"தியாகு"

# விவிலியக் களஞ்சியம்

# IV

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்
சென்னை - 28

# விவிலியக் களஞ்சியம்

# IV

தெ, தே, தொ, தோ,

ந, நா, நி, நீ, நு, நூ, நெ, நே, நை, நொ, நோ,

ப, பா, பி, பீ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ

பதிப்பாசிரியர்

**"தியாகு"**

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை - 28.

முதல் பதிப்பு : அக்டோபர், 1994
மறு பதிப்பு : அக்டோபர், 1998
மறு பதிப்பு : நவம்பர், 2003
மறு பதிப்பு : ஜுன், 2006
மறு பதிப்பு : ஜுன், 2012

**Nihil Obstat**
P.C. Thomas.

**Imprimatur**
+M.Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ **300/-**

நூல் கிடைக்கும் இடங்கள்

**தியான ஆசிரமம்**

சென்னை - 28.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

அச்சிட்டோர் : ஹை–டெக் ஆப்செட் (பி) லிட், எண்: 11, சீனிவாசா நகர் மெயின் ரோடு, கோயம்பேடு, சென்னை -107. போன் ✆ : 2479 3339.

# அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையைத் தம் இதயத்தில் ஏற்று, வார்த்தையாம் இறைவனைத் தம் உதரத்தில் வளர்த்து, மனுவுருவான வார்த்தையை உலகிற்கு அளித்த இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு, அன்பு கலந்த அர்ப்பணம்.

# முன்னுரை

விவிலியக் களஞ்சியத் தொகுப்பின் நான்காம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் மூன்று பாகங்களுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த நான்காம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இவ் வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புகள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றோடு இப்பெயர்கள் புதிய பொதுமொழிபெயர்ப்பில் வரும் வடிவில் அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையில் கட்டுரைகளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour-இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி, நன்றி நவிலுதல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இத்தொகுப்பு- பலர் சேர்ந்த கூட்டு முயற்சியாகும். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். இவர்கள் அனைவரின் பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Sehall Von Bell E.V.Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த MISSIO, Munchen ஆகிய இரு நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் மூன்று பாகங்களுக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு விவிலிய ஆணைக் குழுத்தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M.ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக்கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், Nihil Obstat அளித்துள்ள அருட்தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பாகத்தின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவி செய்தும் வந்துள்ள தமிழாசிரியர் ப. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும் சிறப்பான முறையில் நன்றி கூறுகிறேன். இம் முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசு சபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கில் செயராசு அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணி நிலையத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printer, Hi-Tech offset Private Ltd, சென்னை, ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரமும் அளித்து வழிநடத்தி வரும் இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இப்பாகமும் இதற்குப் பின்வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இப்பகுதியை வெளியிடுகிறேன்.

– "தியாகு"

# விவிலியக் களஞ்சியம்
# அணிந்துரை

விவிலியக் களஞ்சியத்தின் நான்காம் தொகுதி வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

இதில் 'தெ' தொடங்கி 'தௌ' வரையுள்ள தலைப்புகள், 'ந' தொடங்கி 'நோ' வரையுள்ள தலைப்புகள், 'ப' தொடங்கி 'போ' வரையுள்ள தலைப்புகள் இடம் பெறுகின்றன. ஆள்களின் சிறப்புப் பெயர்களும் இடங்களின் சிறப்புப்பெயர்களும் விளக்கப்படுகின்றன. திருச்சபை விதிமுறைப்படி சேர்க்கப்பெற்ற நூல்களுக்கும், அவ்வாறு சேர்க்கப்படாத இணை நூல்களுக்கும் இதில் அறிமுகக் கட்டுரைகள் உள்ளன. பொதுப்பெயர்கள் பற்றிய கட்டுரைகளும், விவிலிய இறையியல் பற்றிய கட்டுரைகளும் இக்களஞ்சியத்திற்கு அழகு சேர்க்கின்றன.

850-க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இத்தொகுதி, உண்மையில் ஒரு களஞ்சியம், ஒரு கருவூலம். இதினின்று புதியனவும் பழையனவும் எடுக்கலாம் (மத் 13:52). புதியன புது மகிழ்ச்சி கொடுக்கும்; பழையன புது விளக்கம் பெற்றுப் புது எழுச்சி அளிக்கும்.

இக்களஞ்சியத் தொகுப்பின் ஆதிமூலமும் ஆசிரியருமான அருள்தந்தை சந்தியாகு சுவாமிகளை மனமாறப் பாராட்டுகிறேன். அவர் விவிலியத்துக்கு ஆற்றும் விழுமிய பணி மேலும் மேலும் சிறப்புறுக என வாழ்த்துகிறேன்.

**+ ம. ஆரோக்கியசாமி,**

மதுரைப் பேராயர்,

தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர்.

# இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

1. அந்தோணிசாமி A.
2. அமலதாசு A.
3. அமலநாதன்
4. அமல்ராஜ் P.T.
5. அருள்சாமி S.
6. ஆரோக்கியசாமி C.
7. ஆரோக்கிய நாதன் P.
8. ஆன்ரு டிரோஸ்
9. இஞ்ஞாசி G.
10. இருதயராஜ் A.
11. இதயன் A.
12. உபால்டு M.
13. கருணைதாஸ்
14. சந்தனசாமி
15. சந்தியாகு A.
16. சந்தியாகு M.
17. சார்லஸ் குமார் N.A.
18. சுந்தரம் U.
19. சூசை ஆரோக்கியசாமி
20. சூசை செபஸ்டியன்
21. செபஸ்திராஜ்
22. சேவியர் இளங்கோ
23. ஜான்சன் ராஜ் S.
24. ஜெயபாலன்
25. ஜெரால்டு S.
26. ஜேம்ஸ் ரொசாரியோ B.
27. ஜோ லாரன்ஸ்
28. ஜோசப் I.M.
29. ஜோசப் லயனல் S.
30. ஜோனாஸ் N.
31. ஞானப்பிரகாசம் F.
32. தீஸ்மஸ் P.
33. பால்ராஜ் B.
34. பீட்டர் சகாயராஜ்
35. பிரான்சீஸ் M.
36. மரிய அருள்
37. மரிய தாஸ் I.
38. ரொசாரியோ கோமஸ்
39. லூர்து Y.A.
40. லூர்து சாமி A.
41. லூர்துராஜ் G.G.
42. வின்சென்ட் G.

# விவிலியத் திருநூல் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

## I. பழைய ஏற்பாடு

| | |
|---|---|
| 1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்) | ஆதி |
| 2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்) | யாத் |
| 3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்) | லேவி |
| 4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்) | எண் |
| 5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்) | உப |
| 6. யோசுவா ஆகமம் | யோசு |
| 7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்) | நீதி |
| 8. ரூத்து ஆகமம் | ரூத் |
| 9. 1 சாமுவேல் ஆகமம் | 1 சாமு |
| 10. 2 சாமுவேல் ஆகமம் | 2 சாமு |
| 11. 1 அரசர்கள் ஆகமம் | 1 அர |
| 12. 2 அரசர்கள் ஆகமம் | 2 அர |
| 13. 1 நாள் ஆகமம் (1 ஆட்சிக் குறிப்பேடு) | 1 நாள் |
| 14. 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு) | 2 நாள் |
| 15. எஸ்ரா ஆகமம் | எஸ் |
| 16. நெகேமியா ஆகமம் | நெகே |
| 17. தோபியா ஆகமம் | தோபி |
| 18. யூதித்து ஆகமம் | யூதி |
| 19. எஸ்தர் ஆகமம் | எஸ்த |
| 20. யோபு ஆகமம் | யோபு |
| 21 சங்கீதங்கள் (திருப்பாடல்கள்) | சங் |
| 22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்) | பழ |
| 23. திருவுரையாளர் ஆகமம் | திருவுரை |
| 24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்) | உ.ச. |
| 25. ஞான ஆகமம் | ஞான |
| 26. சீராக்கு ஆகமம் | சீரா |
| 27. எசாயா ஆகமம் | எசா |
| 28. எரேமியா ஆகமம் | எரே |
| 29. புலம்பல் ஆகமம் | புல |
| 30. பாரூக்கு ஆகமம் | பாரூ |
| 31. எசேக்கியேல் ஆகமம் | எசே |
| 32. தானியேல் ஆகமம் | தானி |
| 33. ஓசேயா ஆகமம் | ஓசே |
| 34. யோவேல் ஆகமம் | யோவே |
| 35. ஆமோஸ் ஆகமம் | ஆமோ |
| 36. ஒபதியா ஆகமம் | ஒப |
| 37. யோனா ஆகமம் | யோனா |
| 38. மீக்கா ஆகமம் | மீக் |
| 39. நாகூம் ஆகமம் | நாகூ |
| 40. அபக்கூக் ஆகமம் | அப |
| 41. செப்பானியா ஆகமம் | செப் |
| 42. ஆகாய் ஆகமம் | ஆகா |
| 43. செக்கரியா ஆகமம் | செக் |
| 44. மலாக்கி ஆகமம் | மலா |
| 45. 1 மக்கபேயர் ஆகமம் | 1 மக் |
| 46. 2 மக்கபேயர் ஆகமம் | 2 மக் |

## II. புதிய ஏற்பாடு

| | |
|---|---|
| 47. மத்தேயு நற்செய்தி | மத் |
| 48. மாற்கு நற்செய்தி | மாற் |
| 49. லூக்கா நற்செய்தி | லூக் |
| 50. யோவான் நற்செய்தி | யோவா |
| 51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்) | அ.ப. |
| 52. உரோமையர் | உரோ |
| 53. 1 கொரிந்தியர் | 1 கொரி |
| 54. 2 கொரிந்தியர் | 2 கொரி |
| 55. கலாத்தியர் | கலா |
| 56. எபேசியர் | எபே |
| 57. பிலிப்பியர் | பிலி |
| 58. கொலேசியர் | கொலோ |
| 59. 1 தெசலோனிக்கேயர் | 1 தெச |
| 60. 2 தெசலோனிக்கேயர் | 2 தெச |
| 61. 1 திமொத்தேயு | 1 திமொ |
| 62. 2 திமொத்தேயு | 2 திமொ |
| 63. தீத்து | தீத் |
| 64. பிலமோன் | பில |
| 65. எபிரேயர் | எபி |
| 66. யாக்கோபு | யாக் |
| 67. 1 பேதுரு | 1 பேதுரு |
| 68. 2 பேதுரு | 2 பேதுரு |
| 69. 1 யோவான் | 1 யோவா |
| 70. 2 யோவான் | 2 யோவா |
| 71. 3 யோவான் | 3 யோவா |
| 72. யூதா | யூதா |
| 73. திருவெளிப்பாடு | திருவெளி |

# துணை நின்ற நூல்கள்


Anderson G.N. : A CritiDefcal Introduction to the O.T.

A History and Religion of Israel.

The Living Word of the O.T.

A New Catholic Commentary on Holy Scripture.

Bright J : A History of Israel.

Claus Schedl : History of the O.T.

Danielou J : The Lord of History

Daniel-Rops : Sacred History

Edman Jacob : God, the Lord of History

Elis P.F. : The Men and Message of the O.T.

Grelot P : Introduction to the Bible

Harry Thomas Frank : Discovering the Biblical World

Helmer Ringgren : Israelite Religion

James Hastings : Dictionary of the Bible

Leon-Dufour X : Dictionary of the Bibical Theology

Louis Hartman : Encyclopedic Dictionary of the Bible

Mc Kenzie J.L : Dictionary of the Bible

Moriarty F.L : Introducing the O.T.

Osmund Lewry O.P. : Introducting the O.T.

Robert A & Feuillet A : Introduction to the Bible

Robert A & Tricot A : Guide to the Bible

The Eerdmans Bible Dictionary

The Harper's Dictionary of the Bible

The Interpreter's Dictionary of the Bible 5 Vols

The Jerome Biblical Commentary

The Jerusalem Bible

Weather head : A Guide to the Bible

Willaim P. Baber : Everyone in the Bible

"தியாகு" : விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)

# தெ

**தெகாவியர் (DEHAVITES)**

எருசலேம் ஆலயத்தைத் திரும்பக் கட்டக் கூடாதென்று சமாரியர்கள் அர்த்தக்சஸ்தாவுக்கு அனுப்பிய கடிதத்தில் இக்குழுவும் கையொப்பமிட்டது. இவர்கள் கஸ்பியன் கடலின் பக்கமுள்ள தாயோய் என்ற பாரசீக இனத்தைச் சேர்ந்த மக்களாக இருக்கலாம்.

**தெகின்னா ( TEHINNAH** - இரக்கம், மன்றாட்டு)

இவர் காலேபு வழியாக யூதா இனத்தைச் சேர்ந்தவர்; எஸ்தோனின் மகன்; ஈர்னகாசு நகரை நிறுவியவர் (1 நாள் 4:12)

**தெகுவேல் (DEUEL** - இறைவனின் அறிவு)

இவர் பாலைவனத்தில் காது இனத்தின் தலைவரான எல்யாசாபுவின் தந்தையாவார் (எண் 1:14; 7:42.47; 10:20). எண் 2:14-இல் இவர் ரெயுவேல் என்றழைக்கப்படுகிறார். இது எபிரேய மெய்யெழுத்துக்களிடையேயுள்ள குழப்பத்தின் விளைவாக இருக்கலாம்.

**தெக்கப்பொலி (DECAPOLIS** - பத்து நகர்கள்)

பெரிய அலக்சாந்தர் இறந்தபின் (கி.மு. 323), அவருடைய மாதிரியைப் பின்பற்றி, அவருடைய படைத்தலைவர்கள் மேற்காசியாவில் பல கிரேக்க நகரங்களை நிறுவினர். அப்படிப் பாலஸ்தீனத்தில் அமைக்கப்பட்ட பத்துக் கிரேக்க நகர்களின் கூட்டமைப்பாகும் தெக்கப்பொலி அலக்சாந்தர் இன்னேயு (கி. மு. 103 – 76) இவற்றைக் கைப்பற்றினார். பல ஆண்டுகளுக்கு இவை யூத ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. கி. மு. 63–இல் உரோமைத் தளபதி பாம்பே இவற்றிற்குச் சுதந்தரம் அளித்தார். இவை சீரியா மாகாணத்தில் உரோமை ஆளுநனின் அதிகாரத்தில் இருந்தன. யூதேயாவிலிருந்து வரும் யூத ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த இந்நகர்களில் உரோமையர் கிரேக்கக் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தினர். இந்நகர்கள் கொள்ளையர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இந்தக் கூட்டமைப்பைப் பயன்படுத்தின.

பிளினி கொடுக்கும் பட்டியலுக்கும் தோலமியின் பட்டியலுக்கும் வேறுபாடு இருந்தாலும், இப்பத்து நகரங்களின் பெயர்களைத் தோராயமாகக் கொடுக்கலாம். 1. கலிலேயாக் கடலின் கிழக்குக்கரையில் இருந்த இப்போ; 2. கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள காதாரா; 3. யோர்தானுக்கு அருகில் யாபோக்கு ஓடைக்கும் கலிலேயாக்கடலுக்கும் இடையிலுள்ள பெல்லா; 4. யார்முக்கு ஓடைக்கு அருகிலுள்ள அபிலா; 5. கிலயாது மலைகளில் யாபோக்கு ஓடைக்கு வடக்கேயுள்ள கெராசா (இக்கால எராஸ்); 6. யாபோக்கு ஓடையின் மூலத்திலுள்ள பிலதெல்பியா. இதுதான் தெற்குக்கோடியிலுள்ள நகரமாகும். பழைய ஏற்பாட்டு இரபா ஆகும்; 7. கலிலேயாக்கடலுக்குக் கிழக்கில் யார்முக்கு ஓடைக்கு மிக அருகிலுள்ள தியோன்; 8. சீரியாப் பாலைவனத்துக்கருகில் கிழக்குக்கோடி நகரமான கனாத்தா; 9. தியோனுக்கு வடகிழக்கிலுள்ள இராபானா; 10. ஸ்கூத்தாப்பொலி (விவிலிய பேத்சான்). இது ஒன்றுதான் யோர்தானுக்கு மேற்கில் இருந்தது. அகுஸ்துவின் அனுமதியோடு, பெரிய ஏரோது, இப்போ, காதாரா, கனாத்தா ஆகிய நகரங்களைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டார். ஆனால் அவரது மரணத்துக்குப்பின், இவை முந்தைய கிரேக்க அமைப்புக்குள் சேர்க்கப்பட்டன.

தெக்கப்பொலி என்ற பெயர் பத்து நகரங்களைக் குறித்தாலும், பதினான்கு நகரங்கள் இருந்ததாகத் தெரிகிறது. இவற்றில் தமஸ்கு, ஒரு காலத்திற்கு ஒரு முக்கியமான கூட்டாளியாகும். உரோமை அரேபிய மாகாணம் நிறுவப்பட்டபோது, அஃதோடு பிலதெல்பியாவும் காதாராவும் சேர்க்கப்பட்டன. அதனால் கூட்டமைப்பு பலவீனப்பட்டது. மூலக் கூட்டமைப்பின் தலைநகரான காதாராவின் இடத்தைத் தமஸ்கும் ஸ்கூத்தாப்பொலியும் எடுத்துக்கொண்டன.

புதிய ஏற்பாட்டில் தெக்கப்பொலி மூன்று முறை குறிக்கப்படுகின்றது. மத்தேயுவின் கூற்றுப்படி, "கலிலேயா, தெக்கப்பொலி, எருசலேம், யூதேயா, யோர்தானின் அக்கரைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்கள் பெருந்திரளாய் இயேசுவைப் பின்பற்றினர்" (மத் 4:25). இம்மக்கள் திரள் யூதர்களும் சேர்ந்த கலப்பின மக்களைக் குறிக்கலாம். கெரசேனர் பகுதியில் குணமான பேய் பிடித்தவர் நற்செய்தியை "தெக்கப்பொலி நாட்டில் முழங்கிவந்தார்" என்று மாற்கும் (மாற் 5:20), தனது நகரத்தில் முழங்கினார் என்று லூக்காவும் (லூக் 8:39) கூறுகின்றனர். காது கேளாத ஒருவரைக் குணமாக்குமுன் இயேசு தெக்கப்பொலிப் பகுதிவழியாகச் சென்றதாக மாற்கு கூறுகிறார் (மாற் 7:31). இவ்வழிக்குத் தடயம் காணமுடியவில்லை.

**தெக்கோவா (TEKOA - கோட்டை)**

யூதாவின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ள, விவசாயத்தை முக்கியமாகக் கொண்ட நகரம். இது பெத்லகேமுக்குத் தெற்கில் 9 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கத் தெற்கில் 16 கி. மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத்துக்கு என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

இது காலேபைச் சார்ந்த அஸ்கூரால் நிறுவப்பட்டது (1 நாள் 2:24). இதற்குக் கிழக்கே இதே பெயருடைய பாலைவனப் பகுதியிருந்தது (1 மக் 9:33). தாவீதையும் அப்சலோமையும் சமாதானப்படுத்திச் சேர்த்துவைக்க தெக்கோவாவிலிருந்து ஒரு விவேகமுள்ள பெண்ணை வரவழைத்தார் யோவாபு (2 சாமு 14:2). தாவீதின் வலிமை மிக்க வீரர்களில் ஒருவரான, இக்கேசின் மகனான ஈரா இந்த ஊரைச் சேர்ந்தவர் (23:36; 1 நாள் 11:28; 27:9). நாடு பிளவுபட்டபின், சீசாக்கின் படையெடுப்புக்குப்பிறகு, ரெகபயாமும் (2 நாள் 11:6) யோசபாத்தும் (20:20) இந்த ஊரைப் பலப்படுத்தினர். இஃது இறைவாக்கினர் ஆமோசின் சொந்த ஊராகும் (ஆமோ 1:1). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், இவ்வூரைச் சேர்ந்த சிலர் எருசலேம் சுவர்களை மீண்டும் கட்டுவதில் ஈடுபட்டனர் (நெகே 3:5.27).

சிலுவைப்போர்க்காலத்தில் தெக்கோவா புனிதக் கல்லறையின் மானியமாயிருந்தது. கி.பி. 1138-இல் துருக்கியர்கள் இவ்வூரை அழித்தனர். இன்றுவரை ஆளற்ற பாழ்வெளியாக உள்ளது.

**தெசலோனிக்கே (THESSALONICA)**

மாசிதோனியாவில் ஒரு முக்கியமான நகரம். தற்போது "சலோனிக்கா" என்றழைக்கப்படுகிறது.

இந்நகரம் சலோனிக்க வளைகுடாவில் அமைந்துள்ளது. இது "கால்சிதிஸ்" என்ற தீபகற்பத்தின் மேற்குப்பகுதியில் உள்ளது. ஆதிகாலந்தொட்டே மாசிதோனியாவின் முக்கியமான துறைமுகமாக விளங்கியுள்ளது. இந்நகரம் காசாண்டரால் நிறுவப்பட்டது. இவர், தனது மனைவியும் பிலிப்புவின் புதல்வியுமான, மகா அலக்சாந்தரின் சகோதரியுமான தெசலோனிக்கேயின் பெயரையே இந்நகருக்கு இட்டார். இது கி.மு. 316 அல்லது 315-இல் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அங்குக் குடியேறியவர்கள், அப்பகுதியில் காசாண்டரால் அழிக்கப்பட்ட இருபத்து ஆறு கிராமத்து மக்களேயாவர்.

கி.மு. 167-இல் மாசிதோனியா நாடு, நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டபோது, தெசலோனிக்கே, இரண்டாவது மாவட்டத்திற்குத் தலைநகராக இருந்தது. அப்போது அது ஸ்திரிமோன், நதியிலிருந்து ஆக்சியு நதி வரை பரவியிருந்தது. கி.மு. 148-இல் மாசிதோனியா, உரோமையர்களின் மாநிலமாகியது. அப்போது தெசலோனிக்கே, முக்கிய நகரமாகவும், உரோமை நிர்வாகத்திற்கு இருப்பிடமாகவும் அமைந்திருந்தது. உரோமையர்களின் ஆட்சியில், இது சுதந்தர நகராக ஆக்கப்பட்டது. ஸ்தராபோ காலத்தில் மாசிதோனியா நகர்களில் இது புகழ்வாய்ந்ததாயும், மக்கள் தொகை மிக்கதாகவும் இருந்தது. அதன்பிறகு, பேரரசன் மூன்றாம் கோர்தியன் (கி. பி. 238-44) காலத்தில் தெசலோனிக்கேவுக்கு "நெயோகோ ரோஸ்" என்ற பட்டம் சூட்டப்பட்டது. இது கோவிலில் நடக்கும் அரச வழிபாட்டு முறையைக் குறிக்கிறது. தீசியஸ்

காலத்தில் (கி. பி. 250) இஃது ஓர் உரோமைக் காலனியாக ஆக்கப்பட்டது.

தெசலோனிக்கே நகரைச் சுற்றி ஒரு மதிற்சுவர் உண்டு. அதன் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகள் இன்னும் இருக்கின்றன. எக்னேசியன் சாலை, தென்கிழக்கிலிருந்து வடமேற்காகச் செல்கிறது. இப்பாதை வார்தார் வீதி என்று பிறகு அழைக்கப்பட்டது. இச்சாலையில் இரண்டு உரோமையர்களின் வளைவுகள் உண்டு. மேற்கு நுழைவுப்பாதையில் உள்ளது வார்தார் வாயில் என்றழைக்கப்பட்டது. இது 1817-இல் அழிக்கப்பட்டது. கிழக்கு மதிற்சுவருக்கு அருகில் கலேரியு வளைவு, கி.பி. 297-இல் பாரசீகர்களின் வெற்றியைக் கொண்டாடக் கட்டப்பட்டது. இந்தக் கிழக்கு வளைவுக்கு வடக்கில், வட்ட வடிவ உரோமையர்களின் கட்டடம் ஒன்று இருந்தது. அது, பிறகு புனித ஜார்ஜ் கோவிலாக மாறியது. இந்த நகரின் மையத்தில் பேரவை மன்றம் ஒன்று இருந்தது. வார்தார் வாயிலிருந்த ஒரு கல்வெட்டுப் பொறிப்பு இப்போது, இங்கிலாந்து பொருட்காட்சி சாலையில் உள்ளது. அஃதோடு பல பொறிப்புகள் தெசலோனிக்கேயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம், அதிகாரிகளை "நகராட்சிக் குழுவினர்" என்று குறிப்பிடுகின்றன. வார்தார் வாயில் பொறிப்புகள் கி.மு. 30-இலிருந்து கி.பி. 143 வரை உள்ள காலக் கட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஒரு கல்வெட்டுப் பொறிப்பு அகுஸ்து காலத்தைச் சேர்ந்ததாகும். வேறு ஒன்று கிளாதியு காலத்தைச் சேர்ந்தது. இது சிறப்பு வாய்ந்த ஒன்று. ஏனென்றால் அ.ப. 17:6-இல் காணப்படும் "நகராட்சிக் குழுவினர்" என்ற பட்டம் தெசலோனிக்கே நகர் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப்பயணத்தில் தெசலோனிக்கே நகருக்குச் சென்றார் (அ.ப. 17:1-10). அப்போது இந்நகரில் பல இனமக்கள் வாழ்ந்து வந்தனர். யூதமக்கள் பவுலைக் கடுமையாக எதிர்த்தனர். (17:5-10). தன் உழைப்பால் தெசலோனிக்கேயில் உருவான கிறிஸ்தவச் சமூகத்திற்குப் பவுல் இருதிருமுகங்கள் எழுதினார். பவுல், தனது மூன்றாவது பயணத்தின்போது இந்நகருக்கும் சென்றிருக்கலாம் (காண்க. 20:1-2).

## தெசலோனிக்கேயருக்குத் திருமுகம் - I (THESSALONIANS - I, LETTER TO THE

1. அப்போஸ்தலர் பவுல், அவரது தோழர்களாகிய சில்வான் மற்றும் திமொத்தேயு ஆகியோர், தாங்கள் சிறிது காலத்திற்கு முன்பு தெசலோனிக்கேயில் நிறுவிய திருச்சபைக்கு எழுதிய மடலாகும் இது. இப்போது இந்நூல் புதிய ஏற்பாட்டின் திருமுறைப்பட்டியலில் 13-ஆவது இடத்தைக் கொண்டுள்ளது. நமக்குக் கிடைத்திருக்கும் பவுலின் திருமுகங்களிலேயே காலத்தால் மிக முந்தியதாக இது கருதப்படுகிறது.

பவுலின் பிற திருமுகங்களோடு ஒப்பிடும்போது இதில் இறையியல் கோட்பாட்டுக் கருத்துகள் அதிகம் இல்லைபோல் தோன்றலாம். ஆனால் விசுவாசத்தின் பொது அடிப்படையாகக் கருதப்படும் செழிப்பான பல கருத்துகள் சேர்ந்த கோட்பாட்டுத் தொகுப்பு அமைந்துள்ளது. இவற்றில் ஆண்டவர் இயேசு விண்ணக மகிமையோடு மீண்டும் வருவதை எதிர்பார்க்கும் கருத்து ஆதிக்கம் செலுத்துகிறது; நமது கவனத்தை ஈர்க்கிறது. அப்போஸ்தலரின் ஆட்தன்மையையும் பண்புகளையும் கவர்ச்சிகரமான ஒளியில் வெளிப்படுத்தும் அவரது மனித அக்கறையைப் போதகத்திலும் அறவுரைகளிலும் வெளிக்கொணர்கிறது. தொடக்க காலத்திருச் சபையின் மகிழ்ச்சி, மனவுறுதி, ஒருவர்க்கொருவர் அன்பு காட்டுதல், வருங்காலப் பேறுபற்றிய உறுதியான நம்பிக்கை ஆகியவை பற்றிய உயிர்ச்சித்திரமான விவரிப்புகளையும் இந்நூலில் காணலாம். தர்க்கவாதம் இன்மை புதியவிசுவாசத்தின் நேரடிக் கூறுகளைத் தெளிவாக, சுருக்கமாக வெளிக்கொணர ஏதுவாகிறது.

2. தெசலோனிக்கே நகர்: காண்க. தெசலோனிக்கே.

3. தெசலோனிக்கேயும் அப்போஸ்தலர் பணியும் மடலின் சூழ்நிலையும்:

இங்குச் சில மாதங்களுக்கு முன்புதான், ஒருவேளை சில வாரங்களுக்கு முன்புதான், திருச்சபை பவுல் மற்றும் அவரது இரு தோழர்களாலும் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அதற்குமுன் மாசிதோனியாவில் பிலிப்பு என்ற நகரில் தங்கள் மறைபரப்புப் பணியைத் தொடங்கி அங்கு, பிரமாணிக்கமுள்ள விசுவாசிகளின் குழுவை நிறுவினர்; ஆனால், மக்களால் தாக்கப்பட்டனர்; நடுவர்களால் சாட்டையாலும் தடியாலும் அடிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர் (அ.ப. 16:22-24; காண்க. 1 தெச 2:2). ஆனால் இவற்றால் இம்மூவரும் மாசிதோணியாவில் செய்த பணியில் தளர்ச்சியடையவில்லை; உற்சாகம் குன்றவில்லை; சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின், மாகாணத்தின் பிற பகுதிகளுக்கும் சென்று பணிசெய்ய ஆர்வம் கொண்டு, அப்பகுதியின் தலைநகரான தெசலோனிக்கேயிக்கு வந்தடைந்தனர்.

இங்குப் பல இன மக்கள் வாழ்ந்தனர். அவர்களில் யூதர்களும் அடங்குவர். வழக்கம்போல் யூதச் செபக் கூடம் அப்போஸ்தலர்களுக்கும் போதிக்க வாய்ப்பளித்தது. இங்கு யூதர்கள் மட்டுமன்று, யூத மதத்தால் ஈர்க்கப் பெற்று, அதன் புனித நூல்களை அறிந்த "பக்தியுள்ள கிரேக்கர்கள்" சிலரும் கூடுவர். இந்தப் புறவினத்தாரிடையே நற்செய்திப்போதகம் விசுவாசத்தைத் தூண்டி எழச்செய்தது. யூத மதத்திலிருந்து மனந்திரும்பியவர்கள் சிலர். புறவினத்தாரிடையே நற்செய்தியாளர்கள் அடைந்த வெற்றி, யூத சமூகத்திடையே பொறாமையை உண்டாக்கியது; கடும் எதிர்ப்பை எழுப்பியது. இதுபற்றி அ.ப. 17:6-9-இல் வாசித்தறியலாம். இந்த எதிர்ப்பின் விளைவாகப் பவுலும் அவரது தோழர்களும் இரவோடு இரவாக ஊரைவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

அப்போஸ்தலர் பணிநூல் அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயில் மூன்று வாரங்கள் தான் பணி செய்தனர் என்ற கருத்தைக் கொடுக்கிறது. அப்போது அவர்கள் செபக்கூடத்தில்தான் போதித்தனர். அதன் விளைவாக "யூதர்களும் யூதமறையைத் தழுவிய திரளான கிரேக்கர்களும் பெருங்குடி மகளிரும்" (17:4) மனந்திரும்பினர். ஆனால் இந்தத் திருச்சபை பற்றிய பவுலின் சொந்தக் குறிப்புகள், இப்பணி போதிய அளவு நீண்ட காலத்திற்கு நடந்திருக்க வேண்டும் என்றும் அதன் விளைவாகப் புறவின மக்களிலிருந்து நேரடியாக மனந்திரும்பியவர்கள் அடங்கிய திருச்சபை நிறுவப்பட்டது என்றும் சுட்டுகின்றன (1 தெச 5:12-14). அப்போஸ்தலர் பணி நூலில் வரும் "பக்தியுள்ள கிரேக்கர்கள்" என்பது "உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக... தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினீர்கள்" (1:9) என்ற கூற்றோடு ஒத்துப் போகவில்லை எனலாம். இவை அப்போஸ்தலர்கள் செபக்கூடத்துக்கு வெளியே சென்று பொது இடங்களிலும் போதித்திருக்க வேண்டும் எனச்சுட்டுகின்றன. இப்பணிக்குப்பின் இத்திருச்சபையின்பால் அப்போஸ்தலர்கள் காட்டிய மேய்ப்புப்பணி அக்கறையும் (2:9-12), மனந் திரும்பியவர்களுடன் அவர்கள் கொண்டிருந்த அன்பும் பாசமும் (2:8; 3:6-10), இப்பணி மூன்று வாரங்களுக்கும் அதிகமான காலத்திற்கு நடந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன. மேலும் தெசலோனிக்கேயில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட துன்பங்கள் பற்றிய குறிப்புகள், இவை யூத மதத்தினரிடமிருந்து வந்தன என்று சுட்டவில்லை. மாறாக அவர்களினத்தாரிடமிருந்து வந்ததாகத் தெரிகிறது. யூதேயாவில்தான் யூதர்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்; மாசி தோனியாவில் அன்று (2:14).

அப்போஸ்தலர் பணிநூல் நிகழ்ச்சியுரையின் ஒரு பகுதியையே விவரிக்கிறது எனலாம். செபக்கூடத்தில் அடைந்த தொடக்க வெற்றிக்குப்பின், அப்போஸ்தலர்கள் நேரடியாகப் புறவினத்தாரிடம் போதித்திருக்க வேண்டும். அதன் விளைவாகப் பலர் "சிலைகளிலிருந்து கடவுளிடம் திரும்பியிருக்க வேண்டும்." இவர்கள் தங்களினத்தைச் சேர்ந்த விசுவசியாத மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டிருக்க வேண்டும் (காண்க. 3:3-4). இதற்கு யூதர்களின் தூண்டுதல் தேவையாய் இருந்திருக்க வேண்டியதில்லை.

அப்போஸ்தலர் பணிநூல் யூதர்களின் பாகத்தை மிகைப்படுத்தியுள்ளது என்று கருத இடமிருக்கிறது. யூதர்களின் எதிர்ப்பால் தெசலோனிக்கே திருச்சபை பாதிக்கப்பட்டது என்று கருத இத்திருமுகத்தில் ஆதாரம் இல்லை எனலாம்.

தங்களுடைய சீடர்கள் பிறருடைய கொடுமையால் மேலும் துன்புறுதலைத் தடுக்க மூன்று நற்செய்தியாளர்களும் இரவோடு இரவாக நகரைவிட்டு ஓட வேண்டியிருந்தது. ஆனால், தெசலோனிக்கே திருச்சபையோ சிறிது காலத்திற்கு முன்புதான் தோன்றியது. பிறரால் பெரிதும் துன்புறுத்தப்பட்டது. அங்கு அனுபவமிக்க தலைவர்கள் இல்லை. ஆகவே அதன் நலன் பற்றி அப்போஸ்தலர்கள் பெரிதும் கவலைப்பட்டனர். ஆகவே, அங்குத் திரும்பி வர முயற்சித்தனர். "சிறிது காலம் உங்களைவிட்டுப் பிரிந்து தவித்தோம்... உங்கள் முகத்தைப் பார்க்க மிக்க ஆவலாய் ஏங்கி இருந்தோம். உங்களிடம் வரவிரும்பினோம். அதுவும் பல தடவைகளில் நான் உங்களிடம் வர எண்ணங்கொண்டேன். ஆனால், சாத்தான் எங்களைத் தடுத்துவிட்டான்" (2:17-18) என்று பவுல் கூறுகிறார்.

அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயிலிருந்து பெரோயாவுக்குச் சென்று தங்கள் பணியின் தொடக்கத்தில் பெரிதும் வெற்றி கண்டனர். ஆனால், தெசலோனிக்கேயில் எதிர்த்தவர்களே இங்கும் தோன்றி எதிர்ப்பைத் தூண்டினர். சிறிது காலத்திற்குத் தனது இருதோழர்களைப் பெரோயாவில் விட்டு விட்டு, பவுல் ஏதன்சுக்கு ஓட வேண்டியிருந்தது (அ.ப. 17:10-15). சிறிது காலத்திற்குப் பின் அவ்விருவரும் ஏதன்சில் பவுலோடு சேர்ந்து கொண்டனர். ஆனால் தெசலோனிக்கே திருச்சபையைப் பற்றிய கவலை அதிகமாகவே, துணிவோடு ஒரு முடிவு எடுத்தனர். அதன்படி திமொத்தேயு அங்குச் சென்று, அத்திருசபைக்கு அறிவுரை கூறி அதை உறுதிப்படுத்த வேண்டும் (1 தெச 3:1-5). இதற்கிடையில் பவுல் கொரிந்துக்குச் சென்று தங்கினார். அங்கு திமொத்தேயு பவுலுடன் சேர்ந்து கொண்டார் (அ.ப. 18:5).

திமொத்தேயு திரும்பி வந்து செய்தி அறிவித்த சிறிது காலத்திற்குள் இத்திருமுகம் எழுதப்பட்டது. புற இனத்தாரிடமிருந்து பகைமையை எதிர்கொண்டாலும், தெசலோனிக்கே திருச்சபை உறுதியாக உள்ளது என்பதை அறிந்ததால், துயரக்குறைவும் மகிழ்ச்சியும் இம்மடலில் மிளிர்கிறன. அவர்கள் காட்டிய விசுவாசத்திற்காகவும் மன உறுதிக்காகவும் அப்போஸ்தலர்கள் இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள் (1:2-3). அவர்கள் விசுவாசத்தினால் ஆற்றிய செயல்களையும் அன்பினால் மேற்கொண்ட உழைப்பையும் நினைவு கூர்கின்றனர். அவர்கள் அனுபவித்த துன்பங்களே இறைவன் அவர்களிடையே ஆற்றலோடு செயலாற்றுவதைக் காட்டுகின்றன. அவர்கள்பால் அப்போஸ்தலர்கள் கொண்டுள்ள அக்கறையையும், திமொத்தேயு கொண்டுவந்த செய்தியால் அடைந்த மகிழ்ச்சியையும் நூல் எடுத்துக்கூறுகிறது (3:6-8.11-13).

இந்தச் சொந்த நினைவுகூர்தலும், மகிழ்ச்சியும், உறுதியும் திருமுகத்தின் முதல் பகுதியான மூன்று அதிகாரங்களில் அடங்கியுள்ளன. மீதிப்பகுதி, திமொத்தேயு கொண்டு வந்த செய்தியின் விளைவாக அவர்களுக்கு வேண்டிய ஒழுக்கப் போதனைகளை எடுத்துக்கூறுகிறது (அதி 4-5). இதில் வெளிப்பாட்டுத் தன்மையுடைய ஒரு பகுதியும் உள்ளடங்கும் (4:13-18). இது ஆண்டவர் வருகைக்கு முன் மரித்த விசுவாசிகள் ஆண்டவரது வருகையின் மகிழ்ச்சியிலும் மகிமையிலும் பங்கெடுக்கத் தவறிவிடுவார்களோ? என்ற இரு பிரச்சனைகளுக்குப் பதிலாக அமைந்துள்ளது. இத்திருமுகம் இரண்டாம் பிரச்சினைக்கு அளிக்கும் பதில் தெசலோனிக் கேயரைத் திருப்திப்படுத்தி அச்சத்தைப் போக்கியது. ஆனால் முதல் பிரச்சினைக்கு அளித்த பதில் அவர்களைத் திருப்திப்படுத்தவில்லை. ஆகவே, பவுல் இரண்டாம் திருமுகம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இரண்டாம் பகுதி (அதி 4-5) திமொத்தேயு வினுடைய தூதின் விளைவாக அமைந்துள்ளது. சிலரது கருத்துப்படி, தெசலோனிக்கேயர்

ளிடமிருந்து திமொத்தேயு கடிதம் கொண்டு வந்திருக்க வேண்டும். அதிலே அவர்கள் சில அதிகாரபூர்வமான விளக்கங்கள் கேட்டிருக்க வேண்டும் என்பர். ஆனால் இவைபற்றிய எக்குறிப்பும் திருமுகத்தில் காணப்படவில்லை.

**4. ஆசிரியர்:**

இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதுபற்றி, இந்நூற்றாண்டின் செர்மனி நாட்டைச்சேர்ந்த அறிஞர் சிலரைத் தவிர, இப்போது யாரும் ஐயுறுவதில்லை. புறச்சான்றாக அதிகமில்லை. கி.பி. 200-ஐ ஒட்டி எழுதப்பட்ட தாகக் கருதப்படும் செஸ்டர் பேட்டி என்ற கையெழுத்துப் பிரதியில் இத்திருமுகத்தின் துணுக்குகள் காணப்படுகின்றன. மார்சியனுடைய (கி.பி. 140) திருமுறைப்பட்டியலிலும், மற்ற எல்லாத் திருமுறைப்பட்டியல்களிலும், எல்லாப் பழம் வாசகங்களிலும் இத்திருமுகம் இடம்பெறுகிறது. இரேனேயு (கி.பி. 180) இந்நூலைப் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறார். அவரைப் பின்பற்றி எண்ணற்ற ஆசிரியர்கள் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். தொடக்க காலத்திருச்சபைத் தந்தையர்கள் இதிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்துள்ளனர். வாசகத்தைப் பொருத்தமட்டும் சில வேறுபாடுகளைத் தவிர, நாம் கொண்டிருக்கும் வடிவில் இத்திருமுகம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து எல்லா விவிலிய ஏடுகளிலும் காணப்படுகிறது. ஆகவே இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதன் உண்மைத் தன்மையை ஐயுற இடமில்லை.

ஆயினும் இத்திருமுகத்தைப் பவுலின் பெயரால் மற்றொருவர் எழுதியிருக்கலாம் என்று கருதுபவர்கள், இந்நூலில் இறையியல் கோட்பாட்டுத் தொகுப்பு அதிகமில்லை என்பதை ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டுவர். ஆனால் இதுவே, இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்பதற்கு ஒரு வலுவான சான்றாகக் கருதப்படும். போலி ஆசிரியர்கள் இம்மடலால் அதிகம் பயன்பெறப் போவதில்லை. இதில் எந்த இறையியல் ஆதாயமும் இல்லை.

வாழ்த்துகளிலும் குறிப்புகளிலும் காணப்படும் இயல்பான மனந்திறந்த மனவெழுச்சி, இஃது ஓர் உண்மையான கடிதம், செயற்கை முறையான இறையியல் கட்டுரை அன்று என்று காட்டப்போது மானதாகும். ஆண்டவர் வருகை தாமதப்படுத்தப் பட்டதால் ஏற்படும் ஏமாற்றத்தால் மங்காத, இறுதிக்கால எதிர்பார்ப்புகள் பற்றிய உயிர்ச்சித் திரமான விவரிப்புகள் கிறிஸ்தவத் தூதின் முதல் தலைமுறையை ஐயமறச் சுட்டுகின்றன. பவுலின் பெயரால், அவரது மரணத்துக்குப்பின், எழுதியிருக்கக்கூடிய ஆசிரியர் "உயிருடனிருக்கும் நாம், ஆண்டவரின் வருகை வரையில் உயிரோடு எஞ்சி நிற்கும் நாம்" (1 தெச 4:15) என்று பவுலையும் சேர்த்து எழுதியிருக்க மாட்டார். பவுலின் திருமுகங்களை இறையியல் கோட்பாட்டுக் கட்டுரைகளாகத் தவறாகக் கருதினால் ஒழிய, இறையியல் கோட்பாடுகள் அதிகமின்மை இக்கடிதத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதற்கு மறுப்பாக அமையவில்லை. சொற்றொகுதியிலோ, நடையிலோ இந்நூல் பிற திருமுகங்களிலிருந்து வேறுபடுவதும் மறுப்பாக அமையவில்லை.

இத்திருமுகத்தில் சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகியோரின் பங்கு என்ன? வெறுமனே மரியாதைக்காக மட்டும் இவர்களுடைய பெயர்களைப் பவுல் சேர்க்கிறாரா? சில பகுதி களைத்தவிர (2:18;3:15; 5:27) நூல் முழுவதும் தன்மைப்பன்மையில் உள்ளது. இருவரும் தொடக்க காலத்திருச்சபையில் முக்கியம் வாய்ந்தவர்கள் (திமொத்தேயு – பிலி 2:22; அ.ப. 16:1-3; 1 தெச 3: 1-6; சில்வான் அல்லது சீலா – அ.ப. 15:22-18:5). ஆகவே வயதில் இளைய வர்களோ, முதியவர்களோ, யாவரும் மறைபரப்புப் பணியில் தோழர்களாகப் பங்குகொண்டனர் என்ற பவுலின் உணர்வை இந்தப்பன்மைத்தன்மை காட்டுகிறது. ஒரு பொதுப்பணியில் ஈடுபட்ட உண்மையான கூட்டாளிகள் அடங்கிய குழுவின் ஓர் அங்கத்தினன் என்ற முறையில் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார். மடலின் தன்மை இயல்பானதாகவும் ஆர்வமிக்கதாகவும் உள்ளது. ஆகவே, இது மூவரும் ஒருங்கமைந்து தர்க்கித்து இந்நூலை எழுதினார்கள் என்று சுட்டவில்லை.

5. **நூலில் ஒற்றுமை:** இந்நூலில் ஒற்றுமையுள்ளதா என்பது இந்நூற்றாண்டில் எழுப்பப்படும் பிரச்சினை. இந்நூல் இரு கடிதங்களைக் கொண்ட தொகுப்பாகும் என்பர் சிலர். அதி 1-3; அதி 4-5 அடங்கிய இரு கடிதங்களாகப் பிரிப்பர். இவற்றில் முதல் பகுதி- திமொத்தேயுவின் பாதிப்பாலும் இரண்டாம் பகுதி- சில்வானின் பாதிப்பாலும் எழுதப்பட்டவை என்பர். வேறுசிலர் 1:1-2:12; 4:2-5:28 என்ற பகுதிகள் முதல் கடிதத்தையும், 2:13-4:1 என்ற பகுதி இரண்டாம் கடிதத்தையும் சேர்ந்தது என்பர். இக்கருத்துக்குச் செர்மனிநாட்டு அறிஞர் சிலரே ஆதரவு தருவர். பொதுவாக இந்நூல் ஒரே மடலாக ஏற்றுக் கொள்ளப்படும்.

மற்றும் சிலர் 2:13-16 என்ற பகுதி, இடைச் செருகல் ஆகும் என்று கருதுகிறார்கள். இக் கருத்துக்கு ஆதாரமாக, இப்பகுதியில் காணப்படும் கடுமையான யூத எதிர்ப்புப்போக்கையும் 2:12-ஐ அடுத்து 2:17 இயல்பாக அமைவதாகத் தெரிவதையும் காரணம் காட்டுவர். இப்பகுதியையும் பவுலே எழுதினார் என்று கூறுபவர்கள் இடைச்செருகல் கருத்துக்கு ஆதரவான காரணங்கள் இறையியல் மற்றும் கருத்தியல் அடிப்படை கொண்டவை, வரலாற்று மற்றும் இலக்கிய அடிப்படை கொண்டவை அல்ல என்று கூறுவர்.

இதே போன்று, 5:1-11 என்ற பகுதியும் ஓர் இடைச்செருகலாகும். மேலும் இப்பகுதி 4:13-18 என்ற பகுதியின் இரட்டிப்பு வாசகமாகத் தோன்றுகிறது என்பர். இது சிலரது கருத்தேயாகும். இவ்வாதம் நடை, சொற்றொகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

6. **இடமும் காலமும்:** கொரிந்துக்குப் பவுல் சென்ற முதல் மறைபரப்புப் பயணத்திற்குக் காலம் குறிப்பதைப் பொருத்துத்தான் இத்திருமுகம் எழுதப்பட்ட காலத்தைக் குறிக்கமுடியும். ஏனெனில், ஏதன்சிலிருந்து திமொத்தேயு தெசலோனிக்கேக்குச் சென்றார் என்றால் (1 தெச 3:1), அவர் திரும்பிவந்து ஏதன்சிலோ கொரிந்துப் பணித்தொடக்கத்திலோ பவுலோடும் சில்வானுடனும் சேர்ந்திருக்க வேண்டும். இந்தப்பணியின்போது அக்காயாவின் ஆளுநர் கல்லியோவின்முன் விசாரணைக்குப் பவுல் கொண்டு வரப்பட்டார் (அ.ப. 18:12-17). கல்லியோ கி.பி. 51-52-இல் பதவி வகித்தார். ஆகவே அப்போஸ்தலர் பணிநூல் அடிப்படையில் இத்திருமுகம் 50 அல்லது 51-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இத்திருமுகம் பிற்காலத்தில் எழுதப்பட்டது என்று கருதுபவர்கள் கூறும் காரணங்கள்: அ) பவுலைப்பற்றிய குற்றச்சாட்டுகள் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்தில் வருபவை போன்றுள்ளன; ஆ) ஒரு திருமுகம் பெறுவதற்குத் தெசலோனிக்கேயில் நிறுவப்பட்ட திருச்சபை வளர்ச்சியடைவதற்குப் போதிய காலம் வேண்டும்; இ) 1 தெச3:1 திமொத்தேயு ஏதன்சில் இருந்தாகச் சுட்டுகிறது. ஆனால் அ.ப. 17-18 இதுபற்றி ஒன்றும் கூறவில்லை. ஆகையால் இத்திருமுகம் பிற்காலத்தில், ஒருவேளை மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது எழுதப்பட்டிருக்கலாம். இக்கருத்த்துக்குப் பதிலாக, அ) குற்றச் சாட்டுகள் ஒத்தவையாயினும், அவை வெவ்வேறு மக்கள் குழுக்களால் கூறப்பட்டுள்ளன; ஆ) வளர்ச்சிக்கு வேண்டிய காலம் நிச்சயமற்றது; அதை முன்னறிவிக்க முடியாது; மேலும் தெசலோனிக்கேயில் திருச்சபை நிறுவப்பட்டது பற்றிய நினைவு தம் மனதில் பசுமையாய் இருப்பதுபோல் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார்; இ) ஒன்று கூறப்படவில்லை என்பது அதை மறுப்பதற்குச் சமமானதன்று, என்று கூறுவர்.

மேலே கூறியவற்றை மனதில் கொண்டு, இத்திருமுகம் கொரிந்து நகரில், கி.பி. 50-51-இல் எழுதப்பட்டது என்று கூறலாம்.

7. நூலின் திட்டம்:

I. முன்னுரையும் வாழ்த்தும் (1:1).

II. நன்றிகூறல் (1:2-3:13).

அ) முதற்காலம் (1:2-2:12).

| | |
|---|---|
| 1:2-10 | : நன்றியுரை. |
| 2:1-12 | : அப்போஸ்தலரின் பணி. |
| 2:13-16 | : விசுவாசிகளின் பதில் |

ஆ) இரண்டாம் காலம் : திமொத்தேயுவின் தூது (2:17-3:13).

2:16-20 : அப்போஸ்தலர்களின் அக்கறை.
3:1-5 : திமொத்தேயுவை அனுப்பிய தன் நோக்கம்.
3:6-10 : திமொத்தேயுவின் அறிக்கை.
3:11-13 : நன்றியுரையும் மன்றாட்டும்.

III அறவுரை (4:1-12).

4:1-8 : கற்பு.
4:9-12 : பிறர் அன்பு.

IV இறுதிக்கால இயல் (4:13-5:11).

அ) ஆண்டவரின் வருகை (4:13-18).

ஆ) ஆண்டவரின் நாள் (5:1-11).

5:1-3 : எச்சரிக்கை
5:4-11 : ஊக்குவித்தலும் அறவுரையும்.

V இறுதி அறவுரைகள் (5:12-22).

VI முடிவுரை: ஆசீரும் வாழ்த்தும் (5:23-28).

8. இறையியல் கருத்துக்கள்: இத்திருமுகம் ஓர் இறையியல் கோட்பாட்டுக் கட்டுரையன்று. தற்செயலாகத்தான் கிறிஸ்தவ விசுவாசக் கோட்பாடுகள் குறிக்கப்படுகின்றன. ஆயினும் இந்தத் தற்செயலான குறிப்புகள்கூட அப்போஸ்தலர்கள் காலத்திய போதகத்தின் வளமையையும், தொடக்க காலத்தில் மனந் திரும் பியவர்களுக்கு அளிக்கப்பட்ட போதகத்தின் சுருக்கத்தையும் சுட்டிக்காட்டப் போதுமானவை யாகும்.

அ) இறைவனும் விசுவாசிகளும்: தெசலோனிக் கேயர்கள், தங்கள் மனந் திரும்பியபோது, "உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காகச் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினார்கள்" (1:9). அவர், அவர் களுடைய "தந்தையாவார்" (1:1.3; 2:11). அவரே அவர்களைத் தேர்ந்துகொண்டார் (1:4). தமது அரசுக்கும் மாட்சிமைக்கும் அவர்களை அழைத் துள்ளார் (2:12). கடவுள் அவர்களைச் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை. "நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தியுள்ளார்" (5:9). இப்போது அவர்களின் வாழ்வு முழுவதையும் ஆள விரும்புகிறார். "மனிதருக்கு அல்ல, எங்கள் உள்ளங்களை உய்த்துணரும் கடவுளுக்கு உகந்தவர்களாக இருக்கவே" (2:4) அப்போஸ் தலர்கள் பேராவல் கொண்டிருப்பதுபோல், "கடவுளுக்கு ஏற்க வாழ்வதே" புதிதாக மனந் திரும் பியவர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும் (2:12). அப்போஸ்தலர்கள் போதிக்கும் செய்தி இறைவனே அவர்களை நம்பி ஒப்படைத்ததாகும் (2:4). அது "கடவுளின் நற்செய்தியாகும்" (2:2). அது விசுவாசிகளுள் ஆற்றலோடு செயலாற்றும். "கடவுளின் வார்த்தையாகும்" (2:13). விசுவாசிகள் "கடவுளால் அன்பு செய்யப்படும் சகோதரர்கள்" ஆவர் (1:4). ஒருவர்க்கொருவர் அன்புகாட்டக் கடவுளே அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார் (4:9): அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கிறார் (4:8).

ஆ) கிறிஸ்துவும் விசுவாசிகளும்: இவ்வாறு இறைவனை மையமாகக் கொண்ட அப்போஸ்தலரின் போதகம், அதே சமயம் கிறிஸ்துவையும் மையமாகக் கொண்டுள்ளது. ஏனெனில் கடவுளின் பெயரோடு கிறிஸ்துவின் பெயரையும் சேர்த்தே கூறுகிறார். திருச்சபை "தந்தையாகிய கடவுளுக்குள்ளும் ஆண்டவராகிய கிறிஸ்துவுக்குள்ளும் வாழ்கின்றது" (1:1). அப்போஸ்தலப் போதகம் "கடவுளின் வார்த்தை" என்றும் "கடவுளின் நற்செய்தி" என்றும் அழைக்கப்படும்போது, அது "ஆண்டவரின் வார்த்தை" என்றும் (1:8), "கிறிஸ்துவின் நற்செய்தி" என்றும் (3:2) அழைக்கப்படுகிறது. கடவுள் யாரை நம்பி நற்செய்தியை ஒப்படைத்துள்ளாரோ (2:4) அவர்களே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் ஆவர் (2:6). "நம் கடவுளும் தந்தையுமானவரும், நம் ஆண்டவராகிய இயேசுவும்" என்று சேர்த்துச் செபிக்கப்படுகிறார்கள் (3:11). கடவுள் நமக்குக் குறித்துவைத்துள்ள மீட்பைக் "கிறிஸ்து வழியாகவே" நாம் அடையவேண்டும் (5:9). "கிறிஸ்துவிலும்", "கிறிஸ்துவின் வழியாகவும்", கிறிஸ்தவர்கள் மரிக்கின்றனர். இறந்தோரிட மிருந்து உயிர்த்தெழுந்து, அவர்களுடைய ஆண்டவரோடு எப்போதும் இருப்பதற்கும் உறுதிபெற்றுள்ளனர் (4:14.16-18). "இயேசு

கிறிஸ்துவில்தான்" இறைவன் தமது திருவுளத்தை வெளிப்படுத்துகிறார் (5:18). நாம் "அவரோடு வாழும் பொருட்டு இயேசுவே நமக்காக இறந்தார்" (5:9-10). "நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து", "கிறிஸ்து இயேசு", "நமது ஆண்டவர் இயேசு", என்றும், சில சமயம் "கிறிஸ்து", "இயேசு" என்றும், பெரும்பாலும் வெறுமனே "ஆண்டவர்" என்றும் இயேசுவுக்குப் பல பெயர்களையும் பட்டங்களையும் அளிக்கிறார் பவுல். இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த இந்த இயேசுவே இறைமகன் ஆவார். இவரே "வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1:10). விண்ணினின்று இவரது வருகைக்காகக் கிறிஸ்தவர்கள் காத்திருக்கின்றனர். இவர் விசுவாசிகளின் முழுமையான பற்றுறுதியைக் கோருகிறார். அப்போஸ்தலர்களின் கட்டளைகளும் போதகமும் "ஆண்டவர் இயேசுவில்" அளிக்கப்படுகின்றன (4:1தொ). இவரே தவறு செய்தவர்களைத் தண்டிக்கிறார் (4:6). விசுவாசிகளின் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவை இறைவன் திருமுன் இயேசுவை நோக்கிச் செயல்படுகின்றன (1:3). ஆண்டவரோடு நாம் சேர்ந்து வாழவேண்டும் மேலும் அவரோடு எப்போதும் இருக்க வேண்டும் என்பதே நமக்கு அளிக்கப்படும் மேலான உறுதியும் நமதுபேராவலும் ஆகும் (5:10; 4:17). இவற்றில் திட்டம் செய்யப்பட்ட கிறிஸ்து இயல் கருத்துகள் இல்லையென்றாலும், கிறிஸ்துவின் ஆட்தன்மை மற்றும் செயல்கள் பற்றிய மிக வளர்ச்சியடைந்த பலகோணக் கோட்பாட்டை இவற்றில் காணலாம். இவற்றில் பவுலுக்கே சிறப்பாக உரிய இறையியல் கருத்துகள் இல்லையெனலாம். அவர் இறையியல் கட்டுரை எழுதவில்லை; தொடக்க காலத் திருச்சபையினுடைய விசுவாசத்தின் பொதுக்கூறுகளையே பயன்படுத்துகிறார்.

**இ) இறுதிக்காலம் பற்றிய போதனை:**

ஆண்டவர் இயேசுவின் வருகை: இத்திருமுகத்தில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய இறையியல் கருத்து-இறுதிக்காலம் பற்றியதாகும். இது திருச்சபையின் தொடக்க காலப் போதகத்தைப் பிரதிபலிக்கிறது. இதற்கு, பழைய ஏற்பாட்டு "ஆண்டவரின் நாள்" என்ற கருத்து அடிப்படையானதாகும். இக்கருத்தை அச்சுறுத்தும் பொருளில் முதலில் ஆமோஸ் எடுத்துக்கூறினார் (ஆமோ 5:18-20). இது காலப்போக்கில் அச்சுறுத்தல் மட்டுப்படுத்தப்பட்டு இறைவாக்கினர் நூல்களில் வளர்ச்சியடைந்தது (செப் 1:14-15). இஃது இறுதித் தீர்ப்பின் நாளாகும்; "வரப்போகும் சினத்தின்" நாளாகும் (1தெச 1:10). இது "திருடன் நள்ளிரவில் வருவதுபோல்" வரும் (5:2; காண்க. மத் 24:43-44). இவற்றில் இயேசுவின் சொற்களையே பவுல் பிரதிபலிக்கிறார். "எல்லாம் அமைதி, ஆபத்து ஒன்றுமில்லை" என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்குத் திடீரென்று அழிவைக் கொண்டு வரும் (1 தெச 5:3). இந்த அச்சுறுத்தும் பின்னணியில் இயேசு ஒருவரே மீட்பின் நம்பிக்கையாவார். ஏனெனில் அவரே "வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1:10). கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களுக்குச் "சினத்தின் நாள்", ஒளியின் மற்றும் மீட்பின் நாளாகும். "நீங்கள் அனைவரும் ஒளியின் மக்கள், பகலின் மக்கள்" (5:5). "கடவுள் நம்மைத் தம் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை; நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தினார்" (5:9). "நம் ஆண்டவராகிய இயேசு தம்முடைய பரிசுத்தர்கள் அனைவரோடும் வரும் நாளாகும்" (3:13).

"வருகை" என்ற பொருளுடைய "பருசியா" என்ற சொல்லின் முதன்மையான பொருள் வெறுமனே பிரசன்னமாகும். ஆனால், அஃது ஏற்கெனவே பழம் ஆசிரியர்களின் "வந்து சேர்தல்" என்ற பொருளில் பயன்பட்டுள்ளது; குறிப்பாக, ஒரு தேவதையின் அல்லது அரசனின் வருகையைக் குறித்தது. கிரேக்கர் காலத்தில் பேரரசன், அரசன், தளபதி அல்லது உயர் அதிகாரி அதிகார பூர்வமான வருகை தருவதைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன்பட்டது. இத்தகையவர்களைத் தகுந்த முறையில் வரவேற்க முன்னேற்பாடுகளும் பணச்செலவும் செய்யப்பட்டன. இவர்கள் வரும்போது, நகர மக்கள் ஆரவாரமாய்ப் பவனி சென்று, நகர வாயிலில் வரவேற்பர். அங்கு அரசன் அல்லது

பேரரசன் அல்லது உயர் அதிகாரி நகரத்தின் தகுதிவாய்ந்த குடிமக்களுக்குச் சன்மானமும் பட்டமும் வழங்குவார். எங்கும் பகட்டும் மகிழ்ச்சியும் மிளிரும்.

இயேசுவின் வருகையை எண்ணும்போது, பவுல் இத்தகைய சூழ்நிலையைத்தான் மனதில் கொண்டுள்ளார். இயேசு விண்ணேற்றமாகி விட்டதால், அவரது வருகை விண்ணிலிருந்து இறங்கிவருவதாக இருக்கவேண்டும் என்றால், அவர்கள் "வான் வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ள வேண்டும்" (4:16-17). "அதிதூதரின் குரலொலியும் கடவுளின் எக்காளமும் அடையாளமாக முழங்குதல்" கூட கிரேக்க வரவேற்கும் முறையைச் சேர்ந்ததே ஆகும். இஃது இறங்கிவரும் அரசரின் விண்ணகப் படைகள் நெருங்கி வருவதைச் சுட்டுகிறது. இதில் கிரேக்க உருவகமும் எபிரேயரின் வெளிப்பாட்டு உருவகமும் அசாதாரண முறையில் இணைந் துள்ளன. இவ்வுருவங்களின் அடையாளப் பொருள்களை வருங்கால நம்பிக்கையின் உண்மையோடு துல்லியமாகப் பொருத்திக் கூற முடியாது போகலாம். ஆனால் விவரிப்பு முழுவதிலும் வெற்றியும் மகிழ்ச்சியும் மிளிர்கிறன. "ஆண்டவரோடு எப்போதும் இருப்போம்"(4:17) என்ற பொருள் பொதிந்த மேலான உறுதி அளிக்கப்படுகின்றது.

"ஆண்டவரின் வருகை" (4:13-18) மற்றும் "ஆண்டவரின் நாள்" (5:1-11) பற்றிய பவுலின் கூற்றுகள் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் இறுதிக்கால எதிர்பார்ப்புகளைக் கூறுகின்றன. இவை அடிக்கடி பலவாறு தர்க்கிக்கப்படும் தலைப்புகளாகும். ஆனால் இவை கூறப்படும் வெளிப்பாட்டு இலக்கிய நடை அடையாளத் தன்மையுடையது. ஆனால், அடையாளத்திற்கும் உணர்த்தும் உண்மைக்கும் அதிக இடைவெளியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே இறுதிக்காலத்தில் நடக்கப்போவதை அப்படியே பவுலின் கூற்றுகள் விவரிப்பதாகச் சொற்பொருளில் எடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும் பழமைவாதிகளும் அடிப்படைவாதிகளும் இவ்விவரிப்புகளை அவற்றின் சொற்பொருளில் எடுத்துக்கொண்டு தாங்களும் அவதிப்படுகின்றனர்; பிறரையும் அவலப்படுத்துகின்றனர்; இவற்றில் எச்சரிக்கையும் விவேகமும் மிகவும் அவசியம்.

ஈ) பிற கருத்துக்கள்: கிறிஸ்துவின் மீட்பு வேலை, அவரது உயிர்ப்பு, அவரோடு நித்திய வாழ்வுக்கு விசுவாசிகள் அனைவரின் உயிர்ப்பு ஆகியவற்றோடு, பரிசுத்த ஆவி வழியாகப் புனிதமாதல், அருள் ஆகிய கருத்துகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவ ஒழுக்க மரபுச்சட்டம் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. உழைப்பின் முக்கியம், சோம்பலைத் தவிர்த்துத் தனக்கு வேண்டியதைத் தானே உழைத்துத் தேடிக்கொள்ளுதல் ஆகியவை சிறப்பு முக்கியம் பெறுகின்றன. கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் ஆலயம் ஆவார்கள். ஆகவே கெட்ட நடத்தை, காம இச்சைகளைக் குறிப்பாகத் தவிர்க்க வேண்டும். 1 தெச 5:12-14-இல் திருச்சபை அமைப்புப் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. இவற்றிற்குப் பெயர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் முன்பு கலாத்தியாவில் நிறுவப்பட்ட திருச்சபை அமைப்பை ஒத்திருக்கின்றன (அ.ப. 14:22). விசுவாசிகள் இவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

9. நூலின் முக்கியத்துவம்: புதிய ஏற்பாட்டு நூல்களில் இத்திருமுகம் காலத்தால் முந்தியதாகும். இது அப்போஸ்தலிக்கப் பாரம்பரியக் கருத்துகளை, குறிப்பாக விசுவாச வாய்பாடுகளைப் (1:9-10; 4:14; 5:10) பயன்படுத்துகிறது. ஆகவே இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்கும் புதிய ஏற்பாட்டின் நூல்கள் எழுதப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் (கி.பி. 30-50) போதிக்கப்பட்ட நற்செய்திக்குச் சான்றாக உள்ளது. இத்திருமுகம், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குத் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் அளித்த பொருளுக்கு இலக்கியச் சான்றாக உள்ளது.

இலக்கிய நோக்கில், கிறிஸ்தவ இலக்கியம் பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழைய ஏடு என்ற அளவில் மதிப்புமிக்கதாகும். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குப்பின், வரலாறு, சமூகம்,

சமயம் போன்ற பல கூறுகள் கிறிஸ்தவர்களுக்கே சிறப்பாக உரிய இலக்கியம் வளர்ச்சியடையத் தடையாக இருந்தன. இக்கூறுகள் கடிதங்கள் எழுதுவதைத் தடை செய்யவில்லை. இக்கடிதங்கள் எழுதப்பட்டவை என்ற அளவில் இலக்கியமாகக் கருதப்படலாம். கலைப்பண்போடு எழுதப்பட்டவையென்ற அளவில் இவை இலக்கியமல்ல. சிலர் இத்திருமுகத்தைக் கிறிஸ்தவ இலக்கியத்தின் சோதனை முன்முயற்சி என்று கருதுவர். சிலர் இதை விளக்கவுரைக் கடிதம் என்று கருதுவர். அதைவிட இந்நூலை, கிரேக்க மரபுப்படி ஒருவர் மற்றொருவருக்கு எழுதும் சொந்தக் கடிதமாக நோக்குவது மேல். ஏனெனில் அதன் பொருளடக்கம் தன்மையால் நற்செய்தியானாலும், அதன் அடிப்படை அமைப்பு அக்காலத்தில் நிலவிய சொந்தக் கடிதத் தன்மையுடையது. ஆகவே, இதை ஒருவர் மற்றவர்க்கு எழுதிய சொந்தக் கடிதமாக, அதாவது தன்மையால் ஒரு தொடர்புச் சாதனமாக, வாசித்தலே சிறந்தது.

**தெசலோனிக்கேயருக்குத் திருமுகம் - II (THESSALONIANS - II, LETTER TO THE)**

**I. முன்னுரை:** பவுலும் மற்றும் அவருடைய நற்செய்திப்பணியில் தோழர்களான சில்வானும் (சீலா) திமொத்தேயுவும் சேர்ந்து எழுதிய அல்லது அவர்கள் பெயரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் ஒரு திருமுகம். இது தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்டதாகக் கருதப்படும். புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் பதினான்காம் இடத்தைக் கொண்டுள்ளது. இவர்கள்தாம் இத்திருமுகத்தை எழுதினார்களா என்பது பற்றி 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து சிலர் ஐயம் எழுப்பினர்.

தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதல் திருமுகத்தில் காணப்படும் அன்பார்வமும், வெற்றிப்பெருமிதமும் இரண்டாவது திருமுகத்தில் அவ்வளவாகக் காணப்படவில்லை எனலாம். இதில் ஓர் அடக்கமான தொனி தெளிவாக உள்ளது. இரண்டு திருமுகங்களிலும் இறுதிக்கால இயல் கருத்தே முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் முதல் மடலில் காணப்படும் ஆண்டவரின் நாள் விசுவாசிகளுக்குக் கொண்டுவரும் மகிழ்ச்சி, மகிமை ஆகியவற்றிற்குப் பதிலாக, இரண்டாவது மடலில் இறைப்பற்றற்றோர்க்கு வரவிருக்கும் அச்சுறுத்தும் தீர்ப்பு வலியுறுத்தப்படுகிறது. இப்போக்கு முதல் மடலுக்கு நேர்மாறானதாகத் தோன்றுகிறது. முதல் மடலில் கற்பிக்கப்பட்ட ஆண்டவரின் வருகை பற்றிய உயிர்ச்சித்திரமான எதிர்பார்ப்பு நிகழுமுன் சில காரியங்கள் நிகழவேண்டும்; அருஞ்செயல் மற்றும் ஏமாற்றுதல் ஆகிய சாத்தானின் ஆற்றலோடு அக்கிரமி எனப்படும் எதிர்க்கிறிஸ்துவின் வருகையில் உலகைச் சார்ந்த தீய சக்திகள் உச்சநிலை அடையவேண்டும். இக்கருத்து இந்நூலில் முக்கியத்துவம் பெறுகிறது; இது விளக்கவுரையாளர்களுக்கு ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

**II. ஆசிரியர்:** இந்நூலைப் பவுலும் அவரது இருதோழர்களுந்தான் எழுதினார்கள் என்று அறிஞர் பலர் ஏற்றுக்கொண்டாலும், இதை ஐயுற்றுப் பிரச்சனை எழுப்புபவர்களும் உண்டு.

**அ) புறச்சான்றுகள்:** கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த திருச்சபைத் தந்தையர்களான போலிக்காப்பும், இக்னேசியுவும் இந்நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளனர். மார்சியனுடைய (140) திருமுறைப் பட்டியலிலும் இந்நூல் இடம் பெற்றுள்ளது. இரேனியு (130-200) இந்நூல் பவுலால் எழுதப்பெற்றது என்று ஏற்றுக்கொள்கிறார். மூராத்தோரியின் திருமுறை நூல் தொகுப்பிலும் (200) இந்நூல் இடம் பெறுகிறது. பின்வரும் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப் பட்டியல்களில் எல்லாம் பவுல் எழுதிய திருமுகங்கள் தொகுப்பில் இந்நூல் சேர்க்கப்பட்டுள்ளது.

**ஆ) மாற்றுக்கருத்தும் பதிலும்:** கி.பி. 1801-இலிருந்து, இந்நூல் பவுலால்தான் எழுதப்பட்டது என்ற கருத்துக்கு மறுப்புகள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் முதல் திருமுகத்தோடு கொண்டிருக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் அடிப்படையில்

இம்மறுப்பு எழுகிறது. முதல் நூல் இல்லையென்றால், இத்தகைய மறுப்புக்கருத்தே தோன்றியிருக்காது எனலாம்.

1) "ஆண்டவரின் நாள் வந்துவிட்டது என யாராவது தேவ ஆவியின் வாக்காகவோ, திருவுரையாகவோ, நாங்கள் எழுதிய கடிதத்தின் செய்தியாகவோ சொன்னால், நீங்கள் உடனே நிலைகுலைந்து மனங்கலங்க வேண்டாம். எவனும் உங்களை எவ்வாறேனும் ஏமாற்ற விடாதீர்கள்" (2:2-3) என்று ஆசிரியர் தெசலோனிக்கேயர்களை எச்சரிக்கிறார். மேலும் "இவ்வாழ்த்து, பவுலாகிய நான் என் கைப்பட எழுதியது. என் கடிதம் ஒவ்வொன்றுக்கும் இதுவே அடையாளம். நான் எழுதுவது இப்படித்தான்" (3:17) என்று நூலில் கூறப்பட்டவற்றின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறார். இத்தகைய குறிப்புகள் 1 கொரி 16:21-24; கலா 6:11-18-இலும் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் ஆர்வமிக்க செய்திகளையும் சேர்க்கிறார். ஆனால் 2 தெச 3:17-இல் ஆசிரியர் நூலில் காணப்படும் பாரம்பரியங்கள் (காண்க. 2:2.15; 3:6) உண்மையானவை என்று உறுதிப்படுத்த வெறுமனே தனது கையொப்பத்தால் உத்திரவாதம் அளிக்கிறார். இது பவுலின் முறைக்கு முரணானது. ஆகவே, பவுலின் அதிகாரத்தைப் பயன்படுத்தி வேறொருவர், பிற்காலத்தில் இந்நூலை எழுதியிருக்கவேண்டும் என்பர் சிலர். போலிப் போதகர்கள் பவுலின் பெயரால் தவறான போதகத்தை மக்களுக்கு அளித்து அவர்களை மனக்கலக்கம் கொள்ளச் செய்தார்களா? ஏதோ ஒரு போலி ஆசிரியர், தமது மடல் உண்மையாகவே பவுல் எழுதியதுதான் என்று உறுதிகூறும் ஏமாற்றுவித்தையைப் பயன்படுத்தினாரா? இது நமக்குத் திகைப்புண்டாக்கலாம். இத்தகைய நூலைத் தொடக்க காலத்திருச்சபை ஏற்றுக்கொண்டது என்பதும் இத்திகைப்பை மேலும் அதிகப்படுத்தலாம். "அடையாளம்" பற்றிய குறிப்பு (3:17) பவுல் எழுதியதாக உலவி வந்திருக்கக்கூடிய போலி மடல்கள் பற்றிய வதந்திகளை அகற்றும் நோக்கத்தோடு சேர்க்கப்பட்டதாக இருக்கலாம்.

2) இரண்டு திருமுகங்களிலும் காணப்படும் இறுதிக்கால வருகை பற்றிய வேறுபாடுகள் ஒரு பிரச்சினையாக அமைகிறது. முதல் திருமுகம் ஆண்டவரின் வருகை விரைவில் நிகழப்போகிறது என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. 1 தெச 4:13-5:11 ஆண்டவருடைய வருகையை விவரிக்கிறது. அவ்வருகை "திருடன் நள்ளிரவில் வருவதுபோல்" எதிர்பாராத நேரத்தில் நிகழும். ஆகவே விசுவாசிகள் விழிப்பாய் இருக்க வேண்டும்; ஆயத்தமாய் இருக்கவேண்டும். 2 தெச 2:1-12, ஆண்டவரின் வருகைக்குமுன் என்ன அடையாளங்கள் தோன்றும் என்று கூறுகிறது. இந்த அடையாளங்கள் "இறைவனை எதிர்க்கும் கிளர்ச்சி நிகழ வேண்டும். அக்கிரமமே உருவான மனிதன், அழிவுற வேண்டியவன் வெளிப்படவேண்டும்;" அவன் சாத்தானின் வல்லமையோடு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் முதலியனவாகும். இரு திருமுகங்களிலும் வரும் ஆண்டவரின் வருகையைப்பற்றி எத்தகைய போதகத்தைப் (2:3) பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு அளித்திருந்தார் என்ற பின்னணியில் இக்கூற்றுகளைப் புரிந்துகொள்ள முயலவேண்டும். ஆசிரியரே "உங்களோடிருந்தபோது இவற்றையெல்லாம் நான் உங்களுக்குக் கூறிவந்தேன்; உங்களுக்கு நினைவு இல்லையா?" (2:5) என்று கேட்கிறார். இரண்டு பகுதிகளும் வெளிப்பாட்டு இலக்கிய முறையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் சில வேறுபாடுகளைக் கண்டால் வியப்படைய வேண்டியதில்லை.

ஒரு நிகழ்ச்சி திடீரென்று, எதிர்பாராத நேரத்தில் நிகழும் என்பதும், அதை உணர்த்தவல்ல முன்னடையாளங்களும் நிகழும் என்பதும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல; ஒன்றை மற்றது மறுத்துக்கூற வேண்டியதில்லை. நற்செய்திப் பாரம்பரியங்களே இதற்கு வழிவகுக்கின்றன (மத் 24 இணை). அதே சமயம் எப்போதும் ஆயத்தமாகவும் விழிப்போடும் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை விடப்படுகிறது. ஏனெனில், "உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது... நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்"

(24:42.44). ஆகையால் ஆண்டவர் வருகை பற்றி இருதிருமுகங்களுக்கிடையில் காணப்படுவதாகத் தோன்றும் வேறுபாடு, பவுல்தான் இந்நூலுக்கு ஆசிரியர் என்பதற்கு மறுப்பாக அமைய வேண்டியதில்லை.

3) இரண்டு திருமுகங்களுக்கிடையே இலக்கிய அமைப்பு, கட்டுக்கோப்பு, நடை, பொருள் ஆகியவற்றில் எவ்வளவு ஒற்றுமை காணப்படுகிறது என்றால், இரண்டாம் திருமுகத்தை எழுதியபோது ஆசிரியர் முதல் திருமுகத்தைத் தம்முன் வைத்துக்கொண்டு அதைச் சார்ந்து எழுதுவதாக ஓர் உணர்வு ஏற்படலாம்.ஒரு குறுகிய காலத்திற்குள், அதிகமானால் சில வாரங்களுக்குள், அதே ஆசிரியர் ஒரே தன்மையுடைய இரு மடல்களை அதே சபைக்கு எழுதியிருக்கக்கூடுமா என்பதுதான் முக்கியப்பிரச்சனை. இதற்குச் சுலபமாய்த் தீர்வு காண முடியாது, இந்நூல் தோன்றிய சூழ்நிலைபற்றி நாம் இப்போது அறிந்திருப்பதைவிட அதிக அறிவு வேண்டும் என்பர்.

இரண்டாம் திருமுகம் பவுலால் எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொண்டால் இதன் உண்மைத் தன்மைக்கு மறுப்பாகக் கூறப்படுபவை முதலாம் திருமுகத்திற்குப் பொருந்தும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இருதிருமுகங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையைக் கருத்தில் கொள்ளும்போது, இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளையும் கவனிக்கத் தவறக்கூடாது. இரண்டாவது மடல் முதல் மடலைச் சார்ந்திருக்கும்போதும் சில வேற்றுமைகளையும், தனக்கே உரிய சிறப்பு அழுத்தத்தையும் கொண்டுள்ளது. முதல் மடலில் கூறப்பட்ட செய்திகளை எடுத்துக் கூறும்போதும் அவைகளைத் தன்மயமாக்கிப் புதிய கோணத்தில் கூறுகிறது.

இம்மடலை வெகு குறுகிய காலத்திற்குள் பவுல் எழுதியிருப்பார் என்பதை உளவியல்படி ஏற்கமுடியாது என்று கூறுபவர்கள், அதற்கேற்ற காரணங்களைக் காட்டவில்லை. பவுலின் பெயரால் வேறொருவர் இம்மடலை எழுதியிருந்தால், ஏன் அப்படி எழுத வேண்டும்? அப்படி எழுதியிருந்தாலும், ஏன், முதல் திருமுகத்தைச் சார்ந்து எழுத வேண்டும்? பவுல் உயிரோடு இருக்கும்போதே, அவரைச் சார்ந்து வேறொருவர் எழுதிய மடலைப் பவுலினுடையது என்று மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா? இவையெல்லாம் உரிய பதிலைக் கோருகின்றன.

பவுல் இறுதிக்காலம் பற்றிப் பலவற்றைத் தெசலோனிக்கேயர்களுக்கு நேரடியாகப் போதித்திருக்கவேண்டும். இவையும், முதல் திருமுகத்தில் கூறப்பட்டவையும் அவர்களிடையே சில ஐயப்பாடுகளை எழுப்பியிருக்க வேண்டும்; அன்றாட வாழ்வில் சில முறைகேடுகள் புக வாய்ப்பாக இருக்கவேண்டும். இவற்றை நீக்கும் நோக்கோடு, முதல் திருமுகம் எழுதிய குறுகிய காலத்திற்குள் இத்திருமுகத்தைப் பவுல் எழுதியிருக்கவேண்டும். அப்படி எழுதும்போது முதல் திருமுகத்தில் கூறியவற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தி, மேலும் விளக்கமளித்து எழுதியிருக்க வேண்டும். இம்முறை அவசியமென்று பவுல் கருதியிருக்கலாம். "எழுதினதையே மீண்டும் எழுதுவது எனக்குத் தொல்லையில்லை. உங்களுக்கு நல்லதுதான்" (பிலி 3:1) என்று பவுல் கூறுவதை நாம் நினைவில் கொள்வது நல்லது.

சில தனிசொற்றொடர்களைத் தவிர, நூலின் நடைமுழுவதும் பவுலினுடையதே. தம் உடனுழியர்களான சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகியோரை மனதில்கொண்டு, மடலைத் தன்மைப்பன்மையிலேயே எழுதுகிறார்.

### III. நூல் தோன்றிய சூழ்நிலையும் நோக்கமும் காலமும் இடமும்:

1) **சூழ்நிலை:** பவுலுக்கும் அவரது சபைகளுக்குமிடையே நிலவிய செய்தித் தொடர்பு பற்றி நாம் அதிகம் அறியாமையால் பல பிரச்சினைகள் எழுகின்றன. திமொத்தேயு கொண்டு வந்த செய்தியின் அடிப்படையில் பவுல் கொரிந்திலிருந்து கி.பி. 50-51-இல் தெசலோனிக்கே திருச்சபைக்குத் தம் முதல் திருமுகத்தை எழுதினார் எனலாம் (1 தெச 3:1-8).

அத்திருமுகம் எவ்வாறு அனுப்பப்பட்டது என்பது பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இரண்டாம் திருமுகம் எழுதப்படுவதற்கு முன், முதல்திருமுகம் தெசலோனிக்கேயர்களைச் சென்றடைந்து விட்டதா? என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் முதல் திருமுகத்திற்குப்பின், ஏதோ ஒருவழியில், அத்திருச்சபையின் நிலைபற்றி அதிகமான செய்திகள் வந்திருக்கவேண்டும். இச்செய்திகளுக்குப் பதிலாகப் பவுல் இரண்டாம் மடலை எழுதியிருக்க வேண்டும். தெசலோனிக்கேயர்கள் அனுபவித்த துன்பங்களின் கடுமை இம்மடலில் மகிழ்ச்சியையும் வெற்றிப்பெருமிதத்தையும் மட்டுப்படுத்தியது எனலாம். இப்படிக் கொடுமைப்படுத்துபவர்கள்மேல், ஆண்டவரது வருகையில் இறைவன் அளிக்கப்போகும் பயங்கரத் தண்டனையை வலியுறுத்திக் கூறுகிறது இந்த மடல்.

முதல் திருமுகத்தில் ஆண்டவரின் நாள் எப்போது வரும்? அவ்வருகைக்கு முன் மரித்தவர்களின் நிலை என்ன? என்ற இரு பிரச்சினைக்களுக்குப் பவுல் பதில் அளிக்கிறார். பின்னதற்கு அளித்த பதில் தெசலோனிக்கேயர்களுக்குத் திருப்தி அளித்தது. ஆனால் முதல் பிரச்சனைக்கு அளித்த பதில் அவ்வளவு திருப்தி அளிக்கவில்லைபோல் தோன்றுகிறது. சிலர் ஆண்டவரின் நாள் ஏற்கெனவே வந்துவிட்டது என்று ஏற்றுக்கொண்டு, அதனால் "நிலைகுலைந்து மனங் கலங்கியுள்ளனர்" என்ற செய்தி (2 தெச 2;1-2) பவுலுக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆண்டவரின் நாளுக்கு முன் நிகழவேண்டிய பல நிகழ்ச்சிகள் பற்றிய தமது முந்தைய நேரடிப் போதனையின் சிலவற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தி, மேற்கூறப்பட்ட தவறை நீக்க முயலுகிறார். இத்தவறான கருத்துகளால், சிலர் "இங்குமங்கும் சோம்பித்திரிந்து, பிறர் வேலையில் தலையிட்டு", சபைக்குப் பாரமாக இருந்தனர். இதைப் பவுல் கடுமையாக நோக்குகிறார். "உழைக்க மனமில்லாதவன் எவனும் உண்ணலாகாது" என்று கூறுகிறார். ஆண்டவர் வரும்வரை, எல்லோரும் தங்கள் அன்றாடக் கடமைகளை அமைதியோடு செய்ய வேண்டும் என்று போதிக்கிறார். இந்தச் சூழ்நிலையில் இத்திருமுகம் தோன்றியது எனலாம்.

**2. நோக்கம்:** தெசலோனிக்கேயர் பற்றிய இரண்டாம் செய்திக்குப் பதிலாக இவ்வாறு எழுதப்பட்ட இந்த இரண்டாம் திருமுகம் மூன்று நோக்கங்களைக் கொண்டது. அ) கடுமையாகத் துன்புறுத்தப்பட்டபோதும் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்று தெசலோனிக்கேயர்களை உற்சாகப் படுத்துதல். ஆ) ஆண்டவரது நாள் பற்றிய தவறான கருத்துகளைத் திருத்துதல்; ஏனெனில் அதற்குமுன் நிகழவேண்டியவை இன்னும் நிறைவேறவில்லை. இ) சோம்பித்திரிந்து பிறர் வேலையில் தலையிடுபவர்களைக் கடுமையாக, ஆனால் அன்போடு, கண்டித்து, அவர்கள் அன்றாடக் கடமைகளை அமைதியோடு செய்ய வேண்டும் என்று அறவுரை கூறுதல்.

**3) காலமும் இடமும்:** எப்போது இத்திருமுகம் எழுதப்பட்டது என்று துல்லியமாகக் கணிக்கமுடியாது. ஆனால் முதல் திருமுகத்திற்குப்பின் சிறிது காலத்திற்குள், அதாவது கி.பி. 50-51-இல் எழுதப்பட்டிருக்கலாம். இரு திருமுகங்களிலும் காணப்படும் தெசலோனிக்கே திருச்சபையின் நிலைகள் அதிகம் வேறுபடவில்லை. இரண்டுக்குமிடையேயுள்ள இலக்கிய ஒற்றுமை, இரண்டிற்கும் இடைவெளி அதிகம் இருந்திருக்க முடியாது என்று காட்டுகிறது. பவுல், சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து இருக்கின்றனர் என்பது அவர்கள் கொரிந்து நகரில் பணிசெய்த காலத்தின் தொடக்கத்தில் அந்நகரிலிருந்தே இந்நூலை எழுதியிருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இதற்குப்பின் அப்போஸ்தலர் பணிநூலிலும் பவுலின் திருமுகங்களிலும் சில்வான் (சீலா) காணப்படுவதில்லை.

பவுலின் பெயரால் ஒரு போலி ஆசிரியர் இந்நூலை எழுதினார் என்பவர்கள், இந்நூல் தோன்றிய காலத்தையும் இடத்தையும் பொருத்தமட்டும் பல கருதுகோள்களைத் தருவர்.

இவர்களின் கருத்துபடி, கி.பி. 50-100க்கு இடைப்பட்ட காலத்தில், குறிப்பாக முதல் நூற்றாண்டின் இறுதியில், இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். இந்நூல் பெரோயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கோ பிலிப்பியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கோ எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுவர்.

IV. நூலின் திட்டம்:

1. முன்னுரை: வாழ்த்துரை (1:1-2).

2. துன்புறுத்தப்படும் சோதனை, தீர்ப்பில் ஆண்டவரின் மகிமைக்கு இட்டுச் செல்கிறது (1:3-12).

1:3-10 : நன்றிகூறுதல்

1:1-12 : மன்றாட்டு.

3. ஆண்டவரின் வருகையைச் சரியான முறையில் புரிந்து கொள்ளுதல் (2:1-17).

2:1-15 : ஆண்டவர் வருகைக்குமுன் அடையாளங்கள்; ஏமாற்றுதலின் மேல் ஆண்டவரின் வெற்றி.

2:16-17 : உறுதிப்படுத்த மன்றாட்டு.

4. வேண்டுகோளும் அறவுரையும் (3:1-5.6-15).

5. முடிவுரை : இறுதி வாழ்த்துரை (3:16-18).

**V. இறையியல் கருத்துக்கள்:**

இறுதிக்கால இயல்: இந்நூலின் முக்கிய கருத்தான இறுதிக்கால இயல் 2:1-11-இல் அடங்கியுள்ளது. முன் கூறியதுபோல், பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் இரு பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கிறார். ஆண்டவரின் நாளுக்கு முன்பே இறந்தவர்களும் அவரது வருகையின் மகிழ்ச்சி மற்றும் மகிமையில் பங்கு பெறுவர் என்ற பதிலால் திருப்தியடைந்த தெசலோனிக்கேயர்கள், அவர் எப்போது வருவார் என்பதுபற்றிய பதிலால் திருப்தியடையவில்லை. முதல் திருமுகத்தில், ஆண்டவர் திருடனைப்போல் எதிர்பாராத நேரத்தில் வருவார்; ஆகவே, விசுவாசிகள் எப்போதும் விழிப்போடு தயாராக இருக்க வேண்டும் என்று பவுல் கூறியிருந்தார். இதை அவ்வருகை உடனடியாக நிகழப்போகிறது என்று தெசலோனிக்கேயர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். மேலும் சிலர் ஆண்டவரின் நாள் ஏற்கெனவே நிகழ்ந்து விட்டது என்று போதித்திருக்க வேண்டும் (2:2). இதன் விளைவாகச் சிலர் அன்றாடக் கடமைகளில் ஈடுபடாமல் சோம்பித்திரிந்து செயல்முறைப் பிரச்சினைகளை ஏற்படுத்தினர். இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய, இறுதிக்காலம் பற்றித் தாம் ஏற்கெனவே போதித்திருந்தவைகளை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவற்றிலிருந்து சிலவற்றை மட்டும் வெளிப்பாட்டு இலக்கிய முறையில் எடுத்துக்கூறுகிறார். இவை யூத வெளிப்பாட்டு இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டு, நற்செய்திக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட தொடக்க கால அப்போஸ்தலிக்கப் போதனையாக இருக்கலாம்.

ஆண்டவரின் நாள் வருமுன் "இறைவனை எதிர்க்கும் கிளர்ச்சி நிகழவேண்டும். அக்கிரமமே உருவான மனிதன், அழிவுற வேண்டியவன் வெளிப்பட வேண்டும். இவன் இறைவனுக்கு எதிரி"... கடவுளுடைய ஆலயத்தில் அமர்ந்து தன்னைக் கடவுளெனக் காட்டிக்கொள்ளும் அளவுக்குத் துணிவான் (2:1-11). இதுவே, ஏற்கெனவே மறைவாகச் செயலாற்றிவரும் தீமையின், அக்கிரமத்தின் மறைபொருளான ஆற்றலின் இறுதியான வெளிப்பாடாகும். இத்தீமையின் வெளிப்பாட்டைத் தடைசெய்யும் ஏதோ ஒன்றைப்பற்றி அல்லது ஏதோ ஓர் ஆளைப்பற்றித் தெசலோனிக்கேயர்கள் அறிந்திருப்பதுபோல் பவுல் எழுதுகிறார் (2:6-7). இந்தச் சக்தி அல்லது ஆள், அக்கிரமி வெளிப்படக் குறிக்கப்பட்ட காலம்வரை தீய சக்தியைக் கட்டுப்படுத்தும். பின்பு சாத்தானின் வல்லமையோடு அக்கிரமி வெளிப்படுவான். போலி அருங்குறிகளையும் அற்புதங்களையும் செய்து மக்களை ஏமாற்றுவான். அதன் பின்புதான் ஆண்டவர் வருவார். "தம்வாயின் ஆவியால் அவனை அழித்துவிடுவார்... தம் பிரசன்னத்தால் அவனைத் தொலைத்துவிடுவார்" (2:8). அக்கிரமியால் ஏமாற்றப்பட்டவர்கள் தங்களுக்கு மீட்டைத்தரவல்ல உண்மையின்மீது அன்புகொள்ள மறுத்தனர். இவர்கள் யாவரும்

தீர்ப்புக்கு உள்ளாவார்கள் ( 2:9-10).

இத்தகைய நிலை தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு ஏற்படாது. ஏனெனில், "பரிசுத்தமாக்கும் ஆவியாலும் உண்மையின் மீதுள்ள விசுவாசத்தாலும் நீங்கள் மீட்பு அடைவதற்கென்று கடவுள் உங்களைத் தொடக்கமுதல் தேர்ந்து கொண்டார். இதற்காகவே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக இறைவன் உங்களை அழைத்துள்ளார்" (2:13-14) என்று அவர்களுக்குப் பவுல் உறுதியளிக்கிறார். இப்படிப் போதிக்கும்போது பவுல் அதிகாரபூர்வமான பாரம்பரியத்தையே தருவதாகத் தெரிகிறது.

இவ்விவரிப்பில் கிளர்ச்சி, அக்கிரமி, தடைசெய்வது அல்லது தடை செய்பவன் ஆகிய மூன்று கருத்துகளுக்குப் பலரும் பலவாறு விளக்கம் அளித்துள்ளனர். முதல் இரண்டு கருத்துகளுக்குரிய அடிப்படையை யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் நாம் காணலாம். மூன்றாவது கருத்துக்கு இணையான எதையும் நாம் காண முடிவதில்லை. பவுல் தம் வாசகர்களுக்குப் புரியும் மொழியிலேயே எழுதுவதாகத் தெரிகிறது. ஏனெனில் இவைபற்றி அவர்களுக்கு ஏற்கெனவே போதித்திருந்தார் (2:5). நமக்கு அப்போதகத்தின் சாரம் கிடைத்திராதபடியால், இக்கருத்துகளைப் புரிந்துகொள்வது கடினமாகிறது. ஆகையால் பலரும் தங்களது கருதுகோள்களுக்கு ஏற்றவாறு பலவாறு பொருள் கொடுக்க முனைந்துள்ளனர்.

கிளர்ச்சி என்ற கருத்து சங் 2; எசே 38-39-ஐ அடிப்படையாகக் கொண்டதாகத் தெரிகிறது. ஆனால், எந்த வரலாற்று நிகழ்ச்சியை அல்லது சூழ்நிலையைக் குறிக்கிறது என்று ஒன்றும் கூற முடியாது. அக்கிரமி என்ற கருத்துக்கு முன்மாதிரி தானி 11:36-37-இல் வரும் அந்தியோக்கு எப்பிபான் ஆவான். யோவான் திருமுகங்களில் காணப்படும் "எதிர்க்கிறிஸ்து" என்ற சொல், இத்திருமுகத்தில் பயன்படுத்தப்படவில்லை யாயினும், அந்த உருவத்தின் எல்லாப்பண்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன. ஆனால் இந்த ஆள் யார்? இச்சொல்லைக் குழுப்பொருளில் எடுத்துக்கொள்வதா? அல்லது தனிநபரைக் குறிப்பாக எடுத்துக்கொள்வதா? திருச்சபையைப் பிளவுபடுத்தி அதன் ஒற்றுமையைப் பங்கப்படுத்தியவர்கள்கூட, இச்சொல்லைத் திருச்சபைக்கும் அதன் தலைவர்களுக்கும் சாற்றிக் கூறத் தயங்கியதில்லை. பேரழிவுகளை முன்னறிவிக்கும் குழுவினர் வரலாற்றில் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்குச் சாற்றிக் கூறி மக்களை அச்சுறுத்துவர். இஃது இவர்கள் பவுலின் கருத்துகளை அடிப்படையிலேயே தவறாகப் புரிந்து கொள்வதின் விளைவாகும். பொதுவாகத் திருச்சபைக்கும் நற்செய்திக்கும் எதிராக உள்ளவர்களைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்துவது மரபாக இருந்து வந்திருக்கிறது. தடை செய்பவன் அல்லது தடை செய்வதுபற்றிப் பலவாறு விளக்கம் அளிக்கப்பட்டாலும், எதையும் உறுதியாகக் கூறமுடியாது.

பவுல் ஏற்கெனவே பழைய ஏற்பாட்டு யூத வழக்கிலிருந்த சொற்றொடர்களையே பயன் படுத்துகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டு யூத இலக்கியங்களில் மெசியா வருவதுபற்றிய கருத்துகள் முக்கியம் பெறுகின்றன. அவ்வருகைக்குமுன், மக்களின் பெரும்பதிதம் நிகழவேண்டும் என்ற கருத்தும் காணப்படுகிறது. இந்நூலில் வரும் சொற்றொடர்கள் மத் 24-இலும் வருகின்றன. ஆனால் அப்போது இக்காலத்தில் நாம் கொண்டிருக்கும் வடிவில் மத்தேயு எழுதிய நற்செய்தி இன்னும் உருவெடுக்கவில்லை. ஆகையால், பவுலுக்கும் மத்தேயுவுக்கும் பொதுவான முந்தைய அப்போஸ்தலிக்கப் பாரம்பரியம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இப்பாரம்பரியம் யூத வெளிப்பாட்டு இலக்கிய அடிப்படையில் அமைந்திருந்தது என்று கருதப்படுகிறது.

இத்திருமுகத்தில் தர்க்கிக்கப்படும் பிரச்சினை இறுதிக்காலம் பற்றிய யூதச் சிந்தனையில்

புகுத்தப்பட்ட ஒரு புதிய கூறால் எழுகிறது. இப்புதிய கூறு இழிவாக இறக்கவந்த இயேசுவின் வருகையாகும். வெற்றியோடும் மகிமையோடும் வந்து இறுதிக்காலத்தைத் தொடங்கி வைக்க வரும் மெசியாவை யூதர்கள் எதிர்பார்த்தனர். இதற்கு மாறாக, இயேசுவின் வருகை இறுதிக்காலத்தைத் தொடங்கி வைத்தது உண்மைதான்; ஆனால், வெற்றியோடும் மகிமையோடும் வருவது எதிர்காலத்தில் நிகழவேண்டியதாகும். யூதச் சிந்தனையில், இறுதிக்காலம் ஒன்றனபின் ஒன்றாக நிகழும் தொடர்நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இவை எவ்வளவு விரைவில் நிகழுமென்றால் அவற்றையெல்லாம் சேர்த்து ஒரே தொகுப்பு நிகழ்ச்சியாகக் கருதலாம். இவற்றில் சில தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் இயேசுவின் இறுதிக்காலம் தொடங்கப்பட்டபின், அதன் நிறைவேற்றம் வெகுவாகத் தாமதப் படுத்தப்பட மாட்டாது என்று கிறிஸ்தவர்கள் எதிர்பார்ப்பது இயல்பே. ஆகவே, சிலர் ஆண்டவரின் உடனடியான வருகையை எதிர்நோக்கினர். அதன் விளைவாக, சில செயல்முறையான பிரச்சினைகளும் எழுந்தன.

இதில் உண்மையானதும் முக்கியமானதும் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி ஆயத்தமாகக் கிறிஸ்தவ வாழ்வை அமைப்பதாகும். இந்த வருகை, தீர்ப்பின் நாள் பற்றிய யூதவெளிப்பட்டு உருவங்களில் கூறப்பட்டதுபோல் அமையலாம்; அல்லது, மரணத்தில் ஒவ்வொரு நபரும் ஆண்டவரைச் சந்திப்பதாக அமையலாம். இந்த எதிர்பார்ப்புமிக்க ஆயத்தநிலையை முதலாம் திருமுகம் வலியுறுத்துகிறது. ஆனால் இக்கருத்து ஆண்டவரது வருகைக்காக வெறுமனே காத்திருந்து சோம்பியிருக்கும் நிலைக்கு இட்டுச் சென்று விடக்கூடாது என்று எச்சரிப்பதற்காக இரண்டாம் திருமுகத்தில் கிறிஸ்தவன் தனது அன்றாடக் கடமைகளைத் தொடர்ந்து செய்து வாழவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அப்போதனையின் சுருக்கம், ஒருவன் வெறுமனே உட்கார்ந்து காத்திருக்கும் அளவுக்கு ஆண்டவரின் நாள் அவ்வளவு நெருங்கியதன்று என்பதாகும். இதற்கு ஆதரவாக, அந்நாளுக்கு முன் நடக்க வேண்டிய நிகழ்ச்சிகளாகக் கருதப்பட்ட பொதுப்பாணிக் கருத்துகளிலிருந்து சிலவற்றைப் பவுல் எடுத்துக் கூறுகிறார்.

இதில் இறையியல் வளர்ச்சியுண்டு. இது குறிப்பாக, கிறிஸ்தவ வாழ்வின் முடிவுபற்றிக் கூறுகிறது; ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையால் (ஏமாற்றுபவர்களும் ஏமாற்றப்பட்டு மனந்திரும்பாதவர்களும் அடங்கிய) தீயவர்களுக்கு எதிரான - இறுதித் தீர்ப்பையும், விசுவாசிகளின் இறுதிப் பாதுகாப்பையும் பற்றிப்பேசுகிறது. இவ்வளர்ச்சி பாரம் பரியத்தையே பின்பற்றுவதாகத் தெரிகிறது. விசுவாசத்தைச் சரியானமுறையில் புரிந்து கொள்ளும்பொருட்டு (1:10; 2:2) சிற்சில செய்திகளையும், அன்றாட வாழ்வில் கொள்ள வேண்டிய நன்னம்பிக்கையையும் (2:16-17) பற்றிப்பேசுகிறது.

**தெசாவு (DESSAU)**

யூதேயாவிலுள்ள ஒரு நகரம். இவ்விடத்தில் நிக்கானோருக்கும் யூதர்களுக்கும் போர் நடந்தது (2 மக் 14:16).

**தெதான் (DEDAN - தாழ்வான)**

அரேபியாவின் வடமேற்குப் பகுதியில் வாழ்ந்த வணிகம் செய்யும் ஒரு கூட்டத்தார். இவர்கள் கைபார், ஏல்-உலா, ஏல்-கிசிர் ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக்கலாம். இவை தெயிமாவிற்கு அதிக தொலைவில் இருந்திருக்கலாம். ஏனெனில் தெயிமாவின் மேற்குப்பகுதியில் காணப்படும் அழிவுச்சின்னங்கள் தெயிதான் அழிவுச்சின்னங்கள் என்றே கூறப்படுகின்றன. இவர்கள் கூசு என்பவரின் மகனான இரகமாவின் சந்ததி என்றும் (ஆதி 10:7; 1 நாள் 1:9), அல்லது ஆபிரகாம்-கெற்றூரா ஆகியவர்களின் மகனான யோக்சான் என்பவரின் வழித்தோன்றல்கள் என்றும் (ஆதி 25:3; 1 நாள் 1:32) விவிலியத்தில் விவரிக்கப்படுகின்றனர். இவ்விரண்டும் விவிலியப் பகுதிகளிலும் தெதான், சேபா ஆகியோர் சகோதரர்கள் என்றே எண்ணப்படுகின்றனர்.

எனவே இம்மக்கள் ஒருவேளை கலப்பினமாக இருக்கலாமென்றும், ஒருசமயம் இவர்கள் அரேபியாத் தீபகற்பத்தில் பரந்த ஆதிக்கம் செலுத்தியவர்களென்றும் தெரிகிறது.

தெதான் நாட்டு வணிகக் கூட்டங்களைப் பற்றி இறைவாக்கினர்கள் கூறியுள்ளனர் (எசா 21:13; எசே 38:13). எசாயாப் பகுதியில் இவ்வணிகக் கூட்டங்களும், தேமா நாட்டு வணிகக் கூட்டங்களும் அவர்களுக்கு வடக்கே உள்ள கேதார் நாட்டு அகதிகளுக்கு உதவவேண்டுமென்று அழைக்கப்படுகிறார்கள். தெதான் நாட்டினர் தீருக்குக் குதிரைச் சேணங்களைக் கொடுத்ததாக நாம் எசே 27:20-இல் வாசிக்கிறோம். 27:15-இல் வரும் தெதான் மக்கள் என்பது ரோதேயியர் என்றிருக்க வேண்டும். ஏதோம் நாட்டுக்கு எதிராக இறைவன் தீர்ப்பிடுவது பற்றிக் கூறும்போது இரு இடங்களில் தெதான் மக்களைப்பற்றி வருகிறது (எரே 49:8; எசே 25:13). ஏதோமிய மக்கள் தென்கிழக்கில் பரவாதிருந்ததால், இக்குறிப்பு தெதானியர் குடியிருப்பைக் குறிக்கலாம்.

**தெத்து (TETH)**

எபிரேய நெடுங்கணக்கில் ஒன்பதாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் ஒன்பதாம் பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

தெபகு (**TEBAH** - கொலைவதை செய்தல்)

நாகோருக்கும் அவரது வைப்பாட்டி இரயுமாவுக்கும் பிறந்த மூத்த மகன் (ஆதி 22:24). இவரது பெயர் பெற்றகு (2 சாமு 8:8), திப்கத்து (1 நாள் 18:8) ஆகிய இடங்களின் பெயர்களோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

**தெபலியா (TEBALIAH** - யாவே தூய்மைப்படுத்தினார்)

மெராரியின் வம்சவழியில் ஓசாவின் மூன்றாவது மகன். கோவில் வாயிலைக் காக்கும் பணியில் ஓசாவிற்கு மேற்கு வாயிலும் மேட்டுப்பாதை நோக்கிய சல்லகேத்துவாயிலும் குறிக்கப்பட்ட இடங்களாகும் (1 நாள் 26:11,16).

**தெபீர் (DEBIR** - பின்பகுதி, தூரக்கிராமம்) -ஆள்

எருசலேமுக்குத் தென்மேற்கிலுள்ள எக்லோனின் அரசன் (யோசு 10:3). அதோனிசெதேக்கின் தலைமையிலான எமோரியக் கூட்டணியைச் சேர்ந்த ஐந்து அரசர்களில் ஒருவர். இவர்கள் யோசுவாவின் படையெடுப்பு முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தித்தென் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற முயன்றனர்.

**தெபீர் (DEBIR** - பின்பகுதி, தூரக்கிராமம்)

– இடம்

1. நெகேபிலுள்ள, தென் யூதா மலை நாட்டில், எபிரோனுக்கு அருகிலுள்ள ஒரு முக்கியமான கானானிய நகரம் (யோசு 10:38; 12:13). இது கிரியத்து சேபேர் (15-15) என்றும் கிரியத்து சன்னா (15:49) என்றும் அழைக்கப்படும்.

வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ராயேலர் நுழைந்தபோது, தெபீரில் ஆனாக்கியர்கள் வாழ்ந்து வந்தனர் (11:21). யோசுவா, நகரைக் கைப்பற்றி, அதையும் அதில் வாழ்ந்த மக்களையும் அழித்தார் (10:38-39). ஆனால் எல்லா ஆனாக்கியரும் அழிக்கப்படவில்லை போல் தோன்றுகிறது. ஒருவேளை எஞ்சிய ஆனாக்கியரால் திரும்பவும் கைப்பற்றப்பட்டிருக்கலாம். நீதிபதிகள் காலத்தில், காலேபின் சகோதரரான ஒத்னியேல் என்பவரால் இந்நகர் மீண்டும் கைப்பற்றிப் பட்டது என்று நிகழ்ச்சியுரை கூறுகிறது (15:15-17; காண்க. நீதி 1:11-13). இந்நகர் லேவியக்குரிய நகரமாகும் என்பதுதான் இதுபற்றிய கடைசிக் குறிப்பாகும் (யோசு 21:15; 1 நாள் 6:58).

இந்நகரம் இருந்த இடமாகச் செபேலாவின் கிழக்கு ஓரத்திலுள்ள தேல் பெயித் மிர்சிம் அடையாளம் காட்டப்படும். இதைவிடக் கிர்பெத் ராபூது என்ற இடம் பொருத்தமானதாகத் தெரிகிறது. இஃது எபிரோனுக்குத் தென் மேற்கில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நடந்த அகழ்வாய்வுகள் இக்கருத்துக்கு ஆதரவு

தருவதாகத் தெரிகிறது. இங்கு வெண்கலக் காலத் தொடக்கத்திலேயே (கி.பி. 23-22-ஆம் நூற்றாண்டுகள்) மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. அப்போது இங்கு எகிப்து ஆதிக்கம் செலுத்தியது. மத்திய வெண்கலக் காலத்தில் கைக்சோசியர் இந்நகரை அழித்து மீண்டும் கட்டியெழுப்பியதாகத் தெரிகிறது. இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தில் புகுந்தபோது, யோசுவா இந்நகரை முழுவதும் அழித்தார். அதன் அழிவு ஒரு மீட்டர் உயரச் சாம்பலை விட்டுச்சென்றுள்ளது. பெலிஸ்தியர்களால் இந்நகர் கட்டப்பட்டு, அவர்களாலேயே அழிக்கப்பட்டது (1 சாமு 4). தாவீது இதை ஒரு பாதுகாப்புமிக்க நகரமாகக் கட்டி எழுப்பினார். கி.மு. 918-இல் சிசாக்கால் அழிக்கப்பட்டது (1 அர 14;25-28; 2 நாள் 12:9 தொ).

ஆசாவின் காலத்தில் (கி.மு. 913-873) இந்நகர் மீண்டும் கட்டப்பட்டது (காண்க. 1 அர 15:23: 2 நாள் 14:6-7). கி.மு. 701-இல் சனகெரிபுவால் அழிக்கப்பட்டது. மீண்டும் கட்டப்பட்டு கி.மு. 587-இல் நெபுகத்னேசரால் அழிக்கப்பட்டது. மீண்டும் இந்நகர் கட்டப்படவில்லை.

2. கிலயாதின் கிழக்குப்பகுதியில் இருந்த ஓர் இடம் (யோசு 13:26). ஒருவேளை இது, மகனயிம் அருகிலுள்ள லோதபாராக இருக்கலாம்.

3. யூதாவின் வட எல்லையிலுள்ள ஓர் இடம் (யோசு 15:7). இஃது எருசலேமுக்குக் கிழக்கும், வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள தோக்ரெட் எத்-தெபர் என்ற இடமாக இருக்கலாம்.

**தெபேசு (THEBES - ஆமோனின் நகர்)**

இது பழங்கால எகிப்தில் ஒரு பெரிய நகர். வட எகிப்தில் இக்கால லூக்சோர், கர்னாக்கு இருக்கும் இடத்தில் இஃது அமைந்திருந்தது. இது பழம் அரசமரபில் முதன் முதல் தோன்றுகிறது. 11-ஆவது, 12-ஆவது, மற்றும் 18-ஆவது அரச மரபுகளில் தெபேசு அரசு நகரமாய்த் திகழ்ந்தது. இவ்வூரைச் சேர்ந்தவரின் தலைமையின் கீழ்தான் எகிப்தியர் கைக்சோசுகளை விரட்டியடித்தனர். இந்த அரசு மரபுகள் காலத்தில், பழம் எகிப்து மிகச்சிறந்து விளங்கியது. 25-ஆவது அரசமரபில் தெபேசு கடைசிமுறையாக அரச நகராய்த் திகழ்ந்தது. கி.மு. 633-இல், அசீரியாவின் அசூர்பானிப்பால் இதைக் கைப்பற்றி அழித்தார். இதை நாகூ 3:8 குறிப்பிடுகிறது. தெபேசுவைவிட நினிவே பெரியதோ என்று இறைவாக்கினர் கேட்கிறார். தெபேசில் உள்ள "கடல் அரணையும் தண்ணீர் மதிலை"யும் குறிப்பிடுகிறார். இது நைல் நதிநீரைக் குறிக்கலாம். ஏனெனில், நைல் நதிக்கரையில் இந்நகரம் அமைந்திருந்தது. மேலும், இந்நகரம் அகழிகளையும் கொண்டிருந்திருக்கலாம். எரே 46:25; எசே 30:14-16 ஆகிய பகுதிகள் இந்நகரை அச்சுறுத்துகின்றன. இங்கு நடந்துள்ள பரந்த அகழ்வாய்வுகள் பல கோயில்களையும், அரச, அரசிகள் சவக்கிடங்குகளையும் வெளிக்கொணர்ந்துள்ளன.

**தெபேத்து (TEBETH)**

எபிரேய ஆண்டுக் கணிப்பில் பத்தாவது மாதம் (திசம்பர் - சனவரி, மார்கழி). இந்த மாதத்தில்தான் எஸ்தர் அகசவேர் மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டு. (எஸ்த 2:16) அரசியாக முடிசூட்டப்பட்டாள். கி.மு. 587-586-இல் நிகழ்ந்த எருசலேமின் வீழ்ச்சிக்குப்பிறகு, நெபுகத்னேசர் நகரின் முற்றுகையைத் தொடங்கிய நாளான (காண்க. 2 அர 25:1), தெபேத்து மாதத்தின் பத்தாம் நாள் ஆண்டுதோறும் யூதர்கள் நோன்பு இருந்தனர் (காண்க. செக் 8:19).

**தெபோரா (DEBORAH - தேனீ)**

1. பெத்துவேலின் மகள் ரபேக்கா பாலஸ் தீனத்திலுள்ள தனது புதிய வீட்டிற்குச் சென்ற போது, அவளுடன் உடன்சென்ற தாதி (ஆதி 24;59). இவள் பெத்தேலில் இறந்தாள். அங்கு ஒரு கருவாலி மரத்தடியில் அடக்கம் செய்யப்பட்டாள். எனவே அவ்விடத்திற்கு " அல்லோன் - பாகூத்து" (அழுகையின் கருவாலிமரம்) என்னும் பெயர் வழங்கலாயிற்று (35:8).

2. இஸ்ராயேலின் நான்காவது நீதிபதி அல்லது விடுதலைவீரர். இசக்காரைச் சேர்ந்தவள். இலப்பிதோத்தின் மனைவி (நீதி 4:4). இறை

ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செயல்பட்டதால் (6:34; 11:29; 14:6) இவள் ஓர் " இறைவாக்கினி" என்றழைக்கப்படுகிறாள் (4:4). இவள் இராமாவுக்கும், பெத்தேலுக்கும் இடையிலுள்ள எப்பிரயிமின் பகுதியில், "தெபோராவின் பேரீச்ச மரத்தின்" அடியில் அமர்ந்து தீர்ப்பு வழங்கிவந்தாள் (4:5).

யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்ற சமய ஒற்றுமைக் கருத்தின் அடிப்படையில் சிதறிக்கிடந்த இஸ்ராயேல் மக்களைத் தூண்டியெழுப்ப ஆற்றல்படைத்தவள். இந்தச் சமய ஒற்றுமை இஸ்ராயேல் நாடு நிறுவப்படுவதற்கும் தொடர்ந்து இருப்பதற்கும் மிக முக்கியமானதொன்றாகும்.

கி.மு. 1200-ஐ ஒட்டி இஸ்ராயேலர் யாபீன் என்பவரால் கொடுமைப்படுத்தப்பட்டனர். தெபோரா, அபினோவாமின் மகனான பாரக்கை அழைத்து யாபீனின் படைத்தலைவனான *சீசராவுடன்* போரிடுமாறு, யாவேயின் பெயரால் கட்டளையிட்டாள், பாராக்கின் விருப்பத்திற்கு இணங்கி அவருடன் செல்வதாக ஒப்புக்கொண்டாள். ஆனால் அப்போர் பாராக்குக்குப் பெருமை தராது. ஏனெனில், ஆண்டவர் ஒரு பெண்ணிடம் *சீசராவைக்* கையளிப்பார் என்றும் எச்சரித்தாள் (4:6-10). யாவேயின் உதவியால் இஸ்ராயேலர் வெற்றிகொண்டனர். ஆனால் கேனியரான எபேரின் மனைவி யாயேல் *சீசராவைக்* கொன்றாள் (4:12-22).

இந்த நிகழ்ச்சியைத் "தெபோராவின் வெற்றிப்பாடல்" (5:2-31) விவரிக்கின்றது. இது கி.மு. 12- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெற்றிப்பாடலாகும். இந்தப் போருக்குப்பின், கவிகளால் எழுதப்பட்டிருக்க வேண்டும். இது பழைய ஏற்பாட்டில் மிகப்பழங்கால இலக்கியப்பகுதிகளில் ஒன்றாகும்; பல வரலாற்றுச் சுட்டிக்காட்டல்களைக் கொண்டுள்ளது; மிகப் பழங்கால எபிரேய இலக்கண வழக்குகளையும் கொண்டுள்ளது. இப்பாடலிலிருந்து, எபிரேய இனத்தவர் தனித்தனியாகவே வாழ்ந்து வந்தனர்; அவர்களிடையே ஒற்றுமையில்லை என அறியலாம். அப்போது, சமவெளியையும் வியாபாரச் சாலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்த கானானியர்களோடு போர்புரிய வேண்டியிருந்தது. ஆகவே, சில இனத்தவர் ஒன்றுகூடிச் செயல்பட்டனர் (5:6.13-18). இப்பாடல் போரில் கிடைத்த வெற்றியைக் கொண்டாடினாலும் இஸ்ராயேலரின் போர்க்கடவுளாகிய யாவேயிடம் அவர்கள் கொண்டிருந்த மனப்பான்மையை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது (5:4.20-21). இதே நிகழ்ச்சியை 4:2-24 என்ற பகுதி, உரை நடையில் விவரிக்கிறது.

3. தோபியாவின் பாட்டி (தோபி 1:8). தோபியாவின் தந்தை இறந்தபின், இவள் அவரை வளர்த்தாள். தோபியாவின் பக்தியிலிருந்து, இவள் தன் பேரனை இஸ்ராயேலின் சமயபக்தியில் கவனமாய் வளர்த்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

**தெபோன் (TEPHON)**

பாக்கிது என்ற சீரியத் தளபதியால் பலப்படுத்தப்பட்ட ஒரு நகரம் (1 மக் 9:50). இது தப்புவாகு (யோசு 17:7), நெற்றோபா அல்லது தெக்கோவா ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**தெமகு ( TEMAH** - மகிழ்ச்சி)

பாபிலோனியாவில் இருந்து, செருபாபேலோடு நாடு திரும்பிய ஆலய ஊழியர்களில் ஒரு குழுவின் இனப்பெயர் முதியவர் (எஸ் 2:53; நெகே 7:55).

**தெமேத்திரியு ( DEMETRIUS** - மீட்பவர், பாதுகாப்பவர்)

1. அந்திகோனுஸ் என்பவரின் மகனாகிய தெமேத்திரியு போலிகிராத்து 283-இல் இறந்தார். இவர் முதலாம் தோலமியால் கி.மு. 312-இல் காசாவில் தோற்கடிக்கப்பட்டார்.

2. முதலாம் தெமேத்திரியு சோத்தேர் சீரிய அரசனாக கி.மு. 162-151-இல் ஆட்சி செய்தவர். மூன்றாம் அந்தியோக்குக்குப் பிறகு நான்காம் செலூக்கு சீரியாவில் அரசனானபோது அவரது

மகன் முதலாம் தெமேத்திரியு பிணைக்கைதியாக 4-ஆம் அந்தியோக்குக்குப் பதிலாக உரோமைக்கு அனுப்பப்பட்டார். செலூக்கு, கொலை செய்யப்பட்டதால் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் அந்த இடத்தில் அரசனானார். ஆனால் தெமேத்திரியு விடுவிக்கப்படவில்லை. 4-ஆம் அந்தியோக்கின் இறப்பை அறிந்த தெமேத்திரியு தம்மை விடுவிக்குமாறு கேட்டார். ஆனால் உரோமை மேல்சபை உத்தரவு மறுத்துவிட்டது. ஆனால் அவரே போலிபியு என்பவரின் உதவியுடன் கி.மு. 162-இல் தப்பி ஓடிவிட்டார். பின், தெமேத்திரியு அந்தியோக்கின் மகனான 5-ஆம் அந்தியோக்கு யூபேட்டரையும், லீசியாவையும் கொன்று தம்மையே சீரியாவின் அரசனாக அறிவித்துக் கொண்டார் (1 மக் 7:1-4). ஆல்கிமு எனும் தலைமைக்கு யூதா மக்கபேயுவுக்கு எதிராகத் தெமேத்திரியுவின் முன் குற்றம் சாட்டினார். இதனால் யூதர்கள்மேல் பழிவாங்க ஆயுதந்தாங்கிப் போர்தொடுக்க பாக்கிதுவை அனுப்பினார்.

யூதா மக்கபேயு உரோமையுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி உரோமை, தெமேத்திரியு யூதர்களுக்கு எதிராகச் செய்த கொடுமைகளை நிறுத்துமாறு எச்சரிக்கை விடுத்தது. இரண்டாவது முறையாக நிக்கானோரின் தலைமையில் யூதர்களைப் பூண்டோடு அழிக்க, பெரும் படையொன்றை அனுப்பினான் தெமேத்திரியு (1 மக் 7:26); ஆனால் நிக்கானோரின் படை படுதோல்வியடைந்தது. இந்தத்தோல்வியை அறிந்த தெமேத்திரியு மீண்டும் பாக்கிது, தலைமைக்குரு ஆல்கிமு இருவரையும் யூதர்களை அழிக்குமாறு அனுப்பினார். இம்முறை யூதா மக்கபேயு தோல்வியுற்றார் (1 மக் 9:1).

அலக்சாந்தர் பாலா, தெமேத்திரியுவுடன் போரிட்டுக் கொண்டிருந்தபொழுது, யோனத்தானுடன் சமாதானம் செய்து கொள்ள ஒரு மடல் அனுப்பினார் தெமேத்திரியு. இதை அறிந்த அலக்சாந்தர் யோனத்தானைத் தலைமைக் குருவாக்கினார். இதனால் தெமேத்திரியு அளித்த பல வாக்குறுதிகளை நம்பாமல், யோனத்தான் அவனுக்கு ஆதரவு தர மறுத்தார்; அலக்சாந்தர் பாலாவுக்கு ஆதரவு அளித்தார். முடிவில் தெமேத்திரியுவுக்கும் அலக்சாந்தர் பாலாவுக்கும் நடந்த போரில் தெமேத்திரியு படுதோல்வியுற்று கி.மு. 151-இல் கொல்லப்பட்டார் (1 மக் 10:50).

3. இரண்டாம் தெமேத்திரியு நிக்காத்தோர் (கி.பி. 146-130) முதலாம் தெமேத்திரியுவின் மைந்தன். இவன் கிரேத்தாவிலிருந்து சீரியாவுக்கு வந்தான். இதனால் அலக்சாந்தர் பாலா நிம்மதி இழந்தான். பின் தெமேத்திரியு அப்பொல்லோனியு என்பவரை யூதர்கள்மேல் வெற்றி கொள்வதற்காக ஆளுநராக்கினார். ஆனால் அவனை யோனத்தானும் சீமோனும் தோற்கடித்தனர். கி.மு. 147-146-இல் 4-ஆம் தோலமி பிலமேத்தரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தால் தெமேத்திரியு சீரியாவின் அரசன் ஆனார் (1 மக் 11).

யோனத்தான் எருசலேமின் மேல்கொண்ட முற்றுகையை நீக்காததால் தலைமைக்குரு பதவியை அவருக்கு உறுதிப்படுத்தினார் தெமேத்திரியு. மீண்டும் அவர் முற்றுகையைத் தொடர்ந்தாலும் 'அரசனின் நண்பர்' எனும் பட்டத்தையும் அவருக்கு அளித்துத் தனது தந்தை முதலாம் தெமேத்திரியு அவருக்குக் கொடுத்த அனைத்துச் சலுகைகளையும் மீண்டும் உறுதிப்படுத்தினான்.

தமது நாட்டில் அமைதி நிலவுவதைக் கண்ட தெமேத்திரியு தனது படைவீரர்களை விடுவித்தார். ஆனால் அவரது கொடுங்கோன்மையை அறிந்த மக்கள் அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். எருசலேமில் உள்ள சீரியப் படைப்பிரிவை எடுத்துவிடுவதாக வாக்களித்து அதற்குப்பதிலாகச் சீரியாவைச் சேர்ந்த திரிபோவுக்கு எதிரான போரில் உதவுமாறு யோனத்தானைக் கேட்டார். ஆனால் அவன் தனது வார்த்தையைக் காக்கவில்லை. அதே நேரத்தில் யோனத்தான் நாட்டின் பெரும் பகுதியைத் தனது பலத்தின் கீழ் வைத்திருந்தார். இச்சூழலில் திரிபோ யோனத்தானைக் கொன்று, அலக்சாந்தர் பாலாவின் சிறு குழந்தையை

அரசனாக அறிவித்தார்.

திரிபோவும், தெமேத்திரியுவும் போரிட்டுக் கொண்டிருக்கும்பொழுது அசமோனியரான சீமோன் யூதாவை விடுதலை பெற்ற நாடாக அறிவிக்குமாறு கோரினார். அதற்குச் சம்மதித்த 2-ஆம் தெமேத்திரியு அதனை உறுதிப்படுத்தி மடல் ஒன்று அனுப்பினார். பின் மேதியாவிற்குச் சென்று திரிபோவுக்கு எதிரான போரில் தமக்கு உதவுமாறு வற்புறுத்தினார். அங்குப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கைக் காட்சிப்பொருளாக்கப்பட்டார். ஆனால் ஆர்சாசெசு என்ற பாரசீக மன்னரால் நன்முறையில் நடத்தப்பட்டார். அவனது சகோதரியையும் மணந்துகொண்டார். தெமேத்திரியு பாரசீகத்தில் சிறைப்பட்டிருந்தபோது உரோமை அதிகாரம் திரிபோவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. தெமேத்திரியுவின் சகோதரனும் அரசனாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவ்வாறு செலூக்கிய வம்சத்திலே ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டது.

4. மூன்றாம் தெமேத்திரியு யுசேரு. இவர் அந்தியோக்கு கிரிபோவின் மகன். இவர் கி.மு. 88-இல் அலக்சாந்தர் இயன்னே என்பவருக்கு எதிராகப் பரிசேயர்களை ஆதரித்தார். ஆனால் பின்னர், பரிசேயர் தங்கள் சொந்த அரசனை ஆதரிக்க வேண்டுமெனும் எண்ணத்துடன் இவரை விட்டு இயன்னே பக்கம் சேர்ந்தனர்.

5. அலக்சாந்திரிய யூத வரலாற்று ஆசிரியரான இவர் விவிலிய நாட்கணக்கைக் கொண்டு இஸ்ராயேலின் தொன்மையைக் காட்ட விழைந்தவர். யோசிப்பஸ் இவரை ஒரு புறவினத்தாராகக் கருதுகிறார். இவரது படைப்புக்களின் ஒரு சில பகுதிகளே எஞ்சியுள்ளன. அதுவும் யோசிப்பஸ் மேற்கோள் காட்டுவதிலிருந்துதான் அதுபற்றித் தெரியவருகிறது.

6. தெமேத்திரியு பாலெரும் என்னும் இவர் அலக்சாந்திரியாவில் உள்ள நூலகத்தின் தலைமைப் பொறுப்பாளர் என்பது அரித்தேயாவின் மடலிலிருந்து தெரியவருகிறது. 2-ஆம் தோலமியைத் தூண்டி விவிலியத்தின் மொழிபெயர்ப்பை அருங்காட்சியகத்தில் சேர்க்குமாறு வழிசெய்தார்.

7. எபேசு நகரைச் சேர்ந்த வெள்ளி ஆபரணம் செய்யும் இவர் பவுலுக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டிவிட்டார். ஏனெனில் அவரது தொழில் பாதிக்கப்பட்டது. பவுலின் கிறிஸ்துவப் போதனை நகரத் தேவதையான ஆர்தெமிசின் வெள்ளிச்சிலை விற்பனைக்கு எதிரானது எனத் தூண்டி விட்டார் (அ.ப. 19:24.38).

8. மூப்பர்களுள் ஒருவராகிய யோவானின் நம்பிக்கையைப் பெற்ற திருச்சபைத் தலைவர்களுள் ஒருவர் தெமேத்திரியு (3 யோவா 12).

### தெமொபோன் (DEMOPHON)

மக்கபேயர் காலத்தில் வாழ்ந்த, பாலஸ்தீன மாவட்டங்களில் ஓர் ஆளுநர். இவரும் இவரோடிருந்து மற்ற ஆளுநர்களான திமொத்தேயு, அப்போல்லோனியு, எரோனிமு என்பவர்களும் மக்களை "அமைதியிலும், சமாதானத்திலும் வாழவிடாதவர்கள்" (2 மக் 12:2).

### தெயுதா (THEUDAS)

ஒரு யூதக்கிளர்ச்சியாளர். இவர் தாம் ஒரு மெசியா என்று உரிமை கொண்டாடினார். இவர் தமது கட்சியில் ஏறத்தாழ நானூறு பேரைச் சேர்த்துக்கொண்டார். இவர் கொல்லப்பட்டார். இவரைப் பின்பற்றிய அனைவரும் சிதறிப்போயினர் (அ.ப. 5:36). இந்த நிகழ்ச்சி, கி.பி. 6-இல் கலிலேயனான யூதா (9) செய்த கிளர்ச்சிக்குமுன் (5:37). நடந்தது. தெயுதாவின் பெரிய ஏரோதின் மரணத்துக்குப்பின் (கி.மு. 4) நிகழ்ந்த குழப்பங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

யோசிப்பசின் கூற்றுப்படி தெயுதா தாம் ஓர் இறைவாக்கினர் என்று உரிமை கொண்டாடினார். தங்களது உடைமைகளோடு பலரை யோர்தான் நதிக்கு வரச்செய்தார். அங்கு, யோசு 4-இல் நடந்ததுபோல், தமது தெய்வீக ஆற்றலைக்காட்டும் பொருட்டுத் தமது சொல்லால் யோர்தான் ஆற்றை இரண்டாகப் பிரித்து

அவர்களை அக்கரைக்கு இட்டுச் செல்வதாகக் கூறினார். ஆனால் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். அவரது தலை ஓர் எச்சரிக்கையாக எருசலேமுக்கு அனுப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி குஸ்பியு பாதியு ஆளுநராக இருந்த காலத்தில் நடந்ததாகக் (கி.பி. 44-46) கணிக்கப்படுகிறது.

கமாலியேலின் பேச்சில் வரும் தெயுதா பற்றிய நிகழ்ச்சியை லூக்கா காலமயக்கமாக இங்குப் புகுத்தியுள்ளார் என்பர் சிலர். கமாலியேலின் பேச்சு, குஸ்பியு பாதியு ஆட்சிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்கலாம். ஆயினும் அப்போஸ்தலர் பணிநூலில் வரும் நிகழ்ச்சி முந்தைய ஒரு தெயுதாவைப் பற்றியதாக இருக்கலாம். இவரைப்பற்றி வேறொன்றும் அறிவதற்கில்லை என்பர் வேறு சிலர்.

**தெயோதோசியன் (THEODOTION)**

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் விவிலியத்தைக் கிரேக்கத்தில் மொழிபெயர்த்தவர். இவரது பூர்வீகத்தைப்பற்றி உறுதியாக எதுவும் கூறமுடியவில்லை. இவரது மொழிபெயர்ப்பு சிறப்புடன் அமைந்திருந்ததால் பெரும்பாலோர் இதனைப் பின்பற்றினர். புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில், பழைய ஏற்பாட்டு வாசகங்களை மேற்கோள்காட்ட இம்மொழி பெயர்ப்பையே பயன்படுத்தினர்.

**தெயோதோசியுவின் உரை (DISCOURSE OF THEODOSIUS)**

இது மரியாளின் விண்ணேற்பைப் பற்றிய பண்டைக்காலக் கோப்திக்கு (போகைரிக்கு) வாசகமாகும்.

**தெயோதோத்து (THEODOTUS)**

நிக்கானோர் என்பவரால் யூதா மக்கபேயிடம் அமைதியினை நிலைநாட்ட அனுப்பப்பட்ட சமாதானத் தூதுவர்களில் ஒருவர் (2 மக் 14:19). இச்சொல்லுக்கு 'நட்பை ஏற்படுத்தவும், பெறவும், அளிக்கவும்' என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது (2மக் 14:19).

**தெயோபில் THEOPHILUS** - கடவுளின் அன்பன்)

இவருக்கு லூக்கா தமது நற்செய்திநூலையும், அப்போஸ்தலர் பணிநூலையும் அர்ப்பணிக்கிறார் (லூக் 1:3; அ.ப. 1:1). இவர் லூக்காவின் நண்பராக இருக்கலாம் என்றும் புறவினக் கிறிஸ்தவர்களுள் ஒருவர் என்றும் அறிஞர் சிலர் கூறுகின்றனர். வேறுசிலர் இது தனிப்பட்டவரின் பெயர் கிடையாது; மாறாக, கடவுளிடம் அன்பு கொண்ட அனைவரையும் குறிப்பிட லூக்கா இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்றும் கூறுகின்றனர்.

**தெரசேயா (THRASEAS)**

இவர் 2 மக் 3:5-இல் அப்பொல்லோனியுவின் தந்தை என்று குறிக்கப்படுகிறார். சில வாசகங்கள் இச்சொல்லைத் தர்சு என்ற இடப்பெயராக மொழி பெயர்த்துள்ளன.

**தெராகு (TERAH** - சந்திரன், சோம்பேறி) - இடம்

சேமின் வழித்தோன்றல் நாகோரின் மகன். ஆபிரகாம், நாகோர், ஆரான் ஆகியோரின் தந்தை (ஆதி 11:24-27;1 நாள் 1:26; லூக் 3:34).

இப்பெயர் வடமெசபொத்தாமியாவில் பாலி ஆற்றின் கரையிலுள்ள ஓர் ஊரோடு தொடர்புடையதாகும். அவர் அந்த இடத்திலிருந்து தம் பெயரைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்குத் தம் பெயரை அளித்திருக்க வேண்டும்.

குருக்கள் பாரம்பரியப்படி, தென் பாபி லோனியாவிலுள்ள ஊர் என்ற கல்தேய இடம் தெராகுவின் சொந்த ஊராகும். ஆபிரகாம், சாரா, லோத்து ஆகியோரை அழைத்துக்கொண்டு தெராகு கானானுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால் காரானை அடைந்து அங்குத் தங்கி வாழ்ந்து அங்கேயே இறந்தார் (ஆதி 11:31-32). ஆனால் யாவே பாரம்பரியப்படி, குலமுதியவர்களை ஆராம் - நகராயிமில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 24;27:43; 38:10; 29:1-14; 31:46-49. 51-53; உப 26:5).

யோசு 24:2-இன்படி, தெராகு "நதிக்கு அப்பால் வாழ்ந்தபோது மற்றத் தெய்வங்களுக்கு" ஊழியம் செய்தார். ஊரும் காரானும் சந்திரக் கடவுளான சீன் வழிபாட்டுக்குப் பெயர் போனவை ஆகவே

தெராகு இந்த வழிபாட்டோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளார்.

**தெராகு (TERAH** சந்திரன், சோம்பேறி) - இடம்

இஸ்ராயேலர் பாலைவனத்தில் பயணம் செய்தபோது தங்கிய இடங்களில் ஒன்று (எண் 33:27-38). இஃது எங்கிருந்தது என்று அறிவதற்கில்லை.

**தெராபிம் (TERAPHIM)**

இச்சொல் பன்மையில் பயன்பட்டாலும் ஒன்றையோ, அதிகமான குடும்பச் சிலைகளையோ குறிக்கிறது. ஆதி 31:19.34-35- இன்படி இக்குடும்பச்சிலைகள் சிறியனவாகவும் தூக்கிச் செல்லக்கூடியவையாகவும் இருந்தன. இவற்றை எளிதில் திருடி, மறைத்து வைக்கலாம். அவை லாபானின் குடும்பக்கடவுள்கள் ஆகும். சொத்துரிமை உடையவர்களுக்குத்தான் குடும்பக் கடவுள் சிலைகள் உரியன.

1 சாமு 19:13-இல் குறிக்கப்படும் சிலை மனித உருவிலும், மனித உயரத்திலும் இருந்தது. இது தாவீது மற்றும் மீக்கால் வீட்டில் இருந்தது. நீதிபதிகள் காலத்தில் தெராபிம்கள் வழிபாட்டில் இஸ்ராயேலர்களால் பயன்படுத்தப்பட்டன (நீதி 17:5; 18:14.17.20). பிற்காலத்தில் இந்த வழக்கம் கண்டனம் செய்யப்படுகிறது (1 சாமு 15:23;2 அர 23:24; ஓசே 3:4-5). பாபிலோனில் சோதிடம் பார்க்க இவற்றைப் பயன்படுத்தியதாக எசேக்கியேல் (21:21) கூறுகிறார். பொய் முன்னறிவிப்புகளுக்கு இவை பயன்படுவதாகச் செக்கரியா (10:2) குறிப்பிடுகிறார்.

**தெருபை (DERBE -** கொட்டுதல்)

தென் சிறிய ஆசியாவின் நடுப்பகுதியில் ஒரு நகரம். அனத்தோலியாவின் நடுவில் உள்ள மேட்டுநிலமான லிக்கவோனியா மாவட்டத்தில் உள்ளது. அனத்தோலியாவில் இக்கோனியா என்ற பெரிய நகரம் உள்ளது. இக்கோனியாவோ பிரிகியாவைச் சார்ந்தது. ஆனால் தெருபையும் லிஸ்திராவும் லிக்கோனியா மொழிபேசும் (அ.ப. 14:11) மக்களைக்கொண்டது. தெருபையைப் பற்றி அறிய சிறிதளவு வாய்ப்பே உள்ளது. சிறிய ஆசியாவில் கிரேக்க ஆதிக்கம் மிகுந்திருந்தபோது இந்நகரிலும் கிரேக்க ஆதிக்கம் நுழைந்தது எனலாம். லிஸ்திரா, லாராண்டாவை ஆட்சி செய்த அந்திபாத்தர் என்ற தலைவன் முதல் நூற்றாண்டில் தெருபையில் தங்கியிருந்தான். இவர் சீச்செரோடு நெருங்கிப் பழகினான் என்று சிலர் கூறுகின்றனர்; மற்றும் சிலர் அவனை ஒரு கொள்ளைக்காரன் என்கின்றனர். கலாத்தியாவின் அரசன் அமின்தாஸ் அந்திபாத்தரைத் தோற்கடித்துத் தெருபையைக் கைப்பற்றினான். கி.மு. 25-இல் அமின்தாஸ் இறந்தபின் தெருபையைப் பல நாட்டு மன்னர்கள் ஆண்டனர். முதலில் தெருபை கலாத்தியாவில் உள்ள உரோமை மாகாணத்துக்கு அடங்கியிருந்தது. ஆனால் கி.பி. முதல் நூற்றாண்டில் இப்பகுதி சிலிசியாவின் அரசன் 4-ஆம் அந்தியோக்கு என்பவனின் கீழ் சிறிது காலம் இருந்தது. எனவே இவர் பேரரசன் கிளாதியு பெயரைச் சிறப்பிக்கும் பொருட்டு இந்நகருக்கு ஒரு சிறப்புப்பட்டம் இட்டார். எனவே கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாணயங்களில் இந்நகரின் பெயர் கிளாதியா தெருபை என்றுள்ளது.

தெருபையின் முக்கியத்துவம் அப்போஸ்தலப் பணிநூல்மூலம் நமக்குத் தெரிகிறது. பவுல் இரண்டுமுறை இந்நகருக்குச் சென்றிருக்கிறார். தனது முதல் மறைபரப்புப் பயணத்தில் (அ.ப. 14:6.20) இந்நகருக்குச் சென்று சீடர்கள் பலரை ஏற்படுத்தியிருக்கிறார். பின்னர், இரண்டாவது பயணத்தில் சிலிசியாவிலிருந்து லிஸ்திராவுக்கு வரும்போது தெருபை வழியாகப்பயணம் செய்திருக்கிறார் (16:1). பவுலின் சீடர்களுள் ஒருவரான காயுதெருபை நகரைச் சேர்ந்தவர். பவுல், கொரிந்திலிருந்து மாசிதோனியா, ஆசியா நாடுகளுக்குச் சென்றபோது இவரும் உடன்சென்றார் (20:4).

தெருபையின், உண்மையான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினம்தான்; லாராண்டா காரமான் நகருக்கு வடக்கு-வடகிழக்கே சுமார் 24 கி.மீ. தொலைவில் உள்ள கெர்த்தி-குயுக்கு என்ற சிறிய குன்றின் பக்கம்

இருந்திருக்கலாம் என்பது ஒரு கருத்து. காரணம் இவ்விடத்தில் கி.பி. 157-இல் தெருபை மக்களால் அந்தோனினுபயஸ் என்பவருக்கு ஏற்படுத்தப்பட்ட நினைவுச்சின்னம் ஒன்றுள்ளது. இரும்புக்காலம் தொட்டே இவ்விடத்தில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உரோமை, கிரேக்கர் காலத்திலும் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் இடைக்காலத்தில் இது புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது.

**தெரேசு (TERESH - விருப்பம், கண்டிப்பான)**

அகசவேர் மன்னனின் தனி அறையைக் காத்துநின்ற இரு அண்ணகர்களில் ஒருவன். மற்றவன் பிகதான். இவர்கள் இருவரும் மன்னனைக் கொல்ல சதித்திட்டம் தீட்டிய போது, அது மொர்தக்காய் என்ற பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் மூலமாக மன்னனுக்குத் தெரியவருகிறது. உடனே இரு அண்ணகரும் தூக்கிலிடப்படுகின்றனர் (எஸ்த 2:21-23). இதன்மூலம் மொர்தக்காயின் செல்வாக்கு நாட்டில் பரவுகிறது. இதற்கு உதவியவள் மொர்தக்காயின் சகோதரனின் மகள் எஸ்தர் (6:2).

**தெர்த்தியு (TERTIUS - மூன்றாவது)**

பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தை அவர் வாய்மொழியாகக் கூற அதனை எழுதியவர் தெர்த்தியு. பொதுவாகப் பவுல் திருமுகங்களில் ஒருசில பகுதிகளை மட்டுமே எழுதுவார். மற்றவைகளை அவர் கூற அவரது உதவியாளர்கள் எழுதினர் (1 கொரி 16:21; கலா 6:11; கொலோ 4:18; 2 தெச 3:17). அவருக்குப் பல உதவியாளர்கள் இருந்தாலும் தெர்த்தியுவின் பெயர் மட்டுமே தெரியவருகிறது (உரோ 16:22). இதில் தெர்த்தியு தமது வாழ்த்துதல்களையும் சேர்த்து எழுதியுள்ளார்.

**தெர்த்துல்லு (TERTULLUS)**

பெலிக்சு என்ற உரோமை ஆளுநரின் முன் பவுல்மீது குற்றம் சாட்டிய வழக்கறிஞன். இவன் முதலில் ஆளுநனுக்கு முகஸ்துதி கூறியபின் "இவன் ஒரு பெரும் தொல்லை. யூதர்களிடையே உலகெங்கும் கலகம் மூட்டுகிறவன். நசரேயருடைய கட்சியில் ஒரு தலைவன் எனக்கண்டோம். கோயிலைக் கூட இவன்மாசுபடுத்த முயன்றான்" என்று பவுலைப்பற்றிக் குற்றம் சாட்டினான் (அ.ப. 24:2-8). சில கையெழுத்துப் பிரதிகளில் 'எங்கள் சட்டப்படி இவனைத் தண்டிக்க நினைத்தோம். ஆனால் லீசியா என்ற ஆளுநன் தடுத்து இவனை இங்கு அனுப்பிவிட்டான்' என்று இவன் கூறுவதாக வந்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இவன் யூதன் என்று கூறலாம். மற்றப்படி இவன் உரோமையனா, கிரேக்கனா, யூதனா என்று முடிவாகக் கூறமுடியாது. ஒருவேளை வழக்குகளில் வாதாடுவதற்கென்று சட்டங்களைப் படித்த பொதுவழக்கறிஞனாக இருக்கலாம்.

**தெலகு (TELAH - முறிவு)**

எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர். இவருக்குத் தகான் என்ற புதல்வன் உண்டு. யோசுவாவின் மூதாதையர் ஆவார் (1 நாள் 7:25).

**தெலாசார் (TEL-ASSAR - அசூரின் மலை, குன்று)**

வடமெசபொத்தாமியாவில் அரமேயர்கள் தங்கியிருந்த இடம். சனகெரிபுவுக்கு முன்பிருந்த அசீரிய மன்னர்களால் கைப்பற்றப்பட்ட இடம். எசேக்கியா மன்னனுக்கு அசீரிய அதிகாரி அளித்த செய்தியில் குறிக்கப்படும் அசீரியப்படையால் அழிக்கப்பட்ட நகர்களில் ஒன்று. இஃது "ஏதேன் மக்கள்" வாழ்ந்த இடம் என்று குறிக்கப்படுகிறது (2 அர 19:12; எசா 37:12).

மேதியாவில் எக்பத்தானவுக்கு அருகிலுள்ள அசீரிய நகரமான தில்-அசூலி என்று அடையாளம் காட்டப்படலாம்.

**தெலாயா DELAIAH யாவேயால் விடுவிக்கப்பட்ட)**

1. தாவீதின் வழித்தோன்றல்களில் ஒருவராகிய எலியோவெனாயின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 3:24).

2. ஆரோனின் வழித்தோன்றல். தாவீது காலத்தில் குருக்களின் இருபத்தி மூன்றாம் பிரிவின் தலைவர் (1 நாள் 24:18).

3. தங்களது யூதத் தலைமுறையை நிரூபிக்க

முடியாத நாடுகடத்தப்பட்டவர்கள் அடங்கிய ஒரு குழுவின் மூதாதையர். இவர்கள் தங்கள் யூத மரபுரிமையைப் பெறமுடியவில்லை (எஸ் 2:60; நெகே 7:62).

4. மெகேற்றபேலின் மகனும் செமாயாவின் தந்தையும் ஆவார். நெகேமியா ஆலயத்தை மீண்டும் கட்டியதற்காக அவரைக் கொல்லத் தேடியவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக ஆலயத்துள் ஒளிந்து கொள்ளும்படி அவருக்கு ஆலோசனை கூறியவர். இச்செயலால் நெகேமியாவின் பெயரைக்கெடுக்க முயன்றார். ஆனால் நெகேமியா இந்த ஆலோசனைக்கு இணங்க மறுத்துவிட்டார் (நெகே 6:10-11).

5. செமாயாவின் மகன் (எரே 36:12). எரேமியாவின் இறைவாக்குச் சுருளை எரிக்க வேண்டாம் என்று அரசன் யோயாகிமை வேண்டிக்கொண்ட மூன்று தலைவர்களுள் ஒருவர் (36:25).

**தெலாயிம் (TELAIM** - செம்மறிகள்)

தென்கோடியில் இருக்கும் ஏதோமின் எல்லை ஓரமாக யூதாவின் கோத்திரத்திற்குக்கிடைத்த நகரங்களில் ஒன்று. இஃது அமலேக்கியரின் எல்லை ஓரமாக அமைந்திருந்தது. இங்குதான் சவுல் அமலேக்கியருக்கு எதிராகத்தன் படைகளைத் திரட்டினார் (1 சாமு 15:4). ஒருசிலர் இது பெயேர் செபாவுக்குத் தென்கிழக்கு 20 கி.மீ.தொலைவில் இருந்திருக்கலாம் என்று கூறினாலும் இதன் அமைவிடம் பற்றித் தெளிவான கருத்து இல்லை. தேலேம் (யோசு 15:24) என்ற ஊரும் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

சீப் (Zிவுக்கு அருகிலுள்ள கிர்பெத் உம் எஸ்-சலேபே இதற்கு அடையாளம் காட்டப்படுகிறது.

**தெலீலா (DELILAH-** அழகுள்ள, காதல் நாடகமாடுபவள்)

சேரேக்குப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்த இந்தப் பெண்ணைச் சிம்சோன் காதலித்தார். இவள் பெலிஸ்திய இனத்தைச் சேர்ந்தவளாகவோ பணத்திற்காகத் தங்களைக் கொடுமைப் படுத்தியவர்களிடம் தன்னை விற்றுவிட்ட யூதப் பெண்ணாகவோ இருக்கலாம். தான் இனத்தைச் சேர்ந்த சிம்சோன் பெலிஸ்தியர்களைப் பழிவாங்கியதைக் கண்ட அவர்கள், தெலீலாவுக்குப் பெரும் பணம் கொடுத்து, சிம்சோனின் பலம் எதில் இருக்கிறது என்று அறிந்து வர அவளைக் கேட்டுக்கொண்டனர். அவளை மூன்று முறை ஏமாற்றியபின், சிம்சோன் தனது பலம் அதுவரை வெட்டப்படாத தன் முடியில் உள்ளது என்று உண்மையைக் கூறினார். தன்னை நம்பிய சிம்சோனைத் தெலீலா பெலிஸ்தியர்களிடம் காட்டிக் கொடுத்துத் துரோகம் செய்தாள். பெலிஸ்தியர் சிம்சோனைச் சிறைப்பிடித்துத் துன்புறுத்தினர் (நீதி 16:4-22).

**தெல் - அபீபு (TEL ABIB** - தானியக்குவியல், வெள்ளக்குன்று)

பாபிலோனியாவில் ஒரு குன்றின்மேல் அமைந்த நகரம். இங்கு, நாடுகடத்தப்பட்ட எசேக்கியேலும், மற்றும் யூதர்கள் சிலரும் வாழ்ந்து வந்தனர் (எசே 3:15). இது கெபார் ஓடைக்கு அருகில் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் துல்லியமாக இடம் சுட்ட முடியவில்லை.

**தெல் -ஏல் - அமர்னா (TEL-EL-AMARNA)**

இது பார்வோன் 4-ஆம் அமனோபோசின் (அக்கெனத்தோன் - கி.மு. 1377-1358) நகரான அக்கெதாத்தோனுக்கு வழங்கப்பட்ட பெயர். இது கெய்ரோவிற்கும் லுக்சோருக்கும் இடையில், நைல்நதியின் வலக் கரையில் அமைந்துள்ளது. இங்கு நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் பல கடிதப் போக்கு வரத்துகளை எடுத்துரைக்கின்றன. இந்தக் கடிதங்கள் யாத்திரை நிகழ்ச்சி வரலாற்றுக்கு முக்கியம் வாய்ந்தவை. இவை அக்காதிய மொழியில் சித்திர எழுத்துக்களால் எழுதப்பட்டவை. இவை கானானிய மொழிப் பண்புகளைப் பெற்றிருந்தன. எபிரேயர்கள் கானானிய மொழியை ஒருசில மாற்றங்களுடன் பின்பற்றினர் என்பது தெளிவு. மேலும் இக்கடிதங்கள் எபிரேயர் கானானில் குடியேறும்போது நிலவிய அரசியல் சூழ்நிலையையும் தருகின்றன. கி.மு. 1600-1500-

இல் எகிப்து, சீரியா, கானான் போன்றவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தியது. ஆனால் 4-ஆம் அமனோபோசின் காலத்திலே இவ்வாதிக்கம் தளர்ந்தது. குறுநில மன்னர்கள் குழப்பம் விளைவித்தனர். இந்தச் சூழ்நிலை எபிரேயர்கள் கானானில் வந்து குடியேறச் சாதகமாய் அமைந்தது.

காண்க: அமர்ணாவின் கடிதங்கள்

**தெல் மெலாகு (TEL - MELAH - உப்புக் குன்று, மலை)**

பாபிலோனியாவில் இருந்த ஒருநகரம். இங்கிருந்து வந்தவர்களும் தெலாசா் மக்களைப் போலவே தங்களது தலைமுறைப்பட்டியலை நிரூபிக்க முடியாததால் ஆலயப் பணியில் இருந்து நீக்கப்பட்டனர் (எஸ் 2:59; நெகே 7:61). இஃது இருந்த இடம் தெரிய வில்லை. உப்பு விதைக்கப்பட்டு (காண்க. நீதி 4:45) ஏற்கெனவே அழிக்கப்பட்ட இடத்தில் இஸ்ராயேலர் குடியேறியிருக்கலாம். இது பாரசீக வளைகுடாவிலுள்ள உப்பளத்திலுள்ள தோலமியின் தெல்மா என்ற ஊராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

**தெல்லர்சா (TEL - HARSHA - செவிடரின் குன்று)**

பாபிலோனியாவில் இருந்த ஓர் இடம். இங்கிருந்து திரும்பி வந்தவர்கள் தங்கள் தலைமுறைப்பட்டியலை நிரூபிக்க முடியாததால் ஆலயப் பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர் (எஸ் 2:59; நெகே 7:61). இந்த இடம் எங்கிருந்தது என்று அடையாளம் காட்ட முடியாது. ஒருவேளை ஏற்கெனவே அழிந்துபோன ஒருநகரம் இருந்த இடத்தில், நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேலர் ஒரு குடியிருப்பை அமைத்திருக்க வேண்டும்.

**தெற்குத்திசை (SOUTH)**

இஸ்ராயேலர் சூரியன் உதயமாகும் திசையை நோக்கி நின்று தங்கள் திசைகளைக் கணித்தனர். இதன்படி தென்திசையைக் குறிக்க "வலப்பக்கம், வலக்கரம், தெற்கு" என்ற சொற்களைப் பயன்படுத்தினர். யூதாவின் தென்பகுதியாகிய நெகேபு என்ற பெயரும் தென்திசையைக்குறித்தது. தானி 11-இல் வரும் "தென்திசை மன்னன்" எகிப்தைச் சேர்ந்த தோலமிய அரசர்கள் பலரைக்குறிக்கும். புதிய ஏற்பாட்டில் தென்திசையைக் குறிக்கும் சொற்கள் (அ.ப. 8:26) "நண்பகல்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். "தென்னாட்டு அரசி" (மத் 12:42; லூக் 11:31) சேபா நாட்டு அரசியைக் குறிக்கும் (காண்க. 1 அர 10:1-10).

**தெனாரியுஸ் (DENARIUS)**

இது உரோமையரின் வெள்ளிக்காசு. கி.மு. 268 முதல் செப்திமு செல்வு காலம் வரை இந்த வெள்ளிக்காசு பயன்படுத்தப்பட்டது. இது 3.8 கிராம் எடையுள்ளது. புதிய ஏற்பாட்டிலே பலமுறை இந்த நாணயம் குறிப்பிடப் பட்டுள்ளது. இது வேலையாளின் ஒரு நாள் கூலியாகும் (மத் 20:2.7 - 10.13).

**தென்திசை விண்மீன் குழுக்கள் (CHAMBER OF THE SOUTH)**

வடமீன்குழு மற்றும் மிருக சீரிடத்தோடு, யோபு 9:9-இல் குறிக்கப்படும் விண்மீன் குழுக்களாகும். இதற்குப் பல விண்மீன்களை அடையாளம் காட்டியுள்ளனர் அறிஞர்கள். வேறுசிலர், இச்சொற்றொடர் விண்மீன்களைக் குறிக்கவில்லை; மாறாக, ஒரு மாடத்தின் பின்பகுதியைப் போன்ற தென்திசை ஆகாயத்திலுள்ள வெற்றிடத்தைக் குறிக்கிறது என்றும், சுழல்காற்று தோன்றும் கிடங்கு (37:9)என்றும் அடையாளம் காட்டியுள்ளனர்.

# தே

## தேக்கிலா மற்றும் பவுலின் பணிகள் (THE-CLA, ACT OF PAUL AND)

இது கத்தோலிக்கத் திருமறையால் ஏற்றுக்கொள்ளப்படாத 'பவுலின் பணிகள்' என்னும் நூலின் ஒருபாகம். இதில் தேக்கிலா என்ற பவுலின் பெண் சீடரின் வரலாறு மற்றும் புதுமைகள் கூறப்படுகின்றன. இந்தத் தேக்கிலா ஒரு கிரேக்கக் கன்னிகை. இவள் பவுலின் அறிவுரையால் கவரப்பட்டுக் கிறிஸ்துவ மறையைத் தழுவுகிறாள். பின்பு பற்பல கேடுகளினின்று வியத்தகுமுறையில் தப்புகிறாள். இப்பகுதியில்தான் பவுலைப்பற்றிய ஆள்தோற்றம் வருணிக்கப்படுகின்றது. இப்புத்தகத்தின் விளைவாகத் தேக்கிலா ஆதித்திருச் சபையில் ஒரு கன்னிகையாகக் கருதப்பட்டாள். காண்க: பவுலின் பணிகள்.

## தேசியனின் நற்செய்தி ஒருங்கமைவு (DIA-TESSARON OF TATIAN)

தேசியனால் தயாரிக்கப்பட்ட நான்கு நற்செய்திகளின் ஒருங்கமைவு ஆகும். பழைய சீரியக்கு மொழியில் தயாரிக்கப்பட்டது. கி.பி. 170-ஆண்டு வாக்கில் மேற்காசிய நாடுகளில் இந்நூல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் நாளடைவில் இந்நூலைத் தயாரித்த தேசியன் தவறான கொள்கைகளைக் கொண்டவராகத் திருச்சபையால் கண்டு பிடிக்கப்பட்டார். எனவே இவர் தயாரித்த இம்முக்கிய நற்செய்தி ஒருங்கமைவைத் திருச்சபை மக்களிடமிருந்து வாங்கி அழித்துவிட்டது. இதனால் தேசியன் தயாரித்த இந்நூலின் பிரதிகள், பழஞ்சுவடிகள் வழியாக நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. கி.பி. 220-ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரே ஒரு சிறிய துண்டுச் சுவடி மட்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தத் தேசியனின் நூலைப்பற்றிய குறிப்புகள், மற்ற இரு முக்கிய இடங்களில் கிடைத்துள்ளன. எப்பிரேம் என்பவர் தேசியன் தயாரித்த நற்செய்தி ஒருங்கமைவு நூலுக்கு எழுதிய விளக்கவுரை நமக்குக் கிடைத்திருக்கிறது. இதில் தேசியனின் ஒருங்கமைவை நேராகப் பார்ப்பதைப் போலவே விளக்கங்கள் உள்ளன. அராபிய மொழியிலும் இந்நான்கு நற்செய்திகளின் ஒருங்கமைவு ஒன்று காணப்படுகிறது. இது தேசியனின் ஒருங்கமைவின் மொழிபெயர்ப்பைப் போலக் காட்சியளிக்கிறது. ஏனென்றால் அராபிய மொழிபெயர்ப்பு சீரியக்கு பெசிட்டா மொழிபெயர்ப்பை ஒத்திருக்கிறது.

## தேடுதல் (SEEK)

" மனிதன் எத்துணை முயன்றாலும், அவனால் அதை (கடவுளின் செயலை)க் கண்டுகொள்ள இயலாது" (திருவெளி 8:17); ஆனால், இயேசுவோ "தேடுவோர் கண்டடைகின்றனர்" என்று அறிவிக்கிறார் (மத் 7:8). அனைத்து மனித அங்கலாய்ப்பிற்குப் பின்னும் இறைவனைக் காணத் தேடுதல் உள்ளது. ஆனால், இத்தேடுதலானது அடிக்கடி தோல்வியடைவதால், சரிப்படுத்தப்பட வேண்டும். பின்னர், மனிதன் இறைவனைத் தேடும் முயற்சி, முதலில் இறைவன் மனிதனைத் தேடுகிறார் என்ற உண்மையில் வேரூன்றியுள்ளது என்பதைக் கண்டுபிடிக்கிறான்.

I. இறைவனைத் தேடுதல்: வழிபாட்டு முறையினின்று உள்ளார்ந்த தேடுதல் வரை:

மூலத்தில் யாவேயைத் தேடுதல் அல்லது அவரது வாக்கைத் தேடுவதென்பது, இறைவனுடன் ஆலோசிப்பது என்று பொருள் படும். ஒரு முக்கிய தீர்மானத்திற்கு முன்னர் (1 அர 22:5-8), ஒரு வழக்கைத் தீர்ப்பிட (யாத் 8:15-16), அல்லது ஓர் இடுக்கணான சூழ்நிலையில் வழிகாண (2 சாமு 21:1; 2 அர 3:11:8:8; 22:18), ஒருவன் சந்திப்பின் கூடாரத்திற்கு (யாத் 33:7) அல்லது கோவிலுக்குச் சென்று (உப 12:5), சாதாரணமாகக் குரு (எண் 5:11) அல்லது இறைவாக்கினர் மூலமாக ஆண்டவரிடம் ஆலோசனை கேட்கிறான் (யாத் 18:15; 1 அர 22:7; எண் 23:3).

இத்தகைய முறையானது மூடநம்பிக்கையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒருவனது

செயல்களில் ஆண்டவரை ஈடுபடுத்துவதாக இருக்கலாம். ஆனால், இது இறைவன்பால் கொண்ட அன்பின் தன்னலமற்ற எடுத்துக்காட்டாகவும் இருக்கலாம் என விவிலிய மொழி காட்டுகிறது. இறைவனைத் தேடுகின்ற மனிதன் "ஆண்டவரது இல்லத்தில் தன் வாழ்நாள் எல்லாம் குடியிருக்கவே" அதாவது, "ஆண்டவரது இனிய அழகைக் காணவும்", "அவரது முகத்தை நாடவும்" எதிர்பார்க்கிறான் (சங் 27:4.8). புனித இடத்தின் வழிபாட்டில் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமின்றி இடம் பெறுகிறது (சங் 24:6; செக் 8:21). ஆனால் வழிபாட்டினுடைய மகத்துவம் மற்றும் உணர்ச்சியில், பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேலன் "ஆண்டவருடைய நலன்களைத் காணத்" தேடுகிறான் (சங் 27:13). இறைவனுடைய பிரசன்னத்தில் இருக்க விரும்பும் இந்த ஆசையானது நாடு கடத்தப்பட்டவரைப் பாபிலோனிலிருந்து மீண்டும் கொண்டுவந்து (எரே 50:4), ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப அவர்களைத் தூண்டுகிறது (1 நாள் 22:19;28:8-9). இறுதியாக, இறைவனைத் தேடுவதென்பது முறையான வழிபாட்டை அளித்து, போலித் தெய்வங்களை அழிப்பதாகும் (உப 4:29). இஸ்ராயேலரின் அரசர்களைத் தீர்ப்பிடுவதில் நாளாகம ஆசிரியரின் விதிமுறை இதுவேயாகும் (2 நாள் 14:3; 31:21).

இறைவாக்கினர்கள் தொடர்ந்து போதிப்பது போன்று, போலித்தெய்வங்களை நிராகரித்தல் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். நீதி மற்றும் நேர்மைக்கான கவனமுள்ள தேடுதலின்றி இறைவனைத்தேடுதல், மெய்யானதாக இருக்கமுடியாது. "நம்மைத் தேடுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்; ஆனால், பெத்தேலைத் தேடாதீர்கள்" என்னும் சமன்பாட்டை ஆமோஸ் அமைக்கிறார் (ஆமோ 5:4-5). மேலும் "நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்;... தீமையை வெறுத்து, நன்மையை நாடுங்கள்; நகர்வாயிலில் நீதியை நிலைநாட்டுங்கள்' (ஆமோ 5:14-15). அவ்வாறே "நீதியை நீங்கள் விதைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில், ஆண்டவரைத் தேடுங்காலம் நெருங்கி வந்து விட்டது" என்று ஓசேயா வலியுறுத்துகிறார் (ஓசே 10:12; செப் 2:3). "ஆண்டவரைக் காண ஒருவன் அவரைத் தேடுவானாகில்", "கொடியவன் தன் வழிமுறைகளையும் தீயவன் தன் எண்ணங்களையும் விட்டுவிடுவது" அவசியமாகும் (எசா 55:6). ஒருவன் "தனது முழு இதயத்தோடும்" ஆண்டவரைத் தேட வேண்டும் (உப 4:29; எரே 29:13). இதை இயேசு மாற்றவில்லை. "அனைத்திற்கும் மேலாக இறைவனுடைய ஆட்சியையும் நீதியையும் நாடுங்கள்" (மத் 6:33).

II. உண்மையான மற்றும் போலியான தேடுதல்: இஸ்ராயேலிலும் இறைவனைத் தேடுவதில் சில வழி விலகிப்போதல்கள் இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களில் சிலர் போலித் தெய்வங்களை நோக்கித் திரும்பினர் (பாகால்; 2 அர 1:2தொ); மற்றவர்கள் தடைசெய்யப்பட்ட இடைநிலையினரைப் பயன்படுத்தினர் (மந்திரவாதிகள்: லேவி 19:31; இறந்தோர்; உப 18:11; இறந்தோரை வழிபடுவோர்: 1 சாமு 28:7; ஆவிகள்: எசா 8:19). பலர் தொடக்க உள்நிலை அமைப்பையே கொண்டிருக்கவில்லை.

"அவர்கள் நேர்மையானவற்றைச் செய்யும் மக்களைப் போல் உள்ளனர்; ஆனால், சட்டத்தை மறந்து விடுகின்றனர்" (எசா58:2). இறைவனைக் கண்டுபிடிக்க இவர்களில் எவராலும் இயலவில்லை. தங்களுடைய பாவங்களால் அவர்கள் அனைவரும் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டனர் (எசா 29:2).

இறைவனுக்கான உண்மையான தேடுதலானது நேர்மையான உள்ளம் (ஞான 1:1), எளிமை, தாழ்ச்சி, மற்றும் ஏழ்மை (செப் 2:3; சங் 22:27), நொறுங்கிய இதயம் மற்றும் தாழ்மையான சிந்தனை (தானி 3:39 தொ) ஆகியவற்றில் ஏற்படுகிறது. பின்னர், "அவரைத் தேடுவோருக்கு நல்லவராக உள்ள இறைவன் (புல 3:25) அவர்கள் தம்மைக் கண்டடைய அனுமதிக்கிறார் (எரே 29:14). "இறைவனைத் தேடும் எளியோர் மகிழ்ச்சி அடைவர்" (சங் 69:32).

இதயங்களுடைய மறைவான எண்ணங்களை வெளிப்படுத்துகிற இயேசு கிறிஸ்து (லூக் 2:35), இறைவனுக்கான உண்மையான மற்றும் போலித் தேடுதலுக்கிடையே ஒரு பிரிவை ஏற்படுத்துகிறார். அவர்பால் மக்கள் கொள்ளும் மனப்பான்மையானது (யோவா 8:21) உண்மையான மற்றும் போலித் தேடுதலுக் கிடையிலான வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. அதுமுதல் இறைவனைத் தேடுவதற்கும், இயேசுவைத் தேடுவதற்கும் இடையே ஓர் இணைத்தன்மை உள்ளது. "கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும், அவரைப்பற்றிக் கொள்ளவும்" (பிலி 3:8.12), தனக்குரிய நீதியை நிலைநாட்டத் தேடுவதை விட்டுவிட்டு (உரோ 10:3), விசுவாசத்தில் அவரால் பற்றிக்கொள்ளப்படத் தன்னை விட்டுவிடுவது அவசியமாக உள்ளது (பிலி 3:12). இயேசுவைத் தேடலானது, மேலுலகிலிருந்து வருகின்ற பொருட்களுக்கான தேடலில் (கொலோ 3:1) அவரது பிரிவிற்குப் பின்பும் தொடரப்பட வேண்டும் (யோவா 13:33).

III. மனிதனைத் தேடும் இறைவன்: இறைவனைத் தேடுவதென்பது, அவர் முதலில் நம்மை அன்பு செய்தார் (1 யோவா 4:19), மற்றும் அவர் நம்மை நாடினார், தனது மகனிடம் நம்மை நடத்திச்செல்ல அவர் நம்மை ஈர்க்கிறார் என்பதைக் கண்டுபிடித்தலாகும் (யோவா 6:44). இறைவனின் அருளால் எடுக்கப்பட்ட இந்த முன் முயற்சி, பிழிப்புடன் காக்கப்பட்ட மேலாண்மையான உரிமையன்று; ஏனெனில், இந்த முன்முயற்சி அன்பைச் சார்ந்தது. மற்றும் மனிதனுக்கான தேடலானது இறை இதயத்தின் ஆழத்தினின்று எழுகின்ற இயக்கம் என்பதை முழு விவிலியமும் காட்டுகின்றது. இஸ்ராயேல் இறைவனை மறந்துவிட்டு மற்றக் காதலரின் பின்னால் ஓடும்போது, தனது பிரமாணிக்கமற்ற துணைவியை நயமாகக் கவர்ந்திழுத்து "நெஞ்சுருக அவளுடன் பேச" இறைவன் திட்டமிடுகிறார் (ஓசே 2:15-16). சிதறிப்போன ஆடுகளை இஸ்ராயேலின் எந்த மேய்ப்பனும் தேடிச் செல்லாதபோது (எசே 34:5-6), மந்தையை ஒன்றுசேர்த்து, "காணாமல் போன ஆட்டைத் தேடுவதற்கான" தமது திட்டத்தை இறைவனே அறிவிக்கிறார் (34:12.16). பிரமாணிக்க மின்மையின் நேரத்திலேயே தமது தேடுதலில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள இறைவனைப் பற்றி உன்னத சங்கீதம் பாடுகிறது (உ.ச. 3:1-4; 5:6; 6:3).

இந்த ஆர்வத்தின் பரப்பை இறைமகன் வெளிப்படுத்தியுள்ளார். "இழந்து போனதைத் தேடி மீட்கவும்" (லூக் 19:10), காணாமல்போன தனி ஆட்டைத் தேடிச்செல்லவும் மனுமகன் வந்துள்ளார் (மத் 18:12; லூக் 15:4-10). தம்முடையவர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது "நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பதற்காக" (யோவா 14:3), அவர்களைத் தேடி, தம்முடன் கொண்டு செல்ல, தாம் மீண்டும் வரவிருக்கின்ற தருணத்தைப்பற்றி இயேசு எண்ணுகின்றார்.

**தேபேசு (THEBEZ)**

தேபேசு நகரம் செக்கேமிலிருந்து 20 கி.மீ. வடகிழக்கில் உள்ள துபாஸ் நகரமே என்பது பலரின் கருத்து. இந்நகரை ஒட்டிச் செக்கேம் மற்றும் தோத்தான் ஆகிய இடங்களிலிருந்து வரும் சாலைகள் இங்குக் கூடி பள்ளத்தாக்குக்குச் செல்லுகின்றன. இந்த இடம் பாரா ஓடையிலுள்ள நப்லூசுக்குக் கிழக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்நகரை நீதிபதிகள் காலத்தில் இருந்த அபிமெலக்கு தாக்கிக் கைப்பற்றியபோது ஒரு பெண் மதில் மேலிருந்து இயந்திரக் கல்லை இவனது தலைமேல் தூக்கிப் போட்டதால் இறந்தான் (நீதி 9:50; 2 சாமு 11:21). இந்த நகரம், செக்கேமை அபிமெலக்கு தாக்கிய நிகழ்ச்சியோடு கூறப்படுவதால், முதலில் இந்நகரம் அபிமெலக்கின் ஆட்சியில் இருந்து, பின்னர்ச் செக்கேமோடு சேர்ந்து கொண்டு புரட்சியில் இறங்கியிருக்க வேண்டும். அபிமெலக்கின் மரணம் ஒரு பெண்கையில் ஒரு வீரன் அடையும் இழிவான மரணத்திற்கு முதுமொழியாயிற்று (2 சாமு 11:21).

**தேமனி (TEMENI - வலப்பக்கம், தெற்குப்பக்கம்)**

யூதாவைச் சேர்ந்த அஸ்கூர், நாரா ஆகியோரின் புதல்வன் (1 நாள் 4:6). இப்பெயர் "தெற்கைச் சேர்ந்த மக்கள்" என்று பொருள்படும் இனப்பெயராகத் தோன்றுகிறது.

**தேமா (DEMAS - புகழ்பெற்ற)**

1. பவுலோடு சேர்ந்து வேலை செய்தவர் பவுல் பிலமோனுக்கு, எழுதிய திருமுகத்தில் (பில 24) தேமாவையும் மற்றச் சீடர்களையும், "தன் உடன் ஊழியர்கள்" என்று குறிப்பிடுகிறார். இவர்களும் பவுலோடு சேர்ந்து வாழ்த்து அனுப்புகின்றனர். கொலே 4:14-இல் தேமாவும் வாழ்த்து அனுப்புவதாகக் கூறப்பட்டுள்ளது. தேமா "உலகப்பற்று மேற்கொண்டதால் தம்மைவிட்டுத் தெசலோனிக்கேவுக்குப் போய் விட்டதால்" பவுல் திமொத்தேயுவைத் தம்மோடு வேலை செய்ய அழைக்கிறார் (2 திமொ 4:10). 3 யோவா 12-இல் வரும் தெமேத்திரியுவைத் தேமாவாக அடையாளம் காட்டுவர் சிலர்.

2. திசிமாசின் மற்றொரு பெயர்.

**தேமா (TEMA - பாலைவனம்)**

சாராளின் பணிப்பெண்ணான ஆகார் மூலமாக ஆபிரகாமுக்குப் பிறந்த இசுமயேலின் வழிவந்தவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டனர் (ஆதி 36:24; 1 நாள் 1:45). மேலும் இசுமயேலுக்குத் தேமா என்ற பெயரில் ஒரு மகனும் உண்டு (ஆதி 25:15; 1 நாள் 1:30). அரேபியாவிலிருந்து ஓர் இடத்திற்கும், ஓர் இனத்திற்கும் இப்பெயர் இருந்தது. இரு பெரும் சாலைகளுக்கு மத்தியில் இருந்ததால் வணிகர்களின் தங்குமிடமாகவும் இருந்திருக்கிறது. இங்கிருந்து பாரசீக வளைகுடாவுக்கும், தமஸ்குவுக்கும் செல்லும் பாதைகள் சந்தித்துப் பிரிகின்றன. இஃது ஒரு பாலைவனச் சோலை போல் அமைந்துள்ளது. இவ்வழியாக வரும் வணிகர்களைப் பற்றி யோபுபேசுகிறார் (6:19). எசாயா இறைவாக்கினரும் இதனைக் குறித்துப் பேசுகிறார் (எசா 21: 14).

அசீரிய அரசன் மூன்றாம் திகலத்துபிலேசர் இதனை வெற்றி கொண்டபோது கப்பத்தைச் செலுத்தி, தன்னை அழிவிலிருந்து காத்துக் கொண்டது. நெபுகத்னேசரின் வருகையை எரேமியா உரைக்கின்றார் (எரே 25:23; காண்க. 49:28-23). பாபிலோனியாவின் கடைசி அரசனான நபோனித்து, இந்நகரின் மீது நாட்டம் கொண்டு ஒருபடையெடுப்பு நடத்தி இங்கிருந்த அனைவரையும் கொன்றுவிட்டுப் புதிதாக மக்களைக் குடியேற்றினான். தனது மகனைப் பாபிலோனியாவில் தனக்குப் பதிலாக வைத்துவிட்டு அவன் இங்கேயே சுமார் 10 ஆண்டுகள் தங்கிவிட்டான். இதற்கு இரு காரணங்கள் கூறுவர். 1) இவ்விடம் எகிப்தோடு தொடர்பு கொள்ள வசதியாயிருந்தது. ஏனெனில் வளர்ந்து வரும் பாரசீகத்தை எதிர்க்க அவனுக்குத் துணை தேவைப்பட்டது. 2) பாபிலோனியக் கோவில் குருமார்கள் மன்னனோடு சரியான முறையில் ஒத்துழைக்காததால் அக்கோவிலுக்குப் போட்டியாக இங்கு ஒரு கோவிலைக் கட்டுவது அவன் நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் இரண்டும் அவனுக்கு வெற்றியைத் தரவில்லை. இறுதியில் சைரஸ் என்ற பாரசீக மன்னன் கி.மு. 540-இல் இதனைக் கைப்பற்றினான்.

**தேமானியர் (TEMANITE)**

1. தேமான் இனத்தவர் குடியேறிக் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த எவரையும் இவ்வாறு அழைப்பர் (ஆதி 36:24; 1 நாள் 1:45).

2. யோபுவின் நண்பனான எலீபாசின் அடைமொழியாகும் (யோபு 2:11). இஃது ஏதோமிலுள்ள தேமானைக் குறிப்பதாகக் கருதப்படும். ஆனால் சூழ்நிலை அராபியாவிலுள்ள தேமாவைச் சுட்டுவதாக உள்ளது (காண்க. யோபு 6:19).

**தேமான் (TEMAN - வலப்பக்கம், தெற்குப்பக்கம்)**

ஏதோமில் இருந்த ஓர் இடத்தின் பெயரும் பகுதியும் ஆகும் (எரே 49:7; எசே 25:13; ஆமோ 1:12; ஒப 9). இது பொதுவாக, தெதானோடு இணைத்தே பேசப்படும். ஞானிகளுக்குப் பெயர் பெற்ற நகரம். இங்கிருந்து யாவே வருவதாக

அபாகூக்கு தனது நூலில் 3:3-இல் கூறியுள்ளார். தலைமுறை அட்டவணையில் ஏதோமியரின் குலத்தந்தையான ஏசாவின் வழிவந்தவர் என்றும், இவனது தந்தை எலீபாசு என்றும் கூறப்பட்டுள்ளது (ஆதி 36:11.15.42; 1 நாள் 36:53). பொதுவாக இவ்வார்த்தையைப் பழைய ஏற்பாட்டில் 'தெற்கு' என்ற திசையைக் குறிக்கப் பயன்படுத்தினர்.

### தேர், இரதம் (CHARIOT)

கி.மு. 1700 - 1500-இல் கைக்சோஸ் இனத்தவரால் குதிரை இழுத்துச் செல்லும் தேர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மெசபொத்தாமியா, எகிப்து, சீரியா போன்ற நாடுகளில் இதை உடனே போர்க்கருவியாகப் பயன்படுத்தினார்கள். அரசர்களும், பணக்காரர்களும் மட்டுமே தேர்களை வைத்திருந்தனர். இரதம் பயணம் செய்யவும் பயன்படுத்தப்பட்டது. அசீரிய மன்னர்கள் வேட்டையாட இரதத்தைப் பயன்படுத்தினார்கள். ஒரு சாதாரண இரதத்தின் அச்சு 44-45 அங்குலம் அகலமுடையதாக இருந்தது. இரதத்தின் பின்முனை அச்சு மேல் தங்கி அமைந்திருந்தது. முதலில் எகிப்தில் நான்கு ஆரைக்கால் சக்கரங்கள் பயன்பட்டன. பிற்காலத்தில் எகிப்திலும், அசீரியாவிலும், ஆறு ஆரைக்கால் சக்கரங்கள் கொண்ட இரதங்கள் செய்யப்பட்டன. கி.மு. 800-இல் ஆசீரியர்கள் எட்டு ஆரைக்கால் சக்கர இரதத்தைக் கண்டுபிடித்தார்கள். எகிப்திய இரதங்கள் உறுதியற்ற மரங்களால் கட்டப்பட்டதால் நீடித்து உழைக்கவில்லை. ஆனால் வேகமாகச் செயல்பட்டன. பொதுவாக இரதத்தில் இரண்டு குதிரைகளே பூட்டப்படும். சில நேரங்களில் ஒன்று, மூன்று, நான்கு குதிரைகளும் பூட்டப்படுவது உண்டு. பொதுவாக ஒருதேரில் இருவர் செல்வர். ஒருவர் தேரோட்டி; மற்றவர் போர் தொடுப்பவர். அரசனின் தேரோட்டி என்பது மிகப்பெரிய பட்டமாக எகிப்தில் கருதப்பட்டது. இத்தியர்களும் அவர்களுக்குப்பின் அசீரியர்களும் கேடயம் தாங்கிய ஒருவனையும் தேரில் சேர்த்து, மூவர் செல்ல ஆரம்பித்தார்கள். அசீரியாவிலும், அரசனின் தேரோட்டியும், மூன்றாவது நபரும் பெரிய பதவியில் இருப்பதாகக் கருதப்பட்டார்கள். போர்ச் சூழ்ச்சிக்கு ஏற்றவாறு தேர்கள் அணிவகுத்துச் செலுத்தப்பட்டன. கோமேர் காலத்து இரதங்கள் எகிப்திய, அசீரிய இரதங்களை விட மாறுபட்டவை அல்ல. கிரேக்கர்கள் 6-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் இரதங்களைப் பயன்படுத்தவில்லை. ஏனெனில் இக்காலத்தில் காலாட்படைச் சூழ்ச்சிகளும், குதிரைப்படைகளும் வளர்ச்சியடைந்திருந்தன. கிரேக்கர்கள், பாரசீகப் பாதிப்பால் 4-ஆம் நூற்றாண்டில் இரதங்களை மீண்டும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். மக்கபேயப் போர்களில் செலூக்கியப்படைகள் இரதங்களைப் பயன்படுத்தின. உரோமையர்கள் பந்தயங்களிலும், போக்குவரத்திலும் மட்டுமே இரதங்களைப் பயன்படுத்தினார்கள்; போர் செய்யப் பயன்படுத்தவில்லை.

எபிரேயர்களை சாலமோன் காலத்தில் இரதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். அவர்கள் மூவர் இருந்து செல்லக்கூடிய தேர்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது (2 அர 7:2.17.19; 10:25; 15:25). இஃது ஆடம்பரமாகவும், பகட்டாகவும் இருந்ததால் எதிர்ப்பை உண்டாக்கியது. மேலும் பணக்கார உயர்குலத்தாரோடு தொடர்புடையதாலும் மக்கள் இதை வெறுத்தனர். கானானியர்களின் இரும்புத் தேர்கள் எபிரேயர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தன (யோசு 17:16-18; நீதி 4:3தொ). ஆனால் எபிரேயர்கள் அவர்களை வெற்றி கொள்வதற்கான தந்திரங்களைத் தெரிந்து வைத்திருந்தனர். தாபோரில் நடந்த போரில் சீசரா தோல்வி அடைந்ததற்குக் காரணம், பெரும் மழையால் இரதங்கள் சேற்றில் புதைந்துபோனதேயாகும் (நீதி 5:20தொ). கானானியர்களுக்கு எதிரான இந்த வெற்றியானது அவர்களுக்கு மீண்டும் இந்த இரதங்களின் மேல் இருந்த நம்பிக்கையை இழக்கவைத்தது. யோசு 11:9-இல் அவர்கள் கைப்பற்றிய குதிரைகளின் பின்னங்கால் நரம்புகளை அறுத்து, தேர்களை எரித்ததாகக் காணப்படுகிறது. என்றாலும் பெலிஸ்தியர்கள் மட்டும் எபிரேயருக்கு எதிராக இந்தத்

தேர்ப்படையைத் திறமையாகப் பயன்படுத்தி வெற்றி கண்டார்கள் (1 சாமு 13:5). ஆனால் தாவீது பெலிஸ்தியரிடமிருந்து கைப்பற்றிய குதிரைகளில் 100 இரதம் இழுக்கத் தேவையான குதிரைகளைத் தவிர்த்து மற்றவற்றின் பின்னங்கால் நரம்புகளை அறுத்ததாகக் கூறப்படுகிறது (2 சாமு 8:4). சாமுவேல் இறை வாக்கினரின் அரசாட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் முதல் இடம் பெறுவது–அரசன் தேர்களையும் குதிரைப்படைகளையும் வைத்துக்கொள்வான் என்பதாகும் (1 சாமு 8:11). அப்சலோம் (2 சாமு 15:1), அதோனியா (1 அர 1:5) ஆகியோர் பகட்டு மற்றும் அரசப் பேராசை ஆகியவற்றின் அடையாளமாகப் பயன்படுத்தினர். தேர்ப்படை நகர்களில் சாலமோன் 1400 தேர்களை நிறுத்தி வைத்திருந்தார் (1 அர 10:26). அத்தகைய நகர்களில் மெகிதோவும் ஒன்று. இங்கு 450 குதிரைகளை நிறுத்திவைப்பதற்கான குதிரை இலாயங்கள் இருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இஸ்ராயேலின் அரசர்கள் பெரிய தேர்ப்படைகளைக் கொண்டிருந்தனர். கி.மு.853-இல் கார்கர் போரில் ஆகாபு பயன்படுத்திய 2,000 தேர்களைக்கொண்ட தேர்ப்படை, மிகப்பெரிய படை என்று மூன்றாம் சல்மனேசரின் குறிப்புக்கள் கூறுகின்றன. உப ஆகமம், மன்னர்கள் அதிக குதிரைகளை வாங்கக் கூடாது என்று எச்சரிக்கிறது (உப 17:16). யூதாவில் எசாயா இறைவாக்கினர் காலத்தில் கணக்கிலடங்காத் தேர்கள் இருந்தன (எசா 2:7). எசாயா இறைவாக்கினர், யாவே மீது நம்பிக்கை வைப்பதைவிட, தேர்களில் மக்கள் நம்பிக்கை வைப்பதைக் கண்டிக்கிறார் (30:16; 31:1). இக்கண்டனம் அசீரியத் தூதுவனின் ஏளனப்பேச்சோடு (36:8-9) ஒத்துப்போகிறது. ஆனால் யாவே தேரில் வலம் வருவது, இறை மகிமைக்காட்சிகளில் விவரிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தீனத்தில் தேர்கள் வழக்கில் இல்லை. அ.ப. 8:28-40-இல் மட்டுமே ஒரே ஒரு தடவை இரதத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரத்தின் உரிமையாளன் ஒரு யூதன் அல்லன்; மாறாக எத்தியோப்பியன் ஆவான்.

உருவகமாக, எலியா (2 அர 2:12) எலிசா (13:14) ஆகிய இருவரும் "இஸ்ராயேலின் தேரே! அந்தத் தேரின் பாகனே!" என்றழைக்கப்படுகின்றனர். இஃது அவர்களின் இறைவாக்குரைத்தலின் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது. இருவரும் நெருப்புத் தேரால் பிரிக்கப்பட்டனர் (2:11). தோத்தானில் நெருப்புக் குதிரைகளும் தேர்களும் எலிசாவைச் சீரியர்களிடமிருந்து காப்பாற்றின (6:5-19). இது போலவே இஸ்ராயேலின் வரலாற்றில், இறைவனுடைய வலிய செயல்களுக்குத் தேர் அடையாளமாக உள்ளது (சங் 68:17; அப 3:8). செக்கரியாவின் காட்சியில் விவரிக்கப்படும் விண்ணகத் தேர்கள் இறைவனுடைய தூதர்களைக் குறிக்கின்றன (செக் 6:1-8). இவர்கள் மெசியா காலத்தைத் தொடங்கி வைக்கும் தூதர்களாக இருக்கலாம்.

## தேர்ந்தெடுத்தல் (ELECTION)

I. மனிதன் மட்டில் இறைவன் கொண்டிருந்த திட்டம் மற்றும் அவரது திருவுளம் ஆகியவை பற்றிய எதையும் தேர்ந்தெடுத்தல் என்ற கருத்து இன்றிப் புரிந்துகொள்வது இயலாது. ஆனால், பாவியானவன் இறைவனிடத்து மாற்றமுடியாத அவநம்பிக்கையும் தன் சகோதரர்களிடத்துப் பொறாமையும் கொண்டுள்ளான். இத்தகைய நிலையில் அவனால் இறைவனின் அருளையும் தாராள குணத்தையும் ஏற்றுக்கொள்ள எப்போதும் விருப்பமில்லாதவனாக இருக்கிறான். அதே நேரத்தில் மற்றவர்கள் இறைவனது கொடைகளை ஏற்றுப்பயன் பெறுவதை அவனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை (மத் 20:15). ஒருவேளை அவனே அவற்றைப் பெற்றுக் கொண்டு பயன் அடைந்தாலும், தானே அவற்றிற்கு அளித்த மதிப்பையும், பொருளையும் மட்டும் அவை கொண்டிருப்பதாக நினைத்துக்கொள்கிறான். தன் சொந்தச் சகோதரனுக்கு எதிராகக் காயீன் கொண்ட காழ்ப்புணர்ச்சி மிக்க கடுஞ்சினம் ஒருபுறம் (ஆதி 4:4தொ); தன் இரத்த உறவினரான சகோதரர்களுக்காகப் பெரும் துயரமும் இடைவிடாத வேதனையும் அனுபவித்து (உரோ

9:2தொ), இறைவனது அளப்பரிய ஞானம் மற்றும் அறிவுக்காகவும், அறிவுக்கு எட்டாத அவருடைய திட்டங்களுக்காகவும் நன்றி கூறுவதில் (11:33) அந்த வேதனையை வெளிக்கொட்டுகிற பவுலின் தியாகம் மறுபுறம்; இந்த இரண்டுக்குமிடையே பாவத்திலிருந்து விசுவாசத்திற்கு இட்டுச்செல்லும் முழுவழி அமைந்துள்ளது. இதுதான் மீட்பின் முழுமை; மறைநூலின் நிறைவு ஆகும்.

II பழைய ஏற்பாடு:

1. தேர்ந்தடுத்தலின் அனுபவம்:

**அ. தொடக்க உண்மை:** தேர்ந்தெடுத்தலின் அனுபவம் என்பது பிறமக்களின் ஊழிலிருந்து வேறுபட்ட தனித்தன்மையுடைய நிலைக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்படுதலின் அனுபவமாகும். இந்தத் தனித்தன்மையுடைய நிலை சூழ்நிலைகளின் குருட்டுத்தனமான சங்கிலித் தொடராலோ, மனிதவெற்றிகளின் தொடராலோ ஏற்படுவதன்று. அத்தகைய நிலை யாவேயே வலிய வந்து மனிதவாழ்வில் புகுந்து செயலாற்றும் மேலாண்மை மிக்க முன் முயற்சியாகும். தேர்ந்தெடுத்தலைக் குறிக்கும் பாரம்பரியச் சொற்றொகுதிகள் (பாகார் என்ற சொல்லும் அதைச்சார்ந்த சொற்களும்) ஓரளவு பிற்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். ஆனால் இஸ்ராயேல் தாங்கள் யாவேயின் மக்களாக இருப்பதை உணர்ந்த தொடக்கத்திலிருந்தே, மேற்கூறிய துல்லியமான மற்றும் சிறப்புப்பொருளில், தேர்ந்தெடுத்தலில் இறைவனது செயலை அனுபவித்தனர். இந்த அனுபவ உணர்வை உடன்படிக்கையினின்று பிரிக்க முடியாது. அதே நேரத்தில் (பலரில் ஒரே ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட) தனித்தன்மையுடையது; (இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட) உள்ளார்ந்த இரகசியமுடையது. இவ்வாறு தேர்ந்தெடுத்தல் அனுபவம் உடன்படிக்கைக்குச் சமயக் கருத்தாழத்தையும் மறைபொருள் பருமனையும் கொடுக்கிறது.

**ஆ. முதல் அறிக்கைகள்:** இறைத்தேர்தல் பற்றிய முதல் அறிக்கைகள் இஸ்ராயேலின் விசுவாசம் பற்றிய தொன்மைக்காலக் கூற்றுகளில் காணப்படுகின்றன. முதற்கனிகளை ஒப்புக்கொடுத்தல் சடங்குபற்றி விவரிக்கும் உப 26:1-11-இல் அவர்களின் மிகப்பழமையான விசுவாச அறிக்கை காணப்படுகிறது. அதன் சாரம், எபிரேயர்களை எகிப்திலிருந்து ஆசிர் நிறைந்த நாட்டிற்கு அழைத்துவந்த இறைவனது முன்முயற்சியாகும். யோசுவாவின் தலைமையில் செக்கேமில் செய்யப்பட்ட உடன்படிக்கை இஸ்ராயேலின் வரலாற்றை ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்த காலம்வரை பின்னோக்கி இட்டுச் செல்கிறது (யோசு 24:3). இந்த முன் முயற்சிக்கு "யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள்" (24:15) என்பது ஒன்றே பதிலாகும் என்பதை வலியுறுத்துகிறது. சீனாய் மலையில் நடந்த உடன்படிக்கையின் வாய்பாடுகளான "எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும்" (யாத் 24:9), மற்றும் "நீங்களே எல்லா மக்களிணங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்" (19:5) போன்றவை பிற்காலத்தைச் சேர்ந்தவையாயினும், அவை விளம்பும் விசுவாசம் பிலயாமின் இறைவாக்குகளில் ஏற்கெனவே காணப்படுகிறது. "கடவுள் சபிக்காதவனை நான் எப்படிச் சபிப்பேன்?... இதோ தனியாக வாழ்கின்றதொரு மக்கள் கூட்டம்! இது வேற்றினத்தாரோடு தன்னையும் ஓர் இனமாய்க் கொள்ளவில்லை" (எண் 23:8தொ). மேலும் "இஸ்ராயேலின் கடவுளாகிய யாவேயின்" வியத்தகு செயல்களையும் (நீதி 5:3.5.11) "யாவேக்காகத்" தங்களையே அளித்த போராளிகளின் தாராளத் தன்மையையும் (5:2.9.13.23) மாறி மாறிப் புகழும் தெபோராவின் பாடலிலும் அதே விசுவாசத்தைக் காணலாம்.

**இ. தேர்ந்தெடுத்தல் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும்:** இத்தகைய அறிக்கைகள் ஒரு வரலாற்றை நினைவுகூர்கின்றன; ஒரு தனித்தன்மையுடைய திட்டத்தைப் பாடுகின்றன. மக்களைத் தேர்ந்தெடுத்தல் முந்தைய தேர்தல்களடங்கிய தொடரால் தயாரிக்கப்படுகிறது. ஒன்று மற்றதன் அடிப்படையாக அமைகிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனி நபர்களின் தேர்வில் தொடர்ந்து வளர்ச்சியடைகிறது.

1) ஆபிரகாமுக்கு முந்திய மனித வரலாறு இறைவனுடைய முன் ஆதரவையும் (ஆபேல்; ஆதி 4:4), சலுகையையும் (ஏனோக்கு; 5:24) "இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன்" (7:1) என்று இறைவனே கூறும் நோவாவின் தனித்தன்மையுடைய வாழ்வையும் சேமுக்கு அளிக்கப்பட்ட ஆசீரையும் கொண்டுள்ளது. ஆயினும் தேர்ந்தெடுத்தலின் தன்மைகள் இவற்றில் முழுதும் காணப்படவில்லை. ஆனால் வரலாற்றுப்போக்கு, தேர்ந்தெடுத்தலை முன்கருத்தாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மனித இனம் பாவத்திற்கு இரையானது; அதே நேரத்தில் விண்ணகம் அடையக் கனவு காண்கிறது. இத்தகைய மனிதத் தலைமுறைகளைக் காணும் இறைவன் இவர்களிலிருந்து ஒரு காலத்தில் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து அவர் வழியாக "மண்ணின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிர் பெறும்படி" (12:3) வரலாறு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது.

2) முதுபெரும் தந்தையர்களுக்கு இறைவன் தமது தேர்ந்தெடுத்தல் திட்டத்தின் தொடர்ச்சியைக் காட்டுகிறார். அவர் ஓர் இனத்தைத் தேர்ந்தெடுக்கிறார். அந்தத் தேர்தலை உறுதிப்படுத்துகிறார். ஆனால் இந்த இனத்தில் அவரது ஆசிரைப் பெறுபவர்கள் எலியேசர், இசுமயேல், ஏசா, ரூபன் முதலிய இயற்கையான வழித்தோன்றல்கள் அல்லர். ஒவ்வொரு முறையும் தம் விருப்பத்திற்கேற்ப ஈசாக்கு (ஆதி 18:19), யாக்கோபு, யூதா முதலியோரைத் தேர்ந்தெடுக்கிறார். ஆபிரகாமைத் தொடக்கத்தில் தேர்ந்தெடுத்ததின் சாதாரணமான விளைவுகளுக்கும் இறைவனின் நேரடிச்செயல்களுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடான எதிர்நிலையைத் தனது முக்கிய உட்கருத்தாகக் கொண்டுள்ளது ஆதியாகமம். இறைவனது செயல்கள் மனிதனது திட்டங்களைத் தலைகீழாக மாற்றுகின்றன. இவ்வாறு, அதே நேரத்தில், இறைவன் தமது வாக்குறுதிகளுக்கும் தமது தேர்ந்தெடுத்தலின் மேலாண்மை மிக்க முதன்மைக்கும் பிரமாணிக்கமாக உள்ளார்.

மேற்கூறிய தேர்ந்தெடுத்தல் பற்றிய விவரிப்புகள் எல்லாவற்றிலும் ஒரு நிலையான பண்பைக் காணலாம். மனிதக் கண்ணோட்டத்தில், ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சலுகை அது மற்றவர்களுக்கு மறுக்கப்படுவதாகக் கருதப்படும். இதற்கு "உன் சகோதரர்கள் உனக்கு அடிமையாக இருப்பார்களாக" என்ற கூற்று பல்லவிபோல் வருவது (9:25; 27:29.40) சான்றாகும். ஆனால் இறைவனது வாக்குறுதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்மேல் இறைவனது வாக்கு அவர்களை உலகமனைத்துக்கும் ஆசிராக்குகிறது (12:3; 22:18; 26:4; 28:14).

3) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுள், இறைவன் சிலரைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்குக் காலவரையுடைய அல்லது நிலையான ஒரு பணியைக் கொடுக்கிறார். தனித்தன்மையுடையவர்களாக்கி இவர்களை அர்ப்பணிக்கிற இந்தத் தேர்வு, இஸ்ராயேல் தேர்ந்தெடுக்கப்பட்டதின் பண்புகளைக் கொண்டுள்ளது. இறைவாக்கினர்களைப் பொருத்தவரையில் அவர்களை அழைப்பதின் வழியாக இந்தத் தேர்ந்தெடுத்தல் நிகழ்கிறது. இந்த அழைப்பு இறைவனது நேரடி வேண்டுகோளாகும். இஃது அவர்களுக்குப் புதியதொரு வாழ்க்கை முறையை அளித்து அதற்குரிய பதிலைக் கோருகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு மோசே ஆவார் (யாத் 3; காண்க சங் 106:23; தெரிந்து கொள்ளப்பட்ட மோசே). ஆனால் ஆமோஸ் (ஆமோ 7:15), எசாயா (எசா 8:11), எரேமியா (எரே 15:16தொ; 20:7) ஆகியவர்களும் அதே அனுபவம் பெற்றனர். அவர்கள் ஆட்கொள்ளப்பட்டு, சாதாரண வாழ்விலிருந்தும் மக்கள் சமூகத்திலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டு இறைவனுடைய செய்தியை அறிவிக்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு செய்வதால் அவர்கள் தம் சொந்த மக்களின் பகைமையையும் பெறுகின்றனர்.

சவுல் (1 சாமு 10:24), தாவீது முதலிய அரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பாக, சவுல் நிராகரிக்கப்பட்ட அதே நேரத்தில், தாவீது யாவேயால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (16:1).

அவரோடு அவரது சந்ததியினரும் எக்காலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படலாம்; ஆனால் நிராகரிக்கப்பட மாட்டார்கள் (7:4தொ). இப்போது அழைப்புக் கேட்கப்படுவதில்லை. இறைவனது தேர்வு இறைவாக்கினர் வழியாக அரசர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது (10:1). இறைவாக்கினர்கள் இத்தேர்வை இறைவார்த்தையிலிருந்து அறிகின்றனர் (16:6-12; ஆகா 2:23). பெரும்பாலும் நிகழ்ச்சிகளின் சூழ்நிலைகளால், இறைவன் தாம் தேர்ந்தெடுத்த அரசனை அரியணை ஏறச்செய்கிறார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, அதோனியாவுக்குப் பதிலாகச் சாலமோனைத் தேர்ந்தெடுத்ததாகும் (1 அர 2:15). அரச மதிப்பினாலும் அபிடேகத்தின் புனிதப் பண்பாலும் மட்டும் தேர்ந்தெடுத்தல் அமைந்து விடுவதில்லை (உப 17:15). யாவேயின் அபிடேகம் பெற்றவரின் தேர்வு எப்போதும் இறைவனுடைய உடன்படிக்கையோடு இணைந்தது என்பதாலும் (சங் 89:4), இஸ்ராயேல் விசுவாசிகளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்குப் பிரமாணிக்கமாய்க் காப்பதுதான் அரசனுடைய அடிப்படையான அலுவலாகும் என்பதாலும் தேர்ந்தெடுத்தல் நிகழ்கிறது.

குருக்களும் லேவியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணி "கடவுளாகிய ஆண்டவர் திருமுன் என்றென்றும் ஊழியம் செய்வதாகும்" (உப 18:5). இதற்காக அவர்கள் மக்களிடமிருந்து தனித்து வாழவேண்டும் (10:8). இந்தத் திருநிலைப்படுத்தலின் தொடக்கத்தில் இறைவனே முன்முயற்சி எடுக்கிறார். இறைவன் தமக்கு உரிமையாக உள்ள தலைப்பேறு அனைத்திற்கும் பதிலாக லேவியர்களைத் தேர்ந்துகொண்டார் (எண் 8:16தொ). இஃது அவரது மேலாண்மை குருட்டுப்போக்கான, அக்கறையற்ற ஆதிக்கம் அன்று; மாறாக, பங்காளிகளின் மேன்மையில் அக்கறை கொண்டது என்றும், அது மகிழ்ச்சி மிக்க விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் காட்டுகிறது. அவரது பங்காகவும் உரிமைச் சொத்தாகவும் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்கள் அவரைத் தங்கள் பங்காகவும் உரிமைச் சொத்தாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும் (எண் 18:20; சங் 16:5தொ). குருக்கள், லேவியர் இஸ்ராயேல் ஆகியோரின் - தேர்ந்தெடுத்தலில் ஒரு தொடர்ச்சியுள்ளது என்றால், அது யாவே தமது மக்களை முழுவதும் "குருக்களின் அரசராகவும் தூய மக்களினமாகவும்" இருக்கத் (யாத் 19:6) தேர்ந்தெடுத்துள்ளார் என்பதேயாகும்.

தமது மக்களைத் தேர்ந்துகொண்டதுபோல், யாவே இப்பூமியையும், தமக்கே உரியதெனக் குறிப்பிட்ட புனித இடங்களையும் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனெனில், அவர், கானானியப் பாகால் தேவதையைப் போன்று கட்டுப்பட்டு நீருற்றுகள், மலை போன்ற இடங்களில் மட்டும் செயலாற்றுபவர் அல்லர். அவர் "யூதாவின் குலத்தைத் தேர்ந்துகொண்டதுபோல்" தமக்கு விருப்பமான சீயோன் மலையை அவர் தேர்ந்துகொண்டார் (சங் 78:68). "அதையே தம் உறைவிடமாகத்" தேர்ந்துகொண்டார் (68:17; 132:13). எல்லாவற்றிற்கும் மேலாக எருசலேம் ஆலயத்தை, "தம் பெயர் விளங்கும்" உறைவிடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் (உப 12:5; 16:7-16).

## 2. தேர்ந்தெடுத்தலின் உட்பொருள்:

அ. தேர்ந்தெடுத்தலின் தொடக்கம் இறைவனுடைய பயன் கருதாத முன்முயற்சியேயாகும். யாவேதான் "உன் மீது அன்பு கொண்டு உன்னைத் தேர்ந்துகொண்டார்" (உப 7:7). நீ அவரைத் தேர்ந்து கொள்ளவில்லை. இந்த அருட்கொடைக்கு விளக்கம் அன்புதான். எந்தத் தகுதியும் மேன்மையும் அதைக்காரணம் காட்டி விளக்கமுடியாது. உண்மையில் இஸ்ராயேலர் எல்லா மக்களிலும் சொற்பமானவர்களே; ஆனால் "யாவே உங்கள்மேல் அன்பு கூர்ந்தார்" (7:7தொ). தேர்ந்தெடுத்தல் இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்துகிறது. "நீங்கள் உங்கள் கடவுளாகிய யாவேயின் மக்கள்" (14:1). இந்த உறவு, பிற மதங்களில் தேவதைகளுக்கும் அவர்களின்

விசுவாசிகளுக்குமிடையேயுள்ள இயற்கையான உறவு போன்றதன்று. இந்த உறவு யாவேயின் தேர்ந்தெடுத்தலின் விளைவாகும் (14:2); எப்போதும் "முதலில் அன்பு செய்யும்" (1 யோவா 4:19) அவரது யாவும் கடந்த தன்மையை எடுத்துக்கூறுகிறது.

ஆ. தேர்ந்தெடுத்தலின் நோக்கம், யாவேக்குத் திருநிலைப்படுத்தப்பட்ட புனித மக்களை உருவாக்குவதாகும். இவர்கள், "எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும்" உயர்த்தப்பெறுவர் (உப 26:19); மக்களிடையே ஆண்டவரின் மகிமையையும் தாராளத்தையும் ஒளிரச் செய்வர். சட்டம், குறிப்பாக இஸ்ராயேலுக்கும் மற்ற மக்களுக்கும் இடையில் தடைகளை அமைப்பதன் வழியாக, இந்தப் புனிதத்தை உறுதிசெய்யும் சாதனமாகிறது.

இ. தேர்ந்தெடுத்தல் இஸ்ராயேலை மற்ற மக்களினத்தவரிடமிருந்து பிரித்துவைக்கிறது. பிற மக்களோடு எவ்விதத்திலும் பொதுவாக இல்லாத ஓர் ஊழோடு அவர்களைப் பிணைக்கிறது; அஃது அசாதாரணச் செழிப்புடையதாக இருக்கலாம்; அல்லது ஒப்புமையில்லாத் துற்பேறுடையதாக இருக்கலாம் (உப 28). "உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நான் சிறப்பாக அறிந்துகொண்டேன்; ஆதலால் உங்கள் தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன்" (ஆமோ 3:2) என்ற ஆமோசின் வாக்கு. தேர்ந்தெடுத்தலின் சாசனமாக அமைந்திருக்கிறது.

3. புதிய, இறுதிக்காலத் தேர்ந்தெடுத்தல்:

அ. தேர்ந்தெடுத்தலும் நிராகரித்தலும்:

இந்த அச்சுறுத்துதல் கடினமாக இருந்தாலும், மீண்டும் நம்பிக்கை அளிக்கும் குறிப்பையும் கொண்டுள்ளது. இறைவன் தம்மக்களை இவ்வாறு தண்டிக்க வேண்டுமென்றால் அவர்களைத் துறந்து கைவிட்டு விடக்கூடாது. இறைவன் தேர்ந்தெடுத்தலைத் தள்ளுபடி செய்து, மக்களினங்களிடையே மறைந்து போகவிட்டால், அதன் விளைவு மிகப் பயங்கரமானதாக இருக்கும். தாவீதுக்குச் சார்பாக அவரது ஏழு அண்ணன்களையும் புறக்கணித்ததுபோல (1 சாமு 16:7), யூதாவுக்குச் சார்பாக எப்பிராயிமை நிராகரித்ததுபோல (சங் 78:76தொ), அவர் தேர்ந்துகொண்ட நகரமான எருசலேமை நிராகரிக்கத் துணியவில்லையா? (2 அர 23:27). இறைவாக்கினர்கள், குறிப்பாக எரேமியா இத்தகையதொரு விளைவு நிகழும் என்று எடுத்துக் கூறக் கட்டாயப்படுத்தப்பட்டார். இஸ்ராயேல் தூய்மைப்படுத்த முடியாத "தள்ளுபடியான வெள்ளியாகும்;" ஆகவே குப்பைத்தொட்டியில் எறியப்படும் (எரே 6:30; காண்க 7:29). ஆகவே "நீர் யூதாவை முற்றிலும் புறக்கணித்து விட்டீரா? சீயோனை உம் உள்ளம் வெறுத்துவிட்டதா? (14:19).

இதற்குரிய இறுதியான விடை "இல்லை" என்பதுதான். "மேலே வான்வெளி அளக்கப்படக் கூடுமாயின், கீழே பூவுலகின் அடித்தளங்களைக் கண்டுபிடிக்க இயலுமாயின், இஸ்ராயேல் வழிமரபினரின் அனைத்துச் செயல்களையும் முன்னிட்டு அவர்கள் அனைவரையும் நான் தள்ளிவிடுவேன்" (எரே 31:36; காண்க. ஓசே 11:8; எசே 20:32) என்கிறார் ஆண்டவர். பிரமாணிக்கமற்ற மணப்பெண் "அவளுடைய பாவங்களுக்காகத் தள்ளிவைக்கப்பட்டாள்" என்பது உண்மையே. ஆனால் "உன் தாயைத் தள்ளிவைத்ததற்கான மணமுறிவுச் சீட்டு எங்கே? என்று கடவுள் இன்னும் கேட்கக்கூடும் (எசா 50:1). தேர்ந்தெடுத்தல் புதிய வடிவில் தொடர்கிறது. "யாவே எருசலேமைத் திரும்பவும் தேர்ந்துகொள்வார்" (செக் 1:17; 2:16). அவர் "இஸ்ராயேலை மீண்டும் தேர்ந்து கொள்வார்" (எசா14:1).அவர்களுடைய பாவங்களையும் அழிவையும் கவனியாது எஞ்சியோர் வடிவில் இஸ்ராயேலைத் தேர்ந்து கொள்வார். இது தற்செயலாக நிகழ்வதன்று. இறைவனுடைய ஆற்றலால் நிகழ்வதாகும். அவர்களே "தூய வித்து" (எசா 6:13); "தளிர்" (செக் 3:8); "பாகாலின்முன் மண்டியிடாத ஏழாயிரம் பேர்" (1 அர 19:18). பவுலின் விளக்கப்படி அவர்களே கடவுள் தமக்கென ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் (உரோ 11:4).

ஆ. இதோ நான் தேர்ந்தெடுத்தவர்கள்: இந்தப் புதிய இஸ்ராயேலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பட்டம் பெரும்பாலும் இரண்டாம் எசாயாவிலும், எப்போதும் இறைவனாலேயே கொடுக்கப்படுகிறது (எசா 41:8; 43:20; 45:4 43:10; காண்க. 65:9.15.22). இஃது இறைவனுடைய படைக்கும் முன்முயற்சியை நிறைவாக விவரிக்கிறது. புறவினத் தெய்வங்களின் இழிந்த வழிபாட்டு முறைகளில் முழுவதும் ஈடுபட்டிருந்த மக்களை உண்மையான இறைவனுடைய பணிக்குப் பற்றுறுதி உடையவர்களாக மாற்ற இறைவன் வல்லவர். உலகம் மற்றும் வரலாற்றின் மத்தியில் இறைவன் இந்த மக்களைத் தேர்ந்துகொண்டார்; அவர்களுக்காகவே உலக முழுவதையும் ஆளுகிறார். அவர் சைரசைத் தேர்ந்தெடுக்கிறார் (45:1). தாம் "தேர்ந்துகொண்ட இஸ்ராயேலின் பொருட்டு" (45:4), சைரசை வெற்றிகொள்ளச் செய்கிறார்.

இந்தச் செயலினிடையே இறைவன் ஒரு மறைபொருள் மிக்க ஆளைத் தோன்றச் செய்கிறார். அவருக்கு "என் ஊழியன்" (42:1; 49:3; 52:13), "நான் தேர்ந்து கொண்டவர்" (42:1) என்ற பெயர்களைத் தவிர வேறு பெயர் கொடுக்கப்படவில்லை. அவர் அரசரோ, குருவோ, இறைவாக்கினரோ அல்லர். ஏனெனில் இவர்கள் எல்லாம் தங்கள் பணியை உணருமுன்பே மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு பணிக்கு அழைப்புப் பெறுகின்றனர்; அபிடேகம் பெறுகின்றனர். அவரோ "தன் தாயின் கருப்பையில் இருக்கும்போது" (காண்க. எரே 1:5), இறைவனுடைய அழைப்பைப் பெறுகிறார். அவருக்கு மனிதர்கள் பெயர் சூட்டவில்லை. அவர் தம் தாய் வயிற்றில் உருவாகும்போதே, இறைவனே பெயர் சொல்லி அழைக்கிறார் (எசா 49:1). அவருடைய வாழ்வு முழுவதுமே இறைவனிடமிருந்து வருகிறது. ஆகவே, அஃது ஒரு தேர்ந்தெடுத்தலாகும். அதனால்தான் அஃது ஒருபணியும் திருநிலைப்படுத்தலுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஊழியராக இருப்பது அவசியமாகும்.

II. புதிய ஏற்பாடு:

1. **இயேசுகிறிஸ்து:** இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்: புதிய ஏற்பாட்டில் இப்பட்டம் இயேசுவுக்கு அரிதாகத்தான் கொடுக்கப்பட்டாலும், அவரது வாழ்வின் முக்கியக் கட்டங்களான திருமுழுக்கு, உருமாற்றம், சிலுவையில் அறையப்படுதல் ஆகிய நேரங்களில்தான் இப்பட்டம் அவருக்கு வழங்கப்படுகிறது. அஃது எப்போதும் ஊழியனின் உருவத்தை மனக்கண்முன் கொண்டுவருகிறது. ஆபிரகாம் மற்றும் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தலில் தாம் தொடங்கிய பணியை நாசரேத்தூர் இயேசுவில் இறுதியாக முடிவுக்குக் கொண்டு வருவதாகச் சான்று கூறும் விதத்தில் இப்பெயரை இறைவனே உச்சரிக்கிறார். அவர் மட்டுமே இப்பெயருக்குத் தகுதியானவராகவும் அவரிடம் மட்டுமே தமது வேலையை ஒப்படைக்கக் கூடுமானதாகவும், அவர் மட்டுமே தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கூடியவராகவும் இறைவன் கண்டார். " இதோ நான் தேர்ந்து கொண்டவர்" என்ற எசாயாவின் சொற்கள், தம்மை ஒருபோதும் ஏமாற்றாத ஒருவரைக் கொண்டிருப்பதில் இறைவனின் வெற்றிப் பெருமிதத்தை அறிவிக்கின்றன. இந்த உறுதியின் இரகசியத்தை இயேசுவின் மேல் தந்தை கூறும் " நான்தேர்ந்து கொண்டவர் இவரே" (லூக் 9:35). என்ற சொற்கள் வெளிப்படுத்துகின்றன. மானுட உடல் எடுத்த இவர்தான் தாயின் கருப்பையில் இருக்கும் போதே புனிதப்படுத்தப்பட்டு இறைவனின் மகன் என்றழைக்கப்பட்டார் (1:35). "உலகம் உருவாகும் முன்னரே," "அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டும்" என்பதற்காக (எபே 1:4.10; 1 பேதுரு 1:20) அவர் முன் குறிக்கப்பட்டுள்ளார். கிறிஸ்து மட்டுமே இறைவனின் தேர்ந்து கொள்ளப்பட்டவர். அவரைத்தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவருமில்லை. இறைவன் எழுப்பும் கட்டடத்தைத் தாங்கக்கூடிய (1 பேதுரு 2:4தொ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே பாறை அவரே.

இப்பெயரை இயேசு கூறவேயில்லை யானாலும், தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

பற்றிய தெளிவான உறுதி கொண்டுள்ளார். தாம் மற்றொரு உலகிலிருந்து வந்தது பற்றியும் (மாற் 1:38; யோவா 8:14), மற்றொரு உலகத்தைச் சேர்ந்தது பற்றியும் (யோவா 8:23), மனுமகன் எனத் தனித்தன்மையுடைய தமது ஊழால் வாழவேண்டியது பற்றியும், இறைவனது வேலையையே நிறைவேற்ற வேண்டியது பற்றியும் (5:19; 9:4; 17:4) அவர் உறுதி கொண்டிருந்தார். இஸ்ராயேலின் தேர்வுபற்றி மறைநூல் முழுவதும் கூறுகிறது; இவை யாவும் தம்மையே சுட்டிக்காட்டுகின்றன என்பதை இயேசு அறிந்திருந்தார் ( லூக் 24:27; யோவா 5:46). ஆனால் இந்த உணர்வு பணிசெய்யவும், செய்துமுடிக்க வேண்டியதை நிறைவேற்றவுமே மன உறுதியை அவரில் தூண்டுகிறது.

**2. திருச்சபை, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினம்:**

**அ. பன்னிருவர் தேர்ந்துகொள்ளப்படல்:** இது, "தாம் விரும்பியவர்களைத் " தம்மோடு சேர்த்துக்கொண்டு தமது அலுவலைச் செய்துமுடிக்க விரும்பினார் என்று காட்டுகிறது (மாற் 3:13தொ). அவர்கள் பன்னிரு கோத்திரங்களின் அடையாளமாக அவரோடு இருக்கின்றனர். தந்தை கிறிஸ்துவைத் தேர்ந்தெடுத்ததுபோல் (யோவா 6:37; 17:2), கிறிஸ்து இவர்களைத் தேர்ந்துகொள்வதில் (லூக் 6:13; யோவா 6:70) இம்மக்களினம் தோன்றுகிறது. இஃது ஆவியின் செயலால் நிகழ்கிறது (அ.ப. 1:2). இஸ்ராயேலின் தோற்றத்தைப்போலத் திருச்சபையின் தொடக்கத்திலிருந்து அஃது இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" (யோவா 15:16; காண்க. உப 7:6). மத்தியா (அ.ப. 1:24). பவுல் (9:15) ஆகியோரின் தேர்வுகள், இறைவன் தாம்முன் குறித்து வைத்த சாட்சிகள் வழியாக மட்டும் தம் திருச்சபையைக் கட்டியெழுப்ப விரும்புகிறார் (10:41; 26:16) என்று காட்டுகின்றன.

ஆ. இறைவனின் தேர்ந்தெடுத்தல், திருச்சபையில் உயிருள்ள உண்மையாக, இன்றும் தொடர்ந்து நிகழ்கிறது. கிறிஸ்தவச் சமூகங்களும் அதன் தலைவர்களும் தேர்ந்தெடுக்கின்றனர்; பல பணிகளுக்குப் பலரை நியமிக்கின்றனர் (6:5). ஆனால் இந்தத் தேர்வுகள் இறைவனுடைய தேர்வை உறுதிமட்டும் செய்கின்றன; அவரது ஆவியை ஏற்றுக் கொள்கின்றன (6:3). எழுவர்மீது பன்னிருவரும் தம் கரங்களை விரிக்கிறார்கள் என்றால் (6;6), அந்தியோக்கியத் திருச்சபை பவுலையும் பர்னபாவையும் ஒதுக்கி வைக்கிறது என்றால், அதற்குக் காரணம் ஆவியானவர் தம் வேலைக்கு அழைப்பதாக அவர்களைக் குறிப்பிட்டுள்ளதே காரணம் ஆகும் (13:1தொ). திருச்சபையில் அருங்கொடைகள் இருப்பது தேர்ந்தெடுத்தல் அகற்றப்படவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இந்தத் தனிநபர் அழைப்புகள் ஒன்று கூட்டப்பட்டு ஒரு சமூகமாக நிறுவப்படுவதில் திருச்சபை தேர்ந்தெடுக்கப்படுகிறது. விசுவாசக் கொடை, இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை மனித ஞானத்தாலோ, ஆதிக்கத்தாலோ, பிறப்பாலோ விளக்கப்படவில்லை; இறைவனின் தேர்ந்தெடுத்தலாலேயே மட்டும் விளக்கப்படுகின்றன (1 கொரி 1:26 தொ; காண்க அ.ப. 15:7 1 தெச 1:4 தொ). "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்... பரிசுத்த குலமாக" அமைக்கப்பெற "இருளிலிருந்து" அழைக்கப்பட்ட அனுபவ உணர்வைக்கொண்ட (1 பேதுரு 2:9) கிறிஸ்தவர்கள் வெறுமனே "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" என்றழைக்கப்படுவது இயல்பே (உரோ 16:13; 2 திமொ 2:10; 1 பேதுரு 1:1). திருச்சபையும் **(Ekklesia),** தேர்ந்தெடுப்பும் **(Eklekte)** இனிமையான எதிரொலிப்புக்காகச் சேர்த்துப் பயன்படுத்தப்படவில்லை (காண்க. 2 யோவா 13; திருவெளி 17:14).

**3. தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது நிராகரிக்கப்பட்டவர்:**

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் புதிய ஏற்பாடு "இறைவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்"

என்று குறிப்பதன் வழியாக, இத்தேர்வின் ஆட்தன்மையையும், மேலாண்மையையும் உறுதிப்படுத்துகின்றது (மாற் 13:20.27 இணை; உரோ 8:33). அதே சமயம் இறுதிக்காலச் சூழ்நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அடைமொழியின்றியும் குறிக்கிறது. இவ்வாறு சோதனைகளுக்கு அப்பால், தேர்வை, காணக்கூடியதும் வெளிப்படுத்தப்பட்டதுமான உண்மையாகக் கொண்டவர்களையும் காண்கிறது (மத் 22:14; 24:22.24). சபிக்கப்படுதலுக்கும் இதே விதம் கூறலாம்.

தேர்ந்தெடுக்கப்படாதவர் – நிராகரிக்கப்பட்டவர் என்ற பொருளில் தேர்வுக்கு முந்திய நிராகரிப்பைப்பற்றிப் பழைய ஏற்பாடு கூறுகிறது. ஆனால் இந்த நிராகரிப்பு தற்காலிகமானதே. ஏனெனில் ஆபிரகாம் தேர்ந்தெடுக்கப்படுதல் மக்களினங்களுக்கெல்லாம் ஆசிராக அமைவதாகும். தேர்ந்தெடுத்தலின் வரலாற்றில், குற்றமுள்ளவர்கள் மற்றும் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவதின் தொடர், வாக்குறுதிகளைப் பழுதுபடச் செய்வதில்லை. இறைவனது தேர்வு மாற்றமுடியாததாகும். இயேசுகிறிஸ்துவில் ஆபிரகாமின் தேர்வு நிறைவுபெறுகிறது; மக்களினங்களின் நிராகரிப்பு முடிவுறுகிறது. அவரில், யூதர்களும் கிரேக்கர்களும், ஒப்புரவானபின் (எபே 2:14தொ), தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். "இறைவனுடைய உடைமையாவதற்கென" ஒரே மக்களாக உருவாகும்படி "முன் குறிக்கப்படுகின்றனர்" (எபே 1:11.14).

"உண்மையை அறியும் பேறுபெற்ற பின்னரும்", ஒருவன் "கடவுளின் மகனையே காலால் மிதிக்கவும்... உடன்படிக்கை இரத்தத்தை இழிவுபடுத்தவும்.... அதனால் உயிருள்ள கடவுளின் கையில் அகப்படும் பயங்கர நிலைக்கும்" உள்ளாகக்கூடும் (எபி 10:26-31). இத்தகைய நிராகரிப்பு தேர்ந்தெடுத்தலை மறுப்பதன்று. இஃது இறைவனுடையவர்களை அறியாதவர்களின் தீர்ப்பு. தேர்ந்தெடுத்தலிலேயே உள்ளடங்கியுள்ளது என்பதை எடுத்துக்கூறுகிறது. இயேசுவின் "எனக்கு உங்களைத் தெரியாது" (மத் 25:12) என்பது, தேர்ந்தெடுத்தலில் "உங்களைத் தான் நான் சிறப்பாக அறிந்துகொண்டேன்" (ஆமோ 3:2) என்பதைத் தள்ளுபடி செய்யவில்லை. அஃது இறைவனுடைய அக்கறையையே காட்டுகிறது. "ஆதலால் உங்கள் தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன் (3:2).

இந்த நிராகரிப்பு இனி இக்காலத்தைச் சார்ந்ததன்று; இஃது இறுதிக்காலத்தைச் சார்ந்ததாகும். இதனால்தான் இது யூதர்கள் மேல் விழவில்லை. அவர்கள் வரலாற்றில் ஒருபாவம் இருப்பது உண்மையே. இறைவன் தேர்ந்தெடுத்து வைத்த பாறையின்மேல் இஸ்ராயேல் மக்கள் தடுக்கி விழுந்தனர் (உரோ 9:32தொ). அவர் தேர்ந்தெடுத்தவரை அவர்கள் நிராகரித்தனர். இருப்பினும் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களுடைய முன்னோரை முன்னிட்டு, அவர்கள் இறைவனின் அன்புக்குரியவர்களே" (11:22). பழைய உடன்படிக்கையில் மக்களினங்களின் தவறைப்போல் அவர்களது தவறும் தற்காலிகமானதே, இறைத்திட்டத்தைச் சேர்ந்ததே (11:30 தொ). திரும்பவும் ஆண்டவர் வராதிருக்கும்வரை, தேர்ந்தெடுத்தலுக்குள் புறவினத்தாரின் முழுத்தொகையும் வந்தடைந்தபின் எல்லா இஸ்ராயேலரும் தேர்ந்தெடுத்தலை, மீண்டும் தேர்ந்தெடுத்தலைப் பெறும்வரை, அவர்கள் மனந்திரும்ப எப்போதும் அழைக்கப்படுகின்றனர் (11:23-27).

### தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாட்டி (ELECT LADY)

யோவானின் இரண்டாம் திருமுகத்தில் அதை எழுதும் மூப்பர் ஒரு தலத்திருச்சபையை இச்சொற்றொடரால் அழைக்கிறார். இத்திருமுகத்தில், தலத்திருச்சபை தாயாகவும், அங்கத்தினர்கள் அதன் பிள்ளைகளாகவும், அடுத்த சபை சகோதரியாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன (2 யோவா 1.13; காண்க. 1 பேதுரு 5:13). இச்சொற்றொடரில் திருச்சபை தேர்ந்தெடுக்கப்பட்டதாகும் என்ற கருத்தும், மெசியாச் சமூகம், குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்ணாகும் என்ற கருத்தும்

இணைந்துள்ளன (பாரூ 4-5; கலா 4:25; திருவெளி 12).

**தேர்ப்பாகன், தேரோட்டி (CHARIOTEER)**

தேர்ப்பாகன் என்பது தேரினை ஓட்டுகின்றவனைக் குறிக்கிறது. ஒரே எபிரேயச் சொல் மன்னன் ஆகாபின் தேரோட்டியைக் குறிக்கவும் (1 அர 22:34; 2 நாள் 18:33), பொதுவாக, குதிரை வீரனைக் குறிக்கவும் (2 அர 9:17) பயன்பட்டுள்ளது. ஏகூவின் துணையாளராக யிருந்த பிதகர் என்பவர் ஏகூவின் சொந்தத் தேரோட்டியாக இருந்திருக்க வேண்டும் (2 அர 9:25).

**தேலேம் (TELEM - ஒளிமயம்) - ஆள்**

எஸ்ராவின் சமகாலத்தவர். புறவின மனைவியை நீக்கிவிட்ட லேவிய வாயில் காவலர் (எஸ் 10:24).

**தேலேம் (TELEM - ஒளிமயம்) - இடம்**

யூதாவைச் சேர்ந்த நெகேபு பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:24). தெலாயிமின் மற்றொரு பெயர்.

**தேலோ (DELOS - திடீரென்று தோன்றும்)**

ஆசியன் கடற்கரையில் அமைந்த சிறு கிரேக்கத்தீவு. 3 மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் உடைய இத்தீவு அப்பெல்லோ தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஏதன்சு நகரைப்போன்று இச்சிறு தீவும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கிறிஸ்துவுக்கு முன் இரு நூற்றாண்டுகளில் இது மத்திய தரைக்கடலின் மிக முக்கிய துறைமுகமாகவும், வாணிபத்தலமாகவும் விளங்கியது. ஏறத்தாழ கி.மு. 167-ஆம் ஆண்டில் இஃது உரோமையரின் கைக்கு வந்தது. உரோமையர்கள் இந்நகரில் தங்கியிருந்து வாணிபம்செய்யத் தொடங்கினர். பின்னர் உரோமையர், இந்நகரைச் சுதந்தரமுடைய ஒரு துறைமுகமாக மாற்றினர். இதனால் ரோதே, கொரிந்து முதலிய வாணிகத் தலங்கள் முக்கியத்துவம் குறைந்து போயின.

சீமோன் மக்கபேயு தம் பிரதிநிதிகள் சிலரை உரோமைக்கு கி.மு. 138-137-இல் அனுப்பினார். அப்போது உரோமை அயல்நாட்டுத் தூதர் லூக்கியு, தேலோ உட்பட பிற நகரங்களுக்குக் கடிதம் அனுப்பி யூதர்களுக்கு யாரும் தீங்கிழைக்கக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார் (1 மக் 15:16-23). ஒருவேளை அதிக எண்ணிக்கையுள்ள யூதர்கள் அந்நகரத்தில் இருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் மித்ரிதாதெசு மன்னர் உரோமையோடு போர்புரிந்து தேலோ நகரைக் கைப்பற்றியபோது அந்நகரம் அதன் அழகையும் சிறப்பையும் இழக்கத் தொடங்கியது. பின்னர் மீண்டும் உரோமையர் அதனைக் கைப்பற்றிய பின்பும் கூட அதன் முந்தையச் சிறப்பைப் பெறமுடியவில்லை.

**தேவதாரு கொட்டைகள் - (PISTACHIO NUTS)**

உணவாகப் பயன்பட்ட ஒருவகைக் கொட்டை (ஆதி 43:11). பிஸ்டாக்கிய வேர என்ற மரத்தின் கொட்டைகளாகும். இம்மரம் சிறிய ஆசியா, சீரியா, பாலஸ்தீன நாடுகளில் வளர்ந்திருக்கிறது. ஒரு வியாபாரப் பொருளாகவும் பயன்பட்டுள்ளது.

**தேவதாரு மரம் (CYPRESS, TEREBINTH)**

விவிலியத்தில் வரும் மரங்களையும் அவற்றின் பெயர்களையும் தெளிவுபடுத்திக் கூறுவது அவ்வளவு சுலபமன்று. விவிலியக்கால மக்கள் தாவரவியல் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. இக்காலத் தாவரவியல் அறிஞர்கள், விவிலியத்தில் வரும் மரங்களின் பெயர்களுக்கு அடையாளம் காட்டுவதில் கருத்தொற்றுமை கொண்டிருக்க வில்லை. இக்காலத் தாவரவியல் அறிஞர்கள், விவிலியத்தில் வரும் மரங்களின் பெயர்களுக்கு அடையாளம் காட்டுவதில் கருத்தொற்றுமை கொண்டிருக்கவில்லை. கேதுரு, கருவாலி போன்ற மரங்களைத்தவிர பிறவற்றைத் தெளிவாக அடையாளம் காட்ட முடியாது.

லெபனோனின் காடுகளில் வளரும் மரங்களில் கேதுரு மரத்தோடு குறிக்கப்படும் மரங்களில் ஒன்று–தேவதாரு மரம் என்று பல வாசகங்களில் மொழிபெயர்க்கப்படுகிறது (எசா 41:19; 60:13).

தமிழில் சில இடங்களில் நூக்கு மரம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (1 அர 5:8.10). இஃது ஊசியிலை மர வகையைச் சேர்ந்தது. இது கூம்பு வடிவத்தில் 30 மீட்டர் உயரம்வரை வளரக்கூடியது. மத்திய தரைக் கடற்கரைப் பகுதிகளில் வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மரம் கடினமான அமைப்புடையது. ஆகவே கட்டடங்கள் மற்றும் கப்பல்கள் கட்டுவதற்குப் பயன்பட்டது. இஃது அசீரியா மற்றும் பாபிலோனுக்கு எதிராகவும் (2 அர 19:23; எசா 37:24), தீர் மற்றும் எகிப்துக்கு எதிராகவும் (எசே 27:6; 31:8) அமைந்துள்ள ஏளனப்பாடல்களில் பயன்பட்டுள்ளது. நம்பிக்கை (எசா 41:19; 55:13; 60:13; ஓசே 14:8), அழிவு (செக் 11:2), செழிப்பு (உ.ச.6:5) ஆகியவற்றைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது.

“தெரபின்து” என்ற மரமும் தமிழில் தேவதாருமரம் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இஃது ஒரு பெரிய மரமாக வளரக்கூடியது. எசாயா யூதாவின் அழிவைப்பற்றிக் கூறும்போது, அது வெட்டப்பட்ட தேவதாரு மரம்போல் அழிக்கப்படும் என்று கூறுகிறார் (எசா 6:13). ஓசேயா தேவதாரு, புன்னைமரம், கருவாலி மரங்களின் அடியில் அமைந்திருந்த சிலைவழிபாட்டிடங்களைச் சபிக்கிறார் (ஓசே 4:13). சீராக்கு நூல் ஞானத்தைப் போற்றும்போது இம்மரத்தை விவரிக்கிறது.

“தேவதாரு மரத்தைப்போன்று
என் கிளைகளைப் பரப்பினேன்;
என் கிளைகள் மாட்சியும் அருளும்
நிறைந்தவை” (சீரா 24:16).

**தேள் (SCORPION)**

பாலஸ்தீனத்தில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட தேள் வகைகள் உண்டு. இவற்றில் 90 சதவீதம் மஞ்சள் நிறம் கொண்டவை. தேளானது இரவிலே மெதுவாக ஊர்ந்து செல்லக்கூடியது. இது மற்றப் பூச்சிகளைத் தனக்கு இரையாக்கிக்கொள்ளும். வேறு தேள்களையும் தின்றுவிடும். வால் பகுதியில், நஞ்சை வைத்திருக்கும் கொடுக்கு இருக்கும். கொட்டினால் மனிதனுக்குக்கூட அதிக துன்பத்தைக் கொடுக்கும்.

உப 8:15-இன்படி, இஸ்ராயேலர் கடந்து சென்ற பாலைவனத்தில் கொள்ளிவாய்ப் பாம்புகளும், தேள்களும் நிறைந்திருந்தன. அகிரபிம் தேள்களின் ஏற்றம் என்ற பெயர்- அங்குத் தேள்கள் நிறைந்திருந்ததால், வந்திருக்கலாம். ஒருவகை முள்சாட்டை- தேள்சாட்டை என்றழைக்கப்பட்டது. ரெகபயாம் “என் தந்தை பளுவான நுகத்தை உங்கள் மேல் சுமத்தினார்; நானோ அதை இன்னும் பளுவாக்குவேன். என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார்; நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன்” என்று மக்களை அச்சுறுத்தினான். முள்சாட்டை சாதாரணச் சாட்டையைவிட அதிக வலியைத் தரக்கூடியது (1 அர 12:11.14; 2 நாள் 10:11.14).

எசேக்கியேல் மக்களின் வார்த்தைகள் முட்கள், தேள் போன்றவற்றிற்கு ஒப்பாக இருந்தாலும், அவர்களைக் கண்டு எசேக்கியேல் அஞ்ச வேண்டியதில்லை (எசே 2:6). இயேசு, “பாம்புகளையும், தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வலிமையை வெல்லவும் உங்களுக்கு வல்லமை அளித்தேன்” என்று எழுபத்திரண்டு பேரிடம் சொன்னார் (லூக் 10:19). இக்கூற்றில் தமக்கெதிரான யாவற்றையும் உள்ளடக்குகிறார் எனலாம். “மீன்கேட்டால், தேளையா கொடுப்பான்”, தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நன்கொடைகள் அளிக்க அறிவீர்களானால் வானகத்திலுள்ள உங்கள் தந்தை, தம்மிடம் கேட்பவர்களுக்கு, எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்” என்று இயேசு சொன்னார் (லூக் 11:12).

புகையினின்று வெட்டுக்கிளிகள் கிளம்பி மண்ணின்மீது படையெடுத்துவந்தன. தரையிலூரும் தேள்களுக்குள்ள கொடுமை அவற்றிற்கு அளிக்கப்பட்டது. தேள் கொட்டும் போதுள்ள வேதனைபோல், அவர்களுக்குக் (5 மாத வேதனை) கொடுக்கப்பட்டது. “குதிரைப் படை தேள்களைப்போல், வால்களும், கொடுக்குகளும் கொண்டிருந்தன” (திருவெளி 9:3.5.10). இவை நெற்றியில் முத்திரை இடப்படாதவர்களைத் தாக்கியது முதற்கொடுமையாகும்.

## தேனீ (BEE)

பழைய ஏற்பாட்டில், பாலஸ்தீன நாட்டுக் காட்டுத்தேனி நான்கு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. கிரேக்கர் காலம்வரை இது வீட்டில் வளர்க்கப்படும் வகையாக மாறவில்லை. பாலஸ்தீனத்தில் தேன் உண்டாக்கும் செடிகள் பல இருந்தாலும், தேனீ குறிக்கப்படும் நான்கு இடங்களிலும் ஒரே இடத்தில்தான், அதுவும் விநோதமான பகுதியில் ( நீதி 14:8), அஃது உண்டாக்கும் தேனுக்காகக் குறிக்கப்படுகிறது. கானான் நாடு "பாலும் தேனும் பொழியும் நாடு" (யாத் 3:18) என்று குறிக்கப்படுவதால் தேனீக்கள் ஏராளமாக இருந்திருக்கவேண்டும். தேனீ குறிக்கப்படும் மற்ற மூன்று இடங்களும் (உப 1:44; சங் 118; எசா 7:18), எமோரியர்கள் இஸ்ராயேலரைத் தூத்தியடித்ததையும், சங்கீத ஆசிரியரை அவரது எதிரிகள் சூழ்வதையும், இஸ்ராயேலை இறைவனே துரத்துவதையும் அடையாளமாக உணர்த்தின. அவற்றின் எரிச்சல் உண்டாக்கும் பழிவாங்கும் தன்மையும், கடுகடுப்பாகக் கொட்டுவதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

எறும்பை, அது சுறுசுறுப்பாக வேலை செய்வதை, போற்றியபின் (பழ 6:6-8), எழுபது நூல் தேனீயைப் பற்றிப்பேசுகிறது, தேனீ பார்ப்பதற்குச் சிறியதாயினும் அது கொடுக்கும் தேன் இனியவற்றுள் சிறந்தது என்று கூறுகிறது சீராக்குநூல். இஸ்ராயேலர் தேனீக்களை வீட்டில் வாழப் பழக்கப்படுத்தினார்கள் என்பதற்கு நேரடிச் சான்று ஒன்றுமில்லை. ஆனால் எகிப்தியர் இவ்வாறு வளர்த்துள்ளனர். நவீன காலமுறையில் தேனீக்களை வீட்டில் வளர்ப்பது 1880-க்குப் பிற்பட்ட முறையாகும்.

## தேன் (HONEY)

பூ அமுதத்திலிருந்து தேனீக்களால் செய்யப்படும் இனிய சுவையுள்ள ஊட்டச் சத்துள்ள திரவம். பழங்களிலிருந்து எடுக்கப்பட்ட சாறும் தேன் என்று சில சமயம் அழைக்கப்படும். தேனில் காட்டுத்தேன் என்றும் (உப 32:13; சங் 81:16; நீதி 14:8; 1 சாமு 14:25; மத் 3:4; மாற் 1:6), வீட்டுத்தேன் என்றும் (2 நாள் 31:5) இருவகையுண்டு.

தேன் மனிதவாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது (சீரா 36:26); நாட்டின் உணவுப்பொருள்கள் அல்லது நல்ல பொருள்களின் பட்டியலில் குறிக்கப்படுகிறது (ஆதி 43:11; உப 8:8; 2 சாமு 17:29; 1 அர 14:3; காண்க. எசே 16:13). ஆயினும், உயர் இன்பவாழ்க்கையைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது (ஆதி 43:11; 1 அர 14:3). பன்னாட்டு வணிகத்திலும் பயன்பட்டது (எசே 27:17). தேன் எளிதாகப் புளிப்பேறக் கூடியதாகையால் புளிக்காரம், தேன் எதையுமே ஆண்டவருக்கு நெருப்புப்பலியாக ஒப்புக்கொடுக்கக்கூடாது (லேவி 2:11). பழம் மேற்காசியாவின் மற்ற இடங்களில் தேன், பலியில் பரவலாகப் பயன்பட்டது.

தேன் ஏராளத்தன்மையை உணர்த்த உருவகமாகப் பயன்பட்டுள்ளது (யாத் 3:8.17; யோசு 5:6; எரே 11:5; காண்க. உப 8:8; யோபு 20:17) தேனின் இனிமை உருவகமாகப் பயன்பட்டுள்ளது (நீதி 14:18; சங் 19:10; 119:108; பழ 5:8; 16:24; உ.ச. 4:11; எசே 3:3; திருவெளி 10:9-10).

# தொ

**தொக்கேன் (TOCHEN - கடமை, அளவு)**

யூதாவுக்குத் தெற்கிலுள்ள சிமியோனின் கிராமம் (1 நாள் 4:32). யோசு 19:7-இல் வரும் இணையான பட்டியல் இந்த இடத்தில் எத்தேர் என்ற கிராமப் பெயரைக் கொண்டுள்ளது. யோசு 15-இல் உள்ள நகரங்கள் பட்டியலில், இரண்டு பெயர்களுமே சொல்லப்படவில்லை. தொக்கேன் இருந்த இடம் அறியப்படவில்லை.

**தொங்கலாடை (TRAN)**

நீண்ட ஆடையாகும். ஆண்டவரின் தொங்கலாடை திருக்கோயிலை நிரப்பிநின்றது (எசா 6:1). இந்தத் தொங்கலாடை என்பது ஆடையின் நீண்ட விளிம்புப் பகுதியாகும்.

**தொங்கு திரைகள் (HANGINGS)**

திருஉறைவிட முற்றத்தைச் சுற்றித்தொங்க விடப்பட்ட திரைகளாகும் (யாத் 27:9-18; 35:17; 38:9-18; 39:40). இவை முறுக்கேற்றி மெல்லிய நார்ப்பட்டால் நெய்யப்பட்டிருக்கும், ஐந்து முழம் (2.25 மீட்டர்) உயரமுடைய தூண்களிலிருந்து தொங்கவிடப்படும். இத்திரைகள் வடபக்கத்திலும், தென்பக்கத்திலும் 100 முழ (45 மீட்டர்) நீளமும், கிழக்கு மேற்குப் பக்கங்களில் 50 முழ (22.5 மீட்டர்) நீளமுமுடையவை. முற்றத்தின் வாயில்கள் உள்ள ஒவ்வொரு பக்கத்திலும் 15 முழ (6.75 மீட்டர்) நீளமுள்ள திரைகள் தொங்கின. வாயிலின் முன் தொங்கிய திரை 20 முழ (9மீட்டர்) நீளமுடையதாகும். அது நீலம், கருஞ்சிவப்பு நிற நூலாலும் முறுக்கேற்றி நெய்த நார்ப் பட்டாலும், பின்னல் வேலைப்பாட்டுடன் அமைந்திருக்கும். நான்கு தூண்களில் தொங்கவிடப்படும் (யாத் 27:16; 38:18). இவ்வாறு அமைக்கப்பட்ட 25 முழ (11.25 மீட்டர்) நீளமுள்ள திரை சந்திப்பின் கூடாரத்தின்முன் தொங்கவிடப்படும் (25:36-37). இத்திரைகளைக் கெர்சோம் குடும்பத்தைச் சேர்ந்த லேவியர் தூக்கிச்செல்வர் (எண் 3:25-26; 4:26).

எஸ்த 1:6-இல் குறிக்கப்படும் திரைகள் வெண்ணிற, நீலநிறங்களில் இருந்தன என்பதைத் தவிர வேறொன்றும் தெரியாது. அசேராவுக்குப் பெண்கள் நெய்த திரைகள் (2 அர 23:7) வழிபாட்டு உடைகளாக இருக்கவேண்டும்.

**தொடக்க நூல் அல்லது ஆதியாகமம் (GENESIS, BOOK OF)**

விவிலியம் முழுவதிலுமே மிகப்பெயர் பெற்ற பகுதிகளில் ஆதியாகமமும் ஒன்றாகும். அனேகர் இந்நூலை அறிவர். யாரிடமும் எவ்வகைத் தயக்கமும் இன்றி இந்நூலைச் சுட்டிக் காட்டலாம். ஆதியாகமம் என்ற பெயரைக் கேட்டதும் பலருடைய உள்ளங்களிலிருந்து பலவாறான எண்ணங்கள் வெளிப்படும். விசுவாசிகளுக்கு ஆதியாகமம் உலகம், மனிதன், தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்கள் ஆகியோரின் தோற்றம் பற்றிய மறை பொருளைக் கொண்ட நூலாகும். இந்நோக்கோடு இந்நூலுக்கு முன்னுரை எழுதுகிறோம்.

1. **பெயர்:** யூதர்கள் தங்கள் நூல்களைத் தொடக்க வார்த்தைகளால் அழைத்தனர். அந்த மரபுப்படி யூதர்கள் இந்நூலை, எபிரேய மொழியில், "பெரேஷீத்" (bereshith) என்றழைத்தனர். இச்சொல் "தொடக்கத்தில்" என்று பொருள்படும். எழுபதுநூல் இதனைக் கிரேக்க மொழியில் "கெனேசிஸ்" என்றழைத்தது. இச்சொல்லுக்குத் "தொடக்கம்", "மூலம்," "தோற்றம்" என்றெல்லாம் பொருள் உண்டு. ஏனெனில் இந்நூல் உலகப் படைப்புத் தோற்றம் பற்றிய விவரிப்புடன் தொடங்குகிறது. நாம் இந்நூலைத் தமிழில் ஆதியாகமம் என்றழைத்து வந்தோம். புதிய பொதுமொழிபெயர்ப்பில் தொடக்கநூல் என்றழைக்கப்படுகின்றது.

2. **பாரம்பரியங்கள்:** ஐந்நூல் அல்லது தோரா என்ற தலைப்பில் குறிப்பிட்ட யாவே, எலோகீம், குருக்கள், உபாகமப் பாரம்பரியங்களை வேறுபடுத்தும் அடையாளங்கள் ஆதியாகமத்தில் சிறப்பான முறையில் தெளிவாக உள்ளன. அதனால் இந்நூல் பற்றிய பகுப்பாராய்ச்சியாளர்,

ஐந்நூலின் (பெந்தாதுக்) எழுத்து வடிவத் தோற்றம் பற்றிய ஏடுகள் பற்றிய கருதுகோளுக்கு இந்நூல் அடிப்படை அமைத்தது என்பர். ஐந்நூல் தோற்றம் பற்றிக் கூறியவற்றை, பொருத்தமான மாற்றங்களோடு, ஆதியாகமம் தோன்றிய வரலாற்றுக்கும் கூறலாம். யாவே, எலோகீம், குருக்கள் ஆகிய மூன்று பாரம்பரியங்களும் இந்நூலில் இருப்பதாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. முன் வரலாறானது யாவே, குருக்கள் ஆகிய இரு பாரம்பரியங்களின் தொகுப்பாகும். இந்த இரண்டிலும், யாவே பாரம்பரியம் இப்பகுதிக்கும் நூல் முழுவதற்கும் நிகழ்ச்சியுரைப் பணித்திட்டத்தை அளிக்கிறது. மாறாக, குருக்கள் பாரம்பரியம் நிகழ்ச்சியுரைகளுக்குக் காலவரையறை என்னும் முதுகெலும்பை அளிக்கிறது. மக்களின் மரபுப்பட்டியலையும் அளிக்கிறது.

இரண்டாம் பகுதியான 'குலமுதுவர்' வரலாற்றில் எலோகீம் பாரம்பரியமும் சேர்கிறது. ஆதியாகமத்தில் யாவே பாரம்பரியத்தில் எலோகீம் பாரம்பரியம் அடங்கியுள்ளது எனலாம். எலோகீம் பாரம்பரியத்தில் குலமுதுவர் பற்றிய நிகழ்ச்சியுரை இருந்ததா என்பது பற்றி உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடியாது. அப்படியிருந்தாலும், அது மூதாதையர் வரலாற்றைச் சுருக்கமான வடிவில் தான் இந்நூலில் கொண்டுள்ளது எனலாம். ஏனெனில் பிற்காலத்தில் யாவே பாரம்பரியத்தோடு ஒன்று சேர்க்கப்பட்டபோது யாவே பாரம்பரியம் மேலோங்கியது. எலோகீம் பாரம்பரியத்தின் மதிப்பும், சிறப்பும் தொடர்ச்சியான நிகழ்ச்சியுரை அளிப்பதில் அடங்கியிருப்பதில்லை; ஆனால் இறையியல் நோக்கை அளிப்பதில் அடங்கியுள்ளது.

இம்மூன்று பாரம்பரியங்களில் பாதுகாக்கப்படும் அடிப்படைப்பொருள்களின் முன் வரலாறானது மிகவும் சிக்கலானது. பொதுவாக, படைப்புப் பற்றிய பழங்கதைகள், மரபு முறைப்பட்டியல்கள், பாடல்கள், பழமொழிகள், விளக்கம் அளிக்கும் காரணகாரியங்கள், கதைகள், இவை போன்ற பலவகை அடிப்படைப் பொருள்களை இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவை ஆசிரியரின் குறிக்கோள்களுக்கும் நோக்கத்திற்கும் பயன்பட்டன. இந்நோக்கங்களின் ஒளியிலேயே இவைகளுக்கு இறுதியாகப் பொருள் கூற வேண்டும்.

**3. எப்போது, எப்படித் தோன்றியது:** ஐந்நூலின் எல்லாப்பகுதியும் வெவ்வேறு பாரம்பரியங்களின் வளர்ச்சியோடு இணைந்தது. ஆதியாகமத்தில் யாவே, எலோகீம், குருக்கள் பாரம்பரியங்கள் காணப்படுகின்றன என்று கூறினோம். அவற்றின் தொகுப்பாகும் இந்நூல். யாவே பாரம்பரியம் கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இப்பாரம்பரியம் ஆதியாகமத்திற்கு அடிப்படை அமைப்பை அளிக்கிறது. இது நிகழ்ச்சியுரைத் தொடர்பை அளிக்க, எலோகீம் பாரம்பரியம் இறையியல் கருத்தை அளிக்கிறது; குருக்கள் பாரம்பரியம் காலவரையறையையும் மரபு முறைப்பட்டியலையும் அளிக்கிறது. குருக்கள் பாரம்பரியம் நாம் இப்போது கொண்டிருக்கும் வடிவில், ஏறத்தாழ கி.மு. 5-ஆம் நூற்றாண்டில், உருவெடுத்தது எனலாம். கி.மு. 10-முதல் 5-வரையுள்ள நூற்றாண்டுகளில் இப்பாரம்பரியங்கள் வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும், எழுத்து வடிவமாகவும், பொதுமக்கள் தொகுப்பாக உருவெடுத்தன. இவற்றில் சில மிகப் பழமையானவை. திருத்தி அமைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் சிந்திக்கப்பட்டு, இத்தொகுப்பு அதன் இறுதிவடிவ அமைப்பைப் பெற்றது. இப்பாரம்பரியங்களை அமைத்தவர்கள் இவற்றை உண்டாக்கவில்லை. அவர்கள் சமயச் சிந்தனையாளர்கள். இஸ்ராயேலின் வாழ்வின் சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிப்பவர்கள். இப்பாரம்பரியங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கி.மு. 8 அல்லது 7-ஆம் நூற்றாண்டில் ஆதியாகமம் முதல் முதலாக எழுத்து வடிவம் எடுக்கத் தொடங்கியது எனலாம். அப்போதும், அதைப்பதிப்பித்தவர், இஸ்ராயேல் துய்த்த வரலாற்றின் இறையியல் உட்கருத்துக்களின் உயர்ந்த வளர்ச்சியடைந்த தொகுப்பையே அளிக்கிறார். இம்மூன்று

பாரம்பரியங்களும் இணைத்துப் பின்னப்பட்டு நாம் கொண்டிருக்கும் இறுதி வடிவில், ஆதியாகமம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கவேண்டும். இஃது ஊர்ப் பெயர் தெரியாத, இறையூக்கம் பெற்ற ஓர் ஆசிரியரோ, பலரோ செய்த வேலைப்பாடாகும்.

ஆதியாகமத்தின் பிற்பகுதி குலமுதுவர்களைப் பற்றியதாகும். இவ்வரலாற்று நிகழ்ச்சியுரை அவர்களின் குடும்ப வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இப்பகுதியின் இலக்கிய அமைப்பை ஆராயும்போது, இது விவிலிய இலக்கியத்திற்குப் புறம்பேயிருந்து மிகுதியாகக் கடன் வாங்கியிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் ஒரே கருத்துடைய தனிப்பட்ட நிகழ்ச்சிகளை விளக்க, மற்ற மூலங்களிலிருந்து கடன் வாங்கியிருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது. குலமுதுவர் வாழ்க்கையின் ஒவ்வொரு கதைக்கும் தடம் தேடுவதும், முடிந்தால் அவற்றிற்கு நீண்ட வாய்மொழிப் பாரம்பரியத்தில் அளிக்கப்பட்ட தொடர்ந்த விளக்கங்களை வரையறுப்பதும், இறுதியாக அந்தப் பாரம்பரியங்களிலும், ஆதியாகமம் முழுவதிலும், அவற்றின் இறையியல் கருத்தையும், நோக்கத்தையும் மதிப்பீடு செய்வதும், அறிஞர்களிடையே இப்போது நடைபெறும் சிறப்பான வேலையாகும்.

குலமுதுவர் வரலாற்றின் அடிப்படை நிகழ்ச்சிகளை வெளிக்கொணர்தல் இப்போது அவ்வளவு கடினமன்று. ஏனெனில் முற்காலத்தைவிட இப்போது, இந்நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைப்பற்றி நாம் மிகவும் தெரிந்து கொள்ளலாம். தொல்பொருள் ஆராய்ச்சி, கி.மு. இரண்டாயிரமாண்டுக் காலத்தில் மேற்காசியாவில் நிலவிய அரசியல், சமூக நீதி, சமயநிலைகள் பற்றிய தெளிவான அறிவை அளிக்க வல்லது. அதே நிலைகள் ஆதி 12-50-ஆம் அதிகாரங்களில் எதிரொலிக்கின்றன. கி.மு. 10 முதல் 5 வரையுள்ள நூற்றாண்டுகளில் வாழ்ந்த எந்தப் பழைய ஆசிரியரும், உண்மையான வரலாற்று அடிப்படையின்றி, குலமுதுவர்கள் காலம் பற்றித் தெளிவான படம் தீட்டமுடியாது. தொல்பொருள் ஆராய்ச்சியும் புதைபொருள் ஆராய்ச்சியும், இஸ்ராயேல் வட மெசபொத்தாமியாவிலிருந்து குடி பெயர்ந்ததிலிருந்து, கானானில் நாடோடி வீர வாழ்வு வாழ்ந்து, எகிப்தில் குடியேறியது வரையுள்ள விவிலிய விவரிப்புக்களின் உண்மைக்குச் சான்று பகருகின்றன. வரலாறும் இதற்குச் சான்று பகருகிறது.

இப்பகுதியில் வரும் அடிப்படைக் குடும்ப வரலாறு முதலில் வாய்மொழிப் பாரம்பரியமாக உருவெடுத்தது. அதன் மூல நோக்கம் குலப் பெருமையைக் காப்பதும், மகிழ்ச்சிப் பொழுதுபோக்கும் ஆகும். இது மக்கள் விரும்பும் பொதுக்கதை வடிவம் எடுத்தது. இப்படியாக, பெயர்களுக்குப் பொருள் அளிக்கும் முகத்தான் பொது விளக்கங்கள் அளிக்கப்பட்டன. குடும்ப நிகழ்ச்சிகள் நாட்டுப் பாடலாக வடிவம் எடுத்தன. சில சமயங்களில், அறிவுகடந்த நிகழ்ச்சிகளுக்கு ஆழ்ந்த உட்கருத்தளிக்க, அவ்விடங்களில் உள்ள மறைச் சடங்குக் கதைகளைப் பயன்படுத்தினர். படிப்படியாக இக்கதைகள் சில ஆட்களைச் சுற்றி உருவெடுத்தன; அல்லது சில புனித இடங்களில் வழிபாட்டோடு இணைந்ததாக உருவெடுத்தன. இஃது அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. பெரும்பாலும் இடங்களை ஒட்டிக் கதைச் சுழல்கள் எழுந்தன; புனித இடங்களை ஒட்டி இவை வளர்ச்சியடைந்தன. இவற்றில் மறைக்கூறுகள் வலியுறுத்தப்பட்டன. இவை மக்களின் விசுவாச அறிக்கையை எதிரொலித்தன. இவை அந்தந்த இடங்களுக்கும், குலங்களுக்கும், மகிமையும், பெருமையும் ஒளியும் அளித்தன. இந்த வளர்ச்சிக்குப் பின்தான், இவற்றை ஆதியாகம ஆசிரியர்கள் தங்களது நோக்கத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்தனர். சில சமயம், ஒவ்வொரு கதையின் மறைபோதகத்தை அழுத்திக் கூறுதற்கும் அல்லது முழு வரலாற்றில் முனைப்பான கருத்துக்களை அழுத்திக் கூறுவதற்கும் இந்த மாற்றியமைத்தல் தேவையாயிருந்தது. பல பாரம்பரியங்களும் படிப்படியாக ஒன்று சேர்க்கப்பட்டன. இறுதியில் பட்டியல் நூலாக ஏற்றுப் பதிப்பிக்கப்பட்டது. ஆயினும் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, இன்னும்

பதிப்பு வேலை தொடர்ந்து நடந்தது. இந்த வரலாற்று நீண்டதாயும் பலவகைப்பட்டதாயு மிருந்தாலும், இதில் குலமுதுவர் நிகழ்ச்சியுரையின் வரலாற்றுத்தன்மை பாதுகாக்கப்பட்டது. ஆதியாகமத்தை வாசிக்கும் போதும், விளக்கம் அளிக்கும்போதும் நூலின் இந்த நீண்ட தோற்ற வரலாற்றைக் கருத்தில் கொள்ளுதல் நன்று.

குலமுதுவர் வரலாற்றுக்கு முன்னுரையாகவுள்ள முதல் பதினோரதிகாரங்கள், இஸ்ராயேலின் தனிவரலாற்றை உலக வரலாற்றோடு பொருந்திக் கூறுகின்றன எனலாம். அவை குலமுதுவர் வரலாற்றுக்கும் பின் தோன்றியவை; இஸ்ராயேலின் யாத்திரை ஆகம அனுபவத்தின் ஒளியில் எழுதப்பட்டவை. இறைவனது மீட்பை நிலையாகத் துய்த்ததின் விளைவாக இஸ்ராயேல் பல நூற்றாண்டுகளாகத் தனது இறையியல் சிந்தனையை வளர்த்து வந்துள்ளது; இறைவன் – மனிதன் உறவையும், வரலாற்றில் இறைவனது செயலாற்றலையும் ஆழ்ந்த நோக்கோடு புரிந்து கொண்டுள்ளது. முதல் பதினோரதிகாரங்கள் இச்சிந்தனையின் விளைவாகும்; இச்சிந்தனையின் சுருக்கம் என்றுகூடச் சொல்லலாம்.

ஆபிரகாமின் வரலாற்றுக்கும் முன் நடந்ததாக விவரிக்கப்படும் நிகழ்ச்சியுரைகளின் இலக்கிய வடிவம் இஸ்ராயேலின் பாரம்பரியத்துக்கு மட்டுமே உரியதொன்றன்று. அது மற்றப் புறப்பண்பாட்டுப் பாரம்பரியங்களிலிருந்து கிடைத்ததொன்றாகும். விவிலியப் பாரம்பரியங்கள் மெசபொத்தாமியாவின் கதைகளை நன்கு அறிந்திருந்தன. குலமுதுவர்கள் இப்பாரம்பரியச் சூழ்நிலையிலிருந்துதான் தோன்றி வந்திருந்தனர். இவர்கள் தங்களுடைய பழைய பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் மறந்துவிடவில்லை. இப்படி அயல் பாரம்பரியங்களில் தோன்றிய கதைகள் சில சிறப்புமிக்கவையாகும். இவற்றில் சில மனிதன், உலகம் ஆகியவை தோன்றிய மறை உண்மைகள், இயற்கை அமைதி, மக்களிடையே வேறுபாடு, மொழிகள் வேறுபாடு, பிள்ளை பெற்றெடுத்தலில் துன்பம், பாலினக் கவர்ச்சி வேலையின் இன்றியமையாமை சாவைத் தவிர்க்க முடியாமை முதலிய விடை காண முடியாச் சிக்கல்களை விளக்க முயன்றன. விவிலிய நிகழ்ச்சியுரைக்கும், மேற்காசியாவின் மிகப்பழைய இலக்கிய நிகழ்ச்சியுரைகளுக்கும் கருத்தளவில் உள்ள உறவைக் கவனிக்கும் போது, பொருட்களை ஒழுங்குபடுத்துவதிலும், சொற்றொடர்ப்போக்கு விவரங்களிலும் பழைய புற இன இலக்கியங்களுக்கு விவிலிய ஆசிரியர்கள் கடன்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் இக்கதைகளுக்கு, யாவே, குருக்கள் பாரம்பரியங்கள் அளிக்கும் விளக்கம் தனிச்சிறப்புடையது; இக்கதைகள் தோன்ற உதவிய இலக்கியங்கள் அளிக்கும் விளக்கத்திலிருந்து இது வேறுபட்டது; மிகுந்த சிறப்புடையதுமாகும். தனித்தனி வேறான காட்சிகளை மறைவரலாற்றில் ஒரு தொடர்நாடகமாக ஒன்றிக்கச் செய்து, அதன் வழியாக ஆன்மீகக் காரியங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இவற்றில் ஆதிக்கம் செலுத்தும் மறைக்கருத்தால், படைப்பு பற்றிய தொடக்கக் கதைகள் ஆழ்ந்த இறையியலாக மாறுகின்றன; இஸ்ராயேலின் மீட்பு வரலாற்றோடு தொடர்பு படுத்தப்படுகின்றன. புற இனத்தைச் சார்ந்த, பிற பண்பாடுகளைச் சார்ந்த, கதைகளையும் நிகழ்ச்சிகளையும் விவிலிய ஆசிரியர்கள் பயன்படுத்தினாலும், யாவும் தங்கள் இறைவனின் சேவைக்கு ஏற்றதாகவும், தங்கள் மறைக் கொள்கைகளை விளக்கிக் கூறும் இறையியல் இலக்கியமாகவும் அவற்றை மாற்றுகின்றனர்.

தொடக்கக் காலம் பற்றிக் கொடுக்கப்படும் விவரிப்புகள் நாம் அறியும் எந்த வரலாற்றுக்கும் முந்தியவையாகும். இவற்றை எழுதும்போது கடந்தகாலம் பற்றிய அறிவியல், உயிர்நூல், மனித இயல், பிற புவிஇயல் முதலியவற்றைச் சார்ந்த நூல் ஒன்றை எழுதுவது என்பது விவிலிய ஆசிரியர்களின் நோக்கமன்று. உலகம் பற்றியோ, மனித தோற்றம் பற்றியோ அத்தகைய நூலை எழுதுவதற்கு அவர்கள் ஆற்றல் உள்ளவர்கள் அல்லர். இத்தொடக்க வரலாறு

வரலாற்றுக்காக எழுதப்பட்டதன்று. அதன் நோக்கம் முற்றிலும் வேறானது. அது வரலாறு பற்றிய இறையியல் விளக்கமாகும். துய்த்த வரலாற்றை விசுவாசம் தோய்ந்த நோக்கோடு புரிந்து கொள்ளுதலாகும். இப்பகுதி அடிப்படை மறை உண்மைகளைப் போதிக்க, வரலாற்றுச் செய்திகள், கதைகள், பொதுப் பாரம்பரியங்கள், வீரகாவியங்கள் முதலியவற்றைப் பயன்படுத்துகிறது. இப்பகுதியில் விவிலிய ஆசிரியர்கள் பயன்படுத்தும் இலக்கிய வடிவம், இக்கால இலக்கிய வடிவங்களோடு ஒப்பிடத் தக்கதன்று. இக்கால இலக்கிய அளவுகோல் கொண்டு ஆதியாகமத் தொடக்க வரலாற்று இலக்கியத்தை மதிப்பிடக் கூடாது. அதன் சிறப்பே தனிப்பட்டதாகும்.

விவிலிய ஆசிரியர்கள், இவ்விலக்கிய வடிவங்களைக் கொண்டு எப்படித் தாங்கள் விரும்பிய குறிக்கோளை எய்துகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு இத்தொடக்க வரலாற்றுப் பகுதியை மதிப்பிட வேண்டும். இவை பழங்கால வரலாற்று இலக்கிய வடிவங்களாகும். நாகரிகமற்ற மக்களுக்கும் பொருத்தமான, எளிய பொது நடைப்பண்பைக் கொண்டுள்ளன. இம்மக்களுக்குப் புலனறிவுத் தன்மையில் மனதைக் கவரும்படி சித்தரித்து, மிகச்சிறப்பு வாய்ந்த மறை உண்மைகளை மக்களின் மனத்தில் தெளிவாகப் பதிப்பிக்க இவை பயன்படுகின்றன. அறமிக்க ஒரே இறைத்தன்மை ஆதி விவிலிய விவரிப்புக்களுக்கு இன்றியமையாததாகும், உயிர்நிலையானது மாகும்; வேறுபடுத்தும் அடையாளமுமாகும். இஸ்ராயேலின் இறைவன் ஒரே இறைவன் என்கிற கோட்பாட்டின்அடிப்படைக் கொள்கைகள், இறையியல் செய்தியுள்ள உயிர் ஓவியக் கதைகளை ஒரு நாடகமாக இணைத்துக் கூறுதலின் வழியாகப் போதிக்கப்படுகின்றன. மீட்புத்திட்டத்தில் அடங்கியுள்ள பின்வரும் உண்மைகள், இப்பகுதியில் எடுத்துக்கூறப் படுகின்றன: தொடக்கத்தில் இறைவன் எல்லாவற்றையும் படைத்தல், ஆண், பெண் படைக்கப்படுதலில் இறைவனது சிறப்பான இடையீடு, இவர்களிடமிருந்து மனுகுலம் முழுவதும் தோன்றுதல், ஒழுக்க நிறைவும் மகிழ்ச்சியும் மிக்க தொடக்கநிலை, முதல் பெற்றோரின் பாவம், வீழ்ச்சி, பாவத்திற்குரிய தண்டனை, அதன்பின் வழிவழியாக வரும் சோதனைகளும், விளைவுகளும் ஆகியவை. உலகம் தற்செயலாகத் தோன்றியதன்று. இறைவன் திட்டம் செய்து அமைத்த வேலைப்பாடாகும். மேற்கூறியவை, காரணம் காட்டித் தர்க்க முறையில் விவரிக்கப்படுகின்றன. ஆனால் கவிதையும் கற்பனையும் மிக்க மொழியில் தரப்படுகின்றன. கவிதை உருவக முறையும், ஆழ்ந்த மனித உள்நோக்கும், இறை உண்மையும் ஒன்றை ஒன்றுதழுவியும் வியத்தகு முறையில் இணைந்தும் நிற்கும் நிலையையுடைய இப்பகுதி தனி ஒளிச்சிறப்பு வாய்ந்த இலக்கிய மணியாகத் திகழ்கிறது.

இறைவனையும் அவர்தம் ஆற்றல் மிக்க செயல்களையும், பாதுகாப்பையும், துய்த்ததாலும், விசுவாசமிக்க ஆழ்ந்த சிந்தனையாலும், வாழ்வின் பெரும் பிரச்சனைகளைப் பற்றிய அனுபவமும் சிந்தனையும் சார்ந்த வாழ்க்கைப் போராட்டத்தின் வழியாகவும், தொடக்க வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய அறிவை இஸ்ராயேல் பெற்றது. நன்மை, தீமைப்பற்றிய சமய உறுதி சிந்திக்கப்பட்டு, யாவற்றிற்கும் பொருந்தக் கூறப்பட்டு, வரலாற்றுப்பணியில் இறைவனது படைப்பின் தொடக்கத்திற்கே நீட்டப்பட்டது. இப்பகுதியில் நெருக்கமில்லாத வரலாற்றுப்பணி தெளிவாக உள்ளது. நிகழ்ச்சிகள் நடந்தகாலத்திற்கும் அவை எழுதப்பட்ட காலத்திற்கும் இடையே நீண்ட இடைக்காலம் இருந்ததால், இவ்வரலாற்றுப் பகுதியில் ஒரு தெளிவற்ற தன்மை இருப்பது தவிர்க்க முடியாத தொன்றாகும். இந்நிலையில் இஸ்ராயேல் அறமிக்க ஒரே இறைத்தன்மைத் திட்டத்தின் இறை, மனித உண்மைகளிலுள்ள தனது விசுவாசத்தை எடுத்துக்கூறவும் போதிக்கவும் பயன்படுத்திய கருவி, வண்ணமிக்க, மறைப்பொழிவுத் தன்மையுடைய நிகழ்ச் சியுரையிலக்கிய வடிவம்தான். இதற்கு இப்பகுதி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**4. திட்டமும் பொருளடக்கமும்:** ஐந்நூலின் அமைப்பில் ஆதியாகமம், இஸ்ராயேலின் வரலாற்றுக்கு முன்னுரையாக அமைகிறது. இதை இருபாகமாகப் பிரிக்கலாம். முதல் பதினோரதிகாரங்களைக் கொண்ட முதற்பகுதி தானாகவே ஒரு சிறுநூலாகும். இது நாம் அறியும் எவ்வரலாற்றுக்கும் முந்தியது. இதை இனி முன்வரலாறு அல்லது தொடக்கவரலாறு என்றழைப்போம். இது ஐந்நூல் முழுமைக்கும் முன்னுரையாக அமைகிறது; அதைவிட மீட்பு வரலாற்றுக்கே இது முன்னுரையாக அமைகிறது என்பது சிறப்புடையதாகும். இப்பகுதி இறைவனுடைய தலையீட்டின் தேவையை விளக்குகிறது; மீட்பு வரலாற்றை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. உலகப்படைப்பு, மனிதனின் கெடுமதி, அதன் விளைவு முதலியவற்றைப் பற்றிக் கூறுகிறது. ஆபிரகாமின் காலத்தில் நடந்த இறையிடையீட்டுக்கு முன் காலத்தில் நடந்தவற்றைக் கூறுகிறது. இந்த இறையிடையீட்டையும் விளக்குகிறது. ஆபிரகாமின் வரலாற்றுக்கு நம்மை இட்டுச் செல்லுகிறது. இப்படியாக ஐந்நூல் முழுமைக்கும், மீட்பு வரலாறு முழுமைக்குமே பொதுவான முன்னுரையாக விளங்குகிறது இம்முன்வரலாறு.

ஆதி 12-50 அதிகாரங்களைக் கொண்ட பகுதி குலமுதுவர் வரலாறு ஆகும். இஃது ஆபிரகாமில் தொடங்கி, இஸ்ராயேலின் வரலாற்றுக்கு உடனடியான முன்னேற்பாடாகவும், முன்னுரையாகவும் அமைகிறது; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு முதலிய இஸ்ராயேலின் பெரும் குலமுதுவர்களின் வரலாற்றை வரைகிறது. இப்படிப்பட்ட பிரிவை ஆதியாகமத்தின் இறுதி ஆசிரியர்கள் அல்லது பதிப்பாசிரியர்கள் கருத்தில் கொண்டிருந்தனர் என்பதற்கும் அடையாளங்கள் உள்ளன.

இரு பகுதிகளும் பொருட்கள் தோன்றியது பற்றிய விளக்கம் அளிக்கும் பகுப்பாராய்ச்சிகளாகும். அவை பயன்படுத்தும் பொருள்களில் வேறுபடுகின்றன. மேற்கூறிய பிரிவுகளின்படி இந்நூலுக்குப் பின்வரும் பொருளடக்கத் திட்டத்தைக் கொடுக்கலாம். ஒவ்வொரு பிரிவும் எந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாயிருக்கலாம் என்று அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது. யாவே, எலோகீம், குருக்கள் பாரம்பரியங்கள் முறையே J, E, P ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்படும். இஃது ஊகத்தின் அடிப்படையிலானதே.

I. முன் வரலாறு: உலகம், மனுகுலம் தோன்றிய விதம் (1:1-11:32).

1) 1:1-2:3 : உலகப்படைப்பு:முதல் வரலாறு; முதல் ஓய்வு நாள் (P).

2) 2:4-25 : உலகப்படைப்பு: இரண்டாம் வரலாறு; மனிதன், இன்ப வனம், ஏவாள் படைக்கப்படுதல் (J).

3) 3:1-24 : முதல் பெற்றோரின் வீழ்ச்சி, கடவுளின் வாக்குறுதி (J).

4) 4:1-16 : காயின், ஆபேல் வரலாறு (J).

5) 4:17-24 : காயினின் மரபு முறைப்பட்டியல் (J).

6) 4:25-5:31 : ஆதாம் முதல் நோவா வரை மரபு முறைப்பட்டியல் (P).

7) 6:1-4 : அரக்கர்.

8) 6:5-10:32 பெருவெள்ள வரலாறு (J,P).

- 6:5-8 : மனிதருடைய ஒழுக்கக்கேடு (J).
- 6:9-22 : நோவாவின் கதை: வெள்ளத்திற்கு முன்னேற்பாடு (P).
- 7:1-16 : நோவா குடும்பம் பெட்டகத்துக்குள் புகுதல் (J,P).
- 7:17-24 : வெள்ளப் பெருக்கு (J,P).
- 8:1-14 : வெள்ளம் வடிதல் (J,P).
- 8:15-22 : நோவா பெட்டகத்திலிருந்து வெளிவருதல், நோவாவின் பலி (J,P).

9:1-17 : நோவாவுடன் கடவுள் உடன்படிக்கை, புதிய உலக அமைப்பு (P).

9:18-28 : நோவாவின் புதல்வர்கள் (J).

10:1-32 : நோவாவின் வழித் தோன்றல்கள் (P,J).

9) 11:1-9 : பாபேல் கோபுரம் (J)

10) 11:10-32 : தலைமுறைப் பட்டியல் - முடிவுரை (P,J).

**I. குலமுதுவர் ஆபிராமின் வரலாறு:** (12:1-25:18).

1) 12:1-9 : ஆபிராம் அழைக்கப்படுதல், ஆபிராம் கானான் நாடு செல்லல் (P,J).

2) 12:10-20 : எகிப்தில் ஆபிராம் (J).

3) 13:1-18 : ஆபிராமும் லோத்தும் பிரிதல்; கடவுளின் காட்சி (J,P).

4) 14:1-16 : ஆபிராமும், நான்கு அரசர்களும், லோத்தின் சிறைமீட்பும் (தனி மூலம்).

5) 14:17-24 : மெல்கிசெதேக்கு ஆபிராமை ஆசீர்வதித்தல் (தனிமூலம்).

6) 15:1-21 : இறைவனின் அருள்வாக்கு; உடன்படிக்கை (J,E).

7) 16:1-16 : ஆகாரின் ஓட்டம்; இசுமயேல் பிறப்பு (J,P).

8) 17:1-27 : உடன்படிக்கை; விருத்த சேதனம் (P).

9) 18:1-15 : மாம்ரேயில் காட்சி (J).

10) 18:16-19:38: சோதோம் கொமோரா அழிவு (J).

18:16-33 : அழிவு முன்னறிவிக்கப்படுதல்; ஆபிராமின் மன்றாட்டு (J).

19:1-29 : சோதோம், கொமோரா அழிவு; லோத்து காப்பாற்றப்படுதல் (J).

19:30-39 : மோவாபியர், அம்மோனியர் தோற்றம் (J).

11) 20:1-18 : கெராராவில் ஆபிராமும் சாராளும் (E).

12) 21:1-7 : ஈசாக்கின் பிறப்பு (J,P).

13) 21:8-21 : ஆகாரும் இசுமயேலும் துரத்தப்படுதல் (P,E).

14) 21:22-34 : ஆபிராம் அபிமெலக்கு உடன்படிக்கை (J, P, E).

15) 22:1-19 : ஈசாக்கைப் பலியிட ஆபிராமுக்குக் கட்டளை (E,J).

16) 22:20-24 : நாகோரின் மரபினர் (J).

17) 23:1-20 : சாராளின் மரணம்; இரட்டைக் குகைக் கல்லறையை வாங்குதல் (P).

18) 24:1-67 : ஈசாக்கின் திருமணம் (J).

19) 25:1-18 : ஆபிராமின் மரபினர்: அவரது இறப்பு (P,J).

**III. குலமுதுவர் ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் வரலாறு:** (25:19-36:43)

1) 25:19-28 : ஏசா, யாக்கோபு பிறப்பு (J,P).

2) 25:29-34 : ஏசா தம்முடைய உரிமையை விற்றல் (J).

3) 26:1-22 : கெராராவில் ஈசாக்கு (J).

4) 26:23-33 : பெயேர்செபாவில் ஈசாக்கு அபிமெலக் கோடு உடன்படிக்கை (J).

5) 26:34-35 : ஏசாவின் திருமணம் (P).

6) 27:1-45 : ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தல் (J).

7) 27:46-28:9 :

மெபொத்தாமியாவிலுள்ள காரானுக்கு யாக்கோபு செல்லல் (P).

8) 28:10-22 : பெத்தேலில் கனவுக் காட்சி (J,E).

9) 29:1-30 : யாக்கோபின் திருமணங்கள் (J,E).

10) 29:31-30:24 : யாக்கோபின் புதல்வர் (J,E).

11) 30:25-43 : யாக்கோபு லாபானை ஏய்த்தல் (J,E).

12) 31:1-21 : யாகோபு லாபானை விட்டு ஓடுதல் (E).

13) 31:22-42 : யாக்கோபை லாபான் துரத்துதல் (J,E).

14) 31:43-32:2 : லாபானுடன் உடன்படிக்கை (J,E).

15) 32:3-21 : ஏசாவைச் சந்திக்க முன்னேற்பாடு (J,E).

16) 32:22-33 : யாக்கோபு இறைவனோடு போராடுதல், இஸ்ராயேல் என்ற பெயர் பெறுதல் (J).

17) 33:1-20 : யாக்கோபு, ஏசா சந்திப்பு (J,E).

18) 34:1-5 : தீனா கற்பழிக்கப்படுதல் (J,E).

19) 34:6-31 : செக்கேமியருடன் திருமண உடன்படிக்கை (J,P).

20)35:1-29 : பெத்தேலில் யாக்கோபு - ராக்கேல், ஈசாக்கு மரணம் (E, P, J).

21) 36:1-43 : ஏசாவின் வழித்தோன்றல்கள் (P,E).

IV. யோசேப்பின் வரலாறு: (37:1-50-26)

1) 37:1-36 : யோசேப்பு எகிப்திய வணிகரிடம் விற்கப்படல் (J,E).

2) 38:1-30 : யூதாவும், தாமாரும்: ஓனான் அழிவு (J).

3) 39:1-23 : யோசேப்பு சோதிக்கப்படுதல் (J).

4) 40:1-23 : சிறையிலே கனவுகளுக்கு விளக்கம் (E).

5) 41:1-36 : யோசேப்பு பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் அளித்தல் (E).

6) 41:37-57 : யோசேப்பு எகிப்து நாட்டின் முதல் அமைச்சன்.

7) 42:1-34 : யோசேப்பு தனது உடன் பிறந்தவர்களை முதல் தடவை சந்தித்தல் (E,J).

8) 43:1-34 : யாக்கோபின் புதல்வர் யோசேப்பை மீண்டும் சந்தித்தல் (J,E).

9) 44:1-34 : பென்யமினுக்கு யூதாபரிந்துரைத்தல் (J).

10) 45:1-28 : தன்னைத் தெரியப்படுத்துதல் (J,E).

11) 46:1-34 : யாக்கோபு தன் குடும்பத்துடன் எகிப்தில் குடியேறுதல் (J,P).

12) 47:1-31 : எகிப்தில் எபிரேயர்கள், யோசேப்புக்கு யாக்கோபின் கட்டளை (J,P).

13) 48:1-22 : யாக்கோபு யோசேப்பின் புதல்வர்களை ஏற்று ஆசிர்வதித்தல் (J, E, P).

14) 49:1-32 : யாக்கோபின் ஆசிர்கள், இறைமொழிகள், அவருடைய மரணம் (J,P).

15) 50:1-26 : யாக்கோபு அடக்கம் செய்யப்படுதல், யோசேப்பின் இறுதிச் செயல்கள் - அவரது மரணம் (J, E, P).

**5. சிறப்புக் குறிப்புக்கள்:**

மேலே தொடரும்முன் சிலவற்றை மீண்டும் கூற விரும்புகிறோம். வாழ்வு பற்றிய அடிப்படைச் சிக்கல்களைப்பற்றி இறை மக்களுக்காக எழுதப்பட்ட நூலாகும் ஆதியாகமம். இதன் வாசகர்கள் எளிய நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையாக வாழும் நிலைக்கு மாறிக்கொண்டிருந்த மக்களாவர். இவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்த எழுதப்பட்டதாகும் இந்நூல். ஆகையால் அறிவியல் முறைப்படியல்லாது சாதாரணமாய்ப் பொருட்கள் விவரிக்கப்படுகின்றன. ஆசிரியர்களிடம் தொலைநோக்கியோ, உருப்பெருக்கக் கண்ணாடியோ மற்றக் கருவிகளோ இல்லை. அவர்களுடைய சாதாரணக் கண்கள்தாம் பெரிதும் பயன்பட்டன. மனித கண்களுக்குச் சாதாரணமாய்ப் பொருள்கள் தோன்றிய விதத்தில்தான் அவர்கள் எழுதினார்கள்.

**5. அ. இஸ்ராயேலின் விசுவாசம்:**

தொடக்கத்திலிருந்து பல கடவுள்கள் கோட்பாட்டோடு வாதப்போக்கை இஸ்ராயேலின் நூல்கள் காட்டுகின்றன. அறமிக்க ஒரே இறைத்தன்மைக் கோட்பாட்டுப் பணித்திட்டத்தில் படைப்பின் கதையைப் புகுத்தி, உலகம் இறைவனால் படைக்கப்பட்டதால், தொடக்கத்தில் உலகிலுள்ள யாவும் நல்லவையாக இருந்தன என்று அழுத்திக் கூறுவதில் இந்த வாதப்போக்கு தெளிவாகிறது. படைப்புப்பற்றிய பழங்கால மேற்காசிய மிகப்பழங்கதைகளில் எல்லாம் சிறந்தது பலரும் அறிந்த " எனும்மா எலிஷ்" என்ற பாபிலோனியக் கதையேயாகும். இக்கதையைப் பயன்படுத்தும் குருக்கள் பாரம்பரியம், உடல் உறவுக்கருத்து, வெறுமைக்கும், இறைவனுக்கும் இடையே போராட்டம் முதலிய கருத்துக்களை இக்கதையிலிருந்து நீக்கிவிட்டு, இதைப் பயன்படுத்துகிறது. உலகில் உள்ள யாவும் இறைவனது வார்த்தையால், உழைப்பில்லாது தோன்றின என்று வெறுமனே உறுதியாகக் கூறுகிறது. யாவே பாரம்பரியம் மனிதன் உடனடியாகவும், நேரடியாகவும், முழுமையாகவும் இறைவனைச் சார்ந்து இருத்தலே அவனது வாழ்வுக்கு மிக இன்றியமையாததாகும் என்ற உண்மையை வண்ணத்துடன் உறுதியாகக் கூறுகிறது. இவ்விதம் இஸ்ராயேல் தனது வரலாறு உலக வரலாற்றோடு பிரிக்க முடியாத விதத்தில் உறவுடையது என்பதும், உலகமும் மனிதனும் இஸ்ராயேலின் கடவுளால் படைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவதால்தான் உலகிலே இஸ்ராயேலின் பாகம் பொருளுடையதாக இருக்கிறது என்பதுமாகிய தனது விசுவாசத்தைப் பறைசாற்றுகிறது. இறைவன் இஸ்ராயேலைத் தமக்கே உரிய மக்களாகப் படைத்துள்ளார் என்ற இஸ்ராயேலின் அனுபவம், தமது இறைவன் உலக மக்களின் தனிப்பட்ட ஒரே ஆண்டவராக இருக்கிறார் என்பதையும் உண்டாக்குகிறது. தனிப்பட்ட விதத்தில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவம், இறைவன் உலகைப் படைத்தது, உலகின் மேலும் மனுகுலத்தின் மேலும் அவர் கொண்டுள்ள அக்கறை முதலிய உண்மைகள் பற்றிய அறிவை வளர்ச்சியடையச் செய்தது.

**5. ஆ. படைப்பும் வீழ்ச்சியும்:** இஃது எல்லாச் சமய உண்மைகளுக்கும் அடிப்படையான உரிமையாகும். ஆதியாகம முதல் அதிகாரத்தின் படைப்புக்கதை வழிபாட்டுப்போதகப் பாடலாக எழுதப்பட்டுள்ளது. இஃது எல்லாவற்றையும் உள்ளடக்கி இறைவனுக்கு அளிக்கும் போற்றுரையாகும். இதில் இறைவனது மூலத்திட்டமும் வரையப்படுகிறது. எல்லாப் படைப்புக்கும் தலைவனாக மனிதனை அமர்த்துவதில் இறைவனது நன்மைத்தன்மை காட்டப்படுகிறது. இதைவிடச் சிறப்பானது, இறைவன் தம்மோடு ஒன்றிப்பையும், நெருங்கிய நட்புறவையும் மனிதனுக்கு நல்கியதாகும். வாழ்வளிக்கும் மரத்தையும் நன்மை தீமை அறியும் மரத்தையும் கொண்ட இன்பச் சோலைக்கதை, மனிதன்மேல் இறைவன் சுமத்திய ஒரே ஒரு கட்டுப்பாட்டை எடுத்துக்கூறும் ஓர் இறையியல் உத்தியாகும். இந்தக் கட்டுப்பாடு, கடவுள் தன்னைப் படைத்தார் என்று மனிதன் ஏற்றுத் தான் படைக்கப்பட்ட தன்மையை ஏற்றுக்கொள்ளுதலாகும்.

இறைவன் மனிதனுக்கு அளிக்க விரும்பிய வரலாற்றை வரைந்தபின், மனிதனுடைய உரிமையான வாழ்வு எப்படி இருந்தது, மனிதனுக்கு என்ன ஆயிற்று, எப்படித் தனது துன்பத்திற்கு வந்து சேர்ந்தான் என்று படைப்புக் கதையின் மீதிப்பகுதி விவரிக்கிறது. இறைவன் நல்லவர். உலகில் நன்மையிருந்தது. ஆனால் இஸ்ராயேலின் அனுபவத்தில் தீமையும், ஒழுங்கின்மையும் மனிதனின் மகிழ்ச்சியற்ற அவலநிலையும் வெளிப்படையாகும். தீமை எப்படித் தோன்றிற்று? இன்பச் சோலை விவரிப்பில் காணப்படும் மேலான இன்ப வாழ்வு மனிதனின் சொந்த வாழ்வில் இல்லை. இறைவனது திட்டம் எப்படியோ குறுக்கிடப்பட்டுக் கெடுக்கப்பட்டுள்ளது. இறைவனிடமிருந்து மனிதன் தன்னையே விரும்பி, வேண்டுமென்றே பிரித்துக்கொண்டதின் விளைவாகும் தீமையின் தோற்றம். இவ்வாறு இஸ்ராயேல் விளக்கியது. இறைவனிடமிருந்து மனிதன் தன்னையே பிரித்துக்கொள்ளுதல் இறைவன் நேரடியாக விரும்பியதன்று. மனிதனின் பணியாமையின் விளைவாகும். இன்பச்சோலைப் பாம்பால் சோதிக்கப்படுதல், மனிதனது வீழ்ச்சி, அதன் விளைவுகள் முதலியவை நாடகக் காட்சிகளாக, மனிதப் பாணியில் உருவக முறையில் விளக்கப்படுகின்றன. இவற்றின் வழியாக மனிதனது அவலநிலையை விளக்கும் பாவம், தண்டனை பற்றிய இறையியல் போதகம் தரப்படுகிறது. முதல் பாவத்தின் தன்மையை வரையறுப்பதும் மதிப்பீடு செய்வதும் ஆசிரியரது கவனத்தைக் கவரவில்லை. மனிதன் கீழ்ப்படியாமையால் படைப்பு உடன்படிக்கையின் ஒரே எளிய சட்டத்தை மீறினான். தான் இறைவனைச் சார்ந்து இருக்கும் தனது உண்மை நிலையை ஏற்க மறுத்தான். இப்பாவத்திற்குத் தண்டனை அடைந்தான். இக்கருத்து மீட்பு வரலாறு முழுவதும் காணப்படும் தலையாய கருத்துக்களில் ஒன்றாகும்.

ஆயினும் எல்லாம் இழந்துபோகவில்லை. இறைவன் தம்மைப் பொருத்தமட்டும், தமது படைப்பு உடன்படிக்கையின் ஆசீர் அருட்கொடைகளையெல்லாம் எடுத்துக் கொள்ளவில்லை. முதல் பெற்றோர் உடனே சாகவில்லை. சாவில் முடியும் கடினவாழ்வைத் தண்டனையாகப் பெற்றனர். இருப்பினும் தீமைக்கு எதிராகப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. இது மனிதன் பாம்பினால் முழுவதும் வெல்லப்படவில்லை என்பதைக் காட்டிற்று. முதல் மூலநற்செய்தி பறைசாற்றப்பட்டது (ஆதி 3:15). வருங்காலத்தில் நிகழவிருக்கும் மீட்பு வாக்களிக்கப்பட்டது. இறைவன் தொடர்ந்து மனிதன்மீது அக்கறை காட்டினார். அவனுக்கு ஆடையளித்தார்; புது மனித உயிர்களின் ஊற்றான, பல்கிப்பெருகும் அவனது ஆற்றலைப் பயன்படுத்த மனிதனுக்குத் தொடர்ந்து இசைவு அளித்தார். ஆனால் பாவத்தின் மற்ற விளைவுகள் அழிக்கப்படவில்லை. இறைவன் மட்டுமே இச்சாபத்தை எடுக்கக்கூடும். வருங்காலத்தில் அது நிகழும் என்று வாக்களிக்கப்பட்டது. அஃது எப்போது?

**5. இ. காயின் ஆபேல் கதை:** ஆதி 4-ஆம் அதிகாரத்தில், பண்பாடு வளர்ந்துள்ள (4:2) வழிபாட்டு நிறுவனங்கள் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன (4:3); மக்கள் பல்கிப்பெருகிப்பரவியுள்ள நிலையைக் காண்கிறோம். இவற்றைக் கருத்தில் கொண்டு, சிலர், இக்கதை முதல்பெற்றோரின் முதல் புதல்வர்களின் விதியைப் பற்றிக்கூறவில்லை; மூலப் பாரம்பரியத்தில், இக்கதை ஆயர்களுக்கும் உழவர்களுக்கும் இடையேயிருந்த பகைமையை எடுத்துக்கூறுகிறது; ஆகவே பிற்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பர். இது வீரகாவியமாக இருந்திருக்கலாம் என்பர். நாடோடியாக வாழ்தல், பயிர்செய்தல் முதலிய தொழில்கள் ஏற்கெனவே இருந்திருந்தாலும் இக்கதை அவை தோன்றிதற்குக் காரணம் காட்டும் கதையாக அமைந்துள்ளது என்பர்.

விவிலிய ஆசிரியர், இக்கதையை அதன் மூலப் பாரம்பரியங்களினின்று எடுத்து, குறைநீக்கி, யாவர்க்கும் போதனை அளிக்கும் கதையாக மாற்றி அதன் தரத்தை உயர்த்துகிறார். இறைவனுக்குக் கீழ்ப்படியாமையின் கொடிய விளைவு, முதல் பெற்றோரின் வழித்தோன்றல்கல்

யாவரையும் தாக்கித் துன்புறுத்தியது. பாவத் தீமையின் விளைவுகள் மிகப்பெரும் துயர் தருவதாயின; கவலைக்குரியவை ஆயின. பாவம் பாவத்திற்கு இட்டுச் சென்றது. அதன் ஆற்றல் பெருகுகிறது. வாழ்வின் ஒவ்வொரு வழியிலும் அதன் எதிர்விளைவுகள் தெளிவாயிற்று. முதல் பாவத்தின் விளைவாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவு முறிந்தது. இது மனிதர்களுக்குள்ளே பகைமைக்கு இட்டுச் சென்றது. கொலை, அழுக்காறு, பொறாமை, ஒரே சமயத்தில் இருமனைவியரைக் கொள்ளல், பழிவாங்குதல் முதலியவை கீழ்ப்படியாமையின் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

காயின்-நிலத்தை உழுது பயிரிடுபவன். ஆபேல்- ஆடு மேய்ப்பவன். இறைவன் காயினது காணிக்கையை விட ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாகப் பொறாமையாலும் சினத்தாலும் உந்தப்பட்டுக் காயின் தனது தம்பியைக் கொன்றான். இந்த உடன்பிறந்தான் கொலைக்குப்பின், காயின் நிலையற்றவனும் நாடோடியுமாகத் திரியும்படி தண்டிக்கப்படுகிறான். இக்கதையில் இறைத்தேர்தலில் தன்னுரிமை என்ற கருத்தை ஆசிரியர் பயன்படுத்துகிறார். இத்தன்னுரிமையான தேர்தல் மீட்பு வரலாறு முழுவதிலும் அடி ஓட்டமாக உள்ளது.

"நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும்" (4:7) என்ற உரையில் இக்கதையைக் கொடுப்பதில் ஆசிரியரது நோக்கம் தெளிவாகிறது. முதல் பாவத்திற்குப் பிறகு உலகில் பாவங்கள் பெருகிப்பரவியிருந்தன. ஆனால் மனிதன் பாவச்சோதனையை வெல்லமுடியும்; வெல்லவேண்டும். காயின் ஆபேலின் கதை நம்பிக்கையோடு முடிகிறது. இறைவன் காயினுக்குக் காட்டிய இரக்கம் அழுத்திக் கூறப்படுகிறது. "காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான் என்று சொல்லி, காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன்மேல் ஓர் அடையாளம் இட்டார்" (4:15). மீட்பு வரலாற்று முழுவதிலும் பாவம் இறைவனது தண்டனையைக் கோருகிறது. ஆனால் தண்டனை அளிக்கும்போதும் இறைவன் தமது நீதியைத் தமது அருளிரக்கப் பெருக்கால் மட்டுப்படுத்துகிறார்.

பிற்கால விவிலிய அறிஞர்கள், காயினுக்கும் ஆபேலுக்கும் ஒழுக்க, சமயப்பண்புகளில் வேறுபாடு இருந்ததால் (ஆதி 4:6-7; எபி 11:4) இறைவன் இளையவனை ஏற்றுக் கொண்டார்; மூத்தவனைப் புறக்கணித்தார் என்பர். புதிய ஏற்பாடு, ஆபேலை அவனது குற்றமின்மைக்கும் (மத் 23:35) விசுவாசத்திற்கும் (எபி 11:4) புகழுகிறது. ஆபேல் கிறிஸ்துவுக்கு ஒரு முன் அடையாளமாகக் கருதப்படுகிறார் (எபி 12:24). நமது நற்கருணை மன்றாட்டில் ஆபேலின் காணிக்கை கிறிஸ்துவின் பலிக்கு ஓர் அடையாளமாகக் கருதப்படுகிறது. மாறாக, தன் உடன்பிறந்தானுக்கு அன்பு செய்யாத கிறிஸ்துவன் தீயோனைச் சார்ந்த காயினுக்கு ஒப்பாவான் என்று யோவான் அறிவுறுத்துகிறார் (1 யோவா 3:10-12).

### 5. ஈ. மரபுமுறைப்பட்டியல்கள்:

ஒரு குடும்பத்தின் அல்லது குலத்தின் முன்னோர் தலைமுறைப் பட்டியல்களைக் கணித்தல் செமித்தியர்களது வழக்கமாகும். இஸ்ராயேலரிடமும் இவ்வழக்கு இருந்தது. ஐந்நூலில் குருக்கள் பாரம்பரியம் இவ்வகை மரபுமுறைப் பட்டியலில் கவனம் செலுத்துகிறது. வாய்மொழிப் பாரம்பரியங்களை வருங்காலத் தலைமுறையினருக்குக் கையளிப்பதற்குத் திட்டம் செய்யப்பட்ட நினைவுக் குறிப்பு சார்ந்த உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன; தலைமுறை மரபுமுறைப் பட்டியல் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

ஆதியாகமத்தில் வரும் பட்டியல்கள், வரலாற்று மரபுக் கொடி முறைகள் அல்ல; ஆனால் நீண்டகால இடைவெளியை இணைக்க உதவுகின்றன. விவிலிய ஆசிரியர், மீட்பு வரலாற்றில் உள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டவும் பெருங்காவியத்தின்

முடிநிலைக்கு இட்டுச்செல்லும் நோக்கோடும், யாவே குருக்கள் பாரம்பரியங்களில் காணப்படும் மரபுமுறைகளிலிருந்து சிலவற்றை எடுத்துக் கூறுகிறார். இரு பாரம்பரியங்களுமே நாட்டு வரலாற்றை எடுத்துக் கூறும் நோக்கத்திற்காக முதல் மனிதன் வரை தலைமுறை மரபுகளைத் தரவில்லை. மாறாக, இறைவன் வரலாற்றைக் கடந்தவர் என்றும், ஆதிமனிதன் முதல் தங்கள் காலம் வரை வரலாற்றில் முடிவான, உறுதியான விதத்தில் பங்கெடுத்துள்ளார் என்றும் ஏற்றுக்கொண்டனர். தன்னுரிமையற்ற நாட்டு மக்களுக்கு, அன்றையச் சமூகம் அதற்கு முன்வாழ்ந்த முன்னோர்களோடு கொண்டுள்ள தொடர்பையும், இஸ்ராயேலின் வரலாற்றில் அம்முன்னோர்களுக்காக இறைவன் தனிச்சிறப்பான முறையில் இடையிட்டுச் செயல் ஆற்றியதையும் எடுத்துக் கூற விரும்பினர். இஸ்ராயேலை இறைவன் தேர்ந்தெடுத்ததும் உலக வரலாற்றில் இஸ்ராயேலின் பாகமும் தற்செயலாக நடந்தவையல்ல. எல்லா மனிதர்களுக்கும் மூதாதையரான ஆதாமை இறைவன் படைக்கும்போதே, இஸ்ராயேலுக்கு இறைவன் தமது திட்டத்தில் இடம் கொடுத்திருந்தார் என்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கு மரபுமுறைப் பட்டியல்கள் பயன்பட்டன. நீண்ட வாழ்வுகாலம் கொடுக்கப்படுகிறது. எண்களின் அடையாளப்பொருள் தெளிவாகத் தெரியவில்லை. வாழ்வு காலத்தின் நீட்சி குறைவதிலிருந்து ஒழுக்க வாழ்வு, குறைந்து, இழிநிலைக்கு உள்ளாகிறது என்று போதிக்க விவிலிய ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது. இப்படியாகப் பெருவெள்ளத்திற்கு மேடை தயாராகிறது.

காயின் மரபுமுறைப்பட்டியல் (ஆதி 4:17-26) குருக்கள், யாவே ஆகிய இரு பாரம்பரியங்களின் இணைப்பாகத் தெரிகிறது. ஆசிரியர் இரண்டையும் ஒத்திருக்கச் செய்யவில்லை. வெறுமனே இரண்டையும் சேர்த்துத் தருகிறார். யாவே பாரம்பரியம் ஒழுங்காக அமைக்கப்பட்ட சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ற முன்னேற்றத்தையும், புதிய தொழில் முதலியவற்றையும், விவரிக்கிறது. பண்பாட்டு வளர்ச்சிக்கேற்பப் பாவங்களும் மிகுந்தன (4:23-24) என்றும் காட்டுகிறது. குருக்கள் பாரம்பரியத்தைச் சார்ந்த சேத்தின் மரபு முறை (5:1-33; 11:10-26) ஆதி 2:4-இன் தொடர்ச்சியாகும் என்று அறிஞர் கருதுவர். வெள்ளத்திற்கு முன் பத்துக்குல முதுவர்களும், இருக்கின்றனர். இப்பட்டியல் பாபிலோனிய அரசர் பட்டியலுக்கு ஒத்ததாக உள்ளது. ஆனால் விவிலியத்தில் காணப்படும் வாழ்வுக்கால நீட்சிமை பாபிலோனியப் பட்டியலோடு ஒப்பிடும்போது அளவோடு உள்ளதே.

5. உ. பெருவெள்ளம்: 1) இந்த மறைபொருள் மிக்க, தனிப்பட்ட பகுதி, சுவையில் புராணக்கதைத் தன்மையைக் கொண்டுள்ளது; பல கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமாகவும் இருந்துள்ளது. இக்கதையில் யாவே, குருக்கள் பாரம்பரியங்கள் பின்னிப்பிணைந்து நிற்கின்றன. அவற்றைப் பிரித்துக் கதையை அமைக்கலாம். யாவே பாரம்பிரிய விவரிப்பு: 6:5-8; 7:1-5.7 (8-9). 10.12.16-17. 22-23; 8:2 பின் பகுதி .3 முன் பகுதி 6. (7). 8-12.13 பின் பகுதி (14). 20-22; 9:18-19. குருக்கள் பாரம்பரிய விவரிப்பு 6:9-22; 7:6 (8-9). 11, 13-15.18-21,24: 8:1-2 முன் பகுதி. 3 பின்பகுதி. 5(7). 13 முன் பகுதி (14). 15-19; 9:1-17. ஒவ்வொரு தொகுப்பும் ஒற்றுமையுள்ள, முரணில்லாத கதையாகும். யாவே பாரம்பரிய விவரிப்பில் சிலவற்றை ஒதுக்கி விடலாம். குருக்கள் பாரம்பரய விவரிப்பு முழுமை உடையது. 7:8-9; 8:7.14 ஆகிய உரைகள் இருபாரம்பரியங்களுக்கும் பொதுவானவையாகத் தோன்றுகின்றன. 9:8-17 இல் இருமுறை கூறுதல் காணப்படுகிறது.

வரவிருக்கும் பேரழிவிற்கு 6:1-4-இல் எச்சரிக்கை விடப்படுகிறது. யாவே பாரம்பரியத் தொடக்க வரலாறு, உலகிலே பாவம் விரைவாகப் பரவியிருப்பதை விவரிக்கிறது. பாவம் நிறைந்த உலகில் உள்ள உயிர்களையெல்லாம் அழித்துவிடுவதாக இறைவன் முடிவெடுக்கிறார். இஃதோடு பெருவெள்ளக்கதை தொடங்குகிறது. பெட்டகத்தினுள் நுழையுமுன்தான் வெள்ளம் பற்றிய செய்தி நோவாவுக்குச் சொல்லப்படுகிறது. இதை அறியாத நிலையில் பெட்டகம் கட்ட

அவருக்கு இடப்பட்ட கட்டளை அவரது விசுவாசத்தைச் சோதிப்பதாக இருந்திருக்கலாம். பெட்டகம் கட்டப்படும் விவரிப்பு குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் மட்டுந்தான் தரப்படுகின்றது. யாவே விவரிப்பில், தகு (சுத்த) விலங்குகளிலும் பறவைகளிலும் ஆணும் பெண்ணுமாக ஏழுசோடிகளும், தகாத (அசுத்த) விலங்குகளில் ஆணும் பெண்ணுமாக இரு சோடிகளும் பெட்டகத்துள் நுழைகின்றன; குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் இந்த வேறுபாடு புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொன்றிலும் ஒருசோடி பெட்டகத்துள் நுழைகின்றன. ஆதி 7:8-9 பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுவர். யாவே விவரிப்பு ஓவியப் பண்புமிக்கதாயுள்ளது. நோவா பெட்டகத்துள் நுழைந்த ஏழாம்நாள் வெள்ளநீர் வந்தது. 40 நாட்கள் இரவும் பகலும் மழை பெய்தது. 8:7-ஐ யாவே பாரம்பரிய விவரிப்போடு சேர்த்தால், மழை விட்டவுடன் நோவா காக்கையை வெளியே அனுப்பினார். அது திரும்பவேயில்லை. அதற்குப்பின் ஏழுநாட்களுக்கு ஒரு முறை ஒரு புறாவை வெளியில் அனுப்பினார். புறா இருமுறை திரும்பிவந்தது. இரண்டாம் முறை ஒரு பசுங்கிளையைக் கொண்டு வந்தது. மூன்றாம் முறை, புறா தங்குவதற்கு ஓர் இடத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்; ஆகவே திரும்பவேயில்லை. பெட்டகம் தரையைத் தொட்டது பற்றி யாவே பாரம்பரியம் குறிக்கவில்லை. இப்பாரம்பரியப்படி பெட்டகம் அதன் உச்சியில் வாயிலையும் மூடியையும் கொண்டிருந்ததாகத் தெரிகிறது; பக்கப்பகுதியில் வாயில் இல்லை. குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் பெட்டகத்தின் பக்கப்பகுதியில் வாயில் இருக்கிறது. யாவே பாரம்பரியத்தில் மேலிருந்து மழை பெய்கிறது. குருக்கள் பாரம்பரியத்தில் வெள்ளம் தரையிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. இரண்டு விவரிப்புக்களும், இயற்கை அமைதியையும், பருவகாலங்களையும் காப்பதாக யாவே உறுதி அளிப்பதோடு முடிகின்றன.

2) இப்படி ஒரு பெருவெள்ளம் நடைபெற்றதா? பெருவெள்ளக் கதைகள் பழம் மக்களிடையே பரவலாக இருந்ததாகத் தெரிகிறது. இக்கதைகள், பெருவெள்ளம் நாகரிக வளர்ச்சியில் ஒரு நிலையான மாறுதலை ஏற்படுத்தியது என்று காட்ட உதவுகின்றன. இவற்றிற்கும் விவிலிய பாரம்பரியக் கதைக்கும் விவரங்களில் பலவேறுபாடுகள் உள்ளன. இவற்றில் எதுவும் வரலாற்றில் நடைபெற்ற எந்தப் பெருவெள்ளத்தையும் துல்லியமாக விவரிப்பதாகக் காட்டவில்லை. விவிலியத்தைச் சாராத வெள்ளக் கதைகளில் மெசபொத்தாமியாவின் பாரம்பரியம் சிறப்பானதாகும். பழம் மெசபொத்தாமியாவில் பல நகரங்களை முழுவதுமாகவோ, பாதியளவோ அழித்த பல பெருவெள்ளப் பெருக்குகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் மெசபொத்தாமியா முழுவதிலும் நாகரிகச் சுவடுகளை முழுவதும் அழித்த வெள்ளப்பெருக்கு நிகழ்ந்தது என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை. அப்படிப்பட்ட பெருவெள்ளம் நிகழ்ந்திராது இருந்திருக்கலாம். வெள்ளத்தின் அழிக்கும் ஆற்றலைப் பலதரம் துய்த்த அனுபவம், இவற்றைவிட மோசமான, மக்களினம் முழுவதையும் அழித்த பெருவெள்ளம் ஒன்று தெளிவில்லாத கடந்த காலத்தில் நடந்திருக்கலாம் என்று மக்களைக் கற்பனை செய்யச்செய்தது. இப்படிப்பட்ட மெசபொத்தாமியாக்கதை, அழிக்கவல்ல பொங்கி எழும் பெருவெள்ளத்தின் முன், மனிதனது இயலாமையை எடுத்துக் கூறுகிறது.இத்தகைய அழிவுமிக்க இயற்கையின் செயல், இறைவனது சினத்தாலும் ஆற்றலாலும் தான் நடக்கக்கூடும் என்று மக்களை எண்ணச் செய்தது. "தெய்வங்கள்" வெள்ளத்தை அனுப்புவதாக மக்கள் எண்ணினர். சில சமயம் இப்பெருவெள்ளங்களிலிருந்து தப்பிக்கப் படகுகளும், கப்பல்களும் பயன்பட்டிருக்கலாம். அல்லது இவ்வெள்ளங்களின் அழிவிலிருந்து தப்பிக்கப்பெட்டகம் போன்ற படகுதான் ஒரே வழி என்று மக்கள் எண்ணியிருக்கலாம். மெசபொத்தாமியக் கதையை ஆராயுங்கால், இயற்கையின் கொடிய அழிவுமிக்க ஆற்றல்முன் மனிதனது இயலாமையை எடுத்துக்கூறும் உவமையாகவும் உருவகமாகவும் இக்கதை பயன்பட்டதாகத் தெரிகிறது.

எபிரேயர்களுக்குப் பெருவெள்ள விவரிப்பு, தனிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றிய விவரிப்பு என்பதைவிட, மனித நிலையைப் பற்றிய அறிக்கை எனலாம். மனிதனது தவறும் இயல்பு, பாவத்தன்மை, இறைவனது நீதி, இரக்கம், பண்பாடுகளின் குறைகள், பாதுகாப்பின்மை ஆகியவை பற்றி இக்கால மனிதன் கருத்தியலாகப் பேசுவான். அவற்றையே பழங்கால எபிரேய மக்கள் பெருவெள்ளக் கதையாகக் கூறினர். இப்படிப்பட்ட பெருவெள்ளம் நிகழாமலும் இருந்திருக்கலாம். மனிதனது கற்பனையின் படைப்பாகவும் இருக்கலாம். ஆனால் ஓர் அடிப்படைச் சமய போதகத்தை அளிப்பதற்காக இப்பெருவெள்ள நிகழ்ச்சியுரையை இறையூக்கம் பெற்ற ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

**3) மறைபோதகம்:** யாவே பாரம்பரியத்தின் தொடக்க வரலாற்றில், ஆதாமின் பாவத்திலிருந்து தொடங்கிப் பல நிகழ்ச்சித் தொடரின் முடிநிலையாவது பெருவெள்ள நிகழ்ச்சியுரை. இத்தொடர் நிகழ்ச்சிகளில் மனிதன் இறைவன்பால் வெறுப்பை வளர்த்துக்கொண்டே வாழ்க்கை நடத்துகின்றான் என்று காண்கிறோம். மனித வாழ்க்கை உண்மை நன்னெறியிலிருந்து தூர விலகியிருந்தது. இயற்கை உலகோடும், பிற மனிதர்களோடும் மனிதன் கொண்டிருந்த உறவு, தொடர்பு, கலைந்திருந்தது. வன்முறையும் பயமும் தலைதூக்கி நின்றன. இது மனிதபாவத்தினுடையவும் இறைவன் அளித்த தண்டனையினுடையவும் விளைவாகும். கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றின் ஒவ்வொரு முன்னேற்றமும் மனிதனை இறைவனிடமிருந்து ஒருபடி அகன்று செல்லச் செய்வதாகவும், இறைவன் குறித்த படைப்பு அமைதியில் இன்னுமொரு பிளவாகவும் காட்டப்படுகின்றன.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இத்திய நூல்கள், மெபொத்தாமியக் கருப்பொருளைக் கொண்ட ஹூரியன் புராணக்கதையின் மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளன. இந்நூல்கள் கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டுக் காலத்தைச் சார்ந்தவையாகும். ஹூரியன் புராணக்கதை நெப்பிலிம் என்னும் அரக்கர்களின் பிறப்பை விளக்கும் கதையாகும். இவர்கள் வானகப் பிராணிகளுக்கும், மனிதர்களுக்கு மிடையே புணர்ச்சியால் பிறந்தவர்கள். இத்தகைய கதை ஒன்றை யாவே பாரம்பரிய ஆசிரியர் ஆதி 6:4-இல் சுட்டிக்காட்டியிருக்கலாம். இக்கதையின் உண்மையைப்பற்றி உறுதி செய்யாமல், பொருள்கள் தோன்றின வரலாறு கூறும் முகத்தால் பெருவெள்ளச் சூழ்நிலையில் ஆதியாகம ஆசிரியர் இதைப் புகுத்துகிறார். மனிதர் - அரக்கர் புணர்ச்சி மனுகுலத்தின் ஒழுக்கக்கேட்டை எடுத்துக் காட்டுகிறது. இஃது இறைவனது தண்டனை பெறுவதற்கு வாய்ப்பாகிறது. மனிதனது உண்மைநிலையும் அதன் விளைவும் ஆதி 6:5-8-இல் அப்படியே ஓவியமாகின்றன. பாவம் மனிதனை முழுவதும் கெடுத்துவிட்டதாக இறைவனே வருந்திக்கூற வேண்டியிருந்தது. ஆதாமின் மேலும், காயின் மேலும், பொதுவாக மனிதன் மேலும், சுமத்தப்பட்ட தண்டனை பாவம் பரவுவதைத் தடுக்கவேயில்லை. உலகின் தீமை இனித் தாங்கமுடியாத நிலையை அடைகிறது. அதற்குரிய தண்டனை முழு அழிவாகும். ஆனால் புதியதோர் தொடக்கம் எழும். "நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை கிடைத்தது" (6:8). வெள்ளத்திற்குப்பின் நோவாவின் முதல் செயல், பலி ஒப்புக்கொடுத்தலாகும். பின், மனிதன் பாவ நாட்ட முடையனாயினும், - ஏன், அவன் அப்படியிருப்பதாலும், - மனிதனைப் பொறுத்துப்போவதாக இறைவன் உறுதியெடுக்கிறார். இறைவனின் நீதியும், இரக்கமும், ஒரே உண்மையின் இருமுகப்புக் கூறுகளாகும். மனித பாவப் பிரச்சினைக்கு முடிவான விடையின்றி வெள்ள நிகழ்ச்சியுரை முடிகிறது. ஆனால் தொடக்க வரலாற்றுக்குப்பின் ஆபிரகாம் அழைக்கப்படுதலின் மீட்பு வரலாறு மீண்டும் தொடங்குகிறது. இஃது எங்கே உண்மையான விடை காணவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இறைவன் இடையிட்டு அருள் வழங்கினால் மட்டும், அதுவும் மனிதன் அந்த அருளை ஏற்று அதற்கேற்பத் தன்னுரிமை மிக்க

பதில் அளித்தால் மட்டும், மனிதன் தனது பாவத்தன்மையிலிருந்து தப்ப முடியும். இறைவன் காலவரைக்குள் நுழைய வேண்டும்; மனித வரலாற்றில் செயல்படவேண்டும். அன்பில் வேரூன்றிய விசுவாசப் பணிவோடு மனிதன் அதற்குப்பதில் கூறவேண்டும்.

விவிலியத்தில் வெள்ளம் ஓர் இயற்கையான நிகழ்ச்சியாக விவரிக்கப்படவில்லை. இதை யாவே பாரம்பரியம் இறைவனின் நீதி, இரக்கம் ஆகியவற்றை விளக்கும் உவமையாகப் பயன்படுத்துகிறது. இப்பாரம்பரிய வெள்ளக் கதைக்கும் அது போன்ற மற்ற இயற்கைப் பெருவெள்ளப் பேரழிவுக்கதைகளுக்குமிடையே யுள்ள சிறப்பான வேறுபாடு இவ்வழிவுக்கு அளிக்கப்படும் மறை விளக்கமாகும். மெசபொத்தாமியாவை மட்டும் அழிக்கும் கதையை விரிவாக்கி, உலகமனைத்தையும் அழிக்கும் வெள்ளக் கதையாக மாற்றிக் கூறுகிறது யாவே பாரம்பரியம். புராணக் கடவுள்களோடு ஒப்பிடும்போது-யாவே அறமிக்க கடவுளாவார்; மனம்போல் செயல்படுபவர் அல்லர்; நீதி நேர்மைமிக்கவர். அவரது நீதித்தீர்ப்பு நோவாவிற்கும் அவரது குடும்பத்திற்கும் காட்டும் இரக்கத்தால் மட்டுப்படுகிறது. யாவே-மீட்கும் கடவுளாவார்; அழிவுக்குப்பின் எஞ்சிய சிலரிலிருந்து மீளவும் உலக வாழ்வைத் தொடங்குவார். மனிதனுக்கும் இறைவனுக்கும் புதியதோர் உடன்படிக்கை ஏற்படுகிறது. யாவே-வெள்ளத்தால் மனுகுலத்தை இனி அழிக்கவேமாட்டார். இயற்கையின் ஒழுங்க மைப்பும் வானவில்லும் இவ்வுடன்படிக்கைக்கு அவர் காட்டும் பிரமாணிக்கத்தின் அடையாளங் களாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவில் வெள்ள நிகழ்ச்சி ஓர் ஊழியின் முடிவாகும்; புதிய ஊழியின் தொடக்கமாகும்.

யாவே பாரம்பரிய வரலாற்றைக் குருக்கள் பாரம்பரியம் நிறைவு செய்கிறது. யாவே பாரம்பரியம் கூறுவதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, அஃதோடு இன்னும் ஆழ்ந்த பொருளை அளிக்கிறது. பாவத்தைத் தீர்ப்பிடும் இறைவன், மனிதனோடு உடன்படிக்கையைச் செய்து தம்மையே கட்டுப்படுத்துவது தமக்குத் தகுதியானதாகக் காண்கிறார் (9:8-17). பாவம் தண்டனை அடைவது விதி விலக்கற்றதாயினும், மனித வாழ்வு இறை இரக்கத்தால் காப்பாற்றப்படுகிறது. பாவத்தின் விளைவாக இயற்கை அமைதி முழுவதும் அழிந்து மறைந்து போயிருக்க வேண்டும். பாவம் இந்த இயற்கை அமைதியை மாற்றி விட்டது; இசைவு இணக்க நிலையை நொறுக்கித் தகர்த்துவிட்டது. ஆயினும் உயிரினங்கள் தொடரவேண்டும் என்றும், இயற்கைமீது மனிதன் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றும் இறைவன் விரும்பினார். ஆகவே இயற்கை அமைதியை உறுதிப்படுத்து கிறார். அதேவேளை இயற்கையின் மத்தியில் பயத்தையும், வன்முறையையும் வைத்துள்ளார். படைப்பின் தொடக்கத்தில் மனிதனும், விலங்குகளும் பயமின்றி ஒன்றாக வாழ்ந்தனர். எல்லோரும் காய்கறி, கனிகளையே உண்டனர். ஒருவரும் ஊனை உண்ணவில்லை (ஆதி 1:29-30). மனிதனோ, விலங்குகளோ உணவுக்காகக் கொல்லப்படக்கூடாது. ஏனெனில் எல்லா உயிரும் இறைவனுக்குப் பரிசுத்தமானவை.இறைவனது அரசு பூமியில் முழுவதும் நிறைவாக நிறுவப்படும் இறுதிநாட்களையும் இக்கருத்துக்களாலேயே ஓவியமாக்குகின்றனர் இறைவாக்குரைஞர்கள் (எசா 65:25). வெள்ளம் வரை இந்நிலை பரவியிருந்ததெனக் குருக்கள் பாரம்பரியம் கருதுவதாகத் தெரிகிறது. அதற்குப்பின் உணவுக்காக விலங்குகளை மனிதன் கொல்லலாம் (9:2-3).எல்லா உயிர்களும் மனிதனைக் கண்டு அஞ்சும் (9:2). இன்னும் உயிர் இறைவன் முன் தூயனவாகவே இருக்கும். இதை ஏற்றுக்கொள்ளும் விதத்தில், மனிதன் ஊனோடு இரத்தத்தைக் குடிக்கக்கூடாது. மேலும், மனிதன் எந்த அளவுக்குப் பாவத்தை நாடிச்சென்றான் என்றால் தன் உடன் உள்ளவர்களையே கொல்ல அடிக்கடி சோதிக்கப்படுவான். கொலையைத் தண்டிக்க மனிதன் அனுமதிக்கப்படுகிறான். இத்தண்டனை கொலைக்குற்றத்தைத் தடுக்கும் உடனடியாக கருவியாக இருக்கும்.

**4) பெருவெள்ளமும் புதிய ஏற்பாடும்:** நற்செய்தியில், இறையரசின் வருகையைப் பெருவெள்ள வருகைக்கு ஒப்பிடுகிறார் கிறிஸ்து (மத் 24:36-39); லூக் 16:26-27). மனிதர் உண்ணுவதிலும் குடிப்பதிலும் மூழ்கியிருந்தனர். நோவாவின் செய்கையைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் எதிர்பார்க்காத நிலையில் பெருவெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. இதுபோன்றே, பாவத்தில் மூழ்கியிருக்கும் முன்னேற்பாடு இல்லாத மனிதர்களை மனுமகனின் வருகை மேற்கொள்ளும். ஆகையால் மனிதர் எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும். ஆண்டவரைச் சந்திக்க எப்போதும் முன்னேற்பாடுடன் விழிப்பாய் இருக்கவேண்டும்.

பேதுருவினுடைய இரண்டாம் பொதுத்திருமுகம் பாவத்திற்கு அளிக்கப்பட்ட தண்டனையாகப் பெருவெள்ளத்தை வரைகிறது (2 பேதுரு 2:5). இந்நிகழ்ச்சி ஆண்டவர் நடுத்தீர்க்க உறுதியாக வருவார் என்பதற்குச் சான்றாகும் (3:5-7). பேதுருவினுடைய முதல் பொதுத்திருமுகம் வெள்ளத்தைத் திருமுழுக்குக்கு ஓர் அடையாளமாகக் காண்கிறது. திருமுழுக்கு நீரில் மூழ்குவது, கிறிஸ்துபாவத்தின்மேல் கொண்ட வெற்றியின் காரணமாக, கிறிஸ்தவனைப் பாவத்திலிருந்து மீட்கிறது (1 பேதுரு 3:20-21). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், இறைவனால் வெள்ளம் பற்றி எச்சரிக்கப்பட்டுத் தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றப் பெட்டகத்தைக் கட்டிய நோவாவை விசுவாசத்தின் அடையாளமாகக் காட்டுகிறது (எபி 11:7).

**5. ஊ. நோவாவிலிருந்து ஆபிரகாம் வரை: பாபேல் கோபுரம்.**

நோவாவின் மக்கள் வழியாக மக்களினம் உலகம் முழுவதும் பரவிற்று. நோவாவுக்கு இறைவன் காட்டிய மீட்பிரக்கம்-தீமையை நோக்கிச் செல்லும் மனிதனது போக்கைக் கட்டுப்படுத்தவில்லை. திராட்சை ரசம் கண்டுபிடிக்கப்படுகிறது. நோவாவின் புதல்வர்களில் ஒருவனான காமின் பாவமும் அதன் விளைவான சாபமும் விவரிக்கப்படுகிறது. ஆதி 10-ஆம் அதிகாரத்தில் நோவாவின் சந்ததியினர் பட்டியல் கொடுக்கப்படுகிறது. இதில் நாடுகளின் வேறுபாடுகள் பற்றிய யாவே பாரம்பரியக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பின்பு, பாபேல் கோபுரக் கதையை உட்புகுத்தி உலகத் தொடக்க வரலாறு பற்றிய தனது காவியத்தை யாவே பாரம்பரியம் முடிக்கிறது. இந்த மொழிக்குழப்பக் கதை மறைபோதனை அளிக்கவே உட்புகுத்தப்பட்டிருக்க வேண்டும். இறைவனை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்யும் மனப்போக்கு மனிதரிடம் ஆழ்ந்து வேரூன்றி உள்ளது என்று இக்கதை காட்டுகிறது. மனுகுலம் இறைவனோடு கொண்ட உறவில் ஒரு முன்னேற்றமும் அடையவில்லை.

நோவாவின் வழித்தோன்றல்களின் பட்டியலுக்குப் பின், திடீரென்று பாபேல் கதை தொடங்குகிறது. கதை என்ற அளவில் இந் நிகழ்ச்சியுரை நன்கு பின்னப்பட்ட ஒன்றாகும். ஆனால் இக்கதையில் இருவடிவங்கள் கலந்திருப்பதாகத் தெரிகிறது. கட்டட வேலை தொடங்க இரு அழைப்புகள் விடப்படுகின்றன (ஆதி 11:3-4); இருகாரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, மக்கள் சிதறிப்போகாவண்ணம் கட்டடங்கள் அமைக்க விழைகின்றனர். மற்றது, "விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தைக் கட்டி நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோம்". அவர்களது முதல் நோக்கத்திற்கு மாறாக யாவே அவர்களைப் பூமிமுழுவதும் சிதறிப்போகும்படி செய்கிறார். இரண்டாவது நோக்கத்திற்கு மாறாக அவர்களிடையே மொழிக் குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மக்கள் எப்படி உலகம் முழுவதும் பரவினர், மொழிகள் எப்படித் தோன்றின என்பதற்குக் காரணம் காட்டும் விதத்தில் இக்கதை கொடுக்கப்படுகிறது எனலாம்.

இக்கதையின் மூலவடிவம் மெசபொத் தாமியாவிலிருந்து வந்திருக்கவேண்டும். இந்நிகழ்ச்சி சினார் நாட்டுச் சமவெளியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. சினார்-மிகப்பழைய சுமேரிய நாடாகும். செங்கல் அறுத்துச் சூளையிட்டுச் சுட்டுக் கட்டடம் கட்டுதல்

பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததன்று; கருங்கல் அரிதாகக் கிடைக்கும் மெசபொத்தாமியச் சமவெளியைச் சேர்ந்த பழக்கமாகும். இக்கதையில் குறிக்கப்படும் கோபுரம் மெசபொத்தாமியாவில் காணப்படும் "சிகுராத்" என்ற கோபுரங்களைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட கோபுரங்களைப் புதை பொருள் ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தங்களின் கோபுரங்கள் இழிவுபடுத்தும் இக்கதையை மெசபொத்தாமியர் விரும்பியிருக்க மாட்டார்கள். ஆனால் இக்கோபுரங்களும் நகரங்களும் அவற்றைக் கட்டியவர்களின் மனிதக் கைத்திறமையையும், அவர்கள் தங்கள் காரியங்களில் எல்லாம் இறைவனின் முழு ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாத அகந்தையையும் எடுத்துக் காட்டுவதாக எபிரேயர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

பேராசையாலும், பாதுகாப்புத் தேவையாலும், ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் ஆவலாலும் உந்தப்பட்டு, தங்களுடைய புத்தியையும் ஆற்றல்களையும் ஒருங்கே பயன்படுத்தி, தனியாகச் செய்ய முடியாததைக் குழுவாகச் செய்யத் தலைப்பட்டனர் மனிதர். கோபுரங்களும் நகரங்களும் புகழுக்காகவும் பாதுகாப்புக்காகவும் கட்டப்பட்டாலும், இறைவனுக்கு எதிராகக் கட்டப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. மூலக்கதையில் மனிதச் செயல்களைக் கண்டு "கடவுள்கள்" பொறாமைப்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால் விவிலிய விவரிப்பிலே இக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் இறைவன் ஏன் மக்களைச் சிதறச் செய்தார், மொழிக் குழப்பத்தை ஏற்படுத்தினார் என்பதற்குக் காரணம் தெளிவாகவும் இல்லை; நிறைவளிப்பதாகவும் இல்லை. மனிதர் பிற்காலத்தில் தமக்கு எதிராக எதையும் செய்து விடுவார்களோ என்று இறைவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. ஆனால் மக்கள் சிதறிப் போதலும் மொழிக் குழப்பமும் இயற்கைக் காரணங்களால் நிகழவில்லை; இறைச்செயலால் நடந்தது என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஆனால் எந்தக் குறிப்பிட்ட காரணமும் தரப்படவில்லை. ஆதியாகமத் தொடக்க வரலாற்றின் பரந்த சூழ்நிலையில் நோக்கினால், இறைவனது இச்செயலுக்குப் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். ஆதியாகமத்தின் முதல் பதினோரதிகாரங்களில் மனிதன் நாகரிகத்தில் முன்னேறும்போது பாவத்திலும் வளருகிறான் என்ற கருத்து, தெளிவாக உள்ளது. சினார் சமவெளியில் இறைவனது இத்தடுப்புச் செயல், நகரமும் கோபுரமும் கட்டி முடித்தபின் மக்களிடையே பாவம் வளர்வதைத் தடுக்கும் செயலாகும். நோவாவின் சந்ததியினர் பட்டியலையும், பாபேல் கோபுரத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, நாடுகளிலும் நகரங்களிலும் மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். மக்களினம் பல நாடுகளாகவும் பல இனங்களாகவும் பிரிந்து போதல் இயற்கையானது; நல்லதும் ஆகும்; மனித வாழ்வின் இயற்கையான வளர்ச்சியும் ஆகும் (ஆதி 10). ஆனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை அவ்வளவு இயற்கையானது அன்று. இந்த இசைவிணக்கமின்மை, மனிதனுடைய பாவத்தன்மையின் விளைவாக, இறைவனால் அனுமதிக்கப்பட்டதொன்றாகும். அது முன்னோரின் பாவத்திற்காக மனிதன் மேல் சுமத்தப்பட்ட தண்டனை ஆகும்; மனிதனுடைய வரையுள்ள தன்மையையும், அவனுக்கு இறைவனுடைய உதவியும் வழிகாட்டுதலும் தேவை என்பதையும் நினைவூட்டும் செயலும் ஆகும்.

இன்பச்சோலை, காயின் ஆபேல், பெருவெள்ளம், பாபேல் கோபுரம் ஆகிய நிகழ்ச்சியுரைகள் யாவும் ஒரே கருத்தின் வேறுபட்ட வடிவங்களாகும். படைத்தவரை வீம்போடு எதிர்த்துக் கிளர்ச்சி செய்த மனிதனின் ஒவ்வொரு செயலிலும், இறைவன் பாவத்தைத் தண்டிக்கிறார். மனிதன் இறைவனிடமிருந்து தன்னையே பிரித்துக்கொண்டு, படைப்பைத் தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வரவும், தனக்குத்தானே முழுப்பாதுகாப்பு அடையவும் முயலுகிறான். அஃது இயலாது என்று அனுபவத்தால் அறிகிறான்.

தொடக்க வரலாற்றை அவலப்போக்கில் யாவே பாரம்பரிய ஆசிரியர் முடிக்கிறார். மனிதநிலை சீர்திருத்த முடியாததாகத் தோன்றியது. மனிதர்கள் இறைவனிடமிருந்து பிரிந்தும், தனக்குள்ளே பிரிந்தும் பூமியின்மேல் பரவினர். தனது நாடகக் காவியத்தை யாவே பாரம்பரிய ஆசிரியர் ஓர் இக்கட்டான முடிநிலைக்கு நடத்திச் செல்லுகிறார். ஆதாமிலிருந்து பாபேல் கோபுரம்வரை, இவர் மனிதனை உயர்ந்த தகுதிக்கு அழைக் கப்பட்டவனாகவும், ஆனால் மிக இரக்கப்பட வேண்டிய பெருந்துயர நிலைக்குத் தன்னையே ஆளாக்கிக் கொண்டவனாகவும், சித்தரிக்கிறார். ஒழுங்கற்ற உலகில் ஒழுங்கைக் கொண்டுவரத் தனது சொந்த ஆற்றலால் முயலாமல், மனிதன் பொறுமையோடும் நம்பிக்கையோடும் இறைவனுக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. பாவத்தினால் இழந்துவிட்ட பிறப்பு உரிமையை மீளவும் மனிதனுக்கு அளிக்க இறைவன் தொடக்க முயற்சி எடுக்கும்வரை மனிதன் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆதியாகமத்தின் முன்பகுதி-துன்பியலில் முடிகிறது. ஆனால் மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியைத்தான் வரைந்து காட்டுகிறது. கதை அஃதோடு முடிந்துவிடவில்லை. இஃது இறைவனது அருட்செயல் மிக்க மீட்புத் திட்டத்தில் தொடர்கிறது. இத்திட்டத்தின் முதல் களம் ஆபிரகாமை இறைவன் தேர்ந்தெடுத்தலாகும். ஆபிரகாம் சிதறிக் கிடந்த மனுகுலத்தில் ஒருவர். அவர் வழியாக உலக மக்கள் யாவரும் ஆசிபெறுவர். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தலைவர் ஆவார். இத்தேர்தலிலிருந்து, இறைவனது மீட்புச்செயல் பலவிதத்தில் வெளிப்படும்; கிறிஸ்துவின் வாழ்வு-சாவு, உயிர்ப்பில் நிறைவு பெறும்; முழுமை பெறும்.

5. எ. ஆபிரகாம்: ஆதி 12-50 இஸ்ராயேல் குல முதுவர்களின் வரலாற்றை வரைகிறது. இப்பகுதி முழுவதும் வாசிப்பதற்கு எளியது. இவ்வதிகாரங்களில் இறைவன் தமது மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்குகிறார். இத்திட்டம் கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் நிறைவு பெறும். இஃது இறைவன் மனிதனைத் தேடிச்செல்லும் மாபெரும் காவியமாகும்.

i) ஆபிரகாம் என்ற பெயருக்கு "இறைவன் உயர்ந்தவர்" என்றும், "பல இனத்தவருடைய தந்தை" என்றும் பொதுவாகப் பொருள் அளிப்பர். ஆபிரகாம் பாபிலோனிய மன்னன் கமுராபியின் காலத்தைச் சேர்ந்தவர் என்று கருத இடமிருக்கிறது (ஏறத்தாழ கி.மு. 19-18-ஆம் நூற்றாண்டுகள்). விவிலிய குலமுதுவர்கள் பற்றிய ஆதியாகம வரலாற்றுப்பின்னிலை, கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டுக் காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்த வட மெசபொத்தாமியாவின் நிலையோடு ஒத்துப்போவதாகத் தெரிகிறது. ஆபிரகாம் எமோரியர் இனத்தைச் சேர்ந்தவர். இவ்வினம் ஒருவகை நாடோடி இனமாகும். ஆபிரகாம் மெசபொத்தாமியாவிலிருந்து புறப்பட்டு கி.மு. 1900 - 1700-க்கு இடைப்பட்ட காலத்தில் கானான் பகுதியில் குடியேறியவர்களுள் ஒருவராவார். யாவே பாரம்பரியப்படி வட மெசபொத்தாமியா வாகிய "ஆராம் நகராயிமைச்" சேர்ந்த காரான் அபிராமின் ஊராகும். குருக்கள் பாரம்பரியப்படி தென் மெசபொத்தாமியாவின் கல்தேயத்தைச் சேர்ந்த "ஊர்" நகர் அபிராமின் ஊராகும். ஆய்வாளர்கள் கருத்துப்படி-அபிரம், தன் தந்தையின் தலைமையின் கீழ்க் கல்தேயத்தைச் சேர்ந்த ஊர் நகரிலிருந்து புறப்பட்டு, வட மெசபொத்தாமியாவிலுள்ள, காரான் நகரை அடுத்த பகுதியில் குடியேறினார். அங்கிருந்து, தமது உறவினர்களிடமிருந்து பிரிந்து, தம் சிறிய தந்தையின் மகனான லோத்தோடு கானானில் குடியேறினார். அபிராம் இப்படிக் குடியேறிய தற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். அரசியல் பொருளாதாரக் காரணங்கள் குடியேறத் தூண்டியிருக்கலாம். ஆதி 14-13-இல் அபிராம் "எபிரேயன்" என்றழைக்கப்படுகிறார். இச் சொல்லுக்குப் பிற்கால ஆசிரியர்கள் "ஏபரின் வழித்தோன்றல்கள்" என்று பொருள் கொடுத்தனர்; மூலத்தில் "குடியேறியவர்" என்ற பொருள் இருந்திருக்கலாம். விவிலிய உரைப்படி, மறை காரணத்திற்காகக் கானானில் அபிராம் குடியேறியதாகத் தெரிகிறது. யாவேயின் கட்டளைக்குப் பணிந்து

மெசபொத்தாமியாவிலிருந்து அபிராம் புறப்படுகிறார் (ஆதி 12:1-4).

எழுபத்தைந்து வயதில், அபிராம் தம் நாட்டையும், தம் இனத்தையும், தம் தந்தையின் வீட்டைவிட்டுப் புறப்பட்டு இறைவன் காட்டவிருக்கும் நாட்டிற்குப் புறப்படுகிறார்.100 ஆண்டுகள் அலைந்து திரிந்தபின் தம் 175-ஆம் வயதில் இறக்கிறார். 100-ஆவது வயதில் அவருக்கு வாக்களிக்கப்பட்ட மகனான ஈசாக்கு பிறக்கிறான். இங்கே குறிக்கப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை வெறும் கால அளவு மட்டுமன்று; அடையாளப் பொருளையும் உணர்த்துவதாகத் தெரிகிறது. 100 நிறைவேறலின் எண்ணிக்கையாகத் தெரிகிறது. 100-ஆவது வயதில் வாக்களிக்கப்பட்ட மகன் பிறக்கிறான். 100 ஆண்டுகள் அலைந்து திரிந்தபின் வாக்களிக்கப்பட்ட நாட்டை அபிராம் தமது உடைமையாக ஆக்கிக் கொள்ளுகிறார்.

இறைவன் “காட்டவிருந்த நாடு”, “வாக்களிக்கப்பட்ட நாடு” என்ற கருத்து குலமுதுவர் நிகழ்ச்சியுரை முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. இக்கருத்து, பிற்காலத்தில், யாத்திரையின்போது, மோசேக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் ஒரு குறிக்கோளாகவும் தூண்டுதலாகவும் இருந்தது. பிற்கால விவிலிய ஆசிரியர்கள், அபிராமுக்கு நாடு பற்றி இறைவன் அளித்த வாக்குறுதியை யூத நாட்டின் வரலாற்றின் தொடக்கமாகவும் கருதுவர். இஃது ஒன்றே இக்கருத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும்.

2) லோத்தோடு புறப்பட்டு, மந்தைகளோடு நாடோடி வாழ்க்கை வாழ்ந்த அபிராம் கானான் நாட்டிலுள்ள மகிமைப்பள்ளத்தாக்கு எனப்படும் செக்கேம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே மீளவும் இறைவன் தமது வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். செக்கேமிலிருந்து பெத்தேலுக்குச் சென்று சில காலம் தங்கினார். இரு இடங்களிலும் பீடம் எழுப்பி இறைவனைத் தொழுதார். பெத்தேலில் கொஞ்சம் பஞ்சம் ஏற்பட, எகிப்துக்குச் செல்லுகிறார். அழகியான தம் மனைவி சாராயியைக் கவர்ந்து கொள்ளும்பொருட்டு எகிப்திய மன்னன் தன்னைக் கொல்லக்கூடும் என்று அஞ்சிய அபிராம், சாராயியைத் தம் சகோதரி என்று கூறித்திரிகிறார். சாராயி பார்வோனின் அரண்மனைக்குள் கட்டாயமாகக் கொண்டு செல்லப்படுகிறாள். ஆனால் அவள் பொருட்டு அபிராம் அரசனுடையவும் பிறருடையவும் தயவைப் பெறுகிறார். அபிராமுக்குச் செய்யப்பட்ட அவமரியாதையைக் கண்டு இறைவன் தம் வாக்குறுதியை நினைவு கூர்ந்து பார்வோனின் வீட்டைக் கொடிய துன்பங்களால் தண்டிக்கிறார். உண்மையை அறிந்த பார்வோன், சாராயியை அபிராமிடம் திரும்ப அனுப்பிவிடுகிறான்.

அபிராமின் சொத்துக்கள் பெருகின. எகிப்திலிருந்து திரும்பிவந்து பெத்தேல் அருகில் தங்கினார். மந்தைகள் பெருக, லோத்தின் ஆட்களுக்கும் அபிராமின் ஆட்களுக்கும் பிணக்குகள் உண்டாயின. அதன் விளைவாக, சமவெளியை இருவரும் இருபகுதியாகப் பிரித்துக்கொண்டனர். இறைவன் மீண்டும் தோன்றி, அபிராமுக்குத்தம் வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். அதன்பின் எபிரோனில் உள்ள மம்ரேயில் அபிராம் குடியேறுகிறார். இந்நிலையில் அபிராம் லோத்தைச் சிறைமீட்ட தீரச்செயல் ஆதி 14-இல் தரப்படுகிறது; இதை வாசித்தறியலாம். நாம் பெரும் பாலும் குலமுதுவர் வரலாற்றைத் தனிப்பட்டோரின் குடும்ப வரலாறாகக் கருதுகிறோம்; மதிப்பிடுகிறோம்; ஆனால் இவ்வதிகாரத்தில் வரும் அரசர்கள் பலருடையே நடக்கும் போர் போன்ற நிகழ்ச்சிகள், விவிலிய குலமுதுவர்கள் வாழ்ந்த காலத்தையும், வாழ்க்கைச் சூழ்நிலையையும் அரசியல் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிகழ்ச்சியுரையில், அபிராம் ஒரு போர்த்தலைவராகத் தோன்றுகிறார். தன்னைவிட ஆற்றல் மிக்க படைப்பகுதி யொன்றைத் தாக்கி வெற்றி பெறுகிறார்.

சிலர் இக்கதை நாடு கடத்தப்பட்டபின் விவிலியப் பாரம்பரியத்தில் சேர்க்கப்பட்டது என்பர். தங்களின் மூதாதையரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு, பழைமைமிக்க இலக்கிய நடையில், இவ்வீரக் கதையை விவிலிய

ஆசிரியர்கள் புகுத்தியிருக்கவேண்டும் என்பர். வேறு சிலர், இந்நிகழ்ச்சியுரை உண்மையான பழம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஏடாகும் என்பர். ஏனெனில் இஃது இந்நிகழ்ச்சி நடந்ததாகக் கூறப்படும் காலத்திய மேற்கு ஆசியாவின் அரசியல் நிலையை எடுத்துக்காட்டுகிறது என்பர். இந்நிகழ்ச்சி பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. இந்நிகழ்ச்சியில் வரும் எந்த அரசர்களையும் நாம் வரலாற்றில் அடையாளம் தெரிந்து கொள்ளமுடியவில்லை. கி.மு. 2,000 - 1,600-க்கு இடைப்பட்ட காலத்தில், யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதிகளில் நகர வாழ்க்கையும் பண்பாடும் மிக இழிநிலையில் இருந்ததாகப் பிற மூலங்களிலிருந்து அறிகிறோம். கி.மு. 1900-1700-க்கு இடைப்பட்ட காலத்தில் எமோரியரிடமும் ஓரியர்களிடமும் இன எழுச்சி நிகழ்ந்துள்ளது. இவ்வாராய்ச்சிகளின்படி, இவ்வெழுச்சிகளோடு அபிராம் கானானில் குடியேறிய நிகழ்ச்சி ஒத்துப்போகிறது. இவ்வாராய்ச்சிகளின்படி, அபிராம், ஏறத்தாழ கி.மு. 1850-ஐ ஒட்டி எபிரோனில் குடியேறியிருக்க வேண்டும். இவ்விடத்தில் தங்கியிருந்தபோது, அரசர்களின் படையைத் தாக்கித் தம் தம்பி லோத்தைச் சிறை மீட்டிருக்கவேண்டும். இப்படிக் கூறும்போது அரசர்கள் பலரின் ஒன்றித்த படையை எதிர்த்துப் போரிட்டு வென்றார் என்ற பொருள் கொள்ளக்கூடாது. அபிராமின் நோக்கம்-தம் தம்பியை மீட்டலாகும். கைதிகளை நடத்திச் சென்ற பின்புறக் காவலர் படையைத் தாக்கி லோத்தை மீட்டு, அரசர்கள் படை கொள்ளையடித்த பொருள்களையும் கைப்பற்றியிருக்கவேண்டும். பிற மூலங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகளைக் கருத்தில்கொண்டு, இப்படிப்பட்ட நிகழ்ச்சி வரலாற்றில் நடந்திருக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வர். இது வெறும் வீரகாவிய மட்டுமன்று. பழம் மேற்காசியாவின் வரலாற்றோடு ஒன்றித்த நிகழ்ச்சியாகும். அபிராமின் வாழ்க்கைக் காலத்தை வரையறை செய்ய இஃதும் ஓர் உதவியாகும்.

3) லோத்தை மீட்டுத் திரும்பும்போது மறைபொருள் மிக்க மனிதர் ஒருவர் அபிராமை எதிர்கொள்ளுகிறார். "சாலேமின் அரசனும், உன்னத கடவுளின் குருவுமாய் இருந்த மெல்கிசெதேக்கு, கைகளில் அப்பத்தையும் திராட்சைரசத்தையும் ஏந்திவந்து" (ஆதி 14:18) அபிராமுக்கு ஆசீர் அளிக்கிறார். அபிராம், தாம் கைப்பற்றிய பொருட்களில் பத்தில் ஒரு பங்கை இக்குருவுக்குக் கொடுக்கிறார். இப்பொருட்களில் பிறருக்குச் சேரவேண்டியதை அவர்களிடம் ஒப்படைக்கிறார் அபிராம். இங்கே குறிக்கப்படும் சாலேம் நகர் எருசலேமைக் குறிக்கும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். மெல்கிசெதேக்கு அப்பத்தையும் இரசத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை. போரிலிருந்து திரும்பிய வீரர்களுக்கு இவற்றை உணவாக அளித்திருக்கக்கூடும். ஆனால் பழம் மேற்காசியாவின் வழக்கில், தேறல்பலியும் (இரசப்பலி) மன்றாட்டுகளும் இல்லாத உணவு இல்லை. ஆகையால் உணவுக்குமுன் "உன்னத கடவுளின் குருவாகிய" மெல்கிசெதேக்கு பலியிட்டுச் செபம் செய்து அபிராமுக்கு ஆசீர் அளித்தார் என்று ஏற்றுக்கொள்ளலாம்.

குருவும் அரசனும் ஆகிய மெல்கிசெதேக்கு பல இறையியல் ஆராய்ச்சிகளுக்கு இடம் அளித்துள்ளார். சங்கீதத்தில் உன்னத கடவுளின் குருவும் அரசனுமாகிய "மெல்கிசெதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவென்று" மெசியா அரசர் அழைக்கப்படுகிறார் (சங் 109:4). மெல்கிசெதேக்கையும், இயேசுவையும் இணைத்து எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் கூறுவதை அதன் 7-ஆம் அதிகாரத்தில் வாசித்து அறியலாம். மெல்கிசெதேக்கு பற்றிய நிகழ்ச்சியுரை மிகப்பழங்காலப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். பிற்காலத்தைச் சேர்ந்த விவிலிய ஆசிரியர்கள் தங்கள் குலமுதுவரும் "இறைவனின் நண்பனும்" (எசா 41:8) ஆன அபிராமுக்கு இழிவு தருவதுபோன்ற நிகழ்ச்சியை, அதுவும் தாங்கள் வெறுத்த கானானிய அரசனிடமிருந்து ஆசீர்பெறுவது போன்ற நிகழ்ச்சியை, தங்கள் நூலில் புகுத்தியிருக்க மாட்டார்கள். ஆதி 14-இல் வரும் நிகழ்ச்சியுரை வரலாற்று அடிப்படை கொண்டது என்றும்,

அபிராமின் வாழ்வு கானானியர் அரசியல் பணித்திட்டத்தோடு பொருந்தியது என்றும் இக்கால விவிலிய ஆய்வாளர் ஏற்றுக்கொள்வர்.

4) இந்நிகழ்ச்சிக்குப்பின் இறைவனது வாக்குறுதி புதுப்பிக்கப்படுகிறது. அபிராமுக்கு ஒரு புதல்வன் பிறப்பான் என்று இறைவன் அருள்வாக்கு அளிக்கிறார். இறைவனது இவ்வாக்கை அபிராம் விசுவசிக்கிறார். இறைவன்பால் கொண்ட இந்த விசுவாசத்தால் அபிராம் விசுவாசிகளின் தந்தையென உயர்ந்து நிற்கிறார். இவ்விசுவாசத்தால் (மறைபொருள்மிக்க விதத்தில்) இறைவனோடு அபிராம் உறவு கொள்கிறார். இந்த உறவு அவரது வாழ்வையும் அவருடைய மரபினரின் வாழ்வையும் இறைவனோடு முழுமையாக இணைக்கிறது; பிணைக்கிறது. இறைவனே அபிராமோடு ஓர் உடன்படிக்கை செய்கிறார். இவ்வுடன்படிக்கையின் புறச்சடங்கு ஆதி 15-இல் விவரிக்கப்படுகிறது. இதை வாசித்து அறியலாம். சூரியன் மறையும் வேளையில் அபிராமுக்கு அயர்ந்த மறைபொருள் மிக்க தூக்கம் உண்டாயிற்று. இஃது ஏவாள் படைக்கப்பட்டபோது ஆதாம் அனுபவித்த ஆழ்ந்த உறக்கத்திற்கு ஒத்ததாகும். இத்தூக்கத்தில், மறைபொருள் மிக்க ஆன்மப்போராட்டத்திலே தம் மக்களுக்கு வரவிருக்கும் பழுவான ஊழைப்பற்றி அபிராம் முன்னுணர்வு பெறுகிறார். பகலவன் மறைகிறான். காரிருள் உலக மனைத்தையும் சூழ்கிறது. புகைகிற ஒரு சூளையும், நெருப்பு மயமான ஒரு ஒளிப்பிழம்பும் உடன்படிக்கை விலங்குகளின் துண்டங்களில் நடுவே உலாவி நின்றன. இச்சடங்கின் முடிவில் மீளவும் இறைவனது வாக்குறுதி புதுப்பிக்கப்படுகிறது. அபிராமின் வழிவந்தோரை இறைவன் பெருக்குவார். அவர்களுக்கு எகிப்தின் நதி முதல் யூப்பிரத்தீசு மாநதிவரையிலுள்ள நாட்டை உடைமையாகத் தருவார். இச்சடங்கு ஓர் உடன்படிக்கைச் சடங்காகும். அஃதோடு இறைவன் ஆணையிடுதலும் எச்சரிக்கை செய்தலுமாகும். இறைவாக்குரைஞர் எரேமியா இவ்வுடன்படிக்கைச் சடங்கை நன்கு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. "என் திருமுன் செய்யப்பட்ட உடன்படிக்கையை மீறி, அதன் உடன்பாடுகளை நிறைவேற்றத் தவறிய மனிதர்களை, இரண்டாக வெட்டப்பட்டு அவ்விருதுண்டங்களுக்கிடையே கடந்து செல்வதற்காகப் பயன்டுத்திய இளங்காளையைப் போல் ஆக்குவேன்" (எரே 34:18). உடன்படிக்கையை மீறுபவர்கள் துண்டிக்கப்பட்ட விலங்கைப்போல் ஆக்கப்படுவர். இச்சடங்கு "உடன்படிக்கையை வெட்டுதல்" என்றழைக்கப்பட்டது. இச்சடங்கு பழம் மேற்காசியாவில் வாழ்ந்த மக்களிடையேயும் வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. பிற இன உடன்படிக்கைகளிலிருந்து அபிராம் - இறைவன் உடன்படிக்கை வேறுபடுகிறது. இறைவனே ஒளிப்பிழம்பாகத் தோன்றி உலாவித் தன்னுரிமையாக இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்கிறார். இதன் விளைவாக அபிராம் இறைவனோடு ஆற்றல் மிக்க பிணைப்புக் குள்ளாகிறார். இறைவனும், உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், தம்மை அபிராமோடும் அவரது வழித்தோன்றல்களோடும் பிணைத்துக் கொள்கிறார். இவ்வுடன்படிக்கை ஒரே ஒருதரம் செய்யப்பட்ட புறச்சடங்கால் நினைவு கூரப்படுவதன்று. இஃது அபிராமின் உடலிலேயே தங்கவேண்டும். இவ்வாறு இவ்வுடன்படிக்கை விருத்தசேதனக் கட்டளைக்கு இட்டுச்செல்கிறது. இதன்படி அபிராமின் வழித்தோன்றல்களில் ஆண்மகன் ஒவ்வொருவனும் விருத்த சேதனத்தைத் தன் உடலில் ஏற்று, இவ்வுடன்படிக்கையைத் தொடர்ச்சியாக எக்காலத்துக்கும் புதுப்பிக்கவேண்டும்.

5) புதல்வன் பற்றிய இறைவாக்கை நிறை வேற்ற, அபிராம் தனது மனைவி சாராயியால் உந்தப்பட்டு, குறுக்குவழியாக முயலுகிறார். அபிராமும் சாராயும் தங்கள் அடிமையான ஆகாரின் வழியாகப் பிள்ளைப்பேறு பெற முயலுகின்றனர். இஃது அக்காலச் சட்டமுறைக்கு ஒத்ததே. ஆனால் இறைவன் இதை ஏற்க மறுத்து, சாராயின் வழியாகப் பிறக்கும் மகனே வாக்குறுதியின் மகனாவான் என்று கூறுகிறார். ஆதி 16-இலும் 21-இலும் ஆகாரிடம் சாராயி நடந்துகொள்ளும் விதம் பொறாமையும்,

கொடுமையும் மிக்கதாய் நமக்குத் தோன்றலாம். ஆனால் சாராயியின் ஒவ்வொரு செயலும் அக்கால வாரிசுச் சட்டத்திற்கு முற்றிலும் ஒத்ததாகும். சாராயியின் இச்செயல்கள் வழியாக இறைவனது திட்டம் தனது குறிக்கோளை நோக்கி முன்னேறுகிறது.

ஆகார்வழியாக அபிராமுக்கு இசுமயேல் பிறக்கிறான். அபிராமின் தொண்ணூற்றொன்பதாவது வயதில், இறைவன், மீளவும் அபிராமுக்குத் தோன்றி, வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். அபிராம் இனி ஆபிரகாம் என்றழைக்கப்படுவார். இதுவரை சாராயி என்றழைக்கப்பட்ட ஆபிரகாமின் மனைவி, இனி, சாரா என்றழைக்கப்படுவாள். அதற்குப்பின் ஆபிரகாம், இறைவன் கட்டளையிட்டபடி தம் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவருக்கும் விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றுகிறார். இச்சடங்கை ஆபிரகாம் புதிதாகக் கண்டு பிடிக்கவில்லை. இஃது ஏற்கெனவே பல மக்களிடமிருந்த சடங்காகும். இன்று மகம்மதியர்களிடம் இப்பழக்கம் இருந்து வருகிறது. இஸ்ராயேலர் விருத்த சேதனம் செய்யாதவர்களைத் தூய்மையற்றவர்களாகவும், அவர்களோடு உறவு கொள்வதை இழிவாகவும் கருதியதாகத் தெரிகிறது. ஏற்கெனவே இருந்த ஒரு சடங்கை எடுத்து, புதுப்பொருள் அளித்து, தம் மக்களுக்குரிய அடையாளச் சடங்காக்குகிறார் ஆபிரகாம். விருத்தசேதனம், ஆபிரகாமின் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாக்கிற்று. உடன்படிக்கை, முதலில் இனப்பெருக்க ஆசிரின் வாக்குறுதியாக இருப்பதால், விருத்தசேதனம் தகுதியானதும் பொருள் மிக்க அடையாளமும் ஆகிறது. இச்சடங்கின் வழியாக ஆபிரகாமின் மக்கள் இறைவனுடைய உடைமையாகின்றனர். மக்களிடையே இஃது ஒரு வெறும் புறச்சடங்காக மாறிவிடும் ஆபத்து எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. இதை எதிர்த்து, மக்கள் விருத்தசேதனச் சடங்கைப் புறச்சடங்காகக் கொள்ளாமல், அகச்சடங்காகக் கொள்ள வேண்டும்: "உள்ளத்திலே செய்யும் விருத்தசேதனம்" தான். இஸ்ராயேலரை இறைவனுக்கு அன்புள்ளவர்களாக ஆக்கக்கூடும் (எரேமி; 9:25; 4:4; எசே 44:9; உப 10:16; 30:6).

6)இதற்குப்பின், இறைவன் மூன்று மனிதர் வடிவில் மீண்டும் ஆபிரகாமுக்குத் தோன்றி, விரைவில் சாராவின் வழியாக மகன் பிறப்பான் என்று அறிவிக்கிறார். பின், சோதோம் கொமோராவின் அழிவை முன்னறிவிக்கிறார். இந்நிகழ்ச்சியில் ஆபிரகாம் ஓர் இறைவாக்கினராகக் காட்டப்படுகிறார். இஸ்ராயேலரின் கருத்துப்படி, இறைவன் யாருக்குத் தம் திட்டத்தை வெளிப்படுத்துகிறாரோ, அவர் இறைவாக்கினர் ஆவார். "தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்குத் தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல் இறைவனாகிய ஆண்டவர் எதுவும் செய்வதில்லை" (ஆமோ 3:7). சோதோம், கொமோராவைப் பற்றிய தமது தீர்ப்பை ஆபிரகாமுக்கு இறைவன் வெளிப்படுத்துகிறார். இத்தீர்ப்பைக் கண்டு எல்லா மக்களும் அஞ்சுவர். இவ்விரு நகரங்களைப்பற்றி ஆபிரகாம் இறைவனோடு பேரம் பேசுவது-இருவருக்கு மிடையேயுள்ள நல்லுறவையும் ஆபிரகாமின் ஆன்மீக உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது. இறைவனின் இரு தூதர் சோதோமுக்குச் செல்லல், லோத்து அவர்களை விருந்தோம்புதல், நகர மக்களின் இழிவான ஒழுக்கக்கேடு ஆகியவை பற்றி ஆதி 19-இல் வாசித்தறியலாம். அந்நகரின் தீர்ப்புநேரம் வந்துவிட்டது. நகர் முழுவதிலும் பத்து நீதிமான்களைக் கூடக் காணமுடியவில்லை. ஆபிரகாமைச் சேர்ந்தவர்கள் மட்டும் காப்பாற்றப்படுவர். அவர்கள் நகரைவிட்டு வெளியேறியவுடன் இறைவன் சோதோம், கொமோரா "நகரங்களின் மேல் கந்தகமும், நெருப்பும் பொழியச் செய்தார். அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றிலுமுள்ள ஊர் முழுவதையும், அவற்றின் எல்லாக் குடிகளையும் நிலத்தின் எல்லாப் பயிர்களையும் அழித்தார்" (19:25). ஓடிப்போகும்போது, தயங்கித் திரும்பிப்பார்த்த லோத்தின் மனைவியும் அழிந்து போகிறாள்.

சோதோம், கொமோரா நகரங்கள் எங்கிருந்தன? ஆராய்ச்சியாளர்களில் பலர்

சாக்கடலின் தென்பகுதியில் உள்ள சித்திம் பள்ளத்தாக்கைக் காட்டுவர். ஒரு காலத்தில் பசுமைமிக்க பள்ளத் தாக்காக விளங்கிய இவ்விடம் கடலில் மூழ்கிக் கிடக்கிறது. இப்பகுதியில் பூமி அதிர்ச்சிகள் நடந்துள்ளன. நிலக்கரியும், நில எண்ணெய்ப் பொருள்களும் இயற்கையான எரிவாயுவும் நிறையைக் கிடைக்கின்றன. இந்நகரங்களின் அழிவு-பூமி அதிர்ச்சியும் எரிமலைக்கொதிப்பும் சேர்ந்த இயற்கை நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம். இயற்கையான எரிவாயுவும் நில எண்ணெய்ப் பொருள்களும் சேர்ந்து எரிந்ததால், "சூளையில் எழும் புகைபோலப் பூமியிலிருந்து புகை" கிளம்பியிருக்க வேண்டும் (19:28). இதையே விசுவாசமிக்க விவிலிய ஆசிரியர் இறைவனது தீர்ப்பாகக் காணுகிறார்.

7) லோத்து, அவருடைய இருபெண்கள் ஆகியவர்களைப் பற்றிய நிகழ்ச்சியை "உடல் இச்சையால்" நடந்த ஒழுக்கக் கேடு என்று கருதுவதைவிட, நம்பிக்கையற்ற, விடைகாண முடியாத, இருதலைக்கொள்ளி எறும்பு நிலையில், ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் விளைவான ஒழுக்கக்கேடாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது இப்பெண்களின் செயலை மனிதப் பண்போடு புரிந்து கொள்ளமுடியும். கெராரில் நடந்த நிகழ்ச்சியை, ஆபிரகாமுக்கு எகிப்தில் நடந்த நிகழ்ச்சியைப்போல் புரிந்து கொள்ளவேண்டும். இந்நிகழ்ச்சியுரையில் ஆபிரகாம் ஓர் இறைவாக்குரைஞர் என்பதால் சாரா திரும்பக் கொடுக்கப்படுகிறாள். அவருடைய மன்றாட்டில் ஆண்டவர் அனுப்பிய தண்டனை நீங்குகிறது. இவ்விதம், ஆபிரகாமுக்கு வாக்கு அளிக்கப்பட்ட ஆசிர், அவருக்கு உதவி செய்பவர்களுக்கும், அவர் யாருக்காக மன்றாடுகிறாரோ அவர்களுக்கும் பயன் அளிக்கிறது.

8) நிறைவை அடையாளமாக உணர்த்தும் 100-ஆவது வயதில் ஆபிரகாமுக்கு வாக்குறுதியின் மகன் பிறக்கிறான். ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளில், குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. சாராவின் வழியாக ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறப்பான்; அவன் வழியாக ஒரு பெரும் மக்களினம் தோன்றும் என்ற வாக்குறுதி, ஆபிரகாமின் வரலாற்று நிகழ்ச்சியுரை முழுவதும் பரவிநிற்கும் கருத்தாகும். இதில் ஏழுபடிகளைக் காணலாம். ஏழு முழுமையைக் குறிக்கும் எண்; புனித எண்; இறைவனுக்குரிய எண் ஆகும். இவ்வெண்ணைப் பயன்படுத்தி இக்குழந்தை பிறப்பதில் அடங்கியுள்ள ஆழ்ந்த பொருளை ஆசிரியர் உணர்த்துகிறார். இவ்வேழு படிகள்: ஆதி 12:2; 13:15; 15:18; 17:5; 17:15; 18:10; 21:1. இந்த நீண்ட தயாரிப்பில் ஆழ்ந்த இறையியல் பொருள் உண்டு. ஈசாக்கின் பிறப்பில் இறைவனது ஆற்றல் மிக்ககரமே செயல் ஆற்றுகிறது. வயதில் முதிர்ந்த மலடி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள் என்ற கேட்டறியாத அருஞ்செயலுக்கு இறைவனே பொறுப்பு. இறைவனே சாராவுக்கு மகிழ்ச்சி அளிக்கிறார் (21:6).

அடுத்து, ஆகாரின் மகன் இசுமயேல், தனது மகன் ஈசாக்கோடு உடைமையுரிமைக்குப் போட்டியிடுவானோ என்று பயந்த சாரா, ஆகாரையும் இசுமயேலையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பி விடுமாறு ஆபிரகாமைக் கேட்கிறாள். இஃது அக்காலச் சட்ட முறைப்படியே நடைபெறுகிறது. அடிமை ஆகார் தன்னுரிமை பெற்றுத் தன் மக்களிடம் செல்லுகிறாள். இசுமயேலுக்கும் ஆசிர் அளிக்கப்படுகிறது; "அவனையும் ஒரு பெரிய இனத்துக்குத் தலைவனாக்குவோம்" (21:13).

இறைவன் ஆபிரகாமோடு இருப்பதை அறியும் அபிமெலக்கு ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொள்கிறான். அதன்பின் ஆபிரகாமின் வாழ்வின் முடிநிலையாக அமையும் ஈசாக்கைப் பலியிடுமாறு கட்டளை வருகிறது. இந்நிகழ்ச்சியைச் சரியான விதத்தில் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

9) இந்நிகழ்ச்சியைப் புரிந்துகொள்ள, "உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்துகொண்டேன்" (22:12) என்ற வாக்கு வழிகாட்டும். இத்தெய்வ பயம், ஒருவனை இறைவனுக்காக எதையும் செய்யவும்,

இறைவனது குரலுக்கு எப்போதும் எந்த அளவுக்கும் செவி சாய்த்து அதன்படி செயற் படவும் தயாராக இருக்கச் செய்கிறது; தன் தலைமகனையே பலியிடவும் செய்கிறது. இறைவனை ஏற்று அவருக்கு வணக்கம் செலுத்துவதற்கு இதைவிட உன்னதச் சான்று காட்டமுடியாது. இத்தகைய பலிகள் பற்றிய விவரிப்புகள் கானானியர் மத்தியில் காணக் கிடக்கின்றன.

தனது தலைமகனைப் பலியிட ஆபிரகாமுக்கு எழும் எண்ணம் ஒரு சோதனையே ஆகும். சோதனையென்றால் தீமையைத் தேர்ந்தெடுப் பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்பலிக்கு இறைவனே நேரடியாகக் கட்டளையிட்டதாக விவிலியம் கூறுவது உண்மை. விவிலியம் தரும் காட்சி, ஆபிரகாமின் உள்ளப் போராட்டத்தைச் சுருக்கமாகத்தான் தருகிறது. அதையும் இறைவனது நேரடிக் கட்டளையோடு பொருத்திக் கூறுகிறது. இந்தப் போராட்டத்தில் தவறு செய்யும் ஆபத்து உண்டு. அதை இறைவன் அனுமதிக்கலாம். அப்படி இறைவன் அனுமதிக்கும் ஒரு தீமையை இறைவனே செய்வதாகப் பிற இடங்களில் கூறப்படுவதை நாம் அறிவோம் (1 சாமு 16:14). இந்த மரபைப் பின்பற்றி, தவறான மனச்சாட்சியை இறைவனது குரலாகப் பொதுவாக வரைந்து காட்டுதல் விவிலிய வழக்கு ஆகும். இறைவன் தலைமகனது பலியைக் கோரவில்லை; இருப்பினும் ஒருசோதனையாக அனுமதிக்கிறார். அவரே அதைப் பெரும்பாலும் சரிப்படுத்துகிறார். மீக்கா ஆகமத்தில் இதற்கு இணையான பகுதியைப் பார்க்கிறோம். இறைவனுக்கு நிறைவான வணக்கம் செலுத்துவது எப்படி என்று இறைவாக்குரைஞரது உள்ளத்திலே போராட்டம் நிகழ்கிறது. "எதைக் கொணர்ந்து நான் ஆண்டவர் முன் வந்து உன்னதரான கடவுள் முன் பணிந்து நிற்பேன்?" (மீக் 6:6). தனது வணக்கத்தின் உன்னத அடையாளமாக மனித பலியைப் பற்றிச் சிந்திக்கிறார். "என் அக்கிரமத்தைப் போக்க என் தலைப்பேறான பிள்ளையை, என் ஆன்மாவின் பாவத்துக்காக என் வயிற்றுக் கனியாகிய குழந்தையைக் கொடுப்பேனா?" (மீக் 6:7). நாடோ, தனிப்பட்டோரோ வெகு இக்கட்டான நிலையில் இருக்கும்போது மனித பலியைப் பற்றிச் சிந்திக்கும் குறிப்புகள் பழைய ஏற்பாடு முழுவதும் காணப்படுகின்றன. தங்களின் குழந்தைகளைப் பலியிடுதல் பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் வருகிறது (2 அர 3:27; 16:3; 17:17). புதைப்பொருள் ஆராய்ச்சியும் இதை உறுதி செய்கிறது. விவிலிய காலத்துப் பிற இன வரலாற்றில் இப்பலிகள் காணப்படுகின்றன. இறையச்சமும் இறைப்பற்றுமுள்ள மனிதன் இப்பலியை ஓர் உயர் வழிபாடாகக் கருதியதில் வியப்பில்லை. ஒரு சோதனைக்குட்பட்டு, இப்படியே ஆபிரகாமும் எண்ணியிருக்க வேண்டும். ஆனால் ஆபிரகாமின் வரலாற்றில் இறைவன் சிறப்பான முறையில் இடையீடு செய்து, இப்பலியை நிறுத்துகிறார்; எல்லாத் தலைமுறைகளுக்குமே நிறுத்துகிறார். தவறான மனச்சாட்சியைத் திருத்துகிறார். ஆய்வாளர் கருத்துப்படி இந் நிகழ்ச்சியுரையின் போதகம்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் இறைவன் மனிதபலியை விரும்பவில்லை.

இந்நிகழ்ச்சியுரையில் இறைவனோடு நெருங்கிய, உண்மையான ஆபிரகாமைச் சந்திக்கிறோம். ஈசாக்கைப் பலியிடத் தயாராக இருந்ததில், ஆபிரகாம் தனது மனித நம்பிக்கை, ஆற்றல் அனைத்தோடும் தன்னையுமே இறைவனிடம் சரணாக ஒப்படைக்கிறார். இஃது இறைவனது இதயத்தை உருக்குகிறது; உலக வரலாற்றில் ஆபிரகாம் வழியாக இடையீடு செய்ய இறைவனுக்கு வாய்ப்பளிக்கிறது. ஆபிரகாமும் அவருடைய வழித்தோன்றல்கள் அடையும் ஆசிருக்கு ஊற்றாகிறது. உலகமனைத்தும் ஆபிரகாம் வழியாக ஆசிர் பெறுகிறது. இந்நிகழ்ச்சியுரை தனது விசுவாசத்தால் இறைவனையே கட்டுப்படுத்திய மாபெரும் குலமுதுவரின் புகழ்ப்பாடலாகும். இவ்விறைவன் யார்?

10) ஆபிரகாமோடு விவிலியத் திருவெளிப்பாடு தொடங்குகிறது. ஆபிரகாமின் சிறப்பும் முதன்மையும் இதில் அடங்கியிருக்கிறது. ஆபிரகாம் இன்னும் மக்களால் நினைவு

கூறப்படுகிறார் என்பதற்கு. அவரோடு இறைவன்பேசினார். அவரில் மீட்பு வரலாறு புதியதொரு தொடக்கம் எடுக்கிறது என்பதைத் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை ஐயுற்றால், யூத, கிறிஸ்துவ விசுவாச மரபையே ஐயுறுவதாகும். ஆபிரகாமுக்குக் காட்சியளித்த இறைவன் முதலில் ஒரு குடும்பக் கடவுளாகத் தோன்றுகிறார். இவரை ஆபிரகாம், யாவே என்ற பெயரில் அறியவில்லை; "ஏல் சடாய்" என்ற பெயரில் அறிந்திருந்தார். இப்பெயருக்கு "யாவும் வல்லவர்" என்றும், "மலையில் வாழ்பவர்" என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விறைவன் நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர், தீமைகளைத் தண்டிப்பவர், உலகமனைத்தின் மேலும் வல்லமையுள்ளவர்; ஆபிரகாமுக்குக் கானானை உடைமையாகக் கொடுப்பவர். வழிபடுவோர் அவரை எளிதில் அணுகலாம். அவர்களின் மன்றாட்டுக்குச் செவிமடுத்து அருளுவார். பலிக் காணிக்கைகளை ஏற்றுக்கொள்வார். தமது ஆற்றலிலும் வாக்குறுதியிலும் மக்கள் நிபந்தனையற்ற விசுவாசம் கொள்ள வேண்டும்; தமக்கு வழுவாப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று கோருவார், அவரும் பிரமாணிக்கம் தவறார். தாம் வாக்களித்ததை உறுதியாக நிறைவேற்றுவார். அவருக்குத் துணைவரோ, துணைவியரோ இல்லை. அவர் தானாகவுள்ளவர்; தனிச்சிறப்புடையவர்; ஒப்புவமையில்லாதவர். இப்படிப்பட்ட இறைவனை ஆபிரகாம் பல இடங்களில் பீடம் எழுப்பி வழிபட்டார். அவற்றில் சில செக்கேம், பெத்தேல், எபிரோன், மம்ரே, பெயேர்செபா முதலியவை.

11) விவிலிய மரபுப்படி ஆபிரகாம் மேற்காசிய மக்களைச் சார்ந்தவர்; பல மக்களினத்தாருடன் உறவுடையவர். அவரது சகோதரன் நாக்கோர் வழியாக அரமேயர்களோடும், அவரது மகன் இசுமயேல் வழியாக இசுமயேலரோடும், அவரது பேரன் யாக்கோபு வழியாக இஸ்ராயேலரோடும், மற்றொரு பேரன் ஏசா வழியாக ஏதோம் இனத்தவரோடும், அவருடைய இரண்டாவது மனைவி கெற்றூரா வழியாகப் பல அரேபிய இனத்தவரோடும் உறவு கொண்டவர். உண்மையிலேயே ஆபிரகாம் பல இனத்தவருக்குத் தந்தையாவார். இந்த ஊன் சார்ந்த உறவுகளால் ஆபிரகாம் பெருமைபெறவில்லை. முன் சொன்னதுபோல் இறைவனோடு நெருங்கிய உறவுடையவர், இறைவாக்குறுதியில் விசுவாசம் கொண்டு இறைவெளிப்பாட்டை உலகுக்கு அளித்தவர் என்பதனால் தான் பெருமை பெறுகிறார். அவரது மனைவி சாரா தனது 127-ஆவது வயதில் இறந்தாள். எபிரோனில் இரட்டைக்குகையை விலைக்கு வாங்கி அதில் அவளை ஆபிரகாம் அடக்கம் செய்தார். தனது மகன் ஈசாக்குக்குத் திருமணம் செய்தபின், தமது 175-ஆவது வயதில் எல்லா நன்மையிலும் முதிர்ந்தவராய் இறந்தார். அவரது மனைவி சாராவுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

**12) ஆபிரகாமும் புதிய ஏற்பாடும்:** மீட்பு வரலாற்றில் ஆபிரகாம் சிறப்பான பங்கு பெறுகிறார்; உண்மையான இறைவனை வணங்கியவருள் முதன்மையானவர். யாவேயுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர். அவ்வுடன் படிக்கையின் அடையாளம் விருத்தசேதனச் சடங்காகும். எல்லா மக்களும் தம் வழியாக ஆசிர் பெறுவர் என்ற உறுதிமொழி பெற்றவர். மீட்பு வரலாற்றை மீண்டும் தொடங்கி வைக்கும் இந்த உடன்படிக்கையும் உறுதிமொழியும் பிற்கால விவிலிய நூல்களில் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்படும். ஆபிரகாம் இறைவனது உறுதிமொழியில் விசுவாசம் கொண்டார். அஃது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. யாவே தமது மீட்புத் திட்டத்தில் ஆபிரகாமுக்குச் சிறப்பான இடம் அளிக்கிறார். இஸ்ராயேலர்-ஆபிரகாம் என்ற பாறையினின்று செதுக்கப்பட்டவர்கள்; ஆபிரகாம் குழியினின்று வெட்டி எடுக்கப்பட்டவர்கள் (எசா 51:1-2). மீட்புத்திட்டத்தில் ஆபிரகாமின் பங்கை, மீட்பு நிறைவேறலோடு பொருத்தி மதிப்பிட வேண்டும்.

கிறிஸ்து மனித உருவெடுத்ததை, இயேசுவின் தாய் மரியாள், ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த உறுதிமொழியின் நிறைவேறலாகக் கண்டு களிக்கிறாள். "நம் முன்னோருக்கு அவர்

சொன்னதுபோல் ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்" (லூக் 1:54-55). திருமுழுக்கு யோவானின் பிறப்பின்போது, செக்கரியா இறைவனது இரக்கத்தை "நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதிமொழியையும் தமது பரிசுத்த உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தருளினார்" (லூக் 1:72-73) என்று பாடுகிறார். ஆபிரகாம் யூதர்களின் தந்தையாவார் (மத் 3:9). அவர்கள் அவர் வழிவந்தவர்கள் (யோவா 8:33). யோவா 8-இல் வரும் தர்க்கம் யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் வழிவந்தோர் என்று பாராட்டிய பெருமையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதற்கு உடல் சார்ந்த விதத்தில் வழித்தோன்றல்களாக இருப்பது மட்டும் போதாது என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார். தாம் ஆபிரகாமையும்விடப் பெரியவர் என்றும் ஆபிரகாமுக்குமுன்பே தாம் இருப்பதாகவும் இயேசு உரிமை கொண்டாடுவதில் சொற்போர் உச்சநிலை அடைகிறது. பவுல் ஆதி 16:6-ஐ எடுத்துக்கூறி (உரோ 4:3; 9;8) ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக இருப்பது உடலுறவால் வருவது அன்று; விருத்த சேதனத்தால் வரும் மரபு முறையும் அன்று; ஆபிரகாமுடையது போன்ற விசுவாசத்தால் வருவதாகும் (உரோ 4; எபி 11:17-19) என்று கூறுகிறார். கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது ஒருவனை ஆபிரகாமின் உண்மையான பிள்ளையாக்குகிறது (கலா 3:29). நல்லோர் ஆபிரகாமின் மரபினரானதால், இறப்புக்குப்பின், மெசியாவின் விருந்தில் "ஆபிரகாமின் நெஞ்சத்தில்" இளைப்பாறுவர் (லூக் 16:22-23). பவுலின் போதகப்படி "ஆபிரகாமின் இரு மனைவியரும் இரு உடன்படிக்கைகளைக் குறிக்கின்றனர். ஒன்று-மோசேயால் சீனாய் மலையில் செய்யப்பட்டதாகும். இஃது அடிமைத்தனத்தின் உடன்படிக்கையாகும். ஆகார் இதைக் குறித்தாள். மற்றது-இயேசுவில் செய்யப்படும் விடுதலை உடன்படிக்கையாகும். திருச்சபையே, தன்னுரிமையுள்ள மனைவி சாராவால் குறிக்கப்படும், உறுதிமொழிகளுக்கு உரிமையான வாரிசு ஆகும் (கலா 4: 4-31). இப்போதனையைக் கேட்ட யூதர்கள், பவுலை நகருக்குப் புறம்பே தள்ளி, கல்லால் எறிந்து கசையால் அடித்ததில் வியப்பில்லை (அ.ப. 14;5).

மெல்கிசெதேக்கு கிறிஸ்துவின் அடையாளமாவார். இது கிறிஸ்துவின் உயர்தன்மையைக் காட்டுகிறது. ஏனெனில் ஆரோன் குருத்துவத்தின் முன்னோராகிய ஆபிரகாமிடமிருந்து மெல்கிசெதேக்கு பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகப் பெற்றார் (எபி 7:1தொ). திருச்சபையில் இது நற்கருணைப் பொருளோடு நோக்கப்பட்டது. கிறிஸ்துவின் பலிக்கு ஈசாக்கின் பலி ஒரு முன் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டது. இப்பலி-நற்கருணைப்பலிக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. நற்கருணை வழிபாட்டில் "எங்கள் முதுபெருந்தந்தை ஆபிரகாமின் பலியையும் ஏற்றுக்கொண்டது போல் இவற்றையும் ஏற்றுக்கொள்ளும்" என்று திருச்சபை வேண்டுகிறது.

5. ஏ. **ஈசாக்கு:** இப்பெயருக்கு "இறைவன் சிரிக்கிறார்" அல்லது "இறைவன் (குழந்தைமேல்) புன்முறுவல் பூக்கிறார்" என்று பொருள் அளிக்கலாம். தமது முதிர்ந்த வயதில் ஈசாக்கைப் பெற்றெடுத்த சாராவின் சிரிப்போடும் (ஆதி 18:10-15;21-6), குழந்தையின் பிறப்பைக் கேட்ட மக்களின் மகிழ்ச்சியோடும் (21:6) இச்சொல்லின் பொருள் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆபிரகாம் ஒரு பெரும் மக்களினமாவார்; அவரும் அவருடைய மக்களும் பாலஸ்தீன நாட்டை உடைமையாகக் கொள்வார்கள் என்று ஆபிரகாமுக்கு இறைவன் உறுதிமொழி அளிக்கிறார் (12:7;13:14-17; 15:18-21). இதில் ஆபிரகாம் விசுவாசம் கொண்டார். அவ்விசுவாசத்தின் விளைவாக இறை உறுதிமொழியின் உரிமையாளனாக ஈசாக்கு பிறக்கிறார் (ஆதி 17:15-21; உரோ 9:7).

குலமுதுவர் ஆபிரகாமோடு ஈசாக்கு கொண்டிருந்த தொடர்புடைய நிகழ்ச்சிகளை ஏற்கெனவே பார்த்துவிட்டோம். ஆபிரகாம் பிற இனப்பெண்களோடு கொண்ட உறவால் அவரின்

மரபு தீட்டுப்பட்டுவிட்டது. இறை உறுதிமொழியின் மகனான ஈசாக்குக்கு அக்கதி நேரக்கூடாது என்று எண்ணிய ஆபிரகாம், காரானில் உள்ள தன் உறவினரிடமிருந்து ஈசாக்குக்குப் பெண்பார்க்க, தமது ஊழியனை அனுப்புகிறார். இந்த இன்பக்கதையை ஆதி 24-இல் வாசித்தறியலாம். இதன் விளைவாக நாக்கோரின் பேத்தி ரபேக்கா, ஈசாக்கின் மனைவி ஆகிறார். இவ்விருவருக்கும் ஏசாவும், யாக்கோபும் பிறக்கின்றனர். இனி ஈசாக்கின் வாழ்வு யாக்கோபின் வாழ்வோடு தொடர்புபெறுகிறது. இந்நிகழ்ச்சிகள் யாக்கோபின் வாழ்வில் தரப்படும்.

ஈசாக்கைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள் ஒன்று அவரது தந்தையைப்பற்றியது அல்லது அவரது மகன் யாக்கோபைப் பற்றியதாகும். அவையும் அவருக்காகவே விவரிக்கப்படவில்லை; அவரின் தந்தையோடும், மகனோடும் கொண்டிருந்த உறவுக்காகவே அவை விவரிக்கப்படுகின்றன. பிறரோடு ஒப்பிடப்படும்போது, ஈசாக்கு தனித்தன்மை உடையவர் அல்லர்.

ஈசாக்கு தம் தந்தைக்கு இறப்புவரை பணிவாகக் கீழ்ப்படிதலும், அவரை இறைவன் காப்பாற்றுவதும், திருச்சபை வரலாற்றில் கிறிஸ்துவின் பலிக்கும் உயிர்ப்புக்கும் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டன (எபி 11;17-19). ஈசாக்கு உடலுறவால் மட்டுமல்லாது, இறை உறுதிமொழியில் ஆபிரகாம் கொண்ட விசுவாசத்தாலும், ஆபிரகாமின் மகனாகிறார் என்பதில் பவுல் ஈசாக்கைப் புற இனக் கிறிஸ்துவர்களுக்கு எடுத்துக்காட்டாகக் காண்பிக்கிறார் (உரோ 9:7; கலா 4:23-31).

**5. ஐ. யாக்கோபு:** இச்சொல்லுக்குப் பொருள் கூறுவது கடினம். இது குதிக்காலோடு தொடர்புடையதாகத் தெரிகிறது (ஆதி 25:26). இச்சொல்லுக்குக் "கால்வாரி விடுதல்", "பிறர் உரிமைபறித்தல்" என்பனபோன்ற பொருள் அளிக்கலாம் (ஆதி 27:36; ஓசே 12:3). விவிலிய ஆசிரியர் இச்சொல்லுக்குத் தெளிவான பொருள் கொடுக்கவில்லை. ஒருவேளை, யாக்கோபு என்ற பெயருக்கு "இறைவன் காப்பாற்றுகிறார்" என்ற பொருள் இருந்திருக்கலாம். யாக்கோபு இஸ்ராயேல் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். இச்சொல்லுக்கும் தெளிவான பொருள் கொடுக்கமுடியாது. இதில் விவிலிய ஆசிரியருக்கு அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. "கடவுளோடு போராடி மேற்கொண்டவன்" என்ற பொருள் அளிக்கலாம். யாக்கோபை இறைவன் தேர்ந்தெடுத்தலையும், அவரது வழிவந்தோரான இஸ்ராயேலர்களை உயர்த்தி, ஏசாவையும் அவனது வழிவந்தோரான ஏதோமியரையும் தாழ்த்தி, இவர்களின் பிறப்புரிமை பறித்த நிகழ்ச்சியையும் சிறப்பித்துக் கூறவே ஆசிரியர் விழைகிறார் எனலாம்.

யாக்கோபின் வரலாறு பற்றிய விவிலிய விவரிப்பை ஆதியாகமத்தில் வாசித்தறியலாம். இங்கு இரு நிகழ்ச்சிகளை மட்டும் சில குறிப்புகளுடன் தருகிறோம். தமது சகோதரன் ஏசாவின் பழிவாங்கும் நோக்கத்திலிருந்து தப்பிக்கவும், தம்முடைய உறவினரிடையே யிருந்து ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்கவும், யாக்கோபு காரானில் உள்ள தம் மாமனிடம் ஓடிப்போய்க்கொண்டிருக்கிறார். பெத்தேல் என்ற இடத்தில் உறங்கும் போது ஒரு கனவு காண்கிறார் (ஆதி 28:12-15). தாம் செய்த தவறுகளுக்குச் சபிக்கப்பட்ட மனிதனாக ஓடிப்போய்க் கொண்டிருக்கும் யாகோபுவுக்கு, இறைவன் கனவில் தோன்றி, அவரைத் தேற்றுகிறார்; ஊக்கம் அளிக்கிறார்; உறுதிமொழி அளிக்கிறார். இக்காட்சி யாக்கோபு இறைவனுடைய பாதுகாப்பில் இருப்பதற்கு உறுதி அளித்து, இறைவனில் அவர் கொண்ட விசுவாசத்தை ஊக்குவிக்கிறது. இந்த அனுபவத்தின் சமய நினைவுச்சின்னமாக, தலைக்கு வைத்திருந்த கல்லை நாட்டி, அதன்மேல் எண்ணெய் வார்த்துத் திருநிலைப்படுத்துகிறார்.

யாக்கோபின் மற்றொரு சிறப்பான இறை அனுபவம், யாபோக்கு ஆற்றின் துறையில் "இறைவனுடன் போரிட்டதாகும்". தம் மாமன் லாபானைப் பிரிந்து, யாக்கோபு தன் மனைவியர், பிள்ளைகள், உடைமைகள் அனைத்தோடும் கானானுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார். யாபோக்கு ஆற்றங்கரையில் மறைபொருள்மிக்க ஓர் ஆடவன் பொழுதுவிடியுமட்டும் யாக்கோபுடன் போராடினார். இதை ஆதி 32:23-32-இல்

வாசித்தறியலாம். இந்த அனுபவம் மீட்பு வரலாற்றில் அடிப்படை முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். இதில் யாக்கோபு இறைவனிடமிருந்து இஸ்ராயேல் என்ற பெயரைப் பெறுகிறார். ஏனெனில் "நீ கடவுளோடு போராடி மேற்கொண்டாய் என்றால், மனிதர்களை மேற்கொள்வாய் என்று சொல்லவும் வேண்டுமா," என்று யாக்கோபிடம் இறைவனே கூறுகிறார். இந்நிகழ்ச்சி போன்ற மற்ற நிகழ்ச்சிகளோடு (நீதி 6:11;13:3)இதை ஒப்பிடும்போது, யாக்கோபுடன் போராடிய ஆடவன், ஒரு வெறும் வானதூதர் அல்லர்; இறைவனே என்பது தெளிவாகும். இறைவன் யாகோபை ஆசிர்வதிப்பதோடு இவ்வனுபவம் முடிகிறது. இந்த அனுபவம், யாக்கோபு தம்மையே இறைவனுக்கு முழுவதும் ஒப்புக்கொடுக்கவும், அவரை முழுவதும் விசுவசிக்கவும் நம்பவும் செய்கிறது. அவ்விடத்திற்கு "இறைவன் திருமுகம்" என்று பொருள்படும் பெனியேல் என்று பெயரிடுகிறார்.

யாக்கோபு பற்றிய நிகழ்ச்சியுரைகள், வெளித்தோற்றத்திற்கு, இஸ்ராயேலின் குலமுதுவரான ஒருவருடைய சொந்த தீரச்செயல்கள் பற்றிய நேரடியான பாரம்பரியமாகத் தோன்றலாம். ஆனால் இக்குல முதுவர் வாழ்வு, பல பாரம்பரியப் பொருள்களை ஒன்றாய்ச் சேர்த்து, இறைவனுடைய மீட்புத் திட்டத்தோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினத்தோடும் அவர் கொண்டிருந்த உறவின் சிறப்புப் பொருளை எடுத்துக்கூறப் பயன்படுகிறது. விவிலிய ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியுரைகளை மனம் போன போக்கில் படைக்கவில்லை என்று நாம் உறுதியாகக் கூறலாம். தொல்பொருள் ஆராய்ச்சிகள் இந்நிகழ்ச்சியுரைகளின் உண்மையான வரலாற்று நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. இதற்குமேல், இந்த வாழ்க்கை நிகழ்ச்சியுரைகள், வரலாற்றைக் கடந்த ஒன்றை உணர்த்துகின்றன. குலமுதுவரின் வாழ்வை விவரிக்கும்போது, அவர் காலத்து மக்களின் பண்பையும் போக்கையும் விவிலியம் சுருக்கமாக எடுத்துக்கூறி மதிப்பீடு செய்கிறது. யாக்கோபின் வஞ்சகச் சூழ்ச்சி, தீமை செய்யத் தயங்காமை, பலவந்தம் செய்யத் தயாராக இருத்தல் முதலிய இவையாவும் அக்கால மக்களின் பொதுப்பண்பாகக் காட்டப்படுகின்றன. இவை மீட்புபற்றிய இறைத்திட்டத்தைத் தடை செய்கின்றன; கடும் துன்பத்திற்கு இட்டுச் செல்லக்கூடும். சான்றாக, தலைச்சன் பிள்ளைக்குரிய ஆசிரை யாக்கோபு மோசடி செய்து ஏமாற்றி அடைதல், அதன் விளைவான அபாயத்தை யாக்கோபின் வாழ்விலும் அவர் வழிவந்தோர் வாழ்விலும் கொண்டுவருகிறது. இவற்றில் விவிலிய ஆசிரியர் மக்களின் பொதுவான தீய குணங்களைக் கண்டிக்கிறார். மாறாக, இறைவனது திட்டத்தை விசுவாசத்தோடு ஏற்று நடப்பது இன்றியமையாதது என்று தெளிவாகக் கற்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியுரைகள் தனிப்பட்டோரது வரலாறு என்பதைவிட, இவை ஒரு சமயபோதகம் என்பது சால்புடையதாகும். இதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். யாக்கோபு வஞ்சகம் மிக்கவர்; ஏமாற்றுவதில் வல்லவர்; தம் உடன்பிறந்தான் ஏசாவை ஏமாற்றுகிறார்; தந்திரத்தால் தம் தந்தை ஈசாக்கிடமிருந்து தலைமகனுக்குரிய ஆசிரைப் பெறுகிறார்; தம் மாமன் லாபானை விடத் தான் தந்திரக்காரன் என்று காட்டுகிறார். ஆனால் அவர் பிறக்கும் முன்னே ஏசாவை விட்டுவிட்டு, அவரை இறைவன் தேர்ந்தெடுத்திருக்காவிடில் அல்லது ஆபிரகாமோடு செய்த உறுதி மொழியையும் உடன்படிக்கையையும் அவரோடும் இறைவன் புதுப்பித்திருக்காவிட்டால், அவரின் சூழ்ச்சித் திட்டங்கள் எல்லாம் ஒன்றுமில்லாது போயிருக்கும். பெனியேல் என்ற இடத்தில் யாக்கோபு இறைவனோடு போராடியது, அவர் மனந்திரும்புதலைக் குறிப்பதாக விளக்குவர் அறிஞர். இதுவரை தம் ஆற்றல், தந்திரம், உடல்வலு முதலியவற்றில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார் (ஆதி 29:2-30:10). இந்த இயற்கையான போக்குகள் அழிந்து, இறைவனின் எல்லா வல்லமையிலும், எல்லாம் அறியும் ஆற்றலிலும் வேரூன்றிய ஆழ்ந்த இறை நம்பிக்கை அவரில் பிறக்கிறது. இந்த நம்பிக்கை மீட்பு வரலாற்றைத் தொடரச் செய்கிறது.

இவ்வரலாற்று நிகழ்ச்சிகளில் கவனிக்க வேண்டியதொன்றுளது. சில இடங்களில், இந்நிகழ்ச்சியுரைகள், பதிப்பிக்கப்பட்ட காலத்தில் நடந்தவை, முன்னறிவிக்கும் முகத்தால் இந்நிகழ்ச்சியுரைகளில் இடம் பெறுகின்றன. சான்றாக, தாவீது அரசன் காலத்தில்தான் இஸ்ராயேலர் ஏதோமியரை மேற்கொண்டு அவர்கள் நாட்டைக் கைப்பற்றினர். இதைக் கருத்தில் கொண்டு, யாக்கோபு என்ற பெயருக்கு "மேற்கொள்ளுதல்" என்ற பொருள் அளிக்கப் படுகிறது. பிற்கால இனத்தூய்மைக் கருத்தை மனத்திற்கொண்டு, யாக்கோபு பாதான் ஆராமிற்கு ஓடிப்போதல் (ஆதி 27:46; 28:5) இனத்தூய்மையில் குலமுதுவர் அக்கறை காட்டியதாக அழுத்திக் கூறப்படுகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த கலப்புமண எதிர்ப்புக் கொள்கையைத் தொடங்கி வைத்தவராக யாக்கோபு வரைந்து காட்டப்பெறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் யாக்கோபு என்கிற பெயர் இஸ்ராயேல் இனத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆபிரகாம், ஈசாக்கோடு சேர்த்துக் கூறப்படுகிறார்; இயேசு, பெத்தேலில் யாக்கோபு கனவுக்காட்சியில் கண்ட ஏணியோடு தம்மை ஒப்பிடுகிறார் (யோவா 1:51). புனித ஸ்தேவான் யூதத்தலைமைச் சங்கத்தின் முன் பேசியபோது யாக்கோபின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுகிறார் (அ.ப. 7:8-16). புனித பவுல் ஏசாவிடமிருந்து யாக்கோபுக்குப் பிறப்புரிமை மாற்றப்படுவதை இறைவனது தன்னுரிமைத் தேர்தலுக்கு எடுத்துக்காட்டாகக் காண்கிறார் (உரோ 9:10-13).

**5. ஓ. யோசேப்பு:** இப்பெயருக்கு "வளரட்டும்" அல்லது "சேர்க்கட்டும்" என்று பொருள் கொடுக்கலாம். வீரமாமுனிவர் "வளனார்" என்று மொழிபெயர்க்கிறார்.

யாக்கோபு தம் தந்தையரைப்போல், கானானில் உள்ள மம்ரேயில் தங்கிப் பாதி நாடோடி வாழ்க்கை நடத்தினார்; பயிர்த்தொழில் செய்துவந்தார். அவரின் மக்கள் அவருடைய மந்தைகளைக் கவனித்து வந்தனர். யோசேப்பு யாக்கோபின் பதினோராவது மகன். யாக்கோபின் அன்பு மனைவி ராகேலின் முதல் மகன் (ஆதி 30:22-24). யாக்கோபு யோசேப்பிடம் மிக அன்பு பாராட்டி வந்தார். இதுவும் யோசேப்பு கண்ட கனவுகளும் அவரை அவர் சகோதரர்களின் பொறாமைக்குப் பலியாக்கியது. சகோதரர்களால் இசும யேலர்களுக்கு இருபது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டு யோசேப்பு, எகிப்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டார் (37:28). அங்குச் சிறைபட்டு, பல இன்னல்கள் அடைந்து. பின் உயர்ந்தமனிதராக எழுச்சியடைகிறார். பழிவாங்கும் எண்ணம் அவரிடம் இல்லை. தமக்கு அளிக்கப்பட்ட இறைத்தூதையும் நோக்கத்தையும் முற்றும் உணர்ந்த மனிதராகத் திகழ்கிறார். ஏனெனில் "ஆண்டவர் யோசேப்போடு இருந்தார்" (39:2). பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் அளித்து, அதன் விளைவாக எகிப்து நாட்டின் ஆளுநராக உயர்வுபெறுகிறார். பூபாலன் என்ற பெயரில் பார்வோனுக்கு அடுத்த உயர்நிலைக்கு உயர்த்தப்படுகிறார். யோசேப்பு போற்றிபெராவின் மகள் ஆசினத்தை மணந்தார். அவள் அவருக்கு மனாசே, எப்பிராயிம் என்ற இருபிள்ளைகளைப் பெற்றளித்தாள். யோசேப்பின் ஆற்றல் மிக்க ஆட்சியின்கீழ் எகிப்து பஞ்சத்தை எதிர்த்துப் போராடியது. எகிப்தைத் தாக்கிய பஞ்சம், கானான் நாட்டையும் தாக்கியது. பஞ்சத்தின் கொடுமையின் கீழ்த் துன்புற்ற குலமுதுவர் யாக்கோபு தம் பிள்ளைகளை எகிப்துக்கு உணவு வாங்கி வர அனுப்பினார். யோசேப்பு, நம்பிக்கைக்கேடு செய்த தம் சகோதரர்களைத் தேர்ந்து தெளிந்தார். தம் உடன் பிறந்த தம்பிக்கும் தந்தைக்கும் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டினார். இப்பெருங்கதை நிகழ்ச்சியுரை, யோசேப்பு தம் சகோதரர்களுடன் மகிழ்ச்சியோடு ஒன்றுசேர்ந்த நிகழ்ச்சியோடு முடிகிறது. பார்வோன் இசைவுடன் யோசேப்பின் தந்தையும் சகோதரர்களும் எகிப்திலேயே தங்கினர். பேராற்றுக் கழிமுகத்தில், வடக்கிலுள்ள கோசேன் பகுதியில் தங்கித் தங்களது ஆயர் தொழிலைச் செய்தனர்.

யோசேப்பை இறைவன் தமது மீட்புத்திட்டத்தில் சேர்த்துக் கொள்கிறார். பல இன்னல்கள் அடைந்தாலும் அவரது வாழ்வில் பழிவாங்கும் எண்ணமில்லை. எகிப்திற்குத் தாம்,

அனுப்பப்பட்டதில் இறைபாலிப்பே அவர் எண்ணத்தில் நிறைந்து நிற்கிறது. "நீங்கள் என்னைக் கெடுக்க, சதியாலோசனை செய்தீர்களே! ஆனால் கடவுள் தீமையை நன்மையாக மாற்றி, பல இனத்தாரைக் காப்பாற்றத் தக்கதாக, நீங்கள் இந்நேரம் தெளிவாய்க் கண்டறிந்தபடி என்னை உயர்த்தினார்" (50:20). யோசேப்பு, எகிப்தில் தங்கியதால் இஸ்ராயேல் மீட்படைகிறது (45:7); இஸ்ராயேல் மக்கள் காப்பாற்றப்படுகின்றனர். இக்கதையில் இறைவனது மறைமுகமான ஆதிக்கம் பரவி நிற்கிறது. இறைவன் தமது அருள்பாலிப்பால் இஸ்ராயேல் வரலாற்றை எகிப்திய வரலாற்றோடு பின்னிப் பிணைக்கிறார். யோசேப்பின் முழுவரலாறும் ஒரே கருத்தை மையமாகக் கொண்டுள்ளது: "ஆண்டவர் அவரோடு இருந்தார்" (30.2,3.21.23;41:39). ஆனால் இக்கதையை ஆதியாகமத்தில் முன் சென்றவற்றோடு ஒப்பிடும்போது, இக்கதையில் இறைவன் நேரடியாக, புலனறிவு சார்ந்த விதத்தில் இடையீடு செய்து செயல்படுவதற்கு அடையாளங்கள் இல. புதிய இறைவெளிப்பாடு ஒன்றுமில்லை. யோசேப்பு "ஞானத்தின் மகன்" என்றழைக்கப்பட்டார். ஞானியின் நற்செயல்கள் வெகுமதிபெறும், மனிதகுறைகளையும் இறை யருள் பயனுள்ள விதத்தில் மாற்றவல்லது என்பன போன்ற சமயபோதகங்களை மனதில் ஆழமாகப் பதியவைப்பதே இக்கதையின் சிறப்பான நோக்கமாகும்.

யோசேப்பைப் பற்றி ஏற்பாட்டில் ஒரு சில குறிப்புகளே உள்ளன. யோவா 4:5-இல் யோசேப்புக்கு யாக்கோபு அளித்த நிலம் குறிப்பிடப்படுகிறது. அ.ப. 7:18-19-இல் ஸ்தேவான் யோசேப்பின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறார். எபி 11:21-22-இல் யோசேப்பின் விசுவாசம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

யோசேப்பின் காலத்தை வரையறுத்துக் கணிக்கமுடியாது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆசிரியர்கள் யோசேப்பின் கதைக்கு வரலாற்று அடிப்படையில்லை என்று கூறுவது வழக்கமாக இருந்தது. ஆணவம் பிடித்த எகிப்தியர்கள் ஒரு செமித்தியனைத் தங்களின் முதல் அமைச்சராக, அல்லது ஆளுநராக ஏற்றுக்கொள்வர் என்பது நினைத்துப் பார்க்க முடியாததொன்றாகும்; ஆகையால் ஆதியாகம நிகழ்ச்சியுரைகளை வெறும் கதைகள் அல்லது நாட்டுப்பாடல் போன்ற இலக்கிய அமைப்பாகக் கருதவேண்டும் என்று அறிவியல்வாத விளக்கவுரையாளர் முடிவுசெய்தனர். இந்த அறிவியல்வாத விளக்கங்களும் முடிவுகளும் அடிப்படையற்றவை என்று பிற்காலத்து ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. ஏனெனில் யோசேப்பின் காலத்து எகிப்து, உண்மையிலேயே செமித்தியர் ஆட்சியின்கீழ் இருந்ததாக அறிஞர்கள் காட்டியுள்ளனர். இதற்கு எகிப்தியர் வரலாறு சான்று கூறுகிறது. யோசேப்பின் வரலாற்றை எழுதிய எபிரேய ஆசிரியர் எகிப்திய மூலத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் எண்ணுவர். ஆகையால் ஓர் இளைய சகசெமித்தியனைத் தங்கள் ஆளுநராக அல்லது முதல் அமைச்சராகப் பயன்படுத்தினர் என்பதற்கு மறுப்புக் கூறமுடியாது.

கி.மு. 20-ஆம் நூற்றாண்டில் பழம் மேற்காசியாவில் நாடோடி வாழ்வு தோன்றிப் பரவியிருந்தது என்று தொல்பொருள் ஆராய்ச்சிகள் தெளிவாகக் காட்டியுள்ளன. உடல்வலிமை மிக்க பாதி நாடோடி வாழ்க்கையு டையவர்கள் பாலையின் ஓரங்களிலிருந்து நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்த பகுதிகளைத் திடீரென்று தாக்கி வந்தனர். இது பல நூற்றாண்டு களாக நடந்துவந்த ஒன்றாகும். இவற்றில் ஒன்று கி.மு. 1720-ஐ ஒட்டி எகிப்தின்மேல் கைக்சோஸ் இனத்தினர் நடத்திய தாக்குதலாகும். கி.மு. 260-ஐ ஒட்டி வாழ்ந்த எகிப்திய வரலாற்று ஆசிரியர் மனேததோ. கைக்சோஸ் என்பவர்களை "ஆயர் அரசர்கள்" என்னும் பொருள்படத் தவறாக விளக்கம் அளித்துச்சென்றார். இவ்விளக்கம் நவீனகாலம் வரை பலரால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இச்சொற்றொடர் எகிப்தியச் சொற்றொடர் என்றும், அதன் பொருள். "அன்னிய ஆளுநர்" என்றும் இப்போது ஆய்வாளர்கள் கூறுவர். இப்படிப் படையெடுத்து எகிப்தில் நுழைந்தவர்கள் உண்மையிலேயே செமித்தியர்கள் என்பது பல

செமித்தியப் பெயர்களிலிருந்து உறுதியாகத் தெரிகிறது என்பர் ஆய்வாளர். இப்பெயர்களில் பல தடவை வருவது யாக்கோபு என்பதாகும் என்று கருத இடமிருக்கிறது.

எகிப்து முழுவதையும் கைக்சோஸ் இனத்தவர் கட்டுப்படுத்தி ஆண்டனர் என்று உறுதியாகக் கூறமுடியாது. இவர்கள் வட எகிப்திலேயே தங்கிவிட்டதாகத் தெரிகிறது. அங்கே தங்கியிருந்து தங்களது ஆட்சியையும், ஆதிக்கத்தையும் செலுத்தி வந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தங்களின் சக செமித்தயருள் ஒருவனான யோசேப்பு போன்ற ஞானமிக்க இளைஞரை ஆளுநராக அல்லது முதல் அமைச்சராக மக்களும் மன்னனும் ஏற்றுக்கொள்வதில் வியப்பில்லை. காலப்போக்கில் உள்நாட்டில் வாழ்ந்த எகிப்தியரின் ஆற்றல் தீபன் ஆல்மோசின் தலைமையில் வலுப்பெற்றது. இவன் வெறுக்கப்பட்ட செமித்திய அன்னியரை எகிப்திலிருந்து விரட்டினான். இந்நிகழ்ச்சி கி.மு. 1570-ஐ ஒட்டி நடந்திருக்கக்கூடும் என்று கருத இடமிருக்கிறது. ஆனால் பல செமித்தியர்கள் எகிப்திலேயே தங்கிவிட்டனர் என்பது செமித்தியப் பெயர்களைக் கொண்ட பல இடங்களில் வட எகிப்தில் காணப்படுவதிலிருந்து தெளிவாகிறது. அப்படித் தங்கியவர்களுள் யாக்கோபின் வழிவந்தோரும் உள்ளடங்குவர். கைக்சோஸ் இனத்தாரின் தோல்வியால் இவர்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை; தங்களது ஆயர் தொழிலுடன் சிறிது வேளாண்மைத் தொழிலையும் அமைதியாகச் செய்து வந்ததாகத் தெரிகிறது. தொல்பொருள் ஆய்விலிருந்து, யோசேப்பு கைக்சோஸ் காலத்தில் (கி.மு. 1720-1570) வாழ்ந்திருக்கக்கூடும் என்று கூறலாம்.

யோசேப்பின் வரலாற்றில் பெரும் பகுதி யாவே பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். இஃது, இப்பாரம் பரியம் வீர காவியத்தை சொல்லும் கலையில் தலைசிறந்தது என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆதியாகமம்-யோசேப்பின் இறப்பு, அடக்கத்தோடு முடிகிறது. இத்துடன் மீட்பு வரலாற்றில் ஒருபடி முடிகிறது எனலாம்.

### 6. ஆதியாகமத்தின் வரலாறும் அதன் பொருளும்

ஆதியாகம நிகழ்ச்சியுரைப் பகுதிகள் உண்மையாக நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் தொகுப்புதானா? இதற்குப் பதில் அளிக்குமுன் சில விளக்கங்கள் தேவையாகின்றன. வரலாறு பற்றிய நவீன காலத்துக் கருத்துப்படி ஆதியாகமத்தில் வரலாறு இல்லை என்று எல்லா விவிலிய அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளுவர். நவீன கால வரலாற்று ஆசிரியனைப்போல் விவிலிய ஆசிரியர் தம்மைக் கருதவில்லை. அவருக்கு வரலாறு ஒரு முடிவன்று; ஒரு கருவியேயாகும். அவர் வரலாற்றை-எப்படிப் பயன்படுத்துகிறார் என்று நாம் உணரும்போது, ஆதியாகமத்தின் பொருளையும் நிறைவாக அறிகிறோம்.

ஆதியாகமத்தில் வரும் வரலாறு ஒரு தெளிவான நோக்குடையது. வரலாற்றை, இறைவனது அருள்மிக்க இடையீடுகளால் வரையறை செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியாகவும், இறைவன் தேர்ந்தெடுத்த இலக்கை நோக்கி அஃது இயங்குவதாகவும், விவிலிய ஆசிரியர் வரைகின்றார். இறைவனது திட்டத்தை விளக்கிக் காட்டும் அளவுக்குத்தான் வரலாற்று நிகழ்ச்சிகளில் திரு ஆசிரியர்கள் ஆர்வம் காட்டினர். இந்தத் தனிப்பட்ட போக்கு, அவர்கள் தங்களின் நூலின் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் குறுக்கிட்டு வழிகாட்டியது. இவ்வாசிரியர்களின் வரலாற்று நோக்கும் போக்கும் நவீன வரலாற்று ஆசிரியர்களது கருத்துக்கு மாறுபட்டதாகும்.

தொடக்க வரலாற்றில் சமய வரலாற்றுக்குரிய அடிப்படை பின்வருவனவற்றிலிருந்து முழுதும் வேறுபட்டதாகும். இதில் வரும் நிகழ்ச்சிகள் ஒரு தனிப்பட்ட இனத்தாருக்கு மட்டும் உரியவையல்ல; மக்களினம் முழுவதையும் பாதிக்கும் நிகழ்ச்சிகளாகும், பூமி முழுமைக்கும் உரிய காரியங்களாகும். இவற்றில் படைப்பு, இறைவன் அருளிலிருந்து முதல் வீழ்ச்சி போன்ற சில, தன்மையாலே ஒப்புமையற்ற தனித்தன்மை யுடையன. உடன்பிறந்தானைக் கொல்லுதல்,

பழிவாங்குதல், பெருவெள்ளம், நகரங்களின் அழிவு போன்றவை மனித வரலாற்றில் அடிக்கடி நிகழக்கூடியவை; எடுத்துக்காட்டானவையுமாகும். இவைதாம் இறையூக்கம் பெற்ற ஆசிரியருக்குக் கிடைத்த, தொடக்க வரலாறு பற்றிய பொருள்களாகும். இவ்வாசிரியர், தமது சமய முற்கோளுக்கு ஏற்ற விதத்தில், இறைவனிடமிருந்து மனிதன் படிப்படியாகப் பிரிந்து விலகிச் செல்லும் பிளவுபற்றிக் கவலை கொள்கிறார். எப்படி, அடிப்படை ஏடுகள் இல்லாவிடில், நவீன வரலாற்று முறையில் தொடக்க வரலாற்றை விளக்கும் ஆசிரியன் ஒரு பெயரையோ, ஒரு தனிப்பட்ட சூழ்நிலையையோ, ஒரு வாழ்க்கை வரலாற்றையோ படைக்கமுடியாதோ, அதே நிலையில்தான் ஆதியாகமத் தொடக்க ஆசிரியரும் இருக்கிறார். ஆகையால் அவர், எடுத்துக்காட்டான நிகழ்ச்சிகளையும், நீண்ட காலப்போக்கையும், மக்களினங்களின் தோற்றவியலையும் விளக்குகிறார். இப்படிக் கூறுவதால் அவர் எழுதுபவை வரலாற்றைச் சார்ந்தனவல்ல என்று கொள்ளக்கூடாது.

ஆதியாகமத்தில் முதல் பதினோரதிகாரங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளையே கூறுகின்றன. அவற்றில் சில: காலத்தின் தொடக்கத்தில் இறைவன் உலகைப் படைத்தார்; மனிதனைப் படைத்தபோது சிறப்பான இறை இடையீடு நிகழ்ந்தது; முதல் மனிதன் இறைவனோடு நட்புறவு கொண்ட நிலையில் இருந்தான்; அந்நிலையிலிருந்து வீழ்ந்தான்; மனிதனின் பாவங்கள் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த பிளவை மிகுத்தன; அடுத்தடுத்துப் பல இயற்கைப் பெருங்கேடுகள் நிகழ்ந்தன; இவற்றால் மனிதன் தன் பாவங்களின் விளைவைத் துய்த்தான். இவை சமய விளக்கங்களாக இருப்பதால், பலவகையில் நவீன அறிவியலின் மதிப்பீட்டுக்கு அப்பாற்பட்டவை. ஆயினும் அதே சமயத்தில் அவை வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்குவதால் வரலாற்றைச் சார்ந்தவைகளாகும்.

ஆகையால், ஒப்புமையால்தான் இவ்வதிகாரங்கள் வரலாற்றுக் கொண்டுள்ளன எனலாம். இப்பகுதியின் வரலாற்றைத் தன்மை மூன்று பண்புகளைக் கொண்டுள்ளது. முதலாவது, நாம் முன்பு கூறியதுபோல், தொடக்க வரலாற்றை நவீன அறிவியல் நோக்குவது போலவே, இவ்வதிகாரங்களும் அதை நோக்குகின்றன. இரண்டும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. "அடையாளமான" நிகழ்ச்சிகளிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன. இரண்டாவது– பாமர மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் உண்மைகளை எடுத்துக்கூற வேண்டிய தேவை "அடையாள நிகழ்ச்சிகளை"த் தனி நிகழ்ச்சிகளாக மாற்ற வேண்டியதற்கு அடிகோலிற்று. பெரும்பாலும் பலர் சேர்ந்து செய்த காரியங்கள் ஒரு தனி மனிதனால் செய்யப்பட்டதாகக் காட்டப்படுகின்றன. ஒரு பெருங்கேட்டின் கதை, அது போன்ற எல்லாப் பெருங்கேடுகளை எடுத்துக்காட்டவும் விளக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவது பண்பு, திரு ஆசிரியரின் சமய நோக்கு இப்பொருட்களைப் பயன்படுத்தும் விதத்தை வரையறுத்து மேலும் பாதித்துள்ளது. ஆதியாகம முதல் பதினோரதிகாரங்களில் காணப்படும் வரலாற்றை மதிப்பீடு செய்வதில் இச்சமய நோக்குத் தான் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இஸ்ராயேலில் மீட்பு இறையியல்தான் முதன்மையானது. படைப்பு பற்றிய இறையியல் அவ்வளவு முதன்மையுடையது அன்று; மேலும் அது முன்னதைச் சார்ந்ததுமாகும். ஆகையால் உலகம், மனிதர் தோற்றம் முதலியவை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தோற்றத்தோடு இணைத்துக் கூறப்படுகின்றன. இந்த இறையியல் கருத்துக்களின் சார்புடைய உறவு, திரு ஆசிரியர்கள் தங்களுடைய பொருட்களைப் புவி இயல், மனித இயல் சார்ந்த அக்கறையோடு மட்டும் நோக்காமையை விளக்குகிறது.

இம்முதல் அதிகாரங்களில் காணப்படும் பொருள்களில் தோற்றம்பற்றி ஒரு சில கூற விரும்புகிறோம். இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களுக்கு இத்தொடக்க நிகழ்ச்சிகள்

பற்றிய செய்திகள் நேரடியாக வெளிப்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதை முன்னதாகவே ஏற்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது. உண்மையில், வரலாற்றில் இறைவன் செயல்படும் முறை அப்படி ஏற்றுக்கொள்வதற்கு மாறாகச் சொல்லாடுவதாக அமைகிறது. மேலும், நிகழ்ச்சியுரைகள் பற்றிய இலக்கியப் பகுப்பாராய்ச்சி, இவற்றின் இயற்கையான, ஆனால் மிகச் சிக்கல்களுடைய, தோற்றத்தையும் வளர்ச்சியையும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வுரைகள், இந்நிகழ்ச்சிகளில் வரும் மூல ஆட்களிடமிருந்து தோன்றி, இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்களுக்கு உண்மை பிறழாது கிடைத்திருக்கக்கூடும் என்பது நம் பத்தகாததாயி ருக்கிறது. இப்படி நடந்திருக்கக்கூடும் என்பதற்கு முதல் மனிதனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள பல்லாயிரம் ஆண்டுகள் இடம் தரவில்லை. இதில் அருஞ்செயலான இறை இடையீடு நடந்திருக்கலாம் என்று ஏற்றுக் கொண்டால், ஒரே திருவெளிப்பாட்டுச் செயலைவிட மிகப்பெரிய பல அருஞ்செயல்கள் தேவையாகும். இப்படி எண்ணுவதற்கு விவிலியத்திலே அடிப்படையில்லை. மேலும் "முற்காலத்தில் ஆபிரகாம், நாகோர் ஆகியோரின் தந்தை தேராகு உட்பட உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் வாழ்ந்தபொழுது அவர்கள் மற்றத் தெய்வங்களுக்கு ஊழியம் செய்தனர்" என்று இஸ்ராயேலின் முந்தையர் பற்றி இறைவனே கூறுகிறார். தேவர்கள் பலரை வணங்கிய இந்த மூதாதையர்கள், ஒரே இறைவனை மட்டும் வணங்கும் பாரம்பரியத்தை உண்மை பிறழாது கடைப்பிடித்துப் பிறருக்கு வழங்கியிருக்க முடியாது.

ஆகையால் இந்நிகழ்ச்சியுரைப் பொருட்கள் இஸ்ராயேலின் காலத்திற்கு முன்பேயிருப்பதால் இஸ்ராயேலுக்குப் புறம்பே தோன்றிருக்க வேண்டும். பெரும்பாலும் வட மெசபொத்தாமியா விலிருந்து இவை தோன்றியிருக்கவேண்டும். இங்கிருந்துதான் இஸ்ராயேலின் முன்னோர் வந்தனர். ஆதியாகம் நிகழ்ச்சியுரைகள் மெச பொத்தாமியாவின் கதைகளோடு கொண்டுள்ள இலக்கிய ஒப்புமை இதை உறுதிப்படுத்துகிறது. ஆனால், இந்த ஒப்புமை, இவ்வதிகாரங்களின் பொருள்களுக்கு இஸ்ராயேல் புற இன அயலாரை நேரடியாகச் சார்ந்திருந்தது என்று குறிக்கவில்லை. இவை இஸ்ராயேலில் இறையியலால் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டுள்ளன. இஸ்ராயேலைச் சேராத கதைகளோடு திட்டத்திலும் உருவகத்திலும் ஒற்றுமையிருந்தாலும், இந்நிகழ்ச்சியுரைகளுக்கு இறையியல்தான் முழுப்பொருளை அளிக்கிறது. இவ்விறையியல் முழுவதும் இஸ்ராயேலைச் சார்ந்ததாகும். அதற்கு ஒப்புமையேயில்லை.

குலமுதுவர்களின் வரலாறு, அவர்களுடைய பயணங்கள், தொழில்கள், அயலாருடன் கொண்ட உறவு, அவர்களுடைய திருமணங்கள், வீரச் செயல்கள், இறப்பு முதலியவற்றை உள்ளடக் குகிறது. மிகப்பழைய மேற்காசிய வரலாற்றியலும், தொல்பொருள் ஆய்வும் சில உண்மைகளை விளக்கியுள்ளன. ஆதியாகமத்தின் பின்னிலைகளாக உள்ள சமூக, சட்ட மரபு, அரசியல், நிலவியல், சமய நிலைகள் முதலியவை கி.மு. இரண்டாம் ஆயிரம் ஆண்டுக் காலத்தில் இப்பகுதிகளில் நிலவிய நிலைகள்தாம் என்றும், இவற்றைப் பிற்காலத்து ஆசிரியர்கள் கண்டுபிடித்திருக்க முடியாது என்றும் இவ்வாராய்ச் சிகள் காட்டுகின்றன. ஆகையால், இங்குப் பாதி நாடோடி ஆயர்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் அனேகமாக வடமெசபொத்தாமியாவில் தோன்றிக் கானானில் குடிபுகுந்தனர் என்றும், ஆதியாகமத்தில் விளக்கப்படும் விதத்தில் வாழ்ந்தனர் என்றும், அவர்களில் சிலராவது எகிப்துக்குச் சென்று வாழ்ந்தனர் என்றும் ஏற்றுக்கொள்ளலாம். திரு ஆசிரியர்களின் சமய வரலாற்றுக்கு அடிப்படையாகப் பயன்பட்ட இந்தக் குடும்ப வரலாறுகளை இக்கால அறிவியல் வரலாற்று ஆசிரியன் ஏற்றுக்கொள்ளாதிருக்கக் காரணம் இல்லை எனலாம்.

ஆயினும் இந்த அடிப்படை நிகழ்ச்சிகள் தொடக்க காலத்தில் பொதுமக்கள் பாணியில் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஆட்களின் பெயர்களுக்கு, அவருடைய அல்லது அவர் மரபினருடைய பண்புகளை அழுத்திக் கூறும்

பொருட்டு, சொல்லிலக்கண முறையில் விளக்கம் அளிக்கப்படுகிறது. குடும்ப நிகழ்ச்சிகள் ஒப்பனை செய்யப்பட்டு, நாட்டுப் பாடலுக்கும், வீரகாவியத் திற்கும் உரிய பொருட்களாக மாறுகின்றன. அவ்வவ்விடங்களில் வாழ்வோரின் பொழுது போக்கிற்காகவும், அறிவூட்டுதலுக்காகவும் மறையுரைக்காகவும் இவை பயன்பட்டன; எடுத்துக்கூறப்பட்டன. இவற்றில் சில அவ்வவ் விடங்களைச் சேர்ந்த மறை வழிபாட்டுக் கதைகளையும் வழிபாட்டுப் பழக்க வழக்கங் களையும் அடிப்படையாகக் கொண்டவை. அவற்றின் மறை உண்மை அழுத்திக் கூறப்பட்டது.

இத்தகைய பொருட்கள்தாம், தனித்தனி சிறிய பகுதிகளாகவும், சில சமயங்களில் பாரம்பரிய வட்டங்களாகவும், பிற்கால இஸ்ராயேலின் திரு ஆசிரியர்களுக்குக் கிடைத்தன. இவர்கள் தங்களுக்கே உரியவிதத்தில் தங்களது நோக்கை விளக்குவதற்கு இவற்றைப் பயன்படுத்தினர். இந்நோக்கு, அடிப்படையிலேயே சமய நோக்காகும். இதற்கே சிறப்பிடம் அளிக்கப்பட்டது; முதலிடம் அளிக்கப்பட்டது. வரலாற்று நிகழ்ச்சிகளில் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட இறைத்திட்டத்தை எடுத்துக்காட்ட விரும்பினர். ஆகையால் தங்கள் நூல்முழுவதும் இறைவனது தொடக்கச் செயலை அழுத்திக் கூறினர். ஆபிரகாம் கானான் நாட்டில் குடியேறியது, அக்காலச் சூழ்நிலைகளால் மட்டும் வரையறை செய்யப்பட்ட தற்செயலான ஒரு நிகழ்ச்சியன்று. அது, முதன்முதலாக, இறைவனது அழைத்தலின் விளைவாகும். இவ்வழைத்தல் ஆபிரகாம் புறக்கணிக்க முடியாத ஒன்றாகும். கானானில் ஆபிரகாம் நடத்திய நாடோடி வீரவாழ்வு, பிறரோடு நடத்திய வெற்றிமிகு செயல்கள், ஆபத்துக்களிலிருந்து அவர் தப்பியது, அவருக்குப் பிள்ளைகள் பிறத்தல் இவையாவும் இறைத்திட்டத்தின் ஒளியில் அறிமுகம் செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன. இவற்றின் வழியாகத் தாம் அளிக்கும் நாட்டை உடைமையாகக் கொண்டு, அங்குத் தம்மை மட்டும் வணங்கும் ஒரு மக்களினத்தை இறைவன் அமைப்பதற்காகவே இவை நிகழ்கின்றன என்று எடுத்துக்காட்டப்படுகின்றன. இத்திட்டம் ஆபிரகாமுக்கு இறைவன் செய்த வாக்குறுதியில் உருவெடுக்கிறது; அவர் வழிவந்தோர்களோடு (ஈசாக்கு, யாக்கோபு) மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. இவர்களையும் இறைவன் தன்னுரிமையுடன், பயன்கருதாது, தேர்ந்தெடுக்கிறார். இத்திட்டமும், உறுதிமொழியும் ஆபிரகாமின் வழிவந்தோர்களின் நாடோடி வீரவாழ்வையும் விளக்குகின்றன. வரம்பில்லாத இறைநோக்கத்தின் காரணமாகக் குலமுதுவர்களின் வரலாற்றில் முழுமையான் ஒற்றுமை இருக்கிறது; இந்நோக்கம் இயற்கையைக் கடந்தது. ஆகையால், இது நவீன அறிவியலான வரலாற்றின் கட்டுப்பாடுகளைக் கடந்தது. எனவே, விவிலியத்தின் மற்ற நூல்களைப் போல், ஆதியாகமத்தின் பொருள், வரலாற்று ஆசிரியனின் கைகளிலிருந்து எப்போதும் நழுவித் தப்பிவிடுகிறது எனலாம். ஏனெனில் அவன் சமய முற்கோள்களுக்குப் புறம்பே செயல்படுகிறான்.

விவிலிய ஆசிரியர் வரலாற்றைத் தமது நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தியதனால், அவர் எழுதிய நூலின் வரலாற்றுத் தன்மை குறைந்துவிடவில்லை. கடந்த காலம் பற்றிய ஏடுகளில் இறைவனது கரம் செயல்படுவது காணப்பட வேண்டுமென்றால், அவ்வேடுகள் உண்மையான ஏடுகளாக இருக்க வேண்டும். இல்லையெனில், விவிலிய ஆசிரியர் தமது நோக்கத்திற்கே ஊறுவிளைவித்துக் கொள்கிறார். எழுதப்பட்ட, வாய்மொழிப் பாரம்பரியங்கள் வழியாக அவருக்கு வரலாறு கிடைத்தது. இந்த மூலங்களைத் தக்க முறையில் தேர்ந்து தெளிந்து, மதிப்பீடு செய்து, தமது நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தினார். நவீன கால ஆய்வுகள் இம்மூலங்களின் உண்மைத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றன; உறுதிப்படுத்துகின்றன.

**7. ஆதியாகமத்தின் போதனைகள்:** இத்தலைப்பின் கீழ் வருபவை ஏற்கெனவே கூறப்பட்டவையாயிருக்கலாம். ஆயினும் இங்குத் தொகுத்துத் தருகிறோம். ஆதியாகமத்தின் முதல் பகுதி தொடக்க காலத்திலிருந்து ஆபிரகாம்

வரையிலுள்ள மக்களின் சமய நிலையைச் சுருக்கமாக மதிப்பீடு செய்கிறது. உலகில் உள்ளதற்கெல்லாம் இறைவன் ஒருவரே காரணமாவார் (ஆதி 1:1). அவரது படைப்புச் செயலை எதிர்க்கவல்லது எதுவுமில்லை. அதற்குத் தடையேயில்லை (1:2). அவரது வார்த்தை முழு ஆற்றலுடையது. அதில் அவரது எல்லாம் வல்ல தன்மை விளங்குகிறது. அவர் உரைக்க, பொருட்கள் தோன்றுகின்றன. அவரின் படைக்கும் விருப்பத்திற்கும் படைக்கப்பட்ட பொருளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையில் அவரது சொல் செயல்படுகிறது (1:3தொ). இறைவனோடு கொண்டுள்ள சிறப்பு உறவால் மனிதன் மற்றப் படைப்புப் பொருள்களைவிட மேம்பாடு கொண்டு விளங்குகிறான் (1:26-30). இறைவனது கட்டளையால், பெண்-மனிதனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைநலமாகின்றாள்; அவனுடைய மேன்மையில் பங்கு கொள்கிறாள் (1:27; 2:18-23); பிரிக்கமுடியாத திருமண உறவால் அவனோடு இணைக்கப்பட்டிருக்கிறாள் (2:24).

மனிதனது முதல்நிலை குற்றமற்றதாகும் (2:25); இறைவனோடு நட்புறவு கொண்டதாகும் (3:8). படைக்கப்பட்ட தன்மையைக் கடந்த நிலையில் அடையுமாறு சோதிக்கப்பட்டு, மனிதன் பாவம் செய்தான் (3:1-6). இந்த முதல்பாவத்தின் விளைவு, ஆதாமுக்கும் அவர் வழிவந்தோர் யாவருக்கும் சுமையாக மாறியது. இப்பாவத்தின் விளைவாக இறைவனோடு கொண்டிருந்த நட்புறவை மனிதன் இழந்துபோனான் (3:23-4). மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் மதிப்பு இன்றிப் போயிற்று (3:6). மனிதன், பெண் ஆகியோரின் தன்மைக்கேற்ப உடல்சார்ந்த தீமைகளும் (3:17-19) தீய ஆற்றல்களுடன் இடைவிடாப் போராட்டமும் இப்பாவச் சுமையில் உள்ளடங்கும். இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி பற்றி உறுதிமொழி அளிக்கப்படுகிறது (3:15). இறைவனது இந்த மீட்புச் சித்தம் இஸ்ராயேலைப் பொருத்தமட்டும் தெளிவாக வெளிப்படுத்தப்படும். இறுதி வெற்றி பற்றிய நற்செய்தியின் முற்செய்தியாகும் இவ்வுறுதிமொழி.

தொடர்ந்த இந்தத் போராட்டத்தின் விளைவு முதல் மனிதனது தொடர்ந்து தோல்வியில் காணப்படுகிறது (ஆதி 4:11). இறைவனுக்கு மாறாக மீறி எழுந்த மனிதன் தன் அயலானுக்கு எதிராகவும் மீறி எழுந்தான். கொலை (4:1-3), பழி வாங்குதல் (4:24), பல மனைவியரைக் கொள்ளுதல் (4:19), உடல் சார்ந்த இச்சைகள் (16:5) முதலியவை மனிதனுடையவும் அவன் பண்பாட்டினுடையவும் வரலாற்றில் சிறப்புக்களாகத் திகழ்ந்தன. சினமுறச் செய்யப்பட்ட இறைவனது நீதி, இயற்கைப் பெருங்கேடுகளில் வெளிப்படுகிறது. இவை மனிதனை அழித்தன (ஆதி 6:6-7; 7:11). இறைவனுடைய இரக்கமும் மீட்கும் விருப்பமும் நேர்மையுடையோரை மீட்டுக் காப்பாற்றுவதில் வெளிப்படுத்தப்படுகின்றன. நீதிமானோடு இறைவன் செய்து கொள்ளும் உடன்படிக்கை இயற்கையின் அடையாளத்தால் உணர்த்தப் படுகிறது (9:8-17). அதன் பின்னும் மனிதன் தன் ஒழுக்கக்கேட்டிலேயே தொடர்ந்து வளருகிறான் (9:20-27). இதன் விளைவாக மனித சமூகம் இறைவனிடமிருந்து பிரிந்து சென்றது. மனிதர்களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டது (11:1-9).

இந்நிலையில் இறைவன் சிறப்பான முறையில் மனித வரலாற்றில் இடையீடு செய்கிறார். இறைவன் ஆபிரகாமைத் தமது சேவைக்கு அழைக்கிறார் (12:1-3). ஆபிரகாமும் விசுவாசத்தோடு பணிகிறார் (12:4;15:6). இறைவன் குல முதுவர்களின் சொந்த இறைவனாக மாறுகிறார் (31:5.29.42.53). இந்த நெருங்கிய உறவு குல முதுவர்களின் வரலாற்றை வரையறுக்கிறது. இறைவனது தன்னுரிமையான தேர்தலால் தொடங்கிவைக்கப்பட்ட இந்த உறவின் விளைவாக ஆபிரகாம் ஒரு நாட்டையும் தம் வழிவந்த பெரும் மக்களினத்தையும் அடைவார் என்று உறுதிமொழி அளிக்கப்படுகின்றது (12:1-2; 13:14-16; 15:5). இவ்வுறுதிமொழி ஆபிரகாமின் வழிவந்தோரோடும் புதுப்பிக்கப்படுகிறது (26:2-5;28:13-15). இஃது இஸ்ராயேல் மக்களினத்தில் நிறைவுபெற வேண்டிய தொன்றாகும் (15:13-14.18-21).

குல முதுவர்கள்பால் காட்டப்பட்ட இச்சிறப்பான இறைவனது அக்கறையை இறைத்திட்டத்தால் மட்டும்தான் விளக்க முடியும். இறைவனது ஆற்றல், எதற்கும் கட்டுப்பட்ட தில்லையாயினும் (12:17; 14:19-20; 19:24-29), குல முதுவர்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிகளுக்கேற்ப ஒரு தனிப்பட்ட முறையில் செயல்படுகிறது. அவரது நீதியின் (12:17; 19:20-21; 38:7), அவரது இரக்கத்தின் (18:22-23; 19:29) சான்றுகள் யாவும் யாவற்றையும் கட்டுப்படுத்தும் இறைத்திட்டத்தோடு பொருத்தமுடையன. இறைவனது பெயரைப் பலவாறு பயன்படுத்தலையும் இந்த ஒளியில்தான் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவர் எனப் பொருள்படும் "யாவே" என்ற சொல் குலமுதுவர்களின் இறைவனும் இஸ்ராயேலின் இறைவனும் ஒருவரே என்று கருதுவதற்கு வழிவகுக்கிறது. இறைவன் என்று பொருள்படும் "எலோகீம்" என்ற பெயர், எல்லாம் வல்ல இறைவன் என்று பொருள் படும் "ஏல்சடாய்" என்ற பெயர், மிக உன்னதமான இறைவன் எனப்பொருள்படும் "ஏல் எலியோன்" என்ற பெயர், என்றும் உள்ள இறைவன் எனப் பொருள்படும் "ஏல்ஓலாம்" என்ற பெயர், ஆகியவை இறைவன் தம் திட்டத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தும்போது தம் ஆள் தன்மையையும் படிப்படியாக வெளிப்படுத்துகிறார் என்பதையும் காட்டுகின்றன. நூல் முழுவதும் குல முதுவர்களின் இறைவனே உண்மையான இறைவன் (35:2); அவரது ஒரே திட்டம் ஒரு நாட்டில் ஒரு மக்களை ஆட்கொள்கிறது என்று காட்டுகிறது.

இறைவனது திட்டத்தின் வளர்ச்சிக்குத் துணையான மறையுண்மைகள் பல ஆதியாக மத்தில் காணப்படுகின்றன. அவற்றில் சில, பலியால் இறைவனை வணங்குதல், அவரது பெயரைக் கூப்பிட்டு அழைத்தலின் இன்றியமையாமை (12:7-8; 13:4-18; 26:25; 31:54; 32:20; 35:1-7; 46:1), பாலுணர்வு ஒழுக்க வாழ்வு பற்றிய அக்கறை (12:17; 19:20; 38;24; 7-12), மனிதபலியையும் (22), கொலையையும் (37:21 தொ) வெறுத்துத் தவிர்த்தல், அயல்நாட்டாரிடம் அன்பு (18:1-8; 24:17-20), நீதி செய்யக்கடமை (31:37-42; 38:8-10:26), குற்றங்களை மன்னித்தல் (50:15;21), இறந்தோருக்குச் சிறப்பு செய்தல் (23:25; 35:19 தொ; 50:1-14) என்பன. அடுத்தடுத்து வரும் காட்சிகளில் இறைவனது அருள்பாலிப்பு அழுத்திக் கூறப்படுகின்றது (18). சில இடங்களில் இறைவனது யாவும் கடந்த தன்மை அழுத்திக் கூறப்படுகிறது.

**8. ஆதியாகமமும், திருச்சபையும்:** ஆதியாகமத்தில் காணப்படும் மறை உண்மைகளைப் பொதுவாகத் கிறிஸ்துவம் ஏற்றுக்கொண்டது. முதல் பதினோரதி காரங்களுக்கு விளக்கம் அளிப்பதில் நுண்ணிய தெளிவான வேறுபாடுகள் எழுந்தன. இப்பகுதியின் பொருள்களின் தோற்றம், விவரங்கள் முதலியவை பற்றிய பொருளைப் புரிந்துகொள்வதிலும் வேறுபாடுகள் எழுந்தன. கடந்த பல நூற்றாண்டுகளாக விவிலியச் செய்திகளுக்குச் சொற்களுக்கேற்ப விளக்கம் அளிப்பது ஏற்றுக்கொண்ட மரபாகும். இந்த மரபு அப்போது பழக்கத்திலிருந்த பகுத்தறிவுக் கோட்பாடுகளின் விளைவாகும்; புதிதாகப் பிறந்த தொல்பொருள் இயல், மொழி ஆராய்ச்சித்துறை, ஒத்தமை சமய இயல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு எதிராகக் கிறிஸ்துவக் காப்பியல் பாதுகாப்புக்குரிய எச்சரிக்கையான ஒரு போக்கைக் கடைப்பிடித்து வந்தது. புதிய அறிவியல்கள் முழுவளர்ச்சியடைந்து, அவற்றின் கொள்கைகளைத் தவறாகப் பயன்படுத்திய தனிப்பட்ட மெய்யியல் கோட்பாடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னும், கிறிஸ்துவர்களின் போக்கில் ஒரு பாதுகாப்புத்தன்மை தெரிந்தது. இதைப் பல்வேறுபட்ட ஒத்தமைவியலில் காணலாம். அதாவது, மனிதவியல் ஆகியவற்றின் முடிவுகளை எடுத்துக்காட்டச் செய்த முயற்சிகளில் காணலாம்.

ஆதியாகமத்தில் எடுத்துச்சொல்லப்படும் அடிப்படை மறை உண்மைகளைக் கத்தோலிக்கத் திருச்சபை எப்போதும் போதித்துவந்துள்ளது.

பகுத்தறிவுக்கொள்கையும், நவீன தப்பறைக் கொள்கையும் பரவியிருந்த காலத்தில், கி.பி. 1909-இல் பாப்புவின் விவிலியக்குழு ஆதியாகம முதல் மூன்று அதிகாரங்களின் வரலாற்றுத் தன்மை பற்றிக் கூறிய முடிவுகள் இதைக்காட்டுகின்றன. இம்முடிவுகள், மேலே கூறப்பட்ட பாதுகாப்பான மனப்போக்கை எடுத்துக்காட்டினாலும் தனிப்பட்ட வாசகங்களுக்கு விளக்கத்தைச் சுட்டிக் காட்டுவதிலே, அவை, பெரும்பாலும் திருச்சபையால் எப்போதும் ஏற்றுக்கொண்ட மறை உண்மைகளை வரையறுக்கப் பயன்படுகின்றன.

பன்னிரண்டாம் பத்திநாதர் 1943-இல் அளித்த சிறப்புமிகு பொதுத்திருமுகத்தில் மிகுந்த எச்சரிக்கையான இந்தத் போக்குக் காணப்படவில்லை. இதில், விவிலியத்திற்குச் சரியான கிறிஸ்துவ விளக்க இயலின் அடிப்படைக் கொள்கைகள் அமைக்கப்பட்டன. ஆய்வாளர்கள், இவற்றை அச்சமின்றிப் பயன்படுத்தி மறைநூலின் எல்லாப் பகுதிகளையும் ஆராய ஊக்கமூட்டப் பெற்றனர். அதற்குப்பின், ஆதியாகமம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் முழுவிளக்க நூல்களும் வெளிவந்தன. இவை அறிவியல் முறையைப் பயன்படுத்தின. ஆனால் திருச்சபையின் நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தின. இது 1948-இல் கர்தினால் சுகார்டுக்குப் பாப்புவின் விவிலியக்குழு எழுதிய திருமுகத்தில் தெரிகிறது. இத்திருமுகம் ஆதியாகம முதல் பதினோரதிகாரங்களைப் பற்றிக் கூறுவதாவது; "அவை எளிய, உருவக நடையில் இருக்கின்றன. மிக்க வளர்ச்சியடையாத மக்களின் அறிவுத்திறனுக்கேற்ப மாற்றியமைக் கப்பட்டுள்ளன. அவற்றில் மீட்புத்திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் அடிப்படை உண்மை களும், மனித இனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் தோற்றம் பற்றிய பொதுப்பாணி விவரிப்பும் உண்டு".

இத்தொடக்க அதிகாரங்களில் பயன்பட்டிருக்கும் பொருள்களின் தோற்றத்தைப் புரிந்துகொள்வதிலும் இத்தகைய வளர்ச்சியிருந்திருக்கிறது. புவியியல், மனிதவியல் ஆகிய அறிவியல்களின் முன்னேற்றத்திற்கு முந்திய காலத்தில், தொடக்க வரலாற்றைச் சேர்ந்த இஸ்ராயேலர் வரை, இந்நிகழ்ச்சியுரைகள் தொடர்ச்சியாகக் கையளிக்கப்பட்டன என்று எண்ணுவது கடினமாயிருக்க வில்லை. ஆனால் மனித இனத்தின் காலம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகும் என்று இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது, மூலத்திற்குப் பிரமாணிக்கமாக நிகழ்ச்சியுரைகள் தொடர்ச்சியாகப் பின்வரும் வழிவந்தோருக்குக் கையளிக்கப்படுவது, தொடர்ந்த அருஞ்செயல் இடையீடு இன்றி நடக்கக்கூடிய காரியம் அன்று என்று காட்டுகிறது. மேலும், கடந்த தொலைவான காலத்தில் நடந்தவை பற்றி மோசே போன்றோர்க்கு நேரடியான வெளிப்பாடு அளிக்கப்பட்டது என்று ஏற்கப்போதிய சான்றுகள் வேண்டும். அப்படிப்பட்ட சான்றுகள் இல்லை என்பர் அறிஞர். ஆகையால் பெரும்பாலோர் ஆதியாகம முன்பகுதியில் காணப்படும் உண்மைகள் இஸ்ராயேலரின் விசுவாசத்தின் விளைவாகும் என்பர். இந்த உண்மைகளைக் கொண்டுள்ள நிகழ்ச்சியுரை வடிவங்களை, இஸ்ராயேலுக்கு முந்திய விவிலியத்துக்குப் புறம்பான மூலங்களில் நாம் கண்டுபிடிக்கலாம் என்பர். இந்நிகழ்சியுரைகள் வட மெசபொத்தாமியாவிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இங்குதான் குலமுதுவர்களின் முன்னோர் வாழ்ந்தனர். ஆதியாகமக் கதைகளுக்கும் மெசபொத்தாமியக் கதைகளுக்கும் ஒற்றுமையிருப்பது உண்மை. ஆனால் இக்கதைகளை எடுத்து, இஸ்ராயேலின் இறையியல் மாற்றி அமைத்து, புதுப்பொருள் கொடுத்து, அவற்றைத் தன் மறை உண்மைகளைப் போதிக்கப் பயன்படுத்தியது. கர்தினால் சுகார்டுக்கு எழுதப்பட்ட கடிதத்திற்குப்பின், ஆதி யாகமத்திற்கு மட்டுமே உரிய கட்டளை எதையும் திருச்சபை கொடுக்க வில்லை. ஆயினும் மேலே கொடுக்கப்பட்ட கருத்துகள் கத்தோலிக்க ஆய்வாளர்களால், பொதுவாசு ஏற்றுக் கொள்ளப்படுவனவாகும். திருச்சபையின் மேலாண்மை பெற்ற மறையுரைகளுக்கு ஒத்தனவாகும்.

9. **ஆதியாகமத்தின் சிறப்பு:** ஆதியாகம மறை உரைச்சுருக்கத்தில் இந்நூலின் சிறப்பு தெளிவாகிறது. தனது வரலாறு முழுவதும் கிறிஸ்துவம் ஆதியாகமத்தின் சிறப்பை எப்போதும் அறிந்து, ஏற்றிப் போற்றி வந்திருக்கிறது. புதிய ஏற்பாடு, திருச்சபைத் தந்தையர்களுடைய நூல்கள், திருச்சபையின் மேலாண்மை பெற்ற ஏடுகள் ஆகியவற்றில் ஆதியாகமம் குறிக்கப் படுவதும், சுட்டிக் காட்டப்படுவதும், பரந்த அளவில் கையாளப்படுவதும் இந்நூலின் சிறப்பையும், யூத கிறிஸ்துவ சமயங்களின் பல அடிப்படை உண்மைகளுக்கு இந்நூல் மூலமாய் அமைந்திருப்பதையும் எடுத்துக் காட்டவல்லன. சான்றாக, சென்ம பாவம், புதிய ஆதாம், விசுவாசத்தால் ஏற்புடைமை ஆகிய பவுலின் மறைவிளக்கங்கள் ஆதியாகமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சிறப்புக் கருத்துக்களில் இவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளோம். விவிலியத்தின் திட்டமும் செய்தியும் ஆதியாகமத்தோடு தொடங்குகிறது. அஃது இன்றி விவிலியத்தின் பிற்பகுதிகளுக்குப் பொருளேயில்லை எனலாம்.

10. **முடிவுரை:** வெளிப்பாடு என்ற அளவில், இறைவெளிப்பாடு ஆபிரகாமின் அழைப்போடு தொடங்குகிறது. இவ்வெளிப்பாடு சிறிது சிறிதாகக் காலப்போக்கில் மலரும். இறைவன் ஆபிரகாமிடம், நிபந்தனையற்ற, தாராளமான, நிறைவான விசுவாசத்தைக் கோரினார்; ஆபிரகாமின் வழிவந்தோரிடமும் கோரினார். ஆபிரகாமுக்குச் சோதனை இருந்தது. அவரது தயங்காத, தளராத விசுவாசம் அவருக்கு ஏற்புடைமையாகக் கருதப்பட்டது. இஸ்ராயேலர்களுக்கும் சோதனைகள் இருந்தன; எகிப்தில் தங்கியிருந்தது இப்படிப்பட்ட ஒரு சோதனையாகும். இந்நிலையில் ஆதியாகமம் முடிகிறது. இச்சோதனையின் இரண்டாம்படி அடுத்த நூலாகிய யாத்திரை ஆகமத்தில் தொடங்குகிறது.

## தொடுதல் (TOUCH)

இயேசு 'தொட்டார்', அல்லது 'தொடப்பட்டார்' என்ற வகையிலேயே 'தொடுதல்' என்னும் சொல் விவிலியத்தில் பயன்படுத்தப்படுகின்றது. சில சமயங்களில் இது பற்றிக்கொள்ளுதல் என்ற பொருளையும் கொடுக்கிறது. ஆனால் இது நடைமுறையில் ஏற்படும் தொட்டுக் கையாளுவதோ, விரைவான உரசலோ, வெறும் உணர்வோ அன்று. மாறாக, தொட்டு உணர்வதாகும். மெதுவாக, அன்போடு, இரக்கத்தோடு தொடுதலாகும். இயேசு ஒரு தொழுநோயாளியை இவ்விதம் தொட்டுக் குணமாக்குகிறார் (மத் 8:3; மற் 1:41; லூக் 5:13); பேதுருவின் மாமியாரின் கையைப் பற்றிக் குணமளிக்கிறார் (மத் 8:15); குழந்தைகளைத் தொட்டு அரவணைத்து ஆசிர்வதிக்கிறார் (மாற் 10;13; லூக் 18;15); பாடையைத் தொட்டு இறந்தவனை உயிர்ப்பிக்கிறார் (லூக் 7:14); தலைமைக்குருவின் ஊழியனின் வெட்டுப்பட்ட காதைத் தொட்டுக் குணமளிக்கிறார் (லூக் 22:51); செவிடனின் காதைத் தொட்டும் (மாற் 7:33), குருடர்களின் கண்களைத் தொட்டும் குணமளிக்கிறார் (மத் 9:29; 20:34). உருமாற்ற நிகழ்ச்சியில் இயேசு சீடர்களைத் தொட்டு அவர்களது பயத்தைத் தெளிவிக்கின்றார் (மத் 17:7). பெரும்பாடுள்ள பெண் ஒருத்தி, இயேசுவின் ஆடைகளைத் தொட்டுத் குணம் பெறுகிறாள் (மாற் 5:27). நோயாளிகள் பலர் அவரைத் தொட்டுக் குணம் பெற ஆசித்தனர் (மாற் 3:10; லூக் 6:19). இயேசுவின் பாதங்களுக்கு நறுமணத்தைலம் பூசி அவற்றைப் பற்றிக்கொண்டு அழுகின்ற பாவி மன்னிப்புப் பெறுகின்றாள் (லூக் 7:39).

## தொடை (THIGH)

தொடை எனும் சொல் விவிலியத்தில் மூன்றுவித பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக, இஃது ஓர் உடல் உறுப்பாக மட்டும் கருதப்படுகிறது. உதாரணமாக ஓர் இளம் பெண்ணின் அழகிய உடல் உறுப்பாக வருணிக்கப்படுகிறது (உ.ச. 7:2). வீரர்கள் தங்களது வாட்களை அணியும் இடமாகக் கூறப்படுகிறது (நீதி 3:17; சங் 45:3; உ.ச. 3:8; யாத் 32:27). இதே கருத்தைக் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர்கள் பொருட்களின் சில பாகங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்கள்.

உதாரணமாக எபிரேய மொழியில் பலிபீடத்தின் "பக்கத்தையும்" (2 அரச 16:14), விளக்குத்தண்டின் அடிப்பாகத்தையும் (யாத் 25:31) குறிக்கத் தொடை எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாவதாக, இஃது உயிருள்ள மனிதனின் இயக்க ஆற்றல் மிகுந்த உடல் உறுப்பாகக் கருதப்படுகிறது. இனப்பெருக்க உறுப்புக்களுக்கு மிக அருகில் இஃது அமைந்துள்ளதால், இது பிறப்பு உறுப்புகளின் இருப்பிடம் என அழைக்கப் படுகிறது. தொடை என்பது பிறப்புறுப்புகளைக் குறிக்கும் மங்கல வழக்காகும். 'மகன்கள்' தொடையிலிருந்து பிறந்தவர்களாகக் கருதப் பட்டனர் (ஆதி 46:26; யாத் 1:5; யாக்கோபின் புதல்வர்கள்; நீதி 8:30; கிதயோனின் எழுபது பிள்ளைகள்). முறைகேடான உடலுறவில் தொடையும் சம்பந்தப்பட்டிருப்பதால், அது சபிக்கப்பட்டதாகிறது (எண் 5:16-21). மிஷ்னா ஏடுகள், "பாவம்-தொடையிலிருந்தே ஆரம்பமா கிறது; எனவே, அது தண்டிக்கப்படவேண்டும்" எனக்கூறுகிறது. இது தொடைக்கும் பாலின உறுப்புகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை, ஆகவே உயிரின் இருப்பிடத்தைச் சுட்டுகிறது.

மூன்றாவதாக, தொடையின் கீழ் கைவைத்து ஆணையிடும் பழக்கம். இது தொடைக்கும், உண்மைக்கும் உறுதிமொழிக்குமுள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகின்றது. ஒருவன் ஆணையிடும் போது, தான் யாருக்காக ஆணையிடுகிறானோ அவரது தொடையின் அடியில் கைவைத்து ஆணையிடவேண்டும். அப்போதுதான் அந்த ஆணை, உண்மையானதும், நிறைவானதும் ஆகும் (ஆதி 24:2; 47:29). இதன் பொருள் என்னவென்றால், உயிர்நிலைக்கும், ஆணைக்கும் உள்ள தொடர்பு சுட்டிக்காட்டப் படுகிறது. இது பிறப்பு உறுப்புகளைத் தொடுவதையும் உள்ளடக்கும். மேலும் உயிர் நிலையில் மேல் ஆதிக்கம் கொண்ட கடவுளே, கூறப்பட்ட ஆணையின் சாட்சியும் உறுதி அளிப்பவராகவும் விளங்குவதாகக் கருதப்பட்டது. ஆணை என்பது நிறைவேற்றப்பட வேண்டும். இல்லை எனில், பரம்பரை பரம்பரையாகப் பொய் ஆணையிடுபவர் பழிதீர்க்கப்படுவர் என்பதும் தெளிவாகிறது. எனவே தொடை, உயிர் நிலையோடு தொடர்புடைய, மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஓர் உடல் உறுப்பாகும்.

**தொட்டில், தொழுவம் (CRIB)**

இது விலங்குகளுக்குத் தீவனம் வைக்கப் பயன்படும் தொட்டி. இது மாடுகள் தங்கும் கொட்டகையாகவோ (பழ 14:4), கழுதைகள் தங்கும் கொட்டகையாகவோ (எசா 1:3) பேசப்படுகிறது. மேலும் காட்டெருமைக் கொட்டகையில் தங்காது என யோபு ஆகமத்திலே கூறப்பட்டுள்ளது (யோபு 39:9). எசா 1:3-இல் கழுதை, தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் தெரிந்திருப்பது இஸ்ராயேலரின் ஆன்மீக அறியாமையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. இயேசு பிறந்தபின் துணிகளில் பொதிந்து கிடத்தப்பட்ட இடம் இத்தகைய தீவனத் தொட்டியாக இருக்கலாம் (லூக் 2:7).

**தொப்கா (DOPHKAH - மாட்டு வணிகர்)**

இஸ்ராயேலர் சீன் பாலைவனத்தைக் கடந்தபின் தங்கிய முதல் இடம் (எண் 33:12). தற்போது இஃது எகிப்தில் சீனாய் தீபகற் பத்திலுள்ள, செராபித் ஏல்-காதிம் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இந்த இடத்தில் வெண்கலக்காலத்தில் (கி.மு. 14:12 நூற்றாண்டுகள் எகிப்தியர் சுரங்க வேலைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது.

**தொமிசியன் (DOMITIAN)**

தீத்து பிலேவியு தொமிசியன் ஓர் உரோமைப் பேரரசன் (கி.பி.81-96). இவர் வெஸ்பாசியனின் மகன். தம் சகோதரன் தீத்துவுக்குப்பின் பேரரசனானார்.

இவரது ஆட்சியின் தொடக்கத்தில், பிரிட்டனிலும் ரைன்-தான்யூபு எல்லையிலும் பாதுகாப்புக் கோட்டைகளைக் கட்டினார். உரோமையில் ஒரு புதிய மன்றத்தையும் அரண்மனையையும் கட்டினார். ஆனால் வியாபாரத்தையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்தும் கடுமையான பொருளாதார

அமைப்பைப் புகுத்தினார். பொது ஒழுங்கைப்பற்றிக் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தார். இவை பரவலாக, குறிப்பாக உயர் குடிமக்களிடமிருந்து, எதிர்ப்புகளை எழுப்பின. காலப்போக்கில் இவர் தன்னிச்சையாக ஆட்சிசெய்யத் தொடங்கினார்; தத்துவ அறிஞர்களை நாடு கடத்தினார்; தம்மை எதிர்ப் பவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார். இவர் தம்மைத் "தலைவரும் கடவுளும்" என்று அழைக்கவேண்டும் என்று கோரியது மக்களிடையே வெறுப்பை உண்டாக்கியது.

இவரது ஆட்சி, இறுதி ஆண்டுகளில், நாட்டில் இழிவானதாகவும், பயங்கரமானதாகவும் அமைந்தது. பலபேர் கொலை செய்யப்பட்டனர். மூப்பர் அவை அங்கத்தினர்களுக்கு எதிராக நாட்டுத் துரோகக் குற்றங்கள் சாட்டப்பட்டன. இந்த அரசியல் சூழ்நிலை, யோவானின் திருவெளிப்பாட்டு நூலுக்குப் பின்னணியாக இருந்திருக்கலாம். ஆனால் இவர் கிறிஸ்தவர்களைமட்டும் குறிப்பிட்ட முறையில் துன்புறுத்தினார் என்று கூறமுடியாது. ஒரு சூழ்ச்சியின் விளைவாக, கி.பி. 96-இல் இவர் கொலை செய்யப்பட்டார். இச்சூழ்ச்சியில் இவரது மனைவியும் பங்கெடுத்திருந்தாள்.

**தொர்க்கா, தபித்தா (DORCAS, TABITHA – கலைமான்)**

பிறருக்குப் பல நல்ல செயல்கள் செய்து வந்த இந்தப் பெண், யோப்பாவில் வாழ்ந்து வந்தாள். இவள் கிரேக்கத்தில் தொர்க்கா என்றும், அரமேயிக்கில் தபித்தா என்றும் அழைக்கப் பட்டாள். இவள் நோய்வாய்ப்பட்டு இறந்தாள்; பேதுருவால் உயிர்ப்பிக்கப் பெற்றாள் (அ.ப. 9:36-42). தொர்க்கா ஒரு சீடர் என்றழைக்கப் படுகிறாள். புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுந்தான் சீடர் என்ற சொல்லின் பெண்பால் கிரேக்க மொழியில் பயன்பட்டுள்ளது.

தொர்க்கா இறந்ததும் விதவைகள் பலர் அவள் கொடுத்த ஆடைகளைக் காட்டிப் பேதுருவிடம் அழுதனர். பேதுரு அதைக்கண்டு தொர்க்காவை உயிர்ப்பித்தார். பிற்காலத்தில் திருச்சபையில் தொர்க்கா போன்று பல நல்ல செயல்களை மேற்கொள்ளும் பெண்கள் இவர் பெயரை வைத்து, 'தொர்க்கா சபைகள்' என ஆரம் பித்துள்ளனர்.

தொர்க்காவை உயிர்ப்பித்த நிகழ்ச்சி முக்கியமான ஒன்று. காரணம், இதுதான் அப்போஸ்தலர்கள் செய்த முதல் உயிர்ப்பு நிகழ்ச்சி (மத் 10:8; அ.ப. 20:9-10). மேலும் இந்த நிகழ்ச்சி மூலம் பலர் விசுவாசியானார்கள்.

**தொல்பொருளியல் (ARCHAEOLOGY)**

I. இச்சொல்லைக் குறிக்கும் கிரேக்கச் சொல், பழங்காலக் காரியங்களை ஒழுங்காக வகைப்படுத்துதல் என்று பொருள்கொடுக்கும். அதாவது, "பழங்காலப் பொருட்களை ஒழுங்காக வகைப்படுத்துதல்" தொல்பொருளியலாகும். இது வரலாற்றியலின் ஒரு துணை அறிவியலாகும். கடந்த இருநூற்றாண்டு களாகத்தான், இது தனக்கே உரியகுறிக்கோளும் வழிமுறைகளுமுடைய தனி அறிவியலாக வடிவெடுத்தது எனலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்குமுன் வரலாறு என்பது எழுதப்பட்ட ஏட்டுச்சான்றுகளை அடிப்படையாக் கொண்டது என்றும், இதற்கு மாறாகத் தொல்பொருளியல் தரைமேல் கண்டெடுக்கப்பட்ட பழம்பொருள்களின் ஆய்வு என்றும் கருதப்பட்டது. ஆனால் இக்கால அறிஞர்களின் கருத்துப்படி, தொல்பொருளியல் என்பது கடந்தகால மனிதச் செயல்களின் சுவடுகள் மற்றும் பொருட்களில் எஞ்சியவைகளிலிருந்து சான்று காட்டும் வரலாற்று ஆய்வின் ஒரு பிரிவாகும்.

பழங்கால மனித குடியிருப்புகள் இருந்த இடங்களைக் கூர்ந்து ஆய்வு செய்யும்போது, பழங்காலச் சுவடுகளில் பெரும்பாலானவை தரைமட்டத்திற்கு அடியில் புதைந்து கிடப்பது தெரியவந்தது. அகழ்வாய்வுகள் செய்து ஆராய்ந்தபோது, இதுவரை எண்ணிப்பார்க்காத அளவு அதிகச் செய்திகள் கிடைத்தன. இத்தொல்பொருட் சான்றுகள், நினைவுச்சின் னங்கள் அல்லது எழுதப்பட்ட மூலங்களை நிறைவு செய்து, கடந்தகாலம் பற்றிய ஆய்வுக்கு இன்றியமையாதவைகளாகத் தெரியவந்தன. தொல்பொருட்களுக்கு விளக்கம் அளிப்பதில்

எழுதப்பட்ட ஏடுகள் இன்றியமையாதவையாகப் பயன்பட்டன. இவ்வாறு தொல்பொருள் ஆய்வும் எழுதப்பட்ட வரலாறும் ஒன்றையொன்று நிறைவு செய்யும் விதத்தில் பெரும்பாலும் அமைந்தன. தொல்பொருள்களில் (கல், களிமண், உலோகம், தோல் சுருள், புல்தாள் ஆகியவற்றில்) எழுதப்பட்ட குறிப்புகளும், சித்திரங்களும், கட்டடங்கள்; கலைப் பொருள்கள், கோட்டை கொத்தளங்கள், ஆயுதங்கள், கருவிகள், தனி நபர்கள் பயன் படுத்திய பொருட்களும் அடங்கும்.

தொல்பொருள் ஆய்வுகள் உலகெங்கும் நடைபெற்றாலும், மேற்கத்திய அறிஞர்களை விவிலியம் சார்ந்த நாடுகளே அதிகம் ஈர்த்தன. ஆகவே இது விவிலியத் தொல்பொருளியல் என்று குறிப்பிடப்படுவதுண்டு. பாலஸ்தீனம், சீரியா, எகிப்து, மெசபொத்தாமியா, சிறிய ஆசியா, கிரீஸ் ஆகிய நாடுகளில் விவிலியம் சார்ந்த இடங்களில் நடந்த ஆய்வுகள் சிறப்புப்பெற்றன. வளர்ச்சி யடைந்த தொழில் நுணுக்கம் இந்த ஆய்வுகளுக்கேற்பவே செய்யப்பட்டன. இக்கட்டு ரையில் விவிலியத் தொல்பொருளியலைப் பற்றியே எழுதுகிறோம்.

II. **ஆய்வுமுறை:** தற்காலத் தொல்பொருளியல் என்பது பழங்கால மனிதர்களின் குடியிருப்புகள் இருந்த இடங்களை அகழ்வாய்வு செய்து அங்குக் காணப்படும் பொருட்களைச் சேகரித்து, அவற்றிற்குக் காலம் குறிப்பதும், விளக்கம் அளிப்பதுமாகும். இக்காலத்தில் இத்தொழில் நுணுக்கம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

1. **பொருட்களைச் சேகரித்தல்:** முதல்படி ஆய்வுக்குரிய ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தலாகும். இப்படித் தேர்ந்தெடுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பழங்கால இடம் பற்றிய வரலாற்று முக்கியத்துவமுடைய இலக்கியச்சான்றுகள் இம்மாதிரி இடங்களைச் சுட்டியிருக்கலாம்; புவியியல் அமைப்போ தொடர்ந்து வழக்கில் இருந்து வந்திருக்கும் பெயரோ ஓர் இடத்தை ஆய்வுக்குரியதாகச் சுட்டலாம்; ஒரு வரலாற்றுக் காலவரையறைப் பிரச்சனை தீர்க்கப்படா மலிருக்கலாம்; இதை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களின் ஆய்வுகள் விடுவிக்கலாம்; அல்லது ஆய்வு நுணுக்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு ஏதுவான இடமாகவோ, பாதுகாப்பான இடமாகவோ இருக்கலாம்.

அடுத்தபடி, பொருட்களைச் சேகரித்தலாகும். இது தரைமட்ட ஆய்வு என்றும் அகழ்வாய்வு என்றும் வேறுபடுத்தப்படலாம்.

**அ) தரைமட்ட ஆய்வு:** தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சுத்தம் செய்யப்பட்டு அளவாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. தரைமட்டத்தில் காணப்படும் பொருட்கள் கவனமாய்ச் சேகரிக்கப்பட்டு குறிக்கப்படுகின்றன. இத்தகைய முறை, தொல்பொருள் ஆய்வு முயற்சிகளின் தொடக்கத்திலிருந்தே பயன்படுத் தப்பட்டுள்ளன. இம்முறையில் பல குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் கிடைத்துள்ளன. சான்றாக, கி.பி. 1798-இல் நெப்போலியன் எகிப்தின்மீது படையெடுத்தபோது கண்டெடுக்கப்பட்ட ரோசேட்டக் கல். இஃது எகிப்து மொழியை விளக்கும் திறவுகோலாக அமைந்தது. அவ்வாறே பெகிஸ்தூன் கற்பொறிப்புகள் அசீரிய - பாபிலோனிய ஆப்பு எழுத்து வடிவங்களை விளக்க ப்பெரிதும் உதவியாய் அமைந்தன.

**ஆ) அகழ்வாய்வு முறை:** இதுதான் இப்போது பெரும்பாலும் பயன்படும் முறையாகும். இதற்குக் குறிக்கப்படும் இலக்கு, மேடு அல்லது குன்று என்று பொருள்படும் "தெல்" என்பதாகும். ஒரு குடியிருப்பு அழிந்தபின், அதன்மேல் மற்றொரு குடியிருப்பு அழிந்தபின் அதன்மேல் மூன்றாவது குடியிருப்பு எழும். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக ஒரே இடத்தின்மேல் அமைக்கப்பட்ட குடியிருப்புகளின் அழிவுகளை அல்லது சிதைவுகளைக்கொண்ட மேடு அல்லது குன்றுதான் தெல் என்றழைக்கப்பட்டது.

இந்த முறையின் முதற்படி 5 மீட்டர் சதுரத்திற்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு கட்டமைப்பு செய்து மேல்மட்டத்தைப் பாதுகாத்தலாகும். இந்த இடத்தின்மேல் காணப்படும் செடி கொடிகள், குப்பைகள், உடைந்த பாண்டத்துணுக்குகள் முதலியவற்றை

நீக்கிச் சுத்தப்படுத்துதல்; அவ்வாறு கண்டவற்றைக் கவனமாய்க் குறித்து வைத்தல். பின்பு ஒரு மீட்டர் சதுரத்திற்குச் சோதனைக் குழி தோண்டப்படும். அப்போது அங்குக் காணப்படும் பொருள்கள் சேகரிக்கப்பட்டு, அவை காணப்படும் மட்டமும் மற்றவையும் கவனாமாய்க் குறிக்கப் படுகின்றன. குழியின் ஓரங்கள் சுத்தம் செய்யப்பட்டு பல்வேறு மட்டங்கள் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. இஃது மட்டத்திலிருந்து மற்றொரு மட்டத்திற்குள் தோண்டி, கண்டு பிடிப்புகளைக் குழப்பி விடாதிருக்க உதவி செய்யும். பின்பு, செங்குத்தாக மேலிருந்து கீழ்நோக்கி மட்டமாகத் தோண்டப்பட்டு மண் வெளியேற்றப்படும். இவ்வாறு ஒவ்வொரு மட்டமாக அழிக்கப்படுவதால் அந்தந்த மட்டத்தில் காணப்படும் பொருட்கள் தனித்தனியாகச் சேகரிக்கப்படுகின்றன. அவை காணப்படும் இடம், பரப்பு மட்டம், அந்த மட்டத்தில் அவற்றின் இடம், காணப்பட்ட பொருட்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை கவனமாகக் குறிக்கப்படுகின்றன. இவை யாவும் தொல்பொருள் ஆய்வாளரின் குறிப்பேட்டில் இடம் பெறுகின்றன. பின்பு அந்த மட்டம் வரைபடம் செய்யப்படுகிறது; புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. பின்பு அந்த மட்டத்தில் காணப்படும் சுவர்கள், கட்டட அமைப்புகள் அழிக்கப்பட்டுச் சுத்தம் செய்யப் படுகிறது. இவ்வாறு அடுத்தமட்ட ஆய்வுக்கு இடம் தயார் செய்யப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வாளர்களைக் கவரும் பல பொருட்களில் சிறப்புப் பெறுவன-கல்லறைகளும் குகைகளுமாகும். கல்லறைகள் அதிகம் காணப்படுவதில்லை. பெரும்பாலும் இவை நிலத்தடியில் அமைந்திருப்பதால் தரைமட்டத்தில் எச்சுவடும் விட்டுச் செல்வதில்லை. ஆனால் இறந்தவரோடு புதைக்கப்பட்ட மரப் பாத்திரங்கள், அணிகலன்கள், முத்திரைகள், தட்டுமுட்டுப் பொருள்கள் போன்றவை நன்கு பாதுகாக்கப்பட்டு இக்கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பொதுவாகக் குகைகள் வரலாற்றுக்கு முந்திய கலாச்சாரங்கள் பற்றிய செய்திகளைக் கொடுக்கின்றன.

## 2. பொருட்களுக்குக் காலம் குறித்தல்:

அகழ்வாய்வு செய்தபின், தொல்பொருள் ஆய்வாளரின் முக்கியக் கடமைகளில் ஒன்று, ஆய்வுசெய்த மட்டத்தின் காலத்தை ஓரளவு தெளிவாக நிர்ணயம் செய்வதாகும். பாண்டத் துணுக்குகளை வைத்துக் காலம் குறிக்கும் தொழில் நுணுக்கம் இப்போது வளர்ச்சி யடைந்துள்ளது. இதற்கு ஒவ்வொரு கலாச்சாரக் காலமும் தனக்கே உரிய பாண்டங்களைக் கொண்டிருந்தது என்ற கருத்து அடிப்படையாக உள்ளது. இவை வடிவம், நிறம், உருவப்படம், பருமன் ஆகியவற்றில் வேறுபட்டன. இவ்வேறுபாடுகளைக் கவனமாய் ஆராய்ந்து, தெளிவாகக் காலம் குறிக்கப் பயன்படும் பிறசான்றுகளோடு ஒப்பிட்டு, தொல் பொருளியலாளர் பொருட்களுக்கும் அதன் விளைவாக ஒரு மட்டத்திற்கும் காலம் குறிக்க முயல்வர்.

சில சமயங்களில் எழுதப்பட்ட குறிப்புகள், நாணயங்கள், அரச முத்திரைகள் மற்றும் பிறபொருட்களும் காலக்குறிப்புகளைக் கொண்டி ருப்பதாக அமைந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருட்கள் கிடைத்தால் அவை கண்டெடுக்கப்பட்ட மட்டத்தின் காலத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியும். சில சமயங்களில் விவிலியத்தில் காணப்படும் காலக்குறிப்புகள் தொல் பொருட்களின் காலத்தைக் துல்லியமாகக் குறிக்கப் பயன்படுகின்றன. சான்றாக, சமாரியா ஒம்ரியின் ஏழாவது ஆண்டு நிறுவப்பட்டு (1அர 16:23-24; கி.மு. 870) கி.மு. 721-இல் அழிக்கப்பட்டது (2 அர 17:5-6). ஆனால் பெரும்பான்மையான இடங்களுக்கு இத்தகைய செய்திகள் கிடைப்பதில்லை.

அறிவியல் தொழில்நுணுக்க முறைகள் வழக்கில் வந்தபிறகு காலம் குறிக்கப் பிற முறைகளும் பயன்படுகின்றன. இவற்றில் முதன்மையானது காரியம் - 14 ( **Carbon** - 14) முறையாகும். இது மரம், எலும்பு, ஓடு, சாணம் முதலியவற்றிலுள்ள கதிரியக்கக் காரீயத்தை அளந்து காலம் குறிப்பதாகும். சில அறிவியல் வாய்பாடுகளைப் பயன்படுத்தி, விஞ்ஞானிகள், 5

விழுக்காட்டுக்குள் தவறுடைய முறையில், இப்பொருட்களின் காலத்தைத் துல்லியமாகக் கணிக்கமுடிகிறது. இவ்வாறு காலம் குறிக்கப்பட்ட பொருட்கள் அவை கண்டெடுக்கப்பட்ட மட்டத்தின் காலத்தைக் கணிக்க உதவுகின்றன.

காலப்பிரிவுகள் பற்றி அறிஞரிடையே கருத்தொற்றுமை இல்லையெனினும் பின் வரும் தோராயமான பிரிவுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

வரலாற்றுக்கு முந்திய காலம்.

புதிய கற்காலம் கி.மு. 6,000-4500
பித்தளை அல்லது செம்புக்காலம் 4500-3200
தொடக்க வெண்கலக் காலம் I 3200-2900
தொடக்க வெண்கலக் காலம் II 2900-2700
தொடக்க வெண்கலக் காலம் III 2700-2300
தொடக்க வெண்கலக் காலம் IV 2300-2100
மத்திய வெண்கலக் காலம் I 2100-1900
மத்திய வெண்கலக் காலம் II 1900-1700
மத்திய வெண்கலக் காலம் III 1700-1600
பிற்கால வெண்கலக் காலம் I 1600-1400
பிற்கால வெண்கலக் காலம் II 1400-1200
இரும்புக் காலம் I 1200-900
இரும்புக் காலம் II 900-600
இரும்புக் காலம் III 600-300
கிரேக்கர் காலம் 300-63
உரோமையர் காலம் கி.மு. 63-கி.பி.323
பைசாந்தியர் காலம் கி.பி. 323-636
இஸ்லாமியர் காலம் 636...

**3. கண்டுபிடிப்புகளுக்கு விளக்கம் அளித்தல்:**

அகழ்வாய்வு முடிந்தபின் தொல்பொருளியாலாளர், தாம் கண்டெடுத்த பொருள்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். தான் எடுத்த குறிப்புகள், வரைபடங்கள், புகைப்படங்கள் முதலியவற்றை ஆராய்ந்து, ஓர் இடத்தின் அல்லது மட்டத்தின், குடியிருப்பின் தோராயமான காலத்தைக் கணிக்க வேண்டும். இது காலம் குறிக்கக்கூடிய பாண்டங்கள், ஆயுதங்கள் போன்றவற்றோடு, வெவ்வேறு மட்டங்களை ஒப்பிட்டுச் செய்யப்படும். இது முடிந்தவுடன், இச்செய்திகளை அண்டை இடங்களுடனும், பொதுவாக மேற்காசியப் பகுதிகளுடனும் ஒப்பிட்டு ஆய்வுசெய்து விளக்கம் அளிக்க முயற்சி எடுக்கப்படும்.

அகழ்வாய்வு செய்யும்போது ஒவ்வொரு மட்டமாக அழிக்கப்படுவதால், தொல்பொருளியலாளர் தான் காண்பவற்றைக் மிகக் கவனமுடன் குறித்து வைக்க வேண்டும். பிறகு இக்குறிப்புகள், முதலில் சிறு சிறு பகுதிகளாகவும், பின்பு முழுமையாகவும் பதிப்பிக்கப்படும். இதனால் ஆற்றல் வாய்ந்த தொல்பொருளியலாளர் பிறரும் அவற்றிற்கு விளக்கம் அளிக்க வாய்ப்புக் கிட்டும். இம்முறையில் பல தவறுகள் அல்லது துல்லியமற்ற ஆய்வுகள் திருத்தப்படலாம்; விடுவிக்கப்படாத பிரச்சனைகள் விடுவிக்கப் படலாம்.

**III. விவிலியத் தொல்பொருளில் வரலாறு:**

1. சிலுவைப்போர் காலத்திலேயே விவிலியத் தொல்பொருள் ஆய்வுகள் தொடங்கினாலும், நெப்போலியன் கி.பி. 1798-இல் எகிப்தின் மீது படையெடுத்ததோடு இந்த ஆய்வு சிறப்பான முறையில் தொடங்கியது எனலாம். இந்தப் படையெடுப்பில் ரோசேட்டக் கல் கண்டெடுக்கப் பட்டது. இதன் புதிர் 1930-இல் விளக்கப்பட்டதோடு எகிப்தியல் என்ற அறிவியல் தொடங்கியது எனலாம். 1865-இல் பாலஸ்தீனம் அளவியல் செய்யப்பட்டு ஓர் அங்குலம் - ஒருமைல் - வீத விரிவான, அதிகாரபூர்வமான வரைபடம் செய்யப்பட்டது. 1940, 42-43-இல் மெசபொத்தாமியாவின் பல இடங்களிலும், குறிப்பாக நினிவேயிலும் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டன. 1850-இல் ராபின்சன் என்பவர் அசீரிய - பாபிலோனிய ஆப்பு எழுத்துப் புதிர்களுக்கு விடை கண்டார். 19-ஆம் நூற்றாண்டின் முடிவிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பாபிலோன் நகரில் அகழ்வாய்வுகள் நடந்தன. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மெசபொத்தாமியாக் கலாச்சாரத்தின் முன்னோடியான சுமேரியக் கலாச்சாரம் வெளிக்கொணரப்பட்டது.

பாலஸ்தீனக் தொல்பொருள், ராபின்சன் மற்றும் ஸ்மித் ஆகியவர்கள் 1838-இல்

இந்நாட்டில் பயணம் செய்து, தரைமட்ட ஆய்வுத் துணைகொண்டு, விவிலிய இடங்கள் பலவற்றை அடையாளம் காட்டியதிலிருந்து தொடங்கியது எனலாம். 1872-79-இல் மேற்குப் பாலஸ் தீனத்தில் குறிப்பிடத்தக்க தரைமட்ட அளவியல் செய்யப்பட்டது. 1884-இல் அவுரான், வடயோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் ஆய்வுப்பணி தொடங்கியது. 1933-இல் யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளிலும், 1953-இல் நெகேபிலும் பணிகள் தொடங்கின.

1890-இல் தெல் ஏல்-கேசி என்ற இடத்தில் பெற்றி என்பவரால் பணி தொடங்கும்வரை பாலஸ்தீனத்தில் அகழ்வாய்வுப்பணிகள் நடக்க வில்லை. இந்த இடம் முதலில் இலாக்கிசு என்று கருதப்பட்டது; இப்போது எக்லோன் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். பெற்றி என்பவர்தாம் பாலஸ்தீன இடங்களுக்கு மட்டஅளவு ஆய்வு மற்றும் பாண்டங்களைப் பயன்படுத்திக் காலம் கணித்தல் போன்ற வைகளைப் பயன்படுத்தும் முறையை நிறுவினார். மட்ட அளவு ஆய்வு முறையில் 1870-இல் திராய் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

பாலஸ்தீனத் தொல்பொருளாய்வு வரலாறு மிக நீண்டது. இதில் அறிஞர்கள் பலர் ஈடுபட்டிருந்தனர். இங்கு, ஆய்வுகள் நடந்த இடங்களின் பெயர்களையும், ஆய்வு நடந்த ஆண்டுகளையும் மட்டும் சுருக்கமாகத் தருகிறோம்.

**2. முதல் உலகப் போருக்கு முன் நடந்த ஆய்வுகள் :** எருசலேம் (1894-97); தெல் எசேர் (கெசேர்; 1902-09); தெல் தானாக்கு (தனாக்கு; 1901-04); தெல் ஏல்-முத்தேசெலிம் (மெகிதோ; 1903-05); தெல் ஏல் - சுல்தான் (பழைய எரிகோ; 1907-09); செபாஸ்தியே (சமாரியா, 1908-10); தெல் ஏர் - ருமெய்லே (பெத் செமேசு; 1911-12); தெல் பலாத்தா (செக்கேம்; 1913-14).

இவற்றில், சிலவற்றைத் தவிர, மற்றெல்லா ஆய்வுகளும் தாழ்ந்த தரமுடையனவாக அமைந்தன. பெரும்பாலும் தவறாக விளக்கம் அளிக்கப்பட்டன எனலாம். தனிப்பட்ட ஆய்வுகள் ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஒருங்குபடுத்தப் படவில்லை. ஆகவே பாலஸ்தீனம் பற்றிய பொதுக்காலவரைத் திட்டம் அமைக்கப்படவில்லை.

**3. முதல் உலகப்போருக்குப்பின் நடந்த அறிவியல் சார்ந்த அகழ்வாய்வுகளில் சில:** அங்காலோன் (அங்கலோன்; 1920-22); தெல் ஏல் - குசான் (பெத்சான்; 1921-23); தெல் ஏல் - பூல் (கிபயா; 1922-23); எருசலேமில் தாவீதின் நகர் (ஒபேல்; 1923-28); தெல் ஏல் - முத்தேசெலிம் (மெகிதோ; 1925-39); எராசா (கெராசா; 1924-34); தெல் செயுலூன் (சீலோ; 1926); தெல் பலாத்தா (செக்கேம்; 1926-34); தெல் ஏன் - நாஸ்பே (மிஸ்பா; 1926-35); தெல் பெயித் மிர்சிம் (1926-32); தெல் எம்மே (1926-27); தெல் ஏல்-பாரா (திராட்சா; 1928-30); தெல் ஏர்-ருமெய்லே (பெத்செமேசு; 1928-33); தெல் ஏல்-சுல்தான் (எரிகோ; 1929-36); தெல் ஏல்-அச்சூல் (பெத்எக்லாயிம்; 1930-34); எத்-துபேய்க்கா (பெத்சூர்; 1931); செபாஸ்தியே (சமாரியா, 1931-35); தெல் அபு-கவாம் (சல்மோனா, 1932-33); எத்-தெல் (ஆயி; 1933-34); பெயித்தின் (பெத்தேல்; 1934); எருசலேம் (1933-40).

இக்கால ஆய்வுகளின் பண்புகள்: அகழ்வாய்வுக் குழுக்களின் தரம் உயர்ந்திருந்தது. கண்டுபிடிக்கப்பட்டவை கவனமாகக் குறிப்பெடுக் கப்பட்டன. அவற்றிற்கு விரைவில் விளக்கம் அளிக்கப்பட்டன. பொதுவாக, பாலஸ்தீனத் தொல்பொருளியல் அறிவியல் நிலையை எட்டியது எனலாம்.

4. இரண்டாம் உலகப்போரின்போதும் அதன்பின் வந்த அரபு இஸ்ராயேல் போரின் போதும் பாலஸ்தீனத்தில் தொல்பொருளியல் செயல்கள் யாவும் பெருமளவிற்கு ஓய்ந்து போயின எனலாம். ஆயினும் இக்காலத்தில் நடந்த சில குறிப்பிடத்தக்க ஆய்வுகளைத் தருகிறோம். கிர்பெத் கெராக்கு (பெத் எரா; 1944); தெல் ஏல்-பூல் (திராட்சா; 1946-60); கும்ரான் குகைகள், கிர்பெத் கும்ரான் மற்றும் வாடி முராப்பத்து (1948); தெல் குவாசிலே (1948-50); செசரியா (1950); யாப்பா (1950); தூலூல் அபு ஏல்-அலயிக்கு (புதிய ஏற்பாட்டு எரிகோ; 1950-51); தீபான்

(தீபோன் அல்லது தீபோன் காது; 1950;1956); அப்புலே (ஏப்பேர்; 1951); கிர்பெத் ஏல்-பித்தார் (1952-54); தெல் எஸ்-சுல்தான் (எரிகோ; 1952-58); தெல் அபு-முத்தார் (1952); தெல் தோத்தா (தோத்தான்; 1953-64); பென்-தோர் (1947); தோத்தான் (1954-55) பெயித்தின் (பெத்தேல்; 1954; 1957;1960); தெல் ஏல்-கெதா (ஆட்சோர்; 1955-58); மசாதா (1955); பலாத்தா (செக்கேம்; 1957-66); எச்-சிப்பு (கிபயோன்; 1956-62); தெல் செயிக் ஏல்-அரெய்னி (காத்து; 1956-61); இராமாத் இரகேல் (1959-62); யாப்பா (1955-61); செயிசாரியா (ஏராதியோன், செகரியாவின் ஒருபாகுதி; 1959-62); ஓபேல் (எருசலேம்; 1961-68); எஸ் தூது (அசுதோது; 1962-72); தெல் அராது (அராது; 1962-67); தெல் எத்-துவேயிர் (இலாக்கிசு; 1966); எபேல் புரேயிதின் (ஏரோதியோம்; 1962-67); மசாதா (1963-65); தெல் தனாக்கு (தனாக்கு; 1963-68; தெல் எசேர் (கெசேர்; 1964-74); தெல் தாண் (தாண்; 1966); எருசலேமில் மாசார் (1968-77); தெல் எஸ்-செபா (பெயேர் செபா; 1969);

5.பாலஸ்தீனத்துக்கு வெளியே, எட்சி யோன்-கெபேர், பெத்திரா, தெல் தெயிர் அல்லா (சுக்கோத்து), தேல் கெஸ்போன் (எஸ்போன்) ஆகிய இடங்களில் முக்கிய அகழ்வாய்வுகள் நடைபெற்றுள்ளன. சீரியாவில் கர்க்கமிசு, தெல் கலாபு (கோசான்), இரஸ்சம்ரா (உகாரித்து), தெல் கரிரீ (மாரி), தெல் அத்சானா (அலாக்கா), தெல் எர்பாது (அர்ப்பாது), தெல் மர்திக்கா (எபிலா) ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகள் நடந்துள்ளன. லெபனோனில் பாகால்பேக் (ஆவென்), பிப்லோஸ், சீதோன், தீர், கமது ஏல்-லோஸ் (குமிதி), சாரபாத்து ஆகிய இடங்களிலும், சிறிய ஆசியாவில் பாகோஸ்கோய் (அற்றூசாஸ்), அலாக்கா குயுக்கு (எயுக்கு), குல்தெபே, கராதெபே, அலிசார், எபேசு, சார்தை, எராப்போலி, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, பிலதெல்பியா, இலவோதிக்கேயா ஆகிய இடங்களிலும் அகழ்வாய்வுகள் நடந்துள்ளன.

**IV. தொல்பொருளியலும் விவிலியமும்:**

1. **முக்கியமான ஒப்புமை:** பாலஸ்தீனத்தில் நடந்துள்ள பெரும்பான்மையான தொல்பொருள் ஆய்வுகள் விவிலியத்திற்கு இருவழிகளில் விளக்கம் அளிக்க உதவியுள்ளன. ஒன்று, விவிலிய காலத்தில் இஸ்ராயேலின் பொருட்கலாச்சாரம் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதற்கு உதவியுள்ளது. மற்றது விவிலியத்தில் வரும் பல வரலாற்றுக் கூற்றுகளின் துல்லியத்தை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கோட்டை கொத்தளங்கள், கலைப்பொருட்கள், ஆயுதங்கள், கருவிகள், தனிநபர்களின் பொருட்கள், பொதுவாகப் பழங்கால வாழ்வை இக்காலத்திற்கு எடுத்துக்காட்டும் எல்லாப்பொருட்களும் பழங்காலப் பொருட்கலாச்சாரம் பற்றிய அறிவை வளப்படுத்த உதவுகின்றன. இஸ்ராயேலர் கானானை வெற்றி கொண்டபோது பல கானானிய நகர்களில் காணப்படும் கி.மு. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழிவுகளின் மட்டம் (யோசு 5-12), கி.மு. 597-இல் யூதா பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதைக் கூறும் இலாக்கிசு கடிதங்கள் ஆகியவை வரலாற்றுத் துல்லியத்தை உறுதிப்படுத்தும் கண்டுபிடிப்புகளில் சிலவாகும்.

விவிலியத்தோடு ஒத்துப்போகும் இலக்கியச் சான்றுகள் பல பாலஸ்தீனத்திற்குப் புறம்பே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணங்கள் இஸ்ராயேலரின் அண்டை நாட்டார் எழுதப் பயன்படுத்திய களிமண் தகடுகள், இஸ்ராயேலர் பயன்படுத்திய புல் தாள் ஏடுகளையும் மற்ற ஏடுகளையும் விட அதிகநாட்கள் நிலைத்திருக்கக் கூடியதாகும்.

விவிலியத்திற்கு விளக்கம் அளிக்கக்கூடிய எல்லாத் தொல்பொருளியல் இலக்கியச் சான்றுகளையும் கூறுவது என்பது அவ்வளவு எளிதன்று. இங்கு முக்கியமான சிலவற்றை மட்டுமே தருகிறோம்.

2. நினிவேயில், அசூர்பானிப்பாலின் நூல்நிலையத்தில், படைப்புப்பற்றிய பாபிலோனிய விவரிப்பு 1850-54-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இது "எனுமா எலிஸ்" (மேலிருக்கும்போது) என்று பெயர் பெற்றது.

இவை இவ்விவரிப்பின்படி தொடக்கச் சொற்களாகும். இவ்விவரிப்பின்படி, மிகப்பெரிய கடவுளாகிய மார்துக்குக்கும் அதன் பெண் எதிரியான திமயாத்துக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தின் விளைவாகப் படைப்பு நிகழ்கிறது. ஆதியாகமம் முதல் அதிகாரத்தோடு இவ்விவரிப்பு கொண்டிருக்கும் ஒற்றுமைகளில் முதன்மையானவை: ஒருகாலத்தில் மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது; படைப்பு நிகழ்ச்சியின் வரிசை; ஏழு என்னும் எண் அடிக்கடி பயன்படுதல் ஆகியவையாகும். இரண்டிற்கு மிடையே முக்கிய வேறுபாடுகள் உண்டு. பாபிலோனிய விவரிப்பு பல தெய்வக் கோட்பாட்டைப் பயன்படுத்தும்போது விவிலியம் இறையொருமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பாபிலோனிய விவரிப்பு இறை ஆவியையும் அண்டப் பொருட்களையும் குழப்புகிறது; இஸ்ராயேல் விவரிப்பு இரண்டையும் வேறுபடுத்துகிறது. பாபிலோனிய விவரிப்பு மார்துக்குச் சிலைமுன் ஆண்டுதோறும் பாடப்பட்ட சடங்குச் சங்கீதமாகும். விவிலியம் படைப்பை ஒரு விவரிப்பாகவே எடுத்துக் கூறுகிறது.

அறிஞர் சிலர் படைப்புப்பற்றிய ஆதியாகம விவரிப்பு. பாபிலோனிய விவரிப்பைத் தழுவியது என்பர். ஆனால் இரண்டுக்கும் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்கவேண்டும். அது இஸ்ராயேலின் சமயத்துக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டபோது, அதன் இதிகாசக் கூறுகள் நீக்கப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு, விவிலிய விவரிப்பு வடிவெடுத்தது என்று கூறுவதே சாலச்சிறந்ததாகும்.

3. மனுகுலம் முழுவதையும் அழித்ததாகக் கூறப்படும் பெருவெள்ளக்கதையைப் பல மெசபொத்தாமிய மூலங்களிலிருந்து அறிகிறோம். இவற்றில் மிக முந்தியதான சுமேரிய விவரிப்பில் சியுசுத்தார் என்ற ஒருவர் மட்டும்தான் ஒரு படகின் உதவியால் பெருவெள்ள அழிவிலிருந்து தப்பினார். ஆகவே கடவுள்கள் அவருக்குச் சாகா வரம் அளித்தனர்.

பெருவெள்ளம் பற்றிய பாபிலோனிய விவரிப்பு விவிலிய விவரிப்புக்கு நேரடிப் பொருத்த முடையதாம்.இது கில்காமெக இதிகாசத்தின் பதினொன்றாம் தகட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் உதனபிஸ்திம் என்பவர். பெருவெள்ளத்தி லிருந்து தான் தப்பியதன் காரணமாகத் தமக்குக் கடவுள்கள் சாகாவரம் அளித்த கதையைக் கில்கமெசுக்கு விளக்குகிறார். இக்கதையின் பல விவரங்கள் விவிலிய விவரிப்போடு ஒத்துப் போகின்றன. அவற்றில் சில: பெருவெள்ளம் கடவு(ள்க)ளின் சினத்தின் விளைவாகும். கதைத் தலைவனுக்கு இப்பேரழிவு முன்னுரைக்கப் படுகிறது. பல்வேறு வகைகளில் மனுகுலத்தின் பாவமே பெருவெள்ளத்திற்குக் காரணமாகும். கதைத்தலைவனும் அவரது குடும்பமும் இப்பேரழிவிலிருந்து தப்பினர்; உயிரைப் பாதுகாக்குமாறு ஒருபடகைக் கட்டுமாறு கதைத்தலைவனுக்குக் கடவுள்(கள்) கட்டளையிடு கின்றனர்; பெருவெள்ளத்தில் இயற்கைக் காரணங்களும் காலமும் குறிக்கப்படுகின்றன; படகு தங்கிய மலையின் பெயர் தரப்படுகிறது; வெள்ளத்திற்குப் பிறகு தண்ணீர் வற்றுவதை அறியப் பறவைகள் அனுப்பப்படுகின்றன; பேரழிவுக்குப்பின் கதைத்தலைவன் செய்யும் வழிபாட்டுச் செயல் விவரிக்கப்படுகிறது. அதன்பின் தலைவனுக்கு அளிக்கப்படும் சிறப்புச் செய்தி விவரிக்கப்படுகிறது. இரண்டு விவரிப்புகளுக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாடுகள்; பாபிலோனியக் கதை பல தெய்வக் கோட்பாட்டைக் கொண்டிருக்கும்போது, இஸ்ராயேலரின் விவரிப்பு இறையொருமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது; விவிலியத்தில், பெருவெள்ளத்திற்குக் காரணம் மனுகுலத்தின் ஒழுக்கச் சீர்கேடேயாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது. பாபிலோனியக்கதை இறை ஆவியையும் அண்டப்பொருள்களையும் குழப்பும்போது, விவிலியம் இரண்டையும் வேறுபடுத்துகிறது;.

படைப்பு விவரிப்பில் போன்று, இங்கும் இரண்டு விவரிப்புகளுக்கும் பொதுவான ஒரு பாரம்பரியம் இருந்திருக்க வேண்டும் என்றும், அதன் இதிகாசக் கூறுகள் நீக்கப்பட்டு, இஸ்ராயேலர் சமயத்திற்கு ஏற்றதாக மாற்றப்பட்டது என்றும் கூறுவர் அறிஞர் பலர்.

4. நூசி என்ற பழங்கால ஊரியா நகரில் 1925-41-இல் கண்டெடுக்கப்பட்ட பாபிலோனிய ஆப்பு எழுத்துக்களில் எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான களிமண் தகடுகள் விவிலிய குலமுதியவர் பற்றிய விவரிப்புகளில் வரும் பழக்க வழக்கங்களுக்கு ஒளி அளிக்கின்றன. சான்றாக, ஆபிரகாம் தம் ஊழியன் எலியேசரைத் தத்து எடுத்தல் (ஆதி 15:2), விவிலிய அறிஞர்களைத் திகைக்கச் செய்திருக்கிறது. ஆனால் தகடுகள், குழந்தையற்ற ஒரு தம்பதியர் எவ்வாறு ஓர் ஊழியனையோ உறவினரல்லாத ஒரு சுதந்தரக் குடிமகனையோ தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று காட்டுகின்றன. பிற்காலத்தில் அத்தம்பதியருக்குப் புதல்வன் பிறந்தால் அவனுக்குத் தத்து எடுக்கப்பட்டவன் முதல் வாரிசு உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டும் (21:1-14) என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

தாம் மலடி என்றுணர்ந்த சாரா தனது வேலைக்காரியை ஆபிரகாமுக்குத் துணைவியாக அளித்ததற்கும் (16:1-16; 30:9) நூசித்தகடுகள் விளக்கம் அளிக்கின்றன. நூசிச்சட்டம், ஒருவனுடைய மனைவி மலடியானால், அவள் தன் வேலைக்காரியைத் தம் கணவனுக்கு மனைவியாகக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது.

ராகேல் தன் குலதெய்வங்களின் சிலைகளைத் திருடி ஒளித்து வைத்தலுக்கு (ஆதி 31:34) நூசி ஏடுகள் விளக்கம் அளிக்கின்றன. அவற்றின்படி, குலதெய்வச் சிலைகளைக் கொண்டிருப்பது அக்குடும்பத்தில் தலைமைப் பதவி அளிக்கிறது. ஒரு புதல்வி இவ்வாறு கொண்டிருந்தால், அவளது தகப்பனின் சொத்துக்கு உரிமை அளிக்கிறது. இக்கதையில் ராகேலின் எண்ணம் தெளிவாகிறது.

5. விவிலியக் குலமுதியவர்கள் காலம் பற்றிய மேலும் அதிகமான செய்திகள் யூப்பிரத்தீசு நதியின் கரையிலுள்ள மாரி என்ற பழம்பெரும் நகரிலிருந்து கிடைக்கின்றன. இங்கு அக்காதிய மொழியிலுள்ள 20,000 களிமண் தகடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மாரியின் கடைசி அரசனான சிம்ரி-லிம்முக்கும் அவனுடைய தூதன் அல்லது பாபிலோனிய அரசனான கம்முராபிக்குமிடையே நடந்த கடிதத் தொடர்பாகும். இவற்றிலிருந்து விவிலியக் குலமுதிவர்கள் காலத்துப் பழக்கவழக்கங்களுக்கு விளக்கம் கிடைக்கிறது.

மோசே சட்டத்தில் பல பகுதிகள், சுமேரிய, பாபிலோனிய, அசீரிய, இத்திய, கானானிய சட்டத்தொகுப்புகளோடு இணைத்தன்மை கொண்டுள்ளன. அவற்றிலிருந்து விளக்கமும் பெறுகின்றன. இச்சட்டத் தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கவை லிபித்-இஸ்தாரின் பாபிலோனியச் சட்டம் (கி.மு. 1875), எஸ்னுன்னாச்சட்டம் (2000), யாவரும் அறிந்த கம்முராபியின் சட்டம் (1723) முதலியவையாகும். பலவற்றில் சொல்லமைப்பில் கூட பாபிலோனியச் சட்டத்திற்கும் இஸ்ராயேல் சட்டத்திற்கும் நெருங்கிய ஒப்புமை காணப்படுகிறது. இஃது, இஸ்ராயேலர் மேற்காசிய அண்டை மக்களோடு பொதுவான ஒரு சட்டப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இத்தகைய தொடர்பு ஒருவேளை இஸ்ராயேல் கானானில் புகுந்தபோது நடந்திருக்கலாம்.

ஆனால் இரண்டிற்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் உண்டு. காமத்திற்கு எதிராகச் சட்டம் பாபிலோனியத் தொகுப்பில் இல்லை. நடத்தை தன்னலமற்ற பொது நலநோக்கு அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்று பாபிலோனியச் சட்டம் கட்டளையிடவில்லை. இது சமயசார்பற்ற தன்மையுடையது. ஏனெனில் கடவுள்களுக்குரிய மரியாதை அடிப்படையில் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கோரவில்லை.

6. கி.பி. 1928-இல் இராஸ்-சம்ராவில் கண்டெடுக்கப்பட்டவை பழைய ஏற்பாட்டு ஆய்வில் புரட்சி செய்துள்ளன எனலாம். அங்குக் கண்டெடுக்கப்பட்ட அகரவரிசை ஆப்பு எழுத்துக்களில் எழுதப்பட்ட களிமண் ஏடுகள் பழைய ஏற்பாட்டுக்குப் பலவிதங்களில் ஒளி அளிக்கின்றன. இவை கானானியர் சமயத்தைப்பற்றி இதுவரை அறிந்திருந்ததைவிட அதிகமான செய்திகளைக் கொடுக்கின்றன. இவற்றில் காணப்படும் இதிகாசங்களை இடிமழைக் கடவுளான பாகாலைப் பற்றி விரிவான

சித்திரத்தை அளிக்கின்றன. இஸ்ராயேலர் கானானில் வாழ்ந்த காலமுழுவதும் அவர்களின் பிரமாணிக்கத்திற்கு யாவேயோடு போட்டியாகத் திகழ்ந்தது இந்தப்பாகால்தான் (கண். 1 அர 16:31; எரே 7:9). இத்தகடுகளில் காணப்படும் மொழி இப்போது உகாரித்து மொழி எனப்படும். இது பழைய ஏற்பாட்டுச் சொற்றொகுதி பலவற்றிற்கு ஒளி அளித்துள்ளது. அக்காது இதிகாசத்தில் வரும் நேர்மையான அரசன் தானேல்- எசே 14:14-20-இல் குறிக்கப்படும் தானியேல் என்றும், பிற்காலத்தில் நூல் தலைப்புப் பெற்ற தானியேல் அல்லன் என்றும் இப்போது உறுதியாகக் கூறலாம் என்பர் அறிஞர்கள்.

7. எகிப்தில் தெல் ஏல்-அமர்னாவில் (அக்தேதாத்தோன்) 1887-இல் கண்டெடுக்கப்பட்ட களிமண் ஏடுகள் கானானிய மொழியின் காலத்தால் முந்திய மாதிரியை விவிலிய அறிஞர்களுக்கு அளித்துள்ளன. இம்மொழியைத்தான் இஸ்ராயேலர் கானானில் புகுந்தபோது ஏற்றுக்கொண்டனர் (காண். எசா 19:18). இத்தகடுகளில் பல எகிப்தின் 3-ஆம், 4-ஆம் அமென்கோதோப்பு பார்வோன்களுக்கும் மேற்காசியாவிலிருந்து சில நகர அரசுகளின் அரசர்களுக்குமிடையே நடந்த கடிதத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவை அக்காதிய மொழியில் எழுதப்பட்டுள்ளன. சில அக்காதியச் சொற்களை விளக்க எழுத்தாளர்களால் புகுத்தப்பட்ட கானானியக் குறிப்புகளையும் கொண்டுள்ளன. இம்மொழி விவிலிய எபிரேயத்திற்கு ஒளி அளிப்பதோடு, விவிலிய ஆய்வுக்கு இவ்வேடுகள் அளிக்கும் முக்கிய பங்கு கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் நிலவிய உயரிய கானானியக் கலாச்சாரம் பற்றிய சித்திரமாகும்.

8. 1947-இல் கண்டெடுக்கப்பட்ட கும்ரான் ஏடுகள் விவிலிய ஆய்வைப் பெரிதும் பாதித்துள்ளன. இவை பழைய ஏற்பாட்டு வாசக ஆய்வில் புரட்சி செய்துள்ளன. இங்கு வாழ்ந்த யூதப்பிரிவினரின் ஏடுகள் கிறிஸ்தவம் மற்றும் புதிய ஏற்பாடு தோன்றியது பற்றி ஒளி அளிக்கின்றன. எஸ்தர் தவிர, மற்ற எல்லாப் பழைய ஏற்பாட்டு நூல்களின் பிரதிகள் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இதுவரை அறியப்பட்ட பிரதிகளுக்கு 1000 ஆண்டுகள் முந்தியவை. இவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன் மூன்று வகையான வாசகங்கள் பாலஸ்தீனத்தில் வழக்கில் இருந்தன என்று காட்டுகின்றன. **அ) மூல சமாரிய சிறப்பான வாசகப்பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். ஆ) மூல எழுபது நூல்:** எழுபது நூலுக்கே உரிய சிறப்பான வாசகப் பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகப் பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். இ) மூல மாசரோட்டிக்கு வாசகம்: மரபுமுறை எபிரேய வாசகத்திற்கே உரிய பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். இவை மூன்றும் கலந்த நான்காம் வகையும் காணப்பட்டுள்ளது. இந்த வாசகங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் சிறியவையே. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன் பழைய ஏற்பாட்டு வாசகம் இன்னும் நிலையான வடிவம் எடுக்கவில்லை என்று காட்டுவதாக அறிஞர் கருதுவர்.

கும்ரான் பிரிவினரிடையே இருந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களில் பல புதிய ஏற்பாட்டில் காணப்படுபவைகளுக்கு ஒப்பிடப்படுகின்றன. கும்ரானுக்கும் எருசலேமின் தொடக்கத் திருச்சபைக்குமிடையே திருமுழுக்குக் கும் மனம் வருந்துதலுக்கும் உள்ள தொடர்பு, சமூகப் பொது உடைமை, தலைவர்களின் எண்ணிக்கை, சமூகப் பொது உணவு, ஆலய வழிபாட்டில் அக்கறையின்மை போன்றவற்றில் ஒப்புமைகாண முயல்வர் சிலர். கும்ரானுக்கும் நான்காவது நற்செய்திக்குமிடையே, இருமைக் கோட்பாடு, உண்மையும் அக்கிரமமும், சகோதர அன்பு, உயிருள்ள நீரின் ஊற்று, பதிதம் ஆகியவற்றில் ஒப்புமை காண முயன்றுள்ளனர். கும்ரானுக்கும் பவுலின் நூல்கள் தொகுப்புக்குமிடையில் திருமுழுக்கு, ஆண்டவரது இறுதி இரவுணவு, புதிய உடன்படிக்கை, பழைய ஏற்பாட்டு ஒழுக்கக்கட்டளைகளுக்கு விளக்கம், தேவையான சாட்சிகளின் எண்ணிக்கை, இறைவனது சீற்றத்திற்கு இடம் கொடுத்தல், புரிந்து பாடுதல் ஆகியவற்றில் ஒப்புமை காண்பர்.

கும்ரானுக்கும் மற்றப் புதிய ஏற்பாட்டு நூல்கள் தொடக்க காலக் கிறிஸ்தவ ஏடுகளுக்குமிடையே இத்தகைய இணைவுத்தன்மை சிலவற்றில் இருப்பதை மறுக்க வேண்டியதில்லை. ஆனால் புதிய ஏற்பாடு கும்ரான் ஏடுகளை நேரடியாகத் தழுவியுள்ளது என்று ஏற்கவேண்டியதில்லை. இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்திலும், தொடக்க கிறிஸ்தவ காலத்திலும் நிலவிய யூதத்துவத்தின் பல்வேறு வகைகளை மனதில் கொண்டால், இரு இலக்கியத்தொகுப்பு களுக்கும் பொதுவான மூலம் ஒன்று இருந்திருக்கலாம் என்று அதிகபட்சமாகச் சுட்டலாம்.

9. வட சீரியாவில் 1975-இல் தெல் மார்திக் (எப்லா) என்ற இடத்தில் நடந்த அகழ்வாய்வில் 15,000 களிமண் தகடுகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் காணப்படும் மொழி பழைய கானானிய மொழி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இந்த ஏடுகள் பற்றிய ஆய்வுகள் பழைய ஏற்பாட்டுக் காலவரை, மொழி, ஆட்கள் மற்றும் இடங்களின் பெயர்கள், சமயம் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளை ஓரளவு பாதிக்கலாம்.

10. விவிலிய ஆராய்ச்சியில், இலக்கியம் மற்றும் பொருள்கள் சார்ந்த ஒப்புமை ஆய்வில் எச்சரிக்கை மிக அவசியம். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிஞர்கள் சிலர் மேற்காசியாவை விவிலியத்தின் முன்னோராகக் காட்டுவதில் ஆவேசத் தீவிரம் காட்டினார். இவர்கள், இஸ்ராயேலர் பாபிலோனியக் கருத்துகளிலிருந்து நேரடியாகக் கடன் வாங்கினார் என்றும், பாபிலோனிய சமயத்திலிருந்து இஸ்ராயேலர் சமயம், சமய வளர்ச்சியின் பரிணாம முறையில், எபிரேய சமயமாய் வளர்ந்தது என்றும் கருதினர். அறிஞர்களின் இத்தகைய விஞ்சியபோக்கு இராஸ் – சம்ராவின் உகாரித்து ஏடுகள், சாக்கடல் ஏடுகள், எல்பா ஏடுகள் ஆகியன கண்டெடுக்கப்பட்டபின் தோன்றியது. ஆனால் சமீபகாலத்தில் மனித இன வரலாற்று இயல், மொழியில் மற்றும் பிற அறிவியல்கள் கலாச்சாரத்தைப் பாதிக்கும் தர்க்கம்பற்றிய அறிவால் பயன் அடைந்துள்ளனர். இஸ்ராயேலர் தங்களது அண்டை மக்களிடமிருந்து கடன் வாங்கினார்கள் என்றோ அவர்களின் பொருள் மற்றும் இலக்கிய வடிவங்களால் பாதிக்கப்பட்டார்கள் என்றோ தொல்பொருளியல் சான்றுகள் சுட்டினாலும், எபிரேய விசுவாசத்தின் கருத்தியல் முன்னோக்குக்கு ஏற்றவாறு இவை மாற்றியமைக்கப்பட்டன என்பது தெளிவாகிறது.

11. பழைய ஏற்பாட்டுக்குச் செய்த அளவு தொல்பொருளியல் புதிய ஏற்பாட்டுக்குச் செய்யவில்லை. இருந்தாலும் புதிய ஏற்பாட்டு இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் அதற்கு ஒரு கலாச்சாரப் பின்னணியை அளிக்கின்றன. உரோம் பேரரசின் பல இடங்களில் நடந்த அகழ்வாய்வுகள், அதன் நிர்வாக அமைப்பு, அது தொடக்கத் திருச்சபையின்பால் காட்டிய மாறுபட்ட மனப்போக்கு ஆகியவற்றிற்கு ஒளி அளிக்கின்றன. எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட கிரேக்கப் புல்தாள் ஏடுகளின் பெரும் தொகுப்பு, புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழி தான் மற்றக் கிரேக்க மொழி பேசப்பட்ட இடங்களிலும் வழக்கில் இருந்தது என்றும், அது புதிய ஏற்பாட்டுச் சொற்கள் பலவற்றிற்கு விளக்கம் அளிக்க உதவியுள்ளது என்றும் கருத இடமளிக்கிறது.

## IV. தொல்பொருளியல் விவிலியத்தை எண்பிக்கிறதா?:-

விவிலியத் தொல்பொருள் ஆய்வு தொடக்கத்திலிருந்து, அது விவிலியத்தை நிரூபிக்கிறது என்று உரிமை கொண்டாடப் பட்டது. இக்கருத்துக்கு மாறாக இருவகையில் எதிர்ப்பு எழலாம்.

முதலாவதாக, விவிலிய வாசகத்தின் ஒரு சிறுபகுதிதான், அதுவும் பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சியுரைப் பகுதிகள்தான், எண்பிப்பதற்கு உரியவையாகும். அதாவது இஸ்ராயேலர் கானானைக் கைப்பற்றினர் அல்லது யூதாவின்மேல் பாபிலோன் படையெடுத்தது போன்ற விவிலியக் கூற்றுகளைத்தான் தொல்பொருளியல் நிரூபிக்கலாம். இறைவன் இருத்தல் பற்றி உறுதிப்பாடு அல்லது இயேசுகிறிஸ்துவின் இறைத்தன்மை போன்ற வற்றைத் தொல்பொருளியல் செய்ய முடியாது.

சங்கீதங்கள் பலவற்றையுமோ, பழமொழி களையோ, யோபுவுக்கும் அவரது நண்பர்களுக்கு மிடையே நிகழும் உரையாடலையோ (யோபு 3-37) அது உறுதிசெய்ய முடியாது.

இரண்டாவதாக, விவிலியத்தின் பல வரலாற்றுக் கூற்றுகள் அகழ்வாய்வுகளால் உறுதி செய்யப் பட்டாலும், இன்னும் பல கூற்றுகள் உறுதிசெய்யப் படவில்லை. இதற்கு முதன்மையான எடுத்துக்காட்டு, எரிகோ யோசுவாவால் அழிக்கப்படுதலாகும் (யோசு 6). அது அழிக்கப்பட்டதாக விவிலியம் கூறும் காலத்தைச் சேர்ந்த அழிவு மட்டம் தெல் ஏல் - சுல்தானின் (பழைய ஏற்பாட்டு எரிகோ) காணப்படவில்லை. ஒருவேளை இந்த அழிவு மட்டம் அதன் அழிவுக்குப்பின் கரைந்து மறைந்து போயிருக்கலாம். ஆனால் அது ஒரு பிரச்சனையாகவே உள்ளது.

இறுதியாக, விவிலியத்தின் சில வரலாற்றுக் கூற்றுகளைத் தொல்பொருள் ஆய்வு உறுதிப்படுத்துகிறது என்பது கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது என்பதற்குச் சமமா என்று கேள்வி எழுப்பலாம். இதற்குரிய ஒரே பதில் அழுத்தந்திருத்தமாக "இல்லை" என்பதேயாகும். கிறிஸ்தவ விசுவாசத்தின் தன்மை அத்தகையதாகும். "விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதியாகும்" (எபி 11:1).

## தொழில், வேலை (OCCUPATION)

பார்வோன் யோசேப்பின் சகோதரர்களை "உங்கள் தொழில் என்ன?" என்று கேட்க, அவர்கள் தாங்கள் "மேய்ப்பவர்கள்" (ஆதி 46:34), "ஆடுமேய்ப்பவர்கள்" (47:3) என்று பதில் அளித்தனர். கப்பலோட்டிகள் யோனாவை "உன்வேலை என்ன?" (யோனா 1:8) என்று வினவியபோது அவர் மறுமொழி அளிக்கவில்லை. பவுல் கொரிந்து நகரில் தன்தொழில் (அ.ப. 18:3) செய்பவர்களுடன் தங்கியிருந்தார். எபேசு நகரில் வெள்ளி ஆசாரியர்களாகிய கம்மியர்கள் தங்களுக்கென ஒரு சங்கம் வைத்திருந்தனர். இவர்கள் கிறிஸ்துவ நெறியைக் குறித்துக் கலகம் ஏற்படக் காரணமாயிருந்தார்கள் (19:25).

புதிய ஏற்பாடு திறமையைப் பொருத்துத் தொழிலைப் பாகுபடுத்துவதாகத் தெரியவில்லை. அப்படிப்பாகுபாடு காணப்பட்டால், உரிமை அடைந்தோரில் திறமை மிக்க கைவினைஞர்கள் ஈடுபட்ட தொழில்கள் முதலிடம் பெறுகின்றன.

வீடு சம்பந்தப்பட்ட தொழில்கள், ரொட்டி சுடுதல், சமைத்தல், துணி தைத்தல், கயிறுதிரித்தல், கூடாரம் செய்தல், கூடை பின்னுதல், மட்பாண்டம் செய்தல், உழவுத்தொழில், திராட்சை ரசம் தயாரித்தல், ஆடுமாடு பேணுதல் போன்றவையாகும்.

தனிப்பட்டவர்கள் செய்யும் தொழில்கள், அடிமைகளாலும் உரிமைக்குடி மக்களாலும் செய்யப்பட்டன. இவை மருந்து வியாபாரம், முடி வெட்டுதல், காவல் செய்தல், மருத்துவம், தாதித்தொழில், சத்திரக் காவல், தாசித் தொழில் முதலியனவாகும்.

அரசியல் அமைப்புகளும், அரச நிறுவனங்களும் மேலும் தொழில் வாய்ப்பைப் பெருக்கின. அரசர், இளவரசர், தூதுவர், மொழி பெயர்ப்பாளர், மேற்பார்வையாளர், ஏவலாளி, பிரபு அரண்மனைக் கண்காணிப்பாளர், பரிமாறுபவன், ஆலோசகரி, ஆளுநர், நூற்றுவர் தலைவர், வரி வசூலிப்பவர், செயலர், எழுத்தர், நீதிபதி, வழக்கறிஞர், படைவீரர்கள், இரத ஓட்டுநர்கள், ஆயுதம் தாங்குவோர், குறி சொல்வோர், சோதிடம் பார்ப்பவர், பேயோட்டுபவர், குரு போன்றோராவர். இஃதோடு மத சம்பந்தப்பட்ட தொழில்களாகக் குருத்துவம், இறைவாக்குரைத்தல், தீர்க்கதரிசனம் கூறல், கடவுள் பெயரால் குறி சொல்லுதல், சடங்கு விபசாரம் போன்றவை கருதப்பட்டன. இவை தவிர, பல்வகைப்பட்ட தொழிலாளர்களாகப் பாட்டுக்காரர், நடனம் செய்வோர், ஒப்பாரி செய்வோர், கப்பலோட்டி, கம்மியர், ஆசிரியர், பொறியியல் வல்லுநர், ஓவியர், கேணி வெட்டுபவர், வியாபாரி, ஒட்டகம் ஓட்டுநர், பிச்சைக்காரன், குற்றவாளி, மீன் பிடிப்போன், விவசாயி, கொத்தனார், சாராயம் வடிப்போர் போன்றோர் கருதப்பட்டனர்.

பொதுவாகப் பெண்கள் தங்களை வீடு சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்திக் கொண்டனர்; மேலும், மேலே குறிக்கப்பட்டுள்ள தொழில்களில் கூடை பின்னுதல், நெய்தல், மட் பாண்டம் செய்தல், தாதியர், விலைமாது, எடுபிடி வேலை, நீதிபதி, வியாபாரம், பாட்டுப்பாடுதல், நடனம் புரிதல் போன்றவற்றிலும் ஈடுபடுத்திக்கொண்டார்கள்.

## தொழு, தொழுமரம் (STOCKS)

குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், சித்ரவதை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட பழங்காலக் கருவி. குற்றவாளியின் கைகளையும், கால்களையும் குறிப்பிட்ட ஒரே நிலையில் கட்டிவைக்க உதவும் மரத்தால் செய்யப்பட்ட சட்டம். இத்தொழுமரத்தில் ஏற்றப்பட்ட குற்றவாளி, தன் கை கால்களைக் கிஞ்சித்துக் அசைக்க முடியாமல் மிகவும் துன்புறுவான். இத்தொழு மரத்தினைப் பற்றிய குறிப்புகளை யோபு 13:27; எரே 29:6 ஆகிய பகுதிகளில் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் அ.ப. 16:24 தொழு மரத்தினைப் பற்றிய குறிப்பைத் தருகின்றது. உரோமையர்களின் தொழுமரம், கால்களுக்கு இடைப்பட்ட தூரத்தை மாற்றக்கூடிய வகையில் இருந்தது என யூசேபியு என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.

## தொழுகை மேடை (HIGH PLACE)

இது குன்றுகளின் உச்சியிலோ மனிதன் அமைத்த மேடையிலோ அமைந்த வழிபாட்டு இடமாகும். பழைய ஏற்பாட்டு விவரிப்புகள் இவ்வகை மேடைகளைப் பொதுவாகப் பிறமதப் பழக்கங்களோடு தொடர்பு படுத்துகிறது.

இஸ்ராயேலர் கானானில் குடியேறியபோது, கானானிய சமயத்தில் இந்தத் தொழுகை மேடைகள் பரவலாகப் பயன்பட்டன. பழங்கால மேற்காசிய அண்டவியல் பூமியைத் தட்டையான தாகவும் தெய்வங்கள் விண்ணில் வாழ்ந்ததாகவும் கருதியது. அதனால், வழிபாட்டு மையம் உயர்ந்த இடத்தில் இருந்தால் தெய்வங்களின் கவனத்தைச் சுலபமாக ஈர்க்கலாம் என்று மக்கள் கருதினர்.

இந்தத் தொழுகை மேடைகள் திறந்த வெளியாகவோ கட்டடங்களைக் கொண்டதாகவோ அமைந்திருந்தன (1 அர 12:31; 13:32; 2 அர 17:32; 23:9). இம்மேடைகளில் சிலைகள், பலிபீடங்கள், கல்தூண்கள், மரக்கம்பங்கள் மற்றும் தண்ணீரும் உண்டு. மேடையைச் சுற்றி மரத்தோப்புகள் உண்டு. இவையெல்லாம் யாவேயின் கடுஞ்சினத்திற்குரியவையாகும் (லேவி 26:30; சங் 78:58).

இஸ்ராயேலர் கானானைக் கைப்பற்றிய போது, இந்தத் தொழுகை மேடைகளை அழித்துவிடும்படி யாவே கட்டளையிட்டார் (எண் 33:52; உப 33:29). ஆயினும் இஸ்ராயேல் வரலாறு முழுவதும் இந்த மேடைகள் குறிப்பாக அரசர்கள் காலத்தில் தொடர்ந்து இருந்தன. ஆசா ஓரளவுதான் இவற்றை நீக்கினார் (2 நாள் 14:3.5;17:6; 1 அர 15:14). சாலமோன் (1 அர 11:7), ரெகபயாம் (14:23; 2 நாள் 21:11), வட இஸ்ராயேலின் பல அரசர்கள் (2 அர 17:9) பல தொழுகை மேடைகளைக் கட்டினர். யோசபாத்து (22:43), யோவகாசு (2 அர 12:3), அமட்சியா (14:4). அசரியா (15:4), யோத்தாம் (15:35) ஆகியோர் இம்மேடைகளை அழிக்கவில்லை. ஆயினும் இவர்கள் ஆண்டவரின் வழியில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. எசேக்கியா (2 அர 18:4), யோசியா (23:8; 2 நாள் 34:3-7) போன்ற அரசர்கள் இவற்றை முழுவதும் அழித்தனர். எசேக்கியா அழித்தவற்றை மனாசே மீண்டும் கட்டினார் (2 அர 21:3; 2 நாள் 33:3).

இஸ்ராயேல், யூதாவின் அரசர்கள் அன்னிய இளவரசிகளை மணந்தபோது, அவர்கள் தங்கள் தெய்வங்களைத் தொழ இந்த மேடைகளை அல்லது கோவில்களை அரசர்கள் கட்ட வேண்டியதாயிற்று. இவ்விதம் பல தேவதைகள் வழிபாடு இஸ்ராயேலில் புகுந்து உறுதிப்பட்டது (1 அர 11:6-8).

இத்தொழுகை மேடைகளில் மனிதபலி (2 அர 16:4; 2 நாள் 33:6; எரே 19:4-5), சடங்கு விபசாரம் (1 அர 14:23-24), குறி கேட்டல், சூனியம் வைத்தல் (2 அர 17:17) போன்ற வெறுக்கத்தக்க செயல்கள் நடைபெற்றன.

மோவாபிய பாலாக்கு, இஸ்ராயேலரைச் சபிக்கும்முன் அவர்களைப் பார்க்க, குறி சொல்லும் பிலயாமை ஒரு தொழுகை மேடைக்குக் கொண்டு வந்தான்.

சில தொழுகைமேடையில் யாவே வழிபடப்பட்டதாகத் தெரிகிறது. சவுல் தொலைந்து போன கழுதைகளைக் கண்டுபிடிக்க சாமுவேலின் உதவியை நாடியபோது, சாமுவேல் தொழுகை மேட்டில் மக்களுக்காகப் பலி செலுத்த, தொழுகைமேட்டிற்கு வந்திருப்பதாக செய்தி அறிகிறார் (1 சாமு 9:11-19).

சவுல் அரசனாக அபிடேகம் பெற்றபின், தொழுகைமேட்டிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த இறைவாக்கினர் குழுவைச் சந்திக்கிறார் (10:5:10). தாவீதின் ஆட்சியில் கிபயோனில் இருந்த தொழுகை மேடை ஓரளவு முக்கியத்துவம் பெறுகிறது (1 நாள் 16:39; 21:29). சாலமோனின் காலத்திலும் இந்நிலை நீடிக்கிறது (2 நாள் 1:3.13). கிபயோனில் இருந்த தொழுகை மேடையோடு சாலமோன் கொண்ட தொடர்பை அரசர்கள் நூல் ஓரளவு வெள்ளையடிக்கிறது எனலாம் (1 அர 3:4). இதையே நாளாகம ஆசிரியர், திருக்கூடாரத்தோடும் (1 நாள் 16:39;21:29) சந்திப்புக் கூடாரத்தோடும் (2 நாள் 1:3.13) தொழுகைமேடையைத் தொடர்புபடுத்தும்போது செய்கிறார். யாவே தொழுகைமேடைகளில் வழிபடப்படுகிறார் (33:11.17). மோவாபிலும் (எரே 48:35), இஸ்ராயேலிலும் (2 அர 16:4; 2 நாள் 28:4; எசே 6:3.6) தொழுகை மேடைகளில் பலிகளும் தூபமும் அளிக்கப்படுகின்றன. தொழுகை மேடைகளில் வழிபடுவோர் உண்டனர் (1 சாமு 9:13), அழுதனர் (எசா 15:2), மன்றாடினர் (16:2; 56:7). இறைவாக்கினர்களும் (1 சாமு 10:5-13) குருக்களும் (2 அர 23:5,9.20) அங்கு அடிக்கடி சென்றனர்; அங்கே வாழ்ந்தனர். இம்மேடைகள் தனிப்பட்ட பக்தி முயற்சிகள், அதிகாரபூர்வமான வழிபாடுகள், ஆண்டு விழாக்கள் ஆகியவை நடக்கும் இடமாக அரசர்கள் நூல்கள் காட்டுகின்றன. இவ்விதம் இத்தொழுகை மேடைகளை மக்கள் தொடர்ந்து பயன்படுத்தியதற்கு "அந்நாள்வரை ஆண்டவனின் திருப்பெயருக்குக் கோயில் எழுப்பப்படவில்லை. எனவே மக்கள் தொழுகை மேடைகளில் பலியிட்டு வந்தார்கள்" என்று 1 அர 3:2 விளக்கம் அளித்தாலும் சாலமோன் ஆட்சியிலும் அவருக்குப் பின்வந்த பிளவுபட்ட அரசாட்சிகளிலும் இத்தொழுகை மேடைகளில் முழுவதும் பிறமத வழிபாட்டு மரபுகள் பற்றிய குறிப்புகளே மிகுந்துள்ளன.

**தொழுநோய் (LEPROSY)**

தோல் சார்ந்த பலவகைத் தொத்துநோய்களையும், சாதாரண நோய்களையும் சேர்த்துத் தொழுநோய் என்ற பெயரால் விவிலியம் அழைக்கிறது. ஆடைகள், சுவர்கள்கூடத் தொழுநோய் அடையாளத்தைக் கொண்டிருக்கலாம் (லேவி 13:47-59; 14:33-57). விவிலியம் இந்நோயை மருத்துவமுறையில் துல்லியமாக விளக்கவில்லை. இக்காலத்தில் இந்நோய் பற்றிய தெளிவான கருத்து மத்திய காலத்தில் தோன்றியதாகும். ஏனெனில் அப்போது இந்நோய் ஐரோப்பாவில் பரவிக்கொண்டிருந்தது. தொழுநோயைப்பற்றிய விரிவான சட்டங்கள் (லேவி 13-14) எந்த அசுத்தத்திலிருந்தும், அஃது ஒழுக்கம் அல்லது உடல் சார்ந்ததாயிருந்தாலும், இறை மக்களைப் பிரித்துவைக்க வேண்டியதை வலியுறுத்தும் ஒரு சாதனமாகும்.

1. தொழுநோய், தூய்மையின்மை மற்றும் இறைத்தண்டனை:

யூதச் சட்டப்படி, தொழுநோய் ஓர் ஒட்டுவாரொட்டி அசுத்தமாகும். அது பிறரைத் தீண்டாதவாறு தொழுநோயாளிகள் குணமாக்கப்பட்டுச் சடங்கு முறையில் தூய்மைப் படுத்தப்படும் வரை அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். இச்சடங்கு முறைத் தூய்மைச் சடங்கில் குற்றம் நீக்கும் பலி செய்யப்பட வேண்டும் (லேவி 13-14). தொழுநோய் பாவியைத் தாக்கும் மிகக் கொடிய கொள்ளை நோயாகும். ஆண்டவர் இந்நோயால் வதைப்பதாக இஸ்ராயேலை அச்சுறுத்துகிறார் (உப 28:27.35). எகிப்தியர்களும் (யாத் 9:9தொ), மிரியாமும் (எண் 12:10-15), ஊசியாவும் (2 நாள்

26:19-23) இந்நோயால் தண்டிக்கப்பட்டனர். கோட்பாட்டளவில், தொழுநோய் பாவத்தின் அடையாளம் ஆயினும் துன்புறும் ஊழியன் இறைவனால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டபோது, அவரைக் காண்போர் தம்முகத்தை மூடிக்கொள்வர். ஏனெனில் அவர் மனிதரின் தீச்செயல்களைத் தாமே சுமந்தார்; அவரின் காயங்களால் மனிதர் குணம் பெறுவர் (எசா 53:3-12). பாவிகள் அவரது பரிகாரத்தால் ஈடேற்றம் பெற்றனர்.

2. **தொழுநோயாளிகள் குணம் பெறுதல்:**

இந்நோய் குணமாகலாம்; அல்லது, ஓர் அருஞ்செயலால் குணமாகலாம். தொழுநோயுற்ற நாமான் எலியாசின் கட்டளைக்குப் பணிந்து யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கி எழுந்து குணமானது (2 அர 5:8-14) இத்தகைய ஓர் அருஞ்செயலாகும். இது இறைத்தயவு மற்றும் இறைவாக்கு ஆற்றலின் அடையாளமாக விளங்குகிறது. இயேசு தொழுநோயாளிகளைக் குணமாக்கும்போது (மத் 8:1-4 இணை; லூக் 17:11-19), இந்தக் கொள்ளை நோயை வெற்றி கொள்கிறார். மனிதரின் பிணிகளைத் தாங்கி, அவர்கள் துன்பத்தைச் சுமந்த அவர் (மத் 8:17) அவர்களுக்குக் குணமளிக்கிறார். இச்செயலால் தூய்மையுடையவர், தூய்மையற்றவர்களுக் கிடையே உள்ள பிரிவைத் தகர்த்தெறிந்து, தொழுநோயாளிகள் குணம்பெற்று, பிறருடன் கூடிவாழ உரிமைவழங்குகிறார். இவர்களைக் குணமாக்கும் போதெல்லாம் குணமானவர் தம்மைத் குருக்களிடம் காட்டி, குற்றம் நீக்கும் பலியை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். இதன்மூலம் யூதச் சட்டத்தின்பால், தாம் கொண்ட மதிப்பையும் வெளிப்படுத்துகிறார்; அருஞ்செயல் செய்யும் தம் ஆற்றலையும் குருக்கள் கண்டுணர வழி செய்கிறார். மற்ற நோய்களையும் தொழு நோயையும் குணமாக்குவதை, மக்கள் எதிர்பார்த்த "வரவிருப்பவர்தாமே" என்பதற்கும் (11:5 இணை), மெசியாவின் காலம் வருகைக்கும் அடையாளமாகச் சுட்டிக்காட்டுகிறார். அப்போஸ்தலர் தங்கள் தூதுப் பணிக்கு அனுப்பப்பட்டபோது, இறையரசு நெருங்கிவிட்டது என்று குணமாக்கும் அடையாளத்தால் காட்ட ஆணையும் ஆற்றலும் பெறுகின்றனர் (10:8).

## தொழுவம் (STALL, STABLE)

கால்நடைத்தொழுவம், மாட்டுக்கொட்டில் என்பன ஆடுமாடுகளை அடைத்துவைத்துத் தீவனம் வழங்கும் இடமாகும்.

சராசரி வீடுகளில் ஆடு, மாடு, குதிரை போன்ற விலங்குகளை வீடுகளின் பின் பக்கத்திலோ, வீட்டின் கீழ்ப்பகுதியிலோ அல்லது வீட்டிற்கு அருகிலுள்ள குகைகளிலோ அடைத்துக் காத்து வந்தனர்.

யூதாவின் அரசர்களான எசேக்கியாவும் (2 நாள் 32:28), சாலமோனும் (1 அர 4:26; 2 நாள் 9:25) இத்தகைய தொழுவங்களை அமைத்திருந்ததாகத் தெரிகின்றது. 1 அர 4:26-இல் காண்பது போல் சாலமோன் 40 ஆயிரம் குதிரைகளைக் கொள்ளக்கூடிய பரந்த தொழுவம் அமைத்திருந்தான் என்பதை விவிலிய அறிஞர் பலர் மிகைப்படுத்தி எழுதப்பட்ட உண்மை என்றே கருதுகின்றனர். ஆயினும் சாலமோன் மன்னன் அமைத்திருந்த தொழுவம் மிகப் பரந்ததே என்பதற்கு "மெகிதோ" என்னுமிடத்துப் புதைபொருள் கண்டுபிடிப்பு சான்று பகர்கின்றது. மெகிதோவில் அடுத்தடுத்துள்ள இரு பரந்த தொழுவக் கூட்டமைப்புகள் கண்டுபிடிக்சுப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான குதிரைகளைக் கட்டிவைப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழு வங்களில் குதிரைகளைக் கட்டி வைப்பதற்குக் கற்றூண்களும், தீனியைப் போடுவதற்கேற்ற தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆமோ 6:4; மலா 4:2-இல் "தொழுவத்துக் கன்றுக்குட்டி"கள் என்று குறிக்கப்படுவது தொழுவத்திலேயே கொழுக்க வளர்க்கப்பட்ட கால்நடைகளைக் குறிக்கும். பழ 15:17-இல் காணும் கொழுத்த கன்றுக்குட்டிகள் இவ்வகையில் தொழுவத்திலேயே கொழுத்த கால்நடைகளே ஆகும்.

# தோ

**தோகர்மா (TOGARMAH - எலும்பான)**

இவர், கோமேரின் மகனும் எப்பேத்தின் வழித்தோன்றலும் ஆவார். இவரது பெயர் பெத்தொகர்மா என்ற பகுதியோடு தொடர்பு படுத்தப்படுகிறது.

இந்தப்பகுதி சிறிய ஆசியாவில் உள்ளது. இது கோமேர் (சிமிரியர்), அஸ்கனாசு (சித்தியர்) போன்ற மக்களினத்தோடு தொடர்புடையது (ஆதி 10:3; 1 நாள் 1:6; எசே 38:6). இங்கிருந்து குதிரைகள், போர்க்குதிரைகள், கோவேறு கழுதைகள் ஆகியவை பண்டமாற்றப்பட்டன (எசே 27:14). இக்குறிப்புகள் சிறிய ஆசியாவிலுள்ள ஒரு நகருக்குப் பொருத்தமாய் உள்ளன. இந்நகரை அசீரியர்கள் தில்-கரிமு என்று அழைத்தனர். இப்பெயர் இத்திய தெகராமா என்ற பெயரிலிருந்து வருகிறது. பிறகு கவுரேனா எனப்பட்டது. இது மலத்தியாவுக்கு மேற்கே 112 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் வரலாற்றில், கி.மு. 8-ஆவது நூற்றாண்டில் அசீரியப் போரில் ஈடுபடுத்தப்பட்ட பகுதி என்பது தெளிவாக அறியப்படுகிறது. அசீர்யர்கள் கி.மு. 695-இல் இந்நகரை அழித்து விட்டனர்.

**தோகு (TOU)**

தோயி என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 18:9-10).

**தோகூ (TOHU - வளைந்த)**

இவர் சூப்புவின் மகனும் இறைவாக்கினர் சாமுவேலின் மூதாதையருள் ஒருவரும் ஆவார் (1 சாமு 1:1). லேவியர்களின் தலைமுறைப் பட்டியலில், நாகத்து என்ற பெயரில் கோகாத்தியர் என்று சொல்லப்பட்டிருக்கிறார் (1 நாள் 6:26). மேலும் இவர் 1 நாள் 6:34-இல் தோவாகு என்றும் அழைக்கப்படுகிறார். தோகூ அல்லது ஒருவேளை தோவாகு என்பது மூலப்பெயராக இருக்குமெனக் கருதப்படுகிறது.

**தோக்காத்து (TOKHATH)**

இறைவாக்கினி உல்தாவின் மாமனார் (2 நாள் 34:22). 2 அர 22:14-இல் இவர் திக்வா என்றழைக்கப்படுகிறார்.

**தோக்கு (DOK)**

கி.மு. 135-இல் சீமோன் மக்கபேயு இச்சிறு கோட்டையில்தான் இறந்தார். சீமோனும் அவரதுமக்கள் இருவரும் குடிபோதையில் இருந்தபோது அவருடைய மருமகன் தோலமியால் கொல்லப்பட்டனர். இக்கோட்டை தோலமியால் கட்டப்பட்டது எனச் சொல்லப்படுகிறது (1 மக் 16:15-16). இக்கோட்டையை யோசிப்பசு தாகோன் என்றழைக்கிறார். இது தற்போது எரிகோவின் வடமேற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ள அயின்துக்கு என்ற சிறு நீரோடையாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

**தோசித்தேயு (DOSITHEUS)**

1. யூதா மக்கபேயு படைகளில் ஒரு தலைவன். இவனும், சோசிபத்தாரும் திமொத்தேயுவையும் அவன்வசம் இருந்த கோட்டையையும் கைப்பற்றினர். ஆனால் திமொத்தேயுவைச் சிறைப் பிடிக்கவில்லை (2 மக் 12:19.24-25).

2. பாக்கனோரின் வலிமை மிக்க குதிரை வீரன். இவன் கொரிசுக்கியாவை உயிரோடு பிடிக்க வேண்டுமென எண்ணினான். ஆனால் திராக்கைச் சேர்ந்த ஒரு குதிரைவீரன் இவன்மீது பாய்ந்து இவன்தோளை வெட்டிக் காயப்படுத்தியதால், அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை (2 மக் 12:35).

3. ஒரு லேவியக் குரு. பூரிம் திருவிழா குறித்து மொர்தக்காய் அளித்த கடிதத்தைத் தம் மகன் தோலமியோடு எகிப்துக்குக் கொண்டு சென்று அளித்தவர் (எஸ்த 11:1).

**தோசேத்திசம் (DOCETISM)**

புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் அதற்குப்பின்னும் திருச்சபையின் சில பிரிவினரிடையே பரவலாக இருந்த ஒருவகைக் கோட்பாடு. இதன்படி, கிறிஸ்து ஊனுடல் எடுக்கவில்லை. மனித அவதாரம் வெறும்

தோற்றமே. இறைத்தன்மையுடைய கிறிஸ்து மனித இயேசுவின்மேல் அவர் திருமுழுக்குப் பெற்றபோது இறங்கி வந்தார்; பாடுகளுக்கு முன் அவரைவிட்டு அகன்றுவிட்டார்; மனித இயேசுவோடு ஒருபோதும் ஒன்றானதில்லை. இயேசுவின் பாடுகள், மரிப்பு, உயிர்ப்பு ஆகியவற்றில் இறைத்தன்மையுடைய கிறிஸ்து பங்கெடுக்கவில்லை.

இக்கோட்பாடு ஞானவாதக் கோட்பாட்டோடு தொடர்புடையது. ஞானவாதத்தின்படி, ஆன்மீக (அல்லது நல்லது) மற்றும் சடப்பொருள் (அல்லது தீமை) ஆகிய இரு இணைக்க முடியாத விதத்தில் முரண்பட்டுள்ளன. இதன்படி இறைமகன் மனித (சடப்பொருள்) உருவை எடுக்கவே முடியாது. கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றி ஐயமில்லை என்பதால் அவரது மனிதத் தன்மை மறுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின்படி, இக்கோட்பாட்டைக் கொண்டவர்கள் "இயேசுவுக்குச் சாபம்" (1 கொரி 12:3) என்று கூறி "வேறொரு இயேசுவை" (2 கொரி 11:4) அறிவிப்பர் அல்லது இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் மடமை எனக் கருதுவர் (1 கொரி 1:18).

புதிய ஏற்பாட்டில், இக்கோட்பாட்டுக்கு எதிராக யோவான் தம் நற்செய்தியின் முன்னுரையிலும் தம் திருமுகங்களிலும் போராடினார். யோவா 1:14-இல் "வாக்கு மனிதன் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்" என்றும், 1 யோவா 4:2-இல் "ஊன் உருவில் வந்த இயேசு கிறிஸ்து" என்றும், 2 யோவா 7-இல் "ஊன் உருவில் வருகிற இயேசு கிறிஸ்து" என்றும் யோவான் போதித்தார்.

**தோட்டம் (GARDEN)**

பல்வேறு தேவைகளுக்கு, பொதுவாக விவசாயத்திற்கும், பொழுதுபோக்கிற்கும், அழகிற்கும் பயன்படும் விதத்தில் வேலி சூழப்பட்ட இடமாகும். இந்த வேலி கற்களாலோ செங்கலாலோ கட்டப்பட்டிருக்கலாம்; அல்லது, முள் வேலியாக இருக்கலாம்.

பழங்கால மேற்காசியாவில் செல்வந்தர்களும் செல்வாக்குடையவர்களும் தங்கள் வீட்டைச் சுற்றிப் பரந்த தோட்டங்கள் கொண்டிருந்தனர். இவை நீர் பாய்ச்சப்பட்டன (எசா 58:11). தங்குமிடமும் கட்டப்பட்டிருந்தன. அரச மாளிகை பரந்த தோட்டத்தையோ பூங்காவையோ (காண்க. 2 அர 25:4) கொண்டிருந்தது.

ஏதேன் தோட்டந்தான் விவிலியத்தில் முதன்முதலில் குறிக்கப்படும் தோட்டம் (ஆதி 2-3). பூக்கள், காய்கறிகள், மணச்செடிகள், பழமரங்கள் முதலியவை தோட்டங்களில் பயிரிப்பட்டன (1 அர 21:2; உ.ச. 5:1; 6:2; எரே 29:5; ஆமோ 9:14). மேலும் தோட்டங்கள் நிழலுக்காகவும் நடைப்பயிற்சி பெறவும், விருந்துகள் நடத்தவும் பயன்பட்டன. தோட்டத்தில் குளிக்க ஒரு குளமும் அமைந்திருக்கலாம் (தானி 13:7. 15-17). எகிப்தின் தோட்டங்களுக்கு நைல் நதியிலிருந்து நீர் பாய்ச்சப்பட்டன (உப 11:10). தொல்பொருள் ஆய்வுகள் பாலஸ்தீனத்தில் பலவகை நீர்பாய்ச்சும் அமைப்புகளைக் காட்டுகின்றன (காண்க. எசா 58:11; எரே 31:12). தோட்டங்கள் சவங்களை அடக்கம் செய்யும் இடமாகவும் பயன்படலாம் (2 அர 21:18.26; யோவா 19:41). இஸ்ராயேலர் காலத்தில் பிறமத பலி செலுத்தும் இடமாகவும் பயன்பட்டன (எசா 1:29; 65:3; 66:17).

உருவகமாகத் தோட்டங்கள் செழிப்பின் (யோபு 8:16; எசா 51:3; மீக் 7:14) அல்லது பாழ்நிலையின் (ஆமோ 4:9) அடையாளமாகப் பயன்பட்டன. எசா 58:11; எரே 31:12-இல் மீட்கப்பட்டோரின் வாழ்வு நன்கு நீர் பாய்ச்சப்பட்ட தோட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

**தோதவா ( DODAVAHU** - யாவேயின் அன்புக்குரியவர்)

இறைவாக்கினர் எலியேசரின் தந்தை. இவர் யூதாவில் மாரேசாவைச் சேர்ந்தவர் (2 நாள் 20:37). தோது இப்பெயரின் சுருக்கமாக இருக்கலாம். இது 2 சாமு 23:9-இல் "தோதுவின் மகன் எலியேசர்" என்று குறிக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம்.

**தோதாய் ( DODAI** - யாவேயால் அன்பு செய்யப்பட்டவர்)

ஓர் அகோகியர். தாவீதின் படையில் இரண்டாம்

பிரிவின் படைத்தலைவர் (1 நாள் 27:4). 2 சாமு 23:9; 1 நாள் 11:12-இல் குறிக்கப்பட்டுள்ள தோதுவும் (2) இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**தோதானீம், தோதானியர்** ( **DODANIM** - தலைவர்கள்)

அயோனிய மக்கள் யாவானின் வழித்தோன்றல்கள் (ஆதி 10:4; 1 நாள் 1:7). சில வாசகங்களில் 1 நாள் 1:7-இல் ரோதனிம் அதாவது ரோதேயைச் சேர்ந்தவர்கள் என்று இச்சொல் மொழிபெயர்க்கப்படுகிறது.

**தோது** ( **DODO** - அன்பு செய்யப்பட்)

1) இஸ்ராயேலின் தொடக்க வரலாற்றில் இசக்கார் குலத்திலிருந்து தோன்றிய தோலா என்ற சிறிய நீதிபதியின் பாட்டனும் பூவாவின் தந்தையும் ஆவார் (நீதி 10:1).

2) ஓர் அகோகியர். தாவீதின் வலிமை மிக்க மூன்று வீரர்களில் ஒருவரான எலயாசரின் தந்தை (2 சாமு 23:9; 1 நாள் 11:12). இவரும், 1 நாள் 27:4-இல் வரும் தோதாயும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3) பெத்லகேமைச் சேர்ந்தவர். தாவீதின் வலிமைமிக்க முப்பது வீரர்களுள் ஒருவரான எல்கானானின் தந்தை (2 சாமு 23:24; 1 நாள் 11:26).

**தோத்தான்** ( **DOTHAN** - இரு கிணறுகள்)

யூசேயுபுவின் கூற்றுப்படி, சமாரியாவுக்கு வடக்கில் 12 உரோமையர் மைல் தொலைவிலுள்ள ஒரு நகரம். இவ்விடம் செக்கேமுக்கு வடக்கில் 22 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தெல்-தோத்தா என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இஃது இஸ்ரியேல் பள்ளத்தாக்கு வழியாகச் சென்ற பழங்கால முக்கிய பெருஞ்சாலையில் அமைந்திருந்தது.

செம்புக் காலத்திலேயே (கி.மு. 3000) இங்கு மக்கள் குடியேறியிருந்தாலும், விவிலியத்தில் தவிர வேறு மூலங்களில் இவ்விடம் குறிக்கப்படவில்லை. தோத்தான் மேய்ச்சல் நிலத்தில்தான் யோசேப்பு தன் சகோதரர்களைக் கண்டார். அவர்கள் அவரை முதலில் ஒரு பாழுங்கிணற்றில் போட்டனர். பின்பு இசுமயேல் வியாபாரிகளிடம் விற்றனர் (ஆதி 37:17 தொ).

இஸ்ராயேலர்நாடு பிளவுபட்ட காலத்தில், இறைவாக்கினர் எலிசாவைப் பிடிக்க, சீரிய அரசன் பெனதாது இந்நகரை முற்றுகையிட தனது தேர்களையும் படையையும் அனுப்பினார் (2 அர 6:13-14). நெபுக்கதுனேசரின் தளபதி ஒலபெரினே யூதேயாவைத் தாக்கியபோதும் இவ்விடம் குறிக்கப்படுகிறது (யூதி 3:9;4:6). பெத்தூலியாவை வேவுபார்த்தபோது அவருடைய படை இங்கு தான் பாளையம் இறங்கியிருந்து (7:3).

அகழ்வாய்வுகள் ஒரு நகரச் சுவரையும் தொடக்க வெண்கலக் காலத்தைச் சேர்ந்த குடியிருப்புகளின் ஏழு மட்டங்களில் சான்றுகளையும் காட்டியுள்ளன. மத்திய வெண்கலக்காலத்திலும் முதல் இரும்புக் காலத்திலும் இந்நகரம் மிகவும் செழிப்புற்று இருந்தது. நகரச் சுவருக்குள் அமைந்த உட்கோட்டையும், பல கைவினைப் பொருள்களுடன் கூடிய ஒரு குடும்பக் கல்லறையும் முக்கியமான கண்டுபிடிப்புகளாகும். இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த விரிவான கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இவை இஸ்ராயேலர் அரசர்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றில் சில வீதிகளும், வீடுகளும் ஒரு பெரிய நிர்வாகக் கட்டடமும் அடங்கும். மூன்றாம் திகிலத்பிலேசருடைய படையெடுப்போடோ (கி.மு. 732), சமாரியாவின் வீழ்ச்சியோடோ (721) தொடர்புடைய அழிவுகளின் சான்றுகள் உள்ளன. சிறிது காலத்திற்கு அசீரியர்கள் இங்குத் தங்கியபின் ஏழாம் நூற்றாண்டிலிருந்து இந்நகரம் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. கிரேக்கர்கள் காலத்தில் ஒரு சிறு குடியிருப்பு நிறுவப்பட்டது.

**தோபஅதோனியா** ( **TOBADONIJAH** - என் ஆண்டவர் யாவே நல்லவர்)

இவர் அரசன் யோசபாத்தால் யூதாவின் மக்களுக்குச் சட்டத்தைக் கற்றுக்கொடுக்க

அனுப்பப்பட்ட லேவியர்களில் ஒருவர் ஆவார் (2 நாள் 17:8). இது முன் வந்த அதோனியா, தோபியா ஆகிய இருபெயர்களையும் சேர்த்து மறுபடியும் கூறப்பட்ட, பிரதி எடுப்பாளரின் பிழையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**தோபித்து** ( TOBIT - என் நன்மை)

நப்தலி இனத்தைச் சேர்ந்தவர்; அசியேல் வழிவந்த தோபியேலின் மகன். கலிலேயாவிலுள்ள திசிபேயிலிருந்து நினிவேக்கு நாடுகடத்தப்பட்டவர் (தோபி 1:1-2). பக்தியுள்ள ஒரு யூதர்; குருடாகிறார். இவரது மகன் தோபியாவின் வழியாக வானதூதர் இரப்பாயேலால் குணப்படுத்தப்படுகிறார் (ஆதி. 2; 11:1-15). காண்க. தோபித்து நூல்.

தோபித்து நூல்

**1. முன்னுரை:** இந்நூல் யூத குடும்பவாழ்வு பற்றிய ஒரு போதகக் கதையாகும். சிதறிக் கிடந்த யூதர்களிடையே வாழ்ந்த இரு குடும்பங்களுடைய நலன்களின் எழுச்சி - வீழ்ச்சிகளை விவரிக்கிறது. இரு குடும்பங்களின் விசுவாச வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்து, துன்பங்களுக்கிடையிலும் யூதவிசுவாச வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டான கதையை அளிக்கிறது இந்நூல்.

2. பெயர்: இந்நூல் எபிரேயத்தில் "தோபியின் நூல்" என்றும், அரமேயிக்கில் "தோபியாவின் வரலாறு அல்லது செயல்கள்" என்றும் அழைக்கப்படுகிறது. "தோபித்" என்ற கிரேக்கப் பெயர் எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமும் அரமேயிக்குப் பெயரின் குறுகிய வடிவமும் ஆகும். "தோபி" என்பதற்கு "என் நன்மைத் தன்மை" என்றும் "தோபியா" என்பதற்கு "யாவேயின் நன்மைத்தன்மை" என்றும் பொருள் கூறலாம்.

வுல்கத்தா பாரம்பரியம் தந்தையையும் மகனையும் தோபியாஸ் என்ற ஒரே பெயரால் குறிக்கிறது. சில ஆங்கில மொழி பெயர்ப்புகள் தந்தையைத் "தோபித்து" என்றும், மகனைத் "தோபியா" என்றும் குறிக்கின்றன. நாம் இக்கட்டுரையில் தந்தையைத் தோபித்து என்றும் மகனைத் தோபியா என்றும் குறிப்பிடுவோம்.

**3. வாசகங்கள்:** இந்நூல் முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டது என்பது பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. ஆய்வாளர்கள் அவரவர் கருத்துக்கேற்பப் பல அகப்புறச் சான்றுகளைக் காட்டுவர். எவையும் மன நிறைவு தருவதாயில்லை.

ஒரு குழுவினர்- மூலத்தில் இந்நூல் செமித்திய வாசகம் கொண்டிருந்தது என்பர். இவர்களிலும் இரு சாரார் உண்டு. ஒரு சாரார்- மூலநூல் அரமேயிக் மொழியிலும், மற்றொரு சாரார்- எபிரேயத்திலும் தோன்றியது என்பர். இப்போது பெரும்பாலான ஆய்வாளர்கள் இந்நூலின் மூலவாசகம் அரமேயிக் மொழியில் தோன்றியது என்று கருதுவர். கும்ரான் ஏடுகளில், இந்நூலின் மூன்று அரமேயிக்குத் துணுக்குகளும் ஓர் எப்ரேயத் துணுக்கும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் சேர்ந்து நூலின் ஏறக்குறைய பாதிவாசகத்தைக் கொண்டுள்ளன.

இதற்கு மாறாக வேறொரு குழுவினர்- இந்நூல் முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது என்பர். கும்ரான் ஏடுகள் கண்டெடுக்கப்பட்டபின் இந்நிலைக்கு அவ்வளவு ஆதரவு இல்லை. கிரேக்க வாசகத்தில் காணப்படும் செமித்தியப் பண்புகள் அரமேயிக் அல்லது எபிரேய மூலவாசகத்தைச் சுட்டுகின்றன. புனித எரோனிமு அரமேயிக் வாசகத்தைப் பயன்படுத்தியுள்ளார்; யூதர்கள் எபிரேய மொழியில் இந்நூலைக் கொண்டிருக்கவில்லை என்று கூறுகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், இந்நூல் மக்களது மொழியாகிய அரமேயிக்கில் முதலில் தோன்றி, அதிலிருந்து எபிரேய, கிரேக்க வாசகங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இந்நூலின் வாசகம் சிறந்த முறையில் கிரேக்க மொழியில்தான் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பல வாசக வேறுபாடுகள் உண்டு. இதில் இரண்டு பதிப்புகள் முக்கியமானவை. ஒன்று- சினாயிடிக்கஸ் ஏடு. இது நீளமானது,

மற்றவற்றை விடச் சிறந்தது. பிற்காலத்தில் பல மொழிபெயர்ப் புகள் இதைப்பயன்படுத்தியுள்ளன. மற்றது வத்திகான்–அலெக்சாந்திரினுஸ் ஏடு. இது குறுகியது. மூல செமித்திய வாசகத்தை அவ்வளவு சிறப்பாகக் கொண்டிருக்கவில்லை. இரண்டு ஏடுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஒன்றும் உறுதியாகக் கூற முடியாது. இரண்டுக்குமிடையே சொற்றொகுதியிலும் அமைப்பிலும் பரவலாகக் காணப்படும் ஒற்றுமை, இவை ஒன்றையொன்று தழுவி அமைந்துள்ளன என்று காட்டுகிறது. ஆனால் இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் இரண்டுக்கும் பொதுவான மற்றொரு கிரேக்க வாசகம் இருந்திருக்கலாம் என்றும், செமித்திய ஏட்டுப் பாதிப்பும் இருந்திருக்கலாம் என்றும் சுட்டுகின்றன. கிரேக்க வாசகங்களுக்கும் சாதகமான நிறைகளும், பாதகமான குறைகளும் உண்டு. ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வில் இரண்டையும் ஏற்றுக் கொள்வர்.

புனித எரோனிமு அரமேயிக்கிலிருந்து நேரடியாக இலத்தீனில் மொழிபெயர்த்த வாசகத்தை வுல்கத்தா வாசகம் தன்னுடையதாக ஏற்றுக்கொண்டது. இந்நூல் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்ததன்று என்று எரோனிமு கருதியதால் இதை மொழிபெயர்க்க அவர் விரும்பவில்லை. இருப்பினும் ஆயர் நண்பர்கள் சிலரின் வேண்டுகோளுக்கு இணங்கி இம்மொழிபெயர்ப்பைச் செய்தார். "என் விருப்பத்தை அன்று உங்கள் விருப்பத்தையே நிறைவு செய்தேன்" என்று எழுதுகிறார். அரமேயிக்கில் அவருக்கு அவ்வளவு பயிற்சியில்லை. ஆகவே ஒரு யூதமொழிபெயர்ப்பாளர் அரமேயிக்கிலிருந்து எபிரேயத்தில் மொழி பெயர்த்துக்கூற எரோனிமு நேரடியாகவும் உடனடியாகவும் இலத்தீனில் மொழிபெயர்த்து எழுத்தரிடம் கூறினார் என்றும், முழு நூலையும் ஒரே நாளில் மொழி பெயர்த்தார் என்றும் அறிகிறோம். இந்த வுல்கத்தா வாசகத்தின் மொழிபெயர்ப்பையே கத்தோலிக்கத் தமிழ் விவிலியம் கொண்டிருக்கிறது.

### 4. திருமுறைப்பட்டியலில் தோபித்து நூல்:

யூதர்களின் எபிரேய விவிலியப் பட்டியலில் இந்நூல் சேர்க்கப்படவில்லை. எழுபது நூல் தொகுப்பில் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பிற்கால யூதர்கள் இந்நூலை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக அமைந்தது. இருப்பினும் இந்நூல் யூதர்களிடையே எப்போதும் உயர்வானதாகக் கருதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஜுபிலி சுவடிகள் மற்ற யூத நூல்களிலும், மிட்ராஷ்களிலும் காணப்படுகின்றன. கும்ரான் குழுவினர் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளனர். புதிய ஏற்பாட்டில் இந்நூலிலிருந்து சில சுட்டிக்காட்டல்கள் உள்ளன. ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்நூலை அறிந்திருந்தனர். எழுபது நூலின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இதை இணைத் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளத் திருச்சபைத் தந்தையர் பலர் தயங்கியுள்ளனர். புனித எரோனிமு இந்நூலைத் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளவில்லை. எருசலேம் சிரில், எப்பிபானெஸ், கிரேகோரி; நாசியான்சன் போன்றோர் தங்கள் பட்டியலிலிருந்து இந்நூலை நீக்கிவிட்டனர். திருச்சபைத்தந்தையரும் இந்நூலுக்கு விளக்கவுரை எழுதவில்லை. ஆனால் திருச்சபையின் தொடக்கத்திலிருந்து இந்நூல் வாசிக்கப்பட்டுள்ளது; எடுத்துக்காட்டாகப் பயன்பட்டுள்ளது. திதாக்கே என்ற போதக நூலிலும், போலிக் கார்ப்பு, "2-ஆம் கிளமந்து" அலெக்சாந்திரியா கிளமந்து, ஓரிஜன், ஹிப்போலிட்டஸ், அத்தனேசியஸ், அம்புரோஸ் மற்றும் பலரது நூல்களிலும் இந்நூல் சுட்டுக்காட்டப்படுகிறது; அல்லது எடுத்துக் காட்டாகப் பயன்படுகிறது. சிப்ரியன் இந்நூல் பற்றிய சுருக்கமான மறையுரைத் தொடரைத் தருகிறார். மேற்குத்திருச்சபையில் கி.பி. 382-இல் நடந்த உரோமைச் சங்கத்திலிருந்தும் கிழக்குத் திருச்சபையில் 682-இல் நடந்த கான்ஸ்டாண்டி நாபோலிஸ் பொதுச்சங்கத்திலிருந்தும் அதிகாரபூர்வமான திருமுறைப்பட்டியலில் இந்நூல் காணப்படுகிறது. 393-இல் கார்தேஜில் நடந்த

தலத்திருச்சபைச் சங்கங்களிலும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிளாரென்ஸ், திரிதிந்தீன் ஆகிய இடங்களில் நடந்த திருச்சபையின் பொதுச்சங்கங்கள் இந்நூலை இறை ஏவுதல் பெற்ற நூலாக ஏற்று அதிகாரபூர்வமான திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொண்டன. கத்தோலிக்கத் திருச்சபை இந்நூலை இணைத் திருமுறைப்பட்டியலைப் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளுகிறது. ஆங்கிலத் திருச்சபையும் இதை ஏற்றுத் தனது வாசகங்களில் பயன்படுத்துகிறது. மற்றப் பிரிவினைச் சகோதரர்கள் இந்நூலைத் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்வதில்லை. காலப்போக்கில் அவர்களுடைய விவிலியத்தி லிருந்து இந்நூல் நீக்கப்பட்டது.

கிரேக்க விவிலியத்தில் தோபித்து, யூதித்து, 'எஸ்தர்' என்ற வரிசையில் அவற்றோடு இந்நூல் தொகுப்பாகிறது. ஆனால் இத்தொகுப்பு வெவ்வெறு விவிலிய ஏடுகளில் வெவ்வேறு இடங்களில் வருகின்றது. சினாயிடிக்கஸ் ஏட்டில் வரலாற்று நூல்களுக்குப் பின்னும், வத்திக்கான் ஏட்டில் ஞானநூல்களுக்குப் பின்னும், அலெக்சாந்திரினுஸ் ஏட்டில் இறைவாக்கினர் நூல்களுக்குப் பின்னும் வருகிறது. வுல்கத்தா வாசகத்தில் வரலாற்று நூல்களுக்குப்பின் இடம் பெறுகிறது. கத்தோலிக்கத்தமிழ் வாசகம் இந்த வரிசையையே பின்பற்றுகிறது.

**5. ஆசிரியர், இடம், காலம்:** ஆசிரியரைப் பற்றியும் நூல் தோன்றிய இடம் பற்றியும் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் கதை நடப்பதாகக் கூறப்படும் இடத்தின் புவியமைப்பு ஆசிரியரது சொந்தக் கற்பனையாகத் தெரிகிறது. மெசபொத்தாமியா நாட்டுக் குடிமகன் எக்பத்தானுக்கும் இராகியுவுக்கும் உள்ள உயர வேறுபாட்டை அறியாதிருப்பாரா (5:8)? இரு நகரங்களுக்குமிடையிலுள்ள தூரம் இரண்டு நாள் நடைதூரமன்று, ஏறக்குறைய 185 மைல் தூரம் என்று அறியாரா? நினிவேயிலிருந்து எக்பத்தானுக்குச் செய்யும் பயணம் திகிரிஸ் நதியை நோக்கிச் செல்லாது என்பதை அறிந்திருக்க வேண்டுமே (6:7)? இவற்றில் எல்லாம் நூல் தவறான செய்திகளையே அளிக்கிறது.

இந்நூலில் காணப்படும் பின்னணி சிதறிக்கிடந்த யூதர்களிடையே நிலவிய நிலையைப் பிரதிபலிக்கிறது என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். இந்நூலுக்குச் செமித்திய மூலம் உண்டு என்று கருதுபவர்கள் இது மெசபொத்தாமியாவில் தோன்றியிருக்கலாம் என்பர். நூலில் காணப்படும் பேய்கள், மாயவித்தைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் இந்நூல் பாலஸ்தீனத்துக்கு வெளியில் ஒரு சுதந்தரச் சூழ்நிலையில் தோன்றியிருக்கக் கூடும் என்று சுட்டுகின்றன. காலப்போக்கில் இந்நூல் எகிப்தில் தோன்றியது என்ற கருத்து வலுப்பெற்றது. இக்கருத்து நூலின் பொருளடக்கம், பயன்படுத்தியிருக்கும் மூலங்கள், கிரேக்கப் பாதிப்பு, ஆசிரியர் கீழைய நாடுகளின் வரலாற்றையும் புவியமைப்பையும் அறியாமை ஆகியவற்றை விளக்கக் கூடியது என்று கருதினர். நூலில் காணப்படும் கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாலஸ்தீன அரமேயிக்கு, எபிரேய வாசகங்கள், மொழிபெயர்ப்புகள் முதலியவை இந்நூல் பாலஸ்தீனத்தில் தோன்றியது என்று கருதத் தூண்டியதுண்டு.

காலத்தைப் பொறுத்தமட்டும், இந்நூல் நாடு கடத்தலுக்கு மிகப் பிந்தித் தோன்றியதாகத் தெரிகிறது. ஆசிரியர்களது வரலாறு பற்றிய பல தவறுகள் நூலில் காணப்படுகின்றன. ஆகவே இவை கதை நடந்ததாக விவரிக்கப்படும் காலத்தில், தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. இத்தவறுகள் பற்றிப் பின்பு பார்ப்போம். இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பிற்கால ஆலயம் பற்றிய செய்திகள் (14:7): குருக்களுக்கும் லேவியர்களுக்கும் அளிக்க வேண்டிய தசமபாகம் பற்றிய செய்தி (இவ்வழக்கு இரண்டாம் ஆலயகாலத்தில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது) (5:14): பழைய ஏற்பாட்டு வாசகங்கள் பயன்பட்டிருக்கும் முறை, குறிப்பாக இறைவாக்குகளிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கொண்டிருப்பது: நாடுகடத்தப் பட்டபின்பு

தோன்றிய ஞானநூல்களுக்கும் குறிப்பாகச் சீராக்கு நூலுக்கும், இந்நூலுக்கும் உள்ள ஒற்றுமை - இவை இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குச் சான்றாக அமைகின்றன. மேலும் இந்நூல் கி.மு. 200-க்கு முன் தோன்றியிருக்க முடியாது என்றும் காட்டுகின்றன. அந்தியோக்கு, எப்பிபானின் ஆட்சியில் யூதர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையை நூல் கி.மு. 170-க்கு முன் தோன்றியிருக்க வேண்டும். மெசியாகாலம் பற்றிய விவரிப்பு, உயிர்ப்பு, அழியாமை ஆகியவை பற்றிய விசுவாசத்தோடு கூடிய காட்சி இலக்கிய வளர்ச்சி முதலிய கோட்பாடுகள் நூலில் காணப்படாமை, பிற்காலத்தில் தோன்றிய பரிசேயர், சதுசேயர் குழுக்களின் கோட்பாடுகள் காணப்படாமை ஆகியவை இந்நூல் கி.மு. 170-க் குப்பின் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. ஆகவே இந்நூல் கி.மு. 200-170-க்கு இடையில் தோன்றியிருக்க வேண்டும் என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் முடிவாகும்.

**6. வரலாற்றுத் தவறுகள்:** இடம், காலம் பற்றிய பிரச்சினைகளோடு, இந்நூலின் வரலாற்றுத் தன்மை பற்றிய பிரச்சினையும் சேர்ந்து சிக்கல் உண்டாக்கியது. லூத்தர் போன்றோர் இந்நூலின் வரலாற்றுத் தன்மை பற்றி ஐயம் எழுப்பினர். நூலில் காணப்படும் வரலாற்றுத் தவறுகள், நூல் விவரிப்பதாகக் கருதப்படும் காலத்தில் இந்நூல் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. சிலர் இத்தவறுகளை விளக்கிக் காட்ட முயன்றுள்ளனர்; ஆனால், வெற்றி பெறவில்லை. தம் நூலுக்குப் பின்னணியாகப் பயன்படுத்திய வரலாற்றின் துல்லியம் பற்றி ஆசிரியர் அதிகம் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. கி.மு. 734-இல் நெப்தலிப் பகுதியைக் கைப்பற்றி அங்கு வாழ்ந்த யூதர்களை அசீரியாவுக்கு மூன்றாம் திகிலத்-பில்னேசர் (744-727) நாடு கடத்தினான். சல்மனேசர் (726-722) அல்லன் (2 அர 15:29; தோபி 1:2). ஆசிரியரது கருத்துப்படி, அசீரிய அரசமரபு சல்மனேசர், சனகெரிபு, ஏசர்கத்தோன் என்ற வரிசையில் தரப்பட்டுள்ளது (1:18). சனகெரிபுவின் உண்மையான தந்தையான சார்கோன் (722-705) குறிப்பிடப்படவில்லை, சில வாசகங்களில் காணப்படுவதுபோல், நினிவேயைக் கைப்பற்றுவதில் அகசுவேர், நெபுகத்னேசர் ஆகியவர்களை விட சியாக்சரேஸ், நெபோபோலாசர் ஆகியோர் பொறுப்பாளர்கள் ஆவார். தாவீது-சாலமோன் அரசு கி.மு. 931-இல் இரண்டாகப் பிரிந்து போயிற்று. இந்நிலையில் 1:5-இலும் 14:6-இலும் வரும் குறிப்புகள் ஒத்துப் போகவில்லை. ஏனெனில் 14:6-இன்படி நினிவேயின் அழிவுக்குப் பின்தான் (612) தோபித்து மரிக்கிறார். இந்த வரலாற்றுத் தவறுகளும் முன்பே கூறப்பட்ட இடங்கள் பற்றிய தவறுகளும் சேர்ந்து, நவீனக் கருத்துப்படி இந்நூல் வரலாற்றுத் தன்மையுடையதன்று என்று காட்டவல்லன. அதில் ஆசிரியர் அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை. அவர் எழுதிய நூல் மிட்ராஷ் வகையைச் சேர்ந்த சமயப் புதினமாகும் என்பதைப் பின்பு பார்ப்போம்.

**7. இந்நூலைப் பாதித்தவை:**

அ. பிற இனப் பாதிப்பு: பழம் மேற்காசியாவில் ஞானியாகக் கருதப்பட்ட அகிக்கார் என்பவருடைய கதை இந்நூலை ஓரளவு பாதித்திருப்பதாகத் தெரிகிறது. இவரைப் பற்றிய கதைகள் பலவடிவங்களில் பல மொழிகளில் காணப்படுகின்றன. அவற்றுள் காலத்தால் முந்தியவை கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எலிபென்டைன் அரமேயிக்கு ஏடுகளாகும். இக்கதைகளைத் தோபித்து நூலின் ஆசிரியரும் வாசகர்களும் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. அகிக்கார் சனகெரிபின் அமைச்சராவார். அவருக்கு நாடன் என்ற உறவினன் இருந்தான். இவனை அகிக்கார் தத்து எடுத்துத் தமது வாரிசாக வளர்த்துத் தமக்குப்பின் பதவிக்கு வருபவனாகத் தயாரித்தார். நாடன் வரம்பு மீறி வாழ்ந்தான். நன்றி கெட்டவனாக அகிக்காருக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தான். அவருக்கு எதிராகப் பொய்க்குற்றம் சாட்டி அவருக்கு இழிவு உண்டாக்கினான். அகிக்கார் கொலைத் தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டார். ஆனால் அத்தண்டனையை நிறைவேற்றுபவன் அவரது

நண்பன். அவன் அவரை மறைத்துவைத்துப் பாதுகாத்தான். எகிப்தியரோடு போர் தொடங்கியபோது அகிக்கார் மட்டுமே கொடுக்கக்கூடிய ஆலோசனை அரசனுக்குத் தேவைப்பட்டது. ஆகவே அச்சமயத்தில் கொலையை நிறைவேற்றுபவன் அகிக்காரை அரசன் முன் கொண்டுவந்தான். அரசனும் தனது தண்டனைத் தீர்ப்பைப்பற்றி வருந்தினான். மகிழ்ந்து அவரைப் பயன்படுத்தினான். அகிக்கார் தமது மதியால் எகிப்திய மன்னனை வென்றபின் மகிமையோடு நாடு திரும்பினார். நாடன் மக்களால் பழித்துக் கூறப்பட்டு, கைதியாக்கப்படுகிறான். சிறையில் ஊதி, வெடித்து, மிகக்கேவலமாக மடிகிறான். இவ்வாறு அகிக்காரின் கதை நேர்மைக்காக எண்பிக்கப்பட்டவரது வரலாறு ஆகும். இக்கதையின் அடிப்படையில் இந்நூலில் வருபவர்கள் பற்றிய குறிப்புகளைப் புரிந்து கொள்ளலாம்.

கிரேக்க வாசகம் அகிக்கார், நாடன் ஆகியோரைப் பல தடவை குறிக்கிறது. வுல்கத்தா வாசகம் ஒரே ஒருதரம் 11:20-இல் "அகிக்காரும் நாதாபும்" என்று குறிக்கிறது. கிரேக்க வாசகம், 1:21-இல் அகிக்கார் சனகெரிபு, ஏசர்கத்தோன் ஆகியோரின் அமைச்சராவார்; தோபித்தின் உறவினராவார்; 2:10-இல் அகிக்கார் தோபித்தைப் பாதுகாக்கிறார்; பின் எலிமாயிவுக்குப் போகிறார்; 11:10-இல் அகிக்காரும் நாதாபும் திருமணக் கொண்டாட்டத்தில் பங்கு பெறுகின்றனர்; 14:10-இல் தத்து மகனான நாதாபின் சூழ்ச்சியிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என்று கூறப்படுகிறது. இங்கு ஞானியான அகிக்காரைப் போற்றும் கதை பற்றிய குறிப்பைக் காண்கிறோம். ஆசிரியர் தம் கதையில் அகிக்காரைத் தோபித்தின் உறவினனாக அறிமுகப்படுத்துவது, ஏற்கெனவே நன்கு அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கதையோடு தமது கதையை இணைத்துத் தமது கதைத் தலைவரின் புகழை மிகுதியாய்க் கூறுகிறார் எனலாம். ஒரு வேளை ஆசிரியர் தோபித்தை ஒரு யூத அகிக்காராக எண்ணியிருக்க வேண்டும். ஒரு பழங்கதையின் ஒழுக்கப் பாடத்தைத் தமது மக்களின் மொழியிலும் சிந்தனை வடிவிலும் எடுத்துக்கூற விரும்பியிருக்கலாம் பல ஞானமிக்க கூற்றுக்கள் வருகின்றன. அவற்றிற்கு இணையான கூற்றுக்கள் தோபி 4-இல் காணப்படுகின்றன.

தோபித்து நூலின் ஆசிரியர் "நன்றியுள்ள இறந்தவரது கதை" என்ற ஒரு கதையை அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இதுவும் பலரால் அறியப்பட்டது; பல வடிவங்கள் உள்ளன. இதன் சாதாரண வடிவில், பயணம் செய்யும் ஒரு வணிகன், தனக்கு வரவிருக்கும் ஆபத்தையும் பார்க்காது, ஒரு கடன்காரரை மீட்டு நல்லடக்கம் செய்கிறார். பின்பு மறைபொருள் மிக்க அன்னியன் வணிகனுக்கு உதவிசெய்து ஒரு கொடிய ஆபத்திலிருந்து வணிகனைக் காப்பாற்றி அவனுக்கு ஒரு மணமகளையும் காப்பாற்றி ஒழுங்கு செய்கிறான். இறுதியில் அந்த மறை பொருள் மிக்க அன்னியன், வணிகன் அடக்கம் செய்தவனின் ஆவியேயாகும் என்று வெளிப்படுத்தப்படுகிறது. இக்கதையின் மற்றொரு வடிவில் மணமகள் ஓர் இளவரசியாவாள். அவளுடைய கணவர்கள் எல்லாம் ஒரு வேதாளத்தால் கொல்லப்படுகின்றனர். கதைத்தலைவன் இந்த வேதாளத்தை வென்று கொல்லுகிறார். சில சமயம் ஒரு நாய் அவனுக்கு உதவி செய்கிறது. இக்கதையை எகிப்திய வடிவில் தோபித்து நூல் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். இக்கதை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதில் ஓர் இளவரசியைப் பேய் பிடித்திருந்தது. திசிபே என்ற இடத்துத் தெய்வம் ஒரு தூதுவனை அனுப்பிப் பேயை ஓட்டிக் குணமாக்குகிறது. இக்கதைக்கு மாற்றாகவே தோபித்துநூல் கதை எழுதப்பட்டதாகச் சிலர் கருதுவர். இவை போன்று மற்றக் கதைகளும் உள்ளன. இவற்றில் மீன், கல்லீரலின் மாயசக்திகள் போன்ற விவரங்கள் உண்டு (இக்கதைகளுக்கும் தோபித்தின் கதைக்கும் உள்ள இணைத்தன்மை தெளிவாக உள்ளது). தோபித்து நூலில் இறந்தவரை அடக்கம் செய்தல் என்ற கருத்து உண்டு; ஆனால் நன்றியுள்ள இறந்தவர்க்குப் பதிலாக இரப்பாயேல் தூதன் புகுத்தப்படுகிறார். யூத விசுவாசத்திற்கேற்ப இம்மாற்றம் செய்யப்படுகிறது.

சில இடங்களில் பாரசீகப் பாதிப்பு காணப்படுகிறது. 3:15; 6:12-இல் வரும் உறவின் முறைத் திருமணம் பற்றிய குறிப்புகள் உரிமைப் பெண்கள் திருமணம் பற்றிய மோசேயின் சட்டத்தையும் கடந்து செல்கின்றன. எண் 36:8 உரிமைப் பெண்கள் தங்கள் இனத்துக்குள்ளே மணம் செய்து கொள்ள வேண்டும் எனக்கோருகிறது. ஆனால் மகளை இரத்த உறவினனுக்குத் திருமணம் செய்விக்கத் தவறிய தந்தைக்கு மரண தண்டனை அளிக்கும் சட்டம் அல்லது வழக்கம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. உரிமைப் பெண் தன் மிக நெருங்கிய உறவினைத் தான் மணக்க வேண்டியது அவசியமானதாகத் தோன்றவும் இல்லை. இருப்பினும் தோபியாவுக்குச் சாராவை மணம் செய்விக்கத்தவறினால் இரகுவேல் தண்டனைக்குரியவர் ஆவார் என்று இரப்பாயேல் உறுதியாகக் கூறுகிறார். இத்தகைய கருத்து பாரசீகப் பாரம்பரியத்திலிருந்து, கதைத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெறுமனே புகுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர். சில ஏடுகள் 3:8-இல் வரும் வேதாளத்தின் பெயர் அசுமதேயு என்று குறிப்பிடுகின்றன. இது பாரசீக எஸ்மாதேவா என்பதிலிருந்து வரலாம் என்று சிலர் கருதுகின்றனர். இருப்பினும் இப்பெயர் அழித்தல் என்ற பொருளுடைய "ஸ்மத்" என்ற அடிப்படைச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். விவிலியத்தில் தோபித்து நூலிலும் ஆயனின் காவல்நாய்கள் பற்றிய குறிப்புகளிலும்தான் (யோபு 30:1; எசா 56:10) நாய் மனிதனுக்குப் பயனுள்ளதாகவோ, நண்பனாகவோ இருப்பது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதற்கு மாறாகப் பாரசீகத்தில் நாயைப் பாதுகாக்கும் பல சட்டங்கள் உள்ளன. தோபி 5:16; 11:4-இல் வரும் குறிப்புகள் இச்சட்டங்களைப் பிரதிபலிக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேற்கூறப்பட்டவைகளிலிருந்து சில விவரங்களை ஒருங்கிணைத்துத் தோபித்து நூல் ஆசிரியர் யூத விசுவாசத்திற்கேற்பத் தமது கதையை ஆற்றலோடு அமைக்கிறார்; ஆனால், இக்கதைகளிலிருந்து எதையும் அப்படியே கடன் வாங்கவில்லை எனலாம். தோபித்து நூல் கதை ஆசிரியருடைய தனிப்பட்ட சுதந்திரமான படைப்பாகும்.

### ஆ) விவிலியப் பாதிப்பு:

உண்மையிலேயே இந்நூலைப் பாதித்துள்ளவை முந்தைய விவிலிய நூல்களாகும். கருத்துகள், நிகழ்ச்சிகள், சொற்கள், தனிப்பட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுதல், வாசக எடுத்துக்காட்டுகள் ஆகியவை விவிலியப் பாதிப்பைப் பிரதிபலிக்கின்றன. முந்தைய விவிலிய நூல்களின் ஆதிக்கம் இந்நூல் முழுவதும் பரவிக்கிடப்பதை அதிகமாகக் கூறமுடியாது. வாசக எடுத்துக்காட்டுகள்: 1:2 (2 அர 19:37); 2:6 (ஆமோ; 8:10); 4:14 (லேவி. 19:13); 8:6 (ஆதி 2:18); 13:2 (1 சாமு 2:6; ஞானம் 16:13).

சுட்டிக்காட்டுதல்கள்: 1:4 (ஞானம் 9:8); 1:5 (1 அர 12:28-30); 1:6 (உப 12:6; 16:16); 1:7 (உப 14:25-26); 1:8(உப 14:2-29) 1:10 (உப 1:8-9); 1:16-17 (எசா 58:7; எசே 18:5-9); 1:17; 4:17 (1 அர 13:28-29; நெகே 2:23; சீரா 7:33; 30:18; 38:16 தொ); 1:18 (எசா 37:36; சீரா 48:18-21; 1 மக் 7:41;2 மக் 8:19); 3:10;6:15 (ஆதி 42:38; 44:29.31); 3:11 (தானி 6:10). 3:17; 6:11;7:13 (எண் 27:8; 36:6-9); 4:3; 10:12 (யாத் 20:12; பழ 23:22; சீரா 7:27-28); 4:10 (பழ 10:2; 11:14); 4:7.16 (சீரா 14:8-9); 4:7தொ; 12:29; 14:11 (உப 15:7-11; சீரா 17:22;29:11-13;35:2); 7:3-5 (ஆதி 29;4-7); 7:11 (ஆதி 24:33); 8:6 (ஆதி 2:7.18.22); 11:5 (உப 32:39); 12:10 (ஞானம் 1:12); 13:5 (30:3; எரே 29.14); 13:11 (தானி 4:37:13:2 (ஆதி 27:2; எண் 24:9); 13:16-17 (எசா 54:11-12); 14:4.8 (யோனா 3:4); 14:4-5 (எஸ் 1:1; எரே 25:11-13; 29:19.14; தானி 9:2). இந்த நீண்ட பட்டியல் இந்நூலுக்கும் விவிலியத்தின் மற்ற நூல்களுக்குமிடையேயுள்ள தொடர்பை எடுத்துக்காட்ட வேண்டுமென்றே தரப்பட்டது. இவை ஆசிரியர், முழுமையாய் ஒரு யூதர்; தமது மக்களின் இலக்கியத்தில் மூழ்கித்தோய்ந்தவர் என்று காட்ட வல்லன.

6:12; 7:13-இல் சட்டம் வெளிப்படையாகக் குறிக்கப்படுகிறது. அதன் ஒழுங்குகளும்

நிகழ்ச்சிகளும் தோபி 1:6-இலிருந்து நூல் முழுவதற்கும் பின்னணியாக அமைகின்றன. 1:6-ஐ உப 16:16-ஓடும், தசமபாகம் பற்றிய 1:7-ஐ எண் 18:24 தொ: உப 18:3-5-ஓடும், ஏழைகளுக்கு உதவி செய்வது பற்றிய 1:8-ஐ உப 14:28-29-ஓடும், உணவு ஒழுங்குகள் பற்றிய 1:11ஐ லேவி 11; உப 13-ஓடும், ஐம்பதாம் நாள் விழாப் பற்றிய 2:1-ஐ யாத் 23:16-ஓடும், கூலியை உடனே செலுத்துதல் பற்றிய 4:14-ஐ லேவி 19:13 உப 24:15-ஓடும் ஒப்பிடுக. ஆதி 24:3 தொ; 28:1 தொ-இல் வரும் குலமுதியவர்களின் திருமணங்களை 4:12 நினைவுபடுத்துகிறது. தோபியாவின் திருமணம், வீடு திரும்புதல் ஆகியவை பற்றிய பகுதி ஆதி 24-ஐத் தழுவியுள்ளது.

நூல் முழுவதும் ஞான நூல்களின் சுவடுகள் காணப்படுகின்றன. நூல் செயல் முறையான, ஆழ்ந்த சமய போதகத்தை அளிக்கிறது. பழமொழிகள் அடங்கிய இரு தொகுப்புகள் (தோபி 4:3-19; 12:6-10; 14:8) ஆசிரியரது போதக நோக்கைக் காட்டுகின்றன. இவற்றிற்கு இணையான பகுதிகளைச் சீராக்கு நூலில் காணலாம். இதனால் இந்நூல் ஞானநூல்கள் வகையைச் சேர்ந்தது என்று கருதுவாரும் உளர்.

இவற்றில் எல்லாம் முதன்மையான, முக்கியமான பாதிப்பு உபாகமப் பாரம்பரியத்திலிருந்து வருவதாகும். நாடு கடத்தப்படுதலும், நாட்டின் அழிவும் பிரமாணிக்க மின்மை மற்றும் பதித்தின் விளைவாகும் (உப 15:15-68; தோபி 14:4). ஆயினும் தீர்ப்புக்குப்பின் இரக்கத்திற்கு இடமுண்டு (உப 30:1-4; தோபி 14:5-6). ஆண்டவரை வழிபட உரிமையுள்ள ஒரே இடம் எருசலேம் ஆலயமாகும் (உப 12:1-4; தோபி 14:5.7). உபாகமத்தின் உடன்படிக்கைச் சட்டத்தின்படி வாழ்வதைக் கதை பிரதிபலிப்பதால், இந்நூலை உபாகமத்தின் மறுகாட்சி என்றால் மிகையானது.

இவ்வாறு இந்நூலில் காணப்படும் விவிலிய நூல்களின் பாதிப்பு, பிற இனப் பாதிப்புகளை ஒன்றுமின்மையாக்கி விடுகிறது எனலாம்.

8. **இலக்கியவகை:** நிகழ்ச்சியுரை வடிவில் நூல் அமைந்திருந்தாலும் சில பாத்திரங்களின் பெயர்களைத் தவிர வேறெதுவும் வரலாற்றுத் தன்மையுடையது என்று கூறுவது கடினம். இன்றும் ஆய்வாளர்கள் சிலர் இந்நூலின் கரு வரலாற்றுத்தன்மையுடையது என்று கூறுவர். ஆனால், நூலின் வரலாற்றுச் சூழ்நிலை, கதை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தோடு ஒத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் இச்சூழ்நிலை அக்காலத்தில் கதைக்குப் பொது அமைப்பு அளிக்கிறது. ஆனால் வெறும் வரலாற்று நிகழ்ச்சிகளில் ஆசிரியர் சிறிதும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இறைவனோடும் உடன் மனிதர்களோடும் ஒருவர் கொள்ள வேண்டிய உண்மையான உறவு பற்றிப் போதிக்கும் நோக்கம் நூலில் அதிக ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகவே இந்நூல் ஒரு வரலாற்று இலக்கியம் என்பதைவிட ஒரு ஞான இலக்கியம் என்பதே மேலானதாகத் தோன்றும். இதன் வரலாற்றுத் தன்மை பற்றி எதுவும் உறுதியாகக் கூறமுடியாது; கூறவேண்டிய அவசியமும் இல்லை. வரலாறு, இடங்கள் பற்றிய ஆசிரியரின் அறியாமையை அல்லது அக்கறையின்மையைச் சுட்டிக்காட்டும் குறிப்புகளை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

கதை கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருப்பதாய்த் தோன்றினாலும் நூலில் விவரிக்கப்படும் கருத்துக்களும் சமய மரபுகளும் நாடுகடத்தலுக்குப்பின் வந்த காலத்தைச் சுட்டுகின்றன. நூல் கவனமாய் அமைக்கப்பட்ட இணையமைப்பைக் கொண்டுள்ளது. தோபித்து, அன்னா தோபியா ஆகியோர் இரகுவேல், எத்னா, சாரா ஆகியோரோடு தெளிவாக இணையாக அமைகின்றனர். தோபித்தின் சோதனையும் மன்றாட்டும் சாராவினுடையவைகளோடு இணையாய் உள்ளன. இரப்பாயேல் வேதாளத்தை ஈடு செய்கிறார். நூல் எரிச்சல் தரும் விதத்தில் நெருக்கமில்லாத, ஒட்டு வேலையாகத் தெரிகிறது. மரித்தோரை அடக்கம் செய்வது ஏன் அவ்வளவு கொடிய குற்றமாகக் கருதப்பட்டது? தோபித்து தன்

மகனுக்குத் தோழனாக ஒருவரை வாடகைக்குப் பிடிக்கும்போது குடும்பத்தைக் காப்பாற்ற அன்னா உழைக்க வேண்டுமா? 6:9-இல் கட்டிக்காட்டுவதுபோல், தங்களது உறவினன் இரகுவேல் இருப்பதைத் தோபித்தும், தோபியாவும் அறிவார்களா? சாராவின் துன்பநிலை முழுவதும் தோபியா அறிந்திருந்தானா? அதி. 7-இல் விவரிக்கப்படுவது போன்று திருமணங்கள் அவ்வளவு விரைவில் ஒழுங்கு செய்யப்பட்டவையா? ஆசிரியர் நிகழ்ச்சியுரையின் பகுதிகளைத் தமது குறிக்கோளுக்கு ஏற்ற சாதனங்களாக மாற்றி அமைத்திருப்பதாகத் தெரிகிறது. நூலின் வரலாற்றுத் தன்மைக்குச் சான்றுகள் காட்டுவதைவிட, தனது போதக நோக்கில் அதிக அக்கறை செலுத்துகிறார். இப்போதகத்தைப் பின்பு பார்ப்போம்.

ஆசிரியர் பயன்படுத்தும் இலக்கிய வடிவம் அகடிக் மிட்ராஷ் ஆகும் என்று தோன்றுகிறது. இவ்வடிவம் ஒரு வரலாற்று நிகழ்ச்சியையோ, ஆளையோ அடிப்படையாக வைத்துச் சுதந்தரமாக ஒரு நிகழ்ச்சியுரை அமைத்து வாசகர்களுக்குப் போதனை அளிப்பது அல்லது ஆன்மீக வளர்ச்சியளிப்பது ஆகும். கதையில் உற்சாகத்தையும் எதிர் பார்ப்பையும் உண்டாக்குவதற்குக் கதையை அமைப்பதில் ஆசிரியர் காட்டும் சுதந்தரம், தோபித்தின் நற்பண்புகளை விவரிப்பது (ஆதி. 1-2), முக்கிய பாத்திரங்கள் வழியாக அடிக்கடி எடுத்துக் கூறப்படும் நல்லொழுக்கம், சமயபோதகம் (3:2-6. 13-26; 4:2:23; 6:16-22; 8:7-10; 12:6-55; 13;14;6-11) ஆகிய யாவும் ஆசிரியர் ஒரு அகடிக் மிட்ராசை எழுதுகிறார் என்று போதிய மட்டும் காட்டுகின்றன. இந்நூல் ஒரு சமயப் புதினமாகும். இதுவே அனேக நவீன ஆய்வாளர்களின் கருத்துமாகும்.

இந்நூல் தனக்குரிய இலக்கியவகையில், விவிலிய இலக்கிய மணிக்கற்களில் ஒன்றாகும். இந்நூலின் கவர்ச்சியாற்றலைச் சினாயிடிக்கஸ் பதிப்பிலோ எருசலேம் விவிலியம் போன்ற அண்மையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புகளிலோ, மிகச் சிறந்த முறையில் காணலாம். இப்போது செய்யப்படும் புதிய தமிழ்மொழி பெயர்ப்பில் இக்கவர்ச்சி வெளிக்கொணரப்படும் என்று எதிர் பார்ப்போம்.

**9. ஆசிரியரின் நோக்கம்:** தோபித்து நூல் ஒரு சமயப் புதினமாகும்; இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதை வலியுறுத்துகிறது. நம்பிக்கையும் ஆறுதலும் தேவைப்பட்ட ஒரு யூத சமூகத்தைச் சித்தரிக்கிறது. நினிவே, மேதியா ஆகிய பகுதிகளில் சிதறிக் கிடந்த யூத சமூகத்திற்கு இதைச் சாற்றிக் கூறுகிறது. இரு குடும்பங்களும் புறவினத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சமாளிக்க இஸ்ராயேலின் கடந்த காலம் பாடம் கற்பிக்கிறது என்று ஆசிரியர் காட்டுகிறார். பிரமாணிக்கம் செழிப்பையும் பிரமாணிக்கமின்மை பேரழிவையும் கொண்டு வரும் என்ற உபாகமப் போதகம் உடன் படிக்கைச் சமூகத்தால் வரலாற்றில் வாழ்ந்து காட்டக்கூடிய இறையியலேதான் என்று காட்டுகிறார். அதே சமயம் அக்கால நெருக்கடி நிலையில் விசுவாசத்தின் பொருள், அதைக்கடைப் படிப்பது ஆகியவைபற்றி யூதர்கள் வியந்து கொண்டிருந்தபோது, துணிந்து வேறுவிதத்தில் வாழ்வை அமை என்று ஆசிரியர் கற்பிக்கிறார். புது இனப்பழக்க வழக்கங்களை ஏற்று அவற்றோடு ஒத்துப்போகாமல், அன்றாட உடன்படிக்கை வாழ்வில் இஸ்ராயேலின் மரபுரிமையைச் செயல்படுத்தத் தூண்டுகிறார். உடன் படிக்கை மக்களாக இருப்பது என்பது இதன் பொருளாகும்.

அதே சமயம், உடன்படிக்கை விசுவாசத்தால் வரும் மகிழ்ச்சியுணர்வை மனதில் பதியவைக்க ஆசிரியர் முயல்கிறார். பொறுப்புள்ள இடத்தில், அக்கறையுள்ள இறைவனது பிரசன்னம் இருக்கிறது. ஆகையால் தோபித்து , சாரா என்ற முக்கிய பாத்திரங்களின் வாழ்வில் இஸ்ராயேல் வரலாற்றுக்கு உருவம் அளிக்க விரும்புகிறார். அர்ப்பணிக்கப்பட்ட இந்த மக்களின் ஏற்றத்தாழ்விலும் மீட்பு வரலாற்றைத் தீட்டுகிறார். தமது மக்கள் அவநம்பிக்கையாலும், துணிவின்மையாலும் அவதிப்படும்போது, உடன் படிக்கை ஆண்டவர் தனித்து நிற்பதில்லை. சக யூதர்களின் அக்கறையாலும் அன்பாலும் அவர்

சிறப்பான முறையில் பிரசன்னமாகிறார். ஆகவேதான் தர்மம் வழங்குதல் போன்ற பழக்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. யாவேக்கு யூதர்கள் காட்டும் அர்ப்பணம் யாவேயின் சமூகத்திற்கு அவர்கள் காட்டும் அர்ப்பணத்தால் அளவிடப்படுகிறது.

10. திட்டம்:

1 **கதைக்கு மேடை அமைப்பு** (1:1-3:17).

அ) 1:1-3:6 : தோபித்தின் நற்குணங்களும் சோதனைகளும்

ஆ) 3:7-17 : சாராவின் துன்பமும் அவமானமும்.

**2. கதையின் நிகழ்ச்சிக்கூறு** (4:1-11:20).

அ) 4:1-6:18 : எக்பத்தானுக்குத் தோபியா வின் பயணம்.

ஆ) 7:1-10:13 : தோபியா – சாரா திருமணம்.

இ) 11:1-20 : வீடு திரும்புதல்.

**3. முடிவுரை** ( 12:1-14-15).

அ) 12:1-21 : வானதூதர் தம்மை வெளிப்படுத்துதல்.

ஆ) 13:1-17 : தோபித்தின் மன்றாட்டு

இ) 14:1-15 : தோபித்தின் அறிவுரையும், தோபியா, சாராவின் மகிழ்ச்சியும்.

**11. பொருளடக்கச் சுருக்கமும் குறிப்புகளும்:**

விவரங்கள் வேறுபட்டாலும் கதையின் முக்கிய பொருளடக்கத்தைப் பொருத்தமட்டும் எல்லாப் பதிப்புகளும் ஒற்றுமை கொண்டுள்ளன. நாம் கிரேக்க வாசகத்தைப் பின்பற்றி, பின்வரும் பொருளடக்கத்தைத் தருகிறோம்.

**1. கதையின் பின்னணி** (1:1-3:17).

அ) **தோபித்தின் நற்பண்புகளும் சோதனைகளும்** (1:1-3:6): இப்பகுதி ஒருவகையில் முன்னுரையாகும். இதில் தந்தையான தோபித்தின் சிறப்புகளும் துன்பங்களும் விவரிக்கப் படுகின்றன. இவற்றைச் சில பதிப்புகள் படர்க்கையிலும், மற்றவை தன்மை ஒருமையிலும் கொடுக்கின்றன.

தோபித்து இஸ்ராயேலில் நெப்பிலி குலத்தைச் சேர்ந்தவர்; திசிபே நகரில் வாழ்ந்தவர். அங்கிருந்து கி.மு. 8-ஆம் நூற்றாண்டில், அரசன் சல்மனேசர் காலத்தில் மனைவி அன்னாவோடும், மகன் தோபியாவோடும், நினிவேக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் கலிலேயாவில் வாழ்ந்தபோதே ஒரு பக்தியுள்ள யூதராகத் திகழ்ந்தார். சிலைவழிபாட்டை நீக்குதல், எருசலேம் ஆலயத்துக்குச் சென்று முதற் பலன்களையும் தசம பாகத்தையும் காணிக்கையாகச் செலுத்தி இறைவனை வழிபடுதல், பிறருக்கு உதவுதல், தர்மம் வழங்குதல் போன்ற பற்பல நற்செயல்களில் ஈடுபட்டிருந்தார். நினிவேயில் சல்மனேசரின் சலுகை பெற்று, உயர் பதவி வகித்தார். மேதியாவுக்கு அரச காரியங்களுக்காகச் செல்வதுண்டு. அங்கே இராகியுவில் கபேலிடம் ஒரு பெருந்தொகையான பணத்தை வைப்புத் தொகையாக விட்டுவந்தார் (1:1-14).

நினிவேயிலும் தோபித்து தமது நற்செயல்களைத் தொடர்ந்து செய்துவந்தார். குறிப்பாக ஏழைகளுக்குத் தர்மம் வழங்குதல், அரசன் சனகெரிபின் காலத்தில் கொல்லப்பட்ட யூதர்களை நல்லடக்கம் செய்தல் போன்ற செயல்களைச் செய்துவந்தார். கொல்லப்பட்ட யூதர்களை அடக்கம் செய்வது அரசனுக்குத் தெரியவந்தபோது, அவர் நினிவேயை விட்டு ஓடவேண்டியிருந்தது. அவருடைய உடைமைகள் எல்லாம் பறிக்கப்பட்டன (1:15-22).

ஏசர்கத்தோன், ஆட்சிக்கு வந்தபின், தோபித்தின் உறவினனும் புதிய அரசனது அமைச்சனுமான அகிக்காரின் உதவியால், நினிவே திரும்பி வந்து, மரித்தோரை அடக்கம் செய்தலைத் தொடர்ந்து செய்துவந்தார். ஒரு தடவை அப்படிச் செய்தபின் திறந்த முற்றத்திலே உறங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு குருவியின் சூடான எச்சம் அவர் கண்களில் விழுந்து அவரைக் குருடனாக்கியது. அவரது மனைவி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. வறுமையிலும் அவர் நேர்மை தவறவில்லை. ஒரு தரம் தன் மனைவி திருடியிருப்பாளோ என்று ஐயுற்றதற்கு அவள் அவரது நேர்மையை நிந்தித்து

வசைபாடுகிறாள் (2:1-14). இவ்வாறு குருடனாகவும் வறுமையிலும் நான்கு ஆண்டுகள் வருந்தியபின், நம்பிக்கையிழந்தவராய்த் தம்மை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளும்படி உருக்கமாக இறைவனிடம் மன்றாடுகிறார் (3:1-6).

இம்மன்றாட்டில் வரும் கருத்துக்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவையே ஆகும். இறைவன் உண்மையுள்ளவர்; இரக்கமிகுந்தவர். துன்பங்கள் பாவத்திற்குரிய தண்டனையே. இக்கருத்துக்கள் எசே 7:6 தொ; நெகே 8-க்கு இணையானவையாகும். இறைவன் தமது மக்களுக்கு அளிக்கும் துன்பங்களிலும் அவரது நீதியே செயலாற்றுகிறது. மரணத்துக்காக மன்றாடுதல், மோசே (எண் 11:15), எலியா (1 அர 19:4), யோபு (7:15), யோனா (4:38) ஆகியோருடைய மன்றாட்டுகளுக்கு இணையானது.

**ஆ) சாராவின் அவல நிலை** (3:7-17): அதே சமயம் மேதியா நாட்டைச் சேர்ந்த எக்பத்தானில் இரகுவேல்-எத்னா ஆகியோரின் புதல்வியான சாராவும் துன்பநிலையில் உள்ளாள். ஒருவர் பின் ஒருவராக அவள் மணந்த ஏழு கணவன்களும் அசுமதேயு என்ற தீய, பொறாமை மிக்க பேயால், திருமண அறையிலேயே கொல்லப்பட்டனர். இதைச்சொல்லி அவளது ஊர்க்காரி, சாராவை நிந்தித்து ஏசுகிறாள். இதனால் சாரா மனம் நொந்து, தன் உயிருக்கும், அவல இழிவுக்கும் விடிவு தருமாறு இறைவனைப் பார்த்து உருக்கமாக மன்றாடுகிறாள் (3:7-15). இம்மன்றாட்டு, வுல்கத்தா வாசகத்தில், நீண்டதாக உள்ளது. சாராவின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது.

தோபித்து, சாரா ஆகியோரின் மன்றாட்டுக்களை இறைவன் கேட்டு, இரங்கி அவர்களுக்கு உதவி செய்ய இரப்பாயேல் தூதரை அனுப்புகிறார் (3:16-17). இனி இரப்பாயேல் கதையை நடத்துவார்.

**2. கதையின் நிகழ்ச்சிக்கூறு:**

அ) தோபித்து தாம் சாவுக்காக மன்றாடியது கேட்கப்படும் என்று நம்புகிறார். ஆகவே தமது காரியங்களை ஒழுங்குபடுத்துகிறார். இராகியுவில் குடியிருந்த கபேலிடம் கொடுத்து வைத்திருந்த பணத்தை வாங்கிவரத் தம் மகன் தோபியாவை அனுப்ப விரும்புகிறார். வறுமையில் இப்பணத்தைப் பற்றி அவர் நினைத்துப் பார்க்கவில்லையா? கதையும் அதன் பாடலும் இறைவனின் இடையீட்டைக் கோருவதாகும். ஒரே கல்லால் பல பறவைகள் விழவேண்டும்.

மகனை அனுப்புமுன் அவனுக்குத் தோபித்து ஒரு நீண்ட அறிவுரை வழங்குகிறார். இதில் வரும் பல கருத்துக்கள் மற்ற ஞானநூல்களில் காணப்படுகின்றன (4:1-21). துணைக்குத் தோபியா ஆள்தேட, இரப்பாயேல் தூதர் "இறைவன் உதவி செய்கிறார்" அல்லது "இறை உதவியின் மகன்" என்று பொருள்படும் அசாரியா என்ற பெயரோடு நம்பத் தகுந்தவரும் வழி தெரிந்தவருமாகத் தம்மை அறிமுகம் செய்து, தோபியாவுக்கு வழிகாட்ட முன்வருகிறார் (5:4-22).

இருவரும் சேர்ந்து பயணம் செய்கின்றனர். அசாரியா வழிமட்டும் காட்டவில்லை. ஆபத்து வரும்போது எப்படிச் சந்திப்பது என்றும் கற்றுக்கொடுக்கிறார். அவர்கள் திகிரீசு நதிக்கரையில் தங்கியிருந்தபோது, தோபியாவைத் தின்னவோ, அவனது காலைக்கடிக்கவோ வருவது போல் ஒரு பெரிய மீன் துள்ளிவருகிறது. அசாரியாவின் ஆலோசனைப்படி தோபியா அதைப்பிடிக்க, அதன் இதயத்தையும், பித்தப்பையையும் ஈரலையும் பிற்காலத்தில் பயன்படுத்திப் பத்திரப்படுத்திய பின், மீதிப்பகுதியை உண்டனர். பின்பு தோபித்தின் குருட்டுத்தன்மையைக் குணமாக்கும் மருந்தையும், பேய்களை ஓட்டும் மருந்தையும் அசாரியா தோபியாவுக்குக் கற்றுக் கொடுக்கிறார் (6:1-9).

எக்பத்தானுக்குப் போகும் வழியில், அசாரியா சாராவின் அழகையும் பண்பையும் புகழ்ந்து கூறி அவளைத் திருமணம் செய்து தரும்படி இரகுவேலைக் கேட்குமாறு, தோபியாவைத் தூண்டுகிறார். உறவின் காரணமாகச் சாராவுக்கு விடப்பட்டிருக்கும் ஒரே ஒரு முறைக்கணவன், உரிமையுள்ளவன், தோபியாதான் என்றும்

சுட்டிக்காட்டுகிறார். சாராவின் அவல நிலையை எடுத்துக்கூறி திருமண அறையில் நறுமண நெருப்பில் மீனின் இதயத்தையும் ஈரலையும் எரித்துப் பேயை ஓட்டும் முறையையும் தோபியாவுக்குக் கற்றுக் கொடுக்கிறார் (6:10-18).

**ஆ) தோபியா - சாரா திருமணம்** (7:1-10:13).

எக்பத்தானை அடைந்ததும், இரகுவேல் வீட்டிற்குச் சென்று முகமன் கூறியபின், தோபியா, சாராவைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு கட்டாயமாகக் கேட்டு, அவளை மணக்கிறான். நறுமண நெருப்பில் மீனின் இதயத்தையும் ஈரலையும் போட, எழுந்த புகை, பேயை மேற்கு எகிப்திற்கு விரட்டிற்று. பின் சென்று அசாரியா அங்கு அதைக் கட்டிப் போட்டார் (8:1-3). நடந்ததை அறியாத இரகுவேல் தோபியா மரித்திருப்பான் என்ற அச்சத்தில் இரவில் புதைகுழி தோண்டச் செய்தார். ஆனால் அடுத்த நாள் காலையில் தோபியாவை உயிரோடு கண்டபோது வியப்படைந்து பெரிதும் மகிழ்ந்தார். திருமணத்தை யொட்டிப் பதினான்கு நாட்கள் மகிழ்ச்சியாய்க் கொண்டாடப்பட்டன. அதே சமயத்தில், அசாரியா தனித்துச் சென்று கபேலிடமிருந்து பணத்தை மீட்டு வந்தார். தோபியா வீடு திரும்ப அவசரப்படுகிறான்(8:4-9:9).

இதற்கிடையில் நினிவேயில், தோபித்தும் அன்னாவும் தங்கள் மகன் திரும்பி வராதது கண்டு அஞ்சி ஊக்கமிழக்கின்றனர். ஆனால் இராகுவேலும், எத்னாவும் வாழ்த்துக்கூறி வழி அனுப்ப அசாரியா, சாரா, தோபியா ஆகியோர் இறைவனைப் போற்றிக் கொண்டே வீடு நோக்கிப் பயணம் தொடங்குகின்றனர் (10:1-3).

**இ) வீடு திரும்புதலும் தோபித்து கண்பார்வை பெறுதலும்** (11:1-20).

வீடு திரும்பிய தோபியா, தன் பெற்றோரை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான். அசாரியா கற்றுக்கொடுத்தபடி, தோபியா தன் தந்தையின் கண்களில் மீனின் பித்தப்பையை வைக்க அவரும் பார்வை பெறுகிறார். இதனால் முதியவர்களின் மகிழ்ச்சி உச்சநிலை அடைகின்ற. புது மணத்தம்பதியர்களை வாழ்த்த நீண்ட கொண்டாட்டம் நடக்கிறது. உறவினர் பலர் பங்கு பெறுகின்றனர் (11:1-20).

**3. முடிவுரை** (12:1-14:15):

இனி நடிகர்களிடமிருந்து விடைபெறுவதே மீதமுள்ளது. அசாரியா செய்த சேவைகளுக்கெல்லாம் கைம்மாறு செய்யும் பொருட்டுப் பாதிப்பணத்தை அவருக்கு அளிக்க, தோபித்துக் தோபியாவும் முன் வருகின்றனர். அப்போது அசாரியா, தாம் இரப்பாயேல் தூதன் என்று தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்களிடமிருந்து மறைந்து போவதற்கு முன், நற்செயல்கள் பற்றியதோர் போதகம் அளிக்கிறார். இறுதியாக இறைவனது பராமரிப்புக்கு நன்றிகூற அவர்களை அழைக்கிறார் (ஆதி.12). இதைத் தோபித்து ஆர்வமுடன் அருமையானதோர் பாடல் மன்றாட்டில் நிறைவேற்றுகிறார். இப்பாடல் எருசலேமின் வருங்கால மகிமை பற்றிய இறைவாக்குகளை விரிவாக்குகிறது (அதி.13). குல முதியவர்களைப் போல் தோபித்து மரிக்கிறார். மரணப்படுக்கையில் மகனுக்கு வருங்காலத்தை வெளிப்படுத்துகிறார். பிள்ளைக்குரிய பக்தி, நற்செயல்களைச் செய்தல், இறைச்சத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றை அணிந்து கொள்ளுமாறு தூண்டுகிறார் (14:1-11). தோபியா தனது தந்தைக்கும் தாய்க்கும் இறுதிக்கடமைகளைச் செய்தபின், தனது மனைவியின் வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கு அதே கடமைகளைச் செய்ய எக்பத்தானுக்குச் செல்கிறான். பல ஆசிர்களையும் அனுபவித்தபின், மிக முதிர்ந்த வயதில், அவனது தந்தை தோபித்து மரிக்கும்போது கூறிய இறைவாக்குகள் நிறைவேறுதலைக் கண்ட ஆறுதலோடு மரிக்கிறான். நூல் இறைவனைப் போற்றுதலோடு முடிகிறது (14:12-15).

12. **நூலின் போதகம்:** நூல் ஒரு சமயப் புதினம் என்றோம். அதன் முக்கியத்துவம் அதன் போதகத்தன்மையில் அடங்கியிருக்கிறது. சில அடிப்படை உண்மைகள் நிறைவாக வாழ்ந்து காட்டப்படும் ஒரு கதையை ஆசிரியர் கொடுக்கிறார். வார்த்தைகளைவிடச் செயல் மாதிரி நம்மைப் புண்ணியப் பயிற்சிக்குத்

தூண்டுமாதலால், தான் கூற விரும்பிய செய்தியை ஒரு கதையாக எடுத்துக்கூறுகிறார். யூதபக்தியைச் செயல்முறையில் கடைப்பிடிக்க வேண்டிய சித்திரத்தைக் கவர்ச்சியாக வரைகிறார்.

இறைவனைப் பற்றிய சிந்தனையே நூல் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. எல்லாம் அவரையே சார்ந்திருக்கிறது. அயலாருக்கு நீதியும், அன்பும், கருணையும் காட்டும்போதும் இறைவனுக்கே ஒருவன் பணி செய்கிறான். இறைவனது ஊழியர்கள் இயல்பாகவும் மனவிருப்பத்துடனும் அவரிடம் திரும்புகின்றனர். கிறிஸ்துவத்திற்குப் புறம்பான கருத்துக்கள் இந்நூலில் இல்லை. ஆனால் நிறைவு செய்யப்பட வேண்டியவை அதிகம் உள்ளன.

தோபித்து, சட்டத்திற்கு முழுவதும் பிரமாணிக்கமாய் உள்ளார். அவரோடு சேர்ந்து நாடு கடத்தப்பட்டுச் சிதறிக்கிடந்த யூதர்களுள் அவர் மட்டுமே இறைவன் தேர்ந்தெடுத்த இடமான எருசலேமில் வழிபட்டுள்ளார். சட்டம் கட்டளையிட்டபடி, அங்கு முதல் பலனையும் தசமபாகத்தையும் காணிக்கையாக அளித்துள்ளார். ஆலயத்துக்குச் செல்லுதலை ஒரு கடமையாகச் செய்தாலும், அதில் இறைவாக்கினர்கள் கண்டனம் செய்த (எரே 7:4தொ) குருட்டு மூடத்தனம் எதுவுமில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். நாடு கடத்தப்பட்டிருந்தபோதும் பிற இனத்தாரது தீட்டிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார் (தோபி 1:6; 4:12). இதிலும் பிற மக்களை ஒதுக்கும் அடையாளமே இல்லை. அதற்காக மிக எச்சரிக்கையாக இருக்கிறார். தன்னலமற்ற செயல்களில் தம்மையே செலவிடுகிறார். கொடியவர்கள் கொலை செய்த யூதர்களை நல்லடக்கம் செய்வதில் தம்முயிரையே பணயம் வைக்கிறார் (1:19தொ). தமது துன்பங்களை முறைப்பாடு இல்லாமல் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார்.

தந்தை மகனுக்கு அளிக்கும் அறிவுரை, பிற்கால ஞான இலக்கியங்களின் கதம்பமான படைப்பாகும். ஞானம் அதன் தோற்றத்தில் அகில உலகப்பண்பும், சமயச்சார் பற்ற தன்மையும் உடையதாயினும், இந்நூலில் காணப்படும் ஞானம் யூத இறையியலில் தோய்ந்ததாக உள்ளது. அதி 4-இல் வரும் அறிவுரைகளும், அதி. 13-இல் வரும் மகிழ்ச்சி மிக்க மன்றாட்டும் இதற்குச் சான்றுகளாகும். மகனான தோபியாவும் பக்தியுள்ள தந்தைக்கு ஏற்ற வழித்தோன்றலாகவே உள்ளான். அவன் ஒரு நல்ல யூதன். பெற்றோரிடம் ஆழ்ந்த அன்புள்ளவன். இறைவன்பால் ஆழ்ந்த பற்றுக்கொண்டவன். தனது திருமணத்தில் இறைவனது கரத்தைக் காண்கிறான் (8:5தொ). குடும்ப அன்பு, அமைதி, ஒற்றுமை, உறுதிநிலை ஆகிய உணர்வுகள் இந்நூலில் காணப்படும் கவர்ச்சி மிக்க பண்புகளாகும். பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையேயும், கணவன் - மனைவிக்கு இடையேயும், காணப்படும் அன்புறவு வாசகர்களை இன்பத்தில் ஆழ்த்தவல்லது. இவை யாவும் இறைவனது கட்டளையின் விளைவாகும். வுல்கத்தா வாசகத்திற்கே உரிய சிறப்புப்பகுதிகள் (3:16-19; 6:16-22; 8:2) கிரேக்க வாசகத்தில் ஏற்கெனவேயுள்ள கருத்துக்களையே வெளிக்கொணர்கின்றன. அதாவது ஒருபுறம் விலங்குக் காமத்துக்கும், மறுபுறம் இறைவனில் அமையும் திருமண அன்புக்கும் உள்ள வேறுபாடாகும். திருமணச் சூழ்நிலையில் அன்பு, மகப்பேறுடைமை, ஒருவர்க்கொருவர் உதவி செய்தல், தர்மம் செய்தல் ஆகியவை ஒன்றிணைக்கப்படுகின்றன. கத்தோலிக்கத் திருமணத் திருப்பலியில் இந்நூலிலுள்ள வாசகம் பயன்படுகிறது. திருமணப் படுக்கையை மந்திரித்தல், திருமணத்திற்குப்பின் மூன்று நாட்களுக்கு மண உணவு கொள்ளாமை போன்ற சில இடங்களில் கடைப்பிடிக்கப்படும் கிறிஸ்துவப் பழக்கங்கள் இந்நூலின் நற்படிப்பைப் பிரதிபலிக்கின்றன என்பதில் வியப்படைய வேண்டியதில்லை.

இவையெல்லாம் இந்நூல் கற்பிக்கும் பாடங்கள் ஆகும். அவை இன்றும் பொருத்த முடையனவாகும்; கவனத்திற்குரியவையாகும். ஆனால் கதையின் உண்மையான தலைவன் பராமரிப்பு நிறைந்த இறைவனேயாவான். இக்கதையில் எல்லாவற்றையும் அரவணைக்கும் இறைவனது ஞானத்தையும் ஆற்றலையும்

அன்பையும் நாம் கண்டுணரலாம். இவை எல்லாப் பொருட்கள் மேலும் தனிநபர் நாடுகள் மேலும் இறைவனுக்குப் பணி செய்பவர்கள் மேலும் இறைவன் காட்டும் அன்பிலும் இரக்கத்திலும் அக்கறையிலும் செயல்படுகின்றன. இஸ்ராயேலின் பரிசுத்தரான இறைவன் விலகி ஒதுங்கியிருந்தலைப் பிற்கால யூதத்துவம் வலியுறுத்துகிறது. இது 12:12 தொ-இல் வரும் இரப்பாயேலின் சொற்களிலும், இறைவன் தூதர் வழியாகச் செயலாற்றும் இந்நூல் முழுவதிலும் தெளிவாக உள்ளது. இந்நூல் உயிர்ச்சித்திரமாக வெளிக்கொணரும் கோட்பாடுகளிலிருந்து வளர்ந்ததே- காவல் தூதர்கள்பால் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் பக்தியாகும். இத்தூதர்கள் வழியாக இறைவனது பராமரிப்பு செயலாற்றுகிறது என்பதே இப்பக்தியின் அடிப்படை விசுவாசம்.

இந்நூலில் காணப்படும் வானதூதர் பற்றிய போதகம் பழைய ஏற்பாட்டின் மற்ற நூல்களில் காணப்படுவதைவிட வளர்ச்சியடைந்ததாகும். இப்போதகத்தின் சுவடுகளை விவிலியத்துக்குப் புறம்பான யூத இலக்கியங்களிலும் காணலாம். யூதத்துவத்துக்குப் புறம்பான நூல்களில் தூதர்களின் சித்திரம் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. கதையில் வரும் வேதாளம் கிரேக்க வாசகங்களில் அசுமதேயு என்றழைக்கப்படுகிறது. அழிவு என்று பொருள்படும் அசுமதேயு என்ற பெயரும், குணமாக்குகிறார் என்ற பொருளுடைய இரப்பாயேல் என்ற பெயரும் பொருள் பொதிந்தவை. அசுமதேயுவை விரட்டும் புகை, மருந்தின் விளைவாகும்; மந்திர ஆற்றல் அன்று. இந்நிகழ்ச்சியின் முக்கிய பாடம், அழிப்பவன், சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகத் தான் ஆற்றல் கொண்டவன் என்று காட்டுவதாகத் தெரிகிறது. உடைமைக்கு உரிமையுள்ள சாரா, அவளது உறவுக்காரனுக்காகப் பாதுகாக்கப்படுகிறாள் (எண் 27:9-11; 36:1-12). இத்திருமணச் சட்டத்தை மீறுபவர்களை இறைவன் தண்டிக்கிறார் (லேவி 20). அசுமதேயு என்ற வேதாளம் இறைநீதியின் ஒரு கருவி மட்டுமே தவிர வேறன்று. இரப்பாயேல் இறைவனது ஊழியர்களுக்குப் பணி செய்கிறார். அவர்கள் இன்னலுறும்போது அவர்கள் உறுதியாக இருக்க ஆதரவு அளிக்கிறார். அவர்களது நற்செயல்களையும் மன்றாட்டுக்களையும் இறைவனிடம் ஒப்புக் கொடுக்கிறார் (12:12-14). வானதூதர்களும், பேய்களும் பணிசெய்யும் இறைவன் மனிதர்களிடமிருந்து தம் திருமுகத்தை மறைத்துக் கொள்பவர் அல்லர் (6:17; 12:15; 13:6). இந்த உருவகங்களில் உள்ள போதகம் ஏற்கெனவே புதிய ஏற்பாட்டுப் போதகத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்நூல் "ஆசீர்களின் நூல்" என்றால் மிகையாகாது. சந்திக்கும்போதும், பிரியும் போதும் பரிமாறப்படும் வாழ்த்துக்கள் இறைவனது ஆசிர்களைக் கோருகின்றன. நன்றி கூறுதலில் அவற்றை அவரிடம் திருப்பிச் செலுத்துகின்றன (9:6; 11:7). நூலில் பரவலாகக் காணப்படும் செபங்கள், உதவிக்கு அழைப்புகள் (3:11; 8:5-7), நன்றிப் பாடல்கள் (8:15-17; 11:14-15; 12:7 தொ. 17 தொ. 22; 13:1:19) ஆகியவை இன்றும் யூத செபங்களில் பொதுவாகக் காணப்படும்; ஆசி கூறும் அழகிய வாய்பாடுகளில் காணப்படுகின்றன. இறைவனைப் போற்றுவதில் எருசலேமின் குரலோடு எல்லா நாடுகளும் ஒருநாள் ஒன்று சேரும் என்று ஆசிரியர் நம்புகிறார்.

ஆசிர்கள் இறைவனிடமிருந்து வரும் நற்பேறேயாகும். போற்றுரை இந்தப் பேற்றை அதன் ஊற்றாகிய இறைவனிடம் திரும்பச் சமர்ப்பித்தலாம். நூலின் அடிப்படைக்கருத்து நற்பேற்று வழியாகும். இது ஒரு பயணத்தில் செயல்முறையாக எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால், இப்பயணம் ஓர் அடையாளமாகும். இறைவனது கட்டளைகளைக் கடைப்பிடித்தல், இறையச்சம், அன்பு, நம்பிக்கை அடங்கிய பக்தி, பெற்றோர்பால் மரியாதையும் பராமரிப்பும் மிக்க பக்தி, சமூக உறவுகளில் தயக்கமற்ற நீதி, நேர்மை, அயலாரிடம் அவர்கள் தேவைகளில் காட்டும் ஆற்றலுள்ள அக்கறை, குறிப்பாக ப்பிச்சையிடுதல் (1:3-8.16 தொ; 2:2; 4:5-19; 12:8), மரித்தவர்களை நல்லடக்கம் செய்தல் (1:18 தொ; 2:4-8; 12:13)- ஆகியவை தான் நற்பேறு அடைய வழிகளாகும். ஆனால் இது நீதிமான்

தீமையால் தீட்டுப்படுவதிலிருந்து தடுக்க முடியாது. ஆனால் இத்தீமை பெறுவதற்குத் தகுதியானதும் சுத்தி செய்யும் சோதனையாகவும், இறைவனால் அவரது ஞானத்தில் உருவாக்கப்பட தங்களையே அர்ப்பணிப்பவர்களுக்கு அவர் தவறாது அளிக்கும் நற்பேற்றின் வாக்குறுதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் நூலில் ஆசிர் இவ்வுலகிலேயே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆசிர் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசிர், உலகை உடமையாகக் கொள்ளும் சந்ததி (4:2), இந்த மகிழ்ச்சியான செழிப்பைக் காண நீண்ட வாழ்வு ஆகியவற்றில் அடங்கும். மரித்தபின் வரும் சன்மான வாழ்வு என்ற பிரச்சனையே இந்நூலில் எழவில்லை.

கிறிஸ்துவுக்கு முந்தைய சில நூற்றாண்டுகளில், இறைவனது நன்மைத் தன்மையையும் நீதியையும் ஒப்புரவாக்கும் பிரச்சனை யூதர்களில் பலரது கவனத்தை ஈர்த்தது. இந்தப் பிரச்சனையை இந்நூல் தொடவேயில்லை. நற்பண்புடைய தோபித்தும் மாசில்லாத சாராவும் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் காரணம் காட்டப்படவில்லை. அண்ணாவின் பழிச்சொல்லும், 2:14-இல் மற்றும் 3:3-5-இல் வரும் தோபியாவின் பெற்றோரின் பாவங்களுக்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகின்றனர் என்ற பாரம்பரியப் போகத்தையே பிரதிபலிக்கின்றது. மறு உலக வாழ்வு பற்றிய கருத்துக்கள் நூலில் காணப்படவேயில்லை. மாறாகத் துன்பங்களுக்கிடையில் நல்ல மனிதன் கொண்டிருக்க வேண்டிய மனநிலை என்ன என்றும் புண்ணிய வாழ்வு முடிவில் எப்படியாவது சன்மானம் பெறுதலையும் நூல் காட்ட முயலுகிறது. விடாமுயற்சியோடு பிரமாணிக்கமாய் இரு. நம்பிக்கை கொண்டிரு. துன்பங்களைப் பொறுமையாக ஏற்றுக்கொள். இவற்றில் எல்லாம் பிற மக்களிடமிருந்து வேறுபடத் துணிந்திரு என்று அறிவுரை கூறுகிறது.

இறுதியாக நூலின்போதகம் ஞான நூல்களின் முத்திரையைக் கொண்டுள்ளது. செயல் முறையான, ஆழ்ந்த சமய போதகத்தைக் கொண்டுள்ளது. இந்நூலின் மருத்துவக் குறிப்புகளைக் காணாது போகலாம் (சீராக் 31:19-21; 38:1-15). அரசன் அருகில் அமர்ந்து ஆலோசனை அளிக்கும் உயர்பதவியுடைய ஞானியைக் காணாது போகலாம் (சீராக் 38:3). இவற்றால் நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஆனால் பழமொழிகள் அடங்கிய இரு தொகுப்புகள் (4:3-19; 12:6-10; 14:8) ஆசிரியரது நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் சீராக்கு நூலுக்கு இந்நூல் நெருங்கியதாக உள்ளது. ஆசிரியரது சமய ஒழுக்க போதகப் பின்னணியில் நூலின் வரலாற்றுத் தன்மை பற்றிய பிரச்சினை அவ்வளவு முக்கியமில்லாது போகிறது. உண்மையான நிகழ்ச்சிகள் கதையின் அடிப்படையாக இருக்கலாம். ஆனால் இலக்கிய அலங்கரிப்புகள் இவற்றை அடையாளம் காணமுடியாதவைகளாகச் செய்து விடுகின்றன. இதனால் வாசகர்கள் எதையும் இழந்துவிட வில்லை. மேலும் வரலாற்று ஆசிரியர்களின் அறிவு ஆர்வத்தை நிறைவு செய்வது ஆசிரியரது நோக்கமன்று.

**13. இக்காலத்திற்கு:** நல்ல சமாரியன், ஊதாரிமகன் போன்ற உவமைகளில் நமது ஆண்டவர் செய்ததுபோலவே, இந்நூலின் ஆசிரியர் செய்கிறார். நமது அயலாருக்கு அன்பு செய்ய வேண்டும். நமது அன்பு மிக்க தந்தையான இறைவனில் நம்பிக்கை கொள்ள வேண்டும். என்று வெறுமனே கூறுவதோடு ஆசிரியர் மன நிறைவடையவில்லை. இந்த உண்மைகள் நிறைவாக, வாழ்ந்து காட்டப்படும் ஒரு கதையைக் கொடுக்கிறது. இந்நூலை வாசிக்கும்போது, இறைவனை அன்பு செய்பவர்கள் வாழ வேண்டிய முறையைக் கற்றுக் கொண்டுக்கிறது. அதைப் பின்பற்ற ஒரு தூண்டுதல் மாதிரியை இக்கதை நமக்கு அளிக்கிறது. நற்செய்திகளில் வரும் உவமைகளை வாசிக்கும் போதும், கேட்கும்போதும் தம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வியையே இங்கும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். இக்கதையிலிருந்து நான் கற்றுக்கொள்ள வேண்டிய கோட்பாடு அல்லது வாழ்க்கை உண்மை என்ன? இயேசு நல்ல சமாரியன் உவமையின் முடிவில் தமக்குச்

செவிமடுத்தோருக்குக் கூறியதையே, இந்நூலின் ஆசிரியர் அவர் காலத்து மக்களுக்கும் நமக்கும் கூறுகிறார். "நீரும் போய் அவ்வாறே செய்யும்" (லூக் 10:37).

இந்நூல் நமக்கு விடும் மற்றொரு சவாலும் உண்டு. நம்மைச் சுற்றியுள்ளவர்கள் எல்லாம் அலகையைப் பின்பற்றும்போது பிரமாணிக்கமற்று இருக்கும்போது, பதிதத்தில் ஆழ்ந்திருக்கும்போது, விசுவாசி எப்படியிருக்க வேண்டும்? 'வேறுபட்டிரு' என்று இந்நூல் சவால் விடுகிறது. உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இரு; இக்கட்டான நிலையிலும் புனிதனாக இரு; ஏனெனில் நமது தந்தை புனிதரானவர். இந்த எளிய கதை எக்கால மக்களுக்கும், சிறப்பாக நமக்கும் விடும் சவால் இதுவேயாகும்.

**தோபியா** (TOBIAN– யாவே நல்லவர்)

1. ஓர் இனத்தின் அல்லது குடும்பத்தின் தலைவர். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்பு தாங்கள் உண்மையாகவே இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று இவர்களால் நிரூபிக்க முடியவில்லை (எஸ் 2:60; நெகே 7:62). இக்குடும்பம் தோபியாதுகளோடு தொடர்புள்ளதாக இருக்கலாம். ஆனால் தக்க ஆதாரங்கள் இல்லை.

2. நெகேமியா என்ற யூத ஆளுநர் எருசலேம் மதிற்சுவரைத் திரும்பக் கட்டுவதற்கு முயற்சி செய்தார். இதற்குச் சன்பலாற்றோடு சேர்ந்து முக்கிய எதிர்ப்பாளராக இருந்தார் இந்தத் தோபியா (கி.மு. 445 - 437; நெகே 2:10.19; 4:3.7; 6:1.12.19). அவர் 'அம்மோனியர்' என்று அழைக்கப்படுவது 'அம்மோன்' ஆட்சிப் பகுதியோடு தொடர்பு கொண்டுள்ளதைக் குறிப்பிடுகிறது. இது சாக்கடலுக்கு வடக்கே உள்ளது. விவிலியம் அல்லாத ஆதாரங்கள் பாரசீகர்களின் காலத்தில், 'அம்மோன்' பெயரில் இருந்த ஒரு முக்கிய குடும்பத்தைக் குறிக்கின்றன. "அரசு ஊழியனான அம்மோனியன்" என்று இவர் அழைக்கப்படுகிறார். இஃது இவர் பாரசீகர் ஆட்சியில் அதிகாரியாக இருந்ததைக் குறிப்பதாக அமையலாம். சமாரியாவுக்குச் சன்பலாற்றும் யூதேயாவுக்கு நெகேமியாவும் ஆளுநர்களாக இருந்ததுபோல அம்மோன்பகுதிக்கு ஆளுநராக, தோபியா இருந்திருக்கலாம் (நெகே 2:19,19); அல்லது இது இழிவான பட்டமாக இருந்திருக்கலாம் (காண்க. உப 23:3).

இவர் இஸ்ராயேலர்களின் வழித்தோன்றலா, இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால் கி.மு. 586-இல் எருசலேம் அழிவிற்குப் பிறகு அம்மோனுக்கு ஓடிச் சென்ற யூதர்களின் வழித்தோன்றலாக இருக்கலாம். இவர்கள் எரே 41:15-இல் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். தோபியா என்ற பெயரே, அவரது தாய் தகப்பனின் யூத வழிபாட்டுத் தொடர்பைக் குறிப்பதாக அமைகிறது. இவர் யூத விசுவாசத்தைத் தெரிந்து கொண்டவராகவும், அதைச் சிறிது அளவு நடைமுறையில் கடைப்பிடித்ததாகவும் தெரிகிறது. நெகேமியா, எருசலேமில் இல்லாத சமயத்தில், எருசலேம் கோவிலில் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார் (நெகே 13:4-9). நெகேமியா திரும்பியதற்குப் பிறகு, வெளியேற்றப்பட்டிருக்கிறார். மேலும், தோபியா யூத மேல் குலத்தாரோடு தொடர்பு வைத்திருந்தார் எனவும், அவர்களோடு திருமணத்தால் நெருங்கியவராகவும் இருந்தார் எனவும் குறிப்பிடப்படுகிறார் (நெகே 6:17-19). இவர் தோபிய வீட்டாரின் மூதாதையராக இருக்கலாம் என அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள். இக்குடும்பம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஓனியா குடும்பத்திற்கு எதிராக, பெரிய குரு பதவிக்குப் போட்டியிட்டது (2 மக் 3:11).

**தோபியா** (TOBIAS - யாவே நல்லவர்)

1. தோபித்துவின் மகன். இவர், வானதூதர் இரப்பாயேலால், வழிநடத்தப்பட்டு, தனது குருடான தந்தையைக் குணப்படுத்தினார்; இரகுவேலின் மகள் சாராளிடமிருந்து ஒரு பேயை ஓட்டினார். காண்க: தோபித்து நூல்.

2. மக்கபேயர் காலத்தில் ஒரு முக்கிய செல்வந்தரான யூதர். இரிக்கானுவின் (1) தந்தை (2 மக் 3:11).

**தோபியா** (TOBIJAH – யாவே நல்லவர்)

1. யூதாவின் நகரங்களுக்குள் ஆண்டவருடைய

திருச்சட்டத்தைப் போதிக்க யோசபாத்து அரசனால் அனுப்பப்பட்ட லேவியருள் ஒருவர் (2 நாள் 17:8).

2. இறைவாக்கினர் செக்கரியாவின் அருள்வாக்கின்படி, பெரிய குரு யோசுவாவுக்குக் கிரீடம் செய்வதற்குப் பயன்படும் பொருட்டு நால்வர் காணிக்கை கொடுப்பார்கள். இவர்கள் நாடு கடத்தப்பட்டுப் பாபிலோனில் இருக்கிறவர்களிடமிருந்து வந்திருப்பவர்களாவர். இவர்களில் ஒருவர்தான் தோபியா (செக் 6:10.14). எழுபது நூல் இப்பெயரைப் "பயன்படும் மனிதர்கள்" என்ற பட்டமாக எடுத்துக் கொண்டது.

**தோபு** (TOB - நல்ல)

தெற்கு அவுரானில் இருக்கும் ஒரு நகரத்திற்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிக்கும் பெயராக இஃது உள்ளது. இஃது எகிப்திய ஆதாரங்களில் "தூ-பி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமர்னாவின் கடிதங்களில் தூபு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்தாகு, தனது ஒன்றுவிட்ட சகோதரர்களால் விரட்டப்படும்போது, தோபுவுக்கு ஓடிப்போனார். அம்மோன் புதல்வர்கள் இஸ்ராயேலர்களைக் கொடுமைப்படுத்தியதால் கிலயாது இனப்பெரியோர், தங்களுக்குத் தலைமை தாங்க இப்தாகுவைத் தோபு நாட்டிலிருந்து அழைத்து வந்தனர் (நீதி 11:3-5). அரமேயர்களின் நாடாக இது கருதப்பட்டது. இவர்கள் தாவீதை அவமானப்படுத்தியிருந்தனர். இதனால் தாவீதுடன் போர் தொடுக்க வேண்டியதாயிற்று. இவர்களுக்கு உதவியாக, தோபு 12,000 போர்வீரர்களை அனுப்பியது. அது யோவாப்பின் துணிவினால் தோல்வியடைந்தது (2 சாமு 10:6-13).

தோபுக்கு மற்றொரு பெயர்-தாபேல் ஆகும். இவர் யூதாவின் ஆட்சி பீடத்தில் ஆகாசுக்குப் பதிலாக, தமஸ்குவின் ரெத்சினும், இஸ்ராயேலின் பெக்காவும் தேர்ந்தெடுத்த ஓர் இளவரசர் (எசா 7:6). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியதற்குப் பிறகு உள்ள காலங்களில், தோபுவில் பல யூதர்கள் குடியேறினர். அருகிலிருந்து கிரேக்கர்களால் தாக்கப்பட்டபோது, யூதா மக்கபேயுவால் காப்பாற்றப்பட்டனர் பெயரும் (1 மக் 5:13; 2 மக் 12:7). இந்நகரின் பெயரும் இடமும், எத்-தயிபே என்ற கிராமத்தில் காப்பாற்றப்பட்டு இருக்கலாம். இது பொட்சராவுக்கும் எதிரேயிக்கும் இடையில் யார்முக்கு ஆற்றின் மூலத்திற்கு அருகில் கலிலேயக்கடலின் தென்கிழக்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ளது.

**தோபேத்து** (TOPHETH)

இன்னோம் பள்ளத்தாக்கும் கிதரோன் பள்ளத்தாக்கும் கூடும் இடத்தில் எருசலேமுக்குத் தெற்கில் உள்ள ஓர் இடம். இங்குக் குழந்தைகள் மோலேக்குக்குப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டனர் (2 அர 23:10; 2 நாள் 28:3; 33:6; எரே 7:31). யூதாவின் மக்களுக்குத் தோபேத்து போர்த்தோல்வியின் இடமாகும் என்றும், "படுகொலையின் பள்ளத்தாக்கு" என்றழைக்கப்படும் என்றும் எரேமியா முன்னுரைத்தார் (எரே 7:32-34; 19:6-7.11-13). இந்த இடம் கொண்டிருந்த இழிவான, கொடிய தொடர்பால், இப்பெயரின் மெய்யெழுத்து மாற்றப்பட்டு "வெட்கப்படவேண்டியது" என்ற பொருளில் போசேத் என்றழைக்கப்பட்டது. இங்கிருந்த தொழுகை மேடையை யோசியா அரசன் அழித்துப் பாழ்படுத்தினார் (2 அர 23:10).

எசா 30:33-இல் வரும் குறிப்பு தெளிவில்லாமல் இருக்கிறது. "சுடுகாடு" என்ற பொதுப்பொருளில் தோபேத்து பயன்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இக்குறிப்பு இந்த இடம் மோலேக்கு வழிபாட்டோடு கொண்ட தொடர்பைச் சுட்டுவதாகத் தெரிகிறது.

**தோபேல்** (TOPHEL - (சுண்ணாம்புச் சாந்து)

மோசே, யோர்தானுக்கு அப்பால் பாலைவனத்தில் இஸ்ராயேலை ஒன்றுகூட்டி, பேசிய இடங்களில் ஒன்று (உப 1:1). இஃது இன்று சாக்கடலின் தென்கிழக்கில், 25 கி.மீ. தொலைவில் உள்ள எத்-தபிலே என்ற கிராமமே என்று கூறுகின்றனர். இதனைப் பற்றி வேறு எந்தக் குறிப்பும் இல்லை என்றாலும் இஸ்ராயேல் பாலைவனப் பயணத்தின் நடுவில் ஓய்வெடுத்த இடங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம்.

**தோமா (THOMAS - இரட்டையர்)**

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவருரான தோமா நான்கு புதிய ஏற்பாட்டுப் பட்டியலிலும் நடுவில் குறிக்கப்பட்டுள்ளார் (மத் 10:2-4; மாற் 3:16-19; லூக் 6:14-16; அ.ப. 1:13). பட்டியலில் அவர் கொண்டுள்ள இடம் தொடக்க காலத் திருச்சபையில் அவர் முக்கியமுள்ளவராகவோ முக்கியமற்றவராகவோ கருதப்படவில்லை என்று சுட்டுகிறது. நான்காவது நற்செய்தியில் தோமாவின் பெயர் மூன்று தடவை "திதிமு" என்ற கிரேக்க அடைமொழியோடு வருகிறது (யோவா 11:16;20:24; 21:2). அனேகமாக இப்பெயர் கிரேக்கமொழி பேசிய கிறிஸ்தவர்களிடையே வழக்கில் இருந்திருக்க வேண்டும்.

தோமா என்ற சொல் அரமேயிக்கிலும் எபிரேயத்திலும் வெறுமனே "இரட்டையர்" என்று பொருள்படும் அடைமொழி யாகும். இஃது ஓர் ஆளின் சொந்தப் பெயரா என்பது ஐயத்திற்குரியது. தோமா என்ற கிரேக்கப் பெயரை அரமேயிக்கு மொழியில் எழுத்துப் பெயர்ப்பு செய்யும்போது அப்பெயர் இரட்டையர் என்ற பொருள் கொடுக்கும். அப்பொருளைக் கொடுக்கும் "திதிமு" என்ற பெயரையும் நான்காம் நற்செய்தி கொடுக்கிறது. சில சீரியக்குக் கையெழுத்துப் பிரதிகள் யோவா 14:22-இல் யூதா தோமா (யூதா இரட்டையர்) என்று கொண்டுள்ளன. யோவா 14:22 வாசகங்களின் வேறுபாடுகள் லூக் 6; அ.ப. 1-இலும் காணப்படும் "யாக்கோபின் மகன் யூதாவோடு" தொடக்கத்தில் தோமா ஒரே ஆளாகக் கருதப்பட்டதாகச் சுட்டுகின்றன.

தோமாவின் பணிநூல் என்ற ஒரு போலி நூல் யூதா தோமாவும் இயேசுவும் இரட்டையர்கள் என்று கூறுவது எல்லோரையும் திடுக்கிடச் செய்யவல்லது. இதை மெசபொத்தாமியத் திருச்சபை உண்மையென நம்பியதாகத் தெரிகிறது. இக்கூற்றை இக்கால அறிஞர் சிலர் தீவிரமாக ஆய்வு செய்யத் தொடங்கினர். தோமா என்ற சொல்லுக்கு வெறுமென இரட்டையர் என்ற பொருள் மட்டும்தான் என்றும், தோமாவின் பணிநூல் கூறுவது நிராகரிக்கப்படத் தகுந்தது என்று ஏற்றுக் கொண்டால், தோமா என்று குறிக்கப்படுபவர் யாரோடு இரட்டையராகக் கருதப்பட்டார் என்றும் தோமா என்பது அவரது உண்மையான பெயர் என்றும் உறுதி கூறமுடியாது. தோமா இயேசுவோடு இரட்டையர் என்று கூறும் தோமாவின் பணிநூலின் கருத்து, அந்நூல் தோமாவைப்பற்றிக் கொண்டிருக்கும் தனிப்பட்ட கருத்தோடு தொடர்புடையதாகும்.

தோமாவின் பண்புகள் நான்காம் நற்செய்தியில் நன்கு விவரிக்கப்படுகின்றன. யூதேயாவில் தனக்கு எதிர்ப்பும் ஆபத்தும் இருப்பது தெரிந்தும், இயேசு இலாசரின் கல்லறையைப் பார்க்கச் செல்ல விருப்பம் தெரிவித்தபோது, தோமா "அவரோடு செல்லவும் அவரோடு இறக்கவும்" ஆவலாய் உள்ளார் (யோவா 11:16). இஃது இயேசுவின்பால் தோமாவின் ஆழ்ந்த பற்றுறுதியையும் வீரத்தையும் காட்டுகிறது எனலாம். சில நாட்களுக்குப்பின் இயேசு தான் தம் தந்தையிடம் திரும்பிப்போகும் காலம் நெருங்கி வருவதை விளக்குகிறார். "நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்று இயேசு கூற, "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது; அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்" என்று தோமா தனது அறியாமையை வெளிப்படையாகவும் தாழ்ச்சியோடும் கூறுகிறார் (14:4-5). இயேசு உயிர்த்த பின்பு அதை ஏற்க, மறுக்க முடியாத சான்றுகளைக் கோருகிறார். ஒரு வாரத்திற்குப் பிறகு இயேசு தோன்றி அத்தகைய சான்றுகளை அளித்தபோது, "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்!" என்று ஓர் உன்னதமான விசுவாசப் பிரமாணம் செய்கிறார். இந்த விசுவாச அறிக்கையில் நான்காம் நற்செய்தி ஓர் உச்ச கட்டத்தை எய்துகிறது எனலாம் (யோவா 20:24-28). இந்நிகழ்ச்சி தோமாவிற்குச் "சந்தேகப் பேர்வழி" என்ற பெயரைக் கொடுத்துள்ளது. ஒட்டு மொத்தமாகக் கூற வேண்டுமென்றால், தோமா ஓர் ஆழ்ந்த பற்றுறுதியுடைய ஆனால், சிறிது மந்த புத்தியுள்ள சீடராவார். அவரது அறியாமை

உண்மைகளை நிறைவாக விளக்குவதற்கு இயேசுவுக்கு வாய்ப்பளிக்கிறது. புரிந்து கொண்டபின் தோமா மிகுந்த பற்றுறுதி காட்டக்கூடியவர்.

கிறிஸ்து உயிர்த்தபின் தோமாவின் மறைபரப்புப் பணி பற்றிய பாரம்பரியங்கள் ஐயப்பாடு உடையவை. யூசேபியுவின் கூற்றுப்படி தோமா பார்த்தியாவில் பணிபுரிந்தார். 3-ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோமாவின் பணிநூல், தோமா இந்தியாவில் பணி செய்து அங்கு மறைசாட்சியாக மரித்தார் என்றும், அவரது உடல் மெசொபொத்தாமியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் கூறுகிறது. இந்தியாவில் தாங்கள் தோமாவின் கிறிஸ்தவர்கள் என்று உரிமை கொண்டாடுபவர்கள் இந்த நூலை ஆதாரம் காட்டுவர்.

### தோமா எழுதிய இயேசுவின் பாலபருவ நற்செய்தி (THOMAS, INFANCY GOSPEL OF)

இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு போலி நற்செய்தி நூல். இது குழந்தை இயேசு ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரை செய்த பல வியத்தகு செயல்களை விவரிக்கிறது. லூக் 2:41-51-இல் வரும் ஆலய நிகழ்ச்சியின் விரிவான வாசகத்தோடு முடிகிறது. குழந்தை இயேசு செய்ததாகக் கூறப்படுபவை நம்பத்தகாத விசித்திரமான இயற்கைக்கு மேலான கதைகளாகும். இவற்றில் காணப்படும் குழந்தை இயேசுவுக்கும் திருமுறை நற்செய்திகளில் காணப்படும் குழந்தை இயேசுவுக்கும் ஓர் ஒப்புமையுமில்லை. இயேசு குழந்தையாக இருந்த போது என்ன நிகழ்ந்தது என்பது பற்றி அறிய விரும்பும் நோக்கமே இந்நூல் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். ஒரு கதையில் குழந்தை இயேசு களிமண்ணால் பறவைகளைச் செய்து பறக்கச் செய்கிறார். தமக்கு வெறுப்பூட்டுபவர்கள் மேல் பலமுறை கடுங்கோபங்கொண்டு அச்சம் தரும் விதத்தில் பேசுகிறார். ஏற்கெனவே எந்த மனிதனையும்விட அதிக அறிவுள்ள குழந்தைக்குக் கற்பிக்க முடியாமை பற்றிய கதை ஒன்றும் உள்ளது. இந்த இயேசு வெறும் மனிதக்குழந்தை அன்று என்ற தோசேத்திக்கு போக்கு நூல் முழுவதும் காணப்படுகிறது.

இந்நூலில் வரும் கதைகள் வீம்புச் செருக்குடைய, புதுமைகள் செய்யும், தன்னைப்பற்றியே உயர்வாக எண்ணும், தன்னை எதிர்ப்பவர்களின் மேல் பழிவாங்கப் புதுமை செய்யும் ஆற்றலைப் பயன்படுத்தும், தனது செயல்களின் விளைவுகளைத் தவிர்க்கும் ஆற்றலுடைய பாலனைக் காட்டுகின்றன. இக்கதைகளின் கட்டுப்பாடில்லாத தன்மையோடு ஒப்பிடும்போது திருமுறை ஆசிரியர்களின் பாராட்டத்தகுந்த கட்டுப்பாடும் அடக்கமும் மிகச் சிறப்பாகத் தோன்றும்.

இந்நூலில் வரும் கதைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும், வெறுப்பை உண்டாக்கினாலும், தோமா எழுதிய இயேசுவின் பாலபருவ நற்செய்திநூல் பரவலாகவும் பிரபல்யமாகவும் இருந்தது. அதன்மூல மொழியாகிய கிரேக்கத்திலிருந்து பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டது.

### தோமா எழுதிய நற்செய்தி (THOMAS, GO-SPEL OF)

இயேசு கூறியதாகத் தொகுக்கப்பட்ட 114 வாக்குகளைக் கொண்ட ஒருநூல். இது கி.பி. 140-ஐ ஒட்டிச் சீரியாவில், கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். இந்நூலை இப்போலித்து, இரேனேயு போன்ற திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் 1946-இல் நாகு அம்மாதி என்ற இடத்திலிருந்த ஞானவாத நூல்நிலையம் கண்டுபிடிக்கப்படும்வரை இந்நூலின் பொருளடக்கம் அறியப்படவில்லை. இந்நூல் நிலையத்தில், தோமா எழுதிய நற்செய்தியின் ஏறக்குறைய பழுதுபடாத முழுநூலும் கோப்திக்கு மொழிபெயர்ப்பில் கிடைத்தது. இஃது இந்நூல் பற்றிய நவீன ஆய்வைத் தொடங்கி வைத்தது எனலாம். இதன் விளைவாக, முன்பு, கிரேக்க மொழியில் ஓசிரிங்கஸ் துணுக்குகள் என்று கருதப்பட்ட இயேசுவின் சில வாக்குகள் தோமா எழுதிய நற்செய்தியைச் சேர்ந்தன என்பது தெரிய வந்தது.

எத்திட்டமும் இல்லாமல் நிகழ்ச்சியுரைப் பகுதியுமில்லாமல் வாக்குகள் தொகுக்கப்பட்டுள்ளன. பல கூற்றுகள் புதிய ஏற்பாட்டில் வரும் இயேசுவின் கூற்றுகளோடு நெருங்கிய இணைத்தன்மை கொண்டுள்ளன. ஆனால் அப்படியே கூறவில்லை. வேறுசில வாக்குகள் அதிகம் வேறுபாடுகின்றன. 40 வாக்குகள் முழுவதுமே புதியவையாகும். திருமுறைப்பட்டியலின் நற்செய்தி வாக்குகளிலிருந்து வேறுபடும் கூற்றுகள் ஞானவாதப் பாதிப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன. வலுவான இரகசியத்தன்மை காணப்படுகிறது. சாவைத் தவிர்க்க இந்த இரகசியப் பொருளைப் புரிந்து கொள்வதின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. ஒருவன் தன் தோற்றத்தையும் ஊழையும் அறிந்து கொள்வதின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்படுகிறது.

தோமா எழுதிய நற்செய்தியில் வரும் கூற்றுகளுக்கும் திருமுறை நற்செய்திகளில் வரும் கூற்றுகளுக்குமிடையே உள்ள உறவு பற்றி அதிக தர்க்கங்கள் நடந்துள்ளன. இந்நூலில் வரும் சில கூற்றுகளை விட நீளமானவை. இது பிற்கால விரிவடைந்த வடிவங்களைச் சுட்டலாம். தோமாவின் நற்செய்தி, திருமுறை நற்செய்திகளைச் சார்ந்துள்ளதா என்பது சர்ச்சைக்குரியது. இதற்கு மாறாகத் தோமாவின் சில கூற்றுகளைவிட மிகச் சுருக்கமானதாக உள்ளன. இஃது, இவை காலத்தால் முந்திய வளர்ச்சியயைாத வடிவங்களாக இருக்கும் என்பதைச் சுட்டுகிறது. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோமா நற்செய்தியின் கூற்றுகள் தொகுக்கப்படும் முன்பே தனிப்பட்ட பல வாக்குகள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். புதிய நாற்பது வாக்குகளில் சில உண்மையான “அக்ராபாவை” யாக அதாவது திருமுறை ஆசிரியர்களால் பதிவு செய்யப்படாத இயேசுவின் உண்மையான வாக்குகளாக இருக்கலாம்.

**தோமாவின் பணிநூல் (THOMAS, ACTS OF)**

கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த விரிவான ஒரு போலிநூல். இது சீரிய கிறிஸ்தவர்களிடையே தோன்றியிருக்க வேண்டும். அனேகமாக, சீரியக்கு மொழியின் எழுதப்பட்டதாக இருக்கலாம். சீரியக்கு மற்றும் கிரேக்க மொழிகளில் முழுவாசகமும், எத்தியோப்பிக்கு, இலத்தீன் மற்றும் அர்மேனிய மொழிகளில் சில பகுதிகள் மட்டும் கிடைத்துள்ளன. இந்நூல், தோமா பணிக்கு ஆணை பெற்றதிலிருந்து அவரது மறைசாட்சி மரணம் வரையுள்ள அவரது வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. மற்றப் போலி நூல்களைப்போல் வியப்புக்குரியவற்றை அழுத்திக் கூறுகிறது.

நூலின் தொடக்கத்தில், அப்போஸ்தலர்கள் தங்கள் பணித்தளங்களை நிச்சயிக்க ஒன்று கூடுகின்றனர். தோமாவுக்கு இந்தியா பணித் தளமாக அமைகிறது. ஆனால் தோமா அங்குச் செல்ல விரும்பவில்லை. ஆகவே அவரது தலைவர் (இரட்டையர்) இயேசு, இந்திய அரசனுடைய தூதரிடம் தோமாவை அடிமையாக விற்கிறார். இந்தியாவுக்குச் செல்லும் பயணத்தின்போதும், இந்தியாவிலும் தோமா பாலுறவு விலக்கலைப் போதிக்கிறார். இதுவும் மற்றத் துறவுப் பண்புகளும் அவருடைய சொந்த வாழ்வின் பண்புகளாக விவரிக்கப்படுகின்றன. ஒரு நீண்ட பகுதி ஒரு பெண்ணின் கதையைக் கூறுகிறது. இவள் தோமாவின் போதனைக்குப் பணிந்து தன் கணவனுடன் திருமண உறவு கொள்வதைக் கைவிட்டுத் தனது புதிய கணவனான இயேசு கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாக இருக்க முயலுகிறாள். இதனால் துயருற்ற அவளது கணவன் தங்கள் திருமண உறவை மீண்டும் முறைப்படுத்த எல்லாவித முயற்சிகளையும் செய்கிறான். இத்தகைய போதகங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்ளும் போது உண்மையில் நடக்கக்கூடிய ஒரு வரலாற்றையே இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது என்று கூறலாம்.

பல சிறு சிறு கதைகள் கூறப்படுகின்றன. ஆனால் இந்நூல், அதன் ஆசிரியர் சேகரித்துள்ள மறைபொருள் மிக்க பாடல்களுக்கும் செபங்களுக்காகவும் சிறப்புப் பெறுகின்றன. அப்படிப்பட்ட பாடல்களில் ஒன்று முத்து பற்றிய பாடலாகும். இப்பாடல் உருவகங்களும் அழகும்

மிக்கது. ஓர் ஆன்மா புலன் சார்ந்த உலகிற்கு இறங்கிவந்து, அதிலிருந்து விடுதலையடைந்து, அஃது எங்கிருந்து வந்ததோ அந்த வீட்டிற்கு மீண்டும் எழும்பிச் செல்வதை உருவக வடிவில் இந்த முத்து பற்றிய பாடல் எடுத்துக் கூறுகிறது.

இந்நூல் வரலாற்று மதிப்பீடு கொண்டது அன்று. ஆனால் தோமா இந்தியாவுக்கு உண்மையிலேயே சென்றார் என்ற தொடக்க கால நம்பிக்கை மற்றும் முதல் நூற்றாண்டு இந்திய அரசன் பெயர் போன்றவற்றைப்பற்றிய நம்பிக்கையான பாரம்பரியக் கருவைக் கொண்டுள்ளது எனலாம். இஃது ஒரு ஞானவாத நூலா இல்லையா என்பது தர்க்கத்துக்குரியது. ஆனால் வைதீகமானவரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். இதனால்தான் இந்நூல் ஞானவாதிகளிடையேயும் வைதீகமானவர்களிடையேயும் பிரபல்யமாய் இருந்துள்ளது. அருட்சாதனங்கள் வழங்கப்பெற்ற தொடக்க வடிவுகள் பற்றிய சான்றுகள் அளிப்பதாலும், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீரிய ஞானவாத கிறிஸ்துவம் பற்றிய செய்திகளை அளிப்பதாலும் இந்நூல் இக்காலத்தில் மதிப்புப்பெறுகிறது.

### தோமாவின் வெளிப்பாட்டு நூல் (THOMAS, APOCALYPSE OF)

புதிய ஏற்பாட்டில் முக்கியமானவர்களால் எழுதப்பட்ட வெளிப்பாட்டு நூல்கள் அல்லது காட்சிநூல்கள் சிலவே. அவற்றில் ஒன்று இந்நூலாகும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் செலாசியன் சட்டத்தால், இந்நூலும் பவுலின் வெளிப்பாட்டு நூலும், ஸ்தேவான் வெளிப்பாட்டு நூலும் கண்டனம் செய்யப்பட்டன. இந்நூல் பெயரளவிலேயே அறியப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வியன்னாவில் இந்நூலின் பகுதிகளாகக் கருதப்பட்ட இரு பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. ஒன்று 8-ஆம் நூற்றாண்டையும், மற்றது 11 அல்லது 12- ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவையாகும்.

மற்ற வெளிப்பாட்டு நூல்கள், பெரும்பாலும் மறு உலகம் பற்றிய காட்சிகளைக் கொண்டிருக்கும். ஆனால் இந்நூல் இவ்வுலகின் முடிவைப்பற்றிய காட்சிகளைக் கொண்டுள்ளது. இவற்றை "இறைத்தந்தையின் மகனான" ஆண்டவர் தோமாவுக்கு வெளிப்படுத்துகிறார். தானியேல் நூலைப் பின்பற்றி, அக்கால நிகழ்ச்சிகளை இறைவாக்கு வடிவின் இந்நூல் விவரிக்கிறது; இவ்வுலக முடிவிற்கு முன் நிகழும் ஏழு அடையாளங்களை விவரிக்கின்றது.

இந்நூல் 9-ஆம் நூற்றாண்டிலே அறியப்பட்டிருக்கிறது. இதிலிருந்து "இறுதி நாட்களின் பதினைந்து அடையாளங்கள்" என்ற நூல் தோன்றியது. இது எரோனிமு எழுதியதாகக் கருதப்பட்டது. இது 5-ஆம் நூற்றாண்டில், இலத்தீனிலோ கிரேக்கத்திலோ எழுதப்பட்டிருக்கலாம்.

### தோயி (TOI - புழு)

இவர் ஆமாத்தின் அரசன், தாவீது சோபாவின் அரசன் அததேசரின் படை அனைத்தையும் வெட்டி வீழ்த்திய செய்தியைத் தோயி கேள்விப்பட்டார். அததேசரோடு போராடி அவனை முறியடித்து வென்றதற்காகத் தன் வாழ்த்துதலையும், பாராட்டுகளையும் தாவீது அரசருக்குத் தெரிவிக்கும் பொருட்டு, தம்மகன் யோராமை அனுப்பினார். ஏனெனில் தோயி அததேசருக்கு எதிரியாயிருந்தான். தாவீதுக்குக் கொடைகள் பல கொடுத்தனுப்பினார். அவற்றைத் தாவீது ஆண்டவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார் (2 சாமு 8:9-11). தோயி அளித்த கொடைகள், தன் நாட்டைத் தாவீதின் ஆட்சிக்கு அடிபணியச் செய்வதை உணர்த்தலாம். ஏனெனில் அவை தாவீது அடிமைப்படுத்திய நாடுகளிலிருந்து கொண்டுவந்த கொள்ளைப் பொருட்களோடு சேர்க்கப்படுகின்றன (8:11). 1 நாள் 18:9-10-இல் தோயி தோகு என்றும், யோராம் அதோராம் என்றும் குறிக்கப்படுகின்றனர்.

### தோயேகு (DOEG - அமைதியற்ற)

இவர் ஓர் எதோமியன்; சவுலினுடைய இடையர்களுக்குத் தலைவர் (1 சாமு 21:8). ஏதோ ஒரு சடங்குச் செயலால் இவர் நோபுவிலுள்ள புனித இடத்தில் "ஆண்டவரால் தடை

செய்யப்பட்டிருந்தார். சவுலிடமிருந்து தப்பியோடிய தாவீது அங்கிருந்த குருஅகிமெலக்கிடம் உதவி கேட்டார் குருக்கு உதவியளித்ததைத் தோயேகு கண்டார். இதைத் தன் தலைவர் சவுலிடம் தோயேகு தெரிவித்தார்" (22:9-11). சவுல் அகிமெலக்கை அரச துரோகக் குற்றம்சாட்டி, அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மரண தண்டனை விதித்தார் (22:11-16). அரச ஊழியர்கள் இதை நிறைவேற்ற முன் வராததால், தோயேகு அகிமெலக்கையும் அவரோடு சேர்த்து என்பது குருக்களையும் அனேக பெண்களையும் குழந்தைகளையும் கொன்று அழித்தார் (22:18-19).

1 சாமு 22:22-இன்படி சவுலிடம் தன்னையும் அகிமெலக்கையும் தோயேகு குற்றம் சாட்டுவான் என்ற முன்னுணர்வைத் தாவீது கொண்டிருந்ததாகத் தெரிகிறது. சங் 52-இன் மேல் குறிப்பு இந்த நிகழ்ச்சியைச் சுட்டுகிறது. ஆனால் சங்கீதத்தின் பொருள் வரலாற்று நிகழ்ச்சியோடு ஒத்துப்போகவில்லை.

**தோரா (TORAH)**

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களைக் கொண்ட தொகுப்புக்கு அளிக்கப்படும் எபிரேயப் பெயராகும். இவை மோசேயின் நூல்களாகக் கருதப்பட்டன. காண்க: ஐந்நூல் அல்லது தோரா.

பொதுவாகத் தோரா என்ற சொல், உடன் படிக்கை கோரியபடி இஸ்ராயேலர் கடைப்பிடிக்க வேண்டிய இறைவனது சட்டம் அல்லது போதனையைக் குறிக்கும்.

தோரா என்ற சொல்லின் பொருள் படிப்படியாக வளர்ந்துள்ளது. அ) இறைவாக்குகள் மற்றும் யாவேயின் கோரிக்கைகளைப் பாரம்பரியமாகப் புரிந்து கொள்ளுதல் முதலியவை அடிப்படையில் குருக்கள் அளித்த போதனையைத் தொடக்க காலத்தில் உணர்த்தியது. ஆ) அரசாட்சியின் பிற்காலத்திற்குள், யாவேயால், சட்டப்பகுதிகளில் இஸ்ராயேலுக்கு அளித்த போதனைகளையும், சட்டங்களையும் குறித்தது. இ) நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், எஸ்ரா காலத்தில் நிச்சயமாகத் (கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தோரா என்ற சொல் மோசேயின் நூல்களான ஐந்நூலின் சாரத்தைக் குறித்தது (நெகே 8:1.8; எஸ் 3:2; 7:6). ஈ) இறுதியாக, இறைவாக்கினர் நூல்கள், மற்ற நூல்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு ஐந்நூல் முழுவதையும் குறிக்கும் கலைச்சொல்லாகத் தோரா என்ற சொல் வழக்கில் வந்தது (காண்க. சீராக்கு நூலின் முன்னுரை).

**தோரிமேன் (DORYMENES)**

தோலமி மாக்ரோன் என்பவனின் தந்தை. லீசியா மன்னன் யூதேயாவை அழிக்க வலிமை வாய்ந்த மூவர் தலைமையில் படைகளை அனுப்பினான். அம்மூவர்கள் நிக்கானோர், கொரிக்கியா, தோலமிமாக்ரோன் ஆவர் (1 மக் 3:38). மெனலாவு, தோல்வியடைந்தாலும், தோரிமேனின் மகனான தோலமிக்குப் பெரும் பணம் கொடுக்கச் சம்மதித்தான் (2 மக் 4:45). 2 மக் 10:12-இல் வரும் தோலமி வேறொருவராக இருக்கலாம்.

தோர் (**DOR** - குடியுள்ள இடம்)

மத்தியதரைக்கடல் பகுதியில், கர்மேல் மலைக்குத் தெற்கே உள்ள ஒரு நகரம். நாப்பத்தோர் (யோசு 12:23; 1 அர 4:11), நாப்போத்தோர் (யோசு 11:2) ஆகிய இரண்டும் தோர் என்ற நகரையே குறிக்கலாம்.

இஃது எத்-தந்தூரா என்ற சிறிய துறைமுகநகர் இருந்த இடத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அகழ்வாய்வுகளின்படி இப்பகுதியில் பின்வெண்கலக் காலத்திலிருந்தே (கி.மு. 1500-1200) மக்கள் வாழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் பலம் வாய்ந்த கோபுரமாக விளங்கிய ஒன்றின் சிதைவு, இப்போது ஏல்-பூர்ஜ் என்றழைக்கப்படுகிறது. இதுதான் இச்சிறுபகுதியைக் காக்கும் அரணாகக் கானானியர் காலத்தில் இருந்திருக்கலாம்.

யோசுவாவால் தோற்கடிக்கப்பட்ட கானானியக் கூட்டணியில் தோர் நாட்டு மன்னனும் ஒருவர் (யோசு 11:2; 12:23; 1 நாள் 7:29). யோசுவாவின் வெற்றி ஒருதற்காலிகமான வெற்றி போல் தெரிகிறது (நீதி 1:27). இந்நகரமானது

சாலமோனின் ஆட்சியில் நான்காவது மாவட்டத்தைச் சேர்ந்திருந்தது. அதன் முக்கிய அதிகாரி பென்-அபினதாபுக்குச் சாலமோன் தன் மகள்களில் ஒருத்தியை மணம் செய்வித்தார் (1 அர 4:11).

விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகள், பல நூற்றாண்டுகளுக்கு இந்நகரம் ஒரு கடற்கரை ஊராக இருந்திருக்கலாம் என்று சுட்டுகின்றன. வென்-ஆமோன் என்ற எகிப்தியன் பெனிசியாவுக்குச் சென்றபோது இந்நகருக்கும் சென்றான் என்றுள்ளது. கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் பெலிஸ்தியரோடு வந்த தெசேக்கர் என்பவர்கள் இந்நாட்டை ஆட்சி செய்திருக்கலாம் எனத் தெரிகிறது. அந்தியோக்கு சீதேத்தஸ் (கி.மு. 139-129) தனது குதிரைப்படை, காலாட்படை வீரர்கள், கப்பல்கள் ஆகியவை துணைக்கொண்டு இந்நகரை முற்றுகையிட்டான். இறுதியில் சீமோன் கொடுக்க முன்வந்த உதவியை நிராகரித்த திரிபோவை ஒரு கப்பலில் தப்பியோடக் கட்டாயப்படுத்தினான் (1 மக் 15:12-13.25). யோசிப்பசின் கூற்றுப்படி, இந்நகரில் வாழ்ந்த புறஇனத்தார் அப்பொல்லோவை வழிபட்டனர். கி.மு. 64-இல் பாம்பேயால் இந்நகருக்குச் சுயாட்சி அளிக்கப்பட்டது.

**தோலமாய் (PTOLEMAIS)**

இது, பழங்காலத் தென் பெனீசிய நகரமான அக்கோவின் மற்றொரு பெயராகும். இரண்டாம் தோலமி பிலதெல்புவின் (கி.மு. 285-246) புகழ்ச்சிக்காகத் தோலமாய் என்று பெயர் சூட்டப்பட்டது. இந்நகரம் கி.மு. 210-இல் செலூக்கிய கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கிளாதியு பேரரசன் காலத்தில் (கி.பி. 41-54) இஃது ஓர் உரோமைக் குடியிருப்பாயிற்று. உரோமை ஆட்சி முடிவுக்கு வந்த பின், இது மீண்டும் அக்கோ என்று அழைக்கப்பட்டது.

கலிலேயாவில் யூதர்களை அழித்தொழிக்கத் தேடிய கூட்டணியில் தோலமாயைச் சேர்ந்த படைகளும் இருந்தன என்று அறிந்த யூதா மக்கபேயு தன் சகோதரர் சீமோனை அவர்களுக்கு எதிராகப் படையெடுக்கச் செய்தார் (1 மக் 5:15.22.55). கி.மு. 163-இல் 5-ஆம் அந்தியோக்கு தோலமாயிலிருந்து கெரார் வரையிலுள்ள பகுதிக்குக் கெகமோனிய ஆளுநரை நியமித்தார் (2 மக் 13:24-25). 149-இல் அலக்சாந்தர் பாலாசு இந்நகரைக் கைப்பற்றினார் (1 மக் 10:1). இதை 2-ஆம் தெமேத்திரியு எருசலேம் ஆலயத்திற்குக் கொடையாக அளித்து, அதன் பயனாக, அதைக் கைப்பற்ற யூதர்களின் உதவியை எதிர்பார்த்தார் (10:39). இங்குதான் யோனத்தான் திரிபோவால் பதுங்கியிருந்து தாக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டார் (12:45.48). அப்போஸ்தலரான பவுல் தமது மூன்றாம் மறைபரப்பும் பயணத்தின் முடிவில் தோலமாயில் உள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்க அங்குச் சிறிது காலம் தங்கினார் (அ.ப. 21:7).

**தோலமி (PTOLEMY)**

கி.மு. 323-முதல் கி.மு. 30-வரை எகிப்தை ஆட்சி செய்த கிரேக்க அரசர்களின் பெயராகும். உள்நாட்டு மக்கள் இவர்களைப் பார்வோன் என அழைத்தனர்.

1. முதலாம் **தோலமி** சோத்தேர் (மீட்பர்):

இவர் தோலமி அரச மரபை நிறுவினார். இவர் எயோர்தேயாவின் லாகோசின் மகன். பெரிய அலக்சாந்தர் ஆப்கானிஸ்தானையும் இந்தியாவையும் வென்ற படையெடுப்பில் பங்கு பெற்ற அலக்சாந்தரின் நம்பிக்கைக்குரிய தளபதிகளில் ஒருவரும், அவரது ஏழு மெய்க்காவலர்களில் ஒருவரும் ஆவார். எகிப்தின் சத்திராபுவாக நியமிக்கப்பட்டார் (கி.மு. 323-305). இவர் சைப்ரசு மற்றும் பாலஸ்தீனத்தை வென்றார். செலூக்கிய தளபதி அந்திக்கோனுவின் எதிர்ப்பின் விளைவாகப் பின்வாங்கினார். அப்போது அனேகயூதக் கைதிகளை அலக்சாந்திரியாவுக்குக் கொண்டு வந்தார். 315-இல் பாபிலோனிய சத்திராபுடன் சேர்ந்து அந்திக்கோனுவின் முன்னேற்றத்தைத் தடுத்தார். 312-இல் மீண்டும் பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்துக் கைப்பற்றினார். 311-இல் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்படி சீரிய -

பாலஸ்தீனத்தை இழந்தார். பின்பு கிரேக்க நாட்டிலும் சிறிய ஆசியாவிலும் உள்ள பகுதிகளை வெல்வதில் கவனம் செலுத்தினார். 306-இல் சாலமியில் நடந்த போரில் தெமேத்திரியுவிடம் சைப்ரசை இழந்தார். ஆனால் தன்னை எகிப்தின் அரசன் என அறிவித்துக் கொண்டார் (காண்க. தானி 11:4). தெமேத்திரியுவுக்கு எதிராக ரோதுவுக்கு உதவி செய்தததற்காக இவருக்குச் "சோத்தேர்" (மீட்பர்) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அந்திக்கோனுக்கு எதிரான கூட்டணியில் சேர்ந்து இவர் பாலஸ்தீனத்தின் மீது மூன்றாம் முறை படையெடுத்தார். அந்திக்கோனு இறந்துவிட்டான் என்ற பொய்ச் செய்தியைக் கேட்டு, பாலஸ்தீனத்திலிருந்து பின் வாங்கினார். இதை இவருடைய கூட்டணியினர் கைவிட்டதாகக் கருதி, பாலஸ்தீனத்தைச் செலூக்கியுவுக்குக் கொடுத்தனர். 285-இல் தனது பதவியைத் தன்மகன் இரண்டாம் தோலமிக்குக் கொடுத்துவிட்டு, 283-இல் இறந்தார். இவரது மகன் தோலமி செரானு என்ற பெயரில் மாசிதோனிய அரசராக ஆட்சி செய்தார் (281-279).

முதலாம் தோலமி ஆற்றல்மிக்க ஆட்சியாளர்; படைகளை நன்கு அமைத்தவர்; கிரேக்க மயமாக்குதலையும் அறிஞர்களையும் ஆதரித்தவர். அலக்சாந்திரியாவில் ஒரு பெரிய நூல் நிலையத்தை நிறுவினார். பெரிய அலக்சாந்தரின் போர் வரலாற்றை இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. இவர் செரப்பிசின் கலப்பு வழிபாட்டை வளர்த்ததாகவும் கூறப்படுகிறது.

**2. இரண்டாம் தோலமி பிலதெல்பு** (309-246):

கி.மு. 283- முதல் 246 வரை எகிப்தை ஆட்சி செய்தார். செலூக்கிய முதலாம் அந்தியோக்கை வென்று, மத்திய தரைக்கடலின் கிழக்குப்பகுதியில் தோலமியர்களின் ஆதிக்கத்தை நிறுவியவர். பெனீசியா, யூதேயா ஆகிய நாடுகளைக் கைப்பற்றி அங்குக் கிரேக்க நகரங்களான இராபாத் - அம்மோன் (பிலதெல்பியா), அக்ரா (தோலமாய்) ஆகியவற்றை நிறுவினார். 250-இல் தன் மகள் பெர்னிக்கியை இரண்டாம் அந்தியோக்குக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவளுக்குப் பிறக்கும் மகன் அரச வாரிசு ஆவான் என்று உடன்படிக்கை செய்து கொண்டார் (தானி 11:6). வியாபாரம் செழித்தோங்கி இவரது பகட்டான வாழ்க்கைக்கும் இவரது அரசவையின் இழிவான வாழ்க்கை முறைக்கும் ஈடு கொடுத்தது. அலாக்சாந்திரியாவிலுள்ள நூல் நிலையத்தைப் பெரிதாக்கினார். விஞ்ஞான ஆய்வுகளுக்கு ஆதரவு அளித்தார். ஒரு விலங்குகள் காட்சியகத்தையும் நிறுவினார். பாரம்பரியப்படி இவரது ஆட்சிக் காலத்தில்தான் தோரா அல்லது ஐந்நூல் என்ற விவிலியத்தொகுப்பு கிரேக்க மொழியில் பெயர்க்கப்பட்டது.

**3. மூன்றாம் தோலமி யூர்கெத்து:** இரண்டாம் தோலமியின் மகன். கி.மு. 246 முதல் 221 வரை ஆட்சி செய்தார். தனது சகோதரி பெர்னிக்கியும் அவளது மகனும் கொலை செய்யப்பட்டதால், இவர் சீரியாவைத் தாக்கினார் (தானி 11;7-8; காண்க. 1 மக் 11:8). இவர் பாபிலோன் மற்றும் திராக்கு வரைக்கும் தன் அரசைப்பெரிதாக்கினார். ஆகியர் கடல் பகுதிகளிலுள்ள தீவுகளையும் கைப்பற்றினார். இவரது காலத்தில் தோலமியர்களின் ஆட்சி மிகப் பரவியிருந்தது. இவர் 214-இல் இரண்டாம் செலூக்குவுடன் உடன் படிக்கை செய்து, நாட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு அமைதி அளித்தார் (தானி 11:9). இவர் காலத்தில்தான் யூதேயாவின் பெரிய குரு இரண்டாம் ஓனியா தோலமியர்களுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டார். இந்தத் தோலமி யூதேயாவின் மீது படையெடுக்க அச்சுறுத்தியதை யோசேப்பு பென் தோபியா தலையிட்டு நீக்கினார்.

**4. நான்காம் தோலமி பிலோபாத்தோர்:**

மூன்றாம் தோலமியின் மகன் கி.மு. 221 முதல் 204-வரை ஆட்சி செய்தார். இவரது காலத்தில் தோலமியர் அரசு குன்றத் தொடங்கியது. இவர் மூன்றாம் அந்தியோக்குவை வென்றபின் எருசலேம் ஆலயத்துள் நுழைய முனைந்தார். அனுமதி மறுக்கப்படவே சினங்கொண்டு யூதர்களை எங்கும் துன்புறுத்தத் தொடங்கினார்.

இருவருடைய படைகளுக்குள்ளே பூசல்களும் கிளர்ச்சிகளும் தோன்றத் தொடங்கின (காண்க. தானி 11:10-11).

**5. ஐந்தாம் தோலமி எப்பிபான்:** ஐந்து வயதிலே ஆட்சிக்கு வந்து கி.மு. 204 முதல் 181 வரை ஆட்சி செய்தார். இவருக்குப் பதிலாக ஆட்சி செய்தவர்களின் பகர நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு செலூக்கிய மூன்றாம் அந்தியோக்கும் மாசிதோனியாவின் ஐந்தாம் பிலிப்புவும் 198-இல் எகிப்தின்மீது படையெடுத்து வென்றனர். பாலஸ்தீனம் செலூக்கியரின் ஆட்சிக்குட்பட்டது. இவர் 197-இல் அரசனாக முடிசூட்டப்பட்டார். 192-இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இவர் அந்தியோக்குவின் மகள் கிளியோபாத்திராவை மணந்து கொண்டார் (தானி 11:13-18).

**6. ஆறாம் தோலமி பிலோமேத்தோர்:** ஐந்தாம் தோலமியின் மகன். கி.மு. 181 முதல் 145 வரை ஆட்சி செய்தார். இவருடைய தாய் இறந்தபின், பாலஸ்தீனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது பற்றிச் செலூக்கியர் எகிப்தியர்களிடையே போராட்டம் தொடங்கியது. நான்காம் அந்தியோக்கு எப்பிபான் 170-இல் எகிப்தை வென்று ஆறாம் தோலமியின் சகோதரன் ஏழாம் தோலமியை அலக்சாந்திரியாவில் அரசனாக ஏற்படுத்தினார். அந்தியோக்கு பின்வாங்கியபின், இரு சகோதரர்களும் அவர்களுடைய சகோதரி கிளியோபாத்திராவும் சேர்ந்து ஆட்சி செய்தனர். அதனால் பல பூசல்கள் ஏற்பட்டன. பிலோமேத்தோர் 154-இல் தன் சகோதரனை வென்று கைப்பற்றிய பின்னும் இந்நிலை நீடித்தது. இக்காலத்தில்தான், அகதியான பெரியகுரு நான்காம் ஓனியா லெயோன் தோபொலியில் ஒரு யூத ஆலயத்தைக் கட்ட அனுமதிக்கப்பட்டார் (1 மக் 11:18). 6-ஆம் தோலமி முதலாம் தெமேத்திரியுவுக்கு எதிரான கூட்டணியில் சேர்ந்தார். அந்தியோக்கு அருகில், தெமேத்திரியுவுக்கு எதிரான போரில் காயம்பட்டு இறந்தார்.

**7. எட்டாம் தோலமி இரண்டாம் யூர்கெத்து:** இவர் 6-ஆம் தோலமியின் சகோதரனும் 7-ஆம் தோலமி என்று முன்பு குறிக்கப்பட்டவரும் ஆவார். பெருந்தொந்தியுடையவர்" என்ற பொருளில் "பிசிக்கோன்" என்றும் அழைக்கப்பட்டார். இவர் 170 முதல் 164 வரை தன் சகோதரன் ஆறாம் தோலமியுடன் சேர்ந்து ஆட்சி செய்தார். இவர் ஆறாம் தோலமியின் மகனான சிறுவனைக் கொன்று 145-இல் எகிப்தின் அரசை அபகரித்துக் கொண்டார். இவர் மிகவும் கொடுமையானவர். மக்களால் வெறுக்கப்பட்டார். தன் மகனையே கொன்றார். அலக்சாந்திரியாவைச்சேர்ந்த அனேகரைக் கொன்றார். யூதர்களை வெறுத்து அவர்களைக் கொடுமைப்படுத்தினார். 2-ஆம் மக்கபேயர் நூலின் முதல் அதிகாரத்தில் வரும் கடிதம் இவர் காலத்தில் எழுதப்பட்டதாகும். இவர் 117வரை ஆட்சி செய்தார்.

**8. ஒன்பதாம் தோலமி இரண்டாம் சோத்தோர்:** இவர் லாதிரோஸ் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் 116-இலிருந்து 107 வரை தன் தாயுடன் சேர்ந்து ஆட்சி செய்தார். இவர் காலத்தில் குடும்பப் பூசல்கள் மிகுந்திருந்தன. இவர் செலூக்கியர்களுக்கு உதவி செய்தாலும், சமாரியாவை இரிக்கானு கைப்பற்றினார். இதன் விளைவாக இவரை இவர் தாய் விரட்டி விட்டாள். 88-இல் மீண்டும் அரசனாக்கப்பட்டு 80-வரை ஆட்சி செய்தார்.

**9. பன்னிரண்டாம் தோலமி பிலோமேத்தோர் பிலதெல்பு நொயேசு தியோனிசு:** பொதுவாக, "குழல் இசைஞன்" என்ற பொருளில் "அவுலெத்தெசு" என்றழைக்கப்பட்டார். இவர் ஒன்பதாம் தோலமிக்கு முறைகேடாகப் பிறந்தவர். இவர் உரோமையரோடு கொண்ட தொடர்பால் மக்களின் கிளர்ச்சியால் 58-55-இல் நாடு கடத்தப்பட்டார். உரோமையர், யூதர்கள் உதவியால் மீண்டு அரசைப் பெற்றார். இவர் 51-வரை ஆட்சி செய்தார். இவர் காலத்தில் எஸ்தர் நூலின் கிரேக்க வாசகம் எகிப்தில் அறிமுகம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

10. 13-ஆம், 14-ஆம், 15-ஆம் தோலமிகள்: ஒன்பதாம் தோலமியின் மகள் 7-ஆம் கிளியோபாத்திரா பிலோபாத்தோர் (60-30), தன் சகோதரர்கள் 13-ஆம் தோலமி பிலோபாத்தோர் (51-47), 14-ஆம் தோலமி பிலோ பாத்தரோடும்

(47-44)பின் தன் மகன் 15-ஆம் தோலமி பிலோமேத்தோர் சீசரோடும் (44-30) சேர்ந்த ஆட்சி செய்தார். இவளும் இவள் காதலன் மாற்கு அந்தோனியும் அக்டேவியனால் தோற்கடிக்கப்பட்டபின், இவள் தற்கொலை செய்து கொண்டாள். இதன்பின் எகிப்து உரோமைப் பேரரசின் ஒரு மாகாணம் ஆயிற்று.

எகிப்திய அரச மரபைச் சேராத தோலமி என்ற பெயருடைய பலர் இருந்திருக்கின்றனர்.

11. ஒன்பதாம் தோலமி, மூன்றாம் கிளயோபாத்திர ஆகியோரின் காலத்தில் பூரிம் விழாவைப் பற்றிய கடிதத்தை அலக் சாந்திரியாவுக்குக் கொண்டு வந்தவர். இவர் தோசிதேயுடன் மகனும் லிசிமாக்குவின் தந்தையுமாவார் (எஸ் 11:1).

12. அபூபுவின் மகனும் பெரிய குருவின் மருமகனும் ஆவார். சாக்கடலுக்கு வடக்கிலுள்ள பகுதிக்கு ஆளுநர். இவரது பேராசை தன் மருமகனான சீமோன் மக்கபேயுவையும் அவரது புதல்வர்கள் மத்தத்தியாவையும் யூதாவையும் தாக்கு என்ற இடத்தில் ஒரு விழாவின் போது கொல்ல இட்டுச்சென்றது (1 மக் 16:11-17). இக்கொடிய செயலால் சீற்றம் கொண்ட யோவான் இரிக்கானு இவரையும் இவரது படையையும் கொன்றழித்தார் ( 16:18-22).

13. **தோலமி மக்ரோன்:** தோரிமேனின் மகன். ஆறாம் தோலமியால் சைப்ரசுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆனால் இவர் தோலமியைக் கைவிட்டு, நான்காம் அந்தியோக்கு எப்பிபானுக்கு ஆதரவு அளித்தார் (2 மக் 10:12-13). மெனலாவுவிடம் கையூட்டுப் பெற்று, ஆலயத்தை லிசிமாக்கு கொள்ளையடித்ததில் பெரிய குருவுக்குப் பங்கில்லை என்று 4-ஆம் அந்தியோக்கு விடம் இவர் உறுதி கூறினார் ( 4:45-47). 6:8-இன்படி தியோனிசுவின் கிரேக்க விழாவில் யூதர்களும் பங்கெடுக்கும்படி இவர்கட்டளையிட்டார். 5-ஆம் அந்தியோக்குவால் கூலே-சீரியா, பெனீசியாப் பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். யூதர்களை முற்றும் அழித்துவிட நிக்கானோரைப் படையுடன் அனுப்பினார் (8:8-9). 1 மக் 3:38-41 என்ற பகுதி, யூதா மக்கபேயுவைத்தாக்க அனுப்பப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்று கூறுகிறது. 2 மக் 10:12-13-இன்படி இவர் யூதர்களுக்கு ஆதரவு காட்டியதால், துரோகியாகக் கருதப்பட்டார்; அவமானப்படுத்தப்பட்டு, நஞ்சுண்டு இறந்தார்.

**தோலா (TOLA** - கருஞ்சிவப்பான)

இப்பெயர் இசக்கார் குலத்து இரண்டு இனத்து மக்கள் அல்லது இரண்டு தனிப்பட்டவர்களைக் குறிக்கிறது.

1) குருக்கள் பாரம்பரிய தலைமுறைப் பட்டியலிலும் (ஆதி 46:13, எண் 26:23), நாளாகமப் பட்டியலிலும் (1 நாள் 7:1-2), இசக்காரின் நான்கு புதல்வர்களில் முதல்வராகத் தோலா உள்ளார். எண் 26:23-இன்படி, தோலா நான்கு குலத்திற்குத் தலைவராக உள்ளார். இவரது சகோதரர்கள் பூவா, யாசூபு (ஆதி 46:13-இல் யோபு), சிம்ரோன் ஆவர். தோலாவின் ஆறு புதல்வர்களும் வலிமைமிகு வீரர்களாகத் திகழ்ந்தனர் (1 நாள் 7:2).

2. ஒரு நீதிபதி. இசக்கார் இனத்தைச் சேர்ந்தவர். பூவாவின் புதல்வர். தோதுவின் பேரன் எப்பிராயிம் நகரான சாமிரில் வாழ்ந்தவர். இருபத்து மூன்று ஆண்டுகள் இஸ்ராயேலின் நீதிபதியாக விளங்கினார் (நீதி 10:1).

**தோலாது (TOLAD)**

சிமியோன் இனத்தைச் சேர்ந்த நகரம் (1 நாள் 4:29). எல்தோலாது என்பதின் மற்றொரு பெயர். காண்க: எல்தோலாது.

**தோல் (SKIN)**

மனிதனுடைய அல்லது மிருகத்தினுடைய உடலின் மீது மூடியுள்ள மேற்பகுதியைக் குறிக்கின்றது.

**மனிதன்:** மனிதனுடைய உடல் தோலாலும், சதையாலும், தசை நார்களாலும், எலும்புகளாலும் ஆனது (யோபு 10:11;19:20; புல 3:4; எசே 37:4-6). ஒருசில இடங்களில் தோல் மட்டுமே உடல் முழுவதையும் குறிக்கிறது (யாத் 22:27; யோபு

19:26). எத்தியோப்பியர்களின் தோல் நிறம் "எத்தியோப்பியன் தன்நிறத்தை மாற்ற முடியுமோ" என்ற புகழ்மிக்க கேள்விக்குக் காரணமாக அமைந்திருந்தது (எரே 13:23). உடம்பிலுள்ள மயிர்த்திடலின் வித்தியாசம் யாக்கோபு, ஏசா ஆகியவர்களின் கதையில் உணரப்படுகின்றது. பசிக்கொடுமை மற்றும் நோயின் விளைவாக, தோல் கறுப்பாகவும், கடினமானதாகவும், வறண்டு போனதாகவும், நோயுற்றதாகவும், இருக்கலாம் (யோபு 7:5; 30:30; புல 4:8; 5:10). லேவி 13:1-46 அசாதாரண நிலையில் உள்ள தோலுக்குச் சிகிச்சை செய்வதைப்பற்றி விவரிக்கின்றது. மீக் 3:2-3-இல் ஆண்டவர் இஸ்ராயேலர்களின் தலைவர்கள் மக்களுக்குச் செய்துவந்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டும்போது "என் மக்களின் தோலை உயிரோடு உரிக்கிறீர்கள்" என்று உருவகமாகக் கூறுகின்றார்.

**விலங்கு:** யோபு 41:7-இல் குறிப்பிட்டுள்ள லேவியாத்தனுடைய தோலின் குறிப்பைத் தவிர, விவிலியத்தில் உள்ள விலங்குகளின் தோல் சம்பந்தமான எல்லாக் குறிப்புக்களும், இறந்த போன விலங்குகளின் தோல் பற்றியவையேயாகும். பாலஸ்தீனத்தில் எருதுகள், கோவேறு கழுதைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் போன்றவை வீட்டு விலங்குகளாக வளர்க்கப்பட்டதால் பெரும்பாலும் அவைகளின் தோல்கள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. வெள்ளாட்டுக் குட்டிகள் (ஆதி 27:16), ஆட்டுக்கிடாய் மற்றும் வெள்ளாடு (யாத் 25:5), ஆடு மற்றும் செம்மறி (எபி 11:37) ஆகியவற்றின் தோல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பன்றி, ஒட்டகம், உடும்பு, ஓணான், பச்சோந்தி, பல்லி ஆகியவற்றின் தோல்களைப் பற்றி மிஷ்னா குறிப்பிடுகிறது. இவை அனைத்துமே பயன்படுத்துவதற்கு முன்னமே பதனிடப்பட்டன. குருக்களுக்காகவும் சமூகம் முழுவதிற்குமாகவும் அளிக்கப்பட்ட பாவப்பரிகாரப் பலியில் இடம்பெற்ற ஆட்டின் தோலை எரித்து அழித்துவிட வேண்டும் ( யாத் 29:14; லேவி 4:11.21; 8:17;9:11; 16:27; காண்க. எண் 19:5). ஆனால் மற்றப் பாவப்பரிகாரப் பலிகளின் தோல்களையும், அதேபோல் தகனப்பலியில் இடம் பெற்ற காணிக்கையாக்கப்பட்ட ஆட்டுத்தோலும் குருக்களுக்குச் சொந்தமாக்கப்பட்டது (லேவி 5:13; 7:8). அதற்குப் பொருளாதார மதிப்பு இருந்ததாகத் தெரிகிறது. விலங்குகளின் தோல் உரிக்கப்படுவதைப் பற்றி லேவி 1:6; 2 நாள் 29.34-இல் சுட்டிக்காட்டப்படுகிறது.

"தோலுக்குத் தோல்" பழமொழியில் (யோபு 2:4), இதனுடைய மூலப்பொருள் தெரியவில்லை. ஆனால் இது பயன்படுத்தப்பட்ட சூழ்நிலையைப் பார்க்கும்போது "தோலுக்குத் தோல்" என்பது, விலையுயர்ந்த பொருளுக்காக விலை மலிவான ஒன்றை இழப்பதாகும்" என்ற பொருளைத் தருகின்றது.

**தோல் சுருள் (PARCHMENT)**

வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளின் தோலிலிருந்து தயாரிக்கப்பட்ட எழுதுபொருள். நீண்டநாள் நிலைக்கும் தன்மையால், ஓலைச்சுருளின் இடத்தைத் தோல்சுருள் சிறுகச் சிறுக ஆக்ரமித்துக்கொண்டது. பெர்கமு நாட்டு அரசன் இரண்டாம். யூமன் ( கி.மு. 197-158) என்பவர் இதனை அறிமுகப்படுத்தியதால் இது கிரேக்க மொழியில் "பெர்கமேனோன்" என்று அழைக்கப்பட்டது. ஆனால் இவை முதலில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யூப்பிரத்தீசு நதி ஓரத்தில் உள்ள 'தூரா யூரோபோஸ்' என்னுமிடத்தில் காணப்பட்டன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோல்சுருள் அதிகம் உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனை முதலில் கண்டுபிடித்த காலம் பற்றி அறிய இயலவில்லை. தோலில் உள்ள முடி, முதலில் சுண்ணாம்பு நீரில் நனைக்கப்படும். பின்னர், தேய்க்கப்பட்டு முடி நீக்கப்படுகிறது. பிறகு, அவை கழுவப்பட்டு, உலர்ந்தபின் சட்டங்களில் விரித்துப் பொருத்தப்படுகின்றன. இறுதியாக, அவை சுண்ணாம்பு, கல் மற்றும் மாக்கல்லால் தேய்க்கப்பட்டு மென்மையாக்கப்படுகின்றன. இவ்வாறு, தோல்சுருள் பதனிடப்பட்ட தோலிலிருந்து வேறுபடுகிறது. உயர்தர பதனிட்ட தோல் கன்றுக்குட்டிகளின் தோல்களினின்று

தயாரிக்கப்பட்டன. இது "வேலும்" என்றழைக்கப்பட்டது.

2திமொ 4:13 குறிப்பிடும் தோல் சுருள்கள் பற்றிய குறிப்பு, தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றன. ஏனெனில் அவை தனிப்பட்ட விதத்தில் குறிக்கப்படுகின்றன. அவற்றின் தன்மை பற்றி அறிஞரிடையே கருத்தொற்றுமை இல்லை. அவை, கிரேக்க மொழி, பழைய ஏற்பாட்டின் பிரதிகளாக இருக்கக்கூடுமா என்பது தெரியவில்லை. அவை, உரோமைக் குடியுரிமைக்கான சாசனங்கள், அல்லது வருங்கால உபயோகத்திற்கான வெற்றுத் தோல் சுருள்கள் என்பன மற்றும் சில கருத்துகள் ஆகும்.

**தோல் பதனிடுபவர், தோல் பதனிடுதல் (TANNER, TANNING)**

சுண்ணாம்பு, சில தாவரங்களின் சாறு, பட்டை இவற்றைப் பயன்படுத்தித் தோல் பதனிடும் தொழில் மிகப்பழங்காலத்திலிருந்தே தெரிந்திருந்தது.

யாத் 25:5; 26:14; 35:23; 36:19; 39:34 ஆகியவற்றில் செந்நிறத்தில் பதனிடப்பட்ட ஆட்டுக் கிடாய்த்தோல் வாக்குறுதிப் பெட்டகத்திற்குத் திரைச்சீலையாகப் பயன்படுத்தப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.ப. 9:43; 10:6.32-இல் தோல் பதனிடும் சீமோன் குறிப்பிடப்பட்டுள்ளார். தால் மூதின் கூற்றுப்படி, யூதர்களிடையே, தோல் பதனிடுவோர் உயர்ந்தவர்களாகக் கருதப்படவில்லை. அவர்களுடைய வேலையின் காரணமாக, தோல் பதனிடுவோர் நகருக்கு வெளியே வாழ்ந்தனர். சீமோன் கடற்கரை ஓரமாக வாழ்ந்தார். பேதுரு அவரோடு சென்று தங்குவது. அவரது பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.

**தோல்வார் (THONG)**

பதனிட்ட தோலால் செய்யப்பட்ட அகலம் குறுகிய வார் அல்லது கயிறு. இது நுகத்தடியோடு பிணைப்பதற்கும் (எசா 58:6; எரே 27:2) கைதிகளை அடித்துத் தண்டிப்பதற்கும் (அ.ப. 22:25) பயன்பட்டது. இது மிதியடி வாராகவும் பயன்பட்டது (மாற் 1:7; லூக் 3:16; யோவா 1:27). சில வார்களைப் பின்னி அதை ஒரு கசையாகச் செய்து கசையடி கொடுப்பதில் பயன்படுத்துவர்.

**தோவாகு (TOAH – வளைந்த)**

இப்பெயர், ஏமான் என்ற லேவியரின் வழித் தோன்றல்களின் பட்டியலிலும் கோகாத்தியர் லேவியர் தலைமுறைப்பட்டியலிலும் வருகிறது (1 நாள் 6:34). இதற்கு முன் உள்ள பட்டியலில் எப்பெயர் நாகத்து என்றும் (6:26), தோகூ என்றும் (1 சாமு 1:1) இருக்கிறது. இவர் சூப்புவின் மகனும் சாமுவேலின் முன்னோரும் ஆவார்.

**தௌ (THU)**

இது எபிரேய நெடுங்கணக்கில் இருபத்து இரண்டாவது எழுத்தாகும். சங் 119-இல் இருபத்திரண்டாவது பகுதியின் தலைப்பாக உள்ளது. அப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

# ந

**நகமானி ( NAHAMANI - யாவே ஆறுதல் அளித்தார்)**

இவர் பாபிலோன் அடிமைத் தனத்திலிருந்து செருபாபேல் அல்லது நெகேமியாவோடு திரும்பிய இஸ்ராயேலின் தலைவர்களுள் ஒருவர் (நெகே 7:7).

**நகம் (NAIL)**

நகம் கால் அல்லது கைவிரலின் நுனியில் வளரும் ஒருபாகமாகும். "சிறைப்பட்டவர்களில் வடிவழகியான ஒரு பெண்ணைக் கண்டு அவள் மீது காதல்கொண்டு அவளை மணந்துகொள்ள விரும்புவாயாயின், அவளை உன் வீட்டிற்குக் கொண்டு போகலாம். அவளோ தன் தலைமயிரைக் கத்தரித்துத் தன் நகங்களையும் களைந்து.. உன் வீட்டில் உட்கார்ந்தவளாய் ஒரு மாதம் வரையிலும் தன் தாய் தந்தையரை நினைத்துத் துக்கம் கொண்டாடுவாள்" (உபா 21:12). அதற்குப்பின் அவள் மனைவியாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

இறைவனால் தண்டிக்கப்பட்ட நெபுகத்னேசர், விலங்கைப்போல் வாழ்ந்தபோது அவனுடைய நகங்கள் பறவைகளின் நகங்களைப்போல் வளரத்தொடங்கின (தானி 4:30). தானியேல் காட்சியில் கண்ட நான்காம் விலங்கு "இரும்புப் பற்களும் வெண்கல நகங்களும் கொண்டு" அஞ்சி நடுங்க வைக்கும் தோற்றத்தைக் கொண்டிருந்தது (7:19).

**நகர அதிகாரிகள் (CITY AUTHORITIES)**

'நகரக் குழுவினர்' என்ற சொற்றொடர் அப்போஸ்தலர் பணியில் (அ.ப. 17:6.8) மட்டும்தான் காணப்படுகிறது. கிரேக்க இலக்கியங்களிலும் இத்தொடர் வருவதாகத் தெரியவில்லை. ஆனால், கல்வெட்டுக்களில் இத்தொடரைக் காணலாம்.

'நகர ஆளுநர்' என்ற சிறப்புப் பெயர் அல்லது பட்டம் உரோமைப் பேரரசைச் சேராத நகர நடுவருக்கு வழங்கப்பட்ட மாசிதோனியச் சிறப்புப் பெயராகும்.

நகர ஆளுநரின் எண்ணிக்கையானது ஒவ்வொரு நகரத்தின் முக்கியத்துவத்திற்குத் தகுந்தது போல மாறுபடும். அம்பிப்பொலி ஐந்து ஆளுநர்களையும், பெல்லா இரண்டு ஆளுநர்களையும், அகுஸ்துவின் காலத்தில் தெசலோனிக்கே ஐந்து ஆளுநர்களுளையும் அதன் பின் ஆறு ஆளுநர்களையும் கொண்டிருந்தன. தெசலோனிக்கே நகரம் சுதந்தர நகராகவும் மாசிதோனியா மாநிலத்தில் தலைநகராகவும் விளங்கியதால், அங்கிருந்த நகர ஆளுநர்கள் ஏராளமான, கடினமான பொறுப்புக்களைக் கொண்டிருந்தனர். கி.மு. 168-இல் மாசிதோனியா, உரோமையர்களால் கைப்பற்றப்பட்டபின் ஐந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இரண்டாவது மாவட்டத்தின் தலைநகராகத் தெசலோனிக்கே விளங்கியது. கி.மு. 146-இல் மாசிதோனியா ஒரே மாநிலமாக்கப்பட்டது. தெசலோனிக்கே அதன் தலைநகராக விளங்கியது. மறுமுறையும் தெசலோனிக்கே நகரானது. ஆக்டேவியன், அந்தோனி போன்றவர்களால் சுதந்தர நகராக்கப்பட்டது. கி.பி. 44-ஆம் ஆண்டிற்குப்பின் மாசிதோனியாவிலிருந்த அரசாங்க நிறுவனங்கள் வேற்றிடத்திற்கு மாற்றப்படவில்லை. தெசலோனிக்கேயில் பவுலையும், சீலாவையும் சிறைப்பிடித்த முறையிலிருந்து (17:7), அங்கு உரோமைய அரசாங்கம் பொறுப்பு வகித்திருந்தது என்பது தெளிவாக இருந்தாலும், அப்போஸ்தலர் பணியில் கூறப்படுகின்ற இதே நிகழ்ச்சியை வைத்துப் பார்க்கும்பொழுது, நகர அதிகாரிகள்தான் நகருக்கும் உரோமைக்கும் முழுப்பொறுப்புடையவர்களாகத் தெரிகிறது. இவர்கள் மூப்பர் குழுவோடும் மக்கள் மன்றத்தோடும் சேர்ந்து செயல்பட்டனர். ஒரு நகரின் சுதந்தரம் உண்மையானதானாலும்,

"மற்றொரு அரசனை" ஏற்கும் சுதந்தரம் இல்லை.

**நகரம் (CITY)**

ஒரு நாகரிகத்தைப்பற்றி அறிந்துகொள்ள, அந்த நாகரிகம் இருந்த நகரத்தைத் தெரிந்து கொண்டாலே போதும். எரிகோ நகரமே மிகப் பழைமையான நகரம் எனக்கருதப்படுகிறது (கி.மு. 6800). கி.மு. 3500-இல் மெசபொத்தாமியாவில் நகர்ப்புறச் சூழ்நிலைகள் தொடங்க ஆரம்பிக்கின்றன. அதுவரை மெசபொத்தாமிய மக்கள் கிராமப் புறங்களில் விவசாயம் செய்தே வாழ்ந்துவந்தனர். சுமேரியர்களுக்கு ஏற்பட்ட சில உணர்வு மாற்றங்கள், பாதுகாப்போடு, ஒரு கூட்டு வாழ்க்கையை உருவாக்கித் தந்தது. மேய்ச்சலிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த மக்கள் நகர்ப்புறத்திற்கு வந்தபிறகு பல கருவிகளைக் கண்டுபிடித்து, தங்களது உணவைத் தயாரிக்கக் கற்றுக்கொண்டார்கள். நகரமானது பொருட்களைப் பண்ட மாற்றப் பயன்படுத்தப்பட்டது. பொருட்களை மக்கள் தங்கள் நகர மக்களோடு மட்டுமல்லாமல், பிற நகர மக்களோடும் மாற்றிக் கொண்டார்கள். பொருட்களைப் பரிமாறிக் கொண்டதால் உற்பத்தி பெருகியது. இயற்கைச் சக்திகளை மனிதன் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினான். நகரம் மக்களிடையே ஓர் அரசியல் பிணைப்பு ஏற்பட, காரணமாக இருந்தது. பொதுநலனுக்காக மக்கள் சக்தி திரட்டப்பட்டது. மெசபொத்தாமியாவிலும், எகிப்திலும் பயிர்த்தொழிலுக்குக் கூட்டு உழைப்புப் பயன்படுத்தப்பட்டது. பாதுகாப்புப் பணிகளும், அரசுப் பணிகளும் மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டன. சாலை அமைத்தல், ஆலயங்கள் கட்டுதல், பாதுகாப்பு அரண்கள் அமைத்தல் ஆகிய வேலைகள் மன்னனால் செய்யப்பட்டன. மெசபொத்தாமியாவில் உள்ள ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு ஆலயம் மையமாக இருந்தது. ஒவ்வொரு நகரத்தில் வாழ்பவர்களும், தங்களுக்கே உரிய கடவுள்களை வணங்கிவந்தார்கள். இலக்கியம், கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இந்த ஆலயங்களும், அவற்றில் பணிபுரிந்தவர்களும் பெரிதும் உதவியிருக்கின்றார்கள். அரசியல் அமைப்பில் மெசபொத்தாமியா எகிப்தைவிட மாறுபட்டு இருந்தது. மெசபொத்தாமியாவில் உள்ள ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு தனி அரசாகக் கருதப்பட்டது. அவர்கள் ஒரு பரந்த அரசைப் பல தடவை நிறுவ முயன்றும் அவர்களால் முடிய வில்லை. பெரிய நகர்ப் பகுதிகள் பேரரசு என்ற வடிவில் அமைந்தன. ஆனால் எகிப்தில், அரசு என்பது இணைந்து காணப்பட்டது. நைல் நதியின் தேவையை எல்லோரும் நம்பியிருந்ததால் ஒருவேளை, அவர்கள் எல்லோரும் ஒரே அரசாக இருந்திருக்கலாம். இஸ்ராயேலர்களுக்கு முன்பு, கானான் நாடு மெசபொத்தாமியாவைப் போலவே துண்டு துண்டு அரசாக இருந்தது. இவற்றில் மூன்றாம் துட்மோசு மன்னன் 118 நகர்களைக் கைப்பற்றியதாகச் சான்றுகள் உள்ளன. 2-ஆம் ராமசேசுவின் காலத்தில் இருந்து சீரியாவில் 56 அரண்நகர்கள் இருந்ததாகப் புல்தாள் ஏடுகள் குறிப்பிடுகின்றன. இவற்றில் பல விவிலியப் பெயர்களோடு தொடர்புடையன. அமர்னாவின் கடிதங்களில் இஸ்ராயேலர், கானான் நாட்டைப் படிப்பதற்கு முன்பு, அந்நாட்டில் உள்ள அரசியல் அமைப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளன. இந்தக் காலக் கட்டத்தில் பார்வோன்களின் பிரநிதிகளால் கானானிய நகர்கள் ஆளப்பட்டன. ஆனால், ஒவ்வொரு நகர அரசும் சுதந்தரமாகச் செயல்பட்டது. இஸ்ராயேலர்கள் நாட்டைக் கைப்பற்றியபோது, கானான் நாட்டு நகர்களையே இறுதியாகக் கைப்பற்றினார்கள். இஸ்ராயேல் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பும், இஸ்ராயேலைச் சுற்றி, கானானிய நகரங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. எபிரேயர்கள் கானானின் நகர அரசுகளைக் கைப்பற்றிய போதும், அங்குள்ள அரசியல் அமைப்பைப் பின்பற்றவில்லை. நகரங்களைக் கைப்பற்றியபின்பும் இன ஒற்றுமையும், 'இஸ்ராயேல்' என்ற உணர்வும் அவர்களிடம் இருந்தன. அரசாட்சிமுறை வரும் வரை, இஸ்ராயேல் மக்களால் ஒரு நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை.

மெசபொத்தாமியாவைப் போலச் சுவர்களால் சுற்றிச் சூழப்பட்ட ஓர் அமைப்பு தான் நகரம் என்று பழைய ஏற்பாடு குறிப்பிடுகின்றன. கானானிய, எபிரேய நகரங்கள் தற்போதைய நகரங்களோடு ஒப்பிடும்போது மிகவும் சிறியன. அவைகள் அதிகபட்சம் 20 ஏக்கர் நிலப்பரப்பளவையே கொண்டிருந்தன. இந்தப் பரப்பளவில் மக்கள் தொகை மிகவும் நெருக்கமாக இருந்தது. ஓர் ஏக்கருக்குக் குறைந்தபட்சம் 50 பேராவது வாழ்ந்தார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். நகர்களுக்குள், நாம நினைப்பது போலத் தெருக்கள் எல்லாம் கிடையாது. வீடுகளுக்கிடையே ஒற்றையடிப் பாதைகள் மட்டுமே இருந்தன. நகரவாயிலுக்குப் பக்கத்தில்மட்டுமே ஒரு திறந்தவெளி இருந்தது. இந்த இடம் பாதுகாப்புப் பணிக்காக விடப்பட்டிருந்தது. காரணம், இந்த வாயில்கள் பகுதியில்தான் எதிரிகள் அதிகமாகத் தாக்குவது வழக்கம். நீண்ட நாட்களாக நாட்டில் அமைதி நிலவுமாயின், இந்தத் திறந்த வெளிப்பகுதியில் வீடுகள் கட்டப்படும். மீண்டும் போர்மூளும் அபாயம் ஏற்படும்போது அவ்வீடுகள் இடிக்கப்படும் (எசா 22:10). மதிற்சுவர்களின் மீதும் சில நேரங்களில் வீடுகள் கட்டப்பட்டன (யோசு 2:15). நகரைச் சார்ந்த பலர், நகருக்கு வெளியே தங்கி நிலங்களைப் பயிர் செய்து வந்தார்கள். நகருக்கு வெளியே இவர்கள் தங்கியிருந்த கிராமங்கள் 'நகரின் மகள்கள்' என்று அழைக்கப்பட்டன. போர்க்காலத்தின்போது இந்தக் கிராமங்களில் வாழ்பவர்கள் நகருக்குள் நுழைந்து பாதுகாத்துக் கொள்ளவார்கள். நீர் இருப்பதைப் பொருத்தும், பாதுகாப்பான வசதியைப் பொறுத்துமே நகரங்கள் நிறுவப்பட்டன. நீரோடைகள், முடியுமென்றால் மதிற்சுவர்க்குள் இருக்கும்படி அமைக்கப்பட்டன. நகரம், முற்றுகை இடப்பட்டிருக்கும்போது தண்ணீர் பெற, சிக்கல் நிறைந்த பல அமைப்புக்கள் இருந்ததாகக் காணப்படுகிறது. பழைய இஸ்ராயேலின் நகர்களில் கல் பதித்த சாலைகளே இல்லை. அவை அழுக்கு நிறைந்து காணப்பட்டன (எசா 10:6; மீக் 7:10). கழிவுப்பொருட்கள் வீட்டில் இருந்து தெருவிலே வீசப்பட்டன. தெருநாய்கள் தெருவிலுள்ள அசுத்தத்தையே தின்று வாழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது (யாத் 22:30; எசா 5:25). வாயிலுக்குப் பக்கத்தில் உள்ள திறந்தவெளி சந்தையாகவும் நீதி மன்றமாகவும் பயன்படுத்தப்பட்டது (2 அர 7:1). நகரவாயிலுக்குப் பக்கத்தில் உள்ள இருக்கையில் இருந்து பெரியவர்கள் தீர்ப்பு வழங்குவார்கள் (உப 21:19; 2 சாமு 15:2). ஒரே தொழிலைச் செய்பவர்கள் அனேகமாக ஒரே தெருவில் வாழ்ந்தார்கள். தமஸ்குவும், சமாரியாவும் பிற நகரில் இருந்து வரும் வியாபாரிகளுக்குக் கடைகள் வைக்க தனியாகத் தெருக்களை ஒதுக்கிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது (1 அர 20:34).

புதிய ஏற்பாட்டிலும், நகரங்களும், கிராமங்களும் வேறுபடுத்திக் கூறப்படுகின்றன. பெத்தானியா, பெத்பகு, பெத்லேகம், எம்மாவூ ஆகியவை கிராமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நசரேத்து, நயீன், கப்பர்நாகும் போன்றவை நகர் எனப்படுகின்றன. பாலஸ்தீனத்திற்குப் பக்கத்தில் அமைந்த தெக்கப்பொலி போன்ற நகர்கள் கிரேக்க நகர அமைப்பு முறைப்படி கட்டப்பட்டவை ஆகும். இந்த நகர்களுக்குள் குளியல் அறைகள், கலையரங்கம், விளையாட்டரங்கம் போன்றவை அமைக்கப்பட்டிருந்தன. கிரேக்க நகர ஆட்சி முறையில் ஒரு மூப்பர் குழுவும் மக்கள் மன்றமும் இருந்தன. ஆனால் கிரேக்கர்களின் இந்த அமைப்பு முறையை யூதர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே இல்லை.

புதிய ஏற்பாட்டில் 'நகரம்' என்ற சொல், புதிய இறையியல் பொருளைப் பெறுகின்றது. பழைய ஏற்பாட்டில் எருசலேமில் உள்ள ஆலயத்தில் யாவே குடியிருக்கின்றார். எனவே, எருசலேம் ஆண்டவரின் நகரம் எனப் பெயர் பெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் புதிய ஏற்பாடு புது இறையியல் பொருள் பெறுகிறது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள், மெசியா வரும்போது

எருசலேம் மீண்டும் அதன் அழிவிலிருந்து விடுபெறும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் இந்த மண்ணக எருசலேம் விண்ணக எருசலேமாக மாறி, அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு, நமக்கு அன்னையாகவும் மாறுகிறது (கலா 4:26). கிறிஸ்தவர்கள் விண்ணக நகரின் குடிமக்கள் (பிலி 3:29). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பழைய ஏற்பாட்டில் சீனாய் மலையில் கடவுளின் பிரசன்சன்னத்திற்கும், கிறிஸ்தவர்கள் சீயோன் மலையைக் கருதும் விதத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக விளக்குகிறது (எபி 12:22). கிறிஸ்தவர்கள் மண்ணக நகரைச் சார்ந்த குடிமக்கள் அல்லர்; மாறாக, வரவிருக்கின்ற நகரைச் சார்ந்தவர்கள் (எபி 13:14). கடவுளின் நகரமான புதிய எருசலேம் என்பது வானத்தில் உள் கடவுளிடமிருந்து வரவிருப்பதாகும் (திருவெளி 3:12). எருசலேமைப் பற்றிய கடைசிக் காட்சியில், கடவுளின் நகர் மாட்சியோடு மேலிருந்து வருகின்றது (திருவெளி 21-22). ஒளிமிக்க கற்களால் ஆன 12 வாயில்கள் உள்ளன. சூரிய ஒளியோ சந்திர ஒளியோ அந்த நகரத்திற்குத் தேவையில்லை. காரணம், கடவுளின் மாட்சியே அங்கு ஒளி கொடுக்கிறது. செம்மறியே அதன் விளக்கு ஆகும். பூலோகத்தில் உள்ள எல்லா மன்னர்களும் இதை அலங்கரிப்பார்கள். இந்த நகரின் வாயில்கள் எப்போதும் திறந்தே இருக்கும். அசுத்தமானவை எதுவும் அதனுள் நுழைய முடியாது. இந்த விண்ணக நகரம் மனிதனின் எல்லா ஆசைகளையும், கற்பனைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்யும். இந்த நகரில் வாழும் வாழ்க்கை அளிக்கும் வாய்ப்புகளைத் தொடக்க கால நாட்டுப்புற அல்லது விவசாயச் சமூகங்களில் காணமுடியாது.

**நகராய், நகுராய் (NAHARAI - குறட்டை விடுபவர்)**

இவர் தாவீதின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவர். மேலும் இவர் யோவாபின் படைக்கலன் தாங்குவோர். இவர் பெயரோத்து ஊரைச் சார்ந்தவர் (2 சாமு 23:37; 1 நாள் 11:39).

**நகர்க்காவலர் (POLICE)**

அ.ப. 16:35, 38: இதன் மூல கிரேக்கச் சொல்லை உள்ளபடியே மொழிபெயர்த்தால் தனது பணி மற்றும் அதிகாரத்தின் அடையாளமாக கழி அல்லது கோல் வைத்திருப்பவர் என்று பொருள்படும். இவ்வாறு காவலர் தடி அல்லது குச்சி வைத்திருப்பது அவர்களின் அதிகாரத்தின் ஓர் அடையாளமாகும். இதற்குச் சிறைக்காவல்காரன் அல்லது உரோமைக் குற்றவாளிகளோடு செல்லும் அலுவலர் எனப்பொருள் கொள்ளலாம்.

இவர்கள் "கழி வைத்திருப்பவர்கள்" எனப் பொருள் படும் "ராப்துக்சோய்" என அழைக்கப்பட்டனர். ஏனெனில், அவர்கள் தோல் வாரினால் கட்டப்பட்ட பல கழிகளையும் ஒரு கோடரியையும் வைத்திருப்பர். இக்குச்சிகள் அடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இத்தடியால்தான் பவுல் அடிக்கப்பட்டிருப்பார். (2 கொரி 11:25). அவர்கள் வைத்திருந்த கோடரி கொலைத்தண்டனையை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இவை பயன்படாத சமயத்தில் இவை அதிகாரத்தின் அடையாளமாக விளங்கின. நகர நடுவர்களுக்குத் தங்கள் குடிமக்களைக் கொல்லும் அதிகாரம் இல்லை. எனவே அவர்களின் காவலர்கள் (அதாவது பிலிப்பி நாட்டில்) கையில் கோடரி இருக்காது.

தலைமையான உரோமைய நடுவர்களுக்கு இத்தகைய காவலர்கள் பணிவிடை புரிந்தார்கள். இஃது அவர்கள் மக்கள் மீது கொண்டுள்ள குற்றம் தீர்ப்பிடும் தனிப்பட்ட அதிகாரத்தைக் குறிக்கும். நடுவர்கள் வழங்கும் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டியது இக்காவலர்களின் கடமையாகும்.

நடுவர்களோடு செல்லும்போது, இவர்கள் ஒரே மாதிரியான ஆடை உடுத்தியிருப்பர். நகரில் "தோகா" என்ற ஆடை அணிவர். ஆடம்பர நகர் உலா வரும்போது சிவப்பு உடைகளைக் காவலர்கள் அணிந்திருப்பர். துக்க நிகழ்ச்சியின்போது கருப்பு உடை அணிவர். நடுவர்

வருவதைத் தெருக்களில் முன் சென்று அறிவித்து மக்களை நடுவரை வரவேற்கத் தயார்ப்படுத்துவர்.

காவலர்களின் எண்ணிக்கை நடுவரின் அதிகாரத்தைப் பொருத்தது. எ.கா. கி.மு. 300 வரை ஒருவருக்கு 6 காவலர்கள் உண்டு; பின்னர் 12 ஆக்கப்பட்டது. சர்வாதிகாரிக்கு 24-உம், பேரரசருக்கு 24 காவலர்களும் வழங்கப்பட்டனர். பிலிப்பி நகரின் நடுவர்கள் போன்றவர்களுக்கு 2 காவலர்கள் உண்டு.

**நகலால் (NAHALAL – தண்ணீர் காட்டும் இடம்)**

இது செபுலோனில் உள்ள லேவியர் ஊர் (யோசு 19:15; 21:35). இந்நகரில் வாழ்ந்த கானானியர்களைச் செபுலோன் மக்கள் வெளியேற்ற முடியவில்லை (நீதி 1:30). இந்த இடம் தற்போதைய தெல் என்-நாகல் ஆக இருக்குமெனக் கருதப்படுகிறது. இது கிசோன் ஆற்றுக்கு வடக்கிலும், அக்கோ சமவெளியின் தெற்குக் கோடிக்கு அருகிலும் அமைந்துள்ளது.

**நகலியேல் (NAHALIEL – ஏலின் ஓடை)**

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை நோக்கி வரும் வழியில் தங்கிய இடங்களில் ஒன்று (எண் 21:19). யோர்தானுக்கு அப்பால் மத்தானாவிற்கும், பாமேத்துக்கும் இடையில் இந்த இடம் உள்ளது. இது தற்போதைய வாடி செர்கா மாயின் ஆக இருக்கலாம் என, சிலர் கருதுகின்றனர். இஃது அர்னோனுக்கு வடக்கில் 17 கி.மீ. தொலைவில் சாக்கடலில்ச் சேர்கிறது. வேறு சிலர் இஃது அர்னோன் ஆற்றின் உப ஆறாகிய வாடி வாலாவாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

**நகாம் (NAHAM – ஆறுதல், இரக்கம்)**

இவர் யூதாவைச் சேர்ந்த ஓதியாவின் மைத்துனன் (1 நாள் 4:19).

**நகுசோன், நகசோன் (NAHSHON – பாம்பு)**

அம்மினதாபின் புதல்வராகிய நகுசோன் யூதாவின் தலைவர்களில் ஒருவர் (எண் 1:7; 2:3; 7:12.17; 10:14). மோசே பாலைவனத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுக்கும்போது அவருக்கு உதவிய தலைவர்களில் ஒருவர். நகுசோனின் சகோதரியான எலிசபாவை ஆரோன் மணந்துகொண்டார் (யாத் 6:23). இவரது மூதாதையராக, யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த பெரேட்சு கூறப்படுகிறார் (1 நாள் 2:4-10). இவரது வழித்தோன்றலான போவாசு இவரது பேரன். தாவீதும் இவரது வழிவந்தவரே (ரூத் 4:20-22). இயேசுகிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையில் அவரது மூதாதையாராக நகுசோன் (நகசோன்) குறிப்பிடப்படுகிறார். (மத் 1:4; லூக் 3:32).

**நகுபி (NAHUBI – மறைத்து வைக்கப்பட்ட)**

நப்தலி கோத்திரத்தில் ஓப்சியின் புதல்வனான நகுபி கானான் நாட்டை உளவுபார்க்க மோசேயால் அனுப்பப்பட்ட பன்னிருவரில் ஒருவர் (எண் 13:14).

**நகைகளும் விலையுயர்ந்த கற்களும் (JEWELS AND PRECIOUS STONES)**

நகைகளைக் குறிக்க எபிரேய மொழியில் எந்தச் சிறப்பான சொல்லும் இல்லை. சூழ்நிலைக்கேற்ப பொருட்கள், நகைகள், விலையுயர்ந்த கற்கள் என்று அழைக்கப்படுகின்றன. "செய்யப்பட்ட பொருள்" (எசே 16:17) அல்லது, "விலையுயர்ந்த கற்கள் (1 அர 7:9; 10:12) என்று பெயர் சொல்லி நகைகளை விவிலிய வழக்கு குறிக்கின்றது (எ.கா. உ.ச. 5:14; திருவெளி 21:19-20).

அவற்றின் அழகு, நீடித்து இருக்கக்கூடிய தன்மை, பருமன், அருமையாகக் கிடைக்கக் கூடிய தன்மை ஆகியவை நகைகளைச் சொத்துடைமையின் ஓர் இயற்கையான வடிவமாக்கியது. அவற்றை வணிகத்தாலோ (எசே 27:12), கொள்ளையடித்தலோ (எண் 31:50) அடைந்தனர். நகைகள் கொடையாகவும் (1 அர 10:10), உரிமைச் சொத்தாகவும் (2 நாள் 21:3) கொடுக்கப்பட்டன; அரச முடிகளில் பதிக்கப்பட்டன (2 சாமு 12:30); புனித இடத்தையும் (2 நாள் 3:6), குருவின் ஏபோதையும் (யாத் 28:15-21) அலங்கரித்தன; அரச கருவூலத்தில் சேர்த்து

வைக்கப்பட்டன (2 நாள் 32:27); முத்திரை மோதிரம், வளைகாப்பு, கழுத்தணி போன்றவற்றில் கற்கள் பதிக்கப்பட்டன (காண். எசா 3:18-23). நகைகளுக்கு உருண்டையான அல்லது குவி அமைப்புகள் கொடுக்கப்பட்டன. நிறத்தையும் ஒளியையும் சிறப்பித்துக்காட்ட நகைகள் மெருகிடப்பட்டன. கற்களில் உருவங்களும் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன (யாத் 28:11-12).

தொல்பொருள் ஆய்வுகள், பாலஸ்தீனத்தில் வழக்கிலிருந்த பல்வகை நகைகளையும் விலையுயர்ந்த கற்களையும் வெளிக் கொணர்ந்துள்ளன. இஸ்ராயேலின் சொத்துக்களையும் செழிப்பையும் பற்றிய கூற்றுகள் அவர்களின் அணிகலன்களின் பட்டியலைக் கொடுக்கின்றன (2 சாமு 1:24; எசே 16:1). சில சிறப்பான காலங்களில் பயன்பட்டன (எசா 49:18; எரே 2:23). இவை சாதாரண நாட்களில் அணியப்படலாம் என்றாலும், துக்ககாலத்தில் அணியப்படக்கூடாது (யாத் 33:4-6). இந்நகைகளில் சில மூக்கு, காது, விரல், கை, கணுக்கால் (பழ 25:12; உ.ச. 7:2). கழுத்து, தலை (பழ 1:9; 4:9) ஆகிய பகுதிகளில் அணியப்படும் நகைகளாய்க் கொடுக்கப்படுகின்றன. செல்வந்தர்கள் பயன்படுத்திய நகைகளின் பட்டியலை எசா 3:18:23-இல் காணலாம். திருமணப்பெண்ணின் நகைப்பட்டியலை எசே 16:10-13 கொடுக்கிறது. சிலைகள் கூட நகைகளால் அழகு செய்யப்பட்டன (எசே 16:16-18; எசா 30:22). தனிப்பட்ட நகைகள் பற்றி அந்தந்தத் தலைப்புகளின் கீழ்க் காண்க.

விலையுயர்ந்த கற்களின் பட்டியல்கள் யாத் 28;39; திருவெளி 21-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றிய சொற்களிலும் வகைப்படுத்துவதிலும் வேறுபாடுகள் உள்ளதால், இவற்றைத் தெளிவாக அடையாளம் காட்டுவது கடினம். இவை பற்றி அந்தந்தத் தலைப்புகளின் கீழ்க் காண்க.

நகைகளும் விலையுயர்ந்த கற்களும், இறைவனுடைய ஞானத்தின் மகிமையையும் (பழ 3:15), இறையரசையும் (மத் 13:45-46), இறைவனின் மாட்சிமை மிக்க தோற்றத்தையும் (திருவெளி 4:3), புதிய எருசலேமையும் (எசா 54:11-12) விவரிக்க உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குருவின் ஏபோதில் பதிக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு கற்கள் பன்னிரண்டு குலங்களைக் குறித்தன (யாத் 28:15-21). அவை அண்டத்தை அடையாளமாகக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளப்பட்டது (ஞான 18:24). புதிய எருசலேமின் அடிக்கற்களாக அமைந்துள்ள பன்னிரண்டு கற்கள் அப்போஸ்தலர்களைக் குறிக்கின்றன. (திருவெளி (21:14.19-20). அதன் முத்துக்கள், பன்னிரண்டு குலத்தவருக்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டு இப்போது செம்மறியில் நிறைவேறிவிட்ட வீடுபேற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

**நகோமி (NAOMI - என் இனியவர், என் இன்பம்)**

ரூத் எனும் பழைய ஏற்பாட்டு நூலில் வரும் முக்கிய நபர்களில் ஒருவர் நகோமி. ஒரு பஞ்சகாலத்தில் நகோமியும் அவரது கணவன் எலிமெலக்கு, அவர்களது இரு புதல்வர்களும், பிழைப்பின் பொருட்டு மோவாபுக்குச் சென்றனர். அங்கு இருபுதல்வர்க்கும் திருமணம் நடந்தது. பின்னர் நகோமியின் கணவரும், இரு புதல்வர்களும் இறந்ததால் நகோமி யூதாவிலுள்ள பெத்லகேமுக்குத் திரும்பத் தீர்மானித்தாள். தனது இரு மருமகள்களையும் அவர்களுடைய குடும்பங்களுக்கே திரும்பச் செல்ல வேண்டினாள். ஓர்பா இணங்கினாள்; ஆனால், ரூத் இணங்க மறுத்து நகோமியுடன் பெத்லகேம் வந்தாள் (ரூத் 1:16-17). அப்போழுது அங்கும் பார்லி அறுவடை நடந்து கொண்டிருந்தது. நகோமி தனது விதியை எண்ணித் தனது பெயரைக் 'கசப்பி' என மாற்றி அழைக்குமாறு கூறினாள் (ரூத் 1:20-21).

வயல்வெளியில் சிந்திய கதிர்களைச் சேகரிக்கச் சென்ற ரூத், போவாசின் வயலுக்கு வர நேர்ந்தது.

அங்கு அவரது சிறப்பான கவனத்தைப் பெற்றாள் (ரூத் 2:5; 10-16). போவாசு எலிமெலக்கின் உறவினனானதால் அவனது ஊழியக்காரிகளுடன் சேர்ந்து வேலை செய்வதை நகோமி ஆதரித்தாள். பின் போவாசு இரவில் உறங்குமிடத்துக்குச் சென்று உறவின் திருமுறைப்படி மணம் செய்து தங்களைக் காக்குமாறு வேண்ட ரூத்தை நகோமி அனுப்பினாள். போவாசு, இந்த வேண்டுகோளை ஏற்று அவர்களது சொத்தை மீட்டு, ரூத்தையும் மணம் செய்து கொண்டார். அவர்கட்குப் பிறந்த குழந்தை "நகோமியின் மகனாக" ஏற்றுக்கொள்ளப்பட்டது (4:17). இவ்வாறு எலிமெலக்கின் வாரிசு பாதுகாக்கப்பட்டது; நகோமியின் மனந்தளராமைக்கு வெகுமதி கிடைத்தது. குழந்தை ஓபேது என்றழைக்கப்பட்டது. இவர்தான் தாவீது அரசனின் பாட்டனாவார் (4:22).

**நங்கூரம் (ANCHOR)**

கப்பலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைப்பதற்காகக் கயிற்றுடன் பிணைக்கப்பட்ட கப்பல் துறைக் கருவியாகும் நங்கூரம். பவுல் உரோமைக்குச் செல்லும்போது அவர் சென்ற கப்பல் மால்த்தா தீவினை நெருங்கிய பொழுது நான்கு நங்கூரங்கள் இறக்கப்பட்டதாகக் கூறுகிறார் (அ.ப. 27:29-30.40). மற்றொரு இடத்தில், 'ஆன்மாவின் நங்கூரமாக' நம்பிக்கை உருவகப்படுத்தப்படுகிறது (எபி 6:19). அ.ப. 27:13-இல் "நங்கூரத்தைத் தூக்கி" எனும் ஒரு சொற்றொடர் வருகிறது. இது கப்பலை இயக்கத் தொடங்கும் செயலைக் குறிக்கும் பொதுவான கப்பல் துறைச் சொல்லாகும்.

கப்பலின் முனையிலிருந்து முதலில் கனமான கற்கள் கீழிறக்கப்பட்டு அவையே நங்கூரமாகப் பயன்படுத்தப்பட்டன. கி.மு 650-இல் கொக்கி போன்ற அமைப்பில் மரத்திலான நங்கூரங்களும், கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதிகளில், நங்கூரங்களுடன் உலோகம் அல்லது கல் போன்ற கனமான பொருட்களை வைத்துக்கட்டி அதனைப் பயன்படுமாறும் செய்தனர். அதன் பிறகே முழுதும் உலோகத்தாலே செய்யப்பட்ட நங்கூரங்கள் வந்தன. பிளினி கி.பி. முதலாம் நூற்றாண்டில் காணப்பட்ட இருவகை நங்கூரங்கள் பற்றிக் கூறுகிறார். ஒன்று வழக்கம் போல் உள்ளது. மற்றொன்று இரு பக்கங்களை உடையது.

**நசரேயர் (NAZARENE)**

புதிய ஏற்பாட்டுச் சொல்லான இது ஏறக்குறைய இயேசுவை மட்டுமே குறிக்கும் சொல்லாக இருக்கிறது (அ.ப. 25:5-ஐத் தவிர). கிரேக்க வடிவத்தில் "நசரேனோஸ்", "நசராயியோஸ்" எனும் இரு சொற்கள் வருகின்றன. மாற்கு முதற் சொல்லையும், ஏனைய மூவரும் இரண்டாவது சொல்லையும் பயன்படுத்துகின்றனர் (லூக் 4:34; 24:19). ஆனால் இரு சொற்களிடையேயும் பொருளில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லை எனலாம். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இயேசுவின் இப்பெயர், இயேசு நாசரேத்திலிருந்து வந்ததால் கூறப்பட்டதாகும் என்பர் (மத் 2:23); எனவே, நாசரேத்திலிருந்து வந்த ஒருவர் என்பதே சரி (மத் 21:11; மாற் 1:9; யோவா 1:45; அ.ப. 10:38). மத் 2:23 சுட்டும் இறைவாக்கை அடையாளம் காணமுடியவில்லை எனலாம்.

நசரேயர் என்ற சொல், நசீர் என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிகிறது. மத்தேயு குறிப்பிடும் இறைவாக்கு நீதி 13:3-7 என்ற பகுதிதான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு ஒரு நசீர் என்று குறிக்கப்படவே இல்லை. அவர் முடியை வெட்டிக்கொண்டதாக எக்குறிப்பும் இல்லை. ஆனால், அவர் பிணத்தைத் தொட்டார் (மத் 9:18-25), திராட்சைரசம் அருந்தினர் (26:26-29; லூக் 7:34). இவ்விரண்டும் நசீர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தன. சொல்லிலக்கணப்படி நசரேயர் நசீரோடு தொடர்புடையதாகத் தோன்றினாலும், நசரேயரான இயேசுவின் செயல்கள் இத்தொடர்பை மறுக்கின்றன.

அ.ப. 24:5-இல் உள்ளபடி, இயேசுகிறிஸ்து மட்டுமன்று, கிறிஸ்தவர்களும் நசரேயோர்கள் என அழைக்கப்படுகின்றனர். அப்படியென்றால் அவர்களும் நாசரேத்திலிருந்து வந்தவர்களெனக் கூறமுடியுமா? ஆனால் இதனை ஆழ்ந்து கவனிக்கும்பொழுது குற்றம்சாட்டும் யூதர் நசரேயர்கள் என ஒரு குழுவைப் பிரித்துக் குறிப்பிடுகின்றார். மேலும் கிறிஸ்தவர்களை இழிவுபடுத்தி அழைப்பதற்கே யூதர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினர். இச்சொல்லில் மற்றொரு பொருளும் அடங்கியுள்ளது. அதாவது முன்னரே யூதரில் கொள்கை வேறுபாடுடைய ஒருபிரிவினர், இப்பெயரால்அழைக்கப்பட்டனர். இதனையே பின்னர்க் கிறிஸ்தவர்கட்குப் பயன்படுத்தினர். யூதர்கள் தங்கள் செபக்கூட வழிபாட்டின் இறுதியில் பயன்படுத்திய 18ஆசீர்களில் 12-ஆவது நசரேயர்களைச் சபிக்கிறது. இது கிறிஸ்தவர்களைக் குறித்தது எனலாம்.

கிறிஸ்துவுக்கு முந்திய மண்டேயர் என்ற ஞானவாதக் குழுவினர் "கடைப்பிடிப்பவர்கள்" என்ற பொருளில் தங்களை நசரேயர் என்று அழைத்துக்கொண்டார். எப்பிபானியு என்பவர் யூதக்கிறிஸ்தவர்கட்கும், கிறிஸ்தவர்கட்கு முந்திய ஒரு யூதக்குழுவிற்குமான வேற்றுமையைக் காட்டுகிறார். அப்படி ஒரு வேறுபட்ட யூதப்பிரிவிருந்தது உண்மையெனில், இயேசுகிறிஸ்துவும் அவரைப்பற்றிய கிறிஸ்தவர்களும் "கடைப்பிடிப்பவர்கள்" என்ற பொருளில் நசரேயர்கள் என அழைக்கப்பட்டது சரியே.

**நசரேயர்களின் நற்செய்தி (NAZARENES, GOSPEL OF THE)**

இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த மத்தேயு நற்செய்தி நூலின் பொழிப்புரை அல்லது விளக்கவுரையாகும். இந்த யூதக்கிறிஸ்தவ நற்செய்திநூல் எபிரேயர்களின் நற்செய்தி நூலோடு குழப்பப்பட்டிருக்கிறது; மேலும்,மத்தேயு நற்செய்தியின் மூல எபிரேய வடிவாகத் தவறாக அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. இந்நூல் திருமுறையைச் சேர்ந்த கிரேக்க மத்தேயு நற்செய்தியின் அரமேயிக்கு மொழிபெயர்ப்பே ஆகும் என்று அறிஞர்கள் இப்போது ஏற்றுக்கொள்வர். எரோனிமு தாம் முதலில் "எபிரேயர்கள் எழுதிய நற்செய்தியை" மொழிபெயர்த்ததாக நிருபிக்க முடியாத உரிமை கொண்டாடுவதும் அவர் அப்பொல்லோனாரிசிலிருந்து எடுத்துக்காட்டுகள் காட்டுவதும், இந்நூலுக்கும் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த மத்தேயு எழுதிய நற்செய்தி நூலுக்கும், எபிரேயர்கள் எழுதிய மற்றொரு யூதக்கிறிஸ்தவ நற்செய்தி நூலுக்கும் இடையே குழப்பம் உருவாகி வளர்வதற்கு உதவின.

திருமுறை மத்தேயுவின் அரமேயிக்கு மொழிபெயர்ப்பாக இருப்பதால், இது முன்னதற்குப் பிந்தியதாக இருக்க வேண்டும். இந்நூலைக் கெகேசிப்பு (கி.பி. 180) முதில் குறிப்பிடுகிறார். ஆகவே அவர் காலத்திற்கு முன்பே, 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூல் தோன்றியிருக்கவேண்டும். இது வட சீரியாவில் எழுதப்பட்டிருக்கலாம். இது விவிலியத் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த நூலன்று.

**நசீர் (NAZARITE** - திருநிலைப்படுத்தப் பட்டவர், பிரிந்திருப்பவர்)

இறைவனுக்கெனவோ, வேறு குறிக்கோளுக்கெனவோ தம்மையே அர்ப்பணிப் பேன் என்பது போன்ற வாக்குக் கொடுக்கும் ஒருவரே இப்பெயரால் அழைக்கப்படுகிறார். இது சமய அளவில் பயன்படுத்தப்படும் மொழியாகும். சிம்சோன் நசீர் எனப்படுகிறார் (நீதி 13:5.7; 16:17). இதில் வலியுறுத்தப்படுவது இவ்வாறு நசீராக இருப்பவர் தலைமேல் கத்தி படலாகாது என்பதே. தாடியையும் மழித்தல் ஆகாது. சிம்சோனின் தாய் மதுவோ, அசுத்தமான உணவோ உண்ணக்கூடாது. ஏனெனில் சிம்சோன் ஒரு நசீர் என்பதால் (ஆண்டவருக்கென

ஒப்புக்கொடுக்கப்பட்டவனாதலால்) அவர் தாய் கருவுற்றிருக்கும்போது இவையெல்லாம் உண்ணக்கூடாது என ஆண்டவரால் கூறப்பட்டது.

ஆமோஸ் (2:11) இறைவாக்கினர் நசீர்களை மது அருந்த வைத்ததைக் கண்டிக்கிறார். நசீர்கள் பற்றி 1 மக் 3:49-இல் கூறப்படுகிறது. பவுலும் இத்தகையதொரு வார்த்தைப்பாடு எடுத்ததால்தான் பிறகு தமது முடியை வெட்டிக்கொண்டார் (அ.ப. 18:18). தன்னோடு வந்த நால்வரையும் முடிவெட்டச் செய்து சுத்திகரிப்புச் சடங்குகளிலும் பங்கு பெறச்செய்தார். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, இந்த நசீர்வார்த்தைப்பாடு தற்காலிகமானதுதான் என்று தெரிகிறது. எண்-6 இந்த வாக்குறுதி ஆணாலோ, பெண்ணாலோ எடுக்கப்படலாம் என்று கூறுகிறது. இவ்வாக்குறுதி மதுபானம் அருந்துவதையும், கத்திகொண்டு மழித்தலையும், இறந்தவர்களோடு தொடர்பு கொள்வதையும் தடுக்கிறது. வாக்குறுதியின் காலம் முடிந்தபின் அதைக்கொடுத்தவர் தம் தலைமுடியை வெட்டி அதனைப் பீடத்திலே எரிக்கச்செய்கிறார்; அங்குப் பலிப்பொருள்களையும் கொடுக்கின்றார். இவ்வாக்குக் கொடுப்பதற்கான எந்நோக்கமும் கொடுக்கப்படவில்லை; ஆனால், இது கடவுட்பற்றால் விரும்பிச்செய்யப்படும் ஒன்று என்பது தெரிகிறது.

**நச்சுப்பாம்பு (ADDER, ASP)**

பாலஸ்தீனத்தில், பொதுவாக மேற்காசியாவில், பலவகைப்பாம்புகள் உண்டு. சில நஞ்சுடையவை யாகவும் மற்றவை நஞ்சில்லாதவைகளாகவும் இருந்தன. ஆனால் விவிலியத்தில், நஞ்சுள்ள பாம்புகளே குறிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவை விரியன் பாம்பு என்று மொழிபெயர்க்கப் படுகின்றன. ஆனால் பலவகையான பாம்புகளைக் குறிக்கும் எபிரேயச் சொற்களை வைத்துப் பாம்புகளை வகைப்படுத்துதல் சரியன்று. ஏனெனில் பாம்புகள் வெளிப்படுத்தும் "உஸ்" என்ற ஒலியை வைத்தே எபிரேயர்கள் பாம்புகளை வேறுபடுத்தியதாகத் தெரிகிறது.

இலக்கியத்தில் இந்த நச்சுப்பாம்புகள் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எதிரியின் "இரசம் பாம்பின் நஞ்சு போன்றது; விரியன் பாம்பின் கொடிய நஞ்சு போன்றது" (உப 32:33); தீயவனின் "வயிற்றிலே அவன் உணவு மாற்றமடைந்து அவனுக்குள் விரியன் பாம்பின் நஞ்சாகிவிடும்" (யோபு 20:14); இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு கொண்டிராதவர்களின் "உதட்டில் பாம்பின் நஞ்சுள்ளது" (உரோ 3:13); தீயவன் "விரியன் பாம்பின் நஞ்சை உறிஞ்சுவான்" (யோபு 20:16); அமைதியின் புதிய காலத்தில் "பால்குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும்" (எசா 11:8).

**நஞ்சு (POISON)**

பழைய ஏற்பாட்டில் இதற்குப் பயன் படுத்தப்பட்ட பல சொற்களை ஆராய்ந்தால், பொதுவாக ஒரு பொருள் தெளிவுபடும். நஞ்சுள்ள கசப்பான செடி என்பதே அப்பொருள். இஃது இஸ்ராயேலின் பாவத்திற்கும் பாவப்பழக்கத்திற்கும் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது (உப 29:17; 32:32; சங் 69:21; புல3:5.19; ஓசே 10:4; ஆமோ 6:12). எரேமியா (எரே 8:14; 9:14; 23:15) யாவே தரும் நஞ்சு கலந்த கசப்பான நீரைப் போற்றிப் பேசுகிறார். இதுவும் உருவகமாகப் பயன்பட்டதாக இருக்கலாம். அல்லது இஃது அந்நாட்டில் ஏற்படும் கொடும் வறட்சியையும் குறிக்கலாம். இந்த நஞ்சு என்பது விரியன் பாம்பின் நஞ்சு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 20:16).

பழைய ஏற்பாட்டில் நேரடியாக வேறு எந்த நஞ்சுச் செடியும் குறிப்பிடப்படவில்லை. 2 அர 4:38-41-இல் வரும் கும்மட்டிக் காய்கள் கொல்லக்கூடிய நஞ்சு உள்ளவை அன்று. மாறாகப் பேதி உண்டாக்கக்கூடிய அதிகக் கசப்பு நிறைந்த காய்கள் எனக் கூறலாம்.

ஊர்ந்து செல்லும், கொடிய நஞ்சு நிறைந்த பிராணிகள் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது. இதைக் குறிக்கும் எபிரேய மூலச் சொல்லுக்குக்

'கொடிய,' 'எரிக்கும்,' 'கோபமான' என்று பொருள் கொள்ளலாம். இதற்கு நஞ்சு எனவும் பொருள் கூறலாம் (உப 32:24.33; சங் 58:4; 140:3). அம்புகளின் நஞ்சைப் பற்றிக் கூறவும், இதே சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது (யோபு 6:6).

ஊர்வனவற்றில் நஞ்சு மிக்கனவாகக் கருதப்பட்ட பிராணிகள் பின்வருமாறு: கட்டுவிரியன் பாம்பு (யோபு 20:16; எசா 30:6; 59:5), பாம்பு (பழங்காலத்தில் பாம்பு என்பது புராணத்தில் வரும் வேதாளத்தைக் குறிக்கவும் முதலைகளைக் குறிக்கவும் பயன்படுத்தினார்கள். காண். ஆதி 3:1-4; எண் 21:9; உப 8:15; ஆமோ 5:19; 9:3), தேள் (உப 8:15; எசே 2:6), கொடிய விரியன் பாம்பு (உப 32:33; யோபு 20:14.16; சங் 58:4; 91:13; எசா 11:8; *சீரா* 39:30), விரியன் பாம்பின் குட்டி (பழ 23:32; எசா 11:8; 14:29; 59:5 எரே 8:17), பாம்பு (ஆதி 49:17), வேதாளம், பாம்பு (யாத் 7:9; உப 32:33; சங் 91:13) என்பன.

புதிய ஏற்பாட்டில், இச்சொல் உரோ 3:13-இல் காணப்படுகிறது (இது சங் 140:3-இன் மேற்கோள்; யாக் 3:8).

பாவத்தின் கொடிய விளைவையும், இறைவனுக்கு எதிராக எழும் நாட்டின் அழிவையும், பாவிகள் மேல் இறைவன் அளிக்கவிருக்கும் நியாயத் தீர்ப்பையும் உருவகப்படுத்தும் முறையில்தான் நஞ்சு என்ற இந்தச்சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நஞ்சு மிக்க பிராணிகளைப் பற்றிய பயம் பழங்காலத்தில் மக்களிடையே பரவி இருந்தது. பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்களுக்கே உரிய விதத்தில் நஞ்சுப்பொருள்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை மக்களிடையே இறைவன் ஆற்றிய செயல்களோடு தொடர்புபடுத்தியுள்ளனர்.

**நடனமாடுதல் (DANCING)**

உடல்நலம் மற்றும் உள்ள மகிழ்ச்சி மிகுதியில் தயாரிக்கப்பட்ட கூத்துகளில் அல்லது, இறைவன்முன் பக்தியுள்ள மகிழ்ச்சி மிகுதியில் ஒத்திசைந்த மற்றும் சந்தம் பொருந்திய விதத்தில் உடலை அசைத்து ஆடுவதாகும் நடனம். எல்லாப் பழங்கால மதங்களிலும் இருந்தது போன்று, இஸ்ராயேலர் வாழ்விலும் வழிபாட்டிலும் நடனம் இடம் பெற்றிருந்தது.

பழைய ஏற்பாட்டில், நடனத்தை விவரிக்கும் சொற்கள் உடலியக்கத்தின் வேறுபாடுகளைக் குறிப்பிடுகின்றன. "அவர்தம் குழந்தைகள் குதித்தாடுவர்" (யோபு 21:11). "தாவீது தன் முழுவலிமையோடு ஆண்டவர் முன்பாக நடனமாடினார்... குதித்து ஆடினார்" (2 சாமு 6:14:16). இறைவன் புலம்பலைக் களிநடனமாக மாற்றுகிறார் (சங் 30:11). மக்கள் நடனம் செய்து இறைவனைப் போற்றினர் (சங் 149:3; 150:4). மத்தளம் கொட்டி, யாழிசைத்து, குழல் ஊதி, நடனம் ஆடினர். நடனம் நயமிக்கதாயும் அழகாயும் அமையக்கூடும். சில வேளைகளில் சிலைவழிபாடாகவும் மாறக்கூடும் (யாத் 32:19). சில சமயங்களில் சிரிப்பு, போட்டி, நகைச்சுவை போன்றவையும் நடனத்தில் இடம் பெற்றன (நீத் 16:25ச 1 சாமு 18:7). இவை ஆண்டவர் முன்னும் நடைபெற்றன (2 சமு 6:5. 21; 1 நாள் 13:8; 15:29). சில சமயங்களில் போரில் வெற்றி கொண்டு நாடு திரும்பிய அரசனை மக்கள் நடனமாடி வரவேற்றுச் சிறப்பித்தனர் (நீதி 11:34; 1 சாமு 18:6). திராட்சை அறுவடைக்குப்பின் மக்கள் மகிழ்ச்சி மிகுதியால் நடனமாடினர் (நீதி 21:21; எரே 31:4).

இஸ்ராயேலரின் நடனத்தில் பெரும்பாலும் பெண்கள் குழுவாகக் கலந்துகொண்டனர். இசையின் இனிமை நடனத்திற்கு மெருகூட்டியது.கஞ்சிராவையும், மத்தளத்தையும் கொட்டிக்கொண்டு நடனமாடுவது அடிக்கடி குறிக்கப்படுகிறது (யாத் 15:20; சங் 149; 150). விழாக்காலங்களில் நடனம் முக்கிய இடம் பெற்றது.

புதிய ஏற்பாட்டில் ஏரோதியாளின் மகள் சலோமி ஏரோது அந்திப்பாவின் பிறந்த நாளில் அவனைக்

கௌரவிக்க ஆடிய நடனம் கிரேக்கப் பண்பாட்டைச் சார்ந்தது. இதுவே திருமுழுக்கு யோவானின் தலை வெட்டப்படுவதற்குச் சூழ்நிலையை உருவாக்கித்தந்தது (மத் 14:6; மாற் 6:22). காணாமற்போன மகன் உவமையில் மூத்த மகன் வயலிலிருந்து திரும்பி வீட்டை நெருங்கியபோது, ஆடல்பாடல்களைக் கேட்டான் (லூக் 15:25). தெருக்களில் நடனமாடியும் பாடியும் திரியும் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறுர் (மத் 11:12தொ; லூக் 7:32).

**நடுக்கூடம் (NAVE)**

ஆலயத்தின் முன் மண்டபத்திற்கும் உள் அறைக்கும் (திருத்தூயகம்) இடையிலுள்ள முக்கிய அறை அல்லது மைய அறை (தூயகம்) ஆகும் (1 அர 6:3; 7:50; 2 நாள் 3:4-5.13; 4:22; எசே 41). இது கிறிஸ்தவ ஆலயங்களில் நடுக்கூடமாகும்.

**நடுங்கவைக்கும் தீட்டு, பாழாக்கும் அருவருப்பு, கொடும்பாவச் செயல் (DESOLA-TING SACRI-LEGE)**

இது புனிதத்தன்மையைக் கெடுக்கும்படியாகச் செய்யும் அருவருப்புச் செயலாகும் (மாற் 13:14; மத் 24:15; லூக் 16:15; திருவெளி 17:4.5; 21:27).

மத் 24:15; மாற் 13:14-இல் உள்ளதைப் போலவே, தானி 12:11-இலும் (சிறிய மாற்றங்களுடன் தானி 9:27; 11:31) இந்த அருவருப்புச் செயல் குறிக்கப்பட்டுள்ளது. தானியேல் ஆகமத்திலே இந்தப் பாழாக்கும் அருவருப்பு, நான்காம் அந்தியோக்கு எப்பிபான் எருசேலம் தேவாலயத்தில் நிறுவிய பலிபீடத்தைக் குறிக்கிறது. இதன் காரணமாக யூதர்கள் கோவிலில் இறைவனை வழிபட இயலவில்லை (1 மக் 1:54; 2 மக் 6:1-2).

மாற் 13:14-உம், இதற்கு இணையான மத்தேயு வசனமும் அந்தியோக்கு எப்பிபானின் அருவருப்புச் செயலைக் குறிப்பிடவில்லை. இதைப்பற்றிய விளக்கங்கள் பல உள்ளன.

அ) பொதுவாக இந்த நடுங்கவைக்கும் தீட்டு அல்லது 'பாழாக்கும் அருவருப்பு' கலிகுலா பேரரசர் தமது சிலையை கி.பி. 40-இல் எருசலேமில் வைக்க இருந்த திட்டத்தைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் இஃது ஏற்றுக்கொள்ளப்பட இயலாதது. ஏனெனில், கலிகுலா கி.பி. 41-இல் கொலை செய்யப்பட்டான். மேலும் மாற் 13:14 திடீரென வரும் ஆபத்தைக் குறிக்கிறதே தவிர நிதானமாகச் சிலை வைப்பதைக் குறிக்கவில்லை.

ஆ) இஃது எதிர்க்கிறிஸ்துவை, அக்கிரமமே உருவான மனிதனைக் குறிப்பதாகச் சிலர் கூறுகின்றனர் (2 தெச 2:3-10; திருவெளி 12:19-20).இதற்குப் பல எதிர்ப்புகள் உள்ளன.

இ) சிலர், இஃது உரோமையர் யூதாவின் மேல் படையெடுத்து எருசலேம் ஆலயத்தை அழித்ததைக் (கி.பி. 66-73) குறிக்கலாம் எனக் கூறுகின்றனர். 'நிற்கக்கூடாத இடத்தில் அது நிற்கும்' (மாற் 13:14)என்பது போரைக் குறிக்கவில்லை.

ஈ) மாற்கு எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியையும் மனதில் கொள்ளாது எதிர்காலத்தில் நிகழும் ஒரு பாபச்செயலைக் குறிப்பிடுகிறார்.

**நடுமுற்றம், நடுப்பகுதி (MIDDLE COURT)**

எருசலேம் ஆலயத்திற்கும் அரச அரண்மனைக்கும் இடைப்பட்ட பகுதி அல்லது வளாகம் (2 அர 20:4). ஒருவேளை அரசன் தங்கியிருந்த அரண்மனை கட்டப்பட்டிருந்த முற்றமாக இருக்கலாம் (1 அர 7:8).

**நடுவர் (MAGISTRATE, UMPIRE)**

இச்சொல் அ.ப. 16-ஆம் அதிகாரத்தில் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (16:20.22.35-36.38); அதுவும் பன்மையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இஃது உரோமைக் காலனியான பிலிப்பி நகரின் மிக உயர்ந்த அலுவலர்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். இதன் மூல கிரேக்கச் சொல் பரந்தபொருளில் பயன்பட்டுள்ளது. இது படைத்தலைவனையோ, நகரத் தலைவனையோ குறிப்பிடலாம். ஏதன்சு நகரில் தரைப் படையையும்,

கடல்படையையும் முன்னின்று நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அலுவலர்களுக்கும் இதே பட்டம்தான் கொடுக்கப்பட்டது.

சிறிய ஆசியா மற்றும் கிரேக்க மாநிலங்களின் தலைவர்களையும், உரோமானிய எகிப்தில் படைத்தலைவர்களையும், ஆளுநர்களையும், உரோமைக் குடியிருப்புத் தலைவர்களையும் குறிப்பிடுவதற்கு இதே சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொல், பலவகை அலுவலர்களுக்கும் பயன் படுத்தப்பட்டது என்ற உண்மையை, அப்போஸ்தலர் பணி நூலை நன்கு படிப்பதன் மூலம் நாம் அறியலாம்.

உரோமைக்குட்பட்ட நகர்களில் நடுவர் என்ற சொல், சாதாரணமாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த அலுவலர்களைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டது. அப்போது, மூன்று, நான்கு, ஐந்து, பத்து, பன்னிரண்டு என்ற எண்ணிக்கையில் நடுவர்கள் குழு இருந்திருக்கலாம். இக்குழு சமூகக்காரியங்களைக் கவனித்து வந்தது. நகரத்தலைவர்கள் (16:19), நடுவர்கள் என்ற இருசொல்லும் உரோமைப்பேரரசர்கள் அல்லது உரோமை அதிகாரிகள் மக்களுக்கு அனுப்பிய மடல்களில் காணப்படுகின்றன. இதிலிருந்து நகரத்தலைவர்கள் என்பது ஆட்சிக் குழுவைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாகும் என்று கருதலாம். அனேகமாக புனித லூக்கா ஆளும் தலைவர்கள், நடுவர்கள் இருவரையும் தனித்தனியாக வேறுபடுத்தியிருக்க மாட்டார் என்று தெரிகிறது (லூக் 16:19).

நடுவர் குழுவானது, மக்கள் சமுதாயங்களை ஆட்சி செய்வதில் ஈடுபட்டது. அவர்கள் பொது நிதி, மக்கள் குழுவின் செயல் முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். சட்டத்தை மீறியவர்களைத் தண்டித்தனர். சில சமயங்களில் இந்தக் குழுவினரின் பெயர்கள், நகரங்களில் வெளியிடப்பட்ட வெண்கல நாணயங்களில் 'இடம் பெற்றன. சட்ட ஒழுங்குகளைக் காக்க வேண்டிய கடமையையும், பொறுப்பையும் பெற்றிருந்தனர். சிமிர்னா நகரில் ஒரு நடுவர் குழு நியமிக்கப்பட்டு எதிரிகளை அடக்குவதற்கான படைக்கருவிகளைக் கண்காணிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது.

லூக்கா, நடுவர் என்ற சொல்லின் மூலம் எதைக் குறிப்பிடுகிறார் என்று தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், இச்சொல்லின் மூலம் அவர் வரலாற்றுச் சூழ்நிலையைத் துல்லியமாகப் பிரதிபலிக்கிறாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இந்தக் கிரேக்கச் சொல்லுக்கு இணையாகப் 'பிரேத்தோர்' என்ற இலத்தீன் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உரோமைக் குடியிருப்பு அலுவலர்களைக் குறிப்பிட "துஉம்வீரி" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பிரேத்தோர் என்பதைவிடச் சற்றுக் குறைவான பொருளைக் கொண்டது.

லூக்கா பிலிப்பியத் தலைவர்களைக் குறிப்பிடுவதற்காக இந்த நடுவர் என்ற பொதுச் சொல்லைப் பயன்படுத்தினார். இதற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரேத்தோர் என்ற இலத்தீன் சொல் சற்றுக் குறைவான பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்கா எழுதியது கிரேக்கர்களுக்கே என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இந்தத் தலைவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடாததால் இந்த எண்ணிக்கை இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டதாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே எழும் போராட்டங்களைத் தீர்த்து வைக்க ஒரு நடுவர் இல்லையே என்று யோபு ஏங்குகிறார் (யோபு 9:33). இந்நடுவர் தீர்ப்புக் கூறவல்லவராகவும் சமரசம் செய்பவராகவும் கருதப்படுவதாகத் தெரிகிறது. ஆனால், இரண்டையும் செய்பவர் இறைவன் மட்டுந்தானே!

**நடுவாயில் (MIDDLE GATE)**

எருசலேம் சுவரில் அமைந்திருந்த ஒரு வாயில். ஒருவேளை இது நகருக்குள்ளே

அமைந்திருந்திருக்கலாம். சாதாரணமாய் இஃது எப்பிராயிம் வாயில் என்று அடையாளம் காட்டப்படும் (எரே 39:3).

**நண்பன் (FRIEND)**

1. ஒருவர் யாரோடு அன்பிலும் அர்ப்பணிப்பிலும் பங்கு கொள்கிறாரோ, அவர் மற்றொருவருடைய நண்பன் எனப்படுவார். சொல் அடிப்படையில் இது சாதாரண அறிமுகத்திலிருந்து (காண்க. மத் 5:25; 20:13; யோபு 2:11) நெருங்கிய பிணைப்பு வரை (2 சாமு 15:37; காண்க: 1 சாமு 18:1) பல வகைப்படும்.

கலைச்சொல்லாக, நண்பன் என்பது நம்பிக்கைக்குரிய நிலையைக் கொண்டிருப்பவரை, பெரும்பாலும் நெருங்கிய தொடர்புடையவரைக் குறிக்கும். இவ்வாறு, திருமணத்தை ஒழுங்குபடுத்தித் தலைமை தாங்குபவர் "மணமகனின் நண்பர்" எனப்பட்டார் (நீதி 14:20; 15:2). யோவா 3:29; காண்க. 2 கொரி 11:2). அரசவையில் "அரசனின் நண்பன்" ஒரு முக்கிய அதிகாரியாவர். இவர் நம்பத்தகுந்த ஆலோசகராகவும் நெருங்கிய தோழராகவும் விளங்கினார் (1 அர 4:5; 1 நாள் 27:33; காண்க: ஆதி 26:26; 2 சாமு 15:37; 16:16). மக்கபேயர்கள் காலத்தில் இத்தகையவர்கள் ஒரு தனிப்பட்ட, சலுகைகள் பெற்ற குழுவாகத் திகழ்ந்தனர் (1 மக் 2:18; 3:38; 6:10). இவர்களிடையே பல வகையுண்டு (10:65).

2. "எப்போதும் அன்பு செய்து" (பழ 17:17) வாழ்வை இனிமையாக்குவதால் (சங் 133; பழ 15:17) "நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஈடு இணை ஏதும் இல்லை" (சீரா 6;15-16; 7:18). தாவீதையும் யோனத்தானையும் ஒன்றிணைத்த வியக்க வைத்த நட்பை எவ்வாறு மறக்க முடியும் (1 சாமு 18:1-4)? அது மரணம்வரை (2 சாமு 1:25-26) சோதனையில் நிலைத்திருந்து (1 சாமு 19-20), இதயத்தின் நினைவில் நீடித்திருந்தது (2 சாமு 9:1; 21:7).

இத்தகைய நட்புறவுகள் உள்ள அதே வேளையில் மாயத்தோற்றமுடைய நட்புறவுகளும் உள்ளன. செல்வர்கள் எண்ணற்ற நண்பர்களைக் கொண்டிருக்கும் வேளையில், ஏழைகள், நோயாளிகள் மற்றும் துன்புறுத்தப்படுவோர் வெகு சிலரையே நண்பர்களாகக் கொண்டிருப்பதேன் (பழ 14:20; சங் 38:12; 55:13-14; 88:19; 109:4-5; யோபு 19:19)? "என் உணவை உண்டவன் எனக்கு இரண்டகமாகத் தன் குதிக்காலைத் தூக்குவதேன்?" (சங் 4:9). இத்தகைய சோகமான அனுபவங்கள், சில நேரங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமளவிற்குத் தங்களது நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் தெளிந்த மனதினராய் இருக்குமாறு மனிதருக்குக் கற்பிக்கின்றன (சீரா 6:5-13; 12:8-13:23; 37:1-5). உண்மையானதாயினும் (யோபு 2:12-13), நட்பானது ஏமாற்றுவதாகவும் (யோபு 6:15-30), ஒருவனைத் தீமைக்கு இழுக்கக் கூடியதாகவும் இருக்க இயலாதா (உப 13:7; சீரா 12:14; 2 சாமு 13:3-15)?

இவ்வாறாக, நட்புறவானது காலம் ஆக ஆக வலுவடைகிறது. "புதிய மதுவைப் போலவே புதிய நண்பனும். அது நாள் ஆக ஆகத்தான் நீ சுவைத்துக் களிப்பாய்" (சீரா 9:10). நட்பானது வெளிப்படையான கண்டிப்பைப் பாராட்டுகிறது (பழ 27:5-6). நட்பானது சிறப்பாக இறைபயத்தினால் ஊட்டம் பெறுகிறது; "கடவுளுக்கு அஞ்சுபவர்களே முறையான நட்பு உடையவர்கள். அவர்களைப் போலவே அவரை அடுத்தவர்களும் இருப்பார்கள்" (சீரா 6:17). உண்மையில் உண்மையான நட்பினுடைய ஊற்றாகவும், மாதிரியாகவும் இருப்பது, ஆபிரகாம் (எசா 41:8; ஆதி 18:17-19), மோசே (யாத் 33:11), இறைவாக்கினர்கள் (ஆமோ 3:7) ஆகிய மனிதருடன் இறைவன் முத்திரையிடுகின்ற நட்பேயாம்.

3. தமது மகனை நம்மிடையே அனுப்பியதன் மூலம், "மனிதரின் நண்பனாக" இறைவன் தன்னைக் காட்டியுள்ளார் (தீத் 3:4). விடாப்பிடியான நண்பனால் தொந்தரவுபடுத்தப்பட்ட தன்னை அனுமதிக்கின்ற

நண்பனாக இயேசு தம்மைக் காட்டுகின்றார் (லூக் 11:5-8). சிறப்பாக, இயேசு இந்த நட்பிற்கு ஊனுடலின் வடிவை அளித்துள்ளார். பணக்கார வாலிபனை அவர் அன்பு செய்தார் (மாற் 10:21). அவர் உணர்ச்சிப்பெருக்கோடு இலாசரை அன்பு செய்தார்; அவனில், விசுவாசத்தினால் கல்லறையினின்று எழவேண்டிய அனைவரையும் அவர் அன்பு செய்கிறார் (யோவா 11:3.11.35-36). அவரது வாழ்வில் பங்கு கொண்ட சில "தோழர்களை" அவர் கொண்டிருந்தாலும் (மாற் 3:14), அவர்கள் அனைவருமே அவரது நண்பர்களாகிடவில்லை. இவ்வாறே, யூதாஸ் இன்னமும் தோழன் என அழைக்கப்பட்டாலும் (மத் 26:50;20:13; 22:12), மற்றவர்களை நோக்கி "உங்களை நான் இனி ஊழியர் என்று சொல்லேன்; உங்களை நண்பர்கள் என்றேன்" என்று இயேசு அறிவிக்கிறார் (யோவா 15:15). அவர்கள் அவரது சோதனைகளில் பங்கேற்றனர். பாடுகளின் இரவை எதிர்கொள்ளவும் அவர்கள் தயாராக இருந்தனர் (லூக் 22:28-29). நண்பர் களிடையே செய்வது போன்று இயேசு அவர்களிடையே தமது தந்தையின் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்கிறார் (யோவா 15:15). சிலுவை வரை பிரமாணிக்கமாக இருந்த இயேசுவினுடைய நண்பனுடைய மாதிரியே, இயேசு "அன்பு செய்தவரும்" (யோவா 13:23), தம்முடைய தாயிடமே ஒப்படைத்தவருமான சீடராவார் (19:26).

தம்முடைய நண்பர்களாக இருக்குமாறு ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், ஒருவருக்கொருவர் நட்பினால் பிணைக்கப்பட்டிருப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனாலும், சில கொந்தளிப்பான தருணங்களும் எழும். சான்றாக, பல வலிமையான பிணைப்புகளால் தமது சகோதரர்களுடன் பிணைக்கப்பட்டும் (உரோ 16:1-16), அவர்களுடன் எதையும் செய்வதற்கு ஆர்வம் உடையவராகவும் உள்ள பவுல் (1 தெச 2:7-8; 2 கொரி 11:28-29), பர்னபா (அ.ப.15:36-39) மற்றும் பேதுரு ஆகியோருடனும் கூட (கலா 2:11-14) தனது நட்பில் கடும் இடர்களை அனுபவிக்கிறார். மேலும் தமது வாழ்வின் இறுதியில், எல்லா நட்பையும் இழந்து தனிமையை உணரப்போகிறார் (2 திமோ 4:9-14). இத்தகைய இடையூறுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அவரைப் பின் பற்றுகிறவர்களுக்கிடையிலான சகோதர அன்பானது ஆண்டவரது சித்தமே (யோவா 15:2-3) என்ற உறுதிப்பாடு அங்கே உள்ளது. ஆதிகிறிஸ்தவ சமுதாயத்தில் நிலவிய நட்புறவின் காட்சி (அ.ப. 2:44-45:4:32) கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டான மாதிரியாகவும், வலிமையின் ஆதாரமாகவும் உள்ளது.

4. **மணமகனின் நண்பன்:** இஸ்ராயேலின் திருமண நடவடிக்கைகளில் மணமகனுடைய நண்பனின் பிரசன்னம் தேவையாக உள்ளது. திருமணச் சந்திப்பைத் தயாரிப்பதும், இளம் பெண்ணை அவளுக்குரிய மணமகனிடம் அளிக்கின்ற திருமணகாலம்வரை இளம் தம்பதிகளுக்கிடையே இணைப்பாளராகச் செயல்படுவதும் அவரது கடமையாகும். ஆண்டவர் இஸ்ராயேலின் கணவராக விவரிக்கப்படுகின்ற நூற்பகுதிகளில் இந்தப் பழக்கத்திற்கான உருவகங்கள் காணப்படுகின்றன. இறைவனின் நண்பனாக இருந்து, மணமகளின் பிரமாணிக்கமின்மைக்காகப் புலம்புவது இறைவாக்கினரின் கடமையாகும் (எசா 5:1-7). ஆண்டவரைச் சந்திப்பதற்கென மனிதரைத் தயாரித்து, அவர்களது ஒத்த சந்தோஷத்தினால் மனமகிழ்ந்தவராய்ப் பின்னணிக்கு விலகி விடுகின்ற திருமுழுக்கு யோவானின் பணியும் இதுவே (யோவா 3:28-29). இறுதியாக, கொரிந்து சமுதாயத்தைக் கிறிஸ்துவிற்குத் திருமணம் செய்விக்கின்ற பவுலின் பணியும் இதுவே (2 கொரி. 11:2). ஆனால் பிற்காலத்தில் மீண்டும் இந்த உருவகத்தைத் கையாளும் போது, முதல் முயற்சியை எடுப்பவர் மணமகனே என்பதை அப்போஸ்தலர் அறிந்து கொள்வார். முதலில் மணமகளைத் தனது அனைத்துக் கொடைகளால் நிரப்பாவிடில் தனக்கு ஏற்புடையவளாக முடியாத

மணமகளை "அவர் தனக்கே அளிக்கின்றார்" (எபே 5:27). எனவே, முன்னர் நண்பருக்கு உரியதாயிருந்த பங்கைக் கணவரே எடுத்துக்கொள்கிறார்.

**நதிக்கு அப்பால் (BEYOND THE RIVER)**

சீரியாவின் பாலஸ்தீனப் பகுதியில் வாழும் ஒருவருக்கு ஆற்றின் அக்கரைப் பகுதி என்பது யூப்பிரத்திசு நதியின் கிழக்குப் பகுதியாகும் (2 சாமு 10:16; 1 அர 14:15; 1 நாள் 19:16). யோசு 24:3.14:15-இல் "நதிக்கு அப்பால்" என்பது, காரானுக்கு அருகிலிருந்த குல மூதாதையரின் தாய் நாட்டைக் குறிக்கும்.

பாரசீகர்களுக்கு இதே சொற்றொடர் யூப்பிரத்திசு நதியின் மேற்குப்பகுதியைக் குறிப்பதற்காகக் கையாளப்பட்டு வந்துள்ளது.

முதலாம் தாரியு பாரசீக ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைச் சீர்ப்படுத்துகையில் ஒரு பகுதியை 'நதிக்கு அப்பால்' எனப் பெயரிட்டது குறிப்பிடத்தக்கது. இதில் பாலஸ்தீனம், சீரியா அடங்கும். இவ்வழக்கு எஸ் 4:10-20; 5:3.6;6:6.8; 7:21.25; 8:36; நெகே 2:7.9; 3:7-இல் பிரதிபலிக்கிறது.

**நத்தனியேல் (NATHANAEL - இறைவன் கொடுத்துள்ளார்)**

1. தனது அன்னிய நாட்டு மனைவியை விலக்க எஸ்ராவால் கோரப்பட்ட ஒரு குரு.

2. யூதித்தின் மூதாதையரில் ஒருவர் (யூதி 8:1).

3. இயேசுவால் அவரது எதிர்கால மாட்சிமையைக் காண அழைக்கப்பெற்ற கபடற்ற இஸ்ராயேலன் இந்த நத்தனியேல் (யோவா 1:45.51).

இயேசு மெசியாவென நம்பிய பிலிப்பு (1:45) நத்தனியேலை ஆண்டவரிடம் கூட்டி வருகிறார். இவர் கானாவூரைச் சேர்ந்தவர் (21:2). இயேசுவைப்பற்றி அவர் கொண்டிருந்த எண்ணமெலாம் (2:46), இயேசு மனிதரை ஊடுருவிப் பார்த்த தன்மையை அறிந்து கொண்ட நத்தனியேல், வேறு விதமாக மாறினார் (2:25).

நத்தனியேலைக் கபடமற்றவன் என இயேசு கூறியது அவன் பாவமற்றவன் எனும் பொருளிலன்று; நேர்மையுள்ளவன், திறந்த மனதுடையவன், இறைவனுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தவன் எனும் பொருளில்தான். "உன்னை அத்திமரத்தின் கீழ்க் கண்டபோதே உணர்ந்து கொண்டேன்" (1:48) எனக்கூறுவதில் அடங்கியுள்ள பொருள் என்னவெனில், இராபிகள் அத்தி மரத்தின் கீழ், சட்டத்தைப் படிப்பதும் போதிப்பதுமான செயல்களை மேற்கொள்வர். எனவே, நத்தனியேலும் அதுபோன்று ஏதாவது ஒரு சிறந்த செயலையே அவ்விடத்தில் செய்திருக்க வேண்டும். எனவே, அவர் வெளியே மட்டுமன்று , உள்ளத்தளவிலும் சிறந்த இஸ்ராயேலனே என்பதாம்.

நத்தனியேலின் விசுவாச அறிக்கைக்கு இயேசு அளிக்கும் பதில் பெத்தேலில் யாக்கோபு பெற்ற அனுபவத்தைச் சுட்டிக் காட்டுகிறது (ஆதி 28:12). இயேசு "நீ என்னைப் பின் தொடர்ந்தால், நானும் எனது சீடர்களும் இருக்குமிடமே இறைவன் தங்கியிருக்குமிடமென்பதையும், அது விண்ணகத்தின் வாயிலென்பதையும் கண்டு கொள்வாய்" எனக் கூறுவதாக அமைந்துள்ளது.

யோவான் நற்செய்தியைத்தவிர வேறெங்கும் இவர் பெயர் காணப்படாததாலும், முக்கியமான சீடர்களின் பெயர்களுடன் இவர் பெயர் வருவதாலும் (யோவா 1:35-51;21:2) இவர் ஒத்தமை நற்செய்தியில் வரும் பார்த்தலமேயு, மத்தேயு, ஆல்பேயுவின் மகன் யாக்கோபு, யோவான், கானானியரான சீமோன் இவர்களில் யாராவது ஒருவராகவும் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

எப்போதும் பிலிப்போடு சேர்த்து பார்த்தலமேயு கூறப்படுவதால் (மத் 10:3 இணை; மாற்கு 3:18; லூக் 6:14; அ.ப. 1:3), நத்தனியேல் என்பவர்

பர்த்தலமேயுதான் என்று சிலர் கருதுகின்றனர்.

நத்தனியேல் யாராக இருந்தாலும் சரி, இவர் யோவான் நற்செய்தியில் கடவுள் பயமுள்ள ஓர் இஸ்ராயேலனாகவும், இயேசுவின்மேல் கொண்ட விசுவாசத்தால்தான் தான் நிறைவடைய முடியும் எனும் அசையாத நம்பிக்கை கொண்ட ஒரு நல்ல உள்ளத்தின் அடையாளமாகவும் துலங்குகிறார்.

**நத்தை (SNAIL, SLUG)**

யூத மரபுப்படி இஃது ஓடுள்ள நத்தையினையோ, ஓடற்ற அட்டை வகையினையோ குறிக்கும். சங் 58:8 குறிப்பிடும் "ஊர்ந்து ஊர்ந்துபோகும் நத்தைபோல் ஆகட்டும்" என்பதன் பொருள் இன்னும் தெளிவு படாத ஒன்றாகவே உள்ளது. இக்கால அறிஞர்களின் கருத்துப்படி, இது காலத்துக்குமுன் குழந்தை பெறுவதைக் குறிக்கலாம். இப்பொருள் அதே வசனத்தின் பின்பகுதியில் வரும் "பிறந்தும் கதிரொளி காணாத பெண் வயிற்றுப்பிண்டம் போல் ஆகட்டும்" என்பதோடு இணையாக உள்ளது. இப்படியாயின் தனது எதிரி பிறந்திருக்கவே வேண்டாம் என்று சங்கீத ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது (காண். யோபு 3:16; 10:18-19).

**நபத்தேயர் (NABATEANS)**

மக்கபேயர்களுக்கு நண்பர்களும், கூட்டாளிகளுமான இவர்கள் ஓர் அரேபிய இனத்தைச் சார்ந்தவர்கள் (1 மக் 5:25; 9:35). பாலைவன நாடோடி இனத்தைச் சார்ந்த இம்மக்கள் கி.மு. 312-இல் செலூக்கிய அரசத்தொடக்கத்தோடு வரலாற்றில் புகுகின்றனர். இவர்கள் இதற்குத் தெற்கிலுள்ள பகுதிகளிலும் குடியேறினர். அரேபியாவிலிருந்து சீரியாவிற்குச் செல்லும் வியாபாரிகள் இவர்கள் நாட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்ததால் இவர்கள் இப்பகுதியில் முக்கிய இடத்தை வகித்தனர். நபத்தேயர்கள் இவ்வழியில் பல வியாபார நகரங்களையும் அமைத்தனர். இவர்களின் தலைநகரம் புகழ்வாய்ந்த பெத்ரா நகரமாகும். இவர்களின் நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட நெல்சன் குளுயெக்கு, அவர்களது உயரிய நாகரிகத்தை எடுத்துக் கூறுகிறார். இதன்படி இந்த நாடோடி இனம் நாகரிக வாழ்க்கையையும், விவசாயத்தையும் சிறந்த முறையில் வளர்த்துள்ளது. நபத்தேயர்கள் இந்த நாகரிகத்தை உருவாக்க உயரிய பாராட்டக்கூடிய நீர்ப்பாசன அமைப்பை ஏற்படுத்தினர். மிதமழையும், ஒரு சில நீருற்றுகளும் கொண்ட இப்பகுதியை இம்மக்கள் அணைகளும், வாய்க்கால்களும் அமைத்து நீரைச் சேகரித்து ஒழுங்காகப் பயன்படுத்தினர். பெத்ராவில் உள்ள மலையைக் குடைந்த கல்லறைகளும்,வீடுகளும் புகழ் வாய்ந்தவை. ஆனால் அவர்களின் கலைகளும், கட்டடங்களும் எகிப்திய, பார்த்திய, கிரேக்கக் கலையைச் சார்ந்தனவாக உள்ளன. முதலாம் அரேத்தாவின் கீழ் நபத்தேயர்கள் இனம் ஓர் அரசாக மாறியது.

நான்கு பேர் அரேத்த என்ற பெயரைக் கொண்டுள்ளனர். நபத்தேயர்கள் அலக்சாந்தர் இயன்னாயுடனும் ஏரோது அந்திப்பாவுடனும் போரிட்டு வெற்றி பெற்றனர். இந்த ஏரோது, நான்காம் அரேத்தாவின் மகளைத் திருமணம் செய்து, பின் விவாகரத்து செய்துவிட்டு ஏரோதியாளைத் திருமணம் செய்தான். அதனால், நபத்தேயர்களின் சினத்தைத் தூண்டினான். நான்காம் அரேத்தா தமஸ்கு பகுதியின் ஆட்சியைக் கலிகுலாவிடமிருந்து பெற்றான். உரோமை, பார்த்தியா ஆகிய பெரும் அரசுகளுக்கிடையில் அமைந்திருந்த நபத்தேயா, தங்கள் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள ஆற்றல்மிக்க அரசியல் தந்திரம் வேண்டியிருந்தது. இறுதியில் கி.பி. 106-இல் உரோமையரின் அரேபிய மாகாணத்துடன் இப்பகுதி சேர்க்கப்பட்டது. நபத்தேயா பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ குறிக்கப்படவில்லை. பவுல் நான்காம் அரேத்தாவின் ஆளுநரின் கட்டளையின்படி தமஸ்குவில் சிறைப்பிடிக்கப்படுவதிலிருந்து தான் தப்பியது பற்றிக் கூறுகிறார் (2 கொரி 11:32; இந்நிகழ்ச்சி பற்றிய வேறுபட்ட விவரிப்பை அ.ப.

9:23-25-இல் காணலாம்).தான் தமஸ்குவுக்குத் திரும்பும்முன் அரேபியாவுக்குச் சென்றதாகப் பவுல் கூறுகிறார் (கலா 1:17). இஃது அரேபியத் தீபகற்பம் அன்று; நபத்தேயப் பகுதியாகும்.

நபத்தேயர்கள் எந்த இலக்கியத்தையும் விட்டுச் செல்லவில்லை. ஆனால், அவர்களுடைய பல கற்பொறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெத்ரா, கிர்பெத் தன்னூர் இன்னும் சில இடங்களிலுள்ள கோவில்கள் பற்றிய ஆய்வுகள் இவர்களது சமயம் செமித்திய, கிரேக்கத் தெய்வங்களைக் கொண்ட கலப்புச் சமயமாகும் என்று காட்டுகின்றன. இந்தக் கோயில்கள் பரந்த திறந்த தொழுகை மேடைகளைக் கொண்டுள்ளன. இத்தகைய வழிபாட்டு இடங்களைப்பற்றிய குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் பல உள்ளன.

**நபோனிது (NABONIDUS** - நபு அச்சம் எழுப்பக்கூடியவர்)

இவன் பாபிலோனியப் பேரரசின் கடைசி அரசன் (கி.மு. 555-539). பாபிலோனிய அரசின் இறுதிக்கட்டத்தையும், இவ்வரசனையும் பற்றிய குறிப்புகள் மிகக்குறைவாக உள்ளன. இக்குறிப்பின்படி, நபோனிது மன்னன் காரானைச் சார்ந்தவன். இவன் அரசனாக அரியணை ஏறியதும் தன்னுடைய மகன் பெல்சாட்சரைப் பாபிலோனியத் தலைவனாகவும், முக்கியப்படைகளின் தலைவனாகவும் ஆக்கிவிட்டு (காண்க. தானி 5) அரேபியா சென்று, தேமாவைத் (இக்காலத் தெயிமா) தலைநகராக்கி அங்கு, பத்து ஆண்டுகள் தங்கினான். பாரசீகர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க நபோனிது 540-இல் பாபிலோனுக்குத் திரும்பினான். 539-இல் சைரஸ் பாபிலோனை வென்று கைப்பற்றியபோது நபோனிது பிடிபட்டுக் கொல்லப்பட்டான். சைரஸ் மன்னன் மத சகிப்புத்தன்மைக்குப் பெயர் போனவன். இதற்கு மாறாக, நபோனிது சின் என்ற சந்திரக்கடவுள் வழிபாட்டு முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தான். தானி 4-இல் விவரிக்கப்படும் நெபுகத்னேசரின் பைத்தியச் செயல்கள், நபோனிது மார்துக்குக்கும் பாபிலோனுக்கும் காட்டிய பற்றற்ற தன்மை பற்றிய சர்ச்சைக்குரிய பாரம்பரியத்திலிருந்து தோன்றியிருக்கலாம்.

**நப்தலி (NAPHTALI** - மற்போர் வீரன்)

யாக்கோபின் ஆறாவது மகன், ராகேலின் பணிப்பெண் பில்கா வழியாகப் பிறந்த இரண்டாவது மகன் (ஆதி 30:7-8). யாகுட்சேல், கூனி, எட்சேர், சில்லேம் ஆகியோரின் தந்தை (46:24). நப்தலி இனத்தவர் அனுபவிக்கும் அழகையும் பலனுடைமையையும் யாக்கோபின் ஆசீர் சுட்டிக்காட்டுகிறது (49:21).

பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது, நப்தலியின் மக்கள் ஆசேர் இனத்தவரோடு சேர்ந்து தாணின் கொடியின்கீழ், பயணம் செய்தனர்; சாட்சிக் கூடாரத்தின் வடக்கில் இவர்கள் பாளைய மிறங்கினர் (எண் 2:25-31). மோசேயின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், நப்தலி இனத்தில் ஆயுதம் தாங்கக்கூடியவர்கள் 53,400 பேர் இருந்தனர் (1:43). பாலைவனப்பயணத்தின் முடிவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 45,400 போர்வீரர்கள் இருந்தனர் (26:50).

நப்தலியின் உரிமைச்சொத்து கானானின் வடபகுதியில் அமைந்திருந்தது. மோசேயின் பாடல் நப்தலியின் செழிப்பைப் பற்றிக் கூறுவதுடன் ("ஆண்டவரின் அருளின்பால் நிறைவு பெற்றவன்") அதன் இடத்தையும், "கலிலேயக் கடலையும், தென்திசையையும் உடைமையாக்கிக் கொள்வான்," என்றும் விவரிக்கிறது (உப 33:23). இஸ்ராயேலின் தொடக்க வெற்றிகளுக்குப்பின், கிழக்கில் யோர்தான் ஆற்றின் வடபகுதியையும் கினரோத்து ஏரியையும், தெற்கில் இசக்கார் மற்றும் செபுலோன் இனத்தவரது எல்லைகளையும், மேற்கே ஆசேரின் எல்லையையும் கொண்ட பகுதி நப்தலி இனத்துக்கு அளிக்கப்பட்டது (யோசு 19:32-34). இஃது ஊற்றுகள் நிறைந்த செழிப்பான பகுதியாகும். இப்பகுதி ஆட்சோர் (காண்க 11:1), தஞ்சம் புகும் நகரான கெதேசு (20:7),

இருலேவியர் நகரங்கள் (21:6.32) ஆகியவை உட்பட பத்தொன்பது நகரங்களைக் கொண்டிருந்தது. சாலமோனின் ஆட்சியில் இஃது ஒரு நிர்வாக மாவட்டமாகிறது (1 அர 4:15). பிற்காலத்தில் நப்தலி என்ற பெயர் அசீரிய மன்னன் 3-ஆம் திகிலத் பிலேசர் கைப்பற்றிய (கி.மு. 733-732) வட இஸ்ராயேல் முழுவதையும் குறிப்பதாகத் தெரிகிறது (2 அர 15:29; காண்க. 1 மக் 5:15; மத் 4:12-16).

ஆட்சோர் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. நப்தலி இனத்தவர் இப்பகுதியில் குடியேற வாய்ப்பளித்தது (யோக 11:1-15). ஆனால் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்ட நகரங்களான பெத் செமேசிலிருந்தும், பெத் அனாத்திலிருந்தும் கானானியர்களை இவர்களால் விரட்டியடிக்க முடியவில்லை. அவர்களையும் ஏற்று, அரசியல் கட்டுப்பாடு மட்டும் கொண்டிருந்தனர் (நீதி 1:33). சீசராவும் எழுச்சியடைந்த கானானியர்களும் இஸ்ராயேலை அச்சுறுத்தியபோது, கெதெசைச்சேர்ந்த பாராக்கின் தலைமையில் கானானியரை வெற்றி கொண்டு, தங்கள் வீரத்திற்குப் புகழ் பெற்றனர் (4:6.10; 5:8). பிற்காலத்தில் மிதியானியர்களை விரட்டியடிக்கக் கிதியோன் தலைமையில் போரிட்டனர் (6:35; 7:23). தாவீது எபிரோனில் இருந்தபோது நப்தலி இனத்தவர் ஆயிரம் அதிகாரிகளையும், முப்பத்தேழாயிரம் வீரர்களையும், மிகுந்த உணவுப்பொருட்களையும் தாவீதுக்கு அளித்தனர் (1 நாள் 12:33.40). அவர்கள் வீரமிக்கவர்களாக இருந்தாலும் வடபகுதியில் நப்தலி இனத்தவரின் நிலை நிச்சயமற்றதாகவே இருந்தது. பாசாவின் ஆட்சிக்காலத்தில் (கி.மு. 885) பெனதாதுவின் தலைமையில் சீரியர்கள் இப்பகுதியைக் கொள்ளையிட்டுப் பாழாக்கினர் (1 அர 15:20). பெக்காவின் ஆட்சிக்காலத்தில் திகிலத்பிலேசர் இப்பகுதியைக் கைப்பற்றி, மக்களை அடிமைகளாக அசீரியாவுக்கு நாடு கடத்தினான். யோர்தானுக்கு மேற்கில் அசீரியர்களின் ஆளுகைக்குட்பட்ட முதல் மாகாணம் இப்பகுதிதான் (2 அர 15:29).

நாடு கடத்தப்பட்டு வருந்திய நப்தலி மக்களுக்கு எசாயா அவர்கள் மீட்பின் ஒளியைக் காண்பர் என்று இறைவாக்குரைத்தார் (எசா 9:1-2). இவ்வாக்கு இயேசுவின் பணிக்காலத்தில் நிறைவேறியது (மத் 4:12-16). மீட்பிற்கு முத்திரையிடப்பட்ட 1,44,000 பேரில் நப்தலி இனமும் சேர்க்கப்பட்டுள்ளது (திருவெளி 7:6).

**நப்தலியைச் சேர்ந்த கெதேசு (KEDESH IN NAPHTALI)**

அபிநோவாமின் மகன் பாராக்கின் சொந்த ஊர். இது கலிலேயாவில் உள்ளது. காண். கெதேசு – 4.

**நப்துகிம் (NAPHTHUHIM)**

அடையாளம் காணாத ஒரு மக்கள் இனம். நாடு, மொழி, இனம் இவற்றிற்கேற்றாற்போல் மக்கள் பிரிவின் அட்டவணையில் இலெகாபிம், பத்ருசிம் ஆகிய பெயர்களுக்கு இடையில் நப்துகிம் என்ற பெயர் வருகிறது (ஆதி 10:13; 1 நாள் 1:11). இந்த அட்டவணைகள், புவியியல் அமைப்பின்படி தயாரிக்கப்பட்டவை அல்லவெனினும் இலெகாபிம் லிபியாவெனவும், பத்ருசிம் மேல் எகிப்தினையும் சுட்டிக்காட்டுவதால், நப்துகிம் என்பது எகிப்தின் நைல் கழிமுகப் பகுதியில் வாழ்பவரையே குறிக்கும். எனவே, நப்துகிம் என்பது-நைல் கழிமுகப் பகுதியையே குறிப்பதால் இதுதான் ஏற்றுக்கொள்ளக் கூடியதெனப் பலர் கருதுகின்றனர்.

**நம்பிக்கை (HOPE)**

I. இறைமக்களின் மறைவாழ்வில் வருங்காலம் வகிக்கும் இடத்தைப்பற்றி எண்ணுவதுதான் இங்கு நம்பிக்கை என்று குறிக்கப்பெறுகிறது. வருங்காலம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டியது. அதற்காக எல்லா மக்களும் அழைப்புப் பெறுகின்றனர் (1 திமொ 2:4). இறைவனின் வாக்குறுதிகள் ஒளிமயமான எதிர்காலத்தையும், இவ்வுலகையும் சார்ந்த உண்மையாகும். ஆனால் அஃது "ஒரு மேலான நாடாகும்; அதாவது,

விண்ணக நாடாகும்" (எபி 11:16) என்று படிப்படியாக இறைவன் தன் மக்களுக்கு வெளியிட்டார். அது நித்திய வாழ்வைச் சார்ந்தது. அதில் மனிதர்கள் கடவுளைப் போல் இருப்பார்கள் (1 யோவா 2:25; 3:2). இறைவன் வாக்களித்த வருங்காலத்தின் உண்மையும் வேண்டுகோள்களும் விசுவாசத்தால் உறுதிபெறுகின்றன. இவ்வருங்காலத்தின் பிறப்பிடமான இறைவன்மேல் கொண்ட நம்பிக்கையினால் மனிதன் வலிமை பெறுகிறான். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் வேரூன்றிய நம்பிக்கை வருங்காலத்தை எட்டிப்பார்க்க முடியும். அது விசுவசிப்பவருடைய வாழ்வை உள்ளுயிர்த்திறனால் உயர்த்த முடியும். பொறுமைக்கும் பற்றுறுதிக்கும் அடிப்படை நம்பிக்கையாகும். புதிய ஏற்பாட்டின் மிகச் சிறந்த வகையில் அதை வெளிக்காட்டுவது அன்பு. எனவே விசுவாசம், நம்பிக்கை, ஆர்வத்தோடு எதிர்பார்த்திருத்தல், அன்பு இவை அனைத்தும் ஒரே ஆன்மீக ரீதியின் பல கோணங்களாகும். எபிரேய மொழியின் ஒரேவகைச் சொற்கள் இத்தகைய எல்லாக் கருத்துக்களையும் குறிக்கின்றன.

II. பழைய ஏற்பாடு

**1. யாவேயின் கொடைகளுக்காக நம்பிக்கை:** பாவமுள்ள மனுகுலத்திற்குத் தொடக்கத்தில் அளித்துள்ள மறைபொருளான வாக்குறுதி (ஆதி 3:15; 9:1-17) இறைவன் மனிதனை ஒருபோதும் நம்பிக்கையின்றி விடுவதில்லை என்று காட்டினாலும், உண்மையில் விவிலிய நம்பிக்கையின் வரலாறு ஆபிரகாமோடுதான் தொடங்குகிறது. வாக்குறுதியால் உறுதி செய்யப்பட்ட வருங்காலம் மிக எளிதானது. அது தனக்கென்று ஒரு நாடும் எண்ணிக்கைக் கடங்கா வழித்தோன்றலும் தான் (ஆதி 12:1தொ). இஃது இறைவன் கொடுத்த முதல் வாக்குறுதி. பல நூற்றாண்டுகளாக இஸ்ராயேலின் நம்பிக்கை உலகப்பொருட்களை மையமாகக் கொண்டிருந்தது. "பாலும் தேனும் பாய்கின்ற நிலமும்" (யாத் 3:8.17), எல்லாவிதமான செல்வப்பெருக்கும் (ஆதி 49; யாத் 23:27-33; லேவி 26:3-13; உப 28) அதன் நோக்கம்.

இஸ்ராயேலின் நம்பிக்கை, உலகப் பொருட்களைப்பற்றி இருந்தாலும் அவர்களது மறைக்கோட்பாடுகள் அப்பொருட்களை அடையும் வழிமுறை நியதியாக அமையவில்லை. உலகச் செல்வங்களையெல்லாம் இறைவனின் ஆசிர்களாக (ஆதி 39:5; 49:25), கொடைகளாகக் (ஆதி 13:15; 24:7; 28:13) கருதினர். இறைவன் தன் வாக்குறுதிக்கு, உடன்படிக்கைக்கு, பற்றுறுதியாய் இருக்கின்றார் என்பதற்கு இவைகளைச் சான்றுகளாக எண்ணினர் (எசா 23:25; உப 28:2). இறைவனுக்குப் பற்றுறுதியாய் இருக்க இவ்வுலகப் பொருட்கள் இடறலாய் இருந்தால், தயக்கமின்றி இவைகளைத் தியாகம் செய்ய வேண்டும் (யோசு 6:17-21; 1 சாமு 15). ஆபிரகாம் செய்த பெரும் தியாகம் எப்பொழுதும் இறைவனில் வைக்கும் நிறைவான நம்பிக்கைக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது (ஆதி 22); இஸ்ராயேலின் நம்பிக்கை இன்னும் ஒருபடி உயர்ந்து வளர (எபி 7:19) இறைவன் இட்டுச்செல்வார் என்பதற்கு அறிகுறியாக அமைந்திருந்தது.

**2. யாவே இஸ்ராயேலுக்கும் மற்ற நாடுகளுக்கும் நம்பிக்கை:** இதை வளர்க்கும் பணி முக்கியமாக இறைவாக்கினரைச் சார்ந்தது. இஸ்ராயேலின் நம்பிக்கையைத் தூய்மைப்படுத்தி அது தளராவண்ணம் காத்தனர். அஃதோடு அந்நம்பிக்கையைப் புதிய கண்ணோக்கோடு பல கோணங்களிலிருந்து காணவும் வழிவகுத்தனர்.

**அ. போலி நம்பிக்கை:** வருங்கால இன்பம் உடன்படிக்கை செய்த இறைவனின் கொடை என்பதைப் பலமுறை இறைமக்கள் மறந்தனர் (ஒசே 2:10; எசே 16:15 தொ). அப்போது இம்மக்கள் வருங்காலத்தை மற்ற நாடுகளைப்போலத் தாமாக நிலைநிறுத்தும் முறைகளைக் கையாண்டனர். உயிரற்ற சடங்குமுறையான வழிபாடு, சிலைவழிபாடு, ஆதிக்கம், உடன்படிக்கைகள் போன்றவைகளைச் சாதனமாகக் கொண்டனர்.

இறைவாக்கினர் இத்தகைய பொய்த்தோற்ற முடைய நம்பிக்கையைக் கண்டனம் செய்தனர் (எரே 8:15; 13:16). பற்றுறுதியின்றி, மீட்புப்பெறும் நம்பிக்கையில்லை (ஒசே 12:7; எசா 26:8தொ; 59:9தொ). யாவேயின் நாள் கோபத்தின் நாளாக இருக்கும் (செப் 1:15தொ); ஒளியற்ற இருளாக இருக்கும் (ஆமோ 5:20). எரேமியாவின் பணி இத்தகைய பண்பைக் கொண்டிருந்தது (1:29).

**ஆ. உண்மையான நம்பிக்கை:** சில வேளைகளில் இறைமக்களுக்கு வருங்காலமே இல்லாததுபோல் தோன்றியது. "நமது நம்பிக்கை அழிந்துவிட்டது" (எசே 39:11; காண். புல 3:18) என்று சொல்லுமளவிற்குச் சோதனைக்குட்பட்டனர். அவ்வேளைகளில் நம்பிக்கை மறைந்திருந்ததாகக் கண்டனர் இறைவாக்கினர் (காண். எசா 8:16 தொ). ஆனால், உண்மையிலேயே அது மறைந்து போகாது. ஒருசிலர் (எஞ்சியோர்) காப்பாற்றப்படுவர் (ஆமோ 9:8 தொ; எசா 10:19 தொ). இவ்வாறு இறைவன் திட்டம் வளர்ந்து கொண்டே முன்னேறுகிறது. தண்டனை பெறும் நேரமெல்லாம், "நம்பிக்கை நிறைந்த வருங்காலம்" (எரே 29:11; 31:17) என்ற பறைசாற்றல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது (எரே 30:33; எசே 34:48; எசா 40-45). இஃது அவர்களின் நிலையான ஆறுதலும் நம்பிக்கையுமாகும் (சங் 9:19). இஸ்ராயேல் மக்களின் விசுவாசமற்ற தன்மைகூட நம்பிக்கையைத் தடை செய்யக்கூடாது. இறைவன் அவர்களை மன்னித்து விடுவார் (ஓசே 11; புல 3:22-33; எசா 54:4-10; எசே 39:29). மீட்பு தாமதமாக வருகின்றதென்பதால் (அ.ப.2:3; செப் 3:8). இரக்கமும் பற்றுறுதியும் கொண்ட யாவே இஸ்ராயேலின் நம்பிக்கையாக இருக்கிறார் (எரே 14:8; 17:13).

**இ. புதிய நம்பிக்கை:** இறைவாக்கினர் மொழிந்த வருங்காலம் பல பொருள் கொண்டது. அமைதி, உய்வு பெறல், ஒளி, குணமுறுதல், மீட்பு என்பன பற்றி இறைவாக்கினர் போதித்தனர். இன்பவனம், யாத்திரை, உடன்படிக்கை, தாவீதின்ஆட்சி போன்றவைகள் வியத்தகுமுறையில் உறுதியாகப் புதுப்பிக்கப்படுதல் பற்றி அவர்கள் அரைகுறையான கருத்துக்கொண்டிருந்தனர். இஸ்ராயேல் "கடவுளின் அன்புக்கொடைகளால் நிறைவுபெறும்" (எரே 31:14). "எல்லா நாடுகளின் செல்வமும் தன்னிடம் பெருகுவதை இஸ்ராயேலின் காணும்" (எசா 61). இஸ்ராயேலின் முன்னைய வரலாற்றுக்கு அருகில் இறைவாக்கினர் இருந்ததால், அவர்கள் இஸ்ராயேலையும் அதன் மண்ணுலக மகிழ்வையும் வருங்காலத்தின் மையத்தில் இருப்பதாகக் கணிக்கின்றனர்.

இறைமக்கள் கடவுளைப்பற்றிய அறிவால் நிறைவுபெறும் நாளுக்காக இறைவாக்கினர் ஏங்குகின்றனர் (எசா 11:9; அப 2:14). ஏனெனில், முதலில் இறைவன் அவர்களின் உள்ளங்களைப் புதுப்பிப்பார் (எரே 31:33தொ; எசே 36:25 தொ); பிறநாடுகளும் மனந்திரும்பும் (எசா 2:3; எரே 3:17; எசா 45:14 தொ). வருங்காலம் இறுதியான நிறைவான வழிபாட்டின் காலமாக இருக்கும் (எசே 40:48; செப் 14). அவ்வழிபாட்டில் எல்லா நாடுகளும் பங்கெடுக்கும் (எசா 56:8; செப் 14:16 தொ; காண். சங் 86:8 தொ; 102:22தொ). வழிபாட்டின் உச்ச நிலை கடவுளைத் தியானித்து அவரோடு வாழ்தலாகும் (சங் 63:34). இஸ்ராயேலுக்கும், மற்ற நாடுகளுக்கும் கடவுளும் (எசா 60:19தொ; 63:19; 51:5), கடவுளின் அரசும் (சங் 96:99) நம்பிக்கையாகும் என்று இறைவாக்கினர் கருதினர். இருப்பினும் இஸ்ராயேல் எதிர்பார்த்திருந்த வருங்கால மகிழ்ச்சி இவ்வுலகத்தைச் சார்ந்தது; இந்த மகிழ்ச்சி நிறைவேறுதல் தனிப்பட்டோரின் வாழ்க்கையைப் பொறுத்திருந்தாலும், விதிவிலக்கின்றி (எசே 18) அம்மகிழ்ச்சி அந்த முழுச் சமுதாயத்தையும் சேர்ந்தது.

**3. ஒருவனின் சொந்தமீட்பிலும் வருங்காலத்திலும் நம்பிக்கை:**

இத்தருணத்தில் இறைப்பற்றுமிக்க

ஆன்றோரும், ஞானிகளும் விசுவாசக்கண்கொண்டு சொந்த நன்மைக்காகப் பணிபுரியும் பொழுது பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை பற்றிய பொது வளர்ச்சியும் தோன்றுகிறது. இருப்பினும் இந்த விசுவாசம் நேர்மையுள்ளவனின் துன்பத்தோடு எழும் பிரச்சனையோடு முட்டிமோதியது. இத்துன்பம் மீட்பின் துன்பம். எனவே இந்த இன்னல் நம்பிக்கையை எழுப்ப வேண்டுமேயன்றி இடையூறாய் இருக்கக்கூடாது என்று பாபிலோனிய நாடு கடத்தலின் முடிவிலோ, அதற்குப்பின்னோ ஓர் இறைவாக்கினர் கற்பித்துள்ளார் (எசா 53). ஆனால், இந்தப்பழைய ஏற்பாட்டின் இறைவாக்கு அதிகநாட்கள் நீடிக்கவில்லை. தெளிவற்ற சில உணர்வுகள் இருந்தபோதிலும் (யோபு 13:15; 19:25 தொ) யோபுவைப் போன்றோரின் நம்பிக்கை சூழிருளுக்குள் இட்டுச் செல்கிறது (யோபு 42:1-6).

மறையுண்மை அனுபவம் பெற்ற புனிதர்களின் நம்பிக்கை இறைவனின் திருமுன்னால் நிறைந்திருந்து. எனவே, தம் குறிக்கோளை அடைந்துவிட்டதாக அவர்கள் உணர்கின்றனர். அத்தகைய நம்பிக்கைக்குத் துன்பமும், இறப்பும் ஒப்பீட்டு அடிப்படையில் முக்கியமற்றவை (சங் 73; 49:16; காண். 139:8;16). மறைசாட்சியினரின் விசுவாசம் உயிர்ப்பின் நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது (தானி 12:1தொ; 2 மக் 7). அது மனுமகனை மையமாகக் கொண்ட பொது நம்பிக்கையாகும் (தானி 7). நம்பிக்கை ஞானிகளுக்கு அமைதிக்கென்றும் (ஞான 3:3), ஓய்வுக்கென்றும் (4:7), வீடுபேற்றிற் கென்றும் (5:2) தோன்றியது. இக்கொடைகளை மண்ணுலகில் காணமுடியாது. ஆனால் சாவற்ற வாழ்வில் (3:4) ஆண்டவரின் திருமுன்னில் (5:15தொ) காணலாம். இவ்வாறு நம்பிக்கை சொந்த வாழ்வோடு சேர்ந்ததாக (5:5), வருங்காலத்தை நோக்கியதாக மாறுகிறது.

இயேசுவின் காலத்தில் யூதர்களின் நம்பிக்கை அக்காலத்திய சமயப்போக்குகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டது. உலகப் பொருட்களையும், ஆன்மீக நிலையைச் சார்ந்ததுமான வருங்காலத்தை அது எதிர்பார்த்தது; இறைவனையும் இஸ்ராயேலையும் மையமாகக் கொண்டது. எனவே, அது காலவரம்பிற்குட்பட்டும், காலத்தைக் கடந்ததாயும் அமைந்திருந்தது. இவ்வருங்காலம் இயேசுவின் நிறைவுபெற அந்த நம்பிக்கை இன்னும் அதிகமாகத் தூய்மை பெற வேண்டும்.

II. புதிய ஏற்பாடு:

1. **இயேசு நிறைவுபடுத்திய இஸ்ராயேலின் நம்பிக்கை:** இவ்வுலகில் இறையாட்சி வருதலை இயேசு அறிவிக்கின்றார் (மத் 4:17. ஆனால் இந்த அரசு விசுவாசத்தினால் மட்டும் அடையக்கூடிய ஆன்மீக உண்மையாகும். இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவு பெற வேண்டுமானால் அவர்கள் எதிர்பார்த்திருந்ததிலிருந்து இவ்வுலகத்தொடர்பு கொண்டவற்றையெல்லாம் அகற்ற வேண்டும். துன்பத்தையும், மரணத்தையும் தாம் ஏற்றுக்கொண்டது போல் தன் சீடர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென இயேசு கோருகிறார் (மத் 16:24 தொ). ஆனால், ஏற்கெனவே இங்கு பிரசன்னமாக உள்ளது அவரது அரசு; இன்னொருவகையில் இனிமேல்தான் வர இருக்கின்றது. எனவே நம்பிக்கை தொடர்கிறது; ஆனால், இப்பொழுது அதன் திசைநோக்கு எல்லாம் நித்திய வாழ்வை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது (18:8தொ); அவரவர் செயல்களுக்குத் தகுந்தபடி பரிசு வழங்கும் (16:27; 25:31-46) மனுமகனின் புகழ்மிகு வரவை நோக்கி அமைந்துள்ளது. இந்நாளை எதிர்பார்த்திருக்கும்பொழுது இயேசு கொடுத்த வாக்குறுதிகளாலும் (16:18), அவர் உடன் தங்கியிருத்தலாலும் (28:20) திருச்சபை வலிமைபெறுகிறது. இறையாட்சியையும் அதன் நம்பிக்கையையும் எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்தி இறைவாக்கினரின் நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

2. **இயேசுகிறிஸ்து திருச்சபையின் நம்பிக்கை:** திருச்சபையின் நம்பிக்கை,

விசுவாசத்தில் உறுதிபெற்ற நம்பிக்கை, ஏனெனில், தூய ஆவியின் கொடை ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றியுள்ளது (அ.ப. 2:33.39). திருச்சபையின் நம்பிக்கையின் முழு ஆற்றலும் இயேசுவின் வருகையை எதிர்பார்ப்பதிலேயே முனைந்துள்ளது (1:11; 3:20). இவ்வருகை "ஆண்டவரின் நாள்," இரண்டாம் வருகை (யாக் 5:8; 1 தெச. 2:19), சந்திப்பு, மறை உண்மை வெளிப்படுத்தல் என்று அழைக்கப்படுகிறது. இஃது அருகில் உள்ள எதிர்காலம் (யாக் 5;8; 1 தெச 4:13 தொ; எபி 12:18 தொ; 1 பேதுரு 4:7). அதன் தாமதத்தால் அடிக்கடி வியப்பு ஏற்படுகிறது (2 பேதுரு 3:8 தொ); ஆனால், அது உண்மையிலேயே "இரவில் திருடன் வருதல் போல" வரும் (1 தெச 5: 1தொ; 2 பேதுரு 3:10; திருவெளி 3:3 காண். 24:36). இதன் உறுதியற்ற தன்மை விழித்திருக்கச் செய்கிறது (1 தெச 5:6; 1பேதுரு 5:8); துன்பத்திலும் சோதனையிலும் (மன) உறுதியுள்ள பொறுமையும் கோருகிறது (யாக் 5:7 தொ; 1 தெச 1:4 தொ; 1 பேதுரு 1:5 தொ; காண். லூக் 21:29). திருச்சபையின் நம்பிக்கை துன்பத்திலும் கூட மகிழ்ச்சிகரமானது (உரோ 12:12; 1 பேதுரு 4:13; காண். மத் 5:11 தொ) ஏனெனில் எதிர்பார்த்திருக்கும் மகிமை எவ்வளவு உயர்ந்ததென்றால் (2 கொரி 4:17) அது இந்நேரத்திலும் பிரதிபலிக்கின்றது (1 பேதுரு 1:8 தொ). நம்பிக்கை ஒருவகை முக்கியத்துவத்தையும் (1 தெச 5:8; 1 பேதுரு 4:7) பற்றற்ற தன்மையையும் (1 கொரி 7:29 தொ; 1 பேதுரு 1:13) பிறப்பிக்கின்றது. உண்மையிலேயே இவை தெய்வீகத்தன்மையில் பங்கெடுக்கும் நம்பிக்கைக்கு இட்டுச்செல்லும் இவ்வுலக உதவிகளாகும் (2 பேதுரு 1:4). இறுதியாக நம்பிக்கை செபத்தையும், சகோதர அன்பையும் தூண்டுகிறது (1 பேதுரு 4:7 தொ; யாக் 5:8 தொ). வரவிருக்கும் உலகில் உறுதியாக நிலைநின்று (எபி 6:18) நம்பிக்கை கிறிஸ்துவ வாழ்வு முழுவதையும் ஊடுருவிச் செல்கிறது.

**3. நம்பிக்கைபற்றிய பவுலின் கோட்பாடு:** திருச்சபையின் நம்பிக்கையில் புனித பவுல் பங்குகொள்கின்றார். ஆனால் அவருடைய ஆன்மீக வாழ்வும் சிந்தனைச் செறிவும் திருச்சபையின் உண்மை விளக்கத்தைப் பல கோணங்களில் வளர்த்துள்ளன.

இதற்கு நமது உடலின் மீட்புப் பற்றிய கருத்திற்கு (உரோ 8:23), சிறப்பாக வாழ்வோரின் உருமாற்றம் (1 கொரி 15:51; காண். 1 தெச 4:13-18) மற்றும் இறந்தோர் உயிர்ப்புப் பற்றிய கருத்திற்குத் தனி இடம் கொடுத்திருப்பதைச் சான்றாகக் கூறலாம். பவுலின் கொள்கைப்படி இவ்வுயிர்ப்பில் விசுவாசமற்றிருப்பது நம்பிக்கையற்றிருப்பதற்கு ஒப்பாகும் (1 தெச 4:13; 1 கொரி 15:19).

நன்மை செய்வதில் நிலைத்திருப்பவர்க்கு மட்டுமே (உரோ 2:7 தொ; காண் எபி 6:12) வலிமை வழங்கப்படும். ஆனால் மனித சுதந்திரம் வலிமையற்றது (உரோ 7:12-25). எவ்வாறெனில் உண்மையிலேயே வாக்குறுதி அளிக்கப்பட்ட உரிமைச் சொத்தில் பங்குபெற கிறிஸ்துவன் நம்பியிருக்க முடியுமா (கொலோ 4:24)? ஆபிரகாமைப் போல, கிறிஸ்துவனும் நம்ப முடியும், நம்பவேண்டும் (சான்றுகள் முரண்பாடாகத் தோன்றினாலும்). கொடுக்கப்பட்ட வாக்குறுதியில் கொண்ட விசுவாசத்தாலும் (உரோ 4:18-25), இறைவனின் பற்றுறுதியில் கொண்ட நம்பிக்கையாலும் கிறிஸ்துவன் நம்பமுடியும். ஏனெனில், முதல் அழைப்பு விடுத்ததிலிருந்து இறுதி மாட்சியை அடையும்வரை மனிதன் பற்றுறுதியோடு இருக்க இறைவன் வலிமை தருகின்றார் (உரோ 8:28-30).

இவ்வாக்குறுதிகளெல்லாம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன (1 கொரி 1:20) என்ற உண்மை பவுலின் சிந்தனையில் முக்கிய இடம் பெறுகிறது. எதிர்பார்த்திருந்த மாட்சி புலன்களுக்கு மறைந்திருந்தாலும் (2 கொரி 4:18; உரோ 8:24 தொ) நம் முன்னிலையில் இருக்கும் மகிமை யாகும் (2 கொரி 3:18; 4:6). திருமுழுக்குப் பெற்றவன் ஏற்கெனவே ஆவியில் உயிர்த்தெழுந்துவிட்டான் (உரோ 6:1-7; கொலோ 3:1). வரவிருக்கும் உலகின்

அச்சாரமாகவும் (2 கொரி 1:22; 5:5; எபே 1:4) முதல் பலனாகத் தூய ஆவி அவனுள் தங்கியிருக்கின்றார் (உரோ 8:11-23;). ஆதாம் மரணத்திற்கு இழுத்துச் சென்ற மனிதர்களுக்கு இறைவன் ஏற்புடைமையின் அருளை அளித்துள்ளார். ஆனால் இப்பொழுது அதற்கும் மேலாக இறைமகனோடு கொண்ட உறவு மனிதர்களை நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது ( உரோ 5). கிறிஸ்துவில் இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவுபெற்றது, கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையின் தெளிவான அடிப்படையின் நிறைவான வெளிப்பாடாகும். இவ்வன்பை எவ்வகையாலும் கிறிஸ்துவனிட மிருந்து எடுக்க முடியாது (உரோ 8:31-39).

பவுலின் நம்பிக்கை மிகுந்த வாழ்வு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்நம்பிக்கை பவுலின் ஆன்மாவில் மிகச் செறிவோடு காட்சியளிக்கின்றது. அந்நம்பிக்கை இன்னும் நிறைவுபெறவில்லையே என்று வருந்துகிறது (2 கொரி 5:5; உரோ 8:23); அஃதோடு எதிர் பார்த்திருந்த வருங்காலத்தைப்பற்றிய எண்ணத்தில் மகிழ்ச்சியுறுகின்றது (1 கொரி 15:54 தொ). இஃதோடு ஒப்பிடுகையில் மிகவும் நேர்மையான நம்பிக்கைகளும் கூடத் தம் மதிப்பை இழக்கின்றன (பிலி 3:8). இதற்கு ஆதாரமாக இருப்பது நமது செயல்களால் வரும் பலனன்று; இறைவனின் அருளேயாகும் (1 கொரி 4:4; 15:10; உரோ 3:27). அவ்வுறுதி பெற்று பந்தயத்திற்கான வலிமையையும் (பிலி. 3:13 முதல்), தனது அப்போஸ்தலப் பணியைத் தொடர்ந்து நடத்த, பவுல் புரியும் போரில் உறுதியையும் (2 திமொ 4:7), அந்நம்பிக்கையின் உள் வலிமையால் ஊக்கத்தையும் பெறுகின்றார். அதே சமயம் பவுல் தானே தகுதியற்ற நிலையை அடையாது தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றார் (1கொரி 9:26 தொ). இந்நம்பிக்கை புதிய நம்பிக்கைகளை எழுப்புகின்றது (பிலி 2:19; 2 கொரி 1:9 தொ; 4:7-18). ஆனால், அது எப்பொழுதும் ஆண்டவரில்தான் தோன்றுகின்றது. பவுலின் மரணம் நெருங்கி வரும்பொழுது தன் பந்தயத்திற்குப் பரிசாகக் கிடைக்கும் அன்புக் கொடையை எதிர்நோக்குகின்றார். ஆனால் அவரது சன்மானம் கிறிஸ்துதான் என்று அவருக்குத்தெரியும் (பிலி 3:8). எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவோடு இருப்பதுதான் அவரின் நம்பிக்கை (பிலி 1:23; 2 கொரி 5:8). அப்போஸ்தலர் இனி ஒருபோதும் தமது சொந்த மகிழ்ச்சியைத் தேடுவதில்லை; தாம் அன்பு செய்யும் ஒருவரோடு இருப்பதையே தேடுகிறார். கிறிஸ்துவர்கள் மற்றவர்கள் அனைவரின் மீட்புக்காகவும் ஆற்றும் பணியில் நம்பிக்கையோடு கூடிய முழுதும் பற்றற்ற தன்மை வெளிப்படுகிறது. ஏனெனில் அவர்கள் மாட்சியின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவை அவர்களுக்கு வெளிப்படுத்த விரும்புகின்றனர். எனவே, பவுலின் நம்பிக்கை இறைவனின் திட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்குகின்றது. ஆண்டவனின் அன்புக்கு அவர் நம்பிக்கை,பதில் அன்போடு மறுமொழி தருகின்றது.

4. **செம்மறியின் மணவிருந்து:** புனித யோவான் நம்பிக்கையைப் பற்றிப் பேசும் பொழுது ஆண்டவருடைய வருகைக்கு எதிர்பார்த்திருத்தலையும் (யோவா 14:3; 1 யோவா 2:18), உயிர்ப்பையும், இறுதித்தீர்ப்பையும் (யோவா 5:28 தொ 6:39 தொ) பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை. ஆனால், விசுவாசம் கொண்ட ஒருவர் பெற்ற நித்திய வாழ்வைப்பற்றி அதிகம் சிந்திக்க விரும்புகின்றார் (யோவா 3:15; 6:54; 1 யோவா 5:11 தொ). அவ்விசுவாசத்தைப் பெற்றதால் ஏற்கெனவே உயிர்ப்பும் (யோவா 11:25 தொ; 1 யோவா 3:14), தீர்ப்பும் (யோவா 3:19; 5:24) நிகழ்ந்துவிட்டன. கிறிஸ்துவின் நித்திய வாழ்விற்குச் செல்லும் வழியானது ஏற்கெனவே உள்ள உண்மையை (1 யோவா 3:2) அமைதியோடு வெளிப்படுத்தும் ஒன்றாக மட்டும் திகழும் (4:18).

திருவெளிப்பாட்டில் நம்பிக்கை பற்றிய உள்நோக்குகள் முழுவதும் வேறுபடுகின்றன. உயிர்த்த செம்மறி கிறிஸ்தவர்கள் சூழ்ந்து நிற்க

(திருவெளி 5:11-14; 14:1-5; 15:2 தொ) ஏற்கெனவே, விண்ணுலகில் வெற்றியோடு அமர்ந்துள்ளது. அங்கிருந்து தான் அவரது மணமகளாகிய திருச்சபை தோன்றும் (21:2). ஆனால் இம்மணமகள் அதே சமயத்தில் மண்ணுலகிலும் உள்ளாள் (22:17). இங்குதான் கிறிஸ்துவ நம்பிக்கை வரலாற்றுப்பிணைப்பில் ஈடுபட்டுள்ளது.

பேயின் மேலெழுந்தவாரியான வெற்றிகள் இந்நம்பிக்கையைத் தளர்த்துவதற்கு அச்சுறுத்துகின்றன. ஆனால் உண்மையில் வெல்ல முடியாத இறைவாக்கு தம் மக்களுக்காகப் போரிட்டு, தம் மக்கள் மத்தியில் ஆட்சி செய்கின்றது (19:11-16; 20:1-6). உறுதியான வெற்றி அண்மையில் உள்ளது (1:1; 2:5; 3:11; 22:6.12). ஆகவே, கிறிஸ்துவர்களின் நம்பிக்கை புதிய உலகம் வரும்வரைக்கும் வெற்றியோடு திகழவேண்டும். அப்புதிய உலகு இறுதியாகப் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரின் உரைகளுக்கு உறுதியான முழு நிறைவைக் கொடுக்கும் (திருவெளி 21-22).

விவிலியத்தின் இறுதியில் "என் வருகை அருகில் உள்ளது" என்று மணமகன் வாக்களிக்கின்றார். அதற்கு மணமகள் உரைக்கும் பதில்: "ஆண்டவராகிய இயேசுவே வாரும்" (22:20). இக்குரலொலி திருச்சபையின் தொடக்க நாட்களின் செபமாக (அரமேயிக்கு மொழியில், "மரனாதா") விளங்குகிறது (காண். 1 கொரி 16:22). கிறிஸ்துவ நம்பிக்கையை இதைவிடச் சிறந்த சொற்றொடரில் வெளிக்காட்ட முடியாது. ஏனெனில் உண்மையிலேயே ஆண்டவரின் பிரசன்னத்துக்காக ஏங்கும் ஆவல் பொங்கும் அன்புதான் கிறிஸ்துவ நம்பிக்கை; அதையே இச்சொற்றொடர் உள்ளடக்கியுள்ளது.

**நம்பிக்கைக்குரிய, அறிவாளியான பணியாளர் (Faithful and wise servant)** - உவமை.

இது (மத் 24:45-51; லூக் 12:40-43) இயேசுவின் இரண்டாம் வருகையையும் அவர் இறையரசை நிறுவுவதையும் பற்றியது. இதன்படி விசுவாசிகள் எப்போதும் ஆயத்த நிலையில் காத்திருக்க வேண்டும். பணியாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் தலைவன் வரும் நேரத்தை அறியாததால் எப்பொழுதும் நன்மையையே செய்யவேண்டும். அவ்வாறு இல்லாமல் தீமை செய்வதைத் தலைவன் கண்டால், அப்பணியாளனைத் தண்டிப்பான். எனவே, கிறிஸ்தவர்கள் தங்கள் அர்ப்பணத்திற்கேற்ப அன்பு வாழ்க்கை வாழக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் இறைவனின் நற்செய்தியை அறிந்தவர்கள் அதிகப் பொறுப்பு வகிக்கின்றனர்; அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது எனவும் லூக்கா கூறுகிறார் (லூக் 12:48).

**நயீன் (NAIN)** - அழகான, இன்பமான)

தென்மேற்குக் கலிலேயாவில் உள்ள நகரமான இது விவிலியத்தில் விதவையின் இறந்த மகனை உயிர்ப்பிப்பதைக் கூறும்போதுமட்டும் சொல்லப்படுகிறது.

அமைந்துள்ள இடம்: யோசிப்பசு கூறும் இதுமேயாவின் எல்லையில் அமைந்த நகரமாக இஃது இருக்க முடியாது. இன்றைய அராபியர் கிராமமான நெயீன் ஆகத்தான் இஃது இருக்க வேண்டுமென அறிஞர் பலர் கருதுகின்றனர். இது விவிலிய விவரிப்போடு ஒத்துப்போகிறது. நெபிதகி எனப்படும் ஒரு குன்றின் வடமேற்குக் கீழ்ப்பகுதியில் இக்கிராமம் உள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இக்குன்று மோரே எனப்பட்டது (நீதி 7:1); சிறிய எரிமோன் எனவும் அழைக்கப்பட்டது. இக்கிராமம் நாசரேத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் தென்கிழக்கே உள்ளது; கப்பர்நாகுமிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் பற்றிய விவரிப்பு: இந்நகரத்திலிருந்து எசுதிரலோன் சமவெளியின் அருமையான காட்சி தென்படும். இதுதான் நயீனுக்கு "அழகிய, இன்பகரமான" எனும் பொருளுள்ள பெயர் கிடைக்கக் காரணமானது. மேலும், இங்குள்ள ஊற்றினால் ஒலிவ

மரங்களும், அத்தி மரங்களும் வளர்ந்து இவ்விடத்தைச் செழிப்பாக்குகின்றன. இசக்காரின் நிலம் இன்பகரமானது எனும் குறிப்பு இந்நயீனைப் பற்றித்தான் (ஆதி 49:15).

இன்று இக்கிராமத்திலே சில வீடுகளில் 200 பேர்கள் மட்டுமே வசிக்கின்றனர். ஆனால், இங்குள்ள சிதைவுகளைப் பார்க்கும்போது இஃது ஒரு காலத்தில் முக்கியமான நகரமாக இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கிராமத்தின் தென்கிழக்கே மலைப்பகுதிப் பாறையில் கல்லறைகளும், குகைகளும் உள்ளன. மத்திய காலத்தில் அந்த இளைஞனைப் புதைக்கவிருந்த கல்லறையையும், அவ்விதவையின் வீட்டையும் விசுவாசிகளுக்குக் காட்டினர். இன்று இவ்விடத்தில் பிரான்சிஸ்கு சபையாரின் கோவில் ஒன்று, மத்தியகாலக் கோவிலுக்கருகே உள்ளது.

இக்கிராமத்திற்கருகேதான், விதவையின் ஒரே மகனைச் சுமந்து வரும்போது இயேசு பாடையைத் தொட்டு அவ்விளைஞனை உயிர்ப்பித்தார். இது கிராமத்தின் நுழைவாயிலில் நடந்திருக்க வேண்டும் (லூக் 7:11-16).

**நரகம் (HELL)**

I. இயேசு கிறிஸ்து பாதாளங்களில் இறங்கினார்; தண்டனைக்குரியோர் நரகத்திற்குச் சென்றனர். விசுவாசத்தின் இவ்விரண்டு கூற்றுகளும் இரு வேறுபட்ட செயல்களைக் குறிப்பிட்டு, இரு வேறுபட்ட நிலைகளை வலியுறுத்துகின்றன. இயேசு இறங்கிச்சென்ற பாதாளங்களின் வாசல்கள் அதனில் சிறைப்பட்டோர் தப்பிச் செல்வதற்கெனத் திறக்கப்பட்டன. ஆனால், தண்டனைக்குரியோர் சென்றுள்ள நரகத்தின் வாயில்கள் எப்போதுமே மூடப்பட்டுள்ளன. ஆயினும் தற்செயலாகவோ, விருப்பப்படியான ஒப்பிடுதலின்படியோ இல்லாமல், உரிய சரியான காரணத்திற்காகவும் பெரிய உண்மையின் வெளிப்பாடாகவும், உபயோகிக்கப்படும் சொல் ஒன்றாகவே உள்ளது. நரகத்தைப்போன்று பாதாளமும் சாவின் அரசாக உள்ளது. கிறிஸ்து இல்லாமல் உலகில் ஒரே நகரமும் ஒரே சாவும் இருக்கும். இச்சாவானது முடிவற்றதாகவும் எல்லாம் வல்லதாகவும் இருக்கும். முதல் மரணத்தினின்று பிரிக்கப்படக்கூடிய "இரண்டாவது மரணம்" (திருவெளி 21:8) இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் தமது மரணத்தினால் சாவின் ஆட்சியை முறியடித்தது இயேசு கிறிஸ்துவே ஆவார். இயேசு பாதாளத்திற்கு இறங்கிச் சென்றதன் காரணமாக, பாதாளம் இனியும் நரகமன்று. ஆனால், அஃது அதன் தோற்றத்தைத் தொடர்ந்து கொண்டுள்ளது. இதன் காரணமாகவே இறுதித் தீர்ப்பின்போது பாதாளம் நரகத்தோடு மீண்டும் சேர்ந்து, தமது பொதுவான இடத்தை நெருப்புக் குளத்தில் ஏற்கிறது (திருவெளி 20:14). இதன் காரணமாகவே பழைய ஏற்பாட்டு நரகத்தின் உருவகங்கள் தெளிவற்றவையாகவும், தங்களது உறுதியான பண்புகளை அடையாமலும் இருந்தாலும், முடிவில்லாத தண்டனையை விவரிக்க இயேசு அவற்றை உபயோகிக்கின்றார். ஏனெனில், அவை சாதாரண உருவங்களைவிட மேம்பட்டவை. அவரில்லாவிடின் உலகம் எவ்வாறிருக்கும் என்பதன் உண்மை வடிவம் அதுவே.

II. பழைய ஏற்பாடு:

1. அடிப்படை உருவமைப்புகள்:

அ. பாதாளம், இறந்தோரின் உறைவிடம். பண்டைய இஸ்ராயேலில் பாதாளமானது (செயோல்) "வாழ்வோர் அனைவரும் கூடுமிடமாகும்" (யோபு 30:23). மற்ற மக்களைப்போன்று, இஸ்ராயேலானது இறந்தோரின் மறுவாழ்வை மதிப்பும் மகிழ்ச்சியுமில்லாத வாழ்வின் நிழலாகக் கற்பனைசெய்கிறது. செயோல் இந்த நிழல்கள் ஒன்று சேர்க்கப்படும் ஓர் அமைப்பாகும். ஆழமான, தெளிவின்மை ஆட்சி செய்கின்ற (சங் 88:7.13), வெளிச்சமே இருண்ட இரவைப் பிரதிபலிக்கின்ற (யோபு 10:21-22), கீழான பாதாளத்திற்கு அப்பாற்பட்ட (யோபு 26:5; 38:16-

17), மண்ணுலகின் ஆழமான பகுதிகளில் (உப 32:22) உள்ள கல்லறை போன்ற ஒரு பொந்து, குழி, பள்ளம் என அது காட்டப் படுகிறது (சங் 30:10; எசே 28:8). வாழ்வோர் அனைவரும் அங்கே செல்கின்றனர் (எசா 38:18; எசே 31:14). அங்கிருந்து அவர்கள் என்றுமே எழ மாட்டார்கள் (சங் 88:10; யோபு 7:9). இனி அவர்கள் இறைவனைப் புகழவோ (சங் 6:6), அவரது நீதியின் மேலும் (88:11-13), பிரமாணிக்கத்தின் மேலும் (30:10; எசா 38:18) நம்பிக்கை வைக்கவோ முடியாது. அது முழுமையான கைவிடப்பட்ட நிலையாகும் (சங் 88:6).

ஆ. உலகின்மீது தளர்த்தி விடப்பட்ட நரக வல்லமைகள்:

நிறைந்த வாழ்நாள்களைக் கடந்து மகிழ்ச்சியான முதிர்ந்த வயதின் முடிவில் "தங்களுடைய தந்தையரை மீண்டும் சந்திப்பதற்கென" (ஆதி 25:8) பாதாளத்திற்குச் செல்வதானது மனித இனத்தின் பொதுவான பங்காகும் (எசா 14:9-15; யோபு 3:11-21). எவரும், இதனைப்பற்றிய குறை கூற மடியாது. ஆனால் பெரும்பாலும் பாதாளம் இந்த நேரத்திற்கெனக் காத்திருப்பதில்லை. திருப்தியடையாத பயங்கர மிருகத்தைப் போன்று (பழ 27:20; 30:16) தனது இரைக்கென அது காத்திருந்து, முழுவலிமையுடன் அதனை எடுத்துச்செல்கிறது (சங் 54:16). "என் வாழ்நாள்களில் நடுவில் பாதாளத்தில் வாயில்கள் திறக்கப்படுவதை" எசேக்கியா காண்கிறார் (எசா 38:10). "வாழ்வோரின் உலகில்" (38:11) பாதாளச் சக்திகளின் ஆக்ரமிப்பானது அவலமாகவும் இடராகவும் இருக்கிறது (சங் 18:6; 88:4-5).

2. பாவிகளின் நரகம்: இந்த இடறல் வெளிப்பாட்டின் பகுதிகளில் ஒன்றாகும். சாவினுடைய அவலமான தன்மையானது உலகின் ஒழுங்கின்மையைக் காட்டுகிறது. இந்த ஒழுங்கின்மையானது பாவத்தின் பலன் என்ற கண்டுபிடிப்பானது, இஸ்ராயேலின் சமயச் சிந்தனையினுடைய கூரிய ஆயுதங்களில் ஒன்றாகும். இந்த உள்ளுணர்வானது மெய்ப்பிக்கப்படுவதற்கேற்ப நரகத்தின் வடிவங்கள் கொடிய தன்மையை ஏற்கின்றன. கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரை விழுங்க அது தனது வாயைப்பிளக்கிறது (எண் 16:32-33). "சீயோனின் மகிமை, அதனுடைய இரைச்சலிடும் மக்கள் திரள், அதனுடைய கூக்குரல்கள், மகிழ்ச்சி" (எசா 5:14) ஆகியவற்றை விழுங்குவதற்கெனத் தனது ஆற்றல் அனைத்தையும் அஃது இயக்குகிறது. அஃது இறைப்பற்றற்ற மனிதரை அச்சத்தில் மறையச் செய்கிறது (சங் 73:19).

இந்த அச்சமூட்டும் முடிவைப்பற்றி இஸ்ராயேலானது இரண்டு சிறப்பான வெளிப்படுத்தும் உருவங்களை அறிந்துள்ளது. சோதோம் கொமோராவை எரித்தலும் (ஆதி 19:23; ஆமோ 4:11; சங் 11:6), அச்சத்தின் இடமாக உருவாவதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இன்பத்தின் இடமாகிய கேகன்னா பள்ளத்தாக்கிலுள்ள தோபேத்தின் அழிவுமாகும். அங்கே "அவர்கள் நமக்கெதிராய்க் கிளர்ச்சி செய்தவர்களின் பிணங்களைக் காண்பர்; அவர்களை அரிக்கும் புழு சாவதில்லை. அவர்களை எரிக்கும் நெருப்பு அணைந்து போவதில்லை" (எசா 66:24).

நெருப்பிலான மரணமும் அழிவின் முடிவில்லாத் தொடர்ச்சியும் நரகம் பற்றிய நற்செய்தியின் உருவகங்களாகும். இஃது இனியும் இதுவரை கூறப்பட்டு வந்தது போன்ற பாதாளமாக இருந்த சாதாரண நரகமன்று; மாறாக, விண்ணிலிருந்து விழுந்ததாகக் கூறப்படுகின்ற, "யாவேயிடமிருந்து வந்த" நரகமாகும் (ஆதி 19:24). "யாவேயின்மூச்சினாலும்" (எசா 30:33), அவரது, "கனல் கக்கும் சினத்தாலும்" (30:27) தூண்டப்படுவதன் காரணமாக, சேயோலின் சாயலாகவும், சோதோமின் நினைவாகவும் உள்ள "அடித்தளமற்ற பாதாளத்தையும் நெருப்பு மழையையும்" அஃது ஒன்றாகத் கொண்டு வருகிறது (சங் 140:11).

இறைவனுக்குப் பிரமாணிக்கமாய்

இருப்பதற்கென, பாவிகளால் துன்பத்தையும் சில நேரங்களில் மரணத்தையும் ஏற்கவேண்டியுள்ள வேளையில், பாவிகளுக்கு வாக்களிக்கப்பட்ட நரகமானது நீதிமான்களுக்குரியதாக இருக்காது. இறைப்பற்றற்றோர், தூயவரும் நாத்திகரும் இணைந்து உறங்குகின்ற பாரம்பரியச் சேயோலின், தூசியின் நாட்டினுடைய "முடிவில்லா அச்சத்திற்கு" உறங்கியெழும்போது நீதி மான்கள் "முடிவில்லா வாழ்விற்கு" எழுவது சரியே (தானி 2:12). ஆண்டவர் நீதிமான்களுக்கு அவர்களுக்குரிய வெகுமதியை அளிக்கும்போது "தனது பகைவர்களைத் தண்டிப்பதற்கெனப் படைப்பிற்குப் படைக்கலனளிக்கிறார்" (ஞான 5:15-17). நரகமானது இனியும் மண்ணுலகின் கீழான பகுதிகளில் மட்டும் இடம் சுட்டப்படவில்லை. அது "மூடர்களை எதிர்த்துப் போரிட விடுவிக்கப்பட்ட உலகாகும்" (5:20). இந்த உருவகங்களை நற்செய்தி நூல்கள் எடுத்துக் கையாளுகின்றன. தீ நாக்குகளால் துன்புறுத்தப்படுகின்ற இறந்தோரின் உறைவிடத்தில், ஆபிரகாமின் மடியில் இலாசரைச் செல்வந்தன் காண்கிறான்; ஆனால், அவர்களிருவருக்குமிடையே தாண்டி வரமுடியாத பாதாளம் ஒன்று உண்டு (லூக் 16:23-26). நெருப்பு மற்றும் பாதாளம், விண்ணகத்தின் சினம் மற்றும் மண்ணகம் பிளத்தல், இறைவனின் சாபம் மற்றும் படைப்பின் எதிர்ப்பு ஆகிய இவையே நரகம்.

### III. புதிய ஏற்பாடு:

#### 1. நரகம் பற்றி இயேசுவின் போதனை:

தனது காலத்தவரிடையே நிலவிய நரகம் பற்றிய விவரிப்பை விட, வாழ்வின் இழப்பு மற்றும் தன்னிடமிருந்து பிரிந்துபோதல் ஆகியவற்றிற்கு இயேசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். கொடிய செல்வனின் உவமையில் நரகம் பற்றிய ஆண்டவரின் முடிவான கூற்றைக் காண்பது அபாயம் மிக்கதாயின், இப்பின்னணி பற்றிக் கொடூரமான இரக்கமற்ற உருவகங்களை இயேசு உபயோகிக்கும்போது அவற்றை இயேசு கவனமுடன், பயன்படுத்தியிருக்க வேண்டும்: "எரியும் சூளையில் அழுகையும் அங்கலாய்ப்பும்" (மத் 13:42); "அவர்களைத் தின்னும் புழு சாகாது; நெருப்பு அவியாது" (மாற் 9:43-48; காண்க. மத் 5:22); "அங்கே இறைவன் ஆன்மாவையும் உடலையும் அழிக்க வல்லவர்" (மத் 10:28) முதலியன இதற்குச் சான்று.

நரகத்தில் தள்ளக்கூடிய வல்லமையுடைய மனிதரால் உச்சரிக்கப்பட்டதே இந்த உறுதிப்பாடுகளுக்கு வலுவளிக்கிறது. இயேசு நரகம் ஓர் உண்மை என்று மட்டும் பேசவில்லை. "அரசில் இடறலாய் உள்ள நெறிகெட்டவர்கள் அனைவரையும் தீச்சூளையில் தள்ள வான தூதரைத் தான் அனுப்பவிருப்பதாக" அவர் அறிவிக்கிறார் (மத் 13:41-42). "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு அகன்று முடிவில்லா நெருப்புக்குள் செல்லுங்கள்" என அவர் சாபமிடுவார் (மத் 25:41). "உங்களை அறியேன்" (மத் 25:12); "அவனை வெளி இருளில் தள்ளுங்கள்" (25:30) என்று அறிவிப்பவரும் ஆண்டவரே.

#### 2. இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார்:

கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றதானது விசுவாசத்தின் ஒரு பகுதியாகும். அஃது உண்மையில் புதிய ஏற்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைச் செய்தியாகும். சில பகுதிகளின் மதிப்பைத் தீர்மானிப்பதும், "நோவா பேழையைச் செய்து கொண்டிருந்த காலத்தில் கீழ்ப்படிய மறுத்தவர்களுக்கும், சிறையிலிருந்த ஆன்மாக்களுக்குமான அவரது போதனை" என்ன என்பதைக் கண்டுபிடிப்பது (1 பேதுரு 3:19-20) கடினமானதாயின், பாதாளத்திற்கு இயேசு சென்றதானது, மனிதன் என்ற நிலையில் அவரது மரணம் மற்றும் அதன் மீதான வெற்றி ஆகியவற்றின் உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பாதாளத்தின் அச்சுறுத்தல்களினின்று, (அதாவது சேயோலினின்று) இறைவன் அவரை

மீட்டாரெனில் (அ.ப. 2:24), அஃது அவரை அதனில் மூழ்கடித்த பின்னரே. ஆனால், அதிலேயே அவரை என்றென்றைக்கும் விட்டுவிட வில்லை (2:31). கிறிஸ்து விண்ணேற்பின் மறைபொருளில் எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டாரெனில், இதயத்தின் கீழ்ப்பரப்புகளுக்கும் அவர் இறங்கிச் சென்றதே அதற்குக் காரணமாகும். எல்லாவற்றையும் முழுமையாக நிறைவேற்றவும், உலகின் ஆண்டவராக ஆட்சி புரியவும் இத்தகைய தீக்குறியான இறக்கத்தை அவர் செயல்படுத்த வேண்டியிருந்தது (எபி 4:9:10). இறந்தோரிடமிருந்து உயிர்த்த பின்னர் விண்ணகத்தில் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பதைக் கிறிஸ்தவ விசுவாசம் அறிக்கையிடுகிறது (உரோ 10:6-10).

### 3. நரகத்தின் வாயில் உடைக்கப்படுதல்:

தனது மரணத்தின்மூலம் இயேசு இறுதிப் பகைவனாகிய சாவின் மீது வெற்றி கொள்கிறார் (1 கொரி 15:26). நரகத்தின் வாயில்களை அவர் உடைத்துத் திறந்தார். இறைவனின் பார்வையில் மரணமும் பாதாளமும் எப்போதும் "நிர்வாணமாகவே" இருந்தன (ஆமோ 9:2; யோபு 26:6). ஆனால், இப்போது தாங்கள் கொண்டுள்ள இறந்தோரைத் திருப்பித் தருமாறு அவை கட்டாயப்படுத்தப்படுகின்றன (திருவெளி 20:13; மத் 27:52-53). ஆண்டவரது மரணம்வரை நரகமானது, அனைத்து ஊனுடலும் கூடுமிடமாகவும், இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மனித இனத்தினுடைய முடிவான சந்திக்குமிடமாகவும் இருந்தது. "துஞ்சினோரின் முதற்கனியும்" (1 கொரி 15:20-23), "இறந்தோரிடையிலிருந்து முதற் பேரானவருமான கிறிஸ்துவுக்குமுன், அதனின்று யாரும் வெளிவர இயலாததாயிருந்தது" (திருவெளி 1:5). ஆதாமில் மரணத்திற்கும் இறைவனிடமிருந்து பிரிவிற்கும் தீர்வையிடப்பட்ட மனித இனத்திற்கு மீட்பு என்பது நரகத்தின் வாயில்களைத் திறப்பதும், முடிவில்லா வாழ்வின் கொடையைப் பெறுவதுமாகும். திருச்சபையே இவ்வெற்றியின் கனியும் கருவியுமாகும் (மத் 16:18).

ஆனால், கிறிஸ்து அவரது வருகைக்கு முன்னரே வாக்களிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்டார். இவ்வாக்குறுதியை ஏற்றுக் கொண்ட அளவில் பழைய ஏற்பாட்டு மனிதன், பாதாளமானது உறுதிப்படுத்தப்பட்ட ஒளியால் ஒளிர்விக்கப்படுவதைக் காண்கிறான். ஆனால், அதற்கு முரண்பட்ட நிலையில் அதனைப் புறக்கணிக்கின்ற அளவில் பாதாளம் நரகமாக உருவாகிறது. சாத்தானின் வல்லமையானது அச்சுறுத்தலில் நிலவுகின்ற பாதாளத்தில் அவன் மூழ்குகிறான். இறுதியாக இயேசு கிறிஸ்து தோன்றும்போது, "அவரது நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்கள். அவருடைய திருமுன்னிருந்து அகற்றப்பட்டு, முடிவில்லாத அழிவைத் தண்டனையாகப் பெறுவர்' (2 தெச 1:8:9). "நெருப்புக் கடலில்" சாவு, பாதாளம் ஆகியவற்றுடன் அவர்கள் மீண்டும் ஒன்று சேர்வர் (திருவெளி 20:14-15).

## நரந்தம், இலாமிச்சை நறுமணத் தைலம் (NARD)

இதைக்குறிக்கும் மூலச்சொல் சமஸ்கிருதம், பாரசீக மொழிகளிலிருந்து வருவதாகத் தெரிகிறது. இஃது இமாலயப்பகுதியில் காணப்படும் இந்திய நறுமணமூலிகையின் வேர் மற்றும் மயிரிழை கொண்ட தண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட விலையுயர்ந்த நறுமணத் தைலமாகும்.

பழைய ஏற்பாட்டில் பேரின்பப் பாடலில் அரச மஞ்சத்திற்கு நறுமணம் பரப்பும் பொருளாக விவரிக்கப்படுகிறது (உ.ச 1:12). மேலும் காதலியை அடையாளமாக விவரிக்கப் பயன்படும் மருதோன்றி, மஞ்சள், கன்னல், இலவங்கம், வெள்ளைப் போளம், அகில்முதலிய தலை சிறந்த நறுமணப்பொருள்களோடு சேர்த்து நரந்தம் குறிக்கப்படுகிறது (உ.ச. 4:13-14).

இயேசு, தொழுநோயாளர் சீமோன் வீட்டிலும் (மாற் 14:3), இலாசரின் வீட்டிலும் (யோவா 12:3)

உணவருந்தியபோது, நரந்தம் தைலத்தால் தலையிலும் காலடியிலும் பூசப்பட்டார். இவ்விரு இடங்களிலும் புதிய தமிழ் மொழிபெயர்ப்பில் இச்சொல் இலாமிச்சை நறுமணத் தைலம் என்றுள்ளது. இத்தைலம் கொண்ட ஒரு சிறு படிகச்சிமிழின் விலை 300 தெனாரியு என்று குறிப்பிடப்படுகிறது. இந்த விலை ஓர் உழைப்பாளியின் ஓராண்டுச் சம்பளத்திற்குச் சமமாகும். மத் 26:6-13; லூக் 7:36-50 என்ற பகுதிகள் வெறுமனே விலையுர்ந்த நறுமணத் தைலம் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றன.

**நரி, குள்ளநரி (FOX, JACKAL)**

இரண்டு சொற்களும் அதிக வேறுபாடு இல்லாமல் மாறிமாறிப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

நரி மாமிசம் உண்ணும்; குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் விலங்கு; ஓநாயைவிடச் சிறியது; நீண்ட, மயிர்நிறைந்த வாலுடையது; வேகமாக ஓடக்கூடியது; சூழ்ச்சி, கபடம், தந்திரம், ஏமாற்றுதல் ஆகிய குணங்களை உடையது; தனித்து வாழ்வது. இரவில் நடமாடும் இவ்விலங்கு, சிறுபூச்சிகள், பறவைகள், எலிகள், பழங்களை உண்ணும். பதுங்கக் குழி தோண்டும் (மத் 8:20 இணை; லூக் 9:58). நரி வஞ்சகமிக்கது. அதனால்தான் ஏரோது அந்திப்பாவை நரி என்று இயேசு குறிப்பிடுகிறார் (லூக் 13:32). ஆனால் யூத வழக்கில் நரி பயனற்றதையும், சிறுமையானதையும் உணர்த்திற்று (காண். நெகே 4:3; எசே 13:4). போலி இறைவாக்கினர்களையும் குறிக்க நரி என்ற சொல் பொருத்தமாகப் பயன்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள், இஸ்ராயேலரின் துன்பங்களுக்கிடையில், தங்களது ஆதாயத்தையே தேடினர் (எசே 13:4).

குள்ள நரியும் மாமிசம் உண்ணும் பாலூட்டி விலங்காகும். ஓநாயை விடச் சிறியது. ஆனால், அதைவிடக் குறுகிய வாலைக்கொண்டது. குறுகிய காதுகளையுடையது; அதன் மூக்கு ஓநாயினுடையதைவிடக் கூர்மையானது; நரியினுடையதைவிட அகலமானது. குள்ள நரிகள் கூட்டமாக, இரவிலும் நடமாடும். இவை சிறு விலங்குகள், பறவைகள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உண்ணும். நரியைப்போல் அல்லாமல், செத்த உடல்களையும் கழிவுப்பொருட்களையும் உண்ணும். மற்றப்படி நரிகளுக்கும் குள்ள நரிக்கும் பழக்க வழக்கங்களில் அதிக வேறுபாடு இல்லை. ஆகையால் இரண்டுக்கும் குழப்பம் ஏற்படுவதுண்டு. குள்ள நரிகள் கூட்டமாக வாழ்வதால் உயர்தொனியில் ஊளையிட்டு ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளும் (மீக் 1:8; காண். எசா 13:21-22). இவை கோழிப்பண்ணைக்கும், திராட்சைத் தோட்டத்திற்கும், காய்கறித் தோட்டத்திற்கும் அதிக அழிவை ஏற்படுத்தக்கூடியவை.

விவிலியத்தில் குள்ள நரி தன் குட்டிகளுக்குப் பாலூட்டுவது பற்றிய குறிப்பையும் (புல 4:3), எருசலேமுக்கு வெளியிலுள்ள நரிநீரூற்று பற்றிய குறிப்பையும் (நெகே 2:13) தவிர மற்றக் குறிப்புகள் எல்லாம் பாழடைந்த இடங்களிலும் பாலைவனப் பகுதிகளிலும் அலைந்து திரிவது பற்றியவையாகும் (யோபு 30:29; சங் 44:19; எசா 35:7; எரே 9:11; 10:22; 14:6; 49:33; 51:37). பாபிலோன்(எசா 13;22; எரே 51:37), ஏதோம் (எசா 34:13), ஆட்சோர் (எரே 49:33), யூதாவின் நகர்கள் (எரே 10:22), எருசலேம் (9:11), சீயோன்மலை (புல 5:18), ஏசா (மலா 1:3) ஆகியவை குள்ளநரிகள் நடமாடும் இடங்களாக மாறிவிடும் என்று குறிக்கப்படுகின்றன. சங் 63:10-இல் சங்கீத ஆசிரியர் தன் எதிரிகள் குள்ள நரிகளுக்கு இரையாவர் என்று கூறுகிறார். ஆனால் அதே துக்ககரமான முடிவு இஸ்ராயேலுக்கு நிகழும் என்றும் சங் 44:19-இல் கூறுகிறார். மெசியாவின் காலத்தில் குள்ள நரிகள் நடமாடும் இடமெல்லாம் தாவரங்களால் செழிப்புற்று விளங்கும் (எசா 35:7). பாழ்வெளியில் கிடைக்கும் மிகுந்த தண்ணீருக்காகக் குள்ள நரியும், காட்டு விலங்குகளும் இறைவனைப் புகழும், மாட்சிமைப்படுத்தும் (எசா 43:20).

**நரி நீரூற்று (JACKAL'S WELL)**

நெகேமியா கடந்து சென்ற பாதையில் இருந்த ஒரு கிணறு அல்லது நீரூற்று (நெகே 2:13). இஃது எருசலேமுக்கு வெளியில் இன்னோம் பள்ளத்தாக்கில், பள்ளத்தாக்கு வாயிலுக்கும் குப்போமேட்டு வாயிலுக்கும் இடையில் அமைந்திருந்தது. சிலர் இதை ஏன்-ரோகேல் என்று அடையாளம் காட்டுவர்.

**நரைமயிர் (GRAY)**

இஃது ஓர் எபிரேய வினைச்சொல்லின் மொழிபெயர்ப்பாகும். வினைச்சொல்லை விட, பெயர்ச்சொல்லையே அதிகமாகக் குறிக்கும். இது நரை முடி கொண்ட முதிர்ந்த வயதைக்குறிக்கும் (ஆதி 42:38; 44:29.31; உப 32:25; 1 சாமு 12:2; யோபு 15:10; சங் 71:18; பழ 20:29; எசா 46:4; ஓசே 7:9).

**நர்க்கிசு (NARCISSUS)**

ஒரு குடும்பத்தின் பெயரே இது. இக்குடும்பத்தில் அடிமைகளும் இருந்தனர். சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர். பேரரசர் கிளாதியுவால் (கி.பி. 41-54) உரிமை தரப்பட்ட ஒருவர் இப்பெயருடைய இக்குடும்பத்தலைவர். பவுல் தான் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் இறுதியில் இக்குடும்பத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார் (உரோ 16:11).

**நல்ல சமாரியன் (GOOD SAMRIYAN)**

"என் அயலான் யார்"? என்ற கேள்விக்கு விடையாக இயேசு இந்த உவமையைக் கூறுகிறார் (லூக் 10:30-37). எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும்பாதை திருடர்கள் நிறைந்த பயங்கரமான பாதை. அங்கே திருடர்களால் தாக்கப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தான் ஒரு யூதன். அவ்வழியே சென்ற யூதச்சட்டத்தின் இரு பிரதிநிதிகள், இறந்தவன்போல் கிடந்தவனின் உடலைத் தொடுவதனால் தீட்டுப்பட்டுவிடுமோ என்றஞ்சி, ஒருவரும் அவனுக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. அசீரியர்கள் இஸ்ராயேலின் வட பகுதியைக் கைப்பற்றியபோது, அங்குக் குடியேறிய அசீரியர்களும் யூதர்களும் கலந்த கலப்பின மக்களே சமாரியர்கள். ஆகவே இவர்களை யூதர்கள் வெறுத்தனர்; ஒதுக்கிவைத்தனர். இரு குழுவினருக்குமிடையே பரம்பரை பரம்பரையாகப் பகைமை உணர்ச்சி இருந்து வந்தது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல், அவ்வழியே சென்ற ஒரு சமாரியன், குற்றுயிராய்க் கிடந்த யூதனுக்கு உதவி செய்கிறான். இவ்வாறு திருடர்களால் தாக்கப்பட்டவனுக்கு அயலானாக, சமாரியன் காட்டப்படுகிறான். பிறரன்பு-நாடு, இனம், குலம், மதம், போன்ற பாகுபாடுகளைக் கடந்தது என்று காட்டுகிறார் இயேசு.

**நல்ல சிவப்பு (CRIMSON, SCARLET)**

கருவாலி மரத்தில் காணப்படும் ஒருவகைப் பூச்சி இனத்தின் பெண்பூச்சியின் காய்ந்து போன உடலிலிருந்து தயாரிக்கப்படும் செவ்வண்ணப் பொருளாகும். இது துணியாலோ, தோலாலோ செய்த ஆடைகளுக்குச் சாயம் பூசப்பயன்பட்டது (ஆதி 38:28; யோசு 2:18; ' நாள் 2:7; உ.ச. 4:3; நாகூ 2:3). இச்சாயம் பூசப்பட்ட ஆடைகள் அழகு சாதனமாகப் பயன்பட்டன (2 சாமு 1:24; எரே4:30); செல்வந்தர்களாலும் (பழ 31:21; புல 4:5; திருவெளி 18:16), அரச குடும்பத்தாராலும் (உ.ச. 7:5; மத் 27:28; திருவெளி 17:4). சிறப்பாக அணியப்பட்டன. திருக்கூடாரத்தில் பயன்பட்ட துணிகளிலும் சாலமோன் கட்டிய ஆலயத்தின் திரையிலும் இந்நிறம் சிறப்பிடம் பெற்றது (யாத் 25:4; 26:1. 31:36; 2 நாள் 3:14). தொழுநோயாளியின் தீட்டகற்றும் சடங்கிலும் (லேவி 14:4), இறந்த உடலைத் தொடுவதால் ஏற்படும் தீட்டகற்றும் சடங்கிலும் (எண் 19:6), இந்நிறநூல் இடம் பெற்றது. இச்சிவப்பு நிறத்திலிருந்து பனி அல்லது கம்பளத்தின் வெண்மை நிறத்திற்கு மாறுவது பாவமன்னிப்பை உருவகமாக உணர்த்திற்று (எசா 1:18).

உரோமையர் தாங்கள் வென்ற மக்களிடமிருந்து கோரிய கப்பத்தில் இப்பொருளும் அடங்கும். இஃது ஒரு வியாபாரப் பொருளாகவும் (திருவெளி 18:11-12), மருந்துப் பொருளாகவும் பயன்பட்டது. இந்நிறம் பல்வேறு தரமுடையது. நிறத்தைக் கெட்டியாக்கப் படிகாரம் போன்ற பொருள்கள் உதவின.

**நல்லது, நல்லவர் (GOOD)**

இச்சொல் பலபொருளில் விவிலியத்தில் பயன்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, "நல்ல பரந்தநாடு" (யாத் 3:8), "அவன் நல்லவன்" (2 சாமு 18;27), "கடவுள் ஒளியை நல்லது என்று கண்டார்" (ஆதி 1:4), "நல்ல வாக்குறுதி"(யோசு 23:14) போன்ற இடங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நல்ல என்ற இக்கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்ட செயல்முறையான ஒழுக்க அல்லது சமய மரபமைதிக்கேற்ப ஒரு நபருடைய அல்லது பொருளுடைய அழகையும், தன்மையையும் உணர்த்த வல்லது. ரபேக்காவும் (ஆதி 24:12), பாரசீக அரசிகளும் (எஸ்த 1:11; 2:2) எழில் மிக்கவர்களாக இருந்தனர். மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று (ஆதி 2:18). நல்ல மனைவியை அடைகிறவன் நல்வாழ்வு பெறுவான் (பழ 18:22). தேன் சாப்பிடுவது நல்லது (பழ 24:13). நல்ல அத்திப்பழம் (நீதி 9:11) அல்லது தேன் இனிமையானது. தேன் கிடைத்தால் அளவோடு சாப்பிடு; அளவு மீறினால் தெகிட்டிவிடும் (பழ 25:16). நீண்ட வாழ்வே நல்ல வயதாகும் (நீதி 8:32). செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல் (திருவுரை 9:4). ஆனால் பிறவாதவர்களின் நிலைமையே சிறந்தது (4:3; காண். 6:3). மாடிவீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட, குடிசையிலோ, பாலை நிலத்திலோ தனியே வாழ்வதே மேல் (பழ 21:9.19; 25:24).

இந்த மரபமைதிகள் ஒழுக்க அல்லது சமயச்சிந்தனையில்லாமல், அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சியானவை அல்லது கடினமானவைகளை அடிப்படையாகச் கொண்டுள்ளன. ஆனால், இந்த அனுபவங்கள் ஒழுக்கக் கூறுகளைக் கொண்டிருக்கலாம். நல்லவற்றிற்கு ஒழுக்கப் பண்பளித்து, இக்கூறுகளை வெளிக்கொணர்வதே மேற்காசிய மற்றும் இஸ்ராயேல் ஞானநூல்களின் முக்கிய அக்கறையாகும். ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம் நற்போதனை அளிக்கிறது (பழ 4:2). அதை அடைவது வெள்ளியையும், பொன்னையும் அடைவதை விட மேலானது (3:14; 8:19; 16:16). மூடர்கள் புகழ்ந்துரைப்பதைக் கேட்பதினும், ஞானி இடித்துரைப்பதைக் கேட்பது நன்று (திருவுரை 7:5). வலிமை உடையவனைவிடப் பொறுமையுடையவனே மேலானவன்; ஊரை அடக்குகிற வனைவிடத் தன்னை அடக்குகிறவனே சிறந்தவன் (பழ 16:32). வலிமையை விட ஞானமே சிறந்தது (திருவுரை 9:16). முறை கேடாகப் பேசும் செல்வனைவிட நேர்மையாக நடக்கும் ஏழையே மேலானவன் (19:1). பதற்றத்துடன் நடப்பவன் இடறிவிழுவான் (19:2); பற்றாக்குறையில் இருப்பான் (21:5). ஞானத்தைப் பெறுதலே உண்மையான தன்னலமாகும்; மெய்யறிவைப் பேணிக்காப்பவன் நன்மை அடைவான் (19:8). இஸ்ராயேலர்களுக்கு இந்த அறிவு மோசே மற்றும் இறைவாக்கினர் வழியாக யாவே அளித்த சட்டத்தில் அடங்கியிருக்கிறது (நெகே 9:13; மீக் 6:8; சங் 119:39). அதை இஸ்ராயேலரில் வயது வந்தவர் அனைவரும் கற்று நன்மை தீமையை வேறுபடுத்த அறிந்திருக்க வேண்டும் (உப 1:39; எசா 7:15). யாவேயின் கட்டளைகள் நல்லவை. ஏனெனில், அவர் நல்லவர் (சங் 136:1)! ஏன், உண்மையில் அவர் மட்டுமே நல்லவர் (மத் 19:17; மாற் 10:18; லூக் 18:19). தமது கட்டளைகளை வெளிப்படுத்துவதின் வழியாக அவர் வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் மக்கள்முன் வைத்துள்ளார் (உப 30:15).

இறைவன் உன்னத விதத்தில் நல்லவர். இந்த

நன்மை, படைப்பில் வெளிப்படுவது மட்டுமன்று. இது பேரன்பின் நன்மையாகும். நன்றிக்கும் புகழுக்கும் உரியது (சங் 106:1; 107:1; எரே 33:11). இறைவன் தம் நன்மையைப் படைப்பில் காட்டுகிறார் (ஆதி 1). அதைவிட மேலாக உடன் படிக்கைக்குக் காட்டும் பிரமாணிக்கத்தில் அதைக் காட்டுகிறார். அவர் அளித்த எகிப்திலிருந்தான மீட்பில், பாலைவனத்தில் காட்டிய அக்கறையில் (யாத் 18:9), நாட்டையும் (யோசு 24:20), போதனைகளையும் சட்டத்தையும் (எரே 6:16), ஆலயத்தையும் (எஸ் 3:11), மன்னிப்பையும் (ஓசே 3:5)கொடையாக அளித்ததில், ஒடுக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளித்ததில் (சங் 68:10), துன்ப காலத்தில் பலம் அளித்ததில் (அப 1:7), நாடு மீண்டும் அமைக்கப்பெறுதலையும் புதிய உடன்படிக்கையையும் வாக்குறுதி அளித்து (செக் 8:15; எரே 32:40), அதை இப்போது இயேசுவில் மகிமையான விதத்தில் நிறைவேற்றியதிலும் (தீத் 3:4), நற்செய்தியின் மீட்கும் சொற்களிலும் (எபி 6:5), அவை தரும் புதிய வாழ்விலும் (பிலி 1:6) இறைவன் தம் நன்மைத் தன்மையைக் காட்டுகிறார். இறைவனது பெயர் நல்லது (சங் 54:6). அவ்வாறே அவரது ஆவியும் அதன் பலன்களும் நல்லவை. அவர் நல்லவர் என்று லேவியரும் மக்கள் கூட்டமும் அறிக்கையிட வேண்டும் (1 நாள் 16:34). அவரது நன்மைத்தன்மை அவருடைய பேரன்பிலும், எளியோருக்குக் காட்டும் பரிவிலும் முக்கியமாக வெளிப்படுகிறது. அவரைத் தேடுவதும், நன்மையை நாடுவதும், தீமையை வெறுப்பதும் (ஆமோ 5:6. 14-15), நீதியைத் தேடுவது, ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்தல், திக்கற்றோர்க்கு நீதி வழங்குதல் கைம்பெண்ணுக்காக வழக்காடுதல் ஆகியவற்றுக்குச் சமமாகும் (எசா 1:17). இத்தகைய மனநிலைக்கு வெகுமதியாக இறைவன் தமது மக்களுக்கு நல்லநாடு, வெற்றிகள் மற்ற நலன்கள் ஆகியவற்றையும், தனிநபரான இஸ்ராயேலருக்கு உடல் நலம், செல்வச்செழிப்பு, நீடிய வாழ்வு ஆகியவற்றையும் அளிக்கறார். ஆனால் இவை யாவும் இறைவனோடு ஒப்பிடும்போது ஒன்றுமின்மையாகும் என்றும், அவரைத் தவிர தனக்கு வேறு நன்மையில்லை என்றும், மிகப் பெரிய இடுக்கண்கள் துன்பங்களில் கூட அவர் அருகில் இருப்பதுவே தனக்கு நலம் என்றும் பக்தியுள்ளவர் அனுபவப்பூர்வமாக உணர்வார்.

இறைவனுடைய இந்த நன்மைத்தன்மை உண்மையான இஸ்ராயேலர், தூய உள்ளத்தினர் (சங் 73:1; மீக் 2:7), அவரில் நம்பிக்கை வைத்துத் தேடுவோர் (புல 3:25) ஆகியோருக்கே கிடைக்கும். அவரது தோழமைக்குப் புறம்பே நன்மையே இல்லை (சங் 16:2). அவர் ஒருவரே நல்லவர் (மத் 19:17). இறைவனுடைய இந்த நன்மைத் தன்மைக்கு ஒருவரும் உரிமை கொண்டாட முடியாது (சங் 14:3; உரோ 7:18). ஆனால் இத்தோழமை கிறிஸ்துவின் பணியால் நமக்குக் கிடைக்கக் கூடியதாகிறது (எபி 9:11; 11:1).

மக்கள் ஒருவர்க்கொருவர் நன்மை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் (லூக் 6:35). ஒருவனை ஏற்புடையவனாக்க ஒழுக்க நன்மைத் தன்மையை அடைதலோ, கொண்டிருத்தலோ முடியாதெனினும், (உரோ 7:13), மக்கள் ஒருவர்க்கொருவர் அன்றாட வாழ்வில் நன்மை செய்கின்றனர் (லூக் 11:13). இந்த நன்மைத்தன்மையை நெறிகோணச் செய்வது தீர்ப்பைக் கொண்டு வருகிறது (எச 5:20). நன்மை தீமையைத் தேர்ந்து தெளியவும் (உப 34:15; எபி 5:14), நன்மையை மட்டும் தேர்ந்து கொள்ளவும் (சங் 5:14; 34:15; உரோ 12:9; 1 தெச 5:15) மக்களுக்கு விடப்படும் அழைப்பு விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. இவ்வாறு தேர்ந்து கொள்ளுதல் குருட்டுத் தன்மையுடையது அன்று. ஏனெனில், நல்ல கட்டளைகள், போதனைகள் வழியாக (சங் 119:39.68; பழ 4:2; உரோ 7:2) இறைவனே வழிகாட்டுகிறார். நீதியை நிலைநாட்டு (ஆமோ 5:14:15); பொய்பேசாதே (சங் 52:3); அமைதியைத் தேடு (சங் 34:14); நேர்மையானவனுக்கு நீதி கிடைப்பதைத் தடுக்காதே (பழ 18:5); எளியோரைப் பாதுகாத்துவா

(எசா 1:17). நல்லது எது? நேர்மையைக் கடைப்பிடித்தலும், இரக்கம் காட்டுவதும், இறைவன் முன் தாழ்ச்சியோடு நடந்து கொள்ளுவதும்தானே நல்லது! (மீக் 6:8).

இத்தகைய வாழ்க்கை முறையின் எதிர் பார்க்கப்பட்ட விளைவே நற்செயல்களாகும்; கிறிஸ்தவனின் வாழ்வின் நல்ல பலன்களாகும் (மத் 7:17; யாக் 3:17). இவையே இறைவனின் தேர்ந்தெடுத்தல் மற்றும் மீட்பின் நோக்கமாகும் (எபே 2:10; கொலோ 1:10; தீத் 2:14); நற்செய்தியைக்கேட்டு விசுவாசிக்கும் நல்ல நிலத்தின் அறுவடையாகும் (மத் 13:8.23); மறைத்து வைக்க முடியாத பலன் (1 திமொ 5:25; மத் 5:16). இந்நற்செயல்கள் கிறிஸ்தவனின் கடமையாகும் (1 திமொ 6:12); கிறிஸ்தவனின் உண்மையான செல்வமும் அணிகலனும் ஆகும் (2:10; 5:10; 6:18; 2 திமொ 2:21).

**நவியோத்து (NAVIOTH** - குடியிருப்பு)

இராமாவிலே சாமுவேலின் கீழ் ஒன்றாக வாழ்ந்த இறைவாக்கினர்களின் பொதுவான வாழுமிடத்தைக் குறிப்பதே இப்பெயர் (1 சாமு 19:18-24). தாவீது, சவுலின் கோபத்திற்குத் தப்பி ஓடி ஒளிந்தது இவ்விடத்தில் தான் (1 சாமு 19:18-19). இங்கு, சவுலும் அவரது ஆட்களும் தாவீதைத் தேடிச்சென்ற போது இறைவாக்கு ஆவியில் ஆட்கொள்ளப்பட்டனர் (1 சாமு 19:20-24). இதன் பிறகு யோனத்தானைச் சந்தித்தபிறகு தாவீது ஓர் அகதிகள் குழுவின் தலைவரானார் (20:1; 22:1-2).

இப்பெயர் எதிலிருந்து தோன்றியது என்பது தெளிவாயில்லை. "வாழுமிடம்" என்பதைக் குறிக்கலாம். மேலும் இவ்விடம் 'இராமாவிலே' இருந்ததெனத் திரும்பத் திரும்பக் கூறப்படுவதால் ஒரே இடத்திற்கு இரு பெயர் கொடுக்க நினைத்திருக்க மாட்டார்கள் (1 சாமு 19:9.22-23). இறைவாக்கினர்களின் செயலும், திருவிடமும், எல்லோரும் தங்குவதற்கேற்ற வசதிகளுமைந்து இந்த இடத்திற்கு ஏற்கெனவே சவுல், சாமுவேலின் விருந்தினராக வந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது (1 அர 9:19.22-25). எலிசாவின் மேற்பார்வையில் இருந்த இறைவாக்கினரின் பள்ளிபோல இதுவும் இருந்திருக்க வேண்டும் எனும் கருத்து இருக்கிறது (2 அர 6:1-7). இதற்கு ஆதரவாக தார்கும் நவியோத்தைப் "போதனையின் வீடு" என்று கூறுகிறது.

**நள்ளிரவில் வந்த நண்பன் (FRIEND AT MID-NIGHT)**

வேண்டுதலின் உவமைகள் என்று சில நேரங்களில் அழைக்கப்படும், இயேசுவின் இரண்டு சிறிய உவமைகளில் ஒன்றாகிய இது, லூக்கா நற்செய்தியில் மட்டுமே காணப்படுகிறது (11;5-6). செபத்தின் சூழ்நிலையில் மனிதனுக்கான இறைவனின் அருளை இது விவரிக்கிறது. சீடர்களில் ஒருவர் செபிக்கக் கற்றுக் கொடுக்குமாறு இயேசுவைக் கேட்டபோது, அவர் அவர்களுக்கு ஓர் உதாரணத்தை அளித்து (கர்த்தர் கற்பித்த செபம்), இந்த உவமையைக் கூறுகிறார். மேலும் ஆகாத வேளையில், உதவிக்கான அழைப்பிற்குப் பதிலளிக்க மறுக்கின்ற நண்பர் எவரையாவது அவர்கள் கொண்டுள்ளனரா என்று தனது சீடர்களை வினவிய பின்னர், நட்பிற்காக இல்லா விடினும், சூழ்நிலையின் அவசரத்திற்காகவேனும், நண்பர் எழுந்து தேவையான அளவிற்கு இயேசுவே பதிலளிக்கின்றார். ஆயினும் இந்த அவசரமானது, கேட்பதன் வெளிப்படையான, இடைவிடாத பிடிவாதத்தினால் மட்டுமே வெளிப்படுத்தப்பட முடியும்.

உவமையை விளக்கும்போது, "ஒருவன் தன் தந்தையிடம் அப்பம் கேட்டால், அவனுக்குக் கல்லையா கொடுப்பான்?....உங்கள் தந்தை கேட்பவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்" என்று தொடர்கிறார் (லூக் 11:11,13). தயக்கமுடைய அயலாரே உதவி செய்ய முன் வரும்போது, தனது பிள்ளைகளின் வேண்டுதல்களை வரவேற்கின்ற தந்தையாகிய இறைவன், பதிலளிக்க எவ்வளவு தயாராக இருப்பார் என்பதே இதன் பொருளாகும்.

ஆயினும், மனிதருடைய செபங்களுக்கும் தேவைகளுக்கும், அவர்களது விடாமுயற்சிக்கும் பதிலளிப்பதில் அவர் கொண்டுள்ள இடர்ப்பாடுகளை மனிதர் அறிய முடியாது. கேட்பதை எப்போதும் அளிக்க இயலாவிடினும், தேவையை என்றுமே அவர் கேலி செய்ததில்லை. அவர் கலந்தாழ்த்துவதைக் கண்டு நாம் அயராது, தொடர்ந்து செபிக்கவேண்டும். அநீதியான நடுவரின் உவமையும் இதனையே குறிப்பிடுகின்றது.

**நறுமணத் தைலம் (OIN MENT)**

இஃது அபிடேக எண்ணெயாகும். விவிலிய காலத்து மேற்காசிய நாடுகளின் பழக்கவழக்கங்களின்படி நறுமணத் தைலம் பல வகைகளில் பயன்படுத்தப்பட்டது.

1. **நறுமணத்தைலத்தில் உள்ளவை:**

**அ) எண்ணெய்:** இஸ்ராயேல் நாட்டில் ஒலிவ எண்ணெய்தான் நறுமணத் தைலத்திற்கு முக்கியமான அடிப்படைப் பொருள் (உப 28:40). அதுவே தைலமாகவும் பயன்பட்டது. அண்டை நாடுகள் எள் எண்ணெய், வாதுமை எண்ணெய், விலங்குகளின் கொழுப்பு போன்ற பலவகை எண்ணெய்களை, நறுமணத் தைலம் செய்வதற்கு அடிப்படைப் பொருள்களாகப் பயன்படுத்தின.

. **ஆ) பரிமளப்பொருட்கள்:** ஒலிவ எண்ணெயுடன் பல்வேறு நறுமணப்பொருட்கள் சேர்க்கப்பட்டன. தைலம் அல்லது எண்ணெய் என்ற சொல்லுடன் வரும் பண்புச் சொற்களாகிய விலைமதிப்புள்ள (2 அர 20:13), இனிமையான (உ.ச.1:3), உயர்ந்த (ஆமோ 6:6) ஆகிய அடைமொழிகள் சேர்க்கப்படுகின்றன.

2. **தயாரிக்கும் முறை:** எகிப்தியர்கள், கிரேக்கர்கள், யூதர்கள், உரோமானியர்கள் ஆகியோர் நறுமண எண்ணெய் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை நன்கு அரைத்து, எண்ணெயில் கொதிக்க வைத்துக் கலக்கி, பின்பு வடிகட்டி, தயாரிக்கிறார்கள். ஆழியைக் கொப்பளிக்கச் செய்யும் பெகிமோத்தின் செயல் நறுமணத் தைலம் செய்தலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.(யோபு 41:23)

3. **மதிப்பு:** எசேக்கியா, எகிப்திய பார்வோன்கள் ஆகியோருடைய கருவூலங்களில் சேர்த்து வைக்கப்பட்ட பொருட்களில் நறுமணத் தைலமும் ஒன்றாய் இருந்ததே, அதன் பெரும் மதிப்பை எடுத்துக்காட்டுகிறது (2 அர 20:13). நரந்தம் என்னும் நறுமணத் தைலத்தைத்தான் மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசினாள் (யோவா 12;3.5). திருடர்கள் எகிப்தியக் கல்லறைகளில் தங்கப்பொருட்களை விட்டு விட்டு, நறுமணத் தைலப்பொருட்களைத் திருடிச்சென்றனர்.

4. **கொள்கலன்கள்:** அரசர்களை அபிடேகம் செய்யப் பயன்பட்ட தைலம் குப்பி (1 சாமு 10:1), கிண்ணம் (2 அர 9:1), கொம்பு (1 சாமு 10:1) போன்ற பாத்திரங்களில் எடுத்துச் செல்லப்பட்டது. பெத்தானியாவில் இயேசுவின் பாதங்களில் பூசப்பயன்பட்ட நறுமணத்தைலம் படிகச் சிமிழில் வைக்கப்பட்டிருந்தது (மத் 26:7). படிகச் சிமிழ்தான் நறுமணத்தைலம் ஊற்றி வைக்கச் சிறந்த கலனாகும் என்று பிளினி கூறுகிறார். அப்படிப்பட்ட படிகச்சிமிழ்களில்தான் நறுமண எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. எகிப்திலும், பாலஸ்தீனாவிலும் படிகச் சிமிழ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

5. **பயன்கள்:**

**அ) அழகு சாதனம்:** மேற்காசிய நாடுகளில் வறட்சிக்காலத்தில் தோலின் வறட்சியை நீக்க எண்ணெய் பூசிக்கொண்டார்கள் (மீக் 6:15). தலைக்கு எண்ணெய் தடவுதல் (மத் 6:17), குளித்து முடித்தவுடன் உடம்பு முழுவதும் தடவுதல் (ரூத் 3:3; 2 சாமு 12:20) வழக்கம். யூதித்து ஒலபெரினேயைச் சந்திக்கும் முன்பும் (யூதி 10:13), எஸ்தர் அகசுவேரைப் பார்க்கும் முன்பும் (எஸ்த 2:12), மனிதர்கள் மற்றவர்களைக் குறிப்பாக, எதிர்ப்பாலினரைக் கவரவும் நறுமணத்

தைலத்தைப் பயன்படுத்துவது வழக்கமாயிருந்தது (உ.ச. 1:3).

**ஆ) விருந்தோம்பல்:** விருந்தின்போது விருந்தினர்களின் தலையின்மீது எண்ணெய் பூசி வரவேற்பது அவர்களைக் கௌரவிப்பதின் அடையாளமாகும் (சங் 23:5). லூக் 7:46-இல் இயேசு தன்னை விருந்துக்கு அழைத்து பரிசேயனாகிய சீமோனையும், பாவியான பெண்ணையும் எண்ணெய் பூசி வரவேற்றதில் வேறுபடுத்திக் காட்டுகின்றார். சில நேரங்களில் யூதத் திருமணங்களின்போது யூத ராபிகள் எண்ணெய் பூசி வரவேற்கப்பட்டனர். பழைய எகிப்திய விருந்துப் படங்கள் எவ்வாறு விருந்தாளிகள் எண்ணெய்பூசி வரவேற்கப்பட்டனர் என்பதைச் சித்தரிக்கின்றன.

**இ) மகிழ்ச்சியின் அடையாளம்:** எண்ணெய் பூசுதல் இன்பத்தின், மகிழ்ச்சியின் அடையாளமாகும் (சங் 45:7). பொதுவாக, துக்க நேரங்களில் எண்ணெய் பூசுதல் கைவிடப்பட்டது (2 சாமு 12:20-21). யூத ராபிகள் துக்க காலத்திலும், நோன்புக்காலத்திலும் நறுமணத்தைலம் பூசுவதைத் தடை செய்தனர். ஆனால் இயேசு வெளிவேடத்தைத் தவிர்க்க எண்ணெய் பூசச் சொல்கின்றார் (மத் 6:17).

**ஈ) மருந்து:** எண்ணெய் நோய்களையும் (எரே 8:22, மாற் 6:13, யாக் 5:14), புண்ணையும் (எசா 1:6; லூக் 10:34) குணப்படுத்தும் மருந்தாகப் பயன்பட்டது. குணமான தொழுநோயாளி மீது எண்ணெய் பூசுதல் மருந்தவ மற்றும் அடையாள நோக்குடையதாகும்.

**உ) ஈமச் சடங்குகள்:** எகிப்து நாட்டிலே பல வகையான நறுமணப்பொருட்களை இறந்த உடலைப் பாடம் செய்வதற்குப் பயன்படுத்தினார்கள். இந்த வழக்கத்தை யாக்கோபிற்கும் யோசேப்புக்கும் செய்தார்கள். மரியாளும் இயேசுவின் அடக்கத்தைக் குறித்தே எண்ணெய் பூசினாள் (மாற் 14:8). கிறிஸ்துவைப் பின்பற்றிய சில பெண்கள் இயேசுவின் உடல்மீதுபூச நறுமணத் தைலங்களை எடுத்துக் கொண்டு கல்லறைக்குச் சென்றார்கள் (மாற் 18:1; லூக் 23:56). மிஸ்னா, அடக்கதிற்கு முன் இறந்த உடலுக்குத் தைலம் பூசுவதைக் குறிக்கின்றன.

**ஊ) கேடயங்கள்:** கேடயங்களின் தோலைப் பாதுகாக்கவும், அதை வழுவழுப்பாக்கி, ஆயுதங்களை வழுக்கிப்போகச் செய்யவும் கேடயங்கள் எண்ணெய் பூசி வைக்கப்பட்டன (2 சாமு 1:21; எசா 21:5).

**எ) அபிடேகம்:** யாக்கோபு பெத்தேலில் எண்ணெய் வார்த்து, கல்லுக்கு அபிடேகம் செய்தார் (ஆதி 28:18). புனித அபிடேகத்தைலத்தால் உடன்படிக்கைப் பெட்டகமும் அதன் பொருட்களும் பரிசுத்தப்படுத்தப் பட்டன (யாத் 30:26-29). ஆரோனும் அவனுடைய புதல்வர்களும் குருத்துவ நிலைக்குப் புனிதத் தைலத்தால் அபிடேகம் செய்யப்பட்டனர் (யாக் 30:30-32). இஸ்ராயேல் நாட்டிலும் எகிப்து நாட்டைப்போல அரசர்கள் தைலம் பூசி அபிடேகம் செய்யப்பட்டார்கள். 1 அர 19:16-இல் எலிசா என்ற இறைவாக்கினர் அபிடேகம் செய்யப்படவேண்டும் என்று கூறப்படுகிறது. 1 சாமு 16:13-இல் அபிடேகம் செய்ததால் ஆண்டவருடைய ஆவி எப்பொழுதும் இருக்கும் என்று பொருள்.

**6. உருவகம்:** சங் 133:2-இல் சகோதர ஒற்றுமை புனித தைலத்தைப்போல் இனியது என்று கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டிலே அபிடேகம் செய்யத் தைலம் பயன்படுவது புதிய ஏற்பாட்டிலே ஆண்டவருடைய ஆவியைக் குறிக்கப் பொருத்தமான அடையாளமாக அமைகிறது (1 யோவா 2:20.27).

**நறுமண நாணல் (SWEET CANE)**

இதே சொல் நறுமண வசம்பு அல்லது புல்லையும் குறிக்கும்.

இது புனித எண்ணெயிலும், நறுமணப் பொருட்களிலும் பயன்படுத்தப்படும்

எண்ணெயைத் தருகின்ற நாணல் வகையைச் சார்ந்தது. இது பழைய ஏற்பாட்டில் நறுமணப் பொருட்களோடு சேர்த்துக் கூறப்படுகிறது.

நறுமண நாணல் புனித அபிடேக எண்ணெயிலும் (யாத் 30:23) பலிகளிலும் பயன்படுத்தப்பட்டது (எசா 43:24; எரே 6:20). காதலி மணமிக்க பூஞ்சோலையோடு ஒப்பிடப்படும்போது, இந்த நறுமண நாணலும் பூஞ்சோலையோடு சேர்த்துக்கூறப்படுகிறது (உ.ச.4:14). இது வாணிபத்தில், இலவங்கத்தோடு சேர்த்துச் சிறந்த பொருளாகக் கருதப்பட்டது (எசே 27:19).

**நறுமணப்பொருள் (SPICES)**

பழங்காலத்தில் அபிடேகத் தைலம், தூபசாமிபிராணி, அழகு சாதனப்பொருட்கள், பரிமளம், இறந்த உடலைப் பாடம் செய்யும் பொருள்கள் ஆகிய இவைகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட நறுமணமுள்ள தாவரப்பொருட்களை நறுமணப்பொருள் என்று அழைத்தனர். குங்கிலியம், வெள்ளைப்போளம், கல்பான்பிசின் போன்ற இந்நறுமணப்பொருட்கள் மிக விலை மதிப்புள்ளனவாகக் கருதப்பட்டன. விவிலியத்தின்படி இந்நறுமணப்பொருட்கள் உணவு வகைகளோடு தொடர்புள்ளனவாகத் தெரியவில்லை (யாத் 30:34; 25:6; 2 நாள் 2:4; 13:11). சாலமோன் மன்னனுக்கு அளிக்கப்பட்ட பரிசுப்பொருட்களில் முக்கியமானவை நறுமணப்பொருட்களாகவே இருந்தன என்று தெரிகிறது (2 அர 10:2.10.25; 2 நாள் 9:1.9.24). சில நூற்றாண்டுகளுக்குப்பின் எசேக்கியா, பாபிலோன் மன்னன் மெரோதாக் பலாதானின் தூதர்களுக்குத் தன் கருவூலத்தைத் திறந்து காட்டிய பொருள்களில் நறுமணப்பொருட்கள் இடம் பெறுகின்றன (2 அர 20:13; எசா 39:2). ஆலய வழிபாடுகளுக்கு நறுமணப்பொருட்கள் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. சாலமோன் தான் கட்டிய ஆலயத்தை "நறுமணத் தூபம் காட்டுவதற்கும்", தன் கடவுளின் திருப்பெயருக்கு அர்ப்பணிக்கப் போவதாக, தீரின் அரசன் ஈராமுக்குச் செய்தி அனுப்பினார் (2 நாள் 2:3). ஒரு சில லேவியரும், குருக்களின் புதல்வரும் நறுமணப்பொருட்களைச் சரியான விகிதத்தில் கலந்து தயாரிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது (1 நாள் 9:29-30). ஆலய அபிடேகத் தைலத்தையும் தூப சாம்பிராணியையும் தயாரிப்பதற்கான பொருட்களின் பட்டியலையும் விகிதாச்சார முறையையும் (யாத் 30:23 தொ.34) குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் தருகிறார். இந்த நறுமணப் பொருட்கள் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன (35:8). நறுமணப்பொருட்கள் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யத் தயாரிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டதை 2 நாள் 16:14; எரே 34:5 குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் உடலை அடக்கம் செய்யும் முன் நறுமணப்பொருட்களும் பூசித் தயாரித்ததைக் குறிப்பிடுவதை மூன்று நற்செய்திகளில் காண்கிறோம் (மாற் 16:1; லூக் 23:56; 24:1; யோவா 19:40).

உன்னத சங்கீதத்தில் வரும் நறுமணப்பொருட்கள் பற்றிய பல குறிப்புகள் ஆட்களின் உடலமைப்பை வலியுறுத்துகின்றன (உ.ச. 4:14-16; 5:13; 8:14). நறுமணப்பொருட்கள் அழகு சாதனமாகவும் பயன்பட்டுள்ளன (எஸ்த 2:12).

**நறுமணம் (ODOUR)**

இறைவனுக்கு விருப்பமான, உகந்த நறுமணம். வழிபாட்டு நூலும், எண்ணிக்கை நூலும் "ஆண்டவருக்கு விருப்பமான" அல்லது ஆண்டவருக்கு இனிய" நறுமணம் என்ற சொற்றொடரைத் தகனப்பலி மற்றும் நெருப்புப்பலி ஆகியவற்றுக்கு இணையாகப் பயன்படுத்துகின்றன. தகனப்பலிகளான விலங்குப்பலி (ஆதி 8:21; யாத் 29:15.25 லேவி 1:3-9), காய்கனி, தானியம் போன்ற உணவுப் படையல்கள் (லேவி 2; 6:19-23), பானப்பலி (யாத்

29:41; லேவி 23:13 எண் 15:1-10) ஆகியவையும் இவை கலந்தவையும் நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் வழிபாட்டில் மையம் வகித்த பலிவழிபாட்டில் முதன்மை பெற்றிருந்தன. ஆலயத்தில் அன்றாடம் நடந்த காலை, மாலை வழி பாட்டிலும், குறிப்பிட்ட விழாக்களிலும் (எண் 28:29; லேவி 23), நன்றிப்பலியிலும் (ஆதி 8:21), நேர்ச்சை உணவுப்படையலிலும் (லேவி 2:1தொ), திருநிலைப்படுத்தும் சடங்கிலும் (யாத் 29) தகனப்பலிகள் சிறப்பு அங்கம் வகித்தன. பாவப் பரிகாரக் காணிக்கைகளிலும் (லேவி 4-6; 7:1-10), சமாதானக் காணிக்கைகளிலும் (லேவி 3; 7:11-36) தகனப்பலிகள் ஏற்புடையனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"ஆண்டவர் மோசேயிடம் கூறியது: நீ இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்! எனக்குரிய நேர்ச்சையை, நெருப்புப் பலியான உணவை, எனக்கு உகந்த நறுமணத்தை, குறிப்பிட்டகாலத்தில் எனக்குப் படைப்பதில் நீங்கள் கருத்தாய் இருக்க வேண்டும்" (எண் 28:1-2) போன்ற கூற்றுகளில் தகனப்பலி, நெருப்புப்பலி, நறுமணம் ஆகிய சொற்களின் வழிபாட்டுப் பொருளின் ஒத்த தன்மைதெளிவாக இருப்பதைக் காணலாம். இத்தகைய நறுமணம் தெய்வத்திற்கு உணவாகவும் விருப்பமானதாகவும் கருதப்பட்டது. இத்தகைய நறுமணம் குருக்களின் மூலம் ஒப்புக்கொடுக்கப்படும்போது, அதைச் செலுத்துகிறவனுக்கு அது பாவமன்னிப்பையும் பல்வேறு நலன்களையும் பெற்றுத் தருவதாகக் கருதப்பட்டது.

குறிப்பிட்ட விழாக்களுக்கும், தனிநபரின் வழிபாட்டுக்கும் ஏற்றவாறு குறிக்கப்பட்ட தகனப்பலிகளின் பட்டியல் மோசேக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் ஒரு பகுதியாக அமைந்தது (லேவி 1:7; 23; எண் 28-29). பழைய ஏற்பாட்டில், இக்கட்டளைகளை இஸ்ராயேல் கடைப்பிடிப்பதில், அஃது உடன்படிக்கைக்குக் காட்டிய பிரமாணிக்கம் காட்டப்பட்டதாக பொதுவாகக் கருதப்பட்டது. நாடு கடத்தலுக்கு உடனடியான முந்திய காலத்தில் வரவிருக்கும் வீழ்ச்சியைப் பற்றி எசேக்கியேல் முன்னறிவித்தார். இதற்குக் காரணமான அவர்களது முக்கிய பாவங்களில் ஒன்று அவர்களுடைய சிலைகளுக்கு நறுமணத் தூபம் காட்டிய பதிதமாகும் என்று குறிப்பிடுகிறார் (எசே 6:13; 16:19). நாடு கடத்தப்பட்ட பிற்காலத்து யூதத்துவத்தில், இஸ்ராயேலின் வருங்காலப் பாதுகாப்பு, அவர்கள் இந்த வழிபாட்டுக் கட்டளைகளுக்குக் காட்டும் பிரமாணிக்கத்தைப் பொருத்ததாகும் என்ற கருத்து பொதுவாக நிலவியது (நெகே 20:28-39).

நறுமணம் உருவகமாகவும் பயன்பட்டுள்ளது. இஸ்ராயேல் நறுமணக் காணிக்கையாகும் (எசே 20:41). பிலிப்பியர் பவுலுக்கு அளித்த கொடைகள் நறுமணம் வீசும் காணிக்கையும் கடவுளுக்கு உகந்த பலிப்பொருளுமாகும் (பிலி 4:18). "கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக நம்மை முன்னிட்டுக் கையளித்தார்" (எபே 5:2). திருச்சபையின் வாழ்வும் (2கொரி 2:14-16), புனிதர்களின் செபமும் (திருவெளி 5:8) நறுமணக் காணிக்கையாகும்.

## நறுமண வசம்பு, நறுமணப்புல் (AROMATIC CANE)

இதுவும் நறுமண நாணலும் ஒன்றே என்று கருதப்படுகிறது. நறுமணம் வீசும் வெட்டிவேர் போன்ற ஒருவகையான நாணல் அல்லது புல். இஃது இஸ்ராயேலர்களால் பயன்படுத்தப்பட்டது (காண். உ.ச. 4.4:14; எசா 43:24; எரே 6:20). குருத்துவத் திருநிலைப்பாட்டிற்கான அபிடேகப் புனித எண்ணெயில் இதனையும் சேர்த்தனர் (யாத் 27:19; 30:23). எசேக்கியேல் கூறுவதிலிருந்து இந்த நறுமணப்புல் ஏமனிலிருந்து வருவதெனவும் (எசே 27:19), எரேமியா (6:20) கூறுவதின்படி "தூரத்து நாட்டிலிருந்து" இது கிடைத்தது எனவும் தெரிகிறது. பிளினி, இந்நறுமண நாணல் அரேபியா, இந்தியா ஆகிய நாடுகளில் வளர்கின்றது என்கிறார்.

## நற்கருணை - திருவிருந்து (EUCHARIST)

### I. சொல்லின் பொருள்

**1. நன்றி செலுத்துதலும் ஆசி கூறுதலும்:** நற்கருணை, நன்றித்திருப்பலி - திருவிருந்து என்பதன் பொருள் நன்றி செலுத்துவதற்கு அடிப்படையாக அமையும் நன்றியுணர்வாகும். கிரேக்க மொழியில் சமயச் சார்பற்ற இலக்கியத்தில் இச்சொல் பெரும்பாலும் இதே பொருளை உணர்த்துகிறது. இவ்வாறே இச்சொல் கிரேக்க விவிலியத்திலும், சிறப்பாக மனித உறவுகளைப் பற்றிப் பேசும் இடங்களில் பயன்படுகிறது (ஞான 18:2; 2 மக் 2:28; 12:31; அ.ப. 24:3; உரோ 16:4). நன்றி செலுத்தல் இறைவனைப் பொறுத்த அளவில் (2 மக் 1:11; 1 தெ 3:9; 1 கொரி 1:14; கொலோ 1:12) வழக்கமாகச் செப வடிவு கொள்கிறது (ஞான 16:28; 1 தெச 5:17 தொ; 2 கொரி 1:11; கொலோ 3:17).இதைப் பவுலின் திருமுகங்களில் காணலாம் (1 தெச 1:2). இன்னும், நன்றி செலுத்துதல் இயல்பாகவே ஆசிகூறுதலுடன் இணைகிறது. ஆசிகூறுதல் என்பது இறைவனின் "வியத்தகு செயல்களைப்" போற்றிப் புகழுதலாகும். ஏனெனில், இவ்வியத்தகு செயல்கள் மனிதனுக்காக ஆற்றப்படும் நலன்கள். இந்நலன்கள் நன்றியுணர்வுடன் செலுத்தும் புகழ்ச்சிக்குத் தனிச்சிறப்பு அளிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் நன்றி செலுத்துதல் ஒருவகை "நினைவு கூர்தலோடு" இணைந்து செல்கிறது. இவ்வாறு நினைவு கூர்தலில் நினைவு கடந்த கால நிகழ்ச்சிகளை உள்ளத்தில் உயிர்ப்பிக்கிறது (யூதி 8:25 தொ; திருவெளி 11:17தொ). நன்றி செலுத்துதல், (eucharistein) இறைபுகழ் கூறுதலுக்குச் (eulogein) (ஆசிகூறுதலுக்குசி) சரிநிகராய் அமைகிறது (1 கொரி 14:16 தொ). இவ்வாறு ஆசி கூறி - நன்றி செலுத்தல், குறிப்பாக யூதர்கள் உணவு கொள்ளும் பொழுது பயன்படக் காண்கிறோம். அவ்வேளையில் பயன்படும் ஆசியுரைகள், இறைவன் மக்களுக்கு அளித்த உணவுக்காக அவருக்கு நன்றிகூறி அவரைப் புகழ்ந்து பாடுவனவாய் அமைகின்றன. இதைத்தான் பவுல் "நன்றிகூறி" உண்பதாகக் குறிப்பிடுகின்றார் (உரோ 14:6; 1 கொரி 10:30; 1 திமொ 4:3 தொ).

**2. இயேசு பயன்படுத்தும் முறையும் கிறிஸ்தவ முறையும்:**

இயேசு முதல் முறை அப்பங்களைப் பலுகச் செய்கிறபொழுது, ஒத்தமை நற்செய்திகளின் படி "இறை புகழ்" (ஆசி) கூறுகிறார் (மத் 14:19 இணை); யோவா 6:11, 23-இல் கண்டுள்ளபடி, "நன்றி கூறுகிறார்". இரண்டாம் முறை அப்பங்களைப் பெருகச் செய்கிறபொழுது, இயேசு "நன்றி கூறுவதாக" மத் 15:36 குறிப்பிடுகிறது. அதே நிகழ்ச்சியை விவரிக்கின்ற பொழுது மாற் 8:6 தொ. இயேசு அப்பங்கள் மீது "நன்றிகூறுவதாகவும்", மீன்கள் மீது "இறை புகழ்" கூறுவதாகவும் குறிப்பிடுகிறது. இவ்வாறு, ஆசி கூறுதலும் நன்றி கூறுதலும் நடைமுறையில் ஒன்றுக்கொன்று ஈடானவை; எனவே, இறுதி இராவுணவின்போது அப்பத்தின் மீது கூறப்பட்ட "இறைபுகழ்" (ஆசிகூறல்) (மத் 26:26 இணை; காண்க. லூக் 24:30), கிண்ணத்தின்மீது சொல்லப்பட்ட "நன்றி கூறுதல்" (மத் 26:27 இணை) ஆகியவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்துதல் நல்லதன்று. தவிர, பவுல் அப்பத்தின் மீது "நன்றி கூறுதல்" (1 கொரி 11:24) என்றும், கிண்ணத்தின் மீது "இறைபுகழ் கூறுதல்" (ஆசிகூறுதல்) (1 கொரி 10:16) என்றும் மாற்றிக் கூறுகிறார்.

உண்மையிலே, நற்கருணை அல்லது நன்றி கூறுதல் (Eucharist) என்ற சொல்லே, கிறிஸ்துவ வழக்கில் நீடித்துவிட்டது. இச்சொல், இயேசு தாம் சாவதற்கு முந்தினநாள் மாலை நிறுவிய திருச்செயலுக்குச் சிறப்புப் பெயராய் அமைந்துள்ளது. ஆனால், இச்சொல் இறைவனின் வியத்தகு செயல்களால் மனிதர் அடைந்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி கூறுவதையும் உணர்த்துகிறது. அந்த அளவுக்கும் அதற்கு மேலாகவும்கூட அச்செயல்களுக்காகப் புகழ் கூறுதலையும் உணர்த்துகிறது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். மீட்புக்காகத்

தாம் இறப்பதின் நித்திய பயனை இயேசு உணவில் வைத்துக் கையளிக்கிறார். இவ்வாறு செய்து, இயேசு இறைவனுக்குத் தாமும் படைப்பு அனைத்தும் அளிக்கும் வழிபாட்டை எல்லாக் காலத்திற்கென்றும் நிறைவு செய்து நிலை நாட்டினார். இது சமய வழிபாட்டுத் தன்மையுடையதும், கிறிஸ்துவின் மீட்புப் பணிக்கு இன்றியமையாததுமாகும். மனுகுலம் முழுமையும், படைப்பு அனைத்தும், கிறிஸ்து என்னும் ஆளில் சிலுவையிலும் நற்கருணையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தந்தையிடம் திரும்பி வருகின்றன. நற்கருணையின் வளமை கிறிஸ்தவ வழிபாட்டின் நடுநாயகமாக விளங்குகிறது. இது பொருள் செறிந்த சில பகுதிகளில் காணப்படுகிறது. அடுத்து, அப்பகுதிகளை நுணுக்கமாய் ஆய்வு செய்தல் வேண்டும்.

**II. நற்கருணை நிறுவப்படுதலும் அதைத் தொடக்கத்தில் கொண்டாடிய வகையும்:**

**1. நிகழ்ச்சி விவரங்கள்:** புதிய ஏற்பாட்டில் நான்கு பகுதிகள் நற்கருணை நிறுவியதைப் பற்றிய விவரம் தருகின்றன ( மத் 26: 26-29; மாற் 14: 22-25;லூக் 22:15-20; 1 கொரி 11:23 தொ). பவுல் தாம் "பெற்றுக் கொண்டதைக் "கையளிப்பதாகக்" குறிப்பிடுவது ஒரு வழிபாட்டு மரபு எனத்தோன்றுகிறது. இதைப்போலவே ஒத்தமை நற்செய்திப் பகுதிகளும் வழிபாட்டு மரபுகளக இருக்க வேண்டும்; மிக இரத்தினச் சுருக்கமாக உள்ள இப்பகுதிகள் சூழ்நிலையை வரையறுக்கின்றன. அவ்வாசகங்கள், தொடக்க காலத்திருச்சபைகள் ஆண்டவரின் இராவுணவைக் கொண்டாடிய முறையைப்பற்றி எழுந்த பயனுள்ள சிந்தனை உரைகளாகும். இவ்வாறு தோன்றிய உரைகள் என்பதால், வாசகங்களில் கண்டுள்ள ஒருமைப்பாடும் வேறுபாடும் விளங்குகின்றன. மாற்கின் அரமேய மொழி வாசகம் பாலஸ்தீனப் பாரம்பரியத்தின் படைப்பாக இருக்கலாம்; ஆனால், கிரேக்கம் சற்று மிகுந்துள்ள பவுலின் வாசகம் அந்தியோக்கியா அல்லது சிறிய ஆசியாவில் உள்ள திருச்சபைகளின் மரபினைப் பிரதிபலிக்கலாம்; ஐயத்திற்கு இடமின்றி மத்தேயு வாசகம், மாற்கு சுட்டிக்காட்டும் அதே மரபுக்குத்தான் சான்று பகர்கிறது; எனினும், மத்தேயு வாசகத்தில் ஒருசில மாறுபாடுகளும் சேர்க்கைகளும் உண்டு. அவைகளும் வழிபாட்டில்தான் தோன்றியிருக்க வேண்டும். லூக்கா வாசகமோ ஒரு சில நுண்ணிய சிக்கல்களைக் கிளப்பித்தடுமாறச் செய்கிறது. அச்சிக்கல்கள் பல்வேறு வகையில் விடுவிக்கப்படலாம். அந்த வகையில் வசனங்கள் 15-18 தொன்மையானதொரு மரபுக்குச் சான்றுபகரலாம். அந்த மரபு மற்ற மரபுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கலாம்; அல்லது, மாற் 14:25-இல் கண்டுள்ளதை லூக்கா விரிவாக விளக்கியிருக்கலாம். பின்னதே உண்மைக்கு நெருங்கியதாக இருக்கலாம். சில பிரதிகளில் 19-20 வசனங்கள் விடுபட்டுள்ளன. எனினும், இவை உண்மைத் தன்மையுடையனவாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்; ஏனெனில் அவ்வசனங்களில் லூக்காவே, மாற்கு வாசகத்தையும் முதல் கொரிந்திய வாசகத்தையும் இணைத்திருப்பதைக் காணலாம். இவ்வாறு இணைத்திருப்பது, கிரேக்கத் திருச்சபைகளின் மரபுக்குப் பிறிதொரு வடிவம் கொடுப்பதாகும். எனவே, மாற்-மத், 1 கொரி ஆகியவற்றில் கண்டுள்ள இரண்டு வழிபாட்டுச் சான்றுகளோடு கூட மூன்றாம் சான்றாக அமைகிறது லூக்கா தரும் சான்று. நற்கருணைத் திருவிருந்தைத் திரும்பத் திரும்ப நிகழ்த்தவேண்டும் என்ற கட்டளையைத் தவிர, மற்றப்படி வெவ்வேறான இவ்வாசகங்களில் காணப்படும் மாறுபாடுகள் அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல, மேற்படிகட்டளை, மாற்-மத் தரும் சான்றில் விடுபட்டுள்ளது. ஆனால் அக்கட்டளைக்கு 1கொரி-லூக் தரும் சான்றும், நம்பக்கூடியதாக உள்ள கட்டளையின் அகச்சான்றும், கட்டளை பண்டைக் காலத்தியதுதான் என ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்றன.

2. **வரலாற்றுச் சூழமைவு:** மேற்படி வாசகங்களின் பொருளை விளக்கும் பொழுது, மற்றொரு சிக்கலையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதுதான், இவ்வாசகங்கள் தோன்றிய வரலாற்றுச் சூழமைவு. ஒத்தமை நற்செய்திகளின்படி, இச்சூழமைவு ஐயமற ஒரு பாஸ்காப் பலியுணவு வேளையாகும் (மாற் 14:12-16 இணை). ஆனால் யோவா 18:28; 19:14.31 வசனங்களின்படி, பாஸ்கா விழா அடுத்த நாள் அதாவது வெள்ளிக்கிழமை மாலையில்தான் கொண்டாடப்பட்டது. இந்தக் கருத்து வேறுபாட்டை விளக்கும்படி எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளன. ஒருசிலர் யோவானைக் குறை கூறுவர்; பாஸ்காச் செம்மறி கொல்லப்பட்ட (யோவா 19:14.36) அதே நேரத்தில் இயேசு இறக்கலானார் என்ற உருவகத்தை உணர்த்துவதற்கென்று, யோவான் பாஸ்கா விழாவை ஒருநாள் தள்ளி வைத்தார் என்பர். ஒருசிலர், அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் பாஸ்கா விழா, வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் யூதர்களில் வெவ்வேறு பிரிவினரால் கொண்டாடப்பட்டது என்பர். இன்னும் சிலர், எஸ்ஸேனியர் எனப்படுவோர் செவ்வாய்க்கிழமை மாலையில் பாஸ்கா விழாவைக் கொண்டாடினார்கள் என்றும், அதே நேரத்தில் இயேசுவும் அவ்விழாவைக் கொண்டாடியிருக்கலாம் என்றுகூட ஊகிக்கின்றனர். ஐயத்திற்கு இடமின்றி, மிகச்சிறந்த விளக்கம் யாதெனில், இயேசு பாஸ்கா விழா கொண்டாடப்படும் அதே வேளையில் தாம் இறக்கவிருந்ததை முன்னறிந்தவராய், அவ்விழாவை ஒருநாள் முன்கூட்டியே கொண்டாடினார் என்று ஒப்புக்கொள்வதாகும். இயேசுவின் இறுதி இராவுணவு அவருக்குப் பாஸ்காவிழாச் சடங்கு முறையைப் போதுமான அளவுக்கு நினைவுபடுத்தியிருக்கும்;அவரும் அச்சடங்கு முறையோடு தமது புதியசடங்கு முறையைப் பொருத்தி இணைத்திருப்பார். இவ்வாறு இணைக்கப் பெற்ற புதியசடங்கு முறை புதிய ஏற்பாட்டின் பாஸ்காச் சடங்கு முறையாக இருக்கும். இந்த விளக்கும், யோவான் குறிப்பிடும் காலக்கணிப்பை மதிப்பதாயும், ஒத்தமை நற்செய்திகள் விரித்துரைப்பதைப் போதிய அளவுக்குப் பொருட்படுத்துவதாயும் அமைந்துள்ளது.

3. **சமயச்சடங்கும் முறை உணவும், ஆண்டவரின் திருவுணவும்:** எனவே, நற்கருணை நிறுவப்பட்டதைக் குறிப்பிடும் வாசகங்களைப் பாஸ்கா உணவுச் சடங்கு முறைமுன்னோக்குடன் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஒரு சிலர் இவ்வாசகங்களுக்கு எஸ்ஸேனியர் என்போரின் சடங்குமுறை உணவின் பின்னணியில் விளக்கம் காணப்பார்க்கின்றனர். இவ்வாறு யூதர்கள் விழாக்கோலத்தில் உண்ட விருந்துச் சடங்கு முறையைவிடப் பாஸ்கா உணவுச் சடங்கு முறையே மேற்படி வாசகங்களுக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. எஸ்ஸேனியர் உணவு முறைகளில் உள்ளபடி இறுதி இராவுணவிலும் அப்பம் / இரசம் அடுத்தடுத்து இடம் பெறுகின்றன என்றால், இவ்வாறு கும்ரான் உணவுமுறையோடு கொண்ட தொடர்பு மேற்போக்கானதும், முக்கியத்துவமில்லாததுமாகும்; நற்செய்திகளில் இந்த அப்பம் இரச வரிசை முறை, ஒரு வழிபாட்டுச் சுருக்கமாக இருக்கலாம். அந்த வழிபாட்டுச் சுருக்கத்தில், இயேசுவின் இறுதி இராவுணவு பற்றி இரண்டு முக்கிய அம்சங்களை மட்டும் காப்பாற்றி யிருக்கலாம். அந்த இரண்டு அம்சங்கள்; தொடக்கத்தில் பயன்படும் அப்பமும், இறுதியில் பரிமாறப்படும் மூன்றாம் கிண்ணமுமாகும்; இவை இரண்டிற்கும் இடையில் நிகழ்பவை அனைத்தும் விடுபட்டிருக்கலாம். இவ்வாறு இடைவெளி இருந்தது என்பதற்கும் ஓர் அறிகுறி கிடைத்துள்ளது. 1 கொரி 11:25-இல் காணப்படும் "உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து" என்ற தொடரில் உள்ள "உணவு அருந்திய பின்" என்பது இடைவெளியைச் சுட்டுகிறது. தவிர, இயேசுவின் சொற்கள் குறிப்பாக உணர்த்தும் பாஸ்கா இறையியலை எஸ்ஸேனியர் உணவுமுறைகளில் காணோம்; இச்சொற்கள்,

பவுல் அல்லது கிரேக்கத் திருச்சபைகள் கொண்டிருந்த செல்வாக்கின் காரணமாகப் பிற்காலத்தில் தோன்றிய அம்சம் என்று கருதுவது ஆதாரமற்றதாகும். நன்கு கட்டுப்படுத்தப்பட்ட எஸ்ஸேனிய உணவுச் சடங்குமுறை, அவர்கள் காலத்து யூதர்களில் தோழமைக் கூட்டுறவினர் நடத்திய பல உணவுகளின் சடங்கு முறையைப் போன்றது; எஸ்ஸேனிய உணவு முறையை மிகைப்படுத்தினாலும்கூட, அம்முறை இயேசுவும் அவர்தம் சீடர்களும் வழக்கமாக உணவருந்திய முறையை உணர்த்தலாம். அவ்வாறே, இயேசு உயிர்த்தபின்னர், சீடர்கள் திரும்பவும் தங்கள் குருவைச் சூழ்ந்திருந்து, உயிர்த்து என்றென்றும் வாழுகின்ற ஆண்டவர் தங்களோடு எந்நாளும் இருந்துவருகிறார் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் ஒன்றுபடுத்தப்பட்டவர்களாய் உண்ட உணவு முறைகளையும் உணர்த்தலாம்.

எருசலேமில் இருந்த முதல் சகோதரர்கள், தங்கள் வீடுகளில் அப்பத்தைப் பிட்டு மனமகிழ்வோடு (அ.ப. 2:42.46) கூடி உண்ட அன்றாட உணவுகளில் எல்லாம் உண்மையில் நற்கருணை - திருவிருந்தைக் காணவேண்டிய அவசியமில்லை. இங்குக்கண்டுள்ள "அப்பம் பிட்குதல்" என்பது வழக்கமானதொரு உணவை மட்டும் குறிப்பிடலாம். வழக்கமானது என்றாலும் செமித்திய மக்களின் எல்லா உணவையும்போல நிச்சயமாகச் சமயப்பற்றுள்ளதாய் இருந்திருக்கும். எவ்வாறெனில், மக்கள் உயிர்த்த தங்கள் தலைவரை நினைவுகூர்ந்து, அவரை எதிர்பார்த்தவர்களாய் உணவு கொண்டிருப்பார்கள். இதனோடு, நற்கருணைத் திருவிருந்து என்று முறைப்படி அழைக்கப்பெறும் நிகழ்ச்சியும் இணைந்திருக்கலாம். அப்பொழுது மக்கள் ஆண்டவரின் சொற்களையும் சைகைகளையும் மீண்டும் நினைவு கூர்ந்தவராய்ப் புதுப்பித்து, அப்பம் இரசத்திலான மறைபொருளான ஆண்டவரின் திருப்பிரசன்னத்தில் உறவாடியிருப்பார்கள். இவ்வாறு வழக்கமான உணவு "ஆண்டவரின் விருந்து" (உணவு) (1 கொரி 11:20-34) என உருமாற்றம் அடைந்திருக்க வேண்டும். இந்த நற்கருணைத் திருவிருந்து, யூதச்சடங்கு முறையிலிருந்து விலகிச்சென்று, நிச்சயமாக ஆண்டுக்கு ஒருமுறை என்பதற்கும் மேலாக, ஒருவேளை வாரத்திற்கு ஒறு முறையக (அ.ப. 24:7.11) நடைபெறத் தொடங்கிவிட்டது எனலாம். எனினும், இவ்வாறெல்லாம் உறுதியாகச் சொல்வதற்கில்லை; ஏனெனில், வாசகங்கள் பலவற்றில் (அ.ப. 27:35; முன்னரே குறிப்பிட்ட லூக் 24:30.35) குறிக்கப்படுவது, வழக்கமான "அப்பம் பிட்குதல்" என்பதா அல்லது முறைப்படி அழைக்கப்பெறும் நற்கருணைத் திருவிருந்து என்பதா என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் உள்ளோம்.

**III. நற்கருணை - திருவிருந்து: ஊட்டம் அளிக்கும் அருட்சாதனம்:**

**1. உணவு ஒரு சமயநெறி அடையாளம்:** உணவு கொள்கின்றபோது ஏற்படுத்தப்பட்ட நற்கருணைத் திருவிருந்து எனப்படுவது உணவளிக்கும் ஒரு சடங்கு முறையாகும். மிகப்பழங்காலத்திலிருந்து, சிறப்பாக, செமித்திய இனத்தார் வாழ்ந்த பகுதியில், மக்கள் உணவுக்குப் புனிதமான மதிப்பு அளித்து வள்ளன்மையுள்ள இறைவனின் கொடைஎன்றும், அது வாழ்வுக்கு ஆதாரம் என்றும் உணர்ந்திருக்கிறார்கள். அப்பம், நீர், இரசம், பழங்கள் முதலியவைகளெல்லாம் நன்மைகள்; அவைகளுக்காக மனிதன் இறைபுகழ் கூறுகிறான். உணவருந்துதல் தன்னிலேயே சமயப்பொருள் உள்ளதாகும்; ஏனெனில், கூடி உணவு அருந்துதல், பந்தியில் அமர்ந்துள்ளவர்களுக்கு இடையிலும், அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலும் புனிதமான உறவுகளை நிலைநாட்டுகிறது.

**2.முன்னடையாளங்களிலிருந்து மெய்ம் மைக்கு:**

விவிலியத்தில் கண்டுள்ள இறைவெளிப் பாட்டில், உணவும் உணவு அருந்துதலும்,

இறைவன் தம் மக்களோடு வாழ்வைப்பகிர்ந்து கொள்வதை உணர்த்த உதவுகின்றன. யாத்திராகமத்தில் கண்டுள்ள மன்னாவும் காடைகளும், மேலும் ஓரேபு என்னும் பாறையிலிருந்து வெள்ளம்போல் ஓடிய நீரும் (சங் 78:20-29) முன்னடையாளமாயிருந்த நலன்கள் (1 கொரி 10:3 தொ). முன்னடையாளங்கள் என்றளவில் அவை உண்மையான கொடையை உருவகமாய் முன்னுணர்த்துகின்றன. அக்கொடை கடவுளின் திருவாயினின்று வருவதாகும் (உப 8:3; மத் 4:4). அது வானத்தினின்று வரும் (யாத் 16:4) உண்மை அப்பமாகிய (இறைவனின்) வாக்கு ஆகும்.

இந்த முன்னடையாளங்கள் இப்பொழுது இயேசுவில் நிறைவு பெறுகின்றன. அவர்தாம் "உயிர்தரும் உணவு." எவ்வாறெனில், முதலில் அவர் தமது வாக்கினால் உணவாகின்றார். அவ்வாக்கு விசுவாசங் கொள்பவர்களுக்கு முடிவில்லா வாழ்வைத் திறந்து விடுகிறது (யோவா 6:26-51). அடுத்து, அவர் தமது தசையைத் தின்னவும் தமது இரத்தத்தைக் குடிக்கவும் (யோவா 6:51-58) கொடுத்து நமக்கு உணவாகின்றார். இந்த நற்கருணைத் திருவிருந்தை இயேசு பாலைவனத்தில் மக்கட் கூட்டத்திற்குப் புதுமையாக உணவளித்த பின்னர் (யோவா 6:1-15) கூறினார். இயேசு வாக்களிப்பதும், மன்னா போன்றதன்று என்று அவரால் வேறுபடுத்தப்படுவதுமான கொடை (6:31 தொ. 49தொ) இவ்வாறு யாத்திராகமத்தில் கண்டுள்ள வியத்தகு செயல்களோடு தொடர்புபடுத்தப் பெறுகிறது. அதே பொழுது, அக்கொடை, மெசியா திருவிருந்தின் முன்சுவை என்றளவில் இடம் பெறுகிறது. திருவிருந்து என்பது விண்ணகப் பேரின்பத்திற்கு உருவகமாகும். இது, யூத மறையினருக்கும் (எசா 25:6; யூத சட்டவித்தகர்களின் ஏடுகள்) புதிய ஏற்பாட்டினருக்கும் (மத் 8:11; 22:2-14; லூக் 14:15; திருவெளி 3:20; 19:9) நன்கு தெரிந்த உருவகம்.

**3. ஆண்டவரின் உணவு - நினைவுகூர்தல், வாக்குறுதி:** இறுதி இராவுணவு, மெசியா திருவிருந்திற்கு இறுதியான முன்னேற்றபாடு போல் உள்ளது. அவ்விருந்தில் இயேசு, அடுத்துவரும் சோதனைக் காலத்திற்குப் பின்னர், தம்மவர்களை மீண்டும் கண்டு கொள்வார். பாஸ்காவை நிறைவேற்றுதலினாலும் (லூக் 22:15 தொ), தம்மவர்களோடு இறையரசில் சுவைக்கும் "புதிய இரத்தத்தாலும்" (மாற் 14:25 இணை) தம்மவர்களை அவர் ஆயத்தம் செய்கிறார். அப்போது அப்பமும் இரசமும் புதியதொரு மெய்ம்மையை அதாவது, தமது உடலும் இரத்தமும் என்பதைக் குறித்துக் காட்டச் செய்கிறார்.

இவ்வாறு செய்வதற்குப் பொருத்தமானதும் விரும்பத்தக்கதுமான ஒரு வாய்ப்பினை இயேசுவுக்குப் பாஸ்கா உணவு உண்ணும் சடங்குமுறை அளிக்கிறது. அவ்வேளையில் குடும்பத்தின் தந்தை பல்வேறு உணவுப்பொருட்களின்மீது, மிகச்சிறப்பாக அப்பத்தின்மீதும் மூன்றாம் கிண்ணத்தின்மீதும் முறைப்படி கூறிய சொற்கள் அந்த உணவுப் பொருட்களுக்கு ஒருவகையான ஆற்றலை அளித்தன. அந்த ஆற்றலால், கடந்த காலம் நினைவுகூரப்பட்டது; வருங்காலத்திற்கான நம்பிக்கை தூண்டப்பெற்றது. இவ்வாறு, பந்தியிலிருந்தோர் இந்த உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொண்டவர்களாய், யாத்திராகம காலத்துச் சோதனைகளுக்கு உண்மையில் திரும்பவும் ஆளானார்கள். அஃதோடு, மெசியாவின் வாக்குறுதிகளை எதிர்பார்த்தவர்களாய் வாழ்ந்தார்கள். சொற்களில் அடங்கிய இத்தகைய படைக்கும் ஆற்றலைச் செமித்திய மக்களின் உள்ளம் உணர்ந்திருந்தது. இந்த ஆற்றலை இயேசுவும் பயன்படுத்தித் தமக்குரிய தலைமைத்துவ அதிகாரத்தால் அந்த ஆற்றலை இன்னும் பெருகச்செய்கிறார். அப்பத்திற்கும் இரசத்திற்கும் புதிய பொருளைக் கொடுக்கிறபொழுது, இயேசு அதற்குக் காரணம் கூறக் காணோம். ஆனால் அவர் அவைகளில் பொருள் மாற்றம் விளைவிக்கிறார். இயேசு

விளக்கம் தரக் காணோம்; ஆனால், அவர் தீர்மானிக்கிறார், கட்டளையிடுகிறார்; இஃது என் உடல் (அதாவது, இதுமுதற்கொண்டு, இஃது என் உடல்தான்). "இருக்கிறது" என்ற இணைப்பு வினைச்சொல் அரமேய மொழியில் உள்ள மூலவாசகத்தில் தவறியுள்ளது. அந்த வினைச்சொல் தானாக மட்டும் இந்த இயல் வாய்மையை (இந்த அப்பம் உடல்தான் என்று) எண்பித்திடாது; ஏனெனில், அந்த இணைப்பு வினைச்சொல் உருவகப் பொருளை மட்டும் உணர்த்தக்கூடும். அதற்கு எடுத்துக்காட்டாக, "அறுவடை, உலகின் முடிவு (முடிவாய் இருக்கும்); அறுப்போர் வானதூதர் (வானதூதராய் இருப்பர்)" (மத் 13:39) என்றிருப்பதைக் காணலாம். இறுதி இராவுணவுச் சூழ்நிலை வளம் நிறைந்த பொருள் ஒன்றை வற்புறுத்துகிறது. இங்கு இயேசு ஓர் உவமையை எடுத்துரைப்பதில்லை. உவமையின் திட்டவட்டமான பருப்பொருட்கள் புலனாகாத பொருளைக் கண்டுகொள்ள உதவும் இங்கோ, இயேசு ஓர் உணவுப்பந்தியில் தலைமை தாங்குகிறார். இவ்வேளையில் சடங்கு முறைப்படி இறைபுகழ் கூறுதல், உணவுப் பொருட்களுக்கு மற்றொரு நிலை சார்ந்த தகைமை வழங்குகிறது. தவிர, இயேசுவைப் பொருத்தளவில், இவ்வாறு வழங்கும் தகைமை இதுமட்டுமே நிகழ்ந்திராத அளவுக்கு நிறைவும் மெய்ம்மையும் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் வாக்களிக்கப்பட்ட அர்ப்பணமாகும்; அதுதான் மீட்பளிக்கும் சாவு. அந்தச் சாவு உயிர்ப்பின் வழியாக இறுதிக்கால வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது.

### IV. நற்கருணை - திருவருட் சாதனப்பலி

**1. மீட்பளிக்கும் சாவை அறிக்கையிடல்:** சாவு மீட்பு அளிப்பதாகும். ஏனெனில், இந்த உடல் "உங்களுக்காக அளிக்கப்படும்" (லூக் 1 கொரி - இல் "உங்களுக்காக" என்று மட்டும் உள்ளது; இதில் சிறிதளவு வேறுபாடு காணலாம்). இந்த இரத்தம் "உங்களுக்காகச் சிந்தப்படும்" (லூக்) அல்லது "பலருக்காகச் சிந்தப்படும்" (மாற் / மத்). பந்தியில் அப்பம், இரசம் என்று வகைப்படுத்துவதே உடலும் இரத்தமும் வன்முறையில் கூறுபடுத்தப்படுவதை உணர்த்துகின்றது. இயேசு, நெருங்கிக் கொண்டிருக்கும் தமது சாவைத் தெளிவாக அறிவிக்கிறார்; அந்தச் சாவை ஒரு பலி என அறிமுகப்படுத்துகிறார். அப்பலி, பல உயிர்களான ஆடுமாடுகளைப் பலியிடுவதோடு ஒப்பிடக்கூடியது. பலி உயிர்களின் இரத்தம் சீனாய் மலையில் செய்த முதல் உடன்படிக்கைக்கு முத்திரையிட்டது (யாத் 24:4-8). இயேசுவின் காலத்து யூத சமயம் பாஸ்காச் செம்மறியையும் ஒரு பலியாகக் கருதிய அளவுக்கு இயேசுவின் பலியும் பாஸ்காச் செம்மறியோடு ஒப்பிடத்தக்கது (காண். 1 கொரி 5:7).

இயேசுவோ "புதிய உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும்" இரத்தம் எனக் கூறுகிறார். இவ்வாறு கூறுகிறபொழுது, அவர் யாவேயின் ஊழியனையும் நினைவில் கொண்டிருந்திருக்க வேண்டும். அந்த ஊழியன் "சாவுக்குத் தம் ஆன்மாவைக் கையளித்தார்;" "பலருடைய பாவத்தைத் தாமே சுமந்து கொண்டார்" (எசா 53:12). அந்த ஊழியனை இறைவன், "மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புற வினத்தாருக்கு ஒளியாகவும்" (42:7; காண் 49:8) ஏற்படுத்தினார். இதற்கு முன்னரே, இயேசு இறை ஊழியனின் பணியைத் தமக்கே உரித்தாக்கியிருந்தார் (லூக் 4:17-21); இன்னும் இறை ஊழியனைப்போல், "பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கும்" (மாற் 10:45; காண். எசா 53) பணிவிடையை மேற்கொண்டதாகவும் உரிமை கொண்டாடியிருந்தார். இறுதி இரவுணவில் நெருங்கி வந்து கொண்டிருக்கும் அவருடைய சாவு, பழைய உடன்படிக்கைப் பலிகளின் இடத்தை நிரப்பப்போகிறது என்றும் மக்களை இம்மைக்குரிய அடிமைத்தனத்திலிருந்து மட்டுமன்று, பாவத்தளையிலிருந்தும் விடுவிக்கப் போகிறது என்றும் அறியப்படுத்துகிறார். இத்தகைய பணிகளைச் செய்ய ஓர் ஊழியன் இறைவனுக்குத் தேவைப்பட்டார். எரேமியா

முன்னறிவித்திருந்த இந்தப் "புதிய உடன்படிக்கையை" (எரே 31:31-34) இயேசு நிறுவப்போகின்றார்.

**2. பலியில் ஒன்றுபடுதல்:** ஆனால், இங்கு மிகமிகப் புதியது யாதெனில், இயேசு தமது பலியின் பயனை உணவினுள் உள்ளடக்கினார் என்பதாகும். மற்ற எல்லாப் பழங்கால மக்களையும் போல், இஸ்ராயேல் மக்களும் பலிப்பொருளை உண்டு பலியின் பயனைப் பெற்றுக் கொள்ளுதல் வழக்கம். மக்கள் பலிப்பொருளோடும் அதை ஏற்றுக்கொண்ட இறைவனோடும் உறவுகொண்டு ஒன்றுபட இவ்வாறே செய்தனர் (1 கொரி 10:18-21). விசுவாசிகள், பலியாக்கப்பட்ட இயேசுவின் உடலை உண்டும், அவருடைய இரத்தத்தைப் பருகியும், அவருடைய பலியில் பங்கு கொள்கின்றனர். இவ்வாறு, அவர்கள், இயேசு அன்பினால் அளித்த பலிப்பொருளைத் தமதாக்குகிறார்கள். இயேசுவின் பலி செயல்படுத்திய அருள் வாழ்வுக்குத் திரும்புதலின் வழியாகப் பயன் அடைகிறார்கள். மக்கள் இவ்வாறெல்லாம் எங்கும், எப்பொழுதும் செய்யக் கூடுமாய் இருக்க வேண்டும் என்றுதான், இயேசு மிகவும் சாதாரணமான உணவுப் பொருட்களைத் தேர்ந்துகொண்டு, அவைகளைப் பலிப்பொருளுக்குரிய நிலைமையில் தமது உடலாகவும் இரத்தமாகவும் ஆக்கினார். அவர் தம் சீடர்களுக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருக்குப் பின்னர், சீடர்கள் அவர்தம் அதிகாரத்தைக் கொண்டு அவர் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் சொல்வார்கள். அவ்வார்த்தைகள் மேற்படி மாற்றத்தை விளைவிக்கும். இவ்வாறு இயேசு தமது குருத்துவத்தில் சீடர்கள் ஆட்பேர் உரிமையுள்ளவர்க்காகப் பங்குகொள்ளச் செய்கிறார்.

இது முதற்கொண்டு கிறிஸ்துவர்கள் இந்நிகழ்ச்சியைத் திரும்ப நிகழ்த்தும் ஒவ்வொரு முறையும் அல்லது அதில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்கள் "ஆண்டவருடைய மரணத்தை, அவர் வரும் வரையில் அறிக்கையிடுகிறார்கள்" (1 கொரி 11:26); ஏனெனில், அவர்கள் செயலாக்கும் திருவருட்சாதனைப் பிரசன்னம் கிறிஸ்துவின் பிரசன்னமாகும்; இங்குக் கிறிஸ்து தாம் பலியான நிலையில் பிரசன்னமாகிறார். இவ்வாறெல்லாம் கிறிஸ்துவர்கள் "அவருடைய நினைவாகச்" (1 கொரி 11, 25; லூக் 22,19) செய்கிறார்கள்; அதாவது, அவர்கள், இயேசுவின் மீட்புச் செயலைத் தங்கள் விசுவாசத்தைக் கொண்டு நினைவுகூர்கிறார்கள்; அல்லது ஒருவேளை, அவர்கள், இயேசுவின் மீட்புச்செயலை இறைவனுக்கு நினைவுபடுத்துகிறார்கள் என்றால் இன்னும் பொருத்தமாயிருக்கும் (காண் லேவி 24:7; எண் 10:9 தொ:சீரா 50:18; அ.ப. 10:4.31). இவ்வாறு, இயேசு செய்ததை இடையறாது புதுப்பிக்கப்படும் காணிக்கையாக நினைவுபடுத்துகிறார்கள். அக்காணிக்கை இறைவனின் அருளை வேண்டுகிறது. இந்த "நினைவு கூர்தல்' (**anamnesis**) என்பது இறைவன் ஆற்றிய வியத்தகு நிகழ்ச்சிகளை வியந்து பாராட்டும் வகையில் நினைவுகூர்ந்து, அவைகளை வியத்தகு நிகழ்ச்சிகள் என ஒப்புக்கொள்வதாகும். அவற்றுள் தலை சிறந்தது, மக்களின் மீட்புக்காக இறைவனின் திருமகன் ஒப்புக்கொடுத்த பலியாகும். இப்பலி அன்பின் அதிசயமாகும். இப்பலியில் பங்குகொண்டு கிறிஸ்துவர்கள் திருவிருந்தின்போது ஆண்டவரின் உடலோடும், அவரிடத்தில் அவர்தம் உறுப்பினர் அனைவரோடும் இணைந்து ஒன்று படுகிறார்கள் (1 கொரி 10:14:22). கிறிஸ்து செலுத்திய பலியின் திருவருட்சாதனமான நற்கருணைத் திருவிருந்து, அன்பின் திருவருட்சாதனமும், கிறிஸ்துவின் உடலில் கொள்ளும் ஒற்றுமையின் திருவருட்சாதனமும் ஆகும்.

## V. நற்கருணை - திருவிருந்து: திருவருட்சாதனம்:

**1. புதிய உலகில் கிறிஸ்துவின் பலி தொடர்ந்து நிலைத்திருத்தல்:** இத்தகைய அடையாளச் செயல்களுக்கும், சொற்களுக்கும்

முழுப்பொருளைத் தருவது, புதிய உலகு ஒன்று உண்டு என்ற உண்மையாகும். அவ்வுலகுக்கு இச்செயல், சொற்கள் எல்லாம் நுழைவாயிலாய் அமைந்துள்ளன. கிறிஸ்துவின் சாவு, உண்மையான வாழ்வில் மலர்கின்றது. இந்த வாழ்வுக்கு முடிவு இராது (உரோ 6:9 தொ). இத்தகைய வாழ்வுதான் இறுதிக்காலம்; "வரப்போகும் நன்மைகளின்" காலம்; அதனோடு ஒப்பிட்டால் நிகழ்காலம் "நிழல்" தான் (எபி 10:1; காண் 8:5; கொலோ 2:17). கிறிஸ்து தமது பலியை "ஒரே முறையில் எக்காலத்திற்குமே" நிறைவேற்றி விட்டார் (எபி 7:27; 9:11.26 தொ; 10:10; 1 பேதுரு 3:18). அவருடைய இரத்தம் பழைய உடன்படிக்கைப் பலி உயிர்களின் ஆற்றலற்ற இரத்தத்தின் இடத்தை உறுதியாகப் பிடித்துக் கொண்டது (எபி 9:12 தொ. 18-26; 10:1-10). இயேசு இணைப்பாளராக இருக்கும் புதிய உடன்படிக்கை (எபி 12:2; கண் 13:20) பழைய உடன்படிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு (8:13), "முடிவில்லா உரிமையைப்' பெற்றுள்ளது (9:15). இது முதற்கொண்டு, நம்முடைய தலைமைக் குரு "கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்" (8:1; 10:12); "நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச்" செய்து விட்டார் (9:12; காண். 5:9). அவர் "மாறாத குருத்துவத்தைப்' பெற்றுள்ளதால் (7:24), நமக்காகப் "பரிந்து பேசுவதற்கென" என்றுமே வாழ்கிறார் (7:25; காண். 9:24). கிறிஸ்துவின் பலி, நிலையற்ற நம்முடைய உலகின் கால வரம்போடு தொடர்பு கொண்டு நிறைவேறியது கடந்த காலத்தியது என்றாலும், அப்பலி, கிறிஸ்து நுழைந்துள்ள புதிய உலகில் என்றென்றைக்கும் பிரசன்னமாக உள்ளது; எவ்வாறெனில், தம்மையே பலியாய் ஒப்புக்கொடுத்துப் புதிய உலகில் நுழைந்த கிறிஸ்து அங்கு, தொடர்ந்து தம் தந்தையிடம் தம்மையே காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்.

**2. இப்புதிய உகைத்தோடு கிறிஸ்துவன் நற்கருணை வழியாக உறவு கொள்கிறான்:** பலிப்பொருளான நிலைமையில் நம் தலைமைக்குரு என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நற்கருணைத் திருவிருந்தோ விசுவாசியை இக்குருவோடு தொடர்பு கொள்ளச் செய்கிறது. அப்பம் உடலாகவும், இரசம் இரத்தமாகவும் ஆகும் பொழுது காணப்படும் நிலைமாற்றம் (கடந்து செல்லுதல்), தனக்குரிய திருவருட்சாதன முறையில், பழைய உலகம் புதிய உலகமாக மாறுவதை மீண்டும் செயல் படுத்துகிறது. தமது சாவின் வழியாக வாழ்வுக்குக் கடந்து சென்ற கிறிஸ்து இந்தப் புதிய உலகினுள் நுழையலானார். பாஸ்காச் சடங்குமுறை, யாத்திராகமத்தில் கண்டுள்ள திருப்பயணத்தின் (கடந்து சென்றதின்) நினைவு விழாவாகும். இவ்வாறு, அந்த யாத்திரையைப்போலப் பாஸ்காச் சடங்கு முறையும் ஏற்கெனவே, கடந்து செல்வது பற்றிய ஒறு சடங்குமுறையாக இருந்தது. எவ்வாறெனில், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் கிடைக்கவிருந்த விடுதலைக்குக் கடந்து சென்றது பற்றிய சடங்குமுறை அடுத்து, மேலும் மேலும் அது துன்பம், பாவம், சாவு ஆகியவற்றை உள்ளடக்கி. அடிமைத்தனத்திலிருந்து இன்பம், நீதி, வாழ்வு ஆகியவை உள்ளடங்கிய விடுதலைக்குக் கடந்துசெல்வது பற்றிய சடங்கு முறையானது. ஆனால், இந்தப் பாஸ்காச் சடங்கு முறையில், மெசியா காலத்து ஆசிகள் (நலன்கள்) நம்பிக்கையளவில் இருந்துவந்தன. மேலும், அப்பொழுது மக்கள் தாங்கள் ஆசி கூறிய உணவுப் பொருட்களைக் கொண்டு உருவகமாகத்தான் மெசியாவின் ஆசிகளை அனுபவிக்கக் கூடுமாயிருந்தது. இந்நிலை, கிறிஸ்துவின் பாஸ்காவில் மாறிவிட்டது. எவ்வாறெனில், மெசியாவின் உயிர்த்தெழுதலால் அவருடைய காலம் உள்ளபடியே வந்துவிட்டது. எனவே வாக்களிக்கப்பட்ட மெசியாவின் ஆசிகள் கிடைத்துள்ளன. வருங்கால ஆசிகளை கிடைத்துள்ளன. வருங்கால ஆசிகளை முன்னர் உருவகமாய் மட்டும் உணர்த்திய வார்த்தைகளும், சைகைகளும் இனி அவைகளை நிகழ்காலத்திய ஆசிகளாக நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடும்.

ஆகவே, நற்கருணைத் திருப்பலியில் வழங்கப்படும் உடலும் இரத்தமும், நிறைவு கண்டுவிட்ட ஒரு நிகழ்ச்சியின் உருவக நினைவுச்சின்னங்கள் மட்டுமல்ல; அவை, கிறிஸ்து வாழ்ந்துகொண்டிருக்கும் இறுதிக்கால உலகத்தின் முழு உண்மையுமாகும். திருவருட்சாதன அமைப்பு அனைத்தின் மையமாக இருப்பது நற்கருணைத்திருப்பலியாகும். இன்னும் பழைய உலகிலேயே மூழ்கி இருக்கும் விசுவாசிக்கு, திருவருட்சாதன அமைப்பு அனைத்தையும் போல், நற்கருணைத்திருப்பலியும் கிறிஸ்துவோடு சடப்பொருள்வகைத் தொடர்பை ஏற்படுத்துகிறது. இக்கிறிஸ்து புதிய, உயிர்த்தெழுந்த, ஆவிநிலையில் (காண். யோவா 6:63) கொண்டுள்ள தமது இருப்பின் முழுநிறைவோடு உள்ளவர். நற்கருணைத் திருப்பலியில் கையாளப்படுகின்ற உணவுப் பொருட்கள் தங்கள் இருப்பில் மாற்றமடைந்து, உண்மையான "விண்ணோரின் உணவு" ஆகின்றன (சங் 78:25; காண். ஞான 16:20). இதுவே, புது யுகத்தின் உணவு. இந்த உணவுப் பொருட்கள் பலிபீடத்தின்மீது பிரசன்னமாயிருப்பதைக் கொண்டு, மரித்து உயிர்த்த கிறிஸ்து பலிக்குரிய தமது நித்திய மனநிலையில் மெய்யாகவே பிரசன்னமாயிருக்கிறார். இதனால் தான், திருப்பலி பூசை ஒரு பலியாகும். இப்பலியும், வரலாற்றில் சிலுவையில் நிறைவேறிய பலியும் ஒன்றே. இத்தகைய பலியில் கிறிஸ்து தமது அன்பு அனைத்தையும் கொண்டு காணிக்கை யாகின்றார். கிறிஸ்துவே திருப்பலிப்பசையை ஏற்படுத்தியவர். வரலாற்றுப்பலியிலிருந்து திருப்பலிப்பூசை, தான் நடைபெறுகின்ற காலம், இடம் என்ற தற்செயலான சூழ்நிலைகளால் மட்டுமே வேறுபடுகின்றது. எல்லா இடங்களிலும், உலகம் முடியும் மட்டும், திருச்சபை திருப்பலிப் பூசையைக் கொண்டு மக்களின் புகழ்ச்சிப் பலிகளையும், காணிக்கைகளையும், புகழ்ச்சியும் காணிக்கையும் நிறைவுபெற்ற பலியோடு ஒன்றாகச் சேர்த்திணைக்கிறது. சுருங்கக் கூறின், இதுதான் "நற்கருணைத் திருப்பலி" (Eucharist) என்பது! இது மட்டுமே இறைவன் திருமுன் ஏற்புடையதாகும். இதுமட்டுமே மக்களின் புகழ்ச்சிப் பலிகளுக்கும், காணிக்கைகளுக்கும் மதிப்பு அளிக்கிறது (காண். எபி 13:10.15).

**நற்சான்று கூறுதல், புகழ்தல் (COMMEND)**

**புகழ்தல் அல்லது நம்பிக்கைக்கு உரியவர் என்று சான்று கூறுதல்.** தனது அப்போஸ்தல அதிகாரத்திற்குக் கொரிந்தியர்கள் சிலர் சவால் விட்டதை அறிந்த பவுல், "மறுபடியும் எங்களைப்பற்றி நாங்களே நற்சான்று கூறுகிறோமோ? அல்லது நற்சான்று கடிதங்கள்... பெற வேண்டிய தேவை எங்களுக்கு உண்டை?" (2 கொரி 3:1) என்று அவர்களை நோக்கிக் கேட்கிறார்; இல்லவே இல்லை என்று அழுத்தமாகக் கூறுகிறார். ஏனெனில், தலத்திருச்சபையாகிய "நீங்களே எங்களுடைய நற்சான்றுக்கடிதம். அஃது எங்கள் உள்ளங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இதை எல்லா மனிதரும் பார்க்கவும், படிக்கவும் கூடும். எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை எழுதியதோ மையினாலன்று; உயிருள்ள கடவுளின் ஆவியினாலே! கற்பலகையில் அன்று, உங்கள் உள்ளங்களாகிய உயிர்ப்பலகையிலே எழுதப்பட்டது!" (2 கொரி 3:1-3) என்று எழுதுகிறார்.

விவேகத்தோடு புகழ்வதைப் பவுல் தடுப்பதில்லை (காண் 4:2;6:4தொ). உண்மையில் தனக்குரிய மரியாதையைத் தராததற்காக அவர்களைக் குற்றம் கூறுகிறார் (12:11). ஆனால், தங்களைத் தாங்களே பாராட்டிக்கொள்ளும் "போலி அப்போஸ்தலர்களின்" ஒழுக்கத்திற்கு மாறான முறையைப் பின்பற்ற மறுத்துவிடுகிறார். ஏனெனில், அது அறிவீனமாகும் (10:12); அளவுக்கு மிஞ்சியதாகும்.

உண்மையான நற்சான்றுக் கடிதம் கொடுப்பதைப் பவுல் கடிந்து கொள்ளவில்லை என்று விளக்கவுரையாளர்கள் சிலர் கருதுகின்றனர். ஏனெனில் 1 கொரி 16:10-12இல்

திமொத்தேயுவைக் கொரிந்தியத் திருச்சபையிடம் பரிந்துரைக்கிறார்.

**நற்செய்தி (GOSPEL)**

I. நம்மைப் பொறுத்தவரை நற்செய்தியானது, இயேசுவின் வாழ்வை விவரிக்கும் பகுதியையோ, திருப்பலியில் வாசிக்கப்படும் அதனுடைய ஒரு பகுதியையோ குறிப்பிடுகிறது. கிரேக்க மொழியில் இச்சொல்லானது வெற்றியின் அறிவிப்பாகிய நற்செய்தியைக் குறிக்கிறது. கடவுளாகவும், மீட்பராகவும் இருந்த பேரரசருடைய வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் உரோமைச் சமாதானம் முதலியன பல்வேறு நற்செய்திகளாகப் போற்றப்பட்டன. மற்றொருபுறம் மீட்பை அறிவிப்பதற்கென, ஏற்கெனவே கொண்டிருந்த தனிப்பட்ட பொருளுடன் நற்செய்தி என்ற சொல்லானது பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்தவ மொழிமரபால் எடுத்துக் கையாளப்பட்டது என்பதில் சந்தேகமேயில்லை.

எத்தனை நற்செய்திகள் உள்ளன? நான்கல்ல, நான்கு வடிவம் கொண்ட ஒரே நற்செய்தியாகும். மத்தேயு முதலியவர்கள் எழுதிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாகும். நல்ல + செய்தி = நற்செய்தி; சு + விசேஷம். இதே பொருளில் நற்செய்தி, கிரேக்க மொழியில் "எவாங்கெலியோன்" (Evangelion) என்றும், இலத்தீன் மொழியில் "எவான்ஜெலியும்" (Evangelium) என்றும் ஆங்கிலத்தில் "காஸ்பெல்" (Gospel: Good + spel = God news) என்றும் அழைக்கப்படுகிறது. நற்செய்தி என்பது நமது ஆண்டவர் கொண்டுவந்த செய்தியைக் குறிக்கும். இதில் ஒரு தனிச் சிறப்பு உண்டு. சாதாரணமாக ஒரு தூதுவன் நமக்கு ஒரு கடிதம் கொண்டு வந்தால், அவன் அதைக் கொடுத்துவிட்டுச் சென்று விடுகிறான். அவனை நாம் மறந்து போகக்கூடும். நமக்கு வேண்டியது அவன் கொண்டு வந்த கடிதந்தான்; கொண்டு வந்தவனல்லன். நற்செய்தியின் சிறப்பு என்னவென்றால், நற்செய்தி என்பது ஆண்டவர் கொண்டு வந்த செய்தியை மட்டுமன்று, அவரையே செய்தியாகக் கொண்டுள்ளது. அவர் கடவுளின் "வார்த்தை". நற்செய்தியில் ஆண்டவரது தன்மையும், சொல்லும், செயலும் அவரை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

திருச்சபையின் தொடக்க காலத்தில், கிறிஸ்துவின் வாக்கையும் செயலையும் கொண்ட நூல்களை நற்செய்தி குறிக்கவில்லை. மாறாக, மெசியாவால் வந்த மீட்பைக் குறித்தது. மேலும், இவ்வார்த்தையைக் கிறிஸ்துவர்கள் புதிதாகப் பயன்படுத்தவில்லை. கிரேக்க மொழி பேசிய யூதர்களிடையே இவ்வார்த்தை வழக்கில் இருந்தது. பழைய ஏற்பாட்டில் எசாயா இறைவாக்குரைஞர் இவ்வார்த்தையைப் பயன்டுத்துகிறார்.

"நற்செய்தியை அறிவிக்கவும், சமாதானத்தைத் தெரிவிக்கவும், மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கவும், மீட்பைத் தெரிவிக்கவும், சீயோனைப் பார்த்து, "உன் கடவுள் அரசாளுகிறார்" என்று பறைசாற்றவும் வருகிறவருடைய மலரடிகள் மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன!" (எசா 52:7).

இந்நற்செய்தி எவ்வகைப்பட்டது? நற்செய்தி என்ற சொல் எதனைக் குறிக்கப் பயன்பட்டது? பழைய ஏற்பாட்டில் தொடர்ந்துவரும் இன்னல்களிலிருந்து கடவுள் தமது மக்களை மீட்டதை நற்செய்தி குறிக்கிறது. எசாயா தமது இறைவாக்கு நூலின் பிற்பகுதியில் அடிக்கடி இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அதில் வரவிருக்கும் மீட்பையும் கடவுளின் எதிரிகளின் மேல் கொண்ட வெற்றியுடன் கூடிய "ஆண்டவருக்கு உகந்த ஆண்டையும்" நற்செய்தி குறித்துக் கூக்குரல் ஒன்று ஒலிக்கிறது:

"பாலை நிலத்தில ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள்... சீயோனுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உயர்ந்த மலைமேல் நீ ஏறிப்போய் நில்; எருசலேமுக்கு நற்செய்தி அளிப்பவனே...! யூதாவின் பட்டணங்களுக்கு, "இதோ, உங்கள் கடவுள் என்று சொல்லி அறிவி..." (எசா 40:3-9).

பழைய ஏற்பாட்டில் நல்ல புலமை பெற்றிருந்த நமது நற்செய்தியாளர்களும் இதே பொருளில்தான் "நற்செய்தி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கின்றனர். இறைவாக் குரைஞர்களால் முன் அறிவிக்கப்பட்டு இப்பொழுது இறைமகனால் நிறைவுடன் அளிக்கப்பட்ட மீட்பைக் குறிக்கிறது நற்செய்தி. ஆகையால்தான் புனித மாற்கு "கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி" என்று தமது நூலைத் தொடங்குகிறார்.

நற்செய்தி, கிறிஸ்துவின் போதகத்தைக் குறிக்கிறது (மத் 11:5; லூக் 4:18). கிறிஸ்துவின் வாழ்வு, அவரால் நமக்கு வந்த மீட்பு ஆகியவை பற்றிய அப்போஸ்தலர்களது போதனையையும் நற்செய்தி குறிக்கிறது (அ.ப. 5:20; உரோ 1:4). இரண்டும் ஒன்றே. ஏனெனில், நற்செய்தி குறிப்பது கிறிஸ்துவையும் அவரது போதனையையுமே. இவற்றைத்தான் அப்போஸ்தலர்கள் போதித்தனர். ஆரம்பத்தில் கிறிஸ்துவின் வாழ்வு, போதனை ஆகியவற்றைக் குறித்த நற்செய்தி என்ற சொல், நாளடைவில் கலைச் சொல்லாக மாறி, கிறிஸ்துவின் வாழ்வு, போதனை ஆகியவற்றைக் கொண்டுள்ள நூலைக் குறித்தது. அதேபோல், போதித்தவரைக் குறித்த நற்செய்தியாளர் என்ற சொல் நற்செய்தி நூலை எழுதியவரைக் குறித்தது.

யூதர் அல்லாத புற இனத்தவர் இலக்கியங்களிலும் நற்செய்தி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைச் சிறிது ஆராய்ந்தால், இச்சொல்லின் முக்கியத்துவமும் சிறப்பும் நமக்குச் சிறிது விளங்கும். ஆண்டவரது காலத்தில், நற்செய்தி என்ற சொல், பேரரசன் அரசுக்கட்டிலில் ஏறிய செய்தியையோ, அரசகுமாரன் பிறப்பையோ, போரில் அடைந்த வெற்றியை அறிவிக்கும் செய்தியையோ குறித்தது. பேரரசனைப் பற்றிய செய்தியைக் கேட்ட நகர மக்கள் குருத்தோலையையும் மரக்கிளைகளையும் கையிலேந்தி உண்மையான அல்லது போலி உற்சாகத்துடன் ஆரவாரம் செய்வது வழக்கம். இதைப் பின்னணியாகக் கொண்டு நற்செய்தியை வாசித்தோமென்றால், கிறிஸ்துவின் பிறப்பை "மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி" என்று ஆண்டவருடைய தூதன் (லூக் 2:10), எருசலேம் மக்கள் கிறிஸ்துவின் வரவைத் தாவீதின் அரசு வருகிறது என்றழைத்துக் கையில் குருத்தோலை ஏந்தி ஆரவாரம் செய்ததும் (மாற் 11:8-10) நமக்கு நன்கு புரியும். ஆகையால், நற்செய்தி என்பது வெறும் சமயச் செய்தி மட்டுமன்று; அஃது ஓர் அரச செய்தியுமாகும். ஆனால், இவ்வரசு கடவுளது அரசாகும். "அமைதியின் அரசரது" வருகையையும், நமது மீட்பையும் குறிக்கும் அரச நற்செய்தியாகும் நமது நற்செய்தி நூல்கள்.

**II. பழைய ஏற்பாடு:** பகைவனின் மரணம் (2 சாமு 18:19-20.26), வெற்றி (சங் 68:12), யூதாவின் மீட்பு (நாகூ 2:1) முதலான தனிநபர் அல்லது நாட்டின் வாழ்வுபற்றிய நற்செய்தியினுடைய அறிவிப்பைக் குறிப்பிட, எபிரேயர் ஒரு சொல்லை உபயோகிக்கின்றனர். இச்சொல்லானது அதனுடைய தனிச்சிறப்பான சமய மதிப்பினை எசா 40-66-இல் ஏற்கிறது. "நற்செய்தியின் தூதுவர்" நாடு கடத்தப்படுதலின் இறுதியில், இறைவனுடைய அரசின் வருகையைப்பற்றி அறிவிக்கிறார் (எசா 52:7). அவரது செய்தியானது ஆறுதலுக்குரியதொன்று; பாவத்திற்கான மன்னிப்பு, மற்றும் சீயோனுக்குள் இறைவனின் மறுவருகை (40:1-2,9) ஆகியவை பற்றியதாகும். இந்த நற்செய்தியானது செயல் படும் இறை சக்தியாகும் (52:1-2); மலை உச்சியினின்று அறிவிக்கப்படும் (40:9); எல்லா நாடுகளுக்கும் உரியதாகும் (52:10; சங் 96:2). அது நூற்றாண்டின் எல்லையையும் கடந்து செல்கிறது. நாடு கடத்தப்பட்டதினின்று திரும்பி வருவதற்கும் மேலாக, இது இறைவனது வெற்றியையும், அவரது முடிவான ஆட்சியையும் போதிக்கிறது.

**III. இயேசு:**

**1. நற்செய்தியின் தூதுவர்:** நாசரேத்தூர் செபக்கூடத்தின் காட்சியில் இருந்ததைப் போன்று (லூக் 4:16-21), திருமுழுக்காளரால் அனுப்பப்பட்டவர்களுக்கு அளித்த தனது பதிலில் (மத் 11:4-5) இயசு, எசா 61:1-2-இன் பகுதியைத் தனக்குச் சாற்றிக் கூறுகிறார். "பரிசுத்த ஆவியாலும் வல்லமையாலும் இறைவனால் அபிடேகம் செய்யப்பட்டவராய்" (அ.ப. 10:38; மத் 3:16-17), "எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்க" அவர் வருகிறார்.

**2. நற்செய்தி:** "காலம் நிறைவேறிவிட்டது; இறையாட்சி நெருங்கிவந்து விட்டது" (மாற் 1:15); செய்தியினுடைய சாரம் இத்தகையதே. ஆனால் இச்சமயம் செய்தி அளிப்பவரே நற்செய்தியின் மையமாக அமைகிறார். இயேசு நற்செய்தியாவார் (மாற் 1:1). வானதூதர்கள் அவரது பிறப்பை நற்செய்தியாக அறிவித்தனர் (லூக் 2:10-11). அவருடன் இறைவனின் ஆட்சியும் வருகின்றது (மத் 12:28). இயேசுவிற்காகவும் நற்செய்திக்காகவும் அனைத்தையும் இழக்கின்ற மனிதன் இவ்வாழ்வில் நூறு மடங்கு பெறுவான் (மாற் 10:30). இந்த நற்செய்தியைக் கொண்டு வருபவரை மக்கள் திரள் அமுத்தி, நிறுத்திவைக்க முயல்வதையும் நாம் காண்கிறோம். ஆனால், நற்செய்தியானது பிற இடங்களுக்கும் பரவ வேண்டும். "நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" (லூக் 4:43).

**நற்செய்திக்கான பதிலுரையானது மனமாற்றமும் விசுவாசமும்** (மாற் 1:15) ஆகும். மன்னிப்பு (மாற் 2:10 இணை; 2:17) மற்றும் புதுப்பித்தலின் அருளை (மாற் 2:21-22) இறைவன் அளிக்கின்றார். தனது பாவத்தை அறிக்கையிட்டு விலக்குகின்ற மனிதனிடம், அவன் தனது வாழ்வையே இழக்கும் அளவிற்கு நற்செய்திக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பதை அவர் எதிர்பார்க்கிறார்: "தம்மையே காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அழிவுக்குள்ளாவார். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் தம்மையே காத்துக் கொள்வார்" (மாற் 8:35). நற்செய்தியால் பிறந்த இத்தகைய சீடர்கள் "எளிய மனத்தோர்" (மத் 5:3 இணை; மாற் 10:17-23), "சிறியோர்" (மத் 11:28; லூக் 9:48; 10:21), பாவிகள் (லூக் 15:1-2; 18:9-14; மத் 21:31), மற்றும் புறவினத்தார் (மத் 8:10-11; 15:21-28 இணை) முதலியோராவர் தங்களுடைய தேவையின் உணர்வு நிலையானது நற்செய்தி தோன்றுகின்ற இறை இரக்கத்திற்குச் செவிமடுக்கவும், அதை உணரவும், அவர்களை முன்கூட்டியே தயார்ப்படுத்துகிறது (மத் 9:36; 14:14 இணை; லூக் 1:41-50; 19:1-10)

**IV. அப்போஸ்தலர்கள்:**

**1.செய்தியாளர்கள்** "உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை முழுங்குங்கள்" என உயிர்த்த இயேசு தனது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடுகிறார் (மாற் 16:15). எல்லா இனங்களுக்கும் அறிவிக்குமாறும் அவர் கூறுகிறார் (மாற் 13:10). அப்போஸ்தலர் பணிநூலானது இப்போதனையின் நிலைகளை விவரிக்கிறது. தடைகளுக்கும் அப்பாற்பட்டு, "உலகின் கடை எல்லைகள் வரை" (அ.ப. 1:8) நற்செய்தியானது பரவுகிறது. ஆவியினுடைய அருளின் மூலமாகத் திருச்சபையானது நற்செய்தியைத் "துணிவுடன்" அறிவிக்கிறது (2:29; 4:13.31; 28:31). இப்பணியானது எவ்வளவு முக்கியமானதெனில், இது நற்செய்தியாளர் என்ற பெயரை அடைவதே ஒருவருக்குப் போதுமானதாகும். இவ்வாறு திருத்தொண்டர் பிலிப்பு, "நற்செய்தியாளர்" என்று அழைக்கப்படுகிறார் (அ.ப. 21:8; எபே 4:11; 2 திமொ 4:5).

**2.செய்தி:** நற்செய்தியானது எப்போதுமே இறைவனுடைய அரசைப் பற்றியதாகும் (அ.ப. 8:12; 14:21-22; 19:8; 20:25; 28:23).

"முன்னோருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறி விட்டது" என அது போதிக்கிறது (13:32). இது மன்னிப்பின் அருள்; ஆவியின் கொடை (2:38; 3:26; 10:43; 13:38; 17:30). ஆனால், இனிமேல் சம அளவில் அது "இயேசுவினுடைய" (8:35; 17:18), "இயேசு கிறிஸ்துவின் பெயரினுடைய" (8:12), "ஆண்டவராகிய இயேசுவினுடைய" (11:20) மற்றும் "இயேசு கிறிஸ்துவிலான சமாதானத்தினுடைய நற்செய்தி" (10:36) என்றும் அழைக்கப்படலாம். கிறிஸ்துவின் உயிர்ப்பானது நற்செய்தியின் மையமாக உருவாகிறது.

**3. நற்செய்தியைப் பெறுதல்:** நற்செய்தியானது இயேசுவால் வாக்களிக்கப்பட்ட அடையாளங்களுடன் இணைந்துள்ளது (மாற் 16:17; அ.ப. 4:30; 5:12, 16; 8:6-8; 19:11-12). வறுமை, எளிமை, சமுதாய அன்பு மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றின் சூழலில் அது பரப்பப்படுகிறது (2:46; 5:41; 8:8.39). "இறைவனுடைய வார்த்தையைக் கேட்க ஆசிப்பதிலும்" (13:7,12), காப்பாற்றப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கான ஆர்வத்திலும் (16:29-30) ஒரு மனப்பட்ட இதயங்களை நற்செய்தியானது எல்லா இடங்களிலும் சந்திக்கின்றது. செவி மடுத்தல் (2:22. 37; 3:22-23), பெறுதல் (8:14; 11:1; 17:11) மற்றும் கீழ்ப்படிதல் (6:7) என்னும் பொதுவான குணங்களை அவை கொண்டுள்ளன. மற்றொரு புறம் இறுமாப்பான தற்செருக்கு (13:41), பொறாமை (13:45-46) மற்றும் நிலையற்ற தன்மை (17:32) முதலியன மனிதரின் இதயங்களை நற்செய்திக்கு மூடிவைக்கின்றன.

**V. புனித பவுல்**

**1. தூதுவர்:** ஒப்பிட முடியாத அளவிற்குப் பவுல் நற்செய்தியின் மனிதராவார். நற்செய்தியை அறிவிப்பதற்கென இறைவன் அவரைத் தனியே ஒதுக்கி வைத்தார் (உரோ 1:1). புறவினத்தாரிடையிலும் தனது மகனைப்பற்றி அவர் அறிவிப்பதற்கென இறைவன் தனது மகனை அவருக்கு வெளிப்படுத்தினார் (கலா 1:15-16). இறைவன் நற்செய்தியை அவரிடம் ஒப்படைத்தார் (1 தெச 2:4). நற்செய்தியின் பணியாளர் என்ற முறையில் (கொலோ 1:23), பவுல் அதனைக் கண்டிப்பாகப் போதிக்க வேண்டும் (1 கொரி 9:16). இவ்வாறு செய்வதன் வாயிலாக அவர் இறைவனுக்கு "ஓர் ஆன்மீக வழிபாட்டை" அளித்து (உரோ 1:9), புனிதப்பணியைச் செயற்படுத்துகின்றார் (உரோ 15:16).

**2. செய்தி:** பவுல் இந்நற்செய்தியை வெறுமனே "நற்செய்தி" அல்லது "இறைவனுடைய," "அவரது மகனும் நமது ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய" (உரோ 1:3-5,9), "கிறிஸ்துவினுடைய" (உரோ 15:19-20; 2 கொரி 2:21), "கிறிஸ்துவின் மகிமையினுடைய" (2 கொரி 4:4) அல்லது அவரது "ஆழங்காண முடியாத செல்வங்களினுடைய" (எபே 3:8) நற்செய்தி என்று குறிப்பிடுகிறார்.

**அ) மீட்பின் வல்லமை:** அனைத்துத் திருச்சபையைச் போன்று பவுலின் நற்செய்தியானது கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்ப்பை மையமாகக் கொண்டுள்ளது (1 கொரி 15:1-5). ஆனால், அஃது ஒரு தனிச்சிறப்பான ஆற்றலுடன் மகிமை மிக்க வருகையை நோக்கி அது திருப்பப்பட்டுள்ளது (1 கொரி 15:22-28). அப்போஸ்தலிக்கப் போதனை மற்றும் அதற்கு உள்ளார்ந்த இறை ஆற்றல் ஆகியவற்றால் போதிக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட அளவில் இது மீட்பின் புதிய திட்டமாக உள்ளது. "இது மீட்பளிப்பதற்குக் கடவுளின் வல்லமையாய் உள்ளது" (உரோ 1:16). "இந்த நற்செய்தி உலகம் முழுவதும் பரவிப்பயனளித்து வளர்ந்து வருகிறது" (கொலோ 1:6). திருச்சபைகளின் வியத்தகு வளர்ச்சி, அருட்கொடைகளின் அளவற்ற நிலை, கரைகடந்த ஆன்மீக மறுமலர்ச்சி ஆகிய அனைத்தும் அப்போஸ்தலருடைய இயற்கைக்கு மேற்பட்ட உறுதிமொழியுடன் ஒன்றிணைந்து

உலகை வெல்லக்கூடிய இயேசுவின் வல்லமையின் சாட்சியமாக அமைகின்றன (கலா 3:5; 4:26-27; 2 கொரி 2:12; 3:4; 1 தெச 1:5). பவுல் தனது கரங்களால் உழைத்து, "கிறிஸ்துவின் நற்செய்திக்கு எந்தத் தடையும் ஏற்படாதபடி எல்லாவற்றையும் தாங்கிக்கொள்கிறார்" (1 கொரி 9:12).

**ஆ. மறைநூல் நிறைவேறுதல்:** பழைய ஏற்பாட்டுடன் நற்செய்தியின் தொடர்ச்சியைப் பவுல் வலியுறுத்துகிறார். "ஊழி ஊழிக்காலமாக மறைவாயிருந்து இப்பொழுது வெளியாக்கப்பட்டு முடிவில்லாக் கடவுளின் திட்டத்திற்கொப்ப, புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவாசிக்குமாறு இறைவாக்குகளின் மூலமாய் அறிவிக்கப்பட்ட மறைபொருளை வெளிப்படுத்தும் நற்செய்தியே இது" (உரோ 16:25-26). ஆபிரகாமுடன் செய்யப்பட்ட வாக்குறுதியானது (ஆதி 12:3), ஒரு முன் நற்செய்தியாகும். புறவினத்தாரின் மனமாற்றத்தில் அஃது இப்போது நிறைவு பெறுகிறது (கலா 3:8; எபி 3:6).

**3. நற்செய்திக்கான மனிதப் பதிலுரை:**

மனிதர்கள் விசுவாசத்துடன் பதிலுரைக்கும் போது மட்டுமே நற்செய்தியானது தனது காக்கும் வல்லமையைச் செயற்படுத்த முடியும்; "மீட்பளிப்பதற்கு அது கடவுளின் வல்லமையாய் உள்ளது... ஏற்புடையவர்களாக்கும் இறையருட் செயல்முறை அந்த நற்செய்தியிலேயே வெளிப்படுகிறது" (உரோ 1:16-17; 1 கொரி 1:18,20). இது விரும்பித் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். வலிமையற்றதாய்த் தோன்றுவதில் அது தன்னுடைய காக்கும் வல்லமையை வெளிப்படுத்தி, சிலுவையின் மறைபொருளை நீட்டிப்பதால் (1 கொரி 1:17-2:5), சிலருக்கு இஃது ஓர் இடராகவும் முட்டாள்தனமாகவும் உள்ளது (1 கொரி 1:18,21,23: உரோ 9:32-33 கலா 5:11). மேலும், இது மறைத்து வைக்கப்பட்டதாகவும் உள்ளது. "இவ்வுலகத் தெய்வத்தால் குருடாக்கப்பட்ட இம்மனிதர்கள், கிறிஸ்துவினுடைய மாட்சிமை விளங்கும் நற்செய்தியின் ஒளியைப் பார்ப்பதில்லை" (2 கொரி 4:4). அவர்கள் அதற்குச் கீழ்ப்படிவதில்லை (2 தெச 1:8). ஆனால், மற்றவர்கள் "விசுவாசத்தின் கீழ்ப்படிதலில்" நற்செய்தியைப் பெறுகின்றனர் (உரோ 1:5; 2 கொரி 10:5). நற்செய்தியின் அருளில், அவர்கள் "அருளின் நற்செய்திக்குத்" தங்களையே திறக்கின்றனர் (அ.ப. 20:24).

**VI. புனித யோவான்:** யோவானின் நற்செய்தியோ, திருமுகங்களோ நற்செய்தி என்ற சொல்லை உபயோகிப்பதில்லை. வாக்கு மற்றும் சாட்சி என்பன அதன் இடத்தை ஏற்கின்றன. அவற்றினுடைய பொருளானது உண்மை, வாழ்வு மற்றும் ஒளியாகும். இறையரசின் இறுதி வருகையினுடைய நற்செய்தியாகிய "முடிவில்லா நற்செய்தியை உலகில் வாழ்வோருக்கு அறிவிப்பதற்கென ஆகாயத்தில் பறக்கும் வானதூதரைப் பற்றிய" ஒரு காட்சியை யோவான் திருவெளிப்பாட்டில் கொண்டுள்ளார் (14:6-7).

**VII. முடிவுரை:** இரண்டாவது நூற்றாண்டில் நற்செய்தி என்ற சொல்லானது இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைகளின் எழுதப்பட்ட பகுதிகளைக் குறிப்பிடத் தொடங்கியபோது, இச்சொல் தன்னுடைய மூலப்பொருளை இழந்துவிடவில்லை. கிறிஸ்துவிலான மீட்பின் நற்செய்தியையும், இறையரசையும் அது தொடர்ந்து உணர்த்துகிறது. இரனேயுவின் கூற்றுப்படி, "அப்போஸ்தலர்கள் முதலில் இந்த நற்செய்தியைப் போதித்தனர். பின்னர், இறைவனின் சித்தப்படி, நமது விசுவாசத்தின் அடிப்படையாகவும் தூணாகவும் அஃது உருவாகும்படி, அவர்கள் அவற்றை இறைவாக்குகளில் நமக்கு அளித்தனர்." "புனித நற்செய்தியின் தொடர்ச்சி" என்ற சொற்களைக் குருவோ, திருத்தொண்டரோ விளம்பும்போது, அவர்கள் இறைவாக்கினரும், அப்போஸ்தலரும் செய்தது போன்று, இயேசு கிறிஸ்துவிலான மீட்பின் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கின்றனர். திருவழிபாட்டுப் பதிலுரைகளில்

"ஆண்டவரே உமக்கு மகிமை! கிறிஸ்துவே, உமக்குப் புகழ்!" என்ற சொற்களின் பொருளுக்குக் கவனமாக இருந்தால், நற்செய்தியினுடைய புதிய தன்மையோடு உலகின் முதல் சந்திப்பினுடைய ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் நாம் கண்டடைகிறோம்.

### நற்செய்தி அறிவிப்பவர் (EVANGELIST)

இஃது ஒரு பட்டம், பதவியன்று; செய்கின்ற பணியின் பேரில் வருவது; தொடக்க காலத்திருச்சபையில் நற்செய்தியை அறிவித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தச் சொல்-கிறிஸ்தவ இலக்கியத்திற்கு வெளியே அவ்வளவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இது "ரோதே" கல்வெட்டிலே காணப்படுகிறது. இவர் புறவினச்சமயம் பற்றிப் பேசும் ஓர் அறிவிப்பாளர். புதிய ஏற்பாட்டில், இந்தச்சொல் மூன்று இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. அ) அ.ப. 21:8-இல் எழுவரில் ஒருவரான பிலிப்பைக் குறிப்பிடுகிறது. ஆ) எபே 4:11-இல் "அவர் தம் 'கொடைகளை' அருளி, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியின் தூதர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார்" என்று உள்ளது. மேலும், இ) 2 திமொ 4:5-இல் நற்செய்தித் தொண்டனுக்குரிய வேலையைச் செய்யும் என்று உள்ளது. இதைப்பற்றி 1 தெச 3:2-இல் "கிறிஸ்துவினுடைய நற்செய்தியை அறிவிப்பதில் கடவுளின் உடனுழைப்பாளரான சகோதரர் திமொத்தேயு" என்ற குறிப்பு உள்ளது.

தொடக்க காலத்தில், அப்போஸ்தலர்களின் பணி, நற்செய்தி அறிவிப்பாளர்களின் பணியிலிருந்து அதிகம் வேறுபடுத்தப்படவில்லை (கலா 1:8). பிறகு வந்த கிறிஸ்தவப் பயன்பாட்டின்படி, நற்செய்தி அறிவிப்பாளர்கள் அப்போஸ்தலர்களின் சீடர்களாக அல்லது அவர்களைப் பின்பற்றியவர்களாகக் கருதப்பட்டனர் என்பது தெளிவாகிறது. இந்தப் பொருளில் தான், திதாக்கே 11.4-6-இல் உள்ள நடமாடும் அப்போஸ்தலரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்செய்திகளின் ஆசிரியர்களே-'நற்செய்தி அறிவிப்பாளர்கள்' என்று கருதுவது மூன்றாம் நூற்றாண்டு எழுத்தாளர்களிடையே முதன்முதலில் தோன்றுகிறது. இந்த வரையறுக்கப்பட்ட நோக்கு, இப்போலித்து, தெர்துல்லியன் ஆகியோரின் நூல்களில் காணப்படுகிறது. ஆனால், இந்த நான்கு நற்செய்திகளையும் திருவெளி 4:7-இல் உள்ள நான்கு வாழும் உயிரினங்களோடு பொருத்திக்காட்டுவது, இரனேயுவின் நூலில் காணப்படுகிறது. அதில் சிங்கம் = யோவான், மாடு = லூக்கா, மனிதன் = மத்தேயு, கழுகு = மாற்கு என்றுள்ளது. ஆனால், கிறிஸ்தவக் கலை யோவானுக்கும் மாற்குக்கும் உரிய அடையாளங்களை மாற்றிவிட்டது.

இந்த "நற்செய்தி அறிவிப்பாளர்கள்" என்ற சொல், வளர்ந்த திருச்சபையிலும், வழிபாடுகளிலும், சிறப்பான பொருளிலும் காணப்பட்டது. கி.பி. 300-ஐ ஒட்டி, எகிப்தில் உருவாக்கப்பட்ட, அப்போஸ்தலர்களின் திருச்சபை அமைப்பு என்ற நூல் வழிபாட்டில் வாசிப்பவர் நற்செய்தி அறிவிப்பாளரின் பணியைச் செய்கிறார் என்று கூறுகிறது. கிறிசோஸ்தமின் வழிபாட்டு நூலில் தியாக்கோன் "நற்செய்தி அறிவிப்பாளராக" விளக்கப்படுகிறார்.

### நற்செய்திகளின் ஒருங்கமைவு (HARMONY OF THE GOSPHELS)

நற்செய்திகளுக்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை அறிய, நற்செய்திகளை ஒருங்கமைவு செய்வது நல்லது. ஆரம்ப காலத்தில் அதாவது 1537- முதல், ஓசியாண்டர் என்பவரால் நான்கு நற்செய்திகளும் ஒருங்கமைவு செய்யப்பட்டன. பின்னர், காலப்போக்கில், யோவான் எழுதிய நற்செய்தியைத்தவிர மற்ற மூன்று நற்செய்திகள் மட்டுமே ஒருங்கமைவு செய்யப்பட்டன. ஏனென்றால் மாற்கு, மத்தேயு,

லூக்கா ஆகிய மூவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நற்செய்திகளின் ஒருங்கமைவுக்கு முன்னோடிகள் சில இருக்கின்றன. அவை பின்வருமாறு: அ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தேசியன் என்பவரால் எழுதப்பட்ட தியாதெசரோன். ஆ) கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அமோனியு என்பவரால் எழுதப்பட்ட தியாதெசரோன். இ) யூசேபியு என்பவர் எழுதிய பத்துப் பட்டியல்கள்.

### நற்செய்தியாளர் யோவானின் நூல் (JOHN, THE EVANGELIST, BOOK OF)

இஃது அல்பிசென்சிய பிரிவினரால் பயன்படுத்தப்பட்ட நூலாகும். பொதுவாக இது பொகோமிலசிலிருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. இஃது, இயேசுவுக்கும், யோவானுக்கும் இடையே நடந்த கேள்வி, பதில்கள் கொண்டவையாக உள்ளது. உயிர்ப்பிற்குப் பிறகு, ஒரு சீடரோ, ஆண்டவரின் சீடர்களோ இவ்வாறு கேள்விகள் கேட்பது பொதுவாக நடைமுறைக்குரியது. பார்த்தலமேயு நற்செய்தியில் மட்டும் அன்று, பல பழைய ஞானவாத நூல்களிலும் இது காணப்படுகிறது. ஒரு பகுதி கோப்திக்கு பெர்லின் புல்தாள் ஏடுகளிலும், எகிப்திலுள்ள செனபோஸ்கின் என்ற இடத்தில் 1946-இல் கண்டு பிடிக்கப்பட்ட ஞானவாத ஏடுகளிலும் காணப்படுகிறது.

நற்செய்தியாளர் யோவானின் நூல் இவ்வகையைச் சேர்ந்தது மட்டுமன்றி, ஞானவாத மற்றும் மார்சியன் நூல்களில் காணப்படும் இருமைக்கோட்பாட்டையும் கொண்டுள்ளது. இதன்படி, இந்த உலகம் உருவானது கடவுளால் அன்று, மகிமையிலிருந்து வீழ்ச்சியுற்று, பலமற்ற வானதூதர்களையும் தன்பால் கவர்ந்துகொண்ட சாத்தானால் உருவானது. கிறிஸ்து மரியாளிடமிருந்து பிறக்கவில்லை. அவள் ஒரு வானதூதராவாள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள உலகிற்கு அனுப்பப்பட்டவள். கிறிஸ்து மரியாளின் காதினுள் நுழைந்து, காதின் வழியே வெளியில் வந்தார். திருமுழுக்கு யோவான் சாத்தானால் அனுப்பப்பட்டார். அவரது சீடர்கள் உண்மையிலே கிறிஸ்துவின் சீடர்களே அல்லர். திருமுழுக்கு, ஆண்டவரின் இராவுணவு எல்லாம் மதிப்பற்றவை. திருமுழுக்கு குறைவுள்ளது, உண்மையான கிறிஸ்துவின் சீடர்கள் திருமணம் செய்வதில்லை. இதில் அவர்கள் திருமுழுக்கு யோவானின் சீடர்களிடமிருந்து வேறுபட்டவர்கள்.

ஞானவாதக்கோட்பாடு இறையியலின் இந்த விநோதமான பதிப்பு, இறுதித் தீர்ப்போடு முடிகிறது. இக்கருத்தைப் பொறுத்தமட்டும் பரம்பரையான போதகத்தைக் கொண்டுள்ளதும், தவறுகள் இல்லாமையும் இந்நூலில் பிறரது தலையீட்டைச் சுட்டுகின்றன.

இந்த நூல் இலத்தின் மொழியில் மட்டும் தான் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கப் பதிப்பு ஏழு நூற்றாண்டுக்கு முன்பாக இருக்க வாய்ப்பு இருந்தாலும், இப்போது நமது கையில் இருக்கும் பதிப்பு, பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பாக இருக்காது என்று கருதப்படுகிறது.

### நற்செய்தியின் தோற்றம் (ORIGIN OF THE, GOSPEL)

1. நற்செய்தியின் நான்கு நூல்களும் ஒரே காலத்தில் எழுதப்பட்டவை அல்ல; ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவையுமல்ல. இயேசுவின் இவ்வுலக வாழ்வு முடிந்து பத்து ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் நற்செய்தி முதன் முறையாக எழுத்து வடிவம் எடுத்திருக்கக்கூடும். நாம் கொண்டிருக்கும் வடிவில் முதல் நற்செய்தி எழுதப்படுமுன் இருபது ஆண்டுகளாவது கடந்திருக்க வேண்டும். நற்செய்தி எவ்விதம் தோன்றியது? நேரடியாக எழுதப்பட்டதா? என்பனவற்றைப்பற்றி இப்போது சிறிது காண்போம். இவ்வாராய்ச்சியில் நமக்குத் துணையாக இருப்பவை 1962-ஆம் ஆண்டு பாப்பரசு விவிலியக் குழுவிடுத்த அறிக்கையும், அவ்வறிக்கை பற்றி மறைநூல் வல்லுநர் கர்தினால் அகுஸ்தீன் பெயர் எழுதிய நூலுமாகும்.

நற்செய்தி நமக்கு அளிக்கப்பட்ட வரலாற்றில் மறைநூல் அறிஞர்கள் மூன்று நிலைகள் அல்லது

படிகளைக் காண்கின்றனர். அவை: (1) இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குப் போதித்துப் பயிற்சி அளித்தது; (2) அப்போஸ்தலர்கள் ஆற்றிய அலுவல்; (3) நற்செய்தியாளர் ஆற்றிய பணி. இவை ஒவ்வொன்றையும் பற்றி சிறிது பார்ப்போம்.

**2. இயேசுவின் பாகம்:** "காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கி விட்டது. மனந்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15) என்ற பறை சாற்றலுடன் கிறிஸ்து தமது மீட்பின் அலுவலைத் தொடங்கினார். பாலஸ்தீன நாடு முழுவதும் போதித்தார். கிறிஸ்து சீடர்களைத் தேர்ந்தெடுத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டார் (மாற் 3:14; லூக் 6:13). அவர்கள் அவரது பணியின் தொடக்கத்திலிருந்து அவரைப் பின் சென்றனர் (லூக் 2:2; அ.ப. 1:21-22); அவரோடு உண்டும் வாழ்ந்தும் வந்தனர்; அவரது செயல்களைப் பார்த்தனர்; அவரது போதகங்களைக் கேட்டனர். இவ்விதமாக, கிறிஸ்துவின் வாழ்வு, போதனை, செயல்கள் ஆகியவை பற்றிச் சாட்சி பகர்வதற்குத் தயார் செய்யப்பட்டனர் (யோவா 15:27; அ.ப. 1:8; 10:39; 13:31). ஆண்டவர் வாய்மொழியில் தமது போதனைகளை விளக்கியபோது, அக்காலத்தில் வழக்கிலிருந்த சிந்திக்கும் மாதிரியையும், விளக்கும் முறையையும் கையாண்டார்; செவிசாய்ப்போரின் மனப்போக்குக்கும் தேவைக்கும் ஏற்ப, தமது போதகத்தை அமைத்துக் கொண்டார்; எளிய உவமைகளையும் பயன்படுத்தினார். பிறருக்கு உவமைகளில் போதித்தாலும், தமது சீடர்களுக்கு அவ்வுவமைகளை விளக்கி அவர்கள் உண்மைப் பொருளைக் கண்டுணரும்படிச் செய்தார். தாம் போதித்தவைகள் சீடர்களின் மனதில் ஆழமாயும், உறுதியுடனும் பதியவும், அவைகளை அவர்கள் எளிதாய் நினைவில் இருத்திக்கொள்ளவும் துணை செய்யும் வழிமுறைகளைக் கிறிஸ்து கையாண்டார். கிறிஸ்துவின் அருஞ்செயல்களும், அவரது வாழ்வின் மற்றச் செயல்களும் போதனைகளும், மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, மீட்பின் போதகத்தை ஏற்றுக்கொள்ளுவதற்காகத்தான் செய்யப்பட்டன என்று சீடர்கள் அறிந்து கொண்டனர்.

இவ்விதம் தமது மீட்புப் பணியைத் தொடர்ந்து நடத்தும்படிக்கு அப்போதஸ்தலர்களைக் கிறிஸ்து தயாரித்தார். இந்தத் தயாரிப்பில் நற்செய்தியின் தோற்றம் தொடங்குகிறது.

**3. அப்போஸ்தலர்களின் பாகம்:** இயேசு, பாடுபட்டு மரித்து உயிர்த்தபின்னும் வேத நூல்களை விளக்கி, மேலும் தமது அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சி அளித்தார். தமது வாழ்வின் பல நிகழ்ச்சிகளுக்கும் விளக்கம் அளித்தார்; "உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் அணிந்து கொள்ளும்வரை (எருசலேம்) நகரிலேயே தங்கி இருங்கள்" (லூக் 24:49) என்றும், "பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது, அவரது வல்லமையைப்பெற்று எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அ.ப. 1:8) என்றும், "உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" (மாற் 16:15) என்றும் அவர்களிடம் கூறினார் கிறிஸ்து.

அப்போஸ்தலர்களும் இக்கடமையைத் தலைமேற்கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தனர்; கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்ந்தனர். எதற்குச் சாட்சி பகர்ந்தனர்? கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சாட்சி பகர்ந்தனர் (2 திமொ 2:8). இப்படிச் சாட்சி பகரும்போது மரித்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்க்கும் முன் நடந்த அவரது பாடுகள், போதனைகள், அவரது வாழ்வு ஆகியவை பற்றி அழுத்தந்திருத்தமாக விளக்கம் தர அவசியம் ஏற்பட்டது. ஆகையால் ஆண்டவரது இறைப்பையும், உயிர்ப்பையும் அப்போஸ்தலர்கள் பறை சாற்றியபோது தங்களுக்குச் செவிசாய்ப்போரின் சூழ்நிலைக்கு ஏற்ப கிறிஸ்துவின் வாழ்வு, போதனை

ஆகியவற்றைப் பிரமாணிக்கமாய் விளக்கினர். இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தபின் அவரது இறைத்தன்மையை அவர்கள் தெளிவாய்க் கண்டுணர்ந்தனர். பகுத்தறிவுவாதிகள் சிலர் கூறுவது போல் கிறிஸ்துவின் உயிர்ப்பு அப்போஸ் தலர்களது விசுவாசத்தின் கற்பனையால் உண்டாக்கப்பட்டது அன்று. இந்த உயிர்ப்பு, அவரது வாழ்வில் முன் நிகழ்ந்தவற்றைப் பற்றிய நினைவை அழிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு விசுவாசத்தை அளித்தது; அவரது செயல்கள், போதனை ஆகியவற்றின் செய்தது. இயேசு, கடவுளின் மகன் என்ற முறையில் சீடர்கள் அவருக்கு அளித்த வணக்கம், அவரைப் "புராணக்" கதாநாயகனாக மாற்றவில்லை. அதற்கு மாறாகக் கிறிஸ்துவின் மகிமை நிறைந்த நிகழ்ச்சிகளால் போதிக்கப்பட்டும், உண்மையாகிய பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்படும், அவரது சொல், செயல், வாழ்வு ஆகியவை பற்றிய உண்மைகளை அப்போஸ்தலர்கள் தங்களுக்குச் செவி சாய்ப்போருக்குக் கையளித்தனர். கிறிஸ்து தமது உயிர்ப்புக்குப்பின் தம்மைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் வாக்கியங்களை விளக்கிக் காண்பித்ததுபோல், அப்போஸ்தலர்களும் தங்களுக்குச் செவிசாய்ப்போரின் தேவைக்கு ஏற்ப, ஆண்டவரது சொல், செயல் ஆகியவற்றை விளக்கினர். ஆண்டவரது பேச்சு முறை, உவமை, உருவகம், இலக்கிய அமைப்புகள் ஆகியவற்றைத் தங்களது போதக முறையிலும் கையாண்டனர். அவர்களது போதகத்தில் அக்கால மக்கள் பயன்படுத்திய ஞான உபதேசமுறை, கதைகள், காட்சிகள், பாடல்கள், புகழ்ப்பாடல் தொகுதிகள், செபங்கள், இவை போன்ற இலக்கிய அமைப்புகள் காணக்கிடக்கின்றன. இச்சாதனங்களின் உதவியால் கிறிஸ்துவின் இறப்பையும், உயிர்ப்பையும் மக்களுக்குப் பறைசாற்றினர். ஏனெனில், அவர்கள் தங்களைக் "கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதாருக்கும், அறிவுள்ளவர்களுக்கும் அறிவில்லாதவர்களுக்கும் கடமைப்பட்டவர்களா கவும்" (உரோ 1:14) "எல்லார்க்கும் அடிமையாகவும்" கருதி (1 கொரி 9:19-23), "தேவ வார்த்தையைப் போதிக்கும் பணிக்கும்" (அ.ப. 6:4) தங்களையே அர்ப்பணித்தனர்.

அப்போஸ்தலர்களது போதகத்தைப் பற்றிச் சிலவற்றை நாம் எண்ணிப்பார்ப்பது நல்லது. அவர்களது போதகம், தற்காலக் கருத்துப்படி காலவரையறையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறன்று. இப்படிப்பட்ட வேலையைக் கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு அளிக்கவில்லை; அவர்களது நோக்கமும் அஃதன்று என்பது நற்செய்தியை மேலெழுந்தவாறாகப் படித்தாலே புரியும். ஆனாலும் நற்செய்தி சரித்திர அடிப்படை கொண்ட வாழ்க்கை வரலாறு ஆகும். சரித்தரம் என்றவுடனே, பலர் பள்ளிகளிலும், வரலாற்று ஆராய்ச்சியிலும் பயன்படும் வரலாற்று ஆராய்ச்சி ஏடுகளை நினைத்து நற்செய்தியைத் தவறாகப் புரிந்து, நகைப்புத்தரும் பலவகையான கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் இங்குக் கவனிக்க வேண்டியது, யாருக்கு அப்போஸ்தலர்கள் போதித்தனர் என்பது. அப்போஸ்தலர்களுக்குச் செவி சாய்த்தவர்களில் பெரும்பாலோர் பாமர மக்கள்; எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்; பொருளாதாரத்திலும் தாழ்ந்தநிலையில் இருந்தவர்கள். நமதுநாட்டுச் சுதந்தரப் போராட்டத்தைப்பற்றி, நமது சாதாரண மக்களுக்கு விளக்கிக் கூறும்போது, கல்வி பயிற்றுவோர் என்ன செய்வர்? நாட்குறிப்புகளுடனும், புள்ளி விவரங்களுடனும் சுதந்திரப் போராட்டத்தை விளக்குவார்களா? அவற்றைப் பொதுமக்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களுக்கு வேண்டியது காந்தியடிகள் என்ன செய்தார்? என்ன சொன்னார்? எவ்விதம் மக்களை ஒற்றுமைப்படுத்தினார்? மற்றத் தலைவர்கள் செய்தது என்ன? இந்த ஊரில் இந்தத் தியாகி என்னென்ன செய்தார்? அந்த ஊரில் எப்படிச் சுதந்தரப் போராட்டம் உருவெடுத்தது போன்றவையே. அவர்களுக்குக் காலவரையைப் பற்றிக் கவலையில்லை. நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் முன்பின்னாக இருக்கலாம்.

ஆனால், வேண்டுவது சுதந்தரப் போராட்டத்தைப் பற்றிய அவர்களுக்கு ஏற்ற வரலாறு. இவ்விதமே கிறிஸ்துவின் வாழ்மைப்பற்றியும் அப்போஸ்தலர்கள் தங்களுக்குச் செவிசாய்த்தவர்களிடம் போதித்தனர். பாமர மக்களின் மன வளர்ச்சிக்கு ஏற்ப கிறிஸ்துவைப் பற்றிப் போதித்தனர். ஆகையால் நற்செய்தியில், நாம் இக்காலத்தில் கருதுவதுபோல் வரலாற்று ஏடுகளையோ, ஆய்வுப்பதிவேடுகளைப்போன்ற அதிகாரக் குறிப்பேடுகளையோ எதிர்பார்ப்பதோ, புகைப்படம், ஒலிப்பதிவு செய்யும் பொறி ஆகியவற்றில் காணப்படும் துல்லியம், தெளிவு முதலியவற்றை எதிர்பார்ப்பதோ, தவறான முறையில் நற்செய்தியைப் புரிந்து கொள்வதாகும். அப்போஸ்தலர்கள் விரும்பியதெல்லாம், நாசரேத்து ஊராராகிய இயேசுவின் வாழ்க்கை பற்றிய செயல்களை அவரது போதகத்தின் சூழ்நிலையில் பாதுகாப்பதாகும்.

கிறிஸ்துவுக்குச் சாட்சி சொல்லும் மகத்தான கடமையை மேற்கொண்ட அப்போஸ்தலர்கள் பேசும் இயந்திரம்போல் தங்களது போதகத்தை அளிக்கவில்லை; உயிருள்ளவிதத்தில் அளித்தனர். இவர்கள், கிறிஸ்துவின் வாழ்வு, சொல், செயல் ஆகியவை பற்றிய நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டும் ஒற்றுமை கொண்டிருந்தனர். ஆனால், இவர்கள் போதித்த விதமோ ஒருவருக்கொருவர் வேறுபட்டது. இஃது இயற்கை தானே? ஏனெனில், இவர்கள் கிறிஸ்துவை நேரில் பார்த்து அவரது திருவாய் மொழிகளைக் கேட்ட சாட்சிகள். கிறிஸ்துவின் ஆட்தன்மை, செயல், போதகம் ஆகியவை பற்றி நேரடியாக வெவ்வேறு விதத்தில் அனுபவித்து உணர்ந்தவர்கள். அவர்களது கவனத்திலும் நினைவாற்றலிலும் வேறுபாடு இருந்தது. இந்த வேறுபாடு அவர்கள் போதித்த விதத்திலும் விளக்கிய முறையிலும் பிரதிபலித்தது. அதன் விளைவாக நற்செய்தியாளர்கள் பெற்ற உயிருள்ள "பரம்பரை"ப் போதகம் பல வடிவங்களைக் கொண்டிருந்தது. நற்செய்தியின் முதல் மூன்று நூல்களை ஆராய்ந்தால், அவை ஒரே வகையான வாய்மொழிப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது விளங்கும். கிறிஸ்துவின் வாழ்வு, செயல், போதகம் பற்றிய பலவற்றில் ஒற்றுமையிருந்தாலும், சொல்லப்பட்ட வாக்குகளிலும் நிகழ்ச்சிகளிலும் வேறுபாடு இருப்பதுடன் சொல்லும் விதத்திலும், நோக்கும் விதத்திலும், வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. இக்கருத்தை மனதில் கொண்டிருந்தால், நற்செய்தியில் வேறுபாடுகளைக் காணும்போது மலைக்க மாட்டோம். சிறிதோ பெரிதோ, வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, அவ்விடங்களில் புதைந்துள்ள உயிரளிக்கும் உண்மைகளைக் கண்டுணர்வோம்.

புதிய சூழ்நிலைகளும், நிகழ்ச்சிகளும், சிக்கல்களும் எழுந்தபோது, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் செய்தியையும் வாழ்வையையும் ஆழ்ந்து தியானித்து, கிறிஸ்துவின் செய்தியைப் பொருளிலோ பொருளடக்கத்திலோ குறைவின்றி, அந்தந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும்படி சரியான விதத்தில் விளக்கினர். இவ்விளக்கம் செவி சாய்ப்போரின் சூழ்நிலைக்கேற்ப மாறியது. செவிசாய்ப்போரின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப கருத்துகளை அழுத்திக் கூறினர். செவிசாய்ப்போரின் முன்னைய மதக்கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தவும், திருத்தவும், தீய பழக்க வழக்கங்களை வேரறுக்கவும் நல்லதும் பயனுள்ளதுமான போக்குகளையும் குறிக்கோள்களையும் தூண்டுவதற்கும் சாதகமானவற்றை மட்டும் சமயத்திற்கேற்ப, கிறிஸ்துவின் சொல், செயல் ஆகியவற்றிலிருந்து பொறுக்கி எடுத்துக் கூறினர் அப்போஸ்தலர்கள்.

செவிசாய்ப்போரின் தன்மை அப்போஸ்தலர்களின் போதனை முறையை வரையறை செய்தது. முக்கியமான சில நிகழ்ச்சிகளையும், சில உரைகளையும் மட்டுமே ஞான உபதேச வடிவில் கொடுக்கும்படி நேரிட்டது. விளக்கங்களும் ஒரு தனி வடிவம் எடுத்தன.

செவிசாய்ப்போரின் உள்ளத்தில் உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் பதியச் செய்ய நினைவுக் குறியீட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இதனை 2, 3, 5, 7முதலிய எண்களைப் பயன்படுத்துவதிலும், கிறிஸ்துவின் அறவுரைகளையும் வாக்குகளையும் இணைக்கும் தூண்டு சொற்களிலும், அவரது போதகங்கள் (மத் 6, 7, 10 அதிகாரங்கள்) உவமைகள் (மத் 13-ஆம் அதிகாரம்), புதுமைகள் ஆகியவை தொகுக்கப்பட்ட விதத்திலும் காணலாம்.

மேற்கூறியபடி அப்போஸ்தலர்களின் போதகம் பற்றிய உயிருள்ள பாரம்பரியம் பலவிதத்தில் எழுத்து வடிவம் எடுக்கத் தொடங்கியது.

**4. நற்செய்தியாளர்களின் பாகம்:** அப்போஸ்தலர்களின் போதகம் எவ்விதம் எழுத்து வடிவம் எடுத்தது என்பது அடுத்த கேள்வி. இப்போதகத்தின் உயிருள்ள பாரம்பரியம் பல வடிவம் எடுத்தது என்று முன்னர்க் கூறினோம். இப்போதகம் எழுத்து வடிவத்திலும் பல உருவம் எடுத்தது. நாம் கொண்டிருக்கும் நற்செய்தியின் நான்கு நூல்களும் எழுதப்படும் முன்னே அப்போஸ்தலர்களின் போதகத்தை எழுதப்பலர் தொடங்கினர். இது புனித லூக்கா கூறுவதிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. "நம்மிடையே நிறைவேறிய நிகழ்ச்சிகளைத் தொடக்கம் முதல் கண்கூடாய்க் கண்டவர்கள் தேவவார்த்தையின் பணியாளராகி நம்மிடம் ஒப்படைத்துள்ளனர். ஒப்படைத்தவாறே அவற்றைப் பலர் நிரல்பட எழுத முயன்றுள்ளனர்" (லூக் 1:1-2). இதிலிருந்து நற்செய்திகளுக்கு முன்னரே கிறிஸ்துவைப் பற்றிய நூல்கள் இருந்தன என்பது தெரிகிறது. இவைகளும் நற்செய்திகளில் காணப்படும் பல வேறுபாடுகளுக்கு ஒருவிதத்தில் காரணம் என்று கூறலாம்.

அடுத்து நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டியது, நற்செய்திகளைத் தொகுத்தலில் நற்செய்தியாளர்களின் வேலை, பாகம் என்ன என்பதாகும். இஃது ஓர் அறவுரையையோ சொற்பொழிவையோ சுருக்கெழுத்தாளர் குறித்துக்கொள்வது போன்ற வேலையா? அன்று. பேதுருவின் போதகத்தைச் சார்ந்து மாற்கு எழுதியதாகப் பாரம்பரியம் கூறுவதிலிருந்தும், லூக்காவின் வாசகம் புனித பவுலின் கருத்தையும் போதகத்தையும் ஒட்டியிருப்பதிலிருந்தும் பேதுரு சொல்ல மாற்கு எழுதினார் என்றோ, பவுல் கூற லூக்கா எழுதினார் என்றோ கருதுவது சரியாகாது. லூக்காவே தமது உழைப்பைப் பற்றிக் கூறுகிறார். இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொடக்க முதல் கண்ட வார்த்தையின் பணியாளர்கள் ஒப்படைத்தவற்றை ஒழுங்குடன் பலர் எழுத முயன்றதுபோல் "யாவற்றையும் அணுகி ஆய்ந்தறிந்து" தாமும் முறையாக வரைவதாகக் கூறுகிறார் லூக்கா (லூக் 1:1-4).

நற்செய்தியின் தோற்றத்தில் நற்செய்தியாளர்களது வேலையைப்பற்றி விவிலியக் குழுவின் அறிக்கை தெளிவாகவும் சுருக்கமாகவும் கீழ்க்கண்டவாறு கூறுகிறது; "பரிசுத்த ஆசிரியர்கள் திருச்சபையின் நன்மைக்காக நான்கு நற்செய்திகளை எழுதியபோது, ஒவ்வொருவரும் தம் மனதில் கொண்டிருந்த தனிப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ற முறையைக் கையாண்டனர். பாரம்பரியமாக வழங்கப்பட்டவைகளில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தனர்; மற்றும் சிலவற்றைத் தொகுத்து எழுதினர். இன்னும் சிலவற்றைத் திருச்சபையின் நிலைமைக்கேற்ப விளக்கி எழுதினர். அவர்களுக்குப் போதிக்கப்பட்ட போதகத்தின் உண்மையை அவர்களது வாசகர்களும் அறிந்துணர்தலையே எல்லாவிதச் சாதனங்களாலும் தேடினர்." அவர்கள் செய்த வேலைகள்-பொறுக்கி எடுத்தல், தொகுத்து வரைதல், விளக்கம் செய்தல் முதலியனவாகும். இவ்வேலையில் அவர்களுடைய குறிக்கோளும் நோக்கமும் அவர்களுக்குத் தகுந்த வழிகாட்டியாய் அமைந்தன. இவை யாவை? அப்போஸ்தலர்களின் போதகத்தை வாசகர்கள் அறிவதும் நற்செய்தியாளர்கள்

ஒவ்வொருவரையும் தூண்டிய சிறப்பு நோக்கமும் ஆகும். ஆனால் வாசகர்களின் சூழ்நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ப எழுதினர். இவை பற்றி விவிலியக் குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: "தாங்கள் பெற்றுக் கொண்டவற்றிலிருந்து, இந்தப் பரிசுத்த ஆசிரியர்கள், விசுவாசிகளின் பலவகை நிலைமைகளுக்கும் தாங்கள் கருத்தில் கொண்ட நோக்கத்திற்கும் உகந்த எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்து வரைந்தனர். அதே நிலைமைகளுக்கும் நோக்கத்திற்கும் ஏற்பத் தங்களது நிகழ்ச்சியுரைகளையும் அமைத்தனர். வாசகத்தின் பொருள் விளக்கம் வரிசைக்கிரமத்தைச் சார்ந்து இருப்பதால், மீட்பரின் வார்த்தைகளையும் செயல்ளையும் நமக்கு அளிக்கையில், இவற்றை வாசகர்களின் உபயோகத்திற்கு ஏற்ப, இங்கொரு சூழ்நிலையிலும் அங்கொரு சூழ்நிலையிலுமாக நற்செய்தியாளர்கள் விளக்குகின்றனர். ஆண்டவரது சொல், செயல் ஆகியவற்றை வேறு முறையில் கூறுவதாலோ, அவரது வாக்குகளைப் பொருள் மாறாது இடம் மாற்றிக் கூறுவதாலோ வரலாற்றின் உண்மை பாதிக்கப்படுவதில்லை."

இதனையே நமது பண்டைய மறைநூல் அறிஞர்கள் கூறுகின்றனர். புனித அகுஸ்தீன், புனித கிறிசோஸ்தம் யோவான் ஆகியோர் கூறுவதுபோல், அப்போஸ்தலர்களது போதனையையும், அவர்களது போதனை அடங்கிய முதல் நூல்களையும் நற்செய்தியாளர்கள் பிரமாணிக்கமாய் வேலைக்கும் சுதந்தரப் போக்கிற்கும் பல வாய்ப்புகள் இருந்தன. அவர்கள் தங்களிடமிருந்த பாரம்பரியப் போதனை நூல்களைத் தரம் வாரியாகப் பிரித்து எடுத்தனர்; போதகங்களையும் இன்னும் உயிருடன் இருந்த அப்போஸ்தலர்களின் சான்றுகளையும் ஒன்று சேர்த்தனர்; இவற்றை ஒழுங்குபடுத்தினர்; இவற்றிலிருந்து தங்கள் சொந்தக் கருத்திற்கும் வாசகங்களின் தேவைக்கும் ஏற்ப நற்செய்தி நூல்களை எழுதினர்.

இவ்விதம் நற்செய்தி, ஆண்டவர் இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்களுக்கும், அப்போஸ்தலர்கள் வழியாக, அவர்களது போதகம், விளக்கம் ஆகியவற்றோடு நற்செய்தியாளர்களுக்கும் அளிக்கப்பட்டது. நற்செய்தியாளர்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலாலும் உதவியாலும் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தும் பலவற்றைத் தொகுத்து விளக்கியும், நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகளை நமக்கு எழுதித் தந்தனர். முன்னரே எழுதப்பட்ட நூல்கள், வாய்மொழிப் பாரம்பரியம் ஆகியவற்றைச் சார்ந்து இந்நூல்கள் எழுதப்பட்டாலும், பண்டைய திருச்சபைப் பாரம்பரியப்படி நற்செய்தியாளர்கள் இந்நூல்களின் ஆசிரியர்கள் ஆவர். நற்செய்தி மனிதர்களால் எழுதப்பட்டதால், அதனை மனித நூல் எனலாம். அது மட்டுமா? தேவ நூலும் ஆகும். இதை இறை ஏவுதல் என்று தலைப்பின் கீழ்க் காண்க.

### நற்பண்புகளும் தீய பண்புகளும் (VIRTUES & VICES)

1. மனிதனால் அடையப்படுகின்ற பழக்கங்களாகிய பல நல்ல மற்றும் தீய பண்புகளை விவிலியம் குறிப்பிடுகிறது. அவற்றின் மூலமாக அவன் உயர்த்தப்படுகிறான் அல்லது தாழ்த்தப்படுகிறான். ஆயினும், நற்பண்பு அல்லது தீய பண்பு பற்றிப் பொதுவாகப் பேச வரும்போது அதனுடைய சொல் தொகுதி செறிவற்றதாகவே உள்ளது. உண்மையில், கிரேக்க மனிதப்பற்றுக் கோட்பாடு போலன்றி, இறைவனுடைய நோக்கு மற்றும் மனிதனுக்கான அவரது திட்டங்கள் ஆகியவற்றைவிட, மனிதனுடைய நோக்கு மற்றும் அவனுடைய நிறைவு பற்றிக் குறைவாகவே அக்கறை கொண்டதாக உள்ளது. இறைவன் மனிதரைத் தன்னுடனும் அவர்களுக்குள்ளும் ஒன்றுபடுத்தவே விரும்புகிறார். இந்த ஒன்றிப்பானது அவர்களுடைய ஒழுக்க முன்னேற்றத்தைக் கோருகிறது.

**2. நற்பண்பு மற்றும் தீய பண்பினுடைய இயல்பு:** நிறைவான மனிதன் என்பவன் நிறைவாக உருவாக முயல்பவனல்லன். இறைவனை நாடி, இறைவன் காட்டுகின்ற வழியைப் பின்பற்றி அவரைக் கண்டடைகிறவனே நிறைவான மனிதன். தனக்குரிய சுயநிறைவை அவன் கண்டடையக்கூடிய ஒரே வழியும் இதுவே. "இறைவனோடு நடத்தல்" (ஆதி 5:22.24; 6:9) என்னும் வாய்பாட்டில் இந்த அடிப்படைத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. தீமையைத்தவிர வேறெதுவும் இல்லாத இறைப் பற்றற்ற மனிதரைப் போலன்றி, இத்தகைய மனப்பான்மையே நோவாவை நீதிமானாக்குகிறது (6:5). இறைவனுடனான உயிருள்ள உறவு, அவரது வார்த்தைகளுக்கு ஏற்றவாறு நடத்தல் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிதல், ஆழ்ந்த, நிலையான முறையில் அவரை நோக்கிய நிலை ஆகியவற்றில் நற்பண்பு அடங்கியுள்ளது. இந்த உறவே மனிதனை நீதிமானாக்குகிறது. ஆண்டவருடைய வழியைப் பின்பற்றுவதாலான இந்தப் பிரமாணிக்கமே அடிப்படையான நற்பண்பாகும். ஆபிரகாம் தமது மக்களுக்குக் கற்பிக்க வேண்டியது இதுவே (18:19). உடன்படிக்கையின் நிபந்தனையாகத் கடைபிடிக்கப்பட வேண்டியதும் இதுவே (யாத் 19:5.8). இதற்கு மாறாக, அடிப்படையான தீய பண்பானது ஒரே உண்மையான இறைவனை விட்டுவிட்டு வேறு தெய்வங்களைப் பின்பற்றுவதாகும் (உப 6:14; 4:35); இறைவனுடைய பாதையினின்று விலகுவதன் மூலம் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்க மற்றவர்களாகிறதாகும் (யாத் 32:8).

நற்பண்பினை உருவாக்குவதும், விவிலியத்தினால் அடிக்கடி நீதி என்று அழைக்கப்படுவதுமான இறை அமைப்புடனான இந்த இணக்கமானது, இறைவனால் கோரப்பட்ட செயல்களைச் செய்வதால் மட்டுமே அடையப்படுவதில்லை. அன்பின் வெளிப்பாடாக உள்ள இதயத்தினின்று வருகின்ற பணிவு மற்றும் பற்றுறுதி ஆகியவற்றை இச்செயல்கள் வெளிப்படுத்த வேண்டும். இதுவே உடன்படிக்கையினுடைய அடிப்படை விதியாகும் (உப 6:5-6; 10:16; 11:1; 30:20). நற்பண்பும் தீய பண்பும் தங்களுடைய வேரை இதயத்தில் கொண்டுள்ளன. ஒவ்வொரு நற்பண்பினுடைய ஆன்மாவாக உள்ள அன்பு மற்றும் பற்றுறுதியின் ஊற்றாக இருப்பதற்கென இறைவனுடைய வார்த்தைகள் அங்குதான் பதிப்பிக்கப்பட அல்லது செதுக்கப்பட வேண்டும். தாவீது தவறுகளையுடையவராயினும் மிகப்பெரியவராக உள்ளார். மற்றும், ஆண்டவருடைய வழிகளில் யோசப்பாத்து முன்னேறுகிறார் (1 அர 15:3; 2 நாள் 17:6). அவர்களது இதயங்கள் முற்றிலும் இறைவனுக்குரியவையாய் இருப்பதே இதற்குக் காரணமாகும். இறைவனுடைய பார்வையில் எது நல்லதாக, நீதியானதாக, நேர்மையானதாக உள்ளதோ அதை எசேக்கியா செய்கிறாரெனில், தனது முழு இதயத்தோடும் அவரை நாடுவதே அதற்குக் காரணமாகும் (2 நாள் 31:20-21).

சங்கீத ஆசிரியர்களின் ஞானமானது நற்குண மனிதரை விவரிக்கும்போது, அவனது இதயம் இறைவனுடைய சட்டத்தினால் நிறைந்து, அதனில் மகிழ்ச்சி கொள்கிறது என்று கூறுகின்றனர் (சங் 1:2; 37:31). ஆனால், தீயவன் இறைவனில்லாத இதயத்தைக் கொண்டிருக்கிறான்; அவர் இல்லை என்று கருதுகிறான் (14:1). தன்னடக்கம் மற்றும் விவேகம், நீதி மற்றும் மனவலிமை முதலிய மனிதனுக்குப் பயனுள்ள நற்பண்புகளில் ஞானத்தினால் உருவாக்கப்படும் மனிதன் மட்டுமே நீதியை அன்பு செய்பவனாவான் (ஞான 8:7). இங்கு நீதி என்பது எபிரேயப் பொருளில் அடிப்படை நற்பண்பு என்றும், கிரேக்கப்பொருளில் சமூக உறவில் சிறப்பான நற்பண்பு என்றும் பொருள்கொள்ளப்படும்.

இறுதியாக, இயேசுவின் போதிக்கப்பட்டு (மத் 5:20) மலைப்பொழிவில் விவரிக்கப்பட்ட நிறைவான நீதியானது, எல்லாத் தீய ஆசைகளினின்றும் விடுபட்டு, பகைவர்களையும் உள்ளடக்கும் இரக்கமுள்ள அன்பினால்

நிறைந்துள்ள இதயத்தைச் சேர்ந்ததாகும் (5:7-8.28.44). அவனது இதயத்தினின்று வருகின்ற தீய பண்புகளே ஒரு மனிதனை அசுத்தமாக்குகின்றன (15:18-19).

3. **நற்பண்பு மற்றும் தீய பண்பினுடைய ஊற்று:** தீய பண்பினுடைய ஊற்றினை மனிதனுக்கு வெளியே தேடவேண்டிய அவசியமே இல்லை. பாவத்தின் மூலமாக இறைவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டதன் மூலம் தனது தீய ஆசைகளைக் கட்டுப்படுத்தவும் தனக்குத் தலைவனாக இறுக்கவும் இயலாதவனாகிறான். உலகை நிறைவுபடுத்துவதற்குப் பதிலாக அதனைச் சிதைத்துவிட்டான் (1 யோவா 2:16-17). இனிமேல் தனது இச்சைகளின் பழுவை எதிர்க்கவும் (சீரா 1:22; 18:30), மீண்டும் தூயவனாவதற்கும் தேவையான வலிமை மட்டுமே அவனது வலிமைக்கு ஊற்றாக இருக்கும் (உப 8:17-18; எபே 6:10). அஃது இல்லாமல் அவன் வலுவற்ற இதயத்தினனாகவும் அக்கறை அற்றவனாகவும் இருப்பான் (சீரா 2:12-13). அவனது இதயம் தூய்மையடைவதற்கு அவன் இறைவனால் மீண்டும் படைக்கப்பட்டு, அவனுக்குள் ஒரு புதிய ஆவியை அமைத்து வலிமைப்படுத்தப்பட வேண்டும் (சங் 51:12-14). இதுவே இறைவாக்கினர்களால் அறிவிக்கப்பட்ட கொடையாகும். இதுவே புதிய உடன்படிக்கையில் நிறைவேற்றப்படும். பின்னர் மனிதருக்கு ஒரு புதிய இதயம் அளிக்கப்பட்டு, இறைவனுடைய சட்டமானது அதில் எழுதப்படும். இறைவனுடைய ஆவியையே அவர்கள் பெறுவர். அவர் அவர்களைப் பிரமாணிக்கமுள்ளவர்களாக ஆக்குவார் (எரே 31:33; எசே 36:26-27). மெசியாவை நிரப்பி, அவரது அரச பணிக்குத் தேவையாக உள்ள அனைத்து நற்பண்புகளையும் அளிக்கின்ற ஆவி இவரே. ஆட்சிபுரிய ஞானம், பகைவரிடமிருந்து மனிதரை விடுவிக்க வலிமை, தான் சுட்டிக் காட்டுகின்ற இறைவனுடன் ஒன்றுபடுத்தும் பக்தி முதலியன இந்த நற்பண்புகளாகும் (எசா 11:2-5).

உள்ளார்ந்த வாழ்வின் தலைவராக இருந்த ஆவியின் பங்கைக் கிறிஸ்து தமது சீடர்களுக்கு வெளிப்படுத்துகின்றார் (யோவா 14:26; 16;13). வெல்லமுடியாத சாட்சிகளாக இருப்பதற்கென அவர்களுக்குத் தேவையான ஞானத்தையும் வலிமையையும் அளிக்கக்கூடியவர் அவரே (மத் 10:20; லூக் 21:14-15; 24:48-49; அ.ப. 1:8). விசுவாசியின் இதயத்தில் இறையன்பை விதைத்து, இந்த அன்பினால் உருவாக்கப்பட்ட அனைத்து நற்பண்புகளாகிய பலனை அவனில் விளைவிக்கச் செய்வதன் மூலம் (உரோ 5:5; கலா 5:22), மனிதனை நேர்மையற்றவனாக்குகின்ற உலக ஆசைகளினின்று விடுவிக்கக் கூடியவர் இவரே (கலா 5:19-21). இவ்வாறாக, இந்த ஆவியானவர் மனிதரை அவனது ஆழ்நிலைகளில் வலிமைப்படுத்துகிறார் (எபே 3:16).

4. **நற்பண்புகளுக்கும் தீய பண்புகளின் அட்டவணைக்கும் இடையிலான தொடர்பு:** நற்பண்புடைய மனிதர் பின்பற்ற வேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டுவதிலும், இறை தண்டனையில் இறைப் பற்றற்ற மனிதரை அச்சுறுத்துவதிலும் விவிலியமானது முழுமையடைவதில்லை (சங் 1). புறவின ஒழுக்கவியலார்களைப் போன்று, நற்பண்புகள் மற்றும் தீய பண்புகளின் முக்கிய குணவியல்புகளின் அறிவுரை அட்டவணைகளை அமைக்க இது முயல்கிறது.

தீய பண்புகளின் அட்டவணையானது இறைவாக்கினர்கள் (ஓசே 4:1-2; எரே 7:9), ஞானிகள் (பழ 6:16-19; சீரா 25:2; 26:5-6), கிறிஸ்து (மாற் 7:21-22இணை) மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் (1 கொரி 6:9-10; உரோ 1:29-31; கொலோ 3:5-9 1 திமொ 1:9-10; 2 திமொ 3:1-5; 1 பேதுரு 2:1;4:3) ஆகியோரால் அளிக்கப்படுகிறது. தீய பண்பினுடைய உண்மையான காரணமானது உண்மையான இறைவனை அங்கீகரிக்க மறுப்பதும், சிலைகளுக்கான முன்னுரிமையுமாகும் என்று

பவுல் குறிப்பாக வலியுறுத்துகிறார். சில நேரங்களில் தீய பண்புகள் மனிதரைப் பிரிக்கும் விளைவைக் கொண்டுள்ளன. சில நேரங்களில் அவை ஒன்றுக்கொன்று எதிரானவையாகவும் உள்ளன.

இத்தகைய எதிர்ப்பானது நற்பண்புகளுக்கு இடையே இருப்பதில்லை. ஏனெனில், அவை முற்றிலும் மாறுபட்ட வகையில் ஒன்றையொன்று நிறைவுபடுத்துகின்றன. நீதிமான் ஏன் தன்னிலேயே ஒன்றுபட்டுள்ளான் என்பதையும் ஒற்றுமையின் ஊற்றையும் அவற்றின் அட்டவணைகள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, மீக்கா இறைவாக்கினரின் சுருக்கத்தை எடுத்துக்கொள்வோம்: "நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுள் முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கோருகிறார்?" (மீக் 6:18). இயேசுவைப் பொருத்தவரையில், தாம் உதாரணம் அளிக்கின்ற (யோவா 13:15) தமது தாழ்ச்சி, சாந்தம் (மத் 11:29) மற்றும் அவரது வாழ்வையே காணிக்கையாக அளிக்கச்செய்கின்ற அன்பு (யோவா 15:13) ஆகியவற்றால் அவர் சிறந்து விளங்குகிறார். இந்த அன்பானது சீடர்கள் ஒருவர்க்கொருவர் காட்ட வேண்டிய அன்பிற்கு மாதிரியாகவும் (13:34; 15:17), அவர்களைத் தனிப்படுத்திக் காட்டும் அடையாளமாகவும் உள்ளது (13:35). நற்பண்பு பற்றிய கிரேக்கக் கருத்தை ஏற்றுக்கொள்ளும் பவுல், புகழ்ச்சிக்குரிய அனைத்தையும் நாம் செய்ய வேண்டுமெனப் பரிந்துரைக்கும்போது (பிலி 3:8), எஞ்சியுள்ள மூன்றாகிய விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றை அடிக்கடி வலியுறுத்துகிறார் (1 தெச 1:3; உரோ 5:1-5; கொலோ 1:4-5...). இவற்றில் மிக உயரிய நற்பண்பானது அன்பு என்றும் அவர் அறிவிக்கிறார் (1 கொரி 13:13). ஆனாலும், மற்ற நற்பண்புகளும் பரிந்துரைக்கப்படுகின்றன (1 தெச 5:14-18; உரோ 12:9-21; எபே 4:2; 1 திமொ 4:12; 6:11; 1 பேதுரு 3:8; 2 பேதுரு 1:5-7). ஆனால், அன்புதான் நிறைவுடைமையின் பிணைப்பாகும். கிறிஸ்துவினுடைய சமாதானத்தின் ஆட்சியை அஃது ஏற்படுத்துகிறது. அவரில் எல்லா மனிதரும் ஒரே உடலாக உள்ளனர் (கொலோ 3:12-15).

**நன்மை தீமை (GOOD AND EVIL)**

I. "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அது மிகவும் நன்றாய் இருந்தது" (ஆதி 1:31). ஆயினும் இறுதிக்கால அரசின் வருகையைத் துரிதப்படுத்த, "தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" என்று நமது தந்தையிடம் கேட்குமாறு கிறிஸ்து நமக்கு கூறுகிறார் (மத் 6:13). இவ்விரு கூற்றுகளுக்கு இடையிலான முரண்பாடானது இன்றைய விசுவாசிக்கு ஒரு பிரச்சனையைத் தோற்றுவிக்கிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வையும் விவிலியமே அளிக்கின்றது; நல்லதாகப் படைக்கப்பட்ட இவ்வுலகில், எப்போது தீமை வந்தது? எவ்வாறு எப்போது அது மேற்கொள்ளப்படும்?

II. **உலகில் நன்மையும் தீமையும்:** 1. அவற்றைக் காண்கின்ற அல்லது அனுபவிக்கிறவனுக்குச் சில பொருட்கள் அகநிலையில் நல்லவையாகவும், தீயவையாகவும் உள்ளன. அழகிய, நல்ல என்று கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்படும் "தோபு" என்ற எபிரேயச் சொல், அடிப்படையில் இனிமையான பொதுவாக நல உணர்வுககளை ஏற்படுத்தும் ஆட்களையும் பொருட்களையும் சுட்டுகிறது. சான்றாக நல்ல உணவு (நீதி 19:6-9; 1 அர 21:7; ரூத் 3:7), அழகிய இளம்பெண் (எஸ்த 1:11), தாராள குணமுடைய மக்கள் (ஆதி 40:14). சுருக்கமாக உடலளவிலன்று மன அளவில் மகிழ்ச்சியைக் கொணர்கின்ற அல்லது வாழ்வை எளிதாக்குகின்ற எதுவும் நல்லதே (உப 30:15), இதற்கு மாறாக,எவ்வடிவிலும் நோய், துன்பம், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மரணத்திற்கு இட்டுச்செல்லும் எதுவும் தீயதே.

2. கிரேக்கர்கள் புரிந்துக்கொண்டது போன்ற படைப்புகளின் புறநிலை சார்ந்த

நன்மைத்தனமானது பேசப்படக் கூடுமா? ஏனெனில், ஒவ்வொன்றிற்கும் பின்பற்றப்பட வேண்டிய அல்லது செயல்படுத்த வேண்டிய மூல மாதிரியை அவர்கள் கற்பனை செய்திருந்தனர். தன்னிலேயே அனைத்து ஒழுக்க அழகுடைய, சமூக குணங்களைக் கொண்டுள்ள, ஆகவே திறந்த மனதுள்ள, இணக்கமிக்க, நகரத்திற்குப் பயனுள்ள ஒரு மாதிரியை அவர்கள் மனிதனுக்கு அளித்தனர். இத்தகைய தனிப்பட்ட முன்னோக்கில், நாம் எவ்வாறு தீமையைப் பற்றிய எண்ணத்தை உருவாக்கலாம்? முழு நிறைவற்றதாகவோ முற்றிலும் எதிர்மறையான பொருளாகவோ, நன்மையின்மையாகவோ அல்லது முரண்பட்ட நிலையில், தனக்குரிய நிலையில் மெய்ம்மையாக உள்ள ஈரானிய சிந்தனையில் முக்கியப் பங்கு வகித்த தீய கோட்பாட்டினின்று வருவதாகச் சிந்திக்கலாமா? விவிலியமானது பொருட்களுக்கு மெய்யான நன்மைத்தனத்தை அளிக்கும்போது, இம்முறையில் அஃது அதனைப் புரிந்து கொள்வதில்லை. "கடவுள் அதனை நல்லதெனக் கண்டார்" (ஆதி 1:4...) என்று அது கூறும்போது, இந்த நன்மைத்தன்மையானது எவ்விதக் கருத்தியலான நன்மையாலும் அளவிடப்படாமல், பொருட்களுக்கு நன்மைத்தனத்தை அளிக்கின்ற ஒரேயொருவராகிய படைத்த இறைவனுடனான உறவினால் அளவிடப்படுகின்றது என்பதை அது காட்டுகின்றது.

மனிதனுடைய நன்மைத்தனமானது குறிப்பிட்ட நிலையாகும். உண்மையில் ஓரளவு அஃது அவரையே சார்ந்துள்ளது. படைப்பின் தொடக்கத்தில், "நன்மை தீமையை உணர்த்தும் மரத்தின்" முன்னால் இறைவன் அவனை அமர்த்தினார். கீழ்ப்படிந்து வாழ்வின் மரத்தை அனுபவித்தல் அல்லது கீழ்ப்படியாமல் மரணத்திற்கு இழுக்கப்படும் வாய்ப்பினை இறைவன் அவனுக்கு வழங்கினார் (ஆதி 2:9.17). ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கப்படுகின்ற விடுதலையின் முடிவான சோதனை இதுவே. இறைவனின் கட்டளையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும், அவரது சித்தத்தோடு ஒத்துப்போவதன் மூலமும் (உப 6:18; 12:28; மீக் 6:8) தீமையை விலக்கி நன்மை புரிந்தால் (எசா 7:15; ஆமோ 5:14; காண்க: எசா 1:16-17), அவன் நல்லவனாகவும் இறைவனுக்கு ஏற்புடையவனாகவும் இருப்பான் (ஆதி 6:8). இல்லாவிடில் தீயவனாகவும், அவருக்கு ஏற்காதவனாகவும் இருப்பான் (38:7). அவன் பொறுப்புடையவனாக இருப்பதன் காரணமாக, மனச்சாட்சியின்படி செய்யப்பட்ட அவனது தேர்வானது அவனது ஒழுக்கக் குணத்தையும், அதன் விளைவாக அவனது முடிவையும் தீர்மானிக்கும்.

தீயவனால் சோதிக்கப்பட்ட நிலையில், மனிதன் தொடக்கத்திலிருந்தே தீமையைத் தேர்ந்தெடுத்துள்ளான். "உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும்" (ஆதி 3:6), ஆனால் இறைவனுடைய சித்தத்திற்கு அப்பாற்பட்ட படைப்புகளில் அவன் தனது நன்மையைத் தேடினான். பாவத்தினுடைய அடிப்படை இதுவே. இப்படைப்புகளில் துன்பம் மற்றும் மரணத்தினுடைய கசப்பான கனிகளையே அவன் கண்டடைந்தான் (ஆதி 3:16-19). அவனது பாவத்தின் விளைவாக, தீமையானது உலகிற்குள் கொண்டு வரப்பட்டு, அங்கேயே பல்கிப்பெருகியது. ஆதாமின் பிள்ளைகள் எந்த அளவிற்குத் தீயவர்களானார்களெனில், அவர்களைப் படைத்தமைக்காக இறைவனே வருத்தப் பட்டார் (ஆதி 6:5-7). மண்ணுலகில் நன்மை புரிவன் எவனுமில்லை (சங் 14:1-3; உரோ 3:10-12). இதுவும் மனிதனுடைய அனுபவமே. அடைய முடியாத ஆசைகளால் அவன் சோர்வடைகிறான் (திருவுரை 5:9-11; 6:7). ஏனெனில், தீமையானது அவனது இதயத்தினின்றே தோன்றுவதன் காரணமாக (ஆதி 6:5; சங் 28:3; எரே 7:24; மத் 15:19-20) மண்ணுலகப் பொருட்களை முழுமையாக அனுபவிப்பதினின்று (திருவுரை 5:14; 11;2-6) தடுக்கப்படுவதனாலும், "பாவம் செய்யாமல்

நன்மை புரிய'' இயலாதவனாகவும் அவன் உள்ளான். அவன் தனது சுதந்தரத்தில் பாதிக்கப்பட்டுள்ளான் (உரோ 7:19-20); பாவத்திற்கு அடிமையாக உள்ளான் (6:17). அவனது பகுத்தறிவும் கூட, பாதிக்கப்பட்டுள்ளது. பொருட்களை முரண்படுத்திய நிலையில் அவன் நல்லதைத் தீயதென்றும் தீயதை நல்லதென்றும் கருதுகிறான் (எசா 5:20; உரோ 1:21-25). இறுதியாக மனந்தளர்ந்து ஏமாற்றமடைந்த நிலையில் "எல்லாமே வீண்" (திருவுரை 1:20) என அவன் உணர்கிறான். ''உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது'' என்பதைக் கடுமையான வழியில் அவன் அனுபவிக்கிறான் (1 யோவா 5:19; யோவா 7:7). உண்மையில் தீமையானது நன்மையின் மறைவு மட்டுமன்று, மாறாக, மனிதனைக் கீழ்ப்படுத்தி உலகைச் சீர்குலைக்கின்ற நேரிடையான சக்தியாகும் (ஆதி 3:17:18). இறைவன் அதனைப் படைக்கவில்லை; ஆனால், இன்றுள்ள நிலையில் அஃது இறைவனுக்கு எதிராக நிற்கிறது. முற்றுப்பெறாத போர் ஒன்று தொடங்கி, வரலாறு முழுவதும் நீடித்திருக்கும். மனிதனைக் காக்க, எல்லாம் வல்ல இறைவன் தீமையின்மீதும் தீயோனின் மேலும் வெற்றி கொள்ள வேண்டும் (எசே 38:39; திருவெளி 12:7-17).

### III. இறைவன் மட்டுமே நல்லவர்:

1. **இறைவனின் நன்மைத்தனம்:** பழைய ஏற்பாட்டு முதன்மையான வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று. எகிப்திய அடிமைத்தனத்தின்போது தீமையை அதன் உச்சநிலையில் அறிந்த இஸ்ராயேலானது, தனது விடுவிப்பாளராகிய ஆண்டவரில் நன்மையைக் கண்டுணர்கிறது. முதலில் இறைவன் அதனைச் சாவினின்று விடுவிக்கிறார் (யாத் 3:7-8; 18:9). பின்னர், "ஆண்டவர் தனது பாதுகாப்பைத் தொடர்ந்து அளிக்கின்ற," "பாலும் தேனும் ஓடுகின்ற," "நல்ல நாடாகிய'' (உப 8:7-10- வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அதனை நடத்திச் செல்கிறார். உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருந்தால் (உப 8:11-119; 11:8-12; 18:28), இஸ்ராயேல் அங்கே மகிழ்ச்சியைக் கண்டடையும் (உப 4:40).

2. **இறைவன் தனது கொடைகளில் மேல் ஒரு நிபந்தனையை விதிக்கிறார்:** ஏதேன் தோட்டத்திலிருந்த ஆதாமைப்போன்று இஸ்ராயேலானது, தனது முடிவைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு தேர்வை முன் கொண்டுள்ளது. உடல் சார்ந்த மற்றும் ஒழுக்கஞ்சார்ந்த நன்மைகளிரண்டும் இறைவனுடன் சமமாக இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இறைவன் அதன் முன்னிலையில் ஆசியையும், சாபத்தையும் நிறுத்துகிறார். இஸ்ராயேலானது ஆண்டவரை மறந்து, அவரை அன்பு செய்வதை விட்டுவிட்டு, கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல் உடன்படிக்கையை முறிக்க வேண்டி இருந்தால், அஃது உடனடியாக உலக நன்மைகளினின்று பிரிக்கப்பட்டு (உப 11:17), அதனுடைய நிலமானது பாலைவெளியாகும்வரை அடிமைத்தனத்திற்குத் திருப்பியனுப்பப்படும் (உப 30:15-20; 2 அர 17:7-23; ஓசே 2:4-14). தனது வரலாற்றுப் போக்கில் இஸ்ராயேலானது உடன்படிக்கையினுடைய இந்த அடிப்படைக் கோட்பாட்டின் உண்மையைப் பரிசோதித்தறிகிறது. இன்ப வன நிகழ்ச்சியைப்போன்று, துன்பத்தின் அனுபவமானது பாவத்தின் அனுபவத்தைத் தொடர்கிறது.

3. **இறைப் பற்றற்றவர்களின் வெற்றியும் நீதிமான்களின் துன்பமும்:** ஒரு முக்கியக் கருத்தில் இக்கோட்பாடானது தவறி விட்டதாகத் தோன்றுகிறது. இறைவன் இறைப் பற்றற்றவர்களுக்கு ஆதரவாயிருந்து, நல்லவர்களைத் துன்பத்தில் விட்டு விடுவதாகத் தெரியவில்லையா? நீதிமான் துன்புறுகிறான், ஆண்டவரது ஊழியன் துன்புறுத்தப்படுகிறான். இறைவாக்கினர்கள் சாவிற்கு உட்படுத்தப்படுகின்றனர் (எரே 12:1-2; 15:15-18; எசா 53; சங் 22; யோபு 23-24). துன்பத்தினுடைய அனுபவமானது நோவு தருவதாகவும், மறைபொருளானதாகவும்

உள்ளது. அதனுடைய பொருளை நாம் உடனடியாகக் காண்பதில்லை. ஆயினும், இதன் மூலமாக ஆண்டவரது எளியோர் நிலையற்றவையும் குறுகிய காலத்தவையாகவும் உள்ள "இவ்வுலகப் பொருட்களினின்று" தங்கள் விடுவித்துக் கொள்வதை மெதுவாக அறிந்து கொள்கின்றனர் (செப் 3:11-13; மத் 6:19-20; லூக் 12:33-34). அனைத்தும் தங்களை விட்டு விலகிய பின்னும் தங்களுடன் தங்கியுள்ள இறைவனில் மட்டுமே தங்களுடைய வலிமை, வாழ்வு மற்றும் நன்மையைக் கண்டடைவதை அவர்கள் அறிந்து கொள்கின்றனர்; வீறார்ந்த விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் அவரையே பற்றிக் கொள்கின்றனர் (சங் 22:20; 42:6; 73:25; எரே 20:11). சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் இன்னும் தீமைக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். ஆயினும், மீட்பின் நாளில் வெற்றிபெற உள்ள மீட்பரை அவர்கள் தங்கள் பக்கம் கொண்டுள்ளனர். அதன் பின்னர், தமக்கு விசுவாசமாக இருப்போருக்கு இறைவன் வாக்களித்த பொருட்களை அவர்கள் பெறுவர் (சங் 22:27; எரே 31:1-10-14). உண்மையில் இறைவன் "மட்டுமே நல்லவர்" (மாற் 10;18 இணை).

IV. **இறைவன் தீமையின்மீது வெற்றி கொள்கிறார்:** மீட்பராகத் தம்மை வெளிப்படுத்துவதன் மூலம், தீமையின் மீதான தனது வருங்கால வெற்றியை இறைவன் ஏற்கனவே அறிவித்துள்ளார். மனிதனை நல்லவனாக்கி, "இவ்வுலகின் அரசனாகிய" (லூக் 4:6; யோவா 12:31; 14:30) தீயோனின் வல்லமையினின்று அவனை விடுவிப்பதன் மூலம் (1 அர 5:18-19) திட்டமான வழியில் இவ்வெற்றியானது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1. இறைவன் ஏற்கெனவே சட்டத்தை அளித்துள்ளார்: அது நல்லதாகவும் வாழ்வைக் கொணரக் குறிக்கப்பட்டதாகவும் உள்ளது (உரோ 7:12-14). கட்டளைகளைக் கடைப்பிடித்தால், மனிதன் நல்லதைச் செய்து முடிவில்லா வாழ்வை அடைவான் (மத் 19:16-17). பாவத்தின் கைதியாகிய மனிதனின் இதயம் மாறாத வரையில், சட்டமானது தன்னில் பயனற்றதாக உள்ளது. நல்லதை எண்ணுவது மனிதனுக்கு எட்டிய தொலைவிலேயே உள்ளது. ஆனால், அதனை நிறைவேற்றுவது எட்டாத தொலைவிலுள்ளது. அவன் தான் விரும்புகின்ற நம்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்கிறான் (உரோ 7:18-20). அவனுக்கே அப்பாற்பட்டு இச்சைகள் அவனது இழுத்துச் செல்கின்றன. அவனது நன்மைக்கென அமைக்கப்பட்ட சட்டமானது இறுதியில் அவனது வீழ்ச்சியாக மாறுகிறது (உரோ 7:7; 12-13; கலா 3:19). இந்த உள்ளார்ந்த போராட்டமானது முடிவில்லா மகிழ்ச்சியின்மையில் அவனை விட்டுச்செல்கிறது. அப்படியானால் யார்தான் அவனை மீட்பார்? (உரோ 7:14-24)

2. **"நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து"** மட்டுமே (உரோ 7:25): மனிதனுடைய இதயத்திலேயே தீமையின் மீது வெற்றி கொள்வதன் மூலம், அதன் வேர்களிலேயே தீமையை அவர் மட்டும் அடைய முடியும் (எசே 36:26-27). அவரே பாவமற்ற (யோவா 8:46) புதிய ஆதாம் (உரோ 5:12-21). அவர் மீது சாத்தானுக்கு எவ்வித வல்லமையும் இல்லை. சிலுவையில் மரணமடையும் அளவிற்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார் (பிலி 3:8). அவரது மந்தையானது மேய்வதற்கு ஓரிடத்தைக் கண்டடைவதற்கென அவர் தமது வாழ்வை அளித்தார் (யோவா 10:9-18). "வாக்களிக்கப்பட்ட ஆவியானவரை நாம் விசுவாசத்தின் வழியாய்ப் பெற்றுக்கொள்ள; கிறிஸ்து நமக்காகச் சாபமானார்" (கலா 3:13-14).

3. **ஆவியின் கொடைகள்:** இவ்வாறாக வாழ்வையும் உலகப்பொருட்களையும் துறந்து (எபி 12:2). தூய ஆவியை நமக்கு அனுப்புவதன் மூலமாக, தந்தையிடம் நாம் கேட்க வேண்டிய நற்பொருட்களைக் கிறிஸ்து நமக்கெனப் பெற்றுத்தந்தார் (மத் 7:11; லூக் 11:13). இஃது

இனிமேலும், முன்பு எபிரேயருக்கு வாக்களிக்கப்பட்டதைப்போன்ற இவ்வுலகப் பொருட்களைப் பற்றியதன்று; மாறாக, நம்முள்ளிருக்கும் "ஆவியின் பலன்களைப்" பற்றியதாகும் (கலா 5:22-25). இப்போது முதல் அருளால் மாற்றியமைக்கப்பட்ட மனிதன் "நல்லது செய்யலாம்" (கலா 6:9-10), "நற்செயல்களைப் புரியலாம்" (மத் 5:16; 1 திமொ 6:18-19; தீத் 3:8.14) மற்றும் "நன்மையால் தீமையை வெல்லலாம்" (உரோ 12:21). இப்புதிய பொருட்களுக்குத் தகுதியானவனாக உருவாக, அவன் யாவற்றையும் துறக்க வேண்டும்; "தனது உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டு," கிறிஸ்துவைப் பின்செல்ல வேண்டும் (மத் 19:21). "தன்னையே மறுத்து அவருடன் தனது சிலுவையைச் சுமக்க வேண்டும்" (மத் 10:38-39; 16:24-26).

**4. தீமையின் மீதான நன்மையின் வெற்றி:** ஆவியின் தூண்டுதல்களுக்குக் கீழ்ப்படியுமாறு கிறிஸ்துவுடன் வாழும் வழியைத் தேர்ந்தெடுப்பதில், ஆதாமின் தேர்வினுடைய ஒன்றிப்பினின்று கிறிஸ்தவன் பிரிந்து செல்கிறான். இவ்வழியாக அவனில் ஒழுக்கத் தீமையானது உண்மையாகவே வெற்றி கொள்ளப்படுகிறது. இன்றைய உலகம் நிலைத்திருக்கும் வரையில் அதனுடைய உடல் சார்ந்த மற்றும் உளம் சார்ந்த விளைவுகள் நிலைத்திருக்கும் என்பது உறுதி. ஆனால் மனிதன் இப்போது தனது துன்பங்களில் மகிமையடைகிறான். அவைகளின் மூலம் அவன் பொறுமையை அடைகிறான் (உரோ 5:4). "இக்காலத்தினுடைய துன்பங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய மகிமையுடன் ஒப்பிடப்பட"த் தகுதியற்றன என்றும் அவன் கருதுகின்றான் (8:18-25). இவ்வாறு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மூலமாக அழிக்கப்பட முடியாத செல்வங்களை அவன் ஏற்கெனவே கொண்டுள்ளான் (லூக் 12:33-34). "வரவிருக்கும் நன்மைகளின் தலைமைக் குருவாகிய" (எபி 9:11; 10:1) கிறிஸ்துவினுடைய தலையீட்டின் மூலமாக அவை அளிக்கப்படுகின்றன. இஃது ஒரு தொடக்கம் மட்டுமே; ஏனெனில், விசுவசிப்பதென்பது காண்பதன்று. ஆனால், விசுவாசமானது எதிர்நோக்கப்படுகின்ற நன்மைகள் (எபி 11:1), மேலான தாய்நாடு (எபி 11:16) மற்றும் தன்னால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கென இறைவன் படைக்கவிருக்கும் புதிய உலகம் (திருவெளி 21:1-3) ஆகியவற்றையளிக்கின்றது.

**நன்மை தீமை அறியும் மரமும், வாழ்வின் மரமும்: (TREE OF KNOWLEDGE, TREE OF LIFE)**

1. ஏதேன் தோட்டத்தில் இருந்த இயற்கையாற்றலுக்கு மீறிய மரங்களாகும். ஆதி 2-3-இல் பயன்பட்டுள்ள முரண்பட்ட மூலங்களின் காரணமாக, இந்த இரண்டு மரங்களுக்குமிடையே உள்ள தொடர்பை விவரிப்பது கடினமாகும். "நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்" என்ற சொற்றொடரின் பொருள் பற்றி அதிகத் தர்க்கம் உண்டு. மரம் அறிவதற்கு ஏதுவானதாகும். ஆனால் அறிவு, உரிமையால் இறைவனுக்கே உரியதாகும். இறைவனுடைய கட்டளையை மீறி இம்மரத்தின் கனியை உண்ட மனிதன் வெட்கமும், குற்ற உணர்வும் கொண்டான்; தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டான். வீழ்ச்சிக்குப் பிறகுதான், வாழ்வின் மரம் பொருளுள்ள இடம் பெறுகிறது. மனிதன் என்றென்றும் வாழ்வதற்காக, வாழ்வின் மரத்திலிருந்து பறித்து உண்ண முயற்சிப்பதைத் தடுக்க, தோட்டத்திலிருந்து விரட்டப்படுகிறான்.

**2. சொல்லியலும் பயன்படும் முறையும்:** "நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்" என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் இருமுறைதான் தோன்றுகிறது (ஆதி 2:9.17). அதே மரம் ஆதி 3:1-21-இல் பின்னணியாக உள்ளது. அங்கு, "தோட்டத்தின் நடுவிலுள்ள மரம்" (3:3) என்று குறிக்கப்படுகிறது. அதை உண்பவர்களுக்கு நன்மை தீமை பற்றிய அறிவை அளிக்கிறது (3:5.22). இதை "நன்மை தீமை அறிவின் மரம்" என்று மொழிபெயர்ப்பது மேலானதாகும்.

"வாழ்வின் மரம்" ஆதி 2:9; 3:22.24; பழ 3:18; 11:30; 13:12; 15:4; புதிய ஏற்பாட்டில் திருவெளி 2:7; 22:2; 14.19–இல் பயன்பட்டுள்ளது. இது யூதத் திருமுறை சேராத நூல்கள் சிலவற்றில் காணப்படுகிறது. பெயரைக் குறிக்காமலே எசேக்கியேல் இம்மரத்தைக் குறிக்கலாம் (எசே 31:3-9; 47:12).

3. **பிற சமயங்களில் இணை விவரிப்பு:** இந்த இரு மரங்கள் பற்றிய விவரிப்பை இஸ்ராயேல் மேற்காசியப் பொதுப் பாரம்பரியத்திலிருந்து பெற்றதாகத் தெரிகிறது. வட மெசொத்தாமியாவிலிருந்து கானானியக் கலாச்சாரத்தின் வழியாக இவை இஸ்ராயேலின் பாரம்பரியமாகின. ஆனால் இஸ்ராயேல் எவ்வாறு பழங்கால இதிகாசக் கருத்துக்களுக்கு மறுபொருள் அளித்துத் தமதாக்கிக் கொண்டனர் என்பதற்கு இம்மரங்கள் பற்றிய விவரிப்பு பொருள் மிக்கதாகும்.

4. **இலக்கிய ஆய்வு:** இந்த விவரிப்பு இருமூலங்களின் கலப்பாகத் தெரிகிறது. வாய்மொழிப் பாரம்பரியமாக வந்த இந்த விவரிப்புகள், உள் முரண்பாடுகளை நீக்க முயன்றதாகத் தெரியவில்லை.

5. **அறிவின் மரம்:** இதைப்புரிந்து கொள்வது மிகக்கடினமாகும். எல்லாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடையளிப்பது அவ்வளவு இலகுவன்று. விளக்க வரலாற்றில் கூறப்பட்ட சில முக்கியக் கோட்பாடுகளை மட்டும் இங்குத் தருகிறோம்.

அ) **ஒழுக்கத்தீர்வு:** சரியானவற்றைத் தவறானவற்றிலிருந்து பிரித்தறியவும், நல்லது கெட்டதை வேறுபடுத்தி அறியவும் இந்த மரம் ஏதுவானதாக இருந்தது. இந்தப் பாரம்பரிய விளக்கம் "நல்லது தீயது" என்ற சொற்களைப் பழைய ஏற்பாடு ஒழுக்கமுறைப் பொருளில் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது (எசா 5:20; ஆமோ 5:14; மீக் 3:2). ஆனால் சரியானது தவறானது பற்றிய முன்னறிவு இல்லாமல் உண்மையான கீழ்ப்படியாமை நிகழ்ந்திருக்கக்கூடுமா! இறைவனைப் பற்றிய எபிரேயக் கருத்தை மனதில் கொண்டால், இத்தகைய ஒழுக்கத்தீர்வு உணர்வை அடைவதை இறைவன் தடுத்திருப்பாரா என்பது கேள்விக்குரியதாகும்.

ஆ) **உலக அறிவு:** இந்த மரம் உலக அறிவு, கலாச்சாரம், அறிவுத்திறன் ஆகியவற்றைத் தர வல்லது. பழைய ஏற்பாட்டில் நன்மை தீமை பற்றிய கருத்துக்கள், வெறும் ஒழுக்கப்பொருளைவிடப் பரந்த தன்மையுடையது என்று ஏற்றுக்கொள்கிறது. நல்லது தீயது என்பது நலம் தரக்கூடியதும் தீங்கு செய்யக்கூடியதுமாகும் (2 சாமு 13:22). ஆதி 2-3 என்ற பகுதி பரந்த அறிவை நோக்கிய முதற்படியாக விளக்கப்படுகிறது. இஃது இறை அச்சத்திலிருந்து விலகிச்செல்கிறது. இந்த விளக்கத்தில் ஆதி 3:24 யாவரும் அறிந்த புரோமித்தியன் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்த விளக்கத்திற்கு எதிராகப் பல மறுப்புகள் கூறலாம். ஆதாம் தம் கீழ்ப்படியாமைக்குப்பின் உலக அறிவில் வளர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் வெட்கத்திற்கும் குற்ற உணர்வுக்கும் உள்ளாகிறார். மேலும் கலை, கைவினைத்திறம் ஆகியவற்றை ஆதாம் கண்டுபிடிக்கவில்லை; அவரது சந்ததியினரே கண்டு பிடிக்கின்றனர் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது (ஆதி 4:20 தொ).

இ) **பாலின அறிவு:** இம்மரம் பாலின அறிவைத் தர ஏதுவானதாகச் சிலர் கருதுகின்றனர். இவர்கள் "அறிதல்" என்ற வினைச்சொல்லைச் சுட்டிக்காட்டுவர். இச்சொல் பாலினத்தொடர்பைக் குறிக்கும் மங்கலச் சொல் வழக்காகும் (ஆதி 4:1; 19:5). ஆதாமும், ஏவாளும் நன்மை தீமை அறிவைப் பெற்றபின் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்து வெட்க உணர்வு கொண்டனர். மேலும் "நன்மை தீமை அறிவு" என்ற சொற்றொடரைக் கொண்டுள்ள பல இணையானபகுதிகள் பாலின அறிவைச்

சுட்டுவதாக அறிவு சார்ந்த முறையில் விளக்கம் அளிக்கலாம் என்பர்.

இக்கருத்துக்கு எதிராக, ஆதி 2:23-24 என்ற பகுதி பாலின அறிவை ஏற்கெனவே உள்ளடக்கியுள்ளது; பாலின உறவின் காரணகாரியத்தைச் சுட்டுகிறது எனலாம். ஆடையின்றி இருத்தலைப் பாலின அறிவின்மையோடு ஆசிரியர் எங்கும் சமப்படுத்தவில்லை. ஆடையின்றியிருத்தல் எதிர்ப்பாலினத்தாரின் முன் வெட்கமட்டுமன்று, தன்னையே திறந்து காட்டுவதாகும்."நல்லது" என்ற சொல் வெகு அரிதாகத்தான் பாலினப் பொருளை மட்டும் சுட்டவல்லது. இறுதியாக ஆதி 3:22-இல் "மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவன்போல் நன்மை தீமை அறிந்தவனாகி விட்டான்" என்று கடவுள் கூறுகிறார். இந்த அறிவைப் பாலின அறிவோடு ஒத்துப்போகச் செய்யமுடியாது. மனித பிறப்பிக்கும் ஆற்றலை இறைவனது படைப்பாற்றலின் ஒத்த பகுதியாகப் புரிந்து கொள்வதனால் இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க முடியாது.

**ஈ) அறிவின் முழுமை:** இம்மரம் அறிவின் முழுமையை அல்லது இறை அறிவைத் தரவல்லது. இக்கருத்துக்கு ஆதரவாக, எபிரேய மொழிமரபைச் சுட்டிக் காட்டுவர். ஒரு பொருளைப் பற்றிய தொடரில் அல்லது எதிர்மறைகளில் முதலாவதையும் இறுதியானதையும் சேர்த்துக்கூறுவது அதைப் பற்றி முழுமையாகக் கூறுவதாகக் கருதப்படும். இம்மரபை, சங் 139:2; ஆதி 31:24; 2 சாமு 14:17.20-இல் காணலாம்.

இக்கருத்துக்கும் எதிராக, முழுமைக் கருத்துக்குள் தேர்ந்து தெளிதலின் கூறு அனுமதிக்கப்பட்டால் ஒழிய ஆதி 3:22-இன் விளக்கம் மிகவும் செயற்கை முறையாக அமையும். இம்மரத்தின் கனியைத் தின்றதால் மனிதன் அறிவு முழுமைபெறவில்லை. 3:22-ஐ வஞ்சப்புகழ்ச்சிக் கூற்றாகப் புரிந்துகொள்ளுதல் பிரச்சனையைத் தீர்க்கவில்லை.

**உ)** சுருக்கமாக, ஆசிரியர் இம்மரம் பற்றித் தம் கருத்தில் கொண்டுள்ள பொருளை எங்கும் துல்லியமாகக் கூறவில்லை. இதிலிருந்து விளக்கத் தெளிவின்மை தோன்றுவதாகத் தெரிகிறது. ஆசிரியரே தெளிவில்லாமல் இருக்கும் போது, விளக்கவுரையாளர்கள் அக்கருத்திற்குத் திட்டம் அளிக்க முயல்வதில்தான் தவறு இருக்கிறது.

ஆகவே, சில பரந்த கருத்துடைய கூற்றுகளோடு நாம் நிறைவடைய வேண்டும். 1) நன்மை தீமை அறிவு இறைவனைப்போல் இருப்பதற்குச் சமமாகும் (ஆதி 3:5.22). அஃது உயிரின்மேல் ஆதிக்கத்தையும் படைக்கப்பட்ட உயிருக்குப் பொருந்தாத சுயாட்சித் தன்மையையும் வழங்குகிறது. அப்போது மனிதன் வரைக்குட்பட்டவனாக, மனிதனாக இருக்க முடியாது. 2) அறிவு மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே புதிய உறவை ஏற்படுத்துகிறது (3:8 தொ). 3) அறிவின் விளைவு மனிதன் எதிர்பார்த்ததைப்போல் நன்மை பயப்பதாகத் தெரியவில்லை. வெட்கத்தையும் குற்ற உணர்வையும்தான் தந்தது (3:7தொ).

**6. வாழ்வின் மரம்:** படைப்பு விவரிப்பில் வாழ்வின் மரம் என்ன பங்கு கொண்டுள்ளது? இம்மரத்தின் கனி என்றென்றும் வாழும் கொடையை அளிக்கவல்லது என்று 3:22-இல் தெளிவாக விவரிக்கப்படுகிறது. ஆயினும் இம்மரத்தை மனிதன் அணுக முடிந்தால், ஏன் அவன் ஏற்கெனவே முடிவில்லாத வாழ்வை அடையவில்லை? இம்மரத்தின் கனியைத் தொடர்ந்து உண்டால்தான், முடிவில்லா வாழ்வை அடையமுடியும் என்று கூறி இப்பிரச்சனைக்கு விடைகாண, சிலர் முயன்றுள்ளனர். மனிதன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டு, கனிதரும் மரத்தை அணுகத் தடைசெய்யப்பட்டபோது,அவன் முடிவில்லா வாழ்வையும் இழந்து போனான். இந்த விளக்கத்திற்கு ஆதரவாக, சமய ஒப்பியலிலிருந்து பல இணை விவரிப்புகள் தரப்படும். இவற்றில் தொடர்ந்து உண்ணுதல் முடிவில்லாத வாழ்வுக்கு அவசியமாகிறது. இக்கருத்தை அறிஞர் பலர்

ஏற்றுக்கொள்வதில்லை. ஒரே தடவை உண்ணுதல் முடிவில்லா வாழ்வை அழிக்கவல்லது என்பது உண்மையானால்தான், மனிதன் தோட்டத்திலிருந்து உடனடியாக விரட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

வாழ்வின் மரத்தின் பங்கைப் புரிந்து கொள்வதற்கு, விவிலிய ஆசிரியரின் கருத்து என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமாகும். இக்கால மனிதனின் அறிவு சார்ந்த கேள்விகளுக்கு இந்த விவரிப்புகள் விடை அளிக்கவில்லை. மனிதனின் கீழ்ப்படியாமைக்குப் பின்புதான் விவிலிய ஆசிரியர் இந்த மரத்தை முக்கியமானதாகச் சித்தரிக்கிறார்.

ஆதி 2, எளிதான மொழியில் இருந்தாலும், எடுத்துக்காட்டான வாழ்வு பற்றி எபிரேயர்கள் கொண்டிருந்த கருத்தை மிகவும் இறையியல் தன்மையோடு விவரிக்கிறது. இறைவனால் மனிதனுக்குக் குறிக்கப்பட்ட வாழ்வு ஒருங்கிணைந்த வாழ்வின் கூறாக விவரிக்கப்படுகிறது. "களி மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் (கடவுள்) உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (2:7). அவன், ஒரு மனிதக்குழுவில் (2:18தொ) தனக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட வேலையைச் செய்து (2:15.19-20) இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சார்ந்திருக்கும்போதுதான் (2:7) உயிரைக் கொண்டுள்ளான்.

கீழ்ப்படியாமையால் மனிதன் இத்தகைய வாழ்வை இழந்தான். "அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" என்று இறைவன் கூறியிருந்தார் (2:17). வெட்கம், குற்ற உணர்வு மற்றும் புறம்பாக்கப்படுதல் ஆகியவை சாவை விவரிக்கின்றன. உண்மையான வாழ்வின் இழப்பை ஈடு செய்ய, வாழ்வின் மரத்தால் முடிவில்லா வாழ்வை அடைய மனிதன் முயற்சிக்கக் கூடும் என்று கருதினர். இந்த இதிகாசக் கருத்து ஒரு போலிப்பகரமானதாக நிராகரிக்கப்படுகிறது. உண்மையான வாழ்வு மாயசக்தியுடைய மரத்தால் அன்று, இறைவனோடு கொள்ளும் சரியான உறவினாலேயே அடையப்பெறுகிறது. இந்த உறவை இழந்து விட்டதன் காரணமாகத்தான் மனிதன் இன்பவனத்திலிருந்து விரட்டப்படுகிறான். ஆதியாகம ஆசிரியர், வாழ்வு மற்றும் சாவு பற்றிய மனிதனின் இறுதியான பிரச்சனைக்குரிய போலி விடையை அடையாளப்படுத்த, பழங்கால இதிகாசக்கருத்தை ஆற்றலுள்ள விதத்தில் பயன்படுத்தியுள்ளார்.

வாழ்வின் மரம் புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலில் மீண்டும் வருகிறது. வெளிப்பாட்டியல் மொழியில், ஆசிரியர், இறைவனோடு மீண்டும் அமைக்கப்படும் உறவை, ஏதேன் தோட்ட ஆசீர்கள் மீண்டும் வருவதாக விவரிக்கிறார். மரத்தின் மாய சக்தியைப் புதிய ஏற்பாடு இனி ஒருபோதும் வலியுறுத்துவதில்லை; அது நாடுகளைக் குணப்படுத்துவதற்கு ஏதுவானது என்ற குறிக்கோளின் மேல் கருத்தை ஒருங்குவிக்கிறது.

**7. இறையியல் உட்கருத்து:** தனது கதையைக்கூற ஆதி 2-3-இன் விவிலிய ஆசிரியர் பழங்கால இதிகாசக் கருத்துக்களைக் பயன்படுத்துகிறார். அவற்றில் ஒன்று இன்பவத்தின் மாயசக்தியுள்ள மரமாகும். இந்த அன்னியமான பொருள் பழைய ஏற்பாட்டுக்கு விநோதமான கருத்துகளைப் பொதுவாகக் கொண்டிருந்தாலும், ஆசிரியர் இப்பொருளை ஆற்றலோடு மீண்டும் அமைத்து உண்மையான எபிரேயச் சாட்சி அளிக்கச்செய்கிறார்.

ஆதி 2-3-இன் கதை இறையியல் காரணம் காட்டும் கதையாகும். இறைவனிடமிருந்து மனிதன் பிரிந்ததையும் நிறைவாழ்வின் இழப்பையும் விளக்குகிறது. சாவுக்குக் காரணம் வாழ்வின் இதிகாச மரத்தின் இழப்புதான் என்ற பழம் மேற்காசிய மாதிரியிலிருந்து கவனத்தை அகற்றுகிறார். அந்த மரபையும் விலக்கிவிடுகிறார். மனிதனது அவல நிலைக்கு மனிதனது கீழ்ப்படியாமையே காரணம் என்று வெகுவாக

வலியுறுத்துகிறார். இந்த இறையியல் செய்தியை அளிக்கும் வாகனமாக இந்த அறிவின் மரத்தைப் படைத்துள்ளார். இறுதி ஆய்வில், இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நடக்கும் செயல்பாட்டுக்கு மேடைப்பின்னணியாகவே மரம் அமைவதாகத் தெரிகிறது.

**நன்மை புரிவோர் (BENEFACTORS)**

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கடவுள்களுக்கும், மனிதர்களுக்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட இந்த பட்டம், பெரும்பாலும் அரசர்களுக்கு வழங்கப்பட்டது. பொதுவாக, குறிப்பிடத்தகுந்த சேவை செய்ததற்காக அரசர்களுக்கோ, சிறப்புப்பெற்ற மனிதர்களுக்கோ இப்பட்டம் வழங்கப்பட்டது (எஸ்த 8:12; ஞானம் 19:14; 2 மக் 4:2). லூக் 22:25-இல் இதைப் பயன்படுத்துவதைக் கிறிஸ்து தடுக்கிறார். சில இடங்களில் கடவுள் செய்த நன்மைகளை மட்டுமே இச்சொல்லின் மற்ற வடிவங்கள் குறிக்கின்றன. (சங் 13:6; அ.ப. 4:9; 10:38; 1 திமொ 6:2; ஞானம் 16:2; 2 மக் 6:13; 10:38).

**நன்றி செலுத்துதல் (THANKSGIVING, GRATITUDE)**

I. விவிலிய வரலாற்றினுடைய முதல் உண்மையானது கைம்மாறு கருதாத அபரிமிதமான திருப்பியளிக்க முடியாத இறைவனின் கொடையாகும். இறைவனுடனான சந்திப்பானது எல்லாம் வல்லவருடைய பிரசன்னத்தில் மனிதனை நிறுத்துவதோடு நின்று விடுவதில்லை. அஃது அவனை முழுமைப்படுத்தி, அவனது வாழ்வை மாற்றியமைக்கிறது. நன்றி செலுத்துதலானது ஒருநாள் கிறிஸ்துவில் மலர வேண்டிய வளர்கின்ற மற்றும் தொடர்ச்சியான அருளுக்குப் பதிலாக அமைகிறது. அதே சமயம் இறைவனுடைய கொடைகளைப்பற்றிய ஆழ்ந்த உணர்வு எழுகிறது; இறைவனுடைய தாராளத்தின் காரணமாக வியப்பினால் ஆன்மா ஊடுருவி நிரப்பப்படுகிறது; இறைமாட்சிமையின் முன்னிலையிலான மகிழ்ச்சியான அங்கீகாரம் நிகழ்கிறது. இவ்வாறு நன்றி செலுத்துதலானது விவிலியத்தில் தன்மையாலே முக்கிய கருத்தாகும். ஏனெனில், மகிழ்ச்சி மற்றும் ஆராதனையின் துடிப்பில் இறைவனையும் அவரது உயர்வு மற்றும் மகிமை ஆகியவற்றையும் ஓரளவு மனிதன் கண்டடையும்போது படைக்கப்பட்ட மனிதனின் அடிப்படையான சமயப்பதிலாக அஃது உள்ளது. பவுலின் கருத்துப்படி புறவினத்தாருடைய தலையாய பாவமானது “இறைவனுக்கு உரிய மகிமையையும் நன்றியையும் செலுத்தாமலிருப்பதாகும்” (உரோ 1:21). மேலும், உண்மையாகவே மெசபொத்தாமியாவின் பக்தியால் படைக்கப்பட்ட பாடல் தொகுப்பில், நன்றி செலுத்துதலின் உணர்வு அரிதாக உள்ளது. ஆனால், அது விவிலியத்தில் அடிக்கடி நிகழ்வதாகவும், ஆன்மாவின் ஆற்றல் மிக்க உணர்வுகளை வெளிக்கொணர்வதாகவும் உள்ளது.

II. பழைய ஏற்பாடு:

1. **முதல் உடன்படிக்கையிலிருந்து இரண்டாவது உடன்படிக்கை வரை:** பழைய ஏற்பாட்டின் நன்றிசெலுத்துதலானது அஃது எப்போதும் இருக்கும் அளவிலே, புதிய ஏற்பாட்டின் நன்றி செலுத்துதலை முன்னுணர்த்துகின்றது; அதே நேரத்தில் நன்றியுரையாகவும் எதிர்காலம் மற்றும் உயரிய அருள் நோக்கிய நெருக்கடி நிலையாகவும் அறிவிக்கிறது. மற்றொரு புறம் புதிய உடன்படிக்கையின் காலத்தில் நன்றி செலுத்தலானது உண்மையாகவே பீறிட்டெழுகிறது; பண்டைய நீதிமான்களில் இதுவரை எப்போதுமே நிகழாதது போன்று, கிறிஸ்தவர்களின் செபம் மற்றும் வாழ்வில் எங்கும் பிரசன்னமாகிறது. விவிலிய நன்றி செலுத்துதலானது உண்மையாகவே தன்மையாலே கிறிஸ்தவமயமானது. ஆயினும், “இஸ்ராயேலர் நன்றி செலுத்தாமலே புகழ்கின்றனர்” என்று பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ள அளவிற்கு அது கிறிஸ்தவருக்கு

மட்டுமே உரியதன்று. பழைய ஏற்பாடானது நன்றி செலுத்துதலின் முழுமையை இன்னும் அறியாமலிருக்கிறதெனின், அருளின் முழுமையை அது சுவைக்காமலிருப்பதே அதற்குக் காரணமாகும். மேலும், அதிகத் தன்னியலான, வெளிவடிவமாக்கப்பட்ட போற்றுரையானது, இறை செயல்களுக்கும் அவரது வெளிப்பாட்டிற்கும் அதிக சிந்தனையும் கவனமும் செலுத்துகிற நன்றியறிதலைவிட அதிக இடத்தைக் கொண்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம், புனித மிக்க இறைவன் தம்மைப் படிப்படியாகவும் தனது செயலின் பரப்பையும், தனது கொடைகளின் ஆழத்தையும் சிறிது சிறிதாகவும் வெளிப்படுத்துவதேயாகும்.

2. சொல் தொகுதி: விவிலியத்தில் நன்றி செலுத்துதலைக் கண்டுபிடிப்பதென்பது மகிழ்ச்சி (சங் 33:1-3.21), புகழ்ச்சி மற்றும் மகிழ்ச்சி ஆரவாரம் (எஸ் 3:11: சங் 69:30), இறைவனை மகிமைப்படுத்துதல் (சங் 50:23; 86:12) ஆகியவற்றைக் கண்டடைவதாகும். துல்லியமாகக் கூறுவதாயின் நன்றி செலுத்துதல் என்பது குறிப்பிட்ட இறை செயல்களின் பொது அறிக்கையிடுதலாகும். இறைவனைப் புகழ்வதென்பது அவரது பெருமையை விளம்பரப்படுத்துவதாகும். அவருக்கு நன்றி செலுத்துவதென்பது அவர் புரிகின்ற வியத்தகு செயல்களைப் பறைசாற்றி, அவரது செயல்களுக்குச் சான்று பகர்வதாகும். நன்றி செலுத்துதலானது வெளிப்பாட்டுடன் இணைந்து நடைபோடுகிறது. இஃது ஒருவரது இதயத்தில் வெளிப்பாட்டின் எதிரொலியாகும். இவ்வாறாக, இது பெரும்பாலும் நீதிமான்களின் சபையினையோ, அதற்குச் செவிமடுக்கக் கூடியுள்ள மக்களையோ குறிப்பிடுவதையும் (சங் 35:18; 57:10; 109:30), அதில் சேர்ந்து கொள்வதற்கான அழைப்பையும் (சங் 92:2-4; 105:1-2) உள்ளடக்கும்.

இந்த வியந்து பாராட்டும் மற்றும் நன்றியுள்ள அறிக்கையில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளை எபிரேயத்தில் "தோதா" என்ற சொல் எடுத்துக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் நன்றி செலுத்துதலை உருப்பெறச் செய்யும் மற்றும் எதிர்நோக்கியுள்ள சமய மனப்பான்மையைத் துல்லியமாக மொழிபெயர்க்கவும் பயன்படும் எபிரேயச் சொல் ஆசீரைக் குறிக்கும் "பாராக்கு" என்பதாகும். இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான அத்யாவசிய பரிமாற்றத்தை இது வெளிப்படுத்துகிறது. தனது படைப்பிற்கு வாழ்வையும், உடல் நலத்தையும் அளிக்கின்ற இறைவனுடைய ஆசீருக்கு (உப 30:19; சங் 28:9), அந்த ஆற்றலாலும் அந்தத் தாராளத்தாலும் எழுச்சியடைந்த மனிதன் தன்னைப் படைத்தவருக்கு நன்றி செலுத்தும் ஆசீர் பலவாக அமைகிறது (தானி 3:90; சங் 68:20.27; நெகே 9:5..; 1 நாள் 29:10).

3. நன்றி செலுத்துதலின் வரலாறு: நன்றி செலுத்துதலின் உயரிய இலக்கிய வரை முறையானது, குறிப்பாகச் சங்கீதங்களில் காணப்படுகிறது. இறைவனுடைய செயலுக்கு எதிர்ச்செயலாக அது நன்றி செலுத்துதலின் பண்பை நன்றாக வெளிப்படுத்துதலின் பண்பை நன்றாக வெளிப்படுத்துகிறது. பெறப்பட்ட மீட்பினுடைய நன்றியுணர்வின் அறிக்கையானது பின் வரும் மூன்றுபகுதி கொண்ட விவரிப்பாக, சாதாரணமாக விளக்கப்படுகிறது. அனுபவித்த அபாயத்தின் வர்ணனை (சங் 116:3), துயர்மிகுந்த செபம் (சங் 116:4), இறைவனுடைய வியத்தகு தலையீட்டை நினைவுகூர்தல் (சங் 116:6; சங் 30:39; 124). இத்தகைய இலக்கிய நடையானது விவிலியம் முழுவதிலும் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. சங்கீதங்கள், புகழ்ச்சிப் பாடல்கள், மற்றும் இறைவாக்கினரின் பாடல்கள் ஆகியவற்றில் தொடர்ந்து இதே பாரம்பரியச் சொற்றொகுதிகள் பயன்பட்டுள்ளன.

நன்றி செலுத்துதல் ஒன்றாகவே இருப்பதன் காரணம் இறைவனுடைய தனித்துவமிக்க செயலுக்கு அது பதிலுரையாக இருப்பதே ஆகும். ஏறக்குறைய குழம்பிய நிலையில், யாவேயினுடைய ஒவ்வொரு இரக்கச்செயலும்

அதன் செயல்பாட்டில் பெரும் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க நொடியாக எப்போதும் உணரப்படுகிறது. நன்றி செலுத்துதலானது விவிலிய வரலாற்றை நடத்திச் சென்று, இறுதிக்கால நம்பிக்கையில் அதனை நீடிக்கச்செய்கிறது (யாத் 15:18; உப 32:43; சங் 66:8; 96).

நன்றி செலுத்துதலானது, மோசேயின் நன்றிப்பாடல் (யாத் 15:1-12) அல்லது தெபோராவின் நன்றிப்பாடல் (நீதி 5) போன்ற இஸ்ராயேலின் முழு விசுவாசத்தைச் சுருக்கித் தருகின்ற பழமையான இலக்கியப் பகுதிகளை மட்டும் தூண்டுவதாக இருப்பதில்லை. முதல் மரபு மற்றும் இஸ்ராயேலின் முழு வரலாறு ஆகியவற்றின் அடித்தளத்தில், நன்றி செலுத்துதலில் தனது மக்களுக்கான யாவேயின் பெரும் செயல்களைப் பறை சாற்றுகின்ற விசுவாசத்தின் சடங்கு அறிக்கையும் உள்ளது. இவ்வாறு தொடக்கத்திலிருந்தே உண்மையான விசுவாசமானது நன்றி செலுத்துதலில் அறிக்கையிடுதலாகும். இஸ்ராயேலானது இறைவனுடைய தாராளத்தை மேலும் அறிந்துகொள்கின்ற அளவிற்கேற்பு, இந்தப் பாரம்பரியம் தொடர்ந்து விரிவடைகிறது. மேலும், இம்மரபானது, இறைவாக்கு இலக்கியம் (எசா 12:25; 42:10... 63:7...; எரே 20:13) மற்றும் குருகுல இலக்கியம் (1 நாள் 16:8...; 29:10-19; நெகே 9:5-37), பழைய ஏற்பாட்டின் பிற்கால நூல்களின் பெரும் தொகுப்புகள் (தோபி 13:1-8; யூதி 16:1-17; சீரா 51:1-12; தானி 3:26-45. 51-90) முதலிய அனைத்துப் பகுதிகளிலும் தன்னை வெளிப்படுத்தியவாறு செல்கிறது.

III. புதிய ஏற்பாடு: முழுமையான அருளின் வெளிப்பாடு மற்றும் கொடை என்பதன் காரணமாக (யோவா 1:17), ஆண்டவருடைய ஆட்தன்மையில் புதிய ஏற்பாடானது தூய ஆவியில் தந்தைக்கு அளிக்கப்படுகின்ற முழு நிறைவான நன்றி செலுத்துதலின் வெளிப்பாடாகவும் உள்ளது.

1. கிறிஸ்தவச் சொற்றொகுதி: கிறிஸ்தவச் சொற்றொகுதியானது எழுபது நூல்களின் வழியாகப் பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியத்தைப் பெறுகிறது. நன்றி செலுத்துதலானது அறிக்கையிடுதல் (மத் 11:25; லூக் 2:38; எபி 13:15), புகழுதல் (லூக் 2:13,20; உரோ 5:11), மகிமைப்படுத்துதல் (மத் 5:16; 9:8) மற்றும் எப்போதும் சிறப்பான முறையில் ஆசீர்கூர்தல் (லூக் 1:64,68; 2:28; 1 கொரி 14:16; யாக் 3:9) ஆகியவற்றினின்று பிரிக்கப்பட முடியாததாக உள்ளது. ஆனால், பழைய ஏற்பாட்டில் செயல் அளவில் அறியப்படாத "எயுகரிஸ்தேயோ," "எயுகரிஸ்தியா" என்ற புதிய கிரேக்கச் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் (60 தடவைக்கு மேலாகக்) காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவில் இறைவனால் அளிக்கப்பட்ட அருளுக்குப் பதிலுரையான கிறிஸ்தவ நன்றி செலுத்துதலின் தனித்தன்மையையும் முக்கியத்துவத்தையும் அது காட்டுகிறது. கிறிஸ்தவ நன்றி செலுத்துதலானது நற்கருணையாகும். அதனுடைய முழு நிறைவான வெளிப்பாடானது. தனது திருச்சபைக்கு ஆண்டவரால் அளிக்கப்பட்ட அவருடைய நன்றி செலுத்துதலின் அருட்சாதன நற்கருணையாகும்.

**2. ஆண்டவருடைய நன்றி செலுத்துதல்:** ஆண்டவருடைய மேலாண்மைமிக்க செயலானது நன்றி செலுத்துதலாகும். தன்னுடையவர்களைப் புனிதப்படுத்துவதற்கெனத் தன்னுடைய வாழ்வைத் தந்தைக்கு ஒப்புக்கொடுப்பதில் இயேசு செலுத்திய பலியானது (யோவா 17:19) நமது நற்கருணையாகும். இறுதி இரவுணவிலும், சிலுவையிலும் தனது வாழ்வு மற்றும் மரணத்தினுடைய ஆற்றலை இயேசு வெளிப்படுத்துகிறார். அது மகனுடைய இதயத்திலிருந்து நன்றி செலுத்துதலாகும். தந்தையை முழுமையாக மகிமைப்படுத்துவதற்காக இயேசுவின் பாடுகளும் மரணமும் அவசியமாக இருந்தன (யோவா 17:1). ஆனால் அவருடைய வாழ்வு முழுவதும் இடைவிடாத நன்றி செலுத்துதலாக இருந்தது. விசுவசிப்பதற்கென மனிதரை ஈர்த்து அவருடன் இறைவனுக்கு நன்றியை அளிப்பதற்கென அது

சில சமயங்களில் மாட்சிமை மிக்கதாகவும் வெளிப்படையானதாகவும் அமைந்துள்ளது (யோவா 11:42). இந்த நன்றி செலுத்துதலின் முக்கிய பொருள், குறிப்பிடத்தக்க வகையில் புதுமைகளால் வெளிப்படுத்தப்பட்டதாகவும் (யோவா 6:11; 11:41-43), மனிதருக்கு இறைவன் அளித்த அவரது வார்த்தையாகிய கொடையாகவும் உள்ள (மத் 11:25-27) மெசியா நிறைவேறுதலாகிய இறைவனின் செயலாகும்.

3. **சீடர்களின் நன்றி செலுத்துதல்:** திருச்சபைக்கான நற்கருணையின் கொடையானது ஒரு முக்கிய உண்மையை வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து மட்டுமே நமது போற்றுரையாக இருப்பதுபோல், அவர் மட்டுமே நமது நன்றி செலுத்துதலாகவும் உள்ளார். தந்தைக்கு முதலில் நன்றி செலுத்துபவர் அவரே. அவருக்குப்பின்னர்க் கிறிஸ்தவர்கள் அவரில் நன்றி செலுத்துகின்றனர். "இவர் வழியாக இவரோடு, இவரில்..." நன்றி செலுத்துதலில் கிறிஸ்து மட்டுமே ஒரே மாதிரியாகவும் ஒரே இடையாளராகவும் உள்ளார் (உரோ 1:8; 7:25; 1 தெச 5:18; எபே 5:29; கொலோ 3:17).

தாங்கள் பெற்ற கொடையை உணர்ந்தவர்களாயும் தலைவரின் எடுத்துக்காட்டினால் ஆட்கொள்ளப்பட்டவர் களாயும் முதல் கிறிஸ்தவர்கள் நன்றி செலுத்துதலைத் தங்களுடைய புதிதாய்க் கண்டடைந்த வாழ்வின் பாவு நூலாகவும் ஊடிழையாகவும் அமைத்தனர். இத்தகைய வெளிப்பாடுகளின் எண்ணிக்கையின் மிகுதி வியப்பூட்டவல்லது. பழைய ஏற்பாட்டின் சில நன்றிக் கீதங்களைப் போன்று, நிகழ்ச்சிகளின் மீதான நீடித்த சமய சிந்தனையால் தூண்டப்படுகின்ற லூக் 1 மற்றும் 2-இன் நன்றிக்கீதங்களும் உள்ளன. அப்போஸ்தலர்கள் மற்றும் முதல் சமுதாயத்தவர்களுடைய நன்றி செலுத்துதலின் பிரதிபலிப்புகளும் உள்ளன (அ.ப. 28:15; 5:41; 21:20;உரோ 7:25; 2 கொரி 1:11; எபே 5:20 கொலோ 3:17; 1 தெச 5:18). பவுலின் இடைவிடாத நன்றி செலுத்துதலின் நினைவுகூர்தலாக உள்ள சிறந்த பகுதிகளும் உள்ளன (1கொரி 1:4; பிலி 1:3; கொலோ 1:3; 1தெச 1:2; 2:13; 2 தெச 1:3). இவை சிலநேரங்களில் ஆசீர் கூர்தலின் உன்னத வடிவையும் கொண்டுள்ளன (2 கொரி 1:3; எபே 1:3). பவுலைப் பொருத்தமட்டும் முழுக் கிறிஸ்தவ வாழ்வும், முழுத் திருச்சபை வாழ்வும் வேண்டுதல் மற்றும் நன்றி செலுத்துதலின் இடைவிடா இணைப்பில் போர்த்தப்பட்டுத் தொடர்ந்து நடைபெறுகிறது ( 1 தெச 3:9-10; 5:17-18; உரோ 1:8-10). எல்லாவித நிகழ்வுகள் மற்றும் அடையாளங்கள் மூலமான நன்றி செலுத்துதலின் பொருளும் ஒரே விதமாகவே உள்ளது. திருச்சபை முழுவதும் பரவியுள்ள இறை அரசு, நற்செய்தியின் வருகை, கிறிஸ்துவின் மறைபொருள், மீட்பின் பலன் ஆகியவையாகும். இவை எபேசியருக்கான திருமுகத்தின் பெரும் நன்றி செலுத்துதலில் நிறைவாக அமைந்துள்ளன (எபே 1:3-14).

திருவெளிப்பாடானது இந்த நன்றி செலுத்துதலை முடிவில்லா வாழ்வின் பரிமாணங்களுக்கு விரிவுபடுத்துகிறது. மெசியா பணி நிறைவேறிய நிலையில், விண்ணக எருசலேமில் நன்றி செலுத்துதலானது மகிமையின் தூய புகழ்ச்சியாகவும், இறைவனுடைய மற்றும் அவருடைய முடிவில்லா வியத்தகு செயல்களினுடைய ஒளிரும் சிந்தனையாகவும் உருவாகிறது (திருவெளி 4:9-11; 11:16-17; 15:3-4; 19:1-8).

### நன்றிப் பலி (THANK OFFERING)

அடைந்த நன்மைகளுக்காகச் செய்யப்பட்ட நேர்ச்சைப்பலி இயல்பாகவே நன்றிக் கடனாகச் செலுத்தப்பட்ட நன்றிப்பலியாக மாறியது (காண். லேவி 7:12-13.15; 22:29; 2 நாள் 33:16; சங் 50:14.23; 107:22; 116:17; எரே 17:26). இரண்டு பலிகளும் கருத்தளவில் வேறுபட்டவை. ஏனெனில், நன்றிப்பலி எந்த முன் நேர்ச்சியையும் குறிப்பதில்லை. மேலும், லேவி 7:15 தொ-இல்

நன்றிப்பலி ஒப்புக்கொடுப்போர் உணவாக உண்ணும் வகையைச் சேர்ந்தது. ஆகவே சிலவற்றிலாவது, வெற்றிகரமாக ஒரு காரியத்தைக் கொண்டாடச் செய்யப்பட்ட விருந்தில் இது தோன்றியிருக்க வேண்டும். பிற்காலத்தில்தான் பெற்ற இறை நன்மையை வெளிப்படுத்தும் கருத்தோடு இஃது இணைந்திருக்க வேண்டும். சில சமயங்களில் இது சுதந்திரமாகவோ, நேர்ச்சையாகவோ சமாதானப்பலியை உணர்த்திற்று (சங் 56:12-13; காண். சங் 50:14; 54:6-7; 116:14. 17:18). மற்றச் சமயங்களில் சமாதானப் பலியின் ஒரு தனிப்பட்ட வகையை உணர்த்திற்று (லேவி 7:12-14).

**நன்னார் ( NANNAR - ஒளி அளிப்பவர்)**

சுமேரியரின் சந்திர கடவுளுக்கான சிறப்புப் பெயர் இது சீன் எனப்படும் இக்கடவுளைத் தென் மெசபொத்தாமியாவில் சந்திர வழிபாட்டுக்குப் பெயர்பெற்ற "ஊர்" எனுமிடத்தில் இப்பெயரால்தான் மக்கள் வழிபட்டனர்.

# நா

## நா (TONGUE)

1. தன் உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு, உறவை வளர்த்துக்கொள்ள தன் நாவைப் பயன்படுத்துகிறான் மனிதன். இதயத்தில் ஊறிவரும் உணர்வுகளை இறைவன் திருமுன்படைப்பதற்கும் நா பயன்படுகின்றது. இவ்வாறு தம் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்குச் சிலருக்கு நா எழாமற் போகலாம்; அஃது இறைவன் வழங்கும் தண்டனையாக அமையலாம் (லூக் 1:20; சங் 137:6). இறைவனின் பெருமைகளைப் பாடும்படி ஊமைகளின் நாவு கட்டவிழ்த்து விடப்படலாம் (லூக் 1:64); இது மெசியாவின் சிறப்புப்பணி யாகும் (எசா 35:6; மாற் 7:33-37).

2. **நாவினால் விளைவும் நற்பயனும் தீவினையும்:** "வாழ்வதும் நாவாலே,சாவதும் நாவாலே"(பழ 18:21). பழமைமிக்க இக்கருத்து ஞானிகளின் வாக்குகளில் எதிரொலிக்கின்றது ( பழ, சங், சீரா). யாக்கோபும் இதை வலியுறுத்துகிறார்; "பரம தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவதும் அந்நாவாலே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனைக் தூற்றுவதும் அந்நாவாலே" (யாக் 3:9). பொய், ஏமாற்று, இரண்டகம், பழிச்சொல், அவதூறு ஆகியவை தீய நாவினால் விளைகின்றன (சங் 11:2; சீரா 51:2-6). தீய நா ஒரு நச்சுப்பாம்பு (சங் 140:3); கூர்மையானவாள் (57:5); தீட்டிய கத்தி (52:2); கொல்லும் அம்பு (எரே 9:7; 18:18). தன் நாவைக்காக்கிறவன் இடுக்கண்ணிலிருந்து தன் ஆன்மாவையே காத்துக்கொள்கிறான் (பழ 21:23). யாக்கோபு நாவைக் கப்பலின் சுக்கானுக்கு ஒப்பிடுகிறார் (யாக் 3:4-5). நாவால் மனிதன் நீதியை, உண்மையைப் போதிக்க வேண்டும். எனவே,அது மிகச் சிறந்த சக்தி கொண்டதாகக் கருதப்படுகிறது (சங் 37:30). மனிதன் நாவினால் நெறி பிறழ்ந்தும் வாழக்கூடும்.சான்றாக, தன்னைத்தானே பெருமையாகப் பேசிக்கொள்ள முடியும் (சங் 12:4); பிறருடைய நற்பெயரைக் கெடுக்க முடியும் (பழ 25:23); ஏமாற்ற முடியும் (சங் 109:2; 120:2). கடவுளைப் போற்றவே நா அமைந்துள்ளது (சங்35:28; 51:14; 70:24; உரோ 14:11; பிலி 2:11). சில சமயங்களில் நமது நா நம்மைக் கடவுளிடமிருந்து பிரித்து விடவும் கூடும் (யோபு 15:4-5). நாவினை நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்தப்படலாம் (யாக் 3:9). "தம் நாவால் பாவம் செய்யாதோர் யார்?" (சீரா19:17) என்ற வினாவிற்குப் பதில் என்ன? "தன் நாவினால் தவறாதவன் பேறு பெற்றோன்" (25:7-8) என்ற நம்பிக்கைதான். மற்றொரு நம்பிக்கையும் எதிரொலிக்கின்றது: "யாவேயின் நாளில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் "வஞ்சகப்பேச்சு" இராது (செப் 3:13).

இந்த நம்பிக்கை வீணானது அன்று, நெறிபிறழாது நீதியின் வழி நடப்போரின் நாவைப் புடம்போட்ட வெள்ளிக்கு ஒப்பிடலாம் (பழ 10:20).அந்த நா இறைவனின் நீதியை எடுத்துரைக்கும்; அவரது புகழை என்றும் பாடிப்பரவும் (சங் 35:28; 45:2); ஆண்டவரின் அளவற்ற ஆற்றலைப் பறைசாற்றும் (எசா 45:24).இதயத்தின் எதிரொலியாய் மொழி அமைகின்றது: எனவே, உள்ளத்திற்கும் உதட்டிற்கும் ஒற்றுமை வேண்டும்; சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் வேண்டும். "நம் அன்பு சொல்லிலும், பேச்சிலும் இராமல், செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும்" (1 யோவா 3:18; காண். யாக் 1:26).

3. **மொழிகள் பலவிதம்:** உலகில் ஒவ்வொரு இனத்தவருக்கும் ஒரு மொழி உண்டு. ஒவ்வொரு மொழியினருக்கும் ஒரு தனிப்பண்பாடு உண்டு. இது, மனிதன் தேடிப்பெற்ற அறிவுச் செல்வத்தின் சிறப்பைக் காட்டவில்லை. மாறாக மனிதன் செய்த பாவத்தின் தீவினையைச் சுட்டிக்காட்டுகிறது.

ஏனெனில் ஒருவர் ஒருவரைச் புரிந்துகொள்ள இயலாதவாறு இந்த மொழிகள் தடைச்சுவராய் அமைந்துள்ளன. உலகில் நிலவும் பல்வேறு மொழிகளுக்குச் சமய அடிப்படையில் விளக்கம் கொடுக்கிறது- பாபேல் கோபுரம் (ஆதி 11). அதாவது, மனிதன் இறைவனைப் புறக்கணித்து ஒரு கோபுரத்தைக் கட்டிஎழுப்ப இறுமாப்புடன் முனைகிறான். அப்போது ஒருவன் பேசுவது மற்றவனுக்குப் புரியாதவாறு மொழிக்குழப்பம் ஏற்படுகின்றது. ஆனால் மனிதர்களைப் பிரித்த இந்த மொழி என்னும் தடையைத் தகர்த்தெறிகின்றது- பெந்தகோஸ்தே நிகழ்ச்சி (அ.ப. 2:1-13). தீ நாவின் வடிவிலே தூய ஆவியானவர் அப்போஸ்தலர்மீது எழுந்து வருகின்றார். அதன் விளைவாக, ஆண்டவர் அருளிய நற்செய்தியை எல்லா இனத்தவரும் தங்கள் மொழியிலே புரிந்துகொள்கின்றனர். ஆவியானவருக்கு ஒரு தனி மொழி உண்டு. அதுதான் அன்பு என்னும் தேன்மொழி. அந்த மொழியின் வழியாகத்தான் உலக இனத்தவர் அனைவரும் ஒப்புரவாக முடியும், ஒன்றுபடமுடியும். ஆவியார் அருளால் அப்போஸ்தலர்கள் பன்மொழிக் கொடையைப் பெறுகின்றனர். அந்த அருட்கொடையினால் அவர்கள் பேருவகையுடன் தேவனின் திருப்புகழைத் தொழுதேத்துகின்றனர் (அ.ப. 2:4; 10:46); அதே கொடையினால், ஆண்டவரின் அரும் பெரும் செயல்கள் அறிவித்து இறைவாக்கு உரைக்கின்றனர் (2:6.11; 19:6). இளந்திருச்சபையில் பரவசப்பேச்சுக் கொடையை ஒரு வரையறைக்குள் கொண்டுவர விரும்புகிறார் பவுல். அவர் பரவசப் பேச்சைப் பாராட்டுகிறார்; ஆனால், இறைவாக்கு வரத்தின் உறுபயன்கருதி, அதையே நாடுகிறார் (1 கொரி 14:15). பெந்தகோஸ்தே நிகழ்ச்சி நமக்குப் பல உண்மைகளை உணர்த்துகிறது. தொடக்கத்திலிருந்தே திருச்சபை பொதுமைப் பண்பைப் போற்றி வளர்க்கின்றது; பல்வேறு மொழியினருக்கும் நற்செய்தியை அறிவிக்கின்றது; இறைவனின் புகழ்பாடுவதற்கு அவர்களை ஒன்றிக்கின்றது (காண். எசா 66:18; திருவெளி 5:9; 7:9...). இவ்வாறு 'இயேசு ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும் (பிலி 2:11).

**நாகசு (NAHASH – பாம்பு)**

1. அம்மோனியர்களின் அரசனான நாகசு,யாபேசு – கிலயாதை எதிர்த்துப் போரிடத் தொடங்கினான். சவுல் இந்த அம்மோனியரைத் தோற்கடித்து, அதன்மூலம், தாம் இஸ்ராயேல் மக்களுக்கு அரசனாகும் தகுதி உள்ளவர் என எண்பித்தார் (1 சாமு 11:1-11).புகழை விரும்பிய நாகசு,யாபேசு – கிலயாது மக்கள் உதவி வேண்டி, பிற இஸ்ராயேல் இனத்தாரிடம் ஆள் அனுப்ப அனுமதித்தான்; இஸ்ராயேல் மக்களின் படைபலத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்களிடம் பெரும் தோல்வி அடைந்தான். பிற்காலத்தில் சவுலுக்கு எதிராக தாவீதும்,நாகசும் நண்பராயினர் ( 2 சாமு 10:2). நாசுசுக்குப்பின் அவன் புதல்வர்கள் ஆனூனும் (2 சாமு 10:1), சோபியும் (17:27) அம்மோனியரை ஆட்சி செய்தனர்.இவர்களுள் சோபி தாவீதின் அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றினான்.

2. இரண்டாம் சாமுவேல் ஆகமம், "அபிகால் யோவாபின் தாயும் செரூயாவின் சகோதரியுமான நாகசின் மகள்," அப்சலோம் புதிதாக நியமித்திருந்த அமாசாவின் தாய் எனக் கூறுகிறது (2 சாமு 17:25). செரூயாவும் அபிகாயிலும் தாவீதின் சகோதரிகள் என்று 1 நாள் 2:16 கூறுகிறது.ஆகவே, தாவீதின் தந்தையான ஈசாயின் புதல்விகளாவர். ஆனால் நாகசு – தாவீதின் தந்தையன்று. ஆகவே, அறிஞரின் கருத்துப்படி நாகசு -செரூயா மற்றும் அபிகாயிலின் தாயாக இருக்க வேண்டும்; அல்லது ஈசாயின் மனைவியினுடைய முந்தைய கணவராக இருக்க வேண்டும்.

**நாகத்து (NAHATH – இறக்கம், ஓய்வு, தூய்மையான,தெளிவான)**

1. ஓர் ஏதோமிய இனத்தலைவர். ரெயுவேலின் மகன் (ஆதி 36:13.17; 1 நாள் 1:37).

2. ஒரு லேவியர். கோகாத்திய எல்கனாவின் பேரன் (1 நாள் 6:26). இவர் 1 நாள் 6:34-இல் தோவாகு என்றும், 1 சாமு 1:1-இல் தோகூ என்றும் அழைக்கப்படுகிறார்.

3. ஆலய வரிகளை மேற்பார்க்க எசேக்கியாவால் நியமிக்கப்பட்ட, முக்கிய அதிகாரிகளுக்கு உதவி செய்ய அரசனால் நியமிக்கப்பட்ட ஒரு லேவியர் (2 நாள் 31:13).

**நாகரிகமற்றவன், மிலேச்சன் (BARBARIAN)**

கிரேக்கமொழி தெரியாத,கிரேக்கன் அல்லாதோன் நாகரிகமற்றவன் என்று அழைக்கப்பட்டான். தொடக்க காலத்தில் பிறமொழிகளின் ஒலிகளை இழிவுபடுத்துவதன் அடையாளமாக, அவைகளை நாகரிகமற்ற என்ற அடைமொழியோடு குறிப்பிட்டார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது கிரேக்கர் அல்லா தோரைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டது (அ.ப. 28:2; உரோ 1:14;1 கொரி 14:11; கொலோ 3:11).

**நாகாய் (NAGGAI)**

இவர் இறைமகன் இயேசுவின் மூதாதையர் (லூக் 3:25). இவரைப்பற்றி வேறெதுவும் தெரியவில்லை.

**நாகூம்(NAHUM – ஆறுதல், இரக்கம்)**

1. சிறிய இறைவாக்கினர்கள் பன்னிருவருள் ஒருவர். இவரது வாக்குகளை நாகூம் நூலில் காணலாம். இவர் தென்யூதாவிலுள்ள எல்கோசு என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் (நாகூ 1:1).

2. இயேசுவின் முன்னோர் பட்டியலில் குறிக்கப்படுபவரில் ஒருவர். எஸ்லியின் மகன் (லூக் 3:25).

**நாகூம் இறைவாக்கு நூல் (NAHUM, BOOK OF)**

1. பெயரும் வாழ்க்கை வரலாறும்:

“ஆண்டவர் நல்லவர்.... அவரிடம் அடைக்கலம் புகுந்தோரை, அவர் அறிவார்; தம் எதிரிகளை.... முற்றிலும் அழித்து விடுவார்; தம் பகைவர்களை இருளுக்குள் விரட்டி அடிப்பார்” (நாகூர் 1:7-8) என்ற கருத்தினை இந்நூல் விளக்குகிறது.

நாகூம் என்ற சொல் “நாகூமியாஹ்” (nahumyah) என்ற சொல்லின் சுருக்கமாகும். “யாவே ஆறுதல் அளிக்கிறார்” அல்லது, “யாவேயின் ஆறுதல்” என்று அதற்குப் பொருளாகும். இவர் எல்கோசு என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பது தவிர வேறு ஒன்றும் இவரைப் பற்றித் தெரியாது. இவ்விடத்தை அடையாளம் காட்ட மூன்று பாரம்பரியங்கள் முயன்றுள்ளன. முதல் பாரம்பரியம்-நினிவேயின் அழிவின் விளைவான, மண் குன்றுகளுக்கு அருகிலுள்ள நகரமான மோசுல் என்ற நகரத்துக்கு 27 மைல் தூரத்திலுள்ள, ஈராக்கைச் சேர்ந்த இக்கால ஏல்குய்தான் நூலில் குறிக்கப்படும் எல்கோசு என்று கூறும். அங்கே நாகூமின் கல்லறை இருப்பதாகக் காண்பிப்பார்.இப்பாரம்பரியம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து வருகிறது. இது சரியென்றால் சமாரியாவின் வீழ்ச்சிக்குப்பின் கி.மு. 728-21-இல் நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவராக நாகூம் இருக்க வேண்டும். மற்றொரு பாரம்பரியத்தில் (எரோனிமூவின் கருத்துப்படி கி.பி. 4-நூற்) நாகூம் கலிலேயாவைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார், இப்பாரம்பரியம் சரியென்றால், அசீரியர்களால் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டபின், வடவரசில் விடப்பட்டவர்களின் வழித்தோன்றலாக இவர் இருக்கவேண்டும். மேலும் ஒரு பாரம்பரியப்படி, நாகூம் யூதேயாவின் தென்மேற்குப் பகுதியிலிருந்த எல்கோசைச் சேர்ந்தவராவர். இதற்கு, இவர் யூதாவின்மேல் காட்டும் அக்கறையைச் சான்றாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவர். இப்பாரம்பரியம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து வருகிறது. இப்பாரம்பரியங்களில் எதற்கும் போதிய சான்றுகள் இல்லை. ஆயினும் நாகூம் யூதாவைச் சேர்ந்தவர் என்று பொதுவாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர்.

இவரது நூலிலிருந்து - இவர் நாட்டுப் பற்றுடையவர்; ஓரளவு நாட்டு ஆவேசம் மிக்கவர் எனத் தெரிகிறது. இந்நூலில் அமைந்த இறைவாக்கின் தொனி-இவர் எருசலேம் ஆலயத்தோடு தொடர்புடைய இறைவாக்கினராக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.

**2. வரலாற்றுப்பின்னணி:** வடக்கு அரசான இஸ்ராயேலின் அரசனான ஆகாபு அசீரிய எதிர்ப்பாளர் கூட்டணியில் சேர்ந்து கி.மு. 854-இல் மூன்றாம் சல்மனேசரோடு போரிட்டான். அக்காலம் முதல் அசீரிய ஆபத்து யூதாவை அச்சுறுத்திக் கொண்டேயிருந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் இஸ்ராயேலின் அரசன் ஏகூ அசீரியாவுக்குக் கப்பம்கட்டத் தொடங்கினான். அதற்குப் பின் இஸ்ராயேல், யூதாவைச் சேர்ந்த அரசர்கள், கப்பம் கட்டி வந்தனர். கி.மு. 721-இல் 2-ஆம் சார்கோன் வடவரசை முழுவதும் அழித்து, பல்லாயிரக்கணக்கானவரை நாடு கடத்தினான்; யூதாவின் பெரும்பகுதிகளை அழித்தான். சனகெரிபு திடீரென்று பின்வாங்கியதால், எருசலேம் தப்பியது. மனாசேயின் நீண்ட ஆட்சிக்காலம் முழுவதும், அவன் அசீரியர்களுக்குக் கப்பம் கட்டி அடிமையாக இருந்தான். இக்காலத்தில் அசீரிய மன்னன் ஏசர்கத்தோன் எகிப்தில் புகுந்து கி.மு. 671-இல் மெம்பிசைக் கைப்பற்றினான். அவனது மகன் அசூர்பானிப் பால், தென் எகிப்தை வென்று, அதன் தலைநகரான தெபேசை, கி.மு. 663-இல் அழித்தான் (நாகூ 3:8). அவன் காலத்தில், அசீரியா அதன் உச்ச நிலையை அடைந்தது எனலாம். அவனது தலைநகரான நினிவேக்கு இணையான நகரை, அக்கால உலகில் காண முடியாது. அங்கு ஓர் அரிய நூல் நிலையத்தை அமைத்தான். அசீரிய அரசர்களும், தளபதிகளும் அதிகார வெறியாலும், மகிமை அடையவேண்டும் என்ற பேராசையாலும், தங்களால் ஆள முடியாத அளவிற்கு அரசை விரிவாக்கி விட்டனர். அவர்கள் வெற்றிகொண்ட நாடுகளில் இழைத்த கொடுமைகளுக்கு அளவேயில்லை. ஆகையால், எல்லோராலும் வெறுக்கப்பட்டனர். பிற நாடுகள் அவர்களது கொடுமைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய, சாதகமான வாய்ப்பை எதிர் பார்த்துக்கொண்டிருந்தன. அவ்வாய்ப்புக் கிட்டியபோது, அதைப்பயன்படுத்தத் தவறவில்லை.

அசூர்பானிப்பாலின் சகோதரனான சமாஸ்-சும்-உகின் கி.மு. 652-இல் கிளர்ச்சி செய்து உள்நாட்டுப் போரைத் தொடங்கினான். இதை அடக்க ஆறு ஆண்டுகளாயின. இந்த நீண்ட போராட்டம், அரசைப் பலவீனப்படுத்தியது. அதன்பின் அசூர்பானிப்பாலின் மகன் சின்சரிஸ்குன் அரசனானான். கி.மு. 626-இல் நினிவேயை மேதியர்கள் தாக்க முற்பட்டனர். ஆனால் சித்தியர்களின் இடையீட்டால் இது வெற்றி அடையவில்லை. முதலில் எகிப்து விடுதலை பெற்றது. அசீரியப் பேரரசுக்குப் பெரிய ஆபத்து பாபிலோனிலிருந்து வந்தது. அசீரியச் சேனையின் தளபதிகளில் ஒருவனான நபோபோலாசர் கிளர்ச்சி செய்து கி.மு. 626-இல் பாபிலோனில் சுதந்தர அரசன்ஆனான். இவன் கி.மு. 616-இல், பல நூற்றாண்டுகளாக அசீரியப் பேரரசைச் சேர்ந்த, மத்திய யூப்பிரத்தீசு பகுதியைக் கைப்பற்றினான். கி.மு. 615-இல் இவன் அசூரைக் கைப்பற்ற முயன்றான்; ஆனால் வெற்றி பெறவில்லை. கி.மு. 614-இல் மேதியர்களும், பாபிலோனியர்களும் கூட்டணியாக அசூரைத் தாக்கி, அதைத்தரைமட்டமாக்கினர். அதன்பின் நினிவேயை நோக்கிப் படையெடுத்தனர். இவர்களோடு சித்தியரும் சேர்ந்து கி.மு. 612-இல் நினிவேயைத் தாக்கினர். அசீரியப்படை காரானுக்குத் தப்பி ஓடியது. நினிவேயின் அரண்மனைகளும், கோவில்களும் அழிக்கப்பட்டன. மன்னன் சின்சரிஸ்குன் கொல்லப்பட்டான். இவ்வாறு, செப்பனியா இறைவாக்குரைத்த சிறிது காலத்திற்குள்ளே, நினிவே "வறண்ட பாலை நிலமாயிற்று" (செப் 2:13). செப்பனியாவின் ஒரு சிறிய இறைவாக்கு

நாகூமின் இறைவாக்கு, நூலாக, வடிவெடுக்கிறது. காரானில் அசூர்பல்லித்து என்பவன்அரசனாகி அசீரிய அரசை நிலைநிறுத்த முயன்றான். இம்முயற்சியும் கி.மு. 610-இல் பாபிலோனியராலும் சித்தியர்களாலும் தோற்கடிக்கப்பட்டது. அசூர் பல்லித்து கர்கமிசுக்கு ஓடிப்போனான். அங்கே எகிப்தியர் அவனுக்கு உதவிபுரிய வந்தனர். இருவரையும் கி.மு. 605-இல் பாபிலோனியர் தோற்கடித்து, அசீரிய அரசை அழித்தனர். இவ்வாறு, பல நூற்றாண்டுகளாக வெல்ல முடியாதவாறு வலுப்பெற்றிருந்த அசீரியப் பேரரசு, வியத்தகு வகையில் விரைவில் சிதைந்து போயிற்று.

3. **நினிவேயின்நிலை:- தொல்பொருள் அகழ்வும் ஆய்வும்:**

சனகெரிபுவின் காலத்திலிருந்து நினிவே அசீரியப் பேரரசின் தலைநகராக இருந்தது. அசூர்பானிப்பாலின் காலத்தில், உன்னத நிலையை அடைந்தது. சிறந்த நூல் நிலையத்தைக் கொண்டிருந்தது. அதன் இன்றைய நிலை என்ன? திக்ரீசு நதிக்கரையிலுள்ள மோசுல் நகருக்கு எதிராக அந்நதியின் அக்கரையிலுள்ள இரு பெரும் மண் மேடுகளும் 8 மைல் சுற்றளவுள்ள சிதை பொருள்களும்தான் - நினிவேயின் இன்றைய நிலையாகும். இவ்வாறு, செப்பனியா முன்னறிவித்தபடி, நினிவே வறண்ட பாலை ஆயிற்று.

இந்த மண்மேடுகளில் ஒன்று குயுண்டிக் (Quyundig) என்றழைக்கப்படுகிறது. இதை, கி.பி. 1922-32-இல் கவனமாய்த் தோண்டி ஆராய்ந்தனர். புதைபொருள் அகழ்வுகள் கோவில்களையும் அரண்மனைகளையும் காட்டுகின்றன. இவற்றில் சிறப்பானவை அசூர்பானிப்பாலின் கோவில், சனகெரிபின் அரண்மனை, இஸ்தாரின் பழங்காலக் கோவில் ஆகியவையாகும். நினிவேயில் இஸ்தாரின் வழிபாடு, அக்கேடியன் காலம் வரை (கி.மு. 2500-2300) பின்செல்கிறது.

இஸ்தர் போர், காதல் ஆகியவற்றிற்குரிய தேவதையாகும். அசீரியர்கள் இதை ஒரு போர்க்கடவுளாக வழிபட்டனர். இஃது அவர்களது வரலாற்றுக்கு ஏற்ற அடையாளமே. மண்மேட்டின் நடுவில் கோவில் இருந்திருக்கிறது. நாகூம் நினிவேயின் எழுத்தர்களைப்பற்றிக் (அரச அலுவர்; நாகூ 3:17) குறிப்பிடுகிறார். அசூர்பானிப்பாலின் நூல் நிலையம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இது களிமண்ணால் செய்யப்பட்டு,வரையப்பட்ட ஆயிரக்கணக்கான தகடுகளைக் கொண்டுள்ளது. இவை நமக்கு 26 நூற்றாண்டுகளுக்கு முந்திய அசீரியப் பண்பாட்டை விவரிக்கின்றன.

மற்றொரு மண்மேடு "நெபியூனுஸ்" (இறைவாக்கினர் யோனாஸ்) என்று அழைக்கப்படுகிறது. இதை ஒட்டியிருக்கும் மசூதியும், கல்லறை நிலமும், கிராமமும் இம்மண்மேடு அகழ்ந்து எடுக்கப்படுவதைத் தடுத்து விட்டன. இது, முதல் மண்மேட்டில் பாதி அளவுதான் உடையது.

4. **நூல் எப்போது எழுதப்பட்டது?:** நினிவேயின் அழிவாகிய வரலாற்றுத்திருப்ப நிகழ்ச்சியை நாகூம் திருநூல் விவரிக்கிறது. நாகூம், கி.மு. 633-க்கு முன், இந்த இறைவாக்கை உரைத்திருக்க முடியாது; ஏனெனில் தெபேசின் (நோ-ஆமோன்) வீழ்ச்சியைப்பற்றி 3:8-10-இல் குறிக்கிறார். இதற்குப் பிறகுதான் அவர்தம் பணியைச் செய்திருக்க வேண்டும். நினிவேயின் வீழ்ச்சியை அவர் விரிவாக, உயிர்ச்சித்திரமாக விவரிக்கிறார் (3:18-19). ஆகவே, நினிவேயின் அழிவுக்குப் பிறகுதான் (கி.மு. 612) இந்நூலை எழுதினார் என்று ஆய்வாளர்கள் சிலர் கூறுவர். ஆனால், சில பகுதிகள் நகரின் அழிவு உடனடியாக வருவதாகக் காட்டுகின்றன (3:12-13). நூல் முழுவதும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகின்றது.அசீரியர்கள் பயன்படுத்திய போர் பற்றிய விறுவிறுப்பான விவரிப்பும், அசீரிய வாழ்க்கை முறை பற்றிய அறிவும், சில நூற்றாண்டுகளாக அவர்களிடம் அவதியுற்ற

மக்களுக்குச் சாதாரண அறிவாகும். இவற்றையும் தமது கற்பனையையும் பயன்படுத்தி, சிறியதொரு காவியம் படைத்துள்ளார். மேலும், அசீரியர்களுக்கு அடுத்த பேரரசாக வந்த பாபிலோனியர்களும் கொடுமை மிக்கவர்களே. ஆனால், நூலில் இதுபற்றிக் குறிப்பு ஒன்றுமில்லை. நினிவேயின் வீழ்ச்சிக்குப்பின் நூல் எழுதப்பட்டிருந்தால் இஃது அவசியமாகக் குறிக்கப்பட்டிருக்கும். ஆகையால், இந்நூல் நினிவேயின் வீழ்ச்சிக்குச் (கி.மு. 612) சிறிதுமுன் எழுதப்பட்டிருக்க வேண்டும். 3:18-19 போன்ற பகுதிகள் பிற்காலத்தில் நாகூமின் சீடர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் சிந்திக்குங்கால் நாகூம், கி.மு. 626-612-க்கு இடைப்பட்ட காலத்தில் போதித்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

5. **நூலின் திட்டம்:**

**I.ஆண்டவரின் சினம்:** தீர்ப்பின் ஆண்டவரது இறைத்தோற்றம் (1:1-8).

1:1 தலைப்பு

1:2-6-இறையாற்றலின் வெளிப்பாடு.

1:7-8-இறை நீதியின் வெளிப்பாடு.

**II. யூதா அசீரியாவைப் பற்றிய இறைவாக்குகள்:** ஆசீரும் கேடும் (1:9-2:3).

1:9-10. 12:13; 2:1-யூதாவுக்கு ஆறுதலும், ஆசீரும்.

1:11.14-அசீரியாவுக்குக் கேடு.

**III.** நினிவேயின் வீழ்ச்சி (2:2-3:19):

அ. நினிவே தாக்கப்படுகிறு (2:2-14).

2:2-11 நினிவேயின் மேல் படையெடுப்பு.

2:12-14-அசீரியாவின் சிங்கம் அச்சுறுத்தப்படுகிறது.

ஆ. நினிவேயின் குற்றங்களே அதை வீழ்ச்சியுறச் செய்தன (3:1-19).

3:1-4-நினிவேயின் நிலை.

3:5-7-யாவேயின் தீர்ப்பு.

3:8-11-தெபேசு - ஓர் எடுத்துக்காட்டு.

3:12-15- நினிவேயின் பாதுகாப்பு வீண்.

3:15-17-வெட்டுக்கிளிகள் கூட்டம்.

3:18-19-நினிவேயின் மேல் இரங்கற் பாடல்.

6. **இலக்கியச்சிறப்பு:** நினிவேயின் அழிவை விவரிப்பதில், நாகூம் காட்டும் ஆற்றல், இவரை இஸ்ராயேலின் பெரும் புலவர்களில் ஒருவராகக் காட்டுகிறது. நினிவேயின் வீழ்ச்சி பற்றிய விவரிப்புக்கு, முன்னுரையான முதல் அதிகாரமும், அதே புலமையைக் காட்டுகிறது. இதை ஆசிரியர் தான் எழுதினாரா என்று ஐயுற வேண்டியதில்லை. கொடுமைப்படுத்துவோரின் பேரழிவுபற்றிச் சிறிதும் அனுதாபம் இன்றியும் மனிதத்தன்மை இன்றியும் பெருமைப்பட்டுக் கொக்கரிப்பதாக இப்பகுதி தோன்றுகிறது. இதுவும், ஆசிரியரின் பொருத்தமான உருவகங்களும், உயிர்ச்சித்திரமான விவரிப்பும், மொழியின் சிறப்பும், துடிப்பும், நூலில் ஆசிரியரது ஆவேசமான உணர்ச்சி வசப்பட்ட நாட்டுப்பற்றை நன்கு காட்டுகின்றன.

நாகூமின் கவிப்புலமை, பழைய ஏற்பாட்டிலேயே மிகச்சிறந்த பகுதிகளைச் சேர்ந்ததாகும். அவரது உருவகங்களின் உயிர்ச்சித்திரத் தன்மையை மிஞ்சமுடியாது. நினிவேயைக் கைப்பற்ற நடந்த போர் பற்றிய விவரிப்பு கவனத்தை ஈர்க்க வல்லது; சிலிர்ப்பூட்ட வல்லது; நேரடிச் சாட்சித் தன்மையுடையது; வாசகர்களைச் சொல்லாற்றில் சொக்க வைக்கவல்லது. போரின் நேர்முக வர்ணனையாகவே நூல் அமைந்துள்ளது. மேலும், ஆற்றல் மிக்க இந்த இறைவாக்கினர் புலவர் ஆவார். இவர் மனித வரலாற்றில் யாவேயின் போராட்டத்தை நடத்துகிறார். யாவேயின் அக்கினிச்சுடரால் அவரது வார்த்தைகள் பளபளக்கின்றன.

இந்நூலை வாசிக்கும்போது, ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக, நாகூம் ஆற்றிய இறைவாக்குப் பணியிலிருந்து எடுக்கப்பட்ட ஒருசில வாக்குகளையே நூல் கொண்டிருக்கிறது; அதுவும் தங்களது குருவின் வாக்குகளைப் பாதுகாத்துப்போற்றிய சீடர்களின் வேலைப்பாடு என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்நூல், ஆலயவழிபாட்டில் பயன்பட்ட மன்றாட்டு வகையில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நினிவே, விரைவில் விழவேண்டும் என்று மன்றாடுவதாகத் தெரிகிறது.

**7. சிறப்புக் கருத்துக்கள்:-**

**அ. இறைவனது சீற்றம்:** நாகூமின் இறையியல் நேரடியானது. யாவே தம் மக்களோடு செய்து கொண்ட ஒரு தலையான அமர உடன்படிக்கையை, நாகூம் வலியுறுத்துகிறார். ஒரு காலத்திற்கு, இறைவன் தமது மக்கள் மேல் சினம் கொள்ளலாம்; ஆனால், அவர்களை எக்காலத்திற்கும் கைவிடமாட்டார்; நாடு அழிந்து போக விடமாட்டார்; நாட்டுப்பற்றே நாகூமுக்குச் சமயமாகும் என்றால் அது மிகையாகாது.

அசீரியர்கள் பல சமயங்களில் இஸ்ராயேலையும் யூதாவையும் படையெடுத்துப் பாழ்படுத்தினர்; கொடுமைப்படுத்தினர்; இழிவுபடுத்தினர். இதையெல்லாம் நாகூம் உளமார வெறுத்தார். இக்கொடிய அரசு முடிவை நெருங்கிய போது, நாகூமின் அடக்கி வைத்திருந்த சினம் எரிமலைப் பிழம்புபோல் பொங்கிவழிகிறது. இஸ்ராயேலுக்கு மட்டும் அசீரியர்கள் எதிரிகள் அல்லர்; அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம், குருதி ஓடச் செய்தனர்; கொள்ளை அடித்துத் தங்கள் நகர்களைச் செல்வமிக்கதாக்கினர். அளித்த வாக்குறுதிகளை முறித்தனர். இந்தக் கொடிய குற்றங்கள், இறைவனது நீதித் தீர்ப்பைக் கூவி அழைத்தன. தன் மக்கள் பால் கொண்டிருந்த பற்றுறுதியின் அடிப்படையில், இறைவனது சீற்றத்தை நாகூம் நோக்கினாலும், உலகமெல்லாவற்றிற்கும் வரும் இறைத்தீர்ப்பு நூலின் அடிப்படையாக அமைகிறது. இறைநீதிதான் அவரது தண்டிக்கும் தீர்ப்பிற்கு உந்து காரணமாகிறது.

பகைவர்களுக்கும் அன்பு செய்யுங்கள் என்று இயேசு போதித்தார். இப்போதக அடிப்படையில் நாகூமின் இறைவாக்கை எப்படிப் புரிந்து கொள்வது? யோனாவின் ஆகமத்திலிருந்து இந்நூல் எவ்வளவு வேறுபடுகிறது? இதை நாம் மறுக்க முடியாது. ஆனால், இக்குறுகிய நூல், இறைவனது தன்மைபற்றிய எல்லா இயல்புகளையும் கூறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், ஓர் உண்மைமிகத் தெளிவாகக் காணப்படுகிறது. நேர்மையான வெறுப்பும் சினமும் உண்டு. அவை நேர்மையானது மட்டுமல்ல; அவசியமானதும், மேன்மை மிக்கதுமாகும். இறைவனே தீமையை வெறுக்கிறார்; அதற்கு எதிராகச் சினம் கொள்கிறார் (நாகூம் 1:2). சினம் அவரது பரிசுத்த அன்பின் மறுபக்கமேயாகும். தவறை அவர் நேர் வழிப்படுத்துகிறார்; கொடுமைப் படுத்தப் படுவோரை நியாயப்படுத்துகிறார். ஆகையால் அசீரியாவின் குற்றங்களைக் காணாதவர் போல் இருக்க முடியாது. ஏனெனில், அவர் வரலாற்று நாயகன். "உன் இடைவிடாத கொடுமையால், துன்புறாதவர் ஒருவரும் இல்லை" (3:19) என்று அசீரியாவுக்கு எதிராகக் கூறுகிறார். அசீரியர்களின் கொடுமையும், பிறநாடுகளுக்கு எதிராக இழைத்த குற்றங்களும், தண்டனை பெறாமல் போகாது. இறைவனது சினம், காலம் தாழ்த்தலாம்; ஆனால், அதிலிருந்து யாரும் தப்ப முடியாது! அதைத் தவிர்க்க முடியாது (1:2-10). அசீரியாவைப் பொறுத்தமட்டும், அதன் குற்றங்களுக்குரிய இயற்கையான விளைவாகவே, இறைவனது சினம் அமைகிறது. தண்டனை குற்றங்களுக்கு ஏற்றது. "வாளை எடுப்போர் அனைவரும் அழிந்து போவர்" (மத் 26:52). "இதோ! படைத்திரளின் ஆண்டவர் கூறுகிறார். உனக்கெதிராக நான் எழுவேன்" (நாகூம் 2:14). அசீரியா மிருகத் தன்மையிலும், கருணையே சிறிதுமில்லாத கொடுமையிலும், பேரரசு பிடிக்கும் வெறியிலும்,

சேனைகளின் பலத்திலும் நம்பிக்கை வைத்திருந்தது. இவற்றிற்கு எதிராக, இறைவன் போராடுகிறார். அவரது சினம் நாகூம் என்ற மனிதன் வழியாக எடுத்துக் கூறப்படுகிறது. "ஆண்டவரின் கோபத்தால் நான் நிறைந்துள்ளேன்! அதை அடக்கி அடக்கிச் சோர்ந்து போனேன்!!" என்று எரேமியா கூறலாம் (எரே 6:11). நாகூம் அதை அடக்கவில்லை; தங்கு தடையின்றி மகிழ்ச்சிப் பெருக்கோடு எடுத்துக் கூறுகிறார்.

வெறுப்பு தீயதாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை; நாம் வெறுக்கவேண்டியவை சில இருக்கின்றன. ஏனெனில், அவற்றை இறைவனே வெறுக்கிறார். தீமையை வெறுப்பவர்கள்மீது, ஆண்டவர் அன்பு கூர்கிறார் (சங் 97:10). மக்களை வெறுப்பது, எப்போதும் தீமையாகும். ஆனால், பாவத்தை வெறுப்பது எப்போதும் சரியாகும். தீமையை அடியோடு, ஆக்கபூர்வமாக வெறுக்காதவன், உண்மையிலேயே, நல்லவனாக இருக்கமுடியாது. தீமையைக் கண்டு வெகுண்டெழும் மனப்பற்று, நமது காலத்திற்கு மிகத் தேவையானதொன்றாகும். ஆழ்ந்து வேரூன்றிவிட்ட தீமைகளுக்குச் சிறிதும் கவலைப்படாமல், இறுமாந்த நிலையில் ஒத்துழைத்தல் அல்லது அவைபற்றிச் சோம்பல் மிக்க, அக்கறையற்றநிலை தன்னிலையே மிகக் கொடுமையான, அருவருப்பான தீமையாகும். சில சமயம், நாம் சினம் கொண்டேயாக வேண்டும். இத்தகைய சினம், பொங்கி எழவில்லையெனில், இவ்வுலகம், மிகவும் இரங்கத்தக்க இடமாகி விடும்! கோபப்படுதல், வெறுப்புக்காட்டுதல், பழி வாங்குதல் – ஆகியவை சினத்தின் தவறான வடிவங்களாகும்; சுயநலத்தை மையமாகக் கொண்டவையாகும். பிறருக்குச் செய்யப்படும் தீமைகண்டு வெகுண்டெழும் சினம் - தெய்வத் திருநிலைப்படுத்தப்பட்டதாகும். அது பிறரது நலனைத் தேடுகிறது. கிறிஸ்துவின் தன்மை, அலுவல் ஆகியவற்றின் ஒரு கூறுக்கு, நாகூமின் இறைவாக்கு முன்வடிவம் கொடுக்கிறது. ஏனெனில், நற்செய்திகளில் இயேசு அன்பையும் இரக்கத்தையும் மட்டுமே காட்டவில்லை. இயேசு சினம் கொள்கிறார் (மாற் 3:5; 10:14; மத் 23:13-26; யோவா 2:15). இறைவனின் நீதிக்கும் சினத்திற்கும் அவரே நிறைவான, இறுதியான வெளிப்பாடாவார் (உரோ 1:17-18).

**ஆ. பிற கருத்துக்கள்:** உடல் வலிமையின் மேலும், மோசடியின் மேலும், நிலையான அரசை நிறுவமுடியாது. ஏனெனில், அநீதியையும், வன்முறையையும் சிலை வழிபாட்டையும் இறைவன் தண்டிக்கிறார். யாவே - வரலாற்று நாயகனாவார் என்ற உண்மையையும் நாகூம் வலியுறுத்துகிறார். யாவேக்கு எதிரான உலகத்திற்க்கு, நினிவே அடையாளமாகிறது.

**9. நாகூமும் விவிலியத்தின் பிற நூல்களும்:** கி.மு. 612-இல் நடந்த நிகழ்ச்சிகளால், இந்நூல், இஸ்ராயேலரிடையே மனித நம்பிக்கையைத் தூண்டியிருக்க வேண்டும். ஆனால், இம்மகிழ்ச்சி சிறிது காலத்திற்கே நீடித்தது. ஏனெனில், நினிவேயின் வீழ்ச்சியை அடுத்து, எருசலேமும் வீழ்ந்தது. அதற்குப்பின் இந்நூலினது செய்தியின் நோக்கம் விசாலமாகிறது; ஆழமாகிறது. நாகூ 2:1-இலிருந்து "சமாதானத்தை அறிவிப்பவன்" என்ற உருவகத்தை எடுத்து, எசா 52:7 யாவற்றையும் உள்ளடக்கும் ஆன்மீக மீட்புக்கருத்தை விளக்குகிறது. புதிய ஏற்பாட்டு நூல்கள், இந்நூலிலிருந்து, எப்பகுதியையும் எடுத்துக் கையாளவில்லை.

ஆனால், மிக இக்கட்டான பிற்காலத்தில், இந்நூலின் வெற்றிப் பெருமிதமிக்க உருவகங்கள், ஆழமான செய்தியை அளிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கும்ரான் குகைத் துறவிகள், கடந்த காலத்தைப் பிரதிபலிக்கும் ஒன்றாகமட்டும் இந்நூலை எடுத்துக் கொள்ளவில்லை; தங்கள் காலத்துக்குரிய செய்தியாக எடுத்துக்கொண்டார். கி.மு. 88-இல் நடந்த சமய, அரசியல் போராட்டங்களை விளக்க இவர்கள் இந்நூலைப் பயன்படுத்தினர். இவ்வாறு,

இந்நூல் மூலத்தில் அசீரியப் பேரரசின் இறுதிக்காலத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும், இதன் காலம் கடந்த உண்மையான பண்பையும் காட்டுகிறது. எக்காலமும், இந்நூலுக்கு ஏற்ற காலமே! இந்நூல், விசுவாசமிக்க நம்பிக்கையின் தனிச்சிறப்பான அறிவிப்பும், அறைகூவலுமாகும்! ஆனால், எப்போதும் நிகழ்காலத்தைச் சேர்ந்ததே!

10. **இக்காலத்திற்க்கு:** தீமை இழைக்கப் படும்போது பொங்கி எழ வேண்டும் என்று இந்நூல் படிப்பிக்கிறது என்று முன்பு கூறினோம். இன்றைய இயந்திர உலகில், வரலாற்றை அமைப்பது மனிதன் அல்லன், இறைவனே! என்ற உண்மையை நாகூம் நமக்கு நினைவுறுத்துகிறார். இந்த அடிப்படையில்தான் நாடுகள் தீர்ப்பிடப்படுகின்றன; தண்டனையோ, சன்மானமோ பெறுகின்றன. இறைவன் அளித்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், நாடுகளைப் பாழாக்குதல், மக்களை அழித்தல், அநீதிகளைப் பெருக்குதல் முதலிய குற்றங்களை யார் செய்தாலும், அவர்களை மனிதன் தண்டிக்க முடியாமல் போகலாம். ஆனால், இறைவன் அவர்களை உறுதியாகத் தண்டிப்பார் என்று நாகூம் இன்றும் போதிக்கின்றார். சர்வாதிகார ஆட்சியில் துன்புறுபவர்கள் இறைவனை நம்ப வேண்டும். அவரே அவர்களுக்கு இழைக்கப்படும் தீமைகளைப் பழிவாங்குவார். இறைவனிடம் அன்பு செலுத்துபவர்களுக்கு அவரே அரணும், அமைதியும், அன்புப் பரிசும் ஆவார் என்று நாகூம் இன்றும் அறிக்கையிடுகிறார்.

**நாகோர் (NAHOR - கோபமுள்ள) - ஆள்**

1. சேமின் வழியில் பிறந்த இவர் செரூகுவின் மகன் (ஆதி 11:22-25; யோசு 24:2; 1 நாள் 1:26; லூக் 3:34). இவர் தெராகுவின் தந்தையும், ஆபிரகாமின் தாத்தாவுமாவார். தெராகுவைப் பெற்றபின் நாகோர் நூற்றுப் பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து புதல்வர் புதல்விகளைப் பெற்றார்.

2. இவர் தெராகுவின் மகனும், ஆபிரகாம், ஆரானின் சகோதரரும் ஆவார் (ஆதி 11:26; யோசு 24:2). நாகோர் ஆரானின் மகளும், இசுக்காவின் சகோதரியுமான மில்காவை மணந்தார். மில்கா நாகோருக்கு 8 புதல்வரைப் பெற்றுத் தந்தாள் (ஆதி 11:29; 22:20-22). அவரது வைப்பாட்டியின் பெயர் இரயுமாவாகும் (22:24). அவருக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் இருந்தனர் (22:20-24). நாகோர்-மில்கா ஆகியோரின் மகனாகிய பெத்தூவேலின் மகளான ரெபேக்காதான் ஈசாக்கின் மனைவி (24:15). யாக்கோபின் மனைவியரான ராகேலும் லேயாவும் நாகோரின் வழித்தோன்றல்கள் (பேத்திகள்) ஆவார் (29:4-6; காண்க. 25:20). நாகோரின் உறவினர்கள், எபிரேய மூதாதையரையும் மற்ற செமித்திய இனத்தவரையும் தொடர்பு படுத்துகிறார்கள்.

**நாகோர் (NAHOR - கோபமுள்ள) - இடம்** இஃது வடமேற்கு மெசபொத்தாமியாவிலுள்ள ஒரு நகர் (ஆதி 24:10). இஃது ஒரு நகரின் பெயராகவோ, எபிரேய மூதாதையர் ஒருவரின் பெயரைத் தாங்கிய நகரின் பெயராகவோ இருக்கலாம். இந்நகர் காரானுக்கு அருகில் இருந்தாலும் இந்நகரும் காரானும் ஒன்று அன்று. இந்த நாகோர், ஆரானுக்குத் தெற்கில் அல்லது கிழக்கில் அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாரிவாசகம் காரானுக்கு அருகிலுள்ள மேல் பாலி ஆற்றுக்குக் கிழக்கிலுள்ள நாகவர் என்ற இடத்தை அடிக்கடி குறிக்கின்றது.

**நாக்கோன் (NACON - ஆயத்தமான)**

கடவுளின் பேழையைப் பாகால் யூதாவிலிருந்து எருசலேமுக்குத் தாவீதும் மற்றவரும் கொண்டு வரும் வழியில் நாக்கோனின்களத்திற்கு வரும்போது மாடுகள் மிரண்டு பேழையைக் கீழே சாய்த்து விட்டன. இதைக்கண்ட ஊசா அதைத் தம் கையால் தாங்க ஆண்டவர் கோபம் கொண்டார். அவனுடைய துணிவை முன்னிட்டு ஆண்டவர் அவனை வீழ்த்தினார். ஊசா பேழையின் பக்கத்திலேயே விழுந்து இறந்தான் (2 சாமு 6:6-8). ஏனெனில், குருக்களைத் தவிர வேறு யாரும் பேழையைத் தொட அனுமதிக்கப்படவில்லை.

லேவியர்கள் கூட, தண்டுகளில்தான் சுமந்து செல்லலாம் (எண் 4:15; காண்க. யாத் 25:12-14). தாவீது அவ்விடத்தைப் பெரேட்சு - ஊசா (ஊசாவுக்கெதிராகச் சினம்) என்றழைத்தார். ஏனெனில், ஊசாவுக்கு எதிராக ஆண்டவரின் சினம் பற்றி எரிந்தது (2 சாமு 6:7-8; 1 நாள் 13:11). இதற்கு இணையான 1 நாள் 13:9-இல் நாக்கோனுக்குப் பதில் கீதோன் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

**நாசரேத்து (NAZARETH** – காவல், கடைப்பிடித்தல்)

கலிலேயாவின் கீழ்ப்பகுதியில் உள்ள ஒரு கிராமமே நாசரேத்து. இது யோசேப்பு, மேரி, இயேசு வாழ்ந்த ஊர், இயேசு தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை இந்த ஊரில்தான் கழித்தார்.

1. இஃது அமைந்த இடம், இன்றைய நாசரேத்து இருக்குமிடந்தான் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது பற்றிப் பழைய ஏற்பாடு, தால்மூது, மிட்ராஷ், யோசிப்பசு ஆகியவற்றில் எதுவும் கூறப்படாததால் பல கேள்விகள் எழுந்துள்ளன. அதே நேரத்தில் எந்த முக்கியத்துவமும் அற்ற ஒரு கிராமமாசு இஃது இருக்கும் நேரத்தில் (யோவா 1:46) கூறப்பட்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. நாசரேத்து, எசுதிரலோன் சமவெளிக்கு வடக்கே, தெற்குப்பக்கம் மட்டும் திறந்தவெளியுள்ள ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இவ்வூர் கலிலேயக் கடலிலிருந்து 24. கி.மீ தொலைவிலும், மத்தியதரைக்கடலிலிருந்து 32 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 350 மீட்டர்களாகும். இது விவசாயத்திற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையையும் மழைப் பொழிவையும் கொண்டிருந்தாலும் ஒரே ஓர் ஊற்றை நம்பியே இருந்ததால் அவ்வளவு செழிப்பாசு இல்லை. பழைய கிராமம் குன்றுவரை விரிந்ததென்பது அங்குள்ள சிதைவுகளிலிருந்து தெரிகிறது (காண்க. லூக் 4:29). இவ்வூர் செப்போரிஸ் எனும் முக்கிய நகரத்துக்கருகில் இருந்தாலும் பெரும் சாலையில் அமையாததால் இயேசு வாழ்ந்த காலத்தில் முக்கியத்துவம் அற்ற ஓர் ஒதுக்கமான நகரமாக இருந்தது.

2. புதிய ஏற்பாட்டில், மரியாள் யோசேப்பு வசிக்குமிடமாக, வானதூதர் மங்கல வார்த்தை மரியாளுக்கு அறிவிக்கும் போது கூறப்படுகிற (லூக் 1:26). பின் அவர்கள் பெத்லகேம் சென்று இயேசு பிறந்தபின் திரும்பிவருகின்றனர் (மத் 2:23; லூக் 2:4). குழந்தைப் பருவத்திலிருந்து இளைஞனாக வளர்ந்ததுவரை, இயேசு அவரது பெற்றோருடனிருந்திருக்கிறார் (லூக் 2:39.51). பின் நாசரேத்தை விட்டு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப்பெறச் செல்கிறார் (மாற் 1:9). பிலிப்பு நத்தனியேலிடம் நாசரேத்திலிருந்து இயேசு கிறிஸ்து வந்தார் எனக் கூறியபோது நாசரேத்திலிருந்த நல்லது எதுவும் வரக்கூடுமோ எனக்கூறுவதிலிருந்து (யோவா 1:45-46) இஃது எவ்வளவு முக்கியத்துவமற்ற ஊர் என்பது தெரிகிறது. பிறவரலாற்றுச் சான்றுகள் எதுவும் இதுபற்றிப் பேசாதது மேலே கூறியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இயேசு நாசரேத்தைவிட்டு, கப்பர் நகுமுக்கு ஏன் சென்றார் என்பதற்கு எக்காரணமும் கூறப்படவில்லை (மத் 4:13). ஒரே ஒரு முறை மட்டும் தெளிவாக அவர் நாசரேத்துக்குத் திரும்பி வந்தது பற்றிக் கூறப்படுகிறது (லூக் 4:16; மத் 13:54; மாற் 6:1). நாசரேத்து பற்றிய மற்றக் குறிப்புகள் இயேசு மகிமையுடன் எருசலேம் வரும் போதும் (மத் 21:1), பேதுரு கொர்னேலியு வீட்டில் ஆற்றிய உரையின் போதும் (அ.ப. 10:38) வருகின்றன.

இயேசுவை, நசரேயர் எனப் பல இடங்களில் குறிப்பிடுவதைக் காண்கிறோம் (மாற் 1:24; 10:47; யோவா 18:5.7; அ.ப. 2:22; 3:6). ஒரே ஒரு முறை மட்டும் இயேசுவைப் பின்பற்றியவர்கள் 'நசரேயர்கள்' என அழைக்கப்படுகின்றனர் (அ.ப. 24:5). நசரேயர் என்பது வேறு பொருளைத் தருவதாயினும், மத் 2:23-இல் குறிப்பிடப்படுவது போல் 'நாசரேத்தைச் சேர்ந்தவர்' என்பதுவே புதிய ஏற்பாட்டுப்பொருள்.

**3. பிந்திய வரலாறு:** கான்ஸ்தாந்தின் ஆட்சிவரை (கி.பி. 324-37) நாசரேத்து முக்கிய புண்ணியத் தலமாகவில்லை. எப்பிபானியுவின் கூற்றுப்படி, அதுவரை யூதர்கள் மட்டுமே நாசரேத்தில் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தனர். 670-இல் முதன் முதலாக இங்குக் கோவில் கட்டப்பட்டது. முஸ்லிம்களால் அதிகத் துன்பமும் அழிவும் அடைந்த நாசரேத்து சிலுவைப் போர்கட்குப்பின் தன் விடுதலையை அடைந்தது. மீண்டும் முஸ்லிம்களின் கையில் அகப்பட்டு, பின்னர் இரண்டாம் பிரெடரிக்கால் மீட்கப்பட்டு, 1291-இல் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டது. கி.பி 1620-இல் பிரான்சிஸ்கு சபை குருக்கள் இங்குத் தங்கி இப்புனிதத்தலத்தைக் காக்குமாறு அனுமதிக்கப்பட்டனர். கி.பி. 1918-இல் இஃது ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. இன்றைய நாசரேத்து 20,000 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இஸ்ராயேலில் உள்ள மிகப்பெரிய கிறிஸ்தவநகரம் இதுவே. இக்காலத்தில், திருக்கும்பத்தோடு தொடர்புடைய பல புனித இடங்கள் உள்ளன. அவற்றில் சில: மரியாளும் அவளது மகனும் தினமும் தண்ணீர் எடுத்த ஊற்றாகக் கருதப்படும் மரியாளின் கிணறு; இயேசுவின் வீட்டின்மேல் கட்டப்பட்டதாகக் கருதப்படும் "மங்கல வார்த்தைக்" கோவில்; வடக்கில் சிலுவைப்போர்க் காலத்தில் கட்டப்பட்டகோவில்; எசா 61:1-3 (லூக் 4:18-23) நிறைவேறியதாக இயேசு அறிக்கையிட்ட செபக்கூடம் இருந்த இடத்தில் கட்டப்பட்ட கிரேக்கக்கோவில்; தெற்கில் யூதர்கள் இயேசுவை மலையிலிருந்து தள்ள முயன்ற இடமாகக் கருதப்படும் இடத்தில் கட்டப்பட்ட கோவில் என்பன.

## நாசு புல்தாள் ஏடு (NASH PAPYRUS)

இஃது எங்கு எழுதப்பட்டது என்று அறிவதற்கில்லை; அனேகமாக, பையூம் என்ற இடத்தில் தயாரிக்கப்பட்டிருக்கலாம். இது காலத்தால் மிகவும் பழமையானது. சாக்கடல் ஏடுகளைக் கண்டுபிடிக்கும்வரை, காலத்தால் முந்திய பழைய ஏற்பாட்டின் எபிரேய வாசகப்பகுதி இது. மக்கபேயர் காலத்தைச் (கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு, கி.பி. 165-35) சேர்ந்ததாக இருக்கலாம். இந்த 24 வரியுடைய வாசகம் பத்துக்கட்டளையையும் (யாத் 20:2-7; உப 5:6-21) செமாவையும் (6:4-5) கொண்டுள்ளது; இதை 1902-இல் எகிப்திலிருந்து பெற்றுவந்த நாசு என்பவர் பெயரால் அழைக்கப்படுகிறது. இதைக் குக் என்பவர் 1903-இல் பதிப்பித்தார். ஒரு பக்கமுள்ள இந்த ஏடு போதிப்பதற்கோ, செபக்கூட்டங்களில் வாசிப்பதற்கோ பயன்பட்டிருக்க வேண்டும். இந்த ஏடு இப்போது கேம்பிரிட்சு பல்கலைக்கழக நூல்நிலையத்தில் உள்ளது.

## நாடகத்திடல் (THEATER)

நாடகத்திடல்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலே கிரேக்க நாட்டில் தோன்றின. இத்திடல்களில் தியோனிசு என்ற கிரேக்கக் கடவுளின் அருமை பெருமைகள் பாடல்கள் வாயிலாகவும், நாடகங்கள் வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டன. நாடகத் திடல்கள் மக்கள் அவைகளாகவும் பயன்படுத்தப்பட்டன (அ.ப. 19:29-41).

**வரலாறு:** தியோனிசு தேவனின் விழா வருடந்தோறும் கிரேக்க நாட்டிலே கொண்டாடப்பட்டது. அப்போது நாடகப்போட்டிகள் நடைபெற்றன. இந்நாடகங்களில் உரையாடல்களும், குழுப்பேச்சும் இடம் பெற்றன. நாட்டு வரலாறு மற்றும் கிராமியப் பாடல்களே உரையாடலாகவும், குழுப்பேச்சாகவும் பயன்பட்டன. நகைச்சுவை நாடகங்கள், அறுவடைக்கால விழாவின்போது நடிக்கப்பட்டன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மெனான்டர் ஒரு சிறந்த நகைச்சுவை நாடக எழுத்தாளர். இவரின் ஒரு நாடகத்திலிருந்து புனித பவுல் மேற்கோள் காட்டி எழுதுகிறார் (1 கொரி 15:23).

**திடல்களின் அமைப்பு:** பொதுவாக, சரிவான நிலப்பரப்பிலே திடல்கள் அமைக்கப்பட்டன. இவை அரைவட்ட வடிவமாகப் படிக்கட்டு இருக்கைகளைக்

கொண்டனவாக அமைக்கப்பட்டன. ஒரு சில திடல்கள் மேற்கூரையுடையனவாகவும் இருந்தன. பார்வையாளர்கள், இசைக் கலைஞர்கள், நாடக நடிகர்கள் ஆகியோருக்கென்று தனித்தனி இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடகத்திடல்கள், விளையாட்டு அரங்கங்களிலிருந்து வேறு பட்டவையாகும்.

**புதிய ஏற்பாட்டுக் காலத்தில்:** பெரிய ஏரோது, நாடகம் மற்றும் களியாட்டங்களில் இன்பம் கொண்டவன்; ஏராளமான நாடகத்திடல்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்களைத் தனது நாடெங்கும் கட்டியெழுப்பினான். எருசலேமிலும், செசரியாவிலும், அவன் கட்டிய திடல்கள் இன்றும் பழுதுபட்ட நிலையில் காணப்படுகின்றன. கிரேக்க மற்றும் உரோமையத்திடல்கள் இன்றும் பவுல் போதித்த இடங்களான, பிலிப்பி, ஏதன்சு, கொரிந்து, மிலேத்து, எபேசு போன்றவற்றில் காணப்படுகின்றன.

**நாடா, பின்னல் (LA CE)**

முறுக்கிப் பின்னப்பட்ட நூல்களின் தொகுப்பான நாடா. இது குருக்களின் மார்புப் பட்டையும், எப்போதும் ஒன்றை விட்டு ஒன்று நீங்காதபடிக்கு மார்புப் பட்டையின் வளையங்களோடு, எப்போதின் வளையங்கள் இளநீல நாடாவினாலே கட்டப்பட்டன (யாத் 28:28; 39:21). ஆரோனின் பாகையின்மேல் பசும்பொன்னால் செய்யப்பட்ட பட்டம் இதே நீல நாடாவினாலே கட்ட வேண்டும் (யாத் 28:37; 39:31).

**நாடு, நிலம் (LAND)**

I. விவிலிய வழக்கில் நாடு அல்லது நிலம் என்பது அரசியல் நோக்கங்களுக்காக வரையறை செய்யப்பட்ட பகுதியைக் குறிக்கிறது. இப்பகுதியிலிருந்து மக்களுக்கும், விலங்குகளுக்கும் வேண்டிய ஆதாரப் பொருள்களும் உணவும் கிடைத்தன. எபிரேய புவியியலில், நாடு- விண்ணகத்துக்கு எதிர் முரணானதாகும். இஸ்ராயேல் வரலாற்றைப் பொருத்தமட்டும்,அது சிறப்பான இறையியல் பொருள் கொள்கிறது. பழங்கால மேற்காசியக் கலாச்சாரங்களில் நாடு பரந்த பொருளுடைய விளக்கங்களைப் பெறுகின்றது. சுமேரிய, அக்காதிய இலக்கியங்களில் நாடு என்பது, விண்ணகத்து எதிர்மறையாக, மண்ணுலகையும், கீழ் உலகையும், குறிப்பிட்ட பகுதியையும், தரையையும் குறிக்கிறது. நாட்டைக் குறிக்கும் எகிப்தியச்சொல் சித்திரச்சொல்லால் கூறப்படுகிறது. அதில் தட்டையான நீர் நிறைந்த நிலம் சித்தரிக்கப்படுகிறது. அதன் அடியில் மணல் உள்ளது. இது பூமியை, தூசியை, குப்பையை அல்லது நாட்டைக் குறிக்கலாம். ஆகையால் பழைய ஏற்பாட்டில் நாட்டைக் குறிக்கும் "எரேஸ்" என்ற எபிரேயச் சொல் நாடு, பூமி அல்லது தரை ஆகியவற்றில் எதைக் குறிக்கிறது என்று தெளிவாகக் கூறுவது கடினம். இவ்வாறு "நாடு முழுவதும்" என்ற பொதுச்சொல் எசா 7:24-இல் தரையையும், எரே 4:20-இல் யூதாவையும், 1 சாமு 13:3-இல் இஸ்ராயேலையும், உப 19:8; 34:1-இல் ஒரு பகுதியையும், ஆதி 1:26; அர 5:15-இல் மண்ணுலகையும் குறிக்கிறது.

II. பழைய ஏற்பாட்டில்:

1. **சொல்வழக்கில்:** ஆதி 1:1-24-இல் வரும் படைப்புப்பற்றிய விவரிப்பு பழங்கால மேற்காசிய அண்டவியல்களுக்குப் பொதுவான விவரங்களைக் கொண்டுள்ளது. சான்றாக, மண்ணுலகு நீரால் சூழப்பட்டு குவிமாட வானவெளியால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு அப்பால் விண்ணகம் இருந்தது என்றும் நம்பப்பட்டது (ஆதி 1:6-10). இவ்வாறு படைப்பு முழுமையின் பிரிவு "விண்ணுலகு, மண்ணுலகு" என்று குறிக்கப்பட்டது. இந்த வாய்பாடு விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. பூமி படைக்கப்பட்டதை விவரிக்க, பல எபிரேய வினைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இறைவன், படைப்பவர் என்ற அளவில், மழை பொழியச் செய்கிறார் (யோபு 38:26-27). அதன் விளைவாக உயிர்களுக்கு வேண்டிய

மரஞ்செடிகளை "நாடு" கொண்டு வருகிறது (காண். ஆமோ 7:2).

நிலத்தின் அமைப்பு அல்லது அதன் பொருள்களைக் குறிக்கும் பகுதிகளில், நாடு என்பதன் எபிரேயச்சொல் தரை அல்லது நிலத்தைக் குறிக்கிறது. நாடு நல்ல பலனைத்தரும் (லேவி 26:4-5; சங் 85:13; காண். ஆதி 27:28; செக் 8:12). தானியங்கள், பழங்கள் (லேவி 19:23; 23:39; காண். ஆதி 1:11; எசா 61:11), அப்பம் மற்றும் திராட்சை ரசம் (சங் 104:4-5), எண்ணெய் (உப 7:13) ஆகிய பல உணவுப்பொருள்களை நிலம் தருகின்றது.

ஆயினும், எல்லா நாடுகளும் பலன்தருபவை அல்ல, வறண்ட, ஆள் நடமாட்டமில்லாத பாலைப்பகுதிகளும் உண்டு (எரே 9:11; காண். உப 8:15). காட்டு விலங்குகள் உலவும் பலன் தராத பகுதிகளும் உண்டு (உப 29:23; எரே 2:2). பலன் கொடாத நாடு இறைத்தண்டனையின் அடையாளமாக இருக்கலாம் (லேவி 26:19-20; சங் 107:33-84; எரே 12:11; 51:42-43; எசே 12:19-20; 32:15; ஆகா 1:10-11). தரை தோல்வியையும் (எசா 14:12; 21:19; ஓப 3), துக்கத்தையும் (யோபு 2:13; எசே 26:16) அடையாளப்படுத்தலாம்.

நாடுகள் மற்ற அரசியல் அடிப்படை கொண்ட ஒரு குறிப்பிட்ட பகுதிகளைக் குறிக்கலாம். தனது வரலாறு முழுவதும் இஸ்ராயேல் மற்ற அரசியல் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. அவர்களின் பெயர்களை விவிலியத்தில் காணலாம். அவற்றில் சில எகிப்து (ஆதி 41; சங் 78:12), மோவாபு (நீதி 11:15), அசீரியா (எசா 7:18), பாபிலோன் (எரே 25:12), இத்தியர்கள் (நீதி 1:26) மற்றும் அம்மோனியர்கள் (உப 2:37) முதலியவையாகும். மேலும், "கீழ்த்திசை மக்களின் நாடு" (ஆதி 29:1), "எபிரேயர் நாடு" (40:15), "இஸ்ராயேல் நாடு" (1 சாமு 13:19) போன்ற குறிப்புகளும் உள்ளன.

நகரங்களின் பெயரை வைத்தோ, முக்கியப் புவியியல் கூறுகளை வைத்தோ பெயர் பெற்ற பகுதிகளும், நாடு என்றழைக்கப்பட்டன. இவ்வாறு பெயர் பெற்றவையே அவிலா நாடு (ஆதி 2:11), சேயிர் பகுதி (32:4), அரராத்து நாடு (2 அர 19:37), ஆமாத்துநாடு (25:21), யோர்தான் மற்றும் எர்மோன் பகுதிகள் (சங் 42:6) ஆகும்.

இஸ்ராயேல் கோத்திரங்களுக்குரிய பகுதிகளும் நாடு என்றழைக்கப்பட்டன (உப 34:2; 1 சாமு 9:4.16; 13:7; 1 அர 15:20).

**2. இறையியல் வழக்கில்:** இஸ்ராயேல் வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இறைவனது வாக்குறுதியின் இரண்டு கூறுகளில் ஒன்று கானான் நாடாகும்; மற்றது ஆபிரகாமின் வழித்தோன்றல்களான இஸ்ராயேல் மக்களாவர் (ஆதி 12:1-2). இந்நாட்டில் ஆபிரகாம் குடியேறினார். ஆனால், அங்கு ஒரு நாடோடியாகவே வாழ்ந்தார். மக்பேலாக் குகையைத்தவிர அவர் அங்கு எந்தப் பகுதியையும் உடைமையாகக் கொண்டிருக்கவில்லை (23:3-20). யாத்திரை நிகழ்ச்சிகளுக்குப்பின்தான், ஈசாக்கு, யாக்கோபின் வழிவந்த ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் கானான் நாட்டை உடைமையாகக் கொண்டனர். அவர்களின் கானான் நாட்டில் புகுந்ததை நினைவுகூரும் வாசகம் "நிரந்தரக் குடியற்ற அரமேயனான என் தந்தை" என்று தொடங்குகிறது (உப 26:5-10). இந்த வாசகத்தை, ஆண்டுதோறும் முதற்பலனை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும் நாளில் அறிக்கையிட்டனர். எகிப்திலிருந்து வெளியேறியது, பாலையில் அலைந்துதிரிந்தது, கானான் நாட்டை வெற்றி கொண்டது ஆகிய இவை யாவும் கானான் நாட்டை உடைமையாகக் கொண்டிருப்பது பற்றிய வாக்குறுதியை நோக்கிச் செயல்பட்டன. இதில் அந்நாட்டை வேவுபார்த்த கதையும் (எண் 13), அதன் விளைவாக, வாக்குறுதிக்கு எதிரான கிளர்ச்சியும் (14:1-10) முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

ஆயினும், நாட்டை வெற்றி கொள்வது உடனடியாக நிறைவு பெறவில்லை; அதிலிருந்து

இஸ்ராயேலர் விரட்டியடிக்கும் வரை, முன்பு இருந்த பல இன மக்கள் தொடர்ந்து இருந்தனர் (நீதி 1:19 தொ). இஸ்ராயேலர்களுக்குப் பல இன்னல்கள் விளைவித்தனர் (2:1-4). தாவீது மற்றும் சாலமோனின் ஆட்சிக்காலம் இஸ்ராயேல் வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்பட்டது. அப்போது, அவர்கள் அரசியல் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்டனர். நாட்டை உறுதியாக உடைமையாக்கிக் கொண்டனர். அதன் எல்லைகள் "தாணிலிருந்து பெயேர் செபாவரையும்" (2 சாமு 3:10), "யூப்பிரத்தீசு தொடங்கி பெலிஸ்தியரின் நாடு வரையிலும், எகிப்திய எல்லை வரையிலும்" (1 அர 4:21; 2 நாள் 9:26; காண். எண் 34:2-12; 1 அர 8:65; எசே 14:15-20) என்று வரையறை செய்யப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டின் பிற்கால நூல்களிலும், பிற்கால யூத வெளிப்பாட்டு நூல்களில் எதிர்பார்க்கப்பட்ட மீட்பின் இரட்டிப்பு மையம் இஸ்ராயேலில் "சிதறுண்டவர்களை"- அதாவது, நாடு கடத்தப்பட்டவர்களை- மீண்டும் அவர்களது சொந்த நாட்டில் குடியேறச் செய்வதாகும். நாடும், சிதறுண்டு போனவர்களும் மகிமையில் ஒன்றிணைக்கப்படுவர் (எசா 27:12-13; எசே 37:21-25; செப் 3:10; தோபி 14:4-5). இஸ்ராயேலின் எதிரிகள் அழிக்கப்படுவர் (எசா 63:1-6; செக் 14:12-15); அல்லது மகிமைப்படுத்தப்பட்ட எருசேலம் நகரை நோக்கித் தாழ்ச்சியாகப் பவனி வருவர் (செக் 14:16-19; எசா 60:1-3). அப்போது ஆலயத்தை மையமாகக் கொண்ட நாட்டில் இஸ்ராயேல் உறுதியுடன் வாழும் (எசா 26:1-2; 60:18; காண். எரே 31:40; செக் 14:11).

உலகமும் அதனுள் உள்ளவையும் இறைவனுடைய உடைமையாகும் என்ற கருத்து (சங் 24:1), உடைமை பற்றிய விவிலியக் கூற்றுகளுக்கு அடிப்படையாக உள்ளது. ஆகவே, யாரும் தம் உடைமையை இறைவனின் கொடையாக மட்டுமே கொண்டுள்ளனர். யாவேக்கும் இஸ்ராயேலருக்கும் இடையிலான உடன்படிக்கையில், இஸ்ராயேல் மக்கள் இறைவனின் தனிச்சிறப்பான உடைமையாகக் கருதப்படுகின்றனர் (யாத் 19:5). ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் (ஆதி 13:14-17) இஸ்ராயேல் கானான் நாட்டைத் தன் உடைமையாக இறைவனிடமிருந்து பெற்றது (உப 1:25). இஸ்ராயேலில் ஒவ்வொருவனும் தன்னுடைய பகுதியைப் பெற்றான். ஆனால், அதை உடைமையாகக் கொண்டிருப்பது அவன் மக்கள் முழுமையோடு கொண்டிருந்த ஒன்றிப்பைப் பொருத்ததாகும். யாவேக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவால் உடைமை முறை செய்யப்பட்டதால் உடைமை உரிமையை மாற்றக்கூடாது. மீட்பு மற்றும் யூபிலி ஆண்டு பற்றிய ஐந்நூல் ஒழுங்குகளின் நோக்கம் நாடு எந்தக் குடும்பத்திற்குப் பங்கீடு செய்யப்பட்டதோ அந்தக் குடும்பத்துக்குள்ளேயே எக்காலத்திற்கும் உரியதாக இருக்கவேண்டும் என்பதே. சூழ்நிலையால் விற்கவேண்டிய நிலைக்குக் கட்டாயப்படுத்தப்படுபவன் யூபில் ஆண்டில் அதைத் தன் உடைமையாகப் பெற்றான் (லேவி 25:8-10.13-16).

ஆனால், இச்சூழ்நிலையில் யூபிலிக்கு முன்பே வறுமையுற்றவனின் உறவினன் இழந்த உடைமையை மீட்க வேண்டும்; அல்லது வறுமையுற்றவன் தன் நிலை முன்னேறியவுடன் மீட்க வேண்டும் என்பது முதற்படியாகும் (லேவி 25:25-28; ரூத் 4; எரே 32:6-8). நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை ஆகாபும் ஈசபேலும் அபகரித்துக்கொண்ட வரலாறு (1 அர 21), அன்னிய ஆதிக்கத்தின் மற்றும் அரச சர்வாதிகாரத்தின் விளைவாக, நாட்டுரிமைச் சட்டங்கள் எந்த அளவுக்குப் பழுதுபட்டுப் போய்விட்டன என்பதைக் காட்டுகிறது. இந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கத் தவறியபோது நாட்டை உடைமையாகக் கொண்டிருந்த செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையேயிருந்த இடைவெளி வளர்ந்துகொண்டே போயிற்று (எசா 5:8).

III. **புதிய ஏற்பாட்டில்:** நாடு பற்றிய வாக்குறுதியை விட வாரிசு பற்றிய வாக்குறுதியிலேயே ஆபிரகாம் விசுவாசம் வைத்தார் என்று பவுல் வலியுறுத்துகிறார் (உரோ 4:17-21). அப்போஸ்தலர் பணிநூலில் இரு உரைகளில் நாடு பற்றிய வாக்குறுதி குறிக்கப்படுகிறது; ஆனால், மையக் கருத்தாக மாறவில்லை (அ.ப. 7:3-7; 13:17-19). இரு உரைகளிலும், வரலாற்றுத் திறனாய்வின் நோக்கம் நாடு பற்றிய வாக்குறுதியை உள்ளடக்கவில்லை. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில், வாக்குறுதியின் நாடு பற்றிய ஆபிரகாமின் விசுவாசம் கூறப்படுகிறது (எபி 11:8-9). ஆனால் அங்கு நாடு, குறிப்பாக "நகர்" (எருசலேம்), யாவும் கடந்த உண்மையின் அடையாளமாகிறது (11:10.13-16). கலா 4:25-26-இல் யூதர்கள் ஏற்கெனவே கொண்டிருந்த எருசலேமை, வாசகர்கள் கொண்டிருக்கபோகிற "விண்ணக எருசலேமோடு" ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார் பவுல். கிறிஸ்தவச் சுழ்நிலை "புதிய" அல்லது விண்ணக எருசலேம் குறிக்கப்படும்போதெல்லாம் (எபி 12:22; திருவெளி 3:12; 21:2-25:5), உலகிலுள்ள எருசலேமோடு ஒப்பிடுதல் பின்னணியில் உள்ளது. ஏனெனில் வாக்குறுதியைப் புதுப்பித்தல் வேறுவிதமாக அமைந்திருக்கிறது. ஆகவே, ஒப்பிடுதல் தவிர்க்க முடியாததாகிறது. இச்சூழ்நிலையில், கி.பி. 70-இல் எருசலேம் அழிக்கப்படுதல், இறுதிக்கால நிகழ்ச்சிகள் பற்றிய விவரிப்பின் ஒரு பகுதியாக அமைவது புரிந்து கொள்ளப்படுகிறது (லூக் 21 20-24). இதில் இரண்டாம் வருகையின் நிகழ்ச்சிகளில் உலக எருசலேமின் நேர்நிலைப்பங்கும் சுட்டப்படலாம் (லூக் 21:24; உரோ 11:26). மத் 5:5-இல் நாடுபற்றிய வாக்குறுதி சங் 37:11-ஐச் சுட்டிக்காட்டுகிறது. அஃதோடு பழைய ஏற்பாட்டில் வேறு விதத்தில் கொடுக்கப்பட்ட செய்தியை முன்னிலும் திட்டமாக எடுத்துக்கூறுகிறது. அது மனித அகந்தை அல்லது வலிமையில் இல்லாமல், இறைவனில் கொண்டுள்ள நம்பிக்கையில் வாக்குறுதியை அடைகிறது. புதிய ஏற்பாட்டுச் சூழ்நிலையில் நாடு என்ற அளவில் இஸ்ராயேலில் வாக்குறுதி மையம் கொண்டிருக்கவில்லை. இப்பின்னணியில் இஸ்ராயேல் கானான் மேல் கொண்டிருக்கும் சுதந்தர ஆதிக்கம் பற்றிய வாக்குறுதியைக் கடந்து பரந்த பொருளை இவ்வசனம் கொண்டுள்ளது.

**நாடு கடத்தப்படுதல் (EXILE)**

I. பண்டைய மேற்காசிய நாடுகளில் நாடு கடத்தலானது, வெற்றி கொள்ளப்பட்ட மக்களுக்கு எதிராக அடிக்கடி பயன்படுத்தப்பட்ட செயல்பாடாகும் (காண்க. ஆமோ 1). கி.மு. 734 முதல் இஸ்ராயேல் அரசினுடைய சில நகரங்கள், இந்தத் துன்பமிக்க அனுபவத்திற்கு உட்பட்டன (2 அர 15:29). பின்னர், 721-இல் மொத்த அரசும் உட்பட்டது (2 அர 17:6). உடன்படிக்கையினுடைய மக்களின் வரலாற்றில் மாபெரும் அடையாளத்தை விட்டுச்சென்ற நாடு கடத்தல்கள், 597, 587, 582-ஆம் ஆண்டுகளில் யூதா மற்றும் எருசலேமிற்கு எதிரான தனது படையெடுப்புகளின் விளைவாக நெபுகத்னேசர் நிறைவேற்றியவை யாகும் (2 அர 24:14; 25:11; எரே 52:28-30). பாபிலோனுக்கு யூதாவின் மக்கள் கடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகளைக் குறிக்க 'நாடு கடத்தல்' என்ற சொல் ஒரு கலைச் சொல்லாகப் பயன்படுகிறது. நாடு கடத்தப் பட்டவர்களின் பொருளாதார நிலையானது எப்போதுமே கடுமையானதாக இருக்கவில்லை. காலப்போக்கில் அது தளர்த்தப்பட்டது (2 அர 25:27-30). ஆனால், திரும்புவதற்கான வழியானது எப்போதும் போல மூடியே இருந்தது. தங்களுக்கென ஒரு வழி திறக்கப்பட, பாபிலோனின் வீழ்ச்சி மற்றும் 538-இல் சைரசின் கட்டளைக் கடிதத்திற்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று (2 நாள் 36:22-23). இந்த நீண்ட காலச் சோதனையானது இஸ்ராயேலின் சமய வாழ்வில் ஒரு வலிமையான முத்திரையை விட்டுச் சென்றது. இதன் வழியாக, தனது ஒப்பற்ற புனிதத்தினையும், பொங்கி வழிகின்ற பிரமாணிக்கத்தையும் இறைவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

**II. நாடு கடத்தப்படுதல், பாவத்திற்கான தண்டனை:**

**1. நாடு கடத்தப்படுதல், உச்ச நிலையான தண்டனை:** புனித வரலாற்றின் காரணகாரிய வாதத்தின்படி, நாடு கடத்தப்படுதலின் வாய்ப்பானது கற்பனைக் கெட்டாததாகத் தோன்றியது. யாத்திரையின் போது எண்ணற்ற அருஞ்செயல்களின் பயனாக அடையப்பட்ட இறைவனுடைய முழுத்திட்டத்தின் எதிர்த் திருப்பமாக இஃது அமைந்தது. இது செய்யப்பட்ட அனைத்து உறுதிமொழிகளின் மறுதலிப்பாகும். வாக்களிக்கப்பட்ட நாட்டைச் சரணளித்தல், தாவீதினுடைய அரச உரிமையின் இழப்பு, அழிக்கப்பட்ட ஆலயத்தினின்று ஒதுக்கப்படுதல். நாடு கடத்தப்பட்ட பின்பும் மக்கள் அதை நம்பவில்லை. எல்லாம் சரியான முறையில் மீண்டும் விரைவில், தாமதமின்றி நிறுவப்படும் என்று எதிர்பார்த்தனர். இதுதான் மக்களிடையே நிலவிய இயல்பான மனநிலை. ஆனால், எரேமியா இந்த மாயத்தோற்றத்தை வெளிப்படையாகக் கண்டிக்கிறார். நாடு கடத்தப்படுதலானது தொடரப்படும் (எரே 29).

**2. நாடு கடத்தப்படுதல், பாவத்தின் ஒரு வெளிப்பாடு:** மக்களும், அவர்களது தலைவர்களும் தங்களுடைய குணமாக்க முடியாத நெறிபிறழ்வு நிலையை நன்கு அறிந்துகொள்ள இந்த அழிவின் தொடர்ச்சி அவசியமாக இருந்தது (எரே 13:23; 16:12-13). இதுவரை எளிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட இறைவாக்கினர்களின் எச்சரிக்கைகள் இப்போது முழுமையான அளவில் நிறைவேற்றப்பட்டன. நாடு கடத்தப்படுவதானது அடிக்கடி கண்டிக்கப்பட்ட தவறுதல்களுக்கான தண்டனையாக இப்போது தோன்றியது. இறை உடன்படிக்கையைச் சார்ந்திருப்பதை விட்டு விட்டு, மனித அரசியல் நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ள விழையும் ஆட்சியாளர்களின் தவறுகள் (எசா 8:6; 30:1-2; எசே 17:19-21); தங்களுடைய பேராசையினால் வன்முறை மற்றும் மோசடியின் மூலமாக மக்களின் சகோதரத்துவ ஒன்றிப்பை அழித்த அதிகாரமிக்கோரின் தவறுகள் (எசா 1:23; 5:8...; 10:1); எருசலேமைத் தீய இடமாக்கிய பொது மக்களின் ஒழுக்கமின்மை, மற்றும் துர்மாதிரியான சிலைவழிபாடு முதலிய தவறுகள் (எரே 5:19; எசே 22). இவற்றால் தொடர்ந்து தூண்டப்பட்ட இறைவனின் சினமானது, "இனி அவர்களுக்குக் கழுவாய் இல்லை; அவர்கள் தப்ப முடியாது" என்ற கூக்குரலுடன் கனன்றெழுந்தது (2 நாள் 36:16).

ஆண்டவரின் திராட்சைத் தோட்டமானது சீரழிந்து, பின்னர் சூறையாடப்பட்டு, வேரோடு பிடுங்கப்பட்டது (எசா 5). வேசித்தனம் புரியும் துணைவி அவளது பகட்டாடை நீக்கப்பட்டுக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டாள் (ஓசே 2; எசே 16:38). கீழ்ப்படியாமல், கிளர்ச்சி செய்த மக்கள் தங்களுடைய நாட்டினின்று விரட்டப்பட்டு, நாடுகளிடையே சிதறடிக்கப்பட்டனர் (உப 28:63-68). தண்டனையின் கடுமையானது தவறினுடைய பளுவை வெளிப்படுத்தியது. மாயத்தோற்றத்தை நிலை நிறுத்துவதோ, புறவினத்தாரின் முன் நிற்பதோ இனி இயலாத ஒன்று. "இன்றிருப்பதுபோல, தலைக்குனிவுதான் நமக்கொண்டு" (பாரூ 1:15).

**3. நாடு கடத்தப்படுதலும் அறிக்கையிடுதலும்:** இக்காலம் முதல் தாழ்மையுடன் பாவத்தை அறிக்கையிடுவதானது இஸ்ராயேலில் வழக்கமாகிறது (எரே 31:19; எஸ் 9:6...; நெகே 1:6; 9:16.26; தானி 9:5). நாடு கடத்தப்படுதலானது ஓர் எதிர்மறையான இறை மகிமைக் காட்சியாக, இறைவனுடைய புனிதத்தையும் மற்றும் தீமையின் மீதான முழு வெறுப்பும் இதுவரையில்லாத முறையில் வெளிப்படுத்துகிறது.

**III. நாடு கடத்தப்படுதல், ஒரு பயனுள்ள சோதனை:**

1. புனித நாட்டினின்று நிராகரிக்கப்பட்டு, தங்களுடைய ஆலயம் மற்றும் வழிபாட்டை இழந்தவர்களாய், இறைவனால் முற்றிலுமாகக்

கைவிடப்பட்டதை நாடு கடத்தப்பட்டோர் நம்ப வேண்டியிருந்தது. இதனால், அவர்கள் நம்பிக்கையற்ற முறையில் ஊக்கமிழந்தனர் (எசே 11:15; 37:11; எசா 49:14). உண்மையில் சோதனையின் மையத்திலேயே இறைவன் தங்கியிருந்தார். தமது மக்களை எழுப்புவதற்கென அவரது வியப்புமிக்க பிரமாணிக்கம் ஏற்கெனவே செயலில் ஈடுபட்டிருந்தது (எரே 24:5-6; 29:11-14).

**2. இறைவாக்கினர்களின் ஆறுதல்:** அச்சுறுத்தும் இறைவாக்குகள் மெய்யாக்கப்பட்டதானது, இறைவாக்கினரின் பணியைக் கருத்தோடு ஏற்குமாறு நாடு கடத்தப்பட்டோரைத் தூண்டியது. ஆனால், இப்போது இவ்வாக்குகளைத் தங்களுக்கே திரும்பக் கூறிக்கொள்வதன் மூலமாகத்தான் நம்பிக்கைக்கான காரணங்களை அவர்கள் அவற்றில் கண்டடைந்தனர். உண்மையில், தண்டனையின் அறிவிப்பானது எப்போதும், மனமாற்றத்திற்கான அழைப்பு மற்றும் புதுப்பித்தலின் வாக்குறுதி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது (ஓசே 2:1-2; எசா 11:11; எரே 31). இஃது இறையின் கடினத்தன்மையால் வெளிப்படுத்தப்படுகின்ற விழிப்பான அன்பினுடைய வெளிப்பாடு போன்று உள்ளது. தண்டிக்கின்ற போதும் கூட, முதல் இரக்கமானது புதிதாய் மலர்வதைக் காட்டிலும் வேறெதையும் இறைவன் விரும்புவதில்லை (ஓசே 2:16-17). தண்டிக்கப்பட்ட குழந்தையின் குரலொலியானது தந்தையின் இதயத்தை நிரப்புகிறது (ஓசே 11:8-10; எரே 31:20). பாலஸ்தீனத்தில் மிக அரிதாகச் செவிமடுக்கப்பட்ட இச்செய்திகள், பாபிலோனிலுள்ள நாடு கடத்தப்பட்டவர்களுடைய குழுக்களால் மிக ஆர்வமுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன. முன்னர்த் துன்புறுத்தப்பட்ட எரேமியா, இப்போது இறைவாக்கினர்களில் மிக உயர்ந்தவராக மதிக்கப்படுகிறார்.

நாடு கடத்தப்பட்டவர்களிடையிலேயே இறைவன் அவர்களுக்கு வாரிசுகளை உண்டாக்குகிறார். அவர்கள் துன்பங்களினிடையே மக்களை வழிநடத்தி ஆதரவளிப்பார்கள். புறவினத்தாருடைய படைகளின் வெற்றியானது, அவர்களது தெய்வங்களுடைய வெற்றியாகத் தோன்றியது. எனவே, சோதனையானது பாபிலோனிய வழிபாட்டினால் கவரப்படும் அளவிற்குக் கடுமையாக இருந்தது. ஆனால், இறைவாக்கு மரபானது சிலைகளை வெறுத்து, விட்டொழிக்குமாறு நாடு கடத்தப்பட்டோருக்குப் போதித்தது (எரே 10; எசா 44:9...; காண்க: பாரூ 6). இதைவிட மேலாக நாடு கடத்தப்பட்ட குருவாகிய எசேக்கியேல், ஒரு மகிமை மிக்க காட்சியில் ஆண்டவருடைய இயங்குதன்மையின் வெளிப்பாட்டைப் பெற்றார். இந்த ஆண்டவருடைய மகிமையானது ஆலயத்தில் பூட்டப்பட்டதன்று (எசே 1); மேலும், அவரது பிரசன்னமானது நாடு கடத்தப்பட்டோருக்குக் காணவியலாத புனித இடமாகும் (எசே 11:16).

**3. புதிய இஸ்ராயேலின் தயாரிப்பு:** இறைவனின் வார்த்தையே இறைவனுடைய பிரசன்னமாகும். இதன் அடிப்படையில் ஒரு வழிபாடு உருவாக்கப்பட்டு வளர்க்கப்படலாம். இவ்வழிபாடானது பலி வழிபாடாக இல்லாமல் செபக்கூட்டத்தின் திருச்சடங்காக இருக்கும். இறைவனுக்குச் செவிமடுக்க (புனித நூல்களை வாசித்து, விளக்கமளிப்பதன் மூலம்) தங்களை ஒன்று சேர்ப்பதையும், செபத்தில் இறைவனுடன் பேசுவதையும் இது தன்னுள் கொண்டுள்ளது. இவ்வாறாக, முழுவதும் இறைவனை நோக்கியவாறு, அவரிடமிருந்து மட்டுமே மீட்பை எதிர்பார்க்கின்ற எளியோரின் ஆன்மீக சமுதாயமானது அமைக்கப்பட்டது. இச்சமுதாயத்திற்குக் குருத்துவப் பிரிவானது புனித வரலாற்றை விவரித்து, சட்டத்தைக் கற்பிக்கும் பணியினை ஏற்றுக் கொண்டது. இப்பணியானது, பழைய நினைவுகள் மற்றும் கருத்துக்களின் தொகுப்பு மற்றும் புதுப்பிப்பாகிய ஒரு குருக்களின் பாரம்பரிய ஏட்டினை உருவாக்கியது. இவை இஸ்ராயேலை ஒரு புனித இனமாகவும் ஆண்டவருடைய குருத்துவ அரசாகவும் உருவாக்கின.

சிலை வழிபாட்டினால் தீண்டப்படுவதற்கு உட்படுவதினின்று மிகவும் அப்பாற்பட்ட நிலையில் புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலானது புறவினத்தாரின் நாட்டில் உண்மையான இறைவனுடைய தூதுவனாக உருவாயிற்று. இஸ்ராயேலானது "புறவினத்தாருக்கு ஒளியாக" இருக்கும் தன்னுடைய புதிய அழைப்பை ஏற்றது (எசா 42:6; 49:6). ஆண்டவருடைய உலகளாவிய ஆட்சியின் இறுதிக்கால நம்பிக்கையை நோக்கித் தன் கவனத்தைச் செலுத்தியது (எசா 45:14).

**4. புதிய யாத்திரை:** இந்த நம்பிக்கையானது எருசலேமில் மையம் கொண்டிருந்த வேளையில், அதனுடைய நிறைவேற்றமானது நாடு கடத்தப்படுதல் ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனக் கோரியது. இரண்டாம் யாத்திரையின் அதிசயங்களை முன்னதாகவே விவரிக்கின்ற "ஆறுதலின் நூலில்" (எசா 40:55), இறைவன் தனது மக்களுக்கு வாக்களித்தது இதுவே. மீண்டும் ஒருமுறை ஆண்டவர் தாமே இஸ்ராயேலின் மேய்ப்பராவார். அவரே, குறிப்பாக மேய்ப்பன் (எசே 34:11-13), ஆடுகளை அவற்றின் மந்தைக்கு நடத்திச்செல்வது போல (எசா 40:11; 52:12), நாடு கடத்தப்பட்டவர்களைத் தேடிச் செல்வார். அவர்களுடைய தீட்டுகள் அனைத்தினின்றும் தூய்மைப்படுத்தி, புதியதோர் இதயத்தை அவர் அவர்களுக்கு அளிப்பார் (எசே 36:24-28). அவர் அவர்களுடன் ஒரு முடிவில்லா உடன்படிக்கையை நிறைவேற்றி (எசே 37:26; எசா 55:3), எல்லா நன்மைகளாலும் அவர்களை நிரப்புவார் (எசா 54:11-12). ஆண்டவருக்கு அஃது ஒரு மகத்தான வெற்றியாகும் (எசா 42:10-17).எகிப்திலிருந்தான யாத்திரையின் அனைத்து வியத்தகு செயல்களும் ஒன்றுமில்லாததைப் போல் தோன்றும் (எசா 35; 41:17-20; 43:16-21; 49:7-10).

உண்மையில் கி.மு. 538-இல் சைரசின் ஆணை பிறப்பிக்கப்பட்டது, ஆர்வ எழுச்சியும் பக்தியுமுள்ள யூதர்களை உயர்த்தியது. "அடிமைத்தளையினின்று காப்பாற்றப்பட்ட" (எஸ் 1:4) முக்கிய ஆண்களின் தன்னார்வக் குழுவானது எருசலேமிற்குத் திரும்பியது. இம்மனிதர்கள் யூத சமுதாயத்தின் அமைப்பு மற்றும் அதனுடைய ஆன்மீகப் பயிற்சி ஆகியவற்றின் மீது உறுதியான ஆதிக்கம் கொண்டிருந்தனர். பல்வேறு துன்பங்களுக்கிடையில் இதுவே மக்களின் உயிர்ப்பாக இருந்தது (எசே 37:1-14). இறைவனுடைய பிரமாணிக்கத்தைப் பறைசாற்றுகின்ற ஆச்சரியப்படத்தக்க சாட்சிகளாகவும், அதிசயிக்கும் நாடுகளின் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பாடுபவர்களாகவும் திகழ்ந்தனர் (சங் 126).

**5. நாடு கடத்தப்படுதலும் புதிய ஏற்பாடும்:** இறைத்திட்டத்தின் மைய மறை பொருளுக்கு மரணம் மற்றும் உயிர்ப்பினுடைய அனுபவம், நாடு கடத்தப்படுதல் மற்றும் வெற்றிகரமாகத் திரும்பி வருதல் ஆகியவற்றுக்கிடையே உள்ள உறவு சாதாரணமானதைவிட மேலானதாகும் (எசா 53). இந்நிகழ்ச்சிகள் கிறிஸ்துவர்களுக்கு வளமிக்க பாடங்களாகத் தொடர்ந்து இருக்கின்றன. உண்மையில் ஓர் உயிருள்ள வழியானது உண்மையான புனிதத்தலத்திற்கு இலவச நுழைவுரிமையை உறுதிப்படுத்துகிறது (எபி 10:19; யோவா 14:6). ஆனால், இலவச நுழைவுரிமையை அடைவதென்பது, இறுதி இலக்கில் இருப்பதைப் போன்றதன்று. ஒரு நிலையில், "இந்த உடலில் குடியிருக்கும்வரை ஆண்டவரின் வீட்டினின்று தொலைவில் அலைகிறோம்" (2 கொரி 5:6). இவ்வுலகைச் சார்ந்தவர்களாக இல்லாமல் இவ்வுலகில் உள்ளவர்கள் என்ற நிலையில் (யோவா 17:16), தீமையுடன் உடன்படாதவராகிய இறைவனுடைய புனிதத்துவத்தைக் கிறிஸ்தவர்கள் எப்போதும் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும் (1 பேதுரு 1:15; 2:11-12). மேலும், கிறிஸ்துவில் விண்ணகத் தந்தையின் உறைவிடத்திற்கு நடத்திச்செல்லக்கூடிய இறைவனின் பிரமாணிக்கத்தை அவர்கள் நம்பியிருக்க வேண்டும் (எபி 11:16).

**நாடு கடத்தப்படும் தண்டனை (BANISHMENT)**

இஸ்ராயேல் மக்களுக்கு நாடு கடத்தப்படுவது என்பது யாவேயிடம் உள்ள அன்புறவைத் துண்டிப்பதாகும் (ஓசே 9:3-5; காண். ஆதி 4:14; எசே 11:5). இதைவிட மோசமானது சிலைகளை வழிபடக் கட்டாயப்படுத்தப்படுவதாகும் (உப 4:27-28; 1 சாமு 26:19; எரே 16:13). எனவே, விவிலியச் சட்டத்தில் இஃது ஒரு தண்டனையாகக் குறிப்பிடப்படவில்லை. எஸ் 7:26-இல் நாடு கடத்தப்படுதல் குறிக்கப்படுகிறது. இது சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுதலையே குறிக்கிறது (10:8).

கொலை செய்ததற்காகத் தேடப்படுபவன் தானாகவே வேறுநாட்டிற்கு ஓடிப்போவதே அவன் தப்பிப்பதற்குக் கடைசிப் போக்கிடமாகும். யாக்கோபு காரானுக்கும் (ஆதி 27:43), மோசே மிதியாவுக்கும் (யாத் 2:15), தாவீதின் பெற்றோர் மோவாபிற்கும் (1 சாமு 22:3-4), தாவீது காத்துக்கும் (24:1-4), அப்சலோம் கெசூருக்கும் (2 சாமு 13:38), எரொபவாம் எகிப்திற்கும் (1 அர 11:40), எலியா பெனிசியாவிற்கும் (17:9), உரியா எகிப்திற்கும் (எரே 26:21-23) ஓடிப்போதல் தானாகவே நாடு கடத்திக்கொள்ளும் தண்டனைக்கு எடுத்துக்காட்டுகளாகும். பழங்கால மேற்காசியாவில் அரசியல் அகதிகள் மற்றொரு நாட்டில் அடைக்கலம் புகுவது வழக்கமாகும் (2 சாமு 15:19; 1 அர 11:14-25). இத்தகைய அகதிகள் அவர்கள் நாட்டிற்குத் திரும்ப அனுப்பப்படுதற்குரிய நிபந்தனைகள் இத்திய உடன்படிக்கைகளில் காணப்படுகின்றன. விவிலியச் சட்டப்படி-எல்லாக்கொலையும் குற்றமே; ஆனால், அறியாமல் கொலை செய்தவன் அடைக்கல நகரத்திற்குச் செல்வது- ஒரு வகையில் நாடு கடத்துவதைப் போன்றதாகும் (எண் 35:32).

உரோமையர் சட்டப்படி நாடு கடத்துவதில் பல வகைகள் இருந்தன. அவை சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் மற்றும் குடியுரிமை இழத்தல் முதலியவை அடங்கிய நிலையான கடுமையான நாடுகடத்தலையும், ஒருவர் ஓர் இடத்தில் தங்குவதற்கான தடையும் தன் சொந்த இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே குறிப்பிட்ட காலத்திற்கோ நிலையாகவோ தங்க வேண்டும் என்ற நிபந்தனையும் அடங்கிய கடுமை குறைந்த நாடு கடத்தலையும் உள்ளடக்கும். ஒரு தீவுக்கு நாடு கடத்தப்படுதல் சாதாரணமாய் வழக்கில் இருந்தது. தொடக்ககாலத் திருச்சபைப் பாரம்பரியப்படி இத்தகைய நாடு கடத்தலைத் திருவெளிப்பாட்டு நூல் ஆசிரியர் அனுபவித்தார் (திருவெளி 1:9).

**நாடு கடத்தப்பட்டவர்கள், சிதறிப்போனவர்கள் (OUTCAST)**

எட்டு முதல் ஆறாம் நூற்றாண்டுவரை அசீரியர்கள் பாபிலோனியர்களின் தொடர்ந்த படையெடுப்பால் இஸ்ராயேலைவிட்டு வெளியேறிய மக்களைக் குறிக்கப் பயன்படும் எபிரேயச் சொல்லின் பொருளாகும். ஆங்கில மொழியில் பயன்படுவதுபோல் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட ஒருவரைக் குறிக்க இந்தச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. யூதர்களுடைய பிரமாணிக்கமின்மையே இவர்கள் இந்த நிலையை அடைந்ததற்குக் காரணம் என விவிலியம் கூறுகின்றது. பழைய ஏற்பாட்டின் மற்றும் பிற்கால யூத இறுதிக்கால இயலின் முக்கிய கருத்து "சிதறிப்போன இஸ்ராயேலை" இறைவன் ஒன்று சேர்ப்பார்; அவர்கள் எருசலேமுக்குத் திரும்புவர் என்பதாகும் (சங் 147:2; எசா 11:12; 56:8).

**நாடுகளின் அட்டவணை (TABLE OF NATIONS)**

இஸ்ராயேலர் தொடர்புகொண்ட பழங்கால மக்களிடையே இருந்த உறவு முறையை மூதாதையர் பட்டியல் வடிவில் எடுத்துக்கூறும் சுருக்கமாகும் இது (ஆதி 10; 1 நாள் 1:4-24). இந்த அட்டவணை ஆபிரகாமின் வாழ்வு மற்றும் அழைப்புக்கு வரலாற்றுப் பின்னணியாக அமைகிறது; அந்த அளவில், மனுகுலம் முழுவதையும்பற்றிப் பேசும் தொடக்க நூலின் முன்பகுதிக்கும், இஸ்ராயேலின் தோற்றம் பற்றிய வரலாற்றுக்கும் இடையே ஒரு பாலமாக

அமைகிறது. இந்த நாடுகளின் அட்டவணை, நோவாவின் முதல் மகன் சேமின்மூதாதையர் பட்டியலில் கடைசியில் தருவதன் மூலம் ஆதி 10 இஸ்ராயேலின் மரபுக்கொடியை இறுதியில் வைத்து, மீண்டும் 11:10-இல் தொடர்கிறது. இஸ்ராயேல் எப்பேத்தைக் குலத்தலைவராகக் கொண்ட மக்களுடன் (10:2-5) குறைந்த அளவு தொடர்பே கொண்டிருந்தனர். எகிப்தியர் மற்றும் கானானியர்களான காமின் வழித்தோன்றல்களுடன் (10:6-19) இஸ்ராயேல் அதிகத் தொடர்பு கொண்டிருந்தது.

நாடுகளின் அட்டவணையில் வரும் பெயர்களுக்கு விவிலியத்துக்குப் புறம்பே ஆட்களின் அல்லது இடங்களின் பெயர்களாக, விளக்கம் அளிக்கப்படுகின்றன. இவற்றில் சில- உண்மையிலேயே இனப் பெயர்களாகும். நோவாவின் மூன்று புதல்வர்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள மூன்று பிரிவாக இந்நாடுகளைப் பிரிப்பது இன அல்லது மொழிப்பிரிவன்று. அரசியல் நோக்கத்திற்காக, பெரும்பாலும் புவியியல் அடிப்படையில் இப்பெயர்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சிறிய ஆசியா மற்றும் ஆகியன் கடலைச் சார்ந்த மக்களுக்கும், இடங்களுக்கும் மேதியர்களுக்கும் எப்பேத்து முன்னோர் ஆவார் (ஆதி 10:2-5). எகிப்தும் அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளும், வட ஆப்பிரிக்கா, கிழக்கு மற்றும் மேற்கு அராபியா, கிரேத்து லீதியா மற்றும் கானான் ஆகிய பகுதிகளும் காமின் வழித்தோன்றல்கள் வாழ்ந்த பகுதிகளாகும் (10:6-20). சேம், தென் அராபியா, சீரியா, மெசபொத்தாமியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் அர்ப்பகசாது வழியாக இஸ்ராயேலுக்கும் முன்னோர் ஆவார் (10:21-31). சேமின் புதல்வர்களுள் ஏலாம் மற்றும் அசூரின் மெசபொத்தாமிய ஆதிக்கங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் (10:22), கூசு (எத்தியோப்பியா) மற்றும் காமின் வழித்தோன்றலான நிம்ரோது மெசபொத்தாமியாவில் அரசையும் நகரம் கட்டுதலையும் தொடங்கிவைத்ததாகக் கூறப்படுகிறது (10:8-12; காண். மீக் 5:6). ஆதி 10 நிகழ்ச்சியுரைப்பகுதிகளும் (10:8-12. 18:19. 25.30), மூதாதையர் பட்டியலும் சேர்ந்ததாகும். இந்த அதிகாரத்தில் காணப்படும் முரண்பாடுகளும் மற்றப் பிரச்சனைகளும் தொடக்க யாவே பாரம்பரியமும் பிற்காலக் குருக்கள் பாரம்பரியமும் கலப்பதால் எழுகின்றன என்று விளக்கப்படும்.

### நாடுகள், இனங்கள் (NATIONS)

பொதுவாக அரசியல் அல்லது புவியியல் அடிப்படையில் குறிப்பிட்ட விதத்தில் இணைந்த மக்கள் குழு நாடு என்றழைக்கப்பட்டது. பழங்கால உலகில் நாடுகளின் வரலாறும் உறவுகளும் மூதாதையர் பட்டியல் அல்லது மரபுக்கொடி வாயிலாக எடுத்துக்கூறப்பட்டன. இத்தகைய கணிப்பு இன மற்றும் மொழிக்கூறுகளையும் பிரதிபலித்தது (ஆதி 10). நாடுகளைக் குறிக்கும் எபிரேய மற்றும் கிரேக்கச்சொல், யூதர் அல்லாதவரைச்சுட்டும்போது "புறவினத்தார்," "வேற்றினத்தார்" என்றும், எல்லா மக்களையும் குறிக்கும்போது "நாடுகள்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

யாவே, இஸ்ராயேலுக்கு மட்டுமின்றி எல்லா நாடுகளுக்கும் (வேற்றினத்தார்) ஆண்டவரும் நடுவரும் ஆவார் (சங் 22:28; எசா 2:4; 34:1-2; எரே 1:10). இறைவன் ஆபிரகாமை இரு நோக்கங்களுக்காகத் தேர்ந்து கொண்டார். ஒன்று- ஆபிரகாமை ஒரு பெரிய இனம் ஆக்குவது; மற்றது- நாடுகளுக்கு (இனம்) ஆசி வழங்கக் கருவியாக ஆக்குவது (ஆதி 12:1-3; 18:18). யாத்திரை நிகழ்ச்சியின் பின்னுள்ள இறைநோக்கு ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதும் நாடுகளை ஆசீர்வதிக்க இஸ்ராயேலைக் கருவியாக்குவதும் ஆகும். இஸ்ராயேல் சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகும். அதன் நோக்கம், யாவேயின் பெயரையும் சித்தத்தையும் மற்ற இனங்களுக்கு அறிவிப்பதும், குருக்களின் அரசாக இருப்பதும் (யாத் 19:3-6; உப 4:5-8; 1

அர 8:60; சங் 67; எசா 9:3). "மக்களினத்திற்கு உடன்படிக்கையாகவும் வேற்றினத்தாருக்கு ஒளியாகவும் இருப்பதும்" (எசா 42:6) ஆகும். இஸ்ராயேல் இந்தக் கடமையில் தவறியது. ஆகவே, வேற்றினத்தாரிடையே சிதறடிக்கப்பட்டது (உப 4:27; ஆமோ 9:9). பாலஸ்தீனத்தில் வாழ்ந்த வேற்றினத்தார்மேல் அழிவையும் தீர்ப்பையும் கொண்டுவரும் கருவியாக இஸ்ராயேல் அமையும் (யாத் 34:24; உப 4:38).

புதிய ஏற்பாட்டில், இயேசு "புறவினத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியாக" இருக்கிறார் (லூக் 2:32). அவரது பணி முதன்மையாக இஸ்ராயேல் மக்களிடையே ஆற்றப்பட்டது. ஆனால், அது யூதர் அல்லாதோரையும் உள்ளடக்கியது (மாற் 7:24-30). யூதர்களுக்காக மட்டுமன்றி எல்லா மக்களுக்காகவும் இயேசு மரித்தார் (யோவா 11:50-52). அவரது சீடர்கள் உலகமெங்கும் அனுப்பப்படுகின்றனர்; நற்செய்தி முழங்கி எல்லாரையும் சீடராக்க அனுப்பப்படுகின்றன (மத் 24:14; 28:19; காண். அ.ப. 1:8). இந்த ஊழியின் முடிவில் "எல்லாக்குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்கள்" இறையரசிலும் கிறிஸ்து போற்றுரையிலும் பங்கு பெறுவர் என்பது திருவெளிப்பாட்டு நூலின் பொதுத்தலைப்பாகும் (திருவெளி 5:9-10).

## நாடோடி வாழ்க்கை (MOMADISM)

1. நாடோடி வாழ்க்கை என்பது ஒரே இடத்தில் நிரந்தரமாகக் குடியேறாமல் இன்று ஓரிடம் நாளை வேறு ஓரிடமாக அலைந்து திரிவது. இவர்கள் தங்கள் விலங்குகளுக்குத் தேவையான புல்வெளியை நோக்கி நகர்ந்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் மனம் போன போக்கில் குறிக்கோள் இன்றிச் செல்வது கிடையாது. இவர்கள் புல்வெளி நோக்கி, குறிப்பிட்ட வழியில் சென்றார்கள். யூதேயாவில் காணப்படும் பாலைவனப்பகுதியிலும் தாமிரா என்ற இனத்தவர்கள் தங்கள் எல்லையைக் குறிப்பிட்டு அதனுள் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள். ஓர் இடத்தின் தட்பவெப்பநிலை, இடவமைதி, நிலவளம், நீர் வளம், தொழில் நுணுக்க முன்னேற்றங்களை வைத்தே எத்தகைய நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். எல்லாக் காலங்களிலும் எல்லா வகை நாடோடிகளும் காணப்படுகின்றார்கள். நாடோடிகள் வறியவர்களாக இருந்தாலும், நிலையாகக் குடியேறிய மக்களால் மதிக்கப்பட்டார்கள். நவீனக் கருவிகள் வைத்துள்ள மக்கள்கூட இவர்களின் திறமை, உடல் வலிமை, உடற்கட்டு இவைகளைக் கண்டு பயந்தார்கள்.

2. **நாடோடிகளின் வகைகள்:** மூன்று வகையான நாடோடிகள் உலகின் எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் காணக்கிடக்கின்றனர்.

அ. **வேட்டையாடுபவர்கள்:** வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் அனைவரும் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் சில சமயங்களில் சமயச்சடங்குகளுக்காக ஓரினமாக ஒன்று கூடுவார்கள். அவர்களின் மக்கள் கூட்டம் காலத்தையும், கிடைக்கின்ற உணவின் அளவையும், இடத்தையும் பொருத்தது. அவர்கள் எவ்வளவுபேர்தான் இருந்தாலும் எல்லா வேலைகளையும் எல்லாரும் செய்ய வேண்டும். பெரும்பாலும் இவர்கள் செல்வத்தில் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் சமூகம் மக்களாட்சித் தன்மையுடையது. வீட்டின் தலைவன் தந்தை. வீட்டுத் தலைவர்கள் அனைவரும் இணைக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள். வெளியிலிருந்து பெண்களைத் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள். போரில் சிறை எடுத்துவந்து பெண்களை மணம் செய்து கொள்ளும் வழக்கம் அவர்களிடம் அரிதாக இருந்தது. தனிநபர் அரிதாகத்தான் மற்ற இனத்தாரோடு சேர்ந்து கொண்டனர். ஒருசிலர் ஆடு, மாடு மேய்ப்பவர்களாகவும் மாறினார்கள். ஆனால், இதுவரை கருதப்பட்டதுபோல், இது படிப்படியாகத் தோன்றியது அன்று.

ஆ. ஆடுமாடுகளை மேய்ப்பவர்கள்: ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள் தங்கள் தொழிலைக் காலத்திற்கும், இடத்திற்கும் இருக்கின்ற விலங்குகளின் நிலைக்கும் ஏற்றவாறு எப்போது, எங்கே மேய்க்க வேண்டும் என்று கணக்கிட்டுச் செய்தார்கள். வெள்ளாடுகள், செம்மறியாடுகள், கழுதைகள் இவற்றை ஓட்டிக்கொண்டு மெதுவாகப் புல்வெளியைத் தேடிச்சென்று கொண்டிருந்தனர். அரேபியாவிலுள்ள பெடுயீனர்கள் குதிரை, ஒட்டகம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இவர்கள் விரைவாக நாடு முழுவதும் சுற்றிவந்தனர். அவர்கள் செல்வமே விலங்குகளின் பெருக்கத்தில்தான் உள்ளது. அவரவர்களுக்குக் குறிப்பிட்ட நிலப்பரப்புண்டு. அஃது அவர்களுக்குக் குடும்பச்சொத்தாகும். இவர்களில் பணக்காரர்களும் உண்டு. இவர்கள் வேட்டையாடித் திரிபவர்களைவிடத் தரத்திலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்கள். பாலும், இறைச்சியுந்தான் அவர்களது உணவுப்பொருள். தோலினால் கூடாரம், தண்ணீர்ப்பை ஆகியவை, மயிரினால் ஆடைகளையும் செய்தார்கள். மக்களாட்சியைப் பின்பற்றினார்கள். இருந்தாலும், செல்வந்தர்களின் கையே ஓங்கி இருந்தது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான வேலைகள் இருந்தன. ஆண்கள் வழக்கமாக விலங்குகளை மேய்த்துக்கொண்டு வருவார்கள். பெண்கள் உணவு தயாரித்தல், தோலைப்பதப்படுத்துதல், கூடாரம் அமைத்தல் ஆகியவற்றை முக்கியமான தொழிலாகக் கொண்டிருந்தார்கள். மற்ற இனத்திலிருந்தும் அல்லது அதே இனத்திலிருந்தும் பெண்களைத் திருமணம் செய்துகொண்டார்கள். இத்தகைய இனத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் நிலையாய்த் தங்கியிருந்து பயிர் செய்தார்கள். ஆனால், அவர்கள் நிலையான அமைப்புகளைக் கட்டவில்லை. ஆயினும் ஒரு சிலர் தங்கள் எல்லையின் ஓர் இடத்தில் தங்கி, பயிர்த்தொழிலை மேற்கொண்டார்கள்.

இ. பயிர்த்தொழில் செய்பவர்கள்: பயிர்த்தொழில் செய்பவர்கள் ஓரிடத்தில் நிலையாய்த் தங்கியிருந்து பயிர் செய்தார்கள்; நிலவளம் குன்றும் வரைக்கும் அங்கே தங்கியிருப்பார்கள். பிறகு, வேறொருவளமிக்க இடத்தை நோக்கி நகர்ந்து விடுவார்கள். இதுதான் அவர்களின் நடைமுறை. இவர்களை உண்மையிலேயே நாடோடிகள் என்று கூறுவதற்கு இல்லை.

3. ஒட்டகம் கழுதைகளைப் பயன்படுத்தும் நாடோடிகள்: தற்காலத்தில் வாழ்கின்ற பெடுயீனர்கள் பலர் ஒட்டகத்தைப் பயன்படுத்தும் நாடோடிகள். அவர்கள் குதிரையும் வைத்திருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உள்ள விவிலிய அறிஞர்களின் தவறு என்னவென்றால், தற்போது வாழ்கின்ற நாடோடிகளைப் போலவே குலமூதாதையர் வாழ்ந்திருப்பதாகக் கணிப்பதாகும். அதுவும் எவ்வித ஆதாரமும் இல்லாமல் இவர்களின் சமய சமூகப் பழக்கவழக்கங்களை அடிமைத் தனத்திற்கு முன்பிருந்த மக்களின் சமய சமூகப் பழக்கவழக்கங்களோடு ஒப்பிடுதல் தவறு ஆகும். குல மூதாதையர்கள் பற்றிய பல கதைகளில் ஒட்டகம் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 24:64; 31:34). ஆனால், இது கால வரிசைக்கு ஒவ்வாத ஒரு குறிப்பு என்று பலரும் கருதுகின்றனர். கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிதியானியர்கள்தாம் ஒட்டகத்தைப் பயன்படுத்திய முதல் நாடோடிகள் ஆவர். இந்த நூற்றாண்டில்தான் ஒட்டகம் வீட்டு விலங்காகப் பாதுகாக்கப்பட்டது. எனவே, இவ்வகையான தொழில் குலமூதாதையர்களின் கதைகளில் வருவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. எரிகோவிலும், காதூலிலும் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் நன்கு வளர்ச்சியடைந்த நகரங்கள் புதிய கற்காலம் வரை செல்லுகின்றன என்றும், நாடோடித் தன்மையும் நல்வாழ்வும்– இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட படிப்படியான மறுமலர்ச்சி அன்று என்றும் காட்டுகின்றன. மாறாக, குலமூதாதையர்கள் கழுதைகளைப்

பயன்படுத்தும் எகிப்திலுள்ள பெனி-ஆசான் இனத்தவர்போல் இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது. செக்கேமில் பெனி-ஆமோர் (கழுதையின் புதல்வர்கள்) குறிக்கப்பட்டுள்ளனர் (ஆதி 34:21தொ) என்பது கவனிக்கத்தகும். குல மூதாதையர்களின் பழக்கங்களோடு ஒத்து வரும் எமோரியர்கள் மாரியில் கழுதைகளைப் பலியிட்டார்கள். கழுதை உண்மையிலேயே இழிவான விலங்கு அன்று. ஆனால் அந்தக் காலத்தில் அரசர்களும், தெய்வங்களும் ஏறிச்செல்லும் (செக் 9:9) வாகனமாகப் பயன்படுத்தப்பட்டது.

### 4. மேற்காசிய நாடுகளில் நாடோடித்தன்மை:

நமது நாகரிக வரலாற்றில் நாடோடிகள் திடீரென்று முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். கி.மு. 30-ஆம் நூற்றாண்டில் அக்காதியர்கள் குடியேறுகிறார்கள். கி.மு. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எமோரிய நாடோடிகள் வளமிக்க இடங்களில் காணப்படுகின்றார்கள். அவர்களின் தாக்கத்தை மாரியில் காணப்படுகின்ற பதிவேட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவர்களில் ஒரு குழு முந்தைய குழுவின் கலாச்சாரங்களைப் பின்பற்றியது என்று அறிந்து கொள்ளலாம். கைக்சோஸ், அபிரூ ஆகிய இரு குழுவினரும் செமித்திய நாடோடி மக்களையே பிரதிபலிக்கின்றனர் என்று சிலர் கருதுகின்றனர். கி.மு. 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில் அரமேயர்கள் காணப்படுகின்றார்கள். இஸ்ராயேல் கானானை வெற்றிகொண்ட காலத்தில், ஒட்டகத்தைப் பயணம்செய்யும் வாகனமாகப் பயன்படுத்திய மிதியானியர்கள் கிழக்கிலிருந்து தோன்றுகின்றனர். இக்காலங்களில்தான் ஏதோமியர்களும் மோவாபியர்களும் குடியேறினார்கள்.

இந்தச் செமித்திய நாடோடிகளைத் தவிர வடக்கிலிருந்த சமவெளிகளிலிருந்து மற்ற நாடோடி இனத்தவரும் தோன்றுகின்றனர். ஊரியர், இத்தியர், பின்பு மேதியர்கள், இன்னும் பிறகு பார்த்தியர்கள் போன்றவர்கள் மேற்காசிய நாடுகளில் நாடோடித் தன்மையைப் புதுப்பித்தார்கள்.

### 5. விவிலியத்தில் நாடோடி வாழ்க்கை:

**அ. குல மூதாதையர்களின் காலம்:** யாபால் என்பவர் காயீனுடைய வழித்தோன்றல். நாடோடிகளின் தந்தை என்று அழைக்கப்படும் இவர் ஆடுகளோடு கூடாரங்களில் தங்கியிருந்தார் (ஆதி 4:20). குல மூதாதையர்கள் நாடோடிகள் என்று சித்தரிக்கப்படுகின்றனர். ஆபிரகாம் இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்றதாகப் பார்க்கின்றோம் (ஆதி 13:3.5.18; 20:1; எபி 11:9). அவர் மந்தைகள் வைத்திருந்தார் (ஆதி 12:16). ஒட்டகம் வைத்திருந்தார் என்பது கால மயக்கமான தவறான குறிப்பாகும். ஆடு மேய்ப்பதற்கான உரிமை பற்றி லோத்தோடு உடன்படிக்கை செய்திருந்தார் (13:8தொ). ஆபிரகாமின் கூடாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது (18:9-10).

இசுமயேலர்கள் அனைவரும் பழைய ஏற்பாடு முழுவதும், இக்காலத்திலும்கூட, அராபியர்களோடு உறவுள்ளவர்கள் (ஆதி 37:25; எசா 21:13). இசுமயேலின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய இறைவாக்கு அவருடைய நாடோடி வாழ்க்கையைச் சுட்டுகிறது (ஆதி 16:11). இசுமயேலரின் இடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பெயர்கள் எல்லாம் அராபியர்களுடன் தொடர்புடையவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன (25:13-18). தாவீதின்கீழ் ஓர் இசுமயேலர் ஒட்டகங்களைக் கவனிப்பவராக இருந்தார் (1 நாள் 27:30). இஸ்ராயேலர்களின் பகைவர்களான இசுமயேலர்களும் ஏதோமியர்களும் தொடர்புடையவர்கள் (சங் 83:6).

ஈசாக்கின் வாழ்வை நோக்கும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஓரிடத்தில் குடியேறி அங்கே பயிர் செய்வார்; பிறகு வேறு ஓரிடத்திற்குப் பெயர்ந்திடுவார் (ஆதி 26:12). கழுதை அவருடைய சரித்திரத்தில் முக்கிய இடம் வகித்திருந்தது (ஆதி 22:3; 24:35; 30:43; 32:5). இஸ்ராயேலருக்கும், ஏதோமியர்களுக்கும்

இடையேயிருந்த உறவு மூதாதையர்களான யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் உள்ளதுபோல் இருந்தது.

யாக்கோபு லாபானிலிருந்து திரும்பியது, ஒரு நாடோடிக் கூட்டம் தனது கூடாரங்களில் மொத்தமாகத் திரும்பியது போல் காட்சியளித்தது (ஆதி 31:33). யாக்கோபின் புதல்வர்கள், எகிப்திலிருந்த யோசேப்பிடம் உணவு தேடிச்சென்றது, எகிப்திய பெனி - ஆசான் கதையைப்போல் உள்ளது (ஆதி 42; 46:34; 47:4). யோசேப்பின் கனவு அவரது குடும்பத்தினரின் நாடோடி வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது (37:5தொ).

கேனியர்களும் மிதியானியர்களும் கூடாரங்களில் வாழும் நாடோடிகள் (நீதி 5:24; 6:4-5). மிதியானியர்கள் ஒட்டகத்தின் மீது ஏறிச் செல்வது விவிலியம் அல்லாத பிற நூல்களிலும் காணப்படுகின்றது. எகிப்தில் நாடோடிகள் நடமாடும் பகுதிகளில் இஸ்ராயேலர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. மோசே ஆடுகளை மேய்க்கும் நாடோடிகளிடம் தஞ்சம் புகுந்தார் (யாத் 2:15தொ); ஆடுகளை மேய்த்தார் (யாத் 3:1தொ). தேனும், பாலும் பொழியும் நாடு பற்றிய வாக்குறுதி அடிமைகளை மட்டும் அன்று, நாடோடி வாழ்க்கை மேற்கொண்டவர்களையும் கவர்ந்தது. பாலைவனத்தில் பசுமையான இடம் எங்கெல்லாம் காணப்பட்டதோ அங்கெல்லாம் இஸ்ராயேலர் சென்றார்கள் (எண் 33:1தொ; காண். 10:31).

**ஆ. கானான் வெற்றிக்குப்பின்:** யோசுவா, நீதிபதிகள் நூல்களின் கானான் வெற்றியை விவரிக்கும்பொழுது கழுதையைப் பயன்படுத்திய நாடோடிக் கூட்டத்தைப் பற்றியும் குறிப்பு வருகின்றது (யோசு 15:18; நீதி 10:4; 12:14). இஸ்ராயேல் மக்கள் சிலர் கூடாரங்களிலும் வாழ்ந்தார்கள். குடியேறிய பின்னும் அவர்கள் தொடர்ந்து ஆட்டுமந்தைகளைக் கவனித்து வந்தார்கள் (உப 5:39; 2 சாமு 20:1; 1 அர 12:16). நாபால் கர்மேலில் ஆடுகளும், வெள்ளாடுகளும் வைத்திருந்தான் (1 சாமு 25:2). இஸ்ராயேலில் ஆரம்ப நாடோடி வாழ்க்கை மறக்க முடியாத ஒன்றாகும். கூடாரத்திலிருந்து எழுந்த கற்பனைகள், கவிதை, இறைவாக்கினர்களின் நூல்களில் இடம் பெற்றன (சங் 78:55; 104:2; உ.ச. 1:5.8. எசா 33:20; 40:22; எரே 10:20). இரேக்காபியர்கள் இவ்வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ்ந்தார்கள் (எரே 35:6 தொ). நகரச் சமூகத்தின் கெடுக்கிற கவர்ச்சிக்கும் சிலை வழிபாட்டுக்கும் எதிராக, இறைவாக்கினர் யாவரும் நாடோடி வாழ்க்கையை ஓர் எடுத்துக்காட்டான வாழ்வாகச் சித்தரிக்கின்றனர். இக்கருத்து "என் தந்தை நிரந்தரக் குடியற்ற அரமேயன்" (உப 26:5) என்ற அறிக்கையில் தெளிவாகக் கூறப்படுகிறது. எபிரேயர் என்ற சொல்லுக்கு "நிரந்தரக் குடியற்றவன்" என்று பொருள் கொள்வாரும் உளர்.

பிற்காலத்தில் வந்த நூல்களில் நாடோடிகள் கிழக்கிலும் (எரே 49:29), பாலைவனங்களிலும் வாழ்ந்தார்கள் (25:24). இவர்கள் அராபியர்கள் என்று ஏற்கெனவே அழைக்கப்பட்டிருக்கலாம் (எசா 13:20). இவர்கள் யசோபாத்துக்கு எருமைகளையும், ஆடுகளையும் வரியாகச் செலுத்தினார்கள் (2 நாள் 17:11). யோபுவின் கதை நாடோடித் தன்மையையும் நிரந்தரமான வாழ்வுத் தன்மையையும் பின்னணியாகக் கொண்டுள்ளது (யோபு 1:3.14.17.19; 6:18-19).

**இ. நாடோடிகளுக்கும் நிரந்தரக் குடிகளுக்குமிடையே போராட்டங்கள்:** பாலைநிலங்களுக்கும் பயிர் நிலங்களுக்கிடையேயும் நாடோடிகளுக்கும் நகரக் குடிகளுக்கிடையேயும் நடைபெறுகின்ற போராட்டம் வரலாறு முழுவதும் காணப்படுகின்றது. பஞ்சகாலங்களில் இப்போராட்டம் இன்னும் தீவிரமடைகின்றது. அப்போது வேட்டைப்பொருட்களும், புல்வெளிகளும் இல்லாமல் போவதுண்டு. உணவிற்காக நாடோடிகள் விளைநிலங்களின் மேல் படையெடுப்பார்கள். இதனால் அவர்கள் எல்லைப்பகுதி ஒவ்வொரு நாளும்

மாறிக்கொண்டே இருக்கும். நாடோடிகள் படையெடுத்து அயலாரின் அல்லது பகைவர்களின் பெண்களைக் கவர்ந்துசென்று மணம் புரிவார்கள். இதன் விளைவாக நாடோடிகள் தங்கள் பழக்க வழக்கங்களில் சிலவற்றைக் கைவிடுவதும் உண்டு. இப்போராட்டத்தில் பெரும்பாலும் நாடோடிகளே வெற்றி பெற்றனர். இதற்கு, இஸ்ராயேலர் கானானையும், எமோரியர்கள் மாரியையும் வென்றதைச் சான்றாகக் கூறலாம்.

இத்தகைய படையெடுப்பையும், வெற்றிகளையும் விவிலியத்தின் முதல் பகுதியிலிருந்தே நாம் பார்க்கின்றோம். காயீன் ஆபேலைக் கொன்றான் (ஆதி 4:8.17); பாபிலோன் கோபுரம் (ஆதி 11); சோதோம் கொமோரா (ஆதி 12:13; 18:19) என்பன ஒழுக்கமற்ற நகர வாழ்க்கை பற்றிய அவநம்பிக்கையைக் காட்டுகின்றன; யாக்கோபு-ஏசாவின் பகைமை உணர்ச்சி, ஆபேல்-காயின் பகைமையைப் புதுப்பிக்கிறது (25:27தொ). இஸ்ராயேலர்கள் கானானியர்கள் மீது படையெடுத்தார்கள்; வெற்றி கொண்டனர்; அதன் கலாச்சாரத்தை எதிர்த்தனர்; ஆனால், பதிலடியாக இவர்கள் மிதியானியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்களின் தொல்லைக்கு ஆளானார்கள். நிலையாகக் குடியேறும்வரை இஸ்ராயேலர் விவசாயத்தில் முழுமூச்சாக ஈடுபடவில்லை. நாகரிகமடைந்த இஸ்ராயேல் மக்களுக்கும் வளர்ச்சி அடையாத இஸ்ராயேல் மக்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நடந்தன. நாடோடிகளின் கடவுளுக்கும் கானானியர்களின் கடவுள்களுக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது.

**ஈ. எடுத்துக்காட்டான நாடோடி வாழ்க்கை:** இறைவாக்கினர்கள் நாத்தான் முதல் எலியா வரை அனைவரும் நாடோடி வாழ்க்கையைப் போற்றி வாழ்ந்தார்கள். இஃது இரேக்காபியர்களின் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. திருமுழுக்கு யோவான் மற்றும் கும்ரான் பாரம்பரியங்கள், நகரச் சமூகங்களின் சோதனைகளிலிருந்து பின்வாங்கும் இதே போக்கைப் பிரதிபலிக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர்.

பயிர்த்தொழில் செய்த நாடோடிகள் திராட்சையைப் பயிரிடவில்லை. அதைப் பயிர் செய்வது தவறு (எரே 35:7.9) என்று கருதினார்கள். இரேக்காபியர்களும் இக்கால முகமதியர்களும் திராட்சை ரசம் குடிப்பதில்லை. ஒருவேளை நோவாவின் கதையும் (ஆதி 9:21 தொ), லோத்தின் கதையும் (19:30 தொ) குடிப்பதின்மீது ஒருவித வெறுப்பு உணர்ச்சியை உண்டாக்கி இருக்கலாம் (லேவி 10:9; உப 32:32). நசரேயர்களும் குடியைத் தவிர்த்தனர் (1 சாமு 1:15; லூக் 1:15).

இந்த நாடோடி மக்கள் கடுமையாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு வகையான நல்லொழுக்கத்தையும் குணநலன்களையும் பழக்க வழக்கங்களையும் பெற்றிருந்தார்கள். இரேக்காபியர்கள், புற இனத்தாரின் பழக்க வழக்கங்களை அழித்துவிட்டு இஸ்ராயேல் கூடாரங்களில் வாழ்வதே இறைமக்களுக்கு உரியதாகும் என்று தூண்டுகின்றனர் (எரே 35:9-10).

இஸ்ராயேலில் மக்களிடையே மக்களாட்சி வளர்ந்துவந்தது. இஃது உடன்படிக்கைச் சட்டங்களிலும், வரலாறு பற்றிய உபாகமக்கருத்திலும், அரசர்கள் பற்றிய அதன் தீர்ப்பிலும் பிரதிபலிக்கின்றது. இப்போக்கு அரசாட்சிக்கு எதிரான சாமுவேலின் பேச்சிலும் (1 சாமு 8:10தொ), அவரது சுய வாழ்க்கை விளக்கத்திலும் (12:1தொ) உச்சநிலை அடைகிறது. கிதியோன் நடத்தையும் (நீதி 8:23), மரத்தின் உவமையும் (9:8தொ) இதே போக்கைக் கொண்டுள்ளன.

**உ. பல்வேறு பழக்கவழக்கங்கள்:** விவிலியத்துக்குப்புறம்பே, கழுதையைப் பயன்படுத்திய செமித்திய நாடோடிகள் பற்றிய தெளிவான விவரிப்பைப் பெனி-ஆசன்

கொடுக்கிறார். அந்த இனத்தில் 37 குடும்பங்கள் இருந்தன. அவர்கள் கம்பள அங்கிகளையும், காலில் செருப்பும் அணிந்திருந்தார்கள். கையில் வில்லும், அம்பும், ஈட்டியும் வைத்திருந்தார்கள். விலங்குகளின் தோலினால், வாழ்கின்ற கூடாரம் முதல் தண்ணீர்ச் சித்தைகள் வரை செய்து கொண்டார்கள். தற்கால அராபியர்களின் கூடாரத்தைப்போன்றே, அக்கால இஸ்ராயேல் மக்களின் கூடாரமும் இருந்திருக்கலாம் (எசா 33:20). ஆடுகளை மேய்ப்பதற்கென்று குறிப்பிட்ட இடங்களை மரபுமுறையாலும் உடன்பாடுகளாலும் ஒழுங்கு செய்துகொண்டனர்.

பழிவாங்கும் தன்மை அவர்களிடம் நிறைந்து காணப்பட்டது; எனவேதான், "பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண்" (யாத் 21:24; லேவி 24:20). பழிவாங்குதல் ஒருவன் அவனது எதிரியோடு சமமாவதற்கு மட்டுமன்று; அவனது அமைப்பிலே ஏற்பட்ட பழுதைச் சரிப்படுத்தவும் பயன்பட்டது. இலாமேக்கின் பாடல் இதற்கோர் எடுத்துக்காட்டு (ஆதி 4:23:24).

ஆனால் இதற்கு நேரிடையாக, விருந்தோம்பல் என்பது போற்றிப் பாதுகாக்கப்பட்டது (எபி 13:2; காண். ஆதி 18:1தொ). ஆனால், இப்பழக்கம் சீசராவின் கொலையில் பயங்கரமாக முறிக்கப்பட்டது (நீதி 4:17 தொ).

## நாட்டின் நடுவு (CENTRE OF THE LAND)

செக்கேமுக்கு அருகிலுள்ள ஒரு மலையின் இடுபெயராகும். இஃது அப்பகுதியின் மிக உயர்ந்த பகுதியும் மையமுமாக விளங்கிய (நீதி 9:37) கெரிசிம் மலையைக் குறிக்கலாம். எசே 38:12-இல் வரும் நாட்டின் நடுவு நாட்டின் மையப்பகுதியோ, பல நடுவு நாட்டின் மையப்பகுதியோ, பல சாலைகள் சந்திக்கும் இடத்தையோ, உலகின் மையமாகிய (காண். எசே 5:5) எருசலேமையோ குறிக்கலாம். சில மொழிபெயர்ப்புகள் சொற்றொடரை உலகின் "நாபி" அல்லது கொப்பூழ் என்று குறிப்பிடுகின்றன. இஃது உலகின் முக்கிய பகுதிகளான பூமி, விண்ணகம், கீழ் உலகம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் "நாபியாக" ஒரு நகரை அல்லது புனிதத்தலத்தைப் பற்றிய பழங்காலக் கருத்தைச் சுட்டுகிறது. இக்கருத்து மிட்ராசிக் யூத ஏடுகளில் காணப்படுகிறது. ஆனால், எபிரேயச் சிந்தனையில் கிரேக்கர் காலம் வரை வளர்ச்சியடைந்ததாகக் காணப்படவில்லை.

## நாட்டைப் பங்கீடு செய்யும் சட்டம் (LAND LAWS)

ஐந்நூலில், ஒவ்வொரு கோத்திரத்துக்கும் பாலஸ்தீனத்தில் எவ்வெப்பகுதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அதைக் காத்துக்கொள்வதற்கு என்னென்ன விதிகள் உள்ளன என்பதற்கான சட்டங்கள் உள்ளன (எண் 27:5-11; 36:5-9; உப 19:14; 27:17). ஏழாம் ஆண்டான ஓய்வு ஆண்டுக்கும் உரிய நில விதிமுறைகளும் உள்ளன (யாத் 23:10-11; லேவி 25).

## நாணயம், பணம் (MONEY)

1. காசுகள் அறிமுகப்படுத்தப்படும் வரை, பழங்காலச் சமூகங்களில், பொதுவான பரிமாற்றச் சாதனம் உலோகங்களை எடைபோட்டுக் கொடுப்பதாகும். இக்காரணத்தினாலேயே, பழைய ஏற்பாட்டில் பரிமாற்ற அளவைகள் பற்றிய குறிப்புகள், எடை அளவுகளைப் பற்றியனவாக உள்ளன; காசுகளைக் குறிக்கவில்லை. கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் சிறிய ஆசியாவில் முதல் முறையாகக் காசுகள் அச்சிடப்பட்டன. பின் இம்முறை படிப்படியாக, முதலில் கிரீசில், ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாணய உலோகங்களின் எடையை நிர்ணயிக்கவும் உத்தரவாதம் அளிக்கவும் இம்முறை உதவியது. ஒரு காசின் எடையே இன்னும் அதன் மதிப்பின் அடிப்படை அளவையாக இருந்தது. பண்டமாற்று முறையும் மற்றப் பணமாற்ற முறைகளும் ஒருபோதும் வழக்கிலிருந்து முழுவதும் நீங்கிப் போகவில்லை. காசுகளின் தோற்ற மதிப்புக்கும் அவைகளில் வாங்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு மிகுந்த விரைவான பணவீக்கக் காலத்தில், பரிமாற்ற மூலமுறைகள் மீண்டும் பயன்பட்டன.

### II. பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வெள்ளி உலோகந்தான் பரிமாற்றத்தில் மிகவும் பொதுவாகப் பயன்பட்டது. ஆகவே, வெள்ளி என்ற சொல் அனேக தரம் கூறப்படுவதில்லை; மாறாகப் பணம் என்று குறிப்பிடப்பட்டது. நாணய உலோகங்களை எடைபோட மிகவும் பொதுவாகப் பயன்பட்ட எடையளவுகள் செக்கேலும் (ஏறக்குறைய 11.4 கிராம்), தாலந்தும் (ஏறக்குறைய 34.27 கிலோ கிராம்) ஆகும். நாணய உலோகத்தின் அறியப்படாத அளவுகள் பல இடங்களில் குறிக்கப்படுகின்றன (ஆதி 33:9; யோசு 24:32; யோபு 42:11).

ஆகா 1:6 காசுகள் பயன்படுதலைக் குறிக்கலாம். நெகே 5:15; 10:32-இல் வரும் செக்கேல் பழைய செக்கேல் எடையுள்ள பாரசீகக் காசாக இருக்கலாம். திரக்மா, தாரிக்கு என்ற அளவைகளும் பயன் பட்டுள்ளன (1 நாள் 29:7; எஸ் 2:69; 8:27; நெகே 7:70-72). 8.4 கிராம் எடையுள்ள பாரசீகத் தாரிக்கு கி.மு. 515-இல் முதலாம் தாரியுவால் அச்சடிக்கப்பட்டது.

### III. புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டுக்கு மாறாக, புதிய ஏற்பாட்டில் காசுகள் அடிக்கடி குறிக்கப்படுகின்றன. கிரேக்க உரோமை உலகின் அடிப்படையான நாணய அளவைகள் கிரேக்கத் திராக்மாகவும் (லூக் 15:8-9), அதற்குச் சமமான, உரோமைத் தெனாரியுவும் (மத் 18: 28; 20:2-13; 22:19; மாற் 6:37 இணை; லூக் 7:41; 10:35; திருவெளி 6:6) ஆகும். இவைகளின் எடை 3-4 கிராம் ஆகும். இவை வெள்ளியிலானவை. ஓர் உழைப்பாளியின் ஒரு நாள் கூலிக்குச் சமமானதாகும் (மத் 20:2).

திரக்மாவைவிட அதிக மதிப்புடைய கிரேக்க நாணய அளவைகள் பழங்கால மெசபொத்தாமிய எடைத் திட்டத்திலிருந்து வந்திருக்கலாம். ஒரு கிரேக்கத் தாலந்து (மத் 18:24; 25:15-18) ஏறக்குறைய 6000 திராக்மா மதிப்புடையதாகும். தாலந்து நாணய அளவையானாலும் அவ்வளவு உயர்மதிப்புடைய காசு ஒருபோதும் அச்சடிக் கப்படவில்லை. ஒரு "மினா" (லூக் 19:13-15) 100 திராக்மா மதிப்புடையதாகும். ஒரு செக்கேல் அல்லது தெத்திராக்மா (மத் 17:27) நான்கு திராக்மாக்களுக்குச் சமமானதாகும். திதிராக்மா (2 திரக்மா) புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அச்சடிக்கப்பட்ட காசன்று; ஆனால், யூதர்கள் செலுத்திய வருடாந்திர ஆலய வரியைக் குறிக்கும் சொல்லாகும் (மத் 17:24: காண்க. 30:13; 38:26). மத் 10:9-இல் வரும் "பொன்" உரோமையரின் பொற்காசாக இருக்கலாம். இது 25 தெனாரியு மதிப்புடையது.

செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களிலும் சிறிய மதிப்புடைய காசுகள் அச்சடிக்கப்பட்டன. இவற்றில் உரோமை அஸ் அல்லது அசாரியோன் (மத் 10:29) 1/16 தெனாரியு மதிப்புடையது; உரோமைக் குவாத்ரன் (மத் 5:26; மாற் 12:42) 1/4 அசாரியோன் மதிப்புடையது. "லெப்தோன்" (மாற் 12:42 இணை; லூக் 12:59) செம்பால் செய்யப்பட்டது; 1/2 குவாத்ரன் மதிப்புடையதாகும்.

இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாசுக்கு அளிக்கப்பட்ட 30 வெள்ளிக் காசுகளின் (மத் 26:15; 27:3-6) மதிப்பு குறிக்கப்படவில்லை. யாத் 21:32-இன் அடிப்படையில் மதிப்பிடப்பட்டால், இக்காசுகள் ஆலயக் கருவூலத்தில் பயன்பட்ட தீரியச் செக்கேல் ஆகும் (மத் 22:19; யோவா 2:15).

### IV. யூதக் காசுகள்

பேரரசு அதிகாரிகள், அவர்கள் பாரசீகர்கள், கிரேக்க மாசிதோனியர்கள் அல்லது உரோமையர்களாகவே இருந்தாலும், நாணய உரிமைகளைக் கவனமாகக் கட்டுப்படுத்தினர். யூதேயாவின் முதல் காசு-யூதக்காசு அன்று; கிரேக்க முறையில் செய்யப்பட்ட, யூதேயாவாகிய பாரசீக மாகாணத்தின் வெள்ளிக்காசாகும். யூதர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஏழாம் அந்தியோக்கு சிதேத்து என்ற செலூக்கியப் பேரரசன் நாணய உரிமையை அசமோனியப்

பெரிய குருவான சீமோனுக்கு அளித்தார் (1 மக் 15:6; கி.மு. 139). ஆனால், பிற்பாடு தனது வாக்குறுதியை அந்தியோக்கு மறுத்துவிட்டார். ஆகவே, ஒரு வேளை சீமோன் காசுகளை அச்சடிக்க வில்லை எனலாம். அவருக்குப்பின் வந்த முதலாம் யோவான் இரிக்கானு, செலூக்கியப் பேரரசு பலவீனமாய் இருந்த காலத்தில் கி.மு. 111-110-ஐ ஒட்டி முதலாவது யூதக் காசுகளை அச்சடிக்கத் தொடங்கினார். இவை வெள்ளிக் காசுகள் அல்ல; சிறிய வெண்கலக் காசுகளாகும். இத்தகைய காசுகளை, அசமோனிய மற்றும் ஏரோதியப் பாரம்பரியத்தைச் சேர்ந்த யூத ஆட்சியாளர்கள், தொடர்ந்து அச்சடித்து வந்தனர். யூதேயா உரோமை ஆளுநரின் நேரடி ஆட்சிக்கு வந்தபின் பேரரசரின் பெயர், ஆட்சி ஆண்டு ஆகியவை கொண்ட இத்தகைய காசுகளை ஆளுநர்களே அச்சடித்து வெளியிட்டனர். கி.பி. 60-70 மற்றும் 132-135-இல் நடந்த கிளர்ச்சிகளின் காலத்தில் வெளியிடப்பட்ட யூத அரசுகளின் வெள்ளிக்காசுகள் கிளர்ச்சியின் முக்கிய அறிவிப்பாக இருந்தன.

**நாணயம் மாற்றுவோர் (MONEY CHANGERS)**

இன்றைய வங்கிப் பணியாளர்கள் செய்வதைப்போன்ற சில பணிகளைச் செய்து வந்தவர்கள்தாம் அன்றைய நாணயம் மாற்றுவோர். அவர்கள் பல நாட்டு அல்லது பிராந்தியங்களின் பணத்தை மாற்றிக்கொடுக்கும் பணியையும் செய்தனர். இத்தகைய பணிகளுக்காகச் சிறிய அளவிலான கட்டணத்தைப் பெற்று வந்தார்கள்.

இஸ்ராயேல் மக்களில் இருபதும் அதற்கு மேற்பட்ட வயதும் அடைந்த ஒவ்வொருவரும் அரைச்செக்கேல் செலுத்த வேண்டுமென்ற சட்டம் இருந்தது (யாத் 30:11தொ). இது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தீரியன் வெள்ளி நாணயத்தால் கட்டப்பட வேண்டும். எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இக்கடமையைச் சரியாக நிறைவேற்ற நாணயம் மாற்றுபவர்களின் உதவி அவசியமாகத் தேவைப்பட்டது. மிஸ்னாவின்படி, பாஸ்கா் விழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே இந்தப் பணியாளர்கள் மாகாணங்களுக்குச் சென்று இந்த நாணயம் மாற்றும் வேலையைத் தொடங்குவர். பத்து நாட்களுக்குப் பிறகு வெளி நாடுகளிலிருந்து திருப்பயணிகள் அதிக எண்ணிக்கையில் வர ஆரம்பித்துவிடுவதால் இந்த நாணயம் மாற்றுபவர்கள் தங்கள் பணியைக் கோவில் மன்றங்களுக்கு மாற்றுவர்.

இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்த பின்னர் முதல் வேலையாக கோவிலைத் தூய்மை செய்தார். நாணயம் மாற்றுபவர்களையும் விரட்டினார் (மத் 21:12தொ; மாற் 11:15தொ; லூக் 19:45தொ; யோவா 2:13தொ). விலங்குகளையும், பறவைகளையும் வியாபாரம் செய்தவர்களை வெளியே விரட்டினார். எரே 7:11-ஐச் சுட்டிக்காட்டி ஆண்டவனின் ஆலயம் கள்வர்களின் குகையாகி விட்டதாகக் குற்றம் சாட்டினார்.

கோவிலிலிருந்த நாணய மாற்றுபவர்கள் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட்டுவந்தாலும், இந்நிகழ்ச்சியின் உண்மைப் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. இயேசு, தமக்கும் பேதுருவுக்கும் உரிய அரைச் செக்கேல் வரியைச் செலுத்தினார் (மத் 17:24தொ); குணமடைந்த தொழுநோயாளியைக் காணிக்கை செலுத்தக் கட்டளையிட்டார் (மத் 8:4; மாற் 1:44; லூக் 5:14). ஆகவே, ஆலயத்தையும் அதன் பலிகளையும் பேணுவதை இயேசு எதிர்க்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததால் கோவில் வழியாக எந்தப்பொருளையும் எடுத்துச் செல்வதைத் தடுத்தார் (மாற் 11:16). இது பரிசேயர்களின் சட்டத்துடன் ஒத்ததாகியது. ஏனென்றால் அவர்களின் சட்டப்படி, ஆலயப் பகுதிகளைக் குறுக்குவழியாக மாற்றுவது தடைசெய்யப்பட்டது. கடவுளை வழிபடுவதற்குத் தேவையான பொருட்களை எளிதில் பெறும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த வியாபார அமைப்புகளை இயேசு ஏன் விரட்டினார் என்ற கேள்வி எழுவதுண்டு.

இதற்கு முக்கியக் காரணம், நாணயம் மாற்றுவோரும் மற்றவர்களும் அநியாயமாக பணம் வசூலித்ததுதான். இன்றைய யூத ஆதாரக் குறிப்புகள் இக்கருத்தை நேரடியாக ஏற்க மறுக்கின்றன. ஒரு வல்லுநரின் கருத்துப்படி, இவர்கள் பெற்ற அதிகமான இலாபத்தைத் தாங்களே வைத்துக்கொண்டார்கள் எனத் தெரிகிறது. மற்றவர்கள், இவர்களின் வருமானம் பொது நலனுக்காகச் செலவிடப்பட்டதாகக் கருத்து தெரிவிக்கின்றனர்.

பலியிடுவதற்கான புறாக்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. ஒரு முறை இதன் விலை மிக அதிகமாகச் சென்றபோது, அப்போது தலைமையிடத்தைப் பெற்றிருந்த சிமியோன் (கமாலியேலின் மகன்), சட்டத்தை மாற்றிச் சட்டப்படியான பலிகளின் எண்ணிக்கையைக் குறைத்தார். அதனால் புறாக்களின் விலையும் குறைந்தது.

இயேசு செய்த சீர்திருத்தச் செயலிலிருந்து, தீய குருக்களின்பால் அன்றைய மக்களின் நிலையையும் பரிசேயர்களின் நிலையையும் அறிகிறோம். அன்றைய உரோமை ஆட்சியாளர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து இவர்கள் பதவி பெற்றனர். மக்கள் வெறுப்படைந்த நிலையில் வாழ்ந்தனர். நாணயம் மாற்றுபவர்கள் மிக அதிக அளவில் வரி விதித்து வசூல் செய்த காரணத்தால்தான் இயேசு கோபத்துடன் இத்தகையோரை அடித்து விரட்டினார் எனலாம்.

இத்தகைய தீய பழக்கத்திற்கு எதிராக இயேசு சினம் கொண்டார் என்று கருத வேண்டியதில்லை. "கள்வர் குகை" (மத் 21:13; காண். எரே 7:11) என்ற சொற்றொடரால் அது குற்றங்கள் நடந்த இடம் என்று பொருள் கொள்ளவில்லை. மாறாக, அவ்விடம் குற்றம் புரிவோருக்கு ஓர் அடைக்கல இடமாக மாறிவிட்டது என்று கூறுகிறார். இதைவிட, புறவினத்தாரின் முற்றத்தில் இந்த வியாபாரத் தொழிலைச் செய்ததன் வாயிலாக, ஆலயத்தில் இஸ்ராயேலின் கடவுளுக்குப் புறவினத்தார் செய்த வழிபாட்டைத் தடைசெய்தனர். ஆகவே அதை எதிர்க்கிறார் இயேசு.

**நாணல் (REED, RUSH)**

பாலஸ்தீனத்தில் பலவகையான உயரமான புற்கள் வளர்கின்றன. சாக்கடலில் கலக்கும் நீரோடைகளின் ஓரங்களிலும், யோர்தான் பள்ளத்தாக்கிலும், "கூலே" ஏரிப்பகுதிகளிலும் இத்தகைய நாணல்கள் ஏறக்குறைய 15-20 அடி உயரம் கூட வளர்கின்றன. இத்தகைய நாணல்களில் கனமானவை, நடந்து செல்வதற்குப் பயன்படும் ஊன்றுகோல்களாகப் பயன்பட்டன (2 அர 18:21; எசா 36:6 எசே 29:6). இத்தகைய தண்டுகள் அளவுகோல்களாகவும் பயன்பட்டன (எசே 40:3.5; திருவெளி 11:1; 21:5). நாணல் பலவீனத்தின், குறிப்பாக ஏமாறச்செய்கிற பலவீனத்தின், அடையாளமாக உருவகப்படுத்தப்படுகிறது. காற்றுக்குக்கூட வளைந்து கொடுக்கும் தன்மைக்கும் இஃது உதாரணமாகக் கூறப்படுகிறது (மத் 11:7; லூக் 7:24); நீரில் அசையக்கூடியதெனவும் கூறப்படுகிறது (1 அர 14:15). யாவேயின் ஊழியன் வளைந்த நாணலை முறியார் (எசா 42:3). நாணலை ஊன்று கோலாகப் பயன்படுத்தும்போது, எளிதில் ஒடிந்துவிடும்; அவ்வாறு ஒடியும் பொழுது அதன்பிசிறுகள் கைகளில் குத்தும். அத்தகையதே எகிப்தியர் யூதாவுக்குச் செய்யும் உதவி (2 அர 18:21; எசா 36:6; எசே 29:6-7).

**நாணற்படகு (SKIFF)**

இஃது ஒருவகையான படகாகும்; வேகமாகப் போகக்கூடியது. யோபு தம் வாழ்நாள்கள் நாணற்படகு போல விரைந்தோடுகின்றன என்று புலம்புகின்றார் (யோபு 9:26).

**நாதபாத்து (NADABATH)**

யோனத்தானும் சீமோன் மக்கபேயுவும் தம் சகோதரர் யோவானைப் பிடித்துத் தூக்கிவிட்ட நபத்தேய இனத்தைச்சேர்ந்த யாம்பிரியின் மக்கள், நாதபாத்திலிருந்து மேதபா வரை திருமண

ஊர்வலமாக வருவதைக் கேள்விப்பட்டு, வரும் வழியில் பதுங்கியிருந்து யாம்பிரியின் கூட்டத்தைத் தாக்கினர். இந்த நாதபாத்து மேதபாவுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எத்தெயிமாக அல்லது மேதபாவுக்கு வடமேற்கிலுள்ள இக்கால ஏன்–நெபா (பழங்கால நெபோ) ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**நாதாபு (NADAB)** – (யாவே) தாராள முள்ளவர்)

1. ஆரோனின் நான்கு பிள்ளைகளுள் மூத்தவர். இவரும் இரண்டாவது மகன் அபிகூவும் எப்பொழுதும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றனர் (யாத் 6:23; எண் 3:2; 1 நாள் 6:3).

இவர் மோசே, ஆரோன், அபிகூ மற்றும் இஸ்ராயேலின் எழுபது பெரியோர்களுடன் சீனாய் மலையில் உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் சடங்கில் பங்கேற்றார் (யாத் 24:1.9தொ). மேலும் இவர் குருத்துவ ஊழியமும் புரிந்தார் (யாத் 28:1). நாதாபும், அபிகூவும் தங்களுக்குக் கட்டளை இட்டிருந்ததை மீறி ஆண்டவர் திருமுன் வேற்று நெருப்பைச் சமர்ப்பித்தனர் (லேவி 10:1; எண் 3:4). உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்புப் புறப்பட்டு அவர்களை எரித்தது. அவர்கள் ஆண்டவர் முன்னிலையிலேயே இறந்தனர் (லேவி 10:1–7; எண் 26:61). இவர்களின் குற்றத்தின் தன்மை தெளிவாக இல்லை. தூபம் அளித்தமுறை குற்றமுடையதாக இருக்கலாம் (லேவி 10:1.9). இருவரும் வாரிசு இன்றி இறந்தனர் (எண் 3:4).

2. இஸ்ராயேலின் அரசனான நாதாபு அரசனாகி ஈராண்டுகள் அதை ஆண்டார் (கி.மு. 901-900). முதலாம் எரோபவாமின் மகனும் வாரிசும் ஆவார் (1 அரசர் 15:25). அதன்பின் அகியாவின்மகன் பாசாவால் கொலை செய்யப்பட்டார்.

அப்போது நாதாபு தாணைச் சேர்ந்த பெலிஸ்தியரின். நகரமான கிபத்தோனை முற்றுகையிட்டிருந்தார் (1 அர 15:27–29). பாசா ஆட்சிக்கு வந்தபின் எரோபவாமின் வீட்டைச் சேர்ந்த யாவரையும் கொன்று அகியாவின் இறைவாக்கை நிறை வேற்றினார் (1 அர 14:20; 15:25–32; காண்க. 14:1-16).

3. யூதா குலத்தில், எரகுமவேல் வழிவந்த எட்சரோன் குடும்பத்தில் பிறந்தவர். யூதாவின் மருமகள் தாமாரின் வழித்தோன்றல். செலேது, அப்பயிம் ஆகியோரின் தந்தை (1 நாள் 2:28.30).

4. பென்யமின் குலத்தினரான இவர் எயியேல் (2), மாக்கா என்பவர்களின் புதல்வராவர். இவரது சகோதரன் கீசு, சவுலின் தந்தையாவார் (1 நாள் 8:30; 9:36).

5. தோபியா தன் மணப்பெண் சாராளோடு வந்த போது, அவர்தம் உறவினரான அகிக்காரும் நாதாபும் அவர் பொருட்டு மகிழ்வுற்று, கடவுள் அவருக்குச் செய்திருந்த எல்லா நன்மைகளுக்காகவும் அவரை வாழ்த்தினர். அவர்கள் அனைவரும் ஏழுநாள்வரை விருந்துண்டு மகிழ்ச்சிகொண்டாடினர் (தோபி 11:19–20).

சில வாசகங்களில் தோபி 14–இல் அகிக்கார் நாதாபு பற்றிய குறிப்பு வருகின்றது. முன் குறிக்கப்பட்ட நாதாபு– இந்த நாதாபுவாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர் (14:10–11).

**நாத்தான் ( NATHAN** – கொடை)

1. தாவீது வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இறைவாக்கினரே– நாத்தான். இவர் தாவீதின் அரசவையில் மூன்றுமுறை தோன்றுகிறார். முதல்முறை– தாவீது தமது மாளிகையைக் கட்டிமுடித்தபின் இறைவனுக்கோர் ஆலயம் எழுப்பலாமென்ற எண்ணத்துடன் கேட்டபோது, முதலில் ஆதரித்த நாத்தான், பின்னர்க் கட்ட வேண்டாமென்று கூறினார். ஆனால், தாவீதின் அரசமரபு நிறுவப்படுவதைப்பற்றி உறுதி அளிக்கிறார். (2 சாமு 7:1-17).

தாவீது இத்தியான உரியாவின் மனைவி பத்சேபாவுடன் உடலுறவு கொண்டு பாவம் செய்ததுமல்லாமல் உரியாவைப் போர்க்களத்தில் கொல்லச் செய்தபோது, ஒரு பெரிய பணக்காரன்

ஏழை ஒருவனின் ஆட்டைக் கவர்ந்த கற்பனைக் கதையை எடுத்துக்கூறி, அத்தகையவள் சாகவே சாவாள் எனக்கூறிய தாவீதுக்கு, 'அம்மனிதன் நீதான்,' என மனத்துணிவோடு சுட்டிக்காட்டியவர் நாத்தான் (2 சாமு 12:1-15).

தாவீதையடுத்து அவரது அரியணையில் சாலமோன் அமர, சாலமோனின் தாய் பத்சேபாவோடு அதில் ஈடுபட்டு முக்கியப் பங்கு வகித்தவர் நாத்தான் (2 சாமு 12:25). வயதான நோயுற்ற தாவீதிடம் சென்று, தனது மகன் சாலமோனே அரியணை ஏறவேண்டுமெனப் பத்சேபாவைக் கேட்கச் செய்து, தாமும் அதனை உறுதி செய்து அன்றே சாலமோனை அரசனாக அபிடேகம் செய்யச் செய்தார் (1 அர 1:5-48).

நாத்தான், தாவீதின் செயல்கள் பற்றியும் (1 நாள் 29:29), சாமோனின் நடவடிக்கைகள் பற்றியும் (2 நாள் 9:29). நாட்குறிப்பு எழுதியதாகவும், ஆலய வழிபாட்டுக்கான இசைவளர்ச்சியில் இவர் முக்கிய பங்கு வகித்தார் எனவும், நாளாகமம் கருதுகிறது (29:25).

நாத்தான் அரசவை இறைவாக்கினரெனத் தெரிகிறது. இவர் தாவீதின் வம்சத்தின்மேல் ஆர்வம் கொண்டிருந்ததால் இவர் அரசனைக் கண்டித்துத் திருத்தியது வரலாற்று உண்மையாகுமா எனச் சிலர் சந்தேகிக்கின்றனர். ஆனால் அரசவையில் இருக்கும் இறைவாக்கினரெல்லாம் அரசர்களின் அடிமையென்பது சரியன்று.

2. தாவீதின் முப்பது வலிமை வாய்ந்த மனிதர்களுள் ஒருவரான சோபாவைச் சேர்ந்த இகாலின் தந்தை நாத்தான் (2 சாமு 23:36). நாளாகமம் காட்டும் அட்டவணையில் மிகச்சிறந்த வீரர்களின் வரிசையில் உள்ள (1 நாள் 11:38) யோவேலின் சகோதரர் நாத்தான்.

3. சாலமோனின், அலுவலர்களுக்குத் தலைவனாய் இருந்த அசாரியாவும், அரசனின் நண்பனும் குருவுமாய் இருந்த சாபூதுவும் 'நாத்தானின்' புதல்வர்களே (1 அர 4:5). இவர் 1 அல்லது 5-இல் கூறப்பட்டவர்களுள் ஒருவராகவும் இருக்கலாம்.

4. முதுபெரும் தந்தையாகிய யூதாவின் வழிவந்த எரகுமவேலின் வகுப்பைச் சேர்ந்த சாபாதுவின் தந்தையும் அத்தாயின் மகனும் ஆவார் (1 நாள் 2:36). இவர் 1-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

5. தாவீதின் மூன்றாவது மகனான இவர் எருசலேமில் பிறந்தார் (2 சாமு 5:14; 1 நாள் 14:4). இவரது தாய் பாத்சூவா (பத்சேபா) என்பதால் இவர் சாலமோனின் மூத்த சகோதரராகிறார் (1 நாள் 3:5). தாவீதின் குடும்பத்தின் ஒரு கிளையாக இவரின் வழித்தோன்றல்கள் இருப்பதால் 'ஆண்டவரது நாளில்' அவர்களோடு இவர்களும் தோன்றுவர் என, செக்கரியா நூலின் காட்சியில் (செக் 12:12) குறிப்பிடப்படுகின்றனர். இயேசுவின் தலைமுறை அட்டவணையைக் குறிப்பிடும்போது இம்மகனின் வழியாகவும் அவரது மூதாதையர்கள் பற்றி அறியப்படுகிறது (லூக் 3:31).

6. பாபிலோனிலிருந்து திரும்பிவந்த தலைவர்களுள் ஒருவர் ஆவார். எஸ்ரா, கசிப்பியாவில் உள்ள இத்தோ என்பவருக்கு ஆலயத்தில் பணி செய்வதற்கான ஊழியர்களை அனுப்புமாறு இவர்களிடம் சொல்லி அனுப்பினார் (எஸ் 8:16). தமது மனைவி அன்னிய நாட்டவள் என்பதால் அவளை விலக்கி வைப்பேன் என உறுதி கூறியவரும் பின்னூயின் (பானி) மகனுமான நாத்தான் இவர்தாம் எனவும் கருதப்படுகிறது (எஸ் 10:39).

**நாத்தான் - மெலக்கு (NATHAN - MELECH - அரசன் அளித்தார்)**

யோசியா அரசனின்கீழ் அண்ணகனாக இருந்த 'நாத்தான் மெலக்கு' வீட்டையடுத்து யூதாவின் அரசர்கள் சூரிய வழிபாட்டுக்கென எழுப்பியிருந்த குதிரைச் சிலைகளை யோசியா அப்புறப்படுத்தினார் (2 அர 23:11). இந்தப் பட்டம் உயர்நிலை ஊழியரையும் (2 அர 25:14), கீழ்நிலை ஊழியரையும் (1 அர 22:9) குறிப்பதாக அமையும். இஃது அசீரிய, பாபிலோனிய

வழக்கோடு ஒத்துப்போகிறது (காண்க. 2 அர 18:17; இரபிசாரி (முக்கிய அண்ணகர்).

**நாத்திகர், இறைப் பற்றற்றவர் (GODLESSMAN)**

**I.** பல்வேறுபட்ட எபிரேய மற்றும் கிரேக்கச் சொற்றொடர்களால் விவிலியமானது, பக்தி மனப்பான்மைக்கு முரண்பட்ட ஓர் ஆன்மீக மனப்பான்மையை விவரிக்கிறது. இஃது இறைவன் மற்றும் அவரது சட்டத்தின்பால் காட்டும் வெறுப்புடன் பகைமை மற்றும் வீம்புப்பேச்சு ஆகியவற்றின் நுட்பவேறுபாட்டையும் சேர்க்கின்றது. பக்தியற்ற அக்கிரமியின் வருகையைப்பற்றிப் பவுல் உரைக்கின்றார். அவன் இறுதி நாட்களில் "எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்தி, தன்னைக் கடவுளெனக் காட்டிக் கொள்வான்" (2 தெச 2:3-4.8). இறைப் பற்றின்மை அல்லது அக்கிரமத்தின் மறை பொருளானது ஏற்கெனவே உலகில் செயல்பட்டு வருகிறது என்பதையும் அவர் கூறுகிறார் (2:7). உண்மையில் ஆதாம் இறைவனின் கட்டளையை மீறிய வரலாற்றின் தொடக்கம் முதல் அது செயல்பட்டு வருகின்றது (ஆதி 3:5.22).

**II.** பழைய ஏற்பாடு;

1. **இறைவனின் முன்னிலையில் பக்தியற்ற மனிதர்:** பக்தியின்மையானது பாவம் நிறைந்த சமுதாயத்தில் உலகளாவிய உண்மையாகும். பெருவெள்ளக் காலத்திய தலைமுறையின் இறைப்பற்றின்மை (ஆதி 6:11; காண்க: யோபு 22:15-17), பாபேல் கோபுரத்தைக் கட்டியோரின் இறைப்பற்றின்மை (ஆதி 11:4), சோதோமில் குடியிருந்தோரின் இறைப்பற்றின்மை(ஞான 10:6) முதலியன இத்தகையன. ஆனால், இஸ்ராயேலின் பகைவர்களாய் இருந்த புறவினத்தாரின் இடையில் அது தன்னையே தனிப்பட்ட தெளிவுடன் உறுதிப்படுத்துகிறது. சான்றாக, கொடுமைப்படுத்தும் பார்வோன் (காண்க: ஞான 10:20; 11:9), கானானியச் சிலைவழிபாட்டினர் (ஞான 12:9), இறைவனைப் பழிக்கும் சனகெரிபு (எசா 37:17), அகந்தை மிக்க பாபிலோன் (எசா 13:11; 14:4) மற்றும் கொடுமைப்படுத்தும் அந்தியோக்கு எப்பிபான் (2 மக் 7:34). ஆயினும், பாலைவனத்தில் கிளர்ச்சி (சங் 106:13-33), வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவர்களது பிரமாணிக்கமற்ற நிலை (சங் 106:34-40) முதலியவற்றில் காண்பதுபோல இறைமக்களும் பக்தியின்மையினின்று விலக்கப்பட்டவர்களாக இல்லை. உண்மையில் இறைவன் இந்தப் பக்தியற்ற, பாவம் நிறைந்த இனத்தைத் தண்டிக்க, புறவினத்தாரை அனுப்புகிறார் (எசா 10:6; காண்க. 1:4). நாடு தழுவிய மனமாற்றத்திற்குப் பின்னும், நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் சங்கீத ஆசிரியர்களும் ஞானிகளும் விசுவாசிகளிடையில் இறைப்பற்றின்மையின் பிரசன்னத்தைக் கண்டனம் செங்கின்றனர். மக்கபேயரின் பிரச்சனையானது சரியான வழியினின்று விலகியுள்ள சில குறிப்பிட்ட யூதரை நோக்கிக் கவனத்தைத் திருப்பும் (1 மக் 2:23; 3:15; 6:21)

2. **பக்தியற்றோரும் நீதிமான்களும்:** ஞான இலக்கியங்களில் மனித இனமானது- பக்தியற்றோர் முட்டாள்களுக்கு முரண்பட்ட நீதிமான்கள் மற்றும் ஞானிகள் என்ற இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. இவ்விரண்டிற்கும் இடையில் விரோதம் மற்றும் சகோதரத்துவப் போர் உள்ளன. இவை இவ்விரு குழுக்களிடையே வேறுபட்ட செயல்களைப்பற்றிய வரைபடத்தை ஏற்கெனவே அளிக்கின்றது. காயின் மற்றும் ஆபேலில் தொடங்கிய இப்போரானது (ஆதி 4:8...), எல்லாக் காலங்களுக்கும் பரவுகிறது. இறைப்பற்றற்ற மனிதன், தந்திரம், வன்முறை, சிற்றின்பம், பெருமை முதலிய தனது இயல்புணர்வுகளுக்கு விருப்பம்போல் தன்னை ஆட்டிப்படைக்க அதிகாரத்தை அளிக்கிறான் (சங் 36:2-5; ஞான 2:6-10). அவன் இறைவனைப் பழிக்கிறான் (சங் 10:6-4; 14:1). நீதிமான்கள் மற்றும் ஏழைகள் மீது அவன் அதிகாரம் செலுத்துகிறான் (சங் 10:6-11;

17:9-12; ஞான 2:10-20). சில நேரங்களில் நீடித்ததாகவும், சமய மக்களுக்கான உண்மையான வேதனையின் ஊற்றாகவும் இருக்கக்கூடிய வெளிப்படையான வெற்றியை அவன் கொண்டுள்ளான் (சங் 94:1-6; யோபு 21:7-13). நீதியின் மீதான அக்கறையினால் துன்புறுத்தப்பட்டோர் முதலில், தவறாக வழிநடத்தப்பட்ட இந்தத் தீய மக்களின் அழிவை இறைவனிடம் கேட்கின்றனர் (சங் 10:12-18; 31:18-19; 109:6.). மேலும், நம்மை ஆச்சரியப்படுத்தக் கூடிய முறையில் தீயவர்கள் பழிவாங்கப் படுதலில் அவர்கள் முன்னதாகவே மகிழ்ச்சி கொள்கின்றனர் (சங் 58:11).

3. இறைப் பற்றற்றோரின் **செயல்வினைப் பயன்:** இறைப் பற்றற்றோர் அழிவை நோக்கிச் செல்கின்றனர் என்பதை உடன் படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருந்தோர் நன்கு அறிந்திருந்தனர் (காண்க: சங் 1:4-6; 34:22; 37:9-10.12-17.20). ஆனால், இன்னும் தற்காலிக அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள தண்டனை பற்றிய இந்த அமைதியான கூற்று சில இடறல் உண்டாக்கும் உண்மைகளுடன் மோதுகிறது. எவ்வித இறைத்தண்டனையும் இல்லாதது போன்று (திருவுரை 7:15; 8:10-14), செழிப்படையும் சில இறைப் பற்றற்ற மனிதரும் உள்ளனர் (எரே 12:1-2; யோபு 21:7-16; சங் 73:2-12). நாத்திகனை மெசியா அரசர் அழிப்பதை இறுதிநாட்கள் காணும் என்னும் உறுதி மொழியினை இறைவாக்கு இறுதிக்கால இயல் அளிக்கின்றது (எசா 11:4; சங் 72:3). தீர்ப்பின் காலத்தில் இறைவன் அவர்களை அழித்தொழிப்பார் (எசா 24:113; 25:1-2). ஆனால், அஃது இந்த இறுதிநாளை நோக்கியிருக்கும் வேளையில் கொடியவர்கள் தங்களுடைய குற்றங்களுக்கு எப்படிப் பரிகாரம் செய்ய வேண்டும் என்பதைத் துல்லியமாக விளக்குவதில்லை.

ஆயினும், இப்பிரச்சனை அனைவருக்கும் தனிப்பட்ட அளவில் தீர்க்கப்பெறும். அதற்கான ஒரு விடைகாண நாம் ஒரு பிற்காலத்திற்கெனக் காத்திருக்க வேண்டும். மக்கபேயர் நூல்களில், நாத்திகர் அனைவரும் இறைவனுடைய நீதியிருக்கையின் முன் தனிப்பட்ட விதத்தில் தோன்றுவர் (2 மக் 7:34-35), மற்றும் வாழ்விற்கான உயிர்ப்பு அவர்களுக்கு இருக்காது என்பதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம் (2 மக் 7:14; தானி 12:2). எனவே, மரணத்திற்குப் பிற்பட்ட அவர்களது இறுதித் தண்டனையின் வடிவத்தை ஞானாகமமானது சித்தரிக்கிறது (ஞான 3:10-12; 4:3-6; 5:7-14). இந்த வீறார்ந்த சான்று நலந்தரும் சிந்தனையின் ஊற்றாக உள்ளது. உண்மையில், நாத்திகர்கள் சாக வேண்டுமென்பது இறைவனுடைய விருப்பமன்று; மாறாக, மனம்மாறி வாழவேண்டுமென அவர் விரும்புகிறார் (எசே 33:11; 18:20-27; 33:8-19). புதிய ஏற்பாட்டில் அதனையொத்த இரக்கமிக்க நோக்குக் காணப்படும்.

III. புதிய ஏற்பாடு:

1. **உண்மையான பக்தியின்மை:** புதிய ஏற்பாட்டின் கிரேக்கச் சொற்றொடரில் பழைய ஏற்பாட்டினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட ஆன்மீக மனப்பான்மையானது, மிகத்துல்லியமான முறையில் சுட்டிக் காட்டப்படுகிறது. அஃது இறைப்பற்றின்மை, அநீதி மற்றும் சட்டத்தை நிராகரித்தல் முதலியனவாகும். ஆனாலும், இயேசுவிற்கும் பரிசேயருக்கும் இடையிலான விவாதங்கள் முழுவதிலும், இறைவன்பால் காட்டப்படும் ஏளனத்தினுடைய இரு கருத்துக்கள் சந்திக்கின்றன. பரிசேயரைப் பொறுத்தமட்டில் பக்தியின் உரைகல் சட்டம் கூறுபவைகளையும் அதைச் சார்ந்த பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதேயாகும். இதனைப்பற்றிய அறியாமையானது ஏற்கெனவே இறைப்பற்றின்மையாகக் கருதப்பட்டது (யோவா 7:49). எனவே, இயேசு பாவிகளுடன் உண்பதிலும் (மத் 9:11), அவர்களது நண்பராக இருப்பதிலும் (மத் 11:19), அவர்களுடன் தங்குவதிலும் (லூக் 19:7) தவறாகச் செயல்பட்டார்.

ஆயினும், ஒவ்வொரு மனிதனும் பாவி என்பதையும் தான் பக்தியுள்ளவன், நீதிமான் என எவருமே கூற முடியாது என்பதையும் இயேசு நன்றாகவே அறிந்திருந்தார். அவர் கொணரும் நற்செய்தியானது, மனமாற்றம் மற்றும் மீட்பினுடைய வாய்ப்பைப் பாவிகளுக்கு அளிக்கின்றது (லூக் 5:32). உண்மையான பக்தியின் உரைகல், இந்நற்செய்தியை ஒருவன் ஏற்றுத் தழுவுகின்ற மனப்பான்மையாகும்.

2. மீட்பிற்கு இறைப்பற்றற்றோர் அழைக்கப்படுதல்: "கொடியவர்களின் கரங்களில்" (அ.ப. 2:23) இறந்ததன் மூலம் கிறிஸ்து தனது பலியை நிறைவேற்றிய பின்னும் இப்பிரச்சனையானது அதே விதமாகவே உள்ளது. "நெறிகெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட" அவர் உடன்பட்டாலும் (மாற் 15:28), "அநீதருக்கான நீதிமானாக" அவர் இறந்தார் (1 பேதுரு 3:18). அவரில் கொண்ட விசுவாசத்தினால் நீதிமான்களாக எண்பிக்கப்படுவதற்கென (உரோ 4:5), இறைப்பற்றற்றோருக்காக அவர் இறந்தார் (உரோ 5:6). அருளினால் ஏற்புடையவர்களாக்கப்பட்ட இறைப்பக்தியற்ற வர்களே புதிய ஏற்பாட்டின் நீதிமான்களாவர். நற்செய்தியில் மீட்பிற்கான அழைப்பைப் புரிந்து கொண்டவர்களாய்க் கிறிஸ்துவை நோக்கித் திரும்புவதற்காகத் தங்களது இறைப் பற்றின்மையை அவர்கள் கைவிட்டனர் (தீத் 2:12). இனிமேல் இச்செய்தியை ஏற்க மறுப்பவர்களும், அதைச் சிதைப்பவர்களும் மட்டுமே உண்மையில் பக்தியற்றவர்களாவர். விசுவாசிகளுக்குத் தொந்தரவளிக்கின்ற போலிப் போதகர்கள் (2 திமொ 2:16; யூதா 4:18; 2 பேதுரு 2:1-3; 3:3-4) மற்றும் எதிர்க் கிறிஸ்துவின் பெயருக்குத் தகுதியுடையவர்கள் (1 யோவா 2:22), விரும்பி அறியாமையில் வாழ்கின்ற அக்கறையற்றவர்கள் (2 பேதுரு 3:5; மத் 24:37; லூக் 17:26-30), மேலும் சிறப்பாக, ஆண்டவருக்கு எதிராகக் கடுமையான இறைப்பற்றின்மையைத் தூண்டுகிற, புறவினத் தலைவர்கள் (2 தெச 2:3,8) ஆகியவர்களே உண்மையான பக்தியற்றவர்கள். இறைப் பற்றின்மையின் மறை பொருளுக்கான வெளிப்பாட்டின் பின்னணி இத்தகையதே.

3. இறைப் பற்றற்றோரின் மீதான இறைவனின் கோபம்: பழைய ஏற்பாட்டில் இருந்ததைவிட இறைப்பற்றின்மையின் தண்டனையானது இப்போது உறுதிப்படுத்தப்பட்டதாக உள்ளது. இறைவனுடைய கோபமானது அனைத்து இறைப்பற்றின்மை மற்றும் மனித அநீதி முதலியனவற்றிற்கு எதிராக நிலையான வடிவில் தன்னையே வெளிப்படுத்துகின்றது (உரோ 1:18; 2:8). இறுதிநாட்கள் மற்றும் இறுதித் தீர்ப்பின் முன்னோக்கில் இஃது இன்னும் மேலான உண்மையானதாக உள்ளது. பின்னர், தனது வருகையினுடைய மாட்சிமையின் மூலமாக ஆண்டவர், இறைப் பற்றற்றவர்களை ஒன்று மில்லாமைக்குத் தாழ்த்துவார் (2 தெச 2:8). இறைப் பற்றின்மையின் மறைபொருளில் பங்கேற்கும் அனைவரும் சீர்குலைக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார் (யூதா 15; 2 பேதுரு 2:7). தீயவர்கள் மனம் மாறுவதை அனுமதிப்பதற்கென இறைவன் பொறுமையை உபயோகிப்பதன் காரணமாகத் தண்டனையானது தாமதமாக வருகின்றது (2 பேதுரு 2:9).

**நாபால் (NABAL - முட்டாள், அறிவிலி)**

காலேபு குலத்தினனான நாபால், பெரும் செல்வந்தன்; பல கால்நடைகளுக்குச் சொந்தக்காரன். அவன் மனைவி அபிகாயில் விவேகமுள்ளவள். நாபாலின் கால் நடையைப் பராமரித்தற்கான கூலியைத் தாவீது கேட்க, நாபால் தர மறுத்தான். இதனால், தாவீது கோபம் கொண்டு நாபாலைத் தாக்கவரும் வேளையில் நாபாலின் மனைவி அபிகாயில் தாவீதுக்கு வேண்டிய பொருட்களைத் தந்து நாபாலை ஏதும் செய்ய வேண்டாமென மன்றாடுகிறாள். தாவீது நாபாலைப் பொருட்படுத்த வேண்டாம்; ஏனெனில், அவன் தன் பெயருக்கேற்ப அறிவிலி என்றும் கூறுகிறாள் (1 சாமு 25:25). நாபால் இறந்தபின்

தாவீது அபிகாயிலைத் தன் மனைவியாக ஆக்கிக்கொண்டார் (1 சாமு 27:3; 30:5; 2 சாமு 2:2; 3:3).

**நாபிசு (NAPHISH – இன்பம்)**

இவர் இசுமாயேலின் பன்னிரு புதல்வர்களில் பதினோராவது மகன் ஆவார் (ஆதி 25:15; 1 நாள் 1:31). இவரது வழித்தோன்றல்கள்தான் வடமேற்கு அராபியாவில் வாழ்ந்த அராபிய இனத்தவர். இவர்கள் யோர்தானுக்கு அப்பால் குடியேறிய இஸ்ராயேலின் ரூபன், காது இனத்தவர்களால் அடிமைப் படுத்தப்பட்டனர் (1 நாள் 5:19).

**நாபேத்து (NAPHATH – உச்சி, முகடு)**

யோசு 17:11–இல் வரும் ஏன்– தோரிலிருந்து தோர் என்ற இடத்தை வேறுபடுத்திக்காட்ட அதற்கு அளிக்கப்பட்ட அடைமொழியாகும். எபிரேய வாசகம் தெளிவாக இல்லை.

**நாபோத்து (NABOTH – பலன், முளைவிடுதல்)**

இஸ்ரியேலனாகிய நாபேத்துக்கு இஸ்ரியேலில் ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அது சமாரியாவின் அரசன் ஆகாபின் அரண்மனை அருகில்தான் இருந்தது (1 அர 21). ஆகாபு தன் தோட்டத்தை விரிவாக்க நாபோத்தின் இடத்தைத் தனக்குக் கேட்டான். ஆனால், நாபோத்து அத்தோட்டம் தன் முன்னோரின் உடைமையெனக் கூறி, தர மறுத்தான். இதையறிந்த ஆகாபின் மனைவி ஈசபேல் அந்த நிலத்தை வஞ்சகத்தால் கவர நினைத்தாள். எனவே, அவள் நாபோத்து கடவுளையும் அரசனையும் பழித்துரைத்தான் கல்லால் எறிந்து கொல்லும்படியும் அரச முத்திரையோடு மன்றத்திற்குக் கட்டளை பிறப்பித்தாள். நாபோத்தும் அவ்வாறே கொலை செய்யப்பட ஆகாபு அவனுடைய நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போனான் (21:8–16; காண்க. 2 அர 9:26). அந்நேரத்திலே எலியா இறைவாக்கினர் அவன் முன் சென்று அவன் குற்றத்தை எடுத்துரைத்து அவனும் நாபோத்து இறந்த அதே இடத்தில் இறப்பான் என இறைவாக்குரைத்தார். ஆகாபு தன் குற்றத்திற்காக வருந்தி நோன்புகாக்கவே இறைவன் அவன் மீது இரக்கம் கொண்டு அவனை வாழவிட்டார் (1 அர 21:17–24; 2 அர 9:26. 30:37).

**நாப்பத்தோர் (NAPHATH-DOR – தோரின் உச்சி அல்லது முகடு, குன்றுகள்)**

யோப்பாவிலிருந்து வடக்கே செல்லும் பாலஸ்தீனக் கடற்கரைப்பகுதியின் எல்லையாக அமைந்த தாழ்ந்த, குறுகிய குன்றுகள் கொண்ட பகுதியை இது குறிக்கலாம். கோட்டைப் பாதுகாப்புடைய தோர்– இப்பகுதியின் தலைநகராக இருந்திருக்கலாம். நாப்பத்தோரின் அரசனும் சேர்ந்த கானானிய அரசர்களின் கூட்டணியை யோசுவா தோற்கடித்தார் (யோசு 11:2; 12:23). பிற்காலத்தில் இப்பகுதி சாலமோனின் நிர்வாக மாவட்டங்களில் ஒன்றானது (1 அர 4:11).

**நாப்போத்தோர் (NAPHOTH - DOR)**

நாப்பத்தோரின் மற்றொரு பெயர் (யோசு 11:2).

**நாமா (NAAMAH – இன்பமான) – ஆள்**

1. இவள், காயினின் வழிவந்த துபால் காயினின் சகோதரி ஆவாள் (ஆதி 4:22).

2. இவள் சாலமோன் மன்னனின் அம்மோனிய மனைவி. இவள் ரெகபயாமைப் பெற்றெடுத்தாள் (1 அர 14:21; 2 நாள் 12:13).

**நாமா (NAAMAH – இன்பமான) – இடம்**

யூதாவைச் சேர்ந்த செபேலாவில் இலாக்கிசு மாவட்டத்திலுள்ள ஒரு நகர் (யோசு 15:41). இப்பெயர் இக்கால அராக்கு நாமான், தேயிர் நாமான் என்ற பெயர்களில் தங்கிநிற்கிறது. ஆனால், அஃது இருந்திருக்கக்கூடிய இடம் பெத்செமேசுக்கு வடமேற்கில் 7 கி.மீ. தொலைவில் திம்னா (2)வுக்கு அருகிலுள்ள வாடி எஸ் – சரார் (நாகால் சொரேக்கு) கரையிலுள்ள கிர்பெத் பராதுதான் என்று அறிஞர் கருதுவர்.

**நாமாயர், நாமாவியர் (NAAMATHITE)**

வடமேற்கு அரேபியாவில், நாமா அல்லது நாமேயில் வசிப்பவர். பழைய ஏற்பாட்டில்

யோபுவின் நண்பரான சோப்பார் நாமாவியர் தான் எனக் கூறப்பட்டுள்ளார் (யோபு 2:11; 11:1; 20:1; 42:9).

**நாமானியர் (NAAMITES)**

பென்யமின் இனத்தைச் சேர்ந்த ஒரு குலம். இவர்கள் நாமானின் வழித் தோன்றல்கள் ஆவர் (எண் 26:40).

**நாமான் (NAAMAN – இன்பம்)**

**இப்பெயர் உகாரிதிக் (Ugaritic)** தலைமுறை வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. இவர் எகிப்தில் குடியேறியவர்; பென்யமின் குலத்தைச் சார்ந்தவர் (ஆதி 46:21); பேலாவின் மகனும் ஆவார் (1 நாள் 8:3-4.7); நாமானியர்களின் குலப்பெயர்த் தலைவர் (எண் 26:40).

2. சீரியா அரசனின் படைத்தலைவனான நாமான், எலிசா இறைவாக்கினரால் தன் தொழுநோயிலிருந்து குணமாக்கப்பட்டார் (2 அர 5). நாமானின் நாடு தமஸ்கு ஆகும் (2 அர 5:12). அதன் அரசர் இரண்டாம் பெனதாது ஆகவும் இருந்திருக்க வேண்டும் (கி.மு. 850; 8:7). இந்த நிகழ்ச்சியுரையில் வரும் (5:5-8) இஸ்ராயேல அரசனது பெயர் தெரியவில்லை. இக்கதையின் காலத்தைத் துல்லியமாகக் குறிச்சுக முடியாது. நாமான் வருந்திய தொழுநோயின் தன்மை தெரியவில்லை. ஏனெனில், இஸ்ராயேலர் இப்பெயரால் தோல் சார்ந்த பல நோய்களைக் குறிப்பிட்டனர் (லேவி 13:14). நாமானின் தொழுநோய் தொத்து வியாதியாகத் தெரியவில்லை. ஏனெனில் அவரோ அந்நோயால் தண்டிக்கப்பட்ட கேகசியோ சமூகத்திலிருந்து புறம்பாக்கப்படவில்லை (2 அர 5:27; 8:4).

இஸ்ராயேல் நாட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சிறுமிநோய் நீங்க நாமானை இஸ்ராயேல் நாட்டிற்குச் செல்ல வேண்டுகிறாள் (5:2). எலிசா தாம் இறைவனின் இறைவாக்கினர் என்பதை இக்குணப்படுத்துதல் மூலம் எண்பிக்கிறார் (5:8). குணம் பெற்றதும் நாமான் இஸ்ராயேலின் கடவுளே உண்மைக்கடவுள் என அறிக்கையிட்டுப் போற்றுகிறார் (5:15-17). இஸ்ராயேலின் இறைவன் உலகமனைத்திற்கும் கடவுள் என்பது இங்கே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இறைமகன் இயேசு புறவினத்தார்மீது இறைவன் கொண்டுள்ள அன்பை விளக்கும்போது "இறைவாக்கினரான எலிசாவின் காலத்திலே இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர். அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சீரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது" என்று இந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார் (லூக் 4:27).

**"நாம் அறியாத தெய்வத்திற்குப்" பீடம் (ALTAR TO AN UNKNOWN GOD)**

ஏதன்சிலுள்ள அரயோப்பாகுவில் பேசியபோது (அ.ப. 17:22-31) பவுல் பயன்படுத்திய வாசகமாகும். இஃது ஒரு பீடத்தில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். இதைத் தனது பேச்சின் தலைப்பாகப் பயன்படுத்தினர். "நாம் அறியாத தெய்வத்திற்கு" என்று ஒருமையில் உள்ள வாசகச் சான்று எங்கும் காணப்படவில்லை. "நாம் அறியாத தெய்வங்களுக்கு" என்று பன்மையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பவுசானிய என்ற கிரேக்க புவியியல் அறிஞர் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) பாலேரும் துறைமுகத்துக்கும் ஏதன்சு நகருக்குமிடையில் பன்மையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடங்கள் இருந்தமைக்குச் சான்று கூறுகிறார். தியேகெனேசு லெர்தியு, ஏதன்சில் கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கு இத்தகைய பீடங்கள் எழுப்பப்பட்டன என்று கூறுகிறார். ஒருமையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மை, தனது பேச்சின் இறையொருமைக் கோட்பாட்டிற்கு ஏற்றவாறு பவுல்தான் பன்மையிலிருந்து ஒருமைக்கு வாசகத்தை மாற்றியிருக்க வேண்டும்

என்று கருத விளக்கவுரையாளர்களைத் தூண்டியுள்ளது. மூலவாசகம் எப்படியிருந்தாலும், பவுல் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இதுவரை அறியப்படாத "விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் ஆண்டவராகிய" (17:24) கடவுளை ஏதன்சிலுள்ள சமயப்பற்றுள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

"பெயர் தெரியாத கடவுளுக்கு." "உரிய கடவுளுக்கு" அளிக்கப்படும் பலிகள் பற்றிய இலக்கியக் குறிப்புகள் உள்ளன. இவற்றில் எல்லாம் பொருள் ஒன்றே; அதாவது, பெயர் தெரியாத கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவரைப் போற்றுகின்றன. இச்சொற்றொடர் அறிய முடியாத கடவுளைக் குறிக்கவில்லை. ஆனால், பவுல் மூல வாசகத்திற்கு விளக்கம் அளிப்பதில் அக்கறை கொள்ளவில்லை; கிறிஸ்துவில் இறைவெளிப்பாட்டை விளக்குவதற்கு வாசகத்தை மாற்றி அமைக்கிறார்.

**நாய் (DOG)**

இது வீட்டில் வாழும் ஊன் உண்ணும் பாலூட்டி விலங்கு. மோசே சட்டத்தால், தூய்மையற்றதாகக் கருதப்பட்டது. பாலஸ்தீன நாய் ஓநாயைப் போன்றது.

1. **அன்றாட வழக்கில்:** இஸ்ராயேல் வரலாறு தொடங்குவதற்குச் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்பே நாய், வீட்டில் வளர்க்கப்படும் விலங்காகியது. மத்திய கற்காலத்தைச் சேர்ந்த நாய் மண்டை ஓடு, வாடி ஏல்-முகாரவில் கண்டுபிடிக்கப்பட்டது இதைச் சுட்டுகிறது. எரிகோவில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய கற்காலத்தைச் சேர்ந்த பாண்டங்களில் காணப்பட்ட நாயின் சிதைவுகள் இதையே சுட்டுகின்றன. விவிலியத்தில் நாய் ஒரு சாதாரணமான விலங்கு. மத் 15:26-27; மாற் 7:27-28-க்கு உணவு கொள்ளும் இடத்திற்குச் சில நாய்கள் அனுமதிக்கப்பட்டதாய்ப் பொருள் கொள்ளலாம் என்றாலும், பிளினி விவரிப்பதுபோ,ல் நாய்க்கும் அதன் தலைவருக்கு மிடையே நிலவிய நல்ல உறவைப்பற்றி விவிலிய ஆசிரியர்கள் அதிகம் அறிந்ததாகத் தெரியவில்லை. மேற்கூறப்பட்ட பகுதிகளையும், தோபி 5:16; 11:4; யோபு 30:1-இல் வரும் மந்தையின் நாய்களை தவிர, விவிலியத்தில் காணப்படும் நாய்கள், தெருவிலும் குப்பைகளிலும் திரியும், அழுகிய பொருட்களைத் தின்று வாழும் விலங்குகளாக இருக்கின்றன. விவிலியக் குறிப்புகளிலிருந்து நாய்களின் வகைகளைப் பற்றி எதுவும் கூறமுடியாது.

நாய் நாக்கினால் நீரை நக்கிக் குடிப்பதாகவும் (நீதி 7:5), நாய் குரைப்பதைப் பற்றியும் (யாத் 11:6; காண். யூதி 11:19), சில சமயங்களில் அது விரும்பத்தகாத செயல்களைச் செய்வதைப் பற்றியும் (லூக் 16:21), வெறிநாயோடு விளையாடுவதைப் பற்றியும் (பழ 26:17), "நாய் தான் கக்கினதைத் தின்னத் திரும்பி வருவதைப்" பற்றியும் (26:11; 2 பேதுரு 2:22), அது வயல்வெளியில் பீறப்பட்டுக் கிடக்கும் இறைச்சியையும், தூய்மையற்றவைகளையும் உண்பது பற்றியும் (யாத் 22:31), அது மனித ஊனைக்கூடத் தின்பது பற்றியும் (1 அர 9:10.36; சங் 68:23; எரே 15:3) விவிலியத்தில் வாசிக்கின்றோம். நாயிடம் இப்பழக்கவழக்கங்கள் இருந்தாலும், "செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல்" என்று கூறி இறப்பைவிட உயிரோடிருப்பது மேல் என்று திருவுரை 9:4 வலியுறுத்துகிறது.

2. **பலியில் நாய்:** "நாயின் கழுத்தை முறிப்பது" (எசா 66:3) நாய் பலியிடப்பட்ட, யாவே வழிபாட்டுக்குப் புறம் பானதைக் குறிக்கிறது. இத்தகைய அருவருப்பான வழக்கம் கார்தசீனியர்களிடை இருந்தது. இவ்வாறு நாய் பலியிடப்படுவது பழங்காலத்தில் அரிதாகவே நிகழ்ந்திருக்கிறது. எபிரேயர் நாயைத் தூய்மையற்ற விலங்குகளில் ஒன்றாகக் கருதியதால், அதைத் தங்கள் பலிச்சடங்கில் பயன் படுத்துவதில்லை.

**3. உருவக வழக்கில்:** ஒருவனை நாய் என்றழைப்பது அவனை இழிவுபடுத்துவதாகும் (1 சாமு 17:43; 2 சாமு 3:8; 2 அர 8:13). மத் 15:26; மாற் 7:27-இல் நாய் யூதர் அல்லாதாரைக் குறிக்கலாம். மத் 7:6-இல் வரும் நாய் என்பது தகுதியற்றவரையும், திருமுழுக்குப் பெறாதவரையும் கூடக் குறிக்கலாம். "செத்த நாய்" மதிப்பற்ற பொருளைக் குறிக்கும் (1 சாமு 24:15; 2 சாமு 9:8; 16:9). ஒருவன் தனது எதிரியை நாய் என்று அழைக்கலாம். சங்கீத ஆசிரியர் தன் எதிரிகளை இவ்வாறு குறிப்பிடுகிறார் (சங் 22:16-20; 59:6-14).

தீயோர்கள் நாய் என்று குறிக்கப்படுகின்றனர். எச 56:10-11-இல் இஸ்ராயேலின் சமயத்தலைவர்களும், ஒருவேளை, தங்கள் கடமையைச் சரியான முறையில் செய்யாத இறைவாக்கினர்களும் பேராசையுள்ள இறைவாக்கினர்களும், குறிக்கப்படுகின்றனர். பிலி 3:2 தீமை செய்வோரையும், திருச்சபையில் யூதப்பழக்கங்களைப் புகுத்துபவர்களையும் குறிக்கிறது. திருவெளி 22:15-இல் தீயோர் குறிக்கப்படுகின்றனர்.

உப 23:19-இல் நாய் கோவில் விலை மகனைக் குறிக்கிறது.

**நாறா (NAARAH - இளம்பெண்)-ஆள்**

தெக்கோவாவின் தந்தையான அஸ்கூரின் இரு மனைவியருள் ஒருத்தி. இவள், அகுசாம், ஏபர், தேமனி, அகஸ்தாரி ஆகியோரின் தாய் ஆவாள் (1 நாள் 4:5-6).

**நாறா (NAARAH - இளம்பெண்)-இடம்**

எப்பிராயிம், பென்யமின் ஆகியோர் பகுதிகளின் எல்லையில் உள்ள பென்யமினைச் சேர்ந்த நகரம் (யோசு 16:7). இது 1 நாள் 7:28-இல் நாரான் என்றழைக்கப்படுகிறது. இதை யோசிப்பசு நாரா என்றும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நோரான் என்றும், யூசேபியு நோராத்து என்றும் குறிப்பிடுகின்றனர். இஃது எரிகோவிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இது வாடி ஏல்-அவுயா அருகிலுள்ள ஏல்-அயாசாகவும், ஒருசெபக் கூடத்தைக் கொண்டு, எரிகோவின் வடகிழக்கில் மலையடிவாரத்தில் உள்ள அயின் துக்கு ஆகவும், எரிகோவின் வடகிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள தேல் ஏல்-இசிர் ஆகவும் அடையாளமாகக் காட்டப்படுகிறது.

**நாறாய் (NAARAI - யாவேயின் ஊழியன்)**

தாவீது மன்னனின் வலிமை மிக்க முப்பது பேரில் ஒருவனான நாறாய், எசிபாயின் மகன் (1 நாள் 11:37). இதற்கு இணையாக 2 சாமு 23:35-இல் இவர் அர்பாயரான பாராய் என்று அழைக்கப்படுகிறார்.

**நாரான் (NAARAN)**

நாரா (யோசு 16:7) என்ற இடப்பெயரின் மற்றொருவடிவம் (1 நாள் 7:28).

**நாரை (CRANE)**

உயரமான, நீண்ட அலகையும், கழுத்தையும் கால்களையுமுடைய நீரில் நடமாடும் பறவை வகையாகும். இடம் விட்டு இடம் மாறும் இப்பறவைகள் தெற்கிலிருந்து வட கடற்கரைகளுக்குச் செல்லும் வழியில் பாலஸ்தீனத்திற்கு வசந்த காலத்தில் (மார்ச் மாதம்) வந்து தங்கின. இவற்றின் முக்கிய உணவு தானியங்கள், விதைகள், தளிர், காட்டுச்செடிகள் ஆகியவையாகும். சில சமயங்களில் புழுப்பூச்சிகளையும், தவளைகளையும் உண்டன.

விவிலியத்தில் வரும் குறிப்புகளை வைத்துப் பறவைகளை வகைப்படுத்துவது கடினமானாலும் நோயுற்ற அரசன் எசேக்கியாவின் புலம்பலுக்கு ஒப்பிடப்படும் நாரையாக இருக்கலாம் (எசா 38:14). எரே 8:7-இல் குறித்தகாலத்தில் பாலஸ்தீனத்திற்கு இயல்பாகவே திரும்பும் பறவைகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, இஸ்ராயேலர், அக்காலத்தில், ஆண்டவரது நீதியை உணரவில்லை.

**நாற்பட்டு (LINEN)**

பண்டைய உலகில் சணல் வளர்ப்பானது எகிப்தில் மிக அதிக அளவில் நடந்தது. பாலஸ்தீனத்தில், முக்கியமாக எரிகோவில் இது நடைபெற்றதாக விவிலியச் சான்று (யோசு 2:6) உள்ளது. சணல் பறிக்கும் மாதம் பற்றிய விளக்கங்கள் கெசேர் நாளேட்டில் உள்ளன. தால்மூது காலத்தில், பெத்சான், அர்பேலா ஆகிய இடங்களில் சணல் வளர்க்கப்பட்டது. பண்டைக் காலத்திலேயே எகிப்திய சணல் ஆடைகள் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. அரச உடைகள் கூட இந்தச் சணல் நெசவின்மூலம் மிக நேர்த்தியாகவும், பட்டாடைகளுக்கு நிகரான தரம் கொண்டதாகவும் தயாரிக்கப்பட்டன. சாதாரண சணல் துணிகூட மிக உயர்ந்த தரத்தைக் கொண்டிருந்தது.

சணல் விவசாயத்தில், ஏராளமான உற்பத்தியைத் தரமான வகையில் பெற்றிட, வளமான மண் தேவை. சணல் செடியின் தண்டுகள் நன்கு முற்றியவுடன் அவை வேருடன் பிடுங்கப்பட்டு, கட்டுகளாகக் கட்டப்பட்டுப் பின்னர், உலர்வதற்காகப் பரந்த வெளியில் விரிக்கப்படும். நன்கு காய்ந்த பின்னர் அவற்றைத் தண்ணீர்க் குட்டையில் ஊற வைத்துப் பின்னர், அதன்மேல் கற்களைச் சுமையேற்றினர். நாரை எளிதாகப் பிரித்தெடுக்கும் மென்மையான பக்குவத்தை அடையும்வரை இந்த நிலையிலேயே வைத்தனர். பின்னர், அவற்றைப் பிழிந்து காயவைத்து, வெண்மையாக்கித் தூய்மையாக்கினர். கடைசியாக நாரைப் பயன்படுத்தி சிறு இழைகளாக முறுக்கினர். சணலின் அறுந்த பகுதிகளை அகற்றிட வாரிவிட்டனர். இந்த முறையில் நெசவுக்குத் தேவையான நிலையில் சணலைத் தயாரித்தனர்.

நூற்பவர்கள் இந்த நூலை நூற்புக்கழியில் சுற்றினர். அதன்பின், அது நெசவு செய்வதற்குத் தயாரானது. வண்ணம் கலந்த நார்ப்பட்டைப் பற்றிய குறிப்பு எதுவும் விவிலியத்தில் காணப்படவில்லை என்றாலும், எகிப்தில், இஃது இருந்தது என்பதை அறிகிறோம். கும்ரான் ஏட்டுச் சுருள்களோடு கண்டெடுக்கப்பட்ட சில துணிகளில் ஊதா நிற நூல்கள், பயன்படுத்தப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஆடைகளெல்லாம் வெள்ளையானதாகவே இருந்தன. ஆனால், பொருளாதார வசதி படைத்தவர்களின் ஆடைகள் வண்ண அலங்காரங்களைக் கொண்டவையாகச் செய்யப்பட்டன. பெத்தசுபேயா என்ற இடத்தில் நார்ப்பட்டு செய்யும் குடும்பமோ, தொழிலாளர்கள் கொண்ட சிறிய சமூகமோ வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது (1 நாள் 4:21). இஸ்ராயேலர்களிடையேயும் இத்தகைய கலைஞர்கள் மோசேயின் காலத்தில் வாழ்ந்தனர் (யாத் 35:35; 38:23).

நார்ப்பட்டுத் துணியிலிருந்து, படுக்கை விரிப்பு, திரைகள், இறந்த உடலைப் போர்த்தும் துணி போன்ற பலவகைப் பொருட்கள் செய்யப்பட்டன. இதனுடைய குளிர்ச்சியான தன்மையை முன்னிட்டுக் கோடைக்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட நார்ப்பட்டுத் துணிகள், ஆடம்பரப் பொருட்களின் வகையைச் சேர்ந்தது. எகிப்தில் தாழியிலடைக்கப்பட்ட முதுமக்கள் உருகள் வெளிப்பகுதியில் இந்த நார்ப்பட்டால் மட்டுமே சுற்றப்பட்டன. குருக்களின் ஆடைகள், கப்பலின் பாய், ஏட்டுச் சுருள்களின் மேலுறைகள் போன்ற பொருட்களும் நார்ப்பட்டால் செய்யப்பட்டன.

நார்ப்பட்டு என்ற பொருளில் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டன. நார்ப்பட்டு (யாத் 28:42; 39:28; லேவி 6:10; 16:4; 1 சாமு 2:18; 22:18; 2 சாமு 6:14; 1 நாள் 15:27; எசே 9:2-3.11; 10:2.6-7; தானி 10:5; 12:6-7); பட்டாடை அல்லது மெல்லிய நார்ப்பட்டு (ஆதி 41:42; யாத் 25:4; 26:1,31.36, 27:9; 27:16.18; 28:51.6.8.15.39.42; 35:6.23.25; 36:8.35.37; 38:9.16.18; 39:2-3.5.8.24.27-29); மெல்லிய வெள்ளை நார்ப்பட்டு (1 நாள் 15:27; 2 நாள் 2:14; 3:14; 5:12; எஸ்த 1:6; எசே 27:16). சணல் இழையால் செய்யப்பட்ட நார்ப்பட்டு குறிக்கப்படும் பிற இடங்களில் சில: லேவி 13:47-

48.52.59; 19:19; உப 22:11; 1 அர 10:28; 2 நாள் 1:16; பழ 7:16; 31:24; எசா 3:23; 42:3; எசே 44:17;18; மத் 12:20; 27:59; மாற் 14:51-52; 15:46; லூக் 16:9; 23:53; 24:12; யோவா 19:40; 20:5-7; அ.ப. 10:11; 11:5; திருவெளி 15:6; 18;12.16; 19:8.14).

**நாரப் பட்டாடை (LINEN GARMENT)**

நீள் சதுர வடிவில் செய்யப்பட்ட விரிப்பாகவோ, நீண்ட துணியாகவே தயாரிக்கப்பட்டு, மேலாடை அல்லது மேல்விரிப்புப் போன்ற பணிக்குப் பயன்படுத்தப்பட்ட நார்ப் பட்டாகும். இதனுடைய சிறப்பான தன்மையும், அழகிய வடிவமைப்பும் இதற்குப் பெரிதும் மதிப்பும் விலையும் அளித்தன. இந்த நார்ப் பட்டாடை சிம்சோனின் விடுகதைப் பந்தயத்தில் (நீதி 14:12-13) கூறப்படுகிறது. இது சுறுசுறுப்புள்ள நல்ல மனையாளின் படைப்புகளின் ஒன்றாகும் (பழ 31:24). எருசலேம் மகளிரின் சொகுசுப்பொருட்களில் ஒன்றாகும் (எசா 3:23). பிற்கால யூத இலக்கியத்தில் இச்சொல், கோடைக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மெல்லிய மேலாடைகளைக் குறிக்கிறது. இந்தத் துணி கப்பலின் பாய்கள், திரைகள், படுக்கை விரிப்புகள் முதலியவற்றிற்கும், தரை விரிப்புக்கள் அழுக்காகி விடாமல் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்டது.

**நாவாம், நாகாம் (NAAM - இன்பமானர்)**

இவர், யூதா குலத்தில், எப்புன்னேயின் பேரனும் காலேபுவின் புதல்வரும் ஆவார் (1 நாள் 4:15).

**நாளாகமம் , I-II, ஆட்சிக்குறிப்பேடு நூல்கள் I-II, (HI CHRONICLES, BOOK OF THE)**

1. முன்னுரை: பாபிலோனியாவுக்கு

நாடு கடத்தப்பட்டு அடிமை வாழ்வு வாழ்ந்த இஸ்ராயேலில் பலர், வரலாற்றிலும், தங்கள் கடந்த கால வரலாறு அளிக்கும் படிப்பினைகளிலும் அக்கறை கொண்டவர். தாங்கள் தோன்றிய விதம், இன்னும் ஒரு தனிப்பட்ட இனமாய் இருப்பதேன் ஆகியவை பற்றி அறிய விரும்பினர். அதன் விளைவாக நாளாகமம் தோன்றியது.

2. பெயர்: எபிரேய விவிலியத்தின் இறுதி நூல்கள் "ஆண்டுக்குறிப்புகள்" அல்லது "வருடா வருட நிகழ்ச்சிகள்" என்ற பெயரைக் கொண்டுள்ளன. எழுபது நூல், இந்நூல்களைப் "பாறாலி போமெனோன்" (Paralepomenon) என்றழைத்தது. இச்சொல்லுக்கு "விடப்பட்டவை," "கையளிக்கப் பட்டவை," ஒதுக்கப்பட்டவை" என்று பலவாறு பொருள் கூறுவர். "வுல்காத்தா" பதிப்பு இப்பெயரையே பயன்படுத்தியது.

நாளாகமம் என்ற பெயரில் இந்நூல் தமிழில் அழைக்கப்பட்டது. உண்மையில் இந்நூலில் காணப்படுபவை நாட்களாகவோ, ஆண்டுகளாகவோ கணக்கிடப்படவில்லை. ஆகையால், புனித எரோனிமு இந்நூலை "முழு இறை வரலாற்றின் குறிப்பேடு" என்று அழைத்தார். இப்பெயர் இலக்கியப் போக்கிற்கு ஒத்ததாயில்லை எனினும், இந்நூலின் பொருளடக்கத்திற்குப் பொருந்தியதாகும். மார்ட்டின் லூத்தர் இப்பெயரைப் பிரபல்யப்படுத்தினார். பலராலும் இப்பெயர் ஏற்றுக்கொள்ளப்படும் இந்நூல்களைப் புதிய பொதுமொழி பெயர்ப்பில் ஆட்சிக் குறிப்பேடுகள் என்றழைக்கிறோம்.

தொடக்கத்தில் எபிரேய விவிலியத்தில் நாளாகமங்கள் ஒரே நூலாகவே இருந்தன. அலக்சாந்திரியாவில் மொழிபெயர்க்கப்பட்டு எழுபது நூல்கள் தோன்றியபோது, இந்நூல் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவ்வழக்கு பிற்காலப் பதிப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி. 1448-க்குப்பின் எபிரேய வாசகப் பாரம் பரியத்திலும் இம்முறை பின்பற்றப்பட்டது.

எஸ்ரா, நெகேமியா நூல்கள், நாளாகமங்களின் தொடர்ச்சியாகும் என்று எல்லோரும் இப்போது ஏற்றுக்கொள்வர். இதைப்புரிந்துகொள்ள 2 நாள் 36-ஐயும் எஸ்ரா 1:1-4-ஐயும் ஒப்பிடுக. மேலும் பயன் படுத்தப்படும் சொற்றொடர்களும் நடையும் மனப்போக்கும் இம்மூன்று நூல்களுக்கு ஒரே ஆசிரியர் இருந்திருக்கக்கூடும் என்று சுட்டும்.

3. யார் எழுதியது எஸ்ரா 1:1-3-ஐ, 2 நாள்

36:22-23-இல் ஆசிரியர் கூறுகிறார். யூத சமூகத்திற்கும் தன் சமூக சமய நிறுவனங்களுக்கும் எஸ்ராவில் காணப்படும் அதே பற்றுதல் நாளாகமத்தில் காணப்படுகின்றது. ஆலயத்திற்கும் அதன் வழிபாட்டு அமைப்புகளுக்கும் எஸ்ராவைப் போன்று நாளாகம ஆசிரியரும் சிறப்பான அன்பு காட்டுகிறார். சிறிய வழிபாட்டுப் பணியாளர்களுக்கும், சிறப்பாக லேவியர்களுக்கு, அளிக்கப்படும் கவனத்திற்கும் மரபுக்கொடிகளில் காட்டும் அக்கறையிலும், நாளாகமமும் எஸ்ரா நூலும் ஒத்திருக்கின்றன. சொற்றொகுதியிலும் இலக்கணத்திலும் இலக்கிய அமைப்பிலும் மூலங்களில் பயன்படுத்தும் முறைகளிலும் இந்நூல்களுக்குள் மிகுந்த ஒற்றுமை உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு இரு நூல்களையும் ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்றும், அவர் எஸ்ராவாக இருக்கக்கூடுமென்றும் இப்போது பொதுவாக ஒருமுகமாக அறிஞர் ஏற்றுக்கொள்வர்.

இஃதோடு ராபிகளின் இலக்கியம், திருச்சபையின் தந்தையர், ஆதிவிளக்க உரையாளர்கள் ஆகியோர் அளிக்கும் பாரம்பரியச் சாட்சியும் மேற்கூறிய கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. பாபிலோனிய யூதர்களின் இலக்கியமாகிய "தால்மூதின்" படி, எஸ்ரா, தனது நூலையும் தனது மரபுக் கொடியில் தொடங்கி நாளாகமத்தின் மரபுக் கொடிகளையும் எழுதினார். அதை நெகேமியா நிறைவுபடுத்தினார். இக்கூற்று மிகப்பழைய கருத்தை எதிரொலிக்கிறது. இதன்படி, நாடு கடத்தப்பட்டு, திரும்பிய யூதர்களிடையே ஏற்பட்ட சீர்திருத்தத்திற்குத் தலைமை தாங்கியவர்தான் நாளாகமங்கள், எஸ்ரா, நெகேமியா ஆகமங்களுக்குப் பெருமளவில் பொறுப்பாளியாவார். நாளாகம ஆசிரியர் லேவியர் இனத்தைச் சார்ந்த ஒரு பாடகர் ஆவார் என்பது பற்றிப் பொதுவாகக் கருத்து ஒருமைப்பாடு உண்டு. லேவியர் அரசராகமத்தில் ஒருதடவையும், சாமுவேலில் இரு தடவையும், எஸ்ரா நெகேமியாவில் 60 தடவையும், நாளாகமத்தில் 100 தடவையும் குறிப்பிடுகின்றனர். பாடும் லேவியர் பற்றி அதிகம் கூறப்படுகிறது. வெகு சிறிதே சடங்குகளைச் செய்யும் லேவியருக்குப் பாடும் லேவியரைவிட, அதிகச் சன்மானம் அளிப்பதைக் குறை கூறுவதாகத் தெரிகிறது.

**4. எப்பொழுது எழுதப்பட்டது:** இது பற்றி அறிஞர்களிடையே பலத்த வேறுபாடுகள் உண்டு. பிரிட்மென் என்பவரது கருத்துப்படி, இந்நூல் ஆசிரியர் ஒரு மன்னராட்சி சார்பாளர். இந்நூலை கி.மு. 515-ஐ ஒட்டி எழுதியிருக்க வேண்டும். இஃதோடு பிற்காலத்தில் குரு குழுவைச் சேர்ந்த ஒருவர் எஸ்ரா நெகேமியாவின் நினைவுக் குறிப்புகளைச் சேர்த்திருக்கவேண்டும். இது 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்திருக்க வேண்டும். ஆல்பிரைட் என்பவர் எஸ்ரா இந்நூலை 400-க்குப்பின் எழுதினார் என்பார். ஒரு சிலர் இந்நூல் அலக்சாந்தர் காலத்தை ஒட்டி 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது என்பர்.

அலக்சாந்தருக்குப் பிறகு இஸ்ராயேலைக் கிரேக்கத் தன்மையுடையதாக்கச் செய்யப்பட்ட முயற்சியைப் பற்றி இந்நூல் ஒன்றும் கூறவில்லை. இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்பதை அறிய இஃது ஒரு குறி காட்டுகிறது. சிலர் இந்நூல் கி.மு. 160-க்குப்பின் எழுதப்பட்டது என்றும் கூறுவர்.

பொருளடக்கமும் மொழி அமைப்பும் ஆசிரியரின் கருத்துக்கள், அவர் பயன்படுத்தும் துறைச்சொல், வழக்கு ஆகியவற்றின் மீது குருக்களின் சட்டம் செலுத்தும் ஆதிக்கமும் இந்நூல் நாடுகடத்தப்படுவதற்கு முன் பதிப்பிக்கப்பட்டிருக்க முடியாது என்று தெளிவாகக் காட்டுகின்றன. நாடுகடத்தப்பட்டு, திரும்பியவர்களின் மரபுக்கொடிகளின் பட்டியல் சிறப்பாக, 5-ஆம் நூற்றாண்டு முடிவுவரை தாவீது மரபுக்கொடி கொடுக்கப்படுவதும், இந்நூல் கி.மு. 400-க்கு முன் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகிறது. நாளாகமமும், எஸ்ராவும், நெகேமியாவும் ஒரே நூலாக இருந்தன என்ற கருத்தையும், இந்நூலாசிரியரின் மனப்போக்கில்

தோராவும் எஸ்ராவும் கொண்டிருக்கும் ஆதிக்கத்தையும் மனதில் கொண்டால் இந்த முடிவுதான் வரும்.

தாவீது வரலாற்றுச் சூழ்நிலையில், பாரசீகத்தின் தங்க நாணயம் குறிக்கப்படுகிறது (1 நாள் 29:7). இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைக் காட்டலாம். ஆசிரியர் தன் கவனத்தை ஆலயத்தின் மீது ஒருங்குவிக்க முயல்வதாகத் தெரிகிறது. இது யாவே கோட்பாடு பல தீய சக்திகளால் அழியும் ஆபத்திலிருந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம் என்று சுட்டுகிறது. இத்தகைய ஆபத்துக்களில் ஒன்று கி.மு. 350-இல் தொடங்கி, கெரிசிமில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதோடு வளர்ச்சியடைந்த சமாரியப் பிரிவினைச் சபையாகும். மற்றது முதலாம் நீதிமான் சீமோனுக்குப் பின் வந்த பெரிய குருக்கள் தோபியாவோடு கொண்ட தொடர்பும், மூன்றாம் தோலமி யூர்கெத்து அளித்த பொருளாதார உதவியும் ஆகும். கி.மு. 157-இல் இந்நூலின் கிரேக்க மொழி பெயர்ப்பை யூப்பெலம் என்பவர் பயன் படுத்தியுள்ளார் என்பது உறுதியாகும். சீராக்கு ஆகமம் (120) இந்நூலைக் குறிப்பிடுகிறது (சீரா 47:2-11). இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால் இந்நூல் 400-க்கும் 170-க்கும் இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என்று கூறலாம்.

5. நோக்கம்: நவீன ஆய்வுப்படி, உபாகமம் முதல் அரசராகமங்கள் வரையுள்ள நூல்கள் ஒரே தொடர் வரலாறாக அமைந்துள்ளன. இவை கி.மு. 600-ஐ ஒட்டித் தொகுக்கப்பட்டு, இன்று நாம் கொண்டிருக்கும் வடிவில் பதிப்பிக்கப்பட்டது என்பர். இஃது உபாகமப் பாரம்பரிய வரலாறு எனப்படும். இது பற்றி உபாகமப்பாரம் பரியம் பற்றிய தலைப்பில் காண்க. வரலாற்று இயலின் மிகப் பழம் கூறுகளைச் சாலமோன் காலத்தில் "யாவே" பாரம்பரிய ஆசிரியரும், பிற்காலத்தில் எலோகீம் பாரம்பரிய ஆசிரியரும் தொகுத்தனர். இவற்றையெல்லாம் சேர்த்து இணைத்துத் "தோரா"வாக நாடு கடத்தப்பட்ட பின் எஸ்ராதான் பதிப்பித்தார் என்று பாரம்பரியம் கூறுகின்றது. எஸ்ரா தனது செயல்களின் குறிப்பேட்டையும் எழுதி வைத்தார். அப்படியிருக்க ஆதாமிலிருந்து நாளாகம ஆசிரியர் காலம் வரை அடங்கிய இஸ்ராயேல் பற்றிய மற்றொரு வரலாறு ஏன் எழுதப்பட வேண்டும்.

இதற்குக் காரணம், நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளையும் எஸ்ராவின் செயல்களையும் ஒன்றுசேர்த்துப் பதிப்பிப்பதாக இருக்கலாம். இதைவிட மற்றொரு காரணம் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஐந்நூல் மோசேயையும் சீனாய் உடன் படிக்கையையும் பெருமைப் படுத்துகிறது. இது தாவீது வழி வந்த சடங்குமுறை, அரச மரபு, அதிகாரம் ஆகியவற்றைக் குறைத்துக் காட்டுவதாக அமைந்தது. இந்தப் போக்கிலிருந்து விசுவாசிகளைக் காக்க நாளாகமம் எழுதப்பட்டது எனலாம். விரும்பிய சமய போதனையைக் கொடுக்கவே ஆசிரியர் முயல்கிறார். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூத இனத்தவரிடையே எழுந்த சிக்கல் மிக்க பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களை வரலாற்று வழியாக எண்பிப்பதும், சிறப்பாக யூத இனத்தில் அடிப்படையான கூறுகளைத் தாவீதுக்குச் சாற்றிக் கூறுவதும் இந்நூலின் நிலையான போக்காகும். அதேபோது மோசேயின் பாகம் புறக்கணிக்கப்படவில்லை.

பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட எபிரேய மக்கள் தங்களது சுவைமிக்க கடந்த காலத்தால் பெரிதும் கவரப்பட்டனர். அவர்கள் எப்படித் தோன்றினர்? எப்படி இறைவன் இடுக்கண் மிக்க காலங்களில் அவர்களை வழிநடத்திச் சென்றார்? அவர்களின் சட்டத்தின் மேன்மை என்ன? அதைக்கடைப்பிடித்தனரா? ஏன் அவர்களது அரசன் தாவீது வழி வந்தவராக இருக்க வேண்டும்? மூல ஆலயம் எப்படி இருந்தது? அவர்களின் தற்போதைய இழிநிலை ஏன் ஏற்பட்டது? வருங்காலத்தில் நம்பிக்கை உண்டா? இது

போன்ற பல கேள்விகளுக்குப் பதிலை விரும்பினர், தேடினர். நாளாகமம் இக்கேள்விகளுக்குப் பதிலாக அமைந்தது.

இஸ்ராயேலின் குருக்களும் அரசர்களும் அடங்கிய எல்லாச் சக்திகளும் இறையரசு நிறுவப்படுவதற்குத் தடையாக இருந்தனர் என்று காட்டி மெசியா ஒருவரே உண்மையான ஒரே ஆயன் என்று சுட்டிக்காட்டுவது, இந்நூலாசிரியரின் நோக்கமாகும். "இறுதி முன்னோக்கு" இந்நூலில் இல்லை என்று கூறலாம். ஆயினும், உண்மையான மெசியா பற்றிய நம்பிக்கையை வளர்க்கிறார் எனலாம். இந்நம்பிக்கை "இறுதிக்கால முன்னோக்கை" அடிப்படையாகக் கொள்ளவில்லை. மாறாக, நாடுகடத்தப்படும்முன் இருந்த அரச மரபு வடிவில் உள்ளது. இறைவனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட தாவீது மரபு உறுதிப்படுத்தப்படுகிறது.

**6. இலக்கியப் பண்பு:** தனது நோக்கத்தை எடுத்துக்கூற "மிட்ராஸ்" என்ற இலக்கிய வடிவைப்பயன்படுத்துகிறார் ஆசிரியர். நாடு கடத்தப்பட்டு, திரும்பிய காலத்தில் இந்த இலக்கிய வடிவம் வழக்கில் இருந்தது. இவ்விலக்கியம் பற்றி விரிவாக அத்தலைப்பின் கீழ்க் காண்க. இப்போது சுருக்கமாக ஒரு சிறிது கூறுவோம். இவ்விலக்கியம் நெருக்கமில்லாத ஒருவகையான வரலாற்று நிகழ்ச்சியுரையாகும். இது பழங்கால வாசகங்களுக்கும் பாரம்பரியங்களுக்கும் விரிவுரை அளிக்கும்; இதன் வழியாக ஆசிரியர் காலத்து மக்களுக்கு ஒழுக்கம் பயிற்றும்; போதிக்கும்; அக்காலத்துக்குரிய கோட்பாடுகளையோ, ஒழுக்கப் பிரச்சனைகளையோ விளக்கும். சமயக் கருத்தை விளக்கிக்காட்ட வரலாற்றைத் தொடக்கமாகப் பயன்படுத்துவது இவ்விலக்கியத்தின் அடிப்படைப் பண்பாகும். இதில் ஆசிரியருக்குப் பாரம்பரியத் தொகுப்பும் சமய உணர்வும் வழிகாட்டும். இஸ்ராயேலின் வரலாறும் நிறுவனங்களும் தற்செயலாக நிகழ்ந்தவையன்று. மாறாக, இறைவனின் முன்னறிவோடும் ஆற்றல் மிக்க செயலாலும் நிகழ்ந்தவை என்பது தான் இச்சமய உணர்வு.

நாளாகம வரலாறு "மிட்ராசிக்" தன்மையுடையது. ஆசிரியர் வரலாற்று உண்மைகளைப் பயன்படுத்துகிறார். அந்த அளவுக்கு அவர் ஒரு வரலாற்று ஆசிரியர். ஆனால், அவர் சிலவற்றைப் பொறுக்கி எடுக்கிறார்; சிலவற்றை வலியுறுத்திக் கூறுகிறார்; தனக்குக் கிடைத்த உண்மைகளைக் கற்பனையோடு அணிசெய்கிறார். இந்த அளவுக்கு அவரது இலக்கியம் "மிட்ராசிக்" தன்மையுடையது. நாம் அவரது போதகத்தைப் பாராட்ட விரும்பினால் அவரது நூலில் காணப்படும் வரலாற்று "மிட்ராசிக்" கூறுகளை மனதில் கொள்ள வேண்டும்.

**7. மூலங்கள்:** விவிலியம் சார்ந்த மூலங்களைத் தவிர வேறு நம்பத்தகுந்த மூலங்களையும் இந்நூல் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்று உறுதியாகக் கர்தினால் பேயா நிறுவுகின்றார். தன் நூலை எழுதியபோது, இவ்வாசிரியர் பல எழுதப்பட்ட பல மூலங்களைத் தன் முன் வைத்திருக்க வேண்டும். அவரே ஏறக்குறைய 20 மூலங்களைச் சுட்டுகிறார்.

**அ. விவிலியம் சார்ந்த மூலங்கள்:** இந்நூல் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கும் மூலங்களில் சில ஏற்கெனவே எழுத்து வடிவம் எடுத்திருந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். சிலவற்றைக் குறிப்பிடத்தக்க முறையில் மாற்றியும் சிலவற்றை மாற்றாமல் நாம் இப்போது கொண்டிருக்கும் வடிவிலேயும் எடுத்துக்காட்டுகிறார். இந்நூலின் பெயர்களை ஆசிரியர் கூறாவிட்டாலும் அவர் பின்வரும் நூல்களைப் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

1. ஐந்நூல் (ஆதி 10:22-29 = 1 நாள் 1:17-23).
2. யோசுவா (யோசு 19:1-8 = 1 நாள் 4:28-33).
3. சாமுவேல் (1 சாமு 31:1-13 = 1 நாள் 10:1-12). (2 சாமு 5:1-10 = 1 நாள் 11:1-9).

4. அரசர்கள் (1 அர 8:1-52 = 2 நாள் 5:2-6:40; 2 அர 16:2:20 = 2 நாள் 28:1-26).

5. சங்கீதங்கள் (சங் 104 (105): 1-15 = 2 நாள் 16:8-22; சங் 95 (96) = 1 நாள் 16:23-33; சங் 105 (106):1.47-48=1 நாள் 16:34-36

இப்படியே கூறிக்கொண்டு போகலாம்.

சில மூலங்களை வெளிப்படையாகக் கூறுகிறார். அவை:

1. இஸ்ராயேல், யூதா அரசர்களின் வரலாறு (2 நாள் 25:26; 28:26;32:32).

2. யூதா, இஸ்ராயேல் அரசர்களின் வரலாறு (1 நாள் 9:1; 2 நாள் 27:7; 35:27; 36:8).

3. அனானியின் மகன் ஏகூவின் வரலாறு. இஃது இஸ்ராயேலின் அரசர்களின் நூலில் புகுத்தப்படுகிறது (2 நாள் 20:34).

4. இஸ்ராயேல் அரசர்களின் வரலாறு (2 நாள் 33:18).

5. அரசர்கள் வரலாறு பற்றிய விளக்கவுரைகள் (மிட்ராஸ்) (2 நாள் 24:27).

இந்த அரசர்கள் வரலாற்று மூலங்கள் எல்லாம் ஒருவேளை உண்மையில் ஒரே மூல நூலைக் குறிக்கலாம்.

**ஆ. இறைவாக்கினர் மரபில் வந்த மூலங்கள்:**

1. வருங்கால நிகழ்ச்சியை உரைப்பவரான திருக்காட்சியாளர் சாமுவேல் நூல் (1 நாள் 29:29).

2. இறைவாக்கினர் நாத்தானின் நூல் (1 நாள் 29:29; 2 நாள் 9:29).

3. திருக்காட்சியாளர் காதின் வரலாறு (1 நாள் 29:29).

4. சிலோவியரான அகீயாவின் நூல் (2 நாள் 9:29).

5. திருக்காட்சியாளர் இத்தோவின் நூல் (2 நாள் 9:29; 12:15).

6. இறைவாக்கினரான செமாயாவின் நூல் (2 நாள் 12:15).

7. அமோசின் மகன் எசாயா எழுதிய ஊசியாவின் வரலாறு (26:22).

8. எசாயா எழுதிய எசேக்கியாவின் வரலாறு (32:32).

9. மனாசே பற்றிய காட்சியாளர்களின் நூல் (33:19). இவை யாவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இறைவாக்கினர் தொகுப்பாக இருந்திருக்கலாம்.

1 நாள் 1-9-இல் வரும் மரபுக்கொடிகள் ஆதியாகமம், யாத்திரை ஆகமம், எண்ணாகமம், யோசுவா ஆகமம், ரூத் ஆகமம் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகின்றன. 1 நாள் 10-ஆம் அதிகாரத்திலிருந்து முடிவுவரையும், சாமுவேல், அரசராகமங்களிலிருந்து முழுப்பகுதிகளும் அப்படியே எடுத்துப் பயன்படுத்தப்பட்டுளளன.

**இ. மற்ற மூலங்கள்:**

1. காதின் குடும்ப ஏடுகள் (1 நாள் 5:17).

2. தாவீது அரசனின் நாளேடு (27:24).

3. ஆலயப் பொருட்கள் பற்றிய தாவீதின் குறிப்புகள் (28:19).

4. லேவியருக்குத் தாவீது, சாலமோன் அளித்த ஒழுங்குமுறை (2 நாள் 35:4).

5. யோசியாவின் மேல் எரேமியாவின் புலம்பல் (35:25).

**ஈ. மூலங்களைப் பயன்படுத்தும்முறை:**

விவிலியம் சார்ந்த மூலங்களைத் தனது குறிக்கோளுக்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறார்.

1. இக்குறிக்கோளை அடைய, மூலங்களைத் திரும்பக் கூறுகிறார் (1 சாமு 31:1-13 = 1 நால் 10:1-12).

2. தன் விருப்பம் போல் விட்டுவிடுகிறார்; அல்லது கூறாது அடக்கிவிடுகிறார். சான்று: சவுலினால் தாவீதுக்கு ஏற்பட்ட தொந்தரவு, பத்சேபாவுடன் தாவீது விபசாரம் செய்தலும் அவளது கணவனைக் கொலை செய்தலும், அப்சலோமின் கலகம், சாலமோனின் குற்றங்கள் (2 சாமு 24:1=1 நாள் 21:1).

3. தனது கோணத்தில் பார்த்து நிகழ்ச்சிகளைத் திருத்தி எழுதுகிறார்.

4. சுருக்கித் தருகிறார் (2 அர 18:13-19:37 = 2 நாள் 32:1-23).

5. விரித்துத் தருகிறார் (2 அர 23:21-23 = 2 நாள் 35:1-9).

இவற்றில் எல்லாம் ஓர் அடிப்படை மனப்போக்கு தெரிகிறது. ஆசிரியர் விவிலியத்துக்கு வணக்கமும் மரியாதையும் செலுத்துகிறார்; அதை உயிருள்ள விதத்தில் தியானித்து நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிக்கிறார்; செறிவுமிக்கதாக்குகிறார். இதில் இவருக்கும் சீராக்கு, ஞானாகம ஆசிரியர்களுக்கும் ஒற்றுமை உண்டு.

இம்மூலங்கள் பற்றிய மதிப்பீடு என்ன? அறிஞர்கள் வேறுபடுகின்றனர். தனக்குமுன் இருந்த ஆதியாகமம் முதல், அரசர்கள் ஆகமங்கள் வரையுள்ள நூல்களையும் சங்கீதங்களையும் இந்நூல் ஆசிரியர் நன்கு அறிந்திருந்தார் என்பது தெளிவு. இவற்றைத் தவிர்த்த பிற மூலங்களைப் பயன்படுத்தினாரா? இதுபற்றிப் பலத்த கருத்து வேறுபாடுண்டு. சிலர் இந்நூல் ஆசிரியர் விவிலியம் தவிர்த்த மற்ற மூலங்களைப் பயன்படுத்தவில்லை என்பர். விவிலியத்தைச் சாராத பகுதிகளில் காணப்படும் போக்கும் மொழிநடையும் ஆசிரியருடையதே. பிற மூலங்கள் இருந்தன என்பதற்கு உட்சான்றுகள் இல்லை என்பர். இம்மூலங்களை ஆசிரியர் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுவதைக்கூட, தான் கூறுவது அதிகாரப் பூர்வமான உண்மையுடையது என்று காட்டுவதற்காக ஆசிரியரே இட்டுக்கட்டியதாகும் என்பர். இவ்வாதம் மெய்யெனக் காட்டி நம்பவைக்கக் கூடியதன்று. ஏனெனில் பிற மூலங்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தியிருந்தாலும் ஆசிரியர் அப்படியே எடுத்தாள வேண்டியதில்லை. விவிலிய மூலங்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தும் போதுகூட அவர் அப்படியே பயன்படுத்த வில்லை(1 அரச 3:4 2 நாள் 1:3-6). விவிலிய மூலங்களைத் தவிர்த்த பிற மூலங்களை - ஒன்றையோ பலவற்றையோ - ஆசிரியர் பயன்படுத்தியிருக்கலாம். இவை ஒரு வேளை அரசர்களின் நூல் பற்றிய விளக்கவுரை என்ற ஒரே மூலமாக இருந்திருக்கலாம்.

8. **விவிலியப் பட்டியலில் நாளாகமம்:** இந்நூலைப் பலரும் பலவிதமாக வரவேற்றனர். இது கசிதீமியர்களையும் பரிசேயர்களையும் பிரியப்படுத்தியது; சதுசேயர்களைப் பிரியப்படுத்தவில்லை. இத்தகைய வரவேற்பு இந்நூல் விவிலியப்பட்டியலில் சேர்க்கப்படுவதைத் தள்ளிப்போட்டது. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட போது ஒரு விநோதமான வரலாறு மாறுபாட்டால் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த எஸ்ரா, நெகேமியா ஆகமங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு எபிரேய விவிலியப் பட்டியலின் இறுதியில் இந்நூல் வைக்கப்பட்டது. எஸ்ரா ஆகமம் விவிலியத்தில் வேறெங்கும் எடுத்துக் கூறப்படாத மீட்பு வரலாற்றின் முக்கிய நூற்றாண்டுகளைப் பற்றிக் கூறுகிறது. இதுவும் சாமுவேல் முதல் அரசராகமங்கள் வரையுள்ள முந்தைய நூல்களில் காணப்படுபவையே இந்நூலில் காணப்படுவதும், இவ்வரிசை முறைக்குக் காரணமாயிருந் திருக்கலாம். இவ்வரிசை முறை இந்நூல் இறையூக்கம் பெற்ற நூலாகப் பிற்காலத்தில்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சுட்டலாம். யாம்னியாவின் பொதுக்கூட்டத்தில் (கி.பி.95) இந்நூல், அதிகாரப்பூர்வமாக எபிரேய விவிலியப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என உறுதியாகக் கூறலாம். கி.பி. 70-இல் ஆலயம் அழிந்தது. சதுசேயர் தங்கள் அதிகாரத்தை யெல்லாம் இழந்து இருந்தனர். பரிசேயருடைய கோட்பாடே மேலோங்கி நின்றது. அப்போது

இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டதில் வியப்பில்லை. இந்நூல் தாவீதையும் இறையாட்சிச் சமூகத்தையும் உன்னத மாதிரியாக்குதல் இந்நூலை விவிலியப்பட்டியலில் சேர்த்துக்கொள்ள பரிசேயர்களைத் தூண்டியிருக்கலாம்.

எழுபது நூலிலும், பிற்கால மொழி பெயர்ப்புகளிலும் இந்நூல் எஸ்ரா ஆகமத்திற்கு முன் வைக்கப்படுகிறது. சாமுவேல், அரசராமங்கள் ஆகிய வரலாறுகளின் தொடர்ச்சியாகவும் பிற்சேர்க்கையாகவும் வருகிறது.

சீரியன் திருச்சபையைத் தவிர்த்த மற்றக் கிறிஸ்துவ சபைகள் இந்நூலைத் தங்களது விவிலியப் பட்டியலில் இடறல் இன்றி ஏற்றுக்கொண்டன. புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே நாளாகமம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மத் 23:35-இல் ஆபேலின் இறப்பையும் (ஆதி 4:8), செக்கரியாவின் மரணத்தையும் (2 நாள் 24:21-22) இயேசு சுட்டிக்காட்டுகிறார். இதைக்கொண்டு முதல், இறுதிக் கொலைகளைச் சுட்டிக்காட்டி யூத விவிலியத்தை ஒரே வீச்சில் சுட்டிக்காட்டுகிறார். பிற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் இந்நூலைச் சுட்டிக்காட்டுகின்றனர் (எபி 9:11-12 = 1 நாள் 16:1-2; எபி 11:13 = 1 நாள் 29:15). இந்நூல் இறையூக்கம் பெற்றதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்றின் உச்சநிலை, திரிதெந்தின் பொதுச்சங்க விசுவாசிகளால் புனிதமானது என்று விசுவசிக்கப்பட்டு, இது விவிலியப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய நூல்களில் ஒன்று என்று அறிக்கையிட்டதாகும். இந்நூலுக்குத் தியோடொரெட் என்பவரைத் தவிர வேறு எந்தத் திருச்சபைத் தந்தையரும் விளக்கவுரை அளிக்கவில்லை. இந்நூல் சிறிது மந்தப் போக்குடையது; எழுச்சியற்றது; எல்லோராலும் மறக்கப்பட்ட நூலாகத்தோன்றலாம். ஆயினும், கிறிஸ்துவ வழிபாட்டுச் சடங்கு இதிலிருந்து பல வாசகங்களை எடுத்துப் பயன்படுத்துகிறது.

**9. திட்டம்:** இவ்விரு ஆகமங்களையும் நான்கு தெளிவான பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**I. மரபுக்கொடிகள்** (1 நாளா 1-9): இப்பகுதி ஆதாமில் தொடங்கி, கி.மு. 538-இல் சைரசின் சட்டத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த தாவீது, சாலமோன் ஆகியோரின் வழித்தோன்றல்களின் மரபுமுறைக் கொடிகளைக் கொடுக்கிறது.

அ. உலக வரலாற்றில் இஸ்ராயேலர் (1 நாள் 1:1-27).

ஆ. ஆபிரகாமில் இஸ்ராயேலர் (1:28-54).

இ. பன்னிரண்டு இனத்தவர் (2:1-7:40).

1. யூதாவின் மரபுவழி (2:1-23)

2. தென் கிழக்குக் கூட்டாட்சியின் எஞ்சியோர் (4:24-5:26).

3. லேவியர்கள் (6:1-81).

4. வடநாட்டார் தலைமுறை (7:1-40).

ஈ. **தாவீதின் எழுச்சிக்குப் பின்னணி** (8:1-9:44).

**II. தாவீதின் பேரரசு** ( 1 நாள் 10:29):

இப்பகுதி தாவீதின் அரசை ஓர் உன்னத மாதிரியாக எடுத்துக்காட்டுகிறது. மற்றும் அரசன் சமூக சமய அமைப்புகள் விவரிக்கப்படுகின்றன.

அ. மரபு உரிமை நேர்மையானது (10:1-11:9).

ஆ. தாவீதின் சேனைகள் (11:10-12:40).

இ. இறையாட்சி வலுவாக்கப்படுதல் (13:1-17:27).

1. பெட்டகத்தை மீட்டல் (13:1-14).

2. தாவீது தன் வீட்டைக் கட்டுதல் (14:1-17).

3. திருப்பேழை (15:1-16:43).

4. ஆலயம் கட்டுதல் ஒத்திவைக்கப்படுதல் (17:1-27).

ஈ. சேனையின் துணைகொண்டு பேரரசை அமைத்தல்.

1. யோர்தானுக்குக் கிழக்கே நடத்திய போர் (18:1-20:3).

2. பெலிஸ்தியர் பற்றிய கதைகள் (20:4-7).

3. பேரழிவு கொண்டு வந்த கணக்கெடுப்பு (21:1-7).

உ. தாவீதின் ஆலயம் (21:8-29:3).

1. கணக்கெடுப்பின் சமயப்பொருள் (211:8-22:1).

2. ஆலயத்தின் வரைபடம் (22:2-19).

3. ஆட்சிகளின் வரிசை (23:1-27:34).

4. தாவீதின் அறவுரை (28:1-21).

5. தாவீது அரசு துறத்தல் (29:1-29).

**III. சாலமோனின் ஆட்சி** (2 நாள் 1-9):

இப்பகுதி சாலமோனின் ஞானத்தை அழுத்திக் கூறுகிறது. இந்த ஞானம் எருசலேமில் ஆலயம் எழுப்பித் திருநிலைப் படுத்துவதில் சிறப்பாக வெளிப்படுகிறது.

அ. சாலமோன் ஞானம் பெறுதல் (1:11-17).

ஆ. ஆலயம் (2:1-7:22).

1. ஆலயம் எழுப்ப ஏற்பாடு (2:1-18).

2. கட்டடமும் அதன் அளவுகளும் (3:1-17).

3. ஆலயப் பொருட்கள் (4:1-22).

4. திருநிலைப்படுத்தும் சடங்கு (5:11-7:22).

இ. சாலமோனின் நகர்களும் வணிகமும்.

**IV. சாலமோனுக்குப் பின் வந்த யூதாவின் ஆட்சிகள்** (2 நாள் 10-36):

வடபகுதியை ஆண்ட இஸ்ராயேல் அரசர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். தாவீதின் அரசர்களுக்குள்ளும் நல்லவர்களும் சீர்திருத்தம் செய்தவர்களுமான யோசபாத்து, எசேக்கியா, யோசியா ஆகிய மூவருமே சிறப்புப் பெறுகின்றனர். மற்ற அரசர்கள், குருக்கள், மக்கள் ஆகியோரின் தீய ஒழுக்கம் எருசலேமுக்கும் நாட்டிற்கும் அழிவையே கொண்டு வந்தது.

அ. இஸ்ராயேலரிடையே பிளவு (10:1-16:14).

1. ரெகபயாமின் ஆட்சி (10:1-12:16).

2. அபியாவின் ஆட்சியும் ரெகபயாமின் முடிவும் (13:1-22).

3. ஆசாவின் நல்லாட்சி (14:1-16:14).

ஆ. சமூக அமைதியின்மைக் காலம் (17:1-20:37).

1. யோசபாத்து (873-849), (17:1-20:37).

2. அத்தலியா (849-837), (21:1-23:21).

3. யோவாசும் (837-800), அமட்சி யாவும் (24:1-25:28).

4. ஊசியா (26:1-23).

5. யோத்தாம் (27:1-9).

இ. அன்னியர் படையெடுப்புக்கள் (28:1-36:23).

1. ஆகாசும் அவன் பாவமும் (28:1-27).

2. எசேக்கியாவின் சீர்திருத்தமும் ஒன்றிப்பு இயக்கமும் (29:1-32:33).

3. மனாசேயும் ஆமோனும் (33:1-25).

4. யோசியாவும் அவன் சீர்திருத்தமும் (34:1-35:27).

5. பாபிலோனியாவைச் சார்ந்த பொம்மை அரசர்களும் அழிவும் (36:1-23).

மக்கள் நாடு கடத்தப்பட்டு அவதியுற்றனர். மீண்டும் எருசலேம் ஆலயத்தைக் கட்ட பாரசீக மன்னன் சைரசு ஆணை இடுவதோடு நாளாகமம் முடிகிறது. எஸ்ரா, நெகேமியா ஆகமங்கள் இவ்வரலாற்றை நிறைவு செய்யும்.

10. **சிறப்புக் கருத்துக்கள்:** அரசர்கள், இறைவாக்கினர் பற்றிய குறிப்புகள், அரசராகமங்களுக்கு அளிக்கப்பட்ட அறிமுகத்தில் காண்க.

அ. **மரபுக்கொடிகள்:** முதல் ஒன்பது

அதிகாரங்கள் மரபுக்கொடிகளைக் கொண்டுள்ளன. பிரிந்து சென்ற வட இனத்தவரின் மரபுக்கொடிகள் தாவீது காலத்துக்கு அப்பால் கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக, அரசு மரபுக்குப் பற்றுறுதியுடைய பென்யமின், லேவியரின் மரபுக்கொடிகள் நாடு கடத்தப்பட்ட காலம் வரை தொடர்ந்து கொடுக்கப்படுகின்றன. தாவீது அரசனின் வழித்தோன்றல்களின் மரபுக்கொடி எஸ்ரா, நெகேமியாவின் காலம்வரை கொடுக்கப்படுகிறது. இஸ்ராயேலின் அரசர்கள் தாவீதின் புதல்வர்களோடு தொடர்பு கொண்ட அளவிற்குத்தான் குறிக்கப்பெறுகின்றனர்.

பவுல் இம்மரபுக் கொடிகளை வெறுத்து ஒதுக்கலாம் (1 திமொ 1:4; தீத் 3:9). ஆனால் இம்மரபுக்கொடிகளை யூதர்கள் பெரிதும் மதித்தனர். இம்மரபுக் கொடிகள் வறட்சி மிக்க பெயர்களின் தொகுப்பாகத் தோன்றலாம். ஆனால் நுண்ணோக்கோடு அவற்றின் வரலாற்று உட்கருத்தை நோக்கினால் அவற்றின் பின் நிற்கும் வரலாற்று வளர்ச்சியும் பல வண்ணமிக்க உருவக் காட்சியும் தோன்றும்.

இம்மரபுக்கொடிகள் இஸ்ராயேலரின் தொடர்ச்சியான குடும்ப வரிசையைக் கொடுக்கின்றன. இவை, இஸ்ராயேல் சமூகத்தின் இன, குடும்ப அமைப்பிலிருந்து, தங்களது முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒருவன், அவன் சேர்ந்த இனம், குடும்பத்திற்கு ஏற்ற உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றான். நாடு கடத்தப்பட்டபின் தங்களது குருகுல மரபுக்கொடிகளைக் காட்ட முடியாதவர்கள், குருத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதை நாம் அறிவோம் (எஸ் 2:59-65; நெகே 7:61-65). இம்மரபுக் கொடிகள் வேறு இடங்களில் காணப்படாத வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுக்கின்றன. இவை செயற்கை முறையில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இம்மரபுப் பட்டியலில் அடங்கிய அதிகாரங்களிலும் ஆசிரியர் அவருக்கு விருப்பமான சில போதகங்களை எடுத்துக் கூறுகிறார். இவர் நாட்டின் ஆன்மீக வாழ்வில் முதன்மையான அக்கறை கொண்டவர். ஆகவே, இறைவனுக்குக் கீழ்ப்படிதல் (1 நாள் 2:7; 10:11-14), இறைவனிடம் செபித்தல் (4:9-10; 5:18-20), இறைவனுக்குப் பணிசெய்தல் (6:48;9:13) ஆகிய போதனை பற்றிக் கூறுகிறார். இவை குருகுலத்திற்கு மிக முக்கியமானவையாகும்.

**ஆ. அரசர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு:** நாளாகம ஆசிரியரின் கருத்துப்படி சவுல் கீழ்ப்படியாத சுயமையம் கொண்ட குற்றவாளி; அரசனாய் இருக்க முழுவதும் தகுதியற்றவன். ஆகவே, அவன் சில நல்ல செயல்கள் செய்திருந்தாலும், அவனது ஆட்சியைப்பற்றி இக்குருகுல வரலாற்று ஆசிரியருக்கு அக்கறையேயில்லை. அவரைப் பொறுத்தமட்டும் சவுலின்மேல் இறைவன் இட்ட தீர்ப்பைச் சுட்டிக் காட்டுவதுதான். "ஆண்டவர் அவரைச் சாகடித்து அவரது அரசை ஈசாயின் மகன் தாவீதுக்குக் கொடுத்தார்" (10:142).

தாவீதின் அரியணை பற்றி மிகுந்த மனவெழுச்சியோடு அக்கறை கொள்கிறார். அடுத்த பதினாறு அதிகாரங்களில் தாவீதின் வரலாற்றைக் கூறுகிறார். இஃது ஒரு விளக்கம் பெற்ற வரலாறு. தாவீது குடும்பத்துக்கு இழிவு தரும் காரியங்கள் விட்டுவிடப்படுகின்றன. பத்சேபாவுக்கும் அவளது கணவன் உரியாவுக்கும் எதிராகத் தாவீது செய்த பாவம் குறிப்பிடப்பட வில்லை. அப்சலோம் தன் தகப்பனுக்கு எதிராகச் செய்த கிளர்ச்சி பற்றி ஒன்றுகூடக் கூறப்படவில்லை. தாவீது ஆட்சியின் கீழ் எபிரேய நாட்டு முழு வரலாற்றையும் தான் கொடுக்கவில்லை என்று நாளாகம ஆசிரியர் நன்கு அறிந்தே செயல்படுகிறார். சில ஆன்மீக உண்மைகளை வலியுறுத்த சில பொறுக்கி எடுக்கப்பட்ட நிகழ்ச்சியுரைகளையே பயன்படுத்துகிறார். தனது உடனடி நோக்கத்திற்குப் பயன்படாதவைகளை விட்டுவிடுகிறார். அவற்றை மற்ற நூல்களில் வாசகர்கள் வாசித்தறியலாம். நாளாகம ஆசிரியர் வரலாற்றை அணுகும் முறையில் கூட்டு முயற்சிக்கு முக்கியத்துவம்

கொடுக்கிறார்(1 நாள் 9:17-34; 15:16-24; 18:14-17; 28:21). இறைவனின் சட்டத்திற்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகிறார் ஆசிரியர். தாவீது அரசனுக்குப் பணிந்து நடக்கிறார். அவரைச் சார்ந்து செயல்படுகிறார். தேவையின்போது இறைவனது ஆலோசனையைத் தேடுகிறார். ஆன்மீக காரியங்களுக்கு முதலிடம் கொடுக்கிறார். இதைக் குருகுல ஆசிரியர் மிகுந்த ஆர்வத்தோடு எடுத்துக் கூறுகிறார். தாவீதின் வெற்றிகள் ஓர் படிப்பினையைக் கொடுக்கின்றன. இறைவனை ஒருவன் மதித்து நடந்தால் அவர் அவனைச் செழிப்புறச் செய்வார்.

**இ. ஆலயம்:** இவ்வாசிரியரது சிறப்புக் கருத்துக்களில் ஒன்று ஆலயமாகும். ஆலயம், அதன் நிர்வாகம், கட்டடம், திருநிலைப்படுத்துதல் ஆகியவற்றை விரிவாக எடுத்துக் கூறுகிறார். சாலமோனின் ஆட்சியைப்பற்றிப் பொறுக்கி எடுத்த நிகழ்ச்சிகளை மட்டும் கொடுக்கிறார். சாலமோனின் பாவங்கள் தீய செயல்கள் பற்றி ஒன்றுமே கூறவில்லை. சாலமோனை ஆசிரியர் இறைவனுக்கு ஆலயம் கட்டிய மன்னன் என்ற அளவிலே நோக்குகிறார்.

**ஈ. மாறுபாடுகள் நிறைந்த வரலாறு:** இந்நூலின் மீதிப்பகுதிகளும் எபிரேய வரலாற்றில் பொறுக்கி எடுக்கப்பட்ட பகுதிகளாகும். வடநாட்டு அரசர்களைப் பற்றி ஆசிரியருக்கு அக்கறையில்லை. அப்படி ஏது கூறினாலும் அவர்கள் தென்னாட்டு அரசைப் பாதித்த அளவே கூறப்படும். அரசராகமங்களில் தீமைக்கும் சண்டைக்கும் பெயர் பெற்ற அபியா (1 அர 15:1-8) நாளாகமத்தில் அதன் ஆசிரியர் விரும்பிப் போதிக்கும் கருத்துக்களை எடுத்துக்கூறும் சாதனமாகிறான் (2 நாள் 13). அவை: தாவீதின் கீழ் ஒன்றித்த அரசும், அவருக்குப்பின் வந்த இறைவனால் நியமிக்கப்பட்டவர்களும் (2 நாள் 13:4-7), சிலை வணக்கம் என்ற பாவமும் (13:6), இறைவனால் நியமிக்கப்பட்ட குருத்துவமும் அவன் உதவியாளர்களும் (13:9-10), சரியான சூழ்நிலையில் எருசலேம் ஆலயத்தில் சரியான முறைப்படி பலி செலுத்துவதை வலியுறுத்திக் கூறுவதும் (13:11-12) ஆகும்.

உ. ஆன்மீகக் காரியங்களுக்கு முதன்மை அளிப்பவர்கள் இறைவனால் ஆற்றல் மிக்க விதத்தில் ஆசீர்வதிக்கப்படுவர்; பெரிதாக இறை உதவி பெறுவர். யோசபாத்து இதற்கு ஒரு தலை சிறந்த எடுத்துக்காட்டாகும் (2 நாள் 20:1-30).

இப்பகுதியில் நாளாகம ஆசிரியர் சில சிறப்பான படிப்பினைகளைத் தருகிறார்.

1. **இறைவனை நம்பு.** இந்நூல் ஆசிரியரது சிந்தனையில் இறைவனை முழுவதும் சார்ந்திருப்பதும் நம்புவதும் மிக முக்கியமான தொன்றாகும் (2 நாள் 13:18; 14:11; 16:7-9; 20:5-17; 25:8; 32:7-8).

2. **இறைவனுக்குக் கீழ்ப்படி.** ஆசிரியர் சட்டத்திற்குக் காட்டும் அக்கறை பெரிது. இறைவனுக்குப் பணிபவர்களும், குருக்களின் ஆலோசனையை ஏற்பவர்களும் வளம் பெறுவர்; உள்ள உரம் பெறுவர் (2 நாள் 14:2-4; 20. 23; 18:25; 4; 30:16; 34:19-21, 31). சிலை வணக்கத்தையும் தூய்மை கெட்ட வழிபாடுகளையும் அகற்றிய அரசர்கள் சிறப்பான விதத்தில் புகழப்படுகின்றனர் (14:3-5; 15:8-16; 17:6; 23:17; 31:1; 33:15; 34:3-7). போலிவழி பாட்டை உற்சாகமூட்டுபவர்கள் தீர்வையிடப்பட்டு, தண்டிக்கப்படுவர் (25:20).

3. **இறைவனைப் போற்று.** இறைவன் யார் என்று எண்ணி அவரை ஆராதி. இறைவனை ஏற்று நமது வாழ்வில் போற்றும்போது, அங்கே வீம்புச் செருக்குடைய சுயசார்புக்கு இடமேயில்லை. அகந்தையும், சுயநிறைவும் பாவங்களிலெல்லாம் மோசமானதாகும். வாசகர்களைத் தாழ்ச்சிக்கும் இறைவனையே முழுவதும் சார்ந்திருக்கும்படியும் ஆசிரியர் அழைக்கிறார்.

4. **இறைவனைத் தேடு.** ஆசிரியர் குருகுலத்தைச் சேர்ந்தவர்; ஆதலால், செபத்தில்

அக்கறை காட்டுகிறார். இறைவனைத் தேடுபவர்கள் உதவி பெறுவர். அப்படி இறைவனைத் தேடாதவர்கள் அவர்களின் வீம்புச் செருக்கு மிக்க சுய நம்பிக்கைக்காகத் தண்டனை பெறுவர் (14:7; 15:4-12; 16:12; 17:3-4; 18:31; 20:3-4; 26:5; 30:18-19; 31:21).

**11. வரலாற்று மதிப்பீடு:** அறிஞர்கள் பலர் நாளாகமங்கள் வரலாற்று நூல்களே அல்ல என்று சாதிப்பர். இவற்றில் கூறப்படுபவை தொல்பொருள் இயலால் நிறுவப்படுபவைகளிலிருந்தும் வேறுபடுகின்றன. மேலும் விவிலியத்தின் பிற நூல்களில் கூறப்படுபவைகளிலிருந்தும் வேறுபடுகின்றன. நாளாகம ஆசிரியர் தனது மூலங்களைச் சுதந்தரமாகப் பயன்படுத்தும் முறை இந்நூலின் வரலாற்று மதிப்பை ஐயுறச் செய்கிறது. சான்று 2 நாள் 13:3-இல் அபியா 40,000 போர் வீரர்களுடன் போருக்குச் சென்றான் என்று கூறப்படுகிறது. முதலாம் எரோபயாமின் சேனையில் 8,00,000 வீரர்கள் இருந்தனர். இவை வரலாற்று மதிப்புடையவை அல்ல. மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாகும். 2 நாள் 8:2-இன்படி தீரின் அரசனான ஈராம் சில நகரங்களைச் சாலமோனுக்குக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் இந்நகரங்களைச் சாலமோன் தான் ஈராமுக்குக் கொடுத்தான் (1 அர 9:10). அரவுனாவின் போரடிக்கும் களத்திற்குத் தாவீது 10 செக்கேல் தான் கொடுத்து வாங்கினார் (2 சாமு 24:24). ஆகவே, 1 நாள் 21:25-இல் 600 செக்கேல் கொடுத்ததாகக் கூறப்படுவது மிகைப்படுத்திக் கூறுவதாகும். இப்படிப் பல சான்றுகளைக் கூறலாம்.

ஒவ்வொரு வரலாற்று ஆசிரியரும் ஏதாவது ஒரு தனிப்பட்ட நோக்கில்தான் எழுதுகிறார். அவர் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு காரியமும் பொறுக்கி எடுக்கப்பட்ட காரியமாகும். ஆசிரியன் தான் கூற இருக்கும் வரலாற்றில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனது குறிக்கோளுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கிறான், பொறுக்கி எடுக்கிறான். நாம் இந்நாளாகம வரலாற்றைப்படிக்கத் தொடங்கும்போது ஒரு பெரும் கேள்வி எழுகிறது. அஃது ஒருபுறம் இஸ்ராயேல் நாடு பற்றிய முக்கியமான செய்திகள் ஏன் விடப்பட்டுள்ளன? மறுபுறம் ஏன் சில காரியங்கள் மட்டும் நுணுக்கமாய் நீண்டதாக எடுத்துக் கூறப்படுகின்றன? இக்கேள்விகளுக்கு நாம் சரியான பதிலைக் கண்டுணர்ந்தால் இந்நூலில் காணப்படும் வரலாறு தனித்தன்மையுடையது, போதக நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்று உணர்வோம். ஒரு வரலாற்றில் பல காரியங்கள் இருக்க ஒரு சிலவற்றை மட்டும் ஆசிரியர் பொறுக்கி எடுக்கும்போது ஒரு நோக்கோடு செய்கிறார். அந்நோக்கே அக்காரியத்திற்கு விளக்கமாக அமைகிறது. இப்படித் தேர்ந்து பொறுக்கி எடுக்கப்பட்ட காரியம் "விளக்க மளிக்கப்பட்ட" காரியமாகிறது. வரலாறும் விளக்கமளிக்கப்பட்ட வரலாறு ஆகிறது. நாளாகம ஆசிரியர் சமய வாழ்வில்தான் மற்றெதையும்விட அக்கறை கொள்கிறார். அவர் எழுதுவது ஓர் "ஆன்மீக வரலாறு" ஆகும். இதில்தான் இந்நூலின் மதிப்பு அடங்கியிருக்கிறது.

வரலாற்று ஆசிரியன் சிலவற்றைப் பொறுக்கி எடுப்பதும், சிலவற்றை நிராகரிப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்த அடிப்படையில் இந்நூல் இறைவனுடைய பழைய ஏற்பாட்டு அரசின் அடிப்படைத் தன்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இதை வேறு எந்த வரலாற்றின் விரிவான அரசியல், பொருளாதார சமூக விவரிப்புகளும் கொடுக்கவே முடியாது. மேலும் விவிலியத்தின் எந்த நூலும், இக்காலப்பொருளில், வரலாற்று நூல் அன்று. அவை யாவும் ஓர் அளவு வரலாறு பற்றிய இறையியலாகும். இக்கூறு நாளாகமத்தில் அதிகமாகக் காணப்பட்டால், அதற்காக அதன் நம்பகத்தன்மையைத் தாக்க வேண்டியதில்லை; குறைத்துக் கூற வேண்டியதில்லை. கட்டுப்பாடுடைய வரலாற்றுப் பணிச்சட்டத்தை ஒட்டித்தான் பழைய ஏற்பாட்டுத் திருச்சபையின் உயிர்மையான சாரத்தின் விவிலிய இறையியலை எடுத்துக்கூறுகிறார் நாளாகம ஆசிரியர். தான் ஒருதலைப்பட்சமாய் இருப்பதாகத்

தோன்றலாம் என்பதையும் அவர் உணர்வதாகத் தோன்றுகிறது. அதனால்தான் சமயம் சாராத மூலங்களை அடிக்கடி சுட்டிக் காட்டுகிறார். துர்லபமாக இம்மூலங்கள் நமக்குக் கிடைத்தில; தொலைந்து போயின. தொல்பொருள் ஆய்வு ஓர் அளவுக்கு இந்த இழப்பை ஈடு செய்ய உதவுகிறது. இவற்றையெல்லாம் மனதில் கொண்டால் அரசராகமங்களோடு சேர்ந்து நாளாகமங்களும் இஸ்ராயேலின் அரசர்கள் பற்றிய, வரலாறு பற்றிய நம்பகமான மூலமாகும் எனலாம்.

12. **இறையியல் போதனை:** சீனாய் உடன் படிக்கைமேல் தாவீதின் உடன்படிக்கை கொண்டிருந்த மேலாண்மையை எடுத்துக் காட்டுவது நாளாகம ஆசிரியரின் நோக்கம் என்று முன்பு கூறினோம். சீனாய் மலையில் யாவேக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையில் மோசே எப்படி நடுவராக இருந்தாரோ அதேபோல் கடவுளையும் கானானில் தங்குவதற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப் பட்டவர்களையும் இணைக்கும் உடன்படிக்கை தாவீதின் பொறுப்பில் விடப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் விளைவு தாவீது மரபு அரசர்களுக்கெல்லாம் நீட்டப்படுகிறது. இது யாவே யாவரின் மேலும் கொண்டிருக்கும் அரசை உண்மையிலேயே தொடங்குகிறது. வடநாட்டு இனத்தவர் பிரிந்து சென்றபின்னும், யூதா, பென்யமின் ஆகியோருடைய பகுதியான தென்னாடு யாக்கோபின் எல்லா இனத்தவருக்கும் திறந்ததாகவே இருக்கிறது. பிற இனத்தவர் அங்கு வாழ்கின்றனர் (2 நாள் 15:8-15; 30:1-22). எகிப்தியர் உட்பட அயல் இனத்தவரும் ஒதுக்கப்படவில்லை. யாவரையும் உள்ளடக்கும் அரசின் தலைவராகத் தாவீது காட்டப்பெறுகிறார்.

அரச மெசியாக் கருத்து உபாகம வரலாற்றிலும் (சாமுவேல் ஆகமங்கள்) சங்கீதங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அதே கருத்து நாளாகமம் முழுவதும் பரவிநிற்கின்றது. இந்நூலுக்கு அது புதிய வண்ணம் அளிக்கிறது. நாத்தானின் இறைவாக்கு, புதிய ஒளியில் காட்டப்படுகிறது (2 அரச 7:14-16-ஐ 1 நாள் 17:13-24-ஓடு ஒப்பிடுக). அது சாலமோனையும் கடந்து தாவீதின் அரச மரபு முழுவதற்கும் பொறுத்திக் காட்டப்பெறுகிறது. தாவீதின் மரபு அரசர்களின் குறைபாடுகளினால் இந்நம்பிக்கை கைவிடப்பட வேண்டியதொன்றாகத் தோன்றலாம். ஆயினும், தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, வருங்காலத்தில் (இறுதிக் காலத்தில்) நிறைவேறுதலை நாளாகம ஆசிரியர் உண்மையில் எதிர்பார்க்கிறார்.

யாவேயின் உறைவிடமாகிய எருசலேம் ஆலயம் வழிபாட்டின் மையமாகத் திகழ்கிறது. அங்கே நிறுவப்பட்ட எல்லா வழிபாட்டுச் சடங்குகளும் தாவீதிலிருந்து தோன்றுவதாகக் காட்டப்படுகின்றன. ஈசாயின் மகனான தாவீது ஓபேது ஏதோமின் வீட்டிலிருந்து சீயோனுக்குப் பெட்டகத்தை மட்டும் மாற்றவில்லை; யாவேயின் வீட்டைக் கட்டுவதற்குத் தயாரிப்பு மட்டும் செய்யவில்லை; அங்கு நடக்கும் திருப்பணியையும் ஒழுங்கு செய்தார். இங்கே குருக்களோடு லேவியரும் சேர்ந்து பணிபுரிவதைப் பார்க்கிறோம். குருக்களின் சட்டமும் உபாகமப் பாரம்பரியமும் லேவியரது பணியைக் கட்டுப்படுத்தின (எண் 1:50-54; 3:7-8; 4:157-9; உப 10:8; 18:1-8). ஆனால், தாவீதின் வழிபாட்டு முறை அவர்களுக்கு ஆலயத்தில் நிலையாகப் பணிபுரியும் தகுதியை அளிக்கிறது. மோசே குருக்களை நிறுவியது போல், தாவீது லேவியரின் வகைகளையும் அவர்களைப் பற்றிய விவரங்களையும் நிர்ணயித்தார். புனித இசைக்கும் ஓர் அமைப்பை நிறுவினார். அவர் ஆலயத்தின் எல்லாப் பணிக்கும் அடிப்படையிட்டார். நாளாகம ஆசிரியர் ஒரு லேவிய பாடகராக இருந்திருக்க வேண்டும். அதிலிருந்து பெருமையும், வாழ்க்கையும் ஊதியமும் பெற்றிருக்க வேண்டும். தன்னுரிமையை எண்பிக்கவும், முன்னேற்றவும் முயல்கிறார். இந்தச் சுய நலத்துக்குப்பின் நிற்கும், அவர் நிறுவ விரும்பும் ஓர் அடிப்படை மதிப்பையும் கண்டுணரலாம். அது கலைச்சுவையுடைய

குரலைப் பயன்படுத்தும் பழமைப் பற்றுடைய வழிபாடு ஒரு தேவையென மனித இயற்கையை உணர்த்துவதும், திருத்தல ஊழியர்களும் தங்கள் வேலைக்கேற்ற ஊதியம் பெறுவது சமூக நீதி முறையாகும் என்பதுமாகும். நாளாகம ஆசிரியர் ஆர்வம் காட்டும் வழிபாட்டுச் சடங்குகள் பலனற்றவையன்று. இறைவனது வார்த்தையால் வளம் பெறுகின்றன. இறைவனைச் சார்ந்த காரியங்களில் கொண்ட ஆர்வ மிகுதியால்தான் சிலர் லேவியரின் அலுவலை ஏற்றுக் கொள்கின்றனர் (2 நாள் 30:22). இவர்கள் இறைவனது தீர்மானங்களை ஊடுருவிப் பார்க்கின்றனர். இவர்கள் எக்காலத்தும் இருப்பர். பிறரை நீதிக்கு இட்டுச் செல்வர் (தானி 12:3).

எருசலேம் ஆலயத்தின் பெருமை அதற்குரிய விதத்தில் ஏற்கெனவே சுடர் வீசி எரிந்தது. இஸ்ராயேலின் வாழ்வு முழுவதும் ஆலயத்தைச் சுற்றி அமைந்திருந்தது. வழிபாட்டுச் சடங்குகள், சுத்திகரச் சடங்குகள், பலிகள், சிறப்பாக நன்றிப் பலிகள், புனித விழாக்களில் பங்கெடுத்தல் ஆகியவற்றின் வழியாக மக்களின் ஒழுக்க சமய வாழ்வும், புனிதப் படுத்தலும் இங்கே தான் நடந்தன. இங்கேதான் இறைவனைத் தேடினர். இங்குதான் அவரைக் கண்டடைந்தனர். பதிதத்திற்குப்பின் உடன்படிக்கை இங்குதான் புதுப்பிக்கப்பட வேண்டும். விசுவாசம் புதுப்பிக்கப்பட வேண்டும்; ஆழப்படுத்தப்பட வேண்டும். இங்கு சங்கீதங்களைப் பாடிக்கொண்டும் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டும் கொண்டாடப்படும் பெரும் விழாக்களை நினைவுகூர்வதில் நாளாகம ஆசிரியர் பெரும் மகிழ்ச்சி கொள்கிறார் (2 நாள் 5:11; 6:6; 29:25-30; 30:21).

இவ்விதம் நாளாகம ஆசிரியர் இறையரசின் சமய சமூகத்தைப் பார்க்கிறார். இவ்வரசை யாவேயின் அபிடேகம் பெற்றவர்களும் மெசியாவின் முன்னோடிகளுமான தாவீதும் அவரது வழித்தோன்றல்களும் ஆளுவர். வரலாற்று மன்னராட்சியைத் திரும்ப அமைத்தல் முடியாத போதும் தாவீது மரபின் பெருமையை யாவது திரும்ப நிறுவ முயல்கிறார். அதன் விளைவாக இரண்டாம் தாவீதின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நிலை நிறுத்துகிறார். இந்த விசுவாசமும் நம்பிக்கையும் இறைவாக்கினர் களிலும் சங்கீத ஆசிரியர்களின் ஆர்வ மிக்க அறைகூவல்களிலும் பரவி நிற்கின்றன.

நாளாகம ஆசிரியரது இறைவனைப் பற்றிய போதகம் பெரும் கருத்தியலான தன்று; யாவே பாரம்பரியத்தில் காணப்படுவது போன்று, மனிதப்பண்புகள் சாற்றிக் கூறப்பட்டதும் அன்று, அனுபவ வாயிலாக அறியப்பட்ட கடமைகளையும் அதன்பின் நிற்பதாக அறியப்பட்ட காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டது. சமூக மரபுக்கொடிகள் கவனமாய்க் காக்கப்பட வேண்டும். காரணம் இவற்றின் வழியாகத்தான் இறைவனின் சித்தப்படி மனிதச்செயல்கள் வழிவகுக்கப்படுகின்றன; தொடர்ந்து நடைபெறுகின்றன. இறைவனோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையில் மனிதனது பாகத்தை நிறைவேற்ற சன்மானமும் தண்டனையும் அளிக்கும் கருத்தை உபாகமப் பாரம்பரியத்திலிருந்து எடுத்து நாளாகம ஆசிரியர் பயன்படுத்துகிறார். இறையாட்சியில் மனிதர் எந்த அளவுக்கு அதிகமாக இறைவனோடு நெருங்கித் தொடர்பு கொள்கின்றனரோ, அந்த அளவுக்குக் குற்றத்தால் பயனே இல்லை என்று அனுபவ வாயிலாகக் கண்டுணர்வர். அரசராகமங்களில் காணப்படுவதைவிட இந்நூலில் உபாகமச் சட்டம் அரசர்களின்மீது தீர்ப்பை வலியுறுத்திக் கூறுகிறது. அதன் விளைவாக அரசில் செயல்படும் சீர்திருத்தத்தையும் கடந்த தன்மை, மேலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒரே இறைவன் கோட்பாட்டுக்கு மதிப்பை மனதில் நிலைநிற்கச் செய்கிறது. இக்கருத்து இறைவனின் புனிதமும் ஆன்மீகத் தன்மையும் கண்டுணரப்படும் அளவிற்குத் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது; சுத்தி செய்யப்படுகிறது. ஆயினும் யாவேயின் அன்பு மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது. ஏற்கெனவே

போர் வீரரான கடவுளின் இடத்தை அமைதியின் அரசர் ஏற்றுக்கொள்கிறார். பற்றுறுதி உள்ளோருக்குத் தாவீதின் அரசு யாவேயால் பாதுகாக்கப்படும் அமைதியின் அரசாகும். யாவேயின் அன்பை நிராகரிப்பவருக்கு அவரது தண்டனையை அளிக்கும் அரசாகும் அவ்வரசு.

13. **நாடு கடத்தப்பட்டு திரும்பியபின் இருந்த சமூகம்:** நாளாகம ஆசிரியர் எழுதியபோது தாவீது மரபைச் சேர்ந்த அரசன் ஒருவனும் சமுதாயத்தில் இல்லையாதலால் ஓர் உன்னத மாதிரியான சமுதாயமாக மாறி, ஓர் அரசனுக்குத் தன்னையே ஆயத்தம் செய்ய வேண்டியிருந்தது. இந்தக் குறிக்கோள் மோசே சட்டத்தில் காணப்படும் இறைவனுடைய வார்த்தைக்கு அதிகமாகப் பற்றுறுதிக்கும், அதிகத் துல்லியமாக வழிபாட்டிற்கும் கட்டாயப்படுத்தியது (எசே 9:10-14). இந்த நிறைவான சமூகத்தின் உன்னத மாதிரியை மனதில் பதிய வைக்க நாளாகம ஆசிரியர் தனது காலத்தில் வழக்கிலிருந்து வழிபாட்டு முறைகளைச் சட்டப்படி அமைத்துள்ளதாக்க முயல்கிறார். இதற்காக இவற்றைத் தாவீதோடு இணைத்துக் கூறுகிறார் (1 நாள் 23:29). சாலமோனின் ஆலயத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும், சிறப்பாக, லேவியர்களுக்கும் பாடகர்களுக்கும், சிறப்பிடம் கொடுக்கிறார் (2 நாள் 5:11-13).

இப்படியாகப் பரிசுத்த மக்களாக அழைக்கப்பட்டு அன்னிய அரசனுடைய பணிக்குத் தாழ்த்தப்பட்டிருந்த யூதர்கள் (நெகே 9:36:37) தங்களின் உண்மையான அரசனான யாவேயின் அடுத்த இறை இடையீட்டை நோக்கி நம்பிக்கை மிக்க எதிர்பார்ப்போடு திரும்பினர் (எஸ் 9:13; நெகே 9:32).

14. **முடிவுரை:** அரசராகமத்தில் கி.மு. 587-இல் எருசலேமின் அழிவு, யூதர்கள் நாடு கடத்தப்படுதல் ஆகியவை பற்றி வாசித்தபின் வாசகர்களிடம் ஓர் ஐய உணர்வு ஏற்படும். பாபிலோனியர் வெற்றி முழுமையுடையதாகும்; அரசராகமங்களில் காணப்படும் அரசர்களின் பற்றுறுதியில் சோர்வுமிக்க வரலாறு, மகிமைமிக்க வருங்காலம் பற்றிய இஸ்ராயேலின் நம்பிக்கை பழுது பார்க்க முடியாத அளவுக்குத் தகர்ந்து போய்விட்டது என்பனவாகும். ஆனால், எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இஸ்ராயேல் இன்னும் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

யூதாவின் வரலாற்றில் இறுதி நூற்றாண்டுகளில் அழிக்க முடியாத நம்பிக்கையின் புதிய தீக்கொழுந்து தூண்டப்படுகிறது. யூதாவிலும், உலகின் மேலும் தாவீது மரபைச் சார்ந்த மற்றொரு அரசன் ஆள்வார். இவ்வரசர் தாவீதிடமும் அவர் பின் வந்தோர்களிடமும் காணப்பட்ட குறைகளுக்கு ஈடுகட்டுவார். நாத்தான் வழியாக அரச மரபு பற்றி அளிக்கப்பட்ட வாக்குறுதியைச் செயல்படுத்துவார் என்று இஸ்ராயேல் நம்புகிறது. இறைவாக்கினர் வழியாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வுறுதி தவற முடியாது. ஆகவே இஸ்ராயேல் நம்புகிறது. "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்" (எசா 40:8). ஆகவே பாழ்நிலையிலிலும் நம்பிக்கை இருக்கிறது. இதைத்தான் விவிலியத்தில் நாளாகமங்கள் முதலிய நூல்கள் எடுத்தியம்புகின்றன; இந்நம்பிக்கைக்கு யாவரையும் அழைக்கின்றன.

## நாளேடு (CHRONICLES)

சிறப்புமிக்க நிகழ்ச்சிகளைப் பதிந்து வைக்கும் ஏடுகள். இவை பெரும்பாலும் அரண்மனையிலோ ஆலயத்திலோ பாதுகாக்கப்பட்டன. இவை, புனித இடங்களுக்கு அளிக்கப்பட்ட அரசக் கொடைகளின் பட்டியலாக அல்லது போர்ச் செயல்களின் பட்டியல்களாக இருக்கலாம். வெற்றிகள் அணிசெய்யப்பட்டு மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம். தோல்விகளுக்கு நியாயம் காட்டி, விளக்கம் கூறப்படலாம் அல்லது புறக்கணிக்கப்படலாம். பாபிலோனின் நாள் பட்டியல் அல்லது அசீரிய மூதாதையர் பட்டியல் முதலியவை அந்தந்த ஆண்டின் முக்கிய நிகழ்ச்சி அல்லது நிலநடுக்கம் முதலிய இயற்கை நிகழ்ச்சி, அல்லது முக்கிய

அதிகாரியின் பெயரை வைத்து, தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கலாம். காலவரிசையை நிறுவ இவை பெரிதும் உதவுகின்றன. இந்த ஏடுகள் வரலாறு எழுதுவதின் தொடக்க முயற்சிகளைச் சுட்டுகின்றன.

பல எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய நாளேடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ, பெயரளவிலோ கிடைத்துள்ளன (காண். எஸ்த 2:23; 6:1). இத்தகைய ஏடுகள் பழங்கால இஸ்ராயேலிலும் இருந்திருக்கின்றன. இவைகள் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த 1-2 சாமுவேல், 1-2 அரசர்கள், 1-2 நாளாகமம் போன்ற நூல்களுக்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம். பதிவு ஏடுகள் (எஸ் 4:15; மலா 3:16; எண் 33:2) மற்றும் நாளேடுகள்ல் (நெகே 12:23), இஸ்ராயேல் வழித்தோன்றியமையை நிரூபிக்கும் தலைமுறைப்பட்டியல்கள் (எஸ் 2:62-63; நெகே 7:64-65) பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தாவீது அரசனின் நாளேடு (1 நாள் 27:24; காண். சாலமோன் அரசனின் பணிநூல்; 1 அர 11:41), இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரசர்களின் நூல்கள் (1 நாள் 9:1; 2 நாள் 16:11; 27:7), இறைவாக்கினர் செமாயா மற்றும் காட்சியாளர் இத்தோவின் நாளேடுகள் (12:15) ஆகியவை பெயர் கொடுக்கப்பட்ட நாளேடுகளில் சிலவாகும்.

**நாள் (DAY)**

நேரத்தை இது பிரித்துக்காட்டுகிறது. இந்தச்சொல் முக்கியமாக மூன்று பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அ) பகல் நேரத்தைக் குறிக்கும். அதாவது சூரியன் உதித்து, மறையும் வரையுள்ள நேரத்தை இரவிலிருந்து வேறுபடுத்தும் சொல் (ஆதி 1:5; 8:22; அ.ப. 20:31). இப்பொருளில் நாளானது காலை, நண்பகல், மாலை எனப் பிரிக்கப்பட்டுள்ளது (சங் 55:17). புதிய ஏற்பாட்டுக்காலத்திற்கு முன் நாளானது மணிகளாகப் பிரிக்கப்படவில்லை. பொதுவாக நாளை, சூரியன் உதிக்கும் நேரம், நாளின் வெப்ப நேரம், நாளின் குளுமையான நேரம், சூரியன் மறையும் நேரம் எனப் பிரித்தனர். புதிய ஏற்பாட்டிலே ஒளியையுடைய நாளானது மீட்பையும், நேர்மையையும் குறிக்கிறது (யோவா 11:9; உரோ 13:12-13). 1 தெச 5:58 கிறிஸ்தவர்களைப் பகலின் மக்கள் என அழைக்கிறது. திருவெளிப்பாடு நிறைவு பெற்ற நிலை-இரவே இல்லாமல் என்றும் நாளாகவே இருக்குமெனக் கூறுகிறது (திருவெளி 21:25).

ஆ) சாதாரண நாள் 24 மணி நேரத்தைக் கொண்டது. இது முதல் நாள் சூரிய உதயம் முதல் அடுத்த நாள் சூரிய உதயம் வரையில் அல்லது முதல் நாள் சூரியன் மறைவு முதல் அடுத்த நாள் சூரியன் மறைவு வரையில் கணக்கிடப்பட்டுள்ளது (ஆதி 7:24; யோபு 3:6; லூக் 9:37; அ.ப. 21:26). நாளும், நேரமும் பாகுபடுத்தப்பட்டுள்ளது (மத் 25:13). காலம் மணி, நாள், திங்கள், பருவம், ஆண்டு ஆகியவையாகப் பிரிக்கப்பட்டுள்ளது (கலா 4:9; திருவெளி 9:15). எபிரேய மக்களும் நாளை ஒரு விடியற்காலை முதல் அடுத்த காலை வரை கணக்கிட்டனர் (எண் 11:32; நீதி 19:5-9). பிறகு அவர்கள் நாளை, சூரியன் உதயம் முதல் சூரியன் மறையும் வரையிலும் உள்ள நேரமாகக் கணக்கிட்டனர். இதற்குச் சந்திரனை வைத்து விழாக்கள் அமைக்கப்பட்டதே காரணம் (ஆதி 1:5 தொ; யாத் 12:18; லேவி 23:32; எஸ்த 4:16; எசா 27:3; தானி 8:14; 2 கொரி 11:25). எபிரேயர், ஓய்வு நாளைத்தவிர மற்ற நாட்களுக்குப் பெயர் கொடுக்கவில்லை. புதிய ஏற்பாட்டிலே வாரநாட்கள் எண்களைப் பெற்றிருந்தன (லூக் 24:1). நாளின் பகுதிகள் முழுநாளாக எண்ணப்படலாம் என்பதால் மூன்று நாளைக்குப்பின் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது இயேசு புதைக்கப்பட்ட காலமுழுவதையும் குறிக்கிறது (மாற் 8:31).

இ) மேலும், இந்த நாள் ஒரு செயலின் காலத்தையோ, ஒரு நிலையையோ குறிக்கிறது. எனவே 'அந்நாளில்' என்பது 'அப்பொழுது' என்ற பொருளைக் கொண்டுள்ளது (ஆதி 2:4; லேவி 14:2). ஒரு மனிதன் வாழ்ந்த காலம் அல்லது

ஆட்சிக்காலம் "அவனுடைய நாட்கள்" என அழைக்கப்பட்டது (ஆதி 26:1; 1 அர 10:21; எபி 5:7). துன்ப நாள் (சங் 20:1), கடவுளுடைய கோபத்தின் நாள் (யோபு 20:28), மெசியாவின் நாள் (யோவா 8:56), மீட்பின் நாள் (2 கொரி 6:2), பொல்லாத நாள் (எபே 6:13) என்று பலவிதநாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பொருளில் நாள் என்பது ஒரு போரின் நேரமாகவோ, நீதி வழங்குதலின் நேரமாகவோ அழிவின் நேரமாகவோ, மீட்பின் நேரமாகவோ இருக்கலாம் (உப 16:3; சங் 137:7; எசா 9:4; எசே 30:9). இது போன்றவையே இறுதிக்கால இயலில் வரும் "அந்நாளில்," "பிற்காலத்தில்," "ஆண்டவரின் நாளில்" போன்ற சொற்றொடர்கள்.

**நானேயா (NANEA)**

பாரசீகத்தில் உள்ள ஒரு கோவிலான இதை நான்காம் அந்தியோக்கு அரசன் கொள்ளையடிக்க முயன்றான் (1 மக் 6:2). இஃது அர்த்தமியின் கோவில் என யோசிப் பசால் அழைக்கப்படுகிறது. இங்கு மகா அலக்சாந்தரின் தங்கக் கவசம், கேடயம் ஆகியன இருந்ததைக் கேள்விப்பட்டு அந்தியோக்கு கொள்ளையடிக்கச் சென்றபோது, அங்குள்ள மக்கள் அவனைத் துரத்தியடித்ததால் அவன் சீரியாவுக்கு மிகுந்த வருத்தத்துடன் திரும்பினான். நானேயா எனப்படும் தேவதை, பாபிலோனில் நானா எனவும், அப்ரோடைட் எனக் கிரேக்கத்திலும், வீனஸ் என உரோமையிலும் அழைக்கப்படுகிறது.

2 மக் 1:13-18-இன் விவரிப்பின்படி அந்தியோக்கு இக்கோவிலின் தேவதையை மணக்கப் போவதாகக் கூறி இக்கோவிலின் சொத்து முழுவதும் தனக்கு வரதட்சணையாகச் சேர வேண்டுமென்றான். இக்கோவிலின் குருக்கள் அவனை உள்ளே அழைத்துச் சென்று தந்திரமாகக் கொன்றுவிட்டனர். இந்நிகழ்ச்சியில் கூறப்படுபவன்- மூன்றாம் அந்தியோக்குதான் என்றும், இவன் எலிமேயாவிலுள்ள பிலூவின் கோவிலைக் கொள்ளையடிக்க முயன்றபோது இவன் உயிரை இழந்தான் என்றும் சிலர் கருதுவர்.

இங்குக் குறிக்கப்படுபவன் பார்த்தியருக்கு எதிரான போரில் கி.மு. 238-இல் உயிரிழந்த ஏழாம் அந்தியோக்கு சிதேத்தசு என்று வேறுசிலர் கருதுவர். ஆனால், இரண்டாம் மக்கபேயர்நூல் ஆசிரியர் நான்காம் அந்தியோக்கு எப்பிபானைத்தான் கருத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும். எருசலேம் ஆலயத்தைப் பங்கப்படுத்தியதற்காக இவ்வாறு அவன் தண்டிக்கப்பட்டான் என்று அவர் கருதியிருக்க வேண்டும்.

**நான்கு படைவீரர்களைக் கொண்ட குழு (SQUAD)**

அ.ப. 12:1-11, புனித பேதுரு- நான்கு படைவீரர் கொண்ட குழுக்களால் காவல் காக்கப்பட்டதாகக் கூறுகின்றது. ஒவ்வொரு சாமத்துக்கும் ஒரு குழுவாக 4 குழுக்கள் பேதுருவின் காவலுக்கு இருந்தனர். பேதுரு, இருபடைவீரர்களுக்கு இடையே இரு விலங்குகள் மாட்டப்பட்டுத் தூங்க, வேறு இருவர் வாயிலுக்குக் காவல் செய்திருப்பர் என்று அறிகிறோம்.

**நிக்கப்பொலி (NICOPOLIS** - வெற்றியின் நகரம்)

நிக்கப்பொலி என்னும் பெயர் பல நகரங்களுக்குச் சூட்டப்பட்டிருந்தது. தீத் 3:12-இல் குறிப்பிட்டுள்ள நிக்கப்பொலி நகரைக் கண்டுபிடிக்க, பவுலின் வாழ்நாளில் இருந்த நிக்கப்பொலி என்னும் பெயர் கொண்ட நகரங்களையும் அவை குளிர்காலத்தில் தங்க ஏற்றவையா என்பதையும் அறியவேண்டும். பாம்பேயால் கட்டப்பட்ட நிக்கப்பொலியும், அகுஸ்துவால் அலக்சாந்திரியாவின் அருகில் கட்டப்பட்ட நிக்கப்பொலியும் வெகு தொலைவில் உள்ளன. நெஸ்தோ ஆற்றின் கரையிலுள்ள நிக்கப்பொலி திரேசன் என்பவரால் கட்டப்பட்டது. பித்தினியாவில் உள்ள நிக்கப்பொலி குளிர்காலத்தில் தங்க ஏற்ற இடம் அன்று.

இங்கு எப்பிருசில் உள்ள நிக்கப் பொலியையே தீத் 3:12 குறிப்பதாகக் கருத வேண்டும். இந்நகரம் அக்டேவியனால் தான் கி.மு. 31-இல் மாற்கு

அந்தோனியின் மீது வெற்றி கொண்ட நிகழ்ச்சியின் நினைவாகக் கட்டப்பட்டது. இந்நகரம், அர்த்தா வளைகுடாவிற்கு வடக்கில் அக்டேவியனது படைகள் தங்கியிருந்த இடத்திலேயே கட்டப்பட்டுள்ளது. பெரிய ஏரோது அங்குள்ள பொதுக்கட்டடங்களைக் கட்டினான் என்று யோசிப்பசு கூறுகின்றார். எப்பிக்தேத்து என்னும் தத்துவ மேதை கி.பி. 89-இல், தொமிசியன் என்னும் அரசனால், உரோமையிலிருந்து வெளியேற்றப்பட்டபின் இங்குதான் தங்கி இருந்தார். அலக்சாந்திரியா விவிலியத் தொகுப்பு, தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் முடிவில் இது நிக்கப்பொலியிலிருந்து எழுதப்பட்டது என்ற குறிப்பைச் சேர்க்கிறது. இது தவறானது என்று கருதலாம்.

அப்போஸ்தலர் பவுல், நிக்கப்பொலியில் குளிர்காலத்துக்குத் தங்கிவிட்டு, அங்கிருந்து இல்லிருக்கம் வழியாக உரோமைக்குச் செல்லத் திட்டமிட்டிருக்க வேண்டும் (தீத் 3:12).

**நிக்கானோர் (NICANOR** – வெற்றி பெற்றவன்)

1. நிக்கானோர்- அந்தியோக்கு எப்பிபான் அரசனின் படைத்தலைவனும், நண்பனும் (1: மக் 3:38), பத்திரொக்குலின் மகனும் (2 மக் 8:9) ஆவார். இவர் யூதர்களின் எதிரி. நிக்கானோர், யூதா மக்கபேயுவினால் நடத்தப்பட்ட கிளர்ச்சியை அடக்க, கி.மு. 166-இல், லீசியாவால் அனுப்பப்பட்ட மூன்று படைத்தலைவர்களுள் ஒருவர். இக்கிளர்ச்சியில் யூதா மக்கபேயு வெற்றி பெற்றார்.

நடந்த நிகழ்ச்சி பின்வருமாறு: நிக்கானோரும், அவனது படைகளும் எருசலேமுக்கு அருகிலுள்ள எம்மாவுவில் போர் செய்ய நிலைகொண்டனர். ஆனால், அப்படைகள் யூதாவால் விரட்டியடிக்கப் பட்டதால் அவர்கள் உயிருக்கு அஞ்சி, பெலிஸ்தியாவிற்கு ஓடிவிட்டனர். நிக்கானோர், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, அந்தியோக்கியா நகருக்கு மாறுவேடத்தில் ஓடியதாக இரண்டாம் மக்கபேயர் நூல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார் (2 மக் 8:34-36). யூதாவைத் தந்திரத்தால் பிடிக்க நிக்கானோர் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. கப்பர்நகுமில் நடந்த போரில் இரு படைகளுக்கும் அதிகசேதம் ஏற்பட்டது. கி.மு. 161, மார்ச் மாதத்தில் முதலாம் தெமேத்திரியு ஆட்சியில் அதசா, பெத்-கோரோன் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் நிக்கானோர் யூதாவால் தோற்கடிக்கப்பட்டான். இப்போரின் முடிவில் அவன் கொல்லப்பட்டான். அவன் தலையும், வலது கையும் வெற்றிச் சின்னமாக எருசலேமில் தொங்கவிடப்பட்டன. சீரியர்களை வென்ற இந்த நிகழ்ச்சியானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 13-ஆம் நாள் 'நிக்கானோர் நாள்' என்று கொண்டாடப்பட்டது (1 மக் 7:26-50; 2 மக் 14:11-15:36). இந்த வெற்றிப்பெருமிதத்துடன் 2-ஆம் மக்கபேயர் நூலை ஆசிரியர் முடிக்கிறார். இவன் யூதமதத்தை வெறுத்ததால் யூதர்கள் இவனைத் தனிப்பட்ட முறையில் எதிர்த்தனர்.

2. எருசலேமின் திருச்சபையில், பந்தியில் பணிபுரிய அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்ட எழுவருள் ஒருவர் (அ.ப. 6:1-6).

**நிக்கானோர் வாயில் (NICANOR GATE)**

எருசலேம் ஆலயத்தின் முற்றத்திற்கு இட்டுச்செல்லும் வாயில்களில் ஒன்று. ஸ்கோப்பு மலையிலுள்ள ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்சவப்பெட்டியில் உள்ள குறிப்பின்படி ,இந்த வாயிலைக் கட்டிய கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த அலக்சாந்திரிய கைவினைஞரின் பெயரால் இவ்வாயில் அழைக்கப்பட்டது. ஆலய வாயில்களில் இஃது ஒன்றுதான் பொன்முலாம் பூசப்படாததாகும். இது "தங்கம்போல் மின்னும் கொரிந்தியச் செம்பு" உலோகத்தால் செய்யப்பட்டதாகும்.

இஃது எங்கு இருந்தது என்பது பற்றிப் பல கருத்துகள் உண்டு. இது பெண்கள் முற்றத்தின் மேற்கிலும், ஆண்கள் இஸ்ராயேலர் முற்றத்தின் கிழக்கிலும் இருந்தது என்பர் சிலர். புனித இடத்திற்கு அப்பால், பெரிய வாயிலை நோக்கிப் பெண்கள் முற்றத்தின் கிழக்கில் இருந்தது என்பர் வேறு சிலர்.

ஏரோது கட்டிய ஆலயத்தில் இந்த வாயில் பெண்கள் முற்றத்தின் மேற்கில் அமைந்திருந்தால் மரியாள் குழந்தை இயேசுவை, இஸ்ராயேலர் முற்றத்திற்கு இட்டுச்சென்ற பதினைந்து படிகளைக்கொண்ட அரைவட்டவடிவமான படிக்கட்டு வரை கொண்டு வந்திருக்க வேண்டும் (லூக் 2:22-23). இங்குதான், மரியாளின் குழந்தை வழியாக இஸ்ராயேலுக்கு விடுதலை கிடைக்குமென்று சிமியோனும் அன்னாவும் இறைவாக்குரைத்திருக்க வேண்டும் (2:27-38).

**நிக்கொலா (NICOLAUS** – மக்களை வென்றவர்)

நிக்கொலா எருசலேம் திருச்சபையில் பந்தியில் பணிபுரிய அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்ட எழுவரில் ஒருவர். இவரைப்பற்றிக் கூறும்போது சீரியாவின் அந்தியோக்கியாவைச் சேர்ந்த இவர், "யூத மதத்தைத் தழுவியவர்" என்று கூறப்பட்டுள்ளது (அ.ப. 6:5). ஆனால், இந்த ஏழு பேரும் யூத மதத்தைத் தழுவியவர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவர்களுடைய பெயர்கள் எல்லாம் கிரேக்க மொழிப்பெயர்கள். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் கிரேக்க மொழிப்பெயர்களைச் சூட்டுவது வழக்கமாய் இருந்தது. இவர்களைப் போன்றவரிடையேதான் கிறிஸ்துவ மதம் அந்தியோக்கியாவில் பரவியது. இவர் திருச்சபையை விட்டு விலகி, நிக்கொலாயர் என்ற புதிய பிரிவினரை உண்டாக்கியதாக முற்காலத் திருச்சபைத் தந்தையர்களில் இரேனேயு, இப்போலித்து போன்றவர்களின் நூல்கள் சுட்டுகின்றன. ஆனால், இக்கருத்துக்கு ஆதாரமில்லை எனலாம்.

**நிக்கொலாயர் (NICOLAITANS** – நிக்கொலாவைப் பின்பற்றுபவர்கள்)

ஏபேசு (திருவெளி 2:6), பெர்கமு (2:15) ஆகிய திருச்சபைகளில் காணப்பட்ட ஒரு பிரிவினைக் குழுவினர். திருவெளிப்பாட்டு நூல் ஆசிரியர் யோவான் இவர்களைக் கண்டனம் செய்கிறார். இவர்களைப் பற்றிய விவிலியக் குறிப்புகளைத் தவிர, இவர்களின் தோற்றம், போதனை, வாழ்க்கைமுறை ஆகியவை பற்றிய பிற செய்திகள் கிடைத்திலது. இவர்களும் பிலயாமைப் பின்பற்றுபவர்களும் (2:14) ஒரே குழுவினரே என்று சிலர் கருதுகின்றனர். இவர்களையும் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்ட ஏழு திருத்தொண்டர்களுள் ஒருவரும் யூத மதத்தைத் தழுவியவரும் அந்தியோக்கியாவைச் சேர்ந்தவருமான நிக்கொலாவையும் (அ.ப. 6:5) தொடர்புபடுத்த முயன்றுள்ளனர் சிலர். இதற்கு போதிய ஆதாரமில்லை.

நிக்கொலாயர்கள் சிலை வழிபாட்டையும் பாலின ஒழுக்கக்கேட்டையும் கடைப்பிடித்துள்ளனர். இவர்களைப் போன்றவர்களே பிலயாமையும் (திருவெளி 2:14), ஈசபேலையும் (2:20-24) பின்பற்றுபவர்கள். ஆகவே, இவர்களுக்கும் பிற்கால ஞானவாதக் குழுவினருக்குமிடையே தொடர்பு காண அறிஞர் சிலர் முயன்றுள்ளனர்.

**நிக்கோதேமு (NICODEMUS** – மக்களை வென்றவர்)

இவர் ஒரு பரிசேயர்; யூதத் தலைவர்களுள் ஒருவர் (யோவா 3:1); ஒரு போதகர் (3:10). ஒருநாள் இரவில் இவர் இயேசுவைக் காண வந்தவர். இரகசியமாக இயேசுவைப் பின்பற்றியவர்.

இயேசுவின் உயர்வை ஏற்று, அவரால் இன்னும் போதிக்கப்பட விரும்பி வந்தவர் (3:1-2). மறுபடி பிறப்பின் அவசியம் பற்றிய இயேசுவின் போதனையை இவர் உடனடியாகப் புரிந்து கொள்ளவில்லையானாலும் (3:3-36), காலப்போக்கில் புரிந்துகொண்டு இயேசுவின் சீடரானவர் (7:50). ஒருவருடைய வாக்குமூலத்தை முதலில் கேட்காமல் அவரைத் தீர்ப்பிடுவது முறையா என்று யூதப் பொதுச்சங்கத்தில் இயேசுவுக்காக மறைமுகமாக வாதாடுகிறார் (7:51). இயேசுவின் உடலை அடக்கம் செய்ய அரிமத்தியா யோசேப்புக்கு உதவி செய்கிறார் (19:38-42).

யோவா 3-இல், ஆசிரியர் இரு பொருளுடைய சொற்கள் பலவற்றைப் பயன்படுத்துகிறார். இரவில் இயேசுவைக்காண வரும் நிக்கோதேமு இஸ்ராயேலரின் போதகரும் பரிசேயருமாய் இருந்ததால் இறையரசு பற்றிய உண்மைகளை அறிய ஆவல் உள்ளவராக இருந்திருக்க வேண்டும். இவருக்கும் இயேசுவுக்குமிடையே நடைபெறும் உரையாடல், திருமுழுக்குப் பற்றிய உரைக்கு வாய்ப்பாக அமைகிறது.

**நிக்கோதேமுவின் நற்செய்திநூல் (NICODEMUS, GOSPEL OF)**

பிலாத்து பணிநூலின் இலத்தீன் மொழிபெயர்ப்புக்கு கி.பி. 12-14-ஆம் நூற்றாண்டுகளில் அளிக்கப்பட்ட பெயர். காண்க: பிலாத்துவின் பணிநூல்.

**நிசுரோக்கு (NISROCH)**

நிசுரோக்கு என்பது சனகெரிபு வழிபட்ட அசீரியர்களின் கடவுள். நிசுரோக்கின் கோயிலில் அசீரியாவின் மன்னன் சனகெரிபு வழிபட்டுக் கொண்டிருந்தபோது அவனுடைய புதல்வர்களால் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டான் (2 அர 19:37; எசா 37:38). இப்பெயர் வரலாற்றில் அறிமுகமான எந்த ஓர் அசீரியத் தெய்வத்தையும் குறிக்கவில்லை. ஆனால் இப்பெயர்- பாபிலோன் நகரின் தெய்வமான மார்துக்கு, நினூர்த்தா, தீயின் தெய்வமான நுஸ்கு முதலிய அசீரியத் தெய்வங்களைக் குறிப்பதாகக் கருதுகிறார்கள்.

**நிபுகசு (NIBHAZ)**

இது கி.மு. 722-க்குப்பிறகு இவ்வா நாட்டிலிருந்து சமாரியாவில் பாபிலோனியரால் குடியமர்த்தப்பட்ட சீரியர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுள் ஒன்று (2 அர 17:31).

இது சீரியர்களால் வணங்கப்பட்ட, "காட்சியாளர் நெபோ" அல்லது "முகத்தின் நெபோ" என்ற பெயருடைய பாபிலோனியத் தெய்வமாகவோ, இப்னகாசா என்ற ஏலாமியத் தெய்வமாகவோ அடையாளம் காட்டப்படுகிறது.

**நிப்சான் (NIBSHAN - மணற்பாங்கான)**

இது பாலைவனப்பகுதியிலுள்ள யூதாவின் ஊர்களில் ஒன்று (யோசு 15:62). இவ்வூர் எரிகோவின் தென்மேற்கிலும், எருசலேமுக்குத் தென்கிழக்கில் 17 கி.மீ. தொலைவிலும் உள்ள ஆக்கோர் பள்ளத் தாக்கிலுள்ள இக்காலக் கிர்பெத் ஏல்-மாகாரி என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**நிம்சி (NIMSHI - வெளியே இழுத்தல்)**

இவர் யோசபாத்தின் தந்தையும், இஸ்ராயேல் அரசன் ஏகூவின் தாத்தாவும் (அல்லது முன்னோரும்) ஆவார் (2 அர 9:2-14). ஆனால் 1 அர 19:16; 2 அர 9:20; 2 நாள் 22:7-இன்படி இவர் ஏகூவின் தந்தையாவார். சமாரியாவில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட ஏடுகளில் இப்பெயர் காணப்படுகிறது.

**நிம்பா (NYMPHA)**

இலவோதிக்கேயில் கிறிஸ்துவரான நிம்பா வீட்டில்தான் மக்கள் கூடிச் செபித்தனர். பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில் இவருக்கு வாழ்த்து அனுப்புகிறார் (கொலோ 4:15). கிரேக்க வாசகத்தில் வரும் இப்பெயரிலிருந்து இவர் ஆணா பெண்ணா என்று உறுதிசெய்வது முடியாத காரியமாகும்.

**நிம்ரா (NIMRAH)**

பெத்-நிம்ரா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (எண் 32:3).

**நிம்ரிம் நீர்நிலைகள் (NIMRIM, THE WATERS - சிறுத்தைகளின் தண்ணீர்)**

மோவாபைப் பற்றிய புலம்பலில் மோவாபின் நீர் நிலையான நிம்ரிம் நீர் நிலைகள் வற்றிவிடும் என்று எசாயாவும் எரேமியாவும் முன்னறிவிக்கின்றனர் (எசா 15:6; எரே 48:34). இவை விவசாயத்திற்கும் பயன்பட்டன. சிலர், இதனைச் சாக்கடலின் கிழக்குப்புறமாக ஓடுகின்ற, அதன் தென்முனையிலிருந்து 14 கி.மீ.

தொலைவிலுள்ள, வாடி என் நுமெரியா ஓடையுடன் ஒன்றுபடுத்துகின்றனர். இங்குக் குறிப்பிடப்படும் இடம் சரியென்றால் இதுதான் சோதோம் மற்றும் அதனைச் சேர்ந்த மற்ற நகர்களுக்கு, அவற்றின் அழிவிற்கு முன், தண்ணீர் கொடுத்தது. வேறு சிலர் இதனைச் சாக்கடலுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவில் யோர்தானோடு கலக்கும் நிம்ரின் என்னும் சிற்றாறோடு ஒன்றுபடுத்துகின்றனர். இங்குள்ள நிலம் வளமிக்கது. இஸ்ராயேல் மக்கள் யோர்தானைக் கடக்குமுன் பாளையம் இறங்கி இருந்த மோவாபு சமவெளி வாடி நிம்ரின் என்பதிலிருந்து சாக்கடலின் வடமேற்கு எல்லைவரை தெற்கு நோக்கிப் பரவி இருந்தது.

**நிம்ரோது (NIMROD - கிளர்ச்சி செய்தல்)**

நிம்ரோது ஆதி 10:8-12; 1 நாள் 1:10; மீக் 5:6 ஆகியவற்றில் குறிப்பிடப்படுகின்றது.

நிம்ரோது- கூசு என்பவரின் மகன் (2 நாள் 1:10). இவன் பூமியிலேயே மிகவும் வலிமை மிக்கவனாய் இருந்தான். ஆண்டவருக்குமுன் அவன் வலிமை மிக்க வேட்டைக்காரனாய் இருந்தான். ஆதலால், "ஆண்டவருக்கு முன்பாக நிம்ரோதைப் போல் வலிமை மிக்க வேட்டைக்காரன்" என்னும் பழமொழி வழங்கலாயிற்று (ஆதி 10:8-9). மெசபொத்தாமியாவில் இவனுடைய அரசு, புகழ் பெற்றிருந்தது. சினாரில், பாபேல் (பாபிலோன்), எரேக்கு, அக்காது, கல்னே என்பவை இவனது அரசின் முக்கிய நகரங்கள் ஆகும் (ஆதி 10:10). இவன் ஆசூர் (ஆதி 10:11), நினிவே (ஆதி 10:11-12) ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் அசீரியா "நிம்ரோதின் நாடு" (1 மீக் 5:6) என்று அழைக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் நிம்ரோதின் கதை இடம் பெறுவதற்கு அவனுடைய பெரும் புகழ் மட்டுமன்று, கலாச்சார, இனக்காரணகாரிய விளக்கங்களுக்குப் பழங்காலக் கதைகளை யாவே பாரம்பரிய ஆசிரியர் அடிக்கடி பயன்படுத்துவதும் காரணமாகும். இங்குப் பெரிய அசீரிய பாபிலோனியக் கலாச்சாரத்தின் தோற்றத்தை விளக்க அவருக்கு இக்கதை உதவுகிறது.

**நிலக்கரி, கரி (COAL)**

பாலஸ்தீனத்தில் கனிப்பொருளிலிருந்து தயாரிக்கப்படும் கரி காணப்படவில்லை. நிலக்கரி பற்றி விவிலியக் குறிப்புகள் காணப்படவில்லை. ஏனெனில், பாலஸ்தீனத்தின் புவியியல் அமைப்பு அண்மைக் காலத்தைச் சேர்ந்ததாகும்.

மரக்கட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கரியையே இஸ்ராயேலர் பல காரியங்களுக்குப் பயன்படுத்தினர். 1) குளிர்காலத்தில் (டிசம்பர் மாதம்) சூடுபடுத்த அல்லது வெப்பம் உண்டாக்க அரண்மனையில் கரி பயன்பட்டது (எசா 47:4; எரே 36:32). ஏப்ரல் மாதத்தில், இயேசுவின் பாடுகளின் போது அனல்காய பேதுருவுக்கும் மற்றவர்களுக்கும் கரி பயன்பட்டது (யோவா 18:18). 2) சமைப்பதற்கும் (எசா 44:19; யோவா 21:9) பயன்பட்டது. 3) பரிகார நாளில் பெரிய குரு நெருப்புத்தணல் நிரப்பிய தூபக்கலசத்தைப் பயன்படுத்தி (லேவி 16:12-13), தூபச் சடங்கு செய்தார் (லேவி 10:1; எண் 16:46). 4) கொல்லனின் வேலைகளுக்கும் கரி பயன்பட்டது (எசா 44:12; 54;16).

பழ 26:21-இல் கரி, தழல் உண்டாக்குவது போல், சண்டை- கலகத்தையும் சச்சரவையும் உண்டாக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

**நிலக் கீல் (BITUMEN)**

முதலில் இது வெறும் நிலக்கீல் மட்டுமே எனக் கருதப்பட்டது. ஆனால், இத்துடன் பல நீரகக் கரிமங்கள் இருப்பதாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் எபிரேய மூலச்சொல்லானது 'நுரைத்தல்' என்று பொருள் தருகிறது. ஆதி 14:10-இல் கிணற்றோடு இது தொடர்பு படுத்தப்பட்டதால் இது 'நுரைத்தல்' என்று பெயர் பெற்றிருக்கலாம். மேலும் 'மூடுதல்' என்ற பொருளையும் கொடுக்கின்றது. காரணம், மோசேயின் தாய் மோசேக்குச் செய்த பேழையை ஆற்றில் மிதக்கவிடுமுன், அதை அடைக்க இந்தக்

கீலையே பயன்படுத்தினாள் (யாத் 2:3). யோசிப்பஸ் சாக்கடலைப் புகைக்கீல் ஏரி என்று அழைக்கின்றார். காரணம், அதன் தென் முனையின் மேற்பரப்பில் புகைக் கீல் படர்ந்துள்ளது.

நிலக் கீலை எகிப்தியர்கள் உடலைப் பதப்படுத்துதலில் பயன்படுத்தினார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், இஃது உண்மையா என்பது ஐயத்திற்குரியதாகும். சினார் சமவெளியில் நிலக்கீல் சாந்தாகப் பயன்படுத்தப்பட்டது (ஆதி 11:3). .நிலக்கீல் அசீரியாவில் உள்ள 'கிர்குக்குப்' பகுதியிலும், யூப்பிரத்தீசு நதிக்கரையிலும் காணப்பட்டது. 'ஊரில்' உள்ள சிகுராத்துக் கட்டடங்களுக்கு இந்த நிலக் கீல் சாந்தாகப் பயன்படுத்தப்பட்டது. கூடை போன்ற படகுகள் செய்யவும், அதன் ஓட்டைகளை அடைக்கவும், இது பயன்படுத்தப்பட்டது. நினைவுச் சின்னங்களைத் தயாரிக்க இஃது ஒரு கருப்பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது.

**நில நடுக்கம் (EARTH QUAKE)**

எரிமலையினாலும், நிலவுலகின் புறத்தோடு இடம் பெயர்வதாலும் நிலத்தில் உண்டாகும் நடுக்கமே நில நடுக்கமாகும். அதன் அதிர்வு அலைகள் அதிகமாகும் போது அதிக அதிர்ச்சியுடன் சப்தமும் (எசே 3:12-13), வலுத்த பெருங்காற்றும் (1 அர 19:11), நிலப்பிளவும் (எண் 16:32), அழிக்கும் நெருப்பும் (திருவெளி 8:5) உண்டாகும்.

காகசு, இமாலயம், ஆல்ப்ஸ் மலைகள் சூழ்ந்த நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில் பாலஸ்தீனம் அமைந்துள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள நில நடுக்கங்களில் 40 சதவீதம் இப்பகுதியில் உண்டானதாகும். பாலஸ்தீன நாட்டில் ஒரு நூற்றாண்டில் ஏறக்குறைய ஒன்று அல்லது இரண்டு அழிக்கும் நிலநடுக்கங்களும், ஓராண்டில் ஏறக்குறைய 2 அல்லது 6 சிறிய நிலநடுக்கங்களும் ஏற்படுகின்றன. நில நடுக்கம் ஏற்படும் முக்கிய இடங்கள் வட கலிலேயா, நப்லுசுக்கு அருகிலுள்ள சமாரியர் வாழும் பகுதி (செக்கேம்), லித்தாவுக்கு அருகிலுள்ள யூதா மலையின் மேற்கு எல்லை முதலியனவாகும். யோர்தான் பள்ளத்தாக்கிலுள்ள எரிகோவும், திபேரியாவும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் இடங்களாகும்.

கிறிஸ்தவர்களின் காலத்தில் பாலஸ்தீனப் பகுதியில் 17 பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக எழுத்தாளர்கள் பலர் கூறுகிறார்கள். 1837-ஆம் ஆண்டு உண்டான நிலநடுக்கம் 12 மாவட்டங்களை அழித்ததோடு 4000 பேர்களையும் கொன்றது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த தொல்பொருள் இயல் நிபுணரான கிளாது சாப்பேர் என்பவர், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து விவிலியத்தில் வரும் ஊர்களின் காலத்தைக் கணிப்பதில் வல்லவர். இவர் கி.மு. 1365-ஆம் ஆண்டளவில், அதாவது இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்தபோது, ஒரு பெரிய நிலநடுக்கம் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். ஆமோஸ் இறைவாக்குரை தொடங்கிய காலம், ஊசியா அரசனின் காலத்தில் உண்டான நில நடுக்கத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது (கி.மு. 786 - 744; ஆமோ 1:1; செக் 14:5). இயேசுவைச் சிலுவையில் அறைந்த போதும், அவர் உயிர்த்த போதும் நில நடுக்கம் ஏற்பட்டதாக மத்தேயு கூறுகிறார் (மத் 27:54; 28:2). பவுலும் சீலாவும் வைக்கப்பட்டிருந்த சிறை, நிலநடுக்கத்தால் தகர்க்கப்பட்டதாக லூக்கா கூறுகிறார் (அ.ப. 16:26).

இறைவன் தன்னை வெளிப்படுத்தும் போதும் (யாத் 19:18), தீர்ப்பிட வரும் போதும் (எசா 29:6) நிலநடுக்கம் அவரது பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. இறுதி நாட்களில் ஏற்படும் அழிவுகளில் நிலநடுக்கமும் ஒன்றாகும் (மத் 24:7; மாற் 13:8; லூக் 21:11; திருவெளி 6:12; 8:5; 11:13.19; 16:18).

**நிலவறை (CELLAR)**

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் 'செல்வம்,' 'கருவூலம்' என்று பொதுவாக

மொழிபெயர்க்கப்படும். ஒரே ஓர் இடத்தில் மட்டும் எண்ணெயும், இரசமும் சேகரித்துவைக்கும் 'கிடங்கு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1 நாள் 27:27-28). பொதுவாக, பாலஸ்தீனத்தில் நிலத்திற்கு அடியில் அறைகளை வைப்பதில்லை. விளக்கை ஏற்றி, மரக்காலுக்குள்ளும், நிலவறையிலும் வைப்பதில்லை; மாறாக, யாவருக்கும் ஒளி கிடைக்கும்படி அதை விளக்குத்தண்டின் மீது வைப்பர் என்று இயேசு கூறுகிறார் (லூக் 11:33).

**நிலவறைச்சிறை (DUNGEON)**

இதைக்குறிக்கும் எபிரேயச் சொல்லுக்கு முதன்மையான பொருள்-பள்ளம் அல்லது நிலத்தின் அடியில் தோண்டப்பட்ட அறையாகும். இஃது ஒரு பாழுங்கிணற்றைக் குறிக்கலாம் (எரே 38:6.7.9-11.13). இதில் தண்ணீரில்லாமல் சேறு மட்டுமே இருக்கக்கூடும்; அல்லது வறண்டிருக்கக்கூடும். காண்க சிறை.

**நிலவுலகம், மண்ணுலகம், பூமி (EARTH)**

1. எபிரேயர்கள் மண்ணுலகு தட்டையான விரிந்த பரப்பு என்றும் (எசா 42:5; 44:24). நீர்த்திரளின்மீது (சங் 24:2; 136:6) அல்லது வெற்றிடத்தில் (யோபு 26:7) அமைந்துள்ளது என்றும் கருதினார்கள். மேலும் அது தூண்களின் மீதும் (யோபு 9:6; சங் 75:3), அடித்தளங்களின் மீதும் (2 சாமு 22:16; பழ 8:29; எசா 24:18; எரே 31:37) நிறுவப்பட்டிருந்தது என்றும், அதன் கீழ் எல்லைகள் அடி உலகம் வரை செல்கின்றன என்றும் அவர்கள் நினைத்தார்கள். சுற்றியுள்ள கடல், நிலத்தை மூழ்கடிக்காதவாறு நிலத்தைச் சுற்றிச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது (யோபு 26:10; பழ 8:29). இச்சட்டம் மலைத்தொடர்களாக இருக்கலாம்.

"நான்கு எல்லைகள்" அல்லது "நான்கு கோடிகள்" என்ற சொற்கள் மண்ணுலகு முழுவதையுமே குறிக்கும் (எசா 11:12; எசே 7:2; யோபு 37:3). யோபு 38:13 நிலவுலகை மூடியுள்ள வையகத் தொங்கலை இறைவன் பிடித்து உதறி, பொல்லாதவர்களை அதனின்று உதிர்க்கிறார் என்று கூறுகிறது.

சீரியாவுக்கு வடக்கே அல்லது வடகிழக்கே அமைந்துள்ள காட்டுப்பகுதிகளே மண்ணுலகின் கடைசி எல்லைகளாகக் கருதப்பட்டன (எரே 6:22; 31:8; 50:41). எனவேதான் நோவாவின் பேழை உலகின் எல்லைக்குச் சென்று அராரத்துமலையில், அதாவது உரார்து - அர்மேனியாவில் தங்கியதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 8:4).

2. **நிலத்தின் வளம்:** நிலத்தின் வளமை மனிதரின் நடத்தையைப் பொருத்தது என்று பலர் கருதினார்கள். எனவே தீய செயல்கள் வறட்சியைக் கொணர்ந்தன. மனிதனுடைய தீய செயல்கள் இறைவனைப் புண்படுத்துவதால் இறைவன் தன் பிரசன்னத்தையும், பராமரிப்பையும் நீக்கி விடுகிறார் (உப 11:16-17; யோவேல் 1).

எசா 62:4-இல், முதலில் வளமின்றிப் பிறகு வளமாக்கப்பட்ட நிலத்தை, முதலில் கைவிடப்பட்டவளாய் இருந்து பிறகு மணமானவளாய் ஆன பெண்ணுக்கு ஒப்பிடுகிறார். இவ்வாறு ஒப்பிடுதல், ஏற்கெனவே தெல் ஏல் அமர்னாவின் கடிதங்களில் காணப்படுகின்றது. கற்பின்றி நடக்கும் போது நிலம் வறட்சியடைகிறது (எசா 24:5; எரே 3:1).

கொலை செய்து இரத்தம் சிந்துவதால் நிலம் தூய்மையற்றதாவதாகக் கருதப்பட்டது. மாசற்ற இரத்தம் சிந்தப்பட்ட இடத்தில் எதுவுமே வளராது (ஆதி 4:11-12; எண் 35:33-34); அந்நிலத்தில் மழையும் பெய்யாது (2 சாமு 1:21).

எபிரேயர்களின் சட்டப்படி, ஏழு ஆண்டுகளுக்கொரு முறை நிலத்தில் பயிரிடக் கூடாது (யாத் 23:10-12; உப 31:10). இவ்வாறு செய்வது ஏழைகளுக்கு உதவுவதற்காகவே என்று விளக்கப்பட்டது. ஆனால், ஒரு குத்தகை முடிந்து அடுத்த குத்தகை ஆரம்பிக்கும் முன்னால் ஓராண்டு நிலம் வெறுமையாக இருக்கவேண்டும் என்று முற்காலப் பழக்கம் ஒன்று இருந்தது.

**3. கடவுளின் நிலமும் பேயின் நிலமும்:** ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி அங்கு வழிபடப்படும் கடவுளின் உறைவிடமாக அழைக்கப்பட்டு வந்தது (2 சாமு 20:19; சங் 79:1; எரே 2:7; 16:18). ஆனால், பயன்படுத்தப்படாத நிலங்கள் தீய ஆவிகளின் உறைவிடமாகக் கருதப்பட்டன (எசா 13:21; 32:14).

**4. நிலத்தாய்:** இஸ்ராயேலர்கள் நிலத்தை வழிபட்டனர் என்பதற்குச் சான்றுகளே இல்லை. ஆனால், அவர்களின் அயலார்கள், நிலத்தை வழிபட்டு வந்தனர். அசூரில் எர்சித்து அதாவது நிலம் என்ற தேவதையை வழிபட்டு வந்தனர். ஆர்சி அதாவது 'நிலப்பெண்' என்பவள் பாகாலின் மணப்பெண்களில் ஒருத்தியாக வணங்கப்பட்டாள் என்று இராஸ் சம்ராவின் உகாரித்துப் பாடல்களில் காண்கிறோம்.

**5. உலகப்படைப்பிலும், இறுதி நாளிலும் மண்ணுலகு:** படைப்பின் மூன்றாம் நாளில் நிலம் படைக்கப்பட்டதாக ஆதி 1:9-10 கூறுகிறது. கடவுள் பூமியின்மீது மழை பொழியச் செய்யவில்லை. ஆயினும், பூமியிலிருந்து தோன்றிய ஒரு நீரூற்று பூமியெங்கும் பாய்ந்து கொண்டிருந்தது (ஆதி 2:5-6).

நிகழ்கால மண்ணகத்தின் மறைவுக்குப் பின் 'புதிய படைப்பு' உண்டாகும். அதிலே வியத்தகு வளமிக்கதாக இருக்கும் மண்ணுலகு. உயிரளிக்கும் நீரோடைகள் புறப்படும் (செக் 14:8). வானங்கள் எண்ணெய் பொழியும்; ஓடைகளில் தேன் வழிந்தோடும் (யோவா 3:18; ஆமோ 9:13).

## நிலா (MOON)

1. பழைய ஏற்பாட்டில், முப்பத்து நான்கு முறையும், புதிய ஏற்பாட்டில், ஒன்பது முறையும் 'நிலா' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அண்டவியல் மற்றும் இறுதிக்கால இயல் சூழ்நிலைகளைக் குறிப்பிடும்போது இது பயன்படுத்தப்பட்டுள்ளது. சந்திர வழிபாட்டைப்பற்றிய குறிப்புகளும், இதனுடன் தொடர்புடைய கதைகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. சில சமயங்களில் நிலா, நிலைத்த தன்மையின் அடையாளமாகவும் அறிமுகப் படுத்தப்படுகிறது.

**2. அண்டவியலிலும் இறுதிக்கால இயலிலும் நிலா:**

படைப்பின் நான்காம் நாளன்று வான் மண்டலத்தில் நிலா உருவாக்கப்பட்டது. இரவில் ஒளிதந்து பருவங்களைப் பிரிக்கும் செயலினைச் செய்வதற்காகப் படைக்கப்பட்டது. சூரியனைப்போல நிலா தன்னொளி கொண்டதாகவும், சூரியனைச் சாராததாகவும் இதன் இயக்கம் கடவுளின் திருவுளத்திற்கு உட்பட்டதாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 1:14-19; சங் 104:19; 136:9; சீரா 43:6-8). இந்த யுகத்தின் இறுதியில், அனைத்தும் குழப்பநிலையை அடையும்போது நிலாவும் இருளடையும் (எசா 13:10; யோவே 2:10; மத் 24:29; மாற் 13:24); இரத்தமாக மாறும் (யோவே 2:21; திருவெளி 6:12); அல்லது, இயற்கைக்கு மாறாகப் பகலில் ஒளிரும். யாவேயின் நாளில் நிகழும் நிகழ்ச்சிகளில் நிலாவின் ஒளி மறைப்பும் (கிரகணம்) ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது (எசா 13:10; எசே 32:7; யோவே 3:15). கடவுளின் மாட்சிமை நாளில், மீண்டும் ஒளிர ஆரம்பித்து ஒருபோதும் தேய்வுறாது (எசா 60:20). எருசலேம் மீண்டும் அமைக்கப்படும் மெசியாவின் காலத்தில், சூரியனைப்போல் நிலா பிரகாசமாய் ஒளிவிடும் (30:26). விண்ணக எருசலேமில் நிலாவின் ஒளி தேவையற்றதாகும் (திருவெளி 21:23).

**3. நிலா வழிபாடு:** செமித்திய இனமக்கள் அனைவரும் செய்தது போலவே, பாலஸ்தீன மற்றும் சீரியாவின் புறமத மரபினைச் சேர்ந்தவர்கள் நிலா வழிபாட்டிற்கு மிக முக்கியத்துவம் அளித்தனர். இவ்விடங்களில் நிலா ஓர் ஆண் கடவுளாக வழிபடப்பட்டது. கோவில்களில் பலிசெலுத்தினர். அமாவாசை நாளில் சிறப்பான காணிக்கைகள்

செலுத்தப்பட்டன. நிலாக்கடவுளோடு சேர்ந்த பல பெயர்கள் காணப்படுகின்றன.

அக்காதியர் நிலாக் கடவுளைச் சீன் என்று அழைத்தனர். தென் பாபிலோனிலிருந்த ஊர் என்ற இடம், நிலா வழிபாட்டிற்கு மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இக்கடவுளுக்காக இயற்றப்பட்ட பல பாடல்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன. ஆனால், இப்பாடல்கள் கடவுளின் பண்புகளை வரையறுக்காமல் பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளன. சுமேரியர் நிலாக்கடவுளை- நன்னார் என்று அழைத்தனர். சுருபாக்கு என்ற இடம், இந்த வழிபாட்டின் மைய இடமாக விளங்கியது. சுமேரியக் கடவுளான நன்னாரையே செமித்திய மக்கள் சீன் என்று மாற்றிக்கொண்டனர் என்று வல்லுநர் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால், வேறுசிலர் செமித்திய மக்களிடையே நிலா வழிபாடு அதிகப் பரவலாக இருந்ததைக் காரணம் காட்டி, சீன் என்ற கடவுளையே- நன்னார் என்று மாற்றினர் என்று கூறியுள்ளனர்.

எபிரேய இயலில் நிலா இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களில் ஒன்றாகக் கருதப்பட்டது (ஆதி 1:16; சங் 8:3; 104:19; 136:7-9; எரே 31:35; சீரா 43:6-7). இது அவருடைய நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டது (யோசு 10:12-13; அப 3:11). நிலாவையும் மற்ற விண்ணகக் கோள்களையும் வணங்குவது இஸ்ராயேலில் தடை செய்யப்பட்டிருந்தது (உப 4:19; 17:3; காண். யோபு 31:26). ஆனால், இஸ்ராயேலர் இவ்வழிபாட்டில் ஈடுபட்டனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பதித அரசனான மனாசே (கி.மு. 687-641; 2 அர 21:3.5), இதை அதிகாரப்பூர்வமான வழிபாடாக ஏற்றுப் பரப்பினான். மற்ற அரசர்களும் பொது மக்களும் இவ்வழிபாட்டைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது (எரே 8:2). இவ்வழிபாட்டை அரசன் யோசியா முழுவதும் தடை செய்தார் (2 அர 23:5). இவ்வழிபாட்டின் சிறப்புக்கூறுகள் வீட்டுமேல் தளங்களிலிருந்து நிலாவை வணங்குவதும் (எரே 19:13; செப் 1:5), "ஒளியில் தவழும் திங்களை" (யோபு 31:26-27) வாழ்த்துக்கூறி வணங்குவதும் ஆகும்.

**4. நாட்காட்டியில் நிலா:** இஸ்ராயேலரின் நாட்காட்டி நிலாவின் வளர்ச்சி, தேய்வை அடிப்படையாகக் கொண்டது. முக்கியமான பருவகால விழாக்களாகிய பாஸ்கு மற்றும் சேகரிக்கும் விழாக்கள் முழுநிலா நாளில் தொடங்கின. அமாவாசை நாளில் எக்காளம் ஊதப்பட்டது. இஃது அசுத்த ஆவிகளை விரட்டுவதாகக் கருதப்பட்டது. அன்று சிறப்பான காணிக்கைகள் செலுத்தப்பட்டன (எண் 10:10; 28:11-15; சங் 81:3). வியாபாரத்திற்காகப் பயணம் செய்வோர், முடிந்தால் முழு நிலா நாளில் வீடு திரும்பிவிடுவர் (பழ 7:20). இது தேயும் நிலா, குறிப்பாக அது தேயத் தொடங்கும் இரவு, வணிகம் செய்யத் தீய சகுனம் உடையதாகக் கருதப்பட்டதைப் பிரதிபலிக்கிறது.

**5. விவிலிய நாட்டுப்பாடலில் நிலா:** பழைய ஏற்பாட்டு நாட்டுப்பாடல்களில் நிலாவோடு தொடர்புடைய இரு நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

அ. யாவே போரில் ஈடுபடும்போது சூரிய ஓட்டத்தைப்போல் நிலாவின் ஓட்டமும் நிறுத்தப்படலாம் (அப 3:11). யோசுவாவின் காலத்தில், கிபயோனில் இஸ்ராயேலர் தங்கள் பகைவர்களோடு போரிட்டபோது இஃது உண்மையிலேயே நடந்ததாக நம்பப்பட்டது (யோசு 10:12).

ஆ. நிலா தன் தீய சக்தியால் ஒருவனைப் பைத்தியமாக்கக்கூடும் (சங் 126:6). எங்கும் பரவியிருந்த மூட நம்பிக்கை புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது (மத் 4:24; 17:15).

**6. மொழி மரபில் நிலா:** சூரியனைப் போல் நிலாவும் நிலைத்த தன்மைக்கு அடையாளமாகக் கருதப்பட்டது (சங் 72:5.7; 89:37; எசா 60:20; எரே 31:35-36). இந்த அடிப்படையில்தான், நிலாவின் மாற்றங்கள் அல்லது அதன் மறைவு, இறுதிக்கால இயல் மொழியில், முடிவின்

பொருள்மிக்க அடையாளமாயிற்று (எசா 13:10; 24:23; யோவே 2:10.31; 3:15; மத் 24:29 இணை; அ.ப. 2:20; திருவெளி 6:12; 8:12).

**நிலைகளின் மேற்சட்டம் (LINTEL)**

இது, கதவிற்கு மேல் பகுதியில் அமைக்கப்படும் ஒரு மரச்சட்டம். 1 அர 6:31-இல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி இந்தச் சொல்லின் பொருள் தெளிவாக இல்லை. ஏனென்றால், இதில் இரு சட்டங்கள் கோண வடிவில் ஒன்றையொன்று சந்திக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதாக விவரிக்கப்பட்டுள்ளது. இஃது உடன்படிக்கைப் பேழையைக் கொண்டிருந்த கூடாரத்தைச் சுட்டுகிறது. பாஸ்கா விழாவின்போது நிலையின் மேற்சட்டம், நிலைக்கால்கள் ஆகியவற்றின் மீது இரத்தம் தெளிக்கப்பட்டது (யாத் 12:7.2-23).

**நிழல் (SHADOW, SHADE)**

I. இரவு அல்லது மேகத்தைப்போன்று நிழலானது, ஒளியின் பிரசன்னம் இன்மையையோ இருத்தலையோ உறுதிப் படுத்துவதற்கேற்ப ஓர் இரட்டை அனுபவத்தை அடையாளமாக உணர்த்துகிறது. நாளின் முழு ஒளியை விரும்பும் மனிதன், மர நிழலைத் தேடுகிறான். இறைவன் ஒளியாகவும் எரிகின்ற தீயாகவும் மட்டுமின்றி, புத்துணர்வூட்டும் நிழலாகவும் உள்ளார். கருமையான மேகத்தில் தங்கியிருக்க அவர் தீர்மானித்திருந்தார். விவிலியமானது, இந்த இருபொருட்பண்பை வைத்துச் சொல்லாடல் செய்கிறது.

II. மரணத்தின் அறிவிப்பு:

1. **விலகியோடும் நிழல்:** தான் மறைந்து போவதற்கு உட்பட்ட படைப்பு என்பதை அறிந்த நிலையில், நிழலினுடைய நீண்டு வளரும் அல்லது தோன்றி மறையும் பிரசன்னத்தில் மனிதன் தனது ஊழை அறிந்து கொள்கிறான்; "பொழுது சாய்ந்தது, மாலை நேரத்து நிழல் நீண்டு வளர்கின்றது" (எரே 6:4). இவ்வாறாக, அதன் பாகைகள் மாற்ற முடியாத விதத்தில் நிழற்கடிகையில் சேர்க்கப்படுவது தான் மனித வாழ்க்கை (2 அர 20:9-11). "நிழல் போல் ஓடி நிலையற்றுப்போகிறான்" மனிதன் (யோபு 14:2; 8:9). அவனது நாட்கள் நிழலைப்போல இரவில் தேய்கின்றன (சங் 102:12; 144:4). எந்த நம்பிக்கையுமின்றி மரணத்தை நோக்கிக் கடந்து செல்லுகின்றன (1 நாள் 29:15; ஞான 5:9). வீணான வாழ்வினுடைய நூலின்மேல் (திருவுரை 6:12) நிழலைப்போல அவன் பயணம் செய்கிறான் (சங் 38:7). ஆனால் திருப்பமுடியாத இந்த வளர்ச்சிக்குள்ளே தனது முழு மாற்றத்தை அனுபவிக்கின்ற வேளையில், "மாற்றமோ, மாறுதலின் நிழலோ நிலவாத ஒளியின் தந்தையின் மேல்" அவன் தனது விசுவாசத்தை நிலைப்படுத்துகின்றான் (யாக் 1:17).

2. **இருளும் மரணத்தின் நிழலும்:** எழுபது நூல் விவாதத்துக்குரிய ஆனால் மெய்ம்மையின் ஆழமான உணர்வைக் கொண்டுள்ள சொல்லாக்க விளக்கத்தைக் கொண்டுள்ளது. ஆழமான நிழல் என்பதைக் குறிப்பிடும் எபிரேயச் சொல்லை மரணத்தின் நிழல் என அது சாதாரணமாக மொழிபெயர்த்தபோது, நற்செய்தியாளர்கள் அதை ஏற்றுக்கொள்கின்றனர் (எசா 9:1; மத் 4:16; லூக் 1:79). ஏனெனில், நிழலானது மாற்றமடைந்து விரைந்தோடுகின்ற ஒரு சாதாரண இயல் நிகழ்ச்சியன்று. அஃது ஒரு வெறுமை, ஒன்றுமில்லாமை, யோபு தனது துன்பங்களில் விரும்புகின்ற இருண்ட தெளிவற்ற நிலையாகும் (யோபு 3:1-6). இறந்தோரின் நாடாகிய செயோல் என்ற நம்பிக்கையற்ற பாதாளமானது, இருள் மற்றும் நிழலின் உறைவிடமாகும் (10:21). எல்லா வெளிச்சமும் அங்கு இருளாகவே இருக்கும். இந்த வாழ்விலும் சோதனையானது மனிதனை வாழ்வோரின் ஒளியினின்று ஏற்கெனவே ஒதுக்குகிறது; "என் கண்களும் இருண்டுபோயின" (16:16).

3. **நிழலின் தலைவர்:** அச்சுறுத்தும் மரணத்தின் நிழலுக்கு முன்னால், இறைவன் மட்டுமே ஒரே அடைக்கலம். இருளைப் படரச்

செய்பவர். பாவியின் நம்பிக்கையாக உள்ள செயற்கை ஒளியை மங்கச் செய்கிறார் (எரே 13:16; சங் 44:20). அவர் "காரிருளை ஒளிக்குக் கடத்திவரக் கூடியவர் (யோபு 12:22). "காரிருளிலும் சாவின் நிழலிலும் கட்டுண்டு கிடந்தவர்களை வெளிக்கொணர" அவரால் முடியும் (சங் 107:10. 14). இவ்வாறு மனவுறுதி நிறைந்தவராய்ச் சங்கீத ஆசிரியர், "சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சேன்" என்று கூவுகிறார் (சங் 23:4). "சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்தது" என்னும் எசாயாவின் இறைவாக்கைக் கிறிஸ்து நிறைவேற்றியதால், இந்த நம்பிக்கையானது உண்மையாயிற்று (மத் 4:16; எசா 9:1).

III. **பாதுகாப்பின் பிரசன்னம்:** மேகமானது சிலருக்கு- அச்சுறுத்தும் இருளாகவும், மற்றவர்களுக்கு- ஒளியாகவும் பாதுகாப்பாகவும் இருந்ததுபோல, பயங்கர நிழலானது பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கலாம். அஃது உறுதியளிக்கும் பிரசன்னத்தின் மூலமாக மனிதன் ஒரு பிரசன்னத்தைக் கண்டுபிடிக்கிறான்.

1. **மண்ணுலக நிழல்கள்:** அன்றாட வாழ்வில், குறிப்பாக மேற்காசிய நாடுகளில் நிழலானது பாராட்டப்படுகிறது. ஏனெனில், சூரியனின் வெப்பத்தினின்று அது காப்பாற்றுகிறது. எல்லாப் படைப்புகளும் நிழலை நாடுகின்றன. வலிமை மிக்க பெகிமோத்து, தாமரையின் நிழலை நாடுகிறது (யோபு 40:22). பறவைகளும், விலங்குகளும், மனிதரும் மரத்தின் நிழலை நாடுகின்றனர் (எசே 31:6). "அரசே, அந்த மரம் நீர்தான்" என்று தானியேல் நெபுகத்னேசருக்கு விளக்குவது போன்று, நிழலளிக்கும் மரமானது பாதுகாப்பு ஆற்றலை அடையாளங் காட்டுகிறது (தானி 4:17-19). அதே போன்று அரசனின் நிழலில் பாதுகாப்பானது உறுதியளிக்கப்படுகிறது (நீதி 9:15). நீதியுள்ள அரசர், "காய்ந்த மண்ணில் பெரும் குன்றின் நிழல் போல" இருப்பார் (எசா 32:2). இருபொருள் மயக்கத்தன்மையுடைய இத்தகைய நிழலானது, யோனாவின் தலை மீதான உதிர்ந்து போன ஆமணக்குச் செடியைப்போலவும் (யோனா 4:5-7), இஸ்ராயேலின் அரசனுடையதைப் போலவும் (புல 4:20) ஏமாற்றலாம். நொடியில் வேருடன் பிடுங்கப்பட்டு, தங்களுடைய ஏமாற்றும் நிழலின் மேல் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுடன் குழியில் எறியப்படக்கூடிய (எசே 31; தானி 4) எகிப்தினுடைய (எசா 30:2) அல்லது லெபனானின் கேதுரு மரங்களினுடைய நிழலானது எவ்வளவு ஏமாற்றம் தரக்கூடியதாக இருக்கும்!

2. **இறைவனின் நிழல்:** வலுவற்ற பாதுகாப்பிற்குப் பதிலாக, பாதுகாப்பான நிழலை இறைவன் மட்டுமே அளிக்கிறார். மனிதன் புனித மரங்களின் இனிய நிழலைப் பின்னால் விட்டு விட்டு (ஓசே 4:13), யாவேயில் தனது நிழலை எல்லா நேரங்களிலும் கண்டடைய வேண்டும் (சங் 12:5; எசா 25:4-5). "எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பதும்" (சங் 91:1), அவரது வலிமை மிக்க கரம் (எசா 49:2; 51:16) அல்லது அவரது சிறகுகளின் நிழலில் (சங் 7:8; 56:2; 62:8) உண்மையான ஊழியனாக இருப்பதும் விசுவாசம் நிறைந்த மனிதனின் கனவாகும்.

இந்த உருவகங்களின் பின்னணியில், யாத்திரையின் சில நினைவுகளை எதிர் கொள்கிறோம். மேகமானது இறைவனுடைய கூடாரத்தின்மீது நிழலிட்டு (யாத் 40:35), ஓரிடத்தில் பாளையம் தங்கியிருந்த காலத்தை நிர்ணயித்தது (எண் 9:18.22). ஞான நூல் கூறுவது போன்று (ஞான 19:7), தனது நிழலால் அஃது இஸ்ராயேலருக்குப் புகலிடமும் அளித்து (எண் 10:34) வியத்தகு முறையில் அவர்களைப் பாதுகாத்தது. இப்பாதுகாப்பானது இறுதிக்காலங்களில் புதுப்பிக்கப்படும். "ஒரு விதான மண்டபமாகவும், பகல் வெப்பத்தினின்று காக்கும் நிழலாகவும், மழைக்கும் புயல் காற்றுக்கும் ஒதுங்கும் புகலிடமாகவும், அரணாகவும்" (எசா 4:5-6), தூய்மைப்படுத்தப்பட்ட சீயோனின் மேல் இறைவனின் மகிமை வந்து தங்கும். இந்த இறை

மகிமையின் கீழ் இஸ்ராயேல் பயணம் செய்யும்போது, "காடுகள் அதற்கு நிழலைத் தரும்" (பாரூ 5:7-9; 1:12).

ஆலயம் திருநிலைப் படுத்தப்பட்டபோது மேகமானது திருத்தூயகத்தின் மேல் பரவித் தங்கியிருந்தது. "ஆண்டவரே! நீர் கரிய மேகத்தில் உறைவதாகக் கூறினீர்" என அப்போது சாலமோன் சொன்னார் (1 அர 8:12). பாதுகாப்பினுடைய கருத்துடன் இறைவனுடைய நெருங்கிய பிரசன்னமும் இங்கே சேர்க்கப்படுகிறது. இந்தப் பொருளில் உன்னத சங்கீதத்தின் தலைவியைப் போன்று எருசலேமானது "அவரது நிழலிலே அமர்வதில் இன்புறலாம்" (உ.ச. 2:3). உருமாற்றத்தின்போது யார்மீது மேகம் நிழலிட்டதோ (லூக் 9:34 இணை) அவரை இறைவனது ஆற்றலால் மரியாள் கருத்தரித்தபோது (1:35) அவரில் இக்கனவானது உண்மையாயிற்று.

3. இஸ்ராயேலின் நிழல்: தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய முறையின் போது இறைப்பாதுகாப்பின் ஊற்றாக உருவாகின்றனர். முன்னர், மற்ற அரசுகளுக்கு மேலாக, இஸ்ராயேலின் திராட்சைத் தோட்டமானது தனது நிழலால் மலைகளை மூடியது (சங் 80:11). இறைத் தீர்ப்பினால் வீழ்ச்சியுற்ற நிலையில் இஸ்ராயேலானது இறுதியாக, பறவைகள் வந்து தங்குகின்ற பசுமையான மரமாகவும் (எசே 17:23; தானி 4:9), எல்லா நாடுகளுக்கும் திறக்கப்பட்டுள்ள இறை அரசினுடைய காணக்கூடிய உருவமாகவும் (மத் 13:32) மீண்டும் உருவாகும். அதே முறையில் பேதுரு, நோயாளிகளைத் தனது நிழலால் குணப்படுத்தும்போது (அ.ப. 5:15), இறைவனுடைய மீட்பளிக்கும் பிரசன்னத்தை அவரது திருச்சபையில் வெளிப்படுத்துகிறார்.

**நிழற்கடிகை அல்லது கதிரவக்கடிகை (DIAL)**

ஆகாசினால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும், நேரத்தைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி. எசாயா, சூரியனின் நிழல் திரும்புவதின் அடையாளத்தை எசேக்கியாவிற்குக் காட்டுவதற்காக இதைப் பயன்படுத்தினார் (2 அர 20:11; எசா 38:8).

பல வகைப்பட்ட சூரிய நிழற்கடிகைகள் பழங்கால மேற்காசிய மக்களால் பயன் படுத்தப்பட்டன. பாபிலோனியர்கள் 12 மணிகளின் அளவுகளைக் குறிக்கும் ஒரு கருவியைப் பயன்படுத்தியதாக எரோதோத்து கூறுகின்றார். ஆகாசு பயன்படுத்திய சூரியக் கடிகை, எந்த வகையைச் சேர்ந்ததென்று தெரியவில்லை.

ஆகாசின் சூரியக்கடிகை, பாபிலோனிய வகையைச் சேர்ந்த, குறியும் மணி அளவுகளும் கொண்ட ஒரு தனிப்பட்ட கருவி என்று அறிஞர்கள் பலர் கருதி வந்திருக்கின்றனர். இருப்பினும், இஃது ஒரு படிக்கட்டு என்றும், அதன்மேல் அருகிலுள்ள ஒரு பொருளின் நிழல் படும்பொழுது, நேரம் கணக்கிடப்பட்டது என்றும் இன்றைய வல்லுநர்களும், எழுபதுநூலும், யோசிப்பசும் கருதுகின்றனர். எகிப்தியர்கள் இப்படிப்பட்ட ஒரு கருவியைப் பயன்படுத்தியதாக இப்பொழுது தெரிகின்றது. கும்ரான் ஏடுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன.

**நிறம், வண்ணம் (COLOUR)**

இஸ்ராயேலர், தங்கள் அண்டை இனத்தவர்களுக்கு மாறாக, நிறங்களின் பொதுவான வேறுபாடுகளையே, குறிப்பாக திட்பமற்ற மற்றும் திண்மையான நிறங்களையே அறிந்திருந்தனர். மேலும், நிறங்களின் நுண்ணிய வேறுபாடுகளைக் குறிக்கும் சொற்களை அரிதாகவே பயன்படுத்தினர். பழைய ஏற்பாட்டில் நிறங்களைச் சுற்றி வளைத்துத்தான் விவரிக்கப்படுகின்றன. சான்றாக, "கலப்பு நிறமோ, புள்ளியோ உடைய" ஆடுகள் (ஆதி 30:33); "வரியோ புள்ளியோ உடைய வெள்ளாடு" (30:35); "நீண்ட பல்வண்ண இறகுகள்" (எசே 17:3); யோசேப்பின் புகழ்பெற்ற "அழகு வேலைப்பாடுகள் நிறைந்த அங்கி" (ஆதி

37:3.23.32) உண்மையில் வெறும் நீண்ட கைகளையுடைய அங்கியாக இருந்திருக்கலாம். இஸ்ராயேலர் நிறங்களைப் பற்றித் தெளிவில்லாமல் கூறுவது சிலைகள் செய்வதைத் தடுக்கும் இறைவனது கட்டளையின் விளைவாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

விவிலியம் சில வண்ணங்களைக் குறிப்பாகக் கருஞ்சிவப்பு நிறத்தைக் குறிக்கின்றது. இந்நிறத்தில் மிதியான் அரசர்கள் இயேசுவின் உவமையில் செல்வர் உடுத்தினர் (நீதி 8:26- பட்டாடை). இயேசுவின் உவமையில் செல்வர் உடுத்திய ஆடையும் இந்நிறத்தில் (செந்நிறம்) இருந்தது (லூக் 16:19). சிவப்பு நிறத்தையும் குறிப்பிடுகிறது (யாத் 25:4). பழைய ஏற்பாடு வெள்ளை (ஆதி 49:12), கருப்பு (உ.ச. 1:5; 5:11), பச்சை (ஆதி 1:30), சிவப்பு (ஆதி 49:12) ஆகிய நிறங்களையும் குறிப்பிடுகிறது. மஞ்சள், சிவப்பு, வெள்ளை (லேவி 13:19.24:43), நல்ல சிவப்பு (எரே 22:14; எசே 23:14) ஆகிய நிறங்கள் சில இடங்களில்தான் குறிக்கப்படுகின்றன.

இஸ்ராயேலர் ஒப்புமையில் நிறங்களை விரும்பிப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. ஆறுதல் சொற்களைக் கூற எசாயா நிறங்களைப் பயன்படுத்துகிறார் (எசா 1:18). திருவெளிப்பாட்டு நூல் அடையாளப் பொருட்களோடு பல நிறங்களைப் பயன்படுத்துகிறது. முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டபின் தோன்றிய நான்கு குதிரைகளின் நிறங்கள் அடையாளப் பொருளுடையவை. வெள்ளைக் குதிரை- வெற்றியைக் குறித்தது (திருவெளி 6:1-2; காண். செக் 6:3). செந்நிறக் குதிரை- போரையும் இரத்தம் சிந்துதலையும் குறித்தது (திருவெளி 6:4; காண். செக் 6:2). கறுப்பு பசியைக் குறித்தது (திருவெளி 6:5; காண். செக் 6:2), வெளிறிய குதிரை- சாவைக்குறித்தது (திருவெளி 6:8). வெள்ளை நிறம் தூய்மையைக் குறித்தது. சர்தையிலுள்ள விசுவாசிகளும், அவர்களைப் போன்றவர்களும் இவ்வாறு இருந்தனர் (3:4-5). இத்தகைய பொருள்கள் விவிலியத்தின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. தூய்மையை- வெள்ளை நிறமும் (மாற் 16:5 இணை), கறுப்பு- பசியையும் (புல 5:10) அல்லது அரசமகத்துவத்தையும் (எஸ்த 8:15), சாம்பல் நிறம்- முதியவர்களிடையே ஞானம் அல்லது அழகையும் (யோபு 15:10; பழ 20:29; காண். எசா 46:4) உணர்த்தவல்லன.

தொல்பொருள் ஆய்வுகள், சாயம் செய்வதிலும், நிறங்களை மாற்றுவதிலும் பழங்கால மேற்காசியாவில் பயன்படுத்தப்பட்ட முறைகளைப் பற்றி அதிகம் அறிய வாய்ப்பளித்துள்ளன. பலவகைக் களிமண்களைப் பயன்படுத்தி, அதைப் பலவித வெப்ப நிலையில் சூடுபடுத்தி, கற்களுக்கு நிறம் கொடுத்தனர்; பல்வகை வண்ணங்கள் பூசினர். எகிப்தியர் பலவகை உலோகங்களிலிருந்து தங்கள் வண்ணங்களைத் தயாரித்தனர். சான்றாக, படிகக்கல்பொடி, செம்பைச் சூடுபடுத்தி நீலநிறம் தயாரித்தனர். ஓவியங்களிலும் பாண்டங்களில் பூசவும் வண்ணங்களைத் தயாரிப்பதோடு, பழங்கால மக்கள், பூச்சிகளிலிருந்து ஆடைகளுக்குச் சாயம்பூசும் வண்ணங்களையும் தயாரித்தனர்.

**நிறைவுடைமை (PERFECTION)**

I. நற்செய்தியின் ஒரு சொற்றொடரானது இறைவனைப் பின்பற்றுதலையே நிறைவுடைமையின் மாதிரியாகத் தருகின்றது; "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போன்று நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத் 5:48). "நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில், நாம் தூயவர்" (லேவி 11:45; 19:2) என்னும் லேவியர் ஆகமக் கட்டளை பழைய ஏற்பாட்டில் கொண்டிருந்த இடத்தை மேற்கூறப்பட்ட முனைப்பான கட்டளை புதிய ஏற்பாட்டில் கொண்டுள்ளது. ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குக் கருத்து மாற்றமானது தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. **இறைவனின் தூய்மையும் நிறைவுடைமையும்:** பழைய ஏற்பாடானது

நிறைவுடைமையை விட, புனிதத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிறது. இறைவன் தூயவர்; அதாவது, இவ்வுலக உயிர்களைவிட முற்றிலும் வேறுபட்ட அமைப்பைச் சார்ந்தவர். அவர் உயர்ந்தவர், ஆற்றல் மிக்கவர், அச்சம் விளைவிக்கிறவர் (உப 10:17; சங் 76). வியத்தகு முறையில் நல்லவராகவும் பிரமாணிக்கமுள்ளவராகவும் அவர் காணப்படுகிறார் (யாத் 34: சங் 136). மேலாண்மை மிக்க நீதியுடன் அவர் வரலாற்றில் தலையிடுகிறார் (சங் 99). "நிறைவுள்ளவராக" அவரை யாரும் தகுதிப்படுத்துவதில்லை. ஏனெனில், எபிரேய மொழியில் ஒரு சில குறிப்பிட்ட உயிரினங்களுக்கு மட்டுமே இச்சொல்லானது சரியாகப் பொருந்துகிறது. ஆனால், அவரது செயல்களிலும் (உப 32:4), சட்டத்திலும் (சங் 19:8), வழிகளிலும் (2 சாமு 22:31) நிறைவுடைமை பற்றிப் பேசப்படுகிறது.

2. **நிறைவுடைமையின் கோரிக்கை:** தூய்மையின் இறைவன் தனக்கென ஒரு மக்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பதிலுக்கு இம்மக்கள் தூயவர்களாகின்றனர்; அதாவது, திருநிலைக்குப் புறம்பானவற்றிலிருந்து பிரிக்கப்பட்டு, திருநிலைப்படுத்தப் படுகின்றனர். அதே நேரத்தில் நிறைவுடைமைக்கான ஒரு கோரிக்கையும் அதனில் விதிக்கப்படுகிறது. திருநிலைப் படுத்தப்பட்டதானது முழுமையானதாகவும், மாசற்றதாகவும் இருக்க வேண்டும்.

முதலாவதாக உடல் சார்ந்த முழுமை. பலியில் ஒப்பு கொடுக்கப்படுகின்ற விலங்குகளில் இது தேவையாக உள்ளது. "குருடு, ஊனம், நெரிவு முதலிய குறைபாடுள்ளவற்றை ஆண்டவருக்குச் செலுத்தக் கூடாது" (லேவி 22:22). தூய்மை மற்றும் தூய்மையின்மை பற்றிய விதிமுறைகள் மக்களின் குணநலன்களைப்பற்றிக் குறிப்பிடுவதால் (லேவி 11-13), இதே சட்டமானது குருக்களுக்கும் (லேவி 21:17-23), ஓர் அளவுக்கு அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

மனிதர்களைப் பொருத்தமட்டும் உடல் சார்ந்த முழுமையுடன், சேர்க்கப்பட வேண்டும். அனைத்து நேர்மை மற்றும் பிரமாணிக்கத்தில் நிறைவான இதயத்துடன் யாவேக்கு ஊழியம் புரிய வேண்டுமென்றும் (1 அர 8:61; உப 6:5; 10:12), இப்பணியானது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலையும் தீமைக்கெதிரான போராட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது என்றும் இஸ்ராயேல் அறிந்திருந்தது (1 அர 8:61; உப 6:5; 10:12). "இவ்வாறு உன் நடுவிலிருந்து தீமையை அகற்றுவாய்" (உப 17:7.12). சமய உணர்வில் விலகிப்போதலை இறைவாக்கினர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினர் (ஆமோ 4:4...; எசா 1:10-17; 29:13). வன்முறையையும் தான் என்ற எண்ணத்தையும் விலக்கும் போதும், இறைவனிலான விசுவாசத்திலும், உரிமைக்கான மரியாதை கொடுத்து நல்லதைச் செய்தலிலும் நாம் உண்மையான நீதியை நாடவேண்டும் (எசா 58). "என் முன்னிலையில் நடந்து நிறைவுள்ளவனாய் இரு" என்று இறைவன் ஆபிரகாமுக்கு இட்ட கட்டளை (ஆதி 17:1), மீளவும் உப 18:13-இல் எடுத்துரைக்கப்பட்டு அதன் பொருட்செறிவை மேலும் மேலும் வெளிப்படுத்துகிறது.

3. **நிறைவுடைமையில் செயற்பழக்கம்:** தங்களுடைய முன்னோர்களின் மாதிரிகளைத் தியானித்து (ஞான 10; சீரா 44:49), பக்தியுள்ள யூதர்கள் சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் நிறைவை நாடினர்; "ஆண்டவருடைய சட்டப்படி நடப்பவர்களே அவர்களது வழியில் மகிழ்ச்சியும் நிறையும் உள்ளவர்களாவர்" (சங் 119). ஆனால், இந்தக் குறிக்கோளின்பால் அவர்கள் கொண்டிருந்த பற்றே சில பிரச்சனைகளைக் குறித்துக்காட்டியது. யோபு நிறைவுடைமைக்கு ஒரு மாதிரி, "மாசற்றவர், நேர்மையுள்ளவர், கடவுளுக்கு அஞ்சித் தீமையை விலக்கி நடந்து வந்தவர்" (யோபு 1:1). துரதிருஷ்டம் ஏன் அவரை விடவில்லை? இந்தத் துக்ககரமான கேள்வியானது ஆன்மாக்களைத் திறந்த நிலையிலும் எதிர்பார்ப்பிலும் வைத்திருந்தது.

III. புதிய ஏற்பாடு

**1. சட்டத்தின் நிறைவுடைமை:** எதிர்பார்த்தலை முன்னோக்காகக் கொண்ட இந்த நிறைவுடைமைக்கு நற்செய்தி வணக்கம் செலுத்துகிறது. சட்டத்தின்பால் திருமுழுக்கு யோவானின் பெற்றோர், சிமியோன், அன்னா ஆகியோர் கொண்டிருந்த குற்றம் கூற முடியாத பற்றுறுதி (லூக் 1:6) இத்தகையதே. ஆனால், சட்டத்தின் செயற்பழக்கமானது தன்னிலேயே உளநிறைவுடன் அடங்கியிருப்பதெனில், அது போலியான நிறைவுடைமையாகும். அஃது இயேசுவின் சிறிதும் விட்டுக் கொடாத எதிர்ப்பை எழுப்புகிறது (லூக் 18:9-14; யோவான் 5:44). இந்த எதிர்ப்பைப் பவுல் தொடர்ந்து நடத்துகிறார் (உரோ 10:3; கலா 3:10).

**2. இயேசுவும் நிறைவுடைமையும்:** உண்மையில் முற்றிலும் மாறுபட்டதொரு வழியில் சட்டமானது தனது முழு நிறைவைக் கண்டடைய வேண்டும். மிகத்தூய இறைவனே அன்பின் இறைவன் என்பதை வெளிப்படுத்துகின்ற வேளையில், இறைவனுடனான உறவு எழுப்புகின்ற நிறைவுடைமைக்கான கோரிக்கைக்கு இயேசு புதியதொரு திருப்பம் அளிக்கின்றார். இனி மேலும், இது நேர்மையைப் பாதுகாப்பது பற்றிய கேள்வியன்று; மாறாக, இறைவனுடைய கொடைகளையும் அன்பையும் பெற்று மக்களிடையே பரப்புவதாகும்.

பாவிகளுடனான தொடர்பினின்று விலகியோடுகின்ற நீதிமான்களுடன் இயேசு சேரவில்லை. பாவிகளுக்காகவே அவர் வந்தார் (மத் 9:12-13). உறுதியாகவே, லேவியராகமத்தின் குறிப்புகளால் முன்னுரைக்கப்பட்ட "மாசற்ற செம்மறி" இவரே (1 பேதுரு 1:19). ஆனால், நமது பாவங்களை அவர் தன் மேல் சுமந்துகொண்டு, அவற்றின் மன்னிப்பிற்காகத் தனது இரத்தத்தையே பொழிந்தார். இவ்வாறு நமது முறையில் நம்மை நிறைவுபடுத்தக்கூடியவரான (எபி 10:14) நமது "நிறைவுள்ள" குருவாக அவர் உருவாகிறார் (எபி 5:9-10; 7:26-28).

**3. தாழ்ச்சியில் நிறைவுடைமை:** எனவே, கிறிஸ்து கொணர்கின்ற மீட்பிலிருந்து பயனடைய விரும்பும் மனிதன் தன்னைப் பாவியென ஏற்றுக்கொள்ள வேண்டும் (1 யோவா 1:8); மேலும், தன்னை அவருடைய அருளுக்குமட்டுமே ஒப்படைப்பதற்கென, தனிப்பட்ட சொந்த அனுகூலத்தின் காரணமாக உயர்வுபடுத்தும் எண்ணத்தை விட்டுவிட வேண்டும் (பிலி 3:7-11; 2 கொரி 12:9). தாழ்ச்சியும் பற்றற்ற தன்மையுமின்றி, இயேசுவைப் பின்செல்ல இயலாது (லூக் 9:23 இணை; 22:26-27). அனைவரும் ஒரே விதமான செயலாற்றல் மிக்க துறத்தலுக்கு அழைக்கப்படவில்லை (மத் 19:11-12; அ.ப. 5:4). ஆனால், நிறைவை நோக்கி முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் இப்பாதையில் தாராள மனதுடன் நடந்து செல்ல வேண்டும். பணக்கார இளைஞனுக்கு உரைக்கப்பட்ட வார்த்தை குறிப்பிடத்தக்கது; "நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய் உம் உடைமைகளை விற்று... பின்னர் வந்து என்னைப் பின்பற்றும்" (மத் 19:21; அ.ப. 4:36-37).

**4. அன்பின் நிறைவுடைமை:** இறைவனின் பிள்ளைகள் அன்பின் நிறைவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர் (கொலோ 3:14; உரோ 13:8-10). மத் 5:48-க்கு ஒத்த லூக்காவின் பகுதியில் 'நிறைவுள்ளவர்' என்பதற்குப் பதிலாக 'இரக்கமுள்ளவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லூக் 6:36). மத்தேயுவின் பின்னணியானது உலகளாவிய அன்பையும் பகைவனுக்கும் துன்புறுத்துகிறவனுக்கும் காட்டப்படும் அன்பையும் பற்றிப் பேசுகிறது. கிறிஸ்தவன் தீமையினின்று தன்னை விலக்கி வைத்திருக்க வேண்டும் (மத் 5:29-30; 1 பேதுரு 1:14-16). ஆனால், தனது தந்தையைப் பிரதிபலிப்பதற்கென (மத்5:45; எபே 5:1-2) அவன் அதே நேரத்தில் பாவிகளைப் பற்றி, கவலை கொள்ளவேண்டும் (உரோ 5:8); அவர்களை அன்பு செய்ய வேண்டும். கடினமாயினும் "நன்மையால் தீமையை வெல்ல வேண்டும்" (உரோ 12:21; 1 பேதுரு 3:9).

**5. நிறைவுடைமையும் முன்னேற்றமும்:** அடைகின்ற விளைவுகள், பயன்களின் காரணமாக இந்த வெற்றி கொள்ளும் தாராளத்தன்மையானது ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. இன்னும் முன்னேற வேண்டும் என்ற கருத்தானது நிறைவுடைமைக் கருத்தோடு பிணைக்கப்பட்டதாகும். கிறிஸ்துவின் சீடர்கள் எப்போதுமே முன்னேற வேண்டியவர்கள். உருவாக்கப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியாய் அவர்கள் அமைந்தாலும் (1 கொரி 2:6; 14:20; பிலி 3:12.15), அறிவிலும் அன்பிலும் வளர வேண்டும் (பிலி 1:9).

**6. இரண்டாம் வருகையில் நிறைவுடைமை:** அந்நாளில் எவ்விதப் பழியும் இல்லாமல் இருக்கும் நிலையைத் தங்களுக்கு இறைவன் அளிப்பார் என்ற நம்பிக்கையில், தங்களுடைய ஆண்டவருடைய வருகைக்காக, தயாரிப்பை அவர்கள் நிறுத்தி விடுவதில்லை (1 தெச 3:12-13). "மகிமையோடு தொடங்கும் ஒரு திருச்சபையை" (எபே 5:27) அந்நேரத்தில் அளிக்க விரும்பும் கிறிஸ்துவின் ஆவலுக்குப் பதிலளிப்பதை அவர்கள் தங்களது பேராவலாகக் கொண்டிருப்பார். ஏற்கெனவே நிறைவேறியதை மறந்தவர்களாய், கிறிஸ்துவில் தனது முழுமையை அடைகின்ற காலத்தின் வலிமையில் இந்த நிறைவுடைய மனிதனை அமைப்பதற்கென அனைவரும் ஒன்றாகச் சந்திக்கும்வரை (எபே 4:13) அவர்கள் முன்னேறிக்கொண்டிருப்பர் (பிலி 3:13).

## நிறைவேற்றுதல் (FULLFILL)

**II.** மனித பலவீனத்தாலும் நிலையற்ற தன்மையினாலும் முத்திரையிடப்பட்டுள்ள மனித வாழ்வை, நிறைவேறாத மற்றும் உறுதியற்ற திட்டங்கள் குறிக்கின்றன. எல்லாம் வல்ல பிரமாணிக்கமுள்ள, இறைவன் மடிவுறாத பணிகளால் திருப்தியடைவதில்லை. விவிலியமானது மொத்தமாகவும், முழு அளவிலும் அவரது திட்டங்களின் நிறைவேறுதல்களுக்குச் சாட்சியமளிக்கிறது. செய்து முடிப்பதானது செய்தலை விட அதிகமாக உணர்த்துகிறது. இச்சொல்லை மொழிபெயர்க்கின்ற சொற்கள் முழுமை, சாதனை மற்றும் முழுநிறைவு ஆகியவற்றின் கருத்தை வெளிக்கொணர்கின்றன. தொடங்கிய பணியை ஒருவன் செய்து முடிக்கிறான் (1 அர 7:2; அ.ப. 14:26). அதாவது விரும்பத்தக்க நிறைவிற்கு அதனைக் கொண்டு வருகிறான். வார்த்தை, கட்டளை, வாக்குறுதி அல்லது உறுதிமொழி ஆகியவற்றை ஒருவன் செய்து முடிக்கிறான். வார்த்தையானது, உண்மை நிலைக்கு உருவம் அளிக்கும் வார்ப்பபம்போன்று உள்ளது; பின்பற்றி, முடிவை அடையவேண்டிய செயலின் முதல் படியாக இஃது உள்ளது.

II. பழைய ஏற்பாடு

**நிறைவேற்றுதலின் முன்னோக்குகள்:**

**1. இறைவார்த்தையும் சட்டமும்:** மற்றெந்த வார்த்தையையும் விட மேலாக இறைவனின் வார்த்தையானது நிறை வேற்றுதலை நாடுகிறது. "நம் வாயினின்று புறப்படும் வார்த்தை பயன்தராமல் நம்மிடம் திரும்பாது" (எசா 55:11). இறைவன் "வீணாகப் பேசுவதில்லை" (எசே 6:10). அவரது சட்டமும் கட்டளைகளும் கீழ்ப்படிதலைக் கோரி (யாத் 20), இறுதியில் அதனைப்பெறும் (உப 4:30-31; 30:6-8; எசே 36:27).

**2. இறைவாக்குகள்:** இறை வாக்குகள் துரிதமாகவோ, தாமதமாகவோ நிறைவேறுகின்றன. "பண்டைய நிகழ்ச்சிகளை முன் கூட்டியே அறிவித்தோம்; திடீரென நாம், செயல்பட்டோம்; யாவும் நிகழ்ந்தன" (எசா 48:3; காண்க. செக் 1:6; எசே 12:21-28). இறைவாக்கினருடைய அழைப்பிற்கும் அவரது செய்தியின் நம்பத்தகுந்த நிலைக்கும் உறுதியளிக்கின்ற இறைவனின் அடையாளம் நிறைவேற்றுதலே (உப 18:22). இறைவாக்கினால் உரைக்கப்பட்ட "ஆண்டவரது வார்த்தையை நிறைவேற்ற" இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதற்குப் பழைய ஏற்பாடு பலமுறை சான்று

பகர்ந்துள்ளது. இவ்வாறாக, தாவீதின் சந்ததியைப் பராமரித்தல் மற்றும் ஆலயத்தைக் கட்டுதல் (1 அர 8:24), நாடு கடத்தப்படுதல் மற்றும் ஆலயத்தை மீண்டும் கட்டத் திரும்பி வருதல் (2 நாள் 36:21-23; எஸ் 1:1-2) முதலியன எடுத்துக்காட்டப்படு கின்றன. இப்பழைய சாதனைகள் வரவிருக்கும் நிறைவேற்றுதல்களுக்கு உறுதியாக உள்ளன.

**3. காலங்கள் நிறைவேற்றப்படுகின்றன:** சில நேரங்களில் திடீரென இருந்ததைப்போல நிறைவேற்றுதலானது, தற்செயலாக இல்லாமல், "அதனுடைய காலத்தில்" (லூக் 1:20) ஒருவித சூழ்நிலையில் அடையப்படுகிறது. வார்த்தை யானது நிறைவேற்றப்படுவதற்கு "அதற்குரிய காலத்தை அடைவது" அவசியமாக உள்ளது (எரே 25:12). மேலும், இறைவனுடைய திட்டமானது முழுமையாக மற்றும் மொத்தமாக நிறைவேற்றப்படுவதற்குக் காலத்தின் முழுமை யானது வந்தடைவது அவசியமாகும் (எபே 1:10; கலா 4:4; மாற் 1:15).

III. புதிய ஏற்பாடு

1. **எல்லாம் நிறைவேறிற்று:** நிறைவேற்றுதலின் ஒப்பிடப்பட முடியாத காலமானது புதிய ஏற்பாட்டுக் காலமாகும். நற்செய்தியாளர்கள், குறிப்பாக மத்தேயு, வாசிப்போரை இந்த உண்மை பற்றி உறுதிப்படுத்த விழைகின்றார்.

அ. **இறைவாக்குகள்:** "இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன" என்ற வாய்பாடானது மத்தேயு நற்செய்தியில் பின்வரும் பத்து நிகழ்ச்சிகளில் திகழ்கிறது. கன்னி கருத்தரித்தல், எகிப்திற்குத் தப்பியோடுதல், நோயாளிகளைக் குணமாக்குதல், உவமைகளில் போதித்தல், எருசலேமிற்குள் வெற்றி வீரராய் நுழைதல், யூதாஸ் காட்டிக் கொடுத்தல்... ஒத்த வாய்பாடுகள் மற்ற நற்செய்திகளில் காணப்படுகின்றன. மொத்த பழைய ஏற்பாடும் இயேசுவின் வெளிப்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது என்பதை நாம் உணர வேண்டும் என்பதையே இந்த விரிவான குறிப்புகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. அங்கு வலியுறுத்தப்பட்ட நிறைவேறுதல்கள் என்பவை, இயேசுவின் மண்ணுலக வாழ்வின்போது இறைத்திட்டம் முழுமையாக நிறைவேறுதலினுடைய பொதுவான தயாரிப்பேயாகும்.

இயேசுவின் வாழ்விலேயே இந்த நிறை வேறுதல்கள் அனைத்தும் ஒரே மட்டத்தில் இருக்கவில்லை. அவற்றில் ஒன்று மட்டுமே "முழுமையான செயலாக," குறிப்பிடப்படுகிறது. அதாவது, இயேசுவின் சிலுவை மரணம், யோவா 19:28-இல்வரும் "மறை நூலில் எழுதியுள்ளது இவ்வாறு நிறைவேறிற்று" என்ற சொற்றொடரில் அதன் பின்னணியானது "எல்லாம் நிறைவேறிற்று" என்பதை மீண்டும் கூறுவதன் மூலம் முழுமையினை வலியுறுத்துகிறது (19:30). லூக்கா இச்சொல்லைப் பாடுகளைக் குறித்து மட்டுமே உபயோகிக்கிறார் (லூக் 15:20; 18:31; 22:37). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின்படி, இயேசுவின் வாழ்வு அவருடைய பாடுகளால் நிறைவேற்றப்பட்டு, முழுமைக்குக் கொண்டு வரப்பட்டது (எபி 2:10; 5:8-9).

எனவே, புனித வரலாற்றின் அனைத்து நிகழ்ச்சிகளும் கிறிஸ்துவின் வருகையை நோக்கியே தயாரிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் வாழ்வில், மறைநூலின் அனைத்துச் செயல்களும் அவரது பலியில் உச்சநிலை அடைகின்றன. இவ்வாறாக, "கடவுளின் வாக்குறுதிகள் யாவற்றுக்கும் ஆம் என்பது அவரிடமே இருந்தது" (2 கொரி 1:20).

இந்த நிறைவேற்றமானது முன்னோக்கப் பட்டதைவிட அதிகமாகவே செய்கிறது. உண்மையில் இறை நிறைவேற்றங்களின் சட்டமானது, முன்னர்க் கற்பனை செய்யப்பட்டதைவிட அதிகமாகவே இருக்க வேண்டும் என்பதாகும். இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டிலான பழைய ஏற்பாட்டின் நிறைவேற்றமானது, தொடர்பு மற்றும் தொடர்ச்சி என்ற கருத்துகளால் சாதாரணமாக விளக்கப்பட

முடியாது; ஆனால், அதே நேரத்தில் உயர்வான இடத்திற்கான இயக்கத்தால் கோரப்படுகின்ற வேறுபாடுகளையும், பிரிவுகளையும் தன்னுள் கொண்டுள்ளது என்பதாகும். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் மோசேயையும் கிறிஸ்துவையும் (3:1-6), பழைய குருத்துவத்தையும் கிறிஸ்துவின் குருத்துவத்தையும் (5:1-10; 7:11-28), பழைய வழிபாட்டையும் கிறிஸ்துவின் பலியையும் (9:1-14) ஒப்பிடும்போது, மூவகை உறவானது (ஒப்புமை, வேறுபாடு, உயர்நிலை) தனிப்பட்ட விதத்தில் தெளிவாக்கப்படுகிறது. ஆயினும், அதே கருத்தானது புதிய ஏற்பாடு முழுவதிலும் அடிப்படையாக உள்ளது. இறுதியான நிறைவேற்றமும் ஒரு வெளிப்பாடேயாகும். இதுவரை முன்னோக்கப்படாத ஒரு தொகுப்பாகக் கடந்த காலத்தில் பேசப்பட்ட வார்த்தைகளை ஒன்று சேர்ப்பதன் மூலம், இஃது அவைகளுடைய பொருளுக்குப் புதிய ஆழத்தை அளிக்கிறது. தாவீதின் வாக்களிக்கப்பட்ட வாரிசு- உண்மையில் இயேசுவே (2 சாமு 7:12-13; லூக் 1:32-33). ஆனால், அவரது அரசு -இவ்வுலகைச் சார்ந்ததன்று (யோவா 13:36-37). ஏனெனில், தாழ்வுற்ற மரணத்தை அடையும் ஊழியன் (எசா 53:1; பேதுரு 2:24-25) மற்றும் வெற்றிகரமான ஆண்டவராகிய (சங் 110:மத் 26:64) விண்ணக மனுமகன் (தானி 7:13-14; மத் 26:64) ஆகியோரைப்பற்றிய இறைவாக்கின் நிறைவேற்றத்தை நாம் அவரிலே காண்கிறோம். புறவினத்தாரின் செல்வங்கள் திரளாக வந்தடையும் புதிய ஆலயத்தை அவர் கட்டுகிறார் (ஆகா 2:6-9; எசா 60:7-13). ஆனால், இது கைகளால் உருவாக்கப்பட்ட ஆலயமன்று (மாற் 14:58); மாறாக, அவரது உயிர்த்த உடலாகும் (யோவா 2:21). நாம் அதன் உறுப்பினர்களாக மாறுகின்றோம் (1 கொரி 12:27). பழைய ஏற்பாட்டு வாசகங்களைப் புதிய ஏற்பாடு பயன்படுத்தும் மன உலைவுபடுத்துமுறை பின்வருமாறு விளக்கப்படலாம்: ஆசிரியர்கள், நிகழ்ச்சிகளின் மூலமாக இறைவனாலேயே குறிக்கப்பட்ட புதிய பின்னணியைவிட, குறைந்த அளவிலேயே ஒவ்வொரு சொல்லினுடைய மூலப்பின்னணியின் மீது அக்கறை கொண்டுள்ளனர்.

2. சட்டம்: இறைவனுடைய வார்த்தையானது வாக்குறுதி மட்டுமன்று, கோரிக்கையுங்கூட. மலைப்பொழிவில் சட்டத்தைப்பற்றிப் பேசும்போது, அதை "அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே" தான் வந்துள்ளதாக இயேசு போதிக்கிறார் (மத் 5:17).

மோசேயின் சட்டத்தை அழிப்பதற்குப் பதிலாக, அதனுடைய கட்டளைகளை இயேசு ஆழப்படுத்துகிறார் என்பதை இப்பின்னணியானது நாம் புரிந்து கொள்ளச் செய்கிறது. எண்ணங்கள் மற்றும் மறைக்கப்பட்ட ஆசைகள் ஆகியவற்றின் உலகிற்குள்ளும் அவர் அதனுடைய கோரிக்கைகளை விரிவுபடுத்துகிறார். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லாவற்றிற்கும் அவசியமான முதன்மைத் தேவையான அன்பின் கட்டளையை முழுமையாக வெளிப்படுத்துவதன்மூலம் அவர் சட்டத்தைப் புதுப்பித்து, அதனை நிறைவுபடுத்துகிறார் (யாக் 1:25). அதிலே சட்டமும் இறைவாக்கினர்களும் தாங்கள் ஒருமைப்படுத்தப்பட்டு, தங்களுடைய முழுநிறைவிற்கு உயர்த்தப்படுவதைக் கண்டடைகின்றனர் (மத் 7:2; 22:40).

மேலும், "சட்டத்தை நிறைவேற்றுவதற்காக," தன்னுடைய கட்டளையைப் பிரகடனப்படுத்துவதோடு இயேசு மனநிறைவு அடையவில்லை. அவர் கட்டளையிடுகிறார். அனைத்து நீதியையும் நிறைவேற்ற வேண்டியிருப்பவர் (மத் 3:15), தன்னிலேயே அதனைச் சாதிக்கிறார். அவர் கோருகின்ற அனைத்தையும் தனது விசுவாசிகளில் நிறைவேற்றுகிறார். அவரது பலி, அன்பின் உச்சநிலையாகும் (யோவா 15:13). அதுவே அன்பின் ஊற்றாகவும் உள்ளது. "நிறைவுள்ளவரான நிலையில்" (எபி 5:9) அதே செயலில் கிறிஸ்து "தாம் பரிசுத்தராக்கியவர்களை என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார்" (எபி

10:14; யோவா 17:4.23).

முரண்பாடு ஏதுமின்றி பழைய சட்டத்தினுடைய அதையொத்த நிறைவேற்றமானது அதனுடைய நீக்கமாக விளக்கப்படலாம். நிறைவானது நிகழும்போது, நிறைவற்றது ஒரு முடிவிற்கு வருகிறது (1 கொரி 13:10). பவுலின் கருத்து இத்தகையதே. ஒரு புறம் சட்டத்தை ஒன்றுபடுத்துகின்ற அன்பானது அதனை ஆண்டு அதற்கு விளக்கம் அளிக்கிறது. இவ்வாறு இச்செயலின் மூலம் சட்ட நெறிமுறைகளின் அடிமைத்தனத்தை அழிக்கிறது. "பிறரிடத்தில் அன்பு கூர்பவன் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகிறான்" (உரோ 13:8,10; கலா 5:14). மற்றொரு புறம் சட்ட நெறிப்போக்கு வேரிலேயே வெட்டிவிடப்படுகிறது. சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தனது நிறைவைச் செயல்படுத்த மனிதனால் இனி இயலாது. "சட்டத்தின் நீதியானது நம்மில் நிறைவேற்றப்படுவதற்காக" இறைவன் தனது மகனை அனுப்ப வேண்டியதும் (உரோ 8:3-4), மேலும் அவரது மகனின் மூலமாக, நாம் ஆவியைப் பெற வேண்டியதும் அவசியமாயிற்று. இச்செயலின் மூலமாக " இனி நாம் சட்டத்தின் அதிகாரத்தில் இல்லாமல் இறையருளின் அதிகாரத்தில் இருக்கிறோம்" (உரோ 6:15).

பணிகள் செய்வது அருளின் இயக்க ஆற்றலினாலேயே கோரப்படுவதாகும் (கொலோ 1:10-11). பணிகளில் விசுவாசமும் (யாக் 2:22; கலா 5:6), அதே போன்று இறை அன்பும் நிறைவேற்றப்படுகின்றன (1 யோவா 2:5;4:12). ஆனால், பணிகளைச் செயல்படுத்துவதானது பவுலால் தாக்கப்படுகின்ற சட்டநெறிப் போக்கினின்றும் அப்பாற்பட்டதாகும். மனித காட்சியைப் பற்றிய கேள்வியே இனி இல்லை. கேள்விக்குரியது இறைபலனுடைமையே ஆகும் (கலா 5:22-23; யோவா 15:5).

3. **காலத்தின் முடிவு:** கிறிஸ்துவின் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பணியானது, "உலகின் முடிவு வரும்வரையில்" வரலாற்றில் எடுத்துக்காட்டப்படும் (மத் 24:9 இணை). இது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளால் அறிவிக்கப்பட்டது (ஆண்டவரின் நாள்). இஃது கிறிஸ்துவில் இறைவனுடைய திட்டத்தின் நிறைவேற்றத்தின் முழு வெளிப்பாடாக இருக்கும்.

## நினிவே (NINEVEH)

நினிவே மெசபொத்தாமியாவின் மிகவும் பழைமை வாய்ந்த நகரங்களில் ஒன்று. அசீரியர்களின் தலைநகரமாக விளங்கிய நினிவே, கி.மு. 612-இல் அசீரியா அழிந்த போது, அழிவின் சின்னமாகக் கருதப்பட்டது. நினிவே நகரம் திக்ரீசு ஆற்றின் கிழக்குக்கரையில் இக்கால மோசூலுக்கு எதிராக அமைந்திருந்தது. நினிவே நகரம் அழிந்த பகுதி- குயுன்சிக்கு, நெபியூனுசு என்னும் இரண்டு மண்மேடுகளால் குறிப்பிடப்படுகிறது. இவற்றைச் சுற்றிலும், 13 கி.மீ. சுற்றளவுள்ள நகரச் சுவர்கள் இருந்தன. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு மக்கள் வாழ்ந்தார்கள். கமுராபியின் சட்டத்தில்தான் இந்நகரின் பெயர் முதன் முதலில் குறிப்பிடப்பட்டது. இங்குதான் புகழ்பெற்ற இஸ்தார் தேவதையின் சிலையும் கோவிலும் இருந்தன. கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் முதலாம் திகிலத்பிலேசர் காலத்திலிருந்து, சார்கோன் (722-705 கி.மு.) காலம் வரை இது அசீரியாவின் அரச பரம்பரையினரின் இடமாக இருந்தது. சார்கோன் புதிய நகரைக் கட்டினான். மீண்டும் சனகெரிபுவின் (கி.மு. 705-681) காலத்தில் இஃது அசீரிய அரசர்களின் தங்கும் இடமாக மாற்றப்பட்டது. சனகெரிபு இங்கு ஓர் அரண்மனையும், பல கட்டடங்களையும், நகரச்சுவர்களையும் கட்டி நகரைப் பலப்படுத்தினார். இவருக்குப் பின்வந்த ஏசர்கத்தோன் (கி.மு. 681-668), அசூர்பானிப்பால் (கி.மு. 668-630) ஆகிய மன்னர்கள் பல அரண்மனைகளைக் கட்டினார்கள். இந்நகரம் கி.மு. 614-இல் பாபிலோனியர்கள், மேதியர்களாலும், கி.மு. 612-இல் புயலாலும் அழிக்கப்பட்டது. இதனை வென்றவர், இந்நகரை முழுவதுமாக அழித்துவிட்டனர். இந்நிகழ்ச்சி

நாகூமின் இறைவாக்கு நூலில் எடுத்துக்கூறப்படுகிறது.

இவ்விடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் பழங்கால மெசபொத்தாமியாவைப் பற்றிய அரிய செய்திகளை வெளிக்கொணர்ந்துள்ளன. சனகெரிபு, ஏசர் கத்தோன், அசூர்பானிப்பால் ஆகியோரின் அரண்மனைகளில் காணப்படும் புடைப்பகழ்வுச் சித்திரங்கள் அசீரியர் கலையின் அழகிய எடுத்துக்காட்டுகளாகும். அசூர்பானிப்பால் என்னும் அரசனால் அமைக்கப்பட்ட நூலகம் 25,000, ஆப்பெழுத்து முறையில் எழுதப்பட்ட களிமண் பலகைகளையும் மதம், புராணம் சம்பந்தப்பட்ட சுவடிகளையும் கொண்டிருந்தது. அசூர்பானிப்பாலின் காலத்திலிருந்த இலக்கியங்களை 'அக்காதிய' மொழியில் மொழிபெயர்த்து, இரட்டைமொழி அகராதிகளையும், இலக்கணப் புத்தகங்களையும் உருவாக்கினர்.

விவிலியத்தில், முதன்முதலில் நினிவே மெசபொத்தாமியாவில் நிம்ரோதால் அமைக்கப்பட்ட முக்கியமான நகரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (ஆதி 10:11 தொ). இதே போன்ற குறிப்புகள் யோனா ஆகமத்திலும் கூறப்பட்டுள்ளன (யோனா 1:2; 3:3; 4:11). நினிவேயின் புகழ் இஸ்ராவேயில் மக்களுக்கும் தெரிந்திருந்தது. நினிவேயில், சனகெரிபு அவனுடைய புதல்வர்களால் கொல்லப்பட்டான் என்று 2 அர 19:36; எசா 37:37-38 ஆகியவை குறிப்பிடுகின்றன. நினிவேயின் அழிவு, செப்பனியா (செப் 2:13), நாகூம் ஆகிய இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்டது. யோனா நூலில் கூறப்படும் அறநெறிகளுக்காக வரலாற்று உண்மைகள் வேறு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல், நினிவேயின் அரசனைப்பற்றியும் (யோனா 3:6), அதைக் கடக்க மூன்று நாள் ஆகும் (யோனா 3:3) என்றும் கூறுகின்றது. யோனா இறைவாக்கினர் அவருக்கே உரிய முறையில் நினிவேயின் புகழைக் கூறுகின்றார். மத் 12:41; லூக் 11:30,32-இன்படி, இறுதித் தீர்ப்பு நாளில் நினிவேயின் மக்கள் எழுந்து இயேசுவின் காலத் தலைமுறையினரைக் கண்டனம் செய்வர்.

## நினைவு (MEMORY, MEMORIAL)

1. மனிதனுடைய நினைவைப்பற்றி ஒருவன் விவிலியத்தில் வினா எழுப்புவானாயின், ஆசிரை நினைவு கூர்தல் (ஆதி 40:14), அல்லது தந்தையின் எச்சரிக்கைகளை மறத்தல் (தொபி 6:16) போன்ற உளவியல் குறிப்புகளை அவன் காணலாம். ஆனால், இங்கு நாம் கொள்ளும் அக்கறை நினைவினுடைய சமயப்பொருளும், இறைவனுடனான நமது உறவுகளில் அதன் பங்குமாகும்.

மனிதனுக்கான இறைவனுடைய நினைவைப் பற்றியும், இறைவனுக்கான மனிதனுடைய நினைவைப் பற்றியும் விவிலியம் கூறுகிறது. ஒவ்வொரு பரிமாற்ற நினைவு கூர்தலும் ஒருவன் மற்றவனுடன் உறவுகொண்டிருந்த பழைய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்தலானது உறவினைப் புதுப்பிக்கிறது. இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையிலான நிலை இத்தகையதே. விவிலியத்தில் நினைவு என்பது, கடந்த காலத்தில் நிகழ்ந்த சந்திப்புகளையும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காலத்தையும் குறிப்பிடுகிறது. உடன்படிக்கையினின்று பொழிகின்ற பிரசன்னத்தின் முனைப்பான ஆர்வத்தை, "இன்றைய நாளை" வாழ்விற்கு அது கொண்டு வருகின்றது. எதிர்காலத்தைத் தீர்மானித்து அதனை முன்னதாகவே தன்னுள் கொண்டுள்ள சலுகைக்குரிய நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இஃது இருப்பதால், அவற்றை நினைவுகூர்தல் அதற்குரிய இடத்தைப்பெறுகிறது. கடந்த காலத்தைப் பற்றிப் பிரமாணிக்கமான நினைவு மட்டுமே எதிர்காலத்திற்கான நல்ல முன்னோக்கை உறுதிப்படுத்த முடியும்.

2. நினைவின் தோற்றம்:

அ. **உண்மை நிகழ்ச்சிகள்:** முதல்

நிகழ்ச்சியானது படைப்பாகும். இஃது எப்போதுமே இறைவனை நினைவு கூர்வதற்காக மனிதனுக்கு அளிக்கப்பட்ட அடையாளமாகும் (சீரா 42:15-43:33; உரோ 1:20-21). மனிதன் அடையாளத்தைவிட உயரியவன். அவன் இறைவனின் சாயல். அவனால் அவரை நினைவு கூரவும் முடியும். மனிதனுடனான இறைவனுடைய தொடர்ச்சியான உடன்படிக்கைகள் (நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது) இறைவனுடைய நினைவிலிருந்தே வந்துள்ளன. அப்போது நினைவுகூர்ந்த அவர், பின்னரும் காப்பாற்றுவதற்கும் (ஆதி 19:29; யாத் 6:5) நினைவு கூர்வதாக வாக்களித்தார் (ஆதி 8:1; 9:15-17; யாத் 2:24; 2 சாமு 7). இறைமக்களை எக்காலத்திலும் முன்னோக்கச் செய்யும் மீட்கும் நிகழ்ச்சியானது பாஸ்கா ஆகும் (ஓசே 13:4-6).

**ஆ) நிகழ்ச்சிகளின் நினைவு:** கடந்த காலத்தின் செயலாற்றல் தன்மையை இக்காலத்திலும் தொடர்வதற்கு நினைவானது எண்ணற்ற வழிகளைக் கொண்டுள்ளது. எபிரேய மொழியில் இச்சொல்லானது, ஆன்மீக வாழ்விலும், திருவழிபாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கின்ற பல்வேறு செயல்களை நினைவிலிருத்தல், நினைவுகூர்தல், குறிப்பிடுதல், பாதுகாத்தல் மற்றும் கூவி அழைத்தல் என்ற பல்வேறு வடிவங்களில் அதனைப்பற்றி ஓரளவு கருத்தினை நமக்கு அளிக்கின்றது.

பெயரை உச்சரிப்பதென்பது பாஸ்கா நினைவினின்று பிரிக்க முடியாததாகும் (யாத் 20:2). ஏனெனில், தனது பெயரை அளிப்பதாலேயே யாவே பாஸ்காவைத் தொடங்கிவைத்தார் (யாத் 3). இந்த வேண்டுதல் கேட்கின்ற உண்மையான மீட்பானது (சங் 20:8) பண்டைய வியத்தகு செயல்களின் புதுப்பிப்பு என்று புரிந்து கொள்ளப்படுகிறது (சங் 77; யோவே 3). வழிபாடு பற்றிய நினைவின் மூலப்பொருளும் உள்ளது. ஏனெனில், “அவரது உடன்படிக்கையின் நினைவை” அது தட்டியெழுப்புகிறது. குருக்கள் பாரம்பரியத்திற்கு மிகவும் விருப்பமான இந்தச் சொற்றொடர், இறைவன் தனது மக்களை நினைவுகூர்கிறார் மற்றும் மக்கள் மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற வழிபாட்டுச் சடங்குகளில் (விழாக்கள், ஓய்வுநாள்) அல்லது தாங்கள் சந்திக்கின்ற இடங்களில் (பாறை, பீடம், பேழை, கூடாரம், ஆலயம்) தங்களுடைய இறைவனை நினைவு கூரவேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மீட்பின் நிகழ்வுகளில் உருவாக்கப்பட்ட நிலையில், செபமானது நன்றியுணர்வால் தோய்ந்திருப்பது அவசியமே. இறைவனுடைய முன்னிலையில் நினைவின் சாதாரணத்தொனி இந்த நன்றியுணர்வே (யாத் 15; சங் 136).

நினைவுகளை எடுத்துக்கூறல் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ வார்த்தையின் வழியாக (யாத் 12:25-27; 17:14), குறிப்பாக, சட்ட நூல்களின் (யாத் 34:27; உப 31:19-21) வழியாகப் பிற்காலத்தினருக்கு அளிக்கப்படுவதில் உறுதிப்படுத்தப்படுகிறது. அப்போது சட்டத்தின் மீதான தியானம் விசுவாசிகளுக்கு நினைவுகளின் ஒப்புமைத்தொடர்புடைய வடிவாக உள்ளது (உப ஆகமம்; யோசு 1:8). இத்தகைய விழிப்பான கவனமானது ஞானத்திற்கான வாயிலைத் திறக்கிறது (பழ 3:1-3). கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலானது உறுதியாக இந்த நினைவின் உண்மையான வெளிப்பாடாகும். யாவேயின் வழிகளைக் கடைப்பிடிப்பதில் இஃது அடங்கியுள்ளது (சங் 119; ஞான 6:18; எசா 26:8).

**3. மறத்தலின் விபரீதம்:** இறைவன் தனது வார்த்தையையோ, பெயரையோ மறக்காத போது (எரே 1:12; எசே 20:14) அங்கேதான் மனிதனுடைய நினைவானது தனது பலவீனத்தைக் காட்டுகிறது. “உங்கள் கடவுளாகிய யாவேயை மறந்துபோகாதபடி கவனமாயிருங்கள்... நினைவு கொள்ளுங்கள்” என்று உப ஆகமம் எச்சரித்திருந்தும் (உப 4:9; 8:11; 9:7) மக்கள் தங்களுடைய இறைவனை மறந்தனர்; அதுவே அவர்களுடைய பாவமாகும் (நீதி 8:34; எரே 2:13; ஓசே 2:15). அன்பினுடைய வாதத்தின்படி, தனது

விசுவாசமற்ற துணைவியை இறைவன் மறந்து விடுவதாகத் தெரிகிறது. இந்தக்கேடு அவரைத் திரும்பிவரச் செய்ய வேண்டும் (ஓசே 4:6; மீக் 3:4; எரே 14:9). உண்மையில் ஒவ்வொரு துன்பமும் மனிதனில் இறைவனுடைய நினைவைப் புதுப்பிக்க வேண்டும் (2 நாள் 15:2-4; ஓசே 2:9;5:15). இங்கு இறைவாக்குப் போதனையானது சேர்க்கப்படுகிறது. இறைவன் தனது பாஸ்காவை நிறைவேற்றக்கூடிய, ஏற்கும் மன நிலையில், மனிதனுடைய இதயத்தை மாற்றியமைக்க வகுத்தமைக்கப்பட்ட (எசே 16:63; உப 8:2-4) நீண்ட "நினைவுகூர்தலாக" இஃது உள்ளது (மீக் 6:3-5; எரே 13:22-25).

அதே நேரத்தில் தவறுகளை நினைவுகூர்தல் என்ற அளவில் மனத்துக்கம் இறைவனுடைய நினைவிற்கான வேண்டுகோளாகும் (எசே 16:61-63; நெகே 1:7-9). அன்பை நினைவாகக் கொண்டுள்ள இறைவன், மன்னிப்பில் உடன்படிக்கையை நினைவுகூர்ந்து (1 அர 21:29; எரே 31:20), பாவத்தை மறக்கிறார் (எரே 31:32).

4. **நினைவிலிருந்து எதிர்பார்ப்புக்கு:** இங்கே ஒரு முரண்பாடு உள்ளது. கடந்து விட்ட பாஸ்காவானது இன்னும் வரவேண்டியதாக உள்ளது. யாவே தங்களுக்குச் செய்த அனைத்தையும் மக்கள் நினைவுகூர்கின்றனர். கடந்த காலமானது இறைவனது பிரமாணிக்கத்தை நிரூபிக்கிறது; ஆனால், இக்காலமானது ஏமாற்றக்கூடியது; வருங்காலமும் இத்தகையதே. வாக்குறுதிகளின் முழுநிறைவானது ஏற்கெனவே ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டு விட்டதை அதுகாணும். பிரமாணிக்கமும் நிறைவேறாத நம்பிக்கைகளும் இறைமக்களுடைய மனங்களைத் தீர்மானமான "இறுதிக்காலங்களின்" தோற்றத்திற்குத் திறக்கின்றன. கடந்தகாலம் மூலமான எதிர்காலம் பற்றிய இந்த உயிருள்ள கருத்தானது, நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்தபின்னர் மக்களுடைய நினைவின் சிறப்புப்பண்பாக உள்ளது. ஒருவித மாற்றம் இங்கே உள்ளது. நினைவு கூர்தலானது எதிர்பார்ப்பாக உருவாகிறது; மற்றும் நினைவானது வெளிப்பாட்டுக் கற்பனையில் முடிவடைகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு எசேக்கியேலுக்கு உரியது (40:48). செக்கரியா, தானியேல், தாவீது, நான்காவது நற்செய்தியாளர், மற்றும் திருவெளிப்பாட்டின் ஆசிரியர் ஆகியோர் அவரைப் பின்தொடர்கின்றனர்.

சமுதாயம் என்ற அளவில் மகிமை மிக்க கடந்த காலமானது துன்புறும் நிகழ் காலத்தின் இதயத்தில் விடுதலையின் அச்சாரமாக உள்ளது (எசா63:15-64:11; சங் 77; 79:80; 89). தனிப்பட்ட நபர் அளவில் வெளிப்படையாகவே இறைவனால் மறக்கப்பட்ட ஏழை மனிதன் (சங் 10:12; 13:2), அவரது அன்பிற்குத் தான் பிரசன்னமாகியிருப்பதை அறிய வேண்டும் (எசா 66:2; சங் 9:19). சோதனையானது அவனது நினைவைப் புதுப்பித்து (1 மக் 2:51; பாரூ :27) புதிய நிகழ்ச்சிக்கு அதனைத் தயாரிக்கிறது (எசா 43:18-19).

5. **பிரசன்னத்திலிருந்து தெளிவாகத்தெரிகின்ற நிலைக்கு:**

அ. "யாவே இங்கு இருக்கிறார்" என்று கூறும்போது (எசே 48:35; மத் 1:23) நினைவானது நிகழ்காலத்துடன் ஒன்றுபட்டு, அதனுடைய முழு நிறைவாக உள்ளது. வாக்குறுதிகள் மற்றும் உடன்படிக்கையின் நினைவானது, காலத்தைச் சுருக்குகின்ற கிறிஸ்துவின் வருகையில் செயலாக மாறுகின்றது (2 கொரி 1:20; லூக் 1:54.72). அவரில், இரு மறத்தல்களின் விபரீதமானது மனிதனின் திரும்ப வருகையினாலும் இறைவனின் மன்னிப்பினாலும் தீர்க்கப்படுகிறது (கொலோ 3:13). இறைவன், கிறிஸ்துவில் பிரசன்னமாகி மனிதனை நினைவுகூர்வதால், மனிதன் இறைவனை இனிக்கடந்த காலத்தில் தேடாமல், நிகழ்காலத்தில் கிறிஸ்துவில் தேட வேண்டும் (யோவா 14:6-7; 2 கொரி 5:16-17). உண்மையில் கிறிஸ்து, இறைவனுக்கு உறுதியான முறையில் பிரசன்னமாகியுள்ள மனிதனாகவும், மனிதனுக்கு

உறுதியாகப் பிரசன்னமாகியுள்ள இறைவனாகவும் உள்ளார். குருவாகிய கிறிஸ்து தந்தைக்கான வழியை நமக்குத் திறக்கிறார் (எபே 2:18; எபி 10:19). அவரது ஆவி நம்மை அவருடன் ஒன்றுபடுத்துகிறது (உரோ 8:15-16; 8:26-27).

ஆ. ஆனால், காலம் இன்னும் நிறைவேறவில்லை. இப்போது முதல் இறைவன் புதிய நித்திய உடன்படிக்கையில் பிரசன்னமாக இருந்தாலும், மனிதன் அடிக்கடி இறைவனுக்குப் பிரசன்னமாக இருப்பதில்லை; ஆகவே, அவரை நினைவுகூர வேண்டியவனாக உள்ளான். இதன் காரணமாகவே ஆவியானவர் கிறிஸ்துவின் மறைபொருளை ஒரு நூலாக நினைவு கூராமல், உயிருள்ள வார்த்தையின் ஆளுரிமையுடைய செயலுண்மையாக நினைவு கூர்கிறார். இது பாரம்பரியமாகும் (யோவா 14:26; 16:13). ஆவியானவர் கிறிஸ்துவின் மறைபொருளை அவரது உடலில் ஒரு சாதாரண நினைவுச்சின்னமாக இல்லாமல், ஒரே சமயத்தில், உயிர்த்தவராகவும், உலகிற்குப் பிரசன்னமான வராகவும், உடலின் அருட்சாதனச் செயலுண்மையில் நிறைவேற்றுகிறார்; இது வழிபாடாகும் (லூக் 22:19-20; 1 கொரி 11:24-26). பழைய ஏற்பாட்டில் இருந்ததைப்போன்று பாஸ்காவின் இந்த "மீண்டும்-பிரசன்னப்படுத்துதல்" செயலுக்கும் வாழ்விற்கும் பணிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவ நினைவானது "யாவேயின் வழிகளைக் கடைப்பிடிப்பதிலும்" ஆண்டவருடைய ஏற்பாட்டைக் கடைப்பிடிப் பதிலும், அதாவது அன்பில் தங்கியிருப்பதிலும் அடங்கியுள்ளது (யோவா 13:34; 15:10-12; 1 யோவா 3:24). இறுதியாக இறைவனுடைய நினைவுக்கு மனிதனுடைய நினைவின் இறுதி இணக்கத்தைப் பொருத்தவரையில், எந்த அளவிற்கு ஆவியானவர் கிறிஸ்துவனின் வாழ்வில் இடம் பெறுகிறாரோ அந்த அளவிற்கு அவர் அதனை விழிப்புள்ளதாக்குகிறார்; காலங்களின் அடையாளங்களுக்குக் கவனமுள்ளதாக்குகிறார்; ஆண்டவரது செயல்மிக்க பிரசன்னத்திற்கு இடமளிக்கும் மற்றும் அவரது வருகை நெருங்கிவருதலை வெளிப்படுத்தும் சாட்சியாக்குகிறார் (திருவெளி 3:3; பிலி 3:13-14; 1 தெச 5:1-10).

# நீ

**நீகர் (NIGER – கறுப்பான)**

அந்தியோக்கியாவின் சபையில் இறைவாக்கினர்களும், போதகர்களும் இருந்தனர். நீகர் என்பது இவர்களுள் ஒருவரான சிமியோன் என்பவரின் சிறப்புப் பெயராகும் (அ.ப.13:1). இப்பெயரின் கறுப்பான என்ற பொருள்– இவர் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர் என்று சுட்டவில்லை.

நற்செய்தியில் கூறப்படும் சிரேனே ஊரைச்சேர்ந்த சீமோன் (7) (மாற்கு 15:21 இணை) இவர்தான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

**நீசான் (NISAN – அரும்புதல், மலர்தல்)**

எபிரேய, பாபிலோனிய நாட்காட்டியில் முதல் மாதம் (நெகே 2:1; எஸ்த 3:7). (மார்ச் – எப்ரல், பங்குனி மாதத்துக்கு இணையானது). நாடு கடத்தலுக்குமுன் இம்மாதம் ஆபிபு என்றழைக்கப்பட்டது. இம்மாதத்தில் பாஸ்கு, புளியாத அப்ப விழாக்கள் கொண்டாடப்பட்டன. திஸ்ரி மாதத்தைக்கொண்டு தொடங்கிய ஆண்டு நாட்காட்டியில் நீசான் (ஆபிபு) ஏழாவது மாதமாகும்.

**நீண்ட ஆயுளுள்ளவர் தொன்மை வாய்ந்தவர் (ANCIENT OF DAYS)**

இச்சொற்றொடர், இறுதிநாளில் வரும் ஒரு நீதிபதியைக் குறிப்பதாகவே அமைகிறது (தானி 7:9). இதற்கு முதலில் தோன்றியவர்– வணக்கத்திற்குரியவர்– காலங்களால் முடிசூட்டப்பட்டவர்– எனப் பல பொருள்கள் உண்டு (1 நாள் 4:22). இத்தொடர் செமித்திய நாகரிகத்தில் வழங்கப்பட்ட ஒரு மொழிமரபுத்தொடர்; அதாவது, இதைச் சார்ந்து நிற்கும் பெயர்ச்சொல், முடிவற்றது என்பதைக் குறிக்கும்.

உகாரித்துச்சுவடிகள் சில, ஓர் அரசனைக் காலங்களின் தந்தை என்கிறது. அதாவது, அவன் வயதான ஒரு அரசன் என்று குறிப்பிடுகின்றன.

இந்த வழக்கு, கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கடவுளின் அறிவு, ஞானம், மாண்பு, மரியாதை ஆகியவற்றைக் குறிக்கவே இது பயன்படுத்தப்பட்டது (யோபு 36:26). ஆனால், சிலர் இதனைக் கடவுளின் வானதூதரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்கின்றனர் (செக் 3:1). சிலர் இதனை ஈரானில் வழங்கப்பட்டு வந்த 'அகுரா மஸ்தா' என்ற கருத்திலிருந்து வந்தது என்றனர். எது எப்படியிருந்தாலும் 1 அர 22:19–20; சங் 50:1–6, யோவே 3:2; செக் 3:1–இல் கூறியுள்ளபடி சாதாரண வழக்கில் இருந்த இந்த ஒரு மரபுத் தொடரைக் கடவுளைக் குறிக்க மக்கள் பயன்படுத்தினர். இது கடவுளின் என்றும் வாழும் பண்பை உணர்த்துகிறது (சங் 9:7; 29:10; 90:2). இந்த உருவகம் விண்ணக அவையில் தலைமை தாங்கும் இறைநீதிபதியாகக் கடவுளைச் சித்தரிக்கிறது (சங் 82:1; 1 அர 22:19).

**நீதி (JUSTICE)**

I. நீதி என்ற சொல்லானது, மரபு அல்லது விதியைக் கடைப்பிடிப்பதைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் நீதிபதி, நீதியைச் செயல்படுத்துகின்ற சட்டரீதியான அமைப்பை மனதிற்குக் கொண்டு வருகின்றது. நீதியின் ஒழுக்க நோக்கானது பரந்த அளவிலானது. இதன்படி, மரபு அல்லது விதியினால் நிர்ணயிக்கப்படாவிடினும், நீதியானது ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை அளிக்கின்றது என்ற உண்மையின் அளவிற்கு விரிவடைகிறது. நீதியின் இயற்கை விதி, கடுமையானது; பரிமாற்றம் அல்லது பங்கீட்டினுடைய சம நிலையினைச் சார்ந்துள்ளது. இறைவனுடனான மனித உறவுகளின் சமயப் பின்னணியில், நீதியுடன் தொடர்புடைய சொற்றொடரானது, இன்றைய மொழிகளில் குறிப்பிட்ட அளவே பயன்படுகிறது. ஆயினும், இறைவனை– நீதியுள்ள நடுவர் என்றும், தீர்ப்பானது– மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான இறுதிப்போராட்டம்

என்றும் கூறுவது இக்காலத்தைச் சார்ந்ததே. ஆனால், விவிலிய மொழியுடன் ஒப்பிடும்போது, நீதியுடன் தொடர்புடைய சொற்களின் நவீன சமய உபயோகமானது முற்றிலும் வரைக்குட்பட்டதாகத் தெரிகிறது. பொருளளவில் மற்ற பல சொற்களுடன் நெருங்கியிருந்தாலும் (நேர்மை, புனிதம், நடுநிலைமை, நிறைவுடைமை, முதலியன) நீதி என்ற சொல்லானது நியாயம், நியாயப்படுத்துதல், ஏற்புடைமை போன்ற சில குறிப்பிட்ட சொற்களுக்கு மையமாகவும் உள்ளது.

முக்கிய விவிலியக் கருத்துக்களுள் ஒன்றில், இறைவனுடைய கட்டளைகள் அனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடிக்கும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டு, நீதியானது நன்கு அறிமுகமான ஒழுக்கமுறையாக உள்ளது. ஆனால், இறைவனின் முன்னிலையில் நியாயமான பங்கிற்கு மனிதனை உரித்தாக்குவதாக இது கருதப்படுகிறது. இஃதோடு தொடர்புடைய விதத்தில்தான் நேர்மையின் ஒரு மாதிரி என்னும் விதத்தில் இறைவன் தனது நீதியை எடுத்துக்காட்டுகிறார். முதலாவதாக- மக்களையும் ஒவ்வொரு தனி நபரையும் வழிநடத்தும் தனது சட்டரீதியான செயல்முறையிலும், அடுத்து- ஒருவரது செயல்களுக்கேற்பத் தண்டிப்பதிலும் அல்லது வெகுமதி அளிப்பதிலும் வினைப்பயன் அளிக்கும் இறைவன் என்ற அளவில் இதை எடுத்துக்காட்டுகிறார். தீர்ப்பு என்ற நோக்கில், நீதி பற்றிய கருத்து பின்வரும் II-ஆம் பிரிவில் விவாதிக்கப்படுகிறது.

மற்றொரு விவிலியக் கருத்து, அல்லது தனது படைப்பில் தயாரிக்க இறைவன் எண்ணுகின்ற அமைப்பு பற்றிய ஆழ்ந்த கருத்தானது, நீதிக்கு ஒரு பரந்த பொருளையும், உடனடி சமய மதிப்பையும் அளிக்கின்றது. மனித நேர்மையானது எப்போதுமே இறைவனுடைய வீதாச்சாரம் உயர்ந்தது பற்றிய மேலான உணர்வையோ, உலகை நிர்வகித்துத் தனது படைப்புகளை நிரப்புகின்ற வியத்தகு மென்மையையோ வெறுமனே பிரதிபலிப்பதில்லை; அல்லது அவற்றின் விளைவாக அமைவதில்லை. விசுவாசத்தின் மூலமாக மனிதன் அடைகின்ற இறைவனின் நீதியானது முடிவாக அவரது இரக்கத்துடன் ஒன்றுபடுகிறது. மேலும், இறை இரக்கத்தைப்போன்று சில நேரங்களில் ஓர் இறைப்பண்பை அது சுட்டிக்காட்டுகிறது; மற்ற நேரங்களில் இவ்விரக்கம் அளிக்கின்ற மீட்பின் உறுதியான கொடைகளைக் குறிப்பிடுகின்றது. நீதி பற்றிய இந்தப் பொருள்விரிவாக்கம் விவிலிய மொழிபெயர்ப்புகளில் காணக்கிடக்கிறது. ஆனால், பெரும்பாலும் இஃது இறையியல் கலைச்சொற்பொருளைக் கடந்து செல்வதில்லை. உரோ 3:25-ஐ வாசித்த பின்னர், இயேசு கிறிஸ்துவில் இறைவன் வெளிப்படுத்திய நீதியானது குறிப்பாக அவரது மீட்பின் நீதி, அதாவது இரக்கமிக்க பற்றுறுதியாகும் என்பதைப் படித்த எந்தக் கிறிஸ்தவனும் ஐயுறான்! III-ஆம் பிரிவானது இரக்கத்தின் தோற்றத்தினின்று நீதி பற்றிய விவிலியக் கருத்தை அளிக்கும்.

## II. நீதியும் தீர்ப்பும்

### 1. மனித நீதி.

#### அ. பழைய ஏற்பாடு.

**1) சமுதாய நீதி;** தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுதலில் நேர்மையைக் காட்ட வேண்டும் என்று இஸ்ராயேலின் பண்டைய சட்டமுறையானது ஏற்கெனவே நீதிபதிகளிடம் கோரியது (உப 1:16; 16:18.20; லேவி 19:15.36). அவ்வாறே, தொடக்ககாலப் பழமொழிகளும் அரசனுடைய நீதியைப் புகழ்கின்றன (பழ 16:13; 25:5). இவற்றையொத்த சில பகுதிகள் நீதிமானை உரிமையாளனாகவும் (யாத் 23:6-8), சில நேரங்களில் நியாயமான நீதிபதிகளையும் குறிப்பிட்டுப் பேசுகின்றன (உப 16:19). குற்றமற்ற மனிதனை விடுவிப்பதன் மூலமாகவோ, அவனுக்குரிய உரிமைகளைத் திரும்ப அளிப்பதன் மூலமாகவோ நீதிபதிகள் அவனை நியாயப்படுத்த வேண்டும் (உப 25:1; பழ 17:15).

ஏழைகளை அடக்குவதில் நீதிபதிகளும் அரசர்களும் செலுத்திய அநீதியை நாடு கடத்தப்படுவதற்கு முந்தைய இறைவாக்கினர்கள் அடிக்கடி, முழு வல்லமையுடன் வெளிப்படையாகக் கண்டனம் செய்கின்றனர். இத்தகைய ஒழுங்கின்மைக்குச் சம்பளமாகத் தீமையை அவர்கள் முன்னுரைத்தனர் (ஆமோ 5:7; 6:12; எசா 5:7.23; எரே 22:13.15). அநீதியினுடைய ஒழுக்க மற்றும் சமய பரிணாமங்களின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்து கின்றனர். விதிமுறைகள் அல்லது மரபுகளை மீறுதலாக, சாதாரணமாக, நோக்கப்பட்டதானது இப்போது ஓர் ஆட்தன்மையுடைய இறைவனு டைய தூய்மைக்கு எதிரான பழியாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே மரபு சார்ந்த தண்டனையை விட அதிகமாகவே அநீதியானது பெறுகின்றது. இறைவனாலேயே தயாரிக்கப்பட்ட ஒரு தண்டனையை அது பெறுகின்றது. இறைவாக்கு பழியுரைகளின் நீதிமானே மீண்டும் உரிமை கோருபவனாக உள்ளான். ஆனால், அவன் கிட்டத்தட்ட எப்போதும் ஏழையாகவும், ஒடுக்கப்பட்டவனாகவும் மட்டுமே தோற்றுவிக்கப் படுகிறான் (ஆமோ 2:6; 5:12; எசா 5:23; 29:21).

இறைவாக்கினர்கள் அடிக்கடி தங்களுடைய பழியுரைகளுடன் சரியானதும் நீதியானது மானதைச் செய்யவேண்டும் என்னும் அறிவுரையினையும் கூறுகின்றனர் (ஓசே 10:12; எரே 23:3-4). மனித நீதியின் வலுவின்மையை அறிந்தவர்களாய், எல்லாவற்றிற்கும் மேலாகக் குறையற்ற நீதியை அளிக்கக்கூடிய நேர்மைமிக்க அரசராகிய வருங்கால மெசியாவை அவர்கள் எதிர்நோக்குகின்றனர் (எசா 9:6; 11:4-5; எரே 23:5; சங் 45:4-5.7-8; 72:1-3.7).

**2) சட்டத்தின்பால் கொண்டுள்ள பற்றுறுதி என்ற அளவில் நீதி:** நாடுகடத்தப்படுவதற்கு முன்னர், நீதியானது இறைக்கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பதை, அதாவது சட்டத்திற்கு ஒத்த நடத்தையைக் குறிப்பிட்டது. இக்கருத்தானது பல பழமொழிகளிலும் (பழ 11:4-6. 19; 12:28), பல்வேறு நிகழ்ச்சியுரைக் குறிப்புகளிலும் (ஆதி 18:17-19), எசேக்கியேலிலும் (எசே 3:16-21; 18:5-24) காணப்படுகிறது. அதே பின்னணியில் நீதிமான் பக்தியுள்ளவனாகவும், பழிகூற முடியாத ஊழியனாகவும், இறைவனின் நண்பனாகவும் உள்ளான் (பழ 12:10; ஆதி 7:1; 18:23-32; எசே 18:5-26). நாடு கடத்தப்பட்ட பின்னர் இந்த இறைபக்திக் கருத்தானது புலம்பல்களிலும் (சங் 18:21.25; 119; 121), பாடல்களிலும் (சங் 15:1-2; 24:3-4; 140:14) தெள்ளத்தெளிவாகிறது.

**3) நீதி, ஒரு வெகுமதி:** சட்டத்திற்கு ஒத்த நடத்தையானது, தகுதி மற்றும் வளமையின் ஊற்றாகும். இந்நடத்தையை விவரிக்கின்ற நீதி என்னும் இச்சொல்லானது, நாடு கடத்தப்படுவதற்கு முற்பட்ட சொற்பொருள் மாறுபாடு சார்ந்த வளர்ச்சி பெற்று, நீதிக்கான பல்வேறு வெகுமதிகளையும் குறிப்பிடலாயிற்று. இவ்வாறாக, இரக்கமிக்க ஒரு செயலானது, யாவேயின் பார்வையில் நீதியாக உருவாகிறது. இதைத் "தகுதி" என்று மொழிபெயர்க்கலாம் (உப 24:13; 6:24-25). பழ 21:21-இல் "நேர்மையையும், இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பவன், நீடித்து வாழ்வான்; நீதியையும் மேன்மையையும் அடைவான்." கடைசி மூன்று கருத்துகளும் இங்கு ஒரு பொருட் பன்மொழியாகப் பயன்பட்டுள்ளன. சங் 24:3-4-இல் இறைவனிடமிருந்து ஒருவன் பெறுகின்ற நீதியானது, திருப்பயணியின் பக்தியுள்ள பணியின் வெகுமதியான இறை ஆசீராகும் (சங் 112:1.3.8; 37:6).

**4) நீதி, ஞானம் மற்றும் நன்மைத் தனம்:** பழைய ஏற்பாட்டின் இறுதி நூல்களில்- சில புதிய நுட்ப வேறுபாடுகளுடன், முந்தைய நூல்களின் அனைத்துப் பாரம்பரியக் கருத்துகளும் காணப்படுகின்றன. தனது அயலாருடனான மனிதனுடைய தொடர்புகளை நடத்தவேண்டிய கண்டிப்பான நீதியின் கருத்துடன் (யோபு 8:3; 35:8; திருவுரை 5:7; சீரா 38:33), ஞான 1:1.15-இல் ஒரு புதிய பண்பு சேர்க்கப்படுகிறது. அங்கு

நீதியானது, செயல்படுத்தப்படும் ஞானமாக உள்ளது. ஞான 8:7-இல் கிரேக்க ஆதிக்கமானது தெளிவாகத் தெரிகிறது. அங்கே ஞானமானது நான்கு முக்கிய குணங்களாகிய அடக்கம், விவேகம், நீதி,மனவுறுதி ஆகியவற்றைக் கற்பிக்கிறது.

சில பிற்காலப் பகுதிகளில் நீதியானது பிச்சையிடுதல் என்ற பொருளைக் கொண்டுள்ளது. "எரியும் நெருப்பைத் தண்ணீர் தணிக்கும்; பிச்சையிடுதல் பாவங்களுக்குக் கழுவாயாக அமையும்" (சீரா 3:33; தோபி 12:8-9; 14:9-11). இந்தச் சொற்பொருள் வேறுபாடு சார்ந்த நோக்கின் காரணமானது நீதிபற்றிய செமித்தியக் கருத்தில் காணப்படுகிறது. ஏனெனில், இது நேர்மையுள்ளவர்களின்பால் நீதிபதி கொண்டுள்ள ஆர்வமிக்க ஈடுபாடாய் இருப்பதால், இது சார்பின்மையின் முனைப்பற்ற மனப்பான்மையாக இருப்பதில்லை. இந்த உடன்பாட்டுப் பொறுப்புணர்வானது, ஒவ்வொரு நிலையிலும் தண்டனை அல்லது மீட்பு இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கிறது. மேலும், நீதியை அளிக்கின்ற பொதுவான மற்றும் இருமனப் போக்குடைய செயலன்று இது. நீதி பற்றிய இக்கருத்திற்கு ஏற்றவாறு நீதிமான் இரக்க மிக்கவனாகவும், தயாள குணமுள்ளவனாகவும் உள்ளான் (தோபி 7:6; 9:6; 14:9). மேலும், "நீதிமான் மனித நேயம் கொண்டவனாக இருக்க வேண்டும்" (ஞான 12:19).

ஆ. புதிய ஏற்பாடு

1) **இயேசு:** சட்டரீதியான நீதிக்கான அறிவுரையானது, இயேசுவின் செய்திக்கு மையமானதன்று. நீதியின் பணிகள் பற்றிய விதிமுறைகள் எவற்றையும் நற்செய்தியானது குறிப்பிடவில்லை. ஒடுக்கப்பட்ட குழுவிற்கும் அது வலியுறுத்தும் வேண்டுகோளை விடுப்பதில்லை. மேலும், நேர்மையான நீதிபதியாகவும் அது மெசியாவைக்காட்டுவதில்லை. இந்த மௌனத்திற்கு நல்ல காரணங்களும் உள்ளன. இறைவனுடைய சித்தத்தின் வெளிப்பாடுகளாகிய பழைய ஏற்பாட்டு விதிமுறைகள் சமூகத்தின் தனியுரிமைப் பத்திரமாகவும் உள்ளன. இயேசுவின் காலத்தில் நீதியானது, உரோமையரால் நிறைவேற்றப்பட்டது. இயேசு தன்னை ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவோ, இனத்தின் மெசியாவாகவோ வெளிப்படுத்தவில்லை. அவரது காலத்தவரின் மிகக்கொடிய தவறானது சமூக அநீதியன்று; மாறாக, ஆசாரப்போக்கும் வெளிவேடமும் ஆகிய சமயத் தவறுகளாகும். இயேசுவினுடைய பரிசேயத்தன்மையின் மீதான பழிப்புரையானது, அநீதியின் மீதான இறைவாக்கினரின் பழிப்புரையுடன் ஒத்துள்ளது. "சாதாரண" நீதியைப் பின்பற்றுவதற்கு இயேசு தனது காலத்தவரை அறிவுறுத்தியிருக்க வேண்டும். ஆனால், இது பற்றியவை சிறிதளவே எஞ்சியுள்ளது (மத் 23:23. தீர்ப்பானது கண்டிப்பான நீதியைக் குறிப்பிடுகின்றது).

இயேசுவின் போதனை முறையில், நீதியானது சட்டத்திற்கான பற்றுறுதி என்னும் விவிலியப்பொருளைப் பாதுகாக்கின்றது. அவரது செய்தியின் மையப்பொருளாக இஃது இல்லாவிடினும் ஒழுக்க வாழ்வை உண்மையான நீதியென்றும், இறைவனுடைய கட்டளைகளுக்கான ஆன்மீகக் கீழ்ப்படிதல் என்றும் விளக்க இயேசு சிந்தனைப் போக்குகளைக் காணலாம். ஒருபுறம் பரிசேயரின் போலியான நீதியின் மீதான கண்டனம் உள்ளது; பெரிய இறை வாக்கினர்களைவிட உயரிய அளவில் இயேசு, மனித மற்றும் செருக்கு வாய்ந்த சமயத்தின் வெளிவேட நடைமுறையினைக் கண்டிக்கிறார் (மத் 23). மற்றொரு புறம் அவரது தொடக்க மறையுரையானது அவரது சீடர்களின் உண்மையான நீதியை விளக்குகிறது (மத் 5:17-48; 6:1-18). எனவே, கட்டளைகள் பற்றிய குறுகலான, சொற்பொருள் விளக்கத்தினின்று விடுவிக்கப்பட்ட சீடனின் வாழ்வானது நீதியின் வாழ்வாக இன்னும் உள்ளது. அதாவது இயேசுவால் புதிதாய்ப் பறைசாற்றப்பட்டு,

இறைவனின் உண்மையான நிறைவான சித்தமாகிய மோசேயின் உணர்வை மீண்டும் எடுத்துக்கூறுகின்ற சட்டங்களுக்கான பற்றுறுதியான வாழ்வாகும்.

2) **அப்போஸ்தலிக்கத் திருச்சபை:** கண்டிப்பான பொருளில் நீதியானது தொடக்கக் கிறிஸ்தவத்தின் முன்னீடுபாடுகளில் ஒன்றன்று. புதிய திருச்சபையானது நற்செய்தி நூல்களின் உலகம் இருந்ததை விட இஸ்ராயேல் சமுதாயத்தைப் போன்று தாழ்வாக உள்ளது. திருச்சபையினுடைய பிரச்சனைகள் சமூக நீதியைப்பற்றிய பிரச்சனைகளாக இல்லாமல் யூத அவிசுவாசம், மற்றும் புறவினத்தாரின் சிலைவழிபாடு பற்றியனவாக உள்ளன. ஆயினும், சந்தர்ப்பம் வாய்க்கும்போது, நீதியின் மீதான அக்கறையானது முக்கிய சக்தியாக உள்ளது (1 திமொ 6:11; 2 திமொ 2:22).

நீதியைப் புனிதத்தன்மையாகக் கருதும் கருத்து ஆதிகாலத் திருச்சபையிலும் காணப்படுகிறது. யோசேப்பு (மத் 1:19) மற்றும் சிமியோனைப் (லூக் 2:25) பொருத்தவரை சட்டத்தின் மீதான பற்றுறுதியானது அவர்களை மெசியா வெளிப்பாட்டிற்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்கிறது (மத் 13:17). தனது திருமுழுக்கின்போது இயேசு "கடவுளுக்கு ஏற்புடையவை (நீதி) அனைத்தையும் நிறைவேற்றினார்" என மத்தேயு எழுதும்போது, தனது நற்செய்தியின் ஒரு முக்கிய கருத்தை அறிவிப்பதுபோல் அவர் தோன்றுகிறார்; அதாவது, சட்டத்தின் சமயமாகிய பண்டைய நீதியை இயேசு உச்சநிலைக்குக் கொண்டு வருகிறார் (மத் 3:15). பேறுகளைப்பற்றிய மத்தேயுவின் வாசகம், யூத பக்தியின் புதுப்பிக்கப்பட்ட வடிவைக் கிறிஸ்தவத்தில் வெளிப்படுத்துகிறது (5:6.10). ஒருவர் ஆசைப்பட்டு அதற்காகத் துன்புறவும் வேண்டிய நீதியானது, சட்டமாக உள்ள வாழ்வுமுறையின் மீதான பற்றுறுதியாகத் தெரிகிறது. இஃது, ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில் காணப்பட்டாலும், மீண்டும் அப்போஸ்தலிக்கத் திருமுகங்களில் தோன்றுகின்ற சொற்றொடரின் தனித்தன்மை கொண்டுள்ளது. நீதியானது கனியாகவும் (பிலி 1:11; எபி 12:11; யாக் 3:18), கிரீடமாகவும் (2 திமொ 4:8) காணப்படுகிறது. முடிவில்லா வாழ்வின் உட்பொருளைப்போன்று இஃது உள்ளது (2 பேதுரு 3:13).

**2. இறை நீதி:**

அ. **பழைய ஏற்பாடு:** பண்டைய போர்சார்ந்த மற்றும் சமயப்பாடல்கள், இஸ்ராயேலின் பகைவர்களுக்கு எதிரான இறைவனுடைய தண்டிக்கிற தீர்ப்பாக (உப 33:21) அல்லது (சிறப்பாகப் பன்மை வடிவில்) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய அவரது மீட்பாக (நீதி 5:11; 1 சாமு 13:6-7; மீக் 6:3-4) அதன் செயல்பாட்டுப் பின்னணியில் இறை நீதியைப் புகழ்கின்றன. இறைவாக்கினர்கள் இத்தகைய வெளிப்பாட்டின் வடிவை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒரு புதிய ஆழத்தை அளிக்கின்றனர். தனது நீதியாகிய தண்டனைகளை இறைவன் பாவிகளுக்கும் இஸ்ராயேலருக்கும் அனுப்புகிற அளவிற்கு மக்களின் பகைவர்களுக்கு அனுப்புவதில்லை (ஆமோ 5:24; எசா 5:16; 10:22...). மற்றொரு புறம், இறைவனுடைய நீதியானது சாதகமான தீர்ப்பாகவும் உரிமை கோருபவரின் விடுதலையாகவும் (எரே 9:23; 11:20; 23:6) இருக்கலாம். நியாயப்படுத்துதல் என்ற சொல்வழக்கு, இதிலிருந்துதான் வருகிறது (1 அர 8:32). அதே இரட்டைப் பொருளானது புலம்பல்களிலும் காணப்படுகிறது. அங்கே ஆசிரியர் சில நேரங்களில், அவரது பற்றுறுதியில், தன்னை மீட்குமாறு இறைவனை இறைஞ்சுகிறார் (சங் 71:1-2). மற்ற நேரங்களில் தன்னைத் தண்டிப்பதன்மூலம் இறைவன் அவரது சிதைக்கவியலா நீதியை வெளிப்படுத்தி (தானி 9:6-7; பாரூ 1:15; 2:6), அவரே நீதியுள்ளவர் என்று காட்டுகிறார் (எஸ் 9:15; நெகே 9:32-33; தானி 9:14) என ஆசிரியர் அறிக்கையிடுகிறார். இயல்பாகவே, பாடல்கள் நீதியின் சாதகமான கூறைச் சிறப்பாகப் புகழ்கின்றன (சங் 7:18; 9:5;

96:13). நீதியுள்ள இறைவனே இரக்கம் நிறைந்த இறைவனாவார் (சங் 116:5-6; 129:3-4).

**ஆ. புதிய ஏற்பாடு:** இறைவாக்கினர்களுக்கும் சங்கீத ஆசிரியர்களுக்கும் முரண்பட்ட நிலையில், விசுவாசி அல்லது சமூகத்தின் வாழ்வில் இறைவனுடைய சட்டரீதியான நீதியின் இடையீட்டைப் பற்றிய புதிய ஏற்பாடு சிறிதளவே கூறுகிறது. மாறாக, அஃது இறுதித்தீர்ப்பை நோக்கி நமது கவனத்தைத் திருப்புகிறது. இந்த உயரிய தீர்ப்பில் இறைவன் தன்னை நியாயமானவராகக் காட்டுகிறார் என்பது புரிந்துகொள்ளத் தக்கதே. ஆனால், நீதிபற்றிய சொற்றொகுதி அரிதாகவே பயன்பட்டுள்ளது. ஏனெனில், இறுதித் தீர்ப்புபற்றிய, பாரம்பரிய சொற்றொகுதியை ஒதுக்கிவிடாமல் இயேசு (மத் 12:36-37; 41:42), ஒருவனது விசுவாசம் மற்றும் தாழ்ச்சிக்கு ஏற்ப அளிக்கப்பட்ட இறைக்கொடையாக மீட்பை வெளிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலிக்கத் திருச்சபையானது பிந்தைய சிந்தனையைக் கொண்டிருந்தாலும் (யோவா 16:8.10-11; 2 திமொ 4:8), இறைவனுடைய தீர்ப்பின் கடுமையை அது இன்னமும் வலியுறுத்துவது தெரிகிறது. செயல்களுடைய ஒழுங்கின் மொழிக்குத் திரும்புவதையும் (மத் 13:49; 22:14; மாற் 7:13-14; லூக் 13:24), விசுவாசத்தின் மூலமான மீட்பின் நற்செய்தியுடன் தீர்ப்பின் கருத்தை அடுத்தடுத்து வைத்ததையும் காணலாம். மேலும், ஒன்று மற்றதாக ஆக முடியாத இந்த இருமைத் தன்மையின் சில சுவடுகள் பவுலிடமே காணப்படுகின்றன. சந்தேகத்திற்கிடமின்றி அருள் மற்றும் விசுவாசத்தினுடைய கோட்பாட்டை அதனுடைய முழுமையில் அவர் அளிக்கிறார். ஆனால், பவுலும் ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கேற்ப வெகுமதி அளிக்கின்ற இறைவனுடைய நியாயமான தீர்ப்பைப் பற்றி யூதச் சொற்களிலேயே தொடர்ந்து கூறுகிறார் (2 தெச 1:5-6; உரோ 2:5).

**III. நீதியும் இரக்கமும்**

**1. மனிதனின் நீதி:**

**அ. பழைய ஏற்பாடு:** சட்டமுறையின் அடிப்படையே நீதியையும் சட்டத்தைக் கடைப்பிடித்தலையும் ஒன்றாக்குவதாகும். இப்போக்கு நாடு கடத்தப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே காணப்படுகிறது. சட்டமே ஒழுக்க வாழ்வின் விதியாகும். விசுவாசமுள்ள யூதனின் நீதியானது வளமை மற்றும் மகிமைக்கான அவனது சிறப்பு உரிமையாகும். எனவே, இந்தச் சட்ட ரீதியான நீதியானது, வீணானது மற்றும் செயலற்றது என்று பறைசாற்றும் சில பகுதிகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது மிகவும் அவசியமானதாகும். விசுவாசத்தினாலான மீட்பு என்னும் பவுலின் கருத்தை முன்குறித்துக் காட்டுகின்ற சொற்களில் சில பண்டைய பகுதிகள் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுதலைப் பற்றிக் கூறுகின்றன: "எங்களுடைய நேரிய நடத்தையின் பொருட்டே இந்த நாட்டை உடைமையாக்கிக் கொள்ளும்படி ஆண்டவர் எங்களைக் கூட்டிவந்தார்" என்று உங்கள் உள்ளத்தில் எண்ண வேண்டாம் (உப 9:4-6).

இதே ஒளியில் ஆதியாகமத்தின் புகழ்பெற்ற பகுதியான "ஆபிராம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார்; அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்" (ஆதி 15:6) என்ற பகுதி விளக்கப்பட வேண்டும். இப்பகுதியில் நீதியானது இறைவனுக்குத் திருப்தியான நடத்தையாகவோ, மேலே குறிப்பிடப்பட்ட சொல்லின் பொருள் வளர்ச்சியின்படி வெகுமதியாகவோ, தகுதியாகவோ புரிந்து கொள்ளப்பட்டாலும், இரு நிலைகளிலும் விசுவாசமானது இறைவனைத் திருப்திப் படுத்துவதற்கான வழி என்று உயர்வுபடுத்தப்படுகிறது. பவுல் நன்கு வலியுறுத்தியது போன்று, நீதிக்கும் இறைவனைச் சரணடைதலுக்கும் இடையிலான உயர்நிலையான இணைப்பானது நீதியைச் சட்டரீதியான வடிவில்

கருதுவதினின்று நம்மைத் தடுக்கிறது. ஆதியாகமத்தின் வார்த்தைகள் 1 மக் 2:52-இல் குறிப்பிடப்படுகின்றன. அதன் எதிரொலி 1 மக் 14:35-இல் கேட்கிறது. அங்கு நீதியானது தனது மக்கள்பால் சீமோன் கொண்டிருந்த பற்றுறுதியாகும்.

இறுதியாக, யோபுவின் நாடகப்பாணியான கேள்விகளிலும், வினைப்பயன் கோட்பாடு பற்றிய சந்தேகத்தை விதைக்கின்ற திருவுரையாளரின் "ஏவுதல் பெற்ற எதிலும் தேடுதல் காணும் மனப்பான்மையிலும்" ஓர் உயரிய வெளிப்பாட்டிற்கான தயாரிப்பினைக் காணக்கூடிய வாய்ப்பு உள்ளது. "நேர்மையானவன் நேர்மையுள்ள வனாயிருந்தும் மாண்டழிகிறான்...." (திருவுரை 7:5; 8:14; 9:1-2). "மனிதன் இறைமுன் நேர்மையாய் இருப்பது எப்படி?" (யோபு 9:2; 4:17; 9:20...).

ஆ. புதிய ஏற்பாடு

**1) இயேசுவின் செய்தி:** இது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதைவிட இறைவன் மீதான நம்பிக்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆனால், நீதிபற்றிய சொற்றொகுதிக்கு ஒரு புதிய திருப்பத்தை அளிக்காமலே ஏழை, தாழ்ந்தோர், பாவிகள் முதலிய சொற்களுக்கு இயேசு புதிய பொருளைக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயினும் இயேசு, விசுவாசத்தை உண்மையான நீதியென்று அழைத்ததும், பாவியை உண்மையிலேயே நீதிமான் என்று குறிப்பிட்டதும் (மத் 9:13), ஏற்புடைமையை எளியோருக்கான மன்னிப்பு என்று விளக்குவதும் (லூக் 18:14) ஏற்புடையதே.

**2) பவுல்:** மனமாற்றத்திற்கு முன்னர் அவர் சட்டத்தின் நீதியைப் பின் தொடர்ந்தார் (பிலி 3:6). தனது நற்செயல்களுக்கேற்ப மனிதன் இந்த நீதியைப் பெறுகிறான் (உரோ 9:30-31; 10:3). இவ்வாறாக, இது சட்டத்தினின்று வருகிற நீதி என்றும் (உரோ 10:5; கலா 2:21; பிலி 3:9), செயல்களினின்று வருகிற நீதி என்றும் (உரோ 3:20; 4:2; கலா 2:6) அழைக்கப்படலாம். தனது மனமாற்றத்தின் தொடக்கத்தில் பவுல் இக்கருத்துகளினின்று முழுமையான முறிவினை ஏற்படுத்தவில்லை. ஆயினும், அந்தியோக்கிய விவாதமானது தீர்மானமான திருப்புமுனையாக அமைகிறது. கலா 2:11-21-இல் பவுல் ஏற்புடைமை பற்றிய இரு கருத்துக்களையும் எதிர்க்கிறார். ஏற்புடைமை என்பதற்கு அதன் கிறிஸ்தவப்பொருளை அளிக்கின்றார்; "திருச்சட்டம் விதிக்கும் செயல்களால் அன்று, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகக்கூடும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்" (கலா 2:16). இக்காலக் கட்டத்திலிருந்து நீதிபற்றிய பவுலின் கருத்தானது முற்றிலுமாக மாறுகிறது. அதுமுதல், மனிதன் இறைவனில் விசுவாசங் கொள்கிறான். இறைவனும் அவனை ஏற்புடைமையுள்ளவன் ஆக்குகிறார்; அதாவது, விசுவாசத்தினாலும் கிறிஸ்துவோடு ஒன்றிணைப்பினாலும் மீட்பை அவனுக்கு உறுதியளிக்கிறார். இனிமேல் நீதி என்ற சொல்லும் அதனைச் சார்ந்த சொற்களும் மீட்பு பற்றிய கிறிஸ்தவ உண்மைகளைச் சுட்டிக்காட்டும். உண்மையில் இறை உதவியின் உறுதிப்பாடானது அனுபவ முறையில் அடையப்படுகிறது. ஆவியும் (கலா 3:2), வாழ்வும் (2:19-21) ஏற்புடைமைக்கு உறுதியளித்து, அதே நேரத்தில் அதனை உருவாக்குகின்றன. கவனம் இறுதித்தீர்ப்பினின்று மாறுபட்டு மனிதனின் நிகழ்கால நிலையாகக் கருதப்படும் நீதியின்பால் மையம் கொள்கிறது. ஆனால், அதனுடைய விண்ணக வெகுமதிகளின் எதிர்பார்ப்பில் இறுதிக்காலத்தைச் சார்ந்ததாகவே அஃது இன்னும் உள்ளது.

2. இறை நீதி

**அ. பழைய ஏற்பாடு:** தனது சட்டச் சார்பான நீதியைச் செயற்படுத்துவதில், ஒடுக்கப்பட்டவரை விடுவிப்பவராகவே இறைவன் அடிக்கடி காணப்படுகின்றார். தன்னிலேயே இந்த

விடுதலையானது சட்டச்சார்பான நீதியின் வரைமுறைக்குள்ளேயே உள்ளது. ஆனால் இறைவனுடைய உதவி என்று பார்க்கப்படும்போது, இறைவனுடைய நீதி பற்றிய வளமிக்க கருத்துச் செறிவைக் கொண்டுள்ளது. மற்றொருபுறம், மனிதன் தனது சொந்த நீதியினாலேயே இறையுதவியைப் பெற முடியாது. மற்றும் யாவேயின் முன் ஏற்புடைமையைக் கண்டடைய விசுவாசமானது உயரிய மதிப்புடையது என்பதைப் பழைய ஏற்பாடானது முன்னோக்கியுள்ளது. அவரது இரக்கத்திற்கான சான்று எனவும், ஏற்புடைமையின் மறைபொருளை அடைவதற்கான சாதனம் எனவும் இறைவனது நீதியைக் கருதுவதற்கான மற்றொரு காரணத்தை இக்கருத்து அளிக்கின்றது.

நீதி பற்றிய இக்கருத்தானது துரிதமாக வளர்ச்சியடைகிறது. உபாகமப் பாரம்பரிய ஆசிரியருடைய கருத்துப்படி அநாதைக்கு நீதி வழங்குவதில் இறைவன் மனநிறைவு அடைவதில்லை. அவர் அகதியை நேசித்து, அவனுக்கு உணவும் உடையும் அளிக்கிறார் (உப 10:18). ஓசே 2:21-இல் "நேர்மையிலும் நீதியிலும் பேரன்பிலும்" தன் மக்களோடு மண ஒப்பந்தம் செய்து கொள்வதாக வாக்களிக்கிறார். புலம்பல்களின் ஆசிரியர் இறைவனுடைய நீதிக்கான தனது வேண்டுகோளில், நியாயமான தண்டனையை விட அதிகமாக எதிர்பார்க்கிறார்; "நீர் நீதியுள்ளவராய் இருப்பதால் எனக்கு வாழ்வளியும்" (சங் 119:40.107; 36:11). மேலும், பாவத்தின் மன்னிப்பாகிய நீதியையே அவர் எதிர்நோக்குகிறார் (சங் 51:16; தானி 9:16). பாவியின் ஏற்புடைமை பொருந்தாத செயலாகவும், சட்டச்சார்பான போதனைக்கு முரண்பட்டதாகவும் உள்ளது; இப்போதனையில் குற்றவாளியை ஏற்புடையவனாக்குவது மிகப்பெரிய தவறாகும். பல சங்கீதங்களில் இதை ஒத்த பொருந்தாமையானது காணப்படுகிறது. அங்கே இறைவன் தனது பிரதிபலன் கருதாத, சில நேரங்களில் உலகளாவிய உதவிகளால் தனது நீதியை வெளிப்படுத்துகிறார். எதிர்பார்ப்பதற்கென மனிதன் உரிமை கொண்டுள்ள அனைத்தையும் அது முழுமையாக விஞ்சியுள்ளது (சங் 65:6; 111:3; 145:7; 17; நெகே 9:8).

எசா 40:66-இல் இறைவனுடைய நீதி என்ற சொற்றொடரானது முதன்மையையும் முக்கியத்துவத்தையும் அடைகிறது. பவுலின் பெரும் கருத்தை இது முன்னுரைக்கிறது. எசாயாவின் இந்த அதிகாரங்களில் இறைவனுடைய நீதியானது சில நேரங்களில்- அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் மீட்பாகவும், மற்ற நேரங்களில்- இரக்கம் மற்றும் பற்றுறுதி என்ற இறைத் தன்மையாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. இந்த மீட்பானது விடுவித்தல் அல்லது வெகுமதி பற்றிய கருத்தை மிகவும் விஞ்சியுள்ள கொடையாக உள்ளது. யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் ஒரே தகுதியைக் கொண்டுள்ள மக்கள்மீது சமாதானம் மற்றும் மகிமை முதலிய விண்ணக ஆசிகளைப் பொழிதலை அது கொண்டுள்ளது (எசா 45:22-24; 46:12-13; 51:1-3.5.8; 54:17; 56:1; 59:9); இஸ்ராயேலின் முழு இனமும் ஏற்புடையதாக்கப்படும்; அதாவது, மகிமைப்படுத்தப்படும் (45:25). இவ்வாறாக, இறைவன் தனது இரக்கத்தை வெளிப்படுத்தி, தனது வாக்குறுதிகளை அருளுடன் நிறைவேற்றுகின்றார் என்ற பொருளில், தான் நீதியுள்ளவர் என்பதைக் காட்டுகின்றார் (41:2.10; 42:6.21; 45:13.19-21).

### ஆ. புதிய ஏற்பாடு

**1) இயேசு:** தனது உலக வருகையானது கொண்டு வந்த இறை மீட்பிற்கான வெளிப்பாட்டை எடுத்துக்கூற இயேசு விரும்பிய போது, இரண்டாம் எசாயா அல்லது பவுலைப் போன்று இறைவனுடைய நீதியின் வெளிப்பாட்டைப்பற்றி அவர் பேசவில்லை. ஆனால், அதற்கு இணையான "விண்ணக அரசு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். இயேசுவின்

மொழியை நெருக்கமாகப் பின்பற்றிய பவுலைச்சேராத கிறிஸ்தவமானது, இயேசு கிறிஸ்துவில் இறையருளின் உண்மையான வெளிப்பாட்டை வெளிப்படுத்த, "இறைவனுடைய நீதி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை.

**2) பவுல்:** மற்றொரு புறம் இறைவனுடைய நீதி பற்றிய கருத்தைப் பவுல் தெளிவாக விவரிக்கிறார். ஆயினும், இவ்வளர்ச்சியானது அவரது பணியின் தொடக்கத்துடன் ஒன்றுபடவில்லை. தெசலோனிக்கேயர் மற்றும் கலாத்தியருக்கான திருமுகங்கள் இதனைப்பற்றி ஒன்றுமே குறிப்பிட வில்லை. மூலபோதனைக்கு ஒத்தவாறு பவுலின் தொடக்ககால மீட்புச் செய்தியானது இறுதிக்காலம் பற்றியதாகவே உள்ளது (1 தெச 1:10). இவ்விடங்களிலான அழுத்தமானது சினத்தைவிட விடுவித்தலின்மீதே அதிகமாக வலியுறுத்தப் படுகிறது. ஆனால், இந்த விடுவித்தலானது தீர்ப்பினுடைய சாதகமான கூறு மட்டுமேயாகும். மேலும், இஃது இறைவனுடைய சட்டச்சார்பான நீதியின் வரைமுறைக்குள்ளேயே உள்ளது. ஆயினும், யூதக் கிறிஸ்தவர்களுடன் கொண்ட வாக்குவாதங்கள் உண்மையான நீதியை இக்காலத்தில் பொழியப்பட்ட அருள் என்று விளக்குமாறு பவுலை இட்டுச்சென்றன. பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கிறிஸ்தவ வாழ்வை இறைவனுடைய நீதி என விளக்குகிறார். இக்கருத்து மீட்பு மற்றும் அரசு ஆகியவற்றுடன் மூலத்தில் தொடர்பு கொண்டிருந்த இறுதிக்காலப் பொருளின் சில பண்புகளைப் பாதுகாக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் செயல்களின் விளைவான நீதிக்கு எதிரான வகையில் இஃது இக்கால அருள் என்ற உண்மையையும் வலியுறுத்துகிறது. எனவே, இறைவனுடைய நீதியானது-இறை அருளாகும். அது தன்னிலேயே இறுதிகாலப் பண்பையும் இறை வெளிப்பாட்டுப் பண்பையும் கூடக் கொண்டுள்ளது. ஆனால், அஃது உண்மையில் இக்காலத்திலேயே கிறிஸ்தவ வாழ்வில் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவனுடைய நீதியானது விண்ணகத்திலிருந்து வருகின்றது (உரோ 1:17; 3:21-22; 10:3); மற்றும் மனிதகுலத்தை மாற்றியமைக்க அது வருகின்றதெனப் பவுல் கூறுவார். அது தன்மையாலே இறைவனுக்குரிய ஆசீராகும். விண்ணகத்திலிருந்து வந்த நிலையை இழக்காமலேயே அது நமக்குரியதாகிறது.

அதே நேரத்தில், இந்த நீதி அளிக்கப்படுவது தனது உடன்படிக்கை மீதான இறைவனின் பற்றுறுதியில் அல்லது ஒரே சொல்லில் அவரது இரக்கத்தில் வேர் ஊன்றியுள்ளதாகப் பவுல் குறிப்பாகச் சொல்கிறார். சில நேரங்களில் இக்கருத்தானது, "இறைவனின் நீதியானது" இரக்கத்தினுடைய இறை குணமாகும் என்ற பவுலின் இரண்டாவது பொருளுக்கு இடமளிக்கும் வகையில் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பொருளானது உரோ, 3:25-26-இல் தோன்றுகிறது: "இக்காலத்தில் அத்திருவருட் செயல் முறையைக் காட்டவிரும்பி, அவர் அருள் மிக்கவராகவும், இயேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடையவன் ஆகும்படி அருள் அளிப்பவராகவும் விளங்குகிறார்". உரோ 10:3-இல் நீதியின் இரண்டு பொருள்களும் ஒன்றிணைத்துக் கொணரப்படுகின்றன; "கடவுளின் திருவருட் செயல்முறையை (கிறிஸ்தவர் மீது பொழியப்பட்ட அருள்) அவர்கள் அறிந்து கொள்ளாமல், அருள் பெறுவதற்குத் தங்கள் முறையையே நிலை நாட்டத் தேடினார்கள்; ஆகவே கடவுளுடைய அருட்செயல்முறைக்குத் (இரக்கம்) தங்களை உட்படுத்தவில்லை".

இவ்வாறாக, நீதியின் இயல்பு பற்றிய விவிலியச் செய்தியானது, இரட்டைத் தன்மையை அளிக்கின்றது. வரலாற்றுப் போக்கில் செயல்புரிகின்ற இறைத் தீர்ப்பினுடைய நோக்கில் மனிதன் நீதியைச் செயல்படுத்த வேண்டும். இப்பணியானது "ஆவியிலும், உண்மையிலும் தொழுதலில்" முடிவடைகின்ற மிக உள்ளார்ந்த முறையில் புரிந்து கொள்ளப்படவேண்டும். மற்றொரு புறம், மீட்பின் திட்டத்தைக் கருத்தில் கொண்டு, தனது செயல்களால் மட்டுமே இந்த

நீதியை அடையமுடியாது என்பதை மனிதன் காண்கிறான்; ஆனால், அருளின் கொடையாக அவன் அதனைப் பெறுகிறான். இறைவனுடைய நீதியைத் தீர்ப்புச் செயலாக வரையறை செய்ய முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, இஃது அவரது மீட்புச் சித்தத்திற்கான இரக்கமிக்க பற்றுறுதியாகும். மனிதனிடம், தான் கோருகின்ற நீதியை அது மனிதனில் படைக்கிறது.

**நீதி இருக்கை (JUDGEMENT SEAT)**

இஃது ஒரு பெரிய, மிகவும் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அமைக்கப்பட்ட, இருக்கையென அகழ்வாய்வுகள் காட்டியுள்ளன. சந்தை கூடுமிடங்களில் நடுவில் அமைக்கப்பட்டு வழக்குகளைக் கேட்கவும் மக்களிடம் பேசவும் ஏதுவானதாக அமைந்திருந்தது. இயேசுவையோ, பரபாவையோ விடுதலை செய்ய வேண்டும் என்று யூத மக்கள் விருப்பம் தெரிவிக்கக் கூடியபோது, "கல்தளம்" என்று பொருள்படும் "கபத்தா" என்ற மேடையில் அமைந்திருந்த நடுவர் இருக்கையில், பிலாத்து அமர்ந்தான் (மத் 27:19; யோவா 19:13). முதலாம் ஏரோது அகிரிப்பா அரச உடை அணிந்து மேடையில் வீற்றிருந்து மக்களுக்கு உரையாற்றுகையில் ஆண்டவரின் தூதர் அவனைத் தண்டிக்கவே, உடனே அவன் புழுத்துச் செத்தான் (அ.ப. 12:21-23).

அப்போஸ்தலர் பவுல், கொரிந்தில், ஆளுநர்கள் கல்லியோ மற்றும் பெஸ்துவின் நீதியிருக்கை முன் கொண்டுவரப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டார் (அ.ப 18:12; 25:6). நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் பிரதிநிதியான லீசியா தாலமாயின் குடிமக்களோடு பேச்சு நடத்தியபோது இத்தகையதோர் இருக்கையில் அமர்ந்திருந்தான் (2 மக் 13:26).

**நீதிபதி, நடுவர் (JUDGE, JUSTICE)**

சட்டப்படி வழக்குகளை ஆய்ந்து நீதி வழங்கும் அதிகாரம் படைத்தவரே நீதிபதி. இதே அதிகாரத்தைக் கொண்டு நீதிசபைக்கு வெளியே இஸ்ராயேலில் மக்களைப் போருக்கு இட்டுச் சென்று அவர்களை இறை அருளால் அன்னிய ஆக்ரமிப்புகளிலிருந்து மீட்ட தலைவர்களும் (யோசுவாவுக்கும் தாவீதுக்குமிடையே வாழ்ந்தவர்கள்) நீதிபதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தின் மூத்த தந்தையர்கள் அவர்கள் குடும்பத்தின் நீதிபதிகள் ஆவர் (ஆதி 21:22; 27..).

நாடுகளில் நீதி வழங்கிய குற்றநடுவர்கள்-நீதிபதிகள் எனப்பட்டனர். நீதி வழங்கியதன் மூலம் இறைவனுக்குப் பணி செய்தனர். இறைவனின் தீர்ப்பை அளித்தனர் (2 நாள் 19:6). மோசே இத்திரோவின் ஆலோசனைப்படி நீதிபதிகளை நியமித்தார் (யாத் 18:5). துணை நீதிபதிகள் பற்றி ஐந்நூல்களில் காண்கிறோம் (எண் 11:16-17; உப 1:9 தொ). அரசர் காலத்தில் அரசன் தான் மிக உயர்ந்த நீதிபதி (2 சாமு 15:2-3). அரசர்கள் நீதிபதிகளை நியமித்ததைப் பற்றிக் கூறப்பட்டாலும் (1 நாள் 23:4; 2 நாள் 19:5), அவர்களுக்குக் குறுகிய வட்டத்திலேதான் அதிகாரம் இருந்தது (உப 16:18; 17:8-9). குருக்களும் நீதிபதிகளாக இருந்ததால்தான் ஒவ்வொரு திருத்தலமும் நீதி வழங்கும் இடமாயின (யாத் 33:8 தொ; உப 17:12). நகரத்தின் மூப்பர்கள் நகரவாயிலில் நீதி வழங்கினர் (நீதி 8:16; ரூத் 4:2; யோபு 29:7-8). சாமுவேலைப் போல ஒரு நீதிபதி, நகரம், நகரமாகச் சென்றும் நீதி வழங்கலாம் (1 சாமு 7:15). எஸ்ரா பல குற்ற நடுவர்களையும் நீதிபதிகளையும் ஏற்படுத்தினார். கிரேக்கர் காலத்தில், அரசனுடைய இடத்தில் தலைமைக் குருவே உச்சநீதிபதியாகச் செயல்பட்டார் (காண். 2 நாள் 19:8). கிறிஸ்தவர்களும், யூதர்களும் தங்களுக்குள் ஏற்படும் சண்டைகளைப் புறவின நீதிபதிகளிடம் கொண்டு செல்வதைத் தவிர்த்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதத் தலைமைச் சங்கமே உயர்நீதிமன்றமாக இருந்தது. எல்லாக் காலங்களிலும், இடங்களிலும் இருப்பது போன்று அன்றும் நீதிபதிக்குக் கையூட்டுக் கொடுப்பது தெரியாத ஒன்றாக இருக்கவில்லை (மீக் 7:3). நேர்மையற்ற நடுவர் பற்றிய உவமை லூக்கா 18-ஆம் அதிகாரத்தில் கூறப்படுகிறது.

சிலர் தங்கள் அயலாருக்கு நீதி மன்றத்துக்கு வெளியே தீர்ப்பு வழங்கியதற்காக வன்மையாகக் கண்டனம் பெறுகின்றனர் (ஆதி 19:9; யாத் 2:14; லேவி 19:15; அ.ப. 7:27). இயேசுகிறிஸ்து கடவுளைத் தவிர வேறு யாரும் தீர்ப்பிடக் கூடாது என்றார் (லூக் 6:37; யாக் 4:12). தனது உரையைக் கேட்பவர்களிடம் அஃது உண்மையா, பொய்யா எனத் தீர்ப்பிடுமாறு பவுல் கூறுகிறார் (1 கொரி 10:15).

அன்னியர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டபோது மக்களை மீட்டு, வழிநடத்திய தலைவர்களும் நீதிபதிகளே. இவர்களை விடுதலை வீரர்கள் என்று பொருத்தமாக அழைக்கலாம். சங் 2:10- அவர்கள் அரசர்கள் போல் அதிகாரம் உள்ளவர்கள் (ஓசே 7:7) எனக் குறிப்பிடுகிறது. இவர்கள் எந்தக் குறிப்பிட்ட கோத்திரத்தோடோ நகர ஆட்சியோடோ தொடர்புடையவர்கள் அல்லர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களது அதிகாரம்- குழப்பங்கள் தோன்றி மறையும் காலம்வரையே நீடித்தது. கோத்திரங்களையெல்லாம் கடந்து நின்ற இவர்கள் எல்லோரிடமிருந்தும் மரியாதையையும், கீழ்ப்படிதலையும் கோரினர் (நீதி 5). ஆனால், சிம்சோனைப்போல ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தில் அவர்கள் அதிகாரம் செயல்பட்டு இருக்கலாம் (நீதி 15). நீதிபதிகள் சிலர் ஒத்த காலத்தவர்களாய் இருந்திருக்கின்றனர். ஒருவகையில் மோசேயை- முதல் நீதிபதியாகவும், சாமுவேலை- இறுதி நீதிபதியாகவும் கொள்ளலாம்.

கடவுள் நீதிபதியென அழைக்கப்படுகிறார். ஏனெனில், அவரே எல்லா மனிதர்க்கும் இறுதித் தீர்ப்பு அளிப்பவர் (ஆதி 18:25; எசா 33:22; யாக் 4:12). அவரே எல்லா உலகங்களின் நீதிபதி (சங் 94:2; அ.ப. 10:42; உரோ 3:6). நாடுகளுக்கிடையே தீர்ப்பளிக்கிறார் (எசா 2:4). பாவி கடவுளின் தீர்ப்பிலிருந்து தப்பிக்க உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாக இருக்க விழைகிறான் (சங் 6:8; 50:45; 82:8; 96:10; எபி 10:30; 12:23). இயேசுவும் நீதிபதியென அழைக்கப்படுகிறார் (யாக் 5:9; 1 பேதுரு 4:5). அவர் கொண்டு வரும் 'நடுவு நிலைமையின்படி' பார்க்கப்போனால் யாரும் பாவமற்றவன் என்று கூறிக்கொள்ள முடியாது (யோவா 7:24). அவர் தீர்ப்பிட்டால் அது செல்லும்; ஏனெனில் தீர்ப்பிடுவதில், தான் தனியே இல்லை, தந்தையும் தன்னுடன் இருப்பதாகக் குறிப்பிடுகிறார் (யோவா 8:16). உலகம் முழுவதையும் அவர் தீர்ப்பிடுகிறார் (1 திமொ 4:1). உலகம் முடியும் காலத்திலே புனிதர்களும் அவருக்குத் தீர்ப்பிட உதவுவர் (1 கொரி 6:2-3).

### நீதிபதிகள் ஆகமம் (JUDGES, BOOK OF)

காண்க. விடுதலை வீரர்கள் நூல்.

### நீதி மண்டபம் (JUDGEMENT, HALL OF)

சாலமோனால் கட்டப்பட்ட, அவனது அரண்மனையில் உள்ள ஒரு மண்டபம். அது நீதியிருக்கை அமைந்திருக்கின்ற அரியணை மண்டபம். அது தளம் முழுவதும் கேதுரு மரப் பலகையால் பாவப்பட்டிருந்தது (1 அர 7:7).

### நீதிமன்றம் (COURT OF LAW)

விவிலியத்திலுள்ள சட்ட நடவடிக்கைகள் பல காலந்தோறும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. குல மூதாதையர் காலத்தில் பிதாப்பிதாக்களின் சட்டப்பிரச்சனைகள் கோத்திரப் பாரம்பரியங்களின் அடிப்படையில் குடும்பங்களுக்கிடையேயும், கோத்திரங்களுக்கிடையேயும் தீர்த்து வைக்கப்பட்டன (ஆதி 31:37;34:4-24). மோசேக்கும், யோசுவாவிற்கும்கீழ் கோத்திரங்கள் ஓர் அமைப்புக்கு வந்தபிறகு 'கடவுளுக்கு முன்னிலையில்' (அதாவது, கோத்திரங்களின் மையப் புனித இடத்தில்) சிறிது கடினமான சிக்கல்கள் தீர்த்து வைக்கப்பட்டன (யாத் 21:6; 22:8). பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள முதல் நீதிமன்றம்- தெபோராவின் பேரீச்ச மரத்தடியாகும். இங்குதான் இஸ்ராயேல் அனைவரும் தீர்ப்பு பெற வந்தார்கள் (நீதி 4:5). பொதுவாக உள் விவகாரங்கள் நகரவாயிலின் முன் தீர்க்கப்பட்டன (ஆமோ 5:10; ரூத் 4:1).

அரசாட்சி நிறுவப்பட்ட பிறகு, அரசன் இந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான் (1 சாமு 7:16-17). மிகவும் சிக்கலானவைகளைத் தீர்க்கும் மேல் உயர்நீதிமன்றமாகவும் அரசன் இருந்தான் (1 அர 3:16-18; 1 சாமு 15:2-6). நகரவாயில் இன்னும் நீதி வழங்கும் இடமாகத் தொடர்ந்து இருந்தது. அரசன் அல்லது அவனுடைய பிரதி நிதிகள் பிரச்சினையையும் அதற்கான சாட்சிகளையும் கேட்டுத் தீர்ப்பை வழங்கினார்கள்.

பதிதம் பற்றிய குற்றச்சாட்டில், தலைவர்களும் மூப்பர்களும் குற்றம் சாட்டப்பட்டவனை உயரமான இடத்தில் நிறுக வைத்து, அவன்மேல் குற்றம் சுமத்துபவர்களின் சாட்சியங்களைக் கேட்டனர். குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்தவனாக நிரூபிக்கப்பட்டால், மக்கள் அவனைக் கொன்றார்கள் (1 அர 21:9-13).

பழைய ஏற்பாட்டில் "நீதிமன்றம்" என்பதைக் குறிக்க, தகுந்த சொல் இல்லை. இந்தப் பொருளுக்கு மிக நெருங்கிய சொல் "நகர வாயில்" (தானி 2:49) என்பதாகும். பிற்காலத்தில் 'நீதியின் வீடு' என்பது சில சமயங்களில் நீதியின் இருக்கையைக் குறித்தது (தானி 7:10.26).

மத் 5:25-இல் வழக்கு மன்றம் குறிக்கப்படுகிறது. 1 கொரி 4:3; அ.ப. 19:38-இல் மட்டும்தான் நீதிமன்றம் என்ற சொல் சரியாகப் பயன்பட்டுள்ளது.

**நீதிமொழிகள் நூல், பழமொழி யாகமம் (PROVERBS, BOOK OF)**

1. பெயர்: நவீன நூலைப் போன்று, இந்நூல் தலைப்பு, ஆசிரியர் பெயர், அவரது "பட்டங்கள்" ஆகியவற்றோடு "இஸ்ராயேலின் அரசனும் தாவீதின் மகனுமான சாலமோனின் நீதிமொழிகள்" (பழ 1:1) என்ற வாசகத்தோடு தொடங்குகிறது. இந்நூலின் துணைத்தலைப்பு, வழக்கத்திற்கு மாறாக நீண்டதாக உள்ளது (1:2-6).

இந்நூல் எபிரேயமொழியில் "சாலமோனின் பழமொழிகள்" என்றும், கிரேக்க எழுபதுநூலில் "பழமொழிகள்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூலைத் தமிழில், பழமொழியாகமம் என்று அழைத்து வந்துள்ளோம். ஆனால், இப்பெயர் நூலின் தன்மையை முழுவதும் உணர்த்தவில்லை. சான்றாக, தொடர்வாக்குகளையோ, ஒழுக்க, சமய போதகத்தையே, பழமொழி என்ற சொல் உணர்த்தவில்லை. வரவிருக்கும் புதிய தமிழ் மொழிபெயர்ப்பில் இந்நூலை "நீதி மொழிகள்" என்றழைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மரபுக்கும் ஏற்றது. நூலின் தன்மையையும் ஓரளவுக்கு விவரிக்கிறது. ஆயினும், இந்நூலைக் குறிக்க இரு தலைப்புகளையும் பயன்படுத்துவோம்.

2. ஆசிரியர்: இந்நூல் சாலமோனால் எழுதப்பட்டது (1:1; 10:1; 25:1) என்பதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. ஞான இலக்கியங்களைச் சாலமோன் எழுதினார் என்று கருதிய எபிரேய மரபு பற்றி ஞான இலக்கியம் பற்றிய கட்டுரையில் காண்க.

மேலெழுந்தவாறு வாசித்தாலும், இந்நூல் ஒரே ஆசிரியரின் படைப்பு அன்று, பலருடைய படைப்பாகும் என்பது தெளிவாகும். சில பகுதிகளின் தொடக்கம் இதற்குச் சான்றுகூறும்: 10-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில், "சாலமோனின் பழமொழிகள்," 25-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில், "....இவை கூடச் சாலமோனின் பழமொழிகளேயாம்", "மாசாவைச் சார்ந்த யாக்கேயின் மகன் ஆகூரின் மொழிகள்" (30;1), "மாசாவின் அரசனான இலெமுவேலின் மொழிகள்" (31:1). ஞானிகள் வேறு சில முதுமொழிகள்" என்று 24:23-இல் வருகிறது. "இதுவும்" என்பது ஞானிகள் போதித்ததை.. செவி கொடுத்துக் கேள்" (22:17) என்பதைச் சுட்டலாம்.

மற்ற உள்ளார்ந்த சான்றுகளும் இந்நூல் பலருடைய படைப்புக்களின் தொகுப்பு என்பதற்கு ஆதரவு தருகின்றன. 31:10-31-இல் உள்ள "நல்ல மனையாள்" பற்றிய பாடல் மூலத்தில் அகர வரிசையில் இருப்பதால் அஃது ஒரு

தனித்தொகுப்பாக இருக்கலாம். 22-17-இல் தொடங்கும் ஞானிகளின் மொழிகள் முடிவின்றிப் போய்க்கொண்டிருக்க முடியாது. ஏனெனில், "அறிவும் நல்லுரையும் தரக்கூடிய முப்பது முதுமொழிகளை நான் உனக்கென்றே எழுதி வைத்திருக்கிறேன் அல்லவா?" (22:20) என்று கூறப்பட்டுள்ளது. எப்படி இந்த முப்பது முதுமொழிகளை எண்ணுவது என்பது தெளிவாக இல்லை. ஆனால் 23:15-இல் நடை மாறுகிறது. அமென்-எம்-ஒப்பேயின் எகிப்திய முப்பது கூற்றுகளோடு கொண்ட உறவும் முடிவு பெறுகிறது. ஆகவே, 23:15-24:22 என்ற பகுதி ஒரு தனிப்பட்ட தொகுப்பாகக் கருதப்படலாம்.

மேலும், அறிவுரைகள், சமன் செய்யப்பட்ட வரிகள், இரட்டிப்பு வாசகங்கள், உவமைகள், உருவகங்கள் போன்ற பல வகைப்பட்ட இலக்கிய வடிவங்கள் இந்நூல் பலரால் தொகுக்கப்பட்டது என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. கூற்றுகள் ஒரே பகுதியிலும் (18:8; 19:24; 20:16; 21:19; 22:23), வெவ்வேறு பகுதிகளிலும் மீண்டும் மீண்டும் கூறப்படுதல் (26:22;26:15; 27:13; 25:24; 27:12), இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினார் என்பதற்கு மாறாக உள்ளன. ஆசிரியரோ, தொகுத்தவரோ எந்த முறையுமின்றிச் செயல்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை இரட்டிப்பு வாசகங்களைக் காணமுடியாது.

இவையெல்லாம் தனித்தனியான மேற்கோள் தொகுப்புக்கள், கவனிப்பு உரைகள், அறவுரைகள் சேர்ந்த தொகுப்பாகும் இந்நூல் என்பதையே சுட்டுகின்றன. இவற்றை மனதிற்கொண்டு பின்வருமாறு இந்நூலைத் திட்டம் செய்யலாம்.

3. **திட்டமும் பொருளடக்கமும்:**

I. **தலைப்பும் நோக்கமும்:** 1:1-7.

II. **ஞானத்தின் தன்மையும் மேன்மையும், அறவுரைகளும் எச்சரிக்கைகளும்:** 1:8-9:18.

அ. 1:8-33 : தொடக்கவுரை.

1. 1:8-19 : இளைஞருக்கு நல்லுரை.
2. 1:20-33 : ஞானம் விடுக்கும் அழைப்பு; ஞானத்தின் முதல் அறவுரை.

ஆ. 2:1-7:27 : **ஞானத்தின் ஆசீர்கள்.**

1. 2:1-22 : ஞானம் அளிக்கும் பலன்.
2. 3:1-12 : ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை.
3. 3:13-35 : ஞானத்தின் மேன்மை.
4. 4:1-27 : ஞானத்தினால் வரும் நன்மைகள்.
5. 5:1-14 : கற்பு நெறி தவறாமை.
6. 5:15-23 : பிறன் மனைவியை நயவாமை.
7. 6:1-5 : சில நல்லுரைகள்.
8. 6:6-19 : சோம்பல், கயமை, ஆண்டவருக்கு வெறுப்பானவை.
9. 6:20-7:27 : கற்புநெறி - விலை மகளுக்கு இடம் கொடாமை.

இ. 8:1-36 : **ஞானத்திற்குப் புகழுரை, இரண்டாம் அறவுரை.**

ஈ. 9:1-18 : ஞானமும் மதிகேடும்.

III. **சாலமோனின் நீதிமொழிகள் - முதல் தொகுப்பு:** 10:1-22:16. 375 வாக்குகளைக் கொண்டது.

IV. **ஞானிகளின் வாக்குகள் - முதல் தொகுப்பு:** 22:17-23:14.

V. **அறிவுரைகளும் எச்சரிக்கைகளும்:** 23:15-24:22.

VI. **ஞானிகளின் வாக்குகள் - இரண்டாம் தொகுப்பு:** 24:23-34.

VII. **சாலமோனின் நீதிமொழிகள் - இரண்டாம் தொகுப்பு:** 25:1-29:17. எசேக்கியாவின் அவையினர் தொகுத்தது 238 வாக்குகளைக் கொண்டது.

VIII. **ஆகூரின் கூற்றுக்கள்; எண்ணிக்கை வாக்குகள்:** 30:1-33.

IX. **இலெமுவேலின் வாக்குகள் அரசனுக்கு அறிவுரை:** 31:1-9.

X. **நல்ல மனையாள்:** 31:10-31.

**4. காலம்:** நூல் தோன்றிய காலம் குறிப்பது ஒரு சிக்கலான பிரச்சனையாகும். இந்நூல் உருவெடுக்கப் பல ஆண்டுகள் எடுத்தன. இது பலருடைய படைப்புகளைக் கொண்ட தொகுப்பு நூலாகும் என்று முன்பே கூறியுள்ளோம். காலம் பற்றிய பிரச்சனை மூன்று கேள்விகளை எழுப்புகிறது. அ) இந்நூலில் காணப்படும் காலத்தால் முந்திய பகுதிகள் எவ்வளவு பழங்காலத்தவை? ஆ) ஞானிகள் குழுவின் காலம் எது? இ) எப்போது இந்நூல் இறுதியாகத் தொகுக்கப்பட்டு முன்னுரை அளிக்கப்பட்டது?

**IV, V**-ஆவது பகுதிகள் (22:17-24:22), "ஞானிகள் போதித்ததை நான் உனக்குக் கூறுகிறேன்" என்று தொடங்குகிறது. இப்பகுதியை எகிப்திய ஞானியான அமென்-எம் - ஒப்பேயின் நூலோடு ஒப்பிடலாம். இவர் தன் நூலை "முப்பது வாக்குகள்" என்றழைத்தார். "முப்பது முதுமொழிகள்" என்ற சொற்றொடர், பழ. 22:20-இல் வருகிறது. இரு நூல்களுக்கும் பொருளடக்கத்தில் அவ்வளவு ஒற்றுமையில்லையானாலும் சில பகுதிகள் இரு நூல்களிலும் அப்படியே உள்ளன. இரு நூல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி கருத்து வேறுபாடு உண்டு. இரு நூல்களுக்கும் பொதுவான மூலம் இருந்திருக்கலாம் என்று விவிலிய ஆய்வாளர் சிலர் கருதுவர். ஆனால், இம்மூலம் எகிப்தியரைச் சார்ந்ததா, எபிரேயரைச் சார்ந்ததா என்று கூறுவதற்கில்லை. வேறு சிலர் இரு நூல்களுக்குமிடையேயுள்ள ஒப்புமை தற்செயலானதே; எபிரேய நூல் எகிப்திய நூலைச் சார்ந்து எழுதப்பட்டதன்று; அயல் பாதிப்பு எப்படியிருந்தாலும், விவிலியக் கூற்றுகள் பிறவற்றைவிட மேம்பாடு உடையன என்பர். எகிப்திய நூலுக்கும் கி.மு. 1600 - 1000-க்கு இடைப்பட்ட காலத்தை அறிஞர் குறிப்பர்.

**III, VII** - ஆவது பகுதிகள் (10:1-22:16 25:1-29:17), சாலமோனுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. இவை உண்மையிலேயே சாலமோன் காலத்தைச் சேர்ந்தவையாயிருந்தால், இவை கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். 10:1-22:16 என்ற பகுதியைச் சாலமோன் எழுதியதாக நூல் கூறுகிறது. சாலமோன் அரசன் இஸ்ராயேலின் ஞானிகளில் தலைமையானவர்; ஒரு முன் மாதிரியானவரும் கூட (1 அர 5:12). இப்பகுதியில் எந்தக் குறிப்பிட்ட வாக்கையும் சாலமோன்தான் எழுதினார் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், சில வாக்குகளாவது அவரது காலத்தைச் சேர்ந்தவை என்று கூறலாம். ஏனெனில், எரேபிய ஞான இலக்கியம் சாலமோனின் அரசவையில் தோன்றியது என்று பொதுவாகக் கூறலாம். மனிதர் கூடி வாழும் இடங்களில் எல்லாம் அன்றாட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுப்பாணி இலக்கியம் தோன்றுவது தவிர்க்க முடியாதது. இந்த இலக்கியம் மனிதப் பிரச்சனைகளை எடுத்துரைப்பதோடு, பின் வரும் ஆட்சியாளர்களுக்குப் பயன்படும் முறையில் அமைந்திருக்கும். பொதுவாழ்வு பற்றிய போதனை அளிக்கும் இலக்கிய வடிவில் எகிப்தியர் போதிய அளவில் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருந்தனர். எகிப்திய அரசவையைப் பின்பற்றித் திட்டமிட்டுச் சாலமோன் தனது அரசவையை அமைத்தபோது எகிப்திய ஞானிகளைப் பயன்படுத்தியிருக்கலாம் (1 அர 4:3). ஞானிகளுள் சிறந்தவர் என்ற தனது சொந்தப் பெருமையால், சாலமோன் தனது அண்டை நாட்டினரையும் மிஞ்சினார் (3:9-12; 5:9-14; 10:1-9). சாலமோன் இஸ்ராயேலின் ஞான இலக்கியப் பாரம்பரியத்தைத் தோற்றுவித்தவரும் அதன் புரவலரும் ஆவார்.

பழ 25:1-29:27 என்ற பகுதி "யூதாவின் அரசனாகிய எசேக்கியாவின் அவையினர் தொகுத்து எழுதியவை" என்று நூல் கூறுகிறது (25:1). அப்படியானால் கி.மு. 700-ஐ ஒட்டி இப்பகுதி தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இக்குறிப்பு, இப்பகுதியில் சில கூற்றுகளாவது நாடு கடத்தலுக்கு முந்தியவை என்று காட்டுகிறது. தனக்குக்கிடைத்த கூற்றுகளில் சில, நீண்ட பாரம்பரியம் உடையவை என்று பதிப்பாசிரியர் நம்பியதாகத் தெரிகிறது.

மேற்கூறப்பட்ட இரு பகுதிகளிலும் எளிய, முதிராத நிலையுடைய இரட்டிப்பு வாசகங்கள் காணப்படுகின்றன (10:1 = 15:20; 10:2 = 11:4; 10:6 = 10:11; 10:8 = 11:10; 10:13 = 19:29; 16:2 = 21:2; 19:5 = 19:9). இவை தொகுத்ததில் நெருக்க மின்மையைக் காட்டலாம். ஆனால், இக்கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுவதால், இறுதிப் பதிப்பாசிரியர் பல மூலங்களிலிருந்து இந்நூலைத் தொகுத்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. அரசனைப் பற்றிப் பேசும்முறையும் (14:28-35; 16:10-15; 20:2.8.28; 25:1-6; 29:4;......), அரசவை வாழ்வு பற்றிய குறிப்புக்களும் (10:8; 11:2; 15:1; 16:14.15.18; 19:12; 22:11; 25:6-7; 29:23) இஸ்ராயேலின் ஆட்சி மிகவும் புகழ்பெற்றிருந்த காலத்தில், ஒரு வேளை சாலமோன் காலத்தில், இப்பகுதிகள் தோன்றியிருக்கலாம் என்று சுட்டுகின்றன. ஆயினும், இப்பகுதிகளில் காணப்படும் அரமேயிக்கு இலக்கியப் பண்புகள், மீண்டும் மீண்டும் கூறுதல், வாசக வேறுபாடுகள், வாசகச் சீர்திருத்தங்கள் ஆகியன இப்பகுதிகளில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளும் திருத்தங்களும் உண்டு என்றும், புலமைமிக்க எழுத்தாளர்கள் மீண்டும் மீண்டும் திருத்திப் பதிப்பித்திருக்க வேண்டும் என்றும் சுட்டுகின்றன. பல வாக்குகள் இறைவாக்கினர் நூல்களோடும், உபாகம நூல்களோடும் தொடர்பு கொண்டுள்ளன. நாடுகடத்தப்பட்டு மீண்டகாலம், ஞான இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு புது மலர்ச்சிக் காலமாகும். இக்கலாத்திய யூத சமயத் தேவைகள் இதற்குக் காரணங்களாய் அமைந்தன. இக்காலத்தில் சாலமோன் பாரம்பரியத்தில் வந்தவையெல்லாம் தொகுக்கப்பட்டு நூல்வடிவம் எடுத்தன. இவ்வாறு சாலமோன் பகுதிகள் காலப்போக்கில் வளர்ந்தன. குறிப்பாக, பழ 25:29 என்ற பகுதி நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின் வந்த காலத்தில், நூல்வடிவம் எடுத்தது எனலாம்.

VIII, IX பகுதிகளில் வரும் (30:1-31:9) - ஆகவர், இலெமுவேல் என்பவர்களைப்பற்றி அதிகம் தெரியவில்லை. இவர்கள் மாசாவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த இடம், வட அராபியாவில் உள்ளதாகும். இக்குறிப்பு இலக்கிய வகை மரபாக இருக்கலாம் (எசா 13:1). இவர்கள் எப்போது வாழ்ந்தனர் என்றும், இவர்கள் கூற்று எவ்வளவு பழமையானவை என்றும் கூறமுடியாது. இவர்களது கூற்றுகள் நூலில் கொண்டிருக்கும் இடமும், இவற்றில் காணப்படும் அரமேயிக்குப் பண்பும், இவை நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்பதையும், அராபிய ஞானிகளின் பாதிப்பையும் சுட்டுகின்றன.

முந்தைய கூற்றுகள் எப்போது தொகுக்கப்பட்டன, பிரதி எடுக்கப்பட்டன, மாற்றியமைக்கப்பட்டன, விரிவாக்கப்பட்டன - என்பவைபற்றி IV, VI ஆகிய பகுதிகளின் தலைப்புகள் ஒரு குறிகாட்டுவதாகத் தெரிகிறது. சிலவற்றை நேரடியாகவோ எசேக்கியா வழியாகவோ சாலமோனுடையவை என்று பதிப்பாசிரியர் அடையாளம் கண்டதாகத் தெரிகிறது. மற்றவை அயல் பாதிப்புடையவை என அடையாளம் கண்டிருக்கலாம். இவற்றை ஆகவர், இலெமுவேல் ஆகியோருடன் தொடர்புபடுத்தியதாகத் தெரிகிறது. இறுதிப்பதிப்பாசிரியர் IV, VI - ஆவது பகுதிகளை ஞானிகளது கூற்றுகளாகக் குறிப்பிடுகிறார். அப்படிச் செய்யும்போது, தன்னைப்போன்ற ஞானிகளையும் ஆசிரியர்களையும், வயது முதிர்ந்த தன் காலத்தவரையும் குறித்திருக்கலாம். இவர்கள் அக்காலத்தில் தொகுத்தும், பிரதிஎடுத்தும், மாற்றியமைத்தும், விரிவாக்கியும், ஏன்? தாங்களே சில கூற்றுகளைப் படைத்தும், ஞான இலக்கிய வளர்ச்சியில் பங்கு பெற்றிருக்கலாம்.

இறுதிப் பதிப்பாசிரியர் I, II (1:1-9:18)-ஐ முன்னுரையாகவும், × (31:10-31)-ஐ முடிவுரையாகவும் தொகுத்திருக்க வேண்டும். இவர், நூலின் மற்றப் பகுதிகளை அறிந்திருப்பதாகவும் அவற்றை இளைஞர்களின் கவனத்திற்குப் பரிந்துரைப்பதாகவும் தெரிகிறது.

இந்நூல் இறுதி வடிவெடுத்தகாலம் -ஞானிகள் இஸ்ராயேலில் போதித்த காலமாகும். ஞானமிக்க ஆண்களும் பெண்களும், நடுவர்கள் காலமுதல் இஸ்ராயேலில் இருந்துவந்தாலும், நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்புதான் இளைஞர் பயிற்சிக்குரிய நிலையங்களில் ஞான ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்நூல் பலதடவை பதிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் "ஞானிகள் போதித்தவை" (22:17-24:22; 24:23-34) சாலமோனின் முதல் தொகுப்போடு (III) சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். சாலமோனின் இரண்டாவது தொகுப்பு (VII) முதல் தொகுப்போடு (III) சேர்க்கப்படுவதற்கு முன்னே. 30:1-31:9 என்ற பகுதி சாலமோனின் இரண்டாவது தொகுப்போடு சேர்க்கப்பட்டதா என்று உறுதியாகக் கூறமுடியாது. இறுதிப் பதிப்பாசிரியர் I, II-ஐ முன்னுரையாகவும் X-ஐ முடிவுரையாகவும் சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண்டும்.

இந்நூல் கி.மு.200-ஐ ஒட்டித் தோன்றிய சீராக்கு நூலுக்கு முன்பே முழுமை பெற்றிருக்க வேண்டும். சீராக்கு நூல் ஆசிரியர் பழ 1:6-ஐ, சீரா 47:17-இல் சுட்டிக்காட்டுகிறார். மேலும், இவர் பழமொழி நூலில் காணப்படும் சில கருத்துக்களையும் சிந்தனைப் போக்குகளையும் விரிவாக்குகிறார். பழமொழி நூல் ஏற்கெனவே கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கலாம் (சீராக்கு நூல் முன்னுரை).

விவிலியச் சிந்தனை வளர்ச்சியில், குறிப்பாகத் தனி மனிதனுக்கும் வினைப்பயன் கோட்பாட்டுக்கும் காட்டும் கவனத்தில் ஞானத்தின் இடமும், ஞான இலக்கியங்களில் பழமொழி நூல் கொண்டிருக்கும் இடமும் இந்நூல் கி.மு.5-ஆம் நூற்றாண்டின் முடிவேலோ, 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ ஒரு நூலாக இறுதிவடிவம் எடுத்திருக்க வேண்டும் என்று கருத இடந்தருகிறது.

**5. நூல் தோன்றிய சூழ்நிலை:** எந்தச் சூழ்நிலையில் இந்நூல் தோன்றியது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து ஒருமைப்பாடு இல்லை. நான்கு கருதுகோள்கள் ஆய்வுக்குத் தகுதி பெறுகின்றன. இந்நூல் 1) அரசவைக் சூழ்நிலையில், 2) பள்ளிச்சூழ்நிலையில், 3) இனச் சூழ்நிலையில், 4) அறிவுப்புலமை பெற்ற குழுவில் தோன்றியது என்று கூறுவர். இவை ஒவ்வொன்றுக்கும் ஆதரவாகவும் மாறாகவும் நூலிலிருந்து சான்றுகள் காட்டலாம். எந்த ஒரு கருதுகோளுக்கும் ஆதரவாக, மறுக்கப்படக் கூடாத, போதிய சான்றுகள் இந்நூலின் இல்லை.

**6. விவிலியப்பட்டியலில் பழமொழிநூல்:** எபிரேய விவிலியம் சட்டம், இறைவாக்கினர்கள், நூல்கள் எனப் பிரிக்கப்பட்டது. இதில் மூன்றாவது பிரிவான நூல்களில் ஒன்றாகப் பழமொழி நூல் வருகிறது. மிஸ்னா பாரம்பரியப்படி பழமொழி, திருவுரையாளர்-ஆகிய நூல்கள் திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்படுவது கி.மு. முதல் நூற்றாண்டுவரை இன்னும் பிரச்சினைக்குரியதாக இருந்து வந்துள்ளது. தால்மூது நூல், பழமொழி நூலில் எதிர் முரணான கூற்றுக்கள் காணப்படுவதாகக் கூறுகிறது. ராபி நாத்தானின் நூல் வேதநூலிலிருந்து வராத வெறும் கூற்றுகளைக் கொண்ட நூலாகப் பழமொழி நூலைத் திருவுரையாளர், உன்னத சங்கீதம் ஆகியவற்றோடு தொகுக்கிறது. ஒரு வேளை, இவை பழங்காலத்தைச் சேர்ந்தவை இல்லை என்பதால் ஐயுறப்பட்டிருக்கலாம். ஆனால், இவை சாலமோனுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. காலப்போக்கில் இவை யூதத்திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ராபிகளின் ஒரு பாரம்பரியப்படி, யோபு, சங்கீதங்கள், பழமொழி என்று வரிசைப்படுத்துகிறது. இஃது ஒருவேளை காலவரை ஒழுங்கமைப்பாக இருக்கலாம். இப்பாரம்பரியம் யோபுநூலை மோசேயும், சங்கீதங்களைத் தாவீதும், பழமொழிநூலைச் சாலமோனும்

எழுதியதாகக் கூறுகிறது; எழுபது நூல், சங்கீதங்கள், பழமொழி, திருவுரையாளர், உன்னத சங்கீதம், யோபு என்ற வரிசையில் இந்நூல்களைத் தொகுக்கிறது. இது, சாலமோன் எழுதியதாகக் கருதப்பட்ட பழமொழி, திருவுரையாளர் உன்னத சங்கீதம் ஆகிய நூல்களை ஒருங்கே சேர்க்கிறது. தமிழில் கத்தோலிக்க மொழிபெயர்ப்பு, யோபு, சங்கீதங்கள், பழமொழி, திருவுரையாளர், உன்னதசங்கீதம் என்ற முறையில் வரிசைப்படுத்துகிறது.

பல காரணங்களில் ஒன்றாக, விலைமகளின் சாகசங்கள் உயிர்ச்சித்திரமாக விவரிக்கப்பட்டிருப்பதால், இந்நூலைப் பொதுக்கூட்டங்களில் பயன்படுத்துவதை, யாம்னி யாவில் நடந்த யூதப்பொதுச் சங்கத்தில், (கி.பி. 90) சில ராபிகள் தடைசெய்ய விரும்பினார். இதை எதிர்த்து, இச்சங்கம் மேற்கூறப்பட்ட விவரிப்பை உருவகமாக விளக்கவேண்டும் என்று தீர்மானித்து, இந்நூல் பற்றிய வாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இந்நூல் விவிலியப் பட்டியலைச் சேர்ந்தது, இறை ஏவுதல் பெற்றது என்பன பற்றிக் கத்தோலிக்கத் திருச்சபை ஒரு போதும் ஐயுற்றதில்லை. இந்நூலிலிருந்து புதிய ஏற்பாடு பல தடவை மேற்கோள்காட்டுகிறது. இந்நூலுக்குத் திருச்சபையின் தந்தையர் எவரும் விளக்கவுரை அளித்ததாகத் தெரியவில்லை.

7. எபிரேய கிரேக்க வாசகங்கள்:

இந்நூல் முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. வாசகம் தெளிவாக உள்ளது. எப்போதாவது தெளிவின்மை அல்லது தவறான குறிப்புக் காணப்பட்டால், அது சொல் மாறிவிட்டது என்பதைக் காட்டுகிறது. இதிலிருந்து கிரேக்க வாசகம் பெரிதும் வேறுபடுகிறது. சில பகுதிகள் விடப்பட்டுள்ளன; சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன; மற்றும் சில பகுதிகள் வேறுபடுத்தப்பட்டுள்ளன. நூலின் பாகங்களின் வரிசை வேறுபடுகின்றது. எபிரேய வாசகம் 30:1-10, எழுபது நூலில் எபிரேய வாசகம் 24:22-க்குப் பின்னும், எபிரேய வாசகம் 30:11-31:9, எழுபது நூலில் எபிரேய வாசகம் 24:34-க்குப் பின்னும் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரின் தவறுகளையும் புரிந்துகொள்ள இயலாமையையும் மட்டும் எடுத்துக் காட்டவில்லை. மொழிபெயர்க்கப்பட்டபோது இந்நூலின் வாசகம் வளர்ச்சியுற்றுக் கொண்டிருந்தது என்றும், இறுதியாக நிர்ணயிக்கப்படவில்லை என்றும் காட்டுகின்றன. படைப்பு வேலையோ பதிப்பு வேலையோ இன்னும் இறுதியாக முடிவெடுக்க வில்லை; பல பகுதிகள் இடமாற்றம் பெறலாம், புதிய மொழிகள் படைக்கப்பட்டு எபிரேய வாசகத்திலோ மொழிபெயர்ப்பிலோ சேர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் காட்டுகின்றன.

8. அயல் இலக்கியப் பாதிப்புகள்:

பழமொழி நூலின் சில பகுதிகளில் காணப்படும் அயல் இன இலக்கியப்பாதிப்பு இந்நூல் பலவகைத் தொகுப்பு என்பதற்கு ஆதரவு அளிக்கிறது. IV-ஆவது பகுதி (22:17-23:14), எகிப்திய அமென்-எம்-ஒப்பேயின் "முப்பது மொழிகளுக்கு" ஒத்தது என்பது பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. எபிரேய ஆசிரியர் எகிப்திய மூலத்தை அப்படியே பயன்படுத்தாமல், தனது சமயமரபுக்கேற்ப சுதந்தரமாகப் பயன்படுத்தியுள்ளார். கானானியச் சுவடுகள் இங்குமங்குமாகக் காணப்படுகின்றன. சீரியா, அரமேயிக்குப் பண்புகள் எந்த அளவுக்கு இந்நூலைப் பாதித்தன என்று உறுதியாகக் கூற முடியாது.

**9. நூலின் நோக்கம்:** பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பி வந்து மீண்டும் அமைக்கப்பட்ட யூத சமூகம் ஒரு புதிய நாடன்று. மெசியாவைப் பற்றிய கடந்தகால விசுவாசம் மக்களைக் கவரவில்லை. மக்கள் அதில் அக்கறை கொள்ளவில்லை. தனிநபர் மற்றும்,

ஒழுக்கமின்மையும் மக்களிடையே மூர்க்கமாகப் பரவியிருந்தது. சுயநலம் தேடுதல், செல்வர்கள் ஏழை எளியவர்களைச் சுரண்டுவதற்கு இட்டுச்சென்றது. இந்த அவலநிலையில் இறைவாக்கினர்களின் குரல் மறைந்து கொண்டே வந்தது. புறச்சடங்கிற்கு முக்கியம் கொடுத்த வழிபாடு வெறுமை மிக்கதாயிற்று. இந்த வருந்தத்தக்க நிலையில் ஞானிகள் மக்களுக்குப் போதிக்க, வழிகாட்டத் தலைப்பட்டனர். இவர்கள் மக்களுக்கு மகிழ்ச்சியும் செழிப்பும் அளிக்கும் உடனடி வழிவகைகளை எடுத்துக்கூறினர். இவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனைக்குள்ளும் தங்களை வரைப்படுத்திக் கொள்ளவில்லை. இவர்கள் பட்டறிவின் அடிப்படையில் வாழ்வை முழுமையாக நோக்கினர். இவர்கள் மக்களுக்குக் காட்டிய வழி ஞானத்தைத் தேடுவதாகும். மனிதன் தான் வாழும் உலகின் நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு தனது நடத்தையை வெற்றிகரமாக, தனது சொந்த ஆற்றலாலேயே, சரி செய்துகொள்ளக் கூடும் என்று கருதப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், இந்தச் சுதந்தரத்தின் வரையறைகளை ஏற்றுக்கொண்டது ஞானப்பாரம்பரியம் (பழ 16:7.9.33).

பாரம்பரிய யாவே கோட்பாடு- இஸ்ராயேல், ஓர் இனமாக, தன்னையே யாவேயின் திருவுளத்திற்கு அடிபணிய வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதிலிருந்து பழமொழி நூலில் காணப்படும் மனிதன், தன் பிரச்சினைகளைத் தனது சொந்த ஆற்றலாலேயே தீர்த்துக் கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை, ஞானபாரம்பரிய வாழ்க்கையின் பால் கொண்டிருந்த வேறுபட்ட மனப்போக்கைக் காட்டுகிறது. இந்த இரண்டு பாரம்பரியங்களையும், யாவே தான் உண்மை ஞானத்தின் ஊற்று என்ற கோட்பாட்டால், ஒப்புரவு படுத்துவது இஸ்ராயேலின் ஞான வளர்ச்சியின் இரண்டாவது கட்டமாகும். இந்த இரு பாரம்பரியங்களுக்கும் முரண்பாடு இருக்கமுடியாது. மனித அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட உண்மைகளுக்கும், குருக்கள், இறைவாக்கினர்கள் வழியாக வெளிப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கும் இடையில், முரண்பாடு இருக்கமுடியாது என்ற உணர்வு வளர்ந்தது. இறையச்சம் என்பது ஒழுக்க, சமயக்கூறுகளையெலாம் தன்னுள் அடக்கும் பரந்த கருத்தாகும். இக்கருத்து இரண்டு பாரம்பரியங்களையும் ஒப்புரவாக்குவதில் முக்கிய இடம் வகித்தது. இக்கருத்தை, பழ 13:14; 14:27; 9:10 ஆகிய பகுதியில் காணலாம்.

இவ்வாறு இரு பாரம்பரியங்களையும் ஒருங்கு கொணர்வது, ஞானத்தின் செயல்முறைப் போக்கையும், ஓரளவு ஒழுக்கச் சார்பற்ற பண்பையும் மாற்றியமைத்தது. இதை, ஞானபோதகத்திற்கே உரிய சில சொற்கள் புதிய பொருள் பெறுவதில் காணலாம். இவ்வாறு முன்பு சிறப்புத் தகுதிகளாகக் கருதப்பட்ட தன்னம்பிக்கை, தன்னலம் தேடுதல் ஆகியவை யாவேயின் கண்டனத்தைப் பெறுகின்றன. விரும்பத்தக்க பண்பாகக் கருதப்பட்ட விவேகத்தைக் (5:2) குறிக்கும் எபிரேயச்சொல், 12:2-இல் "தீய சூழ்ச்சி செய்தல்" என்ற பொருளைப் பெறுகிறது. இத்தகைய தன்னம்பிக்கை, தன்னலம் மற்றும் விவேகம் உடையவர்களை யாவே கண்டனம் செய்கிறார். இத்தகைய சான்றுகள், ஞான போதகம் படிப்படியாக, புதிய இறையியல் திருப்பம் பெறுகிறது என்பதைக் காட்டுகின்றன. இந்த மாற்றத்தைப் பழமொழி 10:29 ஐயமறப் பாதித்தது எனலாம்.

இந்தப் புதிய இறையியல் போக்கு, படைப்பு பற்றிய முழு இறையியலுக்கு அடிப்படை வகுத்தது. மனித ஆற்றல்களுக்கும் முயற்சிகளுக்கும் உரிய இடத்தை அளித்தது. ஒருபுறம் மனித அறிவும் வினைத்திட்பமும் இறைவன் அளித்தவையாகையால், நேர்மையானவையாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. மறுபுறம் இறைவனுக்குச் சேவை செய்து பணிந்திருத்தல், மனிதனது எல்லாச் செயல்களுக்கும் பணிச் சட்டமாக அமைகிறது. இந்த உள்நோக்கு ஞானபாரம்பரியத்தில்

மனிதனை மையமாகக் கொண்ட போக்கை மாற்றி அமைக்கிறது. யூதத்துவம் இறையியல் உலகில் தனக்குரிய இடத்தைப் பெறுகிறது.

இந்நூலின் முன்னுரை (1:2-6), அதன் குறிக்கோளைத் தெளிவாய் எடுத்துக்கூறுகிறது. ஞானத்தின் போதனையை ஏற்றுக்கொள்ளும்படி மக்களைத் தூண்டுகிறது. ஆனால், நூல் ஞானத்தைத் தொடர்ச்சியாக, கருத்தியலாக ஆராயவில்லை. அதன் குறிக்கோள் நடைமுறை சார்ந்ததாகும்; பட்டறிவை அடிப்படையாகக் கொண்டதாகும்; பரந்த நோக்குடையதாகும். அதன் போதகமும் விரிவான எடுத்துக்காட்டுதல்களும் விவேகமிக்க ஆலோசனைகளும், அவற்றை ஏற்று நடக்கும் எந்த மனிதனையும் விவேக மிக்கவனாகவும், மகிழ்ச்சி மிக்கவனாகவும், நன்னெறி வாழ்க்கையுடையவனாகவும், வாழ்வில் வெற்றி பெறுபவனாகவும் ஆக்கும் நடைமுறை-ஞானமாகும். இந்நூலில், இஸ்ராயேல் சமயப்பாரம்பரியத்திற்கே உரிய வாக்குறுதி, தேர்வு, உடன்படிக்கைச் சட்டம், மெசியாவில் விசுவாசம் போன்ற கருத்துக்கள் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆனால், இவற்றில் தோய்ந்த விசுவாசமுடைய ஆசிரியர்கள் நடைமுறை ஞானத்தை எடுத்துக்கூறுகின்றனர். நூல் முழுவதும் வெளிப்பாட்டின் மறைமுகப் பாதிப்பைக் காட்டுகிறது.

குருக்கள், இறைவாக்கினர்கள் ஆகியோரின் குறிப்பாக, உபாகம ஆசிரியர் எசாயா, எரேமியா ஆகியோரின் போதகங்கள், இந்நூலுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. இவற்றின் அடிப்படையில், இந்நூலின் ஆசிரியர், ஒவ்வொரு யூதனும், உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஞானியாவதற்குரிய, பட்டறிவு அடிப்படை கொண்ட நடைமுறை ஞான வழிகளை எடுத்துக்காட்டுகிறார். ஞானத்தால் வழிநடத்தப்பட, தங்களையே அர்ப்பணிக்குமாறு வாசகர்களை அழைக்கிறார் (1:2-7). போதகம், படிப்பு, பயிற்சி, சிந்தனை, தியானம், ஆலோசனை ஆகியவற்றின் உதவியோடு ஞானத்தைத் தேடத் தூண்டுகிறார். இதனால்தான் "இளைஞரைப் பயிற்றுவிக்கும் ஞானம்" என்று புனித கிரகோரி நாசியான்சனும், "எல்லா நன்னெறியையும் போதிக்கும் ஞானம்" என்று உரோமையைச் சேர்ந்த புனித கிளமெந்தும் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர்.

10. **இலக்கியச் சிறப்புக்கள்:** பழமொழி என்ற சொல்லைக் குறிக்கும் எபிரேயச் சொல் "மாசால்" ஆகும். இதுபற்றி ஞான இலக்கியம் என்ற அதிகாரத்தில் காண்க. இஃது இரண்டு செயல்களுக்கிடையிலோ, பொருட்களுக் கிடையிலோ உள்ள ஒப்புமையை எடுத்துக்கூறுவதாகும். சான்றாக, "சாந்தப்படுத்தும் சொல், வாழ்வெனும் கனிதரும் மரம் போன்றது" (15:4). அறநெறி முறையில் ஒரு காரியத்தைப் பற்றியோ, செயலைப்பற்றியோ, அதன் உள்ளார்ந்த பொருளை வெளிக்கொணர இந்த ஒப்புமை உதவுகிறது. விவிலிய நோக்கில், அனுபவத்தையோ, கவனிப்பையோ அடிப்படையாகக் கொண்டு, ஒப்புமை வழியாக ஓர் அறநெறி அல்லது சமய போதகத்தை எடுத்துக்கூறுவது பழமொழியாகும். அஃது உள்ளார்ந்த ஒற்றுமை வேற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. வழக்கமாக, நிலையையும் (உணர்ந்த ஒரு நிகழ்ச்சி) எதிர் நிலையையும் (அதன் விளைவு), எடுத்துக்கூறுகிறது. இவற்றைச் சிந்தித்து வாசகர் தனது வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உடன்நிலையை (போதகம்) அடைய வேண்டும். சான்றாக, "சோம்பேறி- பருவத்தில் உழுது பயிர் செய்யமாட்டான்; அறுவடைக் காலத்தில் விளைவை எதிர்பார்த்து ஏமாறுவான்" (20:4). பழமொழி ஒரு விவசாயச் சூழ்நிலையை எடுத்துக்கூறுகிறது. உழாதவன் அறுவடை பெறான் என்ற உண்மை கவனிக்கப்படுகிறது. அதிலிருந்து எல்லா வாழ்க்கைக்கும் பொருந்தும் ஓர் அடிப்படைக் கருத்து உணரப்படுகிறது. இவற்றைச் சிந்தித்து, வாசகர் தனது சொந்த வாழ்க்கைக்குப் பொருந்தும் உடன் நிலையை உய்த்துணரவேண்டும். இந்த உடன்நிலை எல்லாருக்கும் ஒரே விதமாய் இராது. அவரவரது

சொந்த வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஓரளவு வேறுபடும்.

பழமொழிகள் பெரும்பாலும் குறுகிய வசனக்கூற்றுகளாக அமைந்திருக்கும். பழமொழிநூலின் பெரும்பகுதி இவ்வகைக் கூற்றுகளையே கொண்டுள்ளது. இவற்றைத் தவிர நீண்ட இணைக்கப்பட்ட கூற்றுகளும் உண்டு (1:10-19). இக்கூற்றுகளுக்கு, எகிப்திய மெசபொத்தாமிய இலக்கியங்களில் நீண்ட முன்வரலாறு உண்டு. இவை எபிரேய ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட முன்மாதிரியாக விளங்கின. நீண்ட கூற்றுகள் இலக்கிய முதிர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றன. குறுகிய கூற்றுகள் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நீண்ட கூற்றுகளைப் போல், இவற்றிலும் இலக்கிய முதிர்ச்சியைக் காணலாம். பழமொழி நூல் வெறும் பொதுப்பாணிக் கூற்றுகளின் தொகுப்பன்று. பழமொழிகள் பொதுப்பாணிச் சூழ்நிலையில் தோன்றியிருந்தாலும், நூலில் இடம் பெறும்போது கலைநயமிக்க இலக்கியப் படைப்புகளாகவே இடம் பெறுகின்றன.

குறுகிய கூற்றுகளை- அறிவிப்புகள், எச்சரிக்கைகள் என இருபிரிவாகப் பிரிக்கலாம். அறிவிப்புகள் வாழ்க்கை அனுபவத்தை எடுத்துக்கூறுகின்றன. ஆனால், எந்தத் தீர்மானத்தையோ படிப்பினையையோ எடுத்துக் கூறுவதில்லை. சான்றாக, "ஒருவனது இன்பமோ, துன்பமோ அவனுடையதே; வேறெனும் அதைத்துய்க்க இயலாது" (14:10). "நம்பிக்கையிலும் துயரமுண்டு; மகிழ்ச்சியை அடுத்து வருத்தம் உண்டு" (14:13). இக்கூற்றின் பயன் இன்ப துன்பம் பற்றிய ஒருவரது அனுபவத்தைப் பொருத்தது.

"கோடைக் காலத்தில் விளைச்சலைக் சேர்த்து வைப்பவன் மதியுள்ளவன்; அறுவடைக் காலத்தில் தூங்குபவன் இகழ்ச்சிக்குரியவன்" (10:5). இஃது ஒரு பொதுச்சூழ்நிலையை எடுத்துக் கூறுகிறது. இப்படிப்பட்ட அறிவிப்புக் கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்களுக்கு இடம் அளிக்க வல்லன. இவற்றிலிருந்து செயல்முறையான அறிவுரைகளை வடித்தெடுக்க முடியும் என்றாலும், சிந்தனையைத் தூண்டுவதே அவற்றின் நோக்கமாகும்.

அறிவுப்புக் கூற்றுகளுக்கு மாறாக, எச்சரிக்கைக் கூற்றுகள் தெளிவான, செயல் முறையான அறிவுரையை எடுத்துக் கூறுகின்றன; கட்டளைத் தொனியைக் கொண்டிருக்கும். சான்றாக, "மூடனை விட்டு விலகிச்செல், அறிவுடைய பேச்சு அவனிடம் ஏது?" (14:7). இத்தகைய கூற்றுகள் கல்விபயிற்றுவிக்கும் சூழ்நிலையில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. எகிப்தில் நிலவிய "போதகம்" என்றழைக்கப்பட்ட ஞானநூல்களின் பாதிப்பால், இவற்றில் காணப்படும் கட்டளைத்தொனி இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்போதகங்கள், கல்வி பயிற்றுவிக்கும் இலக்கியங்களைச் சேர்ந்தவையாகும். அண்மையில், இத்தகைய கூற்றுகள் இஸ்ராயேலுக்கே சொந்தமான "இன ஞானத்திலிருந்து" தோன்றின என்று கூறுவாரும் உளர்.

குறுகிய கூற்றுகளின் தோற்றம் எதுவாயினும், நீண்ட கூற்றுகள் (அதி. 1-9) எகிப்தியப் பாதிப்பைத் தெளிவாக எடுத்துச் காட்டுகின்றன. எகிப்திய போதகத்தோடு, இவை- நடை, சொற்றொகுதி, சிந்தனையிலும் கூட ஒத்திருக்கின்றன.

III. (10:1-22:16), VII. (25:1-29:17) ஆகிய பகுதிகளில் வரும் பழமொழிகள் சமன் செய்யப்பட்ட ஒருவசனக் கூற்றுகளாகும்; ஒன்றோடொன்று தொடர்பில்லாதவை. தனித்தனியான ஒரு வசனப் பழமொழியே இப்பகுதிகளில் காணப்படும் மரபு. வாய்மை பற்றிய 12:17-23 என்ற பகுதியும், அரசனைப்பற்றிய 16:10-15 என்ற பகுதியும், சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய தொகுப்புகள்

வெகு அரிதாவே இப்பகுதிகளில் காணப்படும்.

இத்தகைய ஒருவசனப் பழமொழிகளில் இரு பகுதியுண்டு. இரண்டும் சமன் செய்யப்பட்ட இணையமைப்புத் தன்மை கொண்டவை. பழ 10:15; 28:29 ஆகிய பகுதிகளில் எதிர்நிலை இணையமைப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. பழ 16-இலிருந்து நேர்நிலை இணையமைப்புக் கூற்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பழ 25:26-இல் பாதிக்குமேல் விரிவான உவமைகள் காணப்படுகின்றன. இதில் தொகுப்பு இணையமைப்பு அதிகம் பயன்படுகிறது.

IV (22:17-23:14), V (23;15-24:22),VI (24:23-34) ஆசிய பகுதிகளில் பெரும்பாலான பழமொழிகள் இருவசனக் கூற்றுகளாகும். சில ஒரு வசனக் கூற்றுகளும் உண்டு. சில நீண்ட எச்சரிக்கைக் கூற்றுகளும் உண்டு. சான்று சோம்பேறியின் கதி (24:30-34), குடிகாரனின் துன்பம் (23:29-35).

I (1:1-7), II (1:8-9:18) ஆகிய பகுதிகளில் சமன் செய்யப்பட்ட வசனங்களைக் கொண்ட நீண்ட உரைகள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றில், ஞானத்தின் வேண்டுகோள்கள் (1:20.33;8) சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டியவையாகும். தீய பெண்கள் பற்றிய எச்சரிக்கை (அதி. 5), X-இல் வரும் "நல்ல மனையாள்" பற்றிய பாடலுக்கு (31:10-31) இணையானது.

விடுகதையோடு தொடர்புடைய எண்களை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள் VIII (30:1-33)-இல் அடிக்கடியும், 6:16-19-இலும் வருகின்றன.

இவை தவிர இந்நூலில் பல வகையான இலக்கிய வடிவங்களுண்டு. இவை இந்நூல் வெவ்வேறு சூழ்நிலையில் தோன்றியது என்றும், இது பல்வகைத்தொகுப்பு நூலாகும் என்றும் காட்டுகின்றன.

பழமொழிகள் எப்படித் தோன்றினவோ, அதே முறையில் அவற்றை அணுக வேண்டும். முதலில் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கவனிப்பு, அடுத்து அஃதோடு நேர்நிலை அல்லது எதிர் நிலை, ஒப்புமை உள்ள மற்றொன்றை உய்த்துணர்தல், மூன்றாவது இரண்டையும் இணையமைப்பு முறையில் தொடர்புபடுத்துதல், இறுதியாக ஓர் உண்மை பற்றிய அறிவிப்பு. - இவ்வாறு பலருடைய கவனிப்பும் ஒருவருடைய அல்லது சிலருடைய புத்திக் கூர்மையும் சேர்ந்து இலக்கியக் கலைப்பண்புடைய ஒரு பழமொழியைப் படைக்கின்றன. வாசகர் பழமொழியின் நிலையையும் எதிர்நிலையையும் ஒருங்கு கொணர்ந்து ஒருங்கு நிலையைக் கண்டுணர வேண்டும். பின்பு அது யாவருக்கும் பொருந்தும் உண்மைத் தன்மையை உய்த்துணர வேண்டும்.

வாசகரின் சொந்த அனுபவம் இருவகையில் பழமொழியின் பொருளை விரிவாக்கலாம். ஒன்று பழமொழியின் பொருளை உணர்ந்து அவரது அனுபவத்தை ஆழப்படுத்துதலாகும் (14:13). மற்றது பொது மனிதச் சூழ்நிலை பற்றிய உண்மையாகப் பழமொழியைக் கண்டறிவது (10:5).

பழமொழியின் அமைப்பிலிருந்து, அது நேரடியாகப் போதிப்பதற்கன்று, வாழ்வு பற்றி ஆற்றலுள்ள விதத்தில் சிந்திக்கப் பயன்படும் சாதனமாகும் என்பது தெளிவாகும். சிந்தனையைத் தூண்டுவதே பழமொழியின் முதன்மையான நோக்கம் என்பது முரணான கூற்றுகள் அருகருகே அமைந்திருப்பதிலிருந்து தெரிய வரும். சான்றாக, "மடையனின் கேள்விக்கு முட்டாள்தனமாகப் பதிலுரைக்காதே, உரைத்தால் நீயும் அவனைப்போல் மடையனே! மடையனின் கேள்விக்கு அவனது மடமையை உணர்த்தும் வகையில் பதிலுரை! இல்லாவிடில் அவன் தன்னை ஞானி என்று எண்ணிக்கொள்வான்" (26:45).

மாணவன் அல்லது வாசகர், எது தனக்கும் பொருந்தும் என்று தன்னையே கேட்க வேண்டும். அவர் ஆசிரியரது ஞானத்தைப் பெறும் வெறும் கலமாக இருக்கக்கூடாது. அனுபவத்திலிருந்து

கற்றுக்கொள்ளும் ஆற்றலுள்ள உடன் உழைப்பாளியாகச் செயல்பட வேண்டும். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே யாருடைய அறிவு வேகமாக வேலைசெய்கிறது என்ற ஒருபோட்டி மனப்பான்மை இருக்க வேண்டும். பழமொழிகள்-கல்விபயிலும் முறையில் அமைய ஒருவர் தனது சொந்த அறிவையும் தீர்மானிக்கும் ஆற்றலையும் கைவிட்டு விடுவதற்காகப் பயன்படக்கூடாது. பழமொழிகளை வாசிப்பது வாழ்க்கை பற்றிய அனுபவமாக அமைய வேண்டும். அவற்றிலிருந்து கற்பதை விட, அவற்றைச் சாதனமாகக் கொண்டு கற்க வேண்டும். ஏனெனில் மொழியின் தூண்டும் ஆற்றல் வழியாக, அவை எடுத்துக் கூறும் உண்மையை அடைய வேண்டும். தனி நபருக்கு எடுத்துக் கூறப்பட்டாலும், அதே சூழ்நிலையிலுள்ள எவருக்கும் பழமொழியின் செய்தி பொருந்தும். மனித சூழ்நிலைபற்றிய உணர்வைத் தூண்டும் இயற்கையையும், மனிதர்களையும் பற்றிய அனுபவ அறிவை வளர்க்கும்.

11. **பகுப்பாய்வு: I, II** பகுதிகள் (1:1-9:18): நூலின் இம்முன்னுரைப் பகுதிகள் அமைப்பிலும் சிந்தனைப் போக்கிலும், மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபட்டுத் தனித்து நிற்கின்றன. மற்றப் பகுதிகள் எந்தத் தெளிவான திட்டமுமின்றித் தொகுக்கப்பட்டுள்ளன. மாறாக, இப்பகுதி ஒரு கட்டுரைபோல் வாக்குகளை ஒன்றிணைக்கிறது. இப்பண்பை 1:10-19.20-23; 2:1-22; 4:1-27; 5:1-23; 6:20-35; 7:1-27; 8-9 ஆகியவற்றில் சிறப்பாகக் காணலாம். இப்பகுதி ஞானத்தைத்தேடி அடையும்படி தந்தை மகனுக்கு விடுக்கும் அழைப்பையும், ஆட்தன்மைப் படுத்தப்பட்ட ஞானம் விடுக்கும் அழைப்பையும் தலைப்பாகக் கொண்டுள்ளது. ஆசிரியர் மாணவனுக்கு அளிக்கும் அறவுரையாக உள்ள இப்பகுதி, மாணவனைக்கெட்ட தோழர்களிடமிருந்தும் (1:10-19), தீய பெண்களிடமிருந்தும் (5:1-23; 6:20; 7:27) காப்பதிலும், ஞானவழிபாட்டை அவனது இதயத்தில் வளர்ப்பதிலும் கருத்தைச் செலுத்துகிறது. ஞானத்தின் பயன் (2:1-22), அதைத்தேடி அடைவது (3:1-35), அதனால் வரும் நன்மைகள் (4:1-27) ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது. ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானத்திற்கும் மதிகேடுடைய பெண்ணுக்குமிடையேயுள்ள எதிர்நிலை (9:1-6.13-18) நூலில் காணப்படும் உயிர்ச்சித்திரமான உருவங்களில் ஒன்றாகும். ஞானம் யாவேயின் உடைமையாகும்; படைப்பில் அவரது ஊழியனாகும் (8:22-31). அதன் தன்மையை விவரிக்கும் சொல், 8:30-இல் தெளிவில்லாமல் இருக்கிறது. அதைச் சிற்பி, தலை சிறந்த வேலையாள், செல்லப்பிள்ளை, தத்துப்பிள்ளை என்று பலரும் பலவாறு மொழிபெயர்த்துள்ளனர். பழ 8-இல் காணப்படும் ஞானம் பற்றிய விவரிப்பு-யோபு 28; சீரா 24; ஞானம் 7 ஆகிய பகுதிகளில் காணப்படும் விவரிப்புகளுக்கு இணையானதாகும்.

தந்தை அளிப்பதாக அமைந்துள்ள இந்த அறிவுரைகளின் ஆசிரியர், எந்த அயல் நாட்டு ஞானபாரம்பரியத்தையும்விட விவிலிய பாரம்பரியத்துக்கு நெருங்கியவராகத் தோன்றுகிறார். அவர் வாழும், சிந்திக்கும், தியானிக்கும் கருத்தியலான சூழ்நிலை, காலத்தால் முந்திய பழைய ஏற்பாட்டு நூல்களில் காணப்படும் கோட்பாடுகளையே பின்னணியாகக் கொண்டுள்ளது. பிரமாணிக்கம் (4:11), இரக்கம் (3:27-30), பணிவு (1:8; 5:13), பேராசை (1:19), வன்முறை (1:11.16; 3:29-31), தீயதோழமை (1:10:16), தீயநடத்தை, விபசாரம் (2:6-19; 5:3-23; 6:20-35), அறிவு, விவேகம், இறையச்சம் ஆகியவை பற்றிய அறவுரைகளில் முற்கால இஸ்ராயேலின் பாரம்பரியத்தையே ஆசிரியர் பின்பற்றுகிறார் (1:1-7).

மேலும், பழமொழிநூல் ஆசிரியர் வெவ்வேறுபட்ட முறையில் உபாகமம், எரேமியா, இரண்டாம் எசாயா ஆகிய நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர் இவற்றின்

வாசகங்களை அப்படியே எடுத்தாளவில்லை; தமது நோக்கத்திற்கு ஏற்ப வாசகங்களைத் திருத்தி அமைத்துள்ளார். இந்தப் பழம்பெரும் மூலங்களின் கூறுகளை அறிமுகம் செய்து, தனது இலக்கிய அமைப்புக்குள் ஏற்றுள்ளார். இவ்வாறு தனது இனத்தின் தனித்தன்மைக்குப் பணிகிறார். இந்த இனத் தனித்தன்மை, கவனமான உணர்வுகளால் எப்போதும் பாதுகாக்கப்பட்டு, கோட்பாட்டு வளர்ச்சியைத் தூண்டியுள்ளது. இத்தகைய பண்பை "மிட்ராஸ்" இலக்கியங்களில் காணலாம். இப்படிச் செய்யும்போது, ஆசிரியர் கடந்த காலத்திலிருந்து முறித்துக் கொள்ளாமல், ஒரே உயிருள்ள சிந்தனைப் போக்கில் ஒன்றியைந்த ஒருமைப்பாட்டோடு கோட்பாட்டு வளர்ச்சியைத் தூண்டுகிறார்.

இத்தொகுப்பு காலத்தால் பிந்தியது; கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதன்று. இறுதிப் பதிப்பாசிரியர் இப்பகுதிக்கு இப்போதுள்ள இறுதி வடிவத்தை அளித்து, நூலுக்கு முன்னுரையாக அமைத்துள்ளார். விவிலிய ஞான இலக்கியங்களுள், பழமொழி நூல்- காலத்தால் முந்தியதாகும். முற்கால அறவுரைகளின் தொகுப்பாகும். இறுதிப் பதிப்பாசிரியரின் வேலைப்பாடான இந்த முன்னுரை (1-9) கடந்தகால மரபுரிமையை மதிப்பீடு செய்வதோடு, அதற்கு ஒரு புதிய ஒன்றிப்பையும் போக்கையும் அளிக்கிறது.

**III.** (10:1-22:16) என்ற பகுதி, சாலமோனின் நீதி மொழிகளைக் கொண்ட முதல் தொகுப்பாகும். 375 வாக்குகளைக் கொண்டது. இப்பகுதி திட்டமிட்டு அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இரத்தினங்களை அடுக்கி வைப்பதுபோன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. இவற்றில் ஆசிரியரது கவனிக்கும் ஆற்றல் சிறப்புப் பெறுகிறது. இவற்றில் மதிப்பீடுகள் இல்லை. அனுபவத்தை எடுத்துக் கூறுவதோடு ஆசிரியர் நிறைவு பெறுவதாகத் தெரிகிறது.

இப்பகுதியில் பல இரட்டிப்பு வாசகங்கள் உண்டு. இஃது ஆசிரியரின் கவனமின்மையைச் சுட்டலாம். ஆனால், இக்கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுவது - ஆசிரியர் பயன்படுத்திய ஏற்கெனவே இருந்த பல மூலங்களிலும் இவை காணப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இப்போதுள்ள வடிவில், இப்பகுதி ஒருவேளை நாடுகடத்தலுக்கு முந்தியதன்று. இதன் முதல் தொகுப்பு ஒருவேளை சாலமோனின் காலத்திலேயே செய்யப்பட்டிருக்கலாம். பழமொழி நூலில் இத்தொகுப்புதான் காலத்தால் முந்தியதாகும்.

இப்பகுதியில், மதிப்பீடு செய்தல் அதிகமில்லை எனினும், சிலகூற்றுகள் தீர்ப்புக்குறிப்பைக் கொண்டுள்ளன. திறன் ஆய்வுமுறையும் இக்கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. நன்மை - தீமையையும், ஞானிமூடனையும் ஆசிரியர் தெளிவாக வேறுபடுத்துகிறார். ஆசிரியர் பலவற்றை எடுத்துக்கூறி, இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துகிறார். இவற்றை எதிர்நிலை இணையமைப்பு வாக்குகளில் எடுத்துக்கூறுகிறார் (10:3.6.7; 21:26). நல்லோர்களைப் பற்றிய போற்றுரை (10:31-32. 12:5.15.16: 15:18; 19:11), எடுத்துக்காட்டான பிள்ளைகள் (10:1; 15:20), ஞானமும் அடக்கமும் உள்ள பெண்கள் (11:16; 18:22; 19:14), தீயபெண்கள் (12:5-17; 13:5-10; 16:28-29; 21:14), அடங்காத பெண்கள் (11:22; 19:13; 21:9.19), அவமானமும் சாபமும் கொண்டுவரும் தீய பிள்ளைகள் (19:26; 20:20) ஆகியவர்களைப் பற்றிய விவரிப்புக்கள் கவனிக்கத்தக்கன. தீயபெண்கள், அடங்காத பெண்கள் ஆகியோரின் திரையை ஆசிரியர் இரக்கமற்ற முறையில் கிழிக்கிறார்; கண்டனம் செய்கிறார். பாவங்களைக் கண்டம் செய்தல் உயிர்ச்சித்திரமாக வடிவெடுக்கின்றது. சான்றுகள்: அகந்தை (6:17; 11:2.13; 10:15. 25; 16:18), பேராசை (15:27; 23:4-5; 10:12; 11:4. 28), பொறாமை (14:30), பெருந்தீனி உண்டல் (23:29-35; 21:17), கோபம் (15:18), காமம் (5:1-14; 6:20; 7:27) சோம்பல் (6:6-11; 10:4-5) என்பன.

**IV, V** (22:17-24:22): "ஞானிகளின் கூற்று" என்ற தலைப்பு 22:17-இன் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இத்தொகுப்பிலும் எத்தகைய திட்டமும் இல்லை. இப்பகுதி அயலார்பால் கொள்ள வேண்டிய கடமையையும், மட்டுடைமையின் ஒழுங்குகளையும் வலியுறுத்துகிறது. இதில் நேர்நிலை இணையமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில- இருவசன அடியையுடையன; மற்றும் சில- நீண்டவை. இத்தொகுப்புகளுக்கும், எகிப்திய அமென்-எம்-ஒப்பேயின் போதகத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. இந்த எகிப்திய ஞானி தனது நூலை "30 வாக்குகள்" என்றழைத்தார். பழ 22:20-இல் "30 மொழிகள்" என்று குறிக்கப்படுகின்றது. பொருளடக்கத்தில் இரண்டு நூல்களும் முழுவதும் ஒத்திருக்கவில்லை. ஆனால், இரு நூல்களிலும் சில பகுதிகள் அப்படியே உள்ளன. இஃது இரண்டிற்கும் பொதுவான மூலம் இருந்திருக்கக் கூடும் என்பதைச் சுட்டுகின்றது.

இப்பகுதி நல்ல எடுத்துக்காட்டான அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் நோக்கம் கொண்டது. பலவகையான, செயல்முறை ஆலோசனைகள் கூறப்படுகின்றன. நேர்மைமிக்க மனிதன் (22:22-23; 23:10-11), நல்ல பழக்கமுள்ள நண்பன் (23:14-22; 23:1-2), மட்டுடையவன் (23:20-21.29-35), ஒழுக்க வாழ்வுடையவன் (23:26-28) ஆகியவர்களின் பண்புகள் அரியணைக்குரியவனிடம் காணப்படவேண்டும்.

**VI** (24:23-34) என்ற ஞானிகளின் கூற்றுகள் அடங்கிய பகுதி சோம்பலுக்கு எதிராகச் செயல்திறனை வலியுறுத்துகிறது.

**VII** (25:1-29:17) என்ற சாலமோனின் இரண்டாம் தொகுப்பு எசேக்கியாவின் காலத்தில் தொகுக்கப்பட்டதாகத் தெரிகிறது. III-ஆம் பகுதியைப் போல், பல்வேறு தலைப்புகளையும், பல இலக்கிய வடிவங்களையும் கொண்டது. இதில் 128 வாக்குகள் அடங்கியுள்ளன. அதி. 28:29-இல் காணப்படும் சமயம், சட்டம் ஆகியவை பற்றிய அக்கறை, இப்பகுதி காலத்தால் முந்திய தனிப்பட்ட தொகுப்பாக இருந்திருக்கலாம் என்று கருதத் தூண்டுகிறது.

**VIII** (30:1-33), **IX** (31:1-9) ஆகிய பகுதிகள் ஆகூர், இலெமுவேல் ஆகியோரின் கூற்றுகளைக் கொண்டுள்ளன. (இங்கே, ஒரு குறிப்பு அவசியமாகிறது. நம்மிடையே இதுவரை பழக்கத்திலுள்ள கத்தோலிக்க விவிலிய தமிழ் மொழிபெயர்ப்பு, வுல்கத்தா வாசகத்திலிருந்து செய்யப்பட்டது. அதில் ஆகூர் என்ற சொல் ஓர் ஆளின் பெயராக எடுத்துக்கொள்ளப்படாமல், பொதுப்பெயராக எடுத்துக்கொள்ளப்பட்டு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு "மாசாவைச் சார்ந்த யாக்கேயின் மகனான ஆகூரின் வார்த்தைகளாவன" என்பது, "கக்குகிறவனின் புதல்வனான, சேகரிப்போனின் வார்த்தைகளாவன" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (30:1). ஆகூர் என்ற சொல்லை ஓர் ஆளின் பெயராக எடுத்துக்கொள்வதே சரியானதாகும்). ஆகூரின் கூற்றுகள் சிறிது கரடுமுரடானவை. அவற்றில் சமயப்பண்பு காணப்படுகிறது. அஃது இயற்கையால் உந்தப்பட்டு, செபத்தில் மலரும் விசுவாசமாகும். எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள எபிரேய வாக்குகள் (30:18-33) பழமொழி நூலுக்கு மட்டும் உரியவையன்று (யோபு 5:19; மீக் 5:4; திருவுரை 111:2; சீரா 23:6; 25:7; 25:5.19). இவ்வகை இலக்கிய மரபு, கவனத்தைக் கவரவும், ஞாபகத்திற்கு உதவவும் பயன்பட்ட யுக்தியாகும். இலெமுவேலின் கூற்றுகள் அரசனுக்கு அளிக்கப்படும் ஆலோசனைகளாகும்.

**X** (31:10-31) என்ற அகரவரிசைப் பாடல் நல்ல மனையாளைப் போற்றுகிறது; உயர்ந்த, ஒழுக்க, சமய நிலையினை உடையது. ஆசிரியர் தம் காலத்து மக்களிடையிலிருந்து இச்சித்திரத்தை வரைகிறார். இப்பாடல் - ஞானிகள், வாழ்க்கைச் சூழ்நிலையைக் கூர்ந்து கவனிக்கக் கூடியவர்கள்,

ஊடுருவிப்பார்க்கும் உளவியல் அறிவுடையவர்கள், யாவர்க்குமுரிய விதத்தில் ஓர் எடுத்துக்காட்டான சொல்லோவியத்தை வரையக் கூடியவர்கள் என்பதைக் காட்டுகிறது.

**12. சிறப்புக்கருத்துக்கள்:** விவிலியத்தின் பெரும்பான்மையான நூல்கள் இறைவனின் அழைப்போடோ, அவரது உடன்படிக்கையோடோ, அவர் மக்களுக்கு அளிக்கும் செய்தியோடோ, தொடங்குகின்றன. ஆனால், பழமொழி நூல்- உலகைப் பற்றிய காட்சி அறிவோடு தொடங்குகிறது. பழங்கால ஞானிகள் இவ்வுலக வாழ்வின் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி காட்டுவதிலும் அவற்றிற்குரிய சாதனங்களைக் கற்பிப்பதிலும் அக்கறை கொள்கின்றனர். இதற்காக, வாழ்க்கைச் சூழ்நிலையைக் கூர்மையாகக் கவனித்தனர், படித்தனர். ஏன் சிலர், வாழ்வில் வெற்றி பெறுகின்றனர்? மற்றும் சிலர் வெற்றி பெறுவதில்லை என்பவை பற்றித் தாங்கள் கற்றறிந்தவற்றைத் திட்பநுட்பக் கூற்றுகளிலும் மேற்கோளுரைகளிலும் எடுத்துக்கூறினர்.

இந்நூலில் நாம் இறையனுபவ இறையியலைக் காணமுடியாது; சமயம் புறச்சடங்குகள் பற்றிய கூற்றுகளும் அதிகம் இல்லை; கொள்கை அடிப்படை கொண்ட ஒழுக்க இயல் இல்லை. இதில் காணப்படும் ஞானம் இறைவெளிப்பாட்டின் விளைவன்று, பட்டறிவின் விளைவாகும். இதில் விவேமிக்க பொது அறிவைக் காணலாம். இந்நூலின் ஆசிரியர் முழுவதும் இவ்வுலகைச் சார்ந்தவர். அவருடைய கூற்றுகள் அன்றாட அனுபவத்தைச் சார்ந்தவை. இயற்கையின் ஒழுங்கமைப்பையும், செயலுக்கும் அதன் விளைவுக்குமிடையேயுள்ள தொடர்பையும் கண்டுணர்ந்தவர். இவற்றின் அடிப்படையில் தேர்வுசெய்து முடிவெடுத்து, தன் மேற்கோளுரைகளுக்கு இலக்கிய வடிவம் கொடுத்தார். காட்சியறிவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வித மேற்கோளுரைகளையே இந்நூல் பெரும்பாலும் கொண்டுள்ளது. இந்தப் பட்டறிவு ஞானத்தைப் படித்து, அதைத் தனதாக்கித் தன் வாழ்வில் பயன்படுத்தும் மாணவன், தன் வாழ்வில் நேரிய முடிவுகள் எடுப்பதில் வல்லவன் ஆவான்; ஞானி ஆவான். படிப்பு, போதகம், கட்டுப்பாடு, சிந்தனை, தியானம் ஆகியவற்றின் உதவியால் ஞானத்தைத் தேடும்படியும் அதனால் நடத்தப்பட்டு வாழ்வை அமைத்துக் கொள்ளும்படியும் மாணவனைத் தூண்டுகிறார் ஆசிரியர் (1:2-7).

**12. அ) உலகில் ஒழுங்கமைப்பு:** விவிலியத்தின் பெரும்பாலான நீதிமொழிகள் நேர்மையான மற்றும் நேர்மையற்ற செயல்களைப் பற்றியவையாகும். சில பகுதிகளில் ஞானிகள் தங்களது, ஆசிரிய, ஆலோசனை அளிக்கும் தொழிலையும் கடந்து, தங்களது போதகத்திற்குப்பின் நிற்கும் முன் கருத்துக்களையும் எடுத்துக் கூறுகின்றனர். உலகைப் படைக்கும்போது இறைவன் ஞானத்தைப் பயன்படுத்தியதால், உலகம் ஒழுங்கமைப்புடையதாக இருக்கிறது. படைப்பின் தொடக்கத்தில் உலகம் "உருவமற்றதும் வெறுமையுற்றதுமாய்" இருந்தது. இறைவன் உலகிற்கு அமைப்பு அளித்தார். அந்த அமைப்பு நல்லதெனக் கண்டார் (ஆதி 1). உலகினுள் ஞானம் புகுத்திய ஒழுங்கமைப்பை நாம் காணலாம். ஞானத்தைப் பின்பற்றி இந்த ஒழுங்கமைப்பை அறிந்து கடைப்பிடித்தால், நமது வாழ்வை என்ன செய்வது என்றும், எப்படி முடிவுகள் எடுப்பது என்றும் அறிவோம். இயற்கை உலகு ,ஞானத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மனிதன் தன் வாழ்வை ஞானத்தால் ஒழுங்குசெய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்ராயேலில் அரசாட்சி நிறுவப்படுமுன், கேட்கும் முறையில் இறைவன் சாமுவேலிடம் பேசினார் (1 சாமு 3). முக்கிய முடிவுகள் எடுக்குமுன், மக்கள் திருவுளச் சீட்டால் அவரது விருப்பத்தை அறிய முயன்றனர். தகனப் பலியால் அவரைத் திருப்தி செய்தனர் (1 சாமு 13:14). இறைவனைப் பற்றிய இந்த உறவுத் தன்மையுடைய - ஆனால் நிறைவற்றபோக்கு

ஞானிகளின் போதகத்தில் காணப்படவில்லை. படைப்பின் ஒழுங்குநிறை செயலாற்றலைக் கூர்ந்து கவனித்து, அதில் தான் இறைவனது தன்மையையும் திருவுளத்தையும் கண்டுணர்ந்தனர். அவர் உலகைப் படைத்தார். ஞானத்தால் உலகில் ஒழுங்கமைப்பை நிறுவிய அவர், மனிதனுக்கும் ஞானத்தை அளித்துள்ளார். அவன் இந்த ஒழுங்கமைப்பைக் கற்று, தனது வாழ்வை நடத்தவேண்டிய முடிவுகளை எடுக்க வேண்டும். தனது பிரச்சனைகளைத் தானே தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்து இக்காலத்தில் சமயச் சார்பற்ற போக்கிற்கு இணையானதாகத் தோன்றலாம்.

உலக ஒழுங்கமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஞானிகளின் ஒழுக்க போதகச் செயல்முறையானது, கருத்தியலானது அன்று; புரிந்துகொள்ள எளியது. ஒருவன் ஞானியாய் இருந்தால் அவன் வாழ்வைக் கூர்ந்து கவனிக்கிறான். முதியோரின் போதனையை ஆவலாய்க் கேட்கிறான். அதன் விளைவாக நேர்மையானதையே செய்யக் கற்றுக் கொள்கிறான். இறைவன் வெற்றியை அவனுக்குக் கைமாறாகத் தருகிறார். ஆனால், ஒருவன் மூடனாகவோ சோம்பேறியாகவோ இருந்தால், அவனை இறைவன் தண்டிப்பார். அவனது துன்பம் பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும். இந்த நியதியிலிருந்து தப்ப முடியாது. படைப்பில் ஞானத்தால் நிறுவப்பட்டு உலகில் காணப்படும் ஒழுங்கமைப்பால் இந்நியதி அமைகிறது. இவ்விதம்தான் தொடக்கம் முதல் உலகம் அமைந்திருக்கிறது. இந்த அமைப்புக்கு இரு அடிப்படை உண்டு. ஒன்று, துன்பமாய் இருப்பதைவிட மகிழ்ச்சியாய் இருப்பதே மேல் என்ற பொது அறிவு உந்து காரணமாகும். மற்றது, எந்தச் செயல்கள் – மகிழ்ச்சிமிக்க, வெற்றிகரமான வாழ்வைத் தருகின்றன என்பது பற்றிய கூரிய காட்சியறிவாகும்.

**ஆ) வெற்றிவாழ்வு:** இந்நூலைக் கவனமாகப் படித்தால், ஞானிகள் எப்படி மனித நடத்தையையும், அதன் செயல்முறைப் பண்பையும் கூர்ந்து கவனித்துள்ளனர் என்பது தெளிவாகும். வாழ்வில் வெற்றி பெறுவதற்குரிய எல்லாக் கூறுகளையும் பகுதிகளையும் கூர்ந்து கவனித்து, தங்கள் மேற்கோளுரைகளை அமைத்தனர்.

வாழ்வில் வெற்றிபெற ஞானத்தைத் தேடுகிறவனுடைய தலையாய பண்பு- கடின உழைப்பாகும். அஃது இன்றி ஒருவன் வெற்றிபெற முடியாது (பழ 12:24). சிறிது நேரத்துக்குச் சோம்பலாய் இருப்பதுகூட அழிவில் முடியும் (6:9-11). வேலையைத் தட்டிக் கழிக்கக் கூறும் எந்தச் சாக்குப் போக்கும் மிகுந்த மூடத்தனமாகும் (26:13). செல்வர்களுக்கும் வறியவர்களுக்குமிடையேயுள்ள முதன்மையான வேறுபாடு கடின உழைப்பாகும். தொழில் வெற்றி கொள்வதைப் பாதிக்கும் மற்றக் கூறுகளும் உண்டு. ஆகவே, திட்டம் செய்வது முக்கிய மானதாகும். அஃதோடு துணிவும் முயற்சியும் அவசியமாகும் (11:16; 21:15). ஊழியர்களைக் கவனமாய்த் தேர்ந்தெடுப்பது தொழிலில் வெற்றி பெறுவதற்கு மிக அவசியமாகும் (10:26; 26:6). காரியங்களைச் செய்வதில் முரட்டுத்தனமான பலத்தைவிட, அறிவுக் கூர்மையும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்ட செயல், நல்ல பயன் அளிக்கும் (24:5-6). வாழ்வில் நேர்மை மிக அவசியம். ஏமாற்றுதல் உடனடியான பயனைத் தருவதுபோல் தோன்றலாம். ஆனால், அது சாதாரணமாய்த் தொல்லையையே பின்பு கொணரும் (20:17). ஆகவே, கடினமாய் உழை; முன்னோக்குத் திட்டம் செய்து செயல்படு; சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நேர்மையைக் கடைப்பிடி; அப்போது "நீ வாழ்வில் வெற்றி பெறுவாய், வளம் பெறுவாய்" எனப் பழமொழி படிப்பிக்கின்றது.

வாழ்வில் வெற்றிபெற, கடின உழைப்பும் செல்வமும் மட்டும் போதா. நல்ல நண்பர்களும், சமூகத்தில் மேன்மையும் கொண்டிருப்பது அவசியமாகும். ஞானத்தைத்தேடுபவன்

சமூகத்திலும் தன் குடும்பத்திலும் நல்ல உறவுகளை அமைத்து அவற்றை வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவான். பிறரோடு நல்லுறவு கொண்டிருத்தல் வெற்றியின் அடையாளம் மட்டும் அன்று; அவனது நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் உதவுகிறது. தனது வாழ்வில் தோழர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். என்று உணர்ந்து ஞானி, தீய தோழமையை நீக்கி, நல்ல நட்பை வளர்ப்பதில் கவனமாய் இருப்பான் (20:20-21: 22:24-25; 27:10).

நல்லவர்கள்பால்கூட ஞானி கவனமாய் இருக்க வேண்டும். இல்லையெனில், பல பிரச்சினைகளுக்கு உள்ளாவான். விரைவில் நட்புக்கொள்ளக்கூடாது. பலரோடு நட்பு கொள்ளக்கூடாது. உறவு முறியும் அளவுக்குப் பிறர் மேல் நட்பைச் சுமத்தக்கூடாது (25:16-17). நண்பர்களுக்கிடையே நேர்மை அவசியம் (24:26). நல்லுறவுக்கு ஊறுவிளைப் பனவற்றைப் புறக்கணிக்க வேண்டும். இவற்றையெல்லாம் விட – ஞானி வாதம் செய்தல், கதை பேசுதல், சில்லறைப் பூசல்களில் ஈடுபடுதல் போன்றவற்றைத் தவிர்ப்பான் (26:20-22). நல்ல உறவுகளை ஏற்படுத்தி, அவற்றைப் பாதுகாப்பது ஒரு பெரும் கலையாகும். எப்போது பேச வேண்டும், எப்போது பேசக்கூடாது, எப்போது ஆறுதல் அளிப்பது, எப்போது கண்டிப்பது போன்றவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். சில சமயங்களில் நண்பர்களைத் திருப்திப்படுத்துவது தான் மிகச்சிறந்தது (16:24). மற்ற நேரங்களில் பொதுவாக, நேர்மையோடு நடந்து கொள்வது அவசியம். ஞானத்துடன் தேர்ந்தெடுத்த உண்மையான நண்பனிடம் தாராளமிக்க பிரமாணிக்கம் காட்ட வேண்டும் (3:28; 11:13; 13:20; 22:4; 25:9; 27:10). பிறரோடு கொள்ளும் உறவில் ஏமாற்றுவதைவிட நேர்மையை எப்போதும் தேர்ந்து கொள்ள வேண்டும் (27:5; 26:23).

திருமணமானவர்கள் ஒருவர்க்கொருவர் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் (5:5-21). குடும்பத்தலைவன் தன் குடும்பத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் தேடிக்கொடுக்க வேண்டும் (27:23-27). நல்ல மனையாளுடைய பெருமையை அளவிட முடியாது (12:4; 14:1;31:10-31). அறிவில்லாத மனையாள் (14:1), தீய மனையாள் (7:6-23; 12:4), சண்டை போடுபவள் (19:13; 21:9; 25:24; 27:15-16) ஆகியவர்களால் ஒருவனது மகிழ்ச்சி பாழ்படும். மனிதன் விழக்கூடிய மிகக் கேவலமான சிக்கல் –விபசாரமாகும். அது மேன்மை மிக்கவர்களையும், வெற்றியுடையவர் களையும் வீழ்ச்சியுறச் செய்யும். விலை மகளோடு செய்யும் விபசாரம்– கெட்டதாகும். திருமணமான பெண்ணுடன் செய்யும் விபசாரம்– அதைவிடக் கொடியது (6:26-29.34). ஒருவன் அடுத்தவனது மனைவியிடம் இன்பம் காண்பது தவறாகும். தன் சொந்த மனைவியிடம் பகிர்ந்து கொள்ளும் அன்பில்தான் உண்மையான இன்பத்தைக் காண வேண்டும் (5:18-20).

நல்ல நண்பர்கள், கற்புடைய வாழ்வு, நல்ல பிரமாணிக்கமுள்ள மனைவி ஆகியவர் இருந்தும் கூட, குழந்தைகள் இல்லையெனில், மனித வாழ்வு குறையுடையதே. ஞானியின் வாழ்வு நல்ல குழந்தைகளால் நிறைவு பெறுகிறது. அவர்களின் கல்வி வாழ்வு முழுவதும் நீடிப்பதாகும் (22:6). அன்பு செய்யும் தந்தை தன் பிள்ளைகளைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துவான் (13:24; 23:13-14). நற்போதனையாலும் கட்டுப்பாட்டாலும் பிள்ளைகளைச் சரியாக வளர்த்தால், அவர்கள் தந்தையின் முதுமையில் பெருமை கொண்டு வருவார்கள். விருப்பம்போல் நடக்கவிடப்பட்ட மகன் தன் குடும்பத்திற்கு இழிவையும் கெட்ட பெயரையும் கொண்டு வருவான் (29:15.17). பிள்ளைகள் பணிவுள்ளவர்களாக இருக்கவேண்டும் (6:20-23:22); இதனால் பல துன்பங்களைத் தவிர்ப்பார்கள் (19:26; 20:20; 28:24). பிள்ளைகள் தங்களுக்கு அளிக்கப்படும் போதகத்தில் கவனம் செலுத்தவேண்டும்; பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளும் திறந்த மனது

கொண்டிருக்க வேண்டும். அப்போது ஒருவன் வாழ்வுக்கலையில் வெற்றி பெறுவான் (26:11; 27:17).

செல்வம், நல்ல நண்பர்கள், நல்ல குடும்பம் ஆகியவற்றோடு வாழ்வில் வெற்றி பெற விரும்பும் ஞானி, சில மனப்போக்குகளையும் குணவியல்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். கடின உழைப்பு நல்லது; ஆனால், பேராசை கொள்ளக்கூடாது. அது துன்பத்தைக் கொண்டு வரும். ஒருவன் தான் உழைத்துச் சேகரிப்பதோடு மனநிறைவு கொள்ள வேண்டும். பெறத்தூண்டும் பேராசை எப்போதும் துன்பத்திற்கு இட்டுச் செல்லும் (15:27; 23:4-5; 10:22; 11:4.28). பிறர் தீமை செய்தால் சினம் கொள்ளக்கூடாது. ஏனெனில், அஃது ஒருவனை மேலும் சண்டை சச்சரவுகளில் சிக்க வைக்கும்; பூசல்களுக்கு இட்டுச்செல்லும் (15:18; 25:21-22; 26:21; 29:22; 30:33). தானே பெரியவன் என்னும் மமதையுடையவரையாரும் விரும்ப மாட்டார். அகந்தையும் வீண்பெருமை பாராட்டுவதும் பிறரது வெறுப்பையே பெற்றுத்தரும் (6:17; 11:2; 13:10; 15:25; 16:18; 25:6-7; 29:23). தன்னடக்கம் ஒருவனது ஆளுமையைச் சிறப்பித்துக்காட்டும் (25:6-7). தன்னையே பெருமைப்படுத்துபவன் மட்டுடையவனாக இருப்பது கடினம் (27:21). சோம்பல் (6:6-11; 10:4-5; 24:30:34; 26:13-16), குடிப்பழக்கம் (21:17; 23:29-35), காமம் (5:1-14; 6:20-7:27), பொறாமை (14:30) முதலியவற்றை ஞானி முழுவதும் தவிர்க்க வேண்டும். எல்லாவற்றிலும் ஞானி தன்னையே கட்டுப்படுத்துவான் (25:28). நேர்மையான சிந்தனையே விரும்பத்தக்க மன நிலையாகும். ஏனெனில், ஒருவன் வாழ்வை நோக்கும் முறை அவனது உணர்வையும் மன நிலையையும் அமைக்கிறது (17:22).

இறுதியாக ஒருவன் வாழ்வில் உண்மையிலேயே வெற்றியடைய வேண்டுமென்றால், அவன் சமயப்பற்றுள்ளவனாக இருக்க வேண்டும். எல்லா நன்மைகளும் இறைவனிடமிருந்தே வருகின்றன. ஆகவே, அவர் வெறுப்பதையெல்லாம் தவிர்க்க வேண்டும். அவருக்கு விருப்பமானவற்றையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் (11:1; 12:22; 15:3-8; 16:1-9). ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் (1:7; 14:2). அதுவே வாழ்வின் ஊற்று; மகிழ்ச்சியின் உறுதி (12:28; 14:27; 16:20; 18:10; 29:6.25). ஞானி சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; நேசிக்க வேண்டும் (29:18). நீதியையும் பிரமாணிக்கத்தையும் உயர்வாகக் கருத வேண்டும் (21:3). சமய உணர்வும் இறைவனை வழிபடுதலும் வாழ்வில் வெற்றி பெற மிக அவசியமானவை யாகும். இறைவழிபாட்டை ஒதுக்குபவன் வீம்புடையவனாக, ஆணவம் மிக்கவனாக இருப்பான். முதியோரையும் பாரம்பரியத்தையும் மதியான். பல தவறுகளில் வீழ்வான் (24:16). அவனது வாழ்வு பல சோதனைகளுக்கு உள்ளாகும்.

இறைவனே வாழ்வின் மேலாண்மை மிக்க தலைவரானாலும் (16:1-33), பெரும்பாலும் நாமே நமது வாழ்வுக்கு வடிவம் கொடுக்கிறோம். நாம் அடையும் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் நாமே பொறுப்பாளி. வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் தடைகளை நீக்கி, வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதே இந்நூலின் நோக்கம்.

இந்த அறிவுரைகளையெல்லாம் கடைப்பிடிப்பவன் நீடிய ஆயுளையும், செல்வங்களையும், சமூகத்தில் பெருமையையும் சன்மானமாகப் பெறுவான். அவன் பல நல்ல நண்பர்களையும், நல்ல மனைவியையும் தன் முதுமைக் காலத்தில் பெருமை அளிக்கும் பிள்ளைகளையும் கொண்டிருப்பான். இவ்வறிவுரைகளைக் கடைப்பிடிக்காதவன் அழிவையும், சாவையும், ஏழ்மையையும் பெறுவான்; பிறரால் எள்ளி நகையாடப்படுவான்; பிள்ளை அற்றுப்போவான். பிள்ளைகள் இருந்தாலும், அவர்கள் அவனுக்கு எதிராகக்

கிளர்ச்சி செய்து துன்பம் கொடுப்பர் (10:22; 14:26-27).

**இ) செயல்வினைப்பயன் கோட்பாடு:** ஞான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்குமாறு இளைஞர்களைத் தூண்டச் சன்மானம் என்ற கருத்துப் பயன்பட்டது. நேர்மையான செயலின் சன்மானம் - வாழ்வில் வெற்றியாகும். ஆனால், அது தூரத்திலிருப்பதாகத் தோன்றுகிறது; அதன் விலையாகிய கடின உழைப்போ உடனடியானதாக இருக்கிறது. இதற்கு மாறாக-ஒழுக்கக் கேடான அல்லது நேர்மையற்ற செயலின் சன்மானம்- உடனடியானதாகவும், அதன் விரும்பத்தகாத விளைவு- தூரத்திலிருப்பதாகவும், தவிர்க்கக் கூடியதாகவும் தோன்றுகிறது. செயலுக்கும் அதன் சன்மானத்திற்குமிடையேயுள்ள தூரத்தை ஞானிகள் சுருக்க முடியாது. ஆனால், செயலுக்கும் அதன் விளைவுக்குமிடையே உள்ள தொடர்பை வலியுறுத்துகின்றனர். ஒருவன் நேர்மையாகச் செயலாற்றினால் வெற்றி பெறுவான்; தீய வழியில் செயல்பட்டால், தோல்வியால் தண்டிக்கப் பெறுவான். இந்தப் பாரம்பரிய நம்பிக்கையில் தளராத விசுவாசம் கொண்டிருக்கிறார், இந்நூலின் ஆசிரியர்.

உலக ஒழுங்கமைப்பின் அடிப்படையில், இறைவன் நல்லோருக்குச் சன்மானம் அளித்து, தீயோரைத் தண்டிக்கிறார். ஒருவன் வாழ்வில் வெற்றி பெறாது வறியவனாக இருந்தால், அதற்கு அவனது சோம்பேறித்தனமோ (12:11-24: 13:4; 18:9; 19:15; 20:4-13; 22:7; 23:24), ஒழுக்கக் கேடான வாழ்வோ (13:25), ஞானபோதகத்திற்குச் செவிமடுத்து வாழ்வைத் திட்டம் செய்யத் தவறியதோ (21:17) காரணமாகலாம். ஞானிகள் பயன்படுத்தும் ஒழுக்க ஒப்பளவுகள் சுய நலத்தையும், இவ்வுலகு சார்ந்த வாழ்வையும் கடந்து செல்லவில்லை. புண்ணியவாழ்வு - வெற்றிக்கும் மகிழ்ச்சி மிக்க வாழ்வுக்கும் இட்டுச்செல்லும் (10:11; 13:4; 16:22; 12:31); தீய வழி அழிவுக்கும் சாவுக்கும் இட்டுச் செல்லும் (10:16:17; 11:19). இதை உறுதியாகக் கூறுவதோடு, ஞானிகள் தங்கள் போதகத்தை வரையறை செய்து கொள்கின்றனர். ஆனால் இந்தச் சமன்பாடு, அன்றாட வாழ்வில் எப்போதும் காணப்படுவதில்லை; பெரும்பாலும் தலைகீழாகவே உள்ளது. நீதிமான்கள் துன்புறுவதும், தீயவர்கள் செழிப்புறுவதும் ஞானிகளது கவனத்திலிருந்து தப்பவில்லை. இந்நிலை எத்தனை தடவை நடந்தாலும், அதை ஒரு விதிவிலக்காகவே ஞானி கருதுகிறார். வாழ்வில் காணப்படும் இந்த முரண்பாடு, அவரது பாரம்பரிய விசுவாசத்தை அசைக்கவில்லை; தளர்ச்சியுறச் செய்யவில்லை. இந்த முரண்பாட்டை இருவிதமாக விளக்கினர்.

1. ஒருவர் மற்றவரைப் பற்றியதெல்லாம் அறிந்திருப்பது முடியாத காரியம். இறைவன் ஒருவரே மனித இதயத்தை முழுவதும் அறிவார். அவனது உள்ளத்தைச் சோதிக்கிறார் (15:3.11; 16:2; 17:3; 20:12; 21:2); எண்ணங்களை வெளிப்படுத்துகிறார் (21:3.27; 28:9). அவர் மட்டும்தான் உலகின் முன்னேற்றத்தையும் (19:21), மனிதரின் கதியையும் (16:1-9. 33; 21:31), எல்லா வாழ்வின் நடத்தையையும் (20:14; 21:1) தம் கையில் கொண்டுள்ளார். அவர்தான் ஒருவனது உண்மையான தன்மைக்கேற்ப சன்மானமோ, தண்டனையோ அளிக்கிறார்; அளிக்கவல்லவர். இத்தகைய இறைவனில் தளராத விசுவாசம் கொண்டிருந்தனர் ஞானிகள்.

2. சன்மானமோ தண்டனையோ செயல்படுவதற்கு முன்னுள்ள காலத்தில் கவனம் செலுத்துகிறார் ஞானி. ஒரு நாள் கடின உழைப்பு எவனையும் செல்வந்தனாக்குவதில்லை. இந்தக் காலம் தாழ்த்துதல் போதனையை அவசியமாக்குகிறது. தீயோர் குறைந்த உழைப்பினால் செழிப்புறுவதாகத் தோன்றினாலும் எப்போதும் நல்லதையே செய்யும் மன உறுதி வேண்டும். ஏனெனில், இறுதியில் நீதியே வெற்றி பெறும் (5:22 தொ). ஆசிரியர் மாணவனைச் சோதிப்பதுபோல், சில சமயங்களில் இறைவனும் நீதிமானைக் கடின

காலத்தில் சோதிக்கிறார் (3:11 தொ). இறுதியில் நல்லவர் எப்போதும் வெற்றி பெறுவர் (24:16).

இதற்குமேல்– நல்லவர், தீயவர் பிரச்சனையை இந்நூல் ஆசிரியர் தர்க்கித்திருப்பதாகத் தெரியவில்லை. யோபு நூலின் ஆசிரியர், இப்பிரச்சனையை விரிவாகத் தர்க்கிப்பார். ஆனால், யோபுக்கு யாவே அளிக்கும் பதில் – யாவேயில் முற்கால ஞானிகள் கொண்டிருந்த நம்பிக்கையையே செயல் அளவில் எடுத்துக் கூறுகிறது. மறுவாழ்வில் சன்மானம் அளிக்கப்படுவது பற்றி வெளிப்படுத்தும் காலம் இன்னும் இஸ்ராயேலுக்கு வரவில்லை.

வாழ்வில் வெற்றி பெறுவது பற்றிய ஞானிகளின் ஒழுக்க இயலை, மூன்று காரியங்கள் வரையறை செய்கின்றன.

1. **முதல்வரையறை:** மோசே வழியாகக் கொடுக்கப்பட்டு, தலைமுறை தலைமுறையாக மக்களுக்கு அளிக்கப்பட்ட சட்டமாகும். ஞானம் வெற்றிடத்தில் வளரவில்லை. அது மோசே சட்டத்தாலும், ஏற்புடைமைக்கு இறைவாக்கினர் விடுத்த அழைப்பாலும் சமன் செய்யப்பட்டது. அரசர்கள் கூட தோராவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒழுக்கம் பற்றிய அக்கறையில் தோராவுக்கும் ஞானத்திற்கும் ஒருமைப்பாடு உண்டு. சான்றாக, பிறரது நிலத்தை அபகரித்தல் (23:10 தொ: உப. 19:14; 27:17), நேர்மையான வியாபாரம் (பழ 20:13), சார்பில்லாமல் நீதி வழங்குதல் (24:24 தொ), ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல் (14:31) போன்றவற்றில் ஞானபோதகம் தோராவோடு ஒத்திருக்கிறது.

2. பொருளாதார வெற்றி எப்போதும் உண்மையான வெற்றியன்று; மகிழ்ச்சியோடும் சமாதானமாயும் இருப்பது முக்கியமாகும். ஒருவன் செல்வத்தையோ மகிழ்ச்சியையோ தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் மகிழ்ச்சியே சாலச் சிறந்தது. (25:24; 15:17). சமூகத்தின் நற்பெயரும் புகழும் மிக முக்கியமானவையாகும். பழமொழி நூலில் - மிக உயர்ந்த நன்மை - நற்பெயராகும் (22:1). இதையே சீராக்கு நூலும் கூறுகிறது (சீரா41:31).

3. **மனித அறிவின் வரைக்குட்பட்ட தன்மை:**

முடிந்தனவற்றையெல்லாம் ஞானி படிக்கலாம்; ஆய்வு செய்யலாம்; கவனமாய்த் திட்டம் செய்யலாம்; நேர்மையானவற்றையே செய்யலாம். ஆனால், வாழ்வு அவருக்கு எதிராகச் செல்லலாம். அவர் தவறு செய்யலாம் (11:24; 14:13). வருங்காலத்தை அறிய முடியாமை, நல்லபயனை அளிக்கலாம் (25:25; 19:14). எல்லாவற்றிலும் மட்டுடையவனாகவும் தாழ்ச்சியுடையவனாகவும் இருப்பதும், ஆண்டவர்பால் அச்சத்தோடு வாழ்வதும் ஞானமாகும். ஒருவன் தன் வாழ்வுக்குத் தானே தலைவன் என்று நம்புவது மிகப் பெரிய மதிகேடாகும் (28:26).

இம்மூன்று காரியங்களால் ஞானி, தனது போதனையை வரையறை செய்து கொண்டார். குற்றமற்றவன் துன்புறுவதில்லை; ஒருவன் தீயவனாய் இருப்பதாலேயே துன்புறுகிறான். நல்லவன் துன்புற்றால் அது தற்காலிகமானதே. அவனது நன்மைத் தன்மை சோதிக்கப்படுகிறது; அவன் விரைவில் செழிப்புறுவான் என்ற நம்பிக்கையில் ஞானி உறுதியாக நிலை கொள்ளுகிறார்.

**ஈ) மனிதனின் ஞானம்:**

மனிதனுக்குச் சாற்றிக் கூறும்போது, ஞானம் ஒரு சிக்கலான பண்பாகும். ஒழுங்கமைப்பின் வரையறைகளைக் கொண்ட பின்னணி உடையது. அதன் கூறுகள் பலவகைப்பட்டன. ஞானம் கவனமிக்க காட்சியறிவின் விளைவாகும் (1:2-6; 2:5-9; 8:5-9; 14:8; 19:25; 20:24; 28:5; 29:7). தேர்வுணர்வுடைய சிந்தனையின் விளைவாகும் (16:20; 21:12). முன்னோக்கின் (3:21; 6:14;), விவேகமுள்ள திறமையின் (12:16-23; 13:16; 14:8-15; 22:3; 27:12), கூரிய நுண்ணறிவின் (1:4; 2:11; 3:21; 5:2; 8:12) விளைவாகும். படைப்பவரை ஊற்றாகக் கொண்ட

செயல்முறையான அறிவாகும் (1:2. 4.7.29; 2:5.9.10; 3:20; 4:1; 5:2; 8:10.12; 14:10; 17:27; 31:23;), இந்த நிலையை அடையும் போது ஞானம் நிறைவடைகிறது. அஃது ஆண்டவரிடம் கொள்ளும் பக்தி மிகுந்த அச்சத்தால் வழி நடத்தப்படுகிறது (15:33). இதுவே ஞானத்தின் குறிக்கோள் (1:29; 2:5;); இன்னும் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு நீதி (1:3; 8:8.15), நீண்ட ஆயுள் (10:27), பாதுகாப்பு (14:26), செல்வச் செழிப்பு, நற்பெயர், மேன்மை, வாழ்வு (15:16; 22:4; மேலும் காண்க. 10:3.6.7. 11.20.21.31.32; 11:21.28; 12.3.5.7.10; 13:5; 15:28; 20:7; 21:26; 29:7;) ஆகிய ஆசீர்களையும் நலன்களையும் அளிப்பதாக வாக்குக் கொடுக்கிறது.

**உ) ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம்:** இந்நூலின் ஞானம் ஒரு பண்பாக மட்டும் தோன்றவில்லை. கருத்தளவிலான வடிவங்களைக் களைந்துவிட்டு, ஞானம் உயிருள்ள ஒரு பொருளின் வடிவங்களை எடுத்துக் கொள்வதாகத் தோன்றுகிறது. அது பரந்த வெளியில், தொழில் நடக்கும் இடங்களில், இரைச்சல் மிக்க சந்திப்புக்களில், நகரவாயில்களில் (1:20-21; காண்க. எரே 7:2; 11:6; 17; 19:20; 22:2-6;...) ஓர் இறைவாக்கினரைப்போல், நின்று அறைகூவல் விடுக்கிறது.

ஞானம் தனது அறைகூவலால் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது. இறைவாக்கினர்களைப் போல், ஞானம் முதலில் அதை அறியாதவர்கள் (1:22; 1:4; மேலும் காண்க. 20:19; 7:7; 8:5; 9:4.16; 14:15.18; 19:25; 21:11; 22:3), ஏளனம் செய்வோர் (1:22; 3:34; 9:8; 15:12; 19:25; 21:11), முட்டாள்கள் (1:22; 15:5; 17:28: 22:15) ஆகியோரைப் பார்த்துப் பேசுகிறது. அதன் அழைப்பு குற்றம் கூறுவதாக அமைகிறது (1:22). பின்பு வற்புறுத்தும், நட்புமிக்க, இணக்கமான, ஆதரவு காட்டும் அழைப்பாக மாறுகிறது (1:22-23). அஃது இறைவாக்கினர் மொழியில் பேசுகிறது. இறைவாக்கினரின் மொழி, இறைவனது மொழியே (1:23; எசே 36:24-27; எசா 44:3). இறைவாக்கினர்களைப்போல் ஞானம் அச்சுறுத்தல்களை எடுத்துக் கூறுகிறது (1:24:27; எசா 28:7-22; எரே 7:24-29; 11:8; 17:23; எசா 65:2-12; 66:4). அவர்களுக்கு இடுக்கண்வரும் காலம் ஞானம் பழிவாங்கும் காலமாகும். அப்போது அவர்கள் ஞானத்திடம் திரும்புவர். ஆனால், அது மிகவும் காலம் கடந்த செயலாகும் (1:26-32).

ஞானம் உண்மையிலேயே ஓர் இறைவாக்கினர்தான். மேலும், ஞானம் தாராளமிக்க விருந்தளிக்கும் பெண்ணின் பண்புகளையும் எடுத்துக் கொள்கிறது (9:1-6). தான் கட்டும் வீட்டில் தன்னுடையவர்களை அவள் விருந்துக்கு அழைக்கிறாள். அங்கு எல்லா மனிதர்களும் அழைக்கப்படுகின்றனர். இதில் ஆலயப் பணியிலிருந்து எடுக்கப்பட்ட கட்டடம், பலிப்பொருள், உணவு போன்ற உருவகங்களிலிருந்து, ஆன்மீகப் புனிதத் தலத்தில் நடைபெறும் காலத்துக்கு அப்பாற்பட்ட விருந்தின்முன், உருவத்தை நாம் கற்பனை செய்யலாம். ஞானம் இங்கு ஒரு கோட்பாட்டு அலுவலை நிறைவு செய்கிறது. அதன் போதகம் சுவையுள்ளதாகவும் உயிர்ச் சத்துள்ளதாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, மூடப்பெண் வீதியில் ஓர் உணவுச் சாலையை நடத்துகிறாள் (9:13-18). அவளது நடத்தை வேறுபாட்டால், உண்மையான ஞானத்தின் வியத்தகு அழைப்பு உயர்த்திக் காட்டப்படுகிறது.

மேலும், ஞானம் தன்னையே புகழ்ந்து கொள்ள வல்லது (8:1-21); மேன்மைக்கு உரிமை கொண்டாடுகிறது (8:22-36). எல்லா மனிதர்களுக்கும் மேலானது. அதன் தூது யாவர்க்கும் உரியது (8:1-3). அது வாக்களிக்கும் நலன்கள் மிகவும் உயர்ந்தவை. ஆகையால், மனிதர்கள் அதன்பால் ஈர்க்கப்பெறுகின்றனர். அதன் சொந்த உயர்வே இந்நலன்களுக்கு அவற்றின் அசாதாரண மதிப்பை அளிக்கிறது. ஏனெனில், மனிதன் உழைப்பால் கொண்டிருப்பதை ஞானம் தன்மையாலே கொண்டிருக்கிறது (8:12-14). இவை நல்லுணர்வு,

விவேகம், கூரிய அறிவு, சிந்திக்கும் ஆற்றல், முன்னோக்கு, ஊடுருவிப் பார்த்தல் ஆகியவையாகும். ஞானம் தலைவர்களுக்கு ஒழுக்க நேர்மையையும் அதிகாரத்தையும் அளிக்கிறது (8:15-16). அதை நேசிப்பவர்களை அது நேசிக்கிறது. அதை ஆவலோடு தேடுபவர்கள் அதைக் கண்டடைவர்; அதை நிறைவாகக் கொள்வர் (8:17-21; காண்க. மத் 7:7-8; லூக் 11:9-10).

**ஊ) இறை ஞானம்:**

மேற்கூறப்பட்ட ஞானத்தை ஆட்தன்மைப்படுத்துவதை எப்படிப் புரிந்து கொள்வது? ஞானம் இறைவனோடு நெருக்கமானது. அவரே அதை நித்தியத்திலிருந்து படைத்தார்; அதற்குப் பிறப்பளித்து அரியணையில் அமர்த்தினார் (8:22.26). யாவே எப்போதும் ஞானமிக்கவர். அவரது படைப்புச் செயல் முழுவதிலும் அவரோடு ஞானம் ஒத்துழைக்கிறது. விளையாட்டுப் போல் உலகை அமைக்கிறது (8:27-31). அதே சமயம் மனிதர்களின் தோழமையை மகிழ்ச்சியோடு தேடுகிறது (8:31). இக்காரணத்திற்காக அதன் போதனைக்குச் செவிமடுப்பது அவர்களுக்கு வாழ்வு மற்றும் சாவுக்குரிய பிரச்சனையாகும்.

இந்த ஞானத்தை ஆட்தன்மைப்படுத்தும் பிரச்சினையைப் புரிந்து கொள்வது பற்றி ஏற்கெனவே ஞான இலக்கியம் என்ற தலைப்பில் காண்க. முற்காலக் கிறிஸ்துவ ஆசிரியர்களில் பலர் இந்நூலின் ஆசிரியர் வெறும் உருவகப்பொருளைக் கடந்து செல்கிறார் என்பர். இந்நூலில் வரும் ஞானம் பற்றிய விவரிப்பை யோவானது நற்செய்தியின் முன்னுரையில் வரும் விவரிப்போடு ஒப்பிட்டுள்ளனர். புதிய ஏற்பாட்டின் ஒளியில் கி.பி. முதல் நூற்றாண்டுத் தந்தையரும், விளக்கவுரையாளர்கள் பலரும், ஞானம் பற்றிய விவரிப்பை மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளுக்குச் சாற்றிக் கூறியுள்ளனர். பழைய சித்தைகளில் புதிய இரசத்தை ஊற்றி வைப்பது ஆபத்தானதாகும் என்பதை நினைவில் கொள்வது நலம்.

கத்தோலிக்கத் திருச்சபை, தன் வழிபாட்டில், பழ 8-இல் வரும் ஞானம் பற்றிய விவரிப்பை மரியாளுக்குச் சாற்றிக் கூறிவந்துள்ளது. இவள்தான் மனிதனான வார்த்தையானவர்க்குத் தாயாவதற்கு முன் - நித்தியத்தில் இறைவனது எண்ணத்தில் முன்னேற்பாடாய் உண்டானவள். இவளை ஞானத்திற்கு இருப்பிடமே! என்று வாழ்த்திப் பெருமைகொள்கிறது திருச்சபை. இந்த வழிபாட்டு முறையை அதற்குரிய முறையில் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், மிகைப்படுத்தக் கூடாது.

ஞ இந்நூலின் பல வாக்குகளில், குறிப்பாகக் காலத்தால் முந்திய சாலமோனின் இரு பகுதிகளிலும் III, IV காணப்படும் இவ்வுலகியல் சார்ந்த போக்கும், மனிதப் பண்பும், இலக்கியத்தொனியும் கிறிஸ்தவர்களுக்கு ஓரளவு அதிர்ச்சியைக் கொடுக்கலாம். இந்நூல் வரைக்குட்பட்ட முன்னோக்குடையது; சொந்த வெற்றியையும், தன்னலத்தையும் பாதுகாக்கும் குறிக்கோளுடையது; ஒழுக்க வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது. எளியவர்களுக்கு அன்பு காட்டுவதற்குக்கூட (28:27; 30:10) சுயநலமும் சொந்த வெற்றியும் போதிய தூண்டு காரணங்களாகக் காட்டப்படுவது நமக்கு ஓர் இடறலாகத் தோன்றலாம். குறிப்பாகச் செயல்வினைக் கோட்பாடு பற்றிய போதகம் தாறுமாறானதாகத் தோன்றலாம்.

நம்மிடையே நிலவும் மதிப்பீடுகளின் அமைப்பு, பழமொழி மதிப்பீடுகளிலிருந்து அதிகம் வேறுபட்டதன்று. நேர்மை, உழைப்பு, மட்டுடைமை, சிக்கனம், விவேகம் ஆகியவை சமூக நற்பண்புகளாகக் கருதப்படுகின்றன. நாம் நல்ல கல்வி பெற்றால், நேர்மையானதைச் செய்தால், பூசல்களைத் தவிர்த்தால், கடினமாக உழைத்தால், ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்றால் நல்ல மனைவியை மணந்து பெருமை தரும்

பிள்ளைகளைப்பெற்றால், நேர்மையாகச் சிந்தித்தால் - மகிழ்ச்சியாகவும் இன்பமாகவும் இருந்தால் - அப்போது நாம் வாழ்வில் வெற்றியடைந்தவர்கள் என்று நம்புகிறோம். இத்தகைய வாழ்வமைப்பில் மனநிறைவு அடைகிறோம். இந்த நம்பிக்கைகளை நாம் எடுத்துக்கூறும் விதம், ஞானிகளுடையதைப் போன்று, அவ்வளவு பாடல் நயமும், பல தடவை இறைவனைச் சுட்டும் தன்மையும் இல்லாமல் போகலாம். ஆனால், இரண்டும் ஒத்த தன்மை கொண்டவையே.

இவ்வுலகில் இறைவனது நீதி செயல்படுவது பற்றிய ஞானியின் போதகமும், எதிர்பார்ப்பும் முற்றிலும் தவறுடையவையல்ல என்றாலும், மிகவும் எளிதான முதிராத தன்மையையுடையன. இத்தகைய இலக்கியம், எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இறை ஏவுதல் பெற்றதாக இருக்க முடியும் என்று ஐயம் எழலாம்.

ஒருவனது மகிழ்ச்சி - செல்வத்திலும், பிறர் மதிப்பிலும், நீடிய வாழ்விலும் அடங்கியிருப்பதாக இஸ்ராயேல் ஞானிகள் கருதினர். இந்தப் பழைய ஏற்பாட்டு முன்னோக்கை நிறை சமன்பாடுடையதாக்க புதிய ஏற்பாட்டு வெளிப்பாடு தேவையாய் இருந்தது. கிறிஸ்துவின் போதனைப்படி, இறையரசில் கொள்ளும் நித்திய வாழ்வில் மனிதனது இறுதியான நிறை மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. வான் வீட்டில் தன் சொத்தைச் சேர்த்து வைக்கும்படி கிறிஸ்தவனுக்குப் படிப்பிக்கப்படுகிறது (மத் 6:20). கிறிஸ்தவனின் மேன்மை, இறையரசுக்காக இவ்வுலகில் தனது வாழ்வையும் பலியிடத்தயாராய் இருப்பதில் அடங்கியிருக்கிறது (லூக் 17:33). ஆயினும், அவன் இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களைப் போற்றவும் அன்பு செய்யவும் வேண்டும். பழமொழி நூலில் காணப்படும் சமயம் சார்ந்த மனிதப்பற்றுக்கோட்பாடு பல குறைகளைக் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவன் இயற்கை கடந்த கதியைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும், இயற்கை சார்ந்த, மனிதப் பண்புடைய மதிப்பீடுகளை வெறுத்து ஒதுக்கக் கூடாது என்று இந்நூல் போதிக்கிறது.

இந்நூலின் ஆசிரியர், செயல்வினைப்பயன் கோட்பாட்டிற்கு விடையாக நித்திய சன்மானம் பற்றிக் கவலைப்படவில்லை என்று தெரிகிறது. இஃது அவரது குறுகிய மனப்போக்கையும், இப்பிரச்சனை பற்றிய இறை வெளிப்பாட்டைப் பெற இஸ்ராயேல் வெகுதூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. மறுபுறத்தில், இறைவனது ஞானம் பற்றிய பகுதிகள் - குறிப்பாக 8:22-31 என்ற பகுதி, இறைத்தன்மையைப் பற்றிய உயர்ந்த கருத்தை எடுத்துக் கூறுகிறது. ஆசிரியர், தான் அறியாமலே, இறை ஏவுதலின்கீழ், ஞானத்திற்கு ஆட்தன்மை அளிக்கும் கருத்து வழியாக, சாலமோனைவிடப் பெரிய ஒருவரது வருகைக்குத் தயார் செய்கிறார் (மத் 12:42) எனலாம். மனிதனான - நித்திய வார்த்தையே இறைஞானம் (1 கொரி: 1:30).

நற்செய்திப் போதகம் இந்நூலின் போதகத்தைக் கடந்து செல்கிறது. நிறைவு செய்கிறது. இந்நூலின் பல வாக்குகள் இயேசுவின் போதனையை முன்னறிவிக்கின்றன. உண்மையான இறைப்பற்றுக்கு அடிப்படையாக, பத்துக்கற்பனை ஒழுக்கவியல் அமைய வேண்டியதின் அவசியத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. நேர்மை, விவேகம், அறிவு சார்ந்த பண்புகள் ஆகியவை இல்லாமல் ஒருவர் பக்தியாகவோ, இறைப்பற்றுடையவராகவோ இருக்க முடியாது. ஆகையால், இந்நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில் வியப்பொன்றுமில்லை. இந்நூலிலிருந்து வாக்குகள் புதிய ஏற்பாட்டில் பதினான்கு தரம் நேரடியாக எடுத்துக் கூறப்படுகின்றன; பலதடவை சுட்டிக்காட்டப் படுகின்றன.

பல நூற்றாண்டு அனுபவச் சிந்தனை வளர்ச்சியால் வடித்தெடுத்த நூலாகும் இது. தனிப்பட்ட நீதிமொழிகளை இரத்தினச் சுருக்கமாக

அதிகம் கொண்டுள்ளது. ஆகவே, ஒரே மூச்சில் அல்லது தொடர்ந்து இந்நூலை வாசிக்கக்கூடாது. இந்நூலை உணர்ந்து சிறிது சிறிதாகப் படிக்க வேண்டும்; பதம் பார்க்க வேண்டும்; சுவைக்க வேண்டும்; மெதுவாகச் சீரணித்துக் கிரகிக்க வேண்டும்.

**நீரூற்று நகர் (CITY OF WATERS)**

இஃது இரபா நகருக்கு மற்றொரு பெயர் ஆகும் (2 சாமு 12:27).

**நீரோ (NERO)**

நீரோ கிளாதியு சீசர் துருசு என்பது நீரோவின் முழுப்பெயர். இவர் கிளாதியு என்பவருக்குப்பின் அரசனானார். இவருடைய தாய் அக்ரிப்பினா அகுஸ்துவின் பேத்தியும், கலிகுலாவின் சகோதரியும், கிளாதியுவின் மனைவியும் ஆவாள். இவளுக்கும் இவளுடைய முந்தைய கணவன் தொமித்தியு அகெனோபார்புசு என்பவனுக்கும் பிறந்த குழந்தைதான் நீரோ (கி.பி. 37). கி.பி. 50-இல் அக்ரிப்பினா கிளாதியுவிடம் தன் மகன் நீரோவை, அவனுடைய மகன் பிரிட்டானிக்குவின் பாதுகாப்பாளராகத் தத்து எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினாள். நான்கு ஆண்டுகளுக்குப் பின் கிளாதியு இறந்தபின், நீரோ உரோமைக் குடியரசின் ஆட்சிப் பேரவையால் பேரரசனாக முடி சூட்டப்பட்டான். நீரோவின் அரசு அவனுடைய தாயாலும், அவனுடைய ஆசிரியர் செனேக்கா என்பவனாலும், புரூசு என்பவனாலும் ஆளப்பட்டு வந்தது. கி.பி. 55-இல் பிரிட்டானிக்கு கொல்லப்பட்டான். கி.பி. 59-இல், செனேக்கா மற்றும் அவனுடைய மனைவி போப்பேயா ஆகியோரின் ஆலோசனைப் படி நீரோ தன் தாயைக் கொன்றான். மூன்று ஆண்டுகளுக்குப்பின் புரூசு இறந்தான். செனேக்கா ஓய்வு பெற்றபின், அவனுடைய மனைவி போப்பேயா என்பவளை மணமுடிக்க விரும்பி, நீரோ தன் மனைவியை விவாகரத்து செய்தான்.

பின் நீரோ தேர்ப்பந்தயங்களிலும், பற்பல கேளிக்கைகளிலும் கவனத்தைச் செலுத்தினான். இவன் கிரேக்க மொழிக் கவிதையிலும், இசையிலும் ஆர்வமுள்ளவனாயினும் இவனிடம் திறமைகள் இல்லை. இவனுடைய ஆடம்பரச் செலவு நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்தது.

கி.பி. 64-இல் சூலைமாதம் 19-ஆம் நாள் நடந்த தீ விபத்தில் உரோமை நகரின் கால்பாகம் அழிந்து விட்டது. இது நீரோ தன் அரண்மனைக்கு இடம் கிடைக்கச் செய்த வேலை என்று கூறப்பட்டது. ஆனால், நீரோ பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் சுமத்திவிட்டான். கிறிஸ்தவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சிலர் மிருகங்களின் தோலில் கட்டப்பட்டு நாய்களால் தாக்கப்பட்டனர். வேறு சிலர், சிலுவையில் அறையப்பட்டனர். பின்னும் சிலர் தைபர் நதியின் மேற்கிலுள்ள நீரோவின் தோட்டத்தில் எரிக்கப்பட்டனர். செனேக்கா, நீரோவின் தவறுகளைச் சுட்டிக் காட்டியதால் கொல்லப்பட்டான்.

அப்போஸ்தலர்கள் பேதுருவும், பவுலும் இந்த வேத கலாபனையின்போது இறந்ததாக உரோமைக் கிளமந்து தம் கடிதத்தில் எழுதுகின்றார். இவர்கள் இருவரும் உரோமை நகரில் வேத சாட்சிகளாக மரித்திருக்க வேண்டும். பெண்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டதாகத் தாசித்து குறிப்பிடுகின்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின், ஓய்வு பெற்ற பேத்து திராசெயா அரசனைக் குறை கூறியதால் கொல்லப் பட்டார்.

இதன்பின் நீரோ, கிரேக்க நாட்டுக்கு நீண்ட சுற்றுலாச் சென்றான் (67-68). அங்கு அவன் பல போட்டிகளில் 18,000 விருதுகளை வென்றான். இச்சமயத்தில் நாட்டின் நிலை சீரழியத் தொடங்கியது. நீரோ ஜெர்மனி நாட்டின் தளபதியையும், இரு ஆளுநர்களையும் தற்கொலை செய்து கொள்ளும்படி செய்தான். ஆனால் 68-இல் ஸ்பெயின், கால், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் கலகம் தொடங்கியது. கிரேக்க

நாட்டிலிருந்து நீரோ உரோமைக்குத் திரும்பியபோது அவன் உயிருக்காக நாட்டைவிட்டு ஓட வேண்டியிருந்தது; ஜுன் 6-ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டான். இவனுக்குப் பின் பலர் அரசனானார்கள். ஆனால், வெஸ்பாசியன் அரசனான பின்தான் நிலையான அரசு நிறுவப்பட்டது.

பேரவை நாட்டின் எதிரியாக நீரோவை அறிவித்திருந்ததால் அவனைத் தெய்வமாக்கவில்லை. அவனை அரச பரம்பரையினரும், கிறிஸ்துவர்களும் வெறுத்தனர். இப்பொழுதும் சிலர் அவன் இன்னும் இறக்கவில்லை எனக் கருதினார்கள். கி.பி. 69-இல் ஒரு போலி நீரோ தோன்றினான்; ஆனால், கொல்லப்பட்டான். 88-இல் வேறொருவன் தான்தான் நீரோ என்று கூறிக்கொண்டு வந்தான். அவனும் கொலை செய்யப்பட்டான்.

கிறிஸ்துவர்களைப் பொருத்தமட்டில், அவர்களை நீரோ கொடுமைப்படுத்தினான். நீரோவின் அரச ஆணை இதற்குக் காரணமாக இருந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் சம்பந்தமில்லாத கொடுமைகள், அவ்வாறு ஒரு சட்டம் இருந்ததை நிரூபிக்கவில்லை. இக்கொடுமைகளால்தான் அப்போஸ்தலர்கள் சொன்னவை எல்லாம் நூல்வடிவம் பெற அவசியமாயின. மாற்கு நற்செய்தி இக்காலத்தில்தான் எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது. இக்காலத்தில்தான் கிறிஸ்துவ, யூத மதங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது.

**நீரோடை (WATER COURSE)**

வறண்ட ஓடையை வான்மழை நீரோடையாக மாற்றுவதுபோல் சீயோனின் அடிமை நிலை மாறும் (சங் 126:4). எகிப்துக்கு உவமையான கேதுரு மரக்கிளைகளும் கொம்புகளும் நாடெங்கும் ஓடைகளில் முறிந்து கிடக்கும் (எசே 31:12). எகிப்தின் இரத்தத்தால் நீரோடை நிரம்பி வழியும் (32:6). இவற்றில் எல்லாம் நீரோடையின் முந்தைய வறட்சி நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

**நீர் (WATER)**

1. முதன்முதலில், நீர் வாழ்வின் ஊற்றும் பலமும் ஆகும்; செடிகொடிகள், விலங்குகள் உயிரோடிருப்பதற்குத் தேவையான ஆதாரங்களில் முதன்மையானதாகும். அப்பத்தோடு, நீர் மனித வாழ்விற்கு மிக இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகும் (காண். ஆதி 21:14; யாத் 23:25). அஃது இல்லையேல், மிகக்கொடிய நிலை ஏற்பட்டுச் சாவில் முடியலாம் (எசா 3:1; எசே 4:17; காண். எசா 30:20). அஃது இல்லையேல் நிலவுலகு வறண்ட பாலையாகும், பசியும் தாகமும் நிறைந்த நாடாகும்; மனிதனும் விலங்குகளும் மடிவது திண்ணம். அழிக்கும் நீர்ப்பெருக்கு பூமியை ஆக்கிரமித்து உயிருள்ளவற்றையெல்லாம் விழுங்கி அழிக்கும். குளிப்பதற்கும், துவைப்பதற்கும், சடங்குத் தூய்மையிலும் நீர் பரவலாகப் பயன்படுகிறது. வீட்டுப்பழக்கத்திலிருந்து வரும் சடங்கு முழுக்கில், நீர், அன்றாட வாழ்வில் ஏற்படும் கறைகளிலிருந்து மனிதர்களையும் பொருள்களையும் சுத்தம் செய்கிறது. இவ்வாறு நீர், உயிரளிக்கும் அளவிலோ அழிக்கும் அளவிலோ, எப்போதும் தூய்மைப்படுத்தும் தன்மையுடையது. இந்த அடிப்படையில் உடன்படிக்கை மக்களின் வாழ்விலும் வரலாற்றிலும் நெருங்கிய விதத்தில் கலந்துள்ளது.

2. **இயற்பியல் கூறுகள்:** பாலஸ்தீனம் பெருமளவிற்கு மழைநீரையே நம்பியிருந்தது. மெசபொத்தாமியாவும், எகிப்தும் பள்ளத்தாக்குகளோடு கூடிய பெரும் ஆறுகளால் வளம் பெற்றன. ஆனால், பாலஸ்தீனத்தில் அப்படியில்லை. ஆண்டு மழையளவில் சிறிது வேறுபட்டாலும் அது பஞ்சத்தைக் கொணரும். உண்மையில் விவிலியக்காலம் முழுவதும் பஞ்சம் ஒரு பெரிய பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது (ஆதி 26:1; 1 அர 7:1).

சாதாரண ஆண்டுளில் கோடையின் வறட்சியால் பிரிக்கப்பட்ட (சங் 32:4) குளிர்காலம் மற்றும் இலையுதிர்காலம் என்ற இரு

மழைப்பருவங்கள் உண்டு. பாலஸ்தீனம் முழுவதிலும் பெய்யும் மழையின் அளவு பெரிதும் வேறுபட்டது. கடற்கரைச்சமவெளிகளில் ஓர் ஆண்டுக்கு ஏறக்குறைய 56 செ.மீ. மழைபெய்தது. பொதுவாக, பாலஸ்தீனத்தின் வடக்குப்பகுதி, மேற்குப்பகுதி, கடலை நோக்கிய மலைப்பகுதிகள் ஆகியவை அதிக மழை நீரைப் பெற்றன. தென் பாலஸ்தீனம், குறிப்பாகச், சாக்கடலைச் சுற்றிய பகுதிகள், பெருமளவிற்குப் பாலைவனமே ஆகும்.

பாலஸ்தீனத்தில் பள்ளத்தாக்குகளும் பெரிய ஆறுகளும் இல்லாதது மட்டுமன்று, நீரைத்தேக்கி வைக்கப் போதிய இயற்கை வசதிகளும் இல்லை. ஆகையால், அதன் குடிமக்கள் செயற்கை முறையில் நீரைத்தேக்கி வைத்துக்கொண்டனர். கிணறுகள் ஆழ்ந்த குழிகள் ஆகும் (ஆதி 21:30; 29:2-8; யோவா 4:11-12). வருடமுழுவதும் நீர் கிடைப்பதற்காக, இக்குழிகள் தரை நீர்மட்டம் வரை ஆழமாகத் தோண்டப்படும். பொதுவாகக் கிணறுகள் கற்சுவர்களைக் கொண்டிருக்கும். இது தரைக்குமேல் பாதுகாப்பாகவும், தரைக்கடியில் தண்ணீர் ஓடிவிடாமல் தடுக்கவும் பயன்பட்டது. பள்ளங்களும் சிறு நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டன (2 நாள் 26:10; எரே 2:13). இவற்றில் வீட்டுக்கூரை மீதிருந்து மழை நீரையும், தரையிலிருந்து நீரையும் நிரப்பித்தேக்கி வைத்துக்கொண்டனர். பொதுவாகக் கிணறுகளும் பள்ளங்களும், நீர் நீராவியாகப் போவதைத் தடுக்க, மூடப்பட்டிருந்தன. குளங்கள், நீரூற்றுகளைச் சுற்றிச் சுவர் எழுப்பி அமைக்கப்பட்டன. இவை பொதுவாக மூடப்படவில்லை (2 சாமு 2:13; எசா 7:3; யோவா 5:2-7).

### 3. நீர் இறைவனின் படைப்புகளில் ஒன்று:

**அ. அண்டவியல்:** தொல் பழமையான காலத்திலிருந்தே, பழங்கால மக்கள், நீர் பூமிக்கு மேலும் கீழும் உள்ளது என்பதை அறிந்திருக்கின்றனர். மழை நீராக அதைவானிலிருந்து பெறலாம். விரும்பினால் ஆழமாகத் தோண்டி பூமியின் ஆழத்திலிருந்தும் பெறலாம் பழம் மேற்காசியச் சமூகங்களில், இந்த முரண்தோற்றம், கடவுளுக்கும், குழப்பத்தின் பறவை நாகத்திற்குமிடையே நடந்த உலகின் தொடக்க நிலைக் காலத்துக்குரிய போர் பற்றிய கதையால் விளக்கப்பட்டது. பாபிலோனியாவில், வெற்றி பெற்ற மார்துக்குக் கடவுள் தனது துணைவி தியமாத்தின் உடலைப் பிளந்து, அந்த உடலிலிருந்து பூமியைப் படைத்தார்; இப்பூமியை விண்ணக நீர்த்திரளுக்கும், பாதாள நீர்த்திரளுக்கும் இடையிலுள்ள குழப்பத்தின் வயிற்றில் வைத்தார் என்ற கதையுண்டு.

ஆ. உலகத்தோற்றம் அல்லது அண்டப் பிறப்புப் பற்றிய இந்த அடிப்படைக் கோட்பாட்டைப் பழைய ஏற்பாடு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இக்கருத்துக்கள் இஸ்ராயேலின் இறையொருமைக் கோட்பாட்டுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன (ஆதி 1:1-10; 7:11; காண்க. யாத் 20:4; உப 4:18; 2 சாமு 22:14-17; யோபு 26:5-13; சங் 104:3-6; 136:6; 148:4-7; எரே 10:11-13; ஆமோ 9:5-6; யோனா 2:2-6). இறைவனே உலக முழுமையின் தலைவர்; தம் விருப்பம்போல் நீரைப் பயன்படுத்துகிறார். ஆகவே, மனுகுலத்தில் ஊழ் அவரது கையில் உள்ளது. பழங்காலப் பாபிலோனிய அண்டப்பிறப்புப் பற்றிய கோட்பாட்டைப் பின்பற்றி, இஸ்ராயேலர் நீரை இரு தெளிவான வேறுபட்ட தொகுப்புகளாகப் பிரித்தனர். "மேலுள்ள நீர்" அல்லது அண்ட நீரைக் கடினத்தளம் எனக் கருதப்பட்ட வானம் தாங்கிநின்றது (ஆதி 1:7; சங் 148:4; தானி 3:60; காண்க. திருவெளி 4:6). கடவுள் வானத்தின் மதகுகளைத் திறக்க, நீர் மழையாக அல்லது இரவில் பனியாகப் பெய்ய அனுமதிக்கப் படுகின்றது (ஆதி 7:11; 8:2; எசா 24:18; மலா 3:10 யோபு 29:19; உ.ச. 5:2; யாத் 16:13). நீர் படிகம்போன்று வானத்தில் ஊடுருவிப் பார்க்கக்கூடியதால் வானம் நீல நிறமாக உள்ளது. வானத்திற்கு மேல் நீல நிற அரியணையில்

இறைவன் வீற்றிருப்பதாக எசே 1:26 சித்தரிக்கிறது. ஊற்றுகளும் ஆறுகளும், மழைநீரால் அல்லாமல், நிலவுலகில் நிறுவப்பட்டிருக்கும் மாபெரும் நீர்த்தேக்கத்திலிருந்து ஓடுகின்றன. இத்தேக்கம் "வானத்திற்குக் கீழுள்ள நீர்" என்றும் (ஆதி 1:7), "பாதளம்" என்றும் (ஆதி 7:11; உப 8:7; 33:13; எசே 31:4) அழைக்கப்படுகிறது.

இந்த அமைப்பை நிறுவியவராகிய கடவுள்–நீருக்குத் தலைவர் ஆவார். அவர் தம் விருப்பம்போல், மேலுள்ள நீரையும் கீழுள்ள நீரையும் கட்டுப்படுத்துகிறார் அல்லது விடுவிக்கிறார்; அதன் விளைவாக வறட்சியை அல்லது வெள்ளத்தை உண்டு பண்ணுகிறார் (யோபு 12:15). "மண்முகத்தே மழையைப் பொழிபவர் அவரே" (யோபு 5:10; சங் 104: 10:16). இந்த நீர் கடவுளிடமிருந்தே வருகிறது; மனிதரிடமிருந்து அன்று (மீக் 5:6; காண்க. யோபு 38: 22-28). மழைக்கு அவர் கட்டளை இட்டுள்ளார் (யோபு 28:26). ஏற்ற காலத்தில் மழையைப் பெய்யச் செய்கிறார் (லேவி 26:4; உப 28:13). மழை பிந்திப் பெய்தால் விதைப்பது தள்ளிப்போடப்படும். மழைபெய்வது ஏற்ற காலத்திற்கு முன்பே நின்று விட்டால், அறுவடை இல்லாமல் போகும் (ஆமோ 4:7). இதற்கு மாறாக, தக்க காலத்தில் மனிதருக்கு முன் மாரியும் பின்மாரியும் இறைவன் அருள தயைகூரும்போது (உப 11:14; எரே 5:24), நாட்டின் செழிப்பு உறுதி செய்யப்படுகிறது (எசா 30:23 தொ).

அதேபோல் தம் விருப்பத்திற்கேற்ப இறைவன் பாதாளத்தையும் ஆளுகின்றார் (சங் 135:6; பழ 3:19 தொ). அதை அவர் வற்றச்செய்தால் ஊற்றுகளும், ஆறுகளும் வறண்டு போகின்றன (ஆமோ 7:4; எசா 44:27; எசே 31:15). அதனால் நாடு பாழாகிறது. பாதாளத்தின் மதகுகளை அவர்திறந்து விடும்போது ஆறுகளில் நீர் ஓடுகிறது. அவற்றின் கரைகளில் தாவரங்கள் செழிப்புற வளர்கின்றன (எண் 24:6; சங் 1:3; எசே 19:10). மழைநீர் இல்லாதபோது இந்தத் தரைநீர் மிகவும் அவசியமானதாகும் (எசே 17:8). பாலைவனப் பகுதிகளில் ஊற்றுகளும் கிணறுகளும் மட்டுமே விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தாகம் தீர்க்கும் மூலங்களாகும் (ஆதி 16:14; யாத் 15:23.27). இவற்றைக் கைப்பற்றக் கடுமையான போராட்டங்கள் நிகழ்வதும் உண்டு (ஆதி 21:25; 26:20 தொ; எசா 15:19).

நீரின்மேல் இறைவன் கொண்டிருக்கும் வியத்தகு ஆதிக்கத்தை சங் 104 நன்கு சுருக்கமாக விவரிக்கிறது. அவரே மேலுள்ள நீரையும் (104:3), பாதாளத்திலுள்ள நீரையும் (104:6) படைத்தவர். அவற்றின் ஓட்டத்தை அவர் கட்டுப்படுத்துகிறார் (104:7தொ). பூவுலகை நீர் மீண்டும் மூடிவிடாதபடி, அதற்கு எல்லை வகுத்துள்ளார் (104:9). அவர் ஊற்றுகளிலிருந்து நீர்சுரக்கச் செய்கிறார் (104:10); மழை பெய்யச் செய்கிறார் (104:13). அதன் விளைவாகப் பூமி செழிப்புறுகிறது. மனித உள்ளம் மகிழ்ச்சியடைகின்றது (104:11-18).

**4. இறைமக்களின் வரலாற்றில் நீர்:**

**அ. நீரும் இம்மைக்குரிய முறைமைக் கைம்மாறும்:** இறைவன் தம் விருப்பம் போல் நீரை அளித்தாலும் மறுத்தாலும், இதை அவர் தன்னிச்சையாகச் செய்வதில்லை. அவருடைய மக்களின் நடத்தைக்கு ஏற்றவாறு செய்கிறார். உடன்படிக்கைக்கு அவர்கள் பிரமாணிக்கமாய் இருப்பது, இல்லாததைப் பொருத்து அவர்களுக்கு இறைவன் நீரைக் கொடுக்கிறார் அல்லது மறுக்கிறார். இஸ்ராயேலர் இறைச்சட்டத்துக்கு ஏற்றவாறு வாழும்போது, அவரது குரலுக்குக் கீழ்ப்படியும்போது, இறைவன் தக்க காலத்தில் அவர்களுக்கு மழையைப் பொழிகிறார் (லேவி 26:3தொ.10: உப 28:1.12). இறைவனுக்குப் பிரமாணிக்கமாக ஊழியம் செய்பவருக்கு, நீர் இறை ஆசீரின் விளைவாகவும் அடையாளமாகவும் உள்ளது (ஆதி 27:28; சங் 133:3). இதற்கு மாறாக, இஸ்ராயேல் இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாமல் இருந்தால், "வானத்தை இரும்பைப் போன்றும்

நிலத்தை வெண்கலத்தைப் போன்றும் இறுகச் செய்து" (லேவி 26:19; உப 28:23) அவர்கள் தாங்கள் குற்றத்தை உணர்ந்து மனந்திரும்பும்படி (ஆமோ 4:7) அவர்களைத் தண்டிக்கிறார். ஆகவே, வறட்சி இறைப்பற்றற்றோர்பால் விழும் இறைச்சாபத்தின் விளைவாகும் (எசா 5:13; 19:5தொ; எசே 4:16தொ; 31:15). ஆகாபு காலத்தில் இஸ்ராயேலர் "ஆண்டவரின் கட்டளைகளைப் புறக்கணித்துப் பாகால் பின்னே சென்றபோது" இத்தகைய அழிவு நாட்டைப் பாழ்படுத்தியது (1 அர 18:18).

ஆ. **அச்சுறுத்தும் நீர்:** நீர் வெறும் உயிரின் ஆற்றல் மட்டுமன்று. கடல்நீர் தன் தொடர்ந்த அமைதியற்ற நிலையால் பேய்களின் அமைதியற்ற தன்மையையும், அவற்றின் கசப்பால் செயோலின் பாழ் நிலையையும் பிரதிபலிக்கின்றது. மேற்குக்காற்று திடீரென்று பொங்கி எழுந்து, புயலில் பூமியையும் உயிர் வாழ்பவைகளையும் அடித்துச்செல்வது (யோபு 12:15; 40:23). எதிர்பாராமல் மனிதன்மேல் விழும் துன்பத்தையும் (சங் 124), நீதிமானுக்கு எதிராக அவருடைய எதிரிகள் செய்யும் சூழ்ச்சிகளையும் (சங் 18:5 தொ. 17; 42:8; 71:20; 144:7) அடையாளமாக உணர்த்துகிறது. தீயவர்கள் தாங்கள் சூழ்ச்சியால் நீதிமானைப் பாதாளத்துக்கடியில் இழுத்துச் செல்ல முயல்கின்றனர் (சங் 32:25; 69:2தொ). இந்த அழிவுகளிலிருந்து நீதிமானை இறைவன் காக்கிறார் (சங் 32:6; காண்க. உ.ச 8:6தொ). அதேபோல் தீயோர் பிறர் அன்புக்கு மாறாக நடந்துகொள்வதற்கு ஏற்ற நேர்மையான தண்டனையாக (யோபு 22:11) அழிவுப் பெருவெள்ளத்தை அவர்கள்மேல் இறைவன் எளிதில் வரச்செய்கிறார். பெரிய ஆறுகளின் அழிக்கும் பெரும் வெள்ளத்தை, சிறுநாடுகளை அழித்து மறைந்து போகச் செய்யும் அரசுகளின் ஆற்றலை உணர்த்தும் அடையாளமாகக் காண்கின்றனர் இறைவாக்கினர்கள். அசீரிய ஆதிக்கம் யூப்பிரத்தீசுக்கும் (எசா 8:7), எகிப்தின் ஆதிக்கம் நைல் நதிக்கும் (எரே 46:7தொ) ஒப்பிடப்படுகின்றன. இறைநம்பிகை கொள்ளாத தம் மக்களின் மேலும் (எசா 8:6தொ), இஸ்ராயேலின் பரம்பரையான எதிரிகள் மேலும் (எரே 47:1தொ) இந்த ஆறுகளைத் தண்டனையாக இறைவன் அனுப்பப்போகிறார்.

படைப்பவரின் கரங்களின் இந்தக்கொடிய தண்டனை குருட்டுத் தன்மையுடைதன்று. இறைப் பற்றற்ற உலகை அது விழுங்கினாலும் (2 பேதுரு 2:5), பெருவெள்ளம் நீதிமானாகிய நோவாவைத் தப்பவிடுகிறது (ஞானம் 10:4). செங்கடலின் (நாணல் கடலின்) நீர் இறைவனின் மக்களையும் சிலைகளின் மக்களையும் வேறுபடுத்திச் செயல்படுகிறது (ஞானம் 10:18தொ). அச்சுறுத்தும் நீர்கள் நெருப்பால் வரும் இறுதித் தீர்ப்பை நோக்கி முன்கூட்டிச் செயல்படுகின்றன (2 பேதுரு 3:5 தொ; காண்க. சங் 29:10; லூக் 3:16தொ). இந்த அழிவுக்குப்பின் அவை ஒரு புதிய பூமியை விட்டுச்செல்கின்றன (ஆதி 8:11).

இ. சுத்திசெய்யும் நீர்: சினத்தின் நீர் என்ற கருத்து நீரின் நலம் அளிக்கும் மற்றொரு கருத்தோடு இணைக்கப்படுகிறது. நீர் உயிர் அளிக்கமட்டுமன்று, நீராட்டவும், கழுவவும் பயன்படுகிறது (காண்க.எசே 16:4-9; 23:40). விருந்தோம்பலின் ஒரு முதற்படியான சடங்கு, விருந்தினரின் கால்களில் பயணத்தால் படிந்துள்ள தூசியைத் துடைக்க, அவரது கால்களைக் கழுவுவதாகும் (ஆதி 18:4; 19:2; காண்க. லூக் 7:44; 1 திமொ 5:10). தாம் சாவதற்கு முந்திய இரவில், இயேசு, தாழ்ச்சிக்கும் கிறிஸ்தவ அன்புக்கும் எடுத்துக்காட்டான அடையாளமாக, அவரே ஊழியர் செய்யும் இந்தப் பணியைச் செய்யத் திருவுளமானார் (யோவா 13:2-5).

உடலைச் சுத்திசெய்யப் பயன்படும் நீர், ஒழுக்கத்தூய்மையின் அடையாளமாகவும் பல தடவை பயன்படுகிறது. மக்கள், தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும் குறிப்பிட்ட தீமையைச் செய்யவில்லை என்றும் காட்டத் தாங்கள்

கைகளைக் கழுவுவர் (சங் 26:6; காண்க. மத் 27:24). மனிதன் தன் பாவங்களை விட்டுவிட்டு மனந்திரும்புதல், புழுதி படிந்த மனிதன் குளித்துத் தன்னைச்சுத்தி செய்வதற்கு ஒப்பிடப்படுகின்றது (எசா 1:16). இறைவன் பாவியின் பாவங்களை மன்னிக்கும்போது அவனைக் கழுவுகின்றார் (சங் 51:2). பெருவெள்ளத்தால் இறைப்பற்றற்றோரை அழித்தபோது இறைவன் பூமியைச் சுத்தி செய்தார் (காண்க. 1 பேதுரு 3:20 தொ).

**ஈ. சடங்குமுறையில்:** யூதச்சடங்குமுறை நீரால் சுத்தி செய்யப்படுவதற்குப் பலதரம் வாய்ப்பளிக்கிறது. பெரியகுரு தன் பதவிக்குரிய ஆடைகளை அணிவதற்குமுன் குளித்துத் தயார் செய்ய வேண்டும் (யாத் 29:4; 40:12). பெரிய பாவநீக்க நாளில் நீராடிய பின்னரே அவர் புனித ஆடைகளை அணியலாம் (லேவி 16:4-24). செத்த உடலைத் தொட்டவன் நீரில் மூழ்கிச் சுத்தி செய்ய வேண்டும் (11:40; 17:15தொ). தொழு நோயிலிருந்து தூய்மைப்படவும் (14:8தொ), பாலினத்தீட்டிலிருந்து தூய்மைபெறவும் (லேவி 15) நீரால் சுத்தி செய்யப்பட வேண்டும். இந்த உடல் சார்ந்த சுத்திகரச் சடங்குகள், மும்முறை புனிதரான இறைவனை அணுகிவர விரும்புகிறவனுக்கு அவசியமான இதயத்தின் உள்ளார்ந்த தூய்மையை அடையாளமாக உணர்த்துகின்றன. ஆனால், இவையெல்லாம் ஆன்மாவை ஆற்றலுள்ள விதத்தில் தூய்மைப்படுத்தச் சக்தியற்றவை. புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து சுத்திகரிப்பின் புதிய முறையை நிறுவுகிறார். கானாவூர் திருமணத்தில் நீரைத் (யோவா 2:6) திராட்சைரசமாக மாற்றியபோது இதை அடையாளமாக முன்னறிவித்தார். இஃது ஆவியையும் தூய்மைப்படுத்தி வாக்கையும் அடையாளப்படுத்துகிறது (15:3; காண்க. 13:10).

கசப்பு நீர், தீட்டுக்கழிக்கும் நீர், வாழ்வுதரும் நீர் முதலியவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழ்க் காண்க.

5. அ. இறுதிக்காலநீர்: இறைமக்கள் மீண்டும் அமைக்கப்படும் முன்னோக்கில், நீர் என்னும் கருத்து ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. சிதறிப்போனவர்களை ஒன்று கூட்டியபின், இறைவன் தூய நீரை அவர்கள் மேல் தெளிப்பார். அவர்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மை பெறுவர். அதன் விளைவாக, அவர்கள் இறைவனது நியமங்களைக் கடைப்பிடிப்பார்கள்; அவரது நீதித் தீர்ப்புகளைக் கவனமாய்ச் செயல்படுத்துவார்கள் (எசே 36:24-27). அப்போது சாபத்திற்கும் வறட்சிக்கும் முடிவு ஏற்படும். இறைவன் "ஏற்ற காலத்தில் மழையை வரச்செய்வார்" (34:26). இது செழிப்பை உறுதிப்படுத்தும் (36:29தொ). விதைகள் முளைத்துச் சமவெளிகள் நிறைந்த அறுவடையைக் கொடுக்கும் (எசா 30:23 தொ). இறைவனின் மக்கள் கொப்புளிக்கும் நீரூற்றுகளுக்கு இட்டுச் செல்லப்படுவர்; பசியும் தாகமும் எக்காலத்திற்கும் மறைந்து போகும் (எரே 31:9; எசா 49:10).

பாபிலோனுக்கு நாடு கடத்தலின் இறுதியில் யாத்திரைநிகழ்ச்சியின் நினைவு மீண்டும் அமைக்கப்படும் கருத்துகளோடு கலந்துள்ளது. நாடுகடத்தலிலிருந்து திரும்பி வருதல் உண்மையிலேயே ஒரு புதிய யாத்திரை நிகழ்ச்சியாகும். அப்போது மிகவும் வியத்தகு அருங்குறிகள் நிகழும். கடவுள் தமது மக்களின் தாகத்தைத் தீர்க்க, மோசேயின் கரங்களைக் கொண்டு பாறையிலிருந்து தண்ணீர் வரச்செய்தார் (யாத் 17:17; எண் 20:1-13; சங் 78:16.20; 114:8; எசா 48:21). இனி இறைவன் இவ்வருஞ்செயலைப் புதிப்பிப்பார் (எசா 43:20). ஆனால், இஃது எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாய் இருக்குமென்றால், அப்போது இறைவன் பாலைநிலத்தை வளமுள்ள நிலமாக்குவார் (41:17-20); தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும் (35:6-7).

புனித யாத்திரைகள் முடியும் இடமான எருசலேம் வற்றாத நீரூற்றுகளைக் கொண்டிருக்கும். ஆலயத்திலிருந்து ஓர் ஆறு

தோன்றி சாக்கடலில் சேரும். அதுபோகும் இடமெல்லாம் உயிரையும் நலத்தையும் வழங்கிச்செல்லும். அதன் கரைகளில் மரங்கள் செழிப்புற்று வளர்ந்து வியத்தகு பலனளிக்கும். இந்நிலை இன்பவனத்தின் மகிழ்ச்சி திரும்ப வந்ததுபோல் இருக்கும் (எசே 47:1-12; காண்க. ஆதி 2:10-14). இறைமக்கள் இந்த நீரில் தூய்மையையும் (செக் 13:1). உயிரையும் (யோவே 4:18; செக் 14:8), புனிதத்தையும் (சங் 46:5) கண்டடைவர்.

ஆ. இந்த இறுதிக்கால முன்னோக்கில் நீர் ஓர் அடையாளப் பொருளைப் பெறுகிறது. உண்மையில் இஸ்ராயேல் சடப்பொருள்களை உடைமையாகக் கொண்டிருப்பதில் தனது பார்வையை நிலைநிறுத்துவதில்லை. அது கணநேரம் காணும் நற்பேறு; உலகம் சார்ந்த செழிப்பு மட்டுமே. ஆனால், ஆலயத்திலிருந்து தோன்றுவதாக எசேக்கியேல் காணும் நீர். இறைவனின் வாழ்வளிக்கும் ஆற்றலை அடையாளமாக உணர்த்துகிறது. இந்த நீர் மெசியா காலத்தில் பொங்கி வழிந்து, மனிதர்கள் மிகுதியான பலனைக் கொண்டு வரச்செய்யப்போகிறது (எசே 47:12. காண்க. எரே 17:8; சங் 1:3; எசே 19:10 தொ). எசா 44:3 தொ-இல் நீர் இறைவனது ஆவியின் அடையாளமாகும். இந்த ஆவி பாலைவனத்தைப் பூத்துக்குலுங்கும் தோட்டமாக்கும். பிரமாணிக்கமற்ற மக்களை உண்மையான இஸ்ராயேலராக மாற்றும். பிற இடங்களில் இறைவாக்கு, நிலத்தைப் பலனுள்ளதாக்க வரும் மழைக்கு ஒப்பிடப்படுகிறது (எசா 55:10 தொ; காண்க. ஆமோ 8:11தொ). ஞானம் போதிக்கும் போதகம் வாழ்வளிக்கும் நீரைப் போன்றதாகும் (எசா 55:1; சீரா 15:3; 24:25-31). சுருக்கமாக, இறைவனே மனித வாழ்வின் ஊற்றாவார். அன்பிலும் பிர மாணிக்கத்திலும் வளர்ந்து விரிவடைய அவனுக்கு வலிமை அளிக்கிறார் (எரே 2:13; 17:8). மனிதன் இறைவனிடமிருந்து பிரிந்து செல்லும்போது, அவன் வறண்ட நீர்ப் பசையற்ற நிலமாவான்; சாவுக்கு ஊழின் வழியில் உந்தப்பட்டவனாவான் (சங் 143:6). ஆகவே, கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல், மனிதன் இறைவனுக்காக ஏங்கித் தவிக்கிறான் (சங் 42:1தொ). ஆனால், கடவுள் அவனோடு இருந்தால், இறைவனில் தனது வாழ்வின் ஊற்றைக் கொண்டிருக்கும் தோட்டம் போலாவான் மனிதன் (எசா 58:11).

6. புதிய ஏற்பாட்டில்:

**அ. வாழ்வளிக்கும் நீர்:** இறைவாக்கினர்கள் வாக்குறுதியளித்த வாழ்வளிக்கும் நீரைக் கொண்டுவர கிறிஸ்து வந்தார். மனிதர்கள், தங்களது உண்மையான வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தில் தங்களதுதாகத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய நீரை (1கொரி 10:4; யோவா 7:38; காண்க. யாத் 17:1-7), அடித்தவுடன் (யோவா 19:34) அவரது விலாவிலிருந்து நல்கிடும் பாறை- அவரே. அதே போல், புதிய இன்பவனமாகிய புதிய எருசலேமை நீர்பாய்ச்சி உயிரளிக்கும் ஆறு தோன்றும் (யோவா 7:37 தொ; திருவெளி 22:1.17; எசே 47:1-12) ஆலயமும் அவரே (யோவா 2:19 தொ). இந்தநீர் தூய ஆவியே ஆவார்; படைப்பவரான இறைவனின் வாழ்வளிக்கும் ஆற்றலாவார் (யோவா 7:39). ஆனால், யோவா 4:10-14-இல் கிறிஸ்து - ஞானம் (4:25) கொண்டு வந்த வாழ்வளிக்கும் போதனையை நீர் அடையாளப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எது எப்படியிருந்தாலும் எல்லாம் நிறைவேறும் நாளில், உயிருள்ள நீர் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் முடிவில்லா மகிழ்ச்சியின் அடையாளமாகிறது. அவர்கள் செம்மறியால் வளமுள்ள சமவெளிக்கு இட்டுச் செல்லப்படுவர் (திருவெளி 7:17; 21:6; காண்க. எசா 25:8; 49:10).

**ஆ. திருமுழுக்கு நீர்:**

கிறிஸ்துவத் திருமுழுக்கில், நீரின் அடையாளம் முழுப்பொருளைப் பெறுகிறது. தொடக்கத்திலிருந்து, நீர் அதன்

தூய்மைப்படுத்தும் தன்மையால், திருமுழுக்கில் பயன்படுத்தப்பட்டது. "மனமாற்றம் அடைவதற்காக" யோவான் நீரால் திருமுழுக்கு அளித்தார் (மத் 3:11 இணை). இதற்காக, முன்பு நாமானைத் தொழுநோயிலிருந்து தூய்மைப்படுத்திய (2 அர 5:10-14) யோர்தான் நீரையே யோவான் பயன்படுத்தினார். ஆனால், திருமுழுக்கு, உடல் தூய்மையைக் கொண்டு வரவில்லை; ஆன்மாவின், மனசாட்சியின் (1 பேதுரு 3:21) தூய்மையைக் கொண்டு வருகிறது. அது நமது பாவங்களிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்துகிறது (1 கொரி 6:11; எபே 5:26; எபி 10:22; அ.ப. 22:16). கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மீட்பளிக்கும் சக்தியை நமக்கு அளிக்கிறது (எபி 9:13 தொ; திருவெளி 7:14; 22:14).

திருமுழுக்கு நீரின் இந்த அடிப்படை அடையாளப் பொருளோடு, பவுல் மற்றொன்றையும் சேர்க்கிறார். திருமுழுக்குப் பெறுபவர் நீரில் மூழ்குதலும் அதிலிருந்து எழுதலும், கிறிஸ்துவோடு அடக்கம் செய்யப்படுதலையும் ஆன்மீக உயிர்ப்பையும் அடையாளப்படுத்துகிறது (உரோ 6:3-11). ஒருவேளை, திருமுழுக்கு நீரில் கடலின் உருவத்தைப் பவுல் காட்சி செய்திருக்கலாம். தீய சக்திகள் வாழும் இடமும் சாவின் அடையாளமும் ஆன கடலை, முன்பு யாவே செங்கடலை (நாணல் கடலை) வெற்றி கொள்கிறார் (1 கொரி 10:1தொ; காண்க. எசா 51:10). இறுதியாக இறைவனது ஆவியை நமக்கு அளிப்பதால் திருமுழுக்கு புதிய வாழ்வின் ஊற்றுமாகும். தண்ணீரைக் கொண்டு பலரைக் குணமாக்கியபோது (யோவா 9:6தொ; காண்க. 5:1-8), இதையே சுட்டிக்காட்ட கிறிஸ்து விரும்பியிருக்கலாம். திருமுழுக்கு "புதுப்பிறப்பைத்தரும் முழுக்காகவும், புத்துயிர் அளிக்கும் தூய ஆவியாகவும்" கருதப்படுகிறது (தீத் 3:5; காண்க. யோவா 3:5).

**இ. தூய ஆவி:** பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் பல, இறைவனது ஆவியை உருவகமாகக் குறிக்க நீரைப் பயன்படுத்துகின்றன (எசா 44:3-4; காண்க. எசே 36:25-26; யோவா 2:23; 3:1). மேலும், இறைவனைக் குறிக்கவே நீர் பயன்படுகிறது (எரே 2:13; 17:13). இன்னும் பல பகுதிகள், நீர்மங்களைக் குறிக்கும் சொற்களால் ஆவியைக் குறிக்கின்றன (எசே 39:29; யோவே 3:1-2; எசா44:3; பழ 1:23; எசா 32:15; யாத் 31:3; 35:31; உப 34:9). "நீர்த் திரள்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடி" படைப்பில் செயலாற்றுகிறார்.

உயிர் அளிக்கும் அல்லது தூய்மைப்படுத்தும் நீரோடு இறைவனது ஆவி தொடர்பு-படுத்தப்பட்டிருக்கலாம்; அல்லது இதைவிட ஆழமான மிகவும் இதிகாசத் தொடர்பு இறைவனது ஆவிக்கும் அண்ட நீருக்கும் இடையே இருந்திருக்கலாம் (காண்க. ஆதி 1:2; எசே 1:26).

இந்தச் சூழ்நிலைகளில் எல்லாம், புதிய ஏற்பாடு ஆவியைக் குறிக்க நீரைப்பயன் படுத்துகிறது. குறிப்பாக, லூக்கா நற்செய்தியும் அப்போஸ்தலர் பணியும் ஆவியைக் குறிக்க, நீர்மங்கள் தொடர்புடைய சொற்களைப் பயன்படுத்துகின்றன (லூக் 1:15.41.67; அ.ப. 2:4.17-18; 4:8; எபே 5:18).

புதிய ஏற்பாட்டில் நீர் அடையாளம் பற்றிய சிக்கலான கருத்து, யோவான் நற்செய்தியில் காணப்படுகிறது. அதில் பல நிகழ்ச்சிகளில் நீர் மைய இடம் வகிக்கிறது. இயேசு திருமுழுக்குப் பெற்ற நிகழ்ச்சியைத்தவிர (யோவா 1:26-33), யோவானுக்கே உரிய ஏழுநிகழ்ச்சிகளில் நீர் இடம் பெறுகிறது. அவை தண்ணீரைத் திராட்சைரசமாக மாற்றியது (2:7-9;4:46); நிக்கொதேமுவோடும் (3:5), சமாரியப் பெண்ணோடும் (4:7-15) இயேசுவின் உரையாடல்கள்; பெத்சதா குளத்தருகில் ஒருவருக்குக் குணமளித்தல் (5:3-7); கூடாரவிழாவின் போது இயேசுவின் அறிவிப்பு (7:38); சீடர்களின் பாதங்களைக் கழுவுதல் (13:5); இயேசுவின் விலாவிலிருந்து இரத்தமும் நீரும் வழிதல் (19:34). ஆவி பற்றிய இறையியலை எடுத்துக் கூறுவதற்கு மட்டுமே யோவான் நீரைப்

பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இந்த இறையியல் ஆவியில் செயல்களோடு (1:32-33; 3:5-8; 7:38-39; காண். 19:30) அல்லது, அஃது அகற்றும் சடங்குத் தூய்மைப்படுத்துதலோடு (2:6; 13:10-11) நெருங்கிய இணைப்புடையதாகத் தெரிகிறது. இவ்விதம் புரிந்து கொள்வதற்குரிய விளக்கம், கூடார விழாவில் ஆலயத்தில் அளிக்கப்பட்ட நீர்ப்பலிச்சடங்கிலிருந்து வருகிறது. இச்சடங்கோடு இலையுதிர் காலத்தின் "பின்மாரிக்காக"வும் மன்றாடப்பட்டது. இதை ஆதித்திருச்சபை ஆவியைப் பொழிதலாக நம்பியது (அ.ப. 2:4.16-21; காண்க. யோவே 3:1-5). இந்தச் சடங்கின்போதுதான், இயேசு தானே இத்தகைய வாழ்வு தரும் நீர் என்று அறிவிக்கிறார் (யோவா 7:38-39). இந்த ஒளியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் விலாவிலிருந்து வழிந்தோடிய நீருக்கும் பொருள் கொள்ளலாம் (19:34; காண்க. செக் 12:10; 13:1).

"வாழ்வின் நீர்" (திருவெளி 21:6; 22:1.17;12:10 காண்க. 7:17) என்பது, இவ்வுலகில் உள்ளவர் தாகம் கொள்ளும் உண்மையான என்றும் நீடிக்கும் வாழ்வை, நித்திய வாழ்வைக் குறிக்கிறது. இந்த உருவகம் நீரின் தொடர்ந்து ஓடும் மூலத்தை மட்டுமன்று, உயிரை உள்ளடக்கும், படைக்கும், மற்றும் அளிக்கும் அதன் பண்பையும் சுட்டிக்காட்டுகிறது.

**நீர்க்குடம் (WATER SKIN)**

கவிதைகளில் மழை மேகத்தைக் குறிக்க இது பயன்பட்டுள்ளது (யோவு 38:37; காண். 26:8). இவை விலங்குகளின் தோலிலிருந்து திரவப்பொருள்களை வைக்க, தயாரிக்கப்பட்ட பை போன்ற அமைப்பை உடையவையாகும்.

**நீர்க்கோவை நோய் (DROPSY)**

இது லூக் 14:2-இல் குறிக்கப்படுகிறது. இப்போகிராத்து காலத்திலிருந்து மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு பெயர். இஃது ஓர் அறிகுறியே அன்றி வியாதியன்று. இது முற்றிவிட்ட உடல்நோயைக் குறிக்கின்றது. உடலின் தசைநார்களுக்குள்ளோ, குழிகளுக்குள்ளோ அளவுக்கு அதிகமாக நீர் சேர்ந்து விடுவதால் இந்நோய் வருகின்றது. இது வந்திருக்கும் இடத்தைப் பொருத்து- அடிவயிற்று நீர்க்கோவை, நுரையீரல் சவ்வு நீர்க்கோவை, இருதய நீர்க்கோவை, கை கால் நீர்க்கோவை என்று அழைக்கப்படும். லூக் 14:2-இல் குறிக்கப்படும் நீர்க்கோவை, அனேகமாக இருதய, குண்டிக்காய் அல்லது கல்லீரல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

**நீர்க்கோழி, சகோரம் (CORMORANT)**

ஒரு பெரிய கடற்பறவை இனம். இது லேவி 11:17-இல் சகோரம் என்றும், உப 14:17-இல் நீர்க்கோழி என்றும் மொழி பெயர்க்கப்படுகிறது. இஃது உண்ணத்தகாத தீட்டுள்ள அருவருப்பான பறவையாகும் (லேவி 11:13; உப 14:17).

இந்தப் பறவை இனத்தில் ஏறக்குறைய 30 வகைகள் உள்ளன. மீன்களை மட்டும் உண்ணும் மீன்கொத்தியானது பாலஸ்தீனக் கடற்கரையிலும், கலிலேயாக் கடலிலும், யோர்தான் ஆற்றிலும் இருந்ததாகத் தெரிகிறது. விவிலியப் பறவைகளின் பட்டியலில் இப்பறவை சேர்க்கப்பட்டிருப்பது இயற்கை. இவை நீரில் வேகமாக நீந்தக் கூடியவையும் மூழ்கி எழக்கூடியவையும் ஆகும். இவை முழு மீன்களையும் விழுங்கக்கூடியவை. இவற்றின் நீண்ட உடலும், நீண்ட ஒல்லிய கழுத்தும் பார்ப்பவர்களைக் கவரக்கூடியன.

**நீர்த்திரள், வெள்ளப்பெருக்கு (MANY WATERS)**

குழப்பத்தின் நீர்த்திரளைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டுக் கவிதைச் சொற்றொடர். உலகம் பற்றிய பழங்கால நோக்கில், இந்நீர்த்திரள் மேல்தான் நிலப்பகுதி நிறுவப்பட்டிருந்தது. இது பாகால் கடலோடு நடத்திய போராட்டம் பற்றிய பழங்காலக் கானானிய (உகாரித்து) இதிகாசத்திலிருந்து வந்த கருத்தாக இருக்கலாம்.

இது 2சாமு 22:17; சங் 18:16-இல் வெள்ளப்பெருக்கென்றும், அப 3:15-இல்

பெருவெள்ளக்குவியல் என்றும், சங் 77:19-இல் வெள்ளத்திரள் என்றும், எசா 51:10-இல் பேராழ நீர்த்திரள் என்றும் குறிக்கப்படுகின்றது. இது, யாவே தம் இறையாற்றலில் தோன்றும்போது (எசே 1:24; 43:2; திருவெளி 1:15 பெருவெள்ளத்தின் இரைச்சல்) அழிக்கப்பட்ட இயற்கைச் சக்திகளில் ஒன்றாகும். மற்ற இடங்களில் யாவே தம் எதிரிகளுக்கு எதிராய்ப் பயன்படுத்தும் ஆயுதமாகவும் (யாத் 15:10), படைப்பின் வாகனமாகவும் (எரே 24:7) குறிக்கப்படுகிறது. இந்த உருவகம் இன்பவனச் சூழ்நிலையை (எரே 51:13; காண். எசே 17:5; 19:10; 31:5.15) அல்லது ஆபத்தையும் அழிவையும் (சங் 144:7; காண் சங் 32:16; எசே 26:19) குறிக்கலாம்.

எசா 17:12-13-இல் ஆசிரியர் தன் பகைவர்களைப் பெருவெள்ளத்திற்கு உருவகமாக ஒப்பிடுகிறார்.

**நீர்த்தேக்கம் (RESERVOIR)**

மழை நீரைச் சேகரித்துத் தேக்கி வைக்குமிடங்கள் விவிலிய காலத்தில் பொதுவாகக் காணப்படுகின்றனர். அதன் அடையாளங்களை இன்று கூடக் காணலாம். எசா 22:11 இரண்டு சுவர்களுக்குமிடையேயுள்ள நீரைத் தேக்கி வைக்குமிடத்தைக் குறிப்பிடுகிறது. இஃது எசேக்கியா அரசனால் நிறுவப்பட்டிருக்கலாம்.

**நீர்த்தொட்டி (RUNNEL, TROUGH)**

இது யாக்கோபு, தன் மந்தைகள் தண்ணீர் குடிக்கப் பயன்படுத்திய நீர்த்தொட்டி (ஆதி 30:38.41). மிதியான் நாட்டுக் குருவின் ஏழு புதல்வியரும் ஆட்டு மந்தைகளுக்குத் தண்ணீர் காட்ட, நீர் மொண்டு தொட்டிகளை நிரப்பினர் (யாத் 2:16).

**நீர்ப்பாசனம், நீர் பாய்ச்சுதல் (IRRIGATION)**

பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குக் கையாளப்படும் செயற்கை முறைகளுக்கு- நீர் பாய்ச்சுதல் என்பது பெயர். விவிலிய காலத்தில் அணைக்கட்டுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், மற்றும் நிலத்தடிச் சுரங்கங்கள் மூலம் நீரை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு சென்றனர்.

**நீர்வீழ்ச்சி, அருவி (CATARACT)**

சங் 42:7-இல் குறிக்கப்படும் இந்த அருவிகள் யோர்தான் தோன்றும் மிகவும் மேற்குக் கோடியில் அமைந்துள்ள ஏன்-தன்னூர் நீர் வீழ்ச்சியைக் குறிக்கலாம் அல்லது யோர்தான் தோன்றும் மிகக் கீழ்க்கோடியில் அமைந்துள்ள நக்ர-பானியாவைக் குறிக்கலாம். பின்னது எர்மோன் மலையின் அடிவாரத்தில் குகையிலிருந்து ஓசையுடன் கொப்பளிக்கின்றது. மறு புறத்தில் வாசகச் சூழ்நிலை, கீழ் உலக நீரைச் சுட்டலாம்.

**நீல மணிக்கள் (SAPHIRE, LAPIS LAZULI, TURQUOISE)**

இச்சொல் பல எபிரேயச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்கிறது. இது திண்ணிய நீல நிறக் குருந்தம். வைரத்திற்கடுத்தபடி கடினம் வாய்ந்த கனிப்பொருள்வகை. கெம்புகள் போன்ற வேதியல் அமைப்புடையது. வெள்ளை, பச்சை, கருஞ்சிவப்பு மஞ்சள் நிறமுடைய நீல மணிக்கற்களும் உண்டு.

விவிலியச் சூழ்நிலைகள், அதன் நிறத்தையும் கடினத்தன்மையையும் குறிப்பிடாது; அதன் மினுமினுக்கும் மற்றும் விலையுயர்ந்த தன்மைகளைச் சுட்டுகின்றன. இஸ்ராயேல் கடவுளின் பாதங்களின் கீழுள்ள தளம்- நீல மணிக்கல் இழைத்த வேலைப்பாடு போன்றிருந்து (யாத் 24:10). அவரது அரியணை- நீலமணிக்கம் தோற்றமுடையது (எசே 1:26; 10:1). மண்ணிலிருந்து பெறப்படும் அரிய பொருட்களில் நீலமணிக்கல்லும் ஒன்றாகும் (யோபு 28:6.16). புதிய எருசலேம் நீலக்கற்களால் நிறுவப்படும் (எசா 54:11). தீர்ப்புக்கூறும் மார்புப்பட்டையிலும் ஏபோதிலும் பதிக்கப்பட்டுள்ள கற்களில் இதுவும் ஒன்றாகும் (யாத் 28:18; 39:11). தீர்நாட்டு மன்னன் அணிந்திருந்தவற்றில் இதுவும் ஒன்றாகும் (எசே 28:13). எருசலேமின் இளவரசன் நீலமணிக் கட்டழகராய் இருந்தார் (புல 4:7). "காதலனின்

வயிறு, யானைத் தந்தத்தின் வேலைப்பாடு; அதில் நீலமணிகள் பொதியப்பெற்றுள்ளன" (உ.ச. 5:14).

புதிய எருசலேமின் இரண்டாவது அடிக்கல் நீலக்கல்லால் ஆனது (திருவெளி 21:19). குதிரையில் ஏறி வந்தவர்கள் அணிந்திருந்த மார்புக் கவசங்களின் நிறங்களில் ஒன்று நீலமாகும்.

**நீலம், ஊதா, கருஞ்சிவப்பு (BLUE, VIOLET, PURPLE)**

விவிலியத்தில் கூறப்படுகின்ற ஒரு தெளிவில்லாத நிறம் அனேகமாக ஊதா அல்லது இந்திர நீல நிறமாக இருக்கலாம். மத்திய தரைக்கடல் பகுதியில் கிடைக்கும் ஒருவிதச் சிப்பிகளிலிருந்து இந்த நிறப்பொருள் தயாரிக்கப்பட்டு சாயம்பூசப் பயன்படுத்தப் பட்டது. சிலைகளின் உடைகளுக்கு அதிகமாக இந்த நிறச் சாயம் பூசப்பட்டுள்ளது (எரே 10:9; எசே 23:6). எசே 23:6-இல் அசீரிய இளவரசர்களின் ஆடை நீலத்தால் ஆனது எனப்படுகிறது.

நீலமும், இந்திர நீலமும் எல்லா இடங்களிலும் கிடைத்தாலும் (எசே 27:7.24) அதிகமாகத் தீர் நகரில் இந்த நிறங்கள் தயாரித்து விற்கப்பட்டிருக்கின்றன (2 நாள் 2:7.14). பேழையில் உள்ள துணிகளில் இந்த நிறம் பயன்படுத்தப்பட்டது (யாத் 25:4; 26:1.4; எண் 4:6-7.9). குருக்களின் ஆடைகளிலும் (யாத் 28:5-6.8.15; 39:1). சாலமோனின் ஆலயத்திலும் இந்த நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எஸ்த 1:6-இல் அகசுவேர் அரசனின் அரண்மனையில் உள்ள நீலத் தொங்கல்களைப் பற்றியும், எஸ்த 8:15-இல் நீலம், வெள்ளை வர்ணங்களினாலான அரச மேலாடைகளைப் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளன. சீராக்கு நூலில், ஞானத்தின் தளைகள் நீல மணிவடத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளன (சீரா 6:30). மோசேயின் திருவுடை பொன்னீல நிறமும் கருஞ்சிவப்பு நிறமும் கொண்டதாகும் (45:10). யூதா மக்கபேயு நீலநிறப் பட்டாடைகளையும் கொள்ளைப் பொருளாகக் கைப்பற்றினார் (1 மக் 4:23). கும்ரான் சமூகத்தைச் சேர்ந்த குருக்கள் போரின்போது அணிந்திருந்த ஆடையில், நீலம் முதன்மை பெற்றது.

# நு

## நுகம் (YOKE)

பொதுவாக இஃது எருதுகளின் கழுத்தின் மேல் வைக்கப்படும் மரச்சட்டமாகும். இச்சட்டம் வண்டியோடோ, கலப்பையோடோ இணைக்கப்பட்டிருக்கும். நுகத்தில் பல வகையுண்டு (எரே 28:10; எண் 19:2; உப 21:3). நுகத்தின் மையத்தில் ஒற்றை மரச்சட்டம் இணைக்கப்பட்டு அது கலப்பை அல்லது வண்டியை இழுத்தது. மனிதர்கள் கைதிகளாக நடத்திச் செல்லப்படும்போது மனிதர்களின் மேலும் நுகம் சுமத்தப்பட்டது (எரே 28:10; 1 அர 12:9; 2 நாள் 10:4). அடிமைகள் மரத்தாலோ இரும்பாலோ செய்யப்பட்டிருக்கும் நுகத்தினடியில் கட்டி வைக்கப்பட்டனர் (1 திமொ 6:1). இதையே உருவகப்படுத்தி, நுகம் அடிமை நிலையைக் குறிக்கும் அடையாளமாகிறது. யாக்கோபு ஏசாவின் மீது நுகத்தைச் சுமத்துவார் என்று முன்னறிவிக்கப்பட்டது (ஆதி 27:40). எரொபவாமின்கீழ் மக்கள் கட்டாய வேலை மற்றும் பளுவான நுகத்தையும் பற்றி முறையிட்டு கூறினர் (1 அர 11:28; 12; 11.14). அடிமைத்தனமும் (சீரா 33:27), எந்தத் துன்பமும் (புல 3:27; சீரா 40:1) நுகத்தைப் போன்றாகும். ஒரு நாடு மற்றொரு நாட்டால் இழிவுபடுத்தப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் நுகத்திற்கு ஒப்பிடப்படுகிறது (எரே 27:8; 28:4; ஓசே 11:7; காண்க. உப. 28:48; எசா 47:6). அடிமைத்தனத்தைக் களைந்தெறிவது நுகத்தை உடைத்தெறிவதாக விவரிக்கப்படுகிறது (எரே 28:2; காண்க. எசா 9:4; 14:25). இறைவன் எகிப்தின் ஆதிக்கத்தை அழித்தொழிப்பதாக வாக்குறுதி அளிக்கிறார் (எசே 30:18). இறைவனிடமிருந்து பிரிந்து செல்வதும் அவருக்குக் கீழ்ப்படிய மறுப்பதும் பாவியாக அல்லது கிளர்ச்சிக்காரனாக இறைவனது நுகத்தை முறிப்பதாகும் (எரே 2:20; 5:5; சீரா 51:39). சட்டத்திற்கும், பாவத்திற்கும், தீமைக்கும் அடிமையானதோடு ஒப்பிடுகையில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதாகிய நுகம் எளியது (மத் 11:29). பாவம் ஒரு நுகமாகும் (புல 1:14). சட்டத்தின் வாசகத்தையே பின்பற்றுவது ஒரு நுகமாகும் (அ.ப. 15:10; கலா 5:1).

ஒரு குழு அல்லது ஒரு சோடி மாடுகளை நுகத்தோடு பிணைப்பது ஒரு "நுகம்" என்றழைக்கப்பட்டது (1 சாமு 11:7; 1 அர 19:21; லூக் 14:19). மாடுகள் சோடியாக வேலை செய்தன. சில சமயங்களில் அதிகமான பளுவை இழுக்க நான்கு மாடுகள் பொருத்தப்பட்டன. பாகால் பெயோரை அடிபணிவது பாவமாகும் (எண் 25:3.5). பவுல் தன் உடன் உழைப்பாளர்களை "என்னோடு தோள் கொடுத்து உழைத்த உண்மையான தோழர்களே" (பிலி 4:3) என்றழைக்கிறார். இஃது ஒரு குழுவைச் சுட்டலாம். இதைவிட இயேசுவின் நுகத்தடியின்கீழ் வேலை செய்பவர்கள் என்று பொருள் கொள்வது மேல்.

ஓர் ஏர் ஒருநாளில் உழக்கூடிய நிலத்தின் அளவு- ஓர் ஏக்கர் என்று அழைக்கப்பட்டது (1 சாமு 14:14; எசா 5:10).

## நுண்ணோக்கு, உள்நோக்கு (INSIGHT)

இது பொருட்களின் தன்மையைத் தேர்ந்து தெளியும் அறிவுசார்ந்த மற்றும் ஆன்மீக ஆற்றல் ஆகும். பகுத்தறிவும் மற்றும் வேறுபாடு கண்டறியும் ஆற்றலாகும் (எஸ் 8:16; பழ 1:2; 2:3; 3:5; 4:1.5.7; 7:4; 8:14; 9:6; எபே 1:9; 3:4; காண்க. 2 சாமு 14:17.20; ஞானம் 7:7. 17-21). விவிலியக்கருத்தில், ஞானத்தைப் போன்று, நுண்ணோக்கு இறைவனது கொடையாகும் (திருவுரை 2:26; ஞானம் 7:27; காண்க. 7:7; 1 கொரி 2:2-16; யாக் 1:5-8). இஃது ஓரளவு நிலையான மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த கொடையாகும். அதை விரும்புவது தலைமையாகச் செயல் முறையானதாகும்; வாழ்க்கை வழிகாட்டலுக்கு அவசியமானதாகும். இறைவனுக்குப் புறம்போ, மனிதனது அறிவு சரியான முறையில் நடத்திச் செல்லாது (பழ 3:5).

நுண்ணோக்கு ஞானத்தோடும் (பழ 1:2; 4:5.7; 7:4; 8:14; 9:10; எபே 1:9), மெய்யறிவோடும் (பழ 2:3), ஆலோசனை (8:14) ஆகியவற்றோடும் இணைந்தது. அவற்றோடு நெருங்கிய உறவுடையது. அது மெய்யறிவையும் (2:3), இறைவனைப் பற்றிய ஆழ்ந்த அறிவையும் (யோபு 11:7; 28; எரே 9:23-24; ஞானம் 9:13-18; 1 கொரி 2:10-11) இறைவனது ஆலோசனையையும் (ஞானம் 9:13-17), நன்மை தீமை பற்றிய அறிவையும் (2 சாமு 14:17; 1 அர 3:9), பூமியிலுள்ள எல்லாப்பொருட்கள் பற்றிய அறிவையும் (2 சாமு 14:20), இறைவனுக்கு விருப்பமானவை பற்றிய அறிவையும் (திருவுரை 2:26; ஞானம் 9:18), விரும்பிய முடிவை அடைய காரியங்களை ஒழுங்குபடுத்தும் ஆற்றலையும் (பழ 8:14) மனிதர்களுக்கு அளிக்கிறது. இத்தகைய அறிவு வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

இக்கொடையால், சடப்பொருளில் ஆன் மீகத்தையும், மனித வரலாற்றில்- இறைவனது செயலையும், நாசரேத்து இயேசுவில்- இறைவனின் கிறிஸ்துவையும் மனிதனால் கண்டுணர முடிகிறது.

**நுழைவாயில் (THRESHOLD)**

இது வாயிற்படிக்கல்லை அல்லது கல்லால் ஆன கதவுநிலையின் தரைமட்டக் கல்லைக் குறிக்கும்.

பழங்கால இஸ்ராயேலிலும் அதன் அண்டை நாடுகளிலும் நுழைவாயிலும், கடைவாயிலும் முக்கியமான அடையாளப் பொருள்கள் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட வீடும் குடும்பமும் அதன் வீட்டு வாசலைக்கொண்டு மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது (யாத் 21:5-6; உப 15:16-17). இஸ்ராயேலர் வீட்டு வாயில்கள் பங்குச் செம்மறியின் இரத்தத்தால் குறிக்கப்பட்டிருந்தன (யாத் 12:7.13). சட்டத்தின் பகுதிகள் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் எழுதிவைக்கப்பட்டன (உப 6:9).

ஒரு வீட்டின் அல்லது ஆலயத்தின் நுழைவாயில் புறவுலகோடு கொண்ட எல்லையாக அமைந்திருந்தது. அதைக் கடப்பது, செயல் அளவில் ஒன்றிலிருந்து மற்றதற்குச் செல்வதின் அடையாளமாகும் ( நீதி 19:27; 1 அர 14:17). வாயிலைக் காக்கும் ஊழியர் சிறப்பு முக்கியத்துவம் கொண்டிருந்தனர் (2 அர 12:9; 22:4; எஸ்த 2:21; எரே 35:4). ஆலயத்தின் நுழைவாயில் புனிதமாகக் கருதப்பட்டது (எசே 46:2). தாகோனின் பெலிஸ்திய கோவிலின் நுழைவாயிற்படியை மிதிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. இதற்குத் தாகோனின் சிலை ஆண்டவரின் பேழைக்குமுன் முகம் குப்புறத் தரையில் விழுந்து கிடந்ததும், அதன் தலையும் இரு கைகளும் துண்டிக்கப்பட்டு வாயிற்படியில் கிடந்ததும் காரணமாகக் கூறப்படுகின்றன (1 சாமு 5:4-5). கோவிலையோ, வீட்டையோ சேர்ந்த நுழைவாயிலை மிதியாமல் தாவிச்செல்லும் பழக்கம் இப்படிப்பட்ட ஆனால் பரந்த பொருளையுடைய தடையின் விளைவாக இருக்கலாம். இஃது இஸ்ராயேலரைச் சேராதவர்களின் பழக்கம்; ஆனால், யூதாவில் சிலரால் பின்பற்றப்பட்டது (செப் 1:9). யாவேயின் ஆலய நுழைவாயிலுக்கருகில் மனிதர் வாழும் பகுதிகளை அமைப்பது, அளவுக்கு அதிகமாக அவரோடு கொண்ட நெருக்கத்தைக் குறிக்கிறது. இவ்வாறு தங்கள் வீடுகளை அமைத்து யாவேயின் பெயரை அவர்களின் அருவருப்பான செயல்கள் மூலம் தீட்டுப்படுத்தினர் (எசே 43:8). எசேக்கியேலின் காட்சியில் கடவுளின் மாட்சிமை அது தங்கியிருந்த கெருபுகளை விட்டு மேலெழுந்து அடையாள எழுத்தரிடம் பேசுவதற்காக இருமுறை ஆலயத்தின் வாயிற்படிக்கு வந்தது (9:3; 10:4.18).

**நுனித்தோல் (FORESKIN)**

ஆண்குறியை மூடும் மேல்தோல். காண்க: விருத்தசேதனம்.

# நூ

## நூசி (NUZI)

நூசி அசூருக்குக் கிழக்கிலும், அரப்பாகாவிற்குத் (இக்காலக் கிர்குக்கு) தென்மேற்கிலும் 15 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு பழங்கால மெசபொத்தாமிய நகரம். இது கி.மு. 2-ஆம் ஆயிரம் ஆண்டுகளில் புகழோடு விளங்கியது. இங்குக் கண்டெடுக்கப்பட்ட ஏடுகள் எல்லாம் அக்காதிய மொழியில் ஆப்பு எழுத்தில் எழுதப் பட்டுள்ளன. இவை யூதகுலத் தலைவர்கள் காலத்திய சமூகப் பழக்கவழக்கங்களைப் பற்றி அறிய உதவுகின்றன.

நூசி இருந்த இடம், பாக்தாத்தின் வடக்கில் சுமார் 240 கி.மீ. தொலைவிலுள்ள யோக்லான் தெபே மண்மேடாகும். இவ்விடத்தில் ஊரியன் இனத்தவர் வாழ்ந்த போது இது நூசி என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் மித்தானி என்னும் மன்னனின் அரசாகவும் விளங்கியது. அசீரியர்கள் இதனைக் கைப்பற்றியபின் இந்நகரத்தின் புகழ் குன்றத் தொடங்கியது. ஊரியன் **(Hurrian)** இனத்தவர் இங்குக் குடியேறு முன்னமே வேறு இனத்தவர் இங்கு வாழ்ந்து வந்தனர். பழைய அக்காதிய காலத்தில் இது காசூர் என்று அழைக்கப்பட்டது.

யூதகுல மூதாதையர்கள் பாலஸ்தீன நாட்டில் குடியேறுமுன், மத்திய யூப்பிரத்தீசு பள்ளத்தாக்கில் காரானில் வாழ்ந்தனர். இப்பகுதியில் ஊரியன் இனத்தவரும் வாழ்ந்தனர். இவர்கள் அவர்களைச் சுற்றி வாழ்ந்த மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். நூசியும், ஊரியன் இனத்தவர் வாழ்ந்த மிகவும் கிழக்கில் உள்ள நகரமாகும். எனவே, நூசியில் உள்ள ஊரியன் இனத்தவரைப்பற்றி அறிந்த உண்மைகள், எபிரேயர்களுடன் வாழ்ந்த ஊரியன் இனத்தவருக்கும் பொருந்தும். இவர்களிடையே இருந்த பழக்க வழக்கங்கள் சில எபிரேயர்களிடம் காணப்படுகின்றன.

மிகவும் பொருந்தும் ஓர் உதாரணம், ராகேல் விக்கிரகங்களைத் திருடிச் சென்றதாகும் (ஆதி 31:19.30). முதலில் இஃது ஒரு புதிராக இருந்தாலும், நூசியில் கிடைத்த பல உண்மைகள் இதை விளக்குகின்றன. சில சமயங்களில் ஒருவனுடைய செல்வம் அவனுடைய மருமகனுக்குச் சேரும் வாய்ப்பு உண்டு. ஆனால், அவன் தன் மருமகனுக்குத் தன் குடும்பத்தின் விக்கிரகங்களைக் கொடுத்தால் மட்டுமே சாத்திய மாகும். எனவேதான், ராகேல் விக்கிரகங்களைத் திருடிச்சென்றாள். மூன்று முக்கியமான இடங்களில் 'மனைவி', 'சகோதரி' என்று குறிப்பிடப்படுகின்றாள் (ஆதி 12:10-20; 20:2-6; 26:1-11). ஊரியன் சமுதாயத்தில் ஆண்கள் இரத்த உறவின்படி இல்லாவிட்டாலும், சட்டப்படியாவது 'சகோதரி' முறையுள்ள பெண்களையே மணந்தனர். எனவே, 'மனைவி' என்பதும், 'சகோதரி' என்பதும் ஒரே ஆளைக் குறிக்கும்படி இரு சொற்களும் மாற்றிப் பயன்படுத்தப்பட்டன. மேலும், இச்சமுதாயத்தில் ஒரு பணக்கார மனைவி தன்னால் தன் கணவனுக்குக் குழந்தை பெற்றுத்தர முடியாவிட்டால் அவள் தன் கணவனுக்கு அடிமைப்பெண்ணை மனைவியாகக் கொடுத்து வாரிசைப் பெறலாம் (16:1-4; 30:1-13). இந்த உண்மையின் மூலம் 16:2-இல் கூறப்படும் "அவள் மூலம் நான் பிள்ளைகளைப் பெறுவேன்", என்பது தெளிவாகிறது. மகன் இல்லாதபோது, உரிமைச் சொத்தைக் குடும்பத்திற்குள்ளே வைத்துக்கொள்ள தத்து எடுக்கலாம் (15:2 தொ). ஊரியர்களிடையே பிறப்புரிமை காலவரிசைப்படி அமையவில்லை; தந்தையின் சட்டப்படியே அமைந்தது. குறிப்பாக, அவர் இறக்க இருக்கும்போது கூறும் சட்டம் எல்லாரையும் கட்டுப்படுத்துவதாகும். இத்தகைய வழக்கை ஆதி 27-இல் காணலாம். மாறுபட்ட சூழ்நிலையில் இந்த வழக்கம் தடை செய்யப்படுகிறது. அதற்கு மாறாக, காலவரிசைப்படி தலைச்சன் பிள்ளைக்கே சொத்துக்களைப் பங்கிடும்போது, இரு மடங்கு அளிக்க வேண்டும் (உப 21:15-17).

**நூமேனியு (NUMENUS)**

நூமேனியு அந்தியோக்குவின் மகனும், சீமோன் என்னும் மக்கபேய தலைமைக்குரு யோனத்தானால் உரோமைக்கும் ஸ்பார்த்தாவுக்கும் அனுப்பப்பட்ட யூத தூதுவர்களில் ஒருவரும் ஆவார் (1 மக் 12:16). சீமோன், கி.மு. 141-இல் நூமேனியுவின் தலைமையில் தூதுக்குழு ஒன்றை அனுப்பினார். அவர்களிடம் 1000 பொற்காசுகள் நிறையுள்ள தங்கக் கேடயம் ஒன்றையும் கொடுத்து அனுப்பினார் (14:24). கி.மு. 139-இல் நூமேனியு உரோமை ஆளுநன்லூக்கியுவால் பக்கத்து நாடுகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களுடன் திரும்பி வந்தார். அக்கடிதத்தில் உரோமையர்கள், யூதர்களோடு கொண்டிருந்த நட்புறவைப் பற்றியும், உரோமைக்கு வந்த யூத தூதுக்குழு பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பக்கத்து நாடுகள் யூதர்களைத் துன்புறுத்தக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கடிதத்தின் உண்மைத்தன்மை பற்றிச் சிலர் ஐயுறுவர். ஆனால், யோசிப்பசு இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். அவரது கூற்றுப்படி, இது 2-ஆம் இரிக்கானுவின் ஆட்சிக்காலத்தில் நடந்ததாகும்.

**நூல், புத்தகம் (BOOK)**

**1. எழுத்தும் நூல்களும்:** எழுத்து, நூல் இவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ஆனால், இவை இரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடுண்டு. ஒன்றோடொன்று தொடர்புள்ளவற்றை எழுதி ஒன்றாகத் தொகுக்கும்போது அதை நாம் நூல் அல்லது புத்தகம் என அழைக்கிறோம். வேதநூலில் கூட பொருள் ஒற்றுமையுள்ள ஓர் எழுத்துப் பகுதியைத் தான் ஒரு புத்தகம் என அழைக்கிறோம். இக்காரணத்தினால்தான் நாம் ஒரு நூலுக்கு ஒரு தலைப்புக் கொடுக்கிறோம். பொதுவாக, இத்தலைப்பு ஒருநூலின் தொடக்கத்தில் காணப்படுகிறது. ஒரு நூலுக்கு ஒரு தலைப்பு இருக்க வேண்டும். அஃது ஒற்றுமையுள்ள ஒரு பொருளைப்பற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஒரு நூல் என்பது ஒரு தொகுப்பு. பலவரித்தொடர்களையோ, பல எழுத்துப் பத்திகளையோ நாம் பொதுவாக ஒரு நூல் அல்லது ஒரு புத்தகம் என அழைப்பதில்லை. ஒரு நூலில் ஒவ்வொரு பகுதியும் மற்றப் பகுதிகளோடு தொடர்புள்ளதாக இருக்கின்றன. அதில் பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக வரிசைக் கிரமமாக எடுத்துக் கூறப்படுகின்றன. அதில் ஒன்றோடொன்று தொடர்புள்ள எழுத்துக்கள், பாக்கள், செய்யுட்கள், சொற்றொடர்கள், உவமைகள், இறைவாக்குகள் எல்லாம் ஒன்றாகத் தொகுக்கப் பெறுகின்றன.

நூல் அல்லது புத்தகத்தைப்பற்றி இஸ்ராயேல் மக்களின் வரலாற்றுத் தொடக்கத்திலேயே நாம் வாசிக்கின்றோம். தொன்று தொட்டே "யாவேயின் போர்கள்" (எண் 21:14), "யாசாரின் நூல்" (யோசு 10:3; 2 சாமு 1:18) என்ற இரண்டு பழங்காப்பிய, உணர்ச்சிப்பாடல் தொகுப்புகளை அவர்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். தொடக்கத்திலிருந்தே இஸ்ராயேல் மக்கள் தம் இறுதி முடிவின் தனித்தன்மையையும் இறைவன் அவர்களது வரலாற்றிற் அளிக்க இருந்த தொடர்ச்சியையும் நன்கு உணர்ந்து அறிந்திருந்தனர் என்பதை இவ்விரு தொகுப்புகளும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஒரு சில நூற்றாண்டுகளில் இச்சிறுமக்களினம் வெளியிட்ட, பலதிறப்பட்ட ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ள நூல்களின் எண்ணிக்கை இம்மக்களின் விசுவாசத்தின் ஆழத்திற்கும் ஆற்றலுக்கும் சாட்சி கூறி நிற்கின்றது. இவ்விசுவாசமே அவர்களுக்கு ஏற்பட்ட பல பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்கு உறுதுணையாகயிருந்தது. அவர்கள் வரலாற்றுத் தொகுப்புகளை வெளியிட்டனர்; சட்டநூல்கள் எழுதினர்; கவிதைகளையும் வழிபாட்டுப் பாக்களையும் தொகுத்தளித்தனர்; நடைமுறை வாழ்வில் எழும்

மனிதப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்ந்தறிந்து விவரித்தனர்.

**2. நூல் - ஒரு நினைவுச்சின்னம், திருச்சான்று:**

இஸ்ராயேல் மக்கள் வெளியிட்ட நூல்கள் பலவற்றின் தொடக்கத்தைக் கண்டறிய நம்மால் முடிகின்றது. இத்தொடக்கம் புனிதமானதொன்று எனவும் நாம் அறிய வருகின்றோம். இவ்வாறு புனிதமான தொடக்கத்தைக் கொண்டவைதான் இஸ்ராயேல் மக்களின் சட்ட நூல்களும் இறைவாக்கு நூல்களும். இறைவன் சட்டமும் இறைவாக்கினர்களும் வேதநூலின் சிறப்பான அமைப்பாகத் திகழ்கின்றன.

மோசே இறைவனிடமிருந்து பெற்று, தம் கைகளில் ஏந்திவந்த (யாத் 32:15) "சட்ட திட்டங்கள்" (யாத் 24:12) அடங்கிய 'கடவுளின் கையால் எழுதப்பட்ட சாட்சிப் பலகைகளாகிய இரண்டு பலகைகளையும்" (யாத் 31:18) நாம் மேலே பார்த்த பொருள் பட நூல் என அழைக்க முடியாது. களிமண் பலகைகளை விடக் கற்பலகைகள் சிறந்தவைதான். தெய்வக் "கட்டளை முதலிய சட்டதிட்டங்கள்" கற்பலகைகளில் எழுதப்பெற்றதுபோல் பிற்காலத்தில் மறைநூல் அறிஞர்கள் களிமண் பலகைகளில் தம் சட்டங்களை எழுதி வெளியிட்டனர். ஆனால், "கடவுளின் கையால் எழுதப்பட்ட சாட்சியக் கற்பலகைகள்" போற்றிக் காக்கப்பெற்றன. ஏனெனில், அவற்றை எழுதிய இறைவனின் திருவுளத்திற்குச் சான்றுரைத்து நிற்கின்றன. பிற்காலத்தில் படிப்படியாகத் தோன்றி வளர்ந்த பல தொகுப்புகளின் சுருக்கமாகவும், நடுப்பகுதியாகவும் இக்கற்பலகைகள் அமைந்தன. இவ்வாறு வளர்ந்த தொகுப்புகள்தான் "உடன்படிக்கையின் புத்தகம்" (எண் 24:7; 2 அர 23:2.21), "மோசேயின் திருச்சட்ட நூல்" (2 நாள் 25:4; 35:12; எஸ் 6:18; மாற் 2:26), "சட்ட நூல்" (உப. 28:58.61; மாற் 29:20; யோசு 1:8; 8:34) என்று அழைக்கப்பெறுகின்றன. இறைவனது ஆணைகளைக் காப்பதும் அவருக்குத் தாம் அளித்திருக்கும் வாக்குறுதிகளைக் கைவிட்டு, உதறித்தள்ளி, அலட்சியம் செய்வோர் அனைவருக்கும் எதிராக நிலையான சான்றுரைத்து நிற்பதும் தான் இந்நூலின் நோக்கம் (உப 31:26 தொ: காண்க. யோசு 24:27).

இறைவாக்கினர்களின் தொகுப்புகளும் இவ்வாறு ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே எழுந்தன. தமது சீடர்களை மட்டும் கூட்டி அவர்களது இதயத்தில் மட்டும் தம் சான்றைப் பதித்துப் புதைத்து வைத்து (எசா 8:16) அவரது மக்கள் மத்தியில் மட்டும் திருச்சட்டத்தை வெளிப்படுத்தி இறைவனுக்குச் சான்று கூறி நிற்க (8:20) இறைவாக்கினர் எசாயாவால் முடிய வில்லை. ஏனெனில், "இப்பொழுது நீ சென்று அவர்கள்முன் பலகையில் பதித்துவை; எழுத்துச் சுருள் ஒன்றில் எழுதிவை; வருங்காலத்திற்கென என்றுமுள சாட்சியாக அது விளங்கும்" (30:8), என்று இறைவனிடமிருந்து அவர் ஆணையொன்று பெறுகிறார். "ஆண்டவர் இம்மக்களுக்கு விரோதமாகப் பெருங்கோபத்தோடும், ஆத்திரத்தோடும் பேசியிருக்கும்" சொற்களின் தொகுப்பாவது அவர்களைத் திகிலடையச் செய்து அவர்கள் தங்கள் தீய நெறியைவிட்டுத் திரும்பச் செய்யக்கூடும் (எரே 36:2.7) என்ற நம்பிக்கையோடு இருபது ஆண்டு காலத்தில் தாம் கூறிய கூற்றின் சுருக்கத்தை இறைவாக்கினர் எரேமியா இரண்டு தடவை இறைவாக்கினர் பாரூக்குக்கு எடுத்துக்கூறி எழுத வைத்தார்.

இலக்கியக்கூறை நோக்கினாலும் சரி, அவற்றின் தனிப்பட்ட சிறப்பைச் சீர்தூக்கிப் பார்த்தாலும் சரி, இஸ்ராயேல் மக்களின் நூல்கள் கடந்தகால வரலாற்றுக்கோ ஒரு மக்களின் தகுதி வாய்ந்த திறனுக்கோ சான்று கூறவில்லை என்ற உண்மை நமக்குப் புலப்படுகிறது. அதற்கு மாறாக, அவற்றின் வழியாக இறைவன் தாமே தமது நீதிக்கும் மனிதனின் பாவத்திற்கும் சான்று கூறுகிறார். "அனைத்துமே பாவத்தின் ஆட்சிக்கு

உட்பட்டிருப்பதாக மறைநூல் சாற்றுகிறது" (கலா 3:22) என்று கூறி, புனித பவுலும் இந்த அலுவலையே வேத நூலுக்கு ஒதுக்குகிறார்.

**3. மண்ணிலிருந்தும் விண்ணிலிருந்தும் தோன்றிய நூல்:**

இறைவாக்கினரின் புத்தகங்களில் இறைவனின் வாக்குகள் அடக்கியிருக்கின்றன என்பது உண்மை. அதை அறிந்த எசேக்கியேல் போன்றதொரு காட்சி காண்பவர் இறைவாக்கினர் என்ற தமது இறைவாக்குரைக்கும் அலுவலைப்பற்றிக் கனவுகாண ஆரம்பிக்கின்றார். அக்கனவில் விண்ணிலிருந்து வந்ததோர் ஓலைச் சுருளைத் தாம் தின்பதைப்போலவும், விண்ணிலிருந்து எழுதப்பெற்ற அவ்வாசகத்தை மண்ணில் தாம் திரும்ப எடுத்துரைப்பதைப்போலவும் அவர் காண்கிறார் (எசே 2:8-3,3). பிற்காலத்தில் எழுந்த உரையாசிரியர்கள் பலரின் கடுமையான சொற்பொருள் விளக்கக் கொள்கைக்கு மாறாக, எசேக்கியேலின் இக்காட்சியானது தேவனின் துணைகொண்டு எழுதப்பெற்ற நூலின் தன்மையைத் தெளிவாக, விளக்கமாக எடுத்துரைக்கின்றது. இந்நூல் முற்றிலும் கடவுளது துணைகொண்டு மனித ஆசிரியரால் தொகுத்தெழுதப் பெற்றது என இக்காட்சி விளக்குகிறது.

மனித அறிவால் புரிந்துகொள்ள முடியாத, மறைபொருள் மிக்க வேறுபல நூல்களுமுண்டு. அந்நூல்களின் பொருளடக்கத்தைக் கூட்டியோ குறைத்தோ இறைவன் முற்றிலும் தமக்கே ஒதுக்கி வைத்துக்கொண்டார். எடுத்துக்காட்டாக, இவ்வாறு ஒரு நூல்தான் "சீயோனின் மக்களினங்களோடு பிறமதத்தினரும் பதிவு செய்யப்பெற்றிருக்கும் நூல்" (சங் 87:5-7; எசா 4:3). இவற்றிலிருந்து "போலிக்காட்சியைக் கண்டு, பொய் வாக்கைப் பிதற்றும் தீர்க்க தரிசிகளின்" பெயர்கள் நீக்கப்பெற்றிருக்கின்றன (எசே 13:9). எருசலேமில் பேரெழுதப்பட்டவன் ஒவ்வொருவனும் என்றென்றும் வாழப்பிறந்தவன் (எசா 4:3). எனவே, இந்நூலானது இறைவன் இவ்வுலகிலும் (யாத் 32:32 தொ) மறுவுலகிலும் (தானி 12:1; லூக் 10:20) வாழ்வதற்காகத் தமது மக்களின் பெயர்களை முன் குறித்து எழுதி வைத்திருக்கும் "வாழ்வோரின் நூலோடு" (சங் 68:28) முற்றிலும் பொருந்துகிறது. நமது வாழ்நாட்களும் நமது செயல்களும் அவை நடந்தேறுவதற்கு முன்பே (சங் 139:16) எழுதப்பெற்றிருக்கும் ஒரு நூல் இருக்குமென்றால், அந்நூலானது தீர்ப்பு நேரத்தில் (தானி 7:10; திருவெளி 20:12) கொண்டுவரப் பெற்றுத் திறக்கப்பெறும் அந்நூல்களுக்கு முற்றிலும் மாறுபட்ட தொன்றாக இருக்க வேண்டும். இவ்வுருவகங்களிலிருந்தெல்லாம் எழும் முக்கிய வினா கணக்கீடு, மதிப்பீடு பற்றிய தொன்றன்று. ஆனால் மனிதனிடம் இறைவன் கொண்டுள்ள ஆர்வத்தின் தலைசிறந்த நீதியையும் அவரது திட்டம் தவறில்லாமல் நிறைவேற்றப் பெறுவதையும் பற்றியதாகும். இந்நூலில் கணக்கிடப்பட்டிருப்பதெல்லாம் நமது கண்ணீர்கள் மட்டும்தான் (சங் 56:8).

**4. முத்திரையிடப்பெற்ற நூல்:**

"ஏழு முத்திரை பொறித்து மூடப்பட்டிருந்த" நூல், "அரியணையில் வீற்றிருந்தவரின் வலக்கையிலிருந்த அச்சுருள்", செம்மறியானவர் மட்டுமே எடுக்கவும் அதன் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ள அச்சுருள் (திருவெளி 5:1-10) பழைய ஏற்பாட்டின் மரபுப்படி இறைவாக்கினரின் நூலில் ஒன்று என்றும், (காண்க: எசா 8:16; 29:11 தொ; எசே 2:9) ஒருவேளை, இஸ்ராயேலின் வேதநூலின் முழுத்தொகுப்பாகும் என்றும், நாம் நிச்சயமாகக் கூறலாம். இந்நூல்கள் யாவும் இயேசு கிறிஸ்துவில் புதிய, ஐயமற்ற பொருளைப் பெறுகின்றன. கிறிஸ்துவின் காலம் வரை அவைகள் முதலிடத்தில் ஒரு சட்டமாக, என்றும் மீறப்பட்ட தெய்வீக ஆணைகளின் சுருக்கமாக, நமது பிரமாணிக்கமின்மைக்கு நொறுக்கும் சான்றாகக் கருதப்பெற்றன. ஆனால், சுருளில்

கூறப்பெற்றிருக்கும் கிறிஸ்து வந்து, "இதோ! இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்" (எபி 10:7=சங் 40:9) என்று கூறிய பிறகோ இறைவனது திருச்சித்தம் கடைசிப்புள்ளிவரை நிறைவேற்றப்பெறும் (மத் 5:18); அவரது வார்த்தைகள் இறுதிவரை காப்பாற்றப்பெற்ற பெரியதொரு வாக்குறுதி. முழுமை ஆக்கப்பெற்ற இணையற்றதொரு திட்டம் என மக்கள் அறியவருவர். இயேசு கிறிஸ்துவில் பல்வேறு நூல்கள் எல்லாம் ஒன்று திரட்டப்பெற்று ஒரே ஒரு நூலாக்கப் பெறுகிறது. இந்நூலைத்தான் இன்று நாம் வேதநூல் என அழைக்கிறோம்.

**நூல் நூற்றல் (SPINNING)**

நார் இழைகளை ஒன்று சேர்த்து முறுக்கிநூலாக அல்லது புரியாக அமைக்கும் செயலாகும். சாதாரணமாக இச்செயல் பெண்களுக்குரியதாகக் கருதப்பட்டது (யாத் 35:25-26; பழ 31:19). இது அயர்ச்சி தரும் வேலையாகக் கருதப்பட்டது. ஓர் எளிய கருவி பயன்படுத்தப்பட்டது. கம்பளம், சணல் அல்லது பஞ்சு ஆகியவற்றின் நூற்கப்படாத இழைகள் நூற்புக்கழியில் தளர்ச்சியாகச் சுற்றப்பட்டிருக்கும். நூற்புக் கழியைக் கையால் சுழற்றி அவற்றை முறுக்குவர்.

**நூற்புக்கழி, இராட்டினம் (DISTAFF)**

தயாரிக்கப்பட்ட இழைகளைப் பிடித்துக் கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஒரு குச்சி. இந்த இழைகளிலிருந்து நூல் நூற்கப்பட்ட இழைகளைக் கையிலோ, பையிலோ வைத்துக் கொண்டும் நூல் நூற்கலாம். தயாரிக்கப்பட்ட இழைகளிலிருந்து உருண்டையாகவோ, வட்டமான பாத்திரத்திலோ நூலைச் சேர்க்கலாம். இந்தச் சொல், பழ 31:19-இல் மட்டும் வருகின்றது.

இராட்டினம் என்பது மரத்தாலோ, எலும்பாலோ, தந்தத்தாலோ, உலோகத்தாலோ செய்யப்பட்ட ஓர் உருண்டையான கட்டை இதன் ஒரு முனையோ இரண்டு முனைகளுமோ கூராகவும், ஒரு முனையில் வட்டமான தட்டும் பொருத்தப் பட்டிருக்கும். இந்தத் தட்டின் மேல் நூல் சேர்க்கப்படும்.

நூல் நூற்பது- பெண்கள், முதியோர்களின் வேலை என்ற எண்ணம் மேற்காசியாவில் பரவலாக இருந்தது.

**நூற்றுவர் கோபுரம், மேயா காவல்மாடம் (TOWER OF THE HUDNERED)**

எருசலேமின் வடசுவரில் அமைந்திருந்த ஒரு கோபுரம் அல்லது காவல் மாடம். இது மீன்வாயிலுக்கும் ஆட்டு வாயிலுக்கும் இடையில் அமைந்திருந்தது (நெகே 3:1; 12:39). நெகேமியாவால் மீண்டும் கட்டப்பட்ட சுவரின் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. அனனேல் காவல் மாடத்துக்கு முன் குறிக்கப்படுவதால், இஃது, ஓபேல்மோரிய பக்க மலையின் வடமேற்குப் பகுதியின் மேலிருந்து ஆலயத்தை நோக்கும் விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இங்குதான் பிற்காலத்தில் பெரிய ஏரோது, அந்தோனியாக் கோட்டையைக் கட்டினான். ஒரு படைப்பிரிவின் பெயரிலிருந்து இப்பெயர் வந்திருக்கவேண்டும். இஃது இந்தக் கோபுரம் கோட்டைக் காவல் தளமாகப் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது.

**நூற்றுவர் தலைவன் (CENTURION)**

நூறு வீரர்களுக்குப் படைத்தலைவன். இஃது உரோமையர் படையின் மிகச்சிறிய பிரிவாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு சிறு படையில் நூறு பேர் கொண்ட பத்துப்பிரிவுகள் இருந்தன. இப்படிப்பட்ட ஆறு சிறு படைகள் சேர்ந்த தொகுப்பு, படையாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு படையிலும் ஏறக்குறைய 6000 வீரர்களும், 120 குதிரை வீரர்களும் இருந்தனர். நூற்றுவர் தலைவர்கள்தான் படையின் முதுகெலும்பாவார். இவர்கள்தான், ஒழுங்கை நிலைநிறுத்தவும், ஆயுதங்களை ஆய்வு செய்யவும் பாசறையிலும் போர்க்களத்திலும் நூற்றவர் குழுவிற்குத் தலைமை தாங்கவும், உதவிப்படைகளை நடத்தவும் பொறுப்புடையவர்கள்.

லூக்கா இருவரை நூற்றுவர் தலைவர்க் குறிப்பிடுகிறார். ஒருவர்- முதல் புறவினக் கிறிஸ்தவரான கொர்னேலியு ஆவார் (அ.ப. 10:1.22. 30.44-47). மற்றவர்- பவுலைப் பாதுகாப்பாக உரோமைக்குக் கூட்டிச்செல்லும் பொறுப்புடைய யூலியு என்பவர் ஆவார் (27:3,43).

மற்ற நூற்றுவர் தலைவர்களின் பெயர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் பரிவாகக் குறிக்கப்படுகின்றனர். கப்பர்நாகூமிலிருந்த நூற்றுவர் தலைவனுடைய விசுவாசத்தை இயேசு போற்றுகிறார். அவனது ஊழியன் குணம் பெறுகிறான் (மத் 8:5-13; லூக் 7:1-10). இயேசுவும் மற்ற இருவரும் சிலுவையில் அறையப்படுவதை மேற்பார்த்த நூற்றுவர் தலைவன், இயேசு இறந்தபின், "இவர் உண்மையாகவே இறைமகனாய் இருந்தார்" என்று அறிக்கையிட்டான் (மத் 27:54; லூக் 23:47; மாற் 15:39. 44-45).

**நூன் (NUN – மீன்) – ஆள்**

நூன் யோசுவாவின் தந்தை ஆவார் (யாத் 33:11; எண் 11:28; 13:8. 16; உப 1:38; 32:44; யோசு 1:1; நீதி 2-8; 1 அர 16:34; நெகே 8:17). நூன் யோசுவாவின் தந்தை என்பதையும், அவர் எப்பிராயிம் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதையும் தவிர அவரைப்பற்றி வேறு எதுவும் தெரியவில்லை. நூன், ஓசேயாவின் தந்தை என்றும் குறிப்பிடப்படுகின்றார் (எண் 13:18.16; உப 32:44).

**நூன் (NUN) – எழுத்து**

நூன் எபிரேய மொழியின் நெடுங்கணக்கில் பதினான்காவது எழுத்தாகும். அகர வரிசை சங்கீதம் 119-இன் பதினான்காவது பகுதியின் தலைப்பாக உள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

# நெ

**நெகலாம் (NEHELAM – கனவு காண்பவன்)**

இப்பெயர் எரேமியாவால் கடிந்துகொள்ளப்பட்ட போலி இறைவாக்கினர்களில் ஒருவரான செமாயைக் குறிக்கும் (எரே 29:24; 31:32). இப்பெயர் குடும்பப் பெயராகவோ, இடத்தின் பெயராகவோ இருக்கலாம். சிலர் இது கனவைக் குறிப்பதாகவும், செமாயா "கனவு காண்பவர்" என இச்சொல்லை இருபொருள்பட அமைந்துள்ளதாகக் கருதுவதும் (எரே 23:25.32) ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

**நெகியேல் (NEIEL இறைவன் தங்குமிடம்)**

இஃது ஆசேரின் எல்லைப்புற நகரம் (யோசு 19:27). அக்கோ சமவெளியின் கிழக்கு ஓரத்தில் அமைந்த கிர்பெத் யானின் நெகியேல் இருந்த இடமாகக் கருதப்படுகிறது. வெண்கல, இரும்புக் காலத்திய சிதைவுகள் இவ்விடத்தில் காணப்படுகின்றன.

**நெகுஸ்தா (NEHUSHTHA - செம்பு, பாம்பு)**

இவள் யோயக்கிமின் மனைவியும், யோயாக்கின் அரசனின் தாயுமாவாள் (2 அர 24:8). யோயாக்கினும் நெகுஸ்தாவும் எருசலேமின் குடிகளோடு கி.மு. 597-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர் (2 அர 24:12,15).

**நெகுஸ்தான் (NEHUSHTAN - செம்பால் செய்யப்பட்ட)**

மன்னன் எசேக்கியா எபிரேய வழிபாட்டைத் தூய்மைப்படுத்துவதற்காக உடைத்தெறிந்த பித்தளைப் பாம்பே இந்த 'நெகுஸ்தான்' வழிபாட்டு மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட இச்செயல் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எசேக்கியா உடைத்தெறிந்த இப்பித்தளைப் பாம்பு மோசேயால் செய்யப்பட்டதென நம்பப்பட்டது (எண் 21:8-9). விக்கிரக ஆராதனைக்காக அமைக்கப்பட்டிருந்த தொழுகை மேடைகளையும், சிலைகளையும் பாகால் வழிபாட்டோடு தொடர்புடையவைகளையும் அழித்ததைப் பற்றியும் இதனுடன் குறிப்பிடப்படுகிறது.

நெகுஸ்தான் எனும் பெயர், எசேக்கியா அரசன் 'பித்தளைப் பொருள்' என வெறுப்புடன் வைத்த பெயரே எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், நெகுஸ்தான் என்ற பெயரே இப்பொருளுக்கு நெடுங்காலமாக வழங்கப்பட்டது.

பாகால் வழிபாட்டோடு தொடர்புடைய பாம்புத் தெய்வத்தின் பெயராகவும் இஃது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இஃது எவ்வாறு நிச்சயமாகிறதென்றால் யோயாக்கின் மன்னனின் தாய் நெகுஸ்தா எனப்பெயர் கொண்டிருந்தார் (2 அர 24:8). ஓர் உலோகத்தின் பெயர் அரசிக்கு நிச்சயமாக இடப்பட்டிருக்க மாட்டாது. ஓர் இயற்கைத் தெய்வத்தின் பெயரே இடப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்ராயேலில் எப்போழுதுமே யாவேயைப் பின்பற்றி அவருக்காக உறுதியாக நிற்போர் ஒரு குழுவும், பாகாலைப் பின் பற்றி அதனை வழிபடுவோர் ஒரு குழுவுமாக முரண்பாடு இருந்து வந்தது உண்மை. எசேக்கியா யாவேயின் ஊழியன். பாகால் வழிபாட்டிற்குரிய கானானிய அடையாளமே- பாம்பு ஆகும். இது பலரால் வெறுக்கப்பட்ட அடையாளமாகும்.

**நெகூம் (NEHUM – ஆறுதல்)**

பாபிலோனிலிருந்து திரும்பியவர்களின் பெயர்ப்பட்டியலில் முதன்மையாக வந்துள்ள பெயர்களில் ஒன்று (நெகே 7:7). எஸ்ராவில் வரும் இது போன்ற பெயர்ப்பட்டியலில் இவர் இரகூம் என்றழைக்கப்படுகிறார் (எஸ் 2:2). ஆனால், பின்னது– சரியானது என்றும், முன்னது படிவம்– எழுதியவரின் பிழையாக இருக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

**நெகேபு (NEGEB, THE - தெற்கு நோக்கி, தென்னாடு, வறண்ட நிலம்)**

இது கானானின் முக்கியப் பகுதிகளில் ஒன்று. முக்கோணத்தைக் கவிழ்த்து வைத்தாற்போல அமைந்துள்ளது. இம்முக்கோணத்தின் ஒருபக்கம் வாடி ஏல்–அராபாவோடும், மற்றொரு பக்கம் சீனாய்த் தீபகற்பத்திற்கருகில் அக்காபா வளைகுடாவிலிருந்து காசாவின் சுற்று வட்டாரம் வரையும் அமைந்துள்ளது. அதன் அடிப்பக்கம் கடற்கரையிலிருந்து சாக்கடல்வரை அமைந்துள்ளது. மலைநாடான மேற்குப் பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் இஃது அமைந்திருப்பதாலும் இச்சொல் தெற்கு எனப்பொருள் கொடுப்பதாலும், இஃது இந்நிலத்தைக் குறிக்கிறதா, அல்லது அதன் திசையைக் குறிக்கிறதா எனும் சந்தேகம் எழுகிறது (ஆதி 12:9; 13:1).

விவிலிய காலத்திற்குமுன் இது பாலைவனமாக இருக்கவில்லை. அப்பொழுது இங்குப் பல தாவரங்கள் இருந்ததால் அவை மண்ணை ஈரமுள்ளதாக்க, இவ்விடம் வளமுள்ளதாக இருந்தது. பின்னரே, இது மக்களின் அசட்டையால் வறண்ட பாலைவனமாகி இருக்க வேண்டும். இப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதாக ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர்.

பழைய கற்காலத்திலிருந்து தொடர்ந்து வந்த காலங்களின் மக்கள் குடியிருந்ததற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. இவர்கள் வட தென் வழியாகிய, வடக்கே பெயேர் செபாவிலிருந்து காதேசு பர்னேயா வரையிலும், அங்கிருந்து சீனாய்த் தீபகற்பம் வழியாக எகிப்து செல்லும் வழியெல்லாம் குடியிருந்திருக்கின்றனர். ஆபிரகாமுக்கு முந்திய மத்திய வெண்கலக் காலத்தில் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததால்தான் ஆபிரகாம் எகிப்திலிருந்து திரும்பும்போது வழியில் பல நகரங்களையும் தன் ஊழியர்களுக்கும் விலங்குகளுக்கும் வேண்டிய உணவையும் காண முடிந்தது (ஆதி 12:9–13:1). இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தவர்கள் மறைந்ததற்குக் கெதர்லாகோமேரும் அவனுடைய கூட்டணியும் உட்புகுதலே காரணமாயிருந்திருக்க வேண்டும் (ஆதி 14:7) ஒரு படையெடுக்கும் நோக்கமின்றி கொள்ளையடிப்பதையே நோக்கமாகக் கொண்டதால், நாட்டை அழித்துப் பாழ்படுத்தினர். வழிகள் எல்லாம் மறைந்தன. எனவேதான், ஆகார் வழி தவறிப்போனான் (21:14); மேலும், முதுபெரும் தந்தையர்கள் இதனால்தான் நெகேபில் தொடர்ந்து செல்லாமல், பெயோர்செபா, எபிரோனிலே தங்கிவிட்டனர்.

இஸ்ராயேலர்கள் எகிப்திலிருந்து திரும்பி இவ்வழியே வந்தனர் (எண் 14:44–45; உப 1:44). யூதா, சிமியோன் கோத்திரத்தார், மலைநாட்டை வெற்றி கொண்ட பின்னரே அமலேக்கியரின் நெகேபினைப் பிடிக்க முயன்றனர். அச்சமயத்தில் இப்பகுதி ஆடுகள் வளர்க்குமிடமாகவே இருந்தது. அவர்களின் மன்னரான அகாகுவையும் அவன் நகரையும் சவுல் அழித்தார் (1 சாமு 15). தாவீது இப்பகுதியில் தன்னை நிலை நிறுத்தியபின் (1சாமு 27:10; 30:14.29), நெகேபு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை சிக்லாகு அருகிலுள்ள கெரீத்தியரின் நெகேபு, பெயோர் செபாவைச் சுற்றியுள்ள யூதாவின் நெகேபு, எபிரோனுக்கு அருகில் காலேபின் நெகேபு, ஏரகுமவேலின் நெகேபு, கெனிசியரின் நெகேபு ஆகியவையாகும். இவையெல்லாம் பின்னர் யூதாவுடன் தாவீதால் இணைக்கப்பட்டன.

தாவீது ஏதோமையும் அராபாவையும் வென்றபின், குறிப்பாகச் சாலமோன் தனது வியாபாரம், தொழில் ஆகியவற்றை இப்பகுதியில் விரிவுபடுத்தத் தொடங்கியபின், இப்பகுதி முக்கியத்துவம் பெற்றது. இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த (கி.மு. 900–600) குடியிருப்புகள் இஸ்ராயேல் தங்கள் அரசைத் தெற்கில் விரிவாக்கியதற்குச் சான்று கூறுகின்றன. சிமியோனின் கோத்திரத்தார் தமது நாட்டைக் கெரார்வரை விரிவுபடுத்தினார். இஃது அமேலக்கியர்களை அழித்துக் கிடைக்கப்பெற்ற பகுதியாகும் (1 நாள் 4:39–43).

கி.மு. 597-இல் யூதா நாடு பிடிபட்டு, இஸ்ராயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பின் இந்நாட்டின் வடபகுதி ஏதோமியர்கள் கைவசமாகி அவர்களின் இதுமேயா அரசின் ஒரு பகுதியாகியது. இதன் மத்திய, தென்பகுதிகள் நபத்தேயர்களால் ஆட்கொள்ளப்பட்டன. இவர்கள் பல நகர்களை எழுப்பி, அணைகள் கட்டி, நீரைத்தேக்கி, கால்வாய்கள் வெட்டி மீண்டும் இப்பகுதியை வளமுள்ளதாக்கினர். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இது பாலைவனப் பயணிகள் தங்கிச் செல்லும் ஒரு சோலைவனமாக இருந்தது. பின்னர் அதிகம் கவனிக்கப்படாததாலும் போர்களின் பேரழிவுகளாலும் இப்பகுதி பாலைவனமாக மாறியது.

**நெகேமியா (NEHEMIAH – யாவே ஆறுதல் அளித்தார்)**

1. கி.மு. 538-இல் பாபிலோனிலிருந்து திரும்பிய இஸ்ராயேல் தலைவர்கள் பெயர்ப்பட்டியலில் முதன்மையான பெயர் இது (எஸ்ரா 2:2; நெகே 7:7).

2. அக்கல்யாவின் மகனும், பாரசீக மன்னனான முதலாம் அர்த்தக்சஸ்தாவின் மது பரிமாறுபவனுமாக இவர் இருந்தார். கி.மு. 444-இல் தனது உறவினினனான அனானியிடமிருந்து எருசலேமிலுள்ள யூதர்களின் துன்பமிக்க அவல நிலையைக் கேள்விப்பட்டு மிகவும் வருந்தி நோயுற்றார். எனவே, அரசன் இவரை எருசலேமுக்கு ஆளுநராக அனுப்பி வைத்தான் (நெகே 1:1–2:8). எருசலேமுக்கு வந்தவுடன் சிதையுண்ட எருசலேம் மதிற்சுவர்களை இரகசியமாகப் பார்வையிட்டார் (நெகே 2:9-16). இதனை மீண்டும் கட்டுவதாக அவர் செய்த முடிவைச் சன்பலாற்று, தோபியா போன்றோர் எதிர்த்தாலும் (2:17-20), பக்தியுள்ள யூதர்கள் பலரால் இது மீண்டும் கட்டப்பட்டது (ஆதி 3-4). ஓர் ஆளுநராகத் தன்னலமில்லாது பணியாற்றி, பொருளாதாரச் சீர்குலைவைச் சரி செய்தார் (ஆதி .5). அவர் எதிரிகள் தீய திட்டங்களையும் முறியடித்து (6:1-14). நெகேமியா மதிற்சுவரைக் கட்டி முடித்து, வாயிற்காப்போர்களை நியமித்தார் (7:1-3). எருசலேமில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை மிகக்குறைந்த அளவே இருந்ததால் (7:4-73), பத்து யூதர்களில் ஒருவனாவது தலைநகரில் வாழ வேண்டும் (11:1-2) எனக் கட்டளையிட்டார். எருசலேமில் வாழ்ந்தோரின் பட்டியலும் (11:3-19), யூதேயாவில் வாழ்ந்தோரின் பட்டியலும் (11:20-36) கொடுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஆட்சிக்குறிப்பேட்டாளரால் நெகேமியாவின் நாட்குறிப்பேட்டில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்; மேலும், இதனுடன் எருசலேம் மதிலை அர்ப்பணிப்பது பற்றிய விபரமும் சேர்க்கப்பட்டுள்ளது (12:27-43); காணிக்கைப் பொருட்களைச் சேகரிப்போர் பட்டியலும் தரப்பட்டுள்ளது (12:44-47).

கி.மு. 432-இல் மீண்டும் எருசலேம் வந்த நெகேமியா தோபியாவைக் கோவிலிலிருந்து வெளியேற்றினார் (13:4-9); லேவியர்கட்குச் செலுத்தப்பட வேண்டியவற்றைச் செலுத்துதல் (13:10-4), ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் (13:15-22) ஆகியவற்றைக் கட்டாயப்படுத்தினார். கலப்புத் திருமணத்தை ஒழிப்பதற்காக, தலைமைக் குருவின் பேரன் ஒருவனைத் துரத்தினார். ஏனெனில், அவன் சன்பலாற்றின் மகளை மணந்திருந்தான் (13:28029). தன் நூலின் இறுதியில் இறைவனின் சட்டத்தை நிலை நிறுத்தத் தான் எடுத்த முயற்சிகளை நினைவு கூர்ந்தருளுமாறு வேண்டுகிறார் நெகேமியா (13:30-31).

எஸ்ராவைப் போலன்றி நெகேமியா ஒரு செயல்வீரர். தனது ஆற்றலாலும், தன்னலமற்ற தன்மையாலும், புத்திக்கூர்மையாலும், செத்துக்கொண்டிருந்த எருசலேமின் யூத சமூகத்துக்கு இவர் உயிரூட்டினார். எருசலேமின் மதிலை எழுப்பி அந்நகரைப் பலப்படுத்தினார்; ஏழை எளியவர்க்கு உதவிசெய்து சமூக உயர்வையும், மோசேயின் சட்டத்தை நிலைநாட்டி

நாட்டுயர்வையும் நிலைபெறச்செய்தார் (காண்க. 2 மக் 1:18-36; 2:13; சீரா 49:13).

3. இவர் அசபூக்கின் மகனும் பெத்சூரின் பாதிப்பகுதிக்கு ஆட்சியாளரும் ஆவார். கி.மு. 444-இல் நெகேமியா எழுப்பிய எருசலேம் சுவருக்கு உதவியவர்களுள் ஒருவர் (நெகே 3:16).

**நெகேமியா நூல் (NEHEMIAH, BOOK OF)**

காண்க. எஸ்ரா, நெகேமியா நூல்கள் (**EZRA and NEHEMIAH, Books of**).

**நெக்கோ (NECO)**

கி.மு. 609-594-இல் எகிப்தை ஆண்ட 26-ஆவது அரசமரபைச் சேர்ந்த பார்வோன் மன்னனாகிய இவன் யோசியா மன்னனைக் கொன்றான். அரசன் யோவகாசுக்குப் பதிலாக, யோயாக்கிமை அரியணை ஏற்றினான் (2 அர 23:29-53).

கி.மு. 671-இல் அசீரிய அரசன் எசர்கத்தோன் எகிப்தில் புகுந்து மெம்பிசுவைப் பிடித்தான். எத்தியோப்பியப் பார்வோன் மன்னனைத் தெற்கு நோக்கி ஓட விரட்டினான்; அங்குள்ள சிற்றரசர்களின் ஆட்சியை உறுதிப்படுத்தினான். அவர்களில் ஒருவன் சாயிஸ் மற்றும் மெம்பிசுவின் நெக்கோ என்பவனாவான். பின்னர் இந்தநெக்கோவின் மகன் முதலாம் சம்மெட்டிக்கு 663-இல் எகிப்து முழுவதின்மேல் ஆட்சி உரிமை கோரி, சாயிசைத் தலைநகரமாகக் கொண்ட 26-ஆவது அரச மரபை நிறுவினான். இவனுக்கு அசீரியர்களின் ஆதரவு கிடைத்தது. மேலும், இவன் கூலிப்படைகளையும் பயன்படுத்தினான்.

மூன்று ஆண்டுகளுக்குப்பின், தன் தந்தையை அடுத்து 2-ஆம் நெக்கோ 609-இல் அரியணை ஏறினான். புதிய பாபிலோனிய அரசு சீரிய, பாலஸ்தீனத்துக்குள் புகுமுன் இம்மன்னன் காசா, அஸ்கலோன் போன்றவற்றைப் பிடித்து, பாலஸ்தீனத்தில் தனது ஆட்சியின் அடிப்படையை நிலைநாட்டினான் (எரே 47:1,5), பின்னர், பெலிஸ்தியச் சமவெளியையும், சாரோன் சமவெளியையும் கடந்து, அசீரியரின் எஞ்சிய படையோடு இணைந்துகொள்ளத் தீர்மானித்தான். யூதாவின் அரசன் யோசியா இவனை எதிர்த்து நின்றபோது கொல்லப்பட்டான் (2 அர 23:29; 2 நாள் 35:20-24). எருசலேம் மக்களிடம் யோவகாசு என்னும் எகிப்தியருக்கு எதிரான மனப்பான்மையை யூதாவின் அரசானது ஏற்படுத்தியபோது, நெக்கோ இரிப்லா எனுமிடத்தில் அவனை நீக்கி, யூதாவிற்கும் பெரும் தண்டனையைத் தந்தான். நெக்கோ எலியாக்கிம் என்பவனை, யோயாக்கிம் எனும் பெயரில் யூதாவின் அரசனாக ஆக்கினான் (2 அர 23:33-35). இவ்வாறு யூதா தன்னுரிமை நாடாக இருந்த நிலைமாறி எகிப்தின்கீழ் ஆட்சி செய்யும் சிற்றரசாகியது.

சில ஆண்டுகள் ஆசியாவில் அவன் பலம் ஓங்கியிருந்தது. இவனது நினைவுச் சின்னங்கள் சீதோனில் காணப்படுகின்றன. தன்னிடமுள்ள கூலிப்படையைக் கொண்டு கர்க்கமிசை வலுப்படுத்தி, திக்ரீசைக் கடந்து, சக்தி பெற்று வரும் பாபிலோனிய அரசரான நபோபோலாசரை அச்சுறுத்தத் தொடங்கினான். ஆனால், நபோபோலாசரின் மகன் நெபுகத்னேசரிடம் கர்க்கமிசில் பெரும் தோல்வி அடைந்தான் (2 அர 24:7; எரே 46:2). நெபுகத்னேசரிடம் நெக்கோவை எகிப்திய ஆறு வரை விரட்டிச் சென்றான். தன் தந்தையின் இறப்பால் நாடு திரும்பிய அவன் மீண்டும் கி.மு. 601-இல் எகிப்திய எல்லையில் நெக்கோவுடன் போரிட, இரு பக்கமும் பேரிழப்பு ஏற்பட்டது. அத்துடன் எகிப்திய மன்னன் நெக்கோ தனது நாட்டுக்கு வெளியே போரிடச் செல்வதில்லை என முடிவு செய்தான்.

இந்த அரசன் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் எரோதோத்தசு போன்ற வரலாற்றிஞர்களிடமிருந்து பெறப்பட்டதாகும். இவர் இம்மன்னன் ஆட்சி முடிந்த சில தலைமுறைகளுக்குப்பின் எகிப்துக்குச் சென்றிருக்கிறார். ஆகவே இச்செய்திகளின் உண்மைத்தன்மை ஐயத்திற்குரியதாகும்.

இச்செய்திகளின்படி, நைல் நதியிலிருந்து, செங்கடல் வரை ஒரு கால்வாய் வெட்ட பெருமுயற்சி செய்தான் மன்னன் நெக்கோ. ஆனால் அவனால், அதனை நிறைவேற்ற முடியாததால் பாரசீக மன்னன் தாரியுதான் இவ்வேலையை முடித்தான். நெக்கோ ஆப்பிரிக்காவைச் சுற்றி கப்பல்களை அனுப்பினான் என்றும் மரபு கூறுகிறது.

**நெக்கோதா (NEKODA)**

1. பாபிலோனிலிருந்து எருசலேம் திரும்பிய ஆலயப்பணியாளர்களில் ஒருவரான இவர் ஓர் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:48 = நெகே 7:50).

2. தாங்கள் இஸ்ராயேலில் யார்வழி வந்தவர்கள் என நிரூபிக்க முடியாத, பாபிலோனிலிருந்து திரும்பி வந்த இஸ்ராயேலர்கள் சிலரின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:60 = நெகே 7:62).

**நெசவாளரின் தறிக்கட்டை, படைமரம் (BEAM)**

இது தறியில் பாவுநூல் சுற்றப்பட்டிருந்த படைமரமாகும். இது மிகப்பெரியதாக இருந்திருக்க வேண்டும் (1 சாமு 17:7; 2 சாமு 21:19; 1 நாள் 11:23; 20:5).

**நெசவுத்தறி (LOOM)**

நெய்வதற்குப் பயன்படும் ஒரு கருவி அல்லது எளிய சட்ட அமைப்பாகும். சிம்சோனுடைய ஏழு மயிர்க் கற்றைகளையும் பாவு நூலால் பின்னி, அவரைக் கட்டிப்போட தெலீலா முயன்றாள் ஆனால், அவர் எழுந்து முளையோடு பாவுநூலைப் பிடுங்கி எறிந்தார் (நீதி 16:13-14). யோபு தன் "நாள்கள் தறி ஓடு கட்டையிலும் விரைந்தோடுகின்றன" எனப் புலம்புகிறார் (யோபு 7:6). "நெசவாளன் பாவைச் சுருட்டுவதுபோல் என் வாழ்வை முடிக்கிறேன். தறியிலிருந்து அவர் என்னை அறுத்தெறிகிறார்" என்று எசேக்கியா புலம்புகிறார் (எசா 38:12). இந்த இரண்டு கூற்றுகளிலும் வாழ்வு கடந்து முடிந்து போவதை உருவகமாக எடுத்துக்கூற, தறி பயன்படுகிறது.

**நெடுங்கணக்கு (ALPHABET)**

இது பேச்சில் பயன்படும் தனி ஓசைகளை எடுத்துக்காட்டப் பயன்படும் அடையாளங்களின் தொகுப்பாகும். இங்குச் செமித்திய மொழியில் தொடங்கி கிரேக்கம், இலத்தீன் வழியாக மேல்நாட்டு மொழிகளில் பயன்படும் நெடுங்கணக்கின் வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறோம். கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டுகளில் முதல் பகுதியில் வடமேற்குச் செமித்திய மக்களிடையே தோன்றிய நெடுங்கணக்குதான் இன்றைய எழுத்துக்களின் முதன்மையான தொகுப்பாகும். இது காலப்போக்கில் கிரேக்கர்களால் மாற்றியமைக்கப்பட்டு, இலத்தீன் மொழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேல்நாட்டு மொழிகளில் இடம் பெற்றது.

நெடுங்கணக்கு எழுத்து முறையின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றிய அறிவு முதன்மையாகத் தொல்லெழுத்துக் கலை பற்றிய தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து வருகிறது. இந்தக் கலை எழுத்துப் பொறிப்புகளின் சான்றுகளை ஆராய்ந்து எழுத்து அடையாளங்களின் வளர்ச்சி வரிசை முறையைப் பாகுபாடு செய்கிறது. நெடுங்கணக்கு எழுத்துகளின் அமைப்பு மற்றும் பின்வந்த மாறுதல்களுக்கு அடிப்படை உந்து காரணம் ஆவணங்களுக்கும், கடிதங்களுக்கும் பொறுப்பான எழுத்தாளர்களிடையே நிலவிய எளிதாக்கும் போக்கே ஆகும். ஒரு மொழி அல்லது திரிபுமொழிக்கு எழுதும் முறையை அமைக்க நெடுங்கணக்கு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய எழுத்துத் தொகுப்பு தனிப்பட்ட சொல் அல்லது அசையைக் குறிக்க பலநூறு அடையாளங்களைப் பயன்படுத்தின. இவற்றிலிருந்து செமித்திய முறை ஒரு முன்னேற்றமாகும். எகிப்திய சித்திர எழுத்துக்களால் உந்தப்பட்டு, தொடக்கால நெடுங்கணக்கு சித்திர அடையாளங்களைப் பயன்படுத்தின. இவை படிப்படியாக எளிதாக்கப்பட்டு விரைவாகவும் தெளிவாகவும்

எழுத நயப்படுத்தப்பட்டன. சொற்களின் முதல் அசை, எழுத்து அல்லது ஒலி படக்குறியீடுகளால் குறிக்கப்படும் முறையில், மூல அடையாளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். சான்றாக, அலேபு என்ற எழுத்து எருது என்பதைக் குறிக்கும் 'அல்பு' என்ற சொல்லிலிருந்து வந்தது; எருதின் தலை அடையாளமாயிற்று.

நெடுங்கணக்கு எழுத்துமுறைக்குக் காலத்தால் முந்திய எடுத்துக்காட்டுகள் மத்திய வெண்கலக் காலத்தைச் சேர்ந்த (கி.மு. 1500) செராபித் ஏல்–காதேமியர்களிடமிருந்து கிடைத்துள்ள பாறையில் வெட்டப்பட்ட சுவர் ஓவியங்களாகும். இவர்கள் சீனாய் தீபகற்பத்தில் வாழ்ந்த எகிப்திய சுரங்கத் தொழில் செய்யும் குழுவினர் ஆவர். இந்த எழுத்துப் பொறிப்புகள், சீரியா, பாலஸ்தீனத் தொழிலாளிகளால் பயன்படுத்தப்பட்ட முந்தைய கானானிய நெடுங்கணக்கைச் சித்திர அடையாளங்களால் எடுத்துக்காட்டுவதாகத் தோன்றுகிறது. மத்திய வெண்கலக் காலத்திற்கும், பிற்கால வெண்கலக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தகைய பொருட்கள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த நகர அரசுகளாகிய இலாக்கிசு, மெகிதோ, ஆட்சேர் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிற்கால வெண்கலக் காலத்தைச் சேர்ந்த பல எழுத்துப் பொறிப்புகள் அடையாளங்களைக் கருத்தியல்படுத்துவதையும் செங்குத்தாக, இடமிருந்து வலம் எழுதும் முறையை அகற்றுவதையும் சுட்டுகின்றன. பிற்கால வெண்கலக் கால முடிவில், கானானிய நகர அரசுகள் அழிந்தபின் பல சுயாட்சியுள்ள நாடுகள் தோன்றின. அஃதோடு பழைய கானானிய நெடுங்கணக்கு எழுத்துகளும் ஒவ்வொரு நாட்டுக்குமுரிய விதத்தில் வேறுபட்டன. இவ்வாறு கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தீர் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து, தனிப்பட்ட புதிய பெனிசிய எழுத்துமுறை வளர்ந்து தீர் மற்றும் சிதோனியப் பேரரசுகளிலும் அவற்றோடு தொடர்புடைய மத்தியதரைக்கடல் நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தியது. எபிரேய எழுத்துமுறை கி.மு. பத்தாம் நூற்றாண்டில் கானானிய–பெனிசிய எழுத்து முறையிலிருந்து பிரிந்ததாகத் தோன்றுகிறது. இது குல, இனக் கூட்டாட்சியிலிருந்து தாவீது சாலமோன் காலத்தில் அரசாட்சி தோன்றிய போது நடந்ததாகத் தெரிகிறது. ஒன்பதாம் நூற்றாண்டைச்சேர்ந்த, பெனதாதின் பெயர் பொறிக்கப்பட்ட தூண்கள், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த செபிர் தூண்கள் உட்பட்ட அரமேயிக்கு எழுத்துப் பொறிப்புகள், தனிப்பட்ட எழுத்து முறையைச் சுட்டுகின்றன. இது சாலமோனின் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முதலாம் பெனதாதுவின் கீழ் அரமேய நாடுகள் ஒன்றுபடுத்தப்பட்ட காலத்தில் நடந்ததாகத் தெரிகிறது. இது சதுர எழுத்துகளைக் கொண்டதாகும். இது பாரசீகர்கள் காலத்தில் எபிரேய எழுத்து முறையை அகற்றி அதன் இடத்தை எடுத்துக்கொண்டது. கானானிய எழுத்து முறைகள், மோவாயிய (மேசாகல்), ஏதோமிய மற்றும் அம்மோனிய (தெல் தெயிர் அல்லது எழுத்துப் பொறிப்புகள்) எழுத்து முறைகளாகும்.

கிரேக்கர்கள், பெனிசிய நெடுங்கணக்கின் 22 எழுத்துகளைக் கடன் வாங்கினர் என்பது தெளிவாகும். இதை எழுத்துகளின் வரிசையிலிருந்தும் பெயர்களிலிருந்தும் அறியலாம். இதற்குக் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களும் சான்று கூறுவர். எப்போது இது நடந்தது என்பது பற்றித் தர்க்கம் இருக்கலாம். எழுத்துப் பொறிப்புகள், பெனிசிய எழுத்துவடிவங்களோடு கிரேக்கர்கள் கொண்ட முயற்சி கி.மு. 12–ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியதாகத் தெரிகிறது. காலத்தால் முந்திய கிரேக்க எழுத்துகள் ஒன்பதாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெனிசிய எழுத்துகளோடு நெருங்கிய ஒப்புமை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இக்காலத்தில்தான் பெனிசியர்களின் கடல்போக்குவரத்து பரவியிருந்தது (வட ஆப்பிரிக்கா, இத்தாலியா, மால்தா மற்றும்

ஸ்பெயின் ஆகிய நாடுகளில் காணப்பட்ட பெனிசிய எழுத்துப் பொறிப்புகளைக் காண்க). செமித்திய நெடுங்கணக்கு முதன்மையாக மெய்யெழுத்துகளைக் கொண்டது. கிரேக்க நெடுங்கணக்குதான், உயிர் எழுத்துகளைத் திட்டமிட்டு முதன்முதலாகப் பயன்படுத்தியது. இதற்கு ஐந்து செமித்திய எழுத்துகளைப் பயன்படுத்தியது. பழைய அரமேயிக்கு மொழி ஒன்பதாம் நூற்றாண்டிலேயே வவ், யோது, மற்றும் இறுதி உயிரெழுத்தைக் குறிக்க கே–யையும் பயன்படுத்தியதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், கிரேக்கர்கள்தான் முதன்முதலில் உள்ளார்ந்த உயிர் எழுத்துகளைச் சுட்டிக் காட்டினர். ஏழாம் நூற்றாண்டில் கிரேக்க நெடுங்கணக்கு எழுத்துகள் எட்ரஸ்கர்களால் உரோமையர்களால் பயன்படுத்தப்பட்டன.

கீழே எபிரேய, கிரேக்க நெடுங்கணக்குப் பட்டியலையும் பொருளையும் தருகிறோம்.

ஆலப்பு (**Aleph - Alaph** – எருது

பேத்து (**Beth - Beta**) – வீடு

கிமல் (**Gimel - Gamma**) - ஒட்டகம்

டாலத்து (**daleth - delta**) - கதவு.

ஏ (**He - epsilon**) - (ஐயப்பாடானது)

வவ் (**waw - upsilon**) - கொக்கி.

சாயீன் (**zayin - zeta**) - ஆயுதம் (?) ஒலிவமரம் (?)

கேத்து (**heth - eta**) – வேலி.

றேற்று (**teth - Theta**) – (ஐயப்பாடானது)

யோது (**Yodh - iota**) – கை.

காப்பு (**Kaph - Kappa**) – உள்ளங்கை.

லாமேது (**Lamedh - Lambda**) – எருது தாற்றுக்கோல்.

மேம் (**Mem - Mu**) – தண்ணீர்.

நூன் (**Nun - Nu**) – மீன்.

சாமேக்கு (**Samekh - Sigma**) – ஆதாரம்.

ஆயின் (**ayin - O-mikran**) – கண்.

பே (**peh - pi**) – வாய்.

இட்சாதே (**Sadhe - San**) – தூண்டில்.

கோப்பு (**qoph - Koppa**) – பின்தலை (?)

ரேசு (**Res - Rho**) – தலை.

சீன் (**Sin -**) - பல்.

தௌ (**Tau - Tau**) – குறி.

**நெடுஞ்சாலை (HIGHWAY)**

மத்திய தரைக்கடலையும் சீரிய பாலைவனத்தையும் இணைக்கும் நிலப் பாலமாகப் பாலஸ்தீனம் அமைந்துள்ளது. பாலஸ்தீனத்தில் நெடுஞ்சாலைகளும் சிறிய சாலைகளும் குறுக்குமறுக்குமாக ஓடி ஒரு பின்னல் வடிவைக் கொண்டுள்ளது. இவற்றை இத்தியர் முதல் உரோமையர் வரை மக்கள் வியாபாரத்திற்கும் போர்களுக்கும் பயன்படுத்தியுள்ளனர். கல்பதித்த நெடுஞ்சாலைகள் உரோமையரோடு பாலஸ்தீனத்திற்குள் வந்தன. இவற்றிற்கு முன் இருந்த சாலைகள் பயணத்தை எளியதாகவும் நேரடியானதாகவும் ஆக்கின.

பழங்கால மேற்காசியா முழுவதும் புவியியலுக்கு ஏற்றவாறு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. முக்கியமான பன்னாட்டுச் சாலை பெருங்கடல் வழிப்பாதையாகும் (எசா 8:23). கீழ் நைல் நதியில் தொடங்கி, கடலோரத்தை ஒட்டி ஓடி, இஸ்ரியேல் பள்ளத்தாக்கை வெட்டி, ஆட்சோர் மற்றும் தமஸ்குவை அடைந்தது. அங்கிருந்து நெடுஞ்சாலை பிரிந்து வடக்கே ஆலப்போவுக்கும் தெற்கில் ததிமோருக்கும் சென்று, மாரியில் சந்தித்தன. பின்பு இந்த நெடுஞ்சாலை தெற்கு நோக்கி யூப்பிரத்தீசு நதியை ஒட்டி ஓடி, பாரசீக வளைகுடாவை அடைந்தது. பெருங்கடல் வழியின் ஒரு முக்கிய கிளை அரசு நெடுஞ்சாலை என்றழைக்கப்பட்டது. இச்சாலை யோர்தானுக்கு அப்பால் உள்ள மலைப்பகுதியில், பாலைவனத்துக்கு வெகு அருகில் ஓடியது. இஃது இரண்டாம் தர வழியென்றாலும், பெருங்கடல் வழியைச் சேரும். பல கிழக்கு மேற்குச் சாலைகளைக்கொண்டிருந்தது. ஏதோம் (எண் 20:17; நீதி 11:14-20), எமோரியா (எண் 20:17; நீதி 11:14-20), எமோரியா (எண் 21:22; உப 2:27)

ஆகிய நாடுகளைக் கடந்து செல்ல இஸ்ராயேலர் அனுமதிகேட்ட சூழ்நிலையில் அரச நெடுஞ்சாலை பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படுகிறது.

வரலாற்று நிகழ்ச்சியுரைகளில் நெடுஞ்சாலை அடிக்கடி குறிக்கப்படுகிறது (நீதி 20:31.32.45; 21:19: 1 சாமு 6:12; 2 அர 18:17; எசா 36:2; 7:3). இச்சொல் பாடல்களிலும் இறைவாக்குகளிலும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (எசா 11:16; 33:8; 49: 11; 59:7; காண்க. நீதி 5:20; யோவே 2:8; பழ 15:19; 16:17; எரே 18:15; 31:21) எசா 11:16; 19:23; 35:8; 40:3; 62:10-ஆகிய பகுதிகளில் இச்சொல்லால்-பாபிலோனிய அடிமைத்தனத்தி லிருந்து விடுபட்டவர்கள் திரும்பிவந்த சாலை-குறிக்கப்படுகிறது. மேலும் காண்க. அரச நெடுஞ்சாலை; பயணமும் தொடர்புகளும்.

**நெட்சிபு (NEZIB** - தூண், காவற்படை, எல்லைக் காவல் நிலையம்)

இது செபேலாவிலுள்ள யூதாவின் கிராமங்களில் ஒன்று. கிர்பெத் கிலா என்னுமிடத்திலிருந்து, சுமார் 3 கி.மீ. தொலைவிலுள்ள இலாக்கிசிலிருந்து கிழக்கிலும் எபிரோனுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத் பெயித். நெசிபு என்று அடையாளம் காட்டப்படுகிறது.

**நெட்சியாகு (NEZIAH** - விசுவாசமுள்ள)

இவர் பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களின் பட்டியலில் கூறப்படும் ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தின் குலப்பெயர் முதியவர் ஆவார் (எஸ் 2:54; நெகே 7:56).

**நெதபியா (NEDABIA** - யாவே தூண்டினார், கட்டாயப்படுத்தினார்)

இவன் மன்னன் எக்கோனியாவின் (யோயாக்கினின்) மகன் (1 நாள் 3:18).

**நெத்தனியா (NETHANIAH** - யாவே கொடுக்கிறார்)

1. இவர் கெதல்யாவைக் கொன்ற இஸ்மயேலின் தந்தை (2 அர 25:23.25; எரே 40:8. 14-15; 41:1-9).

2. நெத்தனியா, சுரமண்டலங்களையும், தம்புருகளையும், கைத்தாளங்களையும், இசைத்து இறைவாக்குரைக்க தாவீதால் நியமிக்கப்பட்ட வரும், ஆசாபுவின் மகனும், லேவியரும் ஆவார் (1 நாள் 25:2). இவர் லேவியப்பாடகர்களின் ஐந்தாம் பிரிவுக்குத் தலைவர் (25:12).

3. நெத்தனியா, யோசபாத்தால் யூதாவின் நகரங்களில் ஆண்டவரின் சட்டங்களைப் போதிக்க அனுப்பப்பட்டவர்களுள் ஒரு லேவியர் (2 நாள் 17:8).

4. நெத்தனியா எகுதியின் தந்தை. இவர் எரேமியாவின் ஏட்டுச் சுருளை அரசனுக்குப் படித்துக் காட்டியவர் (எரே 36:14.21).

**நெத்தனியேல் (NETHANEL** - கடவுள் கொடுக்கிறார்)

1. நெத்தனியேல், இசக்காரின் கோத்திரத்தில் சூவாரின் மகன் ஆவார் ( எண் 1:8). 54,400 பேருக்குத் தலைவராய் இருந்த இவர் (2:5; 10:15) பீடமும், கூடாரமும் அர்ப்பணிக்கப்பட்டபோது அதில் பங்கு கொண்டவர் (7:18-23).

2. நெத்தனியேல் ஈசாயின் நான்காவது மகனும், தாவீதின் மூத்த சகோதரனும் ஆவார் (1 நாள் 2:14).

3. தாவீதின் காலத்தில் பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்ட போது நெத்தனியேல், ஆண்டவரின் பேழைக்கு முன் எக்காளம் ஊத வேண்டியவர்களுள் ஒருவர் (1 நாள் 15:24).

4. நெத்தனியேல், லேவியரும், எழுத்தர் செமாயாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 24:6).

5. நெத்தனியேல், கோராகிய லேவியரும், ஓபேது ஏதோமின் ஐந்தாவது மகனும், ஆலய வாயில் காப்போனும் ஆவார் (1 நாள் 26:4).

6. நெத்தனியேல் யோசபாத்து அரசனால் யூதாவின் நகரங்களில் ஆண்டவரின்

சட்டநூலைப் போதிக்க அனுப்பப்பட்ட யூதாவின் தலைவர்களுள் ஒருவர் (2 நாள் 17:7-9).

7. நெத்தனியேல், லேவியரும் கொனனியாவின் சகோதரனும் ஆவார். இவர் யோசியா அரசன் காலத்தில் பாஸ்கு விழாவுக்குக் காணிக்கை கொடுத்தவர்களுள் ஒருவர் (2 நாள் 35:9).

8. நெத்தனியேல் பஸ்கூரின் மகன். நாடு கடத்தப்பட்டபோது அயல் நாட்டு மனைவியரை மணந்த குருக்களில் ஒருவர் (எஸ்ரா 10:22). நாடு திரும்பியபின் அவளை விலக்கிவிட்டவர்.

9. நெத்தனியேல் யோயாக்கிம் தலைமைக் குருவாய் இருந்த காலத்தில் எதாயா வம்சத்தின் தலைவராக இருந்தார் (நெகே 12:21).

10. நெத்தனியேல், திரும்பவும் புதியதாகக் கட்டப்பட்ட எருசலேமின் சுவர் அர்ப்பணிக்கப்பட்டபோது அதில் கலந்து கொண்டவர். ஆசாபுவின் வழித்தோன்றல் (நெகே 12:36). இவரும் 9-இல் குறிக்கப்படுபவரும் ஒருவராக இருக்கலாம்.

**நெத்தினிம் (NETHINIM)**

காண்க; ஆலய ஊழியர்கள்

**நெபயோத்து (NEBAIOTH) - உச்சி)**

இசுமயேலின் மூத்த மகனும், கேதாரின் சகோதரனுமான இவன் பெயரிலிருந்து (ஆதி 25:13; 28:9; 36:3; 1 நாள் 1:29) இதே பெயரில் அரேபிய இசுமயேலரின் மத்தியிலும் குலப்பிரிவுகள் இருந்ததெனத் தெரிகிறது. கேதாரும் நெபயோத்தும் ஆடுகள் வளர்ப்பதில் பெயர் பெற்றவர்கள் (எசா 60:7). நெபயோத்து அராபியர்களும், மூன்றாம் திகிலத்பிலேசர், அசூர்பானிப்பால், பிளினி ஆகியோர் குறிப்பிடும் "நபாயியத்தி" அரேபியர்களும் ஒன்றே எனக் கருதப்படுகிறது. அறிஞர் சிலர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'நபத்தேயர்களே', நெபயோத்து' இனத்தினர் எனக் கூறினாலும் அஃது அவ்வளவு ஏற்கக் கூடியதாக இல்லை.

**நெபல்லாற்று (NEBALLAT - இரகசியமடமை)**

இது சாரோன் சமவெளியின் தென்கிழக்குப் பகுதியைப் பார்க்கும் வண்ணம் குன்றின் மேலமைந்த நகரம். பாபிலோனிலிருந்து திரும்பி வந்த பென்யமின் குலத்தினர் இங்குத் தங்கினர் (நெகே 11:34). லோதுக்கு வடகிழக்கே 7 கி.மீ. தொலைவிலும், ஆட்சோருக்கு மேற்கில் 32 கி.மீ. தொலைவிலும் உள்ள பெயித்துநாபாலாவாக அடையாளம் காட்டப்படுகிறது. கி.மு. ஏழாம் நூற்றாண்டின் சமாரியாவைச் சேர்ந்த ஓர் அசீரிய ஆளுநன் நபு-உபாலித்தின் பெயர் நினைவாகக் கட்டப்பட்டதாக இருக்கலாம்.

**நெபாற்று (NEBAT - நோக்கு, காட்சி)**

இவர் முதலாம் எரொபவாம் அரசனின் தந்தை. செரேதைச் சேர்ந்த எப்பிராமியர் (1 அர 11:26). யோவாசின் மகன் இரண்டாம் எரொபவாமிலிருந்து முதலாம் எரோபவாமை வேறுபடுத்த "நெபாற்றின் மகன்" என்ற அடைமொழி, பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகிறது. இப்பெயர் வடஅரேபியாவில் பொதுவானது. ஒரு சிலர் கருதுவதுபோல் இதுவும் நாபோத்தும் ஒன்றன்று.

**நெபிசிம் (NEPHISIM)**

பாபிலோனிலிருந்து திரும்பி வந்த ஆலயப்பணியாளர்கள் அல்லது நெத்தினிம் எனும் குடும்பத்தின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:50). நாபிசு இசுமயேலர்களோடு தொடர்புடையவராக (உறவினராக) இருக்கலாம். இதற்கு இணையான நெகே 7:52-இல் இப்பெயர் நெபுசசிம் என்றுள்ளது.

**நெபுகத்னேசர், நெபுகத்ரேசர் (NEBU-CHADNEZZAR, NEBUCHADREZZAR - நபு என் எல்லையைப் பாதுகாத்தார்)**

கி.மு. 605-562-இல் பாபிலோனியாவின் அரசனான இவன் நெபோபோலாசரின் மகனும்,

அவில் - மெரோதக்குவின் தந்தையுமாவான்.

D.J. வைஸ்மன் நெபுகத்னேசரைப் பற்றி எழுதியுள்ளவையே அவனது ஆட்சியின் சிறப்புத்தன்மைகளை நமக்குப் புலப்படுத்துகின்றன. இவன் வருடத்திற்கொரு முறை தனது படைகளுடன் சென்று தனக்குச் செலுத்தப்பட வேண்டிய திறைப்பொருளைச் சேகரித்தான். இவன் தன்னிடம் தோற்றவர்களை மற்ற அசீரிய அரசர்களைப் போலவே மிகக் கொடுமையாகத் தண்டித்தான். இவனது 43 ஆண்டு கால ஆட்சியில் முதல் 10 ஆண்டுகளே மிகவும் பெருமைக்குரியனவாக அமைந்தன. அதன்பின் வந்த ஆண்டுகள் பற்றி எதுவும் தெரியவில்லை. முதல் பத்தாண்டுக் காலத்திலே இவனுக்கெதிராக எழுந்த இரண்டு கிளர்ச்சிகள் உள்நாட்டிலும் குழப்பங்கள் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

இவன் பட்டத்து இளவரசனாக இருக்கும் போதே எகிப்திய இரண்டாம் நெக்கே பார்வோனைக் கர்க்கமிசு என்னும் இடத்தில் பெரும் வெற்றி கொண்டதால் பாபிலோனிய அரசே இவன் காலடியில் வீழ்ந்தது. தோல்வியடைந்த எகிப்தியரை அவர்களது நாட்டு எல்லைவரை விரட்டிச் சென்றான்; ஆனால், அவன் யூதாவிற்குள் புகவில்லை (2 அர 24:7). யூதாவின் மன்னனான யோயாக்கிம் ஆட்சியை ஏற்றுக்கொண்டான். இதற்கிடையில் தனது தந்தையின் மரணத்தைக் கேள்விப்பட்டு நாடு திரும்பிய நெபுகத்னேசர் மீண்டும் அரசனாக யூதாவுக்கு வந்து தனது திறைப்பணத்தைப் பெற்றுச் சென்றான். ஒவ்வொரு வருடமும் ஒரு நகரமாகப் பிடித்து வந்தான். 601-ஆம் ஆண்டில் இவன் எகிப்தியரிடம் தோற்றான். எனவே, காசா வரை அவர்கள் வெற்றி பெற்று, எருசலேமிலும் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டினர். இதற்கு எதிராக எரேமியா பல தடவை இஸ்ராயேலரை எச்சரித்தார். ஆனால், யோயாக்கிம் இன்னும் நெபுகத்னேசருக்குத்தான் திறை செலுத்தினான் என்று யோசிப்பசு கூறுகிறார். இதற்கிடையில் யோயாக்கின் யூதாவின் ஆட்சிக்கு வந்திருந்தான். ஆனால், 597-இல் 'யூதாவின் நகரமென' நாளாகமம் கூறும் எருசலேம் நகரத்தையும், நாட்டையும் பிடித்து யோயாக்கினை நாடு கடத்தினான். 'செதேக்கியாவை யூதாவின் அரசனாக அரியணையில் ஏற்றினான். ஆனால், யூதா பெருமளவில் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. இதன் பிறகு நெபுகத்னேசர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சீரியாவின் மீது படையெடுத்தான். இவனது ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டில் திக்ரீசுக்கு அப்பால் உள்ள ஏலாம் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்.

நெபுகத்னேசர் தன் இறுதி 33 ஆண்டுகளில், தீர் நாட்டைப் பிடித்தான்; 586-இல் எருசலேமை இரண்டாம் முறையாகப் பிடித்து அழித்தான்; 567-இல் பார்வோன் அமாசிசுக்கு எதிராகப் படையெடுத்தான்.

மற்ற அசீரிய மன்னர்களைவிட இவன் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் தன் அண்டைநாடான 'மேதிய' அரசின் மகளை மணந்ததால் வடக்கு, மற்றும் வடமேற்கு எல்லைகள் பாதுகாப்புடையனவாக இருந்தன. வெற்றிகொண்ட நாட்டினின்று பெற்ற செல்வங்களையெல்லாம் தன் அரண்மனைகளை அழகுபடுத்தவும், பாபிலோனியாவில் கோவில் கட்டவும், நகர்களைப் பலப்படுத்தவும் பயன்படுத்தினான். உலகப்புகழ் பெற்ற 'பாபிலோனியத் தொங்கு தோட்டம்' சிதைவுகளிடையே அடையாளம் காணமுடியாததாக உள்ளது. தானியேல் 4-இல் குறிப்பிடப்படும் பைத்தியக்காரத்தனம் நெபுகத்னேசரை அன்று, நபோனிது என்பவனையே குறிக்கும். ஏனெனில் அரசனாக இருந்து ஒருவர் செய்யத்தகாத செயல்களைச் செய்ததால், பலரது எதிர்ப்பைப்பெற்ற இவனே அந்தப் பைத்தியக்காரனாக இருக்க வேண்டும்.

**நெபுசசுபான் (NEBUSHAZBAN** - நபு என்னைக் காப்பாற்று)

நெபுகத்னேசரின் தலைமை அண்ணகன் இவன்; பாபிலோனியச் சிற்றரசர்களில் ஒருவனாகக் கூறப்படுகிறான். எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின் எரேமியாவைப் பாதுகாக்க பாபிலோனிய அரசன் இவனை அனுப்பினான் ( எரே 39:13).

**நெபுசரதான் (NEBUZARDAN** - நபு மகப்பேறு அளித்தார்)

நெபுகத்னேசரின் அரசவை உயர் அதிகாரி. இவன் எருசலேம் நகரின் கோவில், அரண்மனை, வீடுகள், அதன் சுவர் அனைத்தையும் நெருப்பால் எரித்தழித்தான்; இஸ்ராயேலர் பலரை நாடு கடத்தினான் (2 அர 25:8-12; எரே 39:9-14). இவன் மீண்டும் அதிக மக்களை நாடு கடத்த நான்கு வருடம் கழித்து எருசலேம் வந்தான் (எரே 52:12-30). இவன் அரசனது "மெய்க்காப்பாளர் தலைவன்" ஆவான்.

**நெபேகு (NEPHEG** - முளைவிடுதல், துளிர்விடுதல்)

1. இட்சகாரின் மகனான இவர் கோராகு, சிக்ரி ஆகியோரின் சகோதரன் ஆவார். இவர் லேவியர் (யாத் 6:21).

2. எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த மகன்களில் ஒருவர் (2 சாமு 5:15; 1 நாள் 3:7; 14-16).

**நெபோ (NEBO** - அறிக்கையிடுபவர், இறைவாக்கினர்) - தெய்வம்.

இது பாபிலோனியாவின் அழிவையும், அதன் கடவுளர்களின் அழிவையும் பற்றித் தமது இறைவாக்கு வசைப்பாடலில் (எசா 46:1) எசாயா குறிப்பிடும்போது கூறப்படும் ஒரு தெய்வமாகும். இவர் எழுதுதல், பேசுதல், ஆகவே ஞானம், வியாபாரம், இறைவாக்கு அடையாளம் கூறுதல் முதலியவற்றின் கடவுள் எனக் கருதப்பட்டது. பாபிலோனில் புதுவருட வசந்த விழா ஊர்வலத்தில் மார்துக்குடன், நெபோ எனப்படும் இத்தெய்வமும் சுமந்து செல்லப்படும். இத்தெய்வம் முதலில் நீரின் தெய்வமாக இருந்தாலும், பேச்சாற்றல் மிக்க மெசபொத்தாமிய மெர்க்குரியாகவே இது வழிபடப்பட்டது. கி.மு. 612-538-இல் புதிய பாபிலோனியாவில் இத்தெய்வம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென்பது இறுதி ஆறு அரசர்களில் மூவர் பெயரில், நபோபோலேசர், நெபுகத்ரேசர், நபோனிது என இத்தெய்வத்தின் பெயர் இணைத்தே வழங்கப்பட்டதால் உறுதியாக்கப்படுகிறது.

**நெபோ (NEBO)** - இடம்

1. யோர்தானுக்கு அப்பால் உள்ள மோவாபிலுள்ள நகரமான இது, ரூபன், காது கோத்திரத்தாரால் விரும்பிக் கேட்கப்பட்டது. ஏனெனில், இஃது ஒரு நல்ல மேய்ச்சல் நிலமாகும் (எண் 32:3). ரூபன் கோத்திரத்தாரால் மீண்டும் கட்டப்பட்டது (எண் 32:38). இஃது ரூபனின் வழித்தோன்றல்களில் ஒருவரான பேலாவைப் பற்றிக் கூறும் பொழுது தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (1 நாள் 5:8). 'மோவாபியர் கல்வெட்டில்' இந்நகரம் மோவாபியரின் அரசன் மேசாவால் பிடிபட்டது பற்றியும், ஏழாயிரத்துக்கு மேல் இஸ்ராயேலர் கொல்லப்பட்டது பற்றியும் குறிப்பிடப்படுகிறது. ஏழாயிரம் என்பது மிகைப்படுத்திக் கூறப்பட்டதே. மோவாபுக்கு எதிரான இறைவாக்குகளிலும் 'நெபோ' குறிப்பிடப்படுகிறது (எசா 15:2; எரே 48:1.22).

யூசேபியு, நெபோ எஸ்போனிலிருந்து எட்டு உரோமைக் கல்தொலைவில் இருக்கவேண்டுமெனக் கருதுகிறார். எஸ்போனுக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் மிக்கயெத்துதான் இஃது எனக் கருதுகின்றனர். இவ்விடத்தில் மோவாபியரின் இரும்புக்காலத்திய கலங்கள் எடுக்கப்பட்டன. பளிங்குத் தரையிலான அழகான பைசாந்தியக் கோவிலின் சிதைவுகளும் காணப்படுகின்றன.

2. யூதாவின் பகுதியில், பெத்தேல், ஆயிக்குப்பின் குறிக்கப்படும் ஓர் இடம், இங்குதான் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் "நெபோவின் மகன்கள்" ஐம்பத்து இரண்டுபேர் குடியேறினர்

(எஸ் 2:29). இதற்கு இணையான பட்டியலாகிய நெகே 7:33-இல் இந்த இடம் "மற்றொரு நெபோ" என்று 1-இல் கூறப்பட்டுள்ளதிலிருந்து வேறுபடுத்திக் கூறப்படுகிறது. இங்கு நெபோ என்பது ஒரு குடும்பப் பெயர் என்று (காண்க. 10:43) அறிஞர் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் "மற்றொரு நெபோவும்," நோபுவும் ஒன்றே எனக் கருதுகின்றனர்.

**நெபோ மலை (NEBO MOUNT - நபுவின் மலை, மலையின் உச்சி)**

யோர்தான் நதியின் முகத்துவாரத்திலிருந்து 19 கி.மீ. தொலைவு கிழக்கே, எரிகோவுக்கு எதிராக உள்ள அபாரிம் மலைத்தொடரில் உள்ள ஒரு மலையே நெபோ. இஃது இஸ்ராயேலர்கள் தங்கிச் சென்ற இடங்களில் ஒன்று. அபாரிம் மலையில் நெபோவுக்கு முன் இருந்தது (எண் 1347). மோசேயின் பாடலுக்குப்பிறகு (உப 32) மோவாபு நாட்டில் எரிகோவுக்கு எதிரேயுள்ள அபாரிம் மலைத்தொடரிலுள்ள நெபோ என்ற மலைமீது ஏறக் "கட்டளையிடப்பட்டார்" (32:49). அங்கிருந்து கானான் நாட்டைக் கண்டுவிட்டு அங்கேயே இறக்கும்படி ஏற்பட்டது. உப 33-இல் மக்களனைவரையும் மோசே ஆசீர்வதித்தபின் நெபோ மலையின் மேல் ஏறி, பிஸ்காவின் உச்சியை அடைந்தார். கடவுள் அங்கிருந்து அவருக்குக் கிலயாதிலிருந்து தாண் வரையிலும், நப்தலி, எப்பிராயிம், மனாசே இவர்களின் நாட்டையும், மேற்குக் கடற்கரையில் உள்ள யூதாவின் நாட்டையும், நெகேபு, எரிகோவின் பள்ளத்தாக்கையும் சோவார்வரை காட்டினார் (உப 34:1-3).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இம்மலை பலரது கைகளுக்கு மாறியது. இஸ்ராயேலர் இதனைப்பிடிக்குமுன் எமோரியர்களின் அரசனான சீகோன் மோவாபைப் பிடித்தான் (எண் 21:26-30). இதனை இஸ்ராயேலர் சீகோனிடமிருந்து கைப்பற்றினர் (21:23-32). இப்பகுதிக்கே மோவாபின் மன்னனான பாலாக்கு, இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பிலயாமை அழைத்து வந்தான் (23:14.8). இப்பகுதி ரூபன், காது கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்டது (அதி .32). நீதிபதிகள் காலத்தில் மோவாபின் அரசன் எக்லோன் இதைக் கொண்டிருந்திருக்க வேண்டும் (நீதி 3:12-30). தாவீது காலத்தில் இது மீண்டும் இஸ்ராயேலுக்குரியதாகியது (2 சாமு 8:2). மோவாபிய மன்னன் மேசா இதனைக் கைப்பற்றினான். கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் இது தனது சுதந்தரத்தை இழந்தது.

இன்றைய எபெல் என் - நெபாதான் நெபோ மலையெனக் கூறப்படுகிறது. இது மத்தியதரைக்கடல் மட்டத்திலிருந்து 820 மீட்டர் உயரமும், சாக்கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் உயரமும் உடையது.

உப 34:1-3-இல் குறிப்பிடப்படுவதிலிருந்து இதன் மேலிருந்து வடக்கு, மேற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளில் உள்ள நிலங்களை நன்கு காணலாம் என்பது தெரிகிறது. வடக்கிலும், வடகிழக்கிலும் யோர்தானுக்கு அப்பாலுள்ள செழிப்பான சமவெளி காணப்படும். சாதகமான வானிலைச் சூழ்நிலையில் பனி போர்த்திய எர்மோன் மலையைச் காணலாம். இங்கிருந்து தெற்கில் தாபோர், ஏபால், கெரிசிம், யூதா பென்யமினின் உயரமான இடங்களையும், பெத்லகேம், எபிரோன், சாக்கடல் ஆகிய ஏன்கேதி வரையுள்ள எல்லாப்பகுதிகளையும் காணலாம். இதற்கு நேர்கீழே யோர்தான் பள்ளத்தாக்கு உள்ளது. இடையேயுள்ள மலைகளினால் இங்கிருந்து மத்தியதரைக் கடலைக் காணமுடிவதில்லை.

இம்மலையையொட்டி இரும்புக்கால, வெண்கலக் காலங்களைச் சேர்ந்த பகுதிகள் காணப்பட்டன. மோவாபியர் காலத்தில் இம்மலையின் ஊற்றுகள் காவல் செய்யப்பட்டன. இப்பகுதியில் கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கான பல அடையாளங்கள் காணப்படுகின்றன.

**நெப்தார் (NEPHTHAR)**

நெகேமியா ஓர் இடத்திற்குக் கொடுத்த பெயர். இதன் பொருள் புனிதம் என்பதாகும். ஆனால், பலர் நாப்தா என்று இதை அழைத்தனர் (2 மக் 1:36). இப்பெயரின் சொல்லிலக்கணம் தெரியவில்லை.

**நெப்தோவாகு (NEPHTOAH – திறப்பு, வாயில்)**

“நெப்தோவாகு எனும் நீரூற்று” எனும் சொற்றொடரில் மட்டுமே பயன்படுத்தப்படும் ஓர் இடத்தின் பெயர் இது (யோசு 15:9; 18:15). எருசலேமுக்கு வடமேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலலிப்தாவையும், அதன் நீரூற்றையுமே இஃது இருந்த இடமெனக் காட்டுகின்றனர். பெத்லகேமுக்குத் தெற்கேயுள்ள அற்றாம் போன்ற இடங்களைக் காட்டினாலும் கிரியத்து எயாரிமுக்கு அண்மையில் உள்ள லிப்தாதான் சரியென்று பலர் கருதுகின்றனர். அறிஞர் சிலர், இதனை ‘மாரென்ப்தா’ என்ற எகிப்தியச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

**நெப்பிலிம், அரக்கர்கள் (NEPHILIM)**

இவர்கள் பெருவெள்ளத்திற்கு முந்திய மக்களாவர். “தெய்வப்புதல்வர்கள்” “மனிதப் புதல்வியர்”களின் சேர்க்கையால் பிறந்தவர்கள் (ஆதி 6:1-4). இதைப் பெருவெள்ளத்தின் காரணமாகத் தொடக்கநூல் ஆசிரியர் கூறுவதாகத் தெரிகிறது. இச்சேர்க்கை ஒழுக்கக்கேட்டின் அடையாளமாகும்.

மற்றொரு விளக்கம்– சேத்தின் நேர்மையுள்ள புதல்வர்கள், இறைப் பற்றற்ற பெண்களை மணந்ததின் விளைவாகப் பிறந்தவர்களை நெப்பிலிம் குறிக்கிறது. அதன் விளைவாகச் சேத்தின் நேர்மையுள்ள வம்சம் ஒழுக்கக்கேடடைந்தது.

எண் 13:33-இல், கானானில் வேவு பார்க்கச்சென்றவர்கள் நெப்பிலிமியர்களைக் கண்டதாகக் கூறுகின்றனர். இங்கு நெப்பிலிமியர் ஆனாக்குவின் புதல்வர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். இவர்கள் எபிரேயருக்கு அறிமுகமான அரக்கர்கள் (உப 9:2; யோசு 15:14; நீதி 1:20). கோலியத்து இப்படிப்பட்ட ஓர் அரக்கர்.

ஆதி 6:1-4-இல் வரும் நெப்பிலிம் என்ற அரக்கர் பற்றிய கதையைப் பிற புராணங்களிலிருந்து எடுத்து, அதைப் பெருவெள்ளத்திற்குரிய காரணங்களில் ஒன்றாக ஆசிரியர் காட்டுகிறார் எனலாம். இவர்களையும் பிற்கால அரக்கர்களையும் குழப்பக்கூடாது.

**நெமுவேல் (NEMUEL – இறைவனின் நாள்)**

1. தாதானுக்கும், அபிராமுக்கும் சகோதரரான இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்; மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கோரகுடன்சேர்ந்து கொண்டார் (எண் 26:9).

2. சீமோனின் கோத்திரத்தைச் சேர்ந்த நெமுவேலிய வம்சத்தலைவர் (எண் 26:12; 1 நாள் 4:24). ஆதி 46;10; யாத் 6:15-இல் எமுவேல் என அழைக்கப்படுகிறார்.

**நெயாரியா (NEARIAH – யாவேயின் ஊழியன் அல்லது இளைஞன்)**

1. தாவீதின் வழிவந்த தூரத்து வழித்தோன்றல். செமாயாவின் மகனும், எலியோவெனாய், இசுக்கியா, அசிரிக்காம் ஆகியோரின் தந்தையுமாவார் (1 நாள் 3:22-23).

2. சிமியோனின் இனத்தைச் சேர்ந்தவர் இவர். இசீயின் நான்கு புதல்வர்களில் ஒருவர். இவர் எஞ்சியிருந்த அமலேக்கியர்களைக் கொன்று அவ்விடத்தில் குடியேறியவர். எசக்கியேல் அரசனாக ஆண்டபோது இது நிகழ்ந்தது (1 நாள் 4:42-43).

**நெயாப்பொலி (NEAPOLIS – புதிய நகர்)**

இது பிலிப்பியின் ஒரு துறைமுகம். திராக்குவில் உள்ள ஒரு நகரமெனக் கூறப்படுகிறது. கி.மு. 188-இல் உரோமைத் தளபதி மான்லியு வோல்சோ என்பவர் இங்கு வந்தார். கி.மு. 42-இல் புருட்டசும், காசியசும் பிலிப்பு நகரில் தங்கியிருந்த போது

அவர்களது போர்க்கலங்கள் நெயாப்பொலியில் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என ஆப்பியன் குறிப்பிடுகிறார்.

பைசாந்தியர்களின் காலத்தில் நெயாப்பொலி கிறிஸ்தோபொலி என அழைக்கப்பட்டது. அஃது இன்றைய கிரேக்கக் 'கவாலா'வாகும். இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள், யூதகிரேக்கப் பண்பாட்டின் நினைவுச்சின்னங்களும் முக்கியமாக, கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பார்த்தேனோசு எனும் தேவதையின் கோவிலும் (நெயாப்பொலியின் தெய்வம்) இங்கு இருந்ததைக் காட்டுகின்றன. இலத்தீன் கல்வெட்டுகள், உரோமையர்கள் காலத்தில் இத்துறைமுகம் பிலிப்பியைச் சார்ந்தே இருந்ததெனவும், பிலிப்பியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் இங்குத் தங்கியிருந்தது பற்றியும் கூறுகிறது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பணியின்போது நெயாப்பொலியில் சில நாட்கள் தங்கியிருந்தார் (அ.ப. 16:11).

**நெய்தல் (WEAVING)**

பழங்காலத்தில் பலவகைத் துணிகள் உற்பத்தி செய்யும் பொதுவான முறை இது. நெசவுத்தறியில் பாவு நூல் தொகுப்பை அமைத்து ஊடிழையைக் கொண்டு பின்னி, அதை அழுத்தி அல்லது அடித்துத் துணியாக்கும் அடிப்படை முறையாகும்.

பழங்காலப் பாலஸ்தீனத்திலும் எகிப்திலும் மூன்று வகையான நெசவுத்தறிகள் பயன்பட்டுள்ளன. 1) செங்குத்தான தறி. இதில் பாவு நூல் தொகுப்பு மேல்சட்டத்திலிருந்து தொங்கவிடப்படும்; பாவு நூலின் கீழ்ப்பகுதியில் கனமான எடை தொங்க விடப்பட்டிருக்கும். இதன் முன் நின்று நெசவாளர் மேலிருந்து கீழாக வேலை செய்வர். 2) இதுவும் செங்குத்தான தறி. இதில் மேலும் கீழும் சட்டம் அமைந்திருக்கும். இரு பக்கமும் நெசவாளர்கள் நின்று மேல் நோக்கிச் சேர்ந்து வேலை செய்வார்கள். 3) இது தரைமட்டமானது; தூக்கிச் செல்லக்கூடியது. இதில் முன்னும் பின்னும் சட்டங்கள் அமைந்து, அவை முளைகளால் தரையில் அமைக்கப்பட்டிருக்கும். நெசவாளர் முன் நின்று வேலை செய்வர். இவற்றில் எந்த வகையைப் பயன்படுத்தித் தெலீலா சிம்சோனின் முடியைப் பின்னினாள் (நீதி 16:13-14) என்பது தர்க்கத்திற்குரியதாகும்.

நெய்தல் பற்றிய பல குறிப்புகள் விவிலியத்தில் காணப்பட்டாலும், குறிப்பிட்ட விவரிப்புகள் சிலவே. நெய்தல் தொழில் பெரும்பாலும் பெண்களாலேயே செய்யப்பட்டது (யூதி 16:13-14; காண். யாத் 35:25-26; பழ 31:32). ஆனால், இத்துறையில் உயர்திறன் பெற்றவர்கள் (யாத் 35:35) அல்லது இத்தொழில் செய்யும் குழுவினைச் (1 நாள் 4:21) சேர்ந்த ஆண்கள் நேர்த்தியான துணிகளை நெய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆரோனும் அவரது புதல்வர்களும் அணிந்த ஆடைகள் (யாத் 28:8.27-28.39; 39:22.27). இயேசுவின் தையல் இல்லாத அங்கி (யோவா 19:23) ஆகியவை நெய்யப்பட்ட ஆடைகளுக்குச் சில விவிலிய எடுத்துக்காட்டுகள் ஆகும்.

வெள்ளாட்டு மயிர் (யாத் 26:7; 36:14) பெரும்பாலும் சணல் நார் இழை மற்றும் கம்பளியிழை (லேவி 13:48) ஆகியவை நெய்யப் பயன்பட்டன. சணல்நார் இழையும் கம்பளி இழையும் கலந்து ஆடை நெய்வது தடை செய்யப்பட்டிருந்தது (உப 22:11; காண்க. லேவி 19:19). இத்தகைய தடைகள் சமயப்பின்னணி உடையவையாக இருக்கலாம். ஒருவேளை சடங்குத் தூய்மை மற்றும் இறைவனின் புனிதம் பற்றிய விவிலியக் கருத்துகளுடன் தொடர்புடையவையாக இருக்கலாம்.

வாழ்வு கடந்து போய் முடிவடைவதைக் குறிக்க நெசவுத்தறி உருவகமாகப் பயன்பட்டுள்ளது (யோபு 7:6; எசா 38:12).

**நெருஞ்சிமுள், முட்செடி (BRIER)**

இது முட்செடிகளைக் குறிக்கும் பல எபிரேயச் சொற்களின் மொழி பெயர்ப்பாகும்.

இஸ்ராயேலரின் பகைவர்களைக் குறிப்பதற்கு இஃது உவமையாகக் கூறப்படும் (எசே 28:24); அல்லது ஒன்றுக்கும், உதவாத ஒரு பொருளைக் குறிக்க (மீக் 7:4) முக்கியமாக ஒன்றுக்கும் பயன்படாத நிலத்தைக் குறிக்க (எசா 5:6; 7:23-25; 55:13) இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

**நெருப்புத்தட்டு (FIRE PAN)**

எரிந்து கொண்டிருக்கும் கரித்துண்டுகளைச் சேகரிக்கவும், பீடத்திலிருந்து அகற்றவும் பயன்படுத்தப்படும் உலோகத்தட்டு அல்லது சட்டி. இது வெண்கலத்தால் செய்யப்பட்டதாக இருக்கும் (யாத் 27:3; 38:3). பொன்னால் செய்யப்பட்டவைகளாகவும் ஒரு சில வேளைகளில் இருக்கலாம் (1 அர 7:50 = 2 நாள் 4:22). இது பீடத்தைச் சார்ந்த பொருட்களில் ஒன்றாகும்; பலி கொடுக்கும்போது பயன்படுத்தப்படுகிறது (எண் 4:14; 2 நாள் 25:15 = எரே 52:19). சாம்பிராணி (நறுமணப்பொருள்) எரிந்து கொண்டிருக்கிற நெருப்பின்மீது போடப்படும்போது, இந்த நெருப்புத்தட்டு தூபக்கலசமாக மாறுகிறது (லேவி 10:1; 16:12; எண் 16:6.17-18.37-39). இது விளக்குத்தண்டின் கத்திரிகளோடு பயன்படுத்தப்பட்டது; அதாவது திரிச்சாம்பலை வைக்கத் தக்க கலசங்களாகப் பயன்படுத்தப்பட்டது (யாத் 25:38; 37:23; எண் 4:9).

**நெருப்பும் மேகமுமான தூண் (PILLAR OF FIRE AND CLOUD)**

எகிப்திலிருந்து தப்பி ஓடிவந்தபோது இஸ்ராயேலருக்கு இறைவன் தம் பிரசன்னத்தை உணர்த்தவும், அவர்களை நடத்திச்செல்லவும், பாதுகாப்பு அளிக்கவும், இறைவன் பயன்படுத்திய சாதனமாகும் (யாத் 13:21-22; 14:19-20.24). பாலைவனத்தில் அவர்களை வழிநடத்தவும் இதைப் பயன்படுத்தினார் (யாத் 40:38; எண் 14:14; நெகே 9:12.19; காண்க. சங் 78:14). பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மேகம் திருஉறைவிடத்தைவிட்டு எழும்பும் போதெல்லாம் மக்கள் புறப்பட்டுச் சென்று தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர் (யாத் 40:36-37). மக்களுக்காக மோசே மன்றாடிய போது மேகத்தூண் இறங்கிவந்து கூடார நுழைவாயிலில் நின்று இறைவனது பிரசன்னத்தை வெளிப்படுத்தியது (33:9-10; எண் 12:5; உப 31:15).

மேகம் இறைவனது பிரசன்னத்தை உணர்த்திற்று. அது மேகத்தூணாக இருக்க வேண்டுமென்பதில்லை (யாத் 16:10; லேவி 16:2; எண் 11:25; 1 அர 8:10-11; எசே 1:4). நெருப்புத்தூண், மேகத்தூண் ஆகியவற்றைச் சீனாய்த் தீபகற்பத்திலுள்ள எரிமலைச் செயலாக அல்லது பயணிகளை வழிநடத்தப் பயன்படும் தீ மற்றும் புகை அடையாளங்களாக, இயற்கை சார்ந்த முறையில் விளக்க முயற்சிகள் நடந்துள்ளன. மற்றொரு விளக்கத்தில், தீ இறை அரசனைச் சூழும் கண்கூசச் செய்யும் ஒளி வட்டத்தைக் குறிக்கிறது என்பர். மெசபொத்தாமிய ஓவியங்களில், நெருப்பு தீப்பிழம்பாடையாகவும், மேகம் பார்ப்பவர்களைத் தேவதையின் சக்தியிலிருந்து பாதுகாக்க அதைப்போர்த்துவ தாகவும் சித்தரிக்கப்படுகின்றன. இறையாற்றல் தோற்றக் காட்சிகளில் இடி முழங்கும் இறைவன் குரலை இத்தூண் எடுத்துக்காட்டலாம் என்பர் சிலர்.

**நெற்றாயிம் (NETAIM – நடுதல்)**

இஃது, அரசனின் வேலையைக் கவனித்து வந்த குயவர்கள் வாழ்ந்து வேலை செய்த இடமாகும் (1 நாள் 4:23). ஆனால், இஃது இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை. வாடி ஏலாவுக்குத் தெற்கில் உள்ள கிர்பெத் என்-நூவேயத் ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**நெற்றி (FOREHEAD)**

பசும்பொன்னால் ஒரு பட்டம் செய்து ஆரோனின் தலைப்பாகையின் முன் அமைக்கப்படும் இடம் நெற்றி என்று அழைக்கப்படுகிறது (யாத் 28:38). விலைமாதின் அடையாளம் அவளது நெற்றியில் எழுதப்பட்டிருந்தது (எரே 3:3; திருவெளி 17:5). இறைவனின் மனிதர்களையும் (எசே 9:4;

திருவெளி 9:4), விலங்கின் மனிதர்களையும் (13:16) பிரித்துக்காட்டும் அடையாளங்கள் அவர்கள் நெற்றியில் குறிக்கப்பட்டன. கருமையான நெற்றி பிடிமுரண்டுத் தனத்தை உருவகமாக உணர்த்தும் (எசே 3:7-8).

**நெற்று (POD)**

அவரை முதலிய செடிகளின் விதைகள் அடங்கிய தோடு, காணாமற்போன மகன் தனக்கு உணவு கிடைக்காதபோது பன்றிகளுக்கும் போடும் நெற்றை உணவாக உட்கொள்ள விரும்பினான். ஆனால், அதைக்கூட அவனுக்குக் கொடுப்பாரில்லை (லூக் 15:16).

இத்தகைய நெற்றுகள் இனிப்பாகவும் ஓர் அடி நீளமுள்ளதாகவும் இருக்கும். அக்காலத்தில் பொதுவாக இவை ஆடு, மாடுகளுக்கும், பன்றிகளுக்கும் உணவாக அளிக்கப்பட்டன.

இந்த நெற்றுகளை ஏழைகளும் சாப்பிட்டு வந்தார்கள்.

**நெற்றோபா (NETOPHAH - ஆற்றொழுக்கான, விழவிடு)**

இது யூதா மலைநாட்டில், பெத்லகேமுடன் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள நகரம் (1 நாள் 2:54; எஸ் 2:21-22; நெகே 7:26). தாவீதின் "வலிமை வாய்ந்தவர்களான" மனிதர்களில் மகராய், ஏலேபு ஆகிய இருவரும் இங்கிருந்து வந்தவர்கள் (2 சாமு 23:28-29; 1 நாள் 11:30). இவர்கள் முறையே பத்தாவது, பன்னிரண்டாவது மாதங்களுக்கான படைப்பிரிவுகளுக்குப் படைத்தலைவர்களாய் இருந்தனர் (1 நாள் 27:13.15).

எருசலேம் கி.மு. 587-இல் பாபிலோனியரால் அழிக்கப்பட்டபோது நாடு கடத்தப்படாமல் விடப்பட்டவர்களுக்கு நெற்றோபாவைச் சார்ந்த தங்குமெத்துவின் மகனான செராயா படைத்தலைவராய் இருந்தார். இப்படை கெதலாயாவோடு சேர்ந்து கொண்டது (2 அர 25:23; எரே 40:8-9). செருபாபேலுடன் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களுள், நெற்றோபாவைத் தங்கள் மூதாதையர்களின் ஊராகக் கொண்ட 56 பேர் இருந்தனர் (எஸ் 2:22; நெகே 7:26). திரும்பி வந்த லேவியர் சிலரும் நெற்றோபாத்தியர்களின் ஊர்களில் (1 நாள் 9:16) தங்கினர். எருசலேம் நகர மதில் அர்ப்பணிக்கப்பட்டபோது பங்கெடுத்த பாடகர்கள் குழுவில் இந்த லேவியருள் சிலரும் இருந்தனர் (நெகே 12:27-28).

நெற்றோபா இருந்த இடம், பெத்லகேமின் தென்கிழக்கில், 5 கி.மீ. தொலைவில் இரண்டு பள்ளத்தாக்குகள் சேரும் இடத்தில் உள்ளது எனலாம். அதே பகுதியில் அயின் என்-நத்துபு என்ற ஊற்று பழங்காலப் பெயரைப் பாதுகாத்துள்ளது எனலாம்.

# நே

**நேபாய் (NEBAI – நெபோவின் குடிமகன்)**

இவர் நெகேமியாவின்கீழ், புதிய உடன்படிக்கையில் கையெழுத்திட்ட தலைவர்களில் ஒருவர் (நெகே 10:19).

**நேயா (NEAH – நடுங்குகின்ற)**

இது செபுலோனுக்குரிய பகுதியின் எல்லைப்புறத்தில் ரிம்மோனுக்கும் அன்னத் தோனுக்குமிடையில் அமைந்திருந்த ஒரு நகரமாகும் (யோசு 19:13). இஃது இருந்த இடத்தை அடையாளம் காட்ட முடியவில்லை; ஆகாபு அரசன் காலத்தைச் சேர்ந்த சமாரியர்களின் பாண்டத் துணுக்குகளில் காணப்படும் நோவா என்ற இடமாக இருக்கலாம்.

**நேரி (NERI – விளக்கு)**

இயேசுவின் மூதாதையருள் ஒருவர். செயல்தியேலின் தந்தை (லூக் 3:27).

**நேரியா (NERIAH – யாவே ஒளியாவார்)**

நேரியா யூதா நாட்டைச் சார்ந்தவர் மாசியாவின் மகன் (எரே 32:12). இவருடைய இரு மகன்கள் எரேமியாவுக்கு ஊழியம் செய்தனர். பாரூக்கு படியெடுக்கும் செயலாளனாகவும் (32:16; 36:4.8; 43:3; 45:1; பாரூ 1:1), செராயா பாபிலோனுக்கு எதிரான இறைவாக்கினரின் கூற்றுக்களைப் பாபிலோனுக்குக் கொண்டு சென்றவரும், அரச விடுதிப்பொறுப்பாளரும் ஆவர்.

**நேரேயு (NEREUS)**

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் 16:15–இல் தனது பெயர் கொடுக்கப்படாத சகோதரியுடன் வாழ்த்துப்பெறும் ஒரு கிறிஸ்தவர். பிலோலகு, யூலியா ஆகியோர் நேரேயுவின் பெற்றோர் எனவும், ஒலிம்பா அவரது சகோதரி எனவும் கருதப்படுகிறது. இப்பெயர்கள் எல்லாம் ஒரே வசனத்தில் அமைந்துள்ளதாலும், அதன் வரிசை முறையிலும் மேலே கூறிய கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

கிரேக்கப் புராணத்தில் நேரேயு கடலின் வயது முதிர்ந்த ஞானி எனவும், இவனுக்கு 50 பெண்கள் இருந்தனரெனவும் (நரேயர்கள்) கூறப்படுகிறது. ஒரு கிறிஸ்தவன் அன்னிய தெய்வமொன்றின் பெயரை வைத்திருப்பது வித்தியாசமாகத் தோன்றுகிறது. ஆனால், இக்கருத்து பெபாவுக்கும் எர்மசுக்கும் பொருந்தும்.

**நேர் (NER – ஒளி, விளக்கு)**

பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த 'நேரின்' மகனான அப்னேரே சவுலின் படைத்தலைவனாக இருந்தார் (2 சாமு 26:5.14). இவரது பெயரைத் தவிர இவரைப் பற்றி வேறொன்றும் கூறப்படவில்லையெனினும், இவருக்கும் சவுல் குடும்பத்துக்கு மேற்பட்ட உறவு மிக முக்கியமானது. சிலர் நேர் சவுலின் சிற்றப்பாவும், 'கீசு' என்பவரது சகோதரரும் ஆவார் என்கின்றனர். ஆனால், இத்தகையதொரு முடிவுக்கு வரவேண்டுமெனில் (1 சாமு 14:50; 1 நாள் 8:33; 1 நாள் 9:36.39; ஆகிய) பல பகுதிகளை ஆராய்ந்து தெளிவு கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் நேர் சவுலின் 'தாத்தா' என்றும், கீசு, அப்னேரின் தந்தையென்றும் கொண்டால் விவிலியப் பகுதிகளை மாற்ற வேண்டியதில்லை. 1 சாமு 9:1–இல், கீசின் பெயரை அடுத்து இவர் நேரின் மகன் என்று எழுதினால்போதும். இப்படிக் கொண்டால், பென்யமின் குலத்தின் தலைமுறை அட்டவணையில் சவுலுக்கும் நேருக்கும் உள்ள உறவு தன்னிறைவுடையதாகும்.

இதன்படி நேர் என்ற பெயர்– பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒருவரையோ இருவரையோ குறிக்கலாம்.

1. இவர் மாக்கா, எயியேல் (2) இவர் 1 சாமு 14:5–இல் அபியேல் என்றழைக்கப்படுகிறார்) ஆகியோரின் மகன்; ஆகவே, கீசுவின் சகோதரன் (1 நாள் 9:36). இதற்கு இணையான 8:30 இப்பெயரை விட்டு விடுகிறது. இவர் அப்னேரின்

தந்தையும் (அல்லது தாத்தா), சவுலின் சிற்றப்பனும் ஆவார்.

2. எயியேலின் (2) மகனும் கீசுவின் தந்தையுமாவார் (1 நாள் 8:33; 9:39). 8:30; 9:36-இல் வரும் எயியேலின் புதல்வர்கள் பட்டியலில், நேர் என்ற பெயரில்லை. கீசு எயியேலின் மகன் என்று குறிக்கப்படுகிறார்.

**நேர்கால் (NERGAL** – பெரிய நகரத்தின் கடவுள்)

நேர்கால் மெசபொத்தாமியாவின் கடவுள். இவருடைய பெயர், 2 அர 17:30-இலும் எரே 39:3.13-இல் வரும் நேர்கால் சரேசர் என்னும் பெயரிலும் காணப்படுகிறது. இஸ்ராயேல் நாடு கி.மு. 722-இல் முழுவதுமாக அழிந்தபின் அங்கு அசீரியர்களால் குடியமர்த்தப்பட்ட படை வீரர்கள் நேர்கால் என்ற கடவுளை வழிபட்டனர். முக்கியமாக, கூத்தா இனத்தவர் இவரை நகரக் கடவுளாக வழிபட்டனர். ஆரம்பத்தில் இவர் தீயோடும், வெயிலோடும் தொடர்பு உடையவராகக் கருதப்பட்டார். பிற்காலத்தில் போர், வேட்டையாடுதல் மற்றும் மக்களை அழிக்கும் சக்திகளுடன் தொடர்புபடுத்தப்பட்டார். இவர் சிங்கத்தை வாகனமாகக் கொண்டவர். இவர் போர்க்கருவிகள் ஆகியவற்றின் கடவுளாகவும் கருதப்பட்டார்.

**நேர்கால் சரேசர் (NERGAL - SHAREZER** – நேர்கால் அரசனைக் காப்பாற்றுவாராக)

இவர் கி.மு. 587-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது அங்கிருந்த பாபிலோனிய அதிகாரிகளுள் ஒருவர். இவர் இரபிமாகு என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் நெபுகத்னேசரின் படைத்தலைவராகவும் இருந்துள்ளார் (எரே 39:3.13). நெபுகத்னேசரின் மகன் அவில் மொரோதக்கு ஒரு கிளர்ச்சியில் கொல்லப்பட்ட போது நெபுகத்னேசரின் மருமகன் நெரிக்லிசார் அரியணை ஏறினான் (கி.மு. 560-556). இந்த நெரிக்லிசாரும் நேர்கால் சரேசரும் ஒருவரே என்று பெரோசுஸ் கூறுகின்றார். நெரிக்லிசார் சிலிசியாவின்மீது படையெடுத்தார் என்பதைத் தவிர வேறு எதுவும் அவரைப் பற்றித் தெரியவில்லை. இவர் அந்நாட்டின் தனிக்குடிமகன் ஒருவருடைய மகன் ஆவார். நபோனிது, பெல்சாட்சர் ஆகிய பெயர்களைப்போன்று இப்பெயரும் சட்ட வாசகங்களில் காணப்படுகிறது. இப்பெயர் எரே 39:3-இல் இருமுறை வருவதால் இப்பெயர் இரு தனிப்பட்ட நபர்களைக் குறிக்கலாம்.

**நேர் தெரு (STRAIGHT STREET)**

இது தமஸ்கு நகரிலுள்ள ஒரு தெரு (அ.ப. 9:11). அங்கு யூதா என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். நகருக்கு வெளியே காட்சியில் இயேசுவைக் கண்டபின் பவுல் தங்கியிருந்தார். ஆண்டவர் கட்டளைப்படி அனனியா அங்கு சென்று பவுலைப்பார்த்து அவருக்குக் கண்பார்வை அளித்தார்.

இது நகரின் முக்கியப் பொது வீதியாகும். இது கிழக்கு மேற்காக ஓடியது. இருபுறமும் தூண்கள் நின்றன. இருமுனைகளிலும் பெரிய வாயில்கள் அமைந்திருந்தன. இப்போதும் "நேர்" என்ற பெயர் இத்தெருவுக்கு உண்டு. ஆனால், அதன் அமைப்பு சிறிது மாறிவிட்டது.

# நை

**நைல் (NILE - கருநீலம்) - நதி**

ஆப்பிரிக்காவின் நதிகளுள் மிகவும் நீளமான 'நைல்', உலகின் இரண்டாவது நீண்ட நதியாகும். இதன் நீளம், விக்டோரியா நயான்சா என்னும் ஏரியிலுள்ள 'வெள்ளை நைல்' என்னும் அதன் மூலத்திலிருந்து, மத்தியதரைக் கடலில் கலக்கும் இடம்வரை ஏறக்குறைய 5,000 கி.மீ. ஆகும். எகிப்தில் மட்டும் இதன் நீளம்- ஆஸ்வானிலுள்ள முதல் நீர் வீழ்ச்சியிலிருந்து அதன் முகத்துவாரம் வரை- 960 கி.மீ. ஆகும். கழிமுகத்தில் நைல் நதியானது, ரோசேட்டா, தமியேட்டா என்னும் இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கிறது. கிழக்கிலுள்ள தமியேட்டா 120 கி.மீ. நீளமும், ரோசேட்டா 80 கி.மீ. நீளமும் உடையவை. இதன் அகலம் மேல் எகிப்தில் 450 மீட்டர் முதல் 1600 மீட்டர் வரையும், அதன் முகத்துவாரத்தில் 180 மீட்டர் முதல் 840 மீட்டர் வரையும் உள்ளது. மத்திய ஆப்பிரிக்காவில் பனி உருகுவதால் உண்டாகும் நீரோடைகள் இதன் முக்கிய மூலங்களாகும். இதன் முக்கிய துணைநதியான நீல நைல், வெள்ளை நைலுடன் கார்ட்டூம் என்னும் இடத்தில் சேர்ந்து கொள்கிறது. கார்ட்டூமுக்கும் வாடிகல்பா என்பதற்கும் இடைப்பட்ட பகுதியில் நைல் "S" வடிவில், நுபியின் பாலைவனம் வழியாகப் பாய்கிறது. இந்தப் பகுதியில் 1-6 நீர்வீழ்ச்சிகள் உள்ளன.

நைலில் வழக்கமாக ஏற்படும் வெள்ளப் பெருக்கு, அதன் அருகிலுள்ள பள்ளத்தாக்கின் வளமான நிலங்களில் விவசாயம் செய்ய உதவுகிறது. இப்பள்ளத்தாக்கை அடுத்து, பயிரிட முடியாத பாலைவனமும் உள்ளது. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நைலின் வெள்ளப்பெருக்கு குறிக்கப்பட்டிருக்கிறது. இன்றும் ஆஸ்வானில் ஆற்றில் நீர் மட்டத்தைக் காட்டும் அளவு குறிப்பிடப்பட்ட ஒரு தூண் உள்ளது. கார்ட்டுமில் ஏப்ரல் - மே மாதங்களில் இதன் அடியளவு 5.4 மீட்டரும், ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் 7.5 மீட்டராகவும் இருக்கும். பழங்காலத்திலிருந்தே உழவர்கள் இந்த நீரைக் குளங்குட்டைகளில் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தினர். தண்ணீர் உருளைகளைப் பழங்காலக் கல்லறைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்களிலும், இன்றைய எகிப்தின் வயல்களிலும் காணலாம். பழங்காலத்தில் கழிமுகம் மேற்கிலிருந்து கிழக்காக, ஏழு முகவாய்களைக் கொண்டிருந்தது. இவை இவற்றின் அருகிலுள்ள நகரங்களின் பெயரால் அழைக்கப்பட்டன. ஆனால், இன்று ரோசேட்டா, தமியேட்டா என்னும் இரு பிரிவுகளாக மட்டுமே உள்ளது.

பழைய ஏற்பாட்டில், நைல், 'நீரோடை' எனப் பொருள்படும் எகிப்தியச் சொல்லால் அழைக்கப்பட்டு வந்தது. இஸ்ராயேல் மக்கள் இந்நதியைப் பற்றி அறிந்திருந்தனர். எகிப்து கால்வாய்களினால் நீர் பாயும் நாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மோசேயின் குழந்தைப்பருவம் நைல் நதியின் கரையில் கோரைகளுள்ள சதுப்புநிலத்தில்தான் ஆரம்பமாகிறது (யாத் 2:1தொ). 10 கொள்ளை நோய்களில் முதல் இரண்டில் நைல் குறிப்பிடப்படுகிறது (யாத் 7:14-8:15). எகிப்தின் அகந்தை நைலின் வெள்ளப்பெருக்கோடும் (எரே 46:7தொ), நிலநடுக்கம் நைலின் எழுச்சியோடும் வீழ்ச்சியோடும் (ஆமோ 8:8; 9:5) ஒப்பிடப்படுகின்றன. எகிப்து நைலில் வாழும் ஒரு முதலையோடு ஒப்பிடப்படுகிறது (எசே 29:3). தெபேசு நகர் நைல் நதியின் கரையிலிருந்து அதன் நீரை மதிலாகக் கொண்டது (நாகூ 3:8). அசீரியாவின் மன்னன் 'நைல் நதியை வற்ற வைத்தான்' என்று தன்னையே புகழ்ந்து கொண்டான் (2 அர 19:24; எசா 37:25). மேலும் கடவுள் நைல் நதியை வற்றச்செய்து, அதன் பயிர்களை வாடச்செய்து, எகிப்திலுள்ள உயிரினங்களையே அழித்துவிடுவார் என்று இறைவாக்கினர் எச்சரிக்கின்றார் (எசே 30:12; எசா 19:5-8).

# நொ, நோ

**நொறுங்கிய, குற்றமுணர்ந்த (BROKEN AND CONTRITE)**

சங்கீதங்களில் செய்த குற்றங்களுக்கு மனம் வருந்தும் ஒருவனின் உள்ளம் நொறுங்கிய, குற்றமுணர்ந்த உள்ளம் எனக் குறிப்பிடப்படுகிறது (சங் 34:18; 51:17; ஏசா 57:15; 66:2). தாழ்வுற்று நொறுங்குண்ட உள்ளம் என்று இது கூறப்பட்டுள்ளது. இஸ்ராயேல் பாபிலோனில் மிகவும் கீழ்ப்படுத்தப்பட்ட அனுபவத்திற்குப் பின் அவர்கள் பயன்படுத்திய ஒரு சொற்றொடர். அடிமைத்தனத்திற்குப்பின் தாழ்ச்சி, சாந்தம், பொறுமை ஆகியவை ஒரு பக்தியுள்ள மனிதனுக்கு அவசியமான நற்பண்புகளாயின. இது புதிய ஏற்பாட்டில் மலைப் பொழிவிலும், மரியாளின் பாடலிலும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**நோகாகு (NOGAH – ஒளிப்பிழம்பு, சுடர் வீசுகின்ற)**

இவர் எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 3:7; 14:6). இதற்கு இணையான பட்டியலில் (2 சாமு 5:15) இப்பெயர் காணப்படவில்லை. ஆகவே, நெபேகு என்று இரட்டிப்பாக்கிய எழுத்தரின் பிழையாகும் என்று சிலர் கருதுவர்.

**நோகாகு (NOHAH – ஓய்வு) – ஆள்**

இவர் பென்யமினுக்கு நான்காவதாகப் பிறந்த மகன் (1 நாள் 8:2). இப்பெயர் ஆதி 46:21-இல் வரும் பட்டியலில் காணப்படவில்லை.

**நோகாகு (NOHAH – ஓய்வு) – இடம்**

நோகாகுவின் சந்ததியினர் வாழ்ந்த இடம். இங்கிருந்து மற்ற இனத்தவர்கள் பென்யமின் இனத்தவரைத் துரத்திச் சென்றனர் (நீதி 20:43).

**நோதாபு (NODAB – மேன்மையான)**

இவர் யோர்தானுக்கு அப்பால் இருந்த இஸ்ராயேலரை எதிர்த்துப் போரிட்ட எத்தூர், நாபிசு ஆகியவர்களோடு சேர்த்துக் குறிக்கப்படும் ஓர் ஆகாரியர் (1 நாள் 5:19). ஆகாரின் மகன் இசுமயேலின் புதல்வர்களாக எத்தூர், நாபிசு, கேதமா ஆகியோர் குறிக்கப்படுவதால் (ஆதி 25:15; 1 நாள் 1:13), கேதமாவும் நோதாபும் வெவ்வேறானவர்களாவர். ஆனால், இரு பெயரும் ஒரே ஆளைக் குறிக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். நோதாபு என்ற பெயர் கவுரானிலுள்ள நுதேபே என்ற கிராமத்தின் பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நோது (NOD – அலைந்து திரிதல்)**

இஃது ஏதேனுக்குக் கிழக்கில் இருந்த ஒரு நாடு. காயின் ஆபேலைக் கொலைசெய்தபின் இங்குதான் வாழ்ந்தான் (ஆதி 4:16). காயினின் தண்டனையைக் குறிக்கும் அடையாளப்பெயராக இருக்கலாம்.

**நோபாகு (NOBAH – நாயின் குரைத்தல்) – ஆள்**

இவர் மனாசே கோத்திரத்தின் தலைவர். இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டைக் கைப்பற்றியபோது இவர் கெனாத்தை வென்றார் (எண் 32:42). மனாசேயின் புதல்வர்கள் கிலயாது நாட்டைக் கைப்பற்றியது (எண் 32:39-42) வேறு மூலத்திலிருந்து எடுக்கப்பட்டது போலவும், மற்ற நிகழ்ச்சிகளோடு ஒத்துவராதது போலவும் தோன்றுகிறது. ஆனால், நீதி 1-இல் கூறப்படும் கானான் நாடு தனித்தனிக் கோத்திரத்தால் கைப்பற்றப்பட்ட விவரிப்போடு ஒத்துப் போகிறது. இவ்வாறு மனாசேயர்களால் கைப்பற்றப்பட்ட கெனாத்து, கிலயாதின் ஒரு பகுதியாகிறது. கெனாத்து யோர்தானுக்கு அப்பால் இருந்தது. இதை நோபாகு கைப்பற்றித் தன் பெயரை அதற்கு இட்டார் (எண் 32:42).

**நோபாகு (NOBAH – நாயின் குரைத்தல்) – இடம்**

1. இது கிலயாதைச் சேர்ந்த நகர். முன்பு கெனாத்து என்றழைக்கப்பட்ட இந்த ஊரை நோபாகு கைப்பற்றித் தனது பெயரையே அதற்கு இட்டார் (எண் 32:42).

2. இது கிலயாதின் கிழக்கில், யோக்பகாவுக்கு அருகில் உள்ள ஒரு நகரம். கிதியோன் மிதியா நாட்டவரின் இந்த இரு ஊர்களையும் சுற்றிச் சென்று கர்க்கோர் என்னுமிடத்தில் அவர்களை முறியடித்தார் (நீதி 8:10-11).

### நோபு (NOB – உச்சி)

அகிமெலக்கு சீலோவில் குருவாக இருந்தார் (1 சாமு 14:3). சீலோ அழிக்கப்பட்ட பின் நோபு சென்றார் (எரே 7:14). அகிமெலக்கின்கீழ் குருக்கள் பலர் இருந்தனர். தாவீது, சவுலிடமிருந்து தப்பித்து ஓடிப்போகும்போது நோபுவுக்கு வந்து, அகிமெலக்கிடம் தான் ஒரு திருப்பயணம் மேற்கொண்டிருப்பதாகவும், தனக்கு உணவும், கோலியத்தின் வாளும் தரும்படியும் வேண்டினார் (1 சாமு 21:1-9). இஃது, ஏதோமைச் சார்ந்த தோயேகு என்பவனால் சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, சவுல் அகிமெலக்கையும் அவருடன் இருந்தவர்களையும் கொலை செய்யும்படி கட்டளை இட்டான். சவுலின் ஊழியர்கள் இக்கட்டளைக்குப் பணிய மறுத்தபோது, தோயேகு அவர்களைக் கொன்று, நகரம் முழுவதையும் வாளுக்கு இரையாக்கினான். அகிமெலக்கின் அபியாத்தார் என்னும் மகன் மட்டும் தப்பித்துத் தாவீதிடம் ஓடிவிட்டார் (27:9-23).

நோபு பென்யமின் கோத்திரத்தாரின் நகரங்களில் ஒன்று. இஃது அனத்தோத்துக்கும் எருசலேமுக்கும் இடையில் எருசலேமை நோக்கி அமைந்திருந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின், மக்கள் இங்குக் குடியேறினர் (நெகே 11:31-32). அசீரியர்கள் விரைந்து வருவது பற்றிக் கூறும்போது இவ்விடம் குறிப்பிடப்படுகிறது (எசா 10:32). எருசலேமின் அருகில் உள்ள நகரம் என்றும், எருசலேமிலிருந்து பார்த்தாலே தெரியும் என்றும் சுட்டுகின்றன (2 சாமு 21:18 தொ; எசா 10:32).

ஆய்வாளர் சிலர் நோபுக்குப் பதிலாகக் கோபு என்ற பெயரைக் பயன்படுத்துகின்றனர் (2 சாமு 21:16). வேறு சிலர், இந்த இடம் இருந்ததாக ஒலிவமலையில் உள்ள எத்-தோர் என்னுமிடத்தையும், எருசலேமுக்கு வடகிழக்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்கோப்பு மலையை அல்லது அதன் சரிவுகளையும் சுட்டிக்காட்டுவர்.

### நோப்பாகு (NOPHAH – வெடிப்பு)

இஃது எமோரியர்களின் அரசனைக் சீகோன் சூறையாடியதைப் பற்றி எழுதப்பட்ட கதைகளில் குறிப்பிடப்படும் தீபோனுக்கு வடக்கிலுள்ள மோவாபியர்களின் நகரங்களில் ஒன்று ( எண் 21:30). வாசகம் ஐயத்திற்குரியது.

### நோய், பிணி (DISEASE)

சாதாரண உடல் சார்ந்த அல்லது உளவியல் சார்ந்த செயற்பாடுகள் சேதப்படுதல், அல்லது ஊறுபடுதல். இது நோய்தொற்றுதல், உடல்நிலை சமன்கெடுதல் அல்லது உடல்நிலை மோசமாகுதலோடு தொடர்புடையது.

எபிரேயர், இறைவெறுப்பின் எடுத்துக்காட்டாகவோ, தீய செயல்களுக்குத் தண்டனையாகவோ, நோய்கள் இறைவனால் அனுப்பப்படுவதாகக் கருதினர் (யாத் 4:11; எண் 25:18; உப 32:29; யோவா 9:2). பாரசீக, கிரேக்க பாதிப்பின் விளைவாக, நோய்களின் காரணமாக, சாத்தானும் (யோபு 2) பேய்ச்சக்திகளும் (மாற் 9:17.25; 1 யோவா 3:8), மனித தீயவிருப்பமும் (யோபு 5:2) காட்டப்பட்டன. உடலின் முக்கிய பாகங்கள், உணர்ச்சி மற்றும் உடல் சார்ந்த செயற்பாடுகளைக் கொண்டிருப்பதாக எபிரேயர்கள் கருதினர். இவ்வாறு இதயம் அறிவுக்கும் சித்தத்திற்கும் இருப்பிடமாகக் கருதப்பட்டது (1 நாள் 29:18; எசே 19:31); சிறுநீர்ப்பை உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் உரிய இடமாகும் (எரே 12:2); குடல், இரக்கத்தின் இடமாகும் (கொலோ 3:2). இக்கருத்துக்கள் உணர்ச்சி நிலைகளுக்கும், உடல் சார்ந்த நோய்களுக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றிய முழு நல நோக்கில் புரிந்து கொள்ளுதலுக்கு இட்டுச்சென்றது. மேலும், சுகாதாரத்தின் முக்கியம் பற்றிய அடிப்படைக் கருத்தும், நோயைத்தடுக்கும்

சாதனமாக உடல் சார்ந்த ஓய்வு பற்றிய கருத்தும் பழைய ஏற்பாட்டுச் சட்டத்தின் பின்னணியாக உள்ளன (ஆதி 2:3; லேவி 11:15;18-20).

புதிய ஏற்பாட்டில் நோயை இறைத்தண்டனையின் அடையாளமாக இயேசு கருதியதற்கு எக்குறிப்புமில்லை. மாறாக, வாழ்வு பற்றிய இறையமைப்பை மீண்டும் அமைப்பதில் குணமாக்குதலை இன்னுமோர் சாதனமாக இயேசு தனது பணியில் கருதினார். நோய் இந்த இறை ஒழுங்கமைவுக்கு மாறாக உள்ளது (காண்க. லூக் 4:18).

மொழியின் சொற்பொருள் சார்ந்த இடர்ப்பாட்டாலும், துல்லியமான விவரிப்புகள் இன்மையாலும், பழை ஏற்பாட்டில் விவரிக்கப்படும் நோய்களை மிகவும் பொதுவாகத்தான் அடையாளம் கூற முடியும். இயேசு எதிர்கொண்ட நோய்களில் குருட்டுத்தன்மை, வாதநோய், தொழுநோய், மனம் கலங்கிய நிலைகள் போன்ற நோய்கள் அடங்கும். குறிப்பிட்ட வியாதிகள் பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழ்க் காண்க.

## நோய்நிலையும், குணப்படுதலும் (SICKNESS AND HEALING)

I. நோய் நிலையும் அத்துடன் தொடர்ந்து வரும் துன்பமும், எக்காலத்து மனிதர்களுக்கும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளன. அவர்கள் வாழும் உலகம், மற்றும் அவர்கள் கட்டுப்படுத்தும் சக்திகள் ஆகியவைபற்றி அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கேற்ப இந்தப் பிரச்சனைக்கு அவர்கள் பதில் அமைந்திருக்கும். பழங்கால மேற்காசியா தீய ஆவிகளால் ஏவப்பட்ட தண்டனையாக அல்லது வழிபாட்டுச் சடங்கில் தவறுகளால் கோபம் அடைந்த கடவுள்களால் அனுப்பப்பட்டதாக நோய் நிலையை மக்கள் கருதினர். குணப்பட, தீய ஆவிகள் நீக்க பேயோட்டுதலைச் செய்தனர். மன்றாட்டுக்களாலும் பலிகளாலும் கடவுள்களின் மன்னிப்பை வேண்டினர். இவ்விருவகை வாய்பாடுகளையும் பாபிலோனிய ஏடுகள் கொண்டுள்ளன. அதேபோல் மருத்துவமும் குருக்களுக்கே உரிய அலுவலாகும். அது மாய வித்தையை நெருங்கியதொன்றாக விளங்கியது. மருத்துவம் ஒரு சுதந்தரமான வளர்ச்சியுடைய அறிவியலாக உருவெடுக்க கிரேக்கர்களின் செயலறிவால் தெரிந்துகொள்ளும் போக்கு வளர்ச்சிக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலிருந்து வேறுபட்டு விவிலிய வெளிப்பாடு இப்பிரச்சனையின் அறிவியல் கூறைப் புறக்கணிக்கிறது. அது, மீட்புத் திட்டத்தில் நோய்நிலை மற்றும் குணப்படுத்தல் பற்றிய சமயப்பொருள் பற்றி மட்டுமே கருத்தைச் செலுத்துகிறது. நோய்நிலையில் மனிதன் மேல் சாவின் ஆற்றல் ஏற்கெனவே தெளிவாக இருப்பதால் (காண்க. 1 கொ 11:28-32), இந்தக் கருத்து மேலும் உண்மையாகிறது. ஆகவே, அஃது இதைப்போன்ற பொருளையே கொண்டிருக்க வேண்டும்.

II. பழைய ஏற்பாடு:

1. நோய்நிலை: அ) நலமாய் இருப்பது உயிர்நிலையான சக்தியை நிறைவாகக் கொண்டிருப்பதாகும். நோய்நிலை பலவீனமான, வலுக்குறைந்த நிலையாகக் கருதப்பட்டது (சங் 38:10). இந்தச் செயலறிவால் வரும் சான்றைத் தவிர மருத்துவக் குறிப்புகள் தோராயமானவையே. அவை ஒருவர் கண்ணுக்குப்படுவதைப் பற்றி மட்டும் கூறுகின்றன. இவை தோல்நோய்கள், காயங்கள், முறிவுகள், காய்ச்சல், நடுக்கம், போன்றவையாகும் (சங் 6:32;38;39; 88:102). நோய்களைப் பாகுபடுத்தி வேறுபடுத்துவது தெளிவில்லாமல் இருக்கிறது. சான்று: தொழுநோய், காயங்கள், வீழ்தல் (2 சாமு 4:4), முதுமை போன்ற தெளிவாகக் காணக் கூடியவற்றைத் தவிர, நோய்களின் இயற்கைக் காரணங்களில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. திருவுரையாளர் முதுமையின் தளர்ச்சியைச் சோர்வூட்டும் நகைச்சுவையுடன் விவரிக்கிறார் (திருவுரை 12:1-6; காண்க. 27:1; 1 அர 1:1-4; இதற்கு மாறாக உப 34:7). உண்மையில்

சமயப்பற்றுடையவருக்கு நோய் பற்றிய கருத்து முழுவதும் வேறுபட்டதாகும். நோயுற்ற மனிதனுக்கு நோயின் பொருள் என்ன?

ஆ) யாவும் இறைவனால் செயலாற்றப்படுகின்றன என்று நம்பும் உலகில் நோய் நிலையும் இறைவனின் செயலே. மனிதனைத் தாக்கும் இறைவனின் தண்டனையாக நோய் நிலையைக் கருதாதிருப்பது முடியாததாகும் (யாத் 4:6; யோபு 16:12 தொ; 19:21; சங் 39:11தொ). மனிதனுக்கு மேலானவரான இறைவனைச் சார்ந்திருப்பதும், அவர் தலையிடுவதும் புரிந்து கொள்ளக்கூடியவையே. இவ்வாறு அழிக்கும் தூதர் (2 சாமு 24:15 தொ; 2 அர 19:35; காண்க. யாத் 12:23), உருவம் அளிக்கப்பட்ட கொள்ளை நோய்கள் (சங் 21:5 தொ) அல்லது சாத்தான் (யோபு 2:7) போன்றவர்களை அவர் அனுப்பலாம். நாடு கடத்தப்பட்ட பிற்கால யூதத்துவத்தில் பேய்கள், தீய ஆவிகளின் செயல்களில் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. நாம் வாழும் உலகின் மேல் இவை கொண்டிருக்கும் ஆதிக்கம் பற்றிய கண நேரத் தோற்றத்தை நோய்நிலை நமக்கு அளிக்கிறது. இறைவன் தனிமுதல் தலைவரானால், உலகில் இந்தப்பேய் ஆதிக்கம், தீமையின் பிரசன்னம் இருப்பது ஏன்?

இ) தன்னியலார்ந்த இயக்கத்தால் மனிதனின் சமய உள்ளுணர்வு நோய் நிலைக்கும் பாவத்திற்குமிடையே உறவை நிறுவியது. இந்த உறவை விவிலிய வெளிப்பாடு மறுக்கவில்லை; இந்த உறவை எந்த நிபந்தனைகளோடு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை மட்டும் தெளிவாக்குகிறது. இறைவன் மனிதன் மகிழ்ச்சியாக இருக்கவே படைத்தார் (காண்க. ஆதி 2). மற்ற மனிதத் தீமைகளைப்போல் நோய்நிலையும் இந்த அடிப்படை நோக்கத்திற்கு மாறானதாகும். பாவத்தின் விளைவாகவே நோய்நிலை உலகில் புகுந்தது (ஆதி 3:16-19). இது பாவமிக்க உலகிற்கு எதிரான இறைவனின் சினத்தின் அடையாளங்களில் ஒன்றாகும் (காண்க. யாத் 9:1-12). உடன்படிக்கைக் கோட்பாட்டுத்திட்டம் குறிப்பாக இந்தப் பொருளைக் கொண்டுள்ளது. பிரமாணிக்க மற்ற மக்களைத் தாக்கும் முக்கிய சாபங்களில் இதுவும் ஒன்றாகும் (உப 28:21 தொ. 27 தொ. 35). ஆகவே நோய் பற்றிய அனுபவம் பாவம் பற்றிய மனித விழிப்புணர்வைக் கூர்மைப்படுத்த வேண்டும். மன்றாட்டுச் சங்கீதங்கள் இவ்வாறுதான் அமைந்துள்ளன. குணப்படுத்தப்பட வேண்டும் மன்றாட்டு பாவங்களின் அறிக்கையோடு எப்போதும் இணைக்கப்பட்டுள்ளது (சங் 38:2-6; 39:9-12; 107:17). நோயுற்றவரின் சொந்தப் பாவங்கள்தான் அவரது நோய்க்குக் காரணம் என்று எவ்வாறு அறிவது என்ற பிரச்சனை எழலாம். இது பற்றிய போதகம் அவ்வளவு துல்லியமாக இல்லை. குழுக்குற்றக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுவது நிறைவான பதிலைக் கொடுக்கவில்லை (யோவா 9:2). இரு பதில்களை மட்டும் தெளிவில்லாமல் பழைய ஏற்பாடு சுட்டுகிறது. யோபு அல்லது தோபி போன்ற நீதிமான்களை நோய் தாக்கும்போது, அஃது அவர்களின் பற்றுறுதியை எடுத்துக் காட்டும் தெய்வச் செயலான சோதனையாக இருக்கலாம் (தோபி 12:13). யாவேயின் ஊழியனாகிய நீதிமானின் துன்பம் என்ற சிறப்பான எடுத்துக்காட்டில், நோய்பாவிகளின் குற்றங்களுக்குப் பரிகாரமாக அமையலாம் (எசா 53:4தொ).

**2. குணப்படுதல்:**

அ) பழைய ஏற்பாடு மருத்துவத்தைப் பயன்படுத்துவதை ஒருபோதும் தடை செய்வதில்லை. எசேக்கியாவைக் குணப்படுத்த எசாயா மருந்தைப் பயன்படுத்தினார் (2 அர 20:7). இரப்பாயேல் தோபியைக் குணப்படுத்த அதைப்பயன் படுத்தினார் (தோபி 11:8.11 தொ). எளிய மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவது வழக்கில் இருந்தது (காண்க. எசா 1:6; எரே 8:22; ஞானம் 7:220). சீராக்கு மருத்துவத் துறையைப் பெரிதும் புகழ்கின்றார் (சீரா 38:1-8.12 தொ). சிலை

வழிபாட்டுடன் தொடர்புடைய மாயவித்தைப் பழக்கங்கள் தான் (2 அர 1:1-4) தடை செய்யப்பட்டிருந்தன. இவை மருத்துவத்தையே பாழ்படுத்தின (காண்க. 2 நாள் 16:12).

ஆ) ஆனால், குணம்பெற இறைவனை மட்டுமே நாடவேண்டும். ஏனெனில், அவர் மட்டுமே வாழ்வின் தனிமுதல் தலைவர் ஆவார் (சீரா 38:9தொ. 14). காயப்படுத்துபவரும் அவரே; குணமாக்குபவரும் அவரே (உப 32:29; காண்க. ஓசே 6:1). அவரே மனிதருக்கு ஒரே மருத்துவர் (யாத் 15:26). அதனால்தான் சாராவைக் குணப்படுத்த அனுப்பப்பட்ட வானதூதர் இறைவன் குணமாக்குகிறார் எனும் பொருள்படும் இரப்பாயேல் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார் (தோபி 3:17). இவ்வாறு, நோயுற்றோர் ஆண்டவருடைய பிரதிநிதிகளான குருக்களிடமும் (லேவி 13:49 தொ; 14:2தொ; காண்க. மத் 8:4), இறைவாக்கினர்களிடமும் (1 அர 14:1-13; 2 அர 4:21; 8:7 தொ) மன்றாடினர். தாழ்ச்சி மிக்க அறிக்கையோடு, குணமாகுதலை ஓர் அருளாக வேண்டுகின்றனர். சங்கீதங்கள் அவர்கள் தங்கள் துன்பநிலையை வெளிப்படுத்துவதையும், இறைவனுடைய உதவியை வேண்டி மன்றாடுவதையும், அவரது எல்லாம் வல்ல தன்மையையும் இரக்கத்தையும் கெஞ்சுவதையும் படம் பிடித்துக் காட்டுகின்றன (சங் 6:38; 41; 88; 102;...). அவர்பால் கொண்டிருக்கும் நம்பிக்கையினால், அவரிடம் வேண்டும் தயவைப்பெறத் தயாராக இருக்கின்றனர். இஃது சில சமயங்களில் அருஞ்செயலாக நிகழலாம் (1 அர 17:17-24; 2 அர 4:18-23). எவ்வாறெனினும், இஃது அடையாளப் பொருளுடையது; துன்புறும் மனித இயல்பை அதன் வேதனையினின்று விடுவிக்க இறைவன் இறங்கி வந்துள்ளார்.

இ) ஆயினும், நோய்நிலை ஒரு பொருளைக் கொண்டிருந்தாலும், அது தீமையே ஆகும். அதனால்தான் இறைவாக்கினர்களின் இறுதிக்காலம் பற்றிய வாக்குறுதிகள், காலமுடிவில் இறைவன் தம் மக்களைக் குடிவைக்கும் புதிய உலகில், இந்நோய்கள் அழிக்கப்படுவதை முன்னோக்குகின்றன. அங்கே நோயுற்றோர் இருக்கமாட்டார்கள் (எசா 35:5தொ); துன்பமோ கண்ணீரோ இராது (25:8; 65:19). பாவத்திலிருந்து விடுபட்ட உலகில், நமது இனத்தைப் பெரும் சுமையாக அழுத்தும் பாவத்தின் விளைவுகள் மறைந்து போக வேண்டும்; இல்லாமல் போக வேண்டும். துன்புறும் நீதிமான் நமது தீமைகளைத் தன் மேலே சுமந்து கொள்ளும்போது, அவருடைய காயங்களால் நாம் குணம் பெறுவோம் (எசா 53:4தொ).

**III. புதிய ஏற்பாடு:**

**1. நோய் நிலையை இயேசு எதிர்கொள்கிறார்:**

அ) இயேசு தனது பணிக்காலம் முழுவதும் எங்கு சென்றாலும் நோயாளிகளைக் கண்டார். வினைப்பயன் நோக்கில் குறுகிய விதத்தில் நோய் நிலையை விளக்காமல் (காண்க. 9:2தொ) நோயிலே, அவர் மனிதர் அனுபவிக்கும் தீமையையும், பாவத்தின் விளைவையும், மனிதர்மேல் சாத்தான் கொண்டிருக்கும் ஆதிக்கத்தின் அடையாளத்தையும் (லூக் 13:6) கண்டார். அதனால் அவர்கள்மேல் இரக்கம் கொண்டார் (மத் 20:34). இந்த இரக்கம் அவரைச் செயலாற்றத் தூண்டியது. பேய் பிடித்தலிலிருந்து இயற்கையான நோய் நிலையை வேறுபடுத்தாமல், "அவர் அசுத்த ஆவிகளை விரட்டினார்; எல்லா நோயாளர்களையும் குணமாக்கினார்" (8:16). இரண்டும் சேர்ந்தே நிகழ்கின்றன. இரண்டும் சமமாக அவரது ஆற்றலை வெளிப்படுத்துகின்றன (லூக் 6:19). இறுதியில் இரண்டும் ஒரே பொருளைக் கொண்டுள்ளன. சாத்தான்மேல் இயேசு கொள்ளும் வெற்றியையும் மறைநூலுக்கேற்ப, இறையரசு இவ்வுலகில் நிறுவப்படுவதையும் (மத் 11:5 இணை) உணர்த்துகின்றன. இனிமேல் நோய்நிலை உலகிலிருந்து மறைந்துபோகும் என்பதையன்று. அதை இறுதியில்

வெற்றிகொள்ளும் இறையாற்றல் இப்போதிலிருந்தே உலகில் செயல்படுகிறது என்பதை உணர்த்துகின்றன. அதனால்தான் அவரில் நம்பிக்கையை எடுத்துக்கூறும் எல்லா நோயாளிகளிடமிருந்தும் (மாற் 1:40; மத் 8:2-6 இணை) அவர்கள் விசுவசிக்க வேண்டும் என்ற தெளிவான ஒரே கோரிக்கையை இயேசு விடுக்கிறார். ஏனெனில் விசுவாசத்திற்கு எல்லாம் செய்ய முடியும் (மத் 9:28; மாற் 5:36 இணை; 9:23). அவரில் கொள்ளும் விசுவாசம் இறையரசில் கொள்ளும் விசுவாசமாகும். இந்த விசுவாசம்தான் மீட்கிறது (மத் 9:22 இணை; மாற் 10:52 இணை).

ஆ) குணமளிக்கும் அருஞ்செயல்கள், இறைவாக்குகளின்படி இறையரசில் மனித இயல்பு இறுதியாகத் திரும்பவும் அடையும் நிறைநிலையை ஓரளவு முன்கூட்டியே எதிர் நோக்குகின்றன. ஆனால், அவை இக்காலத்தைச் சேர்ந்த அடையாளப் பொருளையும் கொண்டுள்ளன. பாவமனிதன் தானே காணும் நிலையில் நோய்நிலை அடையாளமாகும். ஆன்மீக முறையில் அவன் குருடன், செவிடன், வாத நோயுடையவன். ஆகவே, நோயாளியைக் குணமாக்குவதும் ஓர் அடையாளமாகும். மனிதரில் இயேசு ஆற்ற வந்த ஆன்மீகக் குணமளித்தலை அஃது உணர்த்துகிறது. இயேசு வாத நோயுடையவனின் பாவங்களை மன்னித்தார். தனக்கு அந்த ஆற்றல் உண்டு என்று மெய்ப்பிக்க, அவனைக் குணப்படுத்தினார் (மாற் 2:1-12 இணை). அருஞ்செயல்களின் இந்தக்கூறு நான்காம் நற்செய்தியில் சிறப்பான முறையில் வெளிப்படுகிறது. பெத்சதாவின் வாதநோயாளியைக் குணமாக்கியது இயேசுவை உலகின் ஒளியாகக் காட்டுகிறது (யோவா 9). ஆகவே, நோயாளிகளுக்கு இயேசு செய்தவை கிறிஸ்தவ அருட் சாதனங்களுக்குப் பீடிகையாக அமைகிறது. பாவிகளுக்கு மருத்துவராக இயேசு உலகிற்கு வந்துள்ளார் (மாற் 2:17 இணை). இந்த மருத்துவர் பிணிகளையும், துன்பங்களையும் போக்க அவற்றைத் தன்மேலேயே சுமந்து கொண்டார் (மத் 8:7 = எசா 53:4). இதுவே அவரது பாடுகளின் பொருள். மனுகுலத்தின் தீமைகளின் மேல் இறுதியாக வெற்றிகொள்ள, துன்புறும் மனுகுலத்தின் நிலையை இயேசு ஏற்றுக் கொள்வார்.

2. அப்போஸ்தலர்களும், திருச்சபையும் நோய் நிலையை எதிர்கொள்கின்றனர்:

அ) இறையரசின் அடையாளமாகச் செய்யப்பட்ட அருஞ்செயல் குணமளிப்புகள் இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையோடு நின்றுவிடவில்லை. அப்போஸ்தலர்களின் முதல் தூதிலிருந்து, நோயாளிகளைக் குணமாக்கும் அவரது ஆற்றலில் அவர்களையும் கூட்டாளியாக்கினார் (மத் 10:1தொ). இறுதியாக அவர்களைத் தூதுரைக்க அனுப்பியபோது அவர்களின் நற்செய்திப் போதகத்திற்குச் சான்று பகர இந்த அடையாளங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று உறுதி அளித்தார் (மாற் 16:17தொ). அப்போஸ்தலர் பணிநூல் குணமளிக்கும் அருஞ்செயல்களைக் கூறுகின்றன (அ.ப.3:1தொ; 8:7; 9:32 தொ; 14:8 தொ; 28:8 தொ). இவை இயேசுவினுடைய பெயரின் வல்லமையையும் அவரது உயிர்ப்பின் உண்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. பவுலும், அருங்கொடைகளில் குணமளித்தலையும் குறிப்பிடுகிறார் (1 கொரி 12:9.28.30). இந்த நிலையான அடையாளம், தூய ஆவி செயலாற்றுகிறார் என்று காட்டி இயேசுவின் திருச்சபைக்குத் தொடர்ந்து சாட்சி அளிக்கிறது. ஆயினும் இறையருள், சாதாரணமாக, பகட்டு அதிகமில்லா முறையில் நோயாளிகளுக்குக் கிடைக்கிறது. அப்போஸ்தலர்களின் செயலைப் பின்பற்றி (மாற் 6:13), "திருச்சபையின் மூப்பர்கள்" ஆண்டவர் பெயரால் நோயாளியின் மீது எண்ணெய் பூசி அவனுக்காகச் செபித்தனர். விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கிற்று. அவன் பாவம் செய்தவனாயிருந்தால் மன்னிப்புபெறுவான்.

ஒருவர்க்கொருவர் பாவ அறிக்கை செய்துகொண்டு, விசுவாசத்தோடு செபித்தனர். அந்தச் செபம் அவர்களை மீட்டது. ஏனெனில், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன; இறைவன் விரும்பினால் அவர்கள் குணமாக்கப் பெறுவர் என்று நம்பலாம் (யாக் 5:14தொ).

ஆ) ஒரு சடங்கு செபத்தால் மந்திர விளைவுபோல் இந்தக் குணமாகுதல் எப்போதும் தவறாது நிகழ்வதில்லை. இவ்வுலகம் இருக்கும்வரை மனுகுலம் பாவத்தின் விளைவைத் தொடர்ந்து சுமக்க வேண்டும். ஆனால், பாடுகளின்போது "நமது துன்பங்களைத் தம்மேல் சுமந்து கொண்டதால்", இயேசு அவற்றிற்கு ஒரு புதிய பொருளைக் கொடுத்துள்ளார். மற்ற எல்லாத் துன்பங்களைப்போல், இனி அவை மீட்பு மதிப்பீடு கொண்டுள்ளன. பவுல் பல தடவை இதை அனுபவத்தால் உணர்ந்துள்ளார் (கலா 4:13; 2 கொரி 1:8 தொ; 12:7-10). அவை ஒருவனைக் கிறிஸ்துவின் துன்பங்களோடு ஒன்றிக்கின்றன என்பதை அறிந்திருந்தார். "இயேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்" (2 கொரி 4:10). யோபுவால் தன்சோதனையின் பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை; ஆனால், "திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு, கிறிஸ்து பட வேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதைத் தன் உடலில் நிறைவாக்குவதில்" (கொலோ 1:24) கிறிஸ்தவன் மகிழ்ச்சி கொள்கிறான். வாழ்வின் மரக்கனிகளால் மனிதர்கள் எக்காலத்திற்கும் குணமாக்கப்படும் (திருவெளி 22:2; காண்க. எசே 47:12) இடமாகிய இன்பவனத்திற்குத் திரும்பி வந்து சேர்வதை எதிர்நோக்கியிருக்கும் போது, துன்பம் மற்றும் இறைப்பைப் போன்று, நோய் நிலையே மீட்பு அமைப்பில் ஒன்றிணைக்கப்படுகிறது. அதனை ஏற்று அனுபவிப்பது சுலபமாகிவிட வில்லை. அஃது ஒரு சோதனையாகவே தொடர்ந்து இருக்கும். நோயாளிகளைப் பார்த்து ஆறுதல் கூறுவதின் வழியாக அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளச் செய்யும் உதவி அன்பாகும். "ஒவ்வொருவருடைய துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று அந்தியோக்கிய இஞ்ஞாசியார் அறிவுரை கூறுகிறார். நோயாளிகளுக்குப் பணி செய்வது இயேசுவின் துன்புறும் அங்கத்தினர்களில் இயேசுவுக்கே சேவை செய்வதாகும். "உடல் நலம் குன்றியிருந்தேன். என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்" என்று தீர்ப்பு நாளில் அவர் கூறுவார் (மத் 25:36). கிறிஸ்தவ உலகில் இனி நோயாளி, மக்கள் விலகியோடும் விதத்தில் சபிக்கப்பட்டவன் அல்லன் (சங் 38:12; 41:6-10; 88:9). அவன் கிறிஸ்துவின் உருவமும், அடையாளமும் ஆவான்.

**நோவதியா NOADIAH** - யாவே தம்மையே வெளிப்படுத்தியுள்ளார்)

1. நோவதியா, பின்னுாயன் மகனும், லேவியரும் ஆவார். இவர், எஸ்ரா பாபிலோனிலிருந்து கொண்டு வந்த ஆலயச் செல்வங்களின் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டவர்களுள் ஒருவர் (எஸ் 8:33).

2. நோவதியா, என்னும் இறைவாக்கினி நெகேமியாவை அச்சுறுத்த முயன்றதாகக் குறிப்பிடுகின்றார் (நெகே 6:14).

**நோவா (NOAH** - ஓய்வு)

1. நோவா, ஆதி 9:20-29-ஐத் தவிர, மற்ற இடங்களில் வெள்ளத்திலிருந்து தப்பியவராகவும் (எசா 54:9; மத் 24:37-38; லூக் 17:26), நீதிமானாகவும் (எசே 14:14; 20, 1 பேதுரு 3:20, 2 பேதுரு 2:5), கடவுள் மேலுள்ள விசுவாசத்தாலும், கீழ்ப்படிதலினாலும் (எபி 11:7) காப்பாற்றப்பட்டவராகவும் குறிப்பிடப்படுகின்றார்.

நோவா, சேத்தின் வழிவந்த, ஆதாமின் ஒன்பதாவது வாரிசான இலாமேக்கு என்பவரின் மகன். ஆதாம் இறந்து 126 ஆண்டுகள் கழித்து நோவா பிறந்தார். "ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடினவேலையிலும் உழைப்பிலும் நமக்கு

ஆறுதல் அளிப்பான்" என்று சொல்லி இலாமேக்கு இப்பெயரை அளித்தார் (ஆதி 5:29). இவர் மனுகுலத்தை அழிவினின்று காப்பாற்றியவர் என்று குறிப்பிடப்படுகின்றார். சேம், காம் எப்பேத்து என்பவர் பிறப்பதற்கு முன் இவர் 500 ஆண்டுகள் வாழ்ந்தவர் (ஆதி 5:32). உலகம் கடவுளின்பார்வையில் கெட்டுப்போனபோது (ஆதி 6:11), நோவா மட்டும் "நேர்மையானவராகவும் குற்றமற்றவராகவும்" (ஆதி 6:9; காண்க. 2 பேதுரு 2:5), இருந்தார். கடவுள் உலகிலுள்ள உயிரினங்களை அழிக்க விரும்பிய போது (ஆதி 6:7) நோவா கடவுள் முன் அருள் பெற்றவராக இருந்தார் (6:8). கடவுள்தான் முடிவை நோவாவுக்கு அறிவித்தார் (6:13). எனவே, நோவாவை ஒரு பெட்டகம் செய்து அதன் உட்புறம் கீல் பூசும்படி (6:14) சொன்னார். நோவா கீழ்ப்படிந்தார் (6:22; 7:5). இவ்வாறு அவர் தம் குடும்பத்தாரோடும், விலங்குகளோடும் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். நோவாவின் 600-ஆவது வயதில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. 601-ஆம் வயதில், முதல் மாதம், முதல் நாள் வெள்ளம் வற்றியது (8:13). நோவா பெட்டகத்தை விட்டு வெளியே வந்தபின் சுத்தமான மிருகங்களையும், பறவைகளையும் கடவுளுக்குப் பலியிட்டார் (8:20). கடவுள் பலியை ஏற்றுக்கொண்டு இனிமேல் உலகை வெள்ளத்தால் அழிப்பதில்லை என்று உறுதி கூறினார் (8:21). பின், நோவா உலகின் இரண்டாவது தந்தையாக பலுகிப் பெருகி உலகை நிரப்புங்கள் (9:1), கொலை செய்யாதீர்கள் என்ற கட்டளைகளைப் பெற்றார் (9:5-6). கடவுள் இந்த உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை ஏற்படுத்தினார்.

நோவா விவசாயியாகவும் குறிப்பிடப்படுகின்றார் (ஆதி 9:20). இப்பகுதி நோவா திராட்சை பயிரிடும் முறையைக் கண்டு பிடித்தது பற்றியும், மதுகுடிப்பதால் உண்டாகும் தீமையைப் பற்றியும்தான் பேசுகிறது. மது அதிகமாகக் குடித்ததால், நோவா தம் கூடாரத்தில் நிர்வாணமாகக்கிடந்தார் (9:21). இதைக்கண்ட காம், மற்றச் சகோதரர்களிடம் கூறினான். சேமும் எப்பேத்தும், ஒரு துணியை எடுத்துக் கொண்டு பின்புறமாக நடந்து வந்து அவர் மேல் போட்டு மூடினர் (ஆதி 9:23). இதை அறிந்த நோவா, காம் ஆகிய கானானைச் சபித்து, சேமையும் எப்பேத்தையும் ஆசீர்வதித்தார் (9:24-27). நோவா வெள்ளத்திற்குப் பிறகு 350 ஆண்டுகள் வாழ்ந்து, தம் 950-ஆம் வயதில் இறந்தார் (9:28-29).

நோவாவை விவசாயியாகக் குறிப்பிடும் இப்பகுதி வேறு ஒரு பாரம்பரியத்திலிருந்து வந்திருக்க வேண்டும். இங்குக் கூறப்படும் பகுதி மேய்ப்புத் தொழிலிலிருந்து விவசாயத்திற்கு மாறியதை ஏற்றுக் கொள்கிறது. நோவாவும், அவருடைய புதல்வர்களாக சேமும், எப்பேத்தும் கூடாரவாசிகளாக இருந்தபோதிலும் நோவா மிகவும் கடினமான திராட்சை பயிரிடும் தொழிலைச் செய்ததாகக் கூறப்படுகிறது. இத்தொழிலின் விளைவு மிகவும் கீழ்த்தரமானதாக மாறக்கூடும் என்பதை நோவா-கானான் கதை எண்பிக்கின்றது. காயினுக்கும், ஆபேலுக்கும் இடையே இருந்த அதே எதிர்ப்பு (ஆதி 4:1-16) மேய்ப்புத்தொழிலுக்கும், விவசாயத்திற்கும் இடையே கூறப்படுகிறது.

2. செலோவுகாதின் ஐந்து புதல்வியர்களுள் ஒருத்தி (எண் 26:33). இவர்கள் தங்களுக்குச் சகோதரர்கள் இல்லை என்பதால், மோசேயிடம் கேட்டுத் தங்கள் தந்தையின் மரபுரிமைச் சொத்தைப் பெற்றுக்கொண்டனர் (27:1-11; காண்க. யோசு 17:3-6). இவர்கள் ஒவ்வொருவரும் காலப்போக்கில் தங்கள் தந்தையின் உறவினர்களை மணந்து கொண்டனர் (எண் 36:10-12). இப்பெயர் மனாசே இனத்தோடு தொடர்புடைய ஓர் இடத்தின் பெயராகவும் கருதப்படுகிறது.

**நோவாமோன் (NO-AHAMON)**

நோவாமோன் 'நோ' என்னும் எபிரேயப் பெயரின் முழு வடிவமாகும். எகிப்தியச்

சொல்லிலிருந்து வந்த நோ என்னும் எபிரேயச்சொல், தெபேசு என்பதைக் குறிக்கின்றது.

**நோவாவின்பேழை (ARK OF NOAH)**

இது பெருவெள்ளத்தின்போது, இறைவனின் கட்டளைக்குப் பணிந்து, நோவா தன்னையும் விலங்கினங்களையும் பாதுகாக்கச் செய்த பேழை, படகு அல்லது பெட்டகமாகும். இப்பேழையைக் குறிக்கும் எபிரேயச் சொல் நோவாவின் பேழையையும், குழந்தையான மோசே வைக்கப்பட்ட கோரைப்புல்லால் செய்யப்பட்ட பேழையையும் மட்டும் குறிக்கப் பயன்படுகிறது.

1. **பழைய ஏற்பாடு:** நோவாவின் படகு கோபெர் மரத்தால் (ஆதி 6:14) அல்லது நூக்கு மரத்தால் செய்யப்பட்டதாகும். அதில் பல அறைகளும் பிரிவுகளும் இருந்தன. உள்ளேயும் வெளியேயும் கீல் பூசப்பட்டிருந்தது (6:14). அதன் தோராயமான அளவுகள்: நீளம் 133.5 மீட்டர், அகலம் 22 மீட்டர், உயரம் 13.4 மீட்டர். பேழை மூன்றடுக்குகளையும் கூரையையும் கதவையும் கொண்டிருந்தது.

இஃது எகிப்திய சரக்குப் படகைப்போல் செய்யப்பட்ட செவ்வக மூலைகளையும், பெட்டிபோன்ற அமைப்பையும் கொண்டு, மிகுந்த சரக்குகளை ஏற்றப் போதிய இடத்தைக் கொண்டிருந்தது. பேழையில் ஏற்ற வேண்டிய விலங்குகள் நோவா தன் படகைக் கட்டிய பகுதியில் வாழ்ந்தன என்று ஏற்றுக்கொண்டால், 35 ஆயிரம் தனிப்பட்ட தண்டெலும்பு விலங்குகளே பேழையில் இடம் பெற வேண்டும். மேலும் விலங்குகள் குளிர்காலத்தில் செறிதுயில் கொண்டிருக்கலாம். இவ்வாறு தக்க விலங்குகளில் ஏழு சோடியும், தகாத விலங்குகளில் ஒரு சோடியுமாக எல்லா விலங்குகளும் பேழையில் ஏற்றப்பட்டன என்ற ஆதியாகம விவரிப்பு, முதலில் தோன்றுவது போல் அவ்வளவு நம்பத்தகாதது அன்று.

2. புதிய ஏற்பாடு: நற்செய்திகளில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பெருவெள்ளத்திற்கு ஒப்பிடப்படுகிறது. மனிதர்கள் தங்கள் சுயமைய வாழ்க்கை முறையிலிருந்து மனந்திரும்ப, இறைவன், நோவாவின் காலத்தில் செய்ததுபோல் அனுமதிப்பார் (மத் 24:37-39; லூக் 17:26-27). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியரின் கருத்துப்படி, விசுவாசத்தினாலே நோவா பேழையை அமைத்தார் (எபி 11:7). இவ்வாறு அவர் உலகைப் பெருவெள்ளத்திற்குத் தீர்ப்பிட்டார். அவர் நீதியுடைமைக்கு வாரிசு ஆனார் (காண். 2 பேதுரு 2:5). பேதுருவுக்குப் பேழை திருமுழுக்கின் அடையாளமாகும் (1 பேதுரு 3:20-21).

**நோவாவின் வெளிப்பாடு (NOAH, APOCALYPSE OF)**

இஃது ஒரு போலி வாழ்க்கை வரலாற்று நூலாகும். இது யூபிலி நூலில் நோவாவின் நூல் என்று குறிப்பிடப்படுகிறது; யூபிலி நூலின் சில பகுதிகளையும், ஏனோக்கு நூலின் சில பகுதிகளையும் கொண்டுள்ளது. இதன் சில பகுதிகள் சாக்கடல் ஏடுகளில் காணப்படுகின்றன. இது யூபிலி நூலுக்கு முந்தியதாகும். ஆகவே, இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியகாலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்நூலின் சில பகுதிகள் வானதூதர்களின் வீழ்ச்சியைப் பற்றிக் கூறும் புராணத்தில் தனிக் கவனம் செலுத்துகின்றது. தெய்வ புதல்வர்கள் மனித புதல்வியரோடு உடலுறவு கொண்டனர் (காண்க. 6:1தொ). இவர்கள்தான் உலகில் தீமையைப் புகுத்தினர். இவர்களுக்குப் பயங்கர தண்டனை காத்திருக்கிறது. மனுகுலத்தில் இவர்களால் ஏற்பட்ட ஒழுக்கக்கேடே பெருவெள்ளத் தண்டனைக்குக் காரணமாயிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் நோவா பிறந்ததை அழகாக விவரிக்கிறது. அவர் ஒரு சிறப்புமிக்க குழந்தையாக வளர்ந்து பெரியவனாகிப் பின் இறந்ததையும் இந்நூல் குறிக்கிறது. மெசியா அரசின் வருகையும் இதிலே கூறப்பட்டுள்ளது.

தீர ஆராய்ந்தால் இதற்கு வெளிப்பாடு என்ற

தலைப்பு கொடுக்கக் கூடாது. மாறாக, யூபிலி நூல் குறிப்பிடுவதுபோல் "நோவாவின் நூல்" என்ற தலைப்பே பொருத்தமுடையது.

**நோன்பு (FASTING)**

1. நோன்பு என்பது ஒருநாள் அல்லது பலநாட்களுக்கு, ஒரு மாலையிலிருந்து மறுநாள் மாலைவரை உணவு நீர் இன்றி இருத்தல் ஆகும். உடலுறவைத் தவிர்ப்பது கூட நோன்பு எனக்கருதப் படும்.

மேற்கத்திய நாடுகளில் வாழ்வோர், ஏன் கிறிஸ்தவர்களும்கூட, நோன்பு இருத்தலின் மேன்மையை உணர்ந்து போற்ற முடியவில்லை. குடிப்பதிலும் உண்பதிலும் அளவோடு இருக்கவேண்டும் என்று கருதுவோர், நோன்பு இருப்பது சுகக்கேடு என்றும் கருதுகின்றனர். ஆன்மீக வாழ்வுக்கு இஃது எவ்வளவு உறுதுணை அளிக்கிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. இந்த மனப்பான்மை எங்கும் எம்மதத்தைச் சார்ந்த மறையோரும் கூறும் உண்மைக்கு மாறானது. நோன்பு தவத்திற்காகவோ, தூய்மைக்காகவோ, மன்றாட்டு வேண்டுதல்களுக்கோ துக்கத்தை முன்னிட்டோ மதச்சடங்குகளில் ஒரு தனி இடம் பெற்றுள்ளது. இஸ்லாமிய சமயத்தில் இறையின் அப்பாற்பட்ட தன்மையை நோன்பின் வழியாக அறியமுடிகிறது என்று கருதப்படுகிறது. திருச்சபையின் கொள்கைகளுக்கு அடிப் படையான வேதாகமம் எல்லா மதங்களோடும் இந்தக் கொள்கையில் ஒத்திருக்கின்றது. ஆனால், நோன்பின் உட்கருத்தையும் அதனைக் கையாளும் முறையையும் திருச்சபை ஒழுங்கு படுத்துகிறது. செபம், நற்செயல்கள், பிச்சையிடு தல், இவைகளோடு மனிதனின் தாழ்ச்சி, நம்பிக்கை, அன்பு என்பவைகளை இறைவனிடம் எடுத்தியம்புகின்ற சிறந்த சாதனமாக உள்ளது நோன்பு.

2. நோன்பின் உட்பொருள்: மனிதன் உடலும் ஆன்மாவும் கொண்டவனானதால் ஆன் மீகத்தைச் சார்ந்ததாக மட்டும் மதம் இருந்துவிட முடியாது. உலகோடும் உடலோடும் ஒன்றி இயங்க, ஆன்மாவிற்கு உடலைச்சார்ந்த நெறிகளும், செயல்களும், மனப்பான்மைகளும் இன்றியமை யாதனவாகும். மன்றாட்டோடு சேர்ந்த நோன்பால் இறைவன் முன் மனிதனின் தாழ்ச்சியை வெளிப்படுத்த இயலுகிறது. நோன்பு (லேவி 16:31) "உள்ளத்தைத் தாழ்த்துவதற்குச்" (16:29) சமம். நோன்பு ஒரு தவநெறி அன்று; உளவியல் சார்ந்த அல்லது மறையைச் சார்ந்த தனித்தன்மை அடைய வேண்டும் என்று அது செய்யப்படுவதில்லை. மதவரலாறுகளில் இத்தகைய கண்ணோட்டத்தோடு நோன்பு எழுதப் பட்டிருக்கின்றது. ஆனால் விவிலியத்தில், ஒருவன் உணவை ஒறுத்து ஒருநாள் முழுவதும் இருக்கும்போது (நீதி 20:23; 2 சாமு 12:16தொ; யோனா 3:7), உணவைக் கடவுளின் கொடையாகக் கருதும்பொழுது (உப 8:3), இஃது ஒரு மதச்சடங்காக மாறுகிறது. ஆனால், அதன் நோக்கை நாம் சரியாக உணரவேண்டும். மண உறவைக் குறித்தும் இது சொல்லப்படலாம் (யோவே 2:16).

இறைவனையே நம்பியுள்ளோம், அவருக்கே நம்மைக் கையளித்துள்ளோம் என்ற நம்பிக்கையோடு அவர்பால் திரும்புகிறோம் (தானி 9:3; எஸ் 8:21). கடினமான செயலைத் தொடங்கு முன்னும் (நீதி 20:26; எஸ்த 4:16), குற்றத்திற்கு மன்னிப்பு கோரும்பொழுதும் (1 அர 21:27), குணமாக்கப்பட வேண்டும்போதும் (2 சாமு 12:16.22), விதவையானபின் துக்கச் சடங்கள் கொண்டாடும் போதும் (யூதி 8:5; லூக் 2:37), நாட்டில் நடந்த பெருங்கேட்டிற்குப் பின்னும் (1 சாமு 7:6; 2 சாமு 1:12; பாரூ 1:5; செக் 8:19) துக்கம் தெரிவிக்கும்பொழுதும், பெரிய இடையூறின் முடிவை எதிர் நோக்கும்போதும் (யோவே 2:12-17; யூதி 4:9-13), இறை ஒளிக்குத் தன் மனதைத் திறப்பதற்கும் (தானி 10:12), கொடுத்த பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான இறையருள் பெறவேண்டியும் (அ.ப. 13:2 தொ), இறைவனைச் சந்திக்க தன்னையே தயாரிக்க வேண்டியும் (யாத் 34:38; தானி 9:3) நோன்பு பயன்படுத்தப் படுகிறது.

நோன்பு செய்யும் நோக்கமும் காலமும் மாறுபடும். ஆனால், தன்னையே விசுவாசத்தோடு தாழ்த்தி இறையருளைப்பெறவும், இறைவனின் முன்னிலையில் இருக்கவும் நோன்பு செய்யப்படுகிறது என்பது மாறுபடாத உண்மை. மோசேயின் நாற்பது நாள் தவம் (யாத் 34:28) மற்றும் எலியாவின் தவமுயற்சிகள் (1 அர 19:8) ஆகியவற்றின் பொருளை இந்த ஆழ்ந்த கருத்து வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துவின் நாற்பது நாள் நோன்பு, மோசே, எலியா செய்த தவத்தை ஒத்தது. இறைவனின் ஆவியால் நிறைந்தவராகையால் (லூக் 4:1) இறை ஆவியின் வருகைக்காக, தவம் செய்தார் என்று கூறுவது தவறு. தூய ஆவியால் உந்தப்பட்டு வனாந்தரத்திற்குச் சென்றது, தனது மெசியாப்பணியைத் தந்தையின் சித்தத்திற்குத் தலை தாழ்த்தித் தொடங்குவதற்கே (மத் 4:1-4).

3. **நோன்பு இருத்தலின்** மரபு: யூத வழிபாட்டின்படி பாவநீக்க நாளன்று பெரிய நோன்பு இருப்பது வழக்கம் (காண். அ.ப. 27:9). இறைமக்களாய் இருப்பதற்கு இத்தகைய நோன்பு இருப்பது அவசியமான ஒரு நிபந்தனையாகும். நாட்டுக்கு நிகழ்ந்த துக்க நிகழ்ச்சிகள் ஆண்டு நினைவின் போது பொது நோன்பு இருப்பதும், பக்தியுள்ள யூதர்கள் தங்கள் நோக்கத்திற்கேற்ப நோன்பு இருப்பதும் வழக்கம் (லூக் 2:37). எடுத்துக்காட்டாக பரிசேயர்களும், திருமுழுக்கு யோவானின் சீடர்களும் (மாற் 2:18). அவர்களில் சிலர் வாரம் இருமுறை நோன்பு இருந்தார்கள் (லூக் 18:12). இவ்விதமாக சட்டத்தின் மற்றும் இறைவாக்கினர்களின் விதிகளுக்கேற்ப, தங்களையே ஏற்புடையவர்களாக்கிக் கொண்டனர். கிறிஸ்து இதுபோன்று தனது சீடர்களுக்கு எதுவும் குறிப்பிடவில்லை (மாற் 2:18). எனினும், இத்தகைய ஏற்புடைமையை அவர் குறைவாக எண்ணினார் அல்லது எடுத்தெறிய எண்ணினார் என்று சொல்ல முடியாது. இவைகளை நிறைவேற்றவே வந்தார். அதனால்தான் நோன்பு வெறும் வெளிப்படையான சடங்காக இருப்பதைத் தடுத்துப் பேசினார். தனது சீடர்கள் இத்தகைய நீதியைக் கடந்து வெளிப்படையில் மட்டும் இல்லாதவிதத்தில் மிளிர வேண்டும் என எண்ணினார் ( மத் 5:17. 20:6:1). செல்வத்தின்பால் பற்றற்ற தன்மையும் (மத் 19:21), உடல் நாட்டங்களில் ஈடுபடுவதைச் சுயமாக விரும்பித் தவிர்க்க வேண்டும் என்றும் (18:12), சிலுவையின் வழியில் நடக்க தன்னை மறுத்தல் வேண்டும் என்றும் (10:38-39) இயேசு வலியுறுத்துகிறார்.

நோன்பு முயற்சிகளில் சில குறைகளும் இருக்கின்றன. இது வெளிப்படையான ஆசாரச்சடங்காக மாறுகிறது. இதை இறைவாக்கினர் ஏற்கெனவே கண்டித்துள்ளனர் (ஆமோ 5:21; எரே 14:12). அகந்தையோடும், வெளிப்பகட்டிற்கும், 'பிறரால் பார்க்கப்பட வேண்டியும்' (மத் 6:16) செய்யப்படலாம். கடவுளுக்கு ஏற்புடையதாய் இருப்பின் நோன்பு பிறர் அன்போடு ஒன்றினைத்ததாயும், உண்மையான நீதியைத் தேடும் கருத்துடையதாகவும் (எசா 58,2-11) இருக்க வேண்டும். செபத்தைப் போன்று, நோன்பையும் ஏழைக்கு உதவும் மனப்பான்மையி லிருந்து பிரித்து வைக்க முடியாது. இறுதியாகக் கடவுள் (செக் 7:5). உண்மையான விவேகத்தோடு நோன்பு செய்யப்பட வேண்டும் என்று இயேசு தன்னைப் பின் பற்றுவோரைக் கோருகிறார். கடவுளுக்கு மட்டும் தெரிந்த இஃது, அவர் மேல் கொண்ட நம்பிக்கையின் தூய அடையாளமாக இருக்கும். தாழ்ச்சியோடு கலந்த நோன்பு உள்ளார்ந்த நீதிக்கு இதயத்தைத் திறக்கிறது. இது, மறைவாயிருந்து கண்டு, செயலாற்றும் தந்தையின் செயலாகும் (மத் 6:17 தொ).

அப்போஸ்தலரின் திருச்சபை நோன்பு பற்றிய செயலில், யூத மறைஒழுங்குகளைக் கடைப்பிடித்தது; ஆனால், கிறிஸ்து வரைந்த உட்பொருளின்படி மாற்றி அமைத்தது. அப்போஸ்தலர் பணிநூல் நோன்போடும் செபத்தோடும் கலந்த சில மதநிகழ்ச்சிகளைக்

குறிப்பிடுகின்றது (அ.ப. 13:2தொ; 14:22). பவுலின் பல பயணங்களில் உணவின்றிக் கழித்த பல சமயங்களைத்தவிர, தானே நோன்பு செய்துள்ளார் (2 கொரி 6:5; 11:27). இப்பாரம்பரியத்தைப் பின்பற்றி இறையருளைப் பெறவும், கடவுளின் வருகைக்காகக் காத்திருக்கவும் நோன்பு முயற்சிகளைக் கையாளவேண்டும் என்று திருச்சபை இறைமக்களுக்கு அறிவுரை கூறுகிறது. கிறிஸ்துவின் முதல் வருகையால் இஸ்ராயேல் செய்த தவமுயற்சிகளுக்கு விளக்கம் கிடைத்தது. எனினும், அவரின் உயிர்ப்புக்குப் பின்னைய நாட்கள் தவமுயற்சிகள் இல்லாத முழு மகிழ்ச்சியின் காலமன்று. பரிசேயர்களுக்கு எதிராக இயேசு நோன்பு செய்யாத தன் சீடர்களுக்காகப் பரிந்துரைத்தார் "மணமகன் தங்களோடு இருக்கு மளவும் மணவிருந்தினர் நோன்பு இருக்க முடியுமா? மணமகன் அவர்களோடு இருக்கும் காலம் எல்லாம் அவர்கள் நோன்பு இருக்க முடியாது. மணமகன் அவர்களைவிட்டுப் பிரிய வேண்டியகாலம் வரும். அப்போது அவர்கள் நோன்பு இருப்பார்கள்" (மாற் 2:19 தொ). உண்மையான நோன்பு விசுவாசத்தின் நோன்பாகும்; அன்பரைக் காணாதிருப்பதும் மணமகனின் வருகைக்காகக் காத்திருப்பதும் இடைவிடாமல் அவரைத் தேடுவதும் ஆகும். மணமகன் மீண்டும் நம்மிடம் வருவதற்காகக் காத்திருக்கும்போது, தவமிக்க நோன்பு திருச்சபையின் வழக்கில் இடம் கொண்டுள்ளது.

# ப

**பகத் - மோவாபு (PAHATH - MOAB** – மோவாபின் ஆளுநன்)

இவர் மோவாபை ஆட்சிசெய்தவர். எபிரேயரான இவரின் பெயர் இவரது வழிவந்த குடும்பத்தை அல்லது இனத்தைக் குறித்தது. இந்த இன மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களுள் அடங்குவர் (எஸ் 2:6; 8:4; நெகே 7:11).

மேலும், இவர்களில் பலர் எஸ்ரா காலத்தில் அன்னியப் பெண்களை மணந்திருந்தனர் (எஸ 10:30). இந்த இனத்தைச் சேர்ந்த அசுபு என்ற ஒருவர் நெகேமியா, எருசலேம் நகரைப் பழுது பார்த்தபொழுது உதவினார் (நெகே 3:11). வேறு சிலர் நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர் (10:14).

**பகபக்கர் (BAKBAKKAR** – ஆய்வாளர்)

ஆசாபுவின் புதல்வர்களில் ஒருவர். எருசலேமில் வாழ்ந்த ஒரு லேவியர் (1 நாள் 9:15). நெகே 11:16–இல் வரும் பகபுக்கியாவும் இவரும் ஒன்றாக இருக்கலாம்; இதற்கு இணையானபட்டியல் நெகே 11:16–இல் இப்பெயர் காணப்படவில்லை.

**பகபுக்கியா (BAKBUKIAH** – ஆண்டவரின் புட்டி அல்லது குடம்)

ஒரு பாடகரும் (நெகே 11:17; 12:9), கோவில் கருவூலங்களின் காவலனும் (நெகே 12:25) ஆவார். நெகே 11:17 ஆசாவினுடையவும் எதுத்தூனுடையவும் புதல்வர்களைப்பற்றிக் கூறுவதால், பகபுக்கியா ஏமானின் மகனாக இருக்கலாம். இவ்வாறு புலமை வாய்ந்த மூன்று இசைக் குழுக்களைக் குறிப்பதை நிறைவு செய்கின்றது (காண். 1 நாள் 25:1-5). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், எருசலேமில் வாழ இவருக்குச் சீட்டு விழுந்தது. இவர் ஆலய வாயில்காப்போனும், ஆலயப்பாடகர் குழு ஒன்றுக்குத் தலைவராகவும் இருந்தார் (நெகே 12:9.25).

**பகபூக்கு (BAKBUK** – புட்டி)

அடிமைத்தளையிலிருந்து செருபாபேல் தலைமையில் நாடு திரும்பிய பின்பு கோவில் ஊழியர்களில் கீழ்வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:51; நெகே 7:53).

**பகரும், பகருமியர் (BAHARUM, BAHARUMITE** – இளைஞர்கள்)

பகூரிமின் மற்றொரு பெயர். காண்க: பகூரிம்

**பகியேல் (PAGIEL** – இறைவனின் ஊழ் அல்லது நற்பேறு)

ஒக்கிரானுடைய புதல்வனாகிய இவர் ஆசேர் கோத்திரத்தின் தலைவர்களுள் ஒருவர் (எண் 1:13; 2:27; 7:72. 77; 10:26).

பாலைவனத்தில் மோசேக்கு /மக்கள் கணக்கு எடுக்கவும் மற்றக் காரியங்களிலும் உதவி செய்த பன்னிரண்டு கோத்திரத் தலைவர்களுள் இவரும் ஒருவர்.

**பகூரிம் (BAHURIM** – சமவெளி)

எருசலேமிற்கு அருகில் ஸ்கோபு மலைக்குக் கிழக்கே இன்றைய இராஸ்-தெ-மிம் என்ற இடத்திலிருந்த ஒரு கிராமம். மீக்கால் தாவீதிடம் கொண்டு செல்லப்பட்ட பொழுது இந்த இடத்தில்தான் அவள் பல்தியேலைப் பிரிந்தாள் (2 சாமு 3:16). அப்சலோமிடமிருந்து, தாவீது பயந்து ஓடிக்கொண்டிருந்தபோது இங்குதான் சிமயிதாவீதை வசைமொழிகூறினார் (2 சாமு 16:5; 19:16; அர 2:8). யோனத்தானும் அகிமாசும் தாவீதுக்காக உளவு பார்த்துக் கொண்டிருந்தபொழுது பகூரிமைச் சேர்ந்த ஒரு மனிதனின் வீட்டுக்கிணற்றில் பதுங்கிக் கொண்டார்கள் (2 சாமு 17:18).

2 சாமு 23:31; 1நாள் 11:33- ஆகிய பகுதிகளில் காணப்படும் வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தாவீது மன்னனின் வலிமை

வாய்ந்தவர்களில் ஒருவரான அசமாவேத்து என்பவர் பகூரிமைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

**பகைவன், எதிரி (ENEMY)**

**I. பகைமை நிலை:**

**1. நிலைபெற்ற தன்மையும் வரையறைகளும்:**

விவிலிய மனிதன் எப்போதும் தன் பகைவனோடு மோதிக்கொண்டே (எதிராடிக்கொண்டே) வந்திருக்கிறான்; இது குறித்து எவ்வித ஐயமும் இல்லை. குடும்ப வட்டத்திற்குள்ளேயே, காயீனுக்கும் ஆபேலுக்கும் (ஆதி 4:1-16), சாராவுக்கும் ஆகாருக்கும் (ஆதி 16:1-7), யாக்கோபுவுக்கும் ஏசாவுக்கும் (ஆதி 27:29), யோசேப்புக்கும் அவர் சகோதரர்களுக்கும் (ஆதி 37:4), அன்னாவுக்கும் பெனின்னாவுக்கும் (1 சாமு 1:6தொ) பயங்கரமான பகைமை கிளர்ந்தெழுந்தது. நகரத்திலே, இறைவாக்கினரும் சங்கீதம் பாடிய அடியார்களும் தங்களின் பகைவர்களைப் பற்றி முறையிடுகிறார்கள் (சங் 31; 35; 42:10; எரே 18:18-23). பகைவர்கள் சுற்றத்தினராகவே (மீக் 7:6; எரே 12:6), பழைய நண்பர்களாகவோ (55:13தொ) இருக்கலாம். வாழ்வில் வரும் ஒவ்வொரு தீமைக்குப்பின்னும் ஒரு பகைவன் இருக்கிறான்; சங்கீதங்களில், நோய் வாய்ப்பட்டவனென்று அழைக்கப்படுபவன் பிறரால் துன்புறுத்தப்படுபவனே (சங் 13; 38:1-16) என்னும் எண்ணக் கண்ணோட்டம் விவிலியத்தில் விரவிவருகின்றது. பகைமை பாராட்டுபவன் இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்தவனென்றால் அவனையும் குடியுரிமை கொண்டவனாகவே சட்டம் கருதுகிறது (யாத் 23:4; எண் 35:15). இஸ்ராயேல் இனமே பகைமையுடைய இவ்வுலகத்தில் தான் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், பகைமையில் பல நிலைகள் உள்ளன. இரக்கமே இல்லாத மூர்க்கத்தனமான பகைமை கானானியர்களிடமும், அமலேக்கியர்களிடமும் காணப்படுகிறது (யாத் 17:16; 1 சாமு 15); கொடிய சண்டையோடு முடிந்துவிடும் பகைமை மோவாபுக்கும் அம்மோனுக்கும் எதிராக நிகழ்ந்தவற்றில் காணப்படுகிறது (உப 23:4-7). மேலும், உபாகமத்தில் ஏதோமுக்கும் எகிப்துக்கும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தில் (உப 23:8) உபாகமக் கருத்துப்படி அன்னியன் என்பது பகைவனைக் குறிப்பதில்லை என்பது கவனிக்கத் தருந்தது.

**2. தொடக்கம்:** திருச்சரிதையிலே இத்தகையதோர் ஒவ்வாத நிலைமை நிலைபெற்று வந்துள்ளதை எவ்வாறு (புரிந்து) ஏற்றுக்கொள்வது? உண்மையில், பாவம் தோன்றி வெறுப்பை விளைத்தபின்னர், பகைமையென்பது வரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகிவிட்டது. இஸ்ராயேலர் தாங்கள் இரக்கமற்ற கொடியதோர் உலகத்தின் நடுவே வாழ்வதைத் தெளிவாக உணர்ந்திருந்தனர். ஆனால், அவர்களை இத்தகைய உலகச் சூழ்நிலை அமைப்பிலிருந்து அப்புறப்படுத்தித் தனித்துப் பார்க்க விரும்புவதென்பது, அவர்களின் உண்மையான வரலாற்றுத் தொடர்புகளிலிருந்து அவர்களை விலக்கி, அவர்களுக்குள்ள உண்மை உருவத்தையே மாற்றிவிடுவதாக ஆகிவிடும். கடவுள், மனிதனை அவன் இருக்கும் இடத்திலேயே, சூழ்நிலையிலேயே வந்து சந்திக்கிறார். கானானியர்கள் சிலையை வழிபடுவதாலும் (ஆதி 15:16; உப 20:16 தொ). வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததாலும் (உப 2:12) தாக்கப்படுகிறார்கள். இவ்வித நிகழ்ச்சிகள், 'இஸ்ராயேலரின் எதிரிகள் இறைவனுக்கும் எதிரிகள்' என்னும் உண்மையை விளக்குகின்றன. "உங்கள் பகைவர்களுக்கு நான் பகைவனாக இருப்பேன்" (யாத் 23:22) என்னும் கூற்றைக் காண்க.

**II. பகைமை சூழ்ந்த உலகத்தில் ஒளி:**

**1. தெள்ளிய ஓர் எடுத்துக்காட்டு:** தாவீதினிடத்துச் சவுலுக்கிருந்த போராட்டம் பற்றிய வரலாறு தனிமனிதருக்கிடையே இருந்து வந்த பகைமையை விளக்கும் விரிவான பகுதியாகும்.

சவுல் மட்டுமே பகைமை பூண்டிருந்தார்; தாவீதின் உயிரைப் பறிக்கத் துடித்தார் (1 சாமு 18:10 தொ; 19:9-17). அத்தகு புன்மைநெறியால் இறைவன் மனித இனத்திற்காகக் கொண்டிருந்த புனித திட்டத்தை எதிர்த்தார். இப்பகைமையின் உட்கிடக்கையாக அமைந்தது பொறாமையே என்பதை விவிலியம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் சவுலின் வெறுப்புணர்வால் தானும் கறை பட்டுவிடாதபடி தாவீது பார்த்துக் கொள்கிறார். அவருடைய மனப்பாங்கின் மாண்பும் பெருந்தன்மையும் எத்தகையதென்றால், அத்தகைய நிலையை எட்டிப்பிடிப்பதற்கு இன்றைய கிறிஸ்தவன் எவ்வளவோ அரும்பாடுபட வேண்டியிருக்கும். உண்மையிலேயே, கடவுளின் நண்பர் பலர், தாவீதைப்போல அத்தகையதோர் உயர்ந்த தியாக வாழ்வு வாழ வேண்டியிருந்தது. கடவுளின் அழைப்பு, அவர்களை உண்மை வாழ்விலே ஊன்றி நிற்கச்செய்யும் பொருட்டு, அவர்கள் தங்களின் தன்னலத்தை உதறித்தள்ளுவதற்குத் துணை நின்றது.

2. **தோல்வி அனுபவம்:** இஸ்ராயேல் மக்கள் ஓர் இனமாகவே இத்தகைய தோல்வியனுபவங்களை அடைந்திருக்கிறார்கள். வெற்றி வேட்கையால் பிறர் மேல் தொடுத்த ஒரு போருக்காக அவ்வினம் எத்தனையோ போர்களால் தாக்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல, பகைவன் என்னும் சொல் கொடுங்கோலன் என்னும் பொருளில் கலந்து கையாளப்பட்டது. அத்தகைய நிலையில் தங்களின் அதிகாரத்தைப்பற்றிய கனவெதுவும் அவர்கள் காணவில்லை. மாறாக, கடவுள் நீதிமானுக்கு அதிகச் சக்தி தருவதற்குப் பதில் தாமே அவனை விடுவிக்கிறார் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் (யாத் 14:13தொ. 30). தன்னால் கொடுமைப்படுத்தப்பட்ட நீதிமானின் சக்தியால் கொடுங்கோலன் அழிவதில்லை; ஆனால் தானே தனக்கு எதிரியாகி அழிவுறுகிறான் (சங் 7:13-17; காண். சவுல், ஆமான்....). தான் இறுதியில் அழிவையே தேடிக்கொண்டாலும் அவனது வெற்றியில் ஒரு காரணம் இல்லாமலில்லை. அதாவது, அவன் வாயிலாகக் கடவுள் தம் மக்களைத் தண்டித்துத் திருத்துகிறார். அக்கொடுங்கோலனின் முடிவு கடவுள் தம் இனத்திற்குத் தரும் ஆசியின் முழுமையாகத் திகழ்கிறது (ஆதி 22:17; 49:8; உப 28:7). வரலாற்றுப்போக்கில் அன்றளவில் அவன் சக்தி வாய்ந்தவனாக வளரும்படி கடவுள் விட்டு விடுகிறார் (நீதி 2:3; 2:20-23; உப 7:22). அவன் அந்நிலையில் தொடர்ந்து செல்வது, ஒன்று கடவுள் தம் மக்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்பதற்கு அறிகுறி; மற்றது, மக்கள் இறைவனிடத்து முழு நம்பிக்கையும் பற்றும் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு அறிகுறி. இவ்விரு நிலைகளுக்கும் காலத்தின் நிறைவு இன்னும் வரவில்லை.

3. **காலத்தின் செயலாக்கம்:** சங்கீதத்தில் வரும் சாபங்களைப் பல்லாண்டுகளுக்குப் பின்னர் பயன்படுத்துவோர், அதே மனநோக்கோடு பயன்படுத்த மாட்டார்கள்; அதுபோலவே அதே மக்களைக் குறித்தும் சாபமிட மாட்டார்கள். காலத்தின் ஓட்டத்தில் எவ்வளவோ தூய்மையாக்கம் நடைபெற்றுள்ளது. இத்தகைய வளர்ச்சி மாற்றத்தை ஞானாகமத்தில் தெளிவாகக் காணலாம் (ஞான 10-19). அதாவது, மக்கள் இதுவரையில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை முன்னிட்டுச் செய்து வந்த சச்சரவானது மாறி, கொள்கையின் அடிப்படையில் ஏற்படத் தொடங்கியது. தம் பாரம்பரிய வழக்கப்படி புனிதப்போரைத் தொடங்கும் மக்கபேயர்கள் "தங்களது உயிருக்காகவும், தங்கள் திருச்சட்டங்களுக்காகவும்" சண்டையிடுகின்றார் கள் (1 மக் 2:40; 3:21). இவ்விரு நோக்கங் களையும் மனதில் கொண்டு, எவ்விதத் தாழ்ந்த விருப்பமுமின்றிப் போரிடுகிறார்கள். சுருங்கக்கூறின், ஒன்று, தங்கள் பகைவர்களுக்குச் சட்டரீதியில் தகுந்த தண்டனை கொடுத்தல் – இது பழிவாங்குதல் அன்று; இஸ்ராயேலரின் வெற்றி அதன் பகைவர்களின் வீழ்ச்சியாக முடிகிறது (எஸ்தர்). மற்றொன்று, அனுபவமும், இறை ஒளியும் அன்பு நோக்கி மனதை ஈர்த்துச்

செல்கிறது. சீராக்கு நூலில் வரும் அறிவுரைகளில், மனிதன் கடவுளின் மன்னிப்பைப் பெற வேண்டுமாயின் அவன் பிறரை மன்னிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது (சீரா 28:1-7; காண்க. பழ 24:29). இதுவே இயேசுவும் விடுத்த கோரிக்கையாகும்.

III. பகைமையை இயேசு வெல்கிறார்:

1. **கட்டளையும் செயலொழுக்கமும்:** "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோர்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத் 5:44 இணை). இந்தக் கட்டளையானது இயேசு விடுக்கும் புதிய கோரிக்கைகளில் முதன்மையானதாகத் திகழ்கிறது (காண்க. 5:43). உவமையொன்றில் வருவதுபோல (லூக் 19:27) அவருடைய பகைவர்கள் "அவர் ஓர் அரசனாவதை" விரும்பவில்லை. அவர்கள் அவரைச் கொன்றார்கள்; அவரோ சிலுவையின் கொடிய வேதனையிலும் அவர்களை மனமார மன்னித்தார் (லூக் 23:34). அது போன்றே, அவரது சீடரும் தம் தலைவரின் வழியொழுகி வாழவேண்டும் (காண்க. 1 பேதுரு 2:23); தனக்கு மன்னிப்பு வழங்கும் (காண். மத் 6:12) விண்ணகத் தந்தையின் நெறியினைக் கடைப்பிடித்தால் (மத் 5:45 தொ) அவரிடமிருந்து மன்னிப்புப்பெறலாம். இயேசு எவ்வாறு தம் பகைவர்களான பரிசேயர்களையும் ஏரோதையும் வேறு சிந்தனை எதுவுமின்றி மன்னித்தாரோ அவ்வாறே கிறிஸ்தவனும் மன்னித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதென்பது எவ்விதத் தவறான நோக்கத்தோடுமன்று. ஆயினும், இத்தகையதொரு செயலானது வேதாகமம் கூறுவதுபோல், "பகைவனின் தலைமேல் எரிதழலைக் குவிக்கிறது" (உரோ 12: 20 = பழ 25:21 தொ); இது பழிக்குப்பழி பகைவன் மனது வைத்தால் ஓர் அன்புப் பெருக்காக மாறிவிடும் தன்மையது. பகைவனுக்கு அன்பு செய்யும் ஒருவன், அவன் தன் நண்பனாக மாற வேண்டுமென்றே விழைகிறான்; அதற்கேற்ப ஞானத்தோடு வழிமுறைகளைக் கையாளுகிறான். இத்தகையதோர் முன் செயலில் கடவுளே அவனுக்கு வழிகாட்டியாய் முன் சென்றிருக்கிறார். கடவுளுக்குப் பகைவர்களா யிருந்தும் அவருடைய மகனது மரணத்தின் வழியாய் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப் பட்டுள்ளோம் (உரோ 5:10).

2. **பகைமையின் மீது வெற்றி:** இயேசு பகைமை நிலவுவதை மறுக்கவரவில்லை. ஆனால், அதை வெல்லும்போது அதனுடைய முழுப்பருமனும் நன்றாக வெளிப்படுவதைச் சுட்டிக்காட்ட வருகிறார். பகைமை ஒரு சாதாரணமான உண்மையன்று; அஃது ஒரு மறைபொருள்; சாத்தானுடைய ஆட்சியின் ஓர் அறிகுறி. அவனே எல்லாருக்கும் மேலான மிகப்பெரிய பகைவன். ஆதியில் இன்பவனத்தில் நடந்த நிகழ்ச்சி, அவனைப் பின்னர் மனித குலத்திற்கே பகைவனாக்கி விடுகின்றது (ஆதி 3:15). கடவுளுக்கும் மனிதனுக்கும் பகைவனாகவுள்ள அவன் களைகளை இவ்வுலகில் விதைக்கிறான் (மத் 13:39). அதனால்தான் நாம் அவனது தாக்குதல்களுக்கு உள்ளாகிறோம். ஆனால் பகைவனிடமிருந்து வரும் எல்லாத் தீய சக்திகளையும் எதிர்த்து நிற்கவும், அடக்கியாளவும் வேண்டிய வலிமையை இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்திருக்கிறார் (லூக் 19:19). இத்தகையதொரு வலிமையை அவர்கள், இயேசு தம் தோல்வியால் வெற்றிகண்டதிலிருந்து பெறுகின்றனர். அவர் சாத்தானின் கைக்கூலிகளின் வழியாகத் தாக்குதல்களை ஏற்றுத் தம் மரணத்தால் மரணத்தையே வென்றார். இவ்வாறு அவர்கள் மனித இனத்தையே பிரித்து நின்ற "பகைமைச் சுவரை" இடித்துத்தள்ளுகிறார்கள் (எபே 2:14-16). சாவென்னும் இறுதிப் பகைவனை வென்று (1 கொரி 15:25 தொ) தன் பகைவர்கள் அனைவரையும் தம் கீழ்ப்படியச்செய்யும் அப்பெருநாளை எதிர்நோக்கி யிருக்கும் கிறிஸ்தவன், அதே நேரத்தில், கிறிஸ்துவோடு இணைந்து நின்று, மனித இனத்தின் பழைய பகைவனுக்கு எதிராகப் போராடுகிறான் (எபே 6:11-17). இயேசுவோடு உடனிருந்து கொண்டு சிலுவையின் பகைவனாய்

எவனும் இருக்க முடியாது (பிலி 3:18). ஏனென்றால் சிலுவைதான் உண்மையான வெற்றியை விளைக்கிறது; சிலுவையில்தான் நிலையான ஒப்புரவு எழுகிறது. அதற்குப்புறம்பே மனிதனிடத்தும் இறைவனிடத்தும் ஒப்புரவு எழுவதற்கிடமில்லை.

**பகோவா (BAGOAS - அண்ணகன்)**

அசீரியத்தளபதி ஓலபெரினேயின் "சொந்தக் காரியங்களைக் கண்காணித்து வந்த" ஓர் அண்ணகன் (யூதி 12:11). தன்னுடைய தலைவன் யூதித்தால் கொல்லப்பட்டான் என்பதைக் கண்டுபிடித்தவன் (14:14-18).

**பக்தி (PIETY)**

I. நம்முடைய நவீன உலகிற்குப் பக்தி என்பது, பெரும்பாலும் பக்திச் செயல்களாகக் குறைக்கப்பட்ட சமயக்கடமைகளுக்கான பற்றுறுதி ஆகும். விவிலியத்தில் பக்தியானது, மேலும் பரந்த பொருளுடையது. தனது அயலாருடனான மனிதனின் உறவுகளையும் அது தழுவுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. **மனித உறவுகளில் பக்தி:** எபிரேயத்தில் பக்தியானது முதலாவதாக, உறவினரையும் (ஆதி 47:29), நண்பரையும் (1 சாமு 20:8), கூட்டாளிகளையும் (ஆதி 21:23) இணைக்கின்ற ஒருவருக்கொருவரான உறவினை அடையாளப் படுத்துகிறது. பயனுள்ள, பிரமாணிக்கம் நிறைந்த துணையினை இந்த நெருக்கம் வெளிக்காட்டு கிறது. "பக்தியைச் செயல்படுத்துதல்" என்ற சொற்றொடர் பக்தி, செயல்களில் காட்டப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது "பக்தி / பற்றுறுதி" (ஆதி 24:49; பழ 20:28; சங் 25:10) என்னும் சோடியில் இரண்டு சொற்களும் பொதுவாக ஒன்றை மற்றது ஊடுருவிச் செல்லும் தன்மையுடையன. இரண்டாவது சொல் ஆன்மாவின் ஒரு தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. இஃது இல்லாமல் முதலாவது சொல் வெளிப்படுத்தும் நன்மைத்தனமானது நிறைவு பெறாது. எழுபது நூலின் மொழிபெயர்ப்பின்படி, பக்தியினுடைய இன்றியமையாத்தன்மை இரக்கமிக்க நன்மைத்தனமாகத் தெரிகிறது.

2. **இறைவனுடனான உறவுகளில் பக்தி:** வலுவான இந்தப் பக்தியின் மனிதப் பிணைப்பானது, உடன்படிக்கையின் மூலமாக இறைவன் தனக்கும் தன் மக்களுக்கும் இடையே என்ன ஏற்படுத்தினார் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இறைவனுடைய பற்றுறுதிக்கு அதாவது, அவரது தலைச்சன்பிள்ளையாகிய இஸ்ராயேலின்பால் அவர் கொண்டுள்ள இரக்கமிக்க அன்பிற்கு (யாத் 34:6; காண்க. 4:22; எரே 31:3; எசா 54:10), மற்றொரு பற்றுறுதியால் அதாவது விசுவாசம் நிறைந்த கீழ்ப்படிதலும் அன்புமிக்க வழிபாடும் தூண்டியெழுப்புகின்ற மகனுக்குரிய பற்றுதலால் பதிலளிக்க வேண்டும் (உப 10:12 தொ). இறைவன்பால் காட்டப்படும் இந்த அன்பினின்று, இறைவனுடைய நன்மைத் தனத்தையும் ஏழைகளுக்கான அவரது அக்கறையினையும் பின்பற்றும் சகோதர அன்பானது மனிதரிடையில் வர வேண்டும். இவ்வாறு உண்மையான பக்தியை விளக்க மீக்கா அதனை நீதி, அன்பு மற்றும் தாழ்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்துகிறார் (மீக் 6:8).

இந்த விளக்கம் இறைவாக்கினர்களுக்கும், ஞான ஆசிரியர்களுக்கும் உரியது. ஓசேயாவைப் பொருத்தவரை பக்தியானது சடங்கில் அடங்கி இருக்கவில்லை. அச்சடங்கிற்கு உயிரளிக்கும் அன்பில் அடங்கியிருக்கிறது (ஓசே 6:6 = மத் 9:13). இந்த அன்பை நீதியினின்றும் (ஓசே 12:7 தொ; 4:1 தொ). எரேமியாவைப் பொறுத்தவரை, இறைவனே பக்திக்கும், நீதிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் (எரே 9:23). மற்ற இடங்களில், ஏழைகள் ஒடுக்கப்படும் போதும், நீதியானது மீறப்படும்போதும் பக்தியானது விட்டுக்கொடுக்கப் படுவதை நாம் காண்கிறோம் (மீக் 7:2; எசா 57:1; சங் 12:2-6). சங்கீதங்களில் பக்திமானுடைய வழிபாடானது இறைவனுடைய பக்தியைப் போற்றுகின்ற (சங் 103) அன்புப் புகழ்ச்சியிலும், நம்பிக்கையான மகிழ்ச்சியான புகழ்ச்சியிலும்

வெளிப்படுத்தப்படுகிறது (சங் 31:24; 149). ஆயினும், பற்றுறுதியுடன் இணைக்கப்பட்டால் மட்டுமே இந்த வழிபாடு ஏற்புடையதாகும் (சங் 50). வழிபாட்டையும் அன்பையும் பிரிக்காத பக்திமான்களுக்கு (சீரா 35:1-10) இறைவன் ஞானத்தை அளிக்கிறார் (சீரா 43:33). இறைவனால் படைக்கப்பட்ட நல்லவை அனைத்தினின்றும் அவர்கள் பலன் பெறுகின்றனர் (39:27).

மக்கபேயரின் காலத்தில் அவர்களது விசுவாசத்திற்காக மரணம் வரை போராடிய அசிதேயரை ("பக்தியுள்ளோர்" 1 மக் 4:2) இயக்கியது. இந்த ஒன்றுபட்ட பக்தியே. அவர்களை வலுவுள்ளவர்களாக்கி. பக்தியானது உயிர்ப்பில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது (2 மக் 12:45). இறுதித் தீர்ப்பின்போது ஞானம் புகழ்ந்து பாடுகின்ற வெற்றியினையுடைய, "மற்ற எல்லாவற்றையும்விட வலுவுள்ள" பக்தியும் இத்தகையதே (ஞான 10:12; காண்க. ஞான 2:5-இல் நீதியுள்ளோர் / பக்தியற்றோரின் எதிர்ப்பு). மண்ணுலகில் இறையரசை அமைக்கவிருக்கின்ற மெசியாவிற்கு இந்தப் பக்தி அளிக்கப்படும் (எசா 11:2).

### III. புதிய ஏற்பாடு

1. **கிறிஸ்துவினுடைய பக்தி:** "தூய்மையோடும் (பக்தியோடும்) நேர்மையோடும் ஆண்டவர் முன்பணிசெய்ய" ஆசைப்படுவோரின் எதிர்பார்ப்பிற்கு, கிறிஸ்துவை அனுப்பிய இறைவனுடைய பக்தியால் வெகுமதி அளிக்கப்படுகிறது (லூக் 1:75.78). கிறிஸ்து மற்ற எல்லோரையும்விட பக்தியுள்ளவர் (புனிதர், பரிசுத்தர்) (அ.ப. 2:27; 13:35; சங் 16:10). அவருடைய மகனுக்குரிய பக்தியானது அவரது தந்தையாகிய இறைவனுடைய சித்தத்தை முழுமையாக நிறைவேறச் செய்தது (யோவா 8:29; 9:31). நிறைவான வழிபாட்டுச் செயலை அளிக்க அஃது அவரை நடத்திச்சென்றது (எபி 10:5-10). இப்பக்தி நம்மைப் புனிதப்படுத்து வதற்கு, அவரது வேதனையின் ஆர்வமிக்க செபத்தையும், வேதனைமிக்க பலியின் காணிக்கையையும் தூண்டியது (மாற் 14:35-36). நமக்குத் தேவையான பக்தியுள்ள தலைமைக்குருவாக கிறிஸ்துவே இருப்பதால் (எபி 7:26), "அவரது பக்தியின் காரணமாக" (5:7) அவர் இறைவனால் செவிமடுக்கப்படுகிறார். இதன் காரணமாகவே, கிறிஸ்துவின் மறைபொருளானது "பக்தியின் மறைபொருள்" என்று அழைக்கப்படுகிறது (1 திமொ 3:16). அவரில் இறைவனுடைய பக்தியானது தனது மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுகிறது. அவரில் கிறிஸ்தவனுடைய பக்தியானது தனது ஊற்றையும் மாதிரியையும் கொண்டுள்ளது.

2. **கிறிஸ்தவனின் பக்தி:** இறைவன் ஏற்கெனவே ஒவ்வொரு நாட்டின் மனிதருடன் மனநிறைவு அடைந்திருந்தார். இவர்கள் இறை பயத்தினால் தங்களுடைய செபங்களாலும், உதவி அளித்தலாலும் தூண்டப்பட்டு, யூத பக்தியில், இறைவழிபாடு மற்றும் நீதியைச் செயல்படுத்துதல் என்னும் அதனுடைய இரு பண்புகளில் பங்கு பெற்றனர். யூத சிமியோன் (லூக் 2:25), பெந்தகோஸ்தே விழாவிற்கு எருசலேமிற்கு வந்திருந்த மக்கள் (அ.ப. 2:5), மற்றும் நூற்றுவர் தலைவன் கொர்னேலியு (10:2.4.22.34-35) ஆகியோர் இத்தகையோரே. இந்தப் பக்தியானது இயேசுவாலும், ஆவியின் கொடையாலும் புதுப்பிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் பணியில் அனனியா (22:12) அல்லது ஸ்தேவானைப் புதைக்க முன் வந்த கிறிஸ்தவர்கள் (8:2) முதலிய சில பக்திமான்களை நாம் காணலாம். பவுலின் எண்ணப்படி அவர்களுடைய வழிபாடானது இறைவனைப் பொறுத்தவரை மகனுக்குரிய ஆவியால் இப்போது உருவாக்கப்படுகிறது (4:6); மற்றும் அவர்களுடைய நீதியானது அன்பின் மூலமாக இயங்குகின்ற விசுவாசத்திற்குரியதாகும் (கலா 5:6). புதிய மனிதனின் பக்தி இத்தகையதே. போலியான முற்றிலும் மனிதத்தனமான பக்தியினுடைய வெறுமையான செயல் முறைகளுக்கு எதிராக (கொலோ 2:16-23), பவுல் நிலைநிறுத்துகின்ற உண்மையான கிறிஸ்தவ

பக்தியும் இதுவே (எபே 4:24). இதன் மூலமாக மரியாதையுடனும் பயத்துடனும் ஓர் ஏற்புடைய வழிபாட்டினை நாம் இறைவனுக்கு அளிக்கிறோம் (எபி 12:28).

மேய்ப்புப்பணித் திருமுகங்களிலும், பேதுருவின் 2-ஆம் திருமுகத்திலும், ஆயர் மற்றும் இறை மனிதனுடைய பல அடிப்படையான பண்புகளில் பக்தியும் அடங்கியுள்ளது(1 திமொ 6:11; தீத் 1:8). இஃது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மிகவும் அவசியமானது (தீத் 2:12; 2 பேதுரு 1:6-7). இதனுடைய இரண்டு சிறப்பியல்புகள் வலியுறுத்தப்படுகின்றன. முதலாவதாக, பணத்தின் மீதான பற்றற்றது. போலியான ஆதாயம் தேடும் பக்திக்கு எதிராக இஃது அவசியமானதுடன் நிறைவடைகிறது. இதனுடைய ஆதாயமானது இந்தப் பற்றற்ற விடுதலையே ஆகும் (1 திமொ 6:5-10). அடுத்து, கிறிஸ்துவின் பக்தியை மாதிரியாகக் கொண்டுள்ளவர்களுடைய ஒரு பங்காக உள்ள துன்பங்களைத் தாங்கிக்கொள்வதற்கு இது வலிமையை அளிக்கிறது (2 திமொ 3:10-12). இந்தப் பற்றற்ற தன்மையும் நிலைத்தன்மையும் இல்லாமல், பக்தியின் தோற்றங்களை மட்டுமே ஒருவன் கொண்டுள்ளான் (3:5). உண்மையான பக்திக்கு இவ்வாழ்வின் சோதனைகளில் இறைத்துணையும், பிற்காலத்தில் முடிவில்லா வாழ்வும் வாக்களிக்கப்படுகிறது (2 பேதுரு 2:9; 1 திமொ 4:7-8).

இம்முறையில்தான் பக்தியானது கிறிஸ்தவ வாழ்வை அதனுடைய அனைத்துக் கோரிக்கைகளுடனும் இறுதியாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறது (1 திமொ 6:3; தீத் 1:1). "பக்தியுடைய ஒரே நபரான" அவரின் அன்பிற்குப் பதிலளிக்க (திருவெளி 15:4), கிறிஸ்தவன் அவரைப் பின்பற்றி, அதன் மூலம் தனது சகோதரருக்கு அவர்களது விண்ணகத் தந்தையின் சாயலை வெளிப்படுத்த வேண்டும்.

**பக்தியுள்ள, இறைப்பற்றுடையோர் (DENOUT)**

இது பழைய ஏற்பாட்டில் "நீதியுள்ள" என்னும் சொல்லின் மறு சொல்லாகும்; புதிய ஏற்பாட்டில் மதிப்புமிக்க, பக்தியுள்ள, சடங்கிற்கு அல்லது வழிபாட்டிற்கு நியமிக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் பணி நூலில் இச்சொல் பிற இனத்தவர் வழிபாட்டைக் குறிக்கிறது. இவர்கள் செபக்கூடத்துடன் ஓரளவு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் (அ.ப. 10:2).

**பங்கு, பாகம் (PORTION, SHARE)**

இது, போரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் (ஆதி 14:24; 1 சாமு 30:24). சடங்கு உணவு உண்பது (யாத் 29:26; லேவி 7:33; 1 சாமு 1:4-5) போன்றவற்றில் பங்கீடு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். உரிமைச்சொத்து (ஆதி 31:14; லூக் 15:12), நாட்டின் நிலம் (உப 10:9) ஆகியவற்றைப் பொருத்த மட்டும் இச்சொல் ஒரு கலைச்சொல்லாகப் பயன்படுகிறது. நாட்டின் உண்மையான சொந்தக்காரர் யாவேயே ஆவார் என்றும், அவரே அதை இஸ்ராயேலுக்குப் பங்கீடு செய்து அளிக்கிறார் அல்லது பொறுப்பாக ஒப்படைக்கிறார் என்பதை உணர்த்தும். "ஒருவரிடம் பங்கு கொள்ளுதல்" என்ற சொற்றொடர் அவரோடு கொண்டுள்ள தொடர்பையோ, அவருடன் தோழமை கொண்டிருப்பதையோ, அவருடைய சமூகத்தோடு உறவு கொண்டிருப்பதையோ உணர்த்தும் (2 சாமு 20:1; 1 அர 12:16; காண்க. யோவா 13:8). இச்சொற்கள் ஒருவருக்கு விருப்பமானதையும் நெருங்கியதையும் குறிக்கலாம். இவ்வாறு இஸ்ராயேல் ஆண்டவரின் பங்கு என்றும் (உப 32:9), ஆண்டவர் இஸ்ராயேலின் பங்கு என்றும் (சங் 16:5; 73:26; 119:57; 142:5; எரே 10:16; புல 3:24) அழைக்கப்படுகின்றனர். ஒருவரின் நிலை அல்லது ஊழ் இறைவனிடமிருந்து வரும் பங்கென்று குறிக்கப்படுகிறது (யோபு 31:2; எரே 13:25; திருவெளி 21:8). லூக் 10:42-இல் மரியா தேர்ந்துகொண்ட "நல்ல பங்கு" அவள் இயேசுவின் போதனைக்குக் கவனத்தோடு செவிமடுப்பதாகும்.

**பசி தம்மிம் (PAS - DAMMIM - இரத்தம் சிந்திய இடம்)**

தாவீது மன்னன் வெற்றிபெற்ற பல இடங்களில்

இஃதும் ஒன்று. இங்குதான் அவர் பெலிஸ்தியரை வென்றார் (1 நாள் 11:3). இதுவும், 1 சாமு 17:1-இல் குறிக்கப்படும் எபேசுதம்மீமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**பசியும் தாகமும் (HUNGER & THIRST)**

**I.** இவை உயிர்நிலையான தேவைகளைக் குறிப்பிடுவதால், இறைவன்முன் மனித வாழ்வின் பொருளை வெளிப்படுத்துகின்றன. அதனால் இவை இருமுகப்போக்குடையவை (பழ 30:9). பசி, தாகம் அனுபவிப்பது மனிதனை இறைவன்பால் திறந்த மனதுடையவனாக்க வேண்டிய நேர்படியான அனுபவமாகும். ஆனால், பசியாய் இருப்பது ஒரு தீமையாகும். இறைவன் விரும்பிய ஒன்றன்று. ஆகவே அகற்றப்பட வேண்டியதொன்றாகும். பஞ்சம் போன்ற ஒரு சமூக நிகழ்ச்சியாக அது மாறும்போது, விவிலியம் அதை ஒரு பேரழிவாக, இறைத்தீர்ப்பின் அடையாளமாகக் காண்கிறது.

**II. பழைய ஏற்பாட்டில்**

**1. பசியும் தாகமும், விசுவாசத்தின் ஒரு சோதனையாகும்:**

அ) பாலைவனத்தில் இறைவன் தம் மக்களைச் சோதித்தறியவும், அவர்களது உள்ளார்ந்த எண்ணங்களை அறியவும், அவர்களைப் பசி, தாகத்திற்கு உட்படுத்தினார் (உப 8:1 தொ). இஸ்ராயேல் தான் வாழ்வதற்கு யாவேயை மட்டுமே முழுவதும் சார்ந்திருக்க வேண்டும்; ஏனெனில் அவர் மட்டுமே அவர்களுக்கு உணவும் பானமும் கொடுக்கிறார் என்பதைக் கற்றுணர வேண்டியிருந்தது. இந்த உடல் சார்ந்த தேவைகளுக்கு அப்பால், இவற்றை விட உயிர்நாடியான தேவையை, இறைவனைப்பற்றிய தேவையை, இஸ்ராயேல் தன்னிலேயே கண்டுபிடிக்க வேண்டும். விண்ணிலிருந்து வந்த மன்னா, இறைவன் வாயிலிருந்து வெளிப்படும் அவரது வார்த்தை, அவரது சட்டம் ஆகியவற்றைப் பொருத்தமாக அவர்கள் மனதிற்கு வெளிப்படுத்த வேண்டும். இவற்றிலேயே அவர்கள் வாழ்வைக் கண்டடைய வேண்டும் (உப 30:15 தொ; 32:46 தொ). ஆனால் மக்கள் இதைப்புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர். அவர்கள் எகிப்தில் உண்ட இறைச்சியை மட்டுமே எண்ணுகின்றனர் (எண் 11:4 தொ). ஆகவே பசி நலம் தரும் சோதனையாக இருப்பதற்குப் பதிலாக, "அவர்கள் மூக்கில் வெளிவந்து திகட்டிப்போகும்வரை" அவர்களைத் தின்னச் செய்யும்படி இறைவன் கட்டாயத்துக்குள்ளாக்குகிறார் (11:20; காண்க. சங் 78:26-31).

**ஆ) குடியேறியபின்பு:** நாட்டில் நிலையாகக் குடியேறி, அதன் நன்மைகளை அனுபவிக்கத் தொடங்கியபின், இஸ்ராயேலர் பாலைவனத்தில் கற்றபாடங்களை மறந்து விட்டனர். அவற்றைத் தம் சொந்த முயற்சியால் பெற்றதாகக் கருதினர். அவற்றைப்பற்றி யாவேயின் முன் பெருமை பாராட்டிக்கொண்டனர் (உப 32:10-15; ஓசே 13:4-8). ஆகவே, இறைவன் தம் மக்களை மீண்டும் பாலைவனத்திற்கு இட்டுச்செல்ல வேண்டியிருந்தது. அதனால் தாகத்தால் மயங்கி, இழந்துபோன தானியங்களுக்காகவும் அழிந்து போன திராட்சைத் தோட்டங்களுக்காகவும் அழுது (2:11.14), இஸ்ராயேலின் இதயம் விழிப்பூட்டப்படும் (2:16). "ஆண்டவரின் வாக்குக் கிடைக்காத பஞ்சமாகிய" (ஆமோ 8:11) அவசியமான பசி, தாகத்தைக் கடுமையாக உணர்வர்.

இ) இறைவாக்கினர்களும் ஞானிகளும் இப்பாடங்களை ஏற்றுக்கொள்கின்றனர். இறைவனை அன்பு செய்பவர்களுக்கு அவர் அளிக்கவிருக்கும் நன்மைகளைப் பற்றிய தேவை மற்றும் ஆவல் உணவு, அப்பம், தண்ணீர், திராட்சை ரசம் போன்ற உருவகங்கள் வழியாகத் தொடர்ந்து எடுத்துக்கூறப்படுகின்றன. யாவே தம் மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் ஏற்பாடு செய்யும் சிறந்ததொரு விருந்துக்காக ஒருவர் ஏங்குகிறார் (எசா 25:6). மற்றொருவர் புத்துயிர் அளிக்கும் ஞானத்திற்காகவும் (பழ 5:15; 9:5), காதலாகிய களிப்பூட்டும் மதுவிற்காகவும்

(உ.ச. 1:4; 4:10) தாகம் கொள்கிறார். தாகத்திற்குப் பானத்தையும் திருப்தி அளிக்கும் உணவையும் (எசா 55:1தொ), "காசு பணமின்றி" இறைவனிடமிருந்து பெற விரைகின்றனர். ஆனால் இறைவனாகிய (சங் 42:2) மிகத் தூய்மையான நீருக்காகவும், உயிரைக் கொண்டு வரும் போதை அளிக்கும் திராட்சை ரசத்திற்கும் மட்டுமே ஆவல் கொள்கின்றனர். இந்த ஆவலை நிறைவேற்ற, இறைவன் எப்போதும் தயாராக இருக்கிறார். "உங்கள் வாயை விரிவாகத் திறங்கள்: நான் அதை நிரப்புவேன்" (சங் 81:10).

2. பசியும் தாகமும் பிறரன்புக்கு ஓர் அழைப்பு:

பாசிதாகமெனும் சோதனை ஒரு விதி விலக்காகவே இருக்க வேண்டும். நாட்டில் ஏழைகள் என்றும் இருப்பர் (உப 15:11). அவர்களுக்கு இஸ்ராயேலர் தாராளமாக இருக்க வேண்டும். ஓர் இஸ்ராயேலனின் முதன்மையான கடமைகளில் ஒன்று தன் சகோதரனுக்கும், சக குடிமகனுக்கும் (யாத் 23:11), தேவையுள்ளோர் எவருக்கும் (தோபி 4:16 தொ), பகைவனுக்கும் கூட (பழ 25:21) அப்பமும் தண்ணீரும் அளிப்பதாகும். நீதியைக் கடைப்பிடிப்பது (எசே 18:5.16) மற்றும் இறைவனுக்கு நோன்பை விருப்பமுடைய தாக்குவது (எசா 58:7-10) என்பதன் பொருள் இதுதான். இறுதியில் யாவேயே பசி, தாகம் உடையோருக்கு ஆதரவாக இடையீடு செய்து அவர்களது பசி, தாகத்தை முழுவதும் நிறைவு செய்யும் விருந்திற்கு அழைப்பார் (எசா 25:6; 65:13).

III. புதிய ஏற்பாட்டில்:

**1. இயேசு கிறிஸ்து:** ஏழைகளின் மெசியா (லூக் 1:53) பசி, தாகம் உடையவர்கள் நிறைவுபெறுவர் என்று அறிவிக்கிறார் (6:21). தனது தூதைத் தொடங்கும்முன் அவரே பசி, தாகத்திற்குத் தன்னை உட்படுத்துகிறார். பாலைவனத்தில் இஸ்ராயேலைப்போல் சோதிக்கப்படும்போது, மனிதனின் அவசியமான தேவை இறை வார்த்தையும், தந்தையின் விருப்பமுமே (மத் 4:4) ஆகும் என்று அறிவிக்கிறார்; நிரூபிக்கிறார். தந்தையின் விருப்பத்தைத் தன் உணவாக்குகிறார்; அதனால் அவர் வாழ்கிறார் (யோவா 4:32 தொ). சிலுவையில் "தந்தை தனக்களித்த துன்பக் கிண்ணத்திலிருந்து குடித்தபின்" (யோவா 18:11) சிலுவைச்சாவுக்கான அவரது தாகம், "மறைநூலில் எழுதியுள்ளதை நிறைவேற்றும்" ஆவலிலிருந்தும் (19:28), தந்தையின் அலுவலை நிறைவுச்செய்யும் ஆவலிலிருந்தும் மேலும் அவர் திருமுன்னிலை நிற்பதற்கான (சங் 42:2) ஆவலிலிருந்தும் பிரிக்க முடியாதது.

2. இயேசு பசி, தாகத்தைத் தணிக்கிறார், எழுப்புகிறார். முன்பு பாலைவனத்தில் இறைவன் செய்தது போல், இயேசு தன்னைப் பின்பற்றும் மக்களின் பசியைத்தீர்க்கிறார் (மாற் 8:1தொ). அதே சமயத்தில் இறைவார்த்தைக்காகவும் உண்மையான அப்பமாகிய தனக்காகவும் (யோவா 6), அவரது ஆவியாகிய வாழ்வுதரும் நீருக்காகவும் (7:37 தொ) மக்களின் ஆவலைத் தூண்டியெழுப்பக் கருத்தாக இருக்கிறார். இந்த ஆவலைச் சமாரியப் பெண்ணிடம் தூண்டியெழுப்புகிறார் (4:1-14). அதே போல, தேவையான ஒரே காரியமான அவரது வார்த்தையை விரும்ப மார்த்தாவை அழைக்கிறார் (லூக் 10:39-42).

3. கிறிஸ்தவனும் பசிதாகமுடையோரும்: பசித்தோருக்கு உணவளிக்கும் கடமை, முன்பைவிட, கிறிஸ்துவைப் பின்பற்றுவோரிடம் அதிகம் கோரப்படுகிறது. தன் வாசலில் இருக்கும் பசித்தவனைக் காணாதவனுக்குப் பாதாளத்தில் மிகுந்த வேதனை அளிக்கும் தாகம் காத்திருக்கிறது (லூக் 16:19-24). இயேசுவின் சீடர்களுள் ஒருவருக்கு ஒரு கிண்ணம் குளிர்ந்த நீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார் (மத் 10:42). பசித்தோருக்கு உணவளிப்பதும், தாகமுற்றோருக்குப் பானம் அளிப்பதும், இயேசுவின் சகோதரர்கள் வழியாக, இயேசுவின் பசி தாகத்தைத் தணிப்பதால், இந்த அடிப்படையில்

ஒவ்வொருவரும் தீர்ப்பிடப்படுவர் (25:35-42). பிறரது துன்பங்களைக் குறைக்கும் இந்தப் பிறர் அன்புக்காக நாம் எப்போதும் தாகம் கொள்ள வேண்டும். இந்தப் பிறரன்பின் ஊற்று ஆவலுள்ள ஆன்மாக்களுக்கும், இறைவனுக்காகவும் அவரது திருமுகக் காட்சிக்காகவும் தாகம் கொண்டுள்ள ஆன்மாக்களுக்கும், உண்மையான வாழ்வுக்குத் தாகம் கொண்டுள்ளவர்களுக்கும், எப்போதும் திறந்துள்ளது, கட்டுப்பாடற்றது (எசா 55:1 தொ; திருவெளி 21:6; 22:17).

**பசு (COW)**

ஒரு பசுவின் முக்கியமான பணி கன்றுகள் ஈனுவதும் அவற்றிற்குப் பால் கொடுப்பதும் ஆகும் என்று லேவி 22:27-28; உப 7:13; 28:14.18.51; யோபு 21:10; 1 சாமு 6:7 ஆகிய பகுதிகள் குறிப்பிடுகின்றன.

ஓர் இடத்தில் கறவைப்பசுக்கள் வண்டி இழுக்கப் பயன்படுத்தப்படுகின்றன (1 சாமு 6:7-8). யாக்கோபு, ஏசாவிற்கு நாற்பது பசுக்களைப் பரிசாகக் கொடுத்தார் (ஆதி 32:15). பசுவின் பாலிலிருந்து தயிர் தயாரிக்கப்பட்டது (உப 32:14; எசா 7:21-22; 2 சாமு 17:29). பால்பொருட்களுக்காகப் பசுக்கள் வளர்க்கப்பட்டன என்பதற்கு அதிகச் சான்றுகள் இல்லை. ஆடுகளுக்கிருந்த மேய்ச்சல் நிலத்தைவிட, பால் கறக்கும் பசுக்களுக்கிருந்த புல்வெளியானது பாலஸ்தீனத்தில் மிகவும் குறைவாக இருந்தது. எசே 25:4-இல் குறிக்கப்படும் பால் பசு, ஒட்டகம், வெள்ளாடு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டவை யாகும்.

யோசேபின் கனவிலும் (ஆதி 41), ஆமோசிலும் மட்டும்தான் பசுவானது உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுகத்தை விரும்பும் சமாரிய நாட்டுப்பெண்கள் பாசான் பசுக்களுக்கு (இவ்விடம் பசுக்களுக்குப் பெயர் போனது) ஒப்பிடப்படுகின்றனர் (ஆமோ 4:1; காண்க. உப 32:14; சங் 22:12; எசே 39:18). இவர்கள் பரவலாக நாட்டில் நிலவிய அநீதிகளுக்கு இணக்கம் தெரிவித்தனர்.

**பசுமையான (GREEN)**

இச்சொல் பல எபிரேயச் சொற்களில் மொழிபெயர்ப்பாகும்; பொதுவாகத் தாவர வளர்ச்சியோடு தொடர்புடையது (ஆதி 1:30: 9:8; யாத் 10:15; யோபு 39:8; சங் 37:2). தொழுநோயைக்காட்டும் அடையாளங்களில் ஒன்று பச்சை நிறமாகும். சிலை வழிபாட்டு இடங்களைக் குறிக்கும் போது அவற்றைச் சுற்றியுள்ள பசுமையான மரங்கள் கூறப்படுகின்றன (உப 12:2; 1 அர 14:23). மற்ற இடங்களில் இச்சொல் நிறத்தைவிட, செழிப்பான, நலமிக்க வளர்ச்சியைக் குறிக்கப்பயன்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தாவரப் பசுமையைக் குறிக்க இச்சொல் பயன்பட்டுள்ளது (மாற் 6:39; திருவெளி 8:7).

**பச்சை குத்தல் (TATTOO)**

உடலில் காயம் ஏற்படுத்தி, சில சித்திரங்களை வரைந்து கொள்ளும் முறையாகும். பச்சைகுத்தல் இறந்தவருக்காகத் துக்கம் கொண்டாடும்போது உடலைக் காயப்படுத்திக்கொள்ளும் முறையோடு சேர்த்துக் கூறப்படுவதால், இவை இரண்டும் புற வினத்தாரின் மத மரபிலிருந்து வந்தவையாகக் கருதப்படுகின்றன. இரண்டும் சட்டத்தால் தடை செய்யப்பட்டவையாகும் (லேவி 19:28).

**பச்சோந்தி (CHAMELEON)**

பச்சோந்தி என்பது சூழ்நிலைக்கேற்றவாறு தனதுதோலின் நிறத்தை மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்த மரம் செடிகொடிகளில் தங்கி வாழ்கின்ற, ஒரு சிறிய விலங்காகும். தனது நீண்ட ஒட்டுப்பசை வாய்ந்த நாக்கால் தன் இரையைப் பிடித்துக் கொள்ளும். தீட்டான ஊர்வனவற்றில் இதுவும் ஒன்றாகும் (லேவி 11:30).

**பஸ்கூர் (PASHHUR - அமைதியாக இருத்தல், சுற்றி வளைத்து)**

இப்பெயரைக்கொண்ட சிலர் அல்லது எல்லோரும் ஒரே ஆளைக்குறிக்கலாம். நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய சூழ்நிலையிலும் (1,2), எரேமியாவின் எதிரிகளிலும் (3-5) இப்பெயர்

வருகிறது. இரு குழுவிலும் ஒருவர் இம்மேரின் வழித்தோன்றலாகவும் (1,3), வேறு ஒருவர் மல்கியாவின் மகனாகவும் (1,4) உள்ளனர்.

1. இவர் ஒரு குரு; மல்கியாவின் மகன் (1 நாள் 9:12; நெகே 11:12). இம்மேரின் வழித்தோன்றல் (1 நாள் 9:12). நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய காலத்தில் பஸ்கூரின் தோன்றல்களில், செருபாபேலின் தலைமையில் நாடுதிரும்பிய குருகுலம் உள்ளடங்கும் (எஸ் 2:38; நெகே 7:41). இவர்களில் குருக்கள் சிலர் அன்னிய மனைவியர்களை நீக்கி விட்டனர் (எஸ் 10:22). இவர்களில் அதாயா ஒருவராவார் (1 நாள் 9:12; நெகே 11:22).

2. நெகேமியா தலைமையின் கீழ் நிலையான உடன்படிக்கையில் கையொப்பமிட்டவருள் இவரும் ஒருவராவார் (நெகே 10:3).

3. இம்மேரின் மகனான பஸ்கூர், முடியாட்சியின் கடைசிக்காலத்தில் எருசலேம் ஆலயத்தில் தலைமை அதிகாரியாக இருந்தார். பெரிய குருவிற்கு அடுத்தபடியாகப் பதவி வகித்த இவர் ஒழுங்கைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டார். இவர் எரேமியா இறைவாக்கினரை அடித்துச் சிறையில் தள்ளவே,அவரும் சினந்து பஸ்கூருக்கு எதிராகவும் அந்நாட்டின் அழிவைப் பற்றியும் இறைவாக்குரைத்தார் (எரே 20:1-6).

4. மல்கியாவின் மகனான இவர், செதேக்கியா அரசனின் கீழ் ஓர் இளவரசராவார் (எரே 21:1). இவர் எரேமியாவிடம் சென்று பாபிலோனியப் படையெடுப்பைப்பற்றி ஆண்டவரின் வாக்கை கேட்க, அவரும் செதேக்கியாவின் வீழ்ச்சியைப் பற்றி இறைவாக்குரைத்தார். எரேமியாவைப் பாழுங்கிணற்றில் போட்டவர்களில் ஒருவர் (எரே 38:1).

5. இவர் செதேக்கியா அரசன் காலத்தில் வாழ்ந்த இளவரசர். கெதல்யாவின் தந்தை ஆவார் (எரே 38:1). எரேமியாவைப் பாழுங்கிணற்றில் போட்டவர்களில் ஒருவராவார்.

**பஞ்சம் (FAMINE)**

உணவு பற்றாக்குறையினால் ஏற்படும் நிலைமையைப் பல்வேறுபட்ட படிகளில் (degrees) வெளிப்படுத்த இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

(அ) பொதுப்படையான பஞ்சகாலம் (யோபு 5:20).

(ஆ) மழை பெய்யாததால், ஏற்பட்ட வறட்சியின் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமட்டும் நிலவிய பஞ்சம். இவ்வகைப்பஞ்சம் ஆபிராம் காலத்திலும் (ஆதி 12:10), ஈசாக்கு காலத்திலும் (26:1), யோசேப்பு எகிப்திலிருந்த காலத்திலும் (ஏழு ஆண்டுகள்: 41:27; உலகமெங்கும் பஞ்சம் 41:54), ரூத் காலத்திலும் (1:1), தாவீது காலத்திலும் (2 சாமு 21:1-இல் மூன்று ஆண்டுகள்; 2 சாமு 24:13-இல் ஏழு ஆண்டுகள் பயமுறுத்திய பஞ்சம்), எலியா காலத்திலும் (1 அர 18:2), எலிசா காலத்திலும் (2 அர 4:38; 8:1-இல் ஏழு ஆண்டுகள்), கிளாதியு காலத்திலும் (உலகெங்கும் பெரும் பஞ்சம் அ.ப. 11:28) நிலவியது.

(இ) சமாரியா (2 அர 6:25; 7:4) எருசலேம் (2 அர 25:3; புல 4:8-10) போன்ற நகர்கள் முற்றுகையிடப்பட்டபோது பஞ்சம் நிலவியது.

பஞ்சம் கடவுளால் அனுப்பப்படும் தண்டனைகளில் ஒன்றாகவும் (எசா 51:19; எரே 14:13-18; ஆமோ 4:6), வரப்போவதாக வெளிப்படுத்தப்பட்ட துன்பங்களில் ஒன்றாகவும் (மாற் 13:8) குறிப்பிடப்படுகிறது.

பாலஸ்தீனத்தில் குறைந்த அளவே மழை பெய்தது. அதுவும் முறையாகப் பெய்வதில்லை. வறட்சியாலும் (ஆகா 1:10-11), பயிரழிக்கும் நோயாலும், வெட்டுக்கிளிகளாலும் (ஆமோ 4:9) அறுவடை இல்லாமல் போயிற்று. விலங்கினங்கள் அழிந்தன (1 அர 18:5). போரினால் நாடு பாழ்படுத்தப்பட்டது (எசா 1:7; 3:1.7). இது பட்டினிக்கு இட்டுச்சென்றது. மிகக்கொடிய பஞ்சகாலத்தில் மனிதன் மனிதனை உண்ணும் நிலையும் ஏற்பட்டது (2 அர 6:28; புல 4:10).

**பஞ்சு (COTTON)**

பருத்திச்செடியின் இழைகள். இந்த இழைகள் பழங்காலத்திலிருந்தே நூலாகத் திரிக்கப்பட்டு, துணியாக நெய்யப்பட்டது. எஸ்த 1:6 சூசா அரண்மனையில் இருந்த பஞ்சுத் தொங்கணிகளைக் குறிக்கின்றது. எசா 19:9 எகிப்திய பஞ்சு நெய்வோரைப் பற்றிக் கூறுகின்றது.

**படகு (BOAT)**

இது மாற் 4:36; யோவா 21:18 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில், இச்சொல் சில சமயங்களில் மத்திய தரைக்கடலில் செல்லக்கூடிய கலங்களைக் குறிப்பிடுகின்றது (அ.ப. 20:13). அப்போது கப்பல் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் கலிலேயக் கடலில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட சிறிய கலங்களைக் குறித்தது (மாற் 3:9; மத் 4:21). அ.ப. 27:16. 30:32-இல் இது கப்பலோடு சேர்ந்த சிறு படகுகளைக் குறிக்கிறது.

**படிகச் சிமிழ் (ALABASTER)**

மென்மையான கல்லாகிய இது 'படிகம்' போன்றது. இதனைப் பளிங்கு எனவும் அழைக்கின்றனர். சிறு பொருட்களின் வடிவங்களில் இக்கற்கள் எகிப்திலிருந்து பாலஸ்தீனத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இதனை நறுமணப்பொருட்கள் வைத்துக்கொள்ளும் சிமிழாகவே பயன்படுத்தினர். அதனால்தான் பெத்தானியாவிலிருந்து வந்த பெண் 'படிகச் சிமிழில்' விலையுயர்ந்த பரிமளத் தைலங்களாகக் கொணர்ந்தனர் (மத் 26:7; மாற் 14:3; லூக் 7:37). 'படிகச் சிமிழ்' என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும். ஏனெனில் அகழ்வாராய்ச்சியின்போது இது போன்ற பல படிகச் சிமிழ்கள் கண்டெடுக்கப்பட்டன.

எகிப்திய படிகச் சிமிழ்கள் கால்சியம் கார்பனேட்டால் ஆனவை. உள்நாட்டுப் படிகச் சிமிழ்களோ சிப்சம், கால்சியம் சல்பேட் ஆகியவற்றால் ஆனது என யோர்தான் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கானானியரின் மத்திய காலத்திலிருந்து இஸ்ராயேலரின் தொடக்க காலம் வரை பயன்படுத்தப்பட்டன. கிரேக்க-உரோமையர் காலத்துச் சாடிகளும் பயன்படுத்தப்பட்டன. பாலஸ்தீனத்தில் செய்யப்பட்ட சிமிழ்கள் எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்ணினால், உள்நாட்டு மட்பாண்டங்கள் செய்வது போலச் செய்யப்பட்டன. எகிப்தியச் சிமிழ்கள் துளையிடப்பட்டனவாகவும், பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவை உளியால் செதுக்கப் பட்டவையாகவும் இருந்தன. பெத்சானில் பின்வெண்கலக்காலத்தில் இச்சிமிழ்களைச் செய்வதற்கு வேண்டிய கற்களை அளித்த சுரங்கங்கள் இன்றும் சிப்சம் எடுப்பதற்குப் பயன்படுகின்றன.

**படிகப் பச்சை (BERYL)**

சீனாய்த் தீபகற்பத்தில் காணப்படும் நீல நிற அல்லது நீலப்பச்சை நிறமுடைய செம்பு எரியகி (காப்பர் பாஸ்பேட்டு) ஆகும். இஃது அறுகோணப் பட்டைகளையுடையது. பெரிய குருவின் மார்புப் பட்டையில் நான்காவது வரிசையில் முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த கல் (யாத் 28:20; 39:13). தானி 10:6-இல் தானியேல் கண்ட மனிதனின் உடல் படிகப் பச்சை (பளிங்கு) போன்றிருந்தது. தீர் மன்னன் அணிந்திருந்த விலையுயர்ந்த கற்களுள் படிகப் பச்சையும் ஒன்று (எசே 28:13). புதிய ஏற்பாட்டில் புதிய எருசலேம் நகர மதில்களின் எட்டாவது அடிக்கல் படிகப் பச்சையாகும் (திருவெளி 21:20).

**படிக்கட்டு (STAIRS)**

ஏணிப்படிகளின் தொகுதி; வீட்டின் மேல் தளத்திற்கோ, கீழ்த்தளத்திற்கோ செல்லும் படிக்கட்டு.

பாலஸ்தீனத்தில் வீடுகளின் கூரை மேல் தளம், மிக முக்கிய இடமாகக்கருதப்பட்டது. பல குடும்ப

நிகழ்வுகள் அக்கூரை மேல்தளத்தில் நிகழுமாதலால் எல்லா வீடுகளுக்குமே கூரையின்மீது செல்லத்தக்க படிக்கட்டு வரிசைகள் அமைக்கப்பட்டிருக்கும். ஒருமாடி வீடுகளில் மேல்தளத்திற்குச் செல்வதற்கு வெளியே படிக்கட்டு அமைக்கப்பட்டிருக்கும். இருமாடி வீடுகளில் வெளியே படிக்கட்டு அமைக்கப்பட்டிருக்கும். இருமாடி வீடுகளில், கூரைக்குச்செல்லும் படிக்கட்டோடு, இரண்டாம் மாடிக்குச்செல்ல உள்ளே அமைக்கப்பட்ட படிக்கட்டுகளும் உண்டு. பொதுவாக, படிக்கட்டு வரிசைகள் கற்களால் அமைக்கப்பட்டிருக்கும். எனவே படிகளுக்குக் கைப்பிடிச்சுவர் போன்ற அமைப்பு எதுவும் இருக்காது.

மலைப்பாங்கான இடங்களில் சாலைகளிலும் கூட ஒரு மட்டத்தினின்று இன்னொரு மட்டத்திற்குப் படிகள் அமைக்கப்பட்டிருந்தமையை நெகே 3:15; 12:37-இலிருந்து அறிகிறோம்.

கிணறுகளிலும் கூட படிகள் இருந்தமையைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் உலகெங்கும் கிரேக்க மற்றும் உரோமையரின் நாடக அரங்குகள் படிக்கட்டு அமைப்பு கொண்டிருந்தன. 1 அர 6:8-இல் மட்டும் சுழற்படிகள் குறிக்கப்படுகின்றன. எசேக்கியேலின் கோயிலில் படிக்கட்டுகள் உள்ளன (எசே 40:6; 43:17). லேவியர்களின் படிகளைப் பற்றிய குறிப்பு நெகே 914-இல் காண்கிறோம்.

ஆதி 28:12-இல் யாக்கோபு கனவில் கண்ட ஏணியும் கூட, படிக்கட்டுகளின் வரிசையாக இருக்கலாம்.

**படிமங்கள், செதுக்கிய சிலைகள் (FIGU-RED STONE)**

இஃது அபிரேயர்களுடைய அருவருப்பான சில வகை வழிபாட்டைச் சித்தரிப்பதாக வர்ணம் தீட்டப்பட்டோ, கல்லில் செதுக்கப்பட்டோ அமைந்திருக்கும். எச்சூழ்நிலையிலும் இவ்விதமான கற்கள் அமைக்க இஸ்ராயேலர் தடைவிதிக்கப்பட்டிருந்தார்கள் (லேவி 26:1). அவர்களுடைய நாட்டிலிருந்து அவைகளை எடுத்துவிட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்து (எண் 33:52).

எசே 8:12-இல் மூப்பர்கள் தத்தம் அறைகளில் இவ்வகையான பொருட்களை வைத்திருந்தது பற்றி இறைவாக்கினர் பேசுகின்றார். தமிழில் "தெய்வ உருவங்கள்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது.

காசோரில் கானானியக் கோயிலில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில், 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கற்சிலைகள் சிங்கங்கள் முதலிய உருவங்களோடு கண்டெடுக்கப் பட்டுள்ளன.

**படுக்கை (BED)**

இதற்குப் பரப்பி வைக்கப்பட்டிருப்பது, படுக்கும் இடம் அல்லது சாயும் இடம் என்று பல பொருளுண்டு.

**1) வகைகள்:** பெரும்பாலும் தரையில் படுக்கின்ற இடம் படுக்கை எனப்படும். சுவரோடு சேர்ந்த சிறிது தாழ்ந்த அடுக்குபடுக்கை எனப்படுகிறது. படுக்கைகள் பொதுவாக மேல் அறையில் இருக்கும் (1 அர 17:19). மரச்சட்டங்களால் செய்யப்பட்ட சில படுக்கைகள் சில நேரங்களில் ஆட்களைத்தூக்கிச் செல்லவும் பயன்படும் (1 சாமு 19:15; மத் 9:2; லூக் 5:18). இந்த வகைக்கட்டில் கடனைத் திருப்பி அடைப்பதற்குப் பதிலாகக் கொடுக்கப்படுகின்ற அளவு மதிப்புள்ளது (பழ 22:27). பணக்காரர்கள் தங்களது வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றாற்போல விலையுயர்ந்த மரத்தால் படுக்கைகளைச் செய்து படுக்கையறைகளுக்குள் (2 அர 11:2) வைப்பார்கள். ஆமோ 6:4-இல் யானைத் தந்தத்தால் ஆன படுக்கைகள் பற்றிக் கூறப்படுகின்றன. மேலும் எசேக்கியா சனகெரிபுக்கு அளித்த 'கப்பப்பட்டியலில் யானைத் தந்தத்தால் ஆன கட்டில்கள் இடம் பெறுகின்றன. பழ 7:16-17-இல் நறுமணப் பொருட்களால்

சூழப்பட்ட விபசாரியின் கட்டிலைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் எகிப்தியக் கட்டிலோடு தொடர்புடைய இரத்தினக்கம்பளம், மணமிக்க மரத்தைலம், ஆகியவை பற்றி விவிலியத்தில் காணப்படவில்லை. (காண்க. இரத்தினக்கம்பளம் பழ 7:16; மாற் 15:46). எருசலேமின் தலைமைக்குருவான எலியாசருக்கு வெள்ளிக்கால்களுடன் கூடிய 10 கட்டில்களைத் தோலமி கொடுத்ததாக யோசிப்பசு கூறுகிறார். உப ஆகமம் 3:11-இல் வரும் இரும்புக்கட்டில் என்பதன் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு வேளை அது கல் சவப்பெட்டியைக் குறிப்பிடலாம். தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட சயன மஞ்சங்கள் சூசாவில் உள்ள செருசுவின் மாளிகையில் இருந்திருக்கின்றன (எஸ்த 1:6). யூதித்தின் கதை ஒலபெரினேயின் கூடாரக்கட்டிலைப் பற்றிக் கூறுகின்றது (யூதி 10:21). எடுத்துச் செல்வதற்கான சிறிய படுக்கைகளும் உண்டு (மாற் 2:4தொ; யோவா 5:8 தொ; அ.ப. 5:5).

**2) பயன்கள்:** படுக்கைகள் இரவில் தூங்கவும் (யோபு 7:13), காதல் உறவுக்கும் (ஆதி 49:4; நீதி 21:11; உ.ச. 1:15.17; எசே 23:17), இளைப்பாறவும் (2 சாமு 4:5-7; காண்க. பழ 26:14), அரசனின் எரிச்சலைக்காட்டவும் (1 அர 21:4), அமரவும் (1 சாமு 28:23), நோயாளிகளுக்கும் (ஆதி 48:1-2), காயத்திலிருந்து சுகம் பெறவும் (2 நாள் 24:25; 2 அர 1:4), நோயாளிகளையும் ஊனமுற்றவர் களையும் பிற இடங்களுக்குத் தூக்கிச் செல்லவும் (மாற் 6:55; யோவா 5:58), பாடையாகவும் (2 சாமு 3:31; 2 நாள் 16:14) பயன்படுத்தப்பட்டன.

**3) சமயப் பயன்கள்:** படுக்கைகள் சில தனிமனிதர்களின் பக்தி முயற்சிகளுக்கு இடமாய் விளங்கியுள்ள (ஆதி 47:31; 1 அர 1:47). எசா 57:7-8-இல் வரும் படுக்கைகள், யாவே வழிபாட்டைச்சேராத பாலின வழிபாட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**4) உருவக வழக்கில்:** பாதாளத்தில் படுக்கையைத் தயார் செய்வது என்பது ஒரு தனி மனிதனின் மரணத்தையோ (யோபு 17:13-14; காண்க. சங் 139:8), ஒரு நாட்டின் அழிவையோ (எசே 32:23-25) குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. எசா 28:20-இல் வரும் சிறிய படுக்கை பொறுக்க முடியாத வேதனையின் அடையாளமாக நிற்கின்றது.

## படை (ARMY)

1. **அரசாட்சிக்கு முன்:** அரசாட்சியின் தொடக்கமே இஸ்ராயேல் சீரமைக்கப்பட்ட படைகளின் தொடக்கமாகும்.

**அ) குல மூதாதையரின் காலத்தில்:**

ஆபத்து ஏற்படும்போது அந்த இனத்தைச் சார்ந்த ஆண்கள் அனைவரும் ஒன்றுகூடி பகைவரை எதிர்ப்பது வழக்கம். சமவெளி நகரங்களுக்கு எதிராக அரசர்கள் கூட்டுச் சேர்ந்து போர் தொடுத்தபோது, ஆபிரகாம் தனது 318 ஆட்களை 3 குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு எதிராகப் போராடி, அவர்கள் கொள்ளையிட்ட பொருட்களையும், உறவினர்களையும் மீட்டுக்கொண்டு வந்தார்கள் (ஆதி 14). பல்வேறுபட்ட இனங்கள் ஒன்று சேர்ந்து, ஒரு பொது நன்மைக்காகவோ, பொது ஆபத்திலிருந்து விடுபடவோ போராடின (யாத் 17:8-13; நீதி 1).

**ஆ) நீதிபதிகளின் காலத்தில்:**

சீரமைக்கப்படாத படைகள் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு இனத்திடமும் இருந்தன. இந்தப் படைகளின் போர்வீரர்கள் தாமாகவே முன்வந்து சேர்ந்தார்கள். இந்தப் படைகள் சிறியதாக இருந்தாலும் மலைப்பாங்கான இடங்களிலும் திறமையாக போர் நடத்தும் வளமை பெற்றிருந்தது (நீதி 7:7-23). சமாதான காலங்களிலும் இவர்கள் ஒன்று சேர்ந்து வழிப்பறி செய்யும் குழுக்களாகச் சேர்ந்து, தாங்கள் அளித்த பாதுகாப்பிற்காக மக்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டார்கள்.

**2) அரச ஆட்சியின்போது:** ஒரு நிலையான படையின் தேவையை உணர ஆரம்பித்தார்கள்.

அ) சவுல்: சவுல் தொடக்கத்தில் ஓர் அருங்கொடை பெற்ற தலைவனாக இருந்தார் (1 சாமு 11:6-11). ஆனால் அம்மோனியர்களை வென்றபிறகு மூவாயிரம் பேர்களைக் கொண்ட நிலையான படையை அமைத்து அரசனாக மாறினார் (1 சாமு 13:2; காண்க. 24:2; 26:2). அவரது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் சேனையானது, அவரதும், அவரது மகனான யோனத்தானுடையவும் நேரடிக்கட்டுப்பாட்டில் இருந்தது. பிற்காலத்தில் அப்னேர் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார் (1 சாமு 17:55). அப்னேருக்கு என்னென்ன பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன என்பது பற்றித் தெளிவில்லை. காரணம் சவுல் இறக்கும் வரை அவனது படைகளை அவரே நடத்திச் சென்றார்.

ஆ) தாவீது: தாவீதின் போர்த்திறமை அவர் மன்னன் ஆவதற்கு முன்பே வெளிப்படுகிறது. தாவீது காலம்வரை பாதுகாப்பிற்காக மட்டுமே படைவீரர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். தாவீது, யோவாபைத் தலைமைப் படைத்தளபதியாக அமர்த்தி, இஸ்ராயேலின் படைகளை நவீனப்படுத்தினார். அவர்தான் இஸ்ராயேலருக்கு, முற்றுகை இட்டுக் கைப்பற்றும் போர்த்திறமையை அறிமுகப்படுத்தினார் (2 சாமு 20:15). இவ்வாறு கைப்பற்றப்பட்ட எருசலேம் என்ற எபூசியரின் கோட்டையைத்தான் தாவீது பிற்காலத்தில் தன் தலை நகராகப் பயன்படுத்தினார்.

**இ) கூலிப்படைகள்:** சவுலால் நிலையான ஓர் அரசை ஏற்படுத்த முடியவில்லை. சவுலின் தவறுகளை எல்லாம் தாவீது கண்டுபிடித்து, அவற்றை நிவர்த்தி செய்து ஒரு நிலையான அரசை அமைக்க கூலிப்படைகளை அமர்த்தினான். இந்தக் கூலிப்படையில் பிறநாட்டவரும் இருந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கக் கூலி கொடுக்கப் பட்டதால் அவர்கள் தாவீதோடு மட்டுமே உடன்பாடு கொண்டிருந்தார்கள். அவர்கள் தாவீதின் மெய்க்காப்பாளர்களாகவும், தாவீதின் இல்லக் காவலர்களாகவும், நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பவர்களாகவும் இருந்தார்கள். இந்தக் கூலிப்படையில் அதிகமான பெலிஸ்தியர்கள் இருந்தார்கள். தாவீதுக்கு எதிராக அவரதுமகன் அப்சலோம் கிளர்ச்சி செய்தபோது, தாவீதின் மகுடத்தைக் காப்பாற்றியவர்கள் இந்தக் கூலிப்படைகளே. தாவீதின் அரச மரபில் கூலிப்படைகளை வைத்திருப்பது நிலையான ஒரு வழக்கமாக பிற்காலத்தில் மாறிவிட்டது. ஆனால் வடக்கு அரசில் படைகளால் ஆட்சியும் கிளர்ச்சியும் ஆட்சியின் கூறாகிவிட்டன.

ஈ) குதிரை, தேர்ப்படைகள்: தாவீது படையில் எத்தனையோ மாற்றங்கள் செய்தாலும் எல்லாமே காலாட்படையாக மட்டுமே இருந்தன. இஸ்ராயேலின் வரலாறு முழுவதும் காலாட்படையே அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. காரணம், பாலஸ்தீனிய மலைப்பகுதிகளில் குதிரைப்படைகளை வைப்பது வசதிக்கு ஏற்ற ஒன்றாக இல்லை. அரமேயச் சமவெளியைக் கைப்பற்றி பேரரசாக மாறியபிறகு, இந்த வகைப்படைகளின் தேவை ஏற்பட்டது. இந்த வகைப்படைகள் சாலமோன் மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்டன. பெலிஸ்தியர்களும், சீரியர்களும் தேர்ப்படையில் சிறந்து விளங்கியதால் (1 சாமு 13:5; 2 சாமு 1:6), இந்த வகைப் படைகளைப்பற்றி நிச்சயமாக தாவீதுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்; ஆனால், அவர் விவேகத்தோடு அதை ஒதுக்கிவிட்டார். ஆனால் அவரது மகன், செலவு மிகுந்த, இந்த வகைப் படையை அறிமுகப்படுத்தியது (1 அர 10:26) நாட்டின் பிளவுக்கு ஒரு காரணமாக இருந்தது. பிற்காலத்தில் இஸ்ராயேலின் அரசர்கள் தேர்களையும், குதிரைப்படைகளையும் கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால், எசேக்கியாவிடம் குதிரை வீரர்களே இல்லை என்று சொல்லலாம் (2 அர 18:23).

வடக்கு அரசில் குதிரைகளும் தேர்களும் படைகளில் ஒரு பிரிவை வகித்தன. 3-ஆம் சல்மனேசரின் ஏட்டின்படி ஆகாபு, அசீரியர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் சீரியக்

கூட்டணிக்கு 2000 தேர்களையும், 10,000 காலாட்படையினரையும் கொடுத்தார்.

உ) படை பராமரிப்பு: தாவீதின் காலத்திற்கு முன்பு படைவீரர்களே தங்களது ஆயுதத்தையும் உணவையும் கவனித்துக் கொள்ள வேண்டும் (1 சாமு 17:17-18). பிறநாட்டில் படையெடுத்துச் செல்லும் போது அங்குள்ள பொருட்களைக் கொள்ளையிட்டு பராமரிப்புச்செலவுக்குப் பயன்படுத்தினார்கள். சாதாரண இஸ்ராயேல் குடிமகன் இயற்கையிலே படையில் உள்ள சட்டதிட்டங்களோடு ஒத்துப் போகும் தன்மையுள்ளவன் அல்லன். எனவே, வெளிநாட்டுக்காரர்களைக் கூலிப்படையாக வைப்பதில், மன்னருக்கு எந்த விதப் பிரச்சனையும் இருக்கவில்லை.

**ஊ) படை உருவாக்கம்:** இஸ்ராயேலின் போர் அதிகாரிகளைப் பற்றியும் படையின் அமைப்பு பற்றியும் மிகக் குறுகிய குறிப்புகளே உள்ளன. பழைய ஏற்பாட்டில் 1000, 100, 50 என்று படைவீரர்களைப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தலைவனை நியமித்தது என்று குறிப்பிடுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை ஒரு முழுமையைக் குறிக்கவே குறிப்பிடப் பட்டுள்ளனவே அன்றி, அவை உண்மையான எண்ணிக்கை அல்ல.

3. நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய பின்பு: பாலஸ்தீன அரசுகளின் அழிவுக்குப் பின்பு, இஸ்ராயேலியப் படையானது அழிவுற்றது. நாடு கடத்தப்பட்டு கி.மு. 538-இல் திரும்பி வந்தபின்பு அவர்கள் ஒரு பாரசீக மாகாணமாகத் திகழ்ந்தனர். மக்கபேயர் தலைமையில் அவர்கள் போராட்டம் தொடங்கும்வரை அவர்களிடம் படையே இல்லை. அவர்களிடம் சீரமைக்கப்பட்ட படை இல்லை. மாறாக மறைந்திருந்து தாக்க பயிற்சி பெற்ற வெறும் கூட்டம் மட்டுமே இருந்தது. பிற்காலத்தில் அசமோனியர்கள் யூதர் மற்றும் புறவினத்தார் ஆகியோரைக்கொண்ட நிலையான படையை நிறுவினார்கள். யோவான் இரிக்கானுதான் போர்வீரர்களை வாடகைக்கு அமர்த்தும் பழக்கத்தைக் கொண்டு வந்ததாக யோசிப்பசு குறிப்பிடுகிறார்.

அசமோனிய அரசு கி.மு. 63-இல் அழிவுற்றபோது, பாலஸ்தீனம் உரோமையரின் ஆட்சியின் கீழ் வந்தது. உரோமையரின் சிற்றரசனாக விளங்கிய பெரிய ஏரோது, தனது படைகளை உரோமையிடமே ஒப்படைத்திருந்தான்; அவர்கள் படை அமைப்பையும் பின்பற்றினான். ஏரோதின் கூலிப்படையில் பலநாட்டவர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது யூதர்களுக்கு ஏரோதிடமிருந்த வெறுப்பை அதிகரித்தது.

படைக்கருவிச்சாலை (ARMUORY)

போருக்கான ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கும் இடமே படைக்கலச்சாலை. எரே 50:25; நெகே 3:19, ஆகிய இரண்டிலும் ஆயுதங்கள் குவித்து வைத்திருக்கும் இடம் பற்றிக்கூறப்படுகிறது. நிலையான படை இருந்ததால் படைக்கலங்களைச் சேகரித்து வைக்க வேண்டியது அவசியமாகியது. சாலமோன் லெபனானின் காடுகளில் இத்தகையதொரு "வீட்டையே" கட்டினார் எனத்தெரிகிறது (1 அர 7:2; காண். 10:16-17 எசா 22:8). அத்தலியா ஆண்டபோது ஆலயமே ஆயுதக்கிடங்காகப் பயன்பட்டது (2 அர 11:10). எசேக்கியாசு ஆண்ட காலம் வரை எருசலேமில் ஆயுதக்கிடங்கு இருந்தது (2 அர 20:13; எசா 39:2). எருசலேம் சுவரைக் கட்டியெழுப்பும்போது இச்சொல் இடக்குறிப்பாகப் பயன்பட்டது (நெகே 3:19).

## படைக்கலம் தாங்குபவன், பரிசையன் (ARMOR BEARER)

போர்த்தளபதிக்கு உதவியாக அவனது ஆயுதங்களைச் சுமந்து செல்பவன். தொடக்ககாலத்தில் மட்டுமே இவர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் அபிமெலக்கு (நீதி 9:54), யோனத்தான் (1 சாமு 14), சவுல் (1 சாமு 31), யோவாபு (2 சாமு 18:15; 23:37; 1 நாள் 11:39) ஆகிய இவர்களுக்கு இவர்களது ஊழியர்கள் ஆயுதங்களைச் சுமந்து சென்றனர். யோனத்தான்

வீழ்த்தியவர்களை அவனது ஆயுதம் சுமக்கும் ஊழியன் கொன்றான் (1 சாமு 14:13). அபிமெலக்கும், சவுலும் தாங்கள் எதிரியினால் பிடிபடாது இருக்க தங்களைக் கொல்லுமாறு இவ்வூழியர்களிடம் கேட்டுக் கொண்டனர் (நீதி 9:4; 1 சாமு 31:4; 1 நாள் 10:45). இத்தகைய ஊழியர்கள் தங்கள் தலைவர்களிடம் மிகுந்த பற்றுறுதியுடையவர்களாகவும் (1 சாமு 31:5), ஆபத்தான காரியங்களில் தலைவருடன் செல்பவர்களாகவும் இருந்தனர் (1 சாமு 14:6 தொ). ஒரு குறிப்பிட்ட காலத்திறக்குத் தாவீதைச் சவுல் தனது ஆயுதம் சுமப்பவனாகத் தேர்ந் தெடுத்ததாகக் கூறப்படுகிறது (1 சாமு 16:21). யோவாபின் பரிசையனான பெயரோத்தின் நகுராய் தாவீதின் 30 வலிமை மிக்க வீரர்களுள் ஒருவன் (2 சாமு 23:37; 1 நாள் 11:39).

## படைத்தலைவர் (GENERAL, CAPTAIN, MARSHAL, TRIBUNE)

இது பல எபிரேயச் சொற்களின் மொழி பெயர்ப்பாகும். சீசரா (நீதி 4:7), யோவாபு (1 நாள் 27:34), மத்தத்தியாவின் மகன் யோனத்தான் (1 மக் 10:65) ஆகியோர் படைத்தலைவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் படையின் தளபதிகள் எனலாம். இச்சொல் திருவெளி 6:15-இல் தெளிவில்லாமல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

படைத்தலைவர்களுள் காவலர் தலைவனும் (ஆதி 40:3-4), தேர்ப்படைத்தலைவனும் (1 அர 22:31தொ), ஆயிரத்தவர், நூற்றுவர், ஐம்பதின்மர் தலைவர்களும் (எண் 31:48; 2 அர 19தொ), அரசனுக்குப் பக்கபலமாயிருந்த அதிகாரியும் (2 அர 7:217.19; யோவா 18:12; காண்க. அ.ப. 21:31.36; திரிப்யூன்), கோவில் காவல் தலைவரும் (லூக் 22:4.52; அ.ப. 4;1; 5:24.26) குறிக்கப்படுகின்றனர்.

போர் வீரர்களைக் கணக்கெடுப்பதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளும் படைத்தலைவர்கள் என்று குறிக்கப்படுகின்றனர் (நீதி 5:14; 1 மக் 5:42). இத்தகைய அதிகாரியின் செயலன் 2 அர 25:19-இல் குறிக்கப்படுகிறான். பாபிலோனுக்கு எதிரான போர்த்தயாரிப்பில் இத்தகைய "தானைத்தலைவனை ஏற்படுத்துவதும்" (எரே 51:27) குறிக்கப்பட்டுள்ளது.

## படைத்திரளின் ஆண்டவர் (LORD OF HOSTS, HOST OF HEAVEN)

பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேலரின் கடவுள் படைத்திரளின் ஆண்டவர் எனப்பட்டார் (ஏசா 47:4; 51:15; எரே 10:16; 31:35; ஆமோஸ் 5:27). ஏனெனில், இதுவே அவருடைய சொந்தப்பெயர். இது கடவுளின் வரலாற்றில் மேலாண்மையான வல்லமையையும், மகிமையையும் குறிக்கும். ஆனால், படை என்பதற்குப் பொருள் தெளிவாக இல்லை.

எபிரேய வார்த்தையான சாபா என்ற சொல்- போருக்குத் தயாராக நிற்கும் படையைக் குறிக்கும். இஸ்ராயேலில் எப்போதும் உள்ள படைவீரரைத் தவிர பொது மக்களிடையே இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட படையை இது குறிக்கும். இது பிற்காலத்தில் எழுந்த ஒரு பெயர். இதுபழைய ஏற்பாட்டிலே அங்குமிங்குமாக 284 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பாக எசாயா, எரேமியா, ஓசேயா, ஆமோஸ், மீக்கா, செப்பனியா, ஆகாய், மலாக்கி ஆகியோரின் இறைவாக்கு நூல்களில் இது காணப்படுகிறது. சக்திகள் அனைத்தும் ஆண்டவருடையது என்பதை இது குறிக்கிறது.

வானுலகப் படை என்பது இஸ்ராயேலரின் படையையோ, வானதூதர்கள் அல்லது விண்ணக உயிர்களின் படைகளையோ, விண்ணுலகம் அல்லது மண்ணுலகம் சார்ந்த எல்லா அண்டச்சக்திகளையோ குறிக்கும் எனச் சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலரின் கருத்துப்படி கடவுள்தான் இஸ்ராயேலின் படைகளின் ஆண்டவர் என்பதைக் காட்டுவதற்காக எழுந்த தொடர் எனக் கருதப்படுகிறது.

வானுலகப்படை என்பது கி.மு. 8-ஆம்

நூற்றாண்டிற்குப் பின் வந்த சுவடிகள் மட்டுமே காணப்படுகிறது. எனவே, இஃது இஸ்ராயேலர் வழிபட்ட வானுலகத் தேவர்களையே குறிக்கும். எனவே, இது வானதூதர்களைக் குறிக்காது எனவும் கருதப்படுகிறது (யோசு 5:14, நீதி 5:20). இந்தப்பகுதியும் பிற்காலத்திலேயே சேர்க்கப்பட்டதாகக் கருதப்படுகிறது (யாத் 7:4; 12:41). எனவே, அறிஞர்களின் கருத்துப்படி முதன் முதலில் யாவே, இஸ்ராயேலின் படைகளின் கடவுள் எனப்பட்டு வந்த வழக்கே பின்பு இஸ்ராயேலின் கடவுள் படைத்திரளின் ஆண்டவர் என வடிவெடுத்தது எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த இரு வழக்குகளும் ஒரே பொருளையே கொண்டவை.

**படைப்பிரிவுகள் (LEGION, COHORT, CENTURIES)**

உரோமைப்பேரரசின் முதன்மையான படை அளவு, படை (Legion) என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு படையிலும் வீரர்களின் எண்ணிக்கை வேறுபட்டது. ஒவ்வொரு படையிலும் சராசரி 5000 காலாட்படையினரும், 1200 குதிரை வீரர்களும் இருந்தனர். ஒவ்வொரு படையும் பத்துப்படைப்பிரிவுகளாக (Cohort, bathalion) அமைக்கப்பட்டது. ஒவ்வொரு படைப்பிரிவிலும் ஏறக்குறைய 600 வீரர்கள் இருந்தனர். ஒரு படைப்பிரிவு 6 நூற்றுவர் படையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. படையின்மேல் உரோமைப் பிரதிநிதியும் (Legate) படைப்பிரிவின்மேல் படைத்தலைவனும் (Tribune), நூற்றுவர் படைக்கு நூற்றுவர் தலைவனும் (Centurion) தலைமை தாங்கினர். கிறிஸ்தவசகாப்தத் தொடக்கத்தில் உரோமைப் பேரரசில் இருபது முதல் முப்பது படைகள் இருந்தன.

நேரடியாகப் போரில் ஈடுபடும் படையைத் தவிர்த்து உதவிப்படைகளும் இருந்தன. இதில் ஒவ்வொரு படைப்பிரிவிலும் சராசரியாக 700 காலாப்படையினரும், 240 குதிரைவீரர்களும் இருந்தனர். இப்பிரிவு படைத்தலைவனால் நடத்தப்பட்டது. எருசலேமில் இருந்த அந்தோனியாக் கோட்டை போன்ற மாகாணக்கோட்டைகளில் இத்தகைய உதவிப் படைகள் தங்கியிருந்தன. புதிய ஏற்பாட்டில் குறிக்கப்படும் படைப்பிரிவுகள் (மத் 27:27 இணை; அ.ப. 10:1; 21:31; 27:1) உதவிப்படையைச் சேர்ந்தவையாகத் தெரிகின்றன.

மாற் 5:9.15இணை ஆகிய பகுதிகளில் வரும் "படை" என்ற சொல் உருவகமாகப் பெரும் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. தீய ஆவிகளின் கூட்டத்தை மட்டும் குறிக்கப்பயன்பட்டுள்ளது. மத் 26:53-இல் படைப்பிரிவினர் குறிக்கப்படுகின்றனர்.

**படைப்பு (CREATION)**

பழைய ஏற்பாடு:

**I. விண்ணகத்தையும், மண்ணகத்தையும் படைத்தவர்:**

பண்டைய இஸ்ராயேலர் இறைவனை, உலகம் மற்றும் மனிதனைப் படைத்தவர் என்பதைவிட, இஸ்ராயேலின் மீட்பர் மற்றும் உடன்படிக்கையின் காரணர் என்று கருதுவதிலேயே பழக்கப்பட்டிருந்தனர் என்னும் எண்ணத்தைத் தொடக்ககால விவிலிய இலக்கியம் அளிக்கிறது. ஆயினும், படைப்பு பற்றிய கருத்தானது இஸ்ராயேலின் தொடக்க நாட்களுக்கே செல்கிறது என்பது உறுதி. உண்மையில், படைப்பு பற்றிய கருத்தானது ஆபிரகாமின் காலத்திற்கு முன்னரே, விவிலிய வெளிப்பாட்டினுடைய மேற்காகியச் சூழ்நிலையில் இருந்து வந்தது. எகிப்தில் படைப்பு பற்றிய அத்துமின் வர்ணனையானது பிரமீடுகளின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். மெசபொத்தாமியாவில், சுமேரிய மரபுகளைச் சார்ந்து, படைப்பு பற்றிய பல்வேறு விவரங்களை அளிக்கின்ற அக்காதிய வாசகங்கள் உள்ளன. உகாரித்தில், உயர்ந்த தெய்வமாகிய ஏல் "படைப்புகளின் படைப்பாளர்" என்று அழைக்கப்பட்டார். சந்தேகத்திற்கிடமின்றி, இந்த மூன்று விவரிப்புகளிலும் உலகின் தோற்றமானது பல தெய்வக்கருத்துகளுடன்

இணைந்துள்ளது. மெசபொத்தாமியாவில், படைப்பானது தெய்வங்களுடைய போரின் ஒரு பகுதியாகும். இப்போரை, இதிகாசக் காலத்தின் தொடக்கத்தில் நடந்ததாகக் கருதியது. ஆயினும் இப்புராணங்கள், இஸ்ராயேலுக்கு அன்னியமாக இருக்க முடியாத, முன்னீடுபாடுகளுக்கும் கருத்துக்களுக்கும் சான்றுபகர்கின்றன.

யாவே என்னும் இறைபெயரானது "இருக்கச்செய்பவர்" அதாவது "படைப்பாளர்" என்னும் காரணப்பொருளைக் கொண்டிருந்தது என்பது ஒரு கருதுகோளாகும். ஆனால், ஆதியாகமமானது, ஒரு முக்கிய குறிப்பை அளிக்கின்றது. மெல்கி செதேக்கு ஆபிரகாமை "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னதக் கடவுளால்" ஆசீர்வதிக்கிறார் (ஆதி 14:19). இதே சொற்றொடர் பெனிசிய ஏடுகளில் காணப்படுகிறது. பின்னர் ஆபிரகாமே தனது சாட்சியாக "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னதக் கடவுளை" ஏற்கிறார் ( ஆதி 14:22). இவ்வாறு, இத்தெய்வத்தின் பண்புகளை மாற்றியமைத்த பலதெய்வக்கோட்பாட்டுக்கு அப்பாற்பட்டு, மூதாதையர்கள், சாலேம் அரசனின் படைப்புக்கடவுளில் தங்களுடைய இறைவனையே கண்டடைகின்றனர்.

II. படைப்புபற்றிய **விவிலிய விவரிப்பு:**

படைப்பு பற்றிய இணைந்து முழுமையாகவல்ல இரு விவரிப்புகளுடன் ஆதியாகமம் தொடங்குகின்றது. நோவா, ஆபிரகாம் மற்றும் மோசே ஆகியோருடனான உடன்படிக்கைக்கு முன்னுரையாக அவை அங்கே அமைக்கப்பட்டுள்ளன; அல்லது இதைவிட இறைவனுடைய நன்மைத்தனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளுக்கும் மனிதனுடைய பிரமாணிக்கமின்மைக்கும் இடையிலான நாடக வினைவெதிர் விளைவுத்தொடர்பைத் தொடங்குகிற மீட்பு வரலாற்றில் முதல் அங்கமாக உள்ளது எனலாம்.

**1. காலத்தால் முந்திய விவரிப்பு (ஆதி 2:4-25):**

இது முதல் மனித தம்பதியின் படைப்பு மற்றும் அவர்களது உடனடியான சுற்றுச் சூழல்கள் பற்றி முதன்மையான அக்கறை கொண்டுள்ளது. மண்ணுலகம் பயனளிப்பதாய் இருப்பதற்கென இறைவன் நிலத்தினின்று நீரை வெளிக்கொணர்கிறார். பேரின்பவனமாக ஏதேன் தோட்டத்தை அங்கு அவர் அமைக்கிறார். பின்னர், நிலத்தின் மண்ணினின்று மனித உடலையும், விலங்குகளின் உடல்களையும் உருவாக்குகிறார். அதன் பின்னர், மனிதனின் உடலினின்று பெண்ணை உருவாக்குகிறார். இவ்வாறாக, இருக்கின்ற அனைத்தும் இறைவனுடைய சொந்த தனிப்பட்ட செயலின் விளைவேயாகும். மேலும் விவரிப்பானது, மனித கைவினைஞர் முறையில் இறைவன் பணிபுரிவதைக் காட்டி தனக்கேயுரிய முறையில் இச்செயலின் உறுதியான சிறப்புப்பண்புகளை வலியுறுத்துகிறது. ஆனால் இறைவனின் செயல் முழுமையாக நிறைவடைந்துள்ளது. ஏனெனில், விலங்குகள் தனக்குப் பணிபுரிகின்ற நிலையிலும், தனது மற்றொரு நிலையாகிய பெண் துணையாக இருக்கும் நிலையிலும், மகிழ்ச்சியோடு வாழ மனிதன் படைக்கப்பட்டுள்ளான். தன் தொடக்கத்தில் நல்லதாய் இருந்த உலகில் பாவம் மட்டுமே சீர்குலைவையும் சாபத்தையும் உட்புகுத்தும்.

**2. குருக்கள் பாரம்பரிய விவரிப்பு (ஆதி 1):**

இஃது ஒரு கம்பீரமான அமைப்பைக் கொண்டுள்ளது. தொடக்கத்தில் இறைவன் மூலக் குழப்பத்தினின்று உலகை (விண்ணையும் மண்ணையும்) வெளிக்கொணர்ந்தார் (ஆதி 1:1). பின்னர், உலகிற்குச் செழிப்பையும் அழகையும் அளிக்கின்ற அனைத்தையும் அவர் வெளிக்கொனர்கிறார். இந்த விவரிப்பின் ஆசிரியர் படைப்பின் அமைப்பினால், சிறப்பாக அதனுடைய வேறுபட்ட பகுதிகளுக்கிடையிலான வேறுபாடு, விண்மீன்களின் முறையான இயக்கம்,

இனப்பெருக்க விதிகள் ஆகியவற்றால் பெரிதும் கவரப்படுகிறார். இவை அனைத்தும் படைத்தவரின் செயலாகும். தனது வார்த்தையின் வல்லமையாலேயே அவர் அனைத்தையும் அவற்றிற்குரிய இடத்தில் அமைத்தார் (சங் 148:5). இந்தச் செயலின் உச்ச கட்டமானது, இறைவனுடைய "உருவிலும் சாயலிலும்" இருப்பவரும், உலகை ஆள வேண்டிய வருமானவரின் படைப்பாகும். இறுதியாக அவரது வேலை முடிவடைந்தவுடன் இறைவன் ஓய்வெடுத்தார். இவ்வாறு ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதனை ஓய்வுநாளாக நிர்ணயித்தார். இந்த இறுதிக் கூறு மனிதனுடைய வாழ்விற்கு வாரத்தினுடைய புனித ஒழுங்கியல்பை அளித்தது. இந்த இயல்பானது படைப்பினுடைய இம்மைக்குரிய அமைப்பைச் சார்ந்ததாகும். இவ்வாறாக, இறைவனுடைய படைப்புச் செயலானது அனைத்து மனிதப் பணிக்கும் மாதிரியாக உள்ளது.

இந்த இரண்டாம் விவரிப்பானது பாபிலோனிய மரபுகளுடன் சில பொதுவான கூறுகளைக் கொண்டுள்ளது. பாதாளத்தின் மீதான வெற்றி, மேல் மற்றும் கீழ் நீரைப்பிரித்தல், விண்மீன்களைப் படைத்தல் போன்றன இவை. ஆனால், ஆதியாகமத்தின் இந்த அதிகாரத்தில் புராணத்தின் எச்சுவடும் இல்லை. இறைவன் தன்னில் மட்டுமே திட்டமிட்டு, தனியாகச் செயல் புரிகிறார். குழப்பத்தின் மீதான அவரின் வெற்றியானது உண்மையான போராட்டத்தின் விளைவன்று. பாபிலோனிய தியாமாத்தைப் போன்று பாதாளமானது ஒரு தீய தெய்வமன்று. இறைவன் தோற்கடிக்கின்ற அல்லது சிறைப்படுத்துகின்ற கோர விலங்குகளோ, பூதங்களோ, எதுவுமே அங்கு இல்லை. படைப்பு என்பது எல்லாம் வல்ல இறைவனால் தன்னியலாகத் தொடங்கப்பட்ட செயலாகும். அவர் ஒரு திட்டத்தின்படியும், அவரது சாயலாக அவர் படைத்த மனிதனின் நன்மைக்காவும் செயலாற்றுகிறார்.

3. **விவிலியப் பாரம்பரியம்:** இவ்விவரிப்பில் எடுத்துக்காட்டப்பட்ட படைப்பு பற்றிய தோற்றக்கருத்தானது, விவிலிய விவரிப்புகள், தங்களுடைய இன்றைய வடிவை ஏற்பதற்கு முன்னரே இஸ்ராயேலின் சிந்தனையைக் கட்டுப்படுத்தியன என்பதாம். சிலைகளுக்கெதிரான தங்களுடைய வாதங்களில் இறைவாக்கினர்கள் படைப்பு பற்றிய இக்கருத்திற்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். யாவே உலகைப் படைத்தவராக உள்ள நிலையில் (ஆமோ 4:13; 5:8-9; 9:5-6; எரே 10:6-16; எசா 40:21-26) இந்தச் சிலைகள் மனித கரங்களின் உயிரற்ற படைப்புகளாகவும், காப்பாற்ற வல்லமையற்றவையாகவும் உள்ளன (எரே 10:1-5; எசா 40:19-20; 44:9-20).

நாடு கடத்தப்பட்ட பின்னர், படைப்பு பற்றிய இறையியல் சிந்தனையை ஞானிகள் மேம்படுத்துகின்றனர். பழமொழிகளின் தொகுப்பாளர், இறைவன் உலகை ஞானம், விவேகம், அறிவாற்றல் ஆகியவற்றுடன் படைத்தார் என்பதை வலியுறுத்திக் கூறுவதுடன் திருப்தியடையாமல் (பழ 3:19-20; சங் 104:24), முதல் தொடக்கத்தில் இறைவன் உருவாக்கிய முதல் செயலாக ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானத்தைப்பற்றிக் கூறுகிறார் (பழ 8:22-24). எல்லாப் பொருட்களும் படைக்கப்பட்ட போது, தலைமை வினைஞனாகச் செயலாற்றி, ஞானம் அங்கே இருந்தது (பழ 8:24-30). மனிதரின் தோழமையில் இன்பம் அடைவதற்கு முன் அஃது உலகின் இன்பம் கண்டது (பழ 8:31). சீராக்கு இந்தக் கோட்பாட்டினால் வலுவூட்டப்பெற்றார். மற்ற அனைத்திற்கும் முன்னால் ஞானமானது படைக்கப்பட்டதென்ற உண்மையை அவரும் வலியுறுத்துகிறார் (சீரா 1:9; 24:9). அவ்வாறே ஞான நூலானது ஞானத்தை உலகின் கைவினைஞராகக் கண்டது (ஞான 8:6; 9:9). இஃதோடு நெருங்கிய தொடர்புடைய எண்ணத்தை, படைப்பினை ஆட்தன்மைப் படுத்தப்பட்ட வார்த்தைக்கும் இறைவனின் ஆவிக்கும் சாற்றிக்கூறும் சங்கீதங்களின் ஆசிரியர்களில் காண்கிறோம் (சங் 33:6; 104:30;

யூதி 16:14). இந்தப் புதிய அனுபவ எல்லை, வார்த்தை மற்றும் தூய ஆவியினுடைய வெளிப்பாட்டிற்கு முக்கிய பாயிரமாக உள்ளது.

இறுதியாக, கிரேக்க காலத்தில், வெறுமையினின்று படைக்கப்பட்ட உலகைப்பற்றிய வெளிப்படையான கருத்தை நாம் அடைகிறோம். "விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் பார். இவை யாவற்றையும், மனிதகுலத்தையும் கடவுள் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினாரென்று கண்டறிவாய்" (2 மக் 7:28). அக்காலத்தில் படைப்பின் இறையியலானது யூதரின் காப்புரைகளில் இடம் பெற்றிருந்தது. இறைவனைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களையும் தெய்வங்களாகக் கொண்ட புறவின உலகை எதிர்கொண்ட நிலையில், இஸ்ராயேலானது, தமது செயல்களின் மூலமாகத் தம்மைப்பற்றிய காட்சித்துணுக்கு களை அளிக்கின்ற இறைவனின் உயரிய நிலையை வலியுறுத்துகிறது (ஞான 13:1-5).

### III. இறைவனின் திட்டத்தில் படைப்பு:

**1. படைப்பும் வரலாற்றும்:** படைப்பின் மீதான பழைய ஏற்பாட்டின் ஆர்வமானது, பொருட்களின் தொடக்கத்தினுடைய பிரச்சனையை ஆராயும் மனித அவாவைத் தூண்டும் பொருளைச் சார்ந்ததன்று. பழைய ஏற்பாடானது படைப்பில் எல்லாவற்றிற்கும் மேலாக இறைத் திட்டத்திற்கும், மீட்பின் வரலாற்றிற்குமான தொடக்க நிலையைக் காண்கிறது. இஸ்ராயேலின் வரலாறு முழுவதும் தொடருகின்ற உயரிய இறைசெயல்களில் முதன்மையானது படைப்பாகும். படைக்கும் வல்லமையும் வரலாற்றின் ஆதிக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. உலகின் படைப்பாளர் மற்றும் தலைவர் என்ற நிலையில், உலகின் மீதான தமது திட்டத்தைச் செயல்படுத்த யாவே, நெபுகத்னேசரரையோ (எரே 27:4-7), சைரசையோ (எசா 45:12-13) தேர்ந்தெடுக்கலாம். அவரைச்சார்ந்து நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. உயர்வு நவிற்சியற்ற முறையில் அவரே அவற்றைச் செய்கிறார் (எசா 48:6-7). அவரால் உருவாக்கப்பட்டு அமைக்கப்பட்ட இறைமக்களின் மீட்பு (43:16-19) முதலான, இஸ்ராயேலின் ஊழை வடிவமைக்கின்ற உயரிய நிகழ்ச்சிகளில் இது சிறப்பானமுறையில் உண்மையாக உள்ளது. இக்காரணத்திற்காக சங்கீத ஆசிரியர்கள், புனித வரலாற்றின் மீதான தங்களது சிந்தனையில், இறைவனுடைய புதுமைகளின் தகுதியான காட்சியைச் சித்தரிக்க விரும்பி படைப்பின் வியப்புக்குரியவைகளுடன் இந்தப் பெரும் நிகழ்ச்சிகளைச் சேர்க்கின்றனர் (சங் 135:5-12; 136:4-26).

முற்கூறப்பட்ட பின்னணியின் சூழ்நிலையில், இறைவனுடைய படைப்புச் செயலானது பண்டைய மேற்காசிய புராண கருத்துக்களால் உருக்குலைக்கப்படுவதினின்று முழுமையாகத் தப்புகிறது. இனிமேல் முதல், புனித ஆசிரியர்கள், நஞ்சு நீக்கப்பட்ட பழைய புராணங்களிலிருந்து உருவங்களைப் பெற்று, கவிதைநடையில் படைப்பைப்பற்றி பாதுகாப்பாக எடுத்துக் கூறலாம். குழப்பத்தின் உருவகமாகிய இராகாபு மற்றும் லேவியாத்தான் முதலிய விலங்குகளுக்கு எதிரான மாபெரும் போராட்டத்தில் படைத்தவரே நாயகனாகிறார். இறைவன் இந்தக்கொடிய விலங்குகளை நசுக்கி (சங் 89:11), ஊடுருவக்குத்தி (எசா 51:9; யோபு 26:13) துகள்களாக நொறுக்கினார் (சங் 74:13). ஆயினும் அவை இறுதியாக அழிக்கப்படாமல், மௌனப்படுத்தப்பட்டு (யோபு 3:8), சிறைப்படுத்தப்பட்டு (7:12; 9:13), கடலுக்குள் அமிழ்த்தப்படுகின்றன (சங் 104:26). இச்சொற்களில் படைப்பானது இறைவனின் முதல் வெற்றியாக உள்ளது. அதே உருவங்களால் விவரிக்கப்படக்கூடிய வரிசையான போராட்டங்கள் வரலாற்றில் அதனைத் தொடர்ந்து வந்தன. யாத்திரையானது பாதாளத்தின் மீதான புதிய வெற்றியாக இருக்காதா (எசா 51:10)? அடையாளங்களின் தலையீட்டின் மூலமாக, வரலாற்றிலான இறைவனின் செயல்களை

அவரது முதல் பெரிய செயலுடன் ஒப்பிடுவது தொடர்ந்து நிகழ்கின்றது.

**2. மீட்பு புதிய படைப்பும்:** புனித வரலாறானது இக்காலத்தோடு நின்றுவிடாமல், இறைவாக்கு இறுதிக்கால இயல் சித்தரிக்கும் முடிவை நோக்கி நகர்கிறது. இறுதியான மீட்பின் பொருளைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள, இறைவனுடைய படைப்புச்செயலை நாட வேண்டும். இஸ்ராயேலின் மனந்திரும்புதலானது உண்மையான மறுபடைப்பாக இருக்கும். "ஆண்டவர் விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளார்; ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கிறாள்" (எரே 31:21). அவ்வாறே எதிர்கால மீட்பானது (எசா 45:8) புதிய யாத்திரையின் அற்புதங்களோடு நிகழும் (41:20). புதிய எருசலேமில் மக்கள் இன்பவனத்தின் மகிழ்ச்சியை அனுபவிப்பர் (65:18). உலகில் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் நிலைத்த தன்மையானது, வரவிருக்கும் புதிய அமைப்பானது நீடித்திருக்கும் என்பதற்கான உறுதியான அறிகுறியாகும் (எரே 31:35-37). இறுதியாக உலகம் முழுவதும் அனைத்துப் பொருட்களின் முழுப் புதுப்பித்தலில் பங்கு பெறும். ஏனெனில், யாவே புதிய விண்ணுலகையும், புதிய மண்ணுலகையும் படைப்பார் (எசா 65:17; 66:22-23). மனிதனுடைய பாவத்தினால் திறக்கப்பட்ட நீண்ட இடைவெளிக்குப் பின், அவரது மூலப்படைப்பின் நிறைவுடன் இறைவனுடைய திட்டத்தின் முடிவு சேர்க்கப்பட்டதன் கம்பீரமான கருத்தாகும் இது. படைத்தல் என்னும் வெளிப்படையான சொல்லை எசேக்கியேல் உபயோகிப்பதில்லை. ஆனால், மனிதனை ஏதேனின் மகிழ்ச்சிக்கு மீண்டும் அறிமுகப் படுத்துவதற்கென இறுதிக்காலங்களில் ஆண்டவர் மனிதனின் இதயம் மாற்றுவதைக் காட்டும்போது, மேலே கூறப்பட்டதற்கு அவர் நெருங்கி உடன்படுகிறார் (எசே 36:26-35; 11:19). எனவே, தன்னில் "தூயதோர் உள்ளத்தைப்படைத்தருள" இறைவனை இறைஞ்சுவதற்கென சங்கீத ஆசிரியர் இந்த வாக்குறுதியினை நம்பியுள்ளார் (சங் 51:12). இவ்விதம் தன்னையே புதுப்பித்தலில், இயேசு கிறிஸ்துவில் அமைக்கப்பட வேண்டிய புதியபடைப்பின் உறுதியான எதிர்பார்த்தலை அவர் சரியாக வலியுறுத்துகிறார்.

**IV. படைத்தவர் முன் மனிதன்:**

**1. மனிதனுடைய இக்கட்டான நிலை:** படைப்பு பற்றிய விவிலியக் கோட்பாடானது ஊகமான அல்லது கருத்தியலான இறையியலாக இல்லாமல், ஆன்மீக எதிர்ச்செயலைக் கோரும் சமய உணர்வாக உள்ளது. படைப்பின் மூலமாக மனிதன் படைத்தவரைக் கண்டுபிடித்து (ஞான 13:5), வியப்பு மற்றும் நன்றியின் ஆழ்ந்த உணர்வுகளுக்கு நடத்திச்செல்லப்படுகிறான். சில சங்கீதங்களில் படைப்பினுடைய அழகின் மீதான சிந்தனையானது உற்சாகமான புகழ்ச்சிக்கு நடத்திச்செல்கிறது (சங் 19:1-7; 89:6-15;104). மற்ற இடங்களில் இறைவனுடைய வியத்தகு செயல்களில் தோன்றுகின்ற இறை மாட்சிமையால் மனிதன் திணற அடிக்கப்படுகிறான். யோபுவின் நூலிலுள்ள இறைவனுடைய உரையின் பொருள் இதுவே (யோபு 38:41). இத்தகைய உண்மையான நினைவுறுத்தல்களுடன் ஆழ்ந்த தாழ்ச்சியில் யோபு மூழ்கக்கூடாதா (42:1-6)? இவ்வாறு மனிதன்படைப்பு என்னும் தனது உண்மையான நிலையை ஏற்றுக்கொள்கிறான். இறைவன் அவனைக் களிமண்ணைப் போன்று பிசைந்து, வனைந்து, அமைத்தார் (யோபு 10:8-10; எசா 64:7; எரே 18:6). இறைவனின் இரக்கம் மிகவும் தேவைப்படும் மனிதன் இறைவனின் முன் யார் (சீரா 18:8-14)? இறைவனின் முன்னிலையினின்று தப்பியோடுவதென்பது வீணான முயற்சியாகும். ஏனெனில், ஒவ்வொரு தருணத்திலும் மனிதன் படைத்தவரின் கரங்களில் இருக்கிறான். மேலும், படைக்கப்பட்ட எதுவும் இறைவனிடமிருந்து தப்புவதில்லை (சங் 139). பழைய ஏற்பாடு முழுவதிலும் பரவிக்கிடக்கும் மனநிலையான உண்மையான, பக்தியின் அடிப்படைத்தன்மை இதுவே.

**2. நம்பிக்கைக்கு வழி:** இறைவன் முன்னிலையிலான தனது உண்மையான நிலையைப்பற்றிய இந்த அறிவில், நம்பிக்கைக்கான வழியை மனிதன் கண்டடையலாம். வானத்தையும், பூமியையும் படைத்த அதே இறைவன் தனது மக்களுடைய எதிரிகளை அழிக்கவும், தனது மக்களுக்கு மீட்பினை அளிக்கவும், புதிய எருசலேமை மீண்டும் அமைக்கவும் இப்போது எண்ணுகிறார் என்னும் உண்மையை எசாயா மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுகிறார் (எசா 44:24-28; 51:9-11). விண்ணையும், மண்ணையும் படைத்த ஆண்டவரிடமிருந்து அவனது உதவி வருவதால், விசுவாசி அனைத்துப் பயத்தையும் விட்டுவிட வேண்டும் (சங் 121:2).

II. புதிய ஏற்பாடு:

**I. படைத்தவராகிய இறைவன்:** பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட படைத்தவராகிய இறைவன் என்னும் கருத்தானது, புதிய ஏற்பாட்டில் தனது முக்கிய இடத்தை மீண்டும் பெற்று, மேலும் விரிவாக்கப்படுகிறது.

1. பழைய ஏற்பாட்டு மரபுரிமை: தனது வார்த்தையாய் அவர் உலகைப் படைத்த போது (2 கொரி 4:6), இல்லாதவற்றையும் வாழ்வதற்கு இறைவன் அழைத்தார் (உரோ 4:17). அவர் படைப்புகளுக்கு உயிரளிக்கும் போது இந்த முதற்செயலானது தொடர்கிறது. ஏனெனில், அவரில் நாம் வாழ்வு, இயக்கம் மற்றும் உயிர் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம் (அ.ப. 17:25; 1 திமொ 6:13). உலகையும் " அதிலுள்ள அனைத்தையும்" அவர் படைத்தார் (திருவெளி 10:6; அ.ப. 14:15; 17:24; எபி 2:10). அனைத்தும் அவரால், அவருக்காக வாழ்கின்றன (1 கொரி 8:6; உரோ 11:36; கொலோ 1:16). எனவே, படைக்கப்பட்ட அனைத்துமே நல்லது மற்றும், இறைவனிடமிருந்து வருவதனைத்தும் தூயது (1 கொரி 10:25-26; கொலோ 2:20-22). ஆகவே, இயற்கையமைப்பின் சட்டங்கள் மனிதனால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சான்றாக, மணமுறிவானது ஆதியில் மனிதனையும் பெண்ணையும் படைத்த இறைவனுடைய திட்டத்திற்கு முரண்படுகிறது (மத் 19:4-8).

இயல்பாகவே, பிற சமயத்தினருக்கான கிறிஸ்தவ போதனையில் இக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. இதில் ஆதித்திருச்சபையானது யூதக் கோட்பாட்டையே கையளிக்கிறது (அ.ப. 14:15; 17:24-28). படைப்புகளின் சிறப்பினைப் புரிந்து கொள்ளக்கூடிய எவனுக்கும் இறைவனுடைய காண இயலா நிறைவுகள் மிகத் தெளிவாக இருப்பது போன்று (உரோ 1:19-20), "உலகானது இறைவனுடைய ஒரே வார்த்தையால் உருவாக்கப்பட்டது என்பதை விசுவாசத்தினால் நாம் அறிகிறோம்" (எபி 11:3). விசுவாசியில் இக்கோட்பாடானது புகழ்ச்சிக்கு இட்டுச் செல்வதாகவும் (திருவெளி 4:8-11), நம்பிக்கையின் அடிப்படையாகவும் உள்ளது (உ.ப. 4:24).

**2. இயேசு கிறிஸ்துவும் படைப்பும்:** ஒரு முக்கிய கூறில், பழைய ஏற்பாட்டில் மறைவாய் இருந்ததைப் புதிய ஏற்பாடு நிறைவுபடுத்துகிறது. அதாவது, இஸ்ராயேல் அறிந்திருந்த படைத்தவராகிய இறைவன் இப்போது இயேசு கிறிஸ்துவின் தந்தையாக வெளிப்படுத்தப்படுகிறார். தந்தையின் படைப்புச்செயலில் இயேசு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதன் காரணமாக, "யாரில் அனைத்தும் வாழ்கின்றனவோ, யாரால் நாம் உள்ளோமோ அந்த ஒரே ஆண்டவராக அவர் உள்ளார்" (1 கொரி 8:6). இறைவன் படைத்த படைப்பின் "ஆதியாக உள்ளவர்" அவரே (திருவெளி 3:14). அவரே இறைவனுடைய ஞானமாக இருப்பதால் (1 கொரி 1:24) அவர் "இறைவனுடைய மகிமையின் பிரதிபலிப்பாகவும், அவரது உயிரின் சாயலாகவும்" (எபி 1:3), "காணவியலா இறைவனின் சாயலாகவும், அனைத்துப் படைப்புகளின் முதற்பிறப்பாகவும்" உள்ளார் (கொலோ 1:15). அவரில் அனைத்தும்

படைக்கப்பட்டு இணைந்து நிலைப்பதால் (கொலோ 1:15). அவரில் அனைத்தும் படைக்கப்பட்டு இணைந்து நிலைப்பதால் (கொலோ 1:16-17) "தனது வல்லமை மிக்க வார்த்தையின் மூலம் உலகைத் தாங்கி வருபவர்" அவரே (எபி 1:3). கால நிறைவில் ஊனுடலாக ஆவதற்கு முன்னர், தொடக்கத்திலிருந்தே இறைவனுடன் வாழும் இறைவனுடைய வார்த்தை அவரே (யோவா 1:1-2.14). அவரே அனைத்தையும் படைத்தவராய் படைக்கப்பட்ட உலகில் தொடக்கத்திலிருந்தே வாழ்வாகவும் ஒளியாகவும் உள்ளார் (1:3-4). இவ்வாறு, கைவினைஞராகவும், மாதிரியாகவும், எல்லாவற்றிற்கும் முடிவாகவும் உள்ள இறைமகன் மீதான சிந்தனையால் படைப்பு பற்றிய கருத்தானது நிறைவடைகிறது.

III. புதிய படைப்பு:

1. **கிறிஸ்துவில்:** இன்றைய உலகானது அழிக்கப்பட்டு மறைவதற்கெனக் குறிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை அறிந்திருப்பதன் காரணமாக, மனித பாவத்தின் விளைவாய்ப் படைப்பின் நிறைவிற்குள் புகுத்தப்பட்ட வியப்பு மிக்க விளைவுகளைப் பழைய ஏற்பாட்டை விட, புதிய ஏற்பாடு அதிகமாய் அறிந்துள்ளது (1 கொரி 7:31; எபி 1:11-12; திருவெளி 6:12-14; 20:11). ஆனால், இறைவாக்கினர்களின் திருவாக்குகள் சுட்டிக்காட்டியதைப்போன்று, கிறிஸ்துவில் ஒரு புதிய படைப்பு ஏற்கெனவே தொடங்கி விட்டது. பழையது கடந்தபின் புதியதாக, உயிராக (2 கொரி 5:17), ஒரு புதுப்படைப்பாக கிறிஸ்துவில் உருவாகின்ற (கலா 6:15), படைத்தவருடைய சாயலுக்கேற்ப, திருமுழுக்கினால் உள்ளார்ந்த விதத்தில் புதுப்பிக்கப்பட்ட மனிதனில், இப்படைப்பானது முதன்மையாக உள்ளது (கொலோ 3:10). ஆனால் புதுப்படைப்பானது உலகமுழுவதற்கும் பரவுகிறது. ஏனெனில் இறைவனுடைய திட்டமானது, ஒரே தலைமையாக கிறிஸ்துவின் கீழ் அனைத்தையும் ஒன்றுசேர்க்கவும் (எபே 1:10), அவரோடு அவரில் அனைத்தையும் ஒப்புரவாக்குவதும் ஆகும் (2 கொரி 5:18-19; கொலோ 1:20). இவ்வாறு, உலகுடனான கிறிஸ்துவின் உறவை விவரிப்பதில், முதல் படைப்பிலான அவரது செயலினின்று, படைப்புகளின் இறுதிக்கால மறுபடைப்பிலான அவரது செயல்கள் வரை ஒரு நுட்பமான இயக்கம் உண்டு. இவ்வாறு, படைப்பும் மீட்பும் ஒன்றுபடுகின்றன. ஏனெனில், நாம் "நற்செயல்களின் வாழ்விற்காக கிறிஸ்து இயேசுவில் படைக்கப்பட்ட இறைவனின் வேலைப்பாடு" ஆவோம் (எபே 2:10).

2. முதல் படைப்பினின்று இறுதிப்படைப்பு வரை:

முதல் மற்றும் இறுதிப் படைப்பிற்கு இடையிலான குறிப்பிடத்தக்க ஒப்புமையின் காரணமாக, இயேசு கிறிஸ்துவிலான புதிய மனித இனத்தின் இப்படைப்பு வருவது பற்றிய போக்கினை விரிவாக விவரிப்பது கூடியதொன்றே (எபே 2:15; 4:24). தொடக்கத்தில் இறைவன் ஆதாமை மனித இனத்தின் தலைவனாக்கி, அவரது ஆதிக்கத்தில் உலகை ஒப்படைத்தார். இறுதிக்காலத்தில் மனுவுருவான இறைமகன் புதிய ஆதாமாக வரலாற்றில் நுழைந்தார் (1 கொரி 15:21.45; உரோ 5:13). இறைவன் கிறிஸ்துவை அவரது உடலாகிய மீட்கப்பட்ட மனித இனத்திற்குத் தலைவராக்கி (கொலோ 1:18; எபே 1:22-23), மண்ணுலகில் அவருக்கு அனைத்து வல்லமையும் அளித்தார் (மத் 28:18; யோவா 17:2). விண்ணக மண்ணக உயிர்கள் அனைத்தும் அவரில் ஒன்றுபடுவதற்கென (எபே 1:10) அனைத்தும் அவரது கரங்களில் ஒப்படைக்கப்பட்டு, அனைத்திற்கும் அவர்வாரிசு ஆக்கப்பட்டார் (எபி 1:2; 2:6-9). ஆவியின் முழுமையைக் கிறிஸ்து தன்னில் கொண்டிருப்பதன் காரணமாக (மற் 1:10 இணை; லூக் 4:1), மற்ற மனிதருடைய ஆன்மீகப் புதுப்பித்தலுக்காகவும், அவர்களைப் புதிய படைப்பாக ஆக்குவதற்காகவும் அவர் அவர்களுக்கு இந்த ஆவியை அளிக்கிறார் (உரோ 8:14-17; கலா 3:26-28; யோவா 1:12).

**3. வெற்றியின் எதிர்பார்ப்பில்:** பெந்தகோஸ்தே நாளில் தொடங்கிய இந்தப் புதிய படைப்பானது இன்னும் முழுமையை அடையவில்லை. உள்ளார்ந்தவிதத்தில் புதுப்பிக்கப்பட்டமனிதன், உயிர்ப்பின் நாளில் தனது உடலின் மீட்பிற்காக இன்னும் ஏங்குகிறான் (உரோ 8:23). சுற்றியுள்ள உலகானது இப்போது சோர்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இறைவனுடைய பிள்ளைகளின் மகிமையான விடுதலையை அனுபவிப்பதற்கென, தவிர்க்கமுடியாத அழிவிற்கான தனது அடிமைத்தனத்தினின்று சுதந்தரத்தை அது நாடுகிறது (உரோ 8:13-22). நற்செய்தியால் போதிக்கப்பட்ட இந்தப் புதிய விண்ணகமும் மண்ணகமுமான முடிவைநோக்கி வரலாறு செல்கிறது (2 பேதுரு 3:13). இதனைப் பின்வரும் குறிப்பிடத்தக்க விவரிப்பில் திருவெளிப்பாடு எதிர்பார்க்கிறது: "முதலிலிருந்த வானகமும், வையகமும் மறைந்து போயின... அரியணை மீது வீற்றிருந்தவர், 'இதோ நான் அனைத்தையும் புதியன வாக்குகிறேன்' என்றார்" (திருவெளி 21:1-5). செம்மறியின் உறுதியான வெற்றி அடையப்படும்போது, மாற்றி அமைக்கப்பட்ட உலகின் இறுதிப்படைப்பாக இஃது இருக்கும்.

### பட்சிக்கும் பறவை, இரைமேல் பாயும் பறவை (BIRD OF PREY)

பிற மிருகங்களைப் பிடித்து உண்ணும் பறவை. பாலஸ்தீனத்தில் இத்தகைய பறவைகள் பல இருந்தன. கழுகு, கருடன், வல்லூறு, சிறு கழுகு போன்றவை இவற்றில் சிலவாகும். இவைகள் யூதர்களைப் பொருத்தமட்டில் தீட்டுப்பட்டவை எனக் கருதப்பட்டன. சில பறவைகள் உண்ணத் தகாதவை என்றும் விவிலியப்பகுதிகளில் கூறப்பட்டுள்ளது (லேவி 11; உப 14). இரத்தத்தை உண்ணுவது அல்லது இரத்தம் சரியாக நீக்கப்படா இறைச்சியை உண்ணுதல், சவத்தைத்தொடுதல் ஆகியவற்றைப் பற்றிய உடன்படிக்கைக் கட்டளைகளிலிருந்து (லேவி 17) இத்தடை தோன்றுகிறது. ஏனெனில், இப்பறவைகள் தங்கள் இரையைப் பிடித்துக்கிழித்து உண்ணும் வழக்கமுடையவை.

### பட்சிலித்து, பட்சலூத்து (BAZLITH, BAZLUTH)

இவர் ஓர் ஆலய ஊழியர். செருபாபேல் தலைமையில் நாடு திரும்பியவர்களுள் இவரது வழித்தோன்றல்களும் இருந்தனர். இவரது குடும்பத்தினர் நெத்தினிம் குழுவைச் சேர்ந்தவர்கள் (நெகே 7:54). இவர் எஸ் 2:52-இல் பட்சலூத்து என்றழைக்கப்படுகிறார்.

### பட்டு (SILK)

பட்டுப்பூச்சி வளர்ப்பு, பட்டுநூல் நூற்றல், பட்டு நெய்தல் கொரியா சீனாவில் தோன்றி அதன்பிறகு கொரியா வழியாக சப்பானுக்குப் பரவியது.மெதுவாகத்தான் மேற்கு நாடுகளுக்குப் பரவியது. கி.மு. முதல் ஆயிரம் ஆண்டிலேயே இந்தியாவில் பட்டுத் தொழில் இருந்தது, என்று சமஸ்கிருத இலக்கியம் குறிப்பிடுகின்றது. பட்டுத்தொழில் பற்றிய குறிப்புக்கள் அரிஸ்டாட்டில் எழுதிய "விலங்குகளின் வரலாறு" என்ற நூலில் பட்டுப் புழுக்களைப்பற்றி எழுதியுள்ள பகுதியிலிருந்து கிடைக்கின்றது. 1 மக் 6:34-இல் முசுக்கொட்டைச் சாற்றினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எசே 16:10.13-இல் மூலச்சொல் பாரம்பரியமாகப் பட்டு என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இது ஐயத்திற்குரியதாகும். "மென்துகில்" என்று பொதுவான பொருளில் எடுத்துக்கொள்வதுமேல். இதுபோலவே பழ 31:22-இல் வரும் பட்டாடையையும் மென்துகில் என்று பொருள் கொள்வது மேல். பட்டாடை பற்றிய ஒரே ஓர் உறுதியான விவிலியக் குறிப்பு திருவெளி 18:12-இல் வருகிறது. அதில், பாபிலோனுக்கு வியாபாரிகள் வாங்கிக்கொண்டு சென்ற பொருட்களின் பட்டியலில் பட்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

### பட்டை, முகக்கூறு (FACETS)

மணிக்கல்லின் பட்டையிட்ட பரப்புகளின் ஒரு முகக்கூறு. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஏழு

பட்டைகளையுடைய மணிக்கல் குருவாக இருந்த யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்டது (செக் 3:9).

### பணக்காரனும், ஏழையும் - உவமை (THE RICHMAN AND POOR - PARABLE)

இந்தக் கதையானது பண ஆசை பிடித்தவரும், சட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிப்பவருமான பரிசேயர்களுக்காகக் கூறப்பட்டது (லூக் 16:19-31). பணக்காரர் நீதியற்ற கண்காணிப்பாளனைப் போன்றவர். இருவரும் தங்கள் செல்வத்தைத் தகாத வழியிலேயே செலவிடுகின்றனர். இதன் விளைவை அவர்கள் உணரவில்லை. லாசர் விண்ணகத்துக்குச் செல்ல, காரணம் அவனது ஏழ்மையன்று. மாறாக, அவனது கடவுள் பற்று. பணக்காரன் நரகத்திற்குச் செல்ல, காரணம் அவன் மோசேயின் மற்றும் இறைவாக்கினர்களின் அறிவுரைக்கேற்ப வாழாமையே. அவன் செல்வமிக்கவனாயிருந்ததால் விண்ணகம் சேரவில்லை என நாம் கூற இயலாது. செல்வத்தை நேரிய வழியில் ஏழை எளியவர்க்குச் செலவிட்டிருந்தால் அவன் விண்ணகத்தை அடைந்திருப்பான்.

### பணப்பெட்டி (MONEY BOX)

பணத்தை வைத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சிறிய கொள்கலத்தைக் (பெட்டி/பை) குறிப்பிடுகின்றது. விவிலியத்தில் இச்சொல், அப்போஸ்தலர்கள் தங்களின் பொதுப்பணத்தை வைத்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திய கொள்கலத்தைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா 12:6; 13:29).

### பணப்பை (PURSE)

பணப்பை எவ்வகைப்பொருட்களால் செய்யப்பட்டன என்று குறிப்படப்பட வில்லை; ஆனால் பிற்காலத்தில், இவைகள் நூலினால் பின்னப்பட்ட வலையைப் போன்று செய்யப்பட்டன என்று குறிப்பிடப்படுகின்றது. சில பணப்பைகள் தோலினால் செய்யப்பட்டன. எல்லாப் பணப்பைகளும் சாதாரணப் பைகளைப் போன்று வாயின் பகுதிகளில் தோலினாலோ, நூலினாலோ இறுக்கிக் கட்டுவதைப்போன்ற அமைப்பை உடையன. எனவேதான், இதே சொல் மற்றப் பைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருக்கும் பை (பழ 1:14); பொன்னைக் கட்டிவைத்திருக்கின்ற பை (எசா 46:6); "உன் பணப்பையில் ஒன்றுமில்லாதபோது கடன்வாங்கி விருந்தாடி ஏழை ஆகாதே" (சீரா 18:32) என்று வறிய நிலையைக்குறிக்கின்றது. மத் 10:9-இல் பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் இடைக்கச்சைகளில் வைத்திருக்க வேண்டாம் என்று குறிப்பிடப்படுகிறது. லூக் 10:4; 22:35-36-இல் பணப்பை குறிக்கப்படுகிறது. வானகத்தில் குறையாத செல்வத்தையும், இற்றுப்போகாத பணப்பைகளையும் தேடிக்கொள்ளுங்கள் என்று உருவகமாகக் கூறப்பட்டிருக்கின்றது (லூக் 12:33).

### பணி (MINISTRY)

I. வுல்கத்தாவில் பணியாளர் என்ற சொல்லானது வழிபாட்டின் பணியாளராகிய தியாக்கோன்களைக் குறிப்பிடும். எழுபது நூல், இச்சொல்லைச் சமயச்சார்பற்ற சூழ்நிலையில் பயன்படுத்துகிறது (எஸ்த 1:10; 6:1-5). யோசுவா மோசேயின் பணியாளர் என்று குறிக்கப்படுகிறார் (யாத் 24:13). மூல எபிரேயச்சொல் வழிபாட்டுப் பணியாளராகிய குருக்களையும் குறிக்கலாம் (எசா 61:6; எசே 44:11; யோவே 1:9). ஆயினும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே, சில குறிப்பிட்ட சமயச் செயல்களுக்குப் பொறுப்புள்ள மனிதரால் இறை மக்களிடையே நிறைவேற்றப்படுகின்ற சமயப் பணியில் உண்மை, நன்கு சான்று செய்யப்பட்ட ஒன்றாகும். அரசர்கள், இறைவாக்கினர்கள், குருத்துவக்குழுவினர் ஆகியோர், இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே தலையீட்டைச் செயல்படுத்துகின்ற இறைவனுடைய ஊழியர்களாவர். இவ்வாறாக, மோசே முதல் உடன்படிக்கையின் பணியாளர் என பவுல் கூறுகிறார் (2 கொரி 3:7,9). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே இறைவனுக்கும் மனிதருக்கும்

இடையிலான ஒரே இணைப்பாளர்; மீட்பின் பலியை அளிக்கின்ற தனித்துவமிக்க குரு; அவரே ஊனுடலெடுத்த இறைவனுடைய வார்த்தையாக இருப்பதன் காரணமாக வெளிப்பாட்டினைக் தனித்துவமிக்க முறையில் கொண்டு வருபவராகிறார். ஆனால், அவர் தோற்றுவித்த திருச்சபையில் புதுவிதப் பணியானது செயல் படுத்தப்படுகிறது. அது அவரது வார்த்தை மற்றும் அருளுக்குப் பணி செய்வதாக உள்ளது.

**II. திருச்சபையில் பணி:**

1. **அப்போஸ்தலத்துவப்பணி:** தங்களது செயலை ஊழியமாக நோக்குமாறு இயேசு தனது அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தார். நாடுகளின் தலைவர்கள் புரவலர்களாகவும் தலைவர்களாகவும் கருதப்பட விரும்பினர். ஆனால் அவரது எடுத்துக்காட்டைப் பின் பற்றி அப்போஸ்தலர்கள் அனைவருடைய ஊழியராக இருக்க வேண்டும் (மாற் 10:42:44). அவர்கள் அவரது ஊழியர்கள். இப்பட்டத்தின் கீழ்தான் தந்தையின் மகிமைக்குள் அவர்கள் அவருடன் நுழைவர் என அவர் வாக்களிக்கின்றார் (யோவா 12:26). அப்போஸ்தலர் பணி நூலின் தொடக்கம் முதலே அப்போஸ்தலத்துவமானது ஒரு பணியாகக் காட்டப்படுகிறது (அ.ப. 1:17.25). மற்றப் பதினொருவருடன் சேர்ந்து அதனை நிரப்புமாறு மத்தியாவும் அழைக்கப்படுகிறார். அப்போஸ்தலத்துவத்திற்கான பவுலின் அழைப்பு (உரோ 1:1) பணிக்கான ஓர் அழைப்பாகும் (1 திமொ 1:12; 2 கொரி 4:1). அதனைத் தகுதியுடன் நிறைவேற்றுவதற்காக பவுல் முயற்சியெடுக்கிறார் (அ.ப. 20:24). அதன் விளைவாக இறைவன் புறவினத்தாருக்கும் மீட்பை அளிக்கிறார் (21:19). இவ்வாறு இறைவனுடைய பணியாளராகவும் (2 கொரி 6:3-4), கிறிஸ்துவினுடைய பணியாளராகவும் இருப்பதை உணர்ந்தவராய் (11:23), இந்த அலுவலின் உயர்வு பற்றிய உயிருள்ள உணர்வை அவர் கொண்டுள்ளார். இது மோசேயினுடையதை விட உயர்ந்ததே. ஏனெனில், இது புதிய உடன்படிக்கையினுடைய நீதியினுடைய, ஆவியினுடைய (3:6-9), ஒப்புரவினுடைய (5:18), நற்செய்தியினுடைய (கொலோ 1:23; எபே 3:7), திருச்சபையினுடைய (கொலோ 1:25) ஒரு பணியாகும்.

2. **பல்வேறுபட்ட பணிகள்:** ஆயினும் புதிதாகத்தோன்றிய திருச்சபையினுடைய பணியானது, அப்போஸ்தலத்துவ செயல் முறை என்று அழைக்கப்படுவதையும் கடந்துசெல்கிறது. பணி என்ற சொல்லானது முதலாவதாக உணவுபரிமாறுதல் (அ.ப. 6:1.4; லூக் 10:40), மற்றும் எருசலேமின் ஏழைகளுக்கான காணிக்கை சேகரிப்பு (அ.ப. 11:29; 12:25; உரோ 15:31; 1 கொரி 16:15; 2 கொரி 8:4; 9:1.12.13) போன்ற சமுதாயத்திற்கு அவசியமான உடல் சார்ந்த ஊழியத்தைக்குறிக்கிறது. இது தவிர அர்கிப்புவிற்கும் (கொலோ 4:17), திமொத்தேயாவுக்கும் (2 திமொ4:5), ஒருபணி ஒப்படைக்கப்படுகிறது. பணியாளர் என்ற பெயரானது பவுலைப் போன்று அப்பொல்லோவிற்கு (1 கொரி 3:5), திமொத்தேயுவுக்கும் (1 தெச 3:2; 1 திமொ 4:6), திக்கிக்குவுக்கும் (கொலோ 4:7; எபே 6:21), எப்பப்பிராவிற்கும் (கொலோ 1:7), யூதமயமாக்கும் போலி அப்போஸ்தலர்களுக்கும் கூட (2 கொரி 11:23) அளிக்கப்பட்டது. திருச்சபையில் பல்வேறுபட்ட பணிகள் இருந்தன என்பதை இது காட்டுகிறது (1 கொரி 12:5). ஏனெனில், "திருப்பணிக்குரிய வேலையை முன்னிட்டு இறைமக்களைப் பக்குவப்படுத்த ஆவியானவர் அக்கொடைகளை அளித்தார்" (எபே 4:12). இவ்விதமான ஒவ்வொரு ஊழியமும் இறைவனிடமிருந்து பெறப்பட்ட பொறுப்பென (1 பேதுரு 4:11) ஆவியினுடைய தூண்டுதலின் கீழ், பயன்படுத்தப்பட வேண்டும் (உரோ 12:7). இந்தச் செயல்கள் எதில் அடங்கியுள்ளன என்பதைப் பொறுத்திருந்தே காணவேண்டும். திருமுகங்களில் அளிக்கப்பட்டுள்ள கொடைகளின் அட்டவணையானது இறைவார்த்தைக்குத் தொடர்புடைய செயல்களை எப்போதும் மேலாகக் குறிப்பிடுகிறது (அப்போஸ்தலர், இறைவாக்கினர்,

போதகர், நற்செய்தியாளர்). ஆனால், எபேசியருக்கான, திருமுகம் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்ற மேய்ப்புப்பணிக்குரிய அலுவல்களை அது விலக்குவதில்லை (எபே 4:11).

**III. படி மரபுடைய பணி:**

1. அப்போஸ்தலர்களுடைய காலம் முதற்கொண்டு புதிய ஏற்பாடானது, அவர்களது செயலை நீட்டிக்கக்கூடிய அரசினுடைய படி மரபின் பிறப்பில் துணைபுரியச்செய்கிறது. எல்லா யூத சமூகங்களும் மூப்பர்களைத் தங்களுடைய தலைவர்களாகக் கொண்டிருந்தன. அவ்வாறே, மறைபரப்புப் பணியாளர்களாகிய பவுலும் பர்னபாவும் எல்லா இடங்களிலும் அவர்களை வழிநடத்த திருச்சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தினர் (அ.ப. 14:23). எருசலேமில் அப்போஸ்தலிக்கக் கூட்டத்தின் நேரத்தில் யாக்கோபின் தலைமையின்கீழ் உள்ள அவ்விடத்துச் சமூகத்தின் மூப்பர்கள் பன்னிருவருடன் சேர்வதை நாம் காண்கிறோம் (15:2.4.6.22-23; 16:4). பவுல் திரும்பி வரும்போதும் நாம் அவர்களை மீண்டும் காண்போம் (21:18). அதே போலத் தனது கடைசிப் பயணத்தின்போது மிலேத்துவில் எபேசிலிருந்து வந்த மூப்பர்களை வரவழைக்கிறார் (20:17). அது முதல் அப்போஸ்தலர்கள் நேரடியாகவோ, தங்களது பிரதிநிதிகள் மூலமாகவோ ஒவ்வொரு நகரிலும் மூப்பரின் சபையை அமைக்கின்றனர் (தீத் 1:5). அவர்களைச் சேர்ப்பதானது நுட்பமான விதிகளுக்குட்பட்டதாகும். கைகளை மேலே விரிப்பதன் மூலம் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் (1 திமொ 5:17-22). மூப்பர் சபைக்குத் தூய ஆவியினுடைய சிறப்பான கொடை தேவையாயிருந்தது என்பதை இந்தக் கடைசிக்கூறு காட்டுகிறது. எனவே, இஃது ஒரு சாதாரண ஆளுகைச்செயல் மட்டுமன்று. உண்மையில் யாக்கோபின் திருமுகத்தில், மூப்பர்கள் நோயாளிகளுக்காகச் செபித்து, தைலத்தால் அவர்கள்மேல் பூசுவதை நாம் காண்கிறோம் (யாக் 5:14). மேலும், கிறிஸ்தவ சபையில் அவர்கள் தலைமை வகித்தனர் என்றும் கூறப்படுகிறது (1 திமொ 5:17). தலைவர்களைப் பற்றிய பவுலின் குறிப்புகள் அனேகமாக மூப்பர்களைக் குறிப்பிடலாம் (1 தெச 5:12-13; உரோ 12:8). அவ்வாறே, எபிரேயருக்கான திருமுகத்திலும் தலைவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன (எபி 13:7.17.24).

2. ஆனால் பிலிப்பியருக்கான திருமுகம் ஆயர்களையும் திருத்தொண்டர்களையும் அருகருகே குறிப்பிடுகிறது (பிலி 1:1). கூருநிலையில் ஒரு படிமரபை நாம் அங்குக் காண்கிறோம். மேசையில் பணிபுரிய அப்போஸ்தலர்கள் ஏற்படுத்திய எழுவரில் (அ.ப. 6:1-6). அப்போஸ்தலர் பணிநூல் வருங்காலத் திருத்தொண்டர்களின் முன்னோடிகளைக் காண்பதாகத் தெரிகிறது. மேலும், இவர்கள் மூப்பர்களைப் போன்றே கைகள் விரிக்கப்படும் சடங்குடன் தங்களுடைய பணியை ஏற்றனர் (அ.ப. 6:6). அவர்களது பணியானது பொருளுதவியையும் கடந்துசென்றது. ஏனெனில், அவர்கள் போதிக்கவும் செய்தனர். பிலிப்பு நற்செய்தியாளராக வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார் (21:8). இத்தகைய திருத்தொண்டர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகளை மேய்ப்புப்பணி மடல்கள் விதிக்கின்றன (1 திமொ 3:8-13). அப்போது இது கீழானபணியைப் பற்றியதாகிறது. அதனுடைய கடமைகளைத் துல்லியமாக விவரிப்பதென்பது இயலாத ஒன்று. கெங்கிரேயாத் திருச்சபையைச் சேர்ந்த பெண் திருத்தொண்டர் பெபாவின் பணி இதே அமைப்பை உடையது அன்று (உரோ 16:1). ஏனெனில், வழிபாட்டுச் சபைகளில் பெண்களின் பங்கு பற்றி பவுல் அளித்த ஒழுங்கு முறைகள் மிகவும் கண்டிப்பானவை (1 கொரி 11:1-16; 14:33-34).

3. ஆயர்கள், அவர்களது பெயர் குறிப்பிடுவது போன்று, தன்மையால் சமூகங்களின்மேல் கவனமாய் இருக்க ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வையாளர்களாவர். இத்தகைய பதவி யூத

மதத்தில் அறியப்படாததன்று. கும்ரான் சமூகத்தில் பார்வையாளர் அதே போன்ற பணியைக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் இந்தக் கவனிப்புப் பணியைச் செயல்படுத்துபவர்களாக மூப்பர்கள் இருந்ததும் ஒவ்வொரு திருச்சபைக்கும் பொதுவானதாக இருந்தது. ஏனெனில், மேய்ப்பர்களின் மாதிரியாகவும் (1 பேதுரு 5:4), மேய்ப்பராகவும், ஆன்மாக்களை மேற்பார்வையிடுபவராகவும் உள்ள (1 பேதுரு 2:25) கிறிஸ்துவின் சாயலைப் பின்பற்றி, இறைவனின் மந்தையை மேய்க்கும் பணியை அவர்கள் கொண்டிருந்தனர் (அ.ப. 20:28; 1 பேதுரு 5:2-3). ஆனால், ஒவ்வொரு சமூகத்திலும் ஓர் ஆயர்மட்டுமே இருந்தார் என மேய்ப்புப்பணித் திருமுகங்கள் காட்டுகின்றன. அவர் மூப்பர்களிடையினிறு வெளிப்படையாக (தீத் 1:5-9), கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (1 திமொ 3:1-7). சந்தேகத்திற்கிடமின்றி, பவுல் பல அருங்கொடைகளில் ஒன்றாகக் கூறுகின்ற (எபே 4:11) மேய்ப்பரின் இப்பணியை நிறைவேற்றுபவரும் (அ.ப. 20:28-29), அப்போஸ்தலிக்கப் பொறுப்புகளில் ஒன்றினை நினைவிற்குக், கொணருபவரும் இவரே (யோவா 21:15-17); மத் 18:12-14). பவுலின் பிரதிநிதிகளாகிய தீத்துவும், திமொத்தேயுவும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபைகளுடைய மூப்பர்கள், திருத்தொண்டர்கள் மற்றும் ஆயர்கள்மீது அதிகாரம் கொண்டிருந்தார். திருவழிபாடு (1 திமொ 2:1-15) மற்றும் மறை கோட்பாட்டுப் போதனைகளைச் சார்ந்தவற்றில் (1 திமொ 4:6.13-16; 6:3) பொறுப்புகளைக் கொண்டிருந்தனர். ஆனால், போதனையைப் பொருத்தமட்டில் ஒவ்வொரு ஆயரும் தனது ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் கவனக்கண்காணிப்பைச் செயற்படுத்துகின்றனர் (தீத் 1:9). முதலில், அப்போஸ்தலர்களைச் சார்ந்திருந்த ஆட்சி அலுவல்களில் இந்தப் பிரதிநிதித்துவமானது திருச்சபையின் அமைப்பு வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது என்பதை காட்டுகிறது. அப்போஸ்தலர்கள் மறைந்த பின்னர், பின்வரும் மூன்று நிலைத் தலைமையில் அது தன்னை நிலைப்படுத்திக்கொண்டது. ஆயர் மேய்ப்பர், திருத்தொண்டர்கள் துணை புரிந்து மூப்பர்களால் சூழப்பட்ட சமூகத்தின் தலைவர். அவர்களது அலுவல்களைச் செயற்படுத்துவதற்கு அவசியமான அருங்கொடையானது முன்பு போலவே, கைகளை விரிக்கும் சடங்கினால் அவர்களுக்கு அளிக்கப்பட்டது (2 திமொ 1:6).

4. குருக்கள் என்ற பட்டமானது அப்போஸ்தலர்களுக்கோ, புதிய உடன்படிக்கையின் மற்றப் பணியாளர்களுக்கோ எங்குமே அளிக்கப்படவில்லை. ஆனால் அவர்களுடைய பணியானது, மனிதருடைய ஒரே தலைமைக்குருவாகிய இயேசு கிறிஸ்துவினுடைய குருத்துவப்பணியில் அவர்களை அமர்த்துகிறது. இப்பட்டத்தினால் அப்போஸ்தலர்களுக்குப் பிறகு அவர்கள் இறைவனுடைய (தீத் 1:7), அவரது மறை பொருள்களுடைய (1 கொரி 4:2), அவரது அருளினுடைய (1 பேதுரு 4:10) கண்காணிப்பாளராக உள்ளனர். இத்தகைய முன்னோக்கில்தான் கிறிஸ்தவ குருத்துவம் பற்றிய கருத்து வளர்ச்சியடைய இருக்கிறது. மூன்று நிலைகளில் (ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள்) படி மரபு செய்யப்பட்டு, புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட பணியுடன் தனது செயல்களால் ஒத்ததாகி, அதே அருங்கொடை வல்லமையால் செயல்படுத்தப்படுகிறது. இறுதியாக, அப்போஸ்தலிக்கப்பணியில் பிறருக்கு அளிக்கப்படக்கூடியவற்றிலிருந்து இந்தப் படி மரபு தோன்றுகிறது.

**பண்டபாத்திரங்கள், துணைக்கலங்கள் (UTENSILS)**

பாத்திரங்களையும், கருவிகளையும் குறிக்கப் பயன்படும் பொதுவான சொல்லாகும். இஃது உடன்படிக்கைக் கூடாரத்தின் பணிக்கான எல்லாப் பொன், பித்தளைப் பாத்திரங்களையும் குறிக்கும். சாம்பல் எடுக்கும் சட்டி, நெருப்பைத் தூண்டும் குறடு, முள், தீச்சட்டி, மேசைச் சாமான்கள், விளக்குத்தண்டு, தகனப்பலிபீடம், தூபப்பீடம் (யாத்

25:39; 27:3.19; 30:27-28; 31:8-9). இதே சொல் ஆலயத்தின் பணிக்கான எல்லாப்பொருட்களையும் குறிக்கும் (1 நாள் 9:28-29; 2 நாள் 24:14-19; 1 அர 10:21; 2 நாள் 9:20; எரே 27:18-21).

**பதர், சருகு (CHAFF)**

சுளகால் பொலி போடும்போது காற்றில் பறந்துசெல்லும் நுண்துகளான, காய்ந்த பொருள் பதர் என்று குறிக்கப்படும். பதர் பற்றிய விவிலியக்குறிப்புகள் எல்லாம் மதிப்பற்றது அல்லது அழிக்கப்படவிருக்கும் தீமையின் உருவங்களாகும் (யோபு 13:25; 21:18; சங் 1:4; 35:5; 83:13; எசா 17:13; 29:5; 33:11; 41:15; எரே 23:28; தானி 2:35: ஓசே 13:3; செப் 2:1; மத் 3:12; லூக் 3:17).

**பதனிட்ட தோல் (EATHERN)**

பதப்படுத்தப்பட்டு, மனிதனின் பயனுக்காக அல்லது தேவைக்கேற்பத் தயார்செய்யப்பட்ட விலங்குகளின் தோலாகும்.

முற்காலத்திய மேற்காசிய நாடுகளிலும் பாலஸ்தீனத்திலும் தோலானது பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது அனைவரும் அறிந்தது. பதனிட்ட தோலினால் செய்யப்பட்ட உடைகள், அரைக்கச்சைகள், காலணிகள் போன்றவைகளைப் பயன்படுத்தியது பற்றி விவிலியத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன (ஆதி 3:21; லேவி 13:48; 2 அரச 1:8; எசே 16:10; மத் 3:4; மாற் 1:6; எபி 11:37). சரியான முறையில் தோலினைப் பதப்படுத்தாததால் சில தோலாடைகளில் 'தொழுநோய்' காணப்பட்டது (லேவி 13:47-59). இறைவனது திருப்பேழையையும் (யாத் 26:14), அதனோடு சேர்ந்த மற்றப் பொருட்களையும் (எண் 4:6) மூடப்பயன்படுத்தப்பட்ட தோல் திரைகள் அனைத்தும் பதனிடப்பட்ட தோலிலிருந்து செய்யப்பட்டவையாகும். நடைமுறை வாழ்வில் பயன்படுத்தப்படும் ஏராளமான பொருட்கள் (லேவி 13:48; எண் 31:20), தாவீதினுடைய சட்டைப்பை (1 சாமு 17:40) தோலினால் செய்யப்பட்டவையாகும். சிறிய விலங்குகளின் முழுத்தோல்களிலிருந்து தண்ணீர், பால், திராட்சைரசம் போன்றவற்றை ஊற்றி வைத்துக்கொள்ளப் பயன்படும் புட்டிகள், சித்தைகள் அல்லது துருத்திகள் தயார் செய்யப்பட்டன (ஆதி 21:14; நீதி 4:19; 1 சாமு 1:24; யோபு 38:37; மத் 9:17). தோல் எழுதுவதற்கும் பயன்பட்டது. கி.மு. 150-ஆவது ஆண்டைச் சேர்ந்த சாக்கடல் சுருள்களிலுள்ள எசாயா நூலின் கையெழுத்துப் பிரதிகள், சேர்த்துத் தைக்கப்பட்டிருந்த சொரசொரப்பான தோல்களிலிருந்து தயாரிக்கப்பட்ட, பதினேழு தோலினாலான தாள்களால் செய்யப்பட்ட சுருளில் எழுதப்பட்டிருந்தன. பதான் (PADDAN – சமவெளி)

பதான் - ஆராம் என்ற பெயரின் சுருக்கமான வடிவம் (ஆதி 48:7).

**பதான் - ஆராம் (PADDAN-ARAM - ஆராம் சமவெளி)**

வடக்கு மெசபொத்தாமியாவில் இருந்த இந்த இடம், யூத மூதாதையரின் சொந்த நாடு ஆகும் (ஆதி 25:20; 28:2; 48:7). காரான் நகர் இந்த இடத்தைச் சேர்ந்ததே. மெசபொத்தாமியாவின் நகரங்களில் வாழ்ந்து வந்த இந்த மூதாதையர்கள், கால்நடைகளையும் வளர்த்து வந்தனர். சிலர் வியாபாரத்திலும் முழு ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இவர்களின் மொழி அரமேயிக் ஆகும் (ஆதி 31:49). மேலும், இக்குழுவில் இருந்தவர்கள் எல்லாம் 'அரமேயர்' என அழைக்கப்பட்டனர் (ஆதி 31:24).

யாக்கோபு, ஏசாவிடமிருந்து பாதுகாப்பிற்காகத் தப்பிக்கவும் அவர்களின் உறவினர்களிடையே ஒரு மனைவியைத் தேடவும் (ஆதி 28:7; காண்க. 27:42-45), ரெபேக்காவின் தந்தையும் தன் பாட்டனுமாகிய பெத்துவேலின் வீட்டிற்கு, பதான் – ஆராமுக்குச் சென்றார் (25:20). அங்கு ராகேல் மற்றும் லேயாவை மணந்து (ஆதி (35:23-26; 46:15). பெரும் செல்வந்தர் ஆனார்.

**பதிப்பு வேலை (INLAY)**

ஒரு பொருளின் உள்வெட்டுப்புழையில் மற்றொரு பொருள் துண்டுகளைப் பொருத்தி இணைப்பது பதிப்பு வேலையாகும். எசே 27:1-9-இல் வரும் தீர் நகரம் பற்றிய புலம்பலில், தீர் நகரம் ஒரு கப்பலுக்கு ஒப்பிடப்படுகிறது. அதில் "சைப்ரஸ் மரத்தினால் உன் மேல்தளம் கட்டி அதில் தந்தம் இழைத்தனர்" என்று கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் தந்தப் பொருள்கள் என்பவை பெரும்பாலும் தந்தம் பதிப்புச்செய்யப்பட்ட பொருள்களேயாகும். 1 அர 10:18-இல் வரும் சாலமோனின் அரியனை மரத்தால் செய்யப்பட்டு தந்தம், பொன் இழைக்கப் பட்டதாகும். இவ்விதமே ஆமோ 6:4-இல் எசேக்கிய சனகெரிபுவுக்கு அளித்த கப்பத்தில் தந்தத்தால் பதிப்பு வேலை செய்யப்பட்ட மஞ்சங்களும் சேர்க்கப்பட்டன. இதிலிருந்து இப்படிப் பதிப்பு வேலை செய்யப்பட்ட பொருள்கள் பெரிதும் மதிக்கப்பட்டன எனத்தெரிகிறது. 1 அர 22:39-இல் தந்தத்தால் கட்டிய வீடு; சங் 44:8; ஆமோ 3:15-இல் தந்தமாளிகை, தந்தத்தால் இழைத்த வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையும் கதவுகள், சன்னல்களில் அதிகமாகத் தந்தப்பதிப்பு வேலைப் பாடுடையவை என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும். சுமேரியர் காலத்திலிருந்து இக்காலம்வரை, பதிப்பு வேலைகள் வீட்டு அழகு சாதனங்களாக விளங்கியுள்ளன. தொடக்க பதிப்பு வேலைகளில் எலும்பு, முத்து, சிப்பிகள் போன்றவை பயன்பட்டுள்ளன.

**பதில் (ANSWER)**

வேண்டுகோளுக்கோ, வினாவுக்கோ அளிக்கப்படும் எதிர்ச்சொல். பேசுவதைக்குறிக்கும் கிரேக்கச்சொல்லோடு சேர்த்துப் பயன்பட்டுள்ளது. லூக் 2:47-இல், இயேசுவின் "பதில்களில் விளங்கிய அறிவுத்திறன்" வயதுக்கு மீறிய அறிவாற்றலைச் சுட்டவில்லை. மாறாக, இயேசு ஆன்மீகக் காரியங்கள் மற்றும் யூத விசுவாசத்தின் உடன்படிக்கைப் பொறுப்புகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டதைக் குறிக்கிறது (காண்க. சங் 119:99-100).

**பதிவாளர் (RECORDER)**

இஸ்ராயேலர் அரசவையில் ஓர் உயர் பதவி அதிகாரி. தொடக்ககாலத்தில், அரசனுடைய சட்டங்களையும் தீர்ப்புகளையும் ஒருவேளை, மக்களின் பழக்கவழக்கங்களையும் பாதுகாத்து வந்தவர். இவர் அரசனுக்கு ஆலோசனை கூறினார். அரச செயல்பற்றிய குறிப்பேடுகளுக்குப் பொறுப்பானவர். தாவீதுக்கும், சாலமோனுக்கும் யோசபாத்து பதிவாளராகப் பணிபுரிந்தார் (2 சாமு 8:16; 1 அர 4:3; 1 நாள் 18:15). ஆசாபின் மகனான யோவாகு எசேக்கியாவின் பதிவாளராக இருந்தார் (2 அர 18:18.37; எசா 36:3.32). இவர், யோசியா அரசன் காலத்தில் ஆலயத்தைப் பழுதுபார்த்தவர் களுக்குக் கூலி கொடுப்பதில் ஈடுபட்டிருந்தார் (2 நாள் 34:8).

**பதிவு செய்தல், கணக்கெடுத்தல் (ENROLL-MENT)**

குடும்பம், குலம், நிலை இவற்றிற்கேற்ப பொதுப்பதிவேட்டில் மக்களைப் பதிவு செய்தல். இத்தகைய தலைமுறை அட்டவணைகள் பல ஊர்களில் இருந்திருக்கலாம். படைவீரர்களைக் கட்டாயமாக இராணுவத்தில் சேர்ப்பதற்காகப் பதிவு செய்து கொள்வது வழக்கம் (எண் 1:2-3; 2 சாமு 24:1-9; 1 நாள் 7:40; 21:1-5; 2 நாள் 25:5). தாவீதும், சாலமோனும் கட்டாய வேலையில் சேர்ப்பதற்காக புறவினத்தார்களையும் பதிவு செய்தனர் (2 நாள் :217). தங்களது குருத்துவப்பணிக்கும், ஊதியத்துக்கும் தாங்கள் தகுதியானவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, குருக்கள் தங்கள் குடும்பப் பதிவேட்டை வைத்திருந்தனர் (1 நாள் 23:3; எஸ் 2:61-63; நெகே 7:61-65). வரி விதிப்பதற்காக உரோமை அரசாங்கம் மக்களின் பெயர்களைப் பதிவு செய்தது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது (லூக் 2:2; அ.ப. 5:37).

**1. பழைய ஏற்பாட்டில் 'பதிவு செய்தல்':**

அரசர்கள் ஆட்சி செய்வதற்கு முன்

இஸ்ராயேலில் இராணுவத்திற்கு மக்களைப் பதிவு செய்வது வழக்கமாக இருந்தது (எண் 1:2-3; 1 நாள் 7:40). அதன் பிறகு, அரசன் சண்டைக்குச் செல்ல விரும்பிய போதும் மக்களைப் பதிவு செய்தனர் (2 சாமு 24:1-9; 1 நாள் 21:1-5; 2 நாள் 25:5).

அரசாங்கப் பதிவேடுகளைத் தவிர, குடும்பம், குலம் இவற்றின் அடிப்படையிலும் தலைமுறைப்பதிவேடுகள் பாதுகாக்கப்பட்டன (எசே 13:9). அவர்கள் குடும்பம், மூதாதையர்கள், குல ஒற்றுமை முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாலும், ஆபிரகாமின் மக்களாயிருப்பதைப் பற்றியும், இறைவனின் வாக்குறுதியின் மக்களாக இருப்பதைப்பற்றியும் பெருமைப் பட்டதாலும், தலைமுறைப் பதிவேடுகளைப் பாதுகாத்து வந்தனர். யோத்தாம் இரண்டாம் எரோபயாம் ஆகியவர்களின் காலத்தில் தலைமுறைப் பதிவேடு ஒன்று இருந்ததாக நாளாகம ஆசிரியர் கூறுகிறார். எப்பொழுது, எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்தகைய பதிவுகள் செய்யப்பட்டன என்பது தெரியவில்லை. தலைமைக்குரு ஒருவரின் குடும்பத்தலைமுறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பதிவாகியிருந்ததாக யோசிப்பசு கூறுகிறார். இத்தகைய தலைமுறைப் பட்டியல்களைக் குருத்துவ ஆசிரியரும், நாளாகம ஆசிரியரும் பயன்படுத்துகின்றனர்.

2. புதிய ஏற்பாடு: அகுஸ்து உரோமைப் பேரரசாகவும், கிரேனியு சீரியாவின் ஆளுநராகவும் இருந்தபோது, யூதர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தின்படி தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய, தத்தம் ஊருக்குச் சென்றதாக லூக்கா கூறுகிறார் (லூக் 2:2). இதுவே முதல் கணக்கெடுப்பு என்றும் அவர் கூறுகிறார். எனவே வேறு பல கணக்கெடுப்புகளும் இருந்திருக்க வேண்டும். கலிலேயனான யூதா காலத்தில் இத்தகைய கணக்கெடுப்பு நடந்தது (அ.ப. 5:37). எகிப்துநாட்டில் 14 ஆண்டுகளுக்கொரு முறை கணக்கெடுப்பு நடந்ததாக எகிப்து புல்தாள்கள் தெரிவிக்கின்றன. விப்ரியு மாக்சிமுஸ் (கி.பி. 104) என்பவரின் அரச கட்டளையிலும் இத்தகைய கணக்கெடுப்பு பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது.

முதல் கணக்கெடுப்பு நடந்ததாக லூக்கா கூறும் காலத்தைப்பற்றி, சிலர் ஐயம் எழுப்புவர். ஏனெனில், விவிலியத்திற்குப் புறம்பான நூல்களில் இத்தகைய உலக மக்கள் கணக்கெடுப்பு இயேசு பிறந்தபோது நடந்ததாகக் கூறப்படவில்லை. மேலும், கி.பி. ஆறாம் ஆண்டில் நடந்த கணக்கெடுப்பின் போது, கிரேனியு சீரியாவின் ஆளுநராக இருந்தார். ஆனால், கி.மு. 8 அல்லது 6-ஆம் ஆண்டில் சென்சியு சாத்துரினு என்பவர் ஆளுநராக இருந்தார். ஆனால் 'ஆளுநர்' என்ற சொல் கிரேனியுக்கும் பொருந்தும். இவர் இக்காலத்தில் சீரியாவில் ஓர் இராணுவப்பதவியைக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், இவர் அதிகாரப்பூர்வமான பிரதிநிதியாக இருந்ததாகத் தெரியவில்லை.

### பதிவேடு (REGISTER)

குடிக்கணக்கெடுப்பின்போது முறைப்படி ஒவ்வொரு வீட்டிலும் தலைவனும், ஒவ்வொரு வீட்டிலும் போருக்குச் செல்லத் தகுதியான ஆணும் தம் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு எடுக்கும் பதிவேடுகள் பின்னர் வந்த யூதர்களுக்குத் தங்கள் தலைமுறை அட்டவணையை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்பட்டன; முக்கியம் வாய்ந்ததாக அமைந்தன.

### பதினொருவர் (ELEVEN, THE)

உயிர்ப்பை விவரிக்கின்ற பகுதியிலே காட்டிக்கொடுத்த யூதாசைக் கழித்துவிட்டு இயேசுவின் பன்னிரு சீடர்களைக்குறிக்கும் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 28:16; மாற் 16:14; லூக் 24:9.33; 1 கொரி 15:5). அ.ப. 1:26, "பதினொரு அப்போஸ்தலர்கள்" என்ற கணக்கெடுப்பு செய்து, யூதாசை நீக்கிவிட்டு மத்தியாவின் தேர்ந்தெடுப்பை விவரிக்கிறது.

### பதுமராகம் (CARNELIAN, SARDIUS)

இது கடினமான சிவப்பு - ஆரஞ்சு ஆழ்ந்த சிவப்பு அல்லது சிவப்பு-வெள்ளை சேர்ந்த

நிறமுறைய மணிக்கல் வகையைச் சேர்ந்தது. விவிலியத்தில் குறிக்கப்படும் பல கற்களில், இது பாலஸ்தீனத் தொல்பொருள் ஆய்வு இடங்களில் ஓரளவு காணப்படும் ஒன்றாகும். இது தலைமைக் குருவின் மார்புப்பட்டையிலும், ஏபோதிலும் பதிப்பிக்கப்பட்ட கற்களில் ஒன்றாகும் (யாத் 28:17; 39:10). தீர் அரசன் தன்னை அழகுபடுத்திய விலையுயர்ந்த கற்களில் இதுவும் ஒன்று (எசே 28:13). விண்ணக அரியணையில் வீற்றிருந்தவர் பற்றிய விவரிப்பில் இது குறிக்கப்படுகிறது (திருவெளி 4:3). புதிய எருசலேமின் சுவரின் ஆறாவது அடிக்கல் பதுமராகத்தால் ஆனது (21:20).

**பத்சூவா (BATH - SHUA - சூவாவின் மகள்)**

1. யூதாவின் கானானிய மனைவியும், ஏர், ஓனான், சேலா ஆகியோரின் தாயும் ஆவாள் (1 நாள் 2:3).

2. பத்சேபா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 3:5).

**பத்சேபா (BATHSHEBA - நிறைவின் மகள்)**

எலியாமின் (2 சாமு 11:3) அல்லது அம்மியேலின் (1 நாள் 3:5) மகள். தாவீது மற்றும் அப்சலோமின் ஆலோசகரான அகித்தோப்பலின் பேத்தி (2 சாமு 23:24). இவள் இத்தியனான உரியாவின் மனைவி ஆவாள். இவள் மேல் தாவீது காதல் கொண்டார். இவள் தன்னால் கருத்தரித்திருக்கிறாள் என்பதை அறிந்த தாவீது, இவளது கணவனைப் போரில் கொல்லச் செய்தார் (11:2-21). பிறகு தாவீதின் மனைவியானாள். இந்த விபசாரத்தினால் இவள் சிமயா, சோபாபு, நாத்தான், சாலமோன் ஆகியோருக்குத் தாயானாள்.

தாவீதுக்குப் பிறகு அரசாட்சியை ஏற்றுக் கொண்ட சாலமோனின் தாய் இவளே (2 சாமு 12:15-25). இதன் பிறகு 'அதோனியா "நான் அரசன் ஆவேன்" என்று சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தபோது நாத்தான் இறைவாக்கினர் உதவியால் சாலமோனை அரசர் என்று அறிவிக்க, தாவீதைத் தூண்டியவளும் இவளே (1 அர 1:5-40). அபிசாகைத் தனக்கு மணம் முடித்துத்தருமாறு கேட்ட அதோனியாவின் வேண்டுகோளை, இவள் சாலமோனிடம் எடுத்துச்சொன்னாள். அதன் விளைவாக அதோனியா உயிர் இழந்தான் (2:13-25). இப்பெயரின் மற்றொரு வடிவம் பத்சூவா ஆகும் (1 நாள் 3:5). புதிய ஏற்பாட்டில் பத்சேபா சேர்க்கப்பட்டிருக்கிறது (மத் 1).

**பத்தனேயா (BATANEA)**

பாசானின் மற்றொரு பெயர். பெரிய ஏரோது அரசின் நான்கு பகுதிகளில் ஒன்று.

**பத்தாரா (PATARA - மிதிபட்ட)**

லீக்கியாவின் பழைய நகரமான பத்தாரா, சான்துஸ் ஆற்றின் முகத்துவாரத்திற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. இந்த இடத்திலிருந்த நல்ல துறைமுகமும், கடல் வாணிபமும், வளமிக்க சாந்துஸ் பள்ளத்தாக்குடன் வியாபாரமும் இந்நகரை லீக்கியாவின் பெரிய வளம் கொழிக்கும் நகரங்களுள் ஒன்றாகச் செய்தது. இந்த நகர் அப்பொல்லோவின் மகனான பத்தாருவினால் நிறுவப்பட்டது. பத்தாரா மத வழிபாட்டில் முக்கியமாக, இம்மக்கள் அப்பொல்லோவை, இப்பொல்லோ பத்தாரு என்ற பெயருடன் வழிபட்டனர். அப்பொல்லோவின் ஆலயமும், பத்தாரா குறி சொல்லுதலும் புகழ் வாய்ந்ததாகும். பழங்கால அரங்கங்கள், குளங்கள், சுவர்கள் போன்றவைகளின் அழிவுச்சின்னங்கள் இன்னும் உள்ளன. இது தற்போது கெலேமிஸ் என வழங்கப்படுகிறது. தோலமிகள் லீக்கியாவை ஆதிக்கம் செலுத்தியபோது தோலமி பிலதெல்பு பத்தாராவை விரிவுபடுத்தி ஆர்சினோ என மறுபெயரிட்ட போதிலும் அப்பெயர் பொதுவாக மரபில் வழங்கப்படாமல் விரைவில் மறைந்துவிட்டது. மேலும் பத்தாரா எகிப்துடன் சிறந்த வாணிப உறவு கொண்டிருந்தது. மத்தியதரைக்கடலில் மேற்கு நோக்கி வீசும் காற்று எகிப்திலிருந்து லீக்கியா செல்லவும், சிறிய ஆசியா செல்லவும் பத்தாரா உதவுகிறது.

பவுல், எருசலேம் நோக்கிய தனது

இறுதிப்பயணத்தில் மிலேத்து, கோசு, ரோது வழியாக பத்தாரா துறைமுகத்தை அடைந்தார். பாலஸ்தீனத்தை அடைய, அவர இங்குக் கப்பல் மாற்றி, சைப்பிரசுக்கு மேற்கிலும் தெற்கிலும் பயணம் செய்து தீரை அடைந்தார் (அ.ப. 21:1-3).

**பத்திரொக்குல் (PATROCLVS)**

இவர் நிக்கானோரின் தந்தையாவார். இந்த நிக்கானோர் யூதா மக்கபேயுவுக்கு எதிராய்ப் போர்தொடுக்க அனுப்பப்பட்ட தளபதிகளில் ஒருவர் (2 மக் 8:9).

**பத்திரொபா (PATROBAS)**

உரோமைத் திருச்சபையில் ஒருவராவார். பவுலால் உரோமையர் மடலில் வாழ்த்தப்பட்ட ஒரு கிறிஸ்தவர் ஆவார் (உரோ 16:14).

**பத்திலொரு பங்கு (TITHE)**

வருமானத்தில் அல்லது சொத்தில் பத்திலொரு பங்கைக் குருக்களின் மற்றும் மத சம்பந்தப்பட்ட தேவைகளுக்குக் கொடுப்பது இஸ்ராயேல் மக்களின் பழக்கம். இந்தப் பழக்கம் மிகவும் தொன்மையானது. இப்பழக்கம் செமித்திய மக்களிடம் மட்டுமல்லாமல் மற்றப் பல இனத்தவரிடத்திலும் இருந்து வந்தது. பழைய ஏற்பாட்டில் இப்பழக்கம் வெவ்வேறு முறைகளில் செயல்படுத்தப் படுவதைக் காண்கிறோம். எனவே ஒரு தெளிவான, முழுமையான வரலாற்றை இப்பழக்கத்தில் காண்பது அரிது. இருப்பினும் பொதுவாக நான்கு காலக்கட்டங்களில் இப்பழக்கத்தின் நிலையை நாம் காணலாம்.

**1. பழைய ஏற்பாட்டின் தொன்மையான குறிப்புகள்:**

ஆதி 28:22-இல் பெத்தேல் என்னும் புனித இடத்தில் யாக்கோபு, தான் கடவுளுக்குப்பத்திலொரு பங்கு செலுத்துவதாக நேர்ச்சி செய்வது கூறப்படுகிறது. இதே குறிப்பை ஆமோ 4:4-இல் நாம் காணலாம். 1 சாமு 8:15. 17-இல் எவ்வாறு இஸ்ராயேல் மக்கள் ஓர் அரசனுக்குத் தங்கள் உடைமையில் பத்திலொரு பாகம் செலுத்தித் துன்பப்பட வேண்டுமென்பது கூறப்படுகிறது. ஆதி 14-இல் ஆபிரகாம், மெல்கிசெதெக்கிடம் அளிக்கும் பத்திலொரு பாகம், கேள்விக்குரிய ஒன்றாகும். ஏனென்றால் இக்குறிப்பின் காலம் வரையறுக்கப்படவில்லை.

தொடக்ககாலத்தில், அதாவது உடன்படிக்கையின் காலத்தில் இந்தப்பழக்கம் நடைமுறையில் இல்லை. இதற்குப் பதிலாக விளைச்சலின் முதற்கனிகளை அளிக்கும் பழக்கம் இருந்துவந்தது. இரண்டும் ஒரே தோற்றம் கொண்டிருந்திருக்கலாம். காலப்போக்கில், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடையாக ஏற்பட்டதுதான் பத்திலொரு பாகம் அளிப்பது என்பது. குறிப்பாக வட புனிதத் தலங்களில் இப்பழக்கம் ஆரம்பமானதாக இருக்கலாம்.

**2. உப ஆகமத்தில் பத்திலொரு பாகம்:**

உப ஆகமத்திலிருந்துதான் முறையான பத்திலொருபாகம் கொடுக்கும் பழக்கம் ஆரம்பமானதற்கான குறிப்புகள் விவிலியத்தில் நாம் காண்கிறோம்.

**அ. பத்திலொரு பாகம் அளிப்பதின் விதி முறைகள்:**

பத்திலொரு பாகத்தை இருவகையாக அளிக்கலாம் என உப ஆகமம் கூறுகிறது. முதலாவதாக, விளைச்சலில் பத்திலொரு பாகம் வருடா வருடம் குடும்பக் காணிக்கையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனில், காணிக்கை செலுத்த வேண்டிய குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து ஒரு புண்ணியத்தலத்தில் விருந்து ஒன்றைத் தயாரித்து அதற்கு லேவியர் ஒருவரையும் அழைக்க வேண்டும் (உப 14:22-27; காண்க. 12:6-19). இரண்டாவதாக, பத்திலொரு பாகத்தை மூன்று வருடத்திற்கு ஒருமுறை அறச்செயல்களில் பயன்படுத்த வேண்டும் (உப 14:28-29: 26:12-15). அதாவது, பத்திலொரு பாகத்தை லேவி, அன்னியன்,

திக்கற்றவன், விதவை ஆகியோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, உப ஆகமத்தின்படி பத்திலொரு பாகம் கொடுப்பது என்பது இறைவன்தான் விளைச்சலைக் கொடுக்கும் பூமிக்குச் சொந்தக்காரர் என்று அங்கீகரிப்பதாகும். மேலும், இது குருக்களின் தேவைக்காகவும், அறச் செயல்களுக்காகவும் கொடுக்கப்படுகிறது.

ஆ. பத்திலொரு பாகம் கொடுப்பதற்கும், முதற்கனிகளைக் கொடுப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு.

பத்திலொரு பாகம் கொடுப்பதும் முதற்கனிகளை அளிப்பதும் ஒரே செயலா என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. உப 26:1-15-இல் நாம் காணும் விவரங்கள் பத்திலொருபாகம் மற்றும் முதற்கனிகளைக் கொடுப்பதைப் பற்றிக் கூறுகின்றன. இதிலிருந்து பத்திலொருபாகம் கொடுப்பது, முதற்கனிகளை அளிக்கும் பழக்கத்திற்குப் பின்னர் ஏற்பட்டதாக நாம் அறிகிறோம். உப ஆகமத்தின்படி பத்திலொருபாகம் கொடுப்பது இஸ்ராயேல் மக்களிடம் காணப்பட்ட ஒரு பழக்கமாகும். இது முதற்கனிகளை வழங்கும் பழக்கத்துடன் தொடர்புடையதாகும். மேலும் வெவ்வேறு முறையில் இதுசெலுத்தப்பட்டது. மனிதனுடைய எல்லா உடைமைகளும் இறைவனுக்கே சொந்தமானவை என்பதை இரண்டும் எடுத்துக் காட்டுகின்றன.

3. குருக்களின் நியமங்களுக்கும் பத்திலொருபாகத்துக்கும் இடையேயான உறவு: பத்திலொரு பாகம் முழுவதும் லேவியருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டதில் பத்திலொரு பாகத்தை லேவியர்கள் குருக்களுக்குக் கொடுக்க வேண்டும் (எண் 18:20-32). குருக்களின் நியமங்களின்படி பத்திலொருபாகம், பலிகளோடு தொடர்புடையது. குருக்களின் நியமங்களும் உப ஆகமத்தைப் போலவே பத்திலொருபாகம் விளைச்சலின் ஒரு பகுதியே எனக்கூறுகிறது (லேவி 27:30-31). இதே பழக்கம் பிற்பாடு நெகே 10:37-38; 12:44; 13:5-இல் உறுதிப்படுத்தப்படுகிறது. மலா 3:8,10-இல் பத்திலொருபாகம் கொடுப்பது வற்புறுத்தப்படுகிறது. சில பகுதிகள் விலங்குகளிலும் பத்திலொரு பங்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றன (லேவி 27:32-33; 2 நாள் 31:5-12).

4. பிற்கால யூத மரபில் பத்திலொரு பாகம்:

இருவகையான பத்திலொருபாகம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டன. முதல் வகையில் லேவியர்களுக்குப் பத்திலொருபாகம் வழங்கப்பட்டது. இதன் கடுமையை இயேசு கண்டிக்கிறார் (மத் 23:23; லூக் 11:42). இரண்டாவது வகை குடும்ப விருந்தில் பயன்படுத்தப்பட்டது. இதில் கால்நடைகளும் அடங்கும். இந்த இருவகைகளைத் தவிர மூன்றாவதாக ஒரு முறையும் காணப்படுகிறது. இஃது ஏழைகளைப் பராமரிக்க விதிக்கப்பட்ட பத்திலொரு பாகமாகும்.

## பத்துக்கட்டளைகள் (TEN COMMANDMENTS)

I. இது யாவேக்கும் இஸ்ராயேலுக்கும் இடையிலான உடன்படிக்கைக் கோரிக்கைகளின் சுருக்கமாகும். இச்சொல் யாத் 34:28; உப 4:13; 10:4-இல் வருகிறது. இப்பகுதியில் மோசே இச்சட்டங்களை எழுதும்படி கட்டளையிடப்படுகிறார். இவை காலந்தோறும் சமய, பண்பாட்டு வளர்ச்சியிலும் வரலாற்றிலும் சமூக அமைப்பின் பேருரிமைப்பத்திரமாக விளங்குகின்றன.

II. பிரிவுகள்: இக்கட்டளைகள் ஓரளவு வேறுபட்ட இருவடிவில் விவிலியத்தில் வருகின்றன. இவற்றை யாத் 20:2-17; உப 5:6-21 ஆகிய பகுதிகளில் வாசித்து ஒப்பிட்டறிக. இவற்றிற்கு எண்ணிக்கை அளிப்பதில் பல வேறுபாடுகள் உண்டு. மூன்று முக்கியமான பிரிவு முறைகளை இங்குத் தருகிறோம்.

அ) முதல் முறை: இதைப் பீலோ, யோசிப்பசு,

கிரேக்கத் தந்தையர், கிரேக்க மற்றும் சீர்திருத்தச்சபைகள் பின்பற்றுகின்றன. இதன்படி 1) போலி அல்லது அன்னியக் கடவுளுக்குத் தடை, 2) உருவங்களுக்குத் தடை, 3) இறை பெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத் தடை, 4) ஓய்வு கள், 5) பெற்றோர், 6) கொலை, 7) விபசாரம், 8) களவு, 9) பொய்ச்சாட்சி, 10) பிறர் பொருள் கவர்தல் என்பன.

**ஆ) இரண்டாம் முறை:** இம்முறை ஓரிசனால் தோற்றுவிக்கப்பட்டு அலக்சாந்தியா கிளமந்து, அகுஸ்தீன் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டது. இப்போது இலத்தீன் திருச்சபை, லூத்தரின் திருச்சபை ஆகியவை இதைப் பின்பற்றுகின்றனர். இதன்படி 1) போலிக்கடவுள்களுக்கும், உருவங்களுக்கும் தடை, 2) இறைபெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத்தடை, 3) ஓய்வு நாள், 4) பெற்றோர், 5) கொலை, 6) விபசாரம், 7) களவு, 8) பொய்ச்சாட்சி, 9) பிறர் மனைவியைக் கவர்தல், 10) பிறர் உடைமையைக் கவர்தல் என்பன.

**இ) மூன்றாம் முறை:** இதை இக்கால யூதர்கள் பயன்படுத்துகின்றனர். இதன்படி, 1) முகவுரை, "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்....", 2) போலிக் கடவுள்களுக்கும், உருவங்களுக்கும் தடை, 3) இறையின் பெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத் தடை, 4) ஓய்வு நாள், 5) பெற்றோர், 6) கொலை, 7) விபசாரம், 8) களவு, 9) பொய்ச்சாட்சி, 10) பிறர் பொருள் கவர்தல் என்பன.

இம்மூன்று முறைகளில் முதலாவது முறைபொருள் அளவில் சிறந்தது; ஒரு வேளை மூலமானதாக இருக்கலாம். இக்கட்டளைகள் இரு பிரிவாகப் பிரிக்கப்படலாம். முதல் பிரிவு இறைவன்பால் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகின்றது. இரண்டாம் பிரிவு பிற மனிதரிடம் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக்கூறுகிறது. இவற்றில் வாழ்வின் ஊற்றும் இறைவனின் பிரதிநிதிகளுமான பெற்றோர் முதன்மை பெறுகின்றனர். "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்..." என்ற முகவுரை ஒரு கட்டளையாக எண்ணப்பட்டாலும், இது கட்டளைகளுக்குப் புறம்பானதாகும்.

முதல் பிரிவு இறைவனைப்பற்றியதாகும். இதில் சமயத்தின் முதன்மை அழுத்திக் கூறப்படுகிறது. இறைவனை மட்டுமே வழிபடவேண்டும். இஃது எகிப்திலிருந்து விடுதலை அடைந்ததற்கும் உடன்படிக்கையெனும் கொடையைப் பெற்றதற்கும் இஸ்ராயேலர் அளிக்கும் நன்றியறிதலாகும். ஒரே இறைவனை வழிபடும் கட்டளைக்கு, சிலை வணக்கத்தைத் தடுக்கும் கட்டளை பாதுகாப்பு அளிக்கிறது. உடன்படிக்கை மக்களின் கதி அவர்களுடைய இறைவழிபாட்டின் தூய்மையைப் பொருத்ததாகும். இறைவன் பெயருக்கு வணக்கம் செலுத்துதல், ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் என்பன உடன்படிக்கை இறைவனுக்குக் காட்டும் அன்புமிக்க மரியாதையும் ஆராதனையும் ஆகும். அவருக்குக் காட்டும் பிரமாணிக்கமாகும்.

இரண்டாம் பிரிவு பெற்றோருக்கு மரியாதை காட்டுவது, ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய குடும்ப உணர்வு ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி, பிறர் பொருளைக் கவர்தல் என்பன தெளிவாகத் தடை செய்யப்படுகின்றன.

எதிர் மறையான வாக்கிய அமைப்பு நேர்முறையான பொருளை அழுத்திக் கூறவே பயன்படுகிறது. உடன்படிக்கையின் கீழ் நன்றியோடு வாழ்ந்து, அக்கொடைக்கேற்ப வாழ்க்கை அமைத்தலும் இந்த நேர்முறையான பொருளாகும். இக்கட்டளைகள் வெறுமனே புறக்கட்டளைகளை மட்டும் தரவில்லை. அகத்தூய்மையில் அக்கறை கொள்கின்றன. இவை ஒரு மனித ஒழுக்க அமைப்பைத் தருகின்றன. பத்துக் கட்டளைகள் இறைமக்கள் எல்லாருக்கும், எல்லா இடங்களிலும், எல்லாக்காலங்களிலும் உரியதாகும். யாவே ஓர் இனத்தாருடைய கடவுள் மட்டும் அல்லர். அது போல் அவரது கட்டளைகளும் எல்லா இன எல்லைகளையும் கடந்தது; முழு உலக ஒழுக்க

அமைப்பிலும் நிறைந்து நிற்கிறது. உலக இலக்கியம் முழுவதிலும் இதற்கு ஒத்த ஒழுக்கச்சட்டத்தைப் பார்ப்பது அரிது.

III. இந்தக் கட்டளைகள் பற்றிய இரு வாசகங்களையும் (யாத் 20:2-17; உப 5:6-21) வாசித்து, அவற்றிடையேயுள்ள வேறுபாடுகளைக் கண்டுணரலாம். இரண்டு வாசக வடிவமுமே மூல வடிவத்தைப் பிரதிபலிக்கவில்லை எனலாம். மூலத்தில், எல்லாக் கட்டளைகளுமே கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி ஆகியவை பற்றிய கட்டளைகளைப்போல் சுருக்கமாக இருந்திருக்கலாம் என்று விளக்கவுரையாளர்கள் கருதுகின்றனர். மற்றக் கட்டளைகள், அவற்றைக் கடைப்பிடிக்க உதவியாக , போதக உந்து காரணங்களால் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஓய்வுநாள் பற்றிய யாத்திரை ஆகம வாசகம், ஆதி 1:1-2:3-இல் வரும் இறைவன் ஆறுநாட்கள் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்வெடுத்தது உந்து காரணமாகக் காட்டப்படுகிறது. உபாகம வாசகம், எபிரேயர் குடும்பங்களும் மட்டுமன்று, எல்லாருக்கும் இக்கட்டளை உரியது என்று சுட்டுகிறது. ஒரு காலத்தில் எபிரேயர்கள் அடிமைகளாக இருந்தனர் என்பது மனிதாபிமான உந்து காரணமாக எடுத்துக் கூறப்படுகிறது. பிறர் பொருளைக்கவர்வது பற்றிய கட்டளை ஒரே எளிய கட்டளையாக இருந்திருக்க வேண்டும். இது பிறகு இரு முறையில் விரிவாக்கப்படுகிறது. யாத்திரை நூல் வாசகம், அயலாருடைய உடைமைகளையும் உள்ளடக்கும் குடும்பத்தைக் குறிப்பிட்டு விரிவாக்கப்படுகிறது. பிறகு, மனைவி, அடிமைகள், வீட்டு விலங்குகளையும் உள்ளடக்கும் முறையில் விரிவாக்கப்படுகிறது. உபாகம விரிவாக்கத்தில் மனைவி வெளிப்படையாகவும், தனியாகவும் குறிக்கப்படுகிறாள். பின்பு வீடு, அடிமைகள், விலங்குகளையும் உள்ளடக்கு முறையில் கட்டளை விரிவாக்கப்படுகிறது. இது குடும்ப வாழ்வு பற்றிய மிகவும் வளர்ச்சியடைந்த நோக்கைப் பிரதிபலிக்கிறது.

இக்கட்டளைகள் அல்லது தடைகள் நேரடியானவை; ஐயவாதமோ, நிபந்தனையோ உடையவையல்ல. இவை யாத்திரை ஆகம நூலில் பெற்றிருக்கும் இடம் மூல இலக்கியச் சூழ்நிலையைச் சார்ந்ததல்ல என்றும் குருக்கள் பாரம்பரியப் பின்னணியில் உள்ளன என்றும் இக்கால ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். உபாகமத்தில் இக்கட்டளைகள் கொண்டிருக்கும் இடம், சீனாய் உடன்படிக்கையோடு தொடர்புபடுத்தும் பாரம்பரியத்தைத் தழுவி இவற்றின் ஆசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் தொகுத்துள்ளனர் என்று காட்டுகிறது. இதுதான் இவற்றிற்குரிய இடமாகும். இவையெல்லாம், மூல, பழைய மற்றும் எளிய வடிவத்தை நீக்கி, குருக்கள் பாரம்பரிய இறுதி வாசக வடிவம் கொடுத்தவை என்று காட்டுகின்றன.

IV. பழைய ஆய்வாளர்கள் சிலர் இக்கட்டளைகள் மோசே காலத்தைச்சேர்ந்தவை என்பதை மறுத்தனர். இவர்கள் கருத்துப்படி, இக்கட்டளைகள் கி.மு. 8-7-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இறைவாக்கினர்களின் ஒழுக்கபோதனையின் சுருக்கமாகும். இதற்குச் சான்றாக, இவற்றின் சில பண்புகள், மோசே காலத்துப் பாலைவனத்து வாழ்க்கைக்குப் பொருந்துவதைவிட, கானானில் குடியேறிய காலத்து வாழ்க்கைக்குப் பொருந்துவதாக அமைந்திருக்கின்றன என்பர். சான்றாக, வீடு மற்றும் நிலம், எருது மற்றும் கழுதைகள் பற்றிய குறிப்புகள். உருவங்கள் தடை செய்யப்படுவது 8 அல்லது7-ஆவது நூற்றாண்டிலிருந்துதான் தொடங்கியது என்று கருதப்பட்டது. ஓய்வுநாள் நாடோடி வாழ்க்கைக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. ஆனால், நவீன காலக்கண்டுபிடிப்புகள் இந்த மறுப்புகளின் கனத்தைக் குறைத்துள்ளன. இக்கட்டளைகளின் உபாகம வாசக வடிவு, மன்னர்கள் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், இக்கட்டளைகள் வாசகத்தைவிட பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவையாக இருக்கலாம். பிற்கால விவிலிய இலக்கியத்தில் பத்துக்கட்டளைகள்

வெளிப்படையாக எடுத்துக்கூறப்படவில்லை என்பது உண்மையானாலும் உறுதியளிப்பதாக அமையவில்லை. மோசே காலம் என்பது மோசேக்கு மட்டும் சாற்றிக்கூறப்படுவதில்லை. ஆனால், அக்காலத்தில் அவர்தான் முதன்மையானவர். இப்படி மோசேக்குச் சாற்றிக்கூறுவது, கற்பலகைகள் இறைவனால் எழுதப்பட்டு (யாத் 34:12; உப 5:22), பின்பு மோசேயால் மீண்டும் எழுதப்பட்டன (யாத் 34:28) என்ற நிகழ்ச்சியுரை, இக்கட்டளைகளின் இறைத்தோற்றத்தையும் அதிகாரத்தையும் மிகவும் கற்பனை மிக்க விதத்தில் எடுத்துக் கூறுவதேயாகும். போலிக்கடவுள்களையும், உருவங்களையும் தடை செய்யும் கட்டளை, இஸ்ராயேல் சமயத்துக்குத் தனிச்சிறப்பான பண்பாகும். இதைப் பாரம்பரியம் மோசேக்குச் சாற்றிக் கூறுகிறது.

இறைவன் பெயரை வீணாகப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் கட்டளை, மந்திரவித்தைகளில் அப்பெயரைப் பயன்படுத்துவதற்கு எதிரானதாகும். பழங்கால இஸ்ராயேலில் மற்றக் கட்டளைகள் புரிந்து கொள்ளப்பட்ட விதம் பற்றி குடும்பம், திருமணம், கொலை, களவு ஆகிய தலைப்பின் கீழ்க் காண்க. பொய்ச்சாட்சியைத் தடைசெய்யும் கட்டளை சட்ட முறையைச் சேர்ந்ததாகும். பிறர் பொருள்களைக் கவர்வது பற்றிய தடை உள்ளார்ந்த செயலில் அக்கறை கொள்கிறது. தீமைகளுக்கு வேர் உள்ளார்ந்த ஆசையே. இத்தகைய தீய ஆசைகளைத் தடை செய்யும் கட்டளை, பத்துக்கட்டளை தோன்றியதாகக் கருதப்படும் எக்காலத்திலும், இஸ்ராயேல் ஒழுக்க மரபின் சிறப்புப் பண்பாகும்.

வழிபாடு சார்ந்த பத்துக்கட்டளைகளை, யாத் 3:14-26 என்ற பகுதியில் கண்டுபிடித்துள்ளதாக நவீன ஆய்வாளர்கள் சிலர் நம்புகின்றனர். உண்மையில், இப்பகுதியில் பத்துக்கு மேற்பட்ட கட்டளைகள் உள்ளன. சூழ்ச்சித்திறனுடன்தான் பத்து என்ற எண்ணிக்கையை அடைய முடியும். இவர்கள், யாத் 34:28-இல் வரும் "பத்துக்கட்டளைகள்" என்ற சொற்றொடர் வழிபாட்டின் பத்துக்கட்டளைகளைத்தான் குறிக்கிறது என்பர். இரண்டு பத்துக்கட்டளைகளும் மற்றக் கடவுள்களை வணங்குவதற்குத் தடை (34:14), உருவங்களுக்குத் தடை (4:17), ஓய்வுநாள் (34:21) ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்டுள்ளன.

V. புதிய ஏற்பாடு: தனிப்பட்ட கட்டளைகள் குறிக்கப்படுகின்றன. ஆனால், பத்து என்று ஓரிடத்திலும் குறிக்கப்படவில்லை. விபசாரம் (5:27) ஆகியவை பற்றிய தடை (உப 24; 1:1மத் 5:31) இணையாகக் கூறப்படுகிறது. யாத் 20:7; எண் 30:3; உப 23:22 ஆகியவை கலந்த வாசகம் மத் 5:33-இலும், யாத் 21:24; மத் 5:38-இலும் லேவி 19:18; மத் 5:43-இலும் எடுத்துக் கூறப்படுகின்றன. இயேசு அழிக்கவன்று நிறைவேற்ற வந்த சட்டம் இதுவே. எல்லா எடுத்துக்காட்டுகளும் யூதத்துவத்தின் உச்ச அதிகாரமான தோராவிலிருந்து எடுத்துக் கூறப்படுகின்றன. யாத் 20:12; மத் 15:4; எபே 6:2-3-இலும், உப 5:17-21; உரோ 13:9-இலும் யாத் 20:13 தொ (உப 5:7 தொ); யாக் 2:11-இலும் எடுத்துக் கூறப்படுகின்றன. முடிவில்லா வாழ்வு பெற விரும்பும் வாலிபனுக்குக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கச்சொல்கிறார் இயேசு. எக்கட்டளைகள்? என்ற கேள்விக்கு, இயேசு பத்துக்கட்டளைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். ஆனால், வழக்கமான வரிசையிலோ, முழுமையாகவோ அவர் கூறவில்லை. மத் 19:18-19-இல் கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி, பெற்றோரைப் போற்றுதல் ஆகியவற்றோடு அயலான்மேல் அன்பு காட்டுவது பற்றிய கட்டளை (லேவி 19:18) சேர்க்கப்படுகிறது. மாற் 10:9-இல் அதே கட்டளைகளோடு வஞ்சித்துப் பறிக்காதே என்றும் கூறப்படுகிறது. ஆனால், அயலார் அன்பு பற்றிய கட்டளை விடப்பட்டுள்ளது. லூக் 18:20-இல் விபசாரம், கொலை, களவு, பொய்ச்சாட்சி,

பெற்றோரைப் போற்றுதல் ஆகியவை பற்றிய கட்டளைகள் கூறப்படுகின்றன. இப்பகுதிகள், நற்செய்திகள் காலத்தில்கூட பத்துக்கட்டளைகள் அடிப்படை அளவில், நிலையான வடிவத்தையும் முக்கியத்துவத்தையும் அடையவில்லை என்பதைச் சுட்டுகின்றன. இந்நிலையைப் பிற்காலக் கிறிஸ்தவத்தில்தான் பத்துக்கட்டளைகள் அடையும்.

**பத்துக்கன்னியர் - உவமை (TEN VIRGINO-PARABLE)**

ஆண்டவரது இரண்டாம் வருகை யாரும் எதிர்பாராத நேரத்திலே திடீரென இருக்கும் என்பதை விளக்க இந்த உவமை கூறப்பட்டது (மத் 25:1-13). இந்த உவமையிலே வருகின்ற மணமகன் இறைமகன் இயேசு. இவர் இரண்டாம் வருகையின்போது வல்லமையோடும் மாட்சிமையோடும் வருவாரெனக் கூறப்பட்டுள்ளது (லூக் 21:27). விளக்குகளில் எண்ணெயோடு காத்திருக்கும் விவேகக் கன்னியர்கள் ஆண்டவரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் விசுவாசிகளைக் குறிக்கின்றனர். அறிவிலிகளான கன்னியர்கள் விசுவாசமற்றவர்களைக் குறிக்கிறார்கள். இந்த எண்ணெயாகிய விசுவாசம் வானக இன்பத்தை அடையவழி. விவேகிகள் எண்ணெய் தர மறுப்பது பேராசையால் அன்று. விசுவாசமானது மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள இயலாதது. மற்றவர்கள் தாங்களாகவே விசுவாசத்தை அடைய முயல வேண்டும். இறுதி வேளையிலே விசுவாசத்திற்காகத் தேடி அலைந்து பயனில்லை. ஏனெனில், தாமதிப்போரை ஆண்டவர் ஏற்பதில்லை.

**பத்மு (PATMOS)**

இஃது அகியன் கடலில் சிதறிக்கிடக்கும் தீவுகளுள் ஒன்று. இது மிலேத்துக்கு மேற்கு தென் மேற்கில் 60 கி.மீ. தொலைவிலும், எபேசுக்குத் தென்மேற்கில் 90 கி.மீ. தொலைவிலும், சாமோசுக்குத் தென் தென் மேற்கில் 45 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது வடக்கு-தெற்காக 16 கி.மீ. நீளமும், வட எல்லையில் அதிக அகலமாக 10 கி.மீட்டரும் கொண்டது. இது பாறைகளையும் எரிமலைகளையும் கொண்ட ஒரு தீவு. உரோமையர்கள் இத்தகைய சிறிய தீவுகளுக்கு அரசியல் குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டவர்களை அனுப்பினர். காட்சியாளரான யோவான் கடவுளின் வார்த்தையை அறிவித்ததற்காக பத்மு தீவிற்கு அனுப்பப்பட்டார் (திருவெளி 1:9). யோவான் தன் துன்பங்களால் துன்புறும் திருச்சபைகளுடன் அவற்றின் துன்பங்களைப் பகிர்ந்துகொள்கிறார் (திருவெளி 6:9; 20:4). யூசேபியுவின் கூற்றுப்படி, யோவான் தொமிசியன் பேரரசனால் கி.பி. 95-இல் நாடு கடத்தப்பட்டு, பதினெட்டு மாதத்திற்குப் பின்னர் நெர்வா பேரரசனால் விடுவிக்கப்பட்டார்.

யோவானின் சில காட்சிகள் இந்தத்தீவில் நடந்திருக்கக்கூடும் என்பதைப் பிரதிபலிக்கின்றன (10:2; 19:6). இவ்வாறு நாடு கடத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட நிலையை யோவான் அதிகம் உணர்ந்ததாகத் தெரிகிறது. ஆகவே எல்லைகளும் வரையறைகளும் நீக்கப்படுவதை, கடல் மறைந்து போவதாக உருவகப்படுத்துகிறார் (21:1).

இத்தீவிலுள்ள பல புனித இடங்களில், யோவான் காட்சி கண்டதாகப் பாரம்பரியம் கருதும் குகையும் ஒன்றாகும். இங்கு கி.பி. 1088-இல் புனித யோவான் பெயரில் ஒரு துறவியர் இல்லம் கிறிஸ்தோதுலோவால் நிறுவப்பட்டது.

**பத்ரபீம் (BATH - RABBIM- கூட்டத்தின் மகள்)** எஸ்போனின் வாயில். இது மீன்குளங்களுக்கு அருகில் இரபாவை நோக்கியிருந்தது (உ.ச. 7:4).

**பத்ருசிம் (PATHRUSIM - பத்ரோசின் மக்கள்)**

பத்ரோசின் மக்களாகிய இவர்கள், எகிப்தின் தென் பகுதியில் வாழ்ந்தனர். இப்பெயர் இன விளக்கவியல் பட்டியலில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 10:14; 1 நாள் 1:12).

**பத்ரோசு (PATHROS - தென்னிலம்)**

இஃது எகிப்தின் தென் பகுதியை அதாவது, எகிப்தின் மெம்பிசுக்கு மேலுள்ள அனைத்துப்

பகுதிகளையும் குறித்தது. அசீரிய ஏடுகளிலும் எசா 11:11-இலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின்படி பத்ரோசு மெம்பிசுக்குத் தெற்கிலிருந்து சீனிம் நீர் வீழ்ச்சிவரையுள்ள பகுதியைக்குறிக்கும். பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் இந்தப் பத்ரோசு குறிப்பிடப்பட்டுள்ளது. நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலர் சிலர் இங்குத்தப்பி ஓடினர் (எசா 11:11; எரே 44:1.15; எசே 30:14).

எசே 29:14-இல் பத்ரோசு எகிப்தியரின் முன்னோர் நாடு எனக்கூறப்படுகிறது. மேலும், பத்ரோசின் மக்கள் என்று பொருள்படும் பத்ரூசிம் என்ற பெயர் நாடுகளின் பட்டியலில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 10:14; 1 நாள் 1:12).

**பந்து (BALL)**

பந்தைப்பற்றிய ஒரே விவிலியக்குறிப்பு, எசேக்கியாவின் அரண்மனைப் பொறுப்பாளனாகிய செபுனாவின் பதவி இறக்கம் பற்றிய பகுதியில் வருகிறது (எசா 22:15-25). ஒருவேளை, செபுனா தனக்கெனத் தயாரித்துக் கொண்டிருந்த பறைக்கல்லறை அருகில் அவனைச் சந்தித்து, அவனது வீழ்ச்சியை முன்னறிவிக்கிறார் எசாயா. "ஆண்டவர் உன்னைத் தள்ளிவிட்டுத் தூக்கி எறிவார்; உன்னைக் கெட்டியாய் மடக்கிப் பிடித்து, சுற்றிச்சுற்றி, உன்னைச் சுழற்றி, பரந்து விரிந்த நாட்டிலே பந்தடுவார்". அதாவது ஆண்டவர் செபுனாவை அசீரியாவுக்கு நாடு கடத்துவார். இங்கு விளையாட்டில் பயன்படும் பந்தைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**பப்பிரஸ் (PAPYRUS)**

உயரமான நீர்நாணல் பயிர். பண்டைக் காலத்தில் எழுதுவதற்கு உதவும் ஒரு பொருளாக இது பெரிதும் கருதப்பட்டு வந்தது. பண்டைக்காலத்தில் இந்த நாணல் எகிப்து நாட்டுச் சதுப்புநில ஓரங்களில் பெருமளவிலும், நைல் நதியின் ஓரங்களில் சிறிதளவும் காணப்பட்டது. தற்சமயம் எகிப்தில் இத்தகைய நாணல் காணப்படுவதில்லை. வட எகிப்தியக் கலையின் சின்னமாக அது விளங்கிற்று. சூடானின் வட பாகத்தில் தற்சமயம் இது காணப்படுகிறது. பாலஸ்தீனத்தின் கூலே ஏரியின் சதுப்பு நிலங்களில் இது வளர்கிறது. இந்த நாணல் பட்டையையும் உள்ளீடான மென்சோறும் கொண்ட தண்டுடையது. இது நீருக்குமேல் 1.2 மீட்டர் முதல் 4.5 மீட்டர் வரை வளரக்கூடியது. உச்சியில் குடையைப் போன்று இலைகளைக் கொண்டது.

மரங்கள் அரிதாகக் காணப்பட்ட எகிப்தில், நாணல் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. படகு, கூடை, கயிறு போன்றவற்றைச் செய்வதற்கும், பிற பொருட்களைக் கட்டுவதற்கும் இது பயன்படுத்தப் பட்டது. எகிப்து மட்டுமே அந்நாட்களில் நாணலைத் தயாரிக்கும் நாடாக விளங்கியது. பின்னர், அதனை அண்டை மேற்காசிய நாடுகளுக்கும், கிரேக்க நாடுகளுக்கும், இத்தாலிக்கும் ஏற்றுமதி செய்தது.

நாணலை நீர்த் தாவரமாக யோபு 8:1 குறிப்பிடுகின்றது. எசா 18:2 நாணலால் உருவாக்கப்பட்ட படகினைச் சுட்டிக்காட்டுகிறது. யாத் 2:3-இல் குழந்தை மோசேயை வைத்த கூடை நாணலால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. எசா 35:7 குறிப்பிடும் புதிய பாலைவெளியில், புல் நாணலாகவும், கோரையாகவும் வளரும் என்று கூறப்படுகிறது. இதன் பொருள் பரந்த அளவினதாய் இருந்தாலும், நீர்ப் பெருக்கையே உருவகமாகக் குறிப்பிடுகின்றது.

நாணல் அதிக அளவு எழுதுபொருளாகப் பயன்படுத்தப்பட்டது. கி.மு. 3000 ஆண்டுகளில் தொடக்கத்திலிருந்து, கி.பி. 1000 வரை, எகிப்தில் நாணல் எழுதுபொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இஃது எகிப்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்தது. வென்-ஆமோன் பற்றிய நிகழ்ச்சியில், பிபிலோசு அரசனிடமிருந்து பெற்ற ஒரு கப்பல் நிறைந்த தேவதாரு மரங்களுக்கு ஈடாக அளிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியாக ஐந்நூறு சுருள் நாணலும் அடங்கும்.

எழுதும் தாள் நாணல் தண்டின் மென்சோறிலிருந்து தயாரிக்கப்பட்டது. முதலில்

மென்சோற்றுப்படைகள் செங்குத்தாக அடுக்கப்படும். அதன் மேல் மற்றொரு பட்டியல் கிடைநிலையில் அடுக்கப்படும். பின் ஒட்டுப்பொருள் சேர்க்கப்பட்டு அழுத்தப்பட்டு ஒரு தாளாக வடிவெடுக்கும்.

காய்ந்த பின்னர், கிளிஞ்சல் அல்லது சிறு கற்களால் அவை மெருகூட்டப்பட்டு, இணைக்கப்பட்டு, தாள்களாகச் சுருட்டி வைக்கப்படுகின்றன.

யோவா 2 மட்டுமே விவிலியத்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட பப்பிரஸ் அல்லது தாளைப்பற்றிய குறிப்பைக்கொண்டுள்ளது. எசா 19:7 காகித நாணல்களைப்பற்றிக் கூறுகின்றது. ஆனால் எபிரேய மூலச்சொல் அதனை 'வெற்றிடங்கள்' என்று அழைக்கிறது. சாக்கடலின் அருகில் கும்ரான் குகையில் கிடைத்த சுவடிகளை நோக்கும் போது, நாணல் காகிதம் பெருமளவில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெரிகிறது. இதற்குக்காரணம் அங்குத் தோல் சுவடிகள் பெருமளவில் புழக்கத்தில் இருந்திருக்கலாம்.

எரே 36-இல் வரும் கதையிலிருந்து கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட எரேமியாவின் நூல்கள் நாணற்சுவடிகளில் எழுதப்பட்டதாக அறிஞர் பலர் கருதுகின்றனர்.

எழுதுபொருள் என்னும் அளவில், ஓலைத்தாள்கள் ஏடுகள் போன்று பப்பிரஸ் சிறப்புற விளங்கியது. ஆனால், ஈரமான இடங்களில் அவற்றைச் சேர்த்து வைக்க முடியாது; காய்ந்துபோனால் எளிதில் உடைந்துபோகும். இப்படியிருப்பினும் கிரேக்க மொழியில் மட்டும் எழுதப்பட்ட 30,000 சுவடிகளைப் பழங்கால எகிப்தியப் பகுதிகளில் கண்டெடுத்துள்ளனர்.

**பம்பிலியா (PAMPHYLIA)**

இந்தப்பகுதி சிறிய ஆசியாவின் தெற்குக் கடற்கரையில் அமைந்திருந்தது. இதன் மேற்கில் லீக்கியாவும், வடக்கில் பிசிதியாவும், கிழக்கில் சிலிசியா திரகேயியாவும் இருந்தன. இதற்குத் தெற்கில் இருந்த மத்திய தரைக்கடல் பம்பிலியாக்கடல் என அழைக்கப்பட்டது. பெரும்பாலும் சதுப்பு நிலம் கொண்ட இப்பகுதி 80-182 கி.மீ. நீளமும், 20-32கி.மீ. அகலமும் கொண்டது. கடலை நோக்கியிருந்த இப்பகுதி அத்தாலியா, சீதே, பெருகை போன்ற துறைமுகங்களைக் கொண்டிருந்தது (அ.ப. 13:13).

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்கர்கள் இங்குக் குடியேறினார்கள் இரண்டாம் நூற்றாண்டில் யூதர்கள் இங்கு வாழ்ந்தனர் (1 மக் 15:23; அ.ப. 2:10). வெளிநாட்டவர்கள் இங்கே குடியேறினாலும் பழங்குடி மக்களே அதிகமாக வாழ்ந்தனர். அவர்கள் பெரும்பாலும் நாகரிகத்தில் பின் தங்கியவர்கள்.

இந்த நாடு வெளிநாட்டவரால் குறிப்பாக, பாரசீகர்களாலும், மாசிதோனியராலும், செலூக்கியர்களாலும், உரோமையராலும் ஆக்கிரமிக்கப்பட்டது. பவுலின் முதலாம் மறைபரப்புப் பயணத்தின்போது, பாப்போவிலிருந்து கப்பல் ஏறி பம்பிலியாவிலுள்ள பெருகைத்துறையை அடைந்தனர். அங்கே யோவான், மாற்கு அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமிற்குத் திரும்பினார் (அ.ப. 13:13-14). இப்பகுதி மதப்பிரச்சாரத்திற்கு ஏற்றதாக இல்லாததால், இங்கே அவர்கள் தங்கவில்லை. பிசிதியா அந்தியோக்கியா நகர் சென்று திரும்புகையில் அவர்கள் பெருகையில் போதித்தார்கள். ஆனால், கிறிஸ்தவ மதம் இங்கே தாமதமாகவே பரவியதாகத் தெரிகிறது. பம்பிலியாவிலுள்ள அத்தாலியாவி லிருந்து கப்பல் ஏறி சீரிய அந்தியோக்கியா நகருக்குச் சென்றனர் (14:24-26). பவுல் உரோமைக்குச் செய்த பயணத்தில், லூக்கா தற்செயலாகத்தான் பம்பிலியாவைக் குறிப்பிடுகிறார் (27:5).

**பயணமும், தகவல் தொடர்பும் (TRAVEL AND COMMUNICATIONS)**

I. பழைய ஏற்பாடு

1. பாலஸ்தீன மக்கள் தொன்றுதொட்டே

சாலைகளைப்பற்றி அறிந்திருந்தனர். இஃது அவர்களின் பயணம் மற்றும் தகவல் தொடர்புக்கு மிகவும் பயன்பட்டது. மெசா என்ற மோவாபிய மன்னனின் நினைவுத் தூண் ஒன்று இதைக்குறிப்பிடுகிறது. தெல்-ஏல்-அமர்னா ஏடுகளும் பாலஸ்தீன நாட்டின் சாலைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. எகிப்து, அசீரியா, மற்றும் பாபிலோனிய நாடுகள் பாலஸ்தீனத்தைத் தங்கள் பயண, மற்றும் போர்ச்சாலையாகப் பயன்படுத்தினர். பாலஸ்தீனத்தின் கடற்கரையையொட்டி. ஒரு பன்னாட்டு நெடுஞ்சாலை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இச்சாலை வியாபாரம், மற்றும் போர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

**2. சாலைகள்:** பழைய ஏற்பாட்டில் சாலைகளைப்பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. தொடக்கத்தில் சாலைகள் சரிவர செப்பனிடப்படவில்லை.இதன் காரணமாகப் பயணங்கள், மற்றும் பலவற்றில் சீர்கேடுகள் உண்டாயின. பாதைகளின் இடையூறுகளினால் மக்களும், வியாபாரிகளும் துன்புற்றனர் என்பது விவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது (நீதி 5:6; எசா 40:3-4). நல்ல பாதைகள் அமைக்கப்படும்; அதன் காரணமாக, பற்பல நன்மைகள் ஏற்படும் என்று எசாயா இறைவாக்குரைக்கின்றார் (40:3-4). விவிலியத்தில் பாதைகள் நீதிக்கும், நேர்மைக்கும், நல்ல வாழ்க்கைக்கும் உவமைகளாகக் கூறப்பட்டன (பழ 2:13; 15:19; எசா 26:7; யோவா 14:16). பாதைகள், சிறு சாலைகளாகவோ, நெடுஞ்சாலைகளாகவோ அமைந்தன (எசா 9:1; 35:8; எண் 20:17; எசே 21:21). சாலைகள், கால்களால் மிதிக்கப்பட்டே அமைக்கப்பட்டன. சில சமயங்களில் பாதைகளை அமைக்க கற்களும் பயன்படுத்தப்பட்டன. பாதைகளை அமைப்பது மற்றும் செப்பனிடுவது குறித்து விவிலியத்தில் குறிப்புகள் பல உள்ளன: பாதைகளை அமைக்க (எசா 40:3), பாதைகளிலுள்ள கற்களைத் தகர்க்க (எசா 62:10), பாதைகளைச் சமப்படுத்த (26:7). அடைக்கல நகரங்களுக்குப்பாதைகள் அமைக்கப்பட்டன (உப 19:3).

**3. பன்னாட்டு நெடுஞ்சாலைகள்:** பண்டைய கிழக்கத்திய நாடுகளின் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் எகிப்து, அசீரியா, பாபிலோனியா, சீரியா சிறிய ஆசியா போன்ற நாடுகளை இணைத்தன. ஒரு சாலை, பாரசீக வளைகுடாவிலிருந்து புறப்பட்டு ஊர், பாபிலோன், அசூர், காரான், கர்க்க மிசு, ஆலாபு, உகாரித்து வழியாக சைப்ரசு வரை சென்றது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள இரு முக்கிய நெடுஞ்சாலைகள்: 1. அரசனின் நெடுஞ்சாலை (எண் 20:17); 2. கடல் அருகில் அமைந்த நெடுஞ்சாலை (எசா 9:1). முதல்வழி தமஸ்கிலிருந்து புறப்பட்டு அஸ்ரோத்து, இராமோத்து அம்மோன், கிலயாது, இரபாத்து அம்மோன், எஸ்போன், இராபாத்து, மோவாபு, கீர் அரசேத்து வழியாக ஏலாத்தை அடைந்தது. கடல் அருகில் அமைந்த வழி தமஸ்கிலிருந்து புறப்பட்டு, ஆட்சோர், மெகிதோ, கர்மேல், அக்கோ, அசுதோது, காசா, இரப்பியா வழியாக எகிப்தை அடைந்தது. தமஸ்கிலிருந்து புறப்பட்ட மற்றொரு கிளைச்சாலை பெத்சயான், எரிகோ வழியாக எருசலேமை அடைந்தது. மற்றொரு கிளைச்சாலை பெத்சயான், செக்கேம், பெத்தேல், கிபயா, எருசலேம், ஏங்கேதி வழியாக, தாமரை அடைந்தது. யூதா, இஸ்ராயேல் நாடுகளில், இஸ்ராயேல் நாட்டில்தான் பாதைகள் அதிகமாக அமைந்திருந்தன. எனவேதான்,அது யூதாவுக்கு முன்பாக வீழ்ந்தது.

## II. புதிய ஏற்பாடு

**1. புதிய ஏற்பாட்டில் காணப்படும் பயணங்கள்:**

இயேசுவும் அவருடைய பெற்றோர்களும் செய்த பயணங்களே முதலில் நம் நினைவுக்கு வருகின்றன. மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க யூதவுக்குச் செல்கிறாள் (லூக் 1:39-56). மரியாளும், யோசேப்பும் தங்கள் பெயரைப் பதிவு செய்ய பெத்லகேம் செல்கின்றனர் (2:1-7). மரியாள், யோசேப்பு இருவரும் இயேசுவை

எருசலேம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்கின்றனர் (2:22-39). ஒவ்வொருவரிடமும் பாஸ்கா விழாவுக்கு மரியாளும், யோசேப்பும் இயேசுவுடன் எருசலேம் சென்றனர் (லூக் 2:41). நாசரேத்திற்கும், எருசலேமுக்கும் இடையே இருந்ததூரம் எழுபத்தைந்து மைல். இதை நடந்து கடக்க குறைந்தது ஐந்து நாட்கள் வேண்டும். இயேசு பலமுறை எருசலேமுக்குச் சென்றதாக விவிலியக்குறிப்புகள் கூறுகின்றன (யோவா 2:13; 5:1; 7:1-14; 10:22; 12:1; மத் 26:17; மாற் 14:12; லூக் 22:7). மூன்று ஞானிகள் வருகை சுட்டிக் காட்டப்படுகிறது. அவர்கள் எங்கிருந்து வந்தனர் என்பதைத் தெளிவாகக் கூறுவதில்லை (மத் 2:1-12). திருக்குடும்பம் எகிப்திற்குச் செல்வதும் அவ்வளவு தெளிவாகக் கூறப்படவில்லை (13:23). இயேசு தாம் திருமுழுக்குப் பெற யோர்தானுக்குச் செல்கிறார். யோர்தானில் எந்த இடம் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், எரிகோவிற்கு அருகில் எனக் கருதப்படுகிறது (மத் 1:1-11). இயேசு தீர், சீதோன், செசரியா-பிலிப்பு ஆகிய ஊர்களுக்குப் பயணம் செய்கிறார் (மத் 7:24-30; 8:27-30). பலமுறை இயேசு கலிலேயாக் கடலைக் கடந்திருக்கின்றார் (மத் 4:35; 5:1-20). இயேசு பெத்தானியாவிற்கு ஓரிருமுறை சென்றிருக்கின்றார் (மத் 21:17; 26:6). எம்மாவூ என்ற இடம் எருசலேமிலிருந்து அறுபது பர்லாங்கு தொலைவில் இருக்கிறது. இங்கு இயேசு இரு சீடர்களுக்குக் காட்சி கொடுக்கிறார் (லூக் 24:13-35). பிலிப்பு சமாரியாவிற்குச் சென்றார். பின்பு அங்கு, பேதுருவும் யோவானும் சென்றனர் (அ.ப. 8:5.14). மேலும், பிலிப்பு காசாவிற்குச் சென்றார் (8:26). பேதுரு லித்தா (9:35), யோப்பா (9:39), செசரியாவிற்குச் (10:1) சென்றார். பேதுரு உரோமை நகருக்குச் சென்றதைப் பற்றிய தெளிவான குறிப்பு இல்லை. ஆனால் பாரம்பரியம், அவர் உரோமை சென்றதாகக் கூறுகிறார். பவுல் ஒரு தலை சிறந்த பயணியாவார். இவர் சிறிய ஆசியாவிலுள்ள தர்சு நகரிலிருந்து எருசலேமிற்குக் கல்வி கற்கச் செல்கிறார் (அ.ப 22:3). கடவுளின் திருச்சபையை அழிக்க தமஸ்கு செல்கிறார் (9:2); திரும்பவும் எருசலேம் வந்து தர்சு நகர் செல்கிறார் (9:30).

**II. பவுலின் மறைபரப்புப் பயணங்கள்:**

**அ) முதல் பயணம்:** 1) அந்தியோக்கியா (11:25-27), 2) சைப்ரசு, 3) அத்தாலியா, 4) பிசிதியா, 5) இக்கோனியா, 6) தெர்பை, 7) அத்தாலியா, 8) அந்தியோக்கியா.

**ஆ) இரண்டாம் பயணம்:** 1) அந்தியோக்கியா, 2) துரோவா, 3) தர்சு, 4) லீஸ்திரா, 5) இக்கோனியா, 6) அந்தியோக்கியா, 7) திராலா, 8) பிலதெல்பியா, 9) சர்தை, 10) பெர்கமு, 11) பிலிப்பி, 12) நெயாபொலி, 12) தெசலோனிக்கே, 13) ஏதன்சு, 14) எபேசு, 15) எருசலேம்.

**இ) மூன்றாம்** பயணம்: 1) எருசலேம், 2) எபேசு, 3) கொரிந்து, 4) மிலேத்து 5) எருசலேம்.

ஈ) எருசலேமிலிருந்து உரோமைக்குக் கடல்வழிப் பயணம்.

**III. பிரயாணத்தின் நோக்கங்கள்:** திரு விழாக்களின் போது எருசலேம் செல்வது திருயாத்திரையாகக் கருதப்பட்டது. திரு யாத்திரையின் மையமாக மட்டுமல்லாமல் எருசலேம் ஒரு வியாபாரத்தலமாகவும் இருந்து வந்தது. ஆலயங்கள் உள்ள நகரங்களில் மக்களின் மதஉணர்வு மட்டுமல்லாமல் கலை, வாணிக, உணர்வுகளும் வளர்க்கப்பட்டன. மாணவர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள பல பிரயாணங்களை மேற்கொண்டனர்.

**IV. போக்குவரத்துச் சாதனங்கள்:** பொதுவாக மக்கள் தங்கள் கால்களையே பிரயாணத்திற்கு நம்பியிருந்தனர். விலங்குகளும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. மிகவும் சாதாரணமாக, கோவேறு கழுதை பயன்படுத்தப்பட்டது. இயேசு கழுதைமேல் ஏறி எருசலேமிற்குள் நுழைகிறார் (மாற் 11:1-11).

ஒட்டகங்களும், போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன (ஆதி 24:10; 1 அர 10:2).

இவை அதிகமான பாரங்களைப் பாலைவனங்களில் நீண்டதூரம் சுமக்கப் பயன்படுத்தப்பட்டன.

குதிரைகள் பொதுவக, சாலமோன் மன்னனது காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டன என நாம் அறிகிறோம் (1 அர 4:26). ஆனால், அவைகளைப் பராமரிக்க அதிக செலவு ஆனதால் அரசர்களும், செல்வந்தர் களுமே அவைகளை உபயோகப் படுத்தினர்.

யானைகள் போர்க்காலங்களில் பயன்படுத்தப்பட்டன ( 1 மக் 1:11; 60:30-35).

**V). நெடுஞ்சாலைகள்:** கடல், தரைவழிகள் பயன்பட்டன. இவற்றில் கடல்வழி மிகவும் அதிகமாகப் பயன்பட்டது. உரோமையர்கள், மத்திய தரைக்கடலைத் தங்களது சொந்தமெனக் கருதினர். அதைப்பெரும்பாலும் பயன்படுத்தியவர் களும் அவர்களே. உரோமையர்கள் அறிந்திருந்தனர். பயணிகள் விடுதிகள் நிறையக் கட்டப்பட்டன.

**VI). மற்ற தகவல் தொடர்புகள்:** பயணம் எப்போதும் மெதுவாக, கடினமாக, அதிக செலவாக அமைந்ததால் கடித வழித்தொடர்பு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. பவுலின் கடிதங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. அந்தியோக்கு இன்னாசியார், மற்றும் போலிக்கார்ப்பு ஆகியோரின் மடல்களும் குறிப்பிடத்தக்கவை. உரோமையர்கள் தங்களுக்கென ஓர் அஞ்சல் துறையையே வைத்திருந்தனர். இதற்காக, தூதுவர்களைப் பயன்படுத்தினர். அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளே இத்துறையால் எடுத்துச் செல்லப்பட்டன. தனியார் தாங்களே தங்களது கடிதங்களை அனுப்பினர்.

### பயணவிடுதிப்பொறுப்பாளர் (QUARTER MASTER)

செதேக்கியாவின் அதிகாரிகளுள் ஒருவரான செராயாவின் பட்டம் (எரே 51:59). இந்த அதிகாரி படைவீரர்களுக்கு வேண்டிய உணவு, மற்றப் பொருள்களை அளிக்கும் பொறுப்புடையவர். சிறைக்கும் இவர் காப்பாளராக இருந்திருக்கலாம்.

### பயபக்தி (REVERENCE)

இச்சொல் எபி 12:28-இல் மட்டும் வருகிறது. இது சில சமயங்களில் இறைபக்தியைத் தவிர மற்ற அச்சங்களைக் குறிக்கிறது (லேவி 19:3.30; 20:2). "ஆண்டவருக்கு அஞ்சுதல்" என்பது (அ.ப. 9:31; உரோ 3:18; 2 கொரி 5:11; 7:1), இறைவனுக்கு மனிதன் அளிக்கும் அன்பாகிய பதிலைக் குறிக்கிறது.

### பயனற்ற ஊழியர் - உவமை (UNWORTHY SERVANTS - PARABLE)

மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையே இருக்கும் உறவை, குறிப்பாக மனித தாழ்ச்சியின் முக்கியத்துவத்தை இந்த நீதிக்கதை விளக்குகிறது (லூக் 17:7-10). இதிலே தலைவன் இறைவனையும், பயனற்ற ஊழியர்கள் அப்போஸ்தலர்களையும் விசுவாசிகளையும் குறிக்கின்றனர். இந்த நீதிக்கதையை இயேசு கூறுமுன்னர் அப்போஸ்தலர்கள் தங்கள் விசுவாசத்தை அதிகரிக்குமாறு இயேசுவைக்கேட்டனர். இதற்குப்பதிலாக இயேசு கடுகளவு விசுவாசத்தால் அரிய செயலைச்செய்யலாமென்கிறார். விசுவாசம் ஆண்டவரிடம் பெறுவதன்று; மாறாக ஆண்டவன்பால் நாம் செய்யும் கடமை. இதை நாம் அதிகமாகவோ, குறைவாகவோ வைத்திருக்க முடியாது. மனிதன் விசுவாசம் கொண்டவனாகவோ, அஃது இல்லாதவனாகவோ மட்டுமே இருக்க முடியும். ஊழியன் தனது கடமையைத் தலைவனது நன்றியை எதிர்பாராமல் செய்வதுபோல், விசுவாசிகளும் பாராட்டை எதிர்பாராமல் கடவுளுக்கு ஊழியம் புரியவேண்டும்.

### பயனின்மை, நிலையாமை (VANITY)

விவிலிய வழக்கில் ஒன்றுமின்மையையும், வெறுமையையும், குழப்பத்தையும் இச்சொல்

குறிக்கவல்லது. இது சிலை அல்லது சிலை வழிபாடு பற்றியும் பயன்படுகிறது.

இச்சொல் விவிலியத்தில் அடிக்கடி பயன்படும். காற்று (பழ 21:6) அல்லது மூச்சு (எசா 57:13) ஆகிய சொற்கள் இக்கருத்தின் பொருளைக்காட்டுகிறது. இது வாழ்வின் கடந்து போகும் தன்மையைக் குறிக்கிறது (திருவுரை 1:14; 2:11; 4:16; 6:9; இது காற்றைப் பிடிப்பதற்கு ஒப்பானது; காண்க. சங் 39:5; 144:4); அல்லது திருப்தியற்ற தன்மையைக் குறிக்கிறது (சங் 62:9).

இக்கருத்து, இறைவனுக்கும் பிறருக்கும் மேலாக ஒருவன் தன் செயல்களைப் பெரிதாகக் கருதுவதாகும். இதன் விளைவு, இறுதியில் மதிப்பற்றது, காற்றைப்போல் மறைந்துபோவது. ஏனெனில், ஒருவனுடைய குறிக்கோள் இறைவனுடைய நித்திய குறிக்கோளோடு ஒத்துப்போகவில்லையென்றால், அவனது முயற்சிகள் வெறுமையானவையே. இவ்வாறு இக்கருத்து, இறைச்சட்டத்திற்கோ, இறைவனது வழிகாட்டல் மற்றும் தாங்கும் அவரது ஆற்றலுக்கோ அக்கறையின்றி அவன் கொண்டுள்ள மாயையை எடுத்துக்காட்டுகிறது (சங் 2:1; 4:2; அப 2:13). இக்கருத்து, குறிப்பாகப் புறவினத்தாரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது (எசா 30:28; எபே 4:17). இந்நிலை ஒருவன் தன் தற்பெருமை அல்லது குற்ற உணர்வால் படைத்துக் கொள்ளும் போலி உண்மையாகும் (யோபு 31:5; சங் 12:2; 24:4; பழ 30:8; எசே 13:6.8-4).

சிலை அல்லது சிலைவழிபாடும் பயனற்றதாகும்; மனித கரங்களால் செய்யப்பெற்ற மதிப்பற்ற உருவங்களாகும் (உப 32:21; சங் 31;6; எசா 57:13; அ.ப. 14:15); மாயையின் அழிந்துபோகும் பொருட்களாகும்; அவற்றிற்கு "மூச்சு" இல்லை (எரே 51:17-18; எசா 40:17).

சுருக்கமாக, இக்கருத்து "ஒன்றுமின்மையையும்" (2 பேதுரு 2:18) வெறுமையையும் (உரோ 8:20) உணர்த்துகிறது.

**பயித்து (BAJITH – வீடு)**

சாக்கடலுக்குக் கிழக்கில் தீபோனுக்கு அருகிலுள்ள ஒரு மோவாபிய நகரம் (எசா 15:2). சில மொழிபெயர்ப்புகள் இதைத் "தீபோனின் புதல்வியர்" என்று கொண்டிருக்கின்றன. இஃது ஒரு நகரைக் குறிக்கும் (எரே 48:18).

**பயிரிடப்படாத நிலம், தரிசு நிலம் (FALLOW GROUND)**

பொதுவாக, பயிரிடப்படாத நிலம், மண்கட்டி உடைக்கும் கருவியால் சீராக்கப்படுகிறது. ஆனால், களைகளையும், பூச்சிகளையும் அழித்து, மண்ணை வளப்படுத்துவதற்காகப் பயிரிடப்படாமல் விடப்படுகிறது.

இவ்வாறு நிலத்தைப் பயிரிடாமல் விடுவது முற்கால மக்களின் வழக்கமாகும். இஃது ஒரு மத அலுவலுக்குப் பயன்படுவதாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் நிலம் பயிரிடப்படாமல் விடப்பட வேண்டும் என்பது இஸ்ராயேலர்களின் மத ஒழுங்கு (லேவி 26:34-35; யாத் 23:11). இந்த ஓய்வு ஆண்டில் தானாக விளைந்த யாவும் ஏழைகளுக்கும், விலங்குகளுக்கும் உணவாக விடப்பட்டன (யாத் 23:11; நெகே 10:31; பழ 13:23). ஆனால், இத்தகைய ஒழுங்கு இஸ்ராயேல் மக்களால் கடைப்பிடிக்கப் பட்டதற்குச் சான்றுகள் இல்லை. லேவி 26:34-35-லிருந்து இந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்படவில்லை என்பது தெரிகிறது. "தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்" என்பது (எரே 4:3; ஓசே 10:12) புதிய நிலத்தைப்பயிரிடுங்கள் அல்லது உருவக முறையில் "உங்கள் வாழ்வைப் புதுப்பியுங்கள்" என்று பொருள்படும்.

**பயிற்சிக்கூடம் (GYMNASIUM)**

கிரேக்க இளைஞர்களுக்கான உடற்பயிற்சிக்கூடம். இக்கூடம் ஒரு நகரத்தின் சிறப்பு அம்சமாகக் கருதப்பட்டது. ஆகவே, பொதுப்பணத்திலிருந்து கட்டப்பட்டு, பாது காக்கப்பட்டது. இக்கூடம், இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும், பயிற்சிகள் சொல்லிக்

கொள்வதற்கும் பயன்படுத்தப் பட்டது. ஓட்டம், குதித்தல், ஈட்டி எறிதல், மற்போர் போன்றவை பல முக்கிய உடற்பயிற்சிகளாகும். இக்கூடம் பொது மக்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. தலைமைக்குரு 'யாசோன்' வேண்டு கோளுக்கிணங்க எருசலேமில் உடற் பயிற்சிக்கூடம் கட்டப்பட்டது (1 மக் 1:14; 2 மக் 4:12). பவுல் மறைமுகமாக இவ்வுடற்பயிற்சிகளைக் குறிப்பிடுகின்றார். மற்போர் (1 கொரி 9:26), போராடுதல் (எபே 6:12), ஓட்டப்பந்தயம் (1 கொரி 9:24; கலா 5:7; பிலி 3:12-14). புண்ணியங்களைக் கடைப்பிடிப்பதே கிறிஸ்தவ உடற்பயிற்சியாகும் என்றும் குறிப்பிடுகின்றார் (1 திமொ 4:7 தொ).

**பயிற்றுவித்தல், கற்றுக்கொடுத்தல் (DISCIPLINE)**

விவிலியத்தில் இக்கருத்து பயிற்சி, விதி முறைகளை விளக்கு, அறிவைப் பெருக்குதல் என்ற பொருளில் ஒரு புறமும் திருத்துதல், தண்டித்தல் என்ற பொருளில் மறுபுறமும் எண்ணப்படுகின்றது. இதன் இயல்பான சூழ்நிலை குழந்தையைப் பயிற்றுவித்தலாகும். சமய கண்ணோக்கில் கடவுள் மக்கள், நாடுகளின் வாழ்வில் அவர்களைத் திருத்த மேற்கொண்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றது. இச்செயல் கடவுளின் அன்பினால் உந்தப்பட்டு, செய்யப்பட்ட செயல் என்பது இறையியலின் கண்ணோட்டம் ஆகும்.

**1. பழைய ஏற்பாடு:** பழைய ஏற்பாட்டில் காணப்படும் பயிற்றுவித்தலின் சூழ்நிலை குடும்பமும், குடும்பத்தில் அமையும் கல்வி முறையுமாகும். இஸ்ராயேல் மக்கள் கண்ணீர் சிந்தாமல் கல்வியில் அல்லது பயிற்சியில் நம்பிக்கை வைத்தது கிடையாது. தாய் தந்தையரின் சொல்லைக் கேளாதபிள்ளை தண்டிக்கப்பட வேண்டும் (உப 21:18). "பிள்ளையின் இதயத்தில் மடமை ஒட்டிக் கொண்டிருக்கும்; கண்டித்துத்திருத்தும் பிரம்பால் அதை அகற்றிவிடலாம்" (பழ 22:15). இது சிறுவர்களைப் பயிற்றுவிக்கும் மந்திரம் ஆகும்.

குடும்பச் சூழ்நிலை விடுத்து மற்ற இடங்களில் பயிற்றுவித்தல் என்பது தண்டனையைக் குறிக்கின்றது. "என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார்; நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன் (1 அர 12:11.14; காண்க. உப 22:18). மறுபுறம் பயிற்றுவித்தல் என்றால் விதி முறைகளைக் கூறுதலும், திருத்துதலும் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பாரம்பரியத்திலும் (உப 6:20 தொ), சட்டத்தின் கட்டளைகளிலும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பது தந்தையின் பொறுப்பாகும்.

குடும்பக்கட்டுப்பாட்டிலிருந்து இப்போது இறைவனின் பயிற்றுவித்தலைப் பார்ப்போம். "ஒருவன் தன் மகனுக்குக் கற்றுக்கொடுப்பதுபோல், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்" (உப 8:5). மேலும் "கடவுள் திருத்தும் மனிதன் பேறுபெற்றவன்; ஆகவே, வல்லவரின்கண்டிப்பை வெறுக்காதே" (யோபு 5:17; சங் 94:12). "பிரம்பைக் கையாளாதவன் தன் மகனை நேசிக்காதவன்; மகனை நேசிக்கிறவனோ, அவனை அடிக்கத்தயங்க மாட்டான்" (பழ 13:24). இவ்வாறே நாடுகளுக்கும் அறிவுரைகள் கூறப்படுகின்றன; அவை தண்டிக்கப்படுகின்றன, திருத்தப் படுகின்றன. இது கடவுளின் நிலையான அன்பை வெளிப்படுத்துகின்றது. எப்படி இருப்பினும் சங் 6:1-இல் "ஆண்டவரே என்மீது சினங்கொண்டு என்னைக் கண்டியாதேயும்; என் மீது கடுஞ்சீற்றம் கொண்டு என்னைத் தண்டியாதேயும்" என்று ஆசிரியர் வேண்டுகின்றார்.

ஞான நூல்களின் கட்டுப்பாடு என்பது மிகவும் கடுமையாகக் காணப்படுகின்றது. சாட்டையடிகள் கட்டுப்பாட்டுக்குச் சமமாகக் கூறப்படுகின்றது (சீரா 22:6; 23:2). ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம் இந்தப் பயிற்றுவித்தலுக்கு ஆசிரியர் ஆகும். இந்த ஆசிரியர் சில சமயங்களில் வதைக்கலாம் (4:17). சமயநோக்கு பாழ்படுத்தும் பேரழிவுக்கும், திருத்தம்

மற்றும் நலமளிக்கும் பயிற்சிக்குமிடையே வேறுபாடு உண்டாக்கலாம். உலகக்கண்களுக்கு நல்லவர்கள் படும் துன்பம் தண்டனையாகத் தோன்றுகின்றது. இறைவன் உண்மையில் அவர்களைச் சோதிக்கின்றார், தூய்மைப்படுத்துகின்றார். பயிற்சி அளிக்கிறார் (ஞானம் 3:4-7). முடிவில் அவர்கள் இறைவனுக்கு ஏற்றவர்களாய் இருப்பதைக் காண்பார்கள் (ஞானம் 11:10). "இத்தகைய துன்பங்களைப்பற்றி உள்ளத்தில் சோர்வடையாதபடி இப்புத்தகத்தை வாசிக்கிறவர்களை மன்றாடுகிறேன். ஆனால், நடந்ததெல்லாம் மக்களின் அழிவுக்கன்று, தண்டனைக்காக மட்டுமே நடந்தனவென்று கொள்ளுங்கள்" (2 மக் 6:12) என்று 2 மக்கபேயர்நூல் ஆசிரியர் வேண்டுகோள் விடுக்கிறார்.

2. புதிய ஏற்பாடு: கிரேக்க உலகில், கற்றுக்கொடுத்தல், பயிற்றுவித்தல் போன்ற சொற்கள் வீட்டில், குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியைப்பற்றியும், கலாச்சார உலகில் ஒருவன் தனக்குரிய இடத்தைப்பெற வேண்டிய பயிற்சியையும் குறிக்கின்றன. புதிய ஏற்பாடு மோசேயின் கல்வியைப்பற்றிய விவரிப்பும் (அ.ப.7:22), காமலியேலிடம் பவுல்பெற்ற கல்வியைப் பற்றிய விவரிப்பும் இதற்குச்சான்றுகள்.

தண்டனை என்ற பழைய எண்ணம் இயேசுவின் வாழ்வில் வருகின்றது. பிலாத்து இயேசுவைத் தண்டித்து விடுதலை செய்வேன் (லூக் 23:16) என்று கூறுகின்றார். இயேசுவின் சீடர்கள் ஒதுக்கப்பட்டார்கள் (2 கொரி 6:9). பவுல் கடுமையாகத் தண்டித்துத் திருத்தப்படுவதைப்பற்றிச் சிந்தித்து, 2 திமொ 2:25-இல் "சாந்தத்தோடு கடிந்துகொள்ள வேண்டும்" என்று கூறுகின்றார். எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் 12-ஆம் அதிகாரத்தில் தந்தை, பிள்ளையைக் கண்டித்துத் திருத்துவது போல், இறைவன் நம்முடைய நலன் பொருட்டு நம்மைத் தண்டிக்கின்றார் என்று கூறுகின்றார். இமனேயும், அலெக்சாந்தரும் தண்டனை பெற்று இனியும் கடவுளைப் பழிக்காதிருக்க பாடம் கற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்களைச் சாத்தானுக்கும் கையளித்துவிட்டேன்" (1 திமொ 1:20) என்று கூறுகின்றார்.

திருவெளி 3:19-இல் "நான் யார்மேல் அன்பு கூர்கிறேனோ அவர்களைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே நீ மனம் திரும்பி ஆர்வமுள்ள வாழ்க்கை நடத்துக" என்ற கூற்றைக் காண்கின்றோம்.

குடும்பத்தில் கிறிஸ்துவ வளர்ப்புபற்றிக் கூறும்பொழுது "தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்குச் சினமூட்டாதீர்கள். அவர்களைக் கண்டித்துத் திருத்தி, ஆண்டவருக்கேற்ற முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்" என்று (எபே 6:4) கூறப்படுகிறது. இங்குக் கல்வி என்பது கொடூரமான கட்டுப்பாடு அன்று; சொல், செயல் முன் மாதிரியினால் அறிவு புகட்ட வேண்டுமென்று குறிப்பிடப்படுகின்றது.

திருச்சபை எவ்வாறு கிறிஸ்துவ மக்களுக்கு அறிவுபுகட்டியது என்பது திதாக்கே என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொல்லோ என்ற யூதர் ஆண்டவரது அருள்நெறியைக் கற்றறிந்த ஆர்வமிக்க உள்ளத்துடன் இயேசுவைப்பற்றிய செய்திகளையெல்லாம் பிழையறப் போதித்து வந்தார் (அ.ப. 18:25). திருச்சபையும் திருச்பையின் தலைவர்களும் கிறிஸ்துவ சமூகத்தில் காணப்படும் தீயவைகளைக் களைந்து அவர்களைத் திருத்தினார்கள்: சான்று கொரிந்து, அந்தியோக்கியா திருச்சபைகள்.

துன்பங்களையும் எதிர்ப்புகளையும் ஏற்று இறைபயிற்றுதலாக மாற்றுபவருக்குப் பவுல் ஓர் எடுத்துக்காட்டாவார். ஆதலால் "தன் உடலில் முள்ளை" ஏற்றுக் கொள்கிறார் (2 கொரி 12:7). 2 கொரி4:7-15-இல் விவரிக்கப்படும் துன்பங்கள் எல்லாம் "அற்பமானதும், நொடிப்பொழுதே நீடிப்பது" என்றும், அவை "நம்மில் அளவிட முடியாத நித்திய மாட்சிமையை ஒப்புயர்வற்ற

வகையில் விளைவிக்கிறதாகவும்" பவுல் கருதுகிறார்.

**பரக்கியா (BARACHIAH)**

செக்கரியாவின் தந்தை (மத் 23:25). இந்தச் செக்கரியா, பழைய ஏற்பாட்டில் ஆலயத்தில் கொலை செய்யப்பட்டவராக இருக்கலாம் (2 நாள் 24:20-23) என்று சிலர் கருதுவர். வேறு சிலர் இந்தப் பரக்கியாவும், பழைய ஏற்பாட்டுப் பெரக்கியாவும் (?) ஒருவரே என்று கருதுவர்.

**பரக்கோசு (BARKOS – ஓவியன்)**

ஆலயப் பணியாளர்களின் குடும்பத்தலைவன் (எஸ் 2:53; நெகே 7:55). இவரது வழித்தோன்றல்கள் நாடு கடத்தலிலிருந்து செருபாபேலின் தலைமையில் நாடு திரும்பினர்.

**பரத்தை (ADVENTURESS)**

தனது விருப்பம் போல் வாழும் பெண் இவ்வாறு அழைக்கப்படுகிறாள். முக்கியமாகத் தன் வாழ்வை உடல் இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழியாக அமைத்துக் கொள்பவள். பழமொழிநூலில் இச்சொல் (பழ 23:27; காண். 6:24). "விலைமகள்" எனும் சொல்லுக்கு இணையாக வருகிறது. தொடக்கத்தில் "விலைமகள்கள்" வெளி நாட்டவராக இருந்ததால் இச்சொல் "அன்னியப்பெண்" எனவும் மொழி பெயர்க்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்களிடமிருந்து ஒருவரைக்காப்பாற்றுவது அவரது பெற்றோர் அளிக்கும் கட்டளை, சட்டம், அறிவுரைகள் ஆகியவையாகும்.

**பரபா (BARABBAS – தந்தையின் மகன்)**

இயேசுவின் வழக்கு விசாரணையின் பொழுது, உரோமை அதிகாரிகளால் சிறைப்படுத்தப்பட்டவன் என்று எல்லாப் புதிய ஏற்பாட்டு நற்செய்திகளும் கூறுகின்றன. "பேர் போனகைதி" என்று மத்தேயு அவனை அழைத்தாலும் (மத் 27:15) அவன் என்ன குற்றம் செய்தான் என்று குறிப்பிடவில்லை. இவன் ஒரு கள்வன் என்று நான்காம் நற்செய்தி கூறுகின்றது (யோவா 18:40); ஆனால் மாற்கும், லூக்காவும் "ஒரு கலகத்தில் ஈடுபட்டுக் கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டவன்" (லூக் 23:19; மாற் 15:7), பிடிபட்டவன் என்று சொல்லுகின்றார்கள். இக்குறிப்பு உரோமைய ஆட்சியை ஒழிக்க வேண்டும் என விரும்பிய தீவிரவாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று சுட்டுகிறது.

மூன்று நற்செய்திகளின் படி (மத் 27:15; மாற் 15:6; யோவா 18:39), யூதர்கள் விரும்பும் ஒரு கைதியைத் திருவிழாவின் பொழுது (பாஸ்கா விழா என்று யோவான் மட்டும் கூறுகிறார்), விடுதலை செய்ததின் மூலம், உரோமை ஆளுநனான பிலாத்து யூதர்களைச் சாந்தப்படுத்துவதுண்டு. லூக்கா அதிகத்துல்லியமான வரலாற்று ஆசிரியராக இருந்திருக்கலாம். அவர் இதை ஒரு பழக்கம் என்று சொல்லவில்லை (லூக் 23:18 தொ). மேலும், இப்படிப்பட்ட வழக்கம் இருந்ததென்று பூர்வீக இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இருப்பினும், பல காரணங்களுக்காக, சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படும் வழக்கம் இருந்து வந்தது. கைதிகள் சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்று லிவி என்ற வரலாற்று வல்லுநர் கூறினாலும், அவர்கள் உண்மையில் சிறையிலிருந்து வெளியே சென்றார்கள் என்று சொல்லவில்லை.

இத்திருவிழாவின்பொழுது இயேசுவை அல்லது பரபாவை விடுதலை செய்வதென்ற வாய்ப்பு இருந்ததென்று நான்கு நற்செய்திகளும் கூறுகின்றன. யூதத்தலைவர்களால் தூண்டப்பட்டு மக்கள் பரபாவை விடுவிக்கும்படியும், இயேசுவைக்கொலை செய்யும்படி கோரினார்கள். பிலாத்து இதற்கு ஒத்துக்கொண்டு இயேசுவை மரண தண்டனைக்குத் தீர்ப்பிட்டான். அதன்பிறகு பரபாவின் வரலாறு தெரியவில்லை. இவன் விடுதலையாக்கப்பட்டான் என்று நான்காம் நற்செய்தி சொல்லவில்லை.

**பரம்படித்தல் (HARROW)**

ஒரு தனிக்கருவியாக பரம்பு, எகிப்தில்

அறியபட்டதொன்றாகத் தெரியவில்லை. பழங்காலப் பாலஸ்தீனத்தில் இஃது இல்லையென்று கூறலாம். ஆனால், யோபு 39:10; எசா 28:24; ஒசே 10:11 ஆகிய பகுதிகள் உழுவதிலிருந்து வேறுபட்ட ஒரு முறையைக் குறிப்பிடுகின்றன. பரம்படித்தலைக் குறிக்கும் எபிரேய மூலவினைச் சொல்லின் பொருள் தெளிவாக இல்லை. ஒருவேளை, இது விதைகள்மேல் மண்ணை மூடுவதற்கு மரக்கிளைகளை இழுத்தலைக் குறிக்கலாம்.

**பரவசக்காட்சி (TRANCE)**

கடவுளைக்கண்டவர்கள், அல்லது அவரது வெளிப்பாட்டை உணர்ந்தவர்களின் நிலையாகும் (மாற் 16:8). இந்நிலையைக் குறிக்கும் மூலச்சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டது. உதாரணமாக, இடமாற்றம், வெளியேற்றம், அருகில், போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. மேலும், இது சமயத்தில் ஏற்படும் பய உணர்ச்சியாகவோ, மகிழ்ச்சிப் பெருக்காகவோ அமையலாம். இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து ஒருவரிடம் நீடிக்குமானால் அவர் நலமற்றவராகக் கருதப்படுவர். இறைவனின் பிரசன்னத்தைக்கண்ட இறைவாக்கினர் உடல்களை மறந்து நின்ற நிலையில், ஆன்மா இவ்வுலகப்பற்றுகளை விடுத்து இறைவனின் பிரசன்னத்துக்குச் சென்று விடுகிறது. அவர்கள் "இறைவனின் வார்த்தைகளைக் கேட்கின்றனர்", எல்லாம் வல்லவரின் காட்சி பெறுகின்றனர் (எண் 24:4,16). இந்தத் தொடரைப் பயன்படுத்தும் லூக்கா, இதை ஒரு வெளிப்பாட்டுக் கருவியாகவே பயன்படுத்துகிறார். (அ.ப. 10:10; 11:5; 22:17). இந்த இரு நிகழ்ச்சிகளில், காட்சி முக்கியமன்று; ஆனால், அவை வெளிப்படுத்தும் உண்மை முக்கியமாகும். இவற்றின் வழியாக லூக்கா இரு உண்மைகளை வலியுறுத்துகிறார் அ) கிறிஸ்தவத்தோழமைக்குள் புறவினத்தார் ஏற்றுக்கொள்ளப்படுவது இறைவனுடைய செயலாகும் மனிதனுடையதன்று. வெளிப்பாட்டு நிகழ்ச்சி என்ற அளவில் அது கட்டளையிடப்படுகிறது. ஆ) பேதுருவோ பவுலோ இத்தகைய புரட்சிகரமான மாற்றத்தைத் தங்கள் சொந்த நடத்தையாலோ, அனுபவத்தின் அடிப்படையாலோ திருச்சபைக்கு அறிவித்திருக்கத் துணிந்திருக்கமாட்டார்கள். இவ்வாறு, புறவினத் தாருக்குத் தூதுரைத்தல் இறைவனது செயலாக அறிவிக்கப் படுகிறது.

**பராமரிப்பு, பாதுகாப்பு (PROVIDENCE)**

I. தந்தை தன் மக்களுக்குத் தேவையானவைகளை அளித்து, அவர்களைப் பாதுகாத்து வளர்ப்பதுபோல், இறைவனின் பராமரிப்பு விவிலியத்தில் விவரிக்கப்படுகிறது. "ஆண்டவரே, நீர் தக்க காலத்தில் மனுமக்களுக்கும், கால்நடைகளுக்கும் உணவளிக்கிறீர்" (சங் 145:15 தொ; 104:27 தொ; 36:7; 147:9). இறைவனின் பராமரிப்பு இச்சங்கீதங்களில் நன்கு விளக்கப்பட்டு உள்ளது. பராமரிப்பைப்பற்றி நினைக்கும் பொழுது, இக்காட்சி நமது மனதின் முன் நிற்கிறது. இதற்குத் தகுந்த சொல் எபிரேய மொழியில் கிடையாது. கிரேக்க மொழியில் இறைவனின் பராமரிப்பைக் குறிக்கப் "புறோநோய்ய" (பாதுகாப்பு) என்ற சொல் கையாளப்படுகிறது (ஞான 14:3; 17:2). விவிலியத்தில் பராமரிப்பைக் குறிப்பதற்குக் கரிசனம், அக்கறை என்ற சொற்கள் வருகின்றன (யோபு 10:12). இவை மீட்பின் வரலாற்றில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஆனால் இப்பராமரிப்பை, மனிதனைக் கொடுமைப்படுத்தும் ஊழ் முறைமையாகப் புரிந்துகொள்ளக் கூடாது; இறைவனை, விபத்துகளிலிருந்து நம்மைக் காப்பாற்றும் ஒரு மாய வித்தைக்காரனாக எண்ணக்கூடாது; அல்லது ஒரு சலுகை கொடுக்கும் தந்தையாகத் கருதக்கூடாது. இறைவனின் பராமரிப்பு, அவரிடத்தில் நம்பிக்கை வைக்க நம்மைத்தூண்டுகிறது; அவருடன் ஒத்துழைக்க வேண்டிய கடமையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

II. பராமரிப்பு **நம்பிக்கையின், உறுதியின் அடித்தளம்:** இறைவனின் திட்டம் அன்பின் திட்டமாகும் (சங் 103:8தொ). இது

நிறைவேற்றப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை (சங் 33:11). ஆகவேதான் மனிதன் நம்பிக்கையுடன் வாழவேண்டும். இறைவன் உலகத்தைச் சட்டத்திட்ட ஒழுங்குடன் நடத்துகிறார் (ஆதி 8:22). "இறைவன் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச்செய்து, நேர்மையுள்ளோர் மேலும், நேர்மையற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார்" (மத் 5:45). மேலும், செழிப்புமிக்க பருவங்களை அளித்து, நமது உள்ளம் மகிழ்ச்சி பொங்க, நிறைய உணவு கொடுத்து நன்மை புரிகிறார் (அ.ப. 14:17). இப்படி மனுகுல முழுவதும் அவரைத்தேடி வாழும்படி, உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்து, எல்லாவற்றையும் வரையறுத்துக் கொடுக்கிறார் (17:24-28).

1. இறைவன், குலமூதாதையர்களை நன்கு பராமரித்துக் காத்தார். சிறப்பாக, குலத்தந்தையாகிய யோசேப்பின் கதையில், தன் வல்லமையை, மாட்சிமையை யோசேப்பிடத்தில் வெளிப்படுத்தினார். மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தீமைகளை நன்மைகளாக மாற்றினார். "என்னை இங்கு அனுப்பியது நீங்கள் அல்லீர், கடவுளே... ஆனால், கடவுள் அதை... திரளான மக்களை உயிரோடு காக்கும்பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்" (ஆதி 45:8; 50:20). தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள், பாலைவனத்தைக் கடந்து செல்ல வேண்டிய ஆற்றலையும், தேவையான உணவையும் இறைவனிடத்திலிருந்து பெற்றுத் திருப்தியடைந்தனர் (யாத் 16:15-18).

இறைவாக்கினர், இறைவனுடைய கட்டுப் பாடுகளையும், ஒழுங்குகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றனர். இறைவன் நடக்கப்போகின்றவற்றை முதலிலிருந்தே முன்னறிவித்தவர்; வரப்போவதை இப்பொழுதே நமக்கு அறிவிக்கிறவர் (எசா 44:7). இறைவனே, மகிழ்ச்சியிலும், இன்னலிலும் நமக்கு ஆதரவு (ஆமோ 3:6; எசா 45:7). அவர் தம் விருப்பத்திற்கு ஏற்ப எல்லாப் பொருள்களையும், திறமைகளையும் அருள்கிறார் (எரே 27:5தொ). மனிதன் இதயத்தில் சிந்தனைகள் பலவாம்; ஆண்டவர் திருவுளமோ நிலைபெற்றிருக்கும் (பழ 16:1.33; 19:21; 20:24). நன்மையும் தீமையும், வாழ்வும் சாவும், வறுமையும் செல்வமும் இறைவனிடமிருந்து வருகின்றன (சீரா 11:14). ஏனெனில், மண்ணுலக அரசாட்சி இறைவன் கையில் இருக்கிறது. எல்லா ஒழுங்குமுறைகளும் இறைவனால் செயல்படுகின்றன (39:31).

இந்த மனவுறுதி இறைவனுடன் செபத்தில் ஐக்கியமாக நம்மைத் தூண்டுகிறது. "இறைவன் தம் வல்லமையால் என்றென்றும் ஆட்சி செலுத்துகிறார். அவர் கண்கள் மக்கள் இனத்தாரைக் கவனித்து வருகின்றன" (சங் 65:7-14). இஸ்ராயேலை எல்லாத் தீமைகள், கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றி வருகிறார் (சங் 121). "இறைவன் வீட்டைக் கட்டினாலொழிய, அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே; அவர் நகரைக் காத்தாலொழிய, அதைக்காப்பவன் விழிப்பெல்லாம் வீணே" (சங் 126:1). இறைவன் நல்ல ஆயன்; ஆகவே, "இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையானதெதற்கும் அஞ்சேன்; ஏனெனில், இறைவன்கோலும், கைத்தடியும் எனக்கு ஆறுதலாக உள்ளன" (சங் 23). வாழ்வின் முடிவை இறைவனிடம் ஒப்படைத்துவிடும்; அவரையே நம்பியிரு; அவரே உன்சார்பில் எல்லாம் செய்வார் (சங் 37:5).

2. இயேசு தன் போதனைகளில் இறைவன் பாரமரிப்பைப் பற்றி நன்கு கூறியுள்ளார். இறைவன் எப்படி நமக்குத் தந்தையாக இருந்து பராமரிக்கிறார் என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார். "எங்கள் தந்தாய், எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்" (மத் 6:11) என்று எளிமையோடு அவரிடம் செபிக்க வேண்டும். மேலும், நாளைய தினத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள். நமது விண்ணகத் தந்தை நமக்கு என்ன தேவை, என்ன

நிகழப்போகிறது என்பதை முன் அறிந்து அதற்கு ஏற்ப உதவுவார் (6:25-34 10:28-31; லூக் 6:34; 12:22-32;21:18). கிறிஸ்துவின் இப்போதனைகள், கிறிஸ்தவனை அசைக்க முடியாத விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து இருக்கச்செய்கிறது. ஏனெனில், பவுல் கூறுவது போல், "இறைவனின் திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத்தெரியும்... வாழ்வோ, சாவோ, வானதூதரோ, தலைமை ஏற்பவரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமைமிக்கவரோ, வானத்தில் உள்ளவையோ ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்புப் பொருளோ, நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது" (உரோ 8:28. 31:39); கொடிய துன்ப துயரங்களாலும் பிரிக்க முடியாது; மாறாக, பவுல் துன்ப துயரங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறார். ஏனெனில், இறைவனின் பராமரிப்பைத் துன்பத்தில், துயரத்தில், இடையூறுகளில் நாம் அதிகம் சுவைக்கிறோம். இவற்றில் தந்தையினுடைய பராமரிப்பின் உண்மைப்பொருள் என்ன என்று பிறருக்கு வெளிப்படுத்துகிறோம்.

**III. பராமரிப்பு உறுதியையும் பிரமாணிக்கத்தையும் கோருகிறது.**

1. மனிதன் செயல் அற்று, தனது உரிமையை இழப்பதற்கு, இறைவன் அவனை அழைக்கவில்லை; ஆனால், மனிதனின் ஒத்துழைப்புத்தேவை என்பதற்காக, துன்ப துயரங்களின் வழியாக அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்புகிறார். மனிதன் இறைவனோடு ஒத்துழைக்கும்போது ஏற்படும் ஆபத்துகளைத் தடுப்பதற்குப் பயங்களை அகற்றுவதற்கு வேண்டிய துணிவை, நம்பிக்கையை அவனிடத்தில் பிறப்பிக்கிறார். அவரது பிள்ளைகளாக இருக்க அழைக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவர்கள் தன் அன்புக்குச் சாட்சி சொல்ல வேண்டிய அழைப்புக்குப் பிரமாணிக்கமாய் இருக்க ஆற்றலையும், துணிவையும் அருளுகின்றார்.

பழைய ஏற்பாட்டில், இறைவனின் நண்பர்கள் அவர்களைக் காப்பாற்றிப் பராமரித்து வரும் இறைவனுக்கு முழுப்பிரமாணிக்கத்துடன் இருந்தனர் என்பதைக் காண்கிறோம். தகனப்பலிக்கு வேண்டிய விலங்கை இறைவனே தயார் செய்து கொடுப்பார் 'மகனே' என்று கூறி, தன் ஒரே மகனைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் தயங்கவில்லை (ஆதி 22:8.13தொ). யோசேப்பு இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்வதைவிட, தன் தலைவனுடைய கோபத்தின் தண்டனைக்கு இரையாவதற்குத் தயங்கவில்லை. இதற்கு மாறாக இஸ்ரேயல் மக்கள் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து, பாலைவனத்தில் உணவும், தண்ணீரும் கொடுத்துப் பராமரித்து வரும் இறைவனிடத்தில் நம்பிக்கை, விசுவாசம் வைக்காமல், தங்கள் அவநம்பிக்கை கோபம் இவைகளை வெளிப்படுத்தினர். அன்றாட உணவை இறைவனிடத்தில் எதிர்பார்க்காமல் அவருடைய கட்டளைக்கு எதிராக, சிறிது உணவைப் பத்திரப்படுத்தி வைத்தனர் (யாத் 16:20).

யூதித்து நூல், இறைவனுடைய அழைத்தலுக்கு ஏற்ப நாம் வாழ வேண்டும் என தெளிவாகக் கூறுகிறது. யூதித்து ஆண்டவரைச் சோதிப்பதற்கு மறுக்கிறாள் (யூதி 8:12-16). ஆனால் யூதித்து, சட்டங்களையும் ஒழுங்குகளையும் நன்கு கடைப்பிடித்து, இறைவனின் பராமரிப்பின் கருவியாக இருக்க அவள் தயங்கவில்லை (யூத் 9:9; 12:2: 13:8தொ). இதே எடுத்துக்காட்டுத்தான் சங்கீதங்களில் எதிரொலிக்கிறது. "ஆண்டவர் மீது நம்பிக்கை வை, நன்மை செய்" (சங் 36:2).

2. அளவற்ற அன்பால் ஆண்டவன் தம் மக்களைப் பராமரித்து வருவதையும் அதற்கு எப்படிப் பதில் அளிக்க வேண்டும் என்பதையும் இயேசு தன் சொற்களால், எடுத்துக்காட்டுகளால், செயல்களால் வெளிப்படுத்துகிறார். மனிதன்

உலகத் தலைவர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஊழியம் செய்வதைவிட, இறை அரசையும், அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடவேண்டும் (மத் 6:24.33); அதாவது விண்ணகத் தந்தையின் திருவுளம் விண்ணுலகிலும் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேற மன்றாட வேண்டும். அன்றாட உணவையும், தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற கடவுளின் பிள்ளைக்கு வேண்டிய யாவற்றையும் அவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டும் (மத் 6:10 தொ).

துன்ப துயரங்கள் மத்தியில் இறைவனிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த நம்பிக்கைக்கு இயேசு ஒரு விலக்கு அல்லர்; அவரே "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்" எனக்கூறுகிறார் (மத் 27:14). சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்து, மகனுக்குரிய நம்பிக்கையைச் சிலுவைமீது வெளிப்படுத்துகிறார்: "தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" (லூக் 23:46). விசுவாச நம்பிக்கை மூலம், சாவு மற்றும் துன்பதுயரங்களை வென்ற நமது ஆண்டவர், நல்ல ஆயன், துன்ப துயரங்கள் தீமைகள் இவைகளால் சோர்வு அடையும் நமக்கு உண்மை ஒளியாக விளங்குகிறார்; இருளிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறார். கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இறைவனின் பராமரிப்பின் மறை உண்மையை நன்கு உணர்ந்து, சுவைத்து, அதைப்பிறருக்குச் சாட்சியாக வெளிப்படுத்த வேண்டும். விசுவாசத்தில், நம்பிக்கையில், அன்பில் இறைவனுடன் ஒத்துழைக்க வேண்டும்.

## பரிகாரம் (EXPIATION, PROPITIATION, ATONEMENT)

1. இச்சொல் பல எபிரேயச்சொற்களின் பொருளைத் தமிழில் மொழி பெயர்க்கிறது. பழைய ஏற்பாட்டில் "பாவத்திற்கான" பலிகளுடனோ, குரு "பரிகாரச்சடங்கினை நிறைவேற்றுகிறார்" என்று கூறும்போதோ (லேவி 4) இச்சொல் பயன்படுகிறது. மேலும் சிறப்பாக. "பரிகாரங்களின் நாள்" என்று அழைக்கப்படும் திஸ்ரிமாதம் பத்தாம் நாள் கொண்டாடப்படும் ஆண்டு விழாவிலும் இச்சொல் பயன்படுகிறது. இந்நாள் பரிகாரநாள், பாவநீக்க நாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்நாளின் சடங்கானது லேவி 16-இல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் இச்சொல்லானது அரிதாகவே இருந்தாலும் (உரோ 3:25; எபி 2:17; 1 யோவா 2:2; 4:10) இக்கருத்தானது, பரிகாரங்களின் நாளில் தலைமைக்குருவின் செயலோடு கிறிஸ்துவினுடைய மீட்புப் பணியை ஒப்புமைப்படுத்தி வேறுபடுத்தும் எபிரேயருக்கான முழுத்திருமுகத்தில் மட்டுமின்றி, கிறிஸ்து "நமது பாவங்களுக்காக இறந்தார்" (1 கொரி 15:3) அல்லது "பாவங்களை நீக்குவதற்கென தமது இரத்தத்தைச் சிந்தினார்" (மத் 26:28) என்று சொல்லப்படும் ஒவ்வொரு முறையும் கிட்டத்தட்ட உறுதியாகக் காணப்படுகின்றது.

2. **பரிகாரமும் பாவமும்:** ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் பரிகாரம் பற்றிய கருத்தானது. மருந்து போன்றிராத தண்டனையுடன் குழப்பப்படுகிறது. ஆனால், இது துல்லியமானதன்று. ஏனெனில், பண்டைக் காலத்தவர் அனைவருக்கும் "பரிகாரம் செய்தல்" என்பது, "தூய்மைப்படுத்துதல்" அல்லது மேலும் துல்லியமாக ஒரு பொருளையோ, இடத்தையோ, நபரையோ "தெய்வங்களின் முன்னால் முன்பு ஏற்புடையவராகாமல் இருந்த நிலையினின்று ஏற்புடையவராக்குதல்" என்று பொருள்படும். எனவே, ஒவ்வொரு பரிகாரமும் அஃது அழிக்க வேண்டிய பாவம் இருப்பதை முன்குறித்துக் காட்டுகிறது.

இந்தப் பாவமானது மனிதனுடைய ஆற்றலால் துடைத்தழிக்கப்படக்கூடிய பருப்பொருள் கறையாக எண்ணப்படவில்லை. ஆனால், இறைவனுக்கெதிரான மனிதனுடைய கிளர்ச்சியாக இது கருதப்படுகிறது. ஆகவே, புதிதாக மனிதனை இறைவனுடன் மீண்டும் ஒன்றுபடுத்தி, இரத்தத்தைத் தெளிப்பதன் பொருளுக்கேற்ப அவனை இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம்,

பரிகாரமானது பாவத்தைத் துடைத்தழிக்கிறது. ஒரு புறம் பாவமானது இறைவனுடைய சினத்தைத் தூண்டுவது போன்று, ஒவ்வொரு பரிகாரமும் இந்தச் சினத்தை முடித்து வைக்கிறது. அஃது "இறைவனை நல்லிசைவானவராக ஆக்குகிறது." ஆனால், விவிலியமானது சாதாரணமாக "மனிதனை இறைவனுக்கு ஏற்புடையவராக ஆக்கும்" நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு இறைவனை நல்லிசைவானவராக ஆக்கும் பங்கைப் பரிகாரப்பலியோடு கூடிய செபத்திற்குச் சாற்றிக் கூறுகிறது.

**3. பரிகாரமும் வேண்டுதலும்:** பரிகாரம் மற்றும் சினம் முதலிய இரண்டு சொற்களும் இணைந்து காணப்படும் சில பகுதிகளில் உண்மையில் பொதிந்திருப்பது செபமே. மோசேயின் பரிகாரம் (யாத் 32:30; 31:11-13), அல்லது ஞான 18:21-25-இன்படி ஆரோனுடைய பரிகாரம் (எண் 17:11-13) இத்தகையதே. தார்கூமின் கருத்துப்படி பினகாசுவினுடையதும் (சங் 106:30), மேலும் தெளிவாக வேண்டுபவர் என்று நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ள "ஆண்டவருடைய ஊழியனின்" பரிகாரமும் இத்தகையதே (எசா 53:4.7.11.12). பரிகாரம் பற்றிய இக்கருத்தின் விளைவாகவே புனித எரோனிமு பழைய இலத்தீன் பதிப்பைப்பின்பற்றி, "பரிகாரச் சடங்கை நிறைவேற்றுதல்" என்று பொருள்படும் எபிரேயச்சொல்லைச் "செபித்தல்," "வேண்டுதல்" என்ற பொருளுடைய ஒரே சொல்லாக மொழிபெயர்த்தார் (லேவி 4:20.26.310.

"வேண்டுதல்" என்று விளக்கப்படும் (எபி 7:25; 9:24) தனது குருத்துவத்தின் இன்றியமையாக் கடமையை நிறைவேற்ற விண்ணிற்குச் செல்கின்ற கிறிஸ்துவை விவரிக்கின்ற எபிரேயருக்கான திருமுகமானது, திரைக்கு அப்பால் பரிகாரத்திற்காக, இரக்க இருக்கையின் மீது இரத்தத்தைத் தெளிக்கின்ற முக்கியமான பலியை நிறைவேற்றச் செல்கின்ற தலைமைக்குருவுடன் ஒப்பிடுகிறது. கிறிஸ்துவின் மரணமே உயர்ந்த "வேண்டுதலாக"க் கருதப்படுகிறது (எபி 5:7).

இத்தகைய விளக்கம், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதிகாரபூர்வ பரிகாரமானது அதனை அளிப்பவருடைய உள்ளார்ந்த மனநிலையைச் சார்ந்திராமல் எம்மதிப்பையும் கொண்டிருக்க முடியாது என்பதை வலியுறுத்துகிறது. முதலாவதாக இது, வெளிச்செயல் வெளிப்படுத்துகின்ற ஆனால் அளிக்க முடியாத ஆன்மீகச் செயலாகும். மனிதனைப்பொருத்தமட்டும் தனக்கு உகந்தவராக உருவாக இறைவனை வற்புறுத்தும் கேட்புரிமையையும் இது விளக்குகிறது. ஆரோனின் வேண்டுதலை விவரிக்கும்போது ஞான நூல், அவரது செபமானது "இறைவனது வாக்குறுதிகளையும், உறுதிமொழிகளையும் இறைவனுக்கு நினைவுபடுத்துவதாக" இருந்ததெனத் தெளிவாக விளக்குகிறது (ஞான 18:22). அந்த அளவில் இத்தகைய செபம் இறைவனது பிரமாணிக்கத்தில் கொள்ளும் விசுவாசமாகிறது. இவ்வாறு கருதப்படும் போது, பரிகாரமானது எவ்வழியிலும் (மனிதனுடைய பார்வையைத் தவிர்த்து) இறைவனுடைய மனநிலையை மாற்றுவதாக இல்லை. ஆனால், இறைவனுடைய கொடையைப் பெறுமாறு அது மனிதனை அமைக்கிறது.

**4. பரிகாரமும் மன்னிப்பும்:** யூதருடைய சமய உணர்வில் "பரிகார நாளானது" பெருமளவில் "மன்னிப்பின் நாளாகவே" கருதப்பட்டது. யோவான் இரு வேறுபட்ட இடங்களில், முதலில் தந்தையின் முன்பான கிறிஸ்துவினுடைய விண்ணக வேண்டுதலையும் (1 யோவா 2:2), பின்னர் அவரது மரணம் மற்றும் உயிர்பினால் கீழுலகில் நிறைவேற்றப்பட்ட பணியையும் (4:10) சுட்டிக்காட்டும்போது அவர் அல்லது தந்தையே நமது பாவங்களுக்காக அவரைப் பரிகாரப் பலியாக்கினார் என்று அறிவிக்கிறார். கிறிஸ்துவின் வழியாகவும் கிறிஸ்துவிலும், தன்னை நல்லிசைவானவராகக் காட்டுவதன் மூலம் தனது முடிவில்லா அன்பின்

திட்டத்தைத் தந்தை நிறைவேற்றுகிறார் (4:8); அதாவது உண்மையாகவே பாவங்களை அழிக்கின்ற, மனிதனைத் தூய்மைப்படுத்தி இறைவனுடைய வாழ்வையே அவனுக்கு அளிக்கின்ற (4:9) ஆற்றல் மிக்க மன்னிப்பினால் மனிதரை மன்னிப்பதில் அத்திட்டத்தை நிறைவேற்றுகிறார்.

**பரிசு (PRIZE)**

ஓட்டப்பந்தய உருவகத்தின் ஒரு விவரத்தை எடுத்து பவுல் கிறிஸ்தவ வாழ்வை விவரிக்கிறார் (1 கொரி 9:24; பிலி 3:14; கலா 2:2).

1 கொரி 9:24-இல் கால்பந்தயத்தில் பெறும் பரிசைப் பற்றி நேர்சொற்பொருள் காணப்படுகிறது. பிலி 3:14-இல் பரிசு உருவகமாகப் பயன்பட்டுள்ளது. ஓட்டப்பந்தயத்தில் நாம் ஓடி முதலில் வருவது பரிசுக்குத் தகுதி உள்ளவர்கள் ஆக்குகிறது. அதே போல் விண்ணக வாழ்வே நம் கிறிஸ்தவ வாழ்வின் பரிசாகும் என்கிறார். பவுலை இத்தகைய ஓர் உன்னத பரிசைப் பெறவே கடவுள் அழைத்திருக்கிறார் எனப் பவுல் கூறுகிறார் (1 தெச 2:12; எபே 1:18; 4:4).

இந்தவொரு சூழ்நிலையில்தான் (பிலி 3:3-11) பவுல் உலகின் பதவி, ஆடம்பரங்களையெல்லாம் வெறுத்து அந்த முடிவற்ற பரிசை நோக்கிச் செல்கிறார். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதும் அவரோடு ஒன்றித்திருப்பதும், விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டு இறைவனுக்கு ஏற்புடையவனாக இருப்பதும், அவரை அறிந்துகொள்வது, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைத் துய்த்துணர்வதும், அவரது பாடுகளில் பங்கு பெறுவதும், இறந்தோரிடமிருந்து உயிர்ந்தெழுதலை அடைவதுமே இந்தப் பரிசாகும். இவற்றிற்காகத்தான் இயேசு பவுலை ஆட்கொண்டார். அதைப்பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு பவுல் தொடர்ந்து ஓடுகிறார். இதுவே அவரது அழைப்பின் நம்பிக்கை. கிறிஸ்து இயேசுவுக்குள் ஒருவரைக் கடவுள் மேலுலகுக்கு அழைப்பதே இப்பரிசாகும்.

**பரிசேயர் (PHARISEE)**

I. வரலாற்றில் பரிசேயர்: இந்தப்பிரிவினர் எவ்விதம், எப்போதும் தோன்றினர் என்பது பற்றி உறுதியாக நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒருவேளை மக்கபேயர் காலத்திலிருந்த "கசிதீம்" என்ற அடியார்களின் கூட்டத்திலிருந்து இப்பிரிவினர் தோன்றியிருக்கக்கூடும். அசமோனியப் பரம்பரையைச் சார்ந்த யோவான் இர்க்கானு (கி.மு. 135-104) காலத்தில் நிலையாக வேரூன்றி இருந்தனர் பரிசேயர். பரிசேயர் என்பதற்குப் "பிரிந்து இருப்பவர்கள்" என்று பொருள் கூறலாம். அசமோனியப் பரம்பரையினரின் ஒழுக்கக்கேடான வாழ்வையும் அவர்கள் யூதர்களிடையே கிரேக்கக் கலாச்சாரத்தைப் புகுத்துதலையும் எதிர்த்து எழுந்ததால், இப்பெயர் இவர்களுக்குப் பட்டப்பெயராக இவர்களுடைய எதிரிகளால் வழங்கப்பட்டிருக்கலாம். யூத முறையைச் சாராத பிறநாட்டுப் பண்பாடுகளிலிருந்தும், மறை ஒழுக்கத்திற்கும் சட்டத்திற்கும் முரண்பட்ட அனைத்திலிருந்தும் பிரிந்து வாழ்ந்தனர். இவர்கள் யோவான் இர்க்கானு (கி.மு. 134-104), அலக்சாந்தர் யன்னேயு (கி.மு. 103-76) ஆகியோரின் காலத்தில் பல இன்னல்கள் உற்றனர். அரசி அலக்சாந்திரா சலோமே (கி.மு. 76:67) காலத்தில் இவர்களது செல்வாக்கு ஓங்கியிருந்தது. பெரிய ஏரோது, உரோமையர் ஆட்சிக்காலத்தில் இவர்களது செல்வாக்கு குறைந்திருந்தது.

பரிசேயர்கள், யூத இனத்தைக் கடவுள் ஆட்சி கொண்டதாகக் கருதினர். கடவுளே தங்கள் அரசன்; மற்றைய ஆட்சிமுறை யூதர்கள் மேல் புகுத்தப்பட்டால் அஃது ஓர் உரிமைப் பறிப்பாகும் எனக்கருதினர். அவர்களது மதம் மோசே அளித்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களையும் அவை பற்றிய விளக்கவுரைகளையும் பாரம்பரியத்தையும் (மத் 15:2; மாற்கு 7:5) அதிகாரபூர்வமான நூல்களாக ஏற்றுக் கொண்டனர். சட்டத்திற்கு மிக

விரிவான விளக்கங்கள் அளித்தனர். சட்டத்தைப் பரிசேயர் பல நூற்றுக்கணக்கான கட்டளைகளாகப் பிரித்தனர். ஒவ்வொன்றையும் செயல்படுத்துதலில் மிக விரிவான விளக்கங்கள் எழுதினர். இவற்றில் முக்கியமானவை ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல், சடங்குத்தூய்மையைக் கடைப்பிடித்தல், தேவாலயத்திற்குச் செலுத்த வேண்டிய பத்தில் ஒரு பங்காகிய கோயில் மகமையைச் செலுத்துதல் முதலியவைகளாகும். பரிசேயர் ஆன்மாவின் அழிவின்மை, இறந்த பின் தீர்ப்பு, உயிர்ப்பு, விண்ணகத் தூதர்கள் இருத்தல் முதலியவைகளை விசுவசித்தனர். மனிதனது சுயாதீனச் சித்தத்தையும், கடவுள் முன் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப் புணர்ச்சியையும் வலியுறுத்திக்கூறினர். சட்டத்தைச் சரியான முறையில் கடைப்பிடித்தால் ஒரு யூதன் உறுதியாக மீட்பு அடைவான் என்று நம்பினர். இது தேவாலயத்தில் பரிசேயனுடைய செபத்திலிருந்து தெரியவருகிறது (லூக் 18:11.12). ஆகையால் சட்டத்தை நுணுக்கமாய் அனுசரிப்பதை வலியுறுத்திக்கூறினர் பரிசேயர். ஓய்வு நாளில் தவிர்க்கப்பட வேண்டியவை பற்றி மிக நுணுக்கமான விதிகளை வகுத்தனர். ஓய்வு நாளில் இடப்பட்ட முட்டையை, அந்நாளில் பறிக்கப்பட்ட பழங்களை உண்ணலாமா என்பன போன்றவை பல உள. எவ்விதத் தண்ணீர் அதிகமாய்ச் சுத்தம் செய்ய உதவும், நீரில் கைகளை எவ்வளவுக்கு அமிழ்த்தலாம், கோயில் மகமை செலுத்தப்படாத பொருள்கள் வாங்கி உண்ணலாமா? என்பவை போன்றவைகளுக்கும் விதிகள் உண்டு.

இப்படிப்பட்ட விதிகளைக் கேட்டு நாம் புன்முறுவல் பூக்கலாம். ஆனால் பரிசேயர் மிகச்சிரத்தையுடன் இவைகளை அனுசரித்தனர். சட்டத்தை அனுசரிப்பதை ஒரு சுமையாகக் கருதவில்லை. அதற்கு மாறாக அதனை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதினர். மோசே வழியாகச் சட்டத்தை இறைவன் பிறமக்களுக்கு அளிக்காது, யூதர்களுக்கும் மட்டுமே அளித்தது ஒரு பெரும் பேறு அல்லவா? அவ்வாறு அளிக்கப்பட்ட சட்டத்தின் ஒவ்வொரு சிறு பகுதியையும் அனுசரிப்பது எவ்வளவு பெரிய பேறு! அதில் இன்பம் கண்டனர்.

மக்கள் பரிசேயரைப் பெரிதும் மதித்தனர். பரிசேயருடைய பக்தியும், ஒழுக்க உயர்வும், அவர்கள், மக்களுக்கு அளித்த மதக் குறிக்கோள்களும், அரசியல் அதிகாரிகளுக்கு முன் அவர்கள் அஞ்சாமையும், அவர்களை மக்கள் உயர்வாகக் கருதும்படி செய்தன. அதனால் பரிசேயர்களே தங்களை உயர்வாகக் கருதினர். சாதாரண மக்களைச் சபிக்கப்பட்டவர்கள் (யோவா 7:49) என இழிவாகக் கருதினர். மிதவாதியான மேதைகில்லல் கூட சட்டத்தையும் மரபு வழக்குகளையும் வணங்க முடியாது என்று கூறியதாகக் கேள்விப்படுகிறோம். சட்டத்தை அனுசரிப்பது ஒரு விக்கிரக வணக்கமாக மாறியது என்று கூடக் கூறலாம். நாளடைவில் இவ்வனுசரிப்பு பொருளற்ற புறத்தோற்றத்தை மட்டும் கொண்டிருந்தது.

பரிசேயர்கள், மக்கபேயர்கள் காலத்தில் சட்டத்தையும் தேவாலயத்தையும் காப்பதில் பெரிதும் சிரத்தை காட்டினர். பின்வந்த அசமோனியர் பரம்பரையை மத அடிப்படையில் எதிர்த்தனர். ஏரோதர்களுடனும் அவர்கள் ஒத்துவைக்கவில்லை. மக்கள் ஏரோதர்களுக்குப் பணிவதை அனுமதித்தாலும் அவர்கள் மட்டும் அரசியலில் தலையிடாது ஒதுங்கி வாழ்ந்தனர்; இதேபோல்தான் உரோமையரோடும் பழகினர்; ஆனால், இறை ஆட்சியினை ஆவலோடு எதிர்பார்த்தனர்; மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். மக்களிடையே மெசியாவைப் பற்றிய விசுவாசத்தைப் பரப்பினர். மத அடிப்படை கொண்ட இந்த நோக்கமே, மற்றப் பிரிவுகள் அழிந்த போதும் பரிசேயர்கள் குழு அழியாமைக்குக் காரணம்.

கி.பி. 70-ஆம் ஆண்டில் எருசலேம் அழிந்து யூத மக்கள் சிதறுண்டபோது, யூதமக்களைத்

திருத்தி அமைத்தவர்கள் இப்பரிசேயர் பிரிவைச் சேர்ந்தவர்கள்தான். பரிசேயரைச் சேர்ந்த பேரறிஞர்கள்தான் "தால்மூது" என்ற நூலை எழுதினர். இந்நூல் கி.பி. 200-500-இல் பாலஸ்தீனம், பாபிலோன் ஆகிய நாடுகளில் வாழ்ந்த யூத அறிஞர்களால் எழுதப்பட்டது. அதன் மூலம் யூதச் சட்டம், அவர்களது விளக்கவுரைகள், கதைகள், யூத மரபுகள் முதலியவற்றை அறிகிறோம். சட்டமும், வேத நூலைச்சார்ந்த யூத வைதீகமும் நமக்குக் கிடைத்துள்ளன என்றால் அதற்கு இப்பரிசேயர்கள் செய்த சேவையே காரணமாகும்.

II. **பரிசேயரும் இயேசுவும்:** இப்பரிசேயர் குழுவினர் ஆண்டவர் இயேசுவோடு பல இடங்களில் தொடர்பு கொள்கின்றனர். நற்செய்தியின் தொடக்கத்திலிருந்து இருவருக்குமிடையே எதிர்ப்பும் பகைமையும் இருந்து வருகிறது. ஏன்? தாங்கள் கொண்டிருந்த மதத்தலைமைப் பதவியை இயேசு கைப்பற்றிக் கொள்வார் என்ற அச்சம், இயேசுவைப் பரிசேயர் பகைக்கக் காரணமாய் இருந்திருக்கலாம். திருமுழுக்கு யோவான்கூட பரிசேயரது அளவு கடந்த மமதையையும், சுய நம்பிக்கையையும், யூதர்கள் என்ற முறையில் அவர்கள் கொண்டிருந்த தற்பெருமையையும் கண்டு அவர்களை 'விரியன் பாம்புக் குட்டிகளே' என்று அழைக்கிறார் (மத் 3:7-10; லூக் 3:7-8).

இயேசுவிடம் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடிக்கக் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர் பரிசேயர் என்பதை நற்செய்தியில் காண்கிறோம். அவரது பேச்சில் குற்றம் கண்டு பிடிக்க முயல்கின்றனர் (மத் 22:15; மாற் 12:13; லூக் 20:20). அந்நோக்குடன் சட்டம், மெசியா, இறையரசின் வருகை இவற்றைப்பற்றிய யூத விசுவாசம் முதலியவை பற்றி விளக்கம் கேட்கின்றனர் (மத் 22:34). இயேசுவின் நடத்தையைப் பற்றியும், அவர் பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் பழகுவதைக்கண்டும் பழி தூற்றினர் (மத் 9:9-13; மாற் 2:13-17; லூக் 5:27-32; 7:34; 15:2). அவர் ஓய்வு நாளில் நுணுக்க விதிகளைக் கடைப்பிடிப்பதில் கவனம் கொள்ளாது (மத் 12:1 தொ: மாற் 2:24 தொ; லூக் 6:1 தொ) ஓய்வு நாளில் குணப்படுத்தியது (லூக் 14:13), சடங்குத் தூய்மை விதிகளைப் பின்பற்றாதது (மத் 15:1 தொ; மாற் 7:1 தொ) முதலியவைகளுக்காக அவரை வெறுத்தனர். இவை காரணமாக அவரைப் பழி தூற்றுதலோடு நில்லாது, தாங்கள்தான் சட்டத்தையும் அதன் விதிகளையும் கடைப்பிடிப்பவர்கள் என்று யாவரும் அறிய வெளிப்படுத்திக் கொண்டனர். இயேசு பாவத்தை மன்னிப்பதை எதிர்த்தனர் (லூக் 5:17 தொ). அவர் பேய் ஓட்டுதலைப் பேய்களின் தலைவன் பெயெல்செபூபுவைக் கொண்டு செய்வதாகக் கூறினர் (மத் 12:24). அவரது சீடர்கள் அவரை வெற்றிப் பெருமிதத்துடன் வாழ்த்துவதை வெறுத்தனர் (லூக் 19:39). பரிசேயரது பகைமையையும் (யோவா 12:19-37), அவர்களது விசுவாசமின்மையையும் (7:45-52; 8:13; 9:13-34) யோவான் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். இயேசுவைக் கொல்லச் சதி செய்கின்றனர் பரிசேயர் (மத் 12:14; மாற் 3:6). இயேசுவைக் கைது செய்ய தலைமைக் குருக்களும், பரிசேயரும் காவலர்களை அனுப்பினர் (யோவா 18:3). பரிசேயர் பேராசை மிக்கவர்கள் என்றும், இறைவனது திட்டத்தைச் சிதைப்பதில் சிரத்தை கொண்டவர்கள் என்றும் லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 7:30; 14:16).

தமது சீடர்களின் நீதித்தன்மை பரிசேயருடையதைவிட மிகுந்திராவிட்டால் விண்ணரசு புக மாட்டார்கள் என்று இயேசு கூறியது (மத் 5:20), அவர் பரிசேயரைப் பற்றி மிதமாகக் கூறியதாகும். பரிசேயர் இயேசுவின் தூதை உறுதிப்படுத்த ஓர் அடையாளத்தைக் கேட்டபோது, அவர்களைக் கெட்ட விபசாரத் தலைமுறை என்றழைக்கிறார் இயேசு (மத் 12:38 தொ). அவர்கள் தாங்களே சிறந்தவர்கள் என்று கருதி ஒதுங்கி வாழ்தலைக் கண்டிக்கிறார் (மத் 9:9-13; மாற் 21:3-17; லூக் 5:27-32; 7:36 தொ). அவர்கள் சட்டத்தைப் பிறருக்கு ஒரு பெரும்

சுமையாக்கினர் (மத் 23:4). பரிசுத்த ஆவியாருக்கு விரோதமான மன்னிக்கப்பட முடியாத பாவத்தைக் கட்டிக்கொள்கின்றனர் (மத் 12:31 தொ). அவர்கள் சில சமயங்களில் சட்டத்தைத் திரித்துத் தங்களுக்குகந்த விதத்தில் அதற்குப் பொருள் கூறினர் (மத் 15:6; மாற் 7:8.13). குத்தகைக்காரர் உவமையில் கொடிய குத்தகைக்காரர்கள் பரிசேயராவர் (மத் 21:33-46). அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் (யோவா 9:40). அவர்கள் தாங்களே நீதிமான்கள் என்று எண்ணிக்கொண்டனர். இதைப் பரிசேயனும் ஆயக்காரனும் என்ற உவமையில் கண்டனம் செய்கிறார் இயேசு (லூக் 18:8-14). இக்குணங்கள், அவர்கள் தங்களைத் தாங்களே எண்ணிக்கொண்டது போல், மெச்சத்தகும், பிறர் பின்பற்றத்தகும் உயர்ந்த மேதைகள் அல்லர்; மாறாக இழிந்தோர்களே எனக்காட்டுகின்றன. இயேசுவினுடைய வார்த்தைகளும் இதையே உணர்த்துகின்றன. தமது கண்டனப் பொழிவில் கிறிஸ்து பரிசேயர்களை "வெளிவேடக்காரர்களே" என்றழைக்கிறார் (மத் 23). அவர்கள் சட்டத்தின் முக்கியமான பரிசுத்த கடமைகளைப் புறக்கணித்துவிட்டு, வெளிச் சடங்குகளையும் வெளித்தோற்றங்களையும் வலியுறுத்திக் கூறினர். பிறர்மேல் சுமத்தும் கடமைச் சுமையைத் தாங்களே அனுசரியார். அவர்கள் "வெள்ளையடித்த கல்லறைகள்"; வெளித்தோற்றத்தில் பக்திமான்களாகத் தோன்றினாலும், உள்ளத்தில் கறைபடிந்தவர்கள்; கள்ள ஞானமும் அக்கிரமும் நிறைந்தவர்கள்.

மேற்கூறப்பட்டவற்றை நற்செய்தியில் வாசிக்கும் சிலர், நற்செய்தியாளர்கள் பரிசேயரைத் தவறாகவும், அவதூறாகவும் சித்தரிக்கின்றனர் என்று குற்றம் சாட்டுகின்றனர். பரிசேயராலே எழுதப்பட்ட "தால்மூது" என்ற நூலிலும் பரிசேயரைப்பற்றி இதே குறைகள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இக்குறைகள் நற்செய்தியில் பரிசேயரைப்பற்றிக் கூறப்பட்டவைகளுக்கு முரண்படாது ஒத்து இருக்கின்றன. நற்செய்தியில் பரிசேயரைப் பற்றிய கூற்றுக்களிலும் முரண்பாடு காணப்படவில்லை. மேலும் இக்கூற்றுக்கள் மிகையானவை என்று கூறவும் முடியாது. கிறிஸ்துவுக்கு விரோதமாய் இருந்தவர்கள் பரிசேயர் மட்டுமல்லர்; சதுசேயரும் மறைநூல் அறிஞரும் இவர்களோடு சேர்ந்து இயேசுவை எதிர்த்தனர். இயேசுவின் மரணத்திற்குப் பரிசேயர்களும் பொறுப்பாளிகள் என்றாலும், பொறுப்பின் பெரும்பகுதி சதுசேயரையும் சாரும். பரிசேயரில் உண்மையான, நேர்மையான நீதிமான்களும் உண்டு. அவர்களில் சிலர் நிக்கொதேம் (யோவா 3; 7:45-52), அரிமத்தி யாவூர் யோசேப்பு (19:39), கமாலியேல் (அ.ப. 5:34) போன்றவர்களாவர். பவுல் ஒரு பரிசேயர்; அப்படியிருப்பதில் பெருமைப்படவும் செய்தார் என அறிகிறோம் (அ.ப. 23:6-7; 26:5; பிலி 3:5). எருசலேம் கிறிஸ்தவர்களில் பலரும் (அ.ப. 15:5), ஆதிக்கிறிஸ்தவர்களில் பலரும் பரிசேயர் பிரிவிலிருந்து மனந்திரும்பியவர்கள்.

III. **பரிசேயத்தனம்:** பரிசேயர் என்ற சொல்லினை வாதப்பின்னணியில் பயன்படுத்துவது துரதிருஷ்டவசமாக, கிறிஸ்தவப் பண்புக்குப் புறம்பான விதத்தில் அச்சொல்லைத் தவறான விதத்தில் பயன்படுத்த இட்டுச் சென்றுள்ளது. ஆயினும், யூதரைப் பற்றி இல்லாமல், மூடிய மனதுடனான எம்மனிதனுடைய நடத்தையையும் குறிக்சு இச்சொல்லைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டால், இம்முறையில் புரிந்து கொள்ளப்படும் பரிசேயத்தனமானது, பரிசேயருடைய பிரிவுடன் எந்தத் தொடர்பையும் கொண்டிருக்காது. இது நற்செய்தியினுடையதற்கு எதிரான ஒரு மனநிலையாகும். பரிசேயருடைய குருட்டுத்தனத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ள சில காட்சிகளை நான்காவது நற்செய்தி பாதுகாத்து வைத்துள்ளது (யோவா 8:13; 9:13.40). ஆனால், இது சாதாரணமாக அவற்றை யூதருடன் இணைக்கிறது. இவ்வாறு, இயேசுவுடனான அவர்களது முரண்பாடு வரலாற்றிற்கு அப்பாற்பட்ட மதிப்பைக் கொண்டுள்ளது என்பதை

அது சுட்டிக்காட்டுகிறது. நீதியெனும் முகமூடியணிந்து கொண்டு உள்ளார்ந்த வாழ்வின் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் அல்லது தன்னைப் பாவியென்று ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் இறைவனுடைய அழைத்தலிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல் ஆகியவை பரிசேயத்தனமாகும். தன்னுடைய சமய அறிவின் குறுகிய வட்டத்திற்குள் ஒரு மனிதன் இறைவனுடைய அன்பை ஒடுக்குவதும் இத்தகையதே. இந்த மனநிலையானது தொடக்க காலக் கிறிஸ்தவத்தில் யூதேயக் கிறிஸ்தவரிடையிலும் காணப்பட்டது. இதைப் பவுல் எதிர்க்கிறார் (அ.ப. 15:5). இவர்கள் புறவினத்தாரிலிருந்து வருகின்ற புதுக்கிறிஸ்தவர்களை யூதச் செயல் முறைகளுக்கு உட்படுத்த விரும்பினர். அதன் விளைவாக, கிறிஸ்துவின் மரணத்தினால் சட்டத்தின் நுகத்தடியினின்று விடுவிக்கப்பட்டவர் களை மீண்டும் அதே நுகத்தடிக்குக் கீழ்ப்படுத்த அவர்கள் விரும்பினர். மரத்தினின்று வெட்டப்பட்ட யூதனை இழிவாகக் கருதுகின்ற கிறிஸ்துவனிலும் (உரோ 11:18-20) பரிசேயத்தனம் காணப்படுகிறது (11:18). கிறிஸ்தவன் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் நிலைக்குப் பின்வாங்கி, அருளின் உலகளாவிய தன்மையை அறிந்துகொள்வதில் தவறுமளவிற்குப் பரிசேயத்தனமானது கிறிஸ்துவத்தை அச்சுறுத்துகிறது.

### பரிசேயனும் ஆயக்காரனும் - உவமை (PHARISEE AND TAX COLLECTOR - PARABLE)

செபமானது நேர்மையானதும் தாழ்ச்சியுடையதுமாய் இருக்க வேண்டும். இந்த உவமை (லூக் 18:9-14) தங்களை நீதிமான்களெனக் கருதி, பிறரைப் புறக்கணிக்கும் வெளிவேடக்காரரை நோக்கிக் கூறப்பட்டது. தன்னைத்தானே புண்ணியவானாகக் கருதி நிறைவடைபவர் இறைவனுக்கு ஏற்றவரல்லர். இங்கே தன்னிறைவு கொண்ட பரிசேயனும், தாழ்ச்சி நிறைந்த ஆயக்காரனும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றனர். தங்களுடைய செயலில் நிறைவுக் கொண்டு அதை நினைத்துப் பெருமைப்படுபவரை இந்தப் பரிசேயன் பிரதிபலிக்கிறான். ஆயக்காரனோ தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தோடு ஆண்டவரின் மன்னிப்பை மன்றாடும் நல்ல உள்ளம் படைத்தவரைக் குறிக்கிறான். கடவுள் தாழ்ச்சியுடையோர்க்குத் தம் அருளை ஈந்து வாழ்வளிக்கிறார். தீயோரையும், இறுமாப்புக் கொண்டோரையும் புறக்கணிக்கிறார் (1 பேதுரு 5:5).

### பரிந்துபேசுபவர் (ADVOCATE)

இது "பாராகிளேத்தோஸ்" என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. 1 யோவா 2:1-இல் இயேசுவுக்கு அளிக்கப்படும் ஒரு பட்டமாகும். விசுவாசிகள் இன்னும் பாவிகளே என்று கூறியபின், யோவான், இயேசு கிறிஸ்து அவர்களின் பரிந்துரையாளர் என்று விளக்குகிறார்.

நம் பாவத்திற்கு உயிருள்ள பரிகாரமாக விளங்குவதால் கிறிஸ்து, தந்தையோடு மனிதனுக்காகப் பரிந்து பேசுகிறார். இவர்கடவுளிடம் மனிதனுக்காகப் பரிந்து பேசும் மனிதனின் பிரதிநிதி, துணையாளர், உதவுபவர் என்ற முறையில் இவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார்.

இதே செயல் பரிசுத்த ஆவியாலும் செய்யப்படுகிறது (யோவா 14:16). இந்தத் தூய ஆவி விண்ணகத்துக்கு எழுந்து சென்ற கிறிஸ்துவுக்கும் அவர்தம் மக்களாகிய நமக்கும் இடையே உள்ள பாலமாய் இருக்கிறார்.

### பரிமளம், நறுமணப்பொருள் (PERFUME)

1. எல்லா மேற்காசிய மக்களையும் போன்று இஸ்ராயேலும் நறுமணப் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தியது. முப்பது வகைக்கும் குறையாமல் விவிலியம் அவற்றைக் குறிப்பிடுகிறது. மூதாதையர் அவற்றை யோசேப்புக்கு அளிக்கின்றனர் (ஆதி 43:11). நறுமணப் பொருட்களின் விற்பனையில் சாலமோன் (1 அர 10:2, 10; ஆதி 37:25) மற்றும் எசேக்கியா (2 அர 20:13) முதலானோர் ஏகபோக

உரிமை பெற்றிருந்தனர். உண்ணுதல், குடித்தலைப் போன்று நறுமணப் பொருட்களும் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தன. அதனுடைய பொருளானது இருவிதமானது; சமூக வாழ்வில் அது மகிழ்ச்சியின் அடையாளம் அல்லது சம்பந்தப்பட்ட நபர்களுடைய நெருக்கத்தின் வெளிப்பாடு; திருவழிபாட்டில் அது காணிக்கை மற்றும் போற்றுதலின் அடையாளம்.

**2. நறுமணப்பொருளும் சமூகவாழ்வும்:** நறுமணப்பொருட்களைப் பயன்படுத்துவது வாழ்வதில் ஒருவரது மகிழ்ச்சியை வெளிப்படையாக வெளிப்படுத்துவதாகும் (பழ 27:9). எப்போதையும்விடத் தன்னை மிகவும் அழகுபடுத்துவதாகவும் இது பொருள்படும். விருந்துகளில் விருந்தினர் இதனைப் பயன்படுத்துவர் (ஆமோ 6:6). உடலின்ப உறவில் காதலர்களும் இதனைப் பயன்படுத்துவர் (பழ 7:17). ஒருவருடைய விருந்தினரின் தலைமேல் நறுமணப்பொருளைப் பொழிவதென்பது, அவரை வரவேற்பதில் அவருக்குள்ள மகிழ்ச்சியின் அடையாளமாகும் (மத் 26:7). இச்செயலை விட்டு விடுவதானது மோசமான ஒழுக்கமாகும் (லூக் 7:46). மற்றொரு புறம் துக்க நேரங்களில், மகிழ்ச்சியின் இந்த அறிகுறிகள் நீக்கப்படுகின்றன (2 சாமு 12:20; 14:2). ஆயினும், தங்களுடைய தவத்தைக் காட்டிக்கொள்ளாமலிருக்கவும் (மத் 6:17), துக்கத்தினால் உண்மையான கிறிஸ்தவ மகிழ்ச்சியைச் சிதைக்காமல் இருக்கவும், தாங்கள் நோன்பு இருக்கும்போதும் கிறிஸ்துவின் சீடர்கள் நறுமணப் பொருட்கள் பூசுவதைத் தொடர்வர்.

சில நேரங்களில் நறுமணப்பொருளானது மிக நெருக்கமான பங்கையும் வகிக்கலாம். அதாவது ஒருவருடைய உடல்சார்ந்த பிரசன்னத்தை நுட்பமான, மிகவும் ஊடுருவிச்செல்கின்ற முறையில் தெரிவிக்கின்றதாக இஃது இருக்கலாம். மனிதனுடைய தன்மையையே வெளிப்படுத்தி, அவனுள் மறைந்துள்ள வாழ்வின் ஓர் அனுபவத்தை அளிக்கின்ற அமைதியான மென்மையான உறவாகும் இது. இதன் காரணமாகவே, தாங்கள் கவரவேண்டும் என்று எண்ணுகின்றவர்களுடைய உணர்வுகளை அதிகமாகக் கிளர வேண்டுமென்ற நோக்கத்தில் எஸ்தர் (எஸ் 2:12-17) மற்றும் யூதித்து (யூதி 10:3-4) ஆகியோர் வாசனைத் தைலத்தினாலும் வெள்ளைப் போளத்தினாலும் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர். யாக்கோபின் உடைகளினின்று வருகின்ற விளைச்சலின் வாசனையானது (ஆதி 27:27) இறைவனின் ஆசிர் அவர் மேல் தங்கியுள்ளது என்பதற்கான அறிகுறியாகும். உன்னத சங்கீதத்தில் தலைவி தனது காதலரின் பிரசன்னத்தை வெள்ளைப்போள முடிப்பிற்கும் (உ.ச. 1:12) நறுமணப்பொருளுக்கும் (1:3) ஒப்பிடும் வேளையில், அவளது துணைவர் அவளை வெள்ளைப் போளம் என்றும் பரிமளப் பொருள் என்றும் அழைக்கிறார் (5:1;4:10).

**3. நறுமணப்பொருளும் திருவழிபாடும்:** பண்டைய உலகானது தனது வழிபாட்டில் நறுமணப்பொருட்களைக் காணிக்கையின் அடையாளங்களாகப் பெருமளவில் பயன்படுத்தியது. இஸ்ராயேலும் இம்மரபைத் தழுவிக் கொண்டது ஆலய வழிபாட்டில் "நறுமணப் பீடம்" (யாத் 30:1-10), கத்திரிகள் (1 அர 7:50), மற்றும் தூபக்கலசங்கள் (எண் 7:86) முதலியன இடம் பெற்றன. மகிழ்ச்சிமிக்க ஆராதனையில் ஒவ்வொரு காலையும் மாலையும் நறுமணப் பலியானது அளிக்கப்பட்டது (யாத் 30:7-8; லூக் 1:9-11). புகையில் எழுகின்ற சாம்பிராணி மணமானது, இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற புகழ்ச்சியின் அறிகுறியாகும் (ஞான 18:21; சங் 14:2; திருவெளி 8:2-5; 5:8). சாம்பிராணியை எரிப்பதானது இறைவனை ஆராதித்து அமைதிப்படுத்துதல் என்று பொருள்படும் (1 அர 22:44; 1 மக் 1:55).

ஆனால், உண்மையான இறைவனுடைய வழிபாடாகிய ஒரே வழிபாடு மட்டுமே அங்கு இருக்க முடியும். இதன் விளைவாக, இறுதிக்காலங்களில் எல்லா நாடுகளும் இறைவனுக்கு அளிக்கக்கூடிய

இரத்தமற்ற பலியாகிய நிறைவான வழிபாட்டை அடையாளங் காட்ட சாம்பிராணியும் அதன் நறுமணமும் பயன்படுகின்றன (மலா 1:11; எசா 60:6; மத் 2:11). இந்த நிறைவான வழிபாடானது கிறிஸ்துவால் நிறைவேற்றுப்படுகிறது. அவர் தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாகக் கையளித்தார் (எபே 5:2; யாத் 29:18; சங் 40:7). அவருடைய வாழ்வானது இறைவனுக்கு ஏற்ற அன்பின் பலியாக எரிக்கப்பட்டது என்று இதற்குப் பொருள்.

கிறிஸ்தவன் தனது திருமுழுக்கின்போது கிறிஸ்துவுடன் விலை மதிப்புடைய நறுமணப்பொருட்களின் கலவையாகிய கிறிஸ்மாவின் அடையாளத்தினால் அபிடேகம் செய்யப்பட்டுள்ளான் (யாத் 30:22-25). அவன் தனது முறையில் தனது செயல்களில் சிறியவைகூட இந்தக் காணிக்கையின் ஆற்றலுடன் ஊக்குவிக்கப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு (பிலி 4:18), கிறிஸ்துவின் இனிய மணத்தைப் பரப்ப வேண்டும் (2 கொரி 2:14-17).

**பருந்து (KITE)**

இது நடுத்தர உருவமுடைய பிற உயிர்களைப் பட்சிக்கும் பறவையாகும். பாலஸ்தீனத்தில் பொதுவாக, சிவப்புப் பருந்துகளே காணப்படுகின்றன. கறுப்பு இறக்கைகளோடும் பருந்துகள் இங்கு உண்டு. இவை கழிவுப்பொருட்கள், உயிருள்ள சிறு பறவைகள், பாலுண்ணிகள் ஆகியவைற்றை உட்கொள்கின்றன. ஆகவே தீட்டானவையாகும்; உண்ணாமல் அருவருக்க வேண்டியதாகும் (லேவி 11:14). இவை மனிதரற்ற பாலைவனங்களில் வாழ்கின்றன எனக்கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதே (எசா 34:15).

**பருவகாலம் (SEASON)**

இது பல மூல எபிரேய, கிரேக்கச் சொற்களின் கூட்டு மொழி பெயர்ப்பு. இருந்தபோதிலும் எல்லாச் சொற்களும் வரையறுக்கப்பட்ட காலத்தைக் குறிக்கின்றன.

அ) வருடா வருடம் வருகின்ற பருவகாலங்கள் வானிலையை வைத்துப் பிரித்துக்காட்டப்பட்டன: குளிர்காலம், பிந்திய இலையுதிர்காலக்குளிர் (பழ 20:4; எரே 36:22), மழைக்காலம் (செக் 11:14), இளவேனிற் காலம் (செக் 10:1), கோடையின் வறட்சி (சங் 32:4; எசா 18:4). பறவைகள், மிருகங்கள் போன்றவையினுடைய நடத்தைகளினாலும் (ஆதி 31:10; எசா 18:6; எரே 8:7), விவசாயக் கூறுகளை வைத்தும் பருவங்கள் குறிக்கப்பட்டன: உழவு செய்தல் (யாத் 34:21), விதைத்தல் (லேவி 26:5), தளிர்விடுதல் (மத் 24:32), வாற்கோதுமை அறுவடை (ரூத் 1:22), கோதுமை அறுவடை (ஆதி 30:14), கதிரடித்தல் (யோபு 5:26), கோடைப்பழம் (ஆமோ 8:1), அத்திப்பழம் பழுக்கும் காலம் (மாற் 11:13), திராட்சை அறுவடை (எண் 13:26). விண்மீன் குழுக்களின் இடத்தை வைத்தும் (யோபு 38:3), திருயாத்திரை போன்ற (1 சாமு 1:3; லூக் 2:41) பாரம்பரிய பழக்கங்களை வைத்தும், போர்க்காலங்களை வைத்தும் (2 சாமு 11:1) பருவகாலங்களை நிர்ணயித்தனர்.

**பரோசு (PAROSH தெள்ளுப்பூச்சி)**

அடிமைத் தனத்திற்குப்பின் வாழ்ந்த இருவரின் பெயராகும்.

1. அடிமைத் தனத்திற்குப்பின் வாழ்ந்த ஒரு குடும்பத்தலைவரின் பெயர் (எஸ் 2:3; 8:3; 10:25; நெகே 3:25; 7:8).

2. எஸ்ரா காலத்தில் உடன்படிக்கையிலே கையொப்பமிட்ட தலைவர்களுள், இவரும் ஒருவராவார் (நெகே 10:14).

**பர்சந்தாத்தா (PARSHANDATHA - ஆர்வமிக்க, தலையிடுகிற)**

ஆமானின் பத்துப் புதல்வர்களில் இவரும் ஒருவர். இவர்களின் தந்தையான ஆமானைத் தூக்கிலிட்டபின் இவர்களை யூதர்கள் கொன்றனர் (எஸ்த 9:7).

**பர்சபா (BARSABBAS – ஓய்வுநாளின் மகன் அல்லது சாபாவின் மகன்)**

1. பர்சபா என்னும் யோசேப்பு. இவருக்கு யுஸ்து என்ற பெயரும் இருந்தது. யூதாசு இஸ்காரியோத்து இழந்துபோன அப்போஸ்தலர் இடத்தைப் பெறுவதற்குச் சீட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் (இருவரில்) இவர் ஒருவர் (அ.ப. 1:23).

2. அந்தியோக்கியாவில் பவுல், பர்னபா ஆகியோருக்கு உதவிசெய்ய சீலாவோடு பர்சபா என்னும் யூதாசை எருசலேம் திருச்சபை அனுப்பியது (அ.ப. 15:22). சீலாவைப்போல், இவரும் ஓர் இறைவாக்கினர் (15:32).

**பர்சில்லாய் (BARZILLAI – இரும்புமனிதன்)**

1. ரோகலிமைச் சேர்ந்த கிலயாதியரான இவர் மற்ற இருவருடன் கிளர்ச்சி செய்த தன் மகன் அப்சலோமிருந்து தாவீது தப்பியோடியபோது அவரிடம் வந்து அவருக்குப் படுக்கைகள், கிண்ணங்கள் மண்பாண்டங்கள், கோதுமை, வாற்கோதுமை, மாவு, வறுத்த தானியம், மொச்சை இன்னும் பலவற்றைக் காணிக்கையாகக் கொடுத்தார் (2 சாமு 17:27-29).

அப்சலோம் தோற்கடிக்கப்பட்ட பின், அரசரோடு யோர்தானைக் கடந்து சென்று மரியாதை செய்தார். அவருக்கு எண்பது வயதாகி விட்டதால், அரசவையில் சேர்ந்துகொள்ள அரசன் விடுத்த அழைப்புக்கு இணங்க மறுத்து விட்டார். தனக்குப் பதிலாக தன் மகன் கிம்காமை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அரசர் இணங்கினார் (19:31-40). தனது இறப்புக்குமுன், தாவீது அரசர் பர்சில்லாயின் புதல்வர்களை அரசவையில் மதிப்பு மிக்கவர்களாக நடத்தும்படி, தன் மகன் சாலமோனுக்குக் கட்டளையிட்டார் (1 அர 2:7).

2. இவர் ஒரு மெகொலத்தியர். இவரது மகன் அதிரியேல், சவுலின் மகள் மேராபுவைத் திருமணம் செய்து கொண்டார் (1 சாமு 18:19). 2 சாமு 21:8-இல் மீக்கால் மேராபு என்று இருக்க வேண்டும்.

3. ஒரு குரு. பர்சில்லாயின் (1) புதல்வியரில் ஒருத்தியை மணந்து அவரது பெயரையே எடுத்துக்கொண்டவர். இப்பெயர் மாற்றத்தில் இவரது வழித்தோன்றல்கள், நாடு கடத்தப்பட்டதற்குப்பின், தங்களது மரபு முறைப்பட்டியலை எண்பிக்க முடியாததால், குருத்துவப் பணியினின்று நீக்கப்பட்டனர் (எஸ் 2:61; நெகே 7:63-64).

**பர்த்தலமேயு (BARTHOLOMEW – தல்மாயின் மகன்)**

புதிய ஏற்பாட்டின் நான்கு குறிப்புகள்படி இவர் ஓர் அப்போஸ்தலர். இவர் எப்போதும் பிலிப்புக்குப்பின்னோ (மத் 10:3; மாற் 3:18; லூக் 6:14), சிறிது பிந்தியோ (அ.ப. 1:13) குறிக்கப்படுவதால், இவர் நத்தனியேல்தான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இந்த நத்தானியேலைப் பிலிப்பு இயேசுவிடம் கூட்டி வந்தார் (யோவா 1:45-51; காண்க. 21:2).

திருச்சபைப் பாரம்பரியப்படி இவர் இந்தியா, அர்மேனியா, பிரிகியா, லிக்கவோனியா, மெசபொத்தாமியா, பாரசீகம் ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவித்ததாகத் தெரிகிறது. இவர் பிலிப்போடு சேர்ந்து நற்செய்திப்பணி செய்தார் என்று அறிகிறோம். கத்தோலிக்கப் பாரம்பரியம் பிலிப்புக்கும், பர்த்தலமேயுவுக்கும் சேர்ந்து விழாக்கொண்டாடுகிறது. மத்தேயு நற்செய்தி விளக்கவுரையின் முன்னுரையில் எரோனிமு பர்த்தலமேயு எழுதிய நற்செய்தி ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

**பர்த்தலமேயு எழுதிய கிறிஸ்துவின் உயிர்ப்பு பற்றிய நூல் (BARTHOLOMEW THE APOSTLEL, BOOK OF THE RE SURRECTION OF CHRIST BY)**

இந்நூலானது பர்த்தலமேயுவால் எழுதப்பட்டு, அவரின் மகனான ததேயூவிடம் கொடுக்கப்பட்டு, அவிசுவாசிகளின் கையில் அந்நூல் கிடைக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்படி கூறப்பட்டதாகக்

கூறப்படுகிறது. இது பர்த்தலமேயுவின் சிறப்பைப் பற்றிக் கூறுவதற்காக எழுதப்பட்டதாகவே தெரிகிறது. பர்த்தலேமேயுவின் சிறப்பைப் பற்றிக் கூறுவதற்காக எழுதப்பட்டதாகவே தெரிகிறது. பர்த்தலேமேயுவின் நற்செய்தியில் காணப்பட்டது போலவே, இந்நூலிலும், இயேசுவின் உயிர்ப்பும், பாதாளத்தில் இறங்கி அவர் ஆன்மாக்களை மீட்டதும், ஆதாமை மீட்டதும் மையக்கருத்தாகக் கூறப்படுகின்றன. திருமுறை சேராத பிற நற்செய்திகளைப் போலவே, இந்நூலும், திருமுறை நூல்களிலிருந்து மையக்கருத்தை எடுத்து, அதை விரிவுபடுத்தித் தேவைக்கேற்றாற்போலக் கூறியுள்ளது. இந்த நூலின்படி, இயேசு இருமுறை அடக்கம் செய்யப்படுகிறார். ஒருதடவை அரிமத்தியா யோசேப்பாலும், இன்னொரு தடவை ஒலிவமலையில் இருந்து இறங்கிவரும்போது, குணமாக்கப்பட்ட பையனின் தந்தையான பிலகனேசு என்பவராலும் அடக்கம் செய்யப்பட்டார். மேலும், சாவு, இயேசுவைச் சந்திக்கக் கல்லறைக்குச் சென்று உறவாடுதல், அப்போஸ்தலர்கள் விண்ணேற்றம், இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள், தோமையாரின் சந்தேகம் போன்றவற்றை மிகவும் விரிவாக இந்நூலில் காணலாம். தோமையாரின் மகனான சியோபான் தொலைநாட்டில் இறந்து விட்டதால்தான் இயேசு வந்தபோது, தோமையார் அங்கு இல்லை என்றும் கூறுகிறது இந்நூல்.

இதைத் தவிர மீட்கப்பட்ட ஆன்மாக்களை வரவேற்றுப் பாடும் எட்டுப்பாடல்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்நூல் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலாக இருக்கலாம்.

**பர்த்தலமேயு எழுதிய நற்செய்தி (BARTHOLOMEW, GOSPEL OF)**

எரோனிமு தான் எழுதிய மத்தேயு நற்செய்தி விளக்கவுரையின் முன்னுரையில் திருமுறைப்பட்டியலைச் சேராத நூல் பட்டியலின் வரிசையிலும் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எரோனிமுவுக்கு இந்தப் புத்தகத்தைப் பற்றித் தெரியுமா என்பதுபற்றி நமக்குத் தெரியவில்லை. காரணம் அவர், "பந்தனேயு இந்தியாவில் கிரேக்கத்தில் எழுதப்பட்ட மத்தேயு எழுதிய நற்செய்தி நூல் ஒன்றைக் கண்டெடுத்தார். அஃது அங்கு பர்த்தலமேயுவால் கொண்டு செல்லப்பட்டது" என்று யுசேபியு எழுதிய செய்தியையே இவர் ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார். அரயோபாகியர் தியோனிசு எழுதிய ஒரு நூலில் "இறைவல்லுநர் பர்த்தலமேயு" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டதாக இரண்டு மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. ஆனால், மேலே குறிப்பிட்ட எந்தத் தகவலும், பர்த்தலமேயு எழுதிய நற்செய்தியைப் பற்றி எதுவும் சரியாகத் தர இயலவில்லை.

இன்று கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் காணப்படும் "பர்த்தலமேயுவின் கேள்விகள்" என்னும் நூல், ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இஃது ஒரு வேளை திருமுறைப் பட்டியலுக்கே தெரியாத, அதனால் ஏற்கப்படாத நூலாக இருக்கலாம்.

இந்த நூலில், இயேசுவின் சிலுவைப் பாடுகளின்போது தூரத்தில் இருந்து பின் பற்றிய பர்த்தலமேயு, உயிர்த்த இயேசுவிடமும், மரியாளிடமும், சாத்தானிடமும் பல கேள்விகள் கேட்பதாகக் கூறப்பட்டுள்ளது. சிலுவையில் அறையப்படும்போது இவர் தூரத்தில் இருந்து கண்ட தெய்வீகக் காட்சிகளை வேறு யாரும் காணவில்லை என்றும், அஃது இயேசு, இவரை அழைத்தபோது கொடுத்த வாக்குறுதி என்றும் (யோவா 50:51) கூறப்படுகிறது.

இந்த நூலில், நரகத்தில் இறங்குதல், மங்கள வார்த்தையும், அதைத்தொடர்ந்து இயேசுவின் புதுமைப்பிறப்பும், போன்ற பல கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளைப் பற்றிக் கற்பனை கலந்து கூறப்பட்டுள்ளது. இதில் ஐந்து முக்கிய காட்சிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1) இயேசு பாதாளத்தில் இறங்கி, நம் முதுபெரும் தந்தையாரை மீட்டு வருதலும், ஒவ்வொரு நாளும்

அங்கிருந்து மீட்கப்படும் ஆன்மாக்களின் எண்ணிக்கையும், அங்குப் போகும் ஆன்மாக்களின் எண்ணிக்கையும்; 2) மரியாளைத் தூதர் சந்தித்ததும், அப்போது மரியாள் நடத்திய புதுமைகளும்; 3) இயேசு, அப்போஸ்தலர்களிடம் அவர்களின் மிக முக்கிய விருப்பம் எது எனக் கேட்க, அவர்களின் விருப்பப்படி, ஆழமே தெரியாத ஒரு பெரிய பாதாளத்தைக் காணுதல்; 4) பர்த்தலமேயுவால் சாத்தானிடம் கேட்கப்பட்ட கேள்விகள்; 5) தலையான பாவங்கள் பற்றிய தொகுப்பு.

**பர்த்திமேயு (BARTIMAEUS - திமாயின் மகன், அல்லது தீட்டுப்பட்டவனின் மகன்)**

இயேசுவால் குணப்படுத்தப்பட்ட ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் (மாற் 10:46-52). இவரது தந்தையின் பெயர் கிரேக்கப் பெயராய் இருப்பதால் பர்த்திமேயு ஒரு கிரேக்கர் என்று கூற அவசியமில்லை. மத்தேயு (மத் 20:29-34), லூக்கா (லூக் 18:35-43) ஆகியோரின் விவரிப்புகள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிகழ்ச்சியின் சாராம்சம் ஒன்றுபட்டிருந்தாலும் வர்ணனையில் வேறுபாடுகள் தென்படுகின்றன.

மாற்கு விவரிப்பு, நேரில் கண்டவரின் நினைவுபோல் அமைந்துள்ளது. "தாவீதின் மகனே" என்ற அழைப்பு மெசியாத்தொனியைக் கொண்டிருக்கலாம். இந்நிகழ்ச்சியுரையில், பர்த்திமேயுவின் விடாமுயற்சி, விசுவாசம், நன்றிப்பெருக்கு மற்றும் இயேசுவின் ஒத்துணர்வான பதில் ஆகியவை கவனிக்கத்தக்கவையாகும்.

**பர்பார் (PHARPAR - வேகமான)**

சீரியாவின், பர்பார், தமஸ்கு நகரில் ஓடும் இரண்டு ஆறுகளில் ஒன்று. இது மற்றொன்றான அபானா என்னும் நதியுடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது (2 அர 5:12). பர்பார், பரதா ஆற்றின் கிளை ஆறான இக்கால நகர்-ஏல்-அவாசு எனக் கருதப்படுகிறது. இது தமஸ்குவுக்குத் தெற்கில் 13 கி.மீ. தொலைவில் ஓடுகிறது. 2 அர 5:12-இல் பர்பார் தமஸ்கு ஆறுகளில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேலே கூறப்படும் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**பர்மஸ்தா (PARMASHTA - மிக முதன்மையான, முக்கியமான)**

ஆமானின் பத்துப் புதல்வர்களின் இவர் ஏழாவது புதல்வராவார் (எஸ்த 9:9). இவர் யூதர்களால் கொல்லப்பட்டார்.

**பர்மனா (PARMENAS - தளராத)**

எருசலேம் திருச்சபை அப்போஸ்தலர்களுக்கு உதவி புரியத் தேர்ந்தெடுத்த ஏழு தொண்டர்களில் இவரும் ஒருவர் (அ.ப. 6:5).

**பர்வயிம் (PARVAIM - கீழ்த்திசை சேர்ந்த)**

சாலமோன் எருசலேமில் கட்டிய ஆலயத்தை அழகுபடுத்த பர்வயிமினின்று கொண்டு வரப்பட்ட பொன் பயன்படுத்தப்பட்டது (2 நாள் 3:6). இராபிகளின் மூலங்களின்படி, இந்தப் பொன்னானது சிவப்பு நிறமுடையது. இந்தப்பொன்னால் செய்யப்பட்ட பாத்திரத்தினால், பெரிய குரு பாவப்பரிகார நாளன்று பீடத்தில் எரித்த காணிக்கைகளின் சாம்பலை நீக்குவார். அரேபியாவில் பொன் அதிகமாகக் கிடைத்ததால் இந்தப் பர்வயிம் எனும் இடம் அரேபியாவில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இது தற்போது ஏமானில் இருக்கும் சாக்-ஏல்-பர்வெயின் என்ற இடமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**பர்னக்கு (PARNACH - வேகமான)**

பர்னக்கு செபுலோன் கோத்திரத்தின் தலைவனாகிய எலிட்சாபானின் தந்தை ஆவார். இந்த எலிட்சாபான் மேற்கு யோர்தானில் கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நியமிக்கப் பட்டவர்களில் ஒருவராவார் (எண் 34:25).

**பர்னபா (BARNABAS - ஆறுதலின் மகன், உற்சாகத்தின் மகன்)**

சைப்பிரசுத் தீவினரான யோசேப்பு என்னும் லேவியரான இவருக்கு அப்போஸ்தலர் அளித்த பெயராகும் இது (அ.ப. 4:36). இளம் வயதிலேயே இவர் கிறிஸ்தவரானார். அதற்குப்பின் அவரின் முதல் செயல், தனக்கிருந்த ஒரு நிலத்தை விற்றுத் தொகையைக் கொண்டுவந்து, ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும்படி அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்ததாகும் (4:37). பவுல் மனந்திரும்பியபின் பர்னபாதான் அவரை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களிடம் அழைத்துச்சென்று அறிமுகம் செய்து வைத்தார் (9:27). சீரியா அந்தியோக்கியாவில் புதிதாக நிறுவப்பட்ட திருச்சபைக்குப் பர்னபாவைத்தான் எருசலேம் திருச்சபை அனுப்பி வைத்தது (11:22). அங்கு அவர் தம் பணியில் அடைந்த வெற்றி, அப்பணியில் பங்குபெறப் பவுலை அழைத்துவரத் தூண்டியது. இருவரும் சேர்ந்து அங்கு ஓராண்டு தங்கிப் போதித்தனர் (11:25-26). சில காலத்திற்குப்பின், எருசலேம் ஏழைகளுக்காக அந்தியோக்கியாவில் சேகரித்த பொருளுதவியை இருவரும் எருசலேமுக்குக் கொண்டு சென்றனர் (11:29-30).

அ.ப. 13:2-3-இன்படி, இறை ஆவியானவர், "பவுலையும் பர்னபாவையும் நான் தெரிந்தெடுத்த வேலைக்காக எனக்கென ஒதுக்கி வையுங்கள்" என்று கோர, அந்தியோக்கியத் திருச்சபை நோன்பிருந்து செபம் செய்து, அவ்விருவர் மீது கைகளை விரித்து அவர்களை அனுப்பி வைத்தது. சைப்பிரசில் பணிசெய்தபோது, சிறிய ஆசியாவில் செய்த பணியின் தொடக்கத்தில் பர்னபா முதன்மைப் பேச்சாளராக விளங்கினார். ஆனால் பிற்பகுதியில் பவுல் தலைமை ஏற்கிறார். லிஸ்திராவில் பவுல் பேச்சாளராக இருந்ததால், எர்மா என்றும், பர்னபா செயுசு என்றும் அழைக்கப்படுகின்றனர் (14:12). முதல் மறைபரப்புப் பயணத்திற்குப்பின் இருவரும் எருசலேமில் நடந்த அப்போஸ்தலிக்கச் சங்கத்திற்குப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டனர் (15:2). பின்பு, சங்கத்தின் முடிவுகளைச் சிறிய ஆசியாத் திருச்சபைகளுக்கு எடுத்துக்கூற இருவரும் பணிக்கப் பெறுகின்றனர் (15:22 தொ).

தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் பங்குபெற பர்னபாவைப் பவுல் அழைத்தபோது, மாற்கைக் கூட்டிச் செல்வதா இல்லையா என்பது பற்றி இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆகவே பிரிந்து தத்தம் போக்கில் சென்றனர். பர்னபா மாற்கைக் கூட்டிக் கொண்டு சைப்பிரசில் பணிசெய்யச் சென்றார் (15:36-39). ஆனால் பவுல், பர்னபாவுக்கிடையே நிகழ்ந்த இந்தப்பிரிவு ஆழமானதோ, நிலையானதோ அன்று. ஏனெனில் தனது முந்தை உடனுழைப்பாராகிய பர்னபாவைப் பாராட்டியே பேசுகிறார் பவுல் (1 கொரி 9:6; காண்க. கலா 2:1.9.13). மாற்கையும் பற்றிப் பாராட்டிப் பேசுகிறார் (2 திமொ 4:11).

பிற்காலத் திருச்சபையின் சான்று, பர்னபாவை ஓர் எழுத்தாளராகத் காட்டுகிறது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியராகப் பர்னபாவைக் குறிப்பிடுகிறார் தெல்துல்லியன். அலக்சாந்திரிய கிளமெந்தும், ஓரிசனும் பர்னபா ஒரு திருமுகத்தை எழுதியதாகவும், திருமுறையைச் சேர்ந்ததாகவும் கருதுகின்றனர். ஏனெனில், இருவரும் பர்னபாவை ஓர் அப்போஸ்தலராகக் கருதினர். ஆனால், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் மற்றும் பர்னபாவின் திருமுகம் ஆகியவற்றின் தன்மையைக் கலாத்தியர் திருமுகத்தில் விவரிக்கப்படும் பர்னபாவின் பழைமை வாதத்தன்மையோடும், அப்போஸ்தலர் பணி நூலில் பர்னபாவை எருசலேமைச் சார்ந்தவராகக் காட்டுவதோடும் ஒத்துப்போகச் செய்வது கடினம். மேலும், பர்னபா எழுதிய திருமுகத்தின் உள்ளார்ந்த சான்று இந்நூல் கி.பி. 130-இல் எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகிறது. இது பர்னபாவின் காலத்திற்கு மிகவும் பிந்தியதாகும்.

**பர்னபா எழுதிய திருமுகம் (BARNBAS, EPISTLE OF)**

இது புதிய ஏற்பாட்டு இறுதிக்காலக்கட்டத்தில்

கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். இஃது அப்போஸ்தலத் தந்தையரின் நூல்வகையைச் சார்ந்தது. இந்நூலின் மையக்கருத்து பழைய ஏற்பாட்டு வெளிப்பாடு யூதருக்கா? கிறிஸ்தவருக்கா? என்பதே. மேலும் இந்நூலில் இருளின் வழியும், ஒளியின் வழியும் என்னும் முறையில், அறநெறிக்கொள்கைகளையும், படிப்பினைகளையும் கூறுகின்றது.

1. **அமைப்பும் பொதுப்பண்பும்:** பழைய காலத்துத் திருமுகங்களுக்கான முறைகள் எதுவும் இந்தக் கடிதத்தில் அதிகமாகக் காணப்படவில்லை என்றாலும், இஃது ஒரு திருமுகமாகவே கருதப்படுகிறது (1:5; 4:9; 17:2; 21:9). எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தோடு இஃது ஒப்பிடத் தகுதி பெற்றது. இது 'திருச்சபையின் போதனை' வகைசார்ந்த திருமுகம் என தெரியவருகிறது. எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைப் போல, இந்நூல் ஒரே பொருளை, மையக்கருத்தாகக் கொண்டு, அதை விளக்கியுள்ளது. யூத மதம், கடவுளின் வழியையும், எண்ணத்தையும் ஏமாற்றுகின்றது என்றும், பழைய ஏற்பாடு தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவர்களுக்காவே எழுதப்பட்டது என்றும், அதில் குறிப்பிட்டுள்ள இறைவாக்குகள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கே தொடர்புடையது என்றும், தனது மையக்கருத்தில் (அத்தியாயம் 1:17) குறிப்பிட்டுள்ளார். இதை அவர் குறிப்பிட்டது, தனது கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையின் வரலாற்றுத் தோற்றத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விடாதபடி பார்த்துக் கொள்ளவே. அவர்கள் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள். நூலின் திட்டம், பிற்காலத்தைச் சேர்ந்த திருமுழுக்கு ஞான உபதேசமாயும், தயாரிப்பாயும் அமைந்திருக்கிறது.

**2. பொருளடக்கம்**

I. திருமுழுக்கு அருட்கொடையின் சிறப்போடு கூடிய முன்னுரை. அதி. 1.

**II. முக்கிய போதகப் பாகம், யூதர்களின் தவறும் கிறிஸ்தவர்களின் மேன்மையும் (அதி. 2:17).**

1) பலி ஒப்புக்கொடுத்தல் (அதி. 2).

2) நோன்பு இருத்தல் (அதி. 3).

3) காலத்தின் உடனடியாக வரவிருக்கும் முடிவும், விசுவாசிகளிடம் அதன் கோரிக்கைகளும் (4:1-6.10-14).

4) உடன்படிக்கையின் வாரிசுரிமை (4:7-9; அதி. 13:14).

5) இயேசுவின் மீட்புப்பணி. அவர் மனிதன் ஆதல், துன்பம், இறப்பு ஆகியவை பழைய ஏற்பாட்டு அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன (அதி. 5-8; 11-12).

6) விருத்தசேதனம் (அதி. 9).

7) உணவு பற்றிய தடைகள் (அதி. 10).

8) ஓய்வு நாள் (அதி. 15).

9) ஆலயம் (அதி. 16).

10) முடிவுரை (அதி. 17).

III. நடைமுறை அறநெறியின் போதனைகள் (அதி. 18-20).

1) இருவழிகளின் கோட்பாடு (அதி. 18).

2) ஒளியின் வழி (அதி. 19).

3) இருளின் வழி (அதி. 20).

IV. திருமுகத்தின் முடிவுரை (அதி. 21).

ஆசிரியர், தனிப்பட்ட தலைப்புகளை ஒழுங்காக அமைக்காததால், மொத்தத்தில் இந்நூலில், தொடர்ச்சியின்மையும், ஒழுங்கற்ற வடிவமைப்பும் காணப்படுகின்றன. மரபு மரபாக, வாய்வழியாகச் சொல்லப்பட்டதைத் தன்னுடைய நூலுக்கு மையப்பொருளாகக் கொண்டுள்ளார்.

3. **மூலங்கள்:** முதற்பகுதி பழைய ஏற்பாட்டை அதிகமாக இது தழுவியுள்ளது. கிறிஸ்தவ இயல் கருத்துக்களைச் சொல்ல இந்தப் பகுதியையே அவர் பயன்படுத்தியிருக்கிறார். பழைய

ஏற்பாட்டைத் தவிர, இவர் நற்செய்தி நூல்களை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. அதிகமாக, மரபு மரபாக, வாய் மொழியாகச் சொல்லப்பட்டு வந்ததையே இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. இருவழிகளின் கோட்பாடு (அதி 18-20) திருச்பையின் போதனை நூல் திதாக்கேயிலும் காணப்படுகிறது. என்றாலும், இது திதாக்கேயைத் தழுவியது என்று கூறமுடியாத அளவுக்குப் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே இவை இரண்டும், வேறு ஒரு பொது மூலத்தைத் தழுவி அமைந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

4. **இறையியல்:** பர்னபாவின் திருமுகம், பவுலின் இறையியல் கொள்கையை அதிகமாகச் சார்ந்துள்ளது. பவுல் கூறும், விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவை பற்றி பர்னபா 1:4.6-இல் குறிப்பிட்டுள்ளார். விசுவாசத்தால் ஆபிரகாமை ஏற்புடையவராக்குவதன் பொருள், புறவினத்தார் மனந்திரும்புதலுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது (13:7). கிறிஸ்துவின் முன்தோற்றத்தைப் பற்றிய இறையியல் முழுவதும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் எதிர்-யூதத்துவம், ஞானம் போன்ற சொற்களைப் பயன்படுத்துவது, ஞானவாதக் கோட்பாடுகளைக் குறிக்க அல்ல; மாறாக, பழைய ஏற்பாடு பற்றிய உருவக விளக்கத்தால், கிறிஸ்தவத்தின் ஆழ்ந்த உட்கருத்தை வெளிக்கொணரவே.

5. **காலமும் ஆசிரியரும்:** எசாயா இறைவாக்கினர், எருசலேம் ஆலயம் எதிரிகளால் தகர்க்கப்படுவது மற்றும் அது மீண்டும் கட்டப்படுவது பற்றிக் கூறிய இறைவாக்கு 16:3-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் அதிரியான் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. திருமுகத்தின் உள் அமைப்பு புதிய ஏற்பாட்டு நூல்களைத் தழுவி அமையாமை, ஆயரின் பணி பற்றிக் குறிப்பிடாமை, ஆகியவற்றை மனதில் கொண்டு இது கி.பி. 130-இல் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால் திருமுகம் இதற்கு முந்தைய காலத்தைச் சுட்டலாம். என்ன இருந்தாலும், அப்போஸ்தலர் பர்னபா எழுதியிருக்கவே முடியாது. பர்னபா எழுதிய திருமுகத்திலே, ஆசிரியர் பெயர் குறிப்பிடவில்லை. ஆசிரியர் பெருந்தன்மையுடன் அவரைப் போதகர் என்றே குறிப்பிடுகிறார் (1:8; 4:6,9; 9:9; 21:1). இந்தத் திருமுகத்தின் குறிப்புக்களைக் கொண்டு, இவர் தொடக்க கிறிஸ்தவ நிறுவனத்தில் பிரதிநிதியாக இருந்திருப்பார் என்றும், அவர் திருமுழுக்குக் கொடுத்த மக்களுக்குத் தமக்குத் தெரிந்த, வாய்மொழியாகப் பெறப்பட்ட திருமுழுக்குப் போதனையைத் திருமுகமாக எழுதியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

**பர்னபாவின் பணிநூல் (BARNBAS, ACTS OF)**

இது பவுலோடு பர்னபா செய்த பயணம், மாற்கின் காரணமாக எழுந்த தகராறு, அதனால் வந்த பிரிவு, தனித்து செய்த பயணங்கள், சைப்பிரசில் அவரது மறைசாட்சி மரணம் ஆகியவற்றை விளக்க, அப்போஸ்தலர் பணிநூலைப் பெரிதும் தழுவி எழுதப்பட்ட பிற்காலத்தைச் சேர்ந்த குறுகிய போலி நூலாகும். இந்த நூலானது மாற்கால் எழுதப்பட்டதாகவும், மாற்கு கண்ட காட்சியே அவரைப் பவுலோடும், பர்னபாவோடும் கொண்டு சேர்த்ததாகவும், பர்னபாவின் இறப்புக்குப் பிறகு மாற்கு அலக்சாந்திரியாவுக்குப் போனதாகவும் குறிப்பிட்டுள்ளது. கிரேக்கத்தில் எழுதப்பட்ட இந்நூல் 5-ஆம் நூற்றாண்டுக்குப்பின் சைப்பிரசில் எழுதப்பட்டிருக்கலாம். இது சாதாரண, அப்போஸ்தலர் பணி நூலோடு, சில புதுமைக்கதைகளையும், சேர்த்துக் கற்பனையோடு எழுதப்பட்ட நூலாகத்தான் இருக்கமுடியும்.

**பல இனப்பெருந்திரள் (MIXED MULTITUDE)**

எபிரேய மக்கள், எகிப்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவர்களுடன் கதம்பப் பண்புகளுடைய வேற்று இன மக்களும், மிருகங்களும் சேர்ந்து கொண்டனர்.

இத்தகையவர்களையே பல இனப்பெருந்திரள் என்று அழைக்கின்றனர் (யாத் 12:38). எபிரேயச்சொல், யூதாவுடன் இணையற்பெற்ற வெளிநாட்டு வழித்தோன்றல்களையும் (நெகே 13:3), எகிப்துடன் இணைந்த வேற்றின மக்கட் கூட்டத்தையும் (எரே 25:20), பாபிலோனுடன் இணைந்து வெளிநாட்டுப் படையினரையும் (எரே 50:37), பாலைவனத்தில் இணைந்த பல இன மக்களையும் (எரே 25:24) குறிப்பிடுகின்றது.

**பலகை (TABLET, BLANK)**

இது பல எபிரேய, கிரேக்கச் சொற்களின் மொழிபெயர்ப்பு. பொதுவாக, எழுது பலகையைக் குறித்தது. இது மரத்தாலோ (எசா 8:11; 30:8; எரே 17:1; அப 2:2; லூக் 1:63), கல்லாலோ (யாத் 24:12; 31:18). உலோகத்தாலோ (1 அர 7:36) செய்யப்பட்டிருக்கலாம்.

கப்பல் கட்டுவதற்கும் (எசே 27:5; அ.ப. 27:44), திருஉறைவிடத்தை அமைக்கவும், பலிபீடத்தை அமைக்கவும் (யாத் 26:15; 27:8), சாலமோன் கட்டிய ஆலயத்தில் கீழ்த்தளம், சுவர், மேல்மச்சு முதலியவற்றை மூடவும் (1 அர 6:15) பலவகையான மரப்பலகைகள் பயன்பட்டன.

**பலமொழிகளில் பேசுதல், பரவசப்பேச்சு (TONGUES, GIFTS OF)**

**I.** இக்கொடை ஆதித் திருச்சபையில் கருத்தைக் கவர்கின்ற ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இது கிறிஸ்தவர்கள் பரவச நிலையில், ஆவியால் ஆட்கொள்ளப் பட்டுள்ளதாக நம்பி, தெளிவாக ஆனால் புரியாத மொழியில் பேசுவதாகும். பவுல் நிறுவிய சபைகளில் குறிப்பாகக் கொரிந்தில், இக்கொடை பரவலாக இருந்ததாகத் தெரிகிறது (1 கொரி 12:14). ஆனால் இக்கொடை, திருச்சபை வரலாற்றில் தோன்றி யூதேயாவுக்கும், சமாரியாவுக்கும் பரவிய போதே திருச்சபையில் இருந்தது (அ.ப. 2:1-42; 10:44-48; 11:15-17; 19:2-7).

இத்தகைய நிகழ்ச்சி கிறிஸ்தவ சமயத்திற்கு மட்டும் உரியதன்று. பழங்காலத்து மற்றச் சமயங்களிலும் காணப்பட்டது. இது நிகழும்போது, ஒருவர் வழிபடும் கடவுளின் ஆவி அவரை ஆட்கொண்டு, அவர் வழியாகப் பேசியது; அவரில் அசாதாரண உடல் அசைவுகளை உண்டாக்கியது என்று பொதுவாக நம்பப்பட்டது. இந்தப்பரவச் நிலையில் பேசும் உறுப்புகள் பாதிக்கப்பட்டன. மனித மனக்கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சக்தியால் இயக்கப்படுவதுபோல், வாய் அசைந்து பல கூற்றுகளை வெளிப்படுத்தும் இந்நிலை, பார்ப்பவருக்கு எந்த அளவுக்கும் புரியாததாயிருந்துபோல் கவர்வதாயும் இருந்தது. இத்தகைய பரவசப்பேச்சு தொடக்க கால எபிரேய இறைவாக்கினர்கள் அல்லது நபிகளிடையே பரவலாக இருந்தது. இவர்கள் குழுக்களாக நாடு முழுவதும் சுற்றித்திரிந்தனர். இசையாலும், நடனத்தாலும் தங்களையே ஓர் ஆவேச நிலைக்குக் கொண்டு வருவர் (1 சாமு 10:5-13; 19:18-24; 2 சாமு 6:13-17; 1 அர 20:35-37). இவர்களைக் குறித்த நபி என்ற சொல் இவர்களுடைய பரவச உளரல்களிலிருந்தும் 'இறைவாக்குரைத்தலிலிருந்தும்' வந்திருக்கலாம். இவர்களுடைய நடத்தை பல மொழி பேசுதலுக்கு ஒத்ததாக இருந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. கிரேக்கர்களிடையே தியோனிசி வழிபாடு மற்றும் பிற இரகசியச் சடங்குகளில் ஈடுபட்டோர், சடங்குகளினால் பரவசநிலையடைந்து ஆவேசம் கொண்டனர். அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் புரிந்து கொள்ளும் வடிவங்களில் பேசினர். காலந்தோறும் திருச்சபையின் பல பிரிவுகளில் இத்தகைய பரவசப்பேச்சு மீண்டும் மீண்டும் தோன்றியுள்ளது. இவற்றின் உளவியல் கூறு தெளிவாக உள்ளது.

**II. பெந்தகோஸ்தே நாளில் பரவசப் பேச்சு:** 1) கிறிஸ்தவ சமூகத்தில் இக்கொடை பெந்தகோஸ்தே நாளில் தோன்றியது. அப்போது, அப்போஸ்தலர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும், தியானத்தாலும் செபத்தாலும் (அ.ப. 1:24) உயிர்த்த இயேசுதான் கடவுளின் மெசியா என்றும் (2:36), மெசியாவின் காலம் தொடங்கி விட்டது என்றும் (2:29-33),

அவர்கள்தான் பழைய ஏற்பாட்டு இறைமக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் வாரிசான புதிய ஏற்பாட்டு மக்கள் என்றும் (2:16-17; 3:25) மன உறுதி கொண்டனர். இந்த உறுதியின் சக்தியால் ஆட்கொள்ளப்பட்டு, தடைகள் நீக்கப்பட்டு, புதிய ஆன்மீக ஆற்றல் பெற்று, அதை அசாதாரண முறையில் வெளிப்படுத்தினர். இந்தப் பெருஞ்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியை லூக்கா "எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, ஆவியானவர் அருளியபடி அயல்மொழிகளில் பேசத்தொடங்கினர்" என்று விவரிக்கிறார் (2:4).

திருச்சபையின் இந்த முதல் அனுபவத்தில் (2:4-11), பரவசப்பேச்சு பேசியவர்களுக்குத் தெரியாத, உண்மையான மனித மொழிகளாகக் கேட்டது. ஆனால், இது பேச்சின் அருஞ்செயலைவிட, கேட்டலின் அருஞ்செயலாக இருக்கலாம் (2:6-8). மற்றப்படி பரவசப்பேச்சு சாதாரணமாக உண்மையான மனித மொழியாகக் கருதப் படுவதில்லை. மாறாக, அஃது இறைவனை நோக்கிப் பேசப்பட்டதாகவும் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாததாகவும் கருதப்பட்டது (1 கொரி 14:2). பேச்சின் அருஞ்செயல் தன்மையால் மனிதர்களுக்கு, குறிப்பாக விசுவசியாதவர்களுக்கு அளிக்கப்பட்ட அடையாளமாக இருக்கலாம் (14:21-22). இக்கொடையைப் பவுல் "மண்ணோர் மொழிகள் மற்றும் விண்ணோர் மொழிகள்" (13:1) என்று குறிப்பிடுகிறார். "விண்ணோர் மொழிகள்" என்ற சொற்றொடர் பிற்கால வெளிப்பாட்டு இலக்கியங்களிலும் காணப்படுகிறது. "சொல்லொண்ணாப் பெருமூச்சு" (உரோ 8:26) என்ற நிலையையும் பவுல் சுட்டிக் காட்டலாம்.

**III. மனந்திரும்பியவரிடையே பரவசப்பேச்சு:** அ.ப. 2-ஐத் தவிர்த்து, இது போன்ற பரவசப்பேச்சு நிகழ்ச்சிகள் திருச்சபையில் தொடர்ந்தன. இவை யாவும் புதிதாக மனந்திரும்பியவர்களிடையே நிகழ்ந்தனவாகும். செசரியாவிலும், எபேசிலும் மனந்திரும்பியவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது பல மொழிகளில் பேசினர் (அ.ப. 10:45-46; 19:6). இந்த இரு நிகழ்ச்சிகளின் அனுபவம் பெந்தகோஸ்தே நாள் அனுபவத்திற்கு ஒத்ததென்று பேதுரு கூறிகிறார் (10:47). இந்த இரு நிகழ்ச்சிகளிலும் புறவினத்தாருக்கு நற்செய்தி அளிப்பது ஏற்புடையதே என்று திருச்சபையின் தலைவர்களுக்கு எடுத்துக்காட்ட பரவசப் பேச்சு அவசியமாய் இருந்தது (சமாரியர்களுக்கு அ.ப. 8; புறவினத்தாருக்கு அ.ப. 10:47). கொரிந்தில், மனந்திரும்பியவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுதலோடு பெற்ற பரவசப் பேச்சுக்கொடை, அவர்கள் பெற்ற அனுபவம், திருமுழுக்கு யோவானைப் பின்பற்றியபோது பெற்ற அனுபவத்தைக் கடந்து செல்கிறது என்று அவர்களுக்குக் காட்டியது (19:1-6). கிறிஸ்தவ மறைக்கு மனந்திரும்பிய மற்ற நிகழ்ச்சிகள் பரவசப்பேச்சு அனுபவத்தைச் சுட்டிக்காட்டாமல் எடுத்துக் கூறப்படுகின்றன (2:41-42; 4:4; 8:35-38; 9:3-18; 13:12-43; 16:14-15.31-33; 17:4-12). ஆனால் இவற்றில், பவுல் மனந்திரும்பிய நிகழ்ச்சியைத் தவிர்த்து, மற்றவையெல்லாம் மிகச் சுருக்கமாகவுள்ளன. ஆகவே, பரவசப்பேச்சு அனுபவம் கிறிஸ்துவ அனுபவத்திற்கு அவசியமானதா என்று தீர்மானிப்பது கடினமாகிறது. ஆனால், பரவசப்பேச்சு நிகழ்வது பரிசுத்த ஆவியின் பிரசன்னத்திற்கு உறுதியான சான்றாகக் கருதப்படுகிறது. மாற் 16:17-இல் புதிய மொழிகள் பேசுவது பற்றிய குறிப்பு கவனிக்கத் தக்கதாகும்.

**IV. லூக்காவின் விவரிப்பு:** அ.ப. 2-இல் உள்ள நிகழ்ச்சியுரை தெளிவாக உள்ளது. பெந்தகோஸ்தே நாளில் பேசப்பட்ட மொழிகள் அயல்மொழிகளாகும். ஆனால் திடுக்கிட்டுத் திகைத்துப்போன மக்கள் கூட்டம் புரிந்துகொண்டது. ஆனால் செசரியா மற்றும் எபேசு நிகழ்ச்சிகளில் பேசப்பட்ட மொழிகள் பற்றிய அருஞ் செயல் தன்மை குறிக்கப்படவில்லை. இருப்பினும் இந்த அனுபவங்கள் பெந்தகோஸ்தே நாள் அனுபவம் போன்றதே என்று பேதுரு கூறுகிறார் (அ.ப. 10:46; 19:6). மொழிசார்ந்த

அருஞ்செயல் உதவி அப்போஸ்தலர்களுக்குப் பிற்காலத்தில் கிடைத்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. அதற்குத் தேவையும் இருக்கவில்லை. ஏனெனில் கிரேக்க, அரமேயிக்கு மொழிகள் திருச்சபையின் தேவைகளுக்குப் போதியதாக இருந்தன. மேலும், லூக்கா அப்போஸ்தலர் பணிநூலை எழுதி முடிக்கும் முன்பே பரவசப்பேச்சு நிகழ்ச்சி பவுல் நிறுவிய சபையில் பொதுவான ஒரு பண்பாக இருந்தது. ஆனால், அஃது அயல் மொழிகள் பேசும் ஆற்றல் எனக் கருதப்படவில்லை. பரவசப்பேச்சு புரிந்துகொள்ளக் கூடியதென்று, புரிந்து கொள்ளப்படவுமில்லை. சில சமயம் பைத்தியமாகக் கருதப்படக்கூடும் என்று பவுல் அறிவிக்கிறார் (1 கொரி 14:9.23). இவற்றிலிருந்து, அ.ப. 2:4-இல் வரும் லூக்காவின் விவரிப்புக்கும் பவுலின் விவரிப்புக்களுக்குமிடையே ஒத்துப் போகாத வேறுபாடுகள் உள்ளது தெளிவாகிறது. இருவரும் அதே பரவச நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் எழுதுகின்றனர் என்று கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்த விவரிப்பில் லூக்காவின் வேலை என்ன? ஒரு கருத்துப்படி சீடர்களின் பரவச நிலையையும் (2:13) மற்றும் இறைவாக்கு ஆவியையும் (2:15; 3:24-25) அழுத்திக்கூறும் பரவசப்பேச்சுப் பற்றிய மிகப்பழைய, அதிகம் நம்பத்தகுந்த பாரம்பரியத்தை எடுத்து, சட்டம் எல்லா மொழிகளிலும் அளிக்கப்படுவது பற்றிய இராபிகளின் பாரம்பரியத்துக்கேற்ப, நாடகபாணியில் மாற்றி அமைக்கிறார். அப்படிச் செய்யும் போது, கிறிஸ்துவத்தின் உலகளாவிய கருத்தைத் தனக்கே உரியவிதத்தில் அழுத்திக் கூறுகிறார்.

மற்றொரு கருத்துப்படி, பவுலின் ஆதிக்கத்தின்கீழ், திருச்சபைக்கு அப்போது, ஊறு விளைவித்துக் கொண்டிருந்த பரவசப் பேச்சின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் நோக்கோடு பல மொழி பேசும் மூல அனுபவத்திற்கு லூக்கா மறுவிளக்கம் அளிக்க முயன்றார்.

மற்றும் ஒரு கருத்துப்படி, லூக்கா பரவசப்பேச்சை நேர்ச்சொற்பொருட் படுத்துகிறார்; அல்லது ஒருவேளை பரவசப்பேச்சு புரியாத ஒன்றானாலும், சரியான சூழ்நிலையிலும், சரியான ஆட்களின் வழிவிளக்கம் பெறுவதாலும், புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மொழிவடிவமாகும் என்று லூக்கா கருதியிருக்கக்கூடும்.

**V. பவுல் நிறுவிய சபைகளில் பரவசப்பேச்சு:** பலமொழிகளில் பேசுவது கொரிந்திலும் மற்ற இடங்களிலும் நன்கு அறியப்பட்டதொன்றாகும். பவுல் இதனை விளக்க வில்லை; இதன் புரியாத, பரவசப் பண்பை மட்டும் அழுத்திக் கூறுகிறார். மக்களின் மொழியில் உள்ள வேறுபாடுகளாலும் அல்லது அவர்களின் ஆன்மீக நிலையின் வேறுபாடுகளாலும் (1 கொரி 12:10.28), "பலவகைப் பரவசப் பேச்சு" இருந்தது. சிலர் இதைக் கொண்டிருக்கவில்லை (12:30). மற்றவர்கள், வழிபாட்டின் நோக்கத்தைப் பாதுகாக்க விரும்பி இதைக்கட்டுப்படுத்த முயன்றனர் (1 கொரி 14:39; கொலோ 3:16; 1 தெச 5:19-20; எபே 5:18-20). பல விசுவாசிகள் (1 கொரி 12) பரவசப் பேச்சால் பெரிதும் கவரப்பட்டு, இதைப் பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பதின் உறுதியான அடையாளமாகக் கருதினர்; இதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்; பெரிதும் விரும்பினர்.

கொரிந்தில் பரவசப்பேச்சுக்கு மிகைப்படுத்தப்பட்ட அழுத்தம் கொடுக்கப்பட்டதால், பவுல் இதை முறைப்படுத்த வேண்டியிருந்தது. இக்கொடையைப் பற்றிய உண்மையை அவர் ஏற்றுக்கொள்கிறார். அ) இஃது ஆவியின் உண்மையான கொடையாகும்; ஆகவே அதைத்தடை செய்யக்கூடாது. பவுலும் இக்கொடையைக் கொண்டிருந்தார் (1 கொரி 14:5. 18:39). ஆ) தனிப்பட்டோரின் பக்திக்கு இஃது ஓர் உதவியாகும். இறைவனோடு ஒன்றிப்புக் கொள்ள ஓர் ஏதுவாகும். சாதாரண முறையில் வெளிப்படுத்த முடியாத உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த இஃது ஒரு வாய்ப்பாகும் (1 கொரி 14:4; உரோ 8:26-27). இ) அவிசுவாசிகளுக்கு

இஃது ஓர் அடையாளமாகும். இறையாற்றலின் பிரசன்னத்திற்கு ஒரு சான்றாகும் (1 கொரி 14:22). யோனாவின் அடையாளத்தைப்போன்று (12:39). இஃது, உண்மையானது ஆனாலும், கடின இதயமுடையவர்களாலும், அவிசுவாசிகளாலும் இன்னும் அடையாளம் கண்டு கொள்ளப்படவில்லை.

பவுல், பரவசப்பேச்சின் பயனைவிட அதனால் வரும் ஆபத்தைத் தெளிவாகக் கண்டார். ஆகவே, பொது வழிபாட்டில் இதற்கு முதன்மையோ, உற்சாகமோ கொடுக்கவில்லை (1 கொரி 14:19.28). அவருடைய பட்டியலிலும், மதிப்பீட்டிலும் இதுதான் கடைசியானது (12:10.30; 14:19). இதைக் கட்டுப்படுத்தும் முறையையும் சுட்டிக்காட்டுகிறார்.

**அ) முறைப்படுத்தும் ஒழுங்கு:** எல்லா ஆன்மீகக் கொடைகளும் அவை திருச்சபையை "அன்பில்" கட்டியெழுப்புவதற்குப் பயன்படும் விதத்தைக் கொண்டு தீர்ப்பிடப்பட வேண்டும் (1 கொரி 13; 14:4-5.17-19; கொலோ 3:14; எபே 4:16). மொழிகளில் பேசுவது மிகவும் தனிநபர்த்தன்மை கொண்டது; சுய-மையத்தன்மையையும் சுய முக்கியத்துவத்தையும் உற்சாகப்படுத்துகிறது. ஆகவே, கிறிஸ்தவத் தோழமையின் ஒற்றுமைக்குப் பாதிப்பு விளைவிக்கக்கூடிய (உரோ 12:3; 1 கொரி 13:5; பிலி 2:3-4).

**ஆ) ஒழுங்கான வழிபாட்டைக் கடைப்பிடித்தல்:** திருச்சபை கட்டியெழுப்பப்படுவதுதான் முதன்மையானது. விளக்கம் கூறும் திறனுடையவர்கள் இல்லையெனில், பரவசப் பேச்சு பேசுபவர் தன்னையே கட்டுப்படுத்த வேண்டும்; மௌனம் காக்க வேண்டும் (1 கொரி 14:27-28). வழிபாடு புரிந்து கொள்ளப்பட வில்லையென்றாலும் உண்மையைத் தேடுபவர்களை வெறுப்படையச் செய்தாலும், அது தன் நோக்கில் தவறி விட்டதாகும். ஒழுங்கும் தகுதியுடைமையும் முதல்தரமான முக்கியத்துவமுடையதாகும் (14:13-19.23.33.40).

**இ) விளக்கம் கூறும் கொடையைப் பயன்படுத்துதல்:** பரவசப்பேச்சை விளக்குவது சிலரது தனிச்சிறப்பான கொடையாகும் (12:10-30; 14:28). பரவசப்பேச்சு பேசுபவர் விளக்கம் கூறும் கொடையைக் கொண்டிராவிட்டால், அதற்காகச் செபிக்க வேண்டும். ஏனெனில், அவர் தனக்கும் திருச்சபைக்கும் பொறுப்புள்ளவர் ஆவார் (14:13-14).

## பலவண்ணத்தளம் (MOSAIC BASEMENT)

மூல எபிரேயச்சொல் பாவு தளத்தைக் குறித்தாலும் எஸ்த 1:6-இல் சூழ்நிலை பல்வண்ண ஒட்டுத் தளத்தைச் சுட்டுகிறது.

## பல வண்ணப்பறவை (SPECKLED BIRD OF PREY)

எரே 12:9-இல் வரும் பல வண்ணப்பறவையினைப் பற்றி முழு உண்மைப்பொருளும் இன்னும் தெளிவு படாத ஒன்றாகவே உள்ளது.

பல வண்ணங்களைக் கொண்டுள்ள பறவைகளையே இரைகொள்ளும் பறவையினத்தைச் சேர்ந்த ஒரு பறவையாக இருக்கலாம். எரே 12:9-இல் இஸ்ராயேல் பல வண்ணப் பறவைக்கு ஒப்பிடப்படுவதாகத் தெரிகிறது. அதன் அழகிய இறகுகள் அதன் எதிரிகளை ஈர்க்கிறது.

## பலனுடைமை (FRUITFULNESS)

I. எல்லாப் பலனுடைமையையும், அளவு கடந்த விதத்தில் விஞ்சிய மட்டுமீறிய வளமான நிறைவுடைய இறைவன், ஆதாமைத் தம் உருவிலும், தம் ஒரே மகனில் உருவிலும் படைத்தார். இந்த ஒரே மகனில் மட்டுமே இறைவனது நித்திய பயனுடைமை நிறைவெய்துகிறது. இந்த மறையுண்மையை அடைய மனிதன், உயிரை வழங்கும்போது, காலப்போக்கில் தன் உருவையே வழங்குகிறான். இவ்வாறு தலைமுறை தலைமுறையாக நீடிக்கிறான்.

**II. பலுனுடைமைக்கு அழைப்பு:** காலத்தின் தொடக்கத்திலிருந்து, "பல்கிப் பெருகுங்கள்", "மண்ணுலகு படைப்புகளால் நிரம்பட்டும்" என்ற படைப்பவரின் அழைப்பு தொடர்ந்து எதிரொலிக்கிறது.

**1. கட்டளையும் ஆசிரும்:** கடவுள் அப்படிக் கட்டளையிடும்போது அதற்குப் பதில் அளிக்கவும் ஆற்றல் அளிக்கிறார். இக்கட்டளை தாவரங்களிலும், விலங்குகளிலும் தன் செயலாற்றலைக் காட்டிய பின், தங்களுடைய உருவிலேயே உயிர்களை உண்டாக்கும் ஆற்றலுடையவர்களாக ஆணையும் பெண்ணையும் செய்யும் ஆசிரும் இத்தகைய பொருளுடையதே. இனப்பெருக்க வளத்தினால், உயிருள்ளோர் எல்லோருக்கும் தாயாகிய ஏவாள், முதல் குழந்தை பெற்றபின் "ஆண்டவர் அருளால் ஆண் மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன்" என்று (ஆதி 4:1) மகிழ்ச்சியில் திளைக்கிறாள். ஆதியாகமம் மனிதனின் தோற்றம் பற்றிய வரலாறு ஆகும். தலைமுறைகள் பட்டியல், சிறு கதைகள், விரும்பப்பட்ட பிறப்புகள், கடினமான பிறப்புகள், நடக்கமுடியாத பிறப்புகள், திருமணத்திட்டங்கள், பிள்ளைப் பேறுக்கு உண்மையான வழி ஆகியவை அடங்கிய, காலத்தொடக்கத்தில் இறைவன் இசைக்கும், ஒத்திசைவான இசையாக அமைகின்றன. இந்த வரலாற்றை இறைவன் தம் ஆசிரால் நிரப்புகிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டோடு இந்த ஆசிர் "விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் வழிமரபையும்" (22:17) அறிவிக்கிறது. நாடு கடத்தப்பட்டபின் தொலைவிலிருந்து தனது பிள்ளைகள் தன்னை நோக்கி வருவதைக் காணும் எருசலேமுக்கும் இவ்விதமே அமையும் (எசா 49:21; 54:1 தொ; 60:4.15; 62:4).

**2. உயிரின் ஊற்றின் பாதுகாப்பு:** இரு நிகழ்ச்சிகள், மற்றப் படிப்பினைகளை அளிப்பதுடன், வாழ்வின் ஊற்றுகளைச் சூழவேண்டிய மதிப்பை எடுத்துக்காட்டுகின்றன. தன் தந்தை போதைக்குள்ளாகி, ஆடை விலகி நிர்வாணமாகக் கிடப்பதை ஒருவர் பார்க்க அனுமதியில்லை. அப்படிச் செய்தல் சாபத்தைக் கொண்டுவரும் (ஆதி 9:20-27). குல மூதாதையரின் மனைவிகளின் கருப்பை ஆபத்துக்குள்ளாகும்போது இறைவனே தலையிடுகிறார். சாராவும், ரபேக்காவும் இஸ்ராயேலாகிய இறை மக்களாக இருக்க வேண்டியிருக்கும் போது பார்வோனோ (12:12-20), அபிமெலக்கோ (20.26:7-12) இறைவனது செயலோடு மனிதச்செயலைக் கலக்க எப்படித் துணியலாம்? தன் சுயநலத்தால், ஓனான் தன் விந்தைத் தரையில் சிந்தி, அஃது உயிர் உண்டாக்குவதைத் தடுத்தால், அவன் தன் உயிரை இழக்கிறான் (38:8தொ).

**3) சட்டங்களும் பாடங்களும்:** பிற்காலத்தில் சில தடைகளை எடுத்துக்கூறி, சட்டம் மனித இனப்பெருக்க வளத்தைப் பாதுகாக்கிறது; அவை, பெண்ணின் மாதவிலக்குக்காலம் (லேவி 20:18), இளம்பெண்கள் மற்றும் அவர்களுடன் காதலர்களுக்குப் பாதுகாப்பு (உப 22:23-29), சில செயல்களுக்குத் தடை (25:11தொ) முதலியவையாகும். இந்த ஒழுங்குகள் மோசே காலத்திற்கு முந்தியவையாகவும் இயல்பானதூண்டுதல் தடைகளாக இருந்தாலும் கூட, இவை ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் இனப்பெருக்க வளம் பற்றிய கருத்தால் இயக்கப்படுகின்றன. "நீ யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருந்தால் உன் கருவின் கனியும் ஆசி பெற்றிடும்"என்று சட்டம் கூறுகிறது (28:4).

இதற்குப்பின் சங்கீதங்கள் "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு" என்று பல்லவியாக மீண்டும் மீண்டும் பாடுகின்றன (சங் 127:3; 128:3; பழ 17:6). இளம் மணப்பெண்ணுக்கு "எம் சகோதரியே! ஆயிரம் ஆயிரமாக நீ பெருகுவாய்" என்று ஆசி வழங்கப்படுகிறது (ஆதி 24:60; ரூத் 4:11 தொ).

**III. வழி மரபைத்தேடி:** இறை ஆசியாலும் மனிதனுடைய விருப்பத்தாலும் உந்தப்பட்டு ஒவ்வொரு மனிதனும் சாவுக்குப்பின் தன் பெயரை நிலைநிறுத்தக் கனவுகாண்கிறான்.

1. இயற்கையின் இந்த ஆழ்ந்த ஆசை ஒரு கதையில் எடுத்துக்கூறப்படுகிறது (ஆதி 10:30-38). இக்கதை இழிவானதாகத் தோன்றினாலும் பிற்கால ராபிகளின் பாரம்பரியத்தில் போற்றப்பட்டது. இக்கதை தனித்து வாழ்ந்த லோத்தின் புதல்வியர்களைப் பற்றியதாகும். குழந்தைகள் பெற்று வளம் பெறாமல் காய்ந்து போவதைவிட, தங்கள் தந்தை தான் செய்வது என்ன என்று அறியாத நிலையில், அவருடன் உறவு கொண்டு, அவர் மூலம் வழிமரபைக் காத்துக்கொண்டனர். இது சட்டத்தால் கண்டிக்கப்பட்ட, நெருங்கியவர்களுடன் பாலுறவு கொள்வது பற்றிய கதையாகும் (லேவி 8:6-18). இது மோவாபியர்களுக்கு எதிரான வசையுரையாக அமைக்கப்பட்டது. ஆனால் இஃது, ஏவாளின் புதல்வியர்களின் தந்திரத்தைப்பாராட்ட வழிவகுத்தது. ஏனெனில், அவர்கள் இதில் படைப்பவரின் விருப்பத்தை நிறைவேற்றினர்.

2. **லேவிரேட் சட்டம்:** கணவன் உடன் பிறந்தானோடு திருமணச்சட்டம் (உப 25:5-10). இது குழந்தையின்றி இறந்துபோகும் மனிதனுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது (ரூத் 4:5-10). குழந்தையற்ற விதவையின் கணவரின் சகோதரன் அளவில் குழந்தை உண்டாக்க வேண்டும். ரூத்து நூலின் பாடல், ஒருவன் இறந்து போனாலும், நாடு கடத்தப்பட்டாலும், அவன் உறுதிப்படுத்தும் இனப்பெருக்க வளத்தைப் போற்ற எழுதப்பட்டதாகும். தன் கணவனின் உடன்பிறந்தானான ஓனான் சுயநலமாக நடந்து கொண்டாலும், தன் மாமனாரான யூதா நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டாலும் (ஆதி 38:6-26; ரூத் 4:12; மத் 1:3), பிள்ளைப்பேறு பெறுவதற்காகத் தாமார் விலைமகளாகவும் நடிக்கத் தயங்கவில்லை.

3. மலட்டுத்தன்மைக்கு எதிராக, தத்து எடுப்பதற்கு யூதர்கள் ஓர் உபாயத்தைப் பயன்படுத்தினார். இது வேலைக்காரி தன் கணவனுக்குப் பெற்ற குழந்தையை உண்மையான மனைவி தன் குழந்தையாக ஏற்றுக்கொள்வதாகும் (ஆதி 16:2; 30:3;...). வழிமரபுப்பட்டியல்கள் தந்தையிலிருந்து மகனுக்குத் தலைமையைக் கூறுவதில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. தந்தை வழியில் பிறப்பு மூலத்தின் அடிப்படையாக உடலுறவு சார்ந்த முறையில் உயிர்கொடுப்பது அமைந்திருந்தால், இது தான் இதன் ஒரே பொருள் அன்று. ஏனெனில், இரத்த உறவின்படி மட்டும் தான் இறை ஆசிகள் மரபுரிமை வழியாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆதியாகமம் மண்ணுலகில் மக்கள் பெருகினர் என்பதைக் கூறும்போது வழிமரபுப் பட்டியல்கள் ஒரு மனிதனை ஒரு குழுக்களின் அல்லது நாட்டின் தந்தையாக்குகின்றன. இதனைப் பயன்படுத்தி, நாடுகளின் தோற்றத்தில் உள்ள பிரச்சனை ஒரு குடும்பக் கால்வழி விரிவாக்கமட்டுமன்று; குடியேற்றம், திருமணம், உடன்படிக்கை மற்றும் வெற்றிகள் ஆகியவை பற்றியதுமாகும் என்று ஆசிரியர் கூற விரும்புகறார்.

இந்த இன வரிசை விரிவாக்கப்பட்டு ஒரு ஆன்மீகப் பொருளைப் பெறலாம் ஆபிரகாமின் வழிமரபில், மனந்திரும்பியவர்கள் சலுகை பெற்ற இனத்தோடு சேர்க்கப்படுவர்.

இவ்விதம் நோக்கினால், விவிலிய வரலாறு முதலாவதாக ஒரு வழிமரபுப் பட்டியலாகும். இக்கருத்தில் மனிதன் இருத்தல், முழுவதும் வருங்காலத்தை நோக்கி, வரவிருக்கும் ஒருவரை நோக்கி, இயக்கப்படுகிறது. படைப்பவரால் மனிதனில் வைக்கப்பட்டிருக்கும் தூண்டுதலின் பொருள் இதுவே. தொடர்ந்து வாழ்வது மட்டுமன்று, ஒரு மானிட மகனில் இறைவனின் நிறை உருவத்தை ஒருநாள் தியானிக்கவே.

**IV. கிறிஸ்துவில் பலனுடைமை:** இறைவனின் இந்த உருவம் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்து இந்தப்

பலனுடைமை ஆசையை அடக்குவதில்லை; மாறாக, அதை நிறைவு செய்கிறார்; அதற்கு நிறைபொருள் அளிக்கிறார்.

**1. இயேசு கிறிஸ்துவும் மனித வழி மரபுகளும்:**

பழைய ஏற்பாட்டின்படி மனிதனின் வரலாறு அவனது வழித்தோன்றல்களில் எய்தப்பெறுவதாகக் கருதப்பட்டது (ஆதி 5:1; 11:10; 25:19;...). வரலாறு முழுவதும் இந்த வாக்குறுதி நிறைவேறும் வருங்காலத்தை ஆவலோடு நோக்குகிறது. இயேசுவைப் பொருத்தமட்டும் அவருக்கு ஊன் சார்ந்த வழித்தோன்றல்கள் இல்லை. ஆனால், அவருக்கு முன்னோர்களும், ஓர் ஆன்மீக வழிமரபும் உண்டு.

அ) காலம் நிறைவுற்றபோது, கிறிஸ்து ஒரு புனித வரலாற்றின் முடிவில் வருகிறார் (ஆதி 4:4). ஏனோக்கு நூலில் வெளிப்பாட்டுக்கணிப்பின்படி, அவர் ஆபிரகாமின் அழைத்தலுக்குப்பின், ஏழாவது வாரத்தை, மெசியாவின் காலத்தைத் தொடங்கி வைக்கிறார். கிறிஸ்துவின் வழிமரபுப் பட்டியலை 3 × 14 தலைமுறைகளாக அமைப்பதில் (மத் 1:1-17), மத்தேயுவின் நோக்கம் ஒருவேளை இதுவாக இருக்கலாம். காலந்தோறும் எல்லாத் தலைமுறைகளும் காத்திருந்த இறுதி வாரிசாக இயேசு தம்மைக் காட்டுகிறார்.

ஆ) பழைய ஏற்பாட்டில் வரையப்பட்ட உலகளாவிய பொதுப்பண்பைக் கிறிஸ்து நிறைவேற்றுகிறார். வழிமரபுப் பட்டியலில் நான்கு பெண்களின் பெயர்கள் இடைபுகுகின்றன. இவை குல மூதாதையர்களின் மனைவியர்களின் பெயரல்ல. மாறாக, அன்னியர்களின் மனைவியர் பெயர்கள் அல்லது அசாதாரணச் சூழ்நிலையில் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்களின் பெயர்கள்: தாமார் (ஆதி 38); இராகாபு (நீதி 2:1); ரூத்து (ரூத் 1:16; 2:12); பத்சேபா (2 சாமு 11:3). இஸ்ராயேலின் முன்னோர் பட்டியல், சில யூதரல்லாத, நேர்மையற்ற மண்ணைச் சேர்ந்தவர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் மனிதர்கள் மகிமை மற்றும் பாவமுடைமையின் காலத்தில் அதை உரிமையாகப் பெறுகின்றனர். இந்த ஊன் சார்ந்த பலனுடைமைக்கு வேறுபடும் முறையில், தூய ஆவியின் செயலால் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த கன்னி மரியாளின் முழுவதும் தூய்மையான இந்தத் தாய்மை அமைந்துள்ளது.

இ) கிறிஸ்துவே வரலாற்றின்முடிவு. ஏனெனில், அவரே புதிய ஆதாம். இவருடைய வழிமரபை மத்தேயு வரைகிறார் (மத் 1:1; ஆதி 5:1). வரவேண்டிய இவரில் வருங்காலம் ஏற்கெனவே வந்து விட்டது. இயேசு ஓர் ஆன்மீகத் தலைமுறையில் இறைவன் ஆசிகளின் பூவுலக மரபு வழியை நிறைவேற்றுகிறார். இஸ்ராயேல், மனிதனின் புதிய பிள்ளைகளால் பெருகுகிறது. கிறிஸ்துவின் உடல் இறைவனின் பிள்ளைகளின் ஆன்மீகப் பிறப்பால் பெருகுகிறது.

**2. விசுவாச வாழ்க்கையும் கன்னித்தன்மையுடைய பலனுடைமையும்:** இனப்பெருக்க வளம் பற்றிய கடமை பற்றிய ஆதியாகமக் கட்டளையை மீண்டும் கூறுவதற்கு வேளைவாய்ப்பு வந்துவிட்டதாகக் கருதவில்லை. "இனப்பெருக்கம் செய்யாதது மனித இரத்தத்தைச் சிந்துவதற்குச் சமம்" என்று அறிவித்த யூதப் பாரம்பரியத்திலிருந்து முறித்துச் செல்கிறார். இதற்கு மாறாக, விரும்பி அண்ணகராக இருப்பதை உற்சாகப்படுத்தவும் செய்கிறார் (மத் 19:12). இன்னும் அதிகமாக, இனப்பெருக்க வளத்தின் பொருளை வெளிப்படுத்துகிறார்.

முதலாவதாக இதை மரியாளின்பால் செய்திறார். தாய்மைக்கு அவள் பெற்ற அழைப்பின் அழகை அவர் மறுக்க வில்லை. இத்தகைய நற்பேற்றைப் போற்றிய ஒரு பெண்ணுக்கு, அதன் ஆழ்ந்த பொருளை வெளிப்படுத்துகிறார்; "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்". மரியாள் விசுவசித்ததால் பேறு பெற்றவள். அவளது கன்னித் தாய்மையினால், இறைவனை மட்டும் சார்ந்திருப்பவர் அனைவருக்கும் அவள் ஒரு மாதிரி ஆவாள்.

எப்பொருள் விசுவாசம் ஆன்மீக இனப்பெருக்க வளமாக உள்ளது என்பதையும் விளக்குகிறார் இயேசு. ஊன் சார்ந்த தன் பெற்றோருக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறுகிறார். "என் தாய் யார்? என் சகோதரர் யார்?" என்று கேட்டு, "விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரர் சகோதரி, தாய்" என்று கூறுகிறார். தன் மகனை ஈன்றெடுத்தலில் இறைவன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்; செய்துவிட்டார். இறைவனோடு ஒன்றிக்கும் விசுவாசி, மகனை ஈன்றெடுத்தலில் பங்குகொள்கிறான். ஆன்மீக இனப்பெருக்க வளம், விசுவாசத்தின் கன்னிமையை முன்கொள்கிறது.

3. திருச்சபையின் பலனுடைமை: தங்களுடைய பலனுடைமையில், விசுவாசிகள் முழுத்திருச்சபையின் பலனுடைமையில் பங்குபெறுவது மட்டுமே செய்கின்றனர். அவர்கள் வேலை, ஒரு குழந்தைக்குப் பிறப்பளிக்கும் பெண்ணின், ஆண் குழந்தையினுடைய தாயின் (அ.ப.12) வேலைக்கு ஒத்ததாகும். பவுல் தனது சொற்களாலும் வாழ்வாலும் சிறப்பான முறையில் காட்டியது போன்று, இதுதான் அப்போஸ்தலனின் முதன்மையான அலுவல்.தாயைப்போல, வேதனையில் புதிதாகப் பிறப்பளிக்கிறார் (கலா 4:19). அவரது குழந்தைகளைப் பேணி வளர்த்து அவர்களிடம் அன்பாய் நடந்துகொண்டார் (1 தெச 2:7; 1 கொரி 3:2). அவர்களின் ஒரே தந்தையாக, அவர்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் ஈன்றெடுத்தார் (1 கொரி 4:15); வற்புறுத்தி அறிவுறுத்துகிறார் (1 தெச 2:11-12). இந்த உருவங்கள் வெறும் உருவகங்கள் அல்ல; திருச்சபையில் அப்போஸ்தலத்துவத்தின் உண்மையான அனுபவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொரு விசுவாசியும் உண்மையான திராட்சைக்கொடியின் உண்மையான கிளைகளாக (யோவா 15:2.8), திருச்சபையில் பலன் கொண்டு வர வேண்டும். இச்செயல்களில் வழியாகத்தான், விண்ணில் இருப்பவரும் (மத் 5:16), எல்லாப் பலனுடைமைக்கும் ஊற்றாக இருப்பவரும் ஆன தந்தையை விசுவாசிகள் மகிமைப்படுத்துகின்றனர்.

**பலாதான் (BALADAN)**

இவர் பாபிலோனியாவை ஆண்ட அரசர்களுள் ஒருவர். இவர் மெரொதாக்கு - பலாதானின் தந்தை. யூதாவின் அரசர் எசேக்கியாவுக்குச் சம காலத்தவர் (2 அர 20:12; எசா 39:1).

**பலி (SACRIFICE)**

1. விவிலியத்தினுடைய பரவலான கணிப்பானது பலியினுடைய முக்கியத்துவத்தையும், உலகளாவிய தன்மையையும் நமக்கு அறிவிக்கிறது. பலியானது பண்டைய மனித இனம் (ஆதி 8:20), மூதாதையரின் செயல்கள் (15:9...), மோசேயின் காலம் (யாத் 5:3), நீதிபதிகள் மற்றும் அரசர்களுடைய காலம் (நீதி 20:26; 1 அர 8:64) மற்றும் நாடு கடத்தப்பட்டதற்குப் பிந்தையகாலம் (எஸ் 3:1-6) முதலிய வரலாற்றின் அனைத்து நிலைகளிலும் தனது முத்திரையை இட்டுச்செல்கிறது. தனி நபர் மற்றும் சமுதாயத்தினுடைய வாழ்விற்கு அஃது ஓர் இலயத்தை அளிக்கிறது. மரபானது பலியுணவைக் காண்கின்ற மெல்கிசெதேக்கின் மறைபொருளான நிகழ்ச்சியும் (ஆதி 14:18). இத்திரோவினுடைய வழிபாட்டுச் சடங்குச் செயலும் (யாத் 18:12), பரப்பை மேலும் அதிகமாக விரிவுபடுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு வெளியே (யோனா 1:16), பலியானது, தனிநபர் மற்றும் ஒன்றுபட்ட குழுவின் பக்தியை வெளிப்படுத்துகிறது. எதிர்காலம் பற்றிய தங்களுடைய காட்சிகளில் இறைவாக்கினர்கள், புறவினத்தாருடைய காணிக்கைகளைப் பற்றி அறியாதவர்களாக இல்லை (எசா 56:7; 66:20; மலா 1:11). எனவே, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் வரலாற்றினுடைய ஓவியத்தைத்

தீட்டும்போது, பலியைச் சமய வாழ்வின் இன்றியமையாத ஒரு பகுதியாகக் கருதினர். புதிய ஏற்பாடு இந்த உட்கருத்தைத் துல்லியமாக்கி, அசலான மற்றும் உறுதியான முறையில் இதனைத் திருநிலைப்படுத்தும்.

**II. பழைய ஏற்பாடு**

**1. பலிச் சடங்குகளின் வளர்ச்சி:**

**அ. மூல எளிமையினின்று:** விவிலிய வரலாற்றினால் நமக்கு வெளிப்படுத்தப்படும் தொடக்க காலத்தில் சடங்குகள், அடிப்படையான அடக்க அமைதி கொண்டிருந்தன; பீடங்களை அமைத்தல், இறையின் பெயரை வேண்டுதல், மண்ணின் விளைச்சல் அல்லது விலங்குகளை அளித்தல் (ஆதி 4:3; 12:7-8) முதலிய நாடோடி அல்லது அரை நாடோடிகளுடைய பழக்கவழக்கங்களுக்கு ஒத்திருந்தன. குறிப்பிட்ட இடம் ஏதுமில்லை. இறைவன் தன்னை வெளிப்படுத்துமிடத்தில் அவர்கள் பலியிட்டனர். பண்டைய மண்ணாலான பலிபீடமும், நடமாடும் கூடாரமும் (யாத் 20:24; 23:15) அவைகளுக்கே உரிய முறையில், பண்டைய வழிபாட்டுத் தலங்களினுடைய அவ்வப்போது நிகழ்கிற, தற்போதைய பண்புகளுக்குச் சான்று பகர்கின்றன. குறிப்பிட்ட பணியாளர்களும் கிடையாது. குடும்பம் அல்லது கோத்திரத்தினுடைய தலைவனும் (முடியாட்சியின் கீழ்), அரசனும் பலிப்பொருட்களைச் சுட்டெரித்தனர். ஆனால் காலப்போக்கில், தனிப்பட்ட விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இப்பணியினை ஏற்றனர் (உப 33:8-10; நீதி 17). யோசியாவின் கீழ் கோவில் மட்டுமே அனைத்துப் பலி காரியங்களுக்கும் மையமாக இருந்தது போல, லேவியரின் துணையுடனோ, துணை இன்றியோ குருக்கள் பலிகளின் தனியுரிமையைத் தங்களுக்கு ஒதுக்கிக்கொண்டனர்.

**ஆ. சடங்குகளின் கலப்பு நோக்கி:** வரலாற்றின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட வளப்பெருக்கினின்று இக்கலப்பு வெளிப்படுகிறது. உண்மையில் பலிகளில் பல்வகைப்பாடு, வேறுபாடு மற்றும் சிறப்புத் தன்மை என்ற பொருளில் ஒரு படிப்படியாக வளர்கிற மலர்ச்சி நிகழ்கிறது. பல்வேறுபட்ட காரணங்கள் இந்த வளர்ச்சியை விளக்குகின்றன. நாடோடி மற்றும் மேய்ப்பு நிலையிலிருந்து நிலையாகத் தங்குகின்ற வேளாண்மை வாழ்விற்கான மாற்றம், கானானிய ஆதிக்கம், குருத்துவத்தின் வளரும் முக்கியத்துவம் முதலியன இந்தக் காரணங்களாகும். தனது அயலாரிடமிருந்து பெற்ற பண்புகளை இஸ்ராயேலானது தன்னோடிணைத்துக் கொள்கிறது. இதில் அது வடிகட்டுகிறது, திருத்துகிறது, ஆன்மீகப்படுத்துகிறது. பொதுப்பாணிச் சமயத்தில் தவறுகளும் கெடு வழக்கங்களும் இருந்தாலும் (மீக் 6:7; நீதி 11:30-3; 1 அர 16:34), அது மனிதபலிகளை நிராகரிக்கிறது (உப 12:31; 18:10; 1 சாமு 15:33-பலியையன்று, சாபத்தைச் செயல்படுத்துவதை விவரிக்கிறது). மற்ற மக்களிடமிருந்தான கலாச்சார உறவினால் இஸ்ராயேல் வளம் அடைந்தது. இவ்வாறு, புறவினக் கருத்துக்களால் தவறாக வழங்கப்பட்ட செயல்முறைகளை உண்மையான இறைவனை நோக்கி மீண்டும் அமைப்பதன் மூலம் தனது இணைப்பாளர் பணியை, இஸ்ராயேல் நிறைவேற்றியது. அதனுடைய சடங்குகள் முழுமையானவையாகவும், சிக்கலானவையாகவும் ஆயின.

**2. பலியின் பல்வேறு கூறுகள்:**

**அ. வரலாற்றினால் அளிக்கப்பட்ட பல்வேறு வகைகளினின்று:**

விவிலியமானது தொடக்கத்தினின்று பல்வேறு வகைகள் சேர்ந்து இருந்ததற்குச் சான்று பகர்கிறது. மெசபொத்தாமியரால் அறியப்படாதாகவும், பின்னர் எகிப்திற்கு இறக்குமதி செய்யப்பட்டதுமான தகனப்பலி ஏற்கனவே ஆதிகால மரபுகளிலும் நீதிபதிகளின் காலத்தில் காணப்படுகிறது (ஆதி 8:20; நீதி 6:21; 11:31; 13:19). கொடையானது முழுமையானது மற்றும் திரும்பப்பெற முடியாதது என்று காட்டுவதற்கென, முழுப்பலிப்பொருளும் (மாடு,

செம்மறி, வெள்ளாட்டுக்குட்டி, பறவை) எரிக்கப்பட்டது. செமித்திய இனத்தவரிடையே பெரிதும் பரவியிருந்த மற்றொருவித பலியானது முக்கியமாக புனித விருந்தில் அடங்கியிருந்தது. "யாவேயின் முன்னிலையில்" விசுவாசிகள் உண்டு குடித்தனர் (உப 12:18; 14:26). ஒவ்வொரு புனித விருந்தும் ஒரு பலியினை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டில் இந்த ஒன்றிப்பு விருந்துகள் உண்மையில் இதனைக் கொண்டிருந்தன. பலிப்பொருளின் (பெரிய அல்லது சிறிய விலங்கு) ஒரு பகுதியானது, வாழ்வின் தலைவராகிய இறைவனுக்கு உரிமையாக அளிக்கப்பட்டது (சிந்திய இரத்தம், எரிக்கப்பட்ட கொழுப்பு - "இறைவனின் சத்து," "ஆண்டவருடைய உணவு"). மாமிசமானது உண்பவருக்கு உணவாகப் பரிமாறப்படுகிறது. பரிகாரச்சடங்குகள் வெகுமுன்காலத்திலிருந்தே வழக்கில் இருந்தன (1 சாமு 3:14; 26:19; 2 சாமு 24:15...; ஓசே 4:8; மீக் 6:7). பாதுகாக்கப்பட்டு ஆன்மீகப்படுத்தப்பட்ட (லேவி 1:9;3:16) ஒரு பண்டைய வாய்பாட்டின்படி (ஆதி 8:21), இனிமையின் நறுமணத்தில் ஆண்டவர் காணிக்கைகளை ஏற்றுக்கொள்கிறார்.

**ஆ. லேவியராகமத்தின் தொகுப்பு:** தொழில் நுட்ப மொழியில் லேவியராகமமானது, இரத்தம் சிந்தி அல்லது இரத்தம் சிந்தாது இறைவனுக்கு அளிக்கப்பட்ட காணிக்கைகளைத் திட்டத்துடன் எடுத்துக் கூறுகிறது (லேவி 1-7; 22:17-30). அவை தகனப்பலி, உணவுக் காணிக்கைகள், ஒன்றிப்பின் பலிகள் (நன்றிகூறுதல், நேர்ச்சை, தன்னியலானவை), பாவப்பலி, பரிகாரப்பலி முதலியனவாகும். ஆனால், சடங்கு முறைகள் ஆவியை நெரித்து விடுவதில்லை. மிகச்சிறிய, நுட்பமான செய்கைகளுக்கும் புனிதப்பொருள் அளிக்கப்படுகிறது. நன்றிசெலுத்துதலும் பரிகாரம் புரிதலுக்கான ஆசையும் (லேவி 1:4; 2 அர 12:16; யோபு 1:5) தகனப்பலியைத் தூண்டுகின்றன. சில நேரங்களில் அச்சுறுத்தக்கூடியதாக உள்ள சொற்றொடரின் பின்னணியில் இறைவனுடைய புனிதத் தன்மையின் நயப்படுத்தப்பட்ட உணர்வு, பாவத்துடனான வெறி, மற்றும் தூய்மைக்கான தணியாத தேவை முதலியவற்றை ஒருவன் கண்டுணரலாம். இச்சடங்கில் பலி பற்றிய எண்ணமானது பரிகாரம் பற்றிய கருத்தின்மீது கவனங்கொள்கிறது. இரத்தம் இதில் பெரும் பங்கு வகித்தாலும், அதனுடைய செயல் திறனானது இறுதியாக இறை சித்தத்தினின்று பெறப்படுவதாகவும் (லேவி 17:11; எசா 43:25), வருத்தத்தின் உணர்வுகள் உள்ளடக்குவதாகவும் உள்ளது. சுத்தம் மற்றும் அசுத்தம் பற்றிய சட்டங்கள் தீமையினின்று விலகுவதற்கு ஆன்மாக்களைத் தயாரிப்பது போல, சடங்குத் தூய்மையின்மைகள் மற்றும் உணர்வற்ற நிலையில் செய்த தவறுகளின் பரிகாரமானது இதயத்தைத் தூய்மைப்படுத்துதலை நோக்கி விசுவாசிகளைச் செயல்முறையில் இட்டுச்செல்கிறது. புனித விருந்தானது தங்களுக்குள்ளும் இறைவனுடனும் உள்ள ஒன்றிப்பினுடைய சமூக இயல்பினை மகிழ்ச்சியிலும், ஆன்மீக நன்னிலையிலும் வெளிப்படுத்தி நிறைவேற்றுகிறது. ஏனெனில், அனைவரும் ஒரே பலிப்பொருளில் பங்கு பெறுகின்றனர்.

**3. சடங்குகளினின்று ஆன்மீகப் பலிக்கு:**

**அ. ஆன்மீகப் பலியின் அறிகுறிகளாக சடங்குகள்:**

விவிலியத்தின் இறைவன் பலிகளினின்று எந்த இலாபத்தையும் பெறுவதில்லை. யாவே மனிதனுடைய கடனாளியாகக் கருதப்படுவதில்லை, மாறாக, மனிதன் இறைவனைச் சார்ந்தவனாகக் கருதப்படுகிறான். சடங்குகள், ஆராதனை (தகனப்பலி), இறைவனுடனான நெருக்கத்தின் மீதான அக்கறை (விருந்து), பாவ அறிக்கையும் மன்னிப்பிற்கான ஆசையும் (பரிகாரச் சடங்குகள்) முதலிய உள்ளார்ந்த உணர்புகளை வெளிப்படுத்த உதவுகின்றன. இறைத்தன்மையுடனான உடன்படிக்கையின் சடங்குகளில் பலியானது இடம் பெறுகிறது (ஆதி 8:20-22: 15:9-21; யாத் 24:4-

6). இஃது இன, குடும்ப, தனிப்பட்ட வாழ்வை, முக்கியமாக திருப்பயணங்கள் மற்றும் விழாக்களின் சமயத்தில், திருநிலைப்படுத்துகிறது (1 சாமு 1:3; 20:6; 2 அர 16:15). உரையாடல்கள் (யாத் 12:26; 13:8; 24:4-6), விசுவாச அறிக்கை (உப 26:5-11), பாவங்களை அறிக்கையிடுதல் (1 சாமு 7:6 லேவி 5:5) மற்றும் சங்கீதங்கள் (சங் 22:23-30; 27:6; 54:8) முதலியன உடல் சார்ந்த செயலின் ஆன்மீகப் பொருளை அடிக்கடி வெளிப்படையாக்குகின்றன. ஆதி 22-க்குப் பின்னர் (கோயில் பலிகளின் பட்டயம்), இறைவன், மனிதபலிகளை, நிராகரித்து, விலங்குகளைச் சுட்டெரிப்பதை ஏற்றுக்கொள்கிறார். ஆனால், அவர் விலைமதிப்பற்றதாகக் கருதுகின்ற (ஆபிரகாமின் மாதிரியைப் பின்பற்றி) விசுவாசத்தோடு பலியிடக்கூடிய உதயத்தால் அளிக்கப்படும்போது மட்டுமே அவர் இக்கொடைகளை ஏற்றுக்கொள்கிறார்.

**ஆ. உள்ளார்ந்த சமயத்தின் முதன்மை:** பொருளைப் புறக்கணித்துவிட்டு சடங்குகளைப் பற்றிக்கொள்ளும் சோதனை இன்னும் உள்ளது. எனவே, இறைவாக்கினரின் எச்சரிக்கைகளும் காணப்படுகின்றன. மனிதர்கள் சில நேரங்களில் தங்களுடைய கருத்துக்களைப் பற்றி ஏமாந்து போகக்கூடும். இறைவாக்கினர் பலியைக் கண்டனம் செய்வதில்லை; ஆனால், அதன் போலிகளைக் குறிப்பாக, கானானியச் செயல்முறைகளைக் கண்டிக்கின்றனர் (ஓசே 2:5; 4:13). சடங்குகளின் பல்வகைப்பாடு தன்னிலேயே இறைவனைப் போற்றுவதில்லை. முன்னர், இந்தப் பெருக்கம் இல்லாமலிருந்தது (ஆமோ 5:25; எசா 43:23-24; எரே7:22-24). இதயத்தின் சரியான மனநிலை இல்லாமல், பலியானது வீணான, போலியான சைகைக்குத் தாழ்த்தப்படுகிறது. நெறிகோணிய உணர்வுகளுடன் அஃது இறைவனைப் பிரியப்படுத்துவதில்லை (ஆமோ 4:4; எசா 1:11-16). தங்களுடைய பேச்சின் தனித்தன்மைக்கேற்ப இறைவாக்கினர்கள் ஆற்றலுடன் ஆன்மாவினுடைய முதன்மையை வலியுறுத்துகின்றனர் (ஆமோ 5:24; ஓசே 6:6; மீக் 6:8). இதில் அவர்கள் புதியதொன்றையும் செய்யவில்லை; பண்டைய (யாத் 19:5; 24:7-8) தொடர்ந்த மரபினை (1 சாமு 15:22; 1 நாள் 29:17; பழ 15:8; 21:3,27; சங் 40:7-9; 50:16-23; 69:31-32; சீரா 34:18-20) அவர்கள் நீட்டிக்கின்றனர். உள்ளார்ந்த பலியானது ஒரு மாற்று அன்று; ஆனால், இன்றியமையாதது (சங் 51:18-19). பெரும்பாலான நேரங்களில் சடங்கினுடைய இடத்தை இஃது எடுத்துக்கொள்கிறது (சீரா 35:1-10; தானி 3:38-40). கும்ரானில் மீண்டும் தோன்றுகின்ற இந்த ஆன்மீக அடியோட்டமானது மேற்போக்கான, சுயநலமிக்க அல்லது வாழ்வோடு ஒத்திராத பக்தியைக் கண்டனம் செய்கிறது. இறுதியாக, சடங்குகளைப் பற்றியே ஐயப்பாடு எழுப்புகிறது. இந்தப் பொருளில் பலியின் இயல்பைப் பொறுத்தவரை, புதிய ஏற்பாட்டின் வெளிப்பாட்டினை இறைவாக்கினர்கள் எதிர்நோக்குகின்றனர்.

**இ. பழைய ஏற்பாட்டில் உள்ளார்ந்த சமயத்தின் உச்சநிலை:** லேவியராகமத்தின் சட்ட ரீதியான தொகுப்போடு சேர்ந்து, விவிலியமானது மற்றொரு தொகுப்பையும் அளிக்கிறது. ஒரு நபரில் மனித அவதாரம் எடுப்பதின் காரணமாக இஃது உயிருள்ளது. எசா 53-இன்படி இறைவனுடைய ஊழியன் பரிகாரப்பலியாகத் தனது சாவை அளிப்பார். இறைவாக்குக் கூற்றுகள் லேவி 16-இல் காணப்படும் கருத்துக்களைக் குறிப்பிடத்தக்க அளவில் விஞ்சிய ஒரு வளர்ச்சியினைக் காட்டுகிறது. பரிகாரம் செய்யும் பெருநாளில் பலியாடானது மக்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டது. ஆனால், கைகளை விரிக்கின்ற சடங்கு செய்யப்பட்டாலும், பலிப்பொருளுடன் அவை அடையாளப்படுத்தப்படவில்லை. தண்டனையின் பகர ஆள் பற்றிய கோட்பாடானது அச்சடங்கில், காரியங்களைச் சமப்படுத்திவிடவில்லை. ஆனால் அதற்கு முரண்பட்ட நிலையில், ஊழியன் சுதந்தரமாகத் தன்னையே பாவிகளுக்கு மாற்றானாக ஆக்குகிறார். அவரது குறையற்ற

பலியுணவானது இறைவனுடைய வரைமுறைக்கேற்ப மக்கள் திரளுக்குப் பலனளிக்கிறது. இங்கு உள்ளார்ந்த தன்மையின் உச்சநிலையானது மிகப்பெரும் செயல்திறனுடன் மிக உயர்ந்ததாக இருக்கக்கூடிய கொடையுடன் இணைந்துள்ளது.

**III. புதிய ஏற்பாடு:** சடங்கின் மீதான ஆன்மாவின் முதன்மையினுடைய இறைவாக்குக் கருத்தை இயேசு ஏற்றுக்கொள்கிறார் (மத் 5:23 தொ: மாற் 12:33). அதனை நினைவுபடுத்துவதன் மூலம், தன்னுடைய பலியின் பொருளைப் புரிந்துகொள்ள அவர் மனிதரைத் தயாரிக்கிறார். இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் ஒரு தொடர்ச்சியும், விஞ்சிய நிலையும் உள்ளன. பழைய ஏற்பாட்டு பலிச்சொற்றொடரைக் கிறிஸ்துவின் மரணத்திற்குச் சாற்றிக் கூறுவதில் தொடர்ச்சியானது வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுவினுடைய காணிக்கையின் முழுமையான தனித்தன்மையில் விஞ்சிய நிலையானது வெளிப்படுத்தப்படுகிறது. உண்மையில் இந்த விஞ்சிய நிலையானது உலகிற்குள் தன்மையாலேயே புதிய உண்மை ஒன்றை அறிமுகப்படுத்துகிறது.

**1. இயேசு பலியில் தன்னையே அளிக்கிறார்:** இறைவனின் ஊழியனுடைய பரிகாரப்பலியை வருணித்த அதே சொற்களைக்கொண்டு இயேசு தனது பாடுகளை அறிவிக்கிறார். அவர், "பணிவிடை புரிய" வந்தார், "தனது உயிரைத் தந்தார்," "பலரின்" நன்மைக்கென "பரிகாரப்பலியாக" இருக்கிறார் (மாற் 10:45இணை; லூக் 22:27; எசா 53:10-12). மேலும், பிரிவு விருந்தினுடைய பாஸ்கா அமைப்பானது (மத் 26:2; யோவா 11:55-57; 12:1...; 13:1), கிறிஸ்துவின் மரணத்திற்கும் பாஸ்காச் செம்மறியின் பலிக்குமிடையில் ஒரு திட்டமிட்ட, துல்லியமான உறவினை ஏற்படுத்துகிறது. இறுதியாக, "உடன்படிக்கையின் இரத்தம்" என்னும் மோசேயின் வாய்பாட்டை அவர் தன்னுடையதாக்கிக் கொள்ளும்போது (மாற் 14:24 இணை), இயேசு யாத் 24:8-ஐ வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். யூத மக்களை விடுவிக்கிற இரத்தத்தினுடைய செம்மறி, பண்டைய உடன்படிக்கைக்கு முத்திரையிடுகின்ற சீனாய்ப் பலிப்பொருட்கள், ஊழியனுடைய பரிகார மரணம் ஆகிய மூன்றையும் சுட்டிக்காட்டல் இயேசுவின் மரணத்தினுடைய பலியின் தன்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. மனித குலத்திற்கு இது பாவமன்னிப்பைப் பெற்றுத் தருகிறது, நிரந்தர உடன்படிக்கையையும், புதிய மக்களின் பிறப்பையும் திருநிலைப்படுத்துகிறது. மீட்பைக் காப்பீடு செய்கிறது. கல்வாரிப் பலியில் இனப்பெருக்க வளத்தின் தன்மையினை இவ்விளைவுகள் நன்கு புலப்படுத்துகின்றன. சாவே வாழ்வின் ஊற்று. யோவா 17:19-இல் வரும் பொருள் பொதிந்த வாய்பாடு இக்கருத்தினை வற்புறுத்திக் கூறுகிறது. "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்". விருந்தின் அமைப்பில் சிலுவையின் தனித்துவமிக்க பலியை நினைவாக (லேவி 24:7) விளங்கச் செய்ய, குறிக்கப்பட்ட நற்கருணையானது கிறிஸ்தவரின் புதிய சடங்கினைப் பண்டைய ஒன்றிப்புப் பலிகளுடன் இணைக்கிறது. எனவே, இயேசுவின் காணிக்கையானது அதனுடைய இரத்தம் சிந்தும் வடிவிலும் அருட்சாதன வடிவிலும், பழைய ஏற்பாட்டினுடைய பலித்திட்டத்தைத் தொகுத்து, நிறைவுபடுத்துகிறது. அஃது ஒரே சமயத்தில் தகனப்பலியாகவும், இரத்தப் பலியாகவும், பரிகாரக் காணிக்கையாகவும், ஒன்றிப்பின் பலியாகவும் உள்ளது. இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் உள்ள தொடர்ச்சியை மறுக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவின் பலியானது, இறை மகனுடைய மதிப்பு மற்றும் அவரது காணிக்கையின் நிறைவு ஆகியவற்றின் காரணமாக அஃது ஒன்றே ஒன்று என்ற தனித்துவத்தினாலும், அதனுடைய உலகளாவிய செயல்திறனாலும், பழைய ஏற்பாட்டினுடைய பல்வேறுபட்ட பலிகளை விஞ்சுகிறது. பழைய சொல் தொகுப்பு ஆனால்,

புதிய உட்பொருள். உண்மையான நிகழ்ச்சி அதனை வெளிப்படுத்த உதவிபுரிகின்ற எண்ணத்தின் மூலக்கூறுகளின் எல்லைக்கு அப்பால் மேம்படுத்துகிறது.

**2. இயேசுவின் பலியைத் திருச்சபை சிந்திக்கிறது:**

**அ. கல்வாரிப் பலியிலிருந்து நற்கருணை விருந்துக்கு:** அப்போஸ்தலிக்க நூல்கள் வேறுபட்ட வடிவங்களில் இந்த அடிப்படைக் கருத்துக்களை விரிவுபடுத்துகின்றன. இயேசு "நமது பாஸ்காவாக" ஆகிறார் (1 கொரி 5:7; யோவா 19:36). பலியாக்கப்பட்ட செம்மறியானது (1 பேதுரு 1:19; திருவெளி 5:6) தனது இரத்தத்தில் புதிய உடன்படிக்கையைத் தொடங்குகிறது (1 கொரி 11:25); மந்தையை மீட்கிறது (அ.ப.20:28); பாவங்களுக்குப் பரிகாரமாகிறது (உரோ 3:24-25); இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒப்புரவை ஏற்படுத்துகிறது (2 கொரி 5:19:21; கொலோ 2:14). லேவியராகமத்தில் உள்ளது போன்று, இரத்தத்தின் பங்கு வலியுறுத்தப்படுகிறது (உரோ 5:9; கொலோ 1:20; எபே 1:7; 2:13; 1 பேதுரு 1:2. 18-19; 1 யோவா 1:7; 5:6-8; திருவெளி 1:5; 5:9). ஆனால், இங்குத் தந்தையின் தூண்டுதலால் மகனின் இரத்தம் சிந்தப்படுகிறது. எனவே, அப்போஸ்தலர்கள் ஈசாக்கினுடைய பலிக்கும் இயேசுவினுடைய பலிக்கும் இடையிலான உறவினை வெளிக்கொணர்கின்றனர். இந்த இணைவுத்தன்மை கல்வாரிப் பலியின் நிறைவை நன்கு புலப்படுத்துகிறது. "அன்பு மகனாகிய" கிறிஸ்து மரணத்திற்கும் தன்னைக் கையளிக்கிறார் (மாற் 12:6; 1:11; 9:7). மனிதர்பால் கொண்ட அன்பின் காரணமாக, தந்தை தனது மகனையே கையளித்தார் (உரோ 8:32; யோவா 3:16). இவ்வாறு, சிலுவையானது நறுமணம் வீசும் பலியின் நெருங்கிய உள்ளார்ந்த இயல்பை வெளிப்படுத்துகிறது (எபே 5:2). இப்பலியானது, அதனுடைய ஆன்மீக உட்பொருளில் அன்பின் செயலாகும். இப்போது முதல், பாவம் நிறைந்த மனுகுலத்தின் முடிவாகிய மரணமானது முழுவதும் மூல முன்னோக்கில் அமைக்கப்பட்டுள்ளது (உரோ 5).

ஆலயத்தில் ஓர் "அப்பமேசை" இருந்தது. கிறிஸ்தவ சமூகத்திலும் ஆண்டவருடைய மேசை (பந்தி) காணப்படுகிறது. பவுல் இஸ்ராயேலின் புனித விருந்துகளுடன் நற்கருணையை வெளிப்படையாகவே ஒப்பிடுகிறார் (1 கொரி 10:18). ஆனால் எவ்வளவு வேறுபாடு! கிறிஸ்தவர்கள் இனிப் புனிதமான அல்லது மிகப் புனிதமானவற்றில் பங்கு பெறுவது மட்டுமில்லை; முடிவில்லா வாழ்வின் ஊற்றாகிய (யோவா 6:53-58) கிறிஸ்துவின் உடலிலும், இரத்தத்திலும் அவர்கள் ஒன்றுபடுகின்றனர் (1 கொரி 10:16). இந்த பங்கேற்பானது ஒரே உடலில் விசுவாசிகளின் ஒன்றிப்பைக் குறிப்பிட்டு, உண்டாக்குகிறது (1 கொரி 10:17). இவ்வாறு, மலாக்கியாவினால் முன்னுரைக்கப்பட்ட மாதிரிப் பலியானது (1:11), எல்லா மனிதருக்கும் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற மெய்ம்மையாகிறது.

**ஆ) உருவங்களும், மெய்ம்மையும்:** நற்செய்திகளும், அப்போஸ்தலிக்க நூல்களும் பழைய ஏற்பாட்டினுடைய சடங்கு சார்ந்த சொற்றொகுதிகளைப் பல்வேறு முறையில் சுட்டிக்காட்டும் விதம் பண்டைய வழிபாட்டு முறையின் ஆழமான பொருளை வெளிப்படுத்துகின்றது. இந்தப் பண்டைய வழிபாட்டுமுறை மீட்பின் பலிக்காகத் தயாரித்து, அதை முன் உருவகப்படுத்தியது. இரு திட்டங்களையும் திட்டமிட்ட விதத்தில் ஒப்பிடுவதன் மூலமாக, எபிரேயருக்கான திருமுகமானது இக்கோட்பாட்டை வெளிப்படையானதாக்குகிறது. மோசே சீனாய் மலையில் செய்தது போன்று, தலைமைக்குருவும் பலிப்பொருளுமாகிய இயேசு, இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கையை நிறுவுகிறார். இனிமேல் இந்த உடன்படிக்கையானது நிறைவானதாகவும், நிரந்தரமானதாகவும் உள்ளது (எபி 8:6-13; 9:15-10:18). மேலும், பரிகார நாளில் தலைமைக்குரு என்ற அளவில் கிறிஸ்து ஒரு தூய்மைப்படுத்தும்

செயலை நிறைவேற்றுகிறார். ஆனால் இம்முறை, கோவில் பலிப்பொருட்களை விட அதிக செயல்திறன் மிக்கதாக உள்ள தன்னுடைய இரத்தத்தையே பொழிந்து அவர் பாவத்தை அழிக்கிறார். விசுவாசிகள் இனி ஊனுடலின் தூய்மையினை மட்டுமின்றி, மனச்சாட்சியின் தூய்மையையும் அடைகின்றனர் (9:12-14). தலைமைக்குருவின் ஆட்தன்மையும், பலியானது எரிக்கப்படுகிற விண்ணகமாகிய புனித இடத்தின் சிறப்புத்தன்மையும் கிறிஸ்துவினுடைய பலியின் தனிமதிப்பிற்கும், முழுமையான மற்றும் உலகளாவிய செயல்திறனுக்கும் உறுதியளிக்கின்றன. மெய்ம்மையின் சாயல்களாக உள்ள மற்றெல்லாவற்றிற்கும் தலையான மாதிரியாக உள்ள இப்பலியானது மீண்டும் நிகழ்த்தப்பட வேண்டிய அவசியமில்லை (10:1-10). திருவெளிப்பாட்டின்படி, பலியாக்கப்பட்ட செம்மறியைச் சுற்றி விண்ணகத்தில் நிகழ்த்தப்படும் இந்த வழிபாட்டுச் சடங்கானது (திருவெளி 5:6...) எபிரேயருக்கான திருமுகத்தில் வரும் விவரிப்புடன் ஒத்துள்ளது.

**இ. தலைவரின் பலியிலிருந்து உறுப்பினர்களுடைய ஆன்மீகப் பலிக்கு:**

சடங்கினுடைய செயல்களை அன்றாட வாழ்விற்குள் விரிவுபடுத்துவதை இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர். இன்னும் மேலாக, சீராக்குநூல் நற்குணமுடைய நடத்தையினைப் பலிக்கு ஒப்பிடுகிறது (சீரா 35:1-3). கிறிஸ்தவனுக்கும் அப்போஸ்தலிக்க வாழ்விற்கும் அதே ஆன்மீக முறையில் சாற்றிக் கூறுவது புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது (உரோ 12:1; 15:16; பிலி 2:17; 4:18; எபி 13:15). தங்களை உயிரூட்டும் ஆவியால் தூண்டப்பட்ட விசுவாசிகள், தங்களுடைய ஆண்டவருடனான உயிருள்ள ஒன்றிப்பில், இயேசு கிறிஸ்துவின் மூலமாக இறைவனுக்குப் பிரியமான ஆன்மீகப் பலியை அளிக்கும் நோக்குடன், "புனித குருத்துவத்தை" அமைக்கின்றனர் (1 பேதுரு 2:5).

**பல் (TOOTH)**

விவிலியத்தில் இச்சொல் பல இடங்களில் வெவ்வேறு கருத்துகளில் பயன்படுத்தப்படுகின்றது. பழைய ஏற்பாட்டிலே கண்ணுக்கு இணையாக பல் போற்றப்படுகிறது (யாத் 21:24.27; லேவி 24:20; உப 19:21; மத் 5:38). பல்லின் அழகு உ.ச. 4:2; 6:6-இல் வருணிக்கப்படுகிறது. கொடிய மிருகங்களின் பற்கள் (உப 32:24; யோபு 41:14; தானி 7:5; திருவெளி 9:8) அழிக்கும் தன்மையை உணர்த்துகின்றன (யோபு 29:17; சங் 124:6; தானி 7:5; 9:7). எனவே, எதிரி அல்லது தீயவன் கடிக்கும் விலங்குக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறான் (சங் 35:16-17; 57:4; 58:6; பழ 30:14; 2:16; யோவே 1:6; அ.ப. 7:54). நீதிமான்கள், கொடியோரின் கோரைப்பற்களை உடைத்து, பற்களுக்கிடையில் அவர்கள் பிடித்திருந்த இரையை (பாதுகாப்பற்றவர்களை) விடுவிக்கிறார்கள் (யோபு 29:17). இது போலவே சங்கீத ஆசிரியர் இறைவனை நோக்கி, தீயோரின் பற்கள் உடையும் எனக்கூறுகிறார் (சங் 2:7; 57:6). அதே இறைவன், அவருடைய கோபத்தில் கொடிய விலங்காக உருவகப்படுத்தப்படுகிறார் (யோபு 16:9; புல 3:10-11). மற்ற உருவகங்களில் பற்கள் வலியையும் (பழ 25:19), வெறுப்பையும் (10:26) குறிக்கின்றன. மத் 8:12; 13:42; 22:13; 24:51; 25:30; லூக் 13:28-இல் காணப்படும் "பற்களைக் கடித்தல்" என்னும் சொற்றொடருக்கு இணையான அமைப்பைப் பிற இலக்கியங்களில் காணுவது அரிது. இச்சொற்றொடர் அரசுக்குப் புறம்பாக்கப்பட்டவர்களின் நம்பிக்கையற்ற கோபத்தையும் துக்கத்தையும் விவரிக்கிறது.

**பல்தி (PALTI - என் மீட்பு)**

1) இராபூ புதல்வனான பல்தி, பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இஸ்ராயேலர் கானான் நாட்டை ஊடுருவும்முன் அந்த நாட்டை உளவு பார்க்க மோசே அனுப்பிய பன்னிரண்டு ஒற்றர்களில் இவரும் ஒருவர் ஆவார் (எண் 13:9).

2. பென்யமின் கோத்திரத்தில் கல்லீம் ஊரைச் சார்ந்த இவர், இலாயிசின் மகனாவார். சவுல்

மன்னன் தம் புதல்வியும், தாவீது மன்னனின் மனைவியுமான மீக்காலைப் பல்திக்கு மணம் செய்து கொடுத்தார் (1 சாமு 25:44). நேரின் மகனான அப்னேர், இசுபொசேத்துடன் சண்டையிட்டு ஒன்றுபட்ட அரசு ஏற்படுத்த தாவீதுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினார். அப்பொழுது தாவீது தன் மனைவி மீக்காலை உடனே அனுப்பச்சொன்னார். எனவே அப்னேர், அவள் கணவன் பல்தி பெருந்துயர் அடைந்தபோதும், அவளை அழைத்துத் தாவீதிடம் ஒப்படைத்தார் (2 சாமு 3:15-16). பல்தி பகூரீம் வரை அழுது கொண்டே மீக்காலைப் பின்தொடர்ந்து வந்தார்.

**பல்தியர் (PALTITE)**

தாவீது மன்னனின் ஆற்றல் வாய்ந்தவர்களுள் ஒருவரான எலேசுவை விவரிக்கும் பெயரடை (2 சாமு 23:26). இதன் பொருள் பெத்-பெலேத்தில் வாழ்பவர் என்பதாகும் (யோசு 15:27; நெகே 11:26). இதற்கு இணையாக உள்ள முதலாம் நாள் ஆகம அட்டவணை பெலோனியன் எனக்கூறுகிறது (1 நாள் 11:27; 27:10). இது பல்தியராகத் திருத்தப்பட வேண்டும்.

**பல்தியேல் (PALTIEL – இறைவன் மீட்பராவார்)**

1. இசக்கார் கோத்திரத்திலே தோன்றிய இவர் அசானுடைய புதல்வராவார் (எண் 34:26). எலயாசர், யோசுவா மேற்பார்வையில் மேற்கு யோர்தான் நிலத்தைப் பத்துக் கோத்திரங்களும் பங்கிட்டுக் கொள்வதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டவர்களுள், பல்தியேலும் ஒருவராவார் (எண் 34:26).

பல்தியேலின் பொருள் மற்றும் வேறுபெயர்களும், கானானில் புது வாழ்க்கைக்காக இஸ்ராயேலரின் கடவுளைச் சார்ந்துள்ள நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

2. இது பல்தி என்ற பெயரின் மற்றொரு வடிவம். பென்யமின் கோத்திரத்தில் கல்லீம் ஊரினரான இவர், இலாயிசின் மகனாவார். தாவீது மன்னனின் மனைவியை மணமுடித்த இவர், பின்னர் அப்போரினால் அவளைத் திருப்பிக்கொடுக்கக் கட்டாயப் படுத்தப்பட்டார் (2 சாமு 3:15).

**பல்லக்கு (LILLER, PALANGUIN)**

இச்சொல் பல எபிரேயச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும். இது திரைகள் தொங்கவிடப்பட்டு, மனிதர் தோள்களில் சுமந்து கொண்டு செல்லும் வகையில் செய்யப்படும், பெட்டக வடிவ வாகனம். இதனுள்ளே அரசனைப் போன்றோர் அமர்ந்து சென்றனர். பொதுவாக அடிமைகளே இவற்றைச் சுமந்து சென்றனர்.

இது மேற்கவிகை கொண்ட படுக்கை அல்லது பஞ்சணையாக இருக்கக்கூடும். சாமான்களை ஏற்றிச்செல்லும் கூண்டு வண்டிகளையும் குறிக்கலாம் (எசா 66:20; உ.ச. 3:7.9; எண் 7:3).

**பல்லி (LIZARD)**

இஃது ஊர்வன உயிர் வகையைச் சேர்ந்தது. பலவகைப் பல்லிகள் பாலஸ்தீனத்தில் காணப்படுகின்றன. "நிலத்தில் ஊர்வனவற்றில் உங்களுக்குத் தீட்டானவற்றுள்" ஆறு வெவ்வேறான எபிரேயச் சொற்களால் குறிக்கப்பட்ட பலவகைப் பல்லிகள் குறிக்கப்படுகின்றன (லேவி 11:29-30). இவை யாவும் இந்த வசனத்தில் மட்டுந்தான் காணப்படுகின்றன. இவை "ஆமை, உடும்பு, அழுக்கு, ஓணான், பல்லி, பச்சோந்தி" எனத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இக்கால அறிவியல் சொற்களைப்போல் எபிரேய உயிரியல் சொற்கள் அவ்வளவு துல்லியத்தைக் கொண்டிராததால், இவை ஏதோவோர் ஊர்வனவற்றைக் குறிக்கின்றன என்பதற்கு மேல், இவற்றிற்குச் சரியான பொருள் கூறமுடியாது.

**பல்லூ (PALLU – சிறப்பான)**

இவர் ரூபனின் இரண்டாவது மகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). எலியாபின் தந்தையாகிய இவர், பல்லூயர் வம்சத்தின் தலைவரும் ஆவார் (எண் 26:5.8).

**பவழம் (CORAL)**

இது கடற்பஞ்சு – பவழம் முதலியவற்றை உள்ளடக்கிய உயிரினங்கள்; சுண்ணாம்பு நீற்றாலான எலும்புக் கூடாகும். மத்திய தரைக்கடலில் காணப்படும் பவழம் சிறப்பு நிறமுடையது. விலை உயர்ந்ததாகக் கருதப்பட்டது; நகைகள் செய்யப் பயன்பட்டது. இச்சொல் இரு எபிரேயச்சொற்களின் மொழி பெயர்ப்பாகும்.

யோபு 28:18-இல் ஞானத்தை மதிப்பீடு செய்வதில் மணியும், பவளமும், முத்தும் ஒப்புமையாகப் பயன்படுகின்றன. எசே 27:16-இல் தீருக்கும் ஏதோமுக்குமிடையில் நடந்த வியாபரத்தில் ஒரு பொருளாகப் பவளம் குறிப்பிடப்படுகிறது. புல 4:7-இல், சீயோனின் அருமை மைந்தரின் உடலழகு "பவளத்தினும் சிவந்த மேனி" என்று விவரிக்கப்படுகிறது.

**பவுலின் பணிகள்நூல் (PAUL, ACTS OF)**

விவிலியத் திருமுறைப் பட்டியலைச் சேராத போலிநூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது இந்நூல். நாம் புதிய ஏற்பாட்டில் காணும் அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படாத பவுலைப்பற்றிய பல செய்திகள் இதிலே காணப்படுகின்றன. பவுல், தேக்கிலா ஆகியவர்களைப் பற்றிய கதையும், பவுலின் பாடுகள் பற்றியும் இதில் காணப்படுகின்றன.

இத்தகைய ஓர் நூல் இருப்பது முன்னமே தெரிந்திருந்தாலும் 19–ஆம் நூற்றாண்டில் தான் இதன் நூல் வடிவம் நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் புத்தகம் பெண்கள் போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும் உற்சாகமூட்டியதைத் தெர்துல்லியன் வெகுவாகக் கண்டித்தார். இதன் ஆசிரியர் ஆசியாவில் இருந்த ஒரு குரு என்றும் தெர்துல்லியன் கூறுகிறார். இத்தகைய தவறான போதனையை எழுதியதற்காக அவர் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார். அவர் பவுல் மேல் கொண்ட அளவற்ற பற்றினாலேயே அவ்வாறு செய்தாரெனினும் அஃது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யுசேபியு, இப்போலித்தசு, ஓரிசன், இரேனிமு ஆகியோரும் இந்நூலைப்பற்றிக் கூறுகின்றனர். இதன் மொத்தவரிகள் 3,600; அதாவது, அப்போஸ்தலர் பணியைவிட 800 வரிகள் அதிகம். போசியு (கி.பி. 890) என்பவர், இதை மற்ற நான்கு பணிநூல்களோடு லூக்கியு என்பவர் எழுதியதாகக் கூறுகின்றார். ஆனால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. தெர்துல்லியன் கூற்றின்படியும், இந்நூல் அமைப்பின்படியும் பார்த்தால் இதை ஓர் ஆர்த்தடொக்ஸ் கிறிஸ்தவர் கி.பி. 160-170-ஐ ஒட்டி எழுதியிருக்கலாம்.

இந்நூலின் பெரும்பகுதி தொலைந்து போய் விட்டாலும் வெவ்வேறான மூன்று சிறு பகுதிகள், பாதுகாக்கப்பட்டு வழக்கில் இருந்தன. முதல் பகுதி பவுல் மற்றும் தேக்கிலா ஆகியோரின் பணிநூலாகும். இரண்டாவது பகுதி பவுலுக்கும் கொரிந்தியர்களுக்கும் இடையிலான கடிதப் போக்காகும். இதில் பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய நூல் அடங்கியுள்ளது. மூன்றாவது பகுதி உரோமையில் பவுல் மறைசாட்சியாக மரித்த கதையைக் கூறுகிறது.

பவுல், பிசிதியா – அந்தியோக்கியாவிலிருந்து தப்பி ஓடி இக்கோனியா சென்றடைகிறார். அங்கேதான் தேக்கிலா என்ற பெண்ணுக்கும் பவுலுக்கும் இடையே நடந்த உரையாடல் விளக்கப்படுகிறது. இந்தத் தேக்கிலா என்பவள் ஒரு கிரேக்கப் பெண். அவளுக்குத் திருமணம் செய்ய ஒப்பந்தமாயிருந்தது. தன் வீட்டுச் சன்னல் வழியாக, பவுலின் போதனையைக் கேட்கிறாள். கற்பைப் பற்றிய அவரின் போதனை அவள் மனதைத் தொட்டது. உடனே தன் மண ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, பவுலைச் சிறையில் சந்தித்துப் போதிக்கும் பணியில் ஈடுபடுகிறாள். பலமுறை சாவிலிருந்து தப்புகிறாள். பின் ஒருநாள் ஒரு பெரிய குளத்தில் தனக்குத் தானே திருமுழுக்கு கொடுத்துக் கொள்கிறாள். பின் மீராவில் பவுலைச் சந்தித்து இதைப் பற்றிக் கூறுகிறாள். பவுல் இக்கோனியாவுக்குச் சென்று போதிக்கும்படி அவளைப் பணிக்கிறார். பலரை மனம்

மாற்றியபின் இறுதியாக அமைதியாக இறக்கிறாள். சில கிரேக்கச் சுவடிகளில் இது சற்று உயர்வு நவிற்சியில் கூறப்பட்டுள்ளது. இந்தத் தேக்கிலா தன் 90-ஆம் வயதில் கலாமோன் மலையில் வாழ்ந்து வந்தாள். அங்கு, சிலர் அவளைச் கற்பழிக்க முயன்றனராம். அவள் செபித்ததின் விளைவாக, பாறை பிளந்தது. அவள் உள்ளே சென்றவுடன் அது மூடிக்கொண்டது. வேறு சில சுவடிகளில் அவ்வாறு பாறையில் புகுந்து உரோமை நகருக்கே சென்றாள் எனக்கூறப்பட்டுள்ளது.

பெண்கள் பற்றியும், திருமணம் பற்றியும் பவுலின் சில கருத்துகளுக்கு மாறாக (1 கொரி 14:34; 1 திமொ 2:12; தீத்து 2:4), இத்தகைய கட்டுக்கதைகள் எழுதப்பட்டன என்ற கருத்தை மதிப்பீடு செய்வது கடினம். இந்த நூலில் கூறப்பட்டுள்ள பவுலைப்பற்றிய உருவ விளக்கத்தை வைத்துதான் அவரின் உருவப் படம் பிற்காலத்தில் தீட்டப்பட்டது. வளைந்த கால்கள், கொக்கி போன்ற மூக்கு, குட்டையான உருவம், முடி அதிகமில்லாத தலை, ஒன்றோடொன்று தொடும் புருவங்கள் என்று அவர் உருவம் வர்ணிக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் மனிதனைப் போலவும், சில நேரங்களில் வானதூதன் போன்றும் தோன்றினார் என்றும் எழுதப்பட்டுள்ளது.

கொடிய விலங்குகளிடமிருந்து பவுல் எபேசு நகரில் எவ்வாறு தப்பினார் (1 கொரி 15:2) என்பதைப்பற்றி இதன் கிரேக்க வாசகம் கூறுகிறது. அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது; கொடிய விலங்கான சிங்கம் பவுலோடு பேசுகிறது. பவுல் உடனே, "நான் உனக்கு ஞானஸ்நானம் அளித்ததை மறந்து விட்டாயா?" எனக் கேட்கிறார். உடனே சிங்கம் பவுலைப் புரிந்து கொண்டு அவரைத் துன்புறுத்தவில்லை. இது பவுல் எப்படித் தப்பித்திருப்பார் என்ற கேள்விக்குப் பழங்காலக் கிறிஸ்தவர்கள் சிலர் தந்த கற்பனைக் கதை. இதைப் புனித எரோனிமு ஏற்றுக்கொள்ள வில்லை.

எபேசிலிருந்து பவுல் பிலிப்புக்குச் செல்கிறார். அங்குச் சிறையில் அடைக்கப்படுகிறார். இங்கிருந்து பவுல் கொரிந்தியரோடு கடிதத்தொடர்பு கொள்கிறார். தங்களிடையே தவறான போதகங்களைப் பரப்பிவந்த இருவரைப் பற்றி கொரிந்தியர்கள் பவுலுக்கு எழுதினர். அதற்குப் பதிலாகப் பவுல் அத்தவறுகளைக் கடுமையாக மறுத்துக்கூறி, "கொரிந்தியருக்கும் மூன்றாம் திருமுகத்தை" எழுதுகிறார்.

கிரேக்கச் சுவடிகள் சில இஃதோடு வேறு சில கதைகளையும் தருகின்றன. பவுல் கப்பலில் செல்லும்போது அதன் தலைவனைக் கிறிஸ்தவனாக்குகிறார். பின், இயேசு கடல்மீது நடந்து வந்த பவுலை விரைவாக உரோமைக்குச் செல்லும்படி கூறுகிறார். உரோமைக்குச் சென்றவுடன் நீரோ மன்னனால் கொல்லப்படுகிறார். பின், மீண்டும் தோன்றி அம்மன்னனை அச்சுறுத்துகிறார். இது நாம் விவிலியத்தில் காணும் அப்போஸ்தலர் பணி நூலின் கற்பனைத் தொடர்ச்சி எனக் கருதப்படுகிறது. பவுலை நீரோ மன்னனின் படைவீரர் வெட்டியபோது அவர் உடலில் இருந்து பால் பீறிட்டு அப்படைவீரன் மேல் அடித்ததாம். பின், பவுல் மீண்டும் தோன்றி, நீரோவின் அழிவை முன்னறிவித்து அவனின் பாவச் செயல்களைக் கண்டிக்கிறார்.

ஆசியாவில் பவுலின் பக்தனான ஒரு குரு இவற்றைப் பவுலின் புகழுக்காக எழுதியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இது பழங்காலக் கிறிஸ்தவர்களிடையே நன்றாகப் பரவியிருந்தது.

### பவுலின் மன்றாட்டு (PAUL, PRAYER OF THE APOSTLE)

சுருக்கமான ஒரு ஞானவாத நூலாகும். இது கி.பி. 2-ஆம் அல்லது 3-ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம். நாக்கம்மாதியில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளில் ஒன்றாகும். இது ஞானவாத ஏடுகள், மந்திர ஏடுகளோடு தொடர்புடையது; பொருளடக்கத்தைப்

பொருத்தமட்டும் சங்கீதங்களிலிருந்தும், பவுலின் திருமுகங்களிலிருந்தும் சில கருத்துக்களைக் கொண்டுள்ளது.

**பவுலின் வெளிப்பாட்டு நூல் (PAUL APOCALYPSE OF)**

இது பிற்காலத்தில் தோன்றிய, ஆனால் பரவலாகப் படிக்கப்பட்ட ஒரு நூல், பவுலின் மூன்றாவது வானக அனுபவம் (2 கொரி 12:2-4) பற்றி இது விவரிக்கிறது.

சொசோமென் என்பவர் தன் திருச்சபை வரலாற்றில், இந்நூலைப் பழங்காலத்தில் யாரும் அறிந்ததாகத் தெரியவில்லை; ஆனால் சில துறவிகள் இப்புத்தகத்தைப் பவுலின் வீட்டில் (சிலிசியாவில் தர்சு நகரில்) இருந்த பளிங்குப் பெட்டியில் கண்டெடுத்ததாகக் கூறுவதைக் குறிப்பிடுகிறார். ஆனால், சொசோமென் அந்நகரின் வயதான குருவையும் மற்றச் சிலரையும் விசாரித்ததில் அத்தகைய நிகழ்ச்சி (அதாவது பவுலின் வீட்டில் பெட்டி கண்டுபிடித்தது) நடக்கவில்லை என்பது தெரிய வந்தது. அகுஸ்தீன் இந்நூலைக் கண்டிக்கிறார். 2 கொரி 12:2-4-இல்வரும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பேதுருவின் வெளிப்பாட்டு நூலை ஒரு மாதிரியாக வைத்து எழுதப்பட்ட நூலாகும் இது.

இந்நூலில் ஏழு பகுதிகளைக் காணலாம். அ) பவுலின் வீட்டில் இந்நூல் அடங்கிய பெட்டியைக் கண்டெடுத்தல். ஆ) ஆண்டவர் பவுலைப் போதிக்கக் கட்டளையிடுகிறார். ஏனெனில் சூரியன், விண்மீன்கள், கடல், நீர், பூமி, சந்திரன் ஆகியவை பாவிகளை அழிக்க கடவுளிடம் கேட்டுக் கொண்டே இருக்கின்றனவாம். இ) வானதூதர்களின் தினசரி செய்தி. ஈ) பவுல் சாவைப் பற்றிய காட்சி காண்கிறார். உ) விண்ணகத்தைப் பற்றி பவுலின் முதல் காட்சி. அங்கு ஆற்றில் பாலும், தேனும் ஓடினதாம். ஊ) நரகத்தைப் பார்வையிடல். அங்கே கெட்ட கிறிஸ்தவர்கள், குருக்கள், ஆயர்களைத் தண்டிக்க மிகக் கொடுமையான இடம் தனியாக இருந்ததாம். பவுல் இம்மக்களுக்காக, கடவுளின் இரக்கத்தை மன்றாடுகிறார். கடவுளும் நேரில் வந்து மன்னிப்பை வழங்குகிறார். சில வாசகங்களில் ஏழாவது பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. எ) பவுலின் 2-ஆவது காட்சியில் யூத குலமுதியவர்கள் (ஆபிரகாம், ஈசாக்கு), மோசே, மூன்று பெரிய இறைவாக்கினர்கள் (எசாயா, எரேமியா, எசேக்கியேல்), லோத்து, யோபு, நோவா இன்னும் பல பழைய ஏற்பாட்டு ஆட்களுடன் பவுல் உரையாடுகிறார்.

**பவுல், அப்போஸ்தலர் (PAUL, THE APOSTLE)**

I. இயேசுவின் சீடர்களைத் துன்பப் படுத்திய, முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு யூதர். பின்பு தொடக்க காலக் கிறிஸ்துவத்தின் மறைபரப்புப் பணிகளில் தலைமையானவராக மாறினார். இவர் தன்னைப் "புறவினத்தாரின் அப்போஸ்தலர்" என்று அழைத்துக் கொண்டார் (உரோ 11:13). சிறிய ஆசியாவிலும், கிரீசிலும் பல திருச்சபைகளை நிறுவி, அவற்றோடு பரந்த அளவில் கடிதப்போக்கு வைத்துக் கொண்டார். இவர் எழுதியதாக ஏற்றுக் கொள்ளப்படும் திருமுகங்கள் புதிய ஏற்பாட்டில் முக்கிய பகுதியாக அமைந்துள்ளன. அப்போஸ்தலர் பணிநூல் பாதிக்குமேல் இவரைப்பற்றிய விவரிப்பாக அமைந்துள்ளது. நற்செய்தியில் அடங்கியுள்ள கோட்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் எடுத்துக்கூறுவதில் முன்னோடியாவார். இவருடைய ஆதிக்கம் காலந்தோறும் திருச்சபையில் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவத்தில் படைப்பாற்றல் மிக்க ஆட்தன்மையுடையவர் என்ற அளவில் இவரது தலைவரான இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாகக் கருதப்பட வேண்டியவர்.

II. **மூலங்கள்:** விவிலியம் மற்றும் அதைச் சார்ந்த போலி நூல்களுக்குப் புறம்பே பவுல் எங்கும் குறிக்கப்படவில்லை. யோசிப்பசு கூட இவரை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. தன் காலத்து இலக்கிய மற்றும் அதிகார வட்டாரங்களில் இவர் தன் முத்திரையை விட்டுச் செல்லவில்லை எனலாம்.

ஆனால் புதிய ஏற்பாட்டில் இவரைப்பற்றிய மிகுந்த செய்திகளை அறிகிறோம். இவரது

திருமுகங்களில் முதன்மையான மூலங்களைக் கொண்டிருப்பதோடு, அப்போஸ்தலர் பணிநூல் இவரது மறைபரப்புப் பணி பற்றிய நீண்ட நிகழ்ச்சியுரையைக் கொண்டுள்ளது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அப்போஸ்தலர் பணிநூல் ஆசிரியர் பவுலின் திருமுகங்களை அறிந்திருந்தாரா என்பது ஐயத்திற்குரியதாகும். இரண்டுக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்படும்போது, அது தற்செயலானதாகத் தோன்றுகிறதேயொழிய ஒன்றையொன்று தழுவியுள்ளன என்று காட்டவில்லை. இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளில் சொல்லாமல் விடப்பட்டவையும், முரண்பாடுகளும் அடங்கும். இந்த இரு மூலங்களும் ஒன்றையொன்று சாராதிருப்பது சாதகமாகவும், பாதகமாகவும் இருக்கின்றன. இரண்டும் ஒத்திருக்கும்போது ஒன்றையொன்று உறுதிப்படுத்துகின்றன. கொடுக்கப்படும் செய்தியின் நம்பத்தகுந்த தன்மை அல்லது அதைப்புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றன. அவை வேறுபடும்போது பல பிரச்சனைகளை எழுப்புகின்றன. ஏனெனில், அப்போஸ்தலர் பணிநூல் வாழ்க்கை வரலாற்றுத் தன்மையைக் கொண்டுள்ளது. இதற்கு மாறாகத் திருமுகங்கள் தற்செயலாகத்தான் இத்தன்மையைக் கொண்டுள்ளன. இவை யாவும் பவுலின் வாழ்க்கையின் காவலரைப் பற்றியும், அவரது பணிபற்றியும் பல பெரிய பிரச்சனைகளை எழுப்புகின்றன. இக்கட்டுரையில் இப்பிரச்சனைகளுக்குள் நாம் புகப்போவதில்லை. இவைபற்றிய விளக்கங்களைத் தனித்திருமுகங்களுக்குரிய கட்டுரைகளில் காண்க.

**III. வாழ்க்கை வரலாறு:**

**1. தொடக்க கால வாழ்க்கை :** பவுல் சிறிய. ஆசியாவின் தென்பகுதியைச் சேர்ந்த சிலிசியாச் சமவெளியில் உள்ள தர்சு நகரில் பிறந்தவர். ஆனால் பிறந்த ஆண்டை நிர்ணயிக்க முடியாது (அ.ப.9:11; 21:39; 22:3). இந்நகரோடு மூன்று தடவை அப்போஸ்தலர் பணிநூல் அவரைத் தொடர்பு படுத்துகிறது (9:11.30; 11:25). பவுல் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் (உரோ 11:1; பிலி 3:5). அவரது யூதப்பெயர் சவுலாகும். அவரது குடும்பம் கி.மு. 4-இல் கலிலேயாவிலுள்ள சிஸ்கலாவிலிருந்து தர்சுக்குக் குடியேறியிருந்திருக்கலாம். தர்சு, சிலிசியா உரோமை மாநிலத்தின் ஒரு முக்கிய நகரமாகும். அங்கே சிறுவயதிலிருந்து கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூத்துவத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் (9:11; 11:25; 21:39; 22;3). அவரது தந்தை உரோமைக் குடியுரிமைபெற்றிருந்தார் (16:37-39; 22:25-29; 25:10-12). ஆனால் இதை எப்படிப்பெற்றார் என்று கூறப்படவில்லை. பவுல் உரோமைக் குடியுரிமையுடன் தர்சு நகர் குடியுரிமையும் கொண்டிருந்தார் (21:39). அவருடைய சவுல், பவுல் என்ற இரு பெயர்கள் கிரேக்க ஆதிக்கத்தில் சிதறிக்கிடந்த யூதர்களின் இரட்டைக் கலாச்சாரத்துப் பின்னணியைப் பிரதிபலிக்கின்றன. பவுலின் இரட்டைக் குடியுரிமைச் சலுகை, பிற்காலத்தில், அவரது மறைபரப்புப் பயணங்களில் பெரிதும் உதவியாக இருக்கும் (16:3தொ; 21:39; 22:25 தொ; 25:10தொ). பவுலின் குடும்பம் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஓரளவு உயர்நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. பவுல் கூடாரம் செய்யும் தொழில் செய்பவர். இஃது அவரது குடும்பத் தொழிலாக இருந்திருக்கலாம் (18:3). பவுலின் திருமணமான சகோதரி எருசலேமில் வாழ்ந்தாள் என்ற கூற்று (23:16). அவர் இளைஞனாக இருக்கும்போதே அவரது குடும்பம் எருசலேமில் குடியேறியிருக்க வேண்டும் என்று கருத சிலரைத் தூண்டியுள்ளது. ஆனால், இயேசு மரித்த சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் பவுல் எருசலேமுக்கு வந்தார் என்பதும், இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது இவரைப் பவுல் கண்டதேயில்லை என்பதும் உறுதியாகும்.

எருசலேமில் பவுல் ராபிகளின் பயிற்சி பெற்றோர்; பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றுத்தேர்ந்தார் (22:3). அவர் கமாலியேவின் மாணவனாய் இருந்தார். கமாலியேல் பரந்த கொள்கையுடைய புகழ்பெற்ற இல்லேலின் குழுவைச் சேர்ந்தவர். இருப்பினும் எருசலேமில் பெற்ற பயிற்சியினாலோ, வீட்டில் பெற்ற பயிற்சியினாலோ, இரண்டினாலுமோ பவுல் சட்டத்தைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும் பரிசேயரானார் (23:6; 1 கொரி 15:9; கலா 1:13; பிலி 3:6). இம்மனப்பான்மை தொடக்க காலத்தில் நற்செய்தி மற்றும் கிறிஸ்துவத்தின்பால் பவுல் கொண்டிருந்த மனப்போக்கைப் பெரிதும் பாதித்தது. ஆகவே, கிறிஸ்துவத்தை அழிக்கத் தேடினார் (அ.ப. 8:3; 1 கொரி 15:9; கலா 1:13.23). ஸ்தேவான் கல்லால் எறிந்து கொல்லப்பட்டபோது அங்கு, பவுல் இருந்ததுபற்றிய நிகழ்ச்சியுரை (அ.ப. 7:58; 8:1-3; 22:20; கலா 1:23), அங்கு அவர் வெறுமனே நிற்கவில்லை, மாறாகக் கிறிஸ்தவர்களைத் தாக்குவதில்லை எருசலேம் பொதுச்சங்கத்தின் செயல்வீரராக இருந்தார் என்பதைச் சுட்டுகிறது. தமஸ்குவிலிருந்து கூட, கிறிஸ்தவர்களைக் கைது செய்து எருசலேமுக்குக் கொண்டுவரத் தலைமைக் குருவிடம் ஆணை பெற்றுச் சென்றார் (அ.ப. 9:1-2).

**2. மனந்திரும்புதலும் அப்போஸ்தலப் பணியின் தொடக்கமும்:**

பவுலின் மனந்திரும்புதல், அவர் சீரியாவிலுள்ள தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில், அந்நகருக்கு அங்கே பெற்ற அனுபவத்தின் விளைவாகும். இயேசு பவுலுக்குத் தோன்றுகிறார். பவுல் கண்பார்வை இழக்கிறார்; அனனியாவால் குணப்படுத்தப்பட்டுத் திருமுழுக்குப் பெறுகிறார் (அ.ப.9). இந்த அனுபவம் பற்றிய விவரிப்பு அதிகம் வேறுபாடில்லாத வேறு இருபகுதிகளிலும் கூறப்படுகிறது (22:6-21; 26:12-18). இந்த விவரிப்புகளில் சிலவற்றை நாம் கவனிக்க வேண்டும். அக்காலத்தில் பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார். இத்தகைய அனுபவம் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த மனமாற்றம் ஒரு வெளிப்பாட்டால் ஏற்பட்டுத் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த வெளிப்பாடு பவுலுக்கு மட்டுமே தெளிவான முறையில் அளிக்கப்படுகிறது. இந்த வெளிப்பாட்டுக்குப்பின் கிறிஸ்தவர் ஒருவருடனாவது பவுல் தொடர்பு கொண்டிருந்தார். அவர் பவுலுக்குத் திருமுழுக்கு அளிக்கிறார். பவுல் புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்க உடனடியாக இயேசுவால் அழைக்கப்படுகிறார். இந்தத் தோராயமான கூறுகளைக் கொண்ட சித்திரம், பவுல் தனது மனந்திரும்புதல் மற்றும் புறவினத்தாருக்கு அப்போஸ்தலராக இருக்க அழைக்கப்படுதல் பற்றி எழுதுபவைகளோடு ஒத்துப்போகிறது (1 கொரி 9:1; 15:8-9; கலா 1:15-16; காண்க. எபே 3:1-6). இந்த அனுபவம் பவுலிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியதோடு, அவரது விசுவாசம் மற்றும் நற்செய்தியின் பண்புகளையும் நிர்ணயித்தது. இஃது இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து, திருச்சபையில் வாழும் மகிமை பெற்ற ஆண்டவரிடம் குவிமையம் கொள்கிறது. புறவினத்தாருக்குக் கிறிஸ்துவைப் போதிக்க பவுல் ஆணை பெறுவது நற்செய்தியின் உலகளாவிய பண்பை உணர்த்துகிறது. இதை அப்போது பவுல் புரிந்துகொண்டார் என்று கூறமுடியாது. தேர்ந்தெடுத்தல் என்ற கருத்து, இயேசு கொண்டுவரும் முழு மீட்பு, உயிர்ப்பின் முக்கியத்துவம் ஆகியவையும் இந்த அனுபவத்தில் அடங்கியுள்ளன. இத்தகைய திடீர் மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அனுபவத்திற்கு இணையானதொன்றைப் பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் காண்பது அரிது. ஆகவே, இந்த அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்வது கடினம். ஊனுடலில் உண்மையான இயேசுவை, உயிர்த்த மற்றும் மகிமை பெற்ற இயேசுவை, தான் கண்டதுபற்றிய மன உறுதியே பவுலின் பின் வாழ்க்கை முழுவதற்கும் அடிப்படையாயிற்று. பன்னிருவருக்குச் சமமான பதவியும், உரிமையும் கொண்ட அப்போஸ்தலர் என்று பவுல் உரிமை

கொண்டாடுவதற்கு இந்த அனுபவம் காரணமாயிற்று (1 கொரி 9:1).

அ.ப. 9:20-இன்படி, தன் அழைத்தலுக்குப்பின் பவுல் உடனடியாகச் செபக்கூடங்களில், "இயேசு கடவுளின் மகன் தான்" என்று அறிவிக்கத் தொடங்கினார். ஆனால், இதைக் கலா 1-ஓடு சேர்த்துப் பார்க்கும்போது, பவுல் தனது வருங்காலத்தைப்பற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருக்கவில்லை; ஆகவே, முதலில் மூன்று ஆண்டுகளுக்கு அரேபியாவுக்குச் சென்றார் எனத் தெரிகிறது. இந்த அரேபியா நபத்தேய நாடாக இருக்கலாம். அங்கும் அவர் போதித்திருக்கலாம். இந்தக் கால இடைவெளிக்குப் பவுலே காரணம் கூறவில்லை. மோசே, எலியா மற்றும் இயேசு ஆகியோர் பாலைவனத்திற்கு ஒதுங்கியதுபோல் இதைப் புரிந்து கொள்ளலாம். அங்கிருந்து திரும்பி வந்து தமஸ்குவில் யூதர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். புறவினத்தாருக்கான அவரது பணி அல்லது அது செயல் படுத்தப்பட வேண்டிய முறை இன்னும் தெளிவாகவில்லை. அவரது போதகம் யூதர்களின் விரோதத்தை எழுப்பியது. இந்த விரோதம் அவரது வாழ்நாள் முழுவதும் பவுலைத் தொடரும். யூதர்கள் பவுலை ஒரு கட்சி மாறியாக, துரோகியாகக் கருதினர். இவர்களால் தூண்டப்பட்டு நான்காம் அரேத்தா என்ற நபத்தேய அரசன் பவுலைக் கைது செய்ய முயற்சித்தான். சகோதரர்களின் உதவியால் தமஸ்குவிலிருந்து தப்பி, பவுல் எருசலேமுக்குச் சென்றார் (கலா 1:17-20; 2 கொரி 11:32-33; அ.ப. 9:20-29). அங்கு இரு வாரங்கள் தங்கினர். அப்போது பேதுருவையும் யாக்கோபையும் சந்தித்தார். பவுல் "யூதேயா நாட்டுக் கிறிஸ்தவ சபைகளுக்கு அதுவரை அறிமுகம் ஆகாமலே இருந்தார்" என்ற இவரது கூற்றை (கலா 1:22) ஏற்றுக்கொள்வது கடினம். ஏனெனில், தங்களைக் கொடுமைப்படுத்திய ஒருவரைக் கிறிஸ்தவர்கள் அறியாதிருந்திருப்பார்களா? மனந்திரும்பிய பவுல் முதல் முறையாக எருசலேமுக்குச் சென்றது பற்றிய சுருக்கமான விவரிப்பு, அவர் எருசலேம் திருச்சபைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்பதையும், ஆனால் தன் நற்செய்தியை அவர்களிடமிருந்தே பெற்றார் என்பதையும், அவர் பிறரைத் தழுவாது சுதந்தரமாய்ச் செயல்பட்டார் என்பதையும் வலியுறுத்துகிறது. பல குறிப்புகள் அவர் யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலும் அவ்வளவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சுட்டுகின்றன. ஆகவே, எருசலேமிலிருந்து தனது சொந்த ஊராகிய தர்சுக்குத் திரும்பினார் (கலா 1:21-24; அ.ப. 9:30). அங்கு அவர் போதித்திருக்கலாம் அல்லது வெறுமனே காலத்தைக் கழித்திருக்கலாம். இக்காலம் பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை (கி.பி. 36:46). முதல் புறவினத் திருச்சபையாகிய அந்தியோக்கியத் திருச்சபையை அவர் நிறுவியதாகக் கருதமுடியாது. ஆனால், இந்தத் திருச்சபைதான் பவுலைப் புறவினத்தாரின் அப்போஸ்தலராக மாற்றியது எனலாம்.

இதற்கிடையில் போதிக்கும் ஆற்றல் பெற்றவர் என்று பவுலின் புகழ் பரவியிருந்திருக்க வேண்டும். தர்சுவில் பவுல் வாழ்ந்த, மறைந்த வாழ்க்கையிலிருந்து அவரைப் பர்னபா வெளிக்கொணர்ந்தார். பர்னபா, பவுலை அந்தியோக்கியாவுக்கு அழைத்துச் சென்று அங்குப் போதிக்கும் பதவி அளித்தார் (அ.ப 11:26). இக்காலக்கட்டத்திலிருந்து அப்போஸ்தலர் பணிநூலிலும் கலாத்தியரிலும் விவரிக்கப்படும் நிகழ்ச்சியுரைகளுக்கிடையிலான தொடர்பு தெளிவாக இல்லை. அப்போஸ்தலர் பணிநூலின்படி, பவுல், பர்னபா மற்றும் யோவான் மாற்கு ஆகியோர் அந்தியோக்கியாவிலிருந்து பஞ்ச நிவாரணக்காணிக்கையோடு எருசலேமுக்குச் சென்றனர் (11:27-30; 12:25). ஆனால், இதைப்பற்றி பவுல் ஒன்றும் கூறவில்லை. எருசலேமிலிருந்து அந்தியோக்கியா திரும்பியபின், இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் அதைப்போதிக்கப் பர்னபாவும், பவுலும் அந்தியோக்கியத் திருச்சபையிடமிருந்து ஆணை பெற்றனர். இதுவே முதல் மறை பரப்புப் பயணமாகும் (13:1-5).

**3. முதல் மறைபரப்புப்பயணம் (கி.பி. 47-48):**

அந்தியோக்கியாவின் துறைமுகமான செலென்சியாவில் கப்பல் ஏறி சைப்பிரசிலுள்ள துறைமுகமான சலாமியை அடைந்தனர். பின் தீவின் தென்பகுதி வழியாகப் பயணம் செய்து அதன் தலைநகரான பாப்போவை அடைந்தனர். இங்கு பவுல், செர்கியு பவுல் என்ற உரோமை ஆளுநனை மனந்திருப்பினார் (13:6-12). ஆனால் இந்த ஆளுநனின் ஆட்சிக்காலத்தை நிர்ணயிக்க முடியவில்லை. பாப்போவிலிருந்து பவுலும் அவருடன் இருந்தவர்களும் கப்பல் ஏறி பம்பிலியாவிலுள்ள பெருகை அடைந்தனர். அங்கிருந்து தரைவழியாக பிசிதியா - அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தனர் (13:13; 14:28). இவ்விடங்களில் இருந்த சிறிய கிரேக்க-யூதக்குழுக்களுக்குப் போதித்தனர்; புறவினத்தாருக்கும் போதித்தனர். பலரைச் சீடராக்கி உறுதிப்படுத்தியபின், சென்ற வழியிலே திரும்பி வந்து அந்தியோக்கியாவை அடைந்தனர் (அ.ப. 13:14). இக்காலகட்டத்தில் அந்தியோக்கியா இவர்களின் பணி மையமாசு இருந்திருக்கிறது. சவுல் இனிப் பவுல் என்று குறிக்கப்படுகிறார் (13:6-12).

இக்கால கட்டத்தில் பவுலின் பணியில் சில பண்புகள் தெளிவாக உள்ளன. பவுலின் பணி அவரை அரசாங்க அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளச்செய்கிறது. பவுலே செயல்வீரராகத் தலைமை தாங்குகிறார். மற்ற உடன் ஊழியர்கள் வெறுமனே குறிக்கப்படுகின்றனர் அல்லது விடப்படுகின்றனர். பவுல் துணிவோடு நேரடியாகப் பேசுகிறார். எதிர்ப்புகள் தோல்வியுறுகின்றன. பவுலின் உரைகள் துணிவோடு இருப்பதுமல்லாமல், நற்பயனை விளைவிக்கின்றன.

மறைபரப்பாளர்கள் பெருகையை அடைந்தபோது யோவான் மாற்கு அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினார் (13:13). இக்காலத்தில்பவுல் யூத சமூகங்களோடு கொண்ட தொடர்பில் சில பண்புகள் காணப்பட்டன. இவை பிற்காலப் பணியிலும் காணப்பட்டன. பவுல் செபக்கூடங்களில், ஓய்வுநாள் வழிபாட்டில் மறைநூலை வாசித்து, கிறிஸ்துவைப்பற்றிப் போதிப்பார் (9:20; 13:5.14-16; 14:1; 17:1-2; 10:17; 18:4.19; 19:8). இவ்வாறு அதே செபக்கூடத்தில் மீண்டும் மீண்டும் போதித்திருக்கலாம் (13:42; 17:2; 18:4; 19:8). யூதர்களிடமிருந்து எதிர்ப்பு உண்டாகிறது. அவர்கள் பவுலைச் செபக்கூடத்திலிருந்தும் நகரிலிருந்தும் விரட்டியடிப்பர் (9:23-25; 13:45.50-51; 14:2.4-6; 17:5-10.13-14; 18:6-7; 19:9). யூதர்கள் நற்செய்தியை ஏற்க மறுத்தபின்தான் அப்போஸ்தலர்கள் புறவினத்தாரிடம் போதிக்கத் தொடங்கினர் (13:46 தொ). யூத மறை தழுவிய திரளான கிரேக்கர்களும், "கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர்களில் "பலரும் (10:2; காண்க. 13:50; 16:14; 17:4.17; 18:7) யூதர்கள் சிலரும் கிறிஸ்துவை விசுவசித்தனர் (13:48; 14:1; 16:14; 17:4.12; 18:4.7). இது யூதர்களின் பகைமையை மேலும் தூண்டியது. அவர்கள் பவுலுக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் எதிராகக் கலகம் செய்தனர்.

**4. எருசலேமில் அப்போஸ்தலிக்கச் சங்கம் (கி.பி. 49):**

முதல் மறைபரப்புப் பயணத்தின் முடிவில், புறவினக் கிறிஸ்தவர்கள் யூதச் சட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்த வேண்டுமா என்ற பிரச்சனை தோன்றிக் கடுமையாயிற்று. அதன் விளைவுதான் முதல் எருசலேம் சங்கமாகும். இது பற்றிய அ.ப. நூல் விவரிப்புக்கும் கலாத்தியரில் வரும் விவரிப்புக்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஆனால் இரண்டும் புறவினக் கிறிஸ்தவர்களின் மேல் யூதச் சட்டத்தைச் சுமத்தக்கூடாது என்ற பவுலின் கோட்பாடு பற்றி ஒருமைப்பாடு கொண்டுள்ளன. சங்கத்தில் பேதுருவும் யாக்கோபும் சிறப்பாகப் பங்கெடுத்தனர். சங்கம் இக்கோட்பாட்டை ஏற்று உறுதிப்படுத்தியது. பவுலும் பர்னபாவும் சங்கத்தின் தீர்மானத்தைத் தாங்கள்

நிறுவிய சிறிய ஆசியாவிலுள்ள திருச்சபைகளுக்கு எடுத்துச் சென்றனர்.

ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்துக்குச் (கி.பி. 36) சிறிது காலத்திற்குப்பின், பவுல் மனந்திரும்பியிருந்தால் “14 ஆண்டுகளுக்குப்பின்” எருசலேமுக்குச் சென்ற பயணம் பற்றிய அவரது குறிப்பால் இப்பயணமும் சங்கமும் கி.பி. 49-இல் நடந்திருக்க வேண்டும். ஆனால் பர்னபாவும் பவுலும் பஞ்ச நிவாரணக் காணிக்கையோடு எருசலேமுக்குச் சென்றதாக ஒரு குறிப்பு உள்ளது (அ.ப. 11:27-30; 12:25). இது பற்றி பவுலின் திருமுகங்களில் குறிப்பு ஒன்றுமில்லை. கிளாதியுவின் ஆட்சியில் (கி.பி. 41:54) பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட பஞ்சம் பற்றி அக்காலத்திய ஏடுகளில் சான்று இல்லை. ஆனால் யோசிப்பசு திபேரியு அலக்சாந்தர் ஆளுநனாக இருந்தபோது (கி.பி. 46-48) பாலஸ்தீனத்தில் பஞ்சம் ஏற்பட்டது என்று கூறுகிறார். இப்பஞ்சம் ஓய்வு ஆண்டாகிய கி.பி. 47-48-இல் கடுமையாக இருந்தது. சமய காரணங்களுக்காக, அறுவடையேயில்லை. இக்காலத்தில் பாலஸ்தீனக் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய அந்தியோக்கியாவில் காணிக்கை எடுக்கப்பட்டு அனேகமாக சங்கத்திற்கு வந்தவர்கள் வழியாக அனுப்பப்பட்டிருக்கலாம். பவுல் எருசலேமுக்குச் செய்த ஒரு பயணத்தைப்பற்றித்தான் பேசுகிறார். அ.ப. நூலில் லூக்கா, பஞ்சு நிவாரணம், சங்கத்தில் பங்கெடுத்தல் ஆகிய இரண்டையும் பிரித்து, இரு பயணங்கள் பற்றிக்குறிப்பிடுகிறார். ஆனால் இரண்டும் ஒரே பயணத்தின் பின் செய்யப்பட்டிருக்கலாம்.

5. இரண்டாவது மறைபரப்புப்பயணம் (கி.பி. 50-53): எருசலேமிலிருந்து திரும்பிய சிறிது காலத்துக்குப்பிறகு பவுலும், பர்னபாவும் தங்களது இரண்டாவது பயணத்தைத் தொடங்க இருந்த நேரத்தில் யோவான் மாற்கைக் கூட்டிச் செல்வது பற்றி, பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையே கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் விளைவாக இருவரும் பிரிந்தனர். இவ்வாறு சீலாவை அழைத்துக்கொண்டு பவுல் தனது இண்டாவது மறைபரப்புப் பயணத்தைத் தொடங்கினார் (அ.ப. 15:40-18:21). பவுலின் மூன்று மறைபரப்புப் பயணங்களில் இண்டாவதுபயணம் மிக முக்கியம் வாய்ந்ததாகும். பவுலும் அவரோடு இருந்தவர்களும் தரைவழியாக சிலிசியா, கலாத்தியா வழியாகப் பயணம் செய்து, பின்பு வட மேற்காக மீசியாவை அடைந்தனர். வழியில் ஆங்காங்குள்ள திருச்சபைகளில் போதித்து உறுதிப்படுத்தினர். லிஸ்திராவில் திமொத்தேயுவைத் தங்களோடு சேர்த்துக் கொண்டனர். மீசியாவில் இருக்கும்போது கண்ட ஒரு காட்சியின் விளைவாக பவுல் மாசிதோனியாவில் போதிக்கச் சென்றார். மீசியாவிலிருந்து ஆகியன் கடற்கரையிலுள்ள அலக்சாந்திரியா துரோவா துறைமுகத்தை அடைந்தனர். அங்குக் கப்பலேறி, சமொத்திருக்குத் தீவுக்கும், நெயாப்பொலிக்கும் சென்றனர். அங்கிருந்து கிழக்கு மாசிதோனியாவிலுள்ள முக்கியமான உரோமையரின் குடியிருப்பாகிய பிலிப்பியை அடைந்து போதித்தனர்; பலரை மனந்திருப்பினர். ஆனால் யூதர்கள் உரோமைக் குடிமக்களை மனந்திரும்ப அனுமதியில்லையாதலால், சட்ட விரோதமாகச் செயலாற்றிக் கலகம் உண்டாக்குவதாக பவுல் குற்றம் சாட்டப்பட்டார். அவரும் சீலாவும் கைது செய்யப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, நகரத்திலிருந்து விரட்டப்பட்டனர் (அ.ப. 16:11-40). ஆனால் இந்தக் கிறிஸ்தவ சமூகம்தான் பவுலுக்கு எப்போதும் பிரமாணிக்கமுள்ளதாகவும், மிகப்பெரியமானதாகவும் இருந்தது (பிலி 4:14-20).

எக்னேசியன்சாலை வழியாக மேற்கு நோக்கிப் பயணம் செய்து தெசலோனிக்கேயை அடைந்து அங்கு யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் சிலகாலம் பவுல் போதித்தார் (அ.ப. 117:1-9). பிறவினத்தாரிடையே பவுல் எதிராகக் கலகம் மூட்டினர். அங்குள்ள கிறிஸ்துவ சமூகத்தின் நன்மைக்காக, அந்நகரைவிட்டகலக் கட்டாயப்படுத்தப்பட்டார் பவுல்.

தெசலோனிக்கேயில் காரியங்களைக் கவனித்துக் கொள்ள சீலாவையும் திமொத்தேயுவையும் விட்டு, பவுல் பெரோயா சென்று, அங்கிருந்து ஏதன்சை அடைந்தார். இங்கு, பவுல் குறுகிய காலத்திற்கே தங்கினார். அவருடைய பணி வெற்றி பெறவில்லை. இங்கிருந்த அரயோப்பாகுவில் பவுலின் உரை நகர மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனில், இயேசுவையும் அவரது உயிர்ப்பையும் பற்றிய பவுலின் உரை ஏதன்சு நகர மக்களுக்கு மடமையாகத் தோன்றியது (17:16-34; காண்க. 1 கொரி 1:18-25). ஆகவே, அக்காயா என்னும் உரோமை மாநிலத்தின் தலை நகரமான கொரிந்தை அடைந்தார் பவுல்.

இந்தக் துறைமுக நகரத்தில் பவுலின் பணி மிகுந்து பலனளித்தது. யூதர்கள் சிலரையும் புறவினத்தார் பலரையும் பவுல் மனந்திருப்பினார். இங்கு 18 மாதங்கள் தங்கிப்போதித்து, அவர் நிறுவிய திருச்சபைகளிலேயே மிகுந்த புகழ்பெற்ற கொரிந்தின் திருச்சபையை நிறுவினார். இங்குதான் அவர் அக்கிலா மற்றும் பிரிஸ்கில்லாவைச் சந்தித்தார். கொரிந்தின் சுற்று வட்டாரத்தில் பல கிறிஸ்தவச் சபைகள் தோன்றி வளர்ந்தன. இங்கிருக்கும்போது, தெசலோனிக்கே திருச்சபையின் நிலை பற்றித் தெரிய வந்தார். திமொத்தேயு வந்து, பல இடுக்கண்கள் இருந்தாலும் தெசலோனிக்கே திருச்சபை விசுவாசத்தில் உறுதியாக இருந்தது என்று அறிவித்தார் (18:5; 1 தெச 3:1-2.3). இந்தச் சூழ்நிலையில்தான் பவுல் தெசலோனிக்கேயருக்கான தனது முதல் திருமுகத்தை எழுதினார் (கி.பி. 52). இத்திருமுகத்தில், பல இடைஞ்சல்களுக்கிடையில் அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருப்பதைப் பாராட்டுகிறார். மாசிதோனியாவில் நற்செய்திக்குச் சான்று கூறியதின் விளைவாகத் தான் அடைந்த துன்பங்களை நினைவுகூர்கிறார் (1 தெச 1:2-2:16). ஆண்டவர் இயேசுவின் "இரண்டாம் வருகைக்கு" முன் இறந்தவர்களின் விதி என்னவாகும் என்ற பிரச்சனை தெசலோனிக்கேயர்களிடையே மனக்குழப்பம் உண்டாக்கியது (4:13-18). இப்பிரச்சனைக்குப் பவுல் பதில் அளிக்கிறார். பிரமாணிக்கமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் வாக்களிக்கப்பட்ட மகிமையில் சமமாகப் பங்கு பெறுவர். ஆனால் அந்தப் பெரிய "நாள்" எப்போது வரும் என்பது அறியப்படாததாகவே இருக்கும் என்பதை வலியுறுத்துகிறார் (5:1-11). ஆனால், இது தெசலோனிக்கேயருக்கு உடனடியாகத் தெளிவு அளிக்கவில்லை. மனக்குழப்பத்தை நீட்டித்தது. ஆகவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி மீண்டும் எழுதக் கட்டாயப்படுத்தப்பட்டார். இதுவே தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதிய இரண்டாம் திருமுகமாகும் (கி.பி. 52:53). இதில் பல துன்பங்களுக்கிடையில் அவர்கள் காட்டிய விசுவாசப்பிரமாணிக்கத்திற்கு அவர்களை மீண்டும் பாராட்டுகிறார். ஆனால், ஓர் எச்சரிக்கையையும் அளிக்கிறார். "ஆண்டவரின் நாள்" வருவது உறுதி. அதன்பின் அவரது மக்களின் எதிரிகள் தண்டிக்கப்படுவர். ஆனால் அதற்குமுன் பல அடையாளங்கள் நிகழ வேண்டும். இந்த இறுதிக்கால நிகழ்ச்சிகள் நிறைவேறும்வரை, கிறிஸ்தவர்கள் பிரமாணிக்கமுள்ளவர்களாகவும் செயலாற்றல் மிக்கவர்களாகவும் வாழ வேண்டும் (2 தெச 2:1-12; 3:6-13). வருங்காலம் பற்றிய அக்கறை நிகழ்காலப் பொறுப்புகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிக்கவில்லை.

பவுல் கொரிந்தில் 18 மாதங்கள் தங்கிப் பணி செய்தார் (அ.ப. 18:11). அவரது வெற்றி யூதர்களின் பகையைத் தூண்டியது. அவர்கள் ஆளுநன் லூக்கியு யுனியு கல்லியோவிடம் பவுலைப் பற்றிக் குற்றம் சாற்றி, அவரது இயக்கத்தைத் தடைசெய்யும்படி கோரினர். ஆனால், கல்லியோ இவற்றைக் கண்டு கொள்ளவில்லை. பவுல் சுதந்தரமாக நற்செய்தியைப் போதித்து வந்தார் (18:12-17). தெல்பியில் கண்டெடுக்கப்பட்ட கற்பொறிப்புச்சான்று கிளாதிய ஆட்சி செய்த (கி.பி. 41:54) பன்னிரண்டாம் ஆண்டில் (கி.பி. 52) கல்லியோ ஆளுநனாக இருந்ததைக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் பவுலின் பணி

பற்றிய காலவரையைக் கணிக்க இச்சான்று உதவுகிறது. இவை கொரிந்தில் பவுல் ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டும் (கி.பி. 51:53) என்று சுட்டுகின்றன.

கொரிந்திலிருந்து பவுல் சீரிய நாட்டுக்குச் சென்றார். அங்குக் கெங்கிரேயா என்ற துறைமுக நகரில், தான் செய்திருந்த பொருத்தனையின்படி அவர் முடி வெட்டிக் கொண்டார். அங்குக் கப்பல் ஏறி, எபேசு வழியாக செகரியா அடைந்தார். அங்கிருந்து எருசலேமுக்குச் சென்று அந்தியோக்கியா திரும்பினார். அவரது இரண்டாம் மறைபரப்புப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது (18:18-22).

**6. மூன்றாம் மறைபரப்புப்பயணம்** (கி.பி. 54:58): சிறிது காலத்திற்கு அந்தியோக்கியாவில் ஓய்வு எடுத்தபின், பவுல் கலாத்தியா, பிரிகியாத் திருச்சபைகளைச் சந்தித்து சீடர்களை உறுதிப்படுத்தினார். பின் நேரடியாக உரோமையரின் ஆசிய மாநிலத்தின் தலை நகரான எபேசுக்கு சென்றார். இப்பயணத்தின் பெரும்பகுதி, ஏறக்குறைய மூன்று ஆண்டுகள், இங்கு நற்செய்தியைப் போதித்து திருச்சபையை நிறுவுவதில் செலவிடப்பட்டது (18:23-19:41; காண்க. 19:10; 20:31). இங்கு, பவுல் அடைந்த வெற்றிகள், அர்த்தமுவின் பக்தர்களின் அச்சம் மற்றும் அரங்கத்தில் ஏற்பட்ட கலகம் ஆகியவற்றை லூக்கா விவரிக்கிறார். ஆனால், மக்கள் முன் பவுல் குற்றமற்றவராக எண்பிக்கப்படுகிறார். இது பவுலுக்கு மிகக்கடுமையான சோதனைகளின் காலமாகும். எபேசை அடைந்த சிறிது காலத்திற்குள்தான் கலாத்தியாவில் நிறுவிய திருச்சபைகளில் கடும் பிரச்சனைகள் தோன்றியது பற்றிப் பவுல் அறிகிறார் (கி.பி. 54). இது பவுல் கலாத்தியருக்கு ஒரு திருமுகம் எழுதத் தூண்டியது. இத்திருமுகம் யாருக்கு எழுதப்பட்டது என்பது தர்க்கத்திற்குரியதாகும். அ.ப. நூல், இத்திருமுகம் அந்த உரோமை மாநிலத்தின் தென் பகுதியினருக்கு எழுதப்பட்டது என்று சுடுகிறது. ஆனால், திருமுகத்தின் சொற்றொகுதி அது வட பகுதியினருக்கு எழுதப்பட்டது என்று சுட்கிறது (காண்க. அ.ப. 16:1-6; கலா 1:2; 3:1; 4:12-14). பிரச்சனை இதுதான்: யூதச்சார்புடைய கிறிஸ்தவர்கள் சிலர், மீட்புப்பெற வேண்டுமானால், சமூகத்திலுள்ள யூதர்களும் புறவினத்தாரும் மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உணர்ச்சிமிக்க பதிலில், பவுல் எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி, இப்பிரச்சனை ஏற்கெனவே தீர்த்து வைக்கப்பட்டுவிட்டது என்று வலியுறுத்துகிறார் (கலா 1:6-2:11). இயேசு கிறிஸ்துவின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட இறைவன் அருளால் யாவரும் மீட்புப்பெறுகின்றனர். சட்டத்தின் செயல்கள் ஒருவனை இறைவன்முன் ஏற்புடையவனாக்க முடியாது. இறைவனது விருப்பத்தை வெளிப்படுத்த மட்டுமே சட்டத்தால் இயலும். ஆனால், அதைக்கடைப்பிடிக்க அவர்களுக்கு உதவி செய்யமுடியாது. ஆபிரகாமைப்போல் இயேசு மட்டுமே சட்டத்திற்குக் கீழ்ப்படிய முடியும். விசுவசிப்பவர், கிறிஸ்துவில் மகன் தன்மையாகிய விசுவாசத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியில் பங்கு பெற முடியும் (3:1-4:7). சட்டத்தை மீண்டும் ஏற்றுக்கொள்வது அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்வதாகும் (5:1-15). இந்த அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்தவர்கள் விடுதலை பெற்று விட்டனர். அவர்கள் மகன் தன்மையைக் கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் வாழவேண்டும் (5:16-6:10). திருச்சபை யூதத்துவத்திலிருந்து சுதந்தரமானதாகும்.

எபேசில் தங்கியிருந்தபோது பவுல் சில சொந்தத்துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தது. அஃது அவரது உயிருக்கும் ஆபத்தை விளைவித்தது என்பது பற்றிய குறிப்புகள் உள்ளன (1 கொரி 15:32; 2 கொரி 1:8-10). இத்துன்பம் சிறைவாசத்தையும் உள்ளடக்கியதாகத் தெரிகிறது (பிலி 1:7.13.14.17; காண்க. 2:17; 4:14). இதை அறிந்த பிலிப்பியர்கள் அவருக்குச் சில கொடைகளை அனுப்பினர். அவர்கள் காட்டிய இந்த அக்கறைக்கு நன்றிப் பதிலாகத்தான் எபேசியர் திருமுகம் எழுதப்பட்டது

(கி.பி. 56). இதில் அவர்கள் அனுப்பிய எப்பப்பிராதித்து வழியாக இக்கடிதம் அனுப்புவதாகவும், விரைவில் திமொத்தேயு அவர்களைக்காண வருவார் என்றும், தானே அவர்களிடம் விரைவில் வரப்போவதாகவும் கூறுகிறார் (பிலி 2:19-30). திடீரென்று தொனியை மாற்றி, உடலில் ஊனம் ஏற்படுத்தும் "போலி விருத்தசேதனக்காரர்களைப்" பற்றியும், "கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளாக நடப்போர்" பற்றியும் பேசுகிறார் (3:2; 8:18-10). அத்திருச்சபையில் இரு பெண்களுக்கிடையே நிலவிய சண்டையைப் பற்றி எதிர்பாராத சூழ்நிலையில் பேசுகிறார் (4:2-3). இந்த மாற்றங்களின் விளைவாக, நாம் இப்போது கொண்டிருக்கும் கிரேக்க வடிவில் பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகம் பவுலின் இரு கடிதங்களின் தொகுப்பாகும் என்று சிலர் கருதுகின்றனர் (முதல் கடிதம் பிலி 1:1-3:1; 4:8-23; இரண்டாம் கடிதம் 3:2-4:7). இதை நிரூபிப்பது கடினம். எது எப்படியிருந்தாலும், நூல் முழுவதும் பவுலின் நன்றியுணர்வு (1:3-11), தன்னைப் பொருத்தமட்டும் இறைவனது திருவுளம் நிறைவேற வேண்டும் என்ற பேராவல் (1:12-30), சாவு வரை கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற அவர் தயாராக இருப்பது (2:1-11) ஆகியவை ஒளிவீசுகின்றன. இஃது அவரது ஆட்தன்மையின் மற்றொரு பருமனை வெளிப்படுத்தும் பவுலின் உண்மையான மடலாகும். அவர் அன்பு செய்த சமூகத்தில் அவர் கொண்ட மகிழ்ச்சியும் மன நிறைவுமே அந்தப் பருமனாகும்.

இக்காலத்தில், கொரிந்து திருச்சபையில் ஏற்பட்ட குழப்பங்கள் பவுலின் பயணத்தில் சிக்கல்களை ஏற்படுத்தின. இக்காலத்தில் அவரது பயணத்தைப்பற்றி எதையும் உறுதியாகக் கூற முடியாது (காண்க. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட திருமுகங்கள்). எபேசிலிருந்து முதல் கொரிந்தியர் திருமுகத்தையும், பின் மாசிதோனியாவிலிருந்து 2-ஆம் கொரிந்தியர் திருமுகத்தையும் பவுல் எழுதினார் என்று நம்ப இடமிருக்கிறது. இவை கி.பி. 55:57-க்கு இடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கொரிந்தில் தொடர்ந்து நிலவிய இடுக்கண் நிலையும் (1 கொரி 1:10-4:21; 2 கொரி 1:15-3:3), எருசலேமுக்காகக் காணிக்கை எடுத்தலும் (1 கொரி 16:1-9; காண்க. உரோ 15:25-27; கலா 2:10) எபேசிலிருந்து புறப்பட பவுலைத் தூண்டின. கப்பல் வழியாக மாசிதோனியாவை அடைந்தார். அங்கு, கொரிந்து திருச்சபையில் எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியோடு தீத்து வந்து சேர்ந்தார் (கி.பி. 57). இதற்குப் பதிலாக ஒரு மடல் எழுதினார். இதன் பெரும்பகுதி 2-ஆம் கொரிந்தியரில் உள்ளதாகக் கருதப்படும். இக்கடிதத்தைத் தீத்து வழியாக அனுப்பினார். பின்பு தானே அங்குச் சென்றடைந்தார் (2 கொரி 2:12-13; 7:5-16). அங்கு, குளிர்காலத்தைக் கழித்து (கி.பி. 57-58), எஞ்சியிருந்த பிரச்சனைகளைத் தீர்த்திருக்க வேண்டும் (அ.ப. 20:1-3).

பவுல் அக்காயாவில் குளிர்காலத்தைக் கழித்தபோது (கி.பி. 58) உரோமையருக்கு எழுதப்பட்ட நீண்ட திருமுகத்தை எழுதத்தீர்மானித்தார். உரோமையிலிருந்த மதிப்பு வாய்ந்த சமூகத்தைச் சந்தித்து நற்செய்தியைப் போதிக்கவும், அதன்பின் மேற்கு நோக்கி ஸ்பெயின் வரை சென்று போதிக்கவும், வெகுகாலமாக எண்ணியிருந்தார் (உரோ 1:7-15; 15:28-29; அ.ப. 19:21).

பவுல் இத்திருமுகத்தை எழுதியபின் எருசலேமுக்குச் செல்ல உறுதி பூண்டார். மூன்றாவது மறைபரப்புப் பயணத்தின் முடிவில் அந்தியோக்கியாவுக்குத் திரும்பவில்லை. எருசலேம் செல்லும் வழியில் பிலிப்பி, துரோவா, மிலேத்து ஆகிய இடங்களில் தங்கிச்சென்று தீரை அடைந்தார் (அ.ப. 20:3-21:6). எபேசின் தலைவர்களை மிலேத்துக்கு அழைத்து பிரியாவிடை பெற்றார். அங்கிருந்து பவுலும் அவருடன் இருந்தவர்களும் தொலமாய், செசரியா

வழியாக எருசலேமை அடைந்தனர். இஃதோடு மூன்றாவது மறைபரப்புப் பயணம் முடிவடைந்தது (2:7-16).

**7. எருசலேமில் சிறைப்படுதலும் விசாரிக்கப்படுதலும்** (கி.பி. 58-63):

எருசலேமில் கிறிஸ்தவ சமூகத்தால் பவுல் மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டார். தனது பணி பற்றிய விவரிப்பை அச்சமூகத்திற்கு எடுத்துக்கூறினார் (21:17-26). புறவினக் கிறிஸ்தவர்கள் எருசலேம் சங்கத்தால் யூதச் சட்ட அனுசரிப்பிலிருந்து விடுவிக்கப் பெற்றிருந்தனர் என்று இச்சகோதரர்கள் அறிந்திருந்தாலும், சிதறிக்கிடந்த யூதர்களும் யூதச் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று பவுல் போதித்ததாக எழுந்த வதந்தி அவர்களுக்குக் கவலையளித்தது. இந்த வதந்தியைப் போக்க, சகோதரர்களின் ஆலோசனைப்படி பவுலும் மற்ற நான்கு யூதக் கிறிஸ்தவர்களும் துப்புரவுச் சடங்கு செய்து கொண்டு ஆலயத்துக்குள் நுழைந்தனர். இதை வாய்ப்பாகக் கொண்டு, பவுல் புறவினத்தாரையும் ஆலயத்துக்குள் கூட்டிச்சென்றார் என்று பொய்ச் செய்தியைப் பரப்பி, யூதர்கள் கலகம் உண்டாக்கினர் (21:27-36). புறவினத்தார் ஆலயத்துக்குள் செல்லுதல் தடை செய்யப்பட்டிருந்தது. அப்படிச் செய்தால் அதற்குரிய தண்டனை மரணமாகும். பவுல் கைது செய்யப்பட்டு ஆலய வளாகத்திலேயே யூதர்கள் முன் விசாரிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி எருசலேம் யூதர்கள் பவுலை எவ்வளவு பகைத்து வெறுத்தனர் என்று சுட்டுகிறது. ஆலயவளாகத்தில் விசாரித்தல் கலகத்திற்கு இட்டுச்செல்லும் என்றுணர்ந்த கிளாதியு லீசியா என்ற திரிபியூன் பவுலை அங்கிருந்து அகற்றி, விரைவில் யூதப்பொதுச்சங்கத்தின் முன் விசாரணை செய்யச் செய்தான் (20:30-23:11). இது கடும் தர்க்கத்திலும், பவுலின் உயிருக்கு ஆபத்திலும் முடிந்ததால், பவுல் செசரியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கு இரு ஆண்டுகள் சிறைவாசம் செய்தார் (கி.பி. 58-60).

அங்கு அப்போது ஆளுநனாக இருந்த அந்தோனியு பெலிக்சு யூதர்களின் குற்றச் சாட்டைக் கேட்டான். கைக்கூலி பெறும் எண்ணத்துடன் இவன் வழக்கைத் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தான். ஆனால் பவுல் தன் விடுதலைக்காகக் கைக்கூலி கொடுப்பதாயில்லை (23:12-24:27). இந்தப் பெலிக்சு எப்போது பதவி நீக்கம் செய்யப்பட்டான் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் அவனுக்குப்பின் பொர்க்கியு பெஸ்து ஆளுநன் ஆனான் என்பது உறுதியாகும் (கி.பி. 60-62). இவன் பவுலின் வழக்கை விசாரிக்கத் தொடங்கினான். விசாரணைக்காக தான் எருசலேம் அனுப்பப்பட்டால் அங்கே தனக்கு உறுதியாக மரணம் ஏற்படும் என்று அஞ்சிய பவுல், தனது உரோமைக் குடியுரிமைச் சலுகையைப் பயன்படுத்தி, தன் வழக்கை உரோமையில் சீசரின் நீதிமன்றத்துக்குச் அனுப்பக்கோரினார். உரோமைக்குப் போகுமுன், 2-ஆம் அகிரிப்பா மற்றும் பெர்னிக்கி ஆகியோரின் முன்னிலையில் பவுல் விசாரிக்கப்படுகிறார். அகிரிப்பா அரசன் பவுல் குற்றமற்றவர் என்று அறிவிக்கிறான் (26:30-32). ஆயினும், பவுலின் கோரிக்கைப்படி அவர் சீசரிடம் செல்ல வேண்டும். இதைப் பவுலின் நான்காம் மறைபரப்புப்பயணம் என்றழைக்கலாம் (கி.பி. 60-63).

யூதர்களோடு கொண்ட இந்தப் போராட்டத்தில், உரோமை அதிகாரிகள்முன், பவுல் தனது வழக்கு உயிர்ப்புப்பற்றிய யூதர்களுக்கிடையிலான வழக்காகும் என்று கூறவிழைந்தார் (23:6; 24:20-21). ஆனால், இது தம்மைச் சாவுக்கு இட்டுச்செல்லும் என்ற நிலை ஏற்பட்டபோது தன் வழக்கு உரோமை நீதிமன்றத்துக்குரியது என்று கோரினார் (25:8.10). வழக்கு உரோமை நீதிமன்றத்துக் உரியதாக்கப்பட்டு, எருசலேமிலிருந்து வரக்கூடிய ஆபத்து நீக்கப்பட்ட பின்புதான் கிறிஸ்துவின் உயிர்ப்பை அறிவிப்பதோடு தன் வழக்கை வெளிப்படையாக இணைத்துக்கூறினார் (26:8.22-23). இந்த யுக்திகளுக்குப் பின்னால், உரோமைக்குச் சென்று

போதிக்க வேண்டும் என்ற பேராவல் அவரைத் தூண்டியது எனலாம்.

**8. உரோமையை நோக்கிப் பயணம்:** படைப்பாதுகாப்பின் துணையோடு பவுல் செசரியாவில் கப்பல் ஏறி மீராவை அடைந்தார். அங்கு இத்தாலியா செல்வதற்குக் கப்பல் மாற்றப்பட்டார் (27:1-6). இக்கப்பல் புயலில் சிக்கி மால்தா கடற்கரையில் உடைந்து போயிற்று (27:7-44). பவுல் அங்கு, குளிர்காலத்தைக் கழித்தபின், வேறொரு கப்பலில் பயணம் செய்து அடுத்த வசந்த காலத்தில் இத்தாலியாவிலுள்ள புத்தயோலியை அடைந்தார். அங்கிருந்து தரைவழியாக உரோமைக்குக் கொண்டு செல்லப்பட்டார் (28:1-16). அங்கு இரு ஆண்டுகள் வீட்டுக்காவலில் இருந்தார். "தன்னைக் காண வந்தோரை உபசரித்து, மிக்க துணிவோடு தடை எதுவுமின்றி அவர்களுக்குக் கடவுளின் அரசைப் பற்றிய செய்தியை அறிவித்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய உண்மைகளைப் போதித்து வந்தார்" (28:30-31). இக்கூற்றோடு அப்போஸ்தலர் நூல் முடிகிறது.

உரோமையில் இருக்கும்போது, சிறிய ஆசியாவில் தான் நிறுவிய திருச்சபைகளோடு கடிதத்தொடர்பு கொண்டிருந்தார் பவுல். அவற்றில் ஒன்று ஒனேசிமு என்ற அடிமைக்காக, தன் பழைய நண்பனான பிலமோனுக்குப் பவுல் எழுதிய பரிந்துரைக்கடிதமாகும். இதன் முடிவில் "நான் வரும்போது தங்குவதற்கு ஏற்பாடு செய்யவும்" என்ற வேண்டுகோள், சிறிது காலத்தில் தான் சிறைவாசத்திலிருந்து விடுவிக்கப்படுவதைப் பவுல் எதிர்பார்த்தார் என்று சுட்டுகிறது (பில 22). உரோமையிலிருந்து தான் சிறைக்கூட மடல்களான பிலிப்பியர், கொலோசையர், எபேசியர் ஆகியோருக்கான திருமுகங்கள் எழுதப்பட்டன என்று நம்பப்படுகிறது. இங்கிருந்துதான், மேய்ப்புப் பணித்திருமுகங்களான, திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதலாம், இரண்டாம் திருமுகங்கள், தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகம் ஆகியவை எழுதப்பட்டன என்று பாரம்பரியமாகக் கருதப்பட்டாலும், இவை பவுலின் பெயர் தெரியாத ஒரு சீடரால் எழுதப்பட்டிருக்கலாம். திருமுகம் என்பதை விட ஓர் இறையியல் கட்டுரையாக அமைந்துள்ள எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகமும் பவுலின் பெயர் தெரியாத ஒரு சீடரால் பிற்காலத்தில் எழுதப்பட்டதாகும். இவைபற்றி அந்தந்தத் திருமுகங்கள் பற்றிய தனிக்கட்டுரைகளில் காணக.

**9. பவுலின் மரணம்:** ஈராண்டு முடிவில் பவுலின் வழக்கு உரோமையில் விசாரிக்கப்பட்டு அவர் தீர்ப்பிடப்பட்டிருந்தால் அவர் கி.பி. 62-இல் இறந்திருக்க வேண்டும் அல்லது விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். மேய்ப்புப் பணித்திருமுகங்கள், பவுல் கிழக்கு நோக்கி மற்றொரு பயணம் செய்ததாகச் சுட்டுகின்றன. பவுல் விடுதலை பெற்றபின் மேற்கு நோக்கிப் (ஒரு வேளை, ஸ்பெயின்வரை) பயணம் செய்ததாக உரோமையைச் சேர்ந்த கிளமந்து சாட்சி கூறுகிறார். இரண்டும் நெடுங்காலம் எடுத்திருக்க முடியாது. ஏனெனில், பவுல் சிறைப்படுதலும் கொல்லப்படுதலும் நீரோவின் சாவுக்குமுன் அதாவது, கி.பி. 67-68-க்கு முன் நடந்திருக்க வேண்டும். பாரம்பரியம் பவுல் நீரோவின் ஆட்சியில் (கி.பி. 54-68) மறை சாட்சி மரணம் எய்தினார் என்று கூறுகிறது. உரோமை நகரத்தின் மையம் தீயால் அழிக்கப்பட்ட பின்னணியில் (கி.பி. 64), கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்த நீரோ விடுத்த கட்டளையின் விளைவாக இருக்கலாம். ஆனால், பவுல் மரித்த ஆண்டைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியாது. உரோமைப் பாரம்பரியப்படி "சுவருக்கு வெளியே"யுள்ள புனிதபவுலின் பேராலயம் இப்போது இருக்கும் இடத்தில் பவுல் மறைச்சாட்சி மரணம் எய்தினார் எனலாம். இவர் உரோமைக் குடிமகனாக இருந்ததால், அவர் சிரச்சேதம் செய்யப்பட்டிருக்கலாம்.

**IV.** பவுல் என்ற ஆள்: பவுலின் திருமுகங்களை வாசிக்கும்போது, அவற்றில் காணப்படும் உணர்ச்சி மிகுந்த போக்கு, பவுல் ஆழ்ந்த, வலிய

மனவெழுச்சி, ஆர்வம் உடையவர் என்று காட்டுகிறது. அதே சமயத்தில் இத்திருமுகங்கள், அவரது கூரிய, கட்டுப்பாடுடைய அறிவுக்கும் சான்று கூறுகின்றன. அவரது தீவிரமான ஆட்தன்மை அவரது சிந்தையைக் குழப்புவதில்லை. தலைமை தாங்குதல், மற்றும் அமைப்புகளை நிறுவுவதில் அவரது ஆற்றல்கள் அவரது மறைபரப்புப் பயண விவரிப்புகளில் தெளிவாகத் தெரிகின்றன. திருமுகங்கள், அவர் சிறு விவரங்களுக்கும் காட்டிய கவனத்தை வெளிப்படுத்துகின்றன.

தம் நண்பர்கள் மற்றும் தோழர்களைப் பற்றி அவர் அடிக்கடி ஆர்வத்தோடும், அக்கறையோடும் பேசுகிறார். இஃது அவர் நட்புறவா ஆட்தன்மையுடையவர் என்று காட்டுகிறது. அவர் பெரும்பாலும் அன்னியர்களைச் சந்தித்து அவர்களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். ஆகவே அவர் திறந்த, ஆர்வமிக்க மனமுடையவராக இருந்திருக்க வேண்டும். கலாத்தியர், கொரிந்தியர், பிலிப்பியர் ஆகியோருக்கும் அவர் எழுதிய திருமுகங்கள், அவர் எந்த அளவுக்குத் தன்னைத் தான் நிறுவிய சபைகளோடு ஒன்றாக்கிக் கொள்ளக்கூடும் என்று காட்டுகின்றன. எங்கும், யூதர்களோடும் புறவினத்தாரோடும் எளிதில் சமமாகப் பழகக்கூடியவர். விவிலியத்திலேயே பரந்த மனப்பான்மை மிக்கவர். பழைய ஏற்பாட்டு உலகோடும் மத்தியதரைக்கடல் நகரங்களின் வாழ்வோடும் அதிகம் அறிமுகம் பெற்றவர். நற்செய்தியில் காணப்படும் கிராமச் சூழ்நிலைக்கும் பவுலின் திருமுகங்களில் காணப்படும் நகரச் சூழ்நிலைக்குமிடையே நுண்ணிய வேறுபாடுகள் இருக்கின்றன. பவுல் நகரத்தைச் சேர்ந்தவர்; அவரது நூல்கள் எதிலும் நாட்டுப்புறம், கிராமம் ஆகியவை பற்றிய உணர்வைக் காண்பது அரிது. இவற்றில் அவர் அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை.

பவுல் உடலிலும் உள்ளத்திலும் திண்மையும், உறுதியும் உடையவர் என்பதற்கு அவரது வாழ்க்கைப்பணியே சான்றாகும். அவரது ஆன்மீக உறுதி, அவர் போதித்த இயேசுவோடு கொண்டிருந்த ஒருமைப்பாட்டால் இன்னும் வலிமை பெற்றது. நற்செய்தியை அறிவிப்பது தன்மேல் சுமத்தப்பட்ட கடமையாகக் கருதுகிறார் (1 கொரி 9:16 தொ). அவரது ஆர்வம் மட்டும் நம்மைக் கவரவில்லை. நற்செய்தியை எங்கும் வெற்றியோடு அறிவிக்க முடியும் என்று அவர் கொண்டிருந்த அமைதியான உறுதியும் நம்மைக் கவரவல்லது. இந்த உறுதி விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மேல் நிறுவப்பட்டதாகும் (2 கொரி 12:9 தொ). கிறிஸ்தவர்கள் அவரை வெறுமனே "அப்போஸ்தலர்" என்று அழைத்து வந்துள்ளனர்.

பவுலின் புறத்தோற்றத்தைப் பற்றி அதிகம் அறிவதற்கில்லை. திருமுறை சேராத, கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த, பவுலின் பணிநூல் என்ற போலிநூல், குட்டையான உடல், வழுக்கைத்தலை, வளைந்த கால்கள், கட்டான உடலுடையவர் என்றும், அவரது கண்புருவங்கள் ஒன்றையொன்று தொட்டன என்றும் சிறிது வளைந்த மூக்குடையவர் என்றும் விவரிக்கிறது. "அவருடைய கடிதங்கள் கடுமையானவை; அழுத்தமிக்கவை. ஆனால், ஆளை நேரில் பார்த்தால் தோற்றமும் இல்லை; பேச்சுத்திறனும் இல்லை" என்று தன் எதிரிகள் தன்னைப்பற்றிக் கூறுவதை எடுத்துக்கூறுகிறார் (2 கொரி 10:10). இஃது அவர் குட்டையான உருவமுடையவர் என்றும், அவருடைய உரைகள் கிரேக்கப் பேச்சுக்கலையின் வடிவத்தையோ, நயத்தையோ கொண்டிருக்கவில்லை என்றும் சுட்டுவதாக அமைந்திருக்கிறது. தான் நோயால் வருந்தியதாக அவர் ஒரே ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார் (கலா 4:13-15). "என் உடலில் தைத்த முள்" (2 கொரி 12:7). என்ற குறிப்பு நோயைக் குறிக்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம். இது யூதர்களிடமிருந்தான கொடுமையைக் குறிக்கலாம் என்று விளக்கம் அளிக்கலாம்.

**V. இறையியல்:** பவுலின் திருமுகங்களில் பல இறையியல் கருத்துகள் உள்ளன. அவற்றில் சில: இறைவனின் ஆற்றலும் நேர்மையும், மனித நோக்கில் மனிதன், கிறிஸ்துவே இறைவனின்

ஆற்றலும் ஞானமும், கிறிஸ்தியல், சிலுவையியல், விசுவாசமும் சட்டமும், ஆவியில் வாழ்வு, திருச்சபை கிறிஸ்துவின் உடலாகும், ஆவியால் நடப்பது, இறுதிக்கால இயல் ஆகியவையாகும். இவை பற்றி அந்தந்தத் தலைப்புகள் பற்றிய கட்டுரைகளில் காண்க.

கிறிஸ்துவத்தின் வரலாற்றில், பவுல் படைப்பாற்றல் மிக்க சிந்தனையாளர் ஆவார். கிறிஸ்துவோடு தன்னை ஒன்றித்துக்கொண்டு அவருக்குப் பின்னால் தன்னை மறைத்து அழித்துக்கொள்வதில் தன் வாழ்வை முழுவதும் செலவிட்டார். தமஸ்குச் சாலை அனுபவம் அவரது சிந்தனைக்குத் திசை அளிப்பதில் மையமாக விளங்கியது. இஃதோடு மறை மெய்மை சார்ந்த அனுபவத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் (2 கொரி 12:1 தொ). அவருடைய இறையியலை நிர்ணயிப்பதில் யூதத்துவம் பற்றிய வாதமும் முக்கியமானதாகும். இந்தப் பிரச்சனைக்குப்பதில் காணமுயலும் போது, பவுல் அவருக்கே உரிய முனைப்புடன் கருத்துக்களைக் கண்டுணர்ந்தார். யூதத்துவம், கிரேக்க நகரக்கலாச்சாரம் ஆகிய இரண்டையும் சேர்ந்தவர் என்பது அவரது இறையியல் வளர்ச்சியில் ஓரளவு முக்கியத்துவமுடையதாகும். அவர் தன்னை வளர்த்த யூதத்துவம் பற்றிய ஆழ்ந்த அறிவு மற்றும் அதை ஏற்றலிலோ தான் பயிற்சி பெற்ற ராபிகளின் முறையையோ ஒருபோதும் கைவிடவில்லை. அவர் பழைய ஏற்பாட்டைக் கையாளும் முறை ராபிகளைச் சேர்ந்ததாகும். அவரைக் "கிறிஸ்தவ ராபி" என்று அழைப்பது அவருக்கு ஓரளவு பொருந்தியதாக இருக்கலாம். ஆனால், அஃது அவரது அசாதாரணமான வளமிக்க பலதிறப்பட்ட ஆட்தன்மையை வெளிக்கொணரவில்லை. அவரது கிரேக்க நடை முதல்தரமானதாக இல்லை எனலாம். ஆனால் எளியது, நல்ல நடையாகும். கருத்துச் செறிவினாலும், தம் உள்ளுணர்வான முறையில் முடிவுகளுக்கு வருவதாலும், அவரது நடை சில இடங்களில் தெளிவில்லாது இருப்பதாகத் தோன்றலாம். எந்தப்பிரச்சனையையும் எடுத்து விளக்கி அதற்கு விடை அளிக்கும் போது தனது அறிவு, அனுபவம் ஆகிய மூலங்களை ஒருங்குவித்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர். இதிலிருந்துதான் அவருடைய நூல்களின் தரம் வெளியாகிறது. இருகோடித்தன்மையுடன் கூற்றுகளிலும், அவர் கிரேக்கத் தன்மையால் அல்லாது செமித்தியப் பண்புகளால் மட்டுடையவர். துர்வசமாக, இதன் விளைவாக, பல தவறான கோட்பாடுகள் பவுலின் நூல்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளன. அதே சமயத்தில் கிறிஸ்தவச் சிந்தனை வரலாற்றில் எந்தப் பெரிய இயக்கமும் பவுலின் நூல்களில் ஒரு அடிப்படையில்லாமல் தோன்றவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதல் தடவையாக அவரில்தான் திருச்சபையும், திருச்சபையில் வாழும் கிறிஸ்துவும் உலகக் கலாச்சாரத்தை எதிர் கொண்டனர். உலகத்தோடு உறவுகொள்வதில் பவுலின் மொழியைவிட மேன்மையானதொன்றைத் திருச்சபை ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லை எனலாம்.

**பவுல் மற்றும் செனக்காவின் திருமுகங்கள் (PAUL AND SENECA, EPISTLES OF)**

இஃது இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட பதினான்கு திருமுகங்களின் தொகுப்பு ஆகும். இக்கடிதங்கள் பவுலுக்கும் செனக்கா என்ற உரோமைத் தத்துவ ஞானிக்கும் இடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன. இதில் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்கின்றனர். செனக்கா, பவுல் உண்மையிலேயே கடவுளின் ஆவியைப் பெற்றவர்; அவரின் போதனைகளும், கருத்துக்களும் மிகச் சிறந்தவை எனப் புகழ்கிறார். ஆனால், அவர் கடிதங்களில் அவர் கருத்து அளவுக்கு அவர் மொழி நடை சரியில்லை என்கிறார்.

எரோனிமு இந்தத் திருமுகங்கள் பலராலும் படிக்கப்பட்டது எனக் கூறுகிறார். ஆகவே, இதன் காலம் நான்காம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாக இருக்க முடியாது. இஃது இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது.

செனக்கா ஸ்பெயினில் பிறந்து உரோமையில் கல்வி கற்றவர்; ஸ்தோயிக்கு ஞானியும், அரசியல்வாதியுமாவார். இவர் பேரரசன் நீரோவுக்கு ஆசிரியராகவும் ஆலோசகராகவும் இருந்தார். தனக்கு எதிரான ஒரு சதித்திட்டத்தில் செனக்கா பங்கெடுத்ததாக நீரோவால் சந்தேகிக்கப்பட்டதால், செனக்கா கி.பி. 65-இல் தற்கொலை செய்து கொண்டார். இவருடைய ஒழுக்க போதனைகள் கிறிஸ்தவப் போதனைகளுக்கு மிக நெருங்கியதாக உள்ளன. ஆகவே, பல திருச்சபைத் தந்தையர்கள் இவர்பால் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். செனக்காவை ஒரு கிறிஸ்தவராகக் காட்டவும், உரோமையர் பவுலின் திருமுகங்களை வாசித்தறிய ஊக்குவிக்கவும் இந்நூல் எழுதப்பட்டது என்று கருதப்பட்டது.

### பவ்வாய் (BAVVAI)

இவர் கெயிலா மாவட்டத்தின் ஒரு பாதிக்கு ஆளுநராய் இருந்த ஏனதாத்தின் மகன் (நெகே 3:18). லேவியரான இவர், நெகேமியாவின் தலைமையில் எருசலேம் நகரின் சுவர் திரும்பவும் கட்டப்பட உதவியவர் (3:17-18).

சில எபிரேய கையெழுத்துப் பிரதிகள், சீரியக்கு மற்றும் சில கிரேக்க வாசகங்களின்படி, பவ்வாய் என்பவரும் பின்னூய் என்பவரும் ஒரே ஆளாக இருக்கலாம் (3:24).

### பழங்கள், பழப்பொருட்கள் (FRUITS, FRUIT PRODUCTS)

பழைய ஏற்பாட்டில் 100 முறைகளுக்கு மேலாகவும், புதிய ஏற்பாட்டில் 60 முறைகளுக்கு மேலாகவும் இந்தச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பெரும்பாலும் இந்தச்சொல், குறித்துச் சொல்லப்படாமல், அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழச்சதை, விதைகளைச் சுற்றியுள்ள சதைப்பகுதி. விவிலிய மக்கள், அவர்கள் வரலாற்றில் நிலத்தோடு ஒட்டி வாழ்ந்ததால் இந்தச் சொல்லை அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்களது பழக்கத்தில் இருந்த மிக முக்கியமான பழங்களாக ஒலிவப்பழம், அத்திப்பழம், திராட்சைப்பழம் ஆகியவை யோத்தானின் உவமையில் சொல்லப்படுகின்றன (நீதி 9:7-15). விவிலியத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற மற்றப் பழங்கள். வாதுமைப்பழம், ஆப்பிள்பழம், பேரீச்சம்பழம், முலாம் பழம், மல்பரிப்பழம், மாதுளங்கனி, காட்டத்திப்பழம் ஆகியன. தூதாயீம் கழற்சிமயிற்கொன்றை ஆகிய மரப்பழங்களை எப்போதாவது கிடைத்த நேரத்தில் உண்டார்கள்.

பழை ஏற்பாட்டில் சில எபிரேயச்சொற்கள் சில வகையான பழப்பொருட்களைக் குறிக்கின்றன.

(அ) திராட்சை அடைகள், கிச்சிலிப்பழங்கள் (2 சாமு 6:19 = 1 நாள் 16:3; உ.ச. 2:5; எசா 16:7; ஓசே 3:1).

(ஆ) கோடைக்காலம் வருமுன் பருவம் தப்பிப்பழுத்த அத்திப்பழம் (எசா 28:4; எரே 24:2; ஓசே 9:10; மீக் 7:1).

(இ) அத்திப்பழ அடைகள் (1 சாமு 25:18; 30:12; 2 அர 20:7 = எசா 38:21; 1 நாள் 12:40).

(ஈ) காட்டுத்திராட்சை (1 சாமு 25:18; 30:12; 2 சாமு 16:1; 1 நாள் 12:40).

(உ) அத்திப்பழக்குலை, தோற்பை திராட்சை ரசம் (2 சாமு 16:1-2; எசா 16:9; எரே 40:10, 12; 48:32; ஆமோஸ் 8:1-2).

(ஊ) அத்திமரப் பழம், நல்ல கனி (நீதி 9:11).

புதிதாக நடப்பட்ட மரத்தின் கனியை 5 வருடங்களுக்கு உண்ணக்கூடாது (லேவி 19:23-25). முதல் மூன்று வருடங்களில் கிடைக்கின்ற எந்தக்கனியும் விலக்கப்பட்டதாகவே இருக்கும். நான்காம் ஆண்டில் வருகின்ற கனி ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்.

### பழங்கால மேற்காசிய மொழிகள் (LANGUAGES OF THE ANCIENT NEAR EAST)

பாபேல் கோபுரம், பெந்தகோஸ்தே நாள் போன்ற விவிலியக் கதைகள் பழங்காலத்தில்

மொழிப்பிளவுகள் ஏற்பட்டதைக் குறிப்பிடுகின்றன. ஆதி 10-இல் குறிப்பிடப்படும் மக்கள் கணக்கினை மையமாகக் கொண்டு ராபிகள் 72 மொழிகள் பேசப்பட்டதாகக் கணித்தனர். இக்கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விவிலியத்தில் குறிப்பிடப்படும் பல மக்களின் மொழியைப் பற்றி விளக்கம் நம்மிடம் இல்லை. அதே சமயம், பல மொழிகள் விவிலியத்துடன் தொடர்பு அற்றனவாகவும் உள்ளன. இத்தகைய மொழிகளைப்பற்றிய அறிவு, எழுத்து ஆதார மூலங்களிலிருந்தே கிடைக்கின்றது.

மேற்காசிய நாடுகளில் எழுத்துமுறை ஏறக்குறைய கி.மு. 3500-ஐ ஒட்டித்தான் ஆரம்பமானது. எனவே, இக்காலத்திற்கும் முற்பட்ட நிலையை நாம் அறியோம். ஆரம்ப எழுத்து முறையானது சித்திர எழுத்து முறையாகவும், ஒலியைக் குறித்துக் காட்டாத சொல்லின் கருத்துக் குறியீடாகவும் இருந்தன. பின்னர் அடையாளமானது பொருளுக்கு அல்லாமல், ஒலிக்கு அடையாளமாக மாறியபோது ஒலியமைப்பு வடிவம் பெற்றது. பிற்காலத்தில்தான் இன்றைய எழுத்து முறை உருவாக்கப்பட்டது.

மேற்காசிய மொழிகளில் சில முற்றிலும் அறிவிற்குப் புலனாகக் கூடியதாகவும், மற்றவை ஓரளவுதான் புரியக்கூடியதுமாக உள்ளன. புவியியல் சம்பந்தம் அல்லாத எந்தப் பிரிவும் நடைமுறைக்கு கடினமானதாக அமையும்.

**1. மெசபொத்தாமியத் தொகுதி:**

எழுத்துக் கலை தெற்கு மெசபொத்தாமியாவில் ஆரம்பமானதாகத் தோன்றுகிறது. இங்குக் காலத்தால் முந்திய வாசகங்கள் சுமேரிய மக்கள் சித்திர எழுத்து முறையைக் கண்டுபிடித்துக் களிமண்ணில் எழுத ஆரம்பித்து, ஆப்பு எழுத்துக்களை வளர்த்தனர். ஏறக்குறைய கி.மு. 3200 முதல் அர்சாசித்துக் காலம்வரை சுமேரிய வாசகங்கள் இவ்வெழுத்து முறையில் இருந்தன. இவை செமித்திய மற்றும் இந்தோ – ஐரோப்பியன் அல்லாத மொழி. இதில் எமெகு, எமெசால் என்ற இரு பிரிவுகள் உள்ளன. எமெகு பழமையானது. மூன்றாம் ஆயிரமாண்டுகளின் ஆரம்பக்காலத்தில் செமித்திய மொழிபேசுதல், வடக்கு, மத்திய மெசபொத்தாமியாவில் முக்கிய இடம் வகித்தது. சுமேரியர்களிடமிருந்து ஆப்பு எழுத்து முறையைப் பெற்று, செமித்தியர்கள் தங்களின் சொந்த மொழியை இம்முறையில் எழுதினர். இதுதான் அக்காதிய மொழியாகும். இதில் பாபிலோனியா மற்றும் அசீரியா என்ற இரு பிரிவுகள் இருந்தன. பதினைந்து, பதிமூன்றாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அக்காதிய மொழியானது பொதுமொழியாக மாறி, செமித்தியர் அல்லாதவர்களாலும் பயன்படுத்தப்பட்டது. இது கப்பதோக்கியன், நூசி, எலாமிய மற்றும் மாரி என்ற பிரிவு வகைகள் உருவாக வழிவகுத்தது. அக்காதிய மொழியானது, ஏறக்குறைய கி.மு. 2800 முதல் கி.பி. 50-க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. அக்காதிய மொழி மிகமுக்கிய இடம் வகித்தது.

**2. சக்ரோஸ் தொகுதி:** முற்காலத்திலிருந்தே குன்றுகளில் வாழ்ந்த மக்கள் மெசபொத்தாமியாவில் குடியேறி வாழ்ந்தனர். சக்ரோஸ் மலைகளிலிருந்தும் சில கூட்டத்தினர் குடியேறினர். இப்பகுதியைச் சார்ந்தவர்கள் புதிய மரபினை ஊருக்கின் நான்காம், ஐந்தாம் அரச மரபுகளுக்கு இடையே ஏற்படுத்தினர். இந்தக் குட்டியன் மரபு அரசர்களின் பெயர்கள் செமித்திய மொழியைச் சேர்ந்தவையல்ல. பழை ஏற்பாட்டு ஓரியர்களான ஊரியர்களின் குடியேற்றம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஊரியர்களின் மொழியானது ஆப்பு எழுத்து வாசகங்களிலிருந்தே தெரிய வருகின்றது. எலாமிய மொழியில் போதிய ஆதாரங்கள் இருந்தாலும் அவை முற்றிலும் புலனாகக் கூடியவை அல்ல. ஆரம்ப காலத்தில் ஏலாமியரின் முக்கிய நகராகிய சூசாவின் கல்வெட்டுகள் சித்திர எழுத்து முறையைக் கொண்டது. இது மெசபொத்தாமிய ஆரம்பத்தையோ, தனி வளர்ச்சியைக் கொண்டதாகவோ இருக்கலாம்.

பிற்காலத்தில் சூசா மக்கள் ஆப்பு எழுத்து முறையைப் பின்பற்றினார்கள்.

**3. அனத்தோலியன் தொகுதி:** ஆப்பு எழுத்து முறை அனத்தோலியாவின் மேற்குப் பகுதியிலும் பரவி அக்காதிய மற்றும் பிராந்திய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இம்மொழி ஊரியர்கள் மூலமாக இத்தியர்களை வந்தடைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தோ - ஐரோப்பிய மொழி பேசிய இம்மக்கள் மேற்கிலிருந்து சிறிய ஆசியாவில் நுழைந்து காலிசு ஆற்றின் வளைவுப் பகுதியில் ஒரு அரசை ஏற்படுத்தினார்கள். இம்மக்கள் தங்களை நேசியன்கள் என்று கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இவர்கள், அங்கு வாழ்ந்த பழைய காத்தி மக்களை அகற்றி உரிமையைப் பெற்றார்கள். இந்தக் காத்தி மக்கள்தான் பின்னர்க் கித்தி என்று அழைக்கப்பட்டனர்.

அவர்களின் சொந்த மொழி இந்தோ - ஐரோப்பியன் ஆகும். ஆனால், பழைய மக்களின் மொழியான மூல-காத்தி வேறு எந்த மொழியுடனும் தொடர்பற்றதாகக் காணப்படுகின்றது. இத்திய அரசுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சித்திர எழுத்துமுறையிலான கல்வெட்டுகள் கசுவட்டுவானாவின் சிலிசிய அரசு மொழியில் அமைந்ததாகக் கருதப்படுகின்றன. நேசியர்கள் மட்டுமல்லாமல் இன்னும் சில மக்கள் பிரிவினரும் இதே காலகட்டத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழிபேசுபவர்களாக வாழ்ந்தனர் என்று இத்திய ஆப்பு எழுத்து வாசகங்கள் காட்டுகின்றன.

சற்றுப் பிற்பட்ட காலத்தில் இந்தோ - ஐரோப்பியர்களின் படையெடுப்பின் காரணமாக பிரிகிய மொழி பேசுபவர்கள் மத்திய அனத்தோலியாவில் புகுந்தனர். இதன் பழைய கல்வெட்டுகள் 7 அல்லது 6-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இவை பழைய மேற்குக் கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டன. புதிய பிரிகிய கல்வெட்டுகள் உரோமையரின் காலத்தில், சாதாரணக் கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டன. பிரிகிய மொழி, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும் பேசப்பட்டதாக ஒரு கருத்து உள்ளது. உரார்தேய மொழியும் ஆப்பு எழுத்து முறையிலேயே எழுதப்பட்டது. இதனை வன்னிக் என்று அழைத்தனர். ஏனென்றால், ஆரம்பகாலக் கல்வெட்டுகள் வான் ஏரிக்கருகிலிருந்து வந்தன. சிலர் இதனைக் கல்தி என்றும் அழைக்கின்றனர். இந்தக் கல்வெட்டுகள் கி.மு. 840-640-க்கு இடைப்பட்ட காலத்தைச்சேர்ந்தவை. இவை செமித்திய மற்றும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளைச் சேராதவையாகும். இதனை ஊரிய மற்றும் கவுகாசிய மொழிகளுடன் தொடர்புபடுத்திப் பார்த்ததில் வெற்றிகரமான முடிவுகள் கிடைக்கவில்லை.

**4. ஈரானியத்தொகுதி:** மேதிய மற்றும், பாரசீகப்பகுதிகள் எலாமிற்கு வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளில் இருந்தன. இந்த இந்தோ - ஐரோப்பிய மொழி பேசியவர்கள், வேறுபட்ட பேச்சு வழக்கினைக் கொண்டிருந்தவர்களிடையே குடியேற வந்தனர். தாரியு, சைரஸ், செருசு, அர்த்தக் சஸ்தா ஆகிய அரசர்களின் முற்காலக் கல்வெட்டுகள் ஆப்பு எழுத்து முறையிலேயே எழுதப்பட்டன. பாரசீகத்திலிருந்து பாரசீக மொழி வந்தது. இதனைப் பழைய பாரசீக மொழி என்பர். மேதிய மொழியானது ஆட்கள் அல்லது இடங்களின் பெயர்களிலிருந்தே தெரியவருகின்றது. இது, மத்திய ஈரானியர்களின் மொழிக்கு வழிசெய்தது.

பழைய சொராஸ்திய மதநூல் மொழியான அவெஸ்தன் தென்கிழக்குப் பகுதியின் மொழியான பாக்தியனைப் பிரதிபலிப்பதாகக் கருதப்பட்டது. சித்தியர்களின் மொழியும் ஈரானிய வகையைச் சார்ந்ததே.

**5. சீரிய - பாலஸ்தீனியத்தொகுதி:** சீரியாவிலும், பாலஸ்தீனத்திலும் சித்திர மற்றும் ஆப்பு எழுத்து முறைகள் பயன்படுத்தப்பட்டு, இவற்றிலிருந்தே பிராந்திய மொழி எழுத்துகள்

வளர்ந்தன. இரஸ்சம்ரா என்ற இடத்தில் பண்டைய நகரான உகாரித்தை ஆராய்வதற்காகச் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிப் பணியின் மூலம் அகரமுறையில் எழுதப்பட்ட இலக்கியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஆப்பு எழுத்து முறையின் அடையாளங்கள் காணப்பட்டன. இந்த உகாரித்து வாசகங்கள் கி.மு. 1500 - 1300 காலக்கட்டத்தைச் சார்ந்தவை; ஒரு செமித்திய மொழியில் எழுதப்பட்டன. பெனிசிய மொழியும் ஒரு செமித்திய மொழிதான். வட ஆப்பிரிக்காவின் பெனீசியக் குடியேற்றப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மொழி அமைப்பினைப் பூனிக் என்று அழைத்தனர். அகுஸ்தினார் காலம்வரை இது பயன்படுத்தப்பட்டது. பிபுலோசில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம், எகிப்திய மொழியைச் சார்ந்த பாதி சித்திர எழுத்து முறையிலான மற்றொரு பிரிவைச் சார்ந்த கல்வெட்டுகள் வெளிக்கொணரப்பட்டன. இந்தப் பிபுலோசிய மொழியும் செமித்திய மொழியைப் போன்றதாகக் கருதப்படுகின்றது. கானானிய மொழிகளான எபிரேயம், அரமேயிக்கு, சமாரிய, மோவாபிய, ஏதோமிய மற்றும் அம்மோனிய மொழிகள் அனைத்துமே செமித்திய மொழியினத்தைச் சார்ந்தவையாகும்.

அராபியர்களின் மொழியினைப் பற்றிய சில குறிப்புகளும் கிடைத்துள்ளன. தென் அராபிய அரசுகளிடமிருந்து கிடைத்த கல்வெட்டுகளில் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மினேயோ - சபேயன் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. சில வட அராபியக் குழுக்கள் இவற்றிலிருந்து தங்களின் எழுத்துகளைக் கற்றுக்கொண்டு அவர்களின் மொழிகளான தெதானிய, லிகியானிய தாமுதிக்கு மற்றும் சாபைத்திய மொழிகள் ஆகியவற்றில் இவ்வாறு எழுதினர். பெந்தகோஸ்தே நாளில் அங்குத் தங்கியிருந்த அராபியர்கள் நபத்தேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் மொழி திருத்தப்பட்ட அரமேயிக்கு எழுத்துமுறையினில் இருந்தது. இஸ்லாமிய காலம்வரை இது தொடரப்பட்டது. அனைத்து அராபிய மொழிகளும் செமித்திய வகையைச் சார்ந்தவை.

**6. ஆகியன் தொகுதி:** வரலாற்றுக் காலங்களில் கிரேக்க மொழியானது பல வகைகளில் பேசப்பட்டது. ஏனெனில், பலவிதமான பேச்சு வழக்கினையுடைய மக்களிடையே கிரேக்க ஆதிக்கம் செலுத்தப்பட்டதால் அவர்களின் மொழிகளும் பல்வேறுபட்டதாக அமைந்தன. இத்தகைய மொழிகள் சிலவற்றைப் பற்றிய ஆதாரங்கள் கிரேத்தா மற்றும் சிப்ரிய கல்வெட்டுகளில் உள்ளன. மினோவான் மொழிக்கான சான்று கிரேத்த சித்திர எழுத்துக் கல்வெட்டுகளில் உள்ளது.

சில சிப்ரிய கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து அமைப்பு கிரேத்த முறையை ஒத்ததாக இருக்கின்றது. இவற்றைச் சிப்ரிய - மினோவான் என்று அழைக்கின்றார்கள். சிப்ரிய மொழியில் அசை எழுத்து முறை பயன்படுத்தப்பட்டது.

**7. சிறிய ஆசியாவின் கடலோர மொழிகள்:** இவற்றில் பெரும்பான்மையானவைகளை அவற்றின் நேரியப் பெயர்களிலிருந்தும், சிலவற்றைப் பொருள் விளக்கங்களின் மூலமாகவும், இன்னும் சிலவற்றைச் சிறிய கல்வெட்டுகளின் மூலமும் அறிகின்றோம். சிலிசிய, பிசிதிய, மைசிய, இஸவரிய மற்றும் லிக்கவோனிய மொழிகளைச் சில பொருள் விளக்கங்களின் மூலமே அறிகின்றோம். இவை இந்த மொழிகளின் பண்புகளை விளக்கியுள்ளன.

கி.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிதேத்தோ - பம்பிலியன் மொழியிலான நாணயங்கள் கிடைத்துள்ளன. சிதேத்தோ மற்றும் கிரேக்க மொழியிலான மூன்று கல்லறைப் பொறிப்பு எழுத்துகள் கிடைத்துள்ளன. காரியன் என்னும் மொழியைப் பெயர்களிலிருந்தும், பொருள் விளக்கங்களில் இருந்தும், சில பொறியெழுத்துகளின் மூலமும் அறிகின்றோம். சர்தையில் நடந்த அகழ்வாய்வுகளில் கிடைத்த கல்வெட்டுகள் லிதியா மொழியைக் கொண்டவை. இக்கல்வெட்டுகள் கி.மு. 5-4ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை.

**8. எகிப்திய-பெர்பெர் தொகுதி:** பழைய எகிப்திய மொழி, சுமேரிய மொழியைப் போன்ற பழமை வாய்ந்தது. முதலில் இது சித்திர எழுத்துமுறையிலேயே எழுதப்பட்டது. வரலாற்றுக் காலக்கட்டத்தில் இந்தமொழி பெரும் மாறுதல்களை அடைந்தது. எனவே ஒன்றுமுதல் எட்டாவது அரச மரபுவரை (கி.மு. 3000 - 2155) பயன்படுத்தப்பட்ட மொழியைப் பழைய எகிப்திய மொழியென்றும், ஒன்பது முதல் பதினெட்டாம் அரச மரபுக்குட்பட்ட (2155 - 1350) காலத்திய மொழியினை மத்திய எகிப்திய மொழியென்றும், பத்தொன்பதிலிருந்து இருபத்தைந்தாம் அரச மரபுக்கு இடைப்பட்ட காலத்திய (1350 - 720) மொழியைப் பிற்கால எகிப்திய மொழி என்றும் பிரித்துள்ளார்கள்.

இக்காலத்திலிருந்து உரோமையரின் காலம் வரைக்குமான மொழியைத் தெமோதிக்கு என்றும், எகிப்து கிறிஸ்தவமயமாக்கப்பட்ட பின்னர்க் கிரேக்க எழுத்துமுறையில் அமைக்கப்பட்ட மொழியைக் கோப்திக்கு என்றும் அழைத்தனர். கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நபதாவின் எத்தியோப்பிய ஆட்சியாளர்கள் தங்களின் கல்வெட்டுகளில் எகிப்திய மொழியையே பயன்படுத்தினார்கள்.

எகிப்திற்கு மேற்கே, பெர்பெர் மொழிகள் பேசப்பட்ட பகுதி உள்ளது. இவற்றில் ஒன்றான நுமிதிய மொழி பொறி எழுத்துகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, விநோதமான லிபிய எழுத்துகளால் எழுதப்பட்டது. இந்த எழுத்துகளின் ஆரம்பத்தை அறியமுடியவில்லை. இம்மொழி வாசகங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்ற ஆதாரமற்ற கருத்து உள்ளது.

**பழங்கால விவிலிய வாசகங்கள் (VERSIONS ANCIENT)**

மறைநூல்கள் எழுதப்பட்ட மூல மொழிகளில் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்காக இம்மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. கி.மு. கடைசி ஆறு நூற்றாண்டுகளில், அரமேயிக்கு மொழி பேசிய யூதர்கள் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட மரபுமுறை எபிரேய மொழியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்களுக்காக அரமேயிக்கு மொழியில் பொழிப்புரைகள் செய்யப்பட்டன. இவை தார்கும் என்று அழைக்கப்பட்டன. அதே சமயத்தில் கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்காகவும் புறவினத்தாருக்காகவும் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. பிற்காலத்தில், மூல எபிரேய மொழியிலிருந்தோ, பழைய கிரேக்க மொழி பெயர்ப்புகளிலிருந்தோ பழைய ஏற்பாடு பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

அதை தேவையின் அடிப்படையில் புதிய ஏற்பாடு மூல கிரேக்க மொழியிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

இவற்றில் சில முக்கியமானவையாகும்:

1. அரமேய தார்கும்.

2. கிரேக்க மொழிபெயர்ப்புகள்

அ. எழுபது நூல்.

ஆ. பிற கிரேக்க மொழி பெயர்ப்புகள்.

3. இலத்தீன் மொழிபெயர்ப்புகள்.

அ. பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு.

ஆ. வுல்காத்தா.

4. சீரியக்கு மொழிபெயர்ப்பு.

5. கோப்திக்கு மொழிபெயர்ப்பு.

6. கோதிக்கு மொழிபெயர்ப்பு.

7. அர்மேனிய மொழிபெயர்ப்பு.

8. கியோர்சியன் மொழிபெயர்ப்பு.

9. எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு.

10. அராபிய மொழிபெயர்ப்பு.

11. ஸ்லாவோனிக் வாசகங்கள்.

இவை பற்றிய தனித்தனி தலைப்புகள் பற்றிய கட்டுரைகளில் காண்க.

**பழத்தோட்டம் (ORCHARD)**

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் பாரசீக மொழியைச் சேர்ந்த சொல்லாகும். இச்சொல் வளமான தோட்டத்தையும் (உ.ச. 4:3), காட்டினையும் (நெகே 2:8), பல்வகைப் பழத்தோட்டங்களையும் (திருவுரை 2:5; உ.ச. 6:11; நெகே 9:25) குறிக்கப்பயன்பட்டது.

**பழமில்லாத அத்திமர உவமை (PARABLE OF BARREN FIG TREE)**

இந்த உவமை நிகழ்ச்சியை மாற் 11:13-14.20-21; மத் 21:18-23-இல் வாசித்தறிக. இந்நிகழ்ச்சி, வாசகத்தின் முன், பின்வரும் பகுதிகளோடும் இயேசுவின் பண்போடும் ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. இதுவரை அளிக்கப்பட்டிருக்கும் விளக்கங்களும் நிறைவு அளிப்பதாகத் தெரியவில்லை. இது லூக் 13:6-9-இல் வரும் உவமையின் நாடகப்பாணிச் செயலாக்கமாகும் என்று கருதப்படுகிறது. இஃது இந்த உவமை தங்கள் வாழ்வில் உரிய பலனைக் கொடாதவர்களின் பரிதாப மிக்க முடிவைச் சுட்டிக்காட்டுகிறது.

வசந்த காலத்தொடக்கத்தில் இலைசுள் தோன்றுவதற்கு முன்னே, அத்திக்காய்கள் தோன்றும் (உ.ச. 2:13). இஃது அந்த அத்திமரம் உரிய காலத்தில் நல்லபலனை அளிக்கும் என்று முன்னதாகவே சுட்டிக்காட்டும். இக்காய்கள் இல்லாமை, இந்நிகழ்ச்சியுரைக்கு அடிப்படையாக இருக்கலாம். இருப்பினும், இயேசு திடீரென்று உணர்ச்சிவசப்பட்டுச் செயலாற்றுவதை விளக்கவில்லை என்றே கூறலாம். ஒரு வேளை இந்நிகழ்ச்சியுரை, மூலத்தில் இறுதிக்கால இயல் பொருளைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். ஆனால், இந்நிகழ்ச்சியுரையின் மூலச் சூழ்நிலையும், பொருளும் குழப்பப்பட்டிருக்கிறது, அல்லது தவறிப் போய்விட்டது என்பது தெளிவு. லூக்கா தனது நற்செய்தியில் இந்நிகழ்ச்சியுரையை விட்டுவிடுவது இந்த இடுக்கண் நிலையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது எனலாம்.

சாபத்திற்கும் அதன் நிறைவேற்றத்துக்கும் இடையில் ஆலயத்தை இயேசு சுத்தி செய்த நிகழ்ச்சி புகுத்தப்பட்டுள்ளது. இது யூத ஆலய வழிபாடும் மற்றவைகளும் கனிகொண்டிராத அத்தி மரத்துக்கு ஒப்பானவையாகும். ஆகவே, அத்திமரம் பட்டுப்போனது போல், ஆலயமும் அதைச் சார்ந்த யாவையும் கண்டனம் பெறுகின்றன; அவை அழிக்கப்படும் என்ற பொருளையும் உணர்த்தக்கூடியது இந்த உவமை நிகழ்ச்சி.

**பழிவாங்குதல் (VENGEANCE)**

இன்றைய சூழ்நிலையில் பழிவாங்குதலென்பது, தீமைக்குத் தீமை செய்வதன் மூலம் ஒரு தவற்றைத் தண்டிப்பதாகும். விவிலிய மொழியில் பழிவாங்குதல் என்பது நீதியை மீண்டும் ஏற்படுத்துதல், தீமையின் மீதான வெற்றி என்று முதன்மையாகப் பொருள்படும். தவறு புரிந்தவர் மீதான வெறுப்பினால் ஒருவரைப் பழிவாங்குவதென்பது எப்போதுமே தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மீறப்பட்ட உரிமையினைப் பழிதீர்ப்பதென்பது ஒரு கடமையாகும். இப்பொறுப்பைச் செயல் படுத்துவதென்பது வரலாற்றுப்போக்கில் வளர்ச்சியடைந்தது. தனிநபரிடமிருந்து எடுக்கப்பட்டு, இது சமூகத்தின்மேல் சுமத்தப்பட்டது. படிப்படியாசுத் தான் மட்டுமே நீதியின் அமைப்பினுடைய சட்ட பூர்வமான பழி தீர்ப்பாளரென இறைவன் சுட்டிக்காட்டுகிறார்.

1. **இரத்தப்பழி வாங்குவோன்:** இஸ்ராயேலின் தொடக்ககால நாடோடிச் சமுகத்தில், கோத்திரத்து உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பாதுகாப்பையும், ஆதரவையும் அளிக்க வேண்டும். கொலையைப் பொறுத்த மட்டில், கோத்திரத்திற்காக, குற்றவாளியைக் கொல்வதன் மூலம் "இரத்தப்பழி வாங்குவோன்" பழிவாங்குவான் (எண் 35:21). ஆபேலின் வாழ்வில் நடந்தது போல, இரத்தத்தின் குரல் பழிவாங்கக் கூக்குரலிடுகிறது என்ற உறுதி (ஆதி 4:1; யோபு 16:18) கோத்திர ஒருமைப்பாடு

என்ற கருத்துடன் சேர்க்கப்பட்டது. ஏனெனில், யாவே தங்கியிருக்கும் இடத்தை இந்த இரத்தம் தீட்டுப்படுத்துகிறது (எண் 35:33-34). எனவே, நீதியைப் பாதுகாப்ப தென்பது ஒரு கடமையாகும்.

இறுதியாக இஸ்ராயேல் ஓரிடத்தில் தங்கியபின்னர், அது இப்பழக்கத்தை மீண்டும் வழக்கில் கடைப்பிடித்தது (2 சாமு 3:22-27). அதனுடைய சட்டங்கள் (யாத் 21:12; லேவி 24:17) இரத்தப்பழி வாங்குவோனை, நீதியின் பிரதிநிதியாகத் தொடர்ந்து கருதினாலும் (எண் 35:12-19). கோபத்தின் மிகைப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, அவனது உரிமையின் செயல்பாட்டை வரைமுறைப்படுத்துவதற்கென ஓர் அக்கறை இருந்தது (உப 19:6). அது முதல், வேண்டுமென்றே செய்யப்பட்ட மனிதன் கொலை மட்டுமே (உப 24:16). இரத்தப்பழி வாங்குதலுக்கு உட்பட்டதாகும். கொலையாளி தப்பியோடிய அடைக்கல நகரத்தில் முற்பட்ட விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் (எண் 35:24-30; உப 19). எனவே, பழிவாங்கும் உரிமையானது படிப்படியாகத் தனிநபரிடமிருந்து சமூகத்தைச் சேர்ந்ததாகிறது.

2. **தனிப்பட்ட பழிவாங்குதல்:** பழிக்குப் பழி என்னும் சட்டத்துடன் (யாத் 21:23.25; லேவி 24:19; உப 19:21), இஸ்ராயேலின் சட்டமானது தீமைக்குத் தீமை புரிய எப்போதும் விரும்புகின்ற மனித உணர்வுகளை எப்போதும் கட்டுப்படுத்துகிறது. காட்டுமிராண்டி காலங்களின் எல்லைலற்ற பழிவாங்கும் எண்ணத்தை இது தடை செய்கிறது (ஆதி 4:15.24). இறுதியாக, இஸ்ராயேலின் சட்டமானது சில குறிப்பிட்ட சம்பவங்களில் பணவகையான இழப்பீடு அளிப்பதன் மூலம் பழிக்கும் பழி சட்டத்தையும் மென்மைப்படுத்துகிறது. இது பிற மேற்காசிய நெறிமுறைகளால் ஏற்கப்பட்ட கோட்பாடாகும் (யாத் 21:18-19.26-27). ஆயினும் பழிக்கும் பழி சட்டத்துடன், ஒழுக்க உணர்வின் மேம்பட்ட வளர்ச்சியினைத் தடை செய்யும் அபாயமும் இருந்தது. சமூக நீதியால் நெறிமுறைப் படுத்தப்பட்டாலும், பழிவாங்குவதற்கான ஆசையானது ஆன்மாவில் தங்கியிருக்கலாம். எனவே, ஒழுக்க அறிவு பற்றிய மனிதனுடைய உணர்வானது பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

**அ) தடைசெய்யப்பட்ட பழிவாங்குதல்:** புனிதத்தின் சட்டமானது பழியின் அடிப்படைக்கே செல்கிறது: "உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகைக்காதே... பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்தவன் மீதும் அன்புகூர்வாய்" (லேவி 19:17-18). மன்னிப்பைப் பற்றிய சில எடுத்துக்காட்டுகள் புகழ்பெற்றவை: தான் அனுபவித்த வேதனையையும், தீமையினின்று நன்மையைக் கொணர அறிந்துள்ள இறைவனுடைய திட்டமாக விவரிக்கின்றார் யோசேப்பு (ஆதி 45:3-4; 7:50:19); சவுலுக்கு எதிராகப் பழி வாங்காத தாவீது (1 சாமு 24:4-5; 26:5-12), யாவேயினால் அபிடேகம் செய்யப் பட்டவருக்கு எதிராகக் கையோங்கவில்லை. ஆனால், அதே தாவீது தனது மரணத்திற்குப் பின்னர், சிமயி மற்றும் யோவாபின்மேல் பழி தீர்க்கிறார் (1 அர 2:6-46). எப்படியிருந்தபோதிலும் மன்னிக்கும் கடமை ஒருவருடைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வரையறை செய்யப்படுகிறது. இவ்வாறு, பெலிஸ்தியருக்கு எதிராக சிம்சோன் பழிவாங்குவதை நீதிபதி ஆகமம் எவ்விதத்திலும் குறைகூறவில்லை (நீதி 15:3-7). ஞான நூல்களின் இக்கடமையானது மன்னிப்பை ஆழப்படுத்தி, உலகளாவியதாக ஆக்க முயல்கிறது: "பழிவாங்குவோர் ஆண்டவரிடமிருந்து பழிக்குப்பழி பெறுவர்... அடுத்தவர்மீது வெகுளி கொள்ளாதே" (சீரா 28:1.7). இந்தக் கோட்பாடு எவரையும் புறம்பாக்குவதாகத் தெரியவில்லை.

**ஆ) இறைபழிக்கு வேண்டுகோள்:** இறைவனிலான நம்பிக்கையானது பழிவாங்குதலை முழுவதுமாகக் கைவிடுமாறு நீதிமானை உந்துகிறது. "தீமைக்குத் தீமை செய்வேன் என்று

சொல்லாதே! ஆண்டவரையே நம்பியிரு; அவர், உன்னைக் காப்பார்!" (பழ 20:22). நீதிமான் பழி வாங்காமல், நீதிக்குரிய பழிவாங்குதலை இறைவனிடமே விட்டுவிடுகிறார்: "பழிக்குப்பழி வாங்குவது எனக்கு உரியதாகும் என்கிறார் ஆண்டவர்" (உப 32:35). இவ்வாறு, துன்புறுத்தப்பட்ட எரேமியா "தனது வழக்கை இறைவனிடம் சொல்லும்போது" செயல்படுகிறார் (எரே 20:12). தனது நிலையை இறைவனுடைய நிலையுடன் ஒன்றுபடுத்தியதன் காரணமாக (15:15), "இறைவன் பழிவாங்குவதைத் காண" அவர் உறுதியாகவே விரும்புகிறார் (1:20). அவர் தீமையையன்று, நீதியையே விரும்புகிறார். இஃது இறைவனால் மட்டுமே மீண்டும் ஏற்படுத்தப்பட முடியும்.

அவ்வாறே சங்கீத ஆசிரியரும் ஆரவாரமான செமித்தியச் சொற்றொடரில், "தனது பகைவரின் இரத்தத்தில் தனது பாதங்களைக் கழுவ" விரும்புகிறார் (சங் 58:11). பயங்கர சாபங்களையும் அதனுடன் அவர் சேர்க்கிறார் (சங் 5:11; 137:7-8). ஆயினும் அவர், நீதிக்கான ஆசையாலே தூண்டப்படுகிறார். உணர்வினுடைய உண்மைத்தன்மை பற்றி அவர் தன்னையே ஏமாற்றலாம். ஆனால் அவரது மனப்போக்கின் சமயப் பொருள் மறுக்க முடியாதது. "என் மீட்பர் வாழ்கிறார் என்றும், இறுதியில் அவர் (நெருங்கிய உறவினனாக) மண்மேல் எழுதந்தருளி" நீதியை மீண்டும் ஏற்படுத்துவார் என்றும் நான் அறிவேன் (யோபு 19:25).

3. பழிவாங்கும் இறைவன்: யோபுவின் நம்பிக்கையும், எரேமியாவின் நம்பிக்கையும் வீணானதல்ல. எவ்வழியிலும் உயரிய நடுவர் இறைவனே. இதயத்தினுடைய ஆழமான இடைவெளியை அவர் ஆராய்ந்து, அவரவருடைய செயல்களுக்கேற்ப கைம்மாறு அளிக்கிறார். அவரே இஸ்ராயேலின் மீட்பர் (எசா 41:14). ஆண்டவருடைய நாள் பழிவாங்கும் நாள் என்று அழைக்கப்படலாம் (எரே 46:10). ஏனெனில், அப்போது இறைவன் நீதிக்காகவும் தனது மாண்புக்காகவும் பழிவாங்குவார். இந்தப் பொருளில், இறைவன் மட்டுமே அவருக்காகப் பழிவாங்க முடியும் என்று கூறலாம். எனவே நீதி, மீட்பு, மற்றும் பழிவாங்குதல் முதலியன ஆண்டவருடைய நாளுடன் இணைந்து செல்லும் (எசா 59:17-18). இஸ்ராயேலானது உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும் வரையில், மனித நடுவர்களின் அநீதியினின்று "பழிவாங்கும் இறைவனாகிய" தனது மீட்பரை நோக்கி, உலகைத் தீர்ப்பிட வருமாறு வேண்டுகோள் விடுக்கலாம் (சங் 94). இது கிறிஸ்தவ மன்னிப்பாக இல்லாவிடினும், ஆண்டவரது வருகையின் நாளை எதிர்பார்த்திருப்பதில், ஆண்டவரிடம் தாழ்ந்த அடிபணிதலாகும்.

4. **கிறிஸ்துவும் பழிவாங்குதலும்:** இயேசு தனது இரத்தத்தைச் சிந்தியபோது, இறுதியாக நேரம் வந்தது. அப்போது, மனித அநீதியின் உச்சநிலை இறைவனுடைய எல்லையற்ற நீதியைக் காட்டியது. அது முதல், விசுவாசியின் செயல்முறைகள் "பழித்துரைக்கப்பட்டபோதும் எதிர்த்துப்பழிக்காத" (1 பேதுரு 2:23) கிறிஸ்துவின் எடுத்துக்காட்டினால் தயக்கமுறும். இயேசு, பழிக்குப்பழி சட்டத்தினுடைய கோட்பாட்டை நிறைவேற்றுகின்ற புதிய சட்டத்தினைத் தொடங்கியதோடல்லாமல், தீமைபுரிவோனை எதிர்க்க வேண்டாம் என்றும் நமக்குக் கட்டளையிடுகிறார் (மத் 5:38-42). இறை நீதியைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பானவை என்று பவுல் கூறுகின்ற (உரோ 13:4) மனித நீதிமன்றங்களின் நீதியையும் இயேசு கண்டனம் செய்யவில்லை. ஆனால், தன்னுடைய சீடர்கள் குற்றங்களை மன்னித்துத் தங்களுடைய பகைவர்களை அன்பு செய்ய வேண்டுமென அவர் கோருகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, தனக்கு எதிரான அநீதியை ஏற்றுக்கொள்பவன் மட்டுமே மற்றவனுடைய அநீதியை மன்னிப்பான் என்று கூறுகிறார். இறை பழிவாங்குதலுக்கான கோரிக்கை மட்டும் இப்போது போதுமானதன்று. ஏனெனில், ஒருவன் "தீமையை நன்மையால்

வெல்ல வேண்டும்" (உரோ 12:21). இவ்வாறு ஒருவன் "தனது பகைவனின் தலையின்மேல் எரியும் தணலைச் சுமத்தி," தனது வெறுப்பை அன்பாக மாற்ற வேண்டிய சூழ்நிலையில் உள்ளான்.

எல்லா நீதியும் கிறிஸ்துவின் இரத்தத்தில் நிறைவேறி விட்டாலும், இறுதிநாள் இன்னும் வரவில்லை என்பதே உண்மை. உலகில் அன்பானது தனது எதிர்விளைவுகளால் துன்புறுகிறது. இயேசுவைப் போன்று கிறிஸ்தவர்களும் அநீதியான வன்முறைக்குப் பலியாகின்றனர். அவர்கள் தங்களைக் கொன்றவர்களை மன்னித்தாலும் (அ.ப. 7:60), பலியானோரின் இரத்தம் இறைவனை நோக்கிக் கூக்குரலிடுகிறது: "பரிசுத்தரும் உண்மையுமான ஆண்டவரே, எவ்வளவு காலம் நீதி வழங்காமல் இருப்பீர்? எங்கள் இரத்தத்தைச் சிந்திய மண்ணுலகத்தாரை எவ்வளவு காலம் பழிவாங்காமல் இருப்பீர்?" (திருவெளி 6:10; 16:6;19:2). வரலாற்றின் தீர்ப்புவரை காலங்கடத்தப்பட்ட நிலையில், இறைவனுடைய பழிவாங்குதலானது முடிவில்லா அரசில் நீதியை மீண்டும் ஏற்படுத்தும். அங்கு மீண்டும் என்றுமே சாபம் இராது (22:3).

## பழைய ஆடையும், புதிய துணியும் (OLD GARMENT, AND UNSHRUNK CLOTH)

(மத் 9:16; மாற் 2:21; லூக் 5:36).

பாலஸ்தீன நாட்டிலே பழைய ஆடையிலே புதுத்துணியை வைத்துத் தைக்க மாட்டார்கள். ஏனெனில், இந்தப் புதுத்துணி சுருங்கி, பழைய ஆடையைக் கிழிக்கும். இயேசுவின் நற்செய்தியைப்பின்பற்றி வாழ்தல் மோசே காட்டிய வழியிலே வாழ்வதற்கு மாறுபட்டது. இயேசு இந்த உலகிலே தோன்றி அதைப் புதிய பாதையில் வழி நடத்திச் செல்கிறார். அவர் யூத மதத்தின் கொள்கைகளை எடுத்து, புதிய கிறிஸ்தவ மதத்தை நிறுவவில்லை. மாறாக, அவர் புதிய கொள்கைகளைக் கொண்டு கிறிஸ்தவ மதத்தை நிறுவுகின்றார்.

## பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புகள் (OLD LATIN VERSIONS)

பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு என்பது, எரோனிமு என்பவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்து முடித்த இலத்தீன் மொழி பெயர்ப்பிற்கு முன்பாக மக்கள் மத்தியில் உலவிய மொழி பெயர்ப்பாகும்.

சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான், இலத்தீன் மொழியில் விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது. இம்மொழிபெயர்ப்பு நடந்த இடம் வட ஆப்பிரிக்கா. இங்கு அக்காலத்தில் திருச்சபையின் வழிபாட்டு மொழியாக இலத்தீன்தான் பயன்படுத்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டை இப்போது மொழி பெயர்த்தபோது, இதற்கு எழுபது நூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பைத்தான் ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்; எபிரேய மூலம் பயன்படுத்தப்படவில்லை. இதனால் 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓரிசன் என்ற அறிஞருக்குமுன், எவ்வாறு எழுபது நூல் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பு இருந்திருக்கிறது என்பதை ஊகிக்க இந்தப் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

கி.பி. 3-ஆவது நூற்றாண்டில் பல பழைய இலத்தீன் மொழி பெயர்ப்புகள் உலாவி வந்தன. உதாரணமாக, ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனி இலத்தீன் மொழி பெயர்ப்புகள் பழக்கத்தில் இருந்தன. இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகள் தங்களுக்கென்ற தனி இலத்தீன் மொழி பெயர்ப்பைப் பெற்றிருந்தன. அத்துடன் ஒரே வசனத்திற்கு வேறுபட்ட வாசகங்கள் பயன்பட்டு வந்தன. உதரணமாக உப 31:17 என்ற வசனத்தைக் குறைந்தது எட்டு வேறுபட்ட வாசகங்களில் அவரவர்கள் விருப்பத்தைப்போலச் சொல்லி வந்தனர். அதேபோன்று லூக் 24:4-5 என்ற வசனங்கள் சுமார் 27 வேறுபட்ட வாக்கியங்களில் கூறப்பட்டு வந்தன. எரோனிமு என்பவர் இச்சூழ்நிலையைப் பற்றிக்குறிப்பிடும்

போது ஒவ்வொரு பழைய இலத்தீன் விவிலியப் பிரதியும், ஒரு தனிப்பட்ட விதத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது எனக்கூறுகிறார். புனித அகுஸ்தினாரும் இந்நிலையைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்; "எண்ணிக்கையில்லாத மொழிபெயர்ப்புகள்" என்கிறார்; நகைச்சுவையாகவும் இதை விளக்குகிறார்; கிரேக்கம், இலத்தீன் இந்த இரண்டு மொழிகளும் சற்றுத் தெரிந்தால் கூடப்போதும், அவர்களுக்குக் கிரேக்க விவிலிய ஏடு ஒன்று கிடைத்துவிட்டால், உடனே அதனை இலத்தீனில் மொழி பெயர்க்க ஆரம்பித்து விடுவார்கள் என்கிறார்.

தற்போது நமக்குக் கிடைக்கும் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புச் சுவடிகள் இதனையே நிரூபிக்கின்றன. இம்மொழி பெயர்ப்பின் மொழி நடை சாதாரண மக்கள் பேசும் கொச்சை மொழியில் அமைந்திருக்கிறது. எழுதுவதற்கேற்ற இலக்கிய நடையில் இஃது எழுதப்படவில்லை.

மேலை நாட்டில் விளங்கிய பாரம்பரியத்தைப் பின்பற்றித்தான். பழைய இலத்தீன் மொழிநடை அமைந்திருக்கிறது. குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் இது தெளிவாகத் தெரிகிறது. பழைய ஏற்பாடும் மேலை நாட்டைச்சார்ந்த லூசியன் அவர்கள் திருத்திய எழுபது நூலை ஒட்டி வருகிறது. ஆனால் இஃது இன்னும் முழுமையாக ஆய்ந்து கூறப்படவேண்டும்.

கி.பி. 4-ஆம், 5-ஆம் நூற்றாண்டை ஒட்டி, இந்தப் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புகளை அகற்றிவிட்டு, வுல்கத்தா இலத்தீன் வாசகம் வழக்கிற்கு வந்தது. அறிஞர்கள் கருத்துப்படி, பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு ஒரு தனிப்பட்ட மொழிபெயர்ப்பன்று; மாறாக, பல மொழிபெயர்ப்புகளின் தொகுப்பாகும்.

**பழைய ஏற்பாடு (OLD TESTAMENT)**

நவீன வழக்கத்திலே இதை எபிரேய வேதாகமம் என்று கூறலாம். கிரேக்க வேதாகமமான எழுபதுநூல் கடவுள் மேல் கொண்ட வணக்கத்தின் காரணமாக இதைத்தேவ உடன்படிக்கை என்கிறது. பழைய ஏற்பாடு என்பதற்குப் பதில் பழைய உடன்படிக்கை எனக் கூறுவது சிறந்தது (ஞான 12:21).

இச்சொல் அதாவது, 'உடன்படிக்கை' என்பதில் இரண்டு சமமான நிலையில் உள்ள கட்சிக்காரர்கள் உரையாடுகிறார்கள். ஆனால், ஏற்பாடு என்ற சொல்லில் இறந்துபோன ஒருவர் மட்டுமே தீர்மானிக்கிறார்.

பழைய உடன்படிக்கை யூதர்களோடு ஏற்படுத்தப்பட்டது (2 கொரி 3:14; எபி 9:15). புதிய உடன்படிக்கை எரே 31:30-இல் வாக்குறுதி அளிக்கப்பட்டது. புதிய உடன்படிக்கை கிறிஸ்தவர்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது (1 கொரி 11:25; 2 கொரி 3:6; எபி 8:6-13; 10:16-17; காண்க. லூக் 22:20).

**பழைய ஏற்பாட்டு மொழிகள் (O.T. LANGUAGES)**

பழைய ஏற்பாட்டின் மொழி எபிரேயம் ஆகும். சில பகுதிகள் (எஸ் 4:8-6:18; 7:12-26; எரே 10:11; தானி 2:4-7:28; தோபியாநூல்), அரமேய மொழியில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. 2 மக்கபேயர், சாலமோனின் ஞானநூல், தானி 13-14 ஆகியவை கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. யூதித்து, பாருக்கு, சீராக்கு 1 மக்கபேயர் ஆகியவை எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும், இவற்றில் கிரேக்க மொழி வாசகங்கள்தான் நமக்குக் கிடைத்துள்ளன. நாம் எப்படி இத்தாலிய வார்த்தையான 'பியானோ' (Piano) ஆங்கில வார்த்தையான 'பஸ்', 'கார்', 'ரோடு', ஆகிய சொற்களையும் தமிழில் பயன்படுத்துகிறோமோ அதே போல் இஸ்ராயேல் மக்களும் தங்களின் அண்டை நாட்டு மொழிகளின் சில சொற்களைத் தங்கள் நூல்களில் பயன்படுத்தினர். காண்க: எபிரேய மொழி, அரமேயிக்கு மொழி, விவிலியத்தின் மொழிகள், பழம் மேற்காசிய மொழிகள்.

**பழைய வாயில் (OLD GATE)**

நெகேமியா எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பியபோது, பழுதுபார்த்து மீண்டும்

அமைக்கப்பட்ட ஒரு வாயில் (நெகே 3:6; 12:39). இது மிஸ்னே வாயில் அதாவது இரண்டாம் தொகுதியின் வாயிலாகவோ (2 அர 22:14; 2 நாள் 34:22), 2 அர 14:13; 2 நாள் 26:9-இல் குறிக்கப்படும் மூலை வாயிலாகவோ இருக்கலாம். இது நெகே 12:39-இல் குறிக்கப்படும் எப்பிராயிம் வாயிலாக இருக்கலாம் என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

**பளிங்கெனத் தெரிந்த கடல் (SEA OF GLASS)**

காண்க. கண்ணாடிக்கடல்.

**பள்ளத்தாக்கு (VALLEY)**

பள்ளத்தாக்கு என்பது, விவிலியத்தில் மலைகளுக்கிடையே உள்ள பள்ளங்கள், சமவெளிகள், மலையிடுக்குகள் ஆகியவற்றைக் குறிக்கும். இது பல எபிரேயச்சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) ஓர் எபிரேயச்சொல் (எண் 14:25; யோசு 8:13; 1 சாமு 6:13) ஆக்கோர், அய்யாலோன், பாக்கா, பெராக்கா, ஏலா, கிபயோன், எபிரோன், இஸ்ரியேல், கெசிசு ஆகிய இடங்களுக்கு அருகிலுள்ள சமவெளியையோ, பள்ளத்தாக்கையோ குறிக்கும். இச்சொல் "அரசர் பள்ளத்தாக்கு" (ஆதி 14:17; 2 சாமு 18:18) யோசபாத்து பள்ளத்தாக்கு (யோவே 4:2.12), "தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு" (4:14) ஆகியவற்றையும் குறிக்கும்.

ஆ) மற்றொரு எபிரேயச்சொல் எரிகோ, லெபனோன், மெகிதோ ஆகிய நகரங்களுக்கு அருகிலுள்ள சமநிலங்களையும் குறிக்கப் பயன்பட்டது (உப 8:7; எசா 41:18; எசே 37:1).

இ) வேறொரு சொல் (எண் 21:20; உப 34:6; 2 அர 2:16; சங் 23:4) தொழிலாளிகள் வாழ்ந்த பள்ளத்தாக்கையும் குறித்தது.

ஈ) வேறொரு சொல் (ஆதி 26:19; எண் 24:6; உப 21:4; 1 சாமு 15:5) எசுக்கோல், கெரார், சித்திம், சோரேக்கு, செரேது ஆகிய இடப்பெயர்களுடன் சேர்த்துப் பள்ளத்தாக்கைக் குறிக்கிறது.

உ) மற்றுமொரு சொல் (யோசு 9:1; 10:40; நீதி 1:9) மத்திய உயர்நிலங்களுக்கும், பெலிஸ்தியரின் கடற்கரைக்கும் இடைப்பட்ட மலையடிவாரக் குன்றுகளைப் பள்ளத்தாக்கு என்று குறிக்கும்.

கானான் நாட்டின் நிலவமைப்புக் காரணமாக பள்ளத்தாக்குகள் வேறுபட்ட உருவங்களிலும், அளவுகளிலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. நாட்டின் எல்லைகளைச் சுட்டிக்காட்ட பள்ளதாக்குகள் குறிப்பிடப்படுகின்றன (உப 3:16). மேலும், நீர்வளம் மிக்க இடங்களைக் குறிப்பிடவும் (ஆதி 13:10), நகரங்களைக் குறிப்பிடவும் (ஆதி 19:29), ஊற்றுகளைக் (1 அர 18:5) குறிக்கவும் பள்ளத்தாக்குகள் பயன்பட்டுள்ளன. இவற்றில் பல போர்களும் நிகழ்ந்தன (ஆதி 14:8). இவற்றில் திராட்சைத் தோட்டங்கள் செழித்திருந்தன (எண் 13:23). இவை பழங்காலந்தொட்டே கானானியர்களின் தங்கும் இடமாகவும், அவர்களுடைய தெய்வங்களின் கோவில்களாகவும் விளங்கிய (எண் 14:25; 1 அர 20:28). பள்ளத்தாக்குகள் மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் (1 நாள் 27:29), தானியங்கள் விளையும் பூமியாகவும் (சங் 65:13), கோதுமை அறுவடை இடமாகவும் (1 சாமு 6:13), காக்கைகளின் இடமாகவும் (பழ 30:17), புறாக்களின் இருப்பிடமாகவும் (எசே 7:16) விளங்கின. பள்ளத்தாக்குகள் நிரவப்படும் என்று உருவகமாகக் கூறப்படுவது பிரமாணிக்கமற்ற மக்கள்மீது வரும் கடவுளின் நீதியைக் குறிக்கின்றது (மீக் 1:6; செக் 14:5). "இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கு" (சங் 23:4) வாழ்க்கையில் வரும் ஆபத்துகளைக் குறிக்கின்றது.

காண்க: தனிப்பட்ட பள்ளத்தாக்குகள்.

**பள்ளத்தாக்கு வாயில் (VALLEY GATE)**

இன்னோம் பள்ளத்தாக்கின் மேற்கு அல்லது தென்மேற்குத் திசைக்குக் கொண்டு செல்லும் எருசலேமின் ஒரு வாயில். இது குப்பைமேட்டு வாயிலுக்கு 1000 முழம் தூரத்தில், நரி நீரூற்றின் சுற்று வட்டாரத்தில் இருந்தது (நெகே 2:13.15; 3:13).

இது நெகேமியாவால் புதுப்பிக்கப்பட்டது. இந்த வாயிலையும் குப்பைமேட்டு வாயில்வரை இருந்த மதிலையும், ஆனூனும் சானோவாகு மக்களும் பழுதுபார்த்தனர். இதன் கோபுரங்கள் ஊசியாவால் கட்டப்பட்டன (2 நாள் 26:9).

**பள்ளம், கிணறு, தொட்டி (CISTERN)**

எபிரேயச்சொல், இது பள்ளம், குழி போன்றவற்றையும் பெரும்பாலும் கிணற்றையும் உணர்த்தவல்லது. ஆனால், நீரூற்றிற்கும் இவற்றிற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. கிணற்றிற்கும், பள்ளத்திற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக இல்லை (பழ 5:15; எசா 30:14; எரே 14:3). பாலஸ்தீனத்தில் சுண்ணாம்புப் பாறைகளிலுள்ள சிறிய துளைகளை அடைக்கக்கூடிய சுண்ணாம்புச்சாந்து பரவலாகக் கிடைக்கும்வரை, அப்பாறையில் தோண்டப்பட்ட குழிகளில் தண்ணீர் தேக்கி வைக்க இயலவில்லை.

கோடை காலங்களிலும், வறண்ட நேரங்களிலும் இந்த நீர்த்தேக்கங்கள் மக்களுக்குப் பெரும் உதவியாகவும் ஆதரவாகவும் இருந்தன (காண். எசா 36:16). மேலும், பெண்களின் வேலைப்பளுவினையும் குறைத்தன. இவை தனிமனிதனின் வளமைக்கும், வாழ்க்கைநிலை உயர்வுக்கும் வழிவகுத்தன (2 அர 18:31 = எசா 36:16). நகரங்களிலுள்ள நீர்த்தொட்டிகள் மழைக்காலத்தில் வீட்டின் கூரை அல்லது மேல்தளத்திலிருந்து விழுகின்ற தண்ணீரால் நிரப்பப்பட்டன.

அமலேக்கின் மகனான மல்கியாவின் சிறைக்கூடத்து முற்றத்திலிருந்த பாழ்குழியில் எரேமியாவைத் தள்ளிவிட்டதாகக் கூறப்படுகிறது (எரே 38:6.13). இந்த அளவிற்கு நீர்க்குழிகள் ஆழமானதாக இருந்திருக்கின்றன. இஸ்ராயேல் மக்கள் குடிபுகுந்த நகரங்களில் அவர்களால் வெட்டப்படாத கிணறுகள் அங்கு இருந்தன (உப 6:11). ஊசியா மன்னன் தனது ஆடுமாடுகளுக்காகவும், வேளாண்மை வேலைக்காகவும் பாலைவனப்பகுதியில் கிணறுகளை வெட்டினான் (2 நாள் 26:10). எரேமியா ஆகமம் 14-ஆம் அதிகாரத்தில் உடைந்துபோய், நீரைக் கொள்ள முடியாத நீர்த்தேக்கங்கள், புறவினத்தெய்வங்களைக் குறித்துக் காட்டும் அடையாளங்களாகப் பயன்படுகின்றன. திருவுரை 12:6-இல் "கிணற்றருகில் உருளை உடைந்து போதல்" என்பது வாழ்வின் முடிவுக்குக் கூறப்படும் அடையாளங்களில் ஒன்று.

நீர்த்தொட்டிகளனைத்தும் பொதுவாகபுட்டி வடிவத்தைக் கொண்டிருக்கும். பெரும்பாலும் வடிவமற்றுத்தான் காணப்படும். இவற்றின் வாயில்கள் கற்களால் மூடப்படும். அவ்வப்போது இவை சுத்தம் செய்யப்படும். சிலசமயம் இவற்றில் தானியங்களைச் சேர்த்து வைப்பதும் உண்டு.

**பறவை (BIRD)**

வெப்ப இரத்தமுடைய முதுகெலும்புள்ள உயிர். உடல் முழுவதும் இறகுகளால் மூடப்பட்ட, பிற விலங்குகளிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது (ஆதி 1:21).

பாலஸ்தீனத்தில் ஏராளமான, வேறுபட்ட பறவைகள் காணப்படும். திரிஸ்திராம் என்பவர் அவற்றை 322 வகையாகவும், பொதென்கிமர் என்பவர் 413 வகையாகவும் பிரித்துக் கூறினர். இப்பெரும்பான்மைக்கு மூன்று காரணங்கள் கூறப்படும். அ) மத்திய தரைக்கடலுக்குக் கிழக்கிலும், அரமேயப் பாலைவனத்திற்கு மேற்கிலும் அமைந்த பாலஸ்தீனம், ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கும் மேற்காசியாவுக்கு இடையிலான பறவைகள் புலம்பெயர்ந்து செல்லும் பெரும்பாதையின் ஒரு பகுதியாகும் (காண்க. உ.ச. 2:12; எரே 8:7; ஒசே 11:11). ஆ) பாலஸ்தீனம் வெப்ப மண்டலங்களின் ஓரப்பகுதிகளில் அமைந்திருந்தது. அதன் தட்பவெப்பநிலை, உள்நாட்டுப் பறவைகளுக்கும் புலம்பெயரும் பறவைகளுக்கும் சாதகமாக இருந்தது. இ) கூடு கட்டுவதற்கும் குஞ்சுகளை வளர்ப்பதற்கும் ஏற்ற பல வகையான

இயற்கையான இருப்பிடங்களைப் பாலஸ்தீனம் கொண்டிருந்தது. சாக்கடலை ஒட்டிய வறட்சிப் பகுதிகள் சில பறவைகளையே ஈர்த்தன. ஆனால், யோர்தான் பள்ளத்தாக்கு, கெனசரேத்து ஏரி, கூலே ஏரி போன்ற இடங்கள் பலவகைப் பறவைகளை ஈர்த்தன. இவை பறவைகளுக்கு அடைக்கல இடங்களாகத் திகழ்ந்தன (காண்க. சங் 104:12; எசே 31:6). பாறைகளில் உள்ள பிளவுகளும், வயல்வெளியின் சுண்ணாம்பு மண்ணும், பயிர் செய்யப்பட்ட நிலங்களின் புதர்களும் மரங்களும் பறவைகள் இனப்பெருக்கம் செய்ய ஏற்ற இடங்களாகும். அதேபோல் முட்புதர்கள் பாடும் பறவைகளுக்குப் பாதுகாப்பான இடங்களாக அமைந்தன.

பறவைகளைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பழைய ஏற்பாட்டில் பயன்பட்டுள்ளன (ஆதி 1:21; 7:14; 40:17.19; லேவி 11.20-21; உப 4:17; 14:19; சங் 102:7; 124:7; பழ 1:17; 6:5; எரே 5:27; எசே 39:4.17). புதிய ஏற்பாட்டில் பறவைகள் மத் 6:26; 13:4; அ.ப. 10:12; 11:6; 1 கொரி 15:39-இல் குறிக்கப்படுகின்றன.

பாலஸ்தீனத்தில் பல வகையான பறவைகள் காணப்பட்டாலும் விவிலியம் ஐம்பது வகைகளுக்கே பெயர்கள் கொடுக்கிறது. விவிலிய அடிப்படையில் பறவைகளை வகைப்படுத்துவது கடினமாகும். ஏனெனில், சொற்கள் தனிப்பட்ட வகைகளையும், பொது வகையையும் குறிக்கப்பயன்பட்டுள்ளன. இச்சொற்கள் அதிக விவரிப்புச் செய்திகளைக் கொடுக்கவில்லை. சில இடங்களில்தான் விவிலியம் பறவைகளை விவரிக்கிறது (காண்க. லேவி 11:13-23; உப 14:11-20).

உணவு பற்றிய ஒழுக்கங்கள் சில பறவைகளை உண்ணலாமென்று அனுமதித்தாலும் (உப 14:11.20; லேவி 7:26), பறவைகள் இஸ்ராயேலரின் உணவில் அதிக இடம் பெறவில்லை. கோழிவகைகள் உண்ணப்பட்டன (நெகே 5:18). பறவைகளை வேட்டையாடுதல் அல்லது கண்ணிவைத்துப் பிடித்தல் பற்றி, பல குறிப்புகள் உள்ளன (லேவி 17:13; சங் 124:7; பழ 1:17; எரே 5:27). நாடு கடத்தலுக்குப் பின்புதான் கோழிப்பண்ணைகள் அறிமுகப்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது.

பழைய ஏற்பாட்டில் வரும் மெய்மை பற்றிய இறையியல் கருத்தின் ஒரு முக்கிய பகுதியாக பறவைகள் இடம் பெறுகின்றன. இரண்டாம் நாளில் வானத்தை உருவாக்கிய பின் (ஆதி 1:6-8), ஐந்தாம் நாளில் இறைவன் பறவைகளைப் படைத்தார் (1:21). பெருவெள்ளத்தின்போது பாதுகாக்கப்பட்ட உயிரினங்களில் பறவைகளும் அடங்கும் (7:3.8). வெள்ளத்தின் விளைவு அறியகாகமும், புறாவும் அனுப்பப்பட்டன (8:7-12). சடங்கு முறையில், உணவுப் பொருள் என்ற அளவிலும், பலிப்பொருள் என்ற அளவிலும் பறவைகள் சுத்த, அசுத்தப் பறவைகள் என்று கவனமாய் வேறுபடுத்தப்பட்டன (லேவி 11:13-23; உப 14:11-20).

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், பறவைகள் எடுத்துக்காட்டுகளாகப் பயன்பட்டுள்ளன (உ.ச. 1:15). அவை தங்கள் குஞ்சுகளைக் கவனித்துக்கொள்வது, இறைவன் தன் மக்களுக்குக் காட்டும் கவனத்திற்கு எடுத்துக்காட்டாகிறது (உப 32:11; எசா 31:5; மத் 23:37). இறைவன் வானத்துப் பறவைகளுக்குக் காட்டும் அக்கறை, கவலை கொள்ளாது விண்ணகத் தந்தையிடம் நம்பிக்கை கொள்ளுவதற்கு ஒரு காரணமாகும் என்று இயேசு எடுத்துக் கூறுகிறார் (மத் 6:26; லூக் 12:24). இறைவன் பறவைகளுக்கு உறைவிடம் அளிக்கும் போது (எசே 17:23; 31:6), அவரது மகனைப் பின்பற்றுகிறவர்களுக்குத் "தலைசாய்க்கவும் கூட இடமில்லை" (மத் 8:20). தன் வீட்டை விட்டு வெளியேறி அலைந்து திரிபவன், தன் கூட்டைவிட்டு வெளியேறி அலைந்து திரியும் பறவைக்கு ஒப்பாவான் (பழ 27:8; காண்க. எசா 16:2). இறைவனுடைய தீர்ப்பு கழுகுகள் கூடுவதாகச் சித்தரிக்கப்படுகிறது (மத் 24:28; திருவெளி 19:17-18.21). இதே உருவகம்

வீழ்ச்சியடைந்த பாபிலோனின் அவல நிலையையும் சித்தரிக்கிறது (திருவெளி 18:2).

**பறவை நாகம் (DRAGON)**

இது புராணங்களில் வரும் ஒரு உயிரினமாகும். கானானிய மற்றும் பாபிலோனியப் படைப்பு பற்றிய புராணங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. கடவுள்களுக்கு எதிரான சக்தியாகச் சித்தரிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் உள்ள கவிதைப் பகுதிகளில் தொடக்ககாலத்தில் யாவேக்கும், பறவை நாகத்திற்கும் இடையே நடைபெற்ற போரைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றில் இவ்விலங்கின் பெயர் லேவியாத்தன் (யோபு 3:8; சங் 74:14; எசா 27:1); இராகாபு (யோபு 9:13; 26:12; சங் 89:10); யாம் (Yam -கடல்) (யோபு 7:12; அப. 3:8); நாகர் (=ஆறு) (சங் 93:3; அ ப 3:8); தானின் (=கடல் விலங்கு) (யோபு 7:12; சங் 74:13; எசா 51:9); பாசான் (=கடல் நாகம்) (சங் 68:22) என்பனவாகும்.

தொடக்க காலப்போராட்டத்தில் இந்தப் பாம்பின் தலையைக் கடவுள் நசுக்கிவிட்டார் (சங் 74:13); இதை ஊடுருவக்குத்தினார் (எசா 51:9). புராணத்தாக்கம் எதுவாயினும் பழைய ஏற்பாடு, பாபிலோனியப் புராணங்களைப் போல், இந்த உயிரினத்தை ஆட்தன்மைப் படுத்தவில்லை. ஆனால் வாத நோக்கோடு, இப்புராணக்கதைக்கு விளக்கம் அளிக்கிறது. எசா 51:9 படைப்பையோ, யாத்திரை நிகழ்ச்சியையோ சுட்டலாம்; ஏனெனில், இராகாபு எகிப்தை ஆட்தன்மைப்படுத்துகிறது. யோபு 7:12-இல் யோபு தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கடல் பெருநாகமன்று என்று வாதாடுகிறார். இது பாபிலோனியப் புராணத்தை எதிரொலிக்கலாம். ஆனால் 38:4-7-இல், இறைவனே யாவற்றையும் படைத்தார் என்று கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் பறவைநாகம் திருவெளிப்பாட்டு நூலில் மட்டும்தான் வருகிறது. இதில் இறைவனுக்கு எதிரான ஒரு விலங்காகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இஃது அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறது (திருவெளி 12:9). இது குழந்தை கிறிஸ்துவை விழுங்கத் தேடுகிறது; ஆனால், வெற்றியடையவில்லை (12:4).

தொடக்க காலத்தில் நடைபெற்ற போராட்டம் புதிய படைப்பின்போதும் நடைபெறும் என்று யூதர்கள் நம்பினர் (எசா 27:1). சக்தி வாய்ந்ததாயினும் (13:2-4; 16:13), இறுதிக்காலத்தில் இஃது ஆயிரமாண்டுகளுக்குக் கட்டப்பட்டிருக்கும் (20:2-3); இறுதியில் கந்தக நெருப்புக்கடலில் எறியப்படும் (21:10). ஆசிரியர் இந்த இறுதிக்காலப் போராட்டத்தில் பழைய ஏற்பாட்டு உருவகத்தை வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்கலாம் (எசா 27:1).

**பறி (SEINE)**

அப 1:14-17-இன் சூழ்நிலையில் "தூண்டில்," "வலை", "பறி" (1:15) என்பன உருவகமாகப் பகைவர்களின் படைத்திறமையை எடுத்துச்சொல்கின்றது. 1:16-இல் வலைக்குப் பலி செலுத்துவதென்பது படைக்கருவிகளுக்குக் காண்பிக்கின்ற மரியாதையைக் குறிக்கின்றது. ஆனால், "பறி" என்ற சொல்லின் துல்லியமான பொருள் தெளிவாக இல்லை.

**பறிமுதல் செய்தல் (CONFISTICATION)**

இது தனியார் சொத்தைப் பொது உபயோகத்திற்காக அல்லது கருவூலத்திற்காக எடுத்துக் கொள்வதாகும். விவிலியச்சட்டத்தில் சொல்லப்படாத இச்செயல் அரசர்கள் காலத்தில் வழக்கிற்கு வந்தது. தன்னுடைய சொந்த உபயோகத்திற்காகவும், தன்னுடைய அலுவலர்கள் உபயோகத்திற்காகவும் தனியார் சொத்தை எடுத்துக்கொள்வது அரசனுக்கு மட்டும் இருந்த உரிமையாக இருந்தது (1 சாமு 8:14; காண்க. 22:7). இந்த உரிமையைத் தவறான முறையில் பயன்படுத்தியதால் எதிர்ப்பு எழுந்தது (எசே 45:7-8; 46:16-18). நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களுடைய சொத்து அரசனுக்குச்

சென்றது. இதனால் ஆகாபு, நாபோத்தைக் கொன்ற பின்பு அவனுடைய திராட்சைத் தோட்டத்தைத் தனதாக்கிக் கொண்டான் (1 அர 21:15-16). பாரசீகர்கள் ஆட்சிக்காலத்தில் சொத்துக்களை அபகரித்துக்கொள்ள யூத அதிகாரிகளுக்கு உரிமையிருந்தது (எஸ் 7:26; 10:8).

### பறை அறிவிப்பவர், கட்டியங்காரர் (HERALD)

இவர் நாட்டு அல்லது அரச செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் அதிகாரி அல்லது, அரசர்களுக்கிடையே சடங்குச் செய்திகளை எடுத்துச்செல்பவர் ஆவார். இச்சொல் இப்பொருளைத் தானி 3:4-இல் கொண்டுள்ளது. இங்குப் பயன்படும் சொல் ஒரு கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இச்சொல்லைப் புதிய ஏற்பாடு தூதுரைப்பவர் அல்லது போதகர் என்ற பொருளில், உருவகமாகப் பயன்படுத்துகிறது (1 திமொ 2:7; 2 திமொ 1:11; 2 பேதுரு 2:5). இச்சொல் நற்செய்தி தருபவன் அல்லது நற்செய்தியாளன் என்ற பொருளில் எசா 40:9; 41:27-இல் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. இந்த உருவகத்தின் அறிவிப்பாளர், விண்ணரசன் அளித்த செய்தியை அல்லது அறிவிப்பைப் போதகர் கொண்டு வருகிறார் என்பதாம்.

### பனி, மூடுபனி, உறைபனி, வெண்பனி (DEW, MIST, SNOW)

இப்பெயர்களால் நீரின் மூன்று நிலைகள் குறிக்கப்படுகின்றன.

**பனி (Snow):** வெப்பம் குறைந்த நிலத்தோடோ, பொருட்களோடோ கொள்ளும் தொடர்பால் குளிராக்கப்படும் காற்றிலிருந்து உண்டாகும் நீராவியின் உறைவு ஆகும். இது, வெப்பம் குறைந்து காற்று நீர்ச் சத்துள்ளதாய் இருக்கும் தெளிவான, அமைதியான இரவுகளில் முக்கியமாக நிகழ்கிறது. பழைய ஏற்பாட்டு மக்களின் கருத்துப்படி பனி என்ற சொல், தரையிலிருந்து உருவாகும் பனியையும், இரவில் காணமுடியாத விதத்தில் உருவாகும் மூடுபனியையும் குறித்தது (எண் 11:9; 2 சாமு 17:12). இந்தப் பனியானது பாலஸ்தீனத்தில் மழையில்லாத காலங்களில் தாவரங்களுக்கு மிகவும் அவசியமானது. இது பெயோர் செபாவுக்கு மேற்கிலுள்ள கடற்கரையிலும், எசுதிரலோன் சமவெளியிலும், எர்மோன் மலைச்சரிவுக்கடியில் யோர்தான் நதி தோன்றும் (சங் 133:3) இடங்களிலும் மிக அதிகமாக உள்ளது. இது சூரியவெப்பம் அதிகரிக்க அதிகரிக்க (ஓசே 6:4) விரைவில் ஆவியாகிவிடும் (யாத் 16:14). பனி காண முடியாத விதத்தில் (2 சாமு 17:12) ஆகாயத்திலிருந்தோ (செக் 8:12), உயர்ந்த மேகங்களிலிருந்தோ (பழ 3:20) விழுவதாக நம்பப்பட்டது.

பனி என்ற சொல் செழுமையையும் (ஆதி 27:28), புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் (சங் 110:3; ஓசே 14:5), மனித சக்திக்கு அப்பாற்பட்டதையும் (மீக் 5:7), அமைதியான வருகையையும் (2 சாமு 17:12), நிலையற்ற தன்மையையும் (ஓசே 13:3), காப்பின்மையையும் (உ.ச. 5:2) உருவகமாகக் குறிக்கிறது. பனி இறைவனின் ஒரு கொடையாகக் கருதப்பட்டது (1 அர 17:1; மீக் 5:7).

**மூடுபனி (Mist):** இதைக் குறிக்கும் எபிரேயச் சொல் நிலத்திற்குக் கீழான நீரைக் குறிக்கும் (ஆதி 2:6). இஃது இறைவனுடைய மிக முக்கியம் வாய்ந்த நீர் ஊற்றைக் குறிக்கிறது. தாவரங்களின் படைப்பிலும் பின்பு மனித உயிரின் படைப்பிலும் இதை இறைவன் பயன்படுத்துகிறார். யோபு 36:27-இல், கடவுள் "நீர்த்துளிகளை ஆவியாக இழுக்கிறார், அவற்றை மழையாக வடித்துக் கொடுக்கிறார்" என்று கூறுகிறது. "அவர் குரல் கொடுக்க வானத்து நீர்த்திரள் முழக்கமிடுகிறது. மண்ணுலகின் எல்லையினின்று மேகங்களை எழச்செய்கிறார்... தம் கிடங்குகளினின்று காற்று வீசச்செய்கிறார்" (எரே 10:13; 51:16) என்று நீரின்மேல் இறைவன் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டை எடுத்துக் கூறுகிறது.

மூடுபனி பற்றிய மற்றக் குறிப்புகள்

உருவகமாக, வாழ்வின் நொடிப்பொழுதில் தோன்றி மறையும் தன்மையையும் (யாக் 4:14), சிலைகளின் மறைந்துபோகும் தன்மையையும் (ஓசே 13:3), போலிப்போதகங்களின் தன்மையையும் (2 பேதுரு 2:17), இறைவன் அளிக்கும் பாவமன்னிப்பையும் (எசா 44:22 விவரிக்கின்றன. இச்சொல் அ.ப. 13:11-இல் பவுல் தற்காலிகமாகக் குருடாக இருந்ததை விவரிக்கிறது.

உறைபனி, வெண்பனி (**Snow**): உறைபனி பாலஸ்தீனத்தில் அதிகம் பெய்வதில்லை. வருடத்திற்கு அதிகபட்சமாக, சராசரி மூன்று நாட்கள் பெய்யும். சில சமயங்களில் மிக அதிகமாக இருக்கலாம் (2 சாமு 23:20; 1 மக் 13:22). எர்மோன் மலையின் உறைபனி நிறைந்த முகடுகளை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் காணலாம் (எரே 18:14). உருவக முறையில் தொழுநோயால் தோல் வெண்மையாவதை விவரிக்கவும் (யாத் 4:6; எண் 10:12; 2 அர 5:27), காட்சியில் காணப்படுவோரை அல்லது அவர்களின் ஆடைகளை விவரிக்கவும் (தானி 7:9; மத் 28:3; திருவெளி 1:14), இறைவன் பாவியைப் புனிதப்படுத்தும் போது விளையும் தூய்மையை விவரிக்கவும் (சங் 51:7; எசா 1:18; காண்க. 4:7) உறைபனியின் வெண்மை பயன்படுகிறது. தண்ணீரை விட பனிநீர் அதிகம் சுத்தி செய்யக்கூடியது என்று யோபு 9:30 சுட்டுகிறது. இறைவனிடமிருந்து வரும் பொருட்களில் உறைபனியும் ஒன்று; அதன் தோற்றம் பற்றிய மறைபொருள், இறைவனின் ஆற்றலுக்கும் மனிதனின் அறியாமைக்கும் அதைச் சிறப்பான சாட்சியாக விளங்கச் செய்கிறது (யோபு 37:5-6; 38:22; சங் 147:16; 148:8). சீரா 43:18, உறைபனியின் அழகைக் குறிப்பிடுகிறது.

**பன்றி (SWINE)**

அ) லேவி 11:7; உப 14:8 என்பன பன்றி இறைச்சியை இஸ்ராயேல் மக்களுக்குத் தடை செய்கின்றன. "பன்றி இரண்டாகப் பிரிந்திருக்கும் வரிக்குளம்புடையது. ஆனால், அது அசை போடாது. அவற்றின் இறைச்சியை உண்ணலாகாது. அவற்றின் சடலங்களைத் தொடவும் கூடாது. இவைகள் உங்களுக்குத் தீட்டானவை" (லேவி 11:7). கெசேர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, புதிய கற்காலத்தைச் சார்ந்த பொருட்களிலிருந்து முற்காலச் செமித்திய மக்கள் பன்றியைக் கொன்று அதனை உண்டார்கள் என்பது தெளிவாகிறது. கிரேக்கர்களிடையே அதிகமாகப் பலியிடப்பட்ட விலங்குகளில் பன்றியும் ஒன்று. மேலும், அதோனிசு என்ற பன்றிக்கடவுளையும் வழிபட்டனர். பாபிலோனியரிடையே பன்றி இறைச்சி மிகவும் புனிதமாகக் சுருதப்பட்டதால், அது சில முக்கியமான விழாக்களில் மட்டுமே உண்ணப்பட்டது. ஆனால், மற்ற நாட்களில் அதை உண்ண அவர்களுக்கு அனுமதி இல்லை. சீரியர்களிடையே இது தம்முசு என்னும் கடவுளுக்குப் புனிதமானதாகக் கருதப்பட்டது. எகிப்தியரிடையே இவ்விறைச்சி விலக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் சில நாட்களில் உண்ணலாம். எனவே, பன்றி இறைச்சி விலக்சுப்பட்டதொன்றாகக் கருதப்பட்டதால், பன்றியைப் பலியிடுவது மிகவும் புனிதமாகவும் சக்தி வாய்ந்த பலியாகவும் கருதப்பட்டிருக்க வேண்டும். இது, எசா 65:4; 66:3.17 ஆகிய பகுதிகளை விளக்கலாம். பன்றி இறைச்சி யூதர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது என்பது அவர்களின் அண்டை நாட்டுப் பழக்கவழக்கங்களிலிருந்து வேறுபட்டிருந்தது என்பதில் ஐயமில்லை. இதைத் தவிர மற்றப் பழக்க வழக்கங்களை யூதர்கள் பின்பற்றினர். இறைவாக்கினர் பன்றி, நாய், எலி, இவற்றை உண்பதைக் கண்டிக்கின்றனர்.

ஆ) பழைய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் இஃது உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. சங் 80-இல் ஒரு சமூகப் புலம்பல் இஸ்ராயேலைப் பாழாக்கிய ஓர் எதிரியைக் காட்டுப்பன்றியோடு ஒப்பிடுகின்றது. காட்டுப்பன்றிகள் அழிப்பதில் மிகவும் சக்தி வாய்ந்தவை. இஃது அதன் அடையாளமாகும். பழ 11:22-இல், மதியில்லாத பெண்ணின் அழகு பன்றியின் மூக்கிலுள்ள

பொன்வளையம் போலிருக்கும் என்று ஆசிரியர் கூறுகின்றார். 2 மக் 6:18-இல் எவ்வாறு கிரேக்கப்பற்றுடையவர்கள் யூதர்களைப் பன்றி இறைச்சியை உண்ணும்படி கட்டாயப்படுத்தினர் என்று விளக்குகிறது (காண்க: 1 மக் 1:47).

புதிய ஏற்பாட்டிலும் இஃது உருவகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்தமானதை நாய்களுக்குப் போட வேண்டாம்; உங்கள் முத்துக்களைப் பன்றியின் முன் எறியவும் வேண்டாம் என்று மத் 7:6 கூறுகின்றது. மத உண்மைகள் புறவினத்தாரிடமும், அவிசுவாசிகளிடமும் பகிர்ந்து கொள்ளப்படக்கூடாது. பன்றி மேய்க்கும் தொழில் யூதர்களுக்கு அறிமுகமானதொன்றாக இருந்தாலும் "காணாமற்போன மகன்" உவமையில், இளையவன் பன்றி மேய்ப்பது அவனது மிகவும் தாழ்ந்த நிலையைக் காட்டுகின்றது. அவன் பன்றியின் உணவை உண்பது அவனது ஏழ்மையைக் குறிக்கின்றது. 2 பேதுரு 2:22-இல் "கழுவியபின் பன்றி மீண்டும் சேற்றிலே புரளும்" என்பது உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. கதரேன் அருகில் ஒருவனைப் படையாகப் பிடித்திருந்த பேய்கள் தங்கள் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த பன்றிக் கூட்டத்திற்குள் அனுப்புமாறு வேண்டுகின்றன. பேய்கள் அவற்றினுள் புகுந்தபோது அவை கடலை நோக்கிப் பாய்ந்து நீரில் மூழ்கி இறந்தன. அனேகமாக, பன்றிகள் தீட்டான விலங்காதலால், அவைதான் பேய்களுக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

**பன்னிரண்டு (TWELVE)**

இஸ்ராயேலின் வாழ்வில் இந்த எண் புனிதமானதாகக் கருதப்பட்டது. இதற்கான குறிப்புகள் விவிலியம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இவர்கள் காலத்தில் வாழ்ந்த மற்றப் புறவின மக்களிடமும் இந்த நம்பிக்கை இருந்தது. அக்காலத்தில் நிலாவைக் கொண்டு அமைந்த வருடத்தின் பிரிவுகள், இராசி அறிகுறிகள் (காண்க. 2 அர 23:5; யோபு 38:32), பன்னிரு விண்மீன்கள், ஏழும் ஐந்தும் சேர்ந்து தொகை, மும்முறை நான்கு என்றெல்லாம் வருவது இந்த எண்ணின் முக்கியத்துவத்தை உணர்த்தி நின்றன.

இஸ்ராயேல் வாழ்வில் அவர்களது கோத்திரங்கள் 12 என்று குறிப்பு வருவதே (ஆதி 35:22; 42:13,32; 49:20; எண் 1:44), இந்த எண் சமயப்பொருள் முக்கியத்துவம் பெறப் போதுமானதாக இருந்தது. ஆபிரகாமின் மற்றொரு மகனான இசுமயேலின் கோத்திரங்களும் பன்னிரண்டு (ஆதி 17:20). இந்த எண் கோத்திரங்களைக் கணக்கிடும் பொழுது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. லேவியின் கோத்திரம் மறைந்து விட்டபின் யோசேப்பின் கோத்திரங்களான எப்பிராயிம், மனாசே தனித்தனி கோத்திரமாக்கிக் கணக்கிடப்பட்டு, புனித எண் பன்னிரண்டு பாதுகாக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டிலும் யூதாஸ் தவறியபிறகு மத்தியாவைச் சேர்த்துக்கொள்கின்றனர் (அ.ப. 1:23-25). இஸ்ராயேலில் எந்தச் செயலுக்கும் ஆட்களைத் தெரிவு செய்யும்பொழுது ஒவ்வொரு குலத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது (யாத் 24:4; 28:21; எண் 7:3; 17:26; யோசு 4:1 அர 18:31; எஸ் 6:17; 8:35; எசே 48:31). புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களும் இஸ்ராயேல் கோத்திரங்களோடு தொடர்புடையவர்களாவர் (மத் 19:28). இதைத்தவிர பழைய ஏற்பாட்டில் குருக்கள் மற்றும் லேவியரின் பிரிவுகள் 24 (1 நாள் 24:4,25:31); லேவிய நகரங்கள் 48 (எண் 35:7), மூப்பர்கள் 72 (எண் 11:24-26), என்றெல்லாம் வருவது இந்த எண்ணின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இதைத்தவிர யூதாவுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே கிபயோனில் நிகழ்ந்தபோரில் ஒவ்வொரு பக்கமும் இறந்தவர்கள் பன்னிரண்டு (2 சாமு 2:12-17). சாலமோனின் ஊழியர்கள் 12 (1 அர 4:7-19). தாவீதின் படை வீரர்கள் ஒவ்வொரு பிரிவிலும் 24,000.

புதிய ஏற்பாட்டில் விண்ணக அரியணையைச் சுற்றி நின்ற மூப்பர்கள் 24 (திருவெளி 4:4; 5:8; 11:16; 19:4). புதிய எருசலேம் 12 அடிக்கற்களைக் கொண்டது (21:12-14). வாழ்வு மரத்தின் கனிவகைகள் 12 (22:2). வானவர் படைப்பிரிவுகள் 12 (மத் 26:53). 12 கூடைகளில் அப்பத்துண்டு (மத் 14:20). ஒவ்வொரு கோத்திரத்துக்கும் 12000 வீதம் தொகுக்கப்படும் 144000 இறைவனுடைய ஊழியர்கள் (திருவெளி 7:4). இவ்வாறு வருவது இந்த எண்ணுக்கு அக்கால மக்கள் அளித்த சிறந்த இடத்தை நமக்குணர்த்துகிறது.

**பன்னிரு குல மூதாதையரின் ஏற்பாடுகள் (TESTAMENTS OF THE TWELVE PATRIARCHS, THE)**

ஒரு போலிவாழ்க்கை வரலாற்று நூலாகும். இன்றைய உருவத்தை இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அடைந்திருக்க வேண்டும். இப்போது உள்ள வடிவத்தில் 12 பகுதிகள், 'ஏற்பாடுகள்' என்ற தலைப்பின்கீழ் உள்ளன. இதில் சாகும் தருவாயில், இருந்த யாக்கோபின் 12 பிள்ளைகள் ஆற்றிய உரைகள் உள்ளன. இவை எல்லாம் ஒரே பாணியில் உள்ளன. குல மூதாதையர் புதல்வர்களை அழைத்துத் தன் வாழ்க்கையைப்பற்றிக் கூறுகிறார்; குறிப்பிட்ட தீமையைப்பற்றி எச்சரிக்கிறார்; நல்ல பண்புகளைப் போற்றும்படி கூறுகிறார்; அவர்களின் எதிர்கால வாழ்க்கை, பாவம், தண்டனை, மீட்பு ஆகியவற்றைக் குறித்து முன்மொழிகிறார்; பின்பு இறந்து எபிரோனில் அடக்கம் செய்யப்படுகிறார். தனியுரைகள் யோசு 23-24; 1 அர 2-இல் காணப்படும் விவிலிய வடிவத்தை விரிவாக்குகின்றன. முழுத்தொகுப்பும் ஆதி 49; உப 33-இல் காணப்படும் வடிவத்தைப் பின்பற்றுகிறது. இத்தொகுப்பு யூத-கிறிஸ்தவ இலக்கியத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இதில் ஒவ்வொரு தனிப்பகுதியும் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அ) யூபிலி, ராபிகளின் மிட்ராஸ் ஆகியவற்றோடு தொடர்புடைய செய்திகள் உள்ளன. ஆ) ஏனோக்கின் பாரம்பரியம், கும்ரான் இலக்கியங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய இறுதிக்கால இயல், பேய் இயல் பொருள்கள் உள்ளன. இ) ஞான இலக்கியங்கள், கும்ரான் இலக்கியங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய மறையுரைக் கருத்துகள். இத்தொகுப்பு திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், இவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நிரூபிக்க பலர் முயன்றுள்ளனர். இருப்பினும் மத்திய காலத்தில், அர்மேனியத் திருச்சபையினர் இவற்றை ஆலயங்களில் வாசித்து வந்தனர்.

1. **வாசக வரலாறு:** இப்போது உள்ள வாசகத்தில் பெரும்பாலான பகுதிகள் எபிரேயத்திலோ, அரமேயிக்கு மொழியிலோ எழுதப்பட்டிருக்க வேண்டும். கும்ரானில் வாழ்ந்த பிரிவினர், லேவி ஏற்பாட்டுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய படைப்பைக் கொண்டிருந்தனர். இந்தப் படைப்புக்கான சிறிய கையெழுத்து ஏடுகள் முதலாம் கும்ரான் குகையிலும், பெரியவை நான்காம் கும்ரான் குகையிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு. முதல் நூற்றாண்டுக்காலத்தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதே பிரிவினர் நெப்தலி ஏற்பாட்டோடு தொடர்புடைய மற்றொரு படைப்பையும் கொண்டிருந்தனர். இதன் சிறிய, கையெழுத்துப் படிவங்கள் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2. **திறனாய்வின் வரலாறு:** இந்த நூல்களில் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய ஆர்வம், பைசாந்திய மறுமலர்ச்சியோடு தொடர்புடையது. இந்தச் சமயத்தில் இலத்தீன் மொழி பெயர்ப்புகள் மிகவும் புகழ்பெற்றிருந்தன. பகுத்தறிவுக் கொள்கை (Rationalism) வளர்ச்சியின் காரணமாக இதன் புகழ் குன்றத் தொடங்கியது. 17-ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் கிரேக்க வாசகப்பதிப்பை வெளியிட்டனர். ஆனால், 18-ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் இதற்குப் போதிய கவனம் செலுத்தவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் செர்மனியில் திருச்சபை வரலாற்றில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் காரணமாக இந்நூல் ஆதித்திருச்சபையில் ஒருவரால் எழுதப்பட்ட

நூலாகக் கருதப்பட்டது. ஆராய்ச்சியின்போது இதில் உள்ள கருத்துகள் ஒன்றோடு ஒன்றாக முரண்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, இதன் முழுமை ஐயத்திற்குள்ளானது. சினாப்பு என்பவர், இது வாத எதிர்வாதங்களை விரித்துச் சொல்லும் ஆராய்ச்சிக் கட்டுரை என்று முடிவு கட்டினார். அவருக்குப் பின் வந்தவர்கள் இதைச் செபக்கூடப் போதனைகளின் தொகுப்பாகக் கருதினர். சினாப்பின் முடிவுகள் தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இங்கிலாந்தில் குறைகூறப்பட்டது. தீன் என்பவர் இதில் காணப்படும் தொடர்பில்லாத் தன்மையைக் காண மறுத்து, அதில் எந்தவித வேறுபாடும் இல்லை என்று கூறினார். கோனிபியர்ஸ் என்பவர் அர்மேனிய வாசகம் கிரேக்க வாசகத்தைவிட நீளம் குறைந்தது என்றும், பல சொற்கள் இல்லாமல் இருக்கின்றன என்றும் கண்டுபிடித்தார். இது கலப்படம் செய்யப்பட்டதை உறுதி செய்வதாக இருந்தது. ஆனால், அர்மேனிய வாசகம் பெரியபகுதிகளில் கிரேக்க வாசகத்தோடு ஒத்திருந்தது. சினாப்பு தன் கொள்கையையே பின்பற்றியதால், இந்தப் பிரச்சனை மீண்டும் ஆராயப்பட்டது. இதன் விளைவாக 1908-இல் கிரேக்க வாசகத்தின் சார்லஸ் பதிப்பு வெளிவந்தது.

சார்லஸ் பதிப்பு இரண்டு சக்திகளின் போக்காக விளக்கப்படலாம். ஒருபுறம் இந்த ஏற்பாடுகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டவை என்று உறுதியாக நம்பினார். எனவே இதில் காணப்பட்ட கிறிஸ்துவக் கருத்துகள் எல்லாம் கலப்படம் செய்யப்பட்டவை என்று உறுதியாகக் கருதினார். மறுபுறம் இங்கிலாந்தின் திறனாய்வு கையெழுத்துச் சான்றுகளைத் தேடும்படி செய்தன. இதற்கு அவர் சிறு வாசகங்களைக் கொண்ட வாசகங்களை விரும்பினார். இதனால் பல கலப்படங்கள் நீக்கப்பட்டன. இவ்வாறு இவர் ஒரு கலப்பில்லாத வாசகத்தை உருவாக்கினர். இதிலும் முரண்பாடுகள் இருந்தன. எனவே, சார்லஸ் இவ்வாசகம் யோவான் இரிக்கானு என்பவரின் பிற்காலத்தைச் சேர்ந்த அசமோனியர்களுக்குச் சார்பான படைப்பு என்றும் அவர்களது வீழ்ச்சிக்குப் பின் இது கலப்படம் செய்யப்பட்டது என்றும் முடிவு செய்தார். இம்முடிவு தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. திறனாய்வின் விளைவுகள்:** இதனால் சில வாசகங்கள், நூலிலிருந்து நீக்கப்பட்டன, சிறியதாக்கப்பட்டன. சில பகுதிகள் விரிவாக்கப்பட்டன. இன்னும் சில திரும்பவும் எழுதப்பட்டன. இவ்வாறு மாற்றப்பட்டாலும் பல கருத்துகள் மாறாமல் இருந்தன. பல சொற்களும் கருத்துகளும் ஒழுக்கத்தொகுப்போடு இணையாகச் செல்கின்றன. எபிரேய நெப்தலி ஏற்பாடு இடையில் மாற்றப்படினும் மூல நூலில் உள்ள கருத்துகள் பல இன்னும் உள்ளன. இவ்வாறு மாறாத தன்மையைக் கொண்டு இவை எந்தக் காலத்தைச் சார்ந்தவை என்று கண்டுபிடிக்க இயலும். பழங்கால யூத மதத்தைப் பற்றியோ, ஆதிக் கிறிஸ்துவ மதத்தைப் பற்றியோ அதிகம் தெரியாததால் ஒரு குறிப்பிட்ட பகுதியை இது யூத மதத்தைச் சார்ந்தது என்றோ, கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தது என்றோ கூறுவது கடினமாக உள்ளது.

இந்த ஏற்பாடுகள் பாலஸ்தீன் மதத்திலிருந்த சில கருத்துகளின் இணைப்பையும், அவற்றின் திசையையும், அவை கிறிஸ்து பிறக்குமுன் 2 நூற்றாண்டுகளில் எவ்வாறு இருந்தன என்பதையும், கிறிஸ்து பிறந்த பின் 2 நூற்றாண்டுகளில் எவ்வாறு இருந்தன என்பதையும் காட்டுகின்றன. இது மிகவும் சிறந்த தொகுப்பாகும். இது கிரேக்கப் பண்பாடு, விவிலியக் கல்வி, இஸ்ராயேல் பாரம்பரியத்தில் பெருமை, இஸ்ராயேலின் எதிர்காலத்திலும் புறவினத்தாரின் இறுதி மீட்பிலும் நம்பிக்கை, மீட்பர் ஓர் அரசரும் குருவும் ஆவார், மனிதனின் சுதந்தரத்தில் நம்பிக்கை, மக்கபேயரைப் பற்றி மாறுபட்ட எண்ணங்கள், பற்றற்ற வாழ்க்கை, தியாகம், சகோதர அன்பு, இவ்வுலக இறையரசை எதிர்பார்பது, இன்னும் பல கருத்துகளையும் கொண்டுள்ளது.

**பன்னிருபாக எழுத்துகள் (UNCIALS)**

கி.பி. 4-ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், கிரேக்கச் சொற்களையும் இலத்தீன் சொற்களையும் எழுத ஒரு குறிப்பிட்ட எழுத்து வடிவ முறையைப் பின்பற்றினார்கள். இதற்குப் பெயர்தான் பன்னிருபாக எழுத்துகள் அல்லது உன்சியல் என்று கூறுவார்கள். இலத்தீன் சொல் உன்சியா (UNCIA) என்றால் பன்னிரண்டில் ஒருபாகம் என்று பொருள். எரோனிமு இவ்வாறு பன்னிரண்டு பாக எழுத்துகளைக் குறிப்பிட்டு ஒரு கடிதத்தில் எழுதுகிறார். இவரின் இக்கடிதத்தை ஆரம்பமாக வைத்துத்தான், இவ்வடிவ எழுத்துகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இம்முறைப்படி, எழுத்துகள் எல்லாம் பெரிய எழுத்துகளிலேயே எழுதப்பட்டிருக்கும். சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டு எழுதப்படுவதில்லை. இந்தப் பன்னிரண்டு பாக எழுத்துகளில், எழுதப்பட்ட மிகுதியான, விவிலியப் பழஞ் சுவடிகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றில் வத்திக்கான் சுவடி, அலக்சாந்திரியாச் சுவடி, சீனாய்ச் சுவடி முதலியன சிலவாகும்.

**பன்னிருவர் (TWELVE, THE)**

இயேசுவுக்குப்பின் அவரது பணியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்றவும் (மத் 10:1-4; மாற் 3:13-19; லூக் 6:12-16; காண்க. யோவா 6:70), இயேசு தீர்வையிட வரும் பொழுது உதவவும் (மத் 19:28; லூக் 22:30), இயேசுவால் சிறப்பான முறையில் தேர்ந்துகொள்ளப்பட்டு அறிவுறுத்தப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர் குழுவாகும். இவர்கள் இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டனர்.

இயேசு இறந்து உயிர்த்த பிறகு யூதாசுக்குப் பதிலாக மத்தியா என்பவர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார் (அ.ப. 1:15-26). அதன் பிறகு இத்தொகை கூட்டப்படவோ, குறைக்கப்படவோ இல்லை. பவுலின் கூற்றுப்படி உயிர்த்த இயேசுவிடமிருந்து முதலில் நேரடியான காட்சிகளைப் பெற்றவர்களுள் இவர்களும் உள்ளடங்குவர் (1 கொரி 15:5; காண்க. மாற் 16:7). அ.ப. 1-6-இல் இவர்களே திருச்சபையின் தொடக்ககாலத் தலைவர்களாகத் தோற்றமளித்தாலும் பிறகு அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை பெருகப்பெருக அதில் கலந்து விடுகின்றனர்.

இவர்களின் பெயர்ப் பட்டியலை நான்கு நற்செய்தியாளர்களும் தந்தாலும் எல்லாம் ஒத்திருப்பதில்லை. யோவான் நத்தனியேலின் பெயரைச் சேர்த்துள்ளார். விவிலியத் திருமுறைப்பட்டியலைச் சேராத நூல்களில் இப்பெயர்கள் பெரும் முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. ஆனால், பேதுருவே முதன் முதலில் தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்பதும், அவரே உயிர்த்த இயேசுவை முதலில் பார்த்தவர் என்பதும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால் மற்றவர்களுக்காக இயேசுவிடம் அவர் பேசும் இடங்களைத்தவிர மற்ற இடங்களில் அவரது முதன்மை நிலை அறிஞர்களுக்கிடையே தர்க்கத்திற்குரியதாக இருந்துள்ளது (மத் 16:18; லூக் 22:32; அ.ப. 1:15; 2:14; 5:3; கலா 2:8; காண்க. பேதுரு). இவர்களின் பணியைப்பற்றியும், முடிவைப்பற்றியும் உறுதியாக எதனையும் கூறமுடிவதில்லை. நமக்குக் கிடைத்துள்ள செய்திகளெல்லாம் புதிய ஏற்பாட்டில் வருபவை மட்டுமே. பேதுரு உரோமையில் மறைசாட்சி மரணமடைந்து அடக்கம் செய்யப்பட்டார் என்பது உண்மையான செய்தி என்பதில் ஐயமில்லை. யோவான் எபேசில் வாழ்ந்த இடம் மற்றும் மரணம் ஆகியவை தெளிவில்லாமலேயே இருக்கின்றன.

# பா

**பாகசா, பாசா (BAASHA - பாகால் கேட்கிறார், சூரியன் பாகால் ஆவார்)**

ஏறக்குறைய கி.மு. 900-877 வரை இஸ்ராயேலின் அரசன். இவர் நாதாபுவைக் கொன்று அரசனானான்.

இசக்காரின் இனத்தைச் சேர்ந்த ஆகியாவின் மகன் (1 அர 15:27). இவன் திரட்சாவில் 24 ஆண்டுகள் ஆண்டான் (15:33). இங்குதான் முதன்முறையாக திரட்சா வடவரசின் தலைநகரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தலைநகரம் செக்கேமிலிருந்து மாற்றப்படவுள்ளது என்பதற்கு முன்பே குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (14:17; 15:21). ஓம்ரி அரசனாகும் வரை திரட்சா தலை நகரமாயிருந்தது.

இஸ்ராயேல் கிபத்தோனை முற்றுகையிட்டிருந்த பொழுது, பாகசா, நாதாபு அரசனுக்கு எதிராகச் சதி செய்து, அவனைக் கொன்று விட்டு அரசனானான் (1 அர 15:27-28). வடவரசு இன்னும் ஒரு நிலைமைக்கு வரவில்லை என்பதையும், அருங்கொடைத் தலைமை பற்றிய கருத்து இன்னும் வலிமை வாய்ந்ததாக இருந்தது என்பதையும் இது சுட்டுகிறது.

இவன் ஆட்சியின் சுருக்கத்தில் (1 அர 16:5) இவனுடைய வலிமையைப் பற்றிய குறிப்பு உள்ளது. ராமாவைச் சுற்றி கோட்டை மதில் சுவரைக் கட்டியதைத் தவிர (15:17) இவன் ஆட்சியைக் குறித்து மற்ற எந்தக் குறிப்புகளும் தரப்படவில்லை. எருசலேமின் வடக்கே ஏறக்குறைய 8 கி.மீ. தொலைவிலுள்ள ராமாவைச் (இன்றைய எர்ராம்) சுற்றி கோட்டை கட்டப்பட்ட பொழுது, சீரியாவின் அரசனான பெனதாதுவின் உதவியுடன் யூதாவின் அரசனான ஆசா எதிர்த்தெழுந்தான். சீரியா வடக்கு இஸ்ராயேல்மீது படையெடுத்த பொழுது பாகசா பின்வாங்க வேண்டியதாயிற்று (15:17-21). ஆசாவிற்கும், பாகசாவிற்கும் இடையே தொடங்கிய இந்த எல்லைத் தகராறு பாகசாவின் ஆட்சி முழுவதும் நீடித்தது (15:16).

அனானியின் மகன் எகூ, பாகசா மற்றும் அவன் குடும்பத்தினரின் பாவத்திற்கும் கீழ்ப்படியாமைக்கும் கடவுளின் தண்டனை வரும் என்று இறைவாக்குரைத்தார் (1 அர 16:1-7).

**பாகநா, பாநா (BAANAH - துன்பத்தின் மகன், கொடுமையின் மகன்)**

1. பெயரேத்தைச் சேர்ந்த பென்யமின் இனத்தைச் சேர்ந்த ரிம்மோனின் புதல்வர்களில் ஒருவர். இவர் தன்னுடைய சகோதரன் இரேக்கபுவுடன் சேர்ந்து அரசனான இசுபொசேத்தைக் கொன்றார் ( 2 சாமு 4:2-12). இறந்துபோன அப்னேர் என்பவர், தாவீதின் தலைமையில் ஓர் ஒன்றிய அரசை நிறுவ எண்ணினார். இதைச் செயல்படுத்த இசுபொசேத்தின் இரு படைத்தலைவர்களும் இந்த மூர்க்கத்தனமான செயலைச் செய்தனர். இவர்கள் இருவரும், தூங்கிச் கொண்டிருந்த வீட்டு வேலைக்காரியைக் கடந்து அரசனின் படுக்கை அறைக்குச் சென்றனர். தூங்கிக் கொண்டிருந்த இசுபொசேத்தின் தலையை வெட்டிக்கொண்டு தாவீதிடம் சென்று தாங்கள் முடித்த காரியத்தை அறிவித்தனர். ஆனால், இஃது ஒரு மன்னிக்க முடியாத கொலையென்று தாவீது எண்ணி அவர்களைக் கொலை செய்யச்சொன்னார். இருவருடைய கைகால்களையும் வெட்டி எபிரோன் குளத்திற்கருகே ஓர் எச்சரிக்கையாகத் தொங்கவிட்டார்.

2. இவர் ஒரு நெற்றோபாயர். 'முப்பதின்மரில்' ஒருவனான ஏலேதுவின் தந்தை (2 சாமு 23:29; 1 நாள் 11:30).

3. செருபாபேலோடு சேர்ந்து பாபிலோனிய அடிமைத் தளையிலிருந்து மக்களை யூதாவிற்கு அழைத்து வந்தவருள் ஒருவர் (எஸ் 2:2; நெகே 7:7).

4. நெகேமியா காலத்தில் உடன்படிக்கைக்கு

முத்திரையிட்டவர்களில் இவரும் ஒருவர் (நெகே 10:27). இவரும் பாகனாவும் (3) ஒரே ஆளைக்குறிக்கலாம்.

**பாகலா (BAALAH - தலைவி)**

1. கிரியத்து எயாரிமின் முற்காலப்பெயர் (யோசு 15:9; 1 நாள் 13:6).

2. யூதாவின் வட எல்லையிலுள்ள ஒரு மலை (யோசு 15:11); இஃது அனேகமாக, சோரெத்து பள்ளத்தாக்கிற்கு வடக்கேயும், கிர்பெத் ஏல் முக்கானா (எக்ரோன்)விற்கு வடமேற்கேயும் ஏறக்குறைய 8 கி.மீ. தொலைவிலுள்ள முக்கார் என்ற மலையாகும்.

3. யூதாவின் செபேலா மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; முன்பு சிமியோன் கோத்திரத்தின் ஒரு பகுதியாக இருந்தது (யோசு 15:29; 19:3; 1 நாள் 4:29). அனேகமாக இதுவும், பாலாவும் (யோசு 19:3), பிலகாவும் (1 நாள் 4:29) எரே இடத்தைக் குறிக்கலாம். இஃது ஏல்–முத்தாலாப் பகுதியிலுள்ள கிர்பெத்து ஏல்–மெசாவுக்கு அருகிலுள்ள (பெயோர் செபாவுக்கும் சாக்கடலுக்கும் இடையிலுள்ள) துலூல் ஏல்-மெதாபாவாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பாகலாத்து (BAALATH - தலைவி)**

தாணுக்கு ஒதுக்கப்பட்ட பூர்வீக நிலப்பரப்பில் இந்த ஊர் சேர்க்கப்பட்டுள்ளது. பட்டியலில் இது கிபத்தோனுக்கும் ஏகூதுக்கும் இடையில் அமைந்திருக்கிறது (யோசு 19:44-45). சாலமோன் கோட்டை மதில்களைக் கட்டுவித்த மூன்று நகரங்களில் இதுவும் ஒன்று (1 அர 9:18; 2 நாள் 8:5-6). இஃது இருந்த இடம் உறுதியாகத் தெரியாவிட்டாலும் யோசிப்பசு இதைக் கெசேர் (gezer) அருகில் குறிக்கிறார். இதுவும் பாகலா அல்லது கிரியத் எயாரிமும் (யோசு 15:9) ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**பாகலாத் பெயோர் (BAALATH - BEER - கிணற்றின் தலைவி)**

சிமியோன் பகுதியிலுள்ள ஒரு நகரம். ஒரு கானானியத்தேவதையின் திருத்தலமாக இருந்ததாகத் தோன்றுகிறது. யோசு 19:8-இல் இவ்விடம் நெகேபிலுள்ள ராமாவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. சிலர் இதைப் பெகலோத்தோடும் (யோசு 15:24), பாகாலோடும் (1 நாள் 4:33) ஒன்றாகக் கருதுகின்றனர்.

**பாகனா (BAANA - கொடுமையின் மகன், துன்பத்தின் மகன்)**

1. அகிலூதின் மகன்; சாலோனின் 12 கண்காணிப்பாளரில் ஒருவர். இவர் இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் தென்பகுதியில் மெகிதோவிலிருந்து யோர்தான் வரையுள்ள பகுதியை மேற்பார்த்து வந்தார்.

2. ஊசாயின் மகன். சாலமோனின் 12 மேற்பார்வையாளர்களில் ஒருவர். ஆசேர், மற்றும் பெகலோத்து ஆகியவை இவருடைய பகுதிகளாகும் (1 அர 4:16).

3. நெகேமியாவின் காலத்தில் எருசலேமின் சுவர்களைக் கட்டுவதில் பங்கேற்றவரான சாகோக்கின் தந்தை (நெகே 3:4). இவரும் பாகநாவும் (4) ஒரே ஆளாக இருக்கலாம்.

**பாகாலி (BAALI - என் தலைவர், என் கணவன்)**

இறைவனைக் குறிக்கும் அடையாளப் பெயர். இஃது இஸ்ராயேலுக்கும் அதன் கடவுளுக்குமிடையுள்ள சமூக, உடன்படிக்கை உறவைச் சித்தரிக்கிறது. இது கானானிய பாகாலை அல்லது பிற சமய மனித இறை உறவின் பண்பை உணர்த்துவதால், ஓசேயா இதை நிராகரித்து, இஸ்மி (என் கணவன்). என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். " 'என் கணவன்' என என்னை அழைப்பாய், 'என் பாகாலே' என இனிமேல் என்னிடம் சொல்ல மாட்டயே" என்கிறார் ஆண்டவர் (ஓசே 2:18).

**பாகாலிசு (BAALIS - உயர்வின் மகன்)**

அம்மோனியருடைய அரசன். இவன் எருசலேம் அழிக்கப்பட்டவுடன் கெதல்யாவைக் கொல்ல இசுமயேலை அனுப்பினான் (எரே

40:14). இதன் விளைவாக, யூதாவின் அழிக்கப்பட்ட சில பகுதிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று நம்பினான்.

**பாகால் (BAAL - ஆண்டவர், தேவதை, உடைமைக்காரன்) - ஆள்**

1. கிபயோனைச் சேர்ந்தவனும் சவுலினுடைய மூதாதையுமான ஏகியேல் என்பவருடைய 4-ஆம் மகன் நாள் 8:30 = 9:36).

2. அசீரியர்களால், நாடு கடத்தப்பட்டவனும், ரூபன் கோத்திரத் தலைவனுமான பேரா (Beerach) என்பவரின் தந்தை (1 நாள் 5:5).

3. 1 நாள் 4:33-இல் எழுத்துப்பிழையினால் பாகலாத் பேயேர் என்பது பாகால் என்றுள்ளது.

**பாகால் (BAAL - ஆண்டவர், தேவதை, உடைமைக்காரன்) - தேவதை.**

இது கானான் நாட்டின் சிறந்த இனச் செழுமையின் கடவுளான அதாது ஆகும்.

இந்தப் பெயரை மனிதர்களுக்கும், கடவுள்களுக்கும் கொடுக்கும்பொழுது இஃது உரிமையையும், இடத்தையும் குறிப்பிடலாம். சான்றாக, பாகால் - பெயோர் (எண் 25:3.5; உப 9:3); பாகால் - எர்மோன் (நீதி 3:3) முதலியவையாகும்; அல்லது செயல்பாட்டினைக் குறிக்கலாம். சான்றாக, பாகால் - பெரித்து ("உடன்படிக்கையின் கடவுள்") (நீதி 8:33; 9:4).

கி.மு. 3000 முதல் 200 வரை குறிப்பாக, எமோரியர்களுடைய குளிர்காலம், மழை, புயல், ஆகியவற்றின் கடவுளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இதனுடைய பெயர் அதாது என்று மெசபொத்தாமிய, இராஸ் - சம்ரா ஏடுகளிலிருந்து தெரிகிறது.

ஏறக்குறைய, கி.மு. 1400-இலிருந்து பாகலைப் பற்றிப் பல கதைகள் தோன்றியுள்ளன. இதனுடைய வளமைப்படுத்தும் தன்மை இயற்கையை மட்டும் பாதித்தது. கானானியர் கடவுள்களின் தொகுப்பில் மூத்தவரான "ஏல்" என்பது அனைத்திற்கும் தலைமைக் கடவுளாக இருந்தது. "பாகால் என்பவர் ஓர் அரசன். அவர் அரசுக்கு முடிவேயிராது" என்பது கானானியருடைய விசுவாச அறிக்கையாகும்; இந்த அறிக்கையினால் அல்லது அதைச்சார்ந்த ஒரு சடங்கினால் இயற்கையின் போக்கை மாற்றுவதாக எண்ணினர்.

இந்தப் புராணங்களின் கருத்துகள் பழைய ஏற்பாட்டில், சிறப்பாகச் சங்கீதங்களில், கடவுளின் அரசைக் குறிக்கும்பொழுது காணப்படுகின்றன. (உ.ம்) சங் 9:29:46; 88;93;96-98. இறைவாக்கினர் கடவுளின் அரச தன்மையைப் பற்றிக் கூறும் பொழுதும் காணப்படுகின்றன. ஒழுங்கின்மையின் சக்திகளுடன் போரிட்டு வெற்றி பெற்றதைக் குறிக்கும் 'ஆண்டவரின் நாள்' (எசா 2) என்ற கருத்துக்கூட பாகால் தண்ணீரின் மேல் கொண்ட வெற்றி, அதைத் தொடர்ந்து அரசனான கருத்தின் வளர்ச்சிதான். இவ்வாறு எபிரேயப் பகுதிகளுக்கும், கானானியக் கதைகளுக்கும் இடையே தொடர்பிருப்பதோடு, பயன்படுத்தப்படும் உவமைகளுக்கிடையிலும், குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருக்கின்றது (உ.ம்) சங் 29:93. பாகாலின் பண்புகளுடன் யாவே சித்தரிக்கப்படுகிறார். இந்தக் கருத்து யூத (தானி 7:7தொ), கிறிஸ்தவ (திருவெளி 12) மற்றும், இறைவாக்கினர் வெளிப்பாடு பற்றிய எபிரேய இலக்கிய வரலாற்றில் தொடர்ந்து வளர்ந்தது. கானானியக் கதைகளுடன் அதன் பருவச் சடங்குகளும் விவசாயத்திற்கான முறைகள் என்று எபிரேயர் ஏற்றுக்கொண்டனர். செக் 14:16-19 கடவுளின் அரசத்தன்மையையும் இலையுதிர்கால புது வருடத்தையும் (கூடார விழா) தொடர்புபடுத்துகிறது.

இராஸ்-சம்ரா கல்வெட்டில் "மேகங்களின் மேல் பயணம் செய்பவர்" என்றுள்ளது. இது யாவேக்குக் கொடுக்கப்பட்டுள்ளது: "வான மேகங்களைத் தேர் ஆக்குகின்றார்" (உப 33:26; சங் 68:4). பாகலின் காலடியில் அலைகள் போல வரையப்பட்டுள்ள கோடுகள் மேகங்களில் உள்ள தண்ணீரை

அல்லது மலையுச்சிகளைக் குறிக்கின்றன. இதையே ஆமே 4:3; மீக் 1:3-இலும் காண்கின்றோம்: "மாநிலத்தின் உயர்ந்த இடங்களில் நடமாடுபவர்."

பாகால் வழிபாடு எகிப்தையும் அடைந்தது. பெலுசியும் அருகில் உள்ள பாகால் சாப்போன் என்ற இடம் எகிப்தில் இவ்வழிபாட்டின் மையமாக இருந்தது.

இராஸ்-சம்ராவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாகாலைப் பற்றிய கதைகள், வறட்சி, வளமையின்மையின் தேவதையான மோத்துடன் செய்த போரைப்பற்றி விளக்குகின்றன. கோடைவெயிலில் பயிர்கள் வாடும்பொழுது பாகால் இறக்கும் கடவுளாகவும், குளிர்கால மழையில் பயிர்கள் செழுமை அடையும்பொழுது பாகால் உயிர்க்கும் கடவுளாகவும் உள்ளது. பாகால் தோற்கும்பொழுது, அதனுடைய சகோதரி தேவதை அனாத்து மோத்துடன் போரிட்டு அதைத் தூள்தூளாக்கி நிலத்தின்மேல் வீசி எறிகிறது. இத்தகைய சடங்கு லேவி 2:14-இல் விவரிக்கப்படுகிறது. பாகால் மீண்டும் உயிர் பெறும்பொழுது வானம் பொழிய எங்கும் செழிப்பாக இருக்கிறது. இறுதியாக, ஏழு ஆண்டுகளுக்குப்பின், பாகால் போரிட்டு அனாத்தை வெல்கிறது.

இந்தக் கதைகளின் சில பகுதிகள் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில சடங்குகளைக் குறிக்கின்றன. பாகால் இறந்த பிறகு அவனுடைய சகோதரியான "கன்னியான அனாத்து" மலைகளில் அவளது அழுகுரல் எதிரொலிக்கும்படி அழுது கொண்டு தேடிச்செல்கின்றது. இஃது அததரிம்மோனுக்காக அழுவதையும் (செக் 12:11), எருசலேம் பெண்கள் தம்மூசுவுக்காக அழுவதையும் (எகே 8:14), அனேகமாக இஸ்ராயேல் கன்னிப்பெண்கள் இப்தாகுவின் மகளுக்காக பாரம்பரியமாக அழுவதையும் (நீதி 11:37-40) சுட்டுவதாக அமைகிறது.

இஸ்ராயேல் சில சமயங்களில் பாகால் வழிபாட்டைத் தங்களுக்கு ஏற்றபடி எடுத்துக் கொள்ளாமல், அப்படியே பாகாலின வழிபாட்டைப் பின்பற்றினர். ஆகவே, எபிரேயருடைய வரலாற்றில் பல இடுக்கண்கள் ஏற்பட்டன. (உ.ம்) ஆகாபு-ஈசபேல் ஆட்சியில் (1 அர 16:32). ஓசே இறைவாக்கினர் (1 அர 2) இதைக் கண்டித்தார். எசேக்கியா, யோசியா ஆகியோரின் ஆட்சியில் இவ்வழிபாடு அழிக்கப்பட்டாலும் (2 அர 18:4;23) நாடுகடத்தலின் தொடக்கத்திலும் (எசே 8:14), பாரசீகர் காலத்திலும் (செக் 12:11) தம்மூசின் வழிபாடு என்று அழைக்கப்பட்டது.

**பாகால் - அனான் (BAAL-HANAN - ஆண்டவர் கருணையுள்ளவர்)**

1. இஸ்ராயேலருடைய முடியாட்சிக்கு முன்னால் ஏதோமில் இருந்த ஓர் அரசன்; இவர் அக்போரின் மகனும் ஏதோமின் ஏழாவது அரசனும் ஆவார். இவர் யூப்பிரத்தீசிலிருந்து சாவூலுக்கு அடுத்த அரசன் ஆவார். இவருக்குப்பின் அதாது அரசனானார் (ஆதி 36:38-39; 1 நாள் 1:49-50).

2. தாவீதின் ஆட்சியில் பதவி வகித்த ஒரு கெதேரியர். செபேலாவிலுள்ள ஒலிவ மரங்களையும், அத்திமரச் சோலைகளையும் இவர் கண்காணித்தார் (1 நாள் 27:28). ஒருவேளை இவரும் தாவீதின் வலியவீரர்களில் ஒருவரான அனானும் ஒரே ஆளாக இருக்கலாம் (11:43).

**பாகால் - ஆட்சோர் (BAAS - HAZOR - ஆட்சோரின் தலைவர் அல்லது பாகால்)**

அனேகமாக, எபிராயிமுக்கு அருகிலுள்ள, அப்சலோமின் மலைவீடாக இருக்கலாம். ஆட்டு மயிர்வெட்டும் கொண்டாட்டத்திற்காக இவ்விடத்திற்கு அப்சலோம் தாவீதின் மற்றப் புதல்வரை வரவழைத்தான்; அப்சலோமின் ஏவுதலால் அவனுடைய ஊழியர்கள் அம்னோனை இங்குதான் கொன்றனர் (2 சாமு 13:23).

இது கலிலேயாக் கடலுக்கு வடக்கேயுள்ள ஆட்சோர் அன்று. நெகே 11:33-இல் குறிக்கப்படும் ஆட்சோர் சில சமயங்களில் பாகால்-ஆட்சோர்

என்று கருதப்படுகிறது. அனேகமாக பெத்தேலுக்கு, வடகிழக்கே ஏறக்குறைய 7 கி.மீ.தொலைவிலுள்ள எபெல் அசூர் என்ற மலையாக இருக்கலாம். இதன் உயரம் 1032 மீட்டராகும். சாக்கடல் சுருள்களில் ஒன்றான ஆதியாகமக் கதையில் அபிராம் லோத்தைவிட்டுப் பிரிந்தபின் கடவுள் 'இராமோத்து ஆட்சோர்' என்ற இடத்தில் அபிராமுக்குத் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 13:14). பாகால் ஆட்சோருக்கு மற்றொரு பெயர் இராமோத்து ஆட்சோர் என்று இன்னொரு பழைய பாரம்பரியம் சொல்கின்றது; அப்சலோமின் மலை வீடானது பூர்வீக கானானிய எபிரேயத் திருத்தலமாக இருந்திருக்கலாம் என்று பிற்காலப் பாரம்பரியம் கூறுகிறது.

**பாகால் - ஆமோன் (BAAL - HAMON - வளமையின் அல்லது செல்வத்தின் ஆண்டவர்)**

அதிகமான பலன் தரக்கூடிய அம்மோனுடைய திராட்சைத் தோட்டம் இருந்த இடம் (உ.ச 8:11). இஃது இருந்த இடம் தெரியவில்லை; திருத்தப்பட்ட வாசகங்களும் குறிப்பாகச் சொல்லப்பட்ட இடங்களும் ஆதாரங்களால் நிலைநிறுத்தப்படவில்லை. "செல்வம் உள்ளோனின்" நிலைமையைச் சொல்லும் பொருட்டு ஒரு கவிஞனின் கற்பனையில் உண்டாக்கப்பட்ட பெயராக இருக்கலாம். திராட்சைத் தோட்டம் அரசபெண்டிரைக் குறிக்கலாம். ஆகவே, இஃது எருசலேமை மறைமுகமாகக் குறிக்கலாம் என்று விளக்கவுரையாளர் சிலர் கருதுகின்றனர்.

**பாகால் - எர்மோன் (BALL-HERMON - எர்மோனின் ஆண்டவர், புனித இடத்தின் ஆண்டவர்)**

1. மனசே கோத்திரத்தின் எல்லையிலிருந்து ஓர் இவ்வியர் நகரம்; இஃது இஸ்ராயேலருடைய படையெடுப்பினால் பாதிக்கப்படவில்லை (நீதி 3:3; 1 நாள் 5:23).

2. இஃது எர்மோன் மலைக்கு அருகில், இஸ்ராயேலின் வடக்கு எல்லையில் அமைந்திருக்க வேண்டும். சிலர் இஃது எர்மோன் மலையுச்சியில் இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள்; மற்றவர்கள் இது பாகால்-கதுவின் மற்றொரு பெயர் என்று கருதுகின்றனர். அறிஞர் சிலர் இது யோர்தான் தோன்றும் இடத்திலுள்ள பனியாவாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆபேல் என்பவர் இஃது இருந்த இடமாக இக்லிம் ஏல்-பெல்லானைச் சுட்டிக் காட்டுகிறார்.

**பாகால்-கது (BAAL-GAD - நற்பேற்றின் ஆண்டவர்)**

யோசுவாவினுடைய வெற்றிகளின் வட எல்லையைக் குறிக்கும், எர்மோன் மலைக்கு அருகில் உள்ள ஒரு நகரம் (யோசு 11:17; 12:17; 13:5). இஃது ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இதற்கு மேற்கே லெபனோன் மலையும், கிழக்கே எர்மோன் மலையும் உள்ளன. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், இன்றைய அஸ்பெயாவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால், இதற்கு வடக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள தெல்-கவுசு இருக்குமிடத்தில் பாகால்-கது இருந்ததாகக் கருதுவது மேலாகும். இரண்டும் வாடி எத்-தெயிமில் அமைந்துள்ளன.

**பாகால் - சாலிசா (BAAL SHALISHAH - மாவட்டத்தின் தலைவர்)**

எப்பிராயிமின் மலைப்பகுதியில் சாலிசாவிலுள்ள ஒரு நகரமாகும் (1 சாமு 9:4). எலிசா, சில்காலில் இருந்தபொழுது, வாற்கோதுமை ரொட்டிகளையும், புதிய தானியக்கதிர்களையும் கொண்டு சென்ற மனிதனின் ஊராகும் (2 அர 4:42). இக்குறிப்பும், பாலஸ்தீனத்தில் மற்ற இடங்களை விட இங்கு முன்னதாகவே கதிர்கள் முற்றின என்ற தால்மூதின் கூற்றும், இவ்விடம் வளமை மிகுந்த பகுதியில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. அறிஞர் சிலர் சாலிசா இருக்கின்ற இடத்தில் இஃது இருந்தது என்று கருதுகிறார்கள்.

செக்கேமிற்குத் தென்மேற்கிலுள்ள கெபர்தில்த்

என்ற ஊரின் பெயரில் இவ்விடத்தின் பெயர் இன்னும் ஒலிக்கின்றது. இவ்வூர் அனேகமாக,பாகால்-சாலிசா இருந்த இடமாக இருக்கலாம்.

**பாகால் - செபூபு (BAAL - ZEBUB** - ஈக்களின் தலைவர்)

பெலிஸ்திய நகரமான எக்ரோனின் கடவுள். இஸ்ராயேல் அரசன் அகசியா மேல்மாடியிலிருந்து ஜன்னல் வழியாகக் கீழே விழுந்த பிறகு, அவன் தான் உயிர் வாழ்வானா என்பதை அறிந்துகொள்ள இந்தக் கடவுளிடம் ஆட்களை அனுப்பினான் (2 அர 1:2-19).

எபிரேய மொழியில் 'செபூபு என்றால் 'ஈ' என்று பொருள். ஆகவே, இப்பெயர் "ஈக்களின் பாகால்" என்ற பொருளில் எழுபது நூல் மற்றும் யோசிப்பசால் பயன்படுத்தப்படுகிறது. தொற்றுநோயை உண்டு பண்ணும் ஒருவகை ஈக்களை வாட்டிய கடவுளை இப்பெயர் குறிக்கும் என்று இன்றைய வல்லுநர்கள் விளக்கம் கூறுகின்றார்கள். இதைக் கிரேக்க நாட்டுச் சேயுசு அப்போமியோசுடன் ஒப்பிடுகின்றனர். இந்தச் சேயுசு "ஈக்களை நீக்குகின்றவர்", "ஈக்களை விரட்டுபவர்" என்றெல்லாம் விளக்கப்படுகின்றார். ஆனால், அ) தொற்றுநோயை விரட்டுகின்ற கடவுள் ஏன் வீழ்ச்சியின்போது அழைக்கப்படுகின்றார்? ஆ) கிரேக்கக் கடவுள்கள் பொதுவாக ஈக்களை விரட்டுகிறவர்கள் அல்லர். ஆகவே, பாகால்-செபூபு ஈக்கள் பறக்கும் ஒலியில் குறி சொல்லும் கடவுளாகும். பாகால்-செபூபு என்பது பாகால்-செபூபு (பாகால் ஆண்டவர்) என்பதன் வெறுப்பான பெயராகும்.

**பாகால் - செபோன் (BAAL - ZEPHON** - வடக்குத்திசைத் தலைவர், வடகாற்றின் தலைவர்)

இஸ்ராயேலின் யாத்திரையின்போது, வடகிழக்கு எகிப்திலுள்ள இவ்விடத்தில் பாளையம் இறங்கினார்கள்.

இதனுடைய சரியான இடம் தெரியவில்லை. ஏனெனில் இதனோடு சொல்லப்பட்டுள்ள பிகசிரோத்தும் மித்தோலும் (யாத் 14:2.9) இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை; பொதுவாக இவை வடகிழக்கு எகிப்தில் இருப்பனவாகச் சொல்லப்படுகிறது. இஃது ஒரு கோவிலையோ, புனிதத் தலத்தையோ குறிக்கலாம் (எண் 33:7).

இன்றைய ஆராய்ச்சிகளின் விளைவாக, பாகால்-செபோனைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இத்தேவதையின் பெயரால் இவ்விடம் அழைக்கப்பட்டது. இது வடமேற்கு செமித்தியப் பெயர்; இதன் பொருள் 'வடக்கின் தலைவன்'. பழமை வாய்ந்த உகாரித்து இலக்கியத்தின் பலிப்பட்டியலில் இக்கடவுளின் பெயர் கூறப்பட்டுள்ளது. எகிப்திய இலக்கியத்தில் இஃது ஒரு கடல் கடவுள், புயற்கடவுள் என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கடவுளும், எகிப்திய தகபனகேசும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்று பெனிசிய புல்தாள் ஏடுகள் கூறுகின்றன.

**பாகால் - தாமார் (BAAL - TAMAR** - ஈச்சமரங்களின் தலைவர்)

பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த கிபயா என்ற நகருக்கு அருகில் உள்ளது. இங்கு இஸ்ராயேலர் கூடி கிபயா மீது கடைசியாக, வெற்றியின் போர் செய்தனர் (நீதி 20:33-36). இவ்விடம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இஃது ஒரு நகரமாகவே இருந்திருக்காது; அனைவரும் அறிந்த ஓர் இடமாக இருந்திருக்கலாம். யூசேபியுவின் கூற்றுப்படி தெல் ஏல்-புல்லுக்குக் (பென்யாமினின் கிபயா) கிழக்கேயுள்ள ஏற்றமான இராஸ் எத்-தவில் ஆகும் இவ்விடம்.

**பாகால் - பெயோர் (BAAL - PEOR** - திறப்பின் தலைவர், பெயோரின் தலைவர்)

பெயோர் மலையின் கடவுள். இஸ்ராயேலர் சித்திமில் பாளையம் இறங்கி இருந்தபோது மோவாபியப் பெண்களோடு விபசாரம் செய்தனர். அவ்வாறு இஸ்ராயேல் தங்களைப் "பெயோரின் பாகாலைப் பின்பற்றி" தகாத வழிபாட்டுச் சடங்குகளில் ஈடுபட்டார்கள். தண்டனையாக

இஸ்ராயேலர் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டார்கள். மதியானியரும் இஸ்ராயேலரைத் தவறான வழியில் இட்டுச்சென்றனர் (எண் 25:1-9; உப 4:3; சங் 106:28; ஓசே 9:10).

**பாகால்-பெராட்சிம் (BAAL - PERALIM - பிளவின் தலைவர்)**

தாவீது இஸ்ராயேலரின் அரசனாக அபிடேகம் செய்யப்பட்ட சிறிது காலத்திற்குப் பின்பு பெலிஸ்தியரைத் தோற்கடித்த இரபாயிம் பள்ளத்தாக்கிற்கு அருகில் உள்ளது இவ்விடம் (2 சாமு 5:20 தொ; 1 நாள் 14:11தொ). எசாயா எருசலேமிற்குத் தந்த எச்சரிக்கையில் இவ்விடம் கிபயோன் பள்ளத்தாக்கிற்கு இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது (எசா 28:2:). லிப்தா (நெப்தோவா)விற்கு மேலும், எருசலேமிற்கு வடமேற்கிலும், இராஸ் என்-நாதிரிலும் லிப்தாவுக்கு (நெப்தோவாகுக்கு) வடக்கிலும் உள்ள இன்றைய செயிக்கு பெதாராக இருக்கலாம்.

**பாகால் - பெரித்து (BAAL - BERITH - உடன்படிக்கையின் தலைவர்)**

கிதியோனின் மகனான அபிமெலக்கின் ஆட்சியில் செக்கேமியர் வழிபட்ட ஒரு கானானியத் தேவதையின் பெயர் (யோசு 8:33; 9:4). ஓர் உடன்படிக்கையின் விளைவாக அபிமெலக்கு செக்கேமின் அரசனானான். அதன்படி பாகால் - பெரித்து கோவிலிருந்து அவனுக்கு எழுபது வெள்ளிக்காசுகள் கொடுக்கப்பட்டன (9:3). மூன்று ஆண்டுகளுக்குள், இருவருக்குமிடையேயிருந்த உறவு கசந்து போயிற்று. செக்கேமியர் உடன்படிக்கையை முறித்தனர் (9:22-23).

இக்கடவுள் ஏல்-பெரித்து என்றும் அழைக்கப்பட்டது (9:46). இதன் உண்மையான பெயர் ஆமோர் என்று இருந்திருக்கலாம். இதன் பொருள் கழுதையாகும். இஃது "உடன்படிக்கையின் தலைவர்" என்ற பெயருக்குக் குறிப்பிட்ட பொருளுடையதாகும். மாரியில் கழுதையைக் கொன்று பலியிடுவது உடன்படிக்கைச் சடங்கின் முக்கிய பகுதியாகும். காலப்போக்கில் கழுதையைக் கொல்வது, உடன்படிக்கையை ஏற்படுத்துவது என்ற பொருள் கொண்டது. இதுவே அபிமெலக்குக்கும், செக்கேமியருக்கும் இடையிலான உடன்படிக்கைச் சடங்காக இருந்திருக்கலாம். செக்கேம் அரசனின் பெயர் ஆமோர் ஆகும். அவனது சந்ததியினர் "ஆமோரின் மக்கள்" என்று அல்லது "கழுதையின் ஆள்கள்'' என்று அழைக்கப்பட்டனர் என்பது கவனிக்கத் தக்கது (யோசு 24:32; நீதி 9:28; காண்க. அ.ப. 7:16).

**பாகால்பேக்கு (BAAL BEK)**

நாகர் ஏல் - ஆசியின் மூலத்திற்கு அருகிலுள்ள பெக்கா என்ற இடத்திலுள்ள ஒரு லெபனோனிய நகரம்.

இந்தச் செமித்தியப் பெயரானது அங்கு வழிபடப்பட்ட பெக்காவின் பாகால் என்ற கடவுளின் பெயரைக் கொண்டுள்ளது. இதன் கிரேக்கப் பெயர் எலியாப்பொலி (சூரியனின் நகரம்) என்பதாகும். பாகால் சூரியக்கடவுளோடு ஒன்றாக்கப்பட்டதால், இப்பெயர் செலூக்கியர் காலத்தில் பயன்படுத்தப்பட்டது. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் அந்தப் பூர்வீகப்பெயர் மறுபடியும் பயன்படுத்தப்பட்டது.

கோவிலின் இடிபாடுகளில் இன்று பாகால்பேக்கு புகழ்மிகுந்ததாக இருக்கின்றது. மிகவும் பழைமை வாய்ந்த அந்தக் கோவில் முதலில் செமித்திய புயற்கடவுளான அதாதின் வழிபாட்டிற்காகக் கட்டப்பட்டது. பிறகு, இது சூரியக் கடவுளுக்கும், அதன் பிறகு யூப்பித்தருக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. சூரியக் கடவுளும், யூப்பித்தரும் ஒன்றே என்று மக்ரோபியு கூறுகின்றார். பூர்வீகப் பெனிசியாவின் ஆகாயக் கடவுளான பாகால்சமென் என்பதும், யூப்பித்தரும் ஒன்றாயின. தியோனிசுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட கோவில் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்தது. மூன்றாவது முக்கியமான கோவில் வட்டக்கோவில் என்று அழைக்கப்பட்டது. பாகால் பேக்கில்

வழிபடப்பட்ட மற்றக் கடவுள்கள் வீனசும், மெர்க்குரியுமாகும். இவையிரண்டும் யூப்பித்தரோடு சேர்த்துத் தலைமைக் கடவுள், தாய்த்தேவதை, இளைய கடவுள் என மும்மைக் கடவுளாயினர்.

கி.பி. 637-இல் பாகால்பேக்கு அரேபியர்களால் கைப்பற்றப்பட்டு 1401-இல் மங்கோலியர்களால் அழிக்கப்பட்டது. மேலும், இந்த இடம் பல நில நடுக்கங்களால் தாக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் விலை மதிப்பில்லாத பொருட்கள் இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 1900-1904-இல் இவ்விடம் செர்மானியரால் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

**பாகால் - மெகோன் (BAAL - MEON - குடியிருப்பின் தலைவர், மெகோனின் தலைவர்)**

வடமோவாபில் இருந்த ஒரு நகரம்; இது பெத்-பாகால்-மெகோன், பெத்-மெகோன், பெகோன் என்றும் அழைக்கப்பட்டது. இஃது ரூபனின் கோத்திரத்திற்குக் குறிக்கப்பட்ட பகுதியாகும் (எண் 32:3.38; யோசு 13:17; 1 நாள் 5:8; எரே 48:23). ஏறக்குறைய கி.மு. 830-இல் இது மோவாபியருடைய கையில் இருந்தது; ஏனெனில், மேசா என்பவர் "பாகால் - மெகோனைக்கட்டி, அதில் ஒரு நீர்த்தேக்கத்தை உண்டாக்கினார்." மேலும் "மேதபா, பெத்-திப்லாத்தயிம் மற்றும், பெத்-பாகால்-மெகோனையும்" கட்டினார். பாண்ட உடைசல்கள், இது கி.பி. 772-இலிருந்து இஸ்ராயேலரின் கையில் இருந்தது என்று காட்டுகின்றன. பிறகு, மீண்டும் இது மோவாபியருடைய கையில் சேர்ந்து (எரே 48:23; எசே 25:17).

மேதபாவிற்குத் தெற்கே ஏறக்குறைய 6 கி.மீ. தொலைவிலுள்ள மாயின் என்ற பெரிய மண்மேடு இருந்த இடத்தில்தான் இஃது இருந்தது என்று அடையாளம் காட்டப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்து இது குடியேறப்பட்டது என்பதற்கு ஓர் ஆதாரமும் கண்டுபிடிக்கப்படவில்லை; ஆனால், தொடர்ந்து வந்த பல குடியேற்றங்களால் இஃது அழிந்து விட்டிருக்கலாம். இந்நகரை அடுத்த பள்ளத்தாக்கும் மலைச்சரிவும் மிகவும் செழிப்பானவை. அதே சமயம் அதன் மேற்குப் பகுதி பாறையான பகுதியாகும். ஆனால், நல்ல மேய்ச்சல் நிலத்தைக் கொடுத்தது.

**பாகால் - யூதா (BAALE - JUDAH - யூதாவின் பாகால்கள் அல்லது யூதாவின் தலைவர்கள்)**

இதுவும் கிரியத்து எயாரிமும் ஒன்றே (2 சாமு 6:2; 1 நாள் 13:6). காண்க. கிரியத்து எயாரிம்.

**பாகை, தலைப்பாகை (CAP, TURBAN)**

துணியால் ஆன, தலையைச் சுற்றிக்கட்டப்படும் ஓர் ஆடைப்பகுதி. இதைக்குறிக்க, பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. தலைப்பாகை சுதந்தர ஆண்மகனின் தலையணியாகும் (யோபு 29:14; எசா 3:23). விவிலியத்தில் குருக்களின் தலைப்பாகை சிறப்பான முறையில் குறிக்கப்படுகிறது. பெரிய குரு மெல்லிய நார்ப்பட்டால் செய்யப்பட்ட தலைப்பாகை அணிந்திருக்க வேண்டும் (யாத் 28:4.39; எசே 44:18; செக் 3:5). பசும்பொன்னால் செய்யப்பட்ட ஒரு பட்டத்தில் "ஆண்டவருக்கு அர்ப்பணம்" என்று முத்திரை போல் பொறித்து அந்தப் பட்டத்தைத் தலைப்பாகை மேல் இணைத்துக் கட்டுவர் (யாத் 28:36-38; 29:6; 39:30; லேவி 8:9; சீரா 45:12). பெரிய குருவைத் தவிர்த்த மற்றக் குருக்கள் மெல்லிய நார்ப்பட்டால் செய்யப்பட்ட கூம்பு வடிவமான தலைப்பாகையைத் தங்கள் பதவியின் அடையாளமாக அணிந்திருப்பார் (யாத் 28:40; 29:9; 39:28; லேவி 8:13). இது குருக்களின் ஆடைகளில் தனிச்சிறப்பானதாகும். பிற்காலத்தில் குருக்கள் யாவரும் ஒரே மாதிரியான தலைப்பாகை அணிந்திருந்ததாகத் தெரிகிறது (யூதி 4:15).

**பாக்கனோர் (BACENOR)**

2 மக் 12:35-இல் வரும் "பாக்கனோரைச் சேர்ந்தவர்கள்" என்ற சொற்றொடரிலுள்ள ஒரு

பெயர். இவர்களும், 12:17-இல் சொல்லப்பட்டுள்ள துபியானிகளும் ஒருவரே எனத் தோன்றுகிறது. இந்தப் பெயரின் பொருள் தெளிவற்றுள்ளது.

**பாக்கா பள்ளத்தாக்கு (BACA, VALLEY OF - நறுமண மரங்களுடைய பள்ளத்தாக்கு)**

ஒரு பாலஸ்தீனப் பள்ளத்தாக்கு. பசையைக் கக்கும் ஒரு வகை மரத்திலிருந்து அனேகமாக இந்தப் பெயர் வந்திருக்கலாம். இப்பள்ளத்தாக்கில் வளர்ந்த பால்சம் மரமாக இருக்கலாம். இந்தச் சொல் 'அழுதல்' என்ற சொல்லிலிருந்து வந்ததாக இருக்கலாம். இந்தப் பள்ளத்தாக்கு இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், இரபாயிம் என்ற பள்ளத்தாக்கில் நிறைய பால்சம் மரங்கள் இருப்பதால், அதுவாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

இப்பள்ளத்தாக்கு வறட்சியானது; பிரயாணத்திற்குத் தகுந்ததாக இல்லை. இதன் வழியாக எருசலேமிற்குப் (சீயோன்) பாதை செல்கின்றது. அதன் வழியாக யூதர்கள் விசுவாசத்துடனும் மகிழ்ச்சியுடனும் திருப்பயணம் சென்றனர் (சங் 84:6). இஃது ஒரு அடையாளப் பள்ளத்தாக்காகவும் இருந்திருக்கலாம்.

**பாக்கிது (BACCHIDES)**

முதலாம் தெமேத்திரியு என்ற அரசனின் நண்பன்; யூப்பிரத்தீசுக்கு வடக்கேயுள்ள பகுதிக்கு ஆளுநராகவும் இருந்தவன் (1 மக் 7:8 தொ). யூதா மக்கபேயுவின் கிளர்ச்சியை அடக்கவும், ஆல்கிமுவைத் தலைமைக் குருவாக்கவும் இவன் ஒரு படையுடன் அனுப்பப்பட்டான். இவன் பணி ஓரளவு வெற்றி பெற்றது. இவன் யூதாவையும், அவர் சகோதரர்களையும் சமாதான வார்த்தைகளால் ஏமாற்றப் பார்த்தான்; ஆனால், அவன் அசட்டை செய்யப்பட்டான். எழுத்தர்கள் குழு (கசிதேயர்கள்) பாக்கிது மற்றும் ஆல்கிமுவின் முன்னிலையில் தோன்றி நீதி கேட்டபொழுது இந்த இரண்டு தலைவர்களும், அவர்களுக்கு ஒரு தீமையும் செய்வதில்லை என்று சத்தியம் செய்தனர். இதை எழுத்தர்கள் நம்பினார்கள். ஆனால், அவர்களின் பிரமாணிக்கத்தை ஐயுற்று இரு தலைவர்களும் இரக்கமின்றி 60 பேரைக் கொன்று விட்டனர். அசமோனியப் படையிலிருந்து ஓடியவர்களை நம்பாததால் அவர்களைப் பாக்கிது கைது செய்தான்.

ஒரு படையுடன் ஆல்கிமுவின் கையில் நாட்டை ஒப்படைத்து விட்டு, பாக்கிது அரசனிடம் திரும்பினான். இரண்டாம் படைத்தளபதியான நிக்கானோர் யூதாவோடு செய்த போரில் இறந்தபொழுது, தெமேத்திரியு, பாக்கிதுவை மீண்டும் யூதேயாவிற்கு அனுப்பினான். அவன் அர்பேலாவில் வெற்றி பெற்றான் (1 மக் 9:2). பிறகு, எலாசா என்ற இடத்தில் பாக்கிதுக்கு எதிராக நடந்தபோரில் யூதா தோற்றார்.

யூதாவின் மரணம், பஞ்சம் ஆகியவைகளின் விளைவாக, பாக்கிது யூதேயாவை ஆட்டிப்படைக்கவும் யூதத்துவத்தைப் பிரமாணிக்கத்தோடுத் பின்பற்றினவர்களைத் துன்புறுத்தவும் செய்தான். ஓய்வு நாளில், யோர்தான் கரையில், யோனத்தானோடு போரிட்டான் (9:46). தன்னுடைய படையில் ஓராயிரம் பேர் மாண்டாலும், பாக்கிது வெற்றி பெற்றான். எருசலேமுக்குச் சென்று அந்நகரத்தின் மேல்நிலையிலிருந்தவர்களின் புதல்வர்களைப் பிணைக் கைதிகளாகக் கொண்டு சென்றான். எருசலேமைச் சுற்றிப் பல இடங்களில் அரண்களைக் கட்டி தன்னுடைய ஆட்களைக் கோட்டையில் வைத்தான். இதன்பிறகு கசிதேயர்களுக்குப் பயன்படாமல், பாக்கிது, சீரியாவிற்குத் திரும்பினான். இந்தத் திரும்புதல் ஆல்கிமுவின் மரணத்திற்குப்பின் நடந்ததென்றும், அதன்பிறகு யூதேயா கி.மு. 158 வரை இரண்டாண்டுகள் அமைதியாக இருந்ததென்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் முறையாக யூதேயாவிற்குப் போகும்படி பாக்கிது தூண்டப்பட்டான். பெத்பாசியில் யோனத்தானுடன் இவன் போரிட்டான்; ஆனால், அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். யோனத்தானை அழிக்கும்

தன்னுடைய முயற்சி வெற்றி பெறாததற்குக் சிரேக்கமொழி பேசும் யூதர்கள்தான் காரணம் என்று பொய் சொல்லி அனேகரைக் கொன்றான். இதன் விளைவாக யோனத்தான் அமைதியை வேண்டி சிறைக் கைதிகளின் விடுதலையையும் தேடினான். பாக்கிது இதற்கு ஒத்துக்கொண்டு, இனித் தான் வாழும்வரை யோனத்தானுக்கு எதிராகத் தீங்கு இழைப்பதில்லை என்று வாக்களித்தான். தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிய அவன் மறுபடியும் யூதேயாவிற்குத் திரும்பவில்லை. பாக்கிதுடன் செய்து கொண்ட சமாதானத்தின் விளைவாக யோனத்தான் அங்கீகரிக்கப்பட்ட தலைவரானார். ஆல்கிமு இறந்துவிட்டதால் அவருக்குப் போட்டியாக யாரும் எழவில்லை.

**பாசமத்து (BASEMATH - நறுமணம்)**

1. ஏசாவின் மனைவியர்களுள் ஒருத்தி. ரெயுவேலின் தாய் (ஆதி 36:4.13.17). 26:34-இல் இவள் இத்தியரான ஏலோனின் மகள் என்றழைக்கப்படுகிறாள். ஆனால், 36:2-இல் ஆதா ஏலோனின் மகள் என்றழைக்கப்படுகிறாள். 36:3-இல் பாசமத்து இஸ்மயேலின் மகள் என்று குறிக்கப்படுகிறாள். இவளும் 28:9-இல் வரும் மகலாத்து (1) என்பவளும் ஒரே ஆளாக இருக்கலாம்.

2. இவள் சாலமோனின் மகளும், நப்தலியில் இருந்த சாலமோனின் கண்காணிப்பாளரான அகிமாசின் மனைவியும் ஆவாள் (1 அர 4:15).

**பாசயாகு (PASEAH - நொண்டுகிற)**

இதன் உண்மைப்பொருளின்படி, இப்பெயரைத் தாங்கியவர், ஏதாவது ஒரு விதத்தில் முடவர் எனத்தெரிகிறது.

1. யூதா குலத்தின் வழித்தோன்றலாகிய இவர் எஸ்தோனின் மகனாவார் (1 நாள் 4:12).

2. இது செருபாபேலோடு அடிமைத்தனத்திலிருந்து யூதாவுக்குத் திரும்பி வந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத் தலைவன் பெயராகும் (எஸ் 2:49; நெகே 7:51).

3. இப்பெயர் யோயாதாவின் தந்தையைக் குறிப்பதாகும். இந்த யோயாதா பழைய வாயிலைப் பழுது பார்த்தவர்களில் ஒருவராவார் (நெகே 3:6).

**பாசவேல் (PHASAEL)**

எருசலேமில் பெரிய ஏரோதுவின் அரண்மனையில் வடகோடியிலுள்ள கோபுரங்களில் மிகப்பெரியது. இது தாவீதின் கோபுரம் என்று அழைக்கப்பட்டது. இஃது ஏரோதின் மூத்த சகோதரன் பெயரால் பாசவேல் என்றழைக்கப்பட்டது. கி.பி. 70-இல் தீத்துவால் எருசலேம் அழிக்கப்பட்டபோது தப்பிய பகுதிகளில் இதுவும் ஒன்று. இக்கோபுரத்தின் அடிப்பகுதி ஏரோது காலத்தையும் மேற்பகுதி துருக்கியர் காலத்தையும் சேர்ந்தது.

**பாசாக்கு (PASACH - பிரித்தல்)**

ஆசேரின் கோத்திரத்தில் தோன்றிய இவர், யாப்லேற்று என்பவரின் மூன்று புதல்வர்களில் தலைமகனாவார் (1 நாள் 7:33).

**பாசான் (BASHAN - செழிப்பான சமவெளி)**

யோர்தானின் கிழக்குப்பகுதிகள் பிரிக்கப்பட்டுக் காணப்படும் வடகோடிப்பகுதிகள் தான் இந்தப் பாசான் சமவெளி. இதன் சரியான பரப்பளவை நிர்ணயிப்பது கடினம். ஏனெனில், விவிலியம் இதை ஒரு சில இடங்களில் பரந்த விளைச்சல் நிலம் என்றும், வேறு சிலர் இடங்களில் ஓகுவின் அரசாட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளையும் குறிக்கவும் பயன்படுத்துகிறது. இதன் எல்லைகளாக வடக்கே எர்மோன் மலையும், கிழக்கே எபெல் துருசையும், மேற்குப்புற எல்லையாக கலிலேயாக் கடலின் கிழக்கிலுள்ள மலைகளும் கொண்டு, யார்முக்கை அடுத்து 10 கி.மீ. வரைக்கும் பரந்து காணப்படுகிறது. மாகாணங்கள் இதன் உள்ளடங்கும். கர்னாயிம், அஸ்தரோத்து, சலிக்கா, கெனாத்து, எதிரேயி ஆகிய நகரங்கள் இப்பகுதியைச் சேர்ந்தவை.

பிற்கால கிரேக்க நகரங்களான இப்போ, தியோன், அபீலா முதலியன இதில் அடங்கும்.

எமோரியர்களை வெற்றி கொண்டபின் இஸ்ராயேலர் ஓகுவின் நாடாகிய பாசான் மேல் படையெடுத்து எதிரேயில் ஓகுவை வென்றனர் (எண் 21:33-34). இப்பகுதி மனாசேயின் பாதி-இனத்திற்குப் பங்கீடு செய்யப்பட்டது (உப 3:13; எண் 32:33). இஸ்ராயேல் நாடு பிளவுபட்ட தொடக்க காலத்தில் பாசான் வட அரசைச் சேர்ந்ததாக இருந்தது. ஆகாபு (1 அர 23:3), யோராம் (2 அர 8:28). ஏசு (10:33) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் பாசானின் ஒரு பகுதியோ முழுவதுமோ சீரியர்கள் வசமாயிற்று. 2-ஆம் எரொபவாம் இதை மீண்டும் கைப்பற்றினார் (2 அர 14:15). ஆனால் விரைவில் இதை 3-ஆம் திகிலத்-பிலேசர் அசீரியப் பேரரசுக்குள் சேர்த்துக் கொண்டான் (15:29). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிலிப்புவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளான கலானித்து, திராக்கோனித்து, பத்தனேயா ஆகியவை பாசானைச் சேர்ந்தவையாகும் (காண்க. லூக் 3:1).

வளமைமிக்க பாசான் சமவெளி செழிப்பான மேய்ச்சல் நிலங்களையும், பொதுவாக, செல்வச் செழிப்பையும் அளித்தது (எரே 50:19; மீக் 7:14). அதன் புகழ்பெற்ற கருவாலி மரங்கள் தீருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன (எசே 27:6); இன்றும் அங்குக் காணப்படுகின்றன. "பாசான்மலை" (சங் 68:15) எபேல் கவுரானாக அடையாளம் காட்டப்படுகிறது.

உருவகமாக, "பாசானின் கொழுத்த எருதுகள்" தீயவர்களையும், "பாசான் பசுக்கள்" (ஆமோ 4:1) சொகுசு வாழ்க்கை கொண்டிருந்த சமாரியப் பெண்களையும் குறித்தன. இவர்கள் ஏழைகளைப் புறக்கணித்தனர்; கொடுமைப்படுத்தினர். ஏசா 2:12-இல் "இறுமாப்பும் செருக்கும் உடையவர்கள்" பாசானின் கருவாலி மரங்களுக்கு ஒப்பிடப்படுகின்றனர்.

**பாசிக்கமா (BASKAMA)**

செலூக்கியப் படைத்தலைவன், மக்கபேயர் தலைவர் யோனத்தானை வஞ்சகமாகப் பிடித்து, இந்த இடத்தில்தான் கொன்று, தற்காலிகமாக அடக்கம் செய்தான் (1 மக் 13:23; காண்க. 12:39-48). இந்த இடம் இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை. இது, கலிலேயாக்கடலுக்கு வடகிழக்கில் கிலயாதில் உள்ள இக்காலத் தெல்-பசுக்காக இருக்கலாம். யோசிப்பசு இதை வெறுமனே பஸ்கா என்று குறிப்பிடுகிறார்.

**பாசிரோன் (PHASIRON)**

யோனத்தனால், பெத்பாசி அருகில் கொல்லப்பட்டவர்களின் மூதாதையர் (1 மக் 9:66).

**பாசிலிதசின் நற்செய்தி (BASILIDES, GOSPEL OF)**

இந்தப் போலி நற்செய்தி நூலினைப்பற்றி ஓரிசன் குறிப்பிடுகிறார். இந்நூலைப்பற்றி, அம்புரோஸ், எரோனிமு, யூசேபியு ஆகியோரும் தங்களது நூல்களில் குறிப்பிடுகின்றனர். இந்நூல் இன்று நம்மிடம் இல்லை. இந்நூல் 24 பகுதிகளாக அமைந்திருக்கலாம் என நாம் அறிகிறோம். அதிலிருந்து சில எடுத்துக்காட்டுகளே கிடைத்துள்ளன. இந்நற்செய்தி இயேசுவின் வாழ்க்கை விளக்கமாக அமைந்திருக்கலாம்; அல்லது லூக்கா நற்செய்திக்கு விளக்கவுரையாக இருக்கலாம். இதில் ஆசிரியர் தனது மாறுபட்ட கருத்துக்களைக் கொடுக்கிறார். இந்நூல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானவாதியான பாசிலிதசால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**பாசேயா (BAASEIAH - யாவேயின் வேலை, யாவே துணிவுடையவர்)**

கோகாதிய குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். ஆசாபு என்ற ஆலயப் பாடகரின் முன்னோர். பல கையெழுத்துப் பிரதிகளில் இப்பெயர் மாசேயா என்றுள்ளது. ஒரு வேளை இதுதான் சரியான பெயராக இருக்கலாம்.

**பாசேலி (PHASELIS)**

சிறிய ஆசியாவில் லீக்கியாவின் கடற்கரையில் கவிந்திருக்கும் நிலமுனையில் அமைந்திருந்த நகரங்களில் ஒன்று. இங்கு மூன்று துறைமுகங்கள் இருந்ததால், இந்நகரம் வாணிபத்தில் சிறந்திருந்தது மட்டுமல்லாமல் தன் நாணயங்களை அந்நகரமே வெளியிட்டது. ஆனால், சிறிது காலம் ஏதன்சு கூட்டாட்சி சிறிய ஆசியக் கடற்கரையில் ஆதிக்கம் செலுத்தியதால் தன் நாணயங்களை வெளியிட முடியாமல் போயிற்று. ஆனால், கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் பாசேலி சுதந்தரம் அடைந்தது. அனேகமாக கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்நகரம் தோலமியர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்க வேண்டும். கி.மு.168-ஐ ஒட்டி இது லீக்கியாவின் கூட்டாட்சியில் ஓர் அங்கத்தினர் ஆனது. உரோமைத் தூதுவன் யூதர்களுடன் போரிடாமல் இருக்கவும், அவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கவும், சில மாநிலங்களைக் குறிப்பாக, பாசேலியைக் கேட்டபோது, கி.மு. 138-இல் இது சுதந்தர நகரமாக இருந்திருக்க வேண்டும். இதிலிருந்து இங்கு யூதர்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது (1 மக் 15:23; கி.மு. 139-138). அடுத்த நூற்றாண்டில் உரோமையரின் ஆட்சியில் இந்நகரம் தன் சுதந்தரத்தை இழந்தது. பெரிய ஏரோது தன் சகோதரன் பாசயேலின் நினைவாக யோர்தான் பள்ளத்தாக்கில் கட்டிய பாசயேலி நகரமும், பாசேலி நகரமும் ஒன்று அல்ல.

**பாஸ்கா (PASSOVER, PASCHA - கடந்து செல்லுதல்)**

இயேசுவின் காலத்தில் யூத பாஸ்காவானது மோசேயின் விசுவாசிகள் அனைவரையும், பாஸ்கா செம்மறியைக் காணிக்கையாக்கி உண்ணவேண்டு மென்ற நோக்கத்திற்காக, எருசலேமில் ஒன்று சேர்த்தது. எகிப்திய அடிமைத் தளையினின்று எபிரேயரை மீட்ட யாத்திரையை இது கொண்டாடியது. இன்று கிறிஸ்தவ பாஸ்காவானது கிறிஸ்துவின் சீடர்களை, உண்மையான இறைவனின் செம்மறியாகிய அவர்களுடைய ஆண்டவருடைய சமூகத்தில் ஒன்று சேர்க்கிறது. அவர்களைப் பாவத்தினின்றும் மரணத்தினின்றும் விடுவித்து அவரது மரணத்துடனும் உயிர்ப்பினுடனும் அஃது அவர்களை ஒன்று சேர்க்கிறது. ஒரு விழாவினின்று மற்றொன்றிற்கு வெளிப்படையான தொடர்ச்சி உள்ளது. ஆனால், இயேசுவினுடைய பாஸ்காவின் இடைநிலை மூலமாக, பழைய உடன்படிக்கையினின்று புதிய உடன்படிக்கைக்குக் கடந்து செல்வதில், முன்னோக்கு மாற்றப்பட்டு விட்டது.

**1. இஸ்ராயேலின் கடந்து செல்லல்**

**1. நாடோடித்தன மற்றும் வீட்டுப் பண்புடைய, பண்டைய பாஸ்கா:** தொடக்கத்தில் பாஸ்கா ஒரு குடும்பவிழாவாக இருந்தது. ஆபிபு மாதம் (நாடு கடத்தப்பட்டதற்குப் பின் நீசான் என்று அழைக்கப்பட்டது), 14-ஆம் நாள், இளவேனிற்காலத்தில் ஞாயிறு நிலநடுக்கோட்டினைக் கடந்து செல்லும் முழுநிலவு இரவில் இது கொண்டாடப்பட்டது. மந்தைகளின் மீது இறையாசிகளை வருவிப்பதற்கென, அவ்வாண்டில் பிறந்த ஒரு சிறு விலங்கானது ஆண்டவருக்குக் காணிக்கையாக்கப்பட்டது. பலிப்பொருளானது செம்மறியாகவோ, குட்டியாகவோ ஆண்பாலானதாகவும், மருவற்றதாகவும் இருக்க வேண்டும் (யாத் 12:3-6). அதனுடைய ஒரு எலும்புகூட முறிவுபட்டிருக்கக்கூடாது (12:46; எண் 9:12). அதனுடைய இரத்தமானது, காப்பதன் அடையாளமாக ஒவ்வொரு வீட்டு வாயிலின் முன்னும் வைக்கப்பட்டது (யாத் 12:7.22). பயணம் செல்லவிருக்கும் விருந்தினர்களைப் போன்று அதனுடைய இறைச்சியானது. விரைவாக உண்ணப்பட்டது (12:8-11). இத்தகைய நாடோடித்தனமான மற்றும் வீட்டைச் சார்ந்த தனிக்கூறுகள், பாஸ்காவின் மிகப்பழமையான தொடக்கத்தைச் சுட்டுகின்றன. பாலைவனத்தில் கொண்டாட, இஸ்ராயேலரால் பார்வோனிடம்

கேட்கப்பட்ட பலி இதுவாக இருக்கலாம் (3:18;5:1தொ). இவ்வாறாக இது மோசேக்கும், எகிப்திலிருந்து புறப்படுதலுக்கும் முன்பானதாக இருக்கலாம். ஆனால், இதற்கு இதனுடைய உறுதியான பொருளை அளித்தது யாத்திரையே.

2. கடந்து செல்லலும் யாத்திரையும்; இறைவன் தன் தலையீட்டினாலான பல்வேறு செயல்களால், மிகக்குறிப்பாக, எகிப்தியரின் தலைப்பேற்றாண்களைக் கொல்கின்ற பத்தாவது கொள்ளை நோயின் மூலம் எகிப்தியரின் நுகத்தடியினின்று தனது மக்களை விடுவித்தபோது, இஸ்ராயேலின் சிறப்பான இளவேனிற்காலம் ஏற்பட்டது (யாத் 11:5; 12:12. 29-30). இந்நிகழ்ச்சியுடன் பாரம்பரியமானது பிற்காலத்தில், மந்தையின் தலைப்பேறுகளைக் காணிக்கையாக்குவதையும், முதல்பேறான இஸ்ராயேலரை மீட்பதையும் சேர்த்துக் கொண்டது (13:1-2. 11-15; எண் 3:13; 8:17). ஆனால், இந்த ஒத்த ஒப்பீடானது இரண்டாவதாகவே உள்ளது. கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், பாஸ்காவானது இஸ்ராயேலரை விடுவிப்பதுடன் இணைந்து வருகின்றது. இஃது அவர்களது வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்ச்சியாகிய யாத்திரையின் நினைவுச் சின்னமாக ஆகியது. இறைவன் எகிப்தியரைத் தாக்கி, தனது விசுவாசிகளைத் தப்பிக்கச் செய்தார் என்பதை இது நினைவுபடுத்துகிறது (12:26-27; 13:8தொ). இது முதல் பாஸ்காவின் பொருளும், அதனுடைய பெயரின் புதிய பொருளும் இவ்வாறே இருக்கும்.

பாஸ்கா என்னும் இச்சொல்லின் தோற்றமானது சர்ச்சைக்குரியதாக உள்ளது. சிலர் இதற்கு அசீரிய அல்லது எகிப்தியத் தோற்றத்தை அளிக்கின்றனர்; ஆனால், எதுவுமே பொருந்துவதாக இல்லை. விவிலியமானது நொண்டுதல் அல்லது பலியைச் சுற்றி சடங்குமுறை நடனமாடுதல் என்ற வினைச்சொல்லையோ (1 அர 18:21.26), உருவகமாகக் "குதித்தல்", "கடத்தல்", "விடுவித்தல்" என்பதையோ பொருளாகக் கொண்டுள்ளது. கடந்து செல்லல் என்பது, ஆண்டவர் எகிப்தியரைத் தாக்கியபோது இஸ்ராயேலரின் வீடுகளைக் கடந்து சென்ற பாதையாகும் (யாத் 12:13.23.27; எசா 31:5).

2. கடந்து செல்லலும் புளியாத அப்பமும்: காலப்போக்கில் பாஸ்காவுடன் மற்றொரு விழாவும் ஆதியில் தனிப்பட்டதாக இருந்தாலும், அதனுடைய இளவேனிற்காலத் தேதியின் காரணமாக, பாஸ்காவுடன் இணைக்கப்பட்டதாக உருவாயிற்று (யாத் 12:15-20). பாஸ்காவானது மாதத்தின் 14-ஆம் நாள் கொண்டாடப் பட்டது. புளியாத விழாவானது இறுதியாக 15-இலிருந்து 21-க்குக் குறிக்கப்பட்டது. இப்புளியாத அப்பங்கள், விளைச்சலின் முதல் கனிகளுடன் சேர்த்துக் காணிக்கையாக்கப்பட்டன (லேவி 23:5-14; உப 26:1). பழைய புளிப்பை நீக்குவதென்பது தூய்மை மற்றும் வருடாந்திர புதுப்பிப்பின் சடங்காக இருந்தது. இதனுடைய தோற்றமானது நாடோடித் தனமானதாகவோ, விவசாயத்தினுடையதாகவோ கருதப் பட்டது. இஃது எவ்வாறாக இருந்தாலும், இஸ்ராயேலின் பாரம்பரியமானது இச்சடங்கினையும் எகிப்திலிருந்து புறப்பட்டுச் செல்லுதலுடன் சேர்த்தது (யாத் 23:15; 34:18). புறப்பட்டுச் செல்வதன் அவசரமானது எவ்வளவு வேகமானதெனில், இஸ்ராயேலர்கள் தங்களுடைய பிசைந்த மாவு புளிப்பதற்கு முன்பே எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது என்பதை இது நினைவு கூர்கிறது (யாத் 12:34.39). வழிபாட்டு நாட்காட்டிகளில், பாஸ்கா மற்றும் புளியாத அப்பத் திருவிழாக்கள் சில நேரங்களில் வேறுபடுத்தப்பட்டும் (லேவி 23:5-8; எஸ் 6:19-22; 2 நாள் 35:17), சில நேரங்களில் குழப்பப்பட்டும் (உப 16:1-8; 2 நாள் 30:1-13) உள்ளன.

எந்நிலையிலும், ஆண்டுப் பாஸ்கா விழாக்களில் யாத்திரையின் மீட்பே பிரசன்னப்படுத்தப்படுகிறது. இவ்விழாவின் இந்த ஆழமான பொருளானது, சீனாய் (எண் 9) மற்றும் கானானில் நுழைதல் (நீதி 5), 716-ஐ ஒட்டி

யோசியாவின் சீர்திருத்தங்கள் (2 அர 23:21தொ), 515-ஐ ஒட்டி நாடு கடத்தப்பட்டதற்குப் பிற்பட்ட மறு சீரமைப்பு (எஸ் 6:19-22) போன்ற இஸ்ராயேலினுடைய வரலாற்றின் முக்கிய கட்டங்களில் அதிக முனைப்புடன் உணரப்படுகிறது.

**4. பாஸ்காவும் யாத்திரையைத் திரும்பத் திரும்பச் செய்தலும்:** இஸ்ராயேலானது மற்றொரு அடிமைத்தனத்திற்குக் கீழ்ப்படும் ஒவ்வொரு சமயத்திலும், எகிப்திய அடிமைத் தளையினின்று விடுவிக்கப் பெற்றது நினைவிற்குக் கொண்டுவரப்படுகிறது.

710-இல் அசீரிய அடிமைத்தளையின் கீழ், இறைவன் எருசலேமைக் காக்கும்போது (எசா 31:5; 10:26), எசாயா மீட்பினைப் பாஸ்கா இரவாக வாழ்த்துகிறார் (30:29). நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், 721-இல் அடிமைப்பட்டவர்களின் விடுதலையைப் புதிய யாத்திரையாக எரேமியா கொண்டாடுகின்றார் (எரே 31:2-21). எழுபதுநூலின் கிரேக்க வாசகப்படி முதலாவதன் துல்லியமான ஆண்டு விழாவாகவும் கொண்டாடப்படுகிறது: “இதோ, பாஸ்கா விழா நாளில் நாம் இஸ்ராயேலின் மக்களை அழைத்து வருவோம்”, (எரே 31:8) என்கிறார் இறைவன்.

பாபிலோனிய அடிமைத்தளையின் கீழ், 597-இல் நாடு கடத்தப்பட்ட மக்களின் வருகையானது இஸ்ராயேலின் நினைவில் யாத்திரையின் இடத்தைக் கொண்டிருக்குமென எரேமியா கூறுகின்றார் (23:7-8). இறுதியான யாத்திரையாக நாடு கடத்தப்பட்டதன் முடிவை (கி.மு. 587-538) இரண்டாம் எசாயா முன்னறிவிக்கிறார். இது, முந்தையதை மறைத்துவிடுமெனக் கூறுகிறார் (எசா 40:3-5; 41:17-20; 43:16-21; 49:9-11; 55:12-13; 63:7-64:11). சிதறிப்போனவர்களை ஒன்று சேர்ப்பதானது (49:6) செம்மறியாகிய ஊழியரின் பணியாக இருக்கும் (53:7). அவரே நாடுகளுக்கு ஒளியாகவும் உருவாகி, பாஸ்கா செம்மறியுடன் சேர்ந்து வரவிருக்கும் மீட்பரின் ஒரு மாதிரியாகவும் விளங்குவார்.

**5. ஆலய விழாவாகிய பாஸ்கா:** இவ்வாறாக, காலப்போக்கில் பாஸ்காவானது உருவாயிற்று. சில சிறப்புப் பண்புகளும், சில மாற்றங்களும் ஏற்பட்டன. இவற்றில் மிக முக்கியமானது, உப ஆகமம் பழைய குடும்பக் கொண்டாட்டத்தை ஆலய விழாவாக மாற்றியமைத்ததாகும் (உப 16:1-8). இந்தச் சட்ட முறையானது எசேக்கியாவின் காலத்தில் செயல்படத் தொடங்கியிருக்கலாம் (2 நாள் 30; எசா 30:29); எவ்வாறாயினும், யோசியாவின் காலத்தில் இஃது ஒரு நிறுவப்பட்ட உண்மையாக அமைந்தது (2 அர 23:21 தொ; 2 நாள் 35). இவ்வாறாக, பாஸ்காவானது வழிபாட்டின் பொதுவான மையப்படுத்துதலிலேயே தனது இடத்தைப் பெறுகிறது. அதனுடைய சடங்குமுறை பொருத்தமாக மாற்றி அமைக்கப்படுகிறது; பீடத்தின்மீது இரத்தம் ஊற்றப்படுகிறது (2 நாள் 35:11); மற்றும் குருக்களும் லேவியரும் இச்சடங்கின் முதன்மையான ஊழியர்களாக உள்ளனர்.

நாடு கடத்தப்பட்ட பின்னர், பாஸ்காவானது மிகப்பெரிய விழாவாக உருவாயிற்று. அதனை விட்டுவிடுதலானது யூதருக்கு ஒரு மெய்யான சமய நீக்கத்தைக் கொண்டு வந்தது (எண் 9:13). விருத்த சேதனம் செய்யப்பட்டோர் மட்டுமே அதில் பங்கு பெறலாம் (யாத் 12:43-49). அவசரத்தேவைகளில், இஃது ஒரு மாதத்திற்குத் தள்ளி வைக்கப்படலாம் (எண் 9:9-13; 2 நாள் 30:2 தொ). குருக்கள் புகுத்திய இந்த நிபந்தனைகள் அது முதல் மாற்றப்பட முடியாத சட்டத்தன்மையைக் கொண்டிருந்தன. 419-ஆம் ஆண்டினுடைய ஒரு சுவடியின்படி, எகிப்தினுடைய எலி பன்டைனிலுள்ள யூதக் குடியிருப்பில் வழக்கில் இருந்தது போல் புனித நகருக்கு வெளியே, பாஸ்காவானது சந்தேகத்திற்கிடமின்றி இங்குமங்குமாக குடும்ப முறையில் கொண்டாடப்பட்டது. ஆனால், செம்மறியைப் பலியிடுதலானது காலப்போக்கில் இத்தகைய தனிப்பட்ட கொண்டாட்டங்களினின்று படிப்படியாக

விடப்பட்டு விட்டது. அப்போது முதல், இவை எருசலேமின் ஆடம்பரத்தினால் மறைக்கப்பட்டு விட்டன.

**6. பாஸ்கா, இறைவனுடைய பெரிய செயல்களின் காலம்:** இவ்வாறு, பாஸ்காவானது வழிபாட்டு ஆண்டின் முக்கிய திருயாத்திரைகளில் ஒன்றாக உருவாயிற்று. யூத மதத்தில் அது பல்வளஞ்செறிந்த பொருளைப் பெறுகிறது. இதை யாத் 12:42-க்கு அளிக்கும் விளக்கத்தில் தார்கூம் விவரிக்கிறது. அடிமைத் தனத்தினின்று இஸ்ராயேல் காப்பாற்றப்பட்டதானது, குழப்பத்தினின்று உலகை வெளிக்கொணர்ந்ததையும், ஈசாக்கு மரணத்தினின்று காப்பாற்றப்பட்டதையும், ஏங்கி எதிர்பார்த்த மெசியாவினால் மனித இனம் அதனுடைய துன்பத்தினின்று விடுவிக்கப்பட்டதையும் சுட்டுகிறது. இக்கருத்துக்கள் விவிலியத்தில் மிகுந்த ஆதரவைக் காண்கின்றன.

**அ) பாஸ்காவும் படைப்பும்:** படைப்பும் மீட்பும் அடிக்கடி, குறிப்பாக பாஸ்கா புகழுரையில் (அல்லேல்), இணைக்கப்படுகின்றன; சங் 136:4-15; காண்க. ஓசே 13:4; எரே 32:17-21; எசா 51:9-10; நெகே 9; சங் 33:6-7; 74:13-17; 77:17-21; 95:5-9; 100:3; 124:4-8; 135: 6-9; ஞான 19. இறைவன் காலத்தின் தொடக்கத்தில் முதலில் பெருங்கடலை இரண்டாகப் பிரித்ததன் காரணமாகவே (ஆதி 1:6). பின்னர் அவரால் செங்கடலைப் பிரிக்க முடிந்தது (யாத் 14:21).

**ஆ) பாஸ்காவும் ஈசாக்கும்:** அவ்வாறே, இறைவன் யாக்கோபின் மக்களைக் காப்பாற்றக்கூடிதென்பது, முதலில் அவர்களுடைய முன்னோரை அவர் காப்பாற்றியதே காரணமாகும். ஆபிரகாம் யாத்திரையை எதிர்நோக்கி உள்ளார் என்றும் (ஆதி 15:13-14). அதற்கான உறுதியானது ஈசாக்கின் பாதுகாப்பு என்றும் (ஆதி 22) சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், பிற்கால பாஸ்காச் செம்மறியைப்போன்று (உப 16), ஈசாக்கும் சீயோன் மீது காணிக்கையாக்கப் பட்டிருக்க வேண்டும் (2 நாள் 3:1); மற்றும் பிற்காலத்தில் இஸ்ராயேலுக்கு ஏற்பட்டது போன்று (யாத் 12:23; 1 நாள் 23:15), ஈசாக்கு கத்தியினின்றும் காப்பாற்றப்பட்டார் (ஆதி 22:12). ஈசாக்கு ஓர் ஆட்டுக்கிடாயினாலும், இஸ்ராயேல் செம்மறியினாலும் காப்பாற்றப்படுகின்றனர். பிற்காலத்தில் பாஸ்காப்பலிப்பொருளின் இரத்தம் இருக்கப்போவதைப் போன்று (எசே 45:18-24), தனது விருத்த சேதனத்தில், பரிகார மதிப்பில் ஏற்கெனவே செல்வாக்கு மிக்கதாக உள்ள இரத்தத்தை ஈசாக்கு சிந்துகிறார் (யாத் 4:24-26). ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, ஈசாக்கு தனது மொத்த இரத்தத்தையும் சிந்தத் தயாராக இருப்பதன் மூலம் பாஸ்காச் செம்மறியாகிய இயேசு கிறிஸ்துவை முன்குறிப்பதற்குத் தகுதியுடையவராகிறார் (எபி 11:17-19).

**இ) பாஸ்காவும் மெசியாவின் காலமும்:** கடந்த காலத்திலான இறைவனின் அனைத்துத் தலையீடுகளும், எதிர்காலத்தில் ஓர் உறுதியான தலையீட்டின் நம்பிக்கையை உருவாக்குகின்றன. இறுதியான (இறுதிக்கால) மீட்பானது புதிய படைப்பு (எசா 65:17), திரும்ப இயலா யாத்திரை (65:22-23), தீமையின் மீதான முழுமையான வெற்றி, மற்றும் மீண்டும் பெறப்பட்ட இன்பவனம் (62:25) என்று பார்க்கப்படுகிறது. இம்மாற்றத்தைச் செயல்படுத்துமாறு இறைவன் இப்பணியை அளிக்கின்ற தூதுவர், மெசியாவைத்தவிர வேறொருவருமில்லை (11:1-9). இக்கருத்தானது எவ்வளவு வலுவாக இருந்ததெனில், ஒவ்வொரு பாஸ்கா இரவிலும் யூதர்கள் அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்தனர். சிலர் மெசியாவைத் தொடர்ந்து போர்வீரனாகக் கருதிக்கொண்டிருந்தமையால், தேசியவாதத்தை மீண்டும் எழுப்புகின்ற அபாயமும் இங்குண்டு. மேலும், பாஸ்கா காலத்திலேதான் அடிக்கடி அரசியல் இயக்கங்கள் தோன்றுவதும் (லூக் 13:1தொ), அல்லது சமய உணர்ச்சிகள் தூண்டப்படுவதும் (அ.ப. 12:1-4) நிகழ்ந்தன.

உரோமையர் ஆட்சிக் காலத்தில் பாஸ்கா விழாக் காலத்தில் அமைதியை நிலைப்படுத்த அதிகாரிகள் விழிப்பாயிருந்தனர். மேலும், ஒவ்வோர் ஆண்டும் இக்காலத்தில் உரோமை ஆளுநன் எருசலேமிற்குச் செல்வார். ஆனால், சமய விசுவாசமானது இந்த உணர்ச்சிப்பெருக்கிற்கு அப்பாலும் நோக்கி, ஐயுறவு நிலைக்கு உட்படாது சுதந்தரமாகவும் இருக்கலாம். இறைவன் அனுப்பவிருக்கிற மெசியாவின் வருகையின் முறையையும், காலத்தையும் குறிப்பிடுவதை அஃது இறைவனிடமே ஒப்படைத்து விடுகிறது.

II. **இயேசுவின் பாஸ்கா:** உண்மையில் மெசியா வந்தார். முதற்கட்டமாக இயேசு, யூதரின் பாஸ்காவில் பங்கு கொண்டார். அவருடைய நோக்கமானது அதை நிறைவு செய்வதாகும். இறுதியாக அவர் அதனை அகற்றி, நிறைவு செய்கிறார்.

பாஸ்காவின் காலத்தில், அதனுடைய பொருளைப் படிப்படியாக மாற்றிய வார்த்தைகளை இயேசு உரைத்து, செயல்களைச் செய்தார். இவ்வாறு தந்தைக்கு அருகில் இருப்பதை அறிந்துள்ளதால் (லூக் 2:41-51), திருத்தூயகத்துக்கு அருகில் இருக்கிற ஒரே மகனின் பாஸ்காவை நாம் கொண்டுள்ளோம்; இயேசு தற்காலிக புனித இடத்தைத் தூய்மைப்படுத்தி, உறுதியான புனிதத் தலமாகிய தனது உயிர்த்த உடலைப் பற்றி அறிவித்த புதிய ஆலயத்தின் பாஸ்காவைக் (யோவா 2:13-23; காண்க. 1:14. 51;4:21-24) கொண்டுள்ளோம்; பலியில் காணிக்கையாக்கப்படவுள்ள அவரது உடலாக உள்ள பன்மடங்காக்கப்பட்ட அப்பத்தின் (யோவா 6) பாஸ்காவைக் கொண்டுள்ளோம்; மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியாக பாஸ்காப் பலிப்பொருளின் இடத்தை இயேசு ஏற்கின்ற புதிய செம்மறியின் பாஸ்கா, புதிய பாஸ்கா உணவை நிறுவி, இப்பாவ உலகினின்று தந்தையினுடைய அரசிற்குக் கடந்து செல்லுதலாகிய அவரது புதிய யாத்திரையைச் செயல்படுத்துகிறார் (யோவா 13:1).

நற்செய்தியாளர்கள் இயேசுவின் எண்ணங்களை நன்றாகப் புரிந்துகொண்டு, பல்வேறு நுட்ப வேறுபாடுகளின் மூலம் அவற்றிற்கு ஒளி அளித்தனர். முதல் மூன்று ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் இறுதி இரவுணவைப் (பாஸ்காவிற்கு முந்தின நாளே உண்ணப்பட்டாலும்) பாஸ்கா உணவாக விவரிக்கின்றனர். எருசலேமின் சுவர்களுக்குள்ளாகவே இந்த இரவுணவு உண்ணப்படுகிறது. அல்லேல் பாடப்படுவதை உள்ளடக்கிய (மாற் 14:26) அனைத்தையும் கொண்ட திருவழிபாட்டில் இஃது அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இது புதிய பாஸ்காவின் உணவாகும். அப்பத்தின் மீதும் திராட்சைரசத்தின் மீதும் கூறப்பட்ட வழிபாட்டு ஆசிகளுக்குள், நற்கருணை அமைப்பை இயேசு இணைக்கின்றார். தனது உடலை உண்பதற்கும், தனது இரத்தத்தைக் குடிப்பதற்கும் தருவதன் மூலம், தானே புதிய செம்மறியாக உள்ள பாஸ்காவின் பலியாகத் தனது மரணத்தை அவர் விவரிக்கிறார் (மாற் 14:22-24 இணை). செம்மறியாகிய இயேசுவிற்குத் தனது நற்செய்தியில் பல்வேறு சுட்டிக்காட்டுதல்களை உட்புகுத்தி (யோவா 1:29.36), நீசான் மாதம் 14-ஆம் நாளின் பிற்பகலில் செம்மறியைப் பலியிடுதலையும் (18:28; 19:14.31;42), உண்மையான பாஸ்கா பலிப்பொருளின் சிலுவை மரணத்தையும் (19:36) ஒன்றுபடுத்துவதன் மூலம், இவ்வுண்மையை வலியுறுத்த யோவான் விரும்புகிறார்.

III. **கிறிஸ்தவ பாஸ்கா:**

1. **ஞாயிறு பாஸ்கா:** ஓய்வு நாளுக்கு முந்தின நாள் சிலுவையில் அறையப்பட்ட இயேசு (மாற் 15:42; யோவா 19:31), வாரத்தின் முதல் நாளாகிய (மாற் 16:2 இணை) ஓய்வு நாளுக்கு அடுத்த நாள் உயிர்த்தெழுந்தார். அப்போஸ்தலர்கள் தங்களது உயிர்த்த ஆண்டவரைக் கண்டதும் முதல் நாளிலேயே இரவுணவின் புதுவடிவாகிய உணவின்போது அவர் அவர்களுக்குத் தோன்றுகின்றார் (லூக் 24:30.42-43; மாற்

16:14; யோவா 20:19-26; 21:1-14; அ.ப. 1:4). எனவே, வாரத்தின் முதல் நாளில் கூடிய கிறிஸ்தவர்கள், அப்பத்தைப் பிட்குதலுக்காக ஒன்றுசேரப்போகிறார்கள் (அ.ப. 20:7; 1 கொரி 16:2). இந்நாளானது வெகு விரைவிலேயே, ஆண்டவரின் நாள் என்று புதிய பெயரைப் பெறும் (திருவெளி 1:10). அது கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கிறிஸ்தவர்களுக்கு நினைவுபடுத்தியும், அவரது நற்கருணையில் அவர்களை அவரோடு ஒன்றுபடுத்தியும், அவரது மறு வருகையைப் பற்றிய நம்பிக்கையை நோக்கி அவர்களைத் திருப்புகிறது (1 கொரி 11:26).

2. வருடாந்திர பாஸ்கா: ஞாயிறு பாஸ்காவிற்கு அப்பாற்பட்டு, புதியதொரு உட்பொருளும் உள்ளது. யூதர்கள், அன்னிய அடிமைத் தளையினின்றான தங்களது மீட்பைக் கொண்டாடி, ஒரு தேசிய மெசியாவாகிய விடுவிப்பாளரை எதிர்பார்த்திருந்த வேளையில், சிலுவையில் மரித்து உயிர்த்த கிறிஸ்துவுடன் அவருடைய முடிவில்லா வாழ்வைப் பகிர்வதன் மூலம் தங்களை இணைத்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்தான தங்களுடைய விடுதலையைக் கிறிஸ்தவர்கள் கொண்டாடி, அவருடைய மகிமை மிக்க வருகையை நோக்கி, தங்களுடைய நம்பிக்கையைத் திருப்பினர்.

பகல்லப்போல ஒளிவீசும் அவ்விரவில், உலகின் பாவங்களைத் தன்மீது ஏற்று, சுமக்கின்ற இறைவனுடைய செம்மறியுடனான புனித இரவுணவின் சந்திப்பிற்கெனத் தயாரிக்கும்விதமாக, யாத்திரையின் வரலாறானது புதியதொரு ஆழத்துடன் வாசிக்கப்படுகின்ற திருவிழிப்பிற்கென அவர்கள் ஒன்று சேர்கின்றனர் (பேதுரு 1:13-21); திருமுழுக்கினால் யாத்திரையில் இறைவனின் மக்களாக உருவாக்கப்பட்ட அவர்கள் (1:17), இடைக்கச்சை கட்டியவர்களாக (1:13), தீமையினின்று விடுவிக்கப்பட்டவர்களாய், விண்ணக அரசினுடைய வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அவர்கள் முன் செல்கின்றனர். அவர்களுடைய பாஸ்கா பலிப்பொருளாகிய கிறிஸ்து பலியிடப்பட்டுவிட்டதால், அவர்கள் தீய நடத்தையாகிய பழைய புளிப்பு மாவினாலன்றி, தூய்மை மற்றும் உண்மையின் புளியாத அப்பத்தினால் விழாவைக் கொண்டாட வேண்டும் (1 கொரி 5:6 தொ). கிறிஸ்துவுடன் பாவத்திற்கு இறந்து புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுந்ததன் மூலம் பாஸ்கா மறைபொருள் அவர்கள் தனிப்பட்ட விதமாக வாழ்ந்தனர் (உரோ 6:3-11; கொலோ 2:12). இதன் காரணமாகவே, உயிர்ப்பின் விழாவானது, பாஸ்கா மறைபொருள் மீண்டும் வாழ்கின்ற கிறிஸ்தவர்களின் உயிர்ப்பாகிய திருமுழுக்கின் சலுகைக்குரிய தருணமாக, விரைவிலேயே உருவாயிற்று. பாஸ்காவின் தேதி பற்றிய 2-ஆம் நூற்றாண்டின் பிரச்சனையானது, யூத விழாவினுடைய இறுதி கடந்து செல்லலைக் கோடிட்டுக் காட்டுகின்ற இந்த ஆழமான பொருளைப் பழுதுபடாமல் விட்டுச்செல்கிறது.

3. **இறுதிக்காலப் பாஸ்கா:** பாஸ்கா மறைபொருளானது ஆண்டவருடனான சந்திப்பு, மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் மூலமாகக் கிறிஸ்தவர்களால் அடையப்படுகிறது. மண்ணுலக பாஸ்காவானது, வரவிருக்கும் பாஸ்காவாகிய இந்த இறுதிக் கடந்து செல்லலுக்கு அவர்களைத் தயாரிக்கிறது. உண்மையில் "பாஸ்கா" என்ற இச்சொல்லானது, கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்ப்பினுடைய மறைபொருளையோ, வாராந்தர அல்லது வருடாந்தர நற்கருணைச் சடங்கையோ மட்டுமே குறிப்பிடாமல், நாம் அனைவரும் பயணம் மேற்கொண்டுள்ள விண்ணகப் பெருவிருந்தையும் சுட்டிக்காட்டுகிறது. திருவெளிப்பாட்டு நூலானது, வேதனைகளால் இன்னமும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், நேர்மையாக வாழ்ந்து நிமிர்ந்து நிற்கின்ற செம்மறியை நோக்கித் தமது கண்களை உயர்த்துகின்றது. மகிமையால் நிரப்பப்பட்ட அவர், தனது மறை சாட்சிகளைத் தன்னை நோக்கி ஈர்க்கிறார் (திருவெளி 5:6-12; 12:11). அவருடைய சொற்களின்படியே, தனது மரணத்தினுடைய நற்கருணைப் பலியுணவினாலும், தனது

உயிர்ப்பினாலும், தனது பலியின் நிரந்தர அருட்சாதனத் தன்மையாலும், மற்றும் இறுதியாகத் தனது மறு வருகையினாலும் (லூக் 22:16), இயேசு உண்மையாகவே பாஸ்காவை நிறைவேற்றியுள்ளார். அவரது மறு வருகையானது, அவரது தந்தையினுடைய அரசின் இறுதிப் பெருவிருந்தினுடைய மகிழ்ச்சியில் நம்மை இணைக்க வேண்டியுள்ளது (மத் 26:29).

### பாஸ்காச் செம்மறி (PASCHAL LAMB)

பாஸ்கு அல்லது கடந்து செல்லுதல் விழாவில் கொல்லப்பட்ட செம்மறி. இது கிறிஸ்துவின் சாவை யூத பாஸ்கோடு இணைத்துக் கூறும்போது உருவகமாகப் பயன்படுகிறது (1 கொரி 5:7). காண்க. பாஸ்கா.

### பாடை (BIER)

இஃது அடக்கம் செய்யப்படும் முன் உடல் வைக்கப்பட்டிருக்கும் தூக்குக்கட்டில் அல்லது படுக்கையாகும் (காண்க. அடக்கம்). 2 சாமு 3:31; 2 நாள் 16:14; லூக் 7:14 ஆகிய இடங்களில்தான் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன பகுதிகளிலிருந்து தாவீது மன்னன், அப்னேர் இறந்த பின், அவர் பாடையின் பின்னால் சென்றார் என்றும், இயேசு நயீன் பட்டணத்து இளைஞன் இறந்தபோது அவன் பாடையைத் தொட்டார் என்றும் நாம் அறிகிறோம். இதிலிருந்து பாடை என்பது தூக்கிச் செல்லப்படும் ஒன்றாக இருந்திருக்கின்றது. ஆசா என்பவரின் அடக்கத்தின் குறிப்புகளிலிருந்து இந்தப் பாடை என்பது அகலமாகவும் இருந்தது; கல்லறைக்குள்ளும் வைக்கும்படியாக இருந்தது என்று தெரிகிறது.

### பாதங்கழுவும் பாத்திரம் (WASHBASIN)

இந்தச் சொல் சங் 60:8; 108:9 ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எபிரேயச் சொல் வாய் அகலமான சமைக்கும் பாத்திரத்தைக் குறிக்கும். சமைக்கும் பாத்திரம் சடங்கு முறைப்படி சுத்தமாய் வைத்திருக்கப்பட வேண்டியது, மேற்கூறப்பட்ட பகுதிகளில் கால் கழுவும் பாத்திரமாக இழிவுபட்டு விட்டது. இப்பகுதிகளில் மோவாபு இறைவனுக்குப் பாதம் கழுவும் பாத்திரமாயிற்று என்று கூறப்பட்டதற்கு மோவாபு சாக்கடலுக்கு அருகிலிருந்தது காரணமாகலாம்.

### பாதாளத்தில் இறங்குதல் (DESCENT IN HADES)

கிறிஸ்தவ விசுவாச அறிக்கை, இயேசு இறந்து, அடக்கம் செய்யப்பட்டு, பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மைகளைக் கொண்டுள்ளது. "பாதாளங்களில் இறங்கி" என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டு மொழியை அடிப்படையாகக் கொண்டது. இங்குப் "பாதாளம்" என்பது இறந்தோரின் உறைவிடமான எபிரேயச் "செயோலைக்" குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் செயோல் பற்றிய கருத்தில் சன்மானமும் இல்லை, தண்டனையுமில்லை; நல்லோர், தீயோர் நிலை வேறுபாடும் இல்லை. பழைய ஏற்பாட்டில் இறத்தல் என்பது "செயோலுக்குள் இறங்குதலாகும்." உயிர்த்தெழுபவன் செயோலிலிருந்து எழுகிறான். ஆனால், லூக் 23:43-இல் வேறுபட்ட கருத்து முற்கோளாகக் கொள்ளப்படுகிறது. இங்கு மனந்திரும்பிய நல்ல கள்ளனுக்கு இயேசு "நீ இன்று என்னோடு பேரின்பவீட்டில் இருப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்கிறார். "என்னைப் பாதாளத்திடம் (செயோல்) ஒப்புவிக்க மாட்டீர்; உம் அன்பனைப் படுகுழியைக் காணவிடமாட்டீர்" என்ற சங் 16:10-இன் வாசகத்தைப் பேதுரு இயேசுவுக்குச் சாற்றிக்கூறுகிறார் (அ.ப. 2:27). ஆகவே "மரண வேதனை"யை இறைவன் கலைத்து அழித்து விட்டார்; ஏனெனில் மரணம் இயேசுவைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை (அ.ப. 2:24-31). இந்த வாசகம், இயேசுவின் இறப்பு, அதன் விளைவாக அவரது உயிர்ப்பையும் பற்றிய உண்மையை உறுதியாக அறிவிக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் கூறவில்லை. ஆனால் 1 பேதுரு 3:19-இல், இயேசு "சிறையிலிருந்த

ஆன்மாக்களிடம் சென்று அவர்களுக்குத் தம் செய்தியை அறிவித்தார்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆன்மாக்கள் நோவா காலத்தில் வாழ்ந்த அவிசுவாசிகள் ஆவர். இந்த வாசகத்தைக் கொண்டு, இயேசு பாதாளங்களில் இறங்கி, அங்கு விடுதலை அறிவித்தார் என்ற கருதுகோளை அமைக்க முடியாது. ஏனெனில் நோவா காலத்திலிருந்த அவிசுவாசிகள், தங்கள் அவிசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு மாறிவிட்டனர் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. ஆகவே, அவர்கள் இயேசுவின் மீட்பில் பங்கு பெற வாய்ப்புக்கொண்டிருக்கவில்லை. இங்கு வரும் அறிவிப்பு, இயேசு பாவம் மற்றும் இறப்பின்மேல் கொண்ட வெற்றி பற்றியதாகத் தெரிகிறது. 1 பேதுரு 4:6-இல் மனிதருக்கேற்ப ஊனுடலில் தீர்ப்பைப்பெற்றவர்கள் இறைவனுக்கேற்ப ஆவியில் வாழும் பொருட்டு இறந்தோருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பை இயேசுவே செய்தார் என்பதற்கு எக்குறிப்புமில்லை. பவுல் (உரோ 10:6தொ) உப 30:12; சங் 107:26-ஆகிய இரு வாசகங்களையும் இணைத்து, கிறிஸ்துவைக் கீழே கொண்டு வருவதற்காக வானகத்திற்கு ஏறுபவன் யார்? அல்லது கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து கொண்டுவருவதற்காக, கீழ் உலகுக்கு இறங்குபவன் யார்? என்று கேட்கிறார். இங்கும் இயேசுவின் இறப்பு என்னும் உண்மை பற்றிய குறிப்பே உள்ளது. எபே 4:8-தொ-இல் சங் 68:18 என்ற பகுதி இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. சங்கீதத்தில் குறிக்கப்படும் ஏறிச் செல்லுதல், 'மண்ணுலகின் கீழ்ப்பகுதிக்கு' இயேசு இறங்கியதோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. இப்பகுதியில் கீழ்ப்பகுதிக்கு இறங்குதல் வெறுமனே இயேசு மனிதனானதைக் குறிக்கிறதா அல்லது அவரது இறப்பு மற்றும் அடக்கத்தைக் குறிக்கிறதா என்பது தெளிவாக இல்லை. "இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு" (கொலோ 1:18) என்பது உறுதியாக இயேசுவின் உயிர்ப்பைக் குறிக்கிறது. ஆனால், இறங்குதல் பற்றி ஒன்றும் கூறவில்லை. இயேசு பரிசேயர்களுக்கு யோனாவின் அடையாளத்தைக் கொடுத்தார் (மத் 12:40). எவ்வாறு யோனா மூன்று பகலும் மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். இஃது இயேசுவின் அடக்கம் பற்றிய குறிப்பாகும். இப்பகுதிகளில், யூதத்துவத்தின் மொழி எளிய முறையில் பயன்பட்டுள்ளது. யூதத்துவம் விண்ணகத்தை இறைவனின் உறைவிடமாகவும், இறந்தோரின் உறைவிடமான செயோலைப் பூமிக்கு அடியில் இருப்பதாகவும் கருதியது. உலக அமைப்பைப்பற்றிய இந்தக் குழந்தைத் தனமான நோக்கு, இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகியவை பற்றிய விசுவாசத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. மேற்கூறப்பட்ட வாசகங்கள் எல்லாம் இயேசுவின் இறப்பைப்பற்றிய உண்மையைச் செயோலுக்குள் இறங்குவதாக எடுத்துக் கூறுகின்றன. "நரகத்தின் பெரும் வேதனை", தந்தையர்கள் தங்கிய இடத்திற்கு இயேசுவின் விடுதலை அளிக்கும் பயணம், அவரது உயிர்ப்பில் அவர்கள் அவரோடு சேர்ந்து எழுதல் ஆகியவை பற்றிய கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் புதிய ஏற்பாட்டில் அடிப்படை கொண்டிருக்கவில்லை.

## பாதாளம், படுகுழி (ABYSS)

சரியாக நிர்ணயிக்கப்படாத, புதிரான ஒருகுழி என்று பொருள் கொள்ளலாம். இறந்தவர்கள் வாழும் இடத்தைக் குறிக்கும் பல சொற்களில் இதுவும் ஒன்று. இதற்கு ஆழம், அடிப்பகுதியே இல்லாத குழி, இருள் நிறைந்த பாதாளம் (ஆதி 1:2), ஆழம் காணாக் குழி, பூமியின் அடிப்பகுதி என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். லூக் 8:31-இல் பாதாளம் அல்லது படுகுழி பேய்கள் சிறைப்பட்டிருக்கும் இடமாகும். உரோ 10:7-இல் இஃது இறந்தோரின் உறைவிடமான செயோலுக்கு மற்றொரு பெயராகும். திருவெளிப்பாட்டில் வரும் பாதாளக்குழி (திருவெளி 9:1-2,11; 11:7; 20:1,3), பேய்கள், அவைகளின் நிலையான உறைவிடமான எரிகிற

நெருப்புக்கடலில் எறியப்படும் காலம் வரும் வரையில் (19:20; 20:10), தங்கியிருக்கும் இடமாகும்.

**பாதி அல்லது அரைக்கோத்திரம் (HALF-TRIBE)**

இந்தச் சொல் மனாசேயோடு தொடர்பாக, யோசுவா, 1 நாள் ஆகமம் ஆகிய நூல்களில் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எண்ணிக்கை நூல், உப ஆகமம் ஆகிய நூல்களில் ஒரு சில இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எஸ்போனின் அரசன் சீகோனையும் பாசானின் அரசனான ஓகுவையும், மோசேயும் அவரது படைகளும் தோற்கடித்தபின் ரூபன், காது ஆகிய கோத்திரங்களைப் போன்று மனாசேயின் அரைக்கோத்திரமும் யோர்தானுக்குக் கிழக்கில் குடியேற அனுமதி கேட்டது. அவர்கள் கானானைக் கைப்பற்றுவதிலும் மேற்குப் பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவ உதவி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின்பேரிலும் அனுமதி வழங்கப்பட்டது (எண் 32:33-42; உப 3:12-13; 29:8; யோசு 12:4-6; 18:7). இந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டபின்பு, மனாசேயின் அரைக்கோத்திரம் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள தனது பகுதிக்குத் திரும்பியது (யோசு 1:12-18; 4:12). இக்கோத்திரத்திற்குக் கிலயாதின் ஒரு பகுதியும் பாசானின் முழுப்பகுதியும் கொடுக்கப்பட்டது (உப 3:13-15; யோசு 13:29-33). மற்றொரு அரைக்கோத்திரம் மத்திய பாலஸ்தீனத்தில் குடியேறியது (யோசு 17:5-10).

**பாதுகாப்பாளர் (GUARDIAN)**

வயதுக்கு வராதவனையும் அவனுடைய சொத்தையும் காக்க, பொறுப்பு உள்ளவனாக சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்ட ஓர் ஆள்; வயதுக்கு வந்த ஆள். பொதுவான பொருளில் கிரேக்கச்சொல் "காரியத்தலைவனை" (மத் 20:8; லூக் 8:3) அல்லது ஆளுநனைக் (லூக் 3:1) குறிக்கிறது. ஆனால், குறிப்பிட்ட சட்டபூர்வமான பயன்படுத்துதலில், வயதுக்கு வராதவனுடைய பாதுகாப்பாளன் என்பதைக் குறிக்கும். சாதாரணமாக இதே பொருளில் ராபிகளின் இலக்கியத்தில் கடன் வார்த்தையாகக் காணப்படுகிறது. லீக்கியா சீரியா நாட்டு இளவரசன் அந்தியோக்கு எயுபாத்தரின் பாதுகாப்பாளன் என்று அழைக்கப்படுகிறார் (2 மக் 11:1; 13:2; 14:2; காண். 1 மக் 3:32-33; 6:15-17). இதே பொருளில் புதிய ஏற்பாட்டில் வரும் ஒரே இடம் கலா 4:2 ஆகும். அங்கு, பவுல் இயேசுகிறிஸ்துவுக்கு முன் யூத சட்டம் ஒரு தற்காலிக அமைப்பு என்று வாதிடும்போது இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

**பாதை, வழி சாலை (ROAD)**

இவற்றைக் குறிக்கும் எபிரேயச் சொற்கள் வரும் சில இடங்கள் (ஆதி 38:14.16; எண் 22:23-34; உப 2:8.27; எசா 59:8; எரே 6:16; 18:15; 1 நாள் 26:16.18; மத் 21:8; மாற் 10:32; 11:8; லூக் 9:58; 10:4.31; 19:36; 24:32.35; அ.ப. 8:26.36; 9:17.27).

அன்றைய தென்மேற்காசியாவின் முக்கிய நாடுகளை வியாபார அடிப்படையிலும், வரலாற்றடிப்படையிலும் இணைத்த முக்கிய நெடுஞ்சாலைகள் பாலஸ்தீனத்தின் வழியே சென்றன. இவை திருத்தலங்களுக்குப் பாத யாத்திரை செல்வதற்கும் படைகளை நடத்திச் செல்வதற்கும் பயன்பட்டன. எருசலேமும், தமஸ்கு நகரும் திருத்தலங்களாக மட்டுமல்ல, வியாபார மையங்களாகவும் ஆனதால் இரண்டு வகையிலும் பயன்பட்டன.

விவிலிய வரலாற்றில் சாலைகளும், பயணங்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பார்க்கிறோம். பாலஸ்தீனத்தைக் கடந்து சென்ற சாலைகள் பல முக்கியமான நாடுகளுக்கு இட்டுச்சென்றன. மேலும், முக்கியமான சந்திப்புகளில் அமைந்துள்ள கோட்டைகள் படை பலத்தையும், இயக்கத்தையும், வியாபாரப்போக்கையும் கட்டுப்படுத்துவதாக அமைந்தன.

பாலஸ்தீனத்திலிருந்து எகிப்துக்குச் செல்லும்

முக்கிய வழி கடற்கரையோரமாகச் செல்கிறது. இஸ்ராயேலர் கி.மு. 586-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது பாலஸ்தீனத்துக்கும் பாரசீகத்துக்கும் இடைப்பட்ட வளமான பகுதியைச் சுற்றி யூப்பிரத்தீசு நதி வழியாகப் பாபிலோனைச் சென்றடைந்திருக்க வேண்டும். பாலைவனத்தில் பல வழிகள் இருந்தாலும் இந்த வழியாகச் சென்றிருந்தால்தான் விலங்குகட்கும், மனிதர்கட்கும் தேவையான நீர் கிடைத்திருக்கும் (நெகே 7:66-69).

விவிலிய நாட்டில் இருந்த மிகப்புகழ் பெற்ற சாலை மேற்கு நெடுஞ்சாலை அல்லது கடற்கரைச்சாலை ஆகும். இது பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. யோர்தானுக்கும், கலிலேயாவுக்கும் இடையே சென்ற ஒரு பிரிவு தமஸ்கு நகரையும், தோத்தானையும் இணைத்தது. கப்பர்நாகும் வழியாக கெனசரேத் வரை சென்ற ஒரு சாலைப்பிரிவு மேற்கு நெடுஞ்சாலையை 'ராமா'வில் தொட்டது. கப்பர்நகுமிலிருந்து எசுதிரலோன் சமவெளி வழியாக, தாபோர் மலைக்குத் தெற்கே சென்று, மெகிதோ வழியாக எகிப்து வரை சென்ற ஒரு சாலைப்பிரிவு அதிகம் பேர் பயணம் மேற்கொண்ட சாலையாகும். கர்மேல் மலைப்பகுதி வழியாக அந்தியோக்குவரை ஒரு பிரிவு சென்றது. முக்கிய சாலைகள் கலிலேயா, எசுதிரலோன் சமவெளி வழியாக எருசலேம், எபிரோன், பெயேர்-செபா போன்ற ஊர்களையும் இணைத்தன. எரி கோவிலிருந்து ஒரு சாலை எருசலேமின் வட பகுதி வழியாக யோப்பா வரை சென்றது. விவிலியத்தில் அரச நெடுஞ்சாலை மூன்றுமுறை குறிக்கப்படுகிறது (எண் 20:17; 21:22; உப 2:27). இச்சாலை தமஸ்குவிலிருந்து புறப்பட்டு, கிழக்குப் பாலஸ்தீனம் வழியாக ஓடி, பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு மற்றும் ஏதேமை இணைத்து, நெகேபில் பெனிசியாவிலிருந்து எகிப்துக்கு ஓடிய குறுக்குச் சாலைகளைச் சந்தித்து, அக்காபா வளைகுடாவை அடைந்தது.

மேற்காசியாவில் இத்தியர்கள், பாபிலோனியர்கள், அசீரியர்கள், பாரசீகர்கள் அனைவரும் வியாபார, போர் நடவடிக்கைகளுக்காகச் சாலைகள் அமைத்தனர். உரோமையர்கள் தங்கள் பேரரசின் எல்லாப்பகுதிகளையும் தொடுமாறு சாலைகள் அமைத்தனர். 'உரோமையின் அமைதியை' நிலை நாட்ட உருவாக்கப்பட்ட இச்சாலைகள் அனைத்தும் அழிந்துவிடவில்லை. இன்றும் சில சாலைகள் குறிப்பாக, யோர்தான் பகுதியில் உள்ள சாலை, அப்படியே உள்ளது.

நாசரேத்தூர் இயேசு உபசாலைகளை அதிகம் தேர்ந்தெடுக்கிறார். அவை வழியே செல்வதையே விரும்பியிருக்கிறார். அவரது சொந்த ஊராகிய நாசரேத்து பல பாலைவன வழிகள் செல்லும் பாதையாகவும், உரோமைய நெடுஞ்சாலைகள் கடந்து செல்லும் அல்லது தொட்டுச்செல்லும் ஊராகவும் இருந்தது. மத்திய தரைக்கடல், மெகிதோ, எருசலேம், கலிலேயாக்கடல் இவற்றின் வழியாகச் செல்லும் சாலையில் தொடர்புபடுத்தப்பட்டது. செப்போரிசுக்கு அருகே ஒரு நெடுஞ்சாலை பெனிசியக் கடல் ஓரங்களைத் தொடர்புபடுத்துவதாகச் சென்றது. இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் ஊடே சென்ற சாலை பெத்சானுக்குத் தெற்கே சென்று, யோர்தானுக்குக் குறுக்கே சென்றது. கலிலேயாக் கடலுக்குத் தெற்கேயுள்ள மக்கள் நெருக்கமான நகரங்களை ஒருசாலை அமைப்பு தொடர்புபடுத்தியது.

பவுல் பாலஸ்தீனம், சிறிய ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றின் நெடுஞ்சாலைகள் வழியே பன்முறை பயணம் செய்துள்ளார். உரோமை ஆப்பியன் சாலை வழியே அடைந்தார். இச்சாலை இன்றும் 'பிரிந்தி சிக்கும்', 'உரோமைக்கும்' இடையே உள்ளது.

**பாதோன் (PADON – மீட்பு)**

பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களுடைய குடும்பத்தின் பெயர் (எஸ் 2:44; நெகே 7:47).

**பாத்தி, நாற்றங்கால் (BED - GARDEN)**

தோட்டத்திலுள்ள ஒரு சமமான துண்டு நிலம். இச்சொல் உ.ச. 5:18; 6:2; எசே 17:7.10-இல் மட்டும்தான் காணப்படுகின்றது. இஃது எப்பொழுதும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பாத்திரங்கள் (VESSELS)**

பாத்திரங்கள் திடப்பொருளையோ, திரவப்பொருளையோ கொள்ளும்படி குழிவுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகும். விவிலிய காலத்தில் மட்பாண்டம்தான் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. பின் கூடைகள், உலோகப் பொருட்கள், தோல் பொருட்கள், துணிப்பைகள், மரப்பாத்திரங்கள் முதலியவை பயன்படுத்தப்பட்டன. ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலும் மட்பாண்டங்களையே கண்டுபிடித்துள்ளனர். எரிகோவுக்கு அருகிலுள்ள கல்லறைகளில் கூடைகள், தோல், துணி, மற்றும் மரப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலோகப் பாத்திரங்கள் நீண்டநாட்கள் இருந்திருக்கும். ஆனால், போரில் முதலில் கைப்பற்றப்படும் பொருட்கள் உலோகப் பொருட்கள்தான். மேலும், கல்லறைத் திருடர்கள் இவற்றை விரைவிலேயே கல்லறைகளிலிருந்து அகற்றிவிட்டனர்.

**1. தோல், துணி, மரப்பொருட்கள், கூடைகள்:** மட்பாண்டங்கள் எளிதில் உடையக்கூடியவை ஆதலாலும், உலோகப் பொருட்கள் விலை அதிகம் ஆதலாலும், இவற்றால் செய்யப்பட்ட பொருட்கள் நாடோடிகளுக்கு இன்றியமையாப் பொருட்களாயின. விவிலிய மக்களில் ஒரு சிறிய பகுதியினரே நாடோடிகளாக வாழ்ந்தனர். பெரும்பாலான இஸ்ராயேலர் நிலையாக வாழ்ந்தனர். இவர்கள் பின்வரும் தோல் பொருட்களைப் பயன்படுத்தினர்: கிணற்றிலிருந்து நீரிரைக்க ஒரு தோல்வாளி, நீரைச் சுமந்து செல்ல ஒரு தோல்பை, சித்தை, துணிப்பைகள் ஆகியவை. இவை பெரும்பாலும் சேமித்து வைக்க அல்லாது, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவே பயன்பட்டன. துணி விலைமிக்கது மட்டுமல்லாது, துணிப்பைகள் எளிதில் விபத்துக்குள்ளாகக்கூடும். தானியங்கள் கோணிகளில் எடுத்துச் செல்லப்பட்டனவே ஒழிய அவைகளில் சேமித்து வைக்கப்படவில்லை. மரப்பொருட்கள் அவைகளைத் தயாரிக்க ஏற்படும் செலவின் காரணமாக அரிதாகவே பயன்படுத்தப்பட்டன. கூடை எளிதில் கிடைக்கக்கூடிய பொருளாகையால் அவை இடமாற்றத்திற்கும் சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்பட்டன.

**2. மண் மற்றும் உலோகப் பாண்டங்கள்:** மட்பாண்டங்கள்தான் அதிகமாகப் புழக்கத்திலிருந்தன. மோசே இரத்தத்தை வார்க்கப்பயன்படுத்திய பாத்திரம்தான் உலோகத்தாலான மிகப்பெரிய பாத்திரம் (யாத் 24:6). செம்பு (யாத் 2:3), வெள்ளி (எண் 7:13), பொன் (2 நாள் 4:8; எஸ் 1:9) பாத்திரங்களும் இருந்தன. சமைக்கும் உலோகப் பாண்டங்களும், கிண்ணங்களும் அதே உருவத்திலிருந்த மட்பாண்டங்களின் பெயரைப் பெற்றிருந்தன. உலோகப் பாண்டங்கள் பெரும்பாலும் பலியிடுவதில்தான் பயன்படுத்தப்பட்டன.

**3. கற்பாண்டங்கள்:** உலோகப் பாண்டங்கள் செய்யப்படுவதற்குமுன் வீட்டின் தட்டுகளும், முக்கிய பொருட்களும் மாக்கற்களினால் செய்யப்பட்டன. எகிப்தியர்கள்தான் இந்தக் கலையில் மிகவும் பெயர் பெற்றவர்கள். படிகச்சிமிழ் விலையுயர்ந்த தைலங்களை வைக்கப்பயன்பட்டது (மத் 26:7). கற்களில் அமைந்து பெரிய பள்ளங்கள் சாயம் தோய்க்கப் பயன்பட்டன. யோவா 2:6, துப்புறவுச் சடங்கில் பயன்படும் பெரிய கற்சாடிகளைப் பற்றிக் கூறுகின்றது.

**பாபிலோனியா (BABYLONIA - விண்ணகத்தின் வாயில்)**

திகிரீசு மற்றும் யூப்பிரத்தீசு நதிகளுக்கிடையில்,

தென் மெசபொத்தாமியாவில் அமைந்திருந்த ஒரு முக்கிய நாடும் கலாச்சாரமும் ஆகும். இது மூன்றாம் ஆயிரமாண்டு முதல் பிந்திய முதலாம் ஆயிரமாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் செழித்து வளர்ந்தோங்கியிருந்தது. அதன் தலைநகரான பாபிலோன் என்ற பெயரால் கிரேக்கர்கள் அதனை அழைத்தனர். விவிலியத்தில் அது சினார் என்றும் (ஆதி 11:2; 14:1.9; யோசு 7:21), கல்தேயரின் நாடு என்றும் (எரே 24:5; எசே 12:13) அழைக்கப்படுகிறது. ஆனால், தொடக்ககால மக்கள் இதைச் சுமேர் மற்றும் அக்காது என்றும் அழைத்தனர்.

I. **வரலாறு:** வெகு காலமாக "கலாச்சாரத்தின் தொட்டில்" என்று கருதப்பட்ட தென் மெசபொத்தாமியா கி.மு. 7000-ஐ ஒட்டி விவசாயப் புரட்சியையும் நகர அமைப்புகளையும் கண்டது. பொதுவாக இதன் "வரலாற்றுக்கு முந்திய" காலம், கி.மு. 6000-2500 ஆண்டுகளில், ஐந்து கலாச்சாரக் கட்டங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் காலத்தால் முந்தியது எரிது என்ற இடத்தில் (காண்க. ஈராது, ஆதி 4:18) இருந்திருப்பதாகத் தெரிகிறது. இங்கு, சில கோவில்களும் பலவகைப்பட்ட மட்பாண்டங்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. 4300-3500-க்கு இடையில் செமித்திய-இரானியத் தோற்றமுடைய "உபய்து" கலாச்சாரம் வளர்ந்தோங்கியது; வடமெசபொத்தாமியாவுக்கும் பரவியது. அதற்குப்பின் செமித்திய இனத்தைச் சேராத சுமேரியர்கள் உருக்குக் கலாச்சாரத்தைப் புகுத்தினர். இவர்கள் சித்திர எழுத்து முறையையும் விவசாயத்தையும் அறிமுகப்படுத்தினார். பரந்த கலாச்சார ஆதிக்கம் கொண்டிருந்தாலும், சுமேரியர்கள் தென்மெசபொத்தாமியாவில் மட்டுமே அரசியல் ஆதிக்கம் செலுத்தினர். கி.மு. 3100-2900-க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த தொல்பொருள்கள் எம்தெத்து நசர் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் தென் மெசபொத்தாமியா முழுவதிலும் நகரப்புரட்சி நிகழ்ந்திருக்கிறது. இது "வரலாற்றுக்கு முந்திய" இறுதிக்கட்டத்திற்குத் தயாரித்தது. இக்கட்டம் தொடக்க அரசமரபுக் காலம் அல்லது லகாசு காலமாகும். இக்காலத்தின் சுமேரிய அரசன் லிஸ்டு என்பவரின் கூற்றுப்படி, கடவுள்களிடமிருந்து "அரசநிலை" தாழ்த்தப்பட்டு பதினொரு நகர அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. கிஸ் என்னுமிடத்தில் அமைந்திருந்த அரசமரபின் தலைவர்களுள் உருக்கு (எரேக்கு) மற்றும் ஊர் என்பவர்கள் புராணத்தில் வரும் கில்காமிசு மற்றும் அக்கா ஆகியோர் தலைவர்களாவர். இந்த மரபைச்சேர்ந்த ஊர்-நான்சேயும் எயனாத்தும் அரசியலில் வெற்றி பெற்ற தலைவர்கள் ஆவர். பாபிலோனியா சிறிது காலத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நாட்டில் சமூகச் சீர்கேடுகள் நிலவின. பின்பு லகாசில் உருக்காகினா சீர்திருத்தவாதியாகத் தோன்றினார். அவருக்குப்பின் ஆற்றல்மிக்க லூகல்சகேசி ஆட்சிக்கு வந்தார். இவர் லகாசை அழித்து உருக்கு மற்றும் ஊர் ஆகியவற்றைக் கைப்பற்றி, உருக்கின் மூன்றாவது அரசமரபின் ஒரே தலைவராகத் தன்னை நிறுவிக்கொண்டார். அவரது ஆதிக்கம் பாரசீக வளைகுடாவிலிருந்து மத்திய தரைக் கடல்வரை நிலவியது.

அக்காதில் சார்கோனால் நிறுவப்பட்ட செமித்திய அரசமரபு (கி.மு. 2300-2230) சுமேரிய அரசை வென்று, தனது அரசின் மையமாகப் புதிய அக்காதை நிறுவியது. இவ்வரசில் நிலையான படையும், வலுவான மைய ஆட்சியமைப்பும் சிறப்புப் பெற்றன. அதன் ஆட்சி ஏலாமிலிருந்து அனத்தோலியா வரை பரவியிருந்தது. வடக்கிலிருந்து படையெடுத்து வந்த கூட்டியர்கள் அக்காதைக் கைப்பற்றியபோது, செமித்திய அரசு வடபகுதியில் தன் ஆதிக்கத்தை இழந்தாலும் லாகாசில் குதேயாவின் தலைமையில் செழித்து விளங்கியது. இது கி.மு. 2100-ஐ ஒட்டி நகர-அரசுகள் தங்களது சுதந்தரத்தை மீண்டும் உரிமையாக்கிக் கொள்ளும்வரை தென்பகுதியில் ஆதிக்கம் கொண்டிருந்தது.

"சுமேர் மற்றும் அக்காதின் அரசர்கள்" என்று தங்களையே அழைத்துக்கொண்ட ஊரின் (ஊர் III) புதிய சுமேரிய மூன்றாம் அரசமரபு பரந்த வியாபாரத்தையும் கலாச்சார முன்னேற்றத்தையும் அறிமுகப்படுத்தியது. இதற்கு ஆப்பு எழுத்துச் சான்றுகள் உள்ளன. இந்த அரசமரபு ஊர்-நம்மு என்பவரால் நிறுவப்பட்டது. சுல்கி, அமர்-சுயென் போன்ற வலிமை வாய்ந்த அரசர்கள் இந்த மரபைச் சேர்ந்தவர்கள். ஆனால் எமோரியரின் படையெடுப்பால், இதன் தலைநகர் தனிமைப்படுத்தப்பட்டது. ஊர் ஏலாமியர்களிடம் வீழ்ச்சியுற்றது. இஃதோடு சுமேரிய ஆட்சி முடிவுக்கு வந்தது. எமோரியரின் இந்தக் காலத்தைச் சேர்ந்ததாக ஆபிரகாமின் குடியேற்றம் (ஆதி 11:31) இருக்கலாம்.

சுமு-அபும் என்பவரால் பாபிலோனில் நிறுவப்பட்ட (கி.மு. 1894) முதல் எமோரியர் அரசமரபு, அதன் ஆறாவது அரசனான கம்முராபியின் காலத்தில் உச்ச நிலை அடைந்தது எனலாம் (கி.மு. 1792-1750). மாரி ஏடுகள் சுட்டுவதுபோல், அவர் பத்து நகர-அரசுகளுக்குத் தலைமை தாங்கினார். அவர் லார்சாவின் ரிம்சினையும், மாரியின் சிம்ரியையும் வென்றார். அசீரியாவுடனும் எசுன்னாவுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். பாபிலோனிய அரசு நிலைப்படுத்தப்பட்டது. கம்முராபி அக்காதிய மொழியை முக்கியமான மொழியாக்கினார். பாபிலோனியக் கடவுள்களின் தொகுப்பில் மார்துக்கை மிக முக்கிய கடவுளாக்கினார். ஊர்-நம்மு மற்றும் லிபித்-இஸ்தார் ஆகியோரின் முந்தைய சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட தனது சட்டத்தொகுப்பை அமைத்தார். ஆனால், அவருக்குப்பின் பாபிலோனிய அரசு பலவீனப்பட்டது. கி.மு. 1595-இல் இத்தியரான முதலாம் முர்சிலிசிடம் நகரம் வீழ்ச்சியுற்றது. அதன் பின் போர்த்திறமுடைய காசியர்கள் பாபிலோனியாவில் புகுந்தனர். முதலாம் நெபுகத்னேசர் கி.பி. 1150-இல் எழுச்சியுற்றது வரை பாபிலோனியாவின் வரலாறு ஓர் இருண்ட காலமாகும்.

பின்வந்த நூற்றாண்டுகளில், பாபிலோனியா எப்போதும் சுதந்தரமாக இருக்க முயன்றாலும், அக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திய அசீரியப் பேரரசால் மீண்டும் மீண்டும் இழிவுபடுத்தப்பட்டது. மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 858-824), தென்பகுதியில் புகுந்திருந்த கல்தேயர்கள் (அரமேயர்கள்) மேல் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். மூன்றாம் திகிலத்-பிலேசர் கி.மு. 745-இல் பாபிலோனின் அரியணைக்கு உரிமை கொண்டாடினார் (காண்க. 2 அர 15:19; 1 நாள் 5:26). மார்துக்கு-அப்லா-இதினா (மொராதாக்கு-பலாதான்; 2 அர 20:12; எசா 39:1) என்ற கல்தேயத்தலைவர், முதலில் அசீரியர்களுக்கு உதவியளித்தார். ஆனால், பின்பு ஏலாமியர்களின் உதவியுடன் திகிலத்-பிலேசருடைய மகன் இரண்டாம் சார்கோனிடமிருந்து பாபிலோனைக் கைப்பற்றினார். கி.பி. 703-இல் சனகெரிபால் விரட்டியடிக்கப்பட்டார். மார்துக்கு-அப்லா-இதினா, யூதாவின் எசேக்கியா உள்பட்ட கூட்டமைப்பின் உதவியுடன் (2 அர 20:12-19; எசா 39) மீண்டும் படையெடுத்தார். ஆனால், அசீரியர்கள் அவரை மீண்டும் விரட்டியடித்தனர். ஏசர்கத்தோன் தன் மகன் சமஸ்-சமுக்கினை கி.மு. 672-இல் பாபிலோனில், அடுத்த நேர் அரச உரிமையுள்ள இளவரசனாய் நியமித்தார். ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அவனது சகோதரரான அசூர்பானிப்பால் என்ற அசீரிய அரசன் கிளர்ச்சி செய்த பாபிலோனை அழித்தபோது இளவரசன் தற்கொலை செய்து கொண்டார்.

அசூர்பானிப்பாலுக்குப் பின்வந்த கண்டாலானு கி.மு. 627-இல் இறந்தபோது செயா-லாந்துப் பகுதியின் ஆளுநரான நபு-அப்லா-உசூர் (நபோபோலாசர்) பாபிலோனிய அரியணையைக் கைப்பற்றி, புதிய பாபிலோனிய அல்லது கல்தேய அரச மரபை நிறுவினார். சியாக்சரேசு மற்றும் மேதியர்களின் உதவியுடன் நபோபோலாசர் கி.பி. 612-இல் நினிவேயைக் கைப்பற்றினார். நபு-குத்துரி-உசூர் (2-ஆம் நெபுகத்னேசர், கி.மு. 604-

562) என்பவரின் தலைமையில் கர்கமிசு என்ற இடத்தில் பாபிலோனியர் எகிப்தியரைத் தோற்கடித்தனர் (கி.மு. 605; எரே 46:2). பின்பு சீரியாவையும் பாலஸ்தீனத்தையும் கைப்பற்றினர் (காண்க. 2 அர 24:7). யோயாக்கிம் என்ற யூதாவின் அரசன் நெபுகத்னேசரின் சிற்றரசன் ஆனார்; பின் எகிப்தின் 2-ஆம் நெக்கோவோடு சேர்ந்து கொண்டார். இதற்குப் பதிலடியாக நெபுகத்னேசர் கி.மு. 547-இல் எருசலேமை முற்றுகையிட்டு, யோயாக்கிமை நாடு கடத்தினார்; மத்தனியாவை (செதேக்கியாவை) எருசலேமில் அரசராக்கினார். செதேக்கியா கிளர்ச்சி செய்ததால், பாபிலோனியர்கள் எருசலேமை அழித்தனர் (கி.மு. 587); மக்களை நாடு கடத்தினார். இதுதான் பாபிலோனிய அடிமைக்காலம் (2 அர 25:8-26). நெபுகத்னேசர் போர் வெற்றிகளில் சிறந்து விளங்கியது போல், சட்டம் மற்றும் கட்டடக்கலையிலும் அவரது ஆட்சி சிறந்து விளங்கியது. அவரை அடுத்து அமெல்-மார்துக்கு (அவில்-மெரோதக்கு; கி.மு. 562-560; 2 அர 25:27-30; எரே 52:31-34) ஆட்சிக்கு வந்தார். நபோனிது (கி.மு. 556-539) மேதியா மற்றும் லீதியாப்படைகளை எதிர்த்துப் போராடினார்; ஆனால், செமாவுக்கு ஓடிவிட்டார். இந்நிலையில் சைரசு தலைமையில் பாரசீகர்கள் பாபிலோனைக் கைப்பற்றி ஆளுநர் பெல்-சார்-உசூர் (பெல் சாட்சர்; காண்க. தானி 5:30) என்பவரைக் கொன்றனர்.

சைரசின் ஆட்சிக் காலத்தில் பாபிலோனின் ஆட்சி ஆளுநர் குபாரு (கோப்ரியா)விடம் ஒப்படைக்கப்பட்டது. அக்கமேனியர்கள் யூதர்களுக்குச் சாதகமாக இருந்தனர். அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிச்சென்று ஆலயத்தைக் கட்டுவதை ஊக்குவித்தனர் (எஸ் 1:1-11). கி.மு. 522-இல் இரண்டாம் கம்பிசுவின் இறப்பு, பாபேல் அரசுக்கு உரிமை கொண்டாடவும் நாட்டில் அமைதியின்மைக்கும் இடமளித்தது. ஆனால், 2-ஆம் தாரியுவின் காலத்தில் (கி.மு. 520-485) ஒழுங்கு நிலைப்படுத்தப்பட்டது. தாரியு, சத்திரபுகள் மற்றும் தல ஆளுநர்களின் தலைமையில் பாபிலோனிய ஆட்சியைத் திருத்தி அமைத்தார். இவரது ஆட்சியில்தான் எருசலேம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (எஸ் 4:15.24-6:22).

பாபிலோனியர்கள், செருசுவின் ஆட்சியில் (கி.மு. 486-470; காண்க. எஸ் 4:6; அகசுவேர்) மீண்டும் ஒரு முறை கிளர்ச்சி செய்து தோல்வியுற்றனர். கி.மு. 331-இல் பெரிய அலக்சாந்தர் பாபிலோனைக் கைப்பற்றினார். நாடு கிரேக்க ஆட்சியில் கீழ் வந்தது. காலப்போக்கில் இதைச் செலூக்கியர்களும் (கி.மு. 312-64), பார்த்தியர்களும் ஆண்டனர். கி.பி. 641-இல் அரேபியர்களின் கைவசமாயிற்று.

II. சமயம்: மெசபொத்தாமியாவின் சிக்கல்மிக்க வரலாற்றின் காரணமாக அதன் சமயத்தில் சுமேரிய மற்றும் அசீரிய-பாபிலோனியக் கூறுகளை வேறுபடுத்துவது கடினமாகும். அவற்றில் குழப்பமும் தெளிவின்மையும் அதிகம் உண்டு. ஆயினும் அவற்றின் பண்புகளை வேறுபடுத்தி எடுத்துக்கூற அறிஞர் பலர் முயன்றுள்ளனர்.

சுமேரிய சமயம் அடிப்படையில் கீழுலகுக்குரியதாகும். அதாவது நிலவுக்கு மற்றும் அதன் சக்திகளில் சிறப்பு அக்கறை கொள்வதாகும். ஒழுங்கமைவின்பால் கொண்ட ஆர்வத்தில் சுமேரியா உலகநோக்கு அடிப்படை கொண்டுள்ளது. எல்லாம் திட்டமிட்டபடி, நிலையாக, செவ்வொழுங்கோடு இருக்க வேண்டும். சுமேரிய சமயம் அமைதி, மற்றும் பாதுகாப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இயற்கை வாழ்வோடு ஒப்புமையுடையதாகக் கருதப்பட்டது. விண்ணகமும், பூமியும் எதிரிணையானவை. விண்ணகத்தில் நிகழ்பவை பூமியிலும் நிகழ்ந்தன. இவ்வாறு பெண்தெய்வமாகக் கருதப்பட்ட பூமி விண்ணகமான ஆண் தெய்வத்தால் கருவுற்றது. குறிப்பிட்ட காலங்களில் தெய்வம் அல்லது அதன் பிரதிநிதிக்கும் தெய்வீகமணமகளைக் குறிக்கும், பெரும்பாலும் ஆலய விலைமகளுக்கும், திருமணம் நடப்பதாக நம்பப்பட்டது. சுமேரிய

சமயத்துக்கு மாறாக, அசீரிய-பாபிலோனிய சமயம் சூரியன், சந்திரன், விண்மீன்கள், மழை, காற்று, பருவகாலம் போன்ற விண்ணகச்சக்திகளில் அக்கறை காட்டியது.

மெசபொத்தாமிய கடவுள்கள் தொகுப்பு நூற்றுக்கணக்கான தெய்வங்களைக் கொண்டுள்ளது. புராணவாசகங்கள், சமய ஏடுகள், எழுத்தர்களின் பட்டியல், ஆட்களின் பெயர் ஆகியவற்றிலிருந்து 2500-க்கும் மேற்பட்ட தேவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் பல, முக்கிய தேவர்களைப் பற்றிய அடைமொழியாகவும் அவர்களுடைய பண்புகளை எடுத்துக்கூறுபவைகளாகவும் அமைந்திருக்கலாம்; அல்லது கடவுள்களுக்கு ஊழியர்களையும் வழித்தோன்றல்களையும் அளிக்கும் ஆர்வத்தில் பிற்கால சமயவாதிகளால் படைக்கப்பட்டிருக்கலாம். சுமேரியக் கடவுள்கள் அக்காதியப்பெயர்களில், அசீரியர்களாலும் பாபிலோனியர்களாலும் வணங்கப்பட்டனர்.

**முக்கிய கடவுள்கள்:** விண்ணகத்தின் கடவுளும், தேவர்களின் கடவுளும் அரச நிலையின் கடவுளும் ஆனவர் அனு (சும்-அன்) என்றழைக்கப்பட்டார். வான்வெளி மற்றும் காற்று ஆகியவற்றின் கடவுளும் மனித ஊழைக் கொண்டிருப்பவரும் புயல் மற்றும் சுழல்காற்று வழியாக அழிவை ஏற்படுத்தும் கடவுளும் ஆனவர் என்லில் (எல்லில் அல்லது பேல்) என்றழைக்கப்பட்டார். பூமிக்கடியிலுள்ள இனிப்பான தண்ணீர், ஆகவே வளமையின் கடவுளும் ஞானம் மற்றும் மந்திரவாதம் ஆகியவற்றின் கடவுளும் ஆனவர் எயா (சும்-என்கி) என்றழைக்கப்பட்டார். இந்த முக்கியப் படைப்புக் கடவுள்களோடு, சுமேரியர்கள் நின்குரசாகு என்ற தாய்த் தேவதையையும் சேர்த்துக்கொண்டனர்.

முக்கியத்துவத்தில் அடுத்து வரும் கடவுள்கள்.சந்திரகடவுளான சின் (சும்-நானா, சுயென்): இது நிலாவின் பருவங்களுக்கேற்ப இளம் காளையாகவோ, கிழ மனிதனாகவோ கருதப்பட்டது. இது ஞானத்தின் கடவுளாகவும், இரவு நீதிபதியாகவும், வியப்புக்குரியவற்றின் தேவதையாகவும் கருதப்பட்டது. இஃது ஊர் மற்றும் காரான் போன்ற இடங்களில் (காண்க. ஆதி 11:31; யோசு 24:2) சிறப்பாக வழிபடப்பட்டது. சூரிய கடவுள் (சும் உத்து): நீதியின் கடவுளும் ஒழுங்கமைவைப் பாதுகாக்கும் கடவுளாகவும் கருதப்பட்டது. வெள்ளிக் கோளின் தேவதை: இது காதல், பாலினப் பெருக்கம் மற்றும் போரின் தேவதை என்று கருதப்பட்டது. பிற கடவுள்கள்: இடியின் கடவுளான, அதாது: புயல், போர், வேட்டை செய்தல் ஆகியவற்றின் கடவுளான நினுர்த்தா: கீழ் உலகம் மற்றும் கொள்ளை நோய்களின் கடவுளான நெர்கால் என்பன. தம்முசு கடவுள்: இது விவசாயக்கடவுளாகும்; மரித்து உயிர் பெறும் கடவுளாக புராணத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தது. அது கீழ் உலகில் இறங்கி மீண்டும் எழுதல் பருவகாலங்களுக்கு அடிப்படையாக நம்பப்பட்டது.

மார்துக்கு (சூரியனின் மகன்) எயாவின் புதல்வராகும். கம்முராபியின் ஆட்சிக்குப் பின், இது நாட்டுத்தேவதையாக பாபிலோனியத் தெய்வங்கள் தொகுப்பில் முதன்மை பெற்றது. பாபிலோனியப் படைப்புக்காவியத்தில் (எனுமா எலிசு) அவர் குழப்பத்தின் தேவதையான தியமாத்தை வெல்கிறார். அதன் விளைவாக மற்றத் தேவர்கள் பாபிலோனில் எசாகில் என்ற கோவிலை அவருக்காக நிறுவுகின்றனர். அவரிடம் அதிகாரத்தையும் ஊழ் தகட்டையும் ஒப்படைக்கின்றனர். மார்துக்கின் பண்புகளை எடுத்துரைக்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட பெயர்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இவருக்குப் பிற்காலத்தில் பேல் (தலைவர், ஆண்டவர்) என்ற பெயர் வழங்கிற்று. இவரது துணைவி சர்பனித்து தேவதையாகும். அவரது மகன் நபு (நெபோ), நூல்கள் மற்றும் அறிவியலின் கடவுளாகும்.

பாபிலோனிய சமயத்தின்படி, மனுகுலத்தின் முதன்மையான கடமை தேவர்களுக்குச் சேவை செய்வதாகும். இச்சேவை, சிலைகளுக்கு ஆடை அணிவித்துத் தினமும் கோவிலில்

உணவுப்படையல் செய்வதாகும். பொதுமக்கள் தேவர்களை அணுக முடியாது. ஆகவே, இக்கடமைகளைக் குருக்களும், சடங்குகளில் பயிற்சி பெற்றவரும் செய்து வந்தனர். இவர்களில் பலவகைக் குருக்களும், வழிபாட்டுச் சடங்குகளில் திறமை பெற்றவர்களும், இசைவல்லுநர்களும், பாடகர்களும், முன்னுரைப்பவர்களும், சோதிடர்களும் அடங்குவர். தீய ஆவிகள் அல்லது பேய்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டிய மந்திரங்கள் அடங்கிய பல ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கனவுகளுக்கும் பலியிடப்பட்ட விலங்குகளின் உள்ளுடல் கூறுகளில் காணப்படும் அடையாளங்களுக்கு விளக்கம் அளிக்கவும், இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனிப்பதிலிருந்தும், தேவர்களோடு கொள்ளும் நேரடியான பரவசத் தொடர்புகளிலிருந்தும், மனித ஊழை எடுத்துக்கூறவும் பலவகையான வழிபாட்டாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

கம்முராபியின் காலத்திலேயே, அரசன் தெய்வீகமுடையவனாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் மக்களின் நலனிலும், நாட்டின் செழிப்பிலும் முக்கியமான பங்கு வகித்தார். அவர் மார்துக்கிடம் கொண்ட பிரமாணிக்கம் ஆண்டுதோறும் "அகிட்டு" அல்லது புத்தாண்டு விழாவில் புதுப்பிக்கப்பட்டது. இச்சடங்கில், அரசன் ஆடை நீக்கப்பெற்று, குருக்களால் அடிக்கப்பட்டான். மார்துக்கின்முன் மன்னிப்புக்காகக் குனிந்து வணங்கி, தனது புனிதக் கடமைகளை நிறைவேற்றுவதாக வாக்கு அளித்தபின், அரசனது அதிகாரம் புதுப்பிக்கப்பட்டது.

**III. மரபுரிமை:** சுமேரிய, பாபிலோனியக் கலாச்சாரத்தின் பல்வேறு பண்புகள் மற்ற மேற்காசிய நாடுகளுக்கு, சிறப்பாக சீரியா, பாலஸ்தீனத்துக்குக் கிடைத்தன. இவற்றில் முக்கியமானது எழுத்துமுறையாகும். இது முதலில் சித்திர எழுத்தில் தொடங்கி விரிவான ஆப்பு எழுத்து முறையாக வளர்ந்தது. இந்த முறையை எப்லாயிக்கு, இத்திய, கூரிய, எமோரிய, ஏலாமிய மற்றும் பழைய பாரசீக மொழிகளில் பயன்படுத்தலாம். இஃது உகாரித்து அகரவரிசை முறைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டது. கல்வி எங்கும் பரவியிருக்கவில்லை. ஆகவே, எழுத்தர் குழுக்கள் பலவகை வியாபாரம் மற்றும் நிர்வாகம் தொடர்பான கடிதங்கள், சட்டச் செயல்கள், உடன்படிக்கைகள், அரசகட்டளைகள், வழிபாட்டு வாசகங்கள் ஆகியவை பற்றிய ஏடுகளைப் பாதுகாத்து வந்தனர். இக்குழுக்கள் பலவகை இலக்கியங்களையும், பெயர்ப் பட்டியல்களையும் தயாரித்தனர். இவற்றில் வரலாறு மற்றும் அதிகாரபூர்வமான ஏடுகள் மட்டுமின்றி, செறிவுமிக்க இதிகாசங்கள், சமயப்பாடல்கள், முதுமொழிகள், ஞான இலக்கியங்கள், மன்றாட்டுகள், போற்றுரைப்பாடல்கள் ஆகியவையும் அடங்கும். இவற்றிற்கு ஒத்த இலக்கியப்படைப்புகள் மேற்காசியா மற்றும் அனத்தோலியாக் கலாச்சாரங்களிலும் காணப்படுகின்றன. விவிலிய நூல்களில் காணப்படும் மெசபொத்தாமிய பாதிப்புக்களை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதி பற்றிய பாபிலோனிய அக்கறை அங்குக் காணப்படும் சட்டத்தொகுப்புகளில் தெளிவாகத் தெரிகின்றன. இவை அக்காலத்தில் நிலவியவற்றை விவரிக்கின்றன. 282 பகுதிகளையுடைய கம்முராபியின் சட்டத்தொகுப்பு பலரும் அறிந்த ஒன்றாகும். இவை உடைமை, திருமணம் மற்றும் விவாகரத்து, களவு, வியாபாரம், விவசாயம், தத்து எடுத்தல், உரிமைச்சட்டம், நீதிமன்ற முறைகள், குற்றங்களுக்குத் தண்டனை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. இக்காலத்தியப் பொருளில் சட்டம் என்பது அரச கட்டளைகளிலும், அரசனது ஆட்சியின் முதலாண்டில் விடுக்கும் அறிக்கையிலும் காணப்படுகிறது. இவை பெரும்பாலும், மனித நலம், நீதி ஆகியவற்றில் அக்கறை கொள்கின்றன. இவை மாற்றியமைக்கப்பட்ட வடிவை ஐந்நூல் பிரதிபலிக்கின்றது.

தாவரங்கள், விலங்குகள், கனிமப்பொருட்கள்

ஆகியவைபற்றிய ஆப்பு எழுத்துப்பட்டியல்கள் பாபிலோனியர்களுடைய அனுபவ அறிவியலின் தோற்றத்தைச் சுட்டுகின்றன. கணிதத்தில் பல்வகைகளும் இங்கே தோற்றம் கொண்டுள்ளன. வானவியல், மருத்துவம் பற்றிய ஏடுகள் பாபிலோனியர்கள் இவற்றில் அடைந்திருந்த வளர்ச்சியைக் காட்டுகின்றன. ஆனால், மாயவித்தையும் பேயோட்டுதலும் இடங்கொண்டிருந்தன.

**பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட காலம் (PERIOD OF BABYLONIAN CAPTIVITY)**

காண்க: இஸ்ராயேல் வரலாறு – V. பாபிலோனில் அடிமை வாழ்வும் மீளுதலும்.

**பாபிலோன் (BABYLON – இறைவனின் கதவு)**

**I. பழைய ஏற்பாடு:** மெசபொத்தாமியாவின் மிகப்பழமையான தலைநகரமான பாபிலோன் இன்றைய ஈராக்கில் பாக்தாத்தின் தென்மேற்கில், கில்லா என்ற நகருக்கருகே இருந்திருக்க வேண்டும். இதன் சிதைவுகள் யூப்பிரத்தீசு நதியின் கிளைநதி ஒன்றின் ஓரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**I. புவியியலும் விவரிப்பும்:** யூப்பிரத்தீசு நதியும், திகிரீசு நதியும் மிக நெருங்கி வரும் இடத்தில், யூப்பிரத்தீசு நதியின் இடக்கரையில் அமைந்துள்ளது பாபிலோன் நகரம். மிக வளமையான மண்ணைக்கொண்ட இப்பகுதி இரு நதிகளாலும் இன்னும் வளமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இரு நதிகளின் வெள்ளம் அடிக்கடி நகரத்தைப் பாதித்தாலும் இதனைக் கட்டுப்படுத்த அணைகளும், நீர்த்தேக்கங்களும் கட்டி எழுப்பப்பட்டதால். வெள்ளத்தின் சேதத்தைத் தவிர்க்க முடிகிறது. திகிரீசு நதியை விட யூப்பிரத்தீசு நதி கப்பல் செலுத்த, சிறந்த இடமாக உள்ளது.

II. 4 ச.கி.மீ. பரப்பளவுள்ள இந்நகரின் சிதைவுகள் பழங்காலப் பெருமைகளை எடுத்தியம்பும் வண்ணம் அமைந்துள்ளன. புதிய நகரம் ஏற்கெனவே உள்ள பழைய நகரின் விரிவுதான். இது நெபுகத்னேசர் செய்த பணியாகும். இந்நகர் இரட்டைச் சுவர்களால் பாதுகாக்கப்பட்டது. இதனை அடுத்து நெபுகத்னேசர் மற்றுமொரு சுவரைக் கட்டினார். பல கால்வாய்கள் நகரத்திற்குள் சென்றன. எட்டுவாயில்கள் பெரும் வீதிகளுக்கு இட்டுச்செல்வதாக அமைந்திருந்தன. இடையேயுள்ள குறுக்கு வீதிகள் நகரைப் பல பிரிவுகளாக்கின. யூப்பிரத்தீசு நதியின் குறுக்கே இரு பாலங்கள் இருந்தன. நகரம் 53 கோவில்களைக் கொண்டிருந்தது. 'மார்துக்கு' எனும் தெய்வத்தின் ஆலயமான "ஈசகில்" என்பதே இதில் மிகப்பெரிய கோவில் ஆகும். இது சிகுராத்து எனும் உயரமான கோபுரத்தைக் கொண்டிருந்தது. இதுவே பாபேல் கோபுரம் என்றழைக்கப்பட்டது. இந்த ஆலயத்தில்தான் மார்துக்கின் சிலை இருந்தது. ஒவ்வொரு புதுவருடமும் அரசன் தன் அரசாட்சியை மார்துக்கின் கையினின்று பெறுவதாக ஒரு மரபு உண்டு. இந்தச்சிலை அரசர்கள் பலரால் பல முறை எடுத்துச் செல்லப்பட்டு முடிவில் கி.மு. 1130-இல் முதலாம் நெபுகத்னேசர் I என்பவரால் பாபிலோனுக்குக் கொண்டு வரப்பட்டது. சனகெரிபு என்பவரால் கி.மு. 689-இல் நினிவேக்கு எடுத்துச்செல்லப்பட்டு, 21 ஆண்டுகட்குப் பிறகு பாபிலோனுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீரச் செயல்கள் பாபிலோனின் வீழ்ச்சி, எழுச்சியை மட்டுமின்றி மார்துக்கின் சிலையின் மீது உரிமை கொண்டவர்களே அவரது நாட்டின்மீது அரசாட்சி செலுத்தலாம் என்பதையும் குறிக்கும். புதுவருட விழாவின் போது மற்றும்பல சிறு தெய்வங்களும் 'மார்துக்குடன்' பவனியில் எடுத்துச் செல்லப்படும். நெபுகத்னேசரின் அரண்மனைச் சிதைவுகளில் தொங்கும் தோட்டம் இருந்ததற்கான அடையாளங்கள் பல காணப்படுகின்றன.

**III. வரலாறு:** பாபிலோன் அக்காதின் சார்கோனால் முதன்முதல் குறிக்கப்படுகிறது. எமோரியர்களின் ஆளுகையில்தான் பாபிலோன் மிகச்சிறப்பு வாய்ந்த நகரமாகிறது. முக்கியமாக கி.மு. 1728-1686-இல் கம்முராபி என்ற

மன்னனின் ஆட்சியில் இது மிகச்சிறப்பு வாய்ந்த நகரமாகியது. இவரது ஆட்சிக்காலத்தில் பாபிலோன் அசீரியா, சுமேரியா, அக்காதியா அனைத்தையும் உள்ளடக்கிய மிகப்பெரும் நாடாகியது. ஒருமுக மைய ஆட்சியை ஏற்படுத்தி அமைதியும், வளமையும் நிறைந்த மிகச் சிறந்த ஆட்சிமுறையை நிலவச் செய்த பெருமை இவரையே சேரும். சட்டத்தை வரையறுத்த பெருமையும் இவருக்குரியதே. விவிலிய ஆராய்ச்சிக்கு இவரது சட்டத்தொகுப்பு முக்கியமானது. காசியர் படையெடுப்பில் எமோரியப் பேரரசு சிதைந்து போயிற்று. ஆனால், கி.மு. 1530 - 1160-இல் காசியர் அரசின் கீழ் பண்பாட்டிலும், கலையிலும் இருளடைந்த நிலையில் இருந்தது. ஆயினும், கம்முராபி நிலைநாட்டிய அந்தக் கலாச்சாரம் நிலைத்திருந்தது. கி.மு. 7-ஆம் நூற்றாண்டு வரை இந்நிலை தொடர்ந்தது. பின்னர், இஃது அசீரிய அரசர்களின்கீழ் உள்ள ஓர் அரசாகவே திகழ்ந்தது. அவர்கட்குத் திரை செலுத்தும் அரசாக இருந்தாலும் இது முழுமையாக அசீரியர்களால் கட்டுப்படுத்தப்படவில்லை. இதன் பிறகு பலமுறை பாபிலோன் அன்னிய அரசர்களின் கைக்குள் வசமாகி, பின்னர் மீண்டும் பாபிலோனிய அரசர்களின் வசப்பட்டது.

கி.மு. 605-இல் நெபுகத்னேசர் தன் தந்தை நெபோலசாரை அடுத்து, பாபிலோனைப் பிடித்தான்; பின்னர் சீரியா, பாலஸ்தீனம் அனைத்தையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான். கி.மு. 587-இல்தான் எருசலேம் பாபிலோனியரால் தரைமட்டமாக்கப்பட்டது. கி.மு. 605-562 வரை நெபுகத்னேசரின் ஆட்சியின் கீழ் மிகச் சிறந்த பெருமையை அடைந்தது பாபிலோன். நெபுகத்னேசரின் ஆட்சிக்குப்பிறகு வந்தவர்கள் நாட்டை ஆளவும் கட்டிக்காக்கவும் திறமை அற்றவர்களாகப் போனதால் இஃது எதிரிகளின் கையில் பெருமை இழந்தது. பாரசீகர் ஆட்சியில் இஃது ஒரு முக்கிய மையமாக இருந்ததெனினும் பின்னர்க் கிரேக்கர் ஆட்சியின் கீழ் முக்கியமற்ற நகராகப் போனது.

**3. சமயம்:** பாபிலோனிய சமயமானது சுமேரிய சமயத்தின் பல பண்புகளைக் கொண்டதாகவும், பல செமித்திய சமயப் பண்புகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது. இஃது ஒரு பல கடவுள் சமயமாகும். 3300-க்கு மேற்பட்ட கடவுள்களின் பெயர்கள் அக்காதிய இலக்கியங்களில் உள்ளன. இவற்றில் பல ஒரே தெய்வத்தைக் குறிப்பிடுவதாக உள்ளன. இக்கடவுள்கள் 'மண்ணகக் கடவுள்கள்', 'வானகக் கடவுள்கள்' என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை அனைத்தும் வெவ்வேறு பெயரில் வழிபடப்பட்டன. நல்ல, தீய கடவுளர்கள் இருப்பதாக நம்பினர். பொதுவாக இயற்கைச் சக்திகளை வழிபட்டனர். நகரங்களின் காவல் தெய்வங்கள் பல இருந்தன. 'மார்துக்கு', 'அசூர்' என்பவைதான் அவர்கள் வழிபட்டவைகளிலே மிக உயர்ந்தவையாகக் கருதப்பட்டன. இச்சமயம் பல மூடநம்பிக்கைகளையும், தீயசக்திகள், பேய் நம்பிக்கை போன்றவற்றையும் கொண்டிருந்தன. இவர்களின் கடவுள் இயற்கைச் சக்திகளைக் கடந்த ஒருவராகப் பார்க்கப்படவில்லை. பொதுவாக, இச்சமயம் வழிபாட்டுச் சடங்குகளைத் தவிர வேறு எதையும் பக்தர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

**IV. பாபிலோனின் சிறப்பும், முக்கியத்துவமும்:** பாபிலோன் உலக நாகரிகத்திற்கு அளித்துள்ளது மிகப்பெரிய அளவாகும். ஆப்பு வடிவ எழுத்துக்களைக்கொண்டு பல புராண இலக்கியங்களையும், வேறுபல இலக்கியங்களையும் உலகிற்கு அளித்துள்ளது. அது தந்துள்ள "கில்காமிசு" புராணம் விவிலிய நிகழ்ச்சிகள் பலவற்றின் மூலக்கதைகளைத் தந்துள்ளது. 'உலகின் பெருவெள்ளம் பற்றியும்', துன்பம் என்ற பிரச்சனை பற்றியும் (யோபு) மற்றும் பல சங்கீதங்கள் பற்றியும் இது கூறுகின்றது. பாபிலோனிய ஏடுகள் அசீரிய அரசர்களைப் பாபிலோனிய அரசர்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவதால் அவை முதன்மையான வரலாற்று

மூலங்களாகின்றன. பாபிலோனியா நாகரிகங்களின் தொட்டில் எனலாம். செமித்திய நாகரிகம், சுமேரிய நாகரிகத்திலிருந்து தோன்றி அதை வளர்ச்சி பெறச்செய்தல்.

நகர நாகரிகம் வளர்ச்சி பெற்றது, கலைகள், கைவினைப்பொருட்கள் செய்தல், வியாபாரம் போன்ற பல்வேறு திறமைகளில் அவர்கள் சிறப்புற்று விளங்கினர். சட்டம், ஒழுங்கு நகரத்தில் மக்கள் உரிமையைப் பாதுகாக்க நடைமுறையில் இருந்தன. அவை முற்றிலும் பெருமைப்படத்தக்க முறையில் இருந்தன எனக்கூற முடியாது. அடிமைத்தனம் அங்கு இருந்தாலும் மிகவும் மோசமான நிலையில் இல்லை. சிலர் இங்கு நடந்த அரசியல் ஆட்சியைத் தொடக்க கால மக்களாட்சியாகப் பார்க்கின்றனர். பொருட்கள் உற்பத்தியும், வியாபாரமும் அமைதியாக, சிறந்த முறையில் நடைபெற்றன.

அறிவியல் நடைமுறைப்பயன்பாட்டில் மட்டுமே இருந்தது. வானவியல் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியதால் அவர்கள் காலக்கணக்கீடு சிறப்பாக இருந்தது. பாபிலோனியர்களைவிட கட்டடக்கலையில் அசீரியர்கள் சிறந்து விளங்கினர். ஏனெனில் அவர்கள் கற்கள் பற்றி அறியாததே காரணம். ஆபரணங்கள் செய்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்ததால் கலைஞர்களின் தனித்தன்மையைக் கட்டுப்படுத்தினர்.

**V. பாபிலோனின் அடையாளப்பொருள்:** விவிலிய அடையாளம் என்ற நிலையில் தெளிவற்ற பொருளைக் கொண்டுள்ள எகிப்துக்கு முரண்பட்ட நிலையில், பாபிலோனானது, இறைவன் சில நேரங்களில் தமது குறிக்கோளை அடைவதற்கென இதனைப் பயன்படுத்தினாலும், ஒரு தீய சக்தியையே எப்போதும் சுட்டிக்காட்டுகிறது.

**1. பாபேலின் அடையாளம்:** மெசபொத்தாமியப் பாபிலோன் நகருடன் இஸ்ராயேலானது நேரடி உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னரே, புனித வரலாற்றின் பரப்பில் அது பிரசன்னமாகியிருந்தது. ஏனெனில், பாபேல் என்பது பாபிலோனுக்கான எபிரேயப் பெயராகும். ஆதி 11:1-9-இல் வருகிற புகழ்மிக்க கோபுரமானது அதனுடைய கோயிலினுடைய பல்வேறு மட்டங்களையுடைய கோபுரமேயாகும். பாபிலோனியச் சிலைவழிபாட்டின் முதன்மையான அடையாளமான இந்தக் கோபுரமானது மனித அகந்தையின் அடையாளமாகவும் விவரிக்கப்படுகிறது. விவிலிய மரபானது பேச்சுக் குழப்பத்தினைப் பாபேலின் அடையாளத்துடன் இணைக்கிறது. இவ்வாறாக, இறைவன் மனிதரை அவர்களது அகந்தைமிக்க சிலை வழிபாட்டிற்காகத் தண்டிக்கிறார்.

**2. இறைவனுடைய சவுக்கு:** மேலும், ஏழாவது நூற்றாண்டின் தொடக்கமுதல் இன்னும் பாபிலோனானது புனித வரலாற்றில் மிக நேரடியான பங்கை வகிக்கின்றது. அந்நேரத்தில் அதனை வென்ற கல்தேயர்கள், மத்திய மேற்காசியாவின் ஆட்சியை நினிவேக்குக் கொண்டு செல்வதாகக் கனவு கண்டனர். அது “தங்கள் வலிமையைக் கடவுளாகக் கருதுகின்ற” (அப 1:11) வெல்ல முடியாத வல்லரசாக இருந்தது. ஆனால், இவ்வல்லமையைத் தனது திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்க இறைவன் எண்ணுகின்றார். நினிவேக்கு எதிரான அவரது தீர்ப்பைச் செயல்படுத்துவதன் மூலம் பாபிலோன் இதற்கு ஒத்துழைக்கிறது (நாகூ 2:2-3:19). இஸ்ராயேலருக்கும், அதன் அண்டை அரசுகளுக்கும் இறைவனுடைய சவுக்கு இதுவே. அதனுடைய அரசனாகிய நெபுகத்னேசரின் கரங்களில் யாவே அவர்கள் அனைவரையும் கையளிக்கிறார். அவருக்காக அவர்கள் நுகத்தடியைச் சுமக்க வேண்டும் (எரே 27:1-28:17). யாவே தனது மக்களைக் குடிவெறியராக்குகின்ற பொற்கிண்ணம் இதுவே (எரே 25:15-29; 51:7). முழு உலகையும் அடித்து நொறுக்க அவர் பயன்படுத்தும் சம்மட்டியும் இதுவே (எரே 50:23; 51:20-22). எல்லாவற்றிற்கும் மேலாக,

யூதாவிற்கு எதிரான யாவேயின் தண்டனையை அது செயல்படுத்தும் (எரே 21:3-7). தனது மக்களில் எஞ்சியோரை இறைவன் ஒன்று சேர்க்கின்ற நாடு கடத்தப்பட்ட இடமாக அதன் நாடு இருக்கும் (29:1-20). அரசராகமங்கள் விவரிக்கின்ற கடினமான உண்மை இதுவே (2 அர 24-25). ஆனால், கண்ணீருக்கு இடமளிக்கின்ற பாடல்கள் "பாபிலோன் நதிக்கரைகளில்" (சங் 137) வருங்கால மீட்டலுக்குத் தயாரிக்கின்ற தூய்மைப்படுத்தும் துன்பத்தினை நாடு கடத்தப்பட்ட யூதர்கள் அனுபவிப்பர்.

3. **தீமையின் நகரம்:** பாபிலோனுடைய இந்தத் தெய்வச்செயலான பங்கானது இணையற்ற வடிவில் தீமையின் நகராக இருப்பதினின்று அதனைத் தடுக்கவில்லை. மற்ற நாடுகள் மற்றும் நினிவேயைப் போன்று (எசா 19:24; யோனா), அதுவும் ஒரு நாள் இறைவனுடைய மக்களுடன் ஒன்றிக்கப்படுமாறு உறுதியாக அழைக்கப்படும் (சங் 87:4). ஆனால் நினிவேயைப் போன்று, தன்னுடைய வல்லமையிலேயே அது திருப்தியடைகிறது (எசா 47:7-8.10; 9:7-14). யாவேக்கு முன்னால் செருக்குடனும் திமிருடனும் அது நிற்கிறது (எரே 50:29-32; எசா 14:13-14). சூனியம் (எசா 47:12), சிலை வழிபாடு (எசா 46:1; எரே 51:44-52), மற்றும் எல்லாவிதமான கொடுமைகள் ஆகிய தனது குற்றங்களை அது பெருக்குகிறது. அஃது உண்மையாகவே தீமையின் ஆலயமாகவும் (செக் 5:5-11), "வெறுமையின் நகராகவும்" (எசா 24:10) ஆகிவிட்டது.

4. **பாபிலோனிலிருந்து வெளியேறுதல்:** நாடு கடத்தப்பட்டதானது இஸ்ராயேலுக்கு ஒரு நீதியான தண்டனையெனின், இப்போது சோதனையால் மனம் மாறிய சிறிய குழுவான எஞ்சியோருக்கு அது சகிக்க முடியாத அடிமைத்தனமாகவும், ஆபத்தான பயணமாகவும் உள்ளது. முன்னுரைக்கப்பட்ட 70 ஆண்டுகள் கடந்தவுடன் (எரே 25:11; 29:10; 2 நாள் 36:21), மன்னிப்பின் ஆண்டு வரவிருக்கிறது (எசா 61:2; லேவி 25:10). நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த விடுதலையானது இறை மக்களுக்கு "நற்செய்தியாகும்" (எசா 40:9; 52:7-9). தீய நகரினின்று வெளியேறுமாறு நாடு கடத்தப்பட்டோர் அழைக்கப்படுகின்றனர்: "பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்!" (எசா 48:20; எரே 50:8); "வெளியேறுங்கள், தீட்டானதொன்றையும் தொடாதீர்கள்" (எசா 52:11). புதிய யாத்திரையில் உள்ளது போன்று அவர்கள் எருசலேமை நோக்கிச் செல்லவிருக்கின்றனர். இஃது அரிய தருணமாகும். இதை வெறுமனே நினைவுகூர்வதே வரவிருக்கும் நூற்றாண்டுகளில் இதயங்களை மகிழ்ச்சியால் நிரப்பும் (சங் 126:1-2). மெசியா காலத்தை நோக்கிப் படிக்கல்லாக மத்தேயு அமைக்கின்ற முக்கிய காலம் இது (மத் 1:11-12).

5. **பாபிலோன் மேல் தீர்ப்பு:** புனித வரலாறானது ஒரு புதிய திருப்பத்தை ஏற்கும் போது, இறைவனின் சவுக்காகிய பாபிலோன் தனது முறையில் இறை தீர்ப்புகளை அனுபவிக்கிறது. தீமையின் நகருக்கு எதிராகத் தீர்ப்பிடப்படுகிறது. தண்டனையானது இறைவாக்கினர்களால் மகிழ்ச்சியுடன் அறிவிக்கப்படுகிறது (எசா 21:1-10; எரே 51:11-12). அவர்கள் பாபிலோன்மீது வஞ்சப் புலம்பல்களை ஓதுகின்றனர் (எசா 47). அதனுடைய பயங்கர அழிவை அவர்கள் முன்னதாகவே விவரிக்கின்றனர் (எசா 13; எரே 50:21-28; 51:27-43). அந்நாள் அதற்கு எதிரான யாவேயின் நாளாகவும் (எசா 13:6...), அதனுடைய தெய்வங்களுக்கு எதிரான பழியாகவும் இருக்கும் (எரே 51:44-57). சைரசினுடைய வெற்றிகரமான பவனியானது, இந்நிகழ்ச்சிக்கான முன்னோடியாகும் (எசா 41:1-5; 45:1-6). பாபிலோனில் கல்லின்மேல் கல் இராதபடிக்கு, கி.மு. 485-இல் செருசின் படைகள் தண்டனையை நிறைவேற்றும் (எசா 24:7-18; 25:1-5). ஆயினும், அழிவிற்குக் குறிக்கப்பட்ட புறவின நகரின் மாதிரியைப் போன்று, பாபிலோனானது யூதரின் நினைவில் தொடர்ந்து

இருக்கும்; மற்றும் அகந்தை மிக்க, புனிதத்தைப் பாழாக்குகின்ற கொடுங்கோலனின் மாதிரியாக அதனுடைய அரசன் நெபுகத்னேசரும் இருப்பார் (தானி 2-4; யூதி 1:1-12).

**6. பாபேலினுடைய மறைபொருளின் நிலைத்தன்மை:** புதிய ஏற்பாட்டின் வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே வரலாற்று நகராகிய பாபிலோன் வீழ்ந்து விட்டது. ஆனால் அதன் மூலமாக இறை மக்கள், கீழுலகில் தொடர்ந்து நிலவுகின்ற தீமையின் மறைபொருளை அறியலாயினர். ஒன்றையொன்று எதிர்நோக்கியுள்ள பாபிலோனும், எருசலேமும், அவற்றிடையே மக்கள் பிரிக்கப்பட்டுள்ள இரு நகரங்களாக உள்ளன. கிறிஸ்தவ மொழியில், அது சாத்தானின் நகருக்கு எதிராக இறைவனின் நகரம் எதிர்கொள்தலாகும். இவ்விரு நகரங்களின் இந்த நாடகத்திற்குள் தானும் இழுக்கப்பட்டுள்ளதை ஆதித்திருச்சபையானது விரைவிலேயே புரிந்து கொண்டது. பாபிலோனானது ஒவ்வொரு நொடியும் புதிய எருசலேமிற்கு எதிராக அணிவகுக்கிறது (கலா 4:26; திருவெளி 21), நீரோவினுடைய கலாபனையின் தொடக்கத்தில் உரோமைப் பேரரசினுடைய உறுதியான வடிவைப் பாபிலோன் ஏற்கிறது (1 பேதுரு 5:13). செந்நிற விலங்கின்மேல் அமர்ந்து, புனிதர்களின் இரத்தத்தைக் குடிக்கின்ற பெயர்போன வேசியின் வேடத்தில் திருவெளிப்பாடு அதனை விவரிக்கிறது (திருவெளி 17). சாத்தானாகிய பறவை நாகத்துடனும், எதிர்க்கிறிஸ்துவாகிய விலங்குடனும் சேர்ந்து அது தன் வழியே சென்றது. இவ்வாறு, தப்பியோடுமாறு இறைமக்கள் அழைக்கப்படுகின்றனர் (18:4). ஏனெனில், இறைவனுடைய தீர்ப்பு நெருங்கி வருகின்றது; பெரிய பாபிலோன் வீழ்ச்சியடையப் போகிறது (18:1-8). இறைவனுடைய எதிரிகளாகிய நாடுகள் அதனை நினைத்துப் புலம்பும். ஆனால், விண்ணகமோ மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கும் (18:9-19:10). தீமையின் நகருக்கு இறுதியாக ஒதுக்கப்பட்டுள்ள முடிவானது இத்தகையதே. இறைவனுக்கும் அவரது திருச்சபைக்கும் எதிரான உலகப் பேரரசுகளின்மீது விழுகின்ற ஒவ்வொரு வரலாற்றுப் பூர்வப் பேரழிவும் இந்த இறை தீர்ப்பினுடைய செயல்வடிவமேயாகும். பழைய ஏற்பாட்டில் பாதுகாக்கப்பட்டுள்ள பாபிலோனுக்கு எதிரான கூற்றுக்கள் தங்களது இறுதிக்கால நிறைவேறுதலை இந்த நோக்கில் கண்டடைகின்றன. இக்கூற்றுக்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பாபிலோனின் மறைபொருளைத் தோற்றுவிக்கின்ற பாவநாடுகளின் மீது, அச்சுறுத்தும் விதமாகத் தொங்குகின்றவைகளாக உள்ளன.

**பாபேல் (BABEL - குழப்பம்)**

இது பாபிலோன் என்ற பெயரின் எபிரேய வடிவமாகும். பெருவெள்ளத்திற்குப் பிறகு மக்கள் அனைவரும் சினார் சமவெளிக்கு வந்ததாக ஆதி 11:1-9-இல் சொல்லப்பட்டிருக்கின்றது. தங்களுக்காக அழிக்கமுடியாத ஒரு நினைவுச் சின்னத்தைக் கட்டும் பொருட்டும், தங்களை ஒன்றுபடுத்தி, தாங்கள் பூமியில் சிதறிப் போவதைத் தடுக்கும் ஒரு பொதுவான நோக்கோடும் ஒரு நகரையும், விண்ணைமுட்டும் கோபுரத்தையும் கட்ட முடிவு செய்தனர். ஆனால், கடவுள் அவர்களுடைய மொழியை மாற்றியதால் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆகவே, அவர்கள் பிரிந்து போக வேண்டியதாயிற்று.

இந்தக் கதையில் பாபிலோனியாவைப் பற்றித் தெளிவான குறிப்பு இருப்பதால், இக்கதையின் மையமான கோபுரம், பாபிலோனியாவின் கடவுளான மார்துக்கின் மேடைக்கோபுரமாகவோ, சிகுராத்தாகவோ இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு கோபுரம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இஃது ஒன்றன்மேல் ஒன்றாக ஆறு சதுர மேடைகளைக் கொண்டுள்ளது; கடைசி மேடையானது கடவுளின் சிறிய ஆலயமாக உள்ளது. இது பற்றிய ஆப்பு எழுத்து வாசகம் முக்கியமான விவரங்களைக் கொடுக்கிறது. இது கிரேக்கர்கள் காலத்தில் தோன்றிய விதத்தில் எரோதோத்து ஒரு

விவரிப்பைக் கொடுக்கிறார். கோல்டேவேர் என்பவர் பாபிலோனியாவில் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் இந்தக் கோபுரத்தின் அடிப்படைத் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஆப்பு எழுத்து ஏட்டில், இந்தக் கோபுரத்தின் அளவுகள், பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன; இதனால் இந்தக் கோபுரத்தை மறுபடியும் அமைக்க முடிந்தது. இதன் அடிப்படை 230 அடிசதுரம். இந்தக் கோபுரம் எப்படியிருந்தது என்ற கேள்விக்கு இன்னும் முடிவுகாண முடியவில்லை. இதை எகிப்தியக் கடவுளின் (அல்லது) அரசனின் கல்லறையான பிரமிடுகளைப் போல் சிலர் கருதுகின்றனர். சிகுராத்துக் கோபுரம் கடவுளின் அண்டமலையாகவும் கடவுளின் அடையாள ஆசனம் போலவும் இருந்தது என்று சிலர் விலக்குவர். கடவுளை 'உயர்ந்த இடங்களில்' வழிபட்டுப் பழக்கப்பட்டவர்கள் சமவெளியில் குடியேறியபோது இக்கோபுரங்களைக் கட்டினர். ஆகவே, இச்செயற்கை மலை விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கும் பாலமாக அமைகிறது. இதன் வழியாக மனிதன் கடவுள்களிடம் ஏறுகிறான். கடவுள்கள் மனிதரிடம் இறங்கி வருகின்றனர். இக்கருத்துக்கு ஆதி 11:4-இல் வரும் "வானளாவிய கோபுரம்" ஓரளவு ஆதரவு அளிக்கிறது. இக்கருத்தை யாக்கோபின் கனவு (28:11-19) சுட்டலாம். இந்தக் கோபுரம் இடிபாடுகளில் இருந்தபொழுது ஆதி ஆகமத்தின் கதை தோன்றி இருக்கக்கூடும் எனத்தோன்றுகிறது.

ஆதி 10-ஆம் அதிகாரத்தில் நோவாவின் சந்ததியினர் பட்டியல் கொடுக்கப்படுகிறது. இதில் நாடுகளின் வேறுபாடுகள் பற்றிய யாவே பாரம்பரியக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பின்பு, பாபேல் கோபுரக்கதையை உட்புகுத்தி உலகத் தொடக்க வரலாறு பற்றிய தனது காவியத்தை யாவே பாரம்பரியம் முடிக்கிறது. இந்த மொழிக்குழப்பக் கதை மறைபோதனை அளிக்கவே உட்புகுத்தப்பட்டிருக்க வேண்டும். இறைவனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் மனப்போக்கு மனிதரிடம் ஆழ்ந்து வேரூன்றி உள்ளது என்று இக்கதை காட்டுகிறது. மனுகுலம் இறைவனோடு கொண்ட உறவில் ஒரு முன்னேற்றமும் அடையவில்லை.

நோவாவின் வழித்தோன்றல்களின் பட்டியலுக்குப் பின், திடீரென்று பாபேல் கதை தொடங்குகிறது. கதை என்ற அளவில் இந்நிகழ்ச்சியுரை நன்கு பின்னப்பட்ட ஒன்றாகும். ஆனால், இக்கதையில் இருவடிவங்கள் கலந்திருப்பதாகத் தெரிகிறது. கட்டடவேலை தொடங்க இரு அழைப்புகள் விடப்படுகின்றன (ஆதி 11:3-4); இரு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, மக்கள் சிதறிப் போகாவண்ணம் கட்டடங்கள் அமைக்க விழைகின்றனர். மற்றது, "விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தைக் கட்டி நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோம்". அவர்களது முதல் நோக்கத்திற்கு மாறாக, யாவே அவர்களைப் பூமி முழுவதும் சிதறிப் போகும்படி செய்கிறார். இரண்டாவது நோக்கத்திற்கு மாறாக, அவர்களிடையே மொழிக்குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மக்கள் எப்படி உலகம் முழுவதும் பரவினர். மொழிகள் எப்படித் தோன்றின என்பதற்குக் காரணம் காட்டும் விதத்தில் இக்கதை கொடுக்கப்படுகின்றது எனலாம்.

இக்கதையின் மூலவடிவம் மெசபொத்தாமியாவிலிருந்து வந்திருக்க வேண்டும். இந்நிகழ்ச்சி சினார் நாட்டுச் சமவெளியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. சினார் மிகப்பழைய சுமேரியா நாடாகும். செங்கல் அறுத்துச் சூளையிட்டுச் சுட்டுக் கட்டடம் கட்டுதல் பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததன்று; கருங்கல் அரிதாகக் கிடைக்கும் மெசபொத்தாமியாச் சமவெளியைச் சேர்ந்த பழக்கமாகும். இக்கதையில் குறிக்கப்படும் கோபுரம் மெசபொத்தாமியாவில் காணப்படும் "சிகுராத்" என்ற கோபுரங்களைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட கோபுரங்களைப் புதைபொருள் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ளனர். தங்களின் கோபுரங்களை இழிவுபடுத்தும்

இக்கதையை மெசபொத்தாமியர் விரும்பியிருக்க மாட்டார்கள். ஆனால், இக்கோபுரங்களும் நகரங்களும் அவற்றைக் கட்டியவர்களின் மனித கைத்திறமையையும், அவர்கள் தங்கள் காரியங்களில் எல்லாம் இறைவனின் முழு ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாத அகந்தையையும் எடுத்துக் காட்டுவதாக எபிரேயர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

பேராசையாலும், பாதுகாப்புத் தேவையாலும், ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் ஆவலாலும் உந்தப்பட்டு, தங்களுடைய புத்தியையும் ஆற்றல்களையும் ஒருங்கே பயன்படுத்தி, தனியாகச் செய்ய முடியாததைக் குழுவாகச் செய்யத் தலைப்பட்டனர் மனிதர். கோபுரங்களும் நகரங்களும் புகழுக்காகவும் பாதுகாப்புக்காகவும் கட்டப்பட்டாலும், இறைவனுக்கு எதிராகக் கட்டப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. மூலக்கதையில் மனிதச் செயல்களைக் கண்டு "கடவுள்கள்" பொறாமைப்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால், விவிலிய விவரிப்பிலே இக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில், இறைவன் ஏன் மக்களைச் சிதறச் செய்தார், மொழிக்குழப்பத்தை ஏற்படுத்தினார், என்பதற்குக் காரணம் தெளிவாகவும் இல்லை; நிறைவளிப்பதாகவும் இல்லை. மனிதர் பிற்காலத்தில் தமக்கு எதிராக எதையும் செய்து விடுவார்களோ என்று இறைவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. ஆனால், மக்கள் சிதறிப் போதலும் மொழிக் குழப்பமும் இயற்கைக் காரணங்களால் நிகழவில்லை; இறைச்செயலால் நடந்தது என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஆனால், எந்தக் குறிப்பிட்ட காரணமும் தரப்படவில்லை. ஆதியாகமத் தொடக்க வரலாற்றின் பரந்த சூழ்நிலையில் நோக்கினால், இறைவனது இச்செயலுக்குப் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். ஆதியாகமத்தின் முதல் பதினோரதிகாரங்களில் மனிதன் நாகரீகத்தில் முன்னேறும்போது பாவத்திலும் வளருகிறான் என்ற கருத்து தெளிவாக உள்ளது. சினார் சமவெளியில் இறைவனது இத்தடுப்புச் செயல், நகரமும் கோபுரமும் கட்டி முடித்தபின் மக்களிடையே பாவம் வளர்வதைத் தடுக்கும் செயலாகும். நோவாவின் சந்ததியினர் பட்டியலையும் பாபேல் கோபுரத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, நாடுகளிலும் நகரங்களிலும் மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். மக்களினம் பல நாடுகளாகவும் பல இனங்களாகவும் பிரிந்து போதல் இயற்கையானது; நல்லதும் ஆகும்; மனித வாழ்வின் இயற்கையான வளர்ச்சியும் ஆகும் (ஆதி 10). ஆனால், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமை அவ்வளவு இயற்கையானது அன்று. இந்த இசைவிணக்கமின்மை, மனிதனுடைய பாவத்தன்மையின் விளைவாக, இறைவனால் அனுமதிக்கப்பட்ட தொன்றாகும். அது முன்னோரின் பாவத்திற்காக மனிதன் மேல் சுமத்தப்பட்ட தண்டனையும் ஆகும்; மனிதனுடைய வரையுள்ள தன்மையையும், அவனுக்கு இறைவனுடைய உதவியும் வழிகாட்டுதலும் தேவை என்பதையும் நினைவூட்டும் செயலும் ஆகும்.

**பாப்பியா (PAPIA)**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாப்பியா சிறிய ஆசியாவில் எராபோலியின் ஆயராவார். இவர் "ஆண்டவரது கூற்றுகளின் விளக்கங்கள்" என்ற தலைப்பில் ஐந்து புத்தகங்கள் எழுதினார். இவற்றில் சில பகுதிகளே கிடைத்துள்ளன. இவை இரேனயு, யூசேபியு மற்றும் பைசாந்தியர் விளக்கவுரையாளர்கள், வரலாற்று ஆசிரியர்களின் நூல்களில் காணக்கிடக்கின்றன.

இரேனயுவின் கூற்றின்படி, பாப்பியா ஆண்டவரின் சீடர் யோவானிடம் கேட்டறிந்தவரும் போலிகார்ப்பின் தோழருமாவார். இவர் "ஆயிரம் ஆயிரமாண்டு நல்லாட்சி" என்ற கருத்தை உறுதியாக நம்பினார்.

யுசேபியு கூறியபடி, பாப்பியா ஆண்டவரைப்

பார்த்த எவருடனும் பழக்கம் கொள்ளவில்லை. இவர் இயேசுவைப் பற்றிய தமக்குள்ள அறிவை நற்செய்தியாளர் பிலிப்புவின் புதல்விகளிடமிருந்து அறிந்திருக்க வேண்டும் (அ.ப. 21:8-9).

பாப்பியா தன் நூல்களில் இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலத் தலைமுறையைச் சேர்ந்த முக்கியமானவர்கள் ஆகியோருடைய பாரம்பரியமாகக் கருதப்பட்ட கதைகள், கூற்றுகள் ஆகியவற்றைத் தொகுத்தார். மாற்குவின் நற்செய்தியைப் பேதுருவின் போதகத்தோடும், "எபிரேய மொழியின் கூற்றுக்களை" மத்தேயுவோடும் தொடர்புபடுத்தி பாப்பியா கூறுவது, முதல் இரண்டு நற்செய்திகளின் தோற்றம் பற்றிய ஆய்வில் முக்கியமானதாகும்.

**பாப்போ (PAPHOS)**

சைப்பிரசுத் தீவின் தென் மேற்குக் கரையில் இந்நகரம் உள்ளது. பவுல், பர்னபா, மாற்கு எனும் யோவான் ஆகியோர் தங்கள் முதலாம் மறைபரப்புப் பயணத்தின்போது இங்கே சென்றனர் (அ.ப.13:6-13). பவுலின் காலத்திய இந்தப் புதிய பாப்போ நகரம், பழைய பாப்போ நகரத்திலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும். உரோமையர் காலத்தில் இது சைப்பிரசு அரசின் ஆட்சிபீடமாக விளங்கியது. இந்த இடத்தில் ஆளுநராக இருந்த செர்கியு பவுல், பர்னபாவையும், பவுலையும் வரவேற்றான் (அ.ப. 13:7).

கி.மு. 55-இல் சைப்பிரசு உரோமையரால் கைப்பற்றப்பட்டு, கி.மு. 22-இல் உரோமை மேல்சபையின் மாகாணமாயிற்று. பாப்போ ஓர் இயற்கையான துறைமுகமாகும்; புதிய பாப்போ, பழைய பாப்போவிலிருந்து (இக்கலாக் கூகலியா) 15 கி.மீ. தொலைவில் இக்காலத்திய பாபோ இருக்கின்ற இடத்தில் இருந்தது. பாப்போ பைசாந்தியர் காலம் வரை முக்கியம் வாய்ந்த நகராய் விளங்கியது.

**பாமோத்து (BAMOTH – உயர்ந்த இடங்கள்)**

இஸ்ராயேலருக்கு உரித்தான யோர்தானுக்கு அப்பாஸ், நகலியேலுக்கும், "பாலை நிலத்தை நோக்கி நிற்கும் பிஸ்காவின் கொடுமுடிக்கருகில் மோவாபு பகுதியில் இருந்த பள்ளத்தாக்குக்கும்' இடையில் இஸ்ராயேல் தங்கிய ஓர் இடம் (எண் 21:19-20). இது பாமோத்து-பாகாலின் சுருக்கமான பெயராக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

**பாமோத் – பாகால் (BAMOTH - BAAL – பாகாலின் மேடுகள்)**

மோவாபைச் சேர்ந்த ஒரு நகர். பாலாக்கு அரசன், பிலயாமை இந்த மேடுகளுக்குக் கூட்டிக்கொண்டு போனான். பிலாயம் அங்கிருந்து இஸ்ராயேலரில் மிகவும் அண்மையில் இருந்தோரைப் பார்த்தான் (எண் 22:41).

பாமோத்-பாகால் என்ற பெயரும், பாலாக்கு மற்றும் பிலாயமின் பலிகளும் இவ்விடம் பாகால் தெய்வத்திற்கு உரிய புனித இடமாகும் என்று சுட்டுகின்றன (எண் 23:1-12). பிற்காலத்தில் இஃது ரூபன் குலத்தாருக்கு அளிக்கப்பட்டது (யோசு 13:17).

இவ்விடம் இருந்த இடம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை ஆயினும், நெபோ மலைப்பகுதியில் யோர்தானுக்கு அப்பாலுள்ள சமவெளியின் மேற்கு ஓரத்தில் இருந்திருக்கலாம். மோவாபிய கல்லில் குறிக்கப்படும் பெத்-பாமோத்து இவ்விடமாக இருக்கலாம்.

**பாம்பாட்டி வித்தை (SNAKE CHARMING)**

பாம்பாட்டி மந்திரம் அல்லது தந்திரம். பாலஸ்தீனத்தில் பொதுவாக, பாம்புகள் அதிகமாதலால் பாம்பாட்டி வித்தை தெரிந்தோர் பலர் பாலஸ்தீனத்தில் இருந்தனர் (காண்க. திருவுரை 10:11; சீரா 12:13). மகுடி என்னும் இசைக்கருவியினின்று மயக்கும் இசையை எழுப்பி, பாம்புகளை வயப்படுத்துதலே பாம்பாட்டி வித்தை எனப்பட்டது.

விவிலியத்தில் இரு இடங்களில் உருவகமாக,

"பாம்பாட்டி வித்தை" பயன்படுத்தப்பட்டுள்ளது.

அ) எரே 8:7, எவ்வகை மந்திர தந்திரங்களுக்கும் மயங்காத பாம்புகளைப் போன்றவர்கள் என்று எதிரிகளை விவரிக்கிறது.

ஆ) சங் 58:4-5, மனச்சாட்சி மழுங்கிப்போன பாவிகளையும், தீயவர்களையும் குறிப்பதற்கு இச்சொல்லைப் பயன்படுத்துகிறது. "செவிட்டு விரியன் தன் காதை அடைத்துக்கொள்வது போல, அவர்களும் தங்களைச் செவிடாக்கிக் கொள்கின்றனர். பாம்பாட்டியின் மகுடியோசை அவ்விரியனின் காதில் விழாது; அவன் திறமையுடன் ஊதினாலும் அதற்குக் கேளாது".

**பாம்பின் பாறை (SERPENT'S STONE)**

ஏன்-ரோகேல் நீரூற்றுக்கருகிலுள்ள சோகேலேத்து என்ற பாறை. இஃது ஒரு கல்லாகவோ, சிறுமலையாகவோ இருந்திருக்க வேண்டும். இப்பெயர் எக்காரணமும் இல்லாமல் வழங்கி வந்த பெயராக இருக்கலாம்; அல்லது பாம்பு வழிபாடு பரவலாக இருந்த காலகட்டத்தில் இப்பாறையிலும் அதன் உருவம் பொறிக்கப்பட்டிருந்திருக்கலாம். இங்கு தான் தாவீதரசனின் மகன்களில் ஒருவனான அதோனியா தாவீது நோயில் படுத்த படுக்கையாயிருக்கையில், தகனப்பலிகளை ஒப்புக் கொடுத்துத் தன்னை அரசனாக அறிக்கையிட்டுக் கொண்டான் (1 அர 1:9). ஆனால், பெரும் ஆதரவு இல்லாததால் நிலைக்க முடியவில்லை.

**பாம்பு (SERPENT)**

நீளமான பக்க உறுப்பற்ற, செதில்கள் மூடிய ஊர்வன இனத்தைச் சேர்ந்தது பாம்பு.

**1. பெயர்களும் அடையாளங்களும்:** விவிலியத்தில் பாம்புகளுக்குப் பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், எந்த ஒரு பெயரையும் தனித்தமையுடன் ஒரு குறிப்பிட்ட பாம்புக்கு அளிக்கமுடியாது. அ) நாகாசு என்பது எல்லாப் பாம்புகளுக்கும் பொதுவான பெயராகும்.

ஆ) விவிலியத்தில் உள்ள இரண்டு பாம்புகள் புராணத் தன்மையுடையன. அவைகள் சராப்பு என்ற பறக்கும் பாம்பும் செராபிம் எனப்படும் எரிக்கும் (எண் 21:8; உப 8:15) பறவை நாகமும் (எசா 14:29; 30:6) ஆகும். "தானின்" என்ற பாம்பு ஒருவேளை புராணத்தன்மையுடையதாக அல்லது, தெளிவாகக் கூறமுடியாத தன்மையுடையதாக (யாத் 7:9) இருக்கலாம். அங்கு, பார்வோனின்முன்கோல் பாம்பாக மாறுகிறது. இதே பெயர் பாம்புக்குப் பொதுவாகவும் (உப 32:33; சங் 91:12), பறவை நாகத்திற்கும் (ஆதி 1:21; சங் 74:15; 141:7; எசா 27:1; 51:9; எரே 51:34; எசே 29:3) கொடுக்கப்பட்டுள்ளது. இ) பாம்பைக்குறிக்கும் மற்றொரு சொல் ஊரும் நச்சுப் பூச்சி (உப 32:24), "ஊர்வன" (யாக் 3:7) ஆகும்.

விரியன் பாம்பு என்ற பெயரும் பயன் படுத்தப்படுகின்றது. இது மணல் பகுதியில் வாழும் ஒன்றாகும் (ஆதி 49:17: உரோ 3:13; எசா 11:8; 14:29; பழ 23:32; எரே 8:17). நவீன பாலஸ்தீனத்தில் முப்பத்தாறுவகையான பாம்புகள் அறியப்பட்டுள்ளன. ஆனால், பண்டைய எபிரேயர்களுக்கு இவைகளில் ஒருசில வகை மட்டுமே தெரியும் எனக் கருதப்படுகின்றது. நாகாசு என்ற பொதுப்பெயர் எல்லாப் பாம்புகளுக்கும் பொதுவாக அளிக்கப்பட்டது; ஆனால், பெரிய வகையான பாம்புகளுக்கு அளிக்கப்பட்ட பெயராகும். சீரியாவின் கறுப்புப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, மோன்ட்பெல்லிர் பாம்பு, பூனைப் பாம்புகளையும் குறிக்க இப்பெயர் பயன்பட்டது. ஆனால், நச்சுப்பாம்புகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒரு தனித்தன்மையான அடையாளம் கிடையாது. ஆனால், இப்பொழுதுள்ள முறையை வைத்துக்கொண்டு விவிலியத்தில் நஞ்சுள்ள, நஞ்சற்ற பாம்புகள் என்று பிரிக்கப்பட்டிருந்தாலும், நாம் ஒற்றுமைப்படுத்திக்காட்ட முடியாது. ஆனால், கிரேக்கப் பாரம்பரியத்தில் இப்படிப் பிரித்துக் காட்டப்படவில்லை.

பொதுவாக, பாம்புகள் வெறுப்புக்குரியவை. சாதாரணமாக, எல்லாப் பாம்புகளுமே நஞ்சுள்ளவையாகக் கருதப்பட்டுள்ளன.

2. **சொற்பொருளில்:** பெரும்பாலான பாம்பு சம்பந்தமான குறிப்பீடுகளுக்குச் சிறப்பான விளக்கம் தேவையில்லை. பாம்புக்கடி (சங் 10:8; ஆமோ 5:19), பாம்பின் வழி (பழ 30:19), பாம்பை மயக்குதல் (சங் 58:5; திருவுரை 10:11; யாக் 3:7), இஸ்ராயேல் மக்களைத் துன்புறுத்தும்படியாக, பாலைவனத்தில் கடவுளால் அனுப்பப்பட்ட கொள்ளிவாய்ப் பாம்புகள் (எண் 21:6-7; உப 32:24; ஞான 16:5-14; 1 கொரி 10:9). பறக்கும் பாம்பு (எசா 14:29; 30:6), உண்மையான விலங்காக இருக்குமானால், ஒருவேளை பாலைவனத்தில் உள்ள விரியன் பாம்பாக இருக்கும். ஆமோ 93-இல் குறிப்பிட்டுள்ள கடலிலுள்ள பாம்பானது, பெரும்பாலும் ஆழ்கடலிலுள்ள கடிக்கும் பாம்பைப் பற்றியதாக இருக்கலாம். இது யாவேயின் சித்தத்திற்கு உட்பட்டதாயினும் பயங்கரமான சக்திவாய்ந்ததாக இருந்தது எனக் கருதப்பட்டது. மெசியாவின் வருகையின்போது பாம்புகளின் உணவு தூசியாக இருப்பதால் (எசா 65:25; ஆதி 3:14) பாம்பு நஞ்சற்றதாகிவிடும்; ஆகவே மனிதன் பயப்பட வேண்டியதில்லை என்பதைக் காட்டுகின்றது.

3. **உருவகத்தில்:** திரிஸ்தராம் குறிப்பிடும் பதினெட்டு வகைப் பாம்புகளில் பதின்மூன்று வகை நஞ்சற்றவை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், விவிலிய ஆசிரியர்கள் பொதுவாக, பாம்புகளை மனிதனுக்குத் துன்பந்தரக் கூடியவையாகவும், தீயவையாகவும் கருதுகின்றனர். தீய மனிதர்களைப்பற்றிப் பேசும் இடத்தில் பாம்பு பயன்படுத்தப் பட்டுள்ளது (சங் 58:4); அசீரியர்கள் (எசா 14:29), பாபிலோனியர்கள் (எரே 8:17), இஸ்ராயேலின் பகைவர்கள் (உப 32:33), திராட்சை ரசத்தின் விளைவுகள் (பழ 23:32), பரிசேயர்கள், சட்டவல்லுநர்கள் (மத் 23:33) ஆகியவர்களைக் குறிக்க பாம்பு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் இழிநிலையைச் சுட்டிக்காட்டுவதற்காக பாம்புகளைப்போல அந்நாடு தூசியைத் தின்னுவதாகக் கூறப்படுகிறது (மீக் 7:17). பாம்பின் தந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 3). இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த எச்சரிக்கையில் "பாம்புகளைப் போல் விவேகமுள்ளவர்களாய்" இருங்கள் என்று எச்சரிக்கின்றார் (மத் 10:16). ஆதி 49:17-இல் தாணைப் பற்றிய உருவகம் அதற்குப் பெருமை தருவதாக உள்ளது. தாண் சிறியதாகவும், பலவீனமானதாகவும் இருந்தாலும் வெகு சாமர்த்தியமாக தன்னுடைய வேலையைச் செய்யக்கூடியது என்றும் கூறப்படுகிறது (உப 33:22; நீதி 18).

4. **மந்திரவாதம் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளில்:** கழியோ, கோலோ பாம்பாக மாறிய நிகழ்ச்சியை இஸ்ராயேல் மக்களின் விடுதலை வரலாற்றிலே மட்டுமே காண்கின்றோம் (மோசே: யாத் 4:3; 7:15; ஆரோன்: 7:9-10; எகிப்திய மந்திரவாதிகள் 7:2).

5. **புராணங்களில்:** பழக்கப்பட்ட பண்டைய மேற்காசிய நாடுகளில் உள்ள புராணங்களில் இருதலையான சக்திகளுக்கு இடையே காணப்படுகின்ற எதிர்ப்புகளின் எதிரொலியைப் பழைய ஏற்பாட்டிலே காணலாம். ஆனால், இவை யாவேக்கும் அவரது எதிரிக்கும் நடக்கும் போராட்டமாகும். இந்த எதிரியைக் குறிக்கும் ஒரு சொல் "விரைந்தோடும் பாம்பு" ஆகும் (யோபு 26:13; காண்க. சங் 74:13-14; 89:9=10; எசா 51:9). மனிதனை இன்பவனத்திலிருந்து துரத்திய நிகழ்ச்சியுரையின் (ஆதி 3) தனித்தன்மை இஸ்ராயேலரின் கடவுட்கோட்பாட்டைப் பிரதிபலித்தாலும் அதே வேளையில் இந்தக் கருத்து மேற்காசிய புராணங்களுடன் தொடர்புடையதாகத் தென்படுகின்றது. சுமேரிய என்கி மற்றும் நின்குர்சாகு பற்றிய கதை, அடப்பா கதை, கில்காமிசு காவியம் இவை எல்லாமே விவிலியத்திற்கு இணையான

தொடர்புடையவையாகத் தென்படுகின்றன. கில்காமிசு காவியத்தில், பதினொன்றாவது பலகையில், உத்தனாபிஸ்தியும் அவருடைய மனைவியும் கடவுளைப்போல் இருக்கும் வாய்ப்பை எதிர்பார்த்ததாகத் தெரிகிறது. இங்கு வாழ்வளிக்கும் செடி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செடியை ஒரு பாம்பு கில்காமிசிடமிருந்து கவர்ந்து சென்று விடுகின்றது.

ஆதி 3-ஆம் அதிகாரத்திலே பாம்பு கடவுளால் படைக்கப்பட்ட உயிர்மட்டுமன்று; ஆனால், கடவுள் படைத்த எல்லாப் பிராணிகளிலும் அதிக தந்திரமுள்ளதாய் இருந்தது (3:1); நிறைய உண்மைகளை அறிந்திருந்தது (3:4-5). கொடுக்கப்படாத, ஏதோ ஓர் இறையியல் காரணத்திற்காகவே பாம்பு படைத்தவரின் நோக்கத்தை எதிர்க்கின்றது (2 கொரி 11:3). அதனுடைய விளைவுகள் (ஆதி 3:14-19) பூமியிலுள்ள அனைத்தும் சபிக்கப்பட்டதாகிவிட்டது. பாம்பை வயிற்றினாலே ஊர்ந்து செல்லக்கூடிய பிராணியாகச் சபிக்கின்றார் (3:14). ஏனோக்கு நூலில் ஒரு வானதூதர் ஏவாளைத் தவறான வழிக்கு அழைத்துச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. ஞான 2:24-இல் "அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது" என்று படிக்கின்றோம். ஒரு சிலர் இதை விளக்கும்போது பாம்பைச் சாத்தானுடன் ஒன்றுபடுத்திக் காட்டுகின்றனர். பீலோ என்பவர் பாம்பை இச்சைக்கும், உணர்ச்சிகளுக்கும் அடையாளமாக எடுத்துக் கொல்கிறார்.

**6. வழிபாட்டுப் பொருளில்:** மேற்காசிய நாடுகளில் பாம்பு, தேவதையின் மற்றும் வளமைச் சக்திகளின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. எகிப்தில் ஒரு பாம்புத் தேவதைக்குச் செலுத்தும் மரியாதையிலிருந்து இன்னொரு பாம்புத் தேவதைக்கு மாறுவது வழக்கமாக இருந்து வந்தது. தென் எகிப்தில் பூட்டோ என்ற மிகவும் நன்மை வழங்கி வந்த பாம்புத் தேவதையை வணங்கி வந்தனர். நாகப்பாம்பு வடிவத்திலே இந்தத் தேவதையை வழிபட்டனர். காலப்போக்கில் அரசாங்க முத்திரையிலும், மன்னன் மணிமுடியிலும் நாகப்பாம்பு அடையாளம் பொறிக்கப்பட்டது. அந்த நாட்டின் பாதுகாவலாகவும் அறிவிக்கப்பட்டது.

எகிப்தியப் பேய்களில் மிகவும் முக்கியமான அப்போபிசு, ரேயின் தலையான எதிரியாகும். இதுவும் பாம்பாகத்தான் காட்டப்படுகின்றது.

மெசபொத்தாமியாவிலும் பாம்பு ஒரு சமய அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. இதை நிங் கிங்ஸிட்டா என்ற இளமையான தெய்வத்துடன் சேர்த்துப் பயன்படுத்தினர். பிற்காலக் கானானியர்களிடையேயும், முற்காலப் பாலஸ்தீன எபிரேயர்களிடையேயும் பாம்புத் தேவதைகளை வணங்கும் பழக்கம் இருந்ததாக பெத்சான், பெத்-செமேசு, கெசேர், ஆபசோர், செக்கேம், தெல் பெயிட்மிர்சிம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2 அர 18:4-இல் குறிக்கப்படும் எசேக்கியாவின் சீர்திருத்தத்தின்போது அவர், "மோசேயால் செய்து வைக்கப்பட்ட வெண்கலப்பாம்பையும் உடைத் தெறிந்தார்" (எண் 21:8-9) என்று சொல்லப்பட்டுள்ளது. வெண்கலப்பாம்பின் தொடக்கம் எதுவாக இருந்தாலும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர் அனைவருமே அதைச் சிலைவழிபாடாகக் கருதி, வெறுத்தனர்; அதை அழிக்கவும் செய்தனர். இந்தப் பாம்பு மோசேயால் செய்யப்பட்டது என்பது ஐயத்திற்குரியது. அனேகமாக இது கானானியத் தொடக்கமுடையதாக இருக்கலாம். செழுமை அளிக்கக்கூடிய தேவதையாக இருந்திருக்கலாம். தாவீதுக்கு வெகு காலத்திற்கு முன்பே இஃது எருசலேமில் இருந்து வந்த பழக்கமாகத் தெரிகிறது. இதனுடைய வழிபாடு எபிரேயர்களுடைய காலத்தில் எசேக்கிய மன்னனுடைய ஆட்சிக்காலம் வரை நீடித்தது என்று சொல்லப்படுகின்றது.

**7. இறுதிக்கால இயலில்:** எசா 27:1-இல் ஒரு புராணக்கருத்து இறுதிக்கால நோக்கத்திற்காகப்

பயன்படுத்தப்பட்டுள்ளது. "லேவியாத்தன் என்னும் விரைந்தோடும் பாம்பு" என்னும் சொற்றொடர் ஆண்டவருடைய பகைவர்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது. அவர்கள் "அந்த நாளில்" வீழ்த்தப்படுவர். ஆனால், இங்கே குறிப்பிட்டுள்ள பகைவர்கள் மண்ணுலகைச் சார்ந்தவர்களா, விண்ணுலகைச் சார்ந்தவர்களா அல்லது அண்டத்தைச் சார்ந்தவர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. திருவெளிப்பாட்டின் ஆசிரியர் "பறவை நாகம்" என்ற பாம்பைச் சாத்தானுடன் அல்லது பேயுடன் ஒன்றுபடுத்திக் காட்டியுள்ளார் (திருவெளி 12:9-15; 20:2). தொடக்ககால அண்டப்போராட்டங்கள், இன்பவன நிகழ்ச்சி, பழமையான இனப்பெருக்கச் சடங்கு ஆகிய யாவும் பாம்பைச் சாத்தான் எனக்கருதியதோடு ஒன்றாகின்றன. இந்தப் பாம்பின் இறுதியான முடிவு கந்தக நெருப்புக்கடலில் எறியப்படுவதாகும் (திருவெளி 20:10; காண்க. மத் 25:41).

**பாயி (PAI)**

பாவு என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 1:50).

**பாய்மரம் (MAST)**

விவிலியத்தில் மூன்று இடங்களில் பாய்மரம் குறிப்பிடப்பட்டுள்ளது (எச 33:23; எசே 27:5; பழ 23:34). இவற்றில் எசே 27:5-இல் மட்டுமே தீர்நாட்டுக் கப்பலின் பாய்மரம் குறிப்பாகப் பேசப்படுகிறது. பழங்காலத்தில் எகிப்தியர் பயன்படுத்திய ஆற்றுப்படகுகளில் இரண்டு பாய்மரங்கள் இருந்தன. பிற்காலத்தில் ஒற்றைப்பாய்மரம் பயன்படுத்தப்பட்டது. பயணம் செய்யப் பயன்படாதபோது இதைக் கப்பலின் மேல் தளத்தில் கழற்றிப் போட்டுவிடுவர். மத்திய தரைக்கடலில் பயணம் செய்த பெரிய கப்பல்களில் நிலையான பாய்மரங்கள் இருந்தன. இவற்றிலும், கழற்றக்கூடிய பாய் மரங்களைக் கொண்ட கப்பல்கள் இருந்தன.

**பாரக்கேல் (BARACHEL -இறைவன் ஆசீர்வதிக்கிறார்)**

யோபுவின் நான்காம் நண்பனான எலிகூவின் தந்தை. ஒரு பூசியர் (யோபு 32:2).

**பாரசீகம் (PERSIA)**

பாரசீகம் மேற்காசியாவின் மிகப்பெரிய பேரரசு. அதன் ஆதிக்கத்தின் உச்சநிலையில் அஃது இந்தியாவைக் கிழக்கு எல்லையாகவும் அயோனியாவை மேற்கெல்லையாகவும் கொண்டிருந்தது. மக்கள் அதை ஆரியனா என்றழைத்தனர்.

1. புவியியல்: பாரசீகம் நிறுவப்பட்டிருந்த இடம் 7,77,000 சதுர கி.மீட்டர் பரப்புடைய பீடபூமியாகும். அது கடல் மட்டத்திலிருந்து 900-2,500 மீட்டர் உயரத்தில் அமைந்திருந்த உயர்ந்த பள்ளத்தாக்குகளையும், வறண்ட பள்ளங்களையும் கொண்டிருந்தது. பீடபூமி மேற்கில் குர்திஸ்தான் மற்றும் சக்ரோஸ், வடக்கில் எல்புர்சு, கிழக்கில் இந்துகுஷ் ஆகிய மலைத்தொடர்களால் சூழப்பட்டிருந்தது. மற்றும் தஸ்த்-இ-லூத் என்ற இரு பரந்த உப்புக்கட்டிகள் நிறைந்த பாலைவனங்களைக் கொண்டிருந்தது.

வடக்குப் பகுதியைத் தவிர, மற்றப் பகுதிகளில் மழை குறைவாகவே பெய்தது. பீடபூமியின் கிழக்குப்பகுதியில் 20 கி.மீ. அல்லது அதற்கும் குறைவான அளவும், மேற்குப்பகுதியில் 38 செ.மீ. அளவும் மழை பெய்தது. ஆகவே, பரந்த அளவில் விவசாயம் செய்ய வேண்டும் என்றால் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அவசியமாயிற்று. புதிய கற்காலத்தில் (கி.மு. 9000) கோதுமையும், வாற்கோதுமையும் பயிரிடப்பட்டன; ஆடுகள் வளர்க்கப்பட்டன. தட்பவெட்ப நிலை மத்திய பகுதியில் சராசரி - 18$^\circ$ செல்சியசிலிருந்து, உச்ச அளவாக 20-32$^\circ$ செல்சியசு வரை வேறுபட்டது. பாரசீக வளைகுடாப்பகுதியில் 50$^\circ$ செல்சியசு வரை உயரலாம். வடக்கில் காஸ்பியன் கடல்பகுதியில் தட்பவெப்பம் வெப்ப மண்டலத்துக்கும் குறைவாக இருந்தது. அங்கு மழைக்காடுகள் மிகுந்திருந்தன.

**2. வரலாறு:**

**அ. தொடக்ககாலம்:** கி.மு. 9000-ஆண்டுக் காலத்திலேயே சாக்ரோஸ் மலைப்பகுதிகளில் பல இடங்களில் விலங்குகளும் தாவரங்களும் வீட்டுப்பொருளாக்கப்பட்டதற்குச் சான்றுகளைத் தொல்பொருள் ஆய்வுகள் கொடுத்துள்ளன. விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட கிராம நாகரிகம் வழக்கிலிருந்தது.

பாரசீகப்பேரரசுக்கு முந்திய ஏலாம் அரசு தென்மேற்கு ஈரானில் பாரசீக வளைகுடாவின் வடகரையில் அமைந்திருந்தது. இது சுமேருக்குச் செம்பு, தகரம், வெள்ளி, ஈயம் போன்ற பொருள்களைக் கொடுத்து வந்தது. விலையுயர்ந்த கற்கள், மரம், குதிரைகள் முதலியவைகளும் ஏலாமிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இரண்டாம் ஆயிரமாண்டு முடிவில் காஸ்பியன் கடலுக்குத் தெற்கிலும் கிழக்கிலிருந்தும் பல இனக்குழுக்கள் ஏலாமுக்குள் நுழைந்தன. இந்த ஆரியர்களின் குழுக்களுள் சிமிரியர்கள், சித்தியர்கள், மேதியர்கள் மற்றும் பாரசீகர்கள் உள்ளடங்குவர். ஏறத்தாழ கி.மு. 9-ஆம் நூற்றாண்டில், மேதியர்களும் பாரசீகர்களும் ஈரானின் வடமேற்கில் குடியேறி நிலைத்துவிட்டனர். இவர்கள் உரார்த்து, அசீரியா, ஏலாம் மற்றும் பாபிலோனியர்களால் சூழப்பட்டிருந்தனர். அசீரிய அரசனான மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 859-825), தனது கற்பொறிப்புகளில் முதல் தடவையாக பாரசீகர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவர் கி.மு. 837-இல் அனேக பாரசீகர்களை நாடு கடத்தினார். இவர்கள் மூன்றாம் திகிலத்-பிலேசருக்கும் (745-727), இரண்டாம் சார்கோனுக்கும் (721-705) கப்பம் செலுத்தினர்.

7-ஆம் நூற்றாண்டில் அசீரியர்கள் மற்றும் உரார்த்தியர்களின் தாக்குதல் மேதியர்களை ஒன்றுபடக் கட்டாயப்படுத்தின. இவர்கள் எக்பத்தானைத் (இக்கால அமதான்) தலைநகராகக் கொண்ட ஓர் அரசை நிறுவினர். இவர்களின் தலைவர் தியோசீஸ் (அல்லது தயாக்கு) என்பவராவார். இவர் கி.மு. 715-இல் அசீரியர்களால் பிடிக்கப்பட்டு, சீரியாவிலுள்ள ஆமாத்துக்கு நாடு கடத்தப்பட்டார். இவருக்கு அடுத்தவரான பிராரோர்தெஸ் (கசாதிர்த்தர்) 675-653-இல் ஆட்சி செய்தார்; தென்மேற்கில் பாரசீகர்களை வெற்றி கொள்ளும்போது உயிர் துறந்தார். சித்தியர்களின் ஆட்சியில் மேதியர்கள் இருபது ஆண்டுகள் வாழ்ந்தனர். சியாக்செரேஸ் (உபகசத்ரா; 683-585) மேதியர்களை விடுவித்தார். பாபிலோனியர், சித்தியர்களோடு சேர்ந்து, சியாக்செரேஸ் நினிவேயை முற்றுகையிட்டு அழித்தார். பின்பு, இவர் பாபிலோனோடு உடன்படிக்கை செய்து கொண்டார். தன்பேத்தி அமித்திசை, நபோபோலாசரின் மகன் 2-ஆம் நெபுகத்னேசருக்கு (605-562) மணம் செய்வித்தார். இந்த அமித்திசுக்காகத்தான் புகழ்பெற்ற "தொங்கும் தோட்டம்" பாபிலோனில் கட்டப்பட்டது.

பாரசீகர்கள் படிப்படியாக ஏலாமுக்குக் கிழக்கில் குடியேறினர். கி.மு. 700-ஐ ஒட்டி அக்கமேனஸ் ஓர் அரசமரபைத் தொடங்கிவைத்தார். இவருக்குப்பின் வந்தவரான தெயிஸ்பே அன்சானைப் பாரசீக அரசோடு சேர்த்தார். இவரது புதல்வர்கள், அரிய ராம்னேயும் (640-590), முதலாம் சைரசும் (குராஸ் 640-600) மேற்கில் நாட்டை விரிவாக்கினர். முதலாம் கம்பிசேஸ் (600-559) அஸ்தியாகேசின் மகள் மந்தானேயை மணந்து 2-ஆம் சைரசை மகவாய்ப் பெற்றார். மோசேயைப்போன்று, சைரசைப் பற்றிய ஒரு கதை அவரது பிறப்பையும், குழந்தையைக் கைவிட அஸ்தியாகேஸ் கட்டளையிட, ஓர் ஆட்டு இடையனால் காப்பாற்றப்பட்டதையும் விவரிக்கிறது. கி.மு. 549-இல் 2-ஆம் சைரஸ் அஸ்தியாகேசுக்கு எதிராக வெற்றிகரமாகக் கிளர்ச்சி செய்து, அக்கமேனியர் அரச மரபை நிறுவினர்.

**ஆ)** பாரசீகப்பேரரசு: 1. இரண்டாம் சைரஸ் (559-530). பாபிலோனியர் மேற்கில் தங்கள்

அரசை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்த காலம் அசீரியா, சிலிசியா, சர்தை மற்றும் அயோனியக் கிரேக்கத் தீவுகளைத் தன் அரசோடு சேர்த்துக் கொள்வதற்குச் சைரசுக்கு வாய்ப்பளித்தது. புதிதாக வெல்லப்பட்ட பகுதிகள், தொடக்கத்தில் இருபது சத்திராபுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் உயர் குடிமக்கள் தலைவராக நியமிக்கப்பட்டனர். பாபிலோனியத் தேவர்களின் உருவங்களைத் தலைநகருக்கு மாற்றும் அரசன் நபோனிதுவின் தீர்மானம் மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டது. இது பாபிலோனை வெல்வதற்குச் சைரசுக்கு வாய்ப்பளித்தது. கிளர்ச்சி செய்த பாபிலோனியர்களின் உதவியோடு சைரஸ் கி.மு. 539-இல் பாபிலோனில் நுழைந்து அதைக் கைப்பற்றினார்.

பாரசீக அரசன் ஏகாதிபதியாகத் திகழ்ந்தான். அவனது மோதிர முத்திரை பெற்ற அறிக்கைகள் சட்டமாகக் கருதப்பட்டன (எஸ்த 3:12; 8:8). ஆறு முக்கிய குடும்பங்கள் அரசவையில் மரபுரிமையாக வரும் அதிகார உரிமை கொண்டிருந்தனர். இவர்கள் விஸ்பாத்தி என்றழைக்கப்பட்டனர். இவர்களில் சிறப்புப் பெற்றவர், "அழியாதவர்களில்" தலைவன் என்றழைக்கப்பட்ட அரசனது மெய்க்காவலர் ஆவார். இந்தப் பெரிய பேரரசைப் பற்றி அதிகமாக அறிவதற்கில்லை. கண்டெடுக்கப்பட்டுள்ள மிகுதியான ஆவண ஏடுகள், தலத்துப் பிரச்சனைகள் பற்றியே கூறுகின்றன.

ஓர் அரசியல் யுக்தியாக, தேவர்களின் உருவங்களை அந்தந்தக் கோவிலுக்குத் திருப்பிக்கொடுக்குமாறு சைரஸ் கட்டளையிட்டார். பாபிலோனியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த மக்கள் அவரவர்களது சொந்த ஊருக்குத் திரும்பினர் (2 நாள் 36:23; எஸ் 1:1-4). இதனால் நாடு கடத்தப்பட்ட யூதாவின் மக்கள் கொண்ட மகிழ்ச்சி (காண்க. எசா 44:28; 45:1.13), பிற மக்களாலும் அனுபவிக்கப்பட்டது எனலாம். பாரசீகர்கள், தாங்கள் வென்ற பகுதிகளின் பாரம்பரியத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப அப்பகுதிகளில் அரசராக முடிசூட்டிக்கொள்வதில் கவனமாய் இருந்தனர். "சைரசின் நீர் உருளை" என்றழைக்கப்படும் பாபிலோனியப் பொறிப்பு சைரசை நபோனிதுவின் ஆட்சியை வீழ்த்த மார்துக்கினால் தேர்ந்து கொள்ளப்பட்டவராகச் சித்தரிக்கிறது; பாபிலோனின் கோவில்களிலிருந்து தேவர்களின் உருவங்களைக் கொள்ளையடிக்காமைக்கு அவரைப் போற்றுகின்றது. கி.மு. 530-இல் வடகிழக்கு எல்லையில் மசாகெத்தேக்கு எதிரான போரில் சைரஸ் இறந்தார்.

**2. இரண்டாம் கம்பிசேஸ்** (529-522). இவர் சைரசின் மூத்தமகனாவார். பேரரசை விரிவாக்குவதை விரைவாகத் தொடர்ந்தார். எகிப்து, சைப்பிரசு, கிரேக்கத்தீவுகள் என ஒன்றன்பின் ஒன்றாக, பேரரசுக்குள் சேர்க்கப்பட்டன. ஆனால், நுபியாவில் பாரசீகர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இக்காலக்கட்டத்தில், அரியணை கவுமாத்தாவால் கைப்பற்றப்பட்டது. இவர் "மாகி" (ஞானிகள்)களில் ஒருவர். 526-இல் கம்பிசேசால் கொல்லப்பட்ட அவருடைய இளைய சகோதரனான பர்தியாக வேடம் போட்டுக் கொண்டு திரிந்தார். மேதியா, அர்மேனியா, பாபிலோனியா ஆகிய பகுதிகளில் கிளர்ச்சிகள் தோன்றின. அம்மக்களுக்கு இராணுவச் சேவையிலிருந்தும் வரிவிதிப்பிலிருந்தும் விடுதலை அளித்துத் தன்னுடைய பதவியை நிலைப்படுத்த கவுமாத்தா முயன்றார். ஆனால், அவரது ஆட்சி ஆறு மாதங்களுக்கே நீடித்தது. கம்பிசேசு, பாபிலோனுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, புதிரான சூழ்நிலையில் இறந்தார். ஒருவேளை இஃது ஒரு தற்கொலையாக இருக்கலாம்.

**3. முதலாம் தாரியு** (தரியவாவுசு; 522-486). இஸ்தாபேயின் (விஸ்தாபா) மகனான தாரியு, பார்த்தியா மற்றும் இரிக்கானியா பகுதிகளுக்குச் சத்திராபாக இருந்தார். இவர் கவுமாத்தாவைக் கைதியாக்கி 522-இல் எக்பத்தானாவில் கொலை செய்தார். அதன் பின் இவர் அரசராகப் பறைசாற்றப்பட்டார். பேரரசு முழுவதும்

கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இவருக்கு இரு ஆண்டுகள் ஆயின. 518-க்குள் எகிப்து, அயோனியா போன்ற வெகுதொலைவிலுள்ள சத்திராபுகளும் இவருடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டன. பாரசீகர்கள் மேற்கில் தான்யுபு நதிவரை படையெடுத்துச் சென்றனர். ஆனால், 490-இல் மாரத்தோனில் கிரேக்கப்படைகளால் தோற்கடிக்கப்பட்டனர். எக்பத் தானா-பாபிலோன் வர்த்தகசாலையில் பெகிஸ்துன் (இக்காலப் பிஸ்துன்) என்ற இடத்திலுள்ள மலையுச்சியில் அமைந்துள்ள பெரிய புடைப்புச் சித்திரம் தாரியுவின் வெற்றிகளை நினைவுகூர்கிறது. இதில், அகூரா-மஸ்தா என்ற கடவுளின் பாதுகாப்பில் இருப்பதாகவும், கவுமாத்தாவையும் அவருடன் ஒன்பது கிளர்ச்சித் தலைவர்களையும் நசுக்குவதாகவும் தாரியு சித்தரிக்கப்பட்டுள்ளார். பழைய பாரசீக மொழி, அக்காதிய ஏலாமிய மொழிகளிலுள்ள பொறிப்புகள் இப்பழங்கால மொழிகளைப் பொருள் கண்டுபிடிக்கப் பெரிதும் உதவியுள்ளன. இதன்பிறகு அயோனியக் கிளர்ச்சிவரை (500-494) பேரரசு முழுவதும் அமைதி நிலவிற்று. இந்தக் கிளர்ச்சியால் மிலேத்து அழிக்கப்பட்டது.

தாரியுவின் ஆட்சிக்காலத்தில்தான் யூதாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் எருசலேமுக்குத் திரும்பி ஆலயத்தைக் கட்டத்தொடங்கினர். "யூதாவின் தலைவரான" செருபாபேல் இதற்குத் தலைமை வகித்தார். ஆகாய், செக்கரியா போன்ற இறைவாக்கினர்கள் இவ்வேலையில் மக்களை ஊக்குவித்தனர். ஆலயம் கட்டுவது தத்தெனாய் போன்றவர்களிடையே ஐயம் எழுப்பியபோது, ஆலயம் கட்டுவதற்குச் சைரஸ்தான் அனுமதி அளித்தார் என்ற யூதர்களின் கூற்றை (எஸ் 5) உறுதிப்படுத்தும்படி தாரியுவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. சைரசின் சட்டப்பிரதி, தேடிக்கண்டுபிடிக்கப்பட்டது. ஆலயம் கட்டும்வேலை தொடர்ந்து நடக்க வேண்டும் என்று தாரியு கட்டளையிட்டார் (எஸ் 6).

தாரியு நிர்வாக ஆற்றலுடையவர். பேரரசை 22 சத்திராபுகளாகப் பிரித்து, மத்திய அரசிலிருந்து பிரதிநிதிகளை நியமித்தார். சத்திராபுகளை எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். நல்ல சாலை அமைப்பு, அரச அஞ்சல் தொடர்பு அமைப்பு, நெடுங்காலமாக ஆட்சிமொழியாக இருந்த வந்த ஏலாமிய மொழியை நீக்கி, அரமேயிக்கு மொழியை ஆட்சி மொழியாக்கியது ஆகியவை ஆட்சியின் நிர்வாகத்தை மேம்படுத்த உதவின. தாரியு ஒரே விதமான வரிமுறையையும், ஒரே விதமான அளவு முறைகளையும் புகுத்தினார் 517-இல் பொன் தாரிக்கை, வெள்ளிச் செக்கேல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி, நாணய அமைப்பை ஒன்றியப்படுத்தினார்.

வணிகம் வளம்பெற்றது. வங்கிமுறைகள் நிறுவப்பட்டன. நைல் நதியையும், செங்கடலையும் இணைக்கும் கால்வாய் ஒன்றைத் தாரியு தோண்டச் செய்தார். கிரேக்க விஞ்ஞானிகளும், கலைஞர்களும், மருத்துவர்களும் பாரசீக அரசவையில் பயன்படுத்தப்பட்டனர். 521-இல் ஆசாவில் சேமவளமிக்க புதிய அரண்மனை கட்டப்பட்டது. 518-இல் பெர்செப்போலியில் (பார்சா) புதிய தலைநகரம் கட்டத் தொடங்கப்பட்டது. தாரியு பெர்செப்போலியில் "அரச பகுதி" என்றழைக்கப்பட்ட பகுதியைக் கட்டினார். இது 12 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்ட செயற்கையான மாடியாகும். இதை அடைய, குதிரைகளும் ஏறக்கூடிய படியமைப்புகள் செய்யப்பட்டன. ஆட்சி நிறுவனங்களும், குடியிருப்புப்பகுதிகளும் மாடியில் இடம் பெற்றன.

அன்னிய நாட்டுத் தூதர்கள் ஆசாவிலும் எக்பத்தானாவிலும் வரவேற்கப்பட்டனர். ஆனால், பெர்செப்போலியில் ஒருபோதும் வரவேற்கப்படவில்லை எனத்தெரிகிறது. புத்தாண்டு விழாவைக் (மார்ச் மாதம் 21-ஆம் நாள்) கொண்டாட அரசவை ஆசாவிலிருந்து பெர்செப்போலிக்குச் சென்றது. அப்போது பேரரசின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் தூதுக்குழுக்கள் வரவேற்கப்பட்டன.

தாரியு இறந்தபோது, பாரசீகம் பரப்பளவிலும் செல்வப்பெருக்கிலும் உச்சநிலையில் இருந்தது. கிழக்கில் சிந்து மற்றும் யக்சாதெஸ் ஆறுகளையும், மேற்கில் எகிப்தையும் ஆகியனையும், தெற்கில் பாரசீக வளைகுடாவையும், வடக்கில் காஸ்பியன் மற்றும் கருங்கடல்களையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. தாரியுவுக்குப் பின்வந்த அரசர்கள் அவர் நிறுவிய பேரரசின் பரப்பையும் பெருமையையும் பாதுகாப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர்.

**4. முதலாம் செருசு** (485-465). முன்பு பாபிலோனின் ஆளுநராக இருந்த செருசு, எஸ்ரா மற்றும் எஸ்தர் நூல்களில் அகசுவேர் என்றழைக்கப்படுகிறார். இவர் எகிப்தையும் பாபிலோனையும் கட்டுப்பாட்டுடன் ஆண்டார். கிரேக்கர்களுக்கு எதிரான போரை ஆற்றலோடு நடத்தினார். பெனிசிய, எகிப்திய, ஐயோனிய, சைப்ரசு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கப்பல்களின் உதவியுடன் 480-இல் கிரேக்கர்களுக்கு எதிராகப் படையெடுத்தார். தெர்மோ பிலேயில் தற்காலிகமான காலங்கடத்தலுக்குப்பின், தேபசுவையும் ஏதன்சையும் பாரசீகப்படை கைப்பற்றியது. ஆனால் சாலமி, மிலேத்து, பிலத்தேய மற்றும் மிக்கேலே ஆகிய இடங்களில் ஏற்பட்ட தோல்விகள் சிறிய ஆசியாவுக்கு அப்பாற்பட்ட நாடுகளின் மேல் கொண்டிருந்த ஆதிக்கத்தைக் கைவிட செருசைக் கட்டாயப்படுத்தின. 465-இல் அவர் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் முதலாம் அர்த்தக்சஸ்தா அரசரானார்.

**5. முதலாம் அர்த்தக் சஸ்தா** (465-425). இவருடைய ஆட்சியின் பெரும்பகுதி, கிரேக்கர்களால் தூண்டப்பட்டு எகிப்தில் நடந்த கிளர்ச்சிகளையும் கலகங்களையும் அடக்குவதில் செலவிடப்பட்டது (460-454). மற்றக் கிளர்ச்சிகளின் விளைவாக கிழக்குப் பகுதிகளை இழக்க நேர்ந்தது. 449-இல் கல்லியாவில் ஏற்பட்ட உடன்படிக்கையால் ஏதன்சோடு அமைதி நிலவியது.

450-ஐ ஒட்டி, சமாரியாவின் ஆளுநன் இரசூம் எருசலேம் சுவர்கள் பழுதுபார்க்கப்படுவதைப் பற்றி அர்த்தக்சஸ்தாவிடம் முறையிட்டார் (எஸ் 4). இந்தச்சமயத்தில் அரச ஆயப்பதிவேடுகள் யூதச் சதியை வெளிப்படுத்தின. ஆகவே, அர்த்தக்சஸ்தா எருசலேம் சுவர்கள் பழுதுபார்க்கப்படுவதை நிறுத்திவைத்தார். 455-இல் நெகேமியா சூசாவிலிருந்து எருசலேம் வரும்வரை பழுதுபார்க்கும் வேலை தொடரவில்லை. 433 வரை சுவர்கள் கட்டி முடிக்கப்படவில்லை.

**6. இரண்டாம் தாரியு** (423-404). கிரீஸ் பெலப்போனேசியன் போர்களால் பிளவுபட்டுக் கொண்டிருந்தபோது இவர் அரியணை ஏறினார். இவருடைய மனைவி பரிசாத்தில் இடையிட்டுத் தொந்தரவு செய்தாலும், இவர் ஸ்பார்த்துகளின் பக்கம் ஆதரவு அளித்ததால், சிறிய ஆசியாவிலுள்ள பல கிரேக்க நகர்களை மீண்டும் கைப்பற்ற முடிந்தது.

419-இல், பாரசீக ஆளுநர் வித்ரங்காவின் உதவியுடன் எகிப்தியர் எலபன்டையினிலுள்ள யூத யாகு ஆலயத்தை அழித்தனர். அங்கு இருந்த யூதக் கூலிப்படைப்பிரிவு பாரசீக அரசரவைக்கு எழுதிய பல கடிதங்கள், ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கு அனுமதிகோரி அவர்கள் முயற்சி செய்ததை வெளிப்படுத்துகின்றன.

**7. இரண்டாம் அர்த்தக்சஸ்தா நேமோன்** (404-359). பலவீனமான அரசனான இவர் 60 ஆண்டு நீடித்த கிளர்ச்சியை எகிப்தில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஸ்பார்த்தா, ஏதன்சு, சைப்பிரசு ஆகியவற்றோடு சேர்ந்து எகிப்து பாரசீகர்களுக்கு எதிராகச் செயல்பட்டது. இவர் 386-இல் கிரேக்கர்களோடு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்பின் இவர் எகிப்தின்மேல் கொண்ட படையெடுப்பு பார்வோன் முதலாம் நெக்தனபோவின் தந்திரமான எதிர்ப்பால் தடைசெய்யப்பட்டது.

**8. மூன்றாம் அர்த்தக் சஸ்தா ஒக்கு** (359-338). ஒரு கொடிய, பேராசையுள்ள அரசன். இவர்

எகிப்துக்கு எதிராக மற்றொரு முறை படையெடுத்தார். ஆனால், 2-ஆம் நெக்தனபோ 351-இல் இவர் படையை விரட்டியடித்தான். எகிப்தியர் பெனிசியாவில் ஒரு கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்து பாரசீகத்திற்கு எதிராகக் கலகங்களைத் தூண்டி விட்டுக்கொண்டேயிருந்தனர். இறுதியாக, 343-இல் அர்த்தக்சஸ்தா எகிப்தியரைத் தோற்கடிப்பதில் வெற்றி கொண்டார். இவர், தன்னுடைய ஆலோசகனும் அண்ணகனுமான பகோவால் 338-இல் கொலை செய்யப்பட்டார்.

9. மூன்றாம் தாரியு கொடோமான்னு (336-330). இசுவில் இவருடைய படை பெரிய அலக்சாந்தரால் தோற்கடிக்கப்பட்டது. தாரியு பாக்ட்ரியாவுக்கு ஓடிப்போய் அங்கே இறந்தார். இவர்தான் அக்கமேனிய அரசமரபின் கடைசி அரசன். அலக்சாந்தர் 330-இல் பெர்செப்போலியைக் கைப்பற்றி, அதன் சொத்துக்களையெல்லாம் எக்பத்தானாவுக்கு அனுப்பிவைத்தார்.

**இ. அக்கமோனிய அரசமரபுக்குப்பின்:** கி.மு. 323-இல் அலக்சாந்தர் இறந்தார். அதன்பின், பாரசீகம் கிரேக்க ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டது. செலூக்கியர்கள், குறுகிய காலத்திற்கே இப்பகுதியின் மேல் ஆதிக்கம் கொண்டிருந்தனர். கிழக்கு ஈரானிலிருந்துவந்த பார்த்தியர்கள் தெசிபோனில் (கசிபியார்) தங்கள் தலைநகரத்தை நிறுவினர். அரசித்து அரசமரபு படிப்படியாக நாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. பார்த்தியர்கள் ஈரானில் மீண்டும் வணிக முறையை அமைத்தனர். வியாபாரத்தில் மத்தியதரைக் கடலுக்கும், ஆசியாவுக்கும் இடையாளராகத் திகழ்ந்தனர்.

சீரியாவைத் தங்கள் அரசோடு சேர்த்த உரோமையர் தங்கள் ஆதிக்கத்தைப் பாரசீகத்தில் பரப்ப பலமுறை முயன்றனர்; ஆனால், வெற்றியடையவில்லை. கி.மு. 40-இல் உரோமை சீரியா மாகாணத்தின் மேல் படையெடுத்த பார்த்தியர்கள் யூதர்களால் விடுதலை அளித்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் அரிஸ்தோபுலின் மகன் அந்திகோனை எருசலேமில் அரசராக்கினர் (40-37). தீத்து எருசலேமை முற்றுகையிட்டபோது எருசலேமுக்கு இராணுவ ஆதரவு அளித்தனர். யூதர்களும் பார்த்தியர்களும் சேர்ந்து திரேசன் மற்றும் அதிரியான் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் உரோமைக்கு எதிராகச் செயல்பட்டனர்.

பார்த்தியர்களுக்குப்பின் வந்த சசானியர்கள் (கி.பி. 223-651) வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியையும், வட மெசபொத்தாமியாவையும், அர்மேனியாவையும் தங்கள் அரசுடன் சேர்த்துக்கொண்டனர். உரோமையருக்கு எதிரான போரில் இவர்கள் ஒருமுறை பேரரசன் வலேரியனைக் (260) கைதியாக்கினர். பார்த்தியர்களைப்போல், சசானியர்களும் மேற்காசியாவை மற்ற ஆசியப்பகுதிகளுடன் இணைக்கும் வியாபாரிகள் ஆவர்.

**II. சமயம்:** தொடக்கத்தில், மேற்காசியாவில் பொதுவாக இருந்ததுபோல், இந்தியாவும் பாரசீகமும் தேவர்கள் பலரைப் பொதுவாகக் கொண்டிருந்தனர். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அகூரா-மஸ்தா என்ற கடவுள் முதன்மை இடத்துக்கு உயர்த்தப்பட்டார். உடன்படிக்கை மற்றும் போரின் கடவுளான மித்திரா, குடிபோதையின் கடவுளான கோமா, ஆறுகள் மற்றும் வளமையின் தேவதையான அனகித்தா, மழையைக் கொண்டு வரும் கடவுளான திஸ்திரியா ஆகியோர் பிற தேவர்களாவர்.

ஆறாம் நூற்றாண்டில் சாரதுசித்திரா தோன்றினார். அவருடைய பாரம்பரியப்படி, அவ்விடத்து முக்கிய விஸ்தாபா ஆகியதன் சீடனின் ஆதரவைப் பெற்றார். சாரது சித்திராவின் போதனைகள் அவெஸ்தாவின் முன் பகுதியான காதாக்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது. சுதந்தரமாக, தீமைக்கு எதிராக நல்லதை ஆதரிக்குமாறு அவர் எச்சரிக்கிறார். விலங்குகளை வளர்க்கும் முறைகளும், அதனால் வரும் பயன்களும் பற்றிய உரைகள் சாரதுசித்திராவின் போதனைகளில் காணப்படுகின்றன.

சராதுசித்திராவின் போதனை. அகுரா-மஸ்தா உருவில் இறையொருமைக் கோட்பாட்டுக்கு ஆதரவு அளித்தாலும், உண்மை, பொய்மைக்கு இடையிலான இருமைக்கோட்பாடும் காணப்படுகிறது. எந்த அளவுக்கு இவருடைய போதனைகள் அக்கமேனியர் ஆட்சியில் பரவியிலிருந்தது என்பது பற்றித் தெளிவாகக் கூறமுடியவில்லை; என்றாலும், அகுரா-மஸ்தா பல படைப்புச் சித்திரங்களிலும், குறிப்புகளிலும் காணப்படுகிறார்.

**பாரத்தோன் (PHARATHON)**

யூதேயாவிலுள்ள ஒரு நகரம். ஆற்றுக்கு அப்பாலுள்ள மாகாணத்தின் செலூக்கிய ஆளுநரான பாக்கீது இதைப் பலப்படுத்தினான் (1 மக் 9:50). பல தடவை செய்யப்படுவதுபோல் இஃது எப்பிராயிமின் பிராத்தோனாக (யூதி 12:13-15) அடையாளம் காட்டப்படக்கூடாது.

**பாரா (BAARA - பாகால் அனுப்பினார்)**

இவள் பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த சகரயிமின் மனைவியருள் ஒருத்தி (1 நாள் 8:8). இங்கு வாசகம் பழுதுபட்டுள்ளது.

**பாரா (PARAH – இளம் பசுங்கன்று)**

இது பென்யமின் கோத்திரத்தார் குடியேறிய நகர்களில் ஒன்று (யோசு 18:23). இஃது எருசலேமுக்கு வடகிழக்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இது நவீன காலக் கிர்பெத் ஏல்-பாரா என்ற இடமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

**பாராக்கு (BARAK – மின்னல்)**

நப்தலியின் கெதேசைச் சேர்ந்த அபினோவாமின் மகன். இவர் தெபோராவுடன் சேர்ந்து வடக்கு இஸ்ராயேல் படைகளை யாபீன் அரசனுடைய கானானியப் படைகளின் தளபதியான சீசராவிற்கு எதிராக நடத்திச் சென்று, வெற்றி பெற்றார். இந்த வெற்றிக் காவியமானது உரைநடையிலும் (நீதி 4), கவிதை வடிவிலும் (நீதி 5) பாதுகாக்கப்பட்டுள்ளது. உரைநடை நிகழ்ச்சியுரையில், நப்தலியைச் சேர்ந்த கெதேசு ஊரைச் சேர்ந்த பாராக்கை எப்பிராயிம் மலையிலுள்ள தன்னுடைய ஆட்சிபீடத்திற்குத் தெபோரா அழைத்தாள். அங்கு அவள் அவருக்கு யாவேயின் இறைவாக்கை அறிவித்தாள். அதன்படி நப்தலியினின்றும், செபுலோனின்றும் இவர் 10,000 ஆட்களைச் சேர்த்து, கானானியருடைய கொடுங்கோன்மையை அழிக்க வேண்டும். இதைக் கண்ட சீசரா, தன்னுடைய வீரர்களுடனும் 900 இரும்புத் தேர்களுடனும் இஸ்ராயேலருடைய கிளர்ச்சியை அடக்க எண்ணி வந்தான். ஆனால், இஸ்ராயேலர் போர்முனையிலிருந்து வந்து கானானியரை நிலைகுலைய வைத்தனர். சீசரா வடக்கு நோக்கி, சானானிமிற்கு ஓட்டம் பிடித்து, கேனியரான எபேரின் மனைவியான யாயேலிடம் அடைக்கலம் புகுந்தான். ஆனால் அவள், அவன் தூங்கும்போது வஞ்சகமாகக் கொன்றாள். பாராக்கு சீசராவை விரட்டி அங்கு வந்தபோது யாயேல் தான் செய்ததை அவரிடம் கூறினாள். சீசராவின் தலைமையின் கீழான வடக்குக் கானானியரின் தோல்வியானது யாபீனின் இறுதி முடிவை முன்னுணர்த்தியது.

வெற்றிக்காவியத்தைப் பாராக்கு, தெபோராவுடன் சேர்ந்து பாடினார் என்று பதிப்பாசிரியர் கூறுகின்றார் (நீதி 5:1).

கொடுமைப்படுத்தியவரிடமிருந்து இஸ்ராயேலை மீட்டவருள் ஒருவராகப் பாராக்கு சாமுவேலின் பிரியாவிடையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (1 சாமு 12:11; இங்கு, பாராக்கிற்குப் பதிலாகப் பாதான் என்று தரப்பட்டுள்ளது). முன்மாதிரியான விசுவாசிகளாகச் சொல்லப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டுப் பட்டியலில் இவர் பெயரும் இடம் பெறுகிறது (எபி 11:32).

**பாராய் (PAARAI)**

அர்பாயரான பாராய் தாவீது மன்னனின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவராவார் (2 சாமு 23:35). இதற்கு இணையாக உள்ள முதலாம் நாளாகம அட்டவணையில் இவர்,

எசிபாயின் மகன் நாராய் என அழைக்கப்படுகிறார் (1 நாள் 11:37). மூலப் பெயர் அர்பாயரான நாராய் எனக் கூறுவதற்கு வாய்ப்பு உள்ளது (யோசு 15:52).

**பாரான் (PARAN – குகைகளின் இடம்).**

*சீனாய்த் தீபகற்பத்தின் கிழக்குப்பகுதியாகும்.* இது பொதுவாக, "பாரான் பாலைவனம்" என்றழைக்கப்படும். *சீனாயில்* சட்டத்தைப் பெற்றபின், இஸ்ராயேலர் பாரானைக் கடக்குமுன் அட்சரோத்தில் பாளையம் இறங்கினர் (எண் 10:12; 12:16). கானானை வேவு பார்க்கச் சென்றவர்கள் திரும்பி வந்தடைந்த காதேசு பாரானில் இருந்ததாகத் தெரிகிறது (13:3.26). பாலைவனத்தில் இறையாற்றல் தோற்றங்கள் பற்றிய காவியக்குறிப்புகளில் "பாரான்மலை" அக்காபா வளைகுடாவிற்கு மேற்கிலுள்ள மலைப்பகுதியாகும். இஃது இஸ்ராயேலின் தெற்கு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நிலப்பகுதியைப் பற்றிய பொதுவான குறிப்பாகும் (உப 33:2; அப 3:3).

பாரானில் இசுமயேல் வாழ்ந்து வந்தார் (ஆதி 21:21). இங்குதான் தாவீது அபிகாயிலை மனைவியாகப் பெற்றார் (1 சாமு 25:1). அதாது ஏதோமிலிருந்து எகிப்துக்குத் தப்பியோடியபோது பாரானைக் கடந்து சென்றான் (1 அர 11:18). பாரானைப்பற்றிய மற்றக் குறிப்புகள்: ஆதி 14:5-7; 21:21; நீதி 5:4-5; சங் 68:7-8 என்பன.

**பாரியா (BARIAH – நாடோடியான, தப்பியோடுகிற)**

செருபாபேல் வழி, தாவீதின் வழித்தோன்றல்களில் ஒருவரான செமாயாவின் ஒரு புதல்வன் (1 நாள் 3:22).

**பாருவாகு (PARUAH – வனப்புள்ள, பூத்துக்குலுங்கும்)**

இவர் யோசபாத்தின் தந்தையாவார். இந்த யோசபாத்து சாலமோன் மன்னன் காலத்தில் இருந்த பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர்; சட்டப்படி உடைமை உரிமையாக்கப்பட்ட இசக்காரின் பகுதிக்கு ஆளுநராய் இருந்தவர் ஆவார் (1 அர 4:17).

**பாரூக்கின் நூல் (BARUCH, BOOK OF)**

1. **முன்னுரை:** யூத வரலாற்றின் இறுதி நூற்றாண்டுகளில் ஒரு புதுவகையான இலக்கிய வடிவம் தோன்றியது. இது கடந்த காலத்தைச் சேர்ந்த பெரியவர்களின் பெயரால், புனைபெயரில் நூல்கள் எழுதும் வழக்கம். இது விநோதமானதாகவும், ஏமாற்றுத் தன்மையுடையதாகவும், இருந்தாலும், மக்களிடையே பரவலாகவும் விரும்பத்தக்கதாகவும் விளங்கிற்று. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களுக்குக் கடந்த கால ஞானியையோ, இறை வாக்கினரையோ, ஒரு மூதாதையரையோ ஆசிரியர் என்று கூறி, அவர்களை உண்மையான ஆசிரியருக்குப் பதிலாகப் பேசச் செய்வது மரபு. இத்தகைய நூல்கள் திருமுறைக்குப் புறம்பான நூல்களில் பல உண்டு. இவற்றில், உண்மையான ஆசிரியர் தம்மைக் கடந்த காலத்தில் வாழ்ந்த ஆளாகப் பாவித்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட விவிலிய ஆட்களின் அதிகாரத்தோடு பேசுவார். இத்தகைய புனைபெயர் இலக்கிய வடிவம் மக்களிடையே பெரிதும் விரும்பப்பட்டது. நன்கு நிறுவப்பட்ட வடிவமாக ஆகிவிட்டது. அதனால் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறு, உன்னத சங்கீதம், திருவுரையாளர், பழமொழி, ஞானம் ஆகிய நூல்கள் சாலமோனால் எழுதப்பட்டன என்று கருதப்பட்டது. உண்மையில் இவை புனைபெயர் இலக்கியங்களே. தானியேல், பாரூக்கு நூல்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. இந்த அடிப்படையில் பாரூக்கின் நூலுக்கு அறிமுகம் வழங்குகிறோம்.

2. **பெயர்:** "பாரூக்கு" என்ற பெயருக்கு ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பொருள் கூறலாம். இவர் யூதாவின் ஒரு முக்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மக்சேயாவின் மகனான நேரியாவின் மகன் ஆவார் (எரே 32:12). இவரது சகோதரன் செராயா அரசன் செதேக்கியாவின்

கருமத் தலைவர் ஆவார் (எரே 51:59). பாரூக்கு எரேமியாவின் தோழனும் செயலரும் ஆவார். கி.மு. 604-இல் இவர் நமக்கு அறிமுகப்படுத்தப் படுகிறார் (எரே 36:4). அதுவரை எரேமியா கூறியவற்றையெல்லாம், குறிப்பாக எருசலேமின் அழிவுபற்றி எரேமியா கூறிய இறைவாக்குகளை, அவர் சொல்லச் சொல்ல பாரூக்கு எழுதினார். பின்பு, எரேமியாவின் கட்டளைக்கிணங்கி பாரூக்கு அவற்றை ஆலயத்தில் வாசித்துக் காட்டினார். அவற்றை அரசன் யோயாக்கிமினுடைய அதிகாரிகள் முன் வாசித்துக் காட்டினார். அவர்களது ஆலோசனையின்படி அவரும் எரேமியாவும் ஓடி ஒளிந்து கொண்டனர். அரசன் அந்த ஏட்டை வாசிக்கச் செய்து, அதைச் சிறிதுசிறிதாக வெட்டி எரித்தான் (எரே 36:1-23). பின்பு பாரூக்கு, எரேமியா கூற முதல் ஏட்டில் எழுதப்பட்டவைகளோடு வேறு சிலவற்றையும் சேர்த்து மற்றொரு ஏட்டை எழுதிவைத்தார் (எரே 36:32). எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது எரேமியா அனத்தோத்திலிருந்த அவரது உறவினன் அனமேலிடமிருந்து ஒரு நிலத்தை வாங்க உதவி செய்தார். அதன் ஒப்பந்த விலைப்பத்திரத்தை ஒரு மட்பானையில் வைத்துப் பாதுகாத்தார் (எரே 32:12-15). பாரூக்கு தம் வாழ்வின் துன்பங்களையும் தம் மக்களின் கேடுகளையும் பற்றி முறையிட்டபோது, அவரை எச்சரித்தும், அவர் பேரழிவிலிருந்து தப்பிப்பார் என்று உறுதி அளித்தும் எரேமியா இறைவாக்குரைத்தார் (எரே 45). எருசலேமின் அழிவு, கெதல்யாவின் கொலை ஆகியவற்றிற்குப்பின், யூதாவில் எஞ்சியவர்கள் எகிப்துக்கு ஓடிப்போக விரும்பியபோது, அவர்களைத் தடுத்து, எரேமியா இறைவாக்கு அருளினார். இந்தவாக்கை அளிக்க பாரூக்கே எரேமியாவைத் தூண்டினார் என்று குற்றம் சாற்றப்பட்டு, மக்கள் எகிப்துக்கு ஓடிப்போனபோது எரேமியாவோடு கூட்டிச்செல்லப்பட்டார் (எரே 43:2-6). இதற்குமேல் பாரூக்கின் இறுதிக்காலம் பற்றி எரேமியா நூலிலிருந்து ஒன்றும் தெரியவில்லை. அவர் பாபிலோனுக்குச் சென்றாரா என்பதற்கும், அப்படியானால் எப்போது சென்றார் என்பதற்கும் ஒரு சான்றுமில்லை. இவை பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. எரோனிமுவின் கூற்றுப்படி, பாரூக்கு எரேமியாவோடு எகிப்தில் மரித்தார். மற்றொரு கருத்துப்படி, கி.மு. 538-ஐ ஒட்டி அவர் எகிப்திலிருந்து பாபிலோனுக்குச் சென்றார்.

இந்தப் புனைபெயர் நூலுக்கும், பாரூக்கின் வெளிப்பாடு என்ற திருமுறைப் பட்டியலைச் சேராத நூலுக்கும் ஆசிரியராக்கப்படுகிறார் பாரூக்கு.

**3. திருமுறைப்பட்டியலில் பாரூக்கு நூல்:** கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட யூதர்களில் எபிரேய விவிலியத்திலும், பிற்காலப் பிரிவினைச் சகோதரர்களின் திருமுறைப்பட்டியலிலும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனால், கிரேக்க விவிலியத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பாரூக்கின் நூலும் எரேமியாவின் நூலும் யூதத்திருமுறைப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இவை யூதர்களால் முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பு நிராகரிக்கப்பட்டது என்பதற்கு இஃது அடையாளமாகும். தியோடோசின் வாசகத்தில் இவை இடம் பெறுகின்றன. திருமுறைப் பட்டியல்களில் சேராத நூல்களைக் கடுமையாக ஒதுக்கிய மிகப்பழைய பட்டியல்களில் பாரூக்கு நூல் எரேமியாவின் புலம்பலும் - மடலும் என்ற தலைப்போடு காணப்படுகின்றது. கிறிஸ்துவத் தொடக்க காலத்தில் யூதச் செபக்கூடங்களில் சில விழாக்களில் இவை வாசிக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

எழுபது நூலின் அனேக பிரதிகளில், எரேமியா நூலை அடுத்து, பாரூக்கு புலம்பல் நூல், எரேமியாவின் மடல் என்ற வரிசையில் இந்நூல்கள் இடம் பெறுகின்றன. இதே வரிசையில் கிரேக்கத் திருச்சபைத் தந்தையர்களாலும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. வுல்கத்தா வாசகத்தில் எரேமியா நூல், புலம்பல்நூல் பாரூக்கின் நூல் என்ற வரிசையில் இவை இடம் பெறுகின்றன. வுல்கத்தா எரேமியாவின் மடலைப் பாரூக்கு

நூலின் ஆறாம் அதிகாரமாக இணைக்கிறது. ஆனால், இஃது அவ்வளவு பொருத்தமுடையதன்று. ஏனெனில் அதன் நீண்ட தலைப்பு, அஃது ஒரு தனிப்படைப்பு என்று காட்டப்போது மானது. வுல்கத்தாவின் சில நல்ல பிரதிகள், எரோனிமுவைப்போல் பாரூக்கு நூலை விட்டுவிடுகின்றன. அதன் முந்தைய வாசகம் இலத்தீன் விவிலியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திரிதெந்தீன் பொதுச்சங்கம் தன் திருமுறைப்பட்டியலில் பாரூக்கு நூலைச் சேர்த்துக் கொண்டுள்ளது.

**4. நூலின் மூலமொழி:** இந்நூல் நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் கிரேக்க மொழியில்தான் உள்ளது. எரோனிமுகூட எபிரேய வாசகத்தை அறிந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இக்கால ஆய்வாளர்களில் பெரும்பான்மையோர் இந்நூல் மூலத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவர். உரைநடைப்பகுதியானது (1:1-3:8; 6:1-72) மூல எபிரேய வாசகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது எனலாம். நூலின் கிரேக்க வாசகம், முதல் பகுதியில் அதிக செமித்தியப் பண்புகளைக் கொண்டிருந்தாலும், இறுதிப்பகுதி தூய்மையானதாக இருக்கிறது. இது நூலின் ஒரு பகுதிக்காவது எபிரேய மூலம் இருந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. பாரூ 1:15-3.8 என்ற பகுதி தானி 9:4-19-இல் வரும் மன்றாட்டை ஒத்திருக்கிறது. அதைத் தழுவியதாகவும் இருக்கலாம். இஃது இரண்டிற்கும் பொதுவான ஓர் எபிரேய மூலவாசகத்தைச் சுட்டுகிறது. மேலும் 1:14-இல் வரும் கட்டளை, இப்பகுதி வழிபாட்டில் பயன்பட்டதாகத் தெரிகிறது. இதுவும் இப்பகுதிக்கு எபிரேய மூலத்தைச் சுட்டுகிறது. கிரேக்க மொழிபெயர்ப்பும் எரேமியா, தானியேல் ஆகிய நூல்களின் கிரேக்க வாசகத்தைத் தழுவியதாகத் தெரிகிறது. ஞானம் பற்றிய பாடல் (3:9-4:4) ஒருவேளை எபிரேயத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறார் எயிஸ்ஃபெல்ட் என்ற அறிஞர். இறைவாக்குப் பகுதிகள் (4:5-29; 4:30-5:9) கிரேக்க மூலத்தைச் சேர்ந்தவையா என்று தீர்மானிப்பது கடினம். எபிரேயத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட தியோடோசியன் வாசகம் பாரூக்கு நூலையும் கொண்டுள்ளது. இவையெல்லாம் பாரூக்கு நூலின் பெரும் பகுதிக்கு எபிரேய மூலம் இருந்திருக்கக் கூடும் என்பதைச் சுட்டுகின்றன.

**5. நூலின் திட்டம்:** சுட்டிக்காட்டும் வசதிக்காக ஆசிரியர், காலம் என்ற தலைப்புகளுக்கு முன்னே, நூலின் திட்டத்தைத் தருகிறோம். முதற்பகுதியும் கடைசிப்பகுதியும் உரைநடையில் உள்ளன. மற்ற இரு பகுதிகளும் பாடல் வடிவில் உள்ளன.

I. பாரூக்கின் மன்றாட்டு (1:1-3:8).

அ) முன்னுரை: பாரூக்கும் பாபிலோனியாவிலிருந்த யூதர்களும் (1:1-14).

ஆ) நாடு கடத்தப்பட்டவரின் செபம் (1:15-3:8).

II. ஞானம் பற்றிய பாடல்: அஃது இஸ்ராயேலரின் தனியுரிமையாகும் (3:9-4:4).

அ) ஞானமாகிய சட்டத்தை மீறியதே யூதர்களின் இடர்களுக்குக் காரணமாகும் (3:91-14).

ஆ) ஞானத்தை எவரும் கண்டடைய முடியாது (3:15-31).

இ) சட்டமே ஞானம் (3:32-4:4).

III. எருசலேமின் முறையீடுகளும், நம்பிக்கைகளும் (4:5-5:9).

அ) முதல் இறைவாக்குரை (4:5-29).

ஆ) இரண்டாம் இறைவாக்குரை: எருசலேமுக்கு ஓர் ஆறுதல் செய்தி (4:30-5:9).

IV. எரேமியாவின் திருமுகம் (6:1-72).

அ) முன்னுரை (6:1-6).

ஆ) சிலை வழிபாட்டுக்கு எதிராக உரை (6:72).

**6. நூல் தோன்றிய காலம்:** நூலை மேலெழுந்த வாரியாக வாசித்தாலும், அதன் சில

பகுதிகள் எழுதப்பட்ட காலத்தைத் தோராயமாக நிர்ணயிப்பது எளிது. பாரூக்கின் மன்றாட்டின் முன்னுரை, நெபுகத்னேசரிடம் எருசலேம் வீழ்ச்சியுற்றதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப்பின், அதாவது கி.மு. 582-இல் மன்றாட்டு எழுதப்பட்டதாகக் கூறுகிறது (1:2). எரேமியா திருமுகத்தின் முன்னுரை, திருமுகம் கி.மு. 567-இல் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எழுதப்பட்டதாகக் கூறுகிறது (6:1). இறைவாக்கு உரைகள் நாடுகடத்தப்பட்ட பின்னணியைக் கவனத்தில் கொண்டுள்ளன. ஆகவே, கி.மு. 538-க்கு முந்தியதாக இருக்கலாம். ஞானம் பற்றிய பாடல் இதே காலத்தில் தோன்றியதாக இருக்கலாம்.

ஆனால், நூலின் வெவ்வேறு பகுதிகளுக்குப் பிற்காலங்களைக் குறிப்பதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. முன்னுரையும் மன்றாட்டும் அடங்கிய முதல் பகுதியில் வரும் நிகழ்ச்சிகள், பெயர்கள் பற்றிய விவரிப்புகளுக்கும் வரலாற்று நூல்களில் வரும் விவரிப்புகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. பாரூக்கின் மன்றாட்டு தானி 9-இல் வரும் மன்றாட்டைத் தழுவியுள்ளதாகத் தெரிகிறது. ஆகவே, இப்பகுதிக்குத் தானியேல் நூலின் காலத்தைக் குறிப்பர் சிலர். ஆனால், மன்றாட்டில் வரும் முடிவுகாலச் செயல்கள் பற்றிய பாரூக்கின் போதகம் தானியேலில் காணப்படுவது போன்று அவ்வளவு வளர்ச்சியுடையதன்று. ஆகையால், பாரூக்கு தானியேலுக்கு முந்தியதாக இருக்கலாம். ஆனால், இப்போதுள்ள ஆய்வுகளின்படி இரண்டு மன்றாட்டுகளுக்கும் பொதுவான ஒரு யூத வழிபாட்டுப் பாரம்பரியம் இருந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. மேலும், இப்பகுதி சீராக்கு நூலோடு (ஆதி 36) ஒப்புமை கொண்டுள்ளது. இக்காரணங்களுக்காக இப்பகுதி தோன்றிய காலத்தை முந்தியகாலமாக, கி.மு. 2-ஆம் நூற்றாண்டைக் குறிக்கலாம்.

ஞானம் பற்றிய பாடலைக் கொண்ட இரண்டாம் பகுதி யோபு 28-ஐப் பின்பற்றுவதாகத் தெரிகிறது; மக்கபேயர் காலத்தைப் பிரதிபலிக்கிறது; ஆனால், உப 30-இலிருந்து தமது சமய ஏவுதலைப் பெறுவதாகத் தெரிகிறது (மேலும் காணக. உப 4:1-8). இப்பகுதியும் சீராக்கு நூலோடு ஓரளவு ஒப்புமை கொண்டுள்ளது (சீரா 1:1-20; 24:1-32). ஆகவே, இப்பகுதியும் கி.மு. 200-ஐ ஒட்டி எழுப்பட்டிருக்கலாம் என்று முடிவு செய்யலாம்.

இறைவாக்கு உரைகளைத் கொண்ட மூன்றாவது பகுதி யோபுவையும் தானியேலையும் தழுவியுள்ளது. மேலும் இப்பகுதி, சொல்லுக்குச் சொல் ஏறக்குறைய அப்படியே சாலமோனின் சங்கீதங்கள் என்ற புனைபெயர் நூலில் 11-ஆம் பாடலில் காணப்படுகிறது. இந்நூல் முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். பாரூக்கு நூலுக்குப் பிந்தியது. ஏனெனில், இந்நூல் இறுதிக் காலச்செயல்கள் பற்றி மிகவும் வளர்ச்சியுற்ற போதகத்தைக் கொண்டுள்ளது. ஆனால், இறைவாக்கு உரைப்பகுதிக்கும் அதற்கு முந்திய அதிகாரங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு, இப்பகுதி கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியிருக்கலாம் என்று கருதத்தூண்டுகிறது.

எரேமியாவின் திருமுகம் தெளிவாக நாடு கடத்தலுக்கு மிகவும் பிற்பட்ட காலத்திலே எழுதப்பட்டதாகும். யூதர்கள் எச்சரிக்கப்படும் சிலைவழிபாடு கிரேக்க ஆதிக்கம் வலுவுற்றிருந்த காலத்தைச் சேர்ந்ததாகும். இப்பகுதி கி.மு. 587-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்கு உண்மையிலேயே எரேமியாவால் எழுதப்பட்டிருந்தால், நாடு கடத்தப்படுதலுக்கு உடனடியான பிற்காலத்தில் தோன்றிய எரேமியா நூலோடு இப்பகுதி ஏன் சேர்க்கப்படவில்லை என்று விளக்குவது கடினம். ஒருவேளை, இப்பகுதி எழுதப்பட்ட காலம் பற்றிய துல்லியமான குறிப்பு 6:2-இல் உள்ளது எனலாம். இதில், எழுபது ஆண்டுகளுக்கு நாடு கடத்தப்படுதல் பற்றிய எரேமியாவின் முன்னறிவிப்பு (எரே 25:12; 29:10), ஏழு தலைமுறைக்கு நாடு கடத்தல் பற்றிய முன்னறிவிப்பாக மாறுகிறது. ஒரு தலைமுறைக்கு ஏறக்குறை நாற்பது ஆண்டுகள் என்று

கணித்தால் (எண் 32:13), கிரேக்க காலத்தைச் சேர்ந்த ஒரு யூத ஆசிரியர், இன்னும் அடிமைத்தனத்தில் வாழ்ந்த தமது சக யூதர்களுக்கு, விரைவில் இறைவனது உதவிவரும் என்று வாக்குறுதி அளிக்கிறார்.

இந்நூலின் பாரூக்கின் பகுதிகளும் எரேமியாவின் திருமுகமும் தோன்றிய காலம் பற்றி ஆய்வாளர்களிடையே ஒரு மித்த கருத்து இல்லை. பொதுவாக இந்நூல் மக்கபேயர் காலத்திலோ, அதற்குப்பின்னோ தோன்றியிருக்க வேண்டும் என்பர். நூலின் எந்தப்பகுதியும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்னோ, முதலாம் நூற்றாண்டின் முடிவுக்குப் பின்னோ எழுதப்பட்டிருக்க முடியாது.

ஒருசிலர், இந்நூல் கி.பி. 70-க்கும் பின் தோன்றியது என்பர். நெபுகத்னேசர், பெல்சாட்சர் என்ற பெயர்கள் வெஸ்பாசியன், தீத்து ஆகியோரைக் குறிக்கும் புனைபெயர்கள் என்பர். அப்படியானால், நூலில் இப்போது காணப்படுவதை விட, உரோமையரது படையெடுப்பின் சுவடுகள் அதிகமாகக் காணப்படவேண்டும். உரோமையருக்காக மன்றாடுமாறு (1:11) ஒரு பக்தியுள்ள யூதன் தன் சக யூதர்களைத் தூண்டுவது கற்பனை செய்து பார்க்கக் கூடியதன்று.

**7. ஆசிரியர்(கள்):** இந்நூலை யார் எழுதியது என்ற பிரச்சனை சிக்கல் மிக்கதாகும். இதற்கு அறுதியிட்ட முடிவு கூறமுடியாது. இப்படியோ அப்படியோ இருக்கலாம். என்றுதான் கூற முடியும் என்பது தெளிவு. வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் சான்றுகளின் அடிப்படையில் முழுநூல் பற்றிப் பொதுப்படையாகத்தான் கூற முடியும்.

கடந்த காலத்தில், இந்நூலுக்கும் பாரூக்கு தான் ஆசிரியர் என்று கருதப்பட்டது. அதாவது நகரமும் ஆலயமும் அழிக்கப்பட்டு விட்டன (2:26; 4:31). மக்கள் நாடுகடத்தப்பட்டுவிட்டனர் (3:8.10; 4:26). இந்தக் கொடுமைக்குப் பாபிலோனியர்களே காரணம் (2:21-23; 4:15-16). இவற்றை நாடுகடத்தப்பட்ட ஒருவர்தான் எழுதியிருக்க வேண்டும் என்றும், நாடு கடத்தப்பட்டவர்களுக்கு அறிவுரையும் ஆறுதலும் அளிப்பதுவே அவரது நோக்கம் என்றும் கருதப்பட்டது.

ஆனால், நூலின் வெவ்வேறு பகுதிகள் வேறுபட்ட இலக்கிய வகைகளைச் சேர்ந்தவையாகும். கிரேக்க வாசகம் முதல் பகுதியில் அதிக செமித்தியப் பண்புகளைக் கொண்டுள்ளது; ஆனால், போகப்போக கிரேக்கநடை தூய்மை பெறுகிறது. இஃது, ஒரு பகுதிக்காவது எபிரேயமூலம் இருந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. முன்னுரை நாடு கடத்தலின் தொடக்ககாலத்தை நம் கண்முன் கொண்டு வருகிறது. மூன்றாம் பகுதி எருசலேமுக்கு உடனடியாகத் திரும்புதலை முன் கருத்தாகக் கொண்டுள்ளது. மேலும், உண்மையிலேயே முதல் மூன்று பகுதிகளுக்குப் பாரூக்கும், நான்காம் பகுதிக்கு எரேமியாவும் ஆசிரியர்களாக இருந்திருந்தால், யூதப் பாரம்பரியம் எப்படி இந்நூலைப் புறக்கணித்தது என்று விளக்குவது கடினம். இந்நூல் சிறுபகுதிகளின் தொகுப்பென்றால், ஒவ்வொரு பகுதியையும் யார் எழுதினார் என்பதற்கு விடை காண வேண்டும். இந்நூலின் ஒருபகுதி மொழிபெயர்ப்பாகும். மற்றவை நேரடியாக நல்ல கிரேக்க மொழியில் எழுதப்பட்டவை என்று ஏற்றுக்கொண்டால், முதல் மூன்று பகுதிகளையும் ஒரே ஆசிரியர்தான் எழுதியிருப்பார் என்பது ஐயத்திற்குரியதாகும். நாடுகடத்தலுக்கு வெகு பிற்காலத்தில் நூல் முழுமையுமோ ஒருபகுதியோ தோன்றியது என்றால் அதற்குப் பாரூக்கோ, எரேமியாவோ ஆசிரியராக இருக்க முடியாது. நூலின் வெவ்வேறு பகுதிகள் தோன்றிய காலங்களை ஏற்கெனவே கூறியுள்ளோம். இவற்றை மனதில் கொண்டால், இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனை ஏன் தர்க்கிக்கப்படுகிறது என்பதை நாம் உணரலாம்.

இக்காலத்தில், இந்நூலின் ஆசிரியர் (கள்) தோன்றிய காலங்கள் பற்றிய கருத்துக்கள்

பெரிதும் வேறுபடுகின்றன. இப்போது இந்நூலுக்கும் எரேமியா மற்றும் அவருடைய செயலர் பாருக்கு ஆகியோரிடையே எந்த உறவும் இருப்பதாக வெகு சிலரே கருதுவர். இந்நூல் காலத்தால் மிகப்பிந்திய படைப்பாகும்; மற்றொரு தலைமுறைக்கு எழுதப்பட்டது. நாடுகடத்தலுக்குப் பலவிதத்தில் ஒத்த துன்பங்களை இவர்கள் அனுபவித்தனர். இப்போது, நூலின் முதல் மூன்று பகுதிகளுக்கும் மூன்று ஆசிரியர்கள் இருந்ததாகவும் ஒத்த பின்னணியின் அடிப்படையில் பிற்காலத்தில் ஒன்றாகத் தொகுக்கப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், இந்நூல் நாடு கடத்தலுக்கு வெகுகாலத்திற்குப்பின்பு பெயர் தெரியாத சிலரால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லது பல காலங்களில் எழுதப்பட்டவைகளைப் பெயர் தெரியாத ஒருவர் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, முதல் நூற்றாண்டின் முடிவிலோ தொகுத்திருக்கலாம். இவர், இந்நூல் இறை ஏவுதல் பெற்றது, அதிகாரம் பெற்றது கடந்த காலப்பெரியார்கள் இந்நூலை எழுதியதாகப் புனைந்துரைத்திருக்கலாம். இத்தகைய யுக்தி விவிலியத்தின் பிற்கால நூல்களில் (திருவுரை, உன்னத சங்கீதம், ஞானம்) பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் இதில் எந்த முரண்பாட்டையும் காணவில்லை. மாறாக, இந்த யுக்தியை ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. மேலும், பாருக்கைப் புனைபெயராகக் கொண்ட, திருமுறைப் பட்டியலைச் சேராத மற்ற நூல்களும் உள்ளன.

எரேமியாவின் திருமுகத்தைப் பொறுத்தமட்டும், ஆசிரியர் பாபிலோனின் சிலை வழிபாட்டை நன்கு அறிந்திருக்கிறார். அதைக் கடுமையாக விமர்ச்சிக்கிறார். ஆனால், இப்பகுதி எரேமியா நூலின் நடைக்கு மிகவும் தாழ்ந்த தரமுடையதாகும். எரேமியா நூலில் காணப்படும் உணர்ச்சிமிக்க எரிமலை வெடிப்புத் தன்மையும், இரங்கற்பாத் தன்மையும் தீவிரமும் இப்பகுதியில் காணப்படவில்லை. இதற்கு இணையான எரே 10:2-16-ஒடு ஒப்பிடுக. எசா 44:9-20-என்ற பகுதியாலும் ஆசிரியர் உந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பகுதி உண்மையிலேயே எரேமியாவால் எழுதப்பட்டிருந்தால், பிற்காலப்பதிப்பாசிரியர் இதைப் பாருக்கு நூலோடு அல்லாமல் எரேமியா நூலோடு இணைத்திருப்பார். இப்பகுதியில் ஆசிரியர், காலத்தால் எரேமியாவுக்கு மிகப்பிந்தியவர். எரேமியா கி.மு. 587-இல் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எழுதிய மடலைத் தழுவி எழுதுகிறார் (எரே 29).

8. **நூலின் நோக்கம்:** இதுவரை கூறப்பட்டவை இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பதையோ, இதன் தவறின்மையையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. கத்தோலிக்கர்களுக்குத் திரிதெந்தீன் பொதுச் சங்கம் திருமுறைப்பட்டியலைப் பற்றி உறுதியாக எடுத்துக் கூறியுள்ளது உண்மையில் இணைத்திருமுறைப் பட்டியலில் வரும் மற்ற நூல்களைவிட இந்நூலின் திருமுறைப்பட்டியல் தன்மைபற்றி, தொடக்ககாலத் திருச்சபை வரலாறு அதிகச் சான்று கொடுத்துள்ளது.

மிகக் கடந்த காலத்தைச் சேர்ந்த ஒருவரைப் பேச வைத்து, அவர் வாழ்ந்த காலத்திய வரலாற்றுச் சூழ்நிலையை வாசகர்களுக்கு மீண்டும் படைக்க முயற்சி செய்யும் ஆசிரியரது யுக்தியானது வரலாறு, ஆசிரியத் தன்மை ஆகியவை பற்றிய நமது காலத்திய அறிவியல் கருத்துக்கு முரண்பாடாகத் தோன்றலாம். இவ்விதம் வரலாற்றை மறுபடைப்புச் செய்வதில், நமது காலத்திய கருத்துப்படி வரலாற்றுத் தவறுகள் இருந்தாலும், நூலின் தவறின்மையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. ஏனெனில் இஃது ஒரு போதக நூலாகும்; ஓர் அக்காதா மிட்ராஷ் ஆகும். இத்தகைய இலக்கியத்தின் முழுநோக்கு, கடந்தகால வரலாற்றை எல்லா விவரங்களுடனும் துல்லியமாக எடுத்துரைப்பதன்று. இத்தகைய நூல்களில் தமது கால மக்களுக்குக் கடந்த

காலத்தை மறுவிளக்கம் செய்து அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதே ஆசிரியரது நோக்கம். இத்தகைய நூல்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. சான்றாக, ரூத்து, யோனா, யூதித்து, எஸ்தர், தோபித்து போன்ற நூல்களைக் காட்டலாம். இவற்றில் கற்பனையும் வரலாறும் இணைக்கப்படும் முறை நூலுக்கு நூல் வேறுபடலாம். ஆனால், நோக்கம் ஒன்றே. இக்கோணத்தில் பாரூக்கு நூலை நோக்கினோம் என்றால் அவரது குறிக்கோள் தெளிவாகிறது.

9. நூலின் போதகம்:

**அ) மன்றாட்டு :-** இது விவிலியத்தின் பல நூல்களுக்கும், குறிப்பாக இறைவாக்கினர் நூல்களுக்கும், பொதுவானதாகும். இறைவனது நீதி, ஆற்றல் ஆகியவை பற்றிய அறிக்கை, மனந்திரும்புதல், மன்னிப்புக்கேட்டல், மீட்புக்கு ஏங்குதல் ஆகியவை அடங்கியதாகும். அறிக்கையிட்டு மன்றாடும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது (எஸ் 9:5-15; நெகே 9:6-37; தானி 9).

**ஆ) ஞானமும் சட்டமும்:-** சட்டத்தோடு ஒன்றாக்கப்படும் ஞானம் இறைவனது கொடையாகும். அதை மனிதன் சுயமுயற்சியால் அடைய முடியாது. அவனுடைய செல்வத்தாலும் உழைப்பாலும் அதைக்கண்டடைய முடியாது. அது வாழ்வுக்கும் மகிழ்ச்சிக்கும் ஊற்றாகும். இறைவனது அருளாகிய வெளிப்பாடு மனிதனைப் பாவத்திலிருந்து மீட்கிறது.

**இ) இறுதி உண்மைகள்:-** இவைபற்றி கி.மு. 2-ஆம் நூற்றாண்டுவரை பழைய ஏற்பாட்டில் நிலவிய போதகத்தை இந்நூல் அளிக்கிறது. ஆசிரியர் குழுத்தன்மை நோக்கோடு எழுதியதால், மறு உலகம் பற்றிய பிரச்சனைகள் அவருக்கு அவ்வளவு கடுமையாகத் தோன்றவில்லை.

**ஈ) இறைவன் நித்தியர் ஆவார்:-** இறைவனை நித்தியர், "என்றும் உள்ளோன்" என்றழைக்கிறார். இவ்விதம் இறைவனை அழைப்பவர் பழைய ஏற்பாட்டிலே இவர் ஒருவர்தான். மற்ற இடங்களில் பலதடவை "நித்திய அல்லது நித்தியமான இறைவன்" "என்றுமுள்ள இறைவன்" என்ற பெயர்கள் வருகின்றன. ஆனால், அடைமொழியான உரிச்சொல்லே பெயர்ச் சொல்லாவது ஒருபோதும் இல்லை. இது பாரூக்குக்கே உரியதாகும்.

நித்தியம் பற்றிய இந்த ஈடுபாடு தொடக்கத்திலிருந்து ஆசிரியரது நினைவில் ஓயாது ஊடாடுகிறது. மன்றாட்டில் நித்திய உடன்படிக்கைக்காக ஏங்குகிறார் (2:35). ஆனால், இறைவன் எப்போதும் நிலைத்திருக்கும் போது (3:3) மனிதன் திரும்பிவராமல் மறைந்து போகிறான் என்ற சிந்தனையால் அல்லல் உறுகிறார். ஆனால், இதற்குப் பரிகாரமாகச் சட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. அஃது இறைவனைப்போல் எப்போதும் நிலைத்திருக்கும் (4:1). அது மனிதர்களை நித்திய அமைதிக்கு இட்டுச் செல்லும் (3:13). மீட்பு இறுதியாக நித்திய இறைவனிடமிருந்து வருகிறது (4:8). அவருக்கு எதிராகக் குற்றம் செய்யப்பட்டாலும், பாவியை முதலில் தண்டித்து, பின்பு அவனை மீட்டுத் தமது மகிமையை வெளிப்படுத்துகிறார். ஆறுதல் உரை முழுவதும் நித்தியர், "என்றும் உள்ளோன்" பரவி நிற்கிறார் (4:10.14.21.22.24.35; 5:2). இந்த உரை நித்திய மகிழ்ச்சியை அறிவிக்கிறது (4:23.39; 5:1-4). மாறுபடும் தன்மையுடைய கடந்துபோகும் மனிதனுக்கும், எப்போதும் ஒரே தன்மையுடையவராய்த் தமது வார்த்தைகளை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கமுள்ள இறைவனது நித்தியத்திற்கும் இடையேயுள்ள எதிர்நிலை, இறைவாக்கு நூல்களில் வழக்கமாகக் காணப்படும் கருத்தாகும். அது பாரூக்கின் அழுத்தத்தால் புது ஆற்றல் பெறுகிறது.

பெயர்ச் சொல்லாகும் அடைமொழிச் சொல்லான "நித்தியர்" என்பதற்கு ஈடான வழக்கு எபிரேயத்தில் இல்லை. நேரடியாகக் கிரேக்கத்தில் எழுதப்பட்ட நூல்களில் மட்டும்தான் காணப்படுகிறது (2 மக்). இது பாரூக்கு நூலின் மூன்றாவது பகுதி கிரேக்கத்தில் எழுதப்பட்டது

என்பதைச் சுட்டுகிறது; இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**உ) மீண்டும் அமைத்தல்:-** இந்நூல் யூதர்கள் நாடுகடத்தப்பட்ட வரலாற்றை நிழற்படப் பின்னணியாகக் கொண்டதாகும். அவ்வரலாறு பற்றிய சில சிந்தனைகளை அதை நன்கு அறிந்த, சிதறிக்கிடந்த யூதர்களுக்கு அளிக்கிறது. இந்த யூதர்களுக்கு நாடுகடத்தல் பற்றிய சிந்தனைகள் இன்னும் உண்மைகளாக இருந்தன. கி.மு. 538-இல் நாடு திரும்பியது, இறைவன் தமது மக்களுக்கு வாக்களித்த நாட்டை மீண்டும் அமைத்தற்கன்று என்பது அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்து இருந்தது. நாடுகடத்தல் வரலாற்றைப் பயன்படுத்தும் ஆசிரியர் சிதறிக்கிடந்த யூதர்களுக்கு அத்துன்பத்திற்குரிய காரணத்தையும் மீட்பின் ஊற்றையும் எடுத்துக் கூறுகிறார். ஆனால், மீண்டும் அமைக்கப்படும் எருசலேம் நாடு கடத்தலைச் சேர்ந்த எருசலேம் அன்று, முடிவு காலத்தின் புதிய எருசலேமாகும். இஃது இரண்டாவது இறைவாக்கு உரையிலிருந்து தெளிவாகிறது (4:30-5:9). கி.மு. 538-இல் நாடு திரும்பியது வரவிருக்கும் பெரும் நிகழ்ச்சியின் முன் நிழலிடுதலும் உத்தரவாதமும் ஆகும்.

**ஊ) மெசியாப் பொருள்:-** 2:35-இல் வரும் மெசியா பற்றிய போதகம் எரே 32:40-இல் வருவதாகும். 5:1-9-இல் மெசியா காலத்தில் எருசலேம் நிறைவான பொருளில் ஆன்மீக மறுமலர்ச்சி அடைவது முன்னறிவிக்கப்படுகிறது. 3:38-க்கு அளிக்கப்படும் மெசியாப் பொருள் வுல்கத்தா வாசகத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாக்குக்குத் திருச்சபையின் தந்தையர் மெசியாப் பொருள் அளிக்கின்றனர். ஆனால், ஞானத்தோடு ஒன்றாக்கப்பட்ட மோசே சட்டத்தைப் பற்றியே பேசுவதாக ஆசிரியர் தெளிவாகக் கூறுகிறார்; அவர் மெசியாவைக் கருத்தில் கொள்ளவில்லை. இருப்பினும், புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டுக்குப்பின் இவ்வாக்குக்கு மெசியாப் பொருள் அளிப்பது சரியானதே. ஏனெனில், இறைவனது வார்த்தையும் அவரது ஞானமும் மனிதனான இறைமகனே ஆவார் (யோவா 1).

**ஐ) எரேமியாவின் திருமுகம்:-** எரேமியாவாகத் தன்னையே பாவித்துத் தனது காலத்துச் சிதறிக்கிடந்த யூதர்களுக்கு இந்தத் திருமுகத்தை எழுதும் ஆசிரியர் பிற மதத்தினரின் சிலைவழிபாடு பற்றி எச்சரிக்கையாக இருக்க வாசகர்களை அழைக்கிறார் (6:16). பின்பு எசா 44:9-20; எரே 10:1-16-இலிருந்து கடன் வாங்கிச் சிலைவழிபாட்டின் ஆற்றலற்ற, பயனற்ற தன்மையை எள்ளி நகையாடுகிறார். சிலைகளை வழிபடுவோருக்கு எதிராக வண்ணமிக்க, சில சமயம் நகைச்சுவை மிக்க, பழியுரைகளைக் குவிக்கிறார் (6:7-72). ஆனால், விவிலியத்தில் வேறெங்கும் காணப்படாத முறையில் இறையொருமைக் கோட்பாட்டின் உயர்வு இப்பகுதியில் ஒளிர்கிறது.

**10. இக்காலத்திற்கு:** ஓர் அறிஞர், பாரூக்கின் போதகம் பாவம், மனந்திரும்புதல், மீட்பு ஆகியவை அடங்கிய நாடகமாகும் என்பார். இக்கருத்துக்கள் நூல் முழுவதும் பரவிக்கிடக்கின்றன (1:5.13. 17-19. 21-22; 2:5.8.10.12....) பாவ உணர்வு மனிதனிடம் இல்லையேல், மனந்திரும்புதல் இல்லை. இதுவே இந்நூல் இக்காலத்திற்கும் அளிக்கும் போதகம். பாவத்தின் விளைவுகளை மனிதனிடமும் உலகிலும் காணும்போது, பாவமே இல்லை என்று சிலர் கூறுவதைப் புரிந்துகொள்வது வெகு கடினமாகும். பாவத்திற்கு உளவியல் விளக்கம் அளித்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணுபவர்கள், போதிப்பவர்கள் உள்ளனர். அதன் விளைவு, மனிதன் மேலும் இழிவடைகிறான்; உண்மையான விடுதலை அடைவதில்லை. மனித சமூகம் சீர்படுவதில்லை. பாரூக்கு கூறுவதுபோல், மனிதன் தன் பாவத்தை ஏற்று, மனத்துக்கப்பட்டு இறைவனிடம் திரும்பும்போதுதான் உண்மையான விடுதலை அடைகிறான், மேன்மை அடைகிறான். மீட்புப் பெறுகிறான். இந்த உள்ளார்ந்த விடுதலை இல்லையென்றால் வேறெந்த விடுதலையாலும்

எப்பயனுமில்லை. இதுவே, பிற விடுதலைகளுக்கு அடிப்படையும் முடிவும் ஆகும்.

**பாரூக்கின் வெளிப்பாடு (BARUCH APOCALYPSE)**

இந்நூல் கத்தோலிக்கத் திருமறையால் ஏற்கப்படாத நூலாகும். இது முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டு, பின்பு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. பின்பு கிரேக்க மொழியிலிருந்து சீரியக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட யூத நூலாகும். இந்நூல் பாரூக்கு கண்ட திருக்காட்சியைப் பற்றி விவரிக்கிறது. எருசலேம் கல்தேயர்களால் அழிவுறப்போவதை முன்கூட்டியே தனது காட்சியில் காண்கிறார். ஆனால், எருசலேமின் இவ்வீழ்ச்சி கடவுளின் தண்டனையின் முன்னடையாளம் மட்டுமே. மெசியாவின் வருகையைப் பற்றியும், அவரின் ஆட்சியில் பூவுலகம் பெறும் செழிப்பைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. கடவுளின் திருச்சட்டத்தின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படுகிறது. பாரூக்கின் உருவகக் காட்சியில் தோன்றும் பெரிய ஒரு தடாகம் மெசியாவுக்கும், கேதுருமரம் ஒன்று உரோமைக்கும் ஒப்பிடப்படுகின்றன. இம்மரம் எரிக்கப்படும். ஆனால், திராட்சைக்கொடி (மெசியா) வளர்ந்து கொண்டேயிருக்கும். பின்பு, சட்டமும் நீதிமான்களின் உயிர்ப்பும் விவரிக்கப்படுகின்றன. நீதிமான்கள் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்புடையவர்களாகின்றனர். பின்பு சட்டத்தைக் கடைப்பிடிக்கத்தவறிய தீயவர்களின் முடிவு விவரிக்கப்படுகிறது. மற்றொரு அடையாளக்காட்சியில் ஆறு கறுப்பு நதிகள் அநியாய காலங்களையும், ஆறு ஒளிநதிகள் நீதியின் காலங்களையும் எடுத்துரைக்கின்றன. சட்டத்தைக் கடைப்பிடிக்க மக்கள் எச்சரிக்கப் படுகின்றனர், தூண்டப்படுகின்றனர். இந்நூல் கி.பி. 70–க்கும், கி.பி. 100–க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். இதை எழுதியவர் ஒரு பரிசேயர் குழுவைச் சேர்ந்த யூதராகத் தெரிகிறது. இந்நூல் இறுதிநாட்களில் வர இருக்கும் மெசியாவின் அரசினைப்பற்றிக் கூறுகிறது. நன்மையும், தீமையும் இரு வெவ்வேறு சக்திகளல்ல; மாறாக, இறைவனுக்கு நன்மைமேலும் தீமை மேலும் அதிகாரம் உண்டு என இந்நூல் கூறுகிறது. இன்றைய உலகம் ஒரு முன்னேறும் உலகமாகும். கடவுளின் பாதுகாப்பில் வளரும் இவ்வுலகம் இறுதியில் முழுமையடையும். ஆதாமின் பாவத்தால் விளைந்த சாவும், துன்பமும், கடவுளின் கட்டளையினால் குணமாக்கப்படும். நன்னடத்தை முடிவில்லா வாழ்வைப் பெற்றுத்தரும். நன்னடத்தை இறைவனின் விருப்பப்படி நடப்பதாகும். பழைய ஏற்பாடு, இந்நூலின் ஆதாரமாக விளங்குகின்றது.

**பாரூக்கு (BARUCH – ஆசீர்வதிக்கப்பட்டவர்)**

1. சபாயின் மகன். இவர் எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டுவதில் பங்கெடுத்தார் (நெகே 3:20).

2. நெகேமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெகே 10:6). இவரும் 1–இல் குறிக்கப்பட்டவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3. யூதா இனத்தைச் சேர்ந்தவர். மாசேயாவின் தந்தை. எருசலேமில் வாழ்ந்தவர்களுள் ஒருவர் (நெகே 11:5).

4. நூல் தலைப்பைப் பெற்றவர் காண்க. பாரூக்கின் நூல் 2. பெயர்.

**பாரேசு, பார்–இயேசு (BAR-JESUS – இயேசுவின் மகன்)**

சைப்பிரசில் பாப்போ என்ற ஊரில் வாழ்ந்து வந்த மந்திரவாதியும், போலித்தீர்க்கதரிசியுமான ஒரு யூதன். பவுலின் சாபத்தின்படி பார்வை மங்கி, குருடன் ஆனவன் (அ.ப. 13:6–11).

**பார் (BAR – மகன்)**

எஸ்ரா மற்றும் தானியேல் ஆகிய நூல்களின் அரமேயிக்குப் பகுதிகளுக்குப் புறம்பே, இச்சொல் சங் 2:12; பழ 31:2–இல் காணப்படுகிறது. புதிய

ஏற்பாட்டில் பார்-இயேசு (அ.ப. 13:6), பார்-யோனா (மத் 16:17), பரபா (அ.ப. 4:36) ஆகிய பெயர்களின் முன்பகுதியாக வருகிறது.

**பார்-கோக்பா (BAR-KOKHBA – விண்மீனின் மகன்)**

பேரரசன் அதிரியான் காலத்தில் உரோமையர்களுக்கு எதிராக யூதர்களை செய்த இரண்டாம் கிளர்ச்சியில் தலைவரான சீமோன் அல்லது சிமியோனின் பட்டப்பெயர். கி.பி. 132 முதல் 135-வரை நடந்த இக்கிளர்ச்சி, ராபி அகீபாவால் தயாரிக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டது. அகீபா, பார்-கோக்பாவை வரவிருக்கும் மெசியாவாகக் கருதினார். 5,00,000 யூதர்களும், சமாரியர்களும் பார்-கோக்பாவைப் பின்பற்றினர். முதலில் உரோமையர் பின் தள்ளப்பட்டனர். எருசலேமையும் கைவிட வேண்டியிருந்தது. ஆனால், பிரிட்டனிலிருந்து அழைக்கப்பட்ட தளபதி யூரியு செவேரு இந்தக் கிளர்ச்சியை அடக்கினார். கி.பி. 135-இல், எருசலேமுக்குத் தெற்கில் பார்-கோக்பாவின் தலைமையகமாயிருந்த பெத்தேரை வென்றார். பெத்தேரைக் காப்பாற்றச் செய்யப்பட்ட போரில் பார்-கோக்பா கொல்லப்பட்டார். அவரது பெயர் யூத நாட்டுணர்வின் அடையாளமாக இருந்து வந்துள்ளது. 1948-இல் இக்கால இஸ்ராயேல் நாட்டில் யூத விடுதலை வீரர்களுள் ஒருவராக பார்- கோக்பா பெருமைப்படுத்தப்பட்டார்.

யூதேய பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஏடுகளில் பார்-கோக்பா எபிரேய, கிரேக்க, அரமேயிக்கு மொழிகளில் எழுதிய கடிதங்களும் அடங்கும். இவை பார்-கோக்பா என்ற மனிதனைப் பற்றியும் விளக்கம் அளிக்கின்றன. இவற்றில் பார்-கோக்பாவின் எதிரிகள் அவரை பார்-கொசியா (பொய்யின் மகன்) என்றழைக்கின்றனர். அரசின் தலைவர் என்ற பொருளில் "நாசி" என்ற பட்டமும் அவருக்குக் கொடுக்கப்படுகிறது.

**பார்த்தல் (SEE)**

I. சிலைகளுக்குக் "கண்கள் உண்டு; ஆனால், அவை காண்பதில்லை" (சங் 135:16). "வானகத்தின் கீழ் உள்ளவற்றை இறைவன் பார்க்கிறார்" (யோபு 28:24). முக்கியமாக "மானிடர் அனைவரையும் அவர் பார்த்து" (சங் 33:13-14), "எண்ணங்களையும், விருப்பங்களையும் கண்டறிகிறார்" (7:9). ஆயினும், மனிதனைப் பொறுத்தமட்டில் "எவரும் கண்டிராத அல்லது காணவியலாத" (1 திமொ 6:16; 1:17; 1 யோவா 4:12), "தம்மை மறைத்துக் கொள்ளும் இறைவன்" ஆக அவர் உள்ளார் (எசா 45:15). ஆயினும், தம்மை "நேர்முகமாகக் காண்கிற" மக்களை அவர் தேர்ந்தெடுத்தார் (எண் 14:14).தனது முகத்தைக் காண, இறுதியாக அவர்களை விண்ணகத்திற்கு நடத்திச் செல்வதற்கு முன்னர் (திருவெளி 22:4), தனது ஒரே மகனின் உருவில் இம்மக்களுக்குத் தோன்றுமளவிற்கு அவர் உள்ளார் (யோவா 1:18; 12:45).

II. பழைய ஏற்பாடு

1. **இறைவனைப்பார்க்கும் ஆசை:** இறைவனைத் "தம் கண்களாலேயே" காண்பதே (எசா 52:8) பழைய ஏற்பாட்டினுடைய மிக முனைப்பான ஆசையாகும். விவிலியம் முழுவதும் நிறைந்துள்ள இன்பவனத்திற்கான நாட்டமானது முதலாவதாக, இறைவனுடனான நேரடியான, நெருங்கிய தொடர்பை இழந்ததை உணர்வதாகும். இந்த உள்ளார்வமானது அவரது சினம் பற்றி நிலையான அச்சமாக இருந்தாலும், அவரது திருமுன் வந்து அவரது புன்னகையைப் பார்ப்பது பற்றிய நீடித்திருக்கும் நம்பிக்கையாகவும் உள்ளது. இறைவாக்கினர்கள் மூலமான இறைவார்த்தை பற்றிய அனுபவம், மற்றும் அவர்களது வழிபாட்டிலான அவரது பிரசன்னம் பற்றிய அனுபவம் ஆகிய இஸ்ராயேலின் இரு உயரிய சமய அனுபவங்களும், இறைவனைப் பார்த்தலாகிய இறுதியான சலுகைக்குரிய அனுபவத்தை நோக்கிச் செல்கின்றன.

அ) **இறைவாக்கினர்களுக்கு இறைவன் தோன்றுதல்:** இறைவாக்கினர்களுடைய

வாழ்வில் இவையே உச்ச நிலையாக உள்ளன. மோசே மற்றும் எலியா போன்ற இறைவாக்கினர்களுடைய வாழ்வும், இறைப்பணிகளும் இந்த அனுபவத்தை அதனுடைய மிகவும் உன்னத வடிவில் கொண்டிருந்தன. ஆயினும், "உம்முடைய மாட்சியை எனக்குக் காண்பித்தருளும்" (யாத் 33:18) என்று மோசே வேண்டும் போது, ஆண்டவர் அவரது வேண்டுதலுக்குச் செவி மடுத்து "நாம் கடந்து செல்லும் வரை எம் வலக்கையால் உன்னை மூடி மறைப்போம். பின், நாம் எம் கையை அகற்றுவோம். நீ, எம் பின்புறத்தைக் காண்பாய், நம் முகத்தையோ காணமாட்டாய்" என்று பதிலளிக்கிறார் (33:22-23).யாவே தன்னை நெருங்கும் போது எலியா, "தனது முகத்தை மூடிக்கொண்டு" ஒரு குரலொலியை மட்டுமே கேட்கிறார் (1 அர 19:13; காண்க. உப 4:12). இறைவனே தன்னைக் காணக்கூடிய வராக்கினாலன்றி, எவரும் இறைவனைப் பார்க்க முடியாது. மோசேயின் சலுகை தனிச்சிறப்புடையது: "ஆண்டவர் உருவை அவன் காண்கிறான்" (எண் 12:8). மற்றத் தாழ்ந்த நிலைகளில், "கனவுகளிலும் காட்சிகளிலும்" இறைவாக்கினர்கள் (12:6), இவ்வுலகைச் சாராத ஒன்றைக் காண்கின்றனர் (எண் 24:4,16; 2 நாள் 18:18; ஆமோ 9:1; எசே 1-3; தானி 7:1). ஆபிரகாமும் யாக்கோபும் இதற்கொத்த அனுபவங்களைக் கொண்டிருந்தனர் (ஆதி 15:17; 17:1; 28:13). கிதியோன் (நீதி 6:11-24), மனோவாகு மற்றும் அவரது மனைவி ஆகியோரும் இறையனுபவம் பெற்றனர் (13:2-23). மலையின் மேல் இஸ்ராயேலின் இறைவனை நோக்கும்போது இஸ்ராயேலின் எழுபது முதியோரும் மோசேயின் சலுகையில் ஓரளவு பங்கேற்கின்றனர் (யாத் 24:10).

ஆ. வழிபாடு: இறைவன் தன்னையே பிரசன்னப்படுத்தும் இடங்களில் நடக்கும் வழிபாடானது (யாத் 20:24) நற்குணத்தவரிடையே இறைவனைப் பார்த்தால், அவரது திருமுகத்தைத் தேடுதல் (சங் 24:6), அவரது "இனிய அழகைப் பார்த்தல்" (27:4), அவரது "அற்றலையும் மாட்சிமையையும்" பார்த்தல் (63:3) ஆகியவற்றிற்கான ஆர்வத்தையும், தொலைவிலிருந்து ஆலயத்தைப் பார்ப்பதையும் தூண்டுகிறது. (யோனா 2:5). மோசேக்கு அளிக்கப்பட்ட இறைவல்லமைக் காட்சிகளைப் போன்று எசாயாவுக்கு அளிக்கப்பட்ட காட்சியானது, வார்த்தையிலும் இறைப் பணியிலும் மையம் கொண்டுள்ள இறைவாக்குக் காட்சிக்கும், பிரசன்னத்தில் மையம் கொண்டுள்ள வழிபாட்டில் அடைகின்ற காட்சிக்கும் இடையில் ஒரு பொருத்தத்தினை விளைவிக்கிறது (எசா 6; 2 நாள் 18:18; எஸ் 10:1).

2. பார்த்தலும் விசுவசித்தலும்: இறைவன் விசுவாசத்திற்குத் தன்னை வெளிப்படுத்துகின்ற, "மறைத்துக் கொள்ளும்" (எசா 45:15) கடவுளாக இருப்பதன் காரணமாக, இறைவனைப் பார்க்கும் ஆர்வமானது அரிதாக ஓரளவிற்கே நிறைவேற்றப்படுகிறது. "கட்புலனாகாதவர்" அவரது படைப்பின் வியப்புகளில் அறிவுக்குப் புலனாவதால் (உரோ 1:20), அவரை அறிவதற்கு அவரது வார்த்தைக்குச் செவிமடுத்து, அவரது செயல்களைப் பார்ப்பது அவசியமாகிறது. விண்மீன்களின் காட்சி, அவருடைய வல்லமையினைப் பற்றி ஓரளவு அறிவிக்கின்றது (எசா 40:25-26). உலகைப் பற்றிச் சிந்திப்பதென்பது ஏற்கெனவே இறைவனைப் பார்ப்பதாகும் (யோபு 38:41).

ஆனால், மறைத்துக்கொள்ளும் இறைவனை இன்னும் உயரிய அளவில் வரலாற்றில் பார்க்கலாம். முன்னர் என்றுமே கண்டிராத அடையாளங்களைத் (யாத் 34:10) தனது மக்களுக்கென அவர் புரிந்த வியத்தகு செயல்களில் (யாத் 14:13; உப 10:21; யோசு 24:17), அவரது மகிமையை இஸ்ராயேல் கண்டது (யாத் 16:7). எனவே, இறைவனை அறிதலானது, அவரது மாட்சிமை மிக்க செயல்களைப்பார்த்து அவர் யாரென அறிந்து கொள்ளுதலும் (சங்

46:9-11; காண்க. எசா 41:20; 42:18; 43:10), அவரது சாதனைகளைப் பார்த்து அவரில் விசுவாசங் கொள்ளுதலுமாகும் (யாத் 14:31; சங் 40:4; யூதி 14:10). ஏனெனில், அவரன்றி வேறு இறைவன் இல்லை (உப 32:39).

ஆனால், அறிவுத்திறமற்ற சிலைகளைப் போன்று மனிதர் செவிடராகவும், பார்வையற்றவராகவும் உள்ளனர் (எசா 42:18). "அவர்கள் கண்ணிருந்தும் காணாத, காதிருந்தும் கேளாத, மதிகெட்ட, இதயமற்ற மக்கள்" (எரே 5:21; எசே 12:2). மக்களை ஒளிர்விப்பதற்கெனக் குறிக்கப்பட்ட இறைவனுடைய அறிகுறிகளும் கொடைகளும் அவர்களது பார்வையின்மையிலேயே அவர்களைக் கடினமாக்கலாம். இறைவாக்கினரின் போதகம் "அவர்கள் கண்ணால் காணாமலும், காதால் கேட்காமலும், உள்ளத்தால் உணராமலும், மனம் மாறிக் குணமாகாமலும் இருக்கும்படி இந்த மக்களின் இதயத்தைக் கொழுப்படையச் செய்து, காதுகளை மந்தமாக்கி, கண்களை மூடுகிறது" (எசா 6:10).

III. புதிய ஏற்பாடு

**1. இயேசு கிறிஸ்துவில் இறைவன் காணப்படுதல்:**

**அ) கேட்டிராத அருங்குறிகள் இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகின்றன:**

இறைவாக்கினரால் வாக்களிக்கப்பட்ட (எசா 52:15; 64:3;66:8) இதுவரை கண்டிராத செயல்கள் இயேசுவில் வெளிப்படுத்தப்படுகின்றன (மத் 9:33). தன்னுடைய "கண்கள் மீட்பைக் கண்டு கொண்டதனால்", சிமியோன் அமைதியாகப் போகலாம் (லூக் 2:30). இயேசுவின் செயல்களைப் பார்க்கின்ற கண்கள் பேறுபெற்றவை! "பல இறைவாக்கினரும் நேர்மையாளரும் காணவிரும்பியும் காண முடியாதவைகளை" அவை காண்கின்றன (மத் 13:16-17). ஆபிரகாம் தொலைவிலிருந்து பார்த்து (எபி 11:13), இயேசுவின் நாளினை அதிலேயே மகிழ்ச்சியுடன் கொண்டாடியதை விட (யோவா 8:56), மிக அண்மையிலிருந்து அவை காண்கின்றன. இயேசுவினால், இடறல் படாமல் உண்மையில் நடப்பது என்ன என்பதை மட்டுமே காண்பார்களேயாகில், இயேசுவைப் பார்க்கும் கண்கள் பேறு பெற்றவையே! "குருடர் பார்க்கின்றனர்... நற்செய்தி போதிக்கப்படுகிறது" (மத் 11:5-6).

**ஆ) பார்த்தலும் விசுவசித்தலும்:**

ஏற்கெனவே, ஒத்தமை நற்செய்திகளிலும், மிகவும் தெளிவாக யோவானிலும், இயேசுவின் செயல் மற்றும் அவரில் இறைவன் எதைக்கொணர்கிறார் என்பதனுடைய காட்சியானது விசுவசிப்பதற்கும், விசுவாசத்தின் மூலமாக மீட்பு வரலாற்றின் காணமுடியாத பக்கத்தை அணுகி அறிவதற்குமான அழைப்பாக உள்ளது.

இயேசுவால் நிறைவேற்றப்படும் அறிகுறிகள் விசுவாசத்திற்கு நடத்திச்செல்ல வேண்டும் (யோவா 2:23; 10:41; 11:45; லூக் 17:15.19). கேட்கிறவன் எவனுக்கும், மேலும் அதிக அறிகுறிகள் அளிக்கப்படவில்லையெனில், அவை விசுவாசத்தில் விளைவதில்லை என்பதில் ஓரளவிற்கேனும் சந்தேகமில்லை (மத் 12:38-39; மாற் 15:32). அதற்கும் அப்பாற்பட்டு, முழுமையான விசுவாசமானது அறிகுறிகள் இல்லாமலும் செயல்பட வேண்டும் (யோவா 4:38). ஆனால், மெய்ம்மையானது இந்நிலைக்கு மிகவும் அப்பால் உள்ளது. உண்மையில் அவர்களது கண் முன்னால் அறிகுறிகள் பல செய்யப்பட்டாலும் பலர் விசுவசிக்கவும் (யோவா 12:37), எவ்வழியிலும் பார்ப்பதும் (மத் 13:14-15; யோவா 12:40; காண்க. எசா 6:9-10) முடிவதில்லை. அவர்களுக்கு, உலகின் ஒளியானது (யோவா 8:12; 9:5) இருளாகிறது; காட்சியின் தெளிவானது குருடாகிறது; "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால், நீங்கள் 'எங்களுக்குக் கண் தெரிகிறது'

என்கிறீர்கள். எனவே நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (யோவா 9:41).

உயிர்ப்பின் விவரிப்பிலும் அதே கருத்துகள் மீண்டும் நிகழ்கின்றன. வெறுமையான கல்லறையின் காட்சி (யோவா 20:28), தேர்ந்தெடுக்கப்பட்ட சாட்சிகளால் (அ.ப. 10:40-41) இயேசு தன்னையே பார்க்குமாறு அனுமதிக்கின்ற காட்சிகள் முதலியனன் (அ.ப. 13:31; 1 கொரி 15:5-8; மத் 28:7,10 இணை) விசுவாசத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் (யோவா 20:29; காண்க. மத் 28:17). விசுவாசத்தின் மாதிரியானது இங்குக் காணாமலே விசுவசிக்க வேண்டியதாக இருக்க வேண்டிய நேரத்தில் (அரு 20:29), கண்டும் அவிசுவாச நிலையில் இருப்பவர்களைப் பார்ப்பதும், அவர்களைப் பற்றிக் கேட்பதும் இன்னும் காணக்கூடியதே (லூக் 24:12; 27:39-41; மாற் 16:11-14).

**இ. இயேசு கிறிஸ்துவின் இறைவன் வெளிப்படுகிறார்:** விசுவாசத்திற்கு முன் செல்கின்ற ஒரு பார்த்தல் இருக்கிறதெனில், விசுவாசமே அறிவிற்கும், காட்சிக்கும் இட்டுச்செல்கிறது. உண்மையில், மனுமகனின்மீது வானங்கள் திறக்கப்படுதல் (யோவா 1:51; காண்க. மத் 3:16), இறைவனின் மறைபொருட்கள் வெளிப்படுத்தப் படுதல், மற்றும் அவரில் விசுவாசங்கொள்வோருக்கு வாழ்வு அளிக்கப்படுதல் மட்டுமின்றி (யோவா 3:21.36), கணநேரம் தோன்றிமறையும் மற்றும் துணுக்குத் தன்மையில் மோசே கண்ட இறைவனுடைய மகிமை (யாத் 33:22-23; 2 கொரி 3:11) இடைவிடாமல் நேரடியாக ஆண்டவிரினின்று விரிந்து செல்கிறது (2 கொரி 3:18). "அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்... தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்" (யோவா 1:14). இயேசுவைப் பார்ப்பதென்பது ஏற்கெனவே வார்த்தையினையும், "தந்தையோடு இருந்து நமக்கு வெளிப்படுத்தப்பட்ட வாழ்வையும்" பார்ப்பதாகும் (1 யோவா 1:1-3). "நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதனால்", "என்னைக் கண்டவர் தந்தையைக் கண்டவனாகிறார்" (யோவா 14:9-10; காண்க. 1:18; 12:45).

**2. அவர் இருக்கிறவாரே இறைவனைப் பார்த்தல்:** இயேசு தந்தையிடம் திரும்புவதற்கு முன் (யோவா 14:12.28), தனக்குரிய மகிமை அனைத்தையும் வெளிப்படுத்தாததன் காரணமாக (17:1.5), மகன் மனிதனாயினும் கூட, இறைவனைப் பார்ப்பதற்கான நமது ஆசையை நிறைவேற்ற முடியாது. இயேசு, தான் வந்த கட்புலனாகாத மறைவான உலகிற்கு, எவரும் கண்டிராத, காணக்கூடியவற்றின் ஊற்றாக உள்ள மெய்ம்மைகளின் உலகிற்கு (எபி 11:1-2), இறைவனுடைய உலகிற்கு மீண்டும் ஒருமுறை திரும்புவதற்காக மறைந்துவிட வேண்டும். இதன் காரணமாகவே அவர் இனிக் காணப்படக் கூடாது (யோவா 16:10-19). அவரைக் காணாமல் மனிதர் அவரைத் தேட வேண்டும் (7:34; 8:21). அவரது விண்ணேற்பின்போது சீடர்கள் அவரை இறுதிமுறையாகக் கண்ட வேளையில் (அ.ப. 1:9-11), அவரைக் காணாதவர்கள், அவரை மீண்டும் காணாமல் விசுவசிப்பதன் மூலமாகவே அவரை அன்பு செய்து மகிழ வேண்டிய நேரம் தொடங்கும் (1 பேதுரு 1:8-9).

"எல்லாம் வல்லவரின் வலப்பக்கத்தில் அமர்ந்தவராய்" (மத் 26:64), "வான மேகங்களின் மேல் வருபவராய்" (24:30) மனுமகனைக் காணும் நாள் ஒன்று வரும். ஆண்டவருடைய அந்நாளினை நிகழ்காலத்திற்கு உரியதொன்றாக ஸ்தேவான் ஏற்கெனவே காண்கிறார் (அ.ப. 7:55-56). இவ்வருகையானது வரலாறு முழுவதும் ஏற்கெனவே பார்க்கப்படுகிறதெனத் திருவெளிப்பாடு நூல் சுட்டுகிறது. "இதோ அவர் மேகங்கள் சூழ வருகிறார். அனைவரும் அவரைக் காண்பர். அவரை ஊடுருவக் குத்தினவர்களும் காண்பார்கள்" (திருவெளி 1:7; காண்க. யோவா 19:37). ஆனால், உண்மையில் "அனைத்தும் அவருக்கு உட்படுத்தப்படும்வரை" (எபி 2:8),

விசுவாசத்திலன்றி "அவரை இனிக்காண மாட்டோம்". இஃது இனியும் வானகத்தை நோக்குகின்ற காலமன்று. மாறாக, அவர் சென்றவாரே திரும்பி வருவதைக் காண்போம் என்பதற்குச் சான்று பகர்தலுக்கும் (அ.ப. 1:11), இந்த இரட்டை எதிர்பார்ப்பின் நிலையில் வாழ்வதற்குமான காலம் இது. அவரது பிள்ளைகளுக்கு முழுமையாக ஒப்படைக்கப்பட்ட அவரது அணுக முடியாத மறைபொருளில் எப்போதும் ஆண்டவருடன் இருப்பதும் (1 தெச 4:17; பிலி 1:23), இறைவனைக் காண்பதும் (மத் 5:8), அவரது திருமுகத்தைப் பார்ப்பதும் (திருவெளி 22:4), அவர் உள்ளவாரே அவரைப் பார்ப்பதுமாகும் (1 யோவா 3:2).

**பார்த்தியர் (PARYTTHIANS)**

இஃது ஓர் ஈரானிய இனம். எருசலேமில் பெந்தெகோஸ்தே திருநாளுக்காகக் கூடியிருந்தவர்களில் மேதியர், ஏலாமித்தார் போன்றோருடன் பார்த்தியரும் இருந்தனர் (அ.ப. 2:9-11).

கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் பார்த்தியர், செலூக்கிய அரசர்களிடம் இருந்த சுதந்தரம் பெற்றனர். இந்த அரசை நிறுவியவர் அர்சாசிது என்பவர். எனவே, இதன் அரசர்கள் அர்சாசிதியர் என அழைக்கப்படுகின்றனர். இந்த அரசர்கள் நிறுவிய அரசு யூப்பிரத்தீசு முதல் சிந்துநதிவரை பரவியிருந்தது. யூப்பிரத்தீசு நதியில் அமைந்திருக்கும் ஸ்தெசிபோன் என்ற நகரம் இவர்களின் ஒரு தலைநகரமாகும்.

**பார்-யோனா (BAR - YONA - யோனாவின் மகன்)**

சீமோன் பேதுருவின் தந்தை வழிப்பெயர். இவர் மத் 16:17-இல் யோனாவின் மகன் (பார்-யோனா) என்று அழைக்கப்படும்போது, யோவா 1:42; 21:15-17-இல் யோவானின் மகன் என்றழைக்கப்படுகிறார். பேதுருவின் தந்தைக்கு இரு பெயர்கள் இருந்தனவா அல்லது ஒரே எபிரேயப் பெயர் இரு கிரேக்க வடிவங்களில் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி உறுதியாகக் கூறமுடியாது.

**பார்வோன் (PHAROH - பெரிய வீடு)**

விவிலியத்தில் இந்தப் பெயர் அல்லது பட்டம், எகிப்திய மன்னர்களின் பெயராகவோ, பெயரோடு சேர்க்கப்பட்ட அடைமொழியாகவோ பயன்படுத்தப் படுகிறது. கி.மு. 2500-ஐ ஒட்டி, பழைய எகிப்திய அரசில் அரண்மனையைக் குறிக்க, பெரிய வீடு என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி வந்தனர். கி.மு. 1500-இல், 18-ஆம் அரசமரபின்போது இச்சொல், அரண்மனையில் வாழ்ந்த அரசனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (உதாரணம் பார்வோன் சிசாக்கு). இச்சொல் அரசர்களின் பெயரோடு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. எனவே, விவிலிய காலத்தில் இச்சொல் அரசனின் பெயருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது.

பார்வோன்களின் பெயருக்குப் பொருள் உண்டு. உதாரணமாக, "ராம சேசு" என்பது 'ரா' என்னும் "சூரிய கடவுளால் பெற்றெடுக்கப்பட்டவன்" என்பது பொருள். இப்பெயர் குழந்தை பிறந்தவுடன் சூட்டப்பட்டது. இதுவே குடும்ப பெயராகவும் அமைந்தது. இவ்வாறு சூட்டப்பட்ட பெயர்கள் மத சம்பந்தமானவை. எடுத்துக்காட்டாக, துத்துமோஸ், 'துத்து'க்கடவுளோடு தொடர்புடையவன் என்று கருதப்பட்டான். பட்டமளிப்பு விழாவின்போது அரசன் 'நான்கு' பெயர்களைச் சூட்டிக் கொண்டான். அவற்றுள் முக்கியமானது 'முற்பெயர்' ஆகும்.

முதன் முதலில் எகிப்திய நாகரிகத்தில்தான் சிதறிக்கிடந்த பல பகுதிகள் இணைக்கப்பட்டு ஓர் அரசனின் ஆட்சியின் கீழ் அரசாக உருவாக்கப்பெற்றன. எகிப்து மேல் எகிப்து, கீழ் எகிப்து என்று கலாச்சார அடிப்படையில் பிரிந்திருந்தது. இவை இரண்டையும் ஒன்றாக இணைக்க, அவர்களை ஆண்டது ஒரு கடவுள் என்று எகிப்தியர் கருதினர். இக்கொள்கையின்படி எல்லா நிலமும், செல்வமும், மக்களும் இக்கடவுளுக்கு உரியவை என்று கருதினர். எனவே, இக்கடவுளின் வார்த்தையே சட்டங்களாக எண்ணப்பட்டன. இவன் இறந்ததால் ஓசிரிசு என்ற

கடவுளாக மாறிவிட்டதாகவும் எண்ணினர். இவ்வாறு தெய்வத்தோடு தொடர்புடையவனாகக் கருதப்பட்ட அரசன் சர்வாதிகாரியாக இருந்ததால் இக்கொள்கைக்குப் பல எதிர்ப்புகள் எழுந்தன. இதன் பலனாகப் பல அரசு அமைப்புகள் தோன்றின. நிரந்தரமாக, படைகள் உண்டாக்கப்பட்டன. இந்தப் படைத்தலைவர்களிலிருந்து சீசாக்கு போன்ற பல அரசமரபுத் தலைவர்கள் தோன்றினர். பல குருக்களும் பதவிகளுக்கு ஆசை கொண்டனர். இக்காலத்திலிருந்து, அரசன் எவ்வேலையைச் செய்யும் முன்பும் 'குறி' கேட்டான். இதனால் தலைமைக் குரு முக்கியமானவராகக் கருதப்பட்டார். அரசன் தெய்வத்தன்மை பொருந்தியவன் என்ற கொள்கை நிலவினாலும், அரசனுக்கு அடுத்தபடியாக இருந்த குருக்களும், மற்ற அதிகாரிகளும், அவன் மக்களோடு நேரடித்தொடர்பு கொள்ளாதபடி செய்தனர்.

ஆதி ஆகமத்தில், பார்வோன் அடிமையாக வந்த யோசேப்பிடம் அளவில்லாத அன்பு காட்டியதும், யாத்திராகமத்தில் மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் சென்று பேசியதும் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இவை மேலே கூறப்பட்ட கருத்துக்களுடன் ஒத்துப்போகவில்லை. ஆனால், அரசர்கள் பலர் அன்புள்ளவர்களாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. எகிப்தியர் பேரரசை நிறுவ விரும்பியபோது, அருகில் இருந்த அரசர்களுடன் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதே போல்தான் சாலமோன் பார்வோனின் மகளை மணந்தான் (1 அர 3:1). வெளிநாடுகளின் வெற்றியால் பல கைதிகள் எகிப்துக்குக் கொண்டு வரப்பட்டனர். பலர் வீட்டு வேலைக்காரர்களாகவும், யோசேப்பைப் போன்று அரண்மனைக் கண்காணிப்பாளர்களாகவும் இருந்தனர் (ஆதி 47:6). வேறு பலர் அரசனின் மந்தைகளைக் கண்காணிக்கவும், பெரிய கட்டடங்களை எழுப்பவும் அமர்த்தப்பட்டனர் (யாத் 1:11). அரசனுக்கு ஆலோசனை கூற அமைச்சர்களும், குறிசொல்ல குருவும் இருந்தனர். யோசேப்பு பிற்காலத்தில் வரி வசூலிக்கும் அமைச்சராக இருந்தார் (ஆதி 47:13-26). குருக்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்டனர். காண்க. எகிப்து, யாத்திரை.

**பாலஸ்தீனம் (PALESTINE)**

1. இஃது இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்து வந்த பகுதிக்கு விவிலிய அறிஞர்களும் தொல்பொருள் ஆய்வாளர்களும் அளிக்கும் பெயராகும். இப்பெயர் "கடல்வாழ் மக்கள்" என்ற பொருளுடைய சொல்லிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. பாலஸ்தீனம் என்ற சொல் விவிலியத்தில் காணப்படுவதில்லை.

பாலஸ்தீன எல்லைகளை, விவிலியம் யோசுவா நூலின் தொடக்கத்திலேயே பொதுவாக வரையறை செய்கிறது. "மோசேக்கு நாம் கூறியவாறு உன் காலடிபடும் இடத்தையெல்லாம் உங்களுக்குக் கொடுப்போம். பாலைநிலத்திலிருந்து இந்த லெபனோன் வரையிலும், யூப்பிரத்தீசு பேராறு தொடங்கி இத்தியர் நாடு முழுவதுமாகக் கதிரவன் மறையும் பெருங்கடல் வரையிலும் உங்கள் நிலமாக இருக்கும்" (யோசு 1:4) என்று யாவே யோசுவாவுக்குக் கூறினார். யோசுவா காலம் தொடங்கி வரலாற்று நூல்களில் காணப்படும் விவிலிய நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை இப்பகுதியில் நடந்தவை. இப்பகுதியின் புவியியல், எல்லைகள், தட்பவெப்பநிலை, பருவகாலங்கள், நாட்டின்செழிப்பு, முன்பு வாழ்ந்த மக்கள் ஆகியவை பற்றி இங்கு, சுருக்கமாகக் காண்போம்.

2. இட அமைதியும் எல்லைகளும்:

பாலஸ்தீனம் அரேபியாப் பகுதியின் வடமேற்கு எல்லையின் ஒரு பகுதியாகும். இது சீரியாவோடு இணைக்கப்பட்டு அதன்புடைப்பகழ்வுச் சித்திரத்தில் பங்கு கொள்கிறது. இது வடக்கே கடற்கரையிலுள்ள தீரிலிருந்து உள்நாட்டில் தாண் வரை பரவியிருந்தது. இதற்குக் கிழக்கில் பாலைவனமும், மேற்கில் மத்தியதரைக் கடலும் எல்லைகளாக அமைந்தன. தென்கிழக்கில்

சாக்கடலுக்குக் கிழக்கிலுள்ள அர்னோன் ஆறு எல்லையாக அமைந்தது. தெற்கில் கடற்கரைப் பகுதியிலுள்ள எகிப்தின் ஆற்றிலிருந்துதொடங்கி, உள்நாட்டில் கதோசு பர்னேயா வரை ஒரு எல்லையாலும், அங்கிருந்து அராபா வரையும் சாக்கடலிலிருந்து தெற்கே வரையும் ஒடுக்கமான பள்ளத்தாக்கை ஓர் எல்லையாகவும் கொண்டிருந்தது. தாவீது, சாலமோன் ஆட்சிக் காலத்தில் மட்டும்தான் யோசு 1:1-4-இல் குறிப்பிடப்படும் எல்லையை யூதாநாடு கொண்டிருந்தது.

3. எவ்வளவு பெரியது:

இஸ்ராயேலருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பாலஸ்தீனம் ஏறக்குறைய 10,000 சதுரமைல் பரப்புடையது. வடக்கில் தாணிலிருந்து தெற்கில் எகிப்து ஆறுவரை ஏறக்குறைய 200-250 மைல் நீளமுடையது. வடக்கில் ஏரியிலிருந்து கடற்கரையில் கர்மேல் அருகிலுள்ள அக்கோர் வரை 25 மைல் அகலமுடையது. தெற்கில், சாக்கடலிலிருந்து மத்தியதரைக்கடல் வரை 50 மைல் அகலமுடையது. தெளிவாக வேறுபடுத்தக்கூடிய நான்கு புவியியல் பிரிவுகளைக் கொண்டது. அவை: 1)கடற்கரையை ஒட்டிய சமவெளிப்பகுதி. 2) மலைப்பகுதிகள். 3) யோர்தான் பள்ளத்தாக்கு. 4) யோர்தானுக்கு அப்பால் உள்ளபகுதி. இவ்விதப் பிரிவு நாட்டை நான்கு நிரைகோட்டுப் பிரிவாகப் பிரிப்பதற்கு ஒத்ததாகும்.

4. கடற்கரைப்பகுதி:

மேற்றிசையிலிருந்து பாலஸ்தீனத்தை அணுகும்போது, நாம் எதிர்கொள்ளும் நிரைகோட்டுப்பிரிவின் முதற்பகுதி கடற்கரைப் பகுதியாகும். இது வடக்கில் பிபுலோசிலிருந்து தெற்கில் எகிப்திய ஆறு வரையுள்ள கடற்கரைப் பகுதியாகும். பொதுவாகக் கடல்துறைக்கு அவ்வளவு ஏற்ற பகுதியன்று. சீரிய-பெனிசியா கடற்கரைப் பகுதி ஒரு நெருங்கிய நாடாவைப் போன்ற ஒடுக்கமான பகுதியாகும். இப்பகுதி லெபனோன் மலையால் சூழப்பட்டது. இப்பகுதி கடலுக்குள் புகும் மலைகளால் சுற்றி வளைக்கப்பட்டதால் இங்கு வாழ்ந்த பெனிசியர்கள் கடற்கரையை நோக்கியே வாழவேண்டியிருந்தது. அவர்களது முக்கிய கடல்துறைகளான பிபுலோஸ், தீர், சீதோன் ஆகியவை குறைந்த வசதிகளைக் கொண்டிருந்தாலும் பழங்கால உலகத்தில் கடல்துறையில் சிறந்து விளங்கினர். பாலஸ்தீனக் கடற்கரைப் பகுதி உள்நாட்டில் பரந்து இருக்கிறது; வண்டல் மண் பகுதியாகும். இது கர்மேலுக்கு வடக்கே சுமார் 25 மைல் நீளமுள்ளது. அக்கோவுக்கு எதிரில் மிகப்பரந்து இருக்கிறது. கயிபாவாவுக்குத் தென்கிழக்கில் ஏறக்குறைய 9 மைல் தூரத்தில் ஓர் ஒடுக்கமான வழியாக எசுதிரலோன் (இஸ்ரியேல்) பள்ளத்தாக்கின் சமவெளியோடு இணைகிறது. இதன் வழியாக, கிசோன் ஆறு ஓடுகிறது. அக்கோவுக்குத் தெற்கை விட, வடக்கில் நிலம் உழவுக்கு மிக உகந்ததாகும். தெற்கில் உழவர்கள் நிலத்துள் புகும் சதுப்பு நிலம், மணல்மேடுகள் ஆகியவற்றோடு போராட வேண்டும். இப்பகுதியின் சிறப்பு அதன் கடற்கரை யோரத்தின் உருவ அமைப்பாகும். அக்கோ இருக்கும் பாறைப்பகுதிக்கும் கர்மேல் மலைக்கும் இடையிட்ட பகுதி அரை நீள்வட்ட வடிவமுடையது. உண்மையான கடற்கரைப் பண்புகளைக் கொண்டது. நுண்ணிய மணல் ஒரே சீராகப் படிந்து, இவற்றின் முகப்பில் உப்பங்கழிகள் காணப்படும். பாலஸ்தீனத்திலுள்ள இரண்டே கடல்துறைகளில் அக்கோவும் ஒன்று.

கர்மேல் மலைக்கும் யோப்பாவுக்கும் இடையில் சாரோன் சமவெளி அமைந்துள்ளது. இது மிக வளமுடையது. செசரியாப் பக்கத்தில் 9 மைல் அகலத்திற்கு உள்நாட்டில் இச்சமவெளி பரவுகிறது. யோப்பாவுக்கு எதிரில் சமவெளி 12 மைல் அகலமுள்ளது. யோப்பாவுக்கும் எகிப்திய ஆற்றுக்குமிடையே உள்ள பகுதி பெலிஸ்தியச் சமவெளியாகும். அசுகலோனைச் சுற்றி இச்சமவெளி 15 மைல் அகல முடையது. சாரோன், பெலிஸ்தியச் சமவெளிகள் பொதுவாக, கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் உள்ளவை; மிக வளமுடையவை. குளிர்காலப் பெரும்

வெள்ளத்தால் ஏற்பட்ட வண்டல் படிவுகள் இப்பகுதியை வளமுடையதாக்குகின்றன. யோப்பா பாலஸ்தீனத்தின் மற்றொரு கடல் துறையாகும். இஃது எருசலேமின் கடல் துறையாகும்; எருசலேமிலிருந்து சுமார் 30 மைல் தூரத்தில் உள்ளது. பெலிஸ்தியச் சமவெளியை மணல்மேடுகள் புகுந்து கெடுக்கின்றன. இப்பகுதியில் சுண்ணாம்புச் சத்துடைய கடினமான மணல் மேடுகளில் மக்கள் குடியேறினர். கர்மேலில் தொடங்கி நைல் நதியின் கழிமுகப் பகுதிவரை இக்கடற்கரைச் சமவெளி தொடர்ச்சியாக உள்ளது. ஆங்காங்கே சில இடங்களில் கடற்பகுதிகள் உண்டு. அங்கே குடியிருப்புகள் தோன்றின. கடற்கரை ஓரத்தில் சிறுசிறு மணல்தீவுகளும் உப்பங்கழிகளும் உண்டு.

கடற்கரைச் சமவெளிக்கும் மலைப்பகுதிக்கும் இடையில் தாழ்நிலைச் சமவெளி உள்ளது. இதன் இடையே குன்றுகள் உண்டு இவைகளை அடுத்து யூதாவின் மலைப்பகுதிகள் தொடங்குகின்றன. இத்தாழ்நிலைச் சமவெளி யூதாவுக்கு மேற்கிலுள்ள முதல் அரணாக அமைந்திருந்தது.

**5.மலைப்பகுதி:** நிரைகோட்டுப் பிரிவில் இரண்டாவது பகுதி மலைப்பகுதியாகும். இது கலிலேயா மலைப்பகுதி, சமாரிய-யூதா மலைப்பகுதியென இரண்டாகப் பிரிகிறது. லெபனோன் மலைத்தொடர் வடக்கில் சீரியாவில் தொடங்கி கலிலேயாவில் மெதுவாகத் தாழ்ந்து எசுதிரலோன் சமவெளியில் முடிகிறது. கலிலேயா மலைப்பகுதி கடற்கரைச் சமவெளியாலும் யோர்தான் பள்ளத்தாக்காலும் சூழப்பட்டு ஒரு பீடபூமிபோல் அமைந்துள்ளது. ஏபெல் யார்முக்கு என்ற இடம் இப்பகுதியில் உயர்ந்த சிகரமாகும் (3930 அடி). இது பாலஸ்தீனத்தில் உயர்ந்த இடம் எனலாம். இது நாசரேத்தை நோக்கிச் சரிந்து எசுதிரலோன் சமவெளியில் முடிகிறது. இச்சமவெளி கர்மேல் மலைக்கு அருகில் தொடங்கி யோர்தான் நதிவரை தென்கிழக்குத் திசையில் பரவியுள்ளது. 100 சதுரமைல் பரப்புடையது. தீர் சமவெளிக்குத் தெற்கே ராஸ்–எல்–அயியாத், ராஸ்–என்-நகுரா என்ற இடங்களில் கலிலேயா மலைப்பகுதி கடலுள் புகுகிறது. கலிலேயா மலைப்பகுதியில்தான் நாசரேத்தூர் மலை இருக்கிறது. இது, செங்குத்தாய்த் தனித்து நிற்கும் தாபோர் (1840 அடி) மலையோடு இணைகிறது. குவிமாடம் போன்ற பாறைகளும் பள்ளங்களும் உண்டு. இவை, கலிலேயா மலையைக் கிழக்கு மேற்கு மலைத்தொடராகப் பிரிக்கின்றன. இடையிலுள்ள 8 மைல் நீளமும், 1.5 மைல் அகலமுமுடைய சகெல்-புட்பு என்ற ஏரிபோன்ற நீர்க்குட்டை குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

பாலஸ்தீனத்தின் தென்மலைத் தொடர் எசுதிரலோன் சமவெளியின் தென் பகுதியிலிருந்து தொடங்கி சமாரியா, யூதேயா வழியாக பெயேர்-செபா, கதேசு-பர்னேயா வரை செல்லுகிறது; மேற்கில் படிப்படியாகவும் கிழக்கில் யோர்தானை நோக்கிச் செங்குத்தாகவும் சரிகிறது. இது வடக்கில் வளர்பிறை போன்ற அமைப்புடைய கில்போவா (1,700 அடி) மலையைக் கொண்டுள்ளது. அதன் இரு கொம்புகளிடையே 12 மைல் தூரம் உண்டு. பாலஸ்தீன தென்மலைத் தொடரில் கூடை போன்ற சிறுசிறு குன்றுகள் உண்டு. அவற்றில் உயர்ந்தவை: ஏபால் மலை (3100 அடி), கெரிசிம் மலை (2900 அடி). எருசலேம் வரையுள்ள மலைப்பகுதி கூடைபோன்று அமைந்துள்ளது. இப்பாறைகள் புறத்தில் சாம்பல் நிறமாயும் உள்ளே மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பாயும் இருக்கும். எருசலேம் 2500 அடி உயரமுடையது. எபிரோன் மலை 3000 அடி உயரமுடையது. அங்கிருந்து பெயேர்-செபாவில் இம்மலைத்தொடர் 1000 அடியாகத்தாழ்கிறது.

**6. யோர்தான் பள்ளத்தாக்கு:** பாலஸ்தீனத்தின் மூன்றாவது நிரைகோட்டுப் பகுதி யோர்தான் பள்ளத்தாக்காகும். இஃது ஒரு பெரும் பிளவின் பகுதியாகும். இப்பிளவு வடசீரியாவில் தொடங்கி லைபனோனுக்கும் எதிர் லெபனோனுக்கும் இடையே தெற்காக ஓடிப் பின், பாலஸ்தீனத்தின் நடுவில் ஓடி, அக்காபா வளைகுடா வழியாக ஆப்பிரிக்காவுக்குச்

செல்கிறது. இந்தப் பிளவின் பாதி தூரத்திற்கு யோர்தான் பள்ளத்தாக்கு அமைந்திருக்கிறது. எர்மோன் மலை (9200 அடி) அடிவாரத்தில் தொடங்கும் சிறு ஆறுகள் ஒன்று சேர்ந்து யோர்தான் நதியாக உருவெடுக்கின்றன. பாறைகளோடு கூடிய இந்நதி சதுப்பு நிலையோடு கூடிய கூலே என்ற சின்ன ஏரியை உண்டாக்குகிறது. இந்த ஏர் கடல் மட்டத்திலிருந்து 7 அடி உயரத்திலிருக்கிறது. இதிலிருந்து கலிலேயாக் கடலுக்கு நீர் வேகமாக வடிகிறது. இந்தப் பள்ளத்தாக்கில் ஒன்பது மைல் நீளத்திற்குள் 680 அடி சரிகிறது. கலிலேயாக் கடலாகிய திபேரியா ஏரி கடல் மட்டத்திலிருந்து 675 அடி கீழே உள்ளது. அதன் அதிக ஆழம் 165 அடியிலிருந்து 230 அடி வரைக்கும் இருக்கும். மேலும், அது 13 மைல் நீளமும் 8 மைல் அகலமும் உடையது; 1000 அடி உயரமும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. அது கந்தகப் பாறைகளால் மூடப்பட்டிருக்கும். இவ்வேரியின் தெற்கிலிருந்து ஒரு நீர்த்தேக்கம் தொடங்குகிறது. இது திபேரியா ஏரிக்கரையில் 3 மைல் அகலமும், எரிக்கோ அருகில் 12 மைல் அகலமும் கொண்டது. இதனூடே யோர்தான் நதி வளைந்து வளைந்து சாக்கடலை நோக்கிப் பாய்கிறது. நேராகச் சென்றால் 65 மைல் தூரத்திற்குள் 585 அடி சரிந்து யோர்தான் சாக்கடலில் விழுகிறது. இக்கடல் 48 மைல் நீளமும் 10 மைல் அகலமும் கொண்டது. அதன்நீர் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 1300 அடி கீழே உள்ளது. 1200 அடி ஆழமுடையது. இது தான் உலகிலே தாழ்மட்ட நீர்த்தேக்கமாகும். இதுதான் உலகத் தரையிலுள்ள மிக ஆழமான பள்ளமாகும்.

சாக்கடலிலிருந்து அக்காப வளைகுடாவுக்குச் செல்லும் ஏல்-அரபா ஆறு யோர்தான் நதியின் தொடர்ச்சியாகும் என்று கருதப்படுவதுண்டு.

**7. யோர்தானுக்கு அப்பால்:** பாலஸ்தீனத்தின் நான்காவது நிரைகோட்டுப் பகுதி யோர்தான் பள்ளத்தாக்குக்குக் கிழக்கில் உள்ள பகுதியாகும். இஃது ஒரு பீடபூமியாகும். இதன் பெயர் யோலான் என்பதாகும். இது தென்சீரியாவின் பெரிய எரிமலைப்பகுதியின் ஓரமாகும்; கந்தகப் படிவங்களால் மூடப்பட்டது. இப்பீட பூமி கடல் மட்டத்திலிருந்து 2000 அடியிலிருந்து 3000 அடிவரை உயரமுள்ளது. திபேரியா ஏரியில் வடியும் பெரும் வெள்ளத்தால் ஏற்பட்ட பள்ளங்களும், எரிமலை வெடிப்பால் ஏற்பட்ட முகடுகளும் இதில் உண்டு. இப்பீடபூமி தெற்கில் சரிகிறது; யோர்தானுக்கு அருகில் செழிப்புள்ளதாய், உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் உள்ளது; கிழக்கில் போகப்போக வறட்சி மிகுந்து, பாலையாகிறது. இப்பீடபூமியின் பலபகுதிகள் ஒரே சீராக அமைந்து இருப்பதால், இஃது ஓர் இயற்கையான நெடுஞ்சாலையாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கேற்றவாறு "அரச பெரும் நெடுஞ்சாலை" என்றழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இப்பீடபூமி வடக்கிலிருந்து தெற்காக யார்முக்கு, யாபோக்கு, அர்னோன், செரேது ஆகிய நான்கு ஆறுகளால் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதிகளின் பழம் பெயர்கள் பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு, ஏதோம் ஆகும்.

**8. தட்ப வெப்பநிலை:** இது பாலஸ்தீனத்தில் ஒரே சீரானதன்று. பாலஸ்தீனம் $30^{0}$- $33.5^{\circ}C$ நிலக்கோடுகளுக்கிடையில் அமைந்திருப்பதால், ஏறக்குறைய வெப்ப மண்டலத்தைச் சேர்ந்ததாகும். இடத்தின் உயரத்திற்கேற்ப தட்பவெப்ப நிலை மாறும். மலைப்பகுதியில் சுகமானநாள், கடற்கரைச் சமவெளியில் வெப்பமிக்கதாயிருக்கும். அதேபோது யோர்தான் பள்ளத்தாக்கில் பொறுக்கமுடியாத அளவில் வெப்பம் மிகுந்திருக்கலாம். மத்தியதரைக் கடலிலிருந்து அடிக்கும் மேற்கத்திய காற்று கடற்கரையையும் மலைப்பகுதியையும் பிற்பகலில் குளிரச்செய்யும், ஆனால், வெப்பம் மிக்க யோர்தான் பள்ளத்தாக்கில் ஒரு பாதிப்பும் ஏற்படாது.

**9. பருவ காலங்கள்:** நவம்பரிலிருந்து ஏப்ரல் வரை மழை பெய்யும் மாரிக்காலம் ஆகும். மேயிலிருந்து அக்டோபர் வரையுள்ள மற்ற

மாதங்கள் வறட்சியான கோடை காலமாகும். ஆகஸ்டு மிக வெப்பமான மாதமாகும். ஜனவரி குளிர் மிக்கதாகும். சூனிலிருந்து செப்டம்பர் வரையுள்ள காலத்தில் மழையே இராது. முன்மாரி என்றழைக்கப்படும் முதல் மழை அக்டோபரில் பெய்யும். திசம்பர்-மார்ச்சு மாதங்களுக்கிடையில் கனமாகப் பருவமழை பெய்யும். பின்மாரி என்ற பெயருடைய கடைசி மழை ஏப்ரல் முடிவிலும், மே தொடக்கத்திலும் பெய்யும் (உப 11:14; எரே 5:24; யோவே 2:23). பாஸ்கு விழாவுக்கும், ஐம்பதாம் நாள் விழாவுக்கும் இடையில் வரும் இளவேனிற்கால அறுவடை அவ்வாண்டில் பெய்த மழையைப் பொறுத்ததாகும். மழை பெய்யாததாலும், சிறிதளவே பெய்வதானாலும் பஞ்சம் ஏற்படுவது அரிதன்று. மலைப்பகுதியில் பனிமழை பெய்தல் அபூர்வமன்று. அண்மையில் எருசலேமிலும் பெத்லகேமிலும் பனிமழை பெய்து தரையை மறைத்துள்ளது. காலையில் பனி பெய்தல் பாலஸ்தீனத்தில் அடிக்கடி நடப்பதொன்றாகும். மக்கள் இதைப் பெரிதும் விரும்பினர் (உப 33:28; சங் 132). வறட்சியான கோடையிலும் பனி பெய்வதால் தரை மழை பெய்தபின் இருப்பதுபோல் ஈரமாய் இருக்கக்கூடும்.

**10. நீர் நிலைமை:** தரையின் மேலுள்ள சுண்ணாம்புக் கல்லும், கடற்கரை மணற்கற்களும், ஒரு நீர்த்தேக்கத்தின் களிமண்ணும் நீரால் ஊடுருவிச் செல்லக்கூடியவை. இவை மழை நீரை விரைவில் உறிஞ்சித் தரையின் கீழ் உள்ள கால்வாய்களை நிரப்பும். ஆனால், நீரை வெளியேற்ற பெரும்பாலும் வடிகால் இருப்பதில்லை. மலைப்பிரிவு களிடையேயுள்ள பள்ளத்தாக்குகள் அனேகமாக வறட்சியாகவே இருக்கும். பெருமழை பெய்யும்போது தற்காலிக நீரோட்டம் ஏற்படும். கலிலேயாவில் மேற்கே பாயும் நான்கு ஆறுகள் உள்ளன. அவற்றில் அக்கோவும், கிசோனும் சிறப்பானவை. இரண்டும் 6 மைல் நீண்ட நிலையான ஓட்டமுடையவை. கர்மேல் மலைக்குத் தெற்கே உள்ள கடற்கரையில் 10 சிறு ஆறுகள் உள்ளன. இவை பெரும்பாலும் தரையில் அடுத்தடுத்து இருந்த நீர்த்தேக்கங்களின் வடிகால்கள் ஆகும். கிழக்கிலிருந்து பல கிளையாறுகள் யோர்தானில் சேர்கின்றன. இவற்றில் யார்முக்கும், யாபோக்கும் சிறப்பானவை. சாக்கடலில் விழும் ஆறுகளில் சிறப்பானது அர்னோன் என்ற ஆறாகும். சாக்கடல் தனது நீருக்கு யோர்தானைச் சார்ந்துள்ளது.

**11. நாட்டின் செழிப்பு:** கோதுமை, வாற்கோதுமை, கொடிமுந்திரி, அத்தி, ஒலிவா, மாதுளை, தேன் ஆகியவை பாலஸ்தீனத்தில் மிகுதியாகக் கிடைப்பதாகக் கூறப்படுகிறது (உப 8:8). மற்றக் கனிகளும், காய்வகைகளும் விளைந்தன என்பது உறுதி. ஆனால், அவைபற்றி ஒன்றும் கூறப்படவில்லை. உழவுத் தொழிலுக்குரிய பரப்புவரம்புக்கு உட்பட்டதே. அஃது அக்கோ, எசுதிரலோன், சாரோன், பெலிஸ்தியா ஆகிய சமவெளிகளும் மலைப்பகுதியில் ஆங்காங்கே காணப்படும் சில பகுதிகளுமாகும். இந்நாடு "தேனும் பாலும் பொழியும் நாடாக" விவிலியத்தில் கூறப்படுகிறது. இதற்கு விவிலிய மொழியில் உண்ணவும் குடிக்கவும் அபரிமிதமாகப் பொருட்களைக் கொடுக்கும் நிலம் என்று பொருள் கொடுக்கலாம். இப்படி விவரிக்கப்பட்டாலும் சுகமான வாழ்வுக்குப் போதிய பொருட்களை விளைவிக்க, குடியானவன் கடினமாக உழைத்தால்தான் நிலம் செழிப்பாக இருக்கும். ஆனால், இதுவும் எளிதாகக் கைகூடுவதன்று. கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயேலர் நாடோடிகளாகத் திரிந்த பகுதிகளான சீனாய்த் தீபகற்பம், நெகேபு ஆகிய நாடுகளோடு ஒப்பிடும்போது, பாலஸ்தீனம் ஓர் இன்பவனம்தான்.

**12. நாட்டு மக்கள்:** பாலஸ்தீனத்தில் இஸ்ராயேலர் குடியேறுமுன் அங்கு வாழ்ந்த மக்களை விவிலியம் பொதுவாக எமோரியர்கள் அல்லது கானானியர்கள் என்றழைக்கிறது. சில இடங்களில் மலைப்பகுதியில் வாழ்ந்தோரை எமோரியர்கள் என்றும், சமவெளியில் வாழ்ந்தோரைக் கானானியர்கள் என்றும்

அழைக்கிறது (எண் 13:29; உப 1:7). ஆனால், அடிக்கடி ஒரு பொருட் பன்மொழியாக இரண்டும் பயன்பட்டன. இவர்கள் பெரும்பாலும் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். இஸ்ராயேல் பயன்படுத்திய மொழியிலிருந்து சிறிதே வேறுபட்ட மொழியைப் பயன்படுத்தினர்.

கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இவர்களது கலாச்சாரம் நமது மனதைக் கவரக்கூடியதாக இருந்திருக்கிறது. பாதி நாடோடி வாழ்க்கையையுடைய எபிரேயருடைய கலாச்சாரத்தைவிட உயர்ந்ததாக இருந்திருக்கிறது. நவீனகால அளவுகோல்படி இவர்களது நகரங்கள் சிறியவை; ஐந்து அல்லது பத்து ஏக்கர் பரப்புடையவை; ஆனாலும், பலமான அரண்களையும் நல்ல வடிகால் வசதியையும் உடையன. எருசலேம், மெகிதோ போன்ற நகரங்களில் முற்றுகையின்போது தண்ணீர் கொண்டுவருவதற்காக, நுணுக்க விரிவுடைய சுரங்க வழிகள் அமைக்கப்பட்டிருந்தன. குடிசைகளால் சூழப்பட்ட அழகிய பெரிய வீடுகள் இருந்த சுவடுகள், செல்வர்கள், ஏழைகள் என்று தெளிவாகப் பாகுபடுத்தப்பட்ட சமுதாயம் இருந்திருக்கக்கூடும் என்று சுட்டுகிறது. இடையிட்ட நடுத்தர வகுப்பினர் இருந்ததற்கு அடையாளம் இல்லை.

சிறுசிறு நகரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த அரசியல் அமைப்பு இருந்தது. இதன் தலைவர்கள் தங்களை அரசர்கள் என்று அழைத்துக்கொண்டனர் (யோசு 10:1-5); ஆனால், பெரும்பாலும் பார்வோனுக்குப் பணிந்து இருந்தனர். சாதாரண காலங்களில் அவனுக்குக் கப்பம் கட்டிவந்தனர். இஸ்ராயேலின் நல்லகாலம் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீன நகர அரசர்கள் தங்களிடையே ஒருமித்த அமைப்பை இழந்து உதவியற்று இருந்தனர். எகிப்தியரின் வெளிநாட்டுக் கொள்கையே இதற்குக் காரணம். எகிப்தியர் வேண்டுமென்றே இந்நகர அரசர்களை ஒற்றுமையின்றி இருக்கச் செய்தனர். மேலும், தங்கள் உள்நாட்டுக் காரியங்களிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.

கானானில் இஸ்ராயேலர் நுழைந்துபோது அவர்களை எதிர்கொண்ட நல்லமைப்புடைய அரசுகள் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ஏதோமியரும் மோவாபியரும்தான். விவேகத்தோடு இவர்களை இஸ்ராயேலர் தவிர்த்தனர்.

**பாலமோன் (BALAMON)**

தோத்தானுக்கு அருகில் உள்ள ஒரு நகர். இதுவும் பேல்மாயினும் ஒன்றாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**பாலா (BALAH** - முட்டாள், பழைய, பாழடைந்த)

திருவுளச் சீட்டின்படி சிமியோன் கோத்திரத்திற்கும், அதன் வழிவந்தோருக்கும் கிடைத்த நகர்களில் ஒன்று பாலா. இது யூதாவின் நெகேபில் இருந்தது (யோசு 19:3). 1 நாள் 4:29-இல் வரும் பில்காவும், யோசு 15:29-இல் வரும் பாகலாவும் இதே இடத்தைச் சுட்டலாம். இதன் சரியான இடம் இன்னும் அறியப்படவில்லை. இருப்பினும் பெயேர்சபாவுக்குத் தெற்கிலும், கிழக்கிலும் காணப்படும் பகுதியாக இருக்கலாம் எனச் சூழ்நிலை சுட்டுகிறது.

**பாலாக்கு (BALAK** - அழிப்பவன், பாழ்படுத்துகிறவன்)

மோவாபின் அரசன் சிப்போரின் மகன். எமோரியர்களை இஸ்ராயேலர் தோற்கடித்த போது வெகுவாக அச்சமுற்றுப் பாலாக்கு அரசன் குறிகாரன் பிலயாமை அழைத்து அவர்களைச் சபிக்கத் தூண்டினான் (எண் 22:24). பிலயாம் இஸ்ராயேலரைச் சபிப்பதற்குப் பதிலாக ஆசீர் அளித்ததும், அதைத் தொடர்ந்து அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகளும் ஆண்டவரின் காக்கும் வல்லமையை வெளிப்படுத்தியது. தனது முயற்சி தோல்வியடைந்தபின், பிலயாமின் ஆலோசனையை ஏற்று, பாலாக்கு இஸ்ராயேலரைச் சிலைவழிபாட்டிற்கும் பரத்தமைத் தொழிலுக்கும் கவர்ச்சி செய்தான் (யோசு 24:9-10; மீக் 6:5; காண்க. 11:25;

திருவெளி 2:14).

**பாலால் (PALAL – இறைவன் தீர்ப்பிட்டார், நடுவர்)**

உசீயின் மகனான பாலால், எருசலேம் மதிலை நெகேமியா பழுது பார்த்தபொழுது, அவருக்கு உதவியவர்களுள் ஒருவராவார் (நெகே 3:25).

**பாலினப்பண்பு (SEXUALITY)**

பாலினப்பண்பு என்னும் இச்சொல் விவிலியத்தில் காணப்படாவிடினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவுமுறையின் மீது ஒளியை வீசுவதற்கென, இருபாலுக்கும் இடையிலான வேறுபாடு அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் குறிப்பிடத்தக்க பங்கிற்கு மதிப்பளிக்கும் வேளையில், அவற்றினுடைய கால வரிசையின்படி ஆய்வு செய்யாமை மேலாகத் தெரிகிறது. இத்தலைப்பு பற்றி பழைய ஏற்பாட்டில் ஏராளமான கருத்துகள் உள்ளன. ஆனால், இயேசு கிறிஸ்துவின் வருகையுடன்தான் இவை தனது முழுப்பொருளை அடைகின்றன.

I. பாலினப்பண்பும் மனித நிலையும்: "ஆணும் பெண்ணுமாக அவர் அவர்களைப் படைத்தார்" என்று ஆதியாகமம் கூறுகின்ற வேளையில் (ஆதி 1:27), "ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" எனப் பவுல் கூறுகிறார் (கலா 3:28). இவ்விரு கூற்றுகளுக்கிடையில் ஒரு குறிப்பிட்ட உலைவு இருப்பது தெளிவாக இருந்தாலும் அவை ஒன்றையொன்று முரண்படுத்தாமல், ஒன்றின்மேல் ஒன்று ஒளிவீசி, ஒத்த அளவில் ஒன்றையொன்று வரையறுக்கின்றன.

1. "ஆணும் பெண்ணுமாக அவர் அவர்களைப் படைத்தார்" (ஆதி 1:27). பழைய ஏற்பாட்டில் பால்களுக்கு இடையிலான வேறுபாடானது முதலில் மனிதன் "இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டான்" என்ற உறுதியான கூற்றோடு இணைக்கப்படுகிறது. இப்பகுதியின் உடனடிப் பின்னணியான குருக்கள் பாரம்பரிய ஆசிரியரின் செயலானது, வாழ்வளித்து உலகைக் கட்டுப்படுத்துகின்ற இறைவனுடைய ஆக்க வளமுடன் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான பாலின வேறுபாட்டை இணைப்பதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது (ஆதி 1:28). யாவே பாரம்பரிய ஆசிரியரின் கருத்தானது அதிக முழுமையானதாக உள்ளது. அவரது நோக்கில் பாலினங்களுக்கிடையிலான வேறுபாட்டினுடைய அடிப்படையானது, சமூகத்தில் வாழ்வதற்கு மனிதனுக்கான இன்றியமையாமையாகும். "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவோம்" (ஆதி 2:18). இந்த ஆசிரியரால் மேற்போக்காக விடப்பட்டு விடாத வளமையுடைமையோடு பாலினங்களின் மாற்றுத் தன்மையினுடைய உறவு பற்றிய கருத்தானது சேர்க்கப்படுகிறது (3:20). இந்த இரு செயல் நோக்கங்களின் மூலமாக, தனிநபர் சமூகப் பின்னணியில் நிறுத்தப்படுகிறார். பொதுவாக இன்பவனச் சூழலில், இரு உயிர்களின் சந்திப்பினுடைய காட்சியானது எளிமையினுடையதாக உள்ளது. "இருவரும் ஆடையின்றி இருந்தனர்; ஆனால், அவர்கள் வெட்கப்படவில்லை" (2:25). இறைவனிடமிருந்தான பிரிவைக் கொண்டுள்ள பாவமானது, தொலைவு மற்றும் பயத்தினுடைய உணர்வை இக்காட்சிக்குள் புகுத்துகிறது. இப்போதுமுதல் பாலின உணர்வானது குழப்பமானதாக உள்ளது. அடிப்படையில் நல்லது என்ற நிலையினின்று இது விலகா விட்டாலும், பிரிக்கும் சக்தியாகிய பாவத்தினுடைய ஆதிக்கத்தின் கீழ் அது விழுந்துவிட்டது. மற்றவருடைய குறைக்க முடியாத வேறுபாட்டுடன் மகிழ்ச்சியின் இடத்தில், சுயநல உடைமையின் ஆசையைப் பங்காளர்கள் அனுபவிக்கின்றனர் (3:16). இயல்பாகவே புறமுகமாகத் திரும்பும் பாலினத் தூண்டுதலானது அகச்சிந்தனை இயக்கத்தினால் குலைக்கப்படுகிறது. மற்றவரை நோக்கித் திரும்புவதற்குப் பதிலாக, தன்னை நோக்கியே அது திரும்புகிறது.

விவிலியத்தைப் பொறுத்தவரையில், திருமணத்திலான பாலின உறவினுடைய நன்மைத்தனமும் மதிப்பும் எப்போதுமே சந்தேகத்திற்கு உட்பட்டதில்லை. உன்னத சங்கீதத்தில் மட்டுமின்றி (உ.ச. 4:1;5:9; 6:4) பெரும்பாலான மற்ற நூல்களிலும், திருமணம் பற்றிய தன்மை மற்றும் வளமை ஆகியவற்றினுடைய இவ்விரு கூறுகளும் காணப்படுகின்றன. "உன் இளமையின் மனைவியோடு மகிழ்ந்திரு" (பழ 5:18; காண்க. எசே 24:15; சீரா 26:16-18; திருவுரை 9:9). ஆண் மற்றும் பெண்ணிடமிருந்து இறைவனால் உருவாக்கப்பட்ட தனித்துவமிக்க படைப்பினுடைய புறப்பொருள் என்ன? "இறைவன் தந்த சந்ததி" (மலா 2:14-16). ஆதியாகமத்தின் அதே சொற்களை எதிரொலிப்பவராய் இயேசு, இவ்வாறு உருவாக்கப்பட்ட தம்பதியர்களைப் பிரிக்க முடியாததை வலியுறுத்துகிறார். "இனி அவர்கள் இருவர் அல்லர், ஓரே உடல்" (மத் 19:4-6). இறுதியாக, பாலின வாழ்விற்கு எதிரான துறவி என்று தவறாக விவரிக்கப்படும் பவுல், இக்காலத்த வருக்கும் ஏற்றதாக உள்ள நெறிமுறைகளைத் தம்பதிகளுக்கு அளிக்கிறார் (1 கொரி 7:1-6). கொரிந்தியர்கள் கொண்டிருந்த தற்கட்டுப்பாட்டிற்கான கற்பனையான ஆசைகளுக்கு முரண்பட்ட நிலையில், திருமணத்தினுடைய பொதுவான வழியினையும், பாலின உறவின் கடமைகளையும் அவர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். "ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய கடமையை மறுக்காதீர்கள். செபத்தில் ஈடுபடுவதற்காகச் சிறிது காலத்திற்கு அக்கடமையைச் செய்யாமலிருக்கலாம். ஆனால், அதற்கு இருவரும் உடன்பட வேண்டும். அதன்பின் முன்போல் கூடிவாழுங்கள்" (7:5; காண்க. 1 திமொ 4:3; 5:14). படைப்பிலிருந்து வெளிப்படும் சூழ்நிலை இவ்வாறு காக்கப்பட்டு, உயர்த்தவும்படுகிறது. கணவன் மற்றும் மனைவியினுடைய சமூகமானது செபத்தினுடைய சலுகைக்குரிய எல்லைப் பரப்பிற்குள் நுழைகிறது.

2. "ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இனி எந்த வேறுபாடு இல்லை: ஆனால், கிறிஸ்து இயேசுவிற்குள் நீங்கள் அனைவரும் ஒன்றாக உள்ளீர்கள்" (கலா 3:28). இக்கூற்றானது முன் குறிப்பிடப்பட்ட எக்கருத்தையும் மறுப்பதில்லை. ஆனால், இயேசுவின் வருகையானது ஆண் மற்றும் பெண்ணுக்கு உரிய சூழ்நிலையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. பாலின நிலையின் முழுப் பரிமாணமும் தோன்றுவதற்கு இஃது அனுமதிக்கிறது.

இக்கருத்து பற்றிய கோட்பாட்டை இயேசு செயல்படுத்தவில்லை. ஆனால், தனக்கென ஒரு சிறப்பான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டு, மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். உண்மையில், திருமணம் புரிந்தவர்களாக எதிர்பார்க்கப்பட்ட யூத போதகர்களைப் போன்று இயேசு வாழவில்லை. எஸ்ஸேனியரிடையில் பின்பற்றப்பட்டு வந்த கற்பு நிலையானது, இத்தகைய நிலையில் எவ்வித வியப்பையும், அவதூறையும் தவிர்க்க உதவியது. ஆனால், இயேசுவைப் பொறுத்தவரையில் இது பெண்களுக்கு எதிரான துறவு நிலை அன்று. இதற்குப் பின்னணியில் உள்ள காரணங்கள், பின்வரும் மறைமுகமான நம்பிக்கையாகிய கருத்திலின்று புரிந்து கொள்ளப்படலாம்: "விண்ணரசை முன்னிட்டுத் தம்மைத்தாமே அண்ணகராக்கிக் கொண்டவரும் உளர்" (மத் 19:12). இச்சொற்கள், இதனை ஏற்றுக் கொள்ளக்கூடியவருக்கான அழைப்பாகும். லூக்காவிலும் இதற்கிணையான திடீர் ஒப்புமை உள்ளது. "இயேசுவின் சீடனாக இருப்பதற்கு ஒருவன் தனது மனைவியையே துறக்க வேண்டும்" (லூக் 14:26). வாழ்வின் இத்தகைய வழியானது, இயேசுவின் வருடையுடன் வெளிப்படுத்தப்படும் ஒரு புதிய நடைமுறை நிலையில் மட்டுமே புரிந்து கொள்ளப்படும். அவரைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவன் நுழையக்கூடிய இறைவனுடைய அரசின் வருகையே அது. தன்னியலான தூய்மைக்கு ஒரு பொருள் அளிக்கப்பட்டுள்ளதன் காரணமாக,

இப்புதிய அமைப்பில் நுழைவதானது, படைப்பின் கட்டளைக்கு அப்பால் செல்வதற்கான அழைப்பாகும்.

பவுல் திருமணம் செய்தவராக இருக்கலாம். ஆனால், இயேசுவினுடைய பாதச்சுவடுகளில் கன்னிமையைப் பரிந்து பேசுபவராக, தன்னையே அமைத்துக் கொள்கிறார். வாழ்வினுடைய இந்தப் புதிய வழிக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அவர் கேட்டது போன்று சிறப்பு அழைப்பினுடைய அருங்கொடை (1 கொரி 7:7); மற்றது காலத்தின் இறுதியால் உருவாக்கப்பட்டு, இயேசுவில் தொடங்கப்பட்ட சூழ்நிலை. உண்மையில் இறுதிக்காலங்களில் வாழ்வதனுடைய விளைவானது, மனிதரிடையே இரு குழுக்களிடையில் வேறுபாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். மிகப்பழமையான ஆண் / பெண் முரண்பாட்டுடன், மணமானவர் / கன்னிமை என்னும் முரண்பாடும் சேர்க்கப்பட வேண்டும். விண்ணக அரசினுடைய முழுமையினை ஒத்திசைவான வழியில் அமைத்து வெளிப்படுத்த, ஆண் பெண் பற்றிய இருவகைகள் தேவையாக இருந்தன. எனவே, பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களை மட்டுமே கருத்தில் கொண்டு, ஆணும் பெண்ணும் தங்களுடைய உண்மையான முழுமையினைப் பாலினத் துணைவருடனான திறனுள்ள ஒன்றிப்பில் மட்டுமே அடைய முடியும் என்று கூறுவது தவறாகும். உண்மையில் இயேசு கிறிஸ்து பிரதிபலிக்கின்ற முழு மனித சமூகத்தில், பாலினச் சேர்க்கையினின்று விலகியுள்ள அதே நேரத்தில், மற்றவருடன் ஒன்றுபடுவதற்கு இயலக்கூடியதே.

**II. பாலினப்பண்பு, புனிதம் மற்றும் தூய்மையின் நிலை:**

1. இஸ்ராயேலைச் சுற்றியுள்ள மக்களுடைய சமயங்கள், பாலினப்பண்பினைத் தங்களின் தெய்வங்களுடைய உலகின் ஒரு பகுதியாகவும் ஆக்கி விட்டன. தாய்த் தெய்வங்கள் மற்றும் தந்தைத் தெய்வங்கள், தங்களிடையில் அல்லது மனித உயிர்களுடன் மணம் புரிகின்ற காதல் தெய்வங்கள், மற்றும் இறைமையைக் குறிப்பிடுகின்ற புனித வேசிகள் ஆகியோரின் ஒன்றுபட்ட நிலையினை அங்கு நாம் காண்கிறோம். விண்ணகம் மற்றும் மண்ணகத்தின் ஒன்றிப்பினை அடையாளங் காட்டுவதற்கென, தரையில் வீழ்த்தப்பட்ட பணயமாகிய பாகால் மற்றும் அஸ்தார்தி ஆகியவற்றுடன் இஸ்ராயேல் நன்கு அறிமுகமாயிருந்தது. இப்போலியான தெய்வங்களுடனும் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஆண்பாலின் இனப்பெருக்க ஆற்றலின் அடையாளமாகிய பொன் கன்றுக்குட்டியையும் அவர்கள் செய்தனர். உப 23:18 தடை செய்திருந்தாலும் இந்தப் புனித வேசிகளின் வாழ்க்கை தொடர்ந்து இருந்ததற்கான ஆதாரம் இருந்தாலும், இந்த அன்னிய சமயங்களுக்கெதிரான போராட்டமானது, ஆண்டவருக்கான வெற்றியுடன் முடிவடைந்தது (1 அர 14:24; 15:12; 22:47; 2 அர 23:7; ஓசே 4:4; மீக் 1:7).

இந்தப் புறவின நடைமுறைகளின் சுத்திகரிப்பிற்குப் பின்னும், பாலினத்திற்கும் புனிதத்திற்கும் இடையே இஸ்ராயேல் தொடர்ந்து ஒரு தொடர்பைக் கொண்டிருந்தது. ஆனால், இந்தப் புனிதச்சடங்கிற்குப் பின்னிருந்த காரணங்கள் மாறிவிட்டன. அஃது இனியும் தெய்வங்களுடைய பாலினப்பண்பை ஒத்துச் செயல்படுவதன்று. மாறாக, இறைவனுடைய படைப்பு வல்லமையில் பங்கு பெறுவதன் மூலம், இறைவனுடைய வார்த்தையால் தூண்டப்பட்ட செயலைச் செயல்படுத்துவதாகும். குழந்தையைப் பெற்ற பின்னர், “கடவுள் அருளால் ஒருவனை நான் பெற்றுள்ளேன்” என்று ஏவாள் அறிவித்தாள் (ஆதி 4:1). புனிதச்சடங்கினுடைய இந்தப் புதிய அமைப்பின் விளைவுகளில் ஒன்றானது, இஸ்ராயேலுக்கும் அதனுடைய இறைவனுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்தப் பயன்படுகின்ற பாலின அடையாளவியலில் (தாய்மைக்குரிய அல்லது மண வாழ்விற்குரிய)

காணப்படுகிறது. யாவேயுடனான உடன்படிக்கையினைக் குறிப்பிடுவதற்கான விருத்த சேதனத்தின் வழக்கமானது இதனுடன் சேர்க்கப்படலாம் (ஆதி 17:9-14; லேவி 12:3).

பாலினப் பண்பைப் புனிதப்படுத்தும் சடங்கினுடைய மற்றொரு கூறு பண்டைய மேற்காசியச் சடங்குகளினின்று இஸ்ராயேலால் பெறப்பட்ட தூய்மை மற்றும் தூய்மையின்மையினுடைய சடங்குகளைப் பற்றியதாக உள்ளது. குழந்தை பெற்றவுடனே தாய் தீட்டானவள் என்று அறிவிக்கப்பட்டு, புனித இடத்தை அணுக முடியாதவளாகிறாள் (லேவி 12:6). அவளுடைய மாதவிலக்குக் காலத்திலும் (15:19-30), இரவில் விந்து ஒழுகும்போதும் அதே நிலை உள்ளது (15:1-17; உப 23:11). பாலின உறவுகள் மக்களை வழிபாட்டில் சேர்வதற்குத் தகுதியற்றவையாக்கின (லேவி 15:18; யாத் 19:15; 1 சாமு 21:5-6; 2 சாமு 11:11). குருக்களுக்கு இவ்வொழுக்கங்கள் சிறப்புமிக்க முக்கியத்துவமுடையனவாக இருந்தன (யாத் 20:26; 28:42; உப 23:2). இந்த ஒழுக்கங்கள் பாலினப்பண்பினைப் புறக்கணிப்பதன் விளைவல்ல; ஆனால், அதனுடைய சடங்கு அல்லது இந்நிலையிலான புனிதத்தினுடைய தெளிவின்மை மற்றும் சடங்குத் தூய்மையின் தெளிவின்மை ஆகியவற்றின் விளைவாகும். இறுதியாக, இறைவனுடைய படைப்பு வல்லமையில் இயலளவில் பங்கு பெறுகின்ற செயலுக்கும், இறைத் தலைமையுடனான உறவினை அவிநயப்படுத்திக் காட்டுகின்ற கலாச்சாரச் செயலுக்கும் இடையே ஒரு முரண்பாடு இருப்பதில்லை?

2. கிறிஸ்தவ விசுவாசத்தின் வருகையுடன் இந்தத் தீட்டுகள் அனைத்தும் மறைந்து விட்டன; அல்லது புனிதச்சடங்கு பற்றிய பண்டைய கருத்தினின்று, புனிதத்தை நோக்குவதில் புதிய வழிக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டது. பவுலின் சில கருத்துகளுக்கான விளக்கம் இதுவே: "அவிசுவாசியான கணவன் தன் மனைவியால் புனித மடைகிறான்... இல்லையெனில் உங்கள் பிள்ளைகள் மாசுபட்டவர்களாய் இருப்பார்கள். இப்பொழுதோ புனிதமாய் இருக்கிறார்கள்" (1 கொரி 7:14). இந்தப் புறப்பொருள் நிலையின் காரணமானது இனியும் பாலின உறவின் புனித குணமாக இல்லாமல், புனித மக்களின் உறுப்பினர் தன்மையாகவும், முடிவாகத் தூய ஆவியின் பிரசன்னமாகவும் உள்ளது. கிறிஸ்தவ வாழ்வின் குறியாக உள்ள பாலினத் தூய்மையின் தேவைகளைப் பற்றிய பண்டைய ஞான உரையைப் பின்பற்றி, பரிந்துரைகளைச் செய்தபோது, பவுல் ஆவியின் இக்கொடையினை மனதில் கொண்டிருக்கக்கூடும். "நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்; அதாவது, கெட்ட நடத்தையை விட்டுவிட வேண்டும். கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சைகளுக்கு இடங்கொடுப்பதுபோல் நீங்கள் செய்யாமல், உங்களுள் ஒவ்வொருவரும் தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி, பரிசுத்தமாய்க் காப்பாற்ற அறிந்திருக்க வேண்டும்" (1 தெச 4:3-5). இனிமேல் உடலானது ஆவியின் கொடையால் புனிதப் படுத்தப்படுகிறது. "உடல் காமத்திற்கென்று இல்லை; ஆண்டவருக்கென்று இருக்கிறது" (1 கொரி 6:13).

பாலின அடையாளவியலானது இப்போது கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் பயன்படுகிறது. "கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்ததுபோல கணவர்கள் தங்கள் மனைவியருக்கு அன்பு செய்ய வேண்டும்" (எபே 5:25). "கணவன் தன் மனைவியோடு கூடி இருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்" என்னும் படைத்தவரின் கட்டளையை நினைவு கூர்ந்தவராய், "இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்" என்று பவுல் மேலும் கூறுகிறார் (எபே 5:31-32). அதே அடையாளவியலானது விசுவாசிகளை இறைவனுடன் ஒன்றுபடுத்துகின்ற அன்பின் உறவினை அறிவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. விசுவாசிகள் கன்னித்தன்மையுடன் இருப்பதால்

செம்மறியைப் பின்தொடர்கின்ற வேளையில் (திருவெளி 14:4), செந்நிற விலங்கின் மேல் பயணம் செய்வது வேசியே (திருவெளி 17).

**III. செயல்முறையும் நோக்கமும்:**

1. **பழைய ஏற்பாடு:** பழைய ஏற்பாட்டில் எண்ணற்ற விதிகளின் கருப்பொருளாகப் பாலின ஒழுக்கம் உள்ளது. இது, பாலினப் பண்பைக் கண்டிக்கும் ஆசை அல்லது இந்தக் குறிப்பிட்ட நிலைக்கு அளிக்கப்படும் அதிகப்படியான ஒழுக்க கவனம் ஆகியவற்றினுடைய விளைவன்று; மாறாக, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட புனிதச்சடங்கின் விளைவு. இதற்கு அப்பாற்பட்டு, சமயப்போர்வையின் கீழ் தனது சிற்றின்ப உணர்வை மறைக்கின்ற தவறான உலகிற்கு எதிரான தடுப்பு எதிர்ச்சொல் இங்கு உள்ளது. இறுதியாக இறைவனுடைய மக்களின் நலம் பற்றி ஆர்வம் கொண்டதாக இருந்த சட்டத்தினுடைய கற்பிக்கும் பங்கை நாம் மறத்தலாகாது. இத்தகைய விதிகளின் விவரமான அட்டவணையைத் தயாரிப்பதென்பது அயர்ச்சி தரக்கூடும். லேவி 20:10-21-இன் அட்டவணையைத் சற்றுக் காண்போம். மணமாகாத ஆண் பெண் உறவு (காண்க. உப 22:23-29), மாதவிலக்குக் காலத்தில் பெண்ணுடன் பாலின உறவு, விபசாரம் (உப 5:18; 22:22; கவர்தல் பற்றிய யாத் 20:17; மற்றும் பழ 2:16; 6:25; 7:55-57; சீரா 9:9), நெருங்கிய இரத்த உறவினருடன் உடல் உறவு (உப 23:1), ஓரின உடலுறவு (ஆதி 18:20; 19:5), விலங்கோடு புணர்வது (யாத் 22:18) முதலியனவற்றை இது கண்டிக்கிறது. மறுபுறம் தனது இறந்த சகோதரனுக்கென, சந்ததியை விருத்தியடையச் செய்ய மறுத்த ஓனானின் பாவத்தில், ஓனானிசம் என்று நாம் அழைப்பதைக் கண்டிப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை (ஆதி 38:9-10). இதற்கு அப்பாற்பட்டுக் குருக்களுக்கென, சிறப்பு விதிகள் இருந்தன. விலை மகளையோ, கணவனால் தள்ளப்பட்ட வளையோ மணந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப் படவில்லை (லேவி 21:7.13-14). புனித வேசித்தன்மைக்கு அப்பாற்பட்டு, விபசாரத்துடன் இணைந்து வேறு எந்தத் தடையும் இல்லாமலிருப்பதை நாம் இறுதியாக உற்றுக் கவனிக்க வேண்டும் (ஆதி 38:15-23; நீதி 16:1). ஆனால் பழங்கால விவரிப்புகளுடன் ஒப்பிடும்போது, ஞான இலக்கியங்கள் தெளிவான முன்னேற்றம் காட்டுகின்றன. இப்பழக்கத்தால் வரும் அபாயங்கள் பற்றி எச்சரிக்கின்றன (பழ 23:27; சீரா 9:3-4; 19:2).

2. **இயேசு:** முன் குறிப்பிடப்பட்ட சடங்கு விதிகளைப்பற்றி இயேசு ஒன்றும் கூறவில்லை. புரிந்த தவறைக் கண்டிப்பதில் அவர் நேரத்தைச் செலவழிக்கவில்லை. சான்றாக, விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் பாவம் (யோவா 8:11), அல்லது தங்களுடைய விசுவாசத்தின் காரணமாக வேசிகள் பரிசேயரைவிட எளிதாக விண்ணரசில் நுழைவர் என்று அவர் குறிப்பிடுதல் முதலிய நேரங்கள் (மத் 21:31-32). ஆயினும், ஆசையிலும் பார்வையிலும் இந்தத் தவறுகளின் வேரில் உள்ள பாவத்தை நோக்கி நேராகச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர் பழைய ஏற்பாட்டு விதிகளை மிகவும் அடிப்படையானவை ஆக்குகிறார் (மத் 5:28; 15:19).

கொரிந்துவின் பெரிய துறைமுகத்தின் சீரழிந்த ஒழுக்கச் சூழ்நிலையில் பவுல் தன்னைக் காணும் வேளையில், இயேசு யூதரிடையே வாழ்ந்தார். எனவே, தீமையின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராக ஒரு கடுமையான நிலையினை அவர் எடுத்தார். "காமுகர், சிலை வழிபாட்டினர், விபசாரர், இயற்கைக்கு மாறான பாவம் செய்வோர், அதற்கு உடன்படுவோர், திருடர், பொருளாசை பிடித்தவர், குடிகாரர், பழி பேசுவோர், கொள்ளைக்காரர் இவர்களுக்குக் கடவுளின் அரசு உரிமையாகாது" (1 கொரி 6:9-10; காண்க. உரோ 1:24-27). விபசாரத்திற்கு எதிராக அவர் தொடர்ந்து எச்சரித்து வந்தார் (1 கொரி 6:13-15; 10:8; 2 கொரி 12:21; கொலோ 3:5). செயல்துறைக் கோட்பாட்டாளர் என்ற நிலையில், தீய ஒழுக்கமுடைய சகோதரருடன் எவ்விதத் தொடர்பையும் அவர்

தடுத்தாலும், இவ்வுலகின் தீய ஒழுக்கமுடைய மக்களுடனான தொடர்பை அவர் தடுக்கவில்லை. இல்லாவிடின், "நீங்கள் இவ்வுலகைவிட்டே வெளியேற வேண்டியிருக்கும்" (1 கொரி 5:10).

இக்கட்டளையை வற்புறுத்துவதன் காரணமென்ன? யூதத் தோற்றமற்ற கிறிஸ்துவர்களை ஊனுடலின் பிழைபாட்டிலிருந்து காப்பதே இக்காரணமாகும். யூத சட்டத்தினுடைய அரணை அதனுடைய துல்லியமான விதிமுறைகளுடன் தனது செயலாற்றலில் பவுல் கொண்டிருக்கவில்லை. ஆனாலும், "எதையும் செய்ய எனக்கு உரிமையுண்டு (1 கொரி 6:12). ஏனெனில், காலத்தின் கலாச்சாரத்தினால் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட, எழுதப்பட்ட சட்டத்தினை ஒழுக்க நிலையானது சார்ந்திருக்க வில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால், இப்போது முதல் உடலுக்கும் ஆண்டவருக்கும் இடையில் நிலவி வந்த உறவின்மீது அஃது இன்னும் நெருக்கமாகச் சார்ந்திருந்தது. உடலானது தூய ஆவியின் ஆலயமாகவும், கிறிஸ்துவின் ஓர் உறுப்பாகவும் உள்ளது! "நான் ஆண்டவரின் உறுப்புகளை எடுத்து வேசியின் உறுப்புகளாகச் செய்யலாமா? ஒரு காலும் செய்யலாகாது. வேசியோடு சேருகிறவன் அவளோடு ஒருடலாகிறான் என நீங்கள் அறியீர்களா?" (1 கொரி 6:15-16). "வலுவற்ற உங்கள் இயல்பைப் பேணுபவர்களாய்த் தீய இச்சைகளுக்கு இடங்கொடாதீர்கள்" (உரோ 13:14; கலா 5:16-19).

இவ்வாறாக, இயேசுவின் வருகையாலும், பவுலின் படிப்பினையினாலும் பாலின உணர்வானது படிப்படியாக, சமயச் சார்புடைய தன்மையினின்று நீக்கப்பட்டது. இந்த இயக்கமானது ஒரு நிபந்தனையின் கீழ் தொடரும், தொடரப்படவேண்டும். மனிதனுடைய உடல் சார்ந்த இயல்பை மாற்றியமைத்து, அதனை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்திருக்கும் இறை உலகுடன் அடிக்கடி தொடர்புபடுத்தும் புனிதத்தன்மையின் பரிமாணத்தைக் காத்தலே, அந்த நிபந்தனை.

**பாலைவனம் (DESERT)**

I. பாலைவனத்தின் சமயப்பொருள் வேறுபட்ட விதத்தில் அதனுடைய அமைப்பிற்கேற்ப புவியியல் இடமென்றும், மீட்புவரலாற்றில் சிறப்புரிமை பெற்ற காலமென்றும் கருதப்படுகிறது. முதல் கருத்தில் பாலைவனமானது இறைவன் ஆசீர்வதிக்காத இடமாகும். மழைக்கு முன்னர் இன்பவனத்தில் இருந்தது போன்று (ஆதி 2:5), அங்கு நீர் அரிதானதாகவும், தாவர வளர்ச்சி குறைந்த அளவினதாகவும், வாழ்தல் இயலாததாகவும் இருந்தது (எசா 6:11). ஓர் இடத்தைப் பாலைவனமாக்குவதென்பது, அதை மூலக்குழப்பத்திற்கு ஒத்ததாகச் செய்வதாகும் (எரே 2:6; 4:20-26). இஸ்ராயேலின் பாவங்கள் இதற்குத் தகுதி பெறுகிறது (எசே 6:14; புல 5:28; மத் 23:38). இந்தத் தரிசான நிலத்தில் தீய ஆவிகளும் (லேவி 16:10; லூக் 8:29; 11:24), பேய்களும் (லேவி 17:7), மற்றக் காட்டு விலங்குகளும் வாழ்கின்றன (எசா 13:21; 14:23; 30:6; 34:11-16; செப் 2:13-14). சுருக்கமாக இந்த ஒளியில் காணும்போது, சாபமானது ஆசிருக்கு முரண்படுத்தப்படுவது போன்று பாலைவனமானது குடியேறிய பகுதிக்கு முரண்படுத்தப்படுகிறது.

இப்போது, ஆதிக்கம் வகிக்கிற விவிலிய நோக்கில், பாலும் தேனும் ஓடுகின்ற நாட்டில் நுழையச் செய்வதற்கென இறைவன் தனது மக்களை இந்தப் "பயங்கர பாலையைக்" கடந்து செல்லுமாறு விரும்புகிறார் (உப 1:19). இந்த நிகழ்ச்சியானது முந்தைய அடையாளத்தை மாற்றியமைக்க உள்ளது. பாலைவனமானது பாழடைந்த இடம் என்னும் தனது பண்பை எப்போதுமே கொண்டிருக்குமாயின், எல்லாவற்றிற்கும் மேலாக, புனித வரலாற்றின் ஒரு கட்டமாகிய "இறை மக்களின் பிறப்பு" என்பதையும் அது நினைவிற்குக் கொண்டு வருகிறது. பின்னர்,

பாலைவனத்தினுடைய விவிலிய அடையாளமானது தனிமையினுடைய மறைபொருளுடனோ, நாகரிகத்தினின்று விலகிச் செல்லுதலின் மறைபொருளுடனோ குழப்பப்படக்கூடாது. பாலைவன மாதிரிக்குத் திரும்புவதை அது நோக்கமாகக் கொள்ளாமல், இஸ்ராயேலின் யாத்திரையை மாதிரியாகக் கொண்ட பாலைவன காலத்தின் வழியாகக் கடந்து செல்லுதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

II. பழைய ஏற்பாடு:

1. **வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் புறப்படுதல்:** எகிப்திலிருந்தான யாத்திரையின் நினைவுகளைப் போலன்றி, பாலைவனத்திலான பயணத்தின் நினைவுகள் பிற்காலத்தில்தான் உயர்வுபடுத்திக் கூறப்பட்டன. அதனுடைய இன்றைய வடிவில் அது மக்களுக்குச் சோதனையின் காலமாகவும் பதிதத்தின் காலமாகவும் மட்டுமின்றி, ஆண்டவருடைய மகிமைக்கான காலமாகவும் இருந்தது என்பதைப் பாரம்பரியங்கள் காட்டுகின்றன. பின்வரும் மூன்று உறுப்புகள் இந்த நினைவுகளை நெறிப்படுத்துகின்றன: இறைவனுடைய திட்டம், மக்களுடைய விசுவாசமற்ற நிலை, இறைவனுடைய வெற்றி.

அ. **இறைவனுடைய திட்டம்:** பாலைவனக் கடத்தலை இரட்டிப்பான நோக்கம் இயக்கியது. இறைவன் தனது மக்களின் வழிகாட்டியாக இருக்க விரும்பியதன் காரணமாக (யாத் 13:21), குறுகியதாக இல்லாவிடினும், இறைவனால் வெளிப்படையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி இதுவே (13:17). இறுதியாக, சீனாய்ப் பாலைவனத்தில்தான் எபிரேயர்கள் இறைவனை வழிபட வேண்டும் (யாத் 3:17-16=5:1-3). அங்கு அவர்கள் சட்டத்தையும், இந்த நாடோடிகளை உண்மையான இறை மக்களாக்குகின்ற உடன்படிக்கையையும் பெறுகின்றனர். குடிக்கணக்கு எடுக்கவும் அவர்களால் முடியும் (எண் 1:1-3). இறைவன் தனது மக்கள் பாலைவனத்தில் தான் உருவெடுக்க வேண்டுமென விரும்புகிறார். ஆயினும், அவர் அவர்களுக்கு ஒரு நாட்டை வாக்களிக்கிறார்; எனவே, பாலை நிலப் பயணத்தை ஒரு சலுகை மிக்க ஆனால், தற்காலிக காலமாக அமைத்தார்.

ஆ. **மக்களுடைய பிரமாணிக்கமற்ற நிலை:** இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழியானது, ஊட்டமும் பாதுகாப்பும் குறைவற்று இருந்த எகிப்தினுடைய வளமான நிலத்துடன் ஒப்பிட எதையுமே தன்னில் கொண்டிருக்கவில்லை. மாறாக, இஸ்ராயேலை வழிநடத்திச் சென்றவரின் மீதான உண்மையான விசுவாசத்தின் வழியாக மட்டுமே அஃது இருந்தது. பயணத்தின் தொடக்க முதலே "பாதுகாப்பில்லை, தண்ணீரில்லை, இறைச்சியில்லை" என இறைவனுடைய ஏற்பாடுகளுக்கு எதிராக எபிரேயர்கள் முணுமுணுக்கின்றனர். பாலைவனத்தில் முதல் மற்றும் இரண்டாம் சந்ததியினரால் எழுப்பப்பட்டது போன்று, நிகழ்ச்சியுரை முழுவதும் இந்தக் குற்றச் சாட்டுகள் காணப்படுகின்றன (யாத் 14:11; 16:2-3; 17:2-3; எண் 14:2-4; 16:13-14; 20:4-5; 21:5). சாதாரண வாழ்வை அவர்கள் வாழ முடியவில்லை. அதை இழந்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டின் மையக்கருத்துத் தெளிவாக உள்ளது. எகிப்தில் வாழ்ந்த காலம் கடினமானதாக இருந்தாலும், இறைவனுடைய கவனத்திற்கு மட்டுமே கையளிக்கப்பட்ட இந்த அசாதாரண வாழ்வைக்காட்டிலும் அதனையே விரும்பினர். எக்கணமும் அச்சுறுத்தும் மரணத்தைவிட அடிமை வாழ்வே மேலானது; மேலும், சுவையற்ற மன்னாவைவிட ரொட்டியும், இறைச்சியுமே உயர்ந்தது. இவ்வாறு பாலைவனமானது, தான் உட்பட்டுள்ள சோதனையை எதிர்கொள்ள இயலாத மனிதனுடைய இதயத்தை வெளிப்படுத்துகிறது.

இ. **இறை இரக்கத்தினுடைய வெற்றி:** விசுவாசமின்மையிலும், நம்பிக்கையற்ற நிலையிலும் கடினப்படுத்தப்பட்டுள்ள அனைவரும் பாலைவனத்தில் அழிந்து போக, இறைவன் அனுமதிக்கிறாரெனில், அவர் தனது

திட்டத்தைக் கைவிட்டு விடுவதில்லை. ஆனால், அவர் தீமையினின்று நன்மையை வெளிக்கொணர்கிறார். முணுமுணுக்கின்ற மக்களுக்கு வியத்தகு உணவையும், நீரையும் அளிக்கிறார். பாவிகளை அவர் தண்டிக்க வேண்டுமெனில், வெண்கலப் பாம்பு போன்ற எதிர்பாராத மீட்பின் சாதனங்களையும் அளிக்கிறார் (எண் 21:9). இறைவன் எப்போதுமே தனது புனிதத்தையும், மகிமையையும் ஒளிவீசச் செய்கிறார் (20:13). உண்மையான மக்கள் யோசுவாவுடன் சேர்ந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையும்போது அவரது மகிமை தெளிவாகும். இறுதி வெற்றியானது மக்களுடைய பிரமாணிக்கமற்ற காலத்தைவிட இறைவனுடைய இரக்கம் நிறைந்த பிரமாணிக்கத்தின் காலத்தையே நமக்குக் காட்டுகிறது. எதிர்பாளர்களை முன்னதாகத் தடுத்துத் தனது திட்டத்தை முடிக்கின்ற இறைவனையே காணச்செய்கிறது.

**2. பின்நோக்கிச் காட்சியில் பாலைவனக் காலம்:** வாக்களிக்கப்பட்ட நாட்டில் நிலைப்படுத்தப்பட்ட மக்கள் வழிபாட்டுக்கும் கொடிய வளமைக்குமுரிய இடமாக அதை மாற்றுவதில் விரைவிலேயே வெற்றி கண்டனர். உடன்படிக்கையை அளித்தவரைவிட உடன்படிக்கையின் கொடைகளையே அவர்கள் பெரிதும் விரும்பினர். பிற்காலத்தில் பாலைவனக் காலமானது இறை மகிமையால் மேம்படுத்தப்பட்டு எடுத்துக்காட்டானதாகக் கருதப்பட்டது.

**அ. மனமாற்றத்திற்கான அழைப்பு:** பாலைவன நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவாக்கி, மீண்டும் நிகழ்காலத்தில் அவற்றைப் பிரசன்னப்படுத்துகிறது உப ஆகமம் (உப 8:2-4.15-18). இஃது இறைவனுடைய தந்தைக்குரிய அக்கறையின் வியப்புக்குரிய காலமாகும். மக்கள் அங்கேயே அழிந்து விடவில்லை. மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, இறைவனுடைய வாயினின்று வருகின்ற ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் என்பதை உணர்ந்து கொள்வதற்காக, இறைவன் அவர்களை அங்கே சோதிக்கிறார். அவ்வாறே, பாலைவனக் காலத்தில் நிலவிய வழிபாட்டின் வீறமைதி சடங்குமுறை வழிபாட்டில் மட்டுமே திருப்தியடையாதிருக்குமாறு இஸ்ராயேலைத் தூண்டுகிறது (ஆமோ 5:25=அ.ப. 7:42). இதற்கு நேர்மாறான நிலையில், கீழ்ப்படியாமையின் நினைவுகள் இறைவனில் மட்டுமான மனமாற்றம் மற்றும் நம்பிக்கைக்கான அழைப்பாகும். இப்போதாவது வணங்காக் கழுத்துடனும் இறைவனைச் சோதிப்பவராகவும் இருப்பதை விட்டுவிட்டு (சங் 78:17-18.40; 95:7-9; அ.ப. 7:51), செயல்களைச் செய்வதில் இறைவனுடைய வழிக்குப் பொறுமையுடன் தங்களை மாற்றிக்கொள்ளக் கற்று (சங் 106:13-14), அவரது இரக்கத்தின் வெற்றியை வியக்க வேண்டும் (நெகே 9; சங் 78; 106; எஸ் 20).

**ஆ. இறைவனுடைய வியப்பு மிக்க செயல்கள்:** இந்தப் பிரமாணிக்கமின்மைகளை ஒருவர் மனதிற்குக் கொண்டு வந்தாலும், பாலைவனப் பயணத்தை ஒரு தண்டனையாகக் காட்டும் எண்ணமே அங்கு இல்லை. தனது மக்களுடனான இறைவனுடைய மண ஒப்பந்தக்காலத்தில் நிகழ்ந்த வியப்பு நிகழ்ச்சிகளின் நினைவுகூர்தலாகவும் கருதப்பட்டதாகத் தெரியவில்லை. அது கானானில் நிகழ் காலத்திற்கு முரண்பட்ட பழமையின் எளிய வாழ்க்கைக்காலமாக இருந்தது. எனவே, எலியா ஓரேபிற்குச் செல்லும்போது பாலைவனத்தில் அடைக்கலம் நாடிச் செல்பவராக மட்டுமின்றி, இளைப்பாற இடம் தேடுபவராகவும் செல்கிறார் (1 அர 19). விசுவாசமற்ற துணைவியைத் திரும்பக் கொண்டு வருவதில் தண்டனைகள் வெற்றியடையாமையால், இறைவன் அவளைப் பாலைவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே அவளது இதயத்துடன் பேசுவிருக்கிறார் (ஓசே 2:16). மீண்டும் அது மண ஒப்பந்தகாலமாக இருக்கும் (2:21-22). பழைய வியத்தகு நிகழ்ச்சிகள் நினைவில் அழகுபடுத்தப்படுகின்றன. மன்னாவானது விண்ணக ஊட்டச்சத்தாகவும் (சங்

78:24), எல்லாச் சுவையுமுள்ள அப்பமாகவும் உருவாகிறது (ஞான 16:21). இறைவன் பிரமாணிக்கமுள்ளவராய் இருப்பதனால், இப்போது இக்கொடைகள் நிகழ்காலப் பிரசன்னத்தின் பிணையமாகவும் உள்ளன. அவர் அன்புமிக்க தந்தையாகவும் (ஓசே 11), ஆயனாகவும் உள்ளார் (எசா 40:11; 63:11-14; சங் 78:52). மக்கள் இறைவனுடன் மிக நெருங்கி வாழ்ந்த இக்காலத்தின் காரணமாக, வழிநடத்தி ஊட்டமளிக்கிற ஒருவர்மீது எவ்வாறு ஒருவன் முழுமையான நம்பிக்கை வைக்காதிருக்க முடியும் (சங் 81:11)?

**3. பாலைவன மாதிரி:** பாலைவனக் காலமானது மாதிரிக் காலமெனில், முடிவில்லாமல் அதனை ஏன் நீட்டிக்கக்கூடாது? இதன் காரணமாகவே, கானானிய நாகரிகத்தைத் தாங்கள் புறக்கணிப்பதைக் காட்ட இரேக்காபியர்கள் கூடாரங்களில் வாழலாயினர் (எரே 35). இதனாலேயே, கும்ரான் துறவிகள் எருசலேமின் அதிகாரபூர்வ குருத்துவத்துடன் உறவை முறித்துக்கொண்டனர். பாலைவனத்திற்குச் செல்லுதலின் மறை பொருளானது ஒரு மேன்மையையும் கொண்டுள்ளது. துன்புறுத்தப்படும் சூழ்நிலைக்கு ஒரு பொருளையும் அஃது அளிக்க முடியும் (1 மக் 2:28.30; எபி 11:38). ஆனால், அது தோன்றிய செயல்முறையான, நிகழ்ச்சியினின்று அது தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிற அளவில், பலனற்ற பிடிகொடாமைக்குத் தாழ்ந்து போகக்கூடும். பாலைவனத்தில் வாழ்வதற்காக இறைவன் இஸ்ராயேலை அழைக்கவில்லை; ஆனால், வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ்வதற்காக பாலைவனத்தைக் கடந்து செல்ல அழைத்தார். மேலும், பாலைவனம் தனது உருவக மதிப்பீட்டைக் கொண்டுள்ள பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டோரால் எதிர்பார்க்கப்படும் மீட்பானது புதிய யாத்திரையாகக் கருதப்படுகிறது. பாலைவனமானது அவர்களது காலடிகளின்கீழ் மலரும் (எசா 32:15-16; 35:1-2; 41:18; 43:19-20). சில வெளிப்பாட்டு விவரிப்புகளில், காலத்தின் முடிவிலான மீட்பானது பாலைவனத்தை இன்பவனமாக மாற்றுவதாகக் காட்டப்படுகிறது; பின்னர், மெசியா பாலைவனத்தில் தோன்றுவார் (மத் 24:26; அ.ப. 21:38; திருவெளி 12:6.14).

### III. புதிய ஏற்பாடு:

**1. கிறிஸ்துவும் பாலைவனமும்:** கும்ரானில் உள்ளதைப்போன்று எஸ்ஸேன் சமூகத்தவர் நகரினின்று அகன்று செல்வதை மிக உயர்வாகப் புகழ்ந்து பாலைவனத்திற்குச் சென்றாலும், அதற்கு எவ்வித மறைபொருளையும் அளிக்க திருமுழுக்கு யோவான் விரும்பவில்லை. சலுகைக்குரிய காலத்தைப் புதுப்பிக்கவே அவர் தனது செய்தியை அங்கே போதிக்கிறார். நீரானது அவர்களுடைய இதயங்களைப் புதுப்பித்த பின்னர், திருமுழுக்குப் பெற்றவர்களை அவர்களது பணிக்கு அவர் திருப்பியனுப்புகிறார் (லூக் 3:10-14). பாலைவனமானது வரவிருக்கும் மெசியாவை நோக்கிய, மனமாற்றத்தின் சாதனமாக மட்டுமே இருந்தது.

**2. பாலைவனத்தில் கிறிஸ்து:** இறைவனுடைய மக்களின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மீண்டும் வாழ இயேசு விரும்பினார். பண்டைய எபிரேயரைப்போன்று, சோதிக்கப்படுவதற்கென அவர் இறைவனின் ஆவியால் பாலைவனத்திற்கு நடத்திச் செல்லப்பட்டார் (மத் 4:1-11 இணை). ஆனால், தனது மூதாதையருக்கு முரண்பட்ட வகையில், அவர் சோதனையை வென்று, தனது தந்தைக்குப் பிரமாணிக்கமுள்ளவராக இருக்கிறார். அவர் அப்பத்திற்குப் பதிலாக, இறை வார்த்தையையும், கவரும் புதுமைக்குப் பதிலாக நம்பிக்கையையும், உலக ஆதிக்கத்தினுடைய அனைத்து எதிர்பார்ப்பிற்குப் பதிலாக இறைவனுடைய பணியையும் தேர்ந்தெடுக்கிறார். யாத்திரையின்போது தோல்வியடைந்த சோதனையானது அதன் பொருளை இப்போது கண்டடைகிறது. இஸ்ராயேலின் ஊழ் நிறைவேற்றப்படுகின்ற தலைப்பேறான மகன்

இயேசுவே. மீண்டும் பெறப்பட்ட இன்பவனத்தின் கருத்தை மாற்கின் விவரிப்பில் நாம் காணக்கூடும் (மாற் 1:12-13).

**3. கிறிஸ்து, நமது பாலைவனம்:** தனது பொதுவாழ்வின் காலத்தில், மக்கள் கூட்டத்திடமிருந்து தப்பிப்பதற்கும் (மத் 14:13; மாற் 1:45; 6:31; லூக் 4:42), தனிமையாகச் செபிப்பதற்கும் (மாற் 1:35) உகந்த இடமாகச் சந்தேகத்திற்கிடமின்றி, இயேசு பாலைவனத்தைப் பயன்படுத்தினார். ஆனால், பாலைவன அடையாளத்தோடு நேரடியாகத் தொடர்புடையவைகளாக இச்செயல்கள் விவரிக்கப்படவில்லை. இதற்கு மாறாக, நேற்றைய நாளின் வியத்தகு கொடைகளைத் தன்னில் நிறைவேற்றுபவராக இயேசு காட்டப்படுகிறார். அவரே உயிருள்ள தண்ணீர், வானிலிருந்து வந்த அப்பம், வழியும் வழிகாட்டியும், இரவின் ஒளி, காப்பாற்றப்படுவதற்காக தன்னை உற்று நோக்கும் அனைவருக்கும் வாழ்வளிக்கும் பாம்பு. இறுதியாக, அவரது உடலிலும் இரத்தத்திலும் பங்கு கொள்வதன் மூலம் இறைவனுடைய நெருங்கிய அறிவானது நிறைவேறப்படக் கூடியது இவரிலேயே. ஒரு குறிப்பிட்ட பொருளில், கிறிஸ்துவே நமது பாலைவனம் என்றும் நாம் கூறலாம். அவரில் நாம் சோதனையை வெல்கிறோம்; அவரில் இறைவனோடு நாம் முழுமையான ஒன்றிப்பைக் கொண்டுள்ளோம். இனிமேல் பாலைவனமானது இடமாகவும் காலமாகவும் இயேசுவில் நிறைவேற்றப்படுகிறது. இங்கு உருவகமானது உண்மைக்கு வழிவிடுகிறது.

**4. பாலைவனத்தில் திருச்சபை:** பாலைவனத்தினுடைய அடையாளமானது திருச்சபையின் நிலையைப் புரிந்து கொள்வதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. சாத்தானுடைய வல்லமையை முடிக்கக்கூடிய கிறிஸ்துவின் மறுவருகை வரை, அது பாலைவனத்தில் மறைந்து வாழ்கிறது (திருவெளி 12:6.14). இயேசு பாலைவனத்தில் அப்பங்களைப் பெருகச் செய்து, பாலைவனத்தில் வாழ்வது அவசியமானதன்று; ஆனால், கிறிஸ்துவினுடைய வார்த்தையால் மட்டுமே மனிதன் உயரிய வழியில் வாழக்கூடிய புதிய காலமானது தொடங்கி விட்டது என்பதைக் காட்டும்போது, இந்த அடையாளமானது அதனுடைய விவிலியப் பின்னணியுடன் மிக நெருங்கிய உறவினைக் கொண்டுள்ளது (மத் 14:13-21 இணை).

பவுல் அதே முன்னோக்கைக் கொண்டுள்ளார். பழமையின் நிகழ்ச்சிகள் என்பவை காலத்தின் உச்சநிலைக்கு வந்துள்ள நமக்குப் படிப்பினைக்கானவை என்று அவர் கற்பிக்கிறார் (1 கொரி 10:1). மேகத்திலும், கடலிலும் திருமுழுக்குப் பெற்ற நாம், உயிருள்ள அப்பத்தினால் ஊட்டப்பெற்று, பாறையினின்று பொழியப்படுகின்ற ஆவியின் நீரில் தோய்க்கப்படுகிறோம். இப்பாறையே கிறிஸ்து. அஃது எந்தப் போலித்தோற்றமுமன்று. நாம் இன்னும் பாலைவனத்தில் ஆனால், அருட்சாதன முறையில் வாழ்கிறோம். எனவே, பாலைவனத்தினுடைய உருவகமானது, நாம் கிறிஸ்தவ வாழ்வின் இயல்பினை அறிந்து கொள்ள வேண்டுமாயின், விலக்கப்பட முடியாததாக உள்ளது.

இறைவனுடைய அமைதியில் நாம் நுழையாத வரையில் இவ்வாழ்வானது சோதனையினுடைய அடையாளத்தின்கீழ் வாழப்படுகிறது (எபி 4:1). எனவே, பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்வதன் மூலம், நமது இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாமலிருப்போமாக. நமது "இந்நாளானது" வெற்றியடைவது உறுதி. ஏனெனில், சோதனைக் காலத்தில் பிரமாணிக்கமாக இருக்கும் கிறிஸ்துவில் நாம் பங்காளர்களாக இருக்கிறோம் (3:14).

## பால் (MILK)

பாலைவனத்தில் எபிரேயருடையதைப் போன்றிருந்த மேய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்தில், எவ்விதத்திலும் மனிதனுடைய உழைப்புத் தேவைப்படாத

இயற்கையின் கொடைகளில் ஒன்றாகிய பால், ஊட்டத்திற்கு முக்கிய அடிப்படைகளில் ஒன்றாகும். இஸ்ராயேலின் அன்றாட உணவில் ஒன்றாக இஃது எப்போதுமே இருந்தது (நீதி 5:25; பழ 27:27; சீரா 39:26). பால் மிகுதியாகக் கிடைப்பது செல்வத்தின் அடையாளமாகும் (யோபு 29:). வாக்குறுதிகளுடனும் அதனுடைய உருவகப் பயன்பாடுமான தொடர்பின் மூலம் பால் என்ற இச்சொல்லானது ஒரு அடையாளப் பொருளையும் கொண்டுள்ளது.

1. **இறை இரக்கத்தன்மை:** ஒரு தாய் தனது குழந்தைக்கு உணவூட்டுவதென்பது எல்லையற்ற பரிவையும். முனைப்பார்வத்தையும் வெளிப்படுத்துகின்ற மிக இயல்பான அடையாளங்களில் ஒன்றாகும் (2 மக் 7:21). இந்த உருவகமானது, சிறப்பாக எசிப்திலிருந்து வெளியேறி வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பின்னணியில், தனது மக்களுக்கான யாவேயின் அளவில்லாத இரக்கம் மற்றும் கவனம் நிறைந்த அக்கறை முதலியவற்றை விவரிப்பதற்கென இஸ்ராயேலில் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதில் வியப்பில்லை (எண் 11:12). பாலருந்திய பின் குழந்தையானது தனது தாயின் மார்பில் நிறைவோடு இளைப்பாறுவது போலத் தங்களை இறைவனிடம் விட்டுவிடுமாறு சங்கீத ஆரிசியர் மக்களை இதன் காரணமாக அழைக்கிறார் (சங் 13:2-3).

2. **இறையாசிகள் மற்றும் மெசியா வாக்குறுதிகளின் உருவகம்:** பாலின் மிகுதி வாக்குறுதிகளினுடைய உயரிய விவரிப்பின் ஒரு பகுதியாகும். இஸ்ராயேல் நுழையவிருக்கும் நாடானது "பாலும் தேனும் ஓடும் நாடு" என, பழைய ஏற்பாட்டில் அடிக்கடி விவரிக்கப்படுகிறது (யாத் 3:8; 13:5; உப 6:3; 11:9; எரே 11:5; எசே 20:6.15). "இந்த நல்ல பரந்த நாடு" (யாத் 3:8; காண்க. உப 32:12-14), "மற்றெல்லா நாடுகளிலும் பெருமைமிக்கதுமான நாடு" (எசே 20:6.15) என நாடோடி வாழ்வின் செல்வங்களில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. மெசியா முன்னோக்குடைய யூதாவின் ஆசியில் (ஆதி 49:8-12), யூதா நாட்டின் அசாதாரண வளமையானது திராட்சைரசம் மற்றும் பாலின மிகுதியால் விவரிக்கப்படுகிறது. இறைவாக்கினரிடையில் இந்த வளமையின் சித்திரம் வரவிருக்கும் காலங்களின் மாதிரியான நாட்டை விவரிக்கிறது (யோவே 4:18; எசா 55:1; 60:16). அது மெசியாவின் ஆறுதல் மற்றும் மீட்பினுடைய உருவகமுமாகும் (எசா 66:11-13). உன்னத சங்கீதத்தில் பாலானது மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையிலான அன்பின் இன்பத்தை அடையாளப்படுத்துகிறது (உ.ச. 4:11; 5:1). தேவைப்படும்போது இந்தப் பாலைவன ஊட்டமானது இம்மானுவேலுக்கும் தப்பிப் பிழைத்தவர்களுக்கும் மீண்டும் அடிப்படை உணவாகும். அதன் மிகுதி வாக்குறுதிகளை நினைவூட்டுவதாகும் (எசா 7:15.22).

வளமையானது இறையாசிகளின் அளவையாக இருக்குமெனில், போதுமான பாலில்லாமையும் பொதுவான பாழ்நிலையும் இறைவனுடைய சாபம் மற்றும் தண்டனையின் அடையாளமாகும். இஸ்ராயேலினுடைய குற்றங்களின் காரணமாக இஸ்ராயேலின் உதரங்களை மலடாக்கி, அவர்களது மார்புகளைக் காய்ந்து போகச் செய்யுமாறு ஓசே இறைவனிடம் கேட்கிறார் (ஓசே 9:14). புதிய ஏற்பாட்டின் நோக்கில் இறுதிக்காலத் தீர்ப்பானது எவ்வளவு பயங்கரமானதாக இருக்குமெனில், இயேசு கூறுவது போல, அந்நாளில் பால்தராத பெண்கள் பேறு பெற்றோர் (லூக் 23:29; 21:23) ஆவர்.

3. **இறைவனுடைய பிள்ளைகளின் பால்:** சாதாரணமாக, புதிய ஏற்பாடு உருவகப்பொருளில் பாலைப்பற்றிப் பேசுகிறது. போதனையை, இறைவனுடைய பிள்ளைகளின் உணவு எனப் பொருள் கொள்கிறது. குழந்தையின் முதிர்ச்சியடையாத நிலைமீது தனது கவனத்தை மையமாக்கியுள்ள பவுலைப் பொறுத்தவரை ஊனியல்புடைய கொரிந்தியருக்கு அளிக்கப்படும் பாலானது முதல் கிறிஸ்தவச் செய்தியாகும். இது நிறைவுடையவர்களுக்கென ஒதுக்கப்பட்ட

ஞானத்தினுடைய கெட்டியான உணவிற்கு மாறானதாகும் (1 கொரி 3:2; காண்க. எபி 5:12-14). இதற்கு மாறாக, 1 பேதுரு 22-இன்படி புதிய வாழ்விற்குள் பிறந்த விசுவாசி, வலிமையுடையவனாக வளர்ந்து மீட்பினை அடைவதற்காக, வார்த்தையின் பாலுக்காகத் தொடர்ந்து ஏங்க வேண்டும். ஏனெனில், அவன் எப்போதும் வளரும் குழந்தையாகவே இருப்பதால் இறைவனுடைய வார்த்தையின் பால் எப்போதும் தேவையாக உள்ளது. இறுதியாக, திருச்சபையின் தந்தையர்கள் கற்பித்தது போல, இவ்வார்த்தையானது கிறிஸ்துவேயாகும் (2:3). "உண்மையின் ஊட்ட உணவாகிய, வார்த்தை நமக்குத் தேவையாக உள்ளது" (அலக்சாந்திரிய கிளமெந்து).

**பால்தசார் (BALTHASAR)**

பின்னால் தோன்றிய பாரம்பரியப்படி குழந்தை இயேசுவைத் தரிசிக்க வந்த மூன்று அரசர்களில் ஒருவரான இவர் அரேபியாவைச் சார்ந்த ஓர் அரசன் என நம்பப்படுகிறது.

**பால்பாயிம் (BALBAIM)**

தோத்தானுக்கருகில் உள்ள ஒரு நகர். இது பேல்மாயினாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

**பாவப்பரிகாரக் காணிக்கைகள் (SIN OFFERING)**

இது பாவங்களுக்கான காணிக்கைகள் என்றும் குற்ற நீக்கக் காணிக்கைகள் என்றும் அழைக்கப்படும். இஃது ஒருவகையான விலங்குப் பலியாகும் (லேவி 4:1-5:13; 6:17-23). இப்பலி பெரிய குருவுக்காகவோ, மக்கள் அனைவர்க்குமாகவோ ஒப்புக் கொடுக்கப்பட்டால், பலியிடப்பட்ட விலங்கின் உடல், பீடத்தில் எரிக்கப்படுவதில்லை; மாறாக, ஆலயம் அல்லது கூடாரப்பகுதிக்குப் புறம்பே எரிக்கப்படும். மற்றச் சமயங்களில், அது குருக்களால் உண்ணப்பட வேண்டும். பாவப்பரிகாரக் காணிக்கையின் இரத்தம் திருத்தூயகத்தைப் பிரிக்கும் திரைமுன் தெளிக்கப்படும்; தகனப்பலிபீடத்தின் முன் ஊற்றப்படும். இது யாருக்காகப் பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது என்பதைப் பொருத்தது. பலிப்பொருளின் கொழுப்புப்பகுதிகள் பீடத்தில் எரிக்கப்படும். பலி செலுத்துபவர் மிக ஏழையென்றால், விலைமிக்க விலங்குக்குப் பதிலாக ஓர் ஏப்பாவின் பத்திலொரு பங்கு நல்ல மாவைக் காணிக்கையாக அளிக்கலாம்.

பல சூழ்நிலைகளில் பாவப்பரிகாரக் காணிக்கைகள் செலுத்தப்பட்டன. அவற்றின் பட்டியல்கள் லேவி 5:1-4-இல் கொடுக்கப்பட்டன. இப்பலிகள் குரு திருநிலைப்படுத்தப்பட்ட போதும் (யாத் 29:14), அமாவாசை நாளன்றும் (எண் 28:15), வருடாந்திர விழா நாட்களிலும் (28:22; 29:5. 11.16) ஒப்புக்கொடுக்கப்பட்டன.

**பாவப்பரிகாரநாள், பாவநீக்க நாள் (ATONEMENT, DAY OF)**

யூதர்களின் சமூக ஆண்டு திஸ்ரி (செப்டம்பர்-அக்டோபர்) என்ற ஏழாம் மாதத்தில் தொடங்கியது. புத்தாண்டு நாளில் தங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்யுமாறு மக்களை அழைக்கும் நோக்கத்துடன் கொம்புகள் ஊதப்படும். அடுத்த பத்து நாட்களும் மக்கள் நோன்பு இருக்க வேண்டும். பத்தாவது நாள் பாவங்களுக்குப் பரிகாரமாக உருக்கத்தோடு தபசு செய்ய வேண்டும். உண்ணல், பானம் பருகுதல், குளித்தல், அழகு செய்தல் போன்றவை தடை செய்யப்பட்டிருந்தன. ஆலயத்தில் சிறப்பான வழிபாடுகள் நிறைவேறும். அவை பற்றிய விவரங்களை லேவியராகமம் பதினோராம் அதிகாரத்தில் நாம் காணலாம். பெரிய குரு தூய உடை அணிந்து, மக்களின் பாவங்களுக்குப் பரிகாரப் பலிக்காக இரு வெள்ளாடுகளையும், தகனப் பலிக்காக ஒரு செம்மறி ஆட்டையும், தமது பெயரில் பாவப்பரிகாரப் பலிக்காக ஓர் எருதையும் ஆலயத்துக்குள் இட்டுச் செல்வார். இரு வெள்ளாடுகளில் எது கடவுளுக்கு உரியது, எது "அசாசெல்"லுக்குரியது என்று திருவுளச் சீட்டுப்போட்டுத் தேர்ந்தெடுப்பர் ("அசாசெல்" என்பதற்குப் பொருள் என்ன என்று ஓர் இடத்திலும்

விளக்கப்படவில்லை. அது பெரும் பாலைநிலத்தில் உலவும் பேயாக இருக்கக்கூடும் என அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இச்சடங்கு எப்போது தோன்றியது, பாவங்கள் சுமத்தப்பட்ட ஆடு ஏன் பேயிடம் அனுப்பப்படுகிறது என்பவை பற்றி அறியமுடிவில்லை. சிலர் "அசாசெல்" என்ற வார்த்தையைச் செங்குத்தான பாறை, கொடும்பாறை என மொழி பெயர்க்கின்றனர்). பின் பெரியகுரு தமக்காகவும் தமது வீட்டினருக்காகவும் பாவப்பரிகாரப் பலியாக எருதைக் கொன்று பலியிடுவார். பின் எருதின் இரத்தத்தைக் கையில் ஏந்தி, தூபப் புகைசூழ திருத்தூயகத்துக்குள் நுழைவார்; உடன்படிக்கைப் பெட்டகத்தை வலம் வருவார். பெட்டகத்தின் மேலுள்ள இரக்கத்தின் அரியணை மேல் ஒருமுறையும், பெட்டகத்தின் முன் ஏழு முறையும் எருதின் இரத்தத்தைத் தெளிப்பார்; பிறகு, வெளிவருவார். தமக்காகப் பரிகாரம் செய்தபின், பெரிய குரு மக்களுக்காகப் பரிகாரம் செய்வார். கடவுளுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட வெள்ளாட்டைப் பலியிட்டு, அதன் குருதியை முன்கூறியதுபோல் திருத்தூயகத்தினுள் சென்று தெளிப்பார். பின் தூயகத்தையும் அதன் பொருட்களையும் இரத்தத்தைத் தெளித்துச் சுத்தி செய்வார். இவ்விதம் பரிகாரச் சடங்கு நடைபெறும். அதன் விளைவாக அதிதூயகமும், தூயகமும், பீடமும் தீட்டிலிருந்தும், மக்களும் குருக்களும் தாங்கள் அறியாமல் செய்த பாவங்களினின்றும் சுத்தி செய்யப்பட்டனர். இவ்வாறு சுத்தி செய்யப்பட்ட மக்களுடன் பரிசுத்தமே இயல்பான இறைவன் ஒன்றிப்புக்கொள்வார். இதற்கு அடையாளம் உயிரைக் குறிக்கும் பலிப்பொருளாகிய இரத்தமே.

மேற்கூறப்பட்ட சடங்கிற்குப்பின், திருவுளச் சீட்டுப் போட்டு "அசாசெல்"லுக்கெனத் தெரிந்து கொள்ளப்பட்ட வெள்ளாடு தகனப்பலி பீடத்துக்குமுன் கொண்டு வரப்படும். அதன்மேல் தம்முடைய கைகளை விரித்து இஸ்ராயேலரின் சகல பாவங்களையும் அறிக்கையிடுவார் பெரிய குரு. இவ்வாறு அடையாளமாக மக்களின் பாவங்கள் சுமத்தப்பட்ட வெள்ளாடு பாலை நிலத்துக்குத் துரத்தப்படும். பிற்காலத்தில் இவ்வாடு செங்குத்தான பாறையிலிருந்து எறிந்து கொல்லப்பட்டது. இதில் பங்குகொண்ட குருக்களும் பிறரும் தங்களையே சுத்தி செய்தபின், செம்மறியாட்டைத் தகனப்பலியிடுவர்.

இந்நாள் பலவிதத்தில் சிறப்புடையது. இந்நாளை யூதர்கள் வெறுமனே "நாள்" அல்லது "யோமா" என்று அழைத்தனர். இதுவே இந்நாளின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் காட்டும். ஆண்டில் இந்நாளில் மட்டும் பெரிய குரு ஒருவரே திருத்தூயகத்துக்குள் நுழைவார். யூதர்கள் இத்தினத்தில் கடுமையான உபவாசம் இருந்தனர். தங்களுடைய பாவங்களுக்கு வருந்தி மன்னிப்புக்கேட்கும் இந்நாளை இறைவனோடு சமாதானம் செய்யும் பெருநாளாக யூதர்கள் கருதினர். இந்நாளைச் செபத்திலும், தியானத்திலும், சட்டத்தை வாசிப்பதிலும் செலவிட்டனர். இந்நாளை ஓய்வு நாளாக அனுசரித்தனர். இந்நாளின் முடிவிலே விருந்துண்டு மகிழ்வெய்தினர். இவ்விழாவைப்பற்றி நற்செய்திகளில் ஒரு குறிப்பும் இல்லை.

மோசே சட்டத்தால் கட்டளையிடப்பட்ட ஒரே நோன்பு நாளான பாவப்பரிகாரநாள் (காண்க. யாத் 30:10) நாடு கடத்தப்பட்ட பிற்காலத்தில் மேலும் முக்கியத்துவம் பெற்றது (காண்க. நெகே 9:1). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நோன்புகள் கடைப்பிடிக்கப்பட்டாலும் (காண்க. அ.ப. 27:9) கிறிஸ்தவர்களிடையே, பாவப்பரிகாரநாள் விழாபெரிய தலைமைக்குருவாகிய இயேசு கிறிஸ்துவின் பரிகாரப்பலியாகும் என்று மறுபொருள் அளிக்கப்பட்டது (எபி 9:11 தொ; காண்க. 5:5). சுாண்க. பெரிய குரு.

**பாவம், பாவி (SIN, SINNER)**

I. நாம் "பாவம்" என்று பொதுவாக அழைக்கும் உண்மை பற்றி விவிலியமானது அடிக்கடி, ஏன் ஒவ்வொரு பக்கத்திலும், பேசுகிறது. இதனைக் குறிக்க பழைய ஏற்பாடு பயன்படுத்தும் சொற்கள்

எண்ணற்றவையாகும். இவை மனித உறவுகளினின்று பெறப்பட்டவையாகவும் உள்ளன. செய்யாது விட்டுவிடுதல், கொடுமை, கிளர்ச்சி, அநீதி. யூத இனமானது கடன் என்ற சொல்லையும் சேர்க்கும். இந்தச் சொல்லைப் புதிய ஏற்பாடும் பயன்படுத்துகிறது. "இறைவனுடைய பார்வையில் தீமை புரிபவனைப்" பாவி என்று குறிப்பிடுவது இன்னும் பொதுவானதாகும். நீதிமான் சாதாரணமாக, கொடியவனுக்கு எதிரானவன். ஆனால் குறிப்பாக, விவிலிய வரலாறு முழுவதிலும் பாவத்தினுடைய உண்மையான இயல்பானது அதனுடைய அனைத்து வன்மத்துடனும் அனைத்துப் பரிமாணங்களிலும் தோன்றுகிறது. மனிதனைப் பற்றிய இந்த வெளிப்பாடானது அதே நேரத்தில் இறைவனைப் பற்றிய, பாவத்திற்கு முரண்பட்ட அவரது அன்பு பற்றிய, பாவத்தைப் பொறுத்தமட்டில் அவர் செயல்படுத்துகின்ற அவரது இரக்கம் பற்றிய, வெளிப்பாடாகவும் இருப்பதை நாம் அறிகிறோம். ஏனெனில் மீட்பின் வரலாறு என்பது, மனிதனை அவனுடைய பாவநிலையினின்று வெளிக்கொணர்வதற்கான படைத்தவராகிய இறைவனுடைய சோர்வற்ற, விடாப்பிடியான முயற்சிகளேயாகும்.

II. **மூலப்பாவம்:** பழைய ஏற்பாட்டின் அனைத்து விவரிப்புகளிலும் மனித இனத்தின் வரலாற்றைத் தொடங்குகின்ற முதல் வீழ்ச்சியின் விவரிப்பானது, தொடக்கத்தில் அசாதாரணமான வளப்பமுடைய படிப்பினையை அளிக்கிறது. அங்கு அச்சொல் பயன்படாவிடினும், பாவம் என்பது என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, நாம் அங்கிருந்தே தொடங்க வேண்டும்.

1. **ஆதாமின் பாவம்:** ஆதாமினுடைய பாவமானது கீழ்ப்படியாமை என்று வெளிப்படுத்தப்பட்டது. இச்செயலின் மூலமாக இறைவனுடைய கட்டளைகளில் ஒன்றை மீறுவதன் மூலம், மனிதன் மனப்பூர்வமாக வேண்டுமென்றே தன்னை இறைவனுக்கெதிராக நிறுத்துகிறான் (ஆதி 3:3). ஆனால், கிளர்ச்சியெனும் இந்தப் புறச்செயலுக்கு அப்பாற்பட்டு, புறச்செயலுக்கு முற்பட்ட ஓர் உள்ளார்ந்த செயலை மறை நூல் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. பாம்பின் ஆலோசனைக்கு இணங்கி "நன்மை தீமை அறிந்தவர்களாய்க் கடவுள்களைப் போல இருக்க" விரும்பியதன் காரணமாக ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படிய மறுத்தனர் (3:5): அதாவது, மிகவும் பொதுவான விளக்கவுரையின்படி, நன்மை தீமையினைத் தீர்மானிப்பதில் இறைவனுடைய இடத்தைத் தாங்களே எடுத்துக்கொள்ள அவர்கள் விரும்பினர். தங்களையே அளவாக ஏற்று, தங்களுடைய ஊழினை நிர்ணயிக்கும் தலைவர்களாக உரிமை கொண்டாடினர். தாங்கள் விரும்பியவாறு நடந்து கொண்டனர். தங்களைப் படைத்தவரைச் சார்ந்திருப்பதற்கு மறுத்தனர். இதன் விளைவாக, மனிதனை இறைவனுடன் ஒன்றிக்கின்ற உறவினைத் தவறாகப் பயன்படுத்தினர்.

இப்போது, ஆதி 2-இன்படி, இந்த உறவானது சார்ந்திருப்பது மட்டுமின்றி, நட்புறவாகவும் இருந்தது. பண்டைய புராணக்கதைகளில் நாம் காணும் தெய்வங்களைப் போலன்றி, விவிலியத்தின் இறைவன் "தனது உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட" மனிதனுக்கு எதையும் மறுக்கவில்லை (ஆதி 1:26-27). தனக்கென எதையுமே, வாழ்வைக்கூட அவர் ஒதுக்கி வைக்கவில்லை (காண்க. ஞான 2:23). பாம்பினுடைய ஆலோசனையினால் மட்டுமே ஏவாளும், பின்னர் ஆதாமும் இறைவனுடைய எல்லையற்ற தாராளத் தன்மையைச் சந்தேகிக்க ஆரம்பித்தனர். மனிதனுடைய நன்மைகென இறைவனால் அளிக்கப்பட்ட கட்டளையானது (காண்க. உரோ 7:10), அவரது சலுகைகளைக் காப்பதற்கென இறைவனால் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் உபாயமாகும் என்றும், கட்டளையுடன் சேர்ந்துள்ள அச்சுறுத்தலானது ஒரு பொய்யே என்றும் கருதினர். "நீங்கள் சாகவே மாட்டீர்கள். ஏனெனில், நீங்கள் அதிலிருந்து உண்ணும்

நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்" (ஆதி 3:4-5). மனிதன் தனக்கு எதிராளியாக உருவான இறைவனை எதிர்த்து மீறுகிறான் இறைவனைப் பற்றிய கருத்தே தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஏனெனில், மேலாண்மையோடு நிறைவுள்ளவராக இருப்பதால் மேலாண்மை மிக்க தன்னலமற்றவராயும், எதுவும் தேவையற்றவராகவும் கொடுக்கக் கூடியவராகவும் மட்டுமே உள்ள இறைவனைப் பற்றிய கருத்துக்குப் பதிலாக, தனது படைப்பிற்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே முழுவதும் கவனமுள்ளவராகவும் விருப்பமுடையவராகவும் தேவை உள்ளவராகவும் கடவுள் கருதப்பட்டார். மனிதனைச் செயல்படத் தூண்டுவதற்கு முன் பாவம் அவனது ஆவியைக் கெடுத்தது. யாருடைய சாயலாக இருந்தானோ அந்த இறைவனுடனான உறவையே இது பாதித்தது. இதைவிட, கொடுமையான நெறிப்பிறழ்வைச் சிந்தித்துப் பார்க்கமுடியாது; அதனால், ஏற்பட்ட பயங்கர விளைவுகள் வியப்பு அளிக்க வேண்டியதில்லை.

**2. பாவத்தின் விளைவுகள்:** மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் அனைத்தும் மாறிவிட்டன. மனச்சாட்சியின் தீர்ப்பு இதுவே. தண்டனை தொடங்குவதற்கு முன்னரே (ஆதி 3:23), இதுவரை இறை நட்பை அனுபவித்து வந்த ஆதாமும், ஏவாளும் (2:25), "ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிலையிலிருந்து தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டார்கள்" (3:8). தொடக்க முயற்சியானது மனிதனிடமிருந்தே வந்ததால், தவறுக்கான பொறுப்பும் அவனிடமே உள்ளது. இறைவனை இனியும் விரும்பாமல், அவரிடமிருந்து ஓடிப்போனவன் இவனே. இன்பவனத்தினின்று விரட்டப்பட்டதிலிருந்து மனிதன் தன்னுடைய விருப்பத்தை உறுதிப்படுத்தும் அச்சுறுத்தலானது ஒரு பொய்யன்று என்பதைப் பின்னரே அவன் அறிந்து கொள்வான். இறைவனுக்குத் தொலைவான நிலையில், வாழ்வின் மரத்தினை அணுகுவது இயலக்கூடியதன்று (3:22). உறுதியான மரணம் மட்டுமே மீதியாக உள்ளது. ஆதாமும் ஏவாளும் இன்ப வனத்தினின்று வெளியே தள்ளப்பட்டு விட்டனர். இந்நேரம் முதல், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகளில் முறிவு ஒன்று உள்ளது.

பாவமானது மனித சமூக உறுப்பினர்களுடைய உறவுகளிலும் ஒரு முறிவைப் புகுத்தியது. இந்த முறிவு முதல் பெற்றோரின் இதயத்திலேயே இருந்தது. ஆதாம் பின்வாங்கியபோது, இப்பாவம் புரியப்பட்டிருந்தது. "தனது எலும்பின் எலும்பாகவும், தசையின் தசையாகவும்" (2:23) இறைவன் அவருக்குத் துணையாக (2:18) அளித்தவளை அவர் குற்றஞ்சாட்டுகிறார். தண்டனையானது இந்த முறிவை உறுதிப் படுத்துகிறது. "உன் கணவன்மேல் நீ வேட்கை கொள்வாய்; அவனோ உன்னை ஆள்வான்" (3:16). அதன் பின்னர், இந்த முறிவு ஆதாமின் பிள்ளைகளுக்கும் பரவும்; ஆபேலில் கொலை நிகழும் (4:8); பின்னர், இலாமேக்கின் கட்டுப்பாடற்ற பாடல் புகழ்கின்ற வன்முறை மற்றும் வலியோரின் சட்டத்தின் ஆட்சி நிலவும் (4:24).

அது மட்டுமே அனைத்துமன்று. பாவத்தினுடைய மறைபொருளானது மனித உலகிற்கும் அப்பால் செல்கிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில், காட்சியில் ஒரு மூன்றாம் நபர் நுழைகிறான். பழைய ஏற்பாடு அரிதாகவே அவனைப்பற்றிப் பேசும். அவனை இரண்டாம் தெய்வமாக மாற்றுவதைத் தடுக்கவே இந்நிலை அவனைப் பேய் அல்லது சாத்தான் என அடையாளப்படுத்துகிறது (ஞான 2:24). புதிய ஏற்பாட்டில் அவன் மீண்டும் தோன்றுவான்.

இறுதியாக, மனிதனுக்கு நம்பிக்கை அளிக்கப்படாவிடின், முதல் பாவத்தினுடைய விவரிப்பானது முடிவு பெறாது. தான் சுதந்தரம் அடைவேன் என்று எண்ணிய நிலையில், தான்

தண்டிக்கப்பட்ட அடிமைத்தனமானது சந்தேகமின்றி தன்னிலே உறுதியானதாகும். பாவம் உலகில் நுழைந்தவுடனேயே, அது விரைந்து பெருகும். அது பெருகுவதற்கேற்ப, வெள்ளத்தில் முழுமையாக மறையும் அளவிற்கு அது குறையும் (ஆதி 6:13-15). முறிவு மனிதனால் தொடங்கப்பட்டதனால், ஒப்புரவுக்கான முன் முயற்சி இறைவனிடமிருந்தே வரும் என்பது தெளிவு. முதல் விவரிப்பின் நேரத்திலேயே தாம் ஒருநாள் முன் முயற்சியை எடுப்போம் என்பதை இறைவன் சுட்டிக்காட்டுகிறார் (3:15). மனிதன் இகழ்ந்து ஒதுக்கிய இறைவனுடைய நன்மைத்தனமானது இறுதியாக வெற்றிகொள்ளும். அது "நன்மையால் தீமையை வெல்லும்" (உரோ 12:21). ஆதாம் "தன்னுடைய சொந்தக் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்" என ஞானநூல் குறிப்பிடுகிறது (ஞான 10:1). எது எப்படியிருந்தாலும் ஆதியாகமமானது இறைவனுடைய நன்மைத்தனம் செயல்படுவதைக் காட்டுகிறது. ஏனெனில், நோவாவுடன் புதிய உலகைப் படைப்பதற்கென (ஆதி 8:17.21-22; 1:22.28; 3:17), நோவாவையும் அவரது குடும்பத்தையும் உலகளாவிய சீர்கேடு மற்றும் தண்டனையினின்று அது காப்பாற்றுகிறது (6:5-8). "மக்களினங்கள் தங்களது ஒருமித்த கெட்ட நடத்தையால் குழப்பத்திற்குள்ளான போது" (ஞான 10:5), அஃது ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து, அவர் மூலமாக உலகின் அனைத்து இனங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கென (ஆதி 3:14-16-உடன் தெளிவாகத் தொடர்புடைய 12:2-3), அவரைப் பாவ உலகினின்று வெளியே இழுத்தது (ஆதி 12:1: காண்க. யாக் 24:2-3.14).

**III. இஸ்ராயேலின் பாவம்:** பாவமானது மனித வரலாற்றின் தொடக்கத்தில் ஓர் அறிகுறியை இடுவதுபோல், இஸ்ராயேலின் வரலாற்றின் மேலும் ஓர் அறிகுறியை இடுகிறது. அதனுடைய பிறப்பின் முதலிலிருந்தே இஸ்ராயேலானது ஆதாமின் வாழ்வை மீண்டும் வாழ்ந்தது. தனது முறையில், தன்னுடைய அனுபவத்தின் மூலமாகவே அஃது அறிந்து, பாவம் என்றால் என்ன என்பதை நமக்குக் கற்பிக்கிறது. இரு நிகழ்ச்சிகள் குறிப்பாகக் கற்பிக்கக் கூடியவையாகத் தோன்றுகின்றன.

**1. பொன் கன்றுக்குட்டியை ஆராதித்தல்:** ஆதாமைப் போன்று கூடுமானால் இன்னும் அதிகமாகக் கைம்மாறு தராத விதத்தில், இறைவனுடைய கொடைகளால் பொங்கி வழியும் அளவிற்கு இஸ்ராயேல் நிறைவிக்கப்பட்டது. தன்னளவில் எத்தகுதியும் இன்றி (உப 7:7; 9:4-6; எசே 16:2-5), இறைவனுடைய அன்பினால் மட்டுமே (உப 7:8), உலகின் அனைத்து மக்களிடையே சலுகைக்குரிய சிறப்பான மக்களாக, அது தேர்ந்தெடுக்கப்பட்டு (யாத் 19:5) "இறைவனுடைய தலைப்பிள்ளையாக" (4:22) உருவாக்கப்பட்டது. ஏனெனில், இஸ்ராயேலானது மற்ற இனங்களைவிட அதிகமாகவோ, குறைவாகவோ பாவியாக இருக்கவில்லை (யோசு 24:2.14; எசே 20:7-8.18). பார்வோன் மற்றும் பாவத்தினுடைய நாடு (5:1-இன்படி ஒருவன் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய முடியாத இடம்) ஆகியவற்றின் அடிமைத்தனத்தினின்று அதனை விடுவிக்க, இறைவன் தனது வியப்புச் செயல்களைப் பெருக்கினார். ஆனால், இறைவன் தன்னையே அவர்களுக்கு ஒப்படைத்து, "சாட்சியப் பலகைகளை" மோசேயிடம் அளித்துத் (31:18), தனது மக்களுடன் உடன்படிக்கை மேற்கொண்ட அதே தருணத்தில், "எங்களை வழிநடத்தும் தெய்வங்களை எங்களுக்கு உருவாக்கிக் கொடும்" (32:1) என்று மக்கள் ஆரோனைக் கேட்டனர். தனது பற்றுறுதி பற்றி இறைவன் நிரூபணங்களை அளித்திருந்தாலும், மக்கள் அவரைத் தொலைவிலுள்ளவராகவும், காண முடியாதவராகவும் கொண்டு, அவரில் விசுவாசங்கொள்ளாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு எட்டிய தொலைவில் உள்ள, பலிகளால் கோபத்தைத் தணிக்கக்கூடிய கடவுளையே இஸ்ராயேல் விரும்பியது. எவ்வாறாயினும், இஸ்ராயேலானது

உண்மையான இறைவனைப் பின் தொடர்ந்து, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக (காண்க. 40:36-38), தனது சிந்தனைக்கேற்ப மாற்றப்படக்கூடிய கடவுளையே விரும்பியது. இறைவனுடன் நடப்பதற்குப் பதிலாக, இறைவன் தன்னுடன் நடக்க வேண்டுமென இஸ்ராயேல் விரும்பியது.

இஸ்ராயேலின் "மூலப்"பாவமானது கீழ்ப்படிய மறுத்ததாகும். அதாவது, இறைவனை விசுவசித்து, தன்னை அவரிடமே விட்டுவிட மறுப்பதாகும். கீழ்ப்படிய மறுப்பதை உப 9:7 குறிப்பிடுகிறது. உண்மையில், "வணங்காக் கழுத்துடைய மக்களின்" எண்ணற்ற கிளர்ச்சிகள் ஒவ்வொன்றிலும் இது புதுப்பிக்கப்படும். வெகுகாலத்திற்குப் பின்னர், ஆண்டவருக்கு அளிக்கப்படும் வழிபாட்டுடன் பாகாலுக்கும் வழிபாடு அளிக்குமாறு இஸ்ராயேல் சோதிக்கப்பட்டபோது, தனக்கு வாழ்வு அளித்தவர் இறைவனே என்றும், அவருக்குப் பணிசெய்ய வேண்டியது கடமை என்றும் ஏற்று, தனக்கு " அவசியமானவர் அவர் ஒருவரே" என்ற யாவேயைக் காண இஸ்ராயேல் மறுத்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும் (உப 6:13; காண்க. மத் 4:10). பிற்காலத்தில், சிலை வழிபாடான பாவத்தின் வன்மத்தைப் பவுல் விவரிக்கும்போது, புறவினத்தாரிடையிலும், இஸ்ராயேலின் முதல் பாவத்தைப் பற்றிக் குறிப்பிட அவர் தயங்குவதில்லை (உரோ 1:23; சங் 106:20).

**2. இச்சையின் கல்லறைகள்:** பொன்கன்றுக்குட்டி நிகழ்ச்சிக்குப் பின்னர் உடனடியாக உப 9:22 இஸ்ராயேலின் மற்றொரு பாவத்தை நினைவு கூர்கிறது. "பாலைவனப் பாவங்களுக்கு" மாதிரியாகப் பவுல் இதனைப் பயன்படுத்துகிறார் (1 கொரி 10:6). இந்நிகழ்ச்சியின் பொருளானது தெளிவாக உள்ளது. இறைவன் புதுமையான முறையில் தேர்ந்தெடுத்து அளித்த உணவு வகைகளைவிட, தனது தேர்விற்கு ஏற்ற உணவுகளையே இஸ்ராயேல் விரும்பியது. "நமக்கு உண்ண இறைச்சி யார் தருவார்?...இப்பொழுதோ நம் வலிமை குன்றிப்போயிற்று; மன்னாவைத் தவிர வேறதுவும் நம் கண்களில் படுவதில்லையே!" (எண் 11:4-6). இஸ்ராயேலானது இறைவனால் நடத்திச் செல்லப்பட மறுத்தது; அவரில் நம்பிக்கை கொள்ள மறுத்தது; இறைவனுடைய விருப்பப்படி பாலைவனத்தில் ஆன்மீக அனுபவத்தை ஏற்க மறுத்தது (உப 8:3; காண்க. மத் 4:4). இஸ்ராயேலின் இச்சைகள் திருப்தி செய்யப்படும். ஆனால், ஆதாமைப் போன்று, இறைவனுடைய வழிகளுக்குப் பதிலாக மனிதன் விருப்பம்போல் நடத்தலின் விளைவுகளை இஸ்ராயேல் அறிந்து கொள்ளும் (எண் 11:33).

**IV. இறைவாக்கினர்களின் போதனை:** இறைவன் தனது இறைவாக்கினர்களின் மூலமாக இஸ்ராயேலுக்கு மீண்டும் எடுத்துக்கூறிய போதகம் இதுவே. இவ்வாறு, தானாகவே கட்டியெழுப்ப முடியும் என்று எண்ணும் மனிதன், தன்னுடைய அழிவை மட்டுமே கொண்டு வருவான். எனவே, இறைவன் வரைந்த பாதையை விட்டு விலகிய உடனேயே இறைவனுடைய மக்கள் அழிவுறுகின்றனர். உண்மையில், பாவம் இஸ்ராயேலுக்கான இறைவனின் திட்டத்திற்கும் அவரது ஆட்சிக்கும் இறைவனுடைய மக்களாகிய இஸ்ராயேலின் மகிமையுடன் ஒப்பிடப்படக்கூடிய அவரது மகிமைக்கும் மிகச்சிறப்பான முறையில் ஒரே தடையாகக் கருதப்படுகிறது. இந்தத் தலைவருடைய நோக்கில் அரசனுடைய, குருவினுடைய பாவமானது சிறப்பான பொறுப்புடையது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இதன் காரணமாகவே தனிப்பட்ட விதத்தில் இல்லாவிடினும், குறிப்பிட்ட விதத்தில் இது குறிப்பிடப்படுகிறது. ஆக்கானுடைய பாவமானது இஸ்ராயேலின் படையை ஆயிக்கு முன்னர் நிறுத்தியது (யோசு 7). பெரும்பாலும், ஒரு குழுவான மக்களுடைய பாவங்கள் நாட்டினுடைய இடையூறுகளுக்குப் பொறுப்பாக இறைவாக்கினரால் கருதப்பட்டன. "மீட்க இயலாதவாறு, கை குறுகிவிடவில்லை கேட்க

முடியாதவாறு ஆண்டவரின் காது மந்தமாகி விடவில்லை. உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ள" (எசா 59:1-2).

**1. பாவத்தைக் கண்டனம் செய்தல்:** இறைவாக்கினர்களுடைய போதனையானது பெருமளவிற்குப் பாவத்தைக் கண்டனம் செய்வதில் அடங்கியுள்ளது. தலைவர்களது பாவத்தையும் (1 சாமு 3:11; 13:1-14; 2 சாமு 12:1-15; எரே 22:13), மக்களுடைய பாவத்தையும் இது கொண்டுள்ளது. இவ்வாறு சாதாரணமாக, கிட்டத்தட்ட நேரடியாகப் பத்துக் கட்டளைகளைச் சுட்டிக்காட்டும் இறைவாக்கு இலக்கியத்தில் அடிக்கடி காணப்படுகின்ற பாவங்களின் கணக்கீடுகளை நாம் கொண்டுள்ளோம். ஞான இலக்கியத்தில் இந்த விவரங்கள் ஏராளமாக உள்ளன (உப 27:15-26; எசே 18:5-9; 33:25-26; சங் 15; பழ 6:16-19; 30:11-14). பாவமானது செயல் முறையான உண்மை ஆகிறது. யாவே பின்வாங்கியதற்கான காரணத்தையும் நாம் அறிகிறோம். வன்முறை, திருட்டு, அநீதியான தீர்ப்பு, பொய்கள், விபசாரம், பொய்ச்சத்தியங்கள், மனிதக்கொலைகள், தகாதவட்டி, உரிமைகளைப் புறக்கணிக்கும் மனப்பான்மை, மற்றும் சுருக்கமாக அனைத்துச் சமூக ஒழுங்கின்மைகளே, இதற்குக் காரணம். எசா 59-இல் இடைச் செருகலாயுள்ள "அறிக்கை", "இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்கிய" (59:2), இந்த அநீதிகள் என்ன என்பதைச் செயல்முறையாக வெளிப்படுத்துகின்றது. "எங்கள் குற்றங்கள் எங்களோடு இருக்கின்றன. எங்கள் தீச்செயல்களை நாங்களே அறிவோம். ஆண்டவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து அவரை வஞ்சித்தோம்; எங்கள் கடவுளைப் பின்பற்றாது அகன்று போனோம்; ஒடுக்குவதையும் கிளர்ச்சி செய்வதையும் பற்றிப் பேசினோம்; பொய்யானவற்றை மனதில் உருவாக்கி அவற்றை மொழிந்தோம்; நீதி துரத்தப்பட்டது; நேர்மை தொலைவில் நின்றது; பொது இடங்களில் வாய்மை நிலை குலைந்தது; உண்மைக்கு அங்கே இடமில்லை" (59:12-14). இதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே ஓசேயா அதே முறையில் பேசினார்: "நாட்டில் உண்மையுமில்லை, இரக்கமும் இல்லை; கடவுளை அறியவும் அறிவும் இல்லை. பொய்யாணை, பொய்யுரை, கொலை, களவு, விபசாரம் ஆகியன பெருகிவிட்டன". எல்லாக் கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிகின்றனர்; இரத்தப்பழிமேல் இரத்தப்பழி குவிகின்றது. "ஆதலால் நாடு-புலம்புகிறது" (ஓசே 4:1-2; காண்க. எசா 1:17; 5:8; 65:6தொ; ஆமோ 4:1; 5:7-15; மீக் 2:1-2).

படிப்பினையானது முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்தது. இறைவனைச் சாராமல் தானாகவே கட்டியெழுப்ப முடியும் என்று எண்ணும் மனிதன், பெரும்பாலும் மற்றவர்களின் இழப்பின் மூலமாக, குறிப்பாகச் சிறியோர் மற்றும் எளியோர்களின் இழப்பின் மூலமாகவே அதனைச் செய்து முடிப்பான். "கடவுளைத் தன் புகலிடமாய்க் கொள்ளாதவன்"... "அழிவுச் செயலையே புகலிடமாய்க் கொள்வான்" (சங் 52:7): "கேடு விளைவிக்கத் திட்டமிடுவான் (52:2); நீதிமானோ, "கடவுளின் பேரன்பில் எப்போதும் நிலையாக நம்பிக்கை வைத்திருக்கிறான்" (52:8) என்று சங்கீத ஆசிரியர் போதிக்கிறார். தாவீதினுடைய விபசாரமானது ஏற்கெனவே இதனைப்பற்றி ஒரு கருத்தை அளிக்கவில்லையா (2 சாமு 12)? ஆயினும், பாவம் பற்றிய யூதக் கருத்திலிருந்து அதனுடைய முக்கியத்துவம் அறியப்படுகின்ற அந்நிகழ்ச்சியினின்று, எவ்விதத்திலும் குறைவு படாத மற்றொரு உண்மை பெறப்படுகிறது. மனிதனுடைய பாவமானது இறைவனுடைய உரிமைகளைத் தாக்குவதோடு நில்லாமல், இதயத்தையே பாதிக்கிறது.

**2. பாவம், இறைவனுக்கு எதிரான குற்றம்:** உண்மையில் இறைவனைப் புண்படுத்த பாவியால் முடியாது. விவிலியமானது இறைவனது யாவும் கடந்த நிலை பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளது; ஆகவே, அவ்வப்போது

இந்த உண்மைகளை நினைவுபடுத்துகிறது: "எனக்கு வருத்தம் வருவிக்கும்படி வேற்றுத்தெய்வங்களுக்குப் பானப்படையல் படைக்கிறார்கள். எனக்கா வருத்தம் வருவிக்கிறார்கள் என்கிறார் ஆண்டவர்; தங்களுக்குத்தாமே அவ்வாறு செய்து கொள்கிறார்கள்! வெட்கக்கேடு!" (எரே 7:18-19). "நீர் பாவம் செய்தால் அவருக்கெதிராய் என்ன சாதிக்கிறீர்? நீர் மிகுதியான அக்கிரமங்களைச் செய்வதால், அவருக்கு என்ன செய்து விடுகிறீர்?" (யோபு 35:6). இறைவனுக்கெதிராகப் பாவம் புரிவதால் மனிதன் தன்னையே அழித்துக்கொள்கிறான். இறைவன் நமக்கெனச் சட்டங்களை வகுக்கிறாரெனில், அவை அவருக்காக இல்லாமல் "நமக்கு இன்று இருப்பதுபோல் என்றும் நலமாகும் பொருட்டும், நமது வாழ்வை அவர் பாதுகாக்கும் பொருட்டும்" (உப 6:24) அவற்றை அளித்தார். ஆனால், விவிலியத்தினுடைய இறைவனென்பவர், மனிதனுக்கும் உலகிற்கும் விருப்பு வெறுப்பற்ற அரிஸ்டாட்டிலினுடைய இறைவனல்லர்.

அ) பாவமானது இறைவனை அவரிலேயே புண்படுத்தாவிடின், அவர் அன்பு செய்பவரைப் பாதிக்கும் அளவிற்கு அது அவரைப் புண்படுத்துகிறது. இவ்வாறு, "இத்தியனான உரியாவை நீ வாளுக்கு இரையாக்கி அவன் மனைவியை உன்மனைவியாக்கிக் கொண்டதன்" மூலம் இஸ்ராயேலனல்லாத ஒரு மனிதனை மட்டுமே புண்படுத்தியதாகத் தாவீது எண்ணினார். இறைவன் எல்லா மனித உரிமைகளின் காப்பாளராகத் தன்னையே அமைத்திருப்பதை அவர் மறந்து விட்டார். அவர் யாவேயைப் புறக்கணித்து விட்டார். அதன் விளைவாக அவர் தண்டிக்கப்படுவார் என்று ஆண்டவர் பெயரால் நாத்தான் தாவீதுக்கு அறிவிக்கிறார் (2 சாமு 12:9-10).

ஆ) மேலும், பாவமானது வாழ்வின் தனிச்சிறப்பான ஒரே ஊற்றாகிய இறைவனிடமிருந்து மனிதனைப் பிரிக்கிறது. இதனால், இறைவனுடைய அன்பின் திட்டத்தில் அவரையே இது பாதிக்கிறது. "நம் மக்களோ என் மாட்சியைப் பயனற்ற ஒன்றிற்காக மாற்றிக் கொண்டனர்... பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய எனைப் புறக்கணித்தார்கள். தங்களுக்கென்று தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளைக் குடைந்து கொண்டார்கள்" (எரே 2:11.13).

இ) அந்த அன்பினுடைய ஆழத்தை விவிலிய வெளிப்பாடு அறியச்செய்யும் அளவிற்கு, மனிதனுடைய பாவமானது இறைவனைப் புண்படுத்தக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பாவம் என்பது அன்புடைய தந்தைக்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகும் (எசா 64:7). "தாய்மார்கள் பிள்ளையை மறப்பதானாலும், தனது வயிற்றின் கனியை மறவாத" தாய்க்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகவும் உண்மையில் இஃது உள்ளது (எசா 64:7). "தாய்மார்கள் பிள்ளையை மறப்பதானாலும், தனது வயிற்றின் கனியை மறவாத" தாய்க்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகவும் உண்மையில் இஃது உள்ளது (எசா 49:15). சிறப்பாக, பாவமானது கணவனுடைய குறைவற்ற அன்பிற்கு அக்கறையற்றவளாய், வருவோருடனெல்லாம் வேசித்தனம் புரியும் மனைவியின் துரோகத்தைப் போன்றதாகும். "பற்றுறுதியற்ற இஸ்ராயேல் செய்ததைக் கண்டாயா?... இவை அனைத்தையும் செய்தபின் என்னிடம் திரும்பிவருவாள் என நம்பினேன். அவளோ திரும்பி வரவில்லை.... பற்றுறுதியற்ற இஸ்ராயேலே, என்னிடம் திரும்பிவா என்கிறார் ஆண்டவர். நான் உன் மீது சினம் கொள்ள மாட்டேன். ஏனெனில், நான் பேரன்பு கொண்டவன் என்கிறார் ஆண்டவர். நான் என்றென்றும் சினம் கொள்ளேன்" (எரே 3:6.7.12; காண்க. எசே 16:23).

வெளிப்பாட்டின் இந்தக்கட்டத்தில் பாவமானது தனிப்பட்ட உறவுகளின் மீறலாகத் தோன்றுகிறது. அன்பு செய்யப்படாமல் துன்புறுகிற, அன்பினால் வடுப்படுத்தப்படக்கூடிய இறைவனால் அன்பு

செய்யப்படுவதற்குத் தன்னைக் கையளிக்க மனிதன் மறுக்கிறான். புதிய ஏற்பாட்டில் மட்டுமே முழுமையாக வெளிப்படுத்தப்படக்கூடிய அன்பின் மறைபொருளாக இஃது உள்ளது.

3. பாவத்திற்குப் பரிகாரம்: மனமாற்றத்திற்கும் பெரும் ஆற்றலோடு அழைப்பதற்காகவே இறைவாக்கினர்கள் பாவத்தினைக் கண்டனம் செய்து அதனுடைய கொடுமையை வெளிப்படுத்துகின்றனர். மனிதன் பற்றுறுதியற்றவனாய் இருந்தாலும், இறைவன் பற்றுறுதியுள்ளவராய் இருக்கிறார். மனிதன் இறைவனுடைய அன்பை ஏற்க மறுத்தாலும், அதனை அளிப்பதை இறைவன் விட்டுவிடுவதில்லை. திரும்புவதற்கு மனிதனால் இயன்ற வரையில், இறைவன் அவனைத் திரும்புமாறு வற்புறுத்துகிறார். ஊதாரி மைந்தனின். உவமையில் உள்ளது போன்று, இத்தகைய விரும்பத்தக்க திரும்புதலுக்கு அனைத்தும் ஒழுங்கு செய்யப்படுகின்றன; எதிர்பார்க்கப்படுகின்றன; "ஆதலால், நான் அவள் வழியை முள்ளால் அடைப்பேன்; அவள் எதிரில் சுவர் ஒன்றை எழுப்புவேன். அவளால் வழி கண்டுபிடித்துப் போக இயலாது. அவள் தன் காதலர்களைப் பின் தொடர்ந்து ஓடுவாள்; ஆனால், அவர்களிடம் போய்ச்சேரமாட்டாள். அவள் அவர்களைத் தேடித்திரிவாள்; ஆனால், அவர்களைக் காணமாட்டாள். அப்போது அவள் 'என் முதல் கணவனிடமே நான் திரும்பிப் போவேன். இப்போது இருப்பதைவிட அப்போது எனக்கு நன்றாய் இருந்தது என்பாள்" (ஓசே 2:6-9; காண்க. எசே 14:11).

உண்மையில் பாவமானது அன்பை மறுப்பதில் அடங்கியுள்ளதெனில், மனிதன் புதிதாய் அன்பு செய்ய ஏற்றுக்கொள்ளும் அளவிற்கே அது துடைக்கப்பட்டு, நீக்கப்பட்டு, மன்னிக்கப்படும் என்பது தெளிவு. இறைவனிடம் திரும்புவதினின்று மனிதனை விடுவிக்கின்ற மன்னிப்பைக் கற்பனை செய்வது ஒரே சமயத்தில் அன்பு செய்வதினின்று அவனை செய்ய வேண்டுமென விரும்புவதாகவும் இருக்கும். அப்போது இந்தத் திரும்புதலைக்கோருவதை இறைவனுடைய அன்பே தடுக்கும். இறைவன் தன்னை "எரிச்சலுடைய இறைவன்" என்று அறிவிக்கிறாரெனில் (யாத் 20:5; உ.ப. 5:9), அவருடைய எரிச்சலானது அவரது அன்பின் விளைவாக இருப்பதே அதற்குக் காரணம் (எசா 63:15; செக் 1:14). தான் மட்டுமே (தனது சாயலாகப் படைக்கப்பட்ட) மனிதனுடைய மகிழ்ச்சியை வழங்க எண்ணுகிறாரெனில், அவர் மட்டுமே அதனைச் செய்ய முடியும் என்பதே அதற்குக் காரணம். இந்தத் திரும்புதலின் நிபந்தனைகள் பற்றி சாம்பல், அறிவித்தல், பரிகாரம், விசுவாசம், மன்னிப்பு, மனவருத்தம்-மனமாற்றம், மற்றும் மீட்பு ஆகிய தலைப்புகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஆகவே, மனிதனைப் பொறுத்தமட்டும் முதல் நிபந்தனையானது, சுதந்தரமாய் இருப்பதற்குரிய விருப்பதைக் கைவிட்டு, இறைவனுக்குப் பணியவும், அன்பு செய்யத் தன்னையே அனுமதித்துக் கொள்ள ஒத்துக்கொள்வதுமாகும். அதாவது... தனது பாவத்திற்கு அடிப்படையாக இருப்பதையே விட்டுவிடுவதாகும். தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பொருள் துல்லியமாக இதுவே என்பதை இப்போது அவன் உணர்கிறான். மனிதன் மன்னிக்கப்படுவதற்கு, இறைவன் அவனைத் துரத்தாமல் இருப்பதற்கு உடன்படுவது மட்டும் போதுமானதன்று; அதிகம் தேவைப்படுகிறது. "எங்களை உம்மிடம் திருப்பியருளும், நாங்களும் உம்மிடம் திரும்புவோம்" (புல 5:21). சிதறிப்போன ஆடுகளைத் தேடி இறைவனே செல்வார் (எசே 34). அவர் மனிதனுக்குப் "புதிய இதயத்தையும், புதிய ஆவியையும் அளிப்பார்" (36:26-27). அதுவே புதிய உடன்படிக்கையாக இருக்கும். சட்டமானது அங்கு இனியும் கற்பலகைகளில் பொறிக்கப்படாமல், மனிதனுடைய இதயத்தில் பொறிக்கப்படும் (எரே 31:31-33; காண்க. 2 கொரி 3:3). இறைவன் தனது அன்பை அளிப்பதிலோ,

நமது அன்பைக் கோருவதிலோ மனநிறைவு அடைவதில்லை. "உன் கடவுளாகிய ஆண்டவர் உன் உள்ளத்தையும், உன் வழிமரபின் உள்ளத்தையும் பண்படுத்துவார். அதனால் உன் கடவுளாகிய ஆண்டவர்மீது நீ முழு உள்ளத்தோடும் முழு ஆளுமையோடும் அன்பு கூர்வாய். அப்போது நீயும் வாழ்வுபெறுவாய்" (உப 30:6). சங்கீத ஆசிரியரும் தனது பாவத்தை அறிக்கையிடும்போது, தன்னைக் கழுவித் தூய்மையாக்கி, தன்னில் தூயதோர் உள்ளத்தைப் படைக்குமாறு இறைவனிடம் இறைஞ்சுகின்றார் (சங் 51). ஏனெனில், பாவத்திலிருந்து ஏற்புடைமை பெறுவது முற்றிலும் இறைவனுக்குரிய, படைப்புச் செயலுக்கொத்த செயலைக் கோருகிறது என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார். இறுதியாக, மனிதனை அவனுடைய பாவத்தினின்று விடுவிக்கின்ற மனிதனுடைய உள்ளார்ந்த மாற்றமானது, மறைபொருளான ஊழியனுடைய பலியால் நிறைவேற்றப்படுகிறதென, பழைய ஏற்பாடு அறிவிக்கிறது. இந்த இறைவாக்கு நிறைவேறுவதற்கு முன்னர் இந்த ஊழியனுடைய அடையாளத்தை எவராலும் ஊகிக்க முடியவில்லை.

V. புதிய ஏற்பாட்டின் போதனை: "மனிதனைப் பாவத்தினின்று விடுவிக்க வந்த" இந்த ஊழியன் (எசா 53:11) இறைவனுடைய மகனைத் தவிர வேறெவருமல்லர் என்பதைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் வகித்த இடத்தைவிடக் குறைவான இடத்தைப் பாவம் வகிக்கவில்லை என்பதோ, பாவத்தை வெல்வதற்கு இறையன்பு என்ன செய்தது என்றும் அதனுடைய உண்மையான பரிமாணத்தையும் அதே நேரத்தில் இறைஞானத்தினுடைய திட்டத்தில் அதனுடைய பங்கினையும் பற்றிய முழு வெளிப்பாடு அனுமதிப்பதோ வியப்பளிக்க வேண்டியதில்லை.

1. இயேசுவும் பாவிகளும்:

அ) ஒத்தமை நற்செய்திகளுடைய போதனையின் தொடக்கத்தினின்றே பாவிகளின் நடுவில் இயேசுவை நாம் காண்கிறோம். ஏனெனில், நீதிமான்களுக்கன்று, பாவங்களுக்காகவே அவர் வந்தார் (மாற் 2:17). அக்கால யூதச் சொற்றொடரைப் பயன்படுத்தி, அவர்களது பாவங்கள் "மன்னிக்கப்பட்டு" விட்டன என்று அவர் அவர்களுக்கு அறிவிக்கிறார். இதனால் இச்சொல்லானது கடன் என்ற பொருளில் சில நேரங்களில் பயன்பட்டாலும் (மத் 6:12; 18:23-25), அது ஒரு கடனாகக் கருதப்பட வேண்டும் என்று பொருளன்று; மாறாக, மனிதனுடைய ஆவி மற்றும் இதயத்தினுடைய மாற்றத்தையே கோராத இறைவனுடைய செயலால் பாவம் மன்னிக்கப்படலாம் என்று சுட்டுகிறது எனலாம். இறைவாக்கினர்கள் மற்றும் திருமுழுக்கு யோவானைப் போன்று (மாற் 1:14), இயேசுவும் மனமாற்றம் பற்றிப் போதிக்கிறார். இறை அருளைப் பெறுவதற்கும், இறைவனைத் தன்மேல் செயல்பட அனுமதிப்பதற்கும் வேண்டிய மனநிலையில் மனிதனை அமைக்கின்ற ஆவியினுடைய அடிப்படையான மாற்றமாக இஃது உள்ளது. "இறையரசு நெருங்கி வந்து விட்டது; மனமாற்றம் அடைந்து நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15). மற்றொரு புறம் உவமையிலுள்ள பரிசேயனைப் போன்று (லூக் 18:9-11), ஒளியை மறுப்பவர்கள் (மாற் 3:29) அல்லது தங்களுக்கு மன்னிப்புத் தேவையில்லை என்று கருதுபவர்கள் முன்னிலையில், இயேசு வல்லமையற்றவராக உள்ளார்.

ஆ) இதன் விளைவாக இறைவாக்கினரைப்போன்று, இயேசு பாவத்தை அது எங்கிருந்தாலும், கண்டனம் செய்கிறார். புறச்சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுவதன் காரணமாக, தாங்கள் நீதிமான்கள் என்று கருதுவோரையும் அவர் கண்டிக்கிறார். ஏனெனில், பாவமானது உள்ளத்தினுள்ளே இருக்கிறது. "ஏனெனில், மனிதர் உள்ளத்தினின்றே பரத்தமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத்

தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவரும். தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப்படுத்தும்" (மாற் 7:21-23). அவர் திருச்சட்டத்தை அழிப்பதற்கன்று, நிறைவேற்றவே வந்தார் (மத் 5:17) என்பதால் இயேசுவின் சீடன் பரிசேயரின் நெறியில் நிறைவு அடைய முடியாது (5:20). இயேசுவினுடைய நெறியானது சந்தேகத்திற்கிடமின்றி இறுதியாக அன்பாக உருவெடுக்கிறது (7:12). ஆனால், தனது தலைவர் செயல்படுவதைக் காண்பதில் சீடன், "அன்பு செய்வது" என்ன என்பதைப் படிப்படியாக அறிந்து கொள்வான். இதனோடு கொண்டுள்ள தொடர்பில், அன்பை மறுப்பதுதான் பாவம் என்பதையும் அவன் காண்பான்.

இ) பாவிக்கான இறைவனுடைய எண்ணிப்பார்க்க முடியாத இரக்கத்தினை இயேசு அவனுக்கு வெளிப்படுத்துவதற்குச் செவி மடுப்பதன் மூலம், சிறப்பாக அவன் அதை அறிந்து கொள்வான். காணாமற்போன மைந்தன் அல்லது இரக்கம் நிறைந்த தந்தையின் உவமையானது (லூக் 15:11தொ), பெருமளவில் பழைய ஏற்பாட்டின் போதனையைப் போன்று உள்ளது. பாவம் என்பது எவ்வாறு இறைவனுக்கெதிரான குற்றம், பாவியினுடைய திரும்புதலைக் கொண்டிராத மன்னிப்பைப்பற்றி எண்ணுதல் எவ்வளவு அபத்தம் என்பதைப்பற்றிப் போதிக்க, இந்த உவமையைவிட, புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள்தான் மேலானவையாக உள்ளன. தனது கீழ்ப்படிதலுடன் ஒப்பிடுவதற்கென மூத்த சகோதரன் மட்டுமே சுட்டிக்காட்டும் கீழ்ப்படியாமை உள்ளடங்கியிருந்தாலும் (15:29), தந்தையினுடைய உள்ளத்தை வருத்தப்படுத்தியது, இனியும் தந்தையை அனுமதிக்காத அவரது மகனின் பிரிவுமேயாகும். தன்னுடைய பிரசன்னத்தை மறுத்தல் மூலம் மகன் தந்தையைப் புண்படுத்தினான். திரும்ப வந்து, தன்னை மீண்டும் ஒருமுறை மகனான நடத்தச் சம்மதிக்காத வரையில் எவ்வாறு அவன் தனது குற்றத்தைச் சீர்ப்படுத்த முடியும்? இதன் காரணமாகவே உவமையானது தந்தையின் மகிழ்ச்சிக்கு அழுத்தம் தருகிறது. இத்தகைய திரும்புதல் இல்லாமல், மன்னிப்பை எண்ணிப் பார்க்க முடியாது. மிகத்துல்லியமாக, தந்தை எப்போதுமே அவனை மன்னித்தார். ஆனால், அவனுடைய திரும்புதலால்தான் மன்னிப்பானது பயனுடைய விதத்தில் மகனுடைய பாவத்தைச் சென்றடைகிறது.

ஈ) பாவத்தின்பால் இறைவனுடைய மனப்போக்கைச் சொற்களைவிட, செயல்களாலேயே இயேசு அதிகமாய் வெளிப்படுத்தினார். உவமையிலுள்ள தந்தையைப் போன்று அதே அன்பு மற்றும் கனிவுடன் அவர் பாவிகளை ஏற்றுக்கொண்டார் (லூக் 7:36-38; 19:5; மாற் 2:15-17; யோவா 8:10-11). ஆனால், மூத்த மகனைப்போன்று (லூக் 15:28-30), இந்த இரக்கத்தினைப் புரிந்து கொள்ள முடியாத சாட்சிகளுக்கு இடறல் அளிக்கும் அபாயமும் அங்கே இருந்தது. ஆனால், அவர் பாவத்திற்கு எதிராக நேரடியாகவே செயல்பட்டார். அவரே சோதனை நேரத்தில், முதலில் சாத்தானை வெற்றி கொண்டார். தனது பொதுவாழ்வின்போது தீமையின் வல்லமையினின்றும், நோயும் பேய் பிடித்திருத்தலும் உள்ளடக்கியுள்ள பாவத்தினின்றும் (மாற் 1:23) அவர் மனிதனை விடுவித்தார். "தனது வாழ்வை ஈடாக அளிக்கவும்" (மாற் 10:25), "உடன்படிக்கையின் இரத்தமாகிய தனது இரத்தத்தைப் பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்துவதற்காகவும்" (மத் 26:28) காத்திருந்த வேளையில், ஊழியனுடைய பங்கை அவர் இவ்வாறாகத் தொடங்கி வைத்தார் (மத் 8:16-17).

2. **உலகின் பாவங்கள்:** பாரம்பரிய சொற்றொடரை அறிந்திருந்தாலும் "பாவங்களை மன்னிப்பதை விட" (யோவா 20:23; 1 யோவா 2:12), "உலகின் பாவத்தைப் போக்க வந்த" கிறிஸ்துவைப்பற்றியே யோவான் பேசுகிறார் (யோவா 1:29). தனிச்செயல்களுக்குப்

பின்னணியில் அவற்றைத் தோற்றுவிக்கின்ற, இறைவனையும் அவரது ஆட்சியையும் எதிர்க்கும் வல்லமையாகிய ஒரு மறைபொருளான உண்மையை யோவான் காண்கிறார்.

அ. இந்த எதிர்ப்பானது முதலில், ஒளியைச் சுயமாக, செயல்முறையில் மறுப்பதில் காட்டப்பட்டது. பாவமானது இருளின் மறைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. "ஒளி உலகிற்கு வந்திருந்தும், தங்கள் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர்" (யோவா 3:19). "தனது செயல்கள் வெளிப்படுத்தப்படுமோ என்ற பயத்தினால்" பாவி ஒளியைக் கண்டு அஞ்சி அதை எதிர்க்கிறான். அவன் அதனை வெறுக்கிறான். "தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர்" (3:20). இது குருட்டுத்தனமாக விரும்பிச் செய்யப்படுகிறது. குருட்டுத்தனமாக அன்பு செய்யப்படுகிறது. ஏனெனில், தீமை அதன் உண்மைத்தன்மையில் அடையாளம் காணப்படுவதில்லை. "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால், 'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்கிறீர்கள். எனவே, நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (9:40).

ஆ) இத்தகைய குருட்டுத்தன்மையானது சாத்தானுடைய நெறிகோணிய ஆதிக்கத்தினால் மட்டுமே விளக்கப்படுகிறது. செயல்முறையளவில், பாவம் சாத்தானுக்குப் பணி செய்கிறது. "பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை" (யோவா 8:34). கிறிஸ்தவன் இறைவனுடைய மகனாக இருப்பதுபோல், பாவியும் "தொடக்கமுதல், பாவஞ்செய்துவருகின்ற அலகையின் மகனாக உள்ளான்;" மேலும், "அவன் சாத்தானுடைய செயல்களைச் செய்கிறான்" (1யோவா 3:8-10). இப்போது இச்செயல்களில் மனிதக்கொலை மற்றும் பொய் ஆகிய இரண்டினை யோவான் சுட்டிக்காட்டுகின்றார். "தொடக்கமுதல் அவன் ஒரு கொலையாள். அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும் போதும் அஃது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில், அவன் ஏற்படுத்தப்படவில்லை. அவன் தனது பொய்களைக் கூறும்போது, அவன் பொய்யன், பொய்மையின் பிறப்பிடம்" (8:44). மனிதன்மேல் சாவினைச் சுமத்துவதன் மூலமும் (ஞான 2:24), தனது சகோதரனைக் கொல்ல காயீனைத் தூண்டுவதிலும் (1 யோவா 3:12-15) அவன் கொலைகாரனாக இருந்தான். தங்களிடம் உண்மை பேசுபவரைச் சாவிற்கு உட்படுத்துமாறு யூதர்களைத் தூண்டுவதன் மூலம் அன்றும் அவன் கொலைகாரனாக இருக்கிறான். "கடவுளிடமிருந்து கேட்டறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயல்கிறீர்கள்... நீங்கள் உங்கள் தந்தையைப்போல் செயல்படுகிறீர்கள்... அலகையே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம்" (யோவா 8:40.41.44).

இ தங்கள் முறையில், மனிதக்கொலையும் பொய்களும் வெறுப்பினால் மட்டுமே விளக்கப்படுகின்றன. அலகையைப் பொறுத்தமட்டில், இறை வார்த்தையானது பொறாமையைப் பற்றிக் கூறியது (ஞான 2:24), "வெறுப்பு" என்று கூற யோவான் சிறிதும் தயங்கவில்லை. யூதர்கள் கிறிஸ்துவையும் அவரது தந்தையாகிய இறைவனையும் வெறுப்பதுபோல (யோவா 15:22-23), அதே முறையில், பிடிவாதமான அவிசுவாசியும் ஒளியை வெறுக்கிறான் (3:20). இங்கு யூதர்கள் என்பது கிறிஸ்துவை ஏற்க மறுக்கின்ற சாத்தானுடைய ஊழியத்திற்குட்பட்ட உலகினைக் குறிக்கும். உண்மையில் இந்த வெறுப்பானது இறைமகனுடைய கொலையில் முடிவடையும் (8:37).

ஈ) இவ்வாறு, இயேசு வெற்றிகொண்ட உலகினுடைய பாவத்தின் இயல்பை நாம் காண்கிறோம். அவர் பாவமற்றவராய் இருப்பதனாலும் (யோவா 8:46; காண்க. 1யோவா 3:5), அவரது தந்தையுடன் ஒன்றாக இருப்பதாலும்

(யோவா 10:30), இருளற்ற தூய ஒளியாகவும் (1:5; 8:12), எவ்விதப் பொய்யும் அற்ற உண்மையாகவும் இருப்பதாலும் (1:14; 8:40), இறுதியாக "இறைவன் அன்பு" என்பதால் அன்பாக இருப்பதாலும் (1 யோவா 4:8) அவரால் அவ்வாறு வெற்றிக்கொள்ள முடிகிறது. தனது வாழ்வில் அவர் அன்பு செய்வதை விடாமலிருந்தாலும், மேலும் உயர்ந்ததொன்றை எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு உயர்ந்த அன்பின் செயலாக அவரது மரணம் இருக்கும். மேலும், அவரது மரணமானது அன்பின் நிறைவாக இருக்கும் (யோவா 15:13; காண்க. 13:1; 19:30). போட்டியில் தான் வெல்வதாக எண்ணுகின்ற "உலகினுடைய அரசன்" மீதான வெற்றியாகவும் இந்த மரணம் உள்ளது. ஆனால், இயேசுவிற்கு எதிராக அலகை வல்லமையற்றவனாக உள்ளான் (14:30). "தள்ளப்பட்டவன்" இவனே (12:31). இயேசு உலகை வென்றுவிட்டார் (16:33).

உ) "தான் அளித்த வாழ்வை மீண்டும் எடுக்க" இயேசுவால் முடியும் என்ற உண்மை மட்டுமே மேற்கண்டதற்கு நிரூபணமாக இல்லை (யோவா 10:17). அவரது வெற்றியில் அவரது சீடர்களும் பங்காளர் ஆகின்றனர் என்ற உண்மையே மேலும் உயரிய நிரூபணம் ஆகும். இயேசுவை ஏற்றுக்கொண்டதால் இறைவனின் பிள்ளையாக உருவாகிய நிலையில் (1:12), "கிறிஸ்தவன் இறைவனிடமிருந்து பிறந்திருப்பதால் அவன் பாவஞ்செய்வதில்லை" (1 யோவா 3:9). மேலும், "இறைவனுடைய ஆவியின் மூலமாக அவன் செயல்படும் அளவிற்கு" எனப் பவுல் கூறுவது போல (உரோ 8:14; காண்க. கலா 5:16), "இறைவித்து" அவனில் வாழும் அளவிற்கு, அவனால் பாவம் புரிய முடியாது. உண்மையில், ஆவியில் திருமுழுக்கு அளிப்பதன் மூலம் (அர 1:33), அதாவது, அதற்கு ஆவியை அளிப்பதன் மூலம் இயேசு "உலகின் பாவத்தைப் போக்கி விடுகிறார்" (1:29). சிலுவையில் அறையப்பட்டவருடைய ஊடுருவப்பட்ட விலாவினின்று பொங்கிவரும் நீரால் இஃது அடையாளப்படுத்தப்படுகிறது. பாவத்தையும் அசுத்தத்தையும் கழுவுவதற்கெனத் தாவீதின் வீட்டாருக்குத் திறக்கப்பட்ட நீரூற்று என, செக்கரியா கூறிய ஊற்றாகவும் (யோவா 19:30-37; காண்க. செக் 12:10; 13:1), ஆலயவாயிலின் அடியினின்று புறப்பட்டு, சாக்கடல் கரைகளை இன்பவனமாக மாற்றுவதென எசேக்கியேல் கண்ட (எசே 47:1-12; திருவெளி 22:2) ஊற்றாகவும் இஃது உள்ளது. உறுதியாகவே, கிறிஸ்தவன் இறைவனில் பிறந்திருந்தாலும், மீண்டும் பாவத்தில் விழக்கூடும் (1 யோவா 2:1). ஆனால், "இயேசு நமது பாவங்களுக்குப் பரிகாரமாக்கப்பட்டார்" (2:2); மேலும், அப்போஸ்தலர்கள் சரியாக, பாவங்களை மன்னிப்பதற்கென ஆவியை அவர்களுக்கு அளித்தார் (யோவா 20:22-23).

### 3. பவுலின் போதனைப்படி பாவம் பற்றிய இறையியல்:

அ) பாரம்பரிய வாய்பாடுகளுக்குப் புறம்பே தவறுகள், அல்லது மீறல்கள் என்றழைக்கப்படும் பாவச்செயல்களினின்று பாவத்தை மேலும் தெளிவாக வேறுபடுத்துவதற்கு வளமைமிக்க சொற்றொகுதி பவுலுக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. ஆயினும், இஃது இச்செயல்களின் இடர்த்தன்மையைச் சிறிதும் குறைவு படுத்துவதில்லை. இவ்வாறு, பவுல் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்ற, இன்பவனத்தில் ஆதாமினால் புரியப்பட்ட பாவமானது, மீறல், தவறு மற்றும் கீழ்ப்படியாமை எனத் தொடர்ந்து அழைக்கப்படுகிறது (உரோ 5:14.17.19).

எவ்வாறாயினும், பவுலின் திருமுகங்களில் அடிக்கடி காணப்படும் பாவங்களின் அட்டவணைகள் சுட்டிக்காட்டுவதுபோல, பாவச்செயலானது பவுலின் ஒழுக்கவியலில், ஒத்தமை நற்செய்திகளில் வகிக்கும் இடத்தைவிட தாழ்ந்த இடத்தை வகிப்பதில்லை (1 கொரி 5:10-11; 6:9-10; 2 கொரி 12:20; கலா 5:19-21; உரோ 1:29-31; கொலோ 3:5-8; எபே 5:3; 1 திமொ 1:9; தீத் 3:3; 2 திமொ 3:2-5). சின்னப்பர் சில நேரங்களில், வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுவது

போல, இந்தப் பாவங்கள் அனைத்தும், இறை அரசிற்குப் புறம்பாக்கும் தன்மை உடையன (1 கொரி 6:9; கலா 5:21). பழைய ஏற்பாட்டின் ஒத்த அட்டவணைகளில் உள்ளது போன்று, இப்பட்டியல்கள் பாலின ஒழுங்கின்மைகள், சிலைவழிபாடு மற்றும் சமூக அநீதிகள் ஆகிய தலைப்புகளில் தொகுக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும் (உரோ 1:21-32; மற்றும் 1 கொரி; கலா; கொலோ மற்றும் எபேயில் உள்ள அட்டவணைகள்). "அதிகம் கொண்டிருப்பதற்கென, எப்போதும் ஆசைப்படுவதில்" அடங்கியிருக்கும் பிறர் பொருள் மீதான பேராசை என்னும் பாவத்தின் மீது பவுல் சாற்றிக்கூறும் கனாகணம் குறிப்பிடத்தக்கது. பிறர் பொருள் மீதான ஆசை என்ற தலைப்பின் கீழ் (உரோ 7:7) பத்துக் கட்டளைகள் தடை செய்வதை இது பெருமளவில் ஒத்திருக்கிறது. இதனைச் சிலை வழிபாட்டுப் பாவத்துடன், ஒப்பிடுவதில் பவுல் திருப்தியடையவில்லை. "சிலைவழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசை" என்று இரண்டையும் அவர் ஒன்றெனக் காட்டுகிறார் (கொலோ 3:5; காண்க. எபே 5:5).

ஆ) இந்தப் பாவச்செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அவற்றினுடைய முதன்மையான காரணத்திற்குப் பவுல் திரும்புகிறார். பாவியாகிய மனிதனில், இறைவனுக்கும் அவரது அரசுக்கும் எதிரான சக்தியினுடைய வெளிப்பாடாகவும், புறவடிவாகவும் அவை உள்ளன. யோவான் கூறியிருந்ததும் இதுவே. அதற்குப் பாவம் என்ற ஒருமைச் சொல்லைப் பவுல் சிறப்பான முறையில் ஒதுக்குவது, அதன் சிறப்பு முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள உதவும். ஆனால் முக்கியமாக நம்மில் அதனுடைய தோற்றத்தையோ, அதனுடைய விளைவுகளையோ விவரிக்க, பவுல் முனைகிறார். இதில் பாவம் பற்றிய உண்மையான இறையியல் திட்டம் அளிப்பதில் போதிய துல்லியம் உள்ளது.

வல்லமையாகவும் இவ்வுலகின் கடவுளாகிய சாத்தானுடன் குழப்பப்படும் அளவிற்கு ஆட்தன்மைப்படுத்தப்படும் பாவமானது (2 கொரி 4:4), ஒரு தனிப்பட்ட உண்மையாக உள்ளது. அது பாவ மனிதனுக்குச் சொந்தமானது. அஃது அவனுள் உள்ளது. ஆதாமின் கீழ்ப்படியாமையால் அது மனித இனத்திற்குள் புகுத்தப்பட்டது (உரோ 5:12-19). ஒருவிதப் பின்விளைவாகச் சடப்பொருள் உலகிற்குள் புகுத்தப்பட்டுள்ளது (உரோ 8:20; ஆதி 3:17). பாவமானது விதிவிலக்கின்றி அனைத்து மனிதருக்குள்ளும் சென்று, தண்டிக்கப்பட்டோர் நரகத்தில் துன்புறுவது போன்று, அவர்களைச் சாவிற்கும், இறைவனிடமிருந்தான முடிவில்லாப் பிரிவிற்கும் ஈர்க்கிறது. மீட்பினைச் சாராத நிலையில் யாவும் ஒரு "மீளாத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட தொகுப்பாக" இருக்கின்றன. புனித அகுஸ்தீனாருடைய இச்சொற்கள் சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட்டால், அந்நிலையைத் துல்லியமாக விவரிக்கின்றன. "பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டாலும்" (உரோ 7:14), நன்மையோடு "ஒத்துணர்வு" கொள்ளக்கூடியவனும் (7:16,22), அதனை "விரும்பக்கூடியவனுமான" (7:15,21) மனிதனுடைய இந்நிலையை விரிவாக விவரிக்க பவுல் விரும்புகிறார். மனிதனிலுள்ள அனைத்தும் சீரழிந்து போகவில்லை; ஆனால், நன்மையானதைச் செய்ய அவன் முடியாதவனாக உள்ளான் என்பதை இது நிரூபிக்கிறது (7:18). மேலும், முடிவில்லா மரணத்திற்கு அவன் அவசியமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக (7:24), பாவத்தின் முழு நிறைவாகிய சம்பளத்தையும், விளைவையும் விலக்க முடியாதவனாக உள்ளான் (6:21-23).

இ) மேற்கண்ட கூற்றுகளின் காரணமாக, அப்போஸ்தலர் சில நேரங்களில் எதிலும் கெடுதலையே காண்பவராகக் குற்றஞ்சாட்டப்படுகிறார். குற்றம் சாட்டுவோர், பவுல் இந்தக் கூற்றுகளை உறுதியாகக் கூறியபோது கிறிஸ்துவின் அருளினின்றே பிரித்துக் கொள்கிறார் என்பதை மறந்து விடுகின்றனர். சட்டத்தினுடைய வல்லமையின்மையை நிறுவவும்

மற்றும் கிறிஸ்துவினுடைய விடுதலையளிக்கும் பணியின் முழுமையான அவசியத்தை உயர்த்திக்காட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கித்திற்காக, பாவத்தினுடைய உலகளாவிய தன்மையினையும், கொடுங்கோல் தன்மையினையும் வலியுறுத்துமாறு, அவருடைய விவாதமே அவரை அத்தருணத்தில் வற்புறுத்துகிறது. மேலும், பவுல் ஆதாமுடனான மொத்த மனித இனத்தினுடைய ஒன்றிப் பினை நினைவு கூர்வதன் மூலம், இயேசு கிறிஸ்துவுடனான அனைத்து மனித குலத்தின் உயரிய ஒன்றிப்பினையே வெளிப்படுத்துகின்றார். இறைவனின் எண்ணத்தில் எதிர் மாதிரியான இயேசு கிறிஸ்துவே முதலாவதானவர் (உரோ 5:14). இயேசு கிறிஸ்து அதன்மீது வெற்றி கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஆதாமின் பாவமும் அதன் விளைவுகளும் அனுமதிக்கப்பட்டன என்று இதற்குப் பொருள். மேலும், இதுவும் எவ்வளவு மிகு நிறைவான முறையில் என்றால் முதலாம் ஆதாமினுடைய பங்கிற்கும், இரண்டாம் ஆதாமினுடைய பங்கிற்கும் இடையிலான ஒப்புமைகளைக் காட்டுவதற்கு முன்னரே (5:17-19), வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுவதைப் பவுல் வலியுறுத்துகிறார் (5:15-16).

பாவத்தின் மீதான கிறிஸ்துவினுடைய வெற்றியானது பவுலை ஈர்ப்பதில் எந்த அளவிலும் யோவான் ஈர்க்கப்படுவதிலிருந்து குறைவுபடவில்லை. விசுவாசத்தினாலும் திருமுழுக்கினாலும் ஏற்புடையவனான கிறிஸ்தவன் (கலா 3:26-38; காண்க. உரோ 3:21-23; 6:2-4), பாவத்தினின்று முற்றிலும் முறித்துக்கொண்டு விட்டான் (உரோ 6:10=11). பாவத்திற்கு மரித்தவனாய், மரித்து உயிர்த்த கிறிஸ்துவுடன் அவன் "புதிய உயிராக" (6:5), "புதுப்படைப்பாக" உருவாகியுள்ளான் (2 கொரி 5:17). ஆவியின்படி நடக்க அவன் மறுத்தால் (உரோ 8:4), அழியும் உடலில் வாழும் வரையில் அவன் மீண்டும் பாவத்தில் விழுந்து "தனது இச்சைகளுக்கு இடங்கொடுத்தாலும்" (6:12), அவன் இனியும் ஊனுடலில் அன்று, ஆவியிலேயே உள்ளான் (7:5; 8:9).

ஈ) இறைவன் பாவத்தின்மீது மட்டும் வெற்றி கொள்ளவில்லை. மூலவளத்தில் எல்லையற்ற அவரது ஞானம் (எபே 3:10), பாவத்தைப் பயன்படுத்தும் வேளையில் இந்த வெற்றியை அடைகிறது. இறைவனுடைய அரசிற்கும் மனிதனுடைய மீட்பிற்கும் முதன்மைத்தடையாக இருந்த, இந்த மீட்பினுடைய வரலாற்றில் ஒரு பங்கு வகிக்கிறது. உண்மையில் பாவத்துடனான தொடர்பில் "இறைவனுடைய ஞானத்தைப் பற்றி," பவுல் பேசுகிறார் (1 கொரி 1:21-24; உரோ 11:33). எவ்விதச் சந்தேகமுமின்றி, தனது உள்ளத்திற்குப் பெருந்துயராகவும் (உரோ 9:2), எந்நிலையிலும் தனது ஆர்வத்திற்கு இடரலாகவும் உள்ள பாவத்தைப்பற்றித் தியானிக்கும் வேளையில், முக்கியமாக அவர் இதனைச் செய்கிறார். இஸ்ராயேலின் அவிசுவாசம் இதுவே. இந்தப் பிரமாணிக்கமின்மை, எவ்வளவு ஒரு சார்பானதாகவும் தற்காலிகமானதாகவும் இருந்தாலும் (உரோ 11:25), மனித இனத்திற்கான இறைவனுடைய மீட்புத் திட்டத்தில் நுழைந்து விட்டது: மற்றும், "அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக, கடவுள், அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்" (உரோ 11:32; கலா 3:22) என்று பவுல் புரிந்து கொள்கிறார். "கடவுளின் அருட்செல்வம் எத்துணை மிகுதியானது! அவரின் ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை" என்று பவுல் நன்றியுள்ள வியப்போடு பறை சாற்றுவார் (உரோ 1:33).

உ) மனிதனுடைய மீட்பிற்கான பாவத்தையும் உபயோகிக்கின்ற இறை ஞானத்தினுடைய இந்த மறைபொருளானது, இறைமகனுடைய பாடுகளைத் தவிர வேறெங்கும் இவ்வளவு தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை. உண்மையில், தந்தையாகிய இறைவன் தனது

மகனைச் சாவிற்குக் கையளித்தாரெனில் (உரோ 8:32), கற்பனை செய்யக்கூடிய அன்பு மற்றும் கீழ்ப்படிதலினுடைய மிகப்பெருஞ்செயலை அவர் செய்து முடிக்கக்கூடிய நிலைகளில் அவரை நிலைநிறுத்துவதற்கும், இவ்வழியாக, ஊன் நிலையினின்று ஆவியின் நிலைக்குக் கடந்து செல்வதன் மூலம் நமது மீட்பினைக் கொண்டு வருவதற்கும் ஆகும். இந்தக் கடந்து செல்லுதலை அவரே முதலில் செய்கிறார். இந்தச் செயலுக்கென மிகவும் ஏற்ற நிலைகளை உருவாக்குவதற்கென கட்டளையிடப்பட்ட மரணத்தின் சூழ்நிலைகள் அனைத்தும் மனிதனுடைய பாவத்தின் விளைவுகள் உள்ளன. யூதாசு காட்டிக்கொடுத்தல், அவரது அப்போஸ்தலரால் கைவிடப்படுதல், பிலாத்துவினுடைய பலவீனம், யூத இன அதிகாரிகளுடைய வெறுப்பு, கொலை நிறைவேற்றுவோரின் கொடூரம் ஆகிய காணக்கூடிய இவை அனைத்திற்கும் மேலாக அழிப்பதற்கென அவர் இறந்த நமது பாவங்கள் முதலியன இந்தச் சூழ்நிலைகளாகும். வேறு எந்த மனிதரும் அன்பு செய்திராத அளவிற்கு அன்பு செய்ய அவரை அனுமதிக்க தனது மகன் மனிதனுடைய பாவத்தினால் வடுப்பட வேண்டும் என்று கடவுள் சித்தம் கொண்டார். அன்பினுடைய மேலான செயலின் விளைவாக, இறைவனுடைய பலனுள்ள விளைவுகளுக்கு நாம் உட்படுவதற்காக, பாவமாகிய மரணத்தினுடைய வல்லமையின் தீய விளைவுகளுக்குத் தனது மகனை உட்படுத்தினார் (2 கொரி 5:21). எனவே, பாவம் முதற்கொண்டு "தன்னிடம் அன்பு கூர்பவர்களுடைய நன்மைக்கென இறைவன் அனைத்துப் பொருட்களையும் செயல்படுத்துகிறார்" என்பது உண்மையே (உரோ 8:28).

**பாவு (PAU - முணங்கல், ஆட்டின் கத்தல்)**

ஏதோமின் நகரான இஃது, அதாது அரசனின் தலைநகராகும் (ஆதி 36:39; 1 அர 11:14; 1 நாள் 1:50). இதன் அமைவிடம் சரியாகத் தெரியவில்லை. 1 நாள் 1:50-இல் இது பாயி என்றழைக்கப்படுகிறது.

**பாழாக்கும் அருவருப்பு (ALIOMINATION THAT MAKES DESOLATE)**

காண்க: நடுங்க வைக்கும் தீட்டு.

**பாளையம், பாசறை (CAMP)**

ஓர் இனத்தின் அல்லது படையின் தற்காலிகமான மற்றும் பாதுகாக்கப்பட்ட இடம். விவிலியகாலத்தில் பாளையக் கூடாரங்கள் வட்ட வடிவமாகவோ, சதுர வடிவமாகவோ அமைக்கப்பட்டு எப்போதும் வீரர்களால் காவல் காக்கப்பட்டன (யோசு 7:19). அடிக்கடி பாளையங்களைச் சுற்றி, சாமான் ஏற்றி வரும் வண்டிகள் நிற்கும். இதுவே ஒரு பாதுகாப்பு அரணாக அமையும். பெலிஸ்தியர்களும் (1 சாமு 17:20), தாவீதைத் தேடியபோது சவுலும் (26:5,7), இத்தகைய பாளையங்களைப் பயன்படுத்தியிருக்கின்ற. போர்க்காலத்தில் சாமான் வண்டிகளுக்குப்பின் வீரர்கள் நின்று பாளையத்தைக் காத்து வந்தனர் (25:13).

பாலைவனத்தில் இஸ்ராயேலரின் பாளையம் ஒரு போர்க்காலக் குடியிருப்பு போல் அமைந்திருந்தது (எண் 2). இறைவன் பாளையம் ஒரு புனிதப்பண்பு பெற்றது. தூய்மையற்றது எதுவும் பாளையத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் புறம்பே வைக்கப்பட வேண்டும். மோசே மலையில் இறைவனோடு இருந்தபோது, இஸ்ராயேலர் பொன் கன்றுக்குட்டி செய்து பாவம் செய்து பின்னர், மோசே இறைவனைச் சந்திப்பதற்காக, பாளையத்துக்கு வெளியே ஒரு கூடாரம் அமைத்தார் (யாத் 33:7-14). வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையுமுன், ஆண்டவர் பாளையத்தில் பிரசன்னமாய் இருப்பதால், பாளையத்தைப் புனிதமானதாக வைத்திருக்க இஸ்ராயேலர் எச்சரிக்கப்படுகின்றனர் (உப 23:14). தீட்டுடைய எதுவும் இறைவனை மக்களிடமிருந்து விலகியிருக்கச் செய்யும் (23:12-14).

எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் (எபி 13:11-12) பாவப்பரிகார நாளில் மக்களின் பாவங்களுக்காகப் பலியிடப்பட்ட விலங்கின் உடல்

"பாளையத்திற்குப் புறம்பே' எரிக்கப்படுவதையும், இயேசு எருசலேம் 'நகர் வாயிலுக்கு வெளியே" சிலுவையில் அறையப்படுவதையும் இணைப்படுத்துகிறார். விசுவாசிகள் "பாளையத்திலிருந்து வெளியேறி" இயேசு பட்ட நிந்தைகளில் பங்கு பெறுமாறு (13:13) அளிக்கப்படும் அறைகூவல் யாத் 33:7-11-இல் காணப்படும் மோசேயின் செயலைச் சுட்டலாம். திருவெளி 20:9-இல் வரும் "இறை பாசறை" (பாலைவனத்தில் இஸ்ராயேலர் வாழ்ந்தது போன்று) விசுவாசிகளின் திருயாத்திரையை அல்லது இறையரசுக்குப் பணிவதைக் குறிக்கலாம்.

**பாறை (ROCK)**

இதுவரையிலும் வெவ்வேறான பொருளில் வழங்கி வந்த இரு கருத்துக்களைச் சேர்த்து, ஆண்டவர் இயேசுவே பாலைவனப் பாறை (1 கொரி 10.40) என, பவுல் கூறுகின்றார். "இறைவன் இஸ்ராயேலின் பாறை" (2 சாமு 23:3); வறட்சியின் சின்னமான பாறையினின்று கடவுள் வாழ்வளிக்கும் நீரை வரச் செய்தார்.

**1. பாறையைப் போன்று கெட்டியானவர் இறைவன்:** தப்பியோடுபவனுக்குப் பாதுகாப்பாக மலையைப்போல் பாறையின் கெட்டித்தன்மையும் புகலிடமாக அமைகின்றது. பாறையின் குழிவான பகுதி புகலிடமும் பாதுகாப்புமளிக்கிறது (எரே 48:28). இஸ்ராயேலருக்கு மீட்பினை உறுதியளிப்பதால் இறைவன் இஸ்ராயேலின் பாறை எனப்படுகிறார். பாறை எனும் சொல்லின் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஏனைய இறைத்தலைப்புக்களும் மேற்சொன்ன பொருளையே அழுத்திக் கூறுகின்றன. கடவுள் ஓர் கோட்டை, தஞ்சம், அலங்கம், கேடயம், கெட்டியான கோபுரம், துறைமுகம் என்பன (2 சாமு 22:2 தொ; சங் 18:3. 32; 31:4; 61:4; 14:2). இறைவனே முடிவில்லாதவரும் (எசா 26:4; 30:29) பாறையுமாகையால் (44:8) மனிதன் அவரில்தான் தன் நம்பிக்கையை வைத்தல் வேண்டும். பாறையானது உறுதியான பாதுகாப்பு மட்டுமன்று, கெட்டியான அடித்தளமுமாகிறது. பிரமாணிக்கம் உள்ளவராதலால், இறைவனே பாறை (உப 32:4; சங் 92:16). அவரில் விசுவாசங்கொள்பவன் தடுமாறான் (எசா 28:16). இப்பாறையின் மீது தன் அடித்தளத்தை எழுப்ப மறுப்பவன் அப்பாறையின் மீதே மோதி நசுக்கப்படுவான். இடறல் கல்லுக்கு (8:14) இரையாகிச் சுக்கு நூறாவான்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே அடிக்கல் (உரோ 9:33; 1 பேதுரு 2:6 தொ); அவருடைய வார்த்தைக்குச் செவிமடுப்பவன் பாறையின் மீது கட்டுகிறான் (மத் 7:24). பேதுரு எனும் பாறையின்மேல் திருச்சபை கட்டப்பட்டுள்ளது. பேதுரு அதன் நிலையான தன்மையில் பங்கு பெறுகிறார் (16:18).

**2. இறைவன் கரத்தில் பாறை:** விளைச்சல் கொடாத பாறை மலட்டுத்தன்மையின் அடையாளமாகும். இறைவன் தன்னை ஆசிர்வதித்துப் பலுகிப் பெருகச் செய்யுமுன் தனிமையிலிருந்த ஆபிரகாம் பாறையைப் போலானார் (எசா 51:2; காண்க. மத் 3:9). இப்பாறையினின்று உருவாகிவாழ்ந்து வந்த இஸ்ராயேலரின் கூட்டம், இறைவனின் எல்லையற்ற வல்லமையின் சின்னம். அவருடைய திருக்கரத்தில் பாலஸ்தீனப்பாறைகள் உணவு வழங்குகின்றன (உப 32:13). இதற்கும் மேலாக, வறண்ட பாலைவனத்திலே, நாம் காணும்படியாக படைப்பின்மேல் தமக்குள்ள ஆதிக்கத்தை இறைவன் வெளிப்படுத்துகிறார். காய்ந்துபோன பூமியினின்றும், மெரிபா பாறையினின்றும் நீர் பெருகி ஓடச் செய்கின்றார் (யாத் 17:6; எண் 20:10 தொ).

இறைவனின் இச்செய்கை இறுதிநாளில் நிகழவிருக்கும் அதிசயங்களின் முன்னறிகுறியாக விளங்குகின்றது (சங் 78:15-20; 105:41; எசா 43:20). மீட்புநாளில் தேவாலயத்தினின்று ஒரு நதி புறப்பட்டு, புனித நாட்டை இன்பவனமாக மாற்றும் (எசே 47:1-12; செப் 14:8). நற்செய்தியிலே இப்புதுமை நிகழ்ந்தேறக் காணலாம். தூய ஆவியால் நிரப்பப்பட்ட இயேசு, தன்னைப் பின்

தொடர்பவர்கட்கு ஆவியானவரை வழங்குவதால் உயிருள்ள நீரின் ஊற்றைத் திறக்கின்றர் (யோவா 7:37தொ, 19:34). விடுதலை நோக்கி நடைபோடும் புதிய இனத்தின் பாறை அவர். பழைய ஏற்பாட்டின் காலத்திலும், கிறிஸ்து எனும் பாறையினின்றே மக்கள் மெய்யான வரங்களைப் பாலைவனத்தில் பெற்றார்கள் என பவுல் மொழிகின்றார் (1 கொரி 10:4). மனித உறுதிகளால் அல்லாமல், பிரமாணிக்கமுள்ள இறைவனின் அருளால் அப்பாறையில்தான் நாம் நிலையாக நிற்கிறோம் (10:12 தொ).

**பாற்கட்டி, பாலாடைக்கட்டி (CHEESE)**

விவிலியத்தில் உணவுப்பொருள்கள் பற்றிக் கூறப்படும் பகுதிகளில் இரண்டு முறை பாலாடைக்கட்டி பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

அ) தாவீது பாசறையில் இருக்கும் தனது சகோதரர்களுக்குப் பாலாடைக்கட்டி கொண்டு வருவார் (1 சாமு 17:18).

ஆ) தாவீது மகனாயிம் என்ற பாளையத்தை அடைந்தபோது சோபியும், அம்மியேலும், பர்சில்லாயும் கோதுமை, வாற்கோதுமை, மாவு, வறுத்த தானியம், பாற்கட்டிகள் போன்ற பொருட்களை அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர் (2 சாமு 17:29).

விவிலியகாலத்தில் உப்பிட்ட தயிரினைச் சிறிய வட்டமான தட்டுகளின் ஊற்றி, திறந்த வெளியில் அவற்றைக் காயவைத்து அல்லது உறையவைத்துப் பாலாடைக்கட்டி தயாரிக்கப்பட்டது. யோபு என்பவர், "பால் போல என்னை நீர் வார்க்கவில்லையா? தயிர்போல் என்னை நீர் உறைவிக்க வில்லையா?" என்று யாவேயிடம் கேட்கிறார் (யோபு 10:10).

**பானப்படையல், பானப்பலி (LIBATION, DRINK OFFERING)**

இது திரவம் அல்லது பானக்காணிக்கையைப் பலியாக ஒப்புக்கொடுத்தலாகும். இஸ்ராயேலர் ஒவ்வொருநாளும், நோன்பு நாட்களில் அதிக அளவிலும், உணவுப் பொருள்களில் பலவற்றை ஒழுங்காக அளித்த காணிக்கைப் பொருளான விலங்குகள், தானியம், எண்ணெய் போன்ற பொருட்களோடு, பானக்காணிக்கையும் ஒன்றாகும் (எண் 28:29). தூயகத்தில் ஆண்டவருக்குப் பானப்படையலாக மதுபானத்தை ஊற்ற வேண்டும் (28:7). விலங்குகளோ, தானியங்களோ காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்படும்போது பானப்படையலும் சாதாரணமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது (எண் 6:15. 17; 1 நாள் 29:21; 2 நாள் 29:35; எஸ் 7:17). ஒப்புக்கொடுக்கப்பட்ட விலங்கின் பருமனுக்கேற்ப, பானப்படையலின் அளவும் இருந்தது (எண் 28:14). பெத்தேலில் பீடத்தை யாக்கோபு திருநிலைப்படுத்தும்போது பானப்படையலையும் பயன்படுத்தினார் (ஆதி 35:14).

பானக்காணிக்கை பழம் மேற்காசியாவில் வழிபாட்டில் பரவலாகப் பயன்பட்டது; ஆகவே, இஸ்ராயேலர் ஈடுபட்ட சில வழிபாட்டில் ஓர் இடம் வகித்தது (எசா 57:6; எரே 20:28). யாவே வழிபாட்டில் பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தம் சிந்தப்பட்டது; ஆனால், இரத்தத்தைப் பானப்படையலாகப் பயன்படுத்தும் பழக்கம் மற்றத் தெய்வங்களின் வழிபாட்டில் மட்டுமே தொடர்பு கொண்டிருந்தது (சங் 16:4).

நற்செய்தியின் பணியில் தனது இறப்பைக் குறிக்க பவுல் பானப்படையலை உருவகமாகப் பயன்படுத்துகிறார் (பிலி 2:17).

**பானம் (DRINK)**

விவிலிய காலங்களில் மனிதனால் பருகப்பட்ட முக்கியமான பானங்கள் திராட்சைரசம், பால், தண்ணீர் ஆகியவையாகும் (சீரா 39:26; இவை மனித வாழ்க்கைக்கு அவசியமான தேவையான மூன்று பொருட்கள் என்று கொடுக்கப்பட்டுள்ளன). இவற்றோடு, தாகத்தைத் தணிக்கும் பானமாகக் காடி பயன்படுத்தப்பட்டது. குடிப்பது என்பது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கண்டிக்கப்படவில்லை; சீனாய் மலைமீது

மோசேயும், தலைவர்களும் கடவுள் முன்னிலையில் உண்டார்கள், குடித்தார்கள் (யாத் 24:9-11). கடவுள் பயம் அற்றவர்கள்தான் தாகமாயிருப்பவர்களுக்குக் குடிக்கக் கொடுப்பதில்லை (எசா 32:6). மேலும், இயேசு தனது நற்செய்தியை "நிலைவாழ்வு அளிக்கிற தண்ணீர்" (யோவா 4:14) என்றும், தன் இரத்தத்தை "உண்மையாகவே குடிக்கலாம்" (6:55) என்றும் கூறுகின்றார். "உண்பதையும் குடிப்பதையும், தன் உழைப்பால் வரும் இன்பத்தைத் துய்ப்பதையும் விட நலமானது மனிதனுக்கு வேறொன்றுமில்லை" என்று திருவுரையாளர் கூறினாலும் (திருவுரை 2:24; 3:13; 5:18; காண்க. 8:15), "கடவுளின் அரசு உணவிலும் பானத்திலும் அடங்கியில்லை; கடவுளின் அரசு என்பது நீதியும், அமைதியும் பரிசுத்த ஆவியில் துய்க்கும் மகிழ்ச்சியும் ஆகும்" என்று பவுல் கூறுகிறார் (உரோ 14:17).

**பானம் பரிமாறுபவர் (CUPBEARER)**

இவர் அரசருக்குத் திராட்சை ரசம் தருபவர். அவரது நம்பிக்கையையும் பெற்றவர். சூழ்ச்சிகள் பற்றிய அச்சம் இந்த வேலையைத் தனிச்சிறப்பான நம்பிக்கைக்குரியதாக்கியது. இதற்குப் பிரமாணிக்கம் முதன்மையான பண்பாகும். சாலமோன் மன்னருடைய பானம் பரிமாறுபவரும், மற்றவரும் சேபாவின் அரசியை வியப்பில் ஆழ்த்தினர் (1 அர 10:5; 2 நாள் 9:4). நெகேமியா பாரசீக மன்னருக்குப் பானம் பரிமாறுபவராக இருந்தார் (நெகே 1:11; 2:1). இந்த வெளிநாட்டவரான நெகேமியா இந்த உயர்ந்த பதவியை வகிக்கக் காரணம் அவரது சுர்மதியும், நேர்மையும், பாரசீகத்தின் சுதந்தரப்போக்குமாகும்.

**பானி (BANI - நிறுவியவர்)**

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பிறகு உண்டான ஒரு பெயர். இது பல பெயர்களோடு ஒன்றித்துச் செல்வதால் பல்வேறு கருத்துகளுக்கு இடம் அளிக்கிறது.

1. காது வம்சத்தினர். தாவீதின் புகழ் பெற்ற 30 பேர்களில் ஒருவர் (2 சாமு 23:36). இதையொத்து நாளாகமத்தில் காணப்படும் பெயர்ப்பட்டியலில் (1 நாள் 11:38) இப்பெயர் காணப்படவில்லை.

2. மெராரியின் வழிவந்த ஒரு லேவியர். ஏத்தான் குடும்ப வழிவந்தவர். தாவீது காலத்தில் ஆலயப்பாடகர் (1 நாள் 6:46).

3. யூதாவின்மகன். பெரேட்சின் சந்ததியில் பிறந்த ஊத்தாயின் வழிவந்தவர் (1 நாள் 9:4).

4. செருபாபேல் மற்றும் எஸ்ராவின் தலைமையில் அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய ஒரு பெரும் குடும்பப் பெயர்ப்பட்டியலில் இவரது பெயர் இடம் பெறுகிறது (எஸ் 2:10; 8:10).

5. தனி நபரைக்காட்டிலும், ஒரு குடும்ப அளவில் தோன்றும் சிறு கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இவர்களில் பலர் அன்னியப் பெண்களை மணந்தவர்கள் (எஸ் 10:29.34).

6. எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்த்த இரகூமின் தந்தை (நெகே 3:17).

7. எஸ்ரா சட்டத்தை மக்களுக்கு அறிவிக்க, அதை மக்களுக்கு விளக்கிக்காட்டிய லேவியர்களுள் ஒருவர் (நெகே 8:7). இவர் பொதுச் செபத்திலும் பங்கெடுத்தார் (9:4-5). நெகேமியா தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர் (10:13).

8. எஸ்ரா காலத்தில் கூடாரத் திருவிழாவில் கலந்து கொண்ட ஒரு லேவியர் (நெகே 9:4-5).

9. நெகேமியா தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:15).

10. எருசலேமில் லேவியர் குலத்தின் மேற்பார்வையாளராய் இருந்த உசீயின் தந்தை (நெக 11:22).

**பானுவேல் (PHANUVEL - இறைவன் முகம்)**

பானுவேல், இறைவாக்கு உரைப்பவளான அன்னாவின் தந்தை (லூக் 2:36).

# பி

**பிகஹிரோத்து (PIAHIROTH - கோரைப்புல் நிலம் (தேவர்), ஆர்து தெய்வத்தின் வீடு)**

இது நைல்நதியின் கிழக்குக் கழிமுகப் பகுதியில் உள்ள நகரம். இதன் அருகில் யாத்திரையின் தொடக்ககாலத்தில், செங்கடலைக் கடக்குமுன் இஸ்ராயேல் மக்கள் கடைசியாகத் தங்கியிருந்தனர் (யாத் 14:2.9; எண் 33:7). பாகால் - செபோன் என்னும் இடத்திற்கு அருகில் பிகஹிரோத்து இருந்ததாக எண் 33:7 கூறுகின்றது. இஃது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால், நைல் கழிமுகப்பகுதியில் கிழக்குக் கோடியில் இருந்திருக்க வேண்டும்.

**பிகதா (BIGTHA – கடவுளின் கொடை)**

அகசுவேர் அரசனின் கீழ் இருந்த ஏழு அண்ணகர்களில் இவனும் ஒருவன். அந்தப்புரக் காவலர்களாகிய இவர்கள் அரச கட்டளைப்படி அரசி வஸ்தியை அவன்முன் அழைத்து வர அனுப்பப்பட்டவர்கள் (எஸ்த 1:10). இவனும் எஸ்த 2:21; 6:2-இல் குறிப்பிடப்படும் பிகதானும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**பிகதான், பிகதானா (BIGTHAN, BIGTHANA – கடவுளின் கொடை)**

இவன் அகசுவேர் அரசனின் அரண்மனையின் தலைவாயிலைக் காத்து வந்த இரு அண்ணகர்களில் ஒருவன். மற்றொருவன் தெரேசு என்பவன் ஆவான் (எஸ்த 6:2; 2:21). இந்த இரு அண்ணகர்களும் அகசுவேர் அரசன்மேல் சினம் கொண்டு, அவனுக்கு எதிராய் எழுந்து அவனைக் கொல்ல வாய்ப்புத் தேடினர் (2:21). மொர்தக்காயின் செய்தியால் அஃது உண்மை எனத் தெரியவே அக்காவலர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டார்கள். இவனும் எஸ்த 1:10–இல் குறிக்கப்படும் பிகதாவும் ஒரே ஆளாக இருக்கலாம்.

**பிகல் (PHYGELUS – தப்பியோடியவர்)**

ஆசியாவைச் சேர்ந்த கிறிஸ்தவனான பிகல் பவுலைக் கைவிட்டு விலகிச் சென்றார். இவர் கருத்து வேறுபாட்டாலோ, உரோமையில் பவுலைப் போன்று உயிர் துறக்க வேண்டுமே என்ற அச்சத்தாலோ அவரிடமிருந்து விலகிச் சென்றதாகக் கருதப்படுகிறது (2 திமொ 1:15). இதற்கு மாறாக, ஒனேசிப்போர் பவுலுக்கு ஆறுதல் அளித்தார். விலங்கிடப்பட்ட பவுலைக் குறித்து வெட்கப்படவில்லை (1:16-17).

**பிகவாய் (BIGVAI - மகிழ்ச்சியான)**

இவர் பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பிய யூதத்தலைவர்களில் ஒருவர் (எஸ் 2:14; நெகே 7:19). “பிகவாயின் புதல்வர்களில்” சிலர் எஸ்ராவோடும் திரும்பி வந்தார்கள் (எஸ் 2:2; நெகே 7:7). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் இவரும் இடம் பெறுகிறார் (நெகே 10:16).

**பிக்கோல் (PHICOL – வலிமையான)**

பிக்கோல், அபிமெலக்கின் படைத்தலைவன் ஆவார். அபிமெலக்கு ஆபிரகாமோடு பெயேர்செபாவிலும் (ஆதி 21:22-32), ஈசாக்கோடு கெராரிலும் (ஆதி 26:26-31) உடன்படிக்கை செய்து கொண்டதற்குச் சாட்சியாவார். இப்பெயர் ஓர் ஆளின் பெயரைவிட, ஒரு பட்டமாக இருக்கலாம்.

**பிக்ரி (BICHRI – தலைப்புதல்வன்)**

பென்யமின் இனத்தைச் சேர்ந்த சேபாவின் தந்தை, சேபா தாவீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான் ( 2 சாமு 20:1 தொ). இப்பெயர் இனப்பெயராக இருப்பதால் "பிக்ரியின் மகன்" என்ற சொற்றொடருக்குச் சேபா, பெக்கர் குலத்தைச் சேர்ந்தவன் என்று பொருள் கொள்ளலாம் (ஆதி 46:21; 1 நாள் 7:6.8).

**பிக்ரியர் (BICHRITES)**

பிக்ரியின் வழித்தோன்றல்களும் கிளர்ச்சி செய்த சேபாவின் உறவினர்களுமாவர் (2 சாமு 20:14).

**பிசிதியா (PISDIA)**

சிறிய ஆசியாவின் மத்திய தென்பகுதியின் மத்தியில் அமைந்த ஒரு மலைப்பங்கான பகுதியே பிசிதியா. இதற்குத் தெற்கே பம்பிலியாவும், மேற்கே லீக்கியாவும் காரியாவும், வடக்கே பிரிகியாவும், கிழக்கே இசாவுரியாவும் அமைந்துள்ளன. இப்பகுதி கிழக்கு மேற்காக 192 கி.மீ. தொலைவும் தெற்கு வடக்காக 80 கி.மீ. தொலைவும் பரந்து விரிந்து கிடக்கிறது. தவுரசு மலைப்பகுதியில் மலைகள் பல சூழ அமைந்துள்ளதால் இதனை அன்னியர் புகுந்து கைப்பற்றுவது கடினமாகும். மேலும், இப்பகுதியின் முரட்டுப் போர்த்தன்மையுடைய மக்கள், உரோமைய, கிரேக்கக் கலாச்சாரத்துக்குத் தங்களையே அவ்வளவு எளிதாக அளித்து விடவில்லை. ஆனால், இம்மலைப்பாங்கான பகுதி வளமிக்க பள்ளத்தாக்குகளையும், பெரிய ஏரிகளையும், காடுகளையும் கொண்டுள்ளதால் ஏராளமான ஒலிவமரங்கள் வளர்கின்றன; மேய்ப்பு நிலங்களும் நிறைந்துள்ளன. இங்கு, திராட்சை ரசம் சிறந்ததாக உள்ளது. எனவே, ஏராளமானோர் வாழ்வதற்கு வாய்ப்பளிக்கிறது.

உரோமையர் காலத்துக்குமுன் வேறெவருக்கும் பிசிதியா கீழ்ப்பட்டிருந்ததில்லை. கி.மு. 25-இல் கலாத்திய அரசனான அமிந்தசு தனது உயிரை இழந்தபின், அவரது முயற்சியான பிசிதியாவைக் கைப்பற்றுதல் உரோமையர்களால் தொடரப்பட்டது. அகுஸ்து சீசர் பிசிதியாவிற்கு வெளியே உரோமைக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தி அதனைப் பிசிதியாவோடு இணைத்து, பிசிதியாவை ஏனைய உரோமைக் குடியேற்ற நகரங்களோடு இணைத்தான். இங்கு அந்தியோக்கு என்பவன் அதிகாரியாக இருந்தான். இவனையே அ.ப. 13:14 'பிசிதியாவின் அந்தியோக்கு' என அழைக்கிறது. ஆனால், இது பிசிதியாவில் உள்ள அந்தியோக்கு என்னும் ஓர் இடத்தைக் குறிப்பதாகக் கொள்வதே சரியென்கின்றனர்.

கி.மு. 25-இல் கலாத்தியா உரோமையர்களின் ஒரு பகுதியானபோது கலாத்தியா மட்டுமன்று, பிசிதியா, லிக்கவோனியா, இசாவுரியா, பிரிகியாவின் ஒரு சில பகுதிகள் ஆகியவையும் இணைக்கப்பட்டன. இதனால்தான் பவுல் வடக்கே பம்பிலியாவிலுள்ள பெருகையிலிருந்து செல்லும் போது, பிசிதியாவின் அந்தியோக்கு வழியே சென்றார் (அ.ப. 13:14). இது கலாத்தியாவின் ஒரு பகுதியே. பவுல் பிசிதியா வழியில் போகும்போதோ, திரும்பும்போதோ எங்கும் தங்கவில்லை (14:24). ஏனெனில், இப்பகுதியில் யூதர்கள் அதிகமில்லை. இங்கு வாழ்ந்தவர்களே யூத-கிரேக்கப் பண்பாட்டை வெறுப்பவர்களாக இருந்தனர். 2 கொரி 11:26-27-இல் குறிப்பிடுவதன்படி திருடர்களிடமிருந்து இவர் பெற்ற ஆபத்து இப்பிசிதியாவின் மக்களிடமிருந்து பெற்றதாகவே இருக்க வேண்டும். ஆனால், பிசிதியாவின் எப்பகுதியில் பயணம் சென்றார் எனக் கூற இயலாது. அவர் பெருகையிலிருந்து வடக்கே சென்று, தென்கிழக்கே லிம்னாய் என்றழைக்கப்பட்ட இரட்டை ஏரிகளின் கரை ஓரத்திலே பயணம் செய்து, அததா என்னும் பகுதியின் வழியே சென்றிருக்க வேண்டும்.

கி.பி. 74-இல் வெஸ்பாசியன் பிசிதியாவின் தென்பகுதியை உரோமையின் மாநிலமான லீக்கியா-பம்பிலியாவோடு இணைத்தார். வட பகுதி கலாத்தியா மாநிலத்துடன் இருந்தது. பின்னர், கலாத்தியாவின் ஒரு பகுதியான பிசிதியா தனியே பிரிக்கப்பட்டு, பிசிதியா மாநிலமாக விரிவுபடுத்தப்பட்டது.

**பிசித்தா (BIZTHA - அண்ணகன்)**

அகசுவேர் அரசனின்கீழ் அந்தப்புரக் காவலர்களாயிருந்த ஏழு அண்ணகர்களில் இவரும் ஒருவர். அரசி வஸ்தியை அழைத்து வர அனுப்பப்பட்டவர் (எஸ்த 1:10).

**பிசியோத்தியா (BIZIOTHIAH - யாவேயின் வெறுப்பு, புறக்கணிப்பு)**

யூதாவின் நெகேபு மாவட்டத்தில் பெயேர்செபாவுக்கு அருகிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:28). இப்போதுள்ள வாசகம் பழுதுபட்டுள்ளது. இஃது ஒரு வேளை "அவள் புதல்விகள்" (அதாவது சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்கள்) என்று வாசிக்கப்பட வேண்டும்.

**பிசின் மரம் (BALSAM TREE)**

இது 1 நாள் 14-15-இல் பிசின் மரம் என்றும், அதற்கு இணையான 2 சாமு 5:23-24-இல் முசுக்கொட்டை மரம் என்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை மரம் என்பதைவிட, புதர்ச்செடி என்பது மேல். இச்செடி பால்போன்ற சாற்றினைச் சுரக்கும். இது யூதேயாவின் மலைப்பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனுடைய பல கிளைகளும் கடினமான இலைகளும் பாதுகாப்புக்கோ, மறைந்துகொள்வதற்கோ தகுந்த இடம் அளிக்கக்கூடியது.

**பிசைந்து மாவு (DOUGH)**

இது மாவும் (அல்லது உணவு) தண்ணீரும் (அல்லது ஒலிவ எண்ணெய்) சேர்ந்த ஒரு கலவையாகும். இது மரப்பாத்திரத்திலோ, மாவு பிசையும் பாத்திரத்திலோ பிசையப்படும் (யாத் 12:34. 39; 1 சாமு 13:8; எரே 7:18; ஓசே 7:4; உரோ 11:16; 1 கொரி 5:6-7). பிசைவதற்குச் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் மாவுகள் வாற்கோதுமை, கோதுமை ஆகியவையாகும்; சில சமயங்களில் பிற தானியங்களும் பயன்பட்டன. பிசையப்பட்ட மாவில் சிறிது புளிப்பு மாவு சேர்க்கப்பட்டு, புளிக்கச் செய்தபின் அப்பம் செய்யப்பட்டது. பிசைந்த மாவு, எண் 15:20-21; நெகே 10:37; எசே 44:30-இல் குறிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இஃது உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (உரோ 11:16; 1 கொரி 5:6-7). இது மாவு பிசையும் பாத்திரத்திலிருந்தும், போரடிக்கும் களத்திலிருந்தும் முதற்பலனைக் காணிக்கையாகக் கொடுப்பதை உணர்த்தலாம் (எண் 15:20-21; எசே 44:30; உரோ 11:6).

மாவு பிசையும் பாத்திரம் மரம், வெண்கலம், மட்கலங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்டிருக்கலாம். எகிப்தில் கொள்ளை நோய்கள் தாக்கியபோது தவளைகள் மாவு பிசையும் பாத்திரங்களிலும் ஏறிவந்து விட்டன (யாத் 7:28). இஸ்ராயேலர் எகிப்தை விட்டு ஓடியபோது மாவு பிசையும் பாத்திரங்களையும் எடுத்துச் செல்வதில் கவனமாய் இருந்தனர் (12:34). யாவேயின் ஆசீரையும் சாபத்தையும் பெறும் பொருட்களில் மாவு பிசையும் பாத்திரமும் உள்ளடங்கும் (உப 28:5.17).

**பிசோன் (PISHON)**

ஏதேன் தோட்டத்தில் ஓடிய நான்கு ஆறுகளில் ஒன்று. இஃது அவிலா நாட்டைச் சுற்றி ஓடியது (ஆதி 2:11). கங்கை, சிந்து, யூப்பிரத்தீசுவின் உப நதிகளும் மற்ற நதிகளும் இதற்கு அடையாளம் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருத்தும் ஏதேன் தோட்டம் எங்குள்ளது என்ற கணிப்பைப் பொருத்தது. எந்தக் கருத்தும் மற்றதை விட மேலானதாகத் தெரியவில்லை.

**பிச்சையிடுதல், ஈகை (ALMSGIVING)**

**I. பழைய ஏற்பாடு:**

**1. சொல்லின பொருள்:** எபிரேய மொழியில் பிச்சையிடுதலைக் குறிக்க தனிச்சொல் எதுவும்மில்லை. இதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் விவிலியத்தில் பல பொருட்களைத் தருவதாக அமைந்துள்ளது. இச்சொல் இறைவனின் இரக்கத்தையும் (சங் 24:5; எசா 59:16), சில சமயங்களில் மனிதன் இறைவனுக்குப் பணிந்து நடப்பதையும் (உப 6:25), அயலாருக்கு இரக்கத்தைச் செயலில் காட்டுவதையும், அதிலும் முக்கியமாக இல்லாதவருக்குப் பொருளுதவி செய்வதையும் குறிப்பிடுகின்றது. ஈகையைக் குறிக்கும் "எலிமோசின்" என்ற இந்தக் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டிலும், தானியேல் (9:16), தோபியா (3:2), சீராக்கு நூல் (16:14; 17:29)

போன்ற பழைய ஏற்பாட்டின் பிந்திய தொகுப்புகளிலும், பொதுவாகப் பிறருக்கு அளிக்கும் தர்மத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது. சிறப்பாக, விவிலியம் முழுவதிலும் ஒருவன் அயலானுக்கு உதவும் ஈகையானது, இறைவன் மனிதனுக்குச் செய்த உதவியைப் பின்பற்றுவதாக அமைந்துள்ளது.

2. **ஈகை நமது கடமை:** சகோதரரையும், எளியவரையும் அன்பு செய்ய வேண்டும் என்ற உணர்வு தொன்றுதொட்டு விவிலிய இறைமக்களின் சமய மரபில் இருந்து வந்துள்ளது. இவ்வுணர்வுதான் ஈதலின் அடிப்படைக் காரணமாகும். அதனால்தான் மோசே சட்டத்தில் ஈகையைக் குறித்துச் சில விதிமுறைகளைப் பார்க்கிறோம். எ.கா., அறுவடையான கதிர்களில் ஒரு பாகத்தை ஏழைகள் பொறுக்கிச் சேகரித்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். (லேவி 19:9; 23:22; உப 24:20 தொ; ரூத் 2). வருடத்தில் மூன்று தடவை பத்தில் ஒரு பாகத்தை நிலமற்ற லேவியர்கள், அன்னியர்கள், அனாதைகள், கைம்பெண்கள் ஆகியவர்களின் பராமரிப்புக்காக அளிக்க வேண்டும் (உப 14:28 தொ; காண். தோபி 1:8); எளியவருக்குத் தாராள மனப்பான்மையுடனும் (உப 15:11; பழ 3:27), அவரவர் தேவைக்கேற்றவாறும் (சீரா 18:15 தொ) உதவ வேண்டும்.

3. **ஈகையும் சமய வாழ்க்கையும்:** ஈகையை நாம் வெறும் மக்கட்பணியாகக் கருதாது மதச்சார்புள்ளதாகக் கருத வேண்டும். பலமுறை ஈகை திருவழிபாட்டோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது (2 சாமு 6:19; நெகே 8:10 தொ; 2 நாள் 30:21-26; 35:7 தொ). ஏழைகளுக்குத் தானம் அளித்தல் திருவிழாக்களில் நடைபெறும் சாதாரணமான நிகழ்ச்சி ஆகும் (உப 16:11.14; தோபி 2:1 தொ). இந்தச் செய்கையானது இறைவனை அடைவதற்கும் (பழ 19:17), அவரது அருளை அடைவதற்கு உரிமையையும் (எசே 18:7; காண். 16:49; பழ 21:13; 28:27), பாவத்திற்கு மன்னிப்பையும் (தானி 4:24; சீரா 3:30) பெற்றுத்தருவதால் ஈகையின் மாண்பு வெளிப்படுகிறது. ஈகை இறைவனுக்குப் பலி செலுத்துவதற்குச் சமம் (சீரா 35:2). தன் பொருட்களைத் தானம் செய்வதின் மூலம் ஒருவன் முடிவில்லாத திரவியத்தைச் சேர்த்துக் கொள்கிறான் (சீரா 29:12). "எளியோர் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றவர்" (சங் 41:1-4; காண். பழ 14:21). மூத்த தோபியா தன் மகனுக்குத் தூண்டுரை வழங்குகிறார். "உன் உடைமையிலிருந்து தானம் செய். எந்த ஏழையைக் கண்டாலும் புறக்கணியாது அவனுக்குப் பரிவுகாட்டு. அவ்வாறு செய்தால் கடவுளும் உன்னைப் புறக்கணியாமல் உனக்குப் பரிவு காட்டுவார்... உனக்கு மிகுதியான செல்வம் இருக்கும்போது ஏராளமாய்க் கொடு; குறைந்த செல்வம் இருக்கும்போது கொஞ்சமாய் ஆனால், நன்மனத்தோடு கொடுக்கும்படி கவனித்துக்கொள்" (தோபி 4:7-11.15தொ).

**II. புதிய ஏற்பாடு:** இயேசுவின் வருகையால் ஈகையின் மாண்பு குறையவில்லை. மாறாக, புதிய திட்டத்தில் செயல்படுவதால் புதிய மெருகு பெறுகிறது.

1. **நடைமுறையில் ஈகை:** அன்னியர்களும், விசுவாசத்திற்கு ஒத்துணர்வுகாட்டும் தெய்வ பயமுள்ளவர்களும் ஈகை செய்யும்போது, அது விசுவாசிகளால் பெரிதும் போற்றப்படுகிறது (லூக் 7:5; அ.ப. 9:36; 10:2). ஆன்மீக வாழ்வின் முப்பெரும் தூண்களாக ஈகை, செபம், தபம் என்பன இருப்பதாக இயேசு கருதினார் (மத் 6:1-18). விருப்பு வெறுப்பின்றி (மத் 6:1-4) எதையும் எதிர்பாராது (லூக் 6:35; 14:14) ஒரு குறிப்பிட்ட அளவின்றி (லூக் 6:30) தானம் செய்ய வேண்டும் என்று இயேசு போதித்தார். சட்டத்தின்படி பாரம்பரியமாக, பத்தில் ஒரு பங்கையன்று, சொத்தில் பாதியை அளிக்க வேண்டும் என்று நற்செய்தியின் மூலம் அறிகிறோம். சக்கேயு தன் உடைமையில் பாதியை அளிக்க முன்வருகிறார் (லூக் 19:8). பிறருடைய தேவைக்கு நாம் செவிமடுக்கத் தவறக்கூடாது (மத் 5:42 இணை).

ஏனெனில், ஏழைகள் எப்போதும் நம்மோடு இருப்பர் (26:11). ஒருவனிடம் பொருள் எதுவும் இல்லையெனினும் (அ.ப. 2:44) அவன் கிறிஸ்துவின் அருட்கொடைகளைப் பிறர்க்கு அளிக்கக் கடமையுள்ளவனாவான் (அ.ப. 3:6). மேலும், தேவையால் வாடுபவர்களுக்கு உதவ உழைக்க வேண்டும் (எபே 4:28).

2. **கிறிஸ்துவும், ஈகையும்:** ஈகை நமது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில், அதற்குக் காரணமும் உட்பொருளும் கிறிஸ்துவின் விசுவாசத்தில் ஆழ்ந்த முறையில் தெளிவாக விளங்குகின்றன.

அ) வானகத்தில் குறையாத செல்வத்தை அளிப்பது ஈகை (மத் 6:2.4; லூக் 12:21.33தொ) என்ற யூதர்களின் கருத்தை இயேசு ஏற்றுக் கொண்டபோதிலும், இது பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்வதன்று; ஏனெனில், நமது எளிய சகோதரர்களின் மூலமாக நாம் இயேசுவைக் கண்டடைகிறோம். "சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்...." (மத் 25:31-46).

ஆ) அவருடைய சீடர்கள் தங்களிடமுள்ள அனைத்தையும் துறந்துவிட வேண்டும் (லூக் 11:41; 12:33; 18:22). பொருளின்மீது வீண் ஆசை வைக்காது இயேசுவைப் பின்பற்றுதலே அதற்குரிய காரணம் (மத் 19:21 தொ). கடைசியாக இயேசுவைப்போல் நாமும் தாராளக் குணமுடையவர்களாக இருக்க வேண்டும்; "அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார் (2 கொரி 8:9).

இ) ஒரு பெண் தானாக விரும்பி, பரிமளதைலத்தினால் இயேசுவின் பாதங்களைப் பூசியபோது, அவள் முந்நூறு நாள் ஊதியத்தை இழந்துவிட்டாள். அவளைக் குற்றங்கண்ட யூதாசின் போக்கைக் கண்டிக்க இயேசு தயங்கவில்லை. இந்நிகழ்ச்சியில், கிறிஸ்தவ ஈகையானது வெறும் மனித நேய சட்ட திட்டங்களினின்று வேறுபட்ட சட்டத்தைக் கொண்டுள்ளது என்று இயேசு காட்டுகிறார்.

"ஏழைகள் எப்போதும் உங்களோடு இருக்கிறார்கள். நானோ எப்போதும் உங்களோடு இருக்கப்போவதில்லை" (மத் 26:11 இணை). நாட்டில் ஏழைகள் என்றும் இருப்பர் (உப 15:11). ஏழ்மை நமது பாவமனுகுலத்திற்குச் சாதாரணமானதொன்றாகும். ஆனால், இயேசு மெசியாத் தன்மையுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அமைப்பைக் குறிக்கிறார். முன்னது பின்னதின் வழியாகத்தான் தனது உண்மையான பொருளைப் பெறுகிறது. இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தில் வெளிப்படும் இறைவனால்தான் ஏழைகள் கிறிஸ்தவ முறையில் உதவி செய்யப்படுகின்றனர்.

3. **திருச்சபையில் ஈகை:** இறையரசின் நற்செய்தியையும், ஏழ்மையை அழிப்பதையும் குழப்புவதைத் தடுக்க சில பயன் கருதாத செயல்கள் அவசியமானாலும், நம்மிடமிருந்து பிரிந்து சென்று விட்ட மனுமகனை (மத் 9:15) அடைவதற்கு நாம் அயலாருக்கு உதவி செய்வது அவசியமாகும். "இவ்வுலகச் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில் அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்? (1 யோவா 3:17; காண்க. யாக் 2:15). தன் சகோதரனுடன் உடைமைகளைப் பகிர்ந்துகொள்ளாதவன் எவ்வாறு நற்கருணைத் திருவிருந்தில் பங்கு கொள்ள முடியும்? (1 கொரி 11:20 தொ). இத்தகைய வாசகங்கள் இறைவனை அடைவதற்கு நாம் அயலாருக்கு உதவ வேண்டியதின் அவசியத்தை உணர்த்துகின்றன.

ஈகை மேலும் பரந்த நோக்கையும் எல்லையையும் கொண்டது. அது திருச்சபைகளின் ஒன்றிப்பைக் குறிக்கிறது. பவுல் பிச்சை எடுத்தலுக்கு, எருசலேமிலுள்ள தாய்த் திருச்சபைக்கு ஆதரவாகப் பிற திருச்சபைகளில் எடுத்த காணிக்கைக்குப் புனிதப்பெயரைக் கொடுக்கும்போது இதைத்தான் குறிக்கிறார். இஃது

ஓர் அறப்பணியாகும், தொண்டாகும், திருப்பணியாகும் (2 கொரி 8:4; 9:1.12 தொ). பிற இனத்திருச்சபைக்கும் யூதத்திருச்சபைக்கும் இடையில் தோன்றி பெரிதாகத் தொடங்கிய பிளவைப் பழுது பார்த்துத் திருத்தும் நோக்கோடு, கிறிஸ்துவின் ஒரே உடலில் உள்ள இரு பிரிவுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை ஈகையால் ஏற்படுவதை விளக்குவதில் பவுல் கவனமாய் இருக்கிறார் (காண்க. அ.ப. 11:29; கலா 2:10; உரோ 15:26 தொ; 1 கொரி 16:1-4). கொரிந்தியருக்கு அளித்த உரையில் எவ்வளவு ஆர்வத்தோடு பிறரன்பு பற்றிய போதகத்தைத் தருகிறார் (2 கொரி 8-9). சகோதரர்களிடையே கிறிஸ்துவின் தாராள மனப்பான்மையைப் பின்பற்ற (8:4), சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் (8:13). இறைவன் மகிமைப்படுத்தப்படுவதற்காக (9:1-14), நாம் ஏராளமாக "விதைக்க வேண்டும்" ஏனெனில், "முகமலர்ச்சியுடன் கொடுப்பவர்கள்மேல்தான் கடவுள் அன்பு கூர்கிறார்" (9:6தொ).

**பிஸ்கா மலை (PISGAH MOUNT)**

அபாரிம் மலைத்தொடர்களின் நடுவே இம்மலை எரிகோவுக்கு எதிரேயுள்ளது.

'பிஸ்காவின் கொடுமுடியில்' என்ற சொற்றொடர்களில் நான்கு முறை இப்பெயர் வருகிறது. "பாமோத்திலிருந்து பாலைநிலத்தை நோக்கி நிற்கும் பிஸ்காவின் கொடுமுடிக்கருகில் மோவாபு பகுதியிலிருந்த பள்ளத்தாக்குக்கு" இஸ்ராயேலர் சென்றனர் (எண் 21:20). பாலாக்கு அரசன் இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பிலயாமைக் கூட்டிச் சென்றது இம்மலையுச்சிக்குத்தான் (எண் 23:14). வாக்களிக்கப்பட்ட நாட்டைக் காணப் பிஸ்காவின் கொடுமுடிக்குச் செல்லுமாறு மோசேக்குக் கட்டளையிடப்பட்டது (உப 3:27). பின்னர் மோசே மோவாபு சமவெளியைக் கடந்து நெபோ மலையில் ஏறி, எரிகோவுக்கு எதிரேயுள்ள பிஸ்கா மலையுச்சியை அடைந்தார் (34:1).

"பிஸ்காவுக்குத் தாழ்வாக இருக்கும்" என்ற சொற்றொடர்களில் நான்கு முறை இதன் பெயர் வருகிறது. நாடுகளின் எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "பிஸ்காவுக்குக் கிழக்கே தாழ்வாக இருக்கும் அராபாவின் உப்புக்கடல் வரை" எனக் குறிப்பிடப்படுகிறது (உப 3:17; 4:49). சீகோன் ஆண்ட பகுதி பற்றி" அராபாவிலிருந்து... தெற்கில் பிஸ்கா மலைச்சரிவு வரையிலும்" என விளக்கப்படுகிறது (யோசு 12:3). ரூபனின் கோத்திரத்தார்க்குரியது பிஸ்கா மலைச்சரிவு வரைக்குமாம் (யோசு 13:20). உப 4:49 "பிஸ்காவுக்குக் கிழக்கே தாழ்வாக இருக்கும் அராபாக் கடல் வரைக்கும்" என்று குறிப்பிடுகிறது.

சிலர் இஃது அபாரிம் மலைத்தொடர்களில் ஒன்றெனவும், இதன் உச்சி நெபோ மலையெனவும் கருதுகின்றனர். ஆனால், பிஸ்காவின் கொடுமுடியெனக் குறிப்பிடுவது இஃது ஒரு தனிமலையென்பதைக் காட்டுகிறது. இராஸ் எஸ்-சியகா என்பதுதான் பிஸ்காவின் உச்சியெனில் எண் 21:20 குறிப்பிடும் பள்ளத்தாக்கு அயுன்மூசாவாகத் தான் இருக்க வேண்டும்.

**பிஸ்திஸ் - சோபியா (PISTIS SOPHIA** – விசுவாசம் – ஞானம்; இங்கு ஓர் ஆன்மீக உயிரின் பெயர்.)

இஃது ஒரு ஞானவாத நூல். இயேசு உயிர்த்த பன்னிரண்டாம் ஆண்டில், சீடர்களின் கேள்விகளுக்கு, குறிப்பாக, மகதலாவின் மரியாளின் கேள்விகளுக்குப் பாவம் மற்றும் மீட்பு ஆகியவை பற்றி இயேசு அளித்த போதனைகளைப் பிலிப்பு எழுதிவைத்ததாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதல் மூன்று பாகங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டு, பிஸ்திஸ் சோபியா என்ற தொகுப்பாக உள்ளன. நான்காவது பாகத்தில் சில பத்தாண்டுகளுக்கும் முன்பே எழுதப்பட்டதாகும். இரண்டும் எகிப்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டு, கோப்திக்கு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கோப்திக்கு

மொழியில்தான் நமக்கு இந்நூல் கிடைத்துள்ளது. ஒருவகை ஞானவாதத்தைப் பற்றிய நேரடியான செய்திகளுக்கு இந்நூல் முக்கியமானதாகும்.

**பிஸ்பா (PISPA)**

ஆசேர் இனத்தைச் சேர்ந்த எத்தேரின் மகன் (1 நாள் 7:38).

**பிஸ்லாம் (BISHLAM – அமைதியின் மகன்)**

பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களுக்கு எதிராக, பாரசீக அரசன் அர்த்தக்சஸ்தாவுக்கு மனு எழுதிய முக்கிய மூவருள் இவர் ஒருவராவார் (எஸ் 4:7). ஒருவேளை இஃது ஓர் ஆளின் பெயராக இல்லாமல் வெறுமனே ஒரு வாழ்த்தாக (அமைதியின் மகன்) இருக்கலாம்.

**பிணக்குழி, கல்லறை (GRANE)**

இறந்தவர்களைப் புதைப்பதற்காகத் தோண்டி எடுக்கப்பட்ட ஓர் இடம். விவிலியச் சான்றுகளிலிருந்து இஃது ஆழ்கிடங்கா, கல்லில் செதுக்கப்பட்ட குகையா என்பது தெரியவில்லை. 2 அர 13:21; சங் 49:14; தோபி 8:9.18 ஆகியவற்றில் சொல்லப் பட்டுள்ளது ஆழ்கிடங்காக இருக்கலாம். இயற்கையான அல்லது செயற்கையான குகைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன.

**பிணந்தின்னிக்கழுகு (VULTURE)**

பல பிணந்தின்னி பெரிய பறவைகளில் ஒருவகை. இவை தூரத்தில் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். இவற்றின் நகங்கள் அவ்வளவு வளர்ச்சியுற்றவை அல்ல. அலகு வலிமையுள்ளது. பெரிய பறவைகள் 2.5 மீட்டர் அகலத்திற்குத் தன் இறக்கையை விரிக்கக்கூடும்.

இவை, விவிலியகாலத்தில் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டிருக்கின்றன. பறக்கும்போது இவைகளுக்கும், பருந்துகளுக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்காது. இரண்டிற்கும் பொதுவான பண்புகளையே விவிலியம் கூறுகிறது. வேறுபாட்டை அவ்வளவு கவனத்தில் கொள்ளவில்லை. இரண்டு வகைகளும் பெரியவை; வலிமை மிக்கவை; நீண்ட காலம் வாழ்ந்தன; ஒரே மாதிரியாகக் கூடுகட்டின; வேட்டைப் பொருள்களையும் பிணங்களையும் தின்றன.

அசுத்தப் பறவைகளின் பட்டியலில் கழுகு முதலிடம் பெறுகிறது (லேவி 11:18; உப 14:12). கழுகு பற்றிய பிற குறிப்புகள் உருவகமாகவோ, விவரிப்பாகவோ உள்ளன (யாத் 19:4; உப 28:49; சங் 103:5; எச 40:31; எரே 49:16; அப 1:8). இப்பறவையைக் குறிக்கும் எபிரேயச் சொல்லை. யோபு 39:27–30; மீக் 1:16; மத் 24:28; லூக் 17:37; பழ 30:17; புல 4:19; ஓசே 8:11 ஆகிய பகுதிகளில் கழுகு என்றே மொழி பெயர்ப்பது சிறந்தது.

லேவி 11:13; உப 14:17-இல் வரும் கருடன், கடலூராஞ்சி, லேவி 11:18-இல் வரும் கூழக்கடா ஆகியவை கழுகு வகையைச் சேர்ந்தவையே. இவை பாலஸ்தீனத்தில் காணப்பட்டன.

**பிணைக்கைதிகள் (HOSTAGES)**

புரட்சியின்போது அல்லது படையெடுப்பின்போது பிணையாளராகப் பிடிக்கப்படுபவர்கள். இதன் எபிரேயச் சொல் "பிணையாகக் கொடுத்தல் அல்லது எடுத்தல்" என்ற வினைச்சொல்லில் இருந்து உருவானது. எனவே, இச்சொல்லுக்குப் "பிணையாக்கப் பட்டவர்கள்" என்பது பொருள்.

யோவாசு, யூதாவின் அரசன் அமட்சியாவை வென்றதை விவரிக்கும் இடத்தில் மட்டும்தான் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2 அர 14:14=2 நாள் 25:24). அமட்சியா கைது செய்யப்பட்டான்; எருசலேம் சுவரின் ஒரு பகுதி உடைக்கப்பட்டது; யூதா அரசர்கள் எதிர்காலத்தில் நன்கு நடக்க வேண்டுமென்பதற்காக, பிணைக்கைதிகளாகச் சிலர் பிடித்துச் செல்லப்பட்டனர்.

**பிணையாளர் (SURETY)**

விரும்பி மற்றொருவருடைய கடனுக்குச் சட்டப்படி உத்தரவாதம் அல்லது பொறுப்பாளி ஆகுபவர் பிணையாளர் ஆவார். இச்சொல் கலைச்சொல்லாக ஆதி 43:9; 44:32-இல் பயன்பட்டுள்ளது. இங்கு யூதா பென்யமினுக்குத் தன்னைப் பொறுப்பாளி ஆக்குகிறார். பழ 6:1-5; 1:15; 17:18; 20:16; 22:26; 27:13 ஆகிய பகுதிகள் பிறருக்காக, குறிப்பாக அன்னியருக்காகப் பிணையாளராக ஆவது பற்றி எச்சரிக்கின்றன. ஏனெனில், இஃது ஆபத்தானது; பிறரது கடனுக்குப் பொறுப்பாக வேண்டியிருக்கும்; சுதந்தரத்தை இழந்து அடிமையின் நிலைக்கு உள்ளாக வேண்டியிருக்கும்.

இச்சொல் உருவகமாகவும் பயன் பட்டுள்ளது. கொடுமைப்படுத்துபவர்கள் முன்னிலையில், இறைவன் தன் ஊழியர்களுக்காகப் பிணையாளர் ஆகிறார் (சங் 119:122). இறைவனுக்கும் மக்களுக்குமிடையிலான உடன் படிக்கையின் இடையாளராக மட்டுமில்லாமல் அதன் உத்தரவாதமும் ஆவதால், இயேசு "மேலான உடன்படிக்கையின் பிணையாவார்" என்று கூறப்படுகிறது (எபி 7:22).

**பிதகர் (BIDKAR - ஊடுருவக் குத்துதலின் மகன்)**

யோராமைக் கொன்ற சமயம் ஏகூவின் தேரோட்டியாக இருந்தவன் (2 அர 9:25).

**பித்தநீர், பிச்சு (GALL OF LIVER)**

இந்தச் சொல்லானது "கசப்புத்தன்மை" என்னும் பரந்த பொருளைக் குறிக்கிறது (யோபு 13:26). அதற்குப்பின் இந்தச்சொல் பிச்சிற்குக் (உடலைக் கிழித்து) குறித்துச் சொல்லப்படுகிறது (யோபு 20:25). தோபி 6:8-இல் மீனிலிருந்து எடுக்கப்பட்டது மருந்திற்குப் பயன்படும் என்று குறிக்கிறது. பித்தநீர்க் குழி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (யோபு 16:13).

**பித்தியா (BITHIAH - ஆண்டவரின் மகள்)**

பார்வோனின் மகளும், யூதாவின் மெரேதின் மனைவியுமாவாள் (1 நாள் 4:17). இவள் இஸ்ராயேலின் கடவுள் வழிபாட்டுக்கு மனம் மாறியவள் என்று இவள் பெயர் காட்டுகிறது.

**பித்தினியா (BITHYNIA)**

இது சிறிய ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்த ஓர் உரோமையர் மாகாணமாகும். இது கருங்கடல் கரையில், கிழக்கில் பாப்லகோனியாவை அடுத்தும், மேற்கு மற்றும் தென்மேற்கில் மீராவை நோக்கியும் அமைந்திருந்தது. இதில் திராக்கோனியர், தீனியர், பித்தினியர் ஆகிய இனத்தவர்கள் கலந்து வாழ்ந்தனர்.

கிரேக்கர் காலத்தில் முதலாம் நிக்கோமேது (கி.மு. 277-250) ஓர் அரச மரபைத் தொடங்கி வைத்தார். இப்பகுதி முக்கியத்துவம் பெற்றது. நிக்கோதியா இதன் தலைநகரமாகும். நிக்கோமேது திராக்கிலிருந்து காலியர்களைத் தனக்கு உதவியாக அழைத்தார். இது காட்டுமிராண்டிகளை நாட்டிற்குள் புகுத்தும் ஆபத்தைக் கொண்டு வந்தது. இவரது பேரன் முதலாம் பிருசியா (கி.மு. 230-183), பெர்கமோவிற்கு எதிராக, மாசிதோனியர்களுக்கு உதவி செய்தார். ஆனால், இவரது ஆதிக்கம் உரோமையரால் கட்டுப்படுத்தப்பட்டது. இவர் புருசா மற்றும் ஒலிம்பும் நகரங்களை நிறுவினார். இந்நாட்டின் செழிப்பு விவசாயத்தையும் மருந்து நீரூற்றுகளையும் சார்ந்திருந்தது. இந்நாடு கி.மு. 74-இல் உரோமையர்களுக்கு உடைமையாகக் கொடுக்கப்பட்டது.

கி.மு. 65-63-இல் பாம்பே பொந்துவையும் பித்தினியாவையும் சேர்த்து ஒரே மாகாணம் ஆக்கினார். இப்பகுதி பற்றி நாம் அறிவதெல்லாம் இளைய பிளினியின் கடிதங்களிலிருந்துதான். இவர் கி.பி. 111-113-இல் இப்பகுதிக்குச் சிறப்பு ஆணையாளராக இருந்தார். இவரது காலத்தில் பித்தினியக் கிறிஸ்தவர்கள் பெரிதும் பெருகியிருந்தனர். கிறிஸ்துவம் கிராமப் புறங்களுக்கும் பரவிவிட்டது என்று பேரரசன்

திரேசனுக்கு இவர் எழுதுகிறார். இது, நற்செய்தியறிவித்தல் கிரேக்கக் கலாச்சாரமுடைய சிறிய பகுதிகளுக்கும் பரவியிருந்தது என்பதைச் சுட்டுகிறது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் பித்தினியாவுக்குப் போகமுயற்சித்தார். ஆனால், "இயேசுவின் ஆவி அவர்களைப் போகவிடவில்லை" (அ.ப. 16:7). ஆகவே, அவர் துரோவாவுக்குச் சென்றார். ஆனால், பித்தினியப் பகுதியில் விரைவில் திருச்சபை நன்கு நிறுவப்பட்டது (1 பேதுரு 1:1). வரும் நூற்றாண்டுகளில் பித்தினியாவிலுள்ள நிசேயா (கி.பி. 325,787), கால்சிதோன். (451) ஆகிய நகரங்களில் திருச்சபையின் பொதுச்சங்கங்கள் நடைபெற்றன.

**பித்தோம் (PITHOM – ஆதும் தெய்வத்தின் வீடு)**

எகிப்தில் உள்ள இந்நகரம், ராமசேசுடன் சேர்த்து எபிரேயர்களால் கட்டியெழுப்பப் பட்டது. கொடுமைப்படுத்திய எகிப்திய பார்வோனுக்காக இஃது எழுப்பப்பட்டது (யாத் 1:11).

விவிலிய விளக்கங்கள் இந்நகரம் அமைந்த இடத்தைச் சரியாகச் சுட்டிக் காண்பிக்கவில்லையாதலால், எகிப்தியரின் உணவுக் களஞ்சியமான இதனைப் பற்றி அகழ்வாராய்ச்சியில் கிடைத்தனவற்றை வைத்துத்தான் இஃது அமைந்த இடத்தைக் காண முடிகிறது அல்லது சுட்டிக் காட்டமுடிகிறது.

தெல் ஏல்-ரத்தாபா அல்லது தெல் ஏல்-மஸ்குத்தா இவை இரண்டில் ஏதாவது ஒன்றுதான் இந்நகரமாக இருக்க வேண்டும். ஆனால், இது பற்றிய பல கருத்துக்கள் அறிஞர்களிடையே இருந்தாலும் இவை அமைந்த இடமாகக் கருதப்படுபவற்றை நன்கு ஆய்ந்தாலொழிய தெளிவான முடிவு எதற்கும் வர முடியாது. ஆனால், பித்தோம், சுக்கோத்து ஆகியவற்றை வாடிதுமெயிலாத்து இருக்கும் பகுதியில் உள்ளது என்று கூறுவது இஸ்ராயேலர்கள் பயணம் செய்த பாதையை வைத்துக் கூறப்பட்டதாகும்.

**பித்தோன் (PITHON – தீங்கற்ற)**

இவர் மீக்காவின் மகனும், பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த சவுலின் வழித்தோன்றலும் ஆவார் (1 நாள் 8:35; 9:41).

**பித்ரோன் (BITHRON – குறுகிய மலையிடுக்கு)**

அப்னேரும், அவர் வீரரும் கிபயோன் அருகில் கண்ட தோல்விக்குப் பிறகு அவர்களது பாசறைக்குப் பித்ரோனைத் தாண்டி அல்லது அதன் வழியாக மகனயிமை அடைந்தனர் (2 சாமு 2:29). அப்பொழுது மிகவும் பிரபலமான குறுகிய மலைப்பாதை, தற்போது அஃது இருந்த இடமே இல்லை என்ற அளவில் அறியப்படாமல் உள்ளது. ஒருவேளை இது முற்பகலைக் குறிக்கலாம் என்று அர்னால்டு என்ற அறிஞர் கருதுகிறார்.

**பிபசேத்து (PI-BESETH – பூனைத் தேவதை பஸ்தெத்துவின் வீடு)**

நைல் நதியின் கழிமுகப்பகுதியில் அமைந்து இந்நகரம், எகிப்தின் கீழ்ப்பகுதியில் அமைந்த 18-ஆவது பிரிவின் தலைநகரமாகும்.

விவிலியத்தில் இந்நகரம் ஒரே ஒருமுறை மட்டும் பேசப்படுகிறது. எசேக்கியேல் எகிப்துக்கு எதிராக இறைவாக்குரைக்கும் போது ஒன் நகரத்தோடு இந்நகரமும் சேர்த்துப் பேசப்படுகிறது. இந்நகரம் நைல் நதியின் உபநதியான தானித்தின் வலக்கரையில், இன்றைய சாகாசிக்குத் தென்கிழக்கே அமைந்துள்ளது. இன்று இது தெல் பாஸ்தா என அழைக்கப்படுகிறது. பழைய பெயர் பாஸ்தெத்துவின் வீடு எனப் பொருள் தரும். அதாவது, இஃது எகிப்திய பூனைத் தெய்வத்தில் ஒன்று ஆகும்.

இந்நகரம் மிகப்பழமையானதும், பழைய அரசர்கள் காலத்திலிருந்தே உள்ள நகரமும் ஆகும். வரலாற்றில் மிகவும் பிந்திய காலத்தில்தான் இது முக்கியத்துவம் பெற்று 22, 23-ஆவது அரச வம்சங்களின் தங்கும் நகரமாகியது.

**பிபுலோசு (BYBLOS - பிப்ளோஸ்)**

இது பழங்காலப் பெனிசியத் துறைமுகமான கெபாலின் கிரேக்கப் பெயராகும். இத்துறைமுகம் வியாபாரத்திற்கும் கப்பல் கட்டும் தொழிலுக்கும் மையமாக விளங்கியது (காண்க. 1 அர 5:18; எசே 27:9). இத்துறைமுகம் வழியாகக் கடந்து சென்ற பொருள்களுள் புல்தாள் ஏடுகள் (பைப்பிரஸ்) அடங்கும். இப்பொருளின் கிரேக்கப் பெயரால், இத்துறைமுகம் கிரேக்கர்களால் பிபுலோசு என்றழைக்கப்பட்டது.

**பிம்கால் (BIMHAL - விருத்தசேதனத்தின் மகன்)**

நாளாகமத்தின்படி, பாபிலோனிலிருந்து திரும்பியபின் எடுக்கப்பட்ட தலைமுறை அட்டவணைக்கேற்ப ஆசேர் கோத்திரத்தில் வந்த யாப்லேற்றுவின் மகன். இப்பெயர் ஒரு குலப்பெயராகவும் இருக்கலாம் (1 நாள் 7:33).

**பிரக்கோர் (PROCHORUS - பாடற் குழுத்தலைவன்)**

எருசலேம் திருச்சபையில் போதிப்பது தவிர மற்றப் பணிகளை நிருவாகம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவரில் ஒருவர் (அ.ப. 6:5). இவரைப் பற்றிய புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் கூறப்படவில்லை. பாரம்பரியம் இவரை அப்போஸ்தலரான யோவானுடன் தொடர்புபடுத்திப் பேசுகிறது. பைசாந்திய ஓவியங்களில் யோவான் இவரிடம் கூற இவர் நான்காவது நற்செய்தியை எழுதுவதாகக் காட்டப்படுகிறது. மேலும், ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யோவானின் வாழ்க்கை இவரது பெயரில் எழுதப்பட்டது.

**பிரக்கோர் எழுதிய யோவானின் பணிகள் (JOHN, ACTS OF, BY PROCHORUS)**

இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கக் கதையாகும். மூலத்தில் லூக்கியுவின் யோவான் பணி நூலிலிருந்து வேறுபட்டது. பத்முவில் யோவான் தனது பதினைந்தாம் வருடத்தில் செய்த புதுமையான காரியங்களைக் கொண்டுள்ளது. கிரேக்கத்தைத் தவிர, இஃது இலத்தீன், எத்தியோப்பிய, அர்மேனிய, அரமேய, பழைய ஸ்வானிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், ஆண்டவரது வாழ்க்கைப் பாடுகள் பற்றி எந்தப் பகுதியும் குறிப்பிடவில்லை. பிரக்கோர் இந்நூலின் ஆசிரியராகக் கருதப்படுகிறார். இவரிடம்தான் யோவான் தனது நற்செய்தியைக் கூறி எழுதச் செய்வதாக, பைசாந்தியக் கலை சித்தரிக்கிறது. இஃது எருசலேமின் ஏழு திருத்தொண்டர்களில் ஒருவரைப் (அ.ப. 6:5) பிரதிபலிக்கிறது. பாரம்பரியம் இவரை ஆண்டவர் அனுப்பிய எழுபது சீடர்களில் ஒருவராகவும், பிற்காலத்தில் நிக்கோமதியாவின் ஆயராகவும் பாவிக்கிறது.

**பிரதிநிதி (DEPUTY)**

இவர் மற்றவருக்காகச் செயல்பட அதிகாரம் பெற்றவராவார். விவிலியத்தில் இப்பிரதிநிதி பற்றி வரும் இடங்களாவன: 1 அர 22:48; 2 அர 18:24; எஸ்த 8:9; 9:3; எரே 51:28.

**பிராத்தோன் (PIRATHON -இளவரசத் தன்மையுடைய)**

இஃது அமலேக்கியர்களின் மலைப்பாங்கான நாட்டிலுள்ள எப்பிராயிமின் நகரங்களில் ஒன்று (நீதி 12:15). இங்கே ஒரு சிறிய நீதிபதி புதைக்கப்பட்டார். தாவீதின் சிறந்த வீரர்களான பனாயாவும், அப்தோனும் பிராத்தோனியர்களே (நீதி 12:13.15;5 2சாமு 23:30; 1 நாள் 11:31; 27:14). அதாவது, பிராத்தோனில் வாழ்ந்தவர்கள் என்பது பொருள். நீதி 5:14 அமலேக்கியர்கட்கும், பிராத்தோனில் வாழ்ந்தவர்க்கும் தொடர்பு இருப்பதாகக் காட்டுகிறது. ஆனால், அமலேக்கியர்கள் தென்கானான் நாட்டிலே வசித்த தாகவே வழக்கமாகக் கூறப்பட்டனர்.

செக்கேமுக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவிலும், நப்லூசுக்கு மேற்குத் தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவிலும் இன்றுள்ள பராத்த எனுமிடத்திலே பிராத்தோன் இருந்ததாகக் கூறப்படுகிறது. அப்தோன் பென்யமின்

கோத்திரத்தைச் சேர்ந்தவராகையால் பிராத்தோன் பென்யமினின் நாட்டில் இருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர் (1 நாள் 8:23.30;9:36). 1 மக் 9:50-இல் குறிப்பிடப்படும் பெத்தாரோனும் பென்யமினின் நாட்டில்தான் உள்ளது. பிராத்தோன் செக்கேமுக்கு அருகில் இருக்க வேண்டுமென்பதைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர்.

**பிராம் (PIRAM காட்டுக்கழுதை, வேகமான)**

இவர் எருசலேமுக்குத் தென்மேற்கேயுள்ள யார்முத்தின் அரசனாவார் (யோசு 10:3). யோசுவா தங்கள் நாட்டுக்குள் புகாமல் தடுப்பதற்கு எருசலேம் அரசனால் வழி நடத்தப்பட்ட ஐந்து எமோரிய அரசர்களில் இவரும் ஒருவர். எருசலேம் அரசன் தான் இவர்கள் ஐவரையும் ஒன்று கூட்டியது. ஆனால், கிபயோனில் நடந்து போரில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டு, பின் கொல்லப்பட்டனர் (10:23-26).

**பிரிகியா (PHRYGIA)**

**1. எல்லைகள்:** பிரிகியா, பழங்காலத்தில், சிறிய ஆசியாவின் பெரும்பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயராகும். இதன் எல்லைகள் பல்வேறுபட்ட காலங்களில் மாறுபட்டிருந்தன. இதன் வடக்கில் பித்தினியாவும், கிழக்கிலும் தென்கிழக்கிலும் கலாத்தியாவும் லிக்கவோனியாவும், தெற்கில் பிசிதியாவும் எல்லைகளாக இருந்தன. இப்பகுதி, அசீரியர்களால் முசுக்கி என்றும், பழைய ஏற்பாட்டில் மெசேக்கு என்றும் அழைக்கப்பட்டது.

**2. வரலாறு:** கி.மு. 1200-ஐ ஒட்டிய பிரிகியர்கள் சிறிய ஆசியாவில் புகுந்தனர். இஃது அக்காலத்தில் நிலவி, மக்கள் இடமாற்றம் செய்த பெரும் இயக்கத்தின் ஒரு பகுதியாகும். பிரிகியர், கோர்தியனைத் தலை நகராகக் கொண்ட ஓர் அரசை நிறுவினர். இந்நகர் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்தது. இதன் புகழ்பெற்ற அரசர் மிதாஸ் ஆவார். பிரிகியாவின் முக்கிய நகரங்கள் இலவோதிக்கேயா, கொலோசை, எராப்பொலி ஆகியவையாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிரிகியா, ஆசியா மற்றும் கலாத்தியா ஆகிய இரு உரோமையர் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

**3. மக்களும், நாகரிகமும்:** பிரிகிய இனத்தவர் அயல்நாட்டு மன்னர்களுக்கு அடிமைப்பட்டு இருந்ததால், இவர்களுடைய வாழ்க்கை முறை மற்ற நாடுகளின் பண்பாடுகளால் பாதிக்கப்பட்டது. இவர்கள் அமைதியானவர்களாகவும், அடங்கிப்போகும் குணம் உடையவர்களாகவும், நாகரிகம் உடையவர்களாகவும் இருந்தனர். இவர்கள் விவசாயமும் வாணிபமும் செய்தனர். கிரேக்கர் உரோமையர் காலத்தில் கிரேக்க மொழி பரவலாகப் பேசப்பட்டது.

இவர்களின் வழிபாட்டு முறைகள், அயல்நாட்டு வழிபாட்டு முறைகளால் பாதிக்கப்பட்ட போதிலும், இவர்களின் சமயச்சடங்குகளில் இசையும், நடனமும் முக்கிய பங்கு வகித்தன. தாய்க் கடவுளான ரேயசிபெல்லும் இயற்கையைப் புதுப்பிக்கும் ஆற்றலுள்ள சபாசியுவும் முக்கியமான தெய்வங்களாகும். இங்கு யூதர்களும் வாழ்ந்தனர். செலூக்கு நிக்காத்தோர் தான் ஆசியாவில் அமைத்த நகரங்களில் யூதர்களுக்குக் குடியுரிமை அளித்தார். லீதியா நாட்டினருக்கும், பிரிகியருக்கும் இடையே சமநிலைமை உருவாக்க பாபிலோனியா, மெசபொத்தாமியா ஆகிய இடங்களிலிருந்து 2000 யூதக்குடும்பங்களைக் குடியேற்ற மூன்றாம் அந்தியோக்கு முடிவு செய்தார்.

இங்கு வாழ்ந்த யூதர்கள் யூதச்சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் அக்கறை காட்டுவதே இல்லை. இங்கிருந்த குளியல் அறைகளும், மதுவும் பத்துக்கோத்திரத்தினரைத் தங்கள் சகோதரர்களிடமிருந்து பிரித்து விட்டது என்று தால்மூது கூறுகின்றது. பிரிகியா, லிக்கவோனியா நாடுகளில் வாழ்ந்த யூதர்கள், பவுலின் போதனையை உடனே ஏற்றுக்கொண்டதிலிருந்து அவர்கள் புதிய போதனைகளை ஏற்றுக்

கொள்வதில் திறந்த மனம் கொண்டவர்கள் என்பதும், பவுலின் போதனைக்கு எதிராக யூதப் பெரியோர்கள் எழுந்தது அவர்கள், யூதர்கள் சட்டங்களைப் கடைப் பிடிப்பதில்லை என்பதை அறிந்திருந்தனர் என்பதும், இதைப் பவுல் ஊக்குவித்தார் என்று கருதினார் என்பதும் புலனாகின்றன (அ.ப. 13:45.50; 14:2.19).

**4. பிரிகியாவில் கிறிஸ்துவ மதம்:** பெந்தெகொஸ்தேயின் போதும், பேதுரு உரையாற்றிய போதும் பிரிகியா நாட்டினர் சிலர் எருசலேமில் இருந்ததாக அ.ப. 2:10 கூறுகிறது. இவர்கள் பேதுருவால் மனந்திருப்பப்பட்டவர்கள் குழுவில் இருந்திருக்க வேண்டும் என்றும், இவர்கள்தான் பிரிகியாவுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள் என்றும் கருதப்படுகிறது. ஆனால், இக்கருத்து நிரூபிக்கப்பட முடியாதது.

பவுல் பம்பிலியாவிலிருந்து வந்து இரண்டு பிரிகிய நகரங்களான, அந்தியோக்கியாவை நோக்கியுள்ள பிசிதியா, இக்கோனியா ஆகிய நகரங்களுக்குச் சென்றார் (அ.ப. 13:14; 14:24). இரண்டாவது மறைபரப்புப் பயணத்தின்போது பவுல், சீலா, திமொத்தேயு ஆகியவர்களுடன் பிரிகியா, கலாத்தியா பகுதிகள் வழியாகச் சென்றார் (16:6). மூன்றாம் பயணத்தின்போதும் பவுல் இங்கு வந்தார். இங்கு, பவுல் தெற்குக் கலாந்தியாவிலுள்ள பிரிகியாவுக்குப் பல முறை வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. லிகுஸ் பள்ளத்தாக்கில் வாழ்ந்த கிறிஸ்துவர்களின் வரலாறு, பிரிகியாவின் வரலாற்றில் ஒரு பகுதி ஆகும். இப்பள்ளத்தாக்கில்தான் கொலோசை, எராப்பொலி, இலவோதிக்கேயா முதலிய நகரங்கள் அமைந்திருந்தன (கொலோ 2:1; 4;13). எப்பப்பிராதான் இப்பள்ளத்தாக்கில் நற்செய்தி போதித்தார் என்று கருதப்படுகிறது. 1 பேதுரு 1:1-இல் குறிப்பிடப்படும் செய்திகளிலிருந்து பிரிகியாவிலிருந்த திருச்சபை பல எதிர்ப்புகளைத் தாங்க வேண்டி இருந்தது என்பது புலனாகிறது. ஆனால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இங்கு, திருச்சபை வலுப்பெற்றது. இங்கு ஆயரான பப்பியாக, எராப்பொலியின் அப்போலினாரிக ஆகிய தலைவர்கள் தோன்றினர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று யுசேபியு கூறுகின்றார். தியோகிலேசியன் (கி.பி. 301-312) காலத்தில் இந்நகரம் முழுவதும் அழிக்கப்பட்டது.

**பிரிக்கும் பாறை (ESCAPE, ROCK OF)**

மாவோன் பாலைவனத்தில் ஓர் இடம் ஒருவேளை ஒரு செங்குத்தான பாறையாக இருக்கலாம் (1 சாமு 23:28). தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடிய பாலைவனம் இதுதான். செங்குத்தான பாறையாக இருப்பதால் சிறிய பள்ளத்தாக்கால் பிரிக்கப்பட்டு, எதிர்ப்புறத்திலும் அதேபோலச் செங்குத்தான பாறையை ஒருவன் காணலாம். ஆனால், சுற்று வழியில்தான் அடுத்த பாறையை அடைய முடியும். இந்த இடம் மாவோனின் வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள வாடி ஏல்-மலாக்கியாக இருக்கலாம். சுற்று வழியை ஏறக்குறைய சவுல் தாண்டி வந்து விட்டார். ஏனென்றால், பெலிஸ்தியரை எதிர்க்கத் திரும்பிச் செல்வதற்குமுன் 'தாவீதை அருகில் பின்தொடர்ந்ததாக' எழுதப்பட்டிருக்கிறது.

**பிரிஸ்கா, பிரிஸ்கில்லா (PRISCA, PRISCILLA)**

அக்கிலாவின் மனைவி. இருவரும் கூடாரம் செய்பவர்கள். பிரிஸ்கா (உரோ 16:3; 1 கொரி 16:19; 2 திமொ 4:1-9) அப்போஸ்தலப் பணியில் பிரிஸ்கில்லா என்று அழைக்கப்படுகிறாள். இவள் பிஸ்கா இனம் என்ற உரோமை உயர்குடியைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பேரரசன் கிளாதியு எல்லா யூதர்களையும் உரோமையிலிருந்து வெளியே துரத்தியபோது, பிஸ்காவும் அக்கிலாவும் கொரிந்துக்குச் சென்றனர். அங்கே பவுல் இவர்கள் வீட்டில் தங்கினார். (அ.ப. 18:2-3). அங்கிருந்து இவர்கள் பவுலோடு எபேசுக்குச் சென்றனர். அங்கு, இருவரும் அப்பொல்லோவுக்குக் "கடவுளின் அருள் நெறியைத்" திட்டவட்டமாய் விளக்கினர்

(18:26). கிளாதியு இறந்தபின், இருவரும் உரோமைக்குத் திரும்பினர். உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் கொரிந்திலிருந்து பவுலின் வாழ்த்தைப் பெறுபவர்களில் இவர்கள் இருவரும் முதலிடம் பெறுகின்றனர் (உரோ 16:3).

**பிரியாவிடை உரைகள் (FAREWELL; SPEECHES)**

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல பிரியாவிடை உரைகள் காணக்கிடக்கின்றன. மரண நிலையில் இருப்பவர்கள் தங்களுடைய வழித்தோன்றல்களிடமிருந்து பிரியும் நிலையில் இவ்வுரைகளைத் தருகின்றனர். இவை அவர்களுடைய இறுதி விருப்பங்களாகவும் ஏற்பாடுகளாகவும் அமைகின்றன.

I. பழைய ஏற்பாடு: இறைமக்கள் பற்றிய பொறுப்புடையவர்கள் இப்பிரியா விடை உரைகளை அளிக்கின்றனர். இவர்கள், யாக்கோபு, மோசே, யோசுவா, சாமுவேல், தாவீது (பிற்கால யூதப் பாரம்பரியத்தில் 12 குலமுதுவர்கள்) போன்றவராவர். இவ்வுரைகள் எழுதுவதற்குக்காரணமான வெவ்வேறு சூழ்நிலைகளுக்குரிய சிறப்புப் பண்புகளைத் தவிர, மேலும் பலவற்றைப் பொதுவாகக் கொண்டுள்ளன. அவை: இறக்கவிருப்பவர் தம் மக்களுக்கு இறைவன் அளித்த கொடைகளை நினைவுகூர்கிறார்; வாக்களிக்கப்பட்ட மீட்பை முன்னோக்குகிறார் (ஆதி 49:8-12; உப 32:36-43; 12 குல முதுவர்களின் ஏற்பாடு); தன் வழித்தோன்றல்களைப் பிரமாணிக்கமாய் இருக்கும்படி தூண்டுகிறார் (உப 31-32; யோசு 24; 1 சாமு 12); பிற்கால நூல்களில் (1 மக் 2:51-61; 12 குல முதுவர்களின் ஏற்பாடு) அவர் தன் முன்னோர்களின் எடுத்துக்காட்டை அழுத்திக் கூறுகிறார்.

ஆகவே, இஸ்ராயேலின் தந்தையரும் தலைவர்களும் உடன்படிக்கையின் சாட்சிகளாகக் காட்டப்படுகின்றனர். தாங்கள் பெற்றுக் கொண்ட பாரம்பரியத்தையும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், ஆற்றல்களையும் தங்களுடைய வழித்தோன்றல்களிடம் கையளிக்கின்றனர்; தங்களுடைய வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு வழித்தோன்றல்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

II. புதிய ஏற்பாடு

**1. இயேசுவின் பிரியாவிடை உரைகள்:** இறுதிக்காலம் பற்றிய உரையே (மாற் 13) மக்களுக்கு இயேசு அளித்த இறுதிப் போதகமாகும். தான் பறை சாற்றியுள்ள வாக்குறுதிகளின் நிறைவேறுதலுக்குத் தங்களையே தயாரிக்கும்படி இயேசு விசுவாசிகளைத் தூண்டுகிறார். தம் மகிமை மிக்க இரண்டாம் வருகை பற்றிய இறைவாக்கினைப் போன்ற புதிய கருத்தைத் தம் ஆட்தன்மையின் புரட்சி மிக்க புதுமையால், புகுத்துகிறார். இவ்விறைவாக்கு இவ்வுரையை அவர் மீண்டும் வருவதை அறிவிக்கும் முன்னறிவிப்பாக மாற்றுகிறது.

இறுதி இரவுணவு உரை. இயேசுவின் பிரியாவிடை உரைகளில் எல்லாம் முதல்தரமான எடுத்துக்காட்டாகும். மத்தேயுவிலும் மாற்கிலும் நற்கருணை நிறுவப்படுதல், இறையரசில் மீண்டும் சந்திப்பது பற்றிய குறிப்போடு முடிவு பெறுகிறது (மாற் 14:25 இணை). லூக்காவில் இயேசுவின் பணியாகிய எடுத்துக்காட்டைப் பின்வருமாறு பன்னிருவரையும் தூண்டும் அறிவுரையில் நற்கருணை நிறுவப்படும் நிகழ்ச்சியுரை தொடர்கிறது (22:24-27); ஏற்பாட்டு வடிவில், தம் ஆற்றலில் பன்னிருவரும் பங்கு பெறுவார்கள் என்று வாக்களிக்கிறார் (22:28-30). யோவானில், இந்த நீண்ட உரை (யோவா 13-17) சீடர்களின் கால்களைக் கழுவுவதுடன் தொடங்குகிறது. இதில் இயேசு தம் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டுக் கொடுக்கிறார். இப்பிரியாவிடையில் இரு இணை உரைப்பகுதிகள் உண்டு (அதி. 14 மற்றும் 16:16-33). இவற்றில் வரவிருக்கும் துன்பமிக்க பிரிவையும், அவர் மீண்டும் வருதலின் மகிழ்ச்சியையும் இயேசு முன்னறிவிக்கிறார் (16-ஆம் அதிகாரத்தில் வரும் "பாஸ்குக் காட்சிகள்;" 14-ஆம் அதிகாரத்தில் வரும்

திருச்சபையில் அவரது பிரசன்னம்). விசுவாசத்திற்கும், அன்புக்கும் அமைதிக்கும் தம் சீடர்களைத் தூண்டுகிறார். அவர்களிடையே அவர் இல்லாதிருத்தல் ஒரு சிறிது காலத்திற்கே; அதுவும் தோற்ற அளவிற்கே.

மோசே, சாமுவேல், தாவீது ஆகியோருடைய பிரியாவிடை உரைகளைப்போல், உயிர்த்த கிறிஸ்து பன்னிருவருக்கும் அளிக்கும் காட்சிகள் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதையும் உள்ளடக்கியுள்ளன. இத்தறுவாய்களில், தம் தூதைத் தொடர்ந்து செய்யும் அலுவலைத் தம்மைப் பின்பற்றுவோருக்குக் கையளிக்கிறார். போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும், மன்னிக்கவும் அவர்களுக்குக் கட்டளை அளிக்கிறார் (மத் 28:19). எந்நாளும் அவர்களோடு இருப்பதாக வாக்களிக்கிறார் (28:20).

**2. அப்போஸ்தவர்களின் பிரியாவிடை உரைகள்:**

இவர்கள் இறைவன் திட்டத்தைச் செயல் படுத்துபவர்கள். பழைய ஏற்பாட்டுத் தலைவர்களுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருக்கின்றனர்.

திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம், ஓர் உண்மையான இறுதிவிருப்பமும் ஏற்பாடும் ஆகும். பவுல் தமக்கு மரணம் வெகு தொலைவில் இல்லை என்றுணர்ந்து (2 திமொ 4:6-8) இயேசுவின் மீட்பைத் (1:9-10) தன் பிரமாணிக்கமுள்ள சீடருக்கு நினைவுபடுத்துகிறார்; பதிதம் அல்லது சமய மறுப்பைப் பற்றி எச்சரிக்கிறார் (2:16-18); ஆண்டவரின் நாள் வருகையை முழு நம்பிக்கையோடு எதிர் நோக்குகிறார் (1:12.18; 2:11-12). பேதுருவின் இரண்டாம் திருமுகத்திலும் இதே கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை: அப்போஸ்தலரின் நெருங்கிவரும் மரணம் (2 பேதுரு 1:12-15); ஏற்கனவே அளிக்கப்பட்ட மீட்பு (1:3-4); சமய மறுப்பு என்ற நிகழ்ச்சி (2:1-3. 10-22); ஆண்டவர் நாளை எதிர்பார்த்தல் (1:16-19; 3:8-10. 12:13-18).

எபேசின் தலைவர்களுக்குப் பவுல் அளித்த ஏற்பாடு மிகச்சிறப்பு வாய்ந்ததாகும் (அ.ப. 20:17-38). இங்கே நாம் காண்பவை: தம்மையே ஓர் எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றார் (20:18-21.31-35); வரவிருக்கும் அவரது சிறைப்படுதலை எதிர்நோக்குகிறார் (20:22-24); தமது அலுவலை முடித்துவிட்டதாகப் பகிரங்கமாக அறிவிக்கிறார் (20:25-27); திருச்சபையின் பணியில் அவரது அலுவலைத் தொடர்ந்து நடத்த அழைப்புவிடுக்கிறார் (20:28); சமயத்தை மறுப்பவர்களுக்கு எதிராக மந்தையைக் காக்கும்படி கேட்டுக்கொள்கிறார் (20:29-30).

இயேசுவின் உரைகளில் மீண்டும் சந்திப்பது பற்றிய குறிப்பு உண்டு. ஆனால், அப்போஸ்தலர்களின் உரைகளில் மீண்டும் சந்திக்கும் கருத்து இருப்பதில்லை. இதற்குக் காரணம், ஆண்டவர் நாளில், தங்களுடைய பிரமாணிக்கமுள்ள விசுவாசிகளைச் சந்திப்போம் என்று இவர்கள் நம்பவில்லை என்பதன்று; இந்நாளைப் பற்றி எண்ணும்போது, மற்றெல்லாவற்றையும் விடத் தாங்கள் ஆண்டவரைச் சந்திப்பதையே அதிகமாய்ச் சிந்தித்தனர். அவர் ஒருவரே சாவை வென்றவர்; இன்மையை எல்லாம் வென்றவர் (நிறைவு செய்பவர்).

**பிரேத்தோரியம் (PRAETORIUM)**

1.உரோமைப் படைத்தளத்தின் தலைமை இடத்தை அல்லது இராணுவத்தின் தளபதியைக் குறிப்பதாக இச்சொல் வருகிறது; பின்னர் இதன் பொருள் விரிவடைந்து மாநில ஆளுநர் தங்கும் அரண்மனையையும் குறிப்பதாக அமைந்தது. இந்த ஆளுநரின் பெயர் குற்றவியல் நடுவர், புறமாகாண ஆளுநர், கருவூல அதிகாரி என வேறுபட்ட வடிவங்களில் அமையலாம் (யோவா 18:28; அ.ப. 23:35). இறுதியாக எந்தப் பெரிய வீட்டையும் குறிப்பதாகவே இச்சொல் அமைந்தது. நற்செய்தியிலும், அப்போஸ்தவர் பணியிலும், இஃது ஆளுநர் தங்குமிடத்தைத் குறிப்பதாகவே அமைந்தது. இச்சொல் ஆளுநரின் தங்குமிடத்தைக் குறிக்கிறதா (மாற் 15:16),

ஆளுநரின் வீட்டைக் குறிக்கிறதா (யோவா 18:28. 33; 19:9), ஏரோதின் அரண்மனையினைக் குறிக்கிறதா (அ.ப. 23:35) அல்லது காவற்படையினர் தங்குமிடத்தைக் குறிக்கிறதா (மத் 27:27) என்பது தெளிவாகவில்லை.

மாற் 15:16-இன்படி 'போர் வீரர்கள் அனைவரும் இருந்தனர்' என்பது காவற்படையினர் தங்குமிடத்தைத்தான் குறிக்க வேண்டும் என்கின்றனர் சிலர். ஆளுநரின் அரண்மனையில் பொதுமக்களின் குறைகளைக் கேட்பதற்கும், நீதி அளிப்பதற்குமென ஒரு திறந்தவெளி அரங்கு இருந்தது (யோவா 19:13); காவற்படை தங்குமிடமும் இதன் ஒரு பகுதியாக இருந்தது. எனவே, 'பிரேத்தோரியம்' என்பது இதில் ஏதாவதொரு பகுதியை, அல்லது முழுவதையும் குறிக்கலாம்.

யோவான் கூறுவதின்படி இந்தச் சொல் ஆளுநர் தங்குமிடம், காவற்படையினர் தங்குமிடம், நீதி வழங்குமிடம் இவையனைத்தும் சேர்ந்ததையே சுட்டிக்காட்டுவதாக வருகிறது.

ஏரோதின் பிரேத்தோரியம் (அ.ப. 23:35) பெரிய ஏரோதினால் செசரியாவில் கட்டப்பட்டது. பவுல் பெலிக்சினால் இந்த இடத்தில்தான் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் பவுலை ஒரு கைதியைப் போலன்று, மிக மரியாதையுடன் ஒரு விருந்தினரைப்போல நடத்தியிருக்கிறார் எனத் தெரிகிறது.

நற்செய்தியில் குறிப்பிடப்படும் 'பிரேத்தோரியம்' நகரின் வடமேற்கு மூலையில் அமைந்த ஏரோதின் மாளிகையைக் குறிக்கிறதா அல்லது ஆலயத்தின் வடமேற்கு மூலையில் அமைந்த அந்தோனியாக் கோட்டையைக் குறிக்கிறதா எனத் தெரிவில்லை.

பிரேத்தோரியத்தில் உள்ள படைக்கு, பிரேத்தோரியக் காவல்படை என்பது பெயர். இது 1) படைத்தளத்திலுள்ள ஆலோசனைக் குழுவையோ, 2) உயர் நீதி மன்றத்தையோ, 3) அரச காவலர்களையோ குறிக்கலாம்.

கி.மு. 27-இல் அகுஸ்து உரோமையில் ஒரு தலைமைப் படைத்தளத்தை நிறுவினான். உரோமையிலிருந்த பிரேத்தோரியத்தில் இத்தாலியர்களே சேர்க்கப்பட்டனர். பின், ஆள் பற்றாக்குறையினால் அவனது படைகளில் வெளி மாநிலத்தவரும் சேர்க்கப்பட்டனர்.

கி.பி. 23-இலிருந்து காவற்படையினரின் முக்கியத்துவம் அதிகரித்தது. செசானு காலத்தில் இப்படை அச்சுறுத்தும் ஓர் அமைப்பாக மாறியது. கி.பி. 41-இல் கலிகுலா இறந்தபின் இவர்கள் குடியரசை மீண்டும் நிலைநாட்டி கிலாதியுவை அரசனாக்கினர். கி.பி. 98-117-இல் திரேசன் இப்படையை உரோமைக்குள் கொண்டு வந்தார். இது தொடர்ந்து பல அழிவுக்குக் காரணமான ஒரு சக்தியாக அமைந்ததால் கான்ஸ்டன்டைன் இதனை ஒழித்து விட்டார்.

**பிர்சா (BIRSHA – அசிங்கமான)**

கொமோர் அரசன் (ஆதி 14:2). கெதர்ல கோமோரை எதிர்த்துத் தோற்றுப்போனவர் (ஆதி 14:8, 10:11).

ஆபிரகாம் காலத்தில் கொமோராவின் அரசன் (ஆதி 14:2). கெதர்லகோமருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, தோற்கடிக்கப் பட்டவன் (14:8.10-11)

**பிர்சாவித்து (BIRZAITH – ஒலிவமரக் கிணறு)**

பாபிலோனின் அடிமைத்தனத்திற்குப் பிறகு ஆசேர் கோத்திர வழிவந்த குடும்பங்களின் பெயர்ப் பட்டியலில் காணப்படும் ஒரு பெயர்.

இதற்கு இணையான பகுதிகளாகிய ஆதி 46:17; எண் 26:4-47 ஆகியவற்றில் இப்பெயர் குறிக்கப்படவில்லை. இஃது ஓர் இடத்தின் பெயராக இருக்கலாமோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இவ்விடம் பழங்காலத் தீருக்கு அருகில், ரமல்லாவுக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பிர்செய்த்தாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பிலகோன் (PHLEGON - எரிகின்ற)**

கிறிஸ்தவரான பிலகோனுக்கும், அவருடன் இருந்த மற்றக் கிறிஸ்தவர்களுக்கும் பவுல் தன் திருமுகத்தில் வாழ்த்தைக் கூறுகின்றார் (உரோ 16:14).

**பிலதெல்பியா (PHILADELPHIA - சகோதர அன்பு)**

பிலதெல்பியா, மேற்குச் சிறிய ஆசியாவில் லீதியா மாகாணத்து நகரங்களில் ஒன்று (திருவெளி 1:11; 3:7).

தமோலுஸ் மலைகளின் தொடர்ச்சியான, கோகமிஸ் ஆற்றின் தெற்கில் அமைந்துள்ள பீடபூமியின்மீது பிலதெல்பியா அமைந்திருந்தது. இரண்டாம் அத்தாலுசு (பிலதெல்புசு - கி.மு. 159-138) இந்நகரைக் கட்டியதால் அவன் பெயரே இந்நகருக்குச் சூட்டப்பட்டது. இது பலமுறை நில அதிர்ச்சிகளால் தாக்கப்பட்டாலும் வளமுடையதாக இருந்தது. பிலதெல்பியாவின் செல்வம் அதைச் சுற்றியிருந்த கிராமங்களில் இருந்ததால், மக்கள் நகரத்தில் வாழ்வதை விட, கிராமங்களில் வசிக்கவே விரும்பினார்.

கிரேக்கர் காலத்தில் இந்நகரம் செழிப்பாக விளங்கியது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. மாசிதோனியக் கேடயம் நாணயங்களில் காணப்படுவது இங்கு மாசிதோனியக் குடியிருப்புகள் இருந்ததைச் சுட்டிகிறது.

உரோமையர்கள் காலத்தில் நகரின் வாழ்க்கைநிலை மாற்றியமைக்கப்பட்டது. கி.பி. 17-இல் ஒரு நிலநடுக்கம் பிலதெல்பியாவைத் தாக்கியது. இச்சமயத்தில் திபேரியுஸ் இதற்கு உதவி செய்ததால் நன்றிக் கடனாக இந்நகரம் நெயேசெசரியா என்ற பெயரைச் சூட்டிக்கொண்டது. வெஸ்பாசியன் காலத்தில் பிளாவிய என்ற பெயர் நாணயங்களில் பொறிக்கப்பட்டது.

பிலதெல்பியாவின் பொருளாதாரம் விவசாயத்தையும், தொழிற்சாலைகளையும், நெசவு, தோல்பதனிடுதல் ஆகிய தொழில்களையும் சார்ந்திருந்தது. இந்நகரம் பல பிற மதத் திருவிழாக்களைக் கொண்டாடியதால் “சிறிய ஏதன்சு” என்ற பரிகாசப் பெயர் சூட்டப்பட்டது.

திருவெளிப்பாட்டில் குறிப்பிடப்படும் ஏழு திருச்சபைகளுள் பிலதெல்பியாவும் ஒன்று. ஆனால், இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றி எதுவும் தெரியவில்லை. பிலதெல்பியா மற்ற நகரங்களோடு தொடர்பில்லாத ஒரு கிறிஸ்தவ நகரமாகும். இங்கு இருந்த கிறிஸ்தவ சமூகம் அவ்வளவு சக்திவாய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அதன் பற்றுறுதிக்காகப் போற்றப்படுகிறது. இங்கு இருந்த யூத சமூகம் கிறிஸ்தவர்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்ததாகத் தெரிகிறது (திருவெளி 3:7-13).

இதன் பெருமை, ஓட்டமான் பேரரசை எதிர்த்து நின்றதில் வெளிப்படுகிறது. வெற்றி கொள்ளப்பட்ட பின்னும், இஃது ஒரு கிறிஸ்தவ நகரமாகத் தனித்து நின்றது.

**பிலமேத்தோர் (PHILOMETOR)**

இவர் 2 மக் 4:21-இல் குறிக்கப்படும் தோலமி ஆவார்.

**பிலமோனுக்குத் திருமுகம் (PHILEMON, LETTER TO)**

**1. முன்னுரை:** இத்திருமுகம் புதிய ஏற்பாட்டின் பதினெட்டாவது நூலாகும். விவிலியத்திலேயே மிகச் சிறிய நூல்களில் ஒன்று. சிறையிலிருந்த அப்போஸ்தலர் பவுல் கொலோசையிலிருந்த பிலமோன் என்ற கிறிஸ்தவருக்கு, ஒனேசிமு என்ற தன் தலைவரிடமிருந்து ஓடி வந்துவிட்ட அடிமைக்காகப் பரிந்துரைத்து எழுதும் மடலாகும். இது தனிமனிதருக்கு எழுதப்பட்ட மடலானாலும், திருமுறைப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது பவுலின் சிறைக்கூட மடல்களில் ஒன்றாகும்.

**2. சந்தர்ப்பமும் நோக்கமும்:** ஒனேசிமு என்ற அடிமை தன் தலைவரிடமிருந்து ஓடி, அவருக்குப் பெருமளவு இழப்பு ஏற்படுத்திவிட்டார். தன் தலைவர் பவுலிடம் கொண்டுள்ள பெருமதிப்பைக் கருத்தில் கொண்டு, அவர் சிறையிருந்த இடத்தில் அவரிடம் சரண் அடைந்தார். எப்படியோ பவுல் அவருக்கு அடைக்கலம் கொடுத்துக் காலப்போக்கில் அவரைக் கிறிஸ்தவராக்கினார் (பில 10). ஒனேசிமு பிலமோனுடைய அடிமையாவார் என்பதை அறியவந்த பவுல், நற்செய்திப் பணியில் தனக்கு உதவி செய்ய ஒனேசிமுவை நிறுத்திக்கொள்ள விரும்பினாலும், பிலமோனின் உரிமையைக் கருத்தில் கொண்டு, ஒனேசிமுவை அவரது தலைவரிடம் திருப்பி அனுப்பத் தீர்மானிக்கிறார் (14:16). ஓடிப்போன அடிமையை "அடிமையாக அன்று, மாறாக அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்படி" (16) பிலமோனுக்குப் பவுல் வேண்டுகோள் விடுக்கிறார். அதாவது, சட்டம் அனுமதிக்கும் கடும் தண்டனையை ஒனேசிமுக்கு அளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறார். ஒனேசிமு பிலமோனுக்கு ஏற்படுத்தக் கூடிய நட்டத்தை ஈடு செய்வதாகவும் வாக்களிக்கிறார். ஆனால், சிறையிலிருந்து இதை எப்படிச் செய்வார் என்று கூறவில்லை. மேலும், தன்னோடு உழைக்க ஒனேசிமு திரும்ப வருதலை விரும்புவதாகவும் பவுல் சுட்டிக்காட்டுகிறார் (20). இதன் மூலப் பிலமோன் ஒனேசமுக்கு விடுதலை அளிக்க வேண்டும் என்று பவுல் சுட்டுகிறாரா? இச்செய்தியும் உள்ளடங்கியிருக்கலாம்.

**3. ஒனேசிமு, பிலமோன், அர்க்கிப்பு:** கொலோ 4:9-இலிருந்து, ஒனேசிமு (பயனுள்ளவர்) கொலோசையைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. இவர் பிலமோனுடைய (அன்புள்ளவர்) அடிமையாவார் என்ற பாரம்பரியக் கருத்துக்கு மாறாக, நாக்சு என்ற அறிஞர் மாறானதொரு கருத்தைக் கூறுகிறார். இவருடைய கருத்துப்படி ஒனேசிமுவின் தலைவர் அர்க்கிப்பு ஆவார். இவர்தான் கொலோசைச் சபை கூடுவதற்கு இடம் அளித்தவர். ஒனேசிமுவுக்குப் பிலமோன்தான் தலைவர் என்று திருமுகத்தில் எதுவும் காட்டவில்லை. பிலமோன் லீக்குப் பள்ளத்தாக்கில் இருந்த சபைகளின் மேற்பார்வையாளராக இருந்திருக்கலாம். லவோதிக்கேயில் வாழ்ந்திருக்கலாம். கொலோசையர் களுக்கும், பிலமோனுக்கும் எழுதப்பட்ட இருதிருமுகங்களும் ஒரே இடத்திலிருந்து ஒரே சமயத்தில் எழுதப்பட்டவை என்ற அடிப்படையில் "லவோதிக்கேயாவிலிருந்து வரும் கடிதம்" (கொலோ 4:16) பிலமோனுக்கு எழுதப்பட்ட கடிதம்தான். அர்க்கிப்புவைப் பவுல் நேரடியாக அறிந்திராததால், பிலமோன் அர்க்கிப்புவிடம் தன் செல்வாக்கைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறார்.

இந்தப் புனைதிறமிக்க கோட்பாடு நமது கவனத்தை அவ்வளவு ஈர்க்க வேண்டியதில்லை; ஏற்புடையதும் அன்று. ஏனெனில், யாருக்குக் கடிதம் எழுதப்பட்டதோ அவர் மூன்றாம் இடத்தில் குறிக்கப்படுவது (2) பவுலின் திருமுகங்களில் காணப்படாத தொன்றாகும். "அவர் வீட்டில் கூடும் சபை" என்பது இலக்கணப்படி அர்க்கிப்புவைக் குறிக்கலாம் (2). ஆனால், இது முதலில் குறிக்கப்பட்ட வரையே சேர்ந்தது என்று ஏற்றுக் கொள்வதே இயல்பான பொருளாகும். மேலும், திருமுகத்தில் அடிக்கடி வரும் "நீர்" என்ற சொல் அர்க்கிப்புவைக் குறிப்பதாக ஏற்றக்கொள்வது வெகு கடினமாகும். மேலும், பிலமோனுக்கும் கொலோசையருக்கும் எழுதப்பட்ட திருமுகங்கள் ஒரே இடத்திலிருந்தும் ஒரே காலத்திலும் எழுதப்பட்டவை என்ற கருத்தை அறிஞர் பலர் இப்போது ஏற்றுக்கொள்வதில்லை. பில 1-4-ஐச் சாதாரணமாக வாசித்தாலே, பிலமோன் ஒனேசிமுவின் தலைவர் என்றும், "நீர்" என்ற சொல் பிலமோனையே குறிக்கிறதென்றும் நாம் கண்டுணரலாம்.

ஆகவே, பாரம்பரியக் கருத்தை ஏற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். இதன்படி, இம்மடலைப் பெறுபவர் சிறிய ஆசியாவின் லீக்குப் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு நகரத்தில், ஒருவேளை

கொலோசையில் வாழ்ந்த ஓர் இளம் செல்வந்தர்; எல்லாராலும் மதிக்கப்பட்ட கிறிஸ்தவர். பிலமோன், அப்பியா, அர்க்கிப்பு மற்றும் "அவர் வீட்டில் கூடும் சபை" ஆகியோருக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார். அப்பியா பிலமோனுடைய மனைவியாகவும், அர்க்கிப்பு அவர்களின் மகனாகவும் இருக்கலாம். இதற்குச் சார்பாகவோ மறுப்பாகவோ திருமுகத்தில் எக்குறிப்பும் இல்லை. பிலமோன் ஒருவேளை எபேசில் (அ.ப. 19:10) பவுலால் மனந் திருப்பப் பட்டிருக்கலாம் (பில 19). "அவர் வீட்டில் கூடிய சபை" என்பது அவரை அதன் தலைவராக ஆக்கவில்லை. ஒருவேளை அப்போஸ்தலரோடு உடனுழைத்தவர் என்பதால் அச்சபையின் சிறப்பு மிக்க உறுப்பினர் ஆவார்.

பிலமோனைப் பற்றி, நாக்சு மற்றொரு கருத்தைக் கூறியுள்ளார். இதன்படி பவுலுக்கு உதவி செய்ய ஒனேசிமு திரும்பி வந்தார். காலப்போக்கில் அவர் எபேசின் ஆயரானார். பவுலின் திருமுகங்களை ஒரு தொகுப்பாகச் சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்திருக்கலாம். இக்குறிப்புகள் உண்மையாக இருக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

**4. காலமும் இடமும்:** பிலமோனுக்குத் திருமுகத்தைப் பவுல் சிறைக் கைதியாக இருந்தபோது எழுதினார் (23). ஆனால் எங்குச் சிறைக் கைதியாக இருந்தார் என்று உறுதியாகக் கூறமுடியாது. பாரம்பரியக் கருத்து இந்தச் சிறையிருத்தலை உரோமையில் பவுல் வீட்டுக் காவலில் இருந்ததுதான் (கி.பி. 61-63) என்று கூறுகிறது. விளக்கவுரையாளர் சிலர் இது பவுல் செசரியாவில் சிறை இருந்ததுதான் (கி.பி. 58-60) என்பர். வேறு சிலரின் கருத்துப்படி இது பவுல் எபேசில் சிறை இருந்ததைக் குறிக்கிறது (கி.ப. 56-57) என்பர். பெரும்பாலான இன்றைய அறிஞர்கள் மூன்றாவது கருத்துக்கு ஆதரவு அளிக்கின்றனர். ஏனெனில், எபேசில் இருந்த பவுலும் கொலோசையில் இருந்த ஒனேசிமுவும் சென்று வரக்கூடிய தொலைவில் (108 கி.மீ) இருந்தனர் என்பது இக்கருத்துக்குச் சாதகமாக உள்ளது. இது பிலமோனைச் சந்திக்க வரும் பவுலின் திட்டத்தை எளிதாக விளக்குகிறது. உரோமையில் சிறை இருந்திருந்தால் இது நடக்கக் கூடியதன்று

**5. உண்மைத் தன்மை:** மார்சியோன் காலத்திலிருந்தே இத்திருமுகத்தைப் பவுல் தான் எழுதினார் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிலமோன், கொலோசேயர் ஆகிய இரு திருமுகங்களுக்கிடையே காணப்படும் தொடர்பிலிருந்து இரண்டும் ஒரே காலத்தில், ஒரே ஆளால் எழுதப்பட்டது என்று பாரம்பரியமாகக் கருதப்பட்டது. ஆகவே, பவுல்தான் கொலோசையரை எழுதினார் என்பதை மறுத்தவர்கள் பிலமோனையும் அவர் எழுதவில்லை என்று கூற வேண்டியதாயிற்று. இது துபியன் பள்ளி செய்த பல தவறுகளில் ஒன்றாகும். ஏனெனில், திருமுகம் முழுவதும் பவுலோடு கொண்டுள்ள தொடர்புண்மைகளை நினைவூட்டுகிற பண்புகள் நிறைந்த காணப்படுகின்றன. கடிதக் கலையின் இந்த நிறை மாதிரியில் பவுலின் உண்மையான குரலை, அவருக்கே உரிய ஆழ்ந்த, தனிப்பட்ட முறையில் காண்பதாகப் பெரும்பாலான அறிஞர்கள் உறுதி கொண்டுள்ளனர்.

6. திட்டம்

I. முகவுரை (1-7).

1-3 : வாழ்த்து.

4-7 : நன்றிகூறுதல்.

II. வேண்டுகோள் (8-21).

8-14 : அடிமையின் மேல்பிரிவு.

15-21 : அடிமைக்காகப் பரிந்து பேசுதல்.

III. முடிவுரை (22-25).

22 : செய்திகள்.

23-25 : வாழ்த்துக்கள்.

7. கோட்பாடு: சமூக, மேய்ப்புப்பணிக் கருத்தில்லாததாகத் தோன்றும் ஒரு தனி நபருக்கு எழுதப்பட்ட கடிதம் ஏன் திருமுறைப்பட்டியலில் இடம் பெற்றது என்று பழங்கால விளக்கவுரையாளர்கள் வியப்பு அடைந்துள்ளனர். ஆனால், இம்மடல் பிலமோனைத்தவிர அவர் வீட்டில் கூடிய சபையாகிய மற்றவர்களுக்கும் எழுதப்பட்டதாகும். இஃது ஒரு தனிப்பட்ட காரியத்தைப் பற்றி எழுதப்பட்ட மடலாக மேலெழுந்தவாரியாகத் தோன்றினாலும், இம்மடல் அடிமைத்தனம் பற்றிய ஆதித் திருச்சபையின் மனப்பான்மையை உட்கொண்டுள்ளது. அடிமைத்தனத்தைப் பற்றி 1 கொரி 7:20-24; கொலோ 3:22-4:1; எபே 6:5-9; 1திமொ 6:1-2; தீத் 2:9-ஆகிய பகுதிகளில் பவுல் பேசுகிறார். இவை அக்காலத்தில் நிலவிய அடிமைத்தனத்தைப் பவுல் ஏற்றுக்கொள்வதாகக் காட்டுவதாகத் தோன்றுகின்றன. இது நமது சமத்துவ உணர்ச்சிகளைப் புண்படுத்தலாம். ஏனெனில், தன்னையே ஒரு முடிவாகக் கொண்டு நடத்தப்பட வேண்டும் என்ற ஒவ்வொரு தனி நபருக்குமுரிய உரிமை பற்றிய நமது கருத்துக்கு எதிர் முரண்பாடாக இஃது உள்ளது. அடிமைத்தனத்தைப் பவுல் முனைப்பாகக் கண்டனம் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், "எந்த நிலையிலும் ஒருவன் அழைக்கப்பட்டானோ அந்த நிலையிலேயே அவன் இருக்கட்டும்" (1 கொரி 7:20) போன்ற கூற்றுகளால் நாம் தவறான கருத்துகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. கிறிஸ்துவான ஒரே தலைவர்முன் எல்லாரும் சமமானவர்கள் என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்துதலில் பவுல் ஓர் அடி முன் எடுத்து வைக்கிறார். இது காலப்போக்கில் சமூக அமைப்பு முழுவதையும் மாற்றி அமைக்கும். மனிதர்களும் நிறுவனங்களும் ஒன்றன்மீது ஒன்று செயலாற்றி ஒன்றையொன்று பாதிக்கின்றன. வன்முறையால் மனித நிறுவனங்களை மாற்றுவது அல்லது மனித மனத்தை மாற்றி அதன் விளைவாகத் தீய நிறுவனங்களை அகற்றச் செய்வது ஆகிய இருவழிகளைப் பவுல் எதிர்கொள்கிறார். வன்முறையால் ஏற்படும் கொடிய விளைவுகளுக்கு வரலாறு சான்று கூறுகிறது. உரோமைப் பேரரசில் நிகழ்ந்த மூன்று அடிமைக் கிளர்ச்சிகளால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளைப் பவுல் நன்கு அறிந்திருக்கக் கூடும். ஆகவே, பவுல் மனித மனப்பான்மையை மாற்றும் வழியைத் தேர்ந்தெடுக்கிறார்.

முதலில் பவுல் ஒனேசிமுக்கு மேய்ப்புப் பணி மற்றும் அன்புள்ள பாசத்தைக் காட்டுகிறார். இரண்டாவது ஒனேசிமுவைப் பிலமோனிடம் திருப்பி அனுப்புவதில் ஏற்கெனவே இருக்கும் சமூக அமைப்பை அகற்ற, பவுல் முயற்சிக்கவில்லை. அடிமைத்தனத்தை அகற்றச் செய்யும் முயற்சியின் பயங்கர விளைவுகளையும் பயனின்மையையும் நன்குணர்ந்தவராய், இத்திருமுகத்தில் பவுல் பரிந்துரைக்கும் கோட்பாட்டின் வளர்ச்சி காலப்போக்கில் மனித சமூகத்தை மாற்றியமைக்கும். இப்பிரச்சனைக்குச் சமூக அமைப்புகளின் பண்பு மாறச் செய்வதே பவுலின் விடையாகும். ஒனேசிமுவை ஒரு "சகோதரனாக" வரவேற்கும்படி பிலமோனைத் தூண்டுகிறார். ஏனெனில் ஒனேசிமு "ஆண்டவர் விடுவித்த உரிமைக் குடிமகனாக இருக்கிறார்" (1 கொரி 7:22). இதை, கலா 3:27-38-இல் பவுல் போதிப்பதோடு ஒப்பிடுக. பவுல் தனது அப்போஸ்தோலிக்க அதிகாரத்தைப் பயன்படுத்தி பிலமோனிடம் கீழ்ப்படிதலைக் கோரமுடியும் என்றாலும் (பில 8), "அன்பின் பெயரால்" இக்கோரிக்கையை இடுகிறார்.

பவுலின் இந்தக் கோட்பாடு உலகில் மெதுவாகத்தான் செயல்பட்டது. இந்தக் குற்றம் கோட்பாட்டைச் சார்ந்ததன்று. அதைச் செயலாற்ற வேண்டிய மனிதர்களைச் சேர்ந்ததாகும். இக்கோட்பாட்டின் காரணமாக ஒரு தனிப்பட்டவருக்கு ஆதரவாக எழுதப்பட்ட கடிதம் "அப்போஸ்தலிக்கத் திருமுகம்" ஆகியது.

**பிலமோன் (PHILEMON)**

கொலோசையில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவர். இவருக்கு, ஓடிப்போன ஒனேசிமுவுக்கு ஆதரவாகப் பவுல் ஒரு மடல் எழுதினார் (காண்க. கொலோ 4:9). ஒருவேளை பவுல் கொலோசைக்குச் சென்றதில்லை என்று கருதலாம் (2:1). ஆகவே, பவுலும் பிலமோனும் வேறொரு இடத்தில், ஒருவேளை எபேசில் சந்தித்து இருக்கலாம் (அ.ப. 19:8-10). பவுல் பிலமோனை மனந்திருப்பியிருக்க வேண்டும் (பில 19). பிலமோன் ஓர் அடிமையையாவது கொண்டிருந்தார். அவர் வீட்டில் கிறிஸ்தவ சமூகம் கூடியது (2); பயணமாய் வரும் போதகர்களை விருந்தோம்பினார் (22). இவையெல்லாம் அவர் ஒரு செல்வந்தர் என்று காட்டுகின்றன.

**பிலயாம் (BALAAM - விழுங்குபவன், பெருந்தின்னி) - ஆள்**

பிலயாம் ஒரு காட்சியாளர். இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பாலாக்கு என்ற மோவாபிய அரசனால் அழைத்து வரப்பட்டவர். அவ்வாறு சபித்தால் கானான் நாட்டில் நுழையவிருக்கும் இஸ்ராயேலர் அதில் நுழையமாட்டார்கள் என அரசன் நம்பினான் (எண் 22:5-24:25; 31:8.16; உப 23:4-5; யோசு 13:22; 24:9-10; நெகே 13:2; மீக் 6:5; 2 பேதுரு 2:15; யூதா 11; திருவெளி 2:14).

பிலயாம் பெத்தோர் ஊரைச் சேர்ந்த பேயோரின் மகன். மோவாபின் அரசனான பாலாக்கு பிலயாமை அழைத்ததும், அவர் வர மறுத்ததும், பின்னர்ப் புறப்பட்டு வரும்போது தொடர்ந்து செல்ல அவர் ஏறிச்சென்ற கழுதை மறுப்பதும், அதனோடு பிலயாமின் உரையாடலும் ஆகிய இவை அனைத்தும் நாடோடி இலக்கியத் தன்மைகளை அதிகம் கொண்டுள்ளன.

சடங்கு முறைப்படி இஸ்ராயேலைச் சபிக்குமுன் பிலயாம் ஏழு பீடங்களைக் கட்டி, பதினான்கு பலிப்பொருட்களைப் பலியிட்டார். பின் நான்கு முறை இறைவாக்கு உரைத்தார். அவை சாபத்துக்குப் பதிலாக ஆசீராக முடிந்தன.

முதல் இறைவாக்கு இஸ்ராயேல் மற்ற நாடுகளைப் போல் இல்லாது தனித்து விளங்குவதற்காகப் புகழ்கிறது (எண் 23:7தொ). இரண்டாவது இறைவாக்கு, இஸ்ராயேலுக்குள்ளே எந்தவிதத் துன்பமும் குழப்பமும் இல்லை; ஏனெனில், அவர்கள் சிலை வழிபாட்டையோ சோதிடம், குறி சொல்வதையோ நம்புவதில்லை என்பதற்காகப் போற்றுகிறது. இக்காரணத்திற்காக அவர்களுக்கு எதிரான எந்த மந்திர மாயமோ, குறி சொல்லுதலோ பயனளிக்காது (எண் 23:8 தொ). மூன்றாவது இறைவாக்கு இஸ்ராயேலுக்கு வரப்போகும் செல்வாக்கையும், அது பெறப்போகும் வெற்றிகளையும் முன்னோக்குகிறது (எண் 24:2தொ). நான்காவது இறைவாக்கு அவர்கள் உடனடியாக மோவாபின் மீதும், ஏதோமின் மீதும் கொள்ளப்போகும் வெற்றியை உறுதிப்படுத்துவதாக உள்ளது (எண் 24:15 தொ).

பிலயாமைப் பற்றிய பின்னைய மரபு ஒன்று அவர் மோவாபியர்களிடம், பாகாலை வழிபடுமாறும் இஸ்ராயேலரை மயக்குமாறும் கூறியதாகக் குறிப்பிடுகிறது. இதற்காக இஸ்ராயேலர்களால் அவர் தண்டிக்கப்பட்டார் (எண் 31:8.16; யோசு 13:22). பிலயாம் எங்கிருந்து தோன்றினார் என்பது நினைவுபடுத்த முடியாத அளவுக்கு முக்கியத்துவமின்றிப் போய்விட்டது (எண் 22:5). பிலயாம் இறைவாக்குரைப்பதின் பாடல் நடை 11, 12-ஆம் நூற்றாண்டுப் பாடல்களின் நடையைக் கொண்டுள்ளதால், அவரது மரபும் அக்காலத்தவையாகவே இருக்க வேண்டும் என்று ஆல்பிரைட்டு என்பவர் கூறுகிறார். யாக் கோபின் விண்மீன் என்பது (எண் 24:17) யாகோபின் விண்மீன் வெற்றி கொள்ளும் பொழுது என மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று அதே அறிஞர் குறிப்பிடுகிறார். பிலயாம் தப்பறைக் கொள்கைகளைப் போதிப்பவராக 2 பேதுரு 2:16; யூதா 11; திருவெளி 2:4-இல் காட்டப்படுகிறார்.

பிலயாம் என்ற உருவகம் பழைய ஏற்பாட்டில் தனித் தன்மையுடையதாகும். இவர் ஓர் அன்னியர். ஆனால், இஸ்ராயேலின் கடவுளின் கட்டளைக்குட்பட்டவர். சினத்தில் யாவே பயன்படுத்தும் கோலாக விளங்கிய அசீரியாவைப் போலன்றி (எசா 10:5), தனது ஆற்றல்கள் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன என்று நெஞ்சறிய ஏற்றுக்கொள்பவராகப் பிலயாம் சித்தரிக்கப்படுகிறார் (எண் 24:13). "ஆண்டவரின் வார்த்தையை மீறச்சென்று என் விருப்பப்படி நன்மையோ, தீமையோ செய்ய இயலாது" (24:13) என்று கூறும் பிலயாமின் செயல் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பேசப்பட்ட வார்த்தையின் ஆற்றலுக்கு அசாதாரண எடுத்துக்காட்டாகும் (காண்க. ஆதி 12:3; 27:33; யாத் 21:17; எசா 55:11).

**பிலயாம் (BILEAM - அன்னியர்கள்) - இடம்**

இது 1நாள் 6:70-இல் காணப்படும் பட்டியலில், மனாசேயுக்குரிய பகுதியில் லேவியர் குலத்திற்குரிய நகரமாகும். இஃது இபிலயாமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

**பிலலோகு (PHILOLOGUS - கல்வி, படிப்பு ஆர்வமுடைய)**

கிறிஸ்தவனான பிலலோகு என்பவருக்கு, உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் புனித பவுல் வாழ்த்து கூறுகின்றார். பெயர்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் விதத்திலிருந்து இவர் குடும்பத்தின் தலைவன் என்றும், யூலியா இவரது மனைவி என்றும், மற்றவர்கள் பிள்ளைகள் என்றும் எண்ணத்தோன்றுகிறது (உரோ 16:15).

**பிலாஸ்து (BLASTOS - மொட்டுவிடு, தளிர்விடு)**

முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மேற்பார்வையாளன் (அ.ப. 12:20).

அ.ப. 12:20-ஐத் தவிர வேறு எங்கும் இவரைப் பற்றி எழுதப்படவில்லை. ஏரோது தீர், சீதோன் நகர மக்கள் மீது வெஞ்சினம் கொண்டிருந்தான். அந்நிலையில் ஏரோதுக்குட்பட்ட நாடுகளிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிடைக்காது என்ற அச்சத்தில் இம்மக்கள், ஏரோதைக் கண்டு சமாதானமாக விரும்பினர். இதற்குப் பிலாஸ்துவைப் பயன்படுத்தினர்.

**பிலாத்து, பொந்தியு (PILATE, PONTIUS)**

பொந்தியு பிலாத்து யூதேயாவின் உரோமை ஆளுநனும் (கி.பி. 26:36), இயேசுவுக்குக் கொலைத்தீர்ப்பிட்டவனும் ஆவார்.

1. **மூலங்கள்:** பிலாத்து, திபேரியுவின் ஆட்சிக்காலத்தில் இயேசுவுக்குக் கொலைத் தீர்ப்பிட்டதாகத் தாசித்து கூறுகின்றார்.

பிலாத்து எருசலேமின் அரண்மனையில் பேரரசரின் பெயர் பொறிக்கப்பட்ட கேடயங்களைத் தொங்கவிட்டிருந்தான் என்றும், அதை எடுத்து விடுமாறு பேரரசர் கட்டளை இட்டார் என்றும், இவன் கொலை கொள்ளை கற்பழிப்பு ஆகியவற்றில் வல்லவன் என்றும் பீலோ கூறுகிறார்.

யோசிப்பசு பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். யூதர்கள் சிலைகளை விரும்பாததால் உரோமை அதிகாரிகள் பேரரசரின் உருவத்தை யூதேயாவிற்குள் கொண்டு வருவதில்லை. பிலாத்து பதவி ஏற்றவுடன், இரகசியமாக உருவங்களைக் கொண்டு வந்தான். இதைக் கண்ட யூதர்கள் அவனது வீட்டைச் சுற்றி நின்று எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐந்து நாட்களுக்குப்பின் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கினான். மற்றொரு நிகழ்ச்சியில் கால்வாய் வெட்டுவதற்கு ஆலயப்பணத்தைப் பயன்படுத்த பிலாத்து திட்டமிட்டபோது, யூத மக்கள் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பை அடக்க பிலாத்து தன் படைவீரர்களை ஏவி விட்டான். இதனால், யூதர்கள் பலர் கொல்லப்பட்டனர். மூன்றாம் நிகழ்ச்சியில் கி.பி. 35-இல் கெரிசிம் மலை மீதுள்ள சமாரியரின் வழிபாட்டு இடத்தைத் தாக்கி, சிலரைக் கொன்று, பலரைச் சிறையில் அடைத்தான். சமாரியர்கள் இவனைப் பற்றி சீரியாவின் வித்தேலியு என்ற

உரோமைத் தூதுவனிடம் முறையிட்டனர். அதன் விளைவாக, பிலாத்து பதவி இழந்து உரோமைக்கு அனுப்பப்பட்டான்.

புதிய ஏற்பாட்டில், யூதத்தலைமைச் சங்கத்தின்முன் விசாரிக்கப்பட்ட பின்பு இயேசு பிலாத்துவிடம் ஒப்படைக்கப்பட்டார். லூக் 13:1-5, பிலாத்து கலிலேயர்களைக் கொன்றதைக் குறிப்பிடுகிறது. 1 திமொ 6:13-இல் வரும் குறிப்பைத் தவிர, பவுல் இவனைக் குறிப்பிடவில்லை.

**2. குணம்:** யோசிப்பசும், பீலோவும் பிலாத்து வணங்காத் தன்மையுடையவன், கொடூரமானவன், முரட்டுத் தன்மை உடையவன், கொலைகாரன், கொள்ளைக்காரன், பல நீதிமான்களைக் கொன்றவன் என்று கூறுகின்றனர். ஆனால், பிற்காலக் கிறிஸ்துவ இலக்கியங்கள் இவனுக்குச் சாதகமாகவே பேசுகின்றன.

**3. இயேசுவின் வழக்கு விசாரணை:** மாற் 15:1-15, பிலாத்து இயேசுவைத் தீர்ப்பிட்டதாகக் கூறுகின்றது. இயேசுவைக் கசைகளால் அடித்தபின் தலைமைக் குருக்களும், மூப்பரும், மறைநூல் அறிஞரும் இயேசுவைக் கட்டி, பிலாத்திடம் கூட்டிப் போயினர். பிலாத்து, "நீ யூதரின் அரசனோ?" என்று அவரை வினவ, அவர் மறுமொழியாக, "நீர்தான் சொல்லுகிறீர்" என்றார். தலைமைக் குருக்கள் பலவற்றைக் குறித்துக் குற்றம் சாட்டிய பின்னும் இயேசு பதில் கூறாததைக் கண்டு "பிலாத்து வியப்புற்றான்". திருவிழாதோறும் கைதிகளை விடுவிக்கும் வழக்கப்படி பிலாத்து யூதர்களிடம் "யூதரின் அரசனை" விடுதலை செய்யலாமா என்று கேட்டான். கூட்டம் பரபாவை விடுதலை செய்யக்கோரியது. பிலாத்து அவர்களை நோக்கி, இயேசுவை அவன் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்குச் "சிலுவையில் அறையும்" என்று கூச்சலிட்டனர். பிலாத்து அவர்களைத் திருப்திப்படுத்த விரும்பி பரபாவை விடுதலை செய்து, இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையும்படி கையளித்தான். மாற்கு நற்செய்தியில் பிலாத்து ஓரளவு சார்பற்ற நீதிபதியாகவும் இயேசுவையோ, அவரைப் பற்றித் தெரிந்துகொள்வதையோ குறித்துக் கவலை கொள்ளாதவனாகவும் குறிப்பிடப் படுகிறான். சிலுவைக் கொலைக்குற்றம் யூதர்கள்மேல் சுமத்தப்பட்டாலும் பிலாத்து குற்றமற்றவனாகக் காட்டப்படவில்லை. இவன் எதற்கும் கவலையற்றவனாக மாற்கில் காட்சி அளிக்கிறான்.

மத்தேயு நற்செய்தியும் (27:1-26) மாற்கு நற்செய்தி கூறியதையே கூறி, சிறிது சேர்த்துச் (27:19) சொல்கிறது. பிலாத்துவின் மனைவி ஆளனுப்பி, "அந்நீதிமானின் காரியத்தில் நீர் தலையிட வேண்டாம். ஏனெனில், அவர் பொருட்டு இன்று நான் கனவில் துன்புற்றேன்" என்றாள். இச்சிறப்புக் குறிப்பை மத்தேயு கொடுக்கிறார். பிலாத்து இக்கொலைத் தீர்ப்பில் தனக்குப் பங்கு இல்லை என்பதைத் தெரிவிக்கக் கைகழுவினான். அதற்கு மக்கள், "இவன் இரத்தம் எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்றார்கள். இதன் மூலம், மத்தேயு, இயேசுவின் இறப்புக்கு யூதர்களே முழுக்காரணம் என்று சுட்டிக் காட்டுகிறார்.

லூக் 23-இன்படி, இயேசு பிலாத்து முன் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டார். பிலாத்து அவரிடம் குற்றம் ஏதும் காணாததாகக் கூறினான். இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேம்வரை மக்களிடையே குழப்பம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, பிலாத்து இயேசுவை, கலிலேயாவின் சிற்றரசனான ஏரோது அந்திபாவிடம் அனுப்பினான். ஏரோது இயேசுவை விசாரித்தபின், அவனது படைவீரர்கள் அவரை இழிவாக நடத்தினர். மீண்டும், இயேசு பிலாத்திடம் கொண்டு வரப்பட்டபோது இரண்டாம் முறையும் அவர் குற்றமற்றவர் என்றான். மீண்டும் மக்கள், பரபாவை விடுவிக்கக் கோரிய போதும், இயேசு குற்றம் அற்றவர் என்றான். ஆனால், மக்கள் கூட்டம் வலியுறுத்திக் கேட்கவே, பிலாத்து இயேசுவை அவர்களிடம் கையளித்தான். மத்

27:28-31; மாற் 15:17-19 இவற்றில் இயேசுவுக்குச் செய்யப்பட்ட அவமரியாதை எல்லாம் உரோமையர்களால் செய்யப்பட்டது. ஆனால், லூக்கா இவை எல்லாம் ஏரோதின் படைவீரர்களால் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் லூக்கா, இயேசு யூதச் சட்டத்தை மீறவில்லை என்றும், இயேசுவும், அப்போஸ்தலர் பணிநூலில் பவுலும், பேதுருவும் பிரமாணிக்கமுள்ள யூதர்கள் என்றும் குறிப்பிட விரும்பினார் யோவா 18:28-19:16-இன்படி, இயேசு பிலாத்துவிடம் கொண்டு வரப்பட்டபோது அவர்களைக் காண அவன் தனது அரண்மனைக்கு வெளியே வந்தான். யூதர்களே இயேசுவுக்குத் தீர்ப்பிடலாமே என்று அவன் கூறியபோது, யூதர்கள் அதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறினர். பிலாத்து இயேசுவை உள்ளே அழைத்து அவரோடு உரையாடினான். இதன்பின் அவன் வெளியே வந்து இயேசு குற்றமற்றவர் என்றான். ஆனால், அவர்கள் வற்புறுத்தவே, பிலாத்தின் படைவீரர்கள் அவரை அடித்து, சிவப்பு அங்கியைப் போர்த்தி ஏளனம் செய்தனர். பிலாத்து இரண்டாம் முறையும் இயேசு குற்றம் அற்றவர் என்று கூறினான். மீண்டும், மூன்றாம் முறையும் இயேசுவை விடுவிக்க அவன் முயற்சி செய்து வெற்றியடையாததால் இயேசுவைச் சிலுவையில் அறையக்கையளித்தான். இந்தப் பகுதியின் மூலம் யோவான் யூதர்கள் மேல் பழிசுமத்துகிறார். இறைமகன் இயேசு, இறைவன் வகுத்த திட்டத்தில் பிலாத்து ஒரு சிறு கருவிதான் என்று கூறி, தன்னையே கையளித்தார் என்றும் கூறுகிறார்.

1 திமொ 6:13-இல், 'இயேசு பிலாத்து முன் நின்றபோது, சிறந்த விசுவாச அறிக்கையைச் செய்தார்' என்று குறிப்பிடும் போது பிலாத்து குறிப்பிடப்படுகிறான்.

**4. வரலாறும், கதையும்:** இயேசுவின் காலத்தில் பிலாத்து ஆளுநராக இருந்தார். இயேசு இறந்ததற்கு உரோமையர்களும் காரணம். அவரது இறப்பின்போது பிலாத்துவைப் போன்ற உரோமை அதிகாரி ஒருவர் இருந்தார். இந்த உண்மைகளிலிருந்து பிலாத்து இயேசுவின் இறப்பில் தொடர்புடையவன் என்பது புலனாகிறது.

**5. பின்வரலாறு:** பிலாத்துவின் பின்வரலாறு, மரணம் பற்றி எதுவும் உறுதியாகத் தெரியாது. இவன் பேரரசன் கலிகுலா காலத்தில் தற்கொலை செய்ய கட்டளையிடப்பட்டதாகவும், நீரோ காலத்தில் தலை வெட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வரலாற்றுச் செய்திகள் மிகக் குறைவாயிருந்தாலும் பிலாத்துவைப் பற்றிய கிறிஸ்தவக் கதைகள் வளர்ந்தன. கிறிஸ்தவப் பாரம்பரியம் இயேசுவின் மரணப்பழியை யூதர்கள்மேல் முழுவதும் சுமத்தியது; குறிப்பாக, கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே பகை வளர வளர, இப்போக்கு மேலும் மேலும் வளர்ந்தது. பிலாத்துவைப் பற்றிப் பல கிறிஸ்தவப் போலி நூல்கள் பல கதைகளைக் கூறுகின்றன. ஒன்றில் பிலாத்து கிறிஸ்தவ மறைசாட்சியாக மரிக்கிறான். சில கதைகள், பிலாத்துவின் மனைவியை ஒரு புனிதையாகக் கருதுகின்றன. மத் 27:19-இல் பெயர் குறிக்கப்படாத இவள், இக்கதைகளில் புரோக்ளா என்றழைக்கப்படுகிறாள். பிலாத்துவும் அவர் மனைவியும் எத்தியோப்பிய திருச்சபையால் புனிதர்களாகக் கருதப்பட்டு, விழாவையும் கொண்டுள்ளனர். கிரேக்கத் திருச்சபை புரோக்ளாவைப் புனிதையாகக் கொண்டாடுகிறது.

**பிலாத்துவின் பணிநூல் (PILATE, ACTS OF)**

இஃது ஒரு போலிநூல் இது நான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இயேசுவின் பாடுகளைப் பற்றிய நற்செய்தியாகும். இதில் 2 பகுதிகள் உள்ளன. முதல் பகுதி இயேசு பிலாத்துவின் முன் தீர்ப்பிடப்படுகிறார்; பின், சிலுவையில் அறையப்படுகிறார். இதைத் தொடர்ந்து யூதத் தலைமைச் சங்கத்தில் சில செயல்கள் இடம் பெறுகின்றன. இவை இயேசுவின் உயிர்ப்பையும் விண்ணேற்றத்தையும் நிரூபிக்கின்றன. இரண்டாம் பகுதி பாதாளத்தில் இருந்து வந்த இருவர் வழங்கும் சாட்சியங்கள்.

இயேசு இறந்தபின் பாதாளம் சென்றார் (இறந்தோர் வாழும் இடம்; நரகம் அன்று); அங்குக் கைதிகளாக இருந்தோரை மீட்டார்.

முதல் பகுதி நான்கு நற்செய்தியை மிகவும் தழுவியதாக உள்ளது. அஃதோடு நிகழ்ச்சிகள் கற்பனை வளத்தோடு உயர்வு நவிற்சியில் கூறப்பட்டுள்ளது. பல சாட்சிகள் பிலாத்தின் விசாரணையின்போது கொண்டு வரப்பட்டதாம். இயேசுவை விசாரிக்க அழைத்து வந்தபோது பிலாத்து அவருக்குத் தலை வணங்கினானாம். அஃதோடு அரண்மனைக் கொடிகளும் வணங்கி நின்றனவாம். நூற்றுவர் தலைவன் இயேசு இறந்ததை அறிவித்தவுடன் பிலாத்து மனம் வருந்தினாராம். இயேசு மலைமேல் உயிர்த்தெழுந்ததை மூன்று பேர் ஒரு குரு, ராபி, ஒரு லேவியன்-பார்த்ததாகக் கூறப்படுகிறது. உடனே, இவர்கள் கல்லறையில் உடலைத் தேடியபோது உடல் கிடைக்கவில்லையாம். பின், சிறையில் அடைக்கப்பட்ட அரிமத்தியா ஊர் யோசேப்பு புதுமையாக இயேசுவால் விடுவிக்கப்பட்டாராம்.

மறைசாட்சியான யுஸ்தீன் பிலாத்துவின் அறிக்கை ஒன்று பற்றிக் கூறுவது இந்நூலில் இருந்து எடுக்கப்பட்டிருக்கலாம் எனச் சிலர் கருதி இந்நூல் 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்கின்றனர். ஆனால், யுசேபியு இப்புத்தகத்தை அறிந்திருக்கவில்லை.

2-ஆவது பகுதியில் "தேவ ஆவியால் அவர் சேயோலில் இருந்த ஆன்மாக்களுக்குப் போதித்தார்" (1 பேதுரு 3:19) என்று சற்றே உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. அரிமத்தியா ஊர் யோசேப்பைப் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பகுதிகளும் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து அறிஞர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். சிலர், இதை நிக்கோதேமு எழுதினார்; பின், 425-இல் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது எனக் கூறுகின்றனர். சிலர், இது 5-ஆம் நூற்றாண்டில் தான் எழுதப்பட்டது என்கிறார்கள்.

இந்நூல் இயேசுவின் இறப்புக்கும் பாடுகளுக்கும் உயிர்ப்புக்கும் ஒரு சாட்சி எனலாம். காலப்போக்கில் இஃதோடு பல பிற்சேர்க்கைகள் சேர்க்கப்பட்டன. பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகள், பாடுகள் ஆகிய புத்தகங்களில் இருந்தும் சில பகுதிகள் இதிலே சேர்க்கப்பட்டுள்ளன.

**பிலிகா (PILHA - இயந்திரக்கல்)**

எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:24).

**பிலிப்பி (PHILIPPI)**

பிலிப்பி, மாசிதோனியாவின் நகரங்களில் ஒன்று. இது வடகிழக்கு மாசிதோனியாவில், நெயோப்பொலி வளைகுடாவில், கடலிலிருந்து 16 கி.மீ. தொலைவிலிருந்தது. இந்நகரம் மலைகளால் சூழப்பட்ட சமவெளியில் இருந்தது. இஃது, அதை அமைத்தவரான மாசிதோனிய மன்னன் இரண்டாம் பிலிப்பு மாசிதோனின் பெயரால் அழைக்கப்படுகிறது. கி.மு. 167-இல் இந்நகரம் உரோமையர் ஆட்சியின் கீழ் வந்தது. இங்கு, புரூட்டசு, காசியு ஆகியவர்கள் அந்தோனி, அக்டேவியன் ஆகியவர்களால் கி.மு. 45-இல் தோற்கடிக்கப்பட்டனர். இஃது உரோமையர்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டது. இந்நிலையில் இந்நகரம் இருந்தபோதுதான் பவுல் இங்கு வந்தார்.

பிலிப்பியில் அகழ்வாராய்ச்சி நடத்திய போது கோயில்கள், நூல்நிலையம், குளிக்கும் இடங்கள், இடுகாடு, மண்டபங்கள், வாயில்கள், உரோமைக் குடியிருப்புகள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட தெருக்களில் ஒன்று இத்தாலியிலிருந்து எக்னேசியா வழியாகப் பைசாந்தியம் செல்லும் உரோமையர்களின் நெடுஞ்சாலை என்று கருதப்படுகிறது. பிலிப்பி, மாசிதோனியாவின் ஒரு மாவட்டத்தின் முக்கியமான நகரம் என்று அ.ப. 16:12 குறிப்பிடுகிறது.

துரோவாவில் கண்ட காட்சியின் பயனாகப் பவுலும், சீலாவும் மேற்கொண்ட இரண்டாவது மறைபரப்புப் பயணத்தின்போது இங்கு வந்தனர் (அ.ப. 16:9-12). முதலில் பவுல் யூதர்கள் ஒன்று கூடிச் செபிக்கும் இடத்தில் போதித்தார். பின்னர், பவுலும் சீலாவும் அவர்களால் மனந்திரும்பிய லீதியா என்னும் பெண்ணின் வீட்டில் தங்கினர். பவுல் இவளிடமிருந்த ஆவியை ஓட்டி விட்டதால் அப்பெண்ணின் உரிமையாளன் பவுல், சீலா ஆகியோர் மீது வழக்கைத் தொடுத்தான். இருவரும் கசையால் அடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இச்சமயத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிறையின் கதவுகள் உடைபட்டும் பவுலும் சீலாவும் தப்பித்துச் செல்லாததைக் கண்ட காவலன் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றான் அடுத்த நாள் பவுல் தான் ஓர் உரோமைக் குடிமகன் என்று வெளிப்படுத்தியவுடன் நகர அதிகாரிகள் அஞ்சி, அவர்களை நகரை விட்டு வெளியேறக் கட்டளையிட்டனர். பவுல் மீண்டும் மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது பிலிப்பி நகருக்கு வந்தார் (அ.ப. 20:6). இந்நகர மக்கள்பால் பவுல் கொண்டிருந்த அன்பும் பரிவும் அவர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாகக் காணப்படுகிறது.

**பிலிப்பியருக்குத் திருமுகம் (PHILIPPIANS, LETTER TO THE)**

**1. முன்னுரை:** இது புதிய ஏற்பாட்டில் பதினொன்றாவது நூலாகும். ஐரோப்பாவில், முதலில் மாசிதோனியப்பகுதியில் உள்ள பிலிப்பி நகரில் பவுல் திருச்சபையை நிறுவினார் (அ.ப. 16:11-40). அந்நகரக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார். நூல்முழுவதும், அப்போஸ்தலர் அந்நகர மக்களிடம் கொண்டிருந்த அன்பும் பரிவும், அக்கறையும் மிளிர்கின்றன. இது "பவுலின் சிறைக்கூட மடல்கள்" என்ற தொகுப்பில் ஒன்றாகும்.

**2. பிலிப்பி நகரமும் அங்கு இருந்த திருச்சபையின் நிலையும்:** பவுலின் காலத்தில், பிலிப்பிநகரம், மாசிதோனியா நாட்டிலுள்ள ஓர் உரோமை மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றாகும் (அ.ப. 16:12). இது பங்கேயு மலைக்குக் கிழக்கேயுள்ள சமவெளியில் அதிரியாத்திக்கு மற்றும் ஆகியன் கடல்களை இணைக்கும் எக்னேசியன் சாலையில் அமைந்திருந்தது. இது முதலில் கிரேனிது (சிறு சுனைகள்) என்றழைக்கப்பட்டது. கி.மு. 356-இல் மாசிதோனியனின் 2-ஆம் பிலிப்பு இதை அழித்து அதன்மேல் ஒரு நகரம் கட்டி அதற்குத் தன் பெயரையே இட்டான். இஃது அழகிய துறைமுகமான நெயாப் பொலிக்கும் (16 கி.மீ.), அதன் அருகிலுள்ள தங்கச் சுரங்கங்களுக்கும் சென்றுவர எளிதான வழிகளைக் கொண்டிருந்தது. பிலிப்புவின் போர்ச்செயல்களுக்கும் அரசியல் காரியங்களுக்கும் இது பெரும் மதிப்புடையதாகும். கி.மு. 167-இல் உரோமை ஆட்சியின்கீழ் வந்தபோது இப்பகுதி ஓர் உரோமைய மாசிதோனிய மாவட்டமும், பிலிப்பி அதன் முக்கிய நகரமுமாயிற்று. கி.மு. 42-இல் அந்தோனியும் அக்டேவியனும், புரூட்டசையும் காசியசையும் இவ்விடத்தில் தோற்கடித்தபோது இவ்விடம் புகழ் பெற்றது. காலப்போக்கில் உரோமை வீரர்களில் முதியவர்கள் இங்குக் குடியேறினர். கி.மு. 30-இல் மற்றொரு இலத்தீன் பேசும் குடியிருப்பு இங்கே நிறுவப்பட்டபின், அக்டேவியன் இதற்குப் பிலிப்பியில் உள்ள அகுஸ்தா யூலியக் குடியிருப்பு என்று பெயரிட்டான். நகர் "இத்தாலிய உரிமை" பெற்றது. இதன் விளைவாக, உரோமைச் சட்டப்படி, சொத்துரிமை, தலைவரி மற்றும் நிலவரி முதலியவற்றிலிருந்து நகர் விதிவிலக்குப் பெற்றது. இந்நகர் படைத்தளபதி என்றழைக்கப்பட்ட மேலாண்மையுடைய நடுவரைக் கொண்டிருந்தது (அ.ப. 16:19. 35-39). ஒரு நூற்றாண்டுக்குள் இலத்தீன் குடும்பங்கள் கீழ்த்திசைச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டன. நகரத்தில் எப்போதும் திரேசியன் மக்கள் இருந்தனர். ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் எக்னேசியன் சாலையின் முதல் இடமாக இருந்ததால் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வந்த

வணிகர்களைப் பிலிப்பியில் காணலாம். இவை பிலிப்பியருக்குத் திருமுகத்தைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவும்.

ஐரோப்பாவின் தனது மறைபரப்புப் பணியைப் பிலிப்பியில் பவுல் தொடங்கினார் (கி.பி. 50; 2-ஆவது மறைபரப்புப் பயணம்). அ.ப. 16:11-40 பிலிப்பியில் திருச்சபை நிறுவப்பட்டதைச் சில கதைப் பண்புகளோடு விவரிக்கிறது. நகரத்தில் யூதச் செபக்கூடம் இல்லாததால் கிரேனிது ஆற்றங்கரையிலுள்ள "செபிக்கும் இடத்தில்" தனது போதிக்கும் பணியைப் பவுல் தொடங்கினார். ஓர் அடிமைப் பெண்ணிடமிருந்து பேயை ஓட்டியது, அவர் பிடிக்கப்பட்டுத் தடியால் அடிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்படுதலுக்கு இட்டுச் சென்றது. இரவில் ஏற்பட்ட ஒரு நில நடுக்கம், பவுல் தப்பி ஓடுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்தது. இதற்கு மாறாக, தான் ஓர் உரோமைக் குடிமகன் என்று வெளிப்படுத்தி குற்றம் செய்த அதிகாரிகளை மன்னிப்புக் கேட்கும்படி செய்கிறார் (16:37-30). இப்படிச் செய்வது, புதிதாக நிறுவப்பட்ட சபையைப் பாதுகாப்பான அடிப்படையில் வைக்க அவசியமாயிற்று எனலாம். அதிகாரிகளின் அச்சத்தைக் கண்டு மக்கள் புதிய சமயத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பர். தொடக்கத்திலிருந்தே இங்குள்ள சபையில் பெண்கள் முக்கிய பங்கு வகித்திருப்பதாகத் தெரிகிறது. லீதியா (16:14-15.40), எயோதியா மற்றும் சிந்திக்கி (பிலி 4:2-3). பிலிப்பியர் திருமுகத்தில் காணப்படும் பெயர்களிலிருந்து, பிலிப்பியக் கிறிஸ்தவ சமூகம் பெரும்பாலும் புறவினத்தாரையே கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

பிலிப்பியில் புதிய சபையை நிறுவியபின், அதன் பொறுப்பு லூக்காவிடம் விடப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், "நாங்கள்" என்ற பகுதி மூன்றாவது மறைபரப்புப் பயணத்தின் முடிவில் பிலிப்பியிலிருந்து புறப்படும் வரை கொடுக்கப்படவில்லை. பிலிப்பியில் தான் நிறுவிய திருச்சபையின்பால் பவுல் ஒரு தனியன்பு கொண்டிருந்தார் (4:1). தன் பயணங்களின் போது அடிக்கடி பிலிப்பிக்குச் சென்று தன் அன்பார்ந்த திருச்சபையைக் கண்டதாகத் தெரிகிறது (1 கொரி 16:5; அ.ப. 20:1; 1 திமொ 1:3; 2 திமொ 4:13). அவரது தனித்தேவைகளுக்கும் எருசலேம் திருச்சபையின் பொதுத்தேவைகளுக்கும் பிலிப்பித்திருச்சபை தாராளமாகப் பெருநிதி அளித்துப் பலமுறை உதவியது (பிலி 4:16.18; 2 கொரி 11:9). பிலிப்பியரின் அன்பு நன்கொடையை ஏற்க, பவுல் தயங்கவில்லை.

**3. நூலின் உண்மைத் தன்மையும் திருமுறைப் பட்டியலும்:** கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டுவரை இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்றும், ஆகவே இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிலிப்பிக்குப் பவுல் "கடிதங்கள் எழுதினார்" என்று போலிக்கார்ப்பு கூறுகிறார். மார்சியன் இதை ஏற்றுக்கொண்டார். முராத்தோரியன் துணுக்குகளில் இப்பெயர் காணப்படுகிறது. இரேனேயு, தெர்துல்லியன், அலக்சாந்திரியாவின் கிளமந்து ஆகிய திருச்சபைத் தந்தையர்கள் இந்நூலிலிருந்து எடுத்துக்காட்டுகள் கொடுக்கின்றனர். இதன் நடை, சொற்தொகுப்பு, கருத்துப்போக்கு ஆகியவை பவுலுக்கே உரியவையாகும். ஆகவே, இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால், கி.பி. 1845-இல் துபியன் பள்ளி இக்கருத்தை ஐயுறத் தொடங்கி, அதுபற்றி எழுதியது. ஆனால், இப்போது அறிஞர்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

4. நூலின் ஒற்றுமை: இந்நூல் ஒற்றுமையுடைய ஒரே திருமுகம் என்று பொதுவாகக் கருதப்பட்டது. இக்கருத்துக்கு இன்றும் ஆதரவாக உள்ள அறிஞர் சிலர் உள்ளனர். ஆனால், இக்கருத்து இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மாறாக இந்நூல், மூலத்தில் தனித்தனியாக எழுதப்பட்ட இரண்டு அல்லது மூன்று கடிதங்களைக் கொண்ட

ஒரு தொகுப்பாகும் என்ற கருதுகோள் அறிஞர்களிடையே பரவலாக நிலவுகிறது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலிக்கார்ப்பு, பவுல் பிலிப்பியருக்கு எழுதிய "கடிதங்களைக்" குறிக்கிறார். ஆனால், அவர் பன்மையைப் பயன்படுத்துகிறாரா என்று அறுதியிட்டுக் கூறமுடியாது.

நூலின் உள்ளார்ந்த ஆய்வு பிலிப்பியருக்குத் திருமுகம் என்ற நூல் ஒரு தொகுப்பாகும் என்ற புதிய கருதுகோளுக்கு இணக்கமாய் உள்ளது. அதற்குப் பின்வரும் காரணங்கள் சுட்டிக்காட்டப்படும். 1) பவுலின் திருமுகங்களில் மாதிரி முடிவாகத் தோன்றுவதை அடுத்து பிலி 3:1-இல் தொனியிலும் பொருளடக்கத்திலும் முனைப்பான மாற்றம் தோன்றுகிறது. இன்னும் குறிக்கப்படாத எதிரிகளுக்கு எதிராக இப்பகுதியில் ஒரு தர்க்கவாதப் பகுதியைப் பவுல் தொடங்குகிறார். 2) 4:2-9-இல் இத்தகைய முடிவுக்குப்பின், 4:10-இல் புதிதாக ஒரு பகுதியைப் பவுல் தொடங்குகிறார். பிலிப்பியரின் கூறுகிறார். 3) 4:4-இல் "அகமகிழுங்கள்" என்று கோருவது, 3:1-இல் வரும் அதே மாதிரியான கருத்தோடு இயல்பாக இணைந்துள்ளது.

இந்தப் புதிய கருதுகோளின் அடிப்படையில், பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தைப் பின்வருமாறு பிரிப்பர். கடிதம் I: 4:10-20 - நன்கொடையை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறுதலாகும். கடிதம் II. 1:1-2:31; 4:4-7. 21-23- ஒற்றுமைக்கும் அகமகிழ்வதற்கும் தூண்டும் கடிதம். எப்பப்பிராதித்து பிலிப்பிக்குத் திரும்பியபோது கொடுத்தனுப்பப்பட்ட கடிதம். கடிதம் III. 3:1-4:3.8-9-இது கடிதம் II-இல் புகுத்தப்பட்ட ஓர் இடைச்செருகலாகும். இது யூதர்களின் கோரிக்கைகளுக்கு எதிராகப் பிலிப்பியரை எச்சரிக்கிறது. இஃது ஒரு வாதப்பகுதியாகும்.

பிலிப்பியரில் ஒற்றுமையுள்ளது என்று கருதுபவர்கள் மொழி, கருத்து, சர்ச்சைக்குரிய பகுதிகள் ஆகியவற்றில் போதிய இணைப்புத் தன்மை இருப்பதையும், தொகுக்கப்பட்ட முறையையும் இப்புதிய கருதுகோளால் விளக்குவது கடினம் என்பர். ஆனால், 3:1-இல் வரும் முனைப்பான முறிவு ஒரு பெரிய தடையாகவே உள்ளது. ஓர் ஆற்றல் மிக்க பதிப்பாசிரியர் தொகுத்தலை உண்மையிலேயே செய்திருப்பாரா? என்று வியக்கத் தோன்றுகிறது. அப்படிச் செய்திருந்தால், பவுலை இடைவிடாது துன்புறுத்தி வந்த யூதேய மயமாக்கும் பிரிவினரைப் பவுல் தாக்குவதை இன்னும் உறுதிப்பாடான முறையில் செய்திருக்க மாட்டாரா? பவுலின் திருமுகங்களில், கோட்பாட்டுப் பகுதிக்குப்பின் ஒழுக்கத் தூண்டுரை வருவது மரபு. இம்முறையை இத்திருமுகத்தில் பின்பற்றாததற்கு உளவியல் காரணங்கள் காட்டப்படலாம். வேறுபட்ட இலக்கியப் பொருள்களை இந்நூல் கொண்டிருந்தாலும், இதில் இன்னும் ஒற்றுமை இருப்பதாக ஆய்வாளர் சிலர் கருதுவர்.

நூலின் ஒற்றுமை பற்றிய இத்தகைய ஆய்வு நூலின் விளக்கத்திற்கு அதிக ஒளி அளிக்காவிட்டாலும், நூல் தோன்றிய இடம் மற்றும் காலம் பற்றிய சிக்கலான பிரச்சனைக்கு ஒரு வகையில் நம்பக்கூடிய விடை அளிக்கலாம். அப்போது வெவ்வேறான பகுதிகள் வெவ்வேறு காலங்களிலும், இடங்களிலும் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

**5. இடமும் காலமும்:** இஃது ஒரு சிக்கல் மிக்க பிரச்சனையாகும். கொலோசையர், பிலமோன், பிலிப்பியர், எபேசியர் ஆகியோருக்குப் பவுல் தன் சிறைவாசத்தில் திருமுகங்கள் எழுதியதாகவும், ஆகவே இவை "சிறைக்கூட மடல்கள்" என்றழைக்கப்படுவதாகவும் கருதப்பட்டன. பிலிப்பியருக்குத் திருமுகம் சிறைவாசப் பின்னணியில் எழுதப்பட்டது பற்றி ஐயமில்லை. பவுலே அதைச் சுட்டிக்காட்டுகிறார் (பிலி 1:14.17). அச்சிறைவாசமும் உரோமையருக்குக்கீழ் இருந்த ஒரு சிறையில் நிகழ்ந்தது என்றும் சுட்டுகிறார். "அரண்மனைக் காவலர்கள்" மற்றும் "சீசருடைய வீட்டைச் சேர்ந்தவர்கள்" ஆகிய குறிப்புகள் இதைத் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆனால், இச்சிறை

எங்கிருந்தது? இஃது ஒரு பெரிய பிரச்சனையாகும். இஃது ஆய்வுக்குட்பட்டு இன்றும் முடிவு காணப்படாத நிலையில் உள்ளது.

அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படும் செய்திகளிலிருந்து, பவுல் செசரியாவிலும் உரோமையிலும் உரோமையரின்கீழ் சிறைப்பட்டிருந்தார் என்பது தெளிவு. இதைத் தவிர்த்துத் தான் பல தடவை சிறைப்பட்டதாகவும் (2 கொரி 11:23), "எபேசில் விலங்குகளோடு போராடியதாகவும்" (1 கொரி 15:30-32; காண்க. 2 கொரி 1:8-10) பவுல் கூறுகிறார்.

1) இந்நூல் பவுல் செசரியாவில் சிறையிருந்தபோது எழுதப்பட்டது என்ற கருத்து ஆய்வாளர்களிடையே அவ்வளவு ஆதரவு பெறவில்லை. இந்நூல் உரோமையில் எழுதப்பட்டது என்பது பாரம்பரியக் கருத்தாகும். இப்போது மற்றொரு கருதுகோள்முன் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி, அப்போஸ்தலர் பணிநூலில் எபேசில் பவுல் சிறைப்பட்டிருந்தது பற்றிய எக்குறிப்பும் இல்லையெனினும், அங்குச் சிறையிலிருந்தபோதுதான் இந்நூலை எழுதினார் என்ற கருதுகோள் கி.பி. 1897-இலிருந்து சிறிது சிறிதாக அறிஞர்களிடையே அதிக ஆதரவு பெற ஆரம்பித்தது. பின்னிரண்டு கருத்துகளையும் ஆய்வு செய்வது அவசியமாகும்.

இந்நூல் உரோமையில் எழுதப்பட்டது என்று கூறுபவர்கள் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம். 1) பிலி 1:13; 4:22-இல் குறிக்கப்படுபவை உரோமைச் சிறைவாசத்தோடு ஒத்துப்போகின்றன. 2) 1:15-17-இல் குறிக்கப்படும் சூழ்நிலை உரோமையைப் பொருத்த மட்டும் உண்மையாக இருக்கலாம். அத்தகைய கட்சிப் பிரிவுகள் எபேசுத் திருச்சபைக்குப் பொருந்தாது. 3) தன் சிறை வாசத்திற்குப் பவுல் கொடுக்கும் முக்கியத்துவம் உரோமைச் சிறைவாசத்தால் மேலான முறையில் விளக்கப்படலாம். 4) திருச்சபை செழித்து வளர்ந்த மையமான எபேசில் பவுல் சிறைப்பட்டிருந்தால், பிலிப்பியிலிருந்து நன்கொடை கொண்டு வருவதில் எப்பப்பிராதித்து உண்மையில் அபாயமான பயணத்தை மேற்கொள்ள அவசியமில்லை. தூரத்திலிருந்த உரோமைக்கு இஃது அவசியமாகும். பவுல் எபேசில் சிறையிருந்ததற்கு ஆதரவாகக் காட்டப்படும் காரணங்கள் உண்மையாகத் தோன்றலாம். கவர்ச்சியானவையாகவும் இருக்கலாம். இரண்டு கருதுகோள்களுக் கிடையில், எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பிலிப்பியர் திருமுகம் உரோமையில் எழுதப்பட்டது என்ற பழங்காலக் கருதுகோள் அனுமதிக்கப்பட வேண்டும். இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்று நாம் துல்லியமாகக் கூற முடியாவிட்டாலும் கி.பி. 60-64-க்கு இடையில், ஒருவேளை இக்காலத்தின் பிற்பகுதியில், எழுதப்பட்டிருக்கலாம் என்பதோடு நாம் திருப்தி அடைய வேண்டும்.

பிலிப்பியர் திருமுகம் எபேசில் கி.பி. 56-57-க்கு இடையில் எழுதப்பட்டது என்ற கருதுகோளுக்குச் சார்பான காரணங்களின் தொகுப்பையும், அவை பற்றிய ஆய்வுக் குறிப்புகளையும் பின்வருமாறு தருகிறோம். 1) தனது 2-ஆம் மறைபரப்புப் பயணத்தில் தெசலோனிக்கேயில் இருந்ததிலிருந்து, பிலிப்பியரிடமிருந்து பவுல் எந்த நன்மையும் பெறவில்லை என, பிலி 4:10.16- இலிருந்து தோன்றுகிறது. ஆயினும், உரோமைச் சிறைவாசத்திற்குமுன் பவுல் இருமுறை பிலிப்பிக்குச் சென்றதாக அ.ப. 20:1-6 என்ற பகுதியிலிருந்து அறிகிறோம். அப்போது அவர்களிடமிருந்து உதவி பெற்றிருக்கலாம். ஆனால், கடிதங்கள் I மற்றும் II பிலிப்பிக்குத் திரும்பச் செல்லவில்லை என்று சுட்டுகின்றன. தன்பால் அவர்கள் கொண்டிருந்த அக்கறையைக்காட்ட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. என்பது வஞ்சப் புகழ்ச்சியாகவோ, குறையாகவோ கூறப்பட்டதன்று. இத்திருமுகம் கி.பி. 56-இல் எபேசில் எழுதப்பட்டதென்றால் எல்லாம் விளக்கமாகிறது. ஏனெனில், அக்குறுகிய காலத்தில் அதுவரை அவர் அவர்களிடம் வரவில்லை. இதற்கு மாறாக, உரோமைச் சிறைவாசம் வரை

அப்போஸ்தலருக்கு அவர்களின் உதவி தேவைப்படவில்லை அல்லது அவர்களின் உடனடித் தேவையால் அவர்களால் அவருக்கு உதவி செய்ய முடியவில்லை என்று 4:10-க்குப் பொருள் கூறலாம்.

2) இம்மடலில் மூன்று அல்லது நான்கு பயணங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பவுல். எப்பப்பிராதித்து, திமொத்தேயு ஆகியோருடையவும் தன்னுடையவும் ஆகிய மூன்று பயணங்களை முன்னோக்குகிறார் (பிலி 2:19. 24:25.27). மடல் எழுதியபோது பவுல் உரோமையில் இருந்திருந்தால் இத்தனை பயணங்களை மேற்கொள்வது அவ்வளவு எளிதன்று. உரோமையிலிருந்து பிலிப்பிக்கு ஒரு பயணம் செய்ய, குறைந்தது 7 அல்லது 8 வாரங்கள் ஆகும். ஆனால், எபேசிலிருந்து பிலிப்பிக்குச் செல்ல ஏறக்குறைய பத்து நாட்கள்தான் ஆகும். இந்த நீண்ட உறுதியற்ற, ஆபத்துக்கள் நிறைந்த பயணங்களைப் பவுல் குறிப்பிட்டிருக்க மாட்டார். ஆகவே, இந்நூல் உரோமையிலிருந்து எழுதப்பட்டிருக்க முடியாது என்பது ஒரு கருத்தாகும்.

ஆனால், உரோமைச் சிறைவாசம் இரு ஆண்டுகள் நீடித்ததால், இந்த நீண்ட பயணங்கள் செய்யக் கூடியவையே. ஆகவே, உரோமையில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

3) உரோமையருக்குப் பவுல் எழுதியபோது, ஸ்பெயினுக்குப் போகும் வழியில் அவர்களைப் பார்க்க வரும் திட்டத்தைக் கூறுகிறார் (உரோ 15:24.28). இக்கூற்றில் கிழக்கில் தனது பணி முடிந்துவிட்டதாகப் பவுல் கருதுவதாகத் தெரிகிறது. பின் ஏன் தனது திட்டத்தை மாற்றி பிலிப்பியர்களைச் சந்திக்க விரைவில் வருவதாகக் கூறுகிறார்? (பிலி 2:24). உண்மையில் திமொத்தேயுவின் தூதும், எபேசியர் பணிக்காலத்துக்குப்பின் வந்த பவுலின் பணியும் (அ.ப. 19:21-22; 20:1-2) இந்நூல் எபேசிலிருந்து எழுதப்பட்டது என்ற கருதுகோளோடு ஒத்துப்போகிறது.

ஆனால், கி.பி. 63-க்கு இடைப்பட்ட காலத்தில் பவுலிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய உளவியல் வேறுபாடுகளை நாம் கவனிக்க வேண்டும். 63-க்கு முன் ஏற்கெனவே ஏதாவது ஒரு வகையில் 5 வருடங்கள் பவுல் சிறையில் கழித்துவிட்டார். உடனடியாக ஸ்பெயினுக்குச் செல்லும் திட்டத்தை அவர் எளிதில் மாற்றி மாகிதோனியாவிலுள்ள சபைகளைக் காணாத நீண்ட இடைவெளிக்குப்பின் அவர்களைப் பார்த்து உற்சாகப்படுத்த விரும்பியிருக்கலாம். ஆகவே, பிலிப்பியிலுள்ள சபையை நிறுவியபின் அதை மீண்டும் பார்க்கவில்லை என்ற குறிப்பு பிலி 1:26.30; 4:15 தொ-இல் உள்ளது என்றும், எனவே அ.ப. 20:1 தொ-க்கு முன் இந்நூலை எபேசிலிருந்து எழுதினார் என்றும் கூறும் வாதம் மிக வலுவற்றதாகத் தோன்றுகிறது.

4) பிலிப்பியரில் குறிக்கப்படும் சிறைவாசத்திற்குக் காரணமானதை அடிப்படையாகக் கொண்ட வாதம் அவ்வளவு உறுதிவாய்ந்ததாகத் தெரியவில்லை எனலாம். பிலி 1:7. 12:13-இல் நற்செய்திக்காகப் போராடி அதை நிலை நிறுத்துவது சிறைவாசத்துக்கு உந்துகாரணமாகக் கூறப்படுகிறது அ.ப. 21:28; 24:6; 25:8-இல் உரோமைச் சிறைவாசத்துக்கு ஆலயத்தைப் பங்கப்படுத்தியது காரணமாகக் கூறப்படுகிறது. வாசகங்களை ஆராயும்போது யூதசமயத்துக்கு எதிராகப் பேசிய நசரேயர் பிரிவின் தலைவனாகப் பவுல் இருந்தது தான் உண்மைக் காரணமாகத் தெரிகிறது. யூத மயமாக்க விரும்புபவர்கள்மேல், அவர்கள் யூதக்கிறிஸ்தவர்களோ, யூதர்களோ யாராக இருந்தாலும், தாக்குதல் கலாத்தியருக்குத் திருமுகம் எழுதப்பட்டதற்கு முன்புதான் பொருந்தும் என்ற வாதமும் வலுவுள்ளதன்று. ஏனெனில், இத்தகைய போக்கு அப்போஸ்தலர் இறந்த பின்னும் திருச்சபையில் நீடித்திருந்தது.

5. பிலிப்பியர் திருமுகத்துக்கும் பவுலின் மற்றப் பெரிய திருமுகங்களுக்கும் இடையேயுள்ள கருத்தொற்றுமை காரணமாக இந்நூலும் அவை

எழுதப்பட்ட காலத்திலேயே எபேசிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது இறையியல் வாதமாகும். இதற்கு மாறாக, இந்நூல் பிற்காலத் திருமுகங்களோடும் கருத்தொற்றுமை கொண்டுள்ளது என்பது சுட்டிக் காட்டப்படலாம். இவ்வாறு பிலி 3:8-ஐ எபே 3:19-ஓடும், பிலி 3:10-ஐ எபே 1:19 தொ-ஓடும் ஒப்பிடுக. பிலிப்பியர் சூழ்நிலையால் எழுதப்பட்டதாகும். அஃது ஓர் இறையியல் திருமுகமன்று. ஆகவே, கோட்பாட்டு வாதத்தைப் பயன்படுத்தி பவுலின் முன்தொகுப்போடு சேர்க்க முடியாது என்று எபேசு கருதுகோளுக்கு மறுப்பைக் கூறுவர்.

ஆயினும், தனது மூன்றாவது மறைபரப்புப் பயணத்தில் (அ.ப. 19:1-20:1) பவுல் எபேசில் நீண்ட காலம் தங்கியபோது சிறைவாசம் இருந்தார்; அப்போது பிலிப்பியரை எழுதினார் என்ற கருதுகோளுக்கு இக்கால விளக்க விரையாளர்கள் பலர் பெரும் ஆதரவு அளிப்பர். பவுல் எபேசில் சிறைப்பட்டிருந்தார் என்பதற்கு ஏட்டுச்சான்று எதுவும்மில்லை. ஆனால், தான் பல தடவை சிறைப்பட்டதாகப் பவுல் கூறுகிறார் (2 கொரி 11:23). "எபேசில் விலங்குகளோடு போராடியதாகவும் கூறுகிறார்" (1 கொரி 15:30-32; காண்க. 2 கொரி 1:8-10). இக்கூற்றை அப்படியே சொற்பொருளில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஓர் உரோமைக் குடிமகனுக்கு இத்தகைய தண்டனை கொடுக்க முடியாது. மேலும், இந்நூலை எழுதியபோது அவர் உயிரோடு இருந்தார். ஆகவே, இக்கூற்று எபேசில் சிறையிருந்ததைச் சுட்டலாம். மேலும், எபேசில் கண்டடெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் "அரண்மனைக்காவலர் களையும்", படைத்துறை சாராத அதிகாரிகள் அடங்கிய குழுவாகிய "*சீசர் வீட்டைச் சேர்ந்தவர்கள்*" பற்றியும் குறிப்பிடுகின்றன. மேலும், பிலிப்பி எபேசிலிருந்து எளிதில் போய் வரக்கூடிய தொலைவில் இருந்தது. ஆகவே, இந்நூல் எபேசில் எழுதப்பட்டிருக்கலாம்.

இரண்டு கருதுகோள்களுக்கும் சார்பான காரணங்கள் எவ்வளவு மதிப்புடையவையாயினும், முழுச்சூழ் நிலையும் (சங்கிலிகள், சிறைவாசம் பற்றிய குறிப்புக்கள்) இந்நூல் உண்மையான சிறைவாசத்தின் போது எழுதப்பட்டது என்பது உறுதி. எங்கே, எப்போது என்ற பிரச்சனைகள் முடிவு காணப்படாதவைகளாக உள்ளன.

### 6. சந்தர்ப்பமும் நோக்கமும்:

கடிதம் I: பிலி 4:10-20. பிலிப்பியர்கள் தங்கள் சபையின் உறுப்பினரான எப்பப்பிராதித்து வழியாகப் பவுலுக்குப் பண உதவி அனுப்பினர். இக்கடிதம் அதை ஏற்றுக்கொண்டு உடனடியாக நன்றி கூறுகிறது.

கடிதம் II: பிலி 1:1-31; 4:4-7. 21-23. முதலாம் கடிதத்துக்குச் சில வாரங்களுக்குப்பின் இக்கடிதம் எழுதப்படுகிறது. எப்பப்பிராதித்து நோய்வாய்ப்பட்டு இப்போது குணமடையந்துள்ளார். பிலிப்பிக்குத் திரும்பிச் செல்ல ஆவல் கொள்கிறார். பிலிப்பியில் நிலவிய சூழ்நிலையைப்பற்றிக் கேள்விப்பட்டவற்றிற்கு நீண்ட பதில் எழுதுகிறார் பவுல். பிலிப்பியக் கிறிஸ்தவர்கள், தங்கள் உடன் குடிமக்களிடமிருந்து பெரும் எதிர்ப்பை எதிர்கொண்டனர் (பிலி 1:28-30). தன்னலத்தாலும் அகந்தையாலும் தூண்டப்பட்டுத் தங்களிடையே பிரிந்து பலவீனப்பட்டு இருப்பதைப் பவுல் காண்கிறார். அவர்கள் தாங்களிடையேயுள்ள பிரிவுகளை அகற்றி, தன்னலமில்லாமல், ஆழ்ந்த ஒற்றுமையைக் காணும்படி பேரன்போடு அவர்களைத் தூண்டுகிறார். அதே சமயம் தனது நிலையைப் பற்றிச் சிந்தித்து அவர்களின் ஆறுதலுக்காக, நற்செய்திக்காகத் துன்புறுவதின் மறையுண்மையை விளக்குகிறார். அவர்கள் அவரோடு துன்பப்படுவதுபோல், அத்தகைய துன்பங்கள் கொண்டு வரும் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஆழ்ந்த ஒன்றிப்பின் விளைவான மகிழ்ச்சியிலும் பங்குகொள்வர். கடிதம் II: பொதுப்பங்கெடுப்பு (**Koinonia**): என்ற கருத்தைச் சுற்றிச் சுழல்கிறது. துன்பத்தில் பொதுப்பங்கெடுப்பு அப்போஸ்தலருக்கும் அச்சமூகத்திற்கும் இடையிலுள்ள ஒன்றிப்பை ஆழப்படுத்துகிறது. அதே சமயம் கிறிஸ்துவில் கொள்ளும்

அடிப்படைப் பொதுப்பங்கெடுப்பு அவர்களின் உறவுகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும்; அவற்றை நிர்ணயிக்க வேண்டும்.

**கடிதம் III:** பிலி 3:1-4:3.8-9. பவுல் சிறையிலிருந்து விடுதலை பெற்ற காலத்திலும், பிலி 2:24-இல் குறிக்கப்படும் பிலிப்புக்குச் செல்லுதலுக்குப் பின்வரும் காலத்திலும் இந்த வாதப்போக்குடைய கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (காண்க. பிலி 1:26; அ.ப. 20:1-2). யூத மயமாக்கும் சுற்றித்திரியும் மறை பரப்பாளர்களால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பெரும் அபாயத்தைக் காண்கிறார். ஆகவே, ஒருவேளை கொரிந்திலிருந்து (காண்க. அ.ப. 20:2-6; உரோ 15:24-26), தான் ஏற்படுத்திய சபையை இந்த அபாயத்திலிருந்து பாதுகாக்க இக்கடிதத்தைப் பவுல் எழுதுகிறார். கிறிஸ்துவுக்கு மனந்திரும்புதல் என்றால் என்ன, "உண்மையான நிறைவு" எதில் அடங்கியிருக்கிறது ஆகியவை பற்றித் தான் உய்த்துணர்ந்தவற்றிலிருந்து தனது கடிதத்தை அமைக்கிறார்.

**7. நூலின் திட்டம்:**

I. முன்னுரை (1:1-11).

1:1-2 : அஞ்சலியும் வாழ்த்தும்.
1:3-8 : நன்றி நவிலல்.
1:9-11 : மன்றாட்டு.

**II. செய்திகளும் போதனையும்** (1:12-3:1).

அ) பவுலின் நிலை (1:12-26).

ஆ) அறவுரைகள் (1:27-2:18).

1:27-30 : ஒற்றுமையும் பற்றுறுதியும்.
2:1-11 : தாழ்ச்சியும் தன்னலமின்மையும்.
2:12-18 : கீழ்ப்படிதலும் உலகுக்குச் சான்றாய் இருத்தலும்.

இ) தனிப்பட்ட செய்திகள் (2:19-30).

2:19-24 : திமொத்தேயுவை அனுப்புதல்.
2:25-30 : எப்பப்பிராதித்து திரும்புதல்.

ஈ) முடிவுரை (3:1)

**III. போலிப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை** (3:1-4:1).

**IV. ஒற்றுமை, மகிழ்ச்சி மற்றும் அமைதி - அறவுரை** (4:2-9).

4:2-3 : ஒற்றுமைக்கு அழைப்பு.
4:4-7 : அகமகிழவும் மன அமைதிகொள்ளவும் அழைப்பு.
4:8-9 : பவுலைப் பின்பற்ற அழைப்பு.

**V. நன்கொடையை ஏற்றல்** (4:10-20).

**VI. முடிவுரை - வாழ்த்தும் ஆசீரும்** (4:21-23).

8. போதகம்: இத்திருமுகத்தில் கிறிஸ்தவ மகிழ்ச்சி, கிறிஸ்துவின் நாள், நற்செய்திப்பணி, ஆண்டவர் கிறிஸ்து, கிறிஸ்துவில் மீட்பு, கிறிஸ்தவ நட்புறவு முதலிய பல உண்மைகளைப் பற்றி பவுல் போதிக்கிறார். அவற்றைச் சுருக்கமாக இங்குத் தருகிறோம்.

திருமுகத்தில் பதினொரு தடவை கிறிஸ்தவ மகிழ்ச்சியைப் பற்றிச் சிறப்புக் குறிப்புகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இயேசுவினுடைய ஆவியின் மூலம், கடவுளோடும் ஒருவர் பிறரோடும் கொண்டுள்ள தோழமையின் பொதுப்பங்கெடுப்பாகும். இந்தத் தோழமை (**Koinonia**) ஏற்கெனவே அ.ப. 2:4-இல் சுருக்கமாக விவரிக்கப்படுகிறது. பிலிப்பியர்களோடு பவுல் கொண்ட முதல் தொடர்பிலிருந்து நற்செய்திப்பணியில் அவரோடு அவர்கள் கொண்ட தோழமையை எடுத்துக்காட்டும் இக்கடைசிச் செயல்வரை (நன்கொடை) "கிறிஸ்துவின் வழியாக வரும் ஏற்புடைய வாழ்வின் பயனால் நிரப்பப்பட்டுள்ளனர்" (பிலி 1:11) என்பதற்கு அவர்கள் அவருக்குப் பல சான்றுகள் கொடுத்துள்ளனர். கிறிஸ்தவத் துன்பம் பற்றிய பவுலின் போதனையின் மையம் 3:8-11-இல் கொடுக்கப்பட்டுள்ளது. நமது மீட்பு நமது தகுதியாலோ, சட்டத்தாலோ வருவதில்லை. உண்மையான ஏற்புடைமை கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தால் வருகிறது. இதுவும் இறைவனுடைய கொடையேயாகும். இது

கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் இறப்பில் அவரோடு கொள்ளும் ஒன்றிப்பாகும். இதனால் அவரோடு சிலுவையில் அறையப்படுவதால் அவருடைய உயிர்த்த வாழ்வின் புதுமையிலும் நாம் பங்கு கொள்கிறோம் (3:10-11.20-21). இக்கருத்து எபே 2:1-10; 3:14-19; 4:15-16. 22-23; கொலோ 2:6-13; 3:3-11-இல் முழு அழுத்தத்தோடு விவரிக்கப்படுகிறது. அச்ச நடுக்கத்தோடு கிறிஸ்தவர்கள் தங்கள் மீட்புக்காக உழைக்க வேண்டியிருக்கும்போது (பிலி 2:12). கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கு கொள்வதின் மூலம் கிறிஸ்துவோடு இறுதியாக ஒன்றிப்புக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளனர். கிறிஸ்தவத் துன்பத்திற்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள இணைப்பு அவரில் நாம் வாழ்கிறோம் என்பதில் அடங்கியுள்ளது. கிறிஸ்துவுக்காகப்படும் இத்தகைய துன்பங்கள் எல்லாம் நற்செய்தியைப் பரப்புவதற்கும், விண்ணகக் குடிமகன் உரிமையை அடைவதற்கும் உதவும். இதற்குப் பவுலின் துன்பங்களே நிறைசான்றுகளாகும்.

9. **கிறிஸ்துவுக்குப் பாடல்** (பிலி 2:5-11): இப்பாடல் சிறப்பு மிக்கதாகும். கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றிய இப்பகுதியில் புதிதாக எதையும் போதிக்கும் எண்ணம் பவுலுக்கு இல்லையெனலாம். கிறிஸ்துவின் மீட்கும் செயலிலிருந்து கிறிஸ்தவனில் காணப்பட வேண்டிய மனநிலை மாதிரியை எடுத்துக்காட்ட ஏற்கனவே அறியப்பட்ட கோட்பாடுகளை இப்பாடல் எடுத்துக்கூறுகிறது. சமூகத்தின் நன்மைக்காக, கிறிஸ்தவர்கள் தங்கள் உரிமையையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதே இப்போதனையின் நோக்கமாகும். இதற்குக் கிறிஸ்துவே மாதிரி ஆகிறார். அவர் தனது இறை உரிமைகளைக் கைவிட்டுத் தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து, அடிமையின் சாவை ஏற்றார். பாடலின் ஒவ்வொரு வசனமும் கிறிஸ்து என்னும் மறையுண்மையின் வெவ்வேறு நிலையை எடுத்துக்கூறுகிறது. 2:6-இறைமேன்மை; 2:7 - மனிதன் ஆனதில் வெறுமையாக்கப்படுதல்; 2:8- இறுதியான சிலுவை இழிவு; 2:9- உயர்த்தப்பெறுதல்; 2:10-எல்லாப்படைப்புகளும் வழிபடுதல்; 2:11-"இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என்று அறிக்கையிடுதல்.

இப்பாடலைப் பவுல் எழுதினார் என்றும், இது வழிபாட்டில் பயன்படுத்தும் நோக்கோடு எழுதப்பட்டது என்றும் கூறுவர் சிலர். வேறு சிலர், இது பவுலுக்கு முன்பே தோன்றியது என்று கூறுவர். இதில் கிறிஸ்து என்ற மறையுண்மையின் முன்நிலைகளைப் பற்றித் திருச்சபையின் காலத்தால் முந்திய போதனையைக் காண்கிறோம் என்றும் எருசலேம் திருச்சபையின் மூலப்போதனையைக் கொண்டிருக்கிறது என்றும் கூறுவர். எது எவ்வாறாயினும் எருசலேம் திருச்சபையின் போதகம் அந்தியோக்கியாவிற்குக் கொண்டுவரப்பட்டு, அங்குப் பாடல் வடிவம் எடுத்து, அத்திருச்சபையால் விருத்தசேதனம் செய்யாதவர்களிடையே உழைக்க ஒதுக்கப்பட்ட (அ.ப. 13:1-3) பவுலால் பிலிப்புக்குக் கொண்டுவரப்பட்டது என்றும், பிலிப்பியர் உடனடியாக ஏற்று வழிபாட்டில் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் நம்பலாம்.

10. **முடிவுரை:** திருமுகம் முழுவதுமே பவுல் பிலிப்பியர்பால் கொண்ட அன்பு பிரதிபலிக்கிறது. இந்நூல், பவுல் தான் நிறுவிய சபையின்பால் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும், இறைமக்கள்பால் ஓர் அப்போஸ்தலன் கொண்டிருக்கவேண்டிய உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. பவுலும் ஒரு மனிதன்; அவருக்கு ஓர் இதயம் உண்டு; அவரும் அன்பு செய்ய முடியும்; அன்பைப் பெறவும் முடியும் என்பதை உணர்த்துகிறது இத்திருமுகம். இந்நூல் ஒரு கொள்கைத்திரட்டு அன்று; ஓர் ஒப்பற்ற அன்பு மடலாகும்.

**பிலிப்பு (PHILIP - குதிரைகளின் அன்பன்)**

1. இரண்டாம் பிலிப்பு (கி.மு. 359-336) மாசிதோனியாவின் அரசனும், மகா அலக்சாந்தரின் தந்தையும் ஆவார் (1 மக் 1:1). இவரது ஆட்சியில் உருத்தெரியாமலிருந்த

மாசிதோனியா பேரரசாக வளர்ந்தது. இவர் தன் படைகளைச் சிறிய ஆசியாவுக்குள் செலுத்த விரும்பியபோது கி.மு. 336-இல் கொல்லப்பட்டார். இவருக்குப்பின் இவருடைய மகன் அலக்சாந்தர் அரசனானார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அலக்சாந்தர் பாரசீகத்தை வென்று, கிரேக்கர்களின் ஆதிக்கத்தை "உலகின் எல்லைவரை" செலுத்தினார் (1 மக் 1:3; காண்க. 8:5-7).

2. ஐந்தாம் பிலிப்பு மாசிதோனியாவின் அரசராக (கி.மு. 220-179) இருந்தபோது கி.மு. 197-இல் உரோமையர்களால் இழிவுபடுத்தப்பட்டார் (1 மக் 8:5). கார்த்தேசு போர்களின்போது இவர் கன்னிபாலுடன் (கி.மு. 215) உடன்படிக்கை செய்து கொண்டார். கி.மு. 200-இல் உரோமைப்படைகள் நகரைத் தாக்கி, தம்முடன் சமாதானம் செய்யும்படி செய்தனர்.

3. பிரிகியா இனத்தவனான பிலிப்பு, எருசலேம், யூதேயா ஆகியவற்றின் ஆளுநராக அந்தியோக்கு எப்பிபானால் நியமிக்கப்பட்டான் (2 மக் 5:22). பிலிப்பு, அந்தியோக்குவைவிட மிகவும் கொடுமையானவன் என்று கூறப்பட்டுள்ளது. அந்தியோக்கு கி.மு. 169-இல் ஆலயத்தைச் சூறையாடியபின் பிலிப்பை ஆளுநராக்கினான் (1 மக் 1:20-24; காண்க. தானி 11:25-28). இச்சமயத்தில் அந்தியோக்கு கிரேக்க நாகரிகத்தை யூதரிடையே புகுத்த முயன்றான் (2 மக் 6:11; 8:8).

4. பிலிப்பு, அந்தியோக்கு எப்பிபானின் வளர்ப்புச் சகோதரனும், நண்பனும் ஆவார் (1 மக் 6:14-18: 2 மக் 9:29). அந்தியோக்கு இறந்தபோது அவனுடன் பாரசீகத்தில் இருந்த பிலிப்பு அரசனாக்கப்பட்டான். லீசியா அரசைக் கைப்பற்றிக்கொண்டு அவனைக் கொன்றிருக்க வேண்டும் (1 மக் 6:17); அல்லது அவனை எகிப்துக்குப் போகும்படி செய்திருக்க வேண்டும் (2 மக் 9:29; காண்க. 1 மக் 6:2-63). பிலிப்பு திரும்பி வந்து அந்தியோக்கியாவில் தங்கினான். லீசியா எருசலேமைச் சூறையாடி அதனைக் கைப்பற்றும் நிலையிலிருந்தபோது பிலிப்பு அந்தியோக்கியாவில் இருக்கும் செய்தி அவனுக்கு எட்டியது (1 மக் 6:55-56; காண்க. 2 மக் 13:23). உடனே முற்றுகையை நீக்கிவிட்டு, யூதர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பிலிப்பைச் சந்திக்க அந்தியோக்கியாவிற்குச் சென்றான் (1 மக் 6:57-63).

5. இவன் பெரிய ஏரோது மற்றும் பெரிய குரு சீமோனின் மகள் மரியம்னே ஆகியோரின் புதல்வன். ஏரோது அந்திப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரன். இவன் புதிய ஏற்பாட்டில் மாத்திரந்தான் பிலிப்பு என்று அழைக்கப்படுகிறான் (மத் 14:3; மாற் 6:17; லூக் 3:19). மற்றபடி இவன் ஏரோது, ஏரோது பிலிப்பு என்று குறிக்கப்படுகிறான். பெரிய ஏரோதின் உயிலில், முதன்மையான வாரிசான அந்திபத்தாருக்கு அடுத்தபடியாய் நாடு முழுவதற்கும் வாரிசாகக் குறிக்கப்பட்டிருந்தான். இவன் பெரிய ஏரோது மற்றும் அசமோனிய இளவரசியான மரியம்னே ஆகியோரின் பேத்தியாகிய ஏரோதியாளை மணந்தான். இருவருக்கும் சலோமி பிறந்தாள். இவனது ஒன்றுவிட்ட சகோதரன் சிற்றரசன் பிலிப்புக்குச் சலோமியை மணம் செய்வித்தான். இந்தச் சகோதரன் ஏரோது பிலிப்புவின் மருமகனானதுதான், ஏரோது பிலிப்பு என்ற பெயர் பற்றிய குழப்பம் நற்செய்திகளில் காணப்படுவதற்குக் காரணமாகும்.

ஏரோது அந்திப்பா உரோமைக்குப் போகும் வழியில், ஏரோதியாளை மனைவியாக்கிக் கொண்டு, அவனது மனைவியாகிய நபத்தேய அரசன் அரேத்தாவின் மகளை விவாகரத்து செய்தான். இதைத் திருமுழுக்கு யோவான் கண்டனம் செய்தார். இஃது அந்திப்பா அவரைச் சிறையிடவும், கொலை செய்யவும் இட்டுச் சென்றது. இதில் ஏரோதியாளும் சாலோமியும் ஈடுபட்டிருந்தனர் (மத் 14:3-11; மாற் 6:14-28; லூக் 3:19-20).

6. சிற்றரசனான பிலிப்பு, பெரிய ஏரோது மற்றும் எருசலேமைச் சேர்ந்த கிளியோபாத்ரா ஆகியவர்களின் மகன். இவன் கி.மு. 4 முதல் கி.பி.

34 வரை, கலிலேயாவிலிருந்து, வடக்கிலும் கிழக்கிலும் தமஸ்கு நகரை நோக்கி இருந்த, மக்கள் அதிகம் வாழாத பகுதிக்குச் சிற்றரசனாக இருந்தான். இவனுது ஆட்சியில் கலானித்து, திராக்கோனித்து, பாத்தானேயா, பானியா, அவுரானித்து ஆகிய பகுதிகள் இருந்ததாக யோசிப்பசு கூறுகின்றார். லூக் 3:1 இவனது ஆட்சியில் இத்துரேயாவும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. பிலிப்பு உரோமையில் கல்வி பயின்றதால், உரோமையர்களுக்கு விசுவாசம் உள்ளவனாய் இருந்தான். பிலிப்பு பனியோன் என்னும் இடத்தில் ஒரு புதியகரைக் கட்டி அதற்குப் பேரரசரின் ஞாபகமாக செசரியா-பிலிப்பி என்று பெயரிட்டான். இப்பெயரில் தன் பெயரையும் இணைத்ததன் மூலம், பெரிய ஏரோதால் கட்டப்பட்ட செசரியாவிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்டினான். கடலின் அருகே பெத்சாய்தா நகரைக் கட்டி அதற்கு அகுஸ்துவின் மகள் பெயரான யூலியா என்று பெயரிட்டான். ஏரோதியாளின் மகள் சலோமி இவன் மனைவி. இவளுக்குப் பிள்ளைகள் இல்லை. இவன் 27 ஆண்டுகள் ஆட்சி செய்தபின் கி.பி. 33-34-இல் இறந்தான். இதற்குப் பின் இவன் அரசு சீரியாவுடன் இணைக்கப்பட்டு, கி.பி. 37-இல் கலிகுலாவால் முதலாம் அகிரிப்பாவிடம் கொடுக்கப்பட்டது.

7. அப்போஸ்தலரான பிலிப்பு பன்னிருவருள் ஒருவராகக் குறிப்பிடப்படுகின்றார் (மாற் 3:18=மத் 10:3=லூக் 6:14; காண்க. அ.ப. 1:13). இவர் யோவான் நற்செய்தியில் மிகவும் முக்கியத்துவம் உடையவராகத் தோன்றுகிறார். இவர் கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா நகரைச் சார்ந்தவர். இயேசுவால் அழைக்கப்பட்டு, நத்தானியேலை இயேசுவிடம் அழைத்து வந்தவர் (யோவா 1:45-49). அப்பம் பலுகுதலின்போதும் (6:5-7), இயேசுவின் முக்கிய உரைகள் ஒன்றிலும் குறிக்கப்படுகிறார் (14:8-9). கிரேக்க மொழி பேசிய யூதர்கள் தங்களை இயேசுவிடம் அழைத்துச் செல்லுமாறு பிலிப்புவை வேண்டியது, பிலிப்பு மற்ற அப்போஸ்தலர்களைவிட இயேசுவிடம் அதிக பழக்கமுள்ளவர் என்பதைக் காட்டுகிறது (12:20-23). இவர்தான் இயேசுவிடம், தந்தையைக் காட்டும்படி கூறியவர்(14:8). பிற்காலப் பாரம்பரியங்கள் இவரை நற்செய்தியாளர் பிலிப்புவோடு குழப்பியுள்ளன.

8. எருசலேமில் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்யும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவருள் ஒருவர் (அ.ப. 6:5). இவர் ஸ்தேவானின் மரணத்தால் எருசலேமை விட்டு வெளியேறியவர்களுள் இருந்தார் என்று அ.ப. 8:4-5 கூறுகின்றது. சமாரியாவில் முதன் முதலில் நற்செய்தியை அறிவித்தவரும் (8:5-13), சீமோன் என்னும் மந்திரவாதியை மனந்திருப்பியவரும் (8:5-13), இவர்தான். இவர் எருசலேமிலிருந்து காசாவுக்குச் செல்லும்போது எத்தியோப்பிய அரசியின் அண்ணகனை மனந்திருப்பினார் (26:40). இவர் செசரியாவில் இறைவாக்கு உரைப்பவர்களான "நான்கு புதல்வியரோடு" தங்கி இருந்தார் (21:8-9). இவர்கள் பிற்காலப்பாரம்பரியங்களால், சிறப்பாக மோன்த்தானியர்களால், நினைவுகூரப்படுகின்றனர். பிலிப்பு திரலசில் ஆயராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

**பிலிப்புவின் நற்செய்தி (PHILIP, GOSPEL OF)**

எகிப்து நாட்டின் ஞானவாதக் கோட்பாட்டினர் இதைப் பிலிப்பு எழுதினார் என ஒரு போலியான நற்செய்தியைக் கொணர்ந்தனர். எப்பிபானியு என்பவர் இதிலிருந்து சில மேற்கோள்களைக் காட்டியுள்ளார். இது தபசை வலியுறுத்தியது. இந்த உலகம் தீமையால் நிறைந்துள்ளது. அதிலிருந்து விடுவிக்கப்படுவதே நம் மீட்பு என்பதே இக்கூட்டத்தினரின் கொள்கை.

ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பின் அவர் பிலிப்புக்குத் தோன்றி அருளிய காட்சிகளே புத்தகமாக எழுதப்பட்டுள்ளது என, பிஸ்திஸ் சோபியா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்சியோனியர்கள், பிலிப்பு, 'திருமணத்தை எதிர்க்கும் ஓர் எதிரி' எனக் கருதியதாக அலக்சாந்திரியா நகரின் கிளமந்து கூறுகிறார்.

எனவே, இது 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.

**பிலிப்புவின் பணிகள் (PHILIP, ACTS OF)**

இது நான்காம் அல்லு 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால் எழுதப்பட்ட நூல். மற்ற நூல்களில் கூறப்படாத மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றிய சில விளக்கங்கள் இங்கே காணப்படுகின்றன. பிலிப்பின் புதுமைகள், அவர் எராப்போலி என்னுமிடத்தில் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு வேதசாட்சியாக மரித்தல் ஆகிய செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன.

இதன் கிரேக்கச் சுவடியில் இப்பணிகள் 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மறைசாட்சி மரணம் ஆகிய ஒன்பது பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவை தனித்தனியாக, மக்கள் சிலரிடம் மட்டுமே பரவியிருந்தது.

**பிலேத்து (PHILETUS - அன்புக்குரியவர்)**

கிறிஸ்தவனான பிலேத்து புரியாத மொழியைப் பயன்படுத்தி விசுவாசிகள் பலரின் விசுவாசத்தைக் கெடுத்தான். இவர் இமனேயுவுடன் சேர்ந்து, உயிர்த்தெழுதல் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது என்று போதித்தார் (2 திமொ 2:17-18). இவர்கள் உடல் உயிர்த்தெழுதலை மறுத்தனர். இத்தகைய போதனையைத் தவிர்க்க வேண்டும் என்று பவுல் திமொத்தேயுவுக்கு எச்சரிக்கிறார்.

**பில்கா (BILGAH - மகிழ்ச்சியான)**

ஆரோனின் வழிவந்தவர். தாவீதின் காலத்தில் குருக்கள் பிரிவுகள் பல ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவர் அதில் பதினைந்தாவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:14).

1. பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர் பாபிலோனுக்குச் சிறைப்படுத்திக் கொண்டு சென்றவர்களுள் அடிமைத்தனத்தினின்று செருபாபேலோடு திரும்பிய தலைமைக் குருக்களில் ஒருவர் (நெகே 12:5.18).

**பில்கா (BILHAH - எளிமையான, அடக்கமான) - ஆள்**

ராகேலின் பணிப்பெண், ராகேல் தான் மலடியாய் இருந்தது கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமை கொண்டு, யாக்கோபுக்கு இவளை வைப்பாட்டியாகக் கொடுக்க, அவளோ யாக்கோபுவுடன் சேர்த்து கருவுற்று தாண். நப்தலி என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றுக் கொடுத்தாள் (ஆதி 29:31-35; 30:1-8). இவர்களே பிறகு தாண், நப்தலி என இரு கோத்திரங்கள் உண்டாகக் காரணமாயினர். ராகேல் தனது மரணப்படுக்கையில் பென்யமினைப் பெற்றெடுத்தபின், யாக்கோபின் மூத்த மகன் ரூபன் பில்காவுடன் உடலுறவு கொண்டான் (ஆதி 35:22; காண்க. 49:4).

**பில்கா (BILHAH - எளிமையான அடக்கமான) - இடம்**

யூதாவின் தென் பகுதியில் காணப்பட்ட ஏதோ ஒரு கிராமமாக இருந்திருக்கலாம் (1 நாள் 4:29). இது பாலா (யோசு 19:3) என்றும், பாகலா (15:29) என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இஃது இருந்த இடம் தெரியவில்லை.

**பில்காய் (BILGAI - மகிழ்ச்சியான)**

அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய குருக்களில் இவரும் ஒருவர் (நெகே 10:8). எஸ்ராவின் தலைமையில் இஸ்ராயேலரின் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது இவரும் கையொப்பமிட்டுச் சாட்சியாகயிருந்தார். இவர் பில்கா (2) ஆக இருக்கலாம்.

**பில்கான் (BILHAN - எளிய)**

1. ஓரியரான எட்சேரின் மகன். ஏதோம் நாட்டின் சேயிர் மலைப்பகுதியைச் சேர்ந்தவர் (ஆதி 36:27; 1 நாள் 1:42).

2. பென்யமின் குலத்தைச் சேர்ந்த எதியாவேலின் (1) மகனும், ஏழு புதல்வர்களுக்குத் தந்தையுமாவார் (1 நாள் 7:10). இவர் குறிக்கப்படும்

மரபு முறைப்பட்டியல் செபுலோனைச் சேர்ந்ததாக இருக்கலாம். இது வட இனத்தவர்களிடையே குறிக்கப்படவில்லை. ஒருவேளை, தொலைந்து போயிருக்கலாம்.

**பில்சான் (BILSHAN** - அவர்களின் ஆண்டவர், கேட்டறிபவர்)

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு பாலஸ்தீனத்திற்குத் திரும்பிய யூதத்தலைவர்களுள் ஒருவர் (எஸ் 2:2; நெகே 7:7).

**பில்தாசு (PILDASH** - தீக்கொழுந்து)

நாகோருக்கும் மில்காவுக்கும் பிறந்த ஆறாவது மகனே பில்தாசு (ஆதி 22:22). இதனை ஓர் இனத்தின் பெயராகக் கொண்டால் அவ்வினம். எங்கே இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால், வட அரேபியாவில் மற்ற நாகோரியர் வாழுமிடத்தில்தான் இருந்திருக்க வேண்டும்.

**பில்தாது (BILDAD** - ஆண்டவரின் அன்புக்குரியவன், போராட்டத்தின் மகன்)

யோபுவின் மூன்று நண்பர்களில் இவரும் ஒருவர் (யோபு 2:11; 8:1; 18:1; 25:1; 42:9). இவரைச் சூகாயர் என அழைப்பதிலிருந்து இவர் பாலஸ்தீனத்தின் தென்கிழக்குப் பகுதியில் சுற்றித் திரிந்த அரமேய குல நாடோடிகளைச் சேர்ந்தவராக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது (ஆதி 25:2.6). இவர் பழங்கால அறிவர்களின் ஞானத்திலிருந்து மூன்று நீண்ட உரைகளை வழங்குகிறார். இவை யோபுவுக்கு எதிராக, கடவுளின் குற்றச்சாட்டை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளன (யோபு 8:18; 25).

**பில்தாய் PILTAI** - யாவே மீட்பவர்)

மோவாதியாவின் தந்தை குடும்பத்திற்குத் தலைவரும், பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் யோயாக்கிம் தலைமைக் குருவாகப் பணியாற்றியபோது வாழ்ந்தவருமாகிய பில்தாய் ஒரு குரு ஆவார் (நெகே 12:17).

**பிறப்பு (BIRTH)**

பெரிய குடும்பங்களின் இன்றியமை யாமையை உணர்ந்ததால் பிறப்புகள் வரவேற்கப்பட்டன. கருத்தரித்தல், உயிரின் பிறப்பு போன்றவற்றைப் பற்றி அதிகமான மக்கள் அறிந்திருக்கவில்லை (திருவுரை 11:5). பெண் முட்டையைப் பற்றி விவிலிய ஆசிரியர்கள் அறிந்திருக்கவில்லை. ஆணின் விதை மட்டுமே கருத்தரித்தலுக்குக் காரணம் என்றும், பெண்ணின் கருப்பை அதை வளர்க்கவும், பாதுகாக்கவும் பயன்படுகிறது என்றும் கருதினார்கள் (ஞான 7:2.3). எகிப்தியக் கவிதை ஒன்றில் பெண்ணின் விதை என்றும், ஆணின் "நீர்மம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விவிலியத்தில் கருத்தடைக்கு எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஓனான் என்பவன் உடலுறவு கொள்ளும்போது விந்துவை வெளியே சிந்தியதால் கண்டிக்கப்பட்டான். காரணம். அவன் சகோதரனின் மனைவிக்கு ஒரு வாரிசைக் கொடுக்கத் தவறிவிட்டான்; அதனால், சட்டத்தை மீறி விட்டான் என்பதேயாகும். ஒன்பது மாதக் கர்ப்பம் பற்றி ஓர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (7:27; காண்க. பத்து மாதக் கர்ப்பம்: ஞான 7:2-3). எகிப்தில் உள்ள எபிரேயப் பெண்கள் விரைவாகப் பெற்றெடுத்தார்கள் (யாத் 1:19). பிறப்பின் வேதனையை ஆசிரியர்கள் உருவகமாக வெளிப்படுத்துகிறார்கள். அவைகள் அரசர்களின் அச்சம் (சங் 48:6), கடவுளின் நாள் நெருங்கும்போது ஏற்படும் திகில், துயரம் (எசா 13:8), மூச்சுத்திணறல், வேதனைக்கூக்குரல் (எசா 42:14; காண்க. எரே 6:24; 13:21; 22:23; 30:6; 48:41; 49:24; 50:43. யோவா 16:21; திருவெளி 12:2) ஆகியவற்றிற்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டது. குழந்தை பிறப்பின் போது, பெண்கள் உதவி புரிவார்கள். பிறந்த பிறகு, குழந்தையின் தொப்புள் கொடி வெட்டப்பட்டது. பின், குழந்தை கழுவப்பட்டு, உப்பினால் தேய்க்கப்பட்டு, துணியினால் சுற்றப்படும் (எசே 16:4). குழந்தை பிறப்புக்குப்பின் தாய் தன்னைத்

தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் (லேவி 12:2.8).

பெண்ணின் உடலில் சக்தி இல்லாவிட்டாலோ (2 அர 19:3), அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேள்விப்பட்டாலோ குறைப்பிரசவம் ஏற்பட வாய்ப்பு உண்டு (1 சாமு 4:19). முற்றுப் பெறாத குறைப்பிறப்பு இருட்டில் மறைகிறது (திருவுரை 6:4-5). குறைப் பிரசவத்தில் பிறப்பவர்கள் வாழ்க்கையின் துன்பத்தைத் தாங்க வேண்டியது இல்லை (யோபு 3:11-13). விபத்துக்களால் கரு அழிந்து போகலாம் (யாத் 21:22-25). இப்படி அழிவது கடவுளின் தீர்ப்பாகக் கருதப்படும் (சங் 58:8; ஒசே 9:14). ஆண் பிறப்பு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் (ரூத் 4:14; எரே 20:15; லூக் 1:14.57-58; 2:13; யோவா 16:21). குழந்தைகள் பிறந்த உடன் அவற்றிக்குப் பெயர் வைக்கப்படும் (ஆதி 29:32.35; 30:6 தொ). குழந்தையின் பிறந்த நாள், விழாவாகக் கொண்டாடப்படும் (ஆதி 40:20; மத் 14:6). வாழ்க்கை துன்பமானதாக மாறும்போது பிறந்த நாள் சபிக்கப்படும் (யோபு 3:3; எரே 20:14). ஆன்மீகப்பொருளில், ஒருவன் ஆவியினாலும், தண்ணீராலும் மறுபிறப்பு அடைகிறான் (யோவா 3:3-7); உருவகமாக, புதுப்பிறப்படைகிறான்.

**பிறப்புரிமை (BIRTHRIGHT)**

ஒருவனுடைய எல்லா மகன்களுக்கும் சில உரிமைகள் இருந்தாலும் தலைச்சன் பிள்ளைக்கு மட்டுமே சில சிறப்பு உரிமைகள் இருந்தன. அவனே சொத்துரிமையும் குடும்பப்பெயரையும் பெற்றான். தலைச்சன் பிள்ளை வழியாகவே குடும்ப உறவு கணக்கிடப்பட்டது.

எசாவின் பிறப்புரிமையை யாக்கோபு பெற்றுக்கொண்ட கதை பிறப்புரிமையின் இன்றியமையாமையைக் காட்டுகிறது (ஆதி 25:29-34). பிறப்புரிமை தலைச்சன் பிள்ளையிடமிருந்து சில வேளைகளில் எடுக்கப்படலாம். ரூபனின் பிறப்புரிமையானது அவனிடமிருந்து எடுக்கப்பட்டு யோசேப்பின் பரம்பரைக்கு வழங்கப்பட்டது (1 நாள் 5:1; காண்க. ஆதி 49:4). உணவின்போது வயது கிரமப்படியே வரிசையில் அமர்ந்தனர். தலைச்சன்பிள்ளையே நாட்டின் வாரிசு (2 நாள் 21:3; காண்க. சங் 89:27). இஸ்ராயேல் தன்னைக் கடவுளின் தலைச்சன்பிள்ளை ஆக்கிக் கொண்டதால் கடவுளின் பாதுகாப்பைப் பெற்றது (யாத் 4:22.23; எரே 31:9). புனித பவுல் உரோமைக் குடியுரிமையைப் பிறப்புரிமையால் பெற்றிருந்தார் (அ.ப. 22:28).

**பினகாசு (PHINEAAS)**

1. பழங்கால நினைவு கூர்தலில் வடக்கிலிருந்து வந்த இஸ்ராயேலன் மிகவும் முக்கித்துவம் வாய்ந்தவனாய் இருந்ததால், எப்பிராயீம் மலைநாட்டில் ஒருபகுதி 'பினகாசின் கிபயா' என்று அழைக்கப்பட்டது (யோசு 24:33). பினகாசு எலயாசரின் மகனும், ஆரோனின் பேரனும் ஆவார் (யாத் 6:25; 1 நாள் 5:30; 6:35). இவர் எஸ்ராவின் மூதாதையரும் (எஸ் 7:5), எஸ்ராவோடு இருந்த கெர்சோம் என்ற குருவின் மூதாதையரும் ஆவார் (எஸ் 8:2). இவர் செருபாபேல், எஸ்ரா ஆகியவர்கள் காலத்தில் பாபிலோனில் சிறப்புப் பெற்றிருந்தவர். இவர் கடவுளுக்காக ஆர்வமுடன் உழைத்தவர்.

மோசே காலத்தில் ஏற்பட்ட கொள்ளை நோயினால், மக்கள் சந்திப்பின் கூடாரத்தின் முன்பாக அழுது கொண்டிருந்தார்கள். அப்போது, இஸ்ராயேலன் ஒருவன் மிதியானியப் பெண்ணொருத்தியை அழைத்து வந்தான். இதைக் கண்ட பினாகசு, கூட்டத்தை விட்டெழுந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார். அவர்கள் வீட்டில் உடலுறவு கொள்ளும்போது அவர்களை மறைவிடத்தில் ஈட்டியால் குத்திக் கொன்றார். இந்தப் பற்றுறுதியால் திருப்தி அடைந்த ஆண்டவர், கொள்ளை நோயை நீக்கி விட்டார். பினகாசின் ஆர்வத்தைக்கண்டு கடவுள் அவருக்குக் குருத்துவத்தை நிலையாக அளித்தார் (எண் 25:6-18; காண்க. சங் 106: 30-31; 1 மக் 2:26.54; சீரா

45:23-26). மோசே மிதியானியர்களை அழிக்க படைகளை அனுப்பியபோது, பினகாசைத் தலைவராகவோ, குருவாகவோ அனுப்பினார். பினகாசு "திருத்தலத் துணைக்கலங்களையும், போர் எக்காளங்களையும் கையோடு எடுத்துச் சென்றார்" (எண் 31:6; காண்க. 10:1-10; 2 நாள் 13:12).

யோர்தானின் கிழக்கிலுள்ள கோத்திரங்கள் தனிப் பீடத்தை ஆண்டவருக்கென்று எழுப்பியபோது, அதைப் பற்றி விசாரிக்க, மேற்கிலுள்ள கோத்திரத்திலிருந்து பத்துப்பேர் சென்றபோது அவர்கள் தலைவராக, பினகாசு சென்றார். அங்குச் சென்றபோது கிழக்கிலுள்ள கோத்திரத்தார் தாங்கள் செய்த செயல் சரியென்று வாதாடினர். திருப்தியடைந்த இவர்கள் திரும்பி சீலோவுக்கு வந்து போரிடக் காத்திருந்த இஸ்ராயேலரை, அமைதியாக அனுப்பிவிட்டனர் (யோசு 22:9-34).

இஸ்ராயேலர், தங்கள் சகோதரரான பென்யமின் கோத்திரத்தாரோடு போரிடலாமா என்று ஆண்டவரிடம் ஆலோசனை கேட்க வந்தபோது ஆண்டவரின் திருப்பேழைமுன் பணிபுரிந்த பினகாசு ஆண்டவரின் சம்மதத்தை அறிவித்தார் (நீதி 20:27-28). பினகாசு வாயில் காப்போரின் மேற்பார்வையாளராக இருந்ததாக 1 நாள் 9:20 கூறுகிறது. இது வாயில் காப்போருக்கும் பிற்காலத்தில் பெரிய குருவாய் இருக்கப்போகிறவருக்கும் தொடர்பை நிறுவியது.

2. பினகாசு ஏலியின் மகனும், ஒப்னியின் சகோதரனும் ஆவார் (1 சாமு 1:3). இவரும், அவருடைய சகோதரரும் குருத்துவத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினர் (1 சாமு 2:12-36). இவர்களுடைய மரணம் முன்னறிவிக்கப்பட்டது. அபேக்கு என்ற இடத்தில் நடந்த போரில் இருவரும் மாண்டனர் (1 சாமு 4:4. 11.17). சவுலின் காலத்தில் குருவாய் இருந்த அகீயா, பினகாசின் பேரன். அபியாத்தார் பதவியிலிருந்து நீக்கப்படும் வரை இக்குலம் இருந்தது.

3. இவர், நாடு கடத்தலுக்குப்பின் வாழ்ந்த குருவாகிய எலயாசரின் தந்தை. இவர் எஸ்ராவோடு நாடு திரும்பினார் (எஸ் 8:33).

**பினயா (BINEA - யாவேயின் மகன்)**

சவுல் வீட்டாரின் வழிவந்தவர்களில் இவனும் ஒருவன். நாள் 8:37; 9:43-இன்படி பென்யமின் கோத்திரத் தலைமுறைப்பெயர்ப் பட்டியலில் இவன் மோட்சாவின் மகன் என்றும், இரபாயாவுக்குத் தந்தை என்றும் குறிப்பிடப்படுகிறான்.

**பினோன் (PINON - இருள்)**

ஏதோமின் தலைவர்களுள் ஒருவர். இப்பெயர் அவர்கள் வாழ்ந்த இடத்தின் பெயரிலிருந்தோ, குல மூதாதையர் பெயரிலிருந்தோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (ஆதி 36:41; 1 நாள் 52). நிச்சயமாக ஏதோமிலுள்ள செம்பு வெட்டி எடுக்குமிடமான பூனோன்தான் இதுவென்று கூறலாம். இங்கு இஸ்ராயேலர். மோவாபுக்குள் நுழையுமுன் தங்கினர் (எண் 33:42-43).

**பின்பற்று (FOLLOW, IMITATE)**

கடவுளைப் பின்பற்றுவது என்றால் அவரின் வழியில் நடப்பதாகும். முன்னைய யாத்திரை சமயத்தில் கடவுள் தம் மக்களினத்தை வாக்குறுதி நாட்டை நோக்கி இட்டுச்சென்றார். அவர்தம் மைந்தனோ மனிதர் அனைவரையும் புதிய மெய்யான புறப்பாட்டு முடிவுக்கு நடத்திச் செல்கிறார். அவர் காட்டும் வழிதனைக் கடைப்பிடிக்க நாம் அழைக்கப்பெறுகிறோம்.

1. **இஸ்ராயேலின் அழைப்பு:** எகிப்தை விட்டு வெளியேறித் தம்மைப் பின்பற்ற அழைத்த யாவேக்கு (காண். ஓசே 11:1) மக்கள் செவிமடுத்தனர். பாலைவனத்தில் மேகத் தூணாகவும் நெருப்புத் தூணாகவும் (யாத் 13:21) இருந்து வழிநடத்துபவரும், பாதையை வகுத்துக்காட்ட தம் தூதனை அனுப்புபவரும் ஆன யாவேயை இஸ்ரயேலர் பின்பற்றினர். ஒரு மணமகள் தன் மணமகனைப் பின்

தொடர்வதுபோலவும் (எரே 2:2), ஆட்டு மந்தை தன் ஆயனைப் பின்தொடர்வதுபோலவும் (சங் 79:1), குடிமக்கள் தம் அரசரைப் பின்தொடர்வது போலவும் (2 சாமு 15:13; 17:9), பற்றுறுதியுள்ளவன் தன் கடவுளைப் பின்தொடர்வது போலவும் (1 அர 18:21), யாவேயைப் பின்பற்று எனும் அழைப்பு இஸ்ரயேலுக்கு இடையறாது ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

பின்பற்றுவது என்பது- உண்மையில் முழுப் பற்றிணைப்பையும் வரம்பற்ற பணிவையும், அதாவது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் குறித்துக் காட்டும். இவ்வண்ணம், காலேபு என்பவர் ஒருபோதும் ஐயுறாது யாவேயைப் பின்பற்றிச் சென்றதாகப் போற்றப் பெறுகிறார் (உப 1:36). கட்டளைகளைக் கடைப்பிடித்த தாவீது, முழு இதயத்தோடு கடவுளைப் பின்பற்றுவோருக்கெல்லாம் ஒரு மேற்கோளாய்க் காட்டப்படுகிறார் (1 அர 14:8). யோசியா அரசனும் அவனுடைய குடிகளும் தேவ உடன்படிக்கைக்கேற்ப வாழ வாக்களிக்கும் போது, 'யாவேயைப் பின்பற்றுவோம்' என்றே உறுதி எடுக்கின்றனர். இதன்பின் விசுவாசியின் இலட்சியம் எப்பொழுதும் 'ஆண்டவரின் வழிகளைப் பின்பற்றுவது' என்றாகவேயிருக்கும் (சங் 19:22;24:4;...)

எனவே, யாவேயைப் பின்பற்றும்படி பற்றுறுதி கேட்கிறது. மெய்யாகவே யாவே பொறாமை உள்ளவர்தான். பிற தெய்வங்களைப் பின்பற்றுவோரை அதாவது அவைகளை நம்பி வழிபடுவோரை ஒருபோதும் கண்டு பாவிக்கக் கூடாது எனத் தம் மக்களைத் தடுக்கிறார் (உப 6:14). ஆனால், இஸ்ரயேலர் அங்கங்குள்ள தெய்வங்களுக்குக் காது கொடுக்கின்றனர். கானான் நாட்டுக்கு வந்ததுமே சீனாய் மலையில் தோன்றிய கடவுளுக்கு எதிராய்ப் பாகால் தெய்வங்கள் அவர்களின் உள்ளத்தை ஈர்க்கின்றன (உப 4:3). இருமருங்கும் சாய்ந்து சாய்ந்து நடக்கும் நொண்டியைப்போல், இஸ்ரயேலர் உள்ளனர்; எனவே, "ஆண்டவர் கடவுளானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் கடவுளானால் அவனைப் பின்பற்றுங்கள்" எனும் இறைவாக்கினரின் கடும் குரல் கேட்கிறது (1 அர 18:21). "ஆண்டவரை விட்டு விலகி வேசித்தனத்தில் மூழ்கி விட்டாய்" (ஓசே 1:2) என்றும், "அன்னிய தெய்வங்களை நீ பின்பற்றுகிறாய்" (எரே 7:6.9; 9:13; 11:10) என்றும், இறைவாக்கினர் பலர் இடைவிடாது இஸ்ரயேலைக் கண்டிக்கின்றனர்; இஸ்ரயேலரே, மனந்திரும்புங்கள் எனப் போதிக்கின்றனர்; யாத்திரைக் காலத்தில், அவர்கள் பின்பற்றிய பாதையில் மீண்டும் வந்து நடக்க (ஓசே 2.17), அதாவது திரும்பிவந்து யாவேயைப் பின்பற்ற அவர்கட்கு அழைப்பு விடுக்கின்றனர்.

2. **கிறிஸ்துவின் அடிச்சுவட்டில்:**

அ. முதல் கட்டம்: சீமோனையும், அந்திரேயாவையும், யாக்கோபுவையும் யோவானையும், மத்தேயுவையும் பார்த்து இயேசு, 'என்னைப் பின்தொடர்க' என்கிறார். அதிகாரம் ததும்பும் அவரது வாக்கு காந்தம் போல் ஈர்க்கவே, அவர்கள் உடனே அவரைப் பின்பற்றுகின்றனர் (மாற் 1:17-20; 2:14). இயேசுவின் சீடர்களாய் ஆனபிறகும், அவரது தூது மறைபொருளிலும் ஆளுமை மறை உண்மையிலும் அவர்கள் மேன் மேலும் புகுமுகம் பெறுகின்றனர். இவ்விதம் இயேசுவைப் பின்பற்றுவது ஓர் ஒழுக்க நெறி அல்லது ஆன்மீகப் போதனையைக் கடைப்பிடிப்பது மட்டுமன்று; மெய்யாகவே, அவர்தம் நன்மை தீமையில் பங்கு கொள்வதும் ஆகும். அவரது மகிமையிலே பங்குபெறச் சீடர்கள் தயாராய் உள்ளனர் என்பதுதெளிவு. "இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின் தொடர்ந்தோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்?" (மத் 19:27). ஆனல், அவரது மகிமையில் பங்குபெறுமுன், அவருடைய கடும் தொல்லைகளிலும் துயர்ப்பாடுகளிலும் பங்குகொள்ள வேண்டுமென அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பற்று முழுவதும் அறுக்க இயேசு கேட்கிறார். சொத்துகளையும்

பாதுகாப்பையும் துறக்க வேண்டும். சொந்தக் குடும்பத்தையுமே (மத் 8:19-22;10; 37:19; 16-22) இதயப்பிளவின்றி அல்லது திரும்பிப் பார்க்கும் எண்ணமின்றித் (லூக் 19:61 தொ) துறக்க வேண்டும் எனக் கோருகிறார். இந்தக் கோரிக்கை பலருக்கும் வரக்கூடும்; ஆனால், பணக்கார இளைஞனைப் போல் (மத் 19:22 தொ), ஒருசிலர் அதை ஏற்றுக்கொள்ளாதது வருந்தற்பாலதே.

**ஆ. பலி தியாகத்துக்கு:** சீடன் தன் உடைமைகளையும் உலகியல் பற்றுதல்களையும் துறந்து பிறகும், இயேசுவைச் சிலுவை மட்டும் பின்தொடர வேண்டுமென உணர வருகிறான். "என்னைப் பின்தொடர விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்" (மத் 16:24 இணை). இயேசு தம் சீடர்களிடமிருந்து இம்மாபெரும் தியாகத்தைத் கேட்கும்போது, தம் உடைமைகளை மட்டுமல்ல, தங்களையுமே பலியாக்க வேண்டுமென அவர் கோரும்போது, அவர் தாம் கடவுள் என்றும், கடவுளின் கோரிக்கைகள் எவ்வளவு தியாகம் கேட்கின்றன என்றும் வெளிப்படுத்துகிறார். ஆனால், இயேசுவே முதன் முதல் தம்மைப் பலியாக அர்ப்பணிக்க வேண்டும். அதன்பிறகே, சீடர்கள் அவருடைய கோரிக்கைகளுக்கு இணங்கும் ஆற்றல் பெறுவர். இயேசு போகுமிடம் எல்லாம் அவரைப் பின்தொடர பேதுரு விரைவில் உள்ளார்வம் கொள்கிறார்; ஆனால், அதே விரைவில் மற்றச் சீடர்களைப்போல அவரைக் கைவிட்டு ஓடிப்போகிறார். தம் மரணத்தாலும் உயிர்ப்பாலும் இயேசு தியாகப் பாதையைத் திறந்த பின்பே (யோவா 13:36 தொ), தமக்கு விருப்பமில்லாத இடத்துக்குத் தாம் போவதைப் (21:18 தொ) பேதுரு நன்குணர்கிறார்.

**இ. விசுவசிக்கவும் கண்டு பாவிக்கவும்:** புதிய ஏற்பாட்டு இறையியலார் மேலே கூறிய உருவகத்தைச் சிறிது மாற்றுகின்றனர். பவுல் கருத்துப்படி, கிறிஸ்துவைப் பின்பற்றுவது அவரது சாவிலும் உயிர்ப்பிலும் ஒருவன் ஒத்துருக் கொள்வதாகும். இறைத்தந்தை தம் மகனின் சாயலுக்கேற்ற உருவை நாம் தாங்கும்படி நித்தியமாய் முன் குறித்துள்ளார் (உரோ 8:29). இந்த ஒத்துருப் பொருத்தம் நம் திருமுழுக்கில் தொடங்கியுள்ளது (6:2 தொ). இயேசுவை நாம் கண்டு பாவிப்பதாலும் (1 கொரி 11:1), உயிர்ப்பின் ஆற்றல் மிளிரும் அவரது துன்பத்தில் உளமாரப் பங்கெடுப்பதாலும் (2 கொரி 4:10 தொ; 13:4; பிலி 3:10 தொ; காண். 1 பேதுரு 2:21) இப்பொருத்தம் ஆழம் பெறவேண்டும்.

அன்புச் சீடர் யோவான் கண்ணோட்டத்திலோ, கிறிஸ்துவைப் பின்பற்றுவது அவரை விசுவசிப்பதாகும். அவரின் வெளி அருங்குறிக்காக அல்லாது, அவரது சொல்லுக்காக அவரை நம்பி அவரில் நிறைவிசுவாசம் கொள்வதாகும் (யோவா 4:42). வெறும் பகுத்தறிவால் எழும் தயக்கங்களை வெல்லக்கூடியது- இவ்விசுவாசம் (6:2.66-69). உலகின் ஒளியாக வழிகாட்டும் அவரைப் பின்தொடர்வது இவ்விசுவாசம் (8:12). ஒரே ஆயன் சேர்க்கும் ஒரே ஆட்டு மந்தையில் இணைந்திருக்க வைப்பது இவ்விசுவாசமும் இப்பின்பற்றலும்தான் (10:1-16).

இறுதியாக, அப்போஸ்தலர்களைப் பின்பற்றும் விசுவாசி (அ.ப. 13:43) கிறிஸ்து செல்லுமிடமெல்லாம் (திருவெளி 14:4; காண். யோவா 8:21 தொ) அவரைப் பின்பற்றத் தொடங்குகிறான். "முன்னோடியாய்த் திரைச் சீலையைக் கடந்து சென்றுள்ள இயேசுவின் அடிச்சுவட்டில்" (எபி 6:20) விசுவாசி பின்செல்லக் காத்திருக்கிறான். அப்போது, "எனக்குப் பணிவிடை செய்பவன் என்னைப் பின்தொடரட்டும். எங்கே நான் இருக்கிறேனோ, அங்கே என் பணியாளனும் இருப்பான்" என்று இயேசு கூறிய வாக்குறுதி நிறைவேறும் (யோவா 12:26).

**பின் மாரி (LATTER RAIN, SPRING RAIN)**

இஃது இளவேனிற்கால மழையாகும் (எரே 5:24). இஃது ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் மழையாகும். மழைக்காலம் முடிவுறுவது

இம்மழையோடுதான். காலதாமதமாகப் பயிரிடப்பட்ட பயிர்களுக்குக் கைகொடுப்பது இப்பின்மாரியே. பொதுவாக, பாலஸ்தீனத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழைக்காலமாக இருக்கும். இது முன் மாரி என்றழைக்கப்படும். மழைக்கால மாதங்களாகிய ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் மழையினைப் பின் மாரி என்றும் அழைப்பர். இரண்டும் சேர்ந்து இறை நன்மைத்தனத்தின் அடையாளமாகின.

**பின்னல் தட்டி (LATTICE)**

சன்னலை மூடியிருக்கும் பின்னல்தட்டி. இப்பகுதியின் வழியே சன்னலுக்கு வெளியே உள்ளவைகளைக் காணலாம் (நீதி 5:28; 2 அர 1:2; பழ 7:6; உ.ச. 2:9).

**பின்னல் வேலைப்பாடு (CHECKER WORK)**

1. ஆலயத் தூண்களில் அழகுற அமைக்கப்பட்ட வேலைப்பாடுகளின் ஒரு பகுதியைக் குறிக்கிறது. சில இடங்களில் இச்சொல்லானது பின்னல் வேலைப்பாடமைந்த சன்னல்களையும் (2 அர 1:2), வலையையும் (யோபு 18:8) குறிக்கிறது. ஆனால், இங்குக் (1 அர 7:17) குறுக்கு வெட்டுக்கோடுகளாலான வடிவமைப்பைக் குறிக்கிறது.

2. மேலும், இச்சொல் மெல்லிய சணல் நூலால் நெய்யப்பட்ட தலைமைக் குருவின் உட்சட்டையையும் குறிக்கிறது (யாத் 28:4). அதாவது, பல நிறங்களையுடைய மெல்லிய நூலினால் உருவாக்கப்பட்ட பலவிதமான கட்டங்களைக் கொண்ட வேலைப்பாட்டு அமைப்பினைக் குறிக்கிறது.

**பின்னூய் (BINNUI - கட்டியெழுப்பு)**

1. பாபிலோனியரின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய குடும்பங்கள் பல. அக்குடும்பங்களில் ஒரு குடும்பத்தலைவன் பெயரே பின்னூய். எஸ் 20:10; நெகே 10:34-இல் குறிப்பிடப்படும் பானியும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

2. அடிமைத்தனத்திற்குப் பிறகு வாழ்ந்த ஒரு யூதன். பகத்-மோவாபின் மக்களில் ஒருவர். இவர் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:30).

3. அடிமைத்தனத்திற்குப் பிறகு வாழ்ந்த குடும்பங்களில் ஒரு குடும்பத்தலைவன். இவரது பதிமூன்று புதல்வர்கள் அன்னிய மனைவியரை விலக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர் (எஸ் 10:38).

4. அடிமைத்தனத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு லேவியராகயிருக்கலாம். செருபாபேலோடு சமகாலத்தவர் (நெகே 12:8). எருசலேமின் சுவர்கள் மீண்டும் கட்டப்படுவதில் பங்கெடுத்தவரும், நெகேமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவருமான ஏனதாதுவின் மகனாக இருக்கலாம் (நெகே 3:24; 10:9). எஸ் 8:33-இன்படி இவர் லேவியரான நோவாதியாவின் தந்தையாவார். இவரும் பவ்வாயும் ஒரே ஆளாக இருக்கலாம் (நெகே 3:18).

# பீ

## பீடத்தின் கொம்புகள் (HORNS OF THE ALTAR)

தகனப்பலி பீடம் மற்றும் தூபப்பீடங்களின் நான்கு மூலைகளிலும் அமைக்கப்பட்ட கொம்பு போன்ற நீட்டல்களாகும் (யாத் 27:2; 30:2; 37:25; 38:2; எசே 42:15). இவை பொன்னாலோ, வெண்கலத்தாலோ வேயப்பட்டு, பீடத்தோடு சேர்ந்து ஒரே பொருளாகத் தோன்றின. குருக்கள் திருநிலைப்படுத்தப்படுதல் (29:1-2), பாவநீக்க நாள் (லேவி 16:8), பாவக்காணிக்கை செலுத்தல் (லேவி 4) போன்ற சிறப்புச் சடங்குகளில், பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தம் இக்கொம்புகளில் பூசப்பட்டது.

இவற்றின் அடையாளப்பொருள் தெளிவாக இல்லை. ஆயினும், இவை இறைபலத்தையும் புனிதத்தையும் எடுத்துக்காட்டுவதாகக் கருதப்பட்டது. விரும்பிச் செய்த கொலையாளிகளைத் தவிர (காண்க. 21:14; 1 அர 2:28 தொ), மற்ற அகதிகள் இக்கொம்புகளைப் பற்றிக் கொள்வதால் அடைக்கலம் பெறலாம் (1 அர 1:50-53). இஸ்ராயேலின் பாவங்களுக்கான தண்டனையாக, இறைவன் பீடத்தின் கொம்புகளை வெட்டிவிடுவார் என்று ஆமோஸ் இறைவாக்கு கூறுகிறார் (ஆமோ 3:14).

கொம்புகளையுடைய பலவகையான பீடங்கள் பெயேர்செபா, தாண், கெசேர், மெகிதோ போன்ற விவிலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## பீடம் (ALTAR)

ஒவ்வொரு மறையிலும் பலியீட்டு வழிபாட்டின் மையமாகப் பீடம் அமைந்துள்ளது. பீடம் இறைப் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாகும். இந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் மோசே பலியிடப்பட்ட விலங்கின் ஒருபாதி இரத்தத்தைப் பீடத்தின்மேல் தெளித்து, மற்றொரு பாதியை மக்கள்மேல் தெளித்தார். இதன் மூலமாக இறைவனுக்கும் மக்களுக்குமிடையே உறவொன்று ஏற்பட்டது (யாத் 24:6 தொ). பவுலும் இதையே வலியுறுத்துகிறார். "பழைய இஸ்ராயேல் மக்களைப் பாருங்கள்; பலிப்பொருளை உண்பவர்கள் பலிபீடத்தோடு உறவு கொள்கிறார்கள் அல்லரோ?" (1 கொரி 10:18). நிறைவான பலியில், அடையாளங்கள் உண்மைக்கு இடம்விட்டு அகலுகின்றன. ஏனெனில், கிறிஸ்துவே ஒரேசமயத்தில் குருவாகவும், பலிப்பொருளாகவும், பலிபீடமாகவும் உள்ளார்.

1. **நினைவுக்கொண்டாட்டத்திலிருந்து வழிபாட்டு இடத்திற்கு:** தொடக்கத்தில், தனக்குத் தற்போதுதான் காட்சி தந்த இறைவனுக்குப் பதில் அளிக்கும் முறையில், மனிதன் பீடமொன்று கட்டினான். இது தான் குலமுதியவர்களின் செயல் தொகுப்பில், அடிக்கடி காணும் "ஒரு பலிபீடம் எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைப் போற்றினார்" (ஆதி 12:7தொ; 13:18; 26:25) என்ற வாய்பாட்டின் பொருளாகும். பலிபீடம் பலியிடும் இடமாக இருப்பது மட்டுமின்றி, இறையருளின் நினைவுச்சின்னமாகவும் உள்ளது. இதையே இப்பீடங்களுக்கு அளிக்கப்பட்ட அடையாளப் பொருளுடைய பெயர்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன (30:20; 35:1-7; நீதி 6:24). ஆனால், அதே சமயத்தில் பீடமானது பலிசெலுத்தும் இடமுமாக அமைகின்றது. தொடக்கத்தில் தகுதி வாய்ந்த பாறைகளே பீடத்திற்குப் போதுமானதென்று (நீதி 6:20; 13:19 தொ) கருதப்பட்டாலும், மனிதன் விரைவிலேயே குழைத்த மண்ணினாலோ, கரடுமுரடான கற்களினாலோ பீடத்தைக் கட்ட அறிந்து கொண்டான் (யாத் 20:24 தொ).

குலமுதியவர்களின் வழிவந்தவர்களுக்கு வழிபாட்டு இடமானது, அந்த வழிபாட்டுக்குக் காரணமாய் இருந்த இறையாற்றல் காட்சிகளில் நினைவுகூர்தலைவிட அதிக மதிப்பு வாய்ந்தனவாயிற்று. அது பெரும்பாலும் திருயாத்திரைத் தலமாக மாறிற்று. இவ்வாறு கானானிய வழிபாட்டின் பழங்கால இடங்களான

பெத்தேல் (ஆதி 35:7) அல்லது செக்கேம் (33:19), பிற்காலத்தில் கில்கால் (யோசு 4:20) அல்லது எருசலேம் (நீதி 19:10) திருயாத்திரைத் தலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இறைக்காட்சியை நினைவுகூர்தலைவிட இடம் முதன்மை பெற்றது என்பதை ஏற்கெனவே வெளிப்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கானானில் புகுந்துபோது, திருச்சட்டத்தினால் இரக்கமின்றி உடைத்தெறியும்படி கோரப்பட்ட புறவினத்தாரின் பீடங்களைக் கண்டனர் (யாத் 34:13; உப 7:5; எண் 33:52). எனவே, கிதியோன் (நீதி 6:25-32) அல்லது ஏகூ (2 அர 10:27) பாகாலின் பீடங்களை அழித்தொழித்தனர். ஆனால், சாதாரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், தங்களுடைய பருப்பொருட்களின் காணிக்கையால் தொழுகை மேடைகளைத் "திருமுழுக்காட்டுவதோடு" மனநிறைவு பெற்றனர் (1 அர 3:4).

இக்காலக்கட்டத்தில் இருவகையில் ஒரு மறையின் சீர்கேட்டிற்குப் பீடம் காரணமாகலாம்: ஒன்று- பீடமானது உயிருள்ள இறைவனை அடைய ஓர் அடையாளமே என்பதை மறந்து விடுவது; மற்றது- யாவேயின் வழிபாட்டைச் சிலைகளின் வழிபாட்டைப்போல் ஆக்குவது. இப்படியாகச் சாலமோன், தனது அன்னிய மனைவிகளால் புகுத்தப்பட்ட சிலைகளை ஏற்றுக்கொண்டதால், ஒரு சகிப்புத்தன்மைக் காலத்தைத் தொடங்கிவைத்தான் (1 அர 11:7). ஆகாபும் இவ்வாறே செய்வான் (16:32). ஆகாசும் மனாசேயும் புறமதப்பாணியில் செய்யப்பட்ட பீடங்களை ஆலயத்திற்குள்ளேயே புகுத்துவர் (2 அர 16:10-16; 215). இப்படியாகப் பீடங்களின் எண்ணிக்கை பெருகுவதை, இறைவாக்கினர் வன்மையாகக் கண்டித்தனர் (ஆமோ 2:8; ஓசே 8:11; எரே 3:6).

**2. எருசலேமிலுள்ள ஒரே ஆலயத்தின் பீடம்:** வழிபாட்டை எருசலேமின் மட்டும் மையப்படுத்துதால் பல இடங்களில் பலி செலுத்துவதினால் எழும் பிரச்சனைக்கு விடை காணப்பட்டது (2 அர 23:8 தொ; காண். 1 அர 8:63 தொ). இக்காலத்திலிருந்து தான் தகனப்பலிபீடம் இஸ்ராயேலின் சமய வாழ்வை நிலையாக உருப்படுத்தியது. இப்பீடமானது விசுவாசிகளின் இதயங்களிலே பெற்றிருந்த சிறப்பிடத்திற்குப் பல்வேறு சங்கீதங்கள் சான்று பகர்கின்றன (சங் 26:6; 48:4; 84:4; 118:27). வருங்கால ஆலயத்தை விவரிக்கையில் எசேக்கியேல் பீடத்தை நுண்ணிய முறையிலே விவரிக்கிறார் (எசே 48:13-17). பீடத்தைப் பற்றிய குருக்கள் பாரம்பரிய சட்டத்தொகுப்பானது மோசேயால் இயற்றப்பட்டதாகக் கருதப்பட்டது (யாத் 27:1-8;லேவி 1-7). இவ்வாறே, வெகுகாலத்திற்கு முன்பே அடைக்கலமாகக் கருதப்பட்ட பீடத்தின் கொம்புகள் (1 அர 1:50 தொ; 2:28) மேன்மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. பரிகாரச் சடங்கிற்காக அவற்றின்மேல் இரத்தம் அடிக்கடி தெளிக்கப்படும் (லேவி 16:18; யாத் 30:10). இந்தச் சடங்குகள் பீடமானது இறைவனின் பிரசன்னத்தை அடையாளமாக உணர்த்திற்று என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.

அதே சமயத்தில் குருக்களின் அலுவல்கள் துல்லியமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. குருக்கள் பீடத்தின் பிரத்தியேகப் பணியாளர்களாக மாற, லேவியர்கள் மற்றக் கடமைகளைப் பொறுப்பாகப் பெறுகின்றனர் (எண் 3:6-10). இந்த வேலைப் பங்கீட்டை வலியுறுத்தும் (1 நாள் 6:48தொ) ஆட்சிக்குறிப்பேட்டாளர் இந்த ஒழுங்குகளுக்கு ஏற்றவாறே அரசின் வரலாற்றை எழுதியுள்ளார் (2 நாள் 26:16-20; 29:18-36; 35:7-18). இறுதியாக, பீடத்தின்மேல் தாங்கள் கொண்டுள்ள பக்திக்கு எடுத்துக்காட்டாக, தாயகம் திரும்பிய முதல் அகதிக் கூட்டத்தினர் முதல் வேலையாகத் தகன பலிபீடத்தை மீண்டும் கட்ட பேரார்வம் காட்டுகின்றனர் (எஸ் 3:3தொ). பிற்காலத்தில் யூதா மக்கபேயுவும் இதே பக்தியைக் காட்டுவார் (1 மக் 4:44-59).

**3. அடையாளத்திலிருந்து உண்மைக்கு:** பீடம் உணர்த்தும் உட்பொருளின் காரணமாக

அதை இயேசு புனிதமாகக் கருதுகிறார். பரிசேயர்களின் ஐயவாதத்தால் அழிக்கப்பட்டு, பழக்கத்தில் புறக்கணிக்கப்பட்ட இந்த உட்பொருளை இயேசு நினைவுபடுத்துகிறார் (மத் 23:18 தொ). பலி செலுத்தப் பீடத்தை அணுகுவது இறைவனை அணுகுவதாகும். ஆகவே, உள்ளத்திலே சினங்கொண்டவர்கள் இதைச் செய்யக்கூடாது (5:23 தொ).

பழங்கால வழிபாட்டுக்கு உண்மையான பொருளைக் கொடுப்பதோடு மட்டுமின்றி, அதற்கே ஒரு முடிவு காண்கிறார் இயேசு. அவருடைய உடலாகிய புதிய ஆலயத்தில் (யோவா 2:21) அவரைத் தவிர வேறு பீடமில்லை (எபி 13:10). ஏனெனில், பீடம்தான் பலிப்பொருளைப் புனிதப் படுத்துகிறது (மத் 23:19). இவ்வாறு நிறைவான பலிப்பொருளான அவர் ஒப்புக் கொடுக்கப்படும்போது தன்னையே புனிதப்படுத்துகிறார் (யோவா 17:19). ஒரே வேளையில் அவரே குருவும் பீடமுமாக உள்ளார். மேலும், ஆண்டவரின் உடலிலும் இரத்தத்திலும் பங்குபெறுவது, ஆண்டவராகிய பீடத்தில் பங்கு பெறுவதாகும். அவரோடு ஒன்றாகப் பந்தியில் அமர்வதாகும் (1 கொரி 10:16-21).

இவ்வாறே, திருவெளிப்பாட்டுநூல், மறை சாட்சிகளைத் தன் கீழ் கொண்டிருக்கும் விண்ணகப் பீடத்தைப் பற்றியும் (திருவெளி 6:9), புனிதர்களின் செபங்கள் ஒன்றித்த அடர்ந்த மணமுள்ள புகையை எழுப்பும் தீக்கொழுந்தைக் கொண்ட பொன்னாலான பீடத்தைப் பற்றியும் (8:3) குறிப்பிடுகிறது. இந்தத் தீக்கொழுந்து கிறிஸ்துவைக் குறிக்கும் அடையாளமாகவும் விளங்குகிறது; செம்மறி என்ற அடையாளத்தை நிறைவு செய்கிறது. இதுதான் இறைவனுக்கு விருப்பமான நறுமணம் கொண்ட ஒரே பலியின் ஒரே பீடமாகும். திருச்சபையின் காணிக்கைகள் கிறிஸ்துவின் ஒரே நிறைவான பலியோடு சேர்த்து ஒப்புக்கொடுக்கப்படும் விண்ணகப்பீடம் இதுதான் (எபி 10:14). கற்களாலான நமது பீடங்கள் இந்த ஒரே பீடத்தின் உருவங்களேயாகும். இந்த உண்மையை ஆயர்களின் செபநூல் "பீடம் கிறிஸ்துவே" என்று எடுத்துக் கூறுகிறது.

### பீம் (PIM)

இஃது ஓர் எடையளவாகும். ஒரு செக்கேலின் மூன்றில் இரண்டு பாகத்திற்கு அல்லது ஏறக்குறைய 7.6 கிராமுக்குச் சமமானது. இது 1 சாமு 13:21-இல் மட்டும் குறிக்கப்படுகிறது.

### பீரு (PYRRHUS - அனற்சிவப்பு)

பீரு பெரோயா நகரைச் சேர்ந்தவர். சோப்பத்தரின் தந்தையாகிய பீரு பவுலின் துணையாளர்களில் ஒருவராவார் (அ.ப. 20:4).

### பீலோ யூதேயு (PHILO JUDAEUS)

இவர் எகிப்தின் அலக்சாந்திரியாவைச் சார்ந்த ஒரு யூத தத்துவ ஞானி. இயேசுவோடு சமகாலத்தவர். கி.பி. முதல் நூற்றாண்டு யூத தத்துவத்துள் யூதப்பாரம்பரியங்களைக் கிரேக்கத் தத்துவ இயலோடும் கலாச்சாரத்தோடும் ஒத்து இசைந்து போகச் செய்த இவரது முயற்சிகள் சிறப்புமிக்கவையாகும். இது கிரேக்க, உரோமையர் உலகில் கிறிஸ்தவம் பரவுவதற்கு வழிவகுத்தது. யூதரைச் சேராத நகரில் பீலோ வாழ்ந்ததும் அவருடைய பல நூல்களும் இந்த இயக்கம் பற்றிய ஆய்வுக்கு முதன்மையான பொருளாகின்றன.

பீலோவின் வாழ்வு பற்றி அதிகம் தெரியவில்லை. இவர் கி.மு. 10-கி.பி. 45-க்கு இடையில் வாழ்ந்தார். உரோமைப் பேரரசிலேயே மிகச் செல்வமிக்க குடும்பங்கள் ஒன்றில் பிறந்தவர். முக்கிய பொதுப்பணியாளராக விளங்கினார். அலக்சாந்திரிய யூதர்கள் சார்பாக கி.மு. 39-இல் உரோமைக்கு ஒரு தூதுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். அலக்சாந்திரியாவிலுள்ள யூதர்கள் கலிகுலா பேரரசன் சிலையை வணங்க மறுத்ததை அறிந்த கலிகுலாவின் சினத்தைப் பீலோ தன் அரச தந்திரத்தால் தவிர்த்தார்.

பீலோ தனது யூத பாரம்பரியங்களுக்குக் காட்டிய பற்றுறுதியை அவரது நூல்கள் பிரதிபலிக்கின்றன. இந்தப் பாரம்பரியத்தோடு ஒன்றிணைந்து, கிரேக்க இலக்கியங்கள், தத்துவ இயல் மற்றும் வரலாறு ஆகியவற்றில் எபிரேய மதிப்பீடுகளைக் காண நம்பிக்கையோடு முயல்கிறார். அவரது நூல்களில், அண்டம் மற்றும் மனிதப் பொறுப்புடைமை ஆகியவற்றை ஆய்வு செய்யும் தத்துவ நூல்களைக் காணலாம்; இஸ்ராயேலின் வரலாறு, விசுவாசம் ஆகியவற்றைப் புறவின வாசகர்களுக்குக் கவர்ச்சியான முறையில் எடுத்துக்கூறும் காப்புரை நூல்களைக் காணலாம்; ஸ்தோயிக்கு மற்றும் பிளேட்டோனியக் கருத்துக்களைப் பழைய ஏற்பாட்டுக் கருத்துகளோடு ஒப்பிடும் வளர்ச்சியடைந்த உருவக விளக்கங்களைக் கொண்ட விளக்கவுரை நூல்களையும் காணலாம். இந்த உருவக விளக்கமுறை தொடக்க மற்றும் மத்தியகாலத் திருச்சபையில் பழைய ஏற்பாட்டை அணுகப் பெரிதும் பயன்பட்டது. யூதரல்லாத சிந்தனைகளில் மிகச் சிறந்தவை எபிரேய மூலமுடையவை என்று பீலோ காட்டிய முயற்சி, தொடக்ககால யூத, கிறிஸ்தவக் காப்புரையாளர்களுக்கு வழிகாட்டியது.

தத்துவ இயலில், எப்படி அறிவை அடையலாம் என்ற தர்க்கத்துக்குள் தன்னையே வெளிப்படுத்தும் இறைவனைப் பற்றிய கருத்தைப் புகுத்த முயற்சி செய்ததில் பீலோவின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. செமித்திய, கிரேக்கக் கருத்துகளுக்கிடையே ஒரு பாலம் அமைக்க அவர் செய்த முயற்சிகள், அவரது போதனையின் மிக முக்கியக் கூறுகளாகும். இவை விவிலிய ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதன் விளைவுகளைத் தொடக்ககாலத் திருச்சபையின் தந்தையர்கள் பயன்படுத்தினர். இப்படிப்பட்ட முயற்சிகளில் ஒன்று, கடவுளுக்கும் உலகத்திற்கும் இடையிலான உருவகமாக "வார்த்தை" பற்றிய புதிய-பிளேட்டோனிய கருத்தைப் பீலோ பயன்படுத்துவதாகும். வார்த்தையை விவரிப்பதில் பீலோ ஒரே நிலையாக இல்லை. சில சமயங்களில், படைப்பிலும் மனுகுலத்திற்கு ஒளி அளிப்பதிலும் செயலாற்றும் ஆட்தன்மை கொண்ட உருவமாக வார்த்தையை விவரிக்கிறார். மற்றச் சமயங்களில், படைப்பவராகிய இறைவனின் அறிவைப் பிரதிபலிக்கும் உலகின் உள்ளியல்பான அறிவே என்று வெறுமனே வார்த்தையை விவரிக்கிறார்.

வார்த்தை பற்றிய பீலோவின் கருத்து எந்த அளவுக்கு யோவான் நற்செய்தியின் முன்னுரையைப் பாதித்தது (யோவா 1:1-18) என்பது பற்றிய தர்க்கத்திற்கு விடை காண்பது எளிதன்று. நேரடியான பாதிப்பு உண்டு என்று கூறமுடியாது. கிழக்கு மத்தியதரைக்கடற்பகுதியில் நிலவிய தத்துவ இயல் சூழ்நிலையில் பீலோ எழுதினார் என்றும், அதே கலாச்சாரச் சூழ்நிலையில் சில பத்தாண்டுகளுக்குப் பின், யோவானின் நற்செய்தி எழுதப்பட்டது என்றும் கூறுவதுதான் இப்பிரச்சனை பற்றி அதிகம் கூறக்கூடியதாகும்.

பீலோ பயன்படுத்திய உருவக மற்றும் மாதிரி முறைகளும் சிந்தனை அமைப்புகளும் இலக்கிய நடைகளும் புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்களை விட எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் அதிகம் பிரதிபலிக்கப்படுகின்றன. இங்கும் நேரடியான இலக்கியச் சார்புடைமையில்லை; இரண்டிற்கும் பொதுவான பின்னணியே இருந்திருக்க வேண்டும் என்று கூறுவதோடு மனநிறைவடையலாம்.

## பீலோவின் விவிலியத் தொன்மை நிகழ்ச்சிகள் பற்றிய நூல் (PHILO BIBLICAL ANTIQUITIES OF)

இந்நூலின் ஆசிரியர் யார் என்று தெரியாது. இஃது இலத்தீனில் எழுதப்பட்டது. அலக்சாந்திரியா நகரைச் சேர்ந்த உண்மையான பீலோ என்பவரின் நூலோடு இதுவும் முதலில் வெளியிடப்பட்டது. பின் இதன் ஆசிரியர் போலியான பீலோ என்று குறிப்பிடப்படுகிறார். அதாவது, அலக்சாந்திரியா நகர பீலோ அல்லர், மற்றொரு பீலோ என்பதே கருத்து. இஃது ஆதாமிலிருந்து சவுலின் இறப்பு

வரை சுருக்கமான விவிலியக் கதையைக் கொண்டுள்ளது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள இந்நிகழ்ச்சிகள் சில இடங்களில் நீட்டப்பட்டும் சில இடங்களில் விடப்பட்டும் காட்சியளிக்கின்றன. நீதிபதிகள் ஆகமத்திற்கு அதிக கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் இறையியல் கொள்கைகளும் அவ்வப்போது மாறுபடுகின்றன.

இந்நூல் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. ஏனெனில், எபிரேய நூலான மிஸ்னாவிற்கு முன் எபிரேயர்கள் எவ்வாறு எழுதினார்கள் என்பதைப் பற்றிய சில உண்மைகளை இது தருகிறது. இந்நூலின் நடையிலிருந்து இஃது ஒத்தமை நற்செய்திகள் எழுதப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆலயச் சடங்குகள் பற்றியும், லேவியர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

உயிர்த்தெழுதலில் விசுவாசத்தை இஃது உறுதிப்படுத்துகிறது. வானதூதர்கள் பற்றியும் அவர்களின் பெயர்கள் பற்றியும் இதிலே கூறப்படுகிறது. இது மெசியா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினாலும் புதிய ஏற்பாட்டில் வரும் கருத்தோடு பயன்படுத்தவில்லை.

யூதமதத்தைப் பற்றிய தவறான பல கருத்துகளைத் திருத்திக் கொள்ள இந்நூல் உதவும். இந்நூல் எபிரேயத்திலிருந்து கிரேக்கத்திலும், பின் இலத்தீனிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

# பு

## புகழ்ச்சி, போற்றுரை (PRAISE)

இது புகழ்தல், வேண்டுதல், நன்றி செலுத்துதல் ஆகியவற்றிற்கிடையே- செபத்தில் பொதுவாகச் செய்யப்படும் சிறப்பு வேறுபாடாகும். விவிலியத்தில் வாழ்த்துதலும் நன்றி செலுத்துதலும் சேர்ந்து ஆன்மாவின் ஒரே எழுச்சியாகக் கருதப்படுகிறது. இலக்கிய எழுத்து நடையிலும் இவை ஒன்றாகவே கூறப்பட்டிருக்கின்றன. மனிதனுக்குச் செய்துவரும் அருட்செயல்கள் அனைத்திலும் கடவுள் தம்மை. வாழ்த்துக்குரியவராக வெளிப்படுத்துகிறார். எனவே, புகழ்தல் என்பது இயற்கையாகவே நன்றி கூறுதலாகவும், ஆசீராகவும் ஆகிறது. மறை நூலின் பல பகுதிகள் இவைகளை இணைத்தே கூறுகின்றன (சங் 35:18; 69:31; 109:30 எஸ் 3:11). புகழ்தல், நன்றி நவிலல் இரண்டுமே மகிழ்ச்சியின் ஒரே விதமான புறத்தோற்றத்தையே விளைவிக்கின்றன. முக்கியமாக மக்களுடைய வழிபாட்டில், இவை இரண்டுமே கடவுளின் மகத்துவத்தை வெளிப்படுத்தி அவருக்கு மகிமையை அளிக்கின்றன (எசா 42:12; சங் 22:24; 50:23; 1 நாள் 16:4; லூக் 17:15-18; அ.ப. 11:18; பிலி 1:11; எபே 1:6.12.14).

ஆனால், இச்சொற்கள் வெவ்வேறாக இருப்பதாலும், வெவ்வேறு இடங்களில் கூறப்பட்டிருப்பதாலும் தனித்தனியாகப் பொருள் கொள்ளவும் ஒரு வகையில் இடம் இருக்கிறது. இந்த வகையில் புகழ்ச்சி என்பது கடவுளின் கொடைகளை விட மேலாக, அவருடைய ஆட்தன்மையையே குறிக்கிறது எனலாம். புகழ்ச்சி இறைவனை மையமாகக் கொண்டது; அவரில் தன்னை இழந்து விடுவது; ஆராதனையை ஒத்தது; பரவசத்தில் ஒருவனை ஆழ்த்தவல்லது. இவ்வாறாக, புகழ்ச்சிப்பாக்கள் சாதாரணமாக ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சிக்கு அல்லது கொடைக்கு அப்பாற்பட்டதாய் அமைந்திருக்கின்றன. இறைவன் இறைவனாகவே இருப்பதனாலேயே, அவரை இப்பாக்கள் பாடுகின்றன.

1. **இறைவனின் புகழ்ச்சி:** புகழ்ச்சிப் பாக்கள் மகிழ்ச்சி ததும்பிய நிலையில் கடவுளை விவரிக்கவும், அவருடைய உன்னத மகிமையை எடுத்துரைக்கவும் செய்கின்றன. இப்பாக்கள் யாவேயின் நன்மைத் தனம், நீதி (சங் 145:6தொ), மீட்பு (சங் 71:15), உதவி (1 சாமு 2:1), அன்பு, பிரமாணிக்கம் (சங் 89:2; 117:2), மகிமை (யாத் 15:21), வல்லமை (சங் 29:4), வியத்தகு திட்டம் (எசா 25:1), விடுதலை தரும் நீதித் தீர்ப்பு (சங் 146:7) ஆகிய இவையனைத்தையும் பற்றிப் பாடுகின்றன. இவையனைத்தும் யாவேயின் வியப்புமிக்க நிகழ்ச்சிகளிலும் (சங் 96:3), அவருடைய வல்லமை மிகுந்த செயல்களிலும் (சங் 105;1தொ: 106:2), அவருடைய எல்லாச் செயல்களிலும் (சங் 92:5 தொ) பிரதிபலிக்கின்றன. இவை கிறிஸ்துவினுடைய புதுமைகளிலும் (லூக் 19:37) வெளிப்படுகின்றன.

செயல்களிலிருந்து செயலாற்றுபவரை அறிகிறோம். "ஆண்டவர் மாண்பு, மிக்கவர்; பெரிதும் போற்றுதலுக்குரியவர்" (சங் 145:3). "என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்தனை மேன்மை மிக்கவர்; நீர் மாண்பையும் மாட்சியையும் அணிந்துள்ளீர்!" (சங் 104:1; காண்க. 2 சாமு 7:22; யூதி 16:13). பல பாடல்கள் கடவுளுடைய உன்னதமான பெயரைப் போற்றுகின்றன (சங் 34:4; 145:2; எசா 25:1). கடவுளைப் போற்றுதல் என்பது அவரை உயர்த்தி மகிமைப்படுத்துதல் ஆகும் (லூக் 1:46; அ.ப. 10:46). இஃது அவருடைய தனிப்பட்ட ஈடில்லா மகிமையை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். ஏனெனில், அவர் வானகத்திற்கும் உயரே உறைபவர். அவர் ஒருவரே தூயவர் (லூக் 2:14). கடவுளுடைய புனிதத் தன்மையை உணரும்போது மகிழ்ச்சி கலந்த புகழ்ச்சி உடைபட்ட வெள்ளமாக வெளிப்படுகிறது (சங் 30:5 = 97:12; 99:5; 105:3; காண்க. எசா 6:3). இத்தகைய தூய ஆன்மீகப் புகழ்ச்சி-

கடவுளோடு ஒரு தனிப்பெரும் ஒன்றிப்பை ஏற்படுத்துகிறது.

**2. புகழ்ச்சியின் ஆக்கக் கூறுகள்:**

**அ) புகழ்ச்சியும் அறிக்கையும்:-** எல்லாவற்றையும் விட, புகழ்ச்சி கடவுளின் மேன்மையை அறிக்கையிடுவதாகும். புகழ்ச்சி பல வகைகளிலும் எப்போதும் அறிக்கையிடுவதாகும் (காண்க. எசா 12; 4தொ; எரே 31:7; சங் 89:2; 96:1தொ; 105: 1தொ; 145:6; காண்க. 79:13). இந்தப் பிரகடனத்திற்கு ஒரே மனதாக இசைவுதர நீதிமான்கள் என்றும் உள்ளனர் (சங் 22:23-26; காண்க. 33:1). தாழ்ச்சியுள்ளோர் உண்மையுள்ளோர் ஆகிய இவர்கள் மட்டுமே, அறிவற்றவர் அல்லர் (சங் 92:7); இறைவனின் பெருமையை உணரவல்லவர்கள்; அவர் புகழ்பாடக்கூடியவர்கள் (சங் 30:5; 34:3; 66:16தொ). அறிவற்றவர்களால் முடியாது (92:7). என்றும் வாழும் இறைவனோடு ஒன்றியியங்கும்போது மனிதன் புகழ்ச்சியால் உந்தப்பட்டு (சங் 57:8; 108:2-6) வாழ்க்கையில் புதுப்பிக்கப் பெறுகிறான். கடவுளைப் புகழ்வதற்குத் தன்னுடைய எல்லாச் சக்திகளையும் பயன்படுத்துகிறான். அஃது உண்மைப் புகழ்ச்சியாக அமையும்போது, அதற்கு முடிவேயிருப்பதில்லை (சங் 145: 1தொ; 146:2; திருவெளி 4:8). செயோலை அடைந்து விட்ட இறந்தவர்களல்லர், இவ்வுலகில் உயிர்வாழ்பவர்கள் மட்டுமே இறைவனைப் புகழ முடியும் (சங் 6:6; 30:10; 88:1தொ; 115:17தொ; எசா 38:18; பாரூ 2:17; சீரா 17:27தொ). புதிய ஏற்பாட்டிலும், இறைப்புகழ் என்பது முதலில் அவருடைய பெருமையினை உயர்வுபடுத்துதல் என்பதாகும் (மத் 9:31; லூக் 2:38; உரோ 15:9 = சங் 18:50; எபி 13:15; காண்க. பிலி 2:11).

**ஆ) புகழ்ச்சியும் பாடலும்:** கடவுள் முன்னிலையில் இருக்கும்போது ஓர் ஆன்மா இறைவனை வியந்து போற்றுதலில் புகழ்ச்சி எழுகிறது. மகிழ்ச்சியோடு இணைந்து இது பல வகைகளில் வெளிப்படலாம் (சங் 47:2.6; 81:2; 89:16தொ; 95:1; 98:4). ஆயினும் சமூகத்திற்குப் புரியும் விதத்தில், வெளிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், அது சாதாரணமாக ஒரு கவிதையாகவும், இசையும் இயலும், நடனமும்கூட, இயைந்து தோன்றும் பாட்டாகவும் உருவெடுக்கின்றது (சங் 33:2தொ; 98:6; 1 நாள் 23:5). புகழ்ச்சியைக் குறிக்க, பாடலுக்குமுன் பாடுவதற்கு அழைப்பு விடப்படுவது அடிக்கடி காணப்படுகிறது (யாத் 15:21; எசா 42:10; சங் 105:1தொ; எரே 20:13).

எபிரேய மொழியில் 'கில்லெல்' எனும் சொல் புகழ்ச்சியினைத் தனக்கே உரிய பண்போடும் செறிவோடும் நன்கு எடுத்துரைக்கிறது. பெரும்பாலும் புகழ்தலுக்குரிய காரணம் வெளிப்படையாகக் கூறப்படுகிறது. அப்படி இல்லையெனில், அது புகழ்ச்சிக்காகவே புகழப்படுகிறது. இஃது 'அல்லேலூய = அல்லேலு-யா = யாவேயைப் புகழ்' என்ற விளித்தலில் சிறப்பாகக் காணப்படுகிறது. புதிய ஏற்பாடும் புகழ்தல் பற்றிப் பேசும்போது அதைப் பாடலாகவும் (திருவெளி 5:9; 14:3; 15:3), கவிதையாகவும் (மத் 26:30; அ.ப. 16:25), இசைக்கருவிகள் இணைந்து வருவதாகவும் (உரோ 15:9 = சங் 18:50; 1 கொரி 14:15) பேசுகிறது. எபே 5:19 இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கூறுகிறது.

**இ) புகழ்ச்சியும் இறுதிக்கால இயலும்:** இஸ்ராயேல் நாட்டு மக்கள் ஒரே உண்மையான கடவுளைப் பற்றி தனிப்பட்ட விதமாக அறிய அவரால் அழைக்கப்பட்டிருப்பவர்களாதலால், புகழ்தல் முக்கியமாக அவர்களுடைய கடமை என விவிலியம் கூறுகிறது. பின்னர் மற்றவர்களும் உண்மையான மகிமைக்குரிய யாவே என்னும் இறைவனை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களும் அவரைப் புகழ அழைக்கப்படுகின்றனர் (சங் 117:1; 96:3.7தொ; 97:1; 98:3 தொ). கடவுளின் வெற்றிகளைச் சிறப்பாக, நாடு கடத்தலிலிருந்து திரும்புவதைக், குறிப்பிடுகையில்- உலகின் எல்லா மக்களும் மட்டுமல்லர், இயற்கையே இறைவனைப்

புகழ்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எசா 42:10; சங் 98:8; 148; தானி 3:51-90). இந்த உலகளாவிய பண்பு, பின்வரும் இறுதிக்கால இயலை எதிர்நோக்கியிருக்கிறது. நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த காலம் முடிந்து நாடு திரும்பிய காலத்தில் தொடங்கிய இந்த உலகளாவிய புகழ்ச்சி இனிக் 'காலமெல்லாம்' பரவிப் பெருகும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் பாடல்கள் எல்லாம் யாவேயின் முடிவில்லா நிறைவு நாளில் ஒலிக்கும் கீதத்தின் எதிரொலியாக இருக்கின்றன. சங்கீத நூலில் வரும் "புதிய பாடல்கள்" தங்களது இறுதி எதிரொலியைத் திருவெளிப்பாட்டின் "புதிய பாடலில்" காண வேண்டும் (திருவெளி 5:9;14:3).

3. **புகழ்ச்சியும் வழிபாடும்:** இஸ்ராயேலின் புகழ்ச்சி எப்பொழுதும், முக்கியமாக ஆலயம் எழுப்பப்பட்டபின், மக்களின் வழிபாட்டோடு இயைந்தே காணப்படுகிறது; புதிய அமைப்பைப் பெறுகின்றது. ஆலயத்திலே நடைபெற்ற வழிபாடுகளில் ஈடுபடும்போது மக்கள் மிகவும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்திருந்தனர். வருடாந்திர முக்கியமான விழாக்களிலும், முக்கிய நிகழ்ச்சிகளான அரச மகுடம் தரித்தல், வெற்றிவிழா, ஆலயம் அர்ப்பணிக்கப்படுதல் போன்ற நாட்களிலும், புகழ்ச்சி 'ஆமென்' 'அல்லேலூயா' என்னும் மக்களின் குரலொலியில் ததும்பி (1 நாள் 16:36; நெகே 8:6; 5:13), "என்றும் உளது அவரது பேரன்பு" (சங் 136:1; எஸ் 8:11) எனும் சொற்கள் பாட்டு வடிவிலும் கவிதைத் தொகுப்பிலும் உயர்ந்து நின்றன. இவ்வாறாக, பல சங்கீதங்கள் எழுந்தன. முக்கியமாக 'சிறிய அல்லெல்' (சங் 113 முதல் 118 முடிய), 'பெரிய அல்லெல்' (சங் 136), 'நிறைவுறும் அல்லெல்' (சங் 146 முதல் 150 முடிய) என்று கூறப்படும் சங்கீதத் தொகுப்புகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. ஆலயத்தில் "போற்றுரைப்பலி"யான "தோதாவில்" சங்கீதங்களைப் பாடுவது சிறப்புப்பெற்றது (காண்க. லேவி 7:12;....22:29தொ; 2 நாள் 33:16). இது நல்லுறவுப் பலியாகும். இதற்குப்பின் ஆலய வளாகத்திற்குள்ளேயே புனித உணவு மகிழ்ச்சியோடு உண்ணப்பட்டது.

கிறிஸ்தவர்கள் தன்னார்வத்தோடு வழிபாட்டுடன் புகழ்ச்சியைத் தொடர்புபடுத்து கின்றனர். இதற்குச் சான்றுகள்– அப்போஸ்தலர் பணியிலும் திருமுகங்களிலும் குறிக்கப்படும் வழிபாட்டுக் கூட்டங்களிலும் (அ.ப. 2:46 தொ; 1 கொரி 14:26 எபே 5:19), விண்ணகத்தில் நடக்கும் வழிபாடு மற்றும் புகழ்ச்சி பற்றிய திருவெளிப்பாட்டு விவரிப்புகளிலும் காணப்படுகின்றன.

4. **கிறிஸ்தவ வாழ்த்து:** வாழ்த்து என்பது இரண்டு ஏற்பாட்டிலும் ஒன்றாக இருந்தாலும், புதியதில் அது மீட்பராம் கிறிஸ்துவின் அன்புக்கொடையாக மாறியதில் கிறிஸ்தவத்தன்மை பெறுகிறது. கிறிஸ்துவின் பிறப்பின்போது, வானதூதர்களின் வாழ்த்தொலியும், மேய்ப்பர்களின் புகழ்ச்சியும் இந்தக் கிறிஸ்தவத் தன்மையைக் கொண்டிருக்கின்றன (லூக் 2:13தொ. 20). இயேசுவின் புதுமைகளுக்குப்பின் மக்கள் கூட்டம் அளிப்பதாக வரும் புகழ்ச்சியும் இத்தன்மையதே (மாற் 7:36 தொ; லூக் 18:43; 19:37). இதுவே குருத்து ஞாயிறன்று எழும்பிய 'ஓசன்னா' எனும் குரலுக்கும், திருவெளிப்பாட்டு நூலில் வரும் செம்மறியின் பாடலுக்கும் அடிப்படைப் பொருளாகும் (காண்க. மத் 21:16 = சங் 8:2தொ; திருவெளி 15:3). திருச்சபையின் ஆரம்ப நாட்களின் பாடல்களில் சில பகுதிகள் திருமுகங்கள் வழியாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. பக்தியின் மறை உண்மையை வெளிப்படுத்தியவரும் (1 திமொ 3:16) கிறிஸ்துவைத் திரும்பவும் நமக்காக அளிக்க இருப்பவருமான (6:15 தொ) இறைவனைப் புகழ்ந்து பக்திப் பரவசத்தில் பாடப்பட்ட பகுதிகளாக அவை அமைந்திருக்கின்றன. கிறிஸ்துவின் மறை உண்மையையும், மீட்பின் மறை உண்மையையும் இவை அறிக்கையிடுவதாகவும், அதன் விளைவாக விசுவாசத்தையும் கிறிஸ்தவ வாழ்வின் தன்மையையும் பற்றிய உண்மையான அறிவிப்பாகவும் அமைந்திருக்கின்றன (எபே 5:14).

புதிய ஏற்பாட்டில் புகழ்ச்சி கிறிஸ்துவின் கொடையினை ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு கடவுள்பால் எழும் கிறிஸ்தவத் தன்மையை வலியுறுத்தி நிற்கிறது (எபே 3:21). இது கிறிஸ்துவின் செபத்தைப் பின்பற்றி எழும் இறுதிப் புகழ்ச்சியாகும் (காண்க. மத் 11:25); புகழ்ச்சி கிறிஸ்துவுக்கே நேரடியாகவும் சாற்றப்படுகிறது (மத் 21:9; அ.ப. 19:17; எபி 13:21; திருவெளி 5:9). எனவே, இனிமேலாக ஆண்டவர் இயேசுவே நம்முடைய புகழ்ச்சி எனலாம்.

விவிலியமே தனிப்பட்ட விதமாகக் கூறுவதுபோல், புகழ்ச்சி கட்டாயமாக கிறிஸ்து வத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. அதுவே வழிபாட்டுச் செபம் 'அல்லேலூயா', 'பிதா சுதன் பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக' போன்ற இவைகளோடியைந்த ஒரு பாடலமைப்பாக உருவெடுக்கிறது. அதுவே செபத்தில் ஈடுபடும் மக்களுக்கு வாழ்க்கையின் நிறைவினை அளித்து, அவர்கள் புகழ்ச்சிக்குச் சான்றுகளாக விளக்குமாறு செய்கிறது.

**புகேயான் (BOUGAEAN** – கொடுமைக்காரன், வீண்பெருமை கொள்பவன்)

இஃது அம்மதத்தாவின் புதல்வனான ஆமானின் பணிமனைப் பதவிப்பெயர் (எஸ்த 12:6). இவன் அரசனிடம் பெரும் மதிப்பு பெற்றிருந்தான். இவன் கொலையுண்ட அண்ணகர் இருவரையும் முன்னிட்டு மொர்தக்காயிக்கும் அவர் மக்களுக்கும் தீங்கு விளைவிக்க மனம் கொண்டிருந்தான்.

**புகை மண்டலம் (SMOKE)**

இறைவன் தன் பிரசன்னத்தையோ, தனது கோபத்தினையோ மக்களுக்கு வெளிப்படுத்த நினைக்கும்போது புகைமண்டலத்தின் (மூலம்) ஊடே வெளிப்படுத்தியதாக விவிலியத்தின் பல இடங்களில் காண்கின்றோம் (யாத் 19:18; 20:18. காண்க. ஆதி 15:17). இறை பிரசன்னத்தை உறுதிப்படுத்தும் வெளித்தோற்றங்களாக, புகை மண்டலமும் நெருப்பும் தோன்றுவதை மேற்கண்ட விவிலிய வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பிற்கால இலக்கியங்களிலும் மகிமையில் இறைவனது பிரசன்னத்தைச் சுட்டிக்காட்ட புகையும் நெருப்பும் பயன்படுகின்றன (எசா 4:5; 6:4; காண்க. திருவெளி 15:8).

பிறிதொரு சூழ்நிலையில் இறைவனின் நெருப்பிலிருந்து புகை எழுகிறது. அஃது அவரது மக்களின் எதிரிகளுக்கு அவர்காட்டும் சினத்திலிருந்து எழுகிறது (உப 29:20; சங் 18:8; எசா 30:27). இதற்குச் சான்று இறைவன் தீர்ப்பால் அழிக்கப்பட்ட நகரங்கள் மற்றும் நாடுகளிலிருந்த புகையாகும் (ஆதி 19:28; எசா 34:10; திருவெளி 18:9.18; 19:3).

தகனப்பலிகளினின்று எழும்பும் புகை பற்றியும் (சங் 66:15), தூபக்கலசத்தினின்று எழும்பும் புகை பற்றியும் (எசா 8:11) விவிலியக் குறிப்புகள் உள்ளன. எசா 51:6; ஓசே 13:3 ஆகிய இடங்களில் புகையின் நிலையற்ற தன்மையைக் குறிக்க, புகை உருவகமாகப் பயன்பட்டுள்ளது.

**புக்கி (BUKKI** – யாவேயால் சோதித்தறியப்பட்டவன்)

1. தாண் கோத்திரத்தின் ஒரு தலைவன்; கானான் நாட்டை இஸ்ராயேலருக்குப் பிரித்துக் கொடுப்பதில் உதவி செய்த ஒருவர் (எண் 34:22).

2. ஆரோனின் குலத்தில் தோன்றிய ஒரு குரு; அபிசுவாவின் மகன். எலயாசர், பினகாசு ஆகியோரின் வழிவந்தவர் (1 நாள் 6:5.51; எஸ் 7:4).

**புக்கியா (BUKKIAH** – யாவேயின் கலம்)

இவர் ஒரு லேவியர்; ஏமானின் புதல்வர்; இசைக்கருவிகளோடு கோவிலில் இறைவாக்குரைக்கும்படி தாவீதால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர். பாடற்குழுக்களின் ஆறாவது பிரிவைச்சேர்ந்தவர் (1 நாள் 25:4.13).

**புடைநிலை (JAMB)**

எசேக்கியேல் எருசலேம் ஆலயம் பற்றிய காட்சியில் புடைநிலைகளை விவரிக்கின்றார் (எசே 40:9-41:3). இவை புதுமுக மண்டபம், அறைகளின் வாயில்கள், கதவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த கட்டட அமைப்பாக மட்டுமல்லாமல், அழகு செய்யப்பட்டனவாக இருந்தன.

**புட்பராகம் (TOPAZ)**

இது மஞ்சள் நிறமான விலையுயர்ந்த கல்லாகும். இதைக் குருக்கள் உடையின் மார்புப்பகுதியில் பொருத்த வேண்டுமென யாத் 28:17 கூறுகிறார். தீர்நாட்டு மன்னன் இதை அணிந்திருந்ததாக நாம் காண்கிறோம் (எசே 28:13). எருசலேம் நகரத்தின் அடிப்படையான விலைமிக்க கற்களில் இஃது ஒன்பதாவதாகும் (திருவெளி 21:20). யோபு, எத்தியோப்பியாவின் புட்பராகம், ஞானத்திற்கு இணையாகாது என்று கூறுகின்றார் (யோபு 28:19).

**புண் (SORES)**

இவ்வகைப் புண்களைப் பற்றி விவிலியத்தில் எகிப்தில் தோன்றிய ஆறாவது கொள்ளை நோய் பற்றிய பகுதியில் காண்கிறோம் (யாத் 9:9-10). இவை மனிதர்களையும் விலங்குகளையும் தாக்கித் துன்புறுத்தின. இந்நோயினால் மனிதர்கள் விலங்குகளின் உடல்களிலெல்லாம் கொப்புளங்கள் தோன்றி வெடித்துப் புண்ணாயின.

**புதிய (NEW)**

I. புதிய என்னும் கருத்து, கிரேக்க மொழியில் இரு சொற்களால் விளக்கப்படுகிறது. நெயோஸ் (Neos) காலத்தில் புதிது, புதிய, இளமையான அதாவது முதிராதது; கைநோஸ் (Kainos) தன்மையில் புதியது; இவ்விதமாகக் குணத்தில் சிறந்தது. விவிலியத்தில் மீட்பைச் சார்ந்த உண்மைகளுக்கு இந்த இரு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. முதல் சொல்-பழமையில் புதிய பிரசன்னத்தைக் காட்டுகிறது; இரண்டாவது- முதல் சொல்லை விட அடிக்கடி ஆச்சரியத்திற்குரிய, புனிதமான, முழுமையுமற்ற தான உண்மைகளை விவரிக்கின்றது. ஏனென்றால், மனிதனும் உலகமும் ஆடையைப்போல் பழமையாகின்றனர் (சீரா 14:17; எசா 50:9; 51:6); ஆனால், இறைவனில் பழமை ஒன்றுமில்லை, எல்லாமே புதுமை.

II. **புதுமை தன்மையும் புனிதத்தன்மையும்:** படைப்பு எல்லாமே இறைவனைச் சார்ந்ததால், பயன்படுத்துவதால் பாழ்படாப் புதிய பொருள் ஒரு புனிதத் தன்மையைக் கொண்டுள்ளது. அறுவடையின் முதற்கனியும், புதிய பிறப்பும் இறைவனுக்காக ஒதுக்கி வைக்கப்படுகின்றன (உப 26:1-11; யாத் 13:11); நுகத்தடி சுமக்காத விலங்குகள் சிலவற்றைப் பலி செலுத்துகின்றனர் (எண் 19:2; உப 21:3); வேலை செய்யாத விலங்குகள் புனித பெட்டகத்தை இரதத்தில் சுமந்து செல்கின்றன (1 சாமு 6:7; 2 சாமு 6:3); தூய்மையற்ற நீரைப் புனிதப் படுத்துவதைக் குறிக்க, உப்பு நிறைந்த ஒரு புதிய கிண்ணத்தைப் பயன்படுத்துவதின் மூலம் அடையாளமாகக் காட்டுகிறார் (2 அர 2:20). "யாரும் அதுவரை வைக்கப்படாத" (மத் 27:60; யோவா 19:41) புதிய கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்வதிலும், புனிதமானவற்றின்பால் கொள்ளவேண்டிய அதே மரியாதை காணப்படுகிறது.

III. **புதிய காலத்தின் எதிர்நோக்கல்:** பருவந்தவறாமல் படைப்பைப் புதிப்பிப்பதை இஸ்ராயேலர் போற்றினர்; அதை இறைவனின் ஆவி செய்வதாகக் கருதினர் (சங் 104:30). மெசியா மற்றும் இறுதிக் காலத்திலும் இப்படிப்பட்ட யாவும், முழுமையாகப் புதுப்பிக்கப்படுவதை எதிர்பார்த்தார்கள்.

1. **புதியதொரு யாத்திரை:** ஆறுதலின் நூலானது பழைய வியப்புக்குரியவற்றோடு, நாடு கடத்தப்பட்டுத் திரும்பிவரும்போது செய்யப்படவிருப்பவற்றை எதிர்கொள்ளச் செய்கிறது (எசா 42:9); எகிப்திலிருந்து

திரும்புகையில் நடைபெற்ற புதுமைகளைவிட, புதிய யாத்திரையின் புதுமைகள் சிறந்து விளங்கும். இறைவன், "இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்... பாலை நிலத்தில் நான் பாதையொன்றை அமைப்பேன்; பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்" என்று கூறுகிறார் (43:19). இவ்வியப்பு மிக்க செயல்களால் யாவே இஸ்ராயேல் மக்களைப் பாலஸ்தீன நாட்டிற்குள் வழிநடத்திச் செல்வார்; அங்குத் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தி எல்லா மக்கள்மீதும் தம்முடைய மேலாண்மையை நிலைநிறுத்துவார் (45:14-17.20-25). இந்த மேன்மைமிகு வாக்குறுதிகள் புதியதொரு பாடலால் கொண்டாடப்படவேண்டும் (42:10; சங் 149:1). அதை உலகனைத்தும் சேர்ந்து பாடும் (சங் 96:1).

2. இறைவன் பயன்படுத்தும் அதிகாரம் மெசியா வழிவரும் உய்வை ஒரு புதிய படைப்பாகக் கருதும்படி செய்கிறது (எசா 41:20; 45:8; 48: 6தொ); இஸ்ராயேல் மீட்பர் அவர்களைப் படைத்தவரே (43:1.15;54:5); அவரே முதலும் முடிவும் ஆவார் (41:4; 44:6; 48:12). எதிர்காலத்தில் பாலஸ்தீனம் இறைவாக்கினர் விவரித்துள்ளதுபோல (எசா 11:6-9; 65:25; எசே 47:7-12) ஏதேன் தோட்டமாகத் திகழும் (எசா 51:3; எசே 36:35). அடிமை வாழ்வுக்குப் பிறகு "புதிய வானமும் புதிய பூமியும்" எதிர்பார்க்கப்படுகின்றன (எசா 65:17; 66:22).

3. புதியதொரு உடன்படிக்கை: பழைய உடன்படிக்கையில் பல பெரும் உண்மைகள் உருவ மதிப்பைக் கொண்டுள்ளன; வருங்காலத்தில் அவ்வுடன்படிக்கையைப் புதுப்பித்து நிறைவு செய்யப்படுவதை முன்னறிவிக்கின்றன. யாவேயின் முடிவில்லா அன்பையும் (எசா 54:11-17), அவர் மக்கள் மத்தியில் எழுந்தருளியுள்ள (எசே 48:35) தன்மையையும் கொண்டுள்ள புதியதொரு தாவீதையும் (34,23), புதியதொரு ஆலயத்தையும் (40-43), புதியதொரு புனித நாட்டையும் (47:13-48:29), புதியதொரு எருசலேமையும் இறைவாக்கினர் எதிர்பார்த்திருந்தனர். புதியதொரு பெயரால் சீயோன் அழைக்கப் பெறுவாள் (எசா 62:2; 65:15); இனி, ஒருபோதும் கைவிடப்பட்டவளன்று, மண ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெற்றவள் என்று அழைக்கப்பெறுவாள் (62:4). யாவேயும் இஸ்ராயேலரும் தங்களுடைய அன்பின் உறவை மீண்டும் தொடர்வார்கள் (54:4-10); "யாவே விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளார்; ஒரு பெண் (இஸ்ராயேல்) தன் கணவனைப் (யாவேயை) பாதுகாக்கிறாள்" (எரே 31:32). இது முடிவில்லா உடன்படிக்கையாக இருக்கும் (எசா 55:3; 61:8).

ஆனால், அதே சமயத்தில் சீனாய் மலை உடன்படிக்கையிலிருந்து வேறுபட்ட புதியதொரு உடன்படிக்கையாகும் இது (எரே 31:31-34). இது பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தும் தன்மையையும், சட்டத்தை உள்ளார்ந்ததாக ஆக்குவதையும் கொண்டுள்ளது (எசே 36:26தொ). புதியதொரு இதயத்தையும், புதியதொரு ஆவியையும் மனிதனுக்குக் கடவுள் அளிப்பார் (11:19; 18:31; 36:26). இறுதியாக எல்லாப் பொருட்களையும் புதுப்பிக்கும் அலுவலை இறை ஞானம் ஆற்றுகிறது; தூய ஆன்மாக்களுள் பரவி அவர்களை இறைவனின் நண்பர்களாக்குகிறது (ஞான 7:27).

IV. புதிய மெசியா உடன்படிக்கை:

1. புதியதொரு போதகம்: இயேசுவினுடைய போதகத்தின் ஆரம்பத்திலிருந்தே அவருக்குச் செவிமடுப்போர் அவருடைய புதுமையான போதகத்தைக் கேட்டு வியப்படைந்தனர் (மற் 1:27). அவர் இறைவாக்கையும், சட்டத்தையும் நிறைவுபடுத்தவே வருகிறார் (மாற் 5:17). பயன்படுத்திய ஆடைக்கு மாறாக, புதியதொரு ஆடையைப் போலவும், பழைய தோல் துருத்திகளுக்குப் பதிலாக புதிய திராட்சைரசத்தைப் போலவும் (மத் 9:16 இணை), பழைய போதகத்திற்கு மாறாகத் தம்முடையதை எடுத்துரைக்கிறார் (மத் 5, 21-48). சட்டத்தின் முக்கியமானவை மாறுபடாமல் உள்ளன. ஆனால்,

நிறைவு செய்யும் நற்செய்தியாலும், விண்ணரசின் புதுத்தன்மையாலும் அது புதுப்பிக்கப்பட வேண்டும்; சீடர்கள் "தன் கருவூலத்தினின்று புதியனவற்றையும், பழையனவற்றையும் எடுத்து அளிக்கிற வீட்டு உடைமையாளருக்கு" ஒப்பாவார் (மத் 13:52).

அதே சமயத்தில் பிறர் அன்பின் கட்டளை பழமையும் புதுமையும் சேர்ந்தது (1 யோவா 2:7; 2 யோவா 5). விசுவாசிகள் தாங்கள் மனந்திரும்பிய காலத்திலிருந்து கடைப்பிடித்துள்ளதால் இது பழமையாகவுள்ளது; சட்ட வடிவமாக்கப்பட்டதால் மட்டுமன்று (லேவி 19:18). இயேசு இதைத் "தமது கட்டளையாக" அழைத்திருக்கிறார். (யோவா 15:12); இக்காரணத்தால் இஃதொரு புதிய கட்டளையாகும் (13:34). கிறிஸ்து நமக்காகத் தம்மைக் கையளித்தார் (13:1.34; 15:12). அவரில் தந்தையின் அன்பு வெளிப்பட்டது (3:16; 1 யோவா 4:9). ஆகவே, பிறர் அன்பில் அவரைப் பின்பற்ற வேண்டும்; இது சகோதரர்களிடையான அன்பாகும்; தந்தை மகன் அன்புறவில் பங்கு கொள்ளுதலாகும் (யோவா 15:9; 17:26; 1 யோவா 4:16).

2. புதிய உடன்படிக்கை: இறுதி உணவில் இயேசு "இக்கிண்ணம், உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்று கூறுகிறார் (லூக் 22:20 இணை; 1 கொரி 11:25). சீனாய் மலையின் உடன்படிக்கை அதனுடைய பலி விலங்குகளின் இரத்தத்தால் முன்பே முத்திரையிடப்பட்டுள்ளது (யாத் 24:3-8). பழைய உடன்படிக்கையை முழுமைப்படுத்தி நிறைவேற்றிய புதிய உடன்படிக்கை (எபி 8:1-10:18), நிறைவான பலியும், சிறந்த பெரிய குருவும், புதிய உடன்படிக்கையின் இடையாளருமான இயேசுவின் குருதியால் சிலுவையில் முத்திரையிடப்பட்டுள்ளது (எபி 9:15; 12:24). இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்ட பாவமன்னிப்பு, கிறிஸ்துவின் பலியில் நிறைவேறிற்று (10:11-18). நற்கருணையில் புதிய உடன்படிக்கையின் குருதி கொடுக்கப்படுகிறது; ஆனால், நற்கருணைத் திராட்சைரசம் விண்ணரசியின் இறுதிக்கால விருந்தில் அருந்தும் புதிய திராட்சை ரசத்தின் முன் எதிர்பார்ப்பாகும் (மத் 26:29 இணை).

பழமையில் தயாரிக்கப்பட்ட (இதயத்திலுள்ள சட்டம், உப 30:14) புதிய உடன்படிக்கையின் மற்றொரு தன்மை என்னவென்றால், இது கற்பலகைகளில் எழுதப்பட்டதன்று; ஆனால், தசை உள்ளங்களில் எழுதப்பட்டது (2 கொரி 3:3; காண்க. எரே 31:33; எசே 36:26 தொ). இந்த எதிர்வாதத்தைப் பவுல் குறிப்பிடுகிறார். மோசேயின் சட்டம் "பழைய ஏற்பாடு" (2 கொரி 3:14). ஆவியின் புதுமை மூலம் (உரோ 7, 6) கொல்லும் பழைய சட்டத்தோடு உயிர்கொடுக்கும் ஆவியையும் (3:6), எழுத்தின் பழமையோடு ஆவியின் புதுத்தன்மையையும் (உரோ 7:6) எதிர்கொள்ளச் செய்கிறார். இப்புதிய உடன்படிக்கை ஆவியின் உடன்படிக்கை. தூய ஆவியினால் ஆட்கொள்ளப் பட்டவர்கள். புதிய மொழிகளில் பேசுவார்கள் (மாற் 16:17; அ.ப. 2:4); அதாவது, ஆவியால் தூண்டப் பெற்ற ஒரு விண்ணக மொழியில் பேசுவார்கள்.

3. புதிய மனிதன்: மீட்பின் முழுப்பணியும் பெரியதொரு மறுமலர்ச்சியாகும். ஆனால், இறைவாக்கினரால் பேசப்பெற்ற புதிய படைப்பு துல்லியமாக்கப்படுகிறது. இஃது அடிப்படையில் மனித மறுமலர்ச்சியே; அம்மனிதன் வழியாக இவ்வுலகம் புதிப்பிக்கப்படும்.

அ) புதிய ஆதாமாகிய கிறிஸ்து: அனைவருக்கும் இவர் உயிர் அளிக்கிறார் (1 கொரி 15:22.44-49). வீழ்ந்த மனுகுலத்தின் தலைவனாகிய ஆதாம் வழியாக, பழைய மனிதன் பாவத்திற்கு அடிமையானான் (உரோ 6:6.17; எபே 4:22); மீட்பிற்குப் பிறகு புதிய மனிதன் கிறிஸ்துவில் புதுப்பிக்கப் பெற்ற மனுகுலமாகிறான். கிறிஸ்து, தம்முடைய சொந்தத் தசையில், பிறமதத்தாரையும், யூதர்களையும் புதியதொரு தனி மனிதனாய் உருவாக்கியுள்ளார் (எபே 2:15). ஆதாமின் வழிநின்று உண்மையின்

புனிதத்திலும், நீதியிலும் இப்புதிய மனிதன் மறுபடியும் படைக்கப்பெற்றுள்ளான் (4:24). இதிலிருந்து அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றே (கொலோ 3:11).

ஆ. ஒவ்வொரு கிறிஸ்துவனும் தன்னுடைய மறுபிறப்பால் "இறைவனுடைய வேலையாக" அழைக்கப் பெறலாம் (எபே 2:10). "ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், அவன் ஒரு புதிய படைப்பு; அதாவது, பழைய படைப்பு மறைந்து, புதிய படைப்புத் தோன்றியுள்ளது" (2 கொரி 5:17; 6:15). புதுப்பிறப்பு திருமுழுக்காலும் (யோவா 3:5; தீத் 3:5), உண்மையின் வார்த்தையாலும் (யாக் 1:18; 1 பேதுரு 1:23) நிறைவேறியுள்ளது; அதாவது, ஆவியின் கொடையாகிய விசுவாசத்தால் நிறைவேறுகிறது (யோவா 3:5; 1 யோவா 5:1-4).

விசுவாசிகளின் வளர்ச்சியுள்ள புனிதத் தன்மையின் வளர்ச்சி வழியாகப் புதுப்பிறப்பைப் பற்றி பவுல் கூறுகிறார்: "நம்மிடமுள்ள உள் மனிதன் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறான்" ( 2 கொரி 4:16). புதிதாகப் பிசைந்த புதிய மாவாக இருக்கும் பொருட்டுத் திருமுழுக்குப் பெற்றவர்கள் பழைய புளிப்பு மாவிலிருந்து தங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும் (1 கொரி 5:7); அவர்கள் பழைய மனிதனைக் கழித்து விட்டு, புதிய மனிதனை அணிய வேண்டும் (கொலோ 3:10; எபே 4:22தொ); புதுவாழ்வு வாழ வேண்டும் (உரோ 6:4). இறைவடிவான கிறிஸ்துவே நாம் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியாவார் (உரோ 8:29; 2 கொரி 3:18; 4:4; கொலோ 1:15). படைத்தவரின் சாயலை நம்மில், மீண்டும் நிலை நிறுத்துவது (கொலோ 3:10; ஆதி 1:27), கிறிஸ்துவை அணிவதாகும் (உரோ 13:14).

இந்த உருமாற்றம் எல்லாவற்றையும்விட ஆவியின் வேலையே (உரோ 7:6; 8:1-16; கலா 5:16-25). இஃது உய்வுக்குத் தேவையான மறுபிறப்பின் முழுக்கு மட்டுமன்று; ஆவிக்குரிய விதத்தில் பிறப்பும் ஆகும் (யோவா 3:5.8); ஆவியின் புதுப்பிக்கும் வேலையுமாகும் (தீத் 3:5). இறைவனுடைய வார்த்தையாகிய பாலும் (1 பேதுரு 2:2), நம்மில் செயல்படும் உண்மையின் நீதி, புனிதம் (எபே 4:24), விசுவாசமும் (கலா 5:5) இம்மறுமலர்ச்சியின் சாதனங்களாகும். இவ்விதமாக விசுவாசமுள்ளவன் தன்னைப் படைத்தவரின் சாயலில் தன்னைப் படிப்படியாகப் புதுப்பிக்கும் அறிவை நோக்கிப் பயணம் செய்கிறான் (கொலோ 3:10).

இ மறுமலர்ச்சியின் வேலை, கிறிஸ்தவன் வழியாக உலகை முழுவதும் பரவவேண்டும். கிறிஸ்து எல்லாவற்றையும் இறைவனோடு ஒப்புரவாக்கியுள்ளார் (கொலோ 1:20; எபே 1:10). படைப்பனைத்தும் மீட்புக்குக் காத்திருக்கிறது (உரோ 8:19-23). ஆனால், உலகளாவிய இம்மறு நிலைப்படுத்தல் இறுதிநாளில் "நீதி குடி கொள்ளும் புதிய வானம், புதிய பூமியில்" தான் முழுமை பெறும் (2 பேதுரு 3:13).

V. எருசலேம்: கிறிஸ்து தம்முடைய விண்ணேற்றத்தால் புதியதொரு உயிருள்ள வழியைத் தம்மில் உண்டாக்கியிருக்கிறார்; நாம் விண்ணகப் பீடத்தை அணுக அது வழி வகுத்துள்ளது (எபி 10:19). இறுதிக்கால முடிவில்லா வாழ்வின் மறுமலர்ச்சியைத் திருவெளிப்பாடு விவரிக்கிறது. இறைவன் பிரசன்னத்தால் நிறைந்துள்ள (எசே 48:35) "புதிய எருசலேம்" (திருவெளி 3:12; 21:2) இறைவனின் நகரமாகும். மணப்பெண்ணைப்போல் அலங்கரிக்கப்பெற்று, மனிதனோடு வாழும் இறைவன் குடிகொள்ளும் இடமாகிய இவள் உடன்படிக்கையின் தன்மையைச் சிறப்பாக நிலைநிறுத்தியுள்ளாள். "இறைவன் அவர்கள் மத்தியில் வாழ்கிறார்" (திருவெளி 21:3). இப்பொழுது இங்குப் "புதியவானம், புதிய பூமி" தோன்றியுள்ளதால், படைப்பனைத்தும் இதில் பங்கு கொள்ளும். "முதலிலிருந்த வானமும், வையமும் மறைந்து விட்டன" (21:1).

வருங்கால மறுமலர்ச்சியைப் பற்றி பெரும் இறைவாக்கு வாசகங்கள், அவற்றின் நிறைவான பொருளில் மறுபடியும் இங்குத் தோன்றுகின்றன.

முன்புபோல், நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய எபிரேயரைப் போல் (எசா 42:10) இறுதியாக மீட்புப் பெற்றதைக் கொண்டாட (திருவெளி 5:9; 14:3) வயோதிகரும், தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களும் புதியதொரு பண்ணிசைக்கின்றனர். மெசியா சீயோனில் வாழ்பவர்களைப்போல (எசா 62:2; 65:15) கிறிஸ்தவ வெற்றிவீரர்கள் "புதிய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு வெள்ளைக் கல்லைப்" பெறுவர் (திருவெளி 2:17); இம்முறை இப்பெயர் ஒரு கிறிஸ்தவத் தனித்தன்மை கொண்டிலங்கும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறைவனையும், கிறிஸ்துவையும் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகத் தங்களுடைய நெற்றியில் (14:1; 22:3) இறைவன் பெயரையும் (3:12), செம்மறியின் பெயரையும், தந்தையின் பெயரையும் தாங்கியிருப்பார்கள். இறுதிக் காட்சியில் இறைவன் கூறும் "இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்; நானே அகரமும் னகரமும், முதலும் முடிவும்" என்னும் கூற்றோடு திருவெளிப்பாடு முற்றுப்பெறுகிறது (21:5தொ). எல்லாப் புதுமையின் அடிப்படையும் இறைவன் தாமே என்பதைத் திருவெளிப்பாட்டின் இறுதிப் பக்கம் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது.

கிறிஸ்து நிறைவேற்றிய மீட்புப் பணியே படைப்புகளின் இப்பெரிய மறுமலர்ச்சி வேலையாகும். "கிறிஸ்து தம்மைக் கொண்டு வருவதன் மூலம் எல்லாப் புதுத்தன்மையையும் கொண்டு வந்துள்ளார்" (இரனேயு). இவ்விதமாக, நமது மீட்பை உயிர்ப்பு வாரத்தில் கொண்டாடும் திருச்சபை "பழையதைக் களைந்து புதிய படைப்பாக மாறுவதற்குச்" செபிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறாள்.

### புதிய எருசலேம் (NEW JERUSALEM)

புதிய எருசலேம், கடவுளின் புதிய படைப்பின் தலைநகரம் (திருவெளி 21:1). இக்கருத்து பழைய ஏற்பாட்டிலும், யூதரின் இலக்கியங்களிலும் (காண்க. எசா 54;60; எசே 40; 48), புதிய ஏற்பாட்டிலும் (கலா 4:26-27; பிலி 3:20; எபி 12:22) காணப்படுகின்றது. "இஃது மணமகனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணமகள்" என்று குறிப்பிடப்படுகிறது (திருவெளி 21:2). இஃது இறைவனின் உண்மையான மக்களான திருச்சபையைக் குறிக்கிறது (காண்க. எசா 61:10; ஓசே 1-3; எபே 5:25 தொ; எபி 11:10). காண்க. புதிய–V.

### புதிய ஏற்பாடு (NEW TESTAMENT)

நவீன வழக்கத்திலே புதிய ஏற்பாடு என்பது இருபத்தியேழு புத்தகங்கள் அடங்கிய பகுதி. அதாவது, கிறிஸ்தவ வேதாகமத்தின் இரண்டாம் பகுதி என்பது பொருள்.

இது பழைய ஏற்பாடு அல்லது எபிரேய வேதாகமத்திலிருந்து வேறுபட்டது; ஆனால், அதன் தொடர்ச்சியானது. இது பற்றிய குறிப்புகள் 1 கொரி 11:25; 2 கொரி 3:6; எபி 8:8. 13; 9:15; காண்க. எரே 31:31-34-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### புதிய பிறப்பு (NEW BIRTH)

I. புதிய பிறப்பினுடைய அடையாளவியலானது மனித இனத்துச் சமயங்களில் ஒரு பொதுவான கருத்தாக உள்ளது. எனவே, பண்டைய மக்களிடையே பெரிதும் பரவியிருந்த குழந்தையை வாலிபனாகவும், சமயச் சார்பற்றவனாகவும் ஆக்குகின்ற பழக்க வழக்கங்கள், புதிதாய்ப் பிறந்தவரை மீண்டும் தனது முதல் குழந்தைப் பருவத்தின் நிலைகளைக் கடக்குமாறு செய்கின்ற சடங்குகளில் அடிக்கடி அடங்கியுள்ளது. அதே முறையில் அரச அரியணையேறுதலும் ஒரு புதிய பிறப்பாகவே தோன்றலாம் (சங் 2:7; 109:3). ஆனால், யூத கிறிஸ்தவ வெளிப்பாட்டில், ஒரு தனிப்பட்ட அமைப்பின் உண்மைகளை அடையாளவியல் வெளிப்படுத்துகிறது. "ஊனுடலால் பிறப்பது ஊனுடலே. ஆவியால் பிறப்பதோ ஆவி" (யோவா 3:6). மனிதனுடைய இயல்பான பிறப்பிற்கு எதிராக, புதிய ஏற்பாடானது, வார்த்தையையும் இறைவனுடைய ஆவியையும் கோட்பாடாகக் கொண்டதும், திருமுழுக்கு மற்றும்

விசுவாசத்தினால் நிறைவேறக் கூடியதுமான இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறப்பினை அளிக்கிறது.

**II. தயாரிப்புகள்:** மனிதனுக்கான புதிய பிறப்பு பற்றிப் பழைய ஏற்பாடு ஒருபோதும் கூறுவதில்லை. ஏனெனில், அவருடைய இயல்பான பிறப்பின் வாயிலாக இறை மக்களுக்குரிய உரிமைகள் அனைத்தையும் இஸ்ராயேலர் கொண்டுள்ளனர். அவனுக்குப் புதிய பிறப்புத் தேவையில்லை. ஆயினும், இக்கருத்தானது பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

இறைவனுடைய மக்களாக இஸ்ராயேல் நிறுவப்படுதல் ஓர் உண்மையான குழந்தைப் பிறப்பாகப் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இஸ்ராயேல் இறைவனுடைய முதல் பிறப்பு (யாத் 4:22; ஞான 18:13). எகிப்திலிருந்து அவனை வெளிக்கொணர்ந்த போது இறைவன் அவனை ஈன்றெடுத்தார் (உப 32:6. 18-19). பாலைவன வாழ்வானது அவனது இளம் குழந்தைப் பருவத்தைப் போன்றது (உப 1:31; 31:10; ஓசே 11:1-5). யூத மரபானது இஸ்ராயேலின் இப்பிறப்பினைச் சட்டத்தை அளிப்பதுடன் குறிப்பாக இணைத்துள்ளது. "ஒரு மனிதன் ஏன் சீனாயை எனது தாயின் இல்லம் என்று அழைக்க வேண்டும்? ஏனெனில், அங்கே இஸ்ராயேலர் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் ஆயினர்" (உ.ச. 8:2-இன் மீதான மிட்ராஸ்).

இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையில், தனது சட்டத்தைத் தனது மக்களுக்கு அளிப்பதில் இறைவன் மனநிறைவு அடைய மாட்டார்; ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் அவர் அதனைப் பொறித்து வைப்பார் (எரே 31:31-34; உப 30:10-14). மேலும், மனிதனுடைய இதயத்தைப் புதுப்பிக்க வரவேண்டியது ஆவியே (எசே 36:26-27). மீண்டும் ஒரு புதிய பிறப்பு மற்றும் கேட்டிராத மகிழ்ச்சியின் ஓர் ஊற்றானது எருசலேமின் உதரத்தைத் திறந்து பிள்ளைகளில் பலுகிப் பெருகுமாறு அவளை உருவாக்கும் (எசா 66:7-14).

நம்முடைய காலத்தில் முதல் கட்டத்தில் யூத மதமானது புதிய பிறப்புப்பற்றிய கருத்தைக் கொண்டிராமல் இல்லை. ஒரு புறவினத்தான் மனமாற்றப்பட்டு, புறவினத்தாருடைய திருமுழுக்கினைப் பெற்றவுடன், அவனது முந்தைய அனைத்து உறவுகளும் முறிந்து போனவையாகக் கருதப்பட்டன. பழமையுடனான இந்த முறிவினைக் குறிப்பிட, புதிதாய்ப் பிறந்த குழந்தையென அவன் கூறப்பட்டான். இது சட்ட ரீதியில் எண்ணப்பட்ட ஓர் உருவகம் மட்டுமே. புதிய ஏற்பாட்டில் இஃது ஓர் உண்மையாகும்.

**III. இயேசுவின் வார்த்தைகள்:** ஒத்தமை நற்செய்திகளில் புதிய பிறப்புபற்றி கிறிஸ்து பேசவில்லை. ஒரு முறை எரே 31 மற்றும் உப 30-ஐத் தொடக்கக் கருத்துக்களாக உபயோகித்து, புதிய ஒழுக்க வாழ்வின் கோட்பாடாக உருவாவதற்கென மனிதனின் இதயத்தில் விதைக்கப்படுகின்ற விதையுடன் இறை வார்த்தையை அவர் ஒப்பிடுகிறார் (மத் 13:18-23). மேலும், விண்ணக அரசிற்குள் நுழைவதற்காகக் குழந்தைகளின் நிலைக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தையும் அவர் கற்பிக்கின்றார் (மத் 18:3). ஒரு குழந்தையைப்போல அனைத்தையும் இறைவனிடமிருந்து பெற உடன்படுபவனாக மனிதன் இருக்க வேண்டும். இந்த உண்மையானது நான்காம் நற்செய்தியில் வெளிப்படையாகிறது. "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது" (யோவா 3:3.5).

**IV. அப்போஸ்தலிக்கச் சிந்தனை:**

**1. இறைக் கோட்பாடு:** பிறக்கின்ற உயிரின் இயல்பைத் தீர்மானிக்கின்ற வாழ்வின் கருவினின்றே ஒவ்வொரு பிறப்பும் உருவாகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அளவில் மீண்டும் பிறப்பதற்கு, மேலிருந்து, இறைவனிடமிருந்து வருகின்ற வாழ்வின் கோட்பாட்டினை மனிதன் தன்னிலேயே பெற வேண்டும். அப்போஸ்தலிக்க

மரபானது இதனை இறைவனுடைய வார்த்தை அல்லது விளக்கம் என்று அடையாளம் காட்டுகிறது.

அ. வார்த்தை: யாக் 1:18,21-இன் படி தன்னுடைய உண்மையின் வார்த்தையினால் இறைவன் நம்மை ஈன்றெடுத்தார். மீட்படைவதற்கு இதனைப் பெறுவது அவசியமாகும். யூதேய கிறிஸ்தவ முன்னோக்கில் வார்த்தையானது மீண்டும் மோசேயின் சட்டத்துடன் அடையாளம் காட்டப்படுகிறது (1:22-25). ஆகவே, இந்த "ஈன்றெடுத்தல்" இறைவனுடைய புனித மக்களின் நிறுவுதலின்மீதோ, கிறிஸ்தவனுடைய புதிய பிறப்பின்மீதோ, அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தீர்மானிப்பது கடினமானதாகும். 1 பேதுரு 1:22-25-இன்படி இறைவன் தன்னுடைய வார்த்தையால் (நற்செய்தியின் போதனையால்) நம்மை மீண்டும் பிறக்கச் செய்தார். வாழ்வின் வித்தாக அவர் அதனை நம்மில் விதைத்தார். அதற்கு நாம் அடிபணிய வேண்டும். புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போன்று, மீட்பை நோக்கி நம்மை வளரச்செய்கின்ற வார்த்தையின் பாலை நாம் ஆசிக்க வேண்டும் (1 பேதுரு 2:2). அவ்வாறே யோவானுக்கும் நம்முடைய புதிய பிறப்பானது நம்மில் விதைக்கப்பட்ட இறைவனுடைய வார்த்தையின் விளைவாகும் (1 யோவா 3:9). விசுவாசத்தினால் நாம் பெற வேண்டிய (யோவா 1:12-13) இறைவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவே அவ்விதை (1 யோவா 2:14; 5:18).

ஆ. ஆவி: யோவா 3:3-5-இல் அஃது இனியும் வார்த்தையன்று. தீத் 3:5-இல் உள்ளதுபோல, அது, திருமுழுக்கின் நீருடன் சேர்ந்து நமது புதிய பிறப்பின் கோட்பாடாக அளிக்கப்படும் ஆவியே அவர். பவுலைப் பொறுத்தவரை நம்மை "இறைவனின் பிள்ளைகளாக" ஆக்குபவர் ஆவியே (உரோ 8:15-16; கலா 4:6). பிறப்பானது, விசுவாசத்தினால் ஒருவன் பெறும் வார்த்தையின் மூலம் அல்லது திருமுழுக்கின் மூலமாக நமக்கு அளிக்கப்படும் ஆவியின் மூலமாகப் பெறுவதாகும். ஆவியும் வார்த்தையும் பிரிக்க முடியாதவையாகையால், இவையிரண்டும் ஒரே மெய்ம்மையினுடைய இரண்டு முழுமையாக்கும் தன்மைகளாகும். ஆவியானது வார்த்தைக்குச் செயல் தன்மையினை அளிக்கிறது. படைப்பைப் போன்று (ஆதி 1:2தொ; சங் 33:6), நமது மறுபிறப்புச் செயலானது வார்த்தை மற்றும் ஆவியினுடைய ஒத்துழைப்பின்றிச் சிந்தித்துப் பார்க்க முடியாது.

2. புதிய வாழ்வு: புதிய ஏற்பாட்டில் புதிய பிறப்பானது இனிமேல் ஓர் உருவகமன்று; ஆனால், ஓர் ஆழ்ந்த உண்மை. வார்த்தையாலும், ஆவியாலும் மீண்டும் படைக்கப்பட்ட மனிதன் ஒரு புதிய உயிராக உருவாகியுள்ளான் (தீத் 3:5). அவனுடைய ஒழுக்க நடத்தையானது அடிப்படையாகவே மாற்றப்படுகிறது. அவன் தீமையை விட்டு விட்டான் (1 பேதுரு 2:1; யாக் 1:21). அவன் இனியும் தனது உணர்ச்சிகளைப் பின்பற்றாமல் (1 பேதுரு 1:14) தனது சகோதரரை அன்பு செய்யுமாறு தன்னைப் பணிக்கும் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான் (1:22-23). சகோதர அன்பின் கோரிக்கைகளுக்கு எதிராக அவன் இனியும் பாவம் செய்ய முடியாது (1 யோவா 3:9-10). அதுமுதல், கிறிஸ்துவினுடைய வாழ்விற்குள்ளே இணைக்கப்பட்டவனாய் (உரோ 6:5) ஆவியினுடைய ஆதிக்கத்தின் கீழ் அவன் வாழ்கிறான் (8:14).

3. இறுதிக்காலக் கனிகள்: மகனாக உருவாகிய நிலையில், அரசினுடைய உரிமைச் சொத்திற்கு அவன் உரிமை கோர வேண்டும் (யோவா 3:5; 1 பேதுரு 1:3-5; உரோ 8:17; கலா 4:7). நம்மில் நடப்பட்ட விதையானது "எல்லாக் காலங்களிலும் வாழ்கின்ற" வார்த்தையாக இருப்பதனால் அழிவின்மையின் கருவாக உள்ளது (1 பேதுரு 1:23-25). விண்ணகத்திற்குச் செல்வதற்கு, அங்கிருந்து இறங்கி வந்திருக்க வேண்டியது அவசியமாகும் (யோவா 3:13). முதல் தலைவராகிய மனுமகனில் ஏற்புடையதாக உள்ள இந்தக் கோட்பாடானது உலகளாவிய ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. நம்முடைய மகிமைமிக்க உயிர்ப்பினுடைய பிணையமும் (உரோ 8:10-23) இறைவனுடைய ஆவியுமாகிய (யோவா 3:5)

மேலிருந்து வந்த கோட்பாட்டினைத் (யோவா 3:3; யாக் 1:17) தன்னில் பெற்றவர் மட்டுமே விண்ணகத்திற்கு ஏறிச் செல்லமுடியும்.

## புதிய பூமி, புதிய வானம் (NEW EARTH, NEW HEAVEN)

திருவெளிப்பாடு 21:1-இல் புதிய படைப்பைக் குறிக்க இச்சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கருத்து எசா 65:17; 66:22 ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. புனித பவுலைப் போலவே, திருவெளிப்பாட்டு ஆசிரியரும், மனிதனின் பாவத்தால் கெட்டுப்போன படைப்பின் பயனின்மையைக் காண்கிறார் (உரோ 8:19 தொ; திருவெளி 20:11; காண்க. ஆதி 3:17 தொ; திருவுரை 1:2).

## புதிய வாயில் (NEW GATE)

'புதிய வாயில்– எருசலேம் ஆலய வாயில்களில் ஒன்று. இங்குதான் யூதாவின் தலைவர்கள், குருக்களும் இறைவாக்கினர்களும் எரேமியாவுக்கு எதிராக மரண தண்டனைத் தீர்ப்புக் கூறுவதைக் கேட்டனர் (எரே 26:10). இங்குதான் பாரூக்கு இறைவாக்கினரின் கூற்றுகளடங்கிய சுருளை மக்கள் முன்னிலையில் வாசித்தார் (36:10). இவ்வாயில் இருந்த இடம் உறுதியாகத் தெரிய வில்லை. இது, மேல் முற்றத்தில் இருந்திருக்கலாம் (காண்க. 20:2).

## புதிர் அல்லது விடுகதை (RIDDLE)

புதிர் போடுவது அறிவுபூர்வமாகப் பேசுவதில் ஒரு சிறப்பான பகுதியாகும். ஞானம் நிறைந்த பேச்சில் அறிஞர்களுக்குப் பிடித்தமானவற்றுள் புதிர் போடுவதும் ஒன்று. கேட்பவர்களின் உள்ளத்தில் ஓர் ஆர்வத்தைத் தூண்டி மறைந்துள்ள பொருளைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்வது அல்லது அவர்களது அறியாமையை ஏற்றுக் கொண்டு விளக்கம் கேட்கச் செய்வதே. புதிர் போடுவதன் நோக்கம் ஆகும். எனவே, புதிருக்கு விடை கூறுவதென்பது அறிவின் அடையாளமாகக் கருதப்பட்டது. பல முனிவர்கள் தங்களுக்குள்ளே விளையாட்டுப்போலப் புதிர் போட்டு அதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதலும் இருந்தது. சிம்சோனின் திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் சாதாரண மனிதர்களே யெனினும் அங்கும் இத்தகைய விடுகதைப் பரிமாற்றம் நடக்கின்றது. தனது மனைவியின் ஊரைச் சேர்ந்தவர்களிடம், தான் கூறியதை விடுவிக்குமாறு கேட்கிறார் (நீதி 14:12). சிம்சோனின் மனைவியின் மூலம் அதற்குப் பதிலைத் தெரிந்து கொண்டபின் அவர்கள் கூறிய விடை வேறொரு விடுகதைக்கு இடமளிக்கிறது (நீதி 14:18).

செபா நாட்டு இளவரசி சாலமோனுக்கு விடுகதைகள் பல போட்டு அவரது ஞானத்தைச் சோதிக்கிறாள் (1 அர 10:1; 2 நாள் 9:1). ஞானநூல்கள் பல விடுகதைகட்டுப் பதிலளிப்பவை போல அமைந்துள்ளன (பழ 11:22; 27:3.8; 30:15). பழமொழி ஆகமம் 26:4-இல் மதி கெட்டவனுக்குச் சமமாய் மறுமொழி சொல்லாதே; பேதை தனக்குத் தானே ஞானியாய்த் தோன்றாதபடி அவனுக்குப் பதில் சொல் என்பதில் முரண்பாடு உள்ளதுபோல் தோன்றுகிறது. எனவே, இது விளக்கப்பட வேண்டிய விடுகதையாகும். எண்களை வைத்துப் புதிர் போடுவது பழ 30:15-6.18-19:21-23. 24-28.29-31-இல் காணப்படுகிறது. சங் 49:5-இல் வரும் விடுகதை தீயோர் வளமாக வாழ்வதைப் பற்றியது. எசே 17:2-இல் உள்ள கழுகும், திராட்சைக்கொடியும் என்பன உருவகமே; அதற்குப் பின்னே மறைந்துள்ள ஆட்களை வாசகர்கள் கண்டுகொள்ள வேண்டும். பழ 1:6; சங் 78:2–இல் உள்ள விடுகதை ஞானவாக்கியமாகவே உள்ளது. அ.ப. 2:6-இல் வரும் விடுகதை மறைமுகமாக இழித்துப் பேசுவதாகும். மோசே மற்ற இறைவாக்கினர்களைவிட வேறுபட்டவர். ஏனெனில், அவரிடம் ஆண்டவர் விடுகதைகளிலோ, புதிர்போட்டோ பேசுவதில்லை (நேரடியாகப் பேசுகிறார்); வெளிப்படையாகப் பேசுகிறார் (எண் 12:8). பிற்காலப் பகுதியான தானி 8:23-இல் புதிர்போடுதல் வஞ்சகத் தன்மையுடையதாகவோ, சுற்றி வளைத்துக் கூறுவதாகவோ கருதப்பட்டது.

**புதினா (MINT)**

இனிய மணம் தரக்கூடிய ஒருவகைக் கீரை இது. இதன் இலைகளிலும், தண்டுகளிலும் காணப்படும் நறுமணமுள்ள எண்ணெயினை மருந்து மற்றும் உணவுப் பொருட்களில் பயன்படுத்துவார்கள். பரிசேயர்களின் வெளிவேடத்தை இயேசு கண்டித்துப் பேசியபோது புதினாவும் குறிப்பிடப்பட்டுள்ளது (மத் 23:23; லூக் 11:42); "வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால், திருச்சட்டத்தில் முக்கியப் போதனைகளாகிய நீதி, இரக்கம், பற்றுறுதி ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டு விடுகிறீர்கள்" (மத் 23:23).

புதினா இனத்தைச் சேர்ந்த பலவகையான கீரைகள் பாலஸ்தீனத்தில் உள்ள ஈரமான பகுதிகளில், குறிப்பாக ஆற்றங்கரைப் பகுதிகளில், காணப்படுகின்றன.

யூத சட்டத்தின்படி, பாஸ்கா விழாவன்று உண்ண வேண்டிய கசப்பான காட்டுக்கீரைகளில் புதினாவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது (யாத் 12:8; எண் 9:11).

**புதுமை, அருஞ்செயல் (MERACLE)**

I. புதுமைகள் பற்றிய கருத்து, கண்டிப்புடன் வரையறுக்கப்பட்டது என்று கூறுவது கிறிஸ்தவர்கள் சிலருக்கு அசாதாரணமானதன்று. ஆனால், மற்றவர்கள் போலிவியப்புச் செயல்களில், ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதும் அசாதாரணமானதன்று. இந்த முரண்பட்ட மிகைபாடுகள், நீண்டகாலமாக உள்ள வலிமையுள்ள காப்புரையின், ஒரு வகையால் ஊட்டம் பெற்ற பொதுமூலத்தைக் கொண்டுள்ளன. புதுமைகளில் இயற்கை விதிகளின் மீறலையே அவர்கள் காண்கின்றனர். அனைவருடைய அறவுத்திறனுக்கு ஏற்ப அமைக்கப்படுகின்ற அவற்றின் அடையாளப் பங்கு கவனிக்கப்படுவதில்லை.

இறைவனுடைய கையானது தன்னுடைய மக்களுக்காகத் தனது வல்லமையையும் அன்பையும் வெளிப்படுத்துவதை விவிலியம் முழுவதும் நாம் காண்கிறோம். வரலாற்றின் போக்கில் ஏற்படும் இறைவனின் அசாதாரண இடையீடுகளைப் போன்று, படைக்கப்பட்ட உலகானது தன்னுடைய குறிப்பிட்ட அமைப்புடன் (எரே 31:36-37) ஒரு வியப்பாகவும் (சங் 88:6), அடையாளமாகவும் (சங் 64:9) உள்ளது. இன்றைய வரலாற்று ஆசிரியர் அதனைச் சாதாரணமானதாக மற்றும் விளங்க வைக்கக் கூடியதாகக் கருதினாலும், வரலாற்று இடையீடுகள் தனது முறையில் புதுப்பிக்கப்பட்ட படைப்புகளாக உள்ளன (எண் 16:30; எசா 65:18). இயற்கைக் காரணங்களின் விதிவிலக்காக ஒருங்கு சேர்கிற தெய்வீகச் செயல்களுக்கு இடையிலான நவீன வேறுபாடுகளைப் புறக்கணித்தும், இரண்டாம் நிலைக் காரணங்கள் அல்லது இயல்பான பதிலாளர்களின் இடைச்செயலுக்குப் பதிலாக இறைச்செயலை மாற்றீடு செய்தும், விவிலியமானது விசுவாசியின் கவனத்தை, இவ்வனைத்து வகைகளுக்கும் பொதுவானதாக உள்ள ஒரே அத்தியாவசியக் கூறாகிய நிகழ்ச்சிகளின் சமயச் சிறப்புப் பொருள்மீது திருப்புகிறது. இவ்வாறாக, புனித அகுஸ்தீனார் விசுவாசக் கண்களுடன் அப்பங்களைப் பலுகச் செய்ததில் கண்டதுபோன்று, அறுவடையின் சேகரிப்பிலும் இறையன்பு மற்றும் வல்லமையின் அடையாளத்தை அதே தெளிவுடன் காண்கிறார். அவை இரண்டையும் அவர் வேறுபடுத்தாவிடின் அதற்குக் காரணம் ஒரு நன்மை சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுவதும், மற்றொன்று வியப்புடன் பெறப்படுவதுமாகும். இந்நோக்கில் ஒரு விவரமானது நாம் அளிக்க விரும்புவதைவிட அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதில்லை. இவ்வாறு, கனி கொடாத அத்திமரமானது உடனடியாகவோ (மத் 21:19), மிகவும் பிற்பாடோ (மாற் 11:20) உலர்ந்துபோவது முக்கியமன்று. ஆனால், இந்த அடையாளச் செயலில் மறைந்துள்ள படிப்பினையே முக்கியமானதாகும்.

**II. பழைய ஏற்பாட்டில் புதுமைகள்:**

1. **உண்மைகள்:** போதக இலக்கிய வகையைச் சேர்ந்த குறிப்பிட்ட சில நூல்கள் அல்லது நூல்களின் பகுதிகளில் காணப்படும் (யோனா, தோபியா, யோபுவின் நாடகப்பாணி அமைப்பு, தானி 1-6-இல் அக்கதாப்பகுதி, 2 மக்கபேயரின் எடுத்துக்காட்டான ஒப்பனைகள்) மற்றும் எசாயாவின் வாழ்வில் விவரிக்கப்படும் இரு வியப்புகள் (எசா 37:36-37; 38:7-8) ஆகியவற்றிற்குப் புறத்தே, பின்வரும் இருமுக்கியக் காலங்களைத் தவிர்த்துப் புனிதவரலாற்றில் புதுமைகள் எண்ணற்றவையாக இல்லை. இக்காலங்கள் இறைவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை உருவாக்கி நிலைப்படுத்துகின்ற மோசே மற்றும் அவரது வாரிசு யோசுவாவின் வாழ்க்கைக் காலம், மற்றும் மோசேயின் உடன்படிக்கையை மீண்டும் நிறுவியவர்களான எலியா மற்றும் எலியாசினுடைய வாழ்க்கைக் காலம் ஆகியவையாகும்.

எலியா மற்றும் எலியாசின் சூழலின் மெய்யான வரலாற்றுத் தன்மை பொதுப்பான்மையான மிகைப்படுத்துதலை நன்கு பயன்படுத்துகிறது (எ.கா. 2 அர 1:9-16). இவை ஒன்றிலிருந்து மற்றதற்கு விரிந்து வளர்ந்து, பெருமளவு சமயப்பண்பை இழந்து விடுகின்றன (எ.கா. 2 அர 2:23 தொ; 6:1-7). காலப்போக்கில் அவர்கள் கடந்து சென்ற ஏற்புடைய குறிப்பிடத்தக்க விரிவாக்கங்களுக்கும் அப்பாற்பட்டு, எகிப்தின் பத்துக் கொள்ளை நோய்கள் அல்லது பாலைவனத்தின் புதுமைகள் மற்றும் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுதல் முதலியவற்றின் பாரம்பரிய விவரிப்புகள், காலப்போக்கில் பெருமளவு விரிவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதே வரலாற்றுத் தன்மையை இன்னும் கொண்டுள்ளன. இவற்றை நூலாக எழுதியவர்கள், தங்கள் காலத்தில் இருந்த இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக, பாரம்பரியங்களைத் தொகுத்தனர்; தங்களுக்குக் கிடைத்த விவரிப்புகளைச் சுதந்தரமாகப் பயன்படுத்தினர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய வரலாற்றின் தொடக்கத்தில், எல்லாம் வல்ல இறைவனுடைய காக்கும் பிரசன்னத்தைக் காட்டுவதான (யோசு 24:17) தங்களுடைய சமய நோக்கை அவர்கள் என்றுமே இழக்கவில்லை. இந்தப் பாரம்பரியங்கள் வீர காவியத் தன்மையைச் சிறப்புப் பண்பாகக் கொண்டிருந்தாலும், இவை அடிப்படைத் தன்மையுடையவை. படைப்பு நிகழ்ச்சிக்கு அடுத்த தனிச்சிறப்பான ஒரே நிகழ்ச்சியாக (எசா 65:17) இஸ்ராயேலின் பிறப்பை விவரிக்கின்றனர். இஃது இறுதிக்காலப் புதுப்பித்தலோடு (எசா 43:16-21) ஒப்பிடத் தகுதியுடையதாகும்.

2. **புதுமைகள்: இறைத்தன்மையுடைய, பயன்தரும் ஆற்றலுடைய அடையாளங்கள்:**

அ) புதுமைகள் இறைவனுடைய வெளிப்பாடுகள் மற்றும் அவரது செயலின் பயன் தரும் ஆற்றலுடைய அடையாளங்கள் எனப் பழைய ஏற்பாடு காட்டுகிறது. பயன்படுத்தப்படும் சொற்களாலேயே இச்செயலானது சுட்டிக்காட்டப்படுகிறது. அவை "அடையாளங்கள்" (அருஞ்செயல்கள்) (யாத் 10:1), "அடையாளங்கள் மற்றும் அருங்குறிகள்" (உப 7:19). புதுமையைவிட இச்சொற்களைச் சாதாரணமாகப் பயன்படுத்துதல், ஒவ்வொரு சமய வியப்புகளிலும் மறைந்துள்ள அறிகுறி அல்லது அடையாளத்தின் பரிமாணத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இவ்வாறாக, இறைவாக்கினர் ஓர் அறிகுறியாக இருக்கலாம். ஏனெனில், அவரது வாழ்க்கையானது அவரது செயல்களால் அறியச் செய்யப்படுகின்ற இறைவார்த்தையை அடையாளப் படுத்துகிறது (எசா 8:18; 20:3; எசே 12:6.11; 24:24.27).

வியத்தகு அறிகுறிகள் இந்த வார்த்தைக்கு உறுதுணை புரிகின்றன. ஏனெனில், இறைவனுடைய தூதர்களால் அறிவிக்கப்பட்ட மீட்பினை உறுதியான செயல்களில் அவை

வெளிப்படுத்தி, அந்தத் தூதுவர்களை இறைவனுடைய அதிகாரபூர்வமான செய்தியாளர்களாக அடையாளங்காட்டுகின்றன (யாத் 4:1-5; 1 அர 18:36-38; எசா 38:7-8; எரே 44:29-30). வார்த்தைக்குக் கீழடக்கமான இந்தத் துணைமை நிலையே மந்திரவாதிகளாலும் போலி இறைவாக்கினர்களாலும் நிறைவேற்றப்படும் தந்திரங்களினின்று உண்மையான புதுமைகளை வேறுபடுத்துவதாகும் (யாத் 7:12....). வியப்பானவைகளைப் புரிபவருடைய செபத்தினால் சிறப்பாக வெளிப்படுத்தப்படும் செய்தியின் மதிப்பானது (1 அர 18:27-28.36-37) புதுமையின் உண்மையைத் தீர்மானிக்கின்ற முதல் அறிகுறியாகும் (உப 13:2-6). புதுமைகள், வார்த்தையால் தீர்மானிக்கப்பட்ட பின்னர், அதற்கு ஆதரவு மட்டுமே அளிக்கின்றன.

ஆ) இந்த அறிகுறிகள் அனைத்திலும் புதுமைகள் தங்களுடைய செயல் திறத்தினாலும், அசாதாரணப் பண்பாலும் வேறுபடுத்தப் படுகின்றன. ஒருபுறம் தாங்கள் குறிப்பிடுவன வற்றை வழக்கமாகச் செயல்படச் செய்கின்றனர். அற்புதங்களை ஒன்றுபடுத்துவதன் மூலம், இறைவன் தனது மக்களை விடுவித்த முதல் யாத்திரையும், அவரது வார்த்தையின் செயல் திறத்தினை வெளிப்படுத்துகின்ற புதிய யாத்திரையும் இத்தகையதே (எசே 15.11.13). மற்றொரு புறம் இச்செயல்கள் (சங் 76:13; 145:4), சில நேரங்களில் இவை இயற்கை நிகழ்ச்சிகளாக இருந்தாலும் (மழை, பஞ்சம்...) பெரும்பாலும், மனிதன் உலகில் காணக்கூடியதையோ, அவனால் நிறைவேற்றக்கூடியதையோ கடந்து செல்கின்றன. எனவே, புதுமையானது குறிப்பாக இறைவனுடைய வல்லமையை வெளிப்படுத்தக் கூடிய அருங்குறியாகும். பெரும்பாலும் இஃது அருஞ்செயல் (யாத் 15:11), வல்லமை மிக்க செயல் (சங் 106:2), பெரும் செயல் (சங் 106:21), திகிலூட்டும் செய்கை (யாத் 34:10) மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வியத்தகு செயல்கள் (யாத் 15:11; சங் 106:7) என்று குறிப்பிடுகிறது. கடைசிச் சொல்லானது மனிதனால் நிறைவேற்றுவதற்கு இயலாதவையாக உள்ள செயல்களைக் குறிப்பிடுகிறது. இஃது இறைவனுக்கு மட்டுமே உரியதாகும் (சங் 86:10). அவர் தனது விஞ்சிய நிலையாகிய தனது புனிதத்தின் பிரதிபலிப்பான (யாத் 15:11; சங் 77:14; லேவி 10:3) தனது மகிமையை அவைகளில் வெளிப்படுத்துகின்றார் (யாத் 15:1.7; 16:7; எண் 14:20; லேவி 10:3).

ஆனால், இறை வல்லமையானது பாவிகளை மட்டுமே அழிவிற்குக் கொணர்கிறது (உப 7:17-20; மீக் 7:15-17). வாக்குறுதி பெற்ற மக்களுக்கு (உப 4:37) அவரது அற்புதங்கள் முயன்று தாழ்த்துகின்ற நேரத்திலும் (8:16) பலனுள்ளவையாகவே உள்ளன. ஏனெனில், "ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்" (சங் 145:9). ஆகவே இறுதியாக, புதுமைகள் ஆண்டவருடைய இந்தப் பேரன்பின் பயனுள்ள அருங்குறிகளாகவும் (சங் 106:7; 107:8), அவரது பயன் எதிர்பாராத கொடைகளாகவும் உள்ளன (உப 6:10-12; யோசு 24:11-13). இயேசுவில் மட்டுமே இந்த மீட்கும் அன்பின் உலகளாவிய நிலையானது முழுமையாக வெளிப்படுத்தப்படும். புறவினத்தாரின் சார்பாகச் செயல்படுத்தப்பட்ட தன்னுடைய புதுமைகளின் இறைவாக்குப் பொருளைக் கோடிட்டுக் காட்டுவதையும் (மத் 8:11-13), சீதோனியப் பெண் மற்றும் சீரியனுடைய சார்பாக எலியா மற்றும் எலியாசுவின் மூலம் முன்னர் நிறைவேற்றப்பட்ட புதுமைகளின் பொருளை வெளிப்படுத்துவதையும் (லூக் 4:25-27) ஒரே சமயத்தில் அவர் செய்வார்.

**3. விசுவாசம் பற்றிய குறிப்பில் புதுமை:**

புதுமைகள் தூண்டுகின்ற வியப்பிற்கு அப்பாற்பட்டு, விசுவாசத்தையும் அதனோடு வருபவைகளையும் தூண்டியெழுப்பி உறுதிப்படுத்துவதை அவை குறிக்கோளாகக் கொண்டுள்ளன். விசுவாசத்தோடு வருபவை பற்றுறுதி, நன்றி செலுத்துதல் மற்றும்

நினைவுக்கூர்தல் (சங் 105:5), தாழ்ச்சி, கீழ்ப்படிதல், இறை அச்சம், நம்பிக்கை, முதலியனவாகும். பார்வோனைப் போன்று அறியப்படாத இறைவனிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதவர்களை அவை குருடாக்குகின்றன (யாத்-7:13...). ஆனால், ஏற்கெனவே இறைவனை அறிந்து அவரை மட்டுமே சார்ந்திருப்பவனுக்கு, அவைகளில் இறை அன்பினுடைய வல்லமை மிக்க செயலும், இறைவனுடைய பிரதிநிதியின் பணியை அங்கீகரிக்கும் முத்திரையும் வெளிப்படுத்தப்படுகின்றன. பின்னர், அதே இயக்கத்தில் இறைவனின் வார்த்தையிலும் அவன் விசுவசிக்கிறான். இறைவனிலேயே அவன் விசுவாசம் கொள்கிறான் (எண் 14:11).

மனித நிலையில் இயலாததான வாரிசின் பிறப்பை விசுவாத்தால் பெற்ற ஆபிரகாமில் இந்த விசுவாசத்தின் மாட்சிமையை இஸ்ராயேல் வியந்து பாராட்டுகிறது (ஆதி 15:6; உரோ 4:18-22). உப ஆகமம், இறைவாக்கினர்கள் (எசா 63:7-14), சங்கீத ஆசிரியர்கள் (சங் 76: 105-107), ஞான ஆசிரியர்கள் (ஞான 10-19 ஆகியவற்றில் அடங்கியுள்ள பழமையின் தொடர் நினைவூட்டுதல்களுக்கு இந்த விசுவாசமே அடித்தளமாக உள்ளது. இஸ்ராயேலுடனான இறைவன் உறவு கொண்ட காலத்தின் புதுமைகளைச் சுட்டிக் காட்டுகின்ற இவை, எதிர்கால அனுகூலங்களின் அளவையாகவும், அதே நேரத்தில் அவற்றின் கல்வி புகட்டும் தன்மையை வலியுறுத்துவனவாகவும் உள்ளன (உப 8:3: ஞான 16:21). "இந்த அருஞ்செயல்களின் நினைவு கூர்தலாக", திருவிழாக்களை உண்டாக்குவதன் மூலம் யாவே இந்த விசுவாசத்திற்கு ஊட்டமளிக்கிறார் (சங் 111:4). புதுமை மட்டுமே யூதாவைக் காக்கக்கூடிய நேரத்தில் ஏசயாவிற்கு உயிரளித்ததும் (ஏச 37:34-35). புதுமையான கருத்தரிப்பு அறிவிக்கப்பட்டபோது மரியாளுக்கு ஊக்கமளித்ததும் (லூக் 1:45) இந்த விசுவாசமே.

இதற்கு மாறாக, இறைவன் சுமத்திய சோதனைகளுக்குச் சிற்றின்பத்துடன் எதிர்ச்செயலாற்றியபொழுது (உப 8:2) பாலைவனத்தில் இஸ்ராயேலர்கள் விசுவாச மற்றவர்களாக இருந்தனர் (சங் 78:32); மேலும், ஒரு புதுமையைக் கோரி ஆண்டவரையும் சோதனைக்குட்படுத்துகின்றனர் (யாத் 17:2; சங் 95:9). புதுமைகளின் இறைவனைவிட அதிகமாகத் தோழர்களைச் சார்ந்திருப்பதில் ஆகாசு விசுவாசமின்மையைக் காட்டினார் (எசா 7:12). தன்னுடைய ஐயத்தினால் செக்கரியாவும் அதே போன்ற விசுவாசமின்மையைக் காட்டினார் (லூக் 1:18-20). இந்த எல்லா மனப்பான்மைகளிலும் மனிதன் மீதான இறைவனுடைய ஆதிக்கம் மறக்கப்படுகிறது; அவரது வல்லமையும் பயன்கருதாத அன்பும் புறக்கணிக்கப்படுகின்றது; மற்றும் அவரது வார்த்தை சந்தேகத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இவற்றில் எல்லாம் புதுமையானது உண்மையான கொடையாகவும் ஏற்கப்படுவதில்லை. அறிகுறியாகவும் அறியப்படுவதில்லை.

### III. இயேசுவின் வாழ்வில் புதுமைகள்:

**1. உண்மைகள்:** முன்னுரைக்கப்பட்ட புதிய யாத்திரையின் மகிமையைவிட குறைவாகக் கண்டு ஏமாற்றமடைந்த நாடுகடத்தலிலிருந்து திரும்பி வந்த இஸ்ராயேலரின் பேரார்வத்தைப் பென் சீராக்கு "புதிய அருங்குறிகளைச் செய்யும்; வேறு பல வியத்தகு செயல்களை நிகழ்த்தும்" (சீரா 36:5) என்ற மன்றாட்டில் வெளிப்படுத்துகிறார். இந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு இயேசு வந்தார். ஆனால், அதே சமயத்தில் பரபரப்பூட்டுகிறவைகள்பால் கொள்ளும் ஆர்வத்தையும், பழிவாங்கத் தேடுவதையும் உற்சாகப்படுத்தவில்லை.

யாத்திரை விவரிப்புகளுக்கு முரண்பட்ட நிலையில், நற்செய்தியாளர்கள் முதல்நிலைச் சாட்சிகளைச் சார்ந்தவர்களாய், அமைவடக்கமானவர்களாக உள்ளனர். அவர்களுடைய விவரிப்பு அமைவடக்கமாய் இருப்பதாலேயே புதுமைகள், நற்செய்தி விவரிப்புகள் இயல்பாயமைந்துள்ளவையாகத்

தெரிகின்றன. இயேசுவைப் பொருத்தமட்டில் முயற்சியில்லாமை அங்குள்ளது (அவரது செயல்களின் அடையாளவியலைச் செறிவுள்ளதாக ஆக்குகின்ற போதனை முறையில் பயன்படும் வாய்பாடுகள், தொடுதல்கள், பூசுதல்கள், படிப்படியாகச் செயலாற்றும் முறை (மாற் 8:23-25) ஆகியவை இந்த முயற்சியின்மையோடு ஒத்துப்போகக் கூடியன). எல்லா மந்திரவாதத்தையும் விலக்குகின்ற வெளிப்படையாக (யோவா 11:41-42) அல்லது சுட்டிக் காட்டப்படும் (மாற் 6:41; 7:34; 9:29; 11:24) சமய நோக்கமும் செபத்துடன் கூடிய மனப்பான்மையும் அங்குள்ளன. புதுமைகள் இல்லாமல் திருச்சபையினுடைய விசுவாசத்தை விளக்கும் கடின நிலையும் அங்குண்டு. நற்செய்தியினுடைய பாவுநூல் மற்றும் ஊடிழையுடன் புதுமைகள் பின்னிப் பிணைந்துள்ளன. இவ்வனைத்துக் குறிப்புகளின் மூலமாக நற்செய்தியின் புதுமைகள், போலி நற்செய்தி ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதுமைகளினின்றும், கிறிஸ்தவத் தொடக்க காலத்தவராகிய ராபிகள், தெய்வங்கள், அல்லது புறவின சாதுக்கள் ஆகியோருக்கு மரபானது சாற்றிக்கூறும் புதுமைகளினின்றும், அடிப்படையிலேயே வேறுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொரு புறநிலை ஒப்பீடும் நற்செய்தி வாசகங்களின் வரலாற்று மற்றும் சமய மதிப்பீட்டை வெளிக்கொணர்கின்றன. உண்மையானவையாக மட்டுமின்றி அசாதாரணமானவையாகவும் உள்ள இச்செயல்களின் மூலம், இயேசு தனது மக்களுக்கு ஓர் அருங்குறியை அளித்தார்.

**2. மெசியா மீட்பின் செயலாற்றலுள்ள அடையாளங்களாக இயேசுவின் புதுமைகள்:**

அ) இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்ட மெசியா அரசானது தன்னில் தோன்றிப் பிரசன்னமாகியுள்ளது என்பதைத் தனது புதுமைகளின் மூலம் இயேசு காட்டினார் (மத் 11:4-5); தனக்கும் தன்னில் தோன்றிய அரசின் நற்செய்திக்கும் அவர் கவனத்தை ஈர்த்தார்; வியந்து பாராட்டுதலையும் சமய அச்சத்தையும் தூண்டியெழுப்பினார். இஃது அவர் யாரெனக் கேட்குமாறு மனிதரைத் தூண்டியது (மத் 8:27; 9:8; லூக் 5:8-10). பாவங்களை மன்னிக்க அவருக்கிருந்த அதிகாரம் (மாற் 2:5-12), ஓய்வு நாளின் மீதான அதிகாரம் (மாற் 3:4-5; லூக் 13:15-16; 14:3-5), அவரது அரச மெசியா நிலை (மத் 14:33; யோவா 1:49), தந்தையின் பெயரிலான அவரது வருகை (யோவா 10:36), அவரிலான விசுவாசத்தின் வல்லமை (மத் 8:10-13; 15:25) ஆகிய பிரச்சனைகள் யாவும் இயேசுவினுடைய பணிக்கும் தகுதிக்கும் சான்று பகர்கின்றன. ஆனால், இவ்வுலகைச் சேர்ந்த தேசிய மெசியா பற்றிய யூத நம்பிக்கைகளால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (மாற் 1:44; 5:43; 7:36; 8:26). பின்னர், யோவான் சுட்டிக்காட்டவிருக்கும் அருங்குறிகள் ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகளில் அடங்கியுள்ளன.

இந்த அருங்குறிகள் இயேசுவினுடைய மெசியாத்தன்மையையும், இறைத் தன்மையையும், நிரூபிக்கின்றனவெனில், தான் யாரென அவர் உரிமை கொண்டாடியபடி, அவர் உண்மையாகவே உள்ளார் என்பதற்கான மறைமுகமான சான்றுகளாகவும் அவை உள்ளன. அவரது வார்த்தையினின்று இந்த அருங்குறிகள் பிரிக்கப்படக்கூடாது. எளியோருக்கு நற்செய்தி அறிவித்தலில் அவை கைகோத்துச் செல்கின்றன (மத் 11:5 இணை). இயேசு தனக்கு அளிக்கும் பட்டங்கள், தனக்கென உரிமையாக்கும் வல்லமைகள், அவர் போதிக்கும் மீட்பு, அவர் கோரும் துறத்தல் ஆகிய அனைத்தும் அவரது புதுமைகளிலிருந்து இறைநம்பகத் தன்மையைப் பெறுகின்றன என்று தொடக்கத்திலிருந்தே அவரது செய்தியின் உண்மையைப் புறக்கணிக்காதவர்களால் காண முடிகிறது (லூக் 16:31). இவ்வாறாக, இந்த உண்மையானது புதுமைகளைவிட உயர்ந்தது என்பதை யோனா பற்றிய இயேசுவின் வார்த்தைகளினின்று நாம் அறிந்து கொள்ளலாம் (லூக் 11:29-32). இருவிதக் காரணத்திற்காக அவர் தன்னை முதலாவதும்

மற்றும் அவசியமான ஒரே அடையாளமாகவும் காட்டுகிறார் (யோவா 20:23). முதலாவது, அவரது தூதின் இணையற்ற சொந்த அதிகாரம் காரணமாகும் (மத் 7:29); இரண்டாவது, முந்தைய வெளிப்பாட்டை நிறைவேற்றுவதில் (லூக் 16:31; யோவா 5:46-47) அவருக்குச் செவிமடுப்போர் ஆவியின் வேண்டுகோளுக்குப் பதிலை அவரில் கண்டனர் (யோவா 14:17,26) என்பது அதிக உள்ளார்ந்த காரணமாகும். ஆனால், அவரது பணியானது புதுமைகளால் உறுதிப்படுத்தப்பட்டு விவரிக்கப்படுவதற்கு முன்னர், உண்மையான புதுமைகளுக்கும் போலி அருங்குறிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை அவர் சுட்டிக்காட்ட வேண்டும் (மாற் 13:22-23; மத் 7:22; 2 தெச 2:9; திருவெளி 13:13). உப ஆகமத்தில் உள்ளது போன்று இங்கும் "புதுமைகள் கோட்பாட்டைச் கண்டறிகின்றன; கோட்பாடு புதுமைகளைக் கண்டறிகிறது.

ஆ) புதுமைகள் விதிக்கட்டில்லாத அடையாளங்களாகவோ, வெறும் பகட்டாகவோ இல்லாததனால், புறநிலையான எதற்கும் புதுமைகள் சான்று பகர்வதில்லை. இறுதிக்கால அரசில் முழுமையைக் காணவிருக்கின்ற மெசியா மீட்பின் உறுதிநிலையை வெளிக்கொணர்ந்தவாறு அவை தாங்கள் குறிப்பிடுவனவற்றைத் தொடக்க நிலையில் நிறைவேற்றுகின்றன. ஒத்தமை நற்செய்திகளும் அவற்றை வல்லமையின் செயல்கள் என்றே அழைக்கின்றன (மத் 11:20-23; 13:54.58; 14:2). உண்மையில் தனது மனித இரக்கத்தினாலும் (லூக் 7:13; மத் 20:34; மாற் 1:41), அதற்கும் மேலாக வாக்களிக்கப்பட்ட ஊழியன் என்ற மன உணர்வினாலும் உந்தப்பட்டவராய் இயேசு (மத் 8:17) நோய், சாவு, மனிதனுக்கான இயற்கையின் எதிர்ப்பு ஆகியவற்றைத் திறமையுடன் வெற்றிகொள்கிறார்; சுருக்கமாக ஓரளவிற்குப் பாவத்தினால் உருவாக்கப்பட்டு (ஆதி 3:16-19; மாற் 2:5; லூக் 13:2-3; யோவா 9:3) உலகில் பேயின் வேலைக்கு உதவுகின்ற (மத் 13:25; எபி 2:14-15) ஒவ்வொரு சீர்குலைவையும் வெல்கிறார். சாத்தான் (மத் 4:2-7), கெட்டுப்போன தலைமுறை (12:38-40; 16:1-4), பொறாமைக்காரர் (லூக் 4:23), சிறுமைத்தனமானவர் (23:8-9) முதலியோர் மீட்புப் பயனைக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதனால் அதிசயிக்கத் தக்க அருங்குறிகளை நிறைவேற்ற இயேசு மறுக்கிறார். வரலாற்றைவிட இறைவாக்கு உருவகங்களுக்கு மிகவும் ஏற்றவையாகத் தோன்றுகின்ற அண்ட அற்புதங்கள் (அ.ப. 2:19-20) தன்னையே காத்துக்கொள்ளுமாறு சவாலுக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், அனைத்து மனிதருக்காக இயேசு தனது உயிரையே அளித்த தருணம் வரை (மத் 27:39-54; 1 கொரி 1;22-24) எழுதப்பப்படவில்லை. மத் 17:20 இணை-இல் அவர் வாக்களிப்பதாகத் தோன்றுகின்ற அற்புதங்கள், விசுவாசத்தினுடைய வல்லமையின் எடுத்துக்காட்டுகளாக மட்டுமே இருக்கின்றன.

மேற்கூறப்பட்டவையின் ஒளியில் குணமாக்குதலுக்கும் பேயோட்டுதலுக்கும் இடையிலான அடிக்கடி வரும் தொடர்பானது தெளிவாகிறது (மத் 8:16). பேய் பிடித்தவன் விடுதலை பெறுவது சாத்தானின் மீதான "வலியோனுடைய" (லூக் 11:22) வெற்றியின் சலுகைக்குரிய நிலையாகும்; இதை ஒவ்வொரு புதுமையும் தனக்கே உரிய விதத்தில் கொண்டிருக்கிறது. பாலைவனத்தில் தொடங்கி (மத் 4:1-இணை), சிலுவையில் உச்சநிலை அடைந்து (லூக் 4:13; 22:3.53), பொதுத் தீர்வையுடன் மட்டுமே முடிவடையக்கூடிய (திருவெளி 20:10) ஒரு போராட்டத்தில் அஃது இயேசுவை நேரடியாகப் பகைவனுடன் பிணைக்கிறது. ஆனால், இதில் சாத்தானுடைய தோல்வியானது முன்னரே அறியப்பட்ட முடிவாகும் (மத் 8:29; லூக் 10:18). பேயோட்டுதலானது அரசின் வருகையினுடைய தனிச் சிறப்பான செயல்திறனுள்ள அடையாளமாகும் (மத் 12:28).

3. **புதுமைகளும் விசுவாசமும்:**

அ) இயேசு போதித்து, தன்னிலேயே இருப்பதாகக் காட்டிய அரசினுடைய

நற்செய்தியானது மனமாற்றத்தினாலும் விசுவாசத்தினாலும் பெறப்பட வேண்டும் (மாற் 1:15). அவரது புதுமைகளும் பேயோட்டுதல்களும் மன மாற்றத்தையும் விசுவாசத்தையும் உண்டு பண்ணுவதையே நோக்கமாகக் கொண்ட அவரது வியப்புக்குரிய செயல்களைக் கண்ட நிலையில் கொராசின் மற்றும் கப்பர்நகூம் நகரங்கள் மனந்திரும்பி விசுவசித்திருக்க வேண்டும் (மத் 11:20-24 இணை). விசுவாசத்தின் வேறுபட்ட நிலைகளை வேறுபடுத்தும்போது யோவான் இக்கருத்தினை வலியுறுத்துகிறார் (யோவா 2:11; 11:15; 20:30-31). முதலாவதாக மட்டுடைய ஆர்வம் (2:23-25; 4:48) மற்றும் சுயநல ஈர்ப்புக்கள் (6:26). இந்த அடையாளங்கள் இயல்பாகவே இயேசுவை இறைவனுடைய தூதராகவும் (3:2;9:16;10:36), இறைவாக்கினர் (4:19), கிறிஸ்து (7:31, மனுமகன் (9:35-38) என்றும் அறிந்து கொள்ள நடத்திச் செல்கிறது. விசுவசிப்பதற்கென அவரது புதுமைகளின்மேல் அதிக அளவிற்குச் சார்ந்திருப்பதென்பது முழு நிறைவற்ற விசுவாசத்தின் அருங்குறியாகும். இயேசுவினுடைய வார்த்தையின் மெய்ம்மையானது, தனது குழந்தைக்குரிய பற்றுறுதியால் பெறுகின்ற பற்றற்ற தன்மையில் உறுதியளிக்கப்படுவதன் காரணமாக (7:16-18; 12:49-50) சமாரியர்களையும் (4:41-42), கப்பர்நகூமின் அதிகாரியையும் (4:50) மனநிறைவு ஏற்படுத்தியது போலவும், உயிர்த்த உடலைத் தொடாமலே வார்த்தையை விசுவசித்தவர்களுக்கு மன நிறைவு ஏற்படுத்தியது போலவும் (20:29), அது மனநிறைவு ஏற்படுத்த வேண்டும். ஆகவே, அவரது புதுமைகளைக் கண்டும் (6:36; 7:3; 15:24) விசுவசிக்க மறுப்பவர்கள் (7:5; 12:27) மன்னிக்கப்பட முடியாதவர்களாவர் (9:41; 15:24) என்பதற்கு அதிக காரணங்கள் உள்ளன.

ஆ). அவரது புதுமைகளின் சாட்சியத்தைப் பலர் புறக்கணித்தனரெனில் (யோவா 5:36) அதற்குக் காரணம் ஆன்மீகச் சோர்வு (6:15,26) அல்லது சட்டரீதியான அகந்தை (5:16; 7:49.52; 9:16), பொறாமை (12:11) மற்றும் போலி விவேகம் (11:47-48) முதலியன அவர்களைக் குருடாக்கியதாகும் (9:39; 12:40). ஒத்தமை நற்செய்திகளில் புதுமைகளுக்கு முற்பட்ட விசுவாசத்தை உருவாக்கும் இறைவனிடம் ஒப்படைத்து, அவர்பால் திறந்த மனநிலையோடு இருத்தலை அவர்கள் கொண்டிருக்கவில்லை (மாற் 5:36; 9:23; 10:52). இவையில்லாமல் இயேசுவும் கிட்டத்தட்ட வல்லமையற்றவராகவே தோன்றுகிறார் (மத் 13:58). இம்மனிதர்கள், பாலைவன இஸ்ராயேலரைப் போலவும், சமீபச் சோதனைகளில் சாத்தானைப் போலவும் (4:3-7) இயேசுவைச் சோதனைக்கு உட்படுத்தவே அருங்குறி கேட்கின்றவர்களும் (16:1), அவர் பேய்கள் ஓட்டுவதை அவரது இயற்கைக்கு மேம்பட்ட வல்லமைக்கு உட்படுத்தாமல், பேய்களுக்கு உட்படுத்தவே விரும்புகின்ற வர்களுமான (மாற் 3:22.29-30) இவர்கள் காலங்களின் அருங்குறிகளை எவ்வாறு விளக்கமுடியும்? (16:3). கடினமாக்கப்பட்டு, வார்த்தைக்கு மூடப்பட்ட இதயங்களுக்கு அவர்கள் நம்பும் அருங்குறிகள் புரியாதவைகளாகவே உள்ளன.

அத்தலைமுறையானது யோனாவின் அருங்குறியைத் தவிர வேறு அருங்குறியைப் பெறாது (மத் 12:39-40). தனது உயிர்ப்பின் நாளுக்கென, அதாவது அவரது குறிப்பிடத்தக்க அருங்குறியின் நாளுக்கென இயேசு தனது பகைவர்களுடன் ஒரு சந்திப்பைத் திட்டம் செய்துள்ளார். ஆனால், சான்று நாடுவோருக்கு இந்த அருங்குறியும் எளிதாக எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடியதாகும். ஏனெனில், அதனை நிரூபிப்பதற்கான சாதனங்கள் அனைத்தும் மறைமுகமானவை (வெறுமையான கல்லறை, சிலருக்கான காட்சிகள்: மத் 28:13-15; லூக் 24:11). விசுவாசத்தினுடைய இறுதியான ஆதாரமாக இருக்க வேண்டியதே முதலில் விசுவாச்தினுடைய மேலான சோதனையாக இருக்க வேண்டும்.

**IV. திருச்சபையில் புதுமைகள்:**

1. **உண்மைகள்:** உயிர்ப்பினுடைய அருங்குறியும், புதிய யாத்திரையின் உச்ச நிலையும் (யோவா 13:1) அதனின்று பிறந்த திருச்சபைக்கு முந்தைய அனைத்து வரலாற்றிற்குமான திறவுகோலை அளித்துத் தான் அடைந்த மீட்பினுடைய முழுமையான இறந்தோரின் உயிர்ப்பை அறிவிப்பதற்கு முன்பும், தான் தோற்றுவித்த விசுவாசத்திற்கு மனிதரை நடத்துவதற்கு முன்பும் ஒரு புதிய அருங்குறிகளின் தொடரைத் தொடங்கியது (1 கொரி 15:20-28; உரோ 4:25).

**2. நற்செய்தியின் பாஸ்கா ஒளிமயம்:**

அ) தனது நற்செய்தியிலும் போதனையிலும் ஒரு முக்கிய இடத்தை உயிர்ப்பிற்கு அளிக்கின்ற திருச்சபைக்கு, முற்பட்ட அருங்குறிகளின் முழுப் பொருளையும் உயிர்ப்பானது தெளிவுபடுத்தியது. அந்தப் போதனையின்படி இந்த அருங்குறிகள் இயேசுவுக்குச் சான்று பகர்ந்து (அ.ப. 2:22) அவரது நன்மைத் தனத்தை வெளிப்படுத்துகின்றன (10:38); ஒவ்வொரு ஒத்தமை நற்செய்தியும் திருச்சபையினுடைய சிந்தனையின் வளர்ச்சிக்குச் சான்று பகரும் விதமாகத் தனக்கே உரிய கருத்தினை விவரிக்கிறது. இந்த வேறுபட்ட கருத்துகளை, உதாரணமாக, பேய்பிடித்த சிறுவனைப் பற்றிய மூன்றுவித விவரிப்புகளில் காணலாம். லூக் 9:37-43 நன்மைத்தனத்தின் மாண்பினை விவரிக்கிறது. மத் 17:14-21-ஆனது இயேசுவினுடைய யாவும் கடந்த நிலையிலும், அவரது வல்லமையில் பங்கு பெறும் சீடர்களிலும் அக்கறை கொண்டுள்ளது. யோவானின் அடையாளவியலை ஏற்கெனவே தோராயமான வரை முறையில் முன்னறிவிக்கின்ற குறிப்பிடத்தக்க பகுதியில் மாற் 9:14-29-ஆனது, சாத்தானின் மீதான வாழ்வின் தலைவரது வெற்றியைப் புகழ்ந்துரைக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் உயிர்ப்பின் ஒளியில் பொருளின் புதிய ஆழத்தைப் பெறுகின்ற தெளிவான நிகழ்ச்சிகளும் உள்ளன. புதுமைகள் வழியைத் தயாரித்த இறைமகன் தன்மையினை அறிவிப்பது (மத் 14:33; 27:54) அதனுடைய முழுமையான பொருள் செறிந்த உணர்வில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதே உறுதியாக நற்செய்தியாளர்களின் எண்ணமாகும். பிற்கால உண்மைகளின் பொதுக்கோட்பாடுகளைக் குறிப்பிட்ட புதுமைகளில் தியானிக்க வேண்டும். எ.கா. அப்பங்களைப் பலுகச் செய்வதில் நற்கருணையும், அதிசயமான முறையில் மீன்களைப் பிடிப்பதில் அப்போஸ்தலத்துவமும் (லூக் 5:1-11) கண்டுணரப்பட வேண்டும்.

**ஆ) யோவான்:** இவர் இதற்கு அப்பாலும் செல்கிறார். பழைய யாத்திரையைச் செய்து முடித்து (எண் 14:22), புதியதன் காலத்தை எதிர்பார்க்கும்போது, இந்த அடையாளங்கள், "மகிமையின்" ஒருபகுதியை ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளன (யோவா 2:11; 11:40) என அவர் சுட்டிக் காட்டுகிறார். அஃது, இயேசுவின் "உயர்த்தப்படுவதில்" தன்னை வெளிப்படுத்தியதாகவும் (17:5), மனுவுருவான வார்த்தையினின்று வெளிவரும் மீட்பின் வல்லமையினுடைய மேன்மையாகவும் உள்ளது (1:14). உள்ளவாறே, மறையுரையுடன் பிணைந்துள்ள இந்த அடையாளங்களில் ஒவ்வொன்றும் தூய்மைப்படுத்துகின்ற, மன்னிக்கின்ற, உயிரூட்டுகின்ற, ஒளிமய மாக்குகின்ற, வாழ்விற்கு மீண்டும் அழைக்கின்ற பின்னணியில் அமைகின்றது (2:6; 5:14; 6:35; 9:5; 11:25). பல அருங்குறிகள் திருச்சபையில் அதனுடைய வல்லமையின் விளைவுகளைப் பங்கிடவும் செய்கின்ற அருட்சாதனங்களையும் (திருமுழுக்கு, நற்கருணை...) அடையாளப்படுத்தி, மன்னா முதலிய பண்டைக்கால அடையாளங்களையும் செயலில் விஞ்சுகின்றன (6:32. 49-50). மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவெனில், தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான நெருங்கிய உறவினை வெளிப்படுத்துவதற்காக (5:17; 10:37-38; 14:9-10), நிறைவேற்றுமாறு தந்தை மகனுக்கு

அளிக்கின்ற செயல்களே இந்தப் புதுமைகள் என்பதாகும் (5:36). உயர்ந்த அடையாளமாக உயர்த்தப்பட்ட இயேசுவின் பக்கத்தினின்று (12:3; காண்க 3:14; எண் 21:8) வெளிப்படும் வாழ்வினுடைய செயல்திறனுள்ள அடையாளங்களை உற்று நோக்குவதென்பது (யோவா 19:34), இயேசுவே கிறிஸ்து திருச்சபையில் செயல்புரியும் இறைவனின் மகன் மற்றும் அவரது பெயரில் வாழ்வை அடைய வேண்டும் என்று விசுவசிப்பதாகும் (20:30-31). மேலும், தந்தை மற்றும் மகனுடைய பொதுவான மகிமையைத் தியானிப்பதும் (11:4), மூவொரு இறை உறவுகளின் மட்டத்தில் ஒருவரை அமர்த்துவதும் என்று இது பொருள்படும்.

3. **ஆவியின் காலம்:** அ) இயேசு இன்னும் அவர்களுடன் இருப்பதன் காரணமாக (மத் 28:20), பெந்தகொஸ்தேவின் இறைப்புதுமைகள் தொடங்கி அப்போஸ்தலர்கள் அவரது மீட்புச்செயல்களைப் புதுப்பிக்க வேண்டுமென்பது வியப்பூட்ட வேண்டியதில்லை (அ.ப. 3:1-10). ஏனெனில், கிட்டத்தட்ட நிலையான இந்த வல்லமையை அவர் அவர்களுக்கு வாக்களித்து (மாற் 16:17-18), அதை உபயோகிப்பதிலும் அவர்களுக்குச் சிறிது பயிற்சியளிக்கிறார் (மத் 10:8).

அவர்கள் செயல்படுத்திய செயல் ஆற்றலானது உயிர்த்த இயேசுவின் மீட்பின் வல்லமையை உறுதியாக வெளிப்படுத்தி (அ.ப. 3:6.12.16; உரோ 1:4), நற்செய்தி வார்த்தையின் தூதுவர்களுக்குச் சான்றளிப்பதன் மூலம் மனிதரை விசுவாசத்திற்குக் கொண்டு செல்கிறது (மாற் 16:20; 1 கொரி 2:4). இவ்வாறு, புதுமைகள் மற்றும் வார்த்தைக்கு இடையிலான அவசியமான தொடர்பும், அவைகளின் இருவித நோக்கமாகிய காப்புரை மற்றும் மீட்பு முதலியனவும் உறுதிப்படுத்தப்படுகின்றன. இங்கே அருங்குறிகளின் படிமரபைக் காண்கிறோம். செவிச் சான்றின் மதிப்பு (எபி 2:3-4), மறைபரப்பாளர்களின் மாறாத் தன்மை (2 கொரி 12:12), உறுதி மற்றும் பற்றற்ற தன்மை (1 தெச. 2:2-12) முதலியன இந்த "அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள்" ஆகியவற்றுடன் சேர்ந்து, போலி இறைவாக்கினரிலிருந்து இறைவனுடைய உண்மையான தூதுவர்களை வேறுபடுத்துகின்றன (அ.ப. 8:9-24; 13:4-12). இவை அனைத்தும் தூய ஆவியினுடைய வல்லமையின் மூலமாகச் செய்து முடிக்கப்படுகின்றன (1 தெச 1:5; 1 கொரி 2:4; உரோ 15:19).

ஆ) திருச்சபையின் தொடக்கம் முதல், குறிப்பிட்ட விசுவாசிகளின் நம்பிக்கையான செபங்களுக்கு ஆவியானவரும் புதுமைகளை அளித்தார் (மத் 21:21-22; யாக் 5:16-18). வியத்தகு அருங்கொடைகள் (யோவா 14:12) போதிக்கும் உயர் கொடைகளின் கீழ் உட்படுத்தப்பட்டு (1 கொரி 12:28-29), இறுதியாகக் கிறித்தவ வாழ்வில் உயரிய அதிசயமாகிய அன்பிற்குக் கீழும் உட்படுத்திக் கூறப்பட்டன (13:2). இக்கொடையானது, ஓரளவு அதே பங்கினை வகிக்கின்ற அருட்சாதனங்களுடன் இணைந்து இருக்கின்றது (மாற் 6:13; யாக் 5:13-15). ஆனால், இதனுடைய ஆன்மீக செயல்திறனானது, உயிர்ப்பை நோக்கி ஆவியை மிக நேரிடையாகத் திசை திருப்புவதும், அனைத்துப் படைப்பையும் மீண்டும் அமைப்பதுமான அருங்குறிகளுக்கு இடமளிக்கிறது (உரோ 8:19-24; திருவெளி 21:4).

அதே நிலையானது இன்றும் நிலவுகிறது. உண்மையில் நமது கால உலகானது, மனிதரை விசுவாசத்திற்கு நடத்திச் செல்வதற்கெனத் திருச்சபையினுடைய பல்வேறுபட்ட ஒழுக்கப் புதுமையினைக் கொண்டுள்ளது. இஃது இறைபிரசன்னத்தினுடைய உறுதியான அருங்குறியாகிய வீரமிக்க ஒன்றுபடுத்தும் அன்பினுடைய புனிதரின் மாட்சியில் சிறப்பாகக் காணப்படுகிறது (யோவா 13:35; 17:21). ஆனால், நமது கவனத்தை வார்த்தை மற்றும் உறுதியான அரசை நோக்கித் திருப்பவும், மனிதனை முதலில் மனமாற்றத்திற்கும் பின்னர் மறு மனமாற்றத்திற்கும் தூண்டியெழுப்பவும் (மத் 18:3), இறை அன்பை உயிருள்ள செயல்களாக

மாற்றவல்ல இயற்பியல் சார்ந்த புதுமைகள், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இருந்தது போன்று, தொடர்ந்து உள்ளன. முற்காலங்களில் இருந்தது போன்றும் இன்றும் இம்மொழியானது தற்பெருமையாளர்களுக்கும் சமயப் பற்றற்றவர்களுக்கும் அறிந்து கொள்ள முடியாததாக உள்ளது. ஆனால், "இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை" (ஆதி 18:14 = லூக் 1:37) என்பதை அறிந்தவன், ஒரு நிகழ்ச்சியின் சமயப் பின்னணியானது இறைவனே அறிகுறியை அளிப்பவர் என்று சுட்டிக் காட்டும்போது, விசுவாசம் மற்றும் அன்பினுடைய கோரிக்கைகளுக்குத் தனது இதயத்தைத் திறக்கும் போது தயாராகப் புரிந்து கொள்கிறான்.

**புத்தயோலி (PUTEOLI)**

நேப்பிள்ஸ் வளைகுடாவில் அமைந்த நகரம் புத்தயோலி. பவுல் உரோமைக்குச் செல்லும் வழியில் இறங்கிச் சென்ற துறைமுகம் இதுவே (அ.ப. 28:13). இன்று இந்நகரம் 'புஸ்ஸோலி' எனப்படுகிறது.

பைசாந்தியத்திலிருந்த ஸ்தேவான், கிரேக்கத் தீவான சாமுவிலிருந்து வந்த சமியர்கள் **(Samians)** தங்களின் வாழ்வைத் தொடங்கியது இங்குதான் என்கிறார். ஆனால், ஸ்திராபோ, இந்நகரம் கிரேக்கர்களின் குடியேற்றங்களில் மிகப்பழைமையான கூமே துறைமுகநகரமாக மட்டும் இருந்தது என்கிறார். கி.மு.6-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டிருக்கும் இந்நகரின் பெயர் திகேயார் கியவாகும். கி.மு. 215-இல் கனிபால் இத்தாலியில் நுழைந்த பொழுது, உரோமையர் இங்கு ஒரு படையை நிறுத்தி வைத்திருந்தனர். பிறகு இதன் பெயர்- புத்தயோலி என மாற்றப்பட்டது. கி.மு. 194-இல் புத்தயோலி ஓர் உரோமைக் குடியேற்ற நகரமாகியது. அப்பொழுது அங்கு 300 உரோமைக் குடிமக்கள் குடியேறினர். அகுஸ்து காலத்திலும் இஃது தொடர்ந்தது.

கந்தகம் ஏற்றுமதி செய்யப்படும் பகுதியில் புத்தயோலி இருந்தது. மேலும், இங்கு எல்லா வகையான உலோகத் தளவாடங்களின் நுணுக்க வேலையும் செய்யப்பட்டன. வங்கி உரிமையாளர்கள் பலர் இருந்தனர். குளுவியு என்பவர் சிறிய ஆசியாவிலுள்ள ஐந்து சமூகங்களுக்குக் கடன் கொடுத்திருந்தார். அகுஸ்துவின் காலத்தில் இது மிக முக்கியமான துறைமுக நகரமாகியது. பின்னர் திரேசவ், ஒஸ்தியா எனுமிடத்தில் துறைமுகம் கட்டிய பின்னே இதன் முக்கியத்துவம் குறைந்தது. இங்கு கிடைக்கும் சுண்ணாம்பு, எரிமலைச் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து மிக உறுதியான கப்பல் தளங்களைக் கட்ட முடிந்ததால், பெரிய கப்பல்களும் இவ்வளைகுடாவில் பத்திரமாக வந்து நங்கூரம் பாய்ச்ச வசதி ஏற்பட்டது. எனவே, உரோமைக்குச் செல்லும் பயணிகளும், அலக்சாந்திரியாவிலிருந்து தானியங்கள் சுமந்து சென்ற கப்பல்களும் இங்குத் தங்கிச்சென்றன. செனேகா, புத்தயோலி நகர மக்கள் ஆவலுடன் அலக்சாந்திரியக் கப்பல்கள் வந்து நிற்பதைப் பார்த்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

இவை புனித பவுல் பயணம் செய்த கப்பல் போன்றவையே (அ.ப. 27:6). சுடோனியு **(Suetonius)** பவுல் போலவே, தீத்து எருசலேமின் அழிவுக்குப்பின் உரோமை செல்லும்போது இங்கு இறங்கிச் சென்றார் என எழுதி வைத்துள்ளார்.

இங்குச் 'செராபியம்' எனும் பெயரில் ஒரு சந்தையும், அகுஸ்துவின் கோவிலொன்றும், ஒரு பெரிய பந்தயத்திடலும் இருந்தன என்று அகழ்வாய்வுகள் காட்டுகின்றன.

பவுல் புத்தயோலியில் சகோதரர்களுடன் ஏழு நாட்கள் தங்கி இருந்ததால் இங்கு ஏற்கெனவே கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனால், இங்கு இக்கிறிஸ்தவ சமூகம் எவ்வாறு தோன்றியது எனத் தெரியவில்லை. பவுல் ஸ்பெயினுக்குச் சென்றபின் செசரியாவிலிருந்து கப்பல் வழியாகப் புத்தயோலிக்குப் பேதுரு வந்து சேர்ந்தார் எனப் 'பேதுருவின் பணிகள்' எனும் நூலில் கூறப்படுவது வெறும் கற்பனைக் கதையென ஒதுக்கப்படுகிறது.

**புத்தாண்டு (NEW YEAR)**

புதிய நாட்காட்டி, ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் நாளாகும். இந்நாளில் பழங்கால மேற்காசியா முழுவதும் பலவகை விரிவான கொண்டாட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.

எகிப்தில் ஓருஸ் தேவரின் சிலை அவரது ஆலயத்திலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்டது. சூரிய ஒளி சிலையில் படுவதால், அவரது ஆன்மாவும் உடலும் ஒன்றிணைவதாகக் கருதினர். பாபிலோனிலும் அசீரியாவிலும் "அகிட்டு" என்ற வசந்தகால விழா, புத்தாண்டு நாளோடு தொடங்கியது. பதினோரு நாள் கொண்டாட்டத்தில், மார்துக்கின் மேலாண்மை கொண்டாடப்பட்டது; கோவில் தூய்மைப்படுத்தப்பட்டது; அரசனது அதிகாரம் புதுப்பிக்கப்பட்டது. பாபிலோனியப் படைப்பு இதிகாசம் மார்துக்கின் முன் வாசிக்கப்பட்டது. வரும் ஆண்டின் நிகழ்ச்சிகள் முன்னறிவிக்கப்பட்டன. கானானிய இதிகாசத்தில் செழிப்பின் கடவுளான பாகாலின் இறப்பும் மீண்டும் உயிர் பெறுதலும், இலையுதிர் காலத்தில் வரும் புத்தாண்டோடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

இஸ்ராயேலில் புத்தாண்டு விழாவின் தன்மை மற்றும் நாள்பற்றிப் பெரிதும் புலமைமிக்க வாதங்கள் நடந்துள்ளன. ஆனால், விவிலியத்தில் இது பற்றிய குறிப்புகள் குறைவாய் இருப்பது இந்த ஆய்வுக்குத் தடையாக இருக்கிறது. அறிஞர் சிலர், புத்தாண்டு விழாவை விவசாய விழாவோடு, சிறப்பாக இலையுதிர் காலத்தில் வரும் அறுவடை விழாவோடு தொடர்பு படுத்துகின்றனர் (எ.கா. எக்காள விழா, லேவி 23:23-25; எண் 29:1-6). வேறு சிலர் சில "அரியணை ஏறும்" சங்கீதங்கள் (சங் 47:93; 96-100) யாவே அரியணை ஏறுவது பற்றிய வருடாந்திர விழாவுக்குரிய வழிபாட்டைச் சேர்ந்தவை என்று கருதுகின்றனர். பழங்கால மேற்காசிய விழாக்களுக்கும் இஸ்ராயேலர் விழாக்களுக்கும் இடையில் பல இடைவெளிகள் உள்ளதால் எதையும் உறுதியாகக் கூறுவதற்கில்லை.

இவ்விதமே, இஸ்ராயேலரின் புத்தாண்டு இலையுதிர் காலத்திலா (திஸ்ரி மாதத்தின் முதல்நாள், செப்டம்பர் - அக்டோபர், புரட்டாசி), வசந்த காலத்திலா (நீசான் மாதம் முதல்நாள், மார்ச் - ஏப்ரல், பங்குனி) எப்பொழுது கொண்டாடப்பட்டது என்ற பிரச்சனைபற்றி எதுவும் உறுதியாகச் சொல்ல முடியாது. யாத் 12:2-இல் இறைவன், மோசே மற்றும் ஆரோனிடம் ஆபீபு (நீசான்) மாதம் ஆண்டின் முதல் மாதமாய் இருக்கும் என்று கூறுகிறார் (காண்க. யாத் 13:4; 23:15; 34:18; 40:2.17; உப 16:1). 1 அர 6:1-இல் சீவு (இய்யார், ஏப்ரல் - மே, சித்திரை) மாதம் இரண்டாம் மாதம் என்று குறிக்கப்படுவதால் நீசான் மாதம் முதல் மாதமாகும். இதே போல் கிசிலேவு (நவம்பர் - டிசம்பர், கார்த்திகை) மாதம் ஒன்பதாவது மாதம் என்று எரே 36:22-இல் குறிக்கப்பட்டுள்ளது. எசே 40:1 "ஆண்டின் தொடக்கத்தைப்" பற்றிக் கூறுகிறது. எசேக்கியேலின் நாட்காட்டி நீசான் மாதத்தில் தொடங்கும் புத்தாண்டைக் கொண்டது. ஆகவே, எசேக்கியேலின் குறிப்பு வெறுமனே ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

லேவி 25:9 யூபிலி ஆண்டு இலையுதிர் காலத்தில் தொடங்குவதாகக் குறிப்பிடுகிறது. நெகே 1:1; 2:1 ஒன்பதாம் மாதமாகிய கிசிலேவுவை முதல் மாதமாகிய நீசானுக்குமுன் குறிக்கிறது. இஃது இலையுதிர் காலப் புத்தாண்டைக் குறிக்கலாம். யூபிலி ஆண்டு விவசாய நாட்காட்டியைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. இஃது, இக்காலப் பொருளாதார ஆண்டு அல்லது கல்வியாண்டைப்போல், அதிகாரபூர்வமான புத்தாண்டைக் குறிக்காமலிருக்கலாம் (காண்க. யாத் 34:22. இதுவும் ஒரு வேளை விவசாயக் கணிப்பைப் பிரதிபலிக்கலாம்). நெகே 8:2. 14-15 இலையுதிர்காலத் கூடார விழாவை ஏழாவது மாதத்தில் குறிப்பதால், இஃது, இஸ்ராயேலர் அப்போது வசந்த காலத்தில் தொடங்கிய நாட்காட்டியைப் பயன்படுத்தினர் என்று காட்டுகிறது. சுருக்கமாக, புத்தாண்டு பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் தெளிவற்றவையாக அல்லது ஐயத்திற்கு உரியவையாக உள்ளன.

ஆனால், கிடைத்திருக்கும் சில சான்றுகள் நீசான் மாதம் முதல்நாள் புத்தாண்டு கொண்டாடப்பட்டது என்பதற்குச் சார்பாக உள்ளன. இதிலிருந்து, இஸ்ராயேலில் மிகுந்த பொருள் பொதிந்த சமயவிழாக்கள் புத்தாண்டின் சிறப்பைக் குறைத்து விட்டதாலேயே, அதுபற்றிய குறிப்புகள் சிலவே கிடைத்துள்ளன என்று தோன்றுகிறது.

புதிய ஏற்பாட்டில், இந்தப் புத்தாண்டு பற்றிய எக்குறிப்பும் இல்லை. விவிலிய காலத்திற்குப் பின்வந்த யூதத்துவத்தில், திஸ்ரி மாதத்தின் முதல் நாள் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டது. இஃது இறைவனது படைப்புச் செயலை நினைவுகூர்தலாகவும், ஒருவர் தம்மைப் பற்றியே சிந்தித்தறியும் நாளாகவும் கொண்டாடப்பட்டது.

**புத்துயிர் பெறுதல் (REGENERATION)**

கிறித்தவ சமயத்திலே நுழைதல் ஒரு புத்துயிர் பெறுதல் என யோவான், பேதுரு ஆகியோரின் திருமுகங்களுக்குப் புறம்பே புதிய ஏற்பாட்டில் அரிதாகக் காணப்படும். பழைய ஏற்பாட்டில் இதைப் பற்றிய முன்குறிப்பு இல்லை. இரகசிய வழிபாடுகளில் இத்தகைய நுழைவு புதுப்பிறப்பு என வழங்கப்பட்டது. அதிலிருந்தே புதிய ஏற்பாடு இக்கருத்தைக் கையாண்டிருக்க வேண்டுமென அறிஞர்கள் சுட்டிக்காட்ட முயன்றிருக்கின்றனர். ஆனால், இவற்றுக்கான தெளிவான ஆதாரம் இல்லை.

யோவானின், முதலாம் திருமுகம் இறைவனிடமிருந்து பிறந்தவன் நீதியைக் கடைப்பிடிக்கிறான் (2:29), அயலானை அன்பு செய்கிறான் (4:7), இயேசுவை மெசியாவென நம்புகிறான் (5:1) எனக் கூறுகிறது. இந்தப் புத்துயிர் பெறுதலின் விளைவாக மனிதன் பாவம் செய்வதில்லை; செய்யவும் முடியாது. ஏனெனில், அவன் இறைவனிடமிருந்து பிறந்துள்ளான் (3:9; 5:18). இது மனிதர்களைக் கடவுளின் நிலைக்கு உயர்த்துகிறது. புத்துயிர் பெறுதலால், கிறிஸ்து உலகை வென்றதுபோல் (யோவா 16:33), அவன் உலகை வெல்கிறான் (5:4). யோவான் நற்செய்தியிலே கடவுளில் பிறந்தவர் அவரது பெயரை நம்புகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இரத்தத்தினாலோ, உடல் ஆசையினாலோ, ஆண்மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறவாமல், கடவுளாலேயே பிறந்தவர்கள் (1 யோவா 1:13). அவர்கள் புதிய வாழ்க்கை வாழ்கின்றனர். இறை மூலம் கொண்ட புதிய தன்மையைக் கொண்டுள்ளனர். இப்புதுப்பிறப்பு திருமுழுக்கு ஆகும். இஃது ஆவியின் பிறப்பாகும் (யோவா 3:3-8).

முதலாம் பேதுரு திருமுகத்திலே கிறிஸ்தவர்கள் கலப்பற்ற ஞானப்பாலை அருந்தும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் ஆவர் (1 பேதுரு 2:2). இறந்தோரிடமிருந்து எழுந்த இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் தம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கையைத் தரும் புதுப்பிறப்பை அளித்தார் (1:3). இங்கே புத்துயிர் பெறுதல் இறுதிக்கால நிறை வேற்றுதலை எதிர்நோக்குகிறது. இதே இறுதிக்கால நோக்கு 1:23-இலும் தென்படுகிறது. அழியா வித்தினால் கிறிஸ்தவன் புதிதாகப் பிறக்கிறான். இங்கே பிறப்பு உயிருள்ள மற்றும் நித்திய வார்த்தையினால் வருகிறது. இங்கே வார்த்தை நற்செய்திப் போதனையைக் குறிக்கிறது. திருமுழுக்கு புத்துயிர் பெறுதலின் முழுக்காகும்; தூய ஆவியால் வரும் புதுப்பித்தலாகும் (தீத் 3:5). மத் 19:28-இல் புத்துயிர் பெறுதல், யூத இறுதிக்கால நம்பிக்கையான, உடல் உயிர்ப்பையும், உலகப் புதுப்பித்தலையும் குறிக்கிறது.

புத்துயிர் பெறுதல் என்ற கருத்து- இரகசிய வழிபாடுகளின் தொனியை ஒருவேளை கொண்டிருப்பதால், இதற்குப் புதிய ஏற்பாட்டில் அதிக இடமில்லை. ஆனால், திருமுழுக்கு பழைய வாழ்க்கைக்கு மரித்துப் புத்துயிர் பெறுதல் என்ற கருத்து திருமுழுக்குப் பற்றிய பவுலின் கருத்தோடு நெருங்கிய இணைத்தன்மையுடையது. காண்க: புதிய பிறப்பு.

**புப்பிலியு (PUBLIUS)**

மால்தாத் தீவின் தலைவனான இவன் உரோமையில் உயர் அதிகாரியாய் இருந்திருக்க வேண்டும். உரோமைக்குச் செல்லும் வழியில் பவுலும், மற்ற உடன் கைதிகளும் கப்பல் சிதைவிலிருந்து தப்பி இத்தீவையே அடைந்தனர். ஆனால், தீவின் தலைவன் என்பது அந்நாட்டுத் தலைமை அதிகாரியையோ, உரோமை அரசின் அதிகாரியல்லாத வேறு ஏதேனும் ஒன்றைச் சார்ந்த அலுவலரையோ குறிக்கலாம்.

புப்பிலியு பவுலையும், அவருடன் வந்தவர்களையும் மூன்று நாட்கள் தன் இல்லத்தில் வைத்திருந்து நல் விருந்தளித்து அனுப்பினார் (அ.ப. 28:7). காய்ச்சலாலும் சீதபேதியாலும் நோயுற்றிருந்த இவரது தந்தையைப் பவுல் குணமாக்கினார் (28:8). இவர் ஒரு மறைசாட்சி மரணம் எய்தியவர் என்ற ஒரு மரபைச் சுட்டிக்காட்டுகிறார் எரோனிமு.

**புயல் (STORM)**

1. இது புயல், சூறாவளி அல்லது புயல் மழையைக் குறிக்கும். இஃது அழிவை உண்டாக்கக்கூடிய காற்றாகவோ, சுழற் காற்றாகவோ இருக்கலாம் (சங் 77:18; எசா 17:3). இத்தகைய காற்று பெரும்பாலும் மழைக்காலத்தில் தோன்றினாலும், உண்மையான புயல் கடற்கரைப் பகுதிகளில், காற்று நிலைகொள்ளாமல் இருக்கும் பனிக்காலத்தில் உண்டாகின்றது. இத்தகைய சூறாவளி குறுகிய பகுதிகளின் வழியாகச் செல்லும்போது அழிவை உண்டாக்கும். இதைப்போன்ற சூறாவளிதான் எலியா இறைவாக்கினரை விண்ணுக்கு எடுத்துச் சென்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. நெருப்புக் குதிரையும் தேரும், புயலின்போது ஏற்படும் இடி, மின்னல்களைக் குறிக்கும் அடையாளமே (2 அர 2:11; 2 அர 2:12; அப 3:8). குறைவான சக்திகொண்ட சூறாவளிகள் 'தூசிப் பேய்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவை மிகவும் வெப்பமான மணற்பரப்பிலிருந்து உண்டாகக் கூடும் என்று கருதப்படுகிறது.

**2. புறவினத்தாரின் விளக்கம்:** பண்டைய மேற்காசிய நாடுகளில் புயலானது ஒரு கடவுளின் வெளிப்பாடாகக் கருதப்பட்டது (கானானில் பாகாலின் வெளிப்பாடு). இந்த வெளிப்பாடு மூன்று தனிச்சிறப்புகளை அளிக்கிறது. இவற்றிற்குமுன் மனிதனால் எதுவுமே செய்யமுடியாத அண்டச் சக்திகளாக வெளிப்படும்போது, புயலானது இறைவனுடைய அச்சுறுத்தும் மாட்சிமையினை வெளிப்படுத்துகிறது. மனிதனுக்கு அபாயமான தோற்றம் என்ற அளவில், இது கோபத்தின் அறிகுறியாக உள்ளது. மேகங்களில் மறைந்துள்ள கடவுள் தனது பகைவர்களுக்கு எதிராகப் பேசுகிறார் (இடி இடித்தல்); அவர்களுக்கு எதிராகத் தனது அம்புகளை (ஒளிரும் மின்னல்கள்) வீசுகிறார் (சங் 18:6-16). இறுதியாக, பலனுள்ள மழையைக் கொண்டு வருவதில் புயலானது இறைவனில் விளையும் வளத்தின் ஊற்றைக் காட்டுகிறது.

**3. புயல், இறைமாட்சியின் அருங்குறி:** விவிலிய மொழியில் ஒவ்வொரு பல தெய்வத் தொனியும், சிறப்பாக இனப்பெருக்கச் சடங்குகளுடன் தொடர்புடையதும் நீக்கப்படுகிறது. ஆனால், புயலானது ஒரு பொருளைத் தக்க வைத்துள்ளது. இது படைத்தவரின் பேராற்றலைப் பறைசாற்றும் அதிசயங்களில் ஒன்றாகவும் (எரே 51:16-17; சங் 135:7; யோபு 38:34-38), அவரது அச்சத்திற்குரிய மாட்சியின் மறைவான வெளிப்பாடாகவும் உள்ளது (யோபு 36:29-37:5). இறைவன் யாவும் கடந்த தனது நிலையில் அதற்கு மேலாக அரியணையில் அமர்ந்துள்ளார் (சங் 29). இவ்வாறு இறைவன் தன் மகிமையில் சித்தரிக்கப்படுகிறார் (யோபு 38:1; எசே 1:13தொ; 10:5; திருவெளி 4:5; 8:5தொ; 10:3தொ). உலகிலே இறைவனுடைய இடையீட்டை எழுப்பும் இறையாற்றல் தோற்றத்தின் பின்னணி இதுவே. இந்த இடையீடுகள் வரலாற்றைச் சேர்ந்ததாக இருக்கலாம். இவை யாத்திரைக் காலமாகவோ (சங் 77:19 தொ), சீனாய் மலையிலோ (யாத் 19:16-19), கானானில் புகுந்தபோதோ (நீதி 5:4-5), தமது அபிடேகம் பெற்றவரையும் (சங் 18) தம்

மக்களையும் (அப 3:3-16) தமது நிலையான அரசைத் தொடங்கி வைக்கும்போதோ (சங் 97:1-6) நிகழலாம். ஆயினும், இறைவன் புனித பயத்தைத் தூண்டுகின்ற மாட்சிமிகு தோற்றம் மட்டுமல்லர். ஏற்கெனவே, ஒரேபு மலையில் ஓர் உயரிய வெளிப்பாட்டினைப் பெறுவதற்கென, இந்த ஒரு சார்பு அருங்குறியைக் கடந்து செல்லுமாறு எலியா அழைக்கப்படுகிறார். தென்றலின் அடக்கமான மெல்லிரைச்சலில் மனிதனுடன் பேசக்கூடிய நெருங்கிய பிரசன்னமாகவும் இறைவன் உள்ளார் (1 அர 19:11-13).

4. புயல், **இறை சினத்தின் அருங்குறி:** மனிதரைப் பொருத்த அளவில் இறைவனுடைய மன நிலையை வெளிப்படுத்துவதற்கென, புயலானது இரு தன்மையுடைய ஐயப்பாடான அருங்குறியாக உள்ளது. வறட்சியில் இயற்கைக்கு இறைவன் அருளுடன் செழிப்பை அளிக்கும்போது நன்மை செய்யும் அருங்குறியாக உள்ளது (1 அர 18); தனது சினத்தின் அடையாளமாக இறைவன் தனது பகைவர்களுக்கு ஒதுக்கி வைத்துள்ள பயங்கர தண்டனைக் கருவியாகவும் இஃது உள்ளது (யாத் 9:13-34). இறைவன் தீர்ப்பிட்டுத் தண்டிக்கும்போது (எசா 30:27-29), சிறப்பாக, பாபிலோனுக்கு எதிராகத் தனது தண்டனைகளைச் செயல்படுத்தும் இறுதித் தீர்ப்பின் காலத்தில் (திருவெளி 16:18; காண்க. 11:19), புயலின் பயங்கர இறையாற்றல் தோற்றம் இறைவனுக்குப் பயன்படும் சிறப்பான கருவியாகிறது. இதன் காரணமாகவே, இந்தத் தீர்ப்பை முன்னோக்குவதன் வழியாக, இவ்வுலகின் அரசன் பாதாளத்தில் தள்ளப்படும் தருணத்தில் மகனுடைய மகிமையைப் பறை சாற்றும்போது, இறைக்குரலானது இடியின் முழுக்கம்போல ஒலிக்கிறது (யோவா 12:28-32).

புயலுக்கு எதிராகத் தானே அவர்களுக்குப் புகலிடமாக இருப்பேன் எனத் தனக்குரியவர்களுக்கு இறைவன் உறுதியளிக்காவிடில் தீர்ப்பைப்பற்றிய முன்னோக்கு ஒருவனைப் பயத்தில் நடுங்கச்செய்யும். பாவ உலகம் மட்டுமே இந்த இறுதிக்காலத் தண்டனையால் அச்சுறுத்தப்படுகிறது (எசா 4:6). ஏனெனில், இறைவன் இடிக்கும் யூபித்தருக்கு அப்பாற்பட்டுள்ளார். தன்னை ஏற்காவர்கள்மீது நெருப்பு விழச் செய்வதில், தாம் மகிழ்ச்சி கொள்வதில்லை (லூக் 9:54-55) என்று "இடியின் மக்களை" இயேசு புரிந்து கொள்ளச் செய்கிறார் (மாற் 3:17). இயேசுவின் உருவில் நமக்கு அளிக்கப்படுகின்ற இறை அருளின் வெளிப்பாட்டினால் புயலின் இறையாற்றல் தோற்றம் நிறைவு செய்யப்படுகிறது (தீத் 2:11). "முரசொலியைக் கேட்கும்போதும், மின்னல் ஒளியைக் காணும்போதும் உலகம் நடுங்குகிறது; ஆனால், ஒரு கன்னியின் வயிற்றில் நீர் இறங்கும்போது, உமது அடியானது எந்தச் சப்தத்தையும் உண்டாக்குவதில்லை" (கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய கிறிஸ்தவச் செய்யுள்).

### புரா (PURAH)

இவர் கிதியோன், மதியானியர் பாளையம் இறங்கியுள்ள இடத்திற்கு நடுநிசியில் அவர்கள் பேசுவதைக் கேட்டறியச் சென்றபோது, அவருடன் சென்ற ஊழியன் (நீதி 7:10-11).

### புராணக்கதைகள் (MYTHS)

மேய்ப்புப்பணித் திருமுகங்களில் எச்சரிக்கப்படும் புராணக்கதைகளும் போலிப்போதகங்களும் கற்பனையான ஊகப்போதனைகள், முடிவேயில்லாத தலைமுறை வரலாறுகள் (1 திமொ 1:4; காண்க. தீத் 3:9), "உண்மையை விரும்பாத மனிதரின் கட்டளைகள்" (தீத் 1:14) ஆகியவற்றின் தொடர்பில் கூறப்படுகின்றன. மேலும், இவை "இலௌகீகக் கதை, பாட்டி கதைகள்" (1 திமொ 4:7) எனவும், "யூதக்க ட்டுக்கதைகள்" (தீத் 1:14) எனவும் விவரிக்கப்படுகின்றன. மேய்ப்புப்பணித் திருமுகங்களில் வரும் இந்தப் பகுதிகளில் காணப்படும் போலிப் போதகங்களிலிருந்து தோன்றும் சித்திரம் யூத (1 திமொ 1:7; தீத் 1:10),

ஞானவாதத் துறவு (1 திமொ 4:3; 6:20; 2 திமொ 2:18) கூறுகளின் கலப்பைக் கொண்டுள்ளது. இத்தகைய "புராணங்கள்" தலைமுறை வரலாறுகளைப் போன்றதாக இருக்கும். தலைமுறை வரலாறு என்ற சொல், பூமிக்கும் உண்மையான கடவுளுக்கும் இடையில் இருப்பதாகக் கருதப்பட்ட ஊழிகள் பற்றிய ஞானவாத விவரிப்பைக் குறிக்கும் சொல்லாகும். "புராணங்கள்" பாதகமான முறையில் 2 பேதுரு 1:16-இல் குறிக்கப்படுகின்றன. நற்செய்திப் போதகம் "சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை" அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை; மாறாக, நேரடிச் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டது. இங்கு அண்டவியல் புராணங்களை ஞானவாதக் கோட்பாடு கொண்டிருப்பதும் வரலாற்றில் நிகழும் வெளிப்பாட்டை வலியுறுத்துவதும் எதிர்ப்புடையன வாக அமைந்துள்ளன.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் உண்மையல்லாத ஒன்றைக் குறித்தது; ஆனால், ஏதாவது ஒன்றிற்கு விளக்கமளிக்கவோ, விசுவாசத்திட்டத்தை அல்லது போதனையை வலியுறுத்தவோ, புனையப் பட்டதாகவோ, விரிவாக்கப்பட்டதாகவோ அது கருதப்பட்டது. இச்சொல் ஒன்று உண்மையோ பொய்யோ, அது சேர்ந்து காணப்படும் போதனைக்கு முக்கியமல்லாததைக் குறிக்கவும் பயன்பட்டது. அது புறத்திலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம். ஒரு விதத்தில், வெளிப்படையாகப் போதிக்கப்பட்டதை எடுத்துக் கூறாமல், போதனை மூலத்தில் கூறப்பட்ட சிந்தனை உலகைச் சேர்ந்ததாக இருக்கலாம். இந்த விளக்கத்திற்குப்பின், விவிலியத்தில் காணப்படும், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் காணப்படும் புராணக் கூறுகளைப் பற்றிப் பேசலாம். நீண்ட வரலாறு உடைய மக்களின் முழு இலக்கிய ஏட்டுத் தொகுப்பில் இத்தகைய கூறுகளைக் காணலாம். நாகரிகக் கூறுகளின் தோற்றம் பற்றிய விவரிப்புகள் (ஆதி 4:17.20-22), மக்களிடையே வேறுபாடுகள் தோன்றியது பற்றி விவரிப்பு (11:1-9), கடவுள்கள் கூடும் "வட புரத்து எல்லைப் பகுதியிலுள்ள பேரவை மலை" (எசா 14:13) பற்றிய குறிப்பு, படைப்புக் காலத்தில் வெல்லப்பட்ட கொடும்விலங்குகள் பற்றிய குறிப்பு (யோபு 26:12; சங் 74:13-14; எசா 51:9; காண்க. 3:8.15) ஆகியவை மேற்கூறப்பட்ட புராணக் கூறுகளையுடையவையாகும். இத்தகைய விரிவாக்கப்பட்ட புராணங்கள் பற்றிய சிந்தனைகளோடு புராண மொழியைப் பயன்படுத்தும் எளிய உருவக எடுத்துக் கூறல்களும் உண்டு. இந்த விதத்தில்தான் இடி இறைவனுடைய குரலாகக் கருதப்படுகிறது (2 சாமு 22:14); பூமிக்கும் தாயின் உதரத்துக்கும் இணைவுத் தன்மை காணப்படுகிறது (யோபு 1:21; சங் 139:15); "நாட்களின் நூல்" (சங் 139:16) குறிக்கப்படுகிறது. மற்ற மேற்காசிய மக்களின் இலக்கியங்களிலும் இதற்கு மிகவும் இணையான புராணக் கூறுகளைக் காணலாம்.

புராணக்கூறு, முக்கியப் பொருள் ஆகியவற்றிடையேயுள்ள வேறுபாடு விளக்கவுரையாளருக்கு ஒரு முக்கிய பிரச்சினையாகிறது. விளக்கவுரையாளரின் உலகநோக்கே, குறிப்பாக ஒரு குறிப்பிட்ட புராணக்கதை உண்மையான நிகழ்ச்சியைக் குறிக்கின்றதா இல்லையா என்ற பிரச்சினை எழும்போது, விளக்கத்தில் ஒரு துணைக்கூறு ஆகிறது. எடுத்துக்காட்டாக, பேய்கள் இருப்பதையே புறம்பாக்கும் உலகநோக்கில் வாழும் ஒருவர், இயேசு செய்யும் பேயோட்டுதலையும், தீமையின் எல்லா வடிவங்கள் மேலும் இயேசு கொண்டிருக்கும் கருத்தியலான ஆற்றலையும் கதைவடிவில் சித்தரிப்பதாக விளக்கம் கூறலாம். இவ்விளக்கத்தால் இயேசுவின் காலத்தைச் சேர்ந்தவர்கள் விசுவசித்த வடிவில் பேய்கள் இருத்தலையோ இல்லாததையோ பற்றி ஒன்றையும் அவர் நிரூபிக்கவில்லை.

நவீன விவிலிய ஆய்வில் ஒரு முக்கியமான வளர்ச்சி, புராணம் என்ற கருத்தைத் திருமுறை பொருள்கோள் சேர்ந்த கருவியாகப் பயன்படுத்துதலாகும். இதன் விளைவாக, புராணக் கூறுகளை அகற்றுவதில் அக்கறையும்

வளர்ந்துள்ளது. இதன் அடிப்படைக் கருதுகோள், அறிவியல் உலகில் வாழும் மக்கள் விவிலியத்தில் காணப்படும் புராணக் கூறுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும், அவை விவிலியத்தில் சேர்ந்து வரும் உண்மையான செய்தியைப் புரிந்துகொள்ள முடியாததாக அல்லது ஏற்றுக்கொள்ள முடியாததாக ஆக்குகின்றன என்பதும் ஆகும். ஆகவே நவீன மனுகுலம் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதியமுறையில் புராணங்கள் விளக்கப்படவேண்டும். ஆயினும், நிகழ்ச்சியின் புறநிலை உண்மையைப் பாதுகாக்காது. இயேசுவின் கன்னிப்பிறப்பு போன்றவை எடுத்துக்கூறும் உண்மையைப் பற்றி பேசுவது சரியானதா என்ற பிரச்சனை எழுகிறது. மேலும், கிறிஸ்தவ போதனையின் குறிக்க முடியாத மிகக்குறைந்த அளவைக் கூறுவதும், அதன் விளைவாக, அக வரம்பில்லாது புராணக் கூறுகளை நீக்கும் அலுவலுக்குரிய எல்லையை நிர்ணயிப்பதும் முடியாத காரியமாகும். மேலும், புராணம், அடையாளம் மற்றும் கதைகள் இல்லாமல் சமயமொழி இருக்கக் கூடும் என்ற கருத்து கேள்விக்குரியதாகும்.

## புலம்பல் நூல் (LAMENTATIONS, BOOK OF)

**1. முன்னுரை:** இறைவன் அனுப்பும் துன்பங்களும், தண்டனைகளும் இருவகை மனநிலைகளை மனிதர்களிடையே ஏற்படுத்தலாம். சிலருக்கு, அவை மனம் புண்பட்டுக் கிளர்ச்சிக் குரல் எழுப்ப வாய்ப்பாக அமையலாம். மற்றவர்களுக்கு அவை அவர்களது மனசாட்சியை நேர்மையான முறையில் சோதித்தறியவும், மனம் வருந்திக் கண்ணீர் விடவும், இறைவனது தண்டிக்கும் கரம் ஒரு தந்தையினுடையது என்றும், அதே, கரம் மனந்திரும்பி வரும் மகனை வரவேற்று அரவணைக்க எப்போதும் விரிந்திருக்கிறது என்றும் ஆழ்ந்துணரவும் ஓர் அரிய வாய்ப்பாகும். பின்னதையொத்த ஓர் உன்னத உணர்வை உள்ளடக்கியதாகும் இந்தப் புலம்பல் நூல். யூதவரலாற்றில் ஓர் உன்னதமான, மென்மையான காலத்தைப் பாடல் வடிவில் வார்த்து, பாதுகாத்து நமக்கு அளிக்கிறது இந்நூல். அக்காலம் யூதா தனது குற்றத்தை மனமுவந்து ஏற்று மனம் வருந்தி இறைவனிடம் திரும்பி வந்த காலமாகும். இம்மாற்றத்தை எரேமியா நெடுங்காலமாகப் போதித்தார். ஆனால், அவரது இறப்புக்குப்பின்தான் அது நிகழ்ந்தது. அதை இந்நூல் படம் பிடித்துக்காட்டுகிறது.

**2. நூலின் பெயர்:** எபிரேய விவிலியத்தில் இந்நூல் "எப்படி! எவ்வாறு!" என்று வியப்புப் பொருள்படும் "எக்கா" **(Ekah)** என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. இச்சொல் எபிரேய இரங்கற் பாடல்களில் வழக்கமான தொடக்கச் சொல்லாகும். மூல நூலில் இச்சொல் 1:1; 2:1; 4:1-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தால்மூது நூலும், இராபிகளும், எரோனிமுவும் இரங்கற்பா அல்லது புலம்பல் என்று பொருள்படும் "கினோட்" **(quinot)** என்ற தெளிவான தலைப்பைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல் 2 நாள் 35:25-இலும் காணப்படுகிறது. இதற்கொத்த பொருளில் எழுபது நூல் "த்ரேனோய்" **(Threnoi)** என்றும் வுல்காத்தா வாசகம் "லாமென்டாசியோனெஸ்" **(Lemntationes)** என்றும், இந்நூலை அழைத்தன. தமிழில் புலம்பல் நூல் என அழைக்கிறோம்.

**3. திருமுறைப் பட்டியலில் புலம்பல்நூல்:** எபிரேய விவிலியத்தில் மூன்றாவதான "நூல்கள்" என்ற தொகுப்பில் ஒன்றாகும். இந்நூல், எழுபது நூலிலும் சீரியா வாசகத்திலும், வுல்காத்தா வாசகம் மற்றும் அதைத் தழுவிய மொழிபெயர்ப்புகளிலும் எரேமியா நூலுக்குப்பின் இடம் பெறுகிறது. இறைவாக்கினர் நூல்களில் ஒன்றாகக் கருதப்பட்டது .

இந்நூல், யூத விழாக் காலங்களில் வாசிக்கப்படும் ஐந்து சுருள்கள் அல்லது "மெகில்லோத்" **(Megilloth)** என்ற தொகுப்பில் மூன்றாவது நூலாகும். இஃது அபு மாதம் 9-ஆம் நாள், கி.மு. 587-86-இல் எருசலேம் எரியூட்டப்பட்டதை நினைவுகூரும் நோன்பின்போது வாசிக்கப்பட்டது. பிற்காலத்தில், அதே நாளில் கி.பி. 70-இல் எருசலேமை

உரோமையர் அழித்ததை நினைவுகூரும் நோன்பின்போது வாசிக்கப்பட்டது.

**4. புலம்பல் இலக்கிய வகை:** புலம்பல் இலக்கியம் பல வகைப்படும். இறந்தவர்களுக்காகப் பாடப்பட்ட புலம்பல் பாக்கள், சவுல், யோனத்தான் (2 சாமு 1:17-27), அப்னேர் (2 சாமு 3:33-34) ஆகியோர் இறந்த போது தாவீது பாடிய பாடல்களில் வருகின்றன. சவ ஊர்வலப் புலம்பல்களும் உண்டு. மற்ற மேற்காசிய மக்களைப் போன்று இஸ்ராயேலர் மரண அடக்கச் சடங்குகளைக் கொண்டிருந்தனர். இதில் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களோ (எரே 9:17; ஆமோ 5:16), இறந்துபட்டவரின் உறவினர்களோ (2 சாமு 1:17; 3:33) புலம்புவர். இப்புலம்பலில் இசைக் கருவிகள், குறிப்பாகத் தாரை இசைக்கப்படும் (மத் 9:23). இந்த இரங்கற் பாக்கள் எப்படி, எவ்வாறு என்று பொருள்படும் "எக்கா" (**Ekah**) என்ற சொல்லோடு தொடங்கும். மரணத்தால் ஏற்பட்ட ஆழ்ந்த மாற்றங்களைப் புலம்பல் பாக்கள் அறிவிக்கும். "எக்கா" என்ற தொடக்க விளிச்சொல் இந்த மாற்றத்தை அழுத்திக் காட்டும். இந்தப் புலம்பல் பாடல்களால் ஒருவர் தமது சொந்தத் துக்கத்தை எடுத்துக் கூறினார் என்பது உண்மையானாலும், இப்பாடல்கள் வழியாக இறந்த போனவருக்கு ஒரு சமயக் கடமையையும் செய்வதாக இஸ்ராயேலர் கருதினர் (யாத் 20:12). இப்பாடல்களில் யாவே என்ற இறைவனது பெயர் கூறப்படுவதில்லை. ஏனெனில், அவர் இறந்து பட்டவர்களின் இறைவன் அல்லர்; மாறாக, வாழ்வோரின் இறைவனாவார் (சங் 115: மத் 22:32).

இறைவாக்கினர் நூல்களும் புலம்பல் இலக்கியவடிவத்தைப் பயன்படுத்துகின்றன. நாடுகளின் வீழ்ச்சியையோ, தனி நபர்களின் அழிவையோ பற்றிக் கூறும் போது இறைவாக்கினர் புலம்பல் வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளனர் அவை; இஸ்ராயேல் (ஆமோ 5:2), சல்லூம் (எரே 22:1f), யூதா (9:21 தொ), யூதாவின் தலைவர்கள் (எசே 19:12), தீர் (26:17; 27:32-36), தீரின் அரசன் (28:12-19), எகிப்து (32:19தொ), பாபிலோன் அரசன் (எசா 14:4-21).

மற்றப் புலம்பல் பாடல்களின் பொதுவடிவம் மன்றாட்டு வடிவமாகும். அதில் பாடகர் தமது தேவைகள் மற்றம் துரதிர்ஷ்டத்தைப் பற்றிப் புலம்பி, உதவி மற்றும் விடுதலை அளித்திடுமாறு யாவேயைப் பார்த்து மன்றாடுவார். சங்கீத நூலின் மூன்றில் ஒரு பாகம் இவ்வகையைச் சேர்ந்ததாகும். இப்புலம்பல் வகை தனி நபர்களுடையதாகவும் (எரே 11:18-23; 12:1-4; 15:10-12. 15-18; 17:14-18; 18:19-23; 20:7-12; எரேமியாவின் சுயவாழ்வு அறிக்கைகளின் பெரும்பகுதி), குழுத் தன்மையுடையதாவும், சமூகத்தின் பெயரால் கூறப்பட்டதாகவும் (எஸ் 9:6-15. நெகே 1:5-11; எசா 63:7-64; எரே 14:7-9. 17:22; ஓசே 6:1-8; யோவே 1-2) இருக்கும். சில சமயம் மக்கள் குழுவோ, நாடுகளோ ஒரு தனி ஆளாகப் பாவிக்கப்பட்டு, அந்த ஆளைப் பற்றிய புலம்பலாக நகைச்சுவைமிக்க வசைப்பாடலாக இருக்கும் (நாகூ 3:18-19; எசா 14:4-21; எசே 26:15-18; 27:3-36; 41:10-18; 42:17-18). சில சமயம் உடனடியாக வரவிருக்கும் நாடுகடத்தப்படுதல் (எரே 9:7-22), பொதுப் பேரிடர்கள் (எரே 14:2-6), அழிவுகள் (ஆமோ 5:2) ஆகியவற்றால் தூண்டப் பெற்று, நாட்டின் பெயரால் புலம்பல் பாடப்பட்டுள்ளது. சில புலம்பல்கள் மக்கள் கூட்டம் முன்னிலையில் கூறப்படுகின்றன. இவற்றில் பேரழிவுகள் பற்றி மக்கள் குழுவோ, அவர்களது பிரதிநிதிகளோ புலம்புவர். இப்புலம்பலுக்குப்பின் உருக்கமான மன்றாட்டுகளும் கூறப்படும் (சங் 74; 79; 89; எரே 14:2-6; எசா 63:7; 84). பிறபுலம்பல்கள் தனிநபர்த் தன்மையுடையான (சங் 3; 4; 5; 7; 22). இப்புலம்பல்களில் சில, புலம்பலுக்குப்பின் இறைவாக்குகளைக் கொண்டுள்ளன; இறை வழிபாட்டில் இறைவாக்கினர்களால் பேசப்பட்டன. இறைவாக்கினர்களின் இக்கூற்றுகள் சாதகமாய் இருப்பதைவிட, பெரும்பாலும் அச்சுறுத்தல் களாகவே அமைந்திருந்தன.

பழைய ஏற்பாட்டுக்கும் மெசபொத்தாமியாவின் வழிபாட்டில் பயன்பட்ட புலம்பல்களுக்கும் இடையில் வடிவத்திலும் பொருளடக்கத்திலும் ஓரளவு ஒற்றுமையுண்டு. செழிப்பின் கடவுளுடைய வழிபாட்டு மரணத்திற்காகக் கொண்டாடப்பட்ட புத்தாண்டு விழாவில், புலம்பல் பாக்கள் பயன்பட்டன. விவிலியப் புலம்பல்களுக்கும் பிற செமித்தியப் புலம்பல்களுக்குமுள்ள உறவை இஸ்தார் தேவதை பற்றிய புலம்பலிலும், "ஒரு கடவுளுக்குச் செபம்" என்ற பாடலிலும் காணலாம். இரண்டிலும், முன்னுரையும் குற்ற அறிக்கையும் அடங்கியுள்ளன. புலம்பல் நூலின் பாடல்கள் கி.மு. 2000-ஐ ஒட்டி வீழ்ந்த ஊர் என்ற நகர் பற்றிய சுமேரியப் புலம்பலுக்கு ஒத்தவையாகக் கருதப்படும். ஆனால், தலைப்பும், புலம்பல் தன்மையும் தவிர இரண்டிற்கும் வேறு எந்தத் தொடர்பும் இல்லை.

5. **புலம்பல் நூல்:** மேற்கூறப்பட்ட பல பண்புகளும் புலம்பல் நூலில் காணப்படுகின்றன. இஃது ஒரு தொகுப்பு நூலாகும். மேலும், இந்நூல் மற்றுமொரு பண்பைக் கொண்டது. இதன் ஒவ்வொரு அதிகாரமும் அகரவரிசை அமைப்பைக் கொண்டிருக்கிறது. எபிரேய மொழியில் 22 எழுத்துகள் உண்டு. இவற்றை வரிசைப்படி முதல் எழுத்தாகக் கொண்டு ஒவ்வோர் அடியும் தொடங்கும். இவ்வாறு 1:1 ஆலபு **(Aleph)** என்ற முதல் எழுத்தோடும், 1:2 பேத்து **(Beth)** என்ற அடுத்த எழுத்தோடும் தொடங்கும். இவ்வாறு 1, 2, 3, 4 அதிகாரங்கள் 22 அடிகளைக் கொண்டுள்ளன. முதல் மூன்று அதிகாரங்கள் மூன்று வரிகளைக் கொண்ட அடிகளைக் கொண்டுள்ளன. நான்காம் அதிகாரம் இரண்டு வரிகள் கொண்ட அடிகளைக் கொண்டுள்ளது. மூன்றாம் அதிகாரத்தில் அகரவரிசை மிகக் கடுமையாகக் கடைபிடிக்கப்படுகிறது. அதில் ஒவ்வோர் அடியின் மூன்று வரிகளும் அதே எழுத்தோடு தொடங்கும். ஐந்தாம் அதிகாரம் அகர வரிசையில் இல்லை. ஆனால், 22 அடிகளைக் கொண்டுள்ளது. அகரவரிசை அமைப்பைப் பழைய ஏற்பாட்டின் பிறபகுதிகளிலும் காணலாம் (நாகூ 1:2-8; சங் 9-10; 25; 34; 37; 111; 112; 145; பழ 31: 10-31).

புலம்பல் சந்தத்தையும், அகரவரிசை அடியமைப்பையும் ஆசிரியர் விரும்பிப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. நூலின் அடிப்படைக் கருத்து அவ்வளவு துன்பியலானது. இல்லையென்றால் இந்தச் செயற்கை முயற்சி சீர்கெட்டிருக்கும். உண்மையான துக்கத்தையும், மிகவும் கடுமையான இலக்கண ஒழுங்கையும் இணைப்பது முடியாததாக முதலில் தோன்றலாம். ஆனால், உணர்ச்சிகளுக்கோ உண்மைத்தன்மைக்கோ பங்கமில்லாமல் ஆசிரியர் இந்த முயற்சியில் வெற்றி பெறுகிறார். இத்தகைய கடுமையான இலக்கிய அமைப்பை ஆசிரியர் பயன்படுத்தியதற்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். இப்பாடல்கள் வழிபாட்டில் பயன்பட வேண்டியிருந்ததால், இந்த அகரவரிசை முறை இப்பாடல்களை மனனம் செய்வதற்கும், மனதில் பதியவைப்பதற்கும் ஓர் உதவியாக அமைந்தது. மற்றுமொரு காரணம், ஆசிரியர் தான் கூற விரும்பியவற்றை முழுமையாகக் கூறிவிட்டதாகக் காட்டும் ஒரு யுக்தியாகும். இந்த அகரவரிசை முறையில் ஆலபுவிலிருந்து தௌவரை ஒரு கவி எல்லாவற்றையும் கூறிவிட்டால், ஒரு தலைப்பைப்பற்றிச் சொல்லக் கூடியதையெல்லாம் சொல்லிவிட்டார் என்று பொருளாகும். புலம்பல் நூல் துன்பத்தின் கொடுமையையும், துக்கம் மற்றும் அவ நம்பிக்கையின் நிறைவையும், விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் முழுமையையும் அழுத்திக் கூற, இந்த அகரவரிசை முறையைப் பயன்படுத்தியுள்ளது. இந்தச் செயற்கை முயற்சியில் அறிவு செறிந்த கருத்து வளர்ச்சியை எதிர்பார்க்கமுடியாது. ஆயினும், மற்ற அகர வரிசைப் பகுதிகளைப்போல் இந்நூல் அயர்ச்சி தரவில்லை. தொடக்கத்தில் இப்பாடல்கள் தனித்தனியாகத் தோன்றினாலும் அவற்றின் கருத்தொற்றுமையால் பிற்காலத்தில் ஒரே தொகுப்பாக இணைக்கப்பட்டிருக்கலாம்.

இந்த அகர வரிசை அமைப்போடு, ஒரு சொல் அல்லது பல சொற்கள் சமன் செய்யப்பட்ட முறையில் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. இந்த அமைப்பு முக்கிய கருத்துகளை அழுத்திக் கூறுகிறது; அடி அமைப்பைத் தெளிவாக வெளிக்கொணர்கிறது.

அனேகமாக, எல்லாப் பண்பாடுகளிலும் புலம்பலுக்குப் பொதுவான கருத்தாகிய துன்பம் மிக்க பின்னணி அடிக்கடி விவரிக்கப்படும். நிகழ்கால மரணம், பேரழிவு ஆகியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சியை எடுத்துக்கூற, கடந்தகால மகிழ்ச்சிமிக்க மகிமை பற்றிய நினைவுகள் உதவியாக அமைகின்றன. சான்றாக, "அந்தோ! மக்கள் மிகுந்த மாநகர் தனியளாய் அமர்ந்தனளே! (1:1). 1, 2, 4-ஆவது பாடல்கள்- பொதுப்புலம்பல்களாகும். சவ ஊர்வலப் பண்புகளையும் கொண்டுள்ளன. அவற்றில் மக்கள் யாவேயை ஆவேசமாய்க் கூவி அழைத்தலையும், மனமார்ந்த குற்ற அறிவிப்புகளையும், மிக விரைவாக உதவி தரும்படி மன்றாடுதலையும் காணலாம். ஐந்தாவது பாடல்- தெளிவாக ஒரு குழுச் செபமாகும். மூன்றாவது பாடல்- எரேமியாவின் சுயவாழ்க்கை அறிக்கைகள்போலவும் (எரே 11:118-12; 15:10-12; 17:12-18; 18:23; 20:7-18), யோபுவின் புலம்பல்களைப் போலவும் (யோபு 16:8-17; 17:6-9; 30:123) தனிநபர்ப் பண்புடையது. ஆனால், நாட்டின் பேரழிவைக் கண்முன் கொண்டு வருகிறது. அதனால் இஸ்ராயேலின் பொதுத் துக்கத்தைப் பிரதிபலிக்கிறது. குழு ஆளாக யூதா சித்தரிக்கப்படுகிறது. மூன்றாவது பாடல்- யோபு நூலைத் தழுவியுள்ளாதாகத் தெரிகிறது. அப்படியானால் இப்பாடல் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். ஆனால், ஏன் யோபு நூல் இந்தப் பாடலைத் தழுவியிருக்கக்கூடாது? இப்பிரச்சினை ஆய்வுக்குரியதாகும்.

இப்பாடல்களின் இலக்கிய மதிப்பீடு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்குப் பின் இன்றும் அவை எழுப்பும் ஆழ்ந்த உணர்வுகள், இன்றும் உள்ளத்தை உருக்கவல்லன. அவற்றில் காணப்படும் உருவகங்களை நாம் இன்றும் வியக்கலாம். இறுதி அதிகாரம்- துன்புற்று நொந்துபோன இதயத்திலிருந்து எழும், மிகவும் உள்ளத்தை அறுக்கும், அழுகுரலுக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

இப்பாடல்களில் எவ்வித நாடகப்பாணி முன்னேற்றமும் இல்லை. ஒவ்வொரு பாடலும் தனித்து நிற்கலாம். இந்நூல் எருசலேம் வீழ்ச்சியை நினைவுகூரும் வருடாந்திர நோன்பு நாளில் பாடப்படுவதற்காக அமைக்கப்பட்ட புலம்பல்களின் தொகுப்பாகும் என்று கருதுவதுமேல் (எரே 41:4-5; செக் 7:1-5). இவை, பல பாடல்கள் அடங்கிய பெருந்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டதால், இஸ்ராயேலின் தூய்மைப்படுத்தப்பட்ட மனநிலையையும், அவர்களது ஆழ்ந்த துன்பத்தையும் அசைக்கமுடியாத விசுவாசத்தையும் எடுத்துக் கூறுவதாகக் கருதப்பட்டு, மக்களுக்கு விருப்பமானதாக ஆகியிருக்க வேண்டும். இறுதிப் பாடல் அகரவரிசை அமைப்புடைய முதல் நான்கு பாடல்களுக்குப் பின்னுரையாகவும் சுருக்கமாகவும் தெரிகிறது; தொகுப்பை முழுமைப்படுத்துவதகாவும் காலத்துக்கு ஒத்ததாக ஆக்கும் முயற்சியுமாய் அமைந்துள்ளது.

தொகுப்புமுறை, முரண்தொடர் அணி அடிப்படையில் அமைந்துள்ளது. 1, 5-ஆம் அதிகாரங்கள்- அழிவைச் சுருக்கித் தருகின்றன. 2, 4-ஆவது அதிகாரங்கள்- மரணம், அழிவு பற்றிய விவரங்களை விரிவாக எடுத்துக்கூறுகின்றன. அகர வரிசையைக் கடுமையாகப் பின்பற்றும் மூன்றாவது அதிகாரம்- வடிவத்திலும், பொருளடக்கத்திலும் இஸ்ராயேல்பால் இறைவன் கொண்டுள்ள நன்மைத் தனத்தில் நம்பிக்கையை வலியுறுத்துகிறது. இவ்வதிகாரம்- திருகுமுனை இயல்புடைய அமைப்பைக் கொண்டுள்ளது. இறையியல் நோக்கில் முக்கியத்துவம் உடைய

அடிகள், பாடல் அமைப்பில் மையம் வகிக்கின்றன. அதன் விளைவாக முழுத்தொகுப்புக்கும் மையம் வகிக்கின்றன (3:31-36). தொகுப்பின் விளைவு, முதற்பகுதி மூன்றாம் அதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது. பிற்பகுதி அதிலிருந்து பிரிந்து செல்கிறது. அதன் விளைவாக நூலின் மையப்பகுதி அதன் உச்சநிலையாக அமைந்துள்ளது.

**6. ஆசிரியர்:** இந்நூலை எரேமியா எழுதினார் என்ற யூதப் பாரம்பரியம், எழுபதுநூல் காலத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. வுல்காத்தா வாசகமும் இதே கருத்தைச் சுட்டுகிறது. தால்மூது பாரம்பரியமும், கிரேக்க, இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களும் இதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நூல் முழுவதும் எரேமியாவின் செல்வாக்குப் பரவிக்கிடக்கிறது. கன்னிப்பெண், சீயோனின் மகள்: புல 1:15; 2:13; எரே 8:21.22; 14:17; நுகத்தடிபூட்டப்பட்ட கழுத்து: புல 1:14; எரே 27:2; போலி இறைவாக்கினர், அர்ச்சகர்களின் அக்கிரமம்: புல 1:14; 4:13-15; எரே 2:8; 5:32; 14:13; 23:10.40;.... இந்நூலுக்கு ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு எரேமியாதான்-என்ற பதில் இயல்பாகவே அமைகிறது. இப்பதிலுக்கு மற்றுமொரு தூண்டுதலாக 2 நாள் 35:25 அமைகிறது. இதன் அடிப்படையில் இப்பாரம்பரியம் தோன்றியிருக்கலாம். நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகளுக்கு மிகவும் நெருங்கிய முறையிலும் அவற்றின் துன்பங்களிலும் பங்கு கொண்ட சாட்சி எரேமியா தானே! எழுபதுநூல் பாரம்பரியத்தைச் சேர்ந்தப் யூதப் பாரம்பரியம், தார்கும், தால்மூது ஆகியவை புலம்பல்நூல் எரேமியாவால்தான் எழுதப்பட்டது என்று கூறுகின்றன. தொடக்க காலத்தில் எபிரேயத்திலும் இந்நூல் எரேமியாவுக்குப்பின் இடம் பெற்றிருந்தது என்பதற்கு ஓரிசன், கில்லரி, எப்பிபான், எரோனிமு ஆகியோர் சான்று கூறுவதாகத் தெரிகிறது. பிற்காலத்தில் வழிபாட்டுக் காரணங்களுக்காக யூதத் திருமுறைப்பட்டியலில் இடமாற்றம் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

நவீன ஆய்வாளர்கள் மேற்கூறப்பட்ட பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மேலும், முன்பு கூறப்பட்ட வாதங்களும் உறுதியானவை அல்ல. உள்ளார்ந்த ஆய்வுகள் பல பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. இவை எரேமியா நூலும், புலம்பல் நூலும் தொடர்புடையன என்ற கருத்தைப் பலவீனப்படுத்துகின்றன.

1) முதல் அதிகாரத்தில், எபிரேய எழுத்துக்கள் சாதாரண வரிசையில் வருகின்றன. அடுத்து மூன்று அதிகாரங்களில் பே (Pe) என்ற எழுத்து ஆயின் (Ain) என்ற எழுத்துக்கு முன் வருகிறது. இந்த வேறுபாடு, இரு பகுதிகளின் ஆசிரியர்கள் வேறுபட்டவர்கள் என்று சுட்டுவதாகத் தெரிகிறது. எபிரேய எழுத்துக்களை வரிசைப்படுத்துவதில் எபிரேயக் கவிகள் ஓரளவு சுதந்திரம் கொண்டிருந்தனரா? 2) புல 2:9-இல் வரும் "அவள் இறைவாக்கினரும் ஆண்டவரின் காட்சி பெறவில்லை" என்ற குறைபாடு இரண்டாவது அதிகாரத்தின் ஆசிரியராக எரேமியா இருக்க முடியாது என்று சுட்டுகிறது. ஏனெனில், ஆண்டவரது உண்மையான இறைவாக்கினராக எரேமியா விளங்கினார் 3) எரேமியா எகிப்திலிருந்து உதவியை எதிர்பார்க்கவில்லை. மாறாக, புல 4:17 எகிப்திலிருந்து உதவியை எதிர்பார்த்தவர்களுள் ஒருவராக ஆசிரியரைக் காட்டுகிறது. இதை எரேமியா கூறியிருக்கமுடியாது. 4) புல 4:20-இல் ஆசிரியர் அரசன் செதேக்கியாவைப் பற்றி மரியாதையாகக் குறிப்பிடுகிறார். ஆனால், இவ்வரசனைப்பற்றித் தமது நூலில் எரேமியா இழிவாகப் பேசுகிறார் (எரே 24:8-10). 5) புலம்பல் நூலில் வரும் சொற்கள் எரேமியா நூலில் வரும் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன. மேலும் புலம்பல்நூல்-பாடல் வடிவிலும், எரேமியாவின் நூல்- உரைநடையிலும் அமைந்துள்ளன. புலம்பல் நூலில் வருவது போன்ற, கடினமான, செயற்கையான பாடல் வடிவை எரேமியா பயன்படுத்தியிருப்பாரா? 6) குழு வினைக்கோட்பாட்டை எரேமியா போற்றியிருக்கக் கூடுமா? (புல 5:7; எரே 31:29). 7) எருசலே மின்

அழிவுக்குப்பின் எகிப்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படுமுன் சில வாரங்களே எரேமியா யூதாவில் தங்கினார். அப்போது எரேமியா தமது நூலில் வெளிப்படுத்தும் உணர்வுகளும் (எரே 39-43), புலம்பல் நூலில் வரும் உணர்வுகளிலிருந்து வேறுபடுகின்றன. 8) 2 நாள் 35:25, யோசியா அரசன் கி.மு. 609-இல் இறந்தபோது பாடிய இரங்கற்பாவைக் குறிக்கிறது. நாளாகமக் கூற்றுக்கும், புலம்பல் நூலுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்பது மிகவும் ஐயத்திற்குரியது. ஏனெனில், புலம்பல் நூலில் யோசியாவின் மரணம் பற்றிய எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. இந்நூல் கி.மு. 597-இலும் அதற்குப் பின்னும் வந்த பேரழிவுகளைப் பற்றியே பேசுகிறது. 9) எசேக்கியேல், இரண்டாம் எசாயா ஆகிய நூல்களின் சுவடுகள் இந்நூலில் காணப்படுகின்றன. இவை எரேமியாதான் இந்நூலை எழுதினார் என்பதற்கு மாறாக அமைகின்றன. 10) இந்நூலை எரேமியா எழுதியதாக எழுபது நூல் இலத்தீன் வாசகங்களிலும், சிக்ஸ்டோகிளமந்து பதிப்பிலும் காணப்பட்டாலும், இத்தகைய குறிப்பு எபிரேய விவிலியத்தில் காணப்படவில்லை. அதில் எரேமியா நூலுக்குப்பின் அடுத்துப் புலம்பல்நூல் இடம் பெறவில்லை. மாறாக, மூன்றாவது தொகுப்பான நூல்கள் தொகுப்பில் இடம் பெறுகிறது. புலம்பல் நூலுக்கு எரேமியா ஆசிரியர் என்றால், அஃது எரேமியா நூலோடு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இக்காரணங்களுக்காக எரேமியாதான் புலம்பல் நூலை எழுதினார் என்ற பாரம்பரியம், இப்போது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்நூல் எபிரேய விவிலியத்தில் கொண்டிருக்கும் இடமே, அதாவது நூல்கள் என்ற தொகுப்பில் ஒன்றாக இருப்பதுதான் இந்நூலுக்கு உரிய இடம் என்று ஏற்றுக்கொள்வர். பின் யார்தான் இந்நூலை எழுதியது? இவரைப் பற்றி அதிகம் கூறுவதற்கில்லை. ஆசிரியர் எரேமியாவோடு நடையிலும் மனப்போக்கிலும் ஓரளவு உறவு கொண்டிருப்பதால், அவர் எரேமியா காலத்தவராக இருக்கலாம். ரூடால்பு என்ற அறிஞர், இந்நூலின் ஆசிரியர் செதேக்கியா போரிட்டபோது அதில் பங்கு பெற்ற படையைச் சேர்ந்தவராகவோ, ஓர் அரசியல்வாதியாகவோ இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார் (புல 4:19). எது எப்படியிருந்தாலும் ஆசிரியர் தமது உணர்வுகளை விவரிப்பதன்வழியாக எருசலேமின் அழிவால் ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கும் மக்களில் ஒருவராக இந்நூலை எழுதுகிறார்.

அடுத்து இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினாரா, அல்லது பலர் எழுதினாரா? என்பது கேள்வி. யூதாவின் பேரிடர் மிக்க காலத்தில் வாழ்ந்த ஒருவரே இந்நூலை எழுதினார் என்பர் சிலர். இக்கருத்துக்குச் சார்பாக –முதல் அதிகாரம், தனித்து நிற்பதுபோலத் தோன்றினாலும், கூர்ந்து ஆராயுங்கால், இந்த அதிகாரத்திற்கும் நூலின் பிற பகுதிகளுக்கும் நெருங்கிய உறவு இருப்பதாகக் காண்கின்றனர். மூன்றாம் அதிகாரம், கடுமையாக அகரவரிசையில் அமைந்து, ஆசிரியரது சொந்த அனுபவத்தைக் கொண்டிருப்பதால், சமூக நோக்குடைய 1, 2-ஆவது அதிகாரங்களிலிருந்து அது வேறுபடுத்தப்படுகிறது. ஆனால், இது தேவையற்றதாகும். நூலில் காணப்படும் பொதுவான நடை, சொற்றொகுதி, பொருளடக்கம் ஆகியவை இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினார் என்பதற்கு ஆதரவு அளிக்கின்றன என்பர். அழுத்தத்தில் காணப்படும் வேறுபாடுகள் ஒவ்வொரு பாடலும் தோன்றிய காலம், சூழ்நிலை ஆகியவற்றில் உள்ள வேறுபாட்டின் விளைவாகும் என்பர்.

ஆனால், பாடல்களில் காணப்படும் வேறுபாடுகள், இலக்கியத் தழுவல்கள் பற்றிய சிக்கல்கள் ஆகியவற்றை ஆராயும்போது, இந்நூலுக்கு ஆசிரியர்கள் பலர் இருந்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்நூலை ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்று கருதும் ரூடால்பு என்பவர்கூட, முதல் பாடல் கி.மு. 597-இல் ஒரு தனிப்பட்ட ஆசிரியரால் எழுதப்பட்டது என்று கூறக் கட்டாயப்படுத்தப்படுகிறார். வழிபாட்டில்

இப்பாடல்கள் பயன்பட்டன. இஃது, இவை காலப்போக்கில் ஒரே நூலாகத் தொகுக்கப் படுவதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம்.

7. **காலம்:** நூல் மையக் கருத்தாகக் கொண்டிருக்கும் நிகழ்ச்சியான கி.மு. 587-86-இல் நடந்த எருசலேமின் அழிவின் காலத்திற்கு அதிகம் பின்தள்ளி ,நூல் தோன்றியிருக்கமுடியாது என்று பொதுவாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். கி.மு. 597-க்குப் பின்னும், விடுதலைகிடைத்த 538-க்கு முன்னும் இடைப்பட்ட காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கவேண்டும். இவர்கள் கருத்துப்படி முதல் பாடல், கி.மு. 597-இல் நெபுகத்னேசருக்கு எருசலேம் பணிந்தபோது எழுதப்பட்டதாகும். இதன் ஆசிரியர் 597-இல் நடந்த பேரழிவை அனுபவித்திருந்தார். 587-இல் நடந்த பேரழிவை இன்னும் அனுபவிக்கவில்லை. இரண்டாவது, நான்காவது பாடல்கள் 587-இல் நடந்த பேரழிவின் துன்ப அனுபவத்தைச் சித்தரிக்கின்றன. இப்பாடல்கள்- காலத்தால் முந்தியவை, நிகழ்ச்சிகளுக்கு மிக நெருங்கியவை. மூன்றாவது, ஐந்தாவது பாடல்கள்- பிற்காலத்தில் தோன்றியவையாகும். நகரத்தின் அழிவு இரண்டாம் முறை நாடுகடத்தப்படுதல் ஆகியவற்றிற்குப்பின் வந்த குழப்பம், வெறுமை நிலை, அரசியல் கொடுமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. வழிபாட்டுத் தோற்றமுடைய இந்நூல் எரே 41:5; செக் 7:3-இல் கூறப்படுவது போல் 587-இல் நடந்த பேரழிவை ஆண்டுதோறும் நினைவுகூர்தலுக்காக எழுதப்பட்டிருக்கலாம்.

8. **வரலாற்று, சமயப்பின்னணி:** புலம்பல் நூலில் நேரடியான வரலாற்றுச் சான்று எதுவுமில்லை. ஏதோம் என்று ஒரு பெயர் மட்டும் குறிக்கப்படுகிறது (4:2). ஆனால், இந்நூலில் காணப்படும் விவரிப்புகள் யூதாவின் இறுதிக்காலத்தில் நடந்ததாக 2-ஆம் அரசர்கள், எரேமியா ஆகிய நூல்களில் காணப்படும் விவரிப்புகளோடு பெருமளவு ஒத்துப்போகின்றன; அவற்றை நிறைவு செய்கின்றன. முற்றுகை (2 அர 25:1-2; புல 2:22; 3:5.7); பஞ்சம் (2அர 25:3; எரே 37:21; புல 1:11.19; 2:11-12.19-20; 4:4-5.9-10); அரசன் ஓடிப்போதல் (2 அர 24:4-7; புல 1:3.6; 2:2; 4:19-20); ஆலயம் கொள்ளையடிக்கப்படுதல் (2 அர 25:13-15; புல 1:10; 2:6-7); ஆலயம், அரச மாளிகை முதலியன எரியூட்டப்பெறுதல் (2 அர 25:8-9; புல 2:3-5; 4:11; 5:18); நகரச் சுவர்கள் அழிக்கப்படுதல் (2 அர 25:10; புல 2:7-9); தலைவர்கள் கொல்லப்படுதல் (2 அர 25:18-21; எரே 39:6; புல 1:15; 2:2.20; 4:16); குடிமக்கள் நாடுகடத்தப்படுதல் (2 அர 25:11-12; புல 1:1.4-5.18; 2:9.14; 3:2. 19; 4:22; 5:2); அன்னிய உதவியை எதிர்பார்த்தலும், அது கிடைக்காமல் போனதும் (எரே 27:1-11; 37:5-10; புல 4:17; 5:6); யூதாவின் நிலையற்ற அரசியல் நட்பு நாடுகள் (2 அர 24:2; எரே 40:14; புல 1:2.8.17.19); யூதா ஒரு சில மாநிலமாதல் (2 அர 25:22.24-25; புல 1:1; 5:8-9). இவ்வாறு இந்நூல் கி.மு. 609-586-க்கு இடைப்பட்ட காலம் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுக்கிறது. மேலெழுந்த வாரியாக வாசிப்பவர்களுக்குக்கூட முற்றுகை, பஞ்சம், திடீர்மரணம், அவமானம், அரசியல் சமய வெறுமை உணர்வு ஆகிய அனுபவம் அளிக்கக்கூடியது இந்நூல். இது வெறும் நிகழ்ச்சியுரை அன்று. இந்நூலின் பாடல் வடிவம் எருசலேமின் அழிவைப் பற்றி மிகுந்த தாக்கம் விளைவிக்கக் கூடியது. யோபு நூலைப்போல், இந்நூல் ஒரு புதிரான பேரழிவு பற்றிய பாடல் வடிவுடைய சிந்தனைத் தொடராகும்.

கி.மு. 609-இலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் யூதாவின் விசுவாசத்தில் ஓர் இக்கட்டான நிலையை உண்டாக்கின. யூதாவில் நிலவிய கலப்பு மதம், பொதுவான சீர்கேடு ஆகியவற்றிற்காக, வட வரசைப்போல் அஃது அவலநிலையை அடைந்திருக்க வேண்டும். ஆனால், அசீரியப் படையெடுப்பிலிருந்து தப்பி யூதா நீண்ட காலம் இருந்தது. இப்போது உபாகம நூலின்படி ஒரு சீர்திருத்தத்தை யோசியா அரசர் செயல்படுத்தினார். இது மகிழ்ச்சிமிக்க

வருங்காலத்திற்கும் நாட்டின் பெருக்கத்திற்கும் அடிப்படை அமைத்தது. இச்சீர்திருத்தம் வருங்காலத்தை உறுதிப்படுத்த ஏதுவானதாகும். ஆலயம் மைய முக்கியத்துவம் பெற்றது. பிற புனித இடங்களும், கலப்பு மதங்களும் அழிக்கப்பட்டன. மோசே சட்டம் வலியுறுத்தப்பட்டது. அச்சட்டதிற்கு ஏற்றவாறு அரசியலும் அமைக்கப்பட்டது. சீர்திருத்த நூல்கள் பெருகின. பற்றுறுதியின்மையை யாவே நேர்மையாய்த் தண்டித்தால், இச்சீர்திருத்தத்தில் காட்டப்பட்ட பற்றுறுதிக்கு அவர் நேர்மையாய்ச் சன்மானம் அளிக்க வேண்டும். யோசியாவின் சீர்திருத்த இயக்கம் யாவேயின்பால் கொண்ட பற்றுறுதியை எடுத்துக்காட்டும் அசாதாரண நிகழ்ச்சியாகும். இது சலுகைகளை அளிக்கும் என்றும், அரசமரபையும் நாட்டையும் நிலைப்படுத்தும் என்றும், தாவீது, சாலமோன் காலத்தை மீண்டும் கொண்டு வரும் என்றும் மக்களை நம்பிக்கையோடு எதிர்பார்க்கச் செய்தது.

ஆனால், இச்சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை, மெகிதோவில் யோசியா இறந்தபோது அழிந்தது. அங்கு யூதா தமது அரசனை இழந்து, எகிப்துக்கு அடிமையானது. போரில் ஈடுபட்டிருந்த வல்லரசுகளால் இச்சிறுநாடு அலைக்கழிக்கப்பட்டது. யூதா பாபிலோனின் ஆதிக்கத்திற்குள்ளானது. எரேமியாவின் எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் அரசன் யோயாக்கிம் பாபிலோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். பாபிலோன் உறுதியாக, விரைவாகச் செயல்பட்டது. கி.மு. 597-இல் யூதா நெபுகத்னேசரிடம் சரணடைந்தது. மூன்று மாதங்களுக்குப்பின் அவனது மகன் யோயாக்கின் அரசனானான். இவனும் தலைமைக் குடிமக்களும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவனது சிற்றப்பனான செதேக்கியாமை யூதாவிற்கு அரசனாக்கினர் பாபிலோனியர்கள். இவன் ஒரு சமயம் எரேமியாவுக்குச் செவிமடுப்பதும், மற்றொரு சமயம் எகிப்துக்குச் சார்பான கட்சியினர்களுக்குச் செவிமடுப்பதுமாய் ஊசலாடினான். பாபிலோன் ஆட்சியின்கீழ் பத்து ஆண்டுகளுக்குக் கப்பம்கட்டும் நாடாக இருந்தபின், இறுதியில் எகிப்து கட்சியினருக்குச் செவிமடுத்து, பாபிலோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். பாபிலோனின் பழிவாங்குதல் விரைவாக இருந்தது. ஆனால், யூதா இனிமேல் தலைதூக்க முடியாமல் அதை முழுவதும் அழித்தது. நகர் முற்றுகையிடப்பட்டது; தரைமட்டமாக அழிக்கப்பட்டது. ஆலயம் அழிக்கப்பட்டுப் பாழ்படுத்தப்பட்டது. மக்கள் மற்றுமொரு முறை நாடு கடத்தப்பட்டனர். பாரம்பரியப் போதகத்தைப் பின்பற்ற யோசியா செய்த முயற்சியால் எப்பயனும் ஏற்படவில்லை. உலக முடிவுபோல் தோன்றியது. மக்களின் விசுவாசம் தளர்ச்சியுற்றது. ஐயப்பாடுகள் எழுந்தன.

நடக்கமுடியாது என்று நம்பியது, நடந்து விட்டது. யாவேயின் புனித தளமாகிய பரிசுத்த நகரமும், ஆலயமும் அழிக்கப்பட்டு விட்டன. யூதாவின் குடிமக்கள் சிதறடிக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். நாட்டில் அன்னியர் குடியேறிவிட்டனர். யாவே தமது வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கம் தவறி விட்டாரா? அல்லது தமது மக்களை மீட்கச் சக்தியற்றுப் போய்விட்டாரா? இஸ்ராயேலை வெற்றிகொண்ட பிற இன அரசுகளைவிட ஆற்றல் குறைந்தவர்தானா அவர்? யாவே வெறும் பூஜ்யம்தானா? அப்படியானால், யூதாவின் அழிவு- வெற்றி கொண்டவர்களோடு ஒத்துப்போய் அவர்களின் தேவர்களுக்குப் பலி செலுத்தியவர்களுடைய செயல் சரியானது என்று காட்டவில்லையா? இவ்வாறு மக்களிடையே பல ஐயங்கள் எழுந்தன. மக்கள் விசுவாசம் இழந்து, அவநம்பிக்கையுற்று அவதியுற்றனர்.

ஆனால், இறைவனுடைய வாக்குறுதிகள் அவருடைய மக்களின் நடத்தையைப் பொறுத்தது, நிபந்தனைக்குரியது என்று உணர்ந்தவர்களும் இருந்தனர். இவர்கள் எரேமியா மீண்டும் மீண்டும் கூறிய எச்சரிக்கைகளை நினைவுகூர்ந்தனர். அப்படிப்பட்டவர்களுள் புலம்பல் நூல் ஆசிரியரும்

ஒருவர். புதிய பாபிலோனியர்களால் கி.மு. 587-86-இல் எருசலேம் அழிக்கப்பட்டதையும் அப்போது முற்றுகைக்கு முன்னும், அது நடந்த போதும், அதன் பின்னும் மக்கள் அனுபவித்த துன்பங்களைப் பற்றியும் ஆசிரியர் புலம்புகிறார். ஆனால், அவரது பாடல் வெறும் நம்பிக்கையற்ற புலம்பலன்று. நினிவே, அதன் கடவுளர் ஆகியோரின் வீழ்ச்சியைப் பற்றி அசீரியர்கள் பாடிய புலம்பல் போல், இவரது புலம்பல் முழுவதும் நம்பிக்கையற்றதன்று. இவர் நகரத்தின் அழிவு, அவமதிக்கப்பட்ட அரசன், இறந்துபோன குடிமக்கள், நாடு கடத்தப்பட்டவர்கள், நாட்டின் தேவைகள் ஆகியவை பற்றிப் புலம்பினாலும், அவர் அவநம்பிக்கை முடிவைக் கடந்து செல்கிறார். மக்களுக்கு அரியதோர் பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறார். அதைப் போதகம் என்ற தலைப்பின்கீழ்க் காண்போம்.

**9. திட்டம்:**

அதிகாரங்களின் எண்ணிக்கைக்கேற்ப இந்நூலை ஐந்து பாடல் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I. **முதலாம்** : கி.மு. 597-இல் புலம்பல் நடந்த நிகழ்ச்சிகள் (1:1-22) பற்றியது.

அ) 1:1-11 : எருசலேமின் அவநிலை.

ஆ)1:12-22 : எருசலேமின் மன்றாட்டு.

II. **இரண்டாம்** : 587-86-இல் நடந்த புலம்பல் நிகழ்ச்சிகள் பற்றியது. (2:1-22)

அ) 2:1-12 : யாவேயே அழிவை நிகழ்த்துகிறார்.

ஆ)2:13-17 : எருசலேமை நோக்கிச் சுவக்குரல்.

இ) 2:18-22 : யாவேயிடம் மன்றாட எருசலேமுக்கு அழைப்பு.

III. **மூன்றாம்** : ஆசிரியரது துன்ப புலம்பல் மிக்க சொந்த அனுபவம் (3:1-66)

அ) 3:1-21 : ஆசிரியரின் கசப்பான அனுபவம்.

ஆ) 3:22-4 : அவரது நம்பிக்கை.

இ) 3:43-66 : தமக்காகவும், நாட்டுக்காகவும் அவர் மன்றாடுதல்.

IV. **நான்காம்** : 587-86-இல் நடந்த புலம்பல் நிகழ்ச்சிகள் பற்றிய (4:1-22) மற்றுமொரு புலம்பல்.

அ) 4:1-11 : எருசேலமின் மக்கள்.

ஆ)4:12-16 : அதன் அர்ச்சகர்களும் இறைவாக்கினர்களும்.

இ) 4:17-20 : அதன் அரசன்.

ஈ) 4:21-22 : யூதாவும் ஏதோமும்.

V. **ஐந்தாம்** : பின் விளைவுகள். புலம்பல் (5:1-22)

அ) 5:1-18 : யூதாவில் எஞ்சியவர்களின் அவலநிலை.

ஆ) 5:19-22 : நாடும் சமூகமும் அமைக்கப்பட மன்றாட்டு.

10. **போதகம்:** வரலாற்று விசுவாசம், வரலாற்று உண்மை ஆகியவற்றிற்கிடையே காணப்படும் முரண்பாடு என்னும் அச்சைச் சுற்றி, புலம்பல் நூலின் சிந்தனைப்போக்கு சுழல்கிறது. இது காலந்தோறும் சமயத்தை எதிர்கொள்ளும் பிரச்சனையானாலும், கி.மு. 587-86-க்குப்பின் இஸ்ராயேலின் வரலாற்றில் ஏற்பட்ட கடுமையான மாற்றம் இப்பிரச்சனைக்குப் புதிய கோணத்தை அளிக்கிறது. ஒரு தனிப்பட்ட அவசரத் தன்மையையும் அளிக்கிறது. சுருக்கமாக, புலம்பல் நூலில் பல கேள்விகளை எழுப்புகிறது. கி.மு. 609-586-க்குப்பின் இடையில் இஸ்ராயேல்மேல் விழுந்த பயங்கரப் பேரிடர்களின் பொருள் என்ன? அதாவது, யோசியா அரசின் அகால மரணம் தொடங்கி, அடிமை ஊழியம், கிளர்ச்சி, முற்றுகை, பஞ்சம் ஆகியவை வழியாக நகரின் இழிநிலைக்கும், நாட்டின் அழிவுக்கும் இட்டுச் சென்ற இந்த மாற்றத்தின் பொருள் என்ன? இவை யாவேயின் திருவுளத்தை எடுத்துக்கூறுவதாக உண்மையிலேயே புரிந்து கொள்ளக்கூடுமா? அப்படியானால் இஸ்ராயேலின் நிகழ்காலப் பாகம் என்ன? யாவே இஸ்ராயேலுக்கு இன்னும் வேறு திட்டம்

வைத்திரக்கிறாரா? தமது மக்களை இரக்கமற்ற முறையில் தண்டித்துத் தூய்மைப்படுத்திய இந்த இறைவனுக்கு, இஸ்ராயேல் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும்? புலம்பல் நூல், மனிதர்களாலும், இறைவனாலும் கைவிடப்பட்ட நிலை பற்றிய ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. இத்துன்பங்கள், வரலாற்றில் இறைவனது நோக்கங்களுக்கும், அதன் விளைவாகத் தவிர்க்க முடியாத விதத்தில் விசுவாச வாழ்வுக்கும் அச்சுறுத்தல்களாக அமைகின்றன என்றும் எடுத்துக் கூறுகிறது.

நூல் முழுவதும் கசப்பான உண்மைத் தன்மை பரவிக்கிடக்கிறது. படுகொலை, பஞ்சம், அழிவு ஆகியவற்றை விவரிப்பதில் எந்த முயற்சியும் தவிர்க்கப்படவில்லை. மெலிந்து இறக்கும் குழந்தைகளின் அவலநிலை இரங்கத்தக்க முறையில் செதுக்கப்பட்டுள்ளது. மிகக்கொடுமையான பசியால் தூண்டப்பட்டு, மனிதனை மனிதன் உண்ணுதல், ஆலயத்திலேயே குருக்கள் கொல்லப்படுதல் முதலியவை இஸ்ராயேல்பால் இறைவனது நோக்கத்திற்கு மறுப்பாக ஆசிரியரால் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆன்மீக ஆறுதலற்ற கடும்வேதனையால் பாடல்கள் துடிக்கின்றன. ஆயினும், நூல் முழுவதும் செபவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அது துயர்மிக்க வேண்டுதலுக்கு வழிவகுக்கிறது. விவிலியச் செபத்தின் தன்மை ஆற்றலோடும், வாய்மையோடும் எடுத்துக்கூறப்படுகிறது. இந்நூல் அறிவற்ற முறையில் துக்கத்தை வெளிக்காட்டும் புலம்பல் அன்று. மாறாக, யாவேயின் என்றும் தொடரும் ஆற்றல், இரக்கம், நீதி ஆகியவை பற்றிய உறுதியான விசுவாச அறிக்கையாகும். இஸ்ராயேல் மறைந்துவிட்டாலும் அது தேர்ந்தெடுக்கப்பட்டதில் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

மேலும், இந்நூலில் செபத்தன்மையுடைய முறைப்பாட்டோடு, ஆழ்ந்த இறைவாக்குச் சிந்தனைப்போக்கும் அமைந்துள்ளது. புலம்பல் நூல் அழிவு பற்றிய இறைவாக்குகளை எண்பிக்கிறது. எருசலேம் தனது பாவங்களுக்காகவே தண்டிக்கப்பட்டுள்ளது. அதன் கதி கொடுமை மிக்கதானாலும், நேர்மையானதே! தகுதியானதே!! எதிரிக்கு விரோதமாக ஒன்றும் செய்யாமல், அமைதியாக இறைவனில் நம்பிக்கை வைக்கும்படி ஆசிரியர் மக்களுக்கு ஆலோசனை கூறுகிறார். நாடுகடத்தப்பட்ட யூதர்களுக்குச் சோதனையாக அமைந்த கலப்புமதம், பல தேவர்களை வணங்குதல் ஆகியவற்றை உறுதியாக நிராகரிக்கிறார் (எசா 57: எரே 44; எசே 8). யாவேயிடம் வரம்பெற்ற முழுமையான பிரமாணிக்கத்தை வெளிப்படுத்துகிறார். பிரமாணிக்கமற்ற இறைவாக்கினர்களையும் அர்ச்சகர்களையும் கண்டிக்கிறார். இந்த அலுவல்களைத் தொழிலாகக் கொண்ட தலைவர்களின்றி யாவேயின் சமயம் தொடர்ந்து நிலைக்கக்கூடும் என்ற விசுவாசத்தில் உறுதியாக உள்ளார். இந்நூல், இறைவனின் உடன்படிக்கை அன்பில் நிலையான நம்பிக்கையை எடுத்துக்கூறுகிறது.

ஏனெனில், எருசலேமின் இறைவனாகிய யாவே இன்னும் வாழ்கிறார். அவர் நீதியும், இரக்கமும் மிக்கவர். யூதாவின் அழிவு, யாவே பலவீனர் என்றோ, யூதாவைக் காப்பாற்ற இயலாதவர் என்றோ, தமது மக்களைக் கைவிட்டுவிட்டார் என்றோ காட்டவில்லை. மாறாக, அவரே எருசலேமின் வீழ்ச்சியைச் செயல்படுத்துகிறார்; தமது மக்களை அழித்த சக்திகளை அவரே நடத்திச் செயல்படுத்துகிறார் (1:5.12-15; 2:1-8.17-20; 2:22; 3:1-18.43-45; 4:11). நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பேரழிவு அவரது அக்கறையின்மையின் விளைவோ, அவரது ஆற்றலின்மையின் விளைவோ அன்று. அது யாவேயின் நேர்மைமிக்க செயலாகும். மக்கள் மீண்டும் மீண்டும் செய்த பாவங்களுக்குரிய தண்டனையாகும் (1:5.8-14.18; 3:40-42; 4:6.13; 5:7.16).

இறைவாக்கினர்களின் கூற்றுகள் நிறைவேறுதலாகும். மக்களின் போலிப் பற்றுறுதியையும், நாட்டின் சமயம் பற்றிய குறுகிய மனப்போக்கையும், அதன் தொடர்ச்சியான பதித்ததையும் இறைவன் தண்டிக்கிறார். தண்டனையின் குறிக்கோள், அது குணமளிக்கும் மருந்தாகப் பயன்படவேண்டும் என்பதே; மனத்துக்கத்திற்கு அழைக்கிறது (3:9.40).

எருசலேமின் வீழ்ச்சி- யாவேயின் ஊமைத் தன்மைக்குச் சான்று என்றால், ஏதோ தற்செயலாக நடந்தது என்றால், அப்போது எருசலேம் அவநம்பிக்கைதான் படமுடியும். ஆனால், எருசலேமின் வீழ்ச்சி, யாவேயின் ஆற்றல் மிக்க சினத்திற்குச் சான்று என்றால்- அப்போது அஃது எருசலேமின் திருத்தம், நல்வாழ்வு ஆகியவற்றில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த, சொந்த அக்கறையின் அடையாளமாகும், சினம் இறையருளை உணர்த்தும் உருவகமாகும். யூதாவின்மேல் வந்த துன்பங்கள், அது மனந்திரும்பியபின் அதற்கு மேலான நலன் அளிக்கும்; அதனை மீண்டும் அமைக்கும் அருளுக்கு வழிவகுக்கும். மக்களுக்கு 'வருங்காலம்' இன்னும் தோன்றவில்லை யானாலும், அவர்கள் தங்கள் இறைவனைத் தொடர்ந்து நம்ப வேண்டும். விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவேண்டும். இந்த விடுதலை அவர்களது மனத்துக்கத்திற்கு விடையாகவும், இறைவாக்குறுதிகளின் இறுதி நிறைவேறுதலாகவும் கிடைக்கும். மக்கள் தங்கள் பாவங்களை ஏற்று அறிக்கையிடுவதும் யாவேயின் இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றில் நம்பிக்கை கொள்வதும் மட்டுமே அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும் (1:18; 3:21-26.40.58; 4:22; 5:20-22). ஏனெனில், இறைவன் நன்மைத் தன்மையுடையவர். ஆகவே, நம்பிக்கைக்கு இடமிருக்கிறது (1:21; 2:20; 3:19-24.31-33; 4:22-23; 5:1தொ. 19-22). இந்த நம்பிக்கைகளை ஏற்பதே, இஸ்ராயேல் சுதந்தர நாட்டு நிலையை இழந்தபின்னும் ஒரு விசுவாச மக்களாக நிலைத்திருக்க உதவின.

எபிரேயத்துவம் அழிந்து யூதத்துவம் தோன்றுவதற்கு இடையிலுள்ள இடைவெளியைப் புலம்பல் நூல் நிரப்புகிறது. பாவத்தின் பொறுப்பு, துன்பங்களால் வரும் பயிற்சியின் மதிப்பு, இறைவனின் வரையற்ற நீதி மற்றும் நிலையான அன்பு, அவரின் வழிகளில் ஆய்ந்தறிய முடியாத தன்மை, விசுவாசியின் வெல்ல முடியாத நம்பிக்கை, பொறுமையின் அவசியம் ஆகிய பற்றுக்கோள்கள் மூன்றாவது பாடலில், முக்கியமாக அதன் மையப்பகுதியில் (3:19-39) செறிந்து காணப்படுகின்றன. அரசியல் அழிவின் சாம்பலிலிருந்தும், இடிமானத்திலிருந்தும், இறந்து உயிர்த்தெழும் பறவை போல் உயிர் பெறவிருந்த யூத விசுவாசத்தில் இப்பற்றுக்கோள்கள் ஆதிக்கம் செலுத்தின. இஸ்ராயேலுக்கு இறைவன் குறித்திருக்கும் குறிக்கோள், அவரது அளவிடமுடியாத ஆனால் நம்பத்தகுந்த, அன்பிலும் இரக்கத்திலும் மட்டுமே அடித்தளமிடப்பட்டுள்ளது. துன்பங்களால் தூய்மைப்படுத்தப்பட்டு, நயப்படுத்தப்பட்டு, உயிர் பெற்றெழுந்த இஸ்ராயேலின் நம்பமுடியாத விசுவாசத்தை ஆர்வத்தோடு அறிவிக்கிறது இந்நூல். அதை யூதத்துவத்தின் வழிபாட்டில் அழிக்க முடியாத விதத்தில் எழுதி வைத்துள்ளது.

மனத்துக்கம், திருத்தம், மனந்திருந்துதல் ஆகியவை இந்நூலில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய கருத்துக்களாகும். இந்த உணர்வுகளைத் தங்கள் காலக் கிளர்ச்சி செய்யும் மக்களிடையே தூண்டியெழுப்பப் பெரிதும் முயன்றனர் எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள். ஆனால், வெற்றி பெற்றாரில்லை எனலாம். மாறாக, இப்பேரழிவுகள் வெற்றிபெற்றன; இவ்வுணர்வுகளை மக்களிடையே தூண்டி எழுப்புகின்றன. தண்டனை வீண் போகவில்லை. அது குணமளிக்கும் மருந்தாக அமைந்தது (எரே 30:1-17) என்று புலம்பல் நூல் உறுதியளிக்கிறது.

**11. புலம்பல் நூலும் வழிபாடும்:** இந்நூல் வழிபாட்டுச் சூழ்நிலையிலும் வழிபாட்டுக்காகவும் தோன்றியிருக்கலாம் என்று கூறினோம். துக்கம்,

உள்ளச்சோர்வு ஆகியவற்றை நீக்கித் தூய்மைப்படுத்துவதே புலம்பல் வழிபாட்டின் நோக்கமாகும். புலம்பல் நூலில் காணப்படும் அகரவரிசை அமைப்பும், ஓரளவு உரையாடல் அமைப்பும், சொற்கள் மீண்டும் மீண்டும் வருதலும், இந்நூலை வழிபாட்டிற்கு உகந்ததாக்குகின்றன. குறிப்பிட்ட நினைவு நாட்களில் இப்பாடல்கள் மக்கள்முன் பாடப்படுதல், ஒருவேளை சீயோன் குடிமக்கள், வழிப்போக்கர்கள் ஆகியோரின் பகுதிகளை வெவ்வேறு குழுவினர்கள் பாடுதல், அவர்களது முந்தைய வாழ்க்கை முறையைச் சேர்ந்த எல்லாவற்றையும் இழந்துவிட்ட மக்களின் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை வெளிக்கொட்டுவதற்குச் செயலாற்றல் மிக்க வடிகாலாக அமைந்திருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு யூத மக்கள், கி.மு. 587–86-இல் நிகழ்ந்த அழிவை நினைவுகூரும் விதத்தில், அபு மாதம் 9-ஆம் நாள் இந்நூல் வாசிக்கப்பட்டது. பிற்கால யூதர்களிடையே கி.பி. 70-இல் உரோமையரால் எருசலேம் அழிக்கப்பட்டு, யூதர்கள் சிதறிப்போனதை நினைவுகூரும் விதத்தில் செபக்கூடங்களில் இந்நூல் ஆண்டுதோறும் அபு மாதம் 9-ஆம் நாள் நோன்பின்போது வாசிக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபை, தனது புனித வாரக்கட்டளைச் செபத்தில் புலம்பல் நூலைப் பயன்படுத்துகிறது. கிறிஸ்துவின் துன்பங்களுக்கான தனது துக்கத்தை எடுத்துக்கூற, திருச்சபை விவிலியத்தில் வாசகங்களைத் தேடியபோது புலம்பல் நூலைத்தவிர, பொருத்தமானது எதையும் காணவில்லை. நாடு கடத்தப்பட்டபோதும் அதற்குப் பின்னும் யூதர்கள் கண்டதுபோல் (செக் 7:3; 8:19), கத்தோலிக்கத் திருச்சபையும் தனது மனவருத்தத்தையும், இறைவனது மாறுபடாத மீட்புத் திருவுளத்தில் கொண்டுள்ள விசுவாசத்தின் பலனையும், அவரது இரக்கத்தில் மிக்க நம்பிக்கை கொள்ளத் தூண்டுதலையும் புலம்பல்நூல் எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள், கி.மு. 587–86-இல் நடந்த அழிவு பற்றிய இந்நூலை, மீட்பு வரலாற்றில் பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்குச் சாற்றி, இதைத் தங்களது வழிபாட்டில் பயன்படுத்துகின்றன. இதைப் பின்பற்றி திருச்சபையும், குழுக்களும், தனிப்பட்டோரும் தங்கள் செபவாழ்வில் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளனர். திருச்சபை அல்லது தலக்குழுவின் பெயரால் அதைக் கவ்வியுள்ள இழப்பு உணர்வை எடுத்துக்கூற இந்நூலை வாசிக்கலாம். துன்புறும் நண்பனுக்காக மன்றாட -இந்நூல் அடிப்படையாக அமையலாம். கடும் சோதனைகளை அனுபவிக்கும்போது- ஒருவருடைய துன்ப, இழப்பு உணர்வுகளை எடுத்துக்கூற இந்நூல் பயன்படலாம். நமது அவல நிலையைச் செபத்தில் எடுத்துக்கூற உகந்த சொற்களை நாம் காணாமற்போகும் நிலையில், சங்கீத நூலைப்போல் புலம்பல் நூலும், இறையூக்கம் பெற்ற சொற்களை நமக்கு அளிக்கிறது.

12. **இக்காலத்திற்கு:** மனத்துக்கம், திருத்தம், மனந்திருந்துதல் முதலிய கருத்துக்கள் இந்நூலில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று கூறினோம். இவையே இந்நூல் நமக்கு இன்றும் அளிக்கும் செய்தியாகும். மனிதன், தனிநபர் என்ற அளவிலும், சமூகம் என்ற அளவிலும், தன்பாவங்களுக்குத் துக்கப்பட வேண்டும்; தனது வாழ்வை இறைவனுக்கு ஏற்புடைய முறையில் திருத்த வேண்டும்; இறைவனிடம் முழுமையாகத் திரும்ப வேண்டும். அப்போதுதான், மனுகுலத்திற்கு மீட்பு உண்டு; நற்காலம் உண்டு.

மற்றுமொரு பாடமும் உண்டு. எருசலேமின் அழிவுக்குப்பின் யூதாவில் எஞ்சியவர்களும், நாடு கடத்தப்பட்டவர்களும், கடந்த காலத்திற்காக ஏங்கினர்; நிகழ்காலத்திற்குரிய சவால்களை ஏற்கத் தயங்கினர்; வருங்காலத்தை எதிர்நோக்கப் படிப்படியாகத்தான் கற்றுக்கொண்டனர். இந்நிலையில்தான் 2-ஆம் வத்திக்கான் புதுப்பித்தலை நோக்கிச் செயல்பட்டது. ஆனால்

பின்பு நடந்த பல செயல்கள் புதுப்பித்தலை எடுத்துக்காட்டவில்லை. கடந்த காலத் திருச்சபையின் பல நல்ல செயல்கள் தவறிப்போய்விட்டன. விரும்பத்தகாதவைகள் தோன்றின. இதைக் கண்டு பலர், நம்பிக்கையிழந்து எல்லாம் பாழ்பட்டுப் போய்விட்டன என்று எண்ணுகின்றனர். புதிய அமைப்பிலும் பல நல்ல செயல்கள் உள்ளன. கடந்தகாலத் திருச்சபையில் எல்லாம் விரும்பத்தக்கவை அல்ல. ஆகவே, விசுவாசிகளின் கடமை கடந்த காலத் திருச்சபையிலிருந்து இப்போது இழந்து போனதாகத் தோன்றும் நல்ல செயல்களை மீண்டும் முயன்று அமைக்க வேண்டும்; அயராது உழைக்க வேண்டும்; போராட வேண்டும். அதே போன்று, புதிய அமைப்பில் உள்ள நல்ல செயல்களை மனமுவந்து ஏற்கவேண்டும். தீயவற்றை எதிர்த்துப் போராடத் துணியவேண்டும். இவ்வாறு, தீமையை எதிர்த்துப் போராடி, நல்லனவற்றையெல்லாம் ஏற்று, அவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய திருச்சபையை, புதிய யுகத்தை அமைக்க வேண்டும். இதுவே புலம்பல் நூல் நமக்கு விடும் சவாலாகும். அவநம்பிக்கைக்கும், ஏமாற்றத்திற்கும், இழப்பு உணர்வுக்கும் மீட்பு வரலாற்றில் இடமே இல்லை. ஏமாற்றம், இழப்பு உணர்வுகளுக்கு இடமளித்து ஒன்றுமே செய்யாமல் கையாலாகாதவர்களாய் இருப்பதுவே திருச்சபையில் பல தீய போக்குகள் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் காரணமாகின்றன. இந்நிலையைக் கைவிட்டு, தனது கருவூலத்திலிருந்து பழையனவும் புதியனவும் கொண்டுவரும் பொறுப்புள்ள மேற்பார்வையாளர்போல் நல்லவை எல்லாம் ஏற்று, உற்சாகத்தோடும் விடாமுயற்சியோடும் புதிய திருச்சபையை அமைக்க வேண்டும் என்று, புலம்பல் நூல் நமக்கு இன்று கற்பிக்கிறது. ஏனெனில், இறைவன் இன்றும் ஆட்சி செய்கிறார்; வரலாற்றின் ஆண்டவராக உள்ளார். ஆகவே, நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

## புலவர் (POET)

புலவர் என்பது பொயெத்தெஸ் என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு (அ.ப.17:28). கிரேக்கச் சொல்லின் சொற்பொருள் "செய்பவர்" என்பதாகும் (உரோ 2:13; யாக் 1:22-23.25; 4:11). அ.ப. 17:28-இல் பவுல் "உங்கள் புலவர்களில் சிலர்" எனக் குறிப்பிடுகிறார், அதாவது, "உங்கள் புலவர்களில் ஒருவர் கூறுவதுபோல் நாமும் அவரினமே" என்ற வாக்கியம் பின்னோக்காக "நாம் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும் அவரிலேதான்" என்ற வரியைக் குறிக்கிறதா, முன்னோக்காக "நாம் கடவுளின் இனத்தவராதலால்...." என்ற வரியைக் குறிக்கிறதா அல்லது இரண்டையும் குறிக்கிறது என்பதா என்பதைக் கிரேக்க வாசகம் சுட்டிக்காட்டவில்லை. "நாம் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் அவரிலேதான்" என்ற வாக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும், இந்த மேற்கோள், கிறிஸ்துவுக்குமுன் 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்பிமானிதெஸ் என்ற கிரேக்கப்புலவரின் மேற்கோள் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால், இக்கருத்தையும் அறிஞர்கள் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கருத்து ஸ்தோயிக்குத் தத்துவம் தோன்றுமுன் ஏற்பட்ட ஒரு கருத்து. அதாவது, மனிதன் 'சேயுசு எனும் கடவுளில்' வாழவில்லை; மாறாக, கடவுளின் வல்லமையால் வாழ்கிறான் என்பதே எப்பிமானிதெஸ் என்ற கிரேக்கப் புலவரின் கருத்து. எனவே, எப்பிமானிதெஸ் கருத்துப்படி சேயுசு இறக்கவில்லை, இன்னும் வாழ்கிறார். ஏனெனில், அவரால்தான் நாம் வாழ்கிறோம். எது எப்படியிருந்தாலும் இந்த வாக்கு யூத முறைப்படியும் ஸ்தோயிக்கு முறைப்படியும் எளிதாக விளக்கப்படலாம்.

இரண்டாவது பகுதியான "நாமும் அவரினமே" என்பது கி.மு. 310-ஆம் ஆண்டில் சிசிலியாவில் பிறந்த அராத்து என்பவர் எழுதிய பினோமினா என்ற நூலில் காணப்படுகிறது. இவர் ஸ்தோயிக்கு செனோ என்பவரின் நண்பர். எனவே, இவர்

ஸ்தோயிக்குத் தத்துவத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். இந்த வாக்கு, அராத்துவின் நூலின் தொடக்கத்தில் வருகிறது. இதை இவர் கிரியாந்தெஸ் என்ற மற்றொரு புலவரின் "சேயுசுக்கு ஒரு பாடல்" என்ற நூலிலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கலாம். அதில் வாசகம் "ஏனெனில், நாங்கள் உமது வழிமரபு" என்றுள்ளது.

நமது ஆராய்ச்சி எதுவானாலும், ஒன்று மட்டும் உண்மை; பவுல் கிரேக்கர்களுக்குப் போதிக்கும்போது கிரேக்கக் கவிதைகளை மேற்கோள் காட்டிப் போதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**புல் (GRASS)**

எபிரேய மொழி- பலவகைப் புல்களையும், புல் போன்ற மருத்துவப் பூண்டுகளையும் கவனமாக வேறுபடுத்தவில்லை எனலாம். இதைக் குறிக்கும் எபிரேயப் பொதுச்சொல் (ஏதேபு = புற்பூண்டு), விலங்குகளுக்கு அளிக்கப்படும் உணவையும் (உப 11:15), மனிதர்களின் உணவையும் (ஆதி 1:29) குறிக்கின்றது. மற்ற இடங்களில் விலங்குகளின் உணவையும் வீட்டுக் கூரையில் வளர்வதையும் மட்டும் புல் குறிக்கிறது (சங் 104:14; 129:6). பல எபிரேயச் சொற்கள் புல்லைக் குறிக்கின்றன (2 சாமு 23:4; யோபு 6:5; எண் 22:4).

காலையில் தோன்றி மாலையில் வாடிக்காய்ந்து போகும் புல்லின் தன்மை மனிதவாழ்வின் தற்காலிகத் தன்மையை அடையாளமாக உணர்த்துகிறது (சங் 90:6). புல்லின் பெரும் வளர்ச்சி பலனுடைமையையும், செழிப்பையும் குறிக்கிறது (எசா 66:14). கால்நடைகளுக்கும் மனிதருக்கும் இறைவன் புல்லை அளிப்பது அவரது அருட்காவலுக்கு ஓர் அடையாளமாகும் (சங் 104:14). வறட்சிக்காலத்தில் புல் கிடைக்காமை இறைவனுடைய விருப்பமின்மையின் அடையாளமாகும் (எரே 14:5).

புதிய ஏற்பாட்டில் சமவெளியின் புல் பற்றிய குறிப்புகள் பல உள்ளன (மத் 14:19; மாற் 6:39; யோவா 6:10; திருவெளி 8:7; 9:4). பயிர் செய்யப்பட்ட புல்லும் காட்டுப் புல்லும் வேறுபடுத்தப்படுகின்றன (மத் 6:30 இணை; லூக் 12:28; யாக் 1:10-11; 1 பேதுரு 1:24). இறைவனது அருட்காவலையும் (மத் 6:30), மனிதனின் நிலையாமையையும் (யாக் 1:10-11) குறிக்க, புல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**புல்லறுப்பு (MOWING)**

இது பொதுவாக "முதல் புல்லறுப்பு" என்ற கருத்தில்தான் வருகின்றது. சான்றாக, ஆமோ 7:1-இல் "அரசனுக்கென முதல் புல்லறுப்புச் செய்தானபின்" என்று வருவதைப் பார்க்கின்றோம். இந்த முதல் புல்லறுப்பு அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரியாக எண்ணப்பட்டது.

**புளிப்பற்ற அப்பம் (UNLEAVEND BREAD)**

இது புளிப்புச் சத்துச் சேர்ந்து புளிப்பேறாத மாவால் செய்யப்பட்ட அப்பமாகும். பாஸ்கா விழாவைப் புளிப்பற்ற அப்பங்களோடு கொண்டாடும்படியும் (யாத் 12:8.15), தானியக் காணிக்கைகளைப் புளிப்புச்சத்து இன்றி ஒப்புக்கொடுக்கும்படியும் (லேவி 2:4) எபிரேயர்கள் யாவேயால் கட்டளையிடப்பட்டனர். சில சமயங்களில் விரைவாகப் பயணம் செய்வதின் பொருட்டு, புளிப்பற்ற மாவிலிருந்து அப்பங்கள் சுடப்பட்டன (ஆதி 19:3; நீதி 6:19; 1 சாமு 28:24).

புதிய ஏற்பாட்டில் தூய்மையற்றது என்ற உருவகப்பொருளில் பவுல் புளிப்புச்சத்து என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அது சிறிய அளவாய் இருந்தாலும், மாவு முழுவதையும் மாசுபடுத்தும் (1 கொரி 5:1-2.6-8).

**புளிப்பற்ற அப்பவிழா (UNLEAVEND BREAD, FEAST OF)**

இது 'மட்சோத்து விழா' என்றழைக்கப்பட்டது. இதுவும், பாஸ்காத் திருவிழாவும் சேர்த்துக் கொண்டாடப்பட்டன. இஃது ஒரு வரலாற்று விழா;

இஸ்ராயேலர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகின்றது (யாத் 12). பாஸ்கா நாளிலிருந்து ஒரு வாரத்திற்குப் புளிப்பற்ற அப்பம் மட்டுமே உணவாக உட்கொள்ள வேண்டும் (யாத் 12:15-20; 13:3-7). புளிப்பற்ற அப்பவிழாவும், அறுவடை விழாவும், சேகரிப்பு விழாவும் வருடத்தின் முதல் மாதத்திலேயே கொண்டாடப்பட வேண்டும் (யாத் 23:15-16). ஆனால், பாஸ்காவைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. புளிப்பற்ற அப்பவிழா அதே சொற்களில் யாத் 34:18-இல் பாஸ்காவைப் பற்றிக் குறிப்பிடாமல் விவரிக்கப்பட்டுள்ளது.

பாஸ்கா விழாவும் புளிப்பற்ற அப்பவிழாவும், சில இடங்களில் சேர்த்துக் குறிக்கப்படுகின்றன (லேவி 23:6; யாத் 12; எண் 28:17; உப 16:1-8; எசே 45:21; 2 நாள் 35:17); சில இடங்களில் பாஸ்கா விழாவைக் குறிக்காமல், புளிப்பற்ற அப்பவிழா கூறப்படுகிறது (உப 16:16; 2 நாள் 8:13; 30:13.21; எஸ் 6:12). இஃது அறுவடைக்காலத்தின் தொடக்கத்தில் செலுத்தப்பட்ட நன்றிகூர்தல் விழாவாகும். இயற்கையிலிருந்து கிடைப்பது புனிதமானது; தெய்வத்திடமிருந்து நேரடியாக வருவது. ஆகவே, மனிதன் அதைப் பயன்படுத்துமுன் தெய்வத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இச்சடங்கில் புளிப்புச் சத்தை ஒரு வாரத்திற்குச் சேர்க்காமலிருக்க வேண்டும். புறத்திலிருந்து புளிப்புச் சத்தைச் சேர்ப்பது, மாவை மாசுபடுத்துகிறது. இவ்விழா கானானியர்களிடம் தோன்றியிருக்கலாம். அவர்களிடமிருந்து இஸ்ராயேலர் ஏற்று, தங்கள் மீட்பு வரலாற்று நிகழ்ச்சி ஒன்றின் நினைவுகூர்தலாக மாற்றியிருக்கலாம். ஆனால், இஸ்ராயேலர் கடைப்பிடித்த சடங்கில் கானானியருக்கு மட்டும் உரிய எந்தப் பண்பைப் பற்றியும் சுட்டிக்காட்ட முடியாது.

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் பாடுகளின் வரலாற்றோடு புளிப்பற்ற அப்பவிழா குறிப்பிடப்படுகிறது. இறுதி இரவு உணவு "புளிப்பற்ற அப்பவிழாவின் முதல் நாளிலும்" (மத் 26:17; மாற் 14:12), "புளிப்பற்ற அப்பவிழா நாளிலும்" (லூக் 22:1.7) நடைபெற்றது. இவ்விழா அ.ப. 12:3; 20:6-இலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விழா 1 கொரி 5:7.8-இல் பவுலால் சுட்டிக்காட்டப்படுதல், பாஸ்காக் காலத்தில் புளிப்பற்ற அப்பத்தை உண்ணும் பழக்கம் புறவினக் கிறிஸ்தவர்களிடையேயும் இருந்தது என்பதைக் காட்டுகிறது. இவ்விழாவின் தன்மை, உரோமை வழிபாட்டு முறையில் நற்கருணைப்பலியில் புளிப்பற்ற அப்பம் பயன்படுவதில் எஞ்சியிருக்கிறது.

### புளிப்புச்சத்து உவமை (LEAVEN, PARABLE OF)

இறையரசு எளிமையாக ஆரம்பித்து, பின்னர் உலகமனைத்திலும் பரந்து விரிந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட இயேசு இந்த உவமையைக் கூறுகிறார் (மத் 13:33). சிறிதளவு புளிப்புச்சத்து, மாவு முழுமையிலும் புளிப்பேற்றுவது போல, இறையரசும் ஆரம்பத்திலே மிகவும் சிறிய முறையிலே தோன்றிப் பின்னர், வியத்தகு முறையில் எல்லா இடங்களிலும் பரவி வளர்ந்து நிற்கும்.

### புள்ளி, கொம்பு (DOT)

மிகவும் சிறிய விவரம், தோராவின் ஒவ்வொரு விவரத்தின் நிலையான, மாற்ற முடியாத தன்மையைப் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் வலியுறுத்துகின்றன (மத் 5:18; லூக் 16:17). இதே கருத்து பிற்கால யூதத்துவத்திலும், குறிப்பாக ராபிகளின் நூல்களிலும் வலியுறுத்தப்படுகிறது. புள்ளி அல்லது கொம்பு என்பது ஓர் எழுத்தின் சிறு பகுதியைக் குறிக்கிறது. இவை எபிரேய எழுத்துக்களை வேறுபடுத்தப் பயன்பட்டனவாக இருக்கலாம்.

### புள்ளிகளையுடைய (DAPPLED)

இந்தச் சொல் செக் 6:36-இல் வரும் சில குதிரைகளின் நிறத்தைக் குறிக்கிறது. இது "புள்ளிகளையோ", "பலவண்ணப் புள்ளிகளையோ" குறிக்கிறது (காண்க. ஆஸ்தி 31:10.12).

**புள்ளோட்டி உருவம், தோட்டத்துப் பொம்மை (SCARECROW)**

இது பெரும்பாலும் ஒரு தூணாகவோ, செப்பமற்ற மனித உருவாகவோ இருக்கலாம். இது பறவைகளைப் பயமுறுத்தவும், தீய ஆவிகளை அச்சுறுத்தவும் பயன்படக் கூடியதாக அமைக்கப்படும். எரேமியா (10:5) புறவினத்தினருடைய சிலைத் தெய்வங்களை இதற்கு ஒப்பிட்டுச் சொல்கிறார். "அவை வெள்ளரித் தோட்டத்துப் பொம்மை போன்றவை" (எரே 10:5) என்றார். பாரூ 6:69 எரேமியாவின் 'இந்த ஒப்புமையைப் பிரதிபலிக்கிறது.

**புறவினத்தார் (GENTILES, PAGANS NATIONS)**

I. பழைய ஏற்பாடு மனித குலத்தை இரண்டாகப் பிரிக்கிறது. ஒரு குழுவினர்- இறைமக்கள் என்று அழைக்கப்படும் இஸ்ராயேலர் ஆவர். இறைவன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு உடன்படிக்கை ஏற்படுத்தி, அவர்களுக்கு வாக்குறுதிகள் அளித்தார். மற்றோர் குழுவினர்- ஏனைய நாடுகளைச் சேர்ந்த புறவினத்தார் ஆவர். இவ்விரு குழுவினருக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. இவை இன வேறுபாடுகளோ, அரசியல் வேறுபாடுகளோ மட்டுமல்ல. அவர்களுக்கிடையே உள்ள முக்கிய வேறுபாடு- சமய வேறுபாடேயாகும். புறவினத்தார், யாவே என்றழைக்கப்படும் இஸ்ராயேல் மக்களின் இறைவனை அறியாதோரும் (புறமதத்தினர்), இம்மக்களின் வாழ்க்கையில் பங்கு பெறாதோரும் (அன்னியர்) ஆவர். புதிய ஏற்பாட்டில் "இறைமக்கள்" என்ற சொல்லின் பொருள் வளர்ந்து விரிவுமடைந்து திருச்சபையாக, அதாவது கிறிஸ்துவின் உடலாகத் திகழ்கிறது. இந்தப் புதிய மக்கள் குழுவில் சேர எல்லா மனிதருக்கும் உரிமை இருந்தாலும், யூதர், புறவினத்தார் என்ற வேறுபாடு இன்னும் மறையவில்லை (காண். உரோ 1:16; 15:7-12). இப்படியாக இஸ்ராயேல் மக்களுக்கும் புறவினத்தாருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பற்றிய விவாதம் மீட்பின் வரலாற்றில் தொடர்ந்து காணப்படுகிறது. இறைவன் அவருடைய திட்டத்தை இஸ்ராயேல் மக்களின் மூலம் மனித வரலாற்றில் புகுத்துகிறார். இதற்காகவே அவர்களைத் தேர்ந்தெடுத்து, தனியாக ஒதுக்கிவைத்தார். ஆனால் அதே நேரத்தில், இத்திட்டம் மனிதகுலம் முழுவதின் மீட்பைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்காரணத்தினால் இஸ்ராயேலையும் புற வினத்தாரையும் ஒன்றிணைக்க கிறிஸ்து வரும் வரை (எபே 2:14 தொ) மீட்பு தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கே கிடைக்கும் என்ற கோட்பாட்டுக்கும், யாவருக்கும் உரியது என்ற கோட்பாட்டுக்கும் இடையில், மீட்பு வரலாற்றுக்கு முன்னர், ஊசலாடியது.

II. பழைய ஏற்பாடு

1. **தொடக்கங்களின் மறைபொருள்:** பழைய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் இறைவனின் அழைப்பு இவ்வுலகுக்கு வரும் பொழுது இவ்வுலகம் பற்பல இனங்களாகவும், நாடுகளாகவும், பண்பாடுகளாகவும் பிளவுபட்டுக் கிடப்பதைக் காண்கிறோம். இந்த அடிப்படை வரலாற்று உண்மை பல கேள்விகளை எழுப்புகின்றது. இப்பிளவுகளை இறைவனே ஏற்படுத்தினாரா? இல்லாவிடில், இவை ஏற்பட்டதன் காரணமென்ன? இக்கேள்விகளுக்கு மறைநூல் அறிவியல் முறைப்படி பதிலளிக்கவில்லை. அதே நேரத்தில் மனுகுலத்தின் ஆரம்பத்தைப் பற்றிய மறையுண்மையைத் திருவெளிப்பாடு ஒளிர்விப்பதற்காக, விவிலியம் இப்பிரச்சனை பற்றி நெருக்கமாக ஆய்வு செய்யாமலில்லை.

அ) **மனிதகுலத்தின் ஒன்றிப்பும், வேறுபாடுகளும்:**

ஆதியாகமம் மனித இனத்தின் ஒன்றிப்பை வலியுறுத்துகிறது. இறைவன் மனித குலம் முழுவதையும் ஒரே மூலத்திலிருந்து உண்டு பண்ணினார் (அ.ப. 17:26). எல்லா மனிதருக்கும் ஒரே தன்மை இருப்பதுமின்றி அவர்எல்லாரும் ஒரே இரத்தமுடையவர்களாயுமிருக்கிறார்கள். தலைமுறைக் கொடிகளெல்லாம் ஆதாம்-ஏவாளான முதற்பெற்றோரிடமிருந்தே

ஆரம்பிக்கின்றன. பெருவெள்ளத்திற்குப் பின், அவற்றிற்கு நோவாவிலிருந்து தொடர்பு காட்டப்பட்டன (ஆதி 9:18தொ). ஆனால், இந்த ஒன்றிப்பானது வேறுபாடற்ற ஒன்றிப்பன்று. மனிதன் பெருகிப் பலுகிப் பூமியை நிரப்ப வேண்டும் (ஆதி 1:28). இதைச் செய்வதென்றால் படிப்படியாக வெவ்வேறு இனங்களும் நாடுகளும் ஏற்படவேண்டியது அவசியம் என்றும், இதுவே இறைவனின் விருப்பம் என்றும் மறைநூல் கருதுகிறது (ஆதி 10; உப 32: தொ).

**ஆ) பாவத்தின் சமூக விளைவுகள்:** மனிதனுடைய தற்போதைய நிலை இறைவனுடைய நோக்கத்திற்கு இசைந்ததாக இல்லை. மனிதனுடைய வரலாற்றில் பாவம் குறுக்கிட்டது. ஆதாமும் ஏவாளும் தெய்வங்கள் போலாக ஆசித்தார்கள் (ஆதி 3:5). சினார் நாட்டுச் சமவெளியில் குடியேறி, "வானளாவிய கோபுரம் கொண்ட நகரைக்" கட்டத் திட்டமிட்டார்கள் (ஆதி 11:4). இவ்விரண்டு செயல்களிலும் ஒரே விதமான எல்லையற்ற தேவ துரோகம் உள்ளடங்கியுள்ளது. அதே போல் இறைவனும் ஒரே விதமான தீர்ப்பையே இவ்விரண்டு செயல்களுக்கும் அளிக்கின்றார் (ஆதி 3:14-24; 11:5-8). இன்று மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிப்பதெல்லாம் இச்செயல்களின் விளைவே. பாவச்சூழ்நிலையின் விளைவான இந்த இனப்பிரிவு, சகோதரரிடையே வெறுப்பையும் (காயின்-ஆபேல், 4:1-16), ஆன்ம ஒன்றிப்பின்மையையும் (மொழிக்குழப்பம் 11:7 தொ) உண்டாக்குகிறது. இப்படியாக இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவை முறிக்கும் சிலை வழிபாடும், மனிதரிடையே வெறுப்பை ஏற்படுத்தும் அகந்தையும் நிறைந்த சூழ்நிலையில்தான் இனங்கள் உண்டாயின. இதே சூழ்நிலையில்தான் ஆபிரகாமும் அழைக்கப்பட்டார். இறைவன் அவரைப் புறமதத்தினரிடமிருந்து தேர்ந்தெடுத்தது உண்மைதான் (யோசு 24:2). ஆனால், தமக்குச் சொந்தமான ஒரு புதிய மக்களின் தகப்பனாராக்கவும் இறுதியில் மண்ணுலகின் எல்லாக் குடும்பங்களையும் அவர் மூலம் ஆசீர்வதிக்கவுமே அவரை அழைத்தார் (ஆதி 12:1 தொ).

**2. வரலாற்றில் இஸ்ராயேலும் புறவினத்தாரும்:** சில சுற்றுப்புற நாடுகளுடன் தமக்கு இருந்து வந்த இயற்கையான உறவுகளை இஸ்ராயேல் மக்கள் புறக்கணிக்கவில்லை. குலமுதியவர்களின் தலைமுறை அட்டவணைகள் இவ்வுண்மையைப் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளன. இசுமயேலுக்கும் (ஆதி 16) மிதியானுக்கும் உள்ள உறவு (25:1-6); மோவாபுக்கும் அம்மோனியருக்கும் உள்ள உறவு (19:30-38); அரமேயருக்கும் (29:1-14) எதோமியருக்கும் இடையே உள்ள உறவு (36). மேலும், மக்கபேயர் காலத்தில் யூத மக்கள் ஸ்பார்த்த மக்களோடு இனவுறவு கொண்டாடினார்கள் (1 மக் 12:7.21). இருந்தபோதிலும், புறவினத்தாரிடம் இஸ்ராயேல் மக்களுக்கு இருந்த மனப்பான்மை அவர்களுடைய உடன்படிக்கையாலும் மீட்புத் திட்டத்தாலும் அமைக்கப்பட்டது.

அ) **புறவினத்தார் இறைவனின் எதிரிகள்:** இஸ்ராயேல் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு; எனவே, உண்மையான இறைவனைப் பற்றிய அறிவு, அவரை வணங்கும் முறை, உடன்படிக்கையில் உள்ளடங்கிய மீட்பின் நம்பிக்கை, இறைவனின் வாக்குறுதிகள் ஆகிய அடிப்படை உண்மைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், இவை ஒவ்வொன்றிற்கும் ஏனைய நாடுகள் பேரிடராக இருந்தன. அரசியல் ஆதிக்கம் செலுத்துவதன் மூலமும், தவறான சமய நெறிகளைப் புகுத்துவதன் மூலமும் புறவினத்தார் இஸ்ராயேல் மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தார்கள்.

1) அரசியல் அச்சுறுத்தல்: இஸ்ராயேல் மக்களின் அரசியல் வாழ்க்கை அச்சுறுத்தப்படாத காலம் மிக அரிது. செருக்கும், பேராசையும் புறவினத்தாரை ஆட்கொண்டிருந்தன. எனவே, கௌரவம் நில உடைமை முதலியவற்றைப் பற்றி

அக்கறையுடையவர்களாய் இருந்தார்கள். பன்னாட்டு அரசியலில் சிக்கிக்கொண்ட இஸ்ராயேலரோ தம்முடைய கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்ட உண்மைகளை விடாப்பிடியாகப் பாதுகாக்க வேண்டியிருந்தது. எகிப்து நாட்டில் அனுபவித்த அடிமை வாழ்க்கையைப் பற்றி இஸ்ராயேலர் அறிந்திருந்தனர். பிறகு கானான், மிதியான், பெலிஸ்தியர் முதலிய நாடுகளுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே இறைவனால் மூட்டப்பட்ட போர்களையும் அவர்கள் அறிவார்கள். தாவீது அரசனின் ஆட்சியில் இச்சூழ்நிலை தற்காலிகமாக மாறியது (காண். 2 சாமு 8); இஸ்ராயேலின் கௌரவம் ஓரளவு அதிகரித்தது. ஆனால், வெகு விரைவில் இந்நிலை மாறியது. சுற்றுப்புறத்திலுள்ள சிற்றரசுகள் இஸ்ராயேல்மேல் வெறுப்பும் நப்பாசையும் கொண்டன. மேலும், வல்லரசுகளான எகிப்து, அசீரியா, பாபிலோன் முதலியவையும் இஸ்ராயேல் மேல் ஆதிக்கம் செலுத்தமுயன்றன. அரசர்கள் காலம் இப்படிப்பட்ட கடினமான போராட்டங்கள் மலிந்த காலமாகும். இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்ட காலத்தில் நடந்ததுபோல் (யாத் 5-14), பொய்க்கடவுளை வணங்கும் கர்வம் நிறைந்த நாடுகள் உண்மைக் கடவுளையே எதிர்த்து நின்றன (2 அர 18:33 தொ; 19:1-7. 12-19). பிற்காலத்தில் அந்தியோக்கு எப்பிபான் என்பவனும் இதே முயற்சியில் ஈடுபட்டான். அவன் யூதேயாவைக் கிரேக்க மயமாக்கப் பாடுபட்டான் (1 மக் 1:29-42). இவற்றிலிருந்து, இஸ்ராயேலுக்கும் புற வினத்தாருக்குமிடையே இருக்கக்கூடிய உறவு வெறுப்புடையதாகவே இருக்க முடியும் என்பது வெள்ளிடைமலை.

**2) தவறான சமயக் கவர்ச்சி:** புறவினத்தாரையே புறமதங்களின் அறிகுறி என்று இறைமக்கள் கருதினார்கள். இப்புறமதங்கள் சில வேளைகளில் தவறான சமய நெறிகளைப் புகுத்தின. மற்ற நேரங்களில் கொடுமையானதாக இருந்தன. இஸ்ராயேல் மக்கள் சிலைகளை வணங்கும் முன்னோரின் வழி வந்தோராகையால், புறமதத்தினரை எளிதில் பின்பற்றும் மனப்பான்மை அவர்களிடமிருந்து (யோசு 24:2). நீதிபதிகளின் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் கானானியரின் சிலை வணக்க முறையைப் பின்பற்றி வந்தனர் (நீதி 2:11 தொ). எருசலேம் தேவாலயத்தை எழுப்பிய சாலமோன் அரசர் அண்டை நாட்டுத்தேவர்களுக்குத் திருவிடங்களைக் கட்டினார் (1 அர 11:5-8). பின்வந்த நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்து வந்த அசீரியரின் மதக்கோட்பாடுகள் ஏற்கெனவே வழக்கில் இருந்த கானானியரின் மதக்கோட்பாடுகளுடன் சேர்க்கப்பட்டன (2 அர 16:10-18; 21:3-7; எசே 8). மக்கபேயர் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் பண்பாட்டுக் கௌரவம் நிறைந்த கிரேக்க மதக்கோட்பாடுகளைப் பின்பற்றப் பார்த்தார்கள். மேலும், அந்தியோக்கு எப்பிபான், இம்மதக் கோட்பாடுகளையே இஸ்ராயேல் மக்களிடம் புகுத்தப் பாடுபட்டான் (1 மக் 1:43-61). இச்சூழ்நிலையில்தான் உபாகமம் கடுமையான சட்டங்களை வகுத்தது. புறவினத்தாருடைய மதக்கோட்பாடுகள் இஸ்ராயேலருடைய மதத்தின் தூய்மையைக் கெடுத்து விடாமலிருக்க, இஸ்ராயேல் மக்கள் புறவினத்தாரிடம் இருந்து முழுவதும் பிரிந்து வாழ வேண்டும் என்று போதித்தது (உப 7:1-8).

**ஆ) இறைவன் திட்டத்தில் புறவினத்தார்:** புறவினத்தார் உண்மை இறைவனின் எதிரிகள் என்றும், இஸ்ராயேல் மக்கள் அவர்களிடமிருந்து பிரிந்து வாழவேண்டும் என்றும் பழைய ஏற்பாடு போதிப்பது உண்மை தான். ஆனால், புறவினத்தாரைப்பற்றிய வேறு போதனைகளையும் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். யாவே எல்லாருக்கும் இறைவன். எல்லா இனத்தவரும் அவருடைய பராமரிப்பில்தான் இருக்கின்றனர். ஏற்கெனவே புறவினத்தாரின் முதற்கனிகள் உண்மை இறைவனை வணங்கும் பொருட்டு இஸ்ராயேல் மக்களோடு ஒன்று சேர்க்கப்பட்டு விட்டார்கள்.

**1) யாவே முன்னிலையில் புறவினத்தார்:** யாவே எல்லா நாடுகளையும் கண்காணிக்கிறார். அவர் இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டிலிருந்து

மீட்டதுபோல், பெலிஸ்தியரையும், அரமேயர்களையும், புகழுடையச் செய்தார் (ஆமோ 9:7). இஃது ஒரு முக்கியமான உண்மை. எந்த விதமான சமயந்தழுவிய நாட்டுப்பற்றையும் இவ்வுண்மை தடைசெய்கிறது. ஆனால், அதே நேரத்தில் இஸ்ராயேலைப்போல் அவர்களும் ஒரே கடவுளின் தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்பதைப் புறவினத்தார் உணரவேண்டும் (ஆமோ 1:3-23). இந்தத் திருமுறையில் பழைய ஏற்பாடு மீட்புத்திட்டத்தின் அனைத்துலகத் தன்மையை உறுதிப்படுத்துகிறது. ஆனால், புறவினத்தாரின் பங்கு கிளைக்கதைகளாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சில வேளைகளில் இவர்கள் இறைவனின் கடுஞ்சினத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக மாறி, இஸ்ராயேல் மக்களைத் தண்டிக்கிறார்கள் (எசா 8:6 தொ; 10:5: எரே 27). வேறு வேளைகளில், சைரஸ் என்பவனைப்போல், மீட்புப் பணிக்கு அழைக்கப்படுகின்றனர் (எசா 41:1-5; 45:1-6). அதே நேரத்தில் அவர்கள் கொண்டு வந்த மனித மதிப்பீடுகளை ஏளனம் செய்யலாகாது. ஏனெனில், அவை இறைவனின் கொடை, இஸ்ராயேல் மக்கள் அவற்றைத் தங்களுடைய நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் எகிப்து நாட்டை விட்டு ஓடும்பொழுது எகிப்தியரின் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றார்கள் (யாத் 12:35தொ); கானானியரின் நாட்டிற்குப் படையெடுத்தபொழுது அவர்களுடைய பண்பாட்டிலிருந்து பயனடைந்தனர் (உப 6:10தொ). மேலும், ஒவ்வொரு சகாப்தத்திலும் பன்னாட்டு பண்பாட்டிலிருந்து சில புதிய அம்சங்களைத் தம்முடையதாக்கிக் கொண்டனர் (காண். 1 அர 5:9-14; 7:13).

2) **புறவினத்தின் முதற்கனிகள்:** பற்பல வெளிப்படைக் காரணங்கள் இருந்த போதிலும் இறைவனின் திட்டத்தோடு புறவினத்தார் ஒத்துழைத்தனர். இஸ்ராயேல் மக்கள் இறைவனிடமிருந்து சிறப்புரிமைகளைப் பெற்றடைந்த அளவு புறவினத்தார் பெறவில்லை. எனினும், இதற்கு விதிவிலக்குகள் இருந்தன. சில புறவினத்தார் உண்மை இறைவனை வழிபட்டுவந்தனர். இதை இறைவனும் ஏற்றுக்கொண்டார். எடுத்துக்காட்டாக, மெல்கிசெதேக்கு (ஆதி 14:18தொ), இத்திரோ (யாத் 18:12), நாமான் (2 அர 5:17). சிலர் உடன்படிக்கை மக்களோடு சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எடுத்துக் காட்டாக, தாமார் (ஆதி 38), இராகாபு (யோசு 6:25), ரூத்து (ரூத் 1:16) ஆகிய இயேசுவின் முன்னோர் (மத் 1:2-5), கிபயோனியர் இனம் (யோசு 9:19-27), விருத்த சேதனத்தை ஏற்றுக்கொண்ட அன்னியர்கள் (யாத் 12:48 தொ; நெகே 15:15 தொ). இவை எல்லாம் இறைவன் இறுதியில் நிலைநிறுத்தப் போகும் அனைத்துலகத் தன்மை வாய்ந்த திட்டத்தின் முன்அறிகுறிகளாகும்.

### 3. இறைவாக்கினர் நூல்களில் இஸ்ராயேலும் புறவினத்தாரும்:

இறைவாக்கு பற்றி இங்குக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் பண்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. மாறாக, இறுதியில் இறைவனின் திட்டம் எப்படி எடுத்துக்காட்டான முறையில் நிறைவேறும் என்பதாகும். இதுபற்றி இறைவாக்கினர் ஓரளவு மட்டுமே அறிந்திருந்தார்கள். அவர்களுடைய கருத்துப்படி புறவினத்தாருக்கு இதில் ஒரு முக்கிய இடமுண்டு. இறைவனுடைய தீர்ப்புக்குப் பணிந்து நடப்பதிலும் சரி, அவருடைய மீட்புச் செயலினால் பயனடைவதிலும் சரி, அவர்களுக்கு முக்கிய இடம் உண்டு.

அ) **புறவினத்தார்மேல் தீர்ப்பு:** இறைவாக்கினர் புறவினத்தாருக்கு எதிராகக் கூறிய இறைமொழிகளெல்லாம் ஒரே வகைப்பட்டவையே (எசா 13:21; எரே 46:51; எசே 25-32). சில வேளைகளில் இஸ்ராயேல் மக்களின் மீட்பைப் பெற்றடைய, கொடிய முறையைக் கையாளும் புறவினத்தாரை முறியடிக்க வேண்டியது இன்றியமையாததாகத் தோன்றிற்று. இவ்வேளைகளில் இறைமொழிகள் மிகுந்த முக்கியத்துவம் அடைந்தன. அவருடைய குறிப்பிட்ட நாள் வரும்பொழுது, இறைவன்

கொடுங்கோன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாகோகு நாட்டின் அரசன் கோகு என்பவனைத் தகர்த்தெறிவார் (எசே 38-39); எதிரிகளின் எல்லா வலிமையையும் சமாளிப்பார் (யோவே 4:9-14; செக் 14:1-6.12தொ); அவர்களுடைய நகரங்களை அழித்திடுவார் (எசா 24:7-13); அவர்களுடைய அரசர்கள் மேல் தீர்ப்புக் கூறுவார் (24:21 தொ). யூதித்து என்பவளின் கதை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தானியேலின் காட்சியாகமமும் இந்தக் கதையும் மேலே கூறிய கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளன. அந்தியோக்கு மக்களுக்குக் கொடுத்த துன்பங்கள் இவற்றின் உண்மையைப் புலப்படுத்தின.

**ஆ) புறவினத்தாரின் மீட்பு:** ஆனால், இந்த வரலாற்றுக்கு மற்றொரு பக்கமும் உண்டு. இறுதியில் மீட்பு இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதன்று; ஆரம்பத்திலிருந்து பாவம் மனுகுலத்தின் ஒன்றிப்பைத் தகர்த்தெறிந்தது. அதேபோல், புறவினத்தாரின் முடிவான மனமாற்றம் மனுகுலம் முழுவதின் ஒன்றிப்புக்கு வழிவகுக்க வேண்டும். எருசலேம் நகருக்கு வருவோர் இறைச்சட்டங்களைக் கற்றுக்கொள்வதற்காக வருகிறார்கள். இஃது உலகளாவிய சமாதானத்திற்குத் திரும்புதலாகும் (எசா 2:2தொ). அவர்கள் முடிவில்லா இறைவனிடம் திரும்பிவந்து (எசா 45:14-17. 20-25) அவருடைய வழிபாட்டு முறைகளில் பங்கெடுக்கிறார்கள் (எசா 60:1-16; 25:6; செக் 14:16). எகிப்தும், அசீரியாவும் மனந்திரும்புகின்றன. இஸ்ராயேல் இவற்றை ஒன்றாக இணைக்கும் கருவியாக விளங்குகிறது. (எசா 19:16-25). பாபேலில் ஏற்பட்ட பிரிவினைக்கு முடிவு காணும் வகையில் இறைவன் எல்லா நாட்டினரையும் மொழியினரையும் அவர் பக்கத்தில் ஒன்று சேர்க்கிறார் (66:18-21). எல்லா இனத்தாரும் அவரை அரசராக ஏற்றுக்கொள்கின்றனர். அனைவரும் ஆபிரகாமின் மக்களோடு ஒன்றித்து விடுகின்றனர் (சங் 47). சீயோன் அனைவர்க்கும் அன்னை என்று அழைக்கப்படுகிறது (சங் 87). இறைவனின் ஊழியன் இஸ்ராயேல் மக்களுக்கு நடுவராக இருப்பதுபோல் அவர்களுக்கும் நடுவராக இருக்கிறார் (எசா 42:4.6). இப்படியாக இறுதி நாளில் ஒருமுகமாக இறைமக்கள் மறுபடியும் உருவாக்கப்படவேண்டும். இதன் வழியாக ஆரம்பத்திலிருந்த அனைத்துலகத் தன்மை மறுபடியும் நிலைநாட்டப்படும். சட்ட நூல்கள் இஸ்ராயேல் மக்களுக்குத் தனிப்பட்ட தன்மையைக் கொடுப்பதாகத் தோன்றினாலும், இறைவாக்கினர் நூல்களில் இறைவன் ஆரம்பத்திட்டத்தின்படி, அனைவரும் ஒன்றாக இணைவதைக் காண்கிறோம்.

**4. எதிர்பார்ப்புகள்:** நாடு கடத்தலுக்குப் பின் இஸ்ராயேல் மக்கள் சட்ட நூல்களின் போதனைகளுக்கும், இறைவாக்கினரின் போதனைகளுக்கும் உரிமையாளர் ஆனார்கள். எனவே, புறவினத்தாரைப் பற்றி மேலே குறிப்பிட்ட இருவிதமான போக்குகளுக்குமிடையே ஊசலாடினர். இது வேறுபட்ட தேவைகளுக்கேற்ப அமைந்துள்ளது.

**அ) யூத மக்களின் பிரிவுணர்ச்சி:** கடந்தகால அனுபவம் யூத மக்களிடையே பிரிவுணர்ச்சியைத் தூண்டிவிட்டது. புறமதத்தினருடன் உறவு வைத்ததால்தானே இஸ்ராயேல் மக்கள் பற்பல தீமைகளுக்கு ஆளானார்கள்? எனவே, அவர்களிடமிருந்து பிரிந்து வாழ்வது முதல் தேவையாகத் தோன்றியது. நெகேமியா, எஸ்ரா ஆகியவர்களின் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் மறுபடியும் தங்கள் உரிமைகளைப் பெற்றடைந்தார்கள். ஆனால் இதை ஒரு தீவிரமான, பிரிவுணர்ச்சி நிறைந்த சூழ்நிலையிலேயே அடைந்தனர் (எஸ் 9-10; நெகே 10:13). இந்த மனப்பான்மை பிற்காலத்தில் சிறிது விரிவடைந்தாலும், மக்கபேயர் காலத்து இடுக்கண் நிலை அவர்களுடைய சமயத்தைத் தழுவிய நாட்டுணர்ச்சியைக் கிளறிவிட்டது. இதே மனப்பான்மை சிறிது காலத்திற்குப்பின் பரிசேயரிடமும், எஸ்ஸேனியரிடமும் மறுபடியும் தலைதூக்கும்.

**ஆ) யூத மதமாற்றங்கள்:** அதே காலத்தில் இஸ்ராயேல் மக்கள் யூத மதத்தில் சேரவிரும்பும் நன்மனம் படைத்த புறவினத்தாரை முன்பைவிடத் தாராளமாக வரவேற்றார்கள். யோனா நூலாசிரியர் கேலியாகச் சித்தரித்துள்ள சமயவெறி கண்டனம் செய்யப்பட்டது. இஸ்ராயேல் மக்களுடன் இணைய விரும்பும் மனந்திரும்பிய புறவினத்தாருக்கு அதிகார பூர்வமான சட்டம் ஒன்று கொடுக்கப்பட்டது (எசா 56:1-8). கடந்த காலத்தில் எந்தச் சந்தர்ப்பங்களில் இச்சலுகை கொடுக்கப்பட்டது என்றும் மகிழ்வுடன் நினைவு கூரப்பட்டது. உதாரணமாக, மோவாபு நாட்டைச் சேர்ந்த ரூத்து (ரூத் 1:16), அம்மோனியர் நாட்டைச் சேர்ந்த அக்கியோர் (யூதி 5:5-6:20)... அலக்சாந்திரியாவைச் சேர்ந்த யூதர்கள் இதற்கு வழிகாட்டிகளாய் இருந்தார்கள். அங்கு விவிலியம் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும், ஒரு காப்புரை நூலும் வரையப்பட்டது. இதன் மாதிரிச் சான்றுகளைப் பாரூக்கு நூலிலும் (பாரூ 6), ஞான ஆகமத்திலும் (ஞான 13-15) காணலாம். இக்காலத்திலிருந்து மதத்திற்குச் சான்று பகர்வதும் அதைப் பரப்புவதும் அவர்களுடைய தேவ அழைத்தல் என்பதை யூதமக்கள் உணர்ந்தார்கள்.

**III. புதிய ஏற்பாடு:**

**1. இயேசுவும் புறவினத்தாரும்:** இயேசுவின் வருகையோடு இறுதிக்காலம் பிறக்கிறது (மாற் 1:15). அவருடைய பொதுவாழ்வின் ஆரம்பத்தில் இறைவாக்கினர் கூறியுள்ளதுபோல் அனைத்துலகத் தன்மையோடு நடப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், உண்மையில் சூழ்நிலை இதைவிடச் சிக்கலானதாக இருக்கிறது.

**அ) வார்த்தை ஒன்று நோக்கம் ஒன்று:**

**1) குறுகிய நோக்கங்கொண்ட நடத்தை:** அயல்நாடுகளில் தங்கியிருந்தபொழுது கூட, இயேசு அங்குள்ள யூத மக்களுக்கே நற்செய்தியை எடுத்துரைத்தார். அவர்கள் மத்தியில் மட்டுமே புதுமைகளைச் செய்தார். "இஸ்ராயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்பவரிடமே நான் அனுப்பப்பட்டேன்" (மத் 15:24). "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது நல்லதன்று" (மாற் 7:27) என்று கூறியுள்ளார். மேலும், பன்னிருவரைப் போதிக்க அனுப்பும்பொழுது "புறவினத்தாருடைய நாட்டுக்குச் செல்ல வேண்டாம்" (மத் 10:5தொ) என்று கூறினார்.

2) **அனைத்துலகத் தன்மை:** அதே நேரத்தில் "காணாமற்போன ஆடுகளின்" தவறான மனோநிலையை இயேசு உணர்ந்த பொழுது, அவர்மேல் விசுவாசங்கொண்ட அன்னியரைப் புகழத் தயங்கவில்லை. உதாரணமாக, கர்ப்பர்நாகும் ஊரைச் சேர்ந்த நூற்றுவர் தலைவன் (மத் 8:10), சமாரியா நாட்டுத் தொழுநோயாளி (லூக் 17:17தொ), கானானியப் பெண் (மத் 15:28). இவர்கள்தான் புறவினத்தாரிடமிருந்து இறை அரசுக்குக் கிடைத்த முதற்கனிகள். ஆனால், எதிர்காலத்தில் இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நாலா பக்கங்களில் இருந்தும் வந்து இறுதிக்கால விருந்தில் பங்கெடுப்பார்கள். இறை அரசுக்கு உரிமையாளர்களான இஸ்ராயேல் மக்களோ புறம்பே தள்ளப்படுவர் (லூக் 13:28தொ). இப்படியாக வியப்புக்குரிய விதத்தில், யூத மக்களின் நிலையும் புறவினத்தாரின் நிலையும் தலைகீழாக மாறிவிடுகிறது. உடன்படிக்கை உரிமைகளைப் புறவினத்தார் கவர்ந்து விடுகிறார்கள். இறைவனின் திராட்சைத்தோட்டம் இஸ்ராயேல் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேறு குடியானவர்களிடம் ஒப்படைக்கப்படும் (மத் 21:43).

**ஆ) சிக்கலுக்கு விடை:** இயேசுவின் குறுகிய நோக்கத்திற்கும் அனைத்துலகத் தன்மைக்கும் முரண்பாடு எதுவும் இல்லை. மாறாக, வளர்ச்சியடைந்து வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தன்னுடைய கொள்கையை மாற்றியமைத்துக் கொள்கிறார். ஆரம்பத்தில் இஸ்ராயேலை மட்டும் மனந்திருப்பி அவர்களை மண்ணுலகம் முழுவதற்கும் விண்ணரசின் போதகர்களாக்க விரும்பினார். இதனால்தான்

அவருடைய சொந்த இனத்தாரைவிட்டு வேற்றினத்தாரிடம் செல்லவில்லை. ஆனால், யூத மக்களின் உள்ளக் கடினம் ,இத்திட்டத்திற்கு எதிராக நின்றது. இந்நிலையில் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற இறைவன் நிச்சயமாக மாற்றி அமைப்பார். இறை மக்களால் புறக்கணிக்கப்பட்ட இயேசு "பாவ மன்னிப்புக்கென்று பலருக்காக", தன்னுடைய இரத்தத்தைச் சிந்துவார் (மத் 26:28). இப்பலி இறுதிக்கால உடன்படிக்கையின் உறுதிப்பாடாக விளங்குவதோடு இறையரசின் கதவை எல்லா இனத்தவர்க்கும் திறந்துவிடும். இதன் பயனாக மனிதகுலம் இறைவனோடு ஒன்றித்துவிடும்; அதன் உள்ளார்ந்த ஒன்றிப்பையும் மறுபடியும் பெற்றடையமுடியம். எனவேதான் இத்தகைப் பலியைத் தன்னுடைய மகிமையான உயிர்ப்பின் மூலம் நிறைவு செய்தபின், இயேசு பன்னிருவருக்கும் அனைத்துலகத் தன்மை வாய்ந்த இறைப் பணியைக் கொடுப்பார். படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிக்கவும் (மாற் 16:15), எல்லா இனத்தாரையும் சீடராகவும் (மத் 28:19), மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்கும் அவருடைய சாட்சிகளாய் இருக்கவும் (அ.ப. 1:8) கட்டளையிடுவார். இயேசுவின் உயிர்ப்பினால் யூதமக்களின் தனிப்பட்ட உரிமைகள் திட்டவட்டமாகத் தகர்த்தெறியப்படுகின்றன. அவர்களுடைய பிரிவுணர்ச்சி பரந்த குறிக்கோளுக்கு இடம் கொடுக்கிறது.

2. புறவினத்தாருக்கு நற்செய்தி

அ) முதற் கிறிஸ்தவர்களும் புறவினத்தாரும்.

**1) திருச்சபையின் சீரான வளர்ச்சி:** தூய ஆவியானவர் சீடர்கள்மேல் இறங்கிய போது இறைவனின் புகழ் எல்லா மொழிகளிலும் அறிவிக்கப்பட்ட போதிலும் (அ.ப. 2:8-11), முதற் கிறிஸ்தவர்கள், ஆரம்பத்தில் இஸ்ராயேல் நாட்டில் மட்டுமே நற்செய்தியைப் போதித்தனர். அங்கிருந்தே இறைவனின் மீட்பு உலகெங்கும் பரவவேண்டும். ஆனால், தூய ஆவியின் ஏவுதலால் திருச்சபை படிப்படியாக வேறு நாடுகளுக்கும் பரவியது. பிலிப்பு சமாரியாவில் நற்செய்தியை அறிவித்தார் (அ.ப. 8). விருத்தசேதனத்தின் மூலம் இஸ்ராயேல் சுவட்டத்தில் சேர்க்கப்படாத நூற்றுவர் தலைவன் கொர்னேலியு என்பவனுக்குப் பேதுரு திருமுழுக்குக் கொடுக்கிறார் (அ.ப. 10). இறுதியாக அந்தியோக்கியாவில் வாழும் கிரேக்கர்களுக்கு இயேசுவைப்பற்றிப் போதிக்கப்படுகிறது. அவர்களில் அனேகர் மனந்திரும்புகிறார்கள் (11:20தொ). பவுலின் அழைப்பில் இறைவாக்குகளுக்கேற்ப (13:47; காண் எசா 49:6) புறவினத்தாரிடம் நற்செய்தியைப் பரப்புவதற்கு ஒரு கருவியைத் திருச்சபை பெறுகிறது (அ.ப. 9:15; 22:15.21; 26:17).

2) எருசலேம் சங்கம்: இப்படியாகத் திருச்சபை வளர்ந்து ஓர் அடிப்படைப் பிரச்சனையை எழுப்பியது. புறவினத்தார் மோசேயின் முறைமைகளைப் பின்பற்ற வேண்டுமா? எருசலேம் சங்கத்தில் இதைப்பற்றி விவாதம் நடந்தது. இப்படிப்பட்ட பாரத்தைப் புறவினத்தார் மேல் சுமத்தலாகாது என்று பவுல் வாதாடினார் (அ.ப. 15:1-5; கலா 2). பேதுரு இதை ஆதரித்து வழி மொழிந்தார். புறவினத்தார் மனந்திரும்புவது மறைநூலின் போதனைக்குப் பொருத்தமானதே என்றார் யாக்கோபு (அ.ப. 15:7-19). இப்படியாக இயேசுவின் சிலுவை மரணத்திலும் உயிர்ப்பிலும் உள்ளடங்கிக்கிடந்த உண்மை இறுதியில் வெள்ளிடை மலையானது. புதிய இறைமக்களின் சமூகமான திருச்சபையில் புறவினத்தாருக்கும் இஸ்ராயேலருக்கும் சமநிலை அளிக்கப்படுகிறது. தான் புறவினத்தாரின் போதகராக அழைக்கப்பட்டது உண்மை என்பதைப் பவுல் இதிலிருந்து, உறுதியாக உணர்கின்றார் (கலா 2:7தொ).

**ஆ) பவுல் - புறவினத்தாரின் போதக்:** பவுல் நற்செய்தியைப் போதிக்கும்பொழுது பழைய உடன்படிக்கையிலிருந்து வரும் அமைப்புக்குத் தக்க மரியாதை கொடுக்கிறார். எப்பொழுதும், யூத மக்களுக்குத்தான் முதலில் நற்செய்தியைப்

போதிக்கிறார். அவர்கள் அதை ஏற்க மறுத்த பிறகே புறவினத்தாரிடம் செல்கிறார் (அ.ப. 13:45 தொ; 18:5தொ; 19:8 தொ: காண். உரோ 1:16; 2:10). ஆனால் மற்ற இடங்களில் புறவினத்தாருக்கும் நற்செய்திக்குமுள்ள தொடர்பை விளக்குகிறார்.

1) நற்செய்தியும் புறவினத்தாரும்: புறவினத்தாரும் யூத மக்களைப்போல், இறைவனின் சினத்திற்கு உட்பட்டவர்களே (உரோ 1:18). இறைவன் படைப்புகளின் மூலம் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார் (உரோ 1:19தொ; அ.ப. 14:17); ஆனால், அவர்களோ அவரை அறிந்து கொள்ளவில்லை (உரோ 1:21தொ). மனச்சான்றின் மூலம் அவருடைய திருச்சட்டத்தைத் தெரியப்படுத்தினார் (2:14 தொ); அவர்களோ சிலைவழிபாட்டின் விளைவாக உள்ளத்து இச்சைகளுக்குத் தங்களையே கையளித்தனர் (1:24-32). எனினும், இன்று புறவினத்தார் நற்செய்தியில் விசுவாசங் கொள்வார்களேயானால் இறைவன் யூத மக்களுக்கு இரக்கங்காட்டுதுபோல் அவர்களுக்குங் காட்ட ஆசிக்கின்றார் (1:16; 3:21-31; 10:12). விசுவாசந்தான் இருவினத்தாரையும் இறைவனுக்கு ஏற்புடையவராக்குகின்றது. மறைநூலின் சாட்சிப்படி, விசுவாசத்தால் மீட்கப்பட்டோ,ர இறைவனின் ஆசீரைப் பெற உரிமையுள்ள ஆபிரகாமின் மக்களாவர் (கலா 3:6-9). இந்த வாக்குறுதியைக் கண்டனுபவிக்கும் எல்லா இனத்தவரும் ஒருமிக்க விருத்தசேதனம் பெற்றவர்களாகிறார்கள். இப்படியாக ஆபிரகாம் இனத்தார் பலருக்குத் தந்தையாகிறார் (உரோ 4).

2) திருச்சபையில் யூதரும் புறவினத்தாரும்: கிறிஸ்துவில் மனித குலத்தின் ஒன்றிப்புப் புதுப்பிக்கப்படுகிறது. இனி, யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை (கலா 3:28). பகைமை என்னும் சுவர் யூதரையும் புறவினத்தாரையும் பிரித்து வைத்திருந்தது. இந்தச் சுவர் கீழே இடித்துத் தள்ளப்பட்டவுடன் இரு மக்களுக்குமிடையே நட்புண்டாகியது. அவர்கள் எல்லாரும் ஒருமுகமான புதிய மனிதகுலத்தை உருவாக்குகிறார்கள். இந்தப் புதிய மனுகுலம் கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாகிறது. மனுகுலம் முழுவதும் ஒரே உடல்; கிறிஸ்து அதன் தலை (எபே 2:11-22). இந்த ஒன்றிப்பின் மறையுண்மை இப்பொழுது திருச்சபையில் செயல் பெற்று வருகிறது. மேலும், விண்ணரசில் முழு நிறைவை அடையக் காத்துக்கொண்டிருக்கிறது. மனித குலத்தை இரு பாகங்களாகப் பிரிக்கும் பழங்காலப் பழக்கம் மறை வரலாற்றிலுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. முன்பொரு சமயத்தில் இஸ்ராயேல் மக்கள் பணிவற்றவர்களாய் இருந்ததால் அவர்களில் "எஞ்சியவர்" சிலரையே இறைவன் பாதுகாத்து மற்றவர்களைப் புறக்கணித்தார். புறவினத்தாரை இஸ்ராயேல் மக்களுடன் இணைத்து அதன் மூலம் அவர்களை மீட்கவும், அதே நேரத்தில் இஸ்ராயேலின் பொறாமையை எழுப்பிவிட்டு, அதனால் அவர்களை மனந்திரும்பவைக்கவுமே இவ்வாறு செய்தார் (உரோ 11:1-24). பிற்காலத்தில் புறவினத்தார் எல்லோரும் திருச்சபையில் சேர்ந்தபின், இஸ்ராயேல் இனம் முழுவதும் மீட்கப்படும் (11:25-29). இறைவனின் செயல்முறைகள் புறவினத்தார் எல்லாரும் இஸ்ராயேலுடன் இணைத்து மீட்படைவதோடு முடிகிறது. அப்பொழுது அனைவரும் ஒருமிக்க இறைவனின் மக்களாவார்கள் (15:7-12).

### 3. கிறிஸ்தவச் சிந்தனைகள்

#### அ) நற்செய்தி நூல்கள்.

1) முதல் மூன்று ஒத்தமை நற்செய்திகள்: இயேசுவின் இவ்வுலக வாழ்க்கைச் சம்பவங்களை ஒன்று சேர்ப்பதினால் முதல் மூன்று நற்செய்தியாளர்களும் புறவினத்தாரின் மீட்பில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை வெவ்வேறு வழிகளில் காட்டுகிறார்கள். மாற்கு எழுதிய நற்செய்தி நூல் புறவினத்தைச் சேர்ந்த நூற்றுவர் தலைவன் சிலுவை அடியில் செய்த விசுவாசப் பிரமாணத்தை நோக்கி ஒருங்குவிக்கின்றது. "உண்மையாகவே, இம்மனிதர் இறை மகனாய் இருந்தார்" (மாற் 15:39). மத்தேயு புறவினத்தைச்

சேர்ந்த பெண்கள் இயேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார் (மத் 1:2-6). மேலும், குழந்தைப் பருவத்திலிருந்தே இயேசு புறவினத்தாரின் அரசராக விவரிக்கப்படுகிறார் (2:1-11). அவருடைய மறைப்பணியைப் "புறவினத்தாரின் நாடான'' கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் (4:15 தொ). இயேசுவின் இறுதி வார்த்தைகளும் புறவினத்தாரைப் பற்றியவையே. நற்செய்தியை எல்லா இனத்தாருக்கும் போதிக்கும்படி கட்டளை இடுகிறார் (28:19). லூக்கா கொடுக்கும் இயேசுவின் தலைமுறை அட்டவணை மனித குலத்தின் தந்தையாகிய ஆதாம்வரை செல்கிறது இயேசு இம்மனுகுலத்தை மீட்கவே வந்தார் (லூக் 3:23-38). எனவேதான் சிமியோன் அவரைப்பார்த்து, "இதுவே பிறவினத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி. இதுவே உம்மக்களாகிய இஸ்ராயேலின் மாட்சி" என்று புகழ்பாடுகிறார் (2:32). இறுதியாக, நற்செய்தி நூல்களையும், அப்போஸ்தலர் பணி நூலையும் இணைத்துப் பார்க்கும்பொழுது இயேசு தன்னுடைய பலியினால் எருசலேமில் பெற்றடைந்த மீட்புச்செயல் மண்ணுலகின் இறுதி எல்லைவரை பரவியுள்ளது தெளிவாகிறது (அ.ப. 1:8).

2) **யோவான்:** யோவான் புறவினத்தாரின் மீட்பை அவ்வளவு வலியுறுத்தவில்லை. ஏனெனில், அவருடைய கவனமெல்லாம் விசுவசியாத யூதமக்கள் மேல்தான் இருந்தது (யோவா 12:37-43). அவர்கள் இறை மக்களாக இருந்தபோதிலும் அவர்களுடைய மனக்கடினம் அவர்களை மற்ற நாட்டினரைப் போலவே ஆக்கியது (11:48 தொ; 18:35). அதே நேரத்தில் இயேசு இவ்வுலகில் இருந்த பொழுதுகூட விசுவாசமுள்ள புறவினத்தார் அவரை அணுகுவதைப் பார்க்கிறோம். இவர்கள்தான் புறவினத்தாரின் முதற்கனிகள் (4:53; 12:20-32). இறுதியாக, அவருடைய மரணம் மனுகுலம் முழுவதையும் இறைவனோடு ஒப்புரவாக்குகிறது. ஏனென்றால், அவருடைய இனத்திற்காக மட்டும் அவர் இறக்கவில்லை; சிதறிக்கிடக்கும் இறை மக்கள் எல்லாரையும் ஒன்று சேர்க்கவே இறந்தார் (11:50தொ).

அ) **திருவெளிப்பாடு:** திருவெளிப்பாடு ஒரு கிறிஸ்தவ இறைவாக்கு. இதுவும் பழைய ஏற்பாட்டிலுள்ள இறைவாக்குகளைப்போல் இறைவனுக்கும் புறவினத்தாருக்குமிடையே உள்ள இரண்டு விதமான தொடர்புகளை விளக்கியுள்ளது.

1) **பகைவர்மீது தீர்ப்பு:** முற்காலத்தில் புறவினத்தார் இஸ்ராயேலிடம் நடந்து கொண்டது போலவே, சில புறமத நாட்டினர் புதிய இறைக்களிடமும் பகைமை காட்டினர் (காண். திருவெளி 11:2). தம்மை வணங்கச் செய்யும் விலங்குகள் என்றும் (திருவெளி 13), இயேசுவின் சாட்சிகளது இரத்தத்தைக் குடித்து இறைநிந்தனை கூறும் பாபிலோனிய வேசி (திருவெளி 17) என்றும் குறிப்பிடுவது இவர்களைப் பற்றியே. இச்சக்திகள், சாத்தானின் ஆற்றல்களால் நிரப்பப்பட்டு இருப்பதால் கிறிஸ்துவுக்கு எதிராக இறுதிப்போர் புரிகின்றன (17:13 தொ; 19:19; 20:7 தொ). இதனால் அவர்கள் தீர்ப்பிடப்பட்டுத் தகர்த்தெறியப்படுவர் (14:6-11;18). கிறிஸ்துவுக்கு எதிராகச் செய்யும் போராட்டத்தில் அவர்கள் தோல்வி காண்பார்கள் (17:14; 19:15.20தொ).

2) **மனந்திரும்பிய நாடுகளின் மீட்பு:** அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இந்தப் பாவக்கறை படிந்த மனித குலத்திற்கு எதிராக ஒரு புதிய மனிதகுலம் உருவெடுத்துள்ளது. இது செம்மறியின் இரத்தத்தால் மீட்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளையும், குலங்களையும், இனங்களையும், மொழிகளையும் சார்ந்த மக்கள் கூட்டம் இது (திருவெளி 7:9-17). இம்மக்கள், இறைவனை நாடுகளுக்கெல்லாம் அரசர் என்று போற்றி (திருவெளி 15:3தொ), ஊழியுள்ள காலம் வரை, புதிய எருசலேமில் வாழ்வார்கள் (21:24 தொ). மீட்கப்பட்ட மனிதகுலம் இறுதியில் ஒன்றிப்பை அடைந்துவிடுமாகையால் புதிய ஏற்பாடு இந்த நம்பிக்கையூட்டும் இறைவார்த்தைகளுடன் முடிவடைகிறது.

நாடுகளின் அரசரே, அவர்களால் விரும்பப்பட்டவரே, அவர்களை ஒன்றாக இணைத்த மூலைக்கல்லே, மண்ணிலிருந்து உண்டாக்கிய மனுகுலத்தை மீட்டருளும்.

**புறவினத்தார் முற்றம் (GENTILES, COURT OF THE)**

ஏரோது மன்னனின் காலத்தில் கோவில் பரப்பில் வெளிப்புறப் பகுதி இவ்வாறு அழைக்கப்பட்டது. இப்பகுதியில் மட்டும் தான் யூதர் அல்லாதவர்கள் நுழையமுடியும் என்று கோவிலை இரண்டாகப் பிரிக்கும் சுவரில் அமைந்துள்ள எச்சரிக்கைக் கல்லில் குறிப்பிடப் பட்டிருந்தது. மாற்கு 11:15-18-இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சி கோவிலின் இப்பகுதியில்தான் நடைபெற்றது. காண்க. எருசலேம் ஆலயம்.

**புறா (DOVE)**

1. புறா என்னும் பொதுப் பெயரின்கீழ் விவிலியமானது கரும்புறா, காட்டுப்புறா, மாடப்புறா, புறா என்னும் பல்வேறு பறவையினங்களை வகைப்படுத்துகிறது. ஆலயப்பலியில் அளிக்கப்படும் பறவை இது மட்டுமே. இஃது ஏழைகளின் காணிக்கையாகும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தூய்மைச் சடங்குகளில் இது பயன்படுத்தப்பட்டது (லேவி 1:14; 5:7,11; எண் 6:10; லூக் 2:24; லேவி 12:8). எனவே, ஆலயத்தில் புறா விற்பவர்களும் இருந்தனர் (மத் 21:12; யோவா 2:14,16).

2. புறாவின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்தவர்கள் என்ற முறையில், ஒப்பிடுவதில் யூதர்கள் அவற்றைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். இஸ்ராயேலானது வந்திராத மீட்பிற்காகக் காத்திருக்கும் வேளையில், அவர்களது புலம்பலானது புறாவினுடைய வேதனைக் குரலைப் போல உள்ளது (எசா 38:14; 59:11; நாகூ 2:8). அவர்களுக்கு மனத்தளர்வு உண்டாகும்போது, பாலைவனத்திற்கு ஓடிவிட அவர்கள் விரும்புகின்றனர் (சங் 55:7-8). இது புறாவின் பறக்கும் ஆற்றலைச் சுட்டுகிறது. புறா பாறைகளில் கூடு கட்டுகிறது (எரே 48:28) புறாவின் வண்ணங்கள் சங் 68:13-இலும், அதன் கண்கள் உ.ச. 1:15; 4:1; 5:12-இலும் குறிக்கப்படுகின்றன. இஸ்ராயேலானது இறைவனிடம் காட்டாத இயல்பான அறிவைப் புறா கொண்டிருப்பதைப் பருவகால இடப்பெயர்வுகள் காட்டுகின்றன (எரே 8:7). இந்த இடப்பெயர்வுகள் நாடு கடத்தப்படுதலை ஒரு தருணத்திலும் (எசே 7:16). அடுத்து ஓய்விடத்தில் ஒன்று சேருதலையும் சுட்டுகின்றன (ஓசே 11:11; எசா 60:8). மற்றொருபுறம் எப்பிராயிம் ஆபத்தினால் பயமுறுத்தப்பட்ட "அறிவில்லாப் பேதைப் புறாவைப்போல்" உள்ளது (ஓசே 7:11). இவற்றில் எந்தவொரு ஒப்புமையும் இயேசுவால் நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை. அவர் முரண்பாடுகளைப் பயன்படுத்தி "பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடற்றவர்களாயும்" தங்களைக் காட்டுமாறு தமது சீடருக்குக் கூறுகிறார் (மத் 10:16).

3. இறுதியாக, மற்றக் கவிஞர் பலரிடம் உள்ளது போன்று விவிலியத்திலும் புறாவானது அன்பின் அடையாளமாய் இருக்கலாம். காதலரின் பார்வையில் அவரது அன்பிற்குரியவர் "புறாவாக" உள்ளார் (உ.ச. 2:14; 5:2; 6:9). புறா, தன் இணைக்குக் காட்டும் பிரமாணிக்கமும், மென்மையும், அன்பிற்குரியவரைக் குறிக்க ஏற்ற ஒப்புமையாகக் கருத இடமளிக்கிறது. இஸ்ராயேலானது இப்பெயரினாலேயே தன்னை அழைக்கிறது. "உமக்குச் சொந்தமான புறாவின் உயிரைப் பொல்லாத விலங்கிற்கு ஒப்புக்கொடுத்து விடாதேயும்" (சங் 74:19). இயேசுவினுடைய திருமுழுக்கின்போது இறைவனின் ஆவியானவர் புறா வடிவில் இறங்கிவந்து இயேசுவின்மேல் தங்குகிறார் (மத் 3:16 இணை). இந்த அடையாளத்தினுடைய உறுதியான விளக்கத்தைக் கண்டடைவது இயன்றதாக இல்லை. அனேகமாக, நோவாவின் பெட்டகத்திற்குச் திரும்புகின்ற புறாவினைச் சுட்டும் குறிப்பாக இஃது இருக்காது (ஆதி 8:8-12). ஆய்வாளர்கள் சிலர் யூத மரபுகளின் துணையுடன், புறாவினை

இஸ்ராயேலுடன் ஒப்பிடுவர். ஆனால், இறைவனுடைய அன்பானது அடையாள வடிவில் உலகின்மீது இறங்குகிறது என்பதற்கான சுட்டுதலாக இஃது இருக்கக்கூடாதா? இறுதியாக, நீரின்மேல் அமைந்தாடிக் கொண்டிருந்த இறைவனின் ஆவியைப் புறா வடிவாகக் கண்ட மற்ற சில யூத மரபுகளின்படி (ஆதி 1:2), இயேசுவின் திருமுழுக்கின்போது ஒரு புதிய படைப்பு நிகழ்க்கிறது என்பதை இந்த அடையாளம் சுட்டலாம் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர்.

**புறாவின் எச்சம் (DOVE'S DUNG)**

சமாரியா முற்றுகையிடப்பட்ட பொழுது இந்தப் பொருளானது அதிக விலைக்கு விற்கப்பட்டது (2 அர 6:25). எருசலேம் முற்றுகையிடப்பட்ட பொழுது (கி.பி. 66-70) மாட்டுச்சாணம் உணவாகப் பயன்பட்டது என்று யோசிப்பசு கூறுகிறார். பயங்கரமான சூழ்நிலைகளில் இது போன்ற பொருட்கள் உண்ணப்பட்டன என்று ஆசிரியர்கள் பலர் கூறுகின்றார்கள். இஃது உப்பாகப் பயன்படுத்தப்பட்டது என்பது போதிய விளக்கமாக இல்லை. அரேபியாவில் "குருவிச் சாணம்" என்ற மூலிகை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இஸ்ராயேலில் அப்படிப்பட்ட ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை.

**புற்றுநோய் (GANGRENE)**

இது பழைய கிரேக்க வழக்கில், பரவிப் படரும் புண்ணாகும். 2 திமொ 2:17-இல் போலிப் போதகரின் பதிதப் போதகம் மிகக் கேடு விளைவிக்கும் முறையில் பரவுவதை விவரிக்க இச்சொல் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. புளூட்டார்த்தகும் இம்முறையில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

**புனித கல்லறை (HOLY SEPULCHRE)**

இஃது எருசலேமில் இயேசு கிறிஸ்து புதைக்கப்பட்ட கற்குகையான கல்லறையைக் குறிக்கும். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கல்லறையைக் குறிக்க, பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மத் 27:60 இயேசு வைக்கப்பட்ட கல்லறை அரிமத்தியா ஊராரான யோசேப்பு என்பவருடையது எனக் குறிப்பிடுகிறது. மாற்கும், லூக்காவும் இதைச் சுட்டுகின்றன. ஆனால், அது சரியாக எந்த இடத்தில் இருந்தது என்பதை மூவரும் குறிப்பிடவில்லை. மாற்கைத் தவிர, மற்ற மூன்று நற்செய்திகளும் இக்கல்லறையில் அதுவரை யாரையும் வைத்ததில்லை எனக் கூறுகின்றன. யோவான் போகிற போக்கிலே, அங்கு ஒரு தோட்டம் இருந்ததென்றும், ஆயத்தநாள் தொடங்க இருந்ததால், அங்கிருந்த புதுக்கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தனர் என்றும் கூறுகிறார்.

ஆதிக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த முதல் மூன்று நூற்றாண்டுகளில் இந்தப் புனிதக் கல்லறை இருக்குமிடம் பற்றி எந்த ஏட்டுச் சான்றும் தெரியவில்லை. யுசேபியுவின் கூற்றுப்படி மன்னர் கான்ஸ்டன்டைன் ஆயரான மக்காரியுவை இந்தக் கல்லறையின் இடத்தை அறியுமாறு பணித்தார். இக்கல்லறை புதையுண்டு போயிருந்ததாலும் மற்றும் பல இடர்கள் இருந்ததாலும், இந்த ஆயர் இறை வழிகாட்டுதலின் உதவியால் இந்த இடத்தைக் கண்டுபிடித்தார். மன்னர் இந்த இடத்தில் இருந்த அப்போதீத்துக் கோவிலை இடித்துவிட்டு ஓர் ஆலயத்தை எழுப்பினார்; பின், கொல்கொதா தேவாலயத்தையும் கட்டினார். மன்னரின் இச்செயலுக்கு அவர் காலத்தில் வாழ்ந்த (கி.பி. 313) யுசேபியுவும், போர்தோ திருப்பயணியரும் சான்று கூறுகின்றனர்.

இதைத் தவிர சிலர் இக்கல்லறை வேறு ஓர் இடத்தில் தோட்டக்கல்லறை என்னுமிடத்தில் இருப்பதாகக் கூறினர். இது தமஸ்கு வாயிலின் வடக்குத் திசையில் சிறிது தொலைவில் உள்ளது. இது 1867-இல்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோல் கல்லில் குடைந்த கல்லறைகள் பல இங்குக் காணப்படுகின்றன. எனவே, இதுவே உண்மையான இடமாயிருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

**புனிதத்தின் அல்லது தூய்மையின் சட்டம் (HOLINESS CODE)**

காண்க. வழிபாட்டு நூல்: தூய்மையின் சட்டம்.

**புனிதப்படுத்தல் (SANCTIFICATION)**

புனிதம், அடிப்படையில் இறைவனுடைய பண்பானாலும் (யோபு 6:10; எசா 6:1-5; ஓசே 11:9), இறைவனுடைய செயலால் ஆட்கள், இடங்கள் அல்லது பொருட்கள் புனிதப்படுத்தப்படுகின்றன. அதாவது, பொதுவாழ்விலிருந்து பிரிக்கப்பட்டு, ஏதாவது ஒரு வகையில் இறைவனுடைய பணிக்கோ, வழிபாட்டுக்கோ அர்ப்பணிக்கப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டில், இறைவன் எப்பொருளையும் இடத்தையும் புனிதமுடையது என்று வெறுமனே அறிவிப்பதில்லை. அவரே புனிதப்படுத்துகிறவர் என்றாலும் (யாத் 30:43; காண். 31:13), புனிதப்படுத்தலில் சடங்கு முறைகள் இடம் பெறுகின்றன. பீடம் பலியாலும், அபிடேகத்தாலும் புனிதமாக்கப்படுகிறது (29:36-37). திரு உறைவிடம் முதன்முறையாகப் பயன்படுத்தப்படும்போது, அதிலுள்ள அனைத்தோடும் அபிடேகம் செயயப்படுகிறது (40:9-11; காண். 30:22-29). மந்தைகளின் முதல் பேறான ஆண்விலங்குகள் சடங்கு உணவில் உண்ணப்படவேண்டும் (உப 15:19-20).

அர்ப்பணச் சடங்குகள், இடங்களும் பொருட்களும் தங்களுடைய ஆற்றலால் புனிதம் அடையவில்லை என்றும், இறை மக்களுடையவும் அவர்கள் வழிபாட்டினுடையவும் புனிதத்தில் ஈடுபடுவதால் புனிதம் அடைகின்றன என்றும் காட்டுகின்றன. வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களின் புனிதமும் ஆட்தன்மையற்றதன்று, அல்லது பொது நிலையானதன்று. அவை இறைவனோடும் அவரது மக்களோடும் கொண்ட உறவின்மேல் அமைந்ததாகும். குறிப்பிட்ட ஆட்கள், எடுத்துக்காட்டாக குருக்கள் (யாத் 30:30; 40:12-15), லேவியர்கள் (எண் 8:5-21; 2 நாள் 39:5), தலைப்பேற்றாண்கள் (யாத் 13:2) மற்றும் நசரேயர்கள் (எண் 6:1-21) ஆகியோர் குறிப்பிட்ட அலுவலுக்காக அர்ப்பணிக்கப்பட்டாலும், அதன் அடிப்படைக் கருத்து இறைமக்கள் யாவரும் யாவேக்கு அர்ப்பணிக்கப்படுகின்றனர் (காண். லேவி 2:8) என்பதாகும். இந்த மக்கள் முழுமையும் அர்ப்பணிக்கபபடுதல் சில சமயங்களில் சடங்குகளால் நிறைவேற்றப்பட்டது (யாத் 19:10.14). இந்த அர்ப்பணம் மக்களின் முன்செல்லும் தன்மை நோக்கமும் உடையது (லேவி 19:2; காண். 1 பேதுரு 1:15). மக்கள் புனிதப்படுதலுக்கு, இறைவனுடைய குறிப்பிட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிதல் (யாத் 31:13; லேவி 20:8), சடங்குளைச் சரியான முறையில் கடைப்பிடித்தல் (19:5-8), பொது ஒழுக்க நடத்தை (19:17-18), பிற மக்களிடமிருந்து அவர்கள் வேறுபட்டிருத்தல் (யாத் 33:16) ஆகியவை சான்றாக அமைகின்றன.

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களைப் புதிய ஏற்பாடு "புனிதர்கள்" என்றழைப்பது இறைவனது சொந்தச் செயல் மற்றும் அவர்களின் புனிதம் பற்றிய அவரது அறிவிப்பின் விளைவாகும் (யோவா 17:17). இந்தப் புனிதப் படுத்துதல் "கிறிஸ்து இயேசுவில்" நிகழ்கிறது (1 கொரி 1:2.30). புனிதப்படுத்தப்பட்டோர் அவரில் விசுவாசம் கொள்பவர்கள் ஆவர். தனது இறப்பினால் அவரே புனிதப்படுத்துபவர் ஆவார் (யோவா 17:19; எபே 5:25-26; எபி 2:11; 10:10.14; 13:12). தூய ஆவியும், தந்தையாகிய இறைவனும் கிறிஸ்தவர்கள் புனிதப்படுதலில் ஆற்றலோடு செயலாற்றுகின்றனர் (உரோ 15:16; 1 பேதுரு 1:2; யூதா 1). இறைவனால் புனிதப்படுத்தப்படுதல் நிறைவேற்றப்படுவதால், பவுல் கிறிஸ்தவர்களைப் பொதுவாகப் "புனிதர்கள்" என்றும், "இறைமக்கள்" என்றும் அழைக்கிறார் (உரோ 12:13; 1 கொரி 1:2; கலா 1:1). கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வோரைப் புனிதப்படுத்தும் இறைவனது செயல் திருமுழுக்குச் சடங்கோடு இணைக்கப்பட்டுள்ளது (1 கொரி 6:11; எபே 5:26). இறைவனது சட்டத்துக்குப் புறம்பான முந்தைய வாழ்க்கையைக் கொண்டிருப்பவர்களின் வெளிப்படையான

மாறுபட்ட வாழ்வுமுறை இதற்குச் சான்று கூறுகிறது (1 கொரி 6:9-11).

ஒரே செயலாகப் புனிதப்படுத்துதலைக் கருதும் நோக்கோடு, அதை மனித முயற்சிகளடங்கிய ஒழுக்க வளர்ச்சிக்காகப் புரிந்து கொள்ளுதலும் காணப்படுகிறது (உரோ 6:19; 1 தெச 4:1-7; 2 திமொ 2:21; எபி 12:14). இதுவும் விசுவாசிகளிடம் இறைவன் ஆற்றும் முந்தையச் செயலையும், தொடர்ச்சியான அலுவலையும் சார்ந்ததாகும் (1 தெச 5:23).

**புனிதம் (HOLY, HOLINESS)**

**I.** 'தூயவர், தூயவர், தூயவர்' என இறைவனை நாம் வழிபாட்டில் வாழ்த்துகிறோம். 'நீர் ஒருவரே பரிசுத்தர்' எனக் கிறிஸ்துவைப் போற்றுகிறோம். புனிதர்களின் திருநாளையும் கொண்டாடுகிறோம். புனித வாக்கு என்றும், புனித வாரம் என்றும் கூறுகிறோம். நாமும் புனிதத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். புனிதம் என்னும் மறையுண்மை புதுமையானதொன்றாக, கடவுளுக்கு உரியதாய்ப் பொருந்தி நிற்கிறது; அதே நேரத்தில் வழிபாடு, நல்லொழுக்க நெறி இவற்றையும் தழுவியதாய் உள்ளது. கடவுளுக்கே உரித்தான ஒன்றாக இருப்பினும், உலகப் படைப்புகளுக்கும் சாற்றிக் கூறக்கூடியதாக அமைகிறது.

புனிதத்தைக் குறிக்கும் கோதெஸ் (Qodes) என்னும் எபிரேயச் சொல் பிரிந்து வைக்கப்பட்டது, தனித்து ஒதுக்கப்பட்டது என்னும் பொருளிலிருந்து தோன்றியதாகத் தெரிகிறது. அதாவது, சமயச்சார்பற்ற பொருள்களிலிருந்து பிரிந்து வைக்கப்பட்டது எனலாம். புனிதப் பொருள்களை யாரும் கண்டபடி தொட்டுப் பயன்படுத்துவதில்லை. சடங்குத் தூய்மையின் சூழ்நிலையில் அல்லாமல் கடவுள் புனிதமானவர் என்னும் உணர்வு, மனிதன் நெஞ்சத்தில் கடவுளிடத்து ஓர் அளவற்ற ஈர்ப்பையும், அதே நேரத்தில் ஒருவித அச்சத்தையும் விளைவிக்கிறது. மேலும் கடவுளின் புனிதமிக்க சுடரொளிமுன் தான் எவ்வளவு தாழ்ந்தவன் என்னும் உண்மையையும் தெளிவாக்குறிது.

விவிலியத்தில் புனிதத்தின் தன்மை இன்னும் ஆழ்ந்த பொருளுடையதாய் இருக்கிறது. மனிதன் இறைவனைக் காண்பதில் அடையும் திகைப்பைக் கூறி, புனிதமென்பது சமயச்சார்பற்றவற்றிற்கு அப்பாற்பட்டது என்று கூறுவதோடன்றி, கடவுளே தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தியதைக் கூறுகிறது. கடவுள் மட்டுமே புனிதமானவர்! அவரே புனிதத்தின் ஊற்று! அவரிடமிருந்தே புனிதம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஆனால், புனிதமே உருவானவர் நம்மோடு எவ்வாறு உறவுகொள்கிறார் என்பதை அறிந்துகொள்வது ஒரு பிரச்சனைதான். மனிதன், இடம், பொருள் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனின் புனிதமானது, பரிசுத்த ஆவியினால் கொடையாக அவற்றிற்கு அருளப்படுகிறது. இறைவனின் அன்பு (1 யோவா 4:18) பாவத்தை வென்று இவ்வாறு புனிதமெருகேற்றப்பட்ட படைப்பிற்கு அருளப்படுகிறது.

**II. பழைய ஏற்பாடு**

**1. கடவுள் புனிதமானவர், தன் புனிதத்தை வெளிப்படுத்துகிறார்;**

மனிதனானவன் அணுகமுடியாத புனித மயமானவர் இறைவன். மனிதனால் அந்த நிலையையும் புரிந்துகொள்ளச் சக்தியில்லை. எனவே, இதைத் தெரிவிக்க கடவுளே தனது மகிமையையும், புனித நிலையையும் வெளிப்படுத்தவேண்டும். படைப்பு, இறையாற்றல் தோற்றம், சோதனை, தண்டனைகள், பெருந்துயர் ஆகியவற்றின்மூலம் (எண் 20:1-13; எசே 38:21 தொ) இறைவன் தன்னையே வெளிப்படுத்துகிறார். அதே வேளையில், அளவிடற்கரிய அற்புதமான புதுமைகள் வழியாகவும் தன் தனிப்பெரும் புனிதத்தை மனிதனுக்குக் காட்டுகிறார்.

சீனாய் மலையில் இறைவனின் புனிதம் பல்வேறு இறையாற்றல் தோற்றங்களில் வெளிப்படுகிறது (யாத் 19:3-20). யாவேயின் புனிதம் தன்னை நெருங்குவோர்க்குப்

பயங்கரமானதாகவும், புதிரானதாகவும், அச்சத்தை விளைவிப்பதாகவும் இருக்கிறது (1 சாமு 6:19தொ). அதே நேரத்தில் அதன் உறைவிடமான பெட்டகத்திற்கு மரியாதையளித்து அதற்கு இடமளிப்பவர்களுக்கு அது பாதுகாப்பாக அமைந்து, ஆசீர் வழங்குகிறது (2 சாமு 6:7-11). இதைக் கடவுளின் யாவும் கடந்த நிலை அல்லது சினம் என்பதோடு குழப்பிவிடக்கூடாது. ஏனென்றால், இஃது அன்பும் மன்னிப்பும் தந்து, அதன் வழியாகவே வெளிப்படுகிறது (ஓசே 11:9).

தேவாலயத்தில் எசாயாவுக்குத் தோன்றும் போது யாவே மகத்துவம்மிக்க ஒரு பேரரசர் போலவும், உலகமெல்லாம் நிறைந்த புகழுடைய படைப்பின் ஊற்றாகவும், செராபியர் மாத்திரம் அணுகி முறையான வழிபாடு செலுத்தக்கூடிய வழிபாட்டுத் தலைவரெனவும் வெளிப்படுகிறார். செராபியர்கூட அவரை ஏரெடுத்துப் பார்க்க முடியாது. மனிதன் அவரைக் காண நினைத்தாலே இறந்துவிடுவான் (எசா 6:1-5; யாத் 33:18-23). இருப்பினும், அணுக முடியாத இறைவன், படைப்புக்கும் தனக்கும் இடையே இருக்கும் ஆழ்ந்தகன்ற பிளவை நிரப்பி, இணைத்து வைக்கிறார். அவர் இஸ்ராயேலின் புனிதமானவர்; அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களுக்கு மகிழ்ச்சியாகவும் சக்தியாகவும், ஆதரவாகவும், மீட்பாகவும் அமைந்திருக்கிறார் (எசா 10:20; 17:7; 4:14-20).

இவ்வாறு, கடவுளின் புனிதமானது மனிதனிடமிருந்து யாவும் கடந்த தூரத்தே விலகி நிற்காமல், அவனது வாழ்விலே கலக்கிறது; அவனுக்குக் கடவுளின் செல்வமாகவும், வாழ்வாகவும், நன்மையாகவும், சக்தியாகவும் அமைகிறது. புனிதம் என்பது கடவுளின் பண்புகளில் ஒன்றுமட்டுமன்று. கடவுளின் பெயரே புனிதம்தான் (சங் 33:21; ஆமோ 2:7; காண் 3:14). யாவே தன் புனிதத்தை வைத்தே ஆணையிடுகிறார் (ஆமோ 4:2). யாவே புனிதமனாவர் என ஒரு பொருட் பன்மொழியாய் அமைந்திருக்கும் இச்சொல்லே இந்த உறுதியைப் பிரதிபலிக்கிறது (சங் 7:22; எசா 5:24; அப 3:3).

**2. கடவுள்தான் புனிதமானவர் என்பதைப் பிறர் உணரவேண்டும்:**

தன் புனித நிலையை ஏற்றுக்கொண்டு தனக்கு மட்டுமே வழிபாடும் பணிவும் செலுத்த வேண்டுமென்பதிலும், தான் ஒருவரே கடவுள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதிலும் கடவுள் பெரும் ஆவல் உடையவர். தன் அடியார் வழியாக, தன் புனிதத்தைப் பிற மனிதர்க்கு ஒளிர்விக்கவும் விரும்புகிறார். தனக்குரிய வழிபாடு நுணுக்கமான சடங்குகளின்படி நடைபெற வேண்டுமென்றும் (லேவி 1-7), வழிபாட்டிற்குத் தூய்மை அவசியம் என்றும் (லேவி 12-15), தன் பெயருக்கு எவ்வித இழுக்கும் ஏற்படக்கூடாதென்றும் (லேவி 22:32) கடவுள் கோரினால், அதற்குக் காரணம் நல்ல முறையில் ஒழுங்கு நெறியோடு கொண்டாடப்படும் வழிபாடு அவருடைய மகத்துவத்தையும் மேன்மையையும் சிறப்பாக வெளிப்படுத்துகிறதென்ற ஒன்றேயாம். (லேவி 9:6-23; 1 அர 8:10தொ; காண் லேவி 10:1தொ; 1 சாமு 2:17; 3:11தொ). வழிபாடு திருச்சட்டத்துக்கு உட்பட்டதாகவும் (லேவி 22:31தொ), விசுவாசம் தோய்ந்ததாகவும் (உப 20:12), கடவுளை உண்மையாகவே போற்றுவதாகவும் (சங் 99:3-9) இருக்க வேண்டும். கடவுளுக்கு அஞ்ச வேண்டும். "அவருடைய புனிதத் தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பதன் பொருள் இதுதான் (எசா 8:13).

**3. கடவுள் புனிதப்படுத்துகிறார், தன் புனிதத்தை நமக்கு அளிக்கிறார்.**

**அ) புனிதமும் அபிடேகமும்:** யாவே தன் புனிதத்தன்மையை வெளிப்படுத்தும் வழிபாட்டிற்கென ஒருசில ஒழுங்குகளை வரையறுத்துக் கொடுத்ததுபோல, தனக்கெனச் சில இடங்களை (புனிதநாடு, திருவிடம், ஆலயம்), ஆட்களை (குருக்கள், லேவியர், தலைப்பேறு, அதிகாரிகள், இறைவாக்கினர்), பொருட்களை (காணிக்கை, ஆடைகள், வழிபாட்டுப்பொருட்கள்), காலத்தை (ஓய்வு நாட்கள், யூபிலி ஆண்டுகள்)

என்றிவ்வாறு ஒதுக்கி வைத்திருக்கிறார். இவைகளையெல்லாம் குறிப்பிட்ட சடங்குகள் மூலம் (காணிக்கை, பலி, அர்ப்பணம், அபிடேகம், இரத்தம் தெளித்தல்) புனிதப்படுத்தி இவ்வாறு திருநிலைபெற்றவற்றைச் சாதாரண வேலைகளுக்குப் பயன்படுத்தக் கூடாதென்று கூறியிருக்கிறார். இதனால் தான், லேவியர் உடன்படிக்கைப் பெட்டகத்தை ஏரெடுத்துக்கூடப் பார்க்கக்கூடாது (எண் 4:1-20); ஓய்வுநாளுக்கு இழுக்கு வரும்படி நடக்கக்கூடாது (எசே 20:12-24); குருக்களின் நடத்தை குறிப்பிட்ட கண்டிப்பான ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெற வேண்டும் (லேவி 21).

இவையெல்லாம் புனிதமானவை. ஆனால் இப்புனிதத்தின் படி நிலைகள், இவை கடவுளோடு எவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதைப் பொருத்து வேறுபடுகின்றன. இவற்றின் புனிதம் கடவுளின் புனிதம் போன்றதன்று. தீட்டு தொற்றிக் கொள்வதுபோல் (லேவி 11:31; 15:4-27), இறைப் புனிதத்தின் தொடர்பால், புனிதம் தன் இயக்கமாகப் பெறப்படுவதில்லை. அவருடைய திருச்சட்டத்தின் படியும், அவரால் நிர்ணயிக்கப்பட்ட சடங்கு முறைப்படியும், இறைவனுடைய சுதந்தரத் தீர்மானத்தால் விளைவதாகும். கடவுளுக்கும் படைக்கப்பட்ட பொருளுக்கும் இடையே உள்ள அளவில்லாத் தூரத்தை இத்திருச்சடங்குகள் வெளிப்படுத்துகின்றன (யோபு 15:15). இதனால் தான், தலைமைக் குருகூட ஆண்டுக்கொருமுறை மட்டும் அதுவும் தன்னையே நுணுக்கமான முறையில் புனிதப்படுத்தியபின், திருத்தூயகத்துள் நுழையலாம் (லேவி 16:1-16). எனவே, கடவுளின் புனிதத் தன்மைக்கும், மனிதன் மற்றும் பொருட்களின் திருநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்வது அவசியம். இவர்கள் பெறும் திருநிலை, இவர்களைச் சமயச் சார்பற்றவற்றிலிருந்து விடுதலைப்படுத்தி இடைநிலைக்கு உயர்த்துகிறது. இந்த இடைநிலை, ஒரே நேரத்தில், கடவுளின் புனிதத்தை மறைக்கிறது, வெளிப்படுத்துகிறது.

**ஆ) புனித மக்கள்:** கடவுளால் பிற நாடுகளினின்று பிரித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இஸ்ராயேல் கடவுளின் தனிப்பட்ட இனமாக, குருத்துவ இனமாக புனித இனமாக ஆகின்றது. விவரிக்க முடியாத அன்பினால், கடவுள் அவர்களோடு வாழ்ந்து வருகிறார் (யாத் 33:12-17). மேகம், பெட்டகம், ஆலயம் இவற்றின் வழியாகத் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் நாடு கடத்தப்பட்ட போதும், அவர்களோடு உடனிருந்து (எசே 1:1-28) "நானே உங்கள் நடுவிலிருக்கும் புனிதர்" என்கிறார் (ஓசே 11:9). இறைவன் மக்களோடு உடனுறைவதானது வெறும் சடங்குமுறைப் புனிதத்தையன்று, ஒழுக்கப் புனிதத்தைக்கோரும் உண்மையான மேன்மையை மக்களுக்கு அளிக்கிறது. தன் மக்களுக்குத் திருநிலை தரவேண்டும் என்பதற்காகத்தான் யாவே திருச்சட்டத்தை அமல்படுத்துகிறார் (லேவி 22:31தொ). இஸ்ராயேல் கானானிய மக்களோடு கலந்து, அவர்களின் தீய பழக்கங்களைக் கையாளக் கூடாது. இஸ்ராயேல் மற்ற இன மங்கையரை மணக்கவோ, அவர்கள் தொடர்பால் தங்களையே மாசுபடுத்திக் கொள்ளவோ கூடாது (உப 7:1-6). இஸ்ராயேலின் புனிதரான (எசா 7:9) யாவேயிடத்து மட்டுமே அவர்கள் பாதுகாப்பைத் தேடவேண்டும்; அதை விடுத்துப் படைக்கலங்களிலும், அரச தந்திரங்களிலும் நம்பிக்கை வைக்கக்கூடாது. யாவே இஸ்ராயேலுக்குப் பிற இனங்களிலிருந்து வேறுபடுத்தும் ஒரு தனிப்பண்பினைத் தருவதோடு, அதன் பாதுகாப்பாகவும் (எசா 41:14-20; 54:1-5), பெருமையாகவும் (43:3-14; 49:7), நிலை பெற்ற அழியாத நம்பிக்கையாகவும் (60:9-14).

**4. இஸ்ராயேல் தன்னையே புனிதப்படுத்திக் கொள்ளவேண்டும்:** இஸ்ராயேலைப் புனிதப்படுத்த விழையும் கடவுளின் சுதந்தர அழைப்புக்கு அது விருப்பம் தெரிவித்து, அவருடைய அருளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அ) இஸ்ராயேல் முதலில் தன்னையே தூய்மைப்படுத்தவேண்டும். அதாவது, கடவுளின் காட்சியைக்கண்டு அவரை வழிபடுவதற்கு முன்பு, இஸ்ராயேல் முதன்முதலில் கடவுளின் புனிதத்துக்கு ஒத்துப்போகாத எவ்வகைத் தீட்டையும் கழுவித் தன்னைத் தூய்மைப்படுத்த வேண்டும் (யாத் 19:10-15). ஆனால், பலியின் இரத்தத்தின் வழியாகவும் (லேவி 17:11), அவளுடைய இதயத்தைத் தூய்மைப்படுத்துவதின் வழியாகவும் (சங் 51) கடவுளே இஸ்ராயேலைத் தூய்மைப்படுத்துகிறார்.

ஆ) இறைவாக்கினரும் உபாகமமும் கடவுளுக்குப் பரிகாரம் தெரிவிக்க, பலிகள் மட்டும் போதாது; ஆனால் நீதி, கீழ்ப்படிதல், அன்பு இவையெல்லாம் வேண்டியவையாகும் என்று கூறுகின்றனர் (எசா 1:4-20; உப 6:4-9). "தூயோராய் இருங்கள். ஏனெனில், நான் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! தூயவர்!" (லேவி 19:2; 20:26) என்று கடவுள் கூறும்போது, அது வெறும் வழிபாட்டு முறைகளை மட்டும் குறிப்பிடுவதன்று; அவர்களின் குடும்ப, சமுதாய, பொருளாதார வாழ்வு நிலையிலும் அத்தகைய புனிதத்தன்மை உயிருள்ள விதத்தில் வாழ்ந்து காட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது (லேவி 17-26).

இ) மனிதனின் புனிதத்துவத்திலும் முன்னேற்றம் உண்டு. எவர் இறுதிக்கால அரசிலிருந்து வரும் சோதனைகளையும் நன்மைகளையும் கடந்து செல்கின்றனரோ (தானி 7:18-22), அவர்தான் "புனிதர்" என்றழைக்கப் பெறமுடியும். இவர்கள்தான் யாவேக்கு அஞ்சிய உண்மையான ஞானிகள் (சங் 34:10); இவர்கள்தான் சீயோனில் எஞ்சியிருப்பவர்கள்; எருசலேமில் தப்பி வாழ்பவர்கள்; உயிர் பிழைப்பதற்கென எருசலேமில் பெயர் எழுதப்பட்டவர்கள் (எசா 4:3); புனிதர்கள்.

**III. புதிய ஏற்பாடு:** அப்போஸ்தலிக்கச் சமூகத்திலும் பழைய ஏற்பாட்டுச் சொற்களே பயன்படுத்தப்பட்டன. கடவுள் **புனித** தந்தை (யோவா 17:11); யாவும் கடந்த படைப்பின் தலைவர்; கால இறுதியில் வரும் நீதிபதி (திருவெளி 4:8; 6:10). அவருடைய பெயர் புனிதம், தூய்மை (லூக் 1:49). அதுபோலவே, அவருடைய திருச்சட்டமும் (உரோ 7:12), உடன்படிக்கையும் (லூக் 1:72) புனிதமானவை. வானகத்தூதர்களும் (மாற் 8:38), இறைவாக்கினர்களும், புனித ஆசிரியர்களும் (லூக் 1:70; மாற் 6:20; உரோ 1:2) புனிதமானவர்கள் ஆவர். ஆலயமும், விண்ணக எருசலேமும் புனிதமானவையாகும் (1 கொரி 3:17; திருவெளி 21:2). கடவுள் புனிதர்; எனவே, அவரால் அழைக்கப்பட்டவர்களும் புனிதர்களாக விளங்க வேண்டும் (1 பேதுரு 1:15தொ லேவி 19:2). இறையரசின் வருகையில் அவருடைய பெயரின் புனிதம் வெளிப்படுத்தப்படவேண்டும் (மத் 6:9). ஆயினும், பரிசுத்த ஆவியின் வருகை புதிய ஏற்பாடு ஏற்படுத்திய புனித யுகத்தின் தொடக்கமாக அமைகிறது.

**1. புனிதரான இயேசு:** தந்தையின் ஒரே மகனாகவும், கடவுளின் ஆவி குடிகொள்ளும் நிலையாகவுமுள்ள இயேசுவின் புனிதத்துவம் தன் நிலையோடு பிணைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. "தூய ஆவியால் பிறக்கும்" அவர் புனிதராக இருப்பார்; "கடவுளின் மகன் எனப்படுவார்" (லூக் 1:32.35; மத் 1:18). திருமுழுக்கு யோவான் அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தபோது, "அன்பார்ந்த மகன்" தூய ஆவியன் அபிடேகம் பெற்றார் (அ.ப. 10; 38; லூக் 3:22). அவர் அசுத்த ஆவிகளை விரட்டியபோது, அவை "கடவுளின் புனிதர்", "கடவுளின் மகன்" என்று கூறி அறிக்கையிட்டன (மாற் 1:24; 3:11). இவ்விரு சொற்றொடர்களும் ஒரே பொருளில் கையாளப்பட்டன என்பது தெளிவு (யோவா 6:69; காண்க. மத் 16:16). பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு (லூக் 4:1), கிறிஸ்து தன் செயல்களின் வழியாகத் தன்னையே வெளிப்படுத்துகிறார். அவருடைய புதுமைகளும் அருஞ்செயல்களும் அவருடைய புனிதத்தைக் காட்டுவதற்கே தவிர, அச்சத்தை விளைவிப்பதற்கன்று. கடவுள் முன்னிருப்பதுபோல, அவர் முன்னர் ஒருவன்

தன் பாவநிலையை ஆழமாய் உணர்கிறான் (லூக் 5:8; காண். எசா 6:5).

வாழ்வின் ஊற்றாய் இருந்தாலும், சாவை அனுபவித்த புனித ஊழியனாகிய கிறிஸ்து (அ.ப. 4:27.30) ஒப்பற்ற புனிதர் ஆவார் (அ.ப. 3:14தொ). எனவேதான், கடவுள் அவரை மகிமைப்படுத்தியிருக்கிறார் (பிலி 2:9). சாவை வென்று புனிதத்தின் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்து (உரோ 1:4) இவ்வுலகைச் சார்ந்தவரல்லர் (யோவா 17:11). இனிமேல் தந்தையின் வலப்புறம் அமர்ந்திருக்கும் அவர் (மாற் 16:19) கடவுளுக்குச் சமமாகப் புனிதரென்று அழைக்கப்படலாம் (திருவெளி 3:7; 6:10). ஆகவே, கிறிஸ்துவின் புனிதம் பழைய ஏற்பாட்டுப் பெரியோர்களின் புனிதத்தைவிட வேறுபட்ட அமைப்பைச் சேர்ந்தது. அஃது, அவருடைய தூய தந்தையான கடவுளுடைய புனிதத்துக்குச் சமமானது (யோவா 17:11). அதே ஆன்மீக ஆற்றலையும், அதே வியப்புக்குரிய வெளிப்பாட்டையும் அதே மறைபொருளான ஆழத்தையும் கொண்டது. அஃது அவரையும் அவருடையவர்களையும் அன்பு செய்யவும், தந்தையிடமிருந்து பெற்ற மகிமையை அவர்களுக்கு அளிக்கவும், அவர்களுக்காகத் தன்னையே பலியாக்கவும் செய்கிறது. இவ்வாறுதான், அவர் தனது புனிதத்தை வெளிப்படுத்துகிறார். "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவா 17:19-24).

2. **கிறிஸ்து கிறிஸ்தவர்களைப் புனிதப் படுத்துகிறார்:** பழைய ஏற்பாட்டில் எபிரேயர்கள் தம் வழிபாட்டின் வழியாக வெளிப்படையாகச் சுத்தப்படுத்தப்பட்டதற்கும் (எபி 9:11-14; 10:10), புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து "உண்மையின்" வழியாகி நம்மைத் தூய்மைப்படுத்துவதற்கும் (யோவா 17:19) வேறுபாடுண்டு. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பிலே புனிதம் பெறுகிறார்கள். புனித ஆவி குடிகொள்ளும் நிலையமான அவர்கள் (1 கொரி 3:16தொ; எபே 5:26; 1 யோவா 2:20) கிறிஸ்துவில் புனிதர்களாக விளங்குகிறார்கள் (1 கொரி 1:2; பிலி 1:1). திருமுழுக்கு யோவான் கூறியதுபோல (லூக் 3:16; அ.ப. 1:5; 11:16) அவர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறுகிறார்கள்.

3. **தூய ஆவி:** கிறிஸ்தவர்களைப் புனிதப்படுத்துவதில் முக்கிய ஆள் தூய ஆவியே. அவர் முதலில் கிறிஸ்தவ சமூகங்களை அருளாலும், அருங்கொடைகளாலும் நிரப்பினார். திருச்சபையில் அவர் செயலாற்றும்விதம் இறை ஆவி பழைய ஏற்பாட்டில் செயலாற்றிய விதத்திலிருந்து வேறுபடுகிறது. அவருடைய பொழிவின் நிறைவும் உலகளாவிய தன்மையும் கிறிஸ்துவின் உயிர்ப்போடு மெசியாக் காலம் நிறைவேறிவிட்டது என உணர்த்துகின்றன (அ.ப. 2:16-38). ஒருபுறம், அவரது வருகை திருமுழுக்கோடும் மரித்து உயிர்த்த கிறிஸ்துவின் மறையுண்மையில் கொண்டுள்ள விசுவாசத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மறுபுறம், அவரது பிரசன்னம் நிலையானது. மீட்கப்பட்டோர் "தூய ஆவியின் ஆலயங்கள்" என்றும், "கடவுளின் ஆலயங்கள்" என்றும் (1 கொரி 6:11.20; காண் 3:16தொ), அவர்கள் அவரோடு உண்மையான ஒன்றிப்புக் கொண்டுள்ளனர் (2 கொரி 13:13) என்றும் பவுல் உறுதியாக அறிவிக்கிறார். "கடவுளின் ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்களே கடவுளின் மக்கள்" ஆவர் (உரோ 8:14-17) என்பதால், கிறிஸ்தவர்கள், ஆவியால் தற்காலிகமாக இயங்கும் இறைவாக்கினர்கள் மட்டுமல்லர் (லூக் 1:15 7:20); அவர்கள் எப்போதும் தங்களுக்குள்ளேயே இறைப் புனிதத்தின் ஊற்றைக் கொண்டிருக்கும் கடவுளின் குழந்தைகளாவர்.

4. **புனிதர்கள்:** வரையறுக்கப்பட்ட பொருளில், புனித அல்லது புனிதர் ஆகிய சொற்கள் பழைய ஏற்பாட்டில் அரிதாகவே பயன்படுகின்றன. இவை இறுதிக்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் சாற்றிக் கூறப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் புனிதர் என்ற சொல் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இது முதலில் எருசலேமின் தொடக்கச் சமூகத்திற்கு, குறிப்பாகப்

பெந்தகொஸ்தே நாளின் சிறிய குழுவுக்குச் சாற்றிக் கூறப்பட்டது (அ.ப. 9:13; 1 கொரி 16:1; எபே 3:5). பின்பு இக்கருத்து, யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் (அ.ப. 9:31-34), பின்பு எல்லா விசுவாசிகளுக்கும் (உரோ 16:2; 2 கொரி 1:1; 13:12) விரிவாக்கப்பட்டது. உண்மையில் தூய ஆவி வழியாகக் கிறிஸ்தவன் இறைவனுடைய புனிதத்திலேயே உண்மையான முறையில் பங்கு கொள்கிறான். "புனித மக்களாகவும்", "அரச குருத்துவத் திருக்கூட்டமாகவும்", "புனித ஆலயமாகவும்" அமையும் கிறிஸ்தவர்கள் (1 பேதுரு 2:9; எபே 2:21), புனித பலியில் கிறிஸ்துவோடு தங்களையே காணிக்கையாக்கி, இறைவனுக்கு உண்மையான வழிபாடு செலுத்தவேண்டும் (உரோ 12:1; 15:16; பிலி 2:17).

தேர்ந்து கொண்டதன் விளைவான கிறிஸ்தவர்களின் புனிதம் (உரோ 1:7; 1 கொரி 1:2), அவர்கள் பாவத்திலிருந்தும், பிறமதப் பழக்க வழக்கங்களிலிருந்தும் (1 தெச 4:3) தங்களையே விலக்கிக் கொள்ளவேண்டும் எனக்கோருகிறது. அவர்கள் "உலக ஞானத்தின்படி நடவாமல் கடவுளின் அருளையே பின்பற்றி, கடவுளிடமிருந்து வரும் நேர்மையோடு" நடக்க வேண்டும் (2 கொரி 1:12; காண். 1 கொரி 6:9தொ; எபே 4:30-5:1; தீத் 3:4-7; உரோ 6:19). புனித வாழ்வுக்கான இந்தக் கோரிக்கையே முழுக்கிறிஸ்தவத்துறவு வாழ்வின் பாரம்பரியத்துக்கு அடிப்படையாகும். இது புறத்தே மட்டும் கட்டுப்படுத்தும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதன்று; "கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட கிறிஸ்தவன் அவருடைய உயிர்த்தெழுதலை அடைவதற்காக, அவரது சாவின் சாயலைத் தன்னுள் ஏற்று அவருடைய பாடுகளில் பங்குபெற வேண்டும்" (பிலி 3:10-14).

**5. புனித நகர்:** உரிமையாக ஏற்கெனவே அடைந்துவிட்டாலும் இறைவனது புனிதம் என்ற உண்மை பாவத்தோடு போராடுகிறது. "இறைமக்கள் இவ்வுலகைத் தீர்ப்பிடும்" காலம் இன்னும் வரவில்லை (1 கொரி 6:2தொ). புனிதர்கள் தங்களையே புனிதப்படுத்தி ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குத் தயார் செய்யவேண்டும் (1 தெச 3:13; திருவெளி 22:11). அந்நாளில் புதிய எருசலேம், "புனித நகர்" தோன்றும். அதிலே வாழ்வின் மரம் பூத்துக் குலுங்கும்; அதிலிருந்து தூய்மையற்றவை மற்றும் சமயச்சார்பற்றவை யாவும் அகற்றப்படும் (திருவெளி 21-22; காண். செக் 14:20தொ). ஆண்டவர் தனது புனிதர்களில் மகிமைப்படுத்தப் பெறுவார் (2 தெச 1:10; 2:14). ஏனெனில் "இறைவன் அன்பாவார்" (1 யோவா 4:8). இதுவே மனிதருக்கு அளிக்கப்படும் இறைவனது அணுகமுடியாத புனிதத்தின் மறையுண்மையின் இரகசியமாகும்.

## புனிதர் (SAINT)

இவர்கள் கடவுளுக்காக ஒதுக்கப்பட்டவர்கள்.

**1. பழைய ஏற்பாடு:** உடன்படிக்கையின் மக்களாகிய இஸ்ராயேலர் புனித இனத்தைச் சார்ந்தவர்கள்; ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப் பட்டவர்கள். இவர்கள் கடவுளிடம் கொள்ள வேண்டிய உறவை லேவியராகமம் கூறுகிறது. "தூயோராய் இருங்கள். ஏனெனில், நான் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! தூயவர்!" (லேவி 19:2).

இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டு, அவரது வேலைக்காகப் புனிதப்படுத்தப்பட்டவர்களும் "புனிதர்கள்" என அழைக்கப்படுகின்றனர் (உப 33:2). கடைசி நாளில் இறைவன் தன்னை வெளிப்படுத்தும்போது அவரோடு பரிசுத்தர்கள் அனைவரும் வருவார்கள் (செக் 14:5). தானியேல் தமது காட்சியிலே 'பரிசுத்தர்' ஒருவர் பேசுவதைக் கேட்டார் (தானி 8:13).

பல இடங்களில் இஸ்ராயேலைக் கடவுளின் மக்களெனக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம் நீங்கள். "மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் உங்களையே தம் சொந்த மக்களாக, கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்து கொண்டார்" (உப 7:6). கடவுள் மக்களை நேசித்தார். புனிதர்கள் யாவரும்

அவருடைய கையில் இருக்கின்றனர் (33:3). எசாயா இறைவாக்கினர், பிரமாணிக்கமுள்ள எஞ்சியிருப்பவர்களைப் புனிதர்கள் என அழைக்கிறார் (எசா 4:3). இவர்கள் அந்தியோக்குவின் கொடுமைகளைச் சகித்து வாழ்ந்தவர்கள், மேலும் பொதுவாக, பக்தியுள்ள, கடவுள் பயம் கொண்ட மனிதரும் புனிதரென அழைக்கப்பட்டனர் (2 சாமு 22:26; சங் 12:1; 85:9). தானியேல் நூலில் இம்மக்களிடம் இறுதி நாளில் இறையரசு அளிக்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது (தானி 7:18.21-22). இவர்கள் மக்கபேயர் காலத்தில் புனிதப்போர்க் காலத்திலே மக்க பேயர்களுக்குத் துணைபுரிந்தவர்கள் (1 மக் 2:42; 7:13; 2 மக் 14:6). இச்சொல் சில இடங்களில் குறுகிய பொருளில் குருத்துவத்தையும் குறிக்கிறது (2 நாள் 6:41; சங் 132;9.16).

**2. புதிய ஏற்பாடு:** கிறிஸ்தவ காலத்திற்குமுன் மரித்த நல்லவர் சிலர் 'பரிசுத்தர்' என அழைக்கப்பட்டன் (மத் 27:52). கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையின் மக்கள்; பரிசுத்தர்கள். எனவே, கிறிஸ்தவர்கள் புனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர் (1 பேதுரு 1:15-16; 2:9). கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்கின்ற இறைமக்கள் புனிதர்களாவர் (பிலி 1:1). ஏனெனில், இயேசு கடவுளின் மகனானதால் கடவுளின் பரிசுத்தராவார் (மாற் 1:24; லூக் 4:34). இவர்களுடைய புனிதத்தன்மை கடவுளுடைய அழைப்பினால் ஏற்பட்டது. அபிடேகம் செய்யப்பட்ட அவர்களுக்கென ஒரு தனிப்பணி காத்திருக்கிறது. எனவே, பவுல் அவர்களைப் புனிதர்களாவதற்கு அழைக்கப்பட்டவர் எனக் கூறுகின்றார் (உரோ 1:7). கொரிந்து திருச்சபை கிறிஸ்துவில் பரிசுத்தராக்கப்பட்டோரையும், புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்டோரையும் கொண்டிருந்தது (1 கொரி 1:2). இப்புனிதர்களின் பட்டியலில் யூதக் கிறிஸ்தவருடன் சேர்ந்த புறவினத்தாரும் அடங்குவர் (எபே 2:19). இயேசு பரிசுத்தர்களோடு வரும்போது கிறிஸ்தவர்கள் குற்றமின்றிப் பரிசுத்தராய் இருக்க பவுல் வேண்டுகிறார் (1 தெச 3:13). இப்புனிதர்கள் இறுதி நாளிலே வானதூதர் உள்பட்ட உலகைத் தீர்ப்பிடுவதில் இயேசுவோடும் தொடர்புபடுத்தப்படுவர் (1 கொரி 6:2-3).

திருச்சபையின் உறுப்பினர்களைப் பொதுவாகப் புனிதர்கள் என அழைப்பது ஆதித் திருச்சபையின் வழக்கம். பவுல் தமது மடல்களில் இதே சொல்லைப் பயன்படுத்துகிறார் (உரோ 1:7; 1 கொரி 1:2; 2 கொரி 1:1; எபே 1:1; பிலி 1:1; கொலோ 1:2). பவுல் எங்குத் தங்கி தனது மடலை எழுதுகிறாரோ அவர்களைப் புனிதர்கள் எனக் கூறி 'அப்புனிதர்கள் வாழ்த்துகின்றனர்' என எழுதுகின்றார் (2 கொரி 13:13). இதே போன்று கிறிஸ்தவர்களைப் புனிதர்கள் என அழைப்பது அப்போஸ்தலர் பணியிலும் (அ.ப. 9:13.32.41; 26:10), கிறிஸ்தவர்கள் எபிரேயர் மடலிலும் (13:24), திருவெளிப்பாட்டிலும் (5:8) ஆகும். மேலும் குறிப்பாக, கிறிஸ்தவ மறைசாட்சிகள் (திருவெளி 16:16; 17:6; 18:24), புனிதர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். இவர்களது ஆன்ம நலனைக் கவனிப்பது திருச்சபையின் தலையாய பணி (எபே 4:12). இவர்கள் ஒழுக்கத்திலே உயர்ந்தவர்களாக வாழ அழைக்கப்படுகின்றனர் (எபே 5:3). இவர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்தும், நடைமுறையில் பணி வாழ்க்கையில் அதை எண்பித்தும் வாழவேண்டும் (உரோ 12:13; 16:2; எபே 1:15; கொலோ 1:4). இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, பவுல் எருசலேம் திருச்சபையின் புனிதர்கள் நிவாரணத்திற்காகச் சேகரித்த நன்கொடையாகும் (2 கொரி 8:4; உரோ 15:25-26; 1 கொரி 16:1; 2 கொரி 9:1).

### புனை பெயர் நூல்கள் (PSEUDEPIGRAPHA)

இவற்றைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லின் சொற்பொருள் பொய் என்பதாகும்; அதாவது, பொய்யாகச் சாற்றிக் கூறப்படுவது. யூதவரலாற்றின் இறுதி நூற்றாண்டுகளில் ஒரு புதுவகையான இலக்கிய வடிவம் தோன்றியது. இது கடந்த காலத்தைச் சேர்ந்த பெரியவர்களின் பெயரால், புனை பெயரில் நூல்கள் எழுதும் வழக்கம். இது விநோதமானதாகவும் ஏமாற்றுத்

தன்மையுடையதாகவும் இருந்தாலும், மக்களிடையே பரவலாகவும் விரும்பத்தக்கதாகவும் விளங்கிற்று. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களுக்குக் கடந்தகால ஞானியையோ, இறைவாக்கினரையோ, ஒரு குலமுதுவரையோ ஆசிரியர் என்று கூறி, அவர்களை உண்மையான ஆசிரியருக்குப் பதிலாகப் பேசச் செய்வது மரபாகும். இத்தகைய நூல்கள் திருமுறைக்குப் புறம்பான நூல்களில் பல உண்டு. இவற்றில், உண்மையான ஆசிரியர் தம்மைக் கடந்த காலத்தில் வாழ்ந்த ஆளாகப் பாவித்து, ஏற்றுக் கொள்ளப்பட்ட விவிலிய ஆட்களின் அதிகாரத்தோடு பேசுவார். இத்தகைய புனைபெயர் இலக்கிய வடிவம் மக்களிடையே பெரிதும் விரும்பப்பட்டது; நன்கு விரும்பப்பட்ட வடிவமாகிவிட்டது. அதனால் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறு உன்னத சங்கீதம், திருவுரையாளர், பழமொழி, சாலமோனின் ஞானம் ஆகிய நூல்கள் சாலமோனால் எழுதப்பட்டன என்று கருதப்பட்டது. உண்மையில் இவை புனைபெயர் இலக்கியங்களே. தானியேல், பாரூக்கு நூல்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

விவிலியத் திருமுறைப் பட்டியலைச் சேராத புனைபெயர் நூல்கள் பல உண்டு. இவற்றைப் பற்றி விவிலியத்துக்குப் புறம்பான போலி நூல்கள் என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

**புனைபெயர் மத்தேயுவின் நற்செய்தி (PSEUDO-MATTHEW, GOSPEL OF)**

இந்நூல் கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டில், இலத்தீன் மொழியின் எழுதப்பட்ட இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றிய நற்செய்தியாகும். இஃது அடிப்படையில் யாக்கோபின் மூல நற்செய்தி மற்றும் தோமாவின் இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றிய நற்செய்தி ஆகியவற்றின் மறுபதிப்பாகும். இவற்றிலிருந்து இந்நூலில் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன. சில சேர்க்கப்பட்டுள்ளன, சில விரிவாக்கப்பட்டுள்ளன. இந்நூல் மத்திய காலத்தில் மிகப் பிரபல்யமாய் இருந்தது. இந்நூலில் காணப்படும் கதைகள், திருச்சபையின் கலையிலும் கதைகளிலும் இடம் பெற்றன.

**புனைபெயர் மெலித்தோவின் நிகழ்ச்சியுரை (PSEUDO-MELITO, NARRATIVE OF)**

இது மரியாளின் விண்ணேற்புப் பற்றிய ஒரு தொடர் உரை; இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது.

**புன்னை மரம் (POPLAR)**

கிளைகளை உடைய, உயரமாக வளரக்கூடிய ஒரு மரம் இது. யாக்கோபு காரானின் ஆட்டு மந்தையை அதிகரிக்கச் செய்ய, தன் மாமன் இலாபானை ஏமாற்றும் திட்டத்தில் கேதுரு, வாதுமை மர இலைகளோடு புன்னை மர இலைகளையும் பயன்படுத்தினார் (ஆதி 30:37). பாலஸ்தீன நாட்டு மலைகளில் கருவாலி, தேவதாரு ஆகிய மரங்களோடு இம்மரங்களும் காணப்படுகின்றன (ஓசே 4:13). இதன் கெட்டியான வேர்ப்பிடிப்பின் காரணமாக, கவிதைகளில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன் இலைகளின் அடிப்பகுதி சற்றே வெண்மையாக இருக்கும். இதன் பூக்களும் வெண்மையாக இருக்கும்.

# பூ

**பூகா (PUAH - பெண்)**

1.இவள் எகிப்திய மன்னன், எபிரேயர்கட்கும் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லும்படி கட்டளையிட்ட மருத்துவச்சிகளில் ஒருத்தி ஆவாள் (யாத் 1:15). உகாரித்து மொழியிலுள்ள 'பெண்' என்னும் பொருளில் உள்ள சொல்லிலிருந்தே இப்பெயர் வந்திருக்குமெனக் கருதப்படுகிறது. பிற்கால யூத மரபு வழிக்கதைகள் இவளை மிரியாமோடு தொடர்புபடுத்திப் பேசின.

2. இசக்கார் இனத்தைச் சேர்ந்த விடுதலை வீரர் (நீதிபதி) தோலாவின் தந்தை (நீதி 10:1). இப்பெயர் ஓர் இனத்தைக் குறிக்கிறது என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

3. பூவா என்ற பெயரின் மற்றொரு வடிவம். இசக்காரின் நான்கு புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:1).

**பூசி (BUZI) - (வெறுக்கப்பட்)**

எசேக்கியேலினுடைய தந்தை: ஒரு குரு (எசே 1:3).

**பூசியர் (BUZITE)**

பூசுவில் குடியேறியவர் அல்லது பூசுவைச் சேர்ந்தவர் (இவர் எரே 25:23-இல் தேதான், தேமா ஆகியோருடன் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளார்). அனேகமாக ஓர் அரேபியக் கோத்திரமாகவோ, தேசமாகவோ இருக்கலாம். இதனுடைய இருப்பிடம் இன்னும் நிர்ணயமாகத் தெரியவில்லை. எலிகூவின் தந்தை பூசியரான பாரக்கேல் என்று அழைக்கப்படுகிறார் (யோபு 32:2.6).

**பூசு (BUZ - புறக்கணிப்பு, வெறுத்தல்)**

1. ஆபிரகாமின் சகோதரனான நாகோருக்கு, மில்கா வழியாகப் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 22:21). அதே பெயருடைய வட அராபிய இனத்தின், குல மூதாதையர் (எரே 25:23).

2. காது கோத்திரத்தைச் சேர்ந்த யாகுதோவின் தந்தை (1 நாள் 5:14).

**பூச்செடிகள் (FLOWER PLANTS)**

இதில் பூக்கள் கொடுக்கும் மரங்கள் செடிகள் மற்றும் கொடிகளும் அடங்கும். தொடக்க காலத்திலிருந்து பாலஸ்தீனத்தில் பல நூறு மலர்கள் இருந்ததாகக் கருதப்பட்டாலும், ஒரு சிலவே குறிப்பாகப் பெயரிடப்பட்டுள்ளன. மலர்களை எபிரேயர் பாராட்டினர் என்பதற்கு மலரைப் பொதுவாகக் குறிக்கும் எபிரேயச் சொற்கள் பலவிருப்பது சான்று பகர்கிறது. வயல் வெளிப் பூக்கள் வசந்த காலத்தின் அடையாளமாகும் (உ.ச. 2:12). மனித வாழ்வின் நிலையின்மையைக் குறிக்க, பூக்கள் அடிக்கடி பயன்பட்டுள்ளன (யோபு 14:2; சங் 103:15; எசா 5:24; 40:6-8; காண்க. யாக் 1:10-11; 1 பேதுரு 1:24). எப்பிராயிமின் மேன்மைமிகு, எழில் வாடுகின்ற மலருக்குக் கேடு அறிவிக்கப்படுகிறது (எசா 28:1.4). லெபனோனின் மலர்கள் இறைவனின் சக்தியின்முன் வாடிப்போகின்றன (நாகூ 1:4). பூக்கள் தோட்டத்தில் நறுமணம் பரவச்செய்கின்றன (உ.ச. 4:16). மத் 6:28; லூக் 12:27-இல் குறிக்கப்படும் "காட்டு மலர்கள்" பல பூக்களைக் குறிக்கின்றன எனலாம். சுமாராக 100 வேறுபட்ட மலர்வகைகள் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சில மலர்கள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. இவையும் ஐயப்பாடுடையவையே.

1. வாதுமை (யாத் 25:33-34; 37:19-20; எண் 17:8; திருவுரை 12:5).
2. அத்தி (உ.ச. 2:13; அப 3:17).
3. சணல் (யாத் 9:31).
4. மருதோன்றி (உ.ச. 1:14).
5. லீலி (உ.ச. 2:1-2.16; 4:5; 6:2.3.11; மத் 6:28; லூக் 12:27).
6. தாமரை (யோபு 40:21-28).
7. அல்லி (1 அர 7:19.22.26).

8. எல்லோரை (யோபு 24:24).
9. ஒலிவ (யோபு 15:33).
10. மாதுளை (உ.ச. 6:11; 7:12).
11. ரோசா (ஞான 2:8).
12. திராட்சை (உ.ச. 2:13. 15; 6:11; 7:12).

**பூஞ்சைக் காளான், நச்சுப்பனி (MILDEW)**

ஒரு வகையான விவசாயப் பேரழிவு. இதை உறுதியாக அடையாளம் காட்ட முடியவில்லை. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல்லுக்கு வெளிறிப்போதல் என்பது பொருளாகும். இஃது ஒருவேளை தானியப் பயிர்களில் காணப்படும் காளான் நோயாக இருக்கலாம். இஃது எப்போதும் வெப்புநோய் அல்லது கடுங்காற்றோடு சேர்த்துக் கூறப்படுகிறது. பூஞ்சக்காளான், வெப்புநோயின் விளைவாக இருக்கலாம்.

பூஞ்சைக் காளானும், வெப்புநோயும் வரவிருக்கும் பேரழிவுகள் பட்டியலில் மட்டும் குறிக்கப்படுகின்றன. ஆலயத்தை அர்ப்பணித்துச் சாலமோன் வேண்டிய செபத்தில் இத்தகைய பேரழிவுகள் குறிக்கப்படுகின்றன (1 அர 8:37; 2 நாள் 6:28). உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியாமைக்கு அளிக்கப்படும் இறைத் தண்டனையின் ஒரு பகுதியாக இவை குறிக்கப்படுகின்றன (உப 28:22). ஆமோ 4:9; ஆகா 2:17-இலிலும் இத்தகைய பேரழிவுகள் இறைத்தண்டனையாக விளக்கப்படுகின்றன.

**பூதன்சு (PUDENS** - அடக்கமானர்).

இவர் உரோமைத் திருச்சபையிலுள்ள ஒரு கிறிஸ்தவர். திமொத்தேயுவுக்கு வாழ்த்து அனுப்புவதாகக் குறிப்பிடப்படுகிறார் (2 திமொ 4:21).

சிலர், இவர் இலத்தீன் புலவர் மார்சியலின் நண்பர் என்கின்றனர். பூதன்சு ஒரு போர்வீரர். இவரது, மனைவி கிளாதியாவைப் பிறப்பினால் ஓர் ஆங்கிலேயப் பெண்மணி என்கின்றனர். பூதன்சு விழா பைசாந்தியத் திருச்சபையில் ஏப்ரல் 14-இலும், உரோமைத் திருச்சபையில் மே 19-இலும் கொண்டாடப்படுகிறது.

**பூத்தியர் (PUTHITES)**

யூதாவின் பட்டியலில் குறிக்கப்படும் ஒரு குடும்பம். இவர்கள் யூதாவின் வட எல்லையிலிருந்த கிரியத்-எயாரிமில் வாழ்ந்தனர் (1 நாள் 2:53).

**பூமி, நிலம் (EARTH)**

I. மனித வாழ்வு மண்ணகத்தின் வளத்தையும் பூமியில் பொதிந்திருக்கும் செல்வத்தையும் சார்ந்திருக்கிறது. இது மனித வாழ்க்கைக்கான இறை பராமரிப்பின் திட்டமாகும். "விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது; மண்ணகத்தையோ அவர்மானிட மைந்தருக்கு வழங்கியுள்ளார்" (சங் 115:16). ஆயினும், பூமி மனித வாழ்க்கைக்கான பணிச்சட்டம் மட்டுமன்று. அதற்கும் மனிதனுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. மனிதன் "நிலத்தின் களிமண்ணிலிருந்து" (ஆதமா) உருவாக்கப்பட்டவன் (ஆதி 3:7; 3:19; காண். எசா 64:7; எரே 18:6); ஆதாம் என்ற தன் பெயரை மண்ணிலிருந்தே பெறுகிறான். பூமிக்கும் மனிதனுக்கும் உள்ள நெருங்கிய உறவை ஒவ்வொரு பழங்காலப் பண்பாடும் நன்கு உணர்ந்து, அதைத் தாய்-பூமி அல்லது பூமி-மங்கை என்ற உயிர்ச்சித்திரமான உருவகங்களில் எடுத்துக்கூறியுள்ளன. இஸ்ராயேலும் இந்த உணர்வைக் கொண்டிருந்தது. இறைவன் உடன்படிக்கை வழியாக இஸ்ராயேலுடன் கொள்ள விரும்பும் பிணைப்பை இஸ்ராயேல் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக, உடன்படிக்கை வழியாக மனிதன் பூமியோடு கொள்ளப்போகிற அனுபவத்தை இறைவன் பயன்படுத்துகிறார்.

ஆகவே, வெளிப்பாட்டில் பூமியும் அதைச் சார்ந்த பொருட்களும் முக்கிய இடம் வகிப்பதில் வியப்பொன்றுமில்லை. மீட்பு வரலாறு முழுவதும், காலத்தின் தொடக்கத்திலிருந்து, வரவிருக்கும் அரசின் எதிர்பார்ப்பு வரை, பூமி மனிதனோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. தொடக்கங்களைப் பற்றிய மறையுண்மை

**அ) பூமி, இறைவனுடைய படைப்பும் உடைமையும்:**

"தொடக்கத்தில் கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார்" (ஆதி 1:1). விவிலியம் இந்தத் தொடக்கம் பற்றி இரு சித்திரங்களை ஒன்றின் பின் ஒன்றாகத் தருகிறது. இந்தத் தொடக்கம் மனிதனுக்கு முந்தியது. ஆனால், மனிதனை நோக்கி அமைக்கப்பட்டது. முதல் விவரிப்பில் இறைவன் நீரிலிருந்து உலர்ந்த தரையைப் பிரித்து அதற்கு "நிலம்" என்று பெயரிட்டார். பின்னர் அதை மக்களால் நிரப்பினார் (1:9-25). இரண்டாவது விவரிப்பில் பூமி வெறுமையாகவும் எதுவும் முளைத்திராத பாழ்வெளியாகவும் இருந்தது (2:4-6). மனிதனை அதில் குடியிருக்கச் செய்ய அப்பூமியில் இறைவன் ஒரு தோட்டத்தை அமைக்கிறார். இரண்டு விவரிப்புகளிலும் பூமி இறைவனையே முற்றிலும் சார்ந்திருக்கிறது. அஃது அவருடைய உடைமையாகும். "மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை" (சங் 24:1; 89:12; காண். லேவி 25:23). கடவுள் பூமியைப் படைத்தவராய் இருப்பதால், அவருக்குப் பூமியின் மேல் முழு உரிமையுண்டு; அதன் பொருட்களை அவர் மட்டுமே பங்கிட்டு அளிக்கிறார் (ஆதி 2:16தொ); அதன் விதிமுறைகளை நிர்ணயிக்கிறார் (எசே 23:10); அதைப் பலனளிக்கச் செய்கிறார் (சங் 65:105). அவரே அதன் ஆண்டவர் (யோபு 38:4-7; எசா 40:12. 21-26). அஃது அவரது கால்மனையாகும் (எசா 66:1; அ.ப. 7:49). மற்றப் படைப்புகளைப்போல் பூமியும் இறைவனைப் புகழ்ந்து போற்ற வேண்டும் (சங் 66:1-4; 96; 98:4; தானி 3:74). இப்புகழ் மனித நாவில் உருவமும் ஒலியும் பெறுகிறது (சங் 104).

**ஆ) பூமி மனிதனின் ஆட்சிக்குட்பட்டது:**

மனிதனைப் பூமியிலிருந்து இறைவன் உருவாக்கி அவன் நாசியில் உயிர் மூச்சை ஊதி அவனை உயிருள்ளவன் ஆக்கினார் என்றால், அஃது அவனிடம் பூமியை ஒப்படைத்து, அவனை அதன் தலைவனாக்குவதற்கே. மனிதன் அதை ஆட்சி செய்யவேண்டும் (ஆதி 1:28தொ). அப்பூமி ஒரு தோட்டம் போன்றது. அதில் மனிதன் கண்காணிப்பாளனாக நியமிக்கப்பட்டுள்ளான் (2:8.15; சீரா 17:1-4). ஆகவே, மனிதனுக்கும் பூமிக்குமிடையே பரஸ்பரமான உறவுள்ளது. இது பற்றிய பல எதிரொலிப்புகளை விவிலியத்தில் காணலாம். ஒரு புறம் மனிதன் தன் வேலையால் மண்ணகத்தில் தன் முத்திரையை விட்டுச் செல்கிறான். மறுபுறம் பூமியானது மனிதனது மனநிலையைப் பலவகையில் உருவாக்குகிறது. மனிதனின் சிந்தனையும் மொழியும் பூமியை அடிப்படையாகக் கொண்ட உருவகங்களையே தொடர்ந்து கையாளுகிறது. "நீதியை நீங்கள் விதைத்துக் கொள்ளுங்கள்; அன்பின் கனியை அறுவடை செய்யுங்கள் நீங்கள் தீவினையை அறுவடை செய்தீர்கள்" (ஓசே 10:12-13). எசாயா தன் உழுபவன் உவமையில், பயிரிடுவதின் முறைகளில் தொடங்கி, ஆன்மீகப் பலனுடைமைக்கு அவசியமான சோதனைகளை விளக்குகிறார் (எசா 28:23தொ). சங்கீத ஆசிரியர் நீருக்காக ஏங்கும் வறண்ட தரிசு நிலத்திற்கு, இறைவனுக்காக ஏங்கும் கடுந்துயருற்ற ஆன்மாவை ஒப்பிடுகிறார் (சங் 63:2; 143:6).

**இ) பாவத்தால் சாபம் பெற்ற பூமி:** மனிதனுக்கும் பூமிக்குமிடையே இவ்வளவு நெருங்கிய பிணைப்பு இருக்கும்பொழுது, எல்லாத் தலைமுறைகளும் தொடர்ந்து அனுபவித்து வரும் இரண்டு பேருக்கு மிடையே உள்ள பகைமை தோன்றக் காரணம் என்ன? மனிதனுக்குப் பூமி இனி இன்பவனம் அன்று. மறைபொருளான சோதனை ஒன்று குறுக்கிட்டுள்ளது. பாவம் அவர்கள் உறவைப் பாழ்படுத்தி விட்டது. உண்மையிலேயே தொடக்கத்தில் இறைவன்

ஏற்படுத்திய பராமரிப்புச் சட்டங்கள் இன்னும் பூமியைக் கட்டுப்படுத்தி வருகின்றன (ஆதி 8:22). உலகின் இந்த அமைப்பு படைத்தவருக்குச் சான்று பகர்கின்றது (உரோ 1:19தொ; அ.ப. 14:17). ஆனால், பாவம் ஓர் உண்மையான சாபத்தைப் பூமிக்குக் கொண்டு வந்துள்ளது. அதன் விளைவாகப் பூமி முட்செடிகளையும் முட்புதரையும் மனிதனுக்கு விளைவிக்கும் (ஆதி 3:17-18). எதிலிருந்து மனிதன் தோன்றினானோ அந்த மண்ணுக்கு இறுதியாகத் திரும்பும்வரை (3:19; ஞான 15:8), பூமி மனிதன் துன்புறும் சோதனைக்களமாக இருக்கும். இவ்வாறு, பூமியோடு மனிதன் கொண்ட உறவும் ஒற்றுமையும், நன்மைக்கும் தீமைக்கும், தொடர்ந்து நீடிக்கிறது.

**2. இறைமக்களும் அவர்களது நிலமும்:** தொடக்கத்திலிருந்து மனிதனோடு இணைக்கப்பெற்ற பூமி, விவிலிய வெளிப்பாட்டில் தன் பங்கைத் தொடர்ந்து கொண்டிருக்கும். அதன் வழியில், மீட்பு வரலாற்றின் மையத்தில் தனது இடத்தைக் கொண்டிருக்கும்.

**அ) குலமுதியோரின் அனுபவம்:** அச்ச மூட்டும் அன்னிய நாடான பாபிலோனிலிருந்து இறைவன் ஆபிரகாமை அழைக்கிறார் (ஆதி 11:31-12:1). அடிமைத்தனத்திற்கும் சோதனைக்கும் இருப்பிடமான எகிப்திலிருந்து ஆபிரகாமின் வழிவந்தோரை அவர் அழைப்பார் (யாத் 13:9). இவ்விரு நாடுகளுக்கிடையே குலமுதியவர்கள் கானான் நாட்டைத் தற்காலிகமாகத் தங்குமிடமாகக் கொள்வர். அதுதான் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கு வாக்களிக்கப்பட்ட "பாலும் தேனும் பொழியும் பரந்த நாடாக" (3:8) அமையும். இந்த நாட்டைத் தான் இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார் (ஆதி 12:7). அவரைப் பின்பற்றி, அந்நாடு அவர்களது உரிமைச்சொத்தாகும் வரை (17:8) இஸ்ராயேலின் முன்னோர்கள் அந்நாட்டில் அலைந்து திரிவர். அவர்கள் அங்கு அன்னியர்களைப்போல் தற்காலிகமான இல்லங்களில் தங்கியிருப்பர். ஏனெனில், அவர்கள் தங்கள் மந்தைகளின் தேவையைப் பொருத்து ஓரிடம் விட்டு வேறிடம் சென்றனர். ஆனால் அங்கு, கிணறுகளையும் மேய்ச்சலுக்கான நிலத்தையும் மட்டும் காணவில்லை; என்றுமுள்ள இறைவன் தம்மை வெளிப்படுத்தும் இடத்தையும் அதில் கண்டனர். கருவாலி மரங்களும் (ஆதி 18), கிணறுகளும் (26:15தொ; காண். 21:3தொ), கட்டிய பீடங்களும் (12:7) இந்த வெளிப்பாட்டு நினைவைப் பாதுகாத்து நிற்கும் சான்றுகளாகும். இவற்றில் சில இடங்கள் இறைவனது பெயரையே கொண்டுள்ளன. பெத்தேல் - "இறைவனின் வீடு" (28:17தொ); பெனுவேல் "இறைவனின் முகம்". மக்கபேலாக் குகையை வாங்குவதோடு (23) இந்த வாக்களிக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியை ஆபிரகாம் முதல் முறையாகச் சட்டமுறைப்படி தன் உடைமையாக்கிக் கொள்கிறார். ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோர் அங்கு அடக்கம் செய்யப்பட விரும்பினார். அதன் விளைவாக, கானான் நாட்டைத் தங்கள் தாய் நாடாக ஆக்கினர்.

**ஆ) நிலக்கொடை:** இறைவனின் புதுப்பிக்கப்பட்ட வாக்குறுதி (ஆதி 26:3; 35:12; யாத் 6:4) எபிரேய மக்களிடையே தாங்கள் குடியேறுவதற்கான நாட்டைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை நிலைத்திருக்கச் செய்தது. அன்னிய நாடான எகிப்திலிருந்து அவர்களை வெளியேறச் செய்கிறார் இறைவன் (காண். ஆதி 46:3). இருப்பினும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு, அவர்கள் "வெறுமையான ஓலமிடும் பாலையில்" சுட்டெரிக்கும் தனிமையையும் (உப 32:10), வறுமையையும் அனுபவிக்கவேண்டும். "மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ராயேல்" (7:6) இறைவனைத்தவிர வேறு எதனையும் உடைமையாகக் கொண்டிருக்கக்கூடாது. தூய்மைப்படுத்தப்பட்ட பின்னரே, "எதிலும் குறைவற்ற நாடான" கானானை (நீதி 18:10) யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ராயேலர் வெல்லமுடியும் இவ்வெற்றியில் இறைவன்

தலையிடுகிறார். அவர் தாம் தம் மக்களுக்கு நாட்டை உடைமையாகக் கொடுக்கிறார் (சங் 135:12). உழைப்பின்றிப் பெற்ற நாடு (யோசு 24:14), அதைப் பெற்றுத் தந்த உடன்படிக்கையைப் போல (ஆதி 17:8; 35:12; யாத் 6:4.8), ஓர் அன்புக்கொடை, அருட்கொடையாகும். இஸ்ராயேல் மக்கள் அந்நாட்டில் பேரார்வம் கொள்கின்றனர். ஏனெனில், இறைவன் தம் மக்களை ஏமாற்றி விடவில்லை. வறட்சியும் சலிப்பூட்டும் தன்மையும் உள்ள பாலைவனத்தோடு ஒப்பிடுகையில் “இஃது ஒரு நல்ல நாடு, மிகச் சிறந்த நாடாகும்” (எண் 14:7; நீதி 18:9). இதுவே அவர்கள் மீண்டும் கண்ட பூவுலக இன்பவனமாகும். “பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பாய்கின்ற ஆறுகளையும், ஊற்றுகளையும், ஏரிகளையும் கொண்ட கோதுமை, திராட்சை, அத்தி, மாதுளை, பார்லி ஆகியவை நிறைந்த, ஒலிவ எண்ணெயும் தேனும் நிறையக் கொண்ட, பஞ்சமின்றி நிறைய அப்பங்களையும் கொண்ட” (உப 8:7–9) அந்நாட்டின் மேல் மக்கள் உடனே பற்றுக் கொண்டனர். தான் ஊழியம் செய்ய விரும்பும் இறைவனிடமிருந்து (யோசு 24:16தொ), உரிமைச் சொத்தாக அந்நாட்டை இஸ்ராயேல் பெறவில்லையா? (உப 15:4). இவ்வாறு பூமியும் அதன் பொருட்களும் இறைவனது அன்பிற்கும் தம் உடன்படிக்கைக்கு அவர் காட்டிய பற்றுறுதிக்கும் நிலையான நினைவுச் சின்னங்களாக இருக்கும். இந்நாட்டை உடைமையாகக் கொண்டிருப்பவன் இறைவனையும் உடைமையாகக் கொள்கிறான். ஏனெனில், மாவே இனிமேல் பாலை வனத்தின் கடவுள் மட்டும் அல்லர். கானான்நாடு அவரது உறைவிடமாக மாறிவிட்டது. ஆண்டுகள் செல்லச்செல்ல, இந்த உறைவிடம் இஸ்ராயேல் நாட்டோடு எவ்வளவு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறதென்று மக்கள் நம்பினார்கள் என்றால், மற்றக் கடவுள்களைத் தொழும் பிறநாட்டில் யாவேயைத் தொழமுடியும் என்று தாவீது நம்பவில்லை (1 சாமு 26:19). எனவேதான், யாவேக்கு வழிபாடு செலுத்த இஸ்ராயேல் நாட்டின் ஒரு சிறு பகுதியை நாமான் தமஸ்குவுக்குக் கொண்டு செல்கிறார் (2 அர 5:17).

**இ) தனது நாட்டில் இஸ்ராயேல் ஆடிய நாடகம்:**

**1) நிலச்சட்டம்:** வாக்களிக்கப்பட்ட நாடு இஸ்ராயேலுக்கு உரிமைச் சொத்தாக அளிக்கப்படுகிறது (உப 12:1; 19:14). இந்நாடே இஸ்ராயேலுக்குச் செல்வச்செழிப்பைக் கொண்டு வரும். ஆனால், இதற்கு இஸ்ராயேலின் ஒத்துழைப்புத் தேவை. இறைவனுடைய ஆசீர்களைப் பெற விரும்புகிறவனுக்கு வேலை செய்தல் ஒரு சட்டமாகிறது. “அறுவடைக் காலத்தில் தூங்கும்” சோம்பேறியின் மாட்டு விவிலியம் கடுமையாக உள்ளது (பழ 10:5; 12:11; 24:30-34). இஸ்ராயேல் மக்கள் இறைவன் அளித்த நாட்டில் தங்கும் “அன்னியரும் இரவல் குடிகளுமே” ஆவர் (லேவி 25:23; சங் 119:119). மேலும், இஸ்ராயேல் பல்வேறு கடமைகளை நிறைவேற்ற வேண்டும். முதலில் இறைவனுக்குப் புகழும், நன்றியும் அவரையே நம்பியிருக்கும் மனப்பான்மையையும் இஸ்ராயேல் வெளிப்படுத்தவேண்டும்; இதுவே, வேளாண்மைத் திருவிழாக்களின் பொருளாகும் (யாத் 23:14;...). இவ்விழாக்கள் இயற்கையின் இலயத்தோடு வழிப்பாட்டு வாழ்வையும் தொடர்பு படுத்துகின்றன. இவ்விழாக்கள் புளிப்பற்ற அப்பவிழா, அறுவடை விழா, சேகரிப்பு விழா (யாத் 23:16) ஆகியவையாகும். மேலும், நிலத்தின் விளைபொருட்களின் பயனும் துல்லியமான ஒழுங்குகளுக்கு உட்பட்டவையாகும். ஏழைகளையும் அன்னியர்களையும் கதிர்களைப் பொறுக்க அனுமதிக்கவேண்டும் (உப 14:29; 24:19–21). நிலத்தின் வளமெல்லாம் தீர்ந்து விடாமலிருக்க ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலம் தரிசாகக் கிடக்க வேண்டும் (யாத் 23:11). நிலம் பற்றிய இந்தச் சட்டம் ஒரேசமயத்தில் சமய, சமூக அடிப்படை கொண்டது. இஃது இறைவனுடைய அதிகாரத்தின் அடையாளம். ஏனெனில், நிலம்

இறைவனுக்கே உரிமையானது. இச்சட்டத்தைக் கடைப்பிடித்தல் அவர்களைச் சூழ்ந்திருந்த பிறமத வேளாளர்களிடமிருந்து இஸ்ராயேலைப் பிரித்துக்காட்டும்.

**2) சோதனையும் பாவமும்:** இங்குதான் இஸ்ராயேல் சோதனைக்கும் தீய கவர்ச்சிக்கும் உள்ளாகப்போகிறது. தன் வேலையையும் வாழ்வையும் இஸ்ராயேல் நிலத்தோடு பிணைத்துக்கொண்டது. வயல், வீடு, மனைவி இம்மூன்றும் இப்பிணைப்பை வெளிக்காட்டுபவை (உப 20:5தொ). அது நிலத்தோடு இணைந்து நிலைத்து நின்ற பிறகு வயல், திராட்சைத்தோட்டம் போன்ற கோணங்களில் இறைவனைப் புரிந்து கொள்ளும் முறைக்குச் சுலபமாக வந்தடையும். பூமி-தாய், பூமி-மங்கை என்ற உருவகங்களை அவற்றின் பிறமதப் பொருளில் இஸ்ராயேல் அனுபவிக்கும். அதேசமயம், கானானியர்களிடமிருந்து வேளாண்மை வாழ்வின் ஒழுங்குகளைக் கற்றுக்கொள்கிறது. இந்த வாழ்வின் உலகியல் மற்றும் சிலை வழிபாட்டுப் பழக்கவழக்கங்களையும் தனதாக்கிக் கொள்ளத் தொடங்குகிறது. இஸ்ராயேல் மக்களுக்கு, யாவே பெரும்பாலும் ஒரு பாதுகாக்கும் பாகாவலாகவும் (கானானியரின் தெய்வம்), வளப்பத்தை உறுதிப்படுத்துபவராகவும் (நீதி 2:1ே) ஆகிறார். இதுவே கிதியோனிடமிருந்து கடும் எதிர்ப்பை உண்டு பண்ணுகிறது (6:25-32). "வீட்டோடு வீடு சேர்ப்பவர்களையும், வயலோடு வயலை இணைத்துக் கொள்பவர்களையும்" இறைவாக்கினர் கடுமையாகத் தாக்கினர் (எசா 5:8). நிலவளம் பெற்று நிலைத்து வாழ்வதில் உள்ள ஆபத்துக்களைத் தவிர்த்து வாழத் தூண்டுகின்றனர். ஏனெனில், அதுவே திருட்டுகள் (காண். 1 அர 21:3-19), கொள்ளையடித்தல்கள் (மீக் 2:2), அநீதிகள், வகுப்புப் பிரிவினைகள், அகந்தையும் பொறாமையும் உண்டாக்கும் செல்வப்பெருக்கு (காண் யோபு 24:2-12) ஆகியவற்றிற்குக் காரணமாகும். இவற்றையெல்லாம் எப்படித் தூய இறைவன் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தங்கள் நாட்டில் இறைவனிடம் மனதை எழுப்புவதற்காக அவருடைய நன்மைத் தன்மையைத் காட்டும் அடையாளங்களைக் காண்பதற்குப் பதிலாக அல்லது அவரோடு உரையாடல் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் காண்பதற்குப் பதிலாக, பாவ மனுகுலத்தைச் சார்ந்த மற்ற மக்களைப்போல இஸ்ராயேலும் சுயநலத்தோடு அந்நாட்டைப் பற்றிக் கொள்கிறது என்பது தெளிவாகிறது. உரையாடலுக்கான இந்த அழைப்பு இறைவாக்கினர் பயன்படுத்தும் பொருள் பொதிந்த சித்திரங்களிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் பூமி-மங்கை என்ற உருவகத்தைப் பயன்படுத்தவில்லை. மாறாக, பூமி-கணவன் என்ற உருவகத்தைப் பயன்படுத்துகின்றனர் (ஓசே 2:5; எசா 45:8; 62:4; காண். உ.ச. 4:12; 5:1; 6:2.1ே). இங்கு, பூமி மனிதர்களைக் குறிக்கிறது. இறைவன் அதன் கணவர் என்றால், அது பூமிக்காக அன்று, அவர்களுக்காகவே (காண். 2 மக் 5:19).

**3) எச்சரிக்கைகளும் தண்டனைகளும்:** ஆயினும், இஸ்ராயேல் இன்னும் அதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே, இந்நிலையில் இறைவாக்கினர்களின் எச்சரிக்கைகள் உப ஆகமத்தின் வேதனைக் குரலோடு கலந்து ஒலிக்கின்றன. "உம் கடவுளாகிய ஆண்டவரை மறந்து போகாதபடி கவனமாய் இருங்கள்" (உப 6:12; 8:11; 11:16). உண்மையிலேயே, வியத்தகு நாட்டை அனுபவிக்கும் மக்கள் (6:10 தொ) அக்கொடைக்கு ஊற்றாகிய இறைவனை மறந்து விட்டனர். "உங்கள் மூதாதையர்க்கு அவர் அன்பு காட்டியதால்... இந்த நாட்டிற்குள் உங்களை இட்டுச் சென்றார்" 4:37தொ; 31:20). முடிவில் இந்நிலக் கொடையைப் பெற்று இறையன்பை அனுபவிக்க அல்லாமல், அன்னிய நாடுகளைக் கடந்து இத்தனை பயணங்களையும் மேற்கொள்ள வேறு என்ன காரணம் இருக்கிறது? "உங்கள் கடவுளாகிய

ஆண்டவர் பாலைநிலத்தில் உங்களைக் கூட்டிச் சென்ற எல்லா வழிகளையும் நினைவில் கொள்ளுங்கள். அதன் மூலமே, அவர் உங்களை எளியவராக்கினார்... உங்கள் உள்ளச் சிந்தனையை அறிந்து கொள்ளவும் சோதித்தார்" (8:2). இந்நிலம் இறைவனுக்குச் சொந்தம்; அவரது அன்பைப்போல், அவரது அதிகாரமும் பொறாமையும் உரிமைக் கோரிக்கை விடுக்கும் தன்மையும் கொண்டது. மனிதன் தாழ்ச்சியுள்ளவனாகவும், பிரமாணிக்கமுள்ளவனாகவும், கீழ்ப்படிதல் உள்ளவனாகவும் இருக்கவேண்டும் (5:32-6:25). அவன் அப்படியிருந்தால் அதற்குப்பதிலாக ஆசீர்களைப் பெறுவான். "உன் கருவின் கனியும், உன் நிலத்தின் பலனும், உன் கால் நடைகளின் ஈற்றுகளும்... ஆசி பெற்றிடும்" (28:4). ஏனெனில், "இஃது உங்கள் கடவுளாகிய ஆண்டவர் கண்காணிக்கும் நாடு! ஆண்டின் தொடக்கம் முதல் ஆண்டின் முடிவு வரை உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கண் காத்திடும் நாடு!" (11:12). அதற்கு மாறாக, இஸ்ராயேல் நெறி தவறினால், சாபம் விளையும் (உப 28:33; ஓசே 4:3; எரே 4:23-28). நிலத்தையே இழக்க நேரிடும் என்ற மிக அச்சமூட்டும் நேரங்களும் உண்டு. "நீங்கள் உடைமையாக்கிக் கொள்ளப்போகும் நாட்டிலிருந்து நீங்கள் பிடுங்கி எறியப்படுவீர்கள்" (உப 28:63). உணர்வேகத்தோடு இறைவாக்கினர் எடுத்துரைத்த இந்த அச்சுறுத்தல் (ஆமோ 5:27; ஓசே 11:5; எரே 16:18), போர் மற்றும் நாடு கடத்தல் போன்ற இடுக்கண்களிடையே கடுமையான இறைத் தண்டனையாக இறுதியில் நிறைவேறுகிறது.

**ஈ) வருங்காலத்திற்கான வாக்குறுதிகள்:** இந்தத் தண்டனை எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும், இறைவாக்கினர் அதை முடிவு பெற்றது, முழுமையானது என்று கருதவில்லை. நெடுங்காலத்துக்குமுன் பாலை நிலத்தில் நிகழ்ந்ததுபோல் இதுவும் தூய்மைப்படுத்தும் சோதனையாக இருக்கும். இதற்கும் அப்பால் நம்பிக்கை நிலைத்து நிற்கிறது. பழைய அனுபவத்தின் அடையாளங்களை எல்லாம் எடுத்துரைப்பதுதான் இந்நம்பிக்கையின் நோக்கம். நிலம் இன்னும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இது முதலில் இஸ்ராயேலின் நாடாக இருக்கும். அதற்கு இறைவன் புதிய மக்களை மீட்டுக் கொடுப்பார். தூய்மைப்படுத்தப்பட்டு, முழுவதும் அர்ப்பணிக்குப்பட்டு (எசே 47:13-48:35; செக் 14), இந்தப் "புனிதநாடு" (செக் 2:16; 2 மக் 1:7; ஞான 12:3) அதன் தலைநகரான எருசலேமைப்போல், யாவேயின் மணமகள் என்றழைக்கப் பெறலாம் (எசா 62:4). ஆனால், இப்புனித நிலத்திற்பால், இந்தப்பூமியே மீட்பில் பங்குபெறும். எருசலேமைச் சமயமையமாகக் கொண்டு (எசா 2:2தொ; 66:18-21; சங் 47:8தொ), புதிய மனுகுலத்தின் "இனிய நாடாக" மாறும் (மலா 3:12). தங்கள் மூல ஒன்றிப்பை மீண்டும் கண்டடைய, இப்புதிய மனுகுலத்தில் எல்லா நாடுகளும் இஸ்ராயேலோடு சேர்ந்துகொள்ளும். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், தொடக்கங்கள் மட்டுமே உருமாற்றம் பெற்ற பூமியின் போதிய பொருள் விளக்கமாக அமையும். அப்போது இறைவன் படைக்கும் "புதிய வானமும் புதிய பூமியும்" (எசா 65:17), வாழ்க்கையின் வியத்தகு நிலைகளோடும், வளத்தோடும் தொடக்க கால இன்பவனத்தின் தனிப்பட்ட பண்புகளை மனிதர்கள் தங்குமிடத்திற்குக் கொடுக்கும் (ஆமோ 9:13; ஓசே 2:23 தொ; எசா 11:6-9; எரே 23:3; எசே 47:1தொ; யோவே 4:18; செக் 14:6-11).

இத்தகைய முன்னோக்கில் நிலத்தை உடைமையாக்கிக் கொள்தல் இறுதிக்கால இயல் பொருளைக் கொள்கிறது. குழுமட்டத்திலிருந்து தனிப்பட்டோர் நிலைக்கு மாறும்போது இக்கருத்து இன்னும் அதிக அளவில் வலியுறுத்தப்படுகிறது. இஃது எசாயாவால் அறிமுகப்படுத்தப்பட்டு (எசா 57:13; 60:21), ஞானநூல்களில் வளர்ச்சியடைகிறது. அப்போது, பூமி அல்லது நிலம் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டையும், அவர் வழி வந்தோருக்கும்

இறைவனில் தனது முழு விசுவாசத்தையும் வைக்கும் நீதிமானின் பங்காகிய (சங் 25:13; 37:8;...) மற்ற உயர்ந்த, ஆனால், தெளிவற்ற உண்மைக்கும் வாக்களிக்கப்பட்ட நாட்டையும் குறிக்கிறது. படிப்படியாக மண்ணுலக ஈடுபாடுகளிலிருந்து தூய ஆன்மீகப் பேரார்வங்களுக்கு இஸ்ராயேல் உயர்த்தப்பட்டு, "பணிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" (மத் 5:4) என்ற இயேசுவின் நற்செய்தியை ஏற்கும் பக்குவம் பெறுகிறது.

III. புதிய ஏற்பாடு

1. **இயேசுவும் பூமியும்:** இறைவன் பூமியின்மேல் கொள்ளும் மேலாண்மை ஆட்சியில் இயேசுவும் பங்குகொள்கிறார் (கொலோ 1:15; எபே 4:10). ஏனெனில், "உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை" (யோவா 1:3). "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் அவருக்கு அருளப்பட்டிருக்கிறது" (மத் 28:18). இருப்பினும் மனிதர்களுள் ஒருவர் என்ற முறையில், இயேசு இஸ்ராயேல் நாட்டோடு எல்லா வகையிலும் பிணைக்கப்பட்டிருக்கிறார்.

அ) இயேசு உலகளாவிய, யாவர்க்குமுரிய மீட்பின் செய்தியை மனிதர்க்கு வெளிப்படுத்த வருகிறார். ஆனால், அதை ஒரு குறிப்பிட்ட நாட்டின் மொழியில் மற்றும் பண்பாட்டில் வெளிப்படுத்துகிறார். பாலஸ்தீனத்தின் இயற்கைக்காட்சிகளும் பழக்கவழக்கங்களும் அவற்றைப் படைத்தவரின் கற்பனையை ஒருவகையில் உருவாக்கின. இதற்குரிய சான்றுகளில் சில விதைப்பவன், அறுவடை, திராட்சைக்கொடி, அத்திமரம், களைகள், கடுகுவிதை, ஆயன், மந்தை, ஏரியில் மீன் பிடித்தல் போன்ற உவமைகளும் உருவகங்களும் ஆகும். மேலும், வாழ்க்கைக் காட்சிகளைக் கூர்ந்து கவனித்து, அவை வழியாக அவர் அறிவுரை கூறுகிறார். "வானத்துப் பறவைகளைக் கவனமாய் நோக்குங்கள்... காட்டு மலர்கள் எப்படி வளருகின்றன எனக்கவனியுங்கள்" (மத் 6:26.28); கதிர்களைக் கொய்தல் (12:1-8இணை); பலன் கொடா அத்திமரம் (21:19).

ஆ) இந்த உவமைகளுக்கப்பால், இயேசு இவ்வுலகத்தைப் பற்றிய போதகத்தையும் அளிக்கிறார். இயேசுவைப் பொறுத்தமட்டும் நிலத்தை உடைமையாக்கிக்கொள்ளும் ஆவல் ஆன்மீகப் பொருட்களை உடைமை யாக்கிக் கொள்ளும் ஆவல் ஆன்மீகப் பொருட்களை உடைமையாக்கிக் கொள்ளும் ஆர்வமாக மாறுகிறது (மத் 5:4). மண்ணக அரசு, அது முன் சுட்டிக்காட்டிய உண்மையாகிய விண்ணரசுக்கு இடம் விட்டுக்கொடுக்கிறது (5:3). இனிமேல், கிறிஸ்துவுக்காகவும் நற்செய்திக்காகவும், மனிதன் தன் நிலபுலன்களை இழக்கக்கூடியவனாய் இருக்க வேண்டும் (மாற் 10:29தொ). இறைவாக்கினருடைய வாக்குறுதிகளின் குறுகிய பூவுலகக் கூறுகள் இப்போது விஞ்சப்படுகின்றன. அவை கண்டனம் செய்யப்படவில்லை. விண்ணக அரசுக்கான எதிர்பார்ப்போடு ஒப்பிடும்போது இவை எல்லாம் அவற்றிற்குரிய இரண்டாம் இடத்தையே வகிக்கின்றன (மத் 6:33). இவ்வாறு செய்தால் ஒவ்வொன்றும் தனக்குரிய நிலையை அடைகிறது. இறைவனது திருவுளம் "விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறும்" (6;19). இந்த முரண்பாடான முறையில் மனிதரின் நிலத்திற்கு அதன் புனித மதிப்பீட்டை அளிக்கிறார். நிலம் இறைவனது செயலாகவும், அவரது பிரசன்னத்தின் மற்றும் அன்பின் அடையாளமாகவும் உள்ளது. இறைவனி டமிருந்து தங்களையே பகைத்துக் கொள்ளவும், தங்கள் திறமைகளைப் புதைத்துவைக்கவும் (25:8), மனிதர் நிலத்தைப் பயன்படுத்தினர்; இனியும், பயன்படுத்துவர். ஆனால், கிறிஸ்து அதை அன்போடு பொறுப்பேற்று (காண். கொலோ 1:20), தன் மறையுண்மையை ஏற்று நிற்கும் சாதனமாக்குகிறார். கிறிஸ்து எந்த அளவிற்குச் செல்கிறார் என்றால் இவ்வுலகில் தனது உடலின்

பிரசன்னத்தை அடையாளமாக விட்டுச்செல்ல, பூமியின் பலனான (சங் 104:14) அப்பத்தைப் பயன்படுத்துகிறார்.

இ) "மண்ணுலகில் தீ வைக்க வந்தார்" (லூக் 12:49). இத்தீயைப் பரப்புவதற்குக் கலிலேயா மற்றும் யோர்தானுக்கு அப்பாலுள்ள நாட்டுப்புறத்து மக்களிலிருந்து தன் முதல் சீடர்களைத் தேர்ந்தெடுக்கிறார். அவர்கள்தான் "மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறார்கள்" (மத் 5:13). நம் உலகின் ஒரு குறிப்பிட்ட பகுதியில், அதாவது, இஸ்ராயேலுக்கு இறைவன் அளித்த அதே புனித நாட்டில், நற்செய்தி ஆழ்ந்து நட்டுவைக்கப்படுகிறது. அதன் தலைநகரான எருசலேமில் உலகெங்கும் பற்றி எரியச்செய்ய தனது சிலுவையை நடுவார். பிறகு "மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொள்வார்" (யோவா 12:32). இவ்வாறு புனித நாடுதான் எந்நாளும் புவியியல் மையமாகத் திகழும். இங்கிருந்து மனுகுலத்தின் எல்லாரையும் தனதாக்கும் மீட்பு சென்றிடும்.

**2. புதிய மக்களும் புதியபூமியும்:**

அ) அப்போதிலிருந்து, தொடக்கத்தில் வகுக்கப்பட்ட உலகளாவிய மீட்புத்திட்டம் மீண்டும் அமைக்கப்படுகிறது. இயேசு குறிப்பிட்ட திட்டப்படி, இஸ்ராயேல் நாட்டிலிருந்து உலகம் முழுமைக்கும் நற்செய்தி விரிவாக்கப்படும். "எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அ.ப.1:8; காண். மத் 28:16 தொ).

ஆ) இவ்வாறு, எல்லைகளுக்கு உட்பட்ட இஸ்ராயேல் நாட்டிலிருந்து எல்லா உலகிற்கும் செல்லும் ஒரு வழியை மட்டும் இயேசு காணவில்லை. இம்மண்ணுலகிலிருந்து, அது உருவகமாகச் சுட்டிக்காட்டும் மற்றொரு உலகையும் காண்கிறார். அதுவே, திருச்சபையும் விண்ணுலக அரசும் ஆகும். பழைய ஏற்பாட்டின் மக்கள் இளைப்பாறும் நாட்டை உடைமையாகப் பெறுவதற்கு வாக்குறுதிகளின் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், வரவிருக்கும் மீட்பின் உருவமாக மட்டும் இருந்தது. உண்மையான இளைப்பாறும் நாட்டில் இப்போது நாம் விசுவாசத்தால் நுழைகிறோம் (எபி 4:9). அதுவே விண்ணக வீடு. அங்குதான் இயேசு தன் உயிர்ப்புக்குப்பின் தங்கியிருக்கிறார். அதைப்பற்றி அவருடைய திருச்சபையில் முன்சுவையைப் பெற்றிருக்கிறோம்.

இ) இப்புதிய முன்னோக்கில், மனித வேலையோடும் வழிபாட்டிலும் இனிச் சேர்க்கப்பட்டிருக்கும் பொருள் வெளிப் படுத்தப்படுகிறது. கிறிஸ்துவைப் பின் பற்றி, புதிய மக்கள் தங்களுக்கெனக் குறிக்கப்பட்ட இளைப்பாறும் நாட்டினுள் நம்பிக்கையில் ஏற்கெனவே புகுந்துவிட்டனர். இதற்கு அவர்களுடைய உலகச் செயல்கள் எல்லாம் ஓர் உருமாற்றம் பெறவேண்டும் என்ற உண்மை அடங்கியுள்ளது. இன்னும் இம்மக்கள் பூமியை ஆளவேண்டும். நிலம் கொடுக்கும் செழிப்பில் சிக்கிக் கொள்ளும் ஆபத்து இன்னும் இருக்கிறது (லூக் 12:16-34). ஆனால், விண்ணகம் எழுந்து விட்ட கிறிஸ்துவில் கண்களைப் பதித்து, இம்மக்கள் இனி "மேலுலகிலுள்ளவற்றின் மீதே மனதைச் செலுத்தவேண்டும்" (சொலோ 3:2). இப்படிச் செய்வது அவற்றை இழிவாக் கருதுவதால் அன்று; மாறாக, "இவ்வுலகப் பயனைத் துய்ப்போர் அதிலேயே ஆழ்ந்து விடாமலிருக்கவே" (1 கொரி 7:31). விசுவசிப்பவரின் விண்ணகக் கண்ணோக்கு பூமியை மறுக்கவில்லை; மாறாக, அதற்கு உண்மைப்பொருள் கொடுத்து அதை நிறைவுபெறச் செய்கிறது. வழிபாட்டுச் செபம் உண்மையிலேயே பூமிக்கும், அதிலுள்ள அனைத்திற்கும் வேலையால் பயன்கொடுக்க, அஃது அனுமதிக்கும் அனைத்திற்கும் குரல் கொடுக்கிறது. இந்தச் செபத்தால் மனிதன் ஒருவகையில் பூமியை உயர்த்துகிறான்; இறைவனை நோக்கி எழச் செய்கிறான்.

ஏனெனில், புதிய மக்கள் பூமியின் தொடர்புகளை இழந்துவிடவில்லை. மாறாக, இம்மக்கள் பூமியை ஆட்சி செய்கின்றனர் (திருவெளி 5:10). இவ்வுலகில் தன் திருப்பயணத்தைச் செய்து கொண்டிருக்கும்வரை, இம்மக்கள் மீட்புக்காக ஏங்கும் படைப்புப்பொருள் அனைத்தின் தவிப்புக்குச் செவிமடுக்காது இருக்கமுடியாது (உரோ 8:22).

**3. கிறிஸ்தவ நம்பிக்கையில் பூமி:** பாவம் புரிந்த மனிதகுல நாடகத்தில் பங்குபெறும் வரை, பூமி புதிய மக்களின் வரலாற்றோடு தொடர்பு கொண்டிருக்கிறது. "படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையோடு" கடவுளுடைய மக்கள் வெளிப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிர் நோக்கியிருக்கிறது (உரோ 8:19.21). தொடக்கத்திலிருந்து மனிதனோடு ஒன்றித்து, பூமி இறுதிவரை அவ்வாறே இணைந்துள்ளது. மனிதனைப்போலப் பூமியும், மறைபொருளான விதத்தில் இருந்தாலும், மீட்படைய வேண்டிய பொருளாக உள்ளது. ஏனெனில், பூமி அதன் இன்றைய நிலையில் ஒழிந்துபோகும் (மத் 24:33). "மண்ணுலகும் அதிலுள்ள வேலைப்பாடுகளும் எரிந்து அழிந்துபோகும்" (2 பேதுரு 3:10). பூமியின் இடத்தைப் "புதிய பூமியால்" நிரப்புவதற்காகவே இது நிகழும் (திருவெளி 21:1). "நாமோ நீதி குடிகொள்ளும் புதிய வானமும் புதிய வையமும் இறைவன் வாக்களித்தபடியே வருமென்று காத்திருக்கிறோம்" (2 பேதுரு 3:13).

## பூரிம் (PURIM)

அதார் மாதத்தில் (பெப்ரவரி–மார்ச், மாசி), 14–15–ஆம் நாட்களில் கொண்டாடப்படும் இந்த யூதர்களின் விழா, யூதர்களை அழிக்க எண்ணம் கொண்டிருந்த ஆமானிடமிருந்து, மொர்தக்காயும், எஸ்தரும் அவர்களைக் காத்ததன் நினைவாகக் கொண்டாடப்படும் விழாவாகும் (எஸ்த 3:7; 9:24-28). பூரிம் பற்றி யூதச் சட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை. பாரசீகத்தில் சிதறி வாழ்ந்த யூதர்களிடையே இது வளர்ந்திருக்கவேண்டும். இஃது ஒரு சமயச்சார்பற்ற விழாவாகும்.

'பூரி' எனும் அன்னியச்சொல் திருவுளச் சீட்டைக் குறிப்பதாகும் (3:7; 9:24). "பூரிம்" என்பது எபிரேயப் பன்மைச் சொல்லின் முடிவைக் கொண்டு விழா நாட்களைக் குறிக்கும்.

அன்றைய யூத மதத்தில் 'பூரிம்' கொண்டாடப்பட்டதென நிச்சயமாகக் கூறமுடியாது. மேலும், எஸ்தர் பற்றிக் கூறும் பல கருத்துக்கள், அரச சபையிலுள்ள பழக்க வழக்கங்கள் மற்றும் பாரசீக அரச சபையின் பழக்க வழக்கங்களினின்று முற்றிலும் மாறுபட்டு உள்ளன. எனவே, 'பூரிம்' பாலஸ்தீனாவில் தான் தொடங்கியிருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், இஃது அவ்வளவு ஏற்கக்கூடிய கருத்தாகத் தென்படவில்லை.

பூரிம் விழாவில் கொண்டாடப்படும் நபர்கள் பாபிலோனியத் தெய்வங்களைப் போன்றுள்ளனர். மொர்தக்கார்–மார்துக்கு, எஸ்தர்–இஸ்தார் போன்ற தெய்வங்களின் வெற்றியைக் கொண்டாடுவதாக அமைந்தது. ஆனால், இதே சொல் 'காவலர்கள்' எனும் பொருள் தருவதால் அன்று பாரசீகத்தில் இறந்தவர்களின் ஆவிகளுக்கான 'அதார்' மாதத்தில் கொண்டாடப்படுவது இதனை ஒத்திருக்கிறது.

இவ்விழா மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெரும் சப்தத்துடனும் கொண்டாடப்பட்டது. அழுகை என்பது எங்கும் இருக்கக்கூடாது. ஒருவன் 'மொர்தக்காய் வாழ்க', 'ஆமான் அழிக' எனும் இரு சொற்களையும், பிரித்தறிய இயலாதநிலை வரும்வரை குடிக்கலாம் என்றபடி கொண்டாடினர். பின்னர், இத்தாலியின் கொண்டாடப்படும் தவக்காலத்தின் முன்வரும் களியாட்டங்களின் (Carnival) பண்புகள் பூரிம் பற்றிய நிகழ்ச்சிகளில் காணக்கிடக்கின்றன.

**பூர் (PUR - சீட்டுப்போடுதல்)**

காண்க: பூரிம்.

**பூல் (BUL)**

இஃது எபிரேய நாட்காட்டியில் எட்டாவது மாதத்தின் (அக்டோபர்-நவம்பர், ஐப்பசி) பழைய கானானியப் பெயராகும் (1 அர 6:38). பிற்காலத்தில் மார்கேசவன் என்றழைக்கப்பட்டது. இது பாபிலோனியப் பெயராகும். இம்மாதத்தில் கோதுமையும் வாற்கோதுமையும் விதைக்கப்பட்டன; வட கலிலேயாவில் ஒலிவப்பழங்கள் அறுவடை செய்யப்பட்டன.

**பூல் (PUL - ஆண்டவர்)**

மூன்றாம் திகிலத்பிலேசர் (கி.மு. 745-727) இப்பெயரின் கீழ்தான் பாபிலோனியாவை ஆண்டான் (2 அர 15:19; 1 நாள் 5:26). இந்த அசீரியப் பெயரின் பொருள் என்னவென்பது தெளிவாக இல்லை. இவனது மகன் ஐந்தாம் சல்மனேசர் உலுலாய் எனும் பெயரில் பாபிலோனியாவை ஆண்டான். இவன் **ELULU** எனும் மாதத்தில் பிறந்ததால் இப்பெயரில் அழைக்கப்பட்டான். ஆனால், 'பூல்' என எந்தப் பெயரும் எந்த நாளேட்டிலும் குறிப்பிடப்படவில்லை. பாபிலோனிய அரசர்களின் பெயர்ப்பட்டியலில் மட்டுமே இப்பெயர் காணப்படுகிறது.

**பூவா (PUVAH)**

இவர் இசக்காரின் இரண்டாவது மகன் ஆவார் (ஆதி 46:13). இவர் யாக்கோபுடன் எகிப்துக்குச் சென்று அங்கு ஒரு குடும்பத்தின் தலைவரானார். ஆதியாகமம், எண்ணாகமம், முதலாம் நாளாகமம் ஆகியவற்றில் இவர் தோலாவின் சகோதரராகக் குறிப்பிடப்படுகிறார் (ஆதி 46:13; எண் 26:23; 1 நாள் 7:1). நீதிபதிகள் ஆகமத்திலோ தோலாவின் தந்தையெனக் குறிப்பிடப்படுகிறார் (நீதி 10:1). இவர் பூனியர்களின் குலமூதாதையர் ஆவார் (எண் 26:23). 1 நாள் 7:1-இல் இவர் பூகா (3) என்றழைக்கப்படுகிறார்.

**பூற்றியேல் (PUTIEL - இறைவனால் அளிக்கப்பட்டவர்/அருளப்பட்டவர்)**

இவர் ஆரோனின் மகனான எலயாசரின் மாமனாரும், பினகாசின் தாத்தாவும் ஆவார் (யாத் 6:25). லேவியர் கோத்திரத்திலுள்ள மற்றப் பெய்களைப்போல், இதன் ஒரு பகுதி எகிப்தியச் சொல்லினின்று பெறப்பட்டதாகும்.

**பூற்று (PUT)**

நாடுகளின் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒரு புவியியல் பெயரே இது. லிபியாவின் ஒரு பகுதியாகிய இது, காமின் புதல்வராகிய 'பூற்றைக்' குறிப்பதாகவும் உள்ளது. பூற்றின் சகோதரர் கூசு ஆவார் (ஆதி 10:6; 1 நாள் 1:8). இஃது ஆப்பிரிக்காவிலுள்ள லிபியாவாக இருக்கலாம்.

தீர் நாட்டிற்கு எதிரான இறைவாக்கில் இப்பெயர் பாரசீகத்துடனும் இணைத்துப் பேசப்படுகிறது (எசே 27:10). எகிப்துக்கு எதிரான இறைவாக்கில் எத்தியோப்பியா, பூற்று, லூது, அராபியா ஆகியோர் எகிப்துக்கு எதிராக உள்ளார்கள் எனக் கூறப்படுகிறது (எசே 30:5). மேலும், கோகுக்கு எதிராகப் பாரசீகர், கூசு, பூற்று ஆகியோர் துணை புரிவோராகக் காட்டப்படுகின்றனர் (எசே 38:5). எரேமியா பூற்றின் வீரர்கள் எத்தியோப்பியர்கள் போன்று கேடயம் வைத்துச் சண்டைபுரிவதில் வல்லவர்கள் என்கிறார் (எரே 46:9). இவற்றிலிருந்து பூற்று- எத்தியோப்பியா, எகிப்து, லூது ஆகியவற்றுடன் அமைந்த ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

**பூனா (BUNAH - அறிவு)**

யூதா கோத்திரத்தைச் சேர்ந்த எரகுமவேலின் மகன் (1 நாள் 2:25).

**பூனி (BUNNI - பொன்னி)**

1. அசபியாவின் தந்தையான ஒரு லேவியர். செமாயாவின் முன்னோர் (நெகே 11:15); அனேகமாக 2-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

2. எஸ்ரா சட்டத்தை அனைவருக்கும் வாசித்துப்

காட்டிய பொழுது, அதைக் கேட்கச் சென்றிருந்த, அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பிய ஒரு லேவியர் (நெகே 9:4).

3. நெகேமியாவின் தலைமையின்கீழ்ப் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்களின் ஒரு தலைவர் (நெகே 10:15).

**பூனியர் (PUNITES)**

இசக்காருடைய புதல்வர்களில் ஒருவனான புவாவுடைய வம்சத்தின் வழித்தோன்றியவர்கட்கு இடப்பட்ட பெயர் இதுவே (எண் 26:23). கையெழுத்துப் பிரதிகளின்படி பார்க்கும்போது இவர்கள் 'பூவாவியர்' அல்லது பூவியர் என்றே அழைக்கப்படவேண்டும்.

**பூனை (CAT)**

வீட்டில் வாழும், இறைச்சி உண்ணும், பால்கொடுக்கும் ஒரு விலங்கு. இது பற்றி பாரூ 6:21-இல் மட்டும் ஒரு குறிப்பு உள்ளது. அதில் புறவினத்தாரின் தெய்வச் சிலைகளின் உடல்மீதும் தலைமீதும் வெளவால்களும், குருவிகளும், பூனைகளும் உட்கார்கின்றன. இதை இச்சிலை உணர்வதில்லை. இச்சிலைகள் வெறும் சடப்பொருள்களே. இதைத்தவிர, பூனை பற்றிய எந்தக் குறிப்பும் விவிலியம் முழுவதிலுமே காணப்படவில்லை. இதிலிருந்து விவிலிய காலத்து மேற்காசியாவில் பூனை அதிகமாகக் காணப்படவில்லை என்பது தெரிகிறது. பூனை முதலில் எகிப்தில் வீட்டு விலங்கு ஆகியதாகத் தெரிகிறது. அங்குச் சமய வழிபாட்டிலும் இடம்பெற்றது. இதுவே எகிப்தைச் சேராத நாடுகளில், பூனை ஏற்றுக் கொள்ளப்படாததற்குக் காரணமாய் இருக்கலாம்.

**பூனோன் (PUNON - இருள்)**

மோவாபின் சமவெளிக்குள் நுழையுமுன் சல்மோனாவுக்கும் ஓபோத்துக்கும் இடையில் இஸ்ராயேலர் தங்கிய இடமாகும் (எண் 33:42-43). ஏதோமில் உலோகத்தாதுக்களை வெட்டி எடுக்கும் ஒரு முக்கியமான இடமான இஃது ஏதோமின் தலைவர்களுள் ஒருவரின் சொந்த ஊராகவும் இருக்கவேண்டும் (ஆதி 36:41). இது, பெய்னான் என்ற இன்றைய பெயரில் அரபாவுக்குக் கிழக்கே அமைந்த நீர் வளமிக்க பகுதியாகும். தாமிரம் வெட்டி எடுக்கப்படும் கிர்பெத் ஏன்-நகாசு, கிர்பெத் நெகிபு அசைமர் எனும் இரு முக்கிய இடங்களிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். இது வாடி ஏல்-கெவேர், வாடி எஸ்-செகேர் எனும் இரு ஓடைகள் சேருமிடத்தில் அமைந்துள்ளது. ஓடைகளின் கரையில் பல கட்டடங்களையும் தாமிரத்தை மற்ற உலோகங்களிலிருந்து பிரித்தெடுக்கும் தொழில்களையும் கொண்டு விளங்குகிறது.

இந்த இடம் பெத்திராவுக்கு வடக்கில் 35 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த இடத்தில்தான் மோசே வெண்கலப்பாம்பு உருவத்தைச் செய்திருக்க வேண்டும் ( எண் 21:4-10). பினோன் என்ற இனப்பெயர் (ஆதி 36:41; 1 நாள் 1:52) இந்த இடத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

சுமார் கி.மு. 2000-இலிருந்தே இவ்விடத்தில் தாமிரம் பிற தாதுப்பொருட்களினின்று பிரித்தெடுக்கப்பட்டு, சுத்தமான தாமிர உலோகம் எகிப்துக்கு அனுப்பப்பட்டது. கி.மு. பதிமூன்றாம் நூற்றாண்டில் இஸ்ராயேலர்கள் இவ்விடத்தில் தங்கியபோது சுமார் 500 ஆண்டளவாய் யாருமே வாழாத இடமாக இருந்தது (எண் 33:43). அதன் பின்னரே தாமிரத்தைப் பிரித்தெடுக்கும் தொழில் நபத்தேயர்களாலும், உரோமையர்களாலும், பைசாந்தியர்களாலும், அரேபியர்களாலும் தொடரப்பட்டு, சிறப்புற்று விளங்கியது. கிறிஸ்தவர்கள், பூனோனில் இத்தாமிரத்தைப் பிரித்தெடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார்கள் என யுசேபியு கூறுகிறார். பைசாந்தியர் காலத்தில் ஒரு பேராலயமும், துறவியர் இல்லமும் கட்டப்பட்டன. துறவியர் இல்லத்தின் சிதைவுகளில், ஆயர் தியோடோரின் (கி.பி. 587-88) பெயரைக் கொண்ட கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# பெ

**பெகமோத்து (BEHEMOTH – ஊமை விலங்கு, நீர்யானை)**

இச்சொல் நீர் யானையை அல்லது சதுப்பு நிலங்களில் வாழ்கின்ற யானைகளைக் குறிக்க பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கற்பனைப்பெயராகும் (யோபு 40:15-24). இது நிலப்பகுதியில் வாழ்கின்ற லேவியத்தானின் இணையாகிய ஆண்விலங்காகும் என்று வெளிப்பாட்டு மற்றும் போலி நூல்களில் குறிப்பிடப்படுகிறது. ஏதேனுக்குக் கிழக்கேயுள்ள தென்தெயின் பாலைவனத்தில் பெகமோத்து இருக்கிறதாக ஏயோக்கு நூலில் குறிக்கப்படுகிறது. ஆனால், வேறுநூல்கள் 'ஆயிரம் மலைகள் உள்ள இடத்தில்தான்' பெகமோத்து இருப்பதாகக் குறிப்பிடுகின்றன. இது சங் 50-10-இன் கற்பனையான விளக்கமாகும். ராபிகளின் இலக்கியத்தில் 'திறந்த வெளியில் அலைகின்ற எருது' என்று இவ்விலங்கு அழைக்கப்படுகின்றது.

இந்தக் காலக்கட்டத்தின் இறுதியில், லிவியத்தானைப் போலவே பெகமோத்தும் இறைவனோடு போராடி, தோல்வியைச் சந்திக்கும். நேர்மையானவர்களுக்கு இவ்விலங்கின் உடல் உணவாக அளிக்கப்படும். இது சங் 74:14-இன் கற்பனையான விளக்கமாகும். லிவியத்தானைப் போலவே, பெகமோத்து என்ற விலங்கும் இறைவனால் ஐந்தாம் நாள் படைக்கப்பட்ட மிகவும் பயங்கரமான கடல்வாழ் விலங்குகளில் ஒன்றாகக் கருதப்பட்டது (ஆதி 1:21).

**பெகலியா (BEALIAH – யாவே தலைவர் ஆவார்)**

தாவீது கீசின் மகன் சவுலிடமிருந்து தப்பித் தலைமறைவாய்ச் சிக்லாகு என்னுமிடத்தில் இருந்தபோது, ஆற்றல் மிகக்கொண்டவரும், திறமைமிக்கவருமான படைவீரர் சிலர் அவரிடம் வந்தனர். அவர்களின் பென்யமின் குலத்தவனான ஒருவன் பெயர் பெகலியா (1 நாள் 12:5).

**பெகலியாதா (BEELIADA – பாகால் அறிவார்)**

இவர் எருசலேமில் பிறந்த தாவீதினுடைய புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 14:7; காண்க. 2 சாமு :16). "பாகால்" என்ற சொல்லைப் பயன்படுத்த விருப்பமில்லாமலிருக்க வேண்டுமென்பதற்காக, பெகலியாதா என்ற பெயரானது "எலியாதா" (இறைவன் அறிவார்) என்று திரித்து அமைக்கப்பட்டிருக்கிறது (2 சாமு 5:16; 1 நாள் 3:8).

**பெகலோத்து (BEALOTH – தலைவி)**

1. யூதாவின் தென்கோடியில் இருக்கும் நகர்களில் ஒன்றில் பெயர் (யோசு 15:24). இது 'பாகலாத்-பேயர்' ஆக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

2. சாலமோனின் அதிகாரத்தின்கீழ் இருந்த 11-ஆம் நிர்வாகப் பிரிவில் இருந்த ஓர் ஊர் (1 அர 4:16). ஆசேர் இனத்தைச் சேர்ந்தது. அதன் சரியான இருப்பிடம் இன்னும் அறியப்படாமலே உள்ளது.

**பெகா (BEKA – பாதி)**

இஃது ஒரு செக்கேலில் பாதி எடையுடையது அல்லது 5.712 கிராம் எடையுடையது; வயது வந்த ஒவ்வொரு இஸ்ராயேல் ஆணும் திருத்தலத்துக்குக் கொடுக்க வேண்டியதாகும் (யாத் 38:26).

**பெகோர் (BEOR – எரிந்து கொண்டிருக்கிற)**

1. இவர் பேலாவினுடைய தந்தை ஆவார். பேலா என்பவர், இஸ்ராயேல் மக்களை எந்த அரசனும் அரசாள்வதற்குமுன், ஏதோம் நாட்டின் முதல் அரசராவார் (ஆதி 36:32; 1 நாள் 1:43).

2. இவர் இஸ்ராயேல் மக்களைச் சபிக்குமாறு பாலாக்கினால் அழைத்து வரப்பட்ட குறிசொல்பவராகிய பிலயாமின் தந்தை ஆவார் (எண் 22:5; 24:3.15; 31:8; உப 23:4; யோசு 13:22; 24:9; மீக் 6:5; 2 பேதுரு 2:15). எபிரேய மொழியில்– பிலயாம், பேலா என்ற பெயர்கள் ஒரே மாதிரி இருப்பதால் ஒரே ஆளைக் குறிக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

**பெகோன் (BEON)**

இது மோவாபிற்கு வடக்கேயுள்ள ஓர் ஊராகும். ரூபன், காது கோத்திரத்தார், பெகோன் என்ற ஊரினைத் தங்களுக்கு உடைமையாகத் தர வேண்டும் என்று மோசேயிடம் வேண்டினர் (எண் 32:3). ஒருவேளை இதுவும் பாகால்–மெகோனும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**பெக்ககியா (PEKAHIAH – யாவே கண் திறந்தார்)**

இவர் கி.மு. 738 முதல் 737 வரை இஸ்ராயேலின் மன்னராக இருந்தார். மெனகேமின் மகனான இவர் தன் தந்தைக்குப் பிறகு அரசன் ஆனார். இவர் பெக்காவால் கொலை செய்யப்பட்டார். மெனகேமின் ஆட்சிக் காலத்திலே இருந்த குழப்பமிகுந்த சூழ்நிலை, இவர் மகன் பெக்ககியா காலத்திலும் தொடர்ந்தது. இச்சமயத்திலே, அசீரியர்களைச் சார்ந்தோ, அவர்களை எதிர்த்தோ இரு கட்சிகள் இஸ்ராயேல் நாட்டில் ஆட்சியைப் பிடிக்கப் போட்டியிட்டன. பெக்ககியா தம் தந்தை வழியில் அசீரியர்களுக்குக்கீழ் ஆட்சி செய்தார்.

இரமலியாவின் மகனும், படைத்தலைவனுமான பெக்கா பெக்ககியாவுக்கு எதிராகச் சதிசெய்து அவரைக் கொன்றார். இவரோடு கிலயாதைச் சேர்ந்த ஐம்பது பேர் இந்தக் கொலையில் பங்கெடுத்தனர். எனவே, இந்தப் பெக்கா கிலயாதைச் சேர்ந்தவராகவும், கிழக்கு யோர்தானிலிருந்து வந்தவராகவும் இருக்க வேண்டும். மேலம், இவர் சீரியா அரசனின் உதவியைப் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில், இவருடைய காலத்திலே சீரியாவும், இஸ்ராயேலும் ஒரே மனதுடன் செயல்பட்டனர் (2 அர 15:37; 16:5 தொ; எசா 7:1 தொ).

**பெக்கரியர் (BECHERITE)**

எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்த பெக்கரின் வழித்தோன்றல்கள் ஆவர் (எண் 26:35).

**பெக்கர் (BECHER – இளம் ஒட்டகம்)**

1. பென்யமினின் இரண்டாம் மகன் (ஆதி 46:21; 1 நாள் 7:6.8).

1 நாள் 7:6–12–இல் காணப்படும் பென்யமின் புதல்வர்களின் மரபு முறைப்பட்டியல் மூலத்தில் செபுலோனைச் சேர்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

2. மோசேயின் இரண்டாவது கணக்கெடுப்பில் இவர் எப்பிராயிமைச் சேர்ந்தவர் (எண் 26:35). இவர் "பெக்கரியர் குடும்பம்" என்ற குலப்பெயர் முதல்வர் ஆவார். இப்பெயர் 1 நாள் 7:20–இல் பெரேது என்றுள்ளது. ஒருவேளை இதுதான் மூலவடிவமாக இருக்கலாம்.

**பெக்கா (PEKAH – யாவே கண் திறந்தார்)**

இரமலியாவின் மகனான பெக்கா கி.மு. 737–முதல் 732–வரை இஸ்ராயேலின் அரசனாக இருந்தார். பெக்ககியாவின் படைத்தலைவனாக இருந்த பெக்கா, பெக்ககியாவைக் கொன்றுவிட்டு அவருக்குப்பின் அரியணை ஏறினார். கி.மு. 734–இல் அசீரிய அரசன் மூன்றாம் திகிலத்–பிலேசர் இஸ்ராயேலின்மீது படையெடுத்துவந்து கலிலேயா, கிலயாது போன்ற பகுதிகளைப் பிடித்தார். இதற்கிடையிலே ஓசேயா, பெக்காவுக்கு எதிராகச் சதிசெய்து அவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார் (2 அர 15:25–31).

மேலும், எசா 7:1–9–இன்படி பெக்கா, சீரியாவின் அரசன் ரெத்சின் என்பவனுடன் சேர்ந்து கொண்டு, யூதாவின்மேல் படையெடுத்தான். இப்படையெடுப்பு அசீரியர்கள் படையெடுப்பதற்குமுன், அவர்களுக்கு எதிராய் யூதா மன்னன் ஆகாசைக் கூட்டுச் சேர்ப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சியாகும். திகிலத் – பிலேசர் மன்னனின் குறிப்புகளின்படி இந்தப் பெக்கா தோற்கடிக்கப்பட்டு, ஓசேயா திகிலத்–பிலேசரால் இஸ்ராயேலின் மன்னனாக நியமிக்கப்பட்டான். செக்கேமில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை, பெக்கா என்ற பெயரைத் தாங்கியுள்ளது. ஆனால்,

இஃது அரசன் பெக்காவைக் குறிக்கிறது என்று உறுதியாகக் கூறமுடியாது. இஸ்ராயேல் அரசின் கடைசிக் காலக்கட்டத்திலே இவ்வரசின் மன்னர்கள் அசீரியர்களைச் சார்ந்தோ, அவர்களை எதிர்த்தோ ஆட்சி செய்தனர். பெக்கா இந்த இரண்டாம் வகை மன்னர்களைச் சார்ந்தவர். இவர் அசீரியர்களை எதிர்த்து ஆட்சி நடத்துவதை விரும்பினார்.

**பெக்கோது (PEKOD – சந்தித்தல், தண்டனை)**

இது கீழ்த்திகிரீசு ஆற்றின் கிழக்குக் கரையிலே வாழ்ந்த ஒரு சிறு அரமேயன் இனமாகும். இந்த இடம் தற்கால குத்-ஏல்-அமர்னாவுக்கும், கொர்கா கூடுமிடத்திற்கும் இடையில் அமைந்திருந்தது. இம்மக்கள் அசீரியர்களால் குறுகிய காலத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருந்ததாக மூன்றாம் திகிலத்-பிலேசர் (கி.மு. 746-727), 2-ஆம் சார்கோன் (722-705), சனகெரிபு (705-681) ஆகிய அசீரிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

பெக்கோது மக்கள் கிராமத்தலைவர்களால் (Sheiks) நிர்வகிக்கப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும், விவசாயத்தையே நம்பி வாழ்ந்தனர். இரண்டாம் சார்கோன் மன்னன் அவர்கள் பயிரிடுவதற்கு உதவிய தூப்லியா என்ற ஆற்றைத் தடுத்து நிறுத்தி அவர்களைச் சரணடையச்செய்தார். இம்மக்கள் குதிரைகளையும், கால் நடைகளையும் கப்பமாகத் தந்தனர். இரண்டாம் சார்கோன் மன்னனின் வரலாற்றுக் குறிப்பு, இம்மக்களின் நான்கு கிராமத்தலைவர்களின் பெயர்களையும், அந்தக் கிராமங்களின் பெயர்களையும் தருகிறது.

மேலும், எரேமியாவின் பாபிலோனுக்கு எதிரான இறைவாக்கிலே பெக்கோது குறிப்பிடப்பட்டுள்ளது (எரே 50:21).

எசேக்கியேல் இறைவாக்கினர், எருசலேம்மேல் காதல் கொண்டு, பின் அதற்கு எதிராய்க் கிளம்புவோர் பட்டியலில் பெக்கோதுவையும் சேர்த்துள்ளார் (எசே 23:23).

**பெக்கோரத்து (BECORATH – முதல் பிறப்பு)**

இவர் சவுல் அரசனின் மூதாதையர். அப்பியாவின் மகனும் செரோரின் தந்தையுமாவார் (1 சாமு 9:1).

**பெசாய் (BESAI – தாழ்த்தப்பட்ட)**

இவர் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலின் தலைமையில் திரும்பி வந்தபின் ஆலயப்பணியாளர்களாக இருந்தவர்களில் ஒரு குடும்பத்தின் தலைவராவார் (எஸ் 2:49; நெகே 7:52).

**பெசித்தா (PESHITTA – எளிமையான)**

சீரிய மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட விவிலியத்தின் ஒருவகை மொழி பெயர்ப்புக்குத்தான் எளிமை விவிலியம் என்று பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். இதைச் சீரிய மொழியில் பெசித்தா என்றழைக்கிறார்கள். சீரிய மொழியில்– பெசித்தா என்றால் எளிமை என்பது பொருள். இம்மொழிபெயர்ப்பில் பல குறிப்புகளும், மேற்கோள்களும், உரை விளக்கங்களும் கொடுக்காமல் எளிமையாக அமைத்திருக்கிறார்கள்.

**பெசேக்கு (BEZEK – மின்னல்)**

1. இஸ்ராயேலின் மக்கள் மூன்று இலட்சம் பேரும், யூதாவின் புதல்வர்கள் முப்பதாயிரம் பேரும் இருந்ததைச் சவுல் பெசேக்கில்தான் கணக்கிட்டார்; அதன்பின் அம்மோனியர்களை முறியடித்தார். பெசேக்குக்கும், யாபேசுக்கும் இடைப்பட்ட தூரம் ஓர் இரவில் கடக்கக்கூடியதே (1 சாமு 11:8.9). இது நப்லூசுக்கும் (செக்கேம்), பெயிசானுக்கும் (பெத்சான்) இடையிலுள்ள இக்காலக் கிர்பெத் இப்சிக் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது வாடி ஏல்–யாபிஸ் யோர்தானில் புகும் இடத்திற்கு எதிராக உள்ள மலைகளில் செக்கேமுக்கு வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. யூதா மற்றும் சீமோன் குலத்தவர்கள் இந்த நகரில்தான் கானானியரையும்,

பெரிசியர்களையும் தோற்கடித்தனர் (நீதி 1:4-5). பெசேக்கிலிருந்து அதோனி பெசக்கு ஓடிப்போக, அவனை விரட்டிப் பிடித்து எருசலேமுக்குக் கொணர்ந்தான். அவன் அங்கே இறந்தான். இந்த இடம் கெசேரின் வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்-பெஸ்கா என்று அடையாளம் காட்டப்படுகிறது.

**பெசோதியா (BESODEIAH -** யாவேயின் ஆலோசனைக் குழுவில் உள்ளவர்.)

பெசோதியா என்பவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டுவதற்கு உதவியாக இருந்த மெசுல்லாமின் தந்தை ஆவார் (நெகே 3:6).

**பெசோர் ஓடை (BESOR, THE BROOK -** குளிர்ந்த ஓடை

இது சிக்லாகுவைப் பிடித்துத் தீக்கிரையாக்கிய அமலேக்கியர்களை முறியடிக்க படையெடுத்துச் செல்லும் பொழுது தாவீது கடந்து சென்ற ஓடையின் பெயர் (1 சாமு 30:9-10.12). பேசோர் ஓடையென்பது சிக்லாகுவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள மிகப்பெரிய வறண்ட காட்டாறாகிய வாடி காசே-செல்லாலே என்னும் காட்டாற்றை அனேகமாகக் குறிக்கலாம். இந்த ஆறு காசாவுக்குத் தெற்கில் மத்திய தரைக்கடலில் கலக்கிறது.

**பெஸ்து, பொர்க்கியு (FESTUS, PORCIUS)**

இவர் யூதேயாவின் ஆளுநராக 60-இலிருந்து 62 வரை இருந்தார். 'புதிய ஏற்பாடு', 'யோசிப்பசு' ஆகிய இரண்டு மூலங்களிலிருந்து இவரை அறியமுடியும். இவரது காலவரிசைமுறை பற்றிய பிரச்சினைகள் பல ஆண்டுகளாக வாக்குவாதத்திற்குட்பட்டவைகளாக இருக்கின்றன.

1. வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின்படி, பெலிக்சுக்குப் பின்னும் அல்பினுக்கு முன்னும் பெஸ்து ஆளுநராக இருந்தார்.

பெலிக்ஸ் ஆளுநராக இருந்தபோது செசரியாவில் யூதர்களுக்கும், புற இனத்தவர்க்குமிடையே பெரிய கலகம் மூண்டது. புறவினத்தார் யூதர்களுக்கு நகர ஆட்சியில் பங்குகொடுக்க மறுத்தனர். யூதர்கள் நீரோவிடம் புகார் செய்தது வீணாகியது. பிறகு நிலைமை இன்னும் மோசமாக மாறியது.

உரோமைக்கும் யூதர்களுக்கும் இடையேயான, வளர்ந்து வந்த மோதலைச் சரிசெய்ய உண்மையான பல முயற்சிகளை மேற்கொண்டவர் இவர்தான்.

கலகம் செய்த "சிக்காரிகளையும்" அவர்கள் தலைவனையும் அழித்தொழித்தார் பெஸ்து (காண்க. அ.ப. 21:38).

இரண்டாம் அகிரிப்பாவிற்கும், யூதர்களுக்குமிடையே ஆலயத்தை மறைக்க மதில் சுவர் எழுப்புவதில் மோதல் ஏற்பட்டது. பெஸ்து அகிரிப்பாவுக்கு ஆதரவு தந்தார். ஆனால், யூதர்கள் உரோமைக்குப் புகார் எழுதி மறுப்பு உத்தரவு வாங்கிவிட்டார்கள். இந்த உத்தரவு அறிவிக்கப்படுமுன்பே பெஸ்து இறந்து விட்டதாக, பெரும்பாலான ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

2. **அப்போஸ்தலர் பணியில்:** பெஸ்து பெலிக்சுக்குப் பிறகு ஆளுநராக வந்ததையும், பெஸ்துவின் ஆட்சியில் ஏற்கெனவே இரண்டு வருடமாகப் பவுல் சிறைபட்டிருந்ததைப் பற்றியும் அ.ப.24:27 குறிப்பிடுகிறது. அ.ப. 25-26 பெஸ்து எருசலேமிற்கு வந்ததையும், பவுலுக்கு எதிராகச் சாட்சிசொல்ல யூத அதிகாரிகளைச் செசரியாவுக்கு அழைத்ததையும் எடுத்துக் கூறுகிறது. சீசருக்குப் பவுல் புகார் செய்தபிறகு உரோமைக்குச் செல்ல இவன் அனுமதி வழங்கினான்.

2-ஆம் அகிரிப்பாவும் அவனது சகோதரி பெர்னிக்கியும் செசரியாவுக்கு வந்தபோது, பெஸ்து பவுலின் வழக்கை அரசன்முன் வைத்தார். ஆகவே, அகிரிப்பா பவுலைப் பார்க்கவிரும்பினார். அடுத்தநாள் பவுல் கொண்டு வரப்பட்டுப் பேச அனுமதிக்கப்பட்டார்.

பவுலின் உரைக்குப்பிறகு அகிரிப்பா, பவுல் சீசரிடம் புகார் செய்திருக்க வில்லையென்றால், விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்று பெஸ்துவிடம் கூறினார் (25:24-27; 26:31.32).

யோசிப்பசு பவுலைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆகையால், இந்த நிகழ்ச்சி யோசிப்பசின் நூலில் காணப்படவில்லை.

3. **காலவரிசை முறை பிரச்சனை:** பெஸ்து ஆளுநராகப் பதவியேற்றது, புதிய ஏற்பாட்டுக் காலக்கணிப்பை நிறுவும் முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

நீரோ ஆட்சியின் இரண்டாவது வருடத்தில் பெஸ்து ஆளுநராக நியமிக்கப்பட்டாரென்றும் (56), ஆறு அல்லது ஏழாவது ஆண்டில் (61 - 62) அல்பினு ஆளுநராக நியமிக்கப்பட்டாரென்றும் யுசேபியு அறிவிக்கின்றார். இது பெஸ்துவின் காலம் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் என்று கூறுகின்றது. ஆனால், யோசிப்பசின் கணிப்பின்படி, வெகுசொற்ப காலம்தான் பெஸ்து ஆளுநராக இருந்தார். அல்பினு 62-இல் ஆளுநராக நியமிக்கப்பட்டதை யோசிப்பசு உறுதி செய்கின்றார். இது நிச்சயமானால் பெஸ்து 2 வருட காலமே பணி செய்தார் என்றால், பெஸ்து 56-இல் ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்று யுசேபியுவும் எரோனிமுவும் கூறுவது தவறாகிவிடும். இக்கால ஆய்வு, பெஸ்து பதவியேற்பை 60-இல் (அல்லது 59-இல்) குறிக்கிறது.

**பெட்சலேல் (BEZALEL - இறைவனின் நிழலில் அல்லது பாதுகாப்பில்)**

1. இவர் யூதா இனத்தைச் சேர்ந்த கூரின் மகனான ஊரியின் மகன். காலேபின் வழிவந்தவர். இவரும் ஒகோலியாபுவும் திருஉறைவிடத்தையும், அதன் பொருட்களையும் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (யாத் 31:1-11; 35:30-36:3; 37:1; 38:22; 1 நாள் 2:20; 2 நாள் 1:15). இதற்காக "ஞானம், அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில்திறமை அனைத்தும் உண்டாகுமாறு இறை ஆவியால்" இவர் நிரப்பப்பட்டார் (யாத் 31:3).

2. பகத்-மோவாபுவின் புதல்வர்களில் ஒருவர். இவர் எஸ்ராவின் தூண்டுதலின் பேரில் தான் மனைவியாகக் கொண்ட புறவினப் பெண்களை விலக்கி வைத்தவர் (எஸ் 10:30).

**பெட்சேர் (BEZER - அணுகமுடியாத, கோட்டை) - ஆள்**

ஆசோர் குலத்தின் சோபகுவின் மகன் (1 நாள் 7:37).

**பெட்சேர் (BEZER - அணுகமுடியாத, கோட்டை) - இடம்**

இஃது ரூபனுக்கு உரிய அடைக்கல நகரம் (உப 4:43; யோசு 20:8). மெராரிக்கு உரிய ஒரு லேவியர் நகரம் (யோசு 21:36; 1 நாள் 6:78). இது யோர்தானுக்கு அப்பால் இருந்தது. இதுவும் பொட்சராவும் (எரே 48:24) ஒரே இடத்தைக் குறிக்கலாம். இதை மோவாபுவின் மேசா மீண்டும் கட்டினார். இது மெதபாவுக்கு வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் உம் ஏல்-அமாது என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெட்டி (CHEST)**

எருசலேம் ஆலயத்தில் நுழைவாயிலின் வலப்பக்கமாக, பீடத்தருகில் வைக்கப்பட்டிருந்த பெட்டியையும் (2 அர 12:9), அரசன் யோசியாவின் காலத்தில் ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக மக்கள் வழங்கிய அர்ப்பணப் பொருட்களைச் சேமிக்க ஆலய வாயிலுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த பெட்டியையும் (2 நாள் 24:8) இச்சொல் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில், ஆலயக் கருவூலத்தில் இருந்த காணிக்கைப் பெட்டியையும் குறித்தது (மாற் 12:41-43; லூக் 21:1-4; மத் 27:6; யோவா 8:20). இஃது ஒருவேளை பெண்கள் முற்றத்தில் இருந்திருக்கலாம். கருவூலத்தில் கொம்பு அமைப்புடைய பதிமூன்று பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஏழு பெட்டிகள் தனித்தேவைகளுக்காகக் குறிக்கப்பட்டவையாகும்.

**பெட்டைக்கோழி (HEN)**

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளும் பலவகையான பெண் பறவைகளும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. பொதுவாக, எந்தப் பறவையிலும் பெண் இனத்தைக் குறிப்பிடலாம். இறைவன் இஸ்ராயேலரோடு கொண்டிருந்த உறவு இந்தப் பறவை உருவகத்தால் விவரிக்கப்படுகிறது (உப 32:11; சங் 17:8; 37:7; எசா 31:5). "கோழி தன்னுடைய குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பதுபோல, நானும் உன் மக்களை அரவணைத்துக் கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கு விருப்பம் இல்லையே!" என்று இயேசு எருசலேமைப் பார்த்துப் புலம்புகிறார் (மத் 23:37; லூக் 13:34).

**பெண் (WOMAN)**

I. பிற பண்டைக்கால மேற்காசிய நாடுகளின் சட்ட விதிகளை போலவே இஸ்ராயேலின் சட்ட விதிகளிலும் பெண்ணின் நிலையானது இன்னும் கீழானதாகவே இருந்தது. தாயாகச் செயல்படும் அளவிற்கே அவளது ஆதிக்கம் வரையறை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இஸ்ராயேலானது இரு பாலருடைய அடிப்படைச் சமத்துவத்தை வலியுறுத்திய படைத்தலைவராகிய இறைவனில் தங்களுடைய விசுவாசத்தினுடைய காரணத்தினால் முனைப்பாகயிருக்கிறது. ஆயினும், பெண்ணின் உண்மையான நிலையானது கிறிஸ்துவின் வருகையினாலேயே வெளிப்படுத்தப்பட்டது. ஏனெனில், படைப்பின் வரிசைப்படி பெண்ணானவள் மனைவியாகவும், தாயாகவும் உருவாவதில் நிறைவைக் கண்டடைந்தால், இப்புதிய படைப்பின் வரிசைப்படி கன்னிமையின் மூலமாகவும் அவள் இப்போது நிறைவைக் கண்டடையலாம்.

**II. பழைய ஏற்பாடு: தாரமும் தாயும்:**

**1. மண்ணக இன்பவனம்:** பாலினங்கள் மனித இயல்பினுடைய அடிப்படை உண்மை. மனிதன் "ஆணும் பெண்ணுமாக"ப் படைக்கப்பட்டான் (ஆதி 1:27). குருக்கள் பாரம்பரியத் தொகுப்பாளரின் இந்தச் சுருக்கமான கருத்தானது யாவே பாரம்பரிய விவரிப்பை உள்ளடக்கியுள்ளது. பின்னதில், மனிதனோடு தொடர்புடைய பெண்ணின் இரட்டை நிலையானது விளக்கப்படுகிறது.

ஆதாமினுடைய நெருக்கமான பகுதியினின்று பெண் எடுக்கப்பட்டாள். எனவே, மற்ற விலங்குகளைப் போலன்றி, ஆதாமைப் போன்ற அதே இயல்பை அவள் கொண்டுள்ளாள். இறைவன் அவனுக்கு முன்பு நிறுத்துகின்ற படைப்பின் முன்னிலையில், மனிதனின் நிலை இதுவே. இது மட்டுமின்றி, "அவனையொத்த துணையை அவனுக்கு அளிக்கும்" (ஆதி 2:18) இறைத்திட்டத்திற்கும் ஆதாம் பதிலளிக்கிறார். தன்னையே அவளில் அவர் அடையாளம் காண்கிறார். அவளுக்குப் பெயரிடுவதின் மூலம், தனக்கும் ஒரு பெயரை அளித்துக் கொள்கிறார். அவள் முன்னிலையில் வெறும் ஆதாமாக மட்டுமின்றி அவர் ஆணாகவும் (இஸ்), அவள் பெண்ணாகவும் (இஸா) ஆகின்றனர். படைப்பின் திட்டத்தைப் பின்பற்றி, அவரைத் தனது துணைவராக ஏற்றுக் கொள்வதன்மூலம் பெண் மனிதனை முழுமைப்படுத்துகிறாள். அவர்களது வேறுபாட்டிலும் இந்த உறவானது முற்றிலும் சமமாக இருந்திருக்கவேண்டும். ஆனால், மனைவியை அவளது கணவனுக்குக் கீழ்படுத்தி, பாவம் இதனை நெறிபிறழச் செய்தது (3:16).

பெண் மனித சமூகத்திற்கு அதனுடைய தொடக்க வாழ்வை அளிப்பதோடு நில்லாமல், வாழ்வோர் அனைவருக்கும் தாயாகவும் இருக்கிறாள். எண்ணற்ற சமயங்கள் பெண்ணைத் தங்குதடையின்றி மண்ணுலகுடன் ஒப்பிடுகின்ற போது, விவிலியமானது அவளை வாழ்வுடன் அடையாளப்படுத்துகிறது. ஏவாள் என்னும் தன்னுடைய இயல்பான பெயரால் அவள் "உயிர் வாழ்பவளாகவும்" இருக்கிறாள் (3:20). பாவத்தின் காரணமாக, அவள் துன்பத்தின் வாயிலாக, வாழ்வை அளிக்கிறாள் என்றால் (3:16), இனத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதன்

வாயிலாக மரணத்தின் மேலும் அவள் வெற்றி கொள்கிறாள். இந்த நம்பிக்கையில் தன்னை நிலைப்படுத்துவதற்கென, ஒருநாள் அவளது சந்ததியினர் தங்களது பரம்பரை எதிரியான பாம்பின் தலையை நசுக்குவார்களென அவள் அறிந்திருக்கிறாள் (3:15).

**2. புனிதவரலாறு:** இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாளை எதிர்நோக்கிய நிலையில், பெண்ணின் பங்கானது ஒரு எல்லைக்கு உட்பட்டதாக உள்ளது. குடும்பத்தைப் பொருத்தவரையில், அவள் கல்வி கற்பிக்கின்ற பிள்ளைகளைப் பொருத்தமட்டிலும் அவளது உரிமைகள் கணவனுக்குச் சமமாக உள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால், சட்டமானது தகுதியில் அவளை இரண்டாவதாகக் கருதுகிறது. வழிபாட்டில் பெண் எந்த அதிகாரபூர்வமான பங்கையும் வகிப்பதில்லை. விழாக்களின்போது அவள் வெளிப்படையாக மகிழ்ச்சி ஆரவாரம் செய்யலாம் (யாத் 15:20-21; உப 12:12; நீதி 21:21; 2 சாமு 6). ஆனால், எந்தவிதக் குருத்துவப் பணியிலும் அவள் ஈடுபடுவதில்லை. ஆடவர் மட்டுமே திருப்பயணக் கடமைகளுக்கு உட்பட்டிருந்தனர் (யாத் 23:17). ஓய்வு நாளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியவர்களின் அட்டவணையில்கூட மனைவி குறிப்பிடப்படவில்லை (20:10). வழிபாட்டிற்குப் புறம்பே, குறிப்பாக வாழ்விலே, அவளுக்கேயுரிய இடத்தைப் பாதுகாப்பதில் சட்டம் கவனமாக உள்ளது. அவளே இவ்வுலகில் வளமையான வாழ்வின் பிரசன்னமல்லவா (உப 25:5-10)? அவளுக்கேயுரிய வாழ்வின் பாணியில் மனிதன் அவளுக்கு மரியாதையளிக்கவேண்டும் (லேவி 20:18). மனிதன் தன்னை உட்படுத்தாத திருமணத்தில் பற்றுறுதியின் மாதிரியைக் கோருமளவிற்கு அவன் அவளுக்கு மரியாதை அளிக்கிறான்.

உடன்படிக்கை வரலாற்றின் காலத்தில் நன்மைக்காகவோ, தீமைக்காகவோ குறிப்பிட்ட பெண்கள் சிலர் முக்கியப் பங்குவகித்தனர். அன்னியப்பெண்கள் சாலமோனுடைய உள்ளத்தைத் தங்களுடைய தெய்வங்களை நோக்கித் திரும்பினர் (1 அர 11:1-8; காண். திருவுரை 7:26; சீரா 47:19). கணவனுடைய சமயம் மற்றும் ஒழுங்குகளின் மீது ஒரு பெண்ணின் வல்லமையை ஈசபேல் எடுத்துக்காட்டுகிறாள் (1 அர 18:13; 19:1-2; 21:25-26). தாய்மொழியில் சிறந்து விளங்கினாலும், "யூதாவின் மொழியைப் பேச முடியாத" பிள்ளைகளின் எடுத்துக்காட்டுகளும் அங்கு உள்ளன (நெகே 13:23-24). வழிபாட்டில் அதிகாரபூர்வமாகச் செயல்படுத்தாத சமய வாழ்வினைத் தான் விரும்பியவாறு தூண்டுவதாகப் பெண் தோன்றுகிறாள். ஆனால், இந்த எடுத்துக்காட்டுகளுக்கு முரண்பட்ட வகையில், இனப்பெருக்கத்திற்குப் போற்றுதற்குரிய ஆர்வம் காட்டுகின்ற மூதாதையரின் மனைவியரை நாம் காண்கிறோம். இந்த நாயகிகளில் சிலரைப் பற்றிக் கூறுவோம். வழிபாட்டிற்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டாலும், ஆண்டவருடைய ஆவியானவர் பெண்கள் சிலரைப் பயன்படுத்தி, அவர்களை மாற்றி, ஆண்களிடம் செய்வது போல, அவர்களையும் இறைவாக்கினர்களாக்குகிறார். இவ்வாறு, ஆவியின் புகுதலுக்குப் பாலினம் ஒரு தடையன்று என்பதை அவர்கள் காட்டுகின்றனர். சான்றாக, மிரியாம் (யாத் 15:20-21), தெபோரா மற்றும் யாவேல் (நீதி 4:4-5:31), உல்தா (2 அர 22:14-20) என்போரைக் குறிப்பிடலாம்.

**3. ஞானிகளின் சிந்தனையில்:** பெண்களுக்காக, பெண்களுக்குக் கூறப்பட்ட மூதுரைகள் அரிதாகவும், மென்மையற்றனவாகவும் அமைந்துள்ளன (பழ 31:1-9). பெண்ணினுடைய விவிலியச் சித்திரம் எப்போதுமே புகழக் கூடியதாக அமையாவிடினும் ஆசிரியர்கள் பெண்ணின வெறுப்பாளர்கள் என்று அது நிரூபிப்பதில்லை. பெண்களைப் பொறுத்தமட்டிலான ஆணுடைய கடினத் தன்மையானது, மனிதன் அவர்களிடம் கொண்டுள்ள தேவைக்கான விலையாகும். எனவே, மனிதன் பின்வருமாறு தனது கனவை விவரிக்கிறான்: "மனைவியை அடைகிறவன்

நல்வாழ்வு பெறுவான்" (பழ 18:22; காண்க. 5:15-18); "தனக்கு ஏற்ற துணையையும் ஆதரவு தரும் தூணையும்" அடைவான். தான் தங்குவதற்கென ஒரு உறைவிடத்தை, அலைவதற்கான அழைப்பிற்கு எதிரான தங்கும் இடத்தைக் கொண்டிருப்பான் (சீரா 36:24-27). பெண்ணைக் கண்டடைவதென்பது, தனக்கு மனவுறுதி அளிக்கும் ஆண்மையுடன் சேர்த்து ஆட்தன்மைப் படுத்தப்பட்ட அழகினைக் கண்டடைவதாகும் (பழ 11:16). இப்பெண் தைரியசாலியாக இருந்தால், அதைப் பற்றி நாம் என்ன கூறமுடியும் (பழ 12:4; 31:10-31)! உன்னத சங்கீதத்தில் மனைவி பற்றிய விவரிப்பை நினைவு கூர்வதே போதுமானதாகும் (உ.ச. 4:1-5; 7:2-10).

ஆனால், சிறிது அனுபவமுடைய மனிதன் தன்னுடைய துணைவியின் உள்ளியல்பான வலுவின்மையை நினைத்து அச்சப்படுகிறான். அழகு நிறைவளிப்பதில்லை (பழ 11:22). ஆனால், அழகு, தெலீலா போன்ற பெண்ணிடம் தந்திரத்தோடு ஒன்று சேர்ந்து கொள்ளும்போதும் (நீதி 14:15-17; 16:4-21), அல்லது அது சாதாரண மனிதனை நெறிபிறழச் செய்யும்போதும் (சீரா 9:1-9; காண்க. ஆதி 3:6), உண்மையில் மிகவும் அபாயகரமானதாக உள்ளது. இளம் பெண்கள் தங்களுடைய பெற்றோரின் கவலைக்கு ஒரு காரணமாக உள்ளனர் (சீரா 42:9-11). தனது இளம் மனைவியிடமிருந்து விலகிக் கட்டுப்பாடின்றி நடக்கக் துணியும் மனிதன் (பழ 5:15-20), பெண்ணிடம் எழக்கூடிய நிலையற்ற தன்மையையும் விபசாரத்திற்கான அவளது ஆர்வத்தையும் கண்டு அச்சமுறுகிறான் (சீரா 25:13-26:18). அவள் வீண் தற்பெருமை வெளிப்படுத்தும் போதும் (எசா 3:16-24), அல்லது "முட்டாளாக" (பழ 9:13-18; 19:14; 11:22), சண்டைக்காரியாக, சீறி விழுபவளாக மற்றும் எரிச்சலூட்டுபவளாகக் காட்டும்போதும் (பழ 19:13; 21:9,19; 27:15-16) அவன் வெறுக்கிறான்.

ஞானிகள் கொண்டிருந்த பெண்களைப் பற்றிய கருத்தானது ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகளினுடைய விவரங்களால் மட்டுமே கட்டுப்படுத்தப்படக் கூடாது. ஏனெனில், பெண்ணானவள் உண்மையில் இறை ஞானத்தினுடைய உருவமாவாள் (பழ 8:22-31). தனது மகிமையைப் பெறுவதற்கு வலுவற்ற கருவிகளைப் பயன்படுத்தும் இறைவனுடைய வல்லமையை அவள் வெளிப்படுத்துகிறாள். எளியோரின் ஆண்டவரை அன்னா மகிமைப் படுத்தினாள் (1 சாமு 2). செயல்படும் இறைவாக்கினரைப் போன்று, இறைவனுடைய பாதுகாப்பினை அனைவரும் அடையலாம் என யூதித்து காட்டுகிறாள். அவளது அழகு, விவேகம், திறமை, மனோதிடம், மற்றும் விதவை நிலையிலும் அவளது கற்பு முதலியன, பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய திட்டத்திற்கேற்ற நிறைவான மாதிரியாக அவளை அமைக்கின்றன.

**III. புதிய ஏற்பாடு: கன்னி, மனைவி மற்றும் தாய்:-** அழகாக இருந்தாலும் அத்தோற்றமானது பெண்ணுக்கு மாட்சிமிக்க மேன்மையை அளிக்க வில்லை. இந்நாளிலும் யூதனுடைய அன்றாட செபம் கபடின்றி இந்த உண்மையினையே பறை சாற்றுகிறது. "புறவினத்தானாகவோ, பெண்ணாகவோ, அறிவிலியாகவோ என்னை அமைக்காததற்காக, ஓ! இறைவா, நீர் போற்றப் படுவீராக!". அதே நேரத்தில் "உமது சித்தப்படி என்னைப் படைத்த ஆண்டவரே, நீர் புகழப்படுவீராக!" என்று கூறுவதோடு பெண்கள் திருப்தியடையவேண்டும். கிறிஸ்து மட்டுமே பெண்ணை முழு மேன்மையுடன் அர்ப்பணிக்கிறார்.

1. **மீட்பின் தொடக்கம்:** இந்த அர்ப்பணிப்பானது இயேசுவின் பிறப்பு அறிவிப்பின் நாளில் நிகழ்ந்தது. பெண்ணிடம் பிறக்க ஆண்டவர் சித்தமானார் (கலா 4:4). கன்னியும் தாயுமான மரியாள் பலனுடைமையின் பெண்ணின நம்பிக்கையைத் தன்னிலேயே நிறைவேற்றுகிறாள். அதே நேரத்தில், இதுவரை தாழ்த்தப்பட்டு வந்த கன்னிமையின் ஆசையை அவள் வெளிப்படுத்திப் புனிதப்படுத்துகிறாள்.

இந்த ஆசையானது இதற்குமுன் அவமானத்திற்குரிய மலட்டுத் தன்மையுடன் ஒப்பிடப்பட்டு வந்தது. வாழ்வின் அரசனைப் பிறக்கச் செய்ததால், மரியாளில் பெண்மையின் மாதிரியானது ஊன் உரு எடுக்கிறது. ஆனால், மரியாள் மனிதருடைய பிள்ளைகளில் மிக அழகானவருக்குக் கொடுத்த உடல் வாழ்விற்காக ஒரு பெண் அவளைப் பாராட்டும்போது விசுவாசத்தினுடைய கன்னிமையின் மூலமாகப் பிறந்த பலனாகிய ஆன்மீகத் தாய்மை உள்ளதென இயேசு வெளிப்படுத்துகிறார் (லூக் 11:28-29). மரியாளின் மூலமாக, பெண்ணானவள் விசுவாசிக்கும் ஆன்மாவின் அடையாளமாக உருவாகலாம். இதிலிருந்து புனிதப் பெண்கள் தன்னைப் பின் தொடர்வதையும் (லூக் 8:1-3), விசுவாசமிக்க கன்னியரை எடுத்துக்காட்டாகக் கூறுவதையும் (மத் 25:1-12), பெண்களிடம் பணியை ஒப்படைப்பதையும் (யோவா 20:17) இயேசு அனுமதிப்பதை நாம் புரிந்து கொள்ளலாம். எனவே, தொடக்கத் திருச்சபையானது எண்ணற்ற பெண்களால் வகிக்கப்பட்ட நிலையினையும், அவர்கள் ஏற்கும் பங்கினையும் கவனத்திற்குக் கொண்டு வருகிறது (அ.ப. 1:14; 9:36-41; 12:12; 16:14-15). இப்போது முதல் திருச்சபையின் பணியில் உடனுழைக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

2. **கிறிஸ்து இயேசு:** இந்தப் பங்கு பெறுதலானது கன்னிமை என்னும் பெண்ணின் புதிய பரிமாணத்தினுடைய கண்டுபிடிப்பைக் கருத்தில் கொள்கிறது. எனவே, எந்தப்பொருளில் பாலினப் பிரிவானது மேற்கொள்ளப்பட்டு அர்ப்பணிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்கென, பவுல் பெண்ணைப்பற்றிய ஓர் இறையியலை உருவாக்கினார். "ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (கலா 3:28). இன மற்றும் சமூக அமைப்புகளின் பிரிவுகளைப் போன்று, பாலினங்களிடையிலான வேறுபாடும் ஒரு குறிப்பிட்ட பொருளில் மேற்கொள்ளப்படுகிறது. இயேசு கூறிய இந்த வானதூதர் வாழ்வில் வானக வாழ்வானது முன் காணப்படலாம் (மத் 22:30). ஆனால், விசுவாசம் மட்டுமே இதனை மெய்ப்பிக்க முடியும். "காமத்தால் தீய்வதைவிடத் திருமணஞ்செய்து கொள்வதே நல்லது" என்று விவேகத்தோடு பவுல் கூறுகிறாரெனில் (1 கொரி 7:9), கன்னிமையின் அருங்கொடையை அவர் புகழ்வதேயாகும். "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று" என்று கூறிய ஆதியாகமத்துடனும் முரண்பட அவர் துணிகிறார் (ஆதி 2:18; 1 கொரி 7:26). இளைஞர்களோ, இளம் பெண்களோ, அனைவருமே அழைக்கப்பட்டால், கன்னிமையுடன் இருக்கலாம். எனவே, ஆண் மற்றும் பெண்ணிற்கு இடையிலான முதல் வேறுபாட்டுடன் திருமணமானவர் மற்றும் ஆகாதவர் இடையிலான ஒரு புதிய வேறுபாடும் சேர்க்கப்படுகிறது. விசுவாசமும் விண்ணக வாழ்வும் உடைய கன்னிமை வாழ்வில், ஆன்மாவானது எரிச்சலின்றி தன்னுடைய ஆண்டவருடன் தன்னைச் சேர்க்கின்ற செயல்முறையான எடுத்துக்காட்டைக் கண்டடைகின்றது (7:35). தனது அழைப்பை நிறைவுசெய்ய ஒரு பெண் மனைவியாகவோ, தாயாகவோ ஆக வேண்டிய அவசியமில்லை. தனது உள்ளத்திலும் உடலிலும் அவள் கன்னியாகவே இருக்கலாம்.

பெண் இப்போது தீர்மானித்து நிறைவேற்றக் கூடிய கன்னிமையின் இந்த மாதிரியானது திருமணத்தின் சாதாரண நிலையைக் கீழ்ப்படுத்துவதில்லை (1 திமொ 2:15). வானகமானது மண்ணுலகைச் சமநிலைப்படுத்தி நிலைநிறுத்துவது போல, அது தன்னுடன் ஒரு சரியீட்டு மதிப்பையும் கொண்டுள்ளது. இறுதியாக மற்றும் மிகவும் ஆழமான நிலையில், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான இயல்பான உறவானது, திருச்சபையுடனான கிறிஸ்துவினுடைய உறவின்மேல் உருவாக்கப்படுகிறது. பெண் நேருக்கு நேராக

ஆதாமுடன் மட்டுமின்றி கிறிஸ்துவுடனும் நிற்கிறாள். இப்போது அவள் திருச்சபையைக் குறித்துக் காட்டுபவளாக உள்ளாள் (எபே 5:22-24).

**3. பெண்ணும் திருச்சபையும்:** பாலினங்களின் பிரிவானது விசுவாசத்தினால் மேம்படுத்தப்பட்டாலும், காலப்போக்கில் அது மீண்டும் வாழ்விற்கு வந்து, திருச்சபையினுடைய செயல்முறையான வாழ்வின்மேல் தன்னைச் சுமத்துகிறது. படைப்பில் நிலவும் அமைப்பினின்று பவுல் பெண்ணுடைய நடத்தையின் இரண்டு கூறுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். வழிபாட்டிற்கான அவையில் ஒரு பெண் முக்காடு அணியவேண்டும். அவளுடைய கிறிஸ்தவச் சிறப்பானது தனது கணவனைச் சார்ந்திருப்பதினின்று தன்னை விலக்கவில்லை என்பதை இந்த அடையாளத்தின் மூலமாக அவள் வெளிப்படுத்துகிறாள் (1 கொரி 11:2-16). மேலும், இஃது அதிகாரபூர்வ போதனையில் அவள் இன்னும் வகிக்கும் இரண்டாம் நிலையினின்றும் விலகவில்லை என்பதையும் காட்டுகிறது. மேலும், அவள் கோயிலில் பேசவும் கூடாது; அதாவது அவளால் போதிக்க இயலாது (1 கொரி 14:34; காண்க. 1 திமொ 2:12). பவுல் பெற்ற "ஆண்டவருடைய கட்டளை" இதுவே (1 கொரி 14:37). ஆனால், இறைவாக்குரைக்கும் வாய்ப்பைப் பவுல் பெண்ணிற்கு மறுக்கவில்லை (11:5). ஏனெனில், பழைய ஏற்பாட்டில் இருந்ததைப் போன்று, ஆவியானவர் பாலினங்களுக் கிடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்கவில்லை. ஒழுங்குமுறை பின்பற்றப்படுவதற்கென அவள் முக்காடிட்டு மௌனமாக இருந்தாலும், மற்றொரு புறம் வீட்டில் "மரியாதையும் கற்பும் உள்ள வாழ்வினால்" சான்று பகருமாறு ஊக்குவிக்கப்படுகின்றாள் (1 பேதுரு 3:1-2; 1 திமொ 2:9-10). விதவை என்ற நிலையில், அவளது முந்தைய பணியினின்று அவளை விலக்கி வைக்கின்ற முதிர்ந்த வயதை அடைந்தபோது, கிறிஸ்தவ சமுதாயத்தில் அவள் முக்கிய பங்குவகிக்கிறாள் (1 திமொ 5:9).

இறுதியாக திருவெளிப்பாடான, ஈசபேலினுடைய தனிப்பட்ட பங்கையும் (திருவெளி 2:20), புகழ்பெற்ற வேசியினுடைய குற்றங்களையும் (17:1-3; 18:3.9; 19:2) பார்வையினின்று விலக்கிவிடவில்லை. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, விண்மீன்களை முடியா மூடி, ஆண்குழந்தையை ஈன்றெடுத்து, பாலைவனம் வரை பறவை நாகத்தால் துரத்தப்பட்ட "பெண்ணை" அது புகழ்கிறது; ஆனால், தனது வயிற்றின் வாரிசின் மூலமாக அவள் அப்பறவை நாகத்தின்மேல் வெற்றிகொள்ள வேண்டும் (திருவெளி 12). முதலாவதாக இப்பெண்ணானவள் திருச்சபையே; கிறிஸ்துவின் உடலை ஈன்றெடுத்த புதிய ஏவாள். பின்னர், பாரம்பரிய விளக்கவுரையின்படி அவள் மரியாள் ஆவாள். ஒவ்வொரு பெண்ணும் தான் இவ்வாறு இருக்கவேண்டும் என்று தனது உள்ளத்தில் ஏங்குகின்ற பெண்ணினுடைய மூல முன்மாதிரியை நாம் அவளில் காணலாம்.

## பெண்பன்றி (SOW)

"ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவை அறியச் செய்யும் அறிவினால் உலகத்தீட்டிலிருந்து தப்பியபின், இவர்கள் மீண்டும் அதிலே சிக்கி வெல்லப்படுபவருடையவும்," "நீதிநெறியை அறிந்தபின் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட பரிசுத்த கட்டளையை விட்டு விலகுபவருடையவும்" பின்னைய மோசமான நிலையை விவரிக்கப் பயன்படும் இரண்டு உயிரினங்களில் ஒன்றாகும் பெண்பன்றி (2 பேதுரு 2:20-22).

## பெண்பேய், கூளி (NIGHT HAG)

பொதுவான, ஆனால் தவறாக "லில்லித்" என்ற எபிரேயச் சொல் எசா 34:14-இல் 'பெண் பேய்' அல்லது கூளி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இஃது "இரவு" என்ற சொல்லோடு தொடர்புடையது. உண்மையிலேயே இஃது ஒரு குறிப்பிட்ட வகைப் பெண்பேயைக் குறிக்கும் சுமேரியச் சொல்லிருந்து வருவதாகத்

தெரிகிறது. அழிந்து பாழ்பட்ட இடத்தை விவரிக்கப்பயன்படும் பல உருவகங்களில் இதுவும் ஒன்றாகும்.

**பெண்மான் (HIND)**

வளர்ந்த சிவப்புமானின் பெண் இனம். பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் பெண்மானின் அழகையும் (பழ 5:19), அது குட்டி ஈனுதலையும் (யோபு 39:1-4; எரே 14:5; காண்க. ஆதி 49:21; சங் 29:9), அதன் தடுமாறாத கால்களின் வலிமையையும் (2 சாமு 22:34; சங் 18:33; அப 3:19) காட்டுகின்றன. பழ 5:19-இல் மனைவியின் வனப்பு மற்றும் மென்மையை விவரிக்க, பெண்மான் உருவகமாகப் பயன்படுகிறது. ஆதி 49:21-இல் வரும் நப்தலி பற்றிய குறிப்பில் வாசகம் தெளிவாக இல்லை. சங் 22-இன் தலைப்பில் வரும் "காலைப் பெண்மான்" என்பது, அறியப்பட்ட இசைக்குறிப்பாக இருக்கலாம். உ.ச. 2:7; 3:5-இல் வரும் வயல்வெளி பெண்மான்கள் (மரைகள்) இறைவனது பெயருக்குப் பதிலாகப் பயன்பட்டிருக்கலாம் அல்லது இனப்பெருக்க ஆற்றலைக் குறிக்கலாம்.

**பெதகேல் (PEDAHEL - இறைவன் மீட்டு விட்டார்)**

இவர் நப்தலி கோத்திரத்திலே, அம்மி கூதுவுடைய புதல்வராவார். மேற்கு யோர்தான் நிலத்தைப் பத்துக் கோத்திரங்களிடையே பகிர்ந்து கொள்வதை மேற்பார்க்க யோசுவாவோடு இவரும் நியமிக்கப்பட்டார் (எண் 34:28). இப்பகுதியில் வரும் இவருடைய பெயரும், மற்றவர்களுடைய பெயரும், கானானில் புதிய வாழ்விற்கு இறைவனையே சார்ந்திருந்தனர் என்ற பொருளை வலியுறுத்துகின்றன.

**பெதாசூர் (PEDAHZUR - பாறை (இறைவன்) மீட்டுவிட்டார்)**

இவர் கமாலியேலின் தந்தை. இந்தக் கமாலியேல் பாலைவனத்தில் மனாசே கோத்திரத்தின் தலைவராக இருந்தார் (எண் 1:10; 2:20; 7:54.59; 10:23).

**பெதாது (BEDAD - தனியான)**

ஏதோம் நாட்டின் அரசனாகிய அதாதுவின் தந்தை (ஆதி 36:35; 1 நாள் 1:46).

**பெதாயா (PEDAIAH - யாவே மீட்டுவிட்டார்)**

1. இவர் யூதா அரசன் யோயாக்கிமின் தாய்வழி தாத்தா ஆவார் (2 அர 23:36). இவர் ரூமா என்ற ஊரைச்சேர்ந்தவர்.

2. இவர் தாவீது அரசன் வழிவந்தவர். 1 நாள் 3:18-19-இல் செருபாபேலின் தந்தை எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால், எஸ் 3:2.8; 5:2; நெகே 13:1; ஆகா 1:1.12.14; 2:2.23 - ஆகிய வாசகங்களில் செருபாபேல் பெதாயாவின் சகோதரனான செயல்தியேலின் மகன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

3. இவர் யோவேலின் தந்தை. இந்த யோவேல் தாவீது காலத்தில் மேற்கு யோர்தானில் வாழ்ந்த மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்குத் தலைவராவார் (1 நாள் 27:20).

4. பரோசுவின் மகனான பெதாயா அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேம் மதிலைப் பழுது பார்க்க உதவினார் (நெகே 3:25).

5. ஆண்டவரின் திருச்சட்டநூலை, எஸ்ரா மக்கள்முன் படிக்கும்போது, எஸ்ராவின் இடப்பக்கத்தில் பெதாயாவும் மற்றவரும் நின்று கொண்டிருந்தனர் (நெகே 8:4).

6. பென்யமின் குலத்தினரான பெதாயா கேலயாவின் மகனும், யோவேதுவின் தந்தையுமாவார் (நெகே 11:7); சல்லூவின் முன்னோர்.

7. கோவிலில் வேலை செய்யும் லேவியர்களுக்குச் செல்ல வேண்டிய வருமானத்தைத் தர, நெகேமியாவால் கருவூல அறைகளுக்குக் கண்காணிப்பாளராய் நியமிக்கப்பட்ட லேவியருள் இவரும் ஒருவர் (நெகே 13:13).

**பெதான் (BEDAN - நடுவரின் மகன், தாணின் மகன்)**

1. மனாசே இனத்தைச் சேர்ந்த ஊலாமின் மகன் (1 நாள் 7:17).

**பெத்காதேர் (BETH - GADER - சுவரின் வீடு அல்லது புனித இடம்)**

இது வடயூதாவில் உள்ள ஒரு நகரம் (1 நாள் 2:51). இந்நகர் எவ்விடத்திலிருந்தது என்று அறியப்படவில்லை. கெதோர் என்ற ஊரும், பெத்காதேரும் ஒன்றாக இருக்கலாம்.

**பெத்காமுல் (BETH-GAMUL - சன்மான வீடு)**

இது மோவாபியரின் மேட்டுச் சமவெளியிலுள்ள ஒரு நகரமாகும். இதற்கு எதிராக எரேமியா தீர்ப்புக் கூறினார் (எரே 48:22). தீபோனுக்குக் கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள கிர்பெத் ஏல்–எமெயில் என்ற இடம், பெத்காமுல் இருந்த இடமாக அடையாளம் காட்டப்படலாம்.

**பெத்கார் (BETH-CAR - செம்மறியின் வீடு)**

இது மிஸ்பாவிற்கும், பெலிஸ்தியா நாட்டிற்கும் இடையிலுள்ள இடமாகும். ஆனால், இஃது இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை (1 சாமு 7:11). இது பெத்கோரோன் அல்லது அயின் கரீமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்-கில்கால் (BETH-GILGAL - கில்காலின் வீடு)**

இது நெகேமியாவின் காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட எருசலேம் சுவர்களை அர்ப்பணிப்பதில் பங்கு பெற்ற ஆலயப் பாடகர்கள் தங்கியிருந்த இடமாகத் தோன்றுகிறது (நெகே 12:29). எருசலேமிற்குக் கிழக்கிலுள்ள பென்யமினைச் சேர்ந்த கில்காலாகவும் (யோசு 4:19), யூதாவைச் சேர்ந்த கில்காலாகவும் (15:7) அடையாளம் காட்டப்பட்டாலும், இஃது இருந்த இடம் தெரியவில்லை.

**பெத்-கோரோன் (BETH HORON - கவுரோனின் வீடு, குகைகளின் இடம்)**

இது 'உயர்வான பெத்கோரோன்', 'தாழ்வான பெத்கோரோன்' என்ற இரண்டு வேறுபட்ட நகர்களின் பெயராகும் (1 நாள் 7:24). இந்த இரண்டு நகர்களும் எருசலேமிற்கு வடமேற்கே 16 கி.மீ. தொலைவிலுள்ள உயர்ந்த பெயித் ஊர் எல்–போகா, 18 கி.மீ. தொலைவிலுள்ள தாழ்ந்த பெயித் ஊர், எத்-தக்தா ஆகிய இரண்டு வேறுபட்ட தற்போதைய நகர்களோடு அடையாளம் காட்டப்படுகின்றன. இந்நகரங்கள் அய்யலோன் பள்ளத்தாக்கில் எப்பிராயிம், பென்யமின் எல்லையில் இருக்கின்றன (யோசு 16:3.5; 18:13-14). செபேலா வழியாக மத்திய மேட்டு நிலங்களுக்குச் செல்லும் முக்கியப் பாதைகளில் ஒன்று இந்நகர்கள் வழியாகத்தான் செல்கின்றது. இந்தப் பாதையானது 'பெத்கோரோனுக்குச் செல்லும் வழி' என்றழைக்கப்படுகிறது (யோசு 10:10 தொ). தாழ்வான பெத்கோரோன் கடல்மட்டத்திலிருந்து 1300 அடி உயரத்திலிருந்து, உயர்வான பெத்தோரோன் கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்திலும் இருக்கின்றன. எப்பிராயிம், பென்யமினின் எல்லைப்பகுதி தாழ்வான பெத்கோரோன் நகரினைக் கடந்து செல்கிறது (யோசு 16:3.5; 18:13தொ). 1 நாள் 7:24-இல் எப்பிராயிம் கோத்திரத்தாரால் கீழ்ப் பெத்கோரோனும், மேல் பெத்கோரோனும் அரண் சூழக்கட்டியெழுப்பப்பட்டன என்று கூறப்பட்டிருக்கிறது. 1 அர 9:17-இல் கீழ்ப் பெத்கோரோன் சாலமோனால் அரண் சூழக் கட்டி எழுப்பப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் நாளாகமம் (8:5) தாழ்வான, உயர்வான பெத்கோரோன் பற்றிக் குறிப்பிடுகிறது. பெத்கோரோன் லேவியர் நகரங்களின் பட்டியலில் இடம் பெறுகிறது (யோசு 21:22; 1 நாள் 6:53). எகிப்து நாட்டு அரசராகிய சிசாக்கினால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனா நாட்டு நகரங்களின் பட்டியலிலும் இந்நகரம் இடம் பெற்றுள்ளது. இந்நகர் நெகேமியாவின் பகைவனாகிய

"சன்பல்லாற்று" தங்கியிருந்த இடமாகும் (நெகே 2:10.19; 13:28).

ஓலபெரினேக்கு எதிராக யூதர்கள் கொண்டிருந்த சிற்றூர்களில் பெத்கோரோனும் ஒன்று (யூதி 4:4). மக்கபேயர் போர்க்காலத்தில், இவ்விடத்தில் யூதா இருமுறை வெற்றி கொண்டார் (1 மக் 3:16.24; 7:39). யோனத்தானுடன் நடந்த போருக்குப்பின் பாக்கிது இந்த ஊரின் அரண்களை வலுப்படுத்தினார் (1 மக் 9:50).

**பெத்-சதா (BETH - ZATHA)**

எருசலேமின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஒரு குளம் (யோவா 5:2). இங்கு நடந்த நிகழ்ச்சி பற்றி யோவா 5:1-16-இல் வாசித்தறிக.

**பெத்-சாயிது (BETH - ZAITH – ஒலிவ வீடு)**

தெமேத்திரியுவின்கீழ் இருந்த தலைவர்களில் ஒருவரான பாக்கிது, எருசலேமில் தான் செய்த அக்கிரமச்செயலுக்குப்பின் தங்கிய நகரம் ஆகும் (1 மக் 7:19). இங்குத் தன்னைக் கைவிட்ட யூதர் பலரைப் பாக்கிது கொன்று குவித்தான். பெத்சூருக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பெயித்து செயித்து என்ற இடமாக, பெத்சாயிது அடையாளம் காட்டப்படுகிறது. இங்குள்ள ஒரு குளம், பாக்கிது கொன்ற யூதர்களை எறிந்த இடமாகக் காட்டப்படுகிறது.

**பெத்-சாய்தா (BETH - SAIDA – மீன் பிடிப்பவன் வீடு)**

இஃது இயேசுவால் சபிக்கப்பட்ட கலிலேயாவிலுள்ள ஊர்களில் ஒன்று (மத் 11:21; லூக் 10:13). பேதுரு, அந்திரேயர், பிலிப்பு ஆகியவர்களின் சொந்த ஊராகும் (யோவா 1:44; 12:21). இவ்வூரைச் சேர்ந்த குருடன் ஒருவனுக்கு இயேசு குணமளித்தார் (மாற் 8:22). அப்பம் பலுகின நிகழ்ச்சி பெத்சாய்தாவில் நடந்தது என்பது நற்செய்தியில் தெளிவாக இல்லை. ஏனென்றால், நற்செய்தியாளர் லூக்கா இந்நிகழ்ச்சி நடந்த இடமாகக் காட்டுவது- நற்செய்தியாளர் மாற்கு காட்டுவதிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது (மாற் 6:45; லூக் 9:10).

யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும், கலிலேயாக் கடலுக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலும் உள்ள தற்போதைய எத்தெல் என்பதுதான் பெத்-சாய்தா இருந்த இடமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நான்கில் ஒரு பகுதிக்கு அரசனான பிலிப்பு என்பவர் தமது தலைநகரைப் பெத்சய்தாவில் நிறுவி, அகுஸ்துவின் புதல்வியின் பெயராகிய யூலியா என்ற பெயரையே அந்நகருக்கு இட்டார் என்று வரலாற்று ஆசிரியர் யோசிப்பசு கூறுகிறார். இந்த எத்தெல்தான் பிலிப்பினால் கட்டப்பட்ட புதிய நகரத்தின் இடமாகும் என்றும், ஏரிக்கடையிலுள்ள கிர்பெத் ஏல்-அரசு என்பதுதான் முந்தைய மீன் பிடிக்கும் கிராமம் ஆகும் என்றும் கருதப்படுகிறது.

**பெத்சான் (BETH-SHAN – ஓய்வு வீடு, சானின் வீடு)**

இது யோர்தான் பள்ளத்தாக்குக்கும், இஸ்ராயேல் பள்ளத்தாக்குக்கும் இடையில் அமைந்த ஒரு நகரம். எசுதிரலோன் பள்ளத்தாக்கின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது எனலாம். இன்று, இது பெய்சான் என அழைக்கப்படுகிறது. இந்நகரம் அமைந்திருந்த திட்டின் பெயர்- தெல் ஏல்-குசன் ஆகும். இது பிலதெல்பியா அருங்காட்சியகத்தினரால் 1921-33-இல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. கி.மு. 3400-3300 இலிருந்தே இவ்விடத்தில் கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். கி.மு. 2400-ஐ ஒட்டி இந்நகர் அழிக்கப்பட்டு 15-ஆம் நூற்றாண்டில் மீண்டும் எழுப்பப்பட்டது.

கி.மு. 1450-இல் இஃது ஓர் எகிப்தியக் கோட்டையாகியது. எனவே, இஃது எகிப்திய ரின்கீழ் எகிப்தியரின் அதிகாரம் பாலஸ்தீனத்தில் இருந்ததுவரை இருந்தது. ஆயினும், எகிப்தியரின் அதிகாரத்தின்கீழ் இருக்கும்பொழுதே, இருமுறை அழிக்கப்பட்டது. ஆனால், கானானில் இருந்த எகிப்திய நகரங்களில் வளமையானதும்,

செல்வாக்கானதுமாக இருந்தது. இஃது ஒரு முக்கிய வியாபார மையமாக இருந்ததாலும் கடற்கரைச் சமவெளி, மத்திய நிலம் ஆகியவற்றைக் கிழக்குப் பாலஸ்தீனம், சீரியா ஆகியவற்றுடன் இணைக்கும் முக்கியமான சாலையில் இஃது அமைந்திருந்ததாலும் இதன் முக்கியத்துவம் அதிகமானது.

இக்கானானிய நகரம் பல பெரும் கோவில்களைக் கொண்டிருந்தது. தாகோன், அஸ்தார்தே என்பவை இந்நகரின் முக்கியத் தெய்வங்களாகும். தொடக்ககால இஸ்ராயேலில் கலிலேயாவையும், எப்பிராயிமையும் பிரிப்பதாகப் பாலஸ்தீனத்தின் நடுவே அமைந்து, கானானிய வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் இது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லையெனினும், தாவீதுதான் இந்நகரை அழித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பாரசீகர்களின் காலம்வரை இந்நகரம் யாரும் குடியேறாத இடமாக இருந்தது.

ஆனால், கிரேக்கர்கள் காலத்தில் இந்நகரம் படைகளின் இருப்பிடமாக மீண்டும் புதுப்பொலிவு பெற்று ஸ்கூத்தாபொலி என்று அழைக்கப்பெற்றது. கிரேக்கர்களின் பத்து நகரங்களில் மிகப்பெருமை வாய்ந்தது பெத் சான் எனலாம். கி.மு. 108-இல் யோவான் இரிக்கானு இதனை வெற்றி கொண்டார்; கி.மு. 63-இல் பாம்பேயின் காலத்தில் யூதர்களிடமிருந்து இது பிரித்தெடுக்கப்பட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கப் பண்பாட்டு ஆலயத்தின் சிதைவுகள் இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாட்டில் யோசு 17:16-நீதி 1:27 ஆகிய இடங்களில் கானானியர்களிடமிருந்து இந்நகர் இஸ்ராயேலரால் கைப்பற்றப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இஃது இசக்கார் கோத்திரத்துக்கு உரியதாக யோசு 17:11-இலும், மனாசேக்கு உரியதாக நீதி 1:27; 1 நாள் 7:29-இலும் கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மையிலே இஃது இரு கோத்திரங்களின் எல்லைப் பகுதியில்தான் இருக்கிறது. பெலிஸ்தியர்களின் அதிகாரத்தின்கீழ் இந்நகர் இருந்தபோதுதான் சவுல், அவரது புதல்வர்கள் ஆகியோரின் உடல்கள் இந்நகர மதிலின் மேல் தொங்கவிடப்பட்டன. ஆயுதங்கள் வெற்றிச் சின்னமாக அஸ்தார்தே கோவிலில் தொங்கவிடப்பட்டன (1 சாமு 31:10.12-13). யாபேசு-கிலயாது மக்கள் இவ்வுடல்களை இறக்கி யாபேசுக்குக் கொண்டு வந்து அவற்றைத் தகனம் செய்து, எலும்புகளைப் புதைத்தனர்.

1 மக் 5:52; 12:40-இல் எபிரேயப் பெயர் கிரேக்கப் பெயராக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். யோனத்தானும், திரிபோவும் இவ்விடத்தில்தான் சந்தித்துச் சண்டை நிறுத்தம் அறிவித்தனர். 'ஸ்கூத்தாபொலி' என்ற கிரேக்கப்பெயர் 2 மக் 13:39 தொ-இல் காணப்படுகிறது. கிரேக்கர்கள் தம்முடன் நல்ல மனத்துடன் நடந்து கொள்கின்றனர் என இந்நகர யூதர்கள் சான்று கூறுகின்றனர். யூதி 3:10, தனது கற்பனை நிகழ்ச்சியுரையில் ஸ்கூத்தாபொலியை அறிமுகப் படுத்துகிறது.

**பெத் சிற்றா (BETH - SHITTA – வேலமர வீடு)**

இஸ்ராயேலராலும், கிதியோனாலும் தோற்கடிக்கப்பட்டபோது, மிதியானியர்கள் ஓடிப்போன இடம் (நீதி 7:22). இஃது இருந்த இடம் தெரியவில்லை. தெல்சிலெய்காத்துக் அருவில் இருந்திருக்கலாம். சிலர், இதை அரோது ஊற்றுகளுக்குக் கிழக்கில் இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் வடபகுதியிலுள்ள இக்காலத்திய சுத்தாவாக அடையாளம் காட்டுவர்.

**பெத் சூர் (BETH - ZUR – பாறையின் வீடு)**

யூதாவின் ஒரு நகரம் (யோசு 15:58). முதலில் காலேபியர்களால் குடியேறப்பட்டது (1 நாள் 2:45). பின்பு ரெகபயாமால் வலுப்படுத்தப்பட்டது (2 நாள் 11:17). நாடு கடத்தலுக்குப்பின் இது மீளவும் கட்டப்பட்டு, ஒரு மாவட்டத்தின் தலைநகராயிற்று (நெகே 3:16).

மக்கபேயர் போர்களில் இவ்விடம் முக்கியப் பங்கு வகித்தது. கி.பி. 164-இல் யூதா

மக்கபேயுவால் வலுப்படுத்தப்பட்டது (1 மக் 6:26); 162-இல் சீரியர்களிடம் சரண் அடைந்தது (6:31-3.49); 144-இல் யூதா மக்கபேயுவால் மீண்டும் கைப்பற்றிப்பட்டது.

எபிரோனுக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எத்-துபெய்க்கா என்ற இடமாகப் பெத்சூர் அடையாளம் காட்டப்படுகிறது. இது கடல் மட்டத்திலிருந்து 1013 மீட்டர் உயரத்தில் உள்ளது. இது பாலஸ்தீனத்தில் மிக உயர்ந்த பழங்கால இடமாகும். ஏலா பள்ளத்தாக்கின் மேல்முனையில், யூதாவின் மேற்குப்பகுதியில் இருந்த ஒரே கோட்டையாகும். ஆகவே, அன்னியர்களின் தாக்குதல்கள் நடந்த இடமாகும். இது பல தடவை அழிக்கப்பட்டுள்ளது. இங்கு, கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும், சாடியின் கைப்பிடிகளும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெத்சூர் ஒரு முக்கிய வணிக மையமாக இருந்திருக்கிறது என்று காட்டுகின்றன. இதற்குப்பின் இது கைவிடப்பட்டுக் குடியேறப்படவேயில்லை.

**பெத்-செக்கரியா (BETH - ZECHARIAH - செக்கரியாவின் வீடு)**

பெத்சூருக்கு வடக்கே காணப்படும் ஓர் இடம் என்று வரலாற்று ஆசிரியர் யோசிப்பசால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. 'பாதை மிகவும் குறுகியதாய்க் காணப்பட்ட இவ்விடத்தில்தான்' 4-ஆம் அந்தியோக்குவின் படை, மக்கபேயரின் படையைத் தோற்கடித்தது (1 மக் 6:32-33). இந்த இடம் பெத்சூருக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் பெயித் ஸ்கரியாவாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்-செமேசியர் (BETH- SHEMITE)**

யூதாவிலுள்ள பெத்-செமேசின் குடிமக்கள் (1 சாமு 6:14.18).

**பெத்-செமேசு (BETH - SHEMESH - சூரியக் கடவுள் செமேசின் வீடு)**

1. யூதாவின் கோத்திர எல்லைக்குள் அமைந்த பெத்செமேசு (யோசு 15:10). யோசு 19:41-இல் கூறப்பட்டிருக்கும் ஈர் செமேசு நகரமாக இருக்க வாய்ப்புண்டு. இஃது ஒரு லேவிய நகரமாகும் (யோசு 21:16; 1 நாள் 6:44). பெலிஸ்தியர்கள் தாங்கள் எடுத்துச்சென்ற உடன்படிக்கையின் பேழையை மீண்டும் திருப்பி அனுப்பியபோது அது வந்து சேர்ந்த முதல் இடம் இதுதான் (1 சாமு 6:9-20). இஸ்ராயேலின் அரசனான யோவாசு, யூதாவின் அரசனான அமட்சியாவைத் தோற்கடித்ததும் இவ்விடத்தில்தான் (2 அர 14:11-13; 2 நாள் 25:21-23). இது சாலமோனின் இரண்டாவது மாவட்டத்தில் அமைந்துள்ளது (1 அர 4:9).

எருசலேமுக்கு மேற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள இன்றைய அயின் செம்சுக்கு அருகேயுள்ள தெல் எர்-ருமெய்லேதான்-பெத்செமேசு என்று கருதப்படுகிறது. கி.பி. 1912 மற்றும் 1933-இல் இவ்விடம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இந்நகரம் தொடக்க வெண்கலக் காலத்தில் நிறுவப்பெற்று, கி.மு. 1500 – 918-இல் மிகவும் சிறப்புற்ற விளங்கிற்று. கி.மு. 587-இல் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டபின் இதில் மீண்டும் மக்கள் குடியேறவில்லை.

அகழ்வாராய்ச்சியின் வழியாகச் சில உண்மைகள் தெரியவருகின்றன. பெலிஸ்தியர்களின் பண்பாட்டுக்கும், எபிரேயர்களின் பண்பாட்டுக்கும் அதிகத் தொடர்புண்டு என்பது தெரியவந்துள்ளது. ஏனெனில், பெத்செமேசு இஸ்ராயேலரின் நாட்டுக்கும் பெலிஸ்தியரது எல்லைக்கும் மிக அண்மையில் இருந்தது. ஏற்றச் சிறப்புடைய பெலிஸ்தியக் கலாச்சாரம் இஸ்ராயேலரைப் பாதித்ததில் வியப்பில்லை. மேலும், செல்வந்தர்கள் பல பெரிய மாளிகைகளைக் கட்டினர். எவ்வாறெனில், அகழ்வாராய்ச்சியின் மூலம் இவ்வாறு எழுப்பப்பட்ட மாளிகைகளும், பாதுகாப்புக் கோட்டைகளும் சாலமோன்

காலத்தவை என்பது அறியப்படுகிறது. சில கட்டடங்கள் தாவீதின் காலத்தவையாகும் எனவும் அறியப்படுகிறது.

2. இசக்கார் கோத்திரத்தில் அமைந்த இந்நகரம், யோர்தான் பள்ளத்தாக்கில் பெத்சானுக்கருகே அமைந்துள்ளது (யோசு 19:22).

3. இது பல நகரங்களின் பெயராகவும் இருக்கிறது. நப்தலி கோத்திரத்திற்குரிய இந்நகரம் இஸ்ராயேலர் குடியேறிய பின்னும் கானானியர்கள் வசம் இருந்தது. இஃது இருந்த இடம் தெரியவில்லை (யோசு 19:38; நீதி 1:33).

4. எகிப்திலுள்ள ஓன் நகரம். இது எரே 43:13-இல் பெத் செமேசு என்று குறிக்கப்படுகிறது.

**பெத்-தகான், பெத்-ஆகான் (BETH - HAGGAN – தோட்ட வீடு)**

யூதா அரசன் அகசியா என்பவர், ஏகூ என்பவரின் பிடியிலிருந்து தப்பிக்க, பெத் தகான் என்ற இந்த நகரை நோக்கித்தான் ஓடினார் (அர 9:27). இந்நகரானது ஏன் கன்னிமோடும் (யோசு 19:21; 21:29), இக்கால எனினோடும் அடையாளம் காட்டப்படுகிறது. இஃது இஸ்ரியேலுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவில் இபிலயாமுக்கு அருகில் இருந்திருக்கலாம்.

**பெத்-தகியா (PETHAHIAH – யாவே திறந்து விடுகிறார்)**

1. இவர் பாபிலோன் நாடு கடத்தலுக்குப் பின் வாழ்ந்த குருகுலத்தின் முன்னோர். தாவீதின் காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். பத்தொன்பதாவது குருக்கள் பிரிவின் தலைவர் (1 நாள் 24:16).

2. இவர் எஸ்ராவின் கட்டளைப்படி அன்னிய மனைவியரை விலக்கிவிட்டவர்களின் ஒரு லேவியர் (எஸ் 10:23).

3. இவர் எஸ்ராவின் காலத்தில் கூடாரத்திருவிழாவின்போது நடந்த உடன்படிக்கைச் சடங்குகளில் பங்குகொண்ட லேவியர் (நெகே 9:5). 2-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

4. நாடு கடத்தலுக்குப்பின் வாழ்ந்த யூதா கோத்திரத்தானும், மெசசபேலின் மகனும், செருபாபேலின் ஆலோசகரும் ஆவார் (நெகே 11:24).

**பெத் தக்கரேம், பெத் - அக்கரேம் (BETH - HACCHERIM - திராட்சைத்தோட்ட வீடு)**

இஃது எரே 6:1-இல் யூதாவின் ஓர் ஊராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நெகே 3:14-இல் இஃது ஒரு மாவட்ட முக்கிய நகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரானது எருசலேமிற்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள ராமெத் ராகெத்து என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. ஒருவேளை இது கரேமாக இருக்கலாம்.

யோயாக்கிம் அரசன் கட்டியதாகக் கருதப்படும் (எரே 22:113-19) கோட்டையையும், அரண்மனையையும் அகழ்வாய்வுகள் வெளிக்கொணர்ந்துள்ளன. மரியாள் பெத்லகேமுக்குச் சென்றபோது இவ்விடத்தில் ஓய்வெடுத்ததாகக் கருதும் பாரம்பரியத்தை நினைவுகூரும் முறையில் இங்கு ஒரு பைசாந்தியர் ஆலயம் உள்ளது.

**பெத் தசிமோத்து, பெத் - எசிமோத்து (BETH - JESHIMOTH – கழிவுப்பொருட்கள் வீடு, பாலை வீடு)**

இஃது இஸ்ராயேல் மக்கள், கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இடத்திற்குத் தென்புறத்தில், மோவாபியருடைய சமவெளிகளில் உள்ள ஒரு நகரம் (எண் 33:49). இஃது ரூபன் கோத்திரத்தாருக்கு உடைமையாகக் கொடுக்கப்பட்டது (யோசு 13:20); பின், மோவாபியர்களின் உடைமையாக இந்நகரம் மாறியது (எசே 25:9). எரிகோவிற்குத் தென்கிழக்கே 19 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள

தெல் ஏல்-அசெயிமேதான் முன்னாளில் பெத்தசிமோத்து என்று அழைக்கப்பட்டிருக்கலாம் (யோசு 12:3).

**பெத் தசுபேயா, பெத் - அசுபேயா (BETH - ASHBEA)**

யூதாவின் மகனான சேலாவின் தலைமையில் நார்ப்பட்டு நெய்தவர்கள் குடும்பங்கள் தங்கியிருந்த இடமாகும் (1 நாள் 4:21). சில வாசகங்களில் இஃது ஓர் ஆளின் பெயராக உள்ளது. காண்க:- அசுபேயா. இப்பெயர் விவிலியத்தில் வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை.

**பெத் தசுமாவேத்து, பெத் - அசுமா வேத்து (BETH - AZMAVETH)**

அசமாவேத்து என்ற இடத்தின் மற்றொரு பெயர் (நெகே 7:28). காண்க. அசுமாவேத்து.

**பெத் தப்புவாகு (BETH - TAPPUAH - ஆப்பிள் வீடு)**

யூதாவின் மலைப்பகுதியில் உள்ள எபிரோன் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நகரம் (யோசு 15:33). எபிரோனுக்கு மேற்கே 7 கி.மீ. தொலைவில் காணப்படும் இன்றைய தப்புவாக இருக்கலாம். இதுவும் தப்புவாகும் ஒன்றன்று.

**பெத் தராபா, பெத் - அராபா (BETH - ARABAH - அராபாவின்வீடு, பாலையின் வீடு)**

இது யூதாவின் வட எல்லையிலுள்ள ஓர் எல்லை முனையாகும் (யோசு 15:6). மேலும், இந்நகரமானது பென்யாமினின் தென் எல்லைப்புறத்தின் முடிவாகும் (யோசு 18:18). இந்நகரானது ஏல்-கெல்டு என்ற காட்டாற்றிற்கு வடபுறத்திலுள்ள எரிகோவிற்குத் தென் கிழக்கிலிருக்கின்ற அயின் ஏல்-கர்பாவோடு அடையாளம் காட்டப்படலாம். பென்யாமினுடைய மாவட்டங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் பெத்தராபா, எரிகோ மாவட்டத்திலும் (யோசு 18:22), பாலைவனப் பகுதியிலும் (யோசு 15:61) உள்ள ஒரு நகர் போலத் தோன்றுகிறது.

**பெத்தர்போல், பெத் - அர்பேல் (BETH - ARBEL - புதர் வீடு)**

இது சல்மானால் அழிக்கப்பட்ட ஒரு நகராகும் (ஓசே 10;14). இந்நகரின் இருப்பிடத்தைப் பற்றி வேறுபட்ட கருத்துகள் அல்லது கணிப்புகள் காணப்பட்டாலும், பொதுவாக முக்கியமான சாலைகள் சந்திக்கின்ற கிலயாது என்ற இடத்திலுள்ள இர்பித்து மலையோடு இவ்விடம் அடையாளம் காட்டப்படுகிறது. புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து- இவ்விடமானது முதலாம், இரண்டாம் இரும்புக் காலத்தைச் (1200-600) சேர்ந்தது என்பது தெரிய வருகின்றது.

**பெத்தனாத்து, பெத் - அனாத்து (BETH - NATH - அனாத்து தேவதையின் வீடு)**

இது நப்தலி கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியிலுள்ள ஒரு நகராகும் (யோசு 19:38). இங்குக் குடியிருந்த மக்கள் விரட்டப்படவில்லை. இவர்கள் கட்டாய ஊழியம் செய்ய இஸ்ராயேலரால் கட்டாயப்படுத்தப்பட்டனர் (நீதி 1:33). இப்பெயர் எகிப்தியப் புதிய அரசின் பல பார்வோன்களின் பட்டியல்களில் காணப்படுகிறது. அகோகவுக்குக் கிழக்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள ஏல்-பனே என்ற இடத்தில் இந்நகர் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

**பெத்தனோத்து, பெத் - அனோத்து (BETH - ANOTH - அனோத்து தேவதையின் புனித இடம் அல்லது வீடு)**

இது பெத்சூர் மாவட்டத்திலுள்ள யூதாவின் ஊர்களில் ஒன்று. இது கல்குல்லுக்குத் தென்கிழக்கே 2 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள கிர்பெத் பெயித் அயினுன் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இஃது எபிரோனுக்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பெத் தாகோன் (BETH - DAGON - தாகோனின் வீடு)**

1. இது யூதாவிலுள்ள இலாக்கிசின் செபேலா

மாவட்டத்திலுள்ள ஓர் ஊராகும் (யோசு 15:41). இஃது இக்காலக் கிர்பெத் தாயூனாக இருக்கலாம்.

2. இது ஆசேர் கோத்திரத்தாருக்கு உடைமையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஓர் எல்லை முனையாகும் (யோசு 19:27). இந்த ஊர் கர்மேல் மலைக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஒருவேளை, இஃது எலமெத் ஏல்-அதிக்காக இருக்கலாம்.

3. இஃது அசோத்து நகரிலிருந்து தாகோன் தெய்வத்தின் ஆலயமாகும். யோனத்தான் மக்கபேயு தாகோன் ஆலயத்தையும், அதில் அடைக்கலமாகியிருந்த மக்களையும் கொளுத்திவிட்டார் (1 மக் 10:83-84).

**பெத்தாராம், பெத் - ஆராம் (BETH-HARAM உச்சி வீடு)**

இது காதுவின் அரண் சூழ்ந்த நகராகும். யோர்தான் பள்ளத்தாக்கோடு சேர்ந்த பகுதியாகிய மோவாபு நாட்டின் சமவெளிகளிலுள்ள பெத்னிம்ராவுக்குத் தென்புறத்தில் எரிகோவுக்கு எதிராக இந்நகரம் உள்ளது (யோசு 13:27). இந்நகரம் காது கோத்திரத்தாரால் படை வலிமைமிக்க நகராகவும், மக்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற நகராகவும் மாற்றப்பட்டது. காட்டாறாகிய வாடி எர்-ரமேசுக்குத் தென்புறத்தில் உள்ள தெல்-இக்தானுதான் 'பெத்தாராம், என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் சமவெளியால் சூழப்பட்ட பகுதியாகும்.

எண் 32:36-இல் இது பெத்தாரான் என்று அழைக்கப்படுகிறது. பெரிய ஏரோது இதை லீவியா என்றழைத்தார். ஏரோது அந்திபா, அகுஸ்துவின் மனைவியின் பெயரால் இந்த நகரத்தை யூலியா என்றழைத்ததாக யோசிப்பசு கூறுகிறார்.

**பெத்தாரான் (BETH - HARAN)**

பெத்தாராமின் மற்றொரு பெயர் (எண் 32:36).

**பெத்தாவன், பெத் - ஆவென் (BETH - AVEN - தீமையின் வீடு)**

'பெத்தாவன்' என்ற சொல்லுக்கு, 'ஒழுக்கக் கேடுகள் நிறைந்த இல்லம்' என்பது பொருள்.

1. இது யோசுவா எரிகோவிலிருந்து ஆட்களையனுப்பிய பெத்தேலுக்குக் கிழக்கிலும், ஆயி நகருக்கு அருகிலுமுள்ள ஒரு நகரமாகும் (யோசு 7:2). பென்யமினுக்குக் குறிக்கப்பட்ட பாலைவனப் பகுதியின் எல்லையோரத்தில் இஃது இருக்கின்றது (யோசு 18:12). 1 சாமு 13:5; 14:23 போன்ற பகுதிகளில் பெத்தேலுக்கும், பெத்தாவனுக்கும் தொடர்பிருப்பதாகக் காட்டப்படவில்லை. ஆனால், சவுலுக்கும் பெலிஸ்தியர்களுக்கும் போர் நடந்த இடமாகிய மிக்மாசிற்கு மேற்கே பெத்தாவன் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நகரின் சரியான இருப்பிடம் தெளிவாக இல்லை. இப்பெயர் ஆயி நகருக்கு வழங்கப்பட்ட பழைய பெயராக இருக்கலாம் என்று அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

2. பெத்தாவன் என்பது சிலைவழிபாடுகள் நிறைந்த இடமாகிய பெத்தேல் நகரை இகழ்ந்துகூறப் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும் (ஓசே 10:5; 4:15; 5:8; ஆமோ 5:5 - ஒன்றுமின்மை).

**பெத் தானியா (BETHANY) - துயரத்தின் வீடு, அனனியாவின் வீடு**

1. பெத்தானியா என்பது ஒலிவ மலையின் கிழக்குச் சாரலில் எருசலேமிற்குக் கிழக்கே 2.5 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊராகும் (யோவா 11:18). பாஸ்காத் திருவிழாவின்போது இயேசுவும், அவருடைய சீடர்களும் பெத்தானியாவைச் சுற்றியுள்ள பகுதியில்தான் தங்கியிருந்தனர் (மத் 21:17; லூக் 21:37; மாற் 11:19). எருசலேம் நகருக்கு, அதன் கிழக்குப் பகுதியிலிருந்து வரவேண்டுமென்றால், ஒலிவ மலைச்சாரலைக் கடந்து பெத்தானியா வழியாக அங்குச் செல்லலாம். இந்த வழியாகத்தான் இயேசுவைக்

குருத்து ஞாயிறு அன்று அரசராக, கோவேறு கழுதையின்மேல் ஏற்றி எருசலேம் நகருக்கு அழைத்துச் சென்றார்கள் (மாற் 11:1-11; மத் 21:1-11; லூக் 19:28-38; யோவா 12:12-16). தொழுநோயாளி சீமோன் (மாற் 14:3; மத் 26:6), மரியாள், மார்த்தா, இலாசர் (யோவா 11:1-44) முதலியவர்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் இங்குதான் நடந்தன. இயேசு இறுதியாக, தம் சீடர்களை விட்டுப் பிரிந்து வானகத்திற்குச் சென்ற நிகழ்ச்சியும் பெத்தானியாவில்தான் நடந்தது (லூக் 24:50-51). பெத்பகு, பெத்தானியா ஆகிய இரு ஊர்களும் ஒன்றுக்கொன்று அருகிலுள்ளன (மாற் 11:1; லூக் 19:29). பழைய ஏற்பாட்டில் பெத்தானியா என்ற இடம் காணப்படவில்லை. ஆனால், நெகே 11:32-இல் குறிக்கப்படும் அனனியா ஊரோடு அடையாளம் காட்டுவர் சிலர்.

இன்று இந்த ஊரானது அங்குத் தங்கி வாழ்கின்ற இஸ்லாமிய சமயத்தவரால் "ஏல் அசிரியே" என்று அழைக்கப்படுகின்றது. இவர்கள் இலாசரை மாபெரும் புனிதராகக் கருதுவதால், இந்நகரையும் அவர் பெயராலேயே அழைக்கின்றனர். இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் இந்தச் சிறிய பகுதியில் ஏராளமான புனித இடங்களைக் குறித்து வைத்திருக்கின்றனர். இலாசருடைய கல்லறை இங்கிருந்ததாக, திருப்பயணி போர்டோ கி.பி. 333-இல் கூறியுள்ளார். மரியாள் இயேசுவைச் சந்தித்த இடத்தில் கி.பி. 383-இல் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டது. இலாசருடைய கல்லறையின் மேலே ஓர் ஆலயமும், சில ஆண்டுகள் கழித்துத் துறவிகள் மடமும் கட்டப்பட்டன. மரியாள் இயேசுவின் பாதத்தை முத்தி செய்த இடத்தினைக் குறித்துக் காட்டும் பொருட்டு ஆலயம் ஒன்று அங்குக் கட்டப்பட்டது. இவ்வாலயம் இலாசரின் கல்லறைக்குக் கிழக்கிலிருந்தது என்று தானியேல் என்ற துறவியர் இல்லத் தலைவர் கூறியுள்ளார். இன்னும் அங்கு நிலத்திற்குக் கீழேயுள்ள அறை ஒன்றை இலாசரின் கல்லறையாக மக்கள் கருதுகின்றனர். மற்றவையெல்லாம் அழிந்து விட்டன.

2. யோவா 1:28-இன்படி திருமுழுக்கு யோவானின் பணிகளனைத்தும் யோர்தானுக்கு அப்பால் உள்ள பெத்தானியாவில் நடந்ததாகத் தோன்றுகிறது (3:26). ஆனால், யோர்தானுக்கு அப்பால் இப்படிப்பட்ட ஓர் இடம் இருந்ததற்குத் தெளிவான அடையாளங்கள் கண்டுகொள்ள இயலவில்லை. மேலே கூறப்பட்ட வாசகத்தினை (யோவா 1:28) அடிப்படையாகக் கொண்டு, வரையப்பட்ட நாட்டுப்படங்களில் பெத்தானியாவானது யோர்தானுக்குக் கிழக்கிலும், சாக்கடலுக்கு வடக்கிலும் இருப்பதாகக் காட்டப்படுகின்றது. மூன்றாம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த ஓரிகன் என்பவர் யோவா 1:28-இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி யோர்தானுக்கு மேற்குப்புறத்தில் சாக்கடலுக்கு 6 கி.மீ. தொலைவில் உள்ள பேத்த பராவாகும் என்றும், பெத்தானியாவானது எருசலேமிற்கு அருகில் மட்டுந்தான் உள்ளது என்றும் கூறுகின்றார். மேலும், கையெழுத்துப் பிரதிகளில் யோவா 1:28 என்ற பகுதியில் இடம் பெறுவது பெத்தானியா என்ற இடமாகும். ஆனால், இந்நகரானது எருசலேமிற்கு அருகிலுள்ள பெத்தானியாவிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம் என்ற கருத்து காணப்படுகின்றது.

சில வரைபடங்கள், "யோவான் சலீம் என்னும் இடத்துக்கருகில் உள்ள ஐனோனில் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனெனில், அங்குத் தண்ணீர் நிறைய இருந்தது" (யோவா 3:23) என்ற வாசகத்தை அடிப்படையாகக்கொண்டு, யோர்தானுக்கு மேற்கே, கலிலேயக் கடலிலிருந்து தெற்கில் 48 கி.மீ. தொலைவில் ஒரு பெத்தானியாவைக் குறிக்கின்றன. இந்தப் பெத்தானியாவை மரியாள் மற்றும் மார்த்தாவின் ஊரிலிருந்து யோவான் வேறுபடுத்துவதால் (யோவா 11:1), திருமுழுக்கு யோவான் யோர்தானுக்குக் கிழக்கில் எரிகோவுக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் திருமுழுக்குக் கொடுத்திருக்கலாம்.

**பெத் திப்லாத்தியம் (BETH - DIBLATHAIM – இரு அத்தி அப்பங்களின் வீடு)**

இது மோவாபு நாட்டிலுள்ள ஒரு நகரமாகும் (எரே 48:22). இதுவும், அல்மோன் - திப்லாத்தயிம் (எண் 33:46) என்பதும் அனேகமாக ஒன்றாக இருக்கலாம். மோவாபு நாட்டின் அரசரான மேசா என்பவர் மெதபா, பெத் – திப்லாத்தயிம், பெத் – பாகால் – மெகோன் போன்ற நகர்களைக் கட்டியெழுப்பியதாகக் கூறுகிறார்.

**பெத் துவேல் (BETH UEL – இறைவனில் வாழ்பவர்)**

1. மில்கா மற்றும் நாகோருக்குப் பிறந்த கடைசி மகன் (ஆதி 22:22). நாகோர் ஆபரகாமின் சகோதரர்; பெத்துவேல், லாபான், ரபேக்கா ஆகியவர்களின் தந்தையுமாவார் (22:23; 24:15.24.47.50). இவர் பதான்-ஆராமைச் சேர்ந்த அரமேயன் என்றழைக்கப்படுகிறார் (25:20; 28:2.5).

2. ஓர்மாவுக்கு அருகில் உள்ள சிமியோனுடைய நகர் (1 நாள் 4:30). இதற்கு இணையான பட்டியலில் (யோசு 19:4) இது பெத்தூல் என்றழைக்கப்படுகிறது. 1 சாமு 30:27-இல் பெத்தேலில் இருந்தவர்களுக்குத் தாவீது பரிசுகளை அனுப்பிவைத்தார் என்று வருகிறது. யூதாவின் நகர்களின் பெயர்ப் பட்டியல்களில் எதிலும் இப்பெயர் இடம் பெறாததால் பெத்துவேல்தான் தவறாகப் பெத்தேல் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்பது உறுதி. இதன் சரியான இடம் அறியப்படாவிட்டாலும் பெயேர் செபாவுக்கு மிகவும் தொலைவில் இருக்க வாய்ப்பில்லை; அதன் அருகிலேதான் இருந்திருக்க வேண்டும். இது பெயேர்செபாவுக்கு வடமேற்கில் உள்ள இக்காலக் கிர்பெத் ஏல்-கரியத்தெயின் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்துவேல் (PETHUEL – கடவுள் திறக்கிறார்)**

இவர் யோவேல் இறைவாக்கினரின் தந்தை ஆவார் (யோவே 1:1)

**பெத்தூலியா (BETHULIAH)**

இது யூதித்து நூலில் அடிக்கடிக் கூறப்படும் சமாரியாவில் உள்ள ஒரு நகரம். கதையின் நாயகியாகிய யூதித்தின் ஊரும் இதுவே. இப்படிப் பெயர் கொண்ட நகரம் இன்னும் அறியப்படவில்லை. யூதித்து நூலில் தரப்பட்டுள்ள விளக்கங்கள் அதிகம் இருப்பினும், சரியான இடத்தை அடையாளம் காட்டுவது கடினமாயுள்ளது.

இந்த நகரம் தோத்தான் சமவெளிக்கு அருகில், எசுதிரலோனுக்கு எதிராக (யூதி 4:6) போர் முக்கியத்துவம் வாய்ந்த குன்றின் உச்சியில் அமைந்திருந்தது (10:10). மலைகளால் சூழப்பட்டு (6:10-12), அருகில் ஒரு நீரூற்றையும் கொண்டிருந்தது (6:11). எருசலேம் மற்றும் அதன் ஆலயம் ஆகியவற்றின் பாதுகாப்புக்குப் பெத்தூலியாவின் கோட்டை முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது (8:21.24). நெபுகத்னேசரின் அசீரியத் தளபதி ஒலபெரினே நகரை முற்றுகையிட்டபோது (7:1தொ), யூதித்து, விருந்துக்கு வருமாறு தனக்குக் கிடைத்த அழைப்பைப் பயன்படுத்தி அவனைக் கொன்றாள் (13:1-10). இச்செயலால், அசீரியர்களை வெல்லுமாறு யூதர்களைத் தூண்டினாள் (15:3.6).

இப்பெயர் "கடவுளின் வீடு" என்னும் பொருள்பட அழைக்கப்பட்டிருக்கலாம். காரணம், அவ்வூராரும் யூதித்தும் கடவுளை விசுவசித்தவர்கள்; கடவுளின் பலத்தில் நம்பிக்கை வைத்து அவுக்குச் சலியாது தொண்டு செய்தால் எவ்வளவு வல்லமை வாய்ந்த உலக ஆற்றல்களை மேலும் வெற்றி கொள்ளலாம் என்பதை நிரூபித்தவர்கள். இது செக்கேமாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

**பெத்தேக்கது, பெத்-ஏக்கது (BETH - EKED) மயிர் கத்தரிக்கும் வீடு)**

இஃது இஸ்ரியேலிலிருந்து சமாரியாவிற்குச் செல்லும் சாலையில் உள்ள ஓர் இடம். இவ்விடத்திலுள்ள இடையர்களின் குடிசை ஒன்றில் ஏகூ என்பவன் யூதாவின் அரசரான அகசியாவின்

சகோதரர்கள் இருப்பதைக் கண்டான். உடனே அவன் அவர்களைக் குடிசையின் அருகிலிருந்த ஒரு குழியில் வெட்டிக்கொன்றான் (2 அர 10:12.14). இந்த இடமானது எனினின் வடபுறத்தில் 5 கி.மீ. தொலைவிலுள்ள பெயித்-கத்தாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்தேட்செல், பெத் - ஏட்செல் (BETH - EZEL - மேலோரின் வீடு அல்லது புனித இடம்)**

இது தென்புற யூதாவின் தென்பகுதியில் உள்ள ஒரு நகராகும். மீக்காவின் சொல்லாடலில் இந்நகரினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (மீக் 1:11). தேபிருக்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவிலும் எபிரோனுக்குத் தென்மேற்கில் 16 கி.மீ. தொலைவிலும் தற்போதுள்ள தெயிர் ஏல் - அசால் என்ற இடமாக அடையாளம் காட்டப்படும்.

**பெத்தேதன், பெத் - ஏதன் (BETH - EDEN - ஏதனின் வீடு)**

இது யூப்பிரத்தீசு, பாலிக் ஆகிய இரண்டு ஆறுகளுக்குமிடையிலுள்ள ஒரு தனி உரிமையுடைய அரமேய நகர அரசாகும். அசீரிய நாட்டுக் குறிப்புக்களில் இந்நகரானது பித்-அதினியோடு ஒன்றுபடுத்தப்படுகிறது. ஆமோ 1:5-இல் இந்நகர மக்கள் கீருக்கு நாடு கடத்தப்படுவர் என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஏதனின் மக்கள்' அசீரியாவால் பிடிக்கப்படுவர் என்று 2 அர 19:12; எசா 37:12-இலும் உரைக்கப்பட்டுள்ளது. எசேக்கியேல் ஆகமத்தில் (27:23) தீர் நாட்டோடு வியாபாரம் செய்து வரும் நகரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் 'ஏதன்' என்பது மட்டும் இந்நகரின் பெயராக இடம் பெற்றுள்ளது.

**பெத்தேமக்கு, பெத் - ஏமக்கு (BETH - EMEK - பள்ளத்தாக்கின் வீடு)**

இஃது ஆசேர் கோத்திரத்தாருக்கு உடைமையாகத் தரப்பட்ட பகுதியின் எல்லையோரத்தில் அமைந்த ஊராகும் (யோசு 19:27). அக்கோவிற்குக் கிழக்கு, வடகிழக்கில் 10 கி.மீ. தூரத்திலுள்ள தெல் மிமாசாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்தேர் (BETHER - மலைவீடு)**

இது யூதாவின் பெத்லகேம் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:59). இந்நகரைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சிகளின்படி தொடக்க இரும்புக்காலத்திலிருந்து, உரோமையர்களின் ஆட்சிக்காலம் வரை மக்கள் தொடர்ந்து இந்நகரில் தங்கி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

இந்நகரமானது பார்-கெச்சேபாவின் தலைநகரம் என்பது அனைவராலும் அறியப்பட்ட ஒன்று. பெத்தேர்- எளிதில் பாதுகாக்கப்பட்ட அல்லது காவல் செய்யப்பட்ட குன்றின்மேல் உள்ள நகரமாகும். யூதர்களுடைய நகரமாகிய பெத்தேர் கி.பி. 135-இல் வீழ்த்தப்பட்டது. பலர் படுகொலை செய்யப்பட்ட பின்புதான், இந்நகரம் வீழ்த்தப்பட்டது. கொலை செய்யப்படாதவர்கள் அனைவரும் வெற்றி வாகை சூடிய உரோமையரால் அடிமையாக விற்கப்பட்டனர் என்று எரோனிமு கூறுகின்றார்.

**பெத்தேல் (BETHEL - இறைவனது வீடு) தெய்வம்**

பெத்தேல் என்பது மேற்குச் செமித்தியத் தெய்வமாகும். தொடக்கநிலையில் இச்சொல் தெய்வமாக்கப்பட்ட ஏலின் கோயிலைக் குறித்தது. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அசீரியா நாட்டு ஏசர்கத்தோனுக்கும், தீர் நாட்டுப் பாகாலுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டபொழுது இது குறிக்கப்படுகிறது. நெபுகத்னேசர் காலம் தொடங்கி இரண்டாம் தாரியு ஆட்சிக்காலம் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் பாபிலோனிய ஏடுகளில் ஆட்கள் பெயரின் ஒரு கூறாகக் காணப்படுகிறது. சான்றாக பித்-இலி-தலா, பித்-இலி-செசிபு, பித்-இலி-சேர் முதலிய பெயர்களில் ஒரு பகுதியாக, பெத்தேல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எலிபாண்டையின் யூதர்களில் சிலர், பெத்தேல்-நாதன், பெத்தேல்-தூரி, பேத்தேல்-ஆகாபு முதலிய பெயர்களைக் கொண்டிருந்திருக்கின்றனர். மேலும், எலி பாண்டைன் என்ற இடத்தில் எசேம்- பெத்தேல்,

கெரேம்-பெத்தேல், அனத்-பெத்தேல் போன்ற தெய்வங்கள் வழக்கிலிருந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இராஸ்-சம்ராவில் தெய்வங்கள் பற்றிய பட்டியலில், பெத்தேலைப் பற்றி இரண்டு முறை கூறப்பட்டுள்ளது. பீலே பிப்லியுவின் பெனிசிய மொழியில் எழுதப்பட்ட தெய்வமரபுக் காவியத்தில் பெய்திலோஸ் என்பது உரானோஸ் (வானம்), கே (பூமி) ஆகிய இருவரின் குழந்தையாகும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெனிசியாவில் இந்தத் தெய்வம் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் எரே 48:130-இல் "பெத்தல்" என்ற புனிதப்பெயர் காணப்படுகின்றது. ஆதி 31:13; ஆமோ 5:5 போன்ற பகுதிகளில் இந்தத் தெய்வத்தைப் பற்றிக் கூறப்படுவதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். செக் 7:2-இல் இடம் பெறும் 'பெத்தேல் - சாராசார்' என்பது ஒரு தனி ஆளின் பெயராக இருக்கலாம்.

**பெத்தேல் (BETHEL** - இறைவனது வீடு) - இடம்

1. இஃது ஒரு நகரம். இன்றைய பெய்டின் என்ற ஊரின் அருகே உள்ள இவ்விடம் எருசலேமுக்கு வடக்கே 22 கி.மீ. தொலைவில் உள்ளது. குலமுதியவர்களுடன் பல வகைகளின் தொடர்புடையது இந்நகரம். இதன் முந்தையப் பெயர் -லூசு ஆகும். ஆபிரகாம், பெத்தேலில் ஒரு பலி பீடத்தைக் கட்டி எழுப்பினார் (ஆதி 12:8; 13:3). யாக்கோபுடன் இந்த இடம் கொண்டிருக்கும் தொடர்பு முதன்மை உடையது. ஆபிரகாமும் இதனுடன் தொடர்புடைய தாகக் காட்ட முயன்றது இரண்டாம் பட்சமே.

பெத்தேலில் ஆண்டவர் யாக்கோபுக்குக் காட்சி தந்ததாகவும், அதன் நினைவாக ஒரு கல்லை நினைவுத் தூணாக நாட்டினார் என்பதும் ஒரு வழிபாட்டு மரபுக்கதை ஆகும் (ஆதி 28:10-22); இதுதான் அங்கு ஒரு வழிபாட்டு மையம் தோன்றிய விதத்திற்கான கதை ஆகும். இஃது எலோகிம் மரபினின்று முதலில் தோன்றினாலும் ஆதியாகமக் கதை யாவே மற்றும் எலோகிம் பாரம்பரியங்களின் இணைப்பாகும். ஆனால், இது பலர் அறிந்த ஒரு விளக்கமே யொழிய, உண்மையான மரபு என்று கூறமுடியாது. ஆதி 35:1-8-இல் யாக்கோபு இவ்விடத்தில் பீடம் எழுப்பித் தம்குலத்தை ஆண்டவரிடம் ஒப்படைப்பதாகக் கூறப்படுவது பின்னைய இஸ்ராயேல் வழிபாட்டு நிகழ்ச்சிகளை முன்வைத்துக் கூறுவதாகும். ஆதி 35:9-13 குருக்கள் பாரம்பரியத்தின் பெத்தேல் இறைக்காட்சியைப் பற்றி விவரிக்கிறது. இக்கதைகளெல்லாம் பின்னர்த் தோன்றியவையாயினும் பெத்தேலின் பழமையையும் அவ்வழிபாட்டு இடத்தின் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கின்றன. ஏனெனில், இஃது ஒன்றுதான் இஸ்ராயேலின் வழிபாடு தொடர்பான முதன்மையான இடமாக அன்று இருந்தது.

'ஆயி' கைப்பற்றப்பட்டபோது பெத்தேலும் அதனுடன் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது (யோசு 7:2; 8:9.12.17). வெற்றி கொள்ளப்பட்ட அரசர்களின் பட்டியலில் பெத்தேலும் குறிப்பிடப்படுகிறது (யோசு 12:16). நீதி 1:22-25 பெத்தேலை யோசேப்பின் குலத்தவர் வென்றதாகக் கூறுகிறது. இங்கு லூசு என்ற பெயர் பெத்தேலாக மாற்றம் பெறுவது இவ்வெற்றியோடு தொடர்பு படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கோத்திரமாகப் பிரிக்கப்பட்டபோது எப்பிராயிம், பென்யமின் இனத்தவரின் எல்லையில் பென்யமின் பகுதியில் பெத்தேல் இருந்தது (யோசு 16:1தொ; 18:13.22). 1 நாள் 6:28-இல் இஃது எப்பிராயிம் இனத்திற்குரியதாகிறது. நீதி 20:18.26; 21:2-இல் பெத்தேல் எல்லா இஸ்ராயேலரும் வந்து கூடுமிடமாகிறது. இது பெத்தேலின் வழிபாட்டு முக்கியத்துவத்தைக் காண்பிப்பதாகிறது. சாமுவேல் நீதி வழங்கிய இடங்களில் இதுவும் ஒன்றாகும். எரொபவாம் பெத்தேலில் புதிதாக ஒரு வழிபாட்டுப் பீடத்தை

எழுப்பவில்லை; பழையதைப் புதுப்பித்தார் (1 அர 12:29-33). யூதாவின் அபியா, இஸ்ராயேலிலிருந்து பெத்தலைக் கைப்பற்றினார் (2 நாள் 13:19).

இறைவாக்கினர் பணியிமன் மையமாகவும் பெத்தேல் விளங்கியது. இறைவாக்கினர்கள் பெத்தேலைப் பற்றிக் கூறும் சிறு நிகழ்ச்சிகளிலிருந்தும் (1 அர 13), இறைவாக்கினரின் புதல்வர்கள் பெத்தேலில் இருந்தனர் என்பதிலிருந்தும் இது புலப்படுகிறது (2 அர 2:2). எலிசாவுக்கும் பெத்தேலுக்கும் மிகுந்த தொடர்பு இருந்திருக்கிறது (2 அர 2:23). ஏகூ என்பவரால் இங்குள்ள வழிபாட்டிடம் கவனித்துக் கொள்ளப்பட்டது (2 அர 10:29). ஓசேயா, ஆமோஸ் ஆகியோரால் மிகவும் வெறுத்துக் கண்டிக்கப்பட்ட இடம்- பெத்தேல் (ஓசே 4:15; 5:8; 10:5; ஆமோ 3:14; 4:4; 5:5); அங்கிருந்த கன்றுக்குட்டியின் சிலையையும் வெறுத்தனர். இங்குள்ள வழிபாடு மூடநம்பிக்கை நிறைந்ததாகிப் போனதால் ஓசேயா இதனைத் 'தீமையின் வீடு" (பெத்தாவன்) என்கிறார் (4:15; 5:8; 10:5). இந்த இழிவான பட்டம் மற்ற வரலாற்று நூல்களிலும் புகுந்தது (யோசு 7:2; 18:12; 1 சாமு 13:5; 14:23). குரு அமட்சியா, ஆமோசைப் பெத்தேலிலிருந்து விரட்டும்வரை இவர் அங்குதான் பெத்தேலைக் கண்டித்து இறைவாக்கு உரைத்தார் (ஆமோ 7:10தொ). அசீரியர்களின் வெற்றிக்குப் பிறகு அங்கு வந்து தங்கியவர்கட்கு யாவேயின் வழிபாட்டைப் போதிக்க, குரு ஒருவர் வந்து தங்கினார் (2 அர 17:28). யோசியாவின் சீர்திருத்தத்தின்போது பெத்தேலின் வழிபாட்டிடம் அழிக்கப்பட்டது (2 அர 23:15). ஆனால், எரே 48:13-இல்கூட ,அது பற்றிப் பேசுமளவுக்கு அங்குத் தீமைகள் நடந்துள்ளன.

பாபிலோனிலிருந்து திரும்பியவர்களுள் பெத்தேலைச் சேர்ந்தவர்களும் இருந்தனர் (எஸ் 2:28; நெகே 7:32). நாடு கடத்தலுக்குப்பின் அவர்கள் குடியேறிய நகரங்களுள்- பெத்தேலும் ஒன்று (நெகே 11:31; செக் 7:2). இந்நகர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பாபிலோனியப் படையெடுப்பில் தீயினால் அழிக்கப்பட்டுப் பின்னர் பாரசீக, கிரேக்கர் ஆட்சிக்காலத்தில் மீண்டும் மக்கள் வாழுமிடமாகியது.

வெண்கலக்காலத்தில் மக்கள் இங்குக் குடியிருந்திருக்கின்றனர் என்று அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. மிகப்பெரிய பருமனான கட்டடங்களும், கோட்டைச்சுவர்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. நகரம் பெரியதாகவும் செழிப்புடையதாகவும் இருந்திருக்கிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் நகரம் எரியூட்டப்பட்டு முழுவதும் அழிக்கப்பட்டிருக்கிறது. இஃது இஸ்ராயேலரின் வெற்றியின் விளைவாகக் கருதப்படுகிறது. இரும்புக்காலத்தின் தொடக்கத்தில் இந்நகரம் மீண்டும் கட்டப்பட்டு, குடியேறப்பட்டது. இக்கண்டெடுப்புகள் இலக்கிய மூலங்களோடு ஒத்துப்போகின்றன.

2. சிமியோன் இனத்துக்கு உரிமையான ஒரு நகரம். இது 1 சாமு 30:27-இல் பெத்தேல் என்றும், யோசு 19:4 இல் பெத்துவேல் என்றும், 1 நாள் 4:30-இல் பெத்தூல் என்றும் அழைக்கப்படுகிறது. இஃது இருந்த இடம் அடையாளம் காட்டமுடியவில்லை.

**பெத்தொகர்மா (BETH - TOGARMAH - தோகர்மாவின் வீடு)**

இது பாலஸ்தீனத்தின் வட பகுதியாகும். இங்குத் தோகர்மாவின் வழித்தோன்றல்கள் வாழ்ந்தனர் (எசே 27:14; 38:6). இத்திய மூலங்கள் சிறிய ஆசியாவில் ஒரு தோகர்மாவைக் குறிக்கின்றன. இதுவும் கர்க்கமிசுக்கு வடகிழக்கில் 200 கி.மீ. தொலைவிலுள்ள குருன் என்ற இடமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். காண்க:- தோகர்மா.

**பெத்தொகிலா, பெத் - ஒகிலா (BETH - HAGLAH - கவுதாரி வீடு)**

இது பென்யமினுக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகர் எரிகோவிற்குச் சிறிது மேற்கே, பென்யமினுடைய தென்புற எல்லையோரத்தில் இருக்கிறது (யோசு

15:6; 18:19). திருச்சபைத் தந்தையர்கள் செய்த பிழையால் யாக்கோபை நினைத்து மக்கள் அழுது புலம்புகின்ற இடமாகிய ஆத்தாதுவின் சூட்டிப்புக் களமாக (ஆதி 50:10), பெத்தொகிலா அடையாளம் காட்டப்பட்டது. இதையே மெதேபா வரைபடம் பின்பற்றுகிறது. ஒருவேளை, இஃது இக்கால அயின் அய்லா இருக்கும் இடத்தில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**பெத்தோமசுத்தாயிம் (BETOMASTHAIM - எதிரியின் வீடு, சாத்தானின் வீடு)**

யூதி 4:6; 15:4 ஆகிய இவ்விரண்டு பகுதிகளிலும் குறிப்பிடப்படும் இடம்; பழைய ஏற்பாட்டு நூல்களில் அறியப்பட முடியாத இடம். எங்கேயும் இவைகள் இடம் பெறவில்லை. சமாரியாவைக் குறிக்கும் அவதூறான பெயராக இருக்கலாம். ஆனால், இவ்விடத்து மக்கள் யூதர்களோடு சேர்ந்து, தப்பியோடிப் புறவினத்தினரைத் துரத்த உதவியவர்கள் எனத் தெரியவருகிறது.

**பெத்தோர் (PETHOR)**

இது யூப்பிரத்தீசு நதியின் அருகிலிருந்த பிலயாமின் இருப்பிடமாகும் (எண் 22:5; உப 23:5). இது கிழக்கிலுள்ள மலைகளில் ஆராமில் இருந்தது. அசீரிய மன்னன் மூன்றாம் சல்மனேசரின் குறிப்புகளில் கூறப்படும் பித்ரு என்ற இடமும், பெத்தோரும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கர்ககமிசுக்குத் தெற்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ள தெல் ஏல்-அக்மார் என்பது பெத்தோர் இருந்த இடமாக இருக்கலாம்.

**பெத் பகு (BETH - PHAGE – அத்தியின் வீடு)**

இஃது எருசலேமிற்கும், பெத்தானியாவிற்கும் அருகிலுள்ள ஓர் ஊராகும். அனேகமாக இவ்வூர் பெத்தானியாவிற்குக் கிழக்கே இருக்கலாம். குருத்து ஞாயிறு அன்று இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்ததாக நற்செய்தியில் காட்டப்படும் நிகழ்ச்சியில் பெத்பகு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (மாற் 11:1; மத் 21:1; லூக் 19:29). மாற்கும் லூக்காவும் பெத்பகு, பெத்தானியா என்ற வரிசையில் கூறுகின்றனர். இஃது இயேசு கிழக்கிலிருந்து எருசலேமுக்குச் சென்றார் என்று சுட்டுகிறது.

இன்று 'பெத்பகு' என்ற ஊரானது ஒலிவ மலைச்சரிவிற்குத் தென்கிழக்கிலும், பெத்தானியாவிற்குத் தென்கிழக்கிலுமுள்ள இஸ்லாமியர்களின் ஊராகிய அபுதிஸ் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. இயேசு இவ்வூருக்கு அருகில் வந்தபொழுதுதான், ஒலிவ மலையைக் கடந்து செல்வதற்காக ஒரு கழுதைக் குட்டியை அருகிலிருந்த ஊரிலிருந்து பிடித்து வருமாறு தனது சீடர்களை அனுப்பினார் என்று நற்செய்திகளில் கூறப்படுகிறது.

மத்தியகாலத் திருப்பயணிகள் பெத்பகு என்ற ஊரானது பெத்தானியாவிற்கும், ஒலிவ மலை உச்சிக்கும் இடையில் இருந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், இதற்கு ஆதாரங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இவ்வூரானது மலையிடுக்குகளுக்குள் உள்ள நகரமாகும் என்றும் இங்குதான் குருக்கள் தங்கியிருந்தனர் என்றும் ஓரிசன் என்பவர் கூறுகிறார்.

**பெத்பசேசு (BETH - PAZZEZ – சிதறலின் வீடு)**

இஃது இசக்காருக்குக் குறிக்கப்பட்ட பகுதியின் எல்லையோரத்தில் உள்ள ஒரு நகரமாகும் (யோசு 19:2). இந்நகரம் எங்கதாவுக்கும், தாபோர் மலைக்கும் அருகில் இருந்தது. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், கெர்ம் ஏல்-கதித்தே என்று அடையாளம் காட்டப்படும்.

**பெத் பரா (BETH - BARAH – கடவுத்துறையின் வீடு)**

இது யோர்தான் பள்ளத்தாக்கிற்கு அருகிலுள்ள நகரமாகும். இந்நகரானது கிதியோன் என்பவரின் தலைமையில் சென்ற எப்பிராயிமியர்களால் மிதியானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டது (நீதி 7:24). யோர்தான் பள்ளத்தாக்கிற்கும் எசுதிரலோன் சமவெளிக்கும் இடையில், யோர் தான் நதிக்கு மேற்கே உள்ள இடமே இந்நகரின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது. 'பெத்பரா' என்ற இந்நகருக்கும், யோவா 1:28-இல் இடம்

பெறுகின்ற பெத்தராபாவிற்கும், அதாவது, யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள பெத்தானியாவிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

**பெத்-பாகால் மெகோன் (BETH - BAAL - MEON** – பாகால் மெகோனின் வீடு)

இஃது ரூபன் கோத்திரத்தாருக்கு உடைமையாகத் தரப்பட்ட ஒரு நகரமாகும். இந்நகர் மோவாபிற்கு வடபுறத்தில் உள்ளது (யோசு 13:17). பொதுவாக, பாகால்-மெகோன் என்றழைக்கப்படுகிறது.

**பெத் பாசி (BETHBASI** – பாசியின் வீடு, சதுப்புநில வீடு)

இஃது எருசலேமிற்குத் தென்கிழக்கில் உள்ள நகரமாகும். பாக்கீதுவினால் இடிக்கப்பட்ட இந்நகரானது யோனத்தானாலும், சீமோனாலும் அரண் சூழக் கட்டி எழுப்பப்பட்டது (1 மக் 9:62.64). யூதேயா பாலை வனத்தில் தற்போதுள்ள கிர்பெத் பெயித்பாசா என்ற நகர்தான் முன்பு பெத்பாசி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இது தெக்கோவாவுக்குத் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பெத் பிரீ (BETH - BIRI** – படைப்பவரின் வீடு)

இது யூதாவிற்குத் தெற்கில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகர் சிமியோனுக்கு உடைமையாகத் தரப்பட்ட நகரங்களில் ஒன்று (1 நாள் 4:31). பெத்லபவோத்தும் (யோசு 19:6) பெத்பிரீயும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இது பெயேர்-செபாவுக்குத் தென்மேற்கில் 32 கி.மீ. தொலைவிலுள்ள எபேல் ஏல்-பிரீ என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெத்பெயோர் (BETH - PEOR** – பெயோரின் வீடு, திறப்பு வீடு)

இஃது ரூபன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்ட மோவாபின் நகரமாகும் (யோசு 13:20). இஸ்ராயேல் மக்கள் பெத்தெயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே தங்கியிருந்தனர் (உப 3:29; 4:46). அபாரிம் மலைகளிலே *சீகோன்*, ஓகு ஆகியவர்களோடு இஸ்ராயேல் மக்கள் போரிட்டபொழுது மேற்கூறப்பட்ட இடத்தில்தான் தங்கியிருக்க வேண்டும் (காண். எண் 21:20; 33:47-49). நெபோ மலையிலிருந்து எல்லாப் பகுதிகளையும் பார்த்த பின்பு இறந்த மோசே பெத்பெயோருக்கு எதிராக உள்ள மோவாபின் பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார் (உப 34:6). பெத்பெயோர் என்ற இவ்விடம் எஸ்போனுக்குப் போகின்ற வழியில் இருக்கிற லீவியாவிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ளது என்று யுசேபியு கூறுகிறார். நெபோ மலைக்கு வடமேற்கே 5 அல்லது 6 கி.மீ. தொலைவில் இவ்விடம் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இதைக் கிர்பெத் எஸ்-செயிக்கு எயேல் ஆக சிலர் அடையாளம் காட்டுவர்.

**பெத் பெலேத்து (BETH - PELET** – அடைக்கல வீடு)

இது தென்கோடியில் இருக்கும் ஏதோமின் எல்லை ஓரமாக யூதா புதல்வரின் கோத்திரத்தாருக்குக் கிடைத்த நகர்களில் ஒன்று. இந்நகர் பெயேர்-செபாவிற்கு அருகிலுள்ளது (யோசு 15:27). பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபின் யூதேயர்களால் கட்டப்பட்ட நகரங்களில் இதுவும் ஒன்று (நெகே 11:26). காசாவிற்குத் தென்புறத்தில் 29 கி.மீ. தொலைவிலுள்ள தெல் ஏல்-பாராதான் இந்நகர் இருந்த இடம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், இது தெல் எஸ்-சாக்காத்தியாக அடையாளம் காட்டப்படலாம்.

**பெத் - மாக்கா (BETH - MAACAH** – மாக்காவின் வீடு)

பெத்மாக்கா என்பது ஒரு கோத்திரத்தின், ஓர் அரச குலத்தின் அல்லது ஓர் ஆட்சிப்பகுதியின் பெயராகும் (2 சாமு 20:14-15). பின், பெத்மாக்கா என்பது ஆபல் என்ற பெயருடைய நகரின் ஒரு பகுதியாக மாறியது.

**பெத் மர்க்காபோத்து (BETH - MARCABOTH - தேர்களின் வீடு)**

இது சிமியோனுக்குத் திருவுளச் சீட்டின் மூலம் கிடைத்த நகரங்களில் ஒன்று. இந்நகரம் சிக்லாகுவுக்கு அருகில் இருக்கின்றது (யோசு 19:5; 1 நாள் 4:31). இந்நகரில் தேர்கள் செய்யப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டன (1 அர 9:19; 10:29). இந்நகரின் பழைய பெயர் மத்மன்னாவாக இருக்கலாம். இது தெல் அபு குரேய்ராவாக அடையாளம் காட்டப்படலாம்.

**பெத் மில்லோ (BETH - MILLO நிரப்புதலின் வீடு)**

இது செக்கேம் மாநகரத்திலுள்ள ஒரு பகுதியாகும் (நீதி 9:6.20).

**பெத் மெகோன் (BETH - MEON - குடியிருப்பு வீடு)**

இது மோவாபியருடைய மேட்டு நிலங்களில் உள்ள ஒரு நகரமாகும் (எரே 48:23). பொதுவாக, இவ்வூர் "பாகால்-மெகோன்" என்றழைக்கப் படுகிறது.

**பெத் ராகோபு (BETH - REHOB - மூச்சின் வீடு)**

இது கானான் நாட்டின் வடபுற எல்லைப் பகுதியின் முடிவில் இருக்கின்ற ஒரு நகரமாகும் (எண் 13:21). இந்நகரம் இலாயிசுக்கு அருகில் உள்ளது. நீதி 18:28-இன்படி தாணுக்கு அருகில் உள்ளது. தாவீதின் ஆட்சிக்காலத்தில், அம்மோனியருக்கு ஆதரவாக, தங்களது படைகளையனுப்பிய அரமேயர்களின் படைவலிமை மிக்க நகர்களில் பெத்ரகோபுவும் ஒன்றாகும் (2 சாமு 10:6). இந்நகரின் சரியான இருப்பிடம் தெரியவில்லை. இது மூன்றாம் துட்மோசின் பட்டியலில் குறிக்கப்படும் இரகோபுவாக இருக்கலாம். அறிஞர் சிலர் இதைக் கேராவுக்குக் கிழக்கில் 27 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ரிகாபுவாக அடையாளம் காட்டுவர்.

**பெத்ரா (PETRA - பாறை)**

இது நபத்தேயர்களின் புகழ்பெற்ற தலை நகரமாகும். இது மேற்கு ஏதோமில் அக்காபாவுக்குச் சுமார் 96 கி.மீ. வடக்கிலும், சாக்கடலுக்குத் தெற்கில் 75 கி.மீ. தொலைவிலும் இருந்தது.

சிக் என்ற ஒரு குறுகிய மலையருவி ஓடும் பள்ளத்தாக்கு வழியாகச் சென்றால் சுமார் 1000 ச.அடி பரப்பளவுள்ள இச்சமவெளியை அடையலாம். இது பல்வண்ணச் செங்குத்தான பாறைகளால் சூழப்பட்டது. இங்கு இடிந்த கோயில்களும், வீடுகளும், ஓர் உரோமைப் பேராலயமும், பாறையில் குடையப்பட்ட குகைகளும் உள்ளன. பெத்ரா, விவிலியத்தில் குறிப்பிடப்படவில்லை. முதன் முதலில் இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டு உரோமையர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. ஆனால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் முகமதியர்கள் காலத்தில் அழிக்கப்பட்டது.

இதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள செலாவாகவும் (நீதி 11:36; 2 அர 14:7; எசா 16:1; 42:11), இரக்கேமாகவும் (எண் 31:8) அடையாளம் காண முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், பெத்ரா, காலத்தால் மிகப் பிந்தியதாகும்.

**பெத் ராபா (BETH - RAPHA - ராபாவின் வீடு, அரக்கனின் வீடு)**

இவர் யூதாவின் தலைமுறை அட்டவணையில் எஸ்தோனின் புதல்வராகக் குறிப்பிடப்பட்டிருக் கின்றார் (1 நாள் 4:12). இப்பெயர் யூதாவிலுள்ள இடத்தின் பெயரா அல்லது குலத்தின் பெயரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

**பெத்லகேம் (BETHLEHEM - அப்பம் அல்லது உணவு கிடைக்கும் வீடு, சண்டை நடக்குமிடம், லகுமின் வீடு)**

1. இது யூதாவிலுள்ள ஒரு நகரம். தாவீதின் உறைவிடமும், இயேசுவின் பிறப்பிடமும் ஆகும். சில சமயங்களில் "பெத்லகேம் யூதா" என்று குறிப்பிடப்படுகின்றது (நீதி 17:7-9; 19:1-2.18; ரூத் 1:1-2; 1 சாமு 7:12). செபுலோன் பகுதியில் இதே பெயரைக் கொண்ட நகரம் இருப்பதால், இதிலிருந்து வேறுபடுத்திக் காட்ட ,பெத்லகேம் யூதா

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நகர் எருசலேமை எபிரோன், நெகேபு முதலிய நகர்களோடு இணைக்கின்ற தென்வடல் சாலைக்கருகில், எருசலேமிற்குத் தெற்கு, தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது.

கி.மு. பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்னாவின் கடிதங்களில் ஒன்றில் முதன் முதலில் 'பெத்லகேம்' பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதி 35:19; 40:7-இல் பெத்லகேம் நகரானது, ராகேலை அடக்கம் செய்த இடமாகிய எப்ராத்தாவோடு ஒப்புமைப்படுத்தப் படுகிறது. இந்தக் கணிப்பு பெத்லகேம் நகரில் எப்ராத்தா குலத்தவர்கள் வந்து குடியேறிய பின்புதான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், ராகேலை அடக்கம் செய்த நகராகிய எப்ராத்தா வடபெத்லகேம் நகருக்கு அப்பால் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நகரானது மீக்காவின் குருவாகிய லேவியர் ஒருவரின் உறைவிடமாகும் (நீதி 17:7-9; 19:1தொ). இதுவே ரூத் நூலின் பின்னணியாகும் (ரூத் 1:1-2.19.24; 2:4; 4:11). இது தாவீது குடும்பத்தாரின் உறைவிடமுமாகும் (1 சாமு 16:4தொ; 17:12.15; 20:6.28). இந்நகரில்தான் தாவீது சாமுவேலால் அபிடேகம் பண்ணப்பட்டார் (1 சாமு 16:1-13). இவ்விடத்தில்தான் பெலிஸ்தியர்களின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன (2 சாமு 23:14-16; 1 நாள் 11:16-18). இந்நகர் எல்கானான் உறைவிடமாகும் (2 சாமு 23:24; 1 நாள் 11:26). அசாவேல் இங்குதான் புதைக்கப்பட்டார் (2 சாமு 2:32).

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்நகரானது ரெகபயாமால் அரண்சூழக் கட்டப்பட்டது (2 நாள் 11:6). ஆளுநர் கெதல்யா கொலை செய்யப்பட்டதால், இஸ்ராயேல் மக்கள் எகிப்திற்குச் செல்லும் வழியில் கல்தேயருக்கு அஞ்சி, பெத்லேகம் என்ற ஊருக்கு அருகில் தங்கிவிட்டனர் (எரே 41:17). பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில், நூறுபேருக்கு மேல் பெத்லகேம் நகரினைச் சேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எஸ் 2:21; நெகே 7:26). மீக் 5:2-இல், இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப் போகிறமெசியா பெத்லகேம் நகரில் தோன்றுவார் என்று கூறப்பட்டிருக்கிறது.

பெத்லகேம் இயேசு பிறந்த இடமாகும் (மத் 2:1-16; லூக் 2:4-15; யோவா 7:42). ஆதிக்கிறிஸ்தவர்கள் இதை ஒரு புனித இடமாகப் போற்றி வந்தனர். இயேசு ஒரு குகையில் பிறந்தார் என்பது மறைசாட்சியான யுஸ்தினால் இரண்டாம் நூற்றாண்டில் கூறப்பட்டது. 325-இல் கான்ஸ்டன்டைன் எண்கோண வடிவம் கொண்ட பேராலயம் ஒன்றை இக்குகையின் மேல் கட்டினார். இந்த ஆலயம் அழிக்கப்பட்டபின் முதல் யுஸ்தினியன் (கி.பி. 527-65), முந்தைய திட்டத்தைப் பெரிதும் மாற்றி பெரிய ஆலயம் ஒன்றை மறுபடியும் கட்டினார். இவரால் கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்புத்தான் இன்றும் இருக்கிறது.

2. பெத்லகேம் செபுலோனின் எல்லைப் பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:15). இஸ்ராயேலின் நீதிபதிகளில் ஒருவராகிய இப்சான் என்பவரின் பிறப்பிடமும், அடக்கம் செய்யப்பட்ட இடமும் பெத்லகேம் நகராகும் (நீதி 12:8.10). இந்நகர் பொதுவாக நாசரேத்திற்கு மேற்கு, வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள பெயித்லகும் ஆக அடையாளம் காட்டப்படுகிறது. ஒரு செபக்கூடம், ஆலயம் ஆகியவற்றின் சிதைவுகள், பழங்காலத்தில் இஃது ஒரு முக்கிய இடமாக இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

**பெத் லகேமியர் (BETHLEHMITE)**

எருசலேமுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள (1 சாமு 16:18; 17:58) யூதாவின் பெத்லேகம் குடிமகன்.

**பெத் லபவோத்து (BETH - LEBAOTH - சிங்கங்களின் வீடு)**

சிமியோனுக்குச் சொந்தமான ஒரு நகரமாகும். இந்நகரம் யூதாவின் தென்பகுதியில் இருந்தது (யோசு 19:6). இந்நகரமும் பெத்பிரீயும் ஒரே

இடத்தைக் குறிக்கலாம் (1 நாள் 4:31). இஃது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால், இந்நகரம் சாருகென்னுக்கு அருகில் இருந்தது என்பது தெளிவு.

**பெத்லையபரா, பெத்-லெ-அபரா (BETH-LE-APHRAH** – தூசியின் வீடு. அபராவின் வீடு)

இது அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஒரு நகரம். இந்நகரானது காத்து நகரத்திற்கு இணையாகக் கூறப்படுவதால், பெத்தேல் அல்லது ஒபிராவை மறைவாகச் சுட்டிக் காட்டுகின்ற பெலிஸ்திய நாட்டின் நகரங்களில் ஒன்றாக இந்நகரமிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**பெத் னிம்ரா (BETH - NIMRAH** – சிறுத்தைப் புலி வீடு)

இது யோர்தான் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மோவாபியருடைய சமவெளிகளில் உள்ள ஒரு நகரம். காது கோத்திரத்தாரால் இந்நகரமானது அரண்சூழக் கட்டப்பட்டது (எண் 32:36; யோசு 13:27). இந்நகரம் எண் 32:3-இல் நிம்ரா என்றழைக்கப்படுகிறது. யுசேபியுவின் கூற்றுப்படி இது லியாவுக்கு (பெத்தாராமுக்கு) வடக்கில் 8 கி.மீ. தொலைவில் இருந்தது. எரிகோவுக்கு எதிரில் யோர்தானுக்கு அப்பாலுள்ள வாடி நிம்ரின் ஓடையின் கரையிலுள்ள தெல்நிம்ரின் என்ற பெயரில் பெத்னிம்ரா காக்கப்பட்டுள்ளது. தெல்நிம்ரின் பெத்னிம்ராவின், வெண்கலக் காலத்திய பழங்குடியிருப்பாகும். தெல் பிலெயிபில் மலைக்கு அருகில் இருந்தது.

**பெந்தக்கொஸ்தே (PENTACOST)**

காண்க. ஐம்பதாம் நாள் விழா.

**பெத்யசுதரா (BE - ESHTERAH** – சோம்பேறியின் வீடு)

இது யோர்தானுக்குக் கிழக்கே மனாசேயின் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒரு லேவிய நகரமாகும் (யோசு 21:27). இது 1 நாள் 6:71-இல் வரும் இணைப்பட்டியலில் அஸ்தரோத்து என்று குறிக்கப்படுகிறது. இது பெத்-அஸ்தரோத்து என்ற பெயரின் சுருக்கமாக அல்லது எழுத்தர்களின் பிழையாக இருக்கலாம்.

**பெயர் (NAME)**

I. பழைய ஏற்பாடு: பண்டைக்காலத் தவருக்குப் பெயர் என்பது மரபார்ந்த சுட்டுப்பெயராக மட்டுமின்றி, . உலகில் அவ்வுயிரினுடைய நிலையின் வெளிப்பாடாகவும் இருந்தது. இறைவன் தனது படைப்புகளுக்கு நாள், இரவு, விண்ணுலகு, மண்ணுலகு, கடல் என்று பெயரிடுவதன் மூலம் படைப்பை நிறைவுபடுத்துகிறார் (ஆதி 1:3-10). ஒவ்வொரு விண்மீனையும் அவர் பெயரிட்டழைக்கிறார் (எசா 40:26). ஒவ்வொரு விலங்கிற்கும் பெயரிடுமாறு அவர் ஆதாமிற்கும் கட்டளையிடுகிறார் (ஆதி 2:20). பிற்காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களுக்கு மனிதர்கள் அடிக்கடி பொருளுடைய பெயர்களை இடுவர். இத்தகைய பழக்கக் குறிப்புகள் பாபேல் கோபுரம் முதலிய நம்ப முடியாத காரணக் கதைகளுக்கு இடமளிக்கும் (ஆதி 11:9).

1. மனிதருடைய பெயர்கள்: பிறப்பின் போது அளிக்கப்படும் பெயரானது சாதாரணமாக மனிதனுடைய செயலையோ, ஊழையோ வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, யாக்கோபு தகாமுறையில் உரிமையைப் பறித்துக் கொள்பவர் (ஆதி 27:36); அறிவிலியாக இருந்ததால் நாபால் சரியான பெயரைப் பெற்றார் (1 சாமு 25:25). பெயரானது பிறப்பின் சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பதாகவோ, பெற்றோரால் குறிப்பிடப்படும் எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டு வதாகவோ இருக்கலாம். ராகேல் தனது குழந்தையை "எனது துன்பத்தின் மகனே" என்று அழைத்தவாறு இறக்கிறாள்; ஆனால், யாக்கோபு அவனைப் பென்யமின், "எனது வலது கரத்தின் மகனே!" என்று அழைக்கிறார் (ஆதி 35:18). சில நேரங்களில் இப்பெயரானது குழந்தைக்காக இஸ்ராயேலின் இறைவனுடைய உதவியைக் கேட்கின்ற இறைவாக்கு விருப்பத்தின் மாதிரியாக உள்ளது. எசாயா "இறைவன் காப்பாராக!"

பெயரானது "புகழ்" என்றும் பொருள்படுமாறு (எண் 16:2), மனிதனுடைய சமூகத் திறனையும் வெளிப்படுத்துகிறது. பெயரில்லாமல் இருப்பது மதிப்பில்லாமல் இருப்பதாகும் (யோபு 30:8). மற்றொரு புறம் பல பெயர்களைக் கொண்டிருப்பது முக்கியமானவராக இருப்பதாகும்; பல பணிகளைக் கொண்டிருப்பதாகும்; எனவே, சாலமோன் "ஆண்டவரின் அன்பன்" என்றும் அழைக்கப்பட்டார் (2 சாமு 12:25).

பெயரானது ஆளைக் குறிப்பதால், ஒரு பெயரின் மீது ஏதாவது செய்வதென்பது அவ்வுயிரின்மேல் ஒரு பிடிப்பைக் கொண்டிருப்பதாகும். எனவே, குடிக்கணக்கானது ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அடிமைப்பண்பைச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது (2 சாமு 24). பெயர் மாற்றமானது ஆட்தன்மை மாற்றமாகும்; அது முதல் அம்மனி தன் ஒரு குடியாள் என்று அதற்குப் பொருள் (2 அர 23:34; 24:17). அவர்களுடைய வாழ்வை இறைவன் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கென இறைவன் ஆபிரகாம் (ஆதி 17:5), சாரா (17:15), யாக்கோபு (32:29) ஆகியோருடைய பெயர்களை மாற்றுகிறார். எனவே, மன்னிக்கப்பட்ட எருசலேமிற்கு நீதியின் நகரம், பிரமாணிக்கமுள்ள பட்டணம் (எசா 1:26), ஆண்டவரின் நகரம் (60:14), தேடிக்கொள்ளப்பட்டவள் (62:12), என் அன்புடையாள் (62:4) என்னும் புதிய பெயர்களை இறைவன் அளிக்கிறார். புதிய உடன்படிக்கையால் இதயங்கள் புதுப்பிக்கப்படும் நகரின் புதிய வாழ்வினை இது வெளிப்படுத்துகிறது.

2. **இறைவனின் பெயர்கள்:** எல்லா மக்களிலும் இறைத்தன்மையின் பெயரானது உண்மையில் அதிக பொருளுடையதாக இருந்தது. பாபிலோனியர் படைப்பின் காலத்தில் தங்களது தலைமைத் தெய்வமான மார்துக்கின் வெற்றியைச் சிறப்பிப்பதற்கென, அவருக்கு ஐம்பது பெயர்களை அளிக்கும் அளவிற்குச் சென்றார்களெனில், கானானியர் தங்களது தெய்வங்களின் பெயர்களைத் "தலைவர்" என்று பொருள் படும் பாகால் என்ற பொதுச் சொல்லில் மறைத்து வைத்திருந்தனர்.

இஸ்ராயேலரிடையில், தனக்கே பெயரை அளிக்கக் கூடியவர் இறைவனே. இதற்கு முன்னர், மோசேயின் கடவுள் அவர்களது முன்னோருடைய கடவுள், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு–வினுடைய கடவுள் என்றே அறியப்பட்டார். யாக்கோபுவுடன் போராடிய வான தூதர் தனது பெயரைக் கூற மறுத்துவிட்டார் (ஆதி 32:30). சிம்சோனுடைய தந்தைக்கு "வியப்புக்குரியவர்" என்னும் சார்புப்பெயர் மட்டுமே கூறப்படுகிறது (நீதி 13:18). மூதாதையரின் காலங்களில் சதாய் (மலையைச் சார்ந்தவர்) முதலிய சார்புப்பெயர்கள் மற்றும் ஈசாக்கின் அச்சம் அல்லது யாக்கோபுவின் வலியவர் போன்ற சொல்லமைப்புகள் மூலமாக இஸ்ராயேலின் இறைவன் அடையாளங் காட்டப்படுகிறார். ஆனால், ஒரு நாள் ஓரேபில் இறைவனே தமது பெயரை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். "இருக்கிறவர் நாமே" (யாத் 3:13-16; 6:3) என்ற பயன்படும் வாய்பாடானது யாக்கோபுவிற்கு அளிக்கப்படாமல் இருப்பதற்கென வானதூதர் யாக்கோபுவுக்கு மறுத்ததை ஒத்த மறுதலிப்பாகச் சில நேரங்களில் கருதப்படுகிறது. ஆனால், புனிதவாசகம் இந்த வாய்பாட்டுக்கு ஒரு நேரடிப்பொருளை அளிக்க விரும்புகிறது. உண்மையில் சூழ்நிலையின்படி இப்பெயரானது மோசேயின் பணிக்கு மக்கள்முன் சான்று பகர வேண்டும்; "நானாக இருக்கிறவர் என்னை உங்களிடம் அனுப்புகிறார்," என்று மோசே கூறுவார்; மக்கள் புனித மலையில் அவரை வழிபட வருவார்கள். எவ்வாறாயினும், இறைவன் தமது மக்களிடையில் உள்ளார் என்பதை இப்பெயர் குறிப்பிடுகிறது. அவரே யாவே ஆவார்.

3. **இறைவனுடைய பெயரை அழைத்தல்:** இறைவன் தமது பெயரை வெளிப்படுத்தினாரெனில், அதிகார பூர்வமானதாகிய அவரது உண்மையான ஒரே பெயரின்கீழ் மட்டுமே அவரை

ஆராதிக்க வேண்டும் என்பதற்காகவே (யாத் 3:15). இவ்வாறு, வெற்றியின் போதும், அதற்குப் பின்னும் ஒன்றுபட்ட கோத்திரங்களின் முனைப்பான அறைகூவலாக அஃது இருக்கும் (நீதி 7:20). ஒரே உண்மையான இறைவனுடைய பெயர் இது மட்டுமே எனச் சிறிது காலங்கழித்து இறைவாக்கினர்களும் கூறுவர். "நமக்கு முன் தெய்வம் ஏதும் உண்டானதில்லை; நமக்குப்பின் ஏற்படப்போவதுமில்லை. நாமே கடவுள், நாமே யாவே" (எசா 43:10-11).

பின்னர், அது மட்டுமே இஸ்ராயேலின் உதடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பெயராக இருக்கும் (யாத் 23:13); தாவீது எருசலேமைத் தனது சமயத் தலைநகராக அமைத்தபோது அந்நகரில் தொழுது வேண்டும் ஒரே பெயராக இருக்கும்; ஏனெனில், "பொறாதவர்" என்பதே ஆண்டவர் பெயர், ஆம். அவர் பொறாத இறைவன்'' (யாத் 34:14). ''ஆண்டவருடைய பெயரைக் கூவியழைப்பதென்பது" இறைவனுக்கு வழிபாடு செலுத்துவதும் அவரை நோக்கிச் செபிப் பதுமாகும். அவர் பெயர் உயர்க எனப் பறைசாற்றப்பட்டது (எசா 12:4). அவர் அழைக்கப்படுகிறார் (சங் 28:1; காண்க. எசா 41:25); அவர் கூவியழைக்கப்படுகிறார் (சங் 99:6). ஆனால், இவ்வாறாக இறைவன் தமக்கு உரிய பெயரை இஸ்ராயேலுக்கு வெளிப்படுத்தினாரெனில், இஸ்ராயேல் ''ஆண்டவருடைய பெயரை வீணாக உச்சரிக்கக்கூடாது'' (யாத் 20:7; உப 5:11). உண்மையில் பழிக்கப்படுவதும், அதன் மூலமாக இறைவனைச் சோதிப்பதும் அவர்களைச் சார்ந்து இருக்கவில்லை. இத்தகைய நிலையானது இனி இறைவனுக்கு ஊழியம் புரிவதாக இல்லாமல், தங்களுடைய நோக்கங்களுக்காக அவரை உபயோகிப்பதாகவே இருக்கும்.

4. **இறைவனாகிய பெயர்:** இறைவன் தன்னையே தனது பெயருடன் எந்த அளவிற்கு ஒன்றுபடுத்தினாரெனில், அதனைப் பற்றிப் பேசும்போது தம்மையே குறிப்பிடுகிறார். இப்பெயரே அன்பு செய்யப்பட்டது (சங் 5:12), புகழப்பட்டது (சங் 7:18), மற்றும் புனிதப்படுத்தப்பட்டது (எசா 29:23). அது பயங்கரமான (உப 28:58), முடிவில்லாப் (சங் 135:13) பெயர். "தன்னுடைய பெருமை மிக்க பெயருக்காக" (யோசு 7:9), தன்னுடைய பெயரின் பொருட்டு (யாத் 20:9), அவர் இஸ்ராயேலின் சார்பில் செயல்படுகிறார். அதாவது, அவரது மகிமைக்காகவும், உயர்ந்தவராகவும் புனித மானவராகவும் அங்கீகரிக்கப்படுவதற்காகவுமே.

அணுகமுடியாத, மறைபொருளான இறைவனுடைய யாவும் கடந்த நிலையை நன்கு வலியுறுத்த, இப்பெயரானது இறைவனைக் குறிப்பிடுவது மட்டும் போதுமானதாகும். இவ்வாறு, இறைவனுக்குத் தகுதியற்ற முறையில் இட எல்லைக்குட்படுத்துவதைத் தவிர்க்க இறைவன் "தமது பெயரைத் தங்கச்செய்த இடமாக" ஆலயம் உள்ளது (உப 12:5). அவரது பெயரைக் கொண்டுள்ள ஆலயத்தில் மட்டுமே (எரே 7:10,14) ஒருவன் அவரது பிரச்சன்னத்திற்குள் வருகிறான் (யாத் 34:23). அதுவே அழிவின் சோதனைக்குள் நாடுகளைக் கடந்து செல்லுமாறு செய்ய, தொலைவிலிருந்து வருகின்ற பெயராகும் (எசா 30:27-38). இறுதியாக ஒரு பிற்காலப் பகுதியில், இராபிகளின் நூலில் காணப்படுவதுபோல், பெயர் என்ற சொல், வேறு எந்த அடைமொழியும் இன்றி யாவேயைக் குறிப்பிடுகின்றது (லேவி 24:11-16). இன்னும் வலியுறுத்தப்பட்ட மரியாதையினால் யூதத்துவம் உண்மையில் ஓரேபில் வெளிப்படுத்தப்பட்ட பெயரை உச்சரிக்கத் துணியாது வாசிக்கப்படும்போது இறைவன் (எலோகீம்) அல்லது பெரும்பாலும் ''என் ஆண்டவரே'' (Adonai) என்று மாற்றியமைக்கப்படும். இவ்வாறு யூதர்கள் யாவே என்ற பெயரை எழுதாமல் ஆண்டவரே என்று எழுதி, புனித இறைவாக்கு நூல்களை எபிரேய மொழியினின்று கிரேக்க மொழிக்கு மொழி பெயர்ப்பர். யாவே என்ற பெயர் பல்வேறு வடிவங்களின்கீழ் மாந்திரீக அல்லது

அவசங்கையான உபயோகத்திற்கு உட்படுவது போல், ஆண்டவர் என்னும் இப்பெயரானது தனது அர்ப்பணிப்பினைப் பெறுவதற்குப் புதிய ஏற்பாட்டுக் காலம் தொடங்கவேண்டும்.

**II. புதிய ஏற்பாடு:**

**1. தந்தை என்ற பெயர்:** பழைய ஏற்பாட்டில் இறைவன் தனது பெயருக்காக உண்டாக்கிய வெளிப்பாட்டிற்கு ஒத்தவாறு, இயேசு தனது தந்தையின் பெயரைத் தனது சீடர்களுக்கு வெளிப்படுத்துகின்ற வெளிப்பாட்டை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் (யோவா 17:6.26). தம்மை மகனாக வெளிப்படுத்திய நிலையில், தந்தை என்ற பெயரானது இறைவனுடைய உள்தன்மையை மிக ஆழமாக வெளிப்படுத்துவது என அவர் வெளிப்படுத்துகிறார். இயேசுவை மகனாக உடைய (மத் 11:25-27) இத்தந்தை, தமது மகனில் விசுவசிப்பவர்கள் அனை வருக்கும் தனது தந்தை நிலையை விரிவுபடுத்துகிறார் (யோவா 20:17).

இயேசு தமது பெயரை மகிமைப்படுத்துமாறு தந்தையைக் கேட்கிறார் (யோவா 12:28); அதனைப் புனிதப்படுத்த அவரைக் கேட்குமாறு அவர் தமது சீடர்களையும் அழைக்கிறார் (மத் 6:9இணை). தமது மகிமையையும் வல்லமையையும் வெளிப்படுத்துவதிலும் (உரோ 9:17; காண்க. லூக் 1:49), தமது மகனை மகிமைப்படுத்துவதிலும் (யோவா 17:1; காண்க. 5:23-24) இந்த இறைவன் இதனைச் செய்வார். இறைவனுடைய பெயரைப் புகழவும் (எபி 13:15), தங்கள் நடத்தை கடவுளுடைய பெயருக்கும் போதனைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு இருக்கவும் கிறிஸ்தவர்கள் கடமை கொண்டுள்ளனர் (உரோ 2:24; 1 திமொ 6:1).

**2. இயேசு என்ற பெயர்:** இயேசுவின் பெயரை நோக்கி வேண்டுவதன் மூலம் சீடர்கள் நோயாளிகளைக் குணமாக்குகின்றனர் (அ.ப. 3:6; 9:34); பேய்களை ஓட்டுகின்றனர் (மாற் 9:38; 16:17; லூக் 10:17; அ.ப. 16:18; 19:13); எல்லாவிதப் புதுமைகளையும் செய்கின்றனர் (மத்7:22; அ.ப.4:30). இவ்வாறு, தமது பெயர் சுட்டிக்காட்டு கின்றவாறே இயேசு தோன்றுகிறார்: மீட்கிறவர் (மத் 1:21-25), நோயாளிகளுக்கு உடல்நலத்தை அளிப்பவர் (அ.ப. 3:16), மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, தம்மில் விசுவசிப்பவர்களுக்கு முடிவில்லா மீட்பைப் பெற்றுத் தருபவர் (அ.ப. 4:7=12; 5:31; 13:23).

**3. ஆண்டவர் என்ற பெயர்:** இயேசுவை உயிர்த்தெழச் செய்து, தமது வலப்புறத்தில் அமரச்செய்ததன் மூலம், எல்லாப் பெயரிலும் பெரிய பெயரை இறைவன் அவருக்கு அளித்துள்ளார் (பிலி 2:9; எபே 1:20-21). இறைவனுடைய பெயரினின்று வேறுபடாத (திருவெளி 14:1; 22:3-4), அவரது மறைபொருளில் பங்கேற்கின்ற (19:12) புதிய பெயராக் (3:12), அஃது உள்ளது. விவரிக்க முடியாத இப்பெயரானது, இறைவனுக்குரிய அதே அளவில் உயிர்த்த இயேசுவிற்கு உரியதாக உள்ள ஆண்டவர் என்ற சிறப்புப்பெயரிலும் (பிலி 2:10-11 = எசா 45:23; திருவெளி 19:13, 16 = உப 10:17), எப்படைப்புடனும் அவர் பகிராத மகன் என்னும் அடையாளப் பெயரிலும் மொழிபெயர்க்கப்படுகிறது (எபி 1:3-5; 5:5; காண்க. அ.ப. 13:33; உரோ 1:4; சங் 2:7). இறைவனைப் பற்றிய பேசும்போது யூதத்துவம் பயன்படுத்தும் சிறப்புப் பெயர்களுள் ஒன்றை இயேசுவிற்கு அளிக்க முதல் கிறிஸ்தவர்கள் தயங்கவில்லை. “பெயருக்காகத் துன்புற, தகுதியுடையவர்களெனக் கருதப்பட்டதற்காக” (அ.ப. 5:41) அப்போஸ்தலர்கள் மனமகிழ்ந்தனர் என்று கூறப்படுகிறது. “கிறிஸ்துவின் பெயருக்காகப் பயணத்தை மேற்கொண்ட” நற்செய்திப் பணியாளர்களும் சுட்டிக் காட்டப்படுகின்றனர் (3 யோவா 7).

**அ) கிறிஸ்தவ விசுவாசம்:** இறைவன் இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் என்று விசுவாசிப்பதிலும், இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுவதிலும், ஆண்டவருடைய

பெயரைச் சொல்லி மன்றாடுவதிலும் கிறிஸ்தவ விசுவாசம் அடங்கியுள்ளது. இந்த மூன்று சொற்றொடர்களும் செயலளவில் சமமானவை (உரோ 10:9-13). "ஆண்டவருடைய பெயரைச் சொல்லி மன்றாடுவோர்" என முதல் கிறிஸ்தவர்கள் விரும்பி தங்களை அடையாளப்படுத்தினர் (அ.ப. 9:14.21; 1 கொரி 1:2; 2 திமொ 2:22; காண்க. அ.ப. 2:21 யோவே 3:5). இயேசுவை ஆண்டவராக அங்கீகரித்ததையும், அங்கே அவர்கள் குறிப்பிடுகின்றனர் (அ.ப. 2:36). குறிப்பாசு, விசுவாச அறிக்கையானது, ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் (அ.ப. 8:16; 19:5; 1 கொரி 6:11), கிறிஸ்துவின் பெயரால் (கலா 3:27), அல்லது கிறிஸ்து இயேசுவின் பெயரால் (உரோ 6:3) அளிக்கப்படும் திருமுழுக்கின்போது சுமத்தப்படுகிறது. புதுக்கிறிஸ்தவர் ஆண்டவருடைய பெயரைச் சொல்லி மன்றாடுகின்றனர் (அ.ப. 22:16). ஆண்டவருடைய பெயர் அவர்மேல் வேண்டப்படுகிறது (யாக் 2:7). யாருடைய (ஆண்டவர்) தன்மையைத் தாம் ஏற்றுக்கொண்டாரோ, அவரது வல்லமையின்கீழ் அவர் தன்னைக் கண்டடைகிறார்.

யோவானில், கிறிஸ்தவ விசுவாசத்தின் உரிய புறப்பொருளாக ஆண்டவர் பெயரைவிட மகன் பெயரே அதிகமாகச் சிறப்புப் பெறுகிறது. வாழ்வினை அடைவதற்கு இறைவனுடைய ஒரே மகனில் விசுவாசம் கொள்வது அவசியமாகும் (யோவா 3:17-18; காண்க. 1:12; 2:23; 20:30-31; 1 யோவா 3:23; 5:5. 10.13). அதாவது, அவரே இறைவனின் மகன் என்பதை ஏற்றுக்கொள்வதன் மூலம் இயேசுவின் ஆட்தன்மையோடு இணைத்துக் கொள்வதாகும். அவரது உண்மையான தன்மையை வெளிப்படுத்துவது இறைவனுடைய மகன் என்ற பெயரேயாகும்.

**ஆ) அப்போஸ்தலிக்கப் போதனை:** இயேசு கிறிஸ்துவினுடைய பெயரைப் பறை சாற்றுவதையே இது தனது பொருளாகக் கொண்டுள்ளது (லூக் 24:46-47; அ.ப. 4:17-18; 5:28.40; 8:12; 10:43). போதிப்பவர்கள் இப்பெயருக்காகத் துன்புற வேண்டும் (மாற் 13:13). மகிழ்ச்சி கொள்வதற்கு இஃது ஒரு காரணமாகவும் அவர்களுக்கு இருக்கவேண்டும் (மத் 5:11 இணை; யோவா 15:21; 1 பேதுரு 4:13-16). அவரது பெயருக்காகத் துன்புற்றாலும் (திருவெளி 2:3), அதனை விடாமல் பற்றிக்கொண்டு (2:13) அதை மறுக்காத (3:8) கிறிஸ்தவர்களுக்குத் திருவெளிப்பாட்டு நூல் அளிக்கப்படுகிறது. இயேசுவினுடைய பெயருக்கான பணியானது சிறப்பாகப் பவுலின்மேல் சுமத்தப் பெற்றுள்ளது. அவர் அதனை ஓர் ஆணையாகவும் (அ.ப. 9:15), துன்பத்திற்குக் காரணமாகவும் (9:16) பெற்றார். ஆயினும், அவர் தனது மறைபணியைத் துணிவுடனும் பெருமையுடனும் நிறைவேற்றுகிறார் (9:20.22.27-28). ஏனெனில், அவர் தமது வாழ்வையே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பெயருக்குப் பணயமாக்கி (15:26), அவருக்காகச் சாகவும் தயாராக உள்ளார் (21:13).

**இ) கிறிஸ்தவ வாழ்வு:** கிறிஸ்தவ வாழ்வானது முழுமையாக விசுவாசத்தினால் வளப்படுத்தப்படுகிறது. இயேசுவின் பெயரால் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன (மத் 18:20). வேடதாரிகள் எச்சரிக்கையாகத் தவிர்க்கப்பட வேண்டுமெனினும் (மாற் 13:6இணை), அவரது பெயரில் வருபவர்கள் வரவேற்கப்படுகின்றனர் (மாற் 9:37 இணை). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயர் புகழப்படுமளவிற்குத் தன்னையே நடத்துவதில் (2 தெச 1:11-12) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் ஒருவன் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறான் (எபே 5:20; கொலோ 3:17). செபத்தில் தந்தையானவர் அவரது மகனுடைய பெயரால் மன்றாடப்படுகிறார் (யோவா 14:13-16; 15:16; 16:23-24, 26-27).

**4. மற்றப் பெயர்கள்:** ஒவ்வொரு படைப்பும் தனக்குக் குறிக்கப்பட்ட பணிக்கேற்ற பெயரைக் கொண்டுள்ளது. அதனுடைய பணியானது இறைத்தன்மையானதாக இருக்கும்போது

யோவான் போன்று. அதனுடைய பெயர் விண்ணிலிருந்து வருகிறது (லூக் 1:16.63). மனிதரால் அளிக்கப்படும் போதும் அஃது இறைவனுடைய வழிகாட்டுதலின் அறிகுறியாக உள்ளது. செக்கரியா (1:5,72: "இறைவன் நினைவு கூர்ந்தார்"), எலிசபெத்து (1:5,73: "இறைவன் என் உறுதியாவார்"), மரியா (1:27.46.52: "போற்றப்படுகிற, உயர்த்தப்பட்ட"). சீமோனுக்குப் பேதுரு என்னும் பெயரை அளிப்பதில்தான் அவருக்கு அளிக்கும் பங்கையும், அவரில் படைக்கின்ற புதிய மனப்பான்மையையும் இயேசு சுட்டிக்காட்டுகிறார் (மத் 16:18).

நல்ல ஆயன் தனது மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆட்டின் பெயரையும் அறிவான் (யோவா 10:3). தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பெயர்கள் விண்ணகத்தில் (லூக் 10:20), வாழ்வின் நூலில் பொறிக்கப்பட்டுள்ளன (பிலி 4:5; திருவெளி 3:5; 13:8; 17:6). மகிமையில் நுழைந்தவுடன் புதிய விவரிக்க முடியாத பெயரை அவர்கள் பெறுவர் (திருவெளி 2:17). இறைவனுடைய வாழ்வில் பங்கு பெறுவதன் வழியாக, தந்தை மற்றும் மகனுடைய பெயரை அவர்கள் அடைவர் (3:12; 14:1). இறைவன் அவர்களைத் தனது மக்கள் என்று அழைப்பார் (மத் 5:9). ஏனெனில், அவர்கள் உண்மையில் அவ்வாறே உள்ளனர் (1 யோவா 3:1).

**பெயல்செபூல், பெயல் செபூபு (BEEL ZEBUL, BEEL ZEBUB – விண்ணகத் தலைவன், ஈக்களின் தலைவன்)**

பேய்பிடித்த ஒருவரை இயேசு சுகமாக்கியபோது (மத் 12:24; மாற் 3:22; லூக் 11:15), பரிசேயர் "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்று கூறி இயேசுவை ஏளனம் செய்தனர். பெயல் செபூல், பெயல் செபூபு (ஈக்களின் தலைவன்) என்ற பெலிஸ்தியத் தேவதையாக (2 அர 1:2-3) அடிக்கடி அடையாளம் காட்டப்பட்டாலும் பெயல் செபூல் என்ற சொல்லுக்குப் "பாகால் இளவரசன்" என்ற பொருளே மேலானதாகும். பெயல்செபூல் பழைய ஏற்பாட்டில் பேயோடோ, சாத்தானாடோ அடையாளம் காட்டப்படவில்லை. இப்பெயரோடு பழைய ஏற்பாடு கொண்டிருக்கும் தொடர்பு எதுவானாலும், புதிய ஏற்பாட்டில் பெயல்செபூல் பேய்களின் தலைவனாகக் (சாத்தானாகக்) கருதப்பட்டது. இயேசு, தனது செயல்கள் இறை அரசின் தொடக்கத்தைக் குறிக்கின்றன என்றும், அவை சாத்தானின் அரசுக்கு எதிராகச் செய்யப்படுகின்றன என்றும் தெளிவு படுத்துகிறார் (மத் 12:17-28 இணை).

**பெயிபா (PHOEBE – ஒளிமயமான)**

இவள் ஒரு கிறிஸ்தவப் பெண் திருத்தொண்டர். இவள் கொரிந்துவின் கிழக்கிலுள்ள துறைமுகத்தின் அருகில் உள்ள கெங்கிரேயா நகரில் வாழ்ந்தவள். இவள் உரோமைக்குச் சென்றபோது பவுல் இவளையும் இவள் அப்போஸ்தலர்களுக்குச் செய்த உதவிகளையும் பற்றிக் கூறினார் (உரோ 16:1-2). ஒருவேளை இவள்தான் உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை அங்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

**பெயுலா (BEULAH – திருமணமான)**

எருசலேமின் வளமிக்க எதிர்காலத்தைக் குறிக்கும் இரு உருவகப்பெயர்களுள் இதுவும் ஒன்று (எசா 62:4; காண். 54:1-8). இஸ்ராயேல் யாவேயின் மணமகளாவாள் என்ற கருத்தை எரே 2:2; ஒசே 2:14-20-இல் காணலாம். இக்கருத்து, திருச்சபையும் (எபே 5:23-27), புதிய எருசலேமும் (திருவெளி 21:2.9தொ) கிறிஸ்துவின் மணமகளாவர் என்ற புதிய ஏற்பாட்டுக் கருத்தில் உச்ச நிலையடைகிறது.

**பெயுல்லத்தாய் (PEULLATHAI – யாவேயின் கைம்மாறு)**

இவர் ஆலய வாயில் காப்போரில் ஒருவர். இவர் லேவியரும், ஓபேது - ஏதோமின் மகனும் ஆவார் (1 நாள் 26:5).

**பெயேரா (BEERA – கிணறு)**

இவர் ஆசேரின் தலைமுறைப் பட்டியலில் வருகின்ற சோபகுவின் பதினொன்றாவது மகனாவார் (1 நாள் 7:37).

**பெயேரா (BEERAH – கிணறு)**

பெயேரா என்பவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் மூன்றாம் திகிலத்-பிலேசரால் நாடு கடத்தப்பட்டவராவார். இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பாகாலின் மகன் (நாள் 5:6).

**பெயேரியர் (BEERI – கிணற்றைச் சேர்ந்த)**

1. ஓர் இத்தியர். ஏசாவின் மனைவியான யூதித்தின் தந்தை (ஆதி 26:34).

2. இறைவாக்கினர் ஓசேயாவின் தந்தை (ஓசே 1:1).

**பெயேரேலிம், பெயேர் - ஏலிம் (BEER - ELIM – தலைவர்களின் கிணறு, தெரபித்தின் கிணறு)**

இது மோவாபியர்களின் நகரமாகும் (எசா 15:8). இதுவும், பெயேர் (1) என்னும் இடமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இங்கு இஸ்ராயேலர் தங்கினர் (எண் 21:16). இது வாடி எத்–தெமேதாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெயரோத்தியர் (BEEROTHITES)**

பெயரோத்தின் குடிமக்கள் (2 சாமு 4:3.5.9; 23:37).

**பெயரோத்து (BEEROTH – கிணறுகள்)**

இது பென்யமினின் ஆட்சிப்பகுதியிலுள்ள நகரமாகும் (2 சாமு 4:2). கிபயோனியர்களைப்போல் இஸ்ராயேலுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நான்கு இவ்வியர் நகரங்களில் ஒன்றாகும் (யோசு 9:17).

பென்யமின், எப்பிராயிம் ஆகிய இருவருக்கும் குறிக்கப்பட்ட பகுதிக்கு இடையில்தான் பெயரோத்து இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது (2 சாமு 4:2). இந்நகரம் பென்யமினுக்கு உரித்தான பகுதிகளில் ஒன்றாகும் என்று கருதப்படுகிறது. 2 சாமு 4:2-இல் பெயரோத்தியர் கித்தயிமுக்கு ஓடிப்போனார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனேகமாக, கில்போவா வெற்றிக்குப்பின், பெலிஸ்தியரின் தாக்குதலால் இந்நிகழ்ச்சி நடந்திருக்கலாம்.

பெயரோத்தியரான நகுராய் யோவாபின் படைக்கலன் தாங்குவோனாக இருந்தார் (2 சாமு 23:37; 1 நாள் 11:39). 2 சாமு 4-இல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியின்படி பெயரோத்தியரான இரேக்கபு, பாநா என்ற இரண்டு சகோதரர்களும் இசுபொசேத்தின் காவல் தலைவர்களாவர். இவர்கள் இசுபொசேத்தின் ஏழாவது ஆட்சியாண்டில் அவரைக் கொலை செய்தனர். ஏனென்றால், சவுல், இவ்வியர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதால் அதற்குப் பழிக்குப் பழிவாங்கும் பொருட்டு, இச்செயலை இவர்கள் செய்திருக்கலாம் என்று சிலர் கருதுவர். இந்தக் கருத்திற்கு வாசகத்திலிருந்து எவ்வித ஆதாரங்களும் காணப்படவில்லை. ஆனால், இவர்கள் தாவீதின் தயவைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் இச்செயலைச் செய்திருக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால், தாவீது அவர்கள் இருவரையும் கொலைசெய்யக் கட்டளையிட்டதால், அவர்கள் நம்பிக்கை வீணடிக்கப்பட்டு விட்டது (2 சமு 4:9-12).

இஃது இருந்த இடம் எதுவென்று அடையாளம் காட்ட முடியவில்லை. ஆனால், ராமல்லாவிற்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவிலுள்ள ஏல்–பிரேவாக இருக்கலாம் என்று சிலர் கூறுவது சரியான இடமாகத் தோன்றவில்லை. மேலும், ஆல்பறைட் என்பவர் தெல் ஏன்-நகேசுக்குத் தென்புறத்தில் ஒரு கி.மீ. தொலைவிலிருந்த முக்கியமான நகரத்தைப் பெயரோத்தாக அடையாளம் காட்டுவார். வேறுசிலர் எருசலேமுக்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள நெபி சம்வில்லை அடையாளம் காட்டுவர். இங்கு நிறைய தண்ணீர் கிடைத்தது. இது வெறுக்கப்பட்ட சமாரியாவின் பகுதிக்கு வெளியே இருந்தது. ஒரு நாள்

பயணத்திற்குப்பிறகு தங்குவதற்கு வசதியான இடமாக இருந்தது. ஆகவே, எருசலேமிலிருந்து கலிலேயா திரும்பிய திருப்பயணிகள் தங்கிச் செல்லும் இடமாக இருந்தது. பாரம்பரியப்படி, இங்குதான் யோசேப்பும் மரியாளும் வீடு திரும்பும் போது தங்கள் குழுவில் இயேசு இல்லை என்று அறிந்தனர் (லூக் 2:44).

**பெயரோத் - பென - யாக்கான் (BEEROTH - BENE - JAAKAN** - யாக்கானுடைய மகனின் கிணறு)

இது ஏதோம் நாட்டின் எல்லைக்கருகில் இஸ்ராயேல் மக்கள் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இடம். இவ்விடத்திற்கு அருகில்தான் ஆரோன் இறந்து அடக்கம் செய்யப்பட்டாரென்று வரலாறு கூறுகிறது (உப 10:6). எண் 33:31தொ-இல் இது பெனயாக்கான் என்றழைக்கப்படுகிறது. ஒரு வேளை இவ்விடம் ஏல்-அவுயாவுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள ஏல் - பிரேயின் ஆக இருக்கலாம். 1 நாள் 1:42-இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமுறை அட்டவணையில் இவ்விடம் யாக்கான் என்று அழைக்கப்படுகிறது.

**பெயேர் (BEER** - கிணறு)

1. இஸ்ராயேலர் பாலைவனப் பயணத்தில் பாளையம் இறங்கிய ஓர் இடமாகும். இவ்விடத்தில் இளவரசர்களும், மக்கள் தலைவர்களும் கிணறு ஒன்று தோன்டினார்கள் (எண் 21:16.18). வாடி எத்-தெமேதுதான் கிணறு இருந்த இடமாக இருக்கலாம். ஏனென்றால், குழி தோண்டியவுடன் போதுமான அளவிற்குத் தண்ணீர் தருகின்ற இடமாகும். இவ்விடம் அர்னோன் ஆற்றுக்கு வடபுறத்திலுள்ள இடமாக இருக்கலாம். ஏலிம் கேணிகளும் (எசா 15:8) இதே இடத்தில் இருந்திருக்கலாம். ஆகவே, இதுவும் பெயரேலிமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

2. கிதியோனின் கடைசி மகன் யோத்தாம் தன்னுடைய கற்பனைக் கதையைக் கூறி, பின்பு ஓடிப்போய்த் தங்கி வாழ்ந்த இடம் (நீதி 9:21). இதுவும் பெயரோத்தும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். சிலர் இவ்விடத்தைப் பெய்சானுக்கு வடக்கிலும், தாபோர் மலைக்குத் தென்மேற்கிலும் உள்ள ஏல்-பிரே என்ற இடத்தோடு தொடர்பு படுத்துகின்றனர். இவ்விடம் எலுதெரப்பொலிக்கு வடக்கே 12 கி.மீ. தொலைவில் இருந்ததாக யுசேபியு கூறுகிறார்.

**பெயர் - செபா (BEER - SHEBA** - சத்தியத்தின் கிணறு, எழுவரின் கிணறு)

இது நெகேபுவின் முக்கியமான நகரமாகும். இஃது ஆதி காலத்திலிருந்து முக்கியமான, புனித இடமாகக் கருதப்படுகின்றது. இப்பெயருக்கு "எழுவரின் கிணறு" என்று பொருள் கொடுக்கப்படுகிறது. அங்கு ஏராளமான நீரூற்றுக்கள் காணப்படுவதால் இப்பெயர் வந்திருக்கலாம். ஆகார் என்பவள் சாராளிடமிருந்து ஓடியபொழுது பெயேர்-செபா வழியாகத் தான் சென்றிருக்கிறாள் (ஆதி 1:24). இவ்விடத்திலிருந்த கிணற்றிற்கு யார் உரியவர் என்ற குழப்பத்திலிருக்கும்பொழுது, ஆபிரகாம், தாமே வெட்டியதாக அபிமெலக்குமுன் சத்தியம் செய்து கொடுத்தார். பின், அவ்விருவரும் அக்கிணற்றைக் குறித்தே உடன்படிக்கை செய்து கொண்டனர் (ஆதி 21:25-33). மேலும், ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளை அபிமெலக்கிற்கு வழங்கியதாலும், அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சத்தியம் செய்து கொள்வதாலும் பெயேர் - செபா என்ற பெயரின் பொருளானது இரு வகையில் விளக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. மேலும், அபிமெலக்கும், ஈசாக்கும் சத்தியம் பண்ணிக் கொண்டதாகவும், இப்பெயருக்கும் இந்நிகழ்ச்சிக்கும் தொடர்பிருப்பதாகவும், கூறப்பட்டிருக்கிறது (ஆதி 26:31-33).

ஆபிரகாம் (ஆதி 22:19), ஈசாக்கு (26:23; 28:10) ஆகிய இருவரும் சிலகாலங்கள் பெயேர் - செபாவில் தங்கி வாழ்ந்திருந்திருக்கின்றனர். ஆனால் ஆபிரகாம் அங்குத் தங்கியிருந்தபொழுது அவருக்கும் இந்த இடத்திற்குமுள்ள தொடர்புக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. இங்குதான்

ஈசாக்குக்கும் (ஆதி 26:23), யாக்கோபுக்கும் (46:1-5) ஆண்டவரின் காட்சி அருளப்பட்டிருக்கிறது. எனவேதான், இவ்விடம் புனித இடமாகக் கருதப்பட்டது. பெயேர்-செபா யூதாவின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 15:28), அதே நேரத்தில் சிமியோனின் நகரங்களில் ஒன்றாகவும் (1 நாள் 4:28) குறிப்பிடப்பட்டுள்ளது.

யூதா நாட்டின் அரசராகயிருந்த யோவாசின் தாய் சிபியா என்பவள் பெயேர் - செபாவிலிருந்து வந்தவள் (2 அர 12:2; 2 நாள் 24:1). சாமுவேலின் புதல்வர்கள் பெயேர் - செபாவிஸ் நீதிபதிகளாக இருந்தனர் (1 சாமு 8:2). இந்த இரண்டு நிகழ்ச்சிகளைத் தவிர இவ்விடம் இஸ்ராயேல் வரலாற்றில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், இஸ்ராயேலின் வட, தென்புற ஆட்சிப்பகுதியைக் குறிப்பதற்காக, "தாண் முதல் பெயேர்-செபா வரை" என்று அடிக்கடி கூறப்பட்டிருக்கிறது (நீதி 20:1; 1 சாமு 3:20; 2 சாமு 24:15; 17:11; 1 அர 5:5; 1 நாள் 21:2; 2 நாள் 3:5); அல்லது யூதாவின் தென் எல்லையாகக் கூறப்பட்டுள்ளது (2 சாமு 24:7; 1 அர 19:3; 2 அர 23:8. 2 நாள் 19:4). இந்நகரம் கி.மு. 701-இல் சனகெரிபுவால் அழிக்கப்பட்டது. ஆனால், அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபின், மக்கள் குடியேறிய யூதா நாட்டின் நகரங்களில் பெயேர்-செபாவும் ஒன்றாகும் (நெகே 11:27.30). ஆமோ 5:5; 8:14 - பெயேர்-செபாவில் 'புனித இடம்' இருந்ததாகச் சுட்டுகிறது. ஆனால், இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறுவதற்கு முன்னே "புனித இடம்" அங்கு இருந்ததாகக் குல முதியவர்கள் பற்றி நிகழ்ச்சிக் குறிப்புகள் சுட்டுகின்றன.

இந்நகரின்பெயர் எபிரோனுக்குத் தெற்கில் 45 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பிர் எஸ்-செபா என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் குடியிருப்பு இக்கால நகரத்திற்குக் கிழக்கில் 4 கி.மீ. தொலைவில் இருந்திருக்க வேண்டும். இவ்விடம் நெகேபின் பயிரிடப்பட்ட நிலங்கள் மற்றும் புல்வெளிக்குத் தெற்கில் இருந்திருக்க வேண்டும். இது கடல் மட்டத்திலிருந்து 300 கி.மீட்டர் உயரத்திலிருந்தது. இதற்குச் சிறிது வடக்கிலிருந்த யூதாவின் மலைகள் 600 மீட்டர் உயரம் உடையவையாகும். சுற்று வட்டாரத்தில் இங்கு மட்டும் தான் தண்ணீர் அதிகம் கிடைத்ததால், பழங்காலத்திலிருந்தே இங்கு மக்கள் குடியிருந்தனர். இதன் அருகில் வேறு குடியிருப்புகள் காணப்படவில்லை. பாலையிலிருந்து மத்திய மலைப்பகுதிகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகளிலுள்ள சந்தைகளுக்குச் செல்லும் பாதைகள் பெயேர்-செபா வழியாகச் சென்றன. தொல்பொருள் அகழ்வாய்வுகள், பெரிய கொம்புடைய பீடத்தையும், எசேக்கியாவின் சீர்திருத்தம் நடந்த காலத்தில் அழிக்கப்பட்டிருக்கக்கூடிய கோவிலின் சிதைவுகளையும் கண்டுபிடித்துள்ளன.

**பெயேர் - லகய் - ரோயி (BEER - LAHAI - ROI - உயிருள்ள இறைவனின் கிணறு)**

சூருக்குச் செல்லும் சாலையில், காதேசு-பர்னேயாவுக்கும் பெரேதுக்கும் இடையிலுள்ள ஒரு கிணறாகும். ஆதி 16:7-14 இப்பெயருக்கு "என்னைக் காண்பவரை, நானும் இங்கே கண்டேன்" என்றும், அக்கிணற்றுக்குக் "காண்கிற இறைவன் நீர்" என்றும் விளக்கம் தருகிறது. ஆண்டவரின் நம்பிக்கையளிக்கின்ற வாக்குறுதியைக் கொடுத்த ஆண்டவரின் தூதரை இந்த இடத்தில் சந்தித்த ஆகாரால் இப்பெயர் கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இக்கிணற்றுக் கருகில் ஈசாக்கு வாழ்ந்தார் (ஆதி 24:62; 25:11).

**பெயோர் (PEOR - திறப்பு)**

பெயோர் என்பது ஓர் இடப்பெயர். இப்பெயர் மற்றப் பெயர்களுடன் சேர்ந்தே வருகிறது. சான்றாக, பெத்-பெயோர் (உப 3:29; 4:46; 34:6; யோசு 13:20), பாகால் - பெயோர் (எண் 25:3.5; உப 4:3; சங் 106:28; ஓசே 9:10).

1. பாலாக்கு, இஸ்ராயேல் மக்களைச் சபிக்கும்படி பிலயாமைக் கூட்டிக்கொண்டு போன மலை ஆகும் (எண் 23:27-28). அவர்கள்

பெயோர் மலையின் சிகரத்தை அடைந்தவுடன் அங்கிருந்து, மோவாபியச் சமவெளியிலிருந்த இஸ்ராயேலரின் பாளையத்தைக் காணமுடியும் (எண் 24:12). பெயோர் இருந்த இடம் நெபோ மலைக்கு அருகில்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

2. பெயோர் என்பது பெயோர் மலையிலுள்ள கடவுளின் பெயர். இப்பெயர், 'பாகால் - பெயோர்' என்ற பெயரின் குறுகிய வடிவமாகும். பிலயாமின் அறிவுரையால், மிதியான் நாட்டுப் பெண்கள் இஸ்ராயேலரை வஞ்சித்து ஆண்டவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யத் தூண்டியதாக எண் 31:16-இல் குறிப்பிடப்படுகிறது. யோசு 22:17-இல் குறிப்பிடப்படும் காது, ரூபன் ஆகிய கோத்திரத்தார் செய்த பாவம், பெயோரில் செய்யப்பட்ட பாவத்தோடு ஒப்பிடப்படுகிறது.

3. பெயோர் யூதாவின் ஒரு பகுதி (யோசு 15:59). இது பெத்லகேமுக்குத் தென்மேற்கிலுள்ள கிர்பெத்-பாகுர் என்ற இடமாக அடையாளம் காட்டப்படும்.

**பெரக்கியா (BERECHIAH** - யாவே ஆசீர் வழங்கினார்)

1. இவர் தாவீதின் வழிவந்தவர்களின் பட்டியலில் இடம் பெறுகின்ற செருபாபேலின் மகனாகக் கருதப்படுகின்றார் (1 நாள் 3:20).

2. இவர் லேவியர்களின் தலைமுறை அட்டவணையில் ஆசாபுவின் தந்தையாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் (1 நாள் 6:39; 15:17).

3. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்தபின் எருசலேம் நகரில் குடியேறியவர்களில் இவரும் ஒருவர். இவர் ஒரு லேவியர் (1 நாள் 9:16). இதற்கு இணையான நெகே 11-இல் இப்பெயர் காணப்படவில்லை.

4. இவர் கடவுள் திருப்பேழையின் வாயிற்காவலராக இருந்தவர்களில் ஒருவராகிய ஒரு லேவியர் (1 நாள் 15:23).

5. இவர் எப்பிராயிம் மக்கள் தலைவர்களில் ஒருவர் (2 நாள் 28:12).

6. இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டியவர்களில் ஒருவரான மெசுல்லாமின் தந்தையாவார் (நெகே 3:4.30; 6:18).

7. இவர் இத்தோவின் மகனும், இறைவாக்கினர் செக்கரியாவின் தந்தையுமாவார் (செக் 1:1.7; காண். மத் 23:35). சில இடங்களில் செக்கரியாவின் தந்தையாக இத்தோ குறிப்பிடப்படுகிறார் (எஸ் 5:1; 6:14). பெரக்கியா செக்கரியாவின் புதல்வராவார் என்று குறிப்பிடப்படுகின்ற எசா 8:2-இன் பாதிப்பால் செக் 1:1.7-இல், இத்தோவிற்கும், செக்கரியாவிற்குமிடையில் பெரக்கியா என்ற பெயர் புகுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

**பெரசிம் மலை (PERAZIM MOUNT)**

எசாயா இறைவாக்கினரால் விடுக்கப்படும் எச்சரிக்கையில் குறிப்பிடப்படும் நகரங்களில் ஒன்று. "பாகால்-பெராசிம்" மலையில் தாவீது பெலிஸ்தியரை வென்றார். இங்குப் பெயர்களில் மாற்றம் இருந்த போதிலும் எசாயா கடவுளின் அற்புதங்களில் ஒன்றாக இதைக் குறிப்பிடுகின்றார் என்று கருதப்படுகிறது. இப்பகுதி எருசலேமின் தெற்கில் இருந்தது. இன்றைய செயிக்-பெதர் இவ்விடம் இருந்ததாகக் கருதப்படுகிறது. காண்க. பாகால் பெராசிம்.

**பெரயா (BEREA** - நீர் பாய்ச்சப்பட்ட)

இது யூதேயா நாட்டிலுள்ள ஓர் இடமாகும். ஆனால், இதை அடையாளம் காட்ட முடியவில்லை. எருசலேமிற்கு வடபுறத்தில் 16 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள ஏல்-பிரேதான் பெராயா இருந்த இடமாகும் என்று கருதாப்படுகிறது.

எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்த பாக்கிதும், ஆல்கிமுவும் தங்கள் படையுடன் இங்குப் பாளையம் இறங்கினர் (1 மக் 9:4).

**பெரயா (PEREA)**

யோர்தான் அக்கரைப்பகுதி, பெரிய ஏரோதின் அரசில் இருந்தது. கி.மு. 4-இல் அவருடைய இறப்புக்குப்பின் அப்பகுதி கலிலேயாவுடன் சேர்க்கப்பட்டு ஏரோது அந்திப்பாவின் அரசில் இருந்தது.

யோர்தான் அக்கரைப்பகுதி மாவட்டத்தின் மேற்கில் யோர்தானும் சாக்கடலின் வடகிழக்குப்பகுதியும், கிழக்கில் கெராசா, பிலதெல்பியா, எஸ்போன் மாவட்டங்களும், வடக்கில் பெல்லாவும் தெற்கில் மக்கேருவிலிருந்து அர்னோன் நதிவரையும் எல்லைகளாக இருந்தன. கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்குச் செல்லும் சாலைகளில் ஒன்று இப்பகுதியின் வழியாகச் செல்கிறது. மத் 19:1-இன்படி இயேசுவும் அவருடைய சீடர்களும் இதன் வழியாகத்தான் சென்றார்கள்.

முற்காலத்தில் கிலயாது, அம்மோன், மோவாபு ஆகிய நாட்டினர் இங்கு வாழ்ந்தனர். மக்கபேயர்களின் காலத்தில் யூதா மக்கபேயு கிலயாதிலிருந்த யூதர்களை விடுவித்து அவர்களை யூதேயாவுக்குக் குடியேறும்படி செய்தார் (1 மக் 5:9-52). யோவான் இரிக்கானு (கி.மு. 135-104) என்பவர் இப்பகுதியை வென்று, யூத மதத்திற்குக் கட்டாயமாக மதமாற்றம் செய்தார் என்று கருதப்படுகிறது. இதே கொள்கை அலக்சாந்தர் யன்னேயு (கி.மு. 103-76) என்பவராலும் பின்பற்றப்பட்டது. இவர் கலிலேயாவையும், யோர்தான் அக்கரைப் பகுதியையும் யூத மதத்திற்கு மாற்றினார். கி.மு. 76-இல், இவர் மலேரியா நோயால் இப்பகுதியில் இறந்தார். இயேசுவின் காலத்தில் இம்மாவட்டம் ஏரோது அந்திப்பாவின் ஆட்சியின்கீழ் இருந்தது. மேலும், யூதர்களே இங்கு அதிக எண்ணிக்கையில் வாழ்ந்தனர். உரோமையருக்கு எதிராக எழுந்த கலகத்தில், இப்பகுதியில் வாழ்ந்த யூதர்கள் கலிலேயாவில் வாழ்ந்த மற்ற யூதர்களுடன் சேர்ந்து கொண்டனர். நீரோவின் ஆட்சியில் இது 2-ஆவது ஏரோது அகிரிப்பாவிடம் கொடுக்கப்பட்டது. இவரது ஆட்சிக்குப் பின் இது சீரியாவின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் இப்பெயர் காணப்படவில்லை. ஆனால், எபிரேய அல்லது அரமேயிக்குச் சொல்லின் மொழி பெயர்ப்பான, "யோர்தான் அக்கரைப்பகுதி" (மத் 4:25; மாற் 3:8) என்ற பெயரே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. யோவா 1:28-இல் திருமுழுக்கு யோவான் யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானியாவில் திருமுழுக்குக் கொடுத்துவந்ததாகக் கூறப்படுகிறது. மத் 19:1-இன்படி இயேசுவும் அவருடைய சீடர்களும் கலிலேயாவை விட்டு இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. மத்தேயு, இயேசு இப்பகுதியில் நோயாளிகளைக் குணமாக்கி மக்களுக்குப் போதித்தார் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

**பெரா (BERA – கொடை)**

இவர் சோதோம் நாட்டின் அரசர். இவர் ஏலாமிய அரசர் கெதர்லகோமரை எதிர்த்துப் போர் புரிந்த பொழுது, அவரால் தோற்கடிக்கப்பட்டார் (ஆதி 14:2.8.10-11 17.22).

**பெராக்கா (BERACHA - ஆசீர்)**

சிக்லாகு என்னுமிடத்தில் தலைமறைவாயிருந்த தாவீதிடம் வந்துசேர்ந்த ஆற்றலும், திறமையுமிக்க படைவீரர்களில் இவரும் ஒருவர். இவர் பென்யமின் குலத்தினரான சவுலின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 12:3).

**பெராக்காப் பள்ளத்தாக்கு (BERACHA. VALLEY OF - ஆசீரின் பள்ளத்தாக்கு)**

இப்பள்ளத்தாக்கு யூதாவின் பாலைவனத்தில் தெக்கோவாவுக்குத் தெற்கில் உள்ளது. இது பெத்லகேமுக்குத் தென்மேற்கில், கிர்பெத் பெரேய்குத்துக் கருகிலுள்ள வாடி ஏல்-அருபாவுடன் அடையாளம் காட்டப்படுகிறது.

யோசபாது அரசரது பகைவர்களாகிய மோவாபியர், அம்மோனியர், செயீர்,

மேலைநாட்டவர் போன்றவர்களை ஆண்டவர் முறியடித்ததற்குப்பின், அரசன் தனது மக்களையெல்லாம் இப்பள்ளத்தாக்கில் (ஆசீரின் பள்ளத்தாக்கு) ஒன்றுகூட்டி, கடவுளைப் போற்றினார் (2 நாள் 20:26).

யோவேல் நூலில் (4:2.12 தொ) கூறப்பட்டுள்ள 'யோசபாத்துப் பள்ளத்தாக்கு' என்பது இந்தப் பள்ளத்தாக்கினைக் குறிப்பிடலாம் அல்லது சுட்டிக்காட்டலாம்.

**பெராயா (BERAIAH – யாவே படைத்தார்)**

பென்யமின் குலத்தினரான இவர் சிமயியின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8.21). இவர் சகரயிமின் வழித்தோன்றல் ஆவார்.

**பெரி (BERI)**

இவர் ஆசேர் கோத்திரத்தின் தலைமுறை அட்டவணையில் சோபகுவின் மகனாகக் குறிக்கப்படுகிறார் (1 நாள் 7:36). ஆதி 46:17-18; எண் 26:44-47-இல் உள்ள இணையான தலைமுறை அட்டவணைகளில் இப்பெயர் காணப்படவில்லை. இஃது இனப்பெயர் முதல்வருடைய பெயராக இருக்கலாம். இது நிச்சயமாக, பெரீயர் என்பவர்களோடு தொடர்புடையது அன்று. காரணம், இந்தச் சொல் அதே எபிரேய வேர்ச்சொல்லிலிருந்து வரவில்லை.

**பெரிசயு (PERSEUS)**

இவர் மூன்றாம் பிலிப்பின் கள்ளத் தொடர்பினால் அவனுக்குப் பிறந்தமகன். பெரிசயு கித்திமிம் அரசன் என்று அழைக்கப்படுகிறான். இவன் கி.மு. 168-இல் எமிலியு பவுலு என்பவரால் பித்னா போரில் தோற்கடிக்கப்பட்டான். இதற்குப் பிறகு மாசிதோனியா உரோமையர் ஆட்சியின்கீழ் வந்தபோது பெரிசயு கைதியாகக் கொண்டு செல்லப்பட்டான் (1 மக் 8:5).

**பெரிசியர் (PERIZZITE – கிராமத்தைச் சேர்ந்தவர்கள்)**

இவர்கள் இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறுமுன், அங்கு வாழ்ந்தவர்கள். பெரிசியர் என்ற பெயர் பழைய ஏற்பாட்டில் 23 முறை பயன் படுத்தப்படுகிறது. ஆனால், இவர்களைப் பற்றி ஏதும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இவர்கள் கானானியருடன் குறிப்படிப்படுகின்றனர் (ஆதி 13:7; 34:30; நீதி 1:45). இரபாயிம் பெரிசியருடன் குறிப்பிடப்படுகின்றனர் (யோசு 17:15). இதனால் அறிஞர் பலர் பெரிசியர் யோர்தானின் அக்கரைப் பகுதியில் வாழ்ந்ததாகக் கருதுகின்றனர். இங்குக் குறிக்கப்படும் யோசுவாவின் ஆலோசனை, "எப்பிராயிம் மலை நாட்டிலுள்ள மரங்களை வெட்டிவிட்டு நிலங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்" எனவும் பொருள்படும். இவர்கள் மற்ற இனத்தவரான கானானியர், இத்தியர், எமோரியர், இவ்வியர், எபூசியர் ஆகியவர்களுடன் குறிப்பிடப்படுகின்றனர் (ஆதி 15:20; யாத் 3:8.17; 23:23; 34:11; உப 7:11; 20:17; நீதி 3:5; 1 அர 9:20; 2 நாள் 8:7; நெகே 9:8). பெரிசி என்னும் சொல் அமர்னாவின் கடிதங்களில் குறிப்பிடப்படுகிறது. பெரிசி என்ற சொல்லும், விவிலியப் பெரிசியரும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. 1 அர 9:20 (= 2 நாள் 8:7) – சாலமோன் கொல்லப்படாமலிருந்த பெரிசியரை அடிமைகளின் கட்டாய வேலையைச் செய்யச் செய்தார் என்று கூறுகின்றது.

**பெரிய குரு, தலைமைக்குரு (HIGH PRIEST)**

பழைய ஏற்பாட்டில் இவர் யாவேக்கும் மக்களுக்கும் இடையீட்டாளர் ஆவார். இவர் மற்றக் குருக்களைப்போல் பலிகளையும் மற்றச் சடங்குகளையும் செய்வதோடு, ஆண்டுதோறும் பாவநீக்க நாளில் நாட்டின் பாவங்களுக்குப் பரிகாரமும் செய்தார். இவர் பெரியகுரு என்றும் தலைமைக்குரு என்றும் அழைக்கப்படுகிறார் (2 அர 25:18; 2 நாள் 19:11; எரே 52:24).

இவர் ஆரோனின் மகன் எலயாசரின் வழித்தோன்றலாய் இருந்தார்; வாழ்வு முழுவதும் பெரிய குருவாய் இருந்தார் (எண் 25:10-13).

ஏழுநாட்கள் சடங்கில் இவர் திருநிலைப்படுத்தப்பட்டார். இதில் இவரது பதவிக்குரிய சிறப்பான ஆடைகள் அளிக்கப்பட்டன. சடங்கில் அபிடேகம் செய்தலும், பலிகளும் உண்டு (யாத் 29:1-37; லேவி 8:5-35).

மற்றச் சாதாரண லேவியர், குருக்களைவிட உயர்ந்த சடங்குத் தூய்மைக்கு உட்பட்டிருந்தார் பெரிய குரு. இறந்த உடல்களை, அஃது அவருடைய பெற்றோர்களுடையதாக இருந்தாலும், பெரிய குரு தொடக்கூடாது. துக்கத்தின் அடையாளமாகத் தம் ஆடையைக் கிழித்துக்கொள்ளவோ, மயிரை வளரவிடவோ கூடாது. இவர் கைம்பெண்ணையோ, விவாகரத்து செய்த பெண்ணையோ, வேசியையோ திருமணம் செய்யக்கூடாது. இஸ்ராயேலின் கன்னிப் பெண்ணைமட்டும் திருமணம் செய்யலாம் (லேவி 21:10-15). பெரிய குரு செய்த எந்தப் பாவமும் நாடு முழுவதின் மேலும் குற்றம் கொண்டுவந்தது. ஆகவே, சிறப்பான பலிகளால் பரிகாரம் செய்ய வேண்டும் (4:1-12). ஒரு பெரிய குரு இறந்தபோது அடைக்கல நகர்களில் தஞ்சம் புகுந்திருந்த கொலையாளிகள் விடுதலை அளிக்கப்பட்டனர் (எண் 35:25.28.32).

யாத்திரைநூல் பெரியகுரு அணிய வேண்டிய உடைகளை விரிவாக விவரிக்கிறது (யாத் 28:2-39). இவை அங்கி அல்லது புற ஆடை, ஏபோது, மார்புப்பட்டை, கோடிட்ட உள்ளாடை, கச்சை ஆகியவையாகும். ஏபோதும் மார்புப்பட்டையும் நிலையாக இணைக்கப்பட்டதாகத் தெரிகிறது (28:38). புற ஆடை -கைகளில்லாததாக இருந்தது. இது நீலநிறத்திலும், குதிக்கால் வரை நீண்டதாயும் முனைகளில் குஞ்சலங்களைக் கொண்டதாகவும் இருந்தது (காண்க. எண் 15:38-4). குஞ்சலங்களுக்கு இடையில் பொன்மணிகளும் இணைக்கப்பட்டன. இந்தப் புற ஆடை ஏபோதுக்கடியில் அணியப்பட்டது. உள்ளாடை கைகளைக் கொண்டிருந்தது. இதுவும் குதிக்கால்வரை நீண்டதாயிருந்தது (யாத் 28:39). "ஆண்டவருக்கு அர்ப்பணம்" என்று பொறிக்கப்பட்ட -பசும்பொன்னால் செய்யப்பட்ட- ஒரு பட்டம் தலைப்பாகையின் முன் நீல நாடாவால் இணைத்துக் கட்டப்பட்டது (28:36). இது "புனித முடி" என்றழைக்கப்பட்டது. இஃது இஸ்ராயேல் மக்கள் அளிக்கும் புனிதப்படையல்கள் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளை நீக்கும் (28:38). இந்தப் புனிதமுடி மூன்றடுக்குள்ள மகுடம் கொண்டு தலைப்பாகையின்மேல் அணியப்பட்டது என்று யோசிப்பசு கூறுகிறார்.

தீஸ்ரி மாதம் பத்தாம்நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட பாவநீக்க நாள் வழிபாடு இஸ்ராயேலரின் மிகப்பெரிய விழாக்களில் ஒன்றாகும். மோசேயின் சட்டத்தில் குறிக்கப்பட்ட நோன்பு நாள் இஃது ஒன்றுதான். இந்தக் கொண்டாட்டத்தில் பெரியகுரு மையம் வகித்தார். விழாத்தொடங்குவதற்கு ஏழுநாட்கள் முன்பே தம்வீட்டை விட்டு, ஆலயத்தில் ஓர் அறையில் வசித்தார். பாவநீக்க நாளில் நீராடியபின் உள்ளாடை, கச்சை, தலைப்பாகை ஆகிய புனித ஆடைகளை அணிந்து (லேவி 16:4) பலி செலுத்தினார். அதன்பின், நார்ப்பட்டாலான புற ஆடை அணிந்து பாவநீக்கச் சடங்குகளைச் செய்தார். முதலில் ஓர் இளங்காளை அவர் முன் கொண்டு வரப்பட்டது. அதன் மேல் தம் கைகளை வைத்துத் தம்முடையவும், தன் குடும்பத்தினுடையவும் பாவங்களை அறிக்கையிட்டார். பின் அதைப் பலியிட்டு, அதன் இரத்தத்தை ஒரு கையிலும், மற்றொரு கையில் தூபப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு பெரிய குரு திருத்தூயகத்துள் புகுந்து, அங்குத் தூபம் காட்டினார். பின், இரக்க இருக்கையின்மேல் ஒரு முறையும், பேழையின் முன் ஏழுமுறையும் இரத்தத்தைத் தெளித்தார். இரண்டாவதாக, ஒரே மாதிரியான இரண்டு வெள்ளாடுகளில் திருவுளச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகப் பலியிடப்பட்டது. வெள்ளாட்டின் இரத்தத்தோடு மீண்டும் திருத்தூயகத்துள் புகுந்து

முன்புபோலவே செய்தார். பின்பு, மீதியிருந்த இரத்தத்தைத் கலந்து தூபப்பீடத்தின் மேலுள்ள முகப்புகளில் தெளித்தார் (யாத் 30:1-10). முதல் இரண்டு பலிகளும் வழிபாட்டில் ஏற்படக்கூடிய தீட்டை நீக்கப் பயன்பட்டன. மூன்றாவது பலி மக்களின் குற்றத்தை நீக்கப் பயன்பட்டது. அதன்பிறகு, பெரிய குரு தன்கையை இரண்டாம் வெள்ளாட்டின்மேல் வைத்து மக்களின் பாவங்களை அறிக்கையிட்டு, இந்தப் "போக்கு ஆடு" அல்லது பழியாடு பாலைநிலத்திற்குத் துரத்தப்பட்டு அங்குக் கொல்லப்பட்டது. மீளவும், இஸ்ராயேல் குற்றமில்லாது இறைவன் முன் நிற்க முடியும்.

இப்பலிகளை முடித்தபின் பெரிய குரு தன் நார்ப்பட்டாடை உடைகளைக் களைந்து விட்டு, பின் தூய்மையான இடத்தில் குளித்துத் தன் ஆடைகளை அணிந்துகொண்டு, தகனப்பலியையும் மக்களின் தகனப்பலியையும் தனக்காகவும் மக்களுக்காகவும் பாவப் பரிகாரமும் செய்தார். பாவப்பரிகாரப் பலியின் கொழுப்பும் பலிபீடத்தில் எரிக்கப்பட்டது (லேவி 16:24-25). பின்னொரு முறை சடங்குக் குளிப்புச் செய்தபின், நார்ப்பட்டாடை உடுத்தி, திருத்தூயகத்தில் கடைசியாக நுழைந்து, பலிசெலுத்திய காலம் முழுவதும் எரிந்து கொண்டிருந்த தூபப்பாத்திரத்தை வெளியே எடுத்துவந்தார்.

நாடு கடத்தலுக்குப்பின் பெரியகுரு பதவி வெவ்வேறு பரிணாமங்கள் பெற்றது; மதிப்பும் மேன்மையும் பெற்றது. கி.மு. 520-இல் பெரியகுரு யோசுவாவும், தாவீது குலத்தைச் சேர்ந்த ஆளுநர் செருபாபேலும் சமமாக (ஆகா 1:1.12.14;2:2.4), "யாவேயின் அபிடேகம் பெற்ற இருவராக"க் (செக் 4:14) கருதப்படுகின்றனர்.

அரசியல் ஈடுபாடு மேன்மேலும் முதன்மை பெறுகிறது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டைப்போல் தொடக்கத் தலைமைச் சங்கமாகக் கருதப்படும் குருக்கள், மறை நூல் அறிஞர்கள், குடும்பத்தலைவர்கள் ஆகியோர் அடங்கிய குழுவிற்குப் பெரிய குரு தலைமை தாங்குகிறார். கிரேக்கர்கள் காலத்தில் இப்பதவியைப் பெற தீவினை செய்வோரும், பேராசை மிக்கவர்களும் முயற்சி செய்தனர். ஆனால், மக்கபேயர் கிளர்ச்சியின் காலம் பெரிய குருபதவியின் மகிமையை ஓரளவு சீர்ப்படுத்தியது. கிறிஸ்தவர்களுக்கு நாசரேத்தூர் இயேசுவே உண்மையான நிறைவான பெரிய குருவாவார் (காண்க. 5:5-10; 6:20). அவரே முழு உலகின் பாவங்களைத் தன்மேல் ஏற்றுக்கொண்டார்; இறைவனுக்கும் மனுகுலத்திற்கும் இடையில் புதிய உடன்படிக்கையின் இடையீட்டாளர் ஆவார்.

யோவான் 17-இல் வரும் செபமும், உயர் அறையில் அளிக்கப்பட்ட உரையின் கடைசிப்பகுதியும் (யோவா 13-17) பெரிய குருவின் செபம் என்று பொதுவாகக் கூறப்படும்; இயேசுவின் செபமாகப் பதிவு செய்யப்பட்ட நீண்ட செபமாகும். தன் சீடர்களுக்கும், அவர்கள் வழியாக விசுவசிப்பவர்களுக்கும் அவர் காட்டும் பரிவும், கிறிஸ்துவின் வெற்றி பற்றிய வீறார்ந்த எதிர்பார்ப்பும் இச்செபத்தின் சிறப்புப் பண்புகளாகும். 17:1-5-இல், இயேசு அண்மையில் வரவிருக்கும் தனது பாடுகளைப் பற்றிச் செபிக்கிறார்; தன்னில் இறைவனது சித்தம் நிறைவேற வேண்டும் என்று வேண்டுகிறார். 17:6-19 இல், இயேசு தம சீடர்களுக்காக வேண்டுகிறார். இயேசு தம்மை அர்ப்பணிப்பது (17:19), தமது இறப்பினால் இறைவன் தமது சித்தத்தைச் செய்வதற்கு அவரை ஒதுக்கி வைக்கிறது. இறுதியாகச் சீடர்களின் பணியின் விளைவாக, விசுவசிப்பவர்களுக்காகவும் இயேசு மன்றாடுகிறார் (17:20-26). தந்தைக்கும், மகனுக்கும் உள்ள ஒற்றுமைக்கொத்த ஒற்றுமையை அளித்து அவர்களை மகிமைப்படுத்தும்படி மன்றாடுகிறார்.

**பெரிய மனிதன் (GREAT)**

சக்தியுடன் கூடிய சிறப்புப் பட்டம். மந்திரவாதி சீமோன் சமாரிய மக்களை மயக்கி தான் ஒரு பெரிய

மனிதனாகக் காட்டிக்கொண்டு வந்தான். மாபெரும் சக்தி எனும் கடவுளின் வல்லமை இவனே என்று சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் அவன் சொல்வதைக் கேட்டனர் (அ.ப. 8:9-10). ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு அவன் உரோமைக்குச் சென்றதாகவும், அங்கு அவன் கடவுளாகக் கருதப்பட்டதாகவும், மேலும் சமாரியர்களும், மற்ற நாட்டினரும் முதல் கடவுளாகக் கூறினர் என்றும் யுஸ்தீன் கூறுகின்றார்.

புதிய ஏற்பாடு "இவ்வல்லமையை" வானகத் தூதர்களோடும், பேய்களோடும் தொடர்புபடுத்திப் பேசுகின்றது (உரோ 8:38; 1 கொரி 15:24; எபே 1:21; 1 பேதுரு 3:22). மாற்கு 14:62-இல் வல்லமையைக் கடவுளுக்கு ஆகுபெயராகப் பயன்படுத்துகின்றார். "வல்லமையுள்ள வலப்புறத்தில் வீற்றிருப்பது" லூக் 22:69-இல் "வல்ல கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருப்பார்" என்று விரிவாக்கப் படுகிறது. இவ்வாறு வல்லமை மற்றும் பெரிய என்ற சொற்களைச் சிமியோனுக்குத் தொடர்புபடுத்தி நான்கு விளக்கங்கள் கொடுக்கலாம். அ) இவனே கடவுளின் வல்லமையாக் கருதிக் கொள்ளலாம் ஆ) நிலாவைப் போன்ற கடவுளின் பெரிய வல்லமையாகக் கொள்ளலாம். இ) வானதூதனாகவோ, பேயாகவோ கொள்ளலாம். ஈ) இறைவனாகவே கொள்ளலாம். சீமோனின் சீடர்கள் பிற்காலத்தில் இவ்வாறுதான் விளக்கம் அளித்தனர். ஆனால், இவை பற்றிய மூலங்கள் உறுதியற்றவையாக இருப்பதால் நாம் எதையும் உறுதியாகக் கூறமுடியாது.

## பெரிய யாக்கோபுவின் பணி (JAMES, THE GREAT, ACTS OF)

இது, கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு போலி நூலாகும். இந்நூல் செபதேயுவின் மகன் யாக்கோபுவின் மறைசாட்சி மரணம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூல் இன்று இலத்தீன் மொழியில் மட்டுமே உள்ளது. உரோமையின் கிளமந்து இந்நூல் பற்றி குறிப்பிடுகின்றார் யாக்கோபு, எர்மோகேன் மற்றும் பிலேத்து ஆகிய மந்திரவாதிகளுடன் நடத்திய நீண்ட போராட்டம் பற்றிக் கூறுகின்றது. யூதர்களுடன் யாக்கோபு புரிந்த தர்க்கப்போரும் இதில் கூறப்படுகிறது. அப்போஸ்தலர் பணிநூலில் யாக்கோபின் மறைசாட்சி மரணம் பற்றி ஒரு சிறு குறிப்பே உள்ளது (அ.ப. 12:1-2). பேதுருவுக்கும் மந்திரவாதி சீமோனுக்கும் ஏற்பட்ட போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு, இந்நூல் தோன்றியிருக்கலாம்.

## பெரிய வியாழன் (MAUNDY THURSDAY)

இஃது இயேசு உயிர்த்த விழாவுக்கு முந்திய வியாழக்கிழமையாகும். தொடக்ககாலப் பாரம்பரியப்படி, இயேசுவின் இறுதி இரவு உணவு நடந்ததும் நற்கருணை நிறுவப்பட்டதும் இந்த இரவிலேதான். இன்று இயேசுவைப் பின்பற்றி, கால்களைக் கழுவும் சடங்கு திருச்சபையில் கடைப்பிடிக்கப்படுகிறது. நற்கருணையும் புதிய ஏற்பாட்டுக் குருத்துவம் நிறுவப்படுதலும் நினைவு கூரப்படுகிறது.

## பெரிய வெள்ளி (GOOD FRIDAY)

இஃது இயேசு உயிர்த்த விழாவுக்கு முந்திய வெள்ளிக்கிழமையாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த நிகழ்ச்சியை நினைவுகூர்கிறது (மாற் 15:42; லூக் 23:54; யோவா 19:31; காண்க. மத் 27:62). திருச்சபையில் இது பாரம்பரியமாக நோன்பும் தபசும் செய்யும் நாளாகும். மாலை மூன்று மணியிலிருந்து, இயேசு சிலுவையில் தொங்கியபோது அனுபவித்த வேதனையை நினைவு கூர்ந்து (மத் 27:45; மாற் 15:33; லூக் 23:44) வழிபாடு செலுத்தப்படுகிறது.

## பெரீதா (PERIDA)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய சாலமோனின் ஊழியர் குடும்பம் அல்லது குழுவின் தலைவர் (நெகே 7:57). இதற்கு இணையான விவரிப்பில் இவர் பெருதா என்றழைக்கப்படுகிறார் (எஸ் 2:55).

**பெரீயா (BERIAH – சிறப்பு வாய்ந்த, முதன்மை வாய்ந்த)**

1. இவர் ஆசேரின் நான்காவது புதல்வர். இவர் எபேருக்கும், மல்கியேலுக்கும் தந்தை (ஆதி 46:17; எண் 26:44.45; 1 நாள் 7:30-31). இவர் பெரீயர் வம்சத் தலைவனாகக் கருதப்படுகின்றார் (எண் 26:44).

2. இவர் எப்பிராயிமின் புதல்வர். எப்பிராயிமினுடைய மற்றப் புதல்வர்கள் காத்தின் மக்களால் கொலை செய்யப்பட்டபின் பிறந்த இவருக்குப் பெரீயா என்ற பெயரிடப்பட்டது. ஏனெனில், "தீங்கு" அவர் வீட்டை வந்தடைந்தது.

3. இவர் எல்பாகாலின் நான்காவது புதல்வர். இவரும் செமாவுடன் சேர்ந்து காத்தின் குடிகளை முறியடித்து, அய்யலோனில் குடியிருந்த மக்களுக்குத் தலைவராய் விளங்கினார். ஒன்பது புதல்வர்களுக்குத் தந்தை (1 நாள் 8:13.16).

4. லேவிய குலத்தினரான, கெர்சோமிய வம்சத்தைச் சேர்ந்த சிமயியின் நான்காவது புதல்வராக இவர் கருதப்படுகின்றார் (1 நாள் 23:10-11). இவருக்கும் இவர் சகோதரர் எயுசுக்கும் புதல்வர் பலர் இல்லாததால் ஒரே மூதாதையரின் குடும்பத்தினராய்க் கணக்கிடப்பட்டனர்.

**பெரீயர் (BERIIES)**

பெரீயா (1)வின் வழித்தோன்றல்கள் (எண் 26:44).

**பெருகை (PERGA)**

இது பழைய பம்பிலியாவின் புகழ்வாய்ந்த நகரங்களுள் ஒன்று. இது பம்பிலியாவின் சமவெளியில் அமைந்திருந்தது. இந்நகரம் கடற்கரையிலிருந்து வரும் ஆபத்துகளினின்று அருகிலுள்ள குன்றின் மூலம் பாதுகாக்கப்பட்டது. இந்நகரம் முதன் முதலில் அமைக்கப்பட்ட காலம் தெளிவாகத் தெரியவில்லை. திரோசன் போருக்குப் பிறகுதான் யூதர்கள் இங்குக் குடியேறியிருக்க வேண்டும். பெருகையின் தேவதையான அர்தேமிசு, வனாசா பிரேய்யா என்று அழைக்கப்பட்டது.

பாரசீகர்களின் காலத்தில் பெருகையின் வரலாறு தெளிவாக இல்லை. கி.மு. 334-இல் அலக்சாந்தர் பெருகையிலிருந்து வழிகாட்டிகளைப் பெற்று, கிழக்கில் லீக்கியாவிலிருந்து செல்லும்போது ஒரு முறையும், பிரிகியாவுக்குச் செல்லும்போது மறுமுறையும் பெருகை வழியாகச் சென்றார். கிரேக்கர்கள் காலத்தில் இங்குச் செலூக்கியப் படைகள் இருந்தன. ஆனால், கி.மு. 188-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்நகரம் சுதந்தரம் பெற்றது. பெருகையின் நாணயங்கள் இக்காலத்திலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை பயன்பட்டன. கி.மு. 80-79-இல் அர்தேமிசுக் கோயிலின் கருவூலம் கொள்ளை அடிக்கப்பட்டது. அங்குள்ள கட்டடங்களும், நினைவுச் சின்னங்களும் இங்கு உரோமையர் ஆண்டதைப் பறைசாற்றுகின்றன.

முதல் மறைபரப்புப் பயணத்தின்போது பவுலும் பர்னபாவும் பாப்போவிலிருந்து பெருகைக்கு வந்தனர் (அ.ப. 13:13). யோவான் மாற்கு அவர்களைப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினார் (13:14). பெருகையிலிருந்து பயணத்தைத் தொடர்ந்து பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவை அடைந்தனர்.

இந்நகரம் இருந்த இடத்தில் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது ஒரு நகர உள்ளரணும், சுவர்களினால் சூழப்பட்ட ஒரு தாழ்ந்த நகரமும், பல நினைவுச் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. நகரின் கிழக்கு வாயிலில் உரோமையரின் அங்காடி ஒன்றும், நகரில் ஒரு நீச்சல் குளமும் இருந்தன. நகருக்கு வெளியே ஒரு கலையரங்கமும், உரோமையர் கலையில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கமும் இருந்தன. இதில் சுமார் 12,000 பார்வையாளர்கள் அமரலாம். அர்தேமிசுத் தேவதையின் கோயில் உயரமான பகுதியில் இருந்தது. நான்கு கிறிஸ்துவ ஆலயங்களும், இரண்டு பேராயலங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இது, செஸ்துருஸ் ஆற்றின் கிழக்கில் 8 கி.மீ. தொலைவிலும் கடற்கரையிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள அந்தாலியாத் துறைமுகத்திற்குக் கிழக்கு-வடகிழக்கில் உள்ள இக்கால முர்த்தான என்ற கிராமத்துக்கருகில் அடையாளம் காட்டப்படுகிறது.

**பெருங்கடல் (GREAT SEA)**

மேற்காசிய மக்கள் மத்திய தரைக்கடலை இப்பெயரால் குறிப்பிட்டனர். இக்கடல் பெனிசிய, ஆகியன், அதிரியாத்திக்கு, ஐயோனிய, தீரியக்கடல்கள் என்று பிரிக்கப்பட்டிருந்தது.

இஃது அவர்கள் அறிந்த கடல்களை விடப் பெரியதாய் இருந்ததால், எபிரேயரும் இதைப் பெருங்கடல் என்றே அழைத்தனர் (எண் 34:6; யோசு 1:4; எசே 47:10). இது "மேற்குக் கடல்" என்றும் அழைக்கப்பட்டது (உப 11:24; 34:2; யோவே 2:20; செக் 14:8). பழங்கால எபிரேயர்கள் முக்கிய திசைகளைக் குறிக்க கிழக்கே நோக்கிய போது, பெருங்கடல் அவர்களுக்குப்பின் இருந்தது. இது "யோப்பாக்கடல்" என்றும் குறிக்கப்பட்டது (எஸ் 3:7); பெலிஸ்தியர் கடல் என்றும் அழைக்கப்பட்டது (யாத் 23:31). பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் இது வெறுமனே கடல் என்றும் (யோசு 16:8;1 அர 5:9; 18:43; எரே 46:18; யோனா 1:4), புதிய ஏற்பாட்டில் "கடலோரம்" (அ.ப. 10:6.32) என்றும் குறிப்பிடப்பட்டது.

பெனிசியர்கள் கடல் பயணம் செய்வதில் வல்லவர்கள். அவர்களது கப்பல்கள் மத்தியதரைக் கடல் தீவுகளுக்குச் சென்று வந்தன. இதற்கு மாறாக, எபிரேயர்கள் கடல் பயணத்தில் சிறந்தவர்கள் அல்லர். சாலமோன் காலத்தில் ஒரு கப்பற் படை வைத்திருந்தனர். இது செங்கடலின் கரையில் எட்சியோன்-கெபேரில் கட்டப்பட்டுப் பெனிசியர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது (1 அர 9:26-27). யோசபாத் கட்டிய கடற்படை அங்கேயே அழிந்து போயிற்று (22:47-49).

எபிரேயர்கள் மத்தியதரைக்கடலில் கடல் வாணிபம் செய்தனர் என்பதற்கு ஏட்டுச் சான்றுகள் இல்லை. இதற்குக் காரணம்– அவர்கள் பாலைவன மக்கள் என்பதேயாகும் என்பர் சிலர். அவர்கள் கடற்கரையில் நல்ல துறைமுகங்கள் இன்மையே மேலான காரணமாக இருக்கலாம். பெனிசியாவிலிருந்து பெலிஸ்தியா வரையிலுள்ள பாலஸ்தீனக் கடற்கரையின் நீளம் 160 கி.மீ. ஆகும். ஆனால், இதில் இயற்கையான துறைமுகங்கள் இல்லை. நல்ல பருவகாலத்தில் அதன் கடற்கரை நகர்களில் (தோர், யோப்பா, அக்கோ) கப்பல்கள் தங்கிச் செல்லலாம். சிலசமயம் ஒரு வகையான கப்பல் போக்குவரத்து நடக்கலாம். இவ்வாறு, சாலமோன் காலத்தில், லெபனோனிலிருந்து யோப்பாவுக்குக் கட்டுமரங்களில் மரங்கள் கொண்டு வரப்பட்டன (2 நாள் 2:16). விவசாயத்தை அடிப்படைத் தொழிலாகக் கொண்ட எபிரேயர்கள் தரைவழியை முக்கியமாகக் கருதினர்.

எபிரேயர்கள் கானான் நாட்டின் எல்லைகளைக் குறிக்கும்போது, பெருங்கடலை மேற்கெல்லையாகக் குறித்தனர் (எண் 34:6; யோசு 9:1). யோசு 15:12-இன்படி, யூதாவின் மேற்கு எல்லை- பெருங்கடலாகும். இதனை அசீரிய, பாபிலோனியப் போர் ஏடுகள் குறிப்பிடுகின்றன.

செங்கடலின் மேல் யாவே கொண்டிருக்கும் அதிகாரத்தை எபிரேயர்கள் குறிப்பிடுகின்றனர். அதேபோல் அத்தகைய அதிகாரத்தை மத்தியதரைக் கடலின் மேல் யாவே கொண்டிருப்பதாகக் குறிப்பிடவில்லை. ஆயினும், கடலில் யாவே புயலை உண்டாக்குகிறார் (யோவா 1:4); கொந்தளிக்கும் கடல்மீது ஆட்சி செய்கிறார் (சங் 89:9); "கடலுக்கு மேலாக ஆண்டவர் தம் கையை ஓங்கியுள்ளார்" (எசா 23:11). இவையெல்லாம் யாவே, கடல்மேல் அதிகாரம் கொண்டிருந்தார் என்று காட்டுகின்றன.

பெனிசியர்களும் கிரேக்கர்களும் மத்திய தரைக்கடலைக் கடற்பயணத்திற்குப் பெரிதும் பயன்படுத்தினர். உரோமையர்களும் அவ்வாறே பயன் படுத்தினர். அதை "எங்கள் கடல்" என்றழைத்தனர். கி.மு. 63-இல் பாம்பே

பாலஸ்தீனத்தை வென்றபின், கடற் பயணம் இன்னும் அதிகமாயிற்று. தானியங்களை ஏற்றிய கப்பல்கள் அலக்சாந்திரியாவிலிருந்து இத்தாலிக்குச் சென்றன. குளிர்காலப் புயலால் ஏற்படும் ஆபத்துக்களை, கப்பல் தலைவன் எதிர்பார்க்காது புறக்கணிக்கும்போது ஏற்படுவது கப்பல் உடைதலாகும் (அ.ப. 27:6.11). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கப்பல் போக்குவரத்து வளர்ச்சியடைந்தது பவுல், சீலா, பர்னபா போன்ற நற்செய்தி பரப்பாளர்களுக்குப் பெரிதும் உதவியது.

**பெருதா (PERUDA** – பிளவுபட்ட)

இவர் பாபிலோனின் அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த சாலமோன் ஊழியர்களின் குடும்பத்தலைவர் (எஸ் 2:15). இப்பெயர் நெகே 7:57-இல் பெரீதா என்றுள்ளது.

**பெருந்தீனிக்காரன் (GLUTTON)**

இதைக் குறிக்கும் எபிரேயச்சொல்- “அர்பமான,” “பயனற்ற” என்ற பொருளுடைய சொல்லிருந்து வருகிறது (உப 21:20; பழ 23:21; 28:7; மத் 11:19; லூக் 7:34; காண்க. தீத் 1:12).

புதிய ஏற்பாட்டில் இச்சொல் பொது இகழுரையாகப் பயன்படுகிறது. தீராப் பெருவேட்கையுடையவன், வீணன் அல்லது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது செயலில் மட்டு மீறிய ஆசை கொண்டுள்ள போகி ஆகியவர்கள் இச்சொல்லால் குறிக்கப்படுகின்றனர். இந்த இரு பொருளிலும் இச்சொல் இயேசுவை இழிவுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 11:9; லூக் 7:38). செல்வரும் இலாசரும் என்ற உவமையில் வரும் செல்வர், ஒரு பெருந்தீனிக்காரராகச் சித்தரிக்கப்படுகிறார் (லூக் 16:19-31).

**பெருமை (PRIDE)**

I. தாழ்ந்தவர்கள் என்னும் உணர்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, கிரேக்கர்கள், முழுவதும் மனிதப்பண்புடைய ஞானத்தை நோக்கி அடிக்கடி செயலாற்றினர். இறைவனுடைய படைப்பு மற்றும் மகன் என்னும் நிலையில் விவிலியம் மனிதநிலையின் பெருமையினைக் காண்கிறது. பாவத்திற்கு அடிமையாக இல்லாதவரை, மனிதன், இறைவனுக்கு முன்னும் மனிதருக்கு முன்னும் வெட்கப்பட வேண்டியதில்லை. உண்மையான பெருமையானது, அதனுடைய கேலிச்சித்திரமான இறுமாப்பினுடன் எவ்விதத் தொடர்பும் கொண்டிருப்பதில்லை. இது தாழ்ச்சியுடன் முழுமையாக ஒத்திருக்கக்கூடியது. இவ்வாறு கன்னி மரியாள், கடவுளால் மட்டும் படைக்கப்பட்ட தனது தகுதியினை முழுவதுமாய் உணர்ந்தவளாய், புகழ்ப் பாடல் பாடினாள்; எல்லாத் தலை முறைகளுக்கும் முன்பாக அவள் அதை அறிவித்தாள் (லூக் 1:46.50).

பெருமையினைக் குறிப்பிடுவதற்கான உரிய சொல்லை விவிலியம் கொண்டிரா விட்டாலும், இரு மனப்பான்மைகளினின்று கணக்கிடுவதன் மூலம், வருணிக்கிறது. ஒரு மனப்பான்மை எப்போதும் உயர் குணமுடையது; சுதந்தரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இதை எபிரேயர்கள், நிமிர்ந்து நிற்கும் நிலை, உயர்த்தப்பட்ட தோற்றத்தைக் கொண்டிருத்தல், ஒருவரை முழுவதுமாக வெளிப்படுத்துதல் என்னும் பொழிப்புரையால் வெளிப்படுத்து கின்றனர். இது, மொழி மற்றும் நடைமுறைப் போக்கு போன்றவற்றினுடைய முழுச்சுதந்தரத்தினால் காட்டப்படும் சுயமரியாதையாகும். மற்றொரு மனப்பான்மையானது நம்பிக்கையோடு தொடர்புடையது; அதன் சுடரொளியாக உள்ளது. இஃது எதனினும் மகிமை கொள்ளும் செயலாகும் அல்லது ஒருவர் தன்னையும், மற்றவரையும், கடவுளையும் எதிர்கொள்ளவும் நல்ல முகத்தோற்றத்தை அணிந்து கொள்ளவும் ஒரு நிலையை எடுத்தல் என்பதாகும். இம்மகிமை கொள்ளுதல் தன்னுடைய உதவியைக் கடவுளிலோ, மனிதனிலோ கண்டடைவதைப் பொருத்து மேன்மையானதாகவோ, வீணான தாகவோ இருக்கலாம்.

**II. பழைய ஏற்பாடு:**

**1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பெருமை:** இஸ்ராயேலானது அடிமைத்தளையினின்று மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பிறகு, அதனுடைய நுகத்தடிகள் முறிக்கப்பட்ட நிலையில், அவர்கள் பெருமையுடன் நிமிர்ந்து நடக்க முடிந்தது (லேவி 26:13). உறுதியான திருநிலைப்பாட்டினின்று பெற்ற பெருமையின் விளைவாக இறைவனின் புனிதத்திலேயே வாழ வேண்டிய கடமைக்கு, இவ்வுயர் நிலையானது மக்களை உட்படுத்தியது (லேவி 19:2). இது மிக எளிதாக அவமதிப்பாகத் தாழக்கூடிய தெனினும் (சீரா 50:25-26), சிலை வழிபாட்டு மக்களிடமிருந்து விலகியிருக்க வேண்டிய அக்கறையினை, இவ்வுணர்வானது இஸ்ராயேலில் நியாயப்படுத்துகிறது (உப 7:1-6). ஆண்டவர் தம்முடைய முகத்தை மறைத்திருப்பதால் இஸ்ராயேலானது தனது உடலை மண்ணோடு ஒட்டிக் கொண்டிருப்பதுபோல் (சங் 44:24-25), பெருமையானது தாழ்ச்சியில் தொடர்ந்து இருந்தாலும், அது பின்னர் இழிவானதாகிறது. ஆனால், இஸ்ராயேல் தன்னையே தாழ்த்திக் கொள்வதால், "கடவுளைப் பார்த்துத் தனது முகத்தைநிமிர்த்திட" (யோபு 22:26), அதனால் மீண்டும் முடியும். பூமியோடு நசுக்கப்பட்டோ, வானத்தை நோக்கித் தமது பார்வையை நிமிர்த்தியோ உள்ள எவ்வழியிலும், தம்முடைய தேர்வின் பெருமையை மக்கள் தமது இதயத்தில் வைத்துப் பாதுகாக்கின்றனர் (பாரூ 4:2தொ; 2:15; சங் 119:46).

**2. பெருமையும் வீண் தற்பெருமையும்:** பெருமையிலிருந்து இறுமாப்படைவது- ஒருபடியே ஆகும் (உப 8:17). அதனுடைய ஆதரவானது பொய்யானதாக இருப்பதால், பெருமையானது பின்னர்த் தற்பெருமையாக உருவாகிறது. படைப்புகளாக உள்ள நாடுகளுக்கு இடையிலும் தமது அழகு, ஆற்றல் அல்லது செல்வங்களில் பெருமை கொள்ளாமல், இறைவனுக்கு மட்டுமே புகழை அளிக்க வேண்டிய நாடுகளுக்கிடையிலும் (எசா 23:47; எசே 26-32) இத்தகைய சீர்கேட்டைக் காணலாம். ஆனால் இதற்கு முரண்பட்டநிலையில், உண்மையான பெருமையானது, இறைவன்மீது மட்டுமே உள்ள நம்பிக்கையின் ஒளி, அவரது உடன்படிக்கைக்கான பிரமாணிக்கத்தின் மலர்ச்சி ஆகும். ஆன்மீக வழிபாட்டினின்று தங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதாக (எரே 7:4-11), இறைவன் உறையும் ஆலயத்தைத் தாங்கள் கொண்டிருப்பதில் அவர்கள் மகிமை அடைந்தால், அஃது ஒன்றுமற்ற வீணான தற்புகழ்ச்சியே ஆகும். "ஞானி தன் ஞானத்தைக் குறித்துப் பெருமை பாராட்ட வேண்டாம்; வல்லவன் தன்வலிமையைக் குறித்துப் பாராட்ட வேண்டாம்; செல்வன் தன் செல்வத்தைக் குறித்துப் பெருமை பாராட்டவேண்டாம். பெருமை பாராட்ட விரும்புபவன் என்னை அறிந்து புரிந்து கொள்வதிலும், உலகில் பேரன்பும் நீதியும் நேர்மையும் உடையவர் ஆண்டவராகிய நானே என்பதிலும் பெருமை பாராட்டட்டும்" (9:23-24). பெருமைக்கு ஒரே உந்து காரணம் இறை அச்சமேயன்றி (சீரா 1:11; 9:16) செல்வமோ, வறுமையோ அல்ல (10:222) என்று ஞானிகள் இறுதியாக அடிக்கடி கூறுகின்றனர். உண்மையான மகிமையானது ஆண்டவருடைய பிள்ளைகளாக இருந்து (ஞான 2:13), இறைவனைத் தந்தையாகக் கொள்வதாகும் (2:16). இப்போது நீதிமானுடைய பெருமையானது உள்ளார்ந்ததாக மட்டுமில்லாமல், அதனுடைய ஒளிர்வானது இறைப் பற்றற்றவர்களைக் கண்டிப்பதாகவும் உள்ளது. இதற்குப் பதிலடியாக, இறைவனை விசுவசியாதோர் நீதிமான்களைத் துன்புறுத்துகின்றனர். ஒடுக்கப்படுகின்ற நீதிமானின் பெருமையானது, தனது வாழ்வின் காரணராக உள்ளவரை நோக்கி, தனது உரிமைப்படி செய்கின்ற செபத்தில் தன்னையே வெளிப்படுத்துகின்றது. "உம்மை நம்பும் எவரும் வெட்கமுறுவதில்லை" (சங் 25:3; 40:15 தொ).

**3. இறைவனுடைய ஊழியனின் பெருமை:** சங்கீத ஆசிரியர்கள், தங்களது இழிவிற்கு முடிவைக் கொண்டு வர, ஆண்டவரது உடனடித் தலையீட்டை எதிர் பார்க்கின்றனர். தங்களுடைய பகைவர்களைத் தலைகுனியச் செய்தமைக்காக அவர்கள் நன்றி செலுத்துகின்றனர். "என்னை எதிர்த்தவர்களுக்கு மேலாக என்னை உயர்த்தினீர்" (சங் 18:48); "உம் தயவால் எங்கள் வலிமை உயர்த்தப்பட்டுள்ளது" (சங் 89:17). ஆனால், நாடு கடத்தப்பட்ட காலத்தில், அனைவரின் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இழிவின் மூலமாக நீதிமான் மீண்டும் தமது பெருமையில் நிலைநிறுத்தப்படலாம் என இஸ்ராயேல் எண்ணுகிறது. இறைவன் தொடர்ந்து தமது ஊழியனுக்கு ஆதரவு அளித்து, அவரது கையைப் பற்றிப் பிடித்து அவரைப் பாதுகாப்பார் (எசா 42:1.6). அவர் துன்புறுத்தப்பட்டாலும், அவமானம் ஏற்படாது என அவருக்குத் தெரியும் (50:7-8). ஆயினும், மக்கள் கூட்டம் அவரைப் பார்த்து அச்சமுற்றது என்று இறைவாக்கினர் அறிவிக்கிறார். மனித சாயலே அவரிடம் இல்லை. அவரது தோற்றம் அவ்வளவு சீர்குலைந்திருந்தது (52:14). கண்டோர் கண் மறைத்து அருவருக்கும் ஒரு மனிதனைப்போல் அவர் இழிவு படுத்தப்பட்டார். புறக்கணிக்கப் பட்டார். நாம் அவரை மதிக்கவில்லை (53:2-3). ஆனால், ஊழியன் மனிதருடைய பார்வையில் தனது முகத்தோற்றத்தை இழந்து விட்டாலும், இறைவன் அவரது நிலையைத் தனது கரத்தில் எடுத்து, மனிதர் முன்பாக அவரை மகிமைப்படுத்துவதன் மூலம், அவரது உள்ளார்ந்த அசைக்க முடியாத பெருமையை நியாயப்படுத்துகிறார், "நம் ஊழியன் சிறப்படைவார், உயர்த்தப்படுவார், மேன்மைப் படுத்தப்படுவார், பெரிதும் மாட்சியுறுவார்" (52:13); "அவரும் வலியவரோடு கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக் கொள்வார்" (53:12). ஊழியனுடைய அடிச்சுவடுகளில் ஒவ்வொரு நீதிமானும் இறைவனுடைய தீர்ப்பிற்கு வேண்டுகோள் விடுக்க முடியும். முட்டாளாகவும் துன்புறுபவராகவும் அவர் கருதப்பட்ட நேரத்தில், இதே இறுதி நாளில் "நீதிமான் மிகுந்த துணிவோடு எழுந்து நிற்பார்" (ஞான 5:1-5).

**III. புதிய ஏற்பாடு:**

**1. கிறிஸ்துவின் பெருமை:** தான் எங்கிருந்து வந்தார், எங்குச் செல்கிறார் என்பதை அறிந்துள்ள இயேசு, தன்னை இறைமகன் என்று அறிவிக்கும்போது தனது பெருமையை வெளிப்படுத்துகிறார். நான்காவது நற்செய்தி இச்செயல் முறையை ஒரு பெருமையாக விவரிக்கிறது. தமக்கென எந்தச் சிறப்பைப்பற்றிய அக்கறையுமின்றி, தமது தந்தையின் மகிமையை மட்டுமே விரும்பியவராய் (யோவா 8:49-50), அதிகாரிகள் அவரைக் கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ள வில்லையா என்று மக்கள் கேட்கும் அளவிற்கு (7:25-26), இயேசு உலகை நோக்கி வெளிப்படையாகப் பேசினார் (18:20-21). உலகின் பகட்டான விளம்பரத்துடன் இந்த வெளிப்படையான பேச்சு எத்தொடர்பும் கொண்டிருக்க வில்லையாதலால் (7:3-10) அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; அவர் ஒதுங்க வேண்டியதாயிற்று (11:54). அந்நாளில் அனைத்தையும் தெளிவாக்கக்கூடிய ஆவியானவருக்கு இயேசு இடமளிக்கிறார் (16:13.25). இச்சொல்லானது பாடுகள் பற்றிய அறிவிப்பிற்கு மட்டுமே பொருந்தியதாகக் காணப்பட்டாலும் (மாற் 8:32), ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் நடத்தை மகிமையை வெளிப்படுத்துவதாகச் சித்தரிக்கின்றனர். இவ்வாறு தன் பெற்றோர் (லூக் 2:49), இறைவனுக்கொவ்வாத பழிச்சொற்கள் (மத் 21:12தொ), நிறுவன அதிகாரிகள் (மத் 23), அன்னாவின் சபையில் கன்னத்தில் அறையப்பட்டது (யோவா 18:23) ஆகிய சூழ்நிலைகளில், எல்லா அதிகாரங்களுக்கும் முன்பாக இறைமகன் அல்லது தம் தந்தையின் உரிமைகளுக்கு உரிமை கொண்டாடுகிறார்.

**2. விசுவாசியின் பெருமையும் சுதந்தரமும்:** தனது விசுவாசத்தின் மூலம்,

இயேசுவை விசுவாசத்துடன் பின் செல்பவர் தொடக்கப் பெருமையைப் பெற்றுள்ளார் (எபி 3:14). அதனுடைய நம்பிக்கையில் மகிழ்வளிக்கக் கூடிய பெருமையாக இறுதிவரை அதைக் கைக்கொள்ள வேண்டும் (3:6). உண்மையில் இயேசுவின் இரத்தத்தின் மூலம், அஃது உறுதி நிறைந்ததாகும் (10:19-20), அருளின் அரியணையை நோக்கி முன்னேறக்கூடும் (4:16). துன்பத்திலும் (10:34-35), இறுதித் தீர்வை நாளில் இயேசு தனக்காக வெட்கப்படுவதைக் காணும் போது ஏற்படும் வலியிலும் (லூக் 9:26) அஃது இவ்வுறுதியை இழக்க முடியாது. ஆனால், விசுவாசமுள்ளவனாக இருந்தால், அவனது இதயத்திற்கு அவன் மீண்டும் உறுதியளிக்கக்கூடும்; ஏனெனில், நமது இதயத்தைவிட, கடவுள் உயர்ந்தவர் (1யோவா 4:17; 2:28; 3:20 தொ).

உயிர்த்த இயேசுவிற்குச் சாட்சியளிக்கின்ற சுதந்தரத்தில், கிறிஸ்தவனுடைய பெருமையானது உலகில் வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாறு, திருச்சபையின் தொடக்க நாட்களிலிருந்தே கல்வியறிவற்ற அப்போஸ்தலர்கள் (அ.ப. 4:13) பொதுமக்கள் முன்னும் அல்லது அவமதிப்பான பகைவனுக்கு முன்னும் வலுவிழக்காமல் வார்த்தையைப் போதித்தனர் (4:29.31; 9:27-25; 18:25-26). பவுல் இம்மனப்பான்மையினை விசுவாசியினுடைய வெளிப்படையான அறிவிப்பு என்று விவரிக்கிறார். இஃது உயிர்த்த ஆண்டவரின் மகிமையையும் பிரதிபலிக்கிறது (2 கொரி 3:11-12). அப்போஸ்தலிக்கப் பெருமையின் அடித்தளம் இத்தகையதே! "விசுவசித்தேன். ஆகவே, பேசினேன்!" (4:13).

3. பெருமையும் மகிமையும்: ஆண்டவரில் கொண்ட அறிவினைத் தவிர்த்துப் பிற முறைகளில் தன்னைப் பற்றி எவரும் புகழ்ந்து கொள்கின்ற உரிமையை எரேமியா உடனடியாக எடுத்துவிட்டது போன்று, பவுலும் செய்தார் (1கொரி 1:31). ஆனால், போலித் தற்பெருமை போன்ற ஒவ்வொரு சோதனையினின்றும் மனிதனை விடுவிக்க இறைவன் தேர்ந்தெடுத்த அடிப்படைச் சாதனத்தை அவர் அறிவித்திருந்தார். அது விசுவாசமாகும். அதுமுதல், யூதன் என்னும் பெயர், சட்டம், விருத்தசேதனம் போன்ற, சார்ந்திருக்கக்கூடிய சலுகைகள் எதுவும் இனி இல்லை (உரோ 2:17-29). ஆபிரகாமே எந்தவொரு செயலைப்பற்றியும் பெருமை பாராட்டாதிருக்கும் போது (4:2), பாவிகளாகிய நாம் அனைவரும் எவ்வாறு பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடும் (3:19-20.27)! ஆனால், ஒப்புரவினை வென்றுதந்த இயேசுவினால் விசுவாசிகள் அனைவரும் கடவுள் (5:11), மகிமையின் நம்பிக்கை (5:2), விசுவாசத்தினாலான ஏற்புடைமையின் பலன் ஆகியவற்றில் பெருமை பாராட்டமுடியும். மற்ற அனைத்தும் வெறுக்கத்தக்கவை (பிலி 3:3-9); இயேசுவின் சிலுவை மட்டுமே மகிமையின் ஊற்றாக உள்ளது (கலா 6:14); ஆனால், இந்தச் சிலுவையின் போதனையாளர்கள் அல்லர் (1 கொரி 3:21).

இறுதியாக, கிறிஸ்தவன் தனது இன்னல்களுக்காகப் பெருமைப்படும் போது (உரோ 5:3), தனது பலவீனத்தில் அப்போஸ்தலர் எவ்வளவு பெருமை அடையமாட்டார்! (1 கொரி 4:13; 2 கொரி 11:30; 12:9-10). அவர் உருவாக்கிய திருச்சபைகளே, அவருடைய மகிமையின் மணிமுடியாக இருக்கும் (1 தெச 2:19; 2 தெச 1:4). தனது ஆடுகள் விளைவிக்கிற துன்பங்களுக்கிடையிலும், அவர் அவைகளைப் பற்றிப் பெருமை கொள்ளலாம் (2 கொரி 7:4.14; 8:24). கிறிஸ்தவ மற்றும் அப்போஸ்தலிக்கப் பெருமையின் மறைபொருளானது, இருளை ஊடுருவிச் செல்கின்ற மகிமையினுடைய பாஸ்கா மறைபொருளாகும். பெருமை மிக்க மனிதன் என்பவன், மரணத்தை நேராக நோக்கி, அங்கே வாழ்வைக் கண்டு பிடிப்பவனாவான்.

## பெரும் கட்டளை (COMMISSION, THE GREAT)

இயேசு இறுதியாக விண்ணேற்பு அடைவதற்கு முன் தன் சீடர்களுக்கு அளித்த கட்டளையை இது

குறிக்கும். "எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்," "பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" என்ற வாசகம் மத்தேயு கூற விரும்பிய கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகின்றன. உயிர்த்த ஆண்டவர் உயர்த்தப்பட்டார். ஆண்டவர் அவர்களோடு நிலைத்துள்ளார் (காண்க. மத் 5:1; 7:21-29), புதிதாகத் தொடங்கப்பட்ட மெசியாக் காலத்தின் இறுதியான யாவர்க்கும் உரிய தூதுப் பணியில் தன் சீடர்களை ஆண்டவர் அனுப்புகிறார் (மத் 24:14; யோவா 20:19-23; அ.ப.1:8). ஆதித்திருச்சபை இந்தக் கட்டளையை இயேசுவிடமிருந்து நேரடியாகப் பெற்றதா அல்லது அவர்களின் அனுபவங்கள் வாயிலாக அதை அறிந்தனரா என்பது ஒரு கேள்வியாக உள்ளது (அ.ப. 10:1-11:18; கலா 2:9). திருமுழுக்கு அளிக்கும் வழக்கத்திற்குக் கிறிஸ்து தோன்றியதுதான் தொடக்கமா அல்லது வேறு ஏதேனும் தொடக்கம் இருக்குமா என்பதும் ஒரு கேள்வி (அ.ப. 2:38; 8:16; 1 கொரி 1:14-16). "பிதா, சுதன், பரிசுத்த ஆவியால் திருமுழுக்கு அளிக்கும் வாய்பாடு இங்கு (மத் 28) மட்டுமே கூறப்பட்டுள்ளது. இது தொடக்கத்திலேயே எழுதப்பட்ட நற்செய்தியின் பகுதியா என்பதும் ஒரு கேள்வி.

எவுசேபியுஸ் என்ற ஆதிக்கிறிஸ்தவ அறிஞரின் நூலில், 'என் பெயரால்' என எழுதப்பட்டுள்ளது. இதே போன்ற அமைப்பை மத் 28-இல் அரமேய மொழி பெயர்ப்பிலும் காண்கிறோம். ஆனால் நாம் இன்று நற்செய்தியில் காணும் இந்த அமைப்பு, பல சான்றுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிதா, சுதன், தூய ஆவி என்ற இந்த அமைப்பு மற்ற மூல விசுவாச அறிக்கையிலும் காணப்படுகிறது (1 கொரி 12:3-6; 2 கொரி 13:14; 1 பேதுரு 1:2).

## பெரும் பிளவு (CHASM)

இஃது இரண்டு இடங்களைப் பிரிக்கும் பள்ளம் அல்லது படுகுழியாகும். இச்சொல், செல்வரும் இலாசரும் என்ற உவமையில் லூக் 16:12-இல் மட்டும் பயன்பட்டுள்ளது. இங்கு இஃது இறந்த பின் பாதாளத்தில் வேதனையுறும் செல்வந்தர் இருக்கும் இடத்திலிருந்து ஆபிரகாமின் மடியில் அமர்ந்திருக்கும் இலாசர் இருக்கும் இடத்தைப் பிரிக்கும் பிளவு ஆகும். இப்பிளவை ஒருவரும் கடக்க முடியாது என்பது, இருசாராருக்கும் இடையிலான பிரிவு இறுதியானது என்பதை வலியுறுத்துகிறது. இதனை வாசகச் சூழ்நிலை தெளிவாக்குகிறது. இறுதித் தீர்ப்பின் விவரிப்பில் இப்பெரும் பாதாளம் பயன்படுவதை ஏனோக்கின் நூல் போன்ற பிற்காலப் போலிநூல்களில் காணலாம்.

## பெருவாரிநோய், கொள்ளைநோய் (PESTI-LENCE)

பொதுவான, ஆனால் கொடூரமான முறையில் கடவுளால் அனுப்பி வைக்கப்படும் பெரும் தண்டனை. சாதாரணமாக, இச்சொல் பஞ்சம் மற்றும் கொள்ளை போன்ற மற்றப் பேரழிவுகளுடன் இணைத்துக் கூறப்படும். சாதாரணமாக ஏற்படக்கூடிய கொள்ளை நோயைப் பார்வோனுக்கு எதிரான எச்சரிக்கையாக மோசே பயன்படுத்தினார் (யாத் 9:14). ஆனால், எகிப்திய கொள்ளை நோய்களில் மிகக்கடுமையாக ஏற்பட்டது 'கோமாரி' நோய் ஆகும் (யாத் 9:3).

பாலைவனத்தில் அலைந்து திரிந்தபொழுது கடவுளுக்கு விரோதமாக நடந்துகொண்ட இஸ்ராயேலர்கள், பெருவாரி நோய்களின் மூலம் எச்சரிக்கப்பட்டனர் (எண் 14:12; உப 28:21). இஸ்ராயேலரின் கீழ்ப்படியாமையால் (எண் 11:33; 16:46; 25:8) எண்ணற்ற துன்பங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன (எண் 11:33; 16:46; 25:8). எண் 14:37-இல் குறிப்பிடப்பட்டுள்ள வாதை எனும் சொல், ஒத்த கருத்தையே குறிக்கிறது.

சாலமோனின் அர்ப்பணிப்புச் செபம் (1 அர 8:37), நாடு முழுவதும் மனம் திரும்பியிருக்கும் நிலையில் கலாபனைகள், கொள்ளை நோய்கள் ஆகியவற்றை விலக்கி விடும்படி இறைவனை

வேண்டுகிறது. ஆமோ4:10-இல் கொள்ளை நோய் என்பது எகிப்திய நோயைக் குறிக்கிறது. ஆனால், அ.ப. 3:5 பெருவாரி நோயை இறைவனது தீர்ப்பின் வருகையினுடைய முன்னறிவிப்பாகக் கூறுகிறது. கொள்ளைநோய் எனும் சொல் இறுதிக்காலம் பற்றிய கூற்றுகளில் பஞ்சத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (மத் 24:7; லூக் 21:11).

கொள்ளைநோய், பெருவாரிநோய் எனும் இரண்டு சொற்களும் ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்படுவதால், பழங்காலத்தில் இரண்டிற்கும் இடையில் வேறுபாடு இருப்பதாகக் கருதப்பட்டதாகத் தெரிகிறது. மொழி அறிஞர்கள் ஒருசிலர் குறிப்பிடுவது போல, இரண்டும் ஒன்றன்று. வாந்திபேதி, எலும்புருக்கிக் காய்ச்சல், வயிற்றுக் கடுப்பு, அம்மை மற்றும் நரம்புத் தளர்ச்சி போன்றன விவிலிய நாட்டில் காணப்பட்ட பலதரப்பட்ட நோய்களாகும். "பூபானிக்" நோய் போன்றவை கொள்ளைநோய் என்றும், முற்றுகையோடு தொடர்புபடுத்தப்படும் சுகாதாரமற்ற நீரினால் உண்டாகும் வாந்திபேதி, குடல் காய்ச்சல் போன்றவை பெருவாரி நோய்கள் என்றும் கருதப்பட்டன. ஆயினும், அம்மை, அக்குள் நோய் மற்றும் நுரையீரல் நோய் போன்றவையும் அவ்வப்போது குறிப்பிடப்படுகின்றன.

**பெருவெள்ளம் (FLOOD IN GENESIS)**

காண்க. தொடக்கநூல் அல்லது ஆதியாகமம்: 5 உ: பெருவெள்ளம்.

**பெரேசு (PERESH)**

மனாசேயின் இனத்தவர், மாக்கிர், மாக்கா ஆகியோருக்குப் பிறந்தவர் (1 நாள் 7:16).

**பெரேட்சு (PEREZ – உடைப்பு, பிளவு)**

இவர் யூதாவுக்கும், அவருடைய மருமகளான தாமாருக்கும் பிறந்த இரட்டைக் குழந்தைகளுள் ஒருவர் (ஆதி 38:29; 1 நாள் 2:4; 4:1). இவர் எட்சரோன், ஆமூல் ஆகியவர்களின் தந்தை ஆவார் (ஆதி 46:12; எண் 26:21; 1 நாள் 2:5). மேலும், இவர் பெரிசியர் வம்சத்தலைவர் (எண் 26:20). பெரேட்சு வம்சத்தவர், எருசலேமைச் சுற்றி வாழ்ந்ததால் அவர்களின் முக்கியத்துவம் தெளிவாகிறது (1 நாள் 9:4; 27:3; நெகே 11:4-6). தாவீது இந்தக் குலத்தில்தான் பிறந்ததாகப் பாரம்பரியம் கூறுகிறது (ரூத் 4:18-22; மத் 1:3; லூக் 3:33).

**பெரேட்சு - உஸ்ஸா (PEREZ - UZZAH – ஊசாவின் பிளவு)**

இது தாவீது உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வரும்போது (2 சாமு 6:8), கீதோனில் (நாக்கோனின்) களத்தருகில் (1 நாள் 13:19-11) ஊசா கொல்லப்பட்ட இடத்திற்குச் சூட்டப்பட்ட பெயர் ஆகும் (2 சாமு 6:8). ஊசா ஆண்டவரின் பேழையைத் தொட்டதால் கொல்லப்பட்டார். இந்த இடம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் எருசலேமின் மேற்கில், நகரிலிருந்து கிரியத்து எயாரிம் என்னும் இடத்திற்குச் செல்லும் சாலையில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

**பெரேது (BERED – கல்மழை) – ஆள்**

1. இவர் சுத்தேலகுவின் மகனும், எப்பிராயிமின் பேரனும் ஆவார் (2 நாள் 7:20). இஃது இனப்பெயர் மூதாதையரின் பெயர் என்பதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை (எண் 26:35). மேலும், 1 நாள் 7:20-க்கு இணையாக உள்ள எண் 26:35-இல் வருகின்றது போலப் பெரேது என்ற பெயரானது 'பெக்கர்' என்றுதான் வாசிக்கப்பட வேண்டும். காண்க. பெக்கர்.

**பெரேது ( BERED – கல்மழை) – இடம்**

இது கானானிலிருந்து எகிப்துக்குச் செல்லும் வழியில் நெகோபுவிலுள்ள ஓர் இடம். இது பெயேர்-லகய்-ரோயிக்கு அப்பால் உள்ளது (ஆதி 16:14). இஃது இருந்த இடம் அறியப்படவில்லை. இதன் பெயர் வாடி உம்-பரேது என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இஃது அயின்

கெதேயிசுக்கு வடமேற்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள அயின் முவெல்லேவாகவும், பெயோர்-செபாவுக்குத் தென்மேற்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் கலாசேயாகவும் அடையாளம் காட்டப்படுகிறது.

**பெரோயா (BEROEA)**

1. இது தெசலோனிக்கேயாவுக்கு மேற்கில் 65 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு மாசிதோனிய நகரமாகும். இது பெர்மியுமலை அடிவாரத்தில் இருந்தது. கி.பி. 51-இல் தெசலோனிக்கேயா விலிருந்து விரட்டப்பட்ட பவுலும் சில்வானும் பெரோயாவிலுள்ள செபக்கூடங்களில் போதித்து வந்தனர் (அ.ப. 17:10-11). பலர் இறைவார்த்தைக்கு ஆர்வத்தோடு செவிமடுத்தனர். சோப்பத்தர் உட்பட (20:14) கிரேக்கர் பலர் விசுவாசிகளாயினர். தெசலோனிக்கேயாவிலிருந்து வந்த யூதர்கள் இங்கும் கலகம் உண்டாக்கவே, பவுல் இந்நகரை விட்டுப்போக வேண்டியிருந்தது.

2. இது சீரிய நகரமாகி. அலப்போவிற்கு வழங்கப்பட்ட கிரேக்கப் பெயராகும். அந்தியோக்கு யுபாத்தோர் அரசனின் கட்டளையின்படி இவ்விடத்தில்தான் கொள்கையைக் கைவிட்ட மெனலாவு என்ற தலைமைக் குருவை வெம்மை நிறைந்த சாம்பலில் தள்ளிக் கொலைசெய்தார் (2 மக் 13:4).

**பெர்கமு (PERGAMUM – கோட்டை)**

இது மேலைச் சிறிய ஆசியாவில் மீசியாவின் நகரங்களில் ஒன்று. இது கிரேக்கர் காலத்தில் புகழ் பெற்றிருந்தது.

பெர்கமு– ஏகியன் கடலிலிருந்து சுமார் 24 கி.மீ. தொலைவிலும், காய்குசு ஆற்றின் வடக்கில் 3 கி.மீ. தொலைவிலும் அமைந்திருந்தது. இந்நகரின் ஆரம்ப கால வரலாறு, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. அலக்சாந்தருக்குப் பின் வந்தவர்களின் ஆட்சியில் இந்நகரம் சிறப்புற்றிருந்தது. இஃது அந்திக்கோனு கைப்பற்றிய நாட்டின் ஒரு பகுதியாகும். கி.மு. 301-இல் அந்திக்கோனு இறந்தபின் திராக்குவின் அரசன் லிசிமாக்கு மேலைச் சிறிய ஆசியாவை ஆண்டார். லிசிமாக்கு, பிலேத்தேரு என்பவனைப் பெர்கமுவுக்கு அதிகாரியாக்கினார். ஆனால் கி.மு. 282-இல் பிலேத்தேரு, லிசிமாக்குக்கு எதிராகக் கலகம் செய்து செலூக்குவோடு சேர்ந்து கொண்டார். போரில் லிசிமாக்கு கொல்லப்பட்டான். அவனது போட்டியாளனான செலூக்கு திராக்குவில் கொல்லப்பட்டான். அதன்பின் பெர்கமு ஒரு தனி சுதந்தர நாடாயிற்று.

பிலேத்தேரு, கலாத்தியரை வென்ற முதல் பெர்கமு மன்னன் ஆவார். இவருக்குப்பின் வந்த முதலாம் யுமெனசு (கி.மு. 263-241) இச்செயலுக்குப் பரிகாரம்செய்ய விரும்பினார். இவருக்குப்பின் அரியணையேறிய முதலாம் அத்தாலு (கி.மு. 241-197) காட்டுமிராண்டிகளை வென்றார். இரண்டாம் யுமெனசு (கி.மு. 197-159), கி.மு. 167-இல் மற்றொரு போரில் வெற்றி பெற்றான். பெர்கமு நகரின் பொற்காலம் முதலாம் அத்தாலு காலத்தில் தொடங்கியது. இவர் மாசிதோனுக்கு எதிராக, உரோமையர்களுடன் சேர்ந்து கொண்டார். இரண்டாம் யுமெனசு இதே கொள்கையைப் பின்பற்றினார். இருப்பினும், இரண்டாம் அத்தாலு (159-138) காலத்தில் பெர்கமுவின் புகழ் குன்றத்தொடங்கியது. பெர்கமுவில் இரண்டாம் யுமெனசு காலத்தில் பெரிய நூல்நிலையம் இருந்தது.

மூன்றாம் அத்தாலு பெர்கமு நகரை உரோமையர்களிடம் கொடுத்துவிட்டார். அவருடைய செல்வம் உரோமைக்கு அனுப்பப்பட்டது. வரியும் அதிகமாக விதிக்கப்பட்டது. கி.மு. 88-இல் பெர்கமு நகரின் மக்கள், உரோமையருக்கு எதிராக மித்ரா தேத்தசுவின் ஆணையின்படி, பெர்கமு நகரிலிருந்த உரோமையர் அனைவரையும் கொல்ல எழுந்தனர். இச்செயலினால், பெர்கமு சுதந்தரத்தை இழந்த போதிலும் கி.மு. 47-46-இல் சீசர் இதற்குச் சுதந்தரம் அளித்தார். உரோமையர் காலத்தில் இந்நகரம் புகழோடு விளங்கியது.

உரோமை அகுஸ்து வழிபாடு நிறுவப்பட்டது. திரேசனுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. பெர்கமுவிலிருந்த நூல்நிலையம் கிளியோபத்திராவுக்கு நன்கொடையாக, அந்தோணியால் அலக்சாந்திரியாவுக்கு அனுப்பப்பட்டது. இங்கிருந்த வெண்கலச் சிலைகள் நீரோவின் ஆணையால் உரோமைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நகரம் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது. நகரத்தின் தாழ்வான பகுதியில் குடியிருப்புகளும், உயர்ந்த பகுதியில் பொதுக்கட்டடங்களும், வழிபாட்டு இடங்களும், அரண்மனைகளும் இருந்தன. இங்கிருந்த கோட்டையின் நடுமாடியில் வேறுபட்ட வயதினருக்கென்று மூன்று உடற்பயிற்சி நிலையங்கள் இருந்தன. கோட்டையின் மேல்தளம் மிகவும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. குன்றின் சரிவில், கிரேக்க உத்தியில் அமைக்கப்பட்ட கலை அரங்கமும், அரை வட்ட வடிவமான அங்காடியும், பெரிய பீடமும், அரண்மனைகளும் இருந்தன. இங்கிருந்த பெரிய பீடம் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. நகரச் சுவர்களின் தெற்கில் உள்ள தாழ்வான பகுதி, உரோமையர் காலத்தில் விரிவாக்கப்பட்டது.

பெர்கமு நகரிலிருந்த திருச்சபையைப் பற்றியும், அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அரச வழிபாட்டுக்கு எதிராகப் போராடியதைப் பற்றியும் திருவெளி 1:11; 2:12 குறிப்பிடுகின்றது. இங்கிருந்த திருச்சபை- திருவெளிப்பாட்டு நூலில் கூறப்படும் ஏழு திருச்சபைகளுள் ஒன்று. உரோமையர் காலத்திய பெர்கமு, இன்றைய பெர்கமா நகரின் அடியில் உள்ளது. பைசாந்தியர் காலத்தில் இஃது ஆயர்களின் இருப்பிடமாக இருந்தது.

**பெர்சப்பொலி (PERSEPOLIS)**

இது பாரசீக மன்னர்களின் இருப்பிடமாக இருந்தது. 2 மக் 9:2, அந்தியோக்கு எப்பிபான் அந்நகரைக் கொள்ளையடிக்க முயன்று தோற்றுப் போனதைக் குறிப்பிடுகின்றது. பெரிய தாரியு (கி.மு. 521-485) பல கட்டடங்களைக் கட்டி அழகு படுத்தினார். இதே பணியை இன்னும் அதிக அளவில் செருசு (485-465) செய்தான். ஆனால், கி.மு. 330-இல் பெரிய அலக்சாந்தர் அழித்தபின் அந்நகரின் புகழ் குன்றத்தொடங்கியது. இப்போது இந்நகரில் படிக்கட்டும், வாயில் கட்டடங்களும், பெரிய தாரியுவின் காலத்தில் அமைக்கப்பட்ட பெரிய தளமும், செருசு காலத்தில் கட்டப்பட்ட நூறுகால் மண்டபமும், அரண்மனையும், கலையரங்கமும் குறிப்பிடத்தக்கவை.

**பெர்சி (PERSIS - பாரசீகப்பெண்)**

பவுல் வாழ்த்து அனுப்பிய உரோமையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப்பெண் (உரோ 16:12). இப்பெயர் உரோமையைச் சேர்ந்த விடுதலை பெற்ற பெண்களுடையவும் அடிமைப் பெண்களுடையவும் பொதுப்பெயராகவும் ஏடுகளில் காணப்படுகிறது.

**பெர்னிக்கி (BERNICE - வெற்றி வாகைசூடுதல்)**

1. இவள் "தென்திசை மன்னனின் மகள்" (தானி 11:6) ஆவாள்; ஆனால், பெயர் குறிப்பிடப்படவில்லை. இவள் எகிப்து நாட்டு அரசராயிருந்த ஐந்தாம் தோலமிபிலதெல்பு (கி.மு. 285-246) என்பவரின் மகள் ஆவாள். சீரியாவிற்கும் எகிப்து நாட்டிற்கும் இடையே அமைதி உறவை ஏற்படுத்தும் முகத்தான், சீரிய நாட்டு மன்னராகிய இரண்டாம் அந்தியோக்குவை இவள் மணந்துகொண்டாள். இவளை மணப்பதற்காக அந்தியோக்கு அவரது முதல் மனைவியாகிய லாவோதீசை விவாகரத்து செய்தார். அந்தியோக்குவின் இறப்பிற்குப்பின் பெர்னிக்கியும், அவள் மகனும் லாவோதீசால் கொல்லப்பட்டனர்.

2. இவள் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகளும், கால்கிசின் ஏரோதின் மனைவியும் ஆவாள். கி.மு. 48-இல் இவர் இறந்தபின் பெர்னிக்கி அவளது சகோதரர் இரண்டாம் ஏரோது அகிரிப்பாவோடு தகாத முறையில் உறவு

வைத்திருந்தாள். பெஸ்து என்ற ஆளுநர் பவுலை விசாரித்த போது அகிரிப்பாவோடு பெர்னிக்கியும் அங்கு இருந்தாள் (அ.ப. 25:13.23; 26:30). பின் சிலிசியா நாட்டின் அரசரான போலே மோனை மணந்துகொண்டாள். சிறிது காலம் கழித்து மறுபடியும் தன் சகோதரன் அகிரிப்பாவிடம் திரும்பி வந்தாள். பின், தீத்துவின் வைப்பாட்டியாக வாழ்க்கை நடத்தினாள். இவள் கி.ப. 79-இல் தனது ஐம்பத்தோறாவது வயதில் இறந்தாள்.

**பெலலியா (PELALIAH – யாவே நீதி வழங்குகிறார்)**

இவர் எஸ்ரா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு ஆவார். அதாயாவின் முன்னோர் (நெகே 1:12).

**பெலற்றியா (PELATIAH – யாவே மீட்கிறார்)**

1. அனனியாவின் மகனான பெலற்றியா தாவீது மன்னனின் தூரத்து வழித்தோன்றலாவார். நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 3:21).

2. எசேக்கியா மன்னன் காலத்திலே வாழ்ந்த இசீயின் புதல்வரான இவர் சிமியோன் இனப்படைத்தலைவருள் ஒருவராவார். இப்படை, செயீர் மலைக்குச் சென்று அமலேக்கியரில் எஞ்சி இருந்தவரை முறியடித்து, அங்குக் குடியேறியது (1 நாள் 4:42).

3. நெகேமியாக் காலத்தில் உடன்படிக்கையிலே கையெழுத்திட்ட மக்கள் தலைவருள்– இவரும் ஒருவர் (நெகே 10:22).

4. எசேக்கியலின் நீதி வழங்கும் காட்சியிலே வந்த இரண்டு யூதேய இளவரசர்களில்– பெனயாவின் மகனான இவரும் ஒருவர் (எசே 11:1.13). எகிப்தியர்களைச் சார்ந்திருந்த இவ்விருவரும் பாபிலோனியர் எருசலேமைக் கைப்பற்றியபோது தீய ஆலோசனை தந்து அந்நகர அழிவிற்கு உதவினர் (11:2).

**பெலாயா (PELAIAH – யாவே வியப்பானவர்)**

1. எலியோவெனாயியின் மகனான இவர், தாவீது மன்னனின் தூரத்து வழித்தோன்றலாவார். (1 நாள் 3:24).

2. இந்த லேவியர் கடவுளின் திருச்சட்ட நூலை எஸ்ரா படித்தபோது அங்கிருந்தார். மேலும், அவர் மக்களுக்குப் புரியும்படி அதை விளக்க உதவினார் (நெகே 8:7). நெகேமியாவின் தலைமையில் உடன்படிக்கை முத்திரையிடப்பட்டதில் பங்கெடுத்தார் (10:10).

**பெலிக்சு அந்தோனியு (FELIX ANTONIUS)**

கூமானுவுக்குப் பிறகு கி.பி. 52-இலிருந்து 60 வரை யூதேயாவின் ஆளுநர். அ.ப. 23:24-24:27-இன்படி, பவுல் கடைசிப் பயணமாக எருசலேமுக்குச் சென்று அங்கு சிறைப்படுத்தப்பட்டபோது பெலிக்சு ஆளுநராக இருந்தார். நீரோவால் பெலிக்சு திரும்ப அழைக்கப்பட்டபோது பவுல் புதிய ஆளுநர் பெஸ்துவிடம் கையளிக்கப்பட்டார்.

**1. வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின்படி:** பெலிக்சு, பல்லாசு என்ற பெயருடைய செல்வாக்கு வாய்ந்த உரோமையரின் சகோதரர். 52-இல் பெலிக்சு ஆளுநனாகப் பெயர் சூட்ட பெற்றார். "எண்ண முடியாத கூட்டமாக இருந்த கொள்ளைக்காரர்கள் மற்றும் ஏமாற்றுகிறவர்களின் எழுச்சியை அடக்குவதில் கவனம் செலுத்தினார் பெலிக்சு. நம்பிக்கைத் துரோகத்தினால் பெலிக்சு தெனெயாவின் புதல்வன் எலயாசர் என்ற தலைவனை, அவனுக்குத் தீங்கு எதுவும் செய்யவில்லை என்ற வாக்குறுதி கொடுத்தபின், கைதியாக்கினான், யோனத்தான் என்ற பெரிய குருவைக் கொலை செய்ததில் கொள்ளைக்காரர்களின் உதவியைப் பயன்படுத்திக்கொண்டான். பெரும் எண்ணிக்கையுள்ள யூதர்களுக்குத் தலைவனான ஓர் எகிப்திய யூதன் (காண்க. அ.ப. 21:38) பெலிக்சால் தாக்கப்பட்டான்; அதன் பிறகு அந்தத் தலைவனைப் பற்றிக் கேள்விப்படவில்லை. ஆனால், அவனுடைய ஆதரவாளர்கள் நானூறு பேரும் கொல்லப்பட்டார்கள். பெலிக்சு திரும்ப உரோமைக்கு அழைக்கப்பட்டார். யூதர்களின்

தூதுக்குழு பெலிக்சைக் குற்றம் சாட்ட உரோமைக்குச் சென்றது. ஆனால், பல்லாசு தமது செல்வாக்கைப் பயன்படுத்தித் தண்டனையிலிருந்து இவனைக் காப்பாற்றினார். இரண்டாம் அகிரிப்பாவின் சகோதரி துருசில்லாவை அவளது கணவன் எமேசாவின் அரசன் அசிசுவைக் கைவிடச் செய்து, அவளை மணந்து கொண்டார். அவள் இவனுக்கு அகிரிப்பா என்ற மகனைப் பெற்றுக்கொடுத்தாள். இவர், மேலும் இருமுறை மணந்தார்.

**2. உரோமைய மூலங்களில்:** உரோமைய வரலாற்று ஆசிரியர்களான சியுட்டோனியுசு, தாசித்தசு ஆகியவர்களின் புத்தகங்களில் பெலிக்சைப் பற்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகச் செய்திகள் உள்ளன. கூமானு கலிலேயாவின் ஆளுநராக இருந்தபோது பெலிக்சு, சமாரியா, யூதேயாவின் ஆளுநராக இருந்ததாக இருவரும் கூறுகின்றனர். ஆனால், யோசிப்பசு, 'பெலிக்சு கூமானுக்குப் பிறகு யூதேயாவின் ஆளுநன்' என்று எழுதுகின்றார். இக்கருத்தில் அறிஞர்கள் பலர் யோசிப்பசுவின் கருத்துக்கே முதலிடம் கொடுக்கின்றார்கள்.

சியுட்டோனியுவின் குறிப்புப்படி பெலிக்சு மூன்று அரசப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டான் என்று குறிப்பிடுகின்றார். அதாவது, முதலாவதாக துருசில்லாவையும், அடுத்து- மாற்கு அந்தோனி-கிளியோபாத்திரா ஆகியவர்களின் பேத்தியையும் மணந்தார். மூன்றாவது மனைவியின் பெயர் தெரியவில்லை.

தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்ற அச்சமின்றி, உரிமையைப் பயன்படுத்தி எல்லாவிதமான தீமையையும் செய்யமுடியும் என்று பெலிக்சு நம்பினதாக்க தாசித்தசு குறிப்பிடுகின்றார். அவனுடைய சகோதரனின் செல்வாக்குதான் சந்தேகமின்றி அவனுடைய கொடுங்கோன்மைக்குத் தூண்டுகோலாக இருந்தது. அவனுடைய செயல்கள் இன்னும் பல இடர்ப்பாடுகளைத் தூண்டிவிட்டது என்று தாசித்தசு கூறுகின்றார். பெலிக்சு திரும்ப அழைக்கப்பட்ட ஆறு வருடங்களுக்குப் பிறகு யூதர்களின் போர் வெடித்தது. பெலிக்சின் ஆட்சிக் காலமும், கொடூரங்களும், அடக்குமுறைகளும் போருக்கு முக்கிய காரணம். பெஸ்துவோ, அவனுக்குப்பின் வந்தவர்களோ இந்த அழிவைத் திசை திருப்ப முடியவில்லை. அவர்களும் அதைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. இவையெல்லாம் யோசிப்பசின் ஆதாரங்களிலிருந்து கிடைத்தவை. பிற்காலத்தில் இவனுக்காக இவன் சகோதரன் பல்லாசு நீரோவின்முன் பரிந்துரைக்க மறுத்தபோது, பெலிக்சு தன் பதவியைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக உரோமையில் தண்டிக்கப்பட்டார். குடியேற்ற நாட்டைத் தவறாக நடத்துவதில் பெலிக்சு முதன்மையான எடுத்துக்காட்டாவார். இவர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றவராக இருப்பதுபோல் தெரிகிறது. அந்தோனியு என்ற பெயரை அரசன் கிளாதியுவின் தாய் 'அந்தோனியா' என்ற பெயரிலிருந்து எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

**3. அப்போஸ்தலர் பணியில்:** பெலிக்சின் ஆட்சின்போது பல கிளர்ச்சிகள் எழுந்தன. அவைகளில் ஒன்றுதான், இறைவாக்கினர் என்று தன்னைக் கூறிக்கொண்ட எகிப்தியன் நடத்திய கிளர்ச்சி. இஃது, அ.ப. 21:38-இல் குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலர் பணி நூல், பவுல் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டபோது பெலிக்சு ஆளுநராக இருந்ததையும் (23:24), துருசில்லாவோடு சேர்ந்து பவுலோடு தனியாகக் கலந்துரையாட ஒத்துக்கொண்டதையும் குறிப்பிடுகிறது. நீதி, சுய கட்டுப்பாடு, வருங்காலத் தீர்ப்பு ஆகியவற்றைப் பற்றிய பவுலின் உரைகள் இவரையும் இவர் மனைவியையும் அச்சப்படுத்தின. இலஞ்சம் கொடுக்காவிடில் பவுலை இவர் விடுதலை செய்யமாட்டார் என அ.ப. 24:26 குறிப்பிடுகிறது. பெலிக்சுக்குப் பிறகு, பொர்க்கியு பெஸ்து ஆளுநராக வந்தும் பவுல் சிறையில்தான்

இருந்தார் (24:27). உரோமைக்குத் திரும்ப அழைக்கப்பட்டதற்குப் பிறகு (கி.ப. 60) யூதர்களால் பெலிக்சு அவருக்கு எதிராகச் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப் பெற்றார்.

யோசிப்பசோ, பவுலின் திருமுகங்களோ பவுலுக்கும் பெலிக்சுக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

**பெலிஸ்தியர் (PHILISTINES)**

இது பாலஸ்தீனத்திலுள்ள ஒரு நாடு. ஆகியனில் தோன்றிய இம்மக்கள் பாலஸ்தீனத்தின் தெற்குக் கடற்கரையில் வாழ்ந்து இஸ்ராயேலரோடு பன்முறை சண்டையிட்டனர். இவர்கள் வாழ்ந்த பகுதிபெலிஸ்தியா என்றழைக்கப்பட்டது.

எகிப்தின் மூன்றாம் ராமசேசு பெலிஸ்தியரைப் பற்றி முதன் முதலாகக் குறிப்பிடுகிறார் (கி.மு. 1196-1165). ராமசேசினால் முறியடிக்கப்பட்ட இவர்கள் பாலஸ்தீனக் கடலோரப் பகுதிகளில் குடியேறினர். இவர்கள் இந்தோ-செர்மானிய அல்லது மத்தியதரைக் கடல் மக்கள் இனத்தைச் சார்ந்தவர்கள். கி.மு. 1200-இல் காட்டுமிராண்டிகள் ஐரோப்பாவைத் தாக்கியதால் இங்கே வாழ்ந்த இவர்கள் மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கே நோக்கிச் சென்றனர். இவர்களில் சிலர் கானானியக் கலைகளைப் பின்பற்றத் தொடங்கினர்; கானானிய மதத்தைப் பின் பற்றினர். இவர்களது தெய்வங்கள் தாகோன்,அஸ்தார்தே, பாகால்-செபூல் ஆகியோராவர். இவர்கள் மந்திரவாதிகளைக் கொண்டிருந்தனர். போரிலே இவர்கள் சிறந்திருந்தனர். இரும்பின் உபயோகத்தைப் பாலஸ்தீனத்தில் புகுத்தினர். இரும்புக் கருவிகளின் வாணிபத்தை ஏகபோக உரிமையாகத் தாங்களே கையாண்டனர் (1 சாமு 13:19-22). தாவீது கி.மு. 1000-இல் அரசுக்கு வந்தபோது இவர்களது ஆளுகை சிதறியது. கி.மு. 715-இல் பிலிஸ்தியாவுக்கு எதிராக இறைவாக்கு உரைக்கப்பட்டது (எசா 14:29-31). மேலும், இவர்கள் அடிமை வியாபாரம் செய்வதாகவும் கண்டனம் செய்யப்பட்டனர் (யோவே 4:4). இவர்கள் இஸ்ராயேலரின் பகைவர்களாக விளங்கினர் (சங் 63:8; 83:7). நாடுகளின் அட்டவணையிலே பெலிஸ்தியரின் கடல் மத்திய தரைக்கடல் ஆகும் (யாத் 23:31). சிம்சோன் வரலாற்றிலே பெலிஸ்தியர்கள் இஸ்ராயேல் நாட்டைப் பிடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. யூதா, பெலிஸ்தியரின்கீழ் இருந்தது (நீதி 13:16). யூதாவுக்கும் பெலிஸ்தியாவுக்கும் இடையில் இருந்த சிம்சோன் குலமான தாண் வடக்கு நோக்கிச் செல்ல வேண்டியதாயிற்று (நீதி 18). பெலிஸ்தியரைத் திறம்பட எதிர்த்த இஸ்ராயேலர் அபேக்கு என்ற இடத்தில் முறியடிக்கப்பட்டு, பேழையும் எடுத்துச் செல்லப்பட்டது (1 சாமு 4-6). மேலும், பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலின் மையப்பகுதிகளிலும் புகுந்தனர் (1 சாமு 13:3; 10:5). சவுல் முதன்முதலாக மிக்மாசில் பெலிஸ்தியரை வென்றார். மேலும், சவுலின் ஆட்சிக்காலம் முழுவதும் பெலிஸ்தியருடனான சண்டை தொடர்ந்தது (1 சாமு 14:47,32). ஏலாவிலே மறுபடியும் சவுல் அவர்களை முறியடித்தார். ஆனால், பெலிஸ்தியர்கள் தொடர்ந்து இஸ்ராயேலைத் தாக்கினார்கள். கில்போவா மலையில் சவுல் கொல்லப்பட்டபின் பெலிஸ்தியர் கை ஓங்கியது. தாவீது அரியணை ஏறியபின் இந்நிலை மாறியது. தாவீது மன்னருக்கும் பெலிஸ்தியருக்கும் சண்டை மூண்டது. இதிலே தாவீது முழுமையான வெற்றியை அடைந்தார் (2 சாமு 8:1). இந்த ஆதிக்கம், சாலமோன் மன்னர் காலத்திலும் தொடர்ந்தது. இதன் பின்னர், பெலிஸ்தியர் சுதந்தரமாக வாழ்ந்தனர்; பல நேரங்களில் இஸ்ராயேலையும் தாக்கினர் (1 அர 15:27; 16:15); பல முறை தோற்கடிக்கப்பட்டனர் (2 நாள் 26:68; 2 அர 18:8). பல இறைவாக்குகள் இஸ்ராயேல், பெலிஸ்திய பகைமையைக் குறிப்பிடுகின்றன (எசா 14:28-31; எரே 25:20; எசே 16:27; செப் 2:5). நெபுகத்னேசரின் படையெடுப்பிற்குப் பிறகு இவர்களது புகழ் மங்கியது.

**பெலுசிம் (PELUSIUM)**

இஃது எகிப்தின் வடகிழக்கு எல்லையிலுள்ள அரண்களுடன் கூடிய நகரம். இதைக் குறிக்கும் எபிரேயப் பெயர், எகிப்திய மொழிப்பெயரிலிருந்து பெறப்படுகிறது. இந்நகரம் திராட்சை இரசத்திற்குப் புகழ் பெற்றிருந்தது. வடக்கிலும், கிழக்கிலும் ஆசிய நாடுகள் இருந்ததால் எகிப்தியர்களின் காலத்தில் இந்நகரம் படைச்சிறப்பைப் பெற்றிருந்தது. எரே 3:15-இல் இந்நகரம் 'எகிப்தின் அரண்' என்று அழைக்கப்படுகிறது.

**பெலேகு (PELEG - ஓடை, பிரிவு)**

ஏபேரின் மகனான இவர் சேமின் வழிவந்தவராவார் (ஆதி 10:25; 11:16-19; 1 நாள் 1:19.25). இவருடைய பெயர்- 'பிரிவு' என்ற பொருளில் விளக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இவருடைய காலத்தில் உலகம் பிளவுபட்டது. இது பாபேல் கோபுர வரலாற்றைக் குறிப்பதாக இருக்கலாம். இந்த உலகம் என்ற சொல் - நிலத்தைக் குறிக்காமல், ஆதியில் தோன்றிய பெலேகு வழிவந்தவரும், யோக்தான் வழிவந்தவரும் ஆகிய இரண்டு முக்கியமான செமித்திய இனங்கள் பெருகக் காரணமாயிருந்ததைக் குறிக்கலாம். இதன்படி பெலேகு வழிவந்தவர் அராபிய மக்களையும், யோக்தான் வழிவந்தவர் ஆராமிலும், மெசபொத்தாமியாவிலும் வாழ்வோரையும் குறிக்கிறது. இன்றைய வாசகங்களில் கொடுக்கப்பட்டுள்ள தகவலில், பெலேகுவின் வழித்தோன்றல்களில் ஆபிரகாமின் முன்னோர் வரிசை மட்டுமே தரப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தைத் தவிர மற்றும் பல விளக்கங்களும் அறிஞர்களால் தரப்பட்டுள்ளன. இவைகளில் ஒன்று பெலேகு என்ற சொல்லுக்கு "ஓடை, கால்வாய்" என்ற பொருளாகும். ஏனெனில், பெலேகு மக்கள் செயற்கையாகக் கல்வாய் வெட்டி விவசாயம் செய்பவராவர். மேலும், இந்தப் பெயர் யூப்பிரத்தீசு, கபோராஸ் ஆறுகளின் சந்திப்பில் உள்ள பால்கா என்ற நகரிலிருந்து வந்த பெயராகவும் இருக்கலாம்.

**பெலேத்தியர் (PELETHITE)**

பெலேத்தியர்- கெரேத்தியரோடு தொடர்புடைய கூலிப்படையினர். இவர்கள் அயல் நாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் தாவீதின் காலத்தில், பெனாயாவின் தலைமையில் அரசரின் மெய்க்காப் பாளராக வேலை செய்தனர் (2 சாமு 8:18; 20:13; 1 நாள் 18:17). மோந்துகோமெரி என்பவர், "பெலேத்தியர்" என்ற சொல், "பெலிஸ்தியர்" என்ற சொல்லோடு தொடர்புடைய சொல் என்று கருதுகிறார். அப்சலோமின் கலகத்தின்போது, தாவீது எருசலேமை விட்டு ஓடியபோது, பெலேத்தியர் அவரோடு சென்றனர் (2 சாமு 15:18). பென்யமின் கோத்திரத்தானான சேமின் கலகத்தின்போது தாவீதுக்குத் துணை நின்றார்கள் (2 சாமு 20:7). இந்நிகழ்ச்சிகள் பெலேத்தியர் தாவீதிடம் கொண்டிருந்த விசுவாசத்தை விளக்குகின்றன. தாவீதுக்குப் பிறகு, சாலமோன் அரியணை ஏற வேண்டும் என பெனாயா பரிந்துரைத்தபோது, பெலேத்தியர் அவருடன் இருந்தனர். சாலமோன் அரசரின் முடிசூட்டு விழாவில் பெலேத்தியர் இருந்தது. சாலமோனின் எதிரியான அதோனியாவின் முயற்சி வெற்றியடையாமல் போவதற்குக் காரணமாக இருந்தது (1 அர 1:38.44).

**பெலேத்து (PELETH - விரைவான)**

1. ரூபனின் குலத்தில் தோன்றிய இவர், ஓன் என்பவனின் தந்தையாவார். மோசேக்கு எதிராக, கோரகு செய்த கலகத்தில் இந்த ஓன் கலந்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது (எண் 16:1).

2. எரகுமவேலரான இவர், யோனத்தானின் மகனாவார். இவர்களுடைய மூதாதையர் யூதா குலத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும் (1 நாள் 2:33). இந்த எரகுமவேலர்கள் தெற்கு யூதாவில் வாழ்ந்துவந்த ஏதோமியர்களிலிருந்து பிரிந்தவர்களாக இருக்கலாமெனக் கருதப் படுகிறது.

**பெலேற்று (PELET - விடுவித்தல்)**

1. காலேபியரான இவர், எகிதாயின் புதல்வர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார் (1 நாள் 2:47).

2. அசமாவேத்தின் இரு புதல்வர்களில் ஒருவனான பெலேற்று- பென்யமின் குலத்தைச் சார்ந்தவர். தாவீது சவுலிடமிருந்து தப்பித் தலைமறைவாய்ச் சிக்லாகு என்னுமிடத்தில் இருந்தபோது, அவரோடு சேர்ந்து கொண்ட வீரரில் இவரும் ஒருவர் (1 நாள் 12:3).

**பெலோனியர் (PELONITE)**

'பெலோனியர்', என்பது- ஏலேசு, அகீயா ஆகியவர்களுக்குச் சூட்டப்பட்ட பட்டப் பெயர். இவர்கள் தாவீதுடன், பெலிஸ்தியர்களுக்கு எதிராய்ப் போரிட்ட "வலிமை வாய்ந்தவர்களுள்" இருவர் (1 நால் 11:27.36; 27:10). ஆனால் 2 சாமு 23:26-இல் எல்லேஸ் 'பல்தியார்' என்று அழைக்கப்படுகிறார். அதாவது, இவர் பெத்-பெலேற்று என்னும் இடத்திலிருந்து வந்தவர். 2 சாமு 26:34-இல் குறிப்பிடப்படும் எலியாம் என்பவரும் அகீயா என்பவரும் ஒரே நபராக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

**பெல்சாட்சர் (BELSHAZZAR - பேல் அரசனைப் பாதுகாக்கிறார்)**

'பெல்சாட்சர்' என்ற சொல்லுக்குப், பேல் இறைவன் மன்னனைப் பாதுகாக்கிறார்' என்று பொருள் கொள்ளப்படுகிறது.

இவர் நபோனிதுவின் மகனும், அவருடன் ஆட்சி செய்தவரும் ஆவார். தானி 5:11தொ; 8:1- இன்படி பாபிலோன் நாடானது சைரசினால் கைப்பற்றப்பட்ட பொழுது பாபிலோனின் கடைசி அரசராக, பெல்சாட்சர் இருந்தார். தானி 5-என்ற பகுதியில் பெல்சாட்சர் என்னும் அரசன் பெருங்குடி மக்களுக்கு அளித்த விருந்தைப் பற்றிய நிகழ்ச்சி கொடுக்கப்பட்டுள்ளது. அவ்விருந்தில், எருசலேம் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புனித கலங்களிலிருந்து விருந்தினர் பருகினர். விருந்து நடந்து கொண்டிருக்கும் அரண்மனைக் கூடத்துச் சுவரில் மனித கைவிரல்கள் தோன்றி எழுதத் தொடங்கின. அவ்வாறு எழுதப்பட்ட செய்தியினை விளக்கக் கூடியவர் தானியேல் ஒருவர்தான் இருந்தார். தானியேல் எழுந்து, 'பாபிலோனிய ஆட்சியின் முடிவினையும், அது மேதியர்களுக்கும் பாரசீகர்களுக்கும் மாற்றப்படுவதையும் இவ்வெழுத்துக்கள் உணர்த்துகின்றன' என்று விளக்கினார். அன்றிரவே, பாபிலோனிய நகரானது சைரசினால் கைப்பற்றப்பட்டது; பெல்சாட்சர் கொலை செய்யப்பட்டார்.

பெல்சாட்சர், அவரது தந்தையிருந்தபொழுதே அவரோடு இணைந்து ஆட்சிபுரிந்தார். இவரது தந்தை அராபியாவிலிருந்துபொழுது, எட்டு வருடங்களாக தலைநகரை இவர் ஆண்டு வந்தார். ஆனால், இவர் பாபிலோனியாவின் அரசராக இருக்கவில்லை. இவர் நபோனிதுவின் மகனேயொழிய, நெபுகத்னேசரின் மகனல்லர் (தானி 5:17). பண்டைய அசீரிய மொழி ஆராய்ச்சியாளர்கள் தந்துள்ள ஆதாரங்களில் பெல்சாட்சர் அவரது தந்தையோடு இணைந்து ஆட்சிபுரிந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அவரது இறப்பைப் பற்றிய குறிப்புகள் ஒன்றும் காணப்படவில்லை.

**பெல்தசாட்சர் (BELTESHAZZAR - பேல் அவரது வாழ்வைப் பாதுகாப்பாராக)**

இப்பெயர் நெபுகத்னேசரின் அண்ணகர்களின் தலைவனால் தானியேலுக்கு வழங்கப்பட்ட பாபிலோனியப் பெயராகும் (தானி 1:7; 2:26; 4:8-9.19; 5:12; 10:1). பெல்தசாட்சர் என்ற பெயரானது "பேல் அவரது வாழ்வைக் காப்பாற்றுவார்" என்று பொருள்படுகின்ற அக்காதிய தெய்வம் பேல்-பலாட்சு-உட்சூர் என்பதைக் குறித்துக் காட்டலாம்; அதன் குறுகிய வடிவமாகவும் இருக்கலாம்.

**பெல்தேத்திமு (BELTEHMUS)**

இப்பெயர் பாலஸ்தீனத்திலிருந்த பாரசீக அலுவலர் அல்லது அதிகாரியைக் குறிக்கிறது.

இஃது ஓர் ஆளின் பெயரன்று; ஆளுநரின் பட்டமாகத் தெரிகிறது (எஸ் 4:8).

**பெல்லா (PELLA)**

பெல்லா கிழக்குப் பாலஸ்தீனத்தில் தெக்கப்பொலியின் நகரங்களில் ஒன்று. இது கி.பி. முதல் நூற்றாண்டில் ஆயர்கள் தங்கும் இடமாகவும் இருந்தது. விவிலியத்தில் குறிக்கப்பட வில்லையாயினும், இது நீண்ட வரலாறு கொண்ட முக்கிய மையமாகும். இந்நகரம் அமர்னாவின் கடிதங்களில் பிகிலும் என்று குறிப்பிடப்படுகின்றது. இந்நகரம் மூன்றாம் துத்மோஸ் (கி.மு. 1490-1436). சேத்தி (கி.மு. 1318-1301) ஆகிய மன்னர்களின் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் ராம்சேசு கி.மு. 1284-இல் செதுக்கிய சாசனத்தின்படி பாகேல், அம்மாத்து ஒரு பக்கமும், பெத்சான், இரகோபு மற்றொரு படையாகவும் இருந்து போரிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. இப்போரில் தலையிட பார்வோன் அழைக்கப்பட்டான். பாகேல் தோற்கடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. பின் அப்பகுதி மகா அலக்சாந்தரால் கைப்பற்றப்பட்டு அங்குக் கிரேக்கர் குடியேறும்வரை அது கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. அவர்கள் மாசிதோனியாவைச் சேர்ந்தவர் களாதலால், பாகேல் மாசிதோனியாவின் தலைநகரான பெல்லா என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்டு, இந்நகருக்குப் பெல்லா என்னும் கிரேக்கப் பெயரை இட்டனர்.

கி.பி. 66-இல் உரோமையர்களுக்கு எதிராய்க் கலகம் எழுந்தபோது, எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள். உரோமையர் நகரை அழித்துவிடுவர் என்று எச்சரிக்கப்பட்டு பெல்லாவில் குடியேறினர். இச்சமயத்திலிருந்து இது கிறிஸ்தவ சமயத்தின் மையமாக இருந்தது. கி.ப. 135-இல் இங்கிருந்த கிறிஸ்தவர்கள் பலர் எருசலேமுக்குத் திரும்பிய போதிலும் அதன் முக்கியத்துவம் குறையவில்லை.

இது வாடி யாபிசுக்கு வடக்கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள வாடி யுருமில், யோர் தானுக்குக் கிழக்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தபகத் பாகில் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

**பெற்றகு (BETAH - நம்பிக்கை)**

இஃது ஒரு நகரமாகும் (2 சாமு 8:8; காண். ஆதி 22:24). தெல் ஏல்-அமர்னா ஏடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற துபிகி நகரும், பெற்றகு நகரும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**பெற்றன் (BETEN - அடிவயிறு)**

இஃது ஆசேரின் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியில் உள்ள ஒரு நகராகும் (யோசு 19:25). அக்கோவுக்குத் தெற்கே 18 கி.மீ. தூரத்திலும், கர்மேல் மலைக்குக் கிழக்கு - வடகிழக்கில் 4 கி.மீ. தொலைவிலும் உள்ள அப்துன் என்ற இடத்தில் இந்நகர் இருந்திருக்கலாம்.

**பெற்றோனிம் (BETONIM - நாபி, கொப்புழ்)**

காதுக்கு உரிய பகுதியில் வடக்கு எல்லையாக உள்ள ஒரு நகரம் (யோசு 13:26). யோர்தானுக்கு அப்பால், எஸ்-சாட்டுக்குத் தென்மேற்கில் 7 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கிர்பெத் பட்னேயாக இஃது அடையாளம் காட்டப்படுகிறது.

**பெனதாது, பென்-அதாது (BEN - HADAD - அதாதின் மகன்)**

தமஸ்கு அரசர்கள் பலரின் பெயர் இது. அவர்களுள் இருவர் பெயர் விவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது.

**1. முதலாம் பெனதாது:** யூதாவின் அரசன் ஆசா என்பவன் பெனதாதுவுக்குக் கையூட்டுக் கொடுத்து, இஸ்ராயேலின் அரசன் பாகசா என்பவன் யூதாவுக்குள் புகுந்து அதனை ஆட்கொள்வதிலிருந்து விடுவிக்குமாறு கேட்கிறார் (1 அர 15:18). இந்தப் பெனதாது அரசன் தபரிம்மோன் என்பவனின் மகனும், எசியோன் என்பவரின் பேரனும் ஆவார். மேலே கூறப்பட்ட

போர்தொடுப்பு கி.மு. 878-இல் நடந்தது. ஆகாபு சமாரியாவிலும், அபேக்கிலும் வெற்றி கொண்டது இவரைத் தானா என்பது தெளிவாக இல்லை (1 அர 20:1தொ). இப்படையெடுப்பின் காரணமாகத் தமஸ்கில் அரமேயருக்கு வியாபாரத்தில் என்னென்ன சலுகைகள் இருந்தனவோ அவை இஸ்ராயேலருக்கும் வழங்கப்பட்டன. ஆல்பிரைட் என்பவர், முதலாம் பெனதாதுவின் காலத்தை கி.மு. 880-842 எனக் கணக்கிடுகிறார். அதன்படி, இப்போர் ஆகாபு, பெனதாது ஆகிய இருவரும் கி.மு. 853-இல் கார்காரில் சந்தித்ததற்கு முன்பே நடந்திருக்க வேண்டும். இப்போரில் அசீரியர்களின் முன்னேற்றம் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது. இராமோத்து கிலயாத்தை மீட்கப் போரிட்டு ஆகாபு அரசன் இறந்த போரில், இந்தப் பெனதாது அரமேயப் படையின் தளபதியாக இருந்தான் (1 அர 22:1). இப்போர் கார்கார் போருக்கு மூன்று ஆண்டுகட்குப்பின் நடந்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஒருசிலர் 1 அர 20:1-இல் குறிப்பிடப்படுவது இரண்டாம் பெனதாது என்று அடையாளம் காட்டினாலும், 2 அர 6:24-இன்படி சமாரியாவைப் பிடித்த முதலாம் பெனதாதே இங்குக் கூறப்படுபவர் என்ற கருத்தே ஏற்றுக் கொள்ளப்படுகிறது 2 அர 8:7-இன்படி அசவேல் என்பவனால் பெனதாது கொலை செய்யப்பட்டான். இது முதலாம் பெனதாது ஆக இருந்தால் இக்கொலை கி.மு. 842-இல் நடந்திருக்க வேண்டும். ஆனால், இது பற்றி சில குழப்பமான தகவல்கள் உள்ளன.

2. இந்தப் பெனதாது அசவேலின் மகன். இவர் இஸ்ராயேல் அரசனான யோவாசுவால் மூன்று முறை தோற்கடிக்கப்பட்டார் (கி.மு. 801-786). இது பற்றி எலிசா இறைவாக்கினர் ஏற்கெனவே முன்னுரைத் திருக்கிறார் (2 அர 13:14.24). இந்தப் பெனதாதுதான் ஆமோ 1:4; எரே 49:27-இல் குறிக்கப்படும் மன்னனாக இருக்க வேண்டும்.

**பென-பராக்கு (BENE - BERAK – மின்னலின் மகன்)**

இது– தான் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று. இந்நகரமானது தற்காலத்தைச் சேர்ந்த இபின் இப்ராகு (புனாய் பராக்கு) என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது தெல் அவிவுக்கு வட கிழக்கேயுள்ள புறநகர்ப்பகுதிகளில் ஒன்றாகும்.

**பென-யாக்கான் (BENE - JAAKAN – யாக்கானின் மகன்)**

ஏதோம் நாட்டின் கடை எல்லைக்கருகிலுள்ள பெனயாக்கானில் இஸ்ராயேல் மக்கள் பாளையம் இறங்கினர் (எண் 33:31-32). காண்க. பெயரோத்து – பெனே – யாக்கான்.

**பெனாயா (BENAIAH – யாவே கட்டினார்)**

1. பெனாயா குருவாகிய யோயாதாவின் புதல்வர். தென்யூதாவிலுள்ள கப்சவேல் என்ற ஊரைச் சேர்ந்தவர். தாவீதினுடைய புகழ்பெற்ற முப்பது வீரர்களுள் ஒருவர். ஆயினும், பெரும் மதிப்பிற்குரிய "மூவருள்" ஒருவராக இவர் கருதப்படவில்லை. இவர் இரண்டு மோவாபிய வீரர்களைக் கொன்றார்; பனிக்காலத்தில் கேணியில் இறங்கி ஒரு சிங்கத்தைக் கொன்றார்; ஓர் எகிப்திய வீரனையும் கொன்றார். இவை இவரது வீரத்தைப் பறைசாற்றும் செயல்களாகும் (2 சாமு 23:20-23; 1 நாள் 11:22.25). இவரது வீரதீரச் செயல்களும், பிரமாணிக்கமான சேவையும் சாலமோன் ஆட்சிக்காலத்தில் இவருக்கும் படைத்தலைவர் பதவியைக் கொடுத்தன. தாவீதின் மெய்க்காப்பாளராகிய அன்னியக் கூலிப்படையினரான கெரேத்தியருக்கும், பெலேத்தியருக்கும் தலைவராக விளங்கினார் (2 சாமு 8:18; 20:23; 23:23; 1 நாள் 18:17). மேலும், 24,000 படை வீரர்களையுடைய மூன்றாவது பிரிவுக்குத் தலைவராய் விளங்கினார். ஆனால், இவரது மகன் அம்மிசபாதுதான் இப்பிரிவைக் கண்காணித்து வந்தான் (1 நாள் 27:5-6).

தாவீதின் ஆட்சிப் பொறுப்பு நிறைவு பெறப் போகும் காலத்தில், யோவாபின் ஆதரவினால் அதோனியா என்பவன் தான் அரசனாவதற்கு வேண்டிய சதித் திட்டங்களைத் தீட்டினான். ஆனால், தாவீதிற்குப்பின் அவரது மகன் சாலமோன்தான் அரியணை ஏறவேண்டுமென்பதால், பெனாயா சாலமோனுக்கு ஆதரவளித்து, கீகோனில் அவர் அரசராக அபிடேகம் செய்யப்படும்போது அவருக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார் (1 அர 1:38). மேலும், பெனாயா அரசவைக் காப்பாளர்களின் தலைவர் என்ற முறையில் சாலமோனின் பகைவர்களாகிய அதோனியா, யோவாபு, சிமயி போன்றவர்களைக் கொன்று அழித்தார் (1 அர 2:25.34.46). பிரமாணிக்கமான இப்பணிக்குப் பரிசாக, இவர் சாலமோனால் படைத் தலைவராக்கப்பட்டார் (1 அர 2:35). அகித்தோபல்லுக்குப் பதிலாக, இவரது மகன் யோயாதா அரசரின் ஆலோசகராய்ப் பணி புரிந்தார் (1 நாள் 27:14).

2. தாவீதினுடைய ஆற்றலும், திறமையும் வாய்ந்த முப்பது வீரர்களில் பிராத்தோனைச் சேர்ந்த இவரும் ஒருவர் (2 சாமு 23:30; 1 நாள் 11:31). மேலும், பதினோராம் மாதத்திற்கான பதினோராவது பிரிவிலிருந்து தாவீதின் படைவீரர்களுக்கு இவர் தலைவராக யிருந்தார் (1 நாள் 27:14).

3. எசேக்கியாவின் காலத்தில் தங்கள் மேய்ச்சல் நிலங்களைக் கெதோர் பகுதிகள் வரைக்கும் விரிவுபடுத்தியவருள் ஒருவர். சிமியோனின் வழித்தோன்றல் (1 நாள் 4:36).

4. இவர் தாவீதின் காலத்தில் இசைக்குழுவில் யாழ் வாசித்தவர்களில் ஒரு லேவிய இசை வல்லுநர். கடவுளின் திருப்பேழையானது எருசலேம் நகருக்கு எடுத்துவரப்படும் பொழுது இசை மீட்டிய குழுவாக இக்குழு கருதப்படுகின்றது (1 நாள் 15:18.20; 16:5).

5. கடவுளின் திருப்பேழைக்குமுன் எக்காளம் ஊதிக்கொண்டு வந்த குருக்களில் ஒருவர் (1 நாள் 15:24; 16:6).

6. மோவாபியர்கள், அம்மோனியர்கள், ஏதோமியர்கள் போன்றவர்களால் தாக்கப்படப் போகிறோம் என்று கதிலங்கி நின்ற யோசபாத்து என்ற அரசருக்குச் சாதகமாக ஆண்டவரின் வாக்கைக் கூறிய யாகசியேல் என்பவரின் தாத்தா, ஆசாபுவின் குலத்தைச் சேர்ந்தவர் (2 நாள் 20:14).

7. எசேக்கியாவின் காலத்தில் ஆலயத்திற்குச் செலுத்தப்படுகின்ற உணவுப் பொருட்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட துணை மேற்பார்வையாளர்களில் ஒருவர். இவர் ஒரு லேவியர் (2 நாள் 31:13).

8-11. எஸ்ராவின் வேண்டுகோளின்பேரில், தாங்கள் மனைவியராகக் கொண்டிருந்த புறவினப் பெண்களையும், அவர்களது குழந்தைகளையும் தள்ளிவிட்ட அல்லது விலக்கிவிட்ட நான்கு இஸ்ராயேலர்களுள் ஒருவர் (10:25.30.35.43). எஸ்ரா ஆகமத்தில் இவர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்தாலும், முதல் எசுதிரா நூலில் பனாயியால், நாயிதுஸ், **(Naidus)** மாம்தாய் **(Mamdai)**, பனாயியாஸ் என்று நான்கு வேறுபட்ட பெயர்களைக் கொண்டிருக்கின்றனர்.

12. இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்பட்ட பொழுது அவர்களின் தலைவர்களாக விளங்கியவர்களுள் ஒருவராகிய பெலற்றியா என்பவரின் தந்தை. பெலற்றியா எருசலேமுக்குக் கூறிய ஆலோசனை, எசேக்கியேலின் ஆலோசனைக்கு மாறாக இருந்தது. எசேக்கியேல் பேசிக் கொண்டிருக்கும் போதே பெலற்றியா செத்து விழுந்தார் (எசே 11:1.13).

**பெனிக்சு (PHOENIX)**

பெனிக்சு கிரேத்தா தீவிலுள்ள ஒரு துறைமுகம் (அ.ப. 27:12). இது தெற்குத் திசையையும், மேற்குத் திரையையும் நோக்கி இருந்தது. செந்துறை (27:8) என்ற துறைமுகத்தில் பெரிய கப்பல்கள் தங்கமுடியாது. சிறிய கப்பல்கள் மட்டுமே

தங்கமுடியும். பவுல் உரோமைக்குப் பயணம் செய்தபோது மேலே செல்ல வேண்டாம் என்று கப்பல் தலைவனிடம் கூறினார். ஆனால், இறுதியாக முடிவெடுக்க வேண்டிய நூற்றுவர் தலைவன், பவுல் சொன்னதைக் கேளாமல், கப்பலோட்டியும், கப்பலுக்குரியவனும் சொன்னதை நம்பினான். அதன் விளைவு, கப்பல் கவிழ்ந்து பேராபத்து உண்டாயிற்று (27:8-15). அவர்கள் பெனிக்சு துறைமுகத்தை அடைந்து மாரிக்காலத்தைக் கழிக்க விரும்பினர். இதிலிருந்து, பெனிக்சு துறைமுகம் தூரத்திலிருந்தது என்றும், கப்பல்கள் தங்க வசதியானது என்றும் தெளிவாகிறது.

**பெனிசியா (PHOENICIA – கருஞ்சிவப்பு)**

கிழக்கு மத்தியதரைக் கடலின் கரையிலும், பாலஸ்தீனத்திற்கு வடக்கிலும் இருந்த நாடு. இது வளமிக்க நாடு; பல இயற்கைத் துறைமுகங்களைப் பெற்றிருந்தது. கி.மு. 1500 முதல் கி.மு.700 வரை பெனிசியர் சிறந்த கடல் வணிகம் செய்தனர். இவர்கள் செமித்திய இனத்தவர்; கானானியரை ஒத்தவர்கள்; இஸ்ராயேலரோடு தொடர்புடையவர்கள். எகிப்து பல ஆண்டுகளாக பெனிசியாவைக் கட்டுப்படுத்திவந்தது. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து பெனிசியா அசீரியா நாட்டிற்குக் கப்பம் கட்டிவந்தது. பின்னர், இது பாரசீகர் ஆட்சியை ஏற்றது. அலக்சாந்தரின் படையெடுப்பிற்குப்பின் பெனிசிய நகரங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்தன. கி.மு. 64-இல் பாம்பே இதனை உரோமை அரசோடு சேர்த்துவிட்டார். இந்தப் பெனிசியா ஒன்றுபட்ட அரசாக இல்லை. இதன் நகரங்கள் தனித்தனி ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இதன் முக்கிய நகரங்கள்- தீர், சீதோன், பிபுலோசு, அர்வாது, உகாரித்து ஆகும். இந்த அரசுகள் பகையுணர்வு கொண்டிருந்தாலும் சமாதானமாகவே இருந்தன. இவர்கள் சண்டையை வெறுத்தனர். வாணிபம் செய்ய சமாதனத்தை நாடினர். விவசாயமும், தொழில்களும் பெரும் அளவில் நடந்தன. நாட்டிலே செல்வம் கொழித்தது. பெனிசியக் கலைஞர்கள் திறமை மிக்கவர்கள். இவர்களது முக்கியத் தொழில் வாணிபமாகும். இதற்காக இவர்கள் பல குடியேற்றங்களை அமைத்தனர். இவர்களுக்கென்று சொந்த நாகரிகமில்லை. ஆனால், மற்றவரது நாகரிகத்தை இவர்கள் கையாள்வதில் வல்லவர்கள். கிரேக்க நாகரிகம் இங்கே வேரூன்றியது. சாலமோன் ஆலயத்திலே பெனிசியக் கலை வல்லுநர்களும் கட்டடக்கலை நிபுணர்களும் பணிபுரிந்தனர்.

இவர்களது சமயம் செமித்திய வகையைச் சார்ந்தது; பழைய ஏற்பாடு குறிப்பிடும் கானானிய வழிபாட்டை ஒத்தது. உகாரித்து நகரப் புதைபொருள் ஆராய்ச்சி மூலம் நாம் கானானிய சமயத்தைப்பற்றி அறிகிறோம். ஒவ்வொரு நகரமும் ஒரு தெய்வத்தையும் தனி வழிபாட்டையும் கொண்டிருந்தது.

புதிய ஏற்பாட்டிலே, தன் மகளுக்குக் குணமளிக்குமாறு வேண்டிவந்த பெண்ணொருத்தி பெனிசிய நாட்டைச் சேர்ந்தவள். இயேசு முதலில் குணம்தர மறுத்தாலும் பின்னர்க் குணமளிக்கிறார் (மாற் 7:24-31). இங்கே, எருசலேமிலிருந்து சென்ற கிறிஸ்தவர்கள் நற்செய்தியை அறிவித்தனர். ஆனால், புறவினத்தார் இந்த நற்செய்தி பரப்புதலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை (அ.ப. 11:19; 15:3).

**பெனியேல் (PENIEL – இறைவனின் திருமுகம்)**

இந்த இடத்தில்தான் யாக்கோபோடு "ஓர் ஆடவன் பொழுது விடியுமட்டும் மற்போரிட்டான்" (ஆதி 32:25). "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப்பிழைத்தேன்" என்று சொல்லி, யாக்கோபு அந்த இடத்திற்குப் பெனியேல் என்று பெயரிட்டார் (32:31). மற்ற இடங்களில் இது பெனுவேல் என்றழைக்கப்படுகிறது (நீதி 8:8-9.17; 1 அர 12:25).

**பெனினு (BENINU - நம் மகன்)**

இவர் எஸ்ராவின்கீழ் அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்தபின், புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலின் உடன்படிக்கைக்குச் சாட்சியாக இருந்த லேவியர்களில் ஒருவர் (நெகே 10:13).

**பெனின்னா (PENINNAH - பவழம்)**

இவள் எப்பிராயிம் கோத்திரத்தைச் சார்ந்த எல்கானாவின் மனைவி. இவளுக்குப் பிள்ளைகள் பலர் பிறந்தனர்; ஆனால் எல்கானாவின் மற்றொரு மனைவியான அன்னாவுக்குப் பிள்ளைகள் இல்லை. இவள், அன்னாவின் மலட்டுத் தன்மையைப் பற்றிக் கீழ்த்தரமாகப் பேசியதால், அன்னா மிகவும் வருத்தமுற்று தனக்கு ஒரு மகனைத் தரும்படி கடவுளிடம் வேண்டினாள் (1 சாமு 1:6-11).

**பெனுவேல் (PENUEL - இறைவனின் திருமுகம்) - ஆள்**

1. இவர் கூரின் மகனும், யூதாவின் பேரனும், கெதோரின் (Gedor) தந்தையும் ஆவார் (1 நாள் 4:4).

2. இவர் பென்யமினின் குலத்தைச் சேர்ந்தவரும் சாசாக்கின் மகனும் ஆவார் (1 நாள் 8:25).

**பெனுவேல் (PENUEL - இறைவனின் மகன்) - இடம்**

இது கிழக்குப் பாலஸ்தீனத்தில், யாபோக்கு ஆற்றின் கரையிலுள்ள ஓர் இடம், ஆதி 32:24-32-இல் கூறப்படும் செய்திகளின்படி, யாக்கோபு பதான்-ஆரான் என்ற இடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது யாபோக்கு ஆற்றின் கரையில் இரவைக் கழித்தார். இரவில் வானதூதர் ஒருவர், ஆடவன் உருவில் வந்து, இரவு முழுவதும் யாக்கோபோடு போராடி, அவரை வெல்ல முடியாமல், அவரை ஆசீர்வதித்து அவருக்கு 'இஸ்ராயேல்' என்ற பெயரையும் சூட்டிச் சென்றார். அப்போது யாக்கோபு, 'நான் கடவுளை நேரிலே கண்டிருந்தும் உயிர்தப்பிப் பிழைத்தேன்' என்று சொல்லி அந்த இடத்திற்குப் 'பென்வேல்' என்று பெயரிட்டார் (ஆதி 32:30).

கிதியோன், மிதியான் நாட்டினரை இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் வென்றபின் பெனுவேல் நகர மக்களிடம் சென்று உணவு கேட்டார். அவர்கள் வெறுப்புடன் உணவு கொடுக்க மறுத்துவிட்டனர். பின் கிதியோன் வெற்றியோடு திரும்பிவந்து பெனுவேலின் கோபுரத்தை அழித்து அங்குள்ள மக்களையும் கொன்றார் (நீதி 8:8-9.17). முதலாம் எரொபவாம் பெனுவேல் நகரை மீண்டும் கட்டிப் பலப்படுத்தினார் (1 அர 12:25). பார்வோன் சிசாக்கால் வெல்லப்பட்ட பாலஸ்தீன நகரங்களுள் ஒன்றாக, பெனுவேல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரம் யோர்தானுக்கு அப்பால் இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் பலர், அது சுக்கோத்துக்குக் கிழக்கில் யாபோக்கின் கரையில் இக்காலத் துலூல் எத்-தாகாபு என்னும் இடத்தில் இருந்ததாகக் கருதுகிறார்கள்.

**பெனோ (BENO - அவருடைய மகன்)**

இவர் மெராரிய லேவியராகிய யகசியாவின் மகன் (1 நாள் 24:26-27). ஓர் ஆளின் பெயராகக் கருதாமல், பழைய வாசகங்கள் வெறுமனே "அவருடைய மகன்" என்று மொழி பெயர்த்துள்ளன.

**பெனோனி, பென்-ஓனி (BEN - ONI - என் துயரத்தின் மகன்)**

ராகேல் தனது பேறுகால வேதனையின் மிகுதியால் துன்புற்று, தன் உயிர் பிரியப்போகும் வேளையில் தான் பெற்றெடுத்த பிள்ளைக்குப் பெனோனி என்று பெயரிட்டாள். பின், பெனோனியின் தந்தை யாக்கோபினால் இவருக்குப் பென்யமின் என்று மறுபெயர் வழங்கப்பட்டது (ஆதி 35:18).

**பென் (BEN - (உடைய) மகன்)**

ஒரு சொல்லின் முன் சேர்க்கப்படும் அசை, இஃது ஓர் உறவை அல்லது நிலையைக்

குறிக்கிறது. பெரும்பாலும், நேர் ஆண் வழித்தோன்றலைக் குறிக்கிறது. ஆனால், இஃது ஓர் இனத்தையோ (ஆதி 42:5, இஸ்ராயேலின் புதல்வர்கள்), நாட்டையோ, புவியியல் பகுதியைச் (2 அர 15:10; யாபேசின் மகன்) சேர்ந்த ஓர் உறுப்பினனையோ குறிக்கலாம்; அல்லது சமூகம் மற்றும் தொழிற்குழுவினைச் (1 அர 20:35; 2 அர 2:3, இறைவாக்கினர்களின் புதல்வர்கள்) சேர்ந்தவர்களையும் குறிக்கலாம். "இறைவனின் புதல்வர்கள்" என்பது விசுவாசிக்கும் இறைப் பற்றுடையவர் களையும் (ஆதி 6:2; ஓசே 1:10), வானதூதர்களையும் (யோபு 1:6; 2:1; 38:7) குறிக்கலாம்.

**பென்-அபினதாபு (BEN - ABINADAB - அபினதாபின் மகன், தந்தை மேன்மையுள்ளவர்)**

இவர் சாலமோன் காலத்தில், அரசருக்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப்பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர். இவருக்கு நாப்பாத்தோர் மாவட்டப் பொறுப்பு அளிக்கப்பட்டது. இவர் அரசரின் மகள் தாபத்தை மனைவியாகக் கொண்டார் (1 அர 4:11).

**பென்-அம்மீ (BEN - AMMI – என் உறவினனின் மகன்)**

இவர் லோத்தின் இளைய மகள் வழியாகப் பிறந்த லோத்தின் புதல்வர். இவர் அம்மோனியர்களின் குலப்பெயர் மூதாதையர் ஆவார் (ஆதி 19:38).

**பென்கயில் (BEN - HAIL – வலிமையின் மகன்)**

இவர் யூதா நகர்களில் போதிக்கும் பொருட்டு மன்னன் யோசபாத்தினால் அனுப்பப்பட்ட மூப்பர்களில் ஒருவர் (2 நாள் 17:7).

**பென் – கனான் (BEN - HANAN – அருள் பெற்ற மகன், சலுகை பெற்றவன்)**

இவர் யூதாவின் தலைமுறைப் பட்டியலில் சீமோனின் புதல்வராக இடம் பெறுகிறார் (1 நாள் 4:20).

**பென்-கூர் (BEN - HUR – கூரின் மகன்)**

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். இவரது பகுதி எப்பிராயிம் மலையில் இருந்தது (1 அர 4:8).

**பென்-கெசது (BEN - HESED – கெசதின் மகன்)**

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர். அருபோத்து, சோக்கோ, ஏபர் போன்ற பகுதிகள் இவரது கண்காணிப்பில் இருந்தன (1 அர 4:10).

**பென்-கெபர் (BEN - GEBER – கெபரின் மகன்)**

இவர் அரசர்க்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். இராமோத்து-கிலயாது அப்பகுதியின் தலைமையகமாக இருந்தது (1 அர 4:13). கெபருக்கும் பென்-கெபருக்கும் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதிகள் ஒன்றாக இருப்பதால், ஊரியின் மகனாகிய கெபர் என்பவரும் (4:19), பென்-கெபர் என்பவரும் ஒரே ஆள்தான் என்பது அறிஞர் சிலரின் கருத்து.

**பென்-சோகேத்து (BEN - ZOHETH – சேகேத்தின் (வலிமையின்) மகன்)**

இவர் யூதாவின் தலைமுறையில் வந்த இசீயின் புதல்வராகக் கருதப்படுகிறார் (1 நாள் 4:20). இச்சொல் தனி ஆளின் பெயரைக் குறிக்கிறது என்பதைவிட, ஒரு விவரிப்பாகும் என்று கருதப்படுகிறது.

**பென்-தெக்கர் (BEN - DEKER – தெக்கரின் மகன்)**

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும்

வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். தான் நகரத்திற்குத் தென்புறத்திலுள்ள சாலமோனின் ஆட்சிப்பகுதி இவருக்குப் பொறுப்பாக வழங்கப்பட்டது (1 அர 4:9).

**பென்-யமின் (BENJAMIN** - வலக் கையின் மகன், நற்பேற்றின் மகன்)

1. இவர் யாக்கோபு, ராகேல் இவர்களின் மகன் (ஆதி 35:18). இஸ்ராயேலின் 12 கோத்திரங்களில் ஒன்றின் குலப்பெயர் மூதாதையர். கானானில் எப்ராத்தாவில் பிறந்த இஸ்ராயேலின் பிள்ளை இவர் ஒருவரே. இவரது பிறப்பிற்குப் பிறகே ராகேல் இறந்தாள் (ஆதி 35:16). ராகேல் இவனுக்குப் 'பெனோனி' அதாவது, எனது துயரத்தின் மகன் என்று இட்ட பெயரை யாக்கோபு, பென்-யமின் என மாற்றினார். எகிப்துக்குத் தானியங்கள் வாங்க யோசேப்பின் சகோதரர்கள் சென்றபோது இறுதி மகனான பென்-யமின் தந்தையோடு வீட்டில் இருந்தார் (ஆதி 42:3). ஆனால், யோசேப்பு உண்மையிலேயே தன்னோடு கூடப் பிறந்த தம்பி பென்-யமினைக் கொண்டு வந்தால்தான் அவர்கள் கூறுவது உண்மையெனத் தாம் ஏற்றுக் கொள்ள முடியும் என்று கூறிவிட்டார் (ஆதி 42:15). பென்-யமினைப் பார்த்தவுடன் யோசேப்பு கண்ணீர் விட்டு அழுதார் (ஆதி 43:29). தமது சகோதரர்களைச் சோதிக்கும் பொருட்டு, தமது வெள்ளிக்கிண்ணத்தைப் பென்யமினின் கோணிப்பையில் வைக்கச் செய்து (ஆதி 44:1) அவர்கள் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டினார். யூதா தமது தம்பிக்காக தாம் தண்டனை ஏற்றுக் கொள்வதாகக் கூறி அதன் மூலம் யோசேப்பை எகிப்துக்கு விற்றபோது போல் அல்லாமல் இப்பொழுது தாங்கள் மாறிவிட்டனர் என்பதை நிரூபித்தனர். அதன் பிறகே யோசேப்பு தாம் யார் என்பதை அவர்கட்கு வெளிப்படுத்துகிறார்.

மாரி ஏடுகளில் "பானு யாமினா" என்ற ஓர் இனம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இதற்கும் இஸ்ராயேல் இனத்திற்கும் எத்தொடர்பும் இல்லை. ஆனால், பெயர் மட்டுமே ஒரே மாதிரி அமைந்துள்ளது. யாக்கோபு பென்-யமினை ஆசீர்வதிக்கும்போது, ஓநாய் போலக் காலையில் தனது இரையையும், மாலையில் கொள்ளையிட்டதையும் பகிர்ந்து கொள்வான் என்பது பென்-யமின் இனத்தின் போரிடும் தன்மை பற்றிக் கூறப்பட்ட ஓர் உருவகமாகும் (ஆதி 49:27). மோசே ஆசீர்வதிக்கும் பொழுது பென்யமின் யாவேயின் அன்புக் குரியவன்; ஏனெனில், அவனது தோள்களில்தான் யாவே உறைகிறார் (உப 33:12) என்பது எருசலேம் நகருக்காக உரைக்கப்பட்ட ஓர் உருவகமாகும். கணக்கெடுப்பின் போதெல்லாம் 35,400 (எண் 1:37) என்றும், 45,600 (எண் 26:41) என்றும் பென்-யமின் கோத்திரம் எண்ணப்பட்டது. எண் 26:38 தொ-இல் பென்-யமின் கோத்திரத்தின் பிரிவுகள் எல்லாம் கூறப்படுகின்றன.

பென்-யமின் கோத்திரத்தின் எல்லைகளும் அதன் நகரங்களும் குறிப்பிடபபிடுகின்றன (யோசு 18:11). யூதாவுக்கும் எப்பிராயிமுக்கும் இடையில் அமைந்துள்ள இதன் (எல்லைப்) பகுதி மேற்காக யோர்தானிலிருந்து எரிகோவரை விரிந்து கிடக்கிறது. இது கிரியத்து எயாரிம்வரை செல்கிறது. இஸ்ராயேலின் கையில் இல்லாத கிபயோன், எருசலேமைச் சுற்றியுள்ள ஐந்து கானானிய நகரங்களையும் இஃது உள்ளடக்கி இருந்தது.

யோசுவா 2-9-இல் கூறப்படும் உட்புகுதல் ஏற்கெனவே நடந்த ஒன்றை மீண்டும் கூறி ஒரு மாதிரியாகக் காண்பிக்கின்றது. இஸ்ராயேலிலே மிகச் சிறிய எண்ணிக்கை கொண்ட இனமாகக் கருதப்படுவது பென்-யமின்தான் என்றாலும், இது போரிடுவதில் தனிச்சிறப்புப் பெற்றது (1 சாமு 9:21; சங் 68:28). மோவாபு நாட்டு எக்லோனைக் கொன்று இஸ்ராயேலை விடுவித்த ஏகூது பென்-யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (நீதி 3:12). பாராக்கு, தெபோரா ஆகியோரோடு சீசராவுக்கு எதிராகப் போரிட்ட இஸ்ராயேலரில் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர் (நீதி 5:14). இஸ்ராயேலருக்குள் போர் மூளக்

காரணமானவர்களுள் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர். ஏனெனில், ஒரு லேவியனின் மனைவியைக் கிபயோனியர் கற்பழித்து விருந்தோம்பும் சட்டத்தை மீறி விட்டனர் (நீதி 19:1-21:25). எபிரேயர், ஒழுக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்று அதற்காக இணைந்து செயல்பட்டது இங்கு மட்டுந்தான். இதனால், இதன் வரலாற்றுத் தன்மையைச் சிலர் ஐயுற்றுள்ளனர். மேலும், இதில் இஸ்ராயேலரின் எல்லா இனங்களும் கலந்து கொள்வதாகவும், அளவற்ற எண்ணிக்கையில் போர் வீரர்கள் சண்டையிட்டதாகவும் கூறுவது அன்றைய புகழ் பெற்ற பொதுப்பணி மரபுகளிலிருந்து இஃது எடுக்கப்பட்டது என்றாலும், உண்மையிலே இத்தகையதொரு குற்றத்துக்கு எதிராக, போர் மூண்டெழுந்தது உண்மையாக இருந்திருக்கலாம். பென்-யமின் இனத்தவர் ஒரு தந்திரத்தால் தோற்கடிக்கப்பட்டனர். அதன் விளைவாக இருந்தவர் எல்லாம் முழுமையாக அழிக்கப்பட இருந்தனர். இது பிற இனத்தவரை அச்சுறுத்தியது. எனவே, மற்றக் குலத்தவர் எல்லாம் இவர்கட்குப் பெண் கொடுக்கக்கூடாது என முடிவெடுத்தனர். எனவே, போரில் ஈடுபடாத யபேசு-கிலயாதின் பெண்களையும், சீலோவில் இருந்த பெண்களையும் எடுத்துக்கொண்டனர்.

இஸ்ராயேலின் முதல் அரசனான சவுல் பென்-யமின் குலத்தைச் சேர்ந்தவரே. அவர் பென்-யமின் குலத்தின் ஊரான கிபயாவில் தான் தங்கியிருந்தார் (1 சாமு 9:1 தொ). சவுலின் இறப்புக்குப் பிறகு பென்-யமின் குலத்தோர் இசுபகாலுடன் சேர்ந்து கொண்டனர் (1 சாமு 2:9); ஆனால், அப்னேர் தாவீதுடன் சேருமாறு வற்புறுத்தினார் (2 சாமு 3:19). ஆனால், பென்-யமின் தாவீதுக்கு எப்பொழுதுதாவது முழுவதும் பிரமாணிக்கமாய் இருந்தது என்று கூறமுடியாது. சிமயி, தாவீது அப்சலோமிடமிருந்து தப்பி ஓடியதைப் பார்த்து அவரைச் சபித்தார் (2 சாமு 16:5). அப்சலோமின் கிளர்ச்சி அடக்கப்பட்டபின் பென்-யமின் இனத்தைச் சேர்ந்த சேபாவால் கிளர்ச்சி தொடங்கப்பட்டது (2 சாமு 20:1). சாலமோனின் ஆட்சிக்குப்பிறகு நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது ரெகபயாம் பென்யமின் குலத்தின் ஒரு பகுதியைத் தம்மோடு வைத்துக்கொள்ள முடிந்தது (1 அர 12:21). ஆசாவினால் இப்பகுதி விரிவுபடுத்தப் பட்டது (1 அர 15:22). எரேமியா இறைவாக்கினர் பென்-யமின் ஊரான அனதோத்திலிருந்தே வந்தார் (எரே 1:1). பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்தவர்களுள் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர் (எஸ் 1:5). பவுல் கூட பென்-யமின் குலத்தைச் சேர்ந்தவர்தான் (உரோ 11:1; பிலி 3:5).

2.யாக்கோபின் கொள்ளுப் பேரனான இவர் பென்-யாமின், எதியவேல், பில்கான் ஆகியவர்கள் வழியாக வந்தவர் (1 நாள் 7:10).

3. எஸ்ரா காலத்தில் வாழ்ந்த இஸ்ராயேலருள் ஒருவரான இவர் தமது அன்னிய மனைவியிடமிருந்து விலகி விடுவதாக வாக்குறுதி அளித்தார் (எஸ் 10:32).

4. நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த குரு இவர் (நெகே 12:34). நகரின் மதிலைக் கட்டியெழுப்பியவரும் இவர்தாம் என்று கூறலாம் (நெகே 3:23).

**பென்யமின்வாயில் (BENJAMIN GATE)**

பென்-யமின் வாயில் என்பது எரேமியா நூலில் குறிப்பிட்டுள்ள (37:13;38:7) எருசலேம் நகர் வாயிலைக் குறிக்கிறது. மேலும், இவ்வாயில் நெகேமியா வினுடைய ஆட்டு வாயிலோடு (நெகே 3:1.32; 12:39; யோவா 5:2) அல்லது கணக்கர் வாயிலோடு (நெகே 3:31) அடையாளம் காட்டப்படலாம்.

# பே

## பே (PE)

எபிரேய நெடுங்கணக்கில் பதினேழாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இன் பதினேழாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொருவரியும் இதே எழுத்தோடு தொடங்குகிறது.

## பேசேசுவடி (CODEX BEZAE)

இது கி.பி. 5-ஆவது அல்லது 6-ஆவது நூற்றாண்டைச் சார்ந்த பழம் ஏடு. இதில் புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளும், அப்போஸ்தலர் பணியும் காணப்ம!படுகின்றன. இவ்வேட்டின் சிறப்பு என்னவென்றால், கிரேக்க வாசகமும், இலத்தீன் வாசகமும் எதிரெதிரே வைத்து எழுதப்பட்டுள்ளன. கிரேக்க வாசகம் பன்னிருபாக எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது.

இச்சுவடியில் நற்செய்தி நூல்கள் மேற்கத்திய முறைப்படி வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அதாவது, மத்தேயு, யோவான், லூக்கா, மாற்கு என்ற வரிசையில் எழுதப்பட்டுள்ளன. இச்சுவடியில் கத்தோலிக்கத் திருமுகங்கள் என்றழைக்கப்படும் பேதுரு, யாக்கோபு, யோவான், யூதா ஆகியவர்கள் எழுதிய திருமுகங்களும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று யூகிக்க இடமுண்டு. ஏனென்றால், யோவான் எழுதிய மூன்றாம் திருமுகத்தின் கடைசிப்பகுதி, அப்போஸ்தலர் பணிக்கு முன்பாக எழுதப் பட்டிருக்கிறது. இச்சுவடி புதிய ஏற்பாட்டிற்குக் கிடைக்கும் மிக முக்கியமான பழைய சான்றுகளுள் ஒன்றாகும்.

இச்சுவடியில் மொத்தம் 406 தோல் ஏடுகள் அடங்கியிருக்கின்றன. மேலும், 9 ஏடுகளும் உள்ளன. ஆனால், அவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். முதலில் இதில் மொத்த 510 ஏடுகள் இருந்திருக்கின்றன. இச்சுவடியில் காணப்படும் ஏடுகள் 10 அங்குல நீளம் 8 அங்குல அகலம் என்ற அளவில் அமைந்துள்ளன. ஒரு பக்கத்தில் ஒரு பத்தி மட்டுமே வைத்து எழுதப்பட்டுள்ளது. ஒரு பத்தியில் 33 வரிகள் இடம் பெற்றுள்ளன. ஆனால், பக்கத்தின் கடைசி வரையிலும் வரிகளை நீட்டாமல், வாக்கியத்தின் பொருளைச சார்ந்து வரியின் நீளத்தை அமைத்து எழுதியிருக்கிறார்கள். இச்சுவடி எவ்விடத்தில் எழுதப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இச்சுவடியில் இலத்தீன் மொழிபெயர்ப்பும் படிவமாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இது மேலைய நாடுகளில்தான் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

இங்குக் கிரேக்கமும், இலத்தீன் மொழி பெயர்ப்பும் நேருக்கு நேராக வைத்து எழுதப்பட்டிருப்பது, இதே போன்ற ஒரு அமைப்பைப் (கிரேக்கம், இலத்தீன்) பிரதி செய்ததன்று. ஆனால், வேறுபட்ட இடங்களிலிருந்து கிரேக்க வாசகத்தையும், இலத்தீன் வாசகத்தையும் தனித்தனியாக எடுத்து, பிறகு எதிரெதிரே வைத்து எழுதப்பட்டுள்ளன.

நற்செய்திகள் மற்றும் அப்போஸ்தலர் பணி மேலைய நாட்டில் பின்பற்றப்படும் கிரேக்க வசன முறைகளுக்கு, இந்தச் சுவடி ஒன்றுதான் அழகான பழஞ்சான்றாக நிற்கிறது. போன் சோடன் என்பவர் பழைய ஏடுகளின் தொகுப்பைச் சார்ந்தது இஃது என்று வகைப்படுத்தினார். இந்தத் தொகுப்பில் சீரியக்கு, இலத்தீன் மொழிபெயர்ப்பின் பழஞ் சுவடிகள் நிறைந்துள்ளன. வெஸ்காட், கோர்ட் என்ற விவிலியப் பழஞ்சுவடி அறிஞர்கள், மற்றும் பழஞ்சுவடிகளைவிட இப்பழஞ்சுவடிதான் கி.பி. 3-ஆவது 4-ஆவது நூற்றாண்டுகளில் வழங்கிய படிவத்தை அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்கின்றனர்.

1546-ஆம் ஆண்டு இப்பழஞ்சுவடி திரிதெந்தீன் பொதுச்சங்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாறு, இதை எடுத்துச் சென்றவர் கிளர்மோந்து என்றவிடத்தின் ஆயர். இதனை, அவர் இலயன்ஸ் நகரிலிருந்த இரனேயஸ் துறவியர் இல்லத்திலிருந்து

பெற்றிருக்க வேண்டும். இச்சுவடியை இவர் அங்கு எடுத்துச் சென்றதன் நோக்கம் என்னவென்றால், இச்சுவடியில்தான் யோவா 21:22 என்ற வசனத்தில் ஒரு குறிப்பிட்ட சொல் காணப்படுகிறது. இச்சொல்லை வைத்துதான் குருக்களின் திருமணமாகாத துறவு நிலைக்கு விவிலிய ஆதாரம் கொடுக்கமுடியும் என்று கருதினார். யோவா 21:22-இல் வரும் வாக்கியம், "நான் வருமளவும் இவன் இப்படியே இருக்கவேண்டும் என்பது எனக்கு விருப்பமாயிருந்தால் உனக்கென்ன" என்று வருகிறது. இதில் வருகின்ற 'இப்படியே' என்ற சொல், கிரேக்கப் படிவங்களில், இச்சுவடியில் மட்டுந்தான் காணப்படுகிறது. இலத்தீன் மொழிபெயர்ப்புகளில் இதே போலவே காணப்பட்டாலும், கிரேக்கப் படிவத்திற்கு, இப்பழஞ்சுவடி மட்டுந்தான் சான்று பகர்கின்றது.

திரிதெந்தீன் சங்கத்திற்குப் பிறகு, இலயன்சு நகர மடத்திற்கு இப்பழஞ்சுவடி திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் 1562- ஆம் ஆண்டு, குகனோத்து என்பவர்களால் இலயன்ஸ் நகரம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதனிடையில் இச்சுவடி என்ன ஆனதென்று தெரியவில்லை. எப்படியோ இச்சுவடி தியோடோர் பேசா என்பவரிடத்தில் வந்து சேர்ந்தது. இவர் 1581-இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். ஆகவே, இவர் பெயராலேயே இச்சுவடி "பேசே சுவடி" என்று அழைக்கப்படுகிறது.

**பேட்சாய் (BEZAI)**

இவர் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலின் தலைமையில் நாடு திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:17; நெகே 7:23). புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவர்களுள் ஒருவர் (நெகே 10:18).

**பேதயா (BEDEIAH - யாவேயின் ஊழியன்)**

எஸ்ராவின் காலத்தில், இவர் தமது அன்னிய மனைவியை விலக்கிவிடக் கட்டாயப்படுத்தப் பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:35).

**பேதுரு (PETER - பாறை)**

**1. அழைப்பு:** சீமோனுக்குக் கிறிஸ்து அளித்த "கேபா" என்ற பெயருக்குச் சரியான மொழிபெயர்ப்பு "கல்" அன்று, "பாறை"யாகும் (மத் 16:18; யோவா 1:42; காண்க. 1 கொரி 1:12; 15:5; கலா 1:18). இப்பெயர் இனிமேல் அவருக்குரிய கடமையை உணர்த்துகிறது. இப்புதுப்பெயரின் அருளால், சீமோன் பேதுரு, யாவேயினுடையவும் அவருடைய மெசியாவினுடையவும் நீடித்து நிற்கும் உறுதியிலும், தகர்க்க முடியாத பிரமாணிக்கத்திலும் பங்குபெறுகிறார். இஃது அவரது தனிச் சிறப்பான நிலையைச் சுட்டிக்காட்டும் முறையாகும்.

பேதுருவின் ஆட்தன்மை பிறரை முழுவதும் கவரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் அவருடைய ஆட்தன்மைக்காகவோ (அவருடைய மறுதலிப்புக்கு முன்புகூட), அவருடைய வேறு எந்தத் தகுதிக்காவோ, பேதுரு தேர்ந்தெடுக்கப்பட வில்லை. இவ்வாறு கைம்மாறு கருதாது தேர்ந்தெடுக்கப்பட்டது அவருக்கு ஒரு மேன்மையை அளிக்கிறது. இந்த மேன்மை, கிறிஸ்து அவருக்கு அளித்த தூதால், அவர் பிரமாணிக்கத்தோடும் அன்போடும் (யோவா 21:15 தொ) நிறைவேற்றவேண்டிய தூதால் அவருக்கு வருகிறது.

**2. வாழ்க்கை குறிப்பு:** பேதுரு யோனாவின் மகன் ஆவார்; பெத் சாய்தா ஊரைச் சேர்ந்தவர் (யோவா 1:44). பிற்காலத்தில், அவர் கப்பர்நாகுமில் வாழ்ந்தார் (மத் 8:5.14; மாற் 1:21). அவர் திருமணமானவர் (மத் 8:14; 1 கொரி 9:5). அவரும் அவரது சகோதரர் அந்திரேயாவும் மீன் பிடிப்பதில் செபதேயுவின் புதல்வர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடன் பங்காளிகளாவர் (லூக் 5:10). எருசலேம் தலைமைக் குருக்களின் கணிப்புப்படி, பேதுரு, யூதத்துவத்தில் பொதுமக்களின் அடிப்படை அறிவை மட்டும் (கல்வியறிவு அற்றவர்) கொண்டிருந்தார் (அ.ப. 4:13). அவர் பேச்சு அவரை ஒரு கலிலேயர் என்று

காட்டிக் கொடுத்தது (மத் 26:73; மாற் 14:70). அவருடைய பின்னணி புற இனத்தவரது பகுதியைச் சேர்ந்தது. இஃது அவர் பிற்காலத்தில் கிரேக்க மொழிபேசும் புற இனத்தவர்களிடையே பணி செய்யப் பெரிதும் உதவியது (1 கொரி 1:12; கலா 2:11-12).

பேதுருவும், அந்திரேயாவும் திருமுழுக்கு யோவானின் சீடர்கள்; யோவானின் வழியாக இயேசுவோடு அறிமுகமானவர்கள் (யோவா 1:35-42). இயேசு பேதுருவை அழைத்தபோது, அவர் இன்னும் மீன் பிடிக்கும் தொழில்தான் செய்து வந்தார் (மாற் 1:16-17). ஆனால், இயேசுவைத் "தலைவரே" என்று மரியாதையாக அழைத்து வந்தார் (லூக் 5:5).

இயேசுவின் பன்னிரு சீடர்களின் பட்டியல்களில் முதல்வராகப் பேதுரு குறிக்கப்படுகிறார் (மத் 10:2; மாற் 3:16; லூக் 6:14; அ.ப. 1:13); நற்செய்திகளில் மற்றச் சீடர்களைவிட அடிக்கடி குறிக்கப்படுகிறார். அவரும், யாக்கோபும் மற்றும் யோவானும் இயேசுவின் நெருங்கிய சீடர்களாவர் (மாற் 5:37; 9:2; 13:8; 14:33; லூக் 22:8). சீடர்களிடையே பேதுருவின் முதன்மை இயேசுவாலும் (மத் 16:16-19), வானதூதராலும் (மாற் 16:7) ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பேதுரு ஆர்வமிக்க ஆளாகவும், இயேசு வின்பால் கொண்ட பற்றுறுதியைக் காட்ட, பேச அல்லது செயலாற்ற எப்போதும் தயாராக இருந்தவராகவும் சித்தரிக்கப் படுகிறார் (மத் 14:28-29; 17:24-25; மாற் 10:28; 11:21; 14:19-31; லூக் 5:8; 8:45; யோவா 6:68-69; 18:10; 21:7). இயேசுவின்பால் கொண்ட பற்றுறுதியால், பேதுரு அவரைத் தவறாகப் புரிந்து கொள்கிறார். அதனால், தலைவரால் கண்டிக்கப்படுகிறார் (மத் 15:15-17; 16:22-23: மாற் 8:29-33; 9:5-6; 14:37-38; யோவா 13:6-11; 18:10-11). இயேசு விசாரிக்கப்பட்டபோதும், ஒரு பெரும் இக்கட்டான நிலையில் பேதுரு தமது பற்றுறுதியில் தவறி விடுகிறார் (14:66-72 இணை). ஆனால் பிற்பாடு உயிர்த்த இயேசுவைப் பார்த்த அப்போஸ்தலர்களில் பேதுருதான் முதலாவதாக உள்ளார் (லூக் 24:34; 1 கொரி 15:5). கலிலேயாவில் மீன்பிடிக்கும் தொழிலுக்குத் திரும்பிய பேதுருவை இயேசு மீண்டும் அழைத்து உன்னதப் பணியை ஒப்படைக்கிறார் (யோவா 21).

இயேசு விண்ணேற்றமானபின், பேதுரு எருசலேம் திருச்சபையில் முக்கிய தலைவராகத் திகழ்கிறார் (அ.ப. 1:13-14). யூதாசுக்குப் பதிலாக மத்தியாவைத் தேர்ந்தெடுத்தலில் பேதுரு முன்முயற்சி எடுக்கிறார் (1:15-26). இதில் அப்போஸ்தலர்களின் வருங்காலத் தூதின் தன்மையை ஓரளவு உணர்ந்துள்ளார் (1:22). ஐம்பதாம் நாள் விழாவன்று திருச்சபை தொடங்கி வைக்கப்பட்டபோது, அந்நிகழ்ச்சியைப் பேதுரு கூடியிருந்த மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார்; அவர்களுக்கு நற்செய்தியைப் போதிக்கிறார் (அ.ப. 2). அப்போதிருந்து "வேறொரு இடத்திற்குப் போகும்வரை" (12:17-19), பேதுரு பாலஸ்தீனத் திருச்சபையில் முக்கிய இடம் வகிக்கிறார். அவர் மக்களைக் குணப்படுத்துகிறார் (3:1-10; 5:15-16; 9:32-43); மக்கள் கூட்டத்திற்குப் போதிக்கிறார் (3:12-26; 5:21-42); சிறைப்படுத்தப்படுகிறார் (4:1-3; 5:17-18. 26; 12:3-5); வியத்தகு விதத்தில் விடுவிக்கப்படுகிறார் (5:19-20; 12:6-17); அரச அதிகாரிகளிடம் இயேசுவைப் பற்றிப் பேசுகிறார் (4:5-12; 5:27-32).

யூதேய யூதர்களின் மூல எல்லைகளுக்கு அப்பாற்பட்ட திருச்சபையில் நடந்த சில நிகழ்ச்சிகளில் பேதுரு மையப்பாகம் வகிக்கின்றார் (8:14-25; 10:1-11:18; காண்க. கலா 1:18-19). பேதுரு எருசலேமுக்குப் பாதுகாப்பாகத் திரும்பியபின் நடந்த அப்போஸ்தலர் சங்கத்தில், புற இனத்தவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதற்கும், அவர்கள் யூத மரபுகளை அனுசரிக்க வேண்டியதில்லை என்பதற்கும் சார்பாக, பேதுரு முக்கியப் பங்கு வகித்தார் (அ.ப. 15:7-11; காண்க. கலா 2:8-10). இச்சங்கத்திற்குச் சிறிது காலத்திற்குப்பின் பழமைவாத யூதக்கிறிஸ்தவர்களின் கட்டாயத்துக்குப் பணிந்து,

புற இனக் கிறிஸ்தவர்களின் பந்தித் தோழமையிலிருந்து பின்வாங்கினார் என்பதற்காகப் பவுலால் கண்டிக்கப்படுகிறார் (கலா 2:11-14).

சங்க விவரிப்புக்குப்பின் அப்போஸ்தலர் பணிநூலில் பேதுரு குறிக்கப்படவில்லை. அந்தியோக்கிய நிகழ்ச்சிக்குப்பின் (கலா 2:11-14), புற இன உலகில் மறைபரப்புப் பயணம் செய்தார் என்று தோன்றுகிறது (1 கொரி 1:12; 3:22; 9:5) தொடக்கத் திருச்பையின் வலுவான சான்றுகளின்படி பேதுரு உரோமைக்குச் சென்று (1 பேதுரு 5:13-இல் வரும் பாபிலோன்) அங்கு நீரோவின் காலத்தில் மறைசாட்சி மரணம் எய்தினார். பிற்காலத்தில் பேதுரு (பவுலோடு சேர்ந்து) உரோமைத் திருச்சபையை நிறுவியவர் என்றும், அதன் ஆயர் என்றும் அழைக்கப்பட்டார்.

3. **முதன்மை:** இயேசு தம்மைப் பின்பற்ற அழைத்தவர்களில், சீமோன் முதல்வராக இல்லாவிட்டாலும், முதலில் அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் (யோவா 1:35-42). ஒத்தமை நற்செய்தியாளர்கள், பேதுருவுடைய முதன்மையைக் காலத்தில் இடமாற்றி, இயேசு பேதுருவைத்தான் முதன் முதலில் அழைத்தார் என்று காட்டுவது அவர்களுடைய போக்கு (மத் 4:18-22 இணை). இஃது எவ்வாறாயினும், சீடர்களில் பேதுரு ஈடு எடுப்பற்ற முதன்மையான இடம் வகிக்கிறார்; அப்போஸ்தலர் பட்டியலில் முதன்மையானவர் (மத் 10:2); சலுகை பெற்ற மூவரில் முதல்வர் (மத் 17:1 இணை). கப்பர்நாகுமில், பேதுரு வீட்டில்தான் இயேசு சாதாரணமாய்த் தங்கினார் (மாற் 1:29). பிற சீடர் பெயரில் அவர்தான் பதில் கூறுகிறார் (மத் 16:23;18:21; 19:27). குறிப்பாக, இயேசுவின் மெசியாத் தன்மையை அவர் கண்டுகொள்ளும் சிறப்பு மிக்க நேரத்தில், அவர்தாம் பிறர் பெயரால் பதில் அளிக்கிறார் (மத் 16:16 இணை; யோவா 6:68). புனித பெண்களுக்கு உயிர்ப்புப் பற்றி வானதூதர் அளித்த செய்தியில் (மாற் 16:7) பேதுரு சிறப்பாகக் குறிக்கப்பெறுகிறார். கல்லறைக்குள் முதலில் நுழைய பேதுருவை யோவா அனுமதிக்கிறார் (யோவா 20:1-10). இறுதியாக, அனைத்திற்கும் மேலாக, உயிர்த்த கிறிஸ்து பன்னிருவரில் பிறருக்குத் தோன்றும்முன் பேதுருவுக்குத்தான் தோன்றுகிறார் (லூக் 24:34; 1 கொரி 15:5). புதிய ஏற்பாடு முழுவதும் பேதுருவுக்கு அளிக்கப்படும் முதன்மை அழுத்திக் காட்டப்படுகிறது. இருப்பினும், இறைவனுடைய திட்டத்தை அறிவதற்கு (அ.ப. 10:15; கலா 2), அவர் வெகு முயற்சி செய்ய வேண்டியிருந்தது. இந்த முதன்மை, அப்போஸ்தல்களின் குழுப்பொறுப்புடையமையையோ, பவுல் போன்றவரின் தொடக்கச் செயல்களையோ விலக்கவில்லை. பவுல், தாம் மனந்திரும்பியபின், தமது சிறப்பான அழைத்தலை நன்கு உணர்ந்திருந்தாலும் (கலா 1:15தொ), பேதுருவுடன் தொடர்பு கொள்ள எருசலேமுக்குச் செல்கிறார் (1:18). அந்தியோக்கியாவில் ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியில் பேதுரு உறுதியான நிலையெடுக்கப் பயத்தோடு தயங்கியதை நினைவுகூரும் போதும் (கலா 2:11-14), பவுல் பேதுருவைப் பற்றிப் பேசும்போது, திருச்சபை முழுவதையும் தம் அதிகாரத்தால் இட்டுச் செல்பவரிடம் பேசுவதுபோல் பேசுகிறார்.

4. **தூது:** பேதுருவின் முதன்மை அவருடைய தூதின்மேல் நிறுவப்பட்டதாகும். இதைப் பல நற்செய்தி வாசகங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அ) மத் 16:13-23: பேதுருவே புதிய ஆபிரகாம்; உயிருள்ள கற்கள் வெட்டியெடுக்கப்படும் குழியாவார் (எசா 51:1தொ; மத் 3:9); கிறிஸ்து தமது இறுதிக்காலச் சமூகத்தைக் கட்டும் அடிப்படையாவார். பேதுரு, எல்லா மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டிய தூதைப் பெறுகிறார். சாவின் ஆற்றல்களாகிய தீய சக்திகளுக்கு எதிராக, திருச்சபை பேதுருமேல் கட்டப்படுகிறது. அதற்கு வெற்றி உறுதியளிக்கப்படுகிறது. இயேசுவை உயிருள்ள இறைவனின் மகன் என்று பேதுரு அறிக்கையிடுகிறார். மக்களை ஒரு சபையாகக்

கூட்டிச் சேர்க்கும் பெரும் பொறுப்பு பேதுருவுக்கு அளிக்கப்படுகிறது. இத்திருச்சபையின் மக்கள் புனிதமான முடிவில்லா வாழ்வு பெறுவர். உடலில் உயிர்நிலையான செயல்கள் நின்றுவிட முடியாமை போல, உயிருள்ள, உயிர் கொடுக்கும் அமைப்பாகிய திருச்சபையிலும், பேதுரு விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின் வாழ்வை இடைவிடாது அளிக்க ஏதாவது ஒரு வகையில் அதில் எப்போதும் நிலையாயிருக்க வேண்டும்.

**ஆ) லூக் 22:31தொ;** அ.ப.: பேதுருவின் பெயரை ஐயமறச் சுட்டிக்காட்டி, பேதுரு தமது மறுதலிப்பைக் கைவிட்டபின், தம் சகோதரரை உறுதிப்படுத்தவேண்டும் என்று இயேசு பேதுருவுக்கு அறிவிக்கிறார். கிறிஸ்துவின் மன்றாட்டின் பயனாக, அவருடைய விசுவாசம் தவறாது. இதுதான் உண்மையிலேயே பேதுருவுடைய தூதாகும். இதை, லூக்கா அப்போஸ்தலர் பணியில் விவரிக்கிறார். மாடியறையில் கூடியிருந்த குழுவிற்குத் தலைவராகத் தம்மையே காண்கிறார் பேதுரு (அ.ப. 1:13); மத்தியாவின் தேர்தலில் தலைமை தாங்குகிறார் (1:15); அனனியாவுக்கும் சப்பீராவுக்கும் தீர்ப்பு அளிக்கிறார் (5:1-11); தம்மோடு இருந்த பிற அப்போஸ்தலர்கள் பெயரால் உயிர்த்த கிறிஸ்துவின் மெசியா மகிமையைப் பறைசாற்றுகிறார்; ஆவியின் கொடையை எடுத்துரைக்கிறார் (2:14-36); புற இனத்தார் உட்பட (10:1-11:18) யாவரையும் திருமுழுக்கிற்கு அழைக்கிறார் (2:37தொ); எல்லாத் திருச்சபைகளையும் மேற்பார்க்கிறார் (9:32). உயிர்மேல் அவர் கொண்டிருக்கும் ஆற்றலுக்குச் சான்றாக, இயேசுவின் பெயரால் நோய்களைக் குணமாக்குகிறார் (3:1-10); மரித்தவர்களை உயிர்த்தெழச் செய்கிறார் (9:36-32).

திருச்சபை நடந்தது பெரும்பாலும் குழுத் தன்மையுடையது. ஆயினும், கொர்னேலியுவுக்குத் திருமுழுக்கு அளித்த தம் செயலுக்குப் பேதுரு விளக்கம் அளிக்க வேண்டியிருந்த நிகழ்ச்சி (11:1-18), எருசலேம் சங்க நிகழ்ச்சி விவரங்கள் (15:1-35), கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் சுட்டிக்காட்டுவது (கலா 1:18-2:14) ஆகியவை எருசலேம் திருச்சபையை நடத்துவதில் யாக்கோபு சிறப்பிடம் வகித்தார் என்றும், அவருடைய சொல்லுக்குச் சிறப்பான செல்வாக்கு இருந்தது என்றும் காட்டுகின்றன. ஆனால், இச்செய்திகளும் அவற்றிடையே உள்ள தொடர்பும், பேதுருவுடைய முதன்மைக்கும், தூதுக்கும் ஊறு செய்யவில்லை. மாறாக, அம்முதன்மையின் மற்றும் தூதின் ஆழ்ந்த பொருளைத் தெளிவாக்குகின்றன. யாக்கோபின் அதிகாரத்திற்கு, உண்மையில், பேதுருவுடையதைப் போன்ற அடிப்படையோ, தெளிவான பொருளோ இல்லை. ஒரு தனிச்சிறப்பான பட்டத்தின் ஆற்றலால், தவறின்றி விசுவாச ஒழுங்கைப் பிறருக்கு அளிக்கும் தூதையும், அதற்குரிய யாவற்றையும் பேதுரு பெறுகிறார் (கலா 1:18). அவர் வாழ்வு பற்றிய வாக்குறுதிகளின் கருவூலமாவார் (மத் 16:18 தொ).

**இ) யோவா 21:** பகிரங்கமாக, ஒருவேளை சட்ட அமைப்பு முறையில், மும்முறை சொல்லி, உயிர்த்த கிறிஸ்து, ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் கொண்ட முழு மந்தையையும் பேதுருவிடம் ஒப்படைக்கிறார். இந்தத் தூதை, நல்லாயன் உவமையின் ஒளியில் நாம் அறிந்துணரவேண்டும் (யோவா 10:1-28). நல்லாயன், ஒரே மந்தையில் ஒன்று சேர்க்கப்பட்ட ஆடுகளைக் காப்பாற்றுகிறார் (10:6; 11:52). அவை உயிரை மிகுதியாகக் கொண்டுள்ளன. அவற்றிற்காக நல்லாயன் தம் உயிரையே அளிக்கிறார் (10:11). இதைக் கருத்தில் கொண்டே, பேதுருவுக்கு அவருடைய மறை சாட்சி மரணத்தை முன்னறிவித்தபோது, "என்னைப் பின்தொடர்" என்று கிறிஸ்து கூறுகிறார். அவர் தம் குருவின் வழியில் நடக்கவேண்டும் என்றால், அஃது அவர் தம் உயிரைக் கொடுப்பதில் மட்டும் இல்லை; அவருடைய ஆடுகள் ஒருபோதும் அழிந்து போகாமல், அவற்றிற்கு முடிவில்லா வாழ்வை அளிக்க வேண்டும் (10:28).

பாறையும் உயிருள்ள கல்லுமானவரும் (1 பேதுரு 2:4), திருச்சபையினுள் ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் கொண்டுள்ள ஆயனுமாகிய, அதாவது விசுவாசிகளைச் சாவிலிருந்து மீட்டு அவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு அளிக்க வல்லவருமான, கிறிஸ்துவைப் "பின்பற்றுவதில்", பேதுரு உண்மையிலேயே கிறிஸ்துவின் பிரதிநிதியாக உள்ளார். திருச்சபைக்காக ஓர் அவசியமான அலுவலைத் தொடங்கி வைக்கிறார். இதில் அடங்கியிருக்கிறது அவருடைய தூதும் அவருடைய மேன்மையும்.

**பேதுரு எழுதிய திருமுகம் - I (PETER, FIRST LETTER OF)**

1. **முன்னுரை:** இது புதிய ஏற்பாட்டின் இருபத்தொன்றாவது நூலாகும். பொதுத் திருமுகங்களில் ஒன்று, கிறிஸ்தவர்கள் என்பதற்காகத் துன்பத்திற்கு உள்ளானவர்களுக்கு உற்சாகமும், ஆறுதலும் அளிக்கவும் அவர்களின் கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையை எடுத்துக் கூறவும் இந்நூல் எழுதப்பட்டது.

2. **ஆசிரியர்:** "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரான பேதுரு" (1 பேதுரு 1:2), சில்வானின் உதவியுடன் (5:12) இந்நூல் எழுதியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சில்வான், எருசலேம் சங்கத்திற்குப் பிறகு பவுலோடு மறைபரப்புப் பணி செய்தவராக இருக்கலாம் (2 கொரி 1:19; சீலா : அ.ப. 15:40; 16:19; 17:4). திருவெளி 17:5-இல் குறிக்கப்படுவதுபோல், "பாபிலோன்" என்று மறைமுகமாகக் குறிக்கப்படும் உரோமை நகரிலிருந்து (1 பேதுரு 5:13; திருவெளி 17:5) இத்திருமுகம் அனுப்பப் பட்டிருக்கலாம் (ஒருவேளை நெருங்கிய சீடர் என்ற பொருளில்) ஆசிரியரின் "மகன்" என்றழைக்கப்படும் மாற்கும் வாசகர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார் (1 பேதுரு 5:13). இவர் நற்செய்தியின் ஆசிரியராக இருக்கலாம். இவரை, கி.பி. 2-ஆம் நூற்றாண்டில், பாப்பியசு "பேதுருவின் விளக்கவுரையாளர்" என்று குறிப்பிடுகிறார். துன்பங்கள் பற்றி அடிக்கடி வரும் குறிப்புகள் (1:6; 3:14; 4:1.12-19) விசுவாசத்திற்காகக் கொல்லப்படப்போவதை எதிர்நோக்கியிருந்த ஆசிரியரின் அனுபவத்தைப் பிரதிபலிக்கலாம். "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்று ஆசிரியர் தம்மைக் குறிப்பிடுகிறார். இஃது இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நேரடியாகக் கண்டதை உணர்த்தலாம் அல்லது கிறிஸ்துவின் பாடுகளைப் போதித்துச் சான்று பகர்வதைக் குறிக்கலாம்.

எருசலேமில் நடந்த அப்போஸ்தலர் சங்கத்தின் விவரிப்புக்குப்பின் (அ.ப. 15), பேதுரு அப்போஸ்தலர் பணி நூலில் குறிக்கப்படவில்லை. ஆயினும், அந்தியோக்கிய வாசத்திற்குப்பின் (கலா 2:11-14), பேதுரு மறைபரப்புப் பணியாக, பிறவின உலகின் வெகுதூரம் சென்றிருக்கலாம் (காண். 1 கொரி 9:5). பேதுரு தமது இறுதிக் காலத்தை உரோமையில் செலவழித்தார் என்பதற்கும், கி.பி. 64-65-இல் நடந்த நீரோவின் வேதகலாபனையில் மறைசாட்சி மரணம் எய்தினார் என்பதற்கும் வேண்டிய வலுவான இலக்கியச் சான்றுகள் முதல் நூற்றாண்டின் முடிவிலிருந்து கிடைக்கின்றன. சமீப காலத்தில் புனித பேதுரு பேராலயத்தின்கீழ் நடந்த அகழ்வாய்வுகளும் இதற்கு ஆதரவு அளிக்கின்றன.

இரனேயு காலமுதல் சமீபகாலம்வரை இத்திருமுகத்தைப் பேதுருதான் எழுதினார் என்பது பற்றி ஒன்றித்த கருத்து நிலவியுள்ளது. இக்கருத்தைப் பெரும்பாலான கத்தோலிக்க விளக்கவுரையாளர்களும், பிரிவினைச் சபைகளைச் சேர்ந்த சிலரும் ஏற்றுக் கொள்கின்றனர். சமீப காலத்தில் இந்நிலைக்கு எதிரான கருத்துத் தோன்றியுள்ளது. பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவர், பேதுருவின் பெயரைப் பயன்படுத்தி, சிறிய ஆசியாவில் துன்புற்ற திருச்சபைகளுக்கு அப்போஸ்தலர்களின் போதனையை அளிக்கிறார் என்ற கருத்துத் தோன்றியுள்ளது. இத்திருமுகம் "பேதுரு குழுவின்" பிற்காலப் படைப்பு என்றோ,

ஒரு புனைபெயர்நூல் என்றோ விளக்குவர். இந்நிலைக்குச் சார்பாகப் பின்வரும் காரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

1) இத்திருமுகம் அழகான கிரேக்க நடையில் அமைந்துள்ளது. நடை கிரேக்க இலக்கணத்தில் புலமையைக் காட்டுகிறது. இதைக் கொச்சை மொழி பேசிவந்த கலிலேய மீன்பிடிப்பவரிடம் எதிர்பார்க்க முடியாது. மேலும், நூலில் கொடுக்கப்படும் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் நிலையான முறையில் எழுபது நூலிலிருந்து கொடுக்கப்படுகின்றன. பாலஸ்தீனத்தைச் சேர்ந்த "கல்வியறிவு அற்ற" (அ.ப. 4:13) பேதுரு இவ்வாறு பயன்படுத்தியிருக்க முடியாது.

இதற்கு நூலே பதிலைச் சுட்டிக்காட்டுகிறது. 1 பேதுரு 5:12-இல் வரும் சில்வான் (சீலா) வெறும் பிரதி எடுப்பவரோ, வெறும் தூதரோ அல்லர். அவரும் இத்திருமுகத்தை எழுதுவதில் ஈடுபாட்டோடு செயல்பட்டிருக்க வேண்டும். இப்பகுதியை எரோனிமுவே சுட்டிக் காட்டியுள்ளார். இக்காலத்தில் பலர் இதை ஏற்றுக்கொள்வர். கருத்துகளைப் பேதுரு கூற, சில்வான் அவற்றைத் தம் சொந்த நடையில் அமைத்திருக்கலாம். சில்வான் கிரேக்க மொழியிலும், எழுபதுநூல் அறிவிலும் புலமை பெற்றிருந்திருக்கலாம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடிதம் எழுதுவதில், செயலருக்குப் போதிய சுதந்தரம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

2) சிந்திக்கும் முறையிலும், சொற் கோவையிலும் இந்நூல் பவுலின் திருமுகங்களோடும் (குறிப்பாக உரோமையருக்கும் எபேசியருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களோடும்), யூதாவின் திருமுகத்தோடும் தொடர்புடையதாகவும் அவற்றைத் தழுவியதாகவும் தோன்றுகிறது. இப்பண்பின் சில கூறுகள்: கிறிஸ்துவை மூலைக் கல்லாகத் கொண்டு கட்டப்பட்டிருக்கும் ஆலயமாகத் திருச்சபை விவரிக்கப்படுதல் (1 பேதுரு 2:4-5; எபே 2:19-22); "கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும்" கிறிஸ்துவின் நிகழ்கால நிலை மற்றும் "அதிகாரம் தாங்குவோர், வலிமை மிக்கோர், தூதர் அனைவர் மேலும்" அவர் கொண்டிருக்கும் ஆட்சி (1 பேதுரு 3:22; காண். எபே 1:20-21); ஓர் எடுத்துக்காட்டான வீட்டிலுள்ள அங்கத்தினர் பலருக்கும் அளிக்கப்படும் அறவுரைகள் (1 பேதுரு 2:18; 3:1.17; காண். எபே 5:22.28; 6:1; 4-5.9; கொலோ 3:18-22; 4:1). மேலும், இந்நூல் வடிவ அமைப்புக் கூறுகளிலும் பவுலின் திருமுகத்தை ஒத்துள்ளது. பவுல் பொதுவாகப் பயன்படுத்தும் "கிறிஸ்துவுக்குள்" என்ற சொல்லை இந்நூலும் பயன்படுத்துகிறது (1 பேதுரு 3:16; 5:10.14). எசா 8:14-15; 28:16-ஐப் பேதுருவும் பவுலும் மேற்கோளாகக் காட்டுகின்றனர் (1 பேதுரு 2:6-8; உரோ 9:33).

இக்காரணத்திற்குப் பதில் கூறவும் சில்வானின் உதவி பயன்படுகிறது. இவர் அப்போஸ்தலப் பணியில் பவுலோடு ஒத்துழைத்தவர்; தெசலோனிக் கேய்களுக்கு எழுதப்பட்ட இரு திருமுகங்கள் எழுதுவதிலும் தொடர்புடையவர். மேலும், இவர் எருசலேம் சகோதரர் குழுவைச் சேர்ந்தவர் (அ.ப. 15:22.27.32). மேற்கூறப்பட்ட பிரச்சனைக்கு விடையாக, சில்வானுடைய செயல்களைச் சுட்டிக்காட்டினாலும், இந்நூலுக்கும் புதிய ஏற்பாட்டின் பிறநூல்களுக்கும் பொதுவான கருத்துக்கள் மூலத்திருச்சபையின் வளர்ச்சியடைந்த மறைக்கல்விப் போதகத் தொகுப்பிலிருந்து வந்திருக்கலாம் என்பதை மனதில் கொள்வது சாலச் சிறந்ததாகும். பவுலின் திருமுகங்களோடு இத்திருமுகம் கொண்டிருக்கும் ஒற்றுமைகள் தொடக்கத் திருச்சபையில் பயன்பட்ட பாரம்பரிய முறைகளை வெறுமனே பிரதிபலிக்கின்றன எனலாம். இவற்றிலிருந்து பேதுருவும், பவுலும் தங்களது மரபைப் பெற்றிருக்கலாம்.

3) எந்தத் திருச்சபைகளுக்குப் பேதுரு இத்திருமுகத்தை எழுதினாரோ அவை இன்னும் தோன்றியிருக்கவில்லை என்பர். மேலும், பேதுரு சிறிய ஆசியாவிலுள்ள விசுவாசிகளை

அறிந்திருப்பாரா என்பதும் ஐயத்திற்குரியது.

இதற்குப் பதிலாக, பித்தினியாவில் தொடக்க காலத் திருச்சபையில் வளர்ச்சியிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எவ்வளவு விரைவில் சிறிய ஆசியாவில் திருச்சபை வளர்ச்சியுற்றது என்பது பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. மேலும், பேதுரு உரோமைக்குச் சென்று அங்கு மரித்தார் என்பது உறுதியான செய்தியாகும். கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ, அவர்களோடு ஆசிரியருக்கு நேரடி அறிமுகம் வேண்டியதில்லை. யூதக் கிளர்ச்சி தொடங்கியபின், முன்பு எருசலேம் திருச்சபை கொண்டிருந்த தலைமைப் பதவியை உரோமைத் திருச்சபை செயல்படுத்தத் தொடங்கியிருக்கலாம்.

4) கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்திற்காகத் துன்புற்ற காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், பேதுரு காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு உலகளாவிய கலாபனை நடந்ததாகத் தெரியவில்லை. இத்தகைய நிலை தொமீசியன் அல்லது திரேசன் காலத்தில் நிலவியது. இக்காலத்திற்கு முன்பே பேதுரு இறந்துவிட்டார். எனவே, பேதுரு இத்திருமுகத்தை எழுதியிருக்க முடியாது.

அரசர்க்கும், அரச அதிகாரிகளுக்கும் பணிந்திருக்க வேண்டும் என்று நூலில் கூறப்படுகிறது (1 பேதுரு 2:13-17). இஃது அரசால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட சூழ்நிலையைச் சுட்டவில்லை. ஆனால், அந்தந்த இடத்து மக்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டது திருச்சபை முழுவதும் பரவலாக இருந்தது. பிறமதத்தினரால் நீதி மன்றங்களில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டதும் (3:13-17; 4:15-19), கிறிஸ்தவர்கள் என்ற காரணத்திற்காகத் தண்டிக்கப்பட்டதும் (4:16) சாதாரண நிலையில் பல இடங்களில் நடக்கக்கூடியவை; நடந்தவையுமாகும். தனிப்பட்ட மனிதர்களின் வெறுப்பும், பகைமையும், அவதூறும், தப்பெண்ணம் கொண்ட நீதிபதிகளின் ஒத்துழைப்பும் இந்தச் சூழ்நிலைக்குக் காரணமாயிருந்திருக்கலாம். இப்படிப்பட்ட துன்புறுத்தல்களுக்கிடையிலும் தங்களது கிறிஸ்தவ அழைப்பில் உறுதியாக நிற்கும்படி கிறிஸ்தவர்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றனர்.

தொடக்க காலத் திருச்சபையில் புனை பெயரில் நூல்கள் எழுதப்பட்டிருக்கலாம் அல்லது அத்தகைய புனைபெயர் நூல்களைத் திருச்சபை ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில், இந்நூலைப் பேதுருதான் எழுதினார் என்பதற்கு எதிரான காரணங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். இம்முயற்சியிலும் கருத்தொற்றுமை யில்லை. இந்நூல் பேதுருவால் எழுதப்படவில்லையென்றால், பேதுருவோடு அவரது வாழ்நாளில் தொடர்புடைய அல்லது பேதுருவின் பாரம்பரியத்தைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால், பேதுருவுக்கு வெகுகாலத்திற்குப் பின் எழுதப்பட்டிருக்க முடியாது என்பர். இறை ஏவுதல் பெற்ற ஏடு என்ற அளவில், இத்திருமுகத்தின் மதிப்பீடு, இது பேதுருவை ஆசிரியராகக் கொண்டிருப்பதைச் சார்ந்ததன்று என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும். அக்கால இலக்கிய மரபுகளைக் கவனத்தில் கொண்டு, புனைபெயர் நூல்களில் நேர்மையின்மையையோ, தகுதியற்ற செயல் நோக்கையோ நாம் கற்பனை செய்ய வேண்டியதில்லை.

பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்பதற்கு ஆதரவாக, இந்நூலின் மூல இறையியலும் (இறுதிக்கால இயல், ஊழியன் இயல், மெசியா இயல்), திருச்சபை அமைப்புப் பற்றிய இறையியலும் அமைந்துள்ளன. மேலும், பேதுரு இறந்தபின் இந்நூல் எழுதப்பட்டிருந்தால், கி.பி. 65-இல் நீரோவால் தொடங்கப்பட்டு உரோமைத் திருச்சபையில் நிலவிய பயங்கர வேத கலாபனை பற்றியோ, பேதுருவின் இறப்புப் பற்றியோ எக்குறிப்பும் இன்மையை விளக்குவது கடினம். அப்போஸ்தலர் பணிநூலில் வரும் பேதுருவின் உரைகளோடு இந்நூலை ஒப்பிட்டால்

இந்நூலுக்குப் பேதுருதான் ஆசிரியர் என்ற நிலைக்குச் சான்று கிடைக்கும். ஆகவே, இந்நூல் ஒரு புனைபெயர் நூல் என்பவர்கள் அதற்குரிய பின்னணியை நன்கு நிறுவ வேண்டும். ஆகவே, பேதுருவின் மரணத்துக்குமுன் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம்.

**3. யாருக்கு எழுதப்பட்டது?** இந்நூலில் குறிக்கப்படும் ஐந்து மாகாணங்களும் சேர்ந்து, தவுரசு மலையின் தெற்கிலும், வடக்கிலும் அமைந்திருந்த சிறிய ஆசியாவின் முழுப்பகுதியாகும். இப்பகுதியிலிருந்த கிறிஸ்தவச் சமூகங்களின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு ஆகியவை பற்றி அறிஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை. இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இந்நூல் எழுதப்படுகிறது (1 பேதுரு 1:1). இவர்களோடு ஆசிரியர் தனிச் சிறப்பான உறவு கொண்டிருந்ததாகத் தெரிய வில்லை. இந்நூல் பரவலாக வாசிக்கப்பட வேண்டிய சுற்று மடலாகத் தெரிகிறது.

வாசகர்கள் "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்கள்" ( 1:1 ) என்றழைக்கப்படுனர் (சிதறுண்டு வாழ்பவர்கள் என்ற சொற்றொடர், தங்கள் பூர்வீக நாட்டில் வாழாத யூதர்களைக் குறிக்கும். காண். யாக் 1:1). இவர்கள் புறமதத்தினரிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர் (1 பேதுரு 2:12; 4:3). பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. இவை யாவும் இந்நூலின் வாசகர்கள் யூதர்கள் ஆவர் என்று சுட்டுகின்றன என்பர் சிலர். 1:14; 2:9-10; 4:2-4-இலிருந்து இவர்கள் பிற இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகின்றனர் வேறு சிலர். இக்கிறிஸ்தவர்கள் பிற மதத்தினரிடமிருந்து வேறுபடுத்தப்படுவது (2:12; 4:3), இவர்களுக்கும் இவர்கள் இதுவரை சேர்ந்து வாழ்ந்த இவர்களது நாட்டைச் சேர்ந்த பிறமத அயலார்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டைத்தான் சுட்டுகிறது என்பது தெளிவு (காண். கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கு மிடையேயுள்ள வேறுபாடு: 1:14; 4:2-3; காண். 1:18). "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்" என்பது அவர்களது உண்மையான விண்ணக வீட்டிலிருந்து கிறிஸ்தவச் சமூகங்கள் உலகில் தற்காலிகமாகப் பிரிந்திருப்பதை உருவகமாக உணர்த்துவதாகும் (காண். எபி 11:13; 13:14). "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்" என்பது சொற்பொருளாக வாசகர்களின் சமூக நிலையைச் சுட்டுகிறது. உலகத்தோடு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் உறவை உருவகமாகச் சுட்டவில்லை என்பர் விளக்கவுரையாளர் சிலர். ஆனால், 1 பேதுரு 2:11-இல் வாசகர்களின் சமூக நிலையை அன்று, அடிப்படை மனப்பான்மையையே ஆசிரியர் வலியுறுத்துகிறார் என்பது தெளிவாகிறது. இந்தத் திருமுகம் யூதர்களும் பிறவின மக்களும் சேர்ந்த திருச்சபைகளுக்கு எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொள்வது மேலாகும். ஆசிரியர் இவர்களை நேரடியாக அறிந்திருந்தார் என்பதற்கு நூலில் எந்தச் சான்றும் இல்லை.

**4. சூழ்நிலையும் நோக்கமும்:** துன்பங்களை எதிர்கொள்ளும்போது எவ்விதம் நடந்து கொள்வது என்பது பற்றி அறவுரை கூறப்படுகிறது. திருமுகம் "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்களுக்கும்" (1:1), "அன்னியரும் வெளிநாட்டவருமான அவர்களுக்கும்" (2:11) எழுதப்படுகிறது. இச்சொற்றொடர்கள், பிறமத உலகிலே கிறிஸ்தவர்களின் நிலையற்ற மற்றும் இடையூறுகள் மிக்க நிலையைச் சுட்டுகின்றன. அவர்கள் பெரும்பாலும் பிற மதங்களிலிருந்து மனந்திரும்பியவர்கள் (1:14.18; 2:9.10; 4:3-4). ஒருவேளை சமீபத்தில்தான் மனந்திரும்பியவர்களாக இருக்கலாம் (1:14; 2:2; 4:12). பிற மதத்தவர்களின் பகைமையாலும் கொடுமையாலும் தங்கள் விசுவாசத்தை இழந்துவிடும் ஆபத்தில் இருந்திருக்கலாம். அதிகாரபூர்வமான அரசாங்க வேத கலாபனை திருமுகம் எழுதப்பட்ட காலத்தில் சிறிய ஆசியாவில் நிகழ்ந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை (2:13-

17). கி.பி. 64-65-இல் நடந்த நீரோவின் வேதகலாபனை உரோமைக்கு வெளியே பரவியிருந்தது என்று கூறமுடியாது. ஆயினும், அந்தந்த இடங்களில் கிறிஸ்தவர்கள் என்பதற்காகக் கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கலாம். இத்துன்பங்கள் பற்றி முனைப்பாகத் தோன்றும் பகுதி (4:12-19) முடிவுரைப் போற்றுரைக்குப்பின் (4:11; காண் 5:11) உடனடியாக வருகிறது. இது முந்தைய பகுதிகளில் (குறிப்பாக 2:13-17) காணப்படும் நிலையைவிட அமைதி குலைந்த நிலையைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, இம்மடல் எழுதப்பட்டிருந்திருக்கும் போது சிறிய ஆசியக் கிறிஸ்தவர்களின் அச்சமய நிலைபற்றிய செய்தி ஆசிரியருக்குக் கிடைத்திருக்க வேண்டும். இது துன்பங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்ற கருத்தை விரிவாக்க ஆசிரியரைத் தூண்டியிருக்க வேண்டும்.

இச்சூழ்நிலையில், கிறிஸ்தவர்களின் அழைப்பின் மேன்மையை நினைவுபடுத்தியும், வேதகலாபனை அவ்வழைப்பின் அடையாளமாகும் என்று காட்டியும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைநிற்க வேண்டும் என்றும் ஆசிரியர் அறவுரை கூறுகிறார்; உற்சாகப் படுத்துகிறார் (5:12). உலகத்தால் அன்னியரும் வெளிநாட்டவருமாகக் கருதப்படும் இவர்கள் கிறிஸ்தவ சமூகத்தில் ஓர் இல்லத்தைக் கண்டுள்ளனர்.

5. **எங்கிருந்து, எப்போது?** 5:13-இல் வரும் "பாபிலோன்" உரோமை நகரைக் குறிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம் (காண். திருவெளி 14:8; 16:19; 17:5; 18:2.10.21). ஒரே சமயத்தில் பேதுரு, சில்வான், மாற்கு ஆகிய மூவரும் இந்நகரில் இருந்ததற்கு இஃது ஆதரவு அளிக்கிறது. பேதுரு உரோமையில் நீரோவின் வேத கலாபனையில் மறைசாட்சி மரணம் எய்தினார் என்பது உறுதி. இதற்கு வேண்டிய இலக்கியச் சான்றுகள் உள்ளன. அகழ்வாய்வும் ஆதரவு அளிக்கிறது. இத்திருமுகம் பேதுரு இறப்பதற்குமுன் உரோமையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். சிறிய ஆசியாவில் நற்செய்தி ஏற்கெனவே போதிக்கப்பட்டுவிட்டது உரோமையர், எபேசியர், யூதா முதலிய திருமுகங்கள் எழுதப்பட்டுவிட்டன. ஆகவே, இந்நூல் கி.பி. 62-க்கும் 64-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

6. **இலக்கிய அமைப்பு:** கர்னாக்கு என்பவருடைய காலம்வரை இந்நூல் ஒரு திருமுகமாகக் கருதப்பட்டது. ஆனால் இவர், நூலின் முன்னுரையும் முடிவுரையும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்றும், மற்றப் பகுதிகள், பகுதிகள் மூலத்தில் ஒரு மறையுரையாகும்; குறிப்பாக, திருமுழுக்கு மறையுரையாகும் என்றும் கூறினார். இதைப் பின் பற்றி 1:3-4:11-இல் திருமுழுக்கு மறையுரை அல்லது வழிபாட்டைக் காண முயன்றுள்ளனர் சிலர். புல்ட்மன் என்பவர் இதில் ஒரு பாடலையும் (2:21-24). விசுவாச அறிக்கையையும் (3:18-24) காண்பதாகக் கூறியுள்ளார். இப்போக்கைப் பின்பற்றி வேறுசிலர் இதில் நான்கு பாடல்களைக் (1:3-5; 2:22-25: 3:18-22; 5:5-9) கண்டுள்ளனர். ஒரு சிலர், இது திருவழிபாட்டுச் சடங்கு ஆகும் என்றும், 1:21-க்குப்பின் திருமுழுக்கு வழங்கப்பட்டது என்றும் கூறினர். இன்னும் சிலர், 4:11-க்கும் 4:12-க்கும் இடையில் முறிவு இருப்பதாகக் கூறி அதைப் பெரிது படுத்தியுள்ளனர். இதுபற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

ஆனால், இக்கருதுகோள் உறுதியளிப்பதாக இல்லை. அப்போஸ்தலர் காலத்து வழிபாட்டுமுறை பற்றி நமக்கு வெகு சிறிதே தெரியும். ஆகவே, அதன் சுவடுகளைக் காண முயல்வது எளிதன்று. இந்நூல் தன்னைப் பற்றியே 1:1; 5:12-இல் கூறுவதைக் கவனமாக ஏற்றுக்கொள்வதே அறிவுபூர்வமாகும்; அதாவது, வேதகலாபனையை எதிர்கொண்ட கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும் கடிதமாகும். இதில் கிறிஸ்தவ மூல மறைக்கல்வி, விசுவாச அறிக்கைகள், பாடல்கள், வழிபாட்டுச்

சடங்குகள் ஆகிய கூறுகள் பின்னப் பட்டிருக்கின்றன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இந்நிலையை இக்கால ஆய்வாளர்கள் பலரும் ஏற்றுக்கொள்வர். இதன் அகச்சான்றுகள், இது தனக்கே உரிய ஒற்றுமையும் நோக்கமும் கொண்ட ஓர் உண்மையான கடிதத்தைக் காட்டுகின்றன.

7. **திருமுறைப்பட்டியலில்:** இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பது பற்றி ஒருபோதும் ஐயம் எழுந்ததில்லை. உரோமையைச் சேர்ந்த கிளமந்து காலம் முதல், தொடக்ககாலத் திருச்சபையில் இந்நூல் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. திருமுறைப்பட்டியல் பற்றி எல்லா அதிகாரபூர்வமான விவரிப்புகளிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரே விதிவிலக்கு மூராத்தோரியின் துணுக்குகளில் இது காணப்படவில்லை என்பதாகும். கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகுதியான சான்றுகள் உள்ளதால், இவ்விடம் இந்நூல் விடப்பட்டுள்ளது தற்செயலாகவே நடந்திருக்க வேண்டும்.

திட்டம்:

I. முன்னுரை: அறிமுகமும் வாழ்த்தும் (1:1-2).

II. கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையும் பொறுப்புகளும் (1:3-2:10).

அ)கிறிஸ்தவ அழைப்பு (1:3-25).

1) 1:3-12 : ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டு, மகன் வழியாகத் தந்தையால் ஆற்றப்படும் மீட்பு.

2) 1:13-25 : புனிதத்திற்கு அறவுரை.

ஆ). கிறிஸ்தவ அழைப்பின் பொறுப்புகள் (2:1-10).

1) 2:1-3 : அறவுரை - இறைவனின் பிள்ளைகளாக வாழுங்கள்.

2) 2:4-10 : இறைவனின் புதிய இல்லம், புதிய இனம்.

III. கிறிஸ்தவ வாழ்வின் சாட்சி (2:11-3:12).

அ) பிறமத உலகில் கிறிஸ்தவ நடத்தை (2:11-12).

ஆ) பாரம்பரிய மறைக்கல்வி (2:13-17).

1) 2:13-17 : அரசாங்க அதிகாரிகள்பால்.

2) 2:18-3 : வீட்டில் ஒழுங்குமுறை.

இ) எல்லாவற்றிற்கும் மேலாக அன்பும் தாழ்ச்சியும் (3:8-12).

IV. கிறிஸ்தவனும் வேதகலாபனையும் (3:13-5:11).

அ) கிறிஸ்தவன் கலாபனையை அணுகும் முறை (3:13-4:11).

1) 3:13-17 : கலாபனையில் நம்பிக்கை.

2) 3:18-4:6 : கிறிஸ்துவே நம்பிக்கையின் அடிப்படை

3:18-22 : பாவத்தின்மேல் கிறிஸ்து கொண்ட வெற்றி திருமுழுக்கில் கிறிஸ்தவனுக்கு அளிக்கப்படுகிறது.

4:1-6 : கிறிஸ்தவன் துன்பங்கள் வழியாகப் பாவத்தைக் கைவிடுகிறான்.

3) 4:7-11 : கிறிஸ்தவ வாழ்வும் இரண்டாம் வருகையும்.

ஆ) செயலற்ற முறையில் கலாபனையை எதிர்கொள்ளுதல்.

1) 4:12-19 : நடைமுறையில் துன்பத்தில் மகிழ்ச்சி.

2) 5:1-5 : மூப்பர்களுக்கும் விசுவாசிகளுக்கும் அறவுரை.

3) 5:6-11 : இறுதி அறவுரை; இறைவனை நம்பி; அவர் துன்பங்களின் வழியாக உன்னை மகிமைக்குக் கொண்டுவருவார்.

V. முடிவுரை (5:12-14). இறைவனது அருளில் நிலைத்துநில் ! வாழ்த்துரை.

9. **போதனை:** இஃது ஒரு மேய்ப்புப்பணி மடலாகும். நூல் முழுவதற்கும் பின்னணியாக உள்ள இரு கருத்துகள் உண்டு. அ) வேத கலாபனையின் கடுமையையும் நெருக்கடி நிலையையும் எதிர்கொண்டவர்களை உற்சாகப்படுத்தி, இத்துன்பங்கள் வழியாக, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுதலின்

நேர்மதிப்பீட்டை இந்நூல் வலியுறுத்துகிறது. ஆ) கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையையும், அன்றாட வாழ்வில் அது நிறைவேறுதலைப் பற்றியும் இது விளக்குகிறது. இந்த அழைப்பு "இல்லமற்றவர்களுக்கு" (2:11; காண். 1:17) இறைவன் அளிக்கும் இல்லத்தை (குடும்பம்: 2:5; 4:17) அளிக்கிறது. திருச்சபை என்ற சொல் குறிக்கப்படாவிட்டாலும், இக்கருத்து திருமுகம் முழுவதற்கும் பின்னணியாக உள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு, பின்வருமாறு கருத்துத் தொகுப்பைத் தருகிறோம்.

1. **இறைவன்:** மீட்பு இறைவனின் அழைப்போடு தொடங்குகிறது (1:2.15). இறைவன் இரக்கமிக்கவர் (1:3); தூயவர் (1:15); தந்தை (1:17); பிரமாணிக்கமுள்ள படைப்பவர் (4:19); தீர்ப்புக் கூறுபவர் (1:17; 2:24; 3:18; 4:3); கைவண்மை மிக்கவர் (5:6); மீட்பர் (5:10). இந்த அழைப்புக்கேற்ப, இறைவனது மகன் வழியாக, மனிதர் பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்றனர் (1:18; 2:24; 3:18: 4:3). இந்த மகன் "உலகம் தோன்றும் முன்னே முன் குறிக்கப்பட்டவர்" (1:20). இவரது ஆவி இறைவாக்கினர்களைத் தூண்டியது (1:11). இவரே "ஆண்டவர்" (2:3; 3:15).

2) **மனிதனது மீட்பு:** இயேசு கிறிஸ்துவின் பாடுகள் (1:2.19; 2:24; 3:18) மற்றும் உயிர்ப்பு (1:3; 3:18.21.22; 4:11; 5:10) ஆகியவற்றால் இம்மீட்பு நிறைவேற்றப்படுகிறது. இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதால் புத்துயிர் அடைவதாலும் (1:2), ஆவியானவரால் புனிதப்படுத்தப்படுவதாலும் (1:2), இறை வார்த்தையை ஏற்றுக் கொள்வதாலும் (1:23) மற்றும் வாக்குறுதியோடு கூடிய திருமுழுக்காலும் திருச்சபையில் நுழைவதால் இந்த மீட்பு அடையப் பெறுகிறது.

இவ்வாறு, கிறிஸ்துவை மூலைக் கல்லாகக் கொண்ட ஆன்மீக ஆலயமாக (2:4-8), "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்தகுலம், இறைவனுக்குச் சொந்தமான மக்களாக" (2:9), இறைவனுக்கு ஞானப்பலி நிறைவேற்றுபவர்களாக (2:5), நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் போன்று நீரினால் மீட்கப்பட்ட சிலராக (3:20-21), புதிய உடன் படிக்கையின் மக்கள் உருவாக்கப் படுகின்றனர் (1:2; காண். யாத் 24:8). இந்தப் புதிய இஸ்ராயேலின் அங்கத்தினர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர் (4:16). அவர்கள் உலகளாவிய சகோதரத்துவம் உடையவர்கள் (5:9; காண். 5:12). அவர்களின் தலைமை ஆயரான கிறிஸ்துவைச் சூழ்ந்து ஒன்றித்த மந்தையாவர் (2:25; 5:4). அவர்கள் தங்கள் சமூகத் தலைவர்கள் (5:1-3) மற்றும் பேதுருவின் (1:5; 5:12) கண்காணிப்பில் உள்ளனர்.

அவர்கள் வாழ்வு புனிதமானதாகவும் (1:15), சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு மிக்கதாகவும் (1:22; 3:8-12; 4:8-11), இறைவனிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களுக்குப் பணிவு மிக்கதாகவும் (2:13-3:7), பிறமதத் தீய பண்புகளை விலக்கியதாகவும் (1:4; 2:1.11; 3:6; 4:2-3.15) இருக்க வேண்டும்.

3) **கிறிஸ்தவ அழைப்பும் துன்புறுதலும்:** கிறிஸ்துவைப் பின்பற்றித் துன்புறுவது கிறிஸ்தவ அழைப்பின் தன்மையாலான பண்பாகும் (1:6; 2:19-21; 4:1; 5:9). இஃது ஆசீர் அளிக்கிறது (1:7; 3:9.14;4:13). கிறிஸ்து தன் பாடுகளாலும் உயிர்ப்பாலும் வெற்றி அடைந்துவிட்டார் (3:18). இந்த வெற்றி விசுவசியாத உலகில் செயலாற்றும் தீய சக்திகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது (3:19.22; காண். 5:8-9). இந்த வெற்றியில் கிறிஸ்தவன் திருமுழுக்கினாலும் (3:21) விசுவாசத்தாலும் (5:9) பங்கு கொள்கிறான். இவற்றை நன்குணர்ந்து கிறிஸ்தவன் வேதகலாபனையை நம்பிக்கையோடும் (3:14-17) மகிழ்ச்சியோடும்கூட (4:13-14) எதிர்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திய துன்பங்கள் தீர்ப்பின் தொடக்கமாகும் (4:17). அவை தூய்மைப்படுத்துகின்றன (1:7; 4:12);

பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவனை இறுதி மகிமைக்கு இட்டுச்செல்கின்றன (1:4-5. 7-9; 3:9; 4:6.13; 5:4.10). விசுவசியாதவர்களுக்கு அவை தண்டனைத் தீர்ப்பைக் கொண்டுவரும் (2:7-8; 4:5; 17:18). தலைமை ஆயரின் இந்தத் தோற்றம் (5:4), இயேசுவின் இந்த வெளிப்பாடு (1:13) அருகில் உள்ளது (1:5-6; 4:5.7; 5:10).

**பேதுரு எழுதிய திருமுகம் - II (PETER, SECOND LETTER OF)**

**முன்னுரை:** இது புதிய ஏற்பாட்டின் இருபத்திரண்டாம் நூலாகும்; பொதுத் திருமுகங்களில் ஒன்று; திருமுக வடிவில் உள்ளது.

2. **ஆசிரியர்:** இத்திருமுகத்தை எழுதியவர் பேதுரு என்று நூல் குறிப்பிடுகிறது. (2 பேதுரு 1:1). இவர் இயேசு தோற்றம் மாறியபோது நேரடிச் சாட்சியாக இருந்தார் (1:16; காண்க. மத் 17:1-8 இணை). இயேசுவின் கூற்றுக்கேற்ப, தனது இறப்பு மிக விரைவில் நடக்குமென்று, நம்பினார் (1:14; காண். யோவா 21:18-19). பெயர் குறிக்கப்படாதவர்களுக்கு ஏற்கெனவே ஒரு கடிதம் எழுதியுள்ளதை நினைவுபடுத்துகிறார் (3:1). பவுலின் சில கடிதங்களை அறிந்திருக்கிறார். அவற்றை "மறைநூல்" என்று குறிப்பிடுகிறார் (3:15-16).

ஆனால், பேதுரு இத்திருமுகத்தை எழுதியிருக்க முடியாது என்பதை நிறுவக் காரணங்கள் காட்டப்படுகின்றன. இவற்றைக் காணும்முன், ஆசிரியத் தன்மை பற்றி சில கருத்துகளைத் தெளிவுபடுத்துதல் மிக முக்கியமாகும்.

3. **ஆசிரியத்தன்மையும், திருமுறைப் பட்டியலும்:** இந்த இரு கருத்துகளையும் வேறுபடுத்துவது மிக முக்கியமாகும். இத்திருமுகம் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பது திருச்சபையின் அதிகாரபூர்வமான அறிக்கைகள் பல்வற்றால் நிறுவப்பட்டுவிட்டன. ஆனால், இதைப் பேதுரு தான் எழுதினாரா என்ற ஆசிரியத்தன்மை பற்றியது எப்போதும் ஓர் உண்மையான பிரச்சனையாகவே இருந்துள்ளது.

சமீப காலம்வரை, கத்தோலிக்க அறிஞர்கள் இந்த இரண்டு கருத்துகளுக்குமிடையே அவசியமான வேறுபாட்டைக் காணவில்லை. ஆகவே, திருமுறைப்பட்டியலின் தன்மையைப் பாதுகாக்க வேண்டியிருந்ததால் ஆசிரியத்தன்மையையும் உறுதிப்படுத்த காரணங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அறிஞர் பலர், பழைய ஏற்பாட்டில் புனைபெயர் நூல்கள் இருப்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. புதிய ஏற்பாட்டில் புனைபெயர் நூல்கள் இருக்கக்கூடுமா என்பது ஒரு பிரச்சனையாகவே இருந்தது. இப்பிரச்சனையைக் காரண காரியவாத முறையில் விலக்கி விட்டால், பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்று திருச்சபை ஆசிரியர்களிடமிருந்து வரும் சான்றுக்கு மிகைப்படுத்தப்பட்ட முக்கியம் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த ஆசிரியர்கள் ஆசிரிய உண்மைத் தன்மை பற்றிய பிரச்சனையை அறிந்திருந்தனர் என்றும், புனைபெயர் ஆசிரியத் தன்மைக்கு எதிராகத் தீர்மானமாகக் கூற விரும்பினர் என்றும் காட்டப்பட்டால் ஒழிய, இவர்களது சான்றுக்கு மதிப்பில்லை. ஆனால், இவர்கள் பொதுவாக மறுசிந்தனையின்றி, நூலில் வரும் "இயேசு கிறிஸ்துவின் ஊழியனும் அப்போஸ்தலனுமான சீமோன் பேதுரு எழுதுவது" (1:1) என்ற கூற்றை வெறுமனே கூறிவந்தனர்.

இந்நூலைப் பேதுரு எழுதினாரா அல்லது இஃது ஒரு பொய்யான ஏடா என்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது, இந்த அறிஞர்கள் முதலாவதை நிரூபிக்க உள்ளார்ந்த சான்றுகளைக் காண முயன்றுள்ளனர். இரண்டு திருமுகங்களுக்குமிடையே ஒற்றுமையுள்ளது. முதலாவதை மனதில் வைத்து இரண்டாவது எழுதப்பட்டது என்பது உண்மையே. ஆனால், புனைபெயர் ஆசிரியத்தன்மை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு, உள்ளார்ந்த சான்றுகள் வேறுவிதமாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

காரணகாரிய கோட்பாட்டு நிலை நேர்மையானலும், விவிலிய ஆசிரியர்களிடமிருந்து விரும்பிச் செய்யப்பட்ட பொய்க்கையெழுத்துத் தன்மையை விலக்கினாலும், இந்நிலைக்கு ஆதரவாக உள்ளார்ந்த சான்றுகள் பயன்படுத்தப்பட மாட்டா. அவை அவற்றின் சொந்த மதிப்பிலேயே ஆய்வுக் கண்ணோடு மதிப்பீடு செய்யப்படும். அந்த உள்ளார்ந்த சான்றுகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அறிஞர்களுக்கு உரிமையுண்டு.

**4. பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்பதற்கு எதிரான காரணங்கள்:**

அ) இரண்டாம் பேதுரு, யூதா எழுதிய திருமுகத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கியுள்ளது. இரண்டாம் பேதுருவில் காணப்படும் பல பகுதிகள், யூதாவில் அப்படியே காணப்படுகின்றன. அல்லது யூதாவின் பகுதிகளோடு ஒத்துள்ளன.

| பேதுரு II | யூதா |
|---|---|
| 2 : 1.3பின் | 4 |
| :4.6 | 6-7 |
| :5 | 5 |
| :10-11 | 8-9 |
| :12 | 10 |
| :13.15 | 11-12 |
| :17 | 12 பின்-13 |
| :18 | 16 |
| 3 :1-4 | 17-18 |
| :10-13 | 14-15 |
| :14-18 | 20-25 |

இருவரில் யார் யாரைத் தழுவி எழுதுகிறார் என்பது, சிக்கல் மிக்க பிரச்சனையாகும். யூதாவின் வாதப்போக்கு பொதுப்பண்புடையதாகத் தெரிகிறது. அவர் யாரைப் தாக்கி எழுதுகிறார் என்று கூறுவது கடினம். ஆனால், இரண்டாம் பேதுரு இறைவனது நீதி மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகைபற்றிக் கவனமாக எழுதப்பட்ட காப்புரையாகத் தெரிகிறது. ஆகவே, ஒரு பொதுப்பண்புடைய கடிதத்தை, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு இரண்டாம் பேதுரு மாற்றியமைத்து எழுதுகிறது எனலாம். ஒரு நீண்ட ஏடு குறுகிய ஏட்டிலுள்ளதை ஏற்றுக்கொள்வது புரிந்து கொள்ளக்கூடியதே. யூதா இரண்டாம் பேதுருவின் மூன்றில் இரண்டு பகுதியை ஒதுக்கிவிட்டு, மீதியுள்ளதை பொதுப்பண்புடையதாக எப்படி மாற்றினார் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். இப்படி இரண்டாம் பேதுரு யூதாவின் பெரும்பகுதியைக் கொண்டிருப்பது அப்போஸ்தலர்களின் தலைவருக்கு வினோதமாக உள்ளது. இது பேதுருதான் எழுதினார் என்ற கருத்தைப் பலவீனப் படுத்துகிறது.

ஆ) அப்போஸ்தலர்களைப் பற்றிய குறிப்புகள் (2 பேதுரு 3:2), ஏதோ பற்பல ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் பவுலின் கடிதங்கள் குறிக்கப்படுகின்றன (3:15-16).

**இ) பேதுரு எழுதிய முதலாம் இரண்டாம் திருமுகங்களுக்கிடையே** தொடர்பு: 3:1-இல் ஆசிரியர் அதே வாசகர்களுக்கு எழுதப்பட்ட முந்தைய மடலைக் குறிப்பிடுகிறார். இது முதல் திருமுகந்தானா? உண்மையாகவோ, இலக்கிய யுக்தியாகவோ பேதுரு எழுதியதாகக் கூறப்படும் இரு மடல்கள் இவை இரண்டுதான். ஆகவே, இரண்டாவதில் கூறப்படும் முந்தைய மடல் முதலாவதுதான் என்று கருதுவது இயற்கையே! இரண்டிற்குமிடையே நடையிலும் சொற்றொகுதியிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தாலும், முதலாவதை மனதிற்கொண்டு இரண்டாவது எழுதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொடக்க வாழ்த்து இரண்டிலும் அப்படியே வருகிறது (1 பேதுரு 1:2; 2 பேதுரு 1:2). 2 பேதுரு 1:3-11-இல் வரும் சிந்தனை வளர்ச்சி 1 பேதுரு 1:3-9-ஐப் பெரிதும் நினைவுபடுத்துகிறது. திருச்சபையின்

பாரம்பரியமான போதகத்தை நினைவுகூர்வதாக உரிமை கொண்டாடும் இரண்டாவதின் ஆசிரியர் (1:12.15; 3:2), முதலாவதில் வரும் மறைக்கல்வியைக் குறிப்பிடுகிறார் என்பது அறிவுக்கு ஒத்ததாக உள்ளது. ஆசிரியரது இறப்புக்குப்பின், நினைவு கூரப்பட வேண்டிய அப்போஸ்தலர் போதகத்தை (1:15) வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார் (1:12). "பரிசுத்த இறைவாக்கினர் முன்னறிவித்த சொற்களையும், ஆண்டவரும் மீட்பவருமானவர் அப்போஸ்தலர்கள் வழியாகத் தந்த கட்டளைகளையும்" (3:2) அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்தச் சாட்சிகள் 1 பேதுரு 1:10-12-இல் குறிப்பிடப்படுகின்றனர். இதற்கேற்றாற் போல் 1 பேதுரு 1:16; 2:6-8; 3:10-12; 5:5-இல் சாட்சியாகப் பழைய ஏற்பாடு கூறப்படுகிறது. அதேபோது 2:21-25-இல் கிறிஸ்து ஓர் எடுத்துக்காட்டாகச் சித்தரிக்கப்படுகிறார். இரண்டாம் பேதுருவின் ஆசிரியரது முதன்மையான நோக்கம் கடவுளின் நீதியையும், இயேசுவின் இரண்டாம் வருகையையும் எண்பிப்பதாகும். இவற்றைப்பற்றிப் போலிப்போதகர்கள் ஐயம் எழுப்பினர் (1:16; 3:4). இந்தத் தமது நோக்கத்திற்குச் சாதகமாக முதல் பேதுருவில் காணப்படும் கூறுகளை இரண்டாம் பேதுருவின் ஆசிரியர் எடுத்துக்கொள்கிறார்.

பேதுருவின் இரண்டு திருமுகங்களுக் கிடையே ஒற்றுமையிருப்பதாகத் தோன்றினாலும், கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, புதிய இஸ்ராயேலாகிய திருச்சபை, பரிசுத்த ஆவி, தவம், திருமுழுக்கு ஆகியவை பற்றி முதல் பேதுருவில் காணப்படும் கருத்துக்கள்– இரண்டாம் பேதுருவில் இடம் பெறவில்ல. நடை, சொற்றொகுதி ஆகியவற்றில் பல வேறுபாடுகள் உள்ளன. 2-ஆம் பேதுருவில் கிரேக்க நடை கடினமாக உள்ளது; செயற்கையான வாக்கிய அமைப்புகள் உள்ளன; கிரேக்கப் பண்பாட்டின் பாதிப்பு அதிகமாகத் தெரிகிறது; ஆனால், முதலாம் பேதுருவின் நடை எளியதாக உள்ளது. அதில் காணப்படும் ஆறுதலோ, அன்புப் பண்போ 2-ஆம் பேதுருவின் ஆசிரியர் எடுத்துக்கொள்கிறார்.

**ஈ) புறச்சான்றுகள்:** ஆதித்திருச் சபையால் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்படுவது, மற்றப் புதிய ஏற்பாட்டு நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை விடக் கடுமையாக இருந்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முடிவுரை இந்நூல் பற்றிய தெளிவான குறிப்புகள் திருச்சபை நூல்களில் இல்லை. முதல் வெளிப்படையான குறிப்பு ஓரிசன் நூல்களில் காணப்படுகிறது. இதைப் பேதுரு தான் எழுதினார் என்று ஓரிசன் ஏற்றுக் கொண்டாலும், இது தர்க்கத்திற்குரியது என்று கூறுகிறார். விவிலியத் திருமுறையின் முதல்பட்டியலான, கி.பி. 170-ஐ ஒட்டி உருவான முராத்தோரியின் பட்டியலிலோ, பழைய இலத்தீன் பட்டியலிலோ, சீரியக்குப் பட்டியலிலோ இந்நூல் இடம் பெறவில்லை. 3-ஆம், 4-ஆம் நூற்றாண்டுகளில் இந்நூல் பரவலாகப் பயன்பட்டுள்ளது; பொதுவாகப் பேதுருவுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆயினும், சிலர் ஐயுறுவர். சான்றாக, யுசேபியு வாதத்திற்குரிய நூல் தொகுப்பில் இந்நூலைச் சேர்க்கின்றார்; ஆனால், இதைப் பேதுரு எழுதினார் என்பது பற்றி ஐயுறுகிறார். இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று ஏற்றுக்கொள்ளும் எரோனிமு, இதைப் பேதுரு எழுதினார் என்பது தர்க்கத்திற்குரியது என்று கூறுகிறார். திருச்சபையின் மேற்குப் பகுதியில் 4-ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான் இந்நூல் குறிப்பிடப் படுகிறது; ஆனால், இதன் ஆசிரியர் பேதுரு என்பது ஐயுறப்படுகிறது. திருச்சபையின் கிழக்குப் பகுதியில் இந்நூல் நன்கு அறியப்பட்டிருந்தது; ஆனால், தயக்கத்தோடுதான் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இது பேதுருவால் எழுதப்பட்டது என்பதைவிட, இதன் பொருளடக்கத்தின் அடிப்படையில்தான் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி. 392-இல் கார்த்தேசு சங்கத்தால் அமைக்கப்பட்ட திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

இறுதியாகத் திரிதெந்தின் பொதுச்சங்கத்தால் இந்நூல் திருமுறைப் பட்டியலில் சேர்ந்ததாக அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சங்கம் இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனையைத் தொடவில்லை. கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் இரு பண்புகளும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக இந்நூல் அப்போஸ்தலரான பேதுரு எழுதினார் என்று கருதப்பட்டதால், இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆயினும், இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவராமல், திருமுறைப்பட்டியலைப் பற்றிய திருச்சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம். கோட்பாட்டுத் தீர்மானங்களே கட்டுப்படுத்தக்கூடியன; அவற்றிற்கு முந்திய தர்க்கவாதங்கள் அல்ல.

இந்நூலின் ஆசிரியர் பேதுருதான் என்பதற்கு எதிரான இக்காரணங்கள் ஒன்று சேர்ந்து வெல்ல முடியாதவையாக உள்ளன. ஆனால், இக்காரணங்களிலிருந்து, இந்நூல் ஒரு பொய்யேடு என்று முடிவு செய்ய வேண்டியதில்லை. சாலமோனின் ஞான நூலோ, திருவுரையாளர் நூலோ பொய்யேடுகள் என்று ஒருவரும் கூறுவதில்லை. ஆயினும், இவை புனைபெயர் நூல்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படும். இதே பாணியில் இந்நூலின் ஆசிரியர் அப்போஸ்தலர் பேதுருவின் சீடராக இருக்கலாம். இவர் அப்போஸ்தலரின் அதிகாரத்தை உக்தியாகக் கையாண்டு கிறிஸ்துவ விசுவாசத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரியங்களை வலியுறுத்த விரும்பியிருக்கலாம். பேதுருதான் இறையியல் பாரம்பரியத்தின் அடிப்படைப் பாறை என்பது பற்றி வளர்ச்சியடைந்த உணர்விற்கு ஏற்பவும், தொடக்கத் திருச்சபையின் மறைபரப்பு மற்றும் நிர்வாக அமைப்பில் அவரது தலைமைக்கு ஏற்பவும் (காண். மத் 16:16-19) பேதுருவின் பெயரால் இந்த ஆசிரியர் இந்நூலை எழுதுகிறார்.

**5. யாருக்கு, எப்போது, எங்கிருந்து:** இந்நூல் அப்போஸ்தலரான பேதுருவால் எழுதப்பட்டது என்று ஏற்றுக் கொண்டால், இந்நூல், பேதுருவின் முதலாம் திருமுகத்தைப் பெற்றுக் கொண்ட சிறிய ஆசியாக கிறிஸ்தவர்களுக்கு, பேதுருவின் மறைசாட்சி மரணத்திற்குச் சிறிதுகால முன்பு உரோமையில் எழுதப்பட்டதாகக் கருதப்படும்.

ஆனால், மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக இந்நூல், விவிலியத் திருமுறை சார்ந்த ஒரு புனைபெயர் நூல் என்று ஏற்றுக்கொள்வதே சாலச் சிறந்ததாகத் தெரிகிறது. 2 பேதுரு 3:1-இலிருந்து முதலாம் பேதுருவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே இரண்டாம் பேதுருவும் எழுதப்பட்டது என்று முடிவு கட்டமுடியாது. இரண்டாம் பேதுருவைப் பெற்றவர்கள் பற்றி, அவர்கள் ஒரு காலத்தில் பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர (காண். 2 பேதுரு 2:18.20-22), வேறொன்றும் அறிவதற்கில்லை. விவரிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையிலிருந்த ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவச் சமூகத்திற்கு இந்நூல் எழுதப்பட்டது என்று நாம் கருதலாம். இவர்கள் எங்கு வாழ்ந்தனர் என்பது பற்றி ஊகிக்கத்தான் முடியும். இந்நூல் யூத, கிரேக்கக் கிறிஸ்தவர்களடங்கிய கலப்புத் திருச்சபைக்கு எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதி. 2-3-இல் கொடுக்கப்பட்டிருக்கும் விவிலிய எடுத்துக்காட்டுகள், கிரேக்க - உரோமை இலக்கியத்தோடு நெருங்கிய இணையமைப்பைக் கொண்டுள்ளன (வானதூதர்கள் மற்றும் அசுரர்கள், நோவா மற்றும் தெயுகாலி யோன், சோதேம் மற்றும் பாத்தோன்). கிரேக்க நடை கடினமாக இருந்தாலும் நல்ல விதத்தில் அமைந்துள்ளது. "இறை இயல்பு" (2 பேதுரு 1:4), நேரடிச்சாட்சி (1:16), கீழுலகத் தண்டனையிடம் (2:4), நான்கு அடிவேரான தீய பண்புகள் போன்ற கலைச்சொற்களில் கவனம் செலுத்தப்படுகிறது. இறைவனுடைய நேர்மையான நீதித் தீர்ப்புக்குச் சாதகமான மற்றும் பாதகமான வாதங்கள்

புளூட்டார்க்கு நூலிலும், தர்கும், மிட்ராஸ் நூல்களிலும் காணப்படுபவைகளுக்கு ஒத்தனவாக உள்ளன. அண்டத் தீ மற்றும் புதுப்பித்தல் ஆகியவை பற்றிய விவரிப்புகள் ஸ்தோயிக்குகளுக்கும் விவிலியப் பாரம்பரியத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும் விருப்பமானவையாக அமைந்துள்ளன. இறுதிக்கால இயல் பாரம்பரியத்தை யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் புரியும்படி செய்ய எடுத்துக் கொள்ளப்படும் மேய்ப்புப்பணி அக்கறை, நகரச் சூழ்நிலையைச் சுட்டுகிறது. அங்கு, யூதரும் கிரேக்கரும் ஒரு புதிய கலப்புத் திருச்சபையின் கால ஞானத்தோடு தொடர்ச்சியாகத் தன்னைப் பிரசன்னப்படுத்துகிறது. அது தன் அதிகாரத்தின் சுய உணர்வையும் (1:12-15; 3:1-2), நற்செய்திப் பாரம்பரியம் மற்றும் பவுலின் திருமுகங்கள் அடங்கிய தன் கடந்த காலப் பாரம்பரியத்தின் புனிதத்தையும், தன் பாரம்பரியங்கள் பற்றிய அதிகாரபூர்வமான விளக்கம் எழுதி அவற்றை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் (1:12-15) வெளிப்படுத்துகிறது. இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்று உறுதி செய்ய வலுவான சான்றுகள் இல்லையென்றாலும் இந்நூல் கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிருக்கலாம். ஏனெனில், இது கி.பி. 96-இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் வாதங்களுக்கு ஒத்ததாக உள்ளது. இந்நூல் பவுலின் திருமுகங்களைக் குறிப்பிடுகிறது. இத்தொகுப்பு முதலாம் நூற்றாண்டின் இறுதியில்தான் வடிவெடுத்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், இந்நூல் யூதாவின் திருமுகத்திற்குப் பின்புதான் தோன்றியிருக்கவேண்டும். இஃது எங்கு எழுதப்பட்டது என்று நிறுவப் போதிய சான்றுகள் இல்லை.

6. நோக்கம்: பேதுருவின் பெயரால் எழுதும் ஆசிரியர் "நம் கடவுளும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நீதிக்கேற்ப, நாங்கள் பெற்ற விசுவாசத்தைப் போலவே மதிப்புள்ள விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு"க் (1:1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அதன்பின் வரும் இறைவனுடைய நேர்மையான தீர்ப்பு, பாவச் சூழலுக்கிடையே உலகைப் பேணும் இறைவனது நீதியை மெய்ப்பிக்கும் இறைவாதம் ஆகியவற்றின் உறுதியை நினைவுபடுத்துகிறார். ஆகவே, அவர்கள் "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் முடிவில்லாத அரசில் நுழையும் பேறுபெற" (1:11) விரும்பினால், அவர்கள் உண்மையின் அறிவிலும், கிறிஸ்தவ நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதிலும் வளர வேண்டும்.

போலிப் போதகர்களின் பாதிப்பு இருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட விசுவாசத்தில் வாசகர்களை நிலைப்படுத்து வதற்காக இந்நூல் எழுதப்பட்டதாகும். இப்போலிப் போதகர்களை யூதா கண்டித்துரைக்கிறார். இவர்கள் கிறிஸ்தவ அறவொழுக்கத்தை ஒதுக்கியவர்கள்; கிறிஸ்தவத் திருமறையே அறவமைதியின் கட்டுப்பாட்டிலிருந்து கிறிஸ்தவரை விடுவித்து விட்டமையால் கிறிஸ்தவர்களுக்கு அறவொழுக்கம் வேண்டியதில்லை என்றும், சமயப் பற்றுறுதியே போதும் என்றும் நம்பித் தவறு செய்தவர்கள். யூதா கருத்தில் கொண்டிருந்த எதிரிகளை விட, இரண்டாம் பேதுரு கருத்தில் கொண்டிருக்கும் போலிப் போதகர்கள் அதிக மோசமான நிலையில் இருந்தனர். இவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், தீர்ப்பையும் இறை அருள்பாலிப்பையும் கேலி செய்தனர் (3:3தொ). இவர்கள் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளையும் (1:19-21), நற்செய்திப் பாரம்பரியத்தில் நிறுவப்பட்ட புதிய ஏற்பாட்டுச் சாட்சியங்களையும் (காண். 1:16-18), பவுலின் திருமுகங்களையும் (3:15-16) தவறாக விளக்கினர்.

இந்நூலில், கிறிஸ்து இயலின் குவிமையம் இல்லை; மேலும், சன்மானம், தண்டனை பற்றி மனிதனை மையமாகக் கொண்ட நோக்குக் காணப்படுகிறது என்று கூறி, இந்நூல் இறுதிக்கால இயல் பற்றிய அயர்ச்சி தரும் காப்புரையாகும் என்று சிலர் எதிர்முறையில், இந்நூலை மதிப்பீடு

செய்துள்ளனர். இவர்கள், இந்நூல் இறைவனது அருள்பாலிப்பு, தீர்ப்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவற்றை மையப் பிரச்சனைகளாகக் கொண்டுள்ளது எனக் காணத் தவறிவிட்டனர்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில், இறைபாலிப்பு மற்றும் தீர்ப்பு ஆகியவை பற்றிய கிரேக்க, யூதத் தர்க்கவாதங்களின் பின்னணியில் இத்திருமுகம் நோக்கப்பட வேண்டும். இந்த உண்மைகளை எப்பிக்கூரியர்களும், யூதப்பதிதர்களும் எப்படித் தாக்கினர் என்று நாம் அறியவருகிறோம். இவர்கள், இறைவனில் அருள்பாலிப்பு மற்றும் தீர்ப்பு இல்லை; மறு உலக வாழ்வு இல்லை; ஆகவே, மரித்தபின் சன்மானமும், தண்டனையும் இல்லை என்று கூறிவந்தனர். இரண்டாம் பேதுரு இந்த வாதப்போக்கைப் பிரதிபலிக்கிறது. அதற்கு எதிராக, பாரம்பரியக் காப்புரை வடிவில் பதில் அளிக்கிறது. இந்நூலின் பிரச்னை இறைவனின் நேர்மையான தீர்ப்பாகும் (1:3-4; 2:3; -:9; 3:3-7. 8-9), வெறும் கிறிஸ்து இயல் மட்டுமன்று; உலகைப் பேணும் இறைவனது நீதியை மெய்ப்பிக்கும் இறைவாதமாகும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டுமன்று. சிலர், இந்நூலில் ஞானவாதத்துக்கு எதிரான போக்கைக் காண முயன்றுள்ளனர். இஃது இல்லையென்றே கூற வேண்டும். இந்நூலின் சூழ்நிலை இறைவனது அருள்பாலிப்பு மற்றும் நேர்மையான தீர்ப்பு ஆகியவை பற்றிய மாதிரி எடுத்துக்காட்டான வாதமாகும்.

**7. வாசகமும் நடையும்:** புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்நூலின் ஒரு பிரதி, மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கணிக்கப்படுகிறது. இஃது இக்காலத்தில் எகிப்தில் இந்நூல் ஏற்றுக் கொள்ளப்பட்டதைச் சுட்டுகிறது. வாசகங்களில் காணப்படும் வேறுபாடு-பிழைகளின் விளைவாகும். புதிய பிரதி, நூலின் விளக்கத்திற்கு அதிக ஒளி அளிக்கவில்லை.

பேதுரு எழுதிய முதலாம், இரண்டாம் திருமுகங்களுக்கிடையே நடையில் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. இதற்குக் காரணம் பேதுரு இரண்டு வேறுபட்ட செயலர்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று எரோனிமு விளக்கம் அளித்துள்ளார். இக்கருத்து நடை வேறுபாடுகளை விளக்கினாலும், இம்முறையில் விளக்கப்படமுடியாத சிந்தனையிலும் மனப்போக்கிலும் ஆழ்ந்த வேறுபாடுகள் உள்ளன.

**8. திட்டம்:** கடித மரபுமுறை இந்நூலில் காணப்படும் காப்புரையைத் திட்டமிட உதவுகிறது.

I. மடல் முன்னுரை: (1:1-11).

அ) வாழ்த்துரை (1:1-2).

ஆ) இறைவனின் செயல்கள் (1:3-4).

இ) இறுதிக்கால இயலும் ஒழுக்க இயலும் (1:5-11).

1) நல்ல இறையியல் நல்லொழுக்கத்திற்கு இட்டுச் செல்லும் (1:5-7).

2) இரு வழிகள் (1:8-11).

II. கற்பனையான கடிதப் பின்னணி: பேதுருவின் சாட்சி (1:12-15).

III. முதல் காப்புரை: இரண்டாம் வருகை பற்றிய இறைவாக்கு (1:16-21).

அ) இயேசுவின் தோற்ற மாறுதலும் இரண்டாம் வருகையும் (1:16-18).

ஆ) தோற்றம் மாறுதல் இறைவாக்காகும் (1:19).

இ) இறை ஏவுதல் பெற்ற விளக்கவுரை (1:20-21).

IV. பதிதர்களுக்கு எதிரான வாதம் (2:1-22):

அ) இறைவனின் உறுதியான தீர்ப்பு (2:1-11).

ஆ) தவறு தீய பண்புக்கு இட்டுச் செல்கிறது (2:12-16).

இ) பொயோ வாக்குறுதிகள் (2:17-19).

ஈ) அருளிலிருந்து வழுவுதல் (2:20-21).

V. இரண்டாம் காப்புரை: உலகின் முடிவு (3:1-

7).

அ) நினைவுபடுத்துதல் (3:1-2).

ஆ) முன்னுரைக்கப்பட்ட தீர்ப்பைத் தாக்குதல் (3:3-4).

இ) மறுப்புரை: வரலாற்றிலிருந்து சான்று (3:5-7).

VI. மூன்றாம் காப்புரை: காலம் தாழ்த்துதல் ஒரு கொடையாகும் (3:8-9).

VII. மீண்டும் இறுதிக்கால இயலும் ஒழுக்க இயலும் (3:10-13).

அ) இரவில் திருடன் (3:10).

ஆ) இறைவனின் நாள் (3:11-13).

VIII. பேதுருவும் பவுலும் (3:14-16).

IX. மடலின் முடிவுரை (3:17-18).

9. போதனை:

அ) இத்திருமுகத்தின் சமயக்கோட்பாடு கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டுக் கலைச்சொற்றொகுதியில், முழுவதும் அசாதாரண முறையில் அவர் கடவுள் என்றழைக்கப்படுகிறார் (2 பேதுரு 1:1; காண். உரோ 9:5; யோவா 20:28). அவரே "தெய்வீக வல்லமையும்" (2 பேதுரு 1:3), "இறை இயல்பும்" (1:4) ஆவார். அவர் கடவுளின் மகன் (1:17); மீட்பர் (1:1.11; 2:20; 3:2.18); (அவர்களைவாங்கி) மீட்ட ஆண்டவர் (2:1); "இன்றும் என்றும் மகிமைப்படுத்தப்பட்டவர்" (3:18). இந்த மகிமை தோற்ற மாறுதலில் முன் வெளிப்படுத்தப்பட்டது (1:16-18). இயேசுவை அடிக்கடி குறிக்கும் பட்டம் "நம் ஆண்டவர்" (1:2.8.11. 14. 16; 2:20; 3:2.15.18) என்பதாகும். அவரே விசுவாசத்தினால் வரும் அறிவின் பொருளாவார் (1:2-3). அவரது அரசு முடிவில்லாதது (1:11). அவர் (இரண்டாம் முறை) வருவது உறுதியாகும் (1:16; 3:4.12). இதில் நம்பிக்கை கொள்வது தோற்றம் மாறுதலின் முன் அனுபவத்திலும் (1:16-18), இறைவாக்கிலும் (1:19) அடிப்படை கொண்டுள்ளது. "ஆண்டவரின் நாள்" காலம் தாழ்த்தப்பட்டுள்ளது; கடவுள் குறித்த நேரத்தில் (3:8-9), திடீரென்று (3:10) ஆனால், வந்தே தீரும் (3:3-7).

**ஆ) மூவொரு இறைவன்:** இவர் பற்றிய கிறிஸ்தவப் பாரம்பரியத்தின் சான்று தந்தையும், மகனும் (1:17), பரிசுத்த ஆவியானவரும் (1:21) ஆகிய மூவரும் குறிக்கப்படுவதில் அடங்கியுள்ளது. தந்தையே படைப்பவர் (3:5), நேர்மையுள்ள நீதிபதி (2:4-9), உன்னத மாட்சிமை (1:17) ஆவார்.

"துணிச்சல் மிக்கவர்கள்" (2:10) என்றழைக்கப்படும் வானதூதர்கள், மனிதர்களை விட, "ஆற்றலும் வலிமையும்" மிக்கவர்கள் என்றும் (2:11), பாவம் புரிந்தவர்கள் என்றும் (2:4; காண். யூதா 6) பிரிக்கப்படுகின்றனர். பாவம் புரிந்த வானதூதர்கள் தண்டிக்கப்பட்டுவிட்டனர். இறுதித் தீர்ப்புக்காக் காத்திருக்கின்றனர்.

**இ) மனிதன்:** மனிதன் இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்டு விட்டான்; "வாங்கப்பட்டு விட்டான்" (2 பேதுரு 2:1). அவன் நற்செய்தியின் அப்போஸ்தலப் போதகத்தைப் பின்பற்றி விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும் (1:12; 3:1-2). இந்த விசுவாசம் "கடவுளையும் நம் ஆண்டவராகிய இயேசுவையும் அறியச் செய்யும்" (1:2; காண். 1:3.8). விசுவாசம் கிறிஸ்துவின் வாக்குறுதிகளை ஏற்றுக் கொள்வதையும் (1:4; 3:4.9), அவரது "இறையியல்பில்" (1:4) பங்கு கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது. அது கிறிஸ்தவப் புண்ணிய வாழ்வில் தன்னையே வெளிப்படுத்துகிறது (1:5-8; 3:11.14.18). அஃது, அவரது (இரண்டாம்) வருகையின் நாளில் (3:9.14), "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் முடிவில்லாத அரசில் நுழைவதில்" (1:11) நிறைவடைகிறது.

ஈ) போலிப் போதகர்கள்: இவர்கள் "தங்களை மீட்ட ஆண்டவரை" மறுதலிப்பவர்கள். இவர்கள் அழிவது திண்ணம் (2:1). இவர்களுடைய தீய பண்புகள், இவர்கள் மனந்திரும்புதலுக்கு முன்னிருந்த நிலையைவிட மோசமான

நிலைக்கும் (2:20), இறுதி அழிவுக்கும் (2:3.9) இட்டுச் செல்லும். இவர்கள் மனந்திரும்பகாலம் கொடுக்கும்படியாக ஆண்டவரது நாள் காலம் தாழ்த்தப்படுகிறது (3:9).

போலிப் போதகர்கள் தான்தோன்றித் தனமாய்ப் பழைய ஏற்பாட்டுக்கு விளக்கமளிப்பதைத் தடுத்துக் குறையினை நிறைவு செய்ய, ஆசிரியர் மறைநூலின் இறை ஏவுதல் பற்றி மதிப்பு மிக்க கருத்தொன்று தருகிறார். "மனிதர் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு, கடவுளின் ஏவுதலால் பேசினர்." ஆகவே, எவனும், தன் விருப்பம் போல் இறைவாக்குக்குத் திரித்து விளக்கம் அளிக்கக் கூடாது (1:20-21). "மறைநூல்" என்ற தலைப்பின்கீழ், பவுலின் திருமுகங்கள் தொகுப்பும் சேர்க்கப்படுகிறது (3:15-16).

### பேதுரு மற்றும் அந்திரேயாவின் பணிகள் (PETER AND ANDREW, ACTS OF)

இந்நூல் கிரேக்க மற்றும் ஸ்லவோனிய மொழிகளில் உள்ள நூலாகும். இதற்கு இணையான, ஆனால், சிறிய கதை ஒன்று எத்தியோப்பிய மொழியில் உள்ளது. ஆனால், அதில் அந்திரேயாவுக்குப் பதிலாக, ததேயு இடம் பெறுகிறார். அந்திரேயா மனிதனை உண்ணும் மனிதர் வாழும் இடத்திலிருந்து ஒரு மேகம் வழியாக, பேதுரு போதிக்கும் மலைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். அங்கு மத்தியா, ஏற்கெனவே தப்பிச் சென்றிருந்தார். இயேசு ஒரு குழந்தை வடிவில் வந்து பேதுருவையும் அந்திரேயாவையும் காட்டுவாசிகளுக்குப் போதிக்கச் செல்லுமாறு பணிக்கிறார். அவர்களும் அதைச் செய்கிறார்கள். தங்களைக் கவனித்துக்கொண்ட ஒரு முதியவருக்குச் சிலநாள் உதவினர். பிறகு, அவர்களின் பகையாளியான ஒனேசிப்போரைச் சந்திக்கின்றனர். பேதுரு இரண்டு முறை ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழையச் செய்கிறார். இதைச் சந்தேகித்த ஒனேசிப்போர் தன் சொந்த ஒட்டகத்தையும், ஊசியையும் கொண்டு வருகிறான். அதிலும், பேதுரு வெற்றி பெறுகிறார் ஆனால், அவன் முயன்றபோது அவனால் ஒட்டகத்தை நுழைக்க முடியவில்லை. காரணம், அவன் இன்னும் திருமுழுக்குப் பெறவில்லை. எனவே, பலர் திருமுழுக்குப் பெறும்போது ஒனேசிப்போரும் திருமுழுக்குப் பெறுகிறான். அவர்களோடு தீய நடத்தையுள்ள ஒரு பெண்ணும் மனந்திரும்பித் திருமுழுக்குப் பெற்று, பல காணிக்கைகள் செலுத்துகிறாள். தனது வீட்டைக் கன்னியர் வாழும் இடமாகத் தருகிறாள். அப்போஸ்தலர்கள், அங்குள்ள ஆலயத்தை அர்ப்பணித்து, குருக்களை ஏற்படுத்தி, இறைவனிடம் மக்களை ஒப்படைக்கின்றனர்.

மக்களுக்கு எடுத்துக்காட்டாக எழுதப்பட்ட இந்நூல், பிற பணிநூல்களிலிருந்து நடையிலும் அழுத்தத்திலும் வேறுபடுகிறது. இந்நூல் கோட்பாட்டில் அக்கறை கொள்ளவில்லை. பிற நூல்களில் காணப்படும் அப்போஸ்தலர்களின் செபங்களும் அறவுரைகளும் இதில் இடம் பெறவில்லை. மாறாக, நூல் முழுவதிலும் வியப்புமிக்க நிகழ்ச்சிகளும், கதைகளிலும் ஆசிரியர் அக்கறை காட்டுவதாகத் தெரிகிறது.

### பேதுரு மற்றும் பவுலின் பணிகள் (PETER AND PAUL, ACTS OF)

இது கிரேக்க மொழியில் மட்டும் கிடைத்துள்ளது. மார்செல்லுஸ் என்பவர் இதை எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது. கவுதோ மெலேத்து என்ற தீவிலிருந்து பவுல் உரோமைக்கு வந்ததாக இந்நூல் கூறுகிறது. இதைக் கேள்வியுற்ற யூதர்கள் பவுலை உரோமைக்கு வரவிடவேண்டாம் என நீரோவை வற்புறுத்தினர். சிசிலி என்ற தீவில் இருக்கும்போது, பவுலின் நண்பனும், அவரைப் போலவே வழுக்கையான தலையை உடையவருமான கப்பல் தலைவனை, அவ்விடத்துத் தலைவர்கள் வெட்டி, தலையை நீரோவிடம் அனுப்பினர். ஏனெனில், அவர்தாம் பவுல் எனத் தவறாக எண்ணினர். பவுலின் உரோமைப் பயணம் அப்போஸ்தலர் பணி நூலைப் பெரிதும் ஒத்து அமைகிறது. ஆனால், பல

கதைகள் சேர்க்கப்பட்டு, வண்ணம் பூசப்படுகிறது. அவர் உரோமை நகரை அடைந்த நிகழ்ச்சி பற்றிய விவரிப்பும், மற்ற விவரங்களும் பேதுரு மற்றும் பவுலின் பாடுகள் என்ற நூலை மிகவும் நெருங்கியதாக உள்ளன.

**பேதுரு மற்றும் பவுலின் பாடுகள் (PETER AND PAUL, PASSION OF)**

இது பிற்காலத்தில் தோன்றிய ஆனால், முற்றிலும் மரபு சார்ந்த ஒரு நூல். இது கிரேக்கம், இலத்தீன் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளது. பேதுரு, பவுல் ஆகியோரின் உறவு மற்றும் ஒற்றுமை பற்றியும், அவர்கள் எவ்வாறு சீமோன் மாகு என்பவனை எதிர்த்தனர் என்றும், அவர்களின் மறைசாட்சி மரணத்தைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. பழங்காலக் கதைகள் பற்றி இந்நூல் கூறினாலும், இது 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். இது மார்செல்லுஸ் என்பவரால் எழுதப்பட்டது என்பதற்கு ஆதாரமில்லை. இலத்தீனில் இதே தலைப்பைக் கொண்ட, முற்றிலும் வேறுபட்ட நூல் ஒன்று உள்ளது. இருவரும் உரோமை நகரில் போந்தியு பிலாத்தின் உறவினர் வீட்டில் தங்கினர். அங்கே, தான்தான் கிறிஸ்து என்று உரிமை கொண்டாடிய சீமோன் மாகுவிற்குச் சரியான பதில் அளிக்கக் கூடியவர்கள் இவர்களே என்று பரிந்துரைக்கப்படுகிறது. பின், இருவரும் எவ்வாறு மறைசாட்சி மரணம் எய்தினர் என்று விவரிக்கப்படுகிறது.

**பேதுரு மற்றும் பன்னிரண்டு சீடர்களின் பணிகள் (PETER AND TWELVE DISCIPLES, ACTS OF)**

இஃது எகிப்தில் 1946-ஆம் ஆண்டு செனோபோஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஞானவாத நூல். இதற்கும், பேதுருவின் பணிகள் என்ற நூலுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. எபியோனியர்களின் அப்போஸ்தலர் பணிகள் என்ற நூலோடோ, மானிக்கேயரின் பன்னிரு அப்போஸ்தலர் பணிகள் என்ற நூலோடோ இந்நூல் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

**பேதுருவின் ஸ்லாவோனியப் பணிகள் (PETER, SLAVONIC ACTS OF)**

ஸ்லாவோனியப் பகுதி என்பது கிழக்கு ஐரோப்பாவைக் குறிக்கும்; அதாவது, பல்கேரியா, பொகிமியா, உருசியா முதலிய நாடுகள். இவர்களின் மொழி ஸ்லாவிய மொழியாகும். புனித பேதுருவைப் பற்றியும் அவரின் இறப்பைப் பற்றியும் கூறும் மற்றொரு நூல் இது.

ஒரு சிறுகுழந்தையின் வற்புறுத்துதல் மூலம் பேதுரு உரோமாபுரி செல்கிறார். அக்குழந்தையைப் பேதுரு வாங்குகிறார். கப்பலில் அந்தக் குழந்தை பல புதுமைகளைச் செய்கிறது; உரோமை நகரிலும் பல புதுமைகள் புரிகிறது. இக்குழந்தையை அராவிஸ்து என்பவருக்குப் பேதுரு விற்றுவிடுகிறார். நீரோ பேதுருவைக் கைது செய்தபின் அக்குழந்தை வந்து மன்னனைத் திட்டுகிறது. நீரோவின் ஆலோசகனான காத்தோ, பேதுருவின் கையில் விலங்கிடும்போது, அவனது கையைச் சூம்பச் செய்கிறது. உடனே, நிலநடுக்கம் ஏற்படுகிறது. இறந்தவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்கள் மிக்கேல் தூதரின் வருகைக்காகக் காத்திருக்கும்படி அவர்களைக் கல்லறைக்கே பேதுரு அனுப்புகிறார். பின், பேதுரு தலைகீழாகச் சிலுவையில் அறையப்படுகிறார். அக்குழந்தை மீண்டும் தோன்றுகிறது. அது வந்தவுடன் ஆணிகள் கழன்று விழுகின்றன. பேதுரு தம் எதிரிகளை மன்னிக்கிறார். இறுதியாக, அக்குழந்தை இயேசு எனத் தன்னை வெளிப்படுத்துகிறது.

**பேதுருவின் நற்செய்தி (PETER, GOSPEL OF)**

இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாடுகளைப் பற்றிய இந்நற்செய்தி சீரியா, எகிப்து ஆகிய நாடுகளில் பரவியிருந்தது. இது புனித பேதுருவால் எழுதப்பட்டது எனக் கருதப்பட்டது. இஃது இறைத் தன்மையுடைய கிறிஸ்துவுக்கும், மனித இயேசுவுக்கும் இடையிலான உறவு பற்றிய

தோசேத்திய போக்கைக் கொண்டுள்ளது. யூதர்களுக்கு எதிரான போக்கும் இதில் காணப்படுகிறது.

இந்நூலை மறுத்துக் கூறிய ரோசுஸ் ஆயரான செராப்பியோன் என்ற ஆயரது உரையைக் கொண்டிருக்கும் யுசேபியுவின் நூலிலிருந்துதான் கி.பி. 19-ஆவது நூற்றாண்டுவரை இந்நூல் அறியப்பட்டிருந்தது. செராப்பியோன், இந்நூல் கிறிஸ்தவர்களால் பரவலாக வாசிக்கப்பட்டதை அறிந்து, அதன் உண்மையான தன்மையை எடுத்துக்கூறி, இதற்கு மாறாக எழுதினார். யுசேபியுவில் காணப்படும் செராப்பியோனின் மறுப்புரையில் இந்நூல் தோசேத்தியப் போக்குடையது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதே தலைப்புடைய ஒரு நூலை ஓரிசன் குறிப்பிடுகிறார். இதுவும், "யாக்கோபின் நூலும்", இயேசுவின் சகோதரர்கள் யோசேப்பின் முதல் திருமணத்தின் பிள்ளைகள் என்று குறிப்பிடப்படுகின்றனர். தியோடொரெத்து என்பவர் இதே தலைப்புடைய நூலை நசரேயர்கள் பயன்படுத்தியதாகக் கூறுகிறார்.

கி.பி. 1886-இல் இந்நூலின் சில பகுதிகளும், பேதுருவின் வெளிப்பாட்டிலுள்ள காட்சியாகமத்தின் சில பகுதிகளும் எகிப்திலுள்ள அக்மிமின் கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டன. இஃதோடு, ஏனோக்கு நூலின் கிரேக்க மொழி அதிகாரங்கள் முப்பத்திரண்டும் காணப்பட்டன. இந்நூல் கி.பி. 1892-இல் வெளியிடப்பட்டது. "விண்ணகத்திலிருந்து இரண்டு உருவங்கள் கீழே வந்து, கல்லறையிலிருந்த இயேசுவை வெளியே கொணர்ந்தன" என்று இதில் கூறப்பட்டுள்ளது. சில இடங்களில் நான்கு நற்செய்தியாளர்களையும் தழுவி எழுதப்பட்டுள்ளது (மாற் 16:8; யோவா 21). சில நிகழ்ச்சிகள் உயர்வுநவிற்சியாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கி.பி. 125-இலிருந்து 175-க்குள் எழுதப்பட்டிருக்கும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

**பேதுருவின் பணிகள் (PETER, ACTS OF)**

உரோமையில் பேதுரு செய்தவற்றைப் பற்றியும் அவர் சீமோன் மாகுவோடு போராடியது மற்றும் அவன் செய்த புதுமைகள், அவரது மறைசாட்சி மரணம் ஆகியவை பற்றியும் எழுதப்பட்ட நீண்டதொரு கதை. போலி நூல்களில் ஒன்று. பேதுருவுக்குச் சாற்றிக் கூறப்படும் பல நூல்களில் ஒன்றாக இதை யுசேபியு குறிப்பிடுகிறார். இந்நூலின் பெரும்பகுதி, ஒருவேளை கி.பி. 200-க்கு முன், கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும்.

இந்நூலில் பல கதைகள் உள்ளன: 1) விண்ணிலிருந்து வந்த ஒரு காட்சிக்குப் பணிந்து பவுல் ஸ்பெயினுக்குப் புறப்படுதல். 2) சீமோன் மாகு உரோமைக்கு வந்து பல புதுமைகள் செய்தல், பவுலின் பெயரைக் கெடுத்தல். அதன் விளைவாக நர்க்கிசு மற்றும் ஆறு பெண்களைத் தவிர மற்றவர் எல்லாம் விசுவாசம் தவறுகின்றனர். 3) விண்ணகக் காட்சிக்குப் பணிந்து, பேதுரு, தமது பழைய எதிரியாகிய சீமோன் மாகுவோடு போராடுவதற்காக (அ.ப. 8:9-24), புதுமைகள் பல செய்கிறார்; சீமோன் மாகுவோடு போராடித் தோற்கடிக்கிறார். 4) பேதுருவின் போதனையால் அகிரிப்பாவும், சீசரின் ஒரு நண்பனும் தங்கள் வைப்பாட்டிகளை இழக்கின்றனர். இதனால், இருவரும் பேதுருவின்பால் சீற்றம் கொள்கின்றனர். அதன் விளைவாக, பேதுரு மறைசாட்சி மரணம் எய்துகிறார்.

பேதுருவின் மறைசாட்சி மரணம் பற்றிய கதை, தனியாக இரு கிரேக்க ஏடுகளிலும், இலத்தீன், சீரியக்கு, கோப்திக்கு, அரமேயம், அரபிக்கு, எத்தியோப்பிக்கு வாசகங்களிலும் காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கதைகளோடு மற்றக் கதைகள் பலவும் உள்ளன. அவற்றில் ஒன்று, பேதுருவின் குணமாக்கும் ஆற்றலை நிரூபிக்க, அவரது வாதநோயுடைய மகள் தற்காலிகமாகக் குணம்பெற்று, அவள் குளிக்கும் போது பார்த்துவிட்ட தோலமேயுவிடம் இருந்து காப்பதற்காக மீண்டும் நோயாளி ஆகிறாள். இக்கதையைக் கொண்டுள்ள கோப்திக்கு ஏட்டில்

ஞானவாதப் பகுதிகளும் காணப்படுகின்றன. இக்கதையை அகுஸ்தீனார் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இவர் இக்கதைக்கெத்த தோட்டக்காரன் மகள் பற்றிய மற்றொரு கதையையும் கூறுகிறார்.

இவ்விரு கதைகளும் திருமணத்திற்கு எதிராக உள்ளனவாகத் தெரிகின்றன. துறவு வாழ்வின் சுவடுகள் காணப்படுகின்றன. இன்னும் கதைகள் பல உண்டு. ஆனால், இவை வரலாற்று அடிப்படை கொண்டவை என்பதற்கு ஒரு சான்றும் இல்லை. இவற்றில் எல்லாம் பேதுருவின் மறைசாட்சி மரணம் சிறப்புப் பெறுகிறது. பேதுருவின் நலனைத் தேடுபவர்கள் கட்டாயப்படுத்தியதால் பேதுரு விருப்பமின்றி உரோமையை விட்டுப் புறப்படுகிறார். உரோமையை நெருங்கி வந்து கொண்டிருந்த இயேசுவைப் பேதுரு சந்திக்கிறார். "ஆண்டவரே எங்கே போகிறீர்?" என்ற பேதுருவின் கேள்விக்குச் "சிலுவையில் அறையப்பட உரோமைக்குச் செல்கிறேன்" என்று இயேசு பதில் அளிக்கிறார். பேதுரு உரோமைக்குத் திரும்புகிறார். அங்கே சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு மரணம் அடைகிறார். இக்கதையில் கூட, தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட, பேதுரு ஏன் விரும்பினார் என்பது கடின முயற்சியுடன் விளக்கப்படுகிறது.

### பேதுருவின் பாடுகள் (PETER, PASSION OF)

இது பேதுருவின் பணிகள் என்ற நூலின் இறுதிப்பகுதியான பேதுருவின் மறைசாட்சி மரணம் பற்றிய பிற்கால வாசகமாகும். இஃது இலத்தீன் மொழியில் உள்ளது. உரோமை ஆயராகப் பேதுருவுக்குப்பின் வந்த லினுசு என்பவரால் எழுதப்பட்டது என்று பாரம்பரியம் கருதுகிறது. இதன் இலத்தீன் மொழி வாசகம் 6-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதன்று. பெரும் பாலும், மறைசாட்சி மரணம் பற்றிய பாரம்பரியத்தையே கொண்டுள்ளது. இஃதோடு சில விவரங்களையும் கொண்டுள்ளது. சிறைக்காவலர்களின் பெயர்கள் இதில் கூறப்பட்டுள்ளன. பேதுரு சிலுவையில் அறையப்பட்டபோது நிகழ்ந்த சிக்கல் மிக்க காட்சியையும் விவரிக்கிறது. அதில் பேதுரு சிலுவையில் அறையப்பட்டபோது, வானதூதர்கள் பூக்களால் ஆன கிரீடத்தைச் (ரோஜா,லீலி மலர்கள்) சிலுவைமேல் பிடித்துக்கொண்டு நின்றனராம். அப்போது ஒளிமிக்க சிலுவையின் உச்சியில் நின்று கொண்டு, பேதுரு கிறிஸ்து கொடுக்கும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து வாசித்தாராம்.

### பேதுருவின் போதனைகள் (PETER, PREACHING OF)

உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் என்று இயேசு கூறியதற்கொப்ப, பேதுரு போதிப்பதைப் பற்றி எழுந்த ஒரு நூல் இது (மத் 28:19-20; அ.ப. 1:8). யுசேபியு, இது கத்தோலிக்கப் பாரம்பரியம் அறியாததாகும் என்று விலக்கிவிடுகிறார். ஆனால், அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமந்து உண்மையானதாக இதை ஏற்றுக்கொள்கிறார். மேலும், இதிலிருந்து பல மேற்கோள்கள் காட்டியிருக்கிறார். அவற்றில் இந்நூலின் சுருக்கத்தைக் கொடுக்கிறார்.

பன்னிரு அப்போஸ்தலர்கள் உலகெங்கும் சென்று போதிக்கக் கட்டளை பெறுகின்றனர். இறைவன் ஒருவரே; போதகத்தைக் கேட்டு கிறிஸ்துவில் விசுவசிப்பவர்கள் மீட்புப் பெறுவர். இஸ்ராயேலரில் எவராவது மனந்திரும்பி, கிறிஸ்து வழியாக இறைவனை விசுவசித்தால் அவர் மன்னிப்புப் பெறுவார். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் அப்போஸ்தலர்கள் புற இன உலகை நோக்கிச் செல்கின்றனர். சிலைகளோடும், தெய்வமாக்கப்பட்ட விலங்குகளோடு கூடிய கிரேக்க முறைப்படியும், இறைவனை அறிந்திருப்பதாக உரிமை கொண்டாடினாலும் அவரை அறியாது, வானதூதர்களுக்குப் பணிசெய்து, குறிப்பிட்ட நாட்களையும் பருவங்களையும் கடைப்பிடிக்கும் யூத முறைப்படியும் இறைவனை வழிபடக்கூடாது.

கிறிஸ்தவர்கள் இறைவன் அவர்களோடு செய்து கொண்ட புதிய உடன்படிக்கையின்படி புதிய முறையில் இறைவனை வழிபடவேண்டும். அறியாமல் செய்த தவறுகளை இறைவன் மன்னிப்பார்.

இச்சிறுநூல், பிற்காலத்தில் வரவிருக்கும் காப்புரைகளுக்கு முன்னோடியாகும். ஓரிசன், பேதுருவின் படிப்பினை என்ற ஒரு நூலை அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டும் ஒரே நூலைத்தான் குறிக்கின்றனவா என்பதற்கு உறுதியாகப் பதில் கூற முடியாது. விலங்குகளை வழிபடுவதற்கு எதிரான விரிவான எச்சரிக்கைகளும், கிளமந்து இதை அறிந்திருப்பதும் இந்நூல் எகிப்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

## பேதுருவின் வெளிப்பாடு (PETER, APOCALYPSE OF)

இஃது அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்ட வெளிப்பாட்டு நூல்களில் காலத்தால் முந்தியதாகும். கிழக்கத்திய கிறிஸ்தவர்களால் 2-ஆம் நூற்றாண்டில் உயர்வாகக் கருதப்பட்டது. ஆனால், காலப்போக்கில் நிராகரிக்கப்பட்டது. 5-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனத் திருச்சபைகளில் பெரிய வெள்ளியன்று ஆண்டுதோறும் இந்நூல் வாசிக்கப்பட்டதாகச் சொசோமென் கூறுகிறார்.

முராத்தோரியன் பட்டியலில் யோவானின் திருவெளிப்பாட்டு நூலுக்குப்பின் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், "ஆலயத்தில் சிலர் இதை வாசிக்க அனுமதியார்" என்ற எச்சரிக்கையையும் கொண்டுள்ளது. அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமந்து, இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று கருதியதாகத் தெரிகிறது. இதிலிருந்து பல எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கிறார். கிளாரமொந்தானு வாசகம் இதைக் கடைசி நூலாகக் கொண்டுள்ளது. ஆனால் யுசேபியு, இது கத்தோலிக்கப் பாரம்பரியம் அறியாததொன்று என்று இந்நூலை ஒதுக்கி விடுகிறார். யுசேபியுவைப் பின்பற்றி, எரோனிமுவும் இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேராதது என்று ஒதுக்கிவிடுகிறார். ஆனால், இது பிற்காலப்போலி நூல்கள் பலவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பது, இது பொதுமக்களிடையே பரவலாக மதிக்கப்பட்டது என்பதைச் சுட்டுகிறது. இதன் எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு முழுவதும் 1910-இல் கண்டுபிடிக்கப்பட்டது. இஃது அரபிக் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலின் கிரேக்கத் துணுக்கு 1836-இல் எகிப்திலுள்ள அக்மிமின் கல்லறையில் கண்டெடுக்கப்பட்டது. பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட அரமேய வாசகத்தோடு ஒப்பிடும்போது கிரேக்கத் துணுக்கு ஒரு குறுகிய வடிவின் பாகமாகத் தெரிகிறது.

கிரேக்கத் துணுக்கு, உயிர்த்த இயேசுவின் உரையின் இறுதிப் பகுதியோடு திடீரென்று தொடங்குகிறது. இயேசுவின் கட்டளைக்கிணங்கி அப்போஸ்தலர்கள் ஒலிவ மலைக்குப் போகின்றனர். அங்கு நீதிமான்களின் வருங்கால நிலைபற்றிய காட்சி ஒன்று காண்கின்றனர். இஃது இயேசு உருமாற்றமானதைத் தழுவியதாக உள்ளது. ஆனால், கற்பனையான பல விவரங்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது காட்சி, பாவிகளின் தண்டனைகளைப் பல விவரங்களுடன் விவரிக்கிறது.

இந்நூல், திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த திருவெளிப்பாட்டு நூலால் உந்தப்பட்டு எழுதப்பட்டதாகவும், கற்பனை வளமிக்கதாகவும், பிற இன சமயக் கூறுகளால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இந்நூல் 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்; பேதுருவின் நற்செய்தி என்ற நூலுக்கு முந்தியதாகும்.

கி.பி. 1946-இல் எகிப்தில் செனோ போஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஞானவாதக் கோப்திக்கு வாசகங்களில், "பேதுருவின் வெளிப்பாடு" என்றதொரு நூல் குறிக்கப்படுகிறது. ஆனால், இரண்டிற்குமிடையே

பெயரைத் தவிர வேறு ஒற்றுமை இல்லை.

**பேத்தபாரா (BETHABARA கடக்கக் கூடிய துறை)**

இது யோவான், திருமுழுக்குக் கொடுத்த யோர்தான் நதிக்கு அப்பால் உள்ள, இடமாகும் (யோவா 1:28). பழங்கால வாசக ஏடுகள் இவ்விடத்தைப் பெத்தானியா என்று குறிப்பிடுகின்றன. ஆனால், யோர்தானுக்கு அப்பால் பெத்தானியா என்று ஓர் இடம் இருந்ததற்கு ஆதாரம் எதுவுமில்லை என்று ஓரிசன் கூறுகிறார். எனவே, இச்சொல் பேத்தபாரா என்றுதான் வாசிக்கப்பட வேண்டும் என்பது அவரின் கருத்து.

**பேத்து (BETH)**

இஃது எபிரேய நெடுங்கணக்கில் இரண்டாவது எழுத்தாகும்: அகரவரிசைச் சங்கீதம் 119-இன் இரண்டாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

**பேபாய் (BEBAI – தந்தைத் தன்மையுடைய)**

1. ஓர் இஸ்ராயேலர். இவருடைய வழித்தோன்றல்கள் சிலர், செருபாபேலின் தலைமையிலும் (எஸ் 2:1; நெகே 6:16), சிலர் எஸ்ராவின் தலைமையிலும் (எஸ் 8:11) நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பினர்.

2. ஓர் இஸ்ராயேலர். மக்கள் தலைவர்களுள் ஒருவர். இவர் நெகேமியாவின்கீழ், புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார் (நெகே 10:15).

3. அடையாளம் தெரியாத ஓர் இஸ்ராயேல நகர். ஓலபெரினேயின் மரணத்துக்குப்பின், சிதறித் தப்பி ஓடிய அசீரியர்களை அழிப்பதில் பங்கு பெற்றனர் (யூதி 15:14). அறிஞர் சிலர், இது பேல்மாயின் என்ற இடமாய் இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

**பேயான் (BAEAN)**

யூதா மக்கபேயுவால் அழிக்கப்பட்ட ஒரு மக்களினம். ஏனெனில், "இவர்கள் மக்களைப் பிடித்தற்குக் கண்ணி போலும், படுகுழி போலும் இருந்தனர்" (1 மக் 5:4).

**பேய், பேய் இயல் (DEMON, DEMONOLOGY)**

1. **மெசபொத்தாமியா:** சுமேரிய மற்றும் அக்காதிய இலக்கியத்தில் காணப்படும் மெசபொத்தாமியப் பேய் இயல் மிகப் பழமையானது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஃது எபிரேயரைப் பாதித்தது; கல்தேயர்களின் வழியாக, கிரேக்க உலகிற்குச் சென்று ஐரோப்பாவை அடைந்தது. இதனுடைய ஒருசில அமைப்புகள் மத்திய மற்றும் நவீன காலம்வரை காணப்பட்டன. மெசபொத்தாமியாவில், பெரிய இயற்கைப் பேரிடர்களுக்குச் சற்று குறைந்த வாழ்வின் தீமைகள், பேய்களின் தீயசக்திகளுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை எல்லையற்று இருந்தன. அவற்றின் கொடுமையை ஆற்றல் மிக்க விதத்தில் எதிர்த்துப் போராடுவதற்குப் பேயோட்டுபவர் அவற்றின் பெயர்களை அறிந்திருக்க வேண்டும். எனவே, மெசபொத்தாமிய இலக்கியம் ஏராளமான பேய்களின் பெயர்களைக் கொண்டுள்ளது. இலக்கியம் மற்றும் ஓவியங்களிலிருந்து இவற்றின் பண்புகளையும் தோற்றத்தையும் ஊகிக்க முடியும். தீய பேய் 'உதுக்கு' எனப்பட்டது. மந்திர வாசகங்களில் ஏழு தீய பேய்களைக் கொண்ட ஒரு குழு அடிக்கடி தோன்றுகிறது. அவை மனிதனைத் தாக்கும்பொழுது, 'அசாக்கு' தலையினையும், 'நம் தரு' தொண்டையினையும், 'உதுக்கு' கழுத்தையும், 'அலு' மார்பையும், தீய 'இலு' கடவுளான 'எதிம்மு' சுரத்தையும், 'கால்லு' காலையும் தாக்கும். மற்றப் பெயர்கள் –'ரபிசு' பதுங்குபவன், 'அக்காசு' – பறிப்பவன், மற்றும் மூன்று இரவுப் பேய்களான 'லீலு' (ஆண்), லிலிது (பெண்), 'அர்தத் லிலி' (லீலுவின் ஊழியக்காரி) என்பன. இவை மூன்றும் கனவில் வந்து கிலியூட்டும் வகையினைச் சேர்ந்தவை. 'பசுசு' என்பது மலேரியாக் கிருமிகளைக் கொண்டுவரும் தென்மேற்குக் காற்றாக இருக்கலாம். 'அசாக்கு'

என்பது மரணம் ஆகும். 'நெர்கல்' என்னும் கீழுலகக் கடவுளுடன் இணைந்திருக்கும் 'நம்தரு', மரணதூதன் ஆகும். 'கல்லு' என்பது அமைப்போ, சிறப்போ இல்லாத மறைந்திருக்கும் கொடிய மிருகம் ஆகும். 'எதிம்மு' என்பது ஓர் ஆவி. 'லமஸ்து' என்பது அழகற்ற அச்சத்தை ஊட்டும் கொடிய மிருகம் ஆகும். இது கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஆபத்தானது. பெரும்பாலான பேய்களைப் போலவே இது மனித மற்றும் விலங்கு உறுப்புகளை இணைத்து அமைக்கப்பட்டது; சிங்கத்தலை, பெண்ணின் உடல், நாயின் பற்கள் மற்றும் கையிலும் காலிலும் கழுகின் நகங்களைக் கொண்டது. ஒவ்வொரு கையிலும் ஒரு பாம்பைக் கொண்டிருந்தது. மனித மாமிசம் மற்றும் இரத்தம்மீது இது வேட்கை கொண்டிருந்தது. மார்புகளில் நாய்க்கும், பன்றிக்கும் பாலூட்டுவதாகக் காட்டப்படுகிறது. பேய்கள் சில நேரங்களில் வானகத்தின் கடவுளாகிய அனுவின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றன. படைப்புக் காவியத்தில், மார்துக்குடனான போட்டியில் தனக்கு உதவிபுரிய "தியாமத்" இவற்றை ஈன்றதாகக் கூறப்படுகிறது. இவை கல்லறைகளிலும்,தனிமையான மற்றும் பாழடைந்த பகுதிகளிலும் முக்கியமாக இரவு நேரங்களில் அலைந்து திரியும். எல்லாப் பேய்களும் தீயவையல்ல. 'சேடு' மற்றும் 'லாமாய்சு' முதலிய நல்ல பேய்கள், தீய பேய்களை அகற்றுவதற்கு அழைக்கப்பட்டன. இத்தகைய கருணையுள்ள பேய்கள், கோவில் மற்றும் அரண்மனை வாசல்களில் காவல் புரியும் தூதர்களாகக் காட்டப்படுகின்றன. மத்திய கிறிஸ்தவக் கலையில் காணப்படும் பேய்களின் அமைப்பு, மெசபொத்தாமியக் கலை மற்றும் இலக்கியத்திலிருந்தே வந்தது.

2. பழைய ஏற்பாடு: எபிரேயச் சட்டத்தில் உள்ள மாயவித்தைக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள தடைகள், இப்பழக்கத்தையும் பேயியல் பற்றிய நம்பிக்கையையும் இஸ்ராயேலில் இருந்து விலக்கிவிட்டதாகத் தெரிகிறது. பிறபல மொழிக்கான உருவங்கள் மற்றும் எபிரேயரிடையிலுள்ள சில மூட நம்பிக்கைகள் பற்றிய குறிப்புகளைத் தவிர, பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் இந்த நம்பிக்கை காணப்படவில்லை. சவுல் இஸ்ராயேலிலிருந்து எல்லாச் சூனியக்காரிகளையும் வெளியேற்றி னாலும், சாமுவேலின் ஆவியை எழுப்ப ஒருத்தியுடைய உதவியை நாடினார் (1 சாமு 28:13). அது மனித ஆற்றலுக்கு மேற்பட்ட உயிரினம் என்று பொருள்படும் 'எலோகீம் என்று அழைக்கப்படுகிறது. எசா 8:19, இறந்தோரின் ஆவிகள் தொடர்பால் வருவதுரைத்தலைக் குறிப்பதாக இருக்கலாம். எபிரேயர்கள் பலியிட்ட அறியாத வேற்றுத் தெய்வங்களாகிய பேய்களைப் பற்றி உப 32:17 குறிப்பிடுகிறது. இங்கு, பிற நாடுகளின் கடவுள்களும் பேய்களும் ஒன்றாகக் கருதப்படுகின்றன; பிற்கால எபிரேய இலக்கியத்தில் இது வெளிப்படையாகிறது. குழந்தைகளைப் பேய்களுக்குப் பலியிடுவது பற்றி சங் 106:37 குறிப்பிடுகிறது. கைவிடப்பட்ட பாழிடங்களைக் கொடிய விலங்குகள், நடனமாடும் கூளிகள் (எசா 13:21; 34:14), மற்றும் போலி யூத இலக்கியத்தின் பெண் பேய்களும் (34:14) ஆட்கொள்ளும். கூளிகள் என்பவை செம்மறியாடு போன்ற அமைப்பைக் கொண்டவை. சவுலைப் பைத்தியமாக அலைக்கழித்த இறைவனிடமிருந்து வந்த தீய ஆவி (1 சாமு 16:14) பேயினைப் போன்று உள்ளது. ஆனால், இந்த ஆவி குணத்தாலன்றி விளைவுகளில் மட்டும் தீயதாக இருந்தது. பேயியல் நடை சங் 91:5-6-இல் காணப்படுகிறது. இரவின் திகில்; பகலில் பாய்ந்து வரும் அம்பு; இருளில் உலவும் கொள்ளை நோய் மற்றும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதை ஆகிய இவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பவர் இறைவனே.

3. யூதமரபு: இரு ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பேய்களின் மீது பெரும் நம்பிக்கை காணப்படுகிறது. பல கூறுகளில், இவை மெசபொத்தாமிய பேயியலிலிருந்தும்,

கடவுள்களுக்கும் மனிதர்களுக்கும் இடைப்பட்ட உயிரினங்கள் பற்றிய கிரேக்க நம்பிக்கையிலிருந்தும் உருவானவை. ஆனால், இக்காலத்தில் மெசபொத்தாமிய மூடநம்பிக்கைகள் கிரேக்க நம்பிக்கையைப் பாதித்தன. நோய்கள் மற்றும் துரதிருஷ்டங்களைப் பேய்களின் தீய செயல்களே ஏற்படுத்துகின்றன என்னும் நம்பிக்கை முழுவதுமாகவும் எவ்வித மாற்றமும் இன்றியும் மெசபொத்தாமியாவிலிருந்து யூதர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. விவிலியப் பகுதிகளின் விளக்கவுரைகளால் பேய்களின் தோற்றம் விளக்கப்பட்டது. தவறிய வானதூதர்களே பேய்கள் என, போலி விவிலிய நூல்கள் கூறுகின்றன. மனிதரின் புதல்வியரை மணந்த இறைவனின் புதல்வர்கள் என அவர்கள் கருதப்படுகின்றனர் (ஆதி 6:1-4). இவர்களின் புணர்ச்சியின் விளைவாக, இதிகாசங்கள் மற்றும் நாடோடிப் பாடல்களின் அரக்கர்கள் தோன்றினர். தொடக்கம் அறியப்படாத புராணப் பகுதியை ஆதியாகமம் கொண்டுள்ளதால், இந்த விளக்கம் சரியானதாக இருக்க வாய்ப்புள்ளது. சாத்தான் என்பது, ஆதி 3-இல் உள்ள பாம்பு என்று கருதப்படுகிறது. இந்த நம்பிக்கை ஞான 2:24-இல் பிரதிபலிக்கிறது. "பேயின் பொறாமையால் பாவம் உலகில் நுழைந்தது." நோய் மற்றும் துரதிருஷ்டம் ஆகியவற்றுடன், சோதனையும் பேயின் செயலாகக் குறிக்கப்படுகிறது. மேலும், பேய்கள் அனைத்தும் ஒரே தலைமையின் கீழ் ஒரே அரசாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது. இந்தத் தலைமை மஸ்தேமா, பேலியார் அல்லது சாத்தான் என்று அழைக்கப்படுகிறது.

4. **புதிய ஏற்பாடு:** புதிய ஏற்பாட்டின் பேயியலானது பழைய ஏற்பாடு மற்றும் யூத மரபிலிருந்தும் வருகிறது. பேய்பிடித்திருத்தல் பற்றிய நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மற்றப்படி பேய்கள் தோன்றுவது புதிய ஏற்பாட்டில் அரிதாக உள்ளது. புறவினத்தாரின் பலிகளின் பலிப்பொருட்கள் பேய்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டன (1 கொரி 10:20-21). பொய்யான போதனைகளுக்கு ஏமாற்றும் ஆவிகளே பொறுப்பு (1 திமொ 4:1). பேய்கள் விசுவசிக்கும், நடுங்கும் (யாக் 2:19). பேய்களின் ஆவிகள் அருஞ்செயல்களைச் செய்யும் (திருவெளி 16:14). பாபிலோனின் பாழிடங்களைப் பேய்கள் உறைவிடமாகக் கொள்ளும் (18:2). இது பழைய ஏற்பாட்டின் எதிரொலிப்பாகும். பேய்கள் பெரும்பாலும் அசுத்த ஆவிகள்' என்றே அழைக்கப்படுகின்றன. பிலிப்பி நகரப் பெண் ஒருத்தி, குறி சொல்ல ஏவும் ஆவியால் பீடிக்கப்பட்டிருந்தாள். பவுல் அவளைக் குணமாக்கினர் (அ.ப. 16:16). வானதூதரோ, ஆவிகளோ இருப்பதைச் சதுசேயர் மறுத்தனர் (23:8). இவற்றின் வேறுபாடு கடவுளின் தூதர் மற்றும் தீய ஆவி ஆகியவற்றிற்கு இடையில் ஆனதாகும். கிறிஸ்தவர்கள், ஆவிகளைக் கடவுளின் ஆவியா என்று சோதித்த பின்னரே விசுவசிக்க வேண்டும் (1 யோவா 4:1). பேய்களும் சாத்தானின் தூதர்கள் என்று அழைக்கப்படுகின்றன; முடிவில்லாத நரகம் அவைகளுக்காகத் தயாரிக்கப்பட்டு உள்ளது (மத் 25:41).

பேய்களின் அரசு என்னும் கருத்து, யூத மரபின் கருத்துக்கு இணையாக உள்ளது. கடவுளின் அன்பினின்று கிறிஸ்தவரைப் பிரிக்கின்றதாக, தூதருடன் குறிப்பிடப்பட்டுள்ள "தலைமை ஏற்பவர்" (உரோ 8:38) பேய் உலகத்தின் தலைவர்களாக, படிமரபுடைய சக்திகளாக இருக்கலாம். கிறிஸ்து, தந்தைக்குக் கீழ்ப்படுத்தும் தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமை மிக்கோர் என்பன இந்தப் படிமரபுடைய சக்திகளையே குறிப்பிட்டிருக்கலாம் (1 கொரி 15:24); கிறிஸ்தவன் போராட வேண்டிய இருளின் ஆட்சியாளர்கள் மேலுள்ள கொடிய ஆன்மீக உயிரினங்களை இதே சொற்கள் எபே 1:21; 3:10; 6:12-இல் தெளிவாகக் குறிப்பிடுகின்றன கொலோ 1:16-இல் வானிலும், பூமியின் மீதும் படைக்கப்பட்ட உயிரினங்கள் என்று இவையே குறிப்பிடப்படலாம். இங்கு

அரியணை சூழ்வோர், ஆட்சி புரிவோர் என்பன சேர்க்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்ட தலைமை தாங்குவோர், ஆட்சிபுரிவோர் (கொலோ 2:10) என்போர் பேய்ச்சக்திகளாக இருக்க முடியாது. ஆனால், கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால் தலைமை தாங்குவோர் மற்றும் ஆட்சிபுரிவோரை வலுவிழக்கச் செய்கிறார் (கொலோ 2:15). அவ்வாறே வானதூதர், ஆட்சி புரிவோர், வலிமை மிக்கோர் ஆகியோர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டனர் (1 பேதுரு 3:22). கிறிஸ்தவர்கள் தீர்ப்பிடப்போகும் வானதூதர்கள் பேய்களாக இருக்கலாம் (1 கொரி 6:3). பவுல் தமது உடல் நோயினைச் சாத்தானுடைய தூதனாகக் குறிப்பிடுகிறார் (2 கொரி 12:7). தங்களது தலைமை நிலையில் நிலைக்காமல், வீழ்ந்து, கட்டுண்டு, தண்டனைக்குக் காத்திருக்கும் வான தூதர்களைப் பற்றி யூதா குறிப்பிடுகிறது. இது யூதரின் போலி இலக்கியத்தை எதிரொலிக்கிறது.

தீமையை உருவகப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாடு எந்த அளவு புராண உருவங்களையும், மொழியையும் பயன்படுத்துகிறது என்னும் கேள்வி எழுகின்றது. இயற்கை நிகழ்ச்சிகளை விவரிக்க பொதுப்பாணி மொழியை விவிலியம் பயன்படுத்துவது பற்றிய கேள்வியைப் போன்றே இக்கேள்வியும் உள்ளது. இத்தகைய பொதுப்பாணி மொழியானது, தீமையின் அண்டசக்திகள் பற்றிய கோட்பாடு மற்றும் தத்துவ உறுதியை அளிப்பதே இல்லை. யூத நூல்களில் காணப்படும் இத்தகைய மொழியின் ஆரம்பம் கீழ்க்கண்டவற்றின் பின்னணியில் உள்ளதாகத் தெரிகிறது: அ.ப. 16:16; 1 கொரி 10:20; திருவெளி 16:4; 18:2; மத் 25:41; உரோ 8:39; 1 கொரி 15:24; எபே 1:21; 3:10; 6:12; கொலோ 2:15; 1 பேதுரு 3:22-இல் வரும் தீயவனின் அரசு; நோயினைத் தீய ஆவிக்குச் சாற்றிக் கூறுதல் (2 கொரி 12:7); பேய்களுக்கான மாபெரும் தீர்ப்பு (யூதா 6; மற்றும் 1 கொரி 6:3). பொதுப்பாணி உருவங்களைப் பயன்படுத்துவது பேய்களைப் பற்றிய புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களுக்குப் பின்னணியாய் அமைந்துள்ளது என்று புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில், திருச்சபை தனிப்பட்ட தீய ஆவிகள் இருப்பதை என்றும் போதித்துள்ளது. அவை, தீய நிலையில் இருப்பது அவற்றினுடைய சொந்த விருப்பத்தினாலேயேயன்றி, அவற்றினுடைய படைப்பினாலல்ல என்றும் வற்புறுத்திக் கூறுகிறது.

## பேய் ஓட்டுதல் (EXORCISM)

அ.ப. 19:13-இல் பேயோட்டுபவரைப் பற்றிய குறிப்பு உள்ளது. பேயோட்டுவது என்பது, தீய ஆவிகளை மனிதர்களிடமிருந்தும், இடங்களிலிருந்தும் சில மந்திரச்சொற்களாலும், சில செயல்களாலும் விரட்டுவதாகும். சுமேரிய - அக்காதிய சமயத்தின் தொடக்க காலத்தில் தீய ஆவிகள், கடவுளோடு தொடர்பற்ற ஒரு தனிப்பட்ட சக்திகளாகக் கருதப்பட்டன. பிற்காலத்தில் அண்டத் தெய்வங்களிடமிருந்து உருவானது, அதிலும் சிறப்பாக, வான தேவன் அனுவிடமிருந்து உருவானது என்று நம்பப்பட்டது. இயற்கையில் நடைபெறும் எல்லாவித இடர்களுக்கும், தீய ஆவிகள்தான் காரணம் என்று நம்பப்பட்டது. மேலும், தீய ஆவிகள் நோய்கள் மற்றும் மனக்கோட்டத்திற்கும் காரணமாகக் கருதப்பட்டன. இப்படிப்பட்ட ஆவி ஒருவனைப் பிடித்துக் கொண்டவுடன் மந்திரிக்கும் குரு ஒன்று அல்லது பல கடவுள்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டு ,அந்த ஆவியை வெளியேற்றுவது அவரது கடமையாகும்.

தீய ஆவிகளை விரட்டும் முறைகள், ஒத்துணர்வான அல்லது மாதிரியைப் பின்பற்றி நடிக்கும் மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். குரு, மண்ணாலோ, மெழுகாலோ அல்லது இதைப் போன்ற ஒரு பொருளாலோ தீய ஆவியின் (அல்லது மாயத்தால் மயக்கிய சூனியக்காரனின்) உருவத்தைச் செய்து, அதன்மேல் சில மந்திரங்களைக் கூறுவார். பிறகு அதை உடைத்து அழித்துவிடுவார். அதாவது,

இதற்கு நடந்ததுபோல், பேய்க்கோ, சூனியக்காரனுக்கோ நிகழும் என்பதுவே கோட்பாடு. இதனால் பேய் தான் பிடித்திருந்தவனை விட்டு அகலவேண்டும். மற்றொரு முறை என்னவென்றால், நோயாளியைப்போல ஓர் உருவம் செய்து கொள்ளவேண்டும்; துன்பப்படும் உடலிலிருந்து தீய ஆவி வெளியேறிச் செய்யப்பட்டிருக்கும் பொருளுக்குள் செல்லத் தூண்டுவதாகும். சில சமயங்களில், குருவே அந்த ஆவி பிடித்தவனிடம் சில மருந்து கொடுப்பார். இத்தகைய மந்திரங்கள் அசீரிய இலக்கியத்தில் பல உள்ளன.

தீய ஆவிகள் இருப்பதைப் பற்றியும், அவற்றை ஓட்டுவதில் மந்திரவாதிக்கு இருக்கும் ஆற்றல் பற்றியுமான நம்பிக்கை பரவலாக இருந்தாலும் இது பற்றிப் பழைய ஏற்பாடு ஒன்றும் கூறாமல் இருப்பது வியப்பளிக்கிறது. சவுலின் கதையில், அவரைத் தீய ஆவி பிடித்திருந்ததாக ஒரு குறிப்பு இருக்கிறது (1 சாமு 16:14-16; 18:10; 19:9). பிறகு, மனநோயால் பீடிக்கப்பட்ட அரசன் தனது நினைவு இழந்த நிலையிலிருந்து, இளைஞன் தாவீது என்பவரின் யாழிசையால் குணம் பெற்றார். இஃது ஒரு வகையான பேயோட்டும் முறை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. இரப்பாயேல் வானதூதர் தோபியாவைப் பார்த்து "மீனின் இதயம் மற்றும் ஈரலின் ஒரு பகுதியை நெருப்பில் போட்டால், அதிலிருந்து கிளம்பும் புகையானது பேய்களையும் ஓட்டிவிடும். அவை மீண்டும் வரா" என்று அறிவுறுத்தினார் (தோபி 6:7; 16-17; 8:3). யோசிப்பசு என்பவர் "தீய ஆவிகளை விரட்டுவதற்கான சக்தியை, அறிவைக் கடவுள் சாலமோனுக்குக் கொடுத்துள்ளார். இவற்றை மனித நலனுக்கும், குணப்படுத்தவும் பயன்படுத்த அளித்துள்ளார். மேலும், அவர் மந்திரங்கள் பல இயற்றியுள்ளார். இவற்றின் மூலம் சில நோய்கள் குணம் பெறுகின்றன. திரும்ப பேய்கள் வராத அளவுக்கு வெளியேறுகின்றன. இம்மாதிரி சக்தி இன்றைய நாளில் அதிகமாக இருக்கின்றன. வெஸ்பாசியன் முன் எனது நாட்டைச் சேர்ந்த எலயாசர் தீய ஆவியால் பிடிபட்டவர்களை விடுவிப்பதைப் பார்த்துள்ளேன்" என்று எழுதியுள்ளார். சக்காயின் மகனான ராபியோகனான் என்பவர், கீழ்க்காணும் செயல் மூலம் தீய ஆவியை ஓட்டலாம் என்கிறார். "சிறியதாக வளர்ந்த மூலிகையை வேரோடு பிடுங்கி, அதைப் பேய் பிடித்திருப்பவனுக்குக் கீழ் தீயினால் எரிக்கவேண்டும். அவனைச் சுற்றி தண்ணீர் வைக்கவேண்டும். அதன் பிறகு ஆவி அவனை விட்டு ஓடி விடும்" என்கிறார்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவாலும் அவரது சீடர்களாலும் தீய மற்றும் அசுத்தமான ஆவிகள் எவ்வித மந்திரமுமின்றி ஓட்டப்பட்டதாகக் காண்கிறோம்.இயேசு கடவுளின் ஆவியாலும் (மத் 12:28), தமது சொந்த வார்த்தையாலும் (மத் 8:16; மாற் 1:25; 5:8; 9:25) தீய ஆவிகளை விரட்டுகிறார். தீய ஆவிகளை ஓட்டும் அதிகாரத்தை இயேசு தம் சீடர்களுக்கு அளித்தார் (மத் 10:1; மாற் 6:7). அவர்கள், அவரது பெயரால் பேய்களை ஓட்டினர் (மாற் 16:17; அ.ப. 16:18...). அ.ப. 19:13-14-இன்படி, எபேசு நகரில் இயேசு கிறிஸ்துவின் பெயரால் தீய ஆவிகளை ஓட்ட முயன்ற யூதப் பேயோட்டுபவர்கள் சிலர் இருந்தனர். இவர்கள் "பவுல் போதிக்கும் இயேசுவின் பெயரால் ஆணையிடுகிறேன்" என்று சொன்னார்கள்.

பாபிலோனியப் பேயோட்டிகள், பண்டைக்காலத்தில், பேயோட்டும்போது தங்கள் மந்திரத்தில் படைப்புத் தேவதைகளை அழைத்தது போல, பாபிலோனிய மந்திரவாதிகள் கிறிஸ்தவத்தின் முதல் நூற்றாண்டுகளில், தாங்கள் பேயோட்டும்போது, புறவினத் தெய்வங்களின் பெயரை அழைத்தனர். யூதர்கள் யாவேயின் பெயரை அழைத்தனர்.

**பேய்க் கொம்மட்டி (WILD GOURDS)**

இறைவாக்கின் குழுவினர்க்குக் கூழ்காய்ச்ச, அவர்களில் ஒருவர் ஒரு காட்டுக் கொடியிலிருந்து பறித்து வந்த காய்களாகும் (2 அர 4:38-39). இது கசப்பு ஆப்பிள் என்றும் அழைக்கப்படும்; ஆரஞ்சு

போன்ற மஞ்சள் அல்லது இளம் பச்சை நிறமுடைய கசப்பான பழம். இது வயிற்றுப்போக்கை உண்டாக்கக்கூடியது: அதனால், நஞ்சுத் தன்மையுடையது என்று கருதப்பட்டது.

**பேய் பிடித்தவன் (DEMONIAC)**

புதிய ஏற்பாட்டில் இந்தச்சொல் 13 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 4:24; 8:16.28.33; 9:32; 12:22; 15:22; மாற் 1:32; 5:15-16.18; லூக் 8:36; யோவா 10:21; லூக் 8:36).

பேய்பிடித்தவனின் இந்தப் நிலை மூளைக்கோளாறு உள்ளவனின் நிலையைப் போன்றது (மாற் 5:15; லூக் 8:35). இயேசுவிடம் குணம் பெற்றவர்களில் இவர்களும் அடங்குவர். இவர்கள் மற்ற உடல் நோய் உடையவரிலிருந்து வேறுபட்டவர்கள் (மத் 4:24; 8:16; மாற் 1:32). இருந்தபோதிலும் பேய் பிடித்ததன் விளைவாக செவிட்டுத் தன்மையும், குருட்டுத்தன்மையும் ஏற்படலாம் (மத் :32; 12:22).

புதிய ஏற்பாட்டிலே பேய் பிடித்தவன் பற்றிய முக்கியமான நிகழ்ச்சி, கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவனைப் பற்றியதாகும் (மத் 8:28-34; மாற் 5:1-20; லூக் 8:26-39). இந்த நிகழ்ச்சியிலே இறைமகன் இயேசு அசுத்த ஆவியின் மேலும், பேய்ச் சக்தியின் மேலும் கொண்டுள்ள அதிகாரம் வெளிப்படுகிறது.

**பேரரசர் (EMPEROR)**

உரோமைப் பேரரசை ஆண்ட அரசனின் சிறப்புப்பெயர். இலத்தீன் சொல்லான "இம்பராத்தோர்" (தளபதி) என்பதிலிருந்து இச்சொல் வந்தது. இப்பட்டம் போரில் வெற்றி பெற்ற படைத்தலைவனைச் சிறப்பிப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே, அவர் இப்பட்டத்தைத் தாங்கியிருக்க முடியும். ஆனால், யூலியு சீசர் இப்பட்டத்தைத் தமக்கு நிரந்தரமாக்கிக் கொண்டார். அதிலிருந்து மேலாண்மைப்படைத் தலைமையைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்பட்டது. அகுஸ்து அரசனும், அவருக்குப்பின் வந்தவர்களும் இப்பொருளிலேயே இச்சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். பிற்காலத்தில், படை ஒருவரை இம்பராத்தோர் என்று ஆர்ப்பரித்து வாழ்த்தினால் அவர் பேரரசாவதற்குத் தகுதியுடையவரானார்.

பேரரசர்- தளபதியாக அன்று, மாறாக, "நாட்டின் தலைவராக" ஆண்டு வந்தார். இதைப் பற்றி திபேரியு இவ்வாறு கூறுகிறார்: "நான் எனது அடிமைகளுக்கு எசமானன்; எனது படைகளுக்குத் தளபதி; மற்றவர்களுக்குத் (அதாவது சாதாரண சுதந்தரக் குடிமக்களுக்கு) தலைவன்". ஆயினும், பழைய வழக்கு தொடர்ந்து இருந்தது. போரில் வெற்றிக்குப்பின் பேரரசன் "இம்பராத்தோர்" என்று வாழ்த்தப் பெற்றான். அத்தகைய நிகழ்ச்சிகள் ஆவணங்களில் எழுதி வைக்கப்பட்டன; நாணயங்களில் பொறிக்கப்பட்டன.

**பேரரசர் வழிபாடு (EMPEROR - WORSHIP)**

தேவர்களாகக் கருதப்பட்ட உரோமைப் பேரரசர்களுக்குச் செலுத்தப்பட்ட வணக்கம். பேரரசர்கள் இறந்த பிறகே, அதிகாரபூர்வமாக அவர்கள் தேவர்கள் என அறிவிக்கப்பட்டனர். முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தாங்கள் தேவர்கள் என்று நம்பிய பேரரசர்கள் யாவரும் கொல்லப்பட்டனர் அல்லது தற்கொலை செய்து கொண்டனர் (கலிகுலா, நீரோ, தொமீசியன், கொமோது). அரசர்கள் இறந்தபிறகு, ஆட்சிப்பேரவையின் உறுப்பினர்களால் தேவர்களாக "அபிடேகம்" செய்யப்பட்டனர். மக்கள் கூறும் முகமன்களை நிராகரித்த அரசர்களையே நல்ல அரசர்களாக ஆட்சிப் பேரவையினர் கருதினர்.

மக்கள் தங்களுக்கு நல்லவை செய்யும் பெரியவர்களைத் தெய்வமாகக் கருதிவந்ததால் இத்தகைய வழிபாடு உருவானது. முதலில் கிரேக்கர்களின் ஆட்சிக்காலத்தில் இந்த வழிபாடு மிகவும் பொதுவானதாக இருந்தது. அதன்பின்

கீழைநாடுகளுக்கும் இது பரவியது. இவ்வாறு கிழக்கில், யூலியு சீசர் "வெளிப்படுத்தப்பட்ட கடவுளாகவும், மனித குலத்தின் மீட்பராகவும்" கருதப்பட்டார். இருப்பினும், உரோமையில் அவர் இறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பே தேவராக அறிவிக்கப்பட்டார். அகுஸ்துவும் மாகாணங்களில் கடவுளாக வணங்கப்பட்டார். ஆனால், அவரது இறப்பிற்குப் பின்னர்தான் அதிகாரபூர்வமாகக் கடவுளாக அறிவிக்கப்பட்டார். அகுஸ்து அவரது வாழ் நாளிலேயே தெய்வமாக அறிவிக்கப்பட்டார் என்று சிலர் வாதாடுகிறார்கள்.

கலிகுலா அரசன் திபேரியுவைத் தேவராக அறிவிக்க வேண்டுமென்று ஆட்சிப் பேரவைக்கு வேண்டுகோள் விடுத்தான். ஆனால், அவ்வேண்டுகோள் மறுக்கப்பட்டது. நாளடைவில் கலிகுலாதான் தெய்வமென்று நம்பினான். கி.பி. 40-ஆம் ஆண்டில் அவனது பெயரால், உரோமையில் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. மேலும், தனது பெயரால் சத்தியங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஆணையிட்டான்.

கிளாதியு அரசன், 41-ஆம் ஆண்டில் அலக்சாந்திரிய நகரத்தினருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், தனது பெயரால் தலைமைக் குருவோ, ஆலயமோ ஏற்படுத்தப்படக் கூடாது என்றும், அது கடவுளர்களுக்கே பொருந்தும் என்றும் எழுதியுள்ளான். ஆனால், பிரிட்டனில் உரோமையர்களின் வெற்றிக்குப் பிறகு கிளாதியு பெயரால் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது.

நீரோ அரசன் கிளாதியுவைக் கடவுளாக அறிவித்தான். ஆனால், நீரோ ஆட்சிப் பேரவையின் கண்டனத்துக்குள்ளானான். அவனுக்குப் பின் வந்த வெஸ்பாசியன் அரசன் கிளாதியுவுக்கு ஆலயம் ஒன்று எழுப்பினான். வெஸ்பாசியாவின் மகன் தீத்து, வெஸ்பாசியனைத் தெய்வமாகப் பிரகடனப்படுத்தினான். தீத்துவின் மரணத்துக்குப்பின் தொமீசியன் தீத்துவைக் கடவுளாக்கினான்.

கி.பி. 89-ஆம் ஆண்டில், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தொமீசியனைத் தெய்வம் என்றும், தலைவன் என்றும் அழைத்து வந்தனர்; அவன் பெயரால் ஆணையிடவும் செய்தனர். ஆசியாவில் எழுந்த வேத கலாபனைக்கும் இது காரணமாக அமைந்தது. அவனது மரணத்துக்குப் பிறகு ஆட்சிப் பேரவையால் நாட்டின் பகைவன் என்று அறிவிக்கப்பட்டான்.

கி.பி. 112-இல் போந்து, பித்தினியா நாடுகளில் திராசன் அரசரின் பிரதிநிதியாக இருந்தவன் கிறிஸ்தவர்களை விசாரணை செய்யும்போது, பேரரசனின் உருவச் சிலைக்குத் தூபமிட வேண்டுமென்று ஆணையிட்டான். ஆனால், திராசன் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

பொதுவில் உரோமையர்கள், தேவர்களுக்கும் உயிர்வாழும் பேரரசர்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்திருந்தனர். திபேரியுவும், அகுஸ்துவும் இறந்தபின் தாங்கள் கடவுள்களாக அறிவிக்கப்படுவோம் என்று நம்பியிருந்தனர்.

ஆனால், உரோமைக்கு வெளியே உயிர்வாழும் அரசனைத் தெய்வமாக வழிபட எந்தத் தடையும் இருக்கவில்லை. ஏனெனில், அது நாட்டில் ஒற்றுமையை வளர்த்தது. வழிபட மறுத்தவர்கள் பிரமாணிக்கமற்றவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டனர். பேரரசருக்காக, தாங்கள் செபம் செய்வோம்; ஆனால், ஒருகாலும் பேரரசரிடம் செபம் செய்யமாட்டோம் என்று கிறிஸ்தவர்கள் கூறி வந்தனர்.

## பேரவை மலை (MOUNTAIN OF ASSEMBLY)

புராண விவரிப்பில் (எசா 14:12-15) வரும் "வடபுறத்து எல்லைப் பகுதியிலுள்ள" ஒரு மலை. இங்குக் கடவுள்கள் கூடுவதாகக் கருதப்பட்டது. அழிவை நோக்கிய "வைகறைப் புதல்வனாகிய விடிவெள்ளிக்கு" ஒப்பிடப்படும் பாபிலோனிய அரசன் இந்த மலையில் ஏறி, தன் அரியணையை அமைப்பதாக உரிமை கொண்டாடினான் (14:13). கடவுள்கள் மலைகளில் வாழ்வதாக உகாரித்து மற்றும் அக்காதிய இலக்கியங்களில் சித்தரிக்கப்படுகிறது. (காண். சங் 82; 89:5-7; எசே

28:11-19). சங் 48:2-இல் இந்தப் புராண மலையாகச் சீயோன் அடையாளம் காட்டப்படுகிறது.

**பேராசை (COVETOUSNESS, CUPIDITY, GREED)**

பேராசை என்ற சொல்லானது, எழுபது நூலிலும் புதிய ஏற்பாட்டிலும், மற்றவர்களைப் பற்றிய அக்கறையின்றி, அவர்களைப் பாதிக்கும் விதத்தில் மிகுதியும் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளுதல் என்று பொருள்படும். பேராசையானது பெருமளவிற்குப் பிறர் பொருள்மீது ஆசை, ஆசைகளின் நெறிபிறழ்வு ஆகியவற்றை ஒத்திருந்தாலும், சில குணவியல்புகளை வலியுறுத்துவதாகவும் தெரிகிறது. இஃது ஒரு தீவிரமான மற்றும் கிட்டதட்ட வெறியூட்டப் பட்ட பேரவாவாகும் (எபே 4:19). மேலும், சிறப்பாக அயலார்பால் அன்பிற்கும், எல்லாவற்றையும்விட ஏழைகளின்பால் அன்பிற்கும் எதிரானதாகும். முதலாவதாக இஃது இயலுலகப் பொருட்களாகிய சொத்து மற்றும் பணம் ஆகியவற்றின்மீது அக்கறை கொண்டுள்ளது.

கிரேக்க தத்துவ அறிஞர்களைப் போன்று, விவிலியமானது பேராசையால் விளையும் தீமைகளை விவரிக்கிறது. ஆனால், புறவினத்தார் அடையமுடியாத மிக உச்ச நிலையினின்று அது தீர்ப்பிடும் போது, அக்கருத்தின் சமய மையத்திற்கே அது செல்கிறது. பேராசையானது ஒருவரது அயலாருக்கு இன்னல் விளைவிக்கிறது என்ற உண்மைக்கு அப்பாற்பட்டு, உடன்படிக்கையின் இறைவனுக்கும் வெறுப்பூட்டுவதால், சிலை வழிபாட்டைவிட எவ்விதத்திலும் குறைவானதன்று.

பழைய ஏற்பாடு

1. வெளித்தோற்றமும் விளைவுகளும்:

பேராசை அயலாரின் உரிமைகளைத் தாக்குகிறது. இத்தாக்குதல்களை வரலாற்று ஆசிரியர்கள், இறைவாக்கினர்கள் மற்றும் ஞானிகள் கண்டிக்கின்றனர். பெரும்பாலும், நேர்மையற்றவராக உள்ள வியாபாரிகளை (சீரா 26:29-27:2) நடத்திச் செல்வது இதுதான். குறைந்த அளவையில் கொடுத்து, கொள்ளை லாபத்தில் எல்லா விதத்திலும் எப்படியாகிலும் பணம் தேட நடத்திச் செல்வது இதுவே (ஆமோ 8:5தொ). மேலும், மிரட்டவும் (5:12), சொத்தைச் சேர்க்கவும் (எசா 5:8; மீக் 2:2.9; காண். 1 அர 21), உரிய சம்பளத்தை அளிக்காமலும்கூட (எரே 22:13) ஏழைகளைச் சுரண்டவும் (நெகே 5:1-5; காண். 2 அர 4:1; ஆமோ 2:6), செல்வந்தனை நடத்திச் செல்வதும் இதுவே. நீதியின் போக்கை நெறிபிறழச் செய்வதற்கெனக் (எசா 1:23; 5:23; மீக் 7:3; 1 சாமு 8:3) கைக்கூலி கோருமாறு அரசனையும், நீதிபதியையும் இது தூண்டுகிறது (எசா 33:15; மீக் 3:11; பழ 28:16).

இவ்வாறு, அயலாரின்பால் சிறப்பாக, ஏழைகளின்பால் கொள்ளவேண்டிய அன்பிற்கு நேரெதிரானதாக இஃது அமைகிறது. சட்டமானது இவர்களையே இத்தகைய நிலையினின்று பாதுகாக்க வேண்டியுள்ளது (யாத் 20:17; 22:24-26; உப 24:10-21). "உன்வறிய சகோதரன் மாட்டு உன் உள்ளத்தைக் கடினப்படுத்தாதே; உன் கையை மூடிக் கொள்ளாதே" என ஆண்டவர் கூறுகின்ற வேளையில் (உப 15:7), பேராசை மிக்க மனிதன் தன் ஆன்மாவைச் சருகாக்கிக் கொண்டு (சீரா 14:8-9), இரக்கமற்றவனாக மாறுகிறான் (27:1). தங்களுடைய நலம் மற்றும் ஆதாயத்தின்மீதே ஆர்வம் கொண்டவர்களாய்த் "தங்களுடைய இரையைக் கிழிக்கின்ற ஓநாய்களைப் போன்று பேராசை மிக்க அரசர்கள் தங்களுடைய இலாபத்தை அதிகரிப்பதற்கும்" (அப 2:9; எரே 22:17), அதிகாரத்திற்கான தங்களது மோகத்தை உறுதிப்படுத்தவும் (எசே 22:27) வன்முறையையும் பயன்படுத்துவர்.

2. சமயப்பொருள்: ஆனால், ஓநாய்களால் கிழிக்கப்பட்ட ஆடானது உடன்படிக்கையின் இறைவனாகிய ஆண்டவருக்கு உரியது (எசே 34:6-16). இறுதியில் பேராசையால் வருத்தப்படப் போகிறவர் இறைவனே. "பேராசையுடையவர்

ஆண்டவரைப் பழித்துப் புறக்கணிக்கின்றனர்" (சங் 10:3). மேலும், பழைய ஏற்பாடானது பேராசையைச் சிலைவழிபாடாகும் என்று ஏற்றுக்கொள்கிறது. யாவே பாரம்பரியம் ஆதாமும் ஏவாளும் கடவுளைப்போல இருக்க முயற்சி செய்ததையும் (ஆதி 3:5), இறைவனில் தங்களுடைய நம்பிக்கையை வைக்கவும், படைப்புகளான தங்களுடைய சார்பு நிலையை ஏற்கவும் மறுத்ததையும் பேராசையென விவரிக்கிறது (3:6). இவ்வாறாக, பேராசையானது ஒவ்வொரு பாவத்தின் வேரிலும் உள்ளது என்பதை ஆதியாகமம் சுட்டிக்காட்டுகிறது (காண். யாக் 1:14-15). அவரது பணிக்கென இறைவனிடமிருந்து வருவதைத் தனக்கு மட்டுமே வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தினால், பாவி இறைவனுடைய இடத்தில் ஒரு படைக்கப்பட்ட பொருளை, முடிவாகத் தன்னையே அமர்த்துகிறான். இதன் காரணமாகவே, பேராசைக்கு எதிரான கட்டளை பற்றிய தனது விளக்கவுரையில் தார்கூம் (யாத் 20:17; உப 5:21), எல்லாவற்றிற்கும் மோசமான பாவிகளாகிய புறவினத்தாரைப் பிறர் பொருள் மீது ஆசைப்படுவோருடன் ஒப்பிடுகிறது (கலா 2:15). பவுல் மொத்த சட்டத்தையும் ஒரே கட்டளையில் சுருக்கும்போதும் (உரோ 7:7), பாலைவனத் தலைமுறையின் அனைத்துப் பாவங்களையும் (1 கொரி 10:6) பிறர் பொருள் மீதான பேராசையாகவும் (எண் 11:4.34), அவர்கள் கடந்து செல்வதற்கென இறைவன் அமைத்த ஆன்மீக அனுபவத்தை நிராகரிப்பதாகக் காணும்போதும் (உப 8:3; காண். மத் 4:4), அவர் ஆதியாகம நிகழ்ச்சியை மனதில் கொண்டிருக்கக் கூடும். பேராசையுடைய மனிதன் நிலையற்ற பொருட்களின் பின்னால் ஓடுபவனாகவும் (திருவுரை 6:2; பழ 23:4-5; 28:22), எப்போதுமே திருப்தியடையாதவனாகவும் உள்ளான் (பழ 27:20; திருவுரை 4:8). இறைவனை வெறுத்தொதுக்கிவிட்டு, தனது அயலானுக்குத் தீங்கு இழைத்தமையின் காரணமாக அவன் தண்டிக்கப்படுவான். "தீயமுறையில் பணம் சேர்க்கும் அனைவரின் முடிவும் இதுவே; அந்தப் பணம் தன்னை வைத்திருப்போரின் உயிரைக் குடித்துவிடும்" (பழ 1:19). ஆனால், "நேர்மையற்ற முறையில் கிடைக்கும் வருவாயை வெறுப்பவன் நீண்டகாலம் வாழ்வான்" (25:16).

புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டின் செய்தியை மூன்று முக்கிய வழிகளில் விவரிக்கிறது. பொருளாசைக்கு முற்றிலும் எதிரான அன்பு விருந்தின் முழுநிலையை வெளிப்படுத்துவதன் மூலமும், பொருளாசையில் மறைவாயுள்ள சிலைவழிபாட்டினை வெளியிடுவதன் மூலமும், பேராசையினுடையவன் மத்தின் மையத்திற்கே அது நேரடியாகச் செல்கிறது. வருங்கால வாழ்வின் மறை பொருட்களை வெளிப்படுத்துவதன் மூலமும், அதனால் உலகப்பொருட்களின் உண்மையான மதிப்பினைக் காட்டுவதன் மூலமாகவும், பொருளாசையுடைய மனிதனின் அணுகுமுறையானது எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை அது சுட்டிக்காட்டுகிறது.

1. வெளித்தோற்றமும் விளைவுகளும்: லூக் 12:15-இல் "பேராசை எதற்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறும்போதும், மாற் 7:22-இல் பாவங்களின் அட்டவணையில் அவற்றின் உள்ளார்ந்த தோற்றத்தைச் சுட்டிக்காட்டும் போதும் மட்டுமே பேராசை என்ற சொல்லானது நற்செய்திகளில் தோன்றுகிறது. லூக்காவிற்கு நெருங்கிய கோட்பாட்டினைச் சுருக்குகின்ற இந்தப் பாதி வசனமானது (லூக் 12:15), சொத்துரிமை பற்றிய பிரச்சனையில் நடுவராயிருப்பதற்குத் தலைவரின் மறுப்பிற்கும் (லூக் 12:13-14), நாளை தனக்குரியது என்ற எண்ணத்தில் பொருட்களைச் சேர்த்து வைக்க விழையும் செல்வனின் அறிவிலித்தன்மை பற்றிய உவமைக்கும் (12:16-21) இடையே ஒரு பாலத்தை உருவாக்குகிறது. எனவே லூக்காவின் கருத்துப்படி, பொருளாசையானது மற்ற மக்களைப் பாதிக்கும் விதத்திலும்கூட, தன் உடைமைகளைப் பெருக்கிக்

கொள்ள விருப்பமும், அதே சமயம் ஏற்கெனவே கொண்டுள்ள உடைமைகளைப் பேராசையால் பற்றிக்கொள்வதும் ஆகும் (காண். 2 கொரி 9:5).

பவுல் இச்சொல்லினைச் சிற்றின்ப முறை கேட்டோடு அடிக்கடி இணைத்துக் குறிப்பிடுகிறார் (1 கொரி 5:10-11; 6:9-10; உரோ 1:29; கொலோ 3:5; எபே 5:3.5; காண். 1 தெச 4:6). இங்குக் குறிப்பிடத்தக்க ஒப்புமையைக் காணலாம். பொருட்களால் வரும் ஆதாயமோ, சிற்றின்பமோ, எதுவாயினும் இதன் முக்கிய கருத்தானது. ஒருவரது அயலருக்குப் பணி செய்வதற்குப் பதிலாக அவரைப் பயன்படுத்துவதாகும். இரு நிலைகளிலும் இது குற்றத்திற்குரிய பொருளாசையைப் பற்றியதாகும். அஃது இறைவனுடைய வார்த்தையை நெருக்கி விடுகிறது (மாற் 4:19); பாவியைப் புறவினத்தார் (உரோ 1:24.29), உலகம் (தீத் 2:12; 1 யோவா 2:16-17; 2 பேதுரு 1:4), தீமை (கொலோ 3:5), ஊனுடல் (கலா 5:16; உரோ 13:14; எபே 2:3; 1 பேதுரு 2:11), பழைய மனிதன் (எபே 4:22) மற்றும் அழியக்கூடிய உடல் (உரோ 6:12) ஆகியவற்றின் பக்கம் நிறுத்துகிறது. பொருளாசைமிக்க மனிதன் தனது இச்சைகளுக்காக, தேவையானால் வன்முறையில் மூலமும் மற்றவர்களைப் பலியிடுகிறான். "பிறர் பொருள்மீது ஆசை வைக்கிறீர்கள்; அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்" (யாக் 4:2). நம்மீது கொண்ட அன்பினால் "கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதாத" கிறிஸ்துவைப் போலன்றி (பிலி 2:6), தனது ஆசையைத் தூண்டியெழுப்புகின்ற எதனையும் அவன் விடாமல் பிடித்துக்கொண்டு விழிப்புடன் காக்கிறான். "செல்வமிக்கவராய் இருந்தும், தன்னுடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையான" இயேசுவைப் போலன்றி (2 கொரி 8:9), அவன் தனது இலாபத்திற்காக ஏழைகளை இழப்புக்குள்ளாக்குகிறான் (யாக் 5:1-6; லூக் 20:47 இணை).

பேராசையானது எந்தக் கிறிஸ்தவனுக்கும் தகுதியற்றதாகும். ஆனால், தனது அழைப்பின்மூலம் "அனைவருக்கும் அடிமையாகத்" தன்னை ஆக்க வேண்டிய அப்போஸ்தலரைப் பொறுத்த வரையில் (மாற் 10:44; 1 கொரி 9:19), இஃது அவதூறானதாகும், கண்டிக்கத் தக்கதுமாகும். பவுல், தன்னைப் பொறுத்தவரையில் தனது மனதில் பொருளாசை பற்றிய எவ்விதச் சிந்தனையும் என்றுமே இருந்ததில்லை என்று அறிவிக்கிறார் (1 தெச 2:5). விசுவாசிகளுடைய உடைமைகளைக் கவர்வதற்கு அப்பாற்பட்டவராய் (அ.ப. 20:33), அவர்களுடைய செலவிலேயே வாழக்கூடிய உரிமையைப் பெற்றிருந்தும், அதனைத் தவிர்ப்பதற்காகத் தனது கரங்களாலேயே உழைத்தார் (20:34; 1 தெச 2:9; 1 கொரி 9:6-14; 2 கொரி 11:9-10; 12:16-18). இவ்வாறாக, தன்னலமற்ற நிலையினைச் சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகிறார் (1 கொரி 9:12; பிலி 4:17). இந்த நடத்தையானது தாழ்ந்த பதவியுடைய பணியாளர்களுக்கு (அ.ப. 20:34-35) எடுத்துக்காட்டாக அமையவேண்டும். ஆயர்களும் (1 திமொ 3:3; தீத் 1:7), திருத்தொண்டர்களும் (1 திமொ 3:9) பணத்தின் மீதும், வெட்கக்கேடான ஆதாயத்தின் மீதும் நாட்டம் கொள்ளக்கூடாது.

மற்றொருபுறம் போலிப் போதகர்கள் தங்களது பேராசையினால் அறிந்து கொள்ளப்படுவர் (தீத் 1:11; 2 திமொ 3:2). ஏனெனில், தாங்கள் கொண்டிருப்பதில் திருப்தியடையாதவர்களாய், பக்தியின் பெயரால் இலாபம் அடைய அவர்கள் முயல்கின்றனர் (1 திமொ 6:5-6). 2 பேதுரு 2:3.14-இல் பேராசை என்ற சொல் பொய்யான பேச்சுகளை விவரிக்கவும், சில சமயங்களில் நெறியற்ற நோக்குடனும் பயன்படுகிறது (2:2.10.18; 3:3; காண். யூதா 16).

எல்லாவற்றையும் உரிமையாக்கிக் கொள்ளும்போதும் ஒன்றுமற்ற மக்களாகக் கருதப்படுவது, எப்போதுமே, நற்செய்தியினுடைய

உண்மையான ஊழியர்களுடைய மாதிரியாகும் (2 கொரி 6:10).

**2. சமய உட்பொருள்:** பேராசையானது மிகவும் முக்கியமானதெனப் பவுல் கருதுகிறாரெனில் "பொருளாசையானது சிலை வழிபாடு" (1 கொரி 3:5) என்று பழைய ஏற்பாடு சுட்டிக்காட்டுவதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டார் என்பதே பொருளாகும். இதில் அவர் இயேசுவைப் பின்பற்றுகிறார். இயேசுவைப் பொருத்தவரை "பொருளாசை உடையோர்" (லூக் 16:14) என்பவர், இறைவனுக்கு மட்டுமே உரியதான உள்ளத்தை, படைக்கப்பட்ட பொருட்களின் மீது வைப்பவராவார் (மத் 6:21 இணை). ஒரே உண்மையான தலைவராகிய இறைவனைப் புறக்கணித்துவிட்டு இப்பொருட்களைத் தலைவர்களாகக் கொள்வதாகும் (6:24 இணை).

"பண ஆசைதான் எல்லாத் தீமைகளுக்கும் வேர்'' (1 திமொ 6:10) என்ற பழமொழியானது பின்னர் ஆழமான, அவலமான பொருளைப் பெறுகிறது. பொய்யான தெய்வத்தைத் தேர்ந் தெடுப்பதன் மூலம், ஒருவன் ஒரே உண்மையான இறைவனிடமிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு, அழிவுக்குரியோனாகிய (யோவா 17:12), பொருளாசை மிக்க, காட்டிக் கொடுத்தவனாகிய யூதாசைப் போன்று (12:6; மத் 26:15), தன்னை அழிவிற்கு உட்படுத்துகிறான் (1 திமொ 6:9). மற்றொரு புறம், ஞானிகள் அறியாததிலிருந்த எதிர்கால வாழ்வின் நோக்கில், அழிவுக்குரிய பொருட்கள் அவற்றின் தகுதிக்கேற்பப் பார்க்கப்படுகின்றன (லூக் 6:20.24). எனவே, பொருளாசை மிக்க மனிதனுடைய நடத்தையானது எவ்வளவு பொருளற்றது என்பதை ஞானிகளைவிட மேலான முறையில் புதிய ஏற்பாடானது காட்ட முடியும் (12:20; எபே 5:17; மாற் 8:36). செல்வம் தீட்டுப்படுத்தப்பட்டுள்ளது; ஆகவே "நேர்மையற்றதாகும்" (லூக் 16:9.11); அதாவது, இதற்குப் பின்னணியில் உள்ள அரமேயிக்குச் சொல்லின்படி, பொய்யானதாகவும், ஏமாற்றுவதாகவும் உள்ளது. அழியக்கூடிய பொருட்களைச் சார்ந்திருப்பதென்பது முட்டாள்தனமானதாகும் (மத் 6:19-20). ஏனெனில், செல்வமானது மனிதனை முடிவில்லாத வாழ்வை மறக்கச் செய்கிறது. ஆனால் அவ்வாழ்வின் வாயிலான மரணம் சூழ்நிலையைத் தலைகீழாக மாற்ற வல்லது (லூக் 16:19-26; 6:20-26).

## பேரிடர் (CALAMITY)

**1. துன்ப துயரங்கள் அனைவருக்கும் பொதுவானவை;** மனிதக் குடும்பம் அவைகளை அனுபவித்துக் கொண்டேயிருக்கிறது. மக்கள் எதிர்பாராத நிலையில் திடீரென வந்தும், நெடுங்காலம் வருத்தியும், 'யார் என்ன செய்ய முடியும், அனுபவித்துத்தான் தீர வேண்டும்' என்ற மனநிலைக்குக் கொண்டு வந்தும் அவர்களைத் துன்புறுத்துகிறது. துன்பங்கள், சண்டைகள், பஞ்சங்கள், வெள்ளம், புயல், தீவிபத்து, நோய் நோக்காடு, சாவு முதலான இடர்கள் விவிலிய நூல் முழுவதிலும் பரவி நிற்பதை அறிகிறோம். இவைகளுக்கு அளிக்கப்படும் சாதாரண விளக்கங்கள் மனித மனத்தைத் திருப்திப்படுத்து வதாயில்லை. புலனறிவால் இவைகளை விளக்க முடியாத நிலையில் வெளிப்பாட்டு நூல்கள் புலனறிவுக்கு அப்பாற்பட்ட மறைபொருள் நிலையினைக் காட்டி, மனிதன் ஓரளவு தன்னையே அறிந்துகொள்ளத் துணை செய்கின்றன.

**2. இறைவன் திட்டத்தில் பேரிடர்:** வெளித்தோற்றத்திலும் சரி, ஆராய்ந்து பார்க்கும்பொழுதும் சரி, பேரிடர் சமநிலையற்ற நிலையாகும். இறுதி ஆய்வில் மனிதனின் பாவத்தினால் அது விளைகிறது என்று உணர்ந்து, தண்டனையோடு இடரை ஒப்பிட்டுப் பார்ப்பினும், படைப்பு அனைத்திற்கும் இடர் ஏற்படுவதால் தண்டனையோடு அதை ஒன்றுபடுத்திவிட முடியாது. சோதனைக் காலத்தே சாத்தானுக்கு அடிமைப்பட்டிருப்பதால், அது சாத்தானின்

முகத்தை வெளிப்படுத்துகிறது (யோபு 1:12; மத் 24:22). பேரிடர் அனைவருக்கும் வரும் துன்பம்; அதன்மூலம், மனித வரலாற்றில் பாவத்தின் விளைவு எத்தன் மையது என்று தெரிகிறது (திருவெளி 6; 8:6-11:19).

யுத்தம், கடும்பஞ்சம், கொடும் வியாதி, கெடுமரணம் முதலிய துயர்களை வெறுமனே அந்தந்தக் காலத்திற்கு உரியவைகளாகத் திருவெளிப்பாடு காட்டவில்லை. திருமுறை நூல்கள் எழுதப்பட்ட வரை முறைகளை ஆராயும்பொழுது, முந்தைய நூல்களில் (யாத் 7-10) காணும் எகிப்தில் ஏற்பட்ட இடர்களிலிருந்து, இறைவாக்கு மொழிகளிலும் (எசே 14:21; 38; எசா 24; செப் 1:24), சங்கீதங்களிலும் (சங் 78; 105), பின்னைய நூல்களிலும் (ஞான 10-19; தானி 9:24-27; 12:1) இக்கருத்து ஒரு சங்கிலியாகத் தொடர்ந்து வருகிறது. இவ்வாறாய் ஆராயும்பொழுது பேரிடரின் பொருள் விளங்குகிறது. இது பாஸ்காவாகிய பெரும் நீதித் தீர்ப்பின் ஒரு பகுதியாகும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இறுதிக்கால விடுதலையின் முன் உருவாக முதல் பாஸ்காவும் முதல் விடுதலைப் பயணமும் அமைந்துள்ளன.

இவ்வாறாய், பாஸ்காவின் ஒளியில் காணும்பொழுது பேரிடரின் முகமூடி அகன்று போகிறது. எக்கணம், பாவத்தின் சாவைத் தரும் சக்தி வெற்றி பெறுவதாகத் தோன்றுகிறதோ, அக்கணமே அதன் தோல்வியும், கிறிஸ்துவின் வெற்றியும் தொடங்குகிறது. சிலுவையினால் செயல்படும் இறைவனுடைய அன்பின் பெயரால், பேரிடர் தன் பொருளை மாற்றிக்கொள்கிறது (உரோ 8:31-39; திருவெளி 7:3; 10:7).

**3. மனிதனை எதிர்நோக்கி நிற்கும் பேரிடர்:** இதுவே பேரிடர் என்றால், மனிதர் நேர்மையான உள்ளத்தோடு அதை நோக்க வேண்டும். இறைவனை நிந்தித்துப் பேசவோ (திருவெளி 16:9), மீட்பு வேண்டி சிலைகளை அண்டிச் செல்லவோ கூடாது (2 அர 1:2-17; எசா 44:17; 47:13). இந்த இடர்களின் கால அடையாளத்தையும் (லூக் 12:54தொ), பாவத்திற்குத் தான் அடிமைப்பட்டுள்ள தன்மையையும், விரைவில் சந்திக்கவிருக்கும் மீட்பரின் வருகை பற்றிய அறிவிப்பையும் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும் (மத் 24:33). கடவுளின் தீர்ப்பு நாளின் முன்னறிவிப்பாய் உள்ள பேரிடரை மனந்திரும்ப வேண்டுமெனக் கொடுக்கப்படும் இறுதி எச்சரிக்கையாகவும் (திருவெளி 9:20), விழிப்பாயிருக்கும்படி விடுக்கப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (மத் 24:44). இதுவே நம் இறுதி விடுதலையின் தொடக்கமாய் அமைகிறது. "இவை நிகழத் தொடங்கும் போது, நீங்கள் தலை நிமிர்ந்து நில்லுங்கள்; ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது" (லூக் 21:28) என்று ஆண்டவர் தாமே கூறியுள்ளார்.

அதே இறுதிக்கால இயல் போக்கில் இவ்வுலகைக் காணும்பொழுது, இறைவார்த்தையின் வளர்ச்சியோடு (திருவெளி 11:1-13), எதிர்க்கிறிஸ்துவைப் பற்றிய மறை பொருளும் வளர்வது போலப் பேரிடரும் இவ்வளர்ச்சிகளைத் தொடர்கிறது. இது நாம் எதிர்பாராத ஒன்றன்று. ஆனால், அனைத்திற்கும் மேலாய் "நான் அன்பு செய்யப்படுகிறேன் (லூக் 21:8-19), கிறிஸ்துவில் வல்லமை பெற்றிருக்கிறேன்" (2 கொரி 12:9) என்ற மனநிலையோடு, உளவுறுதியோடு இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாய், நம்மிடையே எதிர் நோக்கி எதிர்பார்த்திருக்கும் மனநிலையைப் பேரிடர் ஏற்படுத்துகிறது. உண்மையில் அது, புத்துலகத்தின் பிறப்பிற்கும், சகல படைப்புகளையும் முழுமீட்புக்கு உட்படுத்தும் இறை ஆவியின் செயலுக்கும் சான்று பகர்கிறது (மத் 24:6; உரோ 8:19-23).

## பேரின்பப் பாடல், உன்னத சங்கீதம் (SONG OF SONGS)

**1. முன்னுரை:** காதல் கதை நூலின்றி எந்த நூல் நிலையமும் நிறைவு பெறாது. அதேமுறையில் விவிலியம் என்ற நூல்

நிலையத்தில் ஒரு காதல் நூலைக் கண்டால் அது பலருக்கு வியப்பளிக்கலாம். விவிலயத்தில் பல காதல் கதைகள் உண்டு. அவற்றில் நீண்டது "உன்னத சங்கீத" மாகும். இந்நூலை ஞான இலக்கியங்களோடு தொகுப்பது அவ்வளவு பொருத்தமுடையதன்று. இருப்பினும் மனிதனின் நல்வாழ்வில் காதல் ஒரு சிறப்பு அங்கம் வகிக்கிறதென்ற அளவில், பாரம்பரியம் இந்நூலை ஒரு ஞான இலக்கியமாகக் கருதியதுபோலும்.

2. **நூலின் தலைப்பு:** எபிரேயவாசகம் "சாலமோனுடைய தொகுப்பைச் சேர்ந்த (அல்லது சாலமோனால் பாடப்பட்ட) பாடல்களில் சிறந்த பாடல்" என்று பொருள்படும் தலைப்பைக் கொண்டுள்ளது. தலை சிறந்த அரசரை "அரசர்களுக்கு அரசர்" என்று அழைப்பதுபோல், இந்நூல் "பாடல்களுக்குள் பாடல்" என்றழைக்கப்பட்டது. இத்தலைப்பு இந்நூலின் சிறப்பையும் உன்னதத் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. தமிழில் இந்நூலை "உன்னத சங்கீதம்" என்று அழைத்து வந்தோம். இனி, வரவிருக்கும் புதிய மொழிபெயர்ப்பில் "பேரின்பப் பாடல்" என்றழைக்கப்படும். ஏனெனில், இந்நூல் காதல் பேரின்பத்தைப் பாடுகிறது; அன்பு, காதல் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு நெருக்கமில்லாது ஒன்று சேர்க்கப்பட்ட பல பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும்.

3. **ஆசிரியர்:** ஆசிரியரது பெயர் தெரியாதாயினும் எபிரேயப் பாரம்பரியம் சாலமோன் இந்நூலை இயற்றியதாகச் சுட்டுவதாகத் தெரிகிறது. இதற்கு, ஆதரவாக, சாலமோனின் பெயர் நூலில் பன்முறை குறிக்கப் பெறுவது (1:5; 3:7.9.11; 8:11 தொ) ஒரு காரணமாய் இருக்கலாம். அர 4:32-இல், சாலமோன் 1005 பாடல்களைப் பாடியதாகக் குறிப்பு உள்ளது. அந்த 1005 பாடல்களில் ஒன்றாகவும் அவற்றில் தலை சிறந்ததாகவும், மிக அழகியதாகவும் இந்நூல் கருதப்படுவது எளிதாகும். நூலுக்குப் பொறுப்பானவர்கள் பிற்கால இஸ்ராயேல் ஞானிகளே. இவர்கள், இந்நூலுக்குப் புகழும் மதிப்பும் அளிக்கும் நோக்கோடு, ஞானத்திற்குப் புகழ் பெற்று விளங்கிய தங்கள் இலக்கியத் தலைவரான சாலமோன்தான் இந்நூலை எழுதினார் என்ற கருத்தை ஏற்படுத்துவது மிக எளிது. மேலும், சாலமோன் காதல் மன்னன் என்று புகழ் பெற்றவர். அவர்தான் காதல் பற்றிய இந்நூலை எழுதினார் என்று கருதுவது எளிது. உண்மையில் இந்நூலுக்குச் சாலமோன் ஆசிரியர் என்பது வெறும் இலக்கிய யுக்தியே தவிர, அதில் உண்மையில்லை.

4. **காலமும் இடமும்:** மொழிக் குறிப்புகளிலிருந்து இவற்றை ஒரளவு நிர்ணயிக்கலாம். மூலநூலில் காணப்படும் அரமேயிக்குப் பண்புகள், இந்நூல் நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியது என்று சுட்டுகின்றன. நூலில் காணப்படும் பாரசீகச் சொற்கள், பாரசீகப் பேரரசின் காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம் என்று கருதத் தூண்டுகின்றன. அதுபோல் நூலில் காணப்படும் கிரேக்கச் சொற்கள், இந்நூல் தோன்றிய காலத்தை இன்னும் பிற்காலத்திற்குத் தள்ளிப்போடும் போக்கிற்கு ஆதரவு அளிப்பதாய்த் தெரிகிறது. ஆனால், இவ்வாறு கருதுவதற்குப் போதிய காரணங்கள் இருப்பதாய்த் தெரியவில்லை. ஆய்வாளர்கள் பலரின் கருத்துப்படி இந்நூல் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் முடிவிலோ, 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ தோன்றியிருக்கலாம். அப்போது யூதசமூகம் வாழ்ந்த எருசலேமிலோ, அதைச் சுற்றியிருந்த பகுதியிலோ இந்நூல் தோன்றியிருக்க வேண்டும்.

நாம் கொண்டிருக்கும் வடிவில், இந்நூல் பிற்காலத்தைச் சேர்ந்ததாயினும் இதில் பழங்காலப் பகுதிகள் பல காணப்படுகின்றன. இவை, நூல் இறுதி வடிவம் எடுக்கும்முன்பே, வழக்கில் இருந்திருக்க வேண்டும். இவற்றில் கானானிய அல்லது மேற்காசியப் பண்புகள் பல காணப்படுகின்றன. சிலரது கருத்துப்படி, இந்நூல் இரண்டு தொகுப்புகளாக முதலில் தோன்றியிருக்க வேண்டும், ஒன்று ஆயர்கள் மற்றும் உழவர்களது

வாழ்வைப் பிரதிபலிக்கிறது. இது வடவரசில் தோன்றியிருக்க வேண்டும். மற்றது அரசவை மற்றும் நகரச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கிறது. இது தென்னரசில் தோன்றியிருக்க வேண்டும். இந்நூலில் வடவரவசின் பகுதியைச் சேர்ந்த இடங்களும் (திராட்சை, சாரோன், கர்மேல், லெபனோன், அமானா, செனீர், எர்மோன் 3:9;4:3:6;4...), யூதாவைச் சேர்ந்த இடங்களும் (எருசலேம் 2:7;3:5;... ஏன்கேதி) காணப்படுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் ஞானிகளில் ஒருவர் இரண்டையும் ஒன்றாகத் தொகுத்திருக்க வேண்டும். இவர்தான் 8:6-7 என்ற முடிவுரையையும், 8:8-14 என்ற பிற்சேர்க்கையையும் இயற்றியிருக்க வேண்டும்.

ஞானிகள் இஸ்ராயேலின் அரசியல் அதிகாரத்துக்குப் பணி செய்தனர். இவர்கள் சமயப் பணிகளையும் மேற்பார்த்தனர்; குருக்கள், லேவியர் ஆகியோருடைய கல்விப் பயிற்சியிலும் உதவினர். இறைவனது படைப்புத் திட்டத்தில் காதல், திருமணம் ஆகியவற்றின் இடம் என்ன என்று ஆய்ந்து அறிய வேண்டியிருந்தது. காதல் பற்றி பிற மதத்தினர் கொண்டிருந்த கருத்துக்களையும், பிற மதக் கதைகளோடு அது கொண்ட தொடர்பையும், பாலின வழிபாட்டையும், சடங்கு விபசாரத்தையும், இஸ்ராயேல் சமயம் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆனால், அது தனது தனித்தன்மைக்கேற்ப காதல் சக்தியைப் பற்றி எடுத்துக் கூறவேண்டும். இறுதி ஆசிரியர், ஏற்கெனவே இருந்த காதல் பாடல்களையும், தமது காலப் பாடல்களையும் தொகுத்து ஒரு காதல் பாடல் நூலைத் தருகிறார்; அதில் படைப்பவரான இறைவன் காதலின் ஆற்றலையும் பண்புகளையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தாராளமாகவும் கொடையாகவும் அளிப்பதாகக் கூறுகிறார்; காதலுக்குப் புதிய பொருள் அளிக்கிறார்.

இவ்வாறு இந்நூல் நாடுகடத்தப்பட்டு திரும்பியபின், எஸ்ரா–நெகேமியா சீர்திருத்தத்தை அடுத்துச் சமய, அரசியல் அணிமைமிக்க காலமாகிய கி.மு. 4–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், எருசலேமை ஒட்டித் தோன்றியிருக்க வேண்டும் எனலாம். அக்காலத்தைச் சேர்ந்த ஞானிகளில் ஒருவர், இந்நூலுக்கு நாம் கொண்டிருக்கும் இறுதி வடிவம் அளித்துப் பதிப்பித்திருக்கலாம்.

**5. திருமுறைப் பட்டியலில் உன்னத சங்கீதம்:** இந்நூல் யூதத் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. இதற்கு இந்நூலில் காணப்படும் துணிகரமான காதல் அல்லது காமப் பண்புகளும், இதன் சில பகுதிகளை மதுக்கடைகளிலும் விருந்துகளிலும் பாடி மகிழ்ந்து தவறாகப் பயன்படுத்தியதும் காரணமாகலாம். இப்படித் தவறாக இந்நூலைப் பயன்படுத்தியவர்களை அக்கிபா என்ற ராபி சபித்து உயிர்ப்பிலிருந்து விலக்கிவைத்ததாக ஒரு வரலாறு உள்ளது. இவர் "நூல்கள் (என்ற தொகுப்பைச் சேர்ந்தது) எல்லாம் புனிதமானவை; ஆனால், அவற்றில் உன்னத சங்கீதம் மிகப் புனிதமானது" என்று கருதினார். பொதுவாக, யூதர்கள் இந்நூலைப் புனித மிக்கதாகக் கருதியதாகத் தெரிகிறது. கி.பி. 90–ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதப் பொதுக்கூட்டத்தில், இந்நூல் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்பு இருந்ததாகவும், இந்நூல் சாலமோனால் இயற்றப்பட்டது என்ற நம்பிக்கையும், யூதர்களிடையே மதிப்பும் சலுகையும் பெற்ற ராபிகளின் வாதமும் ஆதரவும், இது திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படு வதற்குப் பெரிதும் உதவின என்றும் தால்மூது பாரம்பரியம் கூறுகிறது.

கிறிஸ்தவப் பாரம்பரியம் இந்நூலைத் தனது திருமுறைப்பட்டியலில் தொடக்கத்திலிருந்து ஏற்றுக்கொண்டது. மாப்சுயெட்சியாவின் தியோடோர் என்பவர் (கி.பி. 428) இந்நூலுக்கு ஆன்மீகப் பொருளைப் புறக்கணித்து, சமயச் சார்பற்ற விளக்கம் அளித்ததற்காகவும், இந்நூல் இறை ஏவுதல் பெற்றது என்பதை

மறுத்ததற்காகவும் இரண்டாம் கால்சீதோன் பொதுச்சங்கம், அவரைக் கண்டனம் செய்தது. இதுபற்றி விளக்க முறைகள் பற்றிய பகுதியில் பார்ப்போம்.

எபிரேய விவிலியத்தின் மூன்றாவது பகுதியாகிய "நூல்கள்" தொகுப்பில் இந்நூல் சேர்க்கப்படுகிறது. விழாக்காலங்களில் வாசிக்கப்பட்ட உன்னத சங்கீதம், ரூத்து, திருவுரையாளர், புலம்பல், எஸ்தர் ஆகிய நூல்கள் அடங்கிய "ஐந்து சுருள்களில்" (**Megilloth**) இந்நூல் முதலிடம் வகிக்கிறது. பாஸ்கு-புளியாத அப்ப விழாவின் எட்டாம் நாளில் இந்நூல் ஆலயத்தில் வாசிக்கப்பட்டது. கிரேக்க மொழி பெயர்ப்பாகிய எழுபதுநூல், பாடல் இலக்கிய வடிவுடைய ஞான நூல்களின் தொகுப்பில் இந்நூலைச் சேர்க்கிறது. இதற்கு, இந்நூல் சாலமோனால் இயற்றப்பட்டது என்ற பாரம்பரியத்தையும், ஞானிகளால் தொகுக்கப்பட்டது என்பதையும் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. எழுபதுநூல் வரிசையில் திருவுரையாளர் நூலை அடுத்து இந்நூல் வருகிறது. எழுபது நூலைப் பின் பற்றி வுல்கத்தா வாசகமும் அதைப் பின்பற்றும் மொழி பெயர்ப்புகளும், ஞான இலக்கியங்களின் தொகுப்பில் இந்நூலைச் சேர்த்துத் திருவுரையாளர் நூலை அடுத்து வைக்கின்றன.

6. **இலக்கிய அமைப்பு:** இந்நூலின் இலக்கிய அமைப்பைப் பற்றியும், அதன் விளைவான நூலின் திட்டம் பற்றியும் ஆய்வாளர்களிடையே கருத்து ஒற்றுமையில்லை. இவை பற்றிய பல்வேறு குழுவினர்களுடைய கருத்துகளை இங்குத் தொகுத்துத் தருகிறோம்.

அ. இந்நூல் ஒன்றிணைக்கப்பட்ட அகப்பாடல்கள் அடங்கிய நூலாகும். இது கவனமாய் ஒழுங்கு செய்யப்பட்ட நூலாகும். காதலின் ஏக்கத்தோடு தொடங்கி (1:2-8), காதலூட்டம், மன உறுதி செய்தல் வழியாகத் திருமண வாழ்வுக்குச் செல்கிறது. இக்கருத்துக்கு ஆதரவாக, நூல், நாம்கொண்டிருக்கும் வடிவில் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. சங்கீதங்களைப் போல் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட்டுத் தனித்தனிப் பாடல்களாக அமையவில்லை.

ஆனால், இக்கருத்து அவ்வளவு நிறைவு அளிப்பதாக இல்லை. ஏனெனில் விவிலியத்தின் மற்ற நூல்களிலும்- சான்றாக இறைவாக்கு நூல்களில்- ஒரே தொடராக வரும் வாசகங்கள் பல தனிப்பட்ட பகுதிகளின் தொகுப்பாக அமைந்துள்ளதைக் காண்கிறோம். இந்நூலைப் பொறுத்தமட்டும், ஆட்கள், சூழ்நிலை, மனநிலை, கருத்துகள் ஆகியவற்றில் காணப்படும் மாற்றங்கள், இந்நூல் ஓர் ஒருங்கிணைப்புடைய நூலாக இருக்க முடியாது என்று காட்டுகின்றன.

இந்நூல் ஒருங்கிணைக்கப்பட்ட நூலாகும் என்று கருதும் வேறுசிலர் இந்நூலின் நடையிலும், நோக்கத்திலும் ஒற்றுமை இருப்பதாகவும், இந்நூலை ஒரே ஆசிரியர் இயற்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஆனால், இந்நூலின் பகுதிகள் பல்வேறு காலங்களில் தோன்றியவை. ஆகையால், இதை ஒரே ஆசிரியர் இயற்றியிருக்க முடியாது. இதன் நடையிலும் நோக்கத்திலும் காணப்படும் ஒற்றுமை இறுதிவடிவப் பதிப்பாசிரியர் அளித்ததாக இருக்கலாம்.

ஆ. இந்நூல் பொதுப்பாணித் திருமணப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும். இவை திருமண வாரத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும். இக்கருத்துக்கு ஆதரவாக, சீரியா நாட்டில் காணப்படும் திருமணப்பழக்க வழக்கங்களைச் சுட்டிக் காட்டுவர். ஆனால், இக்கருத்து நூலுக்கு அடிப்படையாக அமையவில்லை. இது காதல் மற்றும் திருமணத்தோடு தொடர்புடையது. ஆனாலும், திருமணச்சடங்குகளோடு தொடர்புடைய பாடல்களாக இந்நூல் அமையவில்லை.

இ. இந்நூல் ஓர் இசை நாடகமாகும். இந்நாடகக் கருத்தை ஓரிசன் (கி.பி. 254) கூறியுள்ளார். இதைப் பலர் ஏற்றனர். சிலர் இந்நாடகத்தில் இரண்டு முக்கிய நடிகர்களைக் காண்கின்றனர். (சூலாமியப்

பெண்ணும், அவரது ஆயர்குலக் காதலனும் அல்லது அப்பெண்ணும், சாலமோனும் ஆகியவர்களால்) இந்நாடகம் காதலில் தொடங்கி, காதலர் கூடலும் பிரிதலும், தேடி அடைதலும் வழியாகக் காதல் அதன் நிறைவை நோக்கி இயங்குகிறது. இதில் உள்ளப் போராட்டத்தைத் தவிர, புறச் செயல் போராட்டம் இல்லை.

வேறுசிலர், இந்நூல், ஆயர்குலக் காதலன், அவனது காதலி சூலாமியப்பெண், சாலமோன் ஆகிய மூன்று முக்கிய நடிகர்களைக் கொண்ட நாடகம் என்பர். இவர்களோடு பாடகர் குழுவையும் சேர்த்துக் கொள்வர். இந்நாடகத்தில் பெண், ஆயர் குலத்தவனோடு காதல் கொண்டுள்ளாள். சாலமோன் தோன்றி, தமது மகிமையையும் பெருமையையும் எடுத்துக் கூறி, பெண்ணைத் தமது அந்தப்புரத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறான். இந்நாடகத்தை மெருகுபடுத்த, சாலமோன் ஆயர்வேடம் பூண்டு, தனது அன்பை எடுத்துக் கூறுகிறான் என்பர் சிலர். சாலமோன் எவ்வளவு முயற்சி செய்தாலும் பெண் தம் ஆயர்குலக் காதலனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கிறாள். இந்தக் கிராமப்புறக் காதலர்களின் அன்பைக் கண்டுவியந்து, சாலமோன் தமது முயற்சியைக் கைவிட்டு, இருவரும் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கிறான்.

இந்நூல் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும், பாலஸ்தீனத்தைச் சுற்றியிருந்த கிரேக்கப் பகுதிகளில் அராபியப் பாவனைக் கூத்து பரவியிருந்தது என்றும், அது யூதர்களையும் பாதித்தது என்றும் ஏற்றுக் கொண்டு, இந்நூலை ஒரு பாவனைக் கூத்தாகக் காட்டவும் வேறுசிலர் முயன்றுள்ளனர். இக்கூத்து, ஆட்கள் பலருக்குப் பதிலாக, ஒருவரே தனது தொனிமாற்றத்தாலும், சைகைகளாலும் பலருடைய பாகங்களை நடித்துக் காட்டுவதாகும். வேறுசிலர் இந்நூலைப் பலர் நடிக்கும் நாடகமாகக் காண்கின்றனர்.

இந்நூல் ஒரு நாடகமாகும் என்ற கருத்து பெரிய வாதத்துக்குரியது. ஏனெனில், பழங்காலத்துச் செமித்திய இலக்கியங்களில் நாடக வடிவ மாதிரி இல்லை. மேலும், இத்தகைய இலக்கியம் யூதப்போக்கோடு ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. நாடக அமைப்புக்கு அவசியமான, நடிகர்களிடையேயான போராட்டம் காணப்படவில்லை. நூல் முழுவதும், ஆண்-பெண் காதல் அதே உயர்மட்டத்தில் இருப்பதாகத் தெரிகிறது. பொருளுள்ள செயலைக் காட்டக்கூடிய குறிப்புகள் நூலில் இல்லை. இதை நாடகமாக்க, நூலை மாற்றி, திருத்தி, எழுத வேண்டியிருக்கும்.

இந்நூலில் உரையாடல்களும் தனியுரைகளும் கலந்து காணப்படுகின்றன. இதற்கு எபிரேய வாசகம் ஆதரவு அளிக்கிறது. ஆகையால், சிலநவீன மொழி பெயர்ப்புகள் ஓரத்தில் பேசுபவர்களின் பெயரைக் குறிக்கின்றன. இந்நூலில் உரையாடல் உள்ளது என்ற அளவில், இஃது ஒரு நாடகமாகக் கருதப்படலாம். ஆனால், உரையாடலும் காட்சிமாற்றங்களும் நாடக இயக்கம் அளிப்பதற்குப் போதியவை அல்ல.

ஈ. இந்நூல் அன்பு, காதல், என்ற பொதுத் தலைப்பைக் கொண்ட பல தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இக்கருத்தை ஏற்கெனவே மாப்சுயெட்சியாவின் தியோடோர் (கி.பி. 428) கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இப்போது இக்கருத்துக்கு ஆய்வாளர்களிடையே பெரும் ஆதரவு உண்டு சிலர் சீரியா, பாலஸ்தீனப் பகுதிகளில் காணப்பட்ட காதல் பாடல்களையும், திருமணப் பழக்க வழக்கங்களையும் இந்நூலோடு ஒப்பிட்டு, இந்நூலின் சில பகுதிகள் திருமணக் கொண்டாட்டத்திற்காக இயற்றப்பட்டு, அப்போது பாடப்பட்டிருக்கலாம் என்று கருதுவர். மற்றப் பகுதிகள் வெறுமனே ஆண்-பெண் காதல் உறவைப் பாடுகின்றன; இவையும் திருமணக் காலத்தில் பாடப்பட்டிருக்கலாம். ஆனால், எல்லாப் பாடல்களிலும் திருமண அன்புப் பொருளைக் காண வேண்டியதில்லை. இந்நூல் காதலை வலிமை மிக்க ஓர் ஆற்றலாகப் பாவித்து, அதன் உள்ளார்ந்த பொருளைத் துணிவுடன்

எடுத்துக்கூறி, அதைப் போற்றுகிறது. காதல் திருமணத்தை நோக்கி இயங்குகிறது. நூல் காதலர்களின் வேறுபட்ட மனநிலைகளை ஓவியப்படுத்துகிறது. காதலர்கள் கூடலும், பிரிதலும், தேடலும், அடைதலும் மாறி மாறி அமைகின்றன. இப்பாடல்களை நம் தமிழ் இலக்கியத்திலுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளைச் சார்ந்த பாடல்களோடு ஒப்பிடலாம்.

**7. நூலின் சிறப்புத்தன்மை:** நிகழ்ச்சிகள் எந்த முடிவையும் நோக்கி இயங்குவதாகத் தெரியவில்லை. காதலர்கள் ஒருவர் முன் ஒருவர் இருப்பதையும், பிரிவதையும், அன்பையும், அழகையும், கவர்ச்சியையும் உளமார அனுபவிக்கின்றனர். அவர்களது உணர்ச்சிப் பெருக்கு உருவங்களில் எடுத்துக்கூறப்படுகிறது. உருவகங்கள் நாட்டுப்புறத் தன்மையையே கொண்டுள்ளன. நூல் புலமை சார்ந்த விதத்தில் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. திராட்சைத் தோட்டம், திராட்சைக் கொடிகள், வெளிமான், கலைமான், புறாக்கள், நரிகள், வெள்ளைப் போளம், சாம்பிராணி, மாதுளம்பழம், போதைப் பொருட்கள் ஆகிய உருவகப் பொருட்கள் வயல்வெளிச் சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றன. இச்சிறிய நூல் தனக்கே சொந்தமான பல சொற்களைக் கொண்டுள்ளது. 50-க்கு மேற்பட்ட சொற்கள் பழைய ஏற்பாட்டில் வேறு எங்குமே காணப்படவில்லை.

**8. நூலின் திட்டம்:** நூலின் ஆசிரியர் விரும்பி இந்த நூலைத் திட்டம் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்நூலைப் பாகங்களாகப் பிரிப்பதில் ஆய்வாளர்களிடையே வேறுபாடு உண்டு. இந்நூலில் வரும் பல்லவிகள் (2:7; 3:5; 8:4), நூலை மூன்று பாகமாகப் பிரிக்கச் சிலரைத் தூண்டியுள்ளது.

வேறு சிலர், முன்னுரை (1:1-3), முடிவுரை (8:5-7), பிற்சேர்க்கை (8:8-14) நீங்கலாக, மீதிப்பகுதியை 1:4-2:7; 2:8-3:5; 3:6-5:1; 5:2-6:2; 6:3-8:4 - என ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் காதலின் வளர்ச்சியைக் காண முயன்றுள்ளனர். இந்தப் பாடல்கள், போராட்டம், அமைதி என்ற அமைப்பை எடுத்துக் காட்டுகின்றன என்று கூறுவர். போராட்டம் ஒருவர்க்கொருவர் காட்டும் அன்பிலும், ஒருவர் ஒருவரைத் தேடுவதிலும் அடங்கியிருக்கிறது. ஒருவர் மற்றவரை அடைவதில் அமைதி அடங்கியிருக்கிறது. இந்த அமைதி இறுதியில் நிறைவு பெறுகிறது. இந்த அடிப்படையில் நாம் இந்நூலைத் திட்டம் செய்யலாம்.

I. முன்னுரை (1:1-3).

II. காதலி காதலனுக்காக ஏங்குதலும், ஒருவர் மற்றவரைப் புகழ்தலும், கூடுதலும் (1:4-2:7).

1:4-6 : காதலியின் தற்புகழ்ச்சியும், ஏக்கமும்.
1:7 : காதலி காதலனைத் தேடுதல்.
1:8-10 : காதலன் காதலியைப் புகழ்தல்.
1:11-2:3: : காதலர்களிடையே உரையாடல்.
2:4-7 : கூடல்.

III. காதலர்களின் கூடலும், பிரிவும் (2:8-3:5).

2:8-17 : வசந்தகாலத்தில் காதலர் சந்திப்பு.
3:1-5 : காதலனைத் தேடுதலும் அடைதலும்.

IV. அரச ஆரவாரப் பகட்டும், காதலன் காதலிபால் மயங்குதலும் (3:6-5:1).

3:6-11 : மணமகனின் அரசநிலை.
4:1-7 : காதலின் அழகுக் கவர்ச்சி.
4:8 : காதலனின் அழைப்பு.
4:9-15 : காதலியை மேலும் புகழ்தல்.
4:16-5:1 : கூடல்.

V. ஒன்றிப்பும், இழப்பும், காதலனைப் பற்றிய விவரிப்பும் (5:2-6:2).

5:2-9 : காதலி காதலனை இழந்து தேடுதல்.
5:10-16 : காதலி காதலின் கவர்ச்சியை

விவரித்தல்.

5:17-6:2 : காதலி காதலனைத் தேடி அடைதல்.

**VI.** காதலின் அழகும், ஒன்றிப்புக்காக இருவரும் ஏங்குதலும் (6:3-8:5).

6:3-12 : காதலன் காதலியின் அழகைப் போற்றுதல்.

7:1-9 : காதலியின் அழகு.

7:9-13 : காதலின் ஏக்கம்.

8:1-3 : காதலின் ஒன்றிப்பு.

8:4-5 : வீடு திரும்புதல்.

**VII.** முடிவுரை: காதல்களின் ஒன்றிப்பு (8:5-7).

**VIII.** பிற்சேர்க்கைகள்: சிந்தனைகள் (8:7-14).

8:7-10 : கற்புடைமையும், அதன் அரணும்.

8:11-12 : மணமகளும், சீதனமும்.

8:13-14 : ஒன்றிய வாழ்வு.

9. **விளக்கங்கள்:** இந்நூலின் இலக்கிய அமைப்பைக் கண்டு பிடிப்பது கடினம் என்றால், அதன் பொருளை விளக்குவது இன்னும் அதிகக் கடினமாகும். இந்நூல் பலமுறைகளில் விளக்கப்பட்டுள்ளது. எந்த விளக்கமும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ, நிறைவு தருவதாகவோ அமையவில்லை. இங்குக் காலப்போக்கில் தோன்றிய சில விளக்கங்களைத் தொகுத்துத் தருகிறோம். இதற்கு முன் சில கருத்துகளை முன் வைக்கிறோம்.

உவமை ஓர் உயிர்ச் சித்திரமான கற்பனை நிகழ்ச்சியுரையாகும். மற்றொரு உண்மையை எடுத்துக்கூறப் பயன்படுவது. அதன் விவரங்களைப் பொருட்படுத்தாது நிகழ்ச்சியுரையை முழுமையாக எடுத்துக் கொண்டு பொருளைக் காணவேண்டும். இதற்கு மாறாக, உருவகம் ஒரே பொருளைப் பற்றிய தொடர் உவமையாகும். உருவகத்தின் ஒவ்வொரு விவரத்திற்கும் பொருள் உண்டு. உவமையில் இருபகுதிகள் உண்டு. ஒன்று எடுத்துக்காட்டு; மற்றது எடுத்துக் காட்டப்படுவது. இரண்டும் தனித்தனியாக, அருகருகாகவே அமைக்கப்படும். உருவகத்திலோ இந்த இரண்டும் பின்னிப் பிணைந்திருக்கும்; ஒரே அமைப்பாக அமைந்திருக்கும். சில சமயம் உருவகமும் உவமையும் கலந்து, ஒரு கலப்பு அமைப்பைக் கொண்டிருக்கும். உருவகப் பொருளிலிருந்து வேறுபடுவது அடையாளப் பொருளாகும். உருவகப் பொருள் ஆசிரியர் புரிந்து தனது கருத்தில் கொண்டதாகும். அடையாளப்பொருள் உருவகப் பொருளைவிட அதிகமானது. இறைவன் கூற விரும்பியது. அது வெளிப்பாட்டினால் தரப்பட்டால் ஒழிய, ஆசிரியரும் அறியார். அடையாளப் பொருள் எப்போதும் வாசகப் பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அ) **உவமையாக விளக்குதல்:** ராபிகள் காலமுதல் இந்நாள்வரை யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள், இறை ஏவுதல் பெற்ற இந்நூல் வெறும் காதல் பாடலாக இருக்க முடியாது என்ற முன்தீர்மானத்தால், சமயம் சார்ந்த முறையிலேயே விளக்கம் அளித்து வந்துள்ளன; இந்நூலை உவமையாகவோ, உருவகமாகவோ விளக்க முயன்றுள்ளன.

இந்நூல் ஓர் உவமையாகும். இக்கருத்தின் படி, மனிதத் திருமண வடிவில், இந்நூல் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கை உறவை எடுத்துக் கூறுகிறது. இந்த விளக்க முறைக்கு இறைவாக்கினர் நூல்கள் அடிப்படை அளிப்பதாகத் தெரிகிறது. ஓசே 1-3; எசா 1:21-23; 62:5; எரே 3:1-10; எசே 16:23.

இம்முறைதான் ஆசிரியரது நோக்கம் என்று சுட்டிக்காட்டும் எவ்விதக் குறிப்பும் நூலில் இல்லை. இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள உறவைத் திருமண உறவு உவமையால் விளக்கும்போது, அதை இறைவாக் கினர்களே எடுத்துக் கூறுகின்றனர். அத்தகைய விளக்கம் இந்நூலில் காணப்படவேயில்லை.

மேலும், இந்நூல் ஓர் உவமையென்றால், அதிலே ஒற்றுமை இருக்க வேண்டும். மனித அன்பு

அல்லது காதல் பற்றி தற்செயலாகத் தொகுக்கப்பட்ட இந்நூலில் இத்தகைய ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. நூலில் ஒற்றுமை இருப்பதாகக் கூறும் ஆய்வாளர்கள் இந்நூலை ஒரு நாடகமாகப் பாவித்து அதற்கு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். இந்த நாடக அமைப்பைப்பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். இம்முயற்சிக்கு இப்போது ஆய்வாளர்களிடையே அதிக ஆதரவு இல்லை. இதற்குக் காரணம், இஸ்ராயேலின் பழமை மிக்க இலக்கியங்களில் நாடக வடிவம் இல்லை என்பது மட்டுமன்று, இந்நூலை நாடகமாக்க, அதை மாற்றி அமைக்க வேண்டும். என்பதே, ஆகவே, இந்நூலை ஓர் உவமையாக விளக்குவது அவ்வளவு பொருத்தமுடையது அன்று. ஆனால், இம்முறை திருமணச் சூழ்நிலையையும் தலைப்பையும் சிறப்பித்துக் காட்டுகிறது.

ஆ) யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலை ஓர் உருவகமாக விளக்கியுள்ளன. இதற்கும் மேற்கூறப்பட்ட இறைவாக்கினர் வாசகங்கள் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. இம்முறைப்படி, இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கு மிடையேயுள்ள உறவை, ஒன்றிப்பை, இந்நூல் உடனடியாகக் குறிக்கிறது. இம்முறை நூலில் காணப்படும் ஒவ்வொரு விவரத்திற்கும் பொருள் அளிக்கிறது. இவை இறைவன் - இஸ்ராயேல் தொடர்பின் பல்வேறு கூறுகளைக் குறிக்கின்றன. இதற்குத் "தொகுப்பு முறை" அதாவது, திட்டமிட்ட முறையில், முந்தைய விவிலிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சொற்களையும் பதில்களையும் பயன்படுத்தி நூல் அமைக்கும் முறை பயன்பட்டுள்ளது. முந்தைய நூல்களைச் சுட்டிக்காட்டுவது ஆசிரியரின் நோக்கத்தை எடுத்துக்காட்டுகிறது என்பர் இவ்விளக்க முறையை ஆதரிப்பவர்கள்.

இத்தகைய உருவக விளக்கங்கள் கி.மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த யூத இலக்கியங்களில் காணப்படுகின்றன. இந்த முறையைச் சிறிது மாற்றி ஆதித்திருச்சபை பின்பற்றியது. யாவேக்குப் பதிலாகக் கிறிஸ்துவுக்கும், இஸ்ராயேலுக்குப் பதிலாகத் திருச்சபை அல்லது பக்தியுள்ள ஆன்மாவுக்கும் இந்நூலைச் சாற்றிக் கூறியது உருவக விளக்கமுறை. ஆனால், ஆண் - பெண் காதல் உறவை இப்பாடல்கள் முதன்மையாகக் குறிக்கின்றன என்பது ஒருபோதும் மறுக்கப்படவில்லை. மனிதக் காதல் உறவு, கிறிஸ்து - திருச்சபை அல்லது ஆன்ம உறவுக்கு மாதிரியாகும் என்பது எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உருவக விளக்கம் இக்காலம் வரை நீடித்துள்ளது. இந்த முறையைக் கத்தோலிக்க விளக்கவுரையாளர்கள் காலம் காலமாய்ப் பின்பற்றியுள்ளனர். அண்மைக் காலத்திலும் பெரும் அறிஞர்கள் இம்முறையைப் பின்பற்றத் தயங்கவில்லை.

இம்முறை பாரம்பரியக் கருத்து என்பதாலும், ஆய்வின் அடிப்படையாலும் நமது கவனத்தைக் கவர வேண்டும். ஆயினும், இந்த இரண்டு அடிப்படையிலும் ஊறுபாடு உண்டு. ஒரு புறம்- இந்த உருவக முறைக்குக் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதப் பாரம்பரியம் ஆதரவு அளித்தாலும், கி.பி. 90-இல் யாம்னியாவில் நடந்த யூதப் பொதுச்சங்கம், இந்நூலின் உருவகப் பொருளுக்காக அன்று, அது பிரபல்யம் பெற்றிருந்தது என்பதற்காகவே, அதை யூதத் திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதாகத் தெரிகிறது. மறுபுறம்- இம்முறை வாசகத்திற்கு மிகைப்படவும், மனம் போன படியும், தன்னிச்சையாகவும் பொருள் கூறுகிறது. சான்றாக, இடங்கள் பற்றிய பொருள் கட்டாயப்படுத்திக் கூறப்படுவதாகத் தெரிகிறது. இம்முறை விளக்கவுரை வரையறைகளைக் கடந்து செல்வதாயும், கற்பனை மிக்கதாயும் இருக்கிறது.

மேலும் இம்முறைக்கு எதிராக அமைவது, இந்நூல் ஓர் உருவகம் என்று சுட்டிக்காட்ட இந்நூலில் எதுவும் இல்லை என்பதாகும். உவமை விளக்கத்திற்குக் கூறியதுபோல், ஓசேயா, எசாயா,எரேமியா, எசேக்கியேல் நூல்களில்,

திருமண உருவகம் பயன்படுத்தப்படும்போது அதன் உருவகத் தன்மை தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. இதில் இறைவாக்கினர்கள் ஒருகட்டுப்பாட்டைக் கடைப்பிடித்துள்ளனர். உருவகத்தையும் வரையறை செய்துள்ளனர். உன்னத சங்கீதங்களில் காணப்படும் மொழி இதற்குப் புறம்பானதாகும். உவமை, உருவக விளக்கங்கள் இந்நூலுக்குப் புறத்திலிருந்து புகுத்தப்படுகின்றன. மேலும், இந்நூல் ஆன்மீக விளக்கம் பெற்றால் ஒழிய, தரக்குறைவானது, தகுதியற்றது என்று கருதப்பட்டால், இந்த உவமை, உருவக அடையாளமே தரக்குறைவானது, தகுதியற்றது இல்லையா? என்று கேட்க வேண்டியிருக்கும். இந்நூலின் பொருளடக்கம் தரக்குறைவாக இருந்தால், அதை இறையன்பை எடுத்துக்காட்டும் அடையாளமாகப் பயன்படுத்துவது தரக்குறைவானது இல்லையா? மேலும், திருமண உருவகம் இறைவாக்குத் தன்மையுடையது. இந்நூலோ, நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் அகப்பாடல்களின் தொகுப்பாகும்; ஞான இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும்.

தொகுப்பு முறை விளக்கம் பலருக்கு நிறைவு அளிப்பதாக அமையவில்லை. இறைவாக்கினர்கள் திருமண அடையாளத்தைப் பயன்படுத்தும்போது, சில பகுதிகளைத் தவிர (ஓசே 2:18-22; எசா 62:5), மற்றவற்றில் பொதுவாக, இஸ்ராயேலை ஒரு பிரமாணிக்கம் கெட்ட மனைவியாகச் சித்தரிக்கின்றனர். அப்படிப்பட்ட கருத்தே இந்நூலில் இல்லை.

ஆகவே, நவீன விளக்கவுரையாளருள் பலர் இந்த உருவக விளக்கத்தை நிராகரிப்பர். நீண்ட பாரம்பரியத்தையும் மிகச் சிறந்த விளக்கவுரையாளர்களையும் கொண்டிருந்தாலும், உருவக விளக்க முறையை நிறுவுவது கடினம்.

**இ) வழிபாட்டுமுறை விளக்கம்:** இந்நூலின் தோற்றத்தில், புராண வழிபாட்டுப் பண்புகள் உண்டா என்று ஆய்வாளர்கள் சிலர் ஆராய்ந்து, அதன் அடிப்படையில் விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். மனாசே அரசனாய் இருந்த காலத்தில் தம்மூசு, இஸ்தார் போன்ற புராணக்கதைகளோடு தொடர்புடைய சடங்குகள் எருசலேம் ஆலயத்தில் நடந்திருப்பதாகத் தெரிகிறது. இது பிற்காலத்தில் பாஸ்கு விழாவைப் பாதித்திருக்கலாம். இதன் சில கூறுகள் பாஸ்கு விழாவில் புகுந்திருக்கலாம். இதுவே இந்நூல் பாஸ்கு விழாக்காலத்தில் வாசிக்கப்படும் வழக்கிற்குக் காரணமாய் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். மேலும், பழங்கால ஆசியாவில் சடங்குத் திருமணங்கள் வழக்கில் இருந்துள்ளன. இவற்றின் வடிவமும், பொருளும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கானானியர்களுக்கும் இஸ்ராயேலர்களுக்குமிடையே இலக்கிய வழிபாட்டுக் கருத்துப் பரிமாற்றம் நடந்திருக்கிறது என்ற அடிப்படையில், இச்சடங்குத் திருமணக் கருத்து உன்னத சங்கீத நூலின் தோற்றத்தைப் பாதித்திருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

இக்கருத்துக்களுக்கு ஆதரவாகக் கூறப்படும் காரணங்கள் அவ்வளவு பொருந்தியதாகத் தெரியவில்லை. நூலின் இத்தகைய தூர்லபமான தோற்றம் பற்றி எதுவும் கூறாமல் விட்டிருக்க மாட்டார்கள் இஸ்ராயேலர்கள். ஆண்-பெண் காதல் உறவு, சடங்குத் திருமணம் பற்றிய கருத்துக்கள் மேற்காசியாவில் எங்கும் காணப்படும் புராணக்கருத்துக்களாகும். இவை மறைமுகமாக இந்நூலின் தோற்றத்தைப் பாதித்திருக்கலாம். இதற்கு மேலும் இந்தப் பாதிப்பை மிகைப்படுத்தக் கூடாது. மேலும், பாலின வழிபாட்டுக் கருத்துக்களை இஸ்ராயேல் பாரம்பரியம் எப்போதும் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்விடத்தில் பிறவின இலக்கியப் பாதிப்பைப் பற்றிச் சிறிது கூறுவது நன்று. பழங்கால எகிப்திய இலக்கியங்களில் காதல் பாடல்கள் உள்ளன. இவை இந்நூலின் தோற்றத்தைப்

பாதித்திருக்கலாம் என்று சிலர் கருதுவர். எகிப்திய, இஸ்ராயேல் இலக்கியப் பாரம்பரியங்களில் அன்பு அல்லது காதல் என்னும் தலைப்பை அணுகும் முறையில் ஒற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. உன்னத சங்கீதத்தில், காதலன் இயற்கையைச் சுட்டிக்காட்டி, வசந்தகாலம் வந்துவிட்டது ஆகவே, தன்னிடம் வருமாறு காதலியை அழைக்கும் பகுதி வருகிறது (2:10-14). இது போன்ற இலக்கிய அமைப்பு எகிப்திய காதல் பாடல்களிலும் காணப்படுகிறது. உண்மையான காதல் எந்தத் தடையையும் பொருட்படுத்துவதில்லை என்பது சாதாரண மனித அனுபவம். "பெருங்கடலும் காதலை அணைக்க முடியாது, வெள்ளப் பெருக்கும் அதை மூழ்கடிக்க இயலாது" (8:7) என்று இந்நூல் கூறுகிறது. இதே கருத்தைத் காதலன்-காதலியை, நதியில் வாழும் முதலைகூடப் பிரிக்க முடியாது என்று எகிப்தியப் பாடல் கூறுகிறது. இரண்டு பாரம்பரியங்களிலும் காதலன், காதலியை "என் தங்காய்" என்றழைக்கும் மரபு காணப்படுகிறது (4:9. 10. 12:5:1). காதலன் அருகில் இல்லாமையால் காதலி வருந்துதல் போன்ற காதல் நோய் பற்றிய விவரிப்புகள் இரு பாரம்பரியங்களிலும் காணப்படுகின்றன (2:5; 3:1தொ; 5:6-8). இதேபோல், இந்நூலின் சில பகுதிகளுக்கும் சீரியா நாட்டுத் திருமணங்களில் மணமக்களைப் போற்றிப் பாடும் பாடல்களுக்கு மிடையேயுள்ள இணையமைப்புத் தன்மை சுட்டிக் காட்டப்படும்.

இவையெல்லாம் பண்பாடுகள் வேறுபட்டாலும், அவற்றில் எல்லாம் காதல்மொழி ஒத்த தன்மையுடையது, அதிகம் வேறுபடுவதில்லை என்று காட்டுகின்றன. இவை பிறவின இலக்கியங்களை இந்நூல் நேரடியாகச் சார்ந்துள்ளது என்று காட்டவில்லை. ஆனால், இவை உன்னத சங்கீத நூலைப் புரிந்துகொள்ள உதவலாம்.

**ஈ) நேரடியான பொருள்விளக்கம்:** ஆண்-பெண் காதல் உறவையே இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இந்த உறவைப் போற்றிக் கொண்டாடும் பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும் இது. இந்த உறவு மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய கொடைகளில் ஒன்றாகும். ஆகவே இப்பொருள், ஒருநூல் விவிலியத்தில் இடம் பெறத் தகுதியற்றதாகிறது என்று கருதினால், அது விவிலியத்தின் உண்மைப் பொருளைக் காணத் தவறியதாகும்.

விவிலியம் இறைவார்த்தை என்பது உறுதி. ஆனால், யாருக்காக இந்த வார்த்தை அளிக்கப்படுகிறது? இறைவன் தம் சொந்த இன்பத்திற்காக விவிலியத்தை ஏற்படுத்தவில்லை. அவர் படைத்த மனிதனுக்காகவே இந்நூல் தொகுப்பை ஏற்படுத்தினார். இஃது அவர் அவர்களுக்கு அளித்த கொடையாகும். அவர்தான் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அவர்தான் திருமணத்தில் உண்மைப்பொருளை அடையும்-ஒருவர்க்கொருவர் கொள்ளும் கவர்ச்சியை அவர்களுடைய தன்மையின் ஆழத்தில் பதித்தார். அவர் அளித்த மற்றக் கொடைகள் போல் இதுவும் தவறாகப் பயன்படுத்தப்படலாம். இளைஞர்களை ஒருவர்க்கொருவரிடம் வலிமையாக ஈர்க்கும், ஒருவர் மற்றவர்க்காகத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தூண்டும், பிற்காலத்தில் தவிர்க்க முடியாத கவலைகளையும் துன்பங்களையும் தாங்க உதவும் அன்பு -காதல் இறைவனது திட்டத்தில் ஒரு நல்ல கொடையாகும். இறைவன் நல்லது என்று கண்ட அவருடைய படைப்பின் ஒரு பகுதியாகும் (ஆதி 1:31). மனிதர்களுக்கு இறைவன் அளித்த வார்த்தையாகிய விவிலியத்தில் இந்த அன்பு - காதல் விவரிக்கப்பட மேலான தகுதி பெற்றதே. ஆகவே, சமயத் தொடர்பற்ற பாடல்தொகுப்பு எப்படி விவிலியப் பட்டியலில் புகுந்தது என்று கேட்பதற்குப் பதிலாக, பாலினக் கவர்ச்சி, காதல் போன்றவை பற்றி விவிலியம் என்ன கூறுகிறது என்று கேட்பது மேல். இக்கேள்விக்குரிய பதிலின் பெரும் பகுதியை இந்நூலில் காணலாம்.

மேலும், இந்நூல் முறையற்ற காதலைப் பாடவில்லை. திருமணத்தை நோக்கி அமையும் காதலைப் பாடுகிறது. இக்காதல் எந்தச் சீரிய ஒழுக்க முறையிலும் நல்லது மட்டுமன்று; புனிதமானதுமாகும். உடல் அர்ப்பணிப்பை உணர்த்தும் திருமண ஒப்புதல் திருச்சபையில் திருமண அருட்சாதனத்தோடு ஒன்றாக்கப்படுகிறது. ஒழுக்கக் குறைவற்ற ஒன்று, விவிலியத்தில் புகழ்ச்சிக்குரியதாக இருக்கக்கூடாது என்பதற்கோ, காதலில் பங்கு பெறுவோர்க்கு அஃது அளிக்கும் மகிழ்ச்சியைப் பற்றிய போற்றுரையைப் புனிதநூல் கொண்டிருக்கக்கூடாது என்பதற்கோ, காரணமேயில்லை. இக்காதலும் மகிழ்ச்சியும் ஒழுக்கமுறையில் கெட்டது எனக் கருதினால் ஒழிய, அவை பற்றிய புகழ்ச்சியுரை ஒழுக்கமுறையில் கெட்டதாக இருக்கமுடியாது. இந்நூலில் வரும் கவிதைகள் பாலினக் காதலின் நன்மைத் தன்மையையும் மகிழ்ச்சியையும் எடுத்துக் கூறுகின்றன. இது கிறிஸ்தவ ஒழுக்கக் குறிக்கோளுக்கு எவ்விதத்திலும் மாறானதன்று. காதலை இவ்வாறு போற்றுதல் இறை ஏவுதலோடு முழுவதும் ஒத்ததே. ஏனெனில், அக்காதலைப் படைத்தவர் இறைவனே (ஆதி 2:7). ஆகவே, உருவக அல்லது உவமை விளக்கம் அளிக்காமல், பழ 31:10-31-இல் வரும் "வலிமைமிக்க பெண் பற்றிய புகழ்ச்சி"யைப் போல், இந்நூலும் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இவ்விதம் சமயச் சார்பற்ற முறையில் இந்நூலை விளக்குவது, 2-ஆம் கால்சிதோன் பொதுச் சங்கத்தில் (கி.பி. 533) கண்டனம் செய்யப்பட்டது என்று சுட்டிக்காட்டப்படும். மாப்சுயெட்சியாவின் தியோடோர் என்பவர் (428) இந்நூல் இறை ஏவுதல் பெற்றது என்பதையும், அதற்கு அளிக்கப்பட்ட ஆன்மீகப் பொருளையும் ஏற்க மறுத்தார் என்று கருதப்பட்டது. "பக்தியுள்ளோரின் செவிகளுக்கு வெறுப்பைத் தருவதாய் உள்ளது" என்று அவரது கருத்து கண்டனம் செய்யப்பட்டது. ஆனால், இவரது நூல் கிடைக்கவில்லை. அதில் இவர் என்ன கூறியிருந்தார் என்பது பற்றியும் பொதுச்சங்கம் தனது கண்டனத்தில் சொன்னது என்ன என்பது பற்றியும் ஏட்டுச் சான்றுகள் இல்லை. ஆகவே, இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர். உவமை, உருவக விளக்கங்களைத் தவிர வேறு எந்த விளக்கமும் சமயச் சார்பற்றது என்று கூறுவது சரியாகாது. ஏனெனில், நேர்மையான திருமண அன்பைப் போற்றுவதாக இந்நூலைப் புரிந்து கொள்வது, சமயச் சார்பற்றது அன்று. ஏனெனில், அஃது ஒழுக்க முறையில் நல்லதாகும்.

ஆனால், இந்நூலுக்கு இயல்பாக அளிக்கப்படும் ஆண்-பெண் காதலை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகப் பொருளை விளக்க யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் முயன்றுள்ளன. அன்பை, காதலை ஆழ்ந்த முறையில் புரிந்துகொள்ளும் முயற்சியில், இந்நூலின் நிறைவான அல்லது அடையாளப் பொருளை எடுத்துக்கூற பலரும் காலந்தோறும் முயன்றுள்ளனர். ஏனெனில், மனித அன்பு இறையன்பின் பிரதிபலிப்பாகும்; அதில் பங்கு கொள்வதாகும்; அதை நோக்கி இயங்கும் அமைப்புள்ளது. குடும்பம் இறைமக்களைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, இவ்விளக்கவுரையாளர்கள் இந்நூல் இறைவனுக்கும் அவரது மக்களுக்கு மிடையேயுள்ள அன்பை விளக்குகிறது என்று எடுத்துக்காட்ட முயன்றுள்ளனர். இவ்விளக்கத்திற்குரிய அடிப்படை புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் அடிப்படையை ஒரு திருமண விருந்தாகவும் (மத் 22:1-14), கிறிஸ்துவை ஒரு மணமகனாகவும், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவைத் திருமண உறவாகவும் (மத் 9:15; யோவா 3:29; 2 கொரி 11:2; எபே 5:23-32; திருவெளி 21:9) விவரிக்கிறது. பெர்நார்து, சிலுவை அருளப்பர் போன்ற ஆழ்ந்த இறை அனுபவம் பெற்ற புனிதர்கள் இந்த அடையாள விளக்கு முறையைப்

பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். இஃதோடு, விளக்க முறைகள் பற்றிய ஆய்வைக் கைவிடுவது நல்லது.

**10. நூலின் செய்தி:** விவிலியத்தில் இந்நூல் மனித அன்பை, காதலை உயர்த்திப் பாடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் தனிப்பாடல்களின் தொகுப்பாகவோ, ஒரே நீண்டபாடல் தொடராகவோ கருதப்பட்டாலும், இஃது ஓர் அகப்பாடல் என்பது உறுதி. இந்த அளவில் இந்நூல் எந்தச் சமயக் கோட்பாட்டையும் எடுத்துக் கூறவில்லை; எதையும் குறிப்பாகப் போதிக்கவில்லை. இது மனித மன, இதய நிலைகளை எடுத்துக் கூறுகிறது. திருமணத்தை எதிர்நோக்கி, இளைய பருவத்தினர் இருவர் ஒருவர்க்கொருவர் கொள்ளும் அன்பை, காதலைப் பாடுகிறது. இதன் மொழி காதல் மொழியாகும். இஃது ஓரளவு துணிகரமானதாகத் தோன்றினாலும், பழைய ஏற்பாட்டில் மனித அன்பையும் இறையன்பையும் விவரிக்க அதே சொற்கள் பயன்படுகின்றன என்பதை மனதில் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது, கிறிஸ்தவ ஆசிரியர்கள் கிரேக்க மொழியில் எழுதியபோது, சாதாரண மனித அன்பைக் குறிக்கும் சொற்களைத் தங்கள் சமயக்கருத்துக்களை எடுத்துக்கூறப் பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில், அச்சொற்கள் அக்காலத்துச் சமூகத்தில் கொண்டிருந்த தொடர்பு, அவர்களது குறிக்கோளுக்கு அவற்றைத் தகுதியுள்ளதாகச் செய்யவில்லை என்பதே காரணமாகும். இக்காலத்திலும் காதலையும் காமத்தையும் ஒன்றாகக் கருதும் போக்கைக் காணலாம்.

"காதல் சாவைப்போல் வலிமை மிக்கது! காதல் வெறி பாதாளம்போல் பொறாதது! காதலுக்காக ஒருவன் தன் வீட்டுச் செல்வங்களை எல்லாம் வாரியிறைக்கலாம்; ஆயினும், அவன் ஏளனம் செய்யப்படுவது உறுதி" (8:6-7) என்ற முடிவுரைக் கூற்று, இந்நூலின் ஆசிரியர் தன் நூலை அதன் இயல்பான நேரடிப் பொருளிலேயே புரிந்துகொண்டார் என்று காட்டுகிறது. பழமொழி நூலில் மனித ஞானம் விவரிக்கப்படுவது போன்றே, இந்நூல் மனித அன்பை விவரிக்கிறது. இந்த அளவில்தான் இந்நூல் யூதத் திருமுறைப்பட்டியலில் இடம்பெற்றது. அதற்குப்பின் யாவேக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள அன்பை விவரிப்பதாக விளக்கம் பெற்றது.

இந்நூலில் இறைவனது பெயரே இல்லாமை பலருக்கு வியப்பை அளிக்கலாம். அதற்கு மாறாக, எந்தக் தேவர்கள் தேவதைகள் பற்றிய குறிப்பும் இல்லாமைதான் நமக்கு வியப்பு அளிக்கவேண்டும். ஏனெனில், கானானியர்களின் பாலினச் சடங்குகளும், பாலினத் தேவதைகளும் இஸ்ராயேலர்களைக் கவர்ந்தன. காலம் காலமாய் அவர்களுக்குச் சோதனையாக அமைந்தன. அப்படியிருந்தும் இத்தேவதைகளைப் பற்றிய குறிப்பு இக்காதல் நூலில் இல்லாமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இதற்குரிய காரணத்தை ஆதி 2-ஆம் அதிகாரத்தில் காண முயல வேண்டும். முதல் பெண்ணிடம் முதல் மனிதனை ஈர்த்த வியப்புக்கும் (ஆதி 2:23), இந்நூலில் இளைஞர்கள் ஒருவர்க்கொருவர் கொள்ளும் வியப்புக்கும் தன்மையால் வேறுபாடு இல்லை. "இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாக இருப்பர்" (ஆதி 2:24) என்ற ஆதியாகம ஆசிரியரின் கூற்றுக்கும், உ.ச. 8:6-7-இல் வரும் கூற்றுக்கும் இடையே வேறுபாடு இல்லை எனலாம். இரு வாசகங்களும் ஒரே மாதிரி மனித அனுபவத்தின்முன் ஒரேவித மனித மனநிலையை எடுத்துக்காட்டுகின்றன. திருமண அன்பு, தொடக்கம் முதல் இறைவன் படைத்தவற்றுள் ஒன்றாகும். இறைவனது வியப்புக்குரிய படைப்புகளில் ஒன்றாகும். மனிதர்களிடையே நன்றியுணர்வை எழுப்பக்கூடியதாகும்.

இந்நூல், மூலத்தில் காதல்பாடல்கள் அல்லது திருமண விருந்துப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும் என்ற கருத்து தர்க்கத்துக்குரியதாக

இருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட பாடல்களால் தூண்டப்பெற்று வண்ணம் பெறுகிறது என்பது உறுதி. இந்நூலும் அதன் சூழ்நிலையும் வசந்தகால மகிழ்ச்சி, தோழர்கள், காதல் வயப்பட்ட இருவர், ஒருவர்க்கொருவர் காதலில் மூழ்கிக் கிடக்கும் தம்பதியர் ஆகியவற்றை விவரிக்கின்றன. நூல் முழுவதும் இயற்கை மட்டத்திலேயே அமைந்துள்ளது. இதில் கண்டிக்கப்பட வேண்டியது எதுவுமில்லை. சாதாரணமாக, காதல் உடல் அழகாலும், மனிதப்பண்புகளாலும் தூண்டப்படுகிறது. ஆனால், மனித உடலும், ஆன்மாவும் இறைவன் படைத்தவையே. காதலில் இவற்றின் பாகத்தைக் குறைத்துக் கூறினாலும், இவற்றை ஒதுக்க முடியாது. அப்படி ஒதுக்குவது உண்மைக்குப் புறம்பானதாகும். திருமணத்தின் பாலினத்தன்மையை மறுப்பதாகும். இத்தகைய மனப்போக்கு விவிலியத்தன்மை அற்றதாகும்.

திருமணத்தில் ஈடுபட இருப்போரின் தனிச்சிறப்புக்களை இந்நூல் கவனத்தில் கொள்வதால், அது சமன் செய்யப்பட்ட நோக்கை மட்டும் தரவில்லை, திருமணக் கருத்தையும் வலிமைப்படுத்துகிறது. இந்நூல் திருமணத்தில் ஈடுபடுவோரின் தனிச் சிறப்புக்களை வெளிக்கொணர்வது (2:2 தொ; 5:10;6:8 தொ), ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உண்மையான சமநிலையை உண்டாக்குகிறது. பெண்ணின் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம், இந்நூலில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். திருமணத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தும், "மணமுறிவு" செய்யலாகாது என்பதும் இந்நூலில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

மேலும், ஒரு விவிலிய நூல் இளம் தம்பதியரிடையேயுள்ள காதலைப் பெருமைப்படுத்துவதால், அது திருமணத்தின் சமன்பாட்டைத் திருத்தி அமைப்பதுடன், வெளிப்பாட்டு வளர்ச்சியில் அதன் இடத்தையும் தெளிவாக்குகிறது. தன்மையால் சமூகக் குழுத்தன்மையுடைய சீனாய் உடன்படிக்கையை எரேமியா முன்னறிவித்த புதிய உடன்படிக்கையாக (எரே 31:31-34) இந்நூல் மாற்றி அமைக்கிறது. இந்தப் புதிய உடன்படிக்கையில் தனிநபரின் இடமும், மேன்மையும் வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படுகின்றன. ஏனெனில், அன்பு திருமணத்தின் உள்ளார்ந்த கூறாக ஏற்றுக் கொள்ளப்படும்போது ஒரு குடும்பத்தை நிறுவுவதால் தனிநபர் குழுவில் மூழ்கிப் போவதிலிருந்து விடுதலை பெறுகிறான். ஒவ்வொரு ஆண், பெண்ணின் சொந்த மேன்மையும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒருவன், தனிநபர் என்பதற்காகவே மதிப்புப் பெறுகிறான்.

**11. இக்காலத்திற்கு:** அன்பு, காதல் கோரும் பொறுப்புடைமையை இந்நூல் இக்காலத்திற்கும் உரிய பாடமாகக் கற்பிக்கிறது. இஃது அன்பின் புனிதத்தை வலியுறுத்துகிறது; "காதலைக் கலைத்து எழுப்பாதீர்; தானே விரும்பும்வரை அதைத் தட்டி எழுப்பாதீர்" (2:7; 3:5; 8:4) என்பதை அழுத்திக் கூறுகிறது. காதலைக் கவலையற்ற விளையாட்டாகக் கருதுபவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் இருந்துள்ளனர். இவர்கள் அதைத் தன்னிச்சையாக, போகிற போக்கில், எவ்விதப் பொறுப்புமின்றி அனுபவிக்கும் உடல் மட்டும் சார்ந்த இன்பமாகக் கருதுபவர்கள். அதனால், மனித உணர்வுகள் விரைவில் தூண்டப்பட்டு அடிமையாகிறார்கள். இந்நூலில் வரும் எச்சரிக்கையைக் (2:7) கேட்க மறுக்கிறவர்கள் அதனால், பிறருக்குத் தலைவலியையும் துன்பத்தையும் அளிக்கிறார்கள். இவர்கள் காதலுக்கும் காமத்திற்குமிடையே வேறுபாடு காண்பதில்லை. இஃது இறைவன் திட்டமிட்டதன்று. இறைவனுடைய பிள்ளைகளுக்கெல்லாம் அன்பு சூழ்ந்த இன்பத்தையும், நிலையான மகிழ்ச்சியையும் அளிக்க வேண்டும். அது, பிரமாணிக்கம், நம்பிக்கை, மற்றும் ஆழ்ந்த மரியாதையும் அடங்கிய சூழ்நிலையில்தான் நிகழ முடியும். ஒழுக்கக் கோட்பாடுகள் நலிந்து சரிவுற்ற இக்காலத்தில், எல்லாவற்றையும் பொறுப்பின்றி

அனுமதிக்கும் சூழ்நிலையில் மனித உறவுகளின் புனிதம் பற்றிய உயர்ந்த நியதிகளைப் பாதுகாப்பதில் கிறிஸ்தவர்களுக்குப் பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு. "நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல் நீங்கள் ஒருவர் மற்றொருவரிடம் அன்புகூர வேண்டும்" (யோவா 15:12) என்ற இயேசுவின் கட்டளையை நாம் அறிவோம். அவரது அன்பு எப்போதும் வளமூட்டிச் செழிப்பளிக்கவல்லது. அஃது எவருக்கும் எத்தகைய துன்பத்தையும் ஒருபோதும் கொடுப்பதில்லை. இந்த வீறார்ந்த நியதியும் உயர்ந்த எடுத்துக்காட்டான கோட்பாடும் நம்முடையதாக இருக்க வேண்டும்.

**பேரீச்சை நகர் (CITY OF PALM TREES)**

இந்த இடம் எரிகோவின் ஒரு பகுதியாகும் (உப 34:3; 2 நாள் 28:15). இது கேனிர்கள் (நீதி 1:16), எக்லோனியர்கள் (நீதி 3:13) ஆகியவர்களின் உறைவிடமாகும். பாலஸ்தீனத்தை இஸ்ராயேலர் வெற்றி கொண்ட காலமுதல் ஆகாபு அரசன் காலம்வரை எரிகோ இடிபாடுகளாகக் கிடந்ததாலும், கேனிய மக்கள் கூடாரங்களில் வசித்ததாலும், இப்பெயர் ஒரு நகரைக் குறிக்கவில்லை; மாறாக, அங்குச் செழித்து வளர்ந்த பேரீச்சை மரத்தோப்புகளைக் குறித்தது எனலாம். பழங்கால வரலாற்று ஆசிரியர்களின்படி, இத்தோப்புகளை இவற்றின் நீர்வழிகள் வழியாகக் கடக்க ஐந்து மணிநேரம் எடுத்ததாம்.

**பேரீச்சைப்பழம் (DATES)**

இது பற்றிய விவிலியத்தில் வரும் ஒரே ஒரு குறிப்பு உ.ச. 7:8-இல் தலைவியின் அழகை விவரிக்கும்போது வருகிறது. இங்கு வரும் குலைகள் பேரீச்சைப்பழம் வளர்ந்த விதத்தைக் குறிக்கின்றன. 7:9 இப்பழம் பறிக்கப்பட்ட விதத்தைப் பிரதிபலிக்கிறது.

பழங்காலத்தில் பேரீச்சைப் பழம் முக்கிய உணவாகப் பயன்படுத்தப்பட்டது. ஏனெனில், பேரீச்சை மரம் அடிக்கடி கூறப்படுகிறது. அதன் பழம் விவிலியத்தில் குறிக்கப்படாமை தற்செயலானதாகவே கருதப்பட வேண்டும்.

**பேரீச்சை மரம் (PALM TREE)**

எரிகோ பேரீச்சை மாநகர் என்று அடிக்கடி குறிக்கப்படுகிறது (உப 34:3; நீதி 1:16; 3:13; 1 நாள் 28:15). சாக்கடலின் அருகிலுள்ள கும்ரான் பகுதிகளில் கருகிப்போன பேரீச்சை மரத்துண்டுகள் பல .. அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. பிளினியின் கூற்றுப்படி எஸ்ஸேனியர் பேரீச்சைச் சோலையில் வாழ்ந்து வந்தனர்.

இஸ்ராயேலர் தங்கள் விடுதலைப் பயணத்தின்போது ஏலிமில் எழுபது பேரீச்சை மரங்கள் கொண்ட பாலைவனச் சோலையைக் கண்டனர் (யாத் 15:27; எண் 33:9). அக்காபா வளைகுடாவின் முனையிலுள்ள ஏலாத்து (உப 2:8) தனது பெயரை அங்கிருந்த உயர்ந்த மரங்களிலிருந்து பெற்றதாக நம்பப்படுகிறது. இந்த மரங்கள் பேரீச்சை மரங்களைக் குறிக்கலாம் (2 அர 14:22; 16:6; ஏலோத்து - 1 அர 9:26; 2 நாள் 8:17; 26:2). அக்காபாவில் இன்றும் பேரீச்சை மரங்கள் நிறைந்துள்ளன.

பேரீச்சைமரம் உருவகமாகவும் பயன்பட்டுள்ளது."நேர்மையாளர் பேரீச்சை மரமெனச் செழித்தோங்குவார்" (சங் 92:12). தலைவியின் விழுமிய தோற்றத்தை விவரிக்கவும் (உ.ச. 7:8-9), இஸ்ராயேல் ஆட்சியாளரின் அடையாளத்தைக் குறிக்கவும் (எசா 9:14), வெற்றியைக் குறிக்கவும் (1 மக் 13:51; 2 மக் 10:7; 14:4; யோவா 12:13; திருவெளி 7:9) இம்மரம் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. அழிவு பற்றிய இறைவாக்கிலும் (யோவே 1:12) வருகிறது.

பேரீச்சையோடு புனிதத்தைத் தொடர்பு படுத்துவது பழங்கால மேற்காசியா முழுவதும், குறிப்பாக மணிக்கற்களின் செதுக்கு வேலைக் கலையில், காணப்படுகிறது. உருளை முத்திரைகளிலும், மற்றக் கலை வடிவங்களிலும், இது வாழ்வின் மரமாக அடிக்கடி காணப்படுகிறது. தெபோராவின் பேரீச்சை மரம் (நீதி 4:5) ஒரு புனித மரமாக இருந்திருக்கலாம். சாலமோனின்

ஆலயத்திலும் (1 அர 6:29.32.35; 7:36), எசேக்கியலின் காட்சி ஆலயத்திலும் (எசே 40:16.22.26.31.34.37; 41: 18-20.25-26), சுவரிலும், கதவுகளிலும் நிலைகளிலும் மற்றப் பகுதிகளிலும் புடைப்பியல் செதுக்கோவியமாக அடிக்கடி பேரீச்சை மரம் காணப்படுவது இது வெறும் அழகுக்காகச் செய்யப்பட்டதன்று என்று சுட்டுகிறது. இவ்விதம் அணி செய்தல் அசீரியக்கோவில்களிலும் அரண்மனைகளிலும் காணப்படுகின்றன.

கூடார விழாவோடு பேரீச்சை ஓலை கொண்டிருக்கும் தொடர்பிலிருந்து (லேவி 23:40; நெகே 8:15), அது பழங்கால யூதச் செபக்கூடங்களில் புடைப்பியலாகவும், பல்வண்ணப்பட்டையாகவும் அழகு செய்வதற்கும் பயன்பட்டுள்ளது. பேரீச்சை மரம் நாணயங்களில், குறிப்பாக வெஸ்பாசியன் மற்றும் நெர்வா ஆகியோரின் நாணயங்களில், சிறப்பாகக் காணப்படுகிறது.

கிறிஸ்தவப் பாரம்பரியங்களிலும் கதைகளிலும் இம்மரமும் அதன் ஓலையும் அடிக்கடி குறிக்கப்படுகின்றன. யோவா 12:12-13-இல் விவரிக்கப்படும் இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்தபோது குருத்தோலை பயன்பட்டதிலிருந்து குருத்து ஞாயிறு தன் பெயரைப் பெறுகிறது. பத்மோசில் யோவான் கண்ட காட்சியில் (திருவெளி 7:9) அரியணைக்கும் செம்மறிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்த மக்கள் திரள் கையில் பேரீச்சையின் குருத்தோலையை ஏந்தியிருந்தனர். கிறிஸ்தவக் கலையில் மறைசாட்சி வெற்றி மரணத்தின் அடையாளமாகப் பேரீச்சைக் குருத்தோலை பயன்படுகிறது.

பல இடங்கள் பேரீச்சை மரப்பெருக்கத்தால் பெயரிடப்படுகின்றன அல்லது அடையாளம் காட்டப்படுகின்றன. பேரீச்சை நகர் (எரிகோ; உப 34:3; 2 நாள் 28:15); ஏலிம் (யாத் 15:27; எண் 33:9); தாமார் (1 அர 9:18; எசே 47:19); தெபோராவின் பேரீச்சை மரம் (நீதி 4:5); அச்சோன்-தாமார் (ஏன் கேதி; 2 நாள் 20:2); பாகால்-தாமார் (நீதி 20:33).

**பேரோத்தா (BEROTHAH – கிணறு சார்ந்த)**

இஃது இஸ்ராயேல் கோத்திரத்தாரால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்ட பகுதியின் வடவெல்லையிலுள்ள ஓர் ஊராகும் (எசே 47:16). ஒருவேளை பேரோத்தாயாக இருக்கலாம்.

**பேரோத்தாய் (BEROTHAI – என் கிணறு)**

இது சோபாவின் சீரியா ஆட்சிப் பகுதியிலுள்ள ஒரு நகரம். இந்த நகரிலிருந்துதான் தாவீது, அததேசருக்கு எதிரான போரில் மிகத்திரளான வெண்கலத்தை எடுத்துக்கொண்டு வந்தார் (2 சாமு 8:8). 'பேரோத்தா' (எசே 47:16) என்பதும், 'பேரோத்தாய்' என்பதும் ஒருவேளை ஒரே இடத்தைக் குறிக்கலாம். லெபனோனுக்கு எதிரிலுள்ள மலையடிவாரக் குன்றுகளுக்கு வடபுறத்திலுள்ள பாகால்பேக்குக்குத் தெற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள பெரேதியன் என்ற ஊர் பேரோத்தாய் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இதற்கு இணையான விவரிப்பான 1 நாள் 18:18-இல் வரும் கூண் என்ற பெயர் பேரோத்தாயின் மற்றொரு பெயராக இருக்கலாம்.

**பேலா (BELA – விழுங்கும் அழிக்கும்) – ஆள்**

1. பேலா என்பவர் ஏதோம் நாட்டின் முதல் அரசராவார். பேகோரின் புதல்வர் (ஆதி36:32-33; 1 நாள் 1:43-44). இவருடைய தலைநகரின் பெயர் தின்காபா ஆகும். இவருடைய தோற்றத்தைப் பற்றிய தெளிவான குறிப்புகள் காணப்படவில்லை. இவர் எங்கு வாழ்ந்தார் என்பது பற்றியும் அறியமுடியவில்லை. பேகோரின் புதல்வரான காட்சியாளர் பிலயாமின் பெயரும் பேலாவின் பெயரும் ஒன்றுபோல் தோன்றுகிறது.

2. இவர் பென்யமினின் மூத்த மகன் (ஆதி 46:21). பேலாயியர் வம்சத்தலைவனாகவும் கருதப்படுகின்றார் (எண் 26:38). பென்யமினின் புதல்வர்கள் பட்டியல் மூன்றுமுறை

கூறப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு பட்டியலிலிலும், பெயரிலும், எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன (எண் 26:38.40; 1 நாள் 7:6–7; 8:1–3).

3. இவர் ஆகாசின் மகன். ரூபனின் தலைமுறையில் வந்த யோவேலின் வழித்தோன்றல் (1 நாள் 5:8).

**பேலா (BELA – விழுங்கும், அழிக்கும்) – இடம்**

சித்திமின் "பள்ளத்தாக்கு நகரங்களில்" ஒன்றான சோவாருக்கு வழங்கப்பட்ட மற்றொரு பெயராகப் 'பேலா' இருக்கலாம். நான்கு நகரங்களின் அரசர்களின் பெயர்கள் மட்டும்தான் தரப்பட்டுள்ளன (ஆதி 14:2). சோவார் நாட்டின் அரசன் பெயர் தரப்படவில்லை. ஆனால், "பேலா அரசன் சோவார்" என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேலாவும் ஓர் ஆளின் பெயராகத் தோன்றுவதால், "சோவாரின் அரசனான பேலா" என்ற வாக்கியமானது, "பேலாவின் அரசனான சோவார்" என்று மாறிவந்திருக்கலாம். பேலா சாக்கடலின் தென்கிழக்குக் கரையில் அமைந்திருந்திருக்கலாம்.

**பேலாயியர் (BELAITES)**

பேலாவின் வழித்தோன்றல்கள் (எண் 26:38).

**பேலியால் (BELIAL** – மதிப்பற்ற, பயனற்ற, இழிவான)

பேலியால் என்ற இச்சொல்லானது 'பேலியாலின் புதல்வர்கள்' (உப 13:13; நீதி 19:22; 1 சாமு 2:12) 'பேலியாலின் ஊழியன்' (2 சாமு 20:1; பழ 16:27) என்றும், சில சமயங்களில் வெறுமனே 'பேலியால்' (2 சாமு 23:6; யோபு 34:18) என்றும் பல முறைகளில் வழங்கப்படுகிறது. இஃது ஒழுக்கம் கெட்டவர்களை, நெறிகெட்டவர்களை அல்லது பண்பற்றவர்களைக் குறிக்கிறது. 'பேலியாலின் சாட்சி' என்பது பொய்ச்சான்று பகர்கின்றவனையும் (பழ 19:28) 'பேலியாலின் ஆலோசகர்' என்பது தீய திட்டம் தீட்டுகிறவனையும் (நாகூ 1:11) குறிக்கிறது. மேலும், பேலியாலின் வெள்ளங்கள் என்பது நன்மையையோ, ஆசீரையோ கொண்டு வராத அழிவின் சுழல்களைக் குறிக்கிறது. பாதாளத்தின் ஆறுகளோடு ஒப்பிடப்படுகின்றது (2 சாமு 22:5; சங் 18:4).

நாகூ 2:1-இல் "பேலியால்" (தீயோன்) என்ற இச்சொல் 'தீமை விளைவிக்கும் சக்தியைக்' குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, இச்சொல் 'பயனற்ற' என்று பொருள்படும்.

திருமுறை சேராத போலி இலக்கியத்தில் பேலியால் என்ற பெயரானது தீமையின் அரசனான சாத்தானைக் குறிக்கின்றது.

புதிய ஏற்பாட்டில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் மடலில் கிறிஸ்துவுக்கும் பேலியாலுக்கும் உடன்பாடில்லை என்று கூறப்பட்டிருக்கிறது (6:15). மேலும், தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் மடலில் (2:3) கூறப்பட்டுள்ள 'அக்கிரமமே உருவான மனிதன்' என்பது 'பேலியாலின் ஊழியன்' என்பதைச் சுட்டிக்காட்டுவதாகக் கருதப்படுகிறது.

**பேல் (BEL – உடையவன், ஆள்பவன்)**

'பேல்' என்பது பாபிலோன் நாட்டுத் தெய்வமான மார்துக்குக்கு, வழங்கப்பட்ட பெயராகும். பாபிலோனியாவின் வீழ்ச்சியைப்பற்றி எசாயாவும், எரேமியாவும் கூறுகின்ற பகுதிகளில் இத்தெய்வத்தின் வீழ்ச்சியைப்பற்றிக் கூறப்படுகிறது (எரே 50:2; 51:44; எசா 46:1).

'பேல்' என்ற இச்சொல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் முதன்மை நிலையில் வைத்துப் போற்றப்படுகின்ற தெய்வத்தைக் குறிக்கும், அத்தெய்வத்தின் சில குறிப்பிட்ட குணநலன்களைக் குறிக்கும் அல்லது தெய்வங்களின் குறிப்பிட்ட விருப்பத்தைக் குறிக்கும். மேலே கூறப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் இடம் பெறுகின்ற 'பேல்' என்பது பாபிலோனியத் தெய்வமாகிய மார்துக்கைக் குறிக்கிறது. மார்துக்கு என்ற

தெய்வம் கானானியர்களின் பாகால் கடவுளுக்குச் சரிநிகராய் வைத்துப் போற்றப்படுகிறது. பாகால் கடவுளைப் போன்று, இந்தத் தெய்வமும் தான் ஓர் அரசன் என்று ஆர்ப்பரித்து, மார்துக்குக் கடவுளைப் போன்று பாகால் தெய்வமும் படைக்கும் கடவுளாகக் கருதப்பட்டதற்குக் கானானிய வாசகங்களில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால், பாகால் தெய்வத்தின் 'அரசன்' என்ற பட்டம் அவர்தான் உலகத்தை உருவாக்கியவர் என்று உணர்த்துகிறது.

### பேல் சிலையும் நாகமும் (BEL AND THE DRAGON)

இப்பகுதி எழுபதுநூலிலும், கத்தோலிக்க விவிலியத்திலும், தானியேல் நூலின் 14-ஆம் அதிகாரமாக உள்ளது. பிரிவினைச் சபைகள் இதைத் தங்கள் விவிலியத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. இதில் இரண்டு கதைகள் உள்ளன. இவை தானியேலின் ஞானத்தையும் அறிவுத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. புற சமயத்தினர் மத அமைப்புகளை இகழ்ந்து கூற வேண்டுமென்பதுதான் இக்கதைகளின் முதன்மையான நோக்கம்.

**முதல் கதை:** பேல் என்ற மிகப்பெரிய சிலை, இரவு நேரங்களில் அதற்குப் படைக்கப்படுகின்ற உணவுப்பொருட் களையும், மதுபானங்களையும் விழுங்கி விடுவதால் அஃது உயிருள்ள ஒன்று என்று கருதப்பட்டது. ஆனால் தானியேல், பேல் உயிரற்ற பொருள் என்றும், அதற்குப் படைக்கின்ற உணவுப்பொருட்களைக் குருக்கள் அபகரித்துக் கொள்கின்றனர் என்றும் உண்மையை வெளிப்படுத்துகின்றார். எனவே, அரசரால் பேல் சிலையானது அழிக்கப்படுகின்றது; குருக்களும் கொல்லப்படுகின்றனர்.

இரண்டாவது கதையில், தானியேல் பாபிலோனியாவில் தெய்வமாகக் கருதப்பட்ட மிகவும் பயங்கரமான தோற்றத்தையுடைய நாகத்தை வழிபட மறுக்கிறார். இஃது ஒரு பொய்க்கடவுள் என்று தானியேல் அதனை அழித்து விடுகின்றார். எனவே, மக்கள் தங்களது தெய்வம் கொலை செய்யப்பட்டு விட்டது என்று வெகுண்டெழுந்து தானியேலைச் சிங்கங்களின் குகையில் தள்ளிவிடுமாறு முறையிட்டனர். அரசரும் அவ்வாறே செய்தார். ஆனால், சிங்கங்கள் பசியாக இருந்தபொழுதும் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. அவர் ஆறு நாட்கள் அங்கு தங்கியிருக்கிறார். ஆறாம் நாள், ஆண்டவருடைய தூதர், உணவு வைத்திருந்த அபக்கூக்கைத் தூக்கிச் சென்று தானியேலுக்கு உணவளிக்கச் செய்கிறார். ஏழாம் நாள் அரசர் தானியேலைக் குகையிலிருந்து நீக்கிவிட்டு அவரது பகைவர்களை உள்ளே தள்ளிவிடுகின்றார் என்று கூறப்படுகிறது.

இந்தக்கதைகள் முதல் நூற்றாண்டில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று அறிஞர்கள் பலர் எண்ணுகின்றனர். மேலும், 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எரகுமவேலின் கதைத்தொகுப்பில் இக்கதைகள் காணப்படுவதால், அரமேய மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். இக்கதைகள் கி.மு. 130-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

சிலைவழிபாட்டின் மூடத்தனங்களை எடுத்துக்காட்டி, ஒரே ஓர் உண்மை இறைவனைத்தான் வழிபட வேண்டும் என்ற கருத்தானது இக்கதைகளின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. தானியேல் நூலில் வரும் மற்றக் கதைகள் மற்றும் காட்சிகளைப் போல், இக்கதைகளும் இறைவன் தமக்குப் பிரமாணிக்க முள்ளவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை அளிக்கிறார் என்று போதிக்கின்றன. யோசுவாவின் மகனாகிய அபக்கூக்கின் இறைவாக்குகளிலிருந்து இக்கதைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஒரு வாசகம் கூறுகிறது.

பாம்பு வழிபாடு எகிப்து நாட்டில் பரவலாகக் காணப்படுவதால் இக்கதைகளும் அங்குதான் தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து.

**பேல்மாயின் (BELMAIN)**

'பேல்மாயின்' என்பது சமாரியாவிலுள்ள அடையாளம் கண்டுபிடிக்கப்படாத ஓர் ஊராகும் (யூதி 4:4). அனேகமாக யூதித்து நூலில் குறிப்பிடப்படுகின்ற 'பால்பாயிம்' (7:3) என்பதும், பாலலமோன் என்பதும், ஒருவேளை போமாய் (15:4) என்பதும், பேல்மாயினும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். தாணுக்கு அருகிலுள்ள ஆபல் – பெத் – மாக்கா என்பதும், பேல் மாயின் என்பதும் ஒரே இடத்தினைக் குறிக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. பெத்தூலியா என்பது செக்கேமுக்கு மற்றொரு பெயர் என்றால், பேல்மாயின் தோத்தானுக்கு அருகில் சமாரியாவுக்கு வடக்கில் 14 கி.மீ. தொலைவில் இருந்திருக்கலாம் (7:3).

**பேறுகள் (BEATITUDE)**

1. வாழ்வு, அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு, ஆசீர், மற்றும் மீட்பு என்று கூறப்படுகின்ற நற்பேறுகளை மனிதன் விரும்புகிறான். இந்த அனைத்து நலன்களும் ஒருவனை நற்பேறுடையவன் அல்லது நற்பேறற்றவன் என்று அறிவிக்கும் வாய்பாடுகளில் வேறுபட்ட விதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. "எளியோர் நற்பேறுடையோர், செல்வர் நற்பேறற்றவர்" என்று ஞானி அறிவிக்கும் போது, நற்பேற்றை அளிக்கின்ற ஆசியையோ, துக்கத்தை அளிக்கின்ற ஆசியையோ உச்சரிக்க அவர் விரும்பவில்லை. மாறாக, நற்பேறு பற்றிய தனது அனுபவத்தின் பெயரால், அதற்கு நடத்திச் செல்கின்ற பாதைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்தவே அவர் விரும்புகிறார்.

நமக்குச் சாதாரணமாகத் தோன்றுகின்ற எண்ணற்ற ஞான மூதுரைகளின் பரப்பையும், பொருளையும் புரிந்துகொள்ள, அவைகள் தெளிவுபடக் கூறப்பட்ட சமயச் சூழ்நிலையிலேயே அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் பேறானது தன்னுடைய ஆதாரமாக இறைவனையே எப்போதும் கொண்டிருப்பின், அது மண்ணுலகினின்று விண்ணுலகிற்கு ஒரு மெதுவான வளர்ச்சியையே கொண்டுள்ளது.

II. பழைய ஏற்பாடு

1. இறைவனும் பேறுகளும்

**அ) இறைவனில் நற்பேறும் மகிமையும்:** மனிதனுடைய கனவிற்கு ஊன் உருவம் அளிப்பதன் காரணமாக நற்பேறு என்னும் பட்டத்தால் சாதாரணமாகப் புகழப்படுகின்ற கிரேக்கத் தெய்வங்களுக்கு முரண்பட்ட வகையில், விவிலிய மனிதன் விரும்புவதுடன் பொதுவான எதையும் கொண்டிராத இறைவனுடைய நற்பேறு பற்றி விவிலியம் அதிகம் கூறுவதில்லை (காண். 1 திமொ 1:11; 6:15). எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய மகிமையை மனிதருடன் பகிர விரும்புகின்ற மகமையின் இறைவனாக யாவேயை அது காண விரும்புகிறது. எனவே, மற்றொரு வேறுபாடும் இங்குள்ளது.மனிதருடைய ஊழோடு, குறிப்பாகத் தங்களைத் தொந்தரவுபடுத்திக் கொள்ளாமல் தங்களுடைய நற்பேற்றிலேயே கிரேக்கத் தெய்வங்கள் மகிழ்ச்சியடையும்போது, யாவே அனைத்து மக்களுடனும், குறிப்பாகத் தனது மக்களுடன் அக்கறையோடு சார்ந்துள்ளார். இறைவனுடைய அருளினின்று பெறப்படுகின்ற மனிதனுடைய பேறானது, அவரது மகிமையில் பங்கு பெறுவதாகும்.

**ஆ) இறைவனே பேறு ஆவார்:** ஞான இலக்கியத்தில் அளவற்ற விதமாக உள்ள அறிவிப்புக்களைப் பார்க்கும்போது, உண்மையான நற்பேறு எதில் அடங்கியுள்ளது, மற்றும் ஏன் அதை நாட வேண்டும் என்பதை விவிலிய வாசகர்கள் கண்டடைகின்றனர். ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர். அவர் வல்லமைமிக்கவராகவும் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இருப்பார் (சங் 11:102); அவர் எண்ணற்ற பிள்ளைகளைப் பெறுவார் (சங் 128:1-3). வாழ்வு, உடல்நலம், ஆசீர், செல்வம் ஆகியவற்றை அவர் உறுதியாகப் பெற

விரும்பினால் (பழ 3:10), அவர் இறை வழியில் நடக்க வேண்டும் (சங் 119:1); ஞானத்திற்குச் செவி மடுக்க வேண்டும் (பழ 8:34-35); அதனைக் கண்டடைய வேண்டும் (3:13-14); அதில் தன்னைச் செயல்படுத்த கவனித்துக்கொள்ள வேண்டும் (சீரா 14:20); ஏழைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும் (சங் 41:2); ஒரே வார்த்தையில் கூறுவதாயின்- நீதியுள்ளவனாக இருக்க வேண்டும்.

உண்மையான நற்பேற்றின் வழியில் தனது சீடர்களை நடத்திச் செல்லத் தூண்டுகிற இந்த முயற்சிகளின் வளர்ச்சியில், ஞானிகள் உடனடி வெகுமதியின் வாய்ப்பிற்கு அப்பால் நோக்குவதில்லை. இப்படியை முன்னோக்கி அறிவிப்பதானது யாவேயினுடைய பக்தியுள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும் உரியதாகும். இறைவனுடன் தாங்கள் அனைத்தையும் கொண்டுள்ளமையால், பிற யாவற்றையும் முழுமையாக விட்டுவிடுதலும் எல்லையற்ற நம்பிக்கையுமே நற்பேற்றிற்கான வழி என்பதை அவர்கள் புரிந்து கொள்வர். இது வெளிப்படுத்தப்பட்ட நோக்கமன்று; ஆனால், ஒரு சாதாரண எளிய உறுதிப்பாடு மட்டுமே. "ஆண்டவருக்காகக் காத்திருப்போர் நற்பேறு பெற்றோர்" (எசா 30:18). "உம்மை நம்பும் மனிதன் நற்பேறு பெற்றவன்" (சங் 84:12; காண். 2:12; 65:5; 146:5). அப்படியானால் உண்மையான இஸ்ராயேலனுக்கு இறை அச்சம், சட்டத்தைக் கடைப்பிடித்தல் மற்றும் ஞானத்திற்குச் செவிமடுத்தல் என்பது, நற்பேற்றை வெகுமதியாக எதிர்பார்ப்பது என்று பொருள்படும். அதிக ஆன்மீக மானவர்களுக்கு அதனை ஏற்கெனவே கொண்டிருத்தல் என்றும் பொருள்படும். "உமது முன்னிலையில் நிறைவான மகிழ்ச்சியைச்" சுவைத்தவாறு இறைவனுடன் என்றும் இருத்தல் என்றும் இது பொருள்படும் (சங் 16:11; காண். 73:23-25).

**2. மண்ணுலகினின்று விண்ணுலகை நற்பேற்றிற்கு:** இவ்வாறு பேறுகளின் இறை உச்சியானது பகுக்கப்படுகிறது. ஆனால், இறைவன் மட்டுமே நற்பேறு ஆவார் என்பதைக் கண்டடைய, தனது ஆசைகளை மெதுவாய்த் தூய்மைப்படுத்தியவாறு ஒவ்வொரு மனிதனும் ஏமாற்றத்தினின்று ஏமாற்றத்திற்கு நடத்திச் செல்லும் பாதையில் நடந்து செல்கிறான் (சங் 118:8-9; 136:38; 146:3-4).

**அ) மண்ணுலகப் பேறுகள்:** நற்பேறு என்பது நிலவுலக வாழ்வுடன் நீண்ட காலமாக அடையாளம் காணப்பட்டு வருகின்ற வாழ்வாகும். யாவேயைத் தங்களுடைய இறைவனாகக் கொண்டுள்ள மக்களின் பேறானது பெரிய புதல்வர்களையும், அழகிய புதல்விகளையும், நிறைந்த தானியக் களஞ்சியங்களையும், எண்ணற்ற ஆட்டு மந்தைகளையும், இறுதியாக அமைதியையும் கொண்டிருப்பதாகும் (சங் 144:12-15). புனித வாசகங்கள் மனிதனுடைய இந்தப் பொருட்களைத் தேசிய, குடும்ப அல்லது தனிப்பட்ட சூழல்களில் குறிப்பிடுகின்றன. பெயருக்குத் தகுதியுடைய அரசனைக் கொண்டிருத்தல் (திருவுரை 10:16-17), சிறப்பு மிக்க (சீரா 26:1), அறிவுக்கூர்மை கொண்ட மனைவியை அடைதல் (25:8), நேர்மையுடன் பெறப்பட்ட பெருமளவு செல்வம் பெறுதல், அதற்கு அடிமையாய்ப் போகாமலிருத்தல் (31:8), விவேகமுடையவராய் இருத்தல் (25:9), நாவால் தவறு செய்யாதிருத்தல் (14:1), ஏழைகளுக்கு இரங்குதல் (பழ 14:21), தங்கள் பாவங்களுக்காக மனவுறுத்தல் அற்றவராயிருத்தல் மற்றும் தன் மனச்சான்றால் கண்டிக்கப்படாதிருத்தல் (சீரா 14:1-2) ஆகியவை நற்பேற்றின் கூறுகளாகும். சுருங்கக்கூறின், நற்பேறு என்பது பெயருக்குத் தகுதியான வாழ்வைக் கொண்டிருப்பதும் இறைவனாலேயே அதற்குக் கற்பிக்கப்படுவதுமாகும் (சங் 94:12). இறந்த ஒருவருக்காகத் துக்கப்படுவது உண்மையில் சரியானதே. ஆனால், கண்ணீரானது நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடாது. ஏனெனில், மரணச் சோகமானது இவ்வுலகில் நற்பேற்றை

முழுமையாக அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் (சீரா 38:16-23).

**ஆ) விண்ணகப் பேற்றினை நோக்கி:** ஆண்டவரால் அளிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில், உடன்படிக்கையின் மண்ணுலகப் பொருட்கள் இறைவனுடன் பகிரப்பட்ட வாழ்வின் குறியீடுகளாக இருந்தன. முடிவில்லா வாழ்வின் மீதான நம்பிக்கையானது நிலைப்படுத்தப்பட்ட போது இப்பொருட்களின் குறைபாடுகளும் அபாயங்களும் மிகத்தெளிவாகின. இந்தத் தூய்மைப்படுத்தலின் விளைவாகப் பின்னர் இப்பொருட்கள் முடிவில்லா வாழ்வையே சுட்டிக்காட்டின. அதே நேரத்தில் புதிய நம்பிக்கையானது. குழந்தைகளற்ற ஆண் பெண்களுடைய ஆன்மீகப் பலனுடைமையைப் போன்ற புதிய மதிப்பீடுகளுக்கு இட்டுச் சென்றது. மேலும், இந்த நம்பிக்கையானது மதிப்பீடுகளினுடைய பழைய அமைப்பை எதிர்முறையில் மாற்றி அமைத்தது. மனிதனது நேரத்திற்கு முன்னர் அவனுடைய நற்பேறு தீர்ப்பிடப்படக்கூடாது எனக் கடந்த அனுபவம் காட்டுகிறது (சீரா 11:28). நற்செய்தியை முன்குறித்துக் காட்டுகின்ற, கேள்விப்படாத தைரியத்துடன், பிள்ளைகள் அற்றோர் நீதியுள்ளவர்களாகவும் நற்பண்புடையவர் களாகவும் இருந்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என ஞானநூல் அறிவிக்கிறது (ஞான 3:13-15). ஆண்டவரின் மீதான நம்பிக்கையில் முழுமையான நன்மையைக் கண்டு, எளியோரின் சங்கீதங்கள் ஏற்கெனவே அறிவித்து வந்தவற்றை, ஞானிகள் வெறுமனே மீண்டும் எடுத்துக்கூறினர் (சங் 73:23-28).

**III. புதிய ஏற்பாடு:** கிறிஸ்துவின் வருகையுடன் அனைத்து நன்மைகளும் அளிக்கப்பட்டுவிட்ட நிலையில் நற்பேறு அவரில் தனது மாதிரியையும் நிறைவேறுதலையும் கண்டடைகிறது. ஏனெனில், ஏற்கெனவே பிரசன்னமாகியுள்ள அரசு அவரே. மேலும், அவரே தனது விசுவாசிகளுக்கு உயரிய நன்மையை அளிக்கிறார். விண்ணக உரிமைச் சொத்தின் பிணை ஆகிய தூய ஆவியே இந்த நன்மை.

**1. பேறுகளும் கிறிஸ்துவும்:** இயேசு உயரிய அனுபவத்தின் ஞானி மட்டுமல்லர்; தான் முன்மொழிகின்ற பேற்றினில் முழுமையாக வாழ்கின்றவர் அவரே.

அ) மத் 5:3-12-இன்படி இயேசுவினுடைய தொடக்க உரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்படுகின்ற பேறுகள், கிறிஸ்தவ நற்பேற்றிற்கான திட்டத்தை அளிக்கின்றன. லூக்காவின் வாசகப்படி நற்பேறற்ற நிலையின் அறிவிப்புகளும் அவற்றுடன் இணைந்துள்ளன; இவ்வாறு, அவை வாழ்வினுடைய சில நிலைகளின் மேலான மதிப்பைப் புகழ்ந்துரைக்கின்றன (லூக் 6:20-26). ஆயினும், இவ்விரு விளக்கங்களும் நற்பண்புகளை அல்லது வாழ்க்கை நிலைகளைப் பேறுடையதாக்குவதற்குத் தாழ்த்தப்பட முடியாது. அவை ஒன்றையொன்று நிறைவுபடுத்துகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவே அவற்றிற்கு அளித்த பொருளில் எடுத்துக்கூறப்பட்டால்தான் அவை உண்மையை வெளிப்படுத்தும். பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகளுக்கு மாண்புமிக்க "ஆம்" அளிக்கவே இறைவனின் சார்பாக இயேசு வந்தார். விண்ணக அரசு அளிக்கப்பட்டுள்ளது. தேவைகளும், இன்னல்களும் ஒடுக்கப்பட்டுள்ளன. இரக்கமும், வாழ்வும் இறைவனில் ஒப்புரவாக்கப்பட்டுள்ளன. உண்மையில் சில குறிப்பிட்ட பேறுகள் எதிர்காலத்திற்கென உரைக்கப்பட்டால், இயல்பாகவே மற்றவைகளைத் தன்னுள் கொண்டுள்ள முதலாவதானது ("எளியோர் பேறு பெற்றோர்...") இத்தருணத்திலிருந்தே தனது மெய்ப்பிப்பை நோக்குகிறது.

ஆனால், அது மட்டுமே அனைத்துமன்று. பேறுகள் என்பவை இயேசுவில் இறைவனால் அளிக்கப்பட்ட உடன்பாடுகள் ("ஆம்") ஆகும். பழைய ஏற்பாடானது பேறுகளையும் இறைவனையும் ஒன்றுபடுத்தியபோது, தனது முறையில் இயேசு நற்பேற்றிற்கான ஆர்வத்தை

நிறைவேற்றுபவராகத் தன்னையே அளிக்கிறார். விண்ணக அரசானது அவரில் பிரசன்னமாகிறது. பேறுகளை நிறைவாக வாழ்வதன் மூலமும், "இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவராகத்" (மத் 11:29) தன்னையே காட்டுவதன் மூலமும் பேறுகளை மனுவுரு எடுக்கச் செய்ய இயேசு விரும்பினார்.

ஆ) பேறுகளின் மத்தியில் இயேசு உள்ளார் என்பதைக் காட்ட மற்ற நற்செய்தி அறிவிப்புகளும் சம அளவில் முயல்கின்றன. விசுவசித்ததன் காரணமாக (லூக் 1:45) மீட்பரை ஈன்றவரென மரியாள் பேறுடையவளாகிறாள் (லூக் 1:48; 11:27). அவ்வாறு செய்ததன் மூலம், இறைவார்த்தையைக் கேட்டு (11:28) காணாமலே விசுவசிப்பவர் (யோவா 20:29) அனைவரின் பேறுடைமையை மரியாள் அறிவிக்கிறாள். பரிசேயருக்கும் (மத் 23:13-22), யூதாசுக்கும் (26:24), விசுவசியாத நகரங்களுக்கும் ஐயோ கேடு (11:21)! தந்தையால், இயேசுவில் உயிருள்ள இறைவனின் மகன் பற்றிய வெளிப்பாடு பெற்ற சீமோன் பேறுபெற்றவர் (மத் 16:17)! இயேசுவை நோக்கிய கண்கள் பேறுபெற்றவை (13:16)! எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவரது மறுவருகையை எதிர்நோக்கி விசுவாசமுள்ளவர்களாகவும், விழிப்பானவர்களாகவும் (மத் 24:46), ஒருவருக்கொருவரான பணியில் ஈடுபட்டவர்களாகவும் (யோவா 13:17) உள்ள சீடர்கள் பேறு பெற்றோர்.

2. **கிறிஸ்துவின் மதிப்பீடுகள்:** பழைய ஏற்பாடானது செல்வம் மற்றும் வெற்றி என்னும் உலக மதிப்பீடுகளுடன் வறுமை மற்றும் தோல்வியிலான நீதியின் மதிப்பீடுகளைச் சேர்க்க அச்சத்துடன் வலிந்து செயல்படுத்தும்போது, இயேசு தனது பங்கிற்குப் பேறுகளினுடைய மண்ணுலக எடுத்துக்காட்டுகளின் இருபொருள் மயக்க நிலையினைக் கண்டனம் செய்கிறார். அதுமுதல் இவ்வுலகின் பேறு பெற்றோர் என்பவர்கள் செல்வந்தரோ, உயர் செல்வாக்குடையவரோ, புகழ் பெற்றவர்களோ அல்லர்; மாறாக, வறியோரும், அழுவோரும், ஏழைகளும், துன்புறுத்தப்படுவோரும், ஆவர் (காண். 1 பேதுரு 3:14; 4:14). எல்லாமதிப்புமாக உடையவருக்கு மதிப்பீடுகளின் இந்த எதிர்மறையான மாற்றமானது இயன்றதே.

நீதி, தாழ்ச்சி, சாந்தம், தூய்மை, இரக்கம் மற்றும் சமாதானத்திற்கான ஆவல் முதலிய செயல்களுடன் கூடிய வறுமை, மற்றும் கிறிஸ்துவின் அன்பிற்கான கலாபனை ஆகிய இரண்டு முதன்மையான பேறுகள் மற்ற அனைத்தையும் தம்முள் கொண்டுள்ளன. இவை அனைத்திற்கும் பொருளளிக்கின்ற இயேசு இல்லாமல் இவை அனைத்தும் ஒன்றுமற்றவையே. தனது விசுவாசத்தின் இதயத்தில் கிறிஸ்துவை நிறுத்துகிறவன் மட்டுமே திருவெளிப்பாட்டின் பேறுகளைக் கேட்கமுடியும். அவற்றைக் கேட்டாலும் (திருவெளி 1:3; 22:7), விழிப்புடன் இருந்தாலும் அவன் பேறுபெற்றவன் (16:15). ஏனெனில், உயிர்ப்பாகிய (20:6) செம்மறியின் திருமணத்திற்கு (19:9), உயிர்ப்பிற்கு (20:6) அவன் அழைக்கப்பட்டுள்ளான். சாட்சியாகத் தனது வாழ்வையே அளிக்க வேண்டியிருந்தாலும் அவன் உறுதி இழக்க வேண்டாம். "ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு பெற்றோர்" (14:13).

# பை

**பை, கைப்பை (BAG)**

விவிலியத்தில் பலவகைப் பைகள் குறிக்கப்படுகின்றன. இவற்றைக் குறிக்கபல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

1. ஒரு தாலந்து கொள்ளக்கூடிய பணப்பை (2 அர 5:23). அதே எபிரேயச் சொல் எசா 5:22-இல் பெண்ணின் கைப்பையைக் குறிக்கிறது. ஏனெனில், இது பெண்ணின் சொகுசுப் பொருள்களோடு குறிக்கப்படுகிறது.

2. மற்றொரு எபிரேயச் சொல்- எடைக்கற்களை வைத்திருக்கும் ஒரு சிறிய பையைக் குறிக்கிறது (உப 25:13; பழ 16:11; மீக் 6:11). இதே சொல் பணப்பையையும் குறிக்கிறது (பழ 1:14; எசா 46:6).

3. வேறொரு எபிரேயச் சொல்- தானியம், பணம், வாசனைப்பொருட்கள் ஆகியவற்றைக் கட்டிவைக்கப் பயன்படும் கோணிப்பையைக் குறிக்கிறது (ஆதி 42:25; 1 சாமு 25:9; "வாழ்வோரின் கட்டுகள்; யோபு 14:17; "மீறுதல்கள் அடங்கிய பை").

4. மற்றொரு எபிரேயச் சொல்- பணப்பெட்டியைக் குறிக்கிறது.

5. வேறொரு எபிரேயச் சொல்- தானியம், உணவு, திராட்சைப்பழம் போன்றவற்றை வைத்திருக்கும் பையைக் குறிக்கிறது (ஆதி 42:25; 43:11; உப 23:25; 1 சாமு 9:7). இச்சொல் இடையனுக்குரிய பையையும் குறிக்கிறது (1 சாமு 17:40.49).

6. மற்றொரு எபிரேயச் சொல் பயணம் செய்வோர், இடையர், பிச்சைக்காரர் ஆகியோர் கொண்டிருந்த பையைக் குறிக்கிறது (மத் 10:10; மாற் 6:8; லூக் 9:3; 10:4; 22:35-36).

**பைக்திலத்து (BECTILETH - கொலை வீடு)**

வடசிலியாவில் அமைந்ததாகக் கருதப்படும் அடையாளம் கண்டு கொள்ளமுடியாத ஒரு சமவெளி (யூதி 2:21). நினிவேயிலிருந்து மூன்று நாட்கள் பயணம் செய்து பின் தன் படைகளோடு ஒல பெரினே தங்கிய இடம் இதுதான். ஒலபெரினே பயணம் மேற்கொண்ட குறிப்பிட்ட காலம் என்னவென்றோ, அவன் தங்கிய இடம் இஃது என்றோ, குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஏனெனில், நினிவேக்கும் சிலிசியாவுக்கும் இடையிலுள்ள தூரம் 480 கி.மீ. ஆகும். இது பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. சிலர், இது யூதி 2:22-23-இல் மக்கள் கொல்லப்பட்டதைக் குறிக்கும் அடையாளப் பெயராகும் என்று கருதுகின்றனர்.

**பைத்தியம், பித்துப்பிடித்தல் (MADNESS)**

பண்டைய மேற்காசிய நாடுகளில், சீர் பட முடியாத தன்மை கொண்ட மூளை நோய்கள் அசாதாரணமானவையன்று. ஆயினும், பித்துப்பிடித்தல் நிகழ்ச்சிகள் சிலவே விவிலியத்தில் இடம் பெற்றுள்ளன. பைத்தியம் பிடித்தல் அல்லது அவ்வாறு நடத்தல் ஆகியவற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. புதிய ஏற்பாடும், எழுபது நூலும் பயன்படுத்தும் கிரேக்கச்சொற்கள் பொதுவாக மூளைக் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டுள்ளன.

பண்டைக் காலத்திலிருந்தே பித்துப்பிடித்தவனின் நிலையானது பேரச்சத்தைத் தருகின்ற ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. ஏனென்றால், இந்தக் குறைபாடு ஒரு தேவதையுடன், குறிப்பாகப் பேயின் சக்தியுடன் கொண்ட தொடர்பினால் ஏற்படும் விளைவு என்று கருதப்பட்டது. இதன் விளைவாக இத்தகைய மூளை நோய் கொண்டவர்களிடமிருந்து அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இன்னும்கூட மேற்காசிய நாடுகளில் இத்தகையோரின் வாழ்க்கைப் பிரச்சனையில் மிகக் குறைந்த உற்சாகமே காட்டப்படுகிறது.

தோரா அல்லது ஐந்நூலில் இந்த மூளை நோய், கடவுளின் கட்டளைகளை மீறியவர்களுக்கு

அளிக்கப்படும் இறைத் தண்டனையாகவே கருதப்பட்டது (உப 28:28). மற்ற நூல்களில் இந்நோய், இறைவனால் அனுப்பப்பட்ட ஆவியின் செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 16:14; காண். 1 அர 22:19-23). சவுலிடம் காணப்பட்ட உளவியல் சீர்கேடு மிகுந்த பித்தவெறிக்கு உட்பட்ட நோயினைக் குறிப்பிடுவதாகவே விளக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அவர், மிகுந்த கேடு விளைவிக்கின்ற அறிவுப்பிறழ்ச்சி ஆகிய முரண் மூளை நோயினால்தான் துன்பப்பட்டார். இந்நோய், மிகுந்த வேதனையையும், மூளையின் பொதுவான நிலையில் பல மாறுதல்களையும், குழப்பங்களையும் உருவாக்கக் கூடியது. இந்த நிலையில் நோயாளியின் நிலைமை மயக்கக் காட்சியைப் போன்றதாக இருக்கும். நோயின் வளர்ச்சி அதிகரிக்கும்போது நோயாளி வன்முறையான செயல்களைச் செய்ய ஆரம்பித்துவிடுவார். இந்த நிலை, அறிவுசார்ந்த அல்லது உணர்ச்சி தொடர்பான சீர்கேடாகக் காட்சியளிக்கும் (காண். 1 சாமு 18:11; 20:30-34; 28:20; 31:5). அன்றைய சிந்தனையின் உள்ளப்பாங்கு, தாவீதின்பால் காத்து அரசன் ஆக்கிசு கொண்டிருந்த எண்ணத்தினையும் நடத்தையினையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது (1 சாமு 21:12-15).

நெபுகத்னேசருக்குச் சாற்றிக் கூறப்படும் மூளைநோய் (தானி-4) வரலாற்றுத் தன்மை கொண்டது என்பதற்கான கூறுகள் உள்ளன. அவர், மனோதத்துவ நோயிலேயே துன்பப்பட்டார். நோயாளி, அறிவுப் பிறழ்ச்சியுடைய மயக்க நிலைக்கான அறிகுறிகளைக் கொண்டிருந்ததோடு, தன்னையே ஒரு விலங்காகக் கருதி, விலங்கைப் போலவே நடந்து கொண்டார். ஹென்றி ராவ்லின்சன் என்பவர் கண்டுபிடித்த, பழுதடைந்த பாபிலோனியக் கல்வெட்டு ஒன்று இத்தகைய சூழ்நிலையைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோயாளிகள் அனைவரும் அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டனர். பேயோட்டுதலே இந்த நோயைப் போக்கும் ஒரே வழியாக இருந்தது. இயேசு, இத்தகைய நோயாளிகள் பலரைக் குணப்படுத்தினார் (காண். லூக் 8:2.30; 11:14). தனது சீடர்களையும் இதே பணியைச் செய்யப் பணித்துள்ளார் (மத் 10:1; மாற் 16:17). ஒருவரது பேசும்முறை அல்லது செயலை வைத்து அவரைப் பைத்தியம் பிடித்தவர் என்று கூறுவது வழக்கம் (யோவா 10:20; அ.ப. 12:15; 26:24-25; 1 கொரி 14:23).

# பொ

**பொகான் (BOHAN** - பெருவிரல்)

இவர் ரூபனின் மகனாகவோ, பேரனாகவோ, வழித்தோன்றலாகவோ இருக்கலாம். இவர் பெயரால் ஓர் எல்லைக் கல் இருந்திருக்கிறது. இது யூதா மற்றும் பென்யமின் பகுதிகளைப் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்திருக்கிறது (யோசு 15:6; 18:17). இக்கல் மலைப்பகுதியின் ஓரத்தில் யூதாவின் வடகிழக்கு மூலையில் எரிகோவுக்குத் தென்கிழக்கில் அடையாளம் காட்டப்படுகிறது. "பெருவிரலின் கல்" என்ற பெயரின் விவரிப்பு "ரூபனின் மகன் பொகான்" என்று ஆட்பெயரைக் கொண்டிருப்பதாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கலாம். இப்பெயர்- ஒரு காலத்தில் யூதாவின் வடகிழக்கு மூலையில் குடியேறி இருந்தனர் என்பதைச் சுட்டுகிறது.

**பொக்கரு (BOCHERU** - தலைப்பிள்ளை,அழுபவர்கள்)

பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். சவுலின் மகன் யோனத்தானின் வழித்தோன்றல். ஆட்சேலின் மகன் (1 நாள் 8:38; 9:44).

**பொசிதோனியு (POSIDONIUS)**

தங்கள் நாட்டிற்காகப் புரிந்த போர்களில் யூதாவின் வீரர்கள் காட்டிய வீரத்தையும் மனத்துணிவையும் கேள்வியுற்ற நிக்கானோர் அவர்களை வெல்ல முடியாதென்று அஞ்சினான். எனவே யூதா மக்கபேயுவுடன் நட்பு உடன்படிக்கை செய்து வரும்படி அதிகாரமளித்து, நிக்கானோர் மூன்று பேர் கொண்ட ஒரு தூதுக்குழுவை அனுப்பினான். அதில் ஒருவர்- பொசிதோனியு ஆவார் (2 மக் 14:19).

**பொட்சகத்து (BOZKATH** - உயர்ந்த இடம், உச்சி)

இஃது இலாக்கிசைச் சேர்ந்த செபேலா மாவட்டத்திலுள்ள யூதாவின் ஓர் ஊர் ஆகும் (யோசு 15:39). இஃது இருந்த இடம் இன்னும் தெரியவில்லை. யோசியா அரசனின் தாயான எதிதா பொட்சகத்தைச் சேர்ந்த அதாயாவின் மகள் ஆவாள் (2 அர 22:1).

**பொட்சரா (BOZRAH** - பாதுகாக்கப்பட்ட இடம், ஆட்டு மந்தை)

1. ஏதோமியரின் முக்கியமான பாதுகாக்கப்பட்ட நகரம். யோபாபு அரசனின் சொந்த நாடு (ஆதி 36:33; 1 நாள் 1:44). சாக்கடலுக்குத் தெற்கு - தென்கிழக்கே ஏறக்குறைய 32 கி.மீ. தொலைவிலும், பெத்ராவிற்கு வடக்கே ஏறக்குறைய 56 கி.மீ. தொலைவிலுமுள்ள இன்றைய புசெயிராதான் இவ்விடம் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது சமமான உச்சப்பகுதியில் கட்டப்பட்டு, ஆழமான வாடிகளால் (சிற்றாறுகள்) சூழப்பட்டு, கோட்டையினால் பாதுகாக்கப்பட்ட கரைகளால் வெளியுலகோடு சேர்க்கப்பட்டிருப்பதால், இதில் எதிரிகள் யாரும் எளிதில் நுழையவே முடியாது. இது வடக்கு ஏதோமிலிருந்த வலிமை வாய்ந்த நகரம் ஆகும்.

ஏதோமிற்கு எதிராக உருவாக்கப்பட்ட இறைவாக்கில், பொட்சரா ஏதோமின் வலிமைக்கு அடையாளமாகும்; அதனுடைய வீழ்ச்சி தோமினுடைய முழு வீழ்ச்சியையும் குறிக்கும் (எசா 34:16; 63:1; எரே 49:13; ஆமோ 1:12).

2. விரைவில் வரவிருக்கின்ற அழிவை அடையவிரும்புகின்ற மோவாபிலிருந்த ஒரு நகரம் (எரே 48:24). அனேகமாக இது பெட்சேராக இருக்கலாம்.

3. கிலயாதில் யூதா மக்கபேயு (கி.மு. 165 - 160) படையெடுத்த பொழுது, கைப்பற்றிய ஒரு நகரம். செலூக்கியக் கிரேக்கர்களின் கூட்டாளியான அம்மோனியரிடமிருந்து பிரிந்த படைப்பிரிவினர் இங்கு அடைக்கலம் புகுந்திருந்தனர் (1 மக் 5:26,28). தமஸ்குவிற்குத் தெற்கே ஏறக்குறைய 98 கி.மீ. தொலைவிலும், தெராவிற்குக் கிழக்கு, தென்கிழக்குத் திசையில் ஏறக்குறைய 40 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய புஸ்ரா எஸ்கி சாம் என்ற இடத்தில் இஃது இருந்ததாக

அடையாளம் காட்டப்படுகிறது. கிரேக்க, உரோமையர் காலத்தில், மத்திய தரைக் கடல், தமஸ்கு, அயிலா மற்றும் பாரசீகத் துறைமுகங்களுக்குச் செல்லும் பழங்காலச் சாலைகளின் சந்திப்பு இடமாக இருந்ததால், இது முக்கியம் வாய்ந்தது.

பாம்பே இதை கி.மு. 64-இல் வெற்றி கொண்ட பிறகு, இது நபத்தேயப் பேரரசின் வடகோடி நகரமானது; ஆனால், சில சமயங்களில் இப்பேரரசின் எல்லை தமஸ்கு வரை சென்றது (2 கொரி 11:32-33). திராசன் நபத்தேயர்களை வென்ற பின்பு, பொட்சரா அரேபியாவிலிருந்த உரோமை மாகாணத்தின் தலைநகரமானது. அலக்சாந்தர் செவேரு (கி.பி. 222-235) இதை ஒரு குடியிருப்பாக்கினான். அராபியனான பிலிப்பு (கி.பி. 244-249) இதை ஒரு மாநகரமாக்கினான்.

எழுபது சீடர்களில் ஒருவரால் நற்செய்தி போதிக்கப்பட்டு (லூக் 10:1-20), நீண்ட காலமாக அவுரானின் திருச்சபை மையமாக இருந்தது. பிறகு, இது நெஸ்தோரியன் மையமானது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகம்மது தன்னுடைய யாத்திரிகர்களுடன் இவ்விடத்தைப் பார்த்தார். அனேகமாக இங்குதான் அவர் கிறிஸ்தவ மதத்தைப் பற்றி மேலும் அறிந்து கொண்டார். கி.பி. 634-இல் முஸ்லீம்கள் வடக்கே படையெடுத்துச் சென்றபொழுது இது வீழ்த்தப்பட்டது. கி.பி. 1113-இலும், 1119-இலும் சிலுவைப்போர் வீரர்கள் இங்கு வந்தனர்.

**பொதுத்திருமுகங்கள் (CATHOLIC LETTERS)**

புதிய ஏற்பாட்டில் காணப்படும் யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா ஆகியோர் எழுதிய ஏழு திருமுகங்களைக் கத்தோலிக்கத் திருமுகங்கள் என அழைப்பது பாரம்பரியம். 'கத்தோலிக்கம்' என்றால் 'பொதுவானது' எனப்பொருள். விவிலியத்தில் காணப்படும மற்றத் திருமுகங்கள் குறிப்பான சபைகளுக்கு எழுதப்பட்டன. ஆனால், கத்தோலிக்கத் திருமுகங்கள் திருச்சபையின் எல்லோருக்கும் பொதுவாக எழுதப்பட்டன. சிரில் என்பவர், திருச்சபை கத்தோலிக்கத் தன்மையுடையது என்கிறார்; இதற்குக் காரணமென்னவென்றால் திருச்சபை உலக முழுவதற்கும் பொதுவானது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் யுசேபியு என்பவர் பவுல் திருமுகங்களைத் தவிர மற்றனைத்தையும் கத்தோலிக்கத் திருமுகங்கள் என அழைத்தார். புதிய ஏற்பாட்டில் இவை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திற்கும், திருவெளிப்பாட்டு நூலுக்கும் இடையில் அமைந்துள்ளன.

**பொதுவாழ்வு (COMMON LIFE)**

இது தூய ஆவியால் நிரப்பப்பெற்ற ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் ஒரு சிறப்புப் பண்பாகும். உலகு சார்ந்த பிரிவுகளைக் கடந்து, இறைவனோடு கொண்டிருக்கும் குழு ஒன்றிப்பின் விளைவாக உள்ள மனிதர்களுக்கிடையிலான தோழமையை இஃது எடுத்துக்கூறுகிறது (உரோ 15:27; கலா 3:27-29). செயல்முறையில் இஃது ஒருவருக்கொருவர் உதவி செய்வதில் உடைமைகள் அனைத்தையும் பொதுவாகக் கொண்டிருப்பதிலும், பொதுவாக உணவருந்துதலிலும் (காண். அ.ப. 6:1; கலா 2:12) அடங்கியுள்ளது (உரோ 12:13; 15:26; 2 கொரி 8-9). பொதுவாழ்க்கைக்கு எதிரான குற்றம் தூய ஆவிக்கு எதிரானது என லூக்கா கருதினார் (அ.ப. 5:3.9; கலா 2:12). இப்பொது வாழ்வின் ஊற்றும் மையமும் அருட்சாதன நற்கருணை உணவாகும்.

**பொதுவான, சாதாரணமான (COMMON)**

பழைய ஏற்பாட்டுக் குருக்களின் இலக்கியத்தில், இச்சொல் தூய்மை, புனிதம் என்பதற்கு எதிரானதாகும் (லேவி 10:10; 1 சாமு 21:5- சாதாரண அப்பம்; 1 சாமு 21:6 - சாதாரணப் பயணம்). பொதுமக்கள் என்பவர் (லேவி 4:27) குருக்களும், அரசியல் ஆட்சியாளரும் அல்லாதவர்கள்.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் முதன்மையாக யாவற்றையும் அடக்கும் பண்பை, அதாவது எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்படுவதைக்

குறிக்கிறது (தீத் 1:4-பொதுவான விசுவாசம்; யூதா 3-எல்லாருக்கும் கிடைத்துள்ள மீட்பு; அ.ப. 2:44-தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொண்டிருந்தனர்). சில இடங்களில் இச்சொல் சடங்கு முறைப்படி தீட்டானவற்றைக் குறிக்கின்றது (அ.ப. 10:14-15.28).

## பொதுவுடைமைச் சமூகம் (COMMUNITY OF GOODS)

எருசலேமில் திருச்சபை தோன்றிய காலத்தில் அப்போஸ்தலர்களும் விசுவாசிகளும் சமுதாய வாழ்க்கையில் கருத்தொருமித்து வாழ்ந்தனர். தங்களின் ஆன்மீக மற்றும் உலகச் செல்வங்களை மற்ற விசுவாசிகளோடு பகிர்ந்து கொண்டனர். எல்லாவற்றையும் பொதுவுடைமையாகக் கொண்டிருந்தனர் என லூக்கா இருமுறை குறிப்பிடுகிறார். அ.ப. 2:44-45-இல் தங்கள் உடைமைகளை விற்றுத் தேவைகேற்பப் பகிர்ந்து கொண்டனர். 4:32-35-இல் எவரும் இஃது என்னுடையது, அஃது உன்னுடையது என்ற தன்னல நோக்கோடு எதையும் கருதவில்லை. பர்னபா நன்கொடை அளித்த நிகழ்ச்சியும் (4:36-37), அனனியா சப்பீரா பொய்சொல்லி இறந்த நிகழ்ச்சியும் (5:1-11) இதற்குச் சான்று.

இந்தப் பொதுவுடமைச் சமூகத்தின் தொடக்க நிலையை நாம் இயேசு வாழ்ந்த காலத்திலேயே காணலாம் (லூக் 8:3; மாற் 10:21). ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதில் இவர்கள் பெருமகிழ்வுற்றார்கள். எஸ்ஸேனியர் என்னும் சமூகத்தினரும் இக்காலத்தில் இத்தகைய ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்தனர். கும்ரான் சுவடிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த பொதுவுடைமை வாழ்க்கையை "மார்க்சிசக் கம்யூனிசம்" என்று கூறமுடியாது. ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சமுதாய வாழ்க்கை அவர்களாக முன்வந்து நடத்திய ஒன்று. அதிலே ஏழைகள் கவனிக்கப்பட்டனர். கடவுளின் அருளே அவர்களைத் தூண்டியது. முதலில் சில சிக்கல்கள் ஏற்பட்டன (அ.ப. 6:1-6); இவை விரைவில் மறைந்து போயின. ஆனால், ஏழைகள் பிறவழிகளில் உதவிபெற்றனர் (கலா 2:10; 1 கொரி 16:1; 2 கொரி 8:1-15). இம்முறையின் பாதிப்பு வெகுகாலத்திற்கு நீடித்தது. குறிப்பாகத் திருச்சபையின் பொதுவாழ்வுத் துறவுச் சமூகங்களில் இன்றுமுள்ளது.

## பொந்தியு பிலாத்து (PONTIUS PILATE)

காண்க. பிலாத்து.

## பொய் (LIE)

தனது அயலாருடனான அல்லது இறைவனுடனான மனிதனின் உறவைப்பொருத்துப் பொய் என்ற சொல்லின் விவிலிய வழக்கு இரு வேறுபட்ட பொருள்களைக் கொண்டுள்ளது.

### I. அயலாருடனான உறவில் பொய்

1. **பழைய ஏற்பாடு:** சட்டத்தில் பொய்யைத் தடுப்பதானது, விசாரணையில் பொய்ச் சாட்சியம் அளிக்கும் துல்லியமான சமூகப் பின்னணியை அடிப்படையில் குறிக்கோளாகக் கொண்டுள்ளது (பத்துக் கட்டளைகள் : யாத் 20:16; உ.ப 5:20; யாத் 23:1-3.6-8; உ.ப 19:16-21; லேவி 19:11). ஆணையிட்டு அளிக்கப்படும்போது, பொய்யானது இறைவனது பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதாகவும் உள்ளது (லேவி 19:12). வரையறுக்கப்பட்ட பொருளானது இறைவாக்கினர்கள் மற்றும் ஞானிகளுடைய நல்லொழுக்க போதனையில் அடங்கியுள்ளது (பழ 12:17; செக் 8:17). ஆனால், பொய் சொல்லுதல் என்னும் பாவமானது விரிவான பரப்பையும் கொண்டுள்ளது. அது மோசடி, ஏமாற்றுதல், சிந்தனைக்கும் நாக்கிற்கும் இடையிலான உடன்பாடின்மை (ஓசே 4:2; 7:1; எரே 9:7; நாகூ 3:1) என்பனவாகும். யாவே அவை அனைத்தையும் அருவருக்கிறார் (பழ 12:22). அவர் ஏமாற்றுபவரல்லர் (யோபு 13:9). பொய்

பேசுபவனும் அழிவிற்குச் செல்கிறான் (சங் 5:7; பழ 12:19; சீரா 20:25). தந்தையின் ஆசியைப் பெற்றுச் சென்ற சூழ்ச்சிக்கார யாக்கோபுவும் தனது முறைக்கு, மாமனார் லாபானால் ஏமாற்றப்பட்டார் (ஆதி 29:15-30).

2. புதிய ஏற்பாடு: முழு வாய்மை தவறாமையின் கடமையானது இயேசுவால் தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. "நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும், 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள்" (மத் 5:37; யாக் 5:12). பவுல் அதனை நடத்தையின் விதியாக அமைக்கிறார் (2 கொரி 1:17-18). பழைய ஏற்பாட்டுப் படிப்பினைகளும் திருப்பி உரைக்கப்படுகின்றன. ஆயினும், அவை ஓர் ஆழ்ந்த செயல்நோக்கம் பெறுகின்றன. "இனி ஒருவரிடம் ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில், பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்து விட்டு... புதிய இயல்பை அணிந்து கொண்டீர்கள்" (கொலோ 3:9-10). "உண்மையையே பேசுங்கள். ஏனெனில், நாம் ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம்" (எபே 4:25). பொய் பேசுவதென்பது நெறிபிறழ்ந்த இயல்பிற்குத் திரும்புவதாக இருக்கும்; கிறிஸ்துவில் நாம் கொண்டிருக்கும் ஒன்றிப்பிற்கு எதிராக இருக்கும். அப்போஸ்தலர் பணியின்படி அனனியாவும் சப்பீராவும் பேதுருவுடன் பொய் பேசியபோது, உண்மையில் தூய ஆவியிடமே பொய் பேசியதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. (அ.ப. 5:1-11). கிறிஸ்தவ சமுதாயமானது கவனத்தில் கொள்ளப்படும் போது சமூக உறவுகளின் தோற்றமானது கடந்து செல்லப்படுகிறது.

II. இறைவனுடனான உறவுகளில் பொய்:

1. உண்மை இறைவனைப் புறக்கணித்தல்: யாவேயே உண்மையின் இறைவன். ஏமாற்றுச் சிலைகளிடம் திரும்புவதன் மூலம் அவரைப் புறக்கணிப்பதென்பது மிகப்பெரிய பொய்யாகும். இப்பொய் இனிமேல் உதடுகளினுடையதன்று, வாழ்வினுடையதாகும். புனித ஆசிரியர்கள் இந்த மோசடியை முடிவில்லாமல் கண்டனம் செய்கின்றனர்; அதற்கு எதிராக வஞ்சப்புகழ்ச்சியான பாடல்கள் (எரே 10:1-16; எசா 44:9-20; சங் 115:5-7), ஏளனக் கதைகள் (தானி 14), இழிவான பட்டங்கள், அமைக்கின்றனர்; இச்சிலைகள் ஒன்றுமில்லாதவை (எரே 10:8), அருவருப்பானவை (4:1), வீணானவை (2:5), பயனற்றவை என்று அவற்றைப் பழிக்கின்றனர். அவர்களுடைய பார்வையில் ஒவ்வொரு மனமாற்றமும் முதலாவதாக ஒருவன் பணிபுரிந்த சிலைகளின் பொய்யான மற்றும் ஏமாற்றக்கூடிய இயல்பினை அறிக்கையிட வேண்டும் (16:19). உண்மையான உயிருள்ள இறைவனுக்கு ஊழியும் புரிவதற்கென (1 தெச 1:9), பொய்யான சிலைகளினின்று திரும்புமாறு புறவினத்தாரைத் தூண்டும்போது, பவுல் புரிந்துகொள்வது இதுவே (உரோ 1:25).

2. பொய்யின் பாவமும் சமய வாழ்வும்:

அ) உண்மையான இறைவனைப் புறக்கணிப்பதனுடைய மிக நுட்பமான முறையைப் பழைய ஏற்பாடும் அறிந்திருந்தது. அஃது ஒருவரது வாழ்வில் பொய் பேசும் நிலையான வழக்கத்தைக் கொண்டிருப்பதாகும். மனிதர்க்கும் மற்ற நல்லவற்றிற்கும் எதிரிகளான இறைப்பற்றற்றோரின் நடத்தை இவ்வாறே அமைந்திருந்தது. அவர்கள் பொய்யைத் தவிர வேறு எதையும் வாயில் கொண்டிராத (சங் 59:13; சீரா 51:2; எரே 9:2), இரட்டை நாவுடையவர்கள் (சீரா 5:14). அவர்கள் பொய்யில் நம்பிக்கை கொண்டிருந்தனர் (ஒசே 10:13). மனமாற்றத்தை மறுக்குமளவிற்கு அவர்கள் அதனுடன் நெருக்கமாக இருந்தனர் (எரே 8:5). அவர்களுடைய வெளிப்படையான மனமாற்றங்களும் பொய்யே (3:10). தன்னிலேயே விடப்பட்ட மனிதனைப் பற்றிப் போலி எண்ணம் கொள்வது பயனற்றதாகும். தன்னியலாகவே அவன் ஒரு பொய்யன் (சங் 116:11). மற்றொரு புறம், உண்மையான இறைவனுடனான

ஒன்றிப்பிலேயே இருப்பதற்கென உண்மையான பிரமாணிக்கமுள்ள மனிதன் தனது வாழ்வினின்று பொய்யுரைப்பதை அகற்றுகிறான் (சங் 15:2-4; 26:4-5). இவ்வாறே, இறைவன் தனது மக்களுக்கே விட்டு விடுகின்ற மொத்த எளிய எஞ்சியோரைப் போன்று (செப் 3:13), யாவேயின் ஊழியரும் இறுதிக்காலங்களில் நடந்து கொள்வர் (எசா 53:9).

ஆ) இந்த எடுத்துக்காட்டான மாதிரி கிறிஸ்துவில் நிறைவேறியதைப் புதிய ஏற்பாடு எடுத்துக்காட்டுகிறது (1 பேதுரு 2:22). இதன் காரணமாகவே எல்லாப் பொய்களையும் விலக்கி வைப்பதானது கிறிஸ்துவ வாழ்வின் முதல் தேவையாக உள்ளது (2:1). இதன் மூலமாக உதடுகளின் பொய் மட்டுமின்றி, எல்லாத் தீய பண்புகளும் உள்ளடங்கும் என்று நாம் புரிந்து கொள்கிறோம் (திருவெளி 21:8). கிறிஸ்துவின் தோழர்களாகிய தேர்ந்தெடுக்கப்பட்டோர் இத்தகைய பொய்யை ஒருபோதும் அறிந்ததில்லை (14:5). இயேசுவில் வெளிப்படுத்தப்படும் இறை உண்மையைப் புறக்கணிப்பவன், பொய்யன் என்ற பெயருக்குச் சிறப்பான தகுதியுடையவன் ஆகிறான். இயேசுவே கிறிஸ்து என்பதை மறுப்பவனே எதிர்க்கிறிஸ்து (1 யோவா 2:22). அவனுடன் பொய்யானது இனியும் ஒழுக்க அமைப்பைச் சேர்ந்ததன்று; சிலை வழிபாட்டினைப்போன்று அதுவும் தன்மையால் சமயம் சார்ந்ததாகும்.

3. பொய்யின் ஆதரவாளர்கள்:

அ) எதிர்ப்பின் தன்மையில் இறைவனின் முன்னிலையில் இப்போது இந்தப் பொய் பேசும் உலகில் மனிதனைத் தள்ளுவதற்கு எல்லா நேரங்களிலும் ஏமாற்று வழிகாட்டிகள் உள்ளனர். சில நேரங்களில் இறைவனே இகழ்ந்த பொய்யான இறைவாக்கினர்களைப் பழைய ஏற்பாடு அறிந்திருந்தது (1 அர 19:22-23). எரேமியா (5:31; 23:9-40; 28:15-16; 29:31-32), எசேக்கியேல் (13) மற்றும் செக்கரியா (13:3) முதலிய உண்மையான இறைவாக்கினர்களும் இவர்களை அடிக்கடி கடுமையான சொற்களால் கண்டித்தனர். இறைவார்த்தைக்குப் பதிலாக, பொய்யான செய்திகளை அவர்கள் மக்களுக்குக் கொண்டு சென்றனர்.

ஆ) புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அவ்வாறே யூத மக்களின் குருட்டு வழிகாட்டிகளைக் கண்டிருக்கிறார் (மத் 23:16....). அவரில் விசுவாசம் கொள்ள மறுக்கும் இந்த வேடதாரிகள் பொய்யர்கள் (யோவா 8:55). நற்செய்தியினின்று மனிதரைத் திருப்புவதற்கென உலகம் முழுவதும் காலந்தோறும் எழவிருக்கின்ற மற்றப் பொய்யர்களுக்கு அவர்கள் முன்னோடிகள். எதிர்க் கிறிஸ்துகள் (1 யோவா 2:18-28), போலி அப்போஸ்தலர்கள் (திருவெளி 2:2), போலி இறைவாக்கினர்கள் (மத் 7:15), போலி மெசியாக்கள் (மத் 24:24; காண். 2 தெச 2:9), போலிப் போதகர்கள் (2 திமொ 4:3-4; 2, பேதுரு 2:1-3; காண். 1 திமொ 4:1-2), நற்செய்தி போதிப்பதைத் தடுக்கும் யூதர்கள் (1 தெச 2:14-16), போலிச்சகோதர்கள் மற்றும் உண்மையான நற்செய்தியின் எதிரிகள் ஆகியோர் பொய்யர்கள் ஆவர் (கலா 2:4). எலிமா மந்திரவாதி சம்பவத்தில் பவுல் செய்தது போன்று (அ.ப. 13:8-10), கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ள வேண்டிய பொய்யின் ஆதரவாளர்கள் ஏராளமாக உள்ளனர்.

**III. சாத்தான், பொய்களின் தந்தை:** இவ்வாறாக, உலகமானது நன்மை மற்றும் தீமை, உண்மை மற்றும் பொய் என்ற இரு குழுக்களாக, ஒழுக்கம் மற்றும் சமயம் என்ற இருவிதப் பொருளில் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது உறுதியாக இறைவனுடையது. இரண்டாவது உலகனைத்தையும் வஞ்சிக்கும் பழைய பாம்பாகிய (திருவெளி 12:9) சாத்தானைத் தலையாகக் கொண்டுள்ளது. ஏவாளைக் கெடுத்த நாள்முதல் (ஆதி 3:13) வாழ்வின் மரத்தினின்று அவளைப் பிரித்ததனால் "தொடக்கத்திலிருந்தே கொலையாளியாக உள்ளான்" (யோவா 8:44). அனனியாவையும், சப்பீராவையும் தூய

ஆவியிடம் பொய் பேசுமாறு தூண்டியவனும் இவனே (அ.ப. 5:3). மந்திரவாதியாகிய எலிமா இவனது மகன் (13:10). கிறிஸ்துவில் விசுவாசங்கொள்ள மறுக்கின்ற அவநம்பிக்கை வாய்ந்த யூதர்கள் சாத்தானையே சார்ந்துள்ளனர். அவர்கள் பொய்யனாகவும், பொய்களின் தந்தையாகவும் உள்ள பேயின் மக்கள் (யோவா 8:41-44). எனவே, "இயேசு உண்மையை அவர்களிடம் பேசியதன் காரணமாக," இயேசுவைக் கொல்லவும் அவர்கள் விரும்பினர் (8:40). நற்செய்தியினுடைய உண்மையின் பகைவர்களாகிய போலிப்போதகர்களை எழுப்பியவன் அவனே (1 திமொ 4:2). கிறிஸ்தவர்களுக்கெதிராகப் போரிடுவதற்கென (திருவெளி 12:17), இறை நிந்தனைகளை வாய் முழுக்கக் கொண்டுள்ள, பேரரசான கடலின் விலங்கிற்குத் தனது வல்லமைகள் அனைத்தையும் அளித்தான் (13:1-8). மனிதரை ஏமாற்றிப் பொய்யான சிலையை வணங்கச் செய்வதற்கென, போலி இறைவாக்கினர்களின் வேடம் பூண்ட மண்ணுலகின் விலங்கானது இன்னும் அவனையே சார்ந்துள்ளது (13:11-17). உலகின் அச்சானது இந்த இரண்டு குழுக்களுக்கும் இடையில் செல்கிறது. தங்களுடைய விசுவாசம் சிதைக்கப்படும் அளவிற்குப் பேயினுடைய தந்திரங்களால் தவறாக நடத்தப்பட, கிறிஸ்தவர்கள் தங்களை அனுமதிக்காமலிருக்க வேண்டியது மிக முக்கியமானதாகும் (2 கொரி 11:3). எனவே, உண்மையில் நிலைத்திருப்பதற்கென, தீயோனிடமிருந்து விடுவிக்குமாறு அவர்கள் இறைவனை நோக்கிச் செபிக்கவேண்டும் (மத் 6:13).

**பொருளைப் பறித்தல் (EXTORTION)**

இச்சொல் பிறரைக் கசக்கிப்பிழிதல், பிறரைக் கொடுமைப்படுத்துதல், கொள்ளைப் பொருள் என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'கொடுமை செய்வதில் நம்பிக்கை வைக்க வேண்டாம்; பிறர் பொருளைப் பறிப்பதில் வீண் பெருமை கொள்ள வேண்டாம்' என்று சங்கீத ஆசிரியர் எச்சரிக்கிறார் (சங் 62:10). இத்தகைய செயல்களில் நம்பிக்கை கொள்வது கடவுள் மேல் உள்ள நம்பிக்கைக்கு நேர் எதிர்மாறானது. ஏனெனில், மனிதனின் நல்ல எண்ணங்களை நிறைவாக்குபவர் கடவுளே (சங் 61:1தொ). கொள்ளையடிப்பவன் மீட்பை அடையமாட்டான் (சங் 49:5-15). ஒவ்வொருவனும் அவனவன் செயலுக்கேற்ப, தண்டனை பெறுவான் என்று எசேக்கியேல் கூறும்போது, பிறரைக் கொடுமைப்படுத்திக் கொள்ளையடித்தலை ஒரு பெரிய குற்றமாகக் குறிப்பிடுகிறார் (எசே 18:18). அவர் காலத்தில் கொள்ளையடித்தல் பலரால் செய்யப்படுகின்ற குற்றமாக இருந்தது (எசே 22:7.12.29). இயேசுவும் கொள்ளையடித்த பரிசேயர் கூட்டத்தைச் சாடுகிறார் (மத் 23:25; லூக் 11:39; காண். 18:11).

**பொர்த்துனாத்து (FORTUNATUS)**

இவர் பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தை எழுதியபோது அவரோடு இருந்த கொரிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த ஒரு முக்கியமான உறுப்பினர் (1 கொரி 16:17). இவரோடு இருந்த மற்றக் கொரிந்தியர் ஸ்தேவானா, அக்காய்க்கு ஆகியோராவர். இவர்கள்தான் கொரிந்தியத் திருச்சபை பற்றிய செய்திகளை எபேசிலிருந்த பவுலுக்குக் கொண்டு வந்தவர்களும் (5:9), கொரிந்துக்கு முதல் திருமுகத்தைக் கொண்டு சென்றவர்களும் ஆவர்.

**பொவனேர்சேசு (BOANERGES – இடியின் மக்கள்)**

செபதேயுவின் புதல்வர்களான யாக்கோபுவுக்கும், யோவானுக்கும் இயேசு அளித்த பட்டப்பெயர் (மாற் 3:17). மாற்கு இச்சொல்லை "இடியின் மக்கள்" என்று மொழிபெயர்க்கிறார். ஆனால், எவ்விதம் இப்பெயர் அவர்களுக்குப் பொருந்தும் என்று சுட்டிக்காட்டவில்லை. இவர்கள் புயல் வேகமுடைய மனப்போக்குடையவர்களா (மாற் 9:37)? இவர்கள் இரட்டையராய் இருந்ததால், இப்பட்டப்பெயர் தியோஸ் கூரி பற்றிய பழங்கால இதிகாசத்தைப் பிரதிபலிக்கிறா?

மூலத்தில் இப்பெயர் அஸ்போஸ்தலர்கள் அனைவரையும் குறித்திருக்கலாம் என்பதற்கு ஓரளவு வாசகச்சான்று உள்ளது.

**பொறாமை (ENVY, JEALOUSY)**

ஒரே செயலாற்றும் உணர்ச்சியின் இரு கூறுகளில் ஒன்றைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது. நேர்பொருளில், பொறாமை ஆர்வத்தைப் போன்றது. இப்பொருளில் இச்சொல் மனிதருக்கும் இறைவனுக்கும் சாற்றிக் கூறப்படும். எதிர்ப்பொருளில் பொறாமை கொள்வது பாவமாகும். அதே எபிரேய மற்றும் கிரேக்கச் சொற்கள் இரு கூறுகளையும் குறிக்கப் பயன்படுகின்றன. ஆகவே, சூழ்நிலைக்கேற்ப இச்சொல்லின் பொருளை வேறுபடுத்த வேண்டும்.

II. **இறைவனது** பொறாமை: பழைய ஏற்பாடு, இறைவன் "பொறாதவர்", சகிக்க மாட்டார் என்று அடிக்கடி உறுதியாகக் கூறுகிறது (யாத் 20:5; 34:14; உப 4:24; யோசு 24:19; நாகூ 1:2). இச்சொல் பெயர்ச்சொல்லாகவும் (எண் 25:11; யோபு 5:2; சங் 79:5), வினைச்சொல்லாகவும் (ஆதி 37:11; எண் 11:29) மனித மற்றும் இறை, நேர்மையான மற்றும் பாவமான, பொறாமையின் இரு பண்புகளையும் குறிக்கப்பயன்படுகிறது. சில இடங்களில் கடவுள் பொறாமைச் சினம் (வெஞ்சினம்) கொள்வதாகவும் (சங் 79:5), பொறாமைக்குத் (ஆத்திரம்) தூண்டப்படுவதாகவும் (78:58) கூறப்படுகிறார். இறைவனது மேலாண்மைக்கு எதிராக எழும் சவாலுக்கு, குறிப்பாக இஸ்ராயேலுடன் கொண்ட உடன்படிக்கையை முறிப்பதற்கு (பிரமாணிக்க மின்மைக்கு), ஏற்ற நேர்மையான பதிலாக, இறைவனது பொறாமை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் விவரிக்கப்படுகிறது. உடன்படிக்கை முறிவு என்ற பொருளில் இறைவாக்கினர்கள் திருமண உருவகத்தைச் சில சமயம் பயன்படுத்துகின்றனர். இதில் இறைவன் பொறாமையுள்ள கணவனாகவும், இஸ்ராயேல் விபசார மனைவியாகவும் விவரிக்கப்படுகின்றனர் (எசே 16:42). இஃது இஸ்ராயேல் சிலைவழிபாட்டில் மீண்டும் மீண்டும் வீழ்ந்ததைக் குறிக்கிறது. இந்தப் பொறாமை இஸ்ராயேலின் பாவத்திற்கு எதிர் நிலையாக இருந்தால், இஃது இரண்டு நேர் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவை: 1) இறைவனது பிரமாணிக்கமும், இறுதியாக அவரது மக்களோடு அவர் கொண்ட உறவில் அவர்காட்டும் இரக்கமும் ஆகும். இவ்வாறு, இஸ்ராயேலின் போர் வீரனும், பாதுகாவலனும் என்ற அளவில் அவரது "ஆர்வத்தைக்" குறிக்கிறது. 2) இஸ்ராயேலின் சிலைவழிபாட்டில் இறைவனது தனித்தன்மையும், தூய்மையும் பங்கப்படுத்தப்படுகின்றன (எ.க. யோசு 24:19; எசே 39:25). புதிய ஏற்பாடும் சிலைவழிபாடு இறைவனைப் பொறாமைக்குத் (சினம்) தூண்டுவதைச் சுட்டுகிறது.

இறையியல் வல்லுநர்கள், இத்தகைய மொழியமைப்பை இறைவனுக்கு மனித இயல்புகளைச் சாற்றிக் கூறுவதாக விளக்கம் அளித்து, எளிதில் ஒதுக்கி விடுகின்றனர். ஆனால், இறைவனைப் பற்றிய எல்லா மொழியமைப்பும் மனித இயல்புகளை அவருக்குச் சாற்றிக் கூறுவதாக இருப்பது அவசியமாகும். இறைவன் உணர்ச்சி மாற்றம் அடைய முடியாது என்ற கிரேக்கக் கருத்தை ஆய்வு செய்யாமல் ஏற்றுக் கொள்வதால், இறைவனைப் பற்றிய இத்தகைய மொழியமைப்புப் பிரச்சனை திரித்துக் கூறப்பட்டது எனலாம். இறைவனின் பொறாமையின் பொருளை, அவர் தூயவர் என்ற அவரது தன்மையில் தேடவேண்டும். அது படைப்பின்பால் அவர் கொண்டிருக்கும் அன்பு மற்றும் மதிப்பின் ஓர் அளவாக இருக்கலாம். அவரைவிட அளவிடமுடியாத விதத்தில் தாழ்ந்த ஒரு படைக்கப்பட்ட உயிரின் கிளர்ச்சி அவரில் பொறாமையை எழச் செய்கிறது என்று கூறலாம்.

II. மனிதப்பொறாமை: மனிதனது மற்ற எல்லாக் குணங்களையும் போல, பொறாமையும் நேர்முறை உணர்ச்சியாகவோ, பாவமான சீர்கேடாகவோ இருக்கலாம். அதன் நேர்முறைப்

பண்பில் அஃது ஓர் ஆர்வமாகும். இறைவனது பொறாமையைப் போல் அது பிறரது நன்மையில் அக்கறை கொள்கிறது. அஃது இறைவனுக்காகக் கொள்ளும் பொறாமையாகவும் சில சமயம் அமையலாம். இவ்வாறு எலியா, பாகாலின் இறைவாக்கினர்களோடு கொண்ட போராட்டத்தில், ஆண்டவருக்காகப் பொறாமை (பேரார்வம்) கொண்டார் (1 அர 19:10.14); அல்லது அஃது ஒருவர் மற்றொரு ஆளுக்காகக் கொள்ளும் பொறாமையாகும். இவ்வாறு, ஒரு கணவன் தன் மனைவியிடம் பிரமாணிக்கத்தை எதிர்பார்ப்பது அவனது சட்ட உரிமையாகும். இதுவும் ஒருவிதப் பொறாமையாகும் (எண் 5:14). நேர்முறைப் பொறாமையின் அவசியமான, தன்னலமற்ற பண்பை இதில் கடைப்பிடிப்பது கடினம். ஆனால், இஃது உண்மையான சட்ட உரிமையை அடிப்படையாகக் கொண்டதால், இது நேர்மையானது. இவ்வாறு மோசேயின் சட்டம், விபசாரம் செய்ததாகச் சந்தேகிக்கப்படுபவர்களைச் சோதித்தறியும் முறையையும் கொடுக்கிறது (5:11-31). அப்போஸ்தலரான பவுல், கொரிந்தியர்பால் தாம் கொண்டிருக்கும் "தெய்வீகப் பொறாமையைப்" (அன்பார்வத்தைப்) பற்றிப் பேசுகிறார் (2 கொரி 11:2).

மறுபுறத்தில் மனிதப் பொறாமை-அனேகமாக, தவிர்க்கமுடியாத விதத்தில் பாவமானதாகும். நேர்மையான பொறாமைக்கு எதிர்மாறாக, இந்தப் பாவமான சீர்கேடு தனக்கு இயல்பாகவே உரிமையல்லாத ஒன்றின்மேல் உரிமை கொண்டிருப்பதாகக் கொள்ளும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய பொறாமைக்கு எடுத்துக்காட்டுகள் விவிலியத்தில் பல உள. எ.கா. யோசேப்புக்கு யாக்கோபு காட்டிய தனிச்சலுகைகளைப் பற்றி யாக்கோபின் மற்றப் புதல்வர்கள் கொண்ட பொறாமை; இவ்வாறு, தாத்தானும் அபிராமும் மோசேபால் பொறாமை கொண்டனர் (சங் 106:16-18; காண். எண் 16:1-40). ஞான இலக்கியம், பொறாமையால் வரும் ஆபத்துகள் மற்றும் அது தன் விருப்பிழைவோடு அஃது அனேகமாகத் தவிர்க்க முடியாத விதத்தில் கொண்டிருக்கும் தொடர்பு ஆகியவை பற்றி எச்சரிக்கிறது (எ.கா. யோபு 5:2; பழ 6:34; உ.ச. 8:6). புதிய ஏற்பாட்டில் பொறாமை தீய பண்புகளின் பட்டியலில் காணப்படுகிறது. பவுல் இதை "ஊனியல்பின் செயல்களோடு" தொகுக்கின்றார் (கலா 5:20; காண். உரோ 13:8-14). இத்தகைய பொறாமை அழிவுக்கும் பிளவுக்கும் இட்டுச்செல்லும் (1 கொரி 3:3; 2 கொரி 12:20; காண். யாக் 3:14-16). அவருக்கே உரிய விதத்தில் பவுல், மற்றப் பாவங்களைப்போல் பொறாமையும் இறுதி மீட்பு நோக்கத்திற்குப் பயன்படலாம்; இறைவன் தமது அருள் பாலிப்புத் திட்டத்தை நிறைவேற்ற இதைப் பயன்படுத்தலாம்; இவ்வாறு, இஸ்ராயேலைப் பொறாமை கொள்ளச் செய்து, கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ள யூதர்களைத் தூண்டுவதற்காக மீட்பு புறவினத்தாருக்கும் அளிக்கப்பட்டுள்ளது என்று பவுல் விளக்குகிறார் (உரோ 10:9; 11:11.14; காண். அ.ப. 5:17தொ; 17:1-15). இதில் கிறிஸ்தவத் தூதின் வெற்றி யூதத் தலைவர்களிடையே பொறாமையைத் தூண்டியது.

## பொறிகளும் கண்ணிகளும் (TRAPS AND SNARES)

பொறிகளும், கண்ணிகளும், பறவைகளையும், விலங்குகளையும் பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் (யோபு 18:8). பவுல் கூற்றுப்படி, எதிர்பார்க்காத திடீர் மரணம், திடீர்த் துக்கச் சம்பவம் ஆகியவற்றிற்குப் பொறிகளும், கண்ணிகளும் உவமைகளாகக் கூறப்பட்டன. விவிலியத்தில் இவைபற்றிக் குறிப்புகள் பல உள்ளன. ஆனால், அவை பெரும்பாலும் உருவக வடிவில் பயன்பட்டுள்ளன. இக்கருவிகள் பற்றிய துல்லியமான விவரிப்புகள் கொடுக்கப்படவில்லை. ஆனாலும், மூன்று வகையான பொறிகளை விவிலியத்தில் நாம் காண்கிறோம்.

அ) பறவைகளைப் பிடிக்கப் பயன்பட்ட பொறிதான் எல்லோரும் அறிந்தது. சங் 90:3;

123:7 ஆகிய பகுதிகள் "வேடர் கண்ணி" என அழைக்கிறது. இன்றும் அரபு நாடுகளில் இது பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பொறி, மனிதர்களால் கையாளப்படுவதாகவும், தானியங்கித் தன்மையதாகவும் இருந்தது.

ஆ) விலங்குகளைப் பிடிக்கப் பயன்பட்ட கண்ணி மற்றொன்றாகும் (சங் 141:9; எரே 12:13). இது கயிற்றுச் சுருக்குகளால் ஆன பொறியாகும். இது புதர்களில் அல்லது விலங்குகள் போகும் வழிகளில் மறைக்கப்பட்டிருக்கும் (பழ 22:5; ஓசே 9:8).

இ) மூன்றாவது வகையானது- குழிகளில் விலங்குகளை விழச்செய்து பிடிப்பதாகும். குழிகள் வெட்டப்பட்டு, அவற்றின்மேல் இலை தழைகளைப் பரப்பி, சமதரைபோல் செய்துவிடுவது. பின்பு விலங்குகள் அதன் மேல் நடந்தால், குழியில் விழுந்து மாட்டிக்கொள்ளும் (எசா 42:22; எரே 18:22; 48:43-44).

மறைந்திருந்து திடீரென்று தாக்கும் இடர் அல்லது சாவை, கண்ணி உருவகமாகக் குறிக்கிறது (யோபு 22:10; சங் 18:5; லூக் 21:34). பகைவன் பொறியை அமைக்கும் போது கொடுநோக்கின் தொனி தெரிகிறது (1 சாமு 28:9; சங் 140:5). பொறியின் தன்மை என்னவெனில், முதலில் கவர்ச்சியான ஒன்று, பிற்பாடு அழிக்கும் கருவியாக மாறிவிடுவதேயாகும். எனவே, பொய்த்தேவர்களை வழிபடுவது முதலில் இன்பகரமாக இருந்தாலும் பிற்பாடு அழிவையே தரும் என்று விவிலியம், பொறிகளோடு இதை ஒப்பிடுகிறது (யாத் 23:33). கோபியான ஒரு மனிதனுடன் நட்புக்கொள்வதும், பொறியில் சிக்கிக் கொள்வதற்கு உவமையாகக் கூறப்படுகிறது (பழ 22:25).

**பொறுக்கிச் சேர்த்தல் (GLEANING)**

எபிரேயச் சட்டப்படி நிலத்தில் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது, வரப்போரக் கதிரை அறுக்கக்கூடாது. சிந்திக்கிடக்கும் கதிரையும் பொறுக்கக்கூடாது. திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு செய்யக்கூடாது. சிந்திக்கிடக்கும் பழங்களைப் பொறுக்கக்கூடாது. இவற்றை எளியோருக்கும், அன்னியருக்கும், விதவைகளுக்கும் விட்டுவிட வேண்டும் (லேவி 19:9-10; 23:22; உப 24:19-22; காண். நீதி 8:2; ரூத் 2:2-3).

**பொறுப்புணர்வு (RESPONSIBILITY)**

வயது வந்த ஒருவனோ, பண்பாட்டில் முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு சமுதாயமோ தன் பொறுப்புகளை உணர்ந்து நிறைவேற்றுவது ஒரு பெரிய பிரச்சனையாகும். என்பதை விவிலியம் நன்கு அறிந்திருக்கிறது. ஆனால், இது பற்றிய செய்திகளை எல்லாம் திரட்டிக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆகையால், இவை சிறிதளவே இடம் பெறும். மாறாக, கடவுளுக்கு முன்னர் மனிதனுக்கு இருக்கும் பொறுப்புகளைச் சில முக்கிய கோணங்களில் ஆய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும்.

1. **ஒரு மனிதன் வழியாகப் பாவம் உலகினுள் நுழைந்தது** (உரோ 5:12): மனிதச் சாவுக்கு யார் பொறுப்பு? வாழ்வதைவிடச் சாவதே மேல் என்று எண்ணும்படியான நிலைக்கு யார் பொறுப்பு? இவை போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்காகத்தான் ஆதாமின் பாவம் பற்றிய கதை விவிலியத்தில் இடம் பெற்றது (ஆதி 2-3). இவற்றிற்குப் பவுல் பின்வருமாறு பதில் கூறுகிறார். உலகிலுள்ள தீமைகளுக்கு இறைவன் காரணமல்லர்; மாறாக, மனிதனே காரணம் ஆவான். அவனது ஆணவச் செயலே பாவத்தின் அரக்கத்தனமான ஆற்றலை ஆட்சிப் பீடம் ஏற்றியது. உலகிலுள்ள தீமைகளுக்கு மனிதனின் செயல் முழுக்காரணமாக இல்லாவிட்டாலும், அதுவே உண்மையான மூலகாரணமாகும்.

ஆனால், இந்தப்பதில் நம்மைத் திகைக்க வைப்பதோடு, நாம் கேள்விப்படாத ஒன்றுமாகும். ஏனெனில், இஸ்ராயேலைச் சுற்றியிருந்த பெரிய சமயங்களுக்குத் தீமை தேவர்களைப்போல்

பழமையானதாகும். இது தேவர்களிடமிருந்து மனிதர் படித்த பாடமாகும். ஆகவே, மனிதர்களும் தேவர்களும் அதே நேரத்தில் இதற்குப் பொறுப்புள்ளவர்களாகவும் பொறுப் பில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அவரவர்கள் தன்மைக்கேற்ப நல்லவையும் தீயவையும் சேர்ந்த வாரிசாக, ஆனால் இவற்றை வேறுபட்ட அளவில் கொண்டவர்களாக, இருக்கிறார்கள். இது பிற சமயங்களின் கருத்தாகும். மறுபுறம் கடவுள் நல்லவர்; படைப்புக்கள் நல்லவை; படைப்பிற்குப் பிறகே தீமை தோன்றியது என்ற விவிலியம் கூறும்போது, தீமைக்குரிய பொறுப்பைப் படைக்கப்பட்ட சுதந்தரத்தின் மீது அது சுமத்துகிறது.

இந்தப் பொறுப்புணர்வு மனித தராதரத்தைவிட அதிகமானது. பேயின் சோதனை பற்றிய கதையைக் கூறும்போது விவிலிய விவரிப்பு இதைப்பற்றி உணர்கிறது. மனிதன் தன் பாவநிலையில் தன்னுடைய பொறுப்புணர்வால் திணற அடிக்கப்பட்டாலும், அதற்காக அந்தப் பொறுப்புணர்வை நிராகரிக்க முடியாதென்பதும் விவிலியத்திற்குத் தெரியும். அவன் விரும்பாத தீமையைப் பாவத்திலிருந்து வெளிக்கொணரும் ஊழையும், அதே சமயத்தில் பலவீனமும் (காண். ஊன்) கொடுமையும் சேர்ந்த கலவையான அவனது குற்றங்கள்பற்றிய சரியான விளக்கத்தையும் ஒவ்வொரு பாவியும் இப்பக்கங்களில் காணலாம். உலகில் உள்ள தீமைக்குரிய பொறுப்பில் தன்னுடைய பங்கையும் அவன் இவற்றில் காணலாம்.

**2. சட்டம் இல்லாதிருந்தால் பாவம் என்ன என்பதை அறிந்திருக்க மாட்டேன்** (உரோ 7:7): இஸ்ராயேலுக்குச் சட்டம் கடவுளால் கொடுக்கப்பட்ட "வழித்துணை" ஆகும் (கலா 3:24). இது மிகவும் ஆழ்ந்த பொறுப்புணர்வை இஸ்ராயேலிடம் தோற்றுவித்தது. "நீ இதைச்செய்ய வேண்டும்...நீ அதைச் செய்யக்கூடாது..." என்று அது கூறியபோது, அஃது ஒவ்வொரு இஸ்ராயேலனின் கண்முன்பாகவும் அவனுடைய பொறுப்புகளைக் கொண்டு வந்ததோடு, அவன் இவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தான் என்பதையும் நிரூபித்துக்காட்டியது. சூழ்நிலை வேறுபாடுகளுக்கும் உள் எண்ணங்களின் பாதிப்புக்கும் இடம் அளிப்பதன் மூலம், சட்டம் அவனது மனச்சாட்சியை நயப்படுத்தித் தூய்மைப் படுத்தியது. இறைவன் விரும்புவது நல்லதை, கண்டிப்பதோ தீயதை என்று காட்டும்போது, அவனது செயலுக்கு அஃது அளவில்லாத மதிப்பளித்தது. சட்டத்தை உடன்படிக்கையோடு சேர்த்துக் கொண்ட போது, வாழ்க்கை முழுவதையும் கடவுளுக்காக அல்லது கடவுளுக்கு எதிராக என்கிற தேர்வில் அடக்கியது. உண்மையில், "சட்டம் இல்லாமலே" பிற மதத்தினர் தங்கள் பொறுப்புகளைத் "தங்கள் உள்ளங்களில்" (உரோ 2:15) கண்டு கொள்ளக்கூடிய தன்மையை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால், சட்டம் இஸ்ராயேலரை, மனிதர்களின் செயல்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த "ஞானமும் விவேகமும் கொண்ட" மக்களாக ஆக்கியது (உப 4:6).

**3. நீ செய்ததை ஏற்றுக்கொள்** (எரே 2:23): சட்டம் பொதுப்படையாகக் கூறியவைகளைச் சில நேர்மையற்ற இளவரசர்களுக்கும், கற்பனை உலகில் நடமாடும் மக்களுக்கும் செயல்முறையில் எடுத்து விளக்கவும், அவர்களது பொறுப்புக்களை உணரவைக்கவும், இறைவாக்கினர் அனுப்பப்பட்டார்கள். சாமுவேல், நாத்தான் (1 சாமு 3:13-14; 2 சாமு 12:10-12) தொடங்கி எசாயாவின் கடைசி வழித்தோன்றல் வரை (எசா 59:8-10), ஏற்கெனவே இருக்கின்ற அல்லது இனிமேல் வரப்போகின்ற கெடுதல்களின் சூழ்நிலையில் இந்த இறைவாக்கினர்கள் ஏறக்குறைய எப்போதும் தலையிட்டார்கள். "இப்படிப்பட்ட தீய செயலை நீ செய்ததால், இப்படிப்பட்ட தீமை உன்னையும் தாக்கிற்று..." ஒவ்வொரு தேசியப் பேரிடரும், மக்களின் பொறுப்புக்களை இன்னும் உன்னிப்பாகப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பமாக அமைந்தது.

எசேக்கியேலைப் பொருத்தமட்டும், நாட்டின் மிகப்பெரிய கேடு நாடு கடத்தப்படுதலாகும். இஸ்ராயேல் தன்னுடைய பொறுப்புகளிலிருந்து தவறிவிட்டதனால் வீழ்ச்சியுற்றது. ஆனால், ஒவ்வொரு தனிப்பட்ட இஸ்ராயேலனுக்கும் எல்லாம் கூடுமானவையாக இருந்தன. தன்னுடைய பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதும், வாழ்வையோ சாவையோ தெரிந்துகொள்வதும் ஒவ்வொருவருடைய கையிலும் இருந்தது. "நீதிமானின் நீதி அவன்மீது இருக்கும்; பொல்லானின் பொல்லாங்கு அவன்மீது இருக்கும்" (எசே 18:20).

(சங் 51:4): சட்டம் கூறப்பட்டவைகளையும், இறை வாக்கினரால் கூறப்பட்டவைகளையும் பிரதிபலிக்கும் பாவங்களை அறிக்கையிடுதல் என்பது, விவிலியத்தில் அது கொள்ளும் தோற்றத்தில், பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அடையாளமாக இருக்கிறது. ஒன்றையும் விட்டுவிட வில்லை என்று உறுதி செய்யும் பொருட்டு பிழைகளின் பட்டியலைச் செய்யவுமில்லை; பாவங்களின் அதிகக் கூடுதலான தொகையை எண்ணிக்கையிடவும் இல்லை. இது கடவுளின் நீதியையும் மனிதனின் அநீதியையும் நேருக்குநேர் கொண்டு வருகிறது (எசா 59:9-14; தானி 3:27-31; சங் 51:6;...). பெற்றுக்கொண்ட தண்டனை தகுந்த தண்டனைதான் என்று ஏற்றுக்கொள்வதற்காக மாத்திரமல்லாது, மிகவும் ஆழ்ந்த நன்றி செலுத்துதலை, அணுகும் பக்கமிருந்து பார்க்கிறது. அதன் விளைவாக, பிழையின் சுமை பாவியின்மேல் தங்குகிறது. கடவுள் இதற்குப் பொறுப்பல்லர் என்று காட்டுகிறது. "என் தலைவரே! நீதி உமக்குரியது. இன்றுவரை எமக்கு வெட்கமே!" (தானி 9:7; பரூ 1:15). ஆதலால், மனமாற்றத்துக்குரிய செபம், மூலக்கதையில் தெளிவாக உள்ள உட்கருத்தைத் திரும்பவும் கண்டுணர்கிறது. கடவுள் நல்லவர், பாவிதான் தீமைக்குப் பொறுப்பு.

5. பவுலைப் பொருத்தமட்டும், நற்செய்தி என்பது கடவுளின் நீதி மற்றும் பாவிகளின் பொறுப்புணர்வு பற்றிய முடிவான வெளிப்பாடாகும். உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் முதல் மூன்று அதிகாரங்களும், பாவத்தின் தீவிரமாக அழிக்கும் ஆற்றலையும், மனிதனுக்கு முன்னுள்ள திறனாய்வுத் தேர்வுகளின் சுமையையும் பற்றிப் பேசுகிறது. அதே நேரத்தில் மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இந்த ஊழுக்கு விளக்கமும் அளிக்கிறது. கடவுளின் சினம், மனிதனுடைய செயல்களுக்கு அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து, அவனுடைய பொறுப்புணர்வு, எதிர்காலத்தில் நடக்கும் என்று அவன் முன்னோக்கக்கூடிய அல்லது அவன் விரும்பும் எதையும் கடந்து நிற்கச் செய்ததால், இந்த முரண்பட்ட ஆனால் உண்மையான ஊழ், கடவுளைப்போன்ற பெரிதான ஓர் அன்பின் மறு பக்கமாகும். ஏனெனில், "அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக, கடவுள் அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்" (உரோ 11:32).

கிறிஸ்துவின் பாடுகளில் இத்திட்டம் வெளிப்படையாகத் தெரிகிறது. இறைமகனது மரணத்தைக் கொண்டு வந்த ஒன்று சேர்ந்த பல்வேறு பொறுப்புகளும் சமமல்லாததுடன் (காண். யோவா 19:11; அ.ப. 3:13-14), அவைகளின் மொத்தமும் அல்ல (அ.ப. 3:17). ஆனால், அவை உண்மையானவை; அவை ஒன்று சேர்ந்து இந்தப் பயங்கரமான குற்றத்தைப் புரிந்தன. ஆகையால், குழந்தைப்பருவத்திலிருந்த திருச்சபையில் போதிக்கப்பட்ட நற்செய்தி, எருசலேமை முழுமையாகக் கருத்தில் கொண்டு, அதனுடைய பொறுப்பை எப்போதும் நினைவுபடுத்தியது. "நீங்கள் அவரைக் கொலை செய்தீர்கள்" (அ.ப. 2:23; 3:14; 4:10; 5:30;...). மனமாற்றத்தின் மூலமும் தன்னுடைய பொறுப்பை உணர்வதன் மூலமும் மாத்திரமே பாவி விசுவாசத்தை அடைய முடியும்.

**பொறுமை (PATIENCE)**

I. பாவம் நிறைந்த நாடுகளுடன் செயல்படுவது

போலவே, தன்னுடைய "வணங்காக் கழுத்துடைய" மக்களுடன் செயல்படும்போதும், இறைவன் தனது பொறுமையை வெளிப்படுத்துகிறார். ஏனெனில், அவர் அவர்களை அன்பு செய்தார்; அவர்களைக் காப்பாற்ற விரும்பினார். இயேசுவையே உயரிய வெளிப்பாடாகவும், நிறைவான மாதிரியாகவும் கொண்ட இந்த இறைப் பொறுமையானது மனிதரால் பின்பற்றப்பட வேண்டும் (எபே 5:1; மத் 5:45). தனது தலைவரின் எடுத்துக்காட்டைப் பின்பற்றுகிறவராய்ச் சீடன், நம்பிக்கையால் நிரப்பப்பட்டு, தொடர்ந்த மகிழ்ச்சியாலான பற்றுறுதியுடன் துன்பத்தையும் சோதனைகளையும் எதிர்கொள்ள வேண்டும். மேலும், மிக்க தாழ்ச்சியுடன் தனது அயலாரின் தவறுகளையும் சாந்தத்துடனும் அன்புடனும் தினமும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

## II. இறைவனுடைய பொறுமை

1. பழைய ஏற்பாடு: "கடந்த காலத்தில் தம்முடைய திருவருட் செயல்முறையைக் காட்ட விரும்பிய கடவுள் பொறுமையாய் இருந்து, மனிதர் செய்த பாவங்களைத் தண்டிக்காமல் விட்டார்" (உரோ 3:25-26). இக்காலத்தில் தன்னுடைய மீட்பின் நீதியை வெளிப்படுத்தும் எண்ணத்துடன் தனது மக்கள் மற்றும் மற்ற நாட்டினருடைய பாவங்களை இறைவன் சகித்துக் கொண்ட காலமாக, பழைய ஏற்பாட்டைப் பவுல் கருதுகிறார் (1 பேதுரு 3:20; உரோ 9:22-24). அதனுடைய வரலாற்றுக் காலத்தில், இறைவனுடைய இந்தப் பொறுமையினைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மேன்மேலும் ஆழ்ந்துணர்ந்து அறிந்து கொண்டனர். மோசேக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் நேரத்தில், "இரக்கமும் தயவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்; ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும், குற்றத்தையும், பாவத்தையும் மன்னிப்பவர்" என்று யாவே அறிவிக்கிறார். ஆனால், அவரே எதனையும் தண்டிக்காமல் செல்ல அனுமதிக்கமாட்டார். தந்தையருடைய கொடுமைக்கான தண்டனைகளைப் பிள்ளைகள் மேலும், பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது தலைமுறை வரை சுமத்துவார் (யாத் 34:6-7; காண். எண் 14:18). தொடரும் வெளிப்பாடுகள் மேன்மேலும் தந்தையின் பொறுமையினையும் இரக்கமிக்க அன்பையும் வலியுறுத்தும். இத்தந்தை நாம் எதனால் அமைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிபவர்; சினம் கொள்ளத் தயங்குபவர்; அன்பு நிறைந்தவர். அவர் நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை (சங் 103:8; சீரா 18:8-14). சினம் மற்றும் தீர்ப்பினுடைய கருத்துக்கள் ஒருபோதும் மறையாவிட்டாலும், இறை மன்னிப்பின்மீது இறைவாக்கினர்கள் அதிக அழுத்தம் அளிக்கின்றனர். தன்னுடைய அச்சுறுத்தல்களினின்று மனந்திரும்ப இறைவன் எப்போதும் தயாராக இருப்பதைச் சில பகுதிகள் காட்டுகின்றன (யோவா 2:13-14; யோனா 4:2). ஆனால், இறைவனுடைய பொறுமையானது ஒரு போதும் பலவீனமன்று. அது மனமாற்றத்திற்கு அழைக்கிறது; "உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்; ஏனெனில், அவர் அருள் நிறைந்தவர்; இரக்கமிக்கவர்; நீடிய பொறுமையுள்ளவர்; பேரன்புமிக்கவர்" (யோவே 2:13; காண். எசா 55:6). இப்பொறுமையினால் பயனடைவது தான் மட்டுமன்று என்பதை இஸ்ராயேல் படிப்படியாக அறிந்து கொள்கிறது. நாடுகளும் ஆண்டவரால் அன்பு செய்யப்படுகின்றன. மனந்திரும்பும் அனைத்து மனிதருக்கும் இறைவனுடைய இரக்கம் உரியதாக உள்ளது என்பதை யோனாவின் கதை நினைவூட்டுகிறது.

2. புதிய ஏற்பாடு

அ) **இயேசு:** பாவிகள்பால் கொண்ட தனது மனப்பான்மையினாலும், தனது போதனை யினாலும் இயேசு இறைப் பொறுமையினை விவரித்து அதற்கு மனித உரு அளிக்கிறார். தன்னுடைய பொறுமையற்ற, பழிவாங்கும்

மனப்பான்மையுடைய சீடர்களை அவர் கண்டிக்கிறார் (லூக் 9:55). பாவிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகின்ற இறைவனுடைய பொறுமையின் வெளிப்பாடுகளாக உள்ள கனிகொடா அத்தி மரம் (13:6-9), ஊதாரி மைந்தன் (15), மற்றும் இரக்கமற்ற ஊழியன் (மத் 18:23-35) முதலிய உவமைகள் அவரது சீடர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுமை மற்றும் அன்பின் படிப்பினைகளாக உள்ளன. லூக்காவினால் சிறப்பு அழுத்தம் அளிக்கப்பட்டுள்ள, பாடுகளில் காணப்படும் இயேசுவின் மன உறுதியானது, துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள அனைத்து மனிதருக்கான பொறுமையின் மாதிரியாக, அமையும்; ஆனால், அவர்கள் தங்களுடைய துன்பங்களின் பொருளையும் மீட்பின் மதிப்பையும் இப்போதுதான் புரிந்துகொள்ள ஆரம்பிக்கின்றனர்.

**ஆ) அப்போஸ்தலர்:** இயேசுவின் வருகைக் காலம் தாழ்த்தப்படுவதாகத் தோன்றுவதில் அப்போஸ்தலர்கள் இறைவனுடைய பொறுமையின் வெளிப்பாட்டினைக் காண்கின்றனர். “ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்ற காலம் தாழ்த்துவதாகச் சிலருக்குத் தோன்றுகிறது; ஆனால், அவர் காலந்தாழ்த்துவதில்லை; உங்கள் பொருட்டுப் பொறுமையாயிருக்கிறார்; ஒருவரும் அழிவுறக்கூடாது; எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்றிருக்கிறார்” (2 பேதுரு 3:9,15). ஆனால், இறைவனுடைய நன்மைத்தனம், பொறுமை, நீண்ட சகிப்புத் தன்மை ஆகியவற்றை மனிதன் புறக்கணித்தால், தன்னுடைய கடின, மனந்திரும்பா இதயத்தின் மூலம் இறைவனுடைய நீதித்தீர்ப்பு வெளிப்படுத்தப்படும் சினத்தின் நாளில் விழப்போகும் தண்டனையைத் தனக்கெதிராகச் சேர்த்து வைப்பவனாகிறான் (உரோ 2:5). இதன் காரணமாகவே, இன்று இறைவனுடைய அனுதின பொறுமையும், மனமாற்றத்திற்கான அவரது அழைப்பும் நீடித்திருக்கும் வரை, தேர்ந்தெடுக்கப்பட்டோர் அவரது வார்த்தைக்குச் செவி மடுத்து, இறைவனின் சமாதானத்தில் நுழைய முயற்சி எடுக்க வேண்டும் (எபி 3:7-4:11).

**III. மனிதனின் பொறுமை:** மனிதன் இறைவனுடைய மற்றும் இயேசுவினுடைய பொறுமையினால் தூண்டப்பட வேண்டும். இறைவன் அனுமதிக்கின்ற துன்பத்திலும், துயரத்திலும் மனிதன், நம்பிக்கையும் மீட்பும் அளிக்கின்ற இறைவனிடமிருந்தான தனது வலிமையினைப் பெற வேண்டும். அன்றாட வாழ்வில் தனது சகோதரருடனான. ஒரு மனிதருடைய பொறுமையானது, அவர்கள்பால் அவன் கொண்டிருக்கும் அன்பிற்கு ஓர் அறிகுறியாகும்.

**1. இறைவன் முன்னிலையில்:** துன்பங்களால் சோதிக்கின்ற அல்லது துயரங்களை அனுமதிக்கின்ற இறைவன் முன்னிலையில் இத்துன்பங்களின் பொருளைப் படிப்படியாகக் கண்டுபிடிக்கின்ற மனிதன், தனக்குப் பலனளிக்கின்ற பொறுமையுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்கிறான்.

துன்பமானது பாவத்திற்கான ஒரு தண்டனையன்று என்பதை யோபு புரிந்து கொள்கிறார். துன்பத்தை எதிர்கொள்ளும்போது தனது பொறுமையினை அவர் காட்டுகிறார். இஃது உண்மையில் அவருடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனையாகும். இம்மறைபொருளை எதிர்கொண்ட நிலையில் அவர் தாழ்மையுடன் தன்னைக் கையளிக்கிறார். ஆனால், இன்னும் அவர் தன்னுடைய சோதனையின் பொருளையோ, மதிப்பையோ, உணர்ந்துகொள்ளவில்லை. மெசியா அரசினை ஏற்படுத்துவதற்கெனக் குறிக்கப்பட்ட அனைத்துச் சோதனைகளையும் உறுதியோடு மேற்கொண்ட துன்புறுத்தப்பட்ட யூத மக்களின் பொறுமை இத்தகையதே (1 மக்; 2 மக்; தானி 12:12). துன்புறுத்தப்படும் நீதிமான்கள் ஆண்டவருடைய வார்த்தையிலும், அன்பிலும் நீடித்த நிலையில்

நம்பிக்கை கொள்ளலாகாதா (சங் 130:5; 24:3.5.21; சீரா 2)?

"மகிமையில் நுழைவதற்காகக் கிறிஸ்து துன்புற்றிக்க வேண்டும்" என்பதை அறிந்துள்ள கிறிஸ்தவன், அவருடைய மாதிரியைப் பின்பற்றிச் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் முழு விசுவாசத்துடன் அடிபணிய வேண்டும். இயேசுவினுடைய இரண்டாம் வருகையிலான மீட்பின் நம்பிக்கையுடன் அவர் அவற்றை ஏற்கிறார். தன்னுடைய துன்பங்கள் மற்றும் பொறுமையின் மூலம் தான் மீட்பருடன் ஒத்துழைப்பதையும் அவன் அறிந்துள்ளான். "அவரது சாவின் சாயலைத் தன்னுள் ஏற்று அவருடைய பாடுகளில் பங்கு பெறுகிறான்" (பிலி 3:10; உரோ 8:17). துன்ப நேரத்தில் "துன்பம் மற்றும் பொறுமையின் மாதிரிகளாக, ஆண்டவரது பெயரால் பேசிய இறைவாக்கினர்களை" அவன் ஏற்கிறான் (யாக் 5:10). பொதுவாக, பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய அனைத்துப் பெரிய ஊழியர்களையும் (எபி 6:12; 11), குறிப்பாக ஆபிரகாம் (6:15) மற்றும் யோபு (யாக் 5:11) ஆகியோரையும் ஏற்கிறான். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் இயேசுவின் பொறுமையைப் பின்பற்றுவான் (அ.ப. 8:32; எபி 12:2-3; 2 தெச 3:5). தனது கண்களை அவர்மீது பதித்த நிலையில் "தனக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவான்" (எபி 12:1-2). இந்தப் பொறுமையானது அன்பினைப் போன்று ஆவியினுடைய ஒரு கொடையாகும் (கலா 5:22; 1 கொரி 10:13; கொலோ 1:11). சோதனையால் முதிர்ச்சி அடைந்த (உரோ 5:3-5; யாக் 1:2-4), தன்னுடைய முறையின்போது அதில் நிலைத்து நிற்றல் ஏமாற்றாத நம்பிக்கையினை உருவாக்குகிறது (உரோ 5:5).

இவ்வாறாக இறைவனால் வலுப்படுத்தப்பட்டு, இறைவாக்குகளால் ஆறுதலளிக்கப்பட்ட நிலையில் (உரோ 15:4), இயேசுவின் பெயருக்காக நீடித்திருக்கும் சோதனைகளை ஏற்றுக்கொள்வதில் கிறிஸ்தவன் பிரமாணிக்கமுள்ளவனாக இருக்கலாம் (திருவெளி 2:10; 3:21). இவ்வாறு, இறுதிவரை நிலைத்திருப்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பேறுகளை அவன் பெறுவான் (மத் 10:22; 5:11-12; யாக் 1:12; 5:11; காண். தானி 12:12). இந்நிலையானது இறுதியான பெரும் இன்னலின்போது சிறப்பான முறையில் உதவியாக இருக்கும் (மாற் 13:13; லூக் 21:19). அப்போஸ்தலர்களைப் பொறுத்த வரையில், கிறிஸ்துவினுடைய பாடுகள் மற்றும் பொறுமையுடன் இன்னும் நெருக்கமாக உள்ள ஒன்றிப்பிற்கு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். தங்களுடைய இன்னல்கள், துயரங்கள், சோர்வு ஆகியவற்றில் நிலைத்திருத்தல் மூலமாக, அனைத்திலும் கிறிஸ்துவினுடைய பணியாளர்களாக அவர்கள் தங்களைப் பறைசாற்றுகின்றனர் (2 கொரி 6:4; 12:12; 1 திமொ 6:11; 2 திமொ 2:10; 3:10). அவர்களுடைய துன்பம் மற்றும் பொறுமையின் வாயிலாகக் கிறிஸ்து வாழ்வானது அவர்களது உடல்களில் வெளிப்படுத்தப்படுகிறது. மரணமானது தனது வேலையை அவர்களில் செய்வதனால், வாழ்வானது தனது பணியைக் கிறிஸ்தவரில் செய்ய முடியும் (2 கொரி 4:10-12).

2. **அயலார் முன்னிலையில்:** தனக்குச் சினம் மூட்டுகின்ற தனது அயலாரின் முன்னிலையில், "வலிமை உடையவனை விடப் பொறுமை உடையவனே சிறந்தவன்" என்பதை ஞானி தனக்குத்தானே நினைவுபடுத்திக் கொள்வான் (பழ 16:32; காண். 25:15; திருவுரை 7:8). எல்லாவற்றிற்கும் மேலாக, தனது அப்போஸ்தலர்களுக்கும் பாவிகளுக்கும் இயேசு காட்டிய பொறுமையை அவன் பின்பற்றுவான். இரக்கமற்ற நிலைக்கு அப்பாற்பட்ட நிலையில் (மத் 18:23-35), அவன் சகித்துக்கொள்வான் (5:45). அவனது அனுதினப் பொறுமையானது அவனது அன்பை வெளிப்படுத்தும் (1 கொரி 13:4). தன்னுடைய அழைப்பிற்கேற்ப வாழ்வதற்கென, "தாழ்ச்சியிலும், சாந்தத்திலும், பொறுமையிலும் மற்றவர்களுக்கு அவன் அன்புடன்

ஆதரவளிப்பான்" (எபே 4:2; கொலோ 3:12-13; 1 தெச 5:14). இவ்வாறாக, அவன் அன்பு செய்கின்ற, மன்னிக்கின்ற, காப்பாற்ற விரும்புகின்ற, பொறுமையுள்ள இறைவனின் உண்மையான மகனாகவும், இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவின் சீடனாகவும் இருப்பான் (மத் 11:29).

**பொற்கன்று (GOLDEN CALF)**

கன்றுக்குட்டி அல்லது காளையின் வடிவில் அமைக்கப்பட்ட ஓர் உருவம் அல்லது சிலை. பழங்கால மேற்காசிய சமயத்தில் இது பொதுவாகக் காணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் பதிதத்தைக் குறிக்கும் ஏளனச் சொல்லாகும்.

(சீனாய்) மலையிலருந்து மோசே இறங்கிவரத் தாமதித்ததைக் கண்டு அயர்ச்சியடைந்த இஸ்ராயேலர், அவர்களை வழி நடத்தும் தெய்வங்களை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கும்படி ஆரோனைத் தூண்டினர் (யாத் 32:1-35). யாவேயின் உருவத்தைச் செய்வது இதன் நோக்கமா என்று வாசகம் கூறவில்லை. எது எப்படியிருந்தாலும் ஆரோன் மறுக்கவில்லை; செயல்படத் தயங்கவில்லை. அவர் மக்களிடமிருந்து பொற்காதணிகளைச் சேர்த்து, உருக்கி, வார்ப்பு அச்சில் வடிவம் கொடுத்து ஒரு வார்ப்புக் கன்றுக்குட்டியைச் செய்தார். இதுதான் தங்களை எகிப்து நாட்டினின்று நடத்திவந்த தெய்வங்கள் என்று அறிக்கையிட்டு ஆர்ப்பரித்தனர். இச்சிலைக்குமுன் ஒரு பலிபீடம் கட்டி, யாவேக்கு எடுக்கும் ஒரு விழாவை அறிவித்தனர். அடுத்த நாள் அளிக்கப்பட்ட பலிகள் விரைவில் கட்டுப்பாடற்ற களியாட்டமாக மாறின. மோசேயும், யோசுவாவும் மலையிலிருந்து இறங்கிவந்து பாளையத்தை அடைந்தபோது, இக்காட்சி அவர்களுக்குக் கோபம் மூட்டியது. மோசே தம் கையிலிருந்த பத்துக் கட்டளைகளைக் கொண்ட பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப்போட்டார் . பின்பு, சிலைகளை நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாக்கி, தண்ணீரில் தூவி, இஸ்ராயேல் மக்களைக் குடிக்கச் செய்தார் (காண். உப 9:15-21). மோசே பிரமாணிக்கமுள்ள லேவியர்களிடம் வாளால் பாளையத்தில் ஒழுங்கமைவு ஏற்படுத்த கட்டளையிட்டபின், நாடு இக்குற்றத்திலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டது. யாவே அடையாளம் தெரியாத கொள்ளைநோயை அனுப்பி, பாவம் செய்தவர்களைத் தண்டித்தார்.

பிளவுபட்ட அரசாட்சிக் காலத்தில் இஸ்ராயேலின் முதலாம் எரொபவாம் (கி.மு. 922-901) பாரம்பரிய புனிதத் தலங்களாகிய தாணிலும், பெத்தேலிலும் (1 அர 12:26-33) பொன்னால் இரு கன்றுக்குட்டிகளைச் செய்து இவ்விடங்களில் வைத்து, "இதோ, உங்களை எகிப்திலிருந்து மீட்டு வந்த உங்கள் தெய்வங்கள்" என்று அறிவித்தான். இஃது அவனுடைய அரசை ஏற்புடையதாக்கச் செய்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். எரொபவாம் யாவேயின் வழிபாட்டை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவனது செயல் பாவமாகக் கண்டனம் செய்யப்பட்டது (1 அர 12:30; 2 அர 10:29; 17:16; 2 நாள் 13:8). யூதாவின் முதல் அரசனான ரெகபயாமும் (கி.மு. 922-915) புனித இடங்களில் கன்றுக்குட்டிகளை வைத்தான் (11:15). கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இறைவாக்கினர் ஓசேயாவின் வாக்குகளில் குறிக்கப்படும் கன்றுக்குட்டி வழிபாடு (ஓசே 8:5-6; 10:5-6; 13:2) இத்தகைய தவறுகளைச் சுட்டிக்காட்டலாம் அல்லது இஸ்ராயேலின் சமயத்தில் புகுத்தப்பட்ட கலப்பு மதப்பண்பைப் பொதுவாகச் சுட்டலாம்.

**பொற்கொல்லர் (GOLDSMITH)**

பொற்கொல்லர்கள் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றார்கள். இவர்கள் பொற்கொல்லர் சங்கம் வைத்திருந்ததாகத் தெரிகின்றது (நெகே 3:8; 31-32). இவர்கள் ஆபரணங்களும், சிலைகளும் செய்தார்கள். பொற்கொல்லர்கள் சிலைகள் செய்தார்கள் (எசா 40:19; 41:7; 46:6; எரே 10:9. 14; 51:17). மத்திய

வெண்கலக் காலத்தில், தங்கவேலை நுணுக்கங்கள் அதிகமாக இருந்தன.

### பொற்சாடி (GOLDEN URN)

எபி 9:4-இல் கூறப்படும் மன்னாவைக் கொண்டிருந்த பொற்சாடியாகும். இதன் வடிவம் பற்றி அகழ்வாராய்ச்சியின்படி எந்தச் சான்றும் இல்லாவிட்டாலும், இங்குக் கூறப்படும் சாடி, யாத்திரைக் காலத்தில் இரண்டாம் ராமசேசுக் காலத்தைச் சேர்ந்த எகிப்திய வடிவம் கொண்டதாக இருக்கலாம்.

### பொன், தங்கம் (GOLD)

மற்றெந்த உலோகத்தைக் காட்டிலும் தங்கம் என்ற உலோகம் நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்படுகின்றது. பல முறைகளில் வெள்ளியுடன் சேர்த்துத் தங்கமும் குறிப்பிடப்படுகின்றது. பழைய காலத்தை நினைவுபடுத்தி வெள்ளி முதலில் குறிப்பிடப்படுவது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது தங்கம் வெள்ளியைக் காட்டிலும் குறைவாக மதிப்பிடப்பட்டது.

தங்கம் என்ற பொதுப்பெயரைத் தவிர்த்து, மற்றும் பல சொற்களும் தங்கத்தைக் குறிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் உண்டு. இப்பெயர்கள் அதன் சுத்தமான தன்மையையும், வண்ணத்தையும் பொருத்திருக்கலாம். ஆனால், அதன் உண்மையான பொருள் தெரியவில்லை. அவையாவன: தூய தங்கம், நல்ல தங்கம், தெரிந்தெடுக்கப்பட்ட தங்கம்.

புதிய ஏற்பாட்டில் ஞானிகளால் காணிக்கைகளாகக் கொடுக்கப்பட்ட பொருட்களில் பொன் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (மத் 2:11). பன்னிரண்டு சீடர்கள் தூதுரைக்க அனுப்பப்பட்டபோது பொன், வெள்ளி, செம்பு எதையும் அவர்கள் மடியில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று இயேசு அறிவுரை கூறுகின்றார் (மத் 10:9; காண். அ.ப. 3:6; 20:33). பொன் ஆபரணங்கள் 1 திமொ 2:9; 1 பேதுரு 3:3; திருவெளி 1:13; 18:16 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றன. புதிய எருசலேம் பழுதற்ற கண்ணாடி போன்ற பசும்பொன்னாலானது (திருவெளி 21:18.27).

அவிலா மற்றும் பர்வயிம் ஆகிய இடங்கள் தங்கம் கிடைக்கும் இடங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (ஆதி 2:11-12; 2 நாள் 3:6), ஓபிர் நாடே தங்கத்திற்குப் பாரம்பரிய ஊற்றாக இருந்தது (1 அர 9:28; 10:11; யோபு 22:24). இந்நாட்டில் தங்கம் கிடைத்தது பற்றி கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டத் துணுக்குகள் மூலம் தொல்பொருள் ஆய்வுகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### பொன்தகடு, அடிக்கப்பட்ட வேலை (GEATEN GOLD)

மெல்லிய தகடாக அடிக்கப்பட்ட தங்கம்; கீழ்த்தரமான உலோகங்களின் மேல் மேலுறையாகப் பயன்படுத்தப்பட்டது. சாலமோனால் செய்யப்பட்ட தங்கக் கேடயங்களைக் குறிக்க மட்டும் இந்தச்சொல் பயன்படுத்தப்பட்டது (1 அர 10:16-17; 2 நாள் 9:15-16). இவை முழுவதும் தங்கத்தால் செய்யப் பட்டவையல்ல; ஆனால், தங்கத்தகடால் மூடப்பட்டவை. உடன்படிக்கைப் பெட்டகத்தின் விளக்குத்தூண்கள் தங்கத்தகடால் செய்யபப்பட்டவை (யாத் 25:18.31.36; 37:7.22; எண் 8:4; 10:2). எசா 4:19-இல் சொல்லப்பட்டுள்ளது போல், சிலைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டு அதன்மேல் தங்கத்தகடு மூடப்பட்டது. இவை தெல் அபு அவாம் மற்றும் மெகிதோவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

### பொன் மெழுகு, தைல வகை (BALM)

பழங்காலத்தில் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டாலும், இஃது எதிலிருந்து செய்யப்பட்டது என்று தெளிவாகத் தெரியவில்லை. இஃது ஆறுமுறை விவிலியத்தில்

கூறப்பட்டுள்ளது. ஆதி 37:25; 43:11 ஆகிய இரு பகுதியிலும் கிலயாதிலிருந்து வணிகர்கள் ஒட்டகங்களில் இதை ஏற்றிச் சென்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. எசே 27:17-இல் கிலாயதிலிருந்து தீர் நாட்டிற்கு இஃது ஏற்றுமதி செய்யப்பட்ட பொருளாகும் எனக் கூறப்பட்டுள்ளது. தற்கால எழுத்தாளர்கள் பல பெயர்களில் இதைக் குறிக்கின்றனர். எனினும் சரியான பெயர் கூறக் கடினமாக உள்ளது. எரிகோவில் இஃது அதிகம் இருந்ததாகவும் இங்குள்ள புதர்ச்செடிகள் இம்மரப்பிசினைச் சுரந்ததாகவும் பிளினி கூறுகிறார். ஆனால், கலிலேயக் கடலுக்கு அப்பாலும் இது காணப்பட்டதாக ஸ்ட்ராபோ கூறுகின்றார். இருந்தாலும் இருவரும் அரேபியா, அபிசீனியாவில் உள்ள தைல வகைகளை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.

கலிலேயாக் கடலின் தென் கிழக்கே பிசின் மரங்கள் இருந்ததாக விவிலியம் கூறவில்லை. கிழக்கிலிருந்து கிலயாது வழியாகச் சென்ற ஒட்டகங்களில் உள்ள பிசின் அந்த இடத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என தியோபுரோததசு கூறுகின்றார். ஆனால், அவ்விடத்தில் அப்படிப்பட்ட மரங்கள் வளர்ந்ததாகத் தெரியவில்லை. யாக்கோபு எகிப்திலுள்ள யோசேப்புக்கு (ஆதி 43:11) அனுப்பிய தைல வகைகள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். அது கிலயாதில் உள்ள தைலமாக இருக்க முடியாது. எரே 46:11; 51:8-இல் கூறப்படும் பொன் மெழுகு வட ஆப்பிரிக்கவில் உள்ள ஒரு வகையான செடி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது புகழ்வாய்ந்த நோய் தீர்க்கும் சக்தி கொண்ட ஓர் எண்ணெயைச் சுரக்கிறது. எனினும் நோய்தீர்க்கும் சக்தி இந்தப் பொன்மெழுகுக்கு இருப்பதாகக் கூறப்படாததால், வேறு வகையைக் குறிப்பதாகத் தெரிகிறது. பழங்காலத்தில் பொன் மெழுகை நறுமணப் பொருள்களிலும், பிணத்தைப் பாதுகாக்கவும், மருந்துகளிலும் பயன்படுத்தினர்.

**பொன்விதி (GOLDEN RULE, THE)**

இயேசு கூறிய, "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என்று விரும்புவனவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற இந்த வரைமுறைதான், இன்று பொன்விதி என எல்லோராலும் அழைக்கப்படுகிறது. இவ்விதி ஒரு வாழ்க்கைக் குறிக்கோளாகும் (மத் 7:12; லூக் 6:31). இயேசு பொதுவாகப் பெறுபவனைவிட, செய்பவனையே அதிகம் போற்றுகிறார். இந்த விதி பின்பற்றுவதற்கு மிகவும் கடினமானது. இதுவே இதன் சிறப்புக்குச் சான்றாகும். இவ்விதி- ஒரு பொதுமறை விதியாகும். இது போன்ற விதிகள் உலகின் பல மறைகளிலும் காணப்படுகின்றன. இவ்விதியின் நோக்கம் என்னவென்றால் 'அனைவரும் நலம் பெறவேண்டும்' என்பதேயாகும்.

# போ

**போக்கரேத்து-சபாயிம் (POCHERETH-HA-ZZEBAIM** – கலைமான் வேட்டைக்காரன்)

சாலமோனின் பணியாளர்களின் புதல்வர்கள் குடும்பங்களில், ஒரு குடும்பத்தின் தலைவன். இவர்கள் பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்தவர்கள் (எஸ் 2:57; நெகே 7:5).

போக்கிம் (**BOCHIM** – அழுவோர்)

கில்காலுக்கும், பெத்தேலுக்கும் இடையில் அமைந்த ஓர் இடம். அங்கே ஆண்டவரின் தூதர் இஸ்ராயேலரைக் கடிந்து கொண்டதனால், அவர்கள் கூக்குரலிட்டு அழுதார்கள். அதன் விளைவாக அவ்விடத்திற்கு அழுகிறவர்கள் இடம் அல்லது கண்ணீரின் இடம் எனப் பெயர் வழங்கிற்று (நீதி 2:1-5).

இஃது இருந்த சரியான இடம் தெரியவில்லையானாலும், எரிகோவுக்கு மேற்கிலுள்ள மலைப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். அறிஞர் சிலர் இதைப் பெத்தேலாக அடையாளம் காட்டுவர். ஏனெனில், ஆதி 35:8-இல் பெத்தேல் 'அழுகையின் –கருவாலிமரம்' என்று பொருள்படும் அல்லோன் – பாகூத்து என்றழைக்கப்படுகிறது. இங்கு உரத்த அழுகையுடன் (நீதி 20:23.26; 21:2) மக்கள் இறைவன் திருமுன் அடிக்கடி கூடினர் (காண். நீதி 4:5; 20:26-28).

**போக்கு ஆடு, பழி ஆடு (SEAPE GOAT)**

பாவநீக்க நாளில், மக்களின் பாவப்பரிகாரத்திற்கெனப் பாலை நிலத்திற்கு அனுப்பப்படுமாறு சீட்டுப்போட்டுக் குறிக்கப்பட்ட ஆடு (லேவி 16:8.10.26). காண்க. அசாசேல்.

**போசோர் (BOSOR** – எரிகின்ற)

யூதா மக்கபேயு கைப்பற்றிய கிலயாதின் நகரங்களில் ஒன்று. கி.மு. 165-இல் ஆலயம் மீண்டும் அர்ப்பணிக்கப்பட்ட பின், இங்கு இருந்த பிறமதத்தினர் யூதர்களைக் கொடுமைப்படுத்தினர் (1 மக் 5:26.36). இஃது ஏல்-லெயாவின் தென் ஓரத்திலுள்ள புசர் ஏல்-அரீரி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இஃது உப 4:43; யோசு 20:8-இல் குறிக்கப்படும் பெட்சேராக இருக்கலாம்.

**போட்சேசு (BOZEZ** – பளபளப்பான அல்லது சேறான)

யோனத்தான் பெலிஸ்தியர் பாளையம் வரை ஏற முயன்ற, மிக்மாசுக்கும் கெபாவுக்கும் இடையிலுள்ள கணவாயின் இருமருங்கும் செங்குத்தான பாறைகளும், பற்களைப் போன்ற சிகரங்களும் அங்குமிங்கும் இருந்தன; அவற்றில் ஒன்றுக்குப் போட்சேசு என்று பெயர். இது வாடி சுவெநித்துக்கு வடபுறத்தில் இருந்திருக்கலாம். ஆனால், இருந்த சரியான இடம் தெரியவில்லை.

**போதகர் (TEACHER)**

இச்சொல்– கிரேக்க இலக்கியங்களில் பல முறை பயன்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் 'அரசன்', 'ஆண்டவர்' என்ற சொற்களோடு இணைத்துக் கூறப்படும் மரியாதைக்குரிய சொல்லாகும்.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் சில இடங்களில் திருமுழுக்கு யோவான் (லூக் 3:12), யூதமத அதிகாரிகள் (2:46; யோவா 3:10) மற்றும் கிறிஸ்தவர் அல்லாத தலைவர்களுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. மோசேயின் சட்டப்போதகர்கள் திருச்சட்ட அறிஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர். புதிய ஏற்பாட்டில் போதகர் என்ற சொல், 60 முறை வந்தாலும், 30 முறை இயேசுவையே குறிக்கின்றது. இந்தச் சொல் அனேகமாக எந்த அதிகாரப் பதவியையும் குறிக்கவில்லை. மாறாக, அவர் அதிகாரத்தோடு போதித்ததை மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதைக் காட்டுகிறது (காண். மத் 7:29; மாற் 1:22; லூக் 4:32).

இதைத் தவிர மற்ற இடங்களில், 'போதகர்' என்பது புதிய திருச்சபையின் தலைவர்களைக் குறிக்கின்றது; அதிகாரப்பதவியையும் சுட்டுகிறது (அ.ப. 13:1; எபே 4:11; 2 திமொ 1:11; யாக் 3:1). பவுல்,

போதகர்களை அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்களுக்கு அடுத்தும், புதுமை செய்பவர்கள், குணமளிப்பவர்கள், ஆள்பவர்கள், பலமொழி பேசுபவர்களுக்கு மேலாகவும் கருதுகின்றார் (உரோ 16:6-8; 1கொரி 12:28-30).

இளந்திருச்சபையில் இந்தப் போதகர் நற்செய்தி அறிவிப்பாளராக இருந்தார். நற்செய்தியைப் போதிப்பதும், அடிப்படையான இறையியல் உண்மைகளை விளக்குவதும் இவருடைய பணியாகும். இந்தப் பணியே அவருக்கு நாள்முழுவதும் சரியாய் இருந்ததால் அங்கிருக்கும் இறைமக்கள் அவருக்குத் தேவையானவற்றைக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

## போதித்தல் (PREACH)

மீட்பின் நிகழ்ச்சியைப் பற்றி வெளிப்படையாக அறிவிப்பதையோ, மதம், ஒழுக்கம் முதலியவைகப் பற்றி அறிவுரை கூறுவதையோ, மறைநூல் பாடம் கற்பிப்பதையோ போதனை அல்லது போதித்தல் என இன்று நாம் அழைக்கிறோம். ஆனால், புதிய ஏற்பாட்டில் போதித்தல் என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொற்கள் "கிறிஸ்து ஆண்டவரும் மீட்பருமாயிருக்கிறார்" என்ற உண்மையை வீறார்ந்த முறையில் பறைசாற்றுதலுக்கு மட்டுமே பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. இருப்பினும், இவ்வரையறையானது போதனை என்ற சொல்லின் பொதுவான பரந்த பொருளை வறுமையாக்கவோ, வலுக்குறைக்கவோ செய்யவில்லை. அதற்கு மாறாக, அஃது எல்லாப் படிப்பினைகளினதும் அறிவுரைகளினதும் ஊற்றாகிய உயிர்ப்பின் நற்செய்தியைத் திறந்து வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்பிர கடனத்தினுடைய பறைசாற்றுதலின் வேர்களை நாம் பழைய ஏற்பாட்டிலேயே காண்கிறோம். ஏனெனில், பழைய ஏற்பாட்டின் காலத்தில் இறைவாக்கினர் இறைவனது வாக்குகளைப் போதித்துவந்தனர். இறைவனின் ஆவியால் தூண்டப்பட்டு அவர்கள் இறைத்தீர்ப்பைப் பற்றி அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு வெளிப்படையாக எடுத்துரைத்தனர். அவர்களது வாக்குகள் இறைவனது வாக்காக இருந்தன. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் போதகர்களின் வாக்குகள் கடவுளது வாக்காகவே இருக்கின்றன. அவ்வார்த்தையான கிறிஸ்து மனுவுரு எடுத்த நாளிலிருந்து, தாம் ஒருவரே போதகர்களின் வாழ்வையும் வாக்கையும் தீர்ப்பிடுபவராக விளங்குகிறார்.

**1. கிறிஸ்தவப் போதகத்தின் செய்தி:** காலம், இடம், கேட்போர் முதலியவற்றிலெல்லாம் வேறுபாடுகள் இருந்தாலும் திருமுழுக்கு யோவான், கிறிஸ்து, பேதுரு, பவுல் ஆகிய எல்லோரும் (1) மக்களை மனந்திரும்ப அழைத்தனர்; (2) வரப்போகிற நிகழ்ச்சி ஒன்றை எடுத்துரைத்தனர். இவ்வாறு அவர்களது போதனைகளிலெல்லாம் ஒரேவிதமான கருத்தையும் நோக்கத்தையும் மக்களுக்கு எடுத்து வழங்கினர்.

**1) மனந்திரும்ப அழைப்பு:** "மனந்திரும்புங்கள்!" (மத் 3:2; 4:17; அ.ப. 2:38; 3:19; 5:31; 10:43; 13:38தொ) என்ற வார்த்தையுடன் கிறிஸ்துவும் அவரது முன்னோடியாகிய திருமுழுக்கு யோவானும் தமது போதகத்தை ஆரம்பித்தார்கள். "மனந்திரும்புங்கள்!" என்ற அதே வார்த்தை முதல் அப்போஸ்தலப் போதகத்தின் கொடுமுடியாக, சிறப்பம்சமாக அமைகிறது. எனவே, இங்கு வெளிப்படையாக எடுத்துக் கூறப்பெறும் உண்மைக்கும், ஒருவன் விரும்பினால் ஏற்றுக்கொண்டு விரும்பாவிட்டால் தள்ளிவிடும் ஒரு கொள்கைக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. அதற்கு மாறாக, இவ்வுண்மையைக்கேட்டு ஏற்றுக்கொள் பவர்கள் அதற்குத் தம்மை முற்றிலும் கையளிக்க வேண்டும்; அவ்வுண்மையில் ஓர் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், விவிலியப் பொருளின்படி வார்த்தையும் உண்மையும் வாழ்வின் உயர்ந்த மதிப்புகளாகத் திகழ்கின்றன. தவத்தின் அழைப்புக்கு வழிவகுக்காத

எப்போதனையும் நற்செய்தி என்ற பெயரிழந்து வெறும் பேச்சாக மாறக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

**2) நிகழ்ச்சி ஒன்றின் அறிவிப்பு:** ஒழுக்க வாழ்வைப் பற்றிய அறிவுரையின் வழியாக அன்று, ஆனால் சிறப்பாக மீட்பின் நிகழ்ச்சியைப் பற்றி எடுத்துரைப்பதன் வழியாகப் போதனையானது மனந்திரும்புதலுக்கு அழைக்கின்றது. நற்செய்தியாளர், சிறப்பாக மத்தேயு, எவ்வாறு இயேசு தனது மண்ணுலக வாழ்வின்போதே, அப்போஸ்தலப் போதனையை ஆரம்பித்தார் என எடுத்துக்காட்ட விரும்பினர். தமது முன்னோடியைப் பின்பற்றி (மத் 3:2) இயேவும் "விண்ணரசு நெருங்கிவிட்டது" (4:17) என்று பறைசாற்றினார். அதன் எதிரொளியைப்போல் அவரது சீடர்களும் (10:7) அதே உண்மையைத் தான் எடுத்துரைத்தனர்; "இறைவாக்குகள் எல்லாம் நிறைவேறிவிட்டன". இறைவாக்கினர் எசாயா கூறியுள்ளபடி, திருமுழுக்கு யோவான்தான் "பாலைவனத்தில் ஒலிக்கிற கூக்குரல்" (3,3). ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கும் ஊழியனாக இயேசு தம்மைக் கையளிக்கின்றார்; "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" (லூக் 4:17-21; எசா 61:1தொ).

கடத்தல் நாளை நினைவூட்டும் பாஸ்காப் பண்டிகையன்று, முன்னறிவிக்கப்பட்ட விண்ணரசானது உயிர்த்தெழுந்த இயேசுவின் மகிமையில் வெளிப்படையாக்கப் பெற்றது. ஐம்பதாம் நாள் விழாவாகிய பெந்தகொஸ்தே என்னும் திருநாளன்று தூய ஆவியின் கொடையானது திருச்சபை தோன்றக் காரணமாயிருந்தது. இவ்வாறு விண்ணரசானது மண்ணுலகிலேயே உண்மையாக்கப்பெற்றது. அந்நாளிலிருந்து போதனையானது இயேசுவின் காலத்தில் இருந்தது போல, ஏதோ அண்மை வரும் காலத்தில் நிகழ இருக்கும் ஒன்றைப்பற்றி வெறுமனே அறிவிப்பதில் அடங்கியிருக்க வில்லை; ஆனால், தூய ஆவியானவர் செயல்படுவதை எடுத்துக்காட்டும் ஓர் உண்மை நிகழ்ச்சியைப் பற்றியும், கடந்த கால நிகழ்ச்சி ஒன்றைப் பற்றியும் (அதாவது, கிறிஸ்து மண்ணுலகைக் கடந்து விண்ணுலகு எய்திய பாஸ்கா நிகழ்ச்சியைப் பற்றியும்), வருங்கால நிகழ்ச்சி ஒன்றைப் பற்றியும் (அதாவது, இறுதிநாளில் ஆண்டவர் தம் மகிமையில் தோன்றுவதைப் பற்றியும்) பறைசாற்றுவதாகத் திகழ்கிறது. முதல் போதகங்களின் சுருக்கங்கள் எல்லாம் கிறிஸ்தவ நிகழ்காலத்தில் இப்புதுத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

பெந்தகொஸ்தே என்னும் திருநாளன்று, தாம் பேசியதை மக்கள் எல்லோரும் தத்தம் அயல் மொழிகளில் கேட்டார்கள் என்றால், அதற்கு முக்கிய காரணம், அவர்களுக்கு அருளப்பெற்ற தூய ஆவியே (அ.ப. 2:4.11.15தொ) என்று பேதுரு விளக்குகிறார். இவ்வுண்மையானது முடவன் குணமடைந்ததைப்போன்ற (3:1-10) அல்லது வேதபோதகர்கள் பெற்ற வியத்தகு துணிவைப் போன்ற (4:13;5:28) புதுமைகளைப் பற்றிய வினாவாக இருக்கலாம். போதனையானது அதைக் கேட்பவரை எப்போதும் இவ்வாறு வினாக்களைத் தூண்டி எழுப்பும் ஓர் உண்மையின் முன் நிறுத்துகின்றது. அது "பரிசுத்த ஆவி தரும் ஆற்றலையும், அசையா உள்ளத்துறுதியையும் (1 தெச 1:5) துணையாகக் கொண்டியங்குகிறது. கிறிஸ்துவைப் பற்றிய, அவரைச் சுட்டிக்காட்டி மையமாகக் கொண்டிருக்கும் கடந்தகால, வருங்காலச் சூழ்நிலையில் மட்டுமே, என்றும் மாறாத இந்நிகழ்காலமும், புதுப்பிக்கப்பெற்ற இப்பெந்தகொஸ்தே திருநாளும் (அ.ப. 10:44-47) உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இயேசு சாவினின்று உயிர்க்கப்பெற்றார், உயிருடனிருக்கிறார். இவ்வுண்மைக்குத்தான் தூய ஆவியானவர் பெந்தகொஸ்தே திருநாளன்று நிகழ்ந்த புதுமையின் (2:22-31) வழியாகச் சான்று பகன்று நிற்கின்றார். முடவனைக் குணமாக்கியதின் (3:12-16) பொருளும் அதுதான். இயேசு ஆண்டவர், விண்ணுலகில் மகிமைப்படுத்தப்பெற்றவர் (3:21). இறுதித்தீர்ப்பு

நாளன்று அவர் வெற்றிவாகை அணிந்து திரும்புவார் (1 தெச 1:10;2 தெச 1:7). எனவே, உயிர்ப்பின் நற்செய்தியே போதனையின் முக்கியச் சாரமாகும். இவ்வாறு, போதனையானது திருவரலாற்றைப் பற்றிய மறையுண்மையின் வெளிப்பாடாக அமைகிறது.

**3) நிகழ்ச்சியின் அறிமுகம்:** வீறார்ந்த ஒரு பறைசாற்றுதல், ஓர் உண்மையை முறைப்படி எடுத்துரைக்கும் ஒரு தூதுவனது கூக்குரல் என்பன கிரேக்க மொழியில் "கெரிக்மா" என அழைக்கப்பெறுகின்றன. இங்கு இவ்வுண்மை கிறிஸ்து சாவின்மேல் கொண்ட வெற்றியாக இருப்பதால், இதைக் கேட்போர் இந்நிகழ்காலம் ஈறில்லா முக்கால முழுமைத் தன்மை பெறுவதைக் கண்டுணர்கின்றனர். இதுவே இங்குப் போதுமானது. இருப்பினும் தம் காலம், சூழ்நிலை முதலியவற்றால் வரையறுக்கப்பெற்றிருக்கும் இவ்வுண்மையைக் கேட்போர் அதன் நற்செய்தியைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையிலிருப்பது இன்றியமையாதது. பவுல் "இயேசுவையும் உத்தானத்தைப் பற்றியும்" (அ.ப. 17:18) அறிவித்ததைக் கேட்ட ஏதன்சு நகர மக்கள் இரு புதிய தெய்வங்களைப் பற்றி நினைத்து, பவுலை வீண் கதைகளைப் பரப்புகிறவராகக் கருதி நடத்தினர். எனவே, பவுல் அவர்கள் தன்னைப் புரிந்துகொள்ள வைக்கும் வழிவகைகளைத் தேடுகிறார். இருப்பினும், அவர் தம் நற்செய்தியை மனித அறிவின் துணைகொண்டு எண்பிக்க விரும்பவில்லை. "சொல்வன்மை மிக்கவரான, மறைநூல் வல்லுநரான" (அ.ப. 18-24) அப்பொல்லோ இத்துறையில் முன்மாதிரியான போதகர் எனக் கொரிந்தியர் நம்பினர். பவுல் அவர்களது தவறான எண்ணத்தைப் போக்குகிறார். கிறிஸ்துவின் சிலுவை எங்கே மதிப்பிழந்து, பொலிவிழந்து ஒன்றுமில்லாமையாகிவிடுமோ, பொருளற்றதாய்ப் போகுமோ என்று பயந்து அவர் நாவன்மையில் தம் நம்பிக்கையை வைக்க மறுக்கிறார் (1 கொரி 1:17). எனவே, எல்லாப் போதனையும் மீட்பின் நிகழ்ச்சியை எடுத்துக்கூற வேண்டும். அதே வேளையில் அது புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமையவேண்டும். எனவே, நற்செய்தியை அறிவித்து அறிமுகப்படுத்துவதில் மாற்றங்கள் பல தேவைப்படுகின்றன.

அ) இயேசுவைக் கேட்டவர்களைப் போல அப்போஸ்தலரது அவையோரும் கடவுளையும், அவரது மீட்பின் திட்டத்தையும் நம்பினர். எனவே, போதனையானது மீட்பின் நிகழ்ச்சியை எடுத்துரைப்பதற்காக மறைநூலோடு தொடங்கப்பெற்றது. இயேசுவையும் திருமுழுக்கு யோவானையும்போல் இயேசுவின் சீடர்களும் தமது போதனையில் இறைவாக்குகள் நிறைவேறப்பெற்று முழுமை பெற்றிருப்பதை எடுத்துக்காட்டினர். நாம் "இறுதி நாட்களில்" இருப்பதாக யோவேலும் (அ.ப. 2:17), மற்றெல்லா இறைவாக்கினரும் (3:24) எடுத்துரைத்தனர். இவ்வாறாக, கடவுள் நம் முன்னோருக்கு அளித்த வாக்குறுதி நிறைவேறுகிறது (13:33). அவதூறான சிலுவையைப் பற்றிக் கடவுள் தாமே முன்னறிவிக்கிறார் (2:23); அதன் "மரத்தைப்" பற்றிப் பேசுவதுதான் பழைய ஏற்பாட்டின் மரபாக இருந்திருக்கிறது (5:30; 10:39; 13:29; காண். உப. 21:23). மீட்பின் திட்டத்தில் கிறிஸ்துவின் பங்கைப்பற்றி இறைவாக்கினர் (அ.ப. 3:18; 13:27), சிறப்பாக ஊழியனைப்பற்றிய பாடல் (8:32 தொ; 3:13.26), சங்கீதங்கள் (2:25-28.30.34-35), மோசே (3:22) முதலியோர் எடுத்தியம்பினர். மனந்திரும்புதலின் தேவையைப்பற்றிக்கூட இறைவாக்கினர் எடுத்தியம்பியுள்ளனர் (2:21.39). எனவே, போதனையானது சிறப்பாக மறைநூலைப் பற்றியது. "மறை நூல்படி" என்ற சொற்றொடர் மிகப்பழமையான விசுவாச அறிக்கையை நிறுத்தக்குறியிட்டு அழுத்திக்கூறி நிற்கின்றது (1 கொரி 15:3தொ).

ஆ) இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அவர் காலத்தவரான அனேகர் அவரை அறியாமலிருந்திருக்கலாம். எனவேதான், உயிர்ப்பின் நற்செய்தியானது முதலில் இயேசுவின் வாழ்வை எடுத்துக்காட்டும் எளிய அறிமுக உரையாக அரும்புவிட்டு மலர்கிறது.

எனவேதான், நூற்றுவர் தலைவரான கொர்னேலியு என்பவர்முன். பேதுரு இயேசுவின் வாழ்வைப் பற்றிய நற்செய்தியின் சிறப்பான பகுதிகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறார் (அ.ப. 10:37-42). உண்மையிலேயே உயிர்ப்பைப் பற்றிய நற்செய்தியின் ஒளியில் மட்டுமே இயேசு போதனையின் நடுமையமாக அமைகிறார்.

இ) இறுதியாக, போதனையைக் கேட்போர் உண்மைக்கடவுளை நம்புவதற்குக் கூட முடியாமலிருந்திருக் கலாம். எனவே, மறைநூலில் அடங்கியிருக்கும் விசுவாசத்தைப் பற்றிய அடிப்படை உண்மைகளை அறிவதற்கு வேண்டிய தேவை எழுந்திருக்கலாம். "விண், மண், கடல் யாவற்றையும் அவற்றில் அடங்கிய அனைத்தையும் ஆக்கிய, வானின்று மழையைப் பொழிந்து, செழிப்பு மிக்க பருவங்களை அளித்து வரும் உண்மைக்கடவுளைப்" (அ.ப. 14:15 தொ) பற்றிப் பேசி லிஸ்திரா நகரில் பவுல் தம் அவையோரைக் கவர்கிறார். எவ்வாறு கிறிஸ்துவின் உயிர்ப்பு உலகப்படைப்பிலும் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ள கடவுள் நாட்டத்திலுமிருந்து பிறக்கும் வரலாற்றுச் சமய ஒழுங்கு திட்டத்தின் முடிவு என ஏதன்சு நகரில் எடுத்துக்காட்டுகிறார் (17:22-31). தெசலோனிக்கேயரோ "உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக, தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பி, வானின்று வரும் மகனுக்காகக் காத்திருந்தனர்; இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த இந்த இயேசுவே வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1 தெச 1:9 தொ) என நம்பினர். எல்லா வழியிலும், நேரடியாகவோ சுற்றிவளைத்தோ, போதனையானது வரலாற்றின் ஆண்டவராகிய கிறிஸ்துவிடம் இட்டுச் செல்லவேண்டும்.

4) **போதனையிலிருந்து படிப்பினைக்கு:** பவுலிடமிருந்து நாம் பெற்றிருக்கும் (1 கொரி 15:3தொ) விசுவாசப் பிரமாணத்தைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது பாஸ்கா மறையுண்மை. இம்மறையுண்மையை விடாது திரும்பத்திரும்ப எடுத்துரைப்பது இன்றியமையாத தேவை. அப்போதுதான் விசுவாசமானது அதன் உண்மையான ஒளிமையத்தைச் சுற்றி அமைந்திருக்க ஏதுவாகும். இப்பாஸ்கா உண்மையுடன் தொடங்கும் போதனையானது படிப்பினையாக மலர்ந்து விரிகிறது. மலை மேலேயோ (மத் 5:2), செபக்கூடங்களிலோ (9:35) "போதித்த" போது இயேசுவே இவ்வாறுதான் செய்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவிடமிருந்து பெற்ற ஆணைப்படி (மத் 28:20; அ.ப. 4:2) அவரது சீடர்களும் அவ்வாறுதான் நடந்துகொண்டனர். பவுலும் அவரது படிப்பினையைப் பாஸ்கா மறையுண்மையுடன் தொடங்கித் தான் விவரித்தார். எடுத்துக்காட்டாக, அவர் சிலுவையின் ஞானத்தைப்பற்றியோ (1 கொரி 1:28), திருமுழுக்கு இயேசுவின் சாவிலும் உயிர்ப்பிலும் நாம் கொள்ளும் பங்கு என்பதைப் பற்றியோ (உரோ 6) கற்பித்தபோது இம்முறையைத்தான் கடைப்பிடிக்கிறார். அதாவது, போதகர் உபதேசியாராகவும் மறைநூல் வல்லுநராகவும் மாறுகிறார். இருப்பினும், பாஸ்கா நற்செய்தியின் பறைசாற்றுதலை இடைவிடாது சுட்டிக்காட்டுவதன் மூலமாக மாத்திரமே, மறைநூல் வல்லுநர் என்ற பட்டத்திற்கு ஒருவர் தகுதிபெறுகிறார்.

2. **போதனை என்ற மறையுண்மை:** அறிவிக்கும் செய்தியின் உள்ளடக்கத்தின் காரணத்தாலும், அதில் பயன்படுத்தப் பெறும் உருவத்தின் காரணத்தாலும் போதனையானது ஒருமறையுண் மையாகக் கருதப்படுகிறது. எடுத்துரைக்கப் படும் வாக்கைப்பற்றிய மறையுண்மை, வாக்கை எடுத்துரைக்கும் போதகரைப் பற்றிய மறையுண்மை ஆகும்.

1) **வாக்கைப் பற்றிய மறையுண்மை:** போதனையானது ஒரு செயல். இஃது இறைவனது ஒரு செயல் என்பதால் இச்செயல் மனந்திரும்புதல் என்ற மற்றொரு செயலுக்கு இட்டுச்செல்ல வேண்டும். என வேதான், போதனையானது மனிதனை அது போதிக்கும் மறையுண்மையின் முன் நிறுத்துகிறது என்ற உண்மையைப் பவுல்

பறை சாற்றுகின்றார். இவ்வாறு விசுவாசமானது போதனை வழியாகப் பிறக்க முடியும் (உரோ 10:17). இறந்து உயிர்த்த கிறிஸ்துவின் முன் போதனையைக் கேட்போர் நிறுத்தப்பெறுகின்றனர். கிறிஸ்து வரலாற்றின் ஆண்டவராக வந்துதித்தார்; அவரது வாக்கைக் கேட்டு நம்புவோருக்கு அவர் தமது கொடைகளையும் ஆவியையும் பகிர்ந்தளிக்கிறார்; அதை மறுத்துத் தள்ளுவோரைத் தமது சினத்தினால் பயமுறுத்துகிறார் (1 தெச 1:10). இறைவனின் அரசை ஆடம்பரமாகப் பறைசாற்றித் தொடங்கும் தூதுவனின் அறிவிப்பைப்போல் (எசா 40:9), போதனையானது இவ்வுலகின்மேல் கிறிஸ்துவின் அரசுரிமையைக் கொண்டாடத் தொடங்கும் இறைவனின் ஒரு செயலாகும். அஃது அதைக் கேட்போரின் ஆய்வுக்கு உட்பட்டதன்று. இருப்பினும் அதை அவர்கள் உலகம் முடியும்வரை (மத் 24:14), "கீழ்ப்படிந்து விசுவசிப்பதை" (உரோ 1:5) அவர்களிடமிருந்து கோருகிறது.

2) **இறைவாக்கும் மனித வாக்கும்:** மீட்கப்படுவதற்கு ஒருவன் விசுவசிக்க வேண்டும். விசுவசிப்பதற்கு ஒருவன் போதனையைக் கேட்க வேண்டும். ஆனால், "அனுப்பப்படாமல் எவ்வாறு அறிவிப்பர்?" (உரோ 10:15). எனவே, போதகர் கிறிஸ்துவிடமிருந்து அவரது திருச்சபை வழியாகத் தூதுரைக்கும் திருப்பணியையும் அப்பணியை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

அ) **தூதுரைக்கும் திருப்பணி:** இது மட்டுமே மனித வாக்கை இறைவாக்காக மாற்றக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது. இறைவாக்கினரைப்போல ஆவியானவரால் ஆட்கொள்ளப்படுவதால் மட்டுமன்று, கிறிஸ்துவினால் ஒப்படைக்கப்பெற்றதொரு தூதுப்பணியின் ஆற்றலினாலும், மனித வாக்கானது இறைவாக்காக மாறுகிறது. இறைவனோடு மீண்டும் ஒப்புரவு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கோடு, "நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும்!" (2 கொரி 5:20). எனவே, ஒரு தூதுவனைப்போலப் போதகரும் நம்பிக்கை நாணயத்தோடு வாக்கை எடுத்துரைக்கவேண்டும். அப்போதுதான், அவர் நேர்மையாக இல்லாவிட்டாலும் அவரது வாக்காவது பயனுள்ளதாக இருக்கும் (பிலி 1:15-18). கிறிஸ்து எல்லா வழிகளிலும் அறிவிக்கப்படுகிறார். அப்படியானால், இங்கு விசுவாசத்தை அறிவிக்கும் ஊழியனது முக்கியத்துவம்தான் என்னே! இன்றியமையாத, அடிப்படையான மூலக்கூறு இயேசு கிறிஸ்துவே. மற்றவை எல்லாம் அத்துடன் சேர்க்கப்படுகின்றன. தீர்ப்பின் தீயானது அவற்றின் மதிப்பை நிரூபிக்கும் (1 கொரி 3:5-15). புதிதாகப் பிறந்த திருச்சபையானது போதனைக்கு அதிகாரம் கொடுப்பதைப் பற்றிக் கவனமாய் இருந்தது. சிலவேளைகளில் அது, தான் முதலில் எடுக்காத பல முயற்சிகளைப் பிறகு உறுதிப்படுத்தியது (அ.ப. 8:14-17; 11:22தொ); வேறுசில வேளைகளில் வேதபோதகர்களின் "மீது கைகளை விரித்து அவர்களை வழி அனுப்பியது" (13:2 தொ).

பாஸ்கா மறையுண்மையைப் பற்றி ஒரு தூதர் கொடுக்கும் சான்றிலிருந்துதான் அவரது அதிகாரம்கூடத் தோன்றுகிறது. இஃது அப்போஸ்தலர்களின் சான்று என நாம் பொதுவில் கூறலாம். இஃது உயிர்த்த ஆண்டவர் விடுத்த ஆணைப்படி (அ.ப. 1:8) பன்னிருவரும் பகர்ந்த இணையற்ற சான்றோடு தொடர்பு கொண்டுள்ளது (2:32; 3:15; 5:32; 10:39.41; 13:31). உண்மைச் சான்றின் இடைபடாத பாரம்பரியத்தால் கிறிஸ்தவப் போதனையானது இறைவனின் வாக்கை உண்மையாகவே எடுத்துரைக்கின்றது.

ஆ) இந்த அப்போஸ்தலிக்கப் பணி அமர்த்தலிலிருந்துதான் போதகரின் மனத் துணிவும் பிறக்கின்றது. போதிப்பதற்குப் போதகருக்கு முழு அதிகாரமுண்டு. எனவே, அவர் முதல் அப்போஸ்தலர்களைப்போல மன உறுதியோடு பேசுகிறார் (2:29;4:13.29.31). "வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிடினும் அவர் தேவவார்த்தையை அறிவிக்க வேண்டும்" (2 திமொ 4:2). அவர் இப்படிப் பேசுவதன் மூலகாரணம்

அவரது விசுவாசம் (2 கொரி 4:13). இவ்வாறு, அவர் ஒரு பணிக்குத் "தகுதியாக்கப் பெற்றிருக்கிறார்" (2:16தொ; 3:4தொ). அப்படியில்லாவிடில் அவர் பேசுவதெல்லாம் கபட எண்ணத்தோடு கடவுளின் சொல்லை விலைகூறித் திரிவதாக மட்டுமே இருக்கும் (2:17; 1 தெச 2:4). பவுல் தெசலோனிக்கேயருக்கு "நாங்கள் அறிவித்த கடவுளுடைய வார்த்தையை நீங்கள் பெற்றுக்கொண்ட போது அதை மனித வார்த்தையாக ஏற்றுக்கொள்ளவில்லை; கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டீர்கள்" (1 தெச 2:13) என்று கூறினார். அதைப்போல, என்றும் இறைவாக்கை எடுத்துரைப்பதே போதகரின் இலட்சியமாக இருக்கிறது.

3. **போதனையும் மீட்பும்:** போதகர் பெற்றிருக்கும் திருப்பணியின் மேன்மையால் அவரைப் பற்றிய மறையுண்மை முற்றிலும் எடுத்துக் கூறப்படவில்லை. அதற்கு மாறாக, அவரது அலுவலின் பயனை நோக்குவோமானால் அவர் உண்மையிலேயே "கடவுளோடு உழைப்பவர்" (1 கொரி 3:9); "கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் அனுப்பப்பெற்றவர்;" "அவர் வழியாகக் கடவுளைப் பற்றிய அறிவு என்ற நறுமணம் எங்கும் பரவுகிறது;" அவர் "மீட்புப் பெறுவோரிடையிலும் அழிவுறுவோரிடையிலும், கடவுள்பால் எழும் கிறிஸ்துவின் நறுமணமாய்த் திகழ்கிறார்;" "சிலருக்கு அது சாவு விளைவிக்கும் நச்சுப்புகையாகும்; வேறு சிலருக்கு வாழ்வளிக்கும் நறுமணமாகும்" (2 கொரி 2:14 தொ) என்ற பல உண்மைகள் வெளியாகின்றன. முதலிடத்தில், தாமே குற்றம் சாட்டப்பெறக்கூடிய இக்கட்டான நிலையிலிருக்கிறார் ஒரு போதகர் (1 கொரி 9:27). ஆனால், தான் யாரின் தூதுவராக இருக்கிறாரோ அவரது விதியில் தானும் சிறப்புப் பங்கு கொள்ள வேண்டியதுதானே முறை! "உள்ளபடியே அப்போஸ்தலராகிய எங்களைக் கடவுள் அனைவரிலும் கடையராக்கினார்" (1 கொரி 4:9). சிலுவையைப் பற்றிப் போதிப்பவர் "உயிரோடிருக்கும் போதே இயேசுவுக்காக எந்நேரமும் சாவுக்குக் கையளிக்கப்படுகிறார்" (2 கொரி 4:7-15; 6:4-10). வீணான பொருட்கள் எதையும் அவர் இன்னும் தேட இயலுமா (காண். அ.ப. 14:12 தொ)? ஆனால், பாவங்களைப் போக்கும் பலியாளாகிய (1 கொரி 4:13) மீட்பரோடு என்றும் இவ்வாறு ஒன்றித்து, அவர்கள் இவ்வாறு உயிரிழந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் போதிக்கும் கடவுளிடம் உயிர் பிறக்கிறது என்பதை உணர்ந்து அறியக்கூடிய துணிவுடனிருக்க வேண்டும் (2 கொரி 4:12). இவ்வாறு, போதகரின் வாக்கு மட்டும் இறைவனது வாக்காக அமைவதில்லை. ஆனால், அவரது வாழ்வு முழுவதும் பாஸ்கா மறையுண்மையை வெளிப்படையாகத் தோன்றச்செய்யும் நாடக நிகழ்ச்சியாக அமைகிறது.

### போத்திபார் (POTIPHAR - ராவின் கொடை)

யோசேப்பை இசுமயேலர்கள் அடிமையாக எகிப்துக்கு முதன் முதலாகக் கொண்டு வந்தபோது, அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய எகிப்து அரச அலுவலனே போத்திபார் (ஆதி 37:36; 39:1-6). யோசேப்பின் திறமைகளையெல்லாம் அறிந்த போத்திபார், அவனைத் தனக்குரியவற்றிற் கெல்லாம் அதிகாரி ஆக்கினான். போத்திபாரின் மனைவி, அழகும் நல்ல தோற்றமும் உடைய யோசேப்பைத் தவறான வழியில் சோதனைக்கு உட்படுத்த முயன்றதாகக் கூறப்படுகிறது. இவனது மனைவி பொய்க்குற்றம் சாட்டியதன் விளைவாக, இவன் யோசேப்பைச் சிறையிலிட்டான் (39:6-20). ஆதி 39-இல் கூறப்படும் போத்திபார்-யோசேப்புக்குள்ள உறவு எகிப்தில் நிலவிய 'இரு சகோதரர்கள்' பற்றிய உறவை ஒத்ததாக உள்ளது.

### போந்து (PONTUS)

வடசிறிய ஆசியாவின் கிழக்குப் பகுதியே போந்து என்று அழைக்கப்படுகிறது. இது கருங்கடலிலிருந்து காகசசுவரை பரவியுள்ளது.

1. **புவியியலும் வரலாறும்:** போந்துவின் கடற்கரைப் பகுதியானது வளமான பல சமவெளிகளைக் கொண்டுள்ளது. இருப்பினும், இதன் இடையிடையே பல மலைத்தொடர்கள்

அமைந்துள்ளமையால் கிழக்கு-மேற்குத் தரைவழித் தொடர்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டு, மிகுதியும் கடல் வழியே பயன்படுத்தப்பட்டது.

கடற்கரைப் பகுதியானது பல கிரேக்கக் குடியிருப்புகளைக் கொண்டிருந்தது. சினோப்பே மற்றும் அமிசுஸ் ஆகிய துறைமுகங்கள் மிக முக்கியம் வாய்ந்தவையாகும். போந்துவின் உள்நாட்டுப் பகுதியானது மலைகள் நிறைந்தவை. அவற்றில் தோன்றும் சிற்றாறுகள் பல கடலை நோக்கிப் பாய்கின்றன. அவற்றில் லீக்குஸ் மற்றும் ஐரிஸ் ஆகிய இரண்டு ஆறுகள் சேர்ந்து போந்துவிலேயே மிகப் பெரிய ஆறாய் ஓடுகின்றன. காலிஸ் ஆறுதான் சிறிய ஆசியாவிலேயே மிக நீளமான ஆறாகக் கருதப்படுகின்றது. உள்நாட்டின் மலைப்பகுதிகள் போந்துவுக்குக் கிரேக்கர்களின் வரவை எதிர்க்கும் இயற்கை அரணாக அமைந்துள்ளன. அமாசியா போந்துவின் பழைய தலைநகராக விளங்கியது.

கி.மு. 302-ஐ ஒட்டி, விடுதலை பெற்ற நாடாக ஆகுமுன், பாரசீகர்களுக்கும் இத்தியர்களுக்கும் அடிபணிந்து வந்துள்ளது. மித்திரிதேதசு போந்து அரசை நிறுவினார். அவரது அரசமரபு கி.பி. 63-வரை இந்த அரசை ஆண்டு வந்தது. பாம்பே இதனைப் பிடித்தபிறகு இதன் ஒரு பகுதி உரோமை மாநிலத்தோடு இணைக்கப்பட்டது. உரோமையர்கள் இதைப் பல பகுதிகளாகப் பிரித்து ஆட்சி செய்தனர்.

அப்போஸ்தலர் காலத்திய போந்து முழுப்பகுதியையோ, உரோமை ஆட்சியில் இருந்த மேற்குப் பகுதியை மட்டுமோ குறிக்கலாம். பீலோ போந்துவில் யூதர்களும் வசித்து வந்தார்கள் என்று கூறுகின்றார். பெந்தகொஸ்தேயின்போது போந்துவிலிருந்தும் வந்த மக்கள் எருசலேமில் இருந்தனர் என்று அ.ப. 2:9 கூறுகிறது. பவுலோடு உழைத்த அக்கிலா, போந்தைச் சேர்ந்தவராவார் (அ.ப. 18:2). பவுலோடு அவர் எபேசு நகரில் குடியேறினார் (18:18.19).

**2. போந்துவில் கிறிஸ்வம்:** 1 பேதுரு 1:1 குறிப்பிடுவதிலிருந்து இங்குக் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. 1:2-இல் வரும், "நாடுகளில் சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்கள் சிதறுண்டு வாழ்ந்த கிறிஸ்தவர்களையே குறிப்பிடுகிறது. பெந்தகொஸ்தேயின்போது மனந்திரும்பிய யூதர்கள் (அ.ப. 2:9) உடனடியாகப் போந்துவில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்தார்கள். பவுல் பித்தினியா சென்று அங்குப் போதிக்கும் திட்டத்தைக் கைவிட்டபோது (16:7), அங்கு ஏற்கெனவே கிறிஸ்தவப் போதகர்கள் உள்ளார்கள் என்று அறிந்திருக்க வேண்டும். அங்குப் பேதுரு போதித்ததற்கான சான்று ஏதும் இல்லை. ஆனால், பேதுரு தமது முதல் மடலை எழுதியபோது, ஏற்கெனவே அங்குப் பல வருட வயதுடைய திருச்சபைகள் மூப்பர்களைக் கொண்டிருந்தன (1 பேதுரு 6:1). இவர்களில் பெரும்பாலோர் புறவினத்தார் ஆவார். அவர்கள் கிறிஸ் தவரல்லாதவர்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும், அச்சுறுத்தலையும் சந்திக்க வேண்டியிருந்தது.

உரோமையில் கி.பி. 64-இல் ஆரம்பித்த வேதகலாபனை சிறிய ஆசியாவிலும் பரவியதா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. ஆனால், தோமிசியன் காலத்தில் (கி.பி. 81-90) உரோமில் நிலவிய அதே சூழ்நிலை சிறிய ஆசியாவிலும் இருந்திருக்கலாம். கி.பி. 113-115-இல் இளைய பிளினிதிரேசனால் பித்தினியாவுக்கு அனுப்பப்பட்டபோது (போந்துவின் மேற்குப்பகுதி பித்தினியாவின் ஒரு பகுதியே), ஏற்கெனவே இருபது ஆண்டுகளாகக் கிறிஸ்தவம் அங்குப் பரவி வளர்ச்சி பெற்றதைக் கண்டார்; கிறிஸ்தவத்தை விட்டுவிட்டவர்களைத் தண்டனையிலிருந்து விடுவித்தார்; விசுவாசத்தில் நிலைத்து நின்றவர்களுக்கு மிகுந்த கொடுமைகளை விளைவித்தார். இவையெல்லாவற்றிற்கும் பின்னே, மிகவும் ஆழ்ந்த நற்செய்திப்பணி நடந்திருக்கிறது. இதனால், பிளினி இங்குச் செல்வதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே இங்குக் கிறிஸ்தவம் பரவிவிட்டதென்பது தெளிவு.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் மதங்களைப் பொறுத்தவரையில் போந்து மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதிரியான் காலத்தில் வாழ்ந்த அக்கிலா என்ற போந்துவைச் சேர்ந்த யூதர் பழைய ஏற்பாட்டைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார். இக்காலத்தில் அலக்சாந்தர் என்பவன், புதியதொரு மதவழிபாட்டைத் தொடங்கினான். இஃது எவ்வாறு புறவினத்தாரும் தங்கள் வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினர் என்பதற்குச் சான்றாகின்றது. மார்சியன் தப்பறையான போதகம் ஒன்றைப் போதித்து வந்தார். இவருடைய தந்தை போந்துவில் சினோப்பே என்னுமிடத்தில் ஆயராக இருந்தார் என்று அறிகிறோம்.

**போரடிக்கிற களம் (THRESHING FLOOR)**

தானியத்தை வைக்கோலிலிருந்து பிரித்தெடுப்பதற்குச் சூட்டடிப்பு என்று பெயர். முதலில் தானியக்கதிர்கள், சூட்டடிப்புக் களத்தில் பரவலாக இடப்படும். இந்த இடம் பொதுவாக நகர வாயிலிலேயோ, ஓரத்திலோ அமைந்திருக்கும் (1 அர 22:10). இந்த இடம் தனியாளுக்கோ, சமூகத்திற்கோ உரியதாகும். சூட்டடிப்பு பல்வேறு முறைகளில் செய்யப்படும். ஒருமுறையில் தானியக் கதிர்கள், பெரிய கழிகளால் அடித்துத் துவைக்கப்படும் (நீதி 6:11). மற்றொரு முறையில் கால்நடைகள், தானியக்கதிர்களை மிதிப்பதன் மூலம் சூட்டடிப்புச் செய்யப்படும் (உப 25:4). பொதுவாக, ஒரு சில இயந்திரங்களும் சூட்டடிப்பில் பயன்படுத்தப்பட்டன. உருளை வண்டிகளும் (எசா 28:27-28), கூர்மையான போரடிக்கும் கருவிகளும் (2 சாமு 24:22; 1 நாள் 21:23; எசா 41:15) கால்நடைகளால் தானியக்கதிர்கள் மேல் இழுத்துச் செல்லப்பட்டன. இவற்றைக் கனமாக்க, கற்கள் பயன்பட்டன. கனமான இவ்வண்டிகள் மிகவும் பயனுள்ளவைகளாகக் கருதப்பட்டன. சூட்டடிப்பு என்பது பல மணிநேரங்கள் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய வேலையாகும். அப்போதுதான் தானியங்கள் முழுவதையும், கதிர்களிலிருந்து பிரித்தெடுக்க முடியும்.

**போராசன் (BORASHAN - ஆசானின் கிணறு அல்லது நீர்க்குட்டை)**

யூதாவின் தென்பகுதியிலுள்ள ஓர் இடம் (1 சாமு 30:30). இதுவும் ஆசான் என்ற பெயரும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

**போராத்தா (PORATHA - சலுகை பெற்ற)**

இவர் ஆமானின் புதல்வர்கள் பத்துப்பேரில் ஒருவர். இவர்கள் யூதர்களால் கொல்லப்பட்டனர் (எஸ்த 9:8).

**போர் (WAR)**

அ) போர் என்பது ஒழுங்குப் பிரச்சனைகளை எழுப்புகின்ற மனித உண்மை மட்டுமன்று. விவிலிய உலகில் அதனுடைய தோற்றமானது, பொதுவான அனுபவத்திலிருந்து தொடங்கி, மனித இனம் ஈடுபட்டுள்ளதும், மீட்பைப் பணயமாக்கக் கொண்டுள்ளதுமான செயலின் முக்கிய கூறுமான, இறைவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான ஆன்மீகப் போராட்டத்தை வெளிப்பாடு அறிவிக்க அனுமதிக்கிறது. இறைவனுடைய திட்டமானது சமாதானத்தைத் தனது முடிவாகக் கொண்டுள்ளது என்பது உண்மையே. ஆனால், இச்சமாதானமே போராட்டத்தின் விலையாகப் பெற்ற வெற்றியை முன்னுரைக்கிறது.

**ஆ) பழைய ஏற்பாடு**

**I. மனிதனின் போர்உலகம் இறைவனின் சண்டைகளும்:**

1. போரானது எல்லா நேரங்களிலும் மனித நிலையின் முக்கிய கூறாகும்; பண்டைய மேற்காசிய நாடுகளில் திணையின முறைப்பட்ட நோயாக இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் அரசர்கள் போர்க்களம் புகுந்தனர் (2 சாமு 11:1). உயர் கலாச்சாரக் காலங்களில் பேரரசுகள் "இடைவிடாச் சமாதானத்தின்" உடன்படிக்கைகளில் வீணாகக் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சிகளின் வளர்ச்சி, இந்த வலுவற்ற உடன்பாடுகளை முறியடித்தது.

இத்தகைய பணித்திட்டத்தில் புகுத்தப்பட்ட இஸ்ராயேலின் வரலாறு, சில நேரங்களில் உயர்வானதாகவும், சில நேரங்களில் கொடூரமானதாகவும் உள்ள மனிதப்போராட்டங்களின் அனுபவத்தைத் தூண்டவிருக்கிறது. இறைவனுடைய திட்டத்தின் முன்னோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அனுபவமானது அங்கு ஆன்மீக நோக்கை அடைகின்றது. போரானது இவ்வுலகின் நிரந்தர உண்மையாகவும் தீமையாகவும் உடனடியாக வெளிப்படுத்தப் படும்.

2. ஆயினும், அதனுடைய சமூக அனுபவத்தின் விளைவுகளைச் சமயச் சூழ்நிலைக்குள் மாற்றுவதில், பண்டைய மேற்காசிய நாடுகள் தம்முடைய இறை, உலகின் தோற்றத்தில் போரையும் அறிமுகப்படுத்துவதை விட்டுவிடவில்லை. காலத்தின் தொடக்கத்தில், உலகப் போர்களை நீட்டிப்புகளாகவும், உலகச் சாயல்களாகவும் கொண்ட தெய்வங்களின் போரை அஃது அடிக்கடி கற்பனை செய்தது. இத்தகைய உருவங்களால் ஆதரவு பெற்ற பல தெய்வக்கோட்பாட்டைக் கைவிட்டாலும் இஸ்ராயேலானது போராடும் இறைவனைப் பற்றிய உருவத்தைப் பாதுகாக்கின்றது. தனது இறை ஒருமைக்கோட்பாட்டுக்குப் பொருந்தவும், இறைவனின் திட்டத்தினுடைய உலக நிறைவேற்றத்தில் அதற்கு ஓர் இடம் அளிக்கவும், அஃது உருவத்தை மாற்றியமைக்கிறது.

II. **ஆண்டவருடைய போர்களின் ஊழியத்தில் இஸ்ராயேல்:** சீனாய் உடன்படிக்கையால் திறக்கப்பட்ட பரிமாணங்கள் போராட்டத்திற்குரியவையே அன்றி, சமாதானத்திற்குரியவை அல்ல. இறைவன் தமது மக்களுக்கு ஒரு தாய்நாட்டை அளித்தாலும், மக்கள் அதனை வெல்ல வேண்டும் (யாத் 23:27-33). இது புனிதமானதும், பழைய ஏற்பாட்டின் பார்வையில் நியாயப் படுத்தப்பட்டதுமான தாக்கும் போராகும். தன்னுடைய சிதைந்த நாகரிகத்துடன் இயற்கையின் சக்திகளுடைய வழிபாட்டினால் கீழ்ப்படுத்தப்பட்ட கானான், இஸ்ராயேலுக்கு ஒரு கண்ணியை உருவாக்குகிறது (உப 7:1-2). இனி, இஸ்ராயேலின் போர்கள் "யாவேயின் போர்களாக" இருக்கும் மேலும், இறைவனை வழிபட்டு அவரது சட்டத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்களின் காரணமாக, இஸ்ராயேலை வரலாற்றில் தோன்றச் செய்யும்போதும், இறைவன் தனது ஆட்சியையே இவ்வுலகில் ஏற்படுத்துகிறார். அன்னிய வலுத்தாக்குபவர்களுக்கு எதிராகத் தனது சுதந்தரத்தைக் காக்கின்ற அதே வேளையில், இஸ்ராயேல் இறைவனின் காரியத்தையும் காக்கிறது. ஒவ்வொரு பாதுகாப்புப்போரும் இன்னும் "யாவேயினுடைய போரே" ஆகும்.

இவ்வாறு நூற்றாண்டுகளின் போக்கில், போராட்ட வாழ்வின் அனுபவத்தை இஸ்ராயேல் கொண்டுள்ளது. அதில், நாட்டின் செயலாற்றும்திறன் சமயப் பணியில் பயன்படுகிறது. சீகோன் மற்றும் ஓகு ஆகியோருக்கு எதிரான தாக்கும் போர்கள் (எண் 21:21-35; உப 2:26-3:17), கானான் மீதான யோசுவாவின் வெற்றி (யோசு 6-12), மதியானியர் (எண் 31) மற்றும் நீதிபதிகள் காலத்து அடக்குமுறையாளர்கள் ஆகியோருக்கு எதிரான பாதுகாப்புப் போர்கள் (நீதி 3-21), சவுல் மற்றும் தாவீதின் மூலமாக நாட்டின் விடுதலைப்போர் (1 சாமு 11-17; 28:30; 2 சாமு 5:8;10) முதலிய நிகழ்ச்சிகளின் மொத்தத்தில் இஸ்ராயேலானது இறைவனின் தூதராக உலகில் தோன்றுகிறது. அதனுடைய அரசன் வரலாற்றில் யாவேயின் ஆட்பேராக உள்ளார். விசுவாசத்தினுடைய ஆர்வத்திற்கு இராணுவ வீரத்தின் செயல்கள் தேவையாக உள்ளன. இறை உதவியினுடைய உறுதியையும், அதே நேரத்தில் அரசியல் மற்றும் சமயம் சார்ந்ததாக உள்ள வெற்றியின் நம்பிக்கையையும் உயிர் ஊட்டுகிறது (சங் 2; 45:4-6; 60:7-14; 110). ஆனால், இறைவனுடைய செயலோடு இஸ்ராயேலின் மண்ணுலகச் செழுமையைக் குழப்பும் சோதனையானது பெரிதாகவே இருக்கும்.

III. வரலாற்றில் யாவேயின் போர்கள்:

1. யாவே தனது மக்களுக்காகப் போராடுகிறார்: ஆயினும், இஸ்ராயேலால் நடத்தப்படும் யாவேயின் போர்கள், மனித வரலாற்றில் இறைவனால் மேற்கொள்ளப்படும் சண்டைகளில் ஒரு கூறு மட்டுமாகவே உள்ளன. தொடக்கத்திலிருந்தே தனது திட்டங்களுக்கு எதிரான தீய சக்திகளுக்கு எதிராக, அவர் தாமாகவே போராடுகின்றார். பல்வேறு எதிரிகள் அவற்றினுடைய தொடக்கத்தினைத் தடுக்க முயலும்போது, அவரது மக்களுடைய வரலாற்றில் இந்த உண்மையானது வெளிக்கொணரப் படுகிறது. பின்னர், நிகழ்ச்சிகளின் மீதான தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய நிலையில், தனது மேலாண்மைச் செயலின் மூலம் இறைவன் தலையிடுகிறார்; இஸ்ராயேலானது வியத்தகு விடுதலை அனுபவத்தை அனுபவிக்கின்றது. யாத்திரையின் காலத்தில் யாவே எகிப்திற்கு எதிராகப் போரிட்டு, எல்லா விதமான வியப்புச் செயல்களாலும் அதனைத் தாக்கி (யாத் 3:20), அதனுடைய தலைப்பேறுகளையும் (யாத் 11:4;...), அதனுடைய தலைமையையும் (யாத் 14:18...) தாக்குகிறார். கானானில், இஸ்ராயேல் படைகளுக்கு அவர் துணை புரிகிறார் (நீதி 5:4.20; யோசு 5:13-14; 10:10-14; 2 சாமு 5:24); காலப்போக்கில் அரசர்களுக்குத் துணைபுரிந்து (சங் 20;21), தனது புனித நகரை விடுவிக்கிறார் (சங் 48:4-8; 2 அர 19:32-36). மனிதப் போராட்டங்கள் அவரது துணையின்றித் தங்களுடைய முடிவை அடையா என்பதை இவையனைத்தும் காட்டுகின்றன. மனிதர் போரிட்டாலும் இறைவன் மட்டுமே வெற்றியை அளிக்கிறார் (சங் 118:10-14; 121:2; 124).

2. **இறைவன் பாவிகளுக்கு எதிராகப் போரிடுகிறார்:** இவ்வுலகில் இறைவனுடைய போர்கள், இஸ்ராயேலின் தற்காலிக வெற்றியைத் தங்களுடைய இறுதி முடிவாகக் கொண்டிருப்பதில்லை. இறைவனுடைய மகிமையானது மற்றொரு இயல்புடையது. அவரது அரசு மற்றொரு அமைப்புடையது. அவர் விரும்புவது என்னவெனில், அவரது சட்டம் பகுப்பது போல, செழுமை மற்றும் நீதியினுடைய அரசை அமைப்பதாகும். இதனைச் செயல்படுத்தும் பணியை இஸ்ராயேல் கொண்டுள்ளது. ஆனால், அது தவறினால், புறவினச் சக்திகளுடன்தான் போரிடுவதற்கான அதே காரணத்திற்காக, இறைவன் தனது பாவம் நிறைந்த மக்களுடனும் போரிட வேண்டும். இதன் காரணமாகவே தனது விசுவாசமின்மைக்குப் பரிசாகப் பாலைவனம் (எண் 14:39-44), யோசுவா (யோசு 7:2...), நீதிபதிகள் (1 சாமு 4), சவுல் (1 சாமு 31) ஆகியோருடைய காலங்களில் இஸ்ராயேலானது போரின் எதிர் விளைவுகளையும் சந்திக்கிறது. அரசர்களின் காலத்தில், இந்த உண்மை இடையிடையே நிகழ்ந்தது. பல படையெடுப்புகளின் சூறையாடலுக்குப் பின்னர், இஸ்ராயேலும் யூதாவும் முழுமையான நாட்டின் அழிவில் முடிவுறும். இறைவாக்கினரின் பார்வையில் இவை இறைவனுடைய தீர்ப்பின் விளைவுகள் ஆகும்; தன்னுடைய பாவம் நிறைந்த மக்களை யாவே தண்டிக்கிறார் (எசா 1:4-9). தண்டிக்கும் பொறுப்போடு படையெடுப்பவர்களை அனுப்புபவர் அவரே (எரே 4:5-5:17;6; 5:26-30). பாபிலோனியப் படைகள் அவரது கட்டளைக்குப் பணிகின்றன (எரே 25:14-38). நெபுகத்னேசர் அவரது ஊழியன் (எரே 27:6-8) ஆவான்.

போரானது அடிப்படையிலேயே தீயது என்பதை இந்தப் பயங்கர நிகழ்ச்சிகளின் மூலமாக இஸ்ராயேல் புரிந்து கொண்டது. மனிதர்களிடையிலான சகோதரத்துவ வெறுப்பின் விளைவே இது (ஆதி 4). இது பாவ இனத்தினுடைய முடிவோடு பிணைக்கப்பட்டுள்ளது. இறைவனுடைய தண்டனை என்ற நிலையில், பாவம் மறைகின்ற வரையில், இஃது இவ்வுலகிலிருந்து முழுவதும் மறையாது (சங் 46:10; எசே 39:9-10). இதன் காரணமாகவே, இறைவாக்கினருடைய இறுதிக்கால வாக்குறுதிகள் அனைத்தும் உலகளாவிய சமாதானத்தினுடைய வியத்தகு காட்சியால் நிறைந்துள்ளன (எசா 2:4;

11:6-9). வெற்றி மற்றும் அழிவினுடைய புனிதப் போர்களுக்குப் பதிலாக, இத்தகைய உண்மையான மீட்பையே இஸ்ராயேல் நாட வேண்டும்.

**IV. இறுதிக்காலப் போர்கள்**

**1.எதிரிப்படைகளின் தாக்குதல்:** ஆயினும், இந்த மீட்பானது போரின்றி வராது. ஆனால், இப்போராட்டத்தினுடைய இன்றியமையாத சமய இயல்பானது தற்காலிக நிகழ்ச்சிகளினின்று முன்பிருந்ததைவிட மேலான விதத்தில் வேறுபடுத்தப்படும். ஆயினும், இதனுடைய எதிர்பார்க்கப்பட்ட பொருளானது, சந்தேகத்திற்கிடமின்றி எருசலேமிற்கு எதிரான புறவினத்தாருடைய இராணுவத் தாக்குதலின் தோற்றத்தைச் சிறிதாகிலும் கொண்டிருக்கும் (எசே 38; செக் 14:1-13; யூதி 1-7). பேரரசர் அந்தியோக்கினால் கட்டவிழ்த்து விடப்பட்ட, குருதிதோய்ந்த அடக்குமுறையின் போது எழுதப்பட்ட தானியேலின் வெளிப்பாட்டில், கொடிய விலங்குகளின் உருவில் சித்தரிக்கப்படும் பகைச் சக்தியானது தனது முதல் நோக்கமாகப் "புனிதர்களின் மீது போர் தொடுப்பதையும்," இறைவனையே தாக்குவதையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது (தானி 7:19-25; 11:40-45; யூதி 3:8). அரசியல் போரின் பின்னணியில் இறைவனுக்கு எதிரான சாத்தான் மற்றும் அவனது தோழர்களுடைய ஆன்மீகப் போரினையும் அறியலாம்.

**2. இறைவனுடைய பதில்:** தனது விசுவாசத்திற்கு எதிராக, புறவின ஏகாதிபத்திய சக்தியால் தொடரப்பட்ட இந்தத் தாக்குதலின் முன்னிலையில், புனிதப்போரின் மரபில் புதுப்பிக்கின்ற இராணுவப் போராட்டத்தின் மூலமாக யூத இனமானது இன்னும் எதிர்ச்செயல் புரியலாம் (1 மக் 2-4; 2 மக் 8:10). உண்மையில், இறைவனிடமிருந்து முதலில் உதவியைக் கோரக்கூடிய பெரிய போராட்டத்தில் தான் ஈடுபட்டுள்ளதை இஸ்ராயேல் அறிந்திருந்தது (காண். 2 மக் 15:22-24; யூதி 9). குறிப்பிட்ட காலத்தில் விலங்கினுடைய மரணத்தைத் தீர்மானித்து (தானி 7:11.26), அதனுடைய வல்லமையை முறிப்பவர் ஆண்டவரே (தானி 8:25; 11:45). இந்த முன்னோக்கு தற்காலிகப் போர்களின் திட்டத்திற்கும் அப்பால் செல்கிறது. விண்ணகப்போரில் இது முடிவடையும். இதன் மூலமாக, ஏற்கெனவே வரலாற்றில், தான் காத்தவர்களுக்கும் (காண். எசா 59:15-20; 63:1-6), பகைவர்களுக்கு எதிரான நீதிமான்களுடைய பாதுகாப்பில் உண்மையாகவே காப்பவர்களுக்கும் இறைவன் முடிசூட்டுவார் (சங் 35:1-3). இந்தப் போரானது இறுதித் தீர்ப்பைத் தனது அமைப்பிற்கெனக் கொண்டிருக்கும். அஃது இவ்வுலகிலுள்ள அனைத்து அநீதிகளுக்கும் முற்றுபுள்ளி வைத்து (ஞான 5:17-23), மண்ணுலகில் இறைவனுடைய ஆட்சிக்கு நேரடிப் பீடிகையாக இருக்கும். இதன் காரணமாகவே, முடிவில்லாச் சமாதானம் அதனைத் தொடரும். அதில், அனைத்து நீதிமான்களும் பங்கு பெறுவர் (தனி 12:1-3; ஞான 4:7-9; 5:15-16).

**இ) புதிய ஏற்பாடு:** இந்த வாக்குறுதிகளைப் புதிய ஏற்பாடு நிறைவேற்றுகிறது. இறுதிக்காலப் போரானது இயேசுவின் மண்ணுலக வாழ்வு, அவரது திருச்சபையின் வரலாறு, மற்றும் இறுதி முடிவு ஆகிய மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படுகிறது.

**I. இயேசு:** இறுதிக்காலப் போராட்டத்தினுடைய ஆழ்ந்த இயல்பானது இயேசுவில் நிறைவாக வெளிப்படுத்தப்படுகிறது. இஃது இவ்வுலக அரசிற்கான தற்காலிகப் போரன்று (லூக் 22:50-51; யோவா 18:38). இயேசு தன்னைப் பாதுகாக்க எவ்வித மனித வன்முறையினையும் பயன்படுத்த மறுக்கிறார் (மத் 26:52; யோவா 18:11). இது சாத்தானுக்கு எதிரான, உலகிற்கு எதிரான மற்றும் தீமைக்கு எதிரான ஆன்மீகப் போராட்டமாகும். இவ்வுலகின் அரசனைத் தூக்கியெறிய வந்துள்ள வலியவர் இயேசுவே (மத் 4:1-11; 12:27-29; லூக் 11:18-20). உண்மையில், இவ்வுலக அரசன் அவருக்கெதிரான இறுதித் தாக்குதல் மூலம் எதிர்ச்செயல் புரிகிறான். இயேசுவைச் சாவிற்கு உட்படுத்துவது அவனுடைய கடைசி

முயற்சியாகும் (லூக் 22:3; யோவா 13:2,27; 14:30). ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவருக்கு எதிராக வரிசைப் படுத்தப்பட்ட உலக வல்லமைகளின் செயலைத் தூண்டுவது இவனே (அ.ப. 4:25-28; காண். சங் 2). ஆனால், இவ்வாறு செய்வதில் அவன் தனது தோல்வியையே விரைவுபடுத்துகிறான். உண்மையில், முரண்பட்ட நிலையில் இயேசுவின் சிலுவை அவரது வெற்றிக்கு உறுதியளிக்கிறது (யோவா 12:31). அவரது உயிர்ப்பில் தங்களுடைய அதிகாரத்தை இழந்த எதிரான சக்திகள் அவருடைய வெற்றிகரமான ஊர்வலத்தில் தோன்றுகின்றன (கொலோ 2:15). தனது மரணத்தினால் உலகை வென்றவராய் (யோவா 16:33), இனிமேல் வரலாற்றினுடைய ஆட்சியாண்மையை அவர் கொண்டுள்ளார் (திருவெளி 5). ஆனால், அவர் தாமே மேற்கொண்ட போராட்டமானது அவரது திருச்சபையின் வாழ்வில் காலந்தோறும் தொடரும்.

**II. இயேசுவின் திருச்சபை:**

1. **போராடும் திருச்சபை:** பண்டைய இஸ்ராயேல் மக்களைப்போல், திருச்சபையானது தற்காலிக அமைப்பின் மாட்சியாக இருக்கவில்லை. எனவே, மனிதருடைய போர்கள் அதனைச் சார்ந்தவையல்ல. ஆனால், இன்றைய உலகின் வரலாறு நிலைத்திருக்கும்வரையில், தனது அளவில் அது போராட்ட நிலையில் உள்ளது. அதன் மூலமாக இயேசு மனிதருக்குக் கொண்டு வருவது என்னவெனில், இறைவனுடனான சமாதானமும், ஒருவர் மற்றொருவருடனான சமாதானமும் ஆகும் (லூக் 2:14; யோவா 14:27; 16:33). ஆனால், இத்தகைய சமாதானமானது இவ்வுலகினுடையதன்று. இவ்வாறு, அவரில் விசுவாசம் கொள்ளும் மனிதர்கள் எப்போதும் உலகின் வெறுப்புக்கு உரியவர்களாகவே இருப்பர் (யோவா 15:18-21). இம்மைக்குரிய நிலையில் இயேசு அவர்களுக்கு வாளையன்றி, சமாதானத்தை ஒருபோதுமே கொண்டு வரவில்லை (மத் 10:34 இணை). ஏனெனில், இறைவனுடைய அரசு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது (மத் 11:12). தனிப்பட்ட அளவில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் போரிட வேண்டும். இஃது உடலும் இரத்தமுமான பகைவர்களுக்கு எதிராக இல்லாமல், சாத்தானுக்கும் அவனது தோழர்களுக்கும் எதிரானதாக இருக்க வேண்டும் (எபே 6:10-12; 1பேதுரு 5:8-9). திருச்சபையானது குழுவாகச் சாத்தானுடைய தோழர்களான இவ்வுலகச் சக்திகளுடைய தாக்குதல்களுக்குக் கையளிக்கப்படும்; உரோமைப் பேரரசும், புதிய பாபிலோனும் இத்தகையவையே (திருவெளி 12:17-13:10;17).

2. **கிறிஸ்தவ படைக்கருவிகள்:** இப்போரில் திருச்சபையும், அதன் அங்கத்தினர்களும் இம்மைக்குரிய படைக்கலன்களைப் பயன்படுத்தாமல் இயேசு அவர்களுக்கு உரிமையாக விட்டுச்சென்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். கிறிஸ்தவ நற்குணங்களே கிறிஸ்துவினுடைய போர்வீரனால் அணியப்படும் ஒளியின் ஆயுதங்களாகும் (1 தெச 5:8; எபே 6:11; 13-17). கிறிஸ்துவிலான விசுவாசமே தீயோனையும் உலகையும் வெல்கிறது (1 யோவா 2:14; 4:4; 5:4-5). வெளிப்படையாக உலகமானது கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொல்லும்போது, அவர்கள்மேல் வெற்றி கொள்வது போல் தோன்றலாம் (திருவெளி 11:7-10). நிலையற்ற இந்த வெற்றியானது, கிறிஸ்துவின் சிலுவையானது அவரது உயிர்ப்பின் மகிமைக்குப் பீடிகையாக உள்ளது (11:11. 15-18). செம்மறியானது தனது மரணத்தின் மூலம் அலகையை அழித்து விட்டார். அவ்வாறே, அவரது தோழர்களும் தங்களுடைய மறைசாட்சி மரணத்தின்மூலம் தங்கள் பகைவன்மீது வெற்றிகொள்வர் (12:11; 14:1-5). இத்தகைய போர்களின் வீரத்தன்மை பெருமளவில் யாவேயின் பண்டைய போர்களின் வீரத்தை விஞ்சுகிறது; எவ்விதத்திலும் குறையாத வீரதீரத்தைக் கோருகிறது.

**III. இறுதிப்போர்.**

1. முதல்நிலை அறிகுறிகள்: இயேசுவால் தொடங்கப்பட்ட இறுதிக் காலங்கள் கிறிஸ்து மற்றும்

எதிர்க்கிறிஸ்து என்னும் இரு குழுக்களுக்கிடையிலான மரணம் வரை போராட்டத் தோற்றத்தை இவ்வாறு ஏற்கின்றன. வரலாறு தனது முடிவை அடைகின்ற அளவிற்கேற்ப இப்போராட்டமானது நுண்மையிலும், கொடுமையிலும், தீவிரத்திலும் அதிகரிக்க வேண்டும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆனால், பாவ உலகாகிய தீய உலகம் உறுதியான இறைத்தண்டனையின்கீழ் உள்ளது. அதனுடைய அடையாளத்தை அதன் முடிவானது இனிக் கொண்டிருக்கும். இந்த இடத்தில் மனிதருடைய போர்கள் தங்களுடைய பொருளின் முழுமையை வெளிப்படுத்துகின்றன. மனிதனுடைய இம்மைக்கால அனுபவத்தின் மையத்தில், வரவிருக்கும் தீர்ப்பின் அறிகுறிகள் எழுதப்பட்டுள்ளன (மத் 24:6; இணை; திருவெளி 6:1-4; 9:1-11). கிறிஸ்துவினுடைய சமாதானத்தை ஏற்க மறுக்கின்ற அளவிற்கேற்ப, பாவம் நிறைந்த மனித இனமான,து குறிக்கப்பட்டுள்ளதற்குரிய உள்ளார்ந்த எதிர்ப்புகளை வெளிப்படுத்துகின்றது.

2. **இறுதிப்போரின் உருவங்கள்:** காலமானது தனது முடிவை நோக்கி, தவறாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒருபுறம் கிறிஸ்து தனது திருச்சபைக்குள் இறைவனுடைய அனைத்துச் சிதறிய மக்களையும் சிறிது சிறிதாக ஒன்று சேர்க்கிறாரெனில் (யோவா 11:52), மறுபுறம் அவரைப்போல் நடிக்கும் சாத்தான், தான் கெடுத்த அனைவரையும் ஒரே அணியில் ஒன்றுசேர்க்க முயல்கிறான். காலங்களின் முடிவில், தங்களது இறுதிப் போரைத் தொடங்குவதற்கென, அவனது தலைமையின் கீழ் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டவர்களாக அவர்களைத் திருவெளிப்பாடு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. (திருவெளி 19:19; 20:7-9). ஆனால் இம்முறை, வெற்றியாளராகிய கிறிஸ்து தனது ஆட்சியுரிமையைக் காணக் கூடிய விதத்தில் ஒளிவீசச் செய்வார்; இறைவார்த்தையானது மகிமையில் தோன்றி, அழிப்பவரின் பணியைப் புரியும் (19:11-16.21; காண். மத் 24:30). வரவிருப்பதனுடைய இம்மைக்குரிய தோற்றமானது இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட தோற்றத்திற்குப் பின்னால், நம்மிடமிருந்து தன்னையே மறைக்கிறது; சாத்தான் மற்றும் அவனது ஆதரவாளர்களுடைய முடிவில்லாத் தண்டனையுடன், காலத்தின் இறுதியுடன் அது முடிவடையும் (19:20; 20:10). அதன் பின்னர், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, மனிதருடைய பல்வேறுபட்ட குழுக்களுக்கு இடையிலோ உள்ள அனைத்து முரண்பாடுகளும் வெற்றி கொள்ளப்பட்டபின், புதிய எருசலேமினுடைய நிறைவான சமாதானமானது காப்பாற்றப்பட்ட மனித இனத்தை இன்பவனத்திற்குள் மீண்டும் அறிமுகப்படுத்தும் (திருவெளி 21). புனிதர்களின் நிலைத்தன்மை மற்றும் நம்பிக்கையின் அடித்தளமாகிய இறுதி வெற்றியின் காட்சியானது இதுவே (12:10): ஏனெனில், வெற்றி வீரராகிய கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து (3:21-22:7), போராடும் திருச்சபை வெற்றித்திருச்சபையில் எக்காலத்திற்கும் இறந்து போகும்.

## போர் இயந்திரம், அரண் தகர் பொறி (BATTERING RAM)

இது போர்க்காலத்தில் ஒரு நகரை முற்றுகையிடுவோர் அதன் கோட்டைச்சுவர்களை இடிக்கப் பயன்படுத்தும் கருவியாகும். இதன் தொடக்க வடிவம் அசீரியர்களிடம் தோன்றியதாகத் தெரிகிறது. இஃது ஒரு சட்ட அமைப்பிலிருந்து நடுவில் தொங்கவிடப்பட்ட கனத்த மரத்துண்டு ஆகும். இச்சட்டம், கோட்டைச் சுவரிலிருந்து பாதுகாக்கும் படையினரால் எய்யப்படும் அம்புகளிலிருந்தும், கற்களிலிருந்தும் முற்றுகையிடுவோர் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் பயன்பட்டது. முழு இயந்திரம் நான்கு அல்லது ஆறு சக்கரங்களில் இழுத்துச் செல்லப்பட்டது.

2 சாமு 20:15-இல் இந்த இயந்திரம் குறிக்கப்பட்டிருக்கலாம். இங்கு யோவாபும், அவருடைய வீரர்களும் ஆபல்–பெத்-மாக்காவின் மதிலைத் தகர்த்தனர் என்று கூறப்பட்டுள்ளது. எசே

4:2-இல் இறைவாக்கினர் முற்றுகையிடப்பட்ட எருசலேமுக்கு ஒரு மாதிரி செய்யக் கட்டளை பெறுகிறார். இவ்விவரிப்பில் இந்த இயந்திரமும் இடம் பெறுகின்றன. எசே 21:27-இல், எருசலேமுக்கு எதிரான முற்றுகையில் பாபிலோனியர் பயன்படுத்திய ஆயுதங்களில் இதுவும் குறிக்கப்படுகிறது. தீர் நகருக்கு எதிரான இறைவாக்கிலும் இப்பொறி இடம் பெறுகிறது (26:9).

**போர்க்கருவிகள் (WEAPONS OF WAR)**

பல்வகைப்பட்ட போர்க்கருவிகள் மற்றும் அவை பயன்படும் சந்தர்ப்பங்கள் பற்றிய குறிப்புகள் விவிலியத்தில், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் நிறையவுள்ளன. இதைக்கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஏனெனில், இஸ்ராயேலர் தங்கள் வரலாறு முழுவதும் ஏதாவது ஒரு போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே ஆயுதங்கள் எல்லாக் கலாச்சாரங்களிலும் ஒரு முக்கியப் பாகம் வகித்தன. இவை வேட்டையாடுவதிலோ, போரிலோ பயன்பட்டன. இவற்றைப் பயன்படுத்தும் திறன் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. போதிய, தகுந்த ஆயுதங்களைச் செய்வது மக்களினங்களின் ஒரு முக்கிய அலுவலாக இருந்தது. காலப்போக்கில் இக்கருவிகளும் வளர்ச்சியுற்றன; நுண்மயமாக்கப்பட்டன. வளர்ச்சியுற்ற ஆயுதங்களைக் கொண்டிருப்பது பெரும்பாலும் ஒரு கலாச்சாரக்குழு மற்றொன்றின்மேல் ஒரு காலத்திற்கு ஆதிக்கம் கொண்டிருக்க உதவியது. இஃது ஆயுதங்களை ஆற்றல் மிக்க தாக்குவதிலும், பெருக்குவதிலும் போட்டிகளை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட கலாச்சாரக்குழு அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களின் தொழில் நுட்பத்தை அடையவோ, அதை விஞ்சவோ கட்டாயப்படுத்தப்பட்டது.

தொடக்க கால ஆயுதங்கள் மரத்தாலும், கற்களாலும் செய்யப்பட்டன. கற்கள் தனியாகவோ மரத்தோடு சேர்த்தோ பயன்படுத்தப்பட்டன. சக்கிமுக்கிக் கல் போன்றவை செதுக்கப்பட்டுக் கூர்மையான முனையுள்ள அல்லது கத்தி போன்ற ஓரங்களுடைய ஆயுதங்களாக்கப்பட்டன. இவை பெரிதும் பயன்படுத்தப்பட்டன. வில், அம்பு, கவண்கள் முதலியவை உலோகம் அல்லாத பொருட்களாலும் செய்யப்பட்டன.

கி.பி. 5-ஆம், 4-ஆம் ஆயிரமாண்டுகளில், உலோக இயல் வளர்ச்சியுற்றது. அஃதோடு போர்க்கருவிகள் செய்யும் தொல்நுட்பமும் பயங்கரமாக வளர்ச்சியுற்றது. இக்காலத்தில், செம்பு உருக்கி அடிக்கப்பட்டு, கருவிகளாகவும் ஆயுதங்களாகவும் செய்யப்பட்டன. ஆனால், கலப்பற்ற செம்பு ஆயுதங்கள் செய்வதற்கு மிகவும் மென்மையாக இருந்ததால், வெண்கலத்தைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் வளர்ச்சியுற்றது. செம்பும் தகரமும் சேர்ந்த இந்தக் கலவை, வெறும் செம்பைவிடக் கடினமானதாகவும் வலுவானதாகவும் இருந்தது.

வெண்கலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் போர்க்கருவிகள் செய்ய வெகுவாகப் பயன்பட்டது. பழங்கால உலகின் பெரும் எழுச்சிகளும், தகரத்தின் பற்றாக்குறைகளும் சேர்ந்து வெண்கலத்தை நடைமுறைக்குப் பயனற்றதாகச் செய்தன. ஆகவே, மக்கள் அதிகமாகக் கிடைத்த இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கினர். இரும்பு ஆயுதங்கள் இக்காலத்திற்கு முன்பே தோன்றியிருக்கலாம். ஆனால், இரு தடைகள் இருந்தன. செம்பைவிட இரும்பை உருக்குவது வெகுகடினம்; மேலும், வெண்கலக்காலக் கொல்லர்கள் இந்தக் கலவையைத் தெரிந்திருக்க வில்லை. ஆகவே, தரத்தில் வெண்கலத்திற்குத் தாழ்ந்த மெல்லிரும்பே பயன்படுத்தப்பட்டது.

வெண்கலக் கால முடிவில் உலோகத் தொழிலாளர்கள் கரித்தீயில் இரும்பைக் காய்ச்சி அடித்து உருவாக்கும் நுட்பத்தைக் கண்டுபிடித்தனர். பரிசோதனைகளின் விளைவாக, அடுத்தடுத்து வெப்பமூட்டிக் குளிரச் செய்வதன் மூலம் சரியான உறுதியும் நீட்டிப்பு ஆற்றலுமுடைய இரும்பைத்

தயாரிக்குமுறையைக் கண்டுபிடித்தனர். இஃது ஒருவகையான எஃது ஆகும். இது, மென்னிரும்பையோ, வெண்கலத்தையோவிட, கருவிகளோ செய்வதற்கு ஏற்றதாக இருந்தது. கூரியமுனை மற்றும் ஓரங்களுடைய ஆயுதங்கள் செய்வதற்கு இது மிக உகந்தாய் இருந்தது. இரும்பிலிருந்து- வாள், குத்துவாள், கத்தி, ஈட்டி, அம்புமுனை மற்றும் பிற கருவிகளும் செய்யப்பட்டன. பெலிஸ்தியர் ஒரு காலத்திற்கு இரும்பை ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தனர் என்று 1 சாமு 13:19-22 சுட்டுகிறது. இதற்குக் காரணம் தொழில் நுட்பம் சார்ந்ததாக இருக்கலாம். ஏனெனில், இஸ்ராயேலர் இத்தொழிலைக் கற்றுக் கொள்ளவில்லை எனலாம் (காண். நீதி 1:19; 4:3); அல்லது அரசியல் சார்ந்ததாக இருக்கலாம்; ஏனெனில், பெலிஸ்தியர் இரும்புக் கொல்லர்களை இஸ்ராயேலரிட மிருந்து வெற்றிகரமாக விலக்கியிருந்தனர்.

விவிலியத்திலும், அதற்குப் புறம்பேயும் பழங்கால ஆயுதங்கள் தாக்கப் பயன்படுபவை, தற்காப்புக்குப் பயன்படுபவை என்று பகுக்கப்பட்டிருந்தன. தற்காப்பு ஆயுதங்களில் முதன்மையாக மார்புக்கவசமும், அதைச் சேர்ந்தவைகயும் அடங்கும். காத்தைச் சேர்ந்த கோலியத்து வெண்கலத்தால் செய்யப்பட்ட தலைச்சவசமும் மீன் செதிலைப் போன்ற ஒரு மார்புக்கவசமும் அணிந்திருந்தான் (1 சாமு 17:56; காண். 17:38; 2 நாள் 26:14; நெகே 4:16; எரே 46:3-4). பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படும் ஒரே ஒரு தற்காப்பு ஆயுதம் ஊசியாவின் "ஏவுகணை இயந்திரமாகும்" (2 நாள் 26:15). இஃது எருசலேமின் கோட்டைக் கோபுரங்களில் வைக்கப்பட்டுத் தாக்குபவர்களின்மேல் அம்புகளையும், பெரும் கற்களையும் வீசுவதற்குப் பயன்பட்டது. இந்த இயந்திரம் தானாகவே அம்புகளையும் கற்களையும் வீசியதா அல்லது இதைப் பாதுகாப்பாகக்கொண்டு வீரர்கள் அம்புகளை எய்து, கற்களை வீசினார்களா என்பது தெளிவாக இல்லை.

தாக்கும் ஆயுதங்கள் பல்வேறு பட்டவையாகும். அவை அடைந்த தூரத்தை வைத்துப் பகுக்கப்பட்டன. குறுகிய தூர ஆயுதங்களில் வாள் அல்லது குத்துவாள் (வெட்டுவதற்கும் குத்துவதற்கும் பயன்பட்டன; யோசு 11:11; நீதி 3:16-22; மத் 26:47-52). தடி, சம்மட்டி மற்றும் போர்க் கோடரி (சிறு பகுதிகளாக உடைப்பதற்குப் பயன்பட்டன; எரே 51:20-23; காண். பழ 25:18; எசா 10:5.15), ஈட்டி (குத்துவதற்குப் பயன்பட்டது; எண்-25:7-8; 2 சாமு 2:23; யோவா 19:34) ஆகியவை அடங்கும். மத்திய தூர ஆயுதங்களில் ஈட்டி மற்றும் அது போன்ற எடைகுறைந்த வேல் (எறிவதற்குப் பயன்பட்டன; 1 சாமு 18:11; 19:10; காண். 17:6-7; அ.ப. 23:23) ஆகியவை அடங்கும். அம்புகளும், கவண்களும் விவிலியத்தில் குறிக்கப்படும் நீண்ட தூர ஆயுதங்களாகும் (1 சாமு 17:49; 1 நாள் 12:2; 2 நாள் 26:14; திருவெளி 6:2). மிகவும் முக்கியமான, இறுதியான தாக்கும் ஆயுதம்- தேர் ஆகும். கானானில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் இஸ்ராயேலர் முன்னேறுவதை இரும்புத்தேர்கள் தடுத்து நிறுத்தின (நீதி 1:19). சாலமோன் தேர்கள் வைத்திருந்த நகரங்களும், அவருடைய 1400 தேர்களும் அவருடைய பெரும் செல்வத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்பட்டன (1 அர 10:14-29).

அதிகம் இல்லாமல் ஆனால் மறைமுகமாக, விவிலியம் ஆன்மீக ஆயுதங்களைக் குறிப்பிடுகிறது. ஆதி 15:1; சங் 3:31-இல் இறைவன் ஒரு கேடயம் என்று குறிக்கப் பெறுகிறார். சங் 7:11-13 இறைவனது நேர்மையான சினத்தின் விளைவுகளை வாள், வில் மற்றும் அனல் பறக்கும் அம்பு ஆகிய சொற்களில் விவரிக்கின்றன. நேர்மை மிக்க நீதிபதியான இறைவன் நேர்மையை- மார்புக்கவசமாகவும், விடுதலையைத் தலைச்சீராவாகவும் அணிந்திருப்பதாக எசா 59:17 விவரிக்கிறது. இவையிரண்டையும் மற்றும் பிறவற்றையும் எபே 6:11-17-இல் கிறிஸ்தவன் அணிய வேண்டிய இறைவனின் படைக்கலன்களை விவரிக்கும்போது, பவுல் பயன்படுத்துகிறார். 2 கொரி 10:14-இல் கிறிஸ்தவனின் ஆயுதங்கள்

உலகத்தைச் சார்ந்தவை அல்ல என்று குறிப்பிடுகிறார். எபி 4:12-இல் ஆசிரியர் இறைவார்த்தையை இருபக்கமும் கருக்கு வாய்ந்த வாளுக்கு ஒப்பிடுகிறார் (காண். திருவெளி 1:16). இஃது இறைவனின் சொல்லை ஆவி தரும் போர்வாளாகப் பவுல் சமன்படுத்துவதற்கு (எபே 6:17) ஒத்ததாகும்.

**போர்க்குதிரை (CHARGERS, STEEDS, STALLION)**

போர்க்காலத்தில் பகைவனின் படைகளை எதிர்த்துத் தாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் வலிமைமிக்க குதிரைகள். பொதுவாக, இவை வலிமை மிக்கவனவாகவும் முரட்டுத்தன்மையும், வீரமும், வேகமும் ஒருங்கே இணையப்பெற்றனவாகவும் இருந்தன; போரில் பயன்படுத்துவதற்கு ஏற்றனவாக இருந்தன (காண். எசா 30:16; 31:1.3; எரே 8:6.16; 47:3; 50:11; மீக் 1:13; நாகூ 2:4; செக் 6:7; நீதி 5:2; 1 அர 5:8).

**போர்க்கைதிகள் (CAPTIVES)**

பழங்காலத்தில் போரில் பிடிபட்ட நகரங்களின் மக்கள் கைதியாக்கப்பட்டனர். அரிதான சில சமயங்களில் இக்கைதிகள் நல்ல முறையில் நடத்தப்பட்டாலும் (1 அர 20:39; 2 அர 6:21-22), அனேகர் கொல்லப்பட்டனர் (2 சாமு 8:7; காண். நீதி 8:7). பெண்களும் குழந்தைகளும் கூடக் கொடுமையாகக் கொல்லப்பட்டனர் (2 அர 8:12; 15:16; ஆமோ 1:3; நாகூ 3:10). பெரும்பாலும் இவர்கள், கொள்ளைப் பொருளாகக் கொண்டு செல்லப்பட்டனர் (உப 20:10). கொல்லப்படுவதிலிருந்து தப்பியவர்கள்- கை, கால் சங்கிலியால் கட்டப்பட்டு, அடிமைத்தனத்துக்கோ, கட்டாய வேலைக்கோ கொண்டுசெல்லப்பட்டனர். பெண்கள், சங்கிலியால் கட்டப்படவில்லை யாயினும், அவர்களைக் கூட்டிச்சென்ற வீரர்களால், கற்பழிப்பு போன்ற கொடுமைகளுக்கு உள்ளானார்கள்.

அசீரியர்களும், பிற்காலத்தில் பாபிலோனியர்களும், அவர்கள் வென்ற நாடுகளிலிருந்து மக்களின் பெரும் பகுதியினரைக் குடிபெயரச் செய்து பிற நாடுகளில் குடியேறச் செய்தனர். சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பின் இஸ்ராயேலும், எருசலேமின் வீழ்ச்சிக்குப் பின் யூதாவும் இத்தகைய கொடுமையை அனுபவித்தன (2 அர 17:24; 24:12-16; 25:11-12). போர்க்கைதிகளை அசீரியர்கள் கொடுமையாக இழிவுபடுத்தினர். கைதியாக்கப்பட்ட அரசன் அசீரியத் தலைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டு, வெற்றி பெற்ற அரசனின் தேரை இழுக்க வைக்கப்பட்டான். கைதியான அரசனின் மூக்கிலோ, உதட்டிலோ ஒரு வளையம் பொருத்தப்படும்; அல்லது அவன் கூண்டில் அடைக்கப்பட்டு, நகரின் வாயிலில் வைத்து அவமானப்படுத்தப்படுவான்; கேலி செய்யப்படுவான் (காண். எசே 19:9). கிளர்ச்சி செய்யும் கைதிகளின் கை, கால், மூக்கு, காது முதலியன வெட்டப்படும்; கண்கள் பிடுங்கப்படும்; நாக்கு பிடுங்கப்படும். மற்றவர்கள் சிரச்சேதத்தாலோ, தூக்கிலிடுவதாலோ கொல்லப்படுவர். சில சமயம், கைதிகள் தோல் உரிக்கப்பட்டு, அவர்களது தோல் ,நகரச் சுவர்களில் தொங்கவிடப்படும்.

**போர்வை (COVERING, COVERLET, RUG)**

இது பஞ்சு, கம்பளம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டது (பழ 7:16; 31:22); பலவாறு பயன்பட்டது. யாயேல் தன் கூடாரத்துக்குள் நுழைந்த சீசராவை ஒரு போர்வையால் மூடினாள் (நீதி 4:18). அசாவேல் ஒரு போர்வையை எடுத்துத் தண்ணீரில் நனைத்துப் பென்-அதாது மன்னன் முகத்தை மூட, மூச்சடைத்து மன்னன் இறந்து போனான் (2 அர 8:15). இது படுக்கை விரிப்பாக, திரையாக அல்லது கனமான உடையாகப் பயன்படலாம்.

**போலி அப்போஸ்தலர்கள் (FALSE APOSTTES)**

கொரிந்து நகருக்கு வந்த சிலர், தாங்களே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் எனக்கூறினர் (2 கொரி 11:13). பவுல் இவர்களை நீதியின்

பணியாளர்களாக நடிக்கும் சாத்தானின் ஊழியர்கள் என்று பழித்துரைக்கிறார். இவர்கள் தாங்கள் யூதப்பரம்பரையில் தோன்றியவர்கள் எனக் கூறிக் கொண்டனர் (11:13-15.22); மற்றச் சபைகளிலிருந்து பரிந்துரைக் கடிதம் வாங்கி வந்திருந்தனர். இவர்கள் கொரிந்தை விட்டுப் போகும்போது அத்தகைய ஓர் கடிதத்தைக் கேட்டனர் (2 கொரி 3:1; காண். அ.ப. 18:27). இவர்கள் முரண்பாடான கருத்துகளை பரப்பினவர்களா அல்லது யூதமறையைப் பரப்பினவர்களா என்பது தெளிவாக இல்லை. ஆனால், இவர்கள் போதிப்பது வேறோர் இயேசு, வேறு நற்செய்தி, வேறோர் ஆவியில் வாழ்கின்றனர் என்று பவுல் குற்றம் சாட்டுகிறார். இவர்களின் எண்ணங்கள் தன்னலமானவை. அதன் விளைவு சீர்கேடு என எச்சரிக்கிறார் பவுல் (11:4.6. 18-20; 12:20-21) இவர்கள்தான் பவுலுக்கு எதிராகக் கொரிந்து நகரத் திருச்சபையிலே குழப்பமும் கலகமும் விளைவித்தனர்.

**போலிகார்பின் திருமுகம் (POLYCARP, EPISTLE OF)**

சிமிர்னா நகர ஆயரான போலிகார்பும் அவரோடிருந்த குருகுலமும், பிலிப்பி நகரத் திருச்சபைக்கு எழுதிய திருமுகம் இது. இது திராசன் மன்னனின் இறுதிக்காலத்தில் (கி.பி. 117) எழுதப்பட்டிருக்கலாம். போலிகார்பன் சீடரான இரனேயுதான் முதன் முதலில் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கிரேக்க மூலத்தில், இதன் ஒரு பகுதிதான் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மீதிப்பகுதி பழைய இலத்தீன் மொழியில் உள்ளது. இது நம்பத் தகுந்த சொற்பொருள் மொழிபெயர்ப்பாக உள்ளது. இந்நூல் அப்போஸ்தலிக்கத் தந்தையர்களின் நூல்களில் ஒன்று.

இக்கடிதத்திற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. அ) இஞ்ஞாசியார் மறைசாட்சி மரணத்திற்கு உரோமை செல்லும் வழியில் பிலிப்பி வழியாகச் சென்றார். அவரது முடிவு பற்றிய செய்தியை அறியவும், இஞ்ஞாசியாருடைய கடிதங்கள் ஏதாவது இருந்தால், பிலிப்பியின் திருச்சபை அதை அனுப்பிவைக்கும்படியும் கேட்டுப் போலிகார்பு இக்கடிதத்தை எழுதுகிறார்.

ஆ) பிலிப்பி நகரக் குருவான வலென்சும், அவரது மனைவியும் பணத்தைக் களவாடியதால் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டனர். இதுபற்றி, போலிகார்பின் ஆலோசனையைப் பிலிப்பி திருச்சபையினர் கேட்டிருந்தனர். அதற்கும் பதில் எழுதுகிறார் போலிகார்பு. அதே சமயம், கிறிஸ்துவின் மனிதத்தன்மையை மறுக்கும் தோசேத்தியர்களுக்கு எதிராகப் பிலிப்பியரை எச்சரிக்கிறார். இவற்றோடு மற்ற ஒழுக்கப் போதனைகளையும் எழுதுகிறார்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பல கருத்துகள் இதில் பிரதிபலிக்கின்றன. இவர் நான்கு நற்செய்திகளையும் அறிந்திருந்தார். ஆனால், இயேசுவின் வார்த்தைகளைப் பல மாற்றங்களோடு மேற்கோள் காட்டுகிறார். பேதுரு, பவுல், யாக்கோபு, யோவான், ஆகியோரின் திருமுகங்களையும் இவர் அறிந்திருந்தார். இவர் இயேசுவின் சீடரான புனித யோவானின் சீடர் எனக்கூறப்படுகிறது (யோவா 5:21; 6:39.44).

போலிகார்பு சிமிர்னா நகரில் கி.பி. 155-இல் உயிரோடு எரிக்கப்பட்டார். மாற்கு அவுரேலியு காலத்தில் இது நடந்தது. இவ்வாறு இவர் மறைசாட்சியாக மரித்தார்.

**போலிகார்பின் மறைசாட்சி மரணம் (POLYCARP, MARTYRDORN OF)**

இது பிலோமெலியும் நகரத் திருச்சபைக்குச் சிமிர்னா நகரத் திருச்சபை எழுதிய ஓர் கடிதமாகும். இதில் சிமிர்னா நகர ஆயரான போலிகார்பு எவ்வாறு மறைசாட்சியாக மரித்தார் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது 2-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம். ஏனெனில், போலிகார்பு, கி.பி. 155-இல்தான் மறைசாட்சியாக மரித்தார். இப்புத்தகத்திலே அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டிய ஆயர், குருக்கள் பலரின் கருத்துகளும், அவர்களைப் பற்றிய செய்திகளும்

காணப்படுகின்றன. இஃது அப்போஸ்தலிக்கத் தந்தையர்களின் நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**போலிக்கிறிஸ்து (FALSE CHRISTS)**

இவர்கள் இயேசுகிறிஸ்துவைப் போலவே நடித்து மக்களை ஏமாற்றுபவர்கள். புதுமைகள் பல செய்து தவறான செய்திகளைப் பரப்பி மக்களை நம்பச் செய்து மக்களைத் தவறான வழிக்கு இட்டுச்சென்றவர்கள் (மாற் 13:22; மத் 24:24; காண். லூக் 21:8). சில கோணங்களில் பார்த்தால் திருவெளி 13:11-இல் வரும் இரண்டாம் விலங்கே இந்தப் போலிக் கிறிஸ்து. ஆனாலும், இந்தப்போலிக் கிறிஸ்து பேய்த்தன்மையுள்ள எதிர்க்கிறிஸ்துவிடமிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். இந்த எதிர்க் கிறிஸ்துதான் இயேசுவின் இரண்டாம் வருகையின்போது வரும் எதிரி (காண். எதிர்க் கிறிஸ்து).

**போலி நற்செய்திகள் (APOCRYPHAL GOSPELS)**

புதிய ஏற்பாட்டுத் திருமுறையில் காணப்படும் நற்செய்திகளைப் பின்பற்றி இவை எழுதப்பட்டன. ஆனால், இவை திருமுறைப்பட்டியலைச் சார்ந்தவை அல்ல. இவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**அ) தொடக்க கால நற்செய்திகள்:** இவை மேலெழுந்தவாரியாகத்தான் திருமுறை நற்செய்திகளை ஒத்திருக்கின்றன. திருச்சபைத் தந்தையர்கள் தங்கள் நூல்களில் இவை பற்றி அளிக்கும் குறிப்புகள் மற்றும் சுட்டிக் காட்டுதல்களிலிருந்து மட்டுமே இவற்றை அறிகிறோம். இவற்றை நற்செய்தித் துணுக்குகள் என்றழைக்கலாம். இவற்றில் சில:

1. எபிரேயர்களின் நற்செய்தி
2. எபியோனியர்களின் நற்செய்தி.
3. நசரேயர்களின் நற்செய்தி.

**ஆ) இயேசுவின் பாலபருவம் பற்றிய நற்செய்திகள்:**

1. அரபிக்கில் பாலபருவ நற்செய்தி.
2. அர்மேனியரின் பாலபருவ நற்செய்தி.
3. தச்சர் யோசேப்பின் வரலாறு.
4. தோமாவின் பாலபருவ நற்செய்தி.
5. யாக்கோபின் மூல நற்செய்தி.

**இ) பாடுகள் பற்றிய நற்செய்தி:**

1. தோமாவின் நற்செய்தி.
2. நற்செய்தியாளர் யோவானின் நூல்.
3. நிக்கொதேமுவின் நற்செய்தி.
4. பசிலிதசின் நற்செய்தி.
5. பார்த்தலமேயுவின் நற்செய்தி.
6. பேதுருவின் நற்செய்தி.

**ஈ. பிற நற்செய்திகள்:**

1. இயேசுவின் கூற்றுகள் அடங்கிய அக்ரபா.
2. எகிப்தியரின் நற்செய்தி.
3. கன்னியின் விண்ணேற்பு.
4. தோமாவின் நற்செய்தி.
5. பார்த்தலமேயுவின் நற்செய்தி.
6. பிலிப்புவின் நற்செய்தி.
7. போலி மத்தேயுவின் நற்செய்தி.
8. மார்சியனின் நற்செய்தி.
9. மத்தியாவின் நற்செய்தி.
10. மரியாளின் பிறப்புப் பற்றிய நூல்

இவைபற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

**போலித்திருமுகங்கள் (APOCRYPHAL EPISTLES)**

புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களின் திருமுகங்களைப் பின்பற்றி இவை எழுதப்பட்டன. இவை எண்ணிக்கையில் சிலவே; பொருளடக்கத்தில் அவ்வளவு முக்கியம் உடையன அல்ல. ஆயினும், இவை பரவலாக அறியப்பட்டிருந்தன. இவற்றில் முக்கியமானவை:

1. அப்கார் - கிறிஸ்துவின் திருமுகங்கள்
2. அப்போஸ்தலர்களின் திருமுகம்.
3. இலௌந்துலுவின் திருமுகம்.
4. பவுல் எழுதியதாகக் கருதப்படும் இலவோதிக்கேயருக்கு எழுதப்பட்ட திருமுகம்.
5. பவுல் எழுதியதாகக் கருதப்படும் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட மூன்றாம் திருமுகம்.

6. பவுல் மற்றும் செனேக்காவின் திருமுகம்.
7. பிலாத்து எழுதிய திருமுகங்கள்.
8. தீத்து எழுதிய திருமுகம்.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

**போலிநூல்கள் (APOCRYPHA)**

I. "அப்போகிரிபா" என்ற கிரேக்கச் சொல், சமயப்பண்புடைய சில யூத, கிறிஸ்தவ நூல்களுக்கு அளிக்கப்பட்ட பெயராகும். இந்நூல்கள் ஒரு காலத்தில் இறை அதிகாரமுடையனவாகவும், சில இடங்களில் இறை ஏவுதல் பெற்ற நூல்கள் தொகுப்பில் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டன அல்லது உரிமை கோரப்பட்டன. ஆனால், காலப்போக்கில் திருச்சபை அதிகாரிகளால் விவிலியத் திருமுறைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

திருமுறைப்பட்டியலில் அடங்கிய நூல்கள் பற்றிக் கத்தோலிக்கர்களுக்கும் பிரிவினைச் சகோதர்களுக்குமிடையே கருத்தொற்றுமை இல்லை. எழுபதுநூல் தொகுப்பில் காணப்பட்டு எபிரேயத் தொகுப்பில் காணப்படாத நூல்களைப் பிரிவினைச் சகோதரர்கள் "அப்போகிரிபா" என்றழைப்பர். இவற்றில் பலவற்றைக் கத்தோலிக்கர்கள் திருமுறைப் பட்டியலைச் சார்ந்தவை என்று கருதி, இவற்றைத் துணைத்திருமுறை நூல்கள் என்றழைப்பர். இதுபற்றி விவிலியத் துணைத்திருமுறைப் பட்டியல் என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

கத்தோலிக்கர்கள் போலி நூல்கள் அல்லது "அப்போகிரிபா" என்ற பெயரைப் பல நூல்கள் அடங்கிய ஒரு தொகுப்புக்கு அளிப்பர். இவை தோன்றிய வரலாறு பற்றி உறுதியாக ஒன்றும் கூற முடியாது. சில சமயங்களில், ஆசிரியர் பெயரில்லாமல் இவை தோன்றின. பெரும்பாலும் பாவனை செய்யப்பட்ட பெயரில் அல்லது புனைபெயரில் இந்நூல்கள் எழுதப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றின. இவை குலமுதுவர்கள், இறைவாக்கினர்கள் அல்லது அப்போஸ்தலர்களின் பெயரால் எழுதப்பட்டன. இத்தொகுப்பைப் பிரிவினைச் சகோதரர்கள் ஆசிரியர் பெயர் தெரியாத நூல்கள் அல்லது புனைபெயர் நூல்கள் **(Pseudepigrapha)** என்றழைப்பர்.

II. "அப்போகிரிபோஸ்" என்ற கிரேக்கச் சொல்லுக்கு மறைந்திருக்கிற அல்லது இரகசியமான என்பது பொருள். இந்நூல்கள் இப்பெயரால் முதலில் அழைக்கப்பட்டபோது, இப்பெயர் இந்நூல்களுக்குப் பெருமை தருவதாக இருந்தது. அதாவது, சாதாரணப் பொதுமக்களுக்கு அளிக்கப்படக் கூடாத மறையுண்மைகளைக் கொண்டிருப்பதாக இந்நூல்கள் கருதப்பட்டன. ஆனால், காலப்போக்கில், இவை பதிதக் குழுக்களிடையே வளர்ச்சியுற்றதாலும் இவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாததாலும், இவற்றின் போதகங்கள் பாரம்பரியப் போதகத்திற்கு எதிர்மாறாக அமைந்திருந்ததாலும் பெருமையாகத் தொடங்கிய பெயர் இழிபொருள் பெற்றுப் போலிநூல்களைக் குறிக்கப் பயன்பட்டது. ஓரிசன் இப்பொருளில் இந்த நூல்களுக்கு இப்பெயரைக் கொடுத்தார். ஏனெனில், இவை உண்மை விசுவாசத்திற்கு மாறானவற்றை மற்றும் தவறானவற்றைக் கொண்டிருந்தன. ஆகவே, காலப்போக்கில், இப்பெயர் போலியான, பொய்யான, பதித நூல்களைக் குறிக்கும் பெயராயிற்று. இதே கருத்தைப் புனித அகுஸ்தினார் எதிரொலிக்கிறார். எரோனிமு விவிலியத் துணைத்திருமுறைப் பட்டியலில் அடங்கிய நூல்களைக் குறிக்கவும் இப்பெயரைப் பயன்படுத்தினார். அவரைப்பின்பற்றி கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் பிரிவினைச் சகோதரர்கள் யூதத் திருமுறைப்பட்டியலை ஏற்று, கத்தோலிக்கத் திருமுறைப்பட்டியலிலிருந்து அவர்கள் நிராகரித்த நூல்களை "அப்போகிரிபா" என்றழைத்தனர். நாம் இக்கட்டுரையில் கத்தோலிக்கர்கள் பயன்படுத்தும்

பொருளிலேயே போலி நூல்கள் என்றழைக்கிறோம்.

### III. பழைய ஏற்பாட்டுப் போலிநூல்கள்

**1. தோற்றமும் நோக்கமும்:** கிறிஸ்தவயுகம் தோன்றுவதற்கு முன்னும், தொடங்கியபோதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய யூதர்களிடையே நிலவிய அவலநிலையும் அவர்களிடையே பரவலாகப் காணப்பட்ட நம்பிக்கையற்ற மனநிலையுமே இந்நூல்கள் தோன்றக் காரணமாயின. அவர்கள் வாழ்ந்த காலத்தில் நம்பிக்கையிழந்து, அவர்கள் அயல் ஆதிக்கத்தில் கடும் சுமையான துன்பங்களை அனுபவித்தனர். அவர்களுடைய அக்கால நிலைக்கும் ஒரு காலத்தில் அவர்கள் உறுதியாக அடைய இருந்த உன்னத நிலைக்கும் இடையிலுள்ள ஏறு மாறான நிலையைக் கடுமையாக உணர்ந்தனர். அவர்களுக்கு வழிகாட்டி உற்சாகப்படுத்த, ஆறுதல் அளிக்க இறைவாக்கினர் ஒருவரும் இருக்கவில்லை. இந்த நிலையில், போலி நூல்களின் ஆசிரியர்கள் வெகுதொலைவில் இல்லாத ஒரு நற்காலத்திற்கு மக்களின் கவனத்தைத் திருப்ப முயன்றனர். அப்போது, தனிப்பட்ட விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்ற அளவில் இஸ்ராயேலர் தங்கள் கதியை அடைவர். இந்த நூல் ஆசிரியர்கள் விரைவில் வரவிருக்கும் மெசியாவின் வெற்றிகரமான ஆட்சியை உயிர்ச் சித்திரமாக எடுத்துக்கூறுவதில் பெருமை அடைந்தனர். அந்த ஆட்சியில் இறைவனுடைய எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறும். நீதிமான்களின் வெற்றி எல்லாருக்கும் வெளிப்படுத்தப்படும். இந்நூல்களின் மையக்கருத்து நம்பிக்கையூட்டுவதாகும். அவர்களின் தவிர்க்க முடியாத மகிமை மிக்க கதியில் யூதர்களிடையே ஆழ்ந்த விசுவாசத்தைத் தூண்டி எழுப்ப இந்நூல்கள் பல வழிகளிலும் முயன்றன; அவர்களின் சோதனைகளில் ஆறுதல் அளித்தன; இறைவாக்கு வழிநடத்துதலை நிறைவு செய்ய முயன்றன. நீதிமான்களின் துன்பம், கடந்த கால இறைவாக்குகள் நிறைவேறலில் இருந்த நம்பிக்கையற்ற நிலை ஆகிய எக்காலத்திலும் நிலவும் பிரச்சினைகளை விடுவிக்க இந்நூல்கள் உதவின; சட்டத்தின் மேலான முதன்மையையும், அதைக் கவனமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தின; அதே சமயம் தீயோரின் செழிப்பு, நீதித்தீர்ப்பு மற்றும் தண்டனையின் உறுதிப்பாடு, இறந்தோரின் உயிர்ப்பு ஆகிய இறையியல் பிரச்சினைகள் மீதும் ஒளிவிசின.

இந்த மாற்றத்தை ஏற்படுத்தப் பலமுறைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு சமயம், இந்த ஆசிரியர்கள் தங்கள் நோக்கத்திற்கு ஏற்றவாறு திருமுறை வாசகத்தை மாற்றி அமைத்து எழுதுவர். மற்றொருசமயம், பழங்காலத்துப் பெரியவர்களில் ஒருவரைக் கட்டுக்கதை விவரங்களுடன் மெருகூட்டிச் சித்தரித்து, அவரைக்கண்டு உற்சாகம் பெறவும், அவரைப் பின்பற்றவும் தூண்டுவர். பெரும்பாலும், இறைவாக்கு அல்லது வெளிப்பாட்டு இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி, மறைந்திருக்கும் வருங்காலத்தை ஆராய்ந்து, அது கொண்டிருக்கும் இரகசியங்களை மறைபொருளான மற்றும் புதிரான வடிவங்களில் எடுத்துரைப்பர். தங்கள் நோக்கை உறுதியாக அடைவதற்குக் கடந்தகாலப் பெரியவர்களைப் பயன்படுத்தி, அவர்கள் கூறுவதாகப் பாவனை செய்து, தமது கால மக்களின் கவனத்தைக் கட்டாயமாக ஈர்க்க முயன்றனர். இப்பெரியவர்கள், இஸ்ராயேலின் தொடக்க காலத்திலேயே எழுதியதாகப் பாவனை செய்து, விரைவில் வரவிருப்பவைகளை இக்கால மக்களுக்கு முன்னுரைப்பதாக ஆசிரியர்கள் எழுதினர் இவ்விதமாக மக்களுக்கு முனைப்பாக எச்சரிக்கை விடுத்தனர்; உற்சாகம் ஊட்டினர். இதில் இவர்கள் பெருமளவிற்கு வெற்றி கண்டனர் என்று உறுதியாகக் கூறலாம். இதன் விளைவாக உரோமை ஆதிக்கத்திற்கு எதிரான கிளர்ச்சிப் போக்கு தோன்றி, மேலும் மேலும் வளர்ந்து கி.பி. 66-70-இல் நடந்த பெரும் கிளர்ச்சியில் உச்சநிலை அடைந்தது. இதற்கு இந்தப் போலிநூல்கள் பெரிதும் உதவின எனலாம்.

இந்நூல்களில் சிலவற்றை வரலாறு சார்ந்தவை, போதக நூல்கள், வெளிப்பாட்டு நூல்கள் என்ற தலைப்புகளில் பின்வருமாறு தொகுத்துத் தருகிறோம்.

2. அ. வரலாறு சார்ந்த நூல்கள்:

1. ஆதாம் ஏவாளின் வரலாறு.
2. ஆசினத்தின் நூல்.
3. எசாயாவின் விண்ணேற்றம்.
4. எசுதிராவின் மூன்றாம் நூல்.
5. மக்கபேயரின் மூன்றாம் நூல்.
6. யூபிலி நூல்.

ஆ. போதக நூல்கள்:

1. சங்கீதம் 151.
2. சாலமோனின் சங்கீதங்கள்.
3. பன்னிரு குலமுதுவர்களின் ஏற்பாடு.
4. மக்கபேயரின் நான்காம் நூல்.
5. மனாசேயின் செபம்.

இ. வெளிப்பாட்டு நூல்கள்:

1. ஆபிரகாமின் வெளிப்பாடு.
2. உவமைகளின் நூல்.
3. எசாயாவின் விண்ணேற்பு.
4. ஏனோக்கின் முதல்நூல் - எத்தியோப்பிய வடிவம்.
5. ஏனோக்கின் 2-ஆம் நூல் - ஸ்லவோனிக் வடிவம்.
6. ஏனோக்கின் 3-ஆம் நூல் - எபிரேய வடிவம்.
7. சிபிலின் வாக்குகள்.
8. பாருக்கின் வெளிப்பாடு 2-ஆம் நூல் - சீரியக்கு வடிவம்.
9. பாருக்கின் வெளிப்பாடு 3-ஆம் நூல் - கிரேக்க வடிவம்.

IV. புதிய ஏற்பாடு:

1. புதிய ஏற்பாட்டுப் போலிநூல்கள் என்ற தொகுப்பில், உரோமையைச் சேர்ந்த கிளமந்து, இஞ்ஞாசியார், பர்னபா, ஆயர் ஏர்மாசு போன்ற கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையர்களின் நூல்கள் சேர்க்கப் படுவதில்லை. இவை அப்போஸ்தோலிக்கத் தந்தையர்கள் என்ற தலைப்பில் தொகுக்கப்படுகின்றன. போலி நூல்கள் என்ற தொகுப்பில் புதிய ஏற்பாட்டையும், திருமுறைப்பட்டியலையும் சேர்ந்ததாக உரிமை கொண்டாடிய நூல்கள் மட்டும் தொகுக்கப்படும். இவற்றில் பல பதிதக் கோட்பாடுகள் உடையன; கற்பனை வளமும் கட்டுக்கதைகளும் மிகுந்தவை.

2. தோற்றம்: திருமுறைப்பட்டியலில் உள்ள நூல்களில் கொடுக்கப்படுபவை சுருக்கமானதாகவும், அதிக விவரங்கள் இல்லாதிருப்பதுமே, இப்போலிநூல்கள் தோன்றுவதற்குக் காரணமாயின. இயேசுவின் பிறப்பு மற்றும் இளமைப் பருவம், அவருடைய தாய் மற்றும் நற்செய்தியில் வரும் முக்கியமானவர் களின் வரலாறு ஆகியவை பற்றி மேலும் மேலும் அறிய மக்கள் ஆவல் கொண்டனர். அப்போஸ்தலர்கள் எங்குப் பணிசெய்தனர், அவர்களின் முடிவு என்ன என்பனவற்றை அறிய விரும்பினர். இவை பற்றி அப்போஸ்தலர் பணிநூல் அதிகம் கூறுவதில்லை. இறந்தபின் நேர்வன, வருங்கால மறுவாழ்வு முதலியவற்றை அறிய மக்கள் விநோத ஆவல் கொண்டனர். போலிநூல்கள் இவற்றை நிறைவு செய்ய முயன்றன. ஆண்டவர், அவரது தாய் மரியாள் ஆகியோரின் மறைந்த வாழ்வு மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் பிற்காலப் பணிகள் ஆகியவை பற்றிய கதைகள் பல படைக்கப்பட்டன; வெளிப்பாட்டு நூல்கள் பல தோன்றின அடிப்படை கொண்டவை அல்ல. பதிதக் கொள்கைகளின் போக்கைக் கொண்டிருந்தன. ஆயினும், இவற்றில் சில நம்பக்கூடியவையாகக் கருதப்பட்டன. வெகுசில திருச்சபையின் வழிபாட்டிலும், பொதுமக்கள் பக்தியிலும், கிறிஸ்தவக் கலையிலும் இலக்கியத்திலும் இடம் பெற்றன. இப்போலி நூல்களை நற்செய்திகள், பணிநூல்கள், திருமுகங்கள், வெளிப்பாட்டு நூல்கள் என்ற தலைப்புகளில் தொகுத்துத் தருகிறோம்.

3. போலி நற்செய்திகள்:

காண்க. போலி நற்செய்திகள்.

**4. போலிப்பணிநூல்கள்:**

காண்க. போலிப்பணிநூல்கள்.

**5. போலித் திருமுகங்கள்:**

காண்க. போலித்திருமுகங்கள்.

**6. போலி வெளிப்பாட்டுநூல்கள்:**

காண்க. போலி வெளிப்பாட்டு நூல்கள்.

**V. திருச்சபையும் போலிநூல்களும்:** திருச்சபையின் மிகத்தொடக்க காலத்தில் இந்நூல்களுக்கு அவ்வளவு எதிர்ப்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஏனோக்கு நூல், மோசேயின் விண்ணேற்பு ஆகிய நூல்களிலிருந்து, திருமுறைப் பட்டியலைச் சேர்ந்த யூதாவின் திருமுகத்தில் எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன. ஆனால், இந்நூல்கள் இறைஏவுதல் பெற்றவைதான் என்பது பற்றிச் சில இடங்களில் ஐயமும் தயக்கமும் நிலவின. எ.கா. எசுதிராவின் நூல்கள். ஆனால், இந்த இலக்கியம் வெகுவேகமாக வளர்ச்சியுற்றது. இவற்றில் சில பதிதச் சூழ்நிலையில் தோன்றி பதிதர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டன. இதைக் கண்ட திருச்சபையின் தந்தையர்கள், இந்நூல்களை அதிகக் கவனத்துடன் நோக்கத் தொடங்கினர். அவர்களுடைய தீர்ப்பு இந்நூல்களுக்கு அதிகப் பாதகமாக அமைந்தது. அவர்கள், இவற்றைப் பயன்படுத்துவதைப் பற்றி மக்களை அடிக்கடி எச்சரித்தனர். இரனேயு பதிதர்களையும் அவர்களுடைய நூல்களையும் கடுமையாகக் கண்டனம் செய்தார். ஏனெனில், "இவர்களே பொய்யுரையாக அமைத்த எண்ணற்ற போலிநூல்களை எழுதி, உண்மையின் மறைநூல்களை அறியாதவர்களையும் அறிவில்லாதவர்களையும் திகைப்புறச் செய்கின்றனர்." ஓரிசனும், ஏயுசும் இந்நூல்களை மிகக் கடுமையாகக் கண்டனம் செய்கின்றனர். இவர்களின் கருத்துப்படி, இந்நூல்கள் பதிதர்களின் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டவை. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் திருச்சபையின் எழுத்தாளர்களால் குறிப்பிடப்பட தகுதி பெறவில்லை. இந்நூல்களின் நடை அப்போஸ்தலர்களின் நடையைச் சேர்ந்ததன்று. இவற்றின் பொருளடக்கம் உண்மையான பாரம்பரியப் போதகத்திற்கு மிகவும் மாறாக உள்ளது. இவையெல்லாம் இந்நூல்கள் பதிதர்களின் பொய்யுரை என்று காட்டுகின்றன. ஆகவே, இந்நூல்கள் போலியானவை என்று கருதப்படவேண்டும்; பயங்கரமானவையும் இறைப் பற்றற்றவையும் என நிராகரிக்கப்பட வேண்டும்.

கி.பி. 393-இல் இப்போவில் நடந்த திருச்சபைச்சங்கம் இப்போலி நூல்கள் பற்றிய அதிகாரபூர்வமான அறிக்கை விடுத்தது. அதன்படி மறைநூலின் திருமுறைப்பட்டியலைச் சேராத எந்த நூலும் மறைநூல் என்ற தலைப்பில் ஆலயங்களில் வாசிக்கப்படக் கூடாது. இந்த அறிக்கை கி.பி. 397-இல் கார்தேசில் நடந்த திருச்சபைச்சங்கத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. செலாசியுவின் சட்டம் நாற்பது நூல்களைத் தொகுத்து இவற்றைப் போலிநூல்கள் என்ற கண்டனம் செய்கிறது. எக்சுப்பெரியுவுக்கு எழுதிய மடலில், முதலாம் இன்னோசந்து இவற்றைக் கண்டனம் செய்கிறார். காலப்போக்கில் இந்தக் கண்டனங்களை மக்கள் மறந்து போயினர். இவை மீளவும் பிரபல்யமாயின. மத்திய காலத்தில் இவை கிறிஸ்தவப் பக்தியிலும், கலையிலும் இலக்கியங்களிலும் பெரும் தர்க்கம் விளைவித்தன.

**IV. போலிநூல்கள் பற்றிய மதிப்பீடு:** இவற்றின் இறையியல் மதிப்பீடு மிகவும் குறைந்ததே ஆகும். ஏனெனில், இறை வெளிப்பாட்டினைப் பற்றிய அறிவை ஆழப்படுத்தக்கூடிய கருத்துகளை இவை அதிகம் கொண்டிருக்கவில்லை. ஆனால், யூத மற்றும் கிறிஸ்தவப் போலிநூல்கள், அவை எழுதப்பட்ட காலங்களைப் பற்றி அறிய வாய்ப்பளிக்கின்றன. யூதப் போலி நூல்கள் இயேசுவின் காலத்தில் முன்னணிக்கு வந்து, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்தவப்

போலிநூல்கள் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் எவற்றில் ஆர்வமும் அக்கறையும் காட்டினர் என்பதைக் காட்டுகின்றன. எவை அக்காலத்துக் கிறிஸ்தவர்களின் கவனத்தையும், பக்தியையும் வணக்கத்தையும் கவர்ந்தன, இவ்வுலக வாழ்வில் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர், மறு உலகவாழ்வில் எதை எதிர்பார்த்தனர் ஆகியவை பற்றி இந்நூல்களிலிருந்து அறிகிறோம். மத்திய காலத்தில் வழிபாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றில் இந்நூல்கள் கொண்டிருந்த தாக்கத்தை நாம் ஒதுக்கிவிடக்கூடாது. மரியாள் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விழா, அவளுடைய பெற்றோரின் யோயாக்கிம் மற்றும் அன்னா என்ற பெயர்கள் முதலியவற்றை இந்நூல்களிலிருந்துதான் பெறுகிறோம். சில உன்னதமான கலைக்கும் இலக்கியப் படைப்புகளுக்கும் இவை பெரிதும் உதவியுள்ளன. இறுதியாக இவை தவறும்போது கூட இவை மதிப்பில்லாமல் இல்லை. இவற்றை மேலெழுந்தவாரியாக வாசித்தாலுங்கூட, இப்போலி நூல்களில் காணப்படும் கதைகளும், வியத்தகு செயல்களும், தவறான போக்குகளும் உண்மையான மறைநூலைப் போற்றுவதற்கு நம்மை இட்டுச்செல்கின்றன; உண்மையான மறைநூலில் காணப்படும் இறை ஏவுதல் பெற்றவார்த்தையின் எளிமை, மட்டுடைமை, உண்மையான மகத்துவம் ஆகியவை பற்றிய அறிவை ஆழப்படுத்த உதவுகின்றன.

### போலிப்பணிநூல்கள் (APOCRYPHAL ACTS)

திருமுறைப்பட்டியில் உள்ள அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படாத, அப்போஸ்தலர்கள் பற்றிய செய்திகளைக் கொடுக்க முயலும் நூல்கள். தொடக்க காலத்தில் எழுதப்பட்டவைகளில் கொள்கை அழுத்தம் தெரிகிறது. ஆனால், இக்கொள்கைகள் பெரும்பாலும் பதிதக் கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் எழுதப்பட்டவைகளில் கொள்கை அழுத்தம் தெரியவில்லை. மாறாக, இவை தங்கள் கதைத் தலைவரின் வீரதீரச் செயல்களையும், புதுமைகளையும், வீர மறைசாட்சி மரணம் பற்றிய விரிவான விவரிப்புகளையும் கொண்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை:

1. அந்திரேயாவின் பணிநூல்.
2. தோமாவின் பணிநூல்.
3. பவுலின் பணிநூல்.
4. பேதுருவின் பணிநூல்.
5. யோவானின் பணிநூல்.

மற்றும் சில போலிப் பணிநல்கள்:

1. அந்திரேயா மற்றும் பவுலின் பணிநூல்.
2. அந்திரேயா மற்றும் மத்தியாவின் (மத்தேயுவின்) பணிநூல்.
3. அந்திரேயாவின் துணுக்குக் கதைகள்.
4. அப்தியாவின் அப்போஸ்தலர் வரலாறு.
5. ததேயுவின் பணிநூல்.
6. தோமாவின் பணிநூல்.
7. பவுலின் பணிநூல்.
8. பர்னபாவின் பணிநூல்.
9. பிரக்கோரின்படி யோவானின் பணிநூல்.
10. பிலாத்துவின் பணிநூல்.
11. பிலிப்புவின் பணிநூல்.
12. பேதுரு மற்றும் அந்திரேயாவின் பணிநூல்.
13. பேதுரு மற்றும் பவுலின் பணிநூல்.
14. பேதுரு மற்றும் பவுலின் பாடுகள்.
15. பேதுருவின் ஸ்லவோனிக்கப் பணிநூல்.
16. பேதுருவின் பாடுகள்.
17. பேதுருவின் போதகம்.
18. மத்தேயுவின் மறைசாட்சி மரணம்.
19. யாக்கோபின் (பெரிய) பணிநூல்.
20. யாக்கோபின் விண்ணேற்பு.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

### போலி வெளிப்பாட்டு நூல்கள் (APOCRYPHAL APOCALYPSES)

இவை புதிய ஏற்பாட்டுப் பெரியவர்கள் எழுதியதாகக் கூறப்படும் போலிநூல்களின் சிறு தொகுப்பாகும். இவற்றின் முக்கிய நோக்கம் மறுவுலகம் பற்றிய காட்சிகளைத் தருவதும், உலக

முடிவு பற்றிய இறைவாக்கு உரைப்பதுமாகும். இவற்றில் சில நூல்கள்.

1. கன்னியின் வெளிப்பாடு.
2. ஸ்தேவானின் வெளிப்பாடு.
3. தோமாவின் வெளிப்பாடு.
4. பவுலின் வெளிப்பாடு.
5. பேதுருவின் வெளிப்பாடு.
6. யாக்கோபின் வெளிப்பாடு.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

**போவாசு (BOAZ - அழகானி)**

1. சொத்தும் குணமும் நிறைந்த இவர் பெத்லகேமைச் சேர்ந்தவர்; எலிமெலக்கு, நகோமி ஆகியோரின் உறவினர்; அவர்களுடைய மருமகள் ரூத்தைப் பிற்காலத்தில் மணந்து கொண்டவர். தம் மாமியார் நகோமியோடு பெத்லகேமை வந்தடைந்தபோது, மோவாபியப் பெண்ணான ரூத்து போவாசின் நிலத்தில் கதிர் பொறுக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவளது நற்குணத்தைப் போற்றும் விதத்தில், அவள் தனது நிலத்திலேயே தொடர்ந்து கதிர் பொறுக்கும்படி போவாசு கேட்டுக்கொண்டார், இந்த அன்புச் செயலால் தூண்டப்பட்டு, தனக்கு உடன்பிறந்தான் கடமையைச் செய்ய வேண்டும் என்று போவாசிடம் கேட்குமாறு நகோமி ரூத்துக்கு ஆலோசனை கூறினாள். இதை ரூத்து செய்த விதத்தையும், அதற்குப் போவாசு அளித்த பதிலையும் செயல்களையும் ரூத் 3-இல் வாசித்தறியலாம். போவாசு ரூத்தை மணந்து, எலிமெலக்கின் உடைமையை மீட்டு, இருவருக்கும் பிறந்த குழந்தையான ஓபேது வழியாக எலிமெலக்கின் குடும்ப மரபு நீடிக்கச் செய்தார். இந்த ஓபேதுதான் தாவீதின் பாட்டனாவார்.

போவாசின் தலைமுறைப் பட்டியல், அவர் யூதா இனத்தைச் சேர்ந்த எட்சரோன் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், தாவீது அரசனின் கொள்ளுப் பாட்டனாராகவும் காட்டுகிறது (ரூத் 4:18-22; 1 நாள் 2:9-15). இயேசுவின் மூதாதையர் பட்டியலில் போவாசு சல்மோனின் மகன் என மத் 1:3-6-இலும், சாலாவின் மகன் என லூக் 3:31-33-இலும் குறிக்கப் பெறுகிறார்.

2. சாலமோனின் ஆலயத்தின் முன் மண்டபத்திலுள்ள இரண்டு தூண்களுள் ஒன்றின் பெயர் (1 அர 7:2; 2 நாள் 3:17).

**போத்திபெரா (POTIPHERA - ராவால் கொடுக்கப்பட்டவர்)**


போற்றிபெரா யோசேப்பின் மாமனார். இவர் சூரியக் கடவுள் வழிபாட்டின் மையமான எலியோப்பொலியின் குரு (ஆதி 41:45.50; 46:20). சூரியக்கடவுளைக் குறிப்பதான ரா (Re) எனும் பெயர், இப்பெயரில் இணைந்திருப்பது மிகப் பொருத்தமாகும். ஆனால் எப்படியோ, பெயரின் இவ்வடிவம் 10-ஆம் நூற்றாண்டு வரை எகிப்தில் தோன்றவில்லை.


**போற்றுரை, புகழ்ப்பாடல் (DOXOLOGY)**

இஃது இறைவனைப் போற்றிப் பாடலின் வாய்பாட்டைக் குறிக்கிறது; இறைவனுடைய அருஞ்செயல்களைப் போற்றிப் பாடுவதாகும் (ஆதி 24:27; யாத் 18:10). யூத வழிபாட்டில் புகழ்ப்பாடல்களின் முடிவில் ஆசீர்களாக வரும் வாய்பாடு (1 நாள் 16:36; சங் 41:13; 72:18; 89:52; 106:48). நீண்ட செபத்தின் முடிவிலும், இறைவன் பெயர் குறிக்கப்படும்போதும் இவ்வித வாய்பாடுகள் வரும். சில சமயங்களில், செபத்தின் தொடக்கத்திலும் இது வரக்கூடும் (1 நாள் 29:10; தானி 2:20; லூக் 1:68; காண். 2 கொரி 1:3; எபே 1:3; 1 பேதுரு 1:3). இப்போற்றுரை பாவங்களின் தண்டனையிலிருந்து போற்றுரை கூறுபவரைக் காப்பாற்றும் (உரோ 1:25; 2 கொரி 11:31).

கிறிஸ்தவப் போற்றுரை தந்தைக்கு (காண். உரோ 9:5; திருவெளி 5:12) மகன் வழியாக (எ.கா. உரோ 16:27; 1 பேதுரு 4:11), பரிசுத்த ஆவியில் செலுத்தப்படுகிறது.


வரைபடம்-i








இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம்


வரைபடம்-iii





கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகள்)
Scale : 1 700 000
0 5 10 20 40
சீரியா
தமஸ்கு
தாண்
மேரோம் ஏரி
பாசான்
கோலான்
கலிலேயா ஏரி
கர்மேல் மலை
தாபோர் மலை
தோர்
தானாக்கு
பெத்சான்
தோத்தான்
பெருங்கடல்
கெரிசிம் மலை
ஏபால் மலை
செக்கேம்
இராமோத்து
சுக்கோத்து
யோப்பா
சீலோ
எக்ரோன்
பெத்தேல்
எரிகோ
எருசலேம்
பெத்லகேம்
கில்கால்
யாசேர்
இரபா
எசிபோன்
நெபோ மலை
அசோத்து
காசா
எபிரோன்
சீப்பு
தெபீர்
பெயேர் செபா
சாக்கடல்
அரோயர்
இரகொபோத்து
தாமார்
ஏதோம்
மோவாபியர்
அரேபியர்
எமோரியர்
பெலிஸ்தியர்
இத்தியர்
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தாண்
6. நப்தலி
7. காத்
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயீம்
12. பென்யமீன்


தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
இஸ்ரயேல்
மோவாபு
ஏதோம்
பெருங்கடல்


பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1,700,000
0 5 10 15 20
சீதோன்
சரெப்தா
தீர்
பெனிக்கியா
இத்துரேயா
அபிலேன்
தமஸ்கு
சீரியா
திரக்கோனித்து
தொலமாய்
கானாவூர்
மகதலா
கலிலேயா
கார்மேல் மலை
நாசரேத்து
தாபோர் மலை
நயீன்
செசரியா
தெக்காப்பொலி
சமாரியா
அப்பொல்லோனியா
அந்திப்பத்திரி
யோப்பா
அரிமத்தியா
பெத்தேல்
எப்பிராயிம்
எம்மாவு
எருசலேம்
பெத்தானியா
பெரயா
அசோத்து
யூதேயா
பெத்லகேம்
காசா
பெயேர்-செபா
சாக்கடல்
மத்தியதரைக்கடல்
இதுமேயா


எருசலேம் — பாடுகளின் பாதை
செசரியா
தமஸ்கு வாயில்
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து அரண்மனை (அந்தோனியா)
பெத்து சயிதா குளம்
பெத்தானியாவிலிருந்து வந்த இயேசு அரசவரச் சிறப்புடன் வரவேற்கப்படல்
எரிகோ
கல்லறை
கொல்கொதா
போதித்தல்
ஆலயம்
வியாபாரிகளைத் துரத்துதல்
அரச முற்றம்
கெதுசமனித் தோட்டம் (இயேசு பிடிபடுதல்)
யோப்பா
பெத்லெகேம்
ஏரோது அந்திப்பாவின் அரண்மனை
பெரிய ஏரோது அரண்மனை
இயேசு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில்
கயபா அரண்மனை
பேதுரு மறுதலித்தல்
கெதுசமனித்
ஒலிவ மலை
இன்னோம் பள்ளத்தாக்கு
மீட்டர்
0 50 100 150


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
ஏகேயக் கடல்
மத்தியதரைக் கடல்
அதிரியாக் கடல்
தல்மாத்தியா
இத்தாலியா
சிசிலி
மால்த்தா
கிரேத்து
லிபியா
எகிப்து
மக்கதோனியா
திராக்கே
மோசியா
தாசியா
கலாத்தியா
கப்பதோக்கியா
சிலிசியா
பம்பிலியா
சைப்ரஸ்
சீரியா


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம் கி.பி. 49—52 (அப். பணி 15:36—18:22)
மூன்றாம் பயணம் கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
0 100 200 300
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
எகிப்து

# ஆசிரியரது பிற நூல்கள்

**விவிலிய அறிமுக நூல்கள்**

1. "தோரா" அல்லது "ஐந்நூல்" (ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2. வரலாற்று நாயகன் (யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3. இஸ்ராயேலின் காவலர்கள் – I (பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா)
4. இஸ்ராயேலின் காவலர்கள் – II (எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5. ஞான நூல்கள் (யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6. சில கதைகளும் காட்சிகளும் (யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7. நான்கு வடிவ நற்செய்திகள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8. புனித பவுலின் திருமுகங்கள் – I (பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9. புனித பவுலின் திருமுகங்கள் – II (2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

**விளக்கவுரை நூல்**

10. லூக்காவின் நற்செய்தி (அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11. விவிலியச் சித்திரக் கதைகள் **பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12. விவிலியக் களஞ்சியம் – I **புதிய ஏற்பாடு:**
13. விவிலியக் களஞ்சியம் – II
14. விவிலியக் களஞ்சியம் – III
15. விவிலியக் களஞ்சியம் – IV
16. விவிலியக் களஞ்சியம் – V

**தயாரிப்பில் உள்ளவை :**

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

*கிடைக்குமிடம்*

**தியான ஆசிரமம்**

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

**மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.**